கில. 129

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணம்.

கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்

அருளிச்செய்தது.

முதலாவது

## உற்பத்திகாண்டம்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை

தும்பைநகர்

சபாபதி ஐயர்குமாரர்

**சுப்பிரமணியசாஸ்திரிகள்**

இயற்றிய

**உரையுடன்**

ஷெ சாஸ்திரிகளாலும் சகோதரர்களாலும்

தங்கள்

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.



# படலவகராதி.


| படலம். | பக்கம். | செய்யுட்டொகை. |
|---|---|---|
| அசுரேந்திரன்மகேந்திரஞ்செல்படலம் ... ... | ௬௭௧ | ௬௫ |
| அயனைச்சிறைநீக்குபடலம் ... ... ... | ௫௫௨ | ௪௨ |
| அயனைச்சிறைபுரிபடலம் ... ... ... | ௫௪௪ | ௧௯ |
| அவையடக்கம் ... ... ... | ௨௭ | ௨௦ |
| ஆற்றுப்படலம் ... ... ... | ௩௭ | ௩௯ |
| கடவுள்வாழ்த்து ... ... ... | ௮ | ௨௫ |
| கணங்கள்செல்படலம் ... ... ... | ௩௬௩ | ௨௯ |
| காமதகனப்படலம் ... ... ... | ௨௭௩ | ௧௧௦ |
| குமாரபுரிப்படலம் ... ... ... | ௭௦௨ | ௮௧ |
| சரவணப்படலம் ... ... ... | ௪௭௪ | ௩௭ |
| சுரம்புகுபடலம் ... ... ... | ௭௨௮ | ௪௦ |
| தகரேறுபடலம் ... ... ... | ௫௩௬ | ௨௫ |
| தவங்காண்படலம் ... ... ... | ௩௨௯ | ௩௩ |
| தாரகன்வதைப்படலம் ... ... ... | ௫௯௦ | ௨௦௩ |
| திருக்கல்யாணப்படலம் ... ... ... | ௩௭௬ | ௯௬ |
| திருக்கைலாசப்படலம் ... ... ... | ௨௧௭ | ௨௨ |
| திருச்செந்திப்படலம் ... ... ... | ௭௪௧ | ௧௮ |
| திருநகரப்படலம் ... ... ... | ௯௩ | ௧௨௪ |
| திருநாட்டுப்படலம் ... ... ... | ௬௧ | ௫௭ |
| திருவவதாரப்படலம் ... ... ... | ௪௧௬ | ௧௨௭ |
| திருவிளையாட்டுப்படலம் ... ... ... | ௪௮௭ | ௧௨௮ |
| துணைவர்வருபடலம் ... ... ... | ௪௬௦ | ௩௭ |
| தேவகிரிப்படலம் ... ... ... | ௬௬௦ | ௩௨ |
| படையெழுபடலம் ... ... ... | ௫௮௩ | ௧௮ |
| பாயிரப்படலம் ... ... ... | ௧௭௯ | ௮௨ |
| பார்ப்பதிப்படலம் ... ... ... | ௨௨௬ | ௩௬ |
| மணம்பேசுபடலம் ... ... ... | ௩௪௩ | ௨௦ |
| மேருப்படலம் ... ... ... | ௨௪௦ | ௮௧ |
| மோனநீங்குபடலம் ... ... ... | ௩௧௬ | ௩௫ |
| வரைபுனைபடலம் ... ... ... | ௩௫௦ | ௩௬ |
| வழிநடைப்படலம் ... ... ... | ௬௯௨ | ௧௬ |
| விடைபெறுபடலம் ... ... ... | ௫௬௬ | ௪௫ |



எமக்குச் சுகவீனமும் பிறதாமசங்களும் நேர்ந்த காலங்களில் இவ்வுரைக்கின்றியமையாத பற்பல உதவிகளைச்செய்த அரியநண்பர் **பிரமஸ்ரீ. சிவ. பஞ்சாக்ஷரக்குருக்கள்** அவர்களுக்கு நன்றியறிதலான துதிகூறுகின்றேம்.

கணபதிதுணை.

(உரையாசிரியர் கூறிய)

# கடவுள் வணக்கம்.

### விநாயகக்கடவுள்.

சீர்பெறு மான்முதற் றேவர்க் காருள்
நேர்பெற வியற்றியே நினையு மன்பர்தங்
கார்பெறு வினைக்களை களையு மாமுகத்
தேர்பெறு மிறைவனை யிறைஞ்சி யேத்துவாம்.

### பரமசிவன்.

ஒன்று யிரண்டாகி மூன்று யகண்டமா யோமெனு மெழுத்து மாகிக்
குன்றுத சோதிப் பிழம்பா யநாதியாய்க் கூறிய பிரம மாகி
மன்றுய தில்லைவனா மன்னியா நந்தசின் மயதாண்ட வம்பு ணர்க்கு
நன்றுய பரமசிவ னடியினை யெனுங்கமல நாண்மலர்கள் போற்றி வாழ்வாம்.

### சுப்பிரமணியக் கடவுள்.

நேரறத் துலங்கு பொன்னகர் மகவா னீண்முடி கவித்தர சாளச்
சீருறத் தரும நெறிமிகத் தழைப்பத் தேவர்தந் சிறைத்துயர் தீரப்
போரிறுத் தவுணர் குழுவினை வாட்டிப் பொருவிலாத் தெய்வத மாதை
யேருற மணந்த விமலனைக் குகனை யெந்தையைப் பணிந்திடர் தீர்ப்பாம்.

---

# உபோற்காதம்.

முற்பிறப்பினீட்டிய புண்ணியவிசேஷத்தினாலே மானுடராகச்சனித்த நம்மனோரனைவர்க்கும், சுகத்தைததேடுவதும் துக்கத்தை நீக்குவதும் ஆவசியகமாம். சுகத்தைத்தருதற்குக் கருவியானவையென்று விரும்பித்தேடுஞ் செல்வமுதலியவைகள்,சிறிதுகாலத்திற்கு மாத்திரம் அற்பசுகந்தருவனவாய், நீங்கு மிழிபோனிலையற்றஇந்தத்தேகம் அழியும்பொழுது பயன்படாதொழிகின்றன; திருடர்கைப்படன் முதலிய சாரணங்களால் இடையிலும் பயன்றாதழிகின்றன. புண்ணியம் பாவமென்னும் இரண்டுமே மறுபிறப்பினுந் தொடர்ந்து முறையே சுக துக்கங்களைத்தருகின்றன.

## உபோற்காதம்.

### பட்டணத்துப் பிள்ளையார்பாடல்.

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

ஆகலின், மாநுடசன்மமெடுத்த நாமெல்லாம், மேலான சுகத்தைப் பெறுதற்கு என்றுந் துணையாயிருக்கின்ற புண்ணியத்தை நம் யாக்கை அழியுமுன் செய்யவேண்டியது அத்தியாவசியகம்.

### திருவள்ளுவர் குறள்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

காச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

அப்புண்ணியங்கள் பலவகையின. அவற்றுட் சிவபுராணங் கேட்டலுமொன்று. அது, தன்னையன்றி, ஏனைப் புண்ணியங்களையும் அப் புண்ணியங்களைச்செய்தோர் பெறுஞ் சுகங்களையும், பாவங்களையும், அப் பாவங்களைச் செய்தோர் பெறுந்துன்பங்களையும், கடவுளிலக்கணம் அடியாரிலக்கணம் முதலியவற்றையுமுணர்த்தலால் மற்றைய புண்ணியங்களெவற்றினும் விசேடமானபுண்ணியமாம்.

### உபதேசகாண்டம்.

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற வினைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டந்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்.

### (சம்ஸ்கிருத) ஸ்காந்தபுராணம்.

புராணஞ்ச்ருண்வதாம்புண்யம்சிவஸ்யசிவதாயிந:।
இயத்தயாபரிச்சேத்தும்நாலமீசோபிபூஸுரா:॥

புராணச்ரவணாதந்யதீசோபாஸ்திர்நலாதுமத்।
தஸ்மாத்தத்ஸதிர்சம்புண்யம்நாஸ்திநாஸ்திச்ருதௌஸ்ம்ருதௌ॥

(இவற்றின் மொழிப்பு) சுபத்தைக்கொடுப்பவராகிய சிவபெருமானது புராணங்களைக்கேட்போர் பெறும் புண்ணியத்தை இத்துணைத்தென அளவிடுதற்குச் சிவபெருமானும் வல்லரல்லர். புராணங் கேட்டலினும் விசேடமான நன்மையைத் தருஞ் சிவ வழிபாடு வேறில்லை. ஆதலாற் புராணங்கேட்டலோடொத்த புண்ணியம் வேதங்களிலாயினும் ஸ்மிருதிகளிலாயினும் கூறப்படவில்லையென்பதாம். (உபலக்ஷணத்தாற்படித்தன் முதலியனவற்றையுங்கொள்க).

## புராணங்கள்.

ஆதிகாலத்திலே சிவபெருமான் நந்திதேவருக்குப் பதினெண்புராணங்களையுபதேசித்தார். அந்நந்திதேவர் சனற்குமார முனிவருக்குபதேசித்தார்.

அந்தச்சனற்குமாரமுனிவர் வேதவியாசமுனிவர்க்குபதேசித்தார். அந்த வேதவியாசர் தமதுமாணாக்கர்களுட் சிறந்த சூதமகாமுனிவர்க்கு நன்குபோதித்து, "சூதனே, நீ இப்பதினெண்புராணங்களையும் பூமியிற்பரப்புவாயாக" என்று ஆஞ்ஞை செய்தார். அச்சூதமகாமுனிவருமவ்வாறே விரும்பிக்கேட்டமுனிவர்களுக்குபதேசித்துப் பூவுலகத்திற்பரப்பினர். (இங்கேகுறித்த புராணவரலாறு சிலநூல்களிற் பேதமாகவுங்கூறப்படுகின்றன).

அவற்றுள்,சிவபுராணம்பத்து; அவையாவன:—சைவபுராணம் பவிடியபுராணம் மார்க்கண்டேயபுராணம் இலிங்கபுராணம் காந்தபுராணம் வராகபுராணம் வாமனபுராணம் மற்சபுராணம் கூர்மபுராணம் பிரமாண்டபுராணம் என்பனவாம்.

விஷ்ணுபுராணம் நான்கு; அவையாவன:—காருடபுராணம் நாரதீயபுராணம் வைணவபுராணம் பாகவதபுராணம் என்பனவாம்.

பிரமபுராணம் இரண்டு; அவையாவன:—பிரமபுராணம் பதுமபுராணம் என்பனவாம்.

அக்கினிபுராணம் ஒன்று; அதாவது ஆக்கினேயமாம். சூரியபுராணம் ஒன்று; அதாவது பிரமகைவர்த்தமாம்.

இப்புராணங்களின் கிரந்தசங்கியை முதலியவைகள் பாயிரப்படலத்தினினிது விளக்கப்படும்.

இங்கே காட்டப்பட்ட புராணவகுப்புகளுட் சிவபுராணங்கள் சாத்துவிக குணமுடையன. விஷ்ணுபுராணங்கள் தாமத குணமுடையன. பிரமபுராணங்கள் ராசதகுணமுடையன. அக்கினிபுராணமும் சூரியபுராணமும் முக்குணங்களையுமுடையன.

யோகிகளுக்கு ஞானோபதேசஞ்செய்யுஞ்சிவபெருமான், தெளிபளிங்கினிறத்தினரும் உறக்கமற்றிருப்பவருமாதலால், அவரது புராணங்கள் பத்தும் சுகம் ஞானம் என்பவற்றுக்கிடமாகிய சாத்துவிகங்களாம். விஷ்ணுமூர்த்தி கருநிறமுடையவரும் சேஷசயனஞ்செய்பவரும் பத்தரைமோகிப்பவருமாதலால், அவரது புராணங்கள் நான்கும் கருநிறம் நித்திரை சோம்பல் என்பவற்றையுடைய தாமதங்களாம். பிரமா சிவந்த நிறத்தையுடையவரும் சஞ்சலரூபியுமாதலால், அவரது புராணங்களிரண்டுஞ் சிவந்தநிறம் துக்கம் என்னுமிவற்றையுடைய ராசதங்களாம். அக்கினியும் சூரியனும் முற்சுட்டிய மூன்று குணங்களையுமுடையராதலால்,அவரதுபுராணங்களிரண்டும் அவ்வாறேதிரிகுணயுக்தமாம். ஆதலால், பதினெண்புராணங்களுள்ளே சாத்துவிகங்களாகிய சிவபுராணங்கள் பத்துஞ்சிறந்தன.

இத்தகைய சிறப்பினையுடைய சிவபுராணம் பத்தினுள்ளும் காந்தபுராணம் மிகச்சிறந்தது. வேதாந்த சாரங்களைஉள்ளடக்கியது. தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் நான்குபுருஷார்த்தங்களையும் எளிதிற்றரவல்லது. மங்களகரமானது. கலிதோஷத்தைநீக்குவது. இலக்கங் கிரந்தங்களை ஐம்பது கண்டங்களாகவுடையது. "புதுமயிலூர்பரன்புராணத்துற்றிடாக்கதையிலை" எனவும் "காந்தமாகியபெருங்கடல்"எனவும் (தமிழ்க் கந்தபுராணமாகிய) இந்நூலாசிரி

யருளிச் செய்ததனால், இது அளவிறந்த சரித்திரங்களை அடக்கியுள்ளதென் பதினிது விளங்கும். இன்னோரன்ன மகிமைகளை யுடைமையாற் சிவ புராணங் களுள்ளுங் காந்தபுராணமொன்றே சிறந்தது.

இக் காந்தபுராணம், சனற்குமாரசங்கிதை சூதசங்கிதை பிரமசங்கிதை விஷ்ணுசங்கிதை சங்கரசங்கிதை சூரசங்கிதையென ஆறு சங்கிதைகளையுடையது. அவற்றுள், சனற்குமாரசங்கிதை ஐம்பத்தையாயிரங் கிரந்தங்களையும், சூத சங்கிதை ஆறாயிரங்கிரந்தங்களையும், பிரமசங்கிதை மூவாயிரங்கிரந்தங்களையும், விஷ்ணுசங்கிதை ஐயாயிரங்கிரந்தங்களையும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங் கிரந்தங்களையும், சூரசங்கிதை ஆயிரங் கிரந்தங்களையுமுடையன. சங்கர சங்கிதை பன்னிரு கண்டங்களையுடையது. அப் பன்னிருகண்டங்களுள் முற்பட்டது சிவரகசியகண்டம். அது பதின்மூவாயிரங் கிரந்தங்களையுடையதாய்ச் சம்பவகாண்டம் முதலிய எழு காண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

அக் கண்டத்தின் முதலினுள்ள ஆறு காண்டங்களையும் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரம் வருடங்களுக்கு முன், ஸ்ரீ. கச்சியப்பசிவாசாரியஸ்வாமிகள் கந்தபுராணமெனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச்செய்தனர். இறுதியிலுள்ள காண்டத்தை, உபதேசகாண்டமென்னும் பெயருடனே கோனேரியப்ப முதலியார் தமிழில் அருளிச்செய்தனர்.

## நூற்பயன்.

(வடநூற்காந்தத்திற் கூறப்பட்டது):—மகிமையினையுடைய இக்காந்தபுராணத்தை விதிப்படி கேட்டலால் மலடியுஞ் சந்ததியைப் பெறுவாள்; கன்னிகையைவிரும்பியவன் கன்னிகையைப் பெறுவான்; திரவியத்தை விரும்பியவன் திரவியத்தைப் பெறுவான்; வித்தையை விரும்பியவன் வித்தையைப்பெறுவான்; அரசியலை விரும்பியவன் அரசியலைப் பெறுவான். ஸ்திரீ புருஷர்கள் இருவரும் வேறுவிஷயங்களில் மனதைச்செலுத்தாது ஒருவழிப்படுத்தி நியமமாய் ஒருமுறை கேட்டால், நினைத்த மனோரதங்களையெல்லாம் பெறுவர். புத்திரப் பேறில்லாத ஸ்திரீபுருஷர்கள் பத்தியோடு பூசித்துக் கேட்டாற் புத்திரரைப்பெறுவார்கள். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம்.

இக்கந்தபுராணத்தை ஓதினோரும் கேட்டோரும் முற்சுட்டியபலன்களைப் பெற்றுவருவது அநுபவத்தாலும் பலரால் நிச்சயிக்கப்பட்டமையினன்றோ, தமிழ்நூல்களைக் கற்கும் விருப்பங் குன்றிய இக்காலத்திலும் இப்புராணத்தைச் சிறுவர்களுங் கற்க விரும்புகின்றார்கள்; ஆலயமுதலியவற்றிற் பத்திமான்கள் படிக்கின்றார்கள்; கேட்கின்றார்கள்.

இக் கந்தபுராணம், முற்சுட்டிய வாற்றாலும் சொற்சுவை பொருட்சுவைகளாலும் இலக்கண அமைதியினாலும் செந்தமிழிற் சிறந்ததோர்காப்பியமாக எவராலும் பாராட்டப் பட்டதாயும், எவரும் அத்தியாவசியகம் கற்றுணர வேண்

டியதாயுமிருக்கின்றது. இதற்கு எவரும்விளங்கத்தக்கதாக ஒருரையியற்றி அச்சிட்டு வெளிவிடும்படி அநேகர் வேண்டிக்கொண்டனர். ஆதலின், என் சிற்றறிவுக்கெட்டியவாறு உரையியற்றி வெளிவிடத்துணிந்தேன்.

---

## அவையடக்கம்.

தெரிந்த லக்கண விலக்கியத் திறமை சேர்ந்த நாவல ரவைக்கணே
பிரிந்து வித்தையணு வேனு மின்றியுறை பித்தன் வாய்விடுதல் போலநான்
திருந்து விற்பனர் சொலுஞ்சி றந்தவுரை தேங்கி மல்குமுல கின்கணே
பரிந்தி யற்றியுரை யச்சி விட்டுவிடல் பாவ லர்க்குநகை யாகுமே.

கல்வியறிவிற்சிறந்த பெரியோர்களே!

சிற்றறிவினேனியற்றிய இவ்வுரையில் யாதேனும்வழூஉக்காணப்படினும் நீரைப் பிரித்துவிட்டுப் பாலைப்பருகு மன்னப்பறவை போல, குணத்தையே பாராட்டி அங்கீகரிக்குமாறு தங்களைப் பன்முறைகேட்டுக்கொள்கின்றேன்.

---

உ

# சிவபுராணபடனவிதி.

தேவாலயம் திருமடம் நதிக்கரை குளக்கரை திருநந்தனவனம் யாகசாலைமுதலிய நற்றானங்களிலே புராணங்களைப் படித்தல் வேண்டும். சிறியோர்கள் லீலைவார்த்தை முதலியவைகளைப் பேசிக் களிக்குமிடத்திலும், சூதாடுமிடத்திலும், பெண்கள் உண்டாட்டுச்செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்களிருக்குமிடத்திலும் படித்தலாகாது.

பஞ்சாங்கசுத்தியமைந்த சுபதினத்திற் சுபலக்கினத்திற் சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். அந்தணர்முதலிய நால்வருணத்தாருள் நல்லொழுக்கமும் இலக்கணவிலக்கியப் பயில்வும் சிவபத்தியுமுடையவரே, ஸ்நாநம் செய்து தோய்த்துலர்ந்த இரண்டுவஸ்திரந்தரித்தவர்களாய், நித்தியகருமமுடித்து, சிவபுராணபுஸ்தகத்தைப் பீடத்தின்மேல் வைத்து, சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் முதலியவற்றாற் பூசித்து, நமஸ்கரித்து, ஆசனத்திருந்து, புராணபடனஞ்செய்தல்வேண்டும். அவர் அங்கே யாரையும் அஞ்சலிசெய்தலாகாது.

சிவபுராணங் கேட்போரும், நியமந்தவறாது நாடோறும் முற்சுட்டிய ஸ்நாநாதி சுத்திகளையுடையராய்ப் புஸ்தக பூசை முற்றியவுடனே, சிவபுராணபோதகரைக் கிழக்குமுகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானாகப் பாவித்துச் சந்தனம் புஷ்பம் முதலியவைகளினாலே பூசித்து, நமஸ்காரஞ்செய்து, சுற்றத்தார்களோடுஞ் சிநேகிதர்களோடுஞ் சித்திரப்பாவைபோலசைவற மௌனமாயிருந்து மெய்யன்போடு கேட்டு, மீண்டும் நமஸ்காரஞ் செய்தல் வேண்டும். நாடோறும் புராணந் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் காப்புச்சொல்லுதல்வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்போது யாவருங் கும்பிட்டுக்கொண்டிருத்தல் வேண்டும்.

புராணம்வாசிப்பவர், சபையார்க்குக் கேட்கும்படி, தெளிவாக, இசையுடைய இராகத்தில் வாசித்தல்வேண்டும். பொருளுக்கு வாசிக்கும்போது நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும், சொற்களைக் கொண்டுகூட்டவேண்டிய இடங்களிற் கொண்டுகூட்டியும், பொருள் சொல்வோர்க்கு ஏற்ப வாசிக்கவேண்டும். பொருள் சொல்வோர், இலக்கணப்பிழையில்லாமலும் வெளிப்படையாகவும் வாசிக்கப்படுகிற இராகத்திற்சொல்லல்வேண்டும்.

புராணங்கேட்போர், தினந்தோறும் பிராமணர்களுக்குப் போசனங்கொடுத்தல்வேண்டும். ஆரம்பிக்குந் தினத்திலும் முடிக்குந் தினத்திலுந் திருக்கல்யாண முதலிய சரித்திரங்கள் படிக்குந்தினங்களிலுஞ் சிவபுராணமண்டபத்தைக் கோமயத்தினாலே திருமெழுக்கிட்டு, மேற்கட்டி கமுகு வாழை கரும்பு பூமாலை தோரண முதலியவற்றால் அலங்கரித்தல்வேண்டும். விசேஷமாகப் பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்தல்வேண்டும்.

சிவபுராணபோதகரைச் சிவபெருமானாகப் பாவியாது மனுஷராகப் பாவிப்போரும், சிவபுராணம் படிக்குஞ்சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலைநீட்டிக் கொண்டிருப்போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலை பாக்குண்போரும், உடம்பு போர்த்துக்கொள்வோரும், பிறவார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே பிறிது பொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப்போரும், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்வோரும், புராணத்தைப் பொய்யென்போரும் நெடுங்காலம் நரகங்களிலே கிடந்து துன்பம் அநுபவித்துப் பின்பு இழிவாகிய பிறப்புகளிலே பிறந்து வருந்துவர்கள்.

புராணமுற்றியவுடன், புராணபோதகரைப் பூசித்து, வஸ்திரம் ஆபரணம் முதலிய உபசாரங்களைக்கொடுத்துப் புராணத் திருமுறையையும் அப்போதகரையும் மங்கல வாத்தியங்களொலிக்க வீதிவலஞ்செய்வித்தல் வேண்டும்.

சிரத்தையோடு சிவபுராணப்புத்தகத்தை எழுதித் தம்வீட்டில்வைத்துப் பூசைசெய்தவரும், சிவனடியார்களுக்குக் கொடுத்தவரும், வாசித்தவரும், பொருள் சொன்னவரும், கேட்டவரும் சிவபதத்தையடைவர். திருக்கோயிலிலே மண்டபஞ்செய்வித்து, அதிலே சிவபுராணத்தைப் பீடத்தின்மேல் வைத்து, நாடோறும் விதிப்படி பூசைசெய்துகொண்டுவரின், அது கோடிசிவலிங்கப்பிரதிஷ்டைக்குச் சமமாகும்.

திருச்சிற்றம்பலம்.

## கச்சியப்பசிவாசாரிய ஸ்வாமிகள்

# சரித்திரச்சுருக்கம்.

கச்சியப்பசிவாசாரிய ஸ்வாமிகள், காஞ்சிபுரத்திலே, சிவப்பிராமணர் குலத்திலே, குமரகோட்டத் தருச்சகருளொருவராயிருந்த காளத்தியப்ப சிவாசாரியர் என்பவருக்குச் சுப்பிரமணியக்கடவுளின் வரப்பிரசாதத்தினாலே, புத்திரராக அவதரித்தார். அவர், ஐந்தாம் வயசிலே வித்தியாரம்பஞ் செயப்பெற்று, சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருபாஷைகளிலுமுள்ள நூல்களைப் பயின்று, ஏழாம் வயசிலுபநயனஞ் செயப்பெற்று வேதமோதி, அதன்மேற் சமய முதலிய தீக்ஷைகளையும் ஆசாரியாபிஷேகத்தையும் பெற்று, வேதாகமாதி சகல சாஸ்திரங்களிலும் மகா பாண்டித்திய முடையராய், குமரகோட்டத்துச் சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசித்துவந்தார்.

அக்காலத்திலே காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்ப் புலவர்கள், அவரது கல்வித்திறமையையும் சுப்பிரமணிய சுவாமியின் மேற்கொண்ட பத்தியையும் நோக்கி, சுப்பிரமணியக்கடவுளின் சரித்திரத்தை ஓர் புராணமாகத் தமிழில் அருளிச்செய்யும்படி வேண்டினார்கள். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் அந்தக்கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, நீ காந்தபுராணத்தாறுசங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசிய கண்டத்தினுள்ள நமது சரித்திரத்தைக் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் விழித்தெழுந்து, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரை தடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்தநாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒருபொருட்படுத்தி வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்னை என்னை" என்று ஆனந்தக்கூத்தாடினார்.

மற்றைத் தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்தியகருமமுடித்துக்கொண்டு, சுப்பிரமணிய பூசை செய்தபின் புராணம் பாட ஆரம்பித்தருளினார். நாடோறும் நூறு செய்யுள் பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும், இராத்திரி காலபூசை முற்றியபின் குமரகோட்டத்தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமது திருமாளிகைக்குப் போவார், பிற்றைநாட்காலையிலே நித்தியகரும முடித்துக்கொ

ண்டு, பூசையின்பொருட்டுத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, ஏட்டை எடுத்துப்பார்த்து, அதிற்சிலவிடங்களிலே திருத்தப்பட்டிருத்தல் கண்டு, அதனைச்சிரமேற்கொண்டு ஆநந்த பரவசராய்ச் சிறிது பொழுது நின்று பின் பூசை செய்வார்.

இவ்வாறே கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் பாடி முடித்தபின், அதனைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும்பொருட்டுச் சுபதினமுஞ் சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு, எங்குமுள்ள சிவனடியார்களெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினர். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப்பட்ட சுப தினத்திலே, புலவர்களும் அரசர்களும் பிரபுக்களும் பிறரும் வந்து கூடினர்கள்.

கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப் பூசை செய்து அவர் சந்நிதானத்திலே மெழுகிப் பீடமிட்டு அதின்மேற் பட்டை விரித்துப் புஷ்பங்களைத்தூவித் தூபங்கொடுத்து ஆசனங்கற்பித்துக் கந்தபுராணத் திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித் துதித்தார். பின்பு இருந்துகொண்டு, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் முதற்செய்யுளை ஒருமுறை வாசித்து, "திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்து உளான்" என்றெடுத்து, "விளங்காநின்ற பத்துத்திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய" என்று பொருளருளிச்செய்தார். உடனே அங்கிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர், "சுவாமிகாள், திகழ் தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி தொல்காப்பியமுதலிய இலக்கணநூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே" என்றார். அதற்குக் கச்சியப்பசிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும்; ஆயின் இம்முதலடி என்வாக்கன்று; சங்கப்புலவராகிய சுப்பிரமணியக் கடவுளது திருவாக்கு; அவரே எனக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளினர்" என்றார். அது கேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆருக. அது இரகசியம். அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம்! அக்கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியதுபோல எங்களுக்குந் தோன்றி "இவ்வடி நாமே எடுத்துக்கொடுத்தருளினோம்" என்று திருவாய்மலர்ந்தருளின் அங்கீகரிப்பேம்; அன்றேல், இதற்கு இலக்கணநூலில் விதி காட்டின் அங்கீகரிப்பேம்; அல்லாக்கால், அரங்கேற்ற வொட்டேம்" என்றார். கச்சியப்பசிவாசாரியர், "இவ்விரண்டினுள் ஒன்று நாளைச்செயப்படும்" என்றருளிச்செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத்தினத்திலே திருவமுது செய்யாது, இராத்திரிகால பூசை முற்றியபின் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு சந்நிதியிலே தரையிலே சயனித்தருளினர். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக்கணநூலிருக்கின்றது; திகழ் தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி அந்நூலிற்சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளிலிருக்கின்றது; சோழதேசத்துப் புலவனொருவன் அந்நூலை நாளைக்கு இவ்விடத்திற்கொ

ண்டுவந்து அவ்விதிகளை எல்லாருக்குங் காட்டுவன்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

மற்றநாட்சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது, கச்சியப்பசிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத்தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச்சொல்லியருளினார். உடனேஒருபுலவர் ஒருபுத்தகங்கையிற்கொண்டு அங்கே வந்தனர். அவரை அங்குள்ளோர்கள் நோக்கி, "நீர்யாவர்? உமது கையிற்புத்தகம் யாது?" என்று வினவினார்கள். அதற்கு அப்புலவர், "நாம் சோழதேசத்துள்ளேம்; இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொழுது முன்னை நாளின் ஆக்ஷேபித்த புலவர் விரைந்து சென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுளை வாசித்துத் திகடசக்கரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலிருத்தலை உணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றனர். மற்றைத் தமிழ்ப்புலவர்களும் ஒருவர்பின் ஒருவராக அதனை வாங்கிப் பார்த்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றார்கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப்புத்தகத்தைக் கச்சியப்பசிவாசாரியர் கையிற்கொடுத்து, சபையாரெல்லாரையும் நோக்கி, "ஆக்ஷேபம் ஒழிந்ததா ஒழிந்ததா!" என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் தம்மையாண்டருளிய அறுமுகக்கடவுளது பெருங்கருணைத்திறத்தை நினைந்து நினைந்து, சரீரம் விதிர்ப்புற, மயிர்க்காம்பூறும் திவலை உண்டாக, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படுஞ்சலம்போல ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்த பரவசராய் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சபையார் எல்லாரும் "இங்ஙனம் எழுந்தருளிவந்த புலவர் குமாரக்கடவுளே" என்று துணிந்து ஆச்சரியமடைந்து வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் குறுவேர்வை கொள்ள ஆனந்தவருவி சொரிய ஆனந்தக்கூத்தாடிக் கச்சியப்பசிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து, அவரைத் தோத்திரஞ்செய்தார்கள். ஆக்ஷேபஞ் செய்த புலவர் கச்சியப்பசிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம்பெருமானே புழுத்த நாயினுங்கடையேனாகிய தமியேன் சுவாமிகளுடைய மகிமையைச் சிறிதும் அறியாது ஆக்ஷேபித்த பெருங் குற்றத்தைப்பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்ற மரம்போல் வீழ்ந்து கிடந்தார். கச்சியப்பசிவாசாரியர் எழுந்து, அப்புலவருடைய இரண்டுகைகளையும் தம்முடைய அருமைத்திருக்கைகளினாலே பற்றியெடுத்து இறுகத் தழுவி, "தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட்டது. இதன்பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது! அறியேம் அறியேம்" என்று பாராட்டியருளினார்.

அதன்பின் சபையாரெல்லாரும் நமஸ்கரித்து, "சுவாமிகாள், இனிப்புராணத்தைத் தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அங்ஙனமே கச்சியப்ப சிவாசாரியர் அரங்கேற்றுவாராயி

ஞர். காஞ்சித்திருநகரத்துள்ள சிவப்பிராமணர் முதலானவர்களுக்கும் கந்தபுராணங்கேட்கவந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசனமுதலியவைகளெல்லாம் தொண்டைநாட்டுள்ள இருபத்துநான்கு கோட்டத்து வேளாளப்பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாகவந்து பேராசையோடு கேட்கக் கச்சியப்பசிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஒருவருஷத்திலே முடித்தருளினார்.

புராணமுற்றுப்பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத் திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மி விம்மித் தண்டாகாரமாக விழுந்து கச்சியப்ப சிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து இரண்டுகைகளுஞ் சிரசின்மேலேறிக் குவிய நின்று துதித்தார்கள். கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத் திருமுறையோடுந் தந்தச்சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்கு கோட்டத்துமுள்ள வேளாளப்பிரபுக்களுள்ளே சிலர் சிவிகைதாங்க, சிலர் வெண்சாமரம் வீச, சிலர் குடை கொடி பிடிக்க, நானாவித மங்கலவாத்தியவொலியினாலே திக்குகளெல்லாஞ் செவிடுபட, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் சரவணபவ சரவணபவ என்று சொல்லும் பேரொலி தழைக்க, திருநகரவாசிகள் திருவீதிகளைச் சுத்தி செய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரிதூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க, தமது அருமைத் திருமேனியிலே தரிக்கப்பட்ட திரிபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷமாலைகளின் அழகையும், சின்முத்திரையையும், திருக்கண்களினின்று பொழியும் பரமானந்த வாரியையும் அடியார்கள் கண்டு மனநெக்குநெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ்செய்து, குமரகோட்டச்சந்நிதியை அடைந்து, சிவிகையினின்றும் இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய்த் திருமுன்னே வைத்தருளினார். உடனே எல்லாரும் கச்சியப்பசிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்றவழியும் தவிராது, ஆராமையினாலே பலகாலும் நமஸ்கரித்து, "பரமகருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ்நாட்டாரெல்லாரும் பிழைக்கும்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய இப்புராணமாகிய திவ்வியாமிர்தத்தை அடியேங்கள் செவிவாய் மடுத்து உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ்செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ்நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும், இக் கந்தபுராணத்தை மிகப்பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும் வாசிப்போரும் பொருள்சொல்வோரும் கேட்போருமாய் இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்துப் பேரானந்தப்பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப்பிழம்பாகிய கச்சியப்பசிவாசாரியர் பின்னருஞ் சிலகாலம் குமரகோட்டத்தடிகளைப் பூசை பண்ணிக்கொண்டும் ஞானநிட்டை செய்துகொண்டும் இருந்து, சிவத்தோடும் இரண்டறக்கலந்தனர்.

## அபியுக்தர் வாக்கு.

உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி யோங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்த புராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும்வெண் டாமரை மேவுமின்னு
மிச்செவி நாவினுக் கின்பா மமுது மெழுந்தனவே.

---

வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
  விரிந்தசிவா கமமுணர்ந்து மேன்மை பூண்டோன்
போதநிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
  புனிதமிகு கச்சியப்ப குரவ னானோன்
வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற
  மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத்
தேதமறு சகாத்தமெழு நூற்றின் மேலா
  யிலகுகந்த புராணமரங் கேற்றி னானே.

---

திருக்கைலாசபரம்பரைத் தருமபுரஞானசம்பந்ததேசிகராதீனத்துச்
சம்பந்தசரணாலய சுவாமிகள் அருளிச்செய்த

## கந்தபுராணச்சுருக்கம்.

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
  புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருளா தான
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
  வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
  சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
கார்தன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
  கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம்.

---

படிக்காசுப்புலவர் செய்த

## தொண்டைமண்டலசதகம்.

அந்தப் புரமு மறுநான்கு கோட்டகத் தாருமொன்றாய்க்
கந்தப் புராணம் பதினா யிரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல் லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப்பு ராண மரங்கேற்றி னார்தொண்டை மண்டலமே.

சுபமஸ்து.

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணம்

## மூலமும், உரையும்.

### காப்பு.

(விநாயகக்கடவுள்.)

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

இதன்பொருள்: திகழ் தச கர செம் முகம் ஐந்து உளான்— விளங்காநின்ற பத்துத் திருக்கரங்களும் செப்பமாகிய ஐந்து திருமுகங்களுமுள்ளவராகிய சிவபெருமானது, சகட சக்கர தாமரை நாயகன்—தேருக்குருளாய் நின்ற தாமரைக்குத் தலைவனாகிய சூரியன், அகட சக்கர வில் மணியா உறை— வயிற்றின்கண்ணே வட்டித்த ஒளி பொருந்தியஇரத்தினமாகஇருக்கப்பெற்ற, விகட சக்கரன் மெய் பதம் போற்றுவாம்— விகடசக்கர விநாயகரது மெய்ம்மையாகிய திருவடிகளை (இந்நூலியற்றும்வழி நேருமிடர்களையொழித்தற்பொருட்டு யாம்) துதிப்பாம் என்றவாறு.

திகழ் தசக்கரம்—திகடசக்கரம் எனப்புணர்ந்தமைக்குவிதி வீரசோழியத்துச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுள் "நான்கொடு மூன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமே,லென்ற ஞகாரம தாம்பதி னைந்திலொ டெண்ணிரண்டாய்த்,தோன்று முடற்பின் நகாரம் வரினிரண் டும்மொருகா, லான்றவை தாமுட லாமுன்பி னொற்றுக் கழிவுமுண்டே" என்பதாம். அற்றேல், இக் கந்தபுராணமரங்கேற்றுஞ் சபையிலோர்புலவர், இவ்விரு பதங்களுஞ் சந்திபெற்றதற்கு விதியாதெனக் கடாவியதும், வடமொழி தென்மொழி யிரண்டினும் பெருந்திறமையுடையராய கச்சியப்பசிவாசாரியர் விடையிறுக்கலாற்றாது மயங்கியதும் யாது பற்றியெனின், இக் கந்தபுராணமியற்றியகாலத்திற்றானே வீரசோழியமு மியற்றப்பட்டமையின் அந்நூலக்காலத்தில் வழங்கப் பெறாமையானும், முற்காலத்திலியற்றப்பட்டு வழங்கிய நூல்களாகிய தொல்காப்பிய முதலியவற்றிலிப் பதப்புணர்ச்சிக்கு விதி நேரே பெறப்படாமையானும், தமதருளால் இக்கந்தபுராணம் இயற்றப்பட்டதென்பதையும் இச் செய்யுளின் முதலடி தம்மாலருளிச் செய்யப்பட்டதென்பதையும் புலவர் விஞதன் முகத்தானே யுலகினர்க்கு விளக்குந் திருவுள

த்தினராய சுப்பிரமணியப் பெருமான் முன்னர்ப் பெருவழக்காய் வழங்கப்பெறாத இச்சந்தியைப்புணர்த்திக் கச்சியப்பசிவாசாரியஸ்வாமிகளுக்குச் சொப்பனத்திற்றிருவாய்மலர்ந்தருளியதனானுமென்க.

**பத்துக்கைகளாவன:** வலப்பக்கத்தில், சூலம் மழு வாள் வச்சிரம் அக்கினி என்பனவமைந்த ஐந்தும், இடப்பக்கத்தில், அபயம் பாசம் மணி சர்ப்பம் அங்குசம் என்பனவமைந்த ஐந்துமென்க; (பிறவாறுங்கூறுப; ஈண்டுவிரிவஞ்சிவிடுக்கப்பட்டது). அவற்றுட் சூலம் முக்குணவடிவும், மழுச்சத்திவடிவும், வாள் பராக்கிரமவடிவும், வச்சிரம் பேதித்தற்கியலாதவடிவும், அக்கினி சங்காரவடிவும் மகாமாயையின் மேலிருக்கிற பதார்த்தங்களை வெளிப்படுத்துவதும் பாசங்களைநீறாக்குவதும், அபயம் எல்லாவுலகங்களையும் காக்குஞ்சத்தியும், பாசம் மல மாயா கன்மவடிவும், மணி ஓசை வடிவும் மந்திரங்களைவிளக்குவதும், நாகம் எவற்றையும் விதிக்கும் காம்பீரியசத்தியும், அங்குசம் ஆன்மாவுக்குப் போக்கியப்பிராப்திகளை நியமிப்பதுமெனக்காமிகாகமங்கூறுகின்றது.

**ஐந்துமுகங்களாவன:** ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்பனவாம். அவை தாமிருக்குமிடவகுப்பால் முறையே நடுமுகம் கிழக்குமுகம் தெற்குமுகம் வடக்குமுகம் மேற்குமுகம் எனவும் வழங்கத்தக்கன. ஈசானமுகம் பளிங்குநிறமும், தற்புருஷமுகமும் வாமதேவமுகமும் குங்குமநிறமும், அகோர முகம் கருநிறமும், சத்தியோசாதமுகம் வெண்ணிறமும் உடையன; ஆதலின், செம்முகமென்பதற்குச் சிவந்தமுகமெனப் பொருள் கோடல் பொருந்தாது.

உளான் குறிப்புவினையாலணையும் பெயர். அகடவென்பதிலகரஞ் சாரியை. ஆகவென்னும் வினையெச்சமீற்றுயிர்மெய் கெட்டு ஆவெனநின்றது. "தாமரைநாயகன்... உறை விகடசக்கரன்" என இயைக்க. விகடசக்கரன் வடநூன்முடிபு. விகடக்கூத்திற்குவந்து சக்கரத்தைக் கொடுத்தவர் என்பது பொருள். தக்கன்யாகம் அழிந்தபோது விஷ்ணுவிடுத்தசக்கரத்தை வீரபத்திரக்கடவுள் பூண்ட வெண்டலையொன்றுகௌவியது. விஷ்ணுமூர்த்தியின்பொருட்டு அச்சக்கரத்தைப் பெறவிரும்பிய அவரது சேனாபதியாகிய விடுவசேனன், கால்களிரண்டையும் கைகளிரண்டையும் வளைத்து வாயையும் நாசியையும் கண்களையுஞ்சுரித்தசைத்து, பற்கடோன்ற விகடக்கூத்தாடினான். அதனைக்கண்டோரெல்லோருநகைக்க வெண்டலையுநகைத்தது; நகைத்தலும், சக்கரம் அதன்வாயினின்றும் பூமியில்விழ, விநாயகக்கடவுள் அதனைவிரைந்து கவர்ந்து ஒன்றுமறியாதார்போன்றிருந்தனர். அதுகண்ட விடுவசேனன் அவர்முன்னும் விகடக்கூத்தாடிவேண்ட அவ்விநாயகக்கடவுள் சக்கரத்தை அவன்கையிற் கொடுத்தருளினார். இச்சரித்திரத்தை "ஏக்கறவானவனியற்றும்விகடகடநெடும்போதெம்பெருமானோக்கி, மாக்கருணைசுரந்தருளியாழியவன்றனக்களித்தான்வரத்தான்மிக்கீர், போக்கறுமிக்காரணத்தானன்றமுதற்காஞ்சியினப்புழைக்கைத்தேவை, யூக்கமுறுந்திறல்விகடசக்கரவிநாயகனென்றுலகங்கூறும்" எனக்காஞ்சிப்புராணங்கூறுதலானுமறிக. இவர்க்கு விகடர் என்னும் பெயர்வழங்குவதிக்காரணத்தானன்று. பேரழகுடையராதல்பற்றியென்க. விகடக்கூத்தென்பதிக்காலத்திற் கோணங்கிக்கூத்தென வழங்குகின்றது.

யாமென்னுந் தோன்றாவெழுவாய் அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. போற்றுவாமென்பதாசிரியர் தன்னையுயர்த்தற்கட்கூறியபன்மையன்று. படிப்போர் கேட்போர் முதலியோரையுமுளப்படுத்தற்குக் கூறியதென்க.

நம்மால் முன்னர்க்காட்டப்பட்ட விசேடங்களையுடைய சூலமுதலியவற்றையேந்திச் சிறந்தமையால் "திகடசக்கரம்" எனவும், பதிபசுபாசலக்ஷணங்களைத்தெருட்டி முத்திநெறியைக் காட்டுநூல்களாகிய வேதாகமங்கள்தோன்றுதற்கிடமாதலால் "செம்முகம்"

எனவும், உதயமாத்திரையானே புறத்தாமரைகளையும், சிவபெருமானது நேத்திரங்களுளொன்றாகின்ற அவரதுகடைக்கணோக்கமாத்திரையானே, அஞ்ஞானவிருளைப்போக்கி மெய்ஞ்ஞானவொளியைப் பரப்பி, அன்பர்களதுஅகத்தாமரைகளையு மலர்த்துதலால் "தாமரைநாயகன்"எனவும், அத்தகைய சூரியன், தந்தையாகிய சிவபெருமானுக்கு நேத்திரமும், திரிபுர தகனஞ்செய்தகாலத்தேறிய தேர்க்குருளுமாயது போலவே, மைந்தராகிய விநாயகக்கடவுளுக்கு, பாரமேச்சுரரூபங்கொண்டகாலத்தில் வயிற்றினணியாகிய உதரபந்தனத்திலிழைக்கப்படும் மாணிக்கரத்தினமாகக் காணப்படுதலால், "செம்முகமைந்துளான் சகடசக்கரத் தாமரைநாயகன்.........மணியாவுறை விகடசக்கரன்"எனவும், விகடக்கூத்தையுவந்துநோக்கிச் சக்கரமீந்ததுபோல, நம்புன்கவியையுமுவந்துகேட்டுக்கருணைசெய்வரென்பதுபோதர "விகடசக்கரன்" எனவும்,அத்தகைய பெருமானதுபாதங்கள் இகபரசாதனங்களாகிய போகமோக்ஷங்களை வழிபடுவோர்க்குப் பயத்தலொருதலையாதலின், "மெய்ப்பதம்" எனவும் விசேடித்தார். ஆகவே இத்தகைச்சிறப்பினையுடைய விநாயகப்பெருமானது பாதங்களைத் தொடங்குமிக்காப்பியஞ்சொற்குற்றம் பொருட்குற்றமுதலியவற்றாலிழுக்குறாதினிது நிறைவேறுமாறு நூலாசிரியர் துதித்துவேண்டினரென்பதிச் செய்யுளின்றாற்பரியமாயிற்று.

சூரியன் இரத்தினமாக இருக்கப்பெற்றானெனவே சந்திரன்முதலிய கிரகங்களும் மற்றைத்தேவர்களும் உலகங்களும் பிறவும் ஏற்றவாறு இருக்கப்பெறுதலும் அமையும். அத்தன்மையும் வணங்கப்படுதற்கு விசேடகாரணமாயது.

"தாமரைநாயகன்.........மணியாவுறை விகடசக்கரன்"எனச்சுட்டியதனால் விநாயகப்பெருமானுடைய பாரமேச்சுரரூபத்தைத் துதித்தாரென்பது பெறப்பட்டது. இதுபற்றியன்றே, இந்நூலாசிரியர் பின்னுமோர் செய்யுளால் விநாயகரைத்துதித்தனர்.

தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்தியுன்மாலியென்னு மூன்றசுரர்களும் பிரமதேவரைநோக்கி எண்ணிறந்தகாலந் தவம்புரிந்து, பொன் வெள்ளி இரும்பு என்னு மூன்றுலோகங்களாற் பூமிமுதலிய மூவுலகங்களிலும் முப்புரமமைக்கவேண்டுமெனவும், அவை ஆயிரம் வருடங்கட்கொருமுறை விரும்பிய இடங்கட்குப் பெயரவேண்டுமெனவும், அப்புரமூன்றுங்கூடியவழிச் சிவபெருமான் ஒருகணையாலழித்தாலேயன்றிப் பிறவாற்றாலழியாதிருக்கவேண்டுமெனவும் வரம்பெற்று, அசுரத் தச்சனால் அவ்வாறு முப்புரங்களையும் இயற்றுவித்து அவற்றில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் சிவபூசை செய்பவர்களாயினும், தங்குலவியற்கைதவறாது தேவர்களோடுபகைத்து, தங்கள் புரங்களோடும் சென்று வைகுண்டமுதலிய லோகங்களைச்சிதைத்தனர். அவர் செய்யுந்தீங்கையாற்றாத தேவர்களுடன் விஷ்ணுமூர்த்தி மேருமலையின் வடபாகத்துச் சென்று சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய அச்சிவபெருமானெழுந்தருளி, "நமதடியராய அசுரரைச் செகுத்தல் ஆகாது" என்றருளிப்போயினர். பின்னர் விஷ்ணு புத்தவடிவு கொண்டு சென்று, அவ்வசுரர்க்குள் மூவர் தவிர ஏனையோரையெல்லாம் துர்ப்போதனையால் வசப்படுத்தி மீட்டும் மேருமலையிற்போய்த் தவஞ்செய்தனர். அஃதறிந்த சிவபெருமான் திரிபுரத் தசுரரைச் செயித்தற்கு வேண்டிய தேர்முதலிய கருவிகளை நிரைப்படுத்துமாறு அறிவித்தனர். அச்சமயத்தில் தேவர்கள் சந்திரசூரியர்களை உருளாகவும், பதினான்குலோகங்களையும் தட்டுகளாகவும், ஆகாயத்தை ஆசனமாகவும், உதயாஸ்தமனகிரிகளைக் கொடிஞ்சியாகவும், நக்ஷத்திரங்களை விதானமாகவும், இவ்வாறே பிறவற்றையும் வேண்டிய அங்கங்களாகவும் திவ்வியமான ஓர் மகாரதத்தை நிருமித்தனர். அந்த ரதத்தையே ஈண்டுச்சகடமெனச்சுட்டினர்.

விநாயகக்கடவுள் முன்னொருகாலத்திலே இந்திரனொருவன்கொண்ட கர்வத்தை

நீக்குமாறு, திருவடிகள் கீழேழுலகங்கட்குங் கீட்செல்லவும், திருமுடிகள் மேலேழுலகங்கட்கும் மேற்செல்லவும், அளவற்றஅண்டங்கள் ரோமத்துவாரங்கடோறும் பொருந்தவும், அனந்தம் விஷ்ணுக்களும் பிரமர்களும் தேவர்களும் தம்முருவத்தில் அமைந்து விளங்கவும் ஓர் விசுவரூபத்தைக்கொண்டனர். அப்பொழுது சூரியன் அவரது வயிற்றில் ஓர் இரத்தினம்போலக் காணப்பட்டனன். அவரது விசுவரூபத்தைச்சுட்டிஇவ்வாறு துதித்தலாற் போந்த பயன் யாதென்பதை "விச்சுவவந்தியரென்றுங்கணேசரென்றும்விச்சுவமாமீசரென்றும், விச்சுவாதிகரென்றம்பரேசுரென்றும்விச்சுவாதீதரென்றும், நிச்சலுநித்தியரென்றுநிகழ்சச்சிதானந்தசொரூபரென்று, முச்சகநாயகரென்று மீசரென்றுமுனையடியேன்முழுப்பக்கண்டேன்." என அவ்விந்திரன்கூறித் துதித்த செய்யுட்கருத்தானுணர்க. (௧)

வேறு.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

இ—ள்: உச்சியில் மகுடம் மின்ன—சிரசிற் கிரீடம் ஒளிவீசவும், நுதலின் ஓடை ஒளிர்தர—நெற்றியிற் பட்டம் பிரகாசிக்கவும், வச்சிர மருப்பினொற்றை மணிகொள் கிம்புரி வயங்க—வைரித்த ஒற்றைக் கொம்பில் ரத்தினமழுத்தப்பெற்ற கிம்புரி விளங்கவும், மெய் செவி கவரி தூங்க—உண்மை பொருந்திய காதுகளாகிய சாமரங்கள் தூங்கவும், மா வேழமுகம் கொண்டு கச்சியின் உற்ற—பெருமை பொருந்திய யானைமுகத்தைக் கொண்டு காஞ்சிபுரத்தி லெழுந்தருளிய, விகடசக்ர கணபதிக்கு அன்பு செய்வாம்—விகடசக்கர விநாயகரிடத்து (யாம்) அன்பு வைப்பாம்; எ—று.

உபலக்கணத்தாற் றுதித்தன் முதலியனவற்றையும் அமைத்துக் கொள்க. இன்னோரன்னவாறு பின்வருஞ் செய்யுட்களினும் வேண்டியவற்றை அமைத்துக்கொள்க. கிம்புரி கொம்பிலணியப்படும் பூண். செவிக்கவரி ரூபகம். மஹா என்னும் வடசொல் மா எனத்தமிழில் வழங்கிற்று. "சக்ர" என்பது தமிழிலக்கணவிதிபெறாது வடசொன்னீர்மையாக நின்றது. விகடசக்கரனென்னும் பெயரின் விளக்கம் முற்செய்யுளிற் குறிக்கப்பட்டது. கணபதி கணங்களுக்குத்தலைவர். அன்பின் வயத்தராய்த் தொண்டர் மனம்பரிந்து கூறும் துதிகளைக்கேட்டலின் "மெய்ச்செவி" எனவும், மென்மை படைத்தனவும், இருமருங்கும்வீசவனவுமாதலின் "செவிக்கவரி" எனவும், பேரழகுடையதும் பிரணவரூபமுமென்பதுபோதர "மாமுகம்" எனவும், திருவேகம்பத்திலுள்ள திருக்கோயிலிலெழுந்தருளிய மூர்த்தியென்பது போதர "கச்சியின் உற்ற விகடசக்ர கணபதி" எனவுங்கூறினர். செவிக்கவரியென்றதற்கு ஏழாம்வேற்றுமை யுருபுவிரித்துச் செவியிற்கவரியெனப் பொருள் கூறுவாருமுளர். விகடசக்ரனென்னுஞ் சொல்லை ஈண்டுப்பிரயோகித்ததனானோர்ந்த பொருள்விரிவை முற்செய்யுளிற் குறித்தவாறுகொள்க. (௨)

(சுப்பிரமணியக்கடவுள்)

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி.

இ—ள்: காஞ்சி மா அடி வைகும் செவ்வேள் மூவிரு முகங்கள் போற்றி—காஞ்சிகரத்திலுள்ள மாமரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளினுடைய ஆறுதிருவதனங்களும் (எம்மால்) துதிக்கப்படுவன; முகம் பொழி கருணை போற்றி—அந்தத்திருவதனங்கள் பொழிகின்ற கிருபைவெள்ளம் துதிக்கப்படுவது; எவரும் துதிக்கின்ற இராறுதோள் போற்றி—அனைவருந்துதிக்கும்படி விலைபெற்ற பன்னிரண்டுதிருக்கரங்களுந் துதிக்கப்படுவன; மலர் அடி போற்றி—செந்தாமரை மலர்போன்ற பாதங்கள் துதிக்கப்படுவன; அன்னான் சேவலும் மயிலும் போற்றி—அந்தக்கடவுளினுடைய சேவற்கொடியும் மயில்வாகனமுந் துதிக்கப்படுவன; திருக்கை வேல் போற்றி போற்றி—திருக்கரத்திற் பொருந்திய வேலாயுதந் துதிக்கப்படுவது துதிக்கப்படுவது. எ—று.

போற்றியென்பதனுள் இகரஞ்செயப்படுபொருள் விகுதி, ஊருணியென்பதிற்போல. வாழியவென்பது வாழியெனவந்தாற்போலவந்த வியங்கோண் முற்றெனக்கொண்டு காக்கவெனப்பொருள் கூறினும் பொருந்தும். அங்ஙனங்கூறின் எம்மையென்னுஞ்செயப்படுபொருள் வருவிக்க. பொழிதல்வினைக்கேற்பக்கருணையை வெள்ளமெனவுரைத்தாம். கருணை முகவிலாசம். மாமரத்தருகிலிருக்குங்கடவுளை மாமரத்தின்கீழ் இருப்பதாகக்கூறியதிலக்கணை. செவ்வேள் என்பது சிவந்த நிறத்தையுடைய வேள். செம்மையான குணத்தினையுடைய வேள் எனவும் பொருள்படும். வேள் வேட்கப்படுபவர். "பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநத—மாவிற் கருமுனியா யானைக்-கமரரும்ப-ரேவிற்றிருமா லெனச்சிறந்த தென்பவே—பாவிற்கு வள்ளுவர் வெண்பா" என்னுங்கவிசாகரப் பெருந்தேவனார் வாக்கின்படி தலைமைபற்றியவழக்காய் "மலர்" என்பது தாமரை மலரையுணர்த்திற்று; இதனை, "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்பதனானுமறிக. சேவன் முதலியன அப்பெருமானுக்குப் புறத்துறுப்பாதல்பற்றி முன்னர்க்கூறிய அகத்துறுப்புகளினின்று வேற்றுமைதோன்ற அன்னானென்னுஞ் சொல்லை இடைப்பெய்து பிரித்தோதினர். எண்ணும்மைகள் விரித்துரைக்கப்பட்டன.

முருகக்கடவுளுடைய ஆறுதிருமுகங்களுள் ஒருதிருமுகம் உலகம் விளங்கப்பல கிரணங்களைத் தோற்றுவிப்பது. அதற்குரிய திருக்கரங்களுளொன்று தேவ விருடிகளைப்பாதுகாத்தற்கு எடுக்கப்பட்டது; மற்றையது பக்கத்தில் வைக்கப்பட்டிருப்பது. மற்றொருதிருமுகம் அன்பர்துதியைக் கேட்டுவந்து வரங்கொடுப்பது. அதற்குரியகைகளுளொன்று அங்குசஞ்செலுத்திக்கொண்டிருப்பது; மற்றையது தொடையில் வைக்கப்பட்டது. மற்றொருதிருமுகம் அந்தணர் செய்யுய்வேள்வியிற்றீங்குறுவண்ணஞ்சிந்திப்பது; அதற்குரிய கைகள் அவ்வேள்விக்கிடர்விளைக்கும் அசுரரைத் தூரத்தும்பொருட்டுப் பரிசையையும்வேலையும வலமாகச்சுழற்றுவன. மற்றொருதிருமுகம் வேதாகமங்களின் மறைந்துகிடக்கும் அரும்பொருள்களை இருடிகட்குப்போதிப்பது; அதற்குரிய கைகளுளொன்று மார்பில் வைக்கப்பட்டு ஞானமுத்திரையைக்காட்டுவது; மற்றைக்கை மாலையோடுசேர்ந்திருப்பது. மற்றொருதிருமுகம் அசுரரைவதைத்துப் போர்க்களவேள்வியை வேட்பது; அதற்குரிய கைகளுளொன்று தொடியுடன் மேற்சென்று சுழன்று களவேள்வியை வேட்பது; கீழ்வீழ்கின்ற மற்றைக்கை இன்னோசையையுடைய மணியைமாறியொலிப்பது. மற்றொருதிருமுகம் வள்ளிநாயகியுடன்மகிழ்வுடாராட்டிக் குறுநகைபுரிவது; அதற்குரியகைகளுளொன்று முகிலினால் மழைபெய்விப்பது; மற்றையது சுவர்க்கலோகப் பெண்கட்கு மணமாலை சூட்டுவது. (இக்கருத்துத் திருமுருகாற்றுப்படையிற் கூறியவாறு குறிக்கப்பட்டது.)

இங்கே குறிக்கப்பட்ட விசேடங்களையுடையன வாதலால் ஆறு திருமுகங்களும்

அவற்றினின்று தோன்றுங்கருணையும் பன்னிருதிருக்கரங்களும், துயரமுற்றோர்க்குப்பற்றுக்கோடாதலாற்பாதங்களும், அருந்தவஞ்செய்து கொடியாகவும் வாகனமாகவும் பேறுபெற்றனவாதலாற் சேவலும் மயிலும் துதிக்கப்பட்டன.

சூரனுதியோர் நல்லொழுக்கங்களை மாற்றித் தேவர் முதலிய பெரியோர்களை வருத்தியகாலத்து, அவரைத்தொலைத்து வருணாச்சிரமதருமங்களைநாட்டி உலகத்தைக்காக்குமாறு பன்னிரு படைகளையும் பரித்தனவும், ஏனைக்காலங்களின் முன்னர்க்குறித்தவாறுதொழினிகழ்த்துவனவுமாதலின் "எவருந்துதிக்கநின்றவிராறுதோள்" எனவும், தலமூர்த்தி யென்பது போதர "காஞ்சிமாவடிவைகுஞ் செவ்வேள்" எனவும், கருநிறமுடையனுய்க் காமத்தை மிகுவிக்குமதவேள் போலாது செந்நிறமுடையராய் ஞானத்தையூட்டும்வேளாதலால் "செவ்வேள்" எனவும், செந்நிறமும் தண்மையும் அஞ்ஞானவிருளுடையார்க் கொடுங்கலும் மெய்ஞ்ஞான வொளியுடையார்க்குவிரிதலு முடைமையால் "மலரடி" எனவும் விசேடித்தார்.

இச்செய்யுளிற் போற்றியென்பது பலமுறைவருதல் சொற்பொருட்பின் வருநிலையணி. மலரடி உவமையணி. (அ)

## நூற்பயன்.

இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

இ—ள்: அந்தம் இல் அவுணர் தங்கள் அடல் கெட முனிந்த—முடிவில்லாத அசுரர்களது வலிமை கெடும்படி கோபித்தழித்த, செவ்வேல் கந்தவேள் புராணந்தன்னை காதலித்து ஓதுவோர்—சிவந்த வேலாயுதத்தைத்தரித்த கந்தஸ்வாமியினது (இந்தப்) புராணத்தை விரும்பிப்படிப்பவர்கள், பார்மேல் இந்திரர் ஆகி—பூமியில் இந்திரசம்பத்தையுடையவர்களாய், இன்பம் உற்று இனிது மேவி—இப்பூவுலகத்திற்சுகாநுபவத்தைப் பெற்று நன்றாக வாழ்ந்திருந்து, சிந்தையில் நினைந்த முற்றி சிவகதியதனில் சேர்வர்—மனத்தில் நினைத்த கருமங்கள் நிறைவேறப்பெற்று (தேகாந்தத்தில்) சிவபதத்திற் புகுவர்; எ—று.

ஏ அசை நிலை. சிவகதியதனில் என்பதில் அது அன் என்பனவும் அவுணர் தங்களென்பதில் தம் என்பதும் புராணந்தன்னை யென்பதில் தன் என்பதும் சாரியைகள். கந்தவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. நினைந்த வினையாலணையும்பெயர். ஓதுவோரென்பதில் பொருள் சொல்வோரையும் கேட்போரையும் உபலக்கணத்தாலமைக்க. இந்திரர் என்பதற்கு செல்வமுடையோரென்பது பொருள். இனிதுமேவல் நோய்பகையின்றி வீரம் அதிகாரம் கீர்த்தி முதலியவற்றாற் குறைவறவாழ்தல்.

சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தினுலே நூற்றெட்டுகங்காறும் இறப்பின்றிப்பல்கினேரென்பது போதர "அந்தமிலவுணர்" எனவும், அவ்வவுணரைச் சங்கரித்தனராயினும் அதுதம்மைப்பூசித்த,இந்திரன் முதலாகிய தேவர்க்குச் சுவர்க்கலோகபோகத்தையும் சுயாதீனவாழ்வையுங் கொடுத்தற்கேயாதலின் மனோரதங்களைப் பெறுமாறு எவராலும் வேட்கப்படுங் கடவுளென்பது போதர "அவுணர் தங்களடல்கெடமுனிந்த..........கந்தவேள்" எனவும், அத்தகைய கடவுளின் சரித்திரமாகிய இக்கந்தபுராண

த்தை மெய்யன்புடன் விரும்பியோதினோரேயன்றி, மற்றையோர் பலன்பெறுதலரிதாகலின் "காதலித்தோதினோர்" எனவும் விசேடித்தார். செல்வங்களெல்லாவற்றினும் இந்திரச்செல்வம் பெரிதாதலின் "இந்திரராகி" என்றார்; இதனை "உந்திவிரப்புறமுண்டியதின்றி, முந்திவிரப்பிடைமூழ்கினன்வல்லே, வெந்திறலாளிவியன்றவிசேறி, யிந்திரனல்வளமெய்தியதொத்தான்" என இந்நூலிற்றானே பிறாண்டு கூறப்படுதலாலுமுணர்க.

"கந்தவேள் புராணந்தன்னை......ஓதுவோர் இந்திரராகி......இன்பமுற்று......சிவகதியதனிற் சேர்வர்" எனக்கூறியதனால் புராணங்கேட்டலாகிய அறமும் அதனாற் பெறப்படும் பொருள் இன்பம் வீடென்பனவும் ஆகநூற்பயனான்கும் இப்புராணத்தாற் சித்தியாமென்பது குறிக்கப்பட்டது. (௪)

## வாழ்த்து.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

இ—ள்: உலகம் எல்லாம்—உலகங்களெங்கும், வான் முகில் வழாது பெய்க—ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற மேகங்கள் (மாதமும்முறை) தவறாது மழையைப்பொழிக; மலிவளம் சுரக்க—நிறைந்தவளங்கள்பெருகுக; மன்னன் கோல் முறை அரசு செய்க—அரசன் செங்கோன் முறைப்படி அரசியலை நடாத்துக; உயிர்கள் குறைவு இலாது வாழ்க—ஆன்மாக்கள் நோய்வறுமைமுதலியஇடையூறுகளின்றி (விருத்தியாகி) வாழுக; நான்மறை அறங்கள் ஓங்க—நான்குவேதங்களிலுங் கூறப்பட்டுள்ள (வருணாச்சிரம) தருமங்கள் தழைக்க; நல் தவம் வேள்வி மல்க—நல்லதவங்களும் யாகங்களும் விருத்தியாகுக; மேன்மை கொள் சைவநீதி விளங்குக—மகிமையையுடைய சைவ சமயாசாரம் பிரகாசிக்க. எ—று.

உலகமெல்லாம் கடைநிலைத்தீபகம். குறைவிலாதென்பதற்குச் சுருங்குதலின்றிப் பெருகியெனினுமாம். தவம் வேள்வி என்பன நான்மறையறத்தி லடங்குமாயினும் கருமகாண்டத்துக் கூறப்பட்டவற்றுட் சிறந்தது வேள்வியும் ஞானகாண்டத்திற் கூறப்பட்டவற்றுட் சிறந்தது தவமுமாதலாற் பின்னும் எடுத்துக்கூறி வாழ்த்தினார். மழைபெய்தன் முதலியன முறையே ஒன்றற்கொன்று காரணகாரியமாய் நிற்றலின் அதற்கேற்ப நிரைப்படுத்துக்கூறினார். ஐம்புலன்களையடக்கிச் செயப்படுந்தவமென்பது போதர "நற்றவம்"எனவும், அறுசமயங்களின்மிக்கதாதலின்"மேன்மைகொள்சைவம்"எனவும் விசேடித்தார். சைவம் சிவசம்பந்தமானது. சிவபெருமானைக் கடவுளாகக்கொள்ளுஞ்சமயமென்பதுவிளக்கம். இச்சமயம்மற்றைச்சமயங்களெவற்றினும் மேலானதென்பதை"சைவசமயமேசமயஞ்சமயாதீதப்பழம்பொருளைக் கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப் பொய்வந்துழலுஞ்சமயநெறிபுகுதவேண்டாமுத்திதருந் தெய்வசபையைக்காண்பதற்குச்சேரவாருஞ்செகத்தீரே" என்னுந்தாயுமானசுவாமிகள் திருவாக்கானுமுணர்க. இச்செய்யுள் வாழ்த்தென்னுமலங்காரம். (௫)

# கடவுள் வாழ்த்து.

கடவுள் வாழ்த்தென்பது கடவுளை வாழ்த்தும் பகுதியென விரிக்கப்படுதலால் இரண்டாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கட—உள்=கடவுள், கடத்தல்; கடத்தலாவது தத்துவாதீதமாய் நிற்றல். அதனையுடையஇறைவர்க்காதலாற் றொழிலாகுபெயர். வாழ்த்து துதித்தல்.

## (சிவபெருமான்.)

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
யருவந் தனையு முருவத்தையு மன்றி நின்ற
னொருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்.

இ—ள்: திருவந்த தொல்லை புவனத்தொடு தேவர் போற்றி—சிறப்புப்பொருந்திய பழைய (இப்) பூவுலகத்தாரும் தேவர்களும் துதித்து, பெருவந்தனை செய்து அறிதற்கு அரும் பெற்றி எய்தி—பெரிய வழிபாட்டைச்செய்தும் (அத்தகைய பிரயத்தினங்களால்) உணர்தற்கரிய தன்மையைப்பொருந்தி, அருவந்தனையும் உருவத்தையும் அன்றி நின்றான் ஒருவன்றனது பதந்தன்னை— அருவத்தன்மையையும் உருவத்தன்மையையும் நீங்கிநின்றவராகிய ஒப்பற்ற சிவபெருமானது திருவடிகளை, உளத்துள் வைப்பாம்—(யாம்) மனதில் இருத்துவாம்; எ—று.

அருவந்தனையும் ஒருவன்றனது பதந்தன்னை என்பவற்றில் தன்மூன்றுஞ்சாரியைகள். உளத்துள் வைத்தல்=தியானித்தல். புவனம் ஆகுபெயர். நின்றான் வினையாலணையும்பெயர். உம்மைகளிரண்டுமெண். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. மங்கலமுதலியபொருத்தங்கள் பத்துமமையக் காப்பியமுதற்செய்யுளின் முதற்சீர்தொடுத்தன் மரபாதலின் அதற்கேற்பத்"திருவந்த"எனத்தொடங்கினர். கடவுள்வழிபாடு பகிர்யாகம் அந்தர்யாகம் எனஇருவகைப்படும். அவற்றுட் பகிர்யாகமாவது சிலை முதலியவற்றானியன்றமூர்த்தியிலே கிரியாமார்க்கத்தாற் கடவுளை ஆவாகனஞ்செய்து வழிபடல். இது வெளிப்பூசையெனவும்படும். அந்தர்யாகமாவது முற்குறித்தவாறு பகிர்யாகஞ்செய்து பரிபக்குவமுற்றோர் யோகமார்க்கத்தினாலே கடவுளை அகத்திலமைத்து வழிபடல். இது உட்பூசையெனவும்படும். இச்செய்யுளிற் பெருவந்தனை யென்றது அந்தர்யாகத்தை. என்னை? உணர்தற்கெளிவந்தருளும் பூசையதுவாகலான். "விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல் — மறையநின்றுளன்மாமணிச் சோதியான்— றுறவுகோனட்டுணர்வுக்கயிற்றினான்— முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே" என்னும் திருநாவுக்கரசுஸ்வாமிகள் தேவாரத்தானுமறிக. அறிதற்கரும்பெற்றியாவது:—காண்டல் முதலிய மூவகையளவைகளாலும் பிரமாணித்தற் கதீதராய் நிற்றல். அருவத்தை நீங்கிநிற்றலாவது:—சராசரங்களெல்லாந் தாமேயாய் நிற்றல். உருவத்தை நீங்கிநிற்றலாவது:— எல்லாந்தாமேயாய் நின்றவழியுந் தமக்கென வேறோருருவின்றி நிட்களராய் நிற்றல். இவையிரண்டுமின்றி நிற்றலாவது:—நிட்களராகிய பரமசிவன் மெய்ஞ்ஞானிகள் தியானத்தாலளவிடுதற்பொருட்டுச் சத்திவிகற்பமான கலைகளானிரம்பப் பெற்றுத் தியானமூர்த்தியாய்நிற்றல். ஒருவன்=அத்துவிதீயன். அதாவது இரண்டாவதற்குப் பிறிதுபொருளின்றித் தாமே பரம்பொருளாய் நிற்பவர். இச்செய்யுளாற் சிவபெருமானது அருவுருவத்திருமேனி துதிக்கப்பட்டது. (க)

ஊனாகி யூனு ளுயிராயுயிர் தோறு மாகி
வானாதி யான பொருளாய்மதி யாகி வெய்யோன்
றானாகி யாண்பெண் ணுருவாகிச் சராச ரங்க
ளானான் சிவன்மற் றவனீள்கழற் கன்பு செய்வாம்.

இ—ள்: ஊன் ஆகி—உடலாகி, ஊன் உள் உயிர் ஆய்—அவ்வுடலினுள்ளிருக்குமான்மாவுமாகி, உயிர்தோறும் ஆகி—அந்த ஆன்மாக்கடோறும் (வியாபித்திருக்கும் பரமான்மாவும்) ஆகி, வான் ஆதி ஆன பொருள் ஆய்—ஆகாயமுதலாகிய பஞ்சபூதங்களுமாகி, மதி ஆகி—சந்திரனும் ஆகி, வெய்யோன் தான் ஆகி—சூரியனுமாகி, ஆண் (உரு)பெண் உரு ஆகி—ஆண்வடிவமும் பெண்வடிவமும் ஆகி, சராசரங்கள் ஆனான் சிவன்—இயங்கியற்பொருளு நிலையியற்பொருளுமானவர் சிவபெருமான்;(ஆதலால்), அவன் நீள் கழற்கு அன்புசெய்வாம்—அப்பெருமானது நெடியபாதங்களில் (யாம்) அன்புவைப்பாம் எ—று.

தான் சாரியை. மற்று அசைநிலை. ஊன் ஆகுபெயர். ஆனான் வினையாலணையும்பெயர். உயிர்தோறுமாதல் உயிர் உடம்பையுறைவிடமாகக்கொண்டுநிற்றல்போல, சிவபெருமான் உயிரையுறைவிடமாகக்கொண்டு கண்ணுக்குக் கதிரொளிபோலின்றியமையாதியக்கி நிற்றல். பூதங்களைந்துநிலமுதலெண்ணப்படுவனவாயினும் ஈண்டு அவற்றினுற்பத்திக்கிரமத்திற்கிசைய "வானாதியானபொருள்" எனப்பட்டன. சிவன் என்பது மங்களமுடையவர், சுகமுடையவர் எனப்பொருள்படும்.

ஊனாகி ஊனுளுயிராய் உயிர்தோறுமாகி ஆண்பெண் உருவாகி என்பவற்றால், ஆன்மாக் கலைமுதற்பிருதுவியீறாகிய தத்துவங்களுடன் கூடிப்புருடனெனப்படுதல் அமையும்; அமையவே புருடனும் பஞ்சபூதங்களுஞ் சூரியசந்திரருமாகிய அட்டமூர்த்தியாய்நிற்பவர் என்பது இச்செய்யுளிற்குறிக்கப்பட்டது. சிவபெருமான் அவ்வாறு நிற்றலை "நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன், புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றான்" என்பதனானும், "நிலனும்விசும்பாநிமிர்காநீர்தீயாம், அலர்கதிராம்வான்மதியாமன்றி- மலர்கொன்றை, ஒண்ணறுந்தாரானொருவனியமானனுமாய், எண்ணிறந்தவெப்பொருளுமாம்" என்பதனானுமறிக.

இச்செய்யுளால் உருவத்திருமேனி துதிக்கப்பட்டது. (௨).

வேறு.

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவும் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

இ—ள்: பிறப்பதும் இறப்பதும்—பிறத்தலும் இறத்தலும், பெயரும் செய்கையும்—நாமமும் தொழிலும், மறப்பதும் நினைப்பதும்—மறத்தலும் நினைத்தலும், வடிவும்—உருவமும், யாவையும் துறப்பதும் இன்மையும்—வெறுப்பும் விருப்பும், பிறவும் சூழ்கலா—(இவைபோன்றஉயிர்க்குணங்கள்) பிறவுஞ்சாரப்பெறாத, சிறப்புடை அரனடி சென்னிசேர்த்துவாம்—மகிமையினையுடைய சிவபெருமானது பாதங்களை யாம் சிரத்திலிருத்துவாம். எ—று.

பிறப்பது இறப்பது மறப்பது நினைப்பது துறப்பது என்பன ஈண்டுத் தொழிற்பெயர்கள். யாவையுந்துறத்தல் எல்லாப்பொருளையும்வெறுத்தல்; இன்மை அங்ஙனம்வெறு

க்காமை; எனவே விரும்புதல். பிற "அறிவருளாசையச்சமான, நிறைபொறையோர்ப்புக்கடைப்பிடிமையல், வென்றிபொச்சாப்பூக்கமறமத, மறவியினையவுடல்கொளுயிர்க்குணம்" என்னுஞ்சூத்திரத்திற் கூறியவற்றுள் இச்செய்யுளிலமையாதவை. சிறப்பு அறுகுணங்கள்; அவையாவன:— முற்றறிவு வரம்பிலின்பம் இயற்கையறிவு தன்வயம் குறைவிலாற்றல் வரம்பிலாற்றல் என்பனவாம். இவற்றிற்கு முறையே சர்வஞ்ஞதை திருப்தி அநாதிபோதம் சுவதந்திரம் அலுப்தசக்தி அநந்தசக்தி என்பன வடநூற்பெயர்கள். அரன்- சங்கரிப்பவர். இப்பொருளை "உயிர்க்குண்மலமொடுக்கலாலேயுயிருளுயிர்க்குமரனெனும்பேருண்டு" என்னுஞ் சைவசமயநெறித்திருக்குறளானுமுணர்க. சென்னிசேர்த்தல் வணங்குதல்.

இருவினையீட்டத்துக்கேற்ப யோனிபேதமுற்றுப்பிறத்தலும், அப்பிறவிக்குக் காரணமாய வினையனுபவித்துத் தொலைந்தவழி இறத்தலும், இவற்றினிடைப்பட்ட காலத்திற் பெயர்முதலியவற்றைப்பெறுதலும் ஆன்மாக்களுக்குரியகுணமாம். சிவபெருமான் அவ்வான்மாக்கடோறும் கிருத்திய நிகழ்ச்சியின்பொருட்டுப் பேதந்தோன்றாது நின்றவழியும் பதிக்குணங்களாறும் நிறையப்பெற்றவராதலின், "கரிசிலைந்தொழில்செய்காரணர்தமக்குங்காரணன்மாயையிற்பலவாய், விரிதருமுலகில்வியாபியாய்நின்றும்விசாரமாதிகடனக்கில்லான்"எனவும், "பேறிழவின்பம்பிணிவளர்மூப்புப்பேதுறச்சாதலென்றுரைக்கு, மாறினுமோவாதுயிர்களையெல்லாமலைவறச்செலுத்தியுந்தனக்குக், கூறியவிருப்புவெறுப்பினையில்லான்கூடியெவ்வுயிரையுமயக்கும், வீறியமாயைமயக்கமுமில்லான்விளங்கியவநாதியேயமலன்"எனவும் விநாயகபுராணத்துக் கூறியவாறு அவ்வான்மகுணங்கள் அவரையணுகாதென்பது கருத்து.

இச்செய்யுளால் அருவத்திருமேனி துதிக்கப்பட்டது. (௫)

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

இ—ள்: பூ மலர் மிசை வரு புனிதன் ஆதியோர் தாம்— செந்தாமரைமலராசனத்தின்மேல் வீற்றிருக்கின்ற பரிசுத்தராகிய பிரமா முதலிய தேவர்களும், உணர்வரியது ஓர் தலைமை எய்தி—அறிதற்கரியமுதன்மையைப்பொருந்தி, மா மறைமுதற்கு ஒரு வடிவம் ஆகியோன்—பெருமைபொருந்திய பிரணவத்தினது ஒப்பற்றவடிவமாய் நின்ற சிவபெருமானது, காமரு செய்ய பூ கழல்கள் போற்றுவாம்— அழகு பொருந்திய சிவந்த தாமரைமலர்போன்ற பாதங்களை (யாம்) துதிப்பாம் எ—று.

தாம் சாரியை. ஓர் ஏ அசைநிலைகள். பூவென்பதீண்டுத் தாமரையையுணர்த்திற்று. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. உணர்வரியது குறிப்புமுற்றுப்பெயரெச்சம். மறைமுதலென்பது மறைக்கு முதலாதலையுடையதென விரிக்கப்படுதலால் அன்மொழித்தொகை. ஆகியோன் வினையாலணையும்பெயர். காமரு என்பதிலுகரஞ்சாரியை. பதிலக்கணத்தையுணர்த்துநூல்களுட் சிறந்ததாகிய வேதத்தையொருங்குணர்ந்தவராதலின், அப்பெருமானையுணர்தற்கேற்ற பரிபக்குவமுடையரென்பது போதர"புனிதன்" என்றார்.

இச்செய்யுளால் மந்திரத்திருமேனி துதிக்கப்பட்டது. (௬)

பங்கயன் முகுந்தனும் பரமென் றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுழி

யங்கவர் வெருவர வங்கி யாயெழு
புங்கவன் மலரடிபோற்றி செய்குவாம்.

இ—ள்: பங்கயன் முகுந்தன்—தாமரைமலராசனத்திலிருக்கின்ற பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும், நாமே பரம் என்று உன்னி—நாங்களே பரப்பிரமமென்று (தனித்தனி) நினைத்து, இருவரும் தங்களில் சமர் செய்து உற்றுழி—அவ்விருவரும் (ஒருவரோடொருவர்) தங்களுள் போர் செய்து நின்றபொழுது, அங்கு அவர் வெருவர—அவ்விடத்து அவர்கள் பயப்படும்படி, அங்கி ஆய் எழு புங்கவன் மலர் அடி போற்றி செய்குவாம்—(இடையே) அக்கினிமலையாய்த் தோன்றிநின்ற தலைவராகிய சிவபெருமானது தாமரைமலர்போன்ற திருவடிகளை (யாம்) துதிப்பாம்; எ—று.

முகுந்தன்—மோக்ஷத்தைக் கொடுப்பவர். உன்னியேயென்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருள்பட நாமென்பதனோடியைத்துரைக்கப்பட்டது. அங்கவர் ஒரு சொல்லாய் அவரென்னும் பொருடந்து நின்றதெனினுமாம். இச்செய்யுளிற்சுட்டிய சரித்திரத்தை இப்புராணத்தில் அடிமுடிதேடுபடலத்தாற்றெள்ளிதிற்காண்க. பிரமன்முதலியோரால் அறியப்படாதவரென முற்செய்யுளிற் சுட்டிய சரித்திரம் யாதென்பதிச்செய்யுளால்விளக்கப்பட்டது. (௧௫)

காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனுமாய் வலிகொள் வான்றொடர்
பூண்பதின் றுய்நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்.

இ—ள்: காண்பவன் முதலிய திறமும் காட்டுவான் மாண்பு உடையோனும் ஆய்—காண்பான்முதலிய மூவகைப்பொருளும் காட்டுவானும் ஆகி, வலி கொள் வான் றொடர் பூண்பது இன்றுய்—வலிமைபொருந்திய பெரியபாசத்தளையைப் பூணுதலின்றி, நயம் புணர்க்கும் புங்கவன்—(ஆன்மாக்களுக்கு)நன்மையைச்செய்யுந் தலைவராகிய சிவபெருமானது, சேண் பொலி திருநடச்செயலை ஏத்துவாம்—சிதாகாசமாகிய கனகசபையிலே பொலியாநின்ற திருநிருத்தத் தொழிலை (யாம்) துதிப்பாம்; எ—று.

காண்பவன் முதலிய மூன்றுவன: காண்பான் காட்சி காட்சிப்பொருள் என்பனவாம். இவற்றிற்கு ஞாதிரு ஞானம் ஞேயம் என்பன வடமொழிப்பெயர்கள். இம்மூன்றிற்கும் திரிபுடியென்பது சமுதாயப்பெயர். காட்டுவான்மாண்புடையோன் காட்டுவானகிய மாட்சிமையையுடையவர். முன்னைய மூன்றுடன் காட்டுவானுங்கூடி நான்காயது. இவற்றை "கருவிமெய்ப்புலன்காட்டுவான்காண்பவன்காட்சிப், பொருளெனப்படுநான்மையும்" என இந்நூலாசிரியர் பின் விரித்துக் கூறுதலாலுமுணர்க.

காட்டுவாராகிய கடவுளில்வழி, "காண்பாரார்கண்ணு தனீகாட்டாக்காலே" என்றபடி காண்பது கூடாதாதலால், காண்பான் முதலிய மூன்றினின்றும் காட்டுவானை வேறு பிரித்து மாண்புடையோன் எனஅடைகொடுத்துக்கூறினர். சிவபோதமூற்றுங்காறுஞ் செம்பிற்களிம்புபோலச் சகசமாய்நிற்றலாலும் பிறவிமுதலியபெருந்துயர்களைத்தருதலாலும் "வலிகொள் வான்றொடர்" எனவிசேடித்தார். பஞ்சபூதஸ்தலங்களுள் இது ஆகாசஸ்தலமாதலாற் சேண் என்றார். இந்தச்சிதம்பரம் சகலபுவனங்களுக்கு முன்னுண்டாயதலமாதலால் திருமூலட்டானமெனப் பெயர்பெற்று விராட்புருடனுடைய இருதயஸ்தானமாக விளங்குதல்பற்றி அத்தலத்திலெழுந்தருளிய மூர்த்தியைத் துதித்தல் அவசியமாயிற்று. "ஐந்துதொழிலென்னுந்திருத்தாண்டவம்புரிதல்கண்டாலுலகிலினிப்

பிறவார்" எனத் திருவாதவூரடிகள் புராணத்திற் கூறியவாறு பஞ்சகிருத்தியமயமாய் முத்திக்கு வாயிலாயிருக்கும் விசேடம்பற்றி, புங்கவனையேத்துவாமென்னது "புங்கவன்றிருநடச்செயலையேத்துவாம்"என்றார். (௬)

(உமாதேவி)

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

இ—ள்: செறிதரும் உயிர் தொறும் திகழ்ந்து மன்னிய—(உலகத்தில்) நெருங்கிய ஆன்மாக்கடோறும் விளங்கி வியாபித்த, மறு அறும் அரன் இடம் மரபின் மேவி—குற்றமில்லாத சிவபெருமானது இடப்பாகத்தில் முறைப்படி வீற்றிருந்து, அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய—ஆறுவகைப்பட்ட சமயங்களையும் பிறவற்றையும் உண்டாக்கிய இறைவிதன் மலர் அடி இறைஞ்சி எத்துவாம்—தலைவியாகிய உமாதேவியினது தாமரைமலர்போன்ற பாதங்களை (யாம்) வணங்கித்துதிப்பாம்; எ—று.

ஏ அசை. பிறவென்றது புறச்சமயங்களை;பதமுத்திகளையென்பாருமுளர்.முன்னர் "ஊனாகி" என்னுஞ்செய்யுளிற்கூறியவாறு எங்குங்கலந்து பரிபூரணமாய் நிற்பவரென்பது போதர "உயிர்தொறுந்திகழ்ந்துமன்னிய...அரன்" எனவும்,அவ்வாறு கலந்துநின்றவழியும்"பிறப்பதும்" என்னுஞ் செய்யுளிற் கூறியவாறு உயிர்க்குணஞ் சாரப்பெறாதவரென்பது போதர "மறுவறுமரன்" எனவும், சிவபெருமானைப்போலவே ஆன்மாக்கடோறும் வியாபித்து நிற்பவரென்பது போதர "உயிர்தொறுந்திகழ்ந்துமன்னிய...அரனிடம்... மேவி" எனவுங்கூறினர். அறுவகைச்சமயங்களாவன:சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் என்பனவாம். (௭)

(விநாயகக்கடவுள்.)

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

இ—ள்: மண்ணுலகத்தினில் பிறவி மாசு அற—பூவுலகத்திற் (பிறக்கும்) பிறவிக்குற்றந் தீரும்பொருட்டும், எண்ணிய பொருள் எலாம் எளிதில் முற்றுற—(பெறவேண்டுமென்று) சிந்தித்த பொருள்களெல்லாம் இலகுவிற் கைகூடும் பொருட்டும், கண்ணுதல் உடையது ஓர் மா களிற்று முக பண்ணவன் மலர் அடி—நெற்றிக்கண்ணையுடைய ஒப்பற்ற பெரிய யானைமுகம்பொருந்திய விநாயகக்கடவுளது தாமரை மலர் போலும் பாதங்களை, பணிந்து போற்றுவாம்—(யாம்) வணங்கித் துதிப்பாம்; எ—று.

அத்தும் இன்னும் சாரியைகள். பிறவிமாசென்பது பிறவியாலாகிய மாசென்றேனும் பிறவியாகிய மாசென்றேனும் விரிக்கப்படும். எல்லாமென்பதெலாமெனத்தொக்கது. செயவெனெச்சங்கள் காரியப்பொருளில் வந்தன. உடையது குறிப்புமுற்றுப்பெயரெச்சம்; அது முகமென்னும் பெயர்ப்பயனிலை கொண்டது.

மறுமைப்பயனையும் இம்மைப்பயனையும் பெறுதற்பொருட்டு விநாயகக்கடவுளது பாதங்களை வணங்குவாமென்பது கருத்து. அவரது பாதங்களைத் துதிப்பின் அப்பயன்

கன் சித்தியாமென்பதை "ஒதவினையகலுமோங்குபுகழ்பெருகுங், காதற்பொருளனைத்துங்கைகூடுஞ்— சீதப், பனிக்கோட்டுமாமலைமேற்பாரதப்போர்தீட்டுங், தனிக்கோட்டு வாரணத்தின்றாள்" என்பதனானுமறிக.

இருவினைவயத்தாற் சுவர்க்கநரகங்களிற் புகினும் அவ்வினைப் பயனுகர்ந்து முடிந்தபின் மீட்டும் பிறத்தற்குரியது பூமியேயாதலின் "மண்ணுலகத்தினிற்பிறவி" எனவும், முத்திக்குத்தடையாய வினைகளையீட்டுதற்குக் கருவியாதலின் "பிறவிமாசு" எனவும், காட்டியானைகளின் முகம்போலாது திவ்வியவடிவமைந்ததென்பது போதர "கண்ணுதனுடையதோர் களிற்றுமாமுகம்" எனவும் விசேடித்தார். (அ)

## (வைரவக்கடவுள்.)

பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

இ—ள்: பரமனை மதித்திடா பங்கயாசனன் ஒருதலை கிள்ளி—சிவபெருமானை (பரம்பொருளென்று) எண்ணாத பிரமதேவரதுநடுத்தலையைக்கொய்து, ஒழிந்த வானவர் குருதியும் அகந்தையும் கொண்டு—அவரொழிந்த (விஷ்ணுமூர்த்திமுதலிய) மற்றைத் தேவர்களுடைய இரத்தத்தையுங் கர்வத்தையுங்கவர்ந்து, முன் தண்டம் புரிதரு வடுகனை போற்றிசெய்குவாம்—முற்காலத்திலே தண்டனையைச்செய்த வைரவக்கடவுளை (யாம்) துதிப்பாம். எ—று.

ஏ அசை. மதித்திடாத என்னும் பெயரெச்சத் தீற்றுயிர்மெய்கெட்டது. பங்கயாசனன் வடநூன்முடிபு; தாமரைமலரைஆசனமாகவுடையவரென்பதுபொருள். சிவபெருமானே முழுமுதற்கடவுளென்பதுஅரிதினுணர்தற்பாலதாகாது வெள்ளிடைமலைபோல்விளங்கலிற்றலைபுணர்த்துவார், முழுமுதற்கடவுளென்றபொருளமைந்த "பரமன்" என்னுஞ்சொல்லைப்பிரயோகித்தார். பிரமதேவரதுதலைகளைந்தனுள் இகழ்ந்துகூற்றமெய்திக்கிள்ளப்பட்டது நடுத்தலையேயாதலின் ஒருதலையென்பதற்கவ்வாறு பொருளுரைத்தாம்.

முன்னொருகாலத்திலே மேருமலையின்கண்ணே பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியுமிருந்தபோது எண்ணிறந்ததேவர்களும் முனிவர்களும் ஒருங்குகூடி அவர்களைவணங்கி "ஸ்வாமிகாள்! முழுமுதற்கடவுள்யாவர்? அதனைச்சிறியேங்களுக்கு உணர்த்தவேண்டும்" என்றுபிரார்த்தித்தார்கள். அதுகேட்டபிரமதேவர் அகங்கரித்து, "நாமேமுழுமுதற்கடவுள்" என்றனர். விஷ்ணுமூர்த்தியும் அகங்கரித்து, "நீ எப்படிமுழுமுதற்கடவுளாவாய்; உன்னைத்தந்தயாமேமுழுமுதற்கடவுள்" என்றுவாதுசெய்தனர். இவ்வாறு வாதித்து இருவரும்போர்புரிய, அதுகண்டதேவர்களும் முனிவர்களும் நம்மாலன்றோ இப்போர்விளைந்ததென்றெண்ணி மனநொந்து தங்கள் தங்களிருப்பிடஞ்சேர்ந்தனர். பின்னும் அவ்விருவரும் போர்செய்தமையின் வேதங்களும் பிரணவமும் தனித்தனி திருவுருக்கொண்டுநின்று அவ்விருவரையுநோக்கி, "சிவபெருமானே முழுமுதற்கடவுள். நீங்கள்போர்புரிதலை நிறுத்துங்கள்" என்றுகூறின. அவ்விருவரும் அச்சொல்லையுஞ்சிந்தியாதுபின்னுங்கொடும்போர்விளைத்தனர். அதுகண்டசிவபெருமான் அவர்களுக்குநல்லுணர்வுண்டாகும்பொருட்டுத் திருவுளங்கொண்டு சோதிசொரூபமாய் ஆகாயத்திடையேதோன்ற விஷ்ணுவும் பிரமாவும் அதுகண்டும் அச்சோதியைச்சிவனென்றுமதியாது ஒருபூதவெளியென்றவமதித்தனர். அதன்மேற்சிவபெருமான் கயிலையிலே

மூர்ந்தருளியிருக்குந் திருக்கோலத்துடன் தோன்ற, அதுகண்டவிஷ்ணுமூர்த்தி அவரைப்பணிந்தனர். பிரமதேவர் அப்போதாயினும் அவரைமதியாமல் தமது நடுத்தலையிலுள்ள வாயால் இகழ்ந்தனர். சிவபெருமான் அவரது அகந்தையையொழிக்கத் திருவுளங்கொண்டு தமதிருதயத்தினின்று வைரவக்கடவுளைத் தோற்றுவித்து, "மைந்தனே! நீ நம்மையிகழ்ந்துபேசிய பிரமனது நடுத்தலையைக்கொய்து தம்மையேபரமென்றெண்ணியிருக்கும் மற்றைத்தேவர்களது உதிரத்தைப்பலியாகஏற்று, அங்ஙனம் பலியேற்கும்போதுயிர்துறந்தாரை மீட்டும் எழுப்பிவருக" என்றுகட்டளைசெய்தனர். அவ்வாறே வைரவக்கடவுள் பிரமாவின் நடுத்தலையைக்கிள்ளி, ஏனைத்தேவரிடம் உதிரப்பலியேற்று அகந்தையையொழித்தனரென்க. இச்சரித்திரத்தை இப்புராணத்தில் ததீசியுத்தரப்படலத்தாற்றெள்ளிதிற்காண்க. (௯)

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

இ—ள்: வெம் சின பரியழல் மீது போர்த்திடும்—கடுங்கோபத்தையுடைய வடவாமுகாக்கினியின்மேற் சூழப்பெற்ற, அஞ்சன புகை என ஆலம் ஆமென—கரும் புகைப்படலம் போலவும் நஞ்சுபோலவும், செம் சுடர் படிவமேல் செறித்த மா மணி கஞ்சுக கடவுள்—சிவந்த ஒளிபொருந்திய திருமேனியின்மேற்றரிக்கப்பட்ட பெரிய கருநிறச்சட்டையையுடைய வைரவக்கடவுளது, பொன் கழல்கள் ஏத்துவாம்—அழகிய பாதங்களை (யாம்) துதிப்பாம்; எ—று.

சினம் என்பது பரிக்கடை. குதிரையின் முகத்திற் றோன்றுதல் பற்றி வடவாமுகாக்கினியைப் பரியழலெனக்கூறினார். "வெஞ்சினப் பரியழன்மீதுபோர்த்திடும்" என்பது ஆலமாமென என்பதனோடுமியைந்து பொருள்பட்டது. வாமனாவதாரங்கொண்ட விஷ்ணுமூர்த்தி மாவலிச்சக்கிரவர்த்தியிடத்தே மூன்றடி யாசித்து அதன்மேற் பேருருக்கொண்டு பூமியை ஓரடியாகவும் ஆகாயத்தை மற்றோரடியாகவும் அளந்து எஞ்சிய மூன்றாமடிக்கிடமின்மையால் அவன்றலைமேற் பாதத்தை வைத்து அடக்கியபின் அவ்வுருவத்துடனே தருக்குற்றுத்திரிய, வைரவக்கடவுள் அவ்வுருவத்தையழித்துக் கருநிறம்பொருந்திய தோலையுரித்துத் தனது மேனியிற் சட்டையாகத்தரித்தமையின் "மாமணிக்கஞ்சுகக் கடவுள்" என்றார். வடவாமுகாக்கினி செந்நிறமும், புகையும் நஞ்சுங் கருநிறமுமுடையனவாதலால், அவை முறையே வைரவக்கடவுளது மேனிக்குங் கருஞ்சட்டைக்கும் உபமானமாயின. இது ஒருவயிற்போலியணி. (௧௦)

(வீரபத்திரக்கடவுள்.)

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ரொடிந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

இ—ள்: அடைந்து அவி உண்டிடும் அமரர் யாவரும் முடிந்திட— வந்து (தங்களுக்காகத்தரப்பட்ட) அவிப்பாகத்தைப்புசிக்குந்தேவர்கள் எல்லோரும் இறக்கவும், முனிவர் வேதியர் வெருவி உடைந்திட—முனிவர்களும் மறையவரும் (தமக்கு யாதுதீங்குவிளையுமோவென்று) பயந்து நிலைகெடவும், மா மகம் ஒடிய—பெரியயாகம் சிதைய

வும், தக்கனை தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்—(யாகாதிபனாகிய) தக்கனைத் தண்டித்த வீரபத்திரக்கடவுளது பாதங்களை (யாம்) துதிப்பாம்; எ—று.

ஏ அசை. உம்மை முற்று. அவி-அன்னமுதலியஹோமத்திரவியங்கள். அமரர்-இறத்தலில்லாதவர்; அஃதவர்க்குபசாரம். செயவெனெச்சங்கள் காரியப்பொருளில்வந்தன. முடிந்திட உடைந்திட ஒடிய தடிந்திடு சேவகன் என இயைக்க. காவற்கடவுளாகிய விஷ்ணுமூர்த்தியாலே, தீங்குநேரிடாவண்ணங் காக்கப்பட்ட யாகமாதலின் 'மாமகம்' எனவும், அத்தகையகாவலைக்கடந்து யாகத்தைச்சிதைத்து அதிபனாகியதக்கனைத்தண்டித்தவீரராதலின் 'சேவகன்' எனவுங்கூறினார். இச்செய்யுளிற் சுட்டிய சரித்திரத்தை இப்புராணத்திற் பின்வரும் யாகசங்காரப்படலத்தாற்றெள்ளிதிற் காண்க. (கக)

## (சுப்பிரமணியக்கடவுள்.)

இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

இ—ள்: இருப்பு அரம் குறைத்திடும் எஃக வேல் உடை பொருப்பர்—இரும்பினையன்றஅரத்தினால் அராவப்பட்ட கூரிய வேற்படையையுடைய வேடர்கள், அங்கு உணர்வுற—அவ்விடத்தே அறியும்படி, புதல்வி தன்மிசை விருப்பு அரங்கு அமரிடை விளங்க காட்டிய—(அந்தக்குறவரது) புத்திரியாகிய வள்ளிநாயகி தம்மேற் கொண்ட காதலை அழிகின்ற போரின்கண்ணே வெளிப்படக்காண்பித்தருளிய, திருப்பரங்குன்று அமர் சேயை போற்றுவாம்—திருப்பரங்குன்றிலெழுந்தருளியிருக்கின்ற கந்தஸ்வாமியை (யாம்) துதிப்பாம்; எ—று.

இரும்பு என்பது வேற்றுமையிற்றம்மினவன்றொடராயது. உடையவென்னும் குறிப்புப்பெயரெச்சத்திற்றுயிர்மெய்தொக்கது. பொருப்பர்-மலைவாணர். அங்கென்றது வள்ளிநாயகியார் அர்த்தராத்திரியில் தம்மிடம்வந்தசுப்பிரமணியக்கடவுளுடன் போய்த் தங்கியிருந்தசோலையை; அசைநிலையெனினுமாம். தன்மிசைப்புதல்விகொண்டவிருப்பை அமரிடைவிளங்கக்காட்டுதலென்றது வள்ளிநாயகியார் சுப்பிரமணியப்பெருமான்மேற் படைகள் படுதலைச்சகியாது தன்கிளைஞராகிய வேடரைக்கொல்லும்படி வேண்டுதலை. புதல்வி தன்மிசைவிருப்பு என்பதற்குத்தன்னைச் சாரியையாக்கி, புதல்வியினிடத்துத் தாங்கொண்ட விருப்பமெனினுமாம். காட்டிய சேய் என இயையும். சனனகாலந் தொட்டுத்தன்னை வளர்த்துப் பயின்றபெற்றாரைமறந்து சின்னாட்பயின்ற கணவரையே காதலித்த கற்பின் விசேடந்தோன்ற வள்ளிநாயகியைப் புதல்வியென்றார்.

தெய்வயானையைத் திருமணஞ்செய்ததும் பராசரபுத்திரர்க்கு ஞானோபதேசஞ் செய்ததும் திருப்படைவீடுகளுள் முதலாவதும் திருப்பரங்குன்றாதலால் அத்தலமூர்த்தியைமுன்னர்த்துதித்தார். (கஉ)

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்
டீரலை வாயிடு மெஃக மேந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

இ—ள்: சூர் அலைவாயிடை தொலைத்து மார்புகீண்டு—சூரபன்மனைச் சமுத்திரத்தின்கண்ணே அழித்து (அவனது) மார்பைக்கிழித்து, ஈரலை வாய் இடும் எஃகம் ஏந்

தி—ஈரலை வாயில் மடுக்கும் வேற்படையைத் (துட்டநிக்கிரகஞ் செய்பவரென்பதற் கோரடையாளமாகத்) தாங்கி, வேரல் ஐவாய் தரு வெள்ளிவெற்பு ஒரீஇ—பிரம்புகளும் சிங்கங்களும் பொருந்தியகைலாசமலையை நீங்கி, சீரலைவாய் வரு சேயை போற்றுவாம்—திருச்செந்தூரின்கண்ணே எழுந்தருளிய குமாரக்கடவுளை (யாம்) துதிப்பாம்; எ—று.

ஏ அசை. அரசனென்பது அரசெனநின்றாற்போலச் சூரனென்பது விகுதியின்றிச் சூரெனநின்றது. முதலாமடியிலுள்ள அலைவாய்—அலைகின்ற வாயையுடையது என விரிக்கப்பட்டுக்கடலுக்காதலால் வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வாய்-இடம். ஈரல் ஓர் தசைவிசேடம். வேரல் மூங்கிலெனினுமாம். ஐவாய் பஞ்சானனமென்பதன் பொருளுணர்த்துமோர் சமானபதம். வேரலைவாய்தரு என்பதற்கு வேரலைத்தன்னிடத்துடைய எனப்பொருள்கூறுவாருமுளர். "வெள்ளிவெற்பொரீஇச்சீரலைவாய்வருசேய்" எனவே தாம் வசித்தற்குக் கைலாசகிரியினுஞ்சிறந்தநற்றானமென்று விரும்பித் திருச்செந்தியம்பதியிற் சுப்பிரமணியக்கடவுள் கோயில்கொண்டனரென்பது குறிப்பாயிற்று. சீரலைவாய்-திருச்செந்தூர். (க௩)

காவினன் குடிஉறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
வாவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.

இ—ள்: காவினன்—ஐந்தருச்சோலையையுடைய இந்திரன், குடில் உறு காமர் பொன்னகர் மேவினன் குடிவர—ஆகாயத்திற் பொருந்திய அழகிய சுவர்க்கலோகத்திற்புகுந்து குடியேறவும், சூர்முதல் விளிய—சூரபன்மனாகிய முதல்வன் இறக்கவும், பூவினன் குடிலையம்பொருட்கு மால் உற—தாமரைமலராசனராகிய பிரமதேவர் பிரணவப்பொருளைக் கூறுதற்கு (அறியாமையால்) மயங்கவும், ஆவினன்குடி வரும் அமலன் போற்றுவாம்—திருவாவினன்குடியிலெழுந்தருளிய மலரகிதராகிய குமாரக்கடவுளை (யாம்) துதிப்பாம்; எ—று.

திருவாவினன்குடியிலெழுந்தருளிய மூர்த்தி இவ்வற்புதங்களைச் செய்தாரென்பது குறிப்பு. காவினன் பூவினன் என்பவற்றில் இன் என்பதும் குடிலையம்பொருளென்பதில் அம்மென்பதும் சாரியைகள். மேவினன் வினைமுற்றெச்சம். செயவெனெச்ச மூன்றும் காரியப்பொருளனவாய், வரும் என்னும் வினைகொண்டன.

ஐந்தருவாவன:— சந்தானம் அரிசந்தனம் மந்தாரம் பாரிசாதம் கற்பகம் என்பன. முன்னர்த் தனதரசுரிமையின்பாற்பட்டிருந்த சுவர்க்கலோகத்தைச் சூரனாதியோர் செய்ததீங்கினாற் கைவிட்டுப் பூவுலகத்திற் பலகாலம் அலைந்து திரிந்து பின்னர்க் குடியேற்றப்பட்டவனாதலால் "காவினன்குடிலுறுகாமர்பொன்னகர்மேவினன்குடிவர" என்றார்.

பிரணவப்பொருளைக்கூறும்படி குமாரக்கடவுள் வினவியவழிப்பிரமதேவர் கூறலாற்றாது மயங்க, அக்குமாரக்கடவுள் "இதன்பொருளையறியாது நீ படைத்தற்றொழில்செய்வதெங்ஙனம்" என்று அப்பிரமதேவரைக் குட்டிச்சிறைப்படுத்திச் சிலகாலம் தாமே படைத்தற்றொழிலை நடாத்தினர். இச்சரித்திரத்தைப் பின்வரும் அயனைச்சிறைபுரிபடலத்தாலுணர்க. பிரமதேவர் பிரணவப்பொருளைத் தவறாகக்கூறியதனாற் குமாரக்கடவுள் சிறைப்படுத்தினரெனக் காஞ்சிப்புராணங்கூறும். பிரணவப்பொருள் சிவபெருமானும் அவரோடபேதமாகிய குமாரக்கடவுளுமென்பதே. சிவபெருமானும் பிரமாவின் சிறையைநீக்கும்படிவந்து பிரார்த்தித்த தேவர்களுக்கு "பிரணவத்தின்பொருள் சிவபெருமா

னாகிய நாமும் நம்மகனாகிய குமாரக்கடவுளும் என்பதேயாம். சதாசிவோமெனப் பன்முறை கூறும் வேதம் சுப்பிரஹ்மண்யோமென மும்முறை முழங்காநின்றது" என்றுகூறிப் பிரமதேவரைச் சிறையினின்று விடுவித்தனர். இதனை "பூந்தேனக்கநறுந்தொடையிதழிக்கடவுளவர்தமைநோக்கிநவில்வானெனன்னே, யக்கமலன்விளம்பியவாநம்மையுநம்புதல்வனையுமன்றேமான, மிக்கபுகழ்ச்சுருதியெலாம்பிரணவத்தின் பொருளாகவிளம்புமாறே" எனவும், "எக்கலைக்கும்பூதங்களெவற்றினுக்கும் பிரமனுக்குமீசனென்னத், தக்கமுதல்பரப்பிரமஞ்சதாசிவனேமெனவேதஞ்சாற்றுமல்லான், முக்கனல்சூழ்வேள்வியிற்சுப்பிரமணியனேமெனவுமுக்காற்கூறும்"எனவும் வருங் காஞ்சிப்புராணத்திருவிருத்தத்தானும், முன்னர் "பூமலர்" என்னுஞ் செய்யுளில் "மாமறைமுதற்கொருவடிவமாகியோன்" எனச்சிவபெருமானையும் இதன்பிற்செய்யுளில் "தாரகத்துருவமாந்தலைமையெய்திய......அறுமுகன்" எனச் சுப்பிரமணியக்கடவுளையும் இந்நூலாசிரியர்கூறித் துதித்தமையானுமுணர்க. திருவாவினன்குடி இக்காலத்திற் பழனியென வழங்குகின்றது. (௧௪)

நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
வேரகத் தறுமுக னடிக ளேத்துவாம்.

இ—ள்: நீர் அகத்தே தனை நினையும் அன்பினோர்—நற்குணம்பொருந்திய மனத்தின்கண்ணே தம்மைத்தியானிக்கும் பத்தர்களுடைய, பேரகத்து அலமரும் பிறவி நீத்திடும்— பெரிய உலகங்களிற் சுழன்றுதிரியும் பிறவியைப் போக்குகின்ற, தாரகத்து உருவம் ஆம் தலைமை எய்திய—பிரணவத்தின் வடிவமாயிருக்கின்ற தலைமையைப்பொருந்திய, ஏரகத்து அறுமுகன் அடிகள் ஏத்துவாம்— திருவேரகமென்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சண்முகப்பெருமானது பாதங்களை (யாம்) துதிப்பாம்; எ—று.

அத்து நான்கும் இன்னும் சாரியைகள். ஏ அசை. தன்னையென்பது தனையெனத்தொக்கது. அன்பினோரது பிறவியை நீத்திடும் அறுமுகன் எனஇயையும். அகம் ஆகுபெயர்; அகத்து அலமரும் என்பதற்கு, பாவத்தினாற் சுழலுகின்ற எனப்பொருள்கூறுவாருமுளர். அஃறித்துணைச் சிறப்பின்று. தாரகம்- (துன்பசாகரத்தினின்றுங்) கடப்பிப்பது. திருவேரகம் மலைநாட்டகத்தோர் திருப்பதி; சுவாமிமலையென்பர் சிலர். மனத்துக்குரியநற்குணமாவன:—பஞ்சாக்ஷரத்தை மானதமாகச்செபித்தல் மானதபூசை சிவோகம்பாவனை என்பனவாம். இதனை "உளத்திலக்கணமூன்றென்றுரைத்தன, மனக்கினஞ்செழுத்துன்னலகப்பட, வளர்க்குமானதபூசனைமக்கடுக் களத்தனைத்தனையொன்றெனக்காணுதல்" எனவரும் உபதேசகாண்டச் செய்யுளாலுணர்க. (௧௫)

ஒன்றுதொ றாடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ றாடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்.

இ—ள்: (ஆவி) ஒன்றுதொறு ஆடலை ஒருவி—ஆன்மாக்கள் (சுத்தமாயாகாரணத்தில்) ஒடுங்குந்தோறும் பஞ்சகிருத்தியத்திருவிளையாட்டை நீங்கியும், ஆவி மெய்துன்றுதொறு ஆடலை தொடங்கி—(அவ்வான்மாக்கள் தத்துவங்களோடு) சரீரங்களிலே (இருவினைநுகர்ச்சியின்பொருட்டுச்) செறியுந்தோறும் (அந்தத்) திருவிளையாட்டைமுய

ன்றும், ஐவகை மன்றுதொறு ஆடிய வள்ளல் காமுற—(இவ்வாறே) பஞ்சசபைகடோறுந் திருநிருத்தம்புரிந்த அருள்வள்ளலாகிய சிவபெருமான் விரும்புமாறு, குன்றுதொறு ஆடிய குமரன் போற்றுவாம்—மலைகடோறுந் திருவிளையாடலைச்செய்த முருகக்கடவுளை (யாம்) துதிப்பாம். எ—று.

தொறு என்பது இடப்பன்மைப்பொருளில் வந்தது. வள்ளல்—கொடைக்குணமுடையவர். ஒன்றுதல்—கேவலாவத்தை; மெய்துன்றுதல்—சகலாவத்தை. கேவலாவத்தையாவது: சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் சுத்தமாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருட்டிகாலமளவும் ஆணவத்தான் மறைப்புண்டு கலையாதிதத்துவங்களோடுங் கூடாமல் யாதொரு வினைவுமின்றியிருப்பது;இது இரவின் இருளிலே கண்ணனது தொழில்செய்யாமல் விழித்திருப்பதுபோலும்; சகலாவத்தையாவது: சிருட்டிதொடங்கிச் சர்வசங்காரகாலமளவும் ஆன்மாக்கள் தத்துவமுப்பத்தாறோடுங் கூடி எண்பத்துநான்குலக்ஷ யோனிபேதங்களிற் பிறந்திறந்துழலுதல். இது இரவில் இருளிலழுந்திக்கிடந்தகண் விளக்கினாலே யிருள்நீங்கிப்பலபதார்த்தங்களைக் காண்டல்போலும்.

ஒருவி தொடங்கி ஆடிய வள்ளல் என இயைக்க. "ஆடலைத்தொடங்கி" எனப் படைத்தலும் "ஆடலையொருவி"எனஅழித்தலும் கூறப்படவே இடையனமூன்றும் அமைந்ததுதெளிக.

சிவபெருமான் ஐவகைமன்றுதோறுமியற்றுமாடல் பஞ்சகிருத்தியமயமான வைதிகடனமாதலின் ஆடலையொருவி ஆடலைத்தொடங்கி "ஐவகைமன்றுதொறுடியவள்ளல்" என்றார். இதனை "தோற்றந்துடியதனிற்றோயுந்திதியமைப்பிற், சாற்றியிடுமங்கியிலேசங்கார-மூற்றமா, யூன்றுமலர்ப்பதத்தேயுற்றதிரோதமுத்தி,நான்றமலர்ப்பதத்தேநாடு" என்பதனானறிக.

தந்தையராயினோர் தம்மைப்போலுந்தகைமைவாய்ந்த மைந்தரிடத்தே பேரன்புடைமை யுலகியலாதலால், மன்றுதொறுடிய சிவபெருமான் முன்னர்த்தோற்றியகுமாரரிருப்பவும் குன்றுதொறுடிய குமரனிடத்தே பேரன்புடையராய்த் தம்மாட்டிருத்திச் சோமாஸ்கந்தரென்னும் பெயர்பெறவிற்றலின் "மன்றுதொறுடியவள்ளல்காமுறக் குன்றுதொறுடியகுமரன்" என்றார். முருகக்கடவுள் அற்புதத்திருவிளையாடலியற்றிய சிலதலங்களைக் குன்றுதொறாடற்றலமென வழங்கும். பஞ்சசபைகளாவன:—திருவாலங்காட்டில் இரத்தினசபையும் தில்லையிற் கனகசபையும் மதுரையில் வெள்ளிச்சபையும் திருநெல்வேலியிற்றாமிரசபையும் திருக்குற்றாலத்திற் சித்திரசபையுமாம். (கக)

எழுமுதி ரைப்புனத் திறைவி முன்புதன்
கிழமுதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலைஅம் பகவற் போற்றுவாம்.

இ—ள்: எழு அம் முதிரைப்புனத்து இறைவிமுன்பு—வளர்ந்த அழகிய தினைப்புனத்திலிருந்த தலைவியாகிய வள்ளியம்மையார்க்கு முன்னாக, தன் கிழம் முதிர் இளநலம் கிடைப்ப—தம்முடைய விருத்தப்பருவமானது மிக்க இளமையின்பத்தைப் பெறும்பொருட்டு, முன்னவன் மழமுதிர் களிறு என வருதல் வேண்டிய—தமையனாராகியவிநாயகக்கடவுள் இளமைமிக்க யானையாகவருதலைவிரும்பிய, பழமுதிர்சோலையம் பகவன் போற்றுவாம்—பழமுதிர் சோலைத்தலத்திலெழுந்தருளிய கடவுளை(யாம்) துதிப்பாம். எ—று.

அத்து அம் என்பனசாரியைகள். "முதிரைப்புனத்துஇறைவி எழ" எனக்கூட்டி,

திணைப்புனத்தின் கண்ணே வள்ளிநாயகியெழுந்தருள எனப்பொருள் கூறினுமாம். முதிரையென்பது புன்செய்த்தானியங்களுக்குரிய பொதுப்பெயர்; ஈண்டுத்திணையையுணர்த்திற்று. இளநலம்-இளமைப்பிராயத்திலநுபவிக்கப்படுமின்பம். பகவன் ஆறுகுணங்களையுடையோர். கிடைப்பவென்னுஞ்செயவெனெச்சங் காரியப்பொருளில் வந்தது. வள்ளிநாயகியையொருப்படுத்துவது தமக்கெளிதாகவும் விநாயகக்கடவுளை வேண்டியது, கருமாரம்பங்களில் அவரைப் பூசிக்கவேண்டுமென்னும் நியதியையுலகினரிகவாவண்ணம் நாட்டுந் திருவிளையாடலேயென்பதை விளக்க"முன்னவன்" என்றார். பழமுதிர்சோலை இக்காலத்தில் அழகர்கோயிலெனப்பெயர்பெற்று விஷ்ணுஸ்தலமாகவழங்குகின்றது. ஆறுதாரங்களெனவழங்குஞ் சுப்பிரமணியஸ்தலங்களாறும் முறையேஆறுசெய்யுட்களாற்றுதிக்கப்பட்டதுகாண்க. (௧௭)

ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வா
ழாறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.

இ—ள்: ஈறுசேர்பொழுதினும் இறுதி இன்றி—(உலகங்கள்) அழிவுபெறுங் கற்பகாலத்திலும் அழிதலின்றி, மாறு இலாது இருந்திடும் வளங்கொள் காஞ்சியில்—ஒப்பற்றதாயிருக்கின்ற வளம்பொருந்திய காஞ்சீபுரத்தின்கண்ணே, கூறு சீர் புனைதரு குமரகோட்டம் வாழ்—(புலவர்கள்) புகழுகின்ற சிறப்பைப்பொருந்திய குமரகோட்டமென்னுந்திருக்கோயிலில் வீற்றிருக்கின்ற, மா ஆறுமுகப்பிரான் அடிகள் போற்றுவாம்—பெருமைபொருந்திய சண்முகப்பெருமானது பாதங்களை (யாம்) துதிப்பாம்; எ—று.

ஏ அசை. இல்லாதென்பது இலாதெனத்தொக்கது. கிருதயுகமுதலிய நான்குயுகங்களும் ஒருமுறை நிகழ்வது ஒருசதுர்யுகம்; இந்தச்சதுர்யுகம் ஆயிரநிகழ்வது பிரமாவுக்கோர்பகல்; இப்பகல்முடிவிலே மூவுலகங்களுஞ் சலப்பிரளயத்தாலழியும்; பகல்முடிந்தபின்னர் ஆயிரஞ்சதுர்யுகநிகழ்வது பிரமாவுக்கு இராக்காலம்; இவ்விராக்காலமுடிந்தபின் பகற்காலாரம்பத்தில் முன் அழிந்த உலகஞ்சிருட்டிக்கப்படும்; இப்படிப் பிரமதினமுந்நூற்றறுபது நிகழ்வது ஓர் பிரமவருடம்; இப்படி நூறுவருடமுடிவது பிரமகற்பம். அதாவது பிரமாவின் ஆயுண்முடிவு. ஈண்டுக்காட்டிய பகன் முடிவிலும் ஆயுண்முடிவிலும் காஞ்சீபுரம் அழிவுறாது பிரளயசித்தெனப் பெயர்பெறுதலின் "ஈறுசேர்பொழுதினுமிறுதியின்றி...இருந்திடும்...காஞ்சி"என்றார். இதனை நகரப்படலத்து அறுபத்தைந்தாஞ்செய்யுளானுமுணர்க. முத்திநகரங்களுட் சிறந்தமைபற்றி "மாறிலாதிருந்திடும்......காஞ்சி" எனக்கூறினர். இச்செய்யுளால் வழிபடுமூர்த்திதுதிக்கப்பட்டது. ()

## (திருநந்திதேவர்.)

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையால்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

இ—ள்: ஐயிரு புராணநூல் அமலற்கு ஓதியும்—பத்துப் புராணசாஸ்திரங்களையுஞ் சிவபெருமானுக்கு(உரியனவாகக்)கூறியும், செய்ய பல் மறைகளும் தெரிந்தும்—செப்பமாகிய பல வேதங்களையுமுணர்ந்திருந்தும், மாயையால் மெய்யறு சூள் புகல் வியாதன் நீட்டிய கை அடும்—அஞ்ஞானமறைப்பினாற் பொய்ச்சபதத்தைச் சொல்லிய வியாசமுனிவர் உயர்த்திய கையை (சபித்துச்) தம்பனஞ்செய்த, நந்திதன் கழல்கள் போற்றுவாம்—திருநந்திதேவரது பாதங்களை (யாம்) துதிப்பாம்; எ—று.

புராணநூல் இருபெயரொட்டு. அமலன் மலரகிதர். மறை மறைந்தபொருளையுடையது; இதற்கிவ்வாறன்றி அதிகாரமில்லாதார்க்கு மறைக்கப்படுவதெனப்பொருள் கூறினுமாம். ஓதியும் தெரிந்தும் என்பவற்றிலும்மை உயர்வுசிறப்பு. மறைகளுமென்பதிலும்மை சிறப்போடு முற்றுமாம். திருமான் முதலியோரைக் கடவுளென்று துதிக்கும் பாகமும் வேதங்களிலுளவாயினும் சிவபெருமானே முழுமுதற்கடவுளென்றுகூறும் பாகமே அவ்வேதத்துள் விசேடமாதலால், அவற்றையுணர்த்துதற்குச் "செய்யபன்மறைகளும்" எனக்கூறினர். வியாசமுனிவர் காசி விசுவநாதஸ்வாமிசந்நிதியினின்று கையையுயர்த்தி, "ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம்நதைவம்கேசவாத்பரம்"என்றுகூற நந்திதேவர் கோபங்கொண்டு உயர்த்தியகை பெயராதுநிற்கும்படி சபித்தருளினரென்க. இச்சரித்திரத்தைக் காசிகாண்டத்தானுந் தெள்ளிதினுணர்க. (௧௧)

## (திருஞானசம்பந்த ஸ்வாமிகள்.)

பண்டைவல் வினையினாற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.

இ — ள்: பண்டை வல்வினையினால் பாய் உடுத்து உழல் குண்டரை முன் வென்று—பழைய தீவினையினாலே பாயை (ஆடையாக) உடுத்துத்திரிகின்ற கீழ்மக்களாகிய சமணரை முற்காலத்தில் வெற்றிகொண்டு, கூடல் வைகி—மதுராபுரியில் வீற்றிருந்து, வெண் திருநீற்று ஒளி விளங்கச்செய்திடு தண் தமிழ்விரகன் மெய் தாள்கள் போற்றுவாம்—வெள்ளிய விபூதியின் பிரகாசம் விளங்கும்படி பரப்பிய செந்தமிழ்ச்சாதுரியமுடையராகிய திருஞானசம்பந்தஸ்வாமிகளது மெய்ம்மையாகிய பாதங்களை (யாம்) துதிப்பாம்; எ—று.

ஏ அசை. ஈரடிமேல்வைப்பு மூவடிமேல்வைப்பு ஏகபாதம் எழுகூற்றிருக்கை மாலைமாற்றுமுதலிய இலக்கணங்கள் பலவற்றானுந் தேவாரமோதினமையால் இவரை முத்தமிழ்விரகரென ஆன்றோர் கூறினார். வெண்ணிற விபூதியேயன்றி ஏனைநிறவிபூதி தரிக்கலாகாமைபற்றி "வெண்டிருநீற்றொளி" என்றார். இதனை "கறுப்புச்சிவப்புக்கடியதொருதூமம், வெறுப்புடனேபீதம்விடு" என்பதனானுமறிக. சைவமய சாதனத்திருவடையாளமாய திருநீற்றினொளியை விளங்கச்செய்தனரெனவே சைவசமயத்தைப் பரவச்செய்தனரென்பது குறிக்கப்பட்டது. திருஞானசம்பந்தஸ்வாமிகள் சமணரை வென்ற சரித்திரம் வருமாறு:—முன்னொருகாலத்திலே பாண்டியராசன் சமணருடைய துர்ப்போதனையான்மயங்கிச் சத்தியமார்க்கமாகிய சைவசமயத்தைவிடுத்துச் சமணசமயத்திற் பிரவேசித்தான். அரசன் அங்ஙனமாக "மன்னனெப்படி. மன்னுயிரப்படி" என்றவாறே குடிகளும் அச்சமயமாயின. வைதிக சைவமார்க்கங் குன்றிற்று. அங்ஙனமாயும் பாண்டியன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும் முதன்மந்திரியாராகியகுலச்சிறையாரும் அரசனறியாவண்ணஞ் சைவநெறியிலொழுகினர்கள்; அங்ஙனமொழுகுநாட்களிலே பரசமயகோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகள் வேதாரணியத்திலெழுந்தருளினரெனக் கேள்வியுற்றுப் பரிசனரைக்கொண்டு தம்மூர்க்கழைப்பித்தனர். அந்தத் திருஞானசம்பந்தஸ்வாமிகள் மதுராபுரிக்கு வந்து ஸ்வாமிதர்சனஞ்செய்து திருப்பதிகம்பாடிக் குலச்சிறைநாயனார்காட்டிய திருமடத்திலெழுந்தருளியிருந்தார். இவரது வரவைக்கண்ட சமணர்யாவரும் அரசனுக்கறிவித்து அவனனுமதியுடன் அப்பெருமானிருக்குந் திருமடத்தில் தீமூட்டினர். மடத்திலிருந்த பரிசனர்கள் அ

து கண்டு அக்கினியைச்சினைத்து நீக்கிவிட்டு, இச்செய்தியை ஸ்வாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய அவர்கேட்டு அரசனால் விளைந்ததென்பதையுணர்ந்து "அமணர்கொளுவுஞ்சுடர், பையவேசென்றுபாண்டியற்காகவே" என்பதையமைத்துப் பதிகம்பாடியருளினார்; உடனே அக்கினிவெம்மைபோய்ப் பாண்டியனைப்பற்றியது; அது கண்டசமணர் அந்நோய்தீரும்பொருட்டுப் பலஉபாயஞ்செய்தும் ஒன்றும் பயன்படாவாக நோய் அதிகரித்தது. உடனே பாண்டிமாதேவியாருங் குலச்சிறையாரும் அரசனைநோக்கி "திருஞானசம்புந்தஸ்வாமிகளுக்குச் செய்த தீமையினால் இது விளைந்தது; அவருடைய அருள்பெற்றால் மாறும்" எனக்கூறினர். அதுகேட்ட பாண்டியன் "அவரையிங்கே அழையுங்கள்.என்னுடைய நோயை நீக்கினவரெவரோ அவர்பக்கஞ்சேர்வேன்" என்றனன். பாண்டிமாதேவியாருங் குலச்சிறையாரும் அதனைத் திருஞானசம்பந்தஸ்வாமிகளுக்கறிவித்துவேண்ட, அவர் பதிகம்பாடிச் சுவாமியின் திருவுள்ளத்தையறிந்து பாண்டியனிடத்திற்கெழுந்தருளினார். அவரைத் தரிசித்தமாத்திரத்தே பாண்டியனுடைய வெப்புநோய் சிறிது தணிந்தது. அதுகண்ட சமணர் தஞ்சமயநூல்களை எடுத்துச்சொல்லிக்குரைத்தனர். அரசன் திருஞானசம்பந்தஸ்வாமிகளையும் சமணரையும் நோக்கி, "நீங்கள் எனது நோயை மாற்றுங்கள் மாற்றியவரே வாதில்வென்றவர்" என்றனன். சமணர் இடப்பாக நோயைத் தீர்ப்போமென்று பேசித் தமதுமந்திரங்களான் மாற்றமாட்டாது தோற்றனர். திருஞானசம்பந்தஸ்வாமிகள் "மந்திரமாவது நீறு" என்னுந் திருப்பதிகத்தைப்பாடித் திருநீற்றினாலே தடவிமாற்றினர். பின்னர்ச்சமணர்கள் "எங்கள் எங்கள் சமயக்கருத்தை ஏட்டிலெழுதி அக்கினியிலிடுவோம் வேவப்பெறாமையேவெற்றி" என்றனர். திருஞானசம்பந்தஸ்வாமிகள் சம்மதித்துத் தாம்பாடிய தமிழ்வேதத்திருமுறையையவிழ்த்துத் திருக்கரத்தான் மறித்து வந்துநேர்ந்த "போகமார்த்தபூண்முலையாள்" என்னுந்திருப்பதிகத்தைக் கழற்றி "தளிரிளவளரொளி" என்னுந்திருப்பதிகத்தைப்பாடி அக்கினியிலிட்டனர். அவ்வேடு வேவாது பச்சையாய் விளங்கிற்று. சமணர்களுந் தங்கள் நூற்பொருளையெழுதியஏட்டை இட்டனர். அது உடனே சாம்பராயிற்று. பின்னுஞ் சமணர்கள் "நாங்களிருபக்ஷத்தேமும் எங்கள் சமயவுண்மைகள் எழுதப்பட்ட ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலிடுவோம்; எதிர்ந்து செல்லுமேட்டே மெய்ப்பொருளுடையதென்றனர். அப்பொழுது குலச்சிறைநாயனார் இனிச்செய்யப்படும் வாதிலே தோற்றவர்களுக்குச் செய்வது யாதெனவினவ, சமணர் வாய்சோர்ந்து, "தோற்றோமாயின் எங்களை இவ்வரசர் கழுவிலேற்றக்கடவர்" என்றனர். அதன்பின் யாவரும் வைகையாற்றை அடைந்தனர். அப்போது சமணர் "அத்தி நாத்தி" என்றெழுதிய ஏட்டை அவ்வாற்றிலிட்டனர். அது விரைந்து கடலை நோக்கி ஓடிற்று. திருஞானசம்பந்தஸ்வாமிகள் "வாழ்கவந்தணர்" என்னுமுதற்குறிப்பையுடைய திருப்பாசுரத்தைப்பாடி ஏட்டிலெழுதி வைகைநதியிலிட்டனர். அது நீரைக்கிழித்துக்கொண்டு எதிரே சென்றது. அப்பாசுரத்தில் "வேந்தனுமோங்குக" என்று பாடியதனால் அப்பாண்டியனுடைய கூன் நிமிர்ந்தது. பாண்டியன் வாதுபேசித்தோற்ற எண்ணாயிரஞ்சமணரையுங்கழுவிலேற்றினன். பின்பு திருஞானசம்பந்தஸ்வாமிகள் விபூதிகொடுத்தருள அரசன்நமஸ்கரித்து வாங்கிஅணிந்தான். உடனேபாண்டிநாட்டிலுள்ளார்யாவரும் விபூதியையணிந்தனர். இச்சரித்திரத்தையும் பிற்செய்யுட்களில் வரும் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரங்களையும் திருத்தொண்டர் பெரியபுராணத்தாற் றெள்ளிதினுணர்க. (௨0)

(திருநாவுக்கரசுஸ்வாமிகள்.)

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடும்

வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

இ—ள்: பொய்யுரை நூல் சில புகலும் தீ அமண் கையர்கள்—பொய்ம்மொழிகளையுடைய நூல்கள் சிலவற்றை (மெய்ந்நூலென்று) கூறுங் கொடிய சமணராகிய கீழ்மக்கள், முன் பிணித்து கடலகத்து இடும் வெய்யகல் தோணியாய் மிதப்ப—முற்காலத்திலே கட்டிக்கடலிலிட்ட கொடியகல்லே தெப்பமாக மிதக்க, மேற்படு துய்ய சொல்லரசர் தாள் தொழுது போற்றுவாம்—(அதனையே ஆதாரமாகக்கொண்டு) கரையேறிய பரிசுத்தராகிய திருநாவுக்கரசுஸ்வாமிகளது திருவடிகளை (யாம்) கைதொழுது துதிப்பாம்; எ—று.

உலகமெல்லாம் நித்தியமாயிருக்குமருகேசுரன் குருத்துவமாத்திரத்திலே கருத்தாவாயிருப்பனென்றிவ்வாறு பிதற்று நூலாதலாற் பொய்யுரை நூலெனவும், தவறவிடாதமிழ்த்தும் பெரும் பாரமுடைய கல்லாதலால் "வெய்யகல்" எனவும், நாவுக்கரசு எனத் திருவதிகை வீரட்டானேசுரராலருளப்பெற்றமையின் "துய்யசொல்லரசர்" எனவும் விசேடித்தார்.

**திருநாவுக்கரசுஸ்வாமிகளைச் சமணர் கடலிற் கட்டியிட்ட சரித்திரம்வருமாறு:—** திருமுனைப்பாடிநாட்டிலே வேளாளர் குலத்திலே புகழனார் என்பவருக்குத் திலகவதியார் என்னும் புத்திரியும் மருணீக்கியாரென்னும் புத்திரரும் பிறந்து வளருநாட்களிலே தந்தையாகிய புகழனார் சிவபதமடையத் தாயாரும் சககமனஞ்செய்தனர். அதன்மேல் அந்தப் புத்திரீபுத்திரரிருவரும் பலதருமங்களைச்செய்து வருநாளில் ஒருநாள், மருணீக்கியார் பாடலிபுத்திரமென்னு நகரத்திற் சமணர்களுடைய பள்ளியையடைந்து அங்குள்ள சமணரது துர்ப்போதனையான் மயங்கி ஆருகதசமயமே முத்தியடைதற்குரிய நெறியென்று துணிந்து அச்சமயத்திற் பிரவேசித்து அந்தச் சமணசமயநூல்களையெல்லாங்கற்றுப் பாண்டித்தியமுடையராய்ப் புத்தர்களை வாதில்வென்றனர். அதுகண்ட சமணர் அவருக்குத்தருமசேனரெனப்பெயரிட்டு அவரைத்தஞ்சமயகுரவரெனக்கொண்டு வழிபட்டனர். திலகவதியார் திருவதிகைவீரட்டானேசுரரைப் பணிந்துவருங்காலத்தில் ஒருநாள் "ஸ்வாமீ! சமணசமயப்படுகுழியில்விழுந்த தமியேனுடைய தம்பியை அதினின்றுந் தூக்கிக்காப்பாற்றல் வேண்டும்"என்றுபெருமானைப்பிரார்த்தித்தனர். சிவபெருமான் திலகவதியாருக்குச் சொப்பனத்திலே தோன்றி "உன்தம்பி நம்மையடையும்படி முற்பிறவியிற் செய்ததவத்திற் சிறிதுவழுவியதனால் அந்நியமதத்திற் பிரவேசித்தான்; இனிச் சூலைநோயினாலாட்கொள்வோம்" என்றுசொல்லி மறைந்தருளினார். அதன்மேல் தருமசேனருக்குச் சூலைநோயுண்டாயிற்று. அந்நோயை மாற்றத்தக்க மந்திரப்பிரயோக முதலியவைகளையெல்லாஞ் சமணர்செய்தும் மாறாமையாற்கைவிடத் தருமசேனர் தமது சகோதரியாரிருக்குந் திருமடத்தையடைந்து அவரது பாதங்களில்விழுந்தயர்ந்தார். திலகவதியார் அவரையெழுப்பி இதுசிவன்செயலேயென்பதையுணர்த்திச் சிவபெருமானுக்குத் தொண்டுசெய்யும்படி கூறி விபூதிகொடுத்துப் பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தார். மறுநாள் திலகவதியார் தம்பியாரைத் திருக்கோயிலுக்கழைத்துக்கொண்டு சென்று விடுத்தனர். அவர் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து எழுந்துநின்று "கூற்றாயினவாறுவிலக்ககிலீர்" என்னுந்திருப்பதிகத்தைப்பாடியருளினார். உடனேசூலைநோய்நீங்கிற்று, அதன்மேல் அற்புதசின்மயமதுரத்தேவாரங்களைப் பாடியதனால் நாவுக்கரசெனச்சிவபிரானால் அசரீரிவாக்கருளப்பெற்றுச் சைவசமயத்தினராய்ச் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்துவந்தார். தஞ்சமயாசாரியராயிருந்த இவர் சைவசமயத்திற்பிரவேசித்தமையின் இனி நஞ்சமயம் அழிந்து விடுமென்று துன்பமேலிட்டுத்தம்ம

ரசனுக்கறிவித்து அவரைத்தம்மூர்க்கழைப்பித்து, கொல்லுதற்குமுயன்று நீற்றறையி லிட்டும் நஞ்சூட்டியும் யானையையேவியும் தங்கருத்துச்சித்திபெறாமையினால், ஒருபெருங்கருங்கல்லோடணைத்துக் கட்டிப் படகிலேற்றிக்கொண்டுசென்று நடுக்கடலிற் றள்ளினர். அப்போது திருநாவுக்கரசுஸ்வாமிகள் "சொற்றுணை வேதியன்" என்னுநமச்சிவாயத்திருப்பதிகத்தைப்பாடக் கல்லானது அவர் மேற்பக்கத்திலிருக்கத் தக்கதாக மிதந்தது; கயிறுகள் அறுந்து போயின; வருணபகவான் கல்லேதோணியாக அவரைத் திருப்பாதிரிப்புலியூரென்னுஞ் சிவஸ்தலத்தின் பக்கத்திற்சேர்த்தனன். (௨௧)

## (சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்.)

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ
ணுறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

இ—ள்: வறந்திடு பொய்கை முன் நிரம்ப—வற்றிய தடாகம் முந்தியபெற்றியதாய் நீர்நிறையவும், அவண் உறைந்திடும் முதலை வந்து உதிப்ப—அத்தடாகத்தில் இருந்த முதலையானது வந்துதோற்றவும், அன்னதால் இறந்திடும் மகன் வளர்ந்து எய்த—அந்தமுதலையான்மாண்ட பிராமணச்சிறுவன் (கழிந்த வயதினளவுக்கேற்ப உருவளர்ந்து) (அம்முதலைவாயினின்று) தோற்றவும், பாடல் ஒன்று அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்—ஓர் தேவாரத்திருப்பதிகத்தைக் கூறியருளிய சுந்தரமூர்த்திநாயனாருடைய பாதங்களை (யாம்) துதிப்பாம், எ—று.

மற்று அசை. முன்னென்பதற்கு முற்காலத்துளனப்பொருள் கூறினுமாம். செயவெனெச்சங்கள்காரியப்பொருளன. சுந்தரமூர்த்திஸ்வாமிகள் முதலையான்மாண்டசிறுவனைத்தோற்றுவித்தசரித்திரம்: முன்னொருகாலத்திலே சுந்தரமூர்த்திஸ்வாமிகள் தோழராகிய சேரமான்பெருமாணாயனாரைக்காணும் பொருட்டுப் புறப்பட்டுப்போம்போது கொங்கதேசத்திலுள்ள திருப்புக்கொளியூரிலே ஒருவீதியில் ஒருவீட்டில் மங்கலவொலியும் அடுத்த மற்றோர்வீட்டில் அழுகையொலியும் நிகழக்கேட்டு, ஐந்துவயதுள்ள இரண்டுபுதல்வர் குளத்திலே ஸ்நாநம்செய்தபோது ஒருபுதல்வன் முதலைவாய்ப்பட்டிறந்தானாக மற்றைப்புதல்வன் தப்பினானென்பதையும் தப்பியகுமாரனுக்குபநயனஞ்செய்ய இறந்தகுமாரனது பெற்றோர் தம் புத்திரனை நினைத்துப் பிரலாபிக்கின்றனரென்பதையும் அங்குநின்ற பிராமணரைவினாவியுணர்ந்து திருவுளமிரங்கினார். அப்பொழுது புதல்வனையிழந்தபிராமணனும் மனைவியும்வந்து முகமலர்ச்சியோடு அவரது பாதங்களைப்பணிந்தனர். சுந்தரமூர்த்திஸ்வாமிகள் அவரைநோக்கி "அப்புதல்வனை முதலைவிழுங்கியவாவிஎங்கே" என்றுவினாவி அதன்கரையிற்சென்றுபதிகம்பாடியருளினார். உடனே அப்பொய்கை நீர்நிறையப்பெற்று முதலையையுடைத்தாயது. "உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா, யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய், புரைக்காடுசோலைப்புக்கொளியூரவினாசியே, கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே" என்னுநான்காந்திருப்பாட்டுமுடியுமுன் யமன் அந்தப்புதல்வனுடைய உயிரைக்கொண்டுவந்து அவ்வாவியிலுள்ள முதலைவயிற்றினுள்ளே சென்றஆண்டுகளின்வளர்ச்சியையுடைய தேகத்துடன் புகுத்திவிட்டான். உடனே முதலை அப்புதல்வனைக் கரையிலுமிழ்ந்தது. (௨௨)

## (மாணிக்கவாசக ஸ்வாமிகள்.)

கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்

முந்தொரு மூகையை மொழிவித்தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

இ—ள்: உயிர் கந்தமொடு கணபங்கம் படும் என—ஆன்மாவானது பஞ்சகந்தங்களுடனே கணந்தோறும் வேறுபாடடையுமென்று, சிந்தைகொள் சாக்கியர் மூகராய் தியங்க—நினைத்த புத்தர்கள் ஊமைகளாய் (தருக்கிக்கலாற்றாது) மனஞ்சோர, முந்து ஒரு மூகையை மொழிவித்து—பிறவிதொடங்கிப்பேசாத .(அரசன் புதல்வியாகிய) ஒரு ஊமையைப் பேசுவித்து, எந்தைபால் வந்திடும் அடிகளை வணக்கஞ்செய்குவாம்—எம் பரமபிதாவாகிய சிவபெருமானிடத்துச்சாயுச்சியமான மாணிக்கவாசகஸ்வாமிகளை நமஸ்கரிப்பாம். எ—று.

ஒடு உடனிகழ்ச்சிப்பொருளில்வந்தது. கந்தம்—சமூகம். பஞ்சகந்தங்களாவன:- உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்பன. இவற்றுள்,உருவகந்தமாவது: பிருதுவி அப்பு தேயு வாயு என்னும் பூதவுருநான்கும்,கடினம் ரசம் உருவம் கந்தம் என்னும்உபாதாயவுருநான்கும்ஆகியஎட்டுமாம்.வேதனைகந்தமென்பது குசலவேதனை அகுசலவேதனை குசலாகுசலவேதனையென்றுமூன்றுமாம்; இவை முறையே சுகவறிவு துக்கவறிவு சுகதுக்கவறிவென்னும்பொருளன.குறிப்புக்கந்தமாவது: பொறிஐந்துஞ் சித்தம்ஒன்றும் ஆகியஆறுமாம்; பாவனைகந்தமாவது: புண்ணியம்பத்தும் பாவம் பத்துமாகிய இருபதுமாம்; புண்ணியம் பத்தாவன: அருள் அவாவின்மை தவவிச்சை இனியவைகூறல் உண்மைகூறல் பயனுள்ளகூறல் அறங்கூறல் வணக்கம் ஈகை தவஞ்செய்தல் என்பன. பாவம் பத்தாவன: தீச்சிந்தை ஆசை கோபம் கடுஞ்சொல் பொய்யுரை பயனிலகூறல் குறளைகூறல் களவு கொலை பயனிலசெயல் என்பன. இவ்விருவகைகளுள்ளும் முதன்மூன்றுமனத்தாலும் இடைநான்கும் வாக்காலும் கடைமூன்றுங் காயத்தாலுநிகழ்வன. விஞ்ஞானகந்தமாவது:புலனைந்தும் சித்தனையொன்றுமாகிய ஆறனுமறியும் அறிவு ஆறுமாம். உருவகந்தம் எட்டு, வேதனைகந்தம் மூன்று, குறிப்புக்கந்தம் ஆறு, பாவனைகந்தம் இருபது, விஞ்ஞானகந்தம் ஆறு ஆகப்பஞ்சகந்தவிரிநாற்பத்துமூன்றாம்.இதனை "எட்டவையுருவமூன்றுவேதனையாறுஞான, மொட்டியகுறிப்போராறுசெய்கையுமிருபதாகக், கட்டியபஞ்சகந்தங்கணத்தினிற்பங்கமாகித், தொட்டநாற்பத்துமூன்றுஞ்சுத்தநூற்றுணிவதாமே" என்பதனானுமறிக.

கணபங்கமாவது: பிரத்தியக்ஷம் அநுமானம் என்னும் பிரமாணங்களால் அறியப்படுகின்ற ஞானம் ஞேயம் என்னுமிரண்டும் கணந்தோறுஞ் சந்தானத்தேபேதப்படுதல். சந்தானம்—தொடர்ச்சி. கணமென்பது எட்டுத்தாமரையிதழையுளியூடறுக்குங்காலம். பங்கம்—சிதைவு. இக்கணபங்கம் வாயுசந்தானம் தீபசந்தானம் தாராசந்தானம் பிபீலிகாசந்தானமென நான்குவகைப்படும்; இவற்றுள், வாயுசந்தானம் வாயுவினொழுக்கம்; தீபசந்தானம் தீபத்தின் சுடரழிவு; தாராசந்தானம் நீரொழுக்கம்; பிபீலிகாசந்தானம் எறும்பினொழுக்கம்; இவற்றைக் கெட்டுக்கெட்டேபோதல் கெட்டுக்ஷயித்தல் கெட்டுவர்த்தித்தல் கெட்டொத்துநிற்றல் எனவும் வழங்குப. இவற்றாற்போந்தபொருள் உலகம் கணந்தோறும் வேறுபாடுற்றுக்கொண்டேயிருக்குமென்பதாம். வெற்றிலை பாக்கு சுண்ணம் என்னும் மூன்றுந் தம்முட்கூடுங் கூட்டத்தின்கண் ஓர் நிறவேறுபாடு தோன்றுதல்போலப் பிருதுவிமுதலிய நான்குபூதமுந் தம்முட்கூடியவழி ஓர் அறிவுவேறுபாடு தோன்றுவதல்லது உடம்பின்கண் அதற்குவேறாயுயிரென்றொரு பதார்த்தமில்லையென்பது புத்தர்கொள்கை. ஆயினும் ஆசிரியர் உயிரென்பதொன்றுண்டென்னுங்கருத்தினராதல்பற்றிப் புத்தர்கருத்தைக்கூறும்போதுந் தம்மதநிறுவுமாறு "உயிர்படுங்கணபங்கம்"எனக்கூறினார்.

மாணிக்கவாசகஸ்வாமிகளாலுண்மையுணர்த்தப்பட்டவழியும் அதனை மெய்யென்றுதெளியாது, பின்னுந்தங்கருத்தையே சாதிக்கலினைத்தவரென்பதுபோதர,, கந்தமொழியிர்படுங்கணபங்கம்மெனச் சிந்தைகொள்சாக்கியர்''என்றார்.

மாணிக்கவாசகஸ்வாமிகள் புத்தரைவென்ற சரித்திரம்வருமாறு:—முன்னொருகாலத்திலே ஈழநாட்டிலே புத்தசமயம் மிகப்பரவியது. அக்காலத்திலே, தேசங்கடோறுஞ்சஞ்சரித்து ஆங்காங்குள்ள தலமகிமைமுதலியவற்றை ஆராய்ந்துணரும் ஒரு சிவனடியார் அவ்வீழமண்டலத்திற்போயினர். அவர் நிற்கும்போதும் இருக்கும்போதும் திருவம்பலமென்றுச்சரிப்பார். அவரது வரவைப்புத்தர் அரசனுக்குக்கூற அரசன் அவரையழைப்பித்தனன். வந்தஅடியார் அவ்விடத்திலிருக்கும்போதும் திருவம்பலமென்றுச்சரித்தனர். அப்போது அரசன் அவரைநோக்கி "பத்தரே! நீர் திருவம்பலம் என்றுசொல்வதுஎதற்காக"என்றுவினவினன்.அதுகேட்டஅடியார் "புலியூரின்கண்ணே கனகசபையென்றோரம்பலம்இருக்கின்றது.சிவபெருமான் ஆன்மாக்களுக்குமுத்தியைக் கொடுக்கும்பொருட்டு உமாதேவியுடன் அச்சபையினின்று ஆநந்ததாண்டவஞ்செய்வார். அக்கடவுளைச் சிந்தித்தற்காகவே திருவம்பலமென்றுசொல்வது; இதனையொருமுறையுச்சரிப்பது இருபத்தோராயிரத்தறுநூறுமுறை பஞ்சாக்ஷரசபஞ்செய்தற்குச்சமமாம்''என்றனர்.அச்சபையிலிருந்தபுத்தகுரு அதுகேட்டு,அவ்விடத்திற்றான்போய்வாதுசெய்து அங்கே தன் சமயத்தைத்தாபிப்பேனென்றுகூறி,அரசன்வருமுன் புலியூரிலுள்ள திருக்கோயிலிற்போயிருந்தனன். அங்குள்ளார் எழுந்துபோம்படி கூறவும், "என்சமயத்தைத்தருக்கத்தினுட்டியன்றிப் புறப்படுவதில்லை" என்று அந்தப் புத்தகுருக்கூறினன். பின் அங்குள்ளார், சோழராசனுக்கும் அந்தணர் முனிவர் புலவர்முதலிய எத்திறத்தார்க்கும் அடுத்ததினத்திற்சபைக்குவரும்படி ஓலைபோக்கி அறிவித்து இரவு சயனித்தனர். கனகசபேசர் அவர்கட்குச்சொப்பனத்திற்றோன்றி "வாதவூரன் புத்தரைவாதில்வெல்வன். நீவிர்கவலையையொழிமின்" என்றருளிச்செய்தனர். மறுநாள் யாவருமொருங்குகூடிப்பெருமானருளைவியந்துபேசி, வாதவூரடிகட்கு அந்நிகழ்ச்சிகளை அறிவித்தழைத்தனர். அவரெழுந்தருளிவந்து புத்தன் முகங்காணலாகாமையின் இடையிற்றிரையிடுவித்திருந்தனர். சோழராசன்முதலியவர்களும் வந்தனர். அதன்மேல் அச்சபையில் வாதில்வென்று நாவெழாவண்ணம் புத்தர்களை ஊமையாக்கி அடக்கி, பிறவியூமையாகிய புத்தராசன் மகளைக்கொண்டு முன்புத்தர்வினவிய வினாக்கட்கெல்லாம் விடைகூறுவித்தனர். இச்சரித்திரத்தைத் திருவாதவூரடிகள்புராணத்தாற்றெள்ளிதினுணர்க. (உ௲)

( திருத்தொண்டர்கள்.)

அண்டரு நான்முகத் தயனும் யாவருங்
கண்டிட வரியதோர் காட்சிக் கண்ணவா
யெண்டரு சிவனடி யெய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்.

இ—ள்: அண்டரும் நான்முகத்து அயனும் யாவரும் கண்டிட அரியது ஓர் காட்சிக்கண்ணவாய் எண்டரு சிவனடி—தேவர்களும் நான்குமுகங்களையுடைய பிரமதேவரும் பிறரெல்லோரும் காணுதற்கரிய காட்சியைத்தன்னிடத்துடையனவாய் மதிப்புவாய்ந்த சிவபெருமானது திருவடிகளை, எய்தி வாழ்—சேர்ந்துவாழுகின்ற, திருத்தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்—திருத்தொண்டர்களது பாததாமரைகளை வணங்கித்துதிப்பாம்; எ—று.

பிரமதேவரைப்பின்னர்க்கூறுதலால் முன்னர்த்தேவரென்றது அவரொழிந்தோரை. யாவருமென்றது முனிவராதியரை. அத்து சாரியை. ஓர் அசைநிலை. காட்சிக்க

ண்ணஎன்பதில் கண் இடம். "கண்ணவாய் தகு அடி" எனஇயைக்க. அரியது குறிப்பு முற்றுப்பெயரெச்சம்.

தில்லைவாழந்தணர்முதலிய திருத்தொண்டர்களைத் துதிப்பான்புக்க ஆசிரியர், சமயாசாரியர் நால்வரையும்முறையே நான்குசெய்யுளாற்றுதித்து எனையரை இச்செய்யுளாற்றுதித்தனர். தேவர்முதலியோர்க்குக் காட்சிக்கும் அரியனவாயிருக்கும் சிவனடியே தொண்டர்க்குவாழ்விடமாயதென்னும் விசேடந்தோன்ற "அண்டருநான்முகத்தயனும்யாவருங்கண்டிடவரியதோர்காட்சிக்கண்ணவாயெண்டகுசிவனடியெய்திவாழ்திருத்தொண்டர்" என்றார். இதனால் விஷ்ணுபிரமாமுதலியோரினுந் தொண்டர்கள் விசேடமுடையரென்பது பெறப்பட்டது. இதனை "அண்டருக்கரியாய்போற்றியடியருக்கெளியாய்போற்றி" என்பதனானுமறிக. பதமலர் ரூபகம். (உச)

## ( சரசுவதிதேவி. )

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

இ—ள்: தா அறும் உலகு எலாம் தந்த நான்முகத்தேவுதன் துணைவியாய்—குற்றம்நீங்கும் உலகங்களெல்லாவற்றையும்படைத்த பிரமதேவரது தேவியாய், செறிந்த பல் உயிர் நாவுதொறு இருந்திடும் நலம் கொள் வாணிதன் பூ அடி—நெருங்கிய பலவகைப்பட்ட ஆன்மாக்களின் நாக்கடோறும் வசிக்கும் நன்மைபொருந்திய சரசுவதியினது தாமரைமலர்போன்ற பாதங்களை, முடிமிசை புனைந்து போற்றுவாம்—சிரமேற்சூடித்துதிப்பாம்; எ—று.

உகரங்களிரண்டும் தன்னிரண்டும்சாரியைகள். வாணி வாக்குக்குரியதெய்வம். வாக்கு நாவினால்வசனிக்கப்படுதலாற் சரசுவதியை "நாவுதொறிருந்திடு...வாணி" என்றார். இதனை "மைந்தர்மடவார்தமதுவாக்கிறைவிநீயே" என்னுந் திருவாதவூரடிகள் புராணச்செய்யுளானுமுணர்க. நான்முகத்தேவு-நான்குமுகங்களையுடையகடவுள். "உலகெலாந் தந்தநான்முகத்தேவுதன்றுணைவியாய்...உயிர்நாவுதொறிருந்திடு...வாணி" என்றதனால் உயிர்கட்குத்தாயெனச்சிறந்தவளென்பதுபெறப்பட்டது.

அத்தகையதேவி நாவிற் சாந்நித்தியமாகநின்று இக்காப்பியத்தை வழுவின்றி இனிது நிறைவேற்றும்பொருட்டு ஆசிரியர்துதித்தவாறு. (உரு)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆக விருத்தம் ௩௦.

---

# அவையடக்கம்.

அவையடக்கமென்பது அவைக்கு அடங்குதலையுணர்த்தும் பகுதியென விரிக்கப்படுதலால் நான்காம்வேற்றுமைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. அவை—பெரியோர்குழு. அடக்கம்—தாழ்மை. இது சபையார்க்குத் துதிபோலாதலின் கடவுள் வாழ்த்தின் பின் வைக்கப்பட்டது.

இறைநில மெழுதுமுன் னிளைய பாலகன்
முறைவரை வேனென முயல்வ தொக்குமா
லறுமுக முடையவோ ரமலன் மாக்கதை
சிறியதோ ரறிவினேன் செப்ப நின்றதே.

இ—ள்: சிறியது ஓர் அறிவினேன்—சிற்றறிவினையுடைய தமியேன், அறுமுகம் உடைய ஓர் அமலன் மா கதை செப்ப நின்றது—ஆறுதிருமுகங்களையுடைய ஒப்பற்ற மலரகிதராகியசுப்பிரமணியப்பெருமானது பெருமைபொருந்திய (இப்)புராணத்தைச்சொல்லத்துணிந்து நின்றதன்மையானது, இளைய பாலகன்—பாலியப்பிராயத்தையுடைய சிறுவன், இறை நிலம் எழுதுமுன் முறைவரைவேன் என முயல்வது ஒக்கும்—விரலினாலே நிலத்தில் எழுதப்பயிலுதற்கு முன்னே புத்தகத்தை எழுதுவேனென்று (துணிந்து) முயற்சிசெய்தல்போலும்; எ—று.

ஆல் என்பதும் சிறியதோர் என்பதில் ஓர் என்பதும் ஏகாரமும் அசைநிலைகள். இறை ஆகுபெயர். எழுத்துப் பயிற்சியேயன்றி மதிநுட்பத்தாலாயினும் ஒருவாறு நிறைவேற்றற்குரிய பருவமும் இல்லையென்பது போதர "இளையபாலகன்" எனவும், முற்றறிவுடைய கடவுளென்பது போதர "அமலன்" எனவும், அக்கடவுளின் மான்மியங்களையுணர்த்தும் நூல்களுட்சிறந்ததென்பது போதர "மாக்கதை" எனவும், அந்நூலைப்பாடுதற்கேற்ற அறிவிலேனென்பது போதர "சிறியதோரறிவினேன்" எனவும் கூறினார். இச்செய்யுளால், இந்நூலைப்பாடிமுடித்தல்தம்மாலியலாததென்பதுபமானங்கூறி விளக்கப்பட்டது. (க)

வேறு.

ஆன சொற்றமிழ் வல்ல வறிஞர்முன்
யானு மிக்கதை கூறுதற் கெண்ணுதல்
வான கத்தெழும் வான்கதி ரோன்புடை
மீனி மைப்ப விரும்பிய போலுமால்.

இ—ள்: ஆன சொல் தமிழ் வல்ல அறிஞர்முன்—சிறந்த சொற்களையுடைய தமிழ்ப்பாஷையில் வல்லபுலவர்களுக்குமுன்னே, யானும் இ கதை கூறுதற்கு எண்ணுதல்— (அத் தமிழ்ப்பாஷை வன்மையில்லாத) தமியேனும் இப்புராணத்தைச் சொல்லுதற்கு நினைத்தல், வான் அகத்து எழும் வான் கதிரோன் புடை—ஆகாயத்தின்கண்ணே கிளருகின்ற பெரியகிரணங்களையுடைய சூரியனுக்குப்பக்கத்தில், மீன் இமைப்ப விரும்பிய போலும்—நக்ஷத்திரங்கள் ஒளிபரப்ப விரும்பியனபோலும்; எ—று.

ஆல் அசை. உம்மை இழிவுசிறப்பு. சிறந்தசொற்களையுடையதமிழாவது செந்தமிழ். சொல் ஆன தமிழ் எனமாற்றிப் பொருள்கூறினுமாம். சொற்றமிழ் என்பதற்கு இலக்கணநூலெனப் பொருள்கூறுவர் சிலர் வடநூலார் சத்தமென வழங்குதல் பற்றி. இக்கதையென்றது கந்தபுராணத்தை. இச்செய்யுளால், இம்முயற்சி ஒத்

தியாதல் அரிதென்பதும் ஒருவாறு சித்தியாயினும் அறிஞர் முன் விளக்கமுறாதென்பதும் உபமானங்கூறி விளக்கப்பட்டது. (௨)

முன்சொல் கின்ற முனிவட நூறெரீஇத்
தென்சொ லாற்சிறி யேனுரை செய்தலான்
மென்சொ லேனும் வெளிற்றுரை யேனும்வீண்
புன்சொ லேனு மிகழார் புலமையோர்.

இ—ள்: சிறியேன்—சிற்றறிவினனாகிய யான், முனி முன் சொல்கின்ற வடநூல் தெரீஇ—(பேரறிவினராகிய) சூதமகாமுனிவர் முற்காலத்தில் (நைமிசாரணியவாசிகளுக்கு) உபதேசித்த வடநூற் காந்தபுராணத்தை ஆராய்ந்து, தென்சொலால் உரை செய்தலால்— தமிழ்ச்சொற்களாலே பாடுதலால், மென்சொலேனும்—(அச்சொற்கள்) மென்சொற்களாயினும், வெளிற்றுரையேனும்—வெளிப்பொருட்சொற்களாயினும், வீண் (சொலேனும்)— பயனில்சொற்களாயினும், புன் சொலேனும்— இழிசொற்களாயினும், புலமையோர் இகழார்—கல்வியறிவினையுடைய ஆன்றோர்கள் நிந்திக்கமாட்டார்கள்; எ—று.

முன் சொல்கின்ற என்பது இறந்தகாலத்தோடு நிகழ்காலமயங்கிய வழுவமைதி. சிறியேனென்றதற்கேற்பச் சூதமுனிவர்க்குப் பேரறிவுடைமை வருவித்துரைக்கப் பட்டது. வடதிசைக்கண் பரந்து வழங்கியதால் ஆரியபாஷையை வடமொழியெனவும், தென்றிசைக்கண் வழங்கியதாற் றமிழ்ப்பாஷையைத் தென்மொழியெனவும் வழங்குப. மென்சொல் சுவையற்றசொல். சுவைகள்: சொற்சுவை பொருட்சுவை என இரண்டு. அவற்றுட்சொற்சுவையாவன: குணம் அலங்காரம் என்பனவாம். பொருட்சுவையாவன: காமம் கருணை நகை வீரம் உருத்திரம் அச்சம் குறிப்பு வியப்பு சாந்தம் என்பனவாம். வீண்சொல்-நெல்லின்கட்பதர்போல அவ்வவ்விடத்தில் வேண்டப்படாதுநிற்குஞ்சொல். புன்சொல் அசப்பியமொழி. முனியை வியாசரென்பாருமுளர். பதினெண்புராணங்களையுமாக்கிய வியாசமுனிவரனுமாணாக்கருட்சிறந்த சூதமாமுனிவர் வடமொழியிலுபதேசித்த காந்தபுராணத்தையே சரித்திரபேதமுறாவண்ணந் தமிழிற்பாடுதலாற் சரித்திரமகிமையைப் பாராட்டி வழுக்களைச்சிந்தியாது இந்நூலை அறிவுடையோர் ஏற்றுக்கொள்வர் என்பது இச்செய்யுளால் உணர்த்தப்பட்டது. (௩)

சிந்து மென்பு சிரம்பிறை தாங்கினோன்
மைந்த னாதலின் மற்றவன் றானுமென்
சந்த மில்லுரை யுந்தரிப் பானெனாக்
கந்த னுக்குரைத் தேனிக் கதையினை.

இ—ள்: சிந்தும் என்பு சிரம் பிறை தாங்கினோன் மைந்தன் ஆதலின்—சிதறிக்கிடக்கும் எலும்புகளையும் கபாலங்களையும் பாலசந்திரனையும் (விரும்பித்) தரித்தவராகிய சிவபெருமானது குமாரர் ஆதலால், அவன்றானும் என் சந்தம் இல் உரையும் தரிப்பான் எனா—அக்குமாரரும் சிறியேனது இசையில்லாத பாக்களையும் ஏற்றுக்கொள்வாரென்றெண்ணி, கந்தனுக்கு இக்கதையினை உரைத்தேன்—கந்தஸ்வாமிக்கு (உரியதாக) இப்புராணத்தைப்பாடினேன்; எ—று.

மற்று அசைநிலை. தான் சாரியை. உம்மையிரண்டனுள் முன்னையது இறந்தது தழீஇயவெச்சம். பின்னையதிழிவுசிறப்பு; எச்சமுமாம். உரை ஆகுபெயர். சிந்துமென்பென அடைகொடுத்துக் கூறினார் அதன்புன்மையை விளக்க. தசை தோன் முதலிய

ண கழியப்பெற்ற எலும்பெனக்கூறினுமாம். தந்தையாகிய சிவபிரான் தாமேமுழுமுதற்கடவுளென்பதை எவருமுணர்ந்து வழிபடும்பொருட்டுக் கற்பங்கடோறுமிறந்த பிரமர்களது எலும்புகளையுந் தலையோடுகளையுங் கலைதேய்ந்தசந்திரனையும் அவற்றினிழிவைப்பொருட்படுத்தாது தரித்தவாறே, மைந்தராகிய கந்தவேளுந் தமதற்புதத்தையெவருமுணர்ந்து வழிபடும்பொருட்டுத் தமியேனாற் பாடப்பட்ட இப்புராணத்தைக் குற்றம்பாராட்டாதுஏற்றுக்கொள்வர்; கடவுளுமேற்றுக்கொள்வரேயானாற் புலவர் ஏற்றுக்கொள்வதற்குத்தடையென்னையெனமுற்செய்யுளிற் சுட்டியகருத்து இச்செய்யுளால் வற்புறுத்தப்பட்டது. (௪)

வெற்றெ னத்தொடுத் தீர்த்து வெளிற்றுரை
முற்று மாக மொழிந்தவென் பாடலிற்
குற்ற நாடினர் கூறுப தொல்லைநூல்
கற்று ணர்ந்த கலைஞரல் லோர்களே.

இ—ள்: வெற்றென தொடுத்து ஈர்த்து—வெறுமையையுடையதெனும்படி (சொற்களைத்) தொடுத்திசைத்து, முற்றும் வெளிற்றுரை ஆக மொழிந்த என் பாடலில்—முழுதும் வெளிப்பொருளாகப்பாடிய எனது பாக்களிலே; தொல்லை நூல் கற்றுணர்ந்த கலைஞர் அல்லோர்களே—பழைய சாஸ்திரங்களைக்கற்றறிந்த புலவரல்லாதவர்களே, குற்றம் நாடினர் கூறுப—குற்றத்தைத் தேடிச் சொல்லுவார்; எ—று.

ஏகாரம் பிரிநிலை. நாடினர் வினைமுற்றெச்சம். தொடுத்து ஈர்த்து மொழிந்த பாடல் எனஇயைக்க. கலைஞரல்லோர்களே குற்றநாடிக் கூறுவரெனவே கலைஞர் அங்ஙனங்கூறார்; குணநாடிக்கூறுவர் என்பதுபெற்றாம். இச்செய்யுளாற் குற்றங்கூறுவாரின் குறைவுகூறப்பட்டது. (௫)

குற்ற மேதெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வராற்
கற்றி லாவென் கவிவழு வாயினு
முற்று நாடிவல் லோருய்த் துரைக்கவே.

இ—ள்: குற்றமே தெரிவார்—குற்றத்தையே ஆராய்கின்றவர்கள், மா குறுமுனி சொற்ற பாவினும் ஓர் குறை சொல்வர்—மகிமைபொருந்திய அகத்தியமுனிவர் பாடிய பாவினும்ஒருகுற்றத்தைச்சொல்லுவார்கள்;(ஆதலால்),வல்லோர்—கல்வியறிவில் வல்லபுலவர்கள், உற்று நாடி—நுனித்து ஆராய்ந்து, கற்றிலா என் கவி வழுவாயினும் உய்த்துரைக்க—கல்வியறிவில்லாத சிறியேனது செய்யுட்கள் குற்றமுடையனவாயினும் தெரிந்து கூறுக; எ—று.

ஆல் அசை. ஏகாரமிரண்டனுண்முன்னையது பிரிநிலை; பின்னையதசை. தெரிவார் வினையாலணையும்பெயர். உம்மைகளிரண்டனுண் முன்னையதுயர்வுசிறப்பு. பின்னையதிழிவுசிறப்பு. மாணுடர்க்குவியதிப்படுத்திய பிரமாணத்திற் குறுத்த வடிவுடைமையால் அகத்தியமுனிவரைக் குறுமுனியெனவழங்குவது. தமிழிலக்கணத்தை அருளிச்செய்தவராதலின் அகத்தியமகாமுனிவரது பாவைச்சிறந்த பாவாகஎடுத்துக்காட்டினார். அத்தகைய அகத்தியமுனிவரது பாவுங் குற்றந்தெரிதற்கிடமாகுமேற் கல்வியறிவில்லாத மூடனாகிய எனது பா அங்ஙனமாகாமையெவ்வாறு? இவ்வுண்மையையறிந்த பெரியோர் அக்குற்றங்களைப் பொருட்படுத்தமாட்டார் என்பது கருத்து.

கற்றுணர்ந்த பெரியோர்களே இந்நூலின் குணகுணத்தை நிச்சயித்தற் கருதராவாரென்பது இச்செய்யுளாலுணர்த்தப்பட்டது. (ச)

வேறு.

குறைபல மாமதி கொளினு மன்னதா
லுறுபய னோக்கியே யுலகம் போற்றல்போற்
சிறியவென் வெளிற்றுரை சிறப்பின் றாயினு
மறுமுகன் கதையிதென் றறிஞர் கொள்வரே.

இ—ள்: மாமதி பலகுறை கொளினும்—பூரணசந்திரனானது பலகுற்றங்களைப்பொருந்தியிருந்தாலும், அன்னதால் உறு பயன் நோக்கி உலகம் போற்றல்போல்— அச்சந்திரனால் உண்டாகும் பிரயோசனங்களை உற்றுணர்ந்து உலகத்தவர்கள் துதிப்பது போல, சிறிய என் வெளிற்றுரை சிறப்பின்று ஆயினும்—சிற்றறிவினையுடைய எனது வெளிச்சொற்பாடல் சிறப்பில்லாததாயினும், அறுமுகன் கதை இது என்று அறிஞர் கொள்வர்—சண்முகக்கடவுளினது சரித்திரம் இதுவென்று அறிவுடையோர் பாராட்டிக்கொள்ளுவார்; எ—று.

சந்திரன் பல குற்றங்களையுடையதாயினும் அதனால்உண்டாகும்பிரயோசனம்பெரிதாதல்கருதி உலகத்தார் துதித்தல்போல, என் கவியும் குற்றங்களையுடைத்தாயினும் சுப்பிரமணியக்கடவுளின் மான்மியத்தை எவர்க்கும்விளங்கவுணர்த்தும் விசேடம்பற்றி அறிவுடையோர் போற்றிக்கொள்வரென்பது கருத்து.

ஏ. அசைகள். உலகம் உரை கதை என்பன ஆகுபெயர்கள்.

சந்திரனுக்குள்ள குற்றங்கள் களங்கமுடைமை கலைதேய்தல் முதலியனவாம். குணம் அமிர்தத்தால் தேவராதியரைத் திருப்திப்படுத்துதல் பயிர்வளர்த்தல் முதலியன. குற்றங்களிவையென்பதையும் ஆசிரியர்கள் தங்கவிக்குச்சந்திரனை உவமித்தலையும் "அலர்மதியுமென்கவியுங்களங்குறையுங்கலைகுறையுமானக்காலும், புலவரெலாமிகமகிழ்ந்தேயமுதெனவேபயனுகர்ந்துபுகழாநிற்பர், நிலவுமிழுமதிகரவுபுரிபவர்க்கும்விரகியர்க்குநெருப்பாத்தோன்று, முலகினிலென்கவியழுக்காறுடையவர்க்கும்பேதையர்க்குமுவப்பெய்தாதே" என்னுஞ்செய்யுளானும், குணங்களிவையென்பதை "வயங்குவெண்மதிய, மேயதன்கலையால்விண்ணவர்தம்மைவிழைந்துறைதென்புலத்தாரை, யெய்வுறவிறையவூட்டிநன்காயவிருந்தவப்பயிர்கண்மற்றெவையுந், தேய்வுறாவாகிநாடொறுமிகுந்துதித்தறவளர்ந்திடச்செய்யும்" என்னுஞ்செய்யுளானும் "மண்டலம்பயிலுயிர்கள்பேருயிர்ப்பினுன்மயங்கி, மண்டலம்பொரவருந்தியபெருந்துயர்மாற, மண்டலந்தனைநிழலெனுமரபினுற்றனது, மண்டலம்பொழியமிர்தின்மெய்குளிரவேவைத்தோன்" என்னும் மகாபாரதச்செய்யுளானுமுணர்க.

அமிர்தரூபமாகியபூரணசந்திரன் கலைகுறையும்போது முதலாவதுமுதற் பதினைந்தாவதிறுகிய கலைகளின் அமிர்தத்தை ஒவ்வொருகலையாக முறையே அக்கினியும் சூரியனும் விசுவேதேவரும் வருணனும் வஷட்காரதேவதையும் இந்திரனும் இருடிகளுடன் தேவர்களும் அஜசரணரும் யமனும் வாயுவும் உமாதேவியும் பிதிரரும் குபேரனும் பசுபதியும் பிரஜாபதியும் பருகுவரெனவும், எஞ்சியகலையினமிர்தம் நீரில் வியாபித்துப் பயிர்களை வளர்ப்பதுடன், பசுக்களால் அந்நீர்பருகப்பட்டுப் பாலாகி ஓமத்துக்குபகரணமாய் அதுவுந்தேவர்க்குப்பிரீதியாமெனவும் சோமோற்பத்தியிற்கூறப்பட்டுளது. சந்திரன் உலகத்தாராற் றுதிக்கப்படுதலை "அந்தியாரணமந்திரத்தன்புடனிவனை, வந்தியாதவர்மண்ணினும்வானினுமில்லை" என்னும் மகாபாரதச்செய்யுளானுமுணர்க.

பெரியோரிந்நூலைவரையாதுகொள்ளுதற்குக்காரணமிச்செய்யுளாற்கூறப்பட்டது ()

நாதனா ரருள்பெறு நந்தி தந்திடக்
கோதிலா துணர்சனற் குமரன் கூறிட
வாதரா யணமுனி வகுப்ப வோர்ந்துணர்
சூதனோ தியதுமூ வாறு தொல்கதை.

இ—ள்: நாதனார் அருள் பெறும் நந்தி தந்திட—(சகலலோகங்கட்குந்) தலைவராகிய சிவபெருமானதுஉபதேசாநுக்கிரகத்தைப்பெற்ற திருநந்திதேவர்போதிக்க, கோது இலாது உணர் சனற்குமரன் கூறிட—குற்றம்(பொருந்துதல்)இன்றிக்கேட்டறிந்தசனற்குமாரமுனிவர் போதிக்க, வாதராயணமுனி வகுப்ப—(கேட்ட) வியாசமுனிவர் வகைப்படுத்துப்போதிக்க, ஓர்ந்து உணர் சூதன் ஓதியது தொல்கதை மூவாறு— விளங்கியறிந்த சூதமுனிவர்சொல்லிய பழைய புராணங்கள் பதினெட்டு (ஆம்); எ—று.

ஆர் விகுதி உயர்வுபற்றிவந்தது; இதனை அருளென்பதற்கடையாக்கி நிறைந்தகருணையெனினுமாம். குற்றங்களாவன: ஐயம் திரிபு அறியாமை என்பன. இல்லாது எனற்பாலதிலாதெனத்தொக்கது. சனற்குமரன்-பிரமாவின் புத்திரர். வாதராயணமுனி-வதரிகாச்சிரமத்தில் வசித்திருந்தமுனிவர். சூதன்-நின்றேத்துவோன். சிவபெருமானது திவ்வியப்பிரபாவங்களையெல்லாம் அடியார் சமூகங்களினின்று எடுத்தோதித்துதிப்பவராதலாலப்பெயரவர்க்காயிற்று. முன்னே பெருந்தொகைக்கிரந்தங்களுடன் ஒரேநூலாயிருந்த புராணத்தை நான்கிலக்கத்தெண்ணாயிரங் கிரந்தங்களாகப் பதினெண்வகைபெற வியற்றினார் வியாசராதலால் "வாதராயணமுனிவகுப்ப" என்றார். புராணங்களையுபதேசிக்குந்தோறும் வேதாந்தசாரத்தோடொற்றுமையாயிருத்தலை நோக்கி மெய்ப்புளகமுற்றுக் கேட்ட விசேடத்தினால் ரோமஹர்ஷணனென வியாதராற்பெயரிடப்பட்ட மகானென்பது போதர "ஓர்ந்துணர் சூதன்" என்றார். பதினெண்புராணங்களின் பெயர்முதலியன பாயிரப்படலத்திற் பின்னர்க்கூறப்படுதலால் ஈண்டுவிடுக்கப்பட்டன. இச்செய்யுளால் வடநூற்புராணங்களின் தொகையும் பாரம்பரியமுங் கூறப்பட்டன. (அ)

சொல்லிய புராணமாந் தொகையு ளீசனை
யல்லவர் காதைக ளனையர் செய்கையு
ணல்லன விரித்திடு நவைகண் மாற்றிடு
மில்லது முகமனா லெடுத்துக் கூறுமே.

இ—ள்: சொல்லிய புராணம் ஆம் தொகையுள்—மேற்கூறிய பதினெண்புராணங்களாகிய தொகுதியுள், ஈசனை அல்லவர் காதைகள்—சிவபெருமானையொழிந்த மற்றைத்தேவர்களது புராணங்கள், அனையர் செய்கையுள் நல்லன விரித்திடும்—அத்தேவர்களது செயல்களுள்ளே நன்மையுடையசெயல்களை விரித்துக்கூறும்; நவைகள் மாற்றிடும்—குற்றமுள்ளசெயல்களைக் கூறாதுவிடுக்கும்; இல்லதும் முகமனால் எடுத்துக் கூறும்—அத்தேவர்கட்கில்லாத சிறப்புகளையும் துதிவாதமுறையாற் கற்பித்துச்சொல்லும்; எ—று.

புராணம்—பழையசரித்திரம். காதையென்பது கவர்க்கத்திருதீயமும் தவர்க்கத்துவிதீயமும் தற்பவமாய்வந்த வடசொல். நவை ஆகுபெயர். திருமான்முதலியதேவர்கள் பசுக்களேயாதலின் அந்தப்பசுகரண சேட்டையினாலவரிடத்தே குணங்களுடன் குற்றங்களுந் தோன்றுமாயினும் அப்புராணங்கள் தங்கோட்பாட்டை நிறுவுதற்பொரு

ட்டுக் குணங்களை விரித்துக்கூறி குற்றங்களைக்கூறாதுமறைத்து அவர்க்குப்பரத்துவங் கற்பிக்குமென்பது கருத்து. கிருத்தியங்களை நடப்பித்தற்பொருட்டுக் கலந்துநிற்றலாலாயபரத்துவத்தை விளக்குவன ஏனைப்புராணங்களாதலினிவ்வாறுகூறினர்.

இச்செய்யுளாற்சிவபுராணமல்லாத பிறபுராணங்களின் குறைவு கூறப்பட்டது.()

பிறையணி சடைமுடிப் பிரான்றன் காதைக
ளிறையுமோர் மறுவில யாவு மேன்மையே
மறைபல சான்றுள வாய்மை யேயவை
யறிஞர்க ணாடியே யவற்றைக் காண்கவே.

இ—ள்: பிறை அணி சடைமுடி பிரான்றன் காதைகள்—பாலசந்திரனை அணிந்த சடாமுடியினையுடைய சிவபெருமானது புராணங்கள், இறையும் மறு இல—சிறிதாயினுங்குற்றமில்லாதன, யாவும் மேன்மையே—எல்லாம் மகத்துவமுடையனவே, மறை பல சான்று உள—அதற்குப் பலவேதங்கள் சாக்ஷியாயுள்ளன, அவை வாய்மையே—(ஆதலால்) அவைஉண்மையுடையனவே, அவற்றை அறிஞர்கள் நாடி காண்க—அத்தகைமைகளை அறிவுடையோர் ஆராய்ந்துணர்க; எ—று.

இறை-விரற்கணுவின்கணுள்ள ரேகை. அஃதீண்டுச்சிறுமையையுணர்த்திற்று. ஓர் அசைநிலை. கலையொழிதலாகிய குற்றத்தையடையாவண்ணங்காக்குமாறு பாலசந்திரனைச் சடாமுடியிலணிந்த சிவபெருமானது புராணமாதலின் அவையுங்குற்றமுடையனவாகாவென்பார் "பிறையணிசடைமுடிப்பிரான்றன்காதைகளிறையுமோர்மறுவில" என்றார். "எல்லாப்பிரமாணங்களுக்குமிகையுமுக்கியமாம்பிரமாணம், வல்லாருரைக்கும்வேதமே"எனவும், "மறைக்குவிரோதமுறா,மொழியார்தருநற்புராணங்கள்முற்றும்பிரமாணங்களே, கழியாமறைமூலம்மாகாக்கசட்டுநூல்கள்யாவுமிகு,பழியார்நூல்கள்பிரமாணப்படாதுபடிமுற்றளந்தோயே" எனவும் சூதசங்கிதைகூறியதற்கேற்ப வேதவிரோதமானதைப்பொய்யென்றுவிலக்குவதும் விரோதமாகாதனவற்றை மெய்யென்று கொள்வதும் வழக்கமாதலின் இச்சிவபுராணங்கள் வேதாவிரோதங்களாய்ப்போற்றப்படுவனவென்பதையுணர்த்திமெய்ப்படுத்துவார்"மறைபலசான்றுளவாய்மையேயவை" எனவும், வேதமுற்றையுமொருங்கோதி மெய்ப்பொருளுணர்ந்தார் நுனித்துணரினன்றிப்பிறவாற்றாற் புலப்படாதென்பார் "அறிஞர்கணாடி ... காண்க" எனவுங்கூறினார்.

இச்செய்யுளாற் சிவபுராணங்களின் விசேடங்கூறப்பட்டது. (௪௦)

புவியின ரேனையர் புராணந் தேரினுஞ்
சிவகதை யுணர்கில ரென்னிற் றீருமோ
வவர்மய லரசனை யடைந்தி டாரெனி
லெவரெவ ராக்கமு மினிது போலுமால்.

இ—ள்: புவியினர் ஏனையர்புராணம் தேரினும்—பூமியிலுள்ளவர்கள் மற்றைத் தேவர்களது புராணத்தைக் கற்றுணர்ந்தாலும், சிவகதை உணர்கிலர் என்னில்—சிவபுராணத்தைக் கற்றுணராதொழிவரேயானால், அவர்மயல் தீருமோ—அவர்களது அறியாமைநீங்குமா? (நீங்காதே), அரசனை அடைந்திடார் எனில்—அரசனை அணுகப்பெறாதவர்களானால், எவரெவர் ஆக்கமும் இனிதுபோலும்—எவரெவரது செல்வமும் சிறந்தசெல்வம்போலும் (அன்றோ); எ—று.

ஆல் அசை. உம்மைகளிரண்டனுண் முன்னையதுயர்வுசிறப்பு. பின்னையதிழிவுசிற

ப்பு. ஒகாரம் எதிர்மறை. எவரெவரென்னுஞ்சொல்லடுக்கு அரசனினும்மிகக்குறைந்த செல்வமுடையாரையுணர்த்தற்கண் வந்தது. அரசனுடன் பயின்று அவனது செல்வப்பெருக்கையுணராதார்க்கு அவனினும்மிகவிழிந்த அற்பரது செல்வமெல்லாம் இணையில் பெருவளமாகக்காணப்படுவதுபோலவே சிவபுராணத்தைக் கேட்டுணராதார்க்கு அற்பதேவர்களைப்பரமாகக்கூறும் பிறபுராணங்கள் சிறந்தனவாய்த்தோன்றி முழுமுதற்கடவுள் சிவபெருமானேயென்னும் உண்மையையொழிக்குமென்பதாம்.

இச்செய்யுளாற் சிவபுராணங்கேட்டலாவசியகமென்பதுணர்த்தப்பட்டது. (௧௧)

மங்கையோர் பங்குடை வான நாயகற்
கிங்குள பலபுரா ணத்து ளெஃகவேற்
புங்கவன் சீர்புகழ் புராண மொன்றுள
தங்கதி லொருசில வடைவிற் கூறுகேன்.

இ—ள்: மங்கை ஓர் பங்கு உடை வானநாயகற்கு இங்கு உள பலபுராணத்துள்—உமாதேவியை வாமபாகத்திலுடையதேவர்தலைவராகியசிவபெருமானுக்கு (உரியனவாக) இவ்வுலகத்தில் வழங்கப்பட்டுள்ள பலபுராணங்களுள்ளே, எஃக வேல் புங்கவன் சீர் புகழ் புராணம் ஒன்று உளது—கூரியவேலாயுதத்தையுடைய தலைவராகிய சுப்பிரமணியஸ்வாமியினது மான்மியத்தை வியந்துசொல்லுகின்றபுராணம் ஒன்று இருக்கின்றது, அங்கதில் ஒருசில அடைவில் கூறுகேன்—அப்புராணத்திற் சிற்சிலசரித்திரங்களை முறைப்படி எடுத்துச்சொல்லுவேன்; எ—று.

உடையவென்பதிலீற்றுயிர்மெய் குறைந்தது. உள்ளஎனற்பாலதுஉளவெனத்தொக்கது. பலவென்றதிண்டுப்பத்தையுணர்த்திற்று. அங்கது ஒருசொல். ஒரு என்னும்பதத்தோடு சிலவென்பதியைந்து சிலவற்றினுள்ளுந்தெரிந்தெடுக்கப்பட்டசுருக்கத்தையுணர்த்திற்று. "எஃகவேற்புங்கவன்சீர்புகழ்புராணம்" என்றது வடநூற்காந்தபுராணத்தை. காண்டங்களையுஞ் சரித்திரங்களையும் பிறழ்வின்றி முதனூலினிரைப்படுத்தப்பட்டவாறே கூறுவனென்பார் "அடைவிற் கூறுகேன்" என்றார்.

இச்செய்யுளால் நூல்வந்தவழிகூறப்பட்டது. (௧௨)

புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடாக்
கதையிலை யன்னது கணித மின்றரோ
வதுமுழு தறையவெற் கமைதற் பாலதோ
துதியுறு புலமைசேர் சூதற் கல்லதே.

இ—ள்: புது மயில் ஊர் பரன் புராணத்து உற்றிடா கதை இலை—புதியமயிலை (வாகனமாகக்கொண்டு) செலுத்துங்கடவுளாகிய சுப்பிரமணியப்பெருமானது புராணத்தில் அமையப்பெறாதகதை (ஒன்றும்) இல்லை; அன்னது கணிதம் இன்று—அந்தச்சரித்திரம் அளவிறந்தது; அது முழுது அறைய—அச்சரித்திரங்களை ஒருங்கே பாடுதற்கு, துதி உறு புலமை சேர் சூதற்கு அல்லது—புகழ்பொருந்திய கல்வியறிவுவாய்ந்த சூதமகாமுனிவரொருவர்க்கேயன்றி, எற்கு அமைதற்பாலதோ—சிறியேனுக்கு அமைவுபடத்தக்கதா (அன்று); எ—று.

அரோ அசை. புதுமயிலூர்பரன்புராணம்-காந்தபுராணம். உற்றிடாத என்பதிலீற்றுயிர்மெய்குறைந்தது. இல்லையென்பது இலையெனத்தொக்கது. சூரனாகியமயிலென்பது போதரப் "புதுமயில்" எனவும், முன்னரே எட்டாஞ்செய்யுளில் ஓர்ந்துணர் என்பதற்குக்குறித்த விசேடமுடையரென்பது போதர "துதியுறுபுலமைசேர்சூதன்" எனவுங்கூறினார்.

இச்செய்யுளால் தாம் முழுதுங்கூறாமைக்குக்காரணமுணர்த்தப்பட்டது. (௧௩)

காந்தமாகியபெருங் கடலுட் கந்தவேள்
போந்திடு நிமித்தமும் புனிதன் கண்ணிடை
யேந்தல்வந் தவுணர்கள் யாரு மவ்வழி
மாய்ந்திட வடர்த்தது மற்றுங் கூறுகேன்.

இ—ள்: காந்தம் ஆகிய பெரும் கடலுள்—காந்தபுராணமாகிய பெரியசமுத்திரத்துள், கந்தவேள் போந்திடும் நிமித்தமும்—கந்தஸ்வாமி திருவவதாரஞ்செய்த காரணத்தையும், ஏந்தல் புனிதன் கண்ணிடை வந்து—அக்கந்தஸ்வாமிபரிசுத்தராகியசிவபெருமானது நெற்றிக்கண்களினின்றும் திருவவதாரஞ்செய்து, அவ்வழி அவுணர்கள் யாரும் மாய்ந்திட அடர்த்ததும்—அதுவாயிலாக அசுரர்களெல்லாம் இறக்கும்படி பொருததையும், மற்றும் கூறுகேன்—பிறவற்றையும் (எடுத்துச்) சொல்வேன்; எ—று.

கிரந்தசங்கியை கதைப்பரப்பு அரும்பொருட்கிடக்கை பொருளாழம் என்பனவற்றால் மற்றைய புராணங்களெவற்றினுஞ் சிறப்புடைமைபற்றிக் காந்தத்தைக்கடலென உருவகித்தார். ஆகியவென்னுமாட்டேற்றுச் சொல்விரிந்துகிடந்தமையினிது விரியுருவகம். காந்தம்-கந்தசம்பந்தமானது. கந்தவேளென்பதற்கு "இந்திரராகி" என்னுஞ் செய்யுளினுரைத்தாங்குரைக்க. கந்தவேள்போந்திடுநிமித்தமென்றது சூரனுதியராற்றேவர்க்கு நேர்ந்ததுயரை. ஏந்தல்—தலைவர். மற்றென்றது விண்குடியேற்றல் திருமணம்முதலியவற்றை.

இச்செய்யுளால் நுதலியபொருள் கூறப்பட்டது. (௧௪)

வேறு.

ஏதிலாக்கற்ப மெண்ணில சென்றன
வாதலாலிக் கதையு மனந்தமாம்
பேத மாகுமப் பேதத்தி னுள்விரித்
தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்.

இ—ள்: ஏதிலா கற்பம் எண்ணில சென்றன— (முற்செய்யுளிற்சொல்லிய சரித்திரங்கள்நிகழ்ந்தபின்)குற்றமில்லாத பிரமகற்பங்கள் அளவிறந்தன கழிந்தன, ஆதலால்—ஆதலினால், இ கதையும் அனந்தமாம் பேதம் ஆகும்—இச் சரித்திரமும் பலவேறுபாடுகள் பொருந்தியிருக்கும், அ பேதத்தினுள்— அந்தவேறுபாடுகளுள்ளே, விரித்து ஓது காந்தத்தின் உண்மையை கூறுகேன்—(இச்சரித்திரத்தை) விஸ்தரித்துக்கூறுகின்ற காந்தபுராணத்தினது உண்மையை (யானாராய்ந்து) சொல்வேன்; எ—று.

இல்லாதவெனற்பாலதீற்றுயிர்மெய்கெட்டு லகரமெய்தொக்கு இலாவெனநின்றது. இல குறிப்புவினையாலணையும்பெயர். அனந்தமென்பதீண்டெண்ணின்றொகையையுணர்த்தாது மிகுதியையுணர்த்திற்று. பலகாலஞ்சென்றதனால் இச்சரித்திரத்தைப்பலவாறு வேற்றுமைப்படுத்தி வழங்கினர். ஆயினும் முதனூலிற்கூறப்பட்ட சரித்திரம் யாதென்பதை உள்ளவாறே ஆராய்ந்து கூறுவேனென்பது கருத்து.

கற்பங்கடோறுஞ் சுப்பிரமணியக்கடவுளவதரித்துச் சூரனைச் சங்கரித்தன்முதலிய திருவிளையாடலைச் செய்தாரெனவும், ஒவ்வொருகற்பங்களினும் நடக்குஞ் சூரசங்காரமுதலியவை ஒன்றற்கொன்று சிறிதுபேதமாகுமெனவும், அவ்வாறுவரும் பேதங்களையே "அநந்தமாம்பேதமாகும்" என்று இந்நூலாசிரியர் ஈண்டுச்சுட்டினரெனவும் சிலர் கூறுவர். நூலாசிரியர் கருத்து அவ்வாறாயின், தாங்கூறிய சரித்திரம் நிகழ்ந்தகற்பம்யாதென்பதனைக்கூறவேண்டியதாவசியகம். அங்ஙனங்கூறாது "உண்மையைக்கூறுகேன்" என்றதனால் அக்கருத்து ஆசிரியர் கருத்தன்றென்பது துணிக.

இச்செய்யுளால் இந்நூலிற்கூறப்படுஞ் சரித்திரங்களினுண்மை நாட்டப்பட்டது. ()

முன்பு சூதன் மொழிவட நூற்கதை
பின்பி யான்றமிழ்ப் பெற்றியிற் செப்புகே
னென்ப யன்னெனி லின்றமிழ்த் தேசிகர்
நன்பு லத்தவை காட்டு நயப்பரோ.

இ—ள்: முன்பு சூதன் மொழி வடநூற்கதை—முன்னரே சூதமகாமுனிவர் சொல்லியவடநூற்புராணத்தை, பின்பு யான் தமிழ்ப்பெற்றியில் செப்புகேன்—பின்னரே சிறியேன் தமிழ்நடையிற்பாடுவேன்; பயன் ஏன் எனில்—(அவர்கூறியநூலிருக்கப் பின்னுமொருநூலை யான் கூறுவதாற்) பிரயோசனம் யாதெனில், இன் தமிழ்த்தேசிகர் நன் புலத்து அவை காட்டும் நயப்பு—இனிய தமிழ்ப்புலவரது நல்ல அறிவின்கண்ணே அவற்றைப்புலப்படுத்தும் நன்மையேயாம்; எ—று.

அரோ அசைநிலை. தேசிகர்-ஆசிரியர்; ஈண்டுப்புலவர்மேற்று. அத்து சாரியை. பாஷைகளெவற்றினும் மிக்க மாதுரியமுடைமையின் இன்றமிழென்றார்.

இச்செய்யுளால் நூற்பயன் கூறப்பட்டது. (௧௬)

தோற்ற மீறின்றித் தோற்றிய சூர்ப்பகைக்
கேற்ற காதைக் கெவன்பெய ரென்றிடி
னாற்று மைம்புலத் தாறுசென் மேலையோர்
போற்று கந்த புராணம தென்பதே.

இ—ள்: தோற்றம் ஈறு இன்றி தோற்றிய சூர்ப்பகைக்கு ஏற்ற காதைக்கு—முதலும் முடிவுமின்றியவதரித்த கந்தஸ்வாமிக்கியைந்த (இந்த) நூலுக்கு, பெயர் எவன் என்றிடில்— பெயர் யாதோவெனில், ஆற்றும் ஐம்புலத்து ஆறு செல் மேலையோர் போற்று கந்தபுராணமது என்பதே— அடக்கப்பட்ட ஐம்புலன்களின்வழியொழுகுகின்ற பெரியோர்கள் வியந்து கூறுகின்ற கந்தபுராணமென்பதேயாம்; எ—று.

சூர்ப்பகை-சூரபன்மனுக்குப் பகைவர். பகை ஆகுபெயர். எவனென்பதீண்டு வினாப்பொருளைத்தரும் குறிப்புவினைமுற்று. ஆற்றுமைம்புலத்தாறு= ஐம்புலம் ஆற்றும் ஆறு; அதாவது: உண்டிசுருக்கன்முதலிய செயல்களான்மனத்தைப்புலன்களின்வழிச் செல்லாமற்றடுத்துச் சிவத்தியானத்தினிறுத்துதல். ஐம்புலன்களாவன:—சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. கருவிலமைந்துபிறவாது பதிரூபமாக அவதரித்தலின் தோற்றமீறின்றித் தோற்றிய சூர்ப்பகை எனவும், பிறவிக்குவித்தாயஐம்புலன்களையுமொருவழிப்படுத்திய பெரியோர்க்கே இப்புராணத்திற் சுவைதோன்றுமென்பது போதர "ஆற்றுமைம்புலத்தாறுசென்மேலையோர்போற்றுகந்தபுராணம்" எனவுங்கூறினார். ஆகவே இப்புராணந்திருமான்முதலியோரது புராணங்களினிலக்கணம்பெறாது சிவபுராணமகத்துவத்தைப் பெறுமென்பது பெற்றாம். முதனூற்பெயரோடிணக்கமுடைய பெயரென்பது தோன்றத் தேற்றேகாரம்புணர்த்திக்கூறினார்.

இச்செய்யுளால் நூற்பெயர் கூறப்பட்டது. (௧௭)

பகுதி கொண்டிடு பாக்க ளினத்தினுள்
மிகுதி கொண்ட விருத்தத் தொகைகளாற்
றொகுதி கொண்டிடு சூர்கிளை சாய்த்தவன்
றகுதி கொண்ட தனிக்கதை சாற்றுகேன்.

இ—ள்: பகுதி கொண்டிடு பாக்களினத்தினுள்—பலபேதங்களைப்பொருந்துகின்ற பாவகைகளுள்ளே, மிகுதிகொண்ட விருத்தத்தொகைகளால்—பெரும்பான்மையமைந்

துள்ள விருத்தப்பாக்களின்றொகுதிகளால், தொகுதி கொண்டிடு சூர்கிளை சாய்த்தவன் தகுதி கொண்ட தனி கதை சாற்றுகேன்—கூட்டமாகியசூரபன்மனதுசுற்றத்தைத் தொலைத்தவராகிய சுப்பிரமணியஸ்வாமியினது தகைமைபொருந்திய ஒப்பற்ற சரித்திரத்தைக்கூறுவேன்; எ—று.

பாக்கள் ஆசிரியப்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா என நான்காய் ஒவ்வொன்றுந் தனித்தனி பலவகைப்படுதலின் "பகுதிகொண்டிடு பாக்களினம்" என்றார். விருத்தத் தொகையென்றது விருத்தபேதங்களை. அவையாவன: ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் வஞ்சிவிருத்தம் என்பன. இந்நூலில் வேறுபாவினங்கள் சிறுபான்மையுளவாயினுங் கமுகந்தோட்டம் என்றாற்போல மிகுதிபற்றிக்கூறுதலின் "மிகுதிகொண்டவிருத்தத் தொகைகளால்" என்றார். தொகுதிகொண்டிடு என்னும் பெயரெச்சம் கிளைஎன்னும் பனிலைகொண்டது. "விருத்தத்தொகைகளால்......சாற்றுகேன்" எனவினையும். தன்னிகரில்லாத்தலைவனையுடைமை பெருங்காப்பியத்துக்கோரிலக்கணமாதலின் அவ்விலக்கணமமைந்திருத்தலை யுணர்த்துவார் "தொகுதிகொண்டிடுசூர்கிளைசாய்த்தவன்றகுதி கொண்டதனிக்கதை" என்றார்.

இச்செய்யுளால், தாங்கூறுங்காப்பியத்தின் பாவினங்கூறப்பட்டது. (௧௮)

செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய
மூந்து காஞ்சியின் முற்றுணர் மேலவர்
கந்த னெந்தை கதையினை நான்முறை
தந்தி டென்னத் தமிய னியம்புகேன்.

இ—ள்: செந்தமிழ்க்கு வரம்பு என செப்பிய மூந்து காஞ்சியில் முற்றுணர் மேலவர்—செந்தமிழ்ப்பாஷைக்கு எல்லையென்று (பெரியோர்கள்) சொல்லிய முதன்மை பொருந்திய காஞ்சீபுரத்தில் (வாழுகின்ற) எல்லாமறிந்த பெரியோர்கள், கந்தன் எந்தை கதையினை நான்முறை தந்திடு என்ன—கந்தஸ்வாமியினது சரித்திரத்தை முதனூலிற்கூறிய முறைப்படியேபாடுகவென்றுகேட்ப, தமியன் இயம்புகேன்—சிறியேன் (அவர்கேள்விப்படி) பாடுவேன்; எ—று.

செந்தமிழ் செம்மையாகியதமிழ். அதாவது தமிழ்ப்பாஷையில் வல்லார்க்குச் சுவைதோற்றுவிப்பதாயியற்சொற்களாலாக்கப்படும் பாமுதலியன. இதற்கெதிர் கொடுந்தமிழென்க. எல்லையானது குறித்தபொருண்முழுதையுந் தன்னுளமைத்தல்போலக் காஞ்சியானது செந்தமிழ் முற்றையுந் தன்னுளமைத்துநிற்றலிற் செந்தமிழ்க்கு வரம்பெனப்பட்டது. "செந்தமிழ்க்குவரம்பெனச்செப்பியமூந்துகாஞ்சியின்முற்றுணர்மேலவர்"எனவே தமிழ்ப்புலவரென்பதுபெற்றாம். சிலர் இச்செய்யுளைத் தம்முளம்போனவாறு கொண்டுகூட்டி, கந்தஸ்வாமிபாடும்படி அருள்செய்ய யான் பாடத்தொடங்குவேனெனப் பொருள்கூறுவர். கச்சியப்பசிவாசாரியர் வடமொழி தென்மொழியிரண்டினுந் திறமையுடையவரும் சுப்பிரமணியக்கடவுளின் றொண்டருமாதலால், தமிழ்ப்புலவர் இப்புராணத்தை மொழிபெயர்த்துப் பாடும்படி வேண்ட, அவ்வேண்டுகோட்கேற்பவே கடவுளும் அவர்க்கருள்புரிந்தனர்; அங்ஙனமின்றெனிற் சுப்பிமணியக்கடவுள் தமிழிற் பாடும்படி அருள்செய்தற்குக் காரணம் இல்லையாம்; ஆதலின் அவருரை பொருந்தாதென்க. "இன்றமிழ்த்தேசிகர் நன்புலத்தவைகாட்டுநயப்பு" என முன்னர்க்கூறியதனானும்இக்கருத்து விளங்கும். என்றந்தை, எந்தையெனமரீயிற்று.

இச்செய்யுளால் நூல்செய்தற்குக் காரணங்கூறப்பட்டது. (௧௯)

வெம்பு சூர்முதல் வீட்டிய வேற்படை
நம்பி காதையை நற்றமிழ்ப் பாடலா

றும்பர் போற்ற வுமையுடன் மேவிய
கம்பர் காஞ்சியிற் கட்டுரைத் தேனியான்.

இ—ள்: யான்-தமியேன், வெம்பு சூர்முதல் வீட்டிய வேற்படை நம்பி காதையை-கோபித்தெதிர்த்த சூரபன்மனாகிய முதல்வனை அழித்த வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியக்கடவுளது சரித்திரத்தை, நல் தமிழ் பாடலால்—நல்லதமிழ்ச்செய்யுட்களால்; உம்பர் போற்ற உமையுடன் கம்பர் மேவிய காஞ்சியில் கட்டுரைத்தேன்—தேவர்கள் துதிக்க உமாதேவியுடன் ஏகாம்பரநாதர் வீற்றிருக்கின்றகாஞ்சிபுரத்தில் அரங்கேற்றினேன்; எ—று.

வேற்படை இருபெயரொட்டுப்பண்புத்தொகை. நம்பி-ஆண்மக்களுட்சிறந்தவர். ஏகாம்பரநாதருடைய தேவியைக் காமாக்ஷியம்மை யென்பர். மேவிய காலவழுவமைதி. பதினெண்பாடைகளுட் சிறந்ததாதலின் "நற்றமிழ்" என்றார். இதனை "தொண்டர்நாதனைத்தூதிடைவிடுத்ததுமுதலை, யுண்டபாலனையழைத்ததுமெலும்புபெண்ணுருவாக், கண்டதும்மறைக்கதவினைத்திறந்ததுங்கன்னித், தண்டமிழ்ச்சொலோமறுபுலச்சொற்களோசாற்றீர்" எனவும் "கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து, பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழேனை, மண்ணிடைச்சிலவிலக்கணவரம்பிலாமொழிபோ, லெண்ணிடப்படக்கிடந்ததாவெண்ணவும்படுமோ" எனவும் "கடுக்கவின்பெறுகண்டனுந்தென்றிசைநோக்கி, யடுக்கவந்துவந்தாடுவானுடலினிளைப்பு, விடுக்கவாரமென்காறிருமுகத்திடைவீசி, மடுக்கவுந்தமிழ்திருச்செவிமாந்தவுமன்றோ" எனவும் திருவிளையாடற்புராணத்தும், "தமரநீர்ப்புவனமுழுதொருங்கீன்றதடாதகாதேவியென்றொருபேர் தரிக்கவந்ததுவுங்கனிமுதலொருநீசவுந்தரமாறனானதுவுங், குமரவேள்வழுதியுக்கிரனெனப்பேர்கொண்டதுந்தண்டமிழ்மதுரங் கூட்டுணவெழுந்தவேட்கையாலெனிலக்கொழிதமிழ்ப்பெருமையாரறிவார்" என மதுரைக்கலம்பகத்தும் கூறப்படுதலா லுணர்க.

இச்செய்யுளால் அரங்கேற்றியதலம் குறிக்கப்பட்டது. பாயிரவுறுப்புக்களுள் ஆசிரியர் கூறாதுவிடுத்தபிற உய்த்துணர்தற்பாலன. (௨௦)

அவையடக்கம் முற்றிற்று.

ஆகவிருத்தம் ௫௦.

---

# ஆற்றுப்படலம்.

ஆற்றுப்படலமென்பது ஆற்றின்சிறப்பைக்கூறும்படலமென விரிக்கப்படுதலால் இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கதொகை. படலம்-நூலின்பகுதி; இதனை, சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் எனவும் வழங்குவர்.

ஆசிரியர் இதுகாறுந்தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளுங் கூறிமுடித்து, மேல், முதனூலிற்கூறப்பட்ட புராணவரலாற்றைக்கூறுவான்கருதி, அதற்கு வேண்டற்பாலதுந் தாம் வசிக்குந்தலமுமாகிய காஞ்சிமாநகரைத் தான்றொடங்கும் பெருங்காப்பியத்துக்கிலக்கணமாக வருணிப்பான்றொடங்கி, அந்நகரையுடைய தொண்டைநாட்டின் சிறப்பை முதற்கூறுவான் புக்கு, "ஆறில்லாவூருக்கழகுபாழ்" என்பதனால் அந்நாடு சிறப்புடைத்தாதற்கு யாறுவேண்டப்படுதலின் அத்தேசத்திற்பாயும் பாலியாற்றையிப்படலத்தால் வருணித்தனர்.

செக்கரஞ் சடைமுடிச் சிவனுக் கன்பராய்த்
தக்கவ ரறிஞர்க டவத்தர் செல்வராய்த்
தொக்கவர் யாரும்வாழ் தொண்டை நாட்டினுண்
மிக்கதோ ரணியிய லதுவி ளம்புகேன்.

இ—ள்: செக்கர் அம் சடைமுடி சிவனுக்கு அன்பராய்– செந்நிறம்பொருந்திய அழகியசடாமுடியையுடைய சிவபெருமானுக்குஅடியவர்களாயும், தக்கவர் அறிஞர்கள் தவத்தர் செல்வர் ஆய்—யோக்கியர்களும் அறிவுடையவர்களும் தவமுடையவர்களும் ஐசுவரியமுடையவர்களுமாயும், தொக்கவர் யாரும் வாழ் தொண்டைநாட்டினில்—செறிந்தோர் எல்லோரும் வாழுகின்ற தொண்டைமண்டலத்தின்கண்ணே, மிக்கது ஓர் அணியியலது விளம்புகேன்—மிகுந்திருக்கின்ற சிறப்பினியல்பைத் தமியேன் சொல்வேன்; எ—று.

அம் சாரியையெனினுமாம். ஓர் அசைநிலை. அது சாரியை. தொண்டைமண்டலத்தில் வாழ்ந்திருப்பவரெல்லோரும் சிவனடியாரும் யோக்கியரும் தபோதனரும் செல்வருமே. அன்னோரன்னதகைமையில்லாதோர் அந்நாட்டிலரியர் என்பது குறிப்பு. இதனை "வேழ முடைத்து மலைநாடு மேதக்க, சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன், றென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து" என்பதனானுமறிக.

அடியார்க்கேற்ற வேடமுடையரென்பது போதரச் "செக்கரஞ்சடைமுடிச்சிவன்" என்றார்.

இச்செய்யுளால் எடுத்துக்கொண்டவர்ணியம்யாதென்பதுணர்த்தப்பட்டது. (௧)

சுந்தர மாயவன் றுயிலு மாழிபோ
லிந்திர னூர்முகி லியாவு மேகியே
யந்தமில் கடற்புன லருந்தி யார்த்தெழீஇ
வந்தன வுவரியின் வண்ண மென்னவே.

இ—ள்: இந்திரன் ஊர் முகில் யாவும்—தேவேந்திரன் (வாகனமாகக் கொண்டு) செலுத்தும் மேகங்கள் எல்லாம், சுந்தர மாயவன் துயிலும் ஆழிபோல் ஏகி—அழகினையுடைய விஷ்ணுமூர்த்தி அறிதுயில்செய்யும் பாற்சமுத்திரம்போல (வெண்ணிறமுடையனவாய்ச்)சென்று, அந்தமில் கடல் புனல் அருந்தி ஆர்த்து எழீஇ—முடிவில்லாத சமுத்திரநீரைப்பருகி முழங்கிக்கிளம்பி, உவரியின் வண்ணம் என்ன வந்தன—உவர்க்கடலினிறம்போல (கருநிற முடையனவாய்) மீண்டன; எ—று.

ஏ அசை. மேகங்கள் விரைபட்டுச்செல்லுதலாற் கடல்போலக்காணப்படுவன; அன்றியும், நீரைப்பருகமுன் வெண்ணிறமுடையனவாதலாற் பாற்கடலையும், பருகியபின் கருநிறமுடையனவாதலால் உவர்க்கடலையும் நிகர்ப்பன. சூரியனது உஷ்ணமாகிய கிரணத்தினால் மேலிழுக்கப்படுகின்ற கடனீரினாவியே மேகமெனப்பட்டு அவை காற்றின் சீதளத்தாற் குளிர்ந்து நீராய்ச்சிந்துவதே மழை யென்பதுண்மையாகவும் இச்செய்யுளிலிவ்வாறு கூறியது பௌராணிகவர்ணனையென்க. (௨)

பார்த்தென துலகடும் பரிதி யென்றொடும்
போர்த்தொழில் புரிகெனப் பொங்கு சீற்றத்தால்
வேர்த்தெனப் பனித்துவெள் ளெயிறு விள்ளநக்
கார்த்தென வேதடித் தசனி கான்றவே.

இ—ள்: பார்த்து எனது உலகு அடும் பரிதி—தேடிப்பார்த்து என்னுடைய மண்டலத்தையழிக்கின்ற சூரியனே!, என்னொடும் போர்த்தொழில் புரிகென—என்னுடனே (இனி) யுத்தமுயற்சியைச் செய்க வென்று (இகலி), பொங்கு சீற்றத்தால் வேர்த்தென பனித்து—மேன்மேலுங்கிளருகின்ற கோபத்தினாலே மெய்வேர்த்தாற்போலத் துளித்து, வெள் எயிறு விள்ள நக்கு (என) நடித்து—வெள்ளிய பற்கடோன்றச் சிரித்தாற்போல மின்னலையும், ஆர்த்து என அசனி—ஒலித்தாற்போல இடியையும், கான்ற—தோற்றுவித்தன (மேகங்கள்); எ—று.

ஏ அசைகள். எனதுலகென்றது மேகமண்டலத்தை. பரிதி அண்மைவிளி. வெள்ளெயிறுவிள்ளநக்கார்த்தென...நடித்தசனிகான்ற என்பது நிரனிறை. புரிகவென்னும் வியங்கோளீறுதொக்கது. சிரிக்கும்போது தோன்றும் வெள்ளெயிற்றொளியே மின்னற்குபமானமென்க.

சூரியனே! நீ கழிந்தபோன முதுவேனிற்காலத்திலே அதிகவெய்யிலினால் என் மண்டலத்தை மிக வருத்தினையே! உனக்கதிகாரம்வாய்ந்த காலமெனக்கருதியன்றோ அங்ஙனம் வாட்டினை! இனி என்காலம்வந்துவிட்டது. நீ என்மண்டலமில்லையென்னும் படியழித்துக் கிரணங்களைப்பரப்பியதுபோல, யானும் என் மண்டலபடலத்தால் உன் மண்டலமில்லையென்னும்படி மறைத்து இருளைப்பரப்புகின்றேன். வல்லையேலங்ஙனஞ்செய்யவொட்டாது தடுத்துக்கொள்ளென்று (இகலி) அந்நேரத்தெழுந்த பெருங்கோபத்தினால் மெய்வியர்த்தாற்போலச் சிறுதிவலைகளை வீசின. சிரித்தாற்போல மின்னின. பேரொலிவிளைத்தாற்போல முழங்கின என்பதிச்செய்யுளின்விளக்கம்.

கோடைகாலமெனவழங்கும் முதுவேனிற்காலநீங்கிக் கார்காலமாரம்பித்தபின் முதலிற்றோன்றுமேகம் பலவகைக்காற்றின் கலப்பினாலே நீர்த்துளிகளை முதலில் வீசுதலையும் மின்னுதலையும் முழங்குதலையும் தற்குறிப்பணிபெற இவ்வாறுகூறினார். (௩)

சுந்தர வயிரவத் தோன்றன் மீமிசைக்
கந்தடு களிற்றுரி கவைஇய காட்சிபோன்
முந்துறு சூன்முகின் முழுது முற்றுற
நந்தியம் பெருவரை மீது நண்ணிய.

இ—ள்: சுந்தர வயிரவ தோன்றல் மீமிசை—அழகினையுடைய வைரவக்கடவுளின்மேல், கந்து அடு களிற்று உரி கவைஇய காட்சிபோல்—கட்டுந்தறியைமுரிக்கின்ற யானையின்தோலானது போர்க்கப்பட்ட காட்சிபோல, முந்துறு சூல் முகில் முழுதும்—முந்தப்பெற்ற கருவையுடைய மேகங்கள் எல்லாம், நந்தியம் பெரு வரை மீது முற்றுற நண்ணிய—பெரிய நந்திமலையின்மேல் எங்கும் பொருந்தப்படிந்தன; எ—று.

வைரவர்-பயங்கரமானதோற்றத்தையுடையவர். மீமிசை ஒருபொருட்கிளவிகள். முந்துறுசூன்முகில்=சூன்முந்துறுமுகில். நீர்பொழியும் பருவமணுகப்பெற்ற முகில் என்பதுகருத்து. முற்றுறல் இடைவெளியின்றிப் பரத்தல்.

வைரவக்கடவுளினது பயங்கரமான சரீரகாந்தி தோலினால் மறைக்கப்படுதல்போல மலையினிடங்களும் மேகத்தினால் மறைக்கப்பட்டனவென்க. நந்திமலைசெந்நிறமும் மேகங்கள்கருநிறமுமுடையனவாதலின் அவற்றிற்கு முறையே வைரவக் கடவுளையும் யானைத்தோலையுமுவமித்தனர். (௪)

வேறு.

வாரை கான்றநித் திலமென வாலிகண் மயங்கச்
சீரை கான்றிடு தந்திரி நரம்பெனச் செறிந்த

தாரை கான்றவோ ரிருதுவி னெல்லையுந் தண்பால்
வீரை கான்றிடு தன்மைய தாமென மேகம்.

இ—ள்: மேகம்—மேகங்கள், வாரைகான்ற லித்திலம் என ஆலிகள் மயங்க—மூங்கில் உமிழ்ந்த முத்துப்போல ஆலங்கட்டிகள் பொருந்த, சீர் ஐ கான்றிடு தந்திரிநரம்பென செறிந்த தாரை— சிறப்பையும் அழகையுந் தோற்றுவிக்கின்ற யாழினரம்புபோல நெருங்கிய நீர்த்தாரைகளை, ஓர் இருதுவின் எல்லையும்—ஒரு பருவகாலமுடியும்வரையும், தண் பால்வீரை கான்றிடு தன்மையது ஆமென—குளிர்ச்சிபொருந்திய பாற்சமுத்திரத்தை உமிழுந்தன்மைபோல, கான்ற—உமிழ்ந்தன; எ—று.

வரையெனற்பாலது வாரையென நீண்டது. ஆலி மழைக்கட்டி. இது சீதள பூமிகளில் அதிகமழைபெய்தகாலத்திற் காணப்படுவது. மயங்கவென்னுஞ் செயவெனெச்சங்காரியப்பொருட்டு. இச்செய்யுளிற் சீரென்றதற்கு மகிமை கீர்த்தி முதலியவற்றையும் அழகென்றதற்கு வடிவழகையுங்கொள்க. சீரைக்கான்றிடு எனற்பாலது எதுகைநோக்கிக் ககரமெய்தொக்கதெனக் கொண்டு பொருள்கூறுவாருமுளர். ஓரிருது வென்றது கார்காலத்தை. உம்மை உயர்வுசிறப்பு. தன்மையது என்பதிலது பகுதிப்பொருள்விகுதி; மேகம் தாரைகான்றனவினையைக்க. (௫)

பூட்டு கார்முகந் தன்னொடுந் தோன்றிய புயல்வா
யூட்டு தண்புன லந்தியங் கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்
காட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே.

இ—ள்: பூட்டு கார்முகந்தன்னொடும் தோன்றிய புயல்—நாண்பூட்டப்பட்ட இந்திரவில்லோடுந்தோற்றிய மேகமானது, வாய் ஊட்டு தண் புனல் நந்தியங்கிரிமிசை உகுத்தல்—வாயின்மடுத்தகுளிர்ந்தநீரை நந்திமலையிற்பொழிதல், வேட்டுவக்குல திண்ணனார் விமலற்கு மஞ்சனம் ஆட்டுகின்றது ஓர் தனி செயல் போன்றுளது— வேடுவர்குலத்தவராகிய கண்ணப்பநாயனார் சிவபெருமானுக்குத் திருமஞ்சனத்தை அபிடேகஞ்செய்கின்ற ஒப்பற்ற செயலையொத்திருந்தது; எ—று.

தன் அம் சாரியைகள், ஓர் அன்று ஏ அசைநிலைகள். திண்ணனாரென்பது சிவனைப்பூசித்து அருள்பெறமுன் கண்ணப்பநாயனாருக்கிடப்பட்டிருந்தபெயர். மஞ்சனம் என்பது மச்சனம்என்னும் வடமொழியின்றிரிபு; இது நீரையுணர்த்தலால் ஆகுபெயர். மஞ்சனமாட்டுகின்றதென ஒருசொன்னீர்மைபெறச் சேர்த்து அபிடேகிக்கின்றவெனப்பொருள் கூறினுமாம். ஆட்டுகின்றது வினையாலணையும்பெயர். உள்ளதெனற்பாலது உளதெனத்தொக்கது.

சூரியனுடைய பலவிதமான கிரணங்கள் மேகத்தின்மேல் விழுதலாலும் அம்மேகங்கள் காற்றினாற் சிதறுதலாலும் பலவகையான நிறங்களுடன் இந்திரவில்லுக்காணப்படும்; இது மழைபெய்யமுன்காணப்பட்டால் மழை அதிகமாகப்பெய்யும்; பெய்யும்போது காணப்பட்டால் மழைகுன்றும் என்பது பிரகற்சங்கிதைமுதலியசோதிடநூல்களின் கருத்து. இவ்விதிக்கேற்பப் பெருமழைபெய்தற்குரிய குறியாக மழைபெய்ய முன்னரே காணப்பட்டதென்பார் "பூட்டுகார்முகந்தன்னொடுந்தோன்றியபுயல்" என விசேடித்தார். வில்லுடன்றோன்றிய மேகத்திற்குக் கையில் வில்லேந்தியகண்ணப்பநாயனாரும் நந்திமலைக்குச்சிவபெருமானும் உபமானமாம்.

கண்ணப்பநாயனார் சிவபெருமானது திருமேனியின் முதனாட்சாத்தப்படிருக்கும் நிர்மாலியங்களைத் தமது காற்செருப்பானீக்கி வாயினிறைத்துக் கொணர்ந்த நீரை அ

ப்பெருமான்மேனியிற் கொப்பளித்தலாகியஅபிடேகமியற்றிச் சிரசிற்சூடிக்கொணர்ந்த மலரையெடுத்துச்சாத்தித் தம்வாயான்மென்றுசுவைபார்த்தவூனை நிவேதித்தது பூசாவிதிகட்குவிரோதமாகவும் அப்பெருமான் அதனை உத்தமோத்தமபூசையாக விரும்பியேற்று ஆருந்தினத்திலவரது பேரன்பைச்சோதித்து அருள்செய்தனராதலின், அவரது தொழிலைத் தனிச்செயல் எனவிசேடித்தார். இவரது பூசை விசேடமுடைத்தென்பதை "வாளான்மகவரிந்தூட்டவல்லேனல்லன்மாதுசொன்ன, சூளாலிளமைதுறக்கவல்லேனல்லன்றொண்டுசெய்து, நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனுனினிச்சென், றாளாவதெப்படியோதிருக்காளத்தியப்பனுக்கே" என்னுந்திருவெண்காட்டடிகள் வாக்காலுமுணர்க. (௬)

கல்லெலன் பேரிசைப் புனன்மழை பொழிதலாற் கானத்
தொல்லும் பேரழல் யாவையு மிமைப்பினி லொளித்த
வெல்லுந் தீஞ்சல மருவுமிக் காருக்கு வியன்பார்
செல்லுங் காலையி லங்கண்வீற் றிருப்பரோ தீயோர்.

இ—ள்: மழை கல்லெலன் பேரிசை புனல் பொழிதலால்—மேகங்கள் பெரியகல்லென்னுங் குறிப்பொலியினையுடைய நீரைப்பொழிதலினாலே, கானத்து ஒல்லும் பேரழல் யாவையும் இமைப்பினில் ஒளித்த—காட்டிற்பொருந்திய பெரிய அக்கினிமுழுதும் மாத்திரைப்பொழுதினுள்மறைந்தன; வெல்லும் தீ சலம் மருவும் மிக்காருக்கு வியன் பார் செல்லுங்காலையில்-வெல்லத்தக்க கொடுங்கோபம்பொருந்திய மேலோர்களுக்குப்பெரியபூவுலகம்(அதிகாரமாக)நடக்குங்காலத்தில்,தீயோர் அங்கண் வீற்றிருப்பரோ—கொடியோர்கள் அப்பூவுலகத்தில் வாழ்ந்திருப்பார்களா? (இருக்கமாட்டார்களே);எ--று.

சாபமுதலியவற்றால் வெல்லத்தக்கவரும் கோபகுணமுடையவருமாகிய மேலோர் பூமிக்கரசராகுங்காரணத்தாற் கீழோர் அங்ஙனம் வசிக்காதொளித்தல்போல, மேகம் பெருமழைபெய்தலால் அக்கினிதணிந்ததென்பது கருத்து.

பெருமை- இசை, பேரிசையெனச்சந்திபெற்றது. யாவையுமென்பதில் ஐகாரம் சாரியை.

பின்னிரண்டடிகட்கும் சிலேடைப்பொருள் வருமாறு: வெல்லும் தீம் சலம் மருவும் இ காருக்கு—(உவர்த்தன்மையை)வென்ற நன்னீர்மைபொருந்திய இந்த மேகத்திற்கு, வியன்பார் செல்லுங்காலையில்—பெரியபூமி உரிமையாய்நிகழுங் கார்காலத்தில், தீயோர் அங்கண் வீற்றிருப்பரோ— அக்கினியார் அவ்விடத்திற்றங்கியிருப்பாரா.

இப்பொருளில், ஈற்றயல்திரிந்த தீயோர்என்பதிற்பன்மைவிகுதி, இழிவுபற்றிவந்தது.

இச்செய்யுள் சிலேடையின்முடித்த வேற்றுப்பொருள்வைப்பணி. (எ)

தேக்கு தெண்டிரைப் புணரிநீர் வெம்மையைச் சிந்தி
யாக்கி வாலொளி யுலகில்விட் டேகலா லடைந்தோர்
நீக்க ரும்வினை மாற்றிநன் னெறியிடைச் செலுத்திப்
போக்கின் மேயின தேசிகர்ப் பொருவின புயல்கள்.

இ—ள்: தேக்கு தெள் திரை புணரிநீர் வெம்மையை சிந்தி—நிறைந்த தெளிந்த திரைமறிகின்ற கடனீரினது உவர்த்தன்மையை மாற்றி, வால் ஒளி ஆக்கி—வெள்ளியஒளியையுண்டாக்கி, உலகில் விட்டு ஏகலால்— பூவுலகத்திற்பொழிந்துசெல்லுதலால், அடைந்தோர் நீக்கரும் வினை மாற்றி—தம்மைச்சார்ந்த சீடரது போக்குதற்கரிய வினைகளைப்போக்கி, நல் நெறியிடை செலுத்தி போக்கில் மேயின தேசிகர் பொருவின—நல்லமார்க்கத்திற் பிரேரித்துப்போதலின் மேம்பட்ட ஆசாரியரைப்போன்றிருந்தன, புயல்கள்—மேகங்கள்; எ—று.

நீக்கு போக்கு என்பன முதனிலைத்தொழிற்பெயர்கள். நீக்கவென்பதிலகரந்தொக்கதெனினுமாம். ஏகலால்...பொருவின எனஇயையும். மேகத்திற்கு ஆசாரியரும் உவர்த்தன்மைக்கு வினையும் வாலொளியாக்கற்கும் உலகிற்பொழிதற்கும் நன்னெறியிற் செலுத்துதலுமுபமானமென்க. வினை: பிராரத்தம் சஞ்சிதம் ஆகாமியமென்பன. தீக்ஷாக்கிரமத்தானன்றிப் பிறவாற்றானொழிப்பதரிதாதலின் நீக்கரும்வினை என்றார். சஞ்சிதவினையைச் சுட்டுதற்கு அங்ஙனங்கூறினரெனினுமாம். (அ)

கழிந்த பற்றுடை வசிட்டன திருக்கையாக் கவிஞர்
மொழிந்த நந்தியம் பெருவரை மொய்த்தசூன் முகில்கள்
பொழிந்த சீதநீர் பொற்புறு சாடியிற் பொங்கி
வழிந்த பாலெனத் திசைதொறு மிழிந்தன மன்னோ.

இ—ள்: கழிந்த பற்று உடை வசிட்டனது இருக்கையா கவிஞர் மொழிந்த—நீங்கிய ஆசையினையுடைய வசிட்டமுனிவரது இருப்பிடமாகப் புலவர்கள்கூறிய; நந்தியம்பெருவரை மொய்த்த சூல் முகில்கள் பொழிந்த சீத நீர்—பெரிய நந்திமலையிற் படிந்த கருக்கொண்டமேகங்கள் கான்ற குளிர்ச்சியையுடைய நீரானது, பொற்பு உறு சாடியில் பொங்கி வழிந்த பால் என—அழகுபொருந்தியதாழியினின்றும்பொங்கிவழிந்தபால்போல, திசைதொறும் இழிந்தன—(அந்நந்திமலையினுச்சியினின்று) திக்குகடோறுங் கீழ்நோக்கிப்பாய்ந்தன; எ—று.

அம் சாரியை. மன் ஒ அசைகள். உடைய ஆக என்பன, ஈற்றுயிர்மெய்தொக்குநின்றன. கழிந்தபற்றுடைவசிட்டன்=பற்றுடைமைகழிந்தவசிட்டன். உலகப்பற்றுக்களை வெறுத்தவரென்பதுகருத்து. வசிட்டன்- பொறிகளையடக்கினவர்.

ஒடிவுமுதலிய பின்னமின்றிச் செவ்வனேயமைந்த வாயையுடையதும் சரிவின்றி நிறுத்தப்பட்டதுமென்பதுபோதரப் பொற்புறுசாடி எனவிசேடித்தார். அத்தகைய பாத்திரத்திற் பொங்கியபால் ஓர் புறத்தானன்றி எல்லாப்புறத்தானும் வழிதல்போல நந்திமலையினுச்சியிற்சிந்திய மழைநீர் எல்லாத்திசைகளாலுமிழிந்தனவென்க. நந்திமலைக்குப்பாத்திரமும் நீருக்குப்பாலும் உபமானம்.

உலகப்பற்றற்ற பெரியோர் கிடைத்தபொருளைத்தாமனுபவிக்காது பிறர்க்குக்கொடுத்தல்போல வசிட்டமுனிவர்க்குவாழ்விடமாம்விசேடத்தாற் றன்னிடத்துள்ள மழைநீரைத் தனக்குபயோகமாகும்பொருட்டுவைத்துக்கொள்ளாது தன்னிற்றாழ்வுடையவிலத்தார்க்குபயோகப்படுமாறுதவியதென்பதை, கழிந்தபற்றுடைவசிட்டனதிருக்கையாக்கவிஞர்மொழிந்தநந்தியம்பெருவரை எனக்கருத்துடையடைபுணர்த்திவிளக்கினர்.

ஆறுபெருகுதற்கு மழையேகாரணமாதலின்இரண்டாஞ்செய்யுண்முதலிதுகாறும் எட்டுச்செய்யுட்களால் மேகம் மழைபெய்தமை வருணிக்கப்பட்டது. (கூ)

சீல மேதகு பகீரதன் வேண்டலுஞ் சிவன்றன்
கோல வார்சடைக் கங்கையம் புனலினைக் குன்றின்
மேலை நாள்விட வந்தென நந்திவீழ் விரிநீர்
பாலி யாறெனும் பெயர்கொடு நடந்தது படிமேல்.

இ—ள்: சீலம் மேதகு பகீரதன் வேண்டலும்—நல்லொழுக்கத்தின்மேம்பட்ட பகீரதராசன்பிரார்த்தித்தலும், சிவன் தன் கோல வார் சடை கங்கையம் புனலினை குன்றில் மேலைநாள் விட வந்தென—சிவபெருமான் தமது அழகிய நீண்ட சடாமுடியிற் றரித்தகங்காதீர்த்தத்தை முற்காலத்தில் மலையின்கண்ணேவிட, அதுபூவுலகத்திற்பாய்ந்

தாற்போல, நந்தி வீழ் விரி நீர்—நந்திமலையினின்றும் இழிந்த பரந்தநீரானது, பாலியாறு எனும் பெயர்கொடு படிமேல் நடந்தது—பாலியாறென்னும்பெயரைப்பெற்றுப் பூமியிற்பாய்ந்தது; எ—று.

என்னும் என்பது எனுமெனத்தொக்கது. கங்கா-பாய்தலையுடையது.

சிவபெருமானும்முடிமேற்கொண்ட மகிமையுடையதென்பதுபோதர, கோலவார் சடைக்கங்கையம்புனல் எனவும், அத்தகைய கங்கையைப் பூவுலகிலழைப்பித்தற்கேற்ற அருந்தவஞ்செய்துடையனென்பதுபோதர, சீலமேதகுபகீரதன் எனவும் விசேடித்தார்.

மலையினின்றிழிதலாலும் வேகமாய்ப்பாய்தலாலும் பரிசுத்தத்தையுந்தீர்த்தமகிமையையும் உடைமையாலும் பாலியாற்றிற்குக்கங்கையையுவமித்தார்.

**கங்காநதி பூமியில் வந்த சரித்திரம்வருமாறு;—** அயோத்தியாபுரியையரசுபுரிந்த சகரராசன் அசுவமேதயாகஞ்செய்ய முயன்று, தேசங்கடோறுஞ்சென்று விசயஞ்செய்துவருமாறு குதிரையைவிடுத்தனன். அதனையறிந்த இந்திரன் யாகமுற்றியவழித் தன் வாழ்வுக்கீனம் வருமென்பதை நினைத்து, அக்குதிரையைக்கரவிற் பற்றிக்கொண்டுசென்று பாதலலோகத்திற் கடுந்தவஞ்செய்கின்ற கபிலமுனிவர்பக்கத்திற் கட்டிப்போயினன். அதன்பின் அரசனுமதிப்படி சென்றகுமாரர் அறுபதினாயிரவரும் அக்குதிரையைப் பூவுலகத்திலெங்குந்தேடிக் காணாமையாற் பூமியைத்தோண்டிப் பாதலலோகம் புகுந்து கபிலமுனிவர்பக்கத்திற் கட்டப்பட்டு நிற்கக்கண்டு நங்குதிரையைக்கவர்ந்த கள்வனிவனே என்று, அவரை வைதனர்; அதுகேட்டமுனிவர் கோபமுற்றுவிழிக்க அம்முனிவரது விழித்தீயினால் அவரனைவருஞ் சாம்பராயழிந்தனர்.

சிலகாலங்கழிந்தபின், இச் சகரர்சந்ததியிற் பிறந்த பகீரதனென்னுமரசன் தன் முன்னோர் முனிவராலழிந்து நிரயமெய்தினரென்பதை யறிந்து, புண்ணியலோகத்திற்சேர்க்கக்கருதிப் பிரமனைநோக்கித் தவஞ்செய்ய, அவர் பிரசன்னராய் "அரசனே! கங்கையை நிரயம்புக்கநும்முன்னோரதுஎலும்பிற்பாயவிடுத்தாற் சுவர்க்கமடைவர். அந்தி பூவுலகத்துவரின் வேகத்தையாற்றுதலரிது, அதனையடைத்தற்பொருட்டுச் சிவபெருமானைநோக்கித் தவஞ்செய்க" என்றனர். பகீரதராசன் அவ்வாறே தவஞ்செய்துசிவனருள் பெற்றுப் பின்பு கங்கையைநோக்கித் தவஞ்செய்தனன். கங்கை பெண்வடிவுடன் தோன்றி "அரசனே! என்வேகத்தைத் தணிக்கும்பொருட்டுச் சிவபெருமானைநோக்கிப்பின்னுந் தவஞ்செய்து அருள்பெற்று என்னையழைப்பாயாக" என்றுகூறியது. அரசன் அவ்வாறே பின்னுந் தவஞ்செய்து அருள்பெற்றுக் கங்கையையழைத்தனன். அப்போது அக்கங்கைநதி மூவுலகத்தாருமஞ்சத்தக்க வேகத்துடன்வரச்சிவபெருமான் வேகத்தைத்தணித்துச் சடையிற்றரித்து, பகீரதராசன் வேண்டுதல் செய்ய ஒரு சிறு திவலையைவிட்டனர். அத்திவலைபெருகிச் சகரபுத்திரரின் எலும்பிற்பாய அவர்கள் நற்கதிசேர்ந்தனர். பகீரதனாற்பூவுலகில் வருவிக்கப்படுதலாற் கங்கைக்குப் பாகீரதியென்னும் பெயர்வழங்கிற்று.

பூவுலகத்தில் வந்த கங்கை பிரமலோகத்திலிருந்தகங்கையாம். இதனை "அந்நிமூன்றுதன்னிலயனகர்புகுந்தகங்கை, பன்னருந்திறலின்மிக்கபகீரதன்றவத்தான்மீளப்பின்னருமிமையாமுக்கட்பெருந்தகைமுடிமேற்றங்கி, யிச்சிலவரைப்பிற்செல்லவிறையதில்விடுத்தல்செய்தான்" என இப்புராணத்திற் றதீசியுத்தரப்படலத்திற் கூறப்படுதலாறுணர்க. (௪0)

வாலி தாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்குஞ்
சீல மாமுனி படைத்ததோர் தேனுவின் றீம்பால்

சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்
பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ.

இ—ள்: வாலிது ஆகிய குணத்தினன் வசிட்டன் என்று உரைக்கும் சில மாமுனி படைத்தது ஓர் தேனுவின் தீம் பால்-பரிசுத்தகுணத்தினையுடைய வசிட்டரென்று சொல்லப்படுகின்ற நல்லொழுக்கத்தையுடைய பெரிய முனிவர் பெற்றுக்கொண்ட காமதேனுவினது இனிய பாலானது, சால நீடி தொல்லைநாள் படர்ந்திடு தன்மை—மிகப்பெருகி முன்னாளிற் பாய்ந்ததன்மையினையுடைய, மா பாலிநதி பெருமை யான் பகர்வதற்கு எளிதோ—பெரிய பாலியாற்றின்பெருமையானது சிறியேன்சொல்லுதற்கு எளிதாகுமா? (அரிதேயாம் ஆயினும் ஒருவாறு கூறுவேனென்றபடி); எ—று.

ஓர் ஏ அசைகள். குணத்தினன் முனி என இயைக்க. சுபடமில்லாதகுணத்தினரென்பார், வாலிதாகியகுணத்தினன் என்றார். வாலிது வெண்ணிறமுடையது; குறிப்பு வினையாலணையும்பெயர். பரிசுத்தகுணம் வெண்ணிறமுடைத்தாமென்பதை, பின்னர்த்திருக்கைலாசவர்ணனையில் "சித்தனைத்தேறுமன்பர்தஞ்சிந்தையும்போன்றதே" எனக்கூறுதலானுமறிக. இன் சாரியை. ஓ எதிர்மறை. முனி படைத்தது ... தேனுவின் ...பால்...நீடி...படர்ந்திடுதன்மைப்பாலிமாநதி என வரலாறுகூறி விசேடித்ததனால் முனிவர் பசுப்போலப்பாலிமாநதியும் விரும்பிய எவற்றையுங் கொடுப்பதென்பது பெறப்பட்டது; இதனை "காரணப்பொருளின்றன்மைகாரியத்துளதாமென்ன, வாரணப்பனுவல்கூறுமரும்பொருடெளியத்தேற்றும், பேரிசைப்புவிமேல்யார்க்கும்பெட்டனபெட்டவாறே, சீரிதிற்கொடுக்குந்தேனுத்தரவருஞ்செழுநீர்ப்பாலி" என்னுங்காஞ்சிப்புராணச் செய்யுளானுமறிக. (௧௧)

எய்யும் வெஞ்சிலைப் புளிஞரை யெயிற்றியர் தொகையைக்
கைய ரிக்கொடு வாரியே சிறுகுடி கலக்கித்
துய்ய சந்தகில் பறித்துடன் போந்தது தொன்னாள்
வெய்ய சூர்படை வான்சிறை கவர்ந்துமீண் டதுபோல்.

இ—ள்: தொல் நாள் வெய்ய சூர்படை வான் சிறைகவர்ந்து மீண்டதுபோல்—முன்னாளிலே கொடிய சூரபன்மனது சேனை தேவர்களைச் சிறையாகப்பிடித்துக்கொண்டுதிரும்பியதுபோல, எய்யும் வெம் சிலை புளிஞரை—எயிற்றியர்தொகையை (அம்பை) எய்கின்ற கொடிய வில்லையுடைய குறவர்களையும் குறத்தியர் தொகுதியையும், கையரிக்கொடு வாரி சிறுகுடி கலக்கி—அகப்படுத்தி இழுத்து (அவர்வசித்த) சிற்றூரைக்குலைத்து, துய்ய சந்து அகில் பறித்து உடன்போந்தது- பரிசுத்தத்தினையுடைய சந்தனமரங்களையும் அகிலமரங்களையும் பிடுங்கிக்கொண்டு அவற்றுடன் பாய்ந்தது (அந்தப்பாலியாறு); எ—று.

ஏ அசை. கையரிக்கொளல்-திரைக்கையினால் அரித்துக்கொள்ளுதல். வான் ஆகுபெயர். சூரனது முதற்குமாரனாகிய பானுகோபனுடன்சென்ற சேனைகள் தம்முடன் பொருத தேவர்களையும், தேவப்பெண்களையுஞ் சிறைப்படுத்தி அவரது இருப்பிடங்களைத் தீமூட்டிக் கற்பகமுதலியவைகளை அழித்துத் தம்மூர்க்குத்திரும்பியதுபோலப் பாலியாறும் குறவர்களையும் குறத்தியர்களையுந்தன்னுளமிழ்த்தி இழுத்துக்கொண்டு அவரிருந்த சிற்றூரை நீர்ப்பெருக்காற்சிதைத்துச் சந்தனமரங்களையும் அகிலமரங்களையும் பிடுங்கிக்கொண்டு பாய்ந்ததென்பது கருத்து. (௧௨)

காக பந்தரிற் கருமுகிற் காளிமங் கழுவு
மாக நீள்கரி யாவையுங் குழுவொடும் வாரி

போகன் மேயின மேற்றிசைப் புணரியுண் டமையா
மேக ராசிகள் குணகடன் மீதுசெல் வனபோல்.

இ—ள்: காகபந்தரில் கருமுகில் காளிமங் கனலும் மாகநீள் கரி யாவையும்—காகங்களாலானபந்தரைப்போலக் கருக்கொண்டமேகங்களின் கருநிறஞ்செறிந்த ஆகாயத்தையளாவியுயர்ந்த யானைகளெல்லாம், மேற்றிசைப்புணரி உண்டு அமையா மேகராசிகள் குணகடன்மீது செல்வன போல்—மேற்குத்திசையிலுள்ள கடலைப்பருகி (நீர்வேட்கை) தணியப்பெறாத மேகக்கூட்டங்கள் (வேட்கைதணியப்பருகுமாறு) கிழக்குத்திசையிலுள்ள கடலின்மேற் போவனபோல, குழுவொடும் வாரி போகன் மேயின—கூட்டத்தோடும் (அந்தப்) பாலியாற்றில் (அகப்பட்டுச்) சென்றன; எ—று.

காகம் பந்தரிட்டதுபோலவும் முகில் செறிந்ததுபோலவும் கருநிறம்விளங்குகின்ற யானை என்க. காகபந்தரென்றது பலகாகங்கள் ஒரிடத்திற் குழீஇயிருத்தலை. பந்தலென்பது பந்தரெனப்போலியாயிற்று.

மேகங்கள் மேற்றிசைக்கடனீரையுண்டு வேட்கைதணியாமையாற் கீட்டிசைக்கடனீரைப்பருகும்படி செல்லுதல்போல, யானைக்கூட்டங்கள் மேற்றிசையினின்று கீட்டிசைநோக்கிப்பாயும் பாலியாற்றுவெள்ளத்தாலிழுக்கப்பட்டுப்போயின என்பதுகருத்து.

பலகூடிவாழுங்கூட்டத்தில் ஒன்றுந்தவறுதமிழ்ந்தியவென்பார், குழுவொடும்போகன்மேயின என்றார்.

யாவையுமென்பதிலைகாரஞ்சாரியை. இதனை இரண்டனுருபாகக்கொண்டு வாரியென்பதை வினையெச்சமாக்கிப் பொருள்கூறுவர்சிலர். அங்ஙனங்கூறுங்கால் அதிகாரத்தான் வருவிக்கப்படும் பாலியாறென்னுமெழுவாய் ஒருமையாயிருப்ப, மேயின என்னும் பயனிலை அதற்கேலாதபன்மைவினைமுற்றாய்நிற்றலின், அப்பொருள் பொருந்தாதென்க. (௧௩)

குவட்டு மால்கரிக் குருகுதே ரரிபுலிக் குலையுண்
டுவட்டி யுந்திடு திரைப்புனன் மதூகநல் லுழிஞ்சில்
கவட்டி னோமைசாய்த் தாறலை கள்வரூர் கலக்கித்
தெவிட்டி வந்தது பாலையுட் கொண்டிடு செருக்கால்.

இ—ள்: குவட்டு மால் கரி குருகு தேர் அரி (குலை) புலிக்குலை உண்டு உவட்டி உந்திடு திரை புனல்—மலைபோன்ற பெரிய யானையினது மூளையை (உண்ணுதற்குவிரும்பித்) தேடுகின்ற சிங்கக்கூட்டங்களையும் புலிக்கூட்டங்களையும் உள்ளமிழ்த்திப்பெருகி உதைத்துப்பாய்கின்ற திரைமறிகின்ற பாலியாறானது, மதூகம் நல் உழிஞ்சில் கவட்டின் ஓமை சாய்த்து—இலுப்பைமரங்களையும் நல்ல அணிஞ்சில்மரங்களையும் கிளைகளையுடைய ஓமை மரங்களையும் விழுத்தி, ஆறலை கள்வர் ஊர் கலக்கி—வழிபறிதிருடர்களது ஊர்களைச்சிதைத்து, பாலை உட்கொண்டிடு செருக்கால் தெவிட்டி வந்தது—பாலைநிலத்தைத் தன்னுளடக்கிக்கொண்ட கர்வத்தினால் நிறைந்து பாய்ந்தது; எ—று.

இன் சாரியை. குருகு யானைமத்தகத்தினுள் வெண்ணிறமுடைத்தாயிருப்பதோருன்விசேடம். இதனையுண்ணும் வேட்கையானே சிங்கம் யானையைக்கண்டவுடன்பாய்ந்துகிழிக்குமென்க. குலையென்பது அரியென்பதனோடுங்கூட்டிப்பொருள்கொள்ளப்பட்டது. பாலைப்பருகிய மதர்ப்பினாலென்னும்பொருளுமமையப்பாலையுட்கொண்டிடுசெருக்கால் எனஇரட்டுறமொழிந்ததற்கேற்ப மூன்னும் உண்டு, உவட்டி, தெவிட்டி என்னும்பொதுச்சொற்களைப் புணர்த்தினர்.

நந்திமலையினின்று பாயும் பாலியாறு முறையே குறிஞ்சிமுதலிய ஐவகைநிலங்களினும் பாய்தலை விசேடிப்பான்றொடங்கிய ஆசிரியர் இச்செய்யுளானு முன்னிருசெய்யுட்களாலும் குறிஞ்சிநிலத்திற் பாய்ந்தமையை வருணித்தார். (௧௪)

காலை வெம்பகல் கதிரவன் குடதிசைக் கரக்கு
மாலை யாமம்வை கறையெலாஞ் செந்தழல் வடிவாய்
வேலை யும்பரு கியவெழும் வெம்மைபோய் விளிந்து
பாலை காண்கிலா வாரியின் பெருமையார் பகர்வார்.

இ—ள்: காலை—சூரியோதயமும், வெம்பகல்—மத்தியானமும், கதிரவன் குடதிசை கரக்கும் மாலை—சூரியன் மேற்றிசையிற்சென்று அஸ்தமிக்கின்ற சாயங்காலமும், யாமம்—அர்த்தராத்திரிகாலமும், வைகறை எலாம்—விடியற்காலமுமாகிய ஐவகைக்காலங்களினும், செந்தழல் வடிவாய்—சிவந்த அக்கினியின் உருவமாய், வேலையும் பருகிய எழும் வெம்மை போய் விளிந்து—சமுத்திரத்தையும் பருகும்படி கிளருகின்ற வெப்பம்நீங்கி அழிந்து, பாலை காண்கிலா—பாலைநிலங்கள் காணப்பட்டில; (ஆதலால்) வாரியின் பெருமை யார் பகர்வார்—அப்பாலியாற்றின்பெருமையை யார்தான்சொல்லவல்லார்; எ—று.

வெம்பகல்—வெப்பத்தைத்தருங்காலம். வேலையுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. தினம் ஐந்தாகப் பகுக்கப்படுதலை, "மாலையாமம் வைகறையெற்படு, காலைவெங்கதிர்காயுநண் பகலெனக், கைவகைச்சிறுபொழுதைவகைத்தாகும்" என்னும் நம்பியகப்பொருட்சூத்திரத்தானுமறிக. பருகியவென்பது செய்தியவென்வாய்பாட்டு வினையெச்சம்.

சிறிதுகாலமேனுந்தணியாதஎக்காலங்களினும் அக்கினிமயமாய்ச் சமுத்திரத்தைப்பருகும்படி கிளருகின்ற பாலைநிலத்தையும் இல்லையென்னும்படியழித்ததேயானால் அவ்வாற்றின் பெருமையாவராலாயினுஞ் சொல்லமுடியுமா! ஒருவராலும் முடியாதே என்பது கருத்து.

இச்செய்யுளாற் பாலைநிலத்திற் பாய்ந்தமை வருணிக்கப்பட்டது. (௧௫)

குல்லை மாலதி கொன்றைகா யாமலர்க் குருந்து
முல்லை சாடியே யானிரை முழுவது மலைத்து
மெல்ல மற்றவை நீந்தலுங் கரைக்கண்விட் டுளதாற்
றொல்லை மாநதி யான்வழித் தோன்றிய தொடர்பால்.

இ—ள்: குல்லை—வெட்சியும், மாலதி—மல்லிகையும், கொன்றை—கொன்றையும், காயா—காயாவும், மலர் குருந்து—புஷ்பங்களையுடைய குருந்தும், முல்லை சாடி—முல்லையுமாகிய மரவகைகளைச்சிதைத்து, ஆனிரை முழுவதும் அலைத்து—பசுக்கூட்டங்கள் முழுவதையும் அலைவுசெய்து, அவை மெல்ல நீந்தலும்—அந்தப்பசுக்கள் மெல்லவாகநீந்துதலும், தொல்லை மா நதி ஆன்வழி தோன்றிய தொடர்பால்—பழையபெரியஅப்பாலியாறு (காமதேனுவென்னும்)பசுவினிடத்தேதோற்றியசம்பந்தத்தால், கரைக்கண் விட்டுளது—கரையின்கண்ணே ஒதுக்கிவிட்டது; எ—று.

ஏ ஆல் அசைகள். உள்ளதெனற்பாலது உளதெனத்தொக்கது. சாடி என்பது அலைத்து என்பதனோடியைந்தது. பசுக்கள் நீந்திக்கரையேறியதைத் தன்னுற்பத்திக்குக் காரணமாய பசுவினினமாதல்பற்றி யாறுகரையேற்றியதெனக் கூறுதலின் இது தற்குறிப்பேற்றம்.

இச்செய்யுளால் முல்லைநிலத்திற் பாய்ந்தமை வருணிக்கப்பட்டது. (௧௬)

சுளையு டைப்பல வாசினி பூகமாந் துடவை
யுளைம லர்ச்சினை மருதமோ டொழிந்தன பிறவுங்
களைத லுற்றுமாட் டெறிந்தது கண்ணகன் குடிஞை
யளவின் மிக்குறு பாணிபெற் றதற்கவை யரிதோ.

இ—ள்: சுளையுடை பலவு—வருக்கைப்பலாமரங்களையும், ஆசினி—ஆசினிப்பலாமரங்களையும், பூகம் கமுகமரங்களையும், மாந்துடவை—மாமரச்சோலைகளையும், உளைமலர் சினை மருதமோடு—நெருங்கிய புஷ்பங்கள் பொருந்திய கிளைகளையுடைய மருதமரங்களையும், ஒழிந்தன பிறவும்—இவையல்லாத பிறமரங்களையும், களைதலுற்று மாட்டு எறிந்தது—பிடுங்கிப்பக்கத்தில்வீசியது, கண் அகன் குடிஞை—இடமகன்ற (அந்தப்) பாலியாறு, அளவின் மிக்குறு பாணி பெற்றதற்கு அவை அரிதோ—அளவின் மேம்பட்ட நீரைப்பெற்றிருக்கின்ற அவ்வாற்றிற்கு அச்செயல்கள் அரியனவா? (அல்லவே); எ—று.

ஒடு எண்ணுப்பொருளில் வந்தது. வருக்கை ஆசினி என்பன பலாவின்பேதங்கள். சினைக்குரியவிசேடணமாகிய சுளையுடைமை, முதலாகியமரத்திற்கேற்றிக்கூறப்பட்டது. அகல் என்பது அகனெனத் திரிந்தது. அவையரிதோ ஒருமைபன்மைமயக்கம். ஓகாரம் எதிர்மறை. மரவகையனைத்தையுங் களைந்தெறிதற்கு அளவில்லாதகைகளிருத்தல்வேண்டுமாதலால், அதற்குமேற்பப் பாணியென்னும்பொதுப்பெயரைப் புணர்த்தி அக்கருத்தையுமுணர்த்தினர்.

இச்செய்யுளால் மருதநிலத்திற் பாய்ந்தமை வருணிக்கப்பட்டது. (கஎ)

இலைவி ரித்துவெண் சோறுகால் கைதையு மெழுதுங்
கலைவி ரித்திடு பெண்ணையுங் களைந்திடுங் களைபோ
யலைவி ரித்திடு கடல்புக வொழுகுமா றனந்தன்
றலைவி ரித்துழி யுடனெளித் தன்னதோர் தகைத்தால்.

இ—ள்: இலை விரித்து வெண் சோறு கால் கைதையும்-மடல்களைப்பரப்பிவெள்ளிய பராகத்தைச்சொரிகின்ற தாழையும், எழுதும் கலை விரித்திடு பெண்ணையும் களைந்திடுங்களை போய்—எழுதுகின்ற சாஸ்திரங்களைப் பரப்புகின்ற (இலைகளையுடைய) பனையும் ஆகிய பிடுங்கப்பட்டமரங்கள் சென்று, அலை விரித்திடு கடல் புக ஒழுகும் ஆறு—திரைகளைப் பரப்புகின்ற சமுத்திரத்திற் புகும்படி பாய்கின்ற அப்பாலியாறானது, அனந்தன் தலை விரித்துழி உடல் நெளித்தன்னது ஓர் தகைத்து—ஆதிசேடன் தலைகளைவிரித்தபோது சரீரத்தைநெளித்தாற்போலுந் தகைமையையுடையது; எ—று.

ஓர் ஆல் அசைகள். எழுதுங்கலைவிரித்திடுபெண்ணையென்பதைக் கலைவிரித்தெழுதிடும்பெண்ணையெனக்கூட்டியுரைப்பினுமாம். களையென்பதிற்செயப்படுபொருளுணர்த்தும் ஐவிகுதிபுணர்ந்துகெட்டது. தாழைமரங்களையும் பனைமரங்களையும்பிடுங்கிக்கொண்டுகடலைநோக்கிப்பாயும் பாலியாறு தன்வேகத்தாலும் எதிரேயுந்துந்திரைவேகத்தாலும் இலைபரப்பிய தாழை பனை என்னும் அம்மரவகைகளோடு மேற்கிளம்புகின்றது. அப்போதுமேற்கிளம்புங்களைகள் சேடன்றலைவிரிதலையும் யாறுஉடனெளிதலையும் ஒத்திருந்தனஎன்பது கருத்து. ஒழுகுமாறென்பதற்குப்பாயுந்தன்மையெனப்பொருள்கூறி இலைப்பரப்புடன் மேற்கிளம்புநுனிமரம் தலைவிரிதலையும் அடிமரம் உடனெளிதலையும் போலுமெனினுமாம்.

இச்செய்யுளால் நெய்தனிலத்திற் பாய்ந்தமை வருணிக்கப்பட்டது. (கஅ)

கொங்கு லாமலர்க் கொன்றைகூ விளங்குர வழிஞை
பொங்கு மாசுணந் தாதகி பாடலம் புன்னை

துங்க மார்திருத் தலைமிசைக் கொண்டுறுந் தொடர்பா
லெங்க ளையகன் றன்னையு மொத்தவ் விருநீர்.

இ—ள்: கொங்கு உலாம் கொன்றை மலர்—வாசனைபொருந்தியகொன்றைப்பூக்களையுளையும், கூவிளை—வில்வ பத்திரங்களையும், குரவு—குராமலர்களையும், உழிஞை—சிறுபூளைமலர்களையும், பொங்கும் மாசுணம்—சீறுகின்ற சர்ப்பங்களையும், தாதகி—ஆத்திமலர்களையும், பாடலம்—பாதிரிமலர்களையும், புன்னை—புன்னைமலர்களையும், துங்கம் ஆர் திரு தலைமிசை கொண்டு உறும் தொடர்பால்—உயர்ச்சிபொருந்திய சிறந்த மேற்புறத்திற்றுக்கிக்கொண்டு பாயுஞ்சம்பந்தத்தினால், எங்களையகன்றன்னையும் ஒத்தது—எங்கள் தலைவராகிய சிவபெருமானையும் நிகர்த்தது, அ இரு நீர்—அந்தப்பெரியபாலியாறு; எ—று.

திருத்தலைமிசை என்பதை, திருத்து அலைமிசையெனக்கண்ணழித்துப் பொருள் கூறினுமாம். உம்மைஉயர்வுசிறப்பு. சிவபெருமானுக்கியையக்கூறுங்கால், திருத்தலைமிசைக்கொண்டுறுந்தொடர்பாலென்பதற்கு, அழகியசிரசின்மேற்றரித்திருக்குந்தொடர்பாலென்க. தொடர்பென்றது ஆற்றின்கண்ணுஞ் சிவன்றலையின்கண்ணுமுள்ள பொருள்களினியைபை. நாயகன்—நடப்பிப்பவர். (௧௯)

கொலைகொள் வேன்மற வீரர்தம் மிருக்கையிற் குறுகாச்
சிலையும் வாளொடு தண்டமுந் திகிரிவான் படையு
நிலவு சங்கமுங் கொண்டுசென் றடல்புரி நீரா
லுலக மேழையு முற்பக லயின்றமா லொக்கும்.

இ—ள்: கொலைகொள் வேல் மற வீரர்தம் இருக்கையில் குறுகா—கொலைத்தொழில்பொருந்திய வேற்படையைத்தாங்கிய வேட்டுவ வீரர்களது இருப்பிடங்களில் நெருங்கி, சிலையும் வாளொடு தண்டமும் வான் திகிரிப்படையும்—(அங்குள்ள) வில்லும் வாளும் தண்டும் பெரியசக்கராயுதமும், நிலவு சங்கமும் கொண்டு சென்று அடல் புரி நீரால்—விளங்குகின்ற சங்குமாகிய பஞ்சாயுதங்களையுங்கவர்ந்து பாய்ந்துபோய் அழிவுசெய்யும் நீரையுடைமையால், உலகம் ஏழையும் முற்பகல் அயின்ற மால் ஒக்கும்—(பூமிமுதலிய) ஏழுலகங்களையும் முற்காலத்தில் உண்ட திருமாலைநிகர்க்கும் (அந்தப்பாலியாறு); எ—று.

ஒடு எண்ணுப்பொருளில்வந்தது. உலகமேழையுமென்பதிலும்மை முற்றும்மைசிறப்புமாம். திருமாலுக்கியையப் பொருள்கொள்ளுங்கால், அசுரர்களது இருப்பிடங்களில் நெருங்கி, வில் முதலிய பஞ்சாயுதங்களைத்தாங்கிச்சென்று, அவர்களையழிக்குந்தன்மையாலெனவுரைக்க. இவர் தைத்தியாரியென்னும் பெயருடையராதலால், வீரரை அசுரரென்றும்.

திருமாலினது வில் சார்ங்கம் எனவும், வாள் நந்தகமெனவும், தண்டு கௌமோதகியெனவும், சக்கரஞ்சுதர்சனமெனவும், சங்கு பாஞ்சசன்னியமெனவும் பெயர்பெறும். பஞ்சாயுதங்களுட் சக்கரம் விசேடமுடைத்தென்பரர் வான்படை எனவிசேடித்தார்.

படைகளைப்பரித்து வீரரையழித்தலாலும் அவரது இருப்பிடங்களை நீரினாற்சிதைத்தலாலும் அசுரரை அழித்தவரும் உலகங்களை உண்டவருமாகிய திருமாலைப் பாலியாற்றிற்குவமித்தனர். (௨௰)

தேன்கு லாவிய மலர்மிசைப் பொலிதரு செயமா
னன்க வாமுகந் தொறுமறை யிசையொடு நணுகிக்

கான்குலாவிய கலைமரை மான்றிகழ் கவினல்
வான்குலாமுல களிப்பவ னிகர்க்குமால் வாரி.

இ—ள்: தேன் குலாவிய மலர் மிசை பொலிதரு செயலால்—தேன்பொருந்திய(பலவகைப்) பூக்கள் தன்மேலே பொலியுஞ்செய்கையினலும், கான் குலாவிய கலைமரை மான்—காட்டிற் சஞ்சரித்த கலைமான்களும் மரைகளும் மான்களும், அறை இசையொடு நான்கவாம் முகந்தொறும் நணுகி திகழ் கவினல்—அதிருகின்ற ஓசையுடனே நான்கு திக்குகடோறும் செறிந்துவிளங்குஞ் சிறப்பினலும், வான் குலாம் உலகு அளிப்பவன் நிகர்க்கும்—பெருமைவிளங்குகின்ற உலகத்தைப் படைப்பவராகிய பிரமதேவரை நிகர்க்கும், வாரி—(அந்தப்) பாலியாறு; எ—று.

ஆல் அசை. நான்க=நான்கென்னுந் தொகையினையுடையன; குறிப்புவினையாலணையும்பெயர். பிரமதேவர்க்கியையப் பொருள்கொள்ளுங்கால், 'தேன் குலாவியமலர்மிசை பொலிதருசெயலால்—தேன்பொருந்திய செந்தாமரைமலரின்மேற் பொலிந்திருக்குஞ் செய்கையினலும், கான் குலாவிய மரை கலைமான்— வாசனைசெறிந்த வெண்டாமரைமலரில் வீற்றிருக்கின்ற கலைமகளானவள், மறையிசையொடு நான்கவாம் முகந்தொறும் நணுகி திகழ் கவினல்—வேதகீதத்தோடும் நான்குமுகங்கடோறும் பொருந்தி விளங்குஞ்சிறப்பினலும்' என்க.

இப்பொருளில், மரை முதற்குறை; மான் உவமவாகுபெயர்;முகமென்பதை ஆஸ்யமென்னும் வடமொழிபோற்கொண்டு வாயெனப்பொருளுரைப்பினுமாம். சரசுவதி வாக்குத்தேவியாய்ப் பிரமதேவரது நாவினிற்றலால் 'நான்கவாமுகந்தொறுமறையிசையொடுநணுகிக் கான்குலாவியகலைமரைமான்றிகழ்கவினல்' என்றார்; இதனை, "காரிருங்கயிலைமலைக்கண்ணுதன் முப்புரமெரிக்கக்கருதுமந்நா,ளீரதிகந்தருந்தரங்கத்தடங்கடல்சூழ்ந்திடும்புடவிநெடுந்தேரூர்ந்த, சாரதிதன்றிருநாவிலடியருளத்தினிலிருக்குந்தவளமேனிப், பாரதி"என்னுஞ் சிவராத்திரிபுராணச்செய்யுளானுமுணர்க.

சொற்பொதுமைகாரணமாக உவமைகூறுதலினிது சிலேடையுவமையணி. இச்செய்யுளும் முன்னிருசெய்யுட்களுமாகிய மூன்றுசெய்யுட்களாலும் மும்மூர்த்திகளுமுவமிக்கப்பட்டது காண்க. (௨௧)

மீது போந்திரி சங்கைவிண் ணிடையின் மீனேடும்
போத லாயுற வீசலாற் சலமிகும் புலனற்
றீதின் மாக்களைச் செறுத்தலா லளித்திடுஞ் செயலாற்
காதி காதல னிகர்க்குமாற் கன்னிமா நீத்தம்.

இ—ள்: மீது போந்து இரி சங்கை விண்ணிடையில் மீனேடும் போதலாய் உற வீசலால்-மேற்கிளம்பியலைகின்ற சங்குகளை மீன்களோடும் ஆகாயத்திற்போய்ப்பொருந்தும்படி திரையெறிதலினலும், சலம் மிகும் புலனல்—நீர்மிகுந்த இடத்தினலும், தீதில் மாக்களை செறுத்தலால்—கொடுமையையுடைய மிருகங்களை அழித்தலினலும், அளித்திடுஞ்செயலால்—(உலகத்தைக்) காக்குந்தன்மையினலும், காதிகாதலன் நிகர்க்கும்— காதிராசனது புதல்வராகிய விசுவாமித்திரமுனிவரைப்போலும், கன்னி மா நீத்தம்—புதிய பெரிய (அந்தப்) பாலியாறு; எ—று.

ஆல் அசை. நிலத்திலுூருஞ்சங்குகள் வெள்ளத்தினலைப்பினல் மேற்கிளம்பியசைதலின் 'மீதுபோந்திரிசங்கை' என்றார். 'திரி சங்கை' எனக்கண்ணழித்துமுறுகியமுகத்தினையுடைய சங்கென்பாருமுளர்; அஃதத்துணைச்சிறப்பின்று; தீதில்மாக்களென்பதில், இல் சாரியை. புலம் என்பது புலனெனப்போலியாயிற்று.

அளித்திடுஞ்செயலென்றது: தானியமுதலிய வளங்களைப் பெருக்குதலால் உயிர்களையுவப்பித்துக்காத்தலை; இதனை, "தன்னடிப்படுத்துமேலைத்தண்டகநாடுமுற்று, முன்னுறக்கவர்ந்துகொண்டவளத்தினுமூவிரட்டி, பின்னுறவளித்துவானிற்புலவரும் பெட்குமாற்றா, லன்னிலையுயிர்களோம்பியரசுசெய்துறையும்பாலி" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க.

விசுவாமித்திரர்க்கியையக்கூறுங்கால்,-மீது போம் திரிசங்கை—மேலுலகத்திற் (சரீரத்துடன்) போகவிரும்புந் திரிசங்குராசனை, 'விண்ணிடையில் மீனோடும் போதலாய் உற வீசலால்—ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரமண்டலங்களோடும் போயிருக்கும்படி எறிதலினாலும், சலம் மிகும் புலனால்—கோபமிகுந்த சிந்தையினாலும், தீது இல் மாக்களை செறுத்தலால்—தீமையில்லாத மனிதரை அழித்தலினாலும், அளித்திடுஞ் செயலால்—படைத்தலினாலும் என்க.

### திரிசங்குவைச் சுவர்க்கம்புகுவித்தன்முதலிய சரித்திரம்.

சூரியவண்ணனென்னும் அரசனது புதல்வனாய், அயோத்தியாநகரையாண்டுவந்த திரிசங்குமகாராசன் ஒருநாள் தனது குலகுருவாகிய வசிட்டமுனிவரையடைந்து "ஸ்வாமீ! யான் இந்தச்சரீரத்தோடு சுவர்க்கம்புகவிரும்புகின்றேன். அவ்வாறுசெய்தருளவேண்டும்" என்று வேண்டினன். முனிவர் அச்செயல் கூடாதெனமறுத்தனர். பின்பு அவரது புதல்வர்களிடம்போய் வேண்டினன். அவர்களும் அவ்வாறே மறுத்தனர். பின் அவ்வரசன், என்னெண்ணத்தைப் பொருட்படுத்தி நிறைவேற்றவினையாது மறுத்துவிட்டனரேயென்று துக்கித்து, அவர்மேல்வெறுப்புற்று, பிற முனிவரிடஞ்சென்று நினைத்ததுமுடிப்பேனென்றுகூறிப்போயினன். அதனையறிந்தவசிட்டமுனிவர் "குருபத்தியைவிடுத்தமையால் நீ புலையனாவாய்" எனச்சபித்தனர். உடனே திரிசங்குபுலையவடிவுபெற்று, வசிட்டமுனிவர்க்குப்பகைவர்விசுவாமித்திரரென்பதை ஆராய்ந்தறிந்து அவரிடம்போய் நிகழ்ந்தவிருத்தாந்தங்களெவற்றையுங் கூறினன். அதுகேட்டமுனிவர் திரிசங்குராசனைச் சுவர்க்கலோகம்புகுவிக்குமாறு யாகஞ்செய்யவெண்ணி முனிவர்களையழைத்தனர். வசிட்டமுனிவரின்புத்திரர் அம்முனிவர்களைப் போகாவண்ணந்தடுத்தனர். அதனையறிந்த விசுவாமித்திரமுனிவர் அந்த வசிட்டமுனிவரின்புத்திரரை வைது கொன்றுவிட்டு, பின்னர்த்தாமேதனித்து யாகஞ்செய்து அவிசொரிய, தேவர்கள் அதனையேற்றிலர். அதனால் விசுவாமித்திரர் அதிககோபமுற்று நெய்யை ஆகுதிசெய்யுஞ்சுருவத்தில் திரிசங்குவையேற்றிச் சுவர்க்கம்புகுமாறு எறிந்தனர். அதுகண்டதேவர்கள் "நீசனே! நீ இவ்விடம் வரத்தக்காயல்லை" என்றுகூறித் தலைகீழாய்விழும்படி தள்ளினர். அவ்வாறு தள்ளுண்டு மீண்டுவருந் திரிசங்கு விசுவாமித்திரரைநோக்கியோலமிட, விசுவாமித்திரர் தந்தவவலிமையினால் அவ்வரசனை அந்தரத்திற்றானே நிறுத்தி, வேறொருசுவர்க்கமமைக்கக்கருதி நக்ஷத்திரங்கள் தேவகணங்கள் சராசரங்கள்முதலிய சிலவற்றைப்படைத்தனர். தேவர்களும் இந்திரனும் இவற்றைக்கண்டு பயந்து விசுவாமித்திரரையடைந்து, "முனிசிரேட்டரே! இனிப்படைத்தலை விடுக. இப்பொழுது படைத்தவைகளையும் திரிசங்குவையும் நக்ஷத்திரமண்டலத்தினருகிலிருத்துக" என்று வேண்டினர். விசுவாமித்திரமுனிவர் அவ்வாறேயிருத்தினர். இந்தத்திரிசங்குவின் குமாரன் அரிச்சந்திரன்; இவன் வசிட்டரையே குருவாகக்கொண்டான். அதனால் விசுவாமித்திரர் அதிககோபமூண்டு அவன்மேல்விரோதஞ்சாதித்துத் துன்பப்படுத்தினர். (௨௨)

தெழித்த மால்சரி யினங்கட மெயிற்றினாற் சிதையக்
கிழித்த பேரிறால் சொரிந்ததேன் கிரியுள வெல்லாம்

கொழித்து வந்துற வணைதரும் பாலியின் கொள்கை
சுழித்த நீர்க்கங்கை யமுனையைக் கலந்தெனத் தோன்றும்.

இ—ள்: செழித்த மால் கரியினங்கள் தம் எயிற்றினால் சிதைய கிழித்த பேர் இறால் சொரிந்த தேன்—பிளிறுகின்ற மதமயக்கினையுடையயானைக்கூட்டங்கள் தங்கள்கோடுகளினாற் கெடும்படி (குற்றிக்) கிழித்த பெரியதேன்கூடுகள் சொரிந்த மதுவெள்ளமானது, கிரியுள எல்லாம் கொழித்து வந்து உற— மலைகளிலுள்ள (பொருள்கள்) எல்லாவற்றையும் வாரிக்கொண்டுவந்து பொருந்த, அணைதரும் பாலியின் கொள்கை—(அத்தேனாற்றோடு) கலக்கும்பாலியாற்றின்றன்மையானது, சுழித்த நீர் கங்கை யமுனையை கலந்தென தோன்றும்—சுழிபொருந்திய நீரினையுடையகங்காநதி காளிந்திநதியைச்சேர்ந்தாற்போலக்காணப்படும்; எ—று.

செழித்த, இயற்கையான்வந்த காலவழுவமைதி. கலந்ததென எனற்பாலது, கலந்தென எனத்தொக்கது. பாலி—பாலையுடையது. முன்னொருகாலத்தில் வசிட்டமுனிவர் நந்திமலையிலெழுந்தருளியபோது அவரிடத்துள்ள காமதேனுவானது சிவபெருமானது வாகனமாகிய இடபதேவரைக்கண்டு காமித்து அதனாற் பால்வற்றிவிடக, வசிட்டமுனிவர் ஒரு தருப்பையையெடுத்துக்கன்றாக்கித்தேனுவின்முன்விடுத்தனர். அந்தக்கன்றைநோக்கியவுடன் காமதேனுவுக்குப் பால்அதிகமாகச்சுரந்து ஆறாகப்பெருகியோடியது. இக்காரணத்தாலிந்நதிக்கிப்பெயர்வந்ததென்க.

பாலியாறு வெண்ணிறமுந் தேனாறு கருநிறமுமுடைமையாலவற்றிற்கு முறையே கங்காநதியையும் யமுனாநதியையுமுவமித்தார். யமுனாநதியினுங்கங்காநதிபெரிதென்பார் 'சுழித்தநீர்க்கங்கை' என அடைகொடுத்துக்கூறினார். உபமானமிங்ஙனங்கூறப்படவே உபமேயமாகியபாலியாறுந்தேனாற்றிலும்பெரிதென்பது போதருமென்க. (௨௩)

சங்க மார்த்திடத் திரையெழ நதியுறுந் தகைமை
யங்கம் வெம்பினை பனிக்கதி ரல்லைநீ யழலோ
யிங்கு வாதிளைத் தேகுதி யெனக்கர மெடுத்தே
பொங்கும் வாய்விடா விரவியை விளிப்பது போலும்.

இ—ள்: சங்கம் ஆர்த்திட திரை எழ நதி உறும் தகைமை—சங்குகள்ஒலிக்கவும் திரைகள் கிளம்பவும் (அந்தப்) பாலியாறு பொருந்துந்தன்மையானது, (எதுபோலுமெனில்) அழலோய்—சூரியனே, நீ அங்கம் வெம்பினை— நீ சரீரம்வெதும்பப்பெற்றாய், பனிக்கதிர் அல்லை—குளிர்ந்த கிரணங்களையுடையாயல்லை (ஆதலால்), இங்கு வா திளைத்து ஏகுதி என கரம் எடுத்து—இங்கே வா (வெப்பந்தீர) நீராடிப்போ என்று கையையுயர்த்தி, பொங்கும் வாய் விடா இரவியை விளிப்பது போலும்—பொலிந்தவாயைத்திறந்து சூரியனை அழைப்பதுபோலும்; எ—று.

ஏ அசை. செயவெனெச்சமிரண்டுஞ் சூரியனுதிக்கவந்தானென்பதிற்போலக்காரணகாரியமிரண்டிமின்றின்றன. அழலோன்—சுடுகிரணங்களையுடையவன்; இது விளியாதலினீறுதிரிந்தது. விடா—செய்யாவென்வாய்பாட்டுவினையெச்சம். நதியுறுந்தகைமை இரவியை விளிப்பது போலும் என இயையும்.

சங்கமார்த்தல் வாய்விடுதலையும் திரையெழுதல் கையெடுத்தலையும்போலுமென்க. தற்குறிப்பேற்றவணி. (௨௪)

வேத மேமுதல் யாவையு முணர்கினு மேலா
மாதி வானவன் கறைமிடற் றிறையென வழியாப்

பேதை மாக்க ளுணர்வென வலைந்துபேர் கின்ற
சீத நீரெலாந் தெளிதலின் றுயது சிறிதும்.

இ—ள்: வேதம் முதல் யாவையும் உணர்கினும்—வேதமுதலாகிய (நூல்கள்) எவற்றையுங் கற்றுணர்ந்தாலும், மேலாம் ஆதிவானவன் கறைமிடற்றிறை என அறியா—மேலாகிய முதற்கடவுள் காளகண்டப்பெருமானேயென்றுணராத, பேதை மாக்கள் தம் உணர்வென-மூடரதுஅறிவுபோல, அலைந்து பேர்கின்ற சீத நீர் எலாம் சிறிதும் தெளிதலின்று ஆயது—கலங்கிப்பாய்கின்ற குளிர்ச்சியையுடைய நீர்முழுதுஞ் சற்றாயினும் தெளிவின்றியிருந்தது; எ—று.

ஏ அசை. தேற்றமென்பாருமுளர். உணர்கினுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. ஆகுமென்பதாமெனநின்றது. கறைமிடற்றிறையென்பதிற்பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது.

மேலாதல்—நூலுணர்வாலுணர்தற்கரிதாய் நிற்றல். சிவபெருமானவ்வாறுநிற்றலை "நல்லனநூல்பலகற்பினுங்காண்பரிதே, யெல்லையிலாதசிவம்" என்பதனாலும், "பூமன்னுநான்முகத்தோன்புத்தேளிராங்கவர்கோன், மாமன்னுசோதிமணிமார்பன்-நாமன்னும், வேதம்வேதாந்தம்விளக்கஞ்செய்விந்துவுட, னாதநாதாந்தநடுவேதம்—போதத்தா,லாமளவுந்தேடவளவிறந்தவப்பாலைச், சேமவொளி"எனப்போற்றிப்பஃறொடையும், "மறையினனயனன் மாலான்மனத்தினல்வாக்கான்மற்றுங், குறைவிலாவளவினலுங்கூறொணாதாகிநின்ற, இறைவனார்" எனச் சிவஞானசித்தியாருங் கூறுதலாலுமுணர்க.

கறைமிடற்றிறை நஞ்சார்ந்தகண்டத்தையுடைய தலைவன்.

முற்காலத்திலே தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த பொழுது தோற்றித்திருமான்முதலிய தலைவரையுமடர்த்து வந்த ஆலாகலத்தை அமுதாக அயின்று, தேவர்முதலியோரனைவரும்இடர்வந்தக்காற் சரணடைதற்கேற்ற பரமபதிதாமேயென்பதற்கோரிலச்சினையாக மிடற்றில் வைத்துடையரென்பதையுணர்த்தி, வேதத்தையேயன்றி இக்குறியீட்டையுமுணராத மூடரெனவிழிப்பார் 'ஆதிவானவன்கறைமிடற்றிறையெனவறியாப்பேதைமாக்கள்' என்றார்.

இதனை "மறையகத்தெல்லாத்தலைமையோரொருபால்வருந்திடுங்கேவலமதுதா, னிறைவனேயிவ்வாறம்புயன்முதலோரினும்பிரித்துத்தியால்விளக்கா, தறைதருமிதனன்மாறுபட்டுழிவேறொராற்றினிற்போக்கவற்றாமற், கறைமிடற்றடக்கியேழைவானவரைக்காத்தருள்கருணைமாகடலே" எனச்சிவதத்துவவிவேகங்கூறுதலானுமறிக.

அறியாதஎன்பதீற்றுயிர்மெய்தொக்கது. பேதைமாக்கள்- உய்த்துணர்வில்லாதமாந்தர். தம் சாரியை. பெயர்கின்ற எனற்பாலது பேர்கின்ற எனவிகாரமாயிற்று. நீரெலாம் ஒருமைபன்மைமயக்கம். எல்லாமென்பதெலாமெனத்தொக்கது.

வேதமுதலியநூல்களையறிந்தும், விசுவாதிகரும் விசுவசேவியரும் சிவபெருமானேயெனப்பிரதிபாதிக்கும் அதிப்பிரபலசுருதியாகிய அதர்வசிகைமுதலியவற்றை விசேடப்பிரமாணங்களாகக்கொள்ளாதுவிடுத்து, அவ்வேதங்களில் ஒரோவிடத்து ஒவ்வோர்காரணத்தால் விஷ்ணுமுதலிய மற்றைத்தேவர்களுக்குப் பரத்துவஞ்சார்த்திக்கூறுஞ் சாமானியப் பிரமாணங்களையே விசேடப்பிரமாணமென்று கொள்ளுதலால், வைஷ்ணவர்முதலிய அந்நியமதஸ்தரது அறிவு அஞ்ஞானம்நீங்காதவாறுபோல, பாலியாற்றுநீர் மிகுதியாயிருந்தும் கலங்கிப்பாய்தலாற் றெளிவில்லாததாயிற்றென்பதுகருத்து. இதனை "மறைமுதற்கலைகளெல்லாமணிமிடற்றவனேயெங்கு, நிறைபரமென்றும்பூதிசாதனநெறிவீடென்று, மறைகுவதறிந்துந்தேறாதறிவெனக்கலங்கி" என்னும்பரஞ்சோதிமுனிவர் திருவாக்கானுமறிக.

வேதம்முதலியநூல்களாவன:—வேதம் நான்கு, வேதாங்கங்கள் ஆறு, நியாயநூல், மீமாஞ்சை, ஸ்மிருதிகள், புராணங்கள் என்னும் பதினான்குவித்தைகளுமாம். இதனை "அங்கமாறுமறைநான்குமீமாங்கியமொன்றருள்கொழித்துத், தங்குநீதிநூலொன்றுபுராணமொன்றுதவநெறிந்து, பொங்குதருமநூலொன்றுபுகன்றவீரேழ்விஞ்சையினை, யங்கணுலகின்றவனளித்தானிவற்றையுணர்ந்தோரறிவுடையோர்" எனக்கூர்மபுராணங்கூறுதலானறிக. இவற்றுடன் ஆயுர்வேதமுதலியவற்றைச்சேர்த்து வித்தைபதினெட்டென்பாருமுளர்.

ஈண்டெடுத்துக்காட்டிய கூர்மபுராணச்செய்யுளில் இவற்றையுணர்ந்தோரறிவுடையோரெனக் கூறியிருப்பவும் ஆசிரியர் அவரைப்பேதைமாக்களென்றார் யாதுபற்றியெனின், நூலுணர்ச்சியாற் பெறவேண்டிய உண்மைஞானத்தைப் பெறாமையானென்க. (௨௫)

செம்பொன் மால்வரை யல்லன கிரிகளுந் திசையு
மும்பர் வானமுந் தரணியுந் துளங்கவந் துறலா
லெம்பி ரான்முனம் வருகென நதிகளோ டெழுந்த
கம்பை மாநதி யொத்தது கரைபொரு பாலி.

இ—ள்: செம்பொன் மால் வரை அல்லன கிரிகளும் திசையும்—பசும்பொன்மயமாகிய பெரிய மேருமலையல்லாத (மற்றைய) மலைகளும் எட்டுத்திக்குகளும், உம்பர் வானமும் தரணியும் துளங்க வந்து உறலால்—மேலுள்ள ஆகாயவுலகமும் பூவுலகமும் நடுங்கும்படி (பெருகிப்) பாய்ந்து வருதலால், எம்பிரான் முனம் வருகென நதிகளோடு எழுந்த மா கம்பைநதி ஒத்தது—எங்கள் கடவுளாகிய ஏகாம்பரநாதர் முற்காலத்திலே பெருகி வருகவென்றுபணிக்கச் சகலதீர்த்தங்களோடும்பெருகிய கம்பாநதி போன்றது, கரைபொரு பாலி—கரையை (அலையினால்) மோதுகின்ற பாலியாறு; எ—று.

அல்லன குறிப்புமுற்றுப்பெயரெச்சம். துளங்கவென்னுஞ் செயவெனெச்சங் காரியப்பொருட்டு. முன்னமென்பது முனமெனவும் வருகவெனஎன்பது வருகெனஎனவுந்தொக்கன. நதிவேகத்தானடுங்காத மலையாதலின் மேருமலையை விலக்கினர்.

முன்னொருகாலத்திலே, காஞ்சிபுரத்தில் உமாதேவியார் சிவபூசைசெய்துவருகின்றுழி, ஒருநாள் ஏகாம்பரநாதஸ்வாமி தேவியின் பூசாபத்தியைப்பரீக்ஷித்து உலகினர்க்குக்காட்டுமாறு கம்பாநதியிலே சகலதீர்த்தங்களையும் வருவிக்க, அக்கம்பைமாநதி ஊழிகாலத்தெழுங் கடற்பிரவாகம்போல ஆகாயத்தையளாவிப் பெருகியது. இச்சரித்திரத்தைக் காஞ்சிப்புராணத்தாலும் பெரியபுராணத்தாலுந் தெள்ளிதினுணர்க. (௨௬)

உதிரு கின்றசிற் றுண்டிகொண் டொலிபுனற் சடைமேன்
மதுரை நாயகன் மண்சுமந் திட்டமா நதியின்
முதிரு முத்தமிழ் விரகன தேடென மொய்ம்மீ
னெதிர்பு குந்திடப் போவது பாலியா மியாறு.

இ—ள்: மதுரைநாயகன்— மதுராபுரிக்குத்தலைவராகிய சோமசுந்தரக்கடவுள், உதிருகின்ற சிற்றுண்டி கொண்டு—உதிருகின்ற பிட்டைக் (கூலியாக) ஏற்று, ஒலிபுனல் சடைமேல் மண் சுமந்து இட்ட மா நதியில்—ஆரவாரிக்கின்ற கங்காநதியையணிந்த சடாமுடியின்மேல் மண்ணை (வைத்துச்) சுமந்துகொட்டிய பெரியவைகையாற்றின்கண்ணே, முதிரும் முத்தமிழ்விரகனது ஏடு என— சிறந்த முத்தமிழ்ச் சாதுரியராகிய திருஞானசம்பந்தஸ்வாமிகளது திருப்பதிகத்திருவேடு (எதிர்சென்றது) போல, மொய் மீன் எதிர் புகுந்திட போவது— மொய்க்கின்ற மீன்கள் (பாயுந்திசைக்கு) எ

திரேசெல்லப்பாய்வது, பாலியாம் யாறு-பாலியென்னும்பெயரையுடையயாறு; எ—று. நீர் மிகவும்பெருகிப்பாய்தலாலுவகைமேலிட்டு மீன்கள் எதிரேயோடுவன வென்க.

சிற்றுண்டி—சிறுமையாகிய உணவு. ஒலி வினைத்தொகை. ஆகுமென்பதா மெனநின்றது. பாலியாஃயாறென்பதில்லிகரம் பதப்புணர்ச்சிக்கண்வந்த சாரியை. முத்தமிழாவன: இயல் இசை நாடகம் என்பனவாம்.

செய்யுந்தொழிற்குப் போதாத கூலியென்பார். 'உதிருகின்றசிற்றுண்டி.' எனவும், மண்ணையேந்திச்சுமத்தற்கேலாத மகிமையுடைத்தென்பார் 'ஒலிபுனற்சடை' எனவும், அற்பமானகூலியைவிரும்பியேற்று இந்தஇழிதொழிலைச்செய்தது மதுரையில் வாழ்பவளாகிய பிட்டுவிற்றுண்பாளைக்காக்கும் வியாசமேயென்பார் 'மதுரைநாயகன்' எனவும், அவ்வாறு சோமசுந்தரக்கடவுளும் மண்சுமந்தடைத்த பெருநதியென்பார் 'மண்சுமந்திட்டமாநதி' எனவும், அத்தகையநதிவேகத்தைத்தமிழிற்பாடிய தேவாரத்திருப்பதிகத்தால் வென்றவரென்பார் 'முதிருமுத்தமிழ்விரகன்' எனவுங்கூறினர்.

## சோமசுந்தரக்கடவுள் மண்சுமந்த சரித்திரம்.

முன்னொருகாலத்திலே, குதிரைகொள்ளும்படி பாண்டியராசன் கொடுத்த திரவியங்களையெல்லாம் மந்திரியாயிருந்த திருவாதவூரடிகளேற்றுச்சென்று குதிரைகொள்ளாது புண்ணியவிஷயங்களிற் செலவுசெய்துவந்தார். அதனையறிந்தபாண்டியராசன் திருவாதவூரடிகளைவருத்த, சோமசுந்தரக்கடவுள் நரிகளைப்பரியாக்கிக் கொணர்ந்து அரசனுக்குக்கொடுத்துத் தமது தொண்டராகிய வாதவூரடிகளது துயரையொழித்தனர். அவர்கொடுத்த பரிகளெல்லாம் அன்றிரவு நரிகளாயின. பாண்டியராசன் பின்னும் வாதவூரடிகளைவருத்தினன். அப்பொழுது அவர்படுந்துயரத்தை நீக்கத்திருவுளம்பற்றிய சோமசுந்தரக்கடவுள் வைகைநதியுடன்சென்று பெருகுமாறு கங்காநதியை விடுத்தனர்; அந்நதி வைகைநதியுடன்கூடிப் பெருகியலைத்தது. அரசனதுகண்டு சிவனடியாரைவருத்தியதாலன்றோ இந்த ஆபத்துநேர்ந்ததென்றெண்ணி வாதவூரடிகளை வருத்தாது நன்மொழிகூறிவிடுத்துப் பெருகாதமைக்கும்படி வேண்டினன். வாதவூரடிகள் சிவபெருமானைத்தியானிக்க, அந்நதிபெருகாதமைந்தது. அதன்மேல் அந்நதிக்கணை கட்டுமாறு மதுராநகரத்தில் வசிப்பார்க்கு நிலம்அளந்து கூறுபடுத்திக்காரியஸ்தர்களால் ஒப்பிக்கப்பட்டது. அக்கூறுகளுள் பிட்டுவிற்றுண்ணுஞ் செம்மனச்செல்வியினதுபாகம் அடைப்பாரின்றிக்கிடந்தமையால் அவளைக் காரியஸ்தர்கள் நெருக்கினர். அப்பொழுது அவளது துயரைத்தீர்க்குமாறு சோமசுந்தரக்கடவுள் கூலியாள்வடிவங்கொண்டு வந்து உதிரும்பிட்டைக் கூலியாகவேற்று மண்சுமந்தனர்.

வைகைநதியிலேயிட்ட சரித்திரத்தை முன்னர்க்கடவுள்வாழ்த்தில் இருபதாஞ்செய்யுளுரையிற் காண்க. (உஎ)

## வேறு.

மாசறத் துளங்கு துப்பு மரகதத் திடைவந் தென்னப்
பாசடை நடுவட் பூத்த பங்கயத் தடாகம் யாவும்
தேசுடைத் தரங்க நீத்தச் செலவினிற் சிதைந்த மன்னோ
பேசிடிற் சிறுமை யெல்லாம் பெருமையா லடங்கு மன்றே.

இ—ள்: மாசு அற துளங்கு துப்பு மரகதத்திடை வந்தென்ன—குற்றம் நீங்கி விளங்குகின்ற பவளமானது நீலரத்தினத்திற்பதிந்தாற்போல, பாசடை நடுவண் பூத்த பங்கயத்தடாகம் யாவும்—பசிய இலைப்பரப்புகளினடுவே மலர்ந்தசெந்தாமரைமலர்களையுடைய தடாகங்களெல்லாம், தேசு உடை தரங்க நீத்த செலவினால் சிதைந்த—ஒ

ளிபொருந்திய திரைகளையுடைய (அந்தப்)பாலியாற்றின் வேகத்தினாலழிந்தன. பேசிடில்—சொல்லுங்கால், சிறுமை எல்லாம் பெருமையால் அடங்கும் அன்றே— சிறியபொருளெல்லாம் பெரியபொருள் அடக்குதலாலடங்குமன்றோ; எ—று.

சிறியபொருளெல்லாம் பெரியபொருளாலடக்கப்படுதற்கேற்பத் தாமரைத் தடாகங்களும் பாலியாற்றாலழிக்கப்பட்டனவென்க.

மன் ஓ அசைகள். அன்றே பலரறிதேற்றம். மாசு-கோணுதல் புழுவரித்தல் முகமொடிதல் முதலியன. பசுமை—அடை, பாசடையெனச்சந்திபெற்றது. பங்கயம் சிறுமை பெருமை என்பன ஆகுபெயர்கள். தேஜஸ் என்னும் வடமொழிதேசெனத்தற்பவமாயிற்று. சிதைந்த அன்பெறுதஅகரவீற்றஃறிணைப்பன்மைவினைமுற்று. அற என்னுஞ்செயவெனெச்சஞ்செய்தெனெச்சமாத்திரிக்கப்பட்டது. பாலியாறு தாமரைத்தடாகங்களினும் பெரிதென்பார் 'தேசுடைத்தரங்கநீத்தம்' எனவிசேடித்தார். (௨௮)

வளவயன் மருத வைப்பின் வாவியங் கமலம் யாவும்
கிளையொடும் பறித்து வாரிக் கேழுறப் பொலிந்த தோற்றம்
விளைதரு பகையிற் றோலா வெவ்வழற் சிறுமை நோக்கிக்
களைதலைப் புரிந்து பற்றிப் பெயர்ந்தெனக் காட்டிற் றன்றே.

இ—ள்: வள் வயல் மருதவைப்பின் வாவியம் கமலம் யாவும்—வளத்தைத்தருகின்ற வயல்களையுடையமருதநிலத்தின்கணுள்ள தடாகங்களின்மலர்ந்த செந்தாமரைப்பூக்களெல்லாவற்றையும், கிளையொடும் பறித்து வாரி கேழ் உற பொலிந்த தோற்றம்—கிளைகளோடும்பிடுங்கி வாரி (அம்மலர்களின்)செந்நிறம்பொருந்த (அப்பாலியாறு) பொலிந்தகாட்சியானது, விளைதரு பகையில் தோலா வெவ் அழல் சிறுமை நோக்கி—மூளுகின்ற பகைமுகத்திலே தோல்வியடையாத கொடியஅக்கினியின் உருவச்சிறுமையைக்கண்டு, களைதலை புரிந்து பற்றி பெயர்ந்தென காட்டிற்று—(அதனைக்) களைந்து பற்றிக்கொண்டு நடந்தாற்போலக் காண்பித்தது; எ—று.

இலைநாளங்களோடு பறித்தென்பார் 'கிளையொடும்பறித்து' எனவும், என்றுமீங்காப் பெரும்பகையென்பார் 'விளைதருபகை' எனவும், எப்பொருள்களையும் எரித்தழிக்குந்தீயென்பார் 'வெவ்வழல்' எனவுங்கூறினார்.

அன்று ஏ அசைகள். அம் சாரியை. கமலம் ஆகுபெயர், கம்-நீர், அலம்-அலங்கரிப்பது; நீரைப்பூஷிப்பது. தோலாதவெனற்பாலது தோலாவெனவும், பெயர்ந்ததென எனற்பாலது பெயர்ந்தென எனவுந் தொக்குநின்றன. 'தோற்றம்...காட்டிற்று' என்பது பாவகருத்தா. இன் ஏழாம்வேற்றுமையில்வந்த வேறுருபு.

முற்செய்யுளிற்கூறியவாறு மருதநிலத்துள்ள தாமரைத்தடாகங்களைச்சிதைத்து, அங்குள்ள மலர்களைத்திரையினாற்பிடுங்கி மேற்பரப்பிப்பாலியாறுபாய்தல், பகையென்றுகருதித் தணிக்குந்தோறுந் தணியாமையால் அவ்வக்கினியைப் பற்றிக்கொண்டுசெல்லுதல்போன்றது. இது தற்குறிப்பேற்றவணி. (௨௯)

திரைகட னீத்தங் கொண்மூ வினத்தொடு சேண்போய் நோக்கித்
தரையிடை யிழிந்து சென்று தன்பொருள் கொடுபோந் தென்னப்
பரதவ ரளவர் வாரிப் படுத்தமீ னுப்பின் குப்பை
யிருபுடை யலைத்து வௌவி யேகிய தெழிநீர்ப் பாலி.

இ—ள்: திரை கடல் நீத்தம்—அலைகின்ற சமுத்திரநீரானது, கொண்மூவினத்தொடு சேண் போய் நோக்கி—மேகக்கூட்டங்களோடு ஆகாயத்திற்சென்றுபார்த்து தரையிடை இழிந்து சென்று தன்பொருள் கோடுபோந்து என்ன—பூமியிலிறங்கிப்பா

ய்ந்து தன்பொருள்களைக்கவர்ந்துகொண்டுபோனாற்போல, பரதவர் அளவர் வாரிப்படுத்த மீன்(குப்பை) உப்பின்குப்பை—நுளையர்களும் உப்பமைப்போரும் வாரிக்குவித்த மீன்குவியல்களையும் உப்புக்குவியல்களையும், இருபுடை அலைத்து வெளவி ஏகியது—இருபக்கங்களிலும் அலைத்துக்கவர்ந்துகொண்டு பாய்ந்தது, எறி நீர் பாலி—அலைமோதுகின்ற நீரினையுடைய பாலியாறு; எ—று.

திரை வினைத்தொகை. போந்ததென்ன எனற்பாலது போந்தென்ன எனத்தொக்கது. பரதவரளவர்வாரிப்படுத்த மீனுப்பின்குப்பையென்றது நிரனிறை.

சமுத்திரநீரானது, தன்னிடத்திற்பிறர்கவர்ந்த பொருள்களையெல்லாந் தேடிப்பெற்றுக்கொள்ளவேண்டுமெனக் கருதி, அப்பொருளிருந்தழியெல்லாஞ்சென்று சென்று தேடிக்காண்பதினும் மேலெழுந்துபோய் நின்றுழியேநின்று ஒரேகாலத்திற்காண்பதுதக்கதென்று மேகங்களாற்பருகப்பட்டு மேலெழுந்துசென்று தன்பொருள்வைக்கப்பட்டிருக்குமிடங்களையெல்லாநன்குதெரிந்தபின் பூமியில்வந்து அவற்றைக் கவர்ந்துசென்று தன்னிடத்திலுய்த்தாற்போல, பாலிநதிநெய்தனிலச்சார்புகளிற் குவிக்கப்பட்டிருந்த மீன்குவைகளையும் உப்புக்குவைகளையும் அலைவீசிக்கவர்ந்து கடலைநோக்கிப் பாய்ந்ததென்பதுகருத்து; இது தற்குறிப்பேற்றவணி. (௫0)

பாரிடை யினைய பண்பிற் படர்ந்திடு பாலி யந்தத்
தாருயி ரனைத்துந் தத்த மருவினைக் கமைத்த நீராற்
சேருறு கதிக ளென்ன மரபினிற் றிறமே யென்னத்
தாருவின் கிளைக ளென்னத் தனித்தனி பிரிந்த தன்றே.

இ—ள்: பாரிடை இனையபண்பில் படர்ந்திடு பாலி—பூமியின்கண் இத்தன்மையோடு பாய்கின்ற பாலியாறானது, அந்தத்து ஆர் உயிர் அனைத்தும் தத்தம் அருவினைக்கு அமைத்தநீரால் சேருறு கதிகள் என்ன—தேகாந்தத்திலேநிறைந்த உயிர்களெல்லாம் தங்கள் தங்களது அருமையாகிய வினைப்பகுப்புக்கிசையவமைத்த முறைக்கேற்பப் புகுகின்ற கதிபேதங்கள்போலவும், மரபினில் திறம் என்ன—சாதிகளின் பகுப்புப்போலவும், தாருவின் கிளைகள் என்ன—மரத்தின்கவடுகள்போலவும், தனித்தனி பிரிந்தது—வேறுவேறாகப்பிரிந்தது; எ—று.

அன்றும் ஏ இரண்டும் அசைகள்.

ஆன்மாக்கள் இப்பூவுலகமொன்றிற்றானே சனித்தும் தாந்தாமீட்டியவினைகளின் அநுபவத்திற்கேற்ப மேலுள்ளசுவர்க்கமுதலியவற்றிலும் கீழுள்ள நரகவகைகளிலுமாகப் பிரிந்துசெல்லுதல்போலவும், நால்வகைச்சாதிகளும் ஒருகடவுளாலே படைக்கப்பட்டும் பலவகைப்பட்டுக் கிரமலக்ஷணத்திற்கிசைய விதிக்கப்படுமிடங்கடோறும் பிரிந்துவாழ்தல்போலவும், கிளைகள் ஓர்மரத்திற்றானே கிளைத்தும் தமக்கேற்ற இடங்களிற் சாய்ந்து பிரிந்துவளருதல்போலவும் ஒரேவெள்ளமாய்ப்பாய்ந்த பாலியாறானது கால்வாய்முதலியவற்றிற் சந்தித்துப் பல கிளைகளாகப் பிரிந்ததென்பது கருத்து. (௫௧)

கால்கிளர் கின்ற நீத்தங் கவிரிதழ்க் கலசக் கொங்கைச்
சேல்கிளர் கரிய வுண்கட் டிருநுதன் மிழற்றுந் தீஞ்சொன்
மேல்கிளர் பரவை யல்குன் மெல்லிய லறன்மென் கூந்தன்
மால்கிளர் கணிகை மாதர் மனமெனப் போயிற் றுமால்.

இ—ள்: கால் கிளர்கின்ற நீத்தம்—முற்செய்யுளிற்குறித்தபடி பலகால்வாய்களிற்பிரிந்த வெள்ளமானது, கவிர் இதழ்—முருக்கலர்போன்ற அதரத்தையும், கல

ச கொங்கை—பூரணகும்பம்போன்றதனங்களையும், சேல் கிளர் கரிய உண் கண்—கயல்மீன்போன்று விளங்குகின்ற கரிய மையுண்டகண்களையும், திரு நுதல்—அழகிய நெற்றியினையும், மிழற்றும் தீம் சொல்—பேசுகின்ற தித்திப்பாகிய சொல்லையும், மேல் கிளர் பரவை அல்குல்—மேலாகக்கிளருகின்ற சமுத்திரம்போன்ற நிதம்பத்தினையும், மெல் இயல்—மெல்லியசாயலையும், அறல் மென் கூந்தல்—கருமணல்போன்ற மெல்லியகூந்தலையுமுடைய, மால் கிளர் கணிகைமாதர் மனம் என போயிற்று— காமவேட்கைமிகுந்த கணிகைப்பெண்களதுமனம்போலப்பாய்ந்தது; எ—று.

ஆம் ஆல் அசைகள். கவிர் ஆகுபெயர். சிவந்தநிறமுடைமையால் அதரத்திற்கு முருக்கலரும், உள்ளே நீருடைத்தாய் உருண்டு திரண்டிருத்தலாற் பயோதரங்களுக்கு நீர்க்கலசமும், பிறழ்ச்சியினாலும் வடிவினாலும் கண்களுக்குச்சேலும், அகன்றிருத்தலால் நிதம்பத்திற்குக்கடலும், வார்ந்து கருநிறமுடைத்தாயிருத்தலாற் கூந்தற்குக் கருமணலுமுபமானமாயின.

காமவேட்கைமிக்ககணிகையர்மனம் நேர்ந்தஆடவர்மாட்டெல்லாம்நாணமின்றிவிரைவிற்செல்லுதல்போல வெள்ளமும் நேர்ந்த கால்வாய்கடோறும்பிரிந்து தடையின்றி விரைந்து பாய்ந்ததென்பது கருத்து. (௩௨)

பாம்பளை புகுவ தேபோற் பாய்தரு பரவைத் தெண்ணீர்
தூம்பிடை யணுகு மாற்றாற் சொன்முறை தடைசெய் வோரிற்
றும்புடை பெயரா வண்ணந் தலைத்தலை தள்ளு மள்ள
ரேம்பலோ டார்க்கு மோதை யுலகெலா மிறுக்கு மாதோ.

இ—ள்: பாம்பு அளைபுகுவதேபோல் பாய்தரு பரவை தெள் நீர்—சர்ப்பமானது புற்றினுட்புகுதலையேபோலப் பாய்கின்ற பரந்த தெளிந்த வெள்ளத்தை, தூம்பிடை அணுகுமாற்றால்—மதகிற்புகும்படி, புடைபெயராவண்ணம் தலைத்தலை தள்ளும் மள்ளர்—விலகாதபடி இடங்கடோறும் (நின்று) மறித்துப்பாய்ச்சுகின்ற உழவர்கள் சொன்முறை தடைசெய்வோரில் ஏம்பலோடு ஆர்க்கும் ஓதை—சொல்லின் முறையினாற்றடுப்பவர்கள்போல இறுமாப்பினுடனே ஒலிக்கின்ற ஓசையானது, உலகெலாம் இறுக்கும்—உலகங்களெங்குஞ் சென்றுதங்கும்; எ—று.

தாம் மாது ஓ அசைகள். ஏகாரம் தேற்றம். புகுவதுதொழிற்பெயர். மள்ளரை இக்காலத்திற் பள்ளரெனவழங்குவர். சொன்முறைதடைசெய்தலாவது:—நீரைப்புறம்பேபாயவொட்டாது தம் வாய்மொழியினாலச்சுறுத்தித் தடுத்தல்; மந்திரத்தாற்றடுத்தலெனினுமாம்.

பாம்பு தலையை முன்னரேயுட்புகுத்தி உடலைநெளித்துச் சுரித்துப்புற்றினுட்புகுவதுபோலக் கால்வாய்களிற்பாயுநீரும் உள்மடங்கிச் சுழித்து மதகினுட்புகுமென்க. (௩௩)

பணையொலி யிரலை யோதை பம்பையின் முழக்க மங்கட்
கிணையொலி மள்ள ரார்ப்புக் கேழ்கிளர் தரங்க நன்னீ
ரணையொலி யவற்றை வானத் தார்ப்பொலிக் கவனி தானு
மிணையொலி காட்டிற் றேயென் றெண்ணுவார் விண்ணு ளோரும்.

இ—ள்: பணை ஒலி—முரசவாத்தியத்தினோசையும், இரலை ஓதை— ஊதுகொம்பினோசையும், பம்பையின்முழக்கம்—பம்பைப்பறையினோசையும், அம் கண் கிணையொலி—அழகிய கண்ணினையுடைய மருதப்பறையினோசையும், மள்ளர் ஆர்ப்பு—

உழவர்களினாரவாரமும், கேழ் கிளர் தரங்க நல் நீர் அணை ஒலி—சிறம்விளங்குகின்றதிரைமறிகின்ற நல்லநீரானது பாய்கின்ற ஓசையுமாகிய, அவற்றை— அந்த முழக்கங்களை, விண்ணுளோரும்— (கேட்ட) தேவர்களும், வானத்து ஆர்ப்பொலிக்கு அவனிதானும் இணையொலி காட்டிற்றோ என்று எண்ணுவார்— வானுலகத்தினிகழும் ஆரவாரவோசைக்குப்பூவுலகமும் எதிரோசைவிளைத்ததோவென்று ஆலோசிப்பார்கள்; எ—று.

அணை வினைத்தொகை. தான் சாரியை. உம்மைகளிரண்டனுண் முன்னையதிறந்ததுதழீயவெச்சம். பின்னையதுயர்வுசிறப்பு. வானத்தார்ப்பொலியென்பதை மேகமுழக்கமென்றேனும் சுவர்க்கலோகத்துத்தேவதுந்துபிமுதலியவாத்தியங்களியம்புமோசையென்றேனுங்கொள்க.

தொண்டைநாட்டினிகழ்ந்த ஓசையைக்கேட்ட தேவர்கள் நம்முலகிலுண்டாயவொலிக்குப் பூமிகாட்டிய விணையொலியோவிது என்றையுறுவிற்பர் என்பதுகருத்து.

தொண்டைநாட்டினிகழுமோசை அதிசதூரத்திற்கப்பாலுளதாகியவிண்ணுலகத்தில் வாழ்பவர்களுக்கும் தம்முலகினிகழ்ந்த ஓசையோடு செவிப்புலனுயதெனக்கூறவே அத்தொண்டைநாட்டொலி வானுலகவொலியினும் பன்மடங்கதிகமானபெருமுழக்கென்பது பெற்றாம். (௫௪)

இயல்புகுங் களிநல் யானை யினந்தெரிந் தெய்து மாபோற்
கயல்புகுந் துலவுஞ் சின்னீர்த் தடம்புகுங் காமர் காவி
னயல்புகுங் கோட்ட கத்தி னகம்புகு மார்வத் தோடி
வயல்புகுங் களிப்பு நீங்கா மாக்களின் மயங்கு மாதோ.

இ—ள்: இயல் புகும் களி நல் யானை இனந்தெரிந்து எய்துமா போல்— தகுதிபொருந்திய களிப்பினையுடைய நல்ல யானையானது தன்னினத்தைத்தேடிப் புகுந்தன்மைபோல, கயல் புகுந்து உலவும் சில் நீர் தடம் புகும்—சேன்மீன்கள்போயுலாவுகின்றஅற்பநீர்பொருந்திய தடாகத்திற்பாயும், காமர் காவின் அயல் புகும்—அழகியசோலைகளினருகிலும்பாயும், கோட்டகத்தின் அகம் புகும்—ஏரிகளினிடத்தும்பாயும், ஆர்வத்து ஓடி வயல் புகும்—விருப்பத்துடனே ஓடி வயல்களினும்பாயும், களிப்புநீங்கா மாக்களின் மயங்கும்—களிமயக்குமாறாத மனிதரைப்போல மயங்கும்; எ—று.

மாது ஓ அசைகள். எய்துமாவென்னும்வினையெச்சத்தினதும் நீங்காதவென்னும்பெயரெச்சத்தினதும் ஈற்றுயிர்மெய்தொக்கன. அகம் ஏழனுருபு. மாக்களில் என்பதில் ஐந்தனுருபு ஒப்புப்பொருளில்வந்தது. தடத்திற்குச் சின்னீரென்னும் விசேடணம் புணர்த்தலாற் கோட்டகத்தைப் பெரிய நீர்நிலையென்க. ஆர்வத்தோடலாவது: தடையின்றி விரைந்துபாய்தல், மயங்கலாவது:-வேகமின்றித்தடைப்பட்டுச் சோர்ந்துபாய்தல்.

யானை தன்னினமுள்ள இடங்களைத்தேடிச்செல்லுதல்போலப் பாலியாற்றுவெள்ளமும் தாம் நிலைப்பட்டுநிற்றற்கேற்ற பள்ளமாகிய தடாகமுதலிவைகளை நாடினவென்பார் 'யானையினந்தெரிந்தெய்துமாபோல்...புகும்' எனவும், மதுக்களிப்புடையோர் ஒருநெறிப்படாது பலவிடத்தும் மயங்கிநிற்றல்போல அவ்வவ்விடங்கடோறுந் தங்கிநிற்றலால் 'களிப்புநீங்காமாக்களின்மயங்கும்' எனவும் கூறினார். (௫௫)

எங்கணு நிறைந்து வேறோ ரிடம்பிறி தின்மை யாகச்
சங்கமா யீண்டு மள்ளர் தாங்குபல் லியமு மார்ப்பப்
பொங்கிய நகரந் தோறும் புறமெலாம் வளைந்த நீத்த
மங்கண்மா ஞாலஞ் சூழு மளக்கரை நிகர்த்த தாமே.

இ—ள்: வேறோரிடம் பிறிது இன்மையாக எங்கணும் நிறைந்து— வேறொருஇடம் புறம்பே(சிறிதும்)இல்லையென்னும்படிஎவ்விடங்களினும் நிறைந்து, சங்கமாய் ஈண்டும் மள்ளர் தாங்கு பல் இயமும் ஆர்ப்ப—கூட்டமாகிநெருங்கிய உழவர்களேந்திய பலவகையான வாத்தியங்களுமியம்ப,பொங்கிய நகரம் தோறும் புறம் எலாம் வளைந்த நீத்தம்—பொலிந்த நகரங்களெங்கும்(அந்நகரங்களின்)புறத்தனவாகியநாடுகளெங்கும் சூழ்ந்துநின்றவெள்ளமானது, அம் கண் மா ஞாலம் சூழும் அளக்கரை நிகர்த்தது—அழகிய இடமகன்ற பெரிய பூவுலகத்தைச்சூழ்ந்துநிற்குங் கடலையொத்தது; எ—று.

ஆம் ஏ அசைகள். இன்மையாக ஈண்டும் எனவியையும். தோறும் இடப்பன்மைப்பொருளில்வந்தது. நகரங்களுக்கும் நாடுகளுக்கும் பூமியும் யாற்றினீர்க்குக் கடலும் மள்ளரது வாத்தியமுழக்கத்திற்குக் கடலொலியுமுபமானமென்க.

நாடுநகரங்களில் உட்புகாது வெளியே வளைந்துநிற்றலால் 'ஞாலஞ்சூழுமளக்கரைநிகர்த்தது' என்றார். (௩௭)

மாறடு மள்ள ருய்ப்ப மருதத்தி னிறைந்து விஞ்சி
யேறிய நார மீட்டு மிருங்கட லோக்கிச் சென்ற
வேறுகொள் புலனை வென்றோர் மேலைநன் னெறியுய்த் தாலுந்
தேறிய வுணர்வி லாதோர் செல்வழிச் செல்வ ரன்றே.

இ—ள்: மாறு அடும் மள்ளர் உய்ப்ப—எதிர்ந்தாரையழிக்கின்ற உழவர்கள் பாய்ச்ச, மருதத்தில் நிறைந்து விஞ்சி ஏறிய நாரம்—வயனிலத்தினிறைந்து மிஞ்சிவழிந்தநீரானது, மீட்டும் இரும் கடல் நோக்கி சென்ற—பின்னும் பெரிய கடலைநோக்கிப்பாய்ந்தன, வேறு கொள் புலனை வென்றோர் மேலை நல் நெறி உய்த்தாலும்— (ஒன்றோடொன்று) பேதமுறுகின்ற ஐம்புலப்பகையைவென்ற ஞானிகள் மேலாகிய நல்ல மார்க்கத்திற் பிரேரித்தாலும், தேறிய உணர்வு இலாதோர் செல்வழி செல்வர் அன்றே—தெளிந்த நற்புத்தியில்லாத அஞ்ஞானிகள் தாம் முன்னொழுகிய துன்மார்க்கத்திற்செல்வார்களன்றோ; எ—று.

மாறு ஆகுபெயர். உய்ப்ப என்னுஞ்செயவெனெச்சங் காரணப்பொருளதாய் நிறைந்தென்னும் வினைகொண்டது. மருதம் ஈண்டுவயலென்னும்பொருட்டு. சென்ற அன்பெறாத அகரவீற்றஃறிணைப்பன்மைவினைமுற்று. வெல்லுதல்வினைக்கேற்பப் புலனைப்பகையென்றாம். இதனை "அவமிகும்புலப்பகைகடந்து" என்னும் பரஞ்சோதிமாமுனிவர்வாக்கானுமுணர்க. வென்றோர் உணர்விலாதோர் என்னும் வினையாலணையும்பெயர்களில் அயலாகாரமோகாரமாயின. இல்லாதோரென்பதிலாதோரெனத்தொக்கது. உய்த்தாலுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. செல்—வழி என்பது உடம்படுமெய்பல்லாதவகரம்பெற்றுச் செல்வழியெனப்புணர்ந்தது சார்வழிச்சார்ந்ததகையளென்பதிற்போல. அன்றே பலரறிதேற்றம்.

ஐம்புலப்பகையைவெல்லுதலாவது:-மனத்தைப் பொறிவழிபோகவொட்டாமற்றடுத்து யோகசாதனத்தினிறுத்துதல். அங்ஙனம் நிறுத்தாக்காற் கடவுள்வழிபாடு சித்திபெறாதென்க. இதனை "கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப், பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு, மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியான், செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே" என்னும் பட்டணத்துப்பிள்ளையார் திருவாக்கானுமுணர்க.

வேகத்துடன் கடலைநோக்கிப்பாயும் வெள்ளத்தைத் தந்திறப்பாட்டானடக்கி வயலிற்போக்கினரென்பதுபோதர 'மாறடுமள்ளருய்ப்ப' என்றார்.

மெய்ஞ்ஞானிகள் நன்னெறிக்கட்புகுத்தியவழியும் அஞ்ஞானிகள் ஐம்புலப்பேய்களாலீர்ப்புண்டு மதிமயங்கி உண்மைநெறிகடைப்பிடியாது முன்னொழுகிய புன்னெறியிற்றானே சேறல்போல, உழவர் வயலிற்பாய்ச்சியவழியும் வெள்ளமானது அமையாது மிஞ்சியுவர்க்கடலைநோக்கிப் பாய்ந்ததென்பது கருத்து.

மள்ளர்க்கு ஞானிகளும் வெள்ளத்திற்கு அஞ்ஞானிகளும் நன்னெறிக்கு வயல்நிலமும் புன்னெறிக்குக் கடலுமுபமானமென்க. (கஎ)

வாளெனச் சிலைய தென்ன வால்வளை யென்னத் தெய்வக்
கோளெனப் பணிக ளென்னக் குலமணி குயிற்றிச் செய்த
மீளிவெஞ் சரங்க ளென்ன வேலென மிடைந்து சுற்று
நாளெனப் பிறழு மீன்க ணடவின நார மெங்கும்.

இ—ள்: வாள் என—வாள்போலவும், சிலையது என்ன—விற்போலவும், வால் வளை என்ன—வெள்ளியசங்குபோலவும், தெய்வ கோள் என—தெய்வத்தன்மைபொருந்திய கிரகங்கள்போலவும், பணிகள் என்ன—சர்ப்பங்கள்போலவும், குலமணி குயிற்றி செய்த மீளி வெம் சரங்கள் என்ன—உயர்ந்தசாதியான ரத்தினங்களையழுத்திச்செய்த வீரனது கொடிய அம்புகள்போலவும், வேல் என—வேலாயுதம்போலவும், மிடைந்து சுற்றும் நாள் என— நெருங்கிச்சூழுகின்ற நக்ஷத்திரங்கள்போலவும், பிறழும் மீன்கள்—பெயருகின்ற மீன்களானவை,நாரமெங்கும் நடவின—நீரின் எவ்விடங்களினுஞ் சஞ்சரித்தன; எ—று.

அது பகுதிப்பொருள்விகுதி. தெய்வக்கோளென்றது சூரியன் முதலாகியஏழுகிரகங்களையும். ஒன்பதெனக் கோடல்ஈண்டுப்பொருந்தாது; இராகுகேதுக்களுருவுடையனவன்றாதலின்.

சுகதுக்கங்களை முன்னரே காண்பித்து அவற்றை ஏற்றகாலங்களில் ஊட்டுதலாலும் தம்மைவழிபட்டோர்க்குத் துன்பத்தைநீக்கிச் சுகத்தைக் கொடுத்தலாலும் தெய்வக்கோளென விசேடித்தார். (கஅ)

மாண்டகு பொய்கை தோறும் வயறொறு மற்று மெல்லாம்
வேண்டிய வளவைத் தன்றி மிகுபுனல் விலக்கு கின்ற
வாண்டகை மள்ளர் தப்பா லமைந்திடுங் காலை யெஞ்சி
யீண்டிய வெறுக்கை வீசு மிடைப்படு வள்ள லொத்தார்.

இ—ள்: மாண் தகு பொய்கைதோறும் வயல்தொறும் மற்றும் எல்லாம்—மாட்சிமை தக்க தடாகங்களெங்கும் வயல்களெங்கும் மற்றையஇடங்களெங்கும்,வேண்டிய அளவைத்து அன்றி மிகு புனல் விலக்குகின்ற ஆண்டகை மள்ளர்—(செய்கைக்கு) வேண்டுமளவினதாகிய நீரைப்(பாய்ச்சுவதே)அன்றி மிஞ்சியநீரைப்(பாயவொட்டாது) போக்குகின்றஆண்டகைமையினையுடையஉழவர்கள், தம்பால் அமைந்திடுங்காலை—தம்மிடத்து (வேண்டிய அளவு) அமைந்தபோது, எஞ்சி ஈண்டிய வெறுக்கை வீசும் இடைப்படுவள்ளல் ஒத்தார்—மிஞ்சிச்செறிந்தசெல்வத்தைப் (பிறர்க்குக்)கொடுக்கின்ற இடைவள்ளலை நிகர்த்தார்; எ—று.

தோறும் தொறும் என்பன இடப்பன்மைப்பொருளில்வந்தன. அளவைத்து குறிப்புவினையாலணையும்பெயர். ஆண்டகைமையாவது வீரம் உற்சாகம் வலிமை முதலியவற்றையுடைமை.

இடைவள்ளலாவார்:—அக்குரன் சந்திமான் அந்திமான் சிசுபாலன் வக்கிரன் கன்னன் சந்தன் என்னுமெழுவருமாம்.

உழவருள் ஒவ்வோர் குழுவினரும் செய்கைப்படுத்தற்குவேண்டிய நீர் தம்வயற்குப் பாய்ந்தவுடன் எஞ்சியநீரைப் பிறர்வயற்செய்கைக்குபயோகமாகும்படி புறம்பே விடுகின்றனர். ஆதலின் வேண்டியஅளவுசேரும்வரையும்பேணி வைத்துக்கொண்டு மேற்பட்டெஞ்சியவழிப் பிறருக்குக்கொடுக்கின்ற இடைவள்ளலை நிகர்த்தனர் என்பது கருத்து.

இதனால் வயல்கட்குவேண்டிய நீர்வளம் அமைந்தமை கூறப்பட்டது. (௩௬)

ஆற்றுப்படலம் முற்றிற்று.

ஆகவிருத்தம் ௮௬.

# திருநாட்டுப்படலம்.

திரு என்னும்பலபொருளொருசொல் ஈண்டு,ஆரியத்தில்வழங்கும் ஸ்ரீஎன்பதுபோல மகிமையுடையபொருள்கட்கியைத்துரைக்கப்படுமோரடைமொழி. நாட்டுப்படலம் என்பது நாட்டின்சிறப்பைக்கூறும்படலமென இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கதொகை. நாடென்ற நீண்டுத்தொண்டைமண்டலத்தை.

அவ்வியல் பெற்றிடு மாற்றன் மள்ளர்கண்
மைவரு கடலுடை மங்கை தன்னிடை
மெய்வளங் கொள்வதை வேண்டி யந்நிலச்
செவ்விக ணாடியே யினைய செய்குவார்.

இ—ள்:அவ் இயல் பெற்றிடும் ஆற்றல் மள்ளர்கள்—அந்த இயல்பினைப்பெற்ற வலிமையினையுடைய உழவர்கள், மை வரு கடல் உடை மங்கைதன்னிடை—கருநிறம்பொருந்திய சமுத்திரத்தை (ஆடையாக) உடைய பூமிதேவியினிடத்தே, மெய் வளம் கொள்வதை வேண்டி—மெய்ம்மையாகிய வளத்தைப்பெற்றுக்கொள்ள விரும்பி, அ நில செவ்விகள் நாடி இனைய செய்குவார்—அந்த நிலத்தின்பருவங்களை ஆராய்ந்து இத்தொழில்களைப்புரிவாராயினர்; எ—று.

ஏ அசை. அவ்,வகரவீற்றுச் சுட்டுப்பெயர். உடையவென்பதிலீற்றுயிர்மெய் தொக்கது;வஸ்திரமெனப்பொருள்கொண்டு 'கடலுடை' என்பதற்குக் கடலாகியஉடையையுடைய எனவுரைப்பினுமாம். தன் சாரியை. இடை ஏழனுருபு. இனையவென்றது மேற்கூறப்படும் உழவுமுதலிய தொழில்களை.

முற்படலத்தில் வருணித்தவாறு நீர்வளம்பெற்றுடையரென்பார் 'அவ்வியல் பெற்றிடும்......மள்ளர்கள்' எனவும், அவ்வாறு நீர்வளங்கிடைத்தமையாற் பெருமகிழ்ச்சிபெற்றுத் தேங்கினரென்பார் 'ஆற்றன்மள்ளர்கள்' எனவும், நீர்வளத்திற்கேதுவாகிய மழைக்குமுதல் கடலேயாதலின் அக்கடலாற்சூழப்பட்டமை எவ்வகை வளங்களையும் பெறுதற்குக்காரணமும், துகிலுடுத்தாற்போலணியாவதுமென்பார் 'கடலுடைமங்கை'எனவும், அத்தகைய சிறப்புக்களையுடைமையாற்றவறாதுகிடைக்குமென்றுதுணியப்பட்டதும்"மேழிச்செல்வங்கோழைபடாது" என ஆன்றோராற் புகழ்ந்துரைக்கப்பட்டதுமென்பார் 'மெய்வளம்' எனவும் விசேடித்தார்.

காமவின்பநுகர்ச்சிக்கு மங்கையர்போலத் தானியவளத்தைப்பெறுதற்குப் பூமிவேண்டப்படுதலின், அப்பூமியை 'மங்கை' எனவும், அம்மங்கையரிடத்தின்பநுகரவேண்டுவோர் மதனனூலிற்கூறியவாறு சாதிவிகற்பங்களைத்தெரிந்து, "அரியபூம்புனலாடியநாண்முதன், மருவுபன்னிருநாளுமணந்திடல்" எனக் காசிகண்டங்கூறியவாறே, பூப்பெய்திய நான்காந்தினத்தின்மேற் பன்னிருநாட்களில், "உச்சியம்போழ்தோடிடையாமமீரந்தி, மிக்கவிருதேவர்நாளோடுவாத்திதிநாள், அட்டமியுமேனைப்பிறந்தநாளிவ்வனைத்து, மொட்டாருடனுறவின்கண்" என்பதுமுதலாக விலக்கிய காலங்களையொழித்து விதித்தகாலங்களிற் புணர்வதுபோல, உழவரும், நிலவிகற்பங்களையும் நீரூறும் பருவமுதலியவற்றையும் பயிரிடுங் காலங்களையுநோக்கித் தொழில்செய்தனரென்பார் 'அந்நிலச்செவ்விகளுடையேயினையசெய்குவார்' எனவுங்கூறினார். இதனை "அகனிலவேறுபாட்டினியல்செவ்வியறிந்துமள்ளர், தகவினைமுயற்சிசெய்யக்காமநூல்சாற்றுநான்கு, வகைநலார்பண்புசெவ்வியறிந்துசேர்மைந்தர்க்கின்ப, மிகவிளைபோகம்போன்றுவிளைந்தனபைங்கூழெல்லாம்" எனப் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்திலருளிச்செய்தலானுமறிக. (௧)

சேட்டிளந் திமிலுடைச் செங்க ணேற்றொடுங்
கோட்டுடைப் பகட்டினம் விரவிக் கோன்முறை
காட்டினர் நிரைபட வுழுப காசினி
பூட்டுறு பொலன்மணி யாரம் போலவே.

இ—ள்: சேடு இளம் திமில் செம் கண் உடை ஏற்றொடும்-பெரிய இளமையாகிய முரிப்பையும் சிவந்த கண்ணையுமுடைய எருதுகளுடனே, கோடு உடை பகட்டினம் விரவி—கொம்புகளையுடைய எருமைக்கடாவினங்களையும் கலந்து (பூட்டி), கோல் முறை காட்டினர்—தாற்றுக்கோலை முறைப்படி காட்டி, காசினி பூட்டுறு பொலன் மணி ஆரம் போல—பூமிதேவி யணிந்த அழகிய(பலவகை)ரத்தினமாலைபோல, நிரைபட உழுப—நிரைபொருந்துமாறு உழுவார்கள் (மள்ளர்கள்); எ—று.

ஏ அசை. கோல் எருதுமுதலியவற்றையேவுந்தண்டு. காட்டினர் வினைமுற்றெச்சம். "ஏறுயர்கபிலைமெய்யெழுந்தநோயது, கூறிடின்முரிந்தவால்கூர்கொம்புள்ளது, மாறிடின்மற்றவைவிளைவின்மாட்சியாம்" என்று சரசோதிமாலையிற்கூறியகுற்றநீங்கிநல்லிலக்கணமுடையனவென்பார் 'சேட்டிளந்திமிலுடைச்செங்கணேறு' எனவும், மேனியிலோச்சாது செல்லவும் வளையவும்வேண்டிய திசைகளைக்குறிப்பிற் காட்டியேவினரென்பார் 'கோன்முறைகாட்டினர்' எனவும், ஒன்றுடனொன்றுநெருங்கநின்றுபலவேர்களாலுழுதனரென்பார் 'காசினிபூட்டுறுபொலன்மணியாரம்போலநிரைபடவுழுப' எனவும் கூறினார்.

பலநிறவேறுகளைப் பூட்டியுழுதல் இரத்தினமாலையைப்போலுமென்பதை 'பலநிறமணிகோத்தென்னப்பன்னிறவேறுபூட்டி' என்னுந்திருவிளையாடற்புராணச் செய்யுளானுணர்க. மணியாரத்தைப் படைச்சால்நிரைக்குவமையாகக்கூறினுமாம். (௨)

காற்றினு மனத்தினுங் கடுமை சான்றன
கோற்றொழில் வினைஞர்தங் குறிப்பிற் செல்லுவ
வேற்றினஞ் சேறலு மிரிந்த சேவினம்
பாற்றின மருளவிண் படர்ந்து பாயுமால்.

இ—ள்: காற்றினும் மனத்தினும் கடுமைசான்றன—வாயுவேகத்தினின்றும் மனோவேகத்தினின்றும் (மிக்க)கடுமையமைந்தனவும், கோல் தொழில் வினைஞர்தம் கு

றிப்பில் செல்லுவ—கோலைக்காட்டுந் தொழிலினையுடைய உழவர்களது குறிப்பின்வழியே நடப்பனவுமாகிய, ஏற்றினம் சேறலும்—பகட்டினங்கள் செல்லுதலும், இரிந்தசேலினம்— (அவற்றின்வேகநடையைக்கண்டு)வெருண்ட சேல்மீன்கள், பாற்றினம் மருள விண்படர்ந்து பாயும்-பருந்துக்கூட்டங்கள் அஞ்ச ஆகாயத்திற்கிளம்பிப்பாயும்;எ—று.

ஆல் அசை. காற்று மனம் ஆகுபெயர்கள். உம்மைகள் சிறப்போடெண்ணுமாம். சான்றன செல்லுவ வினையாலணையும்பெயர்கள். தம் சாரியை. ஏற்றென்றது இடபங்களையும் எருமைக்கடாக்களையும். சேறலும் உம்மீற்றுவினையெச்சம். சேலினம் பாயும் என வியையும். (௫)

சால்வளை தரவுழும் வயலிற் றங்கிய
வால்வளை யினம்வெரீஇ யலவன் மாப்பெடைச்
சூல்வளை புகுவதங் கறிஞர் சூழ்விலைக்
கோல்வளை மகளிர்பாற் கூட்ட மொத்ததே.

இ—ள்: சால் வளைதர உழும் வயலில் தங்கிய வால் வளையினம் வெரீஇ—படைச்சால்கள் வளைந்துவரும்படி உழுகின்ற வயலினுட்டங்கியிருந்த வெள்ளியசங்குக்கூட்டங்கள் (உழவுத்தொழினிகழ்ச்சியைக்கண்டு) அஞ்சி, மா பெடை அலவன் சூல் வளை புகுவது—பெரிய பெடைநண்டுகளினது தோண்டப்பட்ட அளையினுட்போய்மறையுந்தன்மை (எதுபோன்றதெனில்) அறிஞர் சூழ் கோல் வளை விலைமகளிர்பால் கூட்டம் ஒத்தது—நல்லறிவினையுடைய பெரியோர் சூழுகின்ற கோலிய வளையலினையுடைய வரைவின் மகளீரிடத்தே (சென்று) கூடுதலைநிகர்த்தது; எ—று.

அங்கு ஏ அசைகள். வெருவியென்பது வெரீஇ எனமருவிற்று. சூல் வினைத்தொகை; சூலல் தோண்டுதல். கோலம் என்பது கடைக்குறையாயிற்றெனக்கொண்டு கோல்வளையென்பதற்கு அழகிய வளையலெனப்பொருள்கூறினுமாம். சூழ்தல்: ஆடவரை வசீகரித்தற்கேற்ற உபாயங்களைப்புரிதல். விலைமகளிர்—விலைக்காட்படும் மகளிர். கூட்டம் தொழிற்பெயர். சூழ் விலை கோல்வளை என்பன ஒன்றையொன்றுவிசேடியாது மகளிரைவிசேடித்தன.

படைச்சால் வளைந்துவர உழும்போது அவ்வலயங்களினுள்ளிடங்களிற் றங்கியசங்குகள் முற்றுமுழுதுமுடியுமுன்னரே தமக்குத்தீங்குநேர்தல் துணிபாதலின் முன்னரேயொதுங்கிக்கொள்ளவேண்டுமென்றெண்ணியிரிந்து, பெடைநண்டுவாழும் புற்றகப்பட, அதனுட்புகுந்தொளிப்பன; அத்தன்மை, கபடம்புரிந்துமயக்கும் வரைவின் மகளீர்மாட்டு அறிஞர்போய்க் கூடுதலையொத்ததென்பதுகருத்து.

சால்வலையத்தினுட்பட்டமைபற்றிப் பிறிதுபுகலிடந்தேடற்கியலாதனவென்பார் 'சால்வளைதரவுழும்வயலிற்றங்கிய......வளையினம்' எனவும், சாதியானுயர்ந்தனவென்பார் 'வால் வளையினம்' எனவும், கொழுமுனைபுகுந்தாழ்வினும் மிக்க ஆழமுடைத்தென்பார் 'சூல்வளை' எனவும் விசேடித்தார்.

வாயிலில்வந்துநின்று தம்மை மயக்கும் பரத்தையருடன் அறிஞர் ஏகாந்தத்திற்சென்றுகூடினாற்போல, வளைமுகத்தின் வந்து உழவினிகழ்ச்சியைநோக்கியஞ்சியுட்புகுந்தொளிக்குஞெண்டினுடன் அவ்வளையின்கீழ்ப்பாகத்திற்போயிருந்தன சங்குகள். இதனால் அறிஞர்க்குஞ் சங்குக்குமுள்ள பொதுத்தன்மையையுய்த்துணர்க. (௬)

உலத்தொடு முறழ்புயத் துழவர் பொன்விளை
புலத்தினும் வியத்தகு வயலிற் போக்கிய

வலத்திடைப் பிறழ்மணி வேள்வி யாற்றிடு
நிலத்திடைப் பிறந்தமின் னிகர்க்கு நீர்மைய.

இ—ள்: உலத்தொடும் உறழ் புயத்து உழவர்—திரண்டகல்லைநிகர்த்தபுயங்களையுடைய மள்ளர்கள்,பொன்விளை புலத்தினும் வியத்தகு வயலில் போக்கிய அலத்திடை பிறழ் மணி—பொன்விளைகின்ற நிலத்தினின்றும் மேன்மைதக்க வயலிற்செலுத்தியகலப்பைச்சாலின்கண்ணே பெயருகின்ற இரத்தினங்கள்,வேள்வியாற்றிடும்நிலத்திடை பிறந்த மின் நிகர்க்கும் நீர்மைய—(சனகராசன்)புத்திரகாமேட்டியாகஞ்செய்தபூமியின்கண்ணே தோற்றிய சீதாதேவியையொக்குந்தன்மையையுடையன;எ—று.

உலத்தொடுமுறழ்புயம்- (உன்னினும்யானேசிறப்புடையனெனத்)திரண்டகல்லோடிகல்புரியும்புயம். உம்மை உயர்வுசிறப்பு. மின் உவமவாகுபெயர். மணி...நிகர்க்கு நீர்மைய எனவியையும்.

உழவுத்தொழிற்சாமர்த்தியமுடையரென்பார் 'உலத்தொடுமுறழ்புயத்துழவர்' எனவும், அற்ப முயற்சியினலதிகவளத்தைத்தருவதும் பெருவிலையுடைய இரத்தினஞ்செறிந்ததுமாதலின் 'பொன்விளைபுலத்தினும்வியத்தகுவயல்'எனவும், உற்றுநோக்காதவழியுங்கட்புலத்துக்கு விடயமாகும் பெருமணியென்பார் 'மின்னிகர்க்குநீர்மைய'எனவுங்கூறினர்.

சனகராசன் புத்திரரைப்பெறும்பொருட்டு யாகஞ்செய்யவெண்ணி, அதற்கங்கமாகப் பூபரீக்ஷைசெய்தலும் அவ்வுழவுசாலின்கண்ணே சீதாதேவிதோற்றினள்.இச்சரித்திரத்தை இராமாயணமுதலியவற்றுற் றெள்ளிதினுணர்க.

வயலுழும்போது பெருவிலையுடைய ரத்தினங்கள் பெயர்கின்றனவெனவே அந்நகரஞ் செல்வத்தான்மிக்கதென்பது தாற்பரியமாயிற்று. (௫)

நாறுசெய் குநர்சிலர் நார நீர்வய
லூறுசெய் குநர்சில ரொத்த பான்மையிற்
சேறுசெய் குநர்சிலர் வித்திச் செல்லுநீர்க்
காறுசெய் குநர்சில ரளப்பின் மள்ளரே.

இ—ள்: நாறுசெய்குநர் சிலர்—நாற்றங்கால் விதைப்பவர்கள் சிலர்; நார நீர்வயல் ஊறுசெய்குநர் சிலர்—நீர்பொருந்திய வயலை உழுகின்றவர்கள் சிலர்; ஒத்தபான்மையில் சேறுசெய்குநர் சிலர்—ஒத்ததன்மையாகச் சேறுபடுத்துகின்றவர்கள்சிலர்;வித்தி—(அச்சேற்றில்) விதைத்துவிட்டு, செல்லும் நீர்க்கு ஆறுசெய்குநர் சிலர்— பாய்கின்ற நீருக்கு (புறம்பேயோடும்) வழியை யமைக்கின்றவர்கள் சிலர்; அளப்பின் மள்ளர்—(அவர்கள் யாரெனின்) அளவிடப்படாத உழவர்கள்; எ—று.

ஏ அசை.நகரவிடைநிலை நிகழ்காலத்தில்வந்தது.நாரநீர் ஒருபொருட்கிளவி. ஒத்தபான்மையிற் சேறுசெய்தலாவது: உழுதபின் நீரை நிறையப்பாய்ச்சி எருமைமுதலியவற்றுல் உழக்கிச்சமப்படுத்துதல்.

உழவர்களுள்ஒருசாரார் வயல்களிற்பேர்த்துநடுதற்காக நாற்றங்கால்களில் விதைப்பவர்களும், மற்றொருசாரார் வயலை உழுபவர்களும், பிறிதொருசாரார் உழுதபின் நீர்பாய்ச்சி உழக்கிச்சேருக்குகின்றவர்களும்,வேறுமொருசாரார் அச்சேற்றில்நென்முளைகளைவிதைத்துப்பின் அவ்வயலில்மிஞ்சிப்பாய்ந்துவந்தநீரைப் புறம்பே விடுதற்கு வழியமைப்பவருமாயினரென்பது கருத்து.

ஊறுசெய்தல் உழுதல். நீரினுல் வயலை ஊறச்செய்தலெனச் சிலர் பொருளுரைப்பர்.முன்னரே ஆற்றுப்படலத்தில், "மாறடுமௌ்ளருய்ப்பமருதத்தினிறை

ந்துவிஞ்சி, யேறியநாரமீட்டுமிருங்கடனோக்கிச்சென்ற" எனவும், மாண்டகுபொய்கைதோறும்வயலெறுமற்றுமெல்லாம், வேண்டியவளவைத்தன்றிமிகுபுனல்விலக்குகின்றவாண்டகைமள்ளர்" எனவும் வயனிலங்களூறுதற்பொருட்டு நீர்பாய்ச்சுதல்கூறப்பட்டமையின் அஃதீண்டுக் கூறப்படவேண்டாமையானும், உழுதபின்சேறாக்குதற்குவேண்டியநீரைப் பாய்ச்சுதல் வேண்டப்படுமேயெனின் அதனை ஊறுசெய்குநரெனக்கூறினாரெனல்பொருந்தாமையானும், "உழுநர்களொருபாலுழுதசேறழுந்தவொண்புனல்பாய்த்துநரொருபா, லழுகுசேறறிந்துமறுவலும்விளாவியைதுறக்குழப்பிநேராக்கி, விழுமியமுளைகடெய்வதம்போற்றிமேதகவித்துநரொருபாற், கெழுமுமுளைசேற்றிற்பதிந்தபின்றெளிநீர்கீழ்மடைகவிழ்க்குநரொருபால்" எனத்தணிகைப்புராணமும், "ஊறுசெய்படைவாய்தேயவுழுநருநீர்கால்யாத்துச், சேறுசெய்குநருந்தெய்வந்தொழுதுதீஞ்செந்நெல்வீசி, நாறுசெய்குநரும்" எனத்திருவிளையாடற்புராணமுங் கூறுதல்போல இவ்வாசிரியரும் உழவுத்தொழிலையுஞ்சேர்த்துக் கூறினாராதலானும் அவ்வுரைபொருந்தாதென மறுக்க. (௬)

குச்செனப் பரிமிசைக் குலாய கொய்புளை
வைச்செனத் தளிர்த்தெழு நாற்றின் மாமுடி
யச்செனப் பதித்தனர் கடைஞ ராவியா
நச்சின மகளிரை நினைந் துநைந்துளார்.

இ—ள்: கடைஞர்—கீழ்குலத்தவராகியவுழவர்கள், நச்சின மகளிரை ஆவியா நினைந்து நைந்துளார்—விரும்பியபெண்களைத் (தமது) உயிர்போல் (அரும்பொருள்) ஆக நினைத்து மனம்வருந்தியவராய், குச்செ ன—பாவாற்றிபோலவும், பரி மிசை குலாய கொய் உளை வைச்சென—குதிரையின்மேற் பொருந்திய கொய்யப்பட்ட பிடர்மயிரைப்பதித்ததுபோலவும், தளிர்த்து எழும் நாற்றின் மாமுடி—தளிர்த்து வளருகின்ற நாற்றுக்களின்பெரிய முடிகளை, அச்செண பதித்தனர்—அச்சிற்பதித்ததுபோல (அணிபெறப் பூமியில்) ஊன்றினர்; எ—று.

பாவாற்றி ஆடைநெய்யுமாந்தர் நூற்பாவை ஒழுங்குசெய்தற்பொருட்டு அப்பாவின்மேல் வைத்தீர்த்துச்செல்லுமோர்கருவி. கொய்தல்-கத்தரித்தல். குலாவிய என்பது குலாயஎனவும் ஆக என்பது ஆ எனவுந்தொக்கன. வைத்தென என்பது எதுகைநோக்கிவைச்சென என்றாயிற்று. நைந்துளார் குறிப்புமுற்றுவினையெச்சம். அச்சு:-செய்யப்படும்பொருள்களை ஒன்றோடொன்று ஒப்புமையுடையனவாக உண்டாக்கும் யந்திரம். பாவாற்றியையும் குதிரையின் பிடர்மயிர் பதித்ததையும்போல இளமென்றளிர்கள்கற்றையாய்ச்செறிந்தோங்கவளர்ந்த நாற்றுக்களை நனிஒழுங்குபெறநட்டனர் என்பது கருத்து.

உழவர்கள் உழத்தியர்களுடன் ஒருங்குவிரவிநின்று நட்டனரென்பதையும் அங்ஙனம்நடும்பொழுது உழவரது கண்ணுங்கருத்தும் அழகுடைய உழத்தியர்மாட்டுப் பதிந்தவழியும் கைத்தொழில் சிறிதேனுங் குறைவுபாடடைந்திலதென்பதையும் விளக்குவார் "ஆவியாநச்சினமகளிரைநினைந்துநைந்துளார்...பதித்தனர்" என்றார். (௭)

வாக்குறு தேறலை வள்ள மீமிசைத்
தேக்கின ருழவர்தந் தெரிவை மாதரார்
நோக்குறு மாடியி னுனித்து நோக்கினர்
மேக்குறு காதலின் மிசைதன் மேயினார்.

இ—ள்: உழவர் தம் தெரிவை மாதரார்—உழவர்களது மாதர்களாகிய உழத்தியர்கள், வாக்குறு தேறலை வள்ளமீமிசை தேக்கினர்—(கள்விற்போரால்) வாக்கப்ப

ட்ட கள்ளைக்கிண்ணத்தில் (ஏந்தி) நிறைத்து, நோக்குறும் ஆடியில் நுனித்து நோக்கினர்—(நிழல்) பார்த்தற்கேற்ற கண்ணாடிபோல (அந்தக்கள்ளினுட்டங்கணிழலை) உற்றுப்பார்த்து, மேக்குறு காதலின் மிசைதன்மேயினர்— மேற்கிளர்கின்ற ஆசையினாற் பருகத்தொடங்கினர்கள்; எ—று.

மீமிசை,தெரிவைமாதரார் ஒருபொருட்பன்மொழி. மாதரார் என்பதில் ஆர் என்னும் விகுதிமேல்விகுதி இழிவுபற்றிவந்தது. தேக்கினர் நோக்கினர் என்பன வினைமுற்றெச்சம். தம் சாரியை. ஆடியில் என்பதில் இல் .ஒப்புப்பொருளில்வந்தது.

கண்ணாடியிலே தங்கள்பிரதிவிம்பத்தை எவ்வாறு உற்றுநோக்குவாரோ அவ்வாறே கிண்ணத்தினிறைத்தகள்ளில் தம்முகநிழலை உற்றுநோக்கினரென்பார், நோக்குறுமாடியினுனித்துநோக்கினர்" என்றார். (அ)

வாடுகின் றார்சிலர் மயங்கி நெஞ்சொடு
மூடுகின் றார்சில ருயிர்க்கின் றார்சிலர்
பாடுகின் றார்சிலர் பணிகின் றார்சில
ராடுகின் றார்சிலர் நறவ மார்ந்துளார்.

இ—ள்: நறவம் ஆர்ந்துளார் சிலர் மயங்கி வாடுகின்றார்—கள்ளுண்ட உழத்தியர்களுட்சிலர் அறிவழிந்து மெய்சோருகின்றார்கள்; சிலர் நெஞ்சொடும் ஊடுகின்றார்—சிலர் தம்மனத்தினுடன் வெறுக்கின்றார்கள்; சிலர் உயிர்க்கின்றார்—சிலர் பெருமூச்சுவிடுகின்றார்கள்; சிலர் பாடுகின்றார்—சிலர்(பாடல்களைப்)பாடுகின்றார்கள்; சிலர் பணிகின்றார்—சிலர் வணங்குகின்றார்கள்; சிலர் ஆடுகின்றார்—சிலர் கூத்தாடுகின்றார்கள்; எ—று.

நறவமார்ந்துளார் என்பதையும் மயங்கி என்பதையும் ஊடுகின்றார் முதலியவற்றோடுஞ் சேர்த்துப்பொருளுரைக்க. நெஞ்சொடூடலாவது: வெறுக்கும்போதுண்டாகுமெய்ப்பாட்டுடன் பற்றில்லாத வசனங்களைத் தம்மொடுதாம்பயிறல். ஆர்ந்துளார் வினையாலணையும்பெயர்; உளார் தொகுத்தல்விகாரம்.

வாடுதன்முதலியன இயற்கையிலுள்ள குணங்களன்று. கட்குடியானேர்ந்தனவென்பார் 'நறவமார்ந்துளார்' என்றார். (க)

அந்தரப் புள்ளொடு மளிக டம்மொடும்
வந்தடுத் தவரொடு மயக்கு தேறலை
யிந்திரத் தெய்வத மிறைஞ்சி வாமமாந்
தந்திரக் கிளைஞர்போற் றாமு மேயினர்.

இ—ள்: வாமம் ஆம் தந்திர கிளைஞர் போல்—வாமசமயத்தார்போல, தாமும்—தாங்களும், இந்திரத்தெய்வதம் இறைஞ்சி— தம் குலக்கடவுளாகிய இந்திரனை வணங்கி, அந்தரப் புள்ளொடும் அளிகள் தம்மொடும்—அந்தரத்திற்பறக்கும் பக்ஷிகளோடும் வண்டுகளோடும், வந்து அடுத்தவரொடும்—தம் பக்கத்தில் வந்துநெருங்கினவரோடும் (கூட), மயக்கு தேறலை மேயினர்—அறிவைமயக்குகின்ற கள்ளைப் பருகினர்கள் உழத்தியர்கள்; எ—று.

தம் சாரியை. இந்திரத்தெய்வதம்-இருபெயரொட்டு. தைவதம் என்னும் வடமொழி தெய்வதமெனநின்றது. வாமமாந்தந்திரக்கிளைஞர்- வாமமாகிய நூலுக்குரியகூட்டத்தார். ஆகுமென்பது உயிர்மெய்கெட்டு ஆமெனநின்றது. தாமுமென்றதுழத்தியரை; இதிலும்மை இறந்ததுதழீஇயவெச்சம்.

வாமசமயிகள் சத்திபூசைசெய்யும்போது மதுமுதலியவற்றை நிவேதித்துப்பலர் ஒருங்குகூடி எச்சிற்பேதமின்றி அவற்றைப் பருகிக்களித்தல்போல, உழத்தியர்கள் தம்நிலத்தேவனாகிய இந்திரனைவழிபட்டுப் பறவைகளும் வண்டுகளும் வாய்வைத்துப்பருகிய எச்சிலாகியகள்ளை வந்தோருடன் எச்சிற்பேதமின்றிப் பருகினார்களென்பது கருத்து.

கையெடுத்தோச்சும்போது உயரப்பறந்தும் சிறிதுநேரத்தின்பின் அணுகிவந்துபருகியுந்திரிந்தனவாதலின் 'அந்தரப்புள்' என்றார். "மாயோன்மேயகாடுறையுலகமுஞ், சேயோன்மேயமைவரையுலகமும், வேந்தன்மேயதீம்புனலுலகமும், வருணன்மேயபெருமணலுலகமும், முல்லைகுறிஞ்சிமருதநெய்தலெனச், சொல்லியமுறையாற்சொல்லவும்படுமே" என்றவிதிப்படி இந்திரன் மருதநிலக்கடவுளாகலின் 'இந்திரத்தெய்வதம்' என்றார். (௧௦)

விள்ளுறு நாணினர் விரகத் தீயின
ருள்ளுறு முயிர்ப்பின ருலையு நெஞ்சினர்
தள்ளுறு தம்முணர் வின்றிச் சாம்பினார்
கள்ளினு முளதுகொல் கருத்த ழிப்பதே.

இ—ள்: விள்ளுறு நாணினர்—நீங்கியவெட்கத்தையுடையவர்களாயும், விரக தீயினர்—காமாக்கினியையுடையவர்களாயும், உள் உறும் உயிர்ப்பினர்—உள்ளடங்கிய மூச்சையுடையவர்களாயும், உலையும் நெஞ்சினர்— நிலைகெட்ட மனத்தையுடையவர்களாயும், தள் உறு தம் உணர்வு இன்றி சாம்பினார்— தள்ளாடுகின்ற தங்கள் இயற்கையறிவு இல்லாமற் சோர்ந்தார்கள் (உழத்தியர்கள்; ஆதலால்), கருத்தழிப்பது கள்ளினும் உளதுகொல்- அறிவைக் கெடுக்கும்பொருள் கள்ளினின்றும்(மேலாக வேறொன்று)உண்டா? (இல்லையே); எ—று.

ஏ அசை. விள்ளுறுநாணினர்—நாண்விள்ளுற்றோர்=வெட்கநீங்கினோர். நாணினர் தீயினர் உயிர்ப்பினர் நெஞ்சினர் என்னுங் குறிப்புமுற்றெச்சங்கள் சாம்பினார் என்னும்வினைகொண்டன. தள்ளுறு என்னும்வினைத்தொகையைத் தம் என்பதனோடியைக்க. கள்ளினுமென்பதிலும்மைஇழிவுசிறப்பு. உள்ளதென்பதுளதெனத் தொக்கது. அழிப்பது வினையாலணையும்பெயர்.

"நாணென்னுநல்லாள்புறங்கொடுக்குங்கள்ளென்னும்- பேணப்பெருங்குற்றத்தார்க்கு" என்றபடி நாணத்தைவிடுத்துப் புணர்ச்சிவிருப்பமேலிட்டு மூச்சொடுங்கி மனமுலைந்து தள்ளாடி அறிவழிந்து சோர்ந்தனரென்க. இன்னோரன்ன துர்க்குணங்கட்கெல்லாங்காரணங் கள்ளேயாதலின் அதனையுட்கொள்ளாதீரென்பார் 'கள்ளினுமுளதுகொல்கருத்தழிப்பதே' என அதனாலுறுந்தீமையைவற்புறுத்திக்கூறினார். தீபோற்சுடுதலின் விரகத்தைத் தீயென்றார்; இதனை "ஊருளெழுந்தவுருகெழுசெந்தீக்கு,நீருட் குளித்துமுயலாகும்-நீருட், குளிப்பினுங்காமஞ்சுடுமேகுன்றேறி, யொளிப்பினுங்காமஞ்சுடும்" என்பதனாலுமுணர்க. (௧௧)

பளிக்கறை யன்னதோர் படுகர்ப் பாங்கினுந்
தளிர்ப்புறு செறுவினுந் தவறுற் றேகுவார்
தெளிப்பவ ரின்மையி னெறியிற் சென்றிலர்
களிப்பவர் தமக்குமோர் கதியுண் டாகுமோ.

இ—ள்: பளிக்கு அறை அன்னது ஓர் படுகர் பாங்கினும்-பளிங்கினாலாய பாறைபோன்ற தடாகங்களின் பக்கங்களினும், தளிர்ப்பு உறு செறுவினும் தவறுற்று ஏகு

வார்—(பயிர்கள்) செழிக்கப்பெற்ற வயல்களினும் வழிதவறிப்போவார்கள், தெளிப்பவர் இன்மையில் நெறியில் சென்றிலர்—மயக்கத்தைத் தெளிவிப்பாரில்லாமையால் நல்வழியினடந்திலார் (அந்தஉழத்தியர்கள்); களிப்பவர் தமக்கும் ஓர் கதி உண்டாகுமோ—கள்ளுண்டுகளிப்பார்க்கும் ஓர் நல்வழி உளதாகுமா? (ஆகாதே); எ—று.

தமக்குமென்பதிலும்மை இழிவுசிறப்பு. ஓ எதிர்மறை. அன்னதோர் என்பதில் ஓர் அசை. பளிங்கு அறை என்பது "மென்றொடர்மொழியுட்சிலவேற்றுமையிற், றம்மினவன்றொடராகாமன்னே" என்னும் நன்னூற்சூத்திரவிதியால் மெல்லொற்று வல்லொற்றானது. அழுக்கற்றுத்தெளிந்த நீர்நிலையென்பார் 'பளிக்கறையன்னதோர் படுகர்' எனவும், தவஞ்செய்து மெய்வருந்துவோர்க்கேயன்றிக் களியாட்டயர்வார்க்கு மறுமையிற் புண்ணியகதிகிடையாதென்னும் பொருளுமுட்பட 'களிப்பவர்தமக்குமோர்கதியுண்டாகுமோ' எனவுங்கூறினர். (௧௨)

இன்னன பற்பல வியற்றி யீண்டினர்
ருன்னருந் தொல்லையி னுணர்வு வந்துழிக்
கன்னெடுந் திரள்புயக் கணவ ரேவலிற்
றுன்னின ரவரொடுந் துவன்றிச் சூழ்ந்துளார்.

இ—ள்: இன்னன பற்பல இயற்றி ஈண்டினர்—இன்னோரன்ன பலபல விபரீதங்களைச் செய்து (நேர்ந்தஇடங்கடோறும்) செறிந்த உழத்தியர்கள், உன்னரும் தொல்லையில் உணர்வு வந்துழி—(இத்துணைச்சிறப்பினதென எவராலும்) நினைத்தற்கரிய பழைய நல்லறிவு வந்துசேர்ந்தபொழுது, கல் நெடும் திரள்புய கணவர் ஏவலில் துன்னினர்—கற்போன்றநெடிய திரண்டபுயங்களையுடைய (தங்கள்) நாயகரது ஏவல் செய்தலில் அமைந்து, அவரொடும் துவன்றி சூழ்ந்துளார்—அந்த நாயகரோடும் (பிரியாது) நெருங்கிச்சூழ்ந்தார்கள்; எ—று.

இன்னனவென்றது கண்மயக்கரனேருஞ்வேறுபாடுகளுள் முன்னெடுத்துக் கூறப்படாதனவற்றை. பற்பல மிகப்பல. ஈண்டினர் வினையாலணையும் பெயர். இன்ன அன்ன என்பது இன்னனஎனவும் உன்ன அரும் என்பது உன்னரும் எனவும் வந்த உழி என்பது வந்துழிஎனவும் தொக்கன. கல் திரண்டகல். இது திரட்சியினாலும் வன்மையினாலும் புயத்திற்குபமானமாயிற்று. ஆடவர்புயம் முழந்தாளளவுநீளுதல் சாமுத்திரிகாலக்ஷணத்தில் உத்தமமாகக்கூறப்பட்டது. துன்னினர் வினைமுற்றெச்சம்.

கட்குடியான் மயங்காக்கால் எவராலும்வியக்கற்பாலதாந் தீவிரமதியென்பார் 'உன்னருந்தொல்லையினுணர்வு' எனவும், பெண்கள்மாட்டு ஆடவரையவாவச்செய்யும் முலையுங்கண்ணும்போல ஆடவர்மாட்டுப் பெண்களை அவாவச்செய்யும் பேரழகுடையனவென்பார் 'கன்னெடுந்திரள்புயக்கணவர்' எனவும், 'மேவுகாதலருள்ளம்விழைந்தன, வேவுமுன்னர்க்குறிப்பினியற்றுவார்' எனக்காசிகண்டத்திற் கூறப்பட்ட கற்பிலக்கணநெறிக்கேற்பவொழுகினரென்பார் 'கணவரேவலிற்றுன்னினர்' எனவும் விசேடித்தார். (௧௩)

மள்ளர்தம் வினைபுரி மழலைத் தீஞ்சொலார்
கள்ளுறு புதுமணங் கமழும் வாவித
முள்ளுறு நறுவிரை யுயிர்த்து வீசிய
வெள்ளிய குமுதமென் மலரின் மேவுமே.

இ—ள்: மள்ளர்தம் வினைபுரி தீம் மழலைச்சொலார்- (முற்செய்யுளிற்கூறியவாறு தங்கொழுநராகிய) உழவர்களது ஏவற்றொழிலைச்செய்கின்ற இனிய குதலைமொ

ழியையுடைய உழத்தியர்களது, கள் உறு புது மணம் கமழும் வால் இதழ்—கள்ளின் கட்பொருந்திய புதியவாசனை மணக்கின்ற வெளுத்த அதரமானது, உள் உறு நறு விரை உயிர்த்து வீசிய வெள்ளிய மெல் குமுதமலரின் மேவும்— உள்ளே பொருந்திய நறுமணத்தை முகையவிழ்ந்து (வெளியே) பரப்பிய வெண்ணிறத்தையுடைய மெல்லிய ஆம்பன்மலரைப்போலப்பொருந்தும்; எ—று.

ஏ அசை. தம் சாரியை. சொல்லார் என்பது சொலாரெனத் தொக்கது. நீஞ்சொலாரது இதழ் குமுதமலரின்மேவுமென இயைக்க. இன் ஒப்புப்பொருளில்வந்தது. வெள்ளியகுமுதம் வெள்ளாம்பல்.

இயற்கைமணமும் நிறமும் கட்குடியால் விகாரமெய்தினவென்பார் 'கள்ளுறுபுதுமணங்கமழும்வாலிதழ்' என்றார். பயிரிடுங்காலமே யுண்டாட்டுக்குச் சிறந்தகாலமாதலின் அதனை எட்டாஞ்செய்யுண்முதலிதுகாறும் ஏழுசெய்யுட்களாலீண்டுக்கூறி வருணித்தனரென்க.

"மறையவர்ச்செகுத்தோன்கடிமதுநுகர்வோன்வயக்குசெம்பொற்களவாண்டோ, னிறையருட்குரவன்பன்னியைப்புணர்ந்தோனிகரிலிக்கொடியரையாரு, மறைவரான்மாபாதகரென" எனச் சூதசங்கிதையும், "கள்விலைபகர்வோர் கள்ளினைநுகர்ந்தோர்கள்ளருந்துதற்குடன்படுவோர், கள்ளருந்துநரைமகிழ்குநர்நரகிற்கற்பகாலங்கிடந்தழுந்தி, யெள்ளுறுந்தீயமலப்புழுவாகிமலத்தினைநுகர்ந்துபின்னிறந்து, விள்ளருங்கொடியரௌரவநரகின்மீட்டுமீட்டுழந்துநாள்கழிப்பார்"எனக்கூர்மபுராணமும், "நசையானறவுவாய்மடுத்தோர்நரகிலளப்பிலுளழுந்தி,வசையான்மீட்டுங்கள்ளுண்ணுமாந்தராகிலத்துதித்து,மிசையாதனவுமிசைவர்" எனக்காசிகண்டமுங் கூறிவிலக்குங்கட்குடியை, ஆசிரியர் வருணித்தது தகாதேயெனின், இழிகுல மாந்தர் குலவழக்காகச் செய்யுமுண்டாட்டைக் கூறுவது "பெருங்காப்பியநிலைபேசுங்காலை, ........தேம்பிழிமதுக்களிசிறுவரைப்பெறுதல், புலவியிற்புலத்தல்கலவியிற்களித்தலென், றின்னனபுணர்ந்தநன்னடைத்தாகி, .........கற்றோர்புனையும்பெற்றியதென்ப" எனத்தண்டியாசிரியர் கூறியவாறு பெருங்காப்பியவிலக்கணமாமாதலின் குறைபாடின்றென்க. (௧௪)

நட்டதோர் குழுவினை நடாத தோர்குழு
வொட்டலர் போலநின் றொறுத்த லன்னியே
யட்டன ராமென வடாத வான்களை
கட்டனர் வேற்றுமை யுணருங் காட்சியார்.

இ—ள்: நட்டது ஓர் குழுவினை நடாதது ஓர் குழு ஒட்டலர்போல நின்று ஒறுத்தல் உன்னி—நடப்பட்டுவளர்ந்த நெற்பயிர்க்கூட்டங்களை நடப்படாது (தானாய் முளைத்து)வளர்ந்த களைக்கூட்டங்கள் பகைவர்போல உடனின்று அடர்த்தலைநினைத்து, அட்டனராமென—அழித்தார்போல, அடாத வான் களை கட்டனர்—தகாதனவாகிய பெரியகளைகளைப்பிடுங்கினர், வேற்றுமையுணருங்காட்சியார்—(பேதந்தோன்றாதுவளர்ந்தநெற்பயிர்க்குங் களைக்குமுள்ள) பேதத்தை (ஆராய்ந்து உள்ளபடி) அறியுங் காட்சியினையுடைய உழத்தியர்கள்; எ—று.

ஓர் இரண்டும் ஏகாரமும் அசைகள்.களை என்பதிற் செயப்படுபொருளுணர்த்தும்ஐவிகுதிபுணர்ந்துகெட்டது. காட்சியார் குறிப்புவினைமுற்றுவினையும்பெயர்.பின் வேறோரிடத்தில் நடவேண்டுமென்றுவிரும்பி வேரறுதல் தழையொடிதன்முதலிய பங்கம்நேராமேபிடுங்கும் நெற்பயிர்நாற்றுப்போலன்றி நேர்ந்தவாறு பிடுங்கினரென்பார், ஒட்டலர்போலநின்றொறுத்தலுன்னி அட்டனராமென......கட்டனர்'என்றார்.

'நட்டதோர்குழுவினைநடாததோர்குழு வொட்டலர்போலநின்றொறுத்தலுன்னியே வேற்றுமையுணருங்காட்சியார் அட்டனராமென' என்பதற்கு, நண்புற்றிருக்குமோர் கூட்டத்தாரை நண்பில்லாத மற்றோர்கூட்டத்தார் பகைவர்போல உடனின்று வருத்துதலைச்சிந்தித்து அவ்விருவர்மாட்டுமுள்ள குறைகுணபேதங்களையுணர்ந்தோர் (நீதிநூன்முறைப்படி) தண்டித்தல்போல எனவும்பொருள் கொள்க. (கரு)

ஏயின செயலெலா மியற்றி வேறுவே
றாயிடை வேண்டுவ தமைய வாற்றியே
மாயிரும் புவிமிசை மகவைப் போற்றிடுந்
தாயென வளர்த்தனர் சாலி யீட்டமே.

இ—ள்: ஏயின செயல் எலாம் இயற்றி-முன்னர்க்கூறியுள்ளதொழில்களெல்லாவற்றையுஞ் செய்து, வேறு வேறு ஆயிடை வேண்டுவது அமைய ஆற்றி-வெவ்வேறாக அவ்விடத்தில் வேண்டிய காவல்முதலியபிறவற்றையும் பொருந்தநடத்தி, மா இரு நிலத்திடை மகவை போற்றிடும் தாய் என—மிகப்பெரியஇப்பூவுலகின்கண்ணேகுழந்தைகளைவளர்க்குந்தாய்போல, சாலியீட்டம் வளர்த்தனர்— நெற்பயிர்க்கூட்டங்களை வளர்த்தார்கள்; எ—று.

ஏ அசை. எல்லாமென்பது எலாமெனத்தொக்கது. அ—இடை, ஆயிடையெனச்சந்திபெற்றது. வேண்டுவது வினையாலணையும்பெயர். மா இரு ஒருபொருட்கிளவி. இயற்றி ஆற்றி வளர்த்தனர் என இயையும். சாலி ஆகுபெயர்.

தாய்மார் மனங்கசிந்துபாலூட்டிக்குழந்தைகளைப் பாதுகாத்தல் போல விருப்புவைத்து நீரூட்டிப்பயிரைப்பாதுகாத்தனரென்பார் 'மகவைப்போற்றிடுந்தாயெனவளர்த்தனர்சாலியீட்டம்' என்றார். தாயரன்பு தலையன்பென்பதை "பாலிநினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப்பரிந்து" என்றுமாணிக்கவாசகஸ்வாமிகள் அருளிச்செய்ததனாலறிக. இச்செய்யுட்கருத்தையுள்ளிட்டே காஞ்சிப்புராணமும் "இளமகப்பசிதனக்கேங்குகொங்கைப்பா, லளவறிந்தூட்டுதாய்மானவாறறி, களமர்கண்முளைப்புனல்செவ்விகண்டுநீள், வளவயல்பாய்த்தித்தம்மகவினோம்புவார்" எனக்கூறியது. (கசு)

மன்சுடர் கெழுமிய வயிர வான்கணை
மின்சுடர் தூணியின் மேல கீழுறத்
தன்சுடர் பொலிதரச் செறித்த தன்மைபோற்
பொன்சுட ரிளங்கதிர் புறத்துக் கான்றவே.

இ—ள்: மன் சுடர் கெழுமிய வயிர வான் கணை— பேரொளிபொருந்திய வைரத்தினாற்செய்யப்பட்ட பெரிய அம்பினை, மின் சுடர் தூணியில்—ஒளிவிளங்குகின்றகூட்டின்கண்ணே, மேல கீழுற தன் சுடர் பொலிதர செறித்ததன்மை போல்—மேலிருக்கவேண்டிய அடிப்புறம் கீழேபொருந்தவும் தன்னொளி(கூட்டினுண்மறையாது வெளியில்) துலங்கவும் செருகியதன்மைபோல, பொன்சுடர் இளங்கதிர் புறத்து கான்ற—அழகு விளங்குகின்ற இளங்கதிர்களை வெளியே ஈன்றன(நெற்பயிர்கள்); எ—று.

ஏ அசை. மன்சுடர்— தலைமையாகிய ஒளி; நிலைபெற்ற ஒளியெனினுமாம். மின்சுடர் பொன்சுடர் என்பனவற்றில் சுடர் வினைத்தொகை. மேலவென்பதிலகரஞ்சாரியை. அம்புக்கூட்டின்வாயிலே அடிமேலாகவும் நுனி கீழாகவுஞ்செருகும் வழக்கத்திற்குமாறாக ஓரம்பை நுனி மேலாய்வெளிவிளக்கும்படி செருகிவைத்தாற்போல, நெற்பயிர்களின் வாய் முகையினின்றும் இளங்கதிர்கள் தோற்றினவென்பது கருத்து.

நெற்பயிர்களிற்றோன்றும் முகைக்குக்கூடும் அந்தமுகையினின்று நீளுங்கதிர்க்கு அம்புமுபமானமென்க. (கஎ)

பச்சிளங் காம்புடைப் பணையின் மீமிசை
வச்சிரத் தியற்றுமோ ரிலைகொள் வான்படை
யுச்சிமே லுறநிறீஇ யொருங்கு செய்தெனக்
குச்சுறு சாலிமென் கதிர்கு லாவுமால்.

இ—ள்: பசு இளம் காம்பு உடை பணையின் மீமிசை—பசிய இளமையாகிய காம்பினையுடைய மூங்கிலின்மேல் வச்சிரத்து இயற்றும் ஓர் இலைகொள் வான் படை—வைரத்தாற்செய்யப்பட்ட இலைத்தொழின்முற்றிய பெரிய ஒரு ஆயுதத்தை, உச்சி மேல்உற நிறீஇ ஒருங்கு செய்தென—நுனி மேற்பொருந்தநிறுத்தி ஒன்றுபடுத்தினாற்போல, குச்சு உறு சாலி மென்கதிர் குலாவும்—கொத்தாந்தன்மைபொருந்திய நெற்களையுடைய இளங்கதிர்கள் விளங்கும்; எ—று.

ஆல் அசை. பசுமை—இளமை—காம்பு என்பன பச்சிளங்காம்பு எனச் சந்திபெற்றன. உடைய என்பதீறுதொக்கது. மீமிசை ஒருபொருட்பன்மொழி. இலைத்தொழின்முற்றலாவது தகட்டுவடிவாய்க் கூர்மைபெறும்படி அரத்தினாற்குறைத்தல். வான் ஈண்டு நீட்சியின்மேற்று. நிறீஇ என்பது நிறுவியென்பதன்மரூஉ. செய்ததென என்பாலது செய்தென எனத்தொக்கது; செய்தாலென என்பதன்றொகுத்தலெனினுமாம். குச்சம் என்னும்வடமொழி குச்செனநின்றது. மெல் என்பது லகரவொற்று னகரவொற்றாகத்திரிந்தது. நெற்பயிர்க்கு மூங்கிலுங்கதிர்க்குப்படையுமுபமானம். (கஅ)

சுற்றுறு பஃறலைச் சுடிகை மாசுணம்
பெற்றுறு குழவிகள் பெயர்த லின்றியே
முற்றுறு நிவப்பொடு முறையி னிற்றல்போ
னெற்றுறு பசுங்கதிர் நிமிர்தன் மிக்கவே.

இ—ள்: சுற்றுறு பல் தலை சுடிகை மாசுணம் பெற்றுறு குழவிகள்—சூழ்ந்துள்ள பலதலைகளிற் சுடிகையையுடைய சர்ப்பமானது பெற்ற குட்டிகள்; பெயர்தலின்றி—நிலைபிரிதலில்லாமல்; முற்றுறு நிவப்பொடு முறையில் நிற்றல்போல்—முழுதாகியஉயர்ச்சியோடும் வரிசைபெறநிற்றல்போல, நெல் துறு பசுங்கதிர் நிமிர்தன்மிக்க—நெற்கள்நெருங்கப்பெற்ற இளங்கதிர்கள் நிமிர்ச்சிமிகுந்தன; எ—று.

ஏ அசை. பலதலையென்பது நிலைமொழியீற்றகரங்கெட்டு லகரம் ஆய்தமாகவும் வருமொழித்தகரம் றகரமாகவுந்திரிந்து பஃறலையெனநின்றது. முற்றுறுநிவப்பொடுநிற்றலாவது: வால்மாத்திரம் பூமியிற்பொருந்தத் தண்டாகாரமாகமேனியைமேலெழுப்பிநிற்றல். நாகக்குட்டிகள் தோன்றிய இருபத்தெட்டாநாளில் விஷத்தைப்பெறும்பொருட்டுச் சூரியனைநோக்கித் தவஞ்செய்வனவென்று விஷவைத்தியசாஸ்திரங்கள்கூறுதலின் அதனையீண்டுக்கூறியுவமித்தனரென்ச. ஐந்தலைநாகமென்பார் 'பஃறலைச் சுடிகைமாசுணம்' என்றார்.

நெற்பயிர்கட்குச் சர்ப்பக்குட்டிகளின் மேனியையும் கதிர்கட்கு அவற்றின்றலையையுமுவமித்தார். (கக)

மையுறு கணிகையர் மகிழ்நர் வந்துழிப்
பொய்யுறு மளியெனப் பயனில் புன்கதிர்
கையுறு முவகையாற் பணியுங் கற்பினோர்
மெய்யுறு பரிவென விளைந்து சாய்ந்தவே.

இ—ள்: மை உறு கணிகையர் மகிழ்நர் வந்துழி பொய்யுறும் அளியென பயனில் புன் கதிர்—குற்றம்பொருந்திய பரத்தையர்கள் ஆடவர் வந்தபோது காட்டும்

பொய்யன்புபோலப் பயனின்றிநின்ற புன்மையான நெற்கதிர்கள், (மகிழ்நர் வந்துழி) கை உறும் உவகையால் பணியும் கற்பினோர் மெய்யுறு பரிவு என விளைந்து சாய்ந்த—கணவர்வந்தபோது ஒழுக்கம்பொருந்திய மகிழ்வினுடன் வணங்கும் பதிவிரதைகளினது மெய்யன்புபோல விளைந்து சாய்ந்தன; எ—று.

கணிகை—கணத்தையுடையவள். கணம்=கூட்டம். அதாவது பலபுருடர்களின்தொகுதி. வந்த உழி என்பது வந்துழியெனத்தொக்கது. கை—ஒழுக்கம்.

பரத்தையர் தம்மைக்கூடும் புருடர்வந்தபோது அகத்தன்பின்றிப் புறத்தன்புகாட்டி உடைநடையாதியவற்றான் மருட்டி ஒய்யாரமாக இறுமாந்துநிற்பதுபோல, இளங்கதிர்கள் உள்ளீடின்றிக் காட்சிக்குமாத்திரம் மனோகரமாய்நிமிர்ந்துநின்றன. பின்னரவைதாமே, கணவர்வந்தவுடன் கற்புடைமகளிர் அகத்தன்புடையராய் மகிழ்ந்துபணிவதுபோல, அரிசியாகிய உள்ளீடுடையனவாய் விளைந்து சாய்ந்தனஎன்பதுகருத்து. தம்மையணுகுவோர் கீழோராயினும்வறியோராயினும் முதியோராயினும்நோயாளராயினும் பாவம்பழிக்கஞ்சாது பொருள்பறித்தலையேகருதிச் சூழ்ச்சிபுரிவோராதலால்'மையுறுகணிகையர்' என்றார்.

மகிழ்நர்வந்துழிப் பொய்யன்புகாட்டுதல் கணிகையர் குணமென்பதை "மெய்படுமன்பினோர்போல்விரும்பினோர்க்கருத்துந்தங்கள், பொய்படுமின்பம்" எனத்திருவிளையாடற்புராணத்துப் பரத்தையர் வீதியை வருணிக்குமிடத்துப் பரஞ்சோதிமாமுனிவர் கூறுதலானும், கற்புடைமகளிர் மெய்யன்புடையராயுவந்து பணிதலை "தாதைதன்னினுந்தன்னையர்தம்மினு. மாதர்மென்மொழிமைந்தர்கடம்மினுங், கோதில்கற்புடையார்தங்கொழுநர்பாற்,காதல்கூர்ந்து களிமகிழ்வெய்துவார்"எனவும், கேள்வரேகிளர்தேவர்களென்றுவரி, லாளுமெய்ம்மையடிகளென்றெண்ணுவார்" எனவும் காசிகண்டங்கூறுதலானுமுணர்க. (உ0)

மாலுறு பொன்னகர் மருவு மன்னற்குப்
பாலுறு தீம்பதம் பலவு மார்த்தியே
மேலுறு சாலியின் விளைவு நோக்கியே
கோலிநின் றரிந்தனர் குழாங்கொண் மள்ளரே.

இ—ள்: குழாங்கொள் மள்ளர்—(வந்து) கூடிய உழவர்கள், மால் உறு பொன்னகர் மருவும் மன்னற்கு பால் உறு தீம் பதம் பலவும் ஆர்த்தி—பெருமைபொருந்தியசுவர்க்கலோகத்தில் வாழுகின்ற தேவேந்திரனுக்குப் பால்விட்டுச்சமைத்த மதுரமான பலவகையன்னங்களையும் நிவேதித்து, மேல் உறு சாலியின் விளைவு நோக்கி—மேன்மைபொருந்திய நெல்லின் விளைவைப்பார்த்து, கோலிநின்று அரிந்தனர்— வளைந்துநின்று அரிந்தார்கள்; எ—று.

ஏகாரங்கள் அசைகள். கோலிநின்று-ஒருசொல். பலவுமென்பதிலும்மை முற்று. தீம்பதம் என்பதனாற்சர்க்கரைமுதலிய மதுரவஸ்துக்களுஞ்சேர்ந்த அன்னமென்பதுபெற்றாம்.

மண்மயமாகிய நிலவுலகம் போலாது பொன்மயமாய் விளங்கும் அமராவதிபுரியின்கண்ணரசியல் புரிந்து வசிப்பவனென்பார் 'மாலுறுபொன்னகர்மருவுமன்னன்' எனவும், அவ்விந்திரன் மேகங்களைக்கொண்டு மழைபெய்விப்பவனும் மருதநிலத்தேவனுமாதலால் புதிதெடுத்தாக்கியஅமுதை நிவேதித்தபின்னரேயரிந்தனரென்பார் "பொன்னகர்மருவுமன்னற்குப்பாலுறுதீம்பதம்பலவுமார்த்தி...அரிந்தனர்' எனவும், விளைவான்முந்தியவற்றை முன்னும் பிந்தியவற்றைப் பின்னுமாக அரிந்தனரென்பார் 'விளைவுநோக்கி...அரிந்தனர்' எனவும், இடங்கடோறும் பலர்கூடி நின்றரிந்தனரென்பார் 'குழாங்கொண்மள்ளர்...அரிந்தனர்' எனவும் கூறினார். (உக)

அரிந்திடு சுமைகளா லவனிப் பேருட
னெரிந்திடச் சேடனு நெளிந்து நீங்கிடத்
தெரிந்திடும் போர்கள்சே ணளவுஞ் சேறலால்
விரிந்திடு கதிர்சுலா மேரு வாயவே.

இ—ள்: அரிந்திடு சுமைகளால்—(அவ்வுழவர்கள்) அரிந்து தொகுத்த சுமைகளினால், அவனி பேர் உடல் நெரிந்திட—பூமிதேவியினது பெரிய சரீரம்நெரியவும், சேடனும் நெளிந்து நீங்கிட—(அப்பூமாதைத்தாங்கும்) ஆதிசேடனும்(பாரஞ்சுமத்தலரிதாதலால்) உடல்நெளிந்து விலகவும், தெரிந்திடும் போர்கள்—தெரிந்தடுக்கும்போர்களானவை, சேணளவும் சேறலால்—ஆகாயமளவும் உயர்ந்துபோதலினால், விரிந்திடு கதிர் சுலாம் மேரு ஆய— பரந்த கதிர்கள்சூழுகின்ற மேருமலையாயின; எ—று.

ஏ அசை. நெரிந்திட நீங்கிட என்னுஞ்செயவெனெச்சங்கள் காரியப்பொருளன. சேடனுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. சுலாவுமென்னும் பெயரெச்சத் தீற்றயலுயிர்மெய் கெட்டது. கதிரென்பதற்கு, மேருமலைக்காம்போது சூரியசந்திரரெனவும் போர்க்காம்போது நெற்கதிர்களெனவுமுரைத்துக்கொள்க.

"அரிவர்சேர்ப்பரடுக்குவர்சிக்கென, வரிவர்சென்னியில்வைப்பர்களஞ்செலப், புரிவர்பொன்னங்கிரியெனப்போர்செய்வர்" எனக்காஞ்சிப்புராணங்கூறியவாறு, நெற்பயிர்களையரிந்து சேர்த்தடுக்கிச் சுமையாக்கிக்கொண்டுசென்று களத்திற்போர்செய்தனரென்பார் 'அரிந்திடுசுமைகளால்- தெரிந்திடும்போர்கள்' எனவும், வயல்களில் எங்கும் பரவியிருந்தனவற்றை ஓரிடத்திற் சேர்த்துப்போர்புரிதலாற் பூமாதிற்குஞ்சேடனுக்கும் அளவின்மிக்க பாரமாயிற்றென்பார் 'அவனிப்பேருட னெரிந்திடச்சேடனுநெளிந்துநீங்கிட' எனவுங்கூறினார். (௨௨)

ஏற்றொடு பகட்டின மிசைத்துப் போருரு
மாற்றினர் வலமுறை திரித்து வாழ்த்தொலி
சாற்றினர் பரனொடு தமது தெய்வதம்
போற்றினர் மீமிசை பொலிகென் றோதுவார்.

இ—ள்: ஏற்றொடு பகட்டினம் இசைத்து— எருதினங்களுடன் எருமைக்கடாவினங்களைப் பிணைத்து, போர் உரு மாற்றினர்—நெற்போர்களினுருவத்தைக்குலைத்து, வலமுறை திரித்து—பிரதக்ஷிணமாகச்சூழ்வித்து, வாழ்த்தொலி சாற்றினர்—மங்கலவாழ்த்துக்களைக்கூறி, பரனொடு தமது தெய்வதம் போற்றினர்— சிவபெருமானையுந் தங்கள் சிலக்கடவுளாகிய இந்திரனையும் துதித்து, மீமிசை பொலிகென்று ஓதுவார்—மேலும் மேலும் பொலிக என்று சொல்வார்கள் (அவ்வுழவர்கள்); எ—று.

மாற்றினர் சாற்றினர் போற்றினர்என்பனமுற்றெச்சம். பின்னைய ஒடு எண். தைவதமென்னும் வடசொல் தெய்வதம்எனநின்றது. மீமிசை ஒருபொருட்பன்மொழி. பொலிக என்னும் வியங்கோளீற்றகரந்தொக்கது. தமதுதெய்வதமென்பதற்குத் தங்களால் தொன்றுதொட்டநுசரிக்கப்பட்டுவருங் குலதெய்வங்களெனினுமாம்.

மங்கலகருமமாதலின் 'வலமுறைதிரித்து' எனவும், ஒருமுறையிருமுறைகளினமையாது பன்முறைகூறுதலின் 'மீமிசைபொலிகென்றோதுவார்' எனவுங்கூறினார். வாழ்த்தொலிசாற்றுதலுந் தெய்வம்போற்றுதலும் பொலிகெனக்கூறுதலும் தானியம்பொலிதற்பொருட்டென்க. "உத்தமத்தேவர்தம்முளுத்தமனீசனுகும்" எனத்திருவிளையாடற்புராணமும்,"யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே-மாதொருபாகனார்தாம்வருவர்"எனச்சிவஞானசித்தியாருங் கூறியவாறு சர்வதேவோத்தமரும் சர்வ-

தேவமயருமாய் நிற்பவர் சிவபெருமானேயாதலின், குலதெய்வமாகாதபோதும் அவரையும் வழிபட்டனரென்பார்‘பரனொடுதமதுதெய்வதம்போற்றினர்’என்றார். (௨௩)

தொங்கலம் பூமுடித் தொழுவர் போரினை
யங்குறப் படுத்துவை யகற்றி யாக்கிய
பொங்கழிப் பதடிகள் புறத்து வீசியே
யெங்கணு நெற்குவை யியற்று வாரரோ.

இ—ள்: பூ தொங்கலம் முடி தொழுவர்— மலர்மாலையையணிந்த குடுமியினையுடைய உழவர்கள், போரினை அங்கு உற படுத்து—நெற்போரை அவ்விடத்தில் மிகவும்மிதித்து, வை அகற்றி ஆக்கிய பொங்கழி பதடிகள் புறத்து வீசி— வைக்கோலைப்(புறத்தில்)ஒதுக்கி அமைத்த தூற்றாதநெல்லின்கணுள்ள பதர்களைப் புறத்தே(விலகுமாறு)வீசி, எங்கணும் நெற்குவை இயற்றுவார்— எவ்விடத்தும் நெற்குவியலையமைப்பார்கள்; எ—று.

அம் சாரியை; அழகெனினுமாம். ஏ அரோ அசைகள். அங்கென்றது களத்தை. பொங்கழி தூற்றாதநெல். (௨௪)

களப்படு கைவலோர் கால்க ளான்முகந்
தளப்புறு நெற்குழா மவற்றுண் மன்னவற்
குளப்படு கடன்முறை யுதவி மள்ளருக்
களித்தனர் வேண்டிய தனைய நாட்டுளோர்.

இ—ள்: களப்படு கைவலோர் கால்களால் முகந்து அளப்புறும் நெற்குழாம் அவற்றுள்— நெற்களத்தின்கண் வந்த கைத்தொழிற் சாமர்த்தியர்கள் மரக்கால்களினாலே மொண்டு அளக்கும்நெற்கூட்டங்களுள், மன்னவற்கு உளப்படு கடன் முறை உதவி— அரசனுக்குரியதாக மதிக்கப்படுகின்ற (ஆறிலொருபங்காகிய) கடமையை முறைப்படிகொடுத்து, மள்ளருக்கு வேண்டியது அளித்தனர்— (பின்) உழவர்களுக்கு வேண்டிய நெல்லைக்கொடுத்தார்கள்; அனைய நாட்டு உளோர்-அந்தத்தொண்டைநாட்டின்கணுள்ள வேளாண்டலைவர்கள்; எ—று.

கை ஆகுபெயர். வல்லோர் உள்ளோர் என்பன வலோர் உளோர் எனத் தொக்கன. கிடைத்தபொருளை ஆறுகூறாக்கி, அரசனுக்கொருகூறும் பிதிரர்க்கொருகூறும் தேவர்க்கொருகூறும் விருந்தினர்க்கொருகூறும் உறவினர்க்கொருகூறும் ஆக ஐந்துகூற்றையும் விநியோகித்து எஞ்சிய ஒருகூற்றையே தாம் அநுபவிக்கவேண்டுமென்னும் மனுதருமநூற்றுணிபுக்கேற்ப, முன்னையதாகிய அரசனதுபங்கை அக்களத்திற்றானேவழக்கப்படிகொடுத்தனரென்பார்‘மன்னவற்குளப்படுகடன்முறையுதவி’ என்றார். பிதிராதிய ஐவர்க்குங்கொடுப்பது தம்மனையிலாதலின் ஈண்டுக்கொடுத்திலரென்க. திருவிளையாடற்புராண ஆசிரியரும் இக்கருத்தையுள்ளிட்டே “கற்றைவைகளைந்து தூற்றிக் கூப்பியூர்க்காணித்தெய்வ,மற்றவர்க்கற்றவாறீந்தளவைகண்டாறிலொன்று,கொற்றவர்கடமைகொள்ளப்பண்டியிற்கொடுபோய்த்தென்று, மற்றவர்சுற்றந்தெய்வம்விருந்தினர்க்கூட்டியுண்பார்” எனக்கூறினர்.

உழுதன்முதன் மிதித்தலீறாகிய தொழின்முழுதையுமியற்றி மெய்வருந்தினராதலின், அவர்மனங்கோணாதுவப்பக் கொடுத்தனரென்பார் ‘மள்ளருக்களித்தனர் வேண்டியது’ என்றார். (௨௫)

சொற்குவை வழிபடப் புகழிற் றோன்றுதம்
மிற்குவை வேண்டுவ தேவி யெஞ்சிய

நெற்குவை குரம்பையி னிரப்பு வித்தனர்
பொற்குவை யரிந்தனர் பொதிவித் தென்னவே.

இ—ள்: சொற்குவை வழிபட புகழில் தோன்று தம் இற்கு—பாவினங்கள் துதிசெய்யும்படி கீர்த்தியுடன்விளங்குகின்ற தம்முடைய மாளிகைக்கு, உவை வேண்டுவது ஏவி—அந்நெற்குவைகளில் (செலவிற்கு) வேண்டிய தொகையை அனுப்பி, எஞ்சிய நெற்குவை-மிஞ்சியிருந்தநெற்குவியலை, பொற்குவை அரிந்தனர் பொதிவித்து என்ன குரம்பையில் நிரப்புவித்தனர்-பொற்குவியலை அரிந்துபொதிவித்தாற்போல நெற்கோட்டைகளில் (ஏவலாளரால்) நிரப்புவித்தார்கள் (அவ்வேளாண்டலைவர்கள்); எ—று.

ஏ அசை. சொல் ஆகுபெயர். வழிபட என்னுஞ் செயவெனெச்சங்காரியப் பொருளதாய் 'தோன்று' என்னும் வினைகொண்டது. தோன்று என்னும் வினைத்தொகை முதல்குறுகிய தாம்என்னும்பெயரோடியைந்தது. அரிந்தனர் முற்றெச்சம். பொதிவித்தென்னஎன்பது பொதிவித்தென்ன எனத்தொக்கது. பொதிவித்தாலென்னஎன்பதங்ஙனந்தொக்கதெனினுமாம். இதுபோல்வருவனபிறவற்றிற்குமிவ்விதிகொள்க. முற்செய்யுளிலுள்ள அனையநாட்டுளோரென்பதை இச்செய்யுட்குமியைத்துக்கொள்க.

"உழுவாருலகத்தார்க்காணியஃதாற்றா, தெழுவாரையெல்லாம்பொறுத்து" எனவும் "உழுதுண்டுவாழ்வாரேவாழ்வார்மற்றெல்லாந், தொழுதுண்டுபின்செல்பவர்" எனவும் "உழுதுண்டுவாழ்வதற்கொப்பில்லைகண்டீர் பழுதுண்டுவேறோர்பணிக்கு" எனவும் கூறியவாறே நாற்கவிப்புலவர்களும் புகழ்ந்துபாடுதலின் 'சொற்குவைவழிபடப் புகழிற்றோன்றுதம்' என்றும், பின்னர் நெல்விதைத்து விளைவுறுங்காலம் வரையும் வீட்டினிகழுஞ் செலவிற்குப்போதிய அளவுநெல்லையனுப்பினரென்பதுபோதர 'வேண்டுவதேவி' என்றும், பொற்குவியலை மகிழ்வுடன் பேழைமுதலியவற்றிற் சேமிப்பதுபோலப் பெருவகையுடன் தக்க பாத்திரத்திற்பொதிவித்தனரென்பது போதர 'குரம்பையினிரப்புவித்தனர்பொற்குவையரிந்தனர்பொதிவித்தென்ன' என்றும் கூறினார்.

இதுகாறும் நன்செய்த்தானியமாகிய நெல்விளைதலும் அதற்குவேண்டிய பிறவும் கூறப்பட்டன. (உகூ)

தலத்திடை வேறிடத் தொதுங்குந் தண்ணிய
குலத்திடைப் பிறந்தவர் கூட்ட மாமென
நலத்திடை வந்திடு முதிரை நல்வளம்
நிலத்திடை யொருசிறை விளையு நீரவே.

இ—ள்: தலத்திடை வேறு இடத்து ஒதுங்கும்—கிராமங்களில் (தம்மிழிவுக்கேற்பப்) புறம்பான இடங்களிலே ஒதுங்கிவாழுகின்ற, தண்ணிய குலத்திடை பிறந்தவர் கூட்டம் ஆமென—தாழ்ந்தசாதியிற் பிறந்தவர்களது தொகுதிபோல, நலத்திடை வந்திடும் முதிரை நல் வளம்—இன்பத்தைத் தரும்பொருட்டுவரும் புன்செய்த்தானியங்களாகிய நல்லவளங்கள், நிலத்திடை ஒருசிறை விளையு நீர—அம் மருதநிலங்களில் ஒவ்வோர் சாரில் விளையுந்தன்மையையுடையன; எ—று.

ஏ அசை. பிறந்தவர்கூட்டம் என்பது பிண்டப்பொருளும் பிண்டித்தபொருளும் வேறாகாது உரைப்போர்குறிப்பின் வேறுபட்டு நிற்பது. நெல்லது குப்பைஎன்பதுபோல. கிராமலக்ஷணத்திற்கேற்ப அந்தணர்முதலிய உயர்குலத்தார் நடுப்பாகங்களில் வசிப்ப, அவரைத்தீண்டுதற்குரரல்லாத பஞ்சமர்முதலிய தாழ்ந்தசாதியார் அவ்வூர்களின் புறத்தே ஒதுங்கிவாழுதல் நூற்றுணிபும் வழக்குமுமாதலின் 'தலத்திடைவேறிடத்தொதுங்குந்தண்ணியகுலத்திடைப்பிறந்தவர்கூட்டமாமென' எனவும், புன்செய்த்தானியங்களானுக்கப்படும் போசனபதார்த்தங்களில்லாவழி நன்செய்த்தானியத்தாலாக்க-

ப்படுமென்னுஞ் சுவைபெறுமையின் 'நலத்திடைவந்திடுமுதிரை' எனவும், "விட்டில்கி ளிகாவாய்வேற்றரசுதன்னரசு,நட்டம்பெரும்பெயல்காலெட்டு" எனக்கூறப்படுமெண்வ கைக்குறைகளுமின்றிவிளையும் வளமாதலின் 'நல்வளம்' எனவும் கூறினர்.

இச்செய்யுளாற் புன்செய்த்தானியங்களாகிய பயறு உழுந்து முதலியன விளைதல் கூறப்பட்டது. (உஎ)

பிறப்பதும் வளர்வதும் பின்னர் மூப்புவந்
திறப்பதும் வைகலு முலகி லேய்ந்தெனச்
சிறப்புட னடுவதும் பருவஞ் செய்வது
மறுப்பதுந் தொகுப்பது முலப்பின் றாயவே.

இ—ள்: பிறப்பதும்—(பிராணிகள் யோனிவாய்ப்பட்டுப்) பிறத்தலும், வளர்வதும்—(பிறந்தபின் காலந்தோறும்) சரீரம் வளர்தலும், பின்னர் மூப்புவந்து இறப்பதும்— சிலகாலஞ்சென்றபின் கிழப்பருவம்சேர்ந்து சாதலும் (ஆகிய இவைகள்), வைகலும் உலகில் ஏய்ந்தென— தினந்தோறும் உலகத்தில் (குறைவின்றி) நிகழ்ந்தாற்போல, சிறப்புடன் நடுவதும்—(முன்னர்க்கூறப்பட்ட) சிறப்பினுடன் (பயிர்களை) நடுதலும், பருவஞ் செய்வதும்—(அப்பயிர்கட்கு நீர்பாய்ச்சுதல் களைகட்டன்முதலிய) பருவத்தொழில்களைச்செய்தலும், அறுப்பதும் தொகுப்பதும்—(விளைவுநோக்கி) அரிதலும் குவித்தலும் (ஆகிய முயற்சிகள்), உலப்பின்று ஆய—(அத்தொண்டைமண்டலத்திற் காலந்தோறுங்) குறைவின்றி நிகழ்ந்தன; எ—று.

ஏ அசை. ஏய்ந்ததென என்பது ஏய்ந்தென எனத்தொக்கது. ஏய்ந்தாலென் என்பது அங்ஙனந்தொக்கதெனினுமாம். பருவம் ஆகுபெயர். உலப்பு தொழிற்பெயர்.

பிறத்தலும் வளர்தலுஞ் சாதலுமாகிய முத்தொழில்களும் உலகத்தில் மீட்டும் மீட்டும் ஓயாது நிகழ்தல்போல, அத்தொண்டைநாட்டிலுள்ள வயல்களிலும், பயிரிடுதலும் வளர்த்தலும் அறுத்தலுமாகிய தொழில்வகைகள் பரிவிருத்தியாய் நிகழ்ந்தனவென்பதாம்.

இச்செய்யுளால் முன்னர்க்கூறிமுடித்த தானியங்களைக் காலந்தோறுந் தவறாது விளைவித்தல் கூறப்பட்டது. (உஅ)

முழவொலி விண்ணவர் முதல்வற் காக்குறும்
விழவொலி கிணையொலி விரும்பு மென்சிறார்
மழவொலி கடைசியர் வள்ளைப் பாட்டொலி
யுழவொலி பல்கலு முலப்பு றாதவே.

இ—ள்: முழவொலி—முழவினோசையும், விண்ணவர் முதல்வற்கு ஆக்குறும் விழவொலி—தேவர்க்கரசனாகிய இந்திரனுக்குநடாத்தும் திருவிழாவினோசையும், கிணையொலி—மருதப்பறையினோசையும், விரும்பும் மென் சிறார் மழவொலி—(எவராலும்) விரும்பப்படுகின்ற இளஞ்சிறுவர்களது மழலைவார்த்தையினோசையும், கடைசியர் வள்ளைப்பாட்டொலி—உழத்தியர்கள்பாடும் உலக்கைப்பாட்டினோசையும், உழவொலி—உழவினோசையும் (ஆகிய இவையெல்லாம்) அல்கலும் உலப்புறாத—தினந்தோறும் அந்நாட்டிற்குறையாது நிகழ்வன; எ—று.

ஏ அசை. மழவு ஆகுபெயர். அல்கலுமென்றதிலும்மைமுற்று. உலப்பு தொழிற்பெயர். முழவு, அகமுழவு அகப்புறமுழவு புறமுழவு புறப்புறமுழவு பண்ணமை முழவு நாண்முழவு காலைமுழவு என எழுவகைப்படும். அவற்றுள் அகமுழவாவன: உத்தமக்கருவியாகிய மத்தளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை படகம் குடமுழா

என்பன. அகப்புறமுழவாவன: மத்திமக்கருவியாகிய தண்ணுமை தக்கைமுதலியன. புறமுழவாவன: அதமக்கருவியாகிய கணப்பறை முதலியன. புறப்புறமுழவாவன: நெய்தற்பறைமுதலியன. பண்ணமைமுழவாவன: முரசு நிசாளம் துடுமை திமிலை என்னும் வீரமுழவு நான்குமாம். நாண்முழவாவது நாட்பறை; இது நாழிகைப்பறையெனவும்படும். காலைமுழவாவது துடி. இவற்றுள் ஈண்டியைந்தனகொள்க.

உழவொலியாவது: உழுதற்றொழில்புரியுமள்ளர் எருது முதலியவற்றைச் செலுத்தும்பொருட்டு உரப்புதன் முதலியன.

இச்செய்யுளால் மங்கலவோசை என்ஞான்றும் குறைவின்றிநிகழ்தல் கூறப்பட்டது. (௨௧)

காலுற நிமிர்ந்திடு காமர் சோலையு
நீலமுங் கமலமு நிறைந்த பொய்கையு
மாலையங் கழனியு மநங்கற் காயுத
சாலைக ளிவையெனச் சாற்ற நின்றவே

இ—ள்: கால் உற நிமிர்ந்திடு காமர் சோலையும்— காற்றானது (தம்மை) மோதும்படி உயர்ந்த அழகிய சோலைகளும், நீலமும் கமலமும் நிறைந்த பொய்கையும்—நீலோற்பலங்களும் தாமரைகளும் நிறையப்பெற்ற தடாகங்களும், ஆலையம் கழனியும்—கரும்புகளையுடைய வயல்களும், அநங்கற்கு ஆயுத சாலைகள் இவை என சாற்ற நின்ற—மன்மதனுக்கு ஆயுதசாலைகளிவைதாமென்று (கண்டோர்) சொல்லும்படி (பொலிவுற்று) நின்றன; எ—று.

ஏ அசை. சோலையும் பொய்கையும் கழனியும் சாற்றநின்ற என இயையும். ஆலை ஆகுபெயர். தாழ்ந்தமரங்களைவிட்டு உயர்ந்தமரங்களையே காற்றுமோதுதலின் 'காலுறநிமிர்ந்திடுகாமர்சோலையும்' என்றார். அடியானது மிகவும் நிமிர்ந்த சோலையெனினுமொக்கும். அநங்கன்-உருவமில்லாதவன்.

மன்மதன் தேவர்வேண்டுகோட்படி சிவபெருமானது ஞானநிலையைப்பங்கப்படுத்துவான்புகுந்து அவரது நுதற்கண்ணொக்கத்தாலிறந்தனன்; பின் அவனதுதேவியாகிய இரதி வேண்டுதல்செய்யச் சிவபெருமான் அவனையெழுப்பி,அவ்விரதிக்குமாத்திரந் தோற்றும்படியும் சூழ்ச்சிசெய்ததேவர்க்கும் பிறர்க்கும் தோற்றுதொழுகும்படியும் பணித்தனர். அக்காரணத்தால் அநங்கனென்னும்பெயர் அவனுக்காயிற்று.

மன்மதனுக்கு மலர்கள் கணைகளும் கரும்பு வில்லுமாதலால் அவைகளையுடையஇடங்களை 'ஆயுதசாலைகளிவையெனச்சாற்றநின்ற' என்றார். இதனை "ஆலைக்கரும்புசிலையைங்கணைபூநாண் சுரும்பு, மாலைக்கிளிபுரவிமாருதந்தேர்- வேலை, கடிமுரசங் கங்குல்களிறுகுயில்காளங், கொடிமகரந்திங்கள்குடை" என்பதனாலறிக.

ஐங்கணைக்குரியமலர்கள்:—தாமரைப்பூ மாம்பூ அசோகப்பூ முல்லைப்பூ நீலப்பூ என்பனவாம். இதனை "குடைகவித்தநன்கஞ்சங்கோதறுசூதப்பூ, கடியுமசோகந்தளவுகாவிபடையெடுத்து, வாங்காச்சமர்விளக்குமாரனுக்கெப்போதுமங்கை, நீங்காக்கணையாவினை" என்பதனானறிக. ஆயுதசாலை சமர்க்குப்புறப்படும்போது பகைவரையடர்த்தற்கேற்ற சிறந்தபடைகளைத் தெரிந்தெடுத்தற்குரியதாதல்போல இத்தொண்டைநாட்டிலுள்ள சோலைமுதலியனவும் மன்மதன் படைக்கேற்றதென்று விரும்பிக்கைக்கொள்ளத்தக்க சிறந்தகரும்புமுதலியவைகளையுடையனவாயினவென்பதாம். (௩0)

நெறியிடை யொழுகலா விழுதை நீரரை
மறலிதன் னகரிடை வருத்தல் போலுமாற்

குறைபடத் துணித்தவண் குவைசெய் கன்னலை
யறைபடு மாலைக ளிடையிட் டாட்டலே.

இ—ள்: குறை பட துணித்து அவண் குவைசெய் கன்னலை—துண்டாகும்படி வெட்டி அவ்விடத்திற் குவித்த கரும்பை, அறைபடும் ஆலைகளிடை இட்டு ஆட்டல்—ஒலிபொருந்தும் ஆலைகளினிடையேவைத்து ஆட்டுதல்,(எதுபோலுமெனில்)நெறியிடை ஒழுகலா இழுதை நீரரை—சன்மார்க்கத்திலமைந்துநடவாத அறிவிலிகளை, மறலி தன் நகரிடை வருத்தல் போலும்— யமன் தன்னுடைய சம்யமினிநகரத்தில் (வருவித்து) வருத்துதல்போலும்; எ—று.

சன்மார்க்கத்திலொழுகாத பாவிகளை யமன் நரகிலிட்டு வருத்துதல்போலக் கரும்புகளை ஆலையில்வைத்து ஆட்டினர் என்பதாம்.

ஆல் ஏ அசைகள். ஒழுகலாதஎன்னுமெதிர்மறைப்பெயரெச்சமீறுதொக்கது. நெறியாவது:—வேதங்களிலும் அவற்றின்வழி நூல்களாகிய ஸ்மிருதி புராணமுதலியவற்றிலும் விதிக்கப்பட்டவாறு தத்தம் வருணாச்சிரமநிலைக்கியைய ஒழுகுதல். அவ்வாறொழுகாதோர் பாஷண்டரெனப்படுவர். இவற்றை "வேதமோர்நான்குமாதியந்தம்வேறிலவாய்முன்ன, ரோதியவாக்கதாகுமுரைத்தவிம்மறையிற்சார்ந்த, வேதமினூல்கள்யாவும்விழுமியவிவற்றிற்றீர்ந்த, தீதுநூலவற்றினின்றோர்செல்வியரல்லரன்றே" என்னுங்கூர்மபுராணச் செய்யுளானுணர்க. நெறிநின்றோர் புண்ணியகதியடைதலை "யேநயாதாச்சபிதரோயேநயாதா:பிதாமகா:| தேநயாயாத்ஸதாம்மார்க்கம்தேநகச்சன்தரிஷ்யதி" என மநுஸ்மிருதி கூறுதலானும், நெறிபிழைத்தொழுகினோர் யமகிங்கரரால்நரகத்திலுய்த்துத் தண்டிக்கப்படுதலை "அடிப்படுநிலைமைநில்லாதழித்தவரறங்கண்முற்றுங், கடிப்படவிளைத்தாரேனுநிரயமேகாயச்சேர்வார்" என வேதாரணிய புராணங்கூறுதலானுமுணர்க. (௯௧)

ஏறுகாட் டியதிற லிளைஞ ரெந்திரங்
கூறுகாட் டியகழை யழுங்கக் கோறலுஞ்
சாறுகாட் டியதரோ யாதுந் தம்மிடை
யூறுகாட் டினர்க்கலா லுலோப ரீவரோ.

இ—ள்: ஏறு காட்டிய திறல் இளைஞர்—ஆண்சிங்கத்தைப்போன்ற வலிமையினையுடைய காளையர்கள், எந்திரம் கூறுகாட்டிய கழை அழுங்க கோறலும்— ஆலையினால் துண்டுசெய்யப்பட்ட கரும்பை நசியும்படி நெரித்தலும், சாறு காட்டியது—(உடனே தன்னிடத்துள்ள)சாற்றை வெளிப்படுத்தியது, தம்மிடை யாதும் ஊறுகாட்டினர்க்கு அலால் உலோபர் ஈவரோ— தம்மேனியில் (யாதேனுமொரு) ஊறுபாட்டைச்செய்தவர்க்கு(ஆற்றாமையாற் பொருளைக்கொடுப்பதே) அன்றி(அவ்வாறு செய்யாதார்க்கு) உலோபிகள் கொடுப்பார்களா? (கொடார்களே.); எ—று.

அரோ அசை. ஏறுகாட்டியதிறல்—சிங்கவேறு தன்னிடத்துள்ளதாகக் காட்டியவலிமை. ஏறு என்பதற்கு இடபமெனக்கூறினுமாம். யந்திரத்தைஆட்டிக்கரும்பை நெரித்துப் பிழிதற்கேற்ற வலிமையுடையரென்பது போதர 'ஏறுகாட்டியதிறலிளைஞர்' என்றார். யந்திரமென்னும் வடமொழிமுதலிலுள்ள யகரம் எகரமாயிற்று. இதன்விதியைப் பிரயோகவிவேகத்திற்காண்க. எந்திரம் கோறலும் எனஇயையும். கோறலும் உம்மீற்றுவினையெச்சம். ஊறு அடித்தல் முரித்தல் குத்துதன்முதலியன. உலோபர் பேராசைகொண்டு உடாதும் உண்ணாதும் கொடாதும் பொருளீட்டுவோர். இவர் பொருள் தண்டஞ்செய்வோர்க்கே கிடைக்குமென்பதை "பாவிதனந்தண்டிப்போர்பாலாகும்" எ

ன்ற ஔவையார் திருவாக்கானுமறிக. அல்லால் என்பது அலாலெனத்தொக்கது. ஓகாரம் எதிர்மறை.

உலோபிகள் தம்மை வருத்தியவழிப்பொருளீதல்போலக் கரும்புகள் ஆலையில்வைத்து நெரித்தவழிச்சாறுமிழ்ந்தனவென்பது கருத்து. (௩௨)

மட்டுறு கழையினும் வலிதிற்கொண்டபி
னிட்டகொள் கலங்களி னிருந்த தீப்புன
றொட்டிடு கடலெனத் தோன்று மன்னவை
யட்டதோர் புகைமுகி லளாவிற் றொக்குமே.

இ—ள்: மட்டு உறு கழையினும் வலிதில் கொண்டபின்— அளவாகத் துணிக்கப்பட்ட கரும்பினின்றும் வலாற்காரத்தால்எடுத்தபின்பு, இட்ட கொள்கலங்களின் இருந்த தீம் புனல்—(சிந்துமிடத்தில்) வைக்கப்பட்ட பாத்திரங்களில் நிறைந்திருந்த இனிய சாறுகள், தொட்டிடு கடல் என தோன்றும்— (முற்காலத்திற் சகரராலே) தோண்டப்பட்ட சமுத்திரம்போலத் தோற்றும், அன்னவை அட்டது ஓர் புகை—அவற்றைக்காய்ச்சுதலாலுண்டாகிய புகையானது, முகில் அளாவிற்று ஒக்கும்— மேகங்கள் படிதல்போலும்; எ—று.

ஓர் ஏ அசைகள். வலிதிற்கொள்ளல்-ஆலையினுனெரித்துப்பிழிதல். கொண்டபின்இருந்த எனவினையும். கொள்கலம்—பாத்திரம். தொடுதல்--தோண்டுதல். அளாவிற்று வினைமுற்றுத்தொழிற்பெயர். ஆழமானகடலென்பார் 'தொட்டிடுகடல்' என்றார்.

ஆலையில்வைத்துக் கரும்பை நெரிக்கும்போது வெளிப்படுஞ்சாறு சிந்துங்கீழிடத்தில் வேண்டுந்தோறும் பாத்திரங்களை வைத்துக் கருப்பஞ்சாற்றையேந்திப் பரப்பிவைத்தனர்; அவை கடல்போலிருப்ப, அந்தச்சாற்றை வெல்லமுதலியனவாக்குமாறு காய்ச்சும்போதெழுந்த புகை மேகம்படிதல்போலத் தோன்றியதென்பது கருத்து. (௩௩)

கூடின தேனிசை யிளமென் கோகிலம்
பாடின மயில்சிறைப் பறைய டித்தன
வாடின வஞ்சிதந் தலைய சைத்திடா
நாடின பாதவம் புகழ்வ நாரையே.

இ—ள்: தேன் இசை கூடின—வண்டுகள் கீதம்பாடின; இளம் மென் கோகிலம் பாடின—கோமளமானமெல்லியகுயில்கள் பாடல்களைப்பாடின, மயில் சிறைப்பறை அடித்தன—மயில்கள் சிறகுகளாகிய பறைகளை அடித்தன, வஞ்சி ஆடின—கொடிகள் நடித்தன, பாதவம் தம் தலை அசைத்திடா நாடின— மரங்கள் தங்கள் தலையையசைத்து நோக்கின, நாரை புகழ்வ—நாரைகள் (அவற்றைப்)புகழுவன; எ—று.

ஏ அசை. இசை முதனிலைத்தொழிற்பெயர். இசைகூடுதல்— இசைத்தலைப்பொருந்துதல். வண்டினிசைகள் கூடின எனினுமாம். சிறைப்பறை ரூபகம். பாதபம் என்னும் வடமொழி பாதவமெனநின்றது. பாத-பம்= அடியினால்(பாய்ச்சப்பட்டநீரை) குடிப்பது. புகழ்வ அன்பெறாத அகரவீற்றஃறிணைப்பன்மைவினைமுற்று. நாரை ஓர் வகைப்பறவை. செவிக்கின்பம்பயப்பது மழலையோசையாதலின் அதற்கேற்றனவென்பது போதர 'இளமென்கோகிலம்' என்றார்.

நாடகமன்றின்கண்ணே பாணர் யாழ்முதலிய கருவிகளிசைத்தலும், சங்கீத சாமர்த்தியர்கள் மிடற்றாற்பாடுதலும் வாத்தியகாரர் வாத்தியங்களை முழக்குதலும் கணிகைமாதர் நடம்புரிதலும் சபையினர் தலையசைத்து நோக்கலும் புகழ்தலும் நிகழாநிற்

கும்; அவையெல்லாம் தொண்டைநாட்டிலுள்ள அஃறிணைப் பொருள்களினுமமைந்திருந்தனவென்பது கருத்து. (௩௪)

காவொடு நித்திலப் பொதியுங் காட்டியே
பாசடை மாதுளை சினையிற் பைங்குயில்
பேசிட நிற்பன பெறீஇயர் வம்மென
வீசுதல் கருதியே விளித்தல் போன்றவே.

இ—ள்: பாசு அடை மாதுளை—பசிய இலைகளையுடைய மாதுளமரங்கள், காசு (பொதி) ஒடு நித்திலப்பொதியும் காட்டி— மாணிக்கப்பொதியையும் முத்துப்பொதியையும் (தம்மிடத்துள்ளனவாகக்)காட்டி, சினையில் பைங்குயில் பேசிட நிற்பன—கொம்பரில் பசுமையாகிய குயில்கள் (இருந்து) கூவ நிற்பன; (ஆதலால்), வீசுதல் கருதி—பிறர்க்குக்கொடுக்குமாறு நினைத்து,பெறீஇயர் வம்மென விளித்தல் போன்ற—பெற்றுக்கொள்ளவிரும்பியவர்கள் வாருங்கள் என்று அழைத்தல்போன்றன; எ—று.

ஏகாரங்கள் அசைகள். ஒடு எண்ணில்வந்தது. பொதியென்பது காவென்பதனோடுஞ்சேர்த்துப் பொருள் கொள்ளப்பட்டது. பசுமை—அடை, பாசடை எனவும் பசுமை—குயில், பைங்குயிலெனவுஞ் சந்திபெற்றன. பைங்குயில்—இளங்குயில். வம்மினென்பது வம்மென முன்னிலையேவற்பன்மைவிகுதிதொக்கது.

மாதுளமரங்களுட் சில முத்துப்பொதிபோலும் வெண்ணிறவித்துடைய பழங்களும், சில மாணிக்கப்பொதிபோலும் செந்நிறவித்துடைய பழங்களும் தூங்க,கிளைகளிலிருந்து குயில்கள்கூவ நிற்பன ஆதலின், திரவியங்களைப் பெறவிரும்பியவர்களே வாருங்களென்றுஅழைக்குங் கொடையாளிகள்போன்றன என்பது கருத்து. மாணிக்கப்பொதிபோல்வன பழங்களெனவும் முத்துப்பொதிபோல்வன காய்களெனவுங்கூறுவாருமுளர். (௩௫)

சித்திரக் கதலிமா வருக்கைத் தீங்கனி
துய்த்திட வரும்பய னுதவுந் தோற்றத்தா
லுத்தம முதலிய குணத்தி னோங்கிய
முத்திறத் தவர்கொடை மொழிய நின்றவே.

இ—ள்: சித்திர கதலீ மா வருக்கை தீம் கனி—அழகிய வாழை மா பலா என்பவற்றின் இனிமையாகிய பழங்கள், துய்த்திட வரும் பயன் உதவும் தோற்றத்தால்-புசிக்கும்படி (தம்மிடத்துத்) தோன்றும் பிரயோசனத்தை (வேண்டுவோர்க்குக்) கொடுக்குந்தன்மையினால், உத்தமம் முதலிய குணத்தின் ஓங்கிய முத்திறத்தவர் கொடை மொழிய நின்ற—உத்தமமுதலாகிய (மூவகைக்) குணங்களினாற் சிறப்புற்ற மூவகை வள்ளல்களது கொடையை உவமைகூறும்படி (பொருந்தி) நின்றன; எ—று.

ஏ அசை. துய்த்திட மொழிய என்னுஞ்செயவெனெச்சங்கள் காரியப்பொருளன. அரும்பயனெனப்பிரித்து அதற்கேற்பப்பொருள் கூறினுமாம். உத்தமமுதலிய குணமாவன;--உத்தமக்குணம் மத்திமக்குணம் அதமக்குணமென்பன. அவற்றையுடையோர் முறையே முதல்வள்ளல் இடைவள்ளல் கடைவள்ளலெனப்பெயர்பெறுவர். அவருள் முதல்வள்ளல் எழுவர்; இடைவள்ளல் எழுவர்; கடைவள்ளல் எழுவர்; இவர்கள் பெயர்களை "மிக்கசெம்பியனேகாரிவிராடனேநிருதிதானுந், தக்கதுந்துமாரிதானுஞ்சகரனுமளனுந்தாமுன், அக்குரன்சந்திமானேடந்திமான்சிசுபாலன்னே, வக்கிரன்கன்னன்சந்தனிடைவள்ளல்வகுத்தவாறே" எனவும், பாரியாயெழிலிநள்ளிபசுந்தொடைமலயன்பேக, னோரியேகடையிலுற்றோருறுபொருடண்டாதிந்தும், வாரியிலிரந்தோ

ர்க்கிட்டும் வளர்புகழ்த் திக்கவீந்தும் - பேரியல்வையமெண்ணப்பெற்றனர் முப்பாலாகும்" எனவுஞ் சூடாமணிநிகண்டு கூறும். இவற்றுட் சில பெயர்களை வேற்றுமையாகவுஞ்சில நூல்கூறும்.

வாழைப்பழம் கருவியொன்றையும்வேண்டாது கையினாற்றோல்போக்கியவழிப் புசித்தற்குப் பயன்படுதலால், கேட்குமுன் குறிப்பறிந்துகொடுக்கும்உத்தமக்குணத்தையுடைய முதல்வள்ளலையும், மாம்பழம் (அங்ஙனமாகாது) கருவியினாற்றோல்போக்கியரிந்தவழியே பயன்படுதலால், கேட்டபின்கொடுக்கும் மத்திமக்குணத்தையுடைய இடைவள்ளலையும், பலாப்பழம் (மாம்பழம்போல அற்பபிரயாசத்தாலாயினும்பயன்படாது) ஓர் பெருங்கருவியினாற்பிளந்து பலகூறாக்கித் தண்டுநீக்கிச் சுளைகளைத்தெரிந்தெடுத்து அவற்றினுள்ளிருக்கும் விதைமுதலியவற்றைப்போக்கியவழியே பயன்படுதலால், இன்சொற்கூறிப் பன்னாளிரந்துதிரிந்தபின்கொடுக்கும் அதமக்குணத்தையுடையகடைவள்ளலையும் ஒத்தனவென்பது கருத்து.

அந்நாட்டின்கண்ணே முப்பழங்களுங் குறைவற்றிருந்தனவென்பது தாற்பரியம். (௫௬)

வீசுகால் பொரவசை விசும்பிற் றாழைக
டேசுலாம் பரிதிமெய் தீண்டுஞ் செய்கைய
காசினி தன்கையாற் கலைவெண் டிங்கள்போன்
மாசுறூ வகைதுடைத் திடுதன் மானுமே.

இ—ள்: வீசு கால் பொர அசை விசும்பில் தாழைகள்—வீசுகின்ற காற்றானது மோதுதலால் அசைகின்ற ஆகாயத்தில் (வளர்ந்து) சென்ற தென்னைமரங்கள், தேசு உலாம் பரிதி மெய் தீண்டும் செய்கைய—ஒளிபொருந்திய சூரியனது மண்டலத்தைப் பரிசிக்குந்தன்மையையுடையன (ஆதலால்), காசினி— பூமிதேவியானவள், கலை வெண் திங்கள் போல் மாசு உறூவகை தன்கையால் துடைத்திடுதல் மானும்—கலைகள்நிறைந்த வெண்மையாகிய சந்திரன்போலக் களங்கமுறாவண்ணம் தனது கையினாலே துடைத்தல்போலும் எ—று.

ஏ அசை. பொர என்னுஞ்செயவெனெச்சங்காரணப்பொருளில்வந்தது. உலாவுமென்பதிலீற்றயலுயிர்மெய்கெட்டது. பரிதி-வட்டவடிவுடையவன். கலை-சந்திரபிம்பமானத்தின் பதினாறிலொருபாகம்; இது முற்சுட்டியபாகத்தைப் பூச்சாயை நேர்பட்டு மறைத்தலாலும் விலகிவெளிப்படுத்தலாலும் கொள்ளப்படுவது. பூச்சாயை நேர்படுதற்கும் விலகுதற்குங் காரணன் சூரியனாதல்பற்றி "பத்திரட்டியினீரிரண்டொழிந்தபல் கலையோன்- மித்திரற்கவைகொடுத்துமுன்மீளவுங்கவர்வோன்" என வில்லிபுத்தூரர் கூறினர். உறூவகை வகையீற்றுவினையெச்சம்.

துடைத்தற்றொழிற்கேற்ப மாசுதீர்தலாகிய பயனைப்பெற்றானென்பதுபோதர 'தேசுலாம்பரிதி' எனவும், பூரணசந்திரனென்பதுபோதர 'கலைவெண்டிங்கள்' எனவுங் கூறினார்.

ஆகாயத்தையளாவியுயர்ந்த தெங்குகள் காற்றுமோதுதலாலசைதல், 'முன் எவராலாயினுந் துடைக்கப்படாமையானன்றோ சந்திரன் தன்மேனியிற்களங்கமுடையனாயினன்; அவன்போலக் களங்கமுறாவண்ணஞ் சூரியனை யான் புனிதப்படுத்துவேன்' என்று பூமிதேவி சிந்தித்துத் தன்கையைநீட்டித் துடைத்தல்போலும் என்பது கருத்து. தென்னைகள் கைபோலுமென்க.

இச்செய்யுளால் தென்னைகளின் சிறப்புக்கூறப்பட்டது. (௫௭)

வாசநீள் பொதும்பரின் மைந்தர் மாதர்கள்
காசுநூன் மேகலை பரியக் கைவளை
பூசலிட் டலமரப் புணருஞ் செய்கைகண்
டாசைமிக் கழுங்குவ பிரிந்த வன்றிலே.

இ—ள்: வாசம் நீள் பொதும்பரில்—வாசனைமிகுந்த பூஞ்சோலைகளில், மைந்தர் மாதர்கள்—காளையர்களும் மங்கையர்களும், காசுநூல் மேகலை பரிய கை வளை பூசலிட்டு அலமர புணருஞ்செய்கை— (அரையிலுள்ள) பொன்னுணிற் கோக்கப்பட்ட மேகலாபரணம் நழுவவும் கையில் (இறுகத்) தரிக்கப்பட்ட வளையல்கள் (நெகிழ்ந்து)ஒன்றோடொன்றுதாக்கிச் சுழலவும் சேருந்தன்மையை, பிரிந்த அன்றில் கண்டு—சேவலைப்பிரிந்திருக்கும் பெடையன்றில் பார்த்து, ஆசைமிக்கு அழுங்குவ— காமமிகுந்து கவலைப்படுவன எ—று.

ஏ அசை. காசுநூன்மேகலை:—பொன்னூலாலிழைக்கப்பட்ட நாணில் மணிகளைக்கோத்தியன்றஏழுகோவையுடையதோரணி. எண்கோவையென்பாருமுளர். பொதும்பரில் புணருஞ்செய்கை என இயையும். மேகலைபரிய கைவளைபூசலிட்டலமர என்பவற்றை ஏற்புழிக்கோடலான் மகளிர்க்கேகொள்க; மேனிவாடுதலாலவைநிகழ்வனவென்க. கலவிநிகழ்ச்சியைக்கண்டவழிக் காமமேலிடுதல் பிராணிகளனைத்திற்குமியல்பாயினும் பிரிவாற்றாதவழி இறந்துபடுவதன்றிலாதலின் அதனைக் கூறினார்.

மதனுக்குப்படைவீடாந்தன்மையுடையனவென்பதுபோதர 'வாசநீள்பொதும்பர்' எனவும், கரைகடந்த காமக்கடலிலாழ்ந்து உடலிரண்டுயிரொன்றெனும்படி மனமொன்றிப் புணர்ந்தனரென்பதுபோதர 'மேகலைபரியக் கைவளைபூசலிட்டலமரப்புணருஞ்செய்கை' எனவும் விசேடித்தார். (கஅ)

கானுலா நந்தன வனமுங் காரென
வானுலாந் தண்டலை மருங்கும் வைகலும்
வேனிலா னன்னவர் மகளிர் மேயினா
ரூனுலாங் குரம்பையு ளுயிருற் றென்னவே.

இ—ள்: வேனிலான் அன்னவர் மகளிர்— மன்மதன்போன்ற (அழகுமிக்க) ஆடவர்களும் பெண்களும், கான் உலாம் நந்தனவனமும்—வாசனைபொருந்திய பூந்தோட்டங்களிலும், கார் என வான் உலாம் தண்டலை மருங்கும்— மேகம் (செறிதல்) போல ஆகாயத்திற்றழைபொதுளியசோலைகளிலும், வைகலும்—நாடோறும், ஊன் உலாம் குரம்பையுள் உயிர் உற்றென்ன மேயினார்— தசைபொருந்திய உடலின்கண்ணே உயிர் ஒன்றுபட்டிருந்தாற்போலச் சேர்ந்தார்கள் எ—று.

ஏ அசை. செய்புமெனெச்சங்களீற்றயலுயிர்மெய்கெட்டுநின்றன. நந்தனவனம்:- மலர்மரங்களையுடைய வனம். தண்டலை:- மலருடன் காய் கனிகளையுந்தரும் மரங்களையுடையவனம். தண்-தலை=குளிர்ந்தஇடம். வைகலுமென்பதிலும்மை முற்று. வேனிலான்-வேனிற்பருவத்தை(தனதரசியற்காலமாக) உடையவன். குரம்பை-கூடு. உடம்பைக் கூடென்றுசொல்வதை "எல்லாப்படியாலுமெண்ணிலிவ்வுடம்பு-பொல்லாப்புழுமலிநோய்ப்புன்குரம்பை"என்னும்ஔவையார்வாக்கானுமறிக.உற்றென்னதொகுத்தல்.'நந்தனவனமும்தண்டலைமருங்கும்மேயினார்'எனஇயையும்.மருங்கு ஏழனுருபு.

கலவிக்கேற்ற ஏகாந்தத்தானமென்பதுபோதர 'காரெனவானுலாந்தண்டலை' எனவும்,உடலுமுயிரும்போல் மனமொன்றுபட்டுச்சேர்ந்தனரென்பதுபோதர'ஊனுலாங்குரம்பையுளுயிருற்றென்ன மேயினார்' எனவுங்கூறினார். புணருங்கால் இருவர்மனமு

ம் ஒற்றுமைப்படுதற்கு உடலுயிர்களின் ஒற்றுமையையுவமித்தலை "ஒருமையுற்றுயிருட லெனும்படியொண்டமுற்கெதிர்மன்றல்செய் கருமையுற்றகண்மங்கைகொங்கைகலந் துகாமநுகர்ந்து" என்னும் ஏகாதசிப்புராணச்செய்யுளானுணர்க. (௩௯)

அசும்புறு மகன்புன லறாத சூழலின்
விசும்புற வோச்சிய விரைமென் றாதினாற்
பசும்பொனிற் குயிற்றிய பதியிற் றூபிகைத்
தசும்பெலாம் வெள்ளிய தாக்குந் தாழையே.

இ—ள்: அசும்பு உறும் அகன்புனல் அறாத சூழலின்— மதகினூற்பாய்கின்ற பெருவெள்ளம் (எஞ்ஞான்றும்) ஒழியாத இடங்களிலுள்ள, தாழை—தாழைமரங்கள், விசும்பு உற ஓச்சிய விரை மென் தாதினால்—ஆகாயத்திற்செல்லும்படி வீசிய வாசனை பொருந்திய மெல்லிய பராகத்தினால், பசும்பொனில் குயிற்றிய பதியில் தூபிகைத்த சும்பு எலாம் வெள்ளியது ஆக்கும்—மாற்றுயர்ந்தபொன்னினாற்செய்தசுவர்க்கலோகத் திலுள்ள தூபியாகிய குடமுழுவதையும் வெண்ணிறமுடையதாகச் செய்யும் எ—று.

ஏ அசை. அகல் சூழலில் மெல் என்பவற்றின் லகரம்னகரமாகத்திரிந்தது. அகன் புனல்=அகன்ற நீர். பொனில் எலாம் என்பனதொகுத்தல். குயிற்றிய என்னு ம் பெயரெச்சம் பதியென்னுஞ் செயப்படுபொருட் பெயர்கொண்டது. தாதினால் வெள் ளியதாக்கும் எனவியையும்.

மதகின்வழியாகப் பாயும் வெள்ளம் எஞ்ஞான்றுங் குறைவின்றி நிற்றலால் தாழைகள் தழைத்து வளர்ந்துமலர்கின்றன. அம்மலர்களின் பராகங்கள் உதிர்ந்து காற் றினாலெள்ளப்பட்டுப் பொன்னகர்க்கணுள்ள மாளிகைமுதலியவற்றின் தூபிகைக்குடங் களில் இடைவெளியின்றிப் பற்றி வெள்ளியெனக் காண்பிக்குமென்பதாம்.

இச்செய்யுளால் தாழைகளின் சிறப்புக்கூறப்பட்டது. (௪0)

உற்றிட வரிதவ ணுழவர் நீத்ததார்
சுற்றிடுந் தாண்மிசை யிடறுஞ் சூல்வளை
தெற்றிடும் பூங்கொடி புடைக்குஞ் சேலின
மெற்றிடுந் தேம்பழ மிழுக்குந் தேன்களே.

இ—ள்: அவண் உற்றிட அரிது—அத்தொண்டைநாட்டின்கண்ணே சஞ்ச ரிக்க இயலாது (ஏனெனில்), உழவர் நீத்த தார் தாள்மிசை சுற்றிடும்— மள்ளர்கள் (தரித்துக்)கழித்தபூமாலைகள் கால்களிற் சூழ்ந்துகொள்ளும்; சூல் வளை இடறும்— க ருக்கொண்ட சங்குகள் இடறும்; பூங்கொடி தெற்றிடும்—மலர்களையுடையகொடிகள் த டுக்கும்; சேலினம் புடைக்கும்—கயன்மீன்கூட்டங்கள் அடிக்கும்; தேம்பழம் எற்றிடு ம்-தெங்கம்பழங்கள் எற்றும்; தேன்கள் இழுக்கும்- தேன்வெள்ளங்கள் வழுக்கும் எ-று.

ஏ அசை. இடு பகுதிப்பொருள்விகுதி. அரிதுஎன்பது ஈண்டு மறுதலையி ல் வந்தது. நீத்த என்னும் பெயரெச்சம் தார் என்னுஞ் செயப்படுபொருட் பெயர் கொண்டது. தாண்மிசையென்பதைப் பின்னைய தொடர்களுக்குமியைத்துப் பொரு ளுணர்க. இடறுதல்- நிலமென்றெண்ணிச் சங்கின்மேல் மிதிக்கும்போது அவை கள் காலூன்றுதற்கேற்ற நிலைக்களமாகாமையாற் புரளக் கால் நிலைபெயர்தல். எற்றுத ல்- முட்டியவிசையினாற் றள்ளுண்டு சிறிதுதூரம் பாய்தல். தேம்பழமென்பதற்கு இனிமையாகியபழமெனப் பொருள்கூறுவாருமுளர்; அஃதித்துணைச்சிறப்பின்று;தான் முட்டியவுடன்சிதைவுபெறத்தக்கபழங்களை எற்றிடுமெனக்கூறல்பொருந்தாமையின்.()

காணிமிர் கந்திகள் கான்ற பாளைமேன்
மீனினம் பாய்தலுஞ் சிதறி வீழ்வுறு
வானதோர் மருதவைப் படையுந் தன்மைய
வானுறு தாரகை வழுக்கிற் றொக்குமால்.

இ—ள்: கால் நிமிர் கந்திகள் கான்ற பாளைமேல்—அடியுயரப்பெற்ற கமுக மரங்கள் ஈன்றபாளைகளின்மேல், மீனினம் பாய்தலும்— மீன்கூட்டங்கள் பாய்ந்தவுடன், சிதறி வீழ்வுறு—(அப்பாளைமலர்கள்) உதிர்ந்துவிழுந்து, ஆனது ஓர் மருதவைப்பு அடையுந்தன்மைய--சிறந்தமருதநிலங்களைச்சாருந்தன்மையினையுடையன (ஆதலால்), வான் உறு தாரகை வழுக்கிற்று ஒக்கும்—ஆகாயத்திற்பொருந்தியநக்ஷத்திரங்கள் தவறி வீழ்தல்போலும் எ—று.

ஓர் ஆல் அசைகள். கான்றஎன்னும்பெயரெச்சம் பாளை என்னுஞ்செயப்படுபொருட்பெயர்கொண்டது. மீனினம்-மீனினதுதொகுதி எனவிரியும்;இருபத்தேழாஞ்செய்யுளிற் பிறந்தவர்கூட்டம்என்பதுபோல. பாய்தலும் உம்மீற்றுவினையெச்சம்.வழுக்கிற்று வினைமுற்றுத்தொழிற்பெயர். இச்செய்யுளாற்கமுகுகளின்சிறப்புக்கூறப்பட்டது.

மாகுல வல்லியின் மஞ்ஞை யாடல்போற்
கோகில மார்தருக் குழாத்தி னூசன்மேற்
பாகுல வின்சொலார் பனிக்கு மெல்லிடைக்
காகுலம் பிறர்கொள மகிழ்வி னாடுவார்.

இ—ள்: பாகு உலவு இன்சொலார்—பால்போன்றமாதுரியமாகியசொற்களைப்பேசுகின்ற பெண்கள்,கோகிலம் ஆர் தருக்குழாத்தின் ஊசல்மேல்—குயில்கள்நிறைந்துள்ள மரக்கூட்டங்களிற் கட்டப்பட்ட ஊஞ்சல்களின்மீது(இருந்து), பிறர் பனிக்கும் மெல் இடைக்கு ஆகுலம் கொள—(தம்மைக்கண்ட) பிறர் நடுங்குகின்ற மென்மையாகிய இடையின்பொருட்டு வருத்தமுற, மா குல வல்லியின் மஞ்ஞை ஆடல்போல் மகிழ்வின் ஆடுவார்—பெரிய கூட்டமாகிய கொடிகளில் மயிலாடுதல்போல உவகையுடன் ஆடுவார்கள் எ—று.

குலம்- கூட்டம். குலவல்லி என்பதை வல்லிக்குலமென மாற்றியுரைப்பினுமாம். தருக்குழாம் ஆறாம்வேற்றுமைத்தொகை. இருந்து என்பது சொல்லெச்சம். உலவு என்னும் வினைத்தொகையீண்டுவமவுருபு. இது ‘போலப்புரைய’ என்னும் நன்னூற்சூத்திரத்துப் பிறவுமென்றதனாலமையும். சொலார்—தொகுத்தல். ‘ஆகுலம் பிறர்கொள மகிழ்வினாடுவார்’ என்றதனால் அப்பெண்கட்கு ஆகுலமின்றென்பது பெறப்பட்டது. செயவெனெச்சங் காரியப்பொருளில்வந்தது. இடையின்பொருட்டு வருந்தலாவது: தனமுதலிய பாரங்களைத் தாங்கலாற்றாதொசியுமியல்பிற்றாகிய மெல்லிடை ஊஞ்சலாடுதலாலென்படுமோவென்றிரங்கல். ஊஞ்சலுக்குக்கொடிகளையும் பெண்களுக்கு மயிலையுமுவமித்தார். பால்போன் மாதுரியமாகப்பேசுகின்ற அம்மகளிர் மகிழ்தற்கேற்ப ஆடுந்தோறுங் குயில்கூவப்பெறுவனவென்பார், ‘கோகிலமார்தருக்குழாம்’ என்றார். மகிழ்வின் என்பதில் ஐந்தனுருபு உடனிகழ்ச்சிப்பொருள்பட மூன்றனுருபாகத்திரிக்கப்பட்டது. (சங)

வேறு.

ஊச லாற்றவர் குழைக்குடைந் திடுதலா லவரை
வீச லொப்பன வாடுதல் கிளிமொழி வெருவிப்
பேச லொப்பன வீழ்ந்திலர் பிழைத்ததீ தென்று
வேச லொப்பன கோகிலப் பறவைக ளிசைத்தல்.

இ—ள்: ஊசல் ஆடுதல்—(முன்னர்க்கூறியதன்மையமைய) ஊஞ்சல்கள் ஆடுதல், உற்றவர் குழைக்கு உடைந்திடுதலால் உவரை வீசல் ஒப்பன—(தம்மிடத்து) இருந்த பெண்களது காதுக்கு (உவமையாகாது) தோற்றலினால் அந்தப்பெண்களை(வேறிடத்தகற்றுமாறு) வீசுதல்போல்வன, கிளிமொழி— (அங்குள்ள) கிளிகள்பேசுதல், வெருவிப்பேசல் ஒப்பன—அஞ்சிப்பேசுதல்போல்வன; கோகிலப்பறவைகள் இசைத்தல்—குயிற்பக்ஷிகள் (கூவென்று) ஒலித்தல், வீழ்ந்திலர் ஈது பிழைத்தது என்று ஏசல் ஒப்பன—(ஊஞ்சல் சினந்து வீசியபோதும் பெண்கள்)வீழ்ந்திலார் இவ்வூஞ்சலே(தன் கருத்துமுற்றாது)தவறிற்றென்று பழித்தல்போல்வன எ—று.

ஊசலென்னுஞ்சொல்லைஊஞ்சலென்றும்வழங்குப. அகரச்சுட்டிற்கும்இகரச்சுட்டிற்குமிடையதாகிய உகரச்சுட்டுச் சிலவிடங்களில் அகரச்சுட்டின்மேனிற்பதை "ஒருமணத்தைச்சிதைவுசெய்துவல்வழக்கிட்டாட்கொண்டவுவனைக்கொண்டே" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளினுங்காண்க. முன்இருபத்தாறுஞ்செய்யுளில் உவைஎன்பதற்குமிவ்வாறுரைக்க. தொழிற்பெயரும் பாற்பொதுமையனவாதலின் பன்மைவினைமுற்றைப் பயனிலையாகக்கொண்டன. மொழி முதனிலைத்தொழிற்பெயர். கோகிலப்பறவை இருபெயரொட்டு.

கிளிகள்பேசக் குயில்கள்கூவப் பெண்கள் சோலைகளில் ஊஞ்சலாடுகின்றனர். அப்போது ஊஞ்சலாடுதல்'இப்பெண்கள் தமது காதழகால் நமதழகைக் குறைத்து வென்றிபெற்றுப்பகைஞராயினர்; ஆதலின் இவரைநாஞ்சுமந்துகொண்டிருப்பதுதகாது' என்றுநினைத்து அப்பெண்களைத்தூரத்தில்விழும்படி வீசுதல்போன்றது. கிளிகள்பேசுதல் 'ஐயகோ! இவ்வூஞ்சல் பெண்களை வீசுகின்றதே என்படுவரோ'என்று அச்சமொழி பேசுதல்போன்றது. குயில்கள்கூவுதல் 'ஊஞ்சலெறிந்தபோதும் பெண்கள் வீழ்ந்திலார் ஊஞ்சலே பிழைபட்டது' என்றுபழிக்குங்குறிப்புப்போன்றதென்பதுகருத்து.

காதிற்கு ஊஞ்சலுபமானமென்பதை "காதிற்கு— வள்ளை- ஒப்பரியகத்தரிக்கையூசலாம்" என உபமானசங்கிரகங்கூறுதலானறிக.

முப்பதாஞ்செய்யுண்முதலிதுகாறும் அந்நாட்டிலுள்ள சோலைமுதலியவற்றின் சிறப்புக் கூறப்பட்டது. (௪௪)

கூர்ப்புக் கொண்டகட் கொடிச்சியர் குளிர்புனங் காப்போ
ரார்ப்புக் கொண்டுகை விசைத்தெறி மணிக்கல்வந் தணையச்
சார்ப்புக் கொண்டதஞ் சிறகரால் விலக்கியத் தடத்துப்
பார்ப்புக் கொண்டுகொண் டெழுவன தோலடிப் பறவை.

இ—ள்: குளிர் புனம் காப்போர் கூர்ப்புக்கொண்ட கண் கொடிச்சியர்— குளிர்ந்த தினைப்புனத்தைக்காவல்செய்பவராகிய கூர்மைபொருந்திய நோக்கத்தையுடைய குறத்தியர்கள், ஆர்ப்புக்கொண்டு கை விசைத்து எறி மணிக்கல் வந்து அணைய— சத்தமிட்டுக் கையினால் வீசியெறிகின்ற இரத்தினமாகிய கவண்கற்கள் வந்துகிட்ட, தோல் அடி பறவை— தோல்பொருந்தியகால்களையுடைய பக்ஷிகள், சார்ப்புக்கொண்ட தம் சிறகரால்விலக்கி—(இருபுடையுஞ்)சார்த்துதலையுடையதமது சிறகினால்(அவற்றை) அகற்றி, அ தடத்து பார்ப்பு கொண்டுகொண்டு எழுவன—அந்தத் தடாகத்தில் வைக்கப்பட்ட தங்குஞ்சுகளை எடுத்தெடுத்துக்கொண்டுகிளர்வன எ—று.

கூர்ப்பு பண்புப்பெயர். குளிர் எறி என்பன வினைத்தொகை. காப்போர் என்னும் வினையாலணையும்பெயர் கொடிச்சியர்க்குவிசேடணமாய்நின்றது. ஆர்ப்புக்கொண்டு ஒருசொல். மணிக்கல் இருபெயரொட்டு.செயவெனெச்சங்காரணப்பொருளில்வந்த

து. சிறகு சிறகர் எனப்போலியாயிற்று. அணைய விலக்கி கொண்டுகொண்டு என்னும் வினையெச்சங்கள் தனித்தனி எழுவனஎன்பதனேடுமுடிந்தன.

கதிரைக்கவரும்பொருட்டுப் புனத்தில் நாற்றிசைகளினும்வரும் பறவைகளையும் மிருகங்களையுந்தவருது காண்பனவென்பார் 'கூர்ப்புக்கொண்டகண்'எனவும்,செழிப்புடையதென்பார் 'குளிர்புனம்' எனவும், எத்துணைத்தூரத்தினும் விசையோயாதுசென்று பறவைகளைத்தாக்குமாறு எறிந்தனரென்பார் 'விசைத்தெறி- கல்'எனவும்,வாவற்பறவையினிறகுபோன் மென்மையுடையதும், சுருங்குதற்கும்விரிதற்கும்ஏற்றதுமாகிய தோலைக் காலிலுடைய தாராமுதலியனவென்பார் 'தோலடிப்பறவை' எனவுங்கூறினர்.

தினைப்புனங்காப்போர் மணிக்கல்லைக் கவணில்வைத்தெறிதலை "எய்யானைவையுமிரலைமரைமான்பிறவுங்-கொய்யாதவேனற்குரல்கவர்ந்துகொள்ளாமன்-மையார்விழியாண் மணிக்கற்கவணிட்டுக்-கையாலெடுத்துக்கடிதோச்சிவீசினளே" என இவ்வாசிரியர்தாமே பின்னர்க்கூறுதலானுமறிக.

இச்செய்யுளால் தினைப்புனச்சிறப்பும் இரத்தினமிகுதியும் தடாகச்சிறப்புங் குறிக்கப்பட்டன. (சுகு)

வேறு.

கடற்பருகியமுகில் பெய்யுங் காட்சிபோ
லடற்பெரு மேதிக ளனைத்தும் புக்குராய்த்
தடப்புனல் வறிதெனப் பருகித் தம்முலைக்
குடத்திழி பாலினற் குறையைத் தீர்க்குமே.

இ—ள்: அடல் பெரு மேதிகள் அனைத்தும் புக்கு உராய்—வலிய பெரிய எருமைகளெல்லாம் புகுந்து செறிந்து, தடப்புனல் வறிது என பருகி— தடாகத்திலுள்ள நீர்அற்பமென்னும்படி குடித்து, கடல் பருகிய முகில் பெய்யுங்காட்சி போல் தம் முலைக்குடத்து இழி பாலினல்—சமுத்திரநீரைக்குடித்தமேகங்கள் (மழையைப்)பெய்யுந்தன்மைபோலத் தமதுமடியாகிய குடத்தினின்றுஞ் சிந்துகின்றபாலினல், குறையை தீர்க்கும்— அக் குறையைநீக்கும் எ—று.

மேகங்கள்கடலிலுள்ளஉவர்நீரைப்பருகி நன்னீராக்கிப்பெய்து அக்கடலை நிறைப்பதுபோல, பெண்ணெருமைகள் தடாகநீரைப்பருகித் தம்முலையினின்று சிந்தும் பாலினல் அக்குறையைத்தீர்ப்பன என்பதுதோன்ற 'கடற்பருகியமுகில்பெய்யுங்காட்சி போல்'என்ருர்.

ஏ அசை. கடல் ஆகுபெயர். கடற்பருகிய-இரண்டாம்வேற்றுமைத்தொகை. உராய் உரைந்து என்பதன் விகாரம். இதற்கு(நீரைக்)கலக்கி எனவும் பொருள்கூறுவர்.முலைக்குடம் ருபகம்.முகில்பெய்யுங்காட்சிபோல்-இழி எனஇயையும். மடியினின்றும்பால்சிந்துதல் மழைபெய்தல்போலுமென்க.

ஈன்றணித்தாய எருமைகள்சில கன்றை நினைத்தவழித் தாஞகப்பால் சிந்தப்பெறுவன; இதனை "ஈரநீர்படிந்திந்நிலத்தேசில- கார்களென்னவருங்கருமேதிக-ளூரினின்றகன்றுள்ளிடவுண்முலை-தாரைகொள்ளத்தழைப்பனசாலியே" என்னும் இராமாயணச் செய்யுளானுணர்க. "மோட்டெருமைவாவிபுகமுட்டுவராற்கன்றென்று-வீட்டளவும்பால்சொரியும்வெண்ணேயே" எனப் பிறர் கூறியவாறே தடாகத்திலுள்ள மீன்கள்பாய்ந்து மடியில் முட்டுதலாற்பாலுகுப்பனவென்பாருமுளர்.

இச்செய்யுளால் எருமைகளின்சிறப்பும் தடாகச்சிறப்புங்கூறப்பட்டன. ()

பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலி
னாட்டிய நிமலன்முன் னந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமாற்
கோட்டுயர் தடந்தொறுங் குவளை பூத்தவே.

இ—ள்: கோடு உயர் தடந்தொறும் குவளை பூத்த—கரையுயரப்பெற்ற தடாகங்கடோறுஞ் செங்கழுநீர்ப்பூக்கள் மலர்ந்திருத்தல் (எவைபோலுமெனில்),அளி பாட்டியல் முரல் பதுமக்கோயிலில் நாட்டிய நிமலன்முன்—வண்டுகள் பண்ணைப்பாடுகின்ற தாமரையின் பெயரியைந்த கோயிலின்கண்ணே தாபித்த மலரகிதராகிய சிவபெருமானது சந்நிதானத்தில், நந்தி—நமிநந்தியடிகள், நீரிடை மாட்டிய பல் பெரும் சுடரை மானும்—நீரின்கண்ணே ஏற்றிய பல பெரியதீபங்களைப்போலும் எ—று.

ஆல் ஏ அசைகள். பாட்டியல்- பாடலின்றன்மை=பண். முரல் என்னும் வினைத்தொகை பதுமமென்னும் பெயர்கொண்டது. பதுமக்கோயில்=கமலாலயம்; இது இலக்குமியாற் பூசிக்கப்பட்டதலமெனப் பொருள்படும்; சமானபதமாய்நிற்றலின்'பதுமக்கோயில்'எனப்பட்டது.நாட்டிய என்னும்பெயரெச்சம் நிமலன் என்னுஞ்செயப்படுபொருட்பெயர்கொண்டது. நிர்மலன்என்னும்வடமொழியை நிமலன்எனவும்வழங்குவது.நந்தி தலைக்குறை.கோடுயரெனற்பாலதுகோட்டுயரென டகரவொற்றிரட்டித்ததை "நெடிலோடுயிர்த்தொடர்க்குற்றுகரங்களுட்-டறவொற்றிரட்டும் வேற்றுமைமிகவே" என்னும் நன்னூற்சூத்திரத்திலுள்ள 'மிகவே'என்பதனாலமைக்க. குவளை ஆகுபெயர். பூத்த வினைமுற்றுத்தொழிற்பெயர்.

அந்திக்காலத்தின்மலர்தலாலும் செந்நிறத்தாலும் குமிழ்த்தவடிவாலும் குவளைமலர்க்குத் தீபத்தையுவமித்தார்.

### நமிநந்தியடிகள் தண்ணீரில் விளக்கேற்றியசரித்திரம்.

சோணாட்டில் ஏமப்பேறூரில் அந்தணர்குலத்திற் பிறந்த நமிநந்தியடிகளென்பவர் திருவாரூர்க்கெழுந்தருளி வன்மீகநாதரைத்தரிசித்தபின் அங்குள்ள அரனெறியப்பராலயத்திற் சுவாமிதரிசனஞ்செய்யப் புகுந்தபோது தீபங்குறைந்தமையால் மிகுதியாகத் தீபமேற்றித் தரிசிக்கவேண்டுமென்று சிந்தித்து, சமீபத்திலிருந்தவீடுகளிற் புகுந்து "எங்கள்பெருமானுக்குத் தீபமேற்ற நெய்தாருங்கள்" என்று கேட்டனர். அங்குள்ளார் புறச்சமயிகளாகிய சமணராதலால் நெய் கொடாராய்"நுங்கடவுள் கையிற்றானே தீபமிருக்கின்றதே! நீர் தீபமேற்றவேண்டியதென்னை? வேண்டுமானாற் கமலாலயதீர்த்தஜலத்தையள்ளி நிறைத்துத் தீபமேற்றுவீராக" என்று பரிகாசஞ்செய்தனர். அதுகேட்ட நமிநந்தியடிகள் மனநொந்து ஸ்வாமிசந்நிதியிற் போய்நிற்ப "இந்தக் குளத்தினீரை அள்ளி வார்த்து விளக்கெரிப்பாயாக"என்று ஓரசரீரிவாக்குப் பிறந்தது. அதுகேட்ட நமிநந்தியடிகள் மனமுவந்து திருக்குளத்திலுள்ள தண்ணீரை மொண்டுவந்து அகல்களினிறைத்து விளக்கெரித்தனர். (சஎ)

கலனிடைத் தருவதுங் கானத் துள்ளதும்
பொலனுடைப் பொருப்பிடைப் பொருளு மல்லது
நலனுடை நாட்டவர் நயத்த லின்றியந்
நிலனிடைப் பொருள்பகர் வழக்க நீத்ததே.

இ—ள்: கலனிடை தருவதும்—மரக்கலங்களிலேற்றிக் கொண்டுவருந்திரவியங்களையும், கானத்து உள்ளதும்—காட்டிலுள்ளதிரவியங்களையும், பொலன் உடை பொருப்பிடை பொருளும்—அழகினையுடைய மலையிலுண்டாகின்ற திரவியங்களையும்,

அல்லதும்—அவையல்லாத நகர்படுதிரவியங்களையும், நலன் உடை நாட்டவர் நயத்தல் இன்றி—நன்மையினையுடைய அத்தொண்டைநாட்டார் விரும்புதலின்மையால், அநிலனிடை பொருள் பகர் வழக்கம் நீத்தது— அத்தொண்டைநாட்டின்கண்ணே திரவியங்களைக் கூறிமாறுகின்ற வழக்கம் ஒழிக்கப்பட்டது எ—று.

நாடுபடுதிரவியங்கள்போலக் கடல்படுதிரவியமுதலிய பிறபொருள்களும் அந்நாட்டினிறைந்திருத்தலால், தம்நாட்டுப் பொருள்களைக்கூறிக்கொடுத்து அப்பொருள்களை மாறுதலாகிய பரிவர்த்தனை அங்குள்ளாரால் ஒழிக்கப்பட்டதென்பது கருத்து.

ஏ அசை. கலம் நலம் நிலம் என்பவற்றினிறுதிமகரம்போலியாய்நின்றன. பொன் என்பது "பொன்னென்கிளவியீறுகெடமுறையின்-முன்னர்த்தோன்றும்லகாரமகாரஞ்-செய்யுண்மருங்கிற்றொடரியலான" என்னுந் தொல்காப்பியச்சூத்திர விதிப்படி பொலம்என்றானது; இதனைப் பிற்காலத்து நிகண்டாசிரியர் பொன்னின் பரியாயநாமங்களுளொன்றாகச்சேர்த்தனர்; இறுதிமகரம்போலியாயிற்று. உடைய இரண்டும் ஈறுதொக்கன. இன்றியென்னும் வினையெச்சம் ஏதுவில்வந்தது. நீத்தது என்பதிற் படுவிகுதி தொக்கது.

செல்வம் விளைவு வளமிகுதி செங்கோன்மை நோயின்மை குறும்பின்மை எனப்படும் நாட்டமைதியாறும் பொருந்தியதென்பார் 'நலனுடைநாடு' என்றார்.

கலனிடைத்தருவது=கடல்படுதிரவியம். கானத்துள்ளது=காடுபடுதிரவியம். பொருப்பிடைப்பொருள்=மலைபடுதிரவியம். அல்லது=நகர்படுதிரவியம். அந்நிலனிடைப்பொருள்=நாடுபடுதிரவியம்.

கடல்படுதிரவியம்:—உப்பு பவளம் முத்து சங்கு ஒக்கோலை என்பன. காடுபடுதிரவியம்:—அரக்கு இறால் தேன் மயிற்பீலி நாவி என்பன. மலைபடுதிரவியம்:—மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம் என்பன. நகர்படுதிரவியம்:—கண்ணுடி பித்தன் மந்தி யானை அரசன் என்பன. நாடுபடுதிரவியம்:—செந்நெல் செவ்விளநீர் சிறுபயறு வாழை கரும்பு என்பன. இவற்றை "அரக்குடனிறடிதேனேயாய்மயிற்பீலிநாவி-நெருக்கியகாட்டினுற்றநெடுந்திரவியங்களைந்தாம்-திரைக்கடற்படுவவுப்புச்செய்யவொண்பவளம்வெண்முத்-திரைத்தெழுசங்கொக்கோலையிவ்வைந்துமென்னலாமே" எனவும்,"செந்நெல்செவ்விளநீர்மற்றைச்சிறுபயறுடனேவாழை-கன்னலிவ்வைந்துநாட்டிற்கருதியதிரவியப்பேர்-மின்னுகண்ணுடிபித்தன்வெந்திறன்மந்தியானை-மன்னவனகரியைந்துவருந்திரவியங்களென்ப" எனவும், "கறியொடுகோட்டமிக்ககாரகிலொடுதக்கோல- நறியகுங்குமமைந்தென்பநன்மலைத்திரவியப்பேர்" எனவும்வருஞ் சூடாமணிநிகண்டானுணர்க.

இச்செய்யுளால் நாட்டமைதி கூறப்பட்டது. (சஅ)

யாழ்க்கையர் பொருநருக் கிறைவ ரேழிசை
வாழ்க்கைய ரளவையின் வகுத்த பாடலைக்
கேட்குநர் நன்றென மருப்புக் கிம்புரிப்
பூட்கைக ளுதவுவார் பொதுவி றேறுமே.

இ—ள்: யாழ்க்கையர்—யாழையேந்தியகையினையுடையபாணர்களும், பொருநருக்கு இறைவர்-கூத்தர்களுக்குத் தலைவர்களும்,எழு இசை வாழ்க்கையர்-சப்தசுரங்களையும்பாடுதலாற்சீவிப்பவர்களும்(ஆகியமூவினத்தவரும்கூடி) அளவையின் வகுத்த பாடலை கேட்குநர்— வரையறைப்படிபாடிய பாடல்களைக்கேட்கின்ற பிரபுக்கள், நன்

றென—இதுநன்றாயிருக்கின்றதென்று(மதித்து), பொதுவில்தோறும்—சபைகடோறும், மருப்பு கிம்புரி பூட்கைகள் உதவுவார்—கொம்பின்கண்ணே கிம்புரியையுடைய யானைகளைப்(பரிசாகக்) கொடுப்பார்கள் எ—று.

ஏ அசை. ஏழிசையாவன: குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன. அளவை: பரதசாஸ்திரத்திற் கூறிய காலம் தாளம் தானம் முதலியன தவறுபடாமற்பாடுதல். மருப்புக்கிம்புரி என்பதைக் கிம்புரிமருப்பு எனமாற்றியுரைப்பினுமாம். பொதுவில்—பொதுவாகிய இல்லம்.

பேரியாழ் சகோடயாழ் மகரயாழ் செங்கோட்டியாழ் என்னும் நால்வகை யாழையும், பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல் செலவு விளையாட்டு கையூழ் குறும்போக்கு என்னும் தொழில்விதங்களெட்டுமமையப்பாடிக் கைவந்தவரென்பார் 'யாழ்க்கையர்' எனவும், தாளம் அபிநயம் முதலியவற்றாற் றவறாதுநடித்து, மற்றைய கூத்தர்களையெல்லாம்வென்று விருதுபெற்றவரென்பார் 'பொருநருக்கிறைவர்' எனவும், சங்கீதம்பாடுதலையே தமதுசீவனோபாயமுயற்சியாகக்கொண்டு பெரும்பொருளீட்டி வாழ்பவரென்பார் 'ஏழிசைவாழ்க்கையர்' எனவும், அம்மூவினத்தினரும் ஒருமித்துநிகழ்த்தும்பாடல் பாற்றியக்கமுநீழலும்போலமைதிபெறுதலின் 'அளவையின்வகுத்தபாடல்' எனவும், அத்தகையபாடற்குப் பரிசாகக் கொடுத்தற்கேற்ற விலையுயர்ந்த யானைகளென்பார் 'மருப்புக்கிம்புரிப்பூட்கைகள்' எனவும் கூறினார்.

இச்செய்யுளாற் சங்கீதச்சிறப்புக்கூறப்பட்டது. (௪௯)

கஞ்சிதேய்ப் புண்டகில் கமழும் பூந்துகில்
வஞ்சிதேய்ப் புண்டன மருங்கு லாரடி
பஞ்சிதேய்ப் புண்டன பணியத் தாக்கலாற்
குஞ்சிதேய்ப் புண்டன குமரர் கூட்டமே.

இ—ள்: கஞ்சி தேய்ப்புண்டு அகில் கமழும் பூ துகில்— கஞ்சிப்பசைதேய்க்கப்பட்டு அகிற்புகை (ஊட்டப்பெற்றுக்)கமழுகின்ற பொலிவாகிய ஆடையையணிந்த,வஞ்சி தேய்ப்புண்டு அன மருங்குலார்—வஞ்சிக்கொடி (முன்னையினும் மென்மையுறத்) தேய்க்கப்பட்டாற்போன்ற (அத்துணைமென்மையான) இடையினையுடையபெண்களது, பஞ்சி தேய்ப்புண்டன அடி—செம்பஞ்சூட்டப்பட்டனவாகியகால்கள், பணிய தாக்கலால்—வணங்குந்தோறும் உதைத்தலினால்,குமரர்கூட்டம் குஞ்சி தேய்ப்புண்டன—காளையர்கூட்டம் குடுமிதேயப்பெற்றன எ—று.

ஏ அசை. உண் செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தவந்தது. அகில் ஆகுபெயர். வஞ்சி-ஓர்கொடி. அன-தொகுத்தல். பஞ்சிதேய்ப்புண்டன வினைமுற்றுப்பெயரெச்சம்; வினைமுற்றாகக்கொண்டு அடிக்குப்பயனிலையெனினும் இழுக்காது; அவ்வாறு கொள்ளின் தாக்குதற்கு அடியென்னும்வினைமுதல் இயைக்க. செயவெனெச்சங் காரணகாரியமிரண்டுமின்றி நின்றது.

"கொழுநன்சொற்கடவாதுறைகொள்கையே- வழுவினல்லறம்வான்றவமாற்றுதல்-தொழுதுதெய்வம்பராய்மலர்தூவுதல்-பழுதில்கற்புடைப்பத்தினிக்கென்பவே" எனக்காசிகண்டங்கூறுதலின், ஆடவர்பணிதலும் மகளிரவரையுதைத்தலும் இழுக்காமேயெனின் "மனைவியுயர்வுங்கிழவோன்பணிவு-நினையுங்காலைப்புலவியுளுரிய" என்றாசிரியர்தொல்காப்பியனாராதலிற் புலவிக்கணஃதிழுக்காகாதென்க. (௫௦)

அன்றிலம் பெடைகளை யணுகி யன்னைகே
ணன்றென வினையின்மே னடந்த நாயக
ரின்றுவந் திடுவரிங் கெம்பொ ருட்டினு
லொன்றுநீ யிரங்கலென் றுரைக்கின் றூர்சிலர்.

இ—ள்: சிலர் அன்றிலம்பெடைகளை அணுகி— சிலபெண்கள் (தம்மைப் போலப் பிரிந்து புலம்புகின்ற) பெடையன்றில்களைச் சமீபித்து, அன்னை கேள்— தாயே கேட்பாயாக, நன்று என வினையின்மேல் நடந்த நாயகர்—நல்லதென்றுகருதி வினைவயிற்பிரிந்துசென்ற (எங்கள்) கணவர், இன்று இங்கு வந்திடுவர்—இற்றைத்தினத்தில் இங்கே வந்துசேர்வார் (ஆதலால்), எம்பொருட்டினுல் நீ ஒன்றும் இரங்கல் என்று உரைக்கின்றூர்—எங்கள்காரணமாக நீ சிறிதேனும் புலம்பற்க என்று சொல்லுகின்றூர்கள் எ—று.

தங்கணவர் போர்வயிற்பிரிந்துசென்று பலநாட்கழிந்தமையானும் வருநாளணுகியமையானும் விரகமேலிட்ட சிலபெண்கள், சேவலைப்பிரிந்து வருந்தும் பெடையன்றிலைத் தமக்காக வருந்துவதென்றெண்ணி, அதனையணுகி, 'தாயே! நங்கணவர் இனிக் காலந்தாழ்க்கமாட்டார்; இற்றைத்தினத்தில் வருவது திண்ணம்; ஆதலாலெமக்காக நீ கவலைப்படுதலையொழி' என இன்சொற்கூறுவரென்பதுகருத்து.

பிரிவாற்றூமையாற் பெண்கள்வருந்துகின்றனரென்பதுகுறிப்பு.

அம் சாரியை. ஆணன்றிலைப்பிரிந்திரங்கும் பெடையன்றிலைத் தமக்காகப்புலம்புவனவென்று காமமயக்கத்தாற்சிந்தித்தலின் 'அன்னை' எனவிளித்தனர்; இது மரபுவழுவமைதி. அண்மைவிளியாதலினியல்பாயிற்று. ஒன்று அற்பமென்னும் பொருளில்வந்தது; உம்மை இழிவுசிறப்பு. (ருக)

ஆடியல் கருங்கணுஞ் சிவப்புற் றங்கமும்
வாடுவ தாகியே மதன வேர்வுறாக்
கூடிய மகளிருங் குமரர் தங்களை
யூடிய மகளிரு முலப்பின் றூயினூர்.

இ—ள்: ஆடு இயல் கரும் கணும் சிவப்புற்று—இமைத்தல்பொருந்திய கரிய கண்கள் சிவக்கப்பெற்று, அங்கமும் வாடுவது ஆகி—சரீரம் வாடப்பெற்று, மதனவேர்வு உறு குமரர்தங்களை கூடிய மகளிரும்—காமவேர்வையுண்டாகிக் காளையர்களைச்சேர்ந்த பெண்களும், (குமரர்தங்களை) ஊடிய மகளிரும் உலப்பின்று ஆயினூர்— அக்காளையர்களை வெறுத்தபெண்களும் அந்நாட்டில் அளவற்றவராயினூர் எ—று.

முன்னையஉம்மைகளிரண்டும் ஏகாரமும் அசைகள். ஆடு முதனிலைத்தொழிற்பெயர். இயலுதல்-பொருந்துதல். கருங்கணும் தொகுத்தல். குமரர்தங்களை தாப்பிசை. கண்சிவத்தன்முதலியன காமமீறிக் கணவரைக் கலந்தாரிடத்துக் காணப்படுமடையாளங்கள்; "வாயிற்சிவப்பைவிழிவாங்கமலர்க்கண்வெளுப்பைவாய்வாங்கத்-தோயக்கலவியமுதளிப்பீர்" என்றூர் பிறரும். (ருஉ)

அகனமர் கணிகைய ரடிகள் சூடியே
முகனுறு முவகையான் முயங்கி யன்னவர்
நகனுறு குறிகொளீஇ நாளுங் காமநூற்
றகைமைசெய் காளையர் தொகுதி சான்றதே.

இ—ள்: அகன் அமர் கணிகையர் அடிகள் சூடி—தம்மனத்திற் குடிகொண்ட பொதுமகளிரது கால்களைச்(சிரமேற்)புனைந்து, முகன் உறும் உவகையால் முயங்கி—(அதன்மேல் அவரது)முகத்திற்றோன்றும் மகிழ்வினாலே தழுவி, அன்னவர் நகன் உறு குறி கொளீஇ—அப்பெண்களது நகத்தினாலுண்டாகிய குறிகளை ஏற்று, நாளும் காமநூல் தகைமை செய் காளையர்தொகுதி சான்றது-தினந்தோறும் மதனாகமத்திற் கூறியதிறமையைநடாத்துகின்ற இளைஞர்களதுதொகை(அந்நாட்டில்)மிகுந்தது எ-று.

ஏகாரங்கள் அசைகள். அகம் முகம் நகம் என்பவற்றினிறுதிமகரம் போலியாயின. காளையர்க்ககத்தன்புதோன்றியவழியும் கணிகையர்க்குப் புறத்தன்பேதோன்றிற்றென்பார் 'அகனமர்கணிகையர்' எனவும் 'முகனுறுமுவகை'எனவும்விசேடித்தார். கொளீஇ சொல்லிசையளபெடை. காமநூற்றகைமை என்றது ஆலிங்கனம் கரணம் முலியவற்றை. புணரத்தலைப்படுங்கால் "ஊடுதல்காமத்திற்கின்பமதற்கின்பங்-கூடிமுயங்கப்பெறின்" என்றதிருக்குறட்கேற்ப நாயகி ஊடுதலும், நாயகன் ஊடறீர்த்துப்புணர்தலும், அங்ஙனம்புணரும்போது நகக்குறியழுத்துதலும் பிறவும் நிகழ்வது முறையாதலின் இவ்வாறுகூறினார். (௫௫)

வாளைக ளிகல்புரி வயலும் வாவியும்
பாளையொ டுற்பலம் பதும நாறுமால்
வேளயர் தடங்கணார் விரைமென் றாளிணை
காளையர் குஞ்சியுங் கரமு நாறுமால்.

இ—ள்: வாளைகள் இகல்புரி வயலும் வாவியும்— வாளைமீன்கள்(ஒன்றோடொன்று)போர்செய்கின்றவயல்களிலுந்தடாகங்களினும், பாளையொடு உற்பலம் பதுமம் நாறும்—கமுகம்பாளையும் நீலோற்பலமலரும் தாமரைமலரும் கமழும்; வேள் அயர் தடம் கணார் விரை மென் தாளிணை— ஆசையை விளைக்கின்ற விசாலித்த கண்களையுடைய மங்கையரது வாசனையூட்டப்பெற்ற மெல்லியஇரண்டுகால்களும், காளையர் குஞ்சியும் கரமும் நாறும்—இளைஞர்களது குடுமியினுங் கைகளினுங் கமழும் எ—று.

ஆல் இரண்டும் அசைகள். வாளைகளிகல்புரி என்பதை வாவியோடுமியைத்துக்கொள்க. "கடிசொலில்லைகாலத்துப்படினே" என்பதனால் உத்பலம் என்னும் வடமொழித்தகரவொற்று றகரவொற்றாகி உற்பலமெனநின்றது. உற்பலம் பதுமம் ஆகுபெயர்கள். ஒடு எண்ணிடைச்சொல், வேள் முதனிலைத்தொழிற்பெயர்; அயர்தல் செய்தல். இவ்வாறன்றி, (பார்வையினாலே)மன்மதனும் மயங்கத்தக்க கண்ணையுடையாரெனப் பொருள்கூறினுமாம்; இப்பொருட்கு உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. மெல் என்பது ஈறுதிரிந்தது.

ஊடறீர்க்கும்படி ஆடவர் வணங்க உதைத்தலினாற் குடுமியிலும், பற்றிவருடுதலாற் கைகளிலும் பெண்களது கால்மணம் பற்றுமென்க.

வயலினும் வாவியினும்பாளைமுதலியவை கமழுதல்போலக் காளையரது குடுமியிலுங் கைகளிலும் கணிகையரதுகாலிலூட்டிய வாசனை கமழுமென்பதூஉம்,காலிலூட்டியவாசனையே இவ்வாறுகமழுமாயின் அவர்மேனியிற்பரிமளமெவ்வாறுமோ என்பதூஉம், அக்கணிகையர்மேற் காளையர் பேரன்புவைத்தொழுகினரென்பதூஉம் இச்செய்யுளாலுணர்த்தப்பட்டன.

தாளிணைகளிற் குஞ்சியுங்கரமும்நாறுமெனப்பொருள்கூறுவாருமுளர்.

ஐம்பதாஞ்செய்யுண்முதலிதுகாறும் ஆடவர்களும் பெண்களும் காமித்தலும் கலந்துகளித்தலும் வருணிக்கப்பட்டன. (௫௪)

சேவக மணைவன கரிகள் சேனைகள்
காவக மணைவன கலைகள் புள்ளினம்

பூவக மணைவன பொறிவண் டாயிடைப்
பாவக மணைவன பாட லாடலே.

இ—ள்: ஆயிடை—அத்தொண்டைநாட்டில், கரிகள் சேவகம் அணைவன—யானைகள் துயிலிடத்தை அடைவன; சேனைகள் (சேவகம் அணைவன)—சேனைகள்வீரத்தைப்பொருந்துவன; கலைகள் கா அகம் அணைவன—சாஸ்திரங்கள்காத்தலையுடைய மனத்தையடைவன; புள்ளினம் (காவகம் அணைவன)— பறவைக்கூட்டங்கள் சோலையை அடைவன; பொறி பூ அகம் அணைவன— இலக்குமிக்ள் பொலிவார்ந்த மாளிகையைஅடைவார்கள்; வண்டு(பூவகம் அணைவன)—வண்டுகள் பூக்களைஅடைவன; பாடல் பா அகம் அணைவன—பாட்டுக்கள் பாவினுறுப்பைப்பொருந்துவன; ஆடல் (பாவகம் அணைவன)—நடனங்கள் அபிநயத்தைப் பொருந்துவன எ—று.

அத்தொண்டைநாட்டில் எல்லாம் தத்தமக்குவேண்டியஇடங்களிற் பொருந்திச் சிறந்தனவென்பது தாற்பரியம்.

ஏ. அசை. கலைகட்காம்போது கா முதனிலைத்தொழிற்பெயர். பறவைகட்காம்போது காவகம்=சோலையினிடம். வண்டுகட்காம்போது பூவகம்= பூவினிடம். பொறி என்னும் உயர்திணைச்சொல்லும் வண்டென்னும் அஃறிணைச்சொல்லும் செய்யுட்சிறப்புநோக்கி அணைவன என்னும் அஃறிணைப்பன்மை வினைமுற்றோடு முடிந்தன; பொறி சூரியன் சந்திரன் என்னும் பெயர்கள்போறலினஃஙனமுடிந்ததென்பாருமுளர்.

புள்ளினம் காவகமணைவன, வண்டு பூவகமணைவன என்பவற்றில் அகம் என்பதை ஏழனுருபாகக் கொள்ளினுமாம். அ இடை என்பது "தூக்கிற்சுட்டு-நீளின்யகரமுந்தோன்றுதனெறியே" என்றவிதிப்படி சுட்டுநீண்டவழி யகரந்தோன்றிமுடிந்தது. சாஸ்திரங்கள் காத்தலையுடைய மனத்தையடைதலாவது: உயர்குலத்தவரும் விவேகபுத்தியுடையவருமாகிய மகான்களிடத்திற்சேர்தல். (ருரு)

ஆடக மாமதி லம்பொற் கோபுர
நீடிய மண்டப நெறிகொ ளாவணம்
பாடலொ டாடிடம் பிறவும் பாலிநன்
னாடுள பதிதொறு நண்ணி யோங்குமே.

இ—ள்: ஆடக மா மதில்— பொன்னாலாகிய பெரிய மதிலும், அம் பொன் கோபுரம்—அழகிய பொன்னாலாகிய கோபுரங்களும், நீடிய மண்டபம்—நெடிய மண்டபங்களும், நெறி கொள் ஆவணம்—வழியையுடையவீதிகளும், பாடலொடு ஆடு இடம்-பாட்டினுடனே நிருத்தஞ்செய்கின்ற நாடகசாலைகளும், பிறவும்— இவைபோன்ற பிறவும், பாலி நல் நாடு உள் பதிதொறும் நண்ணி ஓங்கும்—பாலியாறுசூழ்ந்த நல்ல (அந்தத்)தொண்டைநாட்டிலுள்ள நகரங்கடோறுஞ் செறிந்து சிறக்கும் எ—று.

ஏ அசை. ஆடலின்கட் பாடலும்வேண்டப்படுதலாற் 'பாடலொடாடிடம்' என்றார். "பதங்களிற்றண்ணுமைபாணிபண்ணுற-விதங்களின்விதிமுறைசதிமிதிப்பவர்" என்றார் கம்பநாட்டாழ்வாரும்; பாடுமிடமும் ஆடுமிடமுமெனவுரைப்பாருமுளர்.

இச்செய்யுளால் அத்தொண்டைநாட்டிலுள்ள நகரங்களின்சிறப்புச்சுருக்கியுணர்த்தப்பட்டது. (ருசு)

தெண்டிரை யுலகினிற் சீர்பெற் றோங்கிய
மண்டல மெங்கணு மதிக்க நின்றதோர்
தொண்டைநன் னாட்டணி சொல்லி னமினித்
தண்டமிழ் வளநகர்த் தன்மை கூறுவாம்.

இ—ள்: தெள் திரை உலகினில் சீர்பெற்று ஓங்கிய— தெளிந்ததிரையையுடைய கடலாற்சூழப்பட்ட பூவுலகத்திற்சிறப்புற்றுயர்ந்த, மண்டலம் எங்கணும் மதிக்க நின்றது ஓர் நல் தொண்டைநாட்டு அணி சொல்லினும்—தேசங்கள்யாவும் மதிக்கும்படி நிலைபெற்ற நல்ல தொண்டைநாட்டின்சிறப்பைக்கூறிமுடித்தாம்; இனி—இப்பால், தண்தமிழ் வள நகர் தன்மை கூறுவாம்—செந்தமிழ்வழங்குகின்ற வளத்தினையுடைய காஞ்சிநகரத்தின்சிறப்பைச் சொல்லுவாம் எ—று.

ஓர் அசை. தெண்டிரை-அன்மொழித்தொகை. தண்டமிழ்=குளிர்ந்ததமிழ்; எனவே செந்தமிழென்பது பெற்றாம். மண்டலமென்பது சேரமண்டலம் சோழமண்டலம் பாண்டிமண்டலம் முதலியவற்றை. ஓங்கியஎன்னும்பெயரெச்சத்தில் இன் இடைநிலை ஈறுகுறைந்து நின்றது.

அகத்தியமுனிவர் வீற்றிருந்து தமிழ்பரப்பிய விசேடமுடைமையால் 'தண்டமிழ்வளநகர்' என்றார். இதனை "காசியினின்றும்போந்துகம்பர்தாமருளப்பெற்று-மாசிலாக்கச்சிமூதூர்மன்னிவீற்றிருந்துபூமே- லாசிலாத்தமிழ்பரப்பியருந்தமிழ்க்குரவுபூண்ட- தேசினன்மலயவெற்பிற்குறுமுனிதிருத்தாள்போற்றி" என்னுங்காஞ்சிப்புராணச் செய்யுளானுணர்க. முன்னர் அவையடக்கத்தில் 'செந்தமிழ்க்குவரம்பெனச்செப்பியமூந்துகாஞ்சி' என்றதூஉமிக்கருத்துப்பற்றியேயென்க.

இச்செய்யுளாற் கூறிமுடிந்ததியாதென்பதும் மேற்கூறப்படுவதியாதென்பதுமுணர்த்தப்பட்டன. (௫௭)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௧௪௯.

---

# திருநகரப்படலம்.

திரு-அடைமொழி. நகரப்படலமென்றது நகரத்தினதுசிறப்பைக்கூறும் படலமென விரிதலால் உருபும்பயனுமுடன்றொக்க தொகை. நகரமென்றது காஞ்சியை.

## இப்படலத்திற் கூறப்படுவன:—

காஞ்சிநகரச் சிறப்பும், இப்பூவுலகத்திலுள்ள பலமுனிவர்கள் அங்குள்ள கச்சபாலயத்திற்சிவபெருமானைப் பூசித்துக்கொண்டிருந்தபிரமதேவனையணுகித்தங்கள் மனமொருப்படத்தவஞ்செய்தற்குரிய வனமொன்றைக் கூறவேண்டுமென்று பிரார்த்திக்க, அப்பிரமதேவர் ஒரு தருப்பையையெடுத்துச் சக்கரமாகவளைத்து இது ஓய்ந்தஇடமே நுமக்கேற்ற தபோவனமாமென்றுகூறி உருட்டியதும், முனிவர் அதன்பின் சென்று அதுதங்கிநைமிசாரணியமென்னும்பெயர்பெற்ற இடத்தையே தமக்குரிய தபோவனமாகக்கொண்டு அங்கிருந்து தவஞ்செய்து யாகமுடித்துப் பரிசுத்தராயிருப்பச் சூதமாமுனிவர் அவ்வனத்திற் போயதும், முனிவர்கள் அவரையுபசரித்துக் கந்தஸ்வாமியின் திவ்வியசரித்திரங்களைத் தமக்குப்போதிக்கும்படி வேண்டியதும், அச்சூதமாமுனிவர் அதற்குடன்பட்டுப் போதிக்கத்தொடங்கியதுமாம்.

மாவுல கெங்கு மலர்த்தட மாகத்
தாவறு சீர்புனை தண்டக நாடே

மேவிய கஞ்சம தாவதின் மேவுந்
தேவினை யொத்தது சீர்பெறு காஞ்சி.

இ—ள்: மா உலகு எங்கும் மலர்த்தடம் ஆக—பெரிய பூவுலகமுழுதும் (ஒ ர்) தாமரைத்தடாகம் (போல்) ஆக, தா அறு சீர் புனை தண்டகநாடே மேவிய கஞ்சமது ஆ—குற்றமற்ற கீர்த்தியை வகித்த தொண்டைமண்டலமே (அத்தடாகத்திற்) பொருந்திய தாமரைமலர் (போல்) ஆக, சீர் பெறு காஞ்சி—சிறப்புப்பெற்ற காஞ்சிநகரானது, அதில் மேவும் தேவினை ஒத்தது—அத்தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவரை நிகர்த்தது எ—று.

மகா என்னும் வடசொல் மா எனத்தமிழில் வழங்கிற்று. உலகமென்பது உலகெனநின்றது. ஏ தேற்றம். கஞ்சம் ஆகுபெயர். கஞ்சமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. ஆக என்பது ஆ எனத்தொக்கது. செயவெனெச்சங்கள் காரணகாரியமிரண்டுமின்றிநின்றன.

எண்ணிறந்த நாடுகளையுடைய புண்ணியபூமியாதலின் 'மாவுலகு' எனவும், நீர்நிலையைச்சிறப்பிக்குந் தாமரைமலர்போன்று, கதிர்கண்டு மலர்தலும் இருள்கண்டு குவிதலுமின்றி, அப்பூவுலகத்துள்ள நாடுகளெவற்றினுஞ் சிறந்துவிளங்குதலின் 'தாவறுசீர்புனைதண்டகநாடேமேவியகஞ்சமதா' எனவும், சலப்பிரளயத்தாலழிந்த உலகங்களெல்லாவற்றையுந் தாமரைமலரில் வீற்றிருந்து சிருட்டித்துப் பண்டையபெற்றியனவாக விளங்கவைப்பவரும் தேவத்தலைவரும் நான்முகமுடையவருமாகிய பிரமதேவர் போன்று, உலகங்களெல்லாம் நிலைபெறுதற்குக்காரணமாய் அவற்றிற்கெல்லாந் தலைமைபூண்டு நாற்றிசைக்கோபுரங்களுடன் பொலிதலின் 'அதின்மேவுந்தேவினையொத்தசீர்பெறுகாஞ்சி' எனவும் கூறினர். ஆகவே பூவுலகத்திலுள்ள நகரங்களெவற்றினுங் காஞ்சிநகர் சிறந்ததென்பது பெறப்பட்டது. இதனை "கச்சிமாநகரோர்தட்டுங்கடவுளருலகோர்தட்டும்- வைச்சுமுன்னயனூர்தூக்கமற்றதுமீதுசெல்ல- விச்சமுறுகித்தாழ்ந்துநிலமிசைவிழுமிவ்வூரை- யிச்சகத்தார்களோடுமென்னுதன்மடமைப்பாற்றே" என்னுங்காஞ்சிப்புராணச் செய்யுளானுமுணர்க. (௧௫)

பூங்கம லத்துறை புங்கவன் மாயோன்
பாங்குறை தேவர்பல் லாண்டிசை பரவ
வோங்கிய புள்ளின மூர்ந்தவ னுறலா
லாங்கவர் மேவு மருப்பத மாமே.

இ—ள்: பூ கமலத்து உறை புங்கவன் மாயோன்—தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் (ஆகிய இருவரும்), பாங்கு உறை தேவர் பல்லாண்டிசை பரவ—தம்பக்கத்தில் வசிக்கின்ற தேவர்கள் வாழ்த்தொலியினாலே துதிக்க, ஓங்கிய புள்ளினம் ஊர்ந்து அவண் உறலால்—சிறந்த (அன்னமுங்கருடனுமாகிய) பறவைகளை (வாகனமாகக்கொண்டு) செலுத்தி அங்கே வந்திருத்தலால், ஆங்கவர் மேவும் அரும் பதம் ஆம்—அப்பிரமவிஷ்ணுக்கள் வசிக்கின்ற அருமையாகியபதவிகள் போலும் (அக்காஞ்சீபுரம்) எ—று.

ஏ அசை. பூங்கமலம்=கமலப்பூ; பூப்பெயர்முன் இனமென்மை தோன்றிமுடிந்தது. புங்கவன்—உயர்வுடையோன். மாயோன்—மாயாவிநோதஞ்செய்பவன். பல்லாண்டு- பல ஆண்டுகெழியும்வரையும் வாழ்க என்னும் பொருளமையக்கூறும் மங்கலவாழ்த்து. அது "மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப்- பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்துபுவனியெல்லாம்விளங்க-வன்னநடைமடவாளுமைகோ

னடியோமுக்கருள்புரிந்து-பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தர்க்குப்பல்லாண்டுகூறுதுமே" என்பதுபோல்வது. ஆருமென்பதீற்றயலுயிர்மெய்கெட்டு ஆமெனநின்றது. இதுபோற் பின்வருவனவற்றிற்குமிவ்விதிகொள்க. ஆங்கென்பது படர்க்கையிடத்தையுணர்த்திநின்றது. அரும்பதமென்றது சத்தியலோகத்தையும் வைகுண்டலோகத்தையும்.

பரிவாரதேவரென்பார் 'பாங்குறைதேவர்' எனவும், தெய்வத்தன்மைவாய்ந்த பறவைகளென்பார் 'ஓங்கியபுள்ளினம்' எனவும் கூறினார். (௨)

இன்னிய றேர்தரு மிந்திரன் முதலா
மன்னிய வானவர் மற்றுளர் யாருந்
துன்னின ராயிடை சூழ்ந்துறை செயலாற்
பொன்னக ரென்று புகன்றிட லாமால்.

இ—ள்: இன் இயல் தேர்தரும் இந்திரன்முதலா மன்னிய வானவர்— இனிய இயல்பைத் தேடுகின்ற இந்திரன்முதலாக நிலைபெற்ற தேவர்களும், மற்று உளர் யாரும்—(அவருடன் இருந்த முனிவர் முதலிய) பிறர் அனைவரும், ஆயிடை துன்னினர் சூழ்ந்து உறை செயலால்—அக்காஞ்சிநகரில் வந்து சூழ்ந்திருக்குந்தன்மையினால், பொன்னகர் என்று புகன்றிடலாம்—(அக்காஞ்சிநகரைச்) சுவர்க்கலோகம் (போலும்)என்று சொல்லலாம் எ—று.

ஆல் அசை. ஆகவென்பதீறுதொக்கது. துன்னினர் வினைமுற்றெச்சம். சுகாநுபவத்துக்குச்சிறந்த இடம் யாதென்றுதேடி அவ்விடத்து வாழுங்குணமுடையரென்பார் 'இன்னியறேர்தருமிந்திரன்முதலாமன்னியவானவர்' என்றார். (௩)

கின்னரர் சித்தர் கெழீஇயத னலத்
தந்நிக ரில்லவர் தம்பதி போலும்
பன்னக வேந்தர் பராயின ருறலா
லன்னவர் தம்பதி யாகிய தன்றே.

இ—ள்: கின்னரர் சித்தர் கெழீயதனால்—கின்னரர்களுஞ் சித்தர்களும் நெருங்கியிருத்தலால், அ தம் நிகர் இல்லவர்தம் பதி போலும்-சமானநிர்தர்களாகிய அவர்களது நகரங்கள்போலும்; பன்னக வேந்தர் பராயினர் உறலால்— நாகராசர்கள் பரந்து வாழ்ந்திருத்தலால், அன்னவர்தம் பதி ஆகியது—அவர்களது வாழ்விடமாகிய நாகலோகம்போன்றது (அக்காஞ்சிநகரம்) எ—று.

காஞ்சிநகர் கின்னரர்வாழ்தலாற் கின்னரலோகத்தையும் சித்தர்வாழ்தலாற் சித்தலோகத்தையும் நாகர்வாழ்தலால் நாகலோகத்தையும் நிகர்க்குமென்பதுகருத்து.

அன்று ஏ அசைகள். கின்னரர்=கிஞ்சித்நரர்; அதாவது சிறிதுபாகம் நரவடிவுடையவர்; குதிரைமுகமும் மநுடவடிவமுமுடையராதலின் இவ்வாறு கூறுவதென்க; இவர்கள் தேவசபையிற் கீதம்பாடுந்தொழிலுடையர். சித்தர் அணிமைமுதலாகிய எண்வகைச்சித்திகளையுடையவர்; கெழீஇயது-கெழுவியது என்பதன்விகாரம். தந்நிகரில்லவர்-தமக்கொப்பாவார் பிறரில்லாதவர். தம் என்னும் விகாரமொழியீற்றுமகரம் வருமொழி முதலிலுள்ள நகரமாகத்திரிந்தது. பன்னகவேந்தர் என்றது ஆதிசேடன் வாசுகி அநந்தன் தக்ஷன் சங்கபாலன் குளிகன் பதுமன் மகாபதுமன் கார்க்கோடகனுதியவரை. பன்னகம்=பத்-ந-கம். காலினால்நடவாதது; பன்ன-கம் எனப்பிரித்துக்கீழ்முகமாகச்செல்வதெனினுமாம். பராயினர்-வினைமுற்றெச்சம்; பரவினர் என்பதன்விகாரம். அன்னவர் அவரென்பதன்விகாரம். (௪)

எண்டிசை காவலர் யாவரு மீண்டப்
பண்டவர் பெற்ற பதங்களை மானு
மண்டல மார்சுடர் மற்றைய வுறலா
லண்டமு மாகிய தப்பதி யென்பார்.

இ—ள்: அ பதி—அக்காஞ்சிநகரமானது, எண்டிசைகாவலர் யாவரும் ஈண்ட பண்டு அவர் பெற்ற பதங்களை மானும்—அட்டதிக்குப்பாலகரனைவரும் செறிந்துவாழ்தலால் முற்காலத்தில் அவர்கள் (சிவபெருமானிடம்) பெற்றுக்கொண்ட பதவிகளைப் போலும், மண்டலம் ஆர் சுடர் மற்றைய உறலால்—மண்டலத்திற்(பொருந்தி)வாழ்கின்ற சூரியனும் மற்றைய (சந்திரன் முதலிய) கிரகங்களும் வந்திருத்தலினால், அண்டமும் ஆகியது என்பார்-பிரமாண்டத்தையும் போன்றதென்று (புலவர்) கூறுவர் எ—று.

எண்டிசையாவன: கிழக்கு தென்கிழக்கு தெற்கு தென்மேற்கு மேற்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கு என்பன. அவற்றிற்கதிபர்களாவார்முறையே, இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்னும் எண்மருமாம். அவர்களதுபதங்களாவன: அமராவதி தேசோவதி சம்யமினி கிருஷ்ணவதி சரஸ்வதி கந்தவதி அளகை யசோவதி என்னும் எட்டுநகரங்களுமாம். செயவெனெச்சங்காரணப்பொருளில்வந்தது. மண்டலம் விருத்தாகாரமான இருப்பிடம். அண்டமுமென்பதிலும்மை எச்சம்; பிரமாமுதன்முற்கூறப்பட்டோரது பதங்களைப்போல்வதேயன்றி அவையெல்லாவற்றையுந் தன்னுளமைத்துள்ள பிரமாண்டத்தையும்போலும் எனக் கருத்துரைத்தவழி உயர்வுசிறப்புமாம்.

இந்திரன் முதலினோர் ஆதிகாலத்திலே சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்து பெற்றுக்கொண்டனவாதலின் 'பண்டவர்பெற்றபதம்' என்றார். (ரு)

இப்படி யாவரு மெய்திய திறனா
லொப்பன போல வுரைத்திட லொப்போ
வப்பதி யேயத னுக்கிணை யன்றிச்
செப்பரி தாற்பிற சீர்கெழு காஞ்சி.

இ—ள்: இப்படி யாவரும் எய்தியதிறனால்—இவ்வாறு (பிரமாமுதலினோர்) அனைவரும் (தம்பதங்களினின்றும் வந்து) குடியேறிய காரணத்தால், ஒப்பனபோல உரைத்திடல் ஒப்போ—(அவ்வவரது நகரங்களை) ஒப்பாவனபோல (நினைத்துச்) சொல்லுதல் (உபமானஉபமேய லக்ஷணங்களுக்கு) இசையுமா!(இசையாது; பின்னரதற்குவமையிதுதானென்று முடிவுகூறப்புகின்), அ பதியே அதனுக்கு இணை—அக்காஞ்சிநகரே அதற்கு ஒப்பாம், அன்றி—அதனைக்கூறுவதல்லது, சீர்கெழு காஞ்சி பிற செப்பு அரிது—சிறப்புப்பொருந்திய காஞ்சிநகரத்திற்குப் பிறநகரங்களை உவமை கூறுதல் அரிது (உவமித்தற்கேற்ற வேறு நகரம் இல்லை) எ—று.

இக்காஞ்சிநகர்க்கும் பிரமனாதியோரது நகரங்கட்குமுள்ள பெருமைசிறுமைகளை நன்காராய்ந்துணராது அவர் வசித்தலொன்றையே காரணமாகக்கொண்டு உவமித்து இதுகாறுங்கூறினம். அவரால்வெறுத்துவிடப்பட்டபதங்களை,விரும்பப்பட்டஇந்நகர்க்குவமிப்பதுதக்கதன்றாதலின் அவை துணிபாகா; இக்காஞ்சிநகரையே பொதுநீங்குவமையாக எடுத்துக்கூறுவதன்றி வேறெந்தநகரையாயினுமுவமித்தல் பொருந்தாது என்பதுகருத்து.

காஞ்சிநகரத்தோடு ஏனையநகரங்களை ஒப்பிடலாகாதென்பதை "மறையுடனேனை நூல்களையெச்சந்தன்னுடன்மற்றைநல்வினையைக்- கறையறும்பார்ப்பாரோடொருத்திரைக்காஞ்சியினோடும்பிறநகரைப்-பிறைமுடிக்கடவுளோடரியயனையொப்பெனப்

பேசற்கபேசிற்-குறைவருநீரயக்குழியினீழ்ழிகுளிப்பதற்கையமொன்றிலையே" என்னுங்காஞ்சிப்புராணச் செய்யுளானுமுணர்க.

ஆல் அசை. திறம் திறனெனப்போலியாயிற்று. ஒப்பன வினையாலணையும் பெயர். ஓ எதிர்மறை. ஏ தேற்றம். செப்பு முதனிலைத்தொழிற்பெயர்.

இப்படலமுதற்செய்யுளிற்கூறியவாறு பூவுலகத்துள்ளநகரங்களுட்சிறந்தும், பின்னரிதுகாறுமுவமித்துக்காட்டி மறுக்கப்பட்டவாறு மேலுலகங்களினுங்கீழுலகங்களினுமுள்ள நகரங்களினுஞ்சிறந்தும் விளங்குதலின் 'சீர்கெழுகாஞ்சி' என்றார். (௯)

மறைமுத லோர்தனி மாவி னிழற்கீ
ழுறைதரு காஞ்சி தனக்குல கெல்லாம்
பெறுமய னாதியர் பெற்றிட வன்னா
னிறுவிய தொன்னக ரோநிக ராமே.

இ—ள்: மறைமுதல் தனி ஓர் மாவின் நிழற்கீழ் உறைதருகாஞ்சிதனக்கு—வேதமுதல்வராகிய சிவபெருமான் ஒப்பற்ற ஒருமாமரத்தினிழலில் வீற்றிருக்கப்பெற்ற (அந்தக்)காஞ்சிநகரத்திற்கு, உலகு எல்லாம் பெறும் அயன் ஆதியர் பெற்றிட—உலகங்களெல்லாவற்றையும் படைக்கின்ற பிரமாமுதலிய தேவர்கள் பெற்றுக்கொள்ளும்படி, அன்னான் நிறுவிய தொல் நகரோ நிகர் ஆம்—அச்சிவபெருமான்(படைத்து)நிறுத்திய பழைய நகரங்களா ஒப்பாகும்? (ஒப்பாகா) எ—று.

ஏ அசை. தனிமை ஒப்பின்மை. கீழ் ஏழனுருபு. ஓ எதிர்மறை. செயவெ சங்காரியப்பொருளில்வந்தது. மறைமுதல் அன்மொழித்தொகை, வேதங்கட்குமூலமாதலையுடையானெனவிரியும். சதாசிவமூர்த்தியின் முகங்களைந்தனுள் ஊர்த்துவமுகந்தவிர்ந்த நான்குமுகங்களினின்றும் வேதங்கள்தோன்றுதலினிவ்வாறுகூறினர். வேதமங்ஙனந்தோன்றுலை "கீட்டிசைமுகத்தொன்றமெத்தநாலைந்திற்கிளைத்ததாலிருக்கதுதென்பாலீட்டியவிரண்டாம்வேதநூறுருவோடெழுந்தது குடதிசைமுகத்தி- னீட்டியசாமமாயிரமுகத்தானியிர்ந்ததுவடதிசைமுகத்தி- னூட்டியவொன்பதுருவொடுகிளைத்துநடந்தது நான்கதாமறையே" என்பதனாலறிக; இதற்கிவ்வாறன்றி, வேதங்களானிச்சயிக்கப்படுமுதல்வரெனக்கூறினுமாம். வேதங்களவரையே முதல்வரென நிச்சயித்தலை "முளரியோன்முதலாஞ்சுரரெலாம்பூதமுதலவற்றேடுதித்துள்ளோ- ரளவிடுந்தலைமையாளரென்றவரையகற்றிமால்விடையவனினையே- வளமுறுமெல்லாத்தலைமையுமுடையோன்வருமுதற்காரணனல்லோ- ருளமுதியானப்பொருளெனச்சிகைதேர்ந்துரைப்பவுமயங்குவர்சிலரே" எனச் சிவதத்துவவிவேகங்கூறுதலானுணர்க.

'மறைகளினுருவாய்ப்பொன்மலர்தனிமா' என, மேல் தொண்ணூற்றுநான்காஞ்செய்யுளினும், "மீதுமன்னியமூலமுங்கிழக்குநோக்குசாகையுமாய்விரைகமழும்- பாதவந்தனையுணர்ந்தவன்வீடுபெற்றுமாங்கதுபலகனிபடைத்துச்-சீதவார்புனலொழுக்கருக்கம்பைத்திருநதிக்கரைமருங்கொலிவேதச்-சூதமாமரமெனத்திகழ்ந்தொளிருந்தொல்லைவையகம்பெரும்பயன்படைப்ப,-எழிரட்டியகல்வியுமதன்மேன்மல்லிகைக்கொடியெனப்படர்ந்தமரும்-யாழ்விச்சைகட்கிறைவியாங்காமக்கண்ணியத்தருபசுங்கொடிக்கினியா- ளூழியீற்றினுமுலப்பருந்தகைசான்றோங்குமாவினுக்குரிமையம்யாமே-யாழியேந்தியநாரணன்விரிஞ்சனாரெனைப்படுமென்புடைப்புதல்வீர்" எனக் காஞ்சிப்புராணத்தினுங்கூறிய விசேடங்களையுடைய தெய்வீகமாவென்பார் 'தனிமா' என்றும், பிரமன் திருமால் முதலாயினோர் ஆதிகாலத்திலே காஞ்சிநகரிற் சிவபெருமானைப்பூசிக்க, அப்பெருமானவர்க்கெளிவந்து, படைத்தல் காத்தன்முதலிய அதிகாரங்களையுதவி, அவ்வவர்க்

கேற்பச்சத்தியலோகம் வைகுண்டலோகமுதலியவற்றைச்சிருட்டித்து அவற்றிலவர்களைக்குடியேற்றிப் பட்டாபிஷேகஞ்செய்தனரெனக் காஞ்சிப்புராணங்கூறலின், அந்நகரங்களை 'உலகெல்லாம்பெறுமயனாதியர்பெற்றிடவன்றோ-னிறுவியதொன்னகர்' என்றும் கூறினார்.

சர்வலோகைகநாயகராகிய சிவபெருமான் சாந்நித்தியமாயெழுந்தருளியிருக்கப்பெற்ற சிவபுரமாகிய காஞ்சிநகரத்திற்கும், அடிமைகளாகிய தேவர்கள் அவரிடம் யாசித்துப்பெற்ற பிறநகரங்களுக்குமுள்ள பேதம் மிகப்பெரிது, ஆதலின் அவையொப்பாகா என,முற்செய்யுட்கருத்தைப் பிறிதொருகாரணவாயிலான்வற்புறுத்தியதிச்செய்யுளென்க. (எ)

மேயதொல் லூழியில் வேலைக ளேழுந்
தூயத னெல்லை சுலாவுற நிற்ற
லாய பரஞ்சுட ராங்குள தாயு
மாயைகள் சுற்றிய மன்னுயி ரொக்கும்.

இ—ள்: மேய தொல் ஊழியில்— பழமைபொருந்திய உகாந்தகாலத்தில், வேலைகள் ஏழும் தூய தன் எல்லை சுலாவுற நிற்றல்- ஏழுசமுத்திரங்களும்(உட்புகுந்தழிவுசெய்யாது) பரிசுத்தமாகிய தனது எல்லையைப் (புறத்தே) சூழ (அக் காஞ்சிநகரம்) நிற்குந்தன்மை, பரம் ஆய சுடர் ஆங்கு உளதாயும்—பரஞ்சோதியாகிய சிவபெருமான் அங்கே இருக்கப்பெற்றும், மாயைகள் சுற்றிய மன் உயிர் ஒக்கும்—மாயைகளாற்சூழப்பட்டிருக்கின்ற நிலைபெற்ற ஆன்மாவைப்போலும் எ—று.

பிரளயகாலத்தில் ஒருங்குபிரவாகித்து உலகமனைத்தையுமழிக்குங் கடல்களேழும்,அக்காஞ்சிநகரையழிக்க வலியின்றி, உட்புகாது மதிலின்புறத்தே நிற்குந்தன்மை,சீவான்மாக்களைமயக்கும்மாயைகள்,அவற்றினுள்வியாபித்துநின்றியக்கும் பரமான்மாவை மயக்கவலியின்றி, அதற்குப்புறம்பேநிற்றலையொக்குமென்பது கருத்து. கற்பகாலங்களில் மற்றையநகரங்கள்போலழியாதிருப்பதென்பது தாற்பரியம். இது,மேல் அறுபத்தைந்தாஞ்செய்யுளில் விரித்துக்கூறப்படும்.

சீவான்மாக்களை மயக்கும்மாயை பரமான்மாவை மயக்காதென்பதை "பேறிழவின்பம்பிணிவளர்மூப்புப்பேதுறச்சாதலென்றுரைக்கு-மாறினுமோவாதுயிர்களையெல்லாமமைவறச்செலுத்தியுந்தனக்குக்- கூறியவிருப்புவெறுப்பினையில்லான்கூடியெவ்வுயிரையுமயக்கும்--வீறியமாயைமயக்கமுமில்லான்விளங்கியவநாதியேயமலன்" என்னும் விநாயகபுராணச்செய்யுளானறிக.

மேய-மேவியஎன்பதன்விகாரம். மேயதொல்லூழி= தொன்மைமேயவூழி. சமுத்திரமேழாவன: உவர்க்கடல் பாற்கடல் தயிர்க்கடல் நெய்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல் தேன்கடல் நன்னீர்க்கடல் என்பன. இதனை "பரவுமிவ்வுலகிலுப்புப்பாறயிர்நெய்யேகன்ன- லிரதமாமதுநீராகுமெழுகடலேழுதீவும்- வரன்முறைவிரவிச்சூழும்"என, மேல் அண்டகோசப்படலங் கூறுதலாலுணர்க. தன் என்றது காஞ்சியை. பரமாயசுடர்=பரஞ்சோதி. ஆங்கு ஆன்மாவினிடத்து. உம்மைகளுண் முன்னையது முற்று; பின்னையதுயர்வுசிறப்பு. நிற்றல் ஒக்கும் எனஇயையும். தமம் மாயை மோகம் அவித்தை அநிர்தம் என மாயை ஐவகைப்படுதலிற் பன்மையாகக்கூறினர். அவற்றுள், தமமாவது: சிவசைதன்னியத்தைமறைத்தல்; மாயையாவது: உலகத்தோற்றத்திற்குக் காரணமாதல்; மோகமாவது: விபரீதஞானமுண்டாக்குதல்; அவித்தையாவது: உணர்வழித்தல்; அநிர்தமாவது: சத்துத்தோற்றத்திற்கந்நியமாதல்.

வந்தக்காற் பல்லாயிரமாண்டு நீடித்துநிற்பதும், கழிந்தக்காற் பின்னும் பல்லாயிரமாண்டின் மேல் வருவதுமென்பதுதோன்ற 'மேயதொல்லூழி' எனவும் எச்சுடருந்தன்னுளடங்கவிளங்கும் பெருஞ்சுடரென்பது போதர 'ஆயபரஞ்சுடர்' எனவும் விசேடித்தார்.

இதுகாறும் எட்டுச்செய்யுட்களால், காஞ்சிநகர் மற்றெல்லாநகரங்களினுஞ்சிறந்ததென்பதுகூறப்பட்டது. (அ)

வேறு.

பாழி மால்வரை யெறிதிரை வையகம் பலவும்
வாழு மண்டங்கள் சிற்றுரு வமைந்துவந் தென்னச்
சூழு நேமியம் புள்ளின முதலிய சுருங்கு
மாழி நீத்தம தொத்தது மதிற்புறத் தகழி.

இ—ள்: பாழி மால் வரை எறிதிரை வையகம் பலவும் வாழும் அண்டங்கள் சிற்றுரு அமைந்து வந்தென்ன— முழைகளையுடைய பெரியமலைகளும் வீசுகின்ற திரைகளையுடைய சமுத்திரங்களும் பூமியும் (மற்றுமுள்ளசராசரப்பொருள்கள்) யாவும் வாழப்பெற்ற பிரமாண்டங்கள் சிறியவடிவுகொண்டுவந்தாற்போல, நேமியம்புள்ளினம் முதலிய சூழும்-சக்கரவாகப்பறவைகள்முதலியன சூழ்ந்துவாழும், மதிற்புறத்து அகழி—(அங்ஙனம்வாழப்பெற்ற) மதிலின்புறத்திலுள்ள அகழியானது, சுருங்கும் ஆழி நீத்தமது ஒத்தது—(பரப்பினாற்)சுருங்கிவந்திருக்கும் புறவாழிச்சமுத்திரத்தைப்போன்றது எ—று.

சக்கரவாகமுதலிய நீர்வாழ்பறவைகள் அண்டங்கள் சிறியவடிவுகொண்டு வந்தாற்போலிருப்ப, அப்பறவைகள் வாழப்பெற்ற அகழியானது சுருங்கிவந்த புறவாழியைப்போன்றிருந்ததென்பது கருத்து.

எறிதிரை அன்மொழித்தொகை. உம்மை முற்று. வந்தென்ன தொகுத்தல். அம் சாரியை. புள்ளினம்=பறவைக்கூட்டம். அது பகுதிப்பொருள்விகுதி.

வட்டவடிவுடையபறவையாதலின் 'அண்டங்கள்சிற்றுருவமைந்துவந்தென்னச்சூழுநேமியம்புள்ளினம்'என்றார். மற்றையகடல்களெவற்றினும்மிக்கபரப்பும்ஆழமுமுடைத்தான புறக்கடலானது, ஆழத்தினாற்சுருங்குதலின்றிப் பரப்பினான்மாத்திரஞ்சுருங்கிவந்ததுபோலுமென்பார் 'சுருங்குமாழிநீத்தமதொத்தது' என்றார். இக்கருத்தறியாதார், சூழுமென்பதைப்பெயரெச்சமாக்கி 'நேமியம்புள்ளினமுதலியசுருங்கும் மதிற்புறத்தகழி ஆழிநீத்தமதொத்தது'என ஒரேமுடிபாகக்கொண்டுகூட்டிப்பொருள்கூறுவர். நீர்ப்பறவைகள்வாழ்தல் அகழிக்கலங்காரமாதலின் 'அண்டங்கள்சிற்றுருவமைந்துவந்தென்னச்சூழுநேமியம்புள்ளினமுதலிய' என்றார். "உன்னுநாரைமகன்றில்புதாவுளி-லன்னங்கோழிவண்டானங்களாழிப்புள்- கின்னரங்குரண்டங்கிலுக்கஞ்சிரல்- சென்னங்காகங்குணாலஞ்சிலம்புமே"என்றார்பிறரும்.

இச்செய்யுளால் அகழியின்சிறப்புக்கூறப்பட்டது. (௯)

மண்ட லப்பொறை யாற்றுவான் பற்பல வகுத்து
முண்ட காசன மீமிசை யிருந்திடு முதல்வ
னண்ட கோளகை தாங்கவோர் சுவர்த்தல மதுவும்
பண்டு செய்தென வோங்கிய நெடுமதிற் பரப்பு.

இ—ள்: முண்டக ஆசன மீமிசை இருந்திடும் முதல்வன்—தாமரைமலராசனத்தின்மேல் வீற்றிருக்கின்ற தலைவராகிய பிரமதேவர், மண்டலப்பொறை ஆற்றுவான் பற்பல வகுத்து—பூமிபாரத்தைத்தாங்கும்படி பலபல பொருள்களைச் சிருட்டித்து (அதன்மேல்), அண்ட கோளகை தாங்கஓர் சுவர்த்தலமதுவும் பண்டு செய்தென-அண்

டகோளகையைச்சுமக்கும்படி ஒருசுவரையும் முற்காலத்திற்சிருட்டித்தாற்போல, நெடு மதிற்பரப்பு ஓங்கிய—(அந்நகரிலுள்ள)நெடிய பரந்தமதிலானது உயர்ந்திருந்தது எ-று.

நகர்க்கரணக அமைக்கப்படின் அதற்குப்போதிய உன்னதத்துடனமையவேண்டும்; இம்மதில் அத்துணையினமையாது அண்டமுகட்டையளாவவுயர்ந்திருத்தலினுல்,அவ்வண்டகோளகையைத் தாங்கும்படி பிரமா சிருட்டித்துவைத்ததென்று சொல்லத்தக்கதாயிற்றென்பது கருத்து.

ஆற்றுவான் வானீற்றுவினையெச்சம். பற்பல என்றது ஆதிகூர்மம் ஆதிசேடன் அட்டமாநாகங்கள் அட்டதிக்கயங்கள் முதலியவற்றை. முண்டக ஆசனம் என்பது சவர்ணதீர்க்கமாய்முண்டகாசனமெனமுடிந்தது. முண்டகம் ஆகுபெயர். மீமிசை ஒருபொருட்பன்மொழி. அண்டகோளகை அண்டவுருண்டை. அது பகுதிப்பொருள் விகுதி. பண்டு என்றது சிருட்டியாரம்பத்தை. செய்தாலென ஓங்கியது என்பன செய்தென ஓங்கிய எனத்தொக்கன. மதிற்பரப்பு பின்மொழிநிலையல்; மதிநுட்பமென்பதுபோல. (௧0)

சென்று மூவெயி லழலெழ நகைத்தவன் செழும்பொற்
குன்று தோளுற வாங்கலு முலகெலாங் குலைந்த
வன்று நான்முக னனைத்தையுந் தாங்குகென் றருள
நின்ற தென்னவும் பாதலம் புகுந்துமே னீண்ட.

இ—ள்: சென்று மூ எயில் அழல் எழ நகைத்தவன்—(போர்செய்யப்) போய் முப்புரங்களினுந்தீமூளும்படி புன்னகைசெய்தருளிய சிவபெருமான், செழும் பொற்குன்று தோளுற வாங்கலும்—செழுமைபொருந்திய மேருமலையாகியவில்லைத்தோளுறவளைத்தலும், உலகு எலாம் குலைந்த அன்று—(அதனல்)உலகங்கள் யாவும் நிலைகலங்கிய அக்காலத்தில், நான்முகன் அனைத்தையும் தாங்குகென்று அருள நின்றது என்னவும்—நான்குமுகங்களையுடைய பிரமதேவர் எல்லாவுலகங்களையுந் தாங்குவாயாக என்றுகூறி (அந்தமேருவுக்குப் பதிலாகப்)படைக்க நிலைபெற்ற தன்மைபோலவும், பாதலம் புகுந்து மேல் நீண்ட—(கீழுலகமாகிய) பாதலலோகங்காறும் புதைந்து மேலுலகங்காறும் உயர்ந்திருந்தது (அந்தமதில்) எ—று.

பொன் வெள்ளி இரும்பு என்னும் மூவகைலோகங்களானும் முறையே முப்புவனங்களினுமியற்றப்பட்டனவாதலின் 'மூவெயில்' என்றார். தோளுறவாங்கலாவது: வில்லை இடப்புறத்தினிறுத்திநின்று, உயர்த்திய கையினல் அவ்வில்லின் மேற்குதையைப்பற்றி ஊன்றித் தோளிற்படுந்துணையும் வளைத்தல். வாங்கலும் உம்மீற்றுவினையெச்சம். குலைந்தஎன்பதை முற்றாகக்கொண்டு பொருள்கூறுவாருமுளர். எல்லாம் தாங்குகவென்று நீண்டதுஎன்பன முறையே எலாம் தாங்குகென்று நீண்ட எனத்தொக்கன. நின்றது வினைமுற்றுத்தொழிற்பெயர். உம்மைகளிரண்டனுண் முன்னையது முற்று; பின்னையதெச்சம். (௧௧)

மேக நாட்டிற்கும் விஞ்சையர் நாட்டிற்கும் விண்ணோர்
மாக நாட்டிற்கு மலரய னாட்டிற்கு மற்றை
நாக நாட்டிற்கும் பாதல நாட்டிற்கு நணுகிப்
போக நாட்டிய பொன்மதி லானதப் புரிசை.

இ—ள்: மேகநாட்டிற்கும்—மேகமண்டலத்திற்கும், விஞ்சையர் நாட்டிற்கும்—வித்தியாதரலோகத்திற்கும், விண்ணோர் மாகநாட்டிற்கும்—தேவர்களது (வாழ்வி

டமாகிய) சுவர்க்கலோகத்திற்கும், மலர் அயன் நாட்டிற்கும்—தாமரை மலராசனராகிய பிரமதேவரது சத்தியலோகத்திற்கும், மற்றை நாகநாட்டிற்கும்—மற்றையதாகிய நாகலோகத்திற்கும், பாதல நாட்டிற்கும்—பாதலலோகத்திற்கும், நணுகி போக நாட்டிய பொன்மதில் ஆனது—அணுகிச்செல்லும் பொருட்டு அமைத்துள்ள பொன்மதில் போன்றது, அ புரிசை—அந்தமதில் எ—று.

பூவுலகத்தின்மேல் மேகமண்டலமும் அதன்மேல் வித்தியாதரலோகமும் அதன்மேல் தேவலோகமும் அதன்மேற்பிரமலோகமும் ஒன்றன்மேலொன்றுயர்ந்தும், கீழ் நாகலோகமும் அதன்கீழ்ப்பாதலலோகமும் ஒன்றன்கீழொன்றுதாழ்ந்து மிருத்தலின், அவ்வுலகங்களெங்குஞ்சென்றுள்ள அம்மதில், ஒருலகத்தினின்று மற்றோருலகத்திற்கிவர்ந்துமிழிந்துஞ்சஞ்சரித்தற்கேற்றதோர் சோபானம்போன்றிருந்ததென்பது கருத்து.

கீழுலகமென்பது போதர 'மற்றைநாகநாடு' என்றார்; ஐகாரஞ்சாரியை. (கஉ)

முதிரை வண்ணமா நவமணிக் குவையும்வான் மூளிக்குங்
கதிரி னெல்லெனும் பொருளுட னெனவுங் காட்டிப்
பொதிவ தாகியே முழுவது நிரம்புதல் பொருந்தா
நிதிய மேயகூ டொத்தது நெடியமா மதிலே.

இ—ள்: முதிர் ஐவண்ணம் ஆம் நவமணிக்குவையும்— சிறந்த ஐவகைநிறங்கள்பொருந்திய நவரத்தினக் குவியல்களையும், வான் மூளிக்கும் கதிரின் எல் எனும் பொருளுடன் எனவும் காட்டி—ஆகாயத்தில் உதிக்கின்ற சூரியசந்திரர்களது ஒளியெனப்படுகின்ற சூரியகாந்தசந்திரகாந்தங்களுடன் (பொன்முதலிய)பிறபொருள்களையும்(தன்னிடத்துக்)காண்பித்து, பொதிவது ஆகி— (அவற்றைப்) பொதியப்பெறுவதாய், முழுவதும் நிரம்புதல் பொருந்தா— முழுதும் நிரம்புதலைப் பொருந்துதலால், நிதியம் மேய கூடு ஒத்தது—திரவியசாலை போன்றது, நெடிய மா மதில்—நீண்ட பெரிய(அந்த) மதிலானது எ—று.

அக்காஞ்சிநகரிலுள்ள மதிலானது,நவரத்தினங்கள் சூரியகாந்தம் சந்திரகாந்தம் என்பவற்றை எவர்க்குங் காட்சிப்படுமாறு கற்களாகவைத்துப் பொன் முதலிய லோகங்களாற் கட்டப்பட்டு, குறைவின்றி முழுவேலையும்நிறைவேறப்பெற்றிருத்தலால், இரத்தினவகைகளையும் லோகவகைமுதலியவைகளையும் வேண்டுவோர்க்குக் காட்டிப் பின்மூடப்படுவதும், சிறிதும்வெள்ளிடமின்றி அப்பொருள்கள் நிரம்பப்பெற்றதுமாகிய திரவியசாலையைப்போன்றதென்பது கருத்து.

ஏகாரங்கள் அசைகள். எனும்-தொகுத்தல். கூடம் என்பது கூடெனக்குறைந்துநின்றது. ஐவண்ணமாவன: வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்பன. பொருந்தா என்னும் வினையெச்சம் ஏதுப்பொருளில்வந்தது.

நவரத்தினங்களாவன:— மாணிக்கம் முத்து பவளம் மரகதம் புருடராகம் வைரம் நீலம் கோமேதகம் வைடூரியம் என்பன. அவ்விரத்தினங்கள் பலவகைநிறங்களையுடையனவாயினும், பெரும்பான்மை ஐந்துநிறத்துளமைதலால் 'முதிரைவண்ணமாநவமணிக்குவை' என்றார். "இரவியெதிரெரியிறைக்குங்கல்லுமதியெதிர்செழுநீரிறைக்குங்கல்லு-முரையிடுமொன்பதிலொன்றிலுட்கிடையாக்கிடக்கும்" எனக்கூறப்படுதல்பற்றிச் சூரியகாந்தத்தையுஞ் சந்திரகாந்தத்தையும் இரத்தினங்களின் பின்னியைத்துக்கூறினார். (கங)

நிறையும் வார்கடல் சுற்றிய நேமியு நேமிக்
குறையு ளாகிய கணிப்பிலா வண்டமு மொப்ப
சிறையில் வான்கிரி நிரையெனச் செவ்விதிற் கிளர்ந்து
மறுகெ லாந்திகழ் மாளிகைப் பத்திசூழ் மதிலே.

இ—ள்: சிறை இல் வான் கிரி நிரை என செவ்விதில் கிளர்ந்து மறுகு எலாம் திகழ் மாளிகைப்பத்தி சூழ் மதில்—சிறகில்லாத பெரியமலைவரிசைகளைப்போலச்செப்பம்வாய்ந்துயர்ந்து வீதிகளெவற்றினும் விளங்குகின்ற மாளிகைநிரையும்(அதனைச்)சூழ்ந்தமதிலும், நிறையும் வார் கடல் சுற்றிய நேமியும் நேமிக்கு உறையுள் ஆகிய கணிப்பு இலா அண்டமும் ஒப்ப—(நீர்) நிறைந்த நெடிய புறக்கடலாற்சூழப்பெற்ற சக்கரவாளகிரியையும் அச்சக்கரவாளகிரிக்கு இருப்பிடமாகிய அளவில்லாத அண்டங்களையும் நிகர்ப்பன எ—று.

வீதிகளினெண்டிசைகளிலும் மாளிகைநிரைகளமைந்துகிடப்ப, அவற்றின் புறத்தே மதில்சூழ்ந்திருத்தல், சக்கரவாளகிரி உட்பட,வெளியே அண்டச்சுவர் சூழ்ந்திருத்தல்போன்றதென்பதுகருத்து. மாளிகைப்பத்திசூழ்மதிலென்பதற்கு மாளிகைநிரையைச்சூழ்ந்த மதிலெனப்பொருளுரைத்து, சக்கரவாளகிரியையும் மதிலுக்கேயுபமானமாக்கினுமாம்.

ஏ அசை. மற்றையகடல்களின்மிக்க பெருநீருடைமையின் 'நிறையும்வார்கடல்' எனவும், அக்கடலாற்சூழப்பட்ட சக்கரவாளகிரியையுள்ளமைத்திருத்தலின் 'நேமிக்குறையுளாகியகணிப்பிலாவண்டம்' எனவும், சிறையுடையனவாயின் காலந்தோறும் இடம்பெயர்ந்து நிரைதவறுமாதலாலும், சிறியனவும் பெரியனவும் விரவின் ஒன்றையொன்றொத்துச் செவ்விபெறாவாதலாலும் அவற்றையொழித்து, முற்காலத்தில் இந்திரனாற்சிறகரியப்பெற்ற மலைகளுள்ளே வடிவத்தாலொப்புமையுடையனவாய்த்தெரிந்துநிரைத்த பெருமலைகளுளவேல்,அவற்றையே நிகர்ப்பனவென்பார் 'சிறையில்வான்கிரிநிரையெனச்செவ்விதிற்கிளர்ந்துமறுகெலாந்திகழ்மாளிகைப்பத்தி' எனவும் கூறினார்.

முன்னொருகாலத்திலே மலைகள் சிறகுபெற்றுத் தாமிருந்தஇடங்களினின்றுமெழுந்து பறந்துதிரிந்து, விரும்பிய இடங்களிற் பின்னுந்தங்குதலாற்பிராணிகளுக்குத் தீங்குநேரிடுதலையறிந்த இந்திரன் வச்சிராயுதத்தினால் அவற்றின்சிறகுகளையரிந்தனனென்பது பூர்வீகவதந்தி.

பத்தாஞ்செய்யுண் முதலிதுகாறும் ஐந்துசெய்யுட்களால் மதிலின்சிறப்புக்கூறப்பட்டது. (௧௪)

தடுக்கு மாற்றலர் நால்வகைப் படையொடுஞ் சாய
முடுக்கும் வாள்கொடு விதிர்த்திடு மெழுவினான் முருக்கு
மெடுக்கு மெற்றிடு மெறிந்திடும் விழுங்கிடு மீர்க்கும்
படுக்குங் கன்மழை சொரிந்திடும் விற்படை பயிலும்.

இ—ள்: அ மதில் மேல் உறும் பொறிகள்-அந்த மதிலின்மேல்உள்ள யந்திரங்கள், தடுக்கும் மாற்றலர் நால்வகைப்படையொடும் சாய முடுக்கும்—முற்றுகையிட்ட பகையரசர்கள் சதுரங்கசேனைகளோடும் பின்னிடும்படி விரைவிற்றள்ளும், வாள் கொடு விதிர்த்திடும்—வாளைக் (கையிற்) கொண்டுசுழற்றும், எழுவினால் முருக்கும்—(அவர்களை) வளைதடியினால் அழிக்கும், எடுக்கும்—தூக்கும், எற்றிடும்—அடிக்கும், எறிந்திடும்—எறியும், விழுங்கிடும்—(தம் வாயிலிட்டு) விழுங்கும், ஈர்க்கும்—(பற்றி)

இழுக்கும், படுக்கும்—கொல்லும், கன்மழை பொழிந்திடும்—(அவர்கள்மேற்) கன்மாரி சொரியும், விற்படை பயிலும்—(அவர்களுடன் எதிர்த்து) விற்போரைச்செய்யும் எ-று.

தடுக்குமென்பதை வினைமுற்றாகக்கொண்டு, பகைவரையுட்செல்லவிடாது தடுக்குமெனக்கூறினுமாம். பத்தொன்பதாஞ்செய்யுளிலுள்ள 'அம்மதின்மேலுறும்பொறிகள்' என்பது இச்செய்யுட்கெழுவாயாக நிற்றலின் அச்செய்யுள்காறும் ஐந்துசெய்யுட்கள் ஒருதொடர். நால்வகைப்படை: யானை தேர் குதிரை காலாள் என்பன. விற்படை இருபெயரொட்டாகுபெயர்.

வேற்றரசர் படையெடுத்துவந்தகாலத்தில் அவருடன் பொருதுவெல்லுமாறு மதிலின்மேல் யந்திரங்களமைக்கப்பட்டிருப்பன; இதனை "நொச்சியுச்சிவேய்ந்துநீண்டநொச்சியோடுபோர்செய-இச்சையுற்றுமன்னர்வந்தெதிர்க்கும்வண்ணமுண்டெனின்- நச்சுமிந்நகர்க்கண்வாழுநல்லவீரர்வேண்டுமோ- மெச்சவெந்திரங்களேவிரைந்துபோர்விளைக்குமே" என விநாயகபுராணமும், "எல்லைதேர்வழித்தடைசெயுமிம்மதிற்புறஞ்சூழ்ந்- தொல்லைமேவலரடைந்தழியுடன்றுபோராற்றி- வெல்லமள்ளரும்வேண்டுமோபொறிகளேவெல்ல-வல்ல" எனத் திருவிளையாடற்புராணமுங் கூறுதலானறிக. ()

உருக்குஞ் செம்பினை வங்கத்தை யிழுதொடு மோச்சும்
வெருக்கொ ணேமிக ளெறிந்திடும் வச்சிரம் வீசி
யிருக்கு நின்றிடுங் குப்புறுஞ் செறுநரை யிகலி
நெருக்குந் தாழ்ந்திடு முலகளந் தோனென நிமிரும்.

இ—ள்: உருக்கும் செம்பினை வங்கத்தை இழுதொடும் ஓச்சும்— உருக்கிய செம்பையும் ஈயத்தையும் நெய்யுடன் (அப்பகைவர்மேல்) வீசும், வெருக்கொள் நேமிகள் எறிந்திடும்—(எவ்வழி எத்தகையவீரரும்) அஞ்சத்தக்க சக்கராயுதங்களை வீசும், வச்சிரம் வீசி இருக்கும்—வச்சிராயுதத்தைச் செலுத்திவிட்டு இருக்கும், நின்றிடும்—(எழுந்து) நிற்கும், குப்புறும்—குதிக்கும், செறுநரை இகலி நெருக்கும்—(அந்தப்) பகைவரைக் கோபித்து நெருக்கும், தாழ்ந்திடும்—தாழும், உலகு அளந்தோன் என நிமிரும்—உலகத்தையளந்த திரிவிக்கிரமமூர்த்தியைப்போல வளரும் எ—று.

வாமனரூபங்கொண்டு மாவலிச்சக்கிரவர்த்தியினிடம் மூன்றடிநிலம் தானமேற்று, பின் அவனையடக்குமாறு திரிவிக்கிரமரூபங்கொண்டு,மண்ணுலகத்தை ஓரடியாகவும் விண்ணுலகத்தை மற்றோரடியாகவும் அளந்தனராதலின் திருமாலை 'உலகளந்தோன்' என்று கூறுவது. (௧௬)

பீடு தங்கிய பணைமுர சியம்பிடும் பிடிக்குங்
கோடு மார்த்திடுந் துடிகளு மொலித்திடுங் கொட்புற்
றாடு மீயுயர் புள்ளையு மெறிந்திடு மரண்மே
லோடு மீளுமக் கதிரையுந் தடுப்பபோ லுந்தும்.

இ—ள்: பீடு தங்கிய பணை முரசு இயம்பிடும்—பெருமைபொருந்திய முரசப்பறையை முழக்கும், பிடிக்கும் கோடும் ஆர்த்திடும்— கையிற்பிடித்த கொம்பையும் ஊதும், துடிகளும் இயம்பிடும்—உடுக்குகளையும் அடிக்கும், கொட்புற்று ஆடும்—சுழன்று ஆடும், மீ உயர் புள்ளையும் எறிந்திடும்— ஆகாயத்தில் உயர்ந்துசஞ்சரிக்கின்ற பறவைகளையுந் துணிக்கும், அரண்மேல் ஓடும்—மதிலின்மீது ஓடிச்செல்லும், மீளும்—திரும்பிவரும், அ கதிரையும் தடுப்பபோல் உந்தும்— அந்தச் சூரிய சந்திரர்களையுந் தடைப்படுத்துவனபோல உயரும் எ—று.

பணை பறையென்னும் பொருளில்வந்தது. உம்மைகளுள் முன்னைய இரண்டும் எச்சம், பின்னைய இரண்டுமுயர்வுசிறப்பு; எதிர்ந்தாரை எறிவதும் தடுப்பதுமேயன்றித் தன்னியல்பிற் சஞ்சரிப்பனவாகிய பறவைகளையுங் கதிர்களையுந் தடுப்பனபோல எனப்பொருள்கொண்டவழிப்பின்னையவுமெச்சமாம். கொட்புறுதல்-சுழலுதல். மிகவும் உயர்ந்தமார்க்கத்திற் சஞ்சரிப்பனவென்பது தோன்ற 'அக்கதிர்' என்றார். தடுப்ப வினையாலணையும்பெயர். (௧௭)

சூலம் வீசிடுந் தோமரம் வீசிடுஞ் சுடர்வே
லாலம் வீசிடுஞ் சுடுமணல் வீசிடு மளப்பில்
சாலம் வீசிநின் றீர்த்திடு மகழியிற் றள்ளுஞ்
சீலம் வீசிய பாரிட மாமெனத் திரியும்.

இ—ள்: சூலம் வீசிடும்—(பகைவர்மேற்) சூலப்படையைச்செலுத்தும், தோமரம் வீசிடும்—இருப்புலக்கையைச்செலுத்தும், சுடர் வேல் ஆலம் வீசிடும்—ஒளிபொருந்திய வேற்படையையும் மழுப்படையையும் செலுத்தும், சுடுமணல் வீசிடும்-சுடுமணலைவீசும், அளப்பு இல் சாலம் வீசி நின்று ஈர்த்திடும்—அளவில்லாத வலைகளைவீசி (அதனுட்பகைவரையகப்படுத்தி) நின்று இழுக்கும், அகழியில் தள்ளும்—(அவர்களை) அகழியில் விழுத்தும், சீலம் வீசிய பாரிடம் ஆமென திரியும்—நல்லொழுக்கத்தைவிட்ட பூதங்களைப்போலப்(பயங்கரமானவடிவத்துடன்) உலாவும் எ—று.

அளப்பு தொழிற்பெயர். (௧௮)

திகழும் வெங்கன லுமிழ்ந்திடு மொன்னலர் செலுத்தும்
பகழி மாரியை விழுங்கிடும் பறவையிற் படரு
மிகழு நாவையு மனத்தையு மெறிந்திடு மென்றாற்
புகழு நீரவன் றம்மதின் மேலுறும் பொறிகள்.

இ—ள்: திகழும் வெம் கனல் உமிழ்ந்திடும்—பிரகாசிக்கின்ற கொடிய அக்கினிப்பொறிகளைக்கக்கும், ஒன்னலர் செலுத்தும் பகழிமாரியை விழுங்கிடும்—பகைவர்கள் செலுத்துகின்ற பாணமழையைவிழுங்கும், பறவையில் படரும்—பக்ஷிகள் போலப்பறந்துசெல்லும், இகழும் நாவையும் மனத்தையும் எறிந்திடும்—(தம்மை)இகழ்ந்துபேசுகின்ற (பகைவர்களது) நாக்கையும் நெஞ்சையும் வெட்டும் (இன்னோரன்னபற்பல அற்புதங்களைச்செய்தலின்), என்றால் புகழும் நீர அன்று—என்றால் வருணித்துமுடிக்கத்தக்கனவல்ல எ—று.

இடைவிடாது செலுத்தப்படுதலாற் பகழியை மாரி என்றார். பதினைந்தாஞ் செய்யுண்முதலிதுகாறும் ஐந்துசெய்யுட்களால் மதிலிலுள்ள யந்திரங்களின்சிறப்புக் கூறப்பட்டது. (௧௯)

பூணி னேர்தரும் பொன்னவாம் புரிசை மேற்புனைந்த
வாணி லாநெடுந் துகிலிகை பெயர்வன மலரோன்
சேணு லாயதீஞ் சுடரெனுங் கோபுர சிகரங்
காண வேபல வெகினமாய்த் தேடல்போற் கவினும்.

இ—ள்: பூணின் ஏர்தரும் பொன் அவாம் புரிசைமேல் புனைந்த நிலா வாள் நெடும் துகிலிகை பெயர்வன—ஆபரணங்கள்போல அழகுசெய்கின்ற இலக்குமியும்விரும்பத்தக்க மதிலின்மேல் அமைக்கப்பட்ட வெண்ணிறச்சோதியையுடையநெடியகொடிகள் (காற்றினால்) அசையுந்தன்மை எவ்வாறிருக்குமெனில்), மலரோன்—பிரமதே

வர், சேண் உலாய தீ சுடர் எனும் கோபுர சிகரம் காண—ஆகாயத்தில் வளர்ந்துசென்ற அக்கினிப்பிழம்புபோன்ற(அந்நகர்க்) கோபுரங்களின்முடிகளைக் காணும்படி, பல எகினம் ஆய் தேடல் போல் கவினும்—பல அன்னப்பறவையுருக்கொண்டு தேடுதல்போல விளங்கும் எ—று.

சோதிப்பிழம்பாய்வளர்ந்துநின்றசிவபெருமானதுமுடியை ஓர் பறவையுருக்கொண்டு தேடி முற்றுப்பெருத பிரமதேவர், மாணிக்கரத்தினமழுத்தப்பெற்று உயர்ந்து அச்சோதிப்பிழம்புபோலொளிவீசிநிற்குங் காஞ்சிநகர்க்கோபுரங்களின் முடிகளைத் தவருது தேடிமுடிக்கவினைந்து பலபறவையுருக்கொண்டு பறப்பதுபோல, மதில்களின்மேற் கட்டப்பட்ட கொடியாடைகள் காற்றினலசைவன என்பது கருத்து.

ஏ அசை. பூண் பூணப்படுவது; செயப்படுபொருளுணர்த்தும் ஐவிகுதி புணர்ந்துகெட்டது. பொன்னவாம் என்பதிற் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஏர்தரும்புரிசை பொன்னவாம்புரிசை எனத் தனித்தனி இயையும். புனைந்த என்னும் பெயரெச்சம் துகிலிகை என்னும் செயப்படுபொருட்பெயர்கொண்டது. பெயர்வன வினைமுற்றுத்தொழிற்பெயர். உலாய உலாவிய என்பதன்விகாரம். தீ சுடர் என்பது பூப்பெயர்போல இனமென்மைதோன்றித் தீஞ்சுடரெனமுடிந்தது. கோபுரசிகரம் வடநூன்முடிபாதலினியல்பாயிற்று. செயவெனெச்சங்காரியப்பொருட்டு.

முன்னர்ப் பதின்மூன்ருஞ்செய்யுளிற்கூறியவாறு இரத்தினகசிதமாய்விளங்குதலின் 'பூணினேர்தரும்பொன்னவாம்புரிசை' என்ருர். (௨௦)

ஈர்த்த மாமதி சசியென்ப துலகுளோ ரிட்ட
வார்த்தை யல்லது சரதமோ கடிமதின் மருங்கிற்
றூர்த்த கேதன மவன்மணி மேனியிற் றுடக்கப்
போர்த்த வெண்ணிலாக் கஞ்சுகம் பீறிய போலாம்.

இ—ள்: ஈர்த்த மா மதி சசி என்பது உலகுளோர் இட்ட வார்த்தை அல்லது சரதமோ—குளிர்ச்சிபொருந்திய பெரிய சந்திரனை முயற்களங்கமுடையானென்று சொல்வது (இப்)பூவுலகத்தார்கற்பித்த வாசகம் (ஆகுமே)அன்றிச் சத்தியவசனமாகுமா? (ஆகாது. பின்னென்னையெனின்), கடி மதில் மருங்கில் தூர்த்த கேதனம் அவன் மணி மேனியில் துடக்க—காவலாகிய (அம்) மதிலின்கண்ணே செறிக்கப்பட்டுள்ள கொடிகள் அச்சந்திரனது கரிய வடிவத்திலே குற்ற (அதனுல்), போர்த்த வெள் நிலா கஞ்சுகம் பீறிய ஆம்—மேற்போர்த்திருந்த வெள்ளிய நிலவாகிய சட்டையானது கிழிந்தது (என்பதே உண்மை) ஆம் எ—று.

குளிர்ந்தகிரணங்களைப்பரப்பி உலகத்திலுள்ள ஆன்மாக்களையெல்லாம் உவப்பிக்குஞ்சந்திரனைக் களங்கமுடையானென்று உலகத்தார் குறைகூறுவதுபொய்யே. காஞ்சிநகரத்துமதிலின் கொடிக்காம்புகள் குற்றுதலினற் கருநிறமுடையனுகிய அச்சந்திரன் தரித்திருந்த நிலவாகியவெண்ணிறச்சட்டை கிழிந்ததென்பதே உண்மை என்பதுகருத்து. கொடிகள் சந்திரமண்டலத்தையளாவியுள்ளனவென்பது தாற்பரியம்.

போல் அசைநிலை. ஈர்த்த-ஈரமென்னும் பண்புப்பெயரடியாகப் பிறந்த பெயரெச்சம். மாமதி-பூரணசந்திரன். சசி-முயற்களங்கமுடையவன்; சசம் முயல். ஒ எதிர்மறை. நீரரண் நிலவரண் காட்டரண் மதிலரண் என்னும்நால்வகைக்காவலுள் மதிலுமொன்ருதலின், கடிமதில் என்பதற்குக் காவலாகியமதில் எனப்பொருளுரைத்தாம்; காவலையு

டையமதிலெனினுமாம். மருங்கு ஏழனுருபின்பொருள்படநின்றதோரிடைச்சொல். செயவெனெச்சங்காரணப்பொருளில் வந்தது. பீறியது என்னும் வினைமுற்றில் துவ்விகுதிதொக்கது.

நூலாசிரியர்கள் சந்திரமண்டலத்திலுள்ள முயற்களங்கத்தைமறுத்துத் தங்கொள்கையையேற்றி வருணிப்பதை "ஒழுகொளிவிரிந்தகதிர்மணிவண்ணனுந்தியந்தாமரையுறைவோன்-முழுமதிக்கலையுணிறைந்தபேரழகைமொண்டுகொண்டரிபரந்தகன்ற- மழைமதர்நெடுங்கண்டமயந்திவதனம்வகுத்தனன்கரத்தினலெடுத்த- புழைவழித்தோன்றும்விசும்பினையன்றோகளங்கமென்றின்னமும்புகல்வார்" என்னும் நைடதச்செய்யுளானுமறிக. (உக)

காட்சி மேயவக் கடிமதிற் கதலிகை காணாச்
சூட்சி நாடிய பரிதியுங் கீழுறத் தொடர்ந்தான்
மாட்சி தேய்ந்திலன் வரன்முறை மனப்படு மதியோர்
தாட்சி செய்யினு மனையர்பா லணுகுமோ தவறு.

இ—ள்: காட்சி மேய அ கடி மதில் கதலிகை காணா—பார்வையமைந்த காவலாகிய அந்தமதிலிலுள்ள கொடிகளைக்கண்டு, சூட்சி நாடிய பரிதியும் கீழ் உற தொடர்ந்தான்—உபாயபுத்தியையுணர்ந்த சூரியனும் (அக்கொடிகளின்) கீழாகச்சஞ்சரித்தான், மாட்சி தேய்ந்திலன்—(அதனாலவன் மேலுயர்ந்துசென்றசந்திரன்போலத் தன்)பெருமை குறையப்பெற்றிலான், வரன்முறை மனப்படும் மதியோர் தாட்சிசெய்யினும்—வரலாற்றுமுறையானது மனதின்கண்ணே அமையப்பெற்ற நற்புத்தியினையுடைய பெரியோர்கள் தாழ்வுசெய்தாலும், அனையர்பால் தவறு அணுகுமோ— அவர்களிடத்துக் குற்றஞ்சாருமா? (சாராதே)எ—று.

காட்சி-எத்துணைத்தூரத்தினுங் கட்பொறிக்கு விடயமாந்தன்மை. சூட்சி தாட்சி என்பன தொடைநோக்கி வந்தவிகாரம். வரன்முறை- செய்யத்தக்கன இவை செய்யத்தகாதன இவை எனப் பெரியோர்வகுத்தமுறை. உம்மையிரண்டனுண் முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையதும் ஓகாரமும் எதிர்மறைகள்.

முற்செய்யுளாற் சந்திரன் கொடிக்குமேலாகச் சஞ்சரித்தானெனவும், இச்செய்யுளாற் சூரியன் கொடிக்குக்கீழாகச் சஞ்சரித்தானெனவுங் கூறி, சந்திரமண்டலத்தின்கீழ்ச் சூரியமண்டலமுளதென்னுங் கருத்தை ஆசிரியர் அமைத்தனர். மேலும் ஆங்காங்கே சிற்சிலசெய்யுட்களில் இக்கருத்தையமைத்துக்கூறினர். இது பௌராணிகர்மதம். சூரியசித்தாந்தமுதலிய சோதிடநூல்கள் சந்திரமண்டலத்தின்மேற் சூரியமண்டலமுளதெனக் கூறுவனவென்க.

இருபதாஞ்செய்யுண்முதலிதுகாறும் மூன்று செய்யுட்களால் மதிலிலுள்ள கொடிகளின்சிறப்புக் கூறப்பட்டது. (உஉ)

புடைப ரப்பிய புரிசையி னாற்றிசைப் புறத்துந்
தடநி லைப்பெருங் கோபுர முளதழ னிறத்துக்
கடவு ளுச்சியின் வதனமொன் றின்றியே காண்பா
னடைத லுற்றிடு திசைமுகம் பொருவின வவையே.

இ—ள்: புடை பரப்பிய புரிசையின் நாற்றிசைப்புறத்தும்— இடமகன்ற(அந்த) மதிலினது நான்கு திக்குகளினும், தட நிலை பெரும் கோபுரம் உள—விசாலித்த

நிலைகளையுடைய பெரிய கோபுரங்கள் உள்ளன, அவை—அக்கோபுரங்கள், தழல் நிறத்து கடவுள், அக்கினிபோலுஞ் சிவந்தநிறத்தையுடைய சிவபெருமான், காண்பான்—(அந்நகர்ச்சிறப்பைக்)காணும்படி, உச்சியின் வதனம் ஒன்று இன்றி அடைதலுற்றிடு திசைமுகம் பொருவின—உச்சிமுகமொன்றையொழித்து (அமைந்து)வந்த நான்குமுகங்களைப்போன்றன எ—று.

சிவபெருமான் அந்நகர்ச்சிறப்பைப் பார்க்குமாறு நான்குமுகங்கொண்டுவந்ததுபோல நாற்றிசைக்கோபுரங்களுமமைந்திருந்தனவென்பதுகருத்து.

ஏ அசைகள். புறம் ஏழனுருபு. உள்ளவென்பதில் ளகரவொற்றுத் தொக்கது. கடவுள் அடைதலுற்றிடுதிசைமுகம் என இயையும். காண்பான் பானீற்றுவினையெச்சம். தழனிறத்துக்கடவுள் என்பதற்குப் பிரமா எனப்பொருள்கூறுவாருமுளர்.

அகன்று கனத்த சுவரென்பார் 'புடைபரப்பியபுரிசை' எனவும், அதனைக் கடந்துட்புகுதற்கு நாற்றிசையினும் பெரியவாயிலமைந்த கோபுரங்கள் உளவென்பார் 'நாற்றிசைப்புறத்துந் தடநிலைப்பெருங்கோபுரமுள' எனவும், அவை மாணிக்கமுதலிய செந்நிறமணிகள்பதிக்கப்பட்டு ஒளிபரப்புவனவென்பார் 'தழனிறத்துக்கடவுளுச்சியின்வதனமொன்றின்றியேகாண்பானடைதலுற்றிடுதிசைமுகம்பொருவின' எனவும் கூறினார். (உ௩)

என்று மாமதிக் கடவுளும் பிறருமீ ரியல்பாங்
குன்ற மேயெனக் கீழ்த்திசை யதனொடுங் குடபா
னின்ற கோபுரங் கடக்கலர் வாய்தலி னெறியே
சென்று சென்றுபோ யப்புறத் தேகினர் திரிவார்.

இ—ள்: என்றும்—சூரியனும், மா மதிக்கடவுளும்—பெரியசந்திரனும், பிறரும்—செவ்வாய்முதலிய பிறகிரகங்களும், ஈரியல்பு ஆம் குன்றமே என கீழ்த்திசையதனொடும் குடபால் நின்ற கோபுரம் கடக்கலர்—உதயாஸ்தமனகிரிகளைக் (கடவாமை)யேபோலக் கிழக்குத்திக்கிலும் மேற்குத்திக்கிலும் பொருந்தியகோபுரங்களைக் கடவாது, வாய்தலின் நெறியே சென்று சென்று போய் அப்புறத்து ஏகினர் திரிவார்—வாயிலின் வழியே நடந்து நடந்து போய் அப்பாற்சஞ்சரித்துத்திரிவார்கள் எ—று.

சூரியன்முதலினோர் தங்கக்ஷாமார்க்கத்தின்மேல் உதயாஸ்தமனகிரிகள் உயர்ந்திருத்தலின், அவற்றின்மேலாகச்செல்லாது கீழ்ப்படிந்துசெல்வர்; அதுபோலவே, இந்நகரின் கீட்டிசையினும் மேற்றிசையினுமுள்ள கோபுரவாயில்களும், உயர்ந்திருத்தலின் மேலாகச்செல்லாது வாயில்வழியாகச்சஞ்சரிப்பர் என்பது கருத்தாயிற்று. ஆகவே கீட்டிசையிலுள்ள உதயகிரியினின்று வரும்போது உதித்தும், மேற்றிசையிலுள்ள அஸ்தமனகிரியிற் புகும்போது மறைந்தும் உலகினர்க்குக் காணப்படுதல்போல, கீழைக்கோபுரவாயிலினின்றுட்படும்போது உதித்தும், மேலைக்கோபுரவாயிலினின்றுவெளிப்படும்போது மறைந்தும் அந்நகரத்தார்க்குக்காணப்படுவரென்பதூஉம்பெறப்பட்டதென்க.

ஈரியல்பாங்குன்று=(கிரகங்களை உதிக்கச்செய்தலும் அஸ்தமிக்கச்செய்தலுமாகிய) இரண்டுதன்மைகளையுடைய மலைகள். ஏகாரமிரண்டுந்தேற்றம். கீழ்த்திசையதனொடும் என்பதில் அது பகுதிப்பொருள்விகுதி. இன்னோரன்னவற்றைச் சாரியையெனினுமொக்கும். கடக்கலர் ஏகினர் என்பன வினைமுற்றெச்சம். குன்றமேயென கடக்கலர் எனஇயையும். சென்று சென்று என்னும் அடுக்கு எஞ்ஞான்றும் நிகழ்தலையுணர்த்திற்று. (உ௪)

தீபு ரத்திடை மடுத்தவ னுணையாற் சிறந்த
மாபு ரத்திடை வான்றொடுங் கடிமதில் வரைப்பி

லாபு ரத்தவாய்க் கிளர்ந்தவே யமைத்தவன் றென்னக்
கோபு ரத்திடைக் கொழுந்துபோ லோங்கிய கொடிகள்.

இ—ள்: தீ புரத்திடை மடுத்தவன் ஆணையால் சிறந்த மா புரத்திடை—(தமது புன்சிரிப்பிலுண்டாகிய) அக்கினியை முப்புரங்களினும் விறைத்தெரித்த சிவபெருமானது ஆஞ்ஞையினுற் சிறப்புற்ற பெரிய (அந்தக்) காஞ்சிநகரில் (உள்ள), வான் தொடும் கடி மதில் வரைப்பில்—ஆகாயத்தையளாவிய காவலாகிய மதிலினெல்லையில், ஆபுரத்த ஆய் கிளர்ந்தவே அமைத்த அன்று என்ன— புரம்வரையுந் தொடர்புடையனவாய் வளர்ந்தனவே (வேறாக) அமைக்கப்பட்டனவல்ல என்று சொல்லும்படி, கொடிகள் கோபுரத்திடை கொழுந்துபோல் ஓங்கிய—கொடிகளானவை (அந்நகர்க்)கோபுரத்தின்கண்ணே கொழுந்துகள்போல வளர்ந்திருந்தன எ—று.

கோபுரத்தின்கண்ணே அலங்காரத்தின் பொருட்டமைக்கப்பட்டுள்ள கொடிவகைகள், 'நகருடன்றேன்றினவே; பின்பியற்றி வேறாய்வைக்கப்பட்டனவல்ல' என்று கண்டோர் சொல்லும்படி, கோபுரத்தோடு பொருந்தினவாய் மனோரம்மியமாக உயர்ந்து வளர்ந்துள்ளன என்பது கருத்து.

ஆபுரம் வடசொல். ஆ என்னுமுபசர்க்கம் ஈண்டெல்லைப்பொருளில் வந்தது; "ஆகன்னமுறச்செம்பொன்வரைவில்வாங்கி" என்னும் பாரதச்செய்யுளிற்போல. ஏ தேற்றம்.

பிரமதேவரது சிருட்டிகாரணமாகச் சிவபெருமானுற் படைக்கப்பட்ட நகரமென்பார் 'தீபுரத்திடைமடுத்தவனுணையாற்சிறந்தமாபுரம்' என்றார்.

இருபத்துமூன்றாஞ்செய்யுண்முதலிதுகாறும் மூன்றுசெய்யுட்களாற் கோபுரச்சிறப்புக்கூறப்பட்டது. (உரு)

மாட மாளிகை மண்டபங் கோபுர மறுகிற்
கோடி கோடியின் மேலுமுண் டன்னதார் குணிப்பா
ராடு கேதனத் தளவையு மன்னதே யகல்வா
னூடு போகலா தலமரும் பறவைக ளொப்ப.

இ—ள்: மாடம் மாளிகை மண்டபம் கோபுரம்— மாடங்களும் மாளிகைகளும் மண்டபங்களும் கோபுரங்களும், மறுகில் கோடிகோடியின் மேலும் உண்டு— (ஒவ்வொரு) வீதிகளிலும் கோடாகோடியின்மேலும் உள்ளன, அன்னது ஆர் குணிப்பார்—அத்தொகையை யார்தான் அளவிட்டுக்கூறவல்லார் (எவராலுமரிதென்பதாம்), அகல் வானூடு போகலாது அலமரும் பறவைகள் ஒப்ப ஆடு கேதனத்து அளவையும் அன்னதே—அகன்ற ஆகாயத்தின்கண்ணே (போகவிரும்பிப் பறந்தும்) போகலாற்றாது உலைகின்ற பறவைகள்போல அசைகின்ற கொடிகளின்தொகையும் அத்தன்மையதே. (அளவிடற்கரிது) எ—று.

கோடிகோடி- கோடியாலுறழ்ந்த கோடி. உம்மையிரண்டனுண் முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையது எச்சம். ஆர் யாவரென்னும் வினைப்பெயரின்விகாரம். ஏகாரம் தேற்றம். ஊடு ஏழனுருபின் பொருள்படநின்றதோரிடைச்சொல். (உகூ)

சிகர மால்வரை யன்னமா ளிகைதொறுஞ் சிவணு
மகர தோரண மாடிகள் பலவுற வயங்க
லிகலும் வெய்யகோ ளிரண்டுமா லொருவடி வெய்தி
யகல்வி சும்பிடைக் கதிர்களின் புறமறைத் தனைய.

இ—ள்: சிகர மால் வரை அன்ன மாளிகைதொறும் செவ்வும் மகர தோரணம்—முடிகளையுடைய பெரிய மலைகளையொத்த வீடுகடோறும் பொருந்திய மகரதோரணங்களானவை, பல ஆடிகள் உற வயக்கல்—பலகண்ணாடிகள் (தம்மிடத்தே) பொருந்த விளங்குந்தன்மை (எதுபோலுமெனில்), இகலும் வெய்ய கோள் இரண்டும் ஆய் ஒருவடிவு எய்தி—பகைக்கின்ற கொடிய இராகுகேதுக்களென்னும் கிரகங்களிரண்டும் கூடி ஒருருக்கொண்டு, அகல் விசும்பிடை கதிர்களின் புறம் மறைத்து அனைய—அகன்ற ஆகாயத்திற் (பல) சூரியசந்திரர்களின் புறத்தை மறைத்தாற்போலும் எ—று.

இரண்டு மகரமீன்கள் பொருந்தி இருபுடையுந்தூங்கும்வடிவாக, நடுவிற்பலவிதமான கொடிகள் செறிய அமைந்திருப்பது மகரதோரணம்; இதனை "த்வயோர்மகரயோர்வக்த்ரைஸ்ஸக்தம்மத்யமபூரிதம்| நாநாவிதலதாயுக்தமேதந்மகரதோரணம்||" என்னுங்காமிகாகமவசனத்தாலுணர்க. இவ்விலக்கணமுடைய மகரதோரணங்கள், பலகண்ணாடிகளழுத்தப்பெற்று விளங்குதலின், சந்திரனைமறைப்பதாகிய ராகுவும் சூரியனை மறைப்பதாகிய கேதுவும் ஒன்றாகிநீண்டு பலசூரியசந்திரர்களின் புறத்தை ஓர்காலத்திற்றானே மறைத்ததுபோலும் என்பதுகருத்து. இது அபூதவுவமை. மகரங்கட்கு இராகுகேதுக்களும் கண்ணாடிகட்குச் சூரியசந்திரருமுபமானம்.

மகரதோரணங்கள் அங்குள்ளகண்ணாடிகளிற் பிரதிபிம்பித்தலை இவ்வாறு கூறியுவமித்தனரென்பர்சிலர். அவை பிரதிபிம்பித்தலாற் கண்ணாடியின்புறம் மறைக்கப்படுதலின்மையின், அது பொருந்தாதென்க.

மறைத்தால் என்பதில் ஆல் என்னும் வினையெச்சவிகுதி தொக்கது. (௨௭)

செம்பொ னிற்புரி நிலையுடைத் திகிரியந் தேர்க
ளம்ப ரத்திடை வசியுற வீற்றுவீற் றுருகுந்
தம்ப முற்றல மருவன செய்யகோற் றலையிற்
பம்ப ரத்துருத் திரிப்புறக் கறங்கிய படிய.

இ—ள்: செம்பொனில் புரி திகிரியம் நிலையுடை தேர்கள்—செம்பொன்னினாற் செய்யப்பட்ட உருளைகளையுடைய நிலைத்தேர்கள், அம்பரத்திடை வசி உற வீற்று வீற்று ஆகும் தம்பம் உற்று அலமருவன—ஆகாயத்தின்கண்ணே கூரானது பொருந்த வெவ்வேறாயமைந்துள்ள தம்பங்களிற் பொருந்திச்சுழலுவன; (அவையெவைபோன்றனவெனில்), செய்ய கோல் தலையில் பம்பரத்து உரு திரிப்புற கறங்கிய படிய—செப்பமாகிய கோலினுச்சியிற் பம்பரங்களினுருவங்களைச் சுழற்ற அவை சுழலுந்தன்மைபோன்றன எ—று.

மாளிகைகடோறுங் கூர்மேலாக நிறுத்திய தம்பங்களில் நிலைத்தேர்களமைக்கப்பட்டு இரவும் பகலுங் காற்றினாற் சுழன்றுகொண்டிருத்தல், கோல்களினுச்சியிற் பம்பரங்களைச்சுழற்ற அவை சுழலுதல்போலும் என்பதுகருத்து.

செம்பொனிற்புரிதேர்கள் நிலையுடைத்தேர்கள் எனத் தனித்தனி இயையும். செயவெனெச்சங்களுள் முன்னையது காரியப்பொருளிலும் பின்னையது காரணப்பொருளிலும் வந்தன. நிலைத்தேரை மரக்காற்றாடியெனவும் வழங்குப. (௨௮)

பளிங்கி னாற்செய்த தெற்றியின் றலையிசைப் பனிதோய்
வளங்கொ ணித்திலஞ் செம்மணி குயிற்றிய வைப்பிற்
றுளங்க நாற்றிய பொன்மணிப் பாலிகை தொகுவ
குளங்கொ டாமரை மலர்ப்பொருட் டாயின குறிக்கின்.

இ—ள்: பளிங்கினால் செய்த தெற்றியின்றலைமிசை— பளிங்குக் கற்களாலியற்றிய திண்ணையின்மேல், பனி தோய் வளம் கொள் நித்திலம் செம்மணி குயிற்றிய வைப்பில்—குளிர்ச்சிபொருந்திய வளப்பத்தினையுடைய முத்துக்களும் மாணிக்கங்களும் அழுத்திய இடங்களிலே, துளங்க நாற்றிய பொன் மணி பாலிகை தொகுவ—விளங்கும்படி முளைக்கச்செய்த பொன்னினாலும் இரத்தினங்களாலுமியன்ற பாலிகைகள் செறிந்திருப்பன, குறிக்கின்— (அவைஎவைபோன்றன என) ஆராயுங்கால், குளம் கொள் தாமரை மலர் பொகுட்டு ஆயின— தடாகத்திற்பொருந்திய தாமரைப்பூவிலுள்ள பொகுட்டுப்போன்றன எ—று.

தெற்றியின்றலை திண்ணையினிடம். பனிதோய்நித்திலம் வளங்கொள் நித்திலம் எனத்தனித்தனி இயையும். நாற்றுதல்-முளையிடுதல். பொகுட்டு தாமரைமலரினடுவிலிருக்குங்காய். இதனை வடமொழியிற் கர்ணிகை என்பர்.

பளிங்குக்கற்படுத்ததிண்ணைக்குத் தடாகத்தையும், முத்துநிலத்திற்கும் மாணிக்கநிலத்திற்கும் வெண்டாமரை செந்தாமரை மலர்களையும், பாலிகைகட்கு அத்தாமரைமலர்ப்பொகுட்டையும் உவமித்தார். (உகூ)

ஓவி யத்தியன் மரகதத் தலத்தின தும்பர்த்
தாவி லாடகத் தலமிசை நித்திலத் தலமேற்
கோவை பட்டசெம் மணித்தலம் பொலிதலாற் கொண்மூ
மூவ கைக்கதிர் வியலிடந் தெரிப்பதம் மூதூர்.

இ—ள்: ஓவியத்து இயல் மரகதத்தலத்தினது உம்பர்— சித்திரமாக அமைந்தமரகதநிலத்தின்மேல், தா இல் ஆடகத்தலம்-குற்றமில்லாதபொன்னிலமும், மிசை நித்திலத்தலம்— அதன்மேல் முத்துநிலமும், மேல் கோவைபட்ட செம்மணி தலம் பொலிதலால்—அதன்மேல் வரிசைப்படுத்திய மாணிக்கரத்தினத்தாலாகிய நிலமும் பொலிந்திருத்தலினால், அ முது ஊர்— அந்தப்பழைய காஞ்சிநகரமானது, கொண்மூ மூவகை கதிர் வியல் இடம் தெரிப்பது— மேகமண்டலத்தையும் முச்சுடர்களின் பெரியமண்டலங்களையும் முறையேநிகர்ப்பது எ—று.

நால்வகைநிலங்களும் ஒன்றன்மேலொன்றடுக்காயிருத்தல், முறையே, மேகமண்டலமும், சூரியசந்திராக்கினிமண்டலங்களும் ஒன்றன்மேலொன்று அடுக்காயிருத்தல்போலுமென்பது கருத்து. முதுமை ஊர்- மூதூர் எனச் சந்திபெற்றது.

இச்செய்யுளால் மேன்மாளிகைகளின் சிறப்புக்கூறப்பட்டது. (ங0)

கன்னல் வேளெனு மைந்தரு மாதருங் கலந்து
மன்னு நித்தில மாளிகைப் பத்தியின் மாடே
பொன்ன வாஞ்சிறை மணிமயிற் குழாத்தொடும் போகு
மன்ன மாமதி முகிலிடை நுழைந்துபோ யனைய.

இ—ள்: கன்னல் வேள் எனும் மைந்தரும் மாதரும் கலந்து மன்னும் நித்தில மாளிகை பத்தியின் மாடு—கருப்புவில்லையுடைய மன்மதன்போன்ற (பேரழகினையுடைய) காளையர்களும் மங்கையர்களுங்கூடி இருக்கின்ற முத்துமாளிகைவரிசையின் பக்கத்தில், பொன் அவாம் சிறை மணி மயிற்குழாத்தொடும் போகும் அன்னம்— இலக்குமிதேவியும் விரும்பத்தக்க சிறகினையுடைய கரிய மயிற்கூட்டத்தோடும் செல்லும் அன்னப்பறவை (எதுபோலுமெனில்), மா மதி முகிலிடை நுழைந்து போய் அனைய— பூரணசந்திரன் மேகங்களினடுவே நுழைந்து சென்றாற்போலும் எ—று.

ஏ அசை. போயினால் என்பது போய் எனத்தொக்கது. வேலென்பது முருகக்கடவுட்கும் பெயராதலின், பிறிதினியைபுநீக்கியவிசேடணம்புணர்த்தி 'கன்னல்வேள்' எனவும், கலாபத்தைவிரித்துக்கொண்டுசென்றனவென்பதுபோதர 'பொன்னவாஞ்சிறைமணிமயில்' எனவும் கூறினார்.

முத்துமாளிகையில், மயில்களின்சாயைதோன்றுமிடங்கள்கறுத்தும் அன்னத்தின்சாயைதோன்றுமிடமாத்திரம்வெளுத்தும் தோன்றுதலின், முறையே மேகத்தையும் அம்மேகத்தினுழைந்துசெல்லுஞ் சந்திரனையும் உபமித்தார். மயில்கட்கும்அன்னத்திற்கும் மேகத்தையுஞ்சந்திரனையும் உபமித்துக் கூறுவர்சிலர். அவ்வாறு கொள்ளின், 'சித்திலமாளிகைப்பத்தியின்மாடே' என்றது வாளாகூறலாமென்க. (௩௧)

தண்ட மாகியே புவியுறு பணியெலாந் தழுவி
யண்ட மீமிசை யிரவியு மதியமு மடைதல்
கண்டு மாளிகைச் சூளிகை மருங்குபோய்க் கவர்வான்
கொண்ட சீற்றத்தி னாவெறிந் தன்னபூங் கொடிகள்.

இ—ள்: புவி உறு பணி எலாம்—பூவுலகத்திலுள்ள சர்ப்பங்களெல்லாம், அண்டமீமிசை இரவியும் மதியமும் அடைதல் கண்டு— ஆகாயத்தின்மேற் சூரியனும் சந்திரனும் வருதலைப்பார்த்து, மாளிகை சூளிகை மருங்கு போய்—(அவைகள் அணிமையனவாம்படி) மாளிகைகளிலுள்ள தூபியின்பக்கங்களில் (இவர்ந்து) சென்று, தண்டமாகி தழுவி—தண்டாகாரமாகி ஒருங்குகூடி, கவர்வான் கொண்ட சீற்றத்தில் நாவெறிந்து அன்ன— அவைகளைப் பற்றும்படி கொண்ட கோபத்தினாலே நாவைநீட்டினாற்போன்றன, பூ கொடிகள்—மலர்களையுடைய கொடிகள் எ—று.

இராகுகேதுக்களாகிய சர்ப்பங்களிரண்டும் சந்திரசூரியர்களைப் பற்ற, நாம் வாளாவிருப்பதாவென்று பூவுலகிலுள்ள சர்ப்பங்கள் நினைந்து, அச்சூரியசந்திரர்கள் தமக்கணிமையாமாறு மாளிகைகளின்மேலிவர்ந்துபோய், பற்றமுயன்று ஒருங்குகுழுமித் தண்டாகாரமாக நாநீட்டிச்சீற்றல்போல, அம்மாளிகைகளிலுள்ள தூபிகளினருகே பொன்முதலியவற்றால் அழகின்பொருட்டமைக்கப்பட்ட பூங்கொடிகள் பொருந்தியிருந்தன என்பதுகருத்து.

ஏ அசை. எறிந்தால் என்பதில் ஆல் என்னும்வினையெச்சவிகுதிதொக்கது. சூளிகை தூபிக்குப்பெயரென்பதை "ஸ்தூபிகாசகட:கீலச்சூளுகஸ்தூபிரித்யபி| சிகாஸ்தூபிரிதிக்யாதாசூளிகாசத்விசோத்தமா:||" எனக்காமிகாகமங் கூறுதலாலுணர்க. (௩௨)

தேனை வென்றசொல் லாரொடு மைந்தருந் திளைக்கு
மீன வாவிபோல் வியன்படி கத்தினால் விளங்குந்
தான மீமிசைத் தயங்கிய முழுமணித் தலந்தான்
வான நின்றிடு தெய்வத மானமே மானும்.

இ—ள்: தேனை வென்ற சொல்லாரொடு மைந்தரும் திளைக்கும் மீனவாவிபோல்—தேனையும்வென்ற (அத்துணையினிமைவாய்ந்த) சொற்களைப்பேசுகின்ற மங்கையர்களுடன் காளையர்களும் ஸ்நாநஞ்செய்கின்ற மீன்களையுடைய தடாகம்போல, வியன் படிகத்தினால் விளங்கும் தானம் மீமிசை-பெரிய பளிங்கினாற் (செய்யப்பட்டு) விளங்குகின்ற இடத்தின்மேல், தயங்கிய முழுமணி தலம்-விளங்கிய மாணிக்கநிலமானது, வானம் நின்றிடு தெய்வதமானமே மானும்— ஆகாயத்தினிற்கின்ற தெய்வவிமானத்தையேபோலும் எ—று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. முழுமணி-மாணிக்கம். தான் சாரியை, ஏ தேற்றம்.

தேனைப்பருகுவார்க்குத் தோன்றுஞ்சுவையினும் பன்மடங்கதிகமான சுவை, கேட்பார்க்குத் தோன்றுமாறு இன்சொற்களைப் பேசுதலின் 'தேனைவென்றசொல்லார்' எனவும், நீர் வாவிபோலுமென்பது போதர 'இளைக்குமீனவாவிபோல்' எனவும் கூறினார். (௩௩)

தேவர் தானவர் முனிவரர் சித்தரோ டியக்கர்
வாவு கின்னர ருவணர்கந் தருவர்மற் றுள்ளோ
ரேவ ருந்தம தகன்பதி யிகந்தவ ணெய்தா
மேவு கின்றன தனித்தனி யிருக்கைகண் மிகுமால்.

இ—ள்: தேவர் தானவர் முனிவரர் சித்தரோடு இயக்கர்— தேவர்களும் அசுரர்களும் முனிவர்களும் சித்தர்களும் இயக்கர்களும், வாவு கின்னரர் உவணர் கந்தருவர்—தாவிச்செல்லுகின்ற கின்னரர்களும் கருடர்களும் கந்தருவர்களும், மற்றுள்ளோர் ஏவரும்—பிறரனைவரும், தமது அகன் பதி இகந்து அவண் எய்தா மேவுகின்றன இருக்கைகள் தனித்தனி மிகும்—தங்கள் தங்கள் பெரிய இருக்கைகளை வெறுத்துவிட்டு அக்காஞ்சிநகரில்வந்து வசிக்கின்ற இருப்பிடங்கள் வேறுவேறாக (அந்நகரத்தில்) மிகுந்திருக்கும் எ—று.

ஒடு எண்ணில்வந்தது. ஏவருமெனற்பாலது ஏவருமெனநீண்டது. மேவுகின்றன வினைமுற்றுப்பெயரெச்சம். தேவராதியோர் தம்பதியைவெறுத்துவிடுங் காரணத்தை மேல் எழுபத்தொன்பதாஞ்செய்யுளிற்காண்க.

தத்தம்நகரில் வாழ்வதுபோல எக்காலமும் நிலைபெற்று வாழும்படி அமைக்கப்பட்டனவென்பதுபோதர 'தனித்தனியிருக்கைகள்' என்றார். (௩௪)

தூங்கு குண்டிகை யருகுறக் காலெதிர் தூண்டி
யோங்கு நாசிமேல் விதிமுறை நயனங்க ளுறுத்தி
யாங்கொ ராசனத் திருந்தர னடியகத் தடக்கிப்
பாங்கர் மாதவம் புரிகுநர் சாலைகள் பலவால்.

இ—ள்: தூங்கு குண்டிகை அருகு உற-(கையில்) தூங்குகின்ற கமண்டலம் (தமது) பக்கத்திற்பொருந்த, கால் எதிர் தூண்டி—பிராணவாயுவை எதிரேசெலுத்தி, ஓங்கும் நாசிமேல் விதிமுறை நயனங்கள் உறுத்தி—உயர்ந்த மூக்குநுனியிற் சாஸ்திரவிதிப்படி விழிகளைப்பதித்து, ஆங்கு ஒரு ஆசனத்து இருந்து—அவ்விடத்தே ஓராசனத்தில் இருந்து, அரன் அடி அகத்து அடக்கி-சிவபெருமானது திருவடிகளை இருதயகமலத்திலிருத்தி, பாங்கர் மா தவம் புரிகுநர் சாலைகள் பல- பக்கங்களில் பெரிய யோகநிட்டையைச்செய்கின்ற தபோதனர்களது ஆச்சிரமங்கள் பல(அந்நகரத்தில்உள்ளன)எ-று.

ஆல் அசை. 'காலெதிர்தூண்டி' என்பதனாற் பிராணாயாமமும், 'நாசிமேல்விதிமுறைநயனங்களுறுத்தி' என்பதனாற் பிரத்தியாகாரமும் தாரணையும், 'ஆங்கொராசனத்திருந்து' என்பதனால் ஆசனமும், 'அரனடியகத்தடக்கி' என்பதனால் தியானமும் சமாதியும் ஆகச் சடங்கயோகமும் இச்செய்யுளிலடக்கிக் கூறப்பட்டனவென்க. சடங்கயோகங்களிவைதாமென்பதை, காசிகண்டம் "ஆசனம்பிராணாயாமமெஞ்ஞான்றுமழிவறுபிரத்தியாகார-மாசில்தாரணைமெய்த்தியானநற்சமாதிவகுத்தநல்யோகமாறு" என்பதனாலறிக. இவற்றுடன் இயமம் நியமம் என்னுமிரண்டையுமாதியிற் சேர்த்து,யோகாங்கம் எட்டெனச்சிலநூல்கூறும்; அதனை, கூர்மபுராணம்"இயமநன்னியமமேத்துமாசன

ப்பிராணாயாம- மூயிர்புலனுளத்தில்வாங்கும்பிரத்தியாகாரமோங்கு- தலையுடன்சித்தஞ்சேர்த்துந்தாரணைதியானமென்று- மயர்வறுசமாதியெட்டும்வகுத்தநல்யோகத்தங்கம்" என்பதனானுணர்க.

இயமமாவன:—கொல்லாமை மெய்ம்மைகூறல் கள்ளாமை பிறர்பொருளிச்சியாமை இந்திரியமடக்கல் என்பன. நியமமாவன:—தவம் தூய்மை தத்துவநூலோர்தல் மனமுவந்திருத்தல் தெய்வம்வழிபடல் என்பன. ஆசனமாவன:—சுவத்திகம் கோமுகம் பதுமம் வீரம் கேசரி பத்திரம் முத்தம் மயூரம் சுகம் என்னும் ஒன்பதுமாம். அவற்றுள், சுவத்திகமாவது: தொடைக்குமுழங்காற்குநடுவே இரண்டுள்ளங்காலையுஞ் செலுத்தியிறுமாந்திருத்தல். கோமுகமாவது: சகனப்பக்கத்திலிருகாற்பரட்டையுமாறவைத்து அவ்விருகாற்பெருவிரல்களையுங் கையிற்பிடித்திருத்தல். பதுமமாவது: இருதொடைமேலுமிரண்டுள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல். வீரமாவது: வலத்தொடையி லிடக்காற்பரட்டைச்சேர்த்தியிறுமாந்திருத்தல். கேசரியாவது: பீசத்தின்கீழ்ச் சீவினியிடத்துப்பரட்டைவைத்து இடமுழங்கையை முழந்தாளில்வைத்து அங்குலிவிரித்து நாசியைப்பார்த்திருத்தல். பத்திரமாவது: பீசத்தின்கீழ்ச்சீவினியிடத்து இருகாற்பரட்டையும் வைத்து அவ்விருபதத்தையுமிருகையாலுமிறுகப்பிடித்தசையாதிருத்தல். முத்தமாவது: இடக்காற்பரட்டாற் சீவினியையழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின்கீழுந்தவிருத்தல். மயூரமாவது: முழங்கையிரண்டுமுந்திப்புறத்திலழுந்தப் புவியிற்கையூன்றிக் காலீட்டித் தலைநிமிர்த்திருத்தல். சுகமாவது: சுகமுந்திடமுமெவ்வாறிருக்கினெய்துமோ அவ்வாறிருத்தல். பிராணயாமமாவது:—பிராணவாயுவைத்தடுத்தல். அது இரேசகம் பூரகம் கும்பகம் என மூன்றுபகுதியையுடையது. அவற்றுள், இரேசகமாவது: அகத்துள்ள அசுத்தவாயுவைப் புறத்தேகழித்தல். பூரகமாவது: புறத்துள்ள சுத்தவாயுவினுலே இயன்றமட்டுஞ் சரீரத்தைநிறைத்தல். கும்பகமாவது: கழித்தலையும் உட்கொள்ளலையுமொழித்து உள்ளே உள்ள வாயுவைத்தடுத்துநிற்றல். பிரத்தியாகாரமாவது:—ஐந்துஅங்கங்களையும் ஆமைஉள்ளடக்குதல்போலப் பஞ்சேந்திரியங்களையுமடக்கிஉண்ணோக்கல். தாரணையாவது:—கண்டம் இதயம் நெற்றி கபாலம் நாபி என்பவற்றுளொன்றில் இடைவிடாது சிந்தைவைத்தல். தியானமாவது:— ஆற்றினீர் இடைவிடாதுபாய்தல்போலச் சிவத்தை இடைவிடாமற் சிந்தித்திருத்தல். இது, சகுணம் நிர்க்குணமென இருவகைப்படும். சகுணத்தியானமாவது: உருவத்துடனிருக்குஞ் சிவபெருமானை மந்திரத்தாற்றுதித்து மனத்திலிருத்துதல். நிர்க்குணத்தியானமாவது: மந்திரசபமின்றிப் பிரமத்தைமனத்திலிருத்துதல். தன்மாத்திரையைந்துஞ் செவிமுதலாகியஐந்திற் பொருந்துந்துணையுமே இதுதியானமெனப்படும். இதன்மேற்சமாதியெனப்படும். சமாதியாவது:—ஆன்மா, தானல்லது பிறிதொன்றில்லையெனும்படி புலனிறந்து, சூரியன் இருளைநீக்கி ஒளிபரப்பி விளங்கல்போல வினைவினுள்ளே பிரகாசித்து, அலையற்றசமுத்திரமெங்கும் நிறைந்துநின்றாற்போல நிறைந்துபொலிந்து, சிவத்தைத்தரிசித்திரண்டற்றிருத்தல். இப்படிச் சமாதியிருப்பவனை அக்கினி ஆயுதம் நீர்முதலியவைகள் வருத்தமாட்டா.

இயமமுதலியன சிலநூல்களில் வேறுபாடாகவுங்கூறப்படுகின்றன. அவற்றையீண்டுவிரிப்பிற் பெருகும்.

தன்கமண்டலமே தனக்குயுக்தமாதலின், அதனைப் பிறர்கைப்படாவண்ணம் பாதுகாப்பாகவைத்தனரென்பது போதர 'தூங்குகுண்டிகையருகுற' எனவும், "மயிர்க்கால்வழியெல்லாமாய்கின்றவாயு-வுயிர்ப்பின்றியுள்ளேபதி,——வாயுவழக்கமறிந்துசெறிந்தடங்கி- லாயுட்பெருக்கமுண்டாம்,—— போகின்றவாயுபொருந்திற்சிவமொக்குந்தாழ்கின்றவாயுவடக்கு" என ஒளவையாரருளிச்செய்தவாறு விசேடமுடைமையி

ன் 'காலெதிர்தூண்டி' எனவும், சாமுத்திரிகாசாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட புருஷல
க்ஷணத்திற்கேற்ப நீண்டுயர்ந்த நாசியென்பதுபோதர 'ஓங்குநாசி' எனவும், சிவபெருமா
ன் பஞ்சகிருத்திய சூக்குமநடனமியற்றுந்தானமாகிய புருவமத்தியத்தையுள்ளமைத்து
இமையாது பார்த்தென்பதுபோதர 'நாசிமேல்விதிமுறைநயனங்களுறுத்தி' எனவும்,
"எறிபுனல்சாம்பர்கரியுமிகொசுகீயென்புதீயெய்திடயன்றங்- குறுகருங்கானந்தொழுவி
வற்றிருந்துயோகினைக்குறித்தலுமாகா" எனக்காசிகண்டம் விலக்கிய தானங்களைநீக்கி,
ஆலயம் மடம் புண்ணியநதிதீரமுதலிய நற்றானங்களில், தருப்பை கம்பலம் புலித்தோ
ல் கருமான்றோல் பட்டு யஞ்ஞவிருக்ஷம் முதலியவற்றாலமைந்த ஆசனங்களுள் யோக
சித்திக்கும் அவகாசத்துக்குமேற்ற ஒன்றில், பதுமாசனமாகவேனும் ஏற்ற பிற ஆசன
மாகவேனுமிருந்தென்பது போதர 'ஆங்கொராசனத்திருந்து' எனவும், "துயக்கந்து
டைத்த ஞானியர்க்குத்தோன்றுமெங்குந்துகளில்லான்- மயக்கமறுத்தயோகர்க்குமரு
வுமிதயமலர்மீதே- பயக்கும்பலத்தைப்பாவகனிற்பார்ப்பார்தமக்குப்பாங்குறவே- நய
குமுருவின்மற்றையவர்காடவுறைவனுடோறும்" எனச் சிவதருமோத்தரங்கூறியவாறு,
அனைத்தையுந்தம்முளமைத்தலால் அரசப்தவாச்சியனுனசிவபெருமான்,யோகியர்க்கும
னத்துளமைதலின் 'அரனடியகத்தடக்கி' எனவும், "மூக்குநுனிதன்னையிருகண் கண்
முகிழாதே-நோக்கியுயர்மாயைகள்விடுத்துநுவன்ஞானந்- தேக்கியெனையன்பினொடுசிந்
தையினிருத்தி-யேக்கறவினோடுபணிவோர்க்கெளியனுவேன்" எனக் கூர்மபுராணங்கூ
றியவாறே சிவபெருமான் எளிவந்தருளுதற்கேற்ற தொழிலாதலின் 'மாதவம்' எனவு
ம் விசேடித்தார்.

இச்செய்யுளால், யோகியர் ஆச்சிரமங்களின் சிறப்புக் கூறப்பட்டது. (௩௫)

பாடு நான்மறை யந்தணர் வேள்விகள் பயில
மூடு தண்புகை யண்டமுங் கடந்தன முன்னந்
தேடு கின்றதோர் பரஞ்சுடர் மீட்டுமித் திறத்தா
னீடு கின்றதோ வென்றுநான் முகத்தனு நினைய.

இ—ள்: நால் மறை பாடும் அந்தணர் வேள்விகள் பயில மூடு தண் புகை—
நான்குவேதங்களையும் (சந்தவிலக்கணந்தவறாது)ஓதுகின்ற பிராமணர்கள் யாகங்களை
ச்செய்தலால் மூடிய செறிந்தபுகைப்படலங்கள், முன்னம் தேடுகின்றது ஓர் பரஞ்சுடர்
மீட்டும் இ திறத்தால் நீடுகின்றதோ என்று நான்முகத்தனும் நினைய— முன்னைநாளி
ல்(நாம்)தேடிய ஒப்பற்றபரஞ்சோதியானது பின்னரும் இவ்வடிவாக வளருகின்றதோ
என்று நான்குமுகங்களையுடைய பிரமதேவரும்நினைக்கும்படி, அண்டமும் கடந்தன—
அண்டமுகட்டையுங்கடந்து (அப்பாற்)சென்றன எ—று.

முற்காலத்திலே திருமாலும்யானுமாகத் தேடும்படி செந்தழல்வடிவாய்வளர்ந்
த பரஞ்சோதியானது பின்னுமோர்முறை கருநிறவடிவாகவளருகின்றதோ என்று(சத்
தியலோகத்தில்வாழும்) பிரமதேவரும் ஐயுறும்படி, அந்நகரிலுள்ள வேதியர்கள் வளர்
க்கும் யாகாக்கினியின் புகை, அண்டமுகட்டையுங்கடந்து அப்பாற்சென்றன என்பது
கருத்து. அந்தணசிரேட்டர்கள் வேள்விபுரிகின்றனரென்பது தாற்பரியம்.

ஓர் அசைநிலையெனினுமாம். நால்வேதங்களாவன: இருக்கு யசுர் சாமம் அ
தர்வணம் என்பன. அந்தணர்-அழகிய தட்பத்தினையுடையவர். வேள்வி- வேட்கப்படுவ
து. அண்டமும் நான்முகத்தனும் என்பவற்றில் உம்மை உயர்வுசிறப்பு. முன்னம் தேடு
கின்றது காலமயக்க வழுவமைதி. தேடுகின்றது என்னும் தெரிநிலைவினைமுற்று, பெ
ரெச்சமாகின்றது. இதற்குவிதி: இலக்கணக்கொத்தில் "இருவகைமுற்றுமீரெச்ச
மாதலும்........உளவெனமொழிபவோரோவழிப்புலவர்" என்பதாம். இன்னோரன்ன

சொற்களை வினையாலணையும்பெயரெனினுமொக்கும். செயவெனெச்சங்களுண் முன்னையது காரணப்பொருட்டு. பின்னையது காரியப்பொருட்டு.

வேதார்த்தங்களை நன்குணர்ந்தவரே யாகஞ்செய்தற்கு யோக்கியராதலின், அதற்கேற்ற பரிபக்குவமுடையரென்பார் 'பாடுநான்மறையந்தணர்' என்றார். (௫௬)

நான்ம றைக்குலத் தந்தணர் நவையறு காட்சி
யூன்ம றைத்திடு முயிரென வோம்பிய வொழுக்கார்
மேன்மு றைக்கணோ ரைம்புலப் படிற்றினை வென்றோர்
வான்ம றைத்திடு மாளிகை வீதியு மலிந்த.

இ—ள்: நவை அறு காட்சி ஊன் மறைத்திடும் உயிர் என ஓம்பிய ஒழுக்கார்—குற்றமற்ற தோற்றத்தினையுடைய உடலான் மறைக்கப்பட்ட உயிரைப்போலப் பேணுகின்ற நல்லொழுக்கத்தினையுடையவர்களும், மேல் முறைக்கணோர்—பாரம்பரியக்கிரமத்தில் (தவறுபடாதமைந்து) நிற்பவர்களும், ஐம்புலப்படிற்றினை வென்றோர்—ஐம்புலங்களால்விளையுங் குற்றத்தை அடக்கினவர்களுமாகிய, நால் மறை குலத்து அந்தணர் வான் மறைத்திடும் மாளிகை வீதியும் மலிந்த—நால்வேதங்கட்குமுரிய குலத்தவர்களாகிய வேதியர்களது ஆகாயத்தைமறைக்கின்ற (அத்துணை உயர்ச்சியிக்க) மாளிகைகள் பொருந்திய வீதிகளும் (அந்நகரில்) நிறைந்திருந்தன எ—று.

உம்மை எச்சம். நவையறுகாட்சியென்றது பிரமதேசு முதலியவற்றாற் புனிதமுறப்பொலிந்து தோன்றுதலை. வேதவுரிமை அந்தணர் முதன்மூன்றுசாதியார்க்குமுளதாயினும், அரசர் வணிகரென்னுமிருசாதியாரும் ஓதற்கல்லது ஓதுவித்தற்கதிகாரமிலராக, முதல்வருணத்தினராயஅந்தணர் அவ்விரண்டின்கண்ணும் அதிகாரமுளராகிய சிறப்புநோக்கி 'நான்மறைக்குலத்தந்தணர்' எனவும், 'ஒழுக்கம்விழுப்பந்தரலானொழுக்க-முயிரினுமோம்பப்படும்' என்றபடி ஒழுக்கத்தைத் தன்னுயிர்போலப்பாதுகாப்பவரென்பதுபோதர 'உயிரெனவோம்பியவொழுக்கார்' எனவும், முன்னோரொழுகிய கிரமத்திற்றவறாது நடத்தல்வேண்டுமெனத் தருமநூல்கள் விதித்தவாறு நிற்பவரென்பதுபோதர 'மேன்முறைக்கணோர்' எனவும், 'உரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்-வரனென்னும்வைப்புக்கோர்வித்து' என்றவாறு ஐம்புலன்களைத் தம்வயப்படுத்தியமைத்தவரென்பதுபோதர 'ஐம்புலப்படிற்றினைவென்றோர்' எனவுங்கூறினர்.

இச்செய்யுளாலும் முற்செய்யுளாலும், முறையே, வெளிப்படையாகவுங் குறிப்பாகவும் அந்தணர் வீதியின் சிறப்புக்கூறப்பட்டது. (௫௭)

ஏவு பல்படை வலியினர் வெஞ்சம மிகந்தோர்
நாவி னான்மறை பயில்பவர் நணுகுறு நலத்தாற்
கோவு நீணகர் மறுகெலாங் குருமணிச் சிகரத்
தேவு நீணகர் நிலைமையே போல்வது தெரியின்.

இ—ள்: ஏவு பல் படை வலியினர்—பல படைக்கலங்களைப் பிரயோகித்தலிற் சாமர்த்தியமுடையவர்களும், வெம் சமம் இகந்தோர்—கொடிய போரைக் கடந்தவர்களும், நாவில் நால் மறை பயில்பவர்- நாக்கினாலே நான்குவேதங்களையும் ஓதுகின்றவர்களுமாகிய அரசர்கள், நணுகுறும் நலத்தால்-பொருந்திவாழும் நன்மையினால், நீள் நகர் கோவு மறுகு எலாம்—நெடிய (அந்தக்)காஞ்சிநகரிலுள்ள அரசர்வீதிமுழுவதும், தெரியின்—ஆராயுமிடத்து, குரு மணி சிகர நீள் தேவுநகர் நிலைமையே போல்வது—நிறம்விளங்குகின்ற இரத்தினங்களிழைத்த முடிகளையுடைய பெரிய தேவலோகத்தின்றன்மையையே நிகர்ப்பது எ—று.

ஏவு பல்படை வலியினர்=பல்படைஎவுதலில் வலியினர். உகரங்கள் சாரியைகள். கோவு சாதியொருமை. ஏகாரம் பிரிநிலை. நணுகுறுகலத்தால் போல்வது என இயையும்.

ஓதல் வேட்டல் ஈதல் உலகோம்பல் படைக்கலம்பயிறல் பொருதல் என்னும் அரசர்தொழிலாறனுள், 'ஏவுபல்படைவலியினர்' என்றதனாற் படைக்கலம் பயிறலும், 'வெஞ்சமமிகந்தோர்'என்றதனாற் பொருதலும், 'நாவினான்மறைபயில்பவர்' என்றதனால் ஓதலும் கூறப்பட்டன. அக்காஞ்சிநகரிலுள்ள அரசர்குலத்தவரெல்லாம் இந்திரபாக்கியத்தினையுடையவராதலின், அவர்வீதிகளைச் சுவர்க்கலோகத்திற்குவமித்தார்.

இச்செய்யுளால் அரசர் வீதியின் சிறப்புக்கூறப்பட்டது. (௬அ)

அணியி னொங்கலும் பன்மணிக் குவால்களு மார்வந்
தணிவி லாடகக் குவைகளும் பிறவுமுன் றழைப்பக்
கணிக ணாணுறு கற்பக மனையன காட்சி
வணிக ராவணத் தெற்றிகள் வயின்றொறும் வயங்கும்.

இ—ள்: அணியின் ஒங்கலும்—ஆபரணக்குவியல்களும், பல் மணி குவால்களும்—பலவகைப்பட்ட இரத்தினக்குவியல்களும், ஆர்வம் தணிவு இல் ஆடக குவைகளும்—(கண்டோர்க்கு) ஆசைநீங்குதலில்லாத பொற்குவியல்களும், பிறவும் முன் தழைப்ப—மற்றையபொருள்களும் முன்னாகப்பொலிய, கணிகள் நாண் உறு கற்பகம் அனையன காட்சி வணிகர் ஆவண தெற்றிகள்—(அளவிடுதலரிதாதலின்) கணிதர்களும் வெட்கமடைகின்ற கற்பகதருப்போன்ற தோற்றத்தினையுடைய வைசியர்களது கடைவீதிகள், வயின்றொறும் வயங்கும்—(அந்நகரின்) இடங்கடோறும் விளங்கும் எ—று.

கணிகள்—கணிதர்கள். சிறப்புய்மை விகாரத்தாற்றொக்கது. கற்பகம் கலுப் என்னுந் தாதுவினடியாகப் பிறந்த பெயர். அனையன வினைமுற்றுப்பெயரெச்சம். எல்லாப்பொருள்களையுந் தம்மிடத்தமைத்துடையனவாதலின்,வணிகர்வீதிகளைக் 'கற்பகமனையனகாட்சி ஆவணத்தெற்றிகள்' என்றார். கணிகணாணுறு ஆவணத்தெற்றி, கற்பகமனையனகாட்சி ஆவணத்தெற்றி, வணிகராவணத்தெற்றி எனத் தனித்தனிஇயையும். தழைப்ப என்னுஞ்செயவெனெச்சம் வயங்குமென்னும் பிறகருத்தாவின் வினைகொண்டு முடிந்தது.

இச்செய்யுளால் வைசியர்வீதியின் சிறப்புக்கூறப்பட்டது. (௬௯)

கங்கை மாமக டொல்பெருங் குலத்தர்கா சினியின்
மங்கை யாளருள் புரிதரு மகாரெனும் வழக்கோர்
செங்கண் மானிகர் வெறுக்கைய ரயன்பதஞ் சேர்ந்தோர்
துங்க வீதியு மேனையர் மறுகொடுந் தொகுமே.

இ—ள்: மா கங்கைமகள் தொல் பெரும் குலத்தர்—மகிமைபொருந்திய கங்காதேவியினது பழைய பெரிய மரபிற் பிறந்தவர்களும், காசினியின் மங்கையாள் அருள்புரிதரும் மகார் எனும் வழக்கோர்—பூமிதேவிபெற்ற புத்திரர்களென்றுசொல்லப்படும் வழக்கத்தையுடையவர்களும், செம் கண் மால் நிகர் வெறுக்கையர்—சிவந்தகண்ணையுடைய விஷ்ணுமூர்த்தியையொத்த பெருஞ்செல்வத்தையுடையவர்களும், அயன் பதம் சேர்ந்தோர்—பிரமதேவரது பாதங்களினுதித்தவர்களும் ஆகிய வேளாளரது, துங்க வீதியும்—மேன்மைபொருந்திய வீதிகளும், ஏனையர் மறுகொடும் தொகும்— மற்றையவர்களது வீதிகளுடன் (அந்நகரிற்)செறிந்திருக்கும் எ—று.

ஏ அசை. ஏனையர்மறுகென்றது அந்தணர்முதலிய நாற்குலத்தாடவருந் தஞ்சாதியாரல்லாத பெண்களுடன் கூடிப்பெற்ற அநுலோமராதியர்வசிக்கும் வீதிகளை. "ஒக்கியநாற்குலத்தொவ்வாப்புணர்விற்றம்மிலுயர்ந்தனவுமிழிந்தனவுமானசாதி- தாங்குழுமிப்பிறந்தகுலபேதமெல்லாந்தந்தகைமைக்கேற்றதனியிடங்கண்மேவி- யாங்குவினைகிளைபயின்றுமரபினுற்றவடுத்தவினைத்தொழின்முறைமைவழாமைநீடு- பாங்குவளரிருக்கைகளிலேபலவுமெல்லாம்பண்புநீடியவுரிமைப்பாலவன்றே" என்றார் சேக்கிழார்நாயனாரும். அந்தணர்முதன்மூற்கூறிய மூவருணத்தாரதுவீதிகளுடன் சூத்திரர்வீதியுஞ் செறிந்திருக்குமெனவுரைப்பர் சிலர். வீதியுமென்பதிலும்மை எச்சம்.

"கங்கைதன்குலத்தில்வந்தவிழுக்குடிப்பிறப்பு" எனத் திருவிளையாடற்புராணமும், "காவிரிப்பாவைதன்புதல்வர்" எனச் சிலப்பதிகாரமுங்கூறுதல்பற்றி, 'கங்கைமாமகடொல்பெருங்குலத்தர்'எனவும், பயிரிடலாதியதொழில்களையியற்றிப் பூமியாற்கொடுக்கப்படும்வளங்களைப்பெற்று வாழ்தலால்"மண்மகள்புதல்வர்"என்பவாகலின் 'காசினியின்மங்கையாளருள்புரிதருமகாரெனும்வழக்கோர்' எனவும், செல்வமடந்தையாகியதிருமகட்கு நாயகராதல்பற்றிச் செல்வமுடையாருள்முதலாக விஷ்ணுமூர்த்தியைத்தெரிந்தெடுத்து, 'செங்கண்மாளிகர்வெறுக்கையர்'எனவும், பிரமதேவரது முகத்தில் அந்தணரும், புயத்தில் அரசரும், தொடையில் வைசியரும், பாதத்திற்சூத்திரருந்தோன்றியமையின், சூத்திரரை 'அயன்பதஞ்சேர்ந்தோர்' எனவும், அநுலோமராதிய ஏனையருட் சூத்திரரினுமுயர்ந்ததரத்தினர் சிற்சிலருளராயினும், அவர்சாதியினுஞ் சூத்திரசாதியே முதலெண்ணப்படும்விசேடமுணர்த்துவான் 'அயன்பதஞ்சேர்ந்தோர்துங்கவீதியும்' எனவுங்கூறினார்.

பிரமதேவரின் முகமுதலியஅங்கங்களில் அந்தணர்முதலிய நால்வருந்தோற்றினரென்பதை "மதுமடையுடைக்குஞ்செந்தாமரைமலர்ப்பீடமேலோன்- விதுமுகத்தினின்முன்றோற்றவிளங்குவாசனையான்முன்னோர்- கதுமெனமடவாரோடுமுதித்தனர்கவின்செய்தோளின்-வதுவைசெய்மடவாரோடுமன்னவருதித்தாரன்றே,- ———ஊருவினுய்கர்மாதருடனுதித்தனராற்பின்னோர்- சாருமாமடவாரோடுந்தாளிடையுதித்தார்" எனச் சூதசங்கிதைகூறுதலாலுணர்க.

கோவைசியர் பூவைசியர் தனவைசியரென வைசியர்மூவகைப்படுவரென்றும், அவருட்பூவைசியரே வேளாளரென்றும், அவரைச்சூத்திரரெனக்கூறல்பொருந்தாதென்றும், வேளாளரினுந்தாழ்ந்த சிலசாதியார்களையே அவ்வாறு கூறல்வேண்டுமென்றும் சிலர் பேசுவர். அவை நூற்கொள்கைக்குமுரணும்; முதன்மூன்றுவருணத்தார்க்கும் அநுகூலமான தொழில்புரிதன்முதலாகத் தஞ்சாதிக்குவிதித்ததொழில்களிற் சிலவற்றைத் தமக்கன்றென விடுத்தற்கும், வேதமோதன்முதலாக அம் மூவருணத்தார்க்கும் விதித்ததொழில்களிற்சிலவற்றைத் தமக்குமுரியவெனக் கொள்ளுதற்கும் ஆகக் கற்பிக்கும் வெற்றுரையேயாம். 'காசினியின்மங்கையாளருள்புரிதருமகாரெனும்வழக்கோர்' எனக்கூறி, பின்னர் 'அயன்பதஞ்சேர்ந்தோர்' எனவுங்கூறுதலால் ஆசிரியர்க்கும் அஃதுடன்பாடன்றென்பது விளங்கக்கிடக்கின்றது.

இச்செய்யுளால், வேளாளர்வீதியின்சிறப்பும், பிறவீதிகளின் சிறப்புங்கூறப்பட்டன. (சு0)

கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட வைம்புல னொருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுகத் தொழுங்கை
யண்டர் கூட்டமு மாலயந் தொறுந் தொறு மறுவால்.

இ—ள்: கண்டு—(காணத்தக்கனவற்றைக்) கண்டும், கேட்டு—(கேட்கத்தக்கனவற்றைக்)கேட்டும், அவை உண்டு— உண்ணத்தக்கனவற்றை உண்டும், உயிர்த்து-(மோக்கத்தக்கனவற்றை)மோந்தும், உற்று அறி கருவி கொண்ட ஐம்புலன்—(பரிசிக்கத்தக்கனவற்றைப்)பரிசித்தும் அறிகின்ற(கண்முதலிய) ஐம்பொறிகளையும் இடமாகக் கொண்டிருக்கின்ற ஐம்புலன்களையும்; ஒருங்கு உற நடாத்திய கொள்கை தொண்டர் கூட்டமும்- ஒருவழிப்படச்செலுத்திய கோட்பாட்டினையுடைய அடியார்கூட்டமும், விழி வழி புனல் உக தொழும் கை அண்டர்கூட்டமும்— கண்களின்வழியே ஆநந்தபாஷ்பஞ்சிந்தும்படி தொழுகின்ற கையினையுடைய தேவர்கூட்டமும், ஆலயம் தொறும் தொறும் அறு-(அந்நகரிலுள்ள)ஒவ்வோர்தேவாலயங்களினும் என்றுநீங்குறையா எ-று.

ஆல் அசை. ஆலயமென்பதைப் பிந்தியதொறுவுக்குமியைக்க. கண் செவி வாய் மூக்கு மெய் என்னும் ஐம்பொறிகளையுங் கருவியாகக்கொண்டே ஐம்புலவுணர்ச்சிபொருந்துதலின் 'கண்டுகேட்டவையுண்டுயிர்த்துற்றறிகருவிகொண்டவைம்புலன்' என்றார். அவற்றை ஒருங்குறநடாத்தலென்றது: ஓர் பொறிவழியே புலன்செல்லும்போது மற்றைப்பொறிகளுனின்குஞ்செயலற்றிருத்தலை. "ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ளவளப்பருங்கரணங்களுனின்குஞ்-சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிகமேயாக-இந்துவாழ்சடையானுடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின்- வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின்மலர்ந்தார்" என்றார் சேக்கிழார்நாயனாரும்.

மெய்யன்புகூர்ந்துவழிபடுபவரென்பது போதர 'விழிவழிப்புனலுகத்தொழுங்கையண்டர்கூட்டம்' என்றார். (௬௧)

ஆதி நான்முக னெகினத் தி னடிகளு மமலன்
பாதி யாளன்ற னுவணத் தி னடிகளும் பனிக்கார்
நாத னூர்தரு தந்தியி னடிகளு நாளும்
வீதி வீதிக டொறுந்தொறுங் காண்வர விளங்கும்.

இ—ள்: ஆதி நான்முகன் எகினத்தின் அடிகளும்— முதல்வராகிய பிரமதேவரின் (வாகனமாகிய) அன்னத்தினது அடிச்சுவடுகளும், அமலன் பாதியாளன்றன் உவணத்தின் அடிகளும்- மலரகிதராகிய சிவபெருமானது பாதித்திருமேனியையுடைய திருமாலின் (வாகனமாகிய) கருடனது அடிச்சுவடுகளும், பனி கார் நாதன் ஊர்தரு தந்தியின் அடிகளும்—குளிர்ந்த மேகங்களுக்கதிபதியாகிய இந்திரன் ஏறிச்செலுத்துகின்ற ஐராவதயானையினது அடிச்சுவடுகளும், வீதிகடொறும் வீதிகடொறும் காண்வர நாளும் விளங்கும்—(அந்நகரின்) ஒவ்வோர் வீதிகளிலும் (எவரும்) காணும்படி எப்போதும் தோன்றும் எ—று.

பிரமாமுதலிய தேவர்கள் அந்நகரவீதிகளில் தினந்தோறும் வாகனரூடராய்ச்சஞ்சரிப்பரென்பது கருத்து.

அடிகள் ஆகுபெயர்கள். வீதிவீதிகடொறுந்தொறும் என்பது வீதிகடொறும் வீதிகடொறும் எனச் சேர்க்கப்பட்டது. நாளுமென்பதிலும்மை முற்று.

முதற்றொழிலாகிய படைத்தற்குக்கருத்தாவாதலின் 'ஆதிநான்முகன்' என்றார். விஷ்ணுமூர்த்தி சிவபெருமானது மேனியிற்பாதியாக விற்றலை "இடமால்வலந்தானிடப்பாலுழாய்வலப்பாலொண்கொன்றை-வடமாலிடந்துகில்தோல்வலமாழியிடம்வலமான்- இடமால்கரிதால்வலஞ்சேதிவனுக்கெழினலஞ்சேர்- குடமாலிடம்வலங்கொக்கரையாமெங்கள்கூத்தனுக்கே" எனப் பொன்வண்ணத்தந்தாதியும், "எச்சகங்களுந்த

தமியல்பினுல்-வைச்சகம்மொருபாதிவடிவமா- மெச்சனீர்ந்துளபத்தொடைமாயவன்" எனக்காஞ்சிப்புராணமுங் கூறுதலாலுணர்க. (சஉ)

மாவி னோதையுங் களிற்றின தோதையு மருங்கின்
மேவு தேர்களி னோதையுங் கவிகையாய் விரிந்த
காவு சூழ்தரு மன்னர்சீ ரோதையுங் கறங்குந்
தேவ துந்துபி யோதையு மிறுத்தில தெருவு.

இ—ள்: மாவின் ஓதையும்—குதிரைகளின் கனைப்பொலியும், களிற்றினது ஓதையும்—யானைகளின் பிளிற்றெலியும், மருங்கில் மேவு தேர்களின் ஓதையும்—பக்கங்களிற்பொருந்திய தேர்களினது ஒலியும், கவிகை ஆய் விரிந்த காவு சூழ்தரும் மன்னர் சீர் ஓதையும்- குடைகளாகிவிரிந்த சோலைசூழப்பெற்ற அரசர்களது பேரொலியும், கறங்கும் தேவதுந்துபி ஓதையும்-(இடைவிடாது) முழங்குகின்ற தேவதுந்துபிகளினொலியும், தெருவு இறுத்தில—(அந்நகரின்) வீதிகளில் (எக்காலமும்) ஒழியாதன எ—று.

காவு தெருவு என்பவற்றிலுகரம் சாரியைகள். கவிகையாய்விரிந்த காவு= குடைக்கூட்டம். (சங)

நாட்டி யச்செயல் யாவையுஞ் சிவனது நடனம்
பாட்டி சைத்திறம் யாவையு மன்னதே பதியோர்
கேட்டி ருப்பன யாவையு மவனிசைக் கேள்வி
கூட்டம் யாவையு மன்னவன் றொண்டுசெய் கூட்டம்.

இ—ள்: நாட்டியச்செயல் யாவையும் சிவனது நடனம் (ஏ)-(அந்நகரிற்செய்யப்படும்) நடனங்களெல்லாஞ் சிவபெருமானுக்காகப்புரியும் நிருத்தமேயாம், பாட்டிசைத்திறம் யாவையும் அன்னதே—(பாடப்படும்) பாடல்களெல்லாம் அச்சிவபெருமானது தோத்திரமேயாம், பதியோர் கேட்டிருப்பன யாவையும் அவன் இசை கேள்வி (ஏ)—அந்நகரிலுள்ளார் (செவிக்கின்பமாகக்) கேட்டுக்கொண்டிருப்பவைகளெல்லாம் அச்சிவபெருமானது கீர்த்திப்பிரபாவமேயாம், கூட்டம் யாவையும் அன்னவன் தொண்டுசெய் கூட்டம் (ஏ)—(அங்குள்ள) கூட்டங்களெல்லாம் அச்சிவபெருமானது திருத்தொண்டுகளைச் செய்கின்ற கூட்டமேயாம் எ—று.

பிரிநிலையேகாரம் ஏனையதொடர்கட்குஞ் சேர்க்கப்பட்டது. பாட்டிசைத்திறம் பாட்டைப்பாடுந்தன்மை. யாவையுமென்பதில் ஐகாரஞ்சாரியை.

"நின்றுமிருந்துங்கிடந்துநடந்துநினை- யென்றுஞ்சிவன்றாளிணை" என்றபடி, அங்குள்ளார் இடையறாத சிவநேசமுடையராயொழுகுதலின், அவர்செய்யும்நாட்டியங்களைச் சிவநடனமென்றும், பாடும் பாடல்களைச் சிவத்தோத்திரங்களென்றும், கேட்கும் கேள்விகளைச் சிவகதையென்றும், கூடும் கூட்டங்களைச் சிவனுக்குத் தொண்டுசெய்யுங்கூட்டமென்றுங்கூறினர். "வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு-காவணங்களெல்லாங்கணநாதர்- பூவுலகில்- ஈதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோரோதுந்திருவொற்றியூர்" என்றார் பட்டினத்தடிகளும். (சச)

பாலு றுந்ததி யிழுதுதே னிருக்கைகள் பலவுங்
கோல மாதுமங் நகரிடை யவையுறை கூவல்
போலு மாயிடை மாதவத் தவளறம் புரியுஞ்
சாலை யாயின வரம்பிலா வடிசிலஞ் சாலை.

இ—ள்: கோலம் ஆகும் அ நகரிடை—அழகுபொருந்திய அந்தக்காஞ்சிநகரில்(உள்ள), பால் உறும் ததி இழுது தேன் இருக்கைகள் பலவும்-பாலும் மிகுந்த தயிரும் நெய்யும் தேனுமாகிய பொருள்கள் இருக்குமிடங்கள்யாவும், அவை உறை கூவல் போலும்-அவ்வப்பொருள்களிருக்குங் கிணறுகள்போலும், வரம்பு இலா அடிசிலம் சாலை—அளவில்லாத அன்னசத்திரங்கள், ஆயிடை மா தவத்தவள் அறம் புரியும் சாலை ஆயின— அந்நகரத்தின்கண் மகத்தாகிய தவத்தைச்செய்திருக்கின்ற காமாக்ஷியம்மையார் முப்பத்திரண்டுதருமங்களையும் இயற்றிய தருமசாலையையொத்தன எ—று.

அடிசிலஞ்சாலையென்பதில் அம் சாரியை. எடுக்குந்தோறுங் குறைவற்றிருத்தலின், பால்முதலியதங்குமிடங்களை 'அவையுறைகூவல்போலும்' எனவும், அன்னதானமாத்திரமன்றி வேண்டியனவெல்லாமினிது பெறுதற்கிடனாயிருத்தலின், அன்னசத்திரங்களை 'மாதவத்தவளறம்புரியுஞ்சாலையாயின' எனவும் கூறினார்.

உமாதேவியார் தவமியற்றுதலை எண்பத்தைந்தாஞ்செய்யுளினும், தருமங்களியற்றுதலை எழுபத்தெட்டாஞ்செய்யுளிலும் மேற்காண்க. (௪௫)

அளவில் பற்பக றம்மினு நீங்கியோ ரடுத்த
கிளைஞர் வந்துழி யெதிர்தழீஇ நன்னயங் கிளத்தி
யுளம கிழ்ந்தவர்க் கூட்டுமின் னடிசில்போ லுறுவோ
ரெளிதி னுங்கிட வழங்குமா லோதன விருக்கை.

இ—ள்: அளவில் பல் பகல் தம்மினும் நீங்கியோர்—மிகப் பலநாளாகத் தம்மினின்றும் பிரிந்தவர்களாகிய, அடுத்த கிளைஞர் வந்துழி—நெருங்கிய சுற்றத்தவர்கள் (வீட்டிற்கு) வந்தபொழுது, எதிர் தழீஇ நல் நயம் கிளத்தி— எதிர்சென்று (அவர்களைத்) தழுவி நல்ல பிரியவசனங்களைக்கூறி, உளம் மகிழ்ந்து அவர்க்கு ஊட்டும் இன் அடிசில் போல்—மனமுவந்து அவர்களுக்கு அருத்துகின்ற இனிய போசனத்தைப்போல, ஓதன இருக்கை—(அந்நகரிலுள்ள) அன்னசத்திரங்கள், உறுவோர் எளிதில் நுங்கிட—தன்னிடத்தே) வருபவர்கள் இலகுவாகப் போசனஞ்செய்யும்படி, வழங்கும்—உணவு கொடுக்கும் எ—று.

அன்னசத்திரங்களிலுள்ளார், முன்னொருகாலுங்கண்டறியாத புதியவர் வரினும், தூரதேசம்போய் நெடுங்காலம் பிரிந்துவந்த உற்றசுற்றத்தவர்களிற்போல அன்புவைத்து, சேய்மையிற்றானே இன்முகங்காட்டி இன்சொற்கூறி, 'அறியாத இவர் நம்மை உபசரித்துப்போசனந்தருவதெப்படி' என அவர் மனத்தில்விளைந்த ஆசங்கையைநீக்கிப் போசனங்கொடுப்பரென்பது கருத்து.

"அகனமர்ந்துசெய்யாளுறையுமுகனமர்ந்து-நல்விருந்தோம்புவானில்,——— மோப்பக்குழையுமனிச்சமுகந்திரிந்து-நோக்கக்குழையும்விருந்து" என்றார் தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனாரும்.

ஆல் அசை. அளவில்பற்பகல்—அளவில்லாத பலநாள். எனவே மிகப்பலநாளென்பதுபெற்றாம். வந்த உழி வந்துழி எனத்தொக்கது. தழீஇ தழுவியென்பதன்விகாரம். நயம் ஆகுபெயர். ஓதனவிருக்கை வழங்கும் என்றது இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது. அடிசில்போல் என்பதை வழங்கும் என்பதனோடு இயைக்க; நுங்கிட என்பதனோடியைத்தல் அத்துணைச்சிறப்பின்று. (௪௬)

வேறு.

மாட மாளிகை வாயி றொறுந் தொறு
நீடு கண்ணுள ராமென நின்றுநின்

றுடு சித்திரப் பத்தி யமரரு
நாடி நோக்கி நயந்திடப் பட்டதே.

இ—ள்: மாடம் மாளிகை வாயில் தொறும் தொறும்—(அந்நகரிலுள்ள)மேன்மாடங்களினதும் மாளிகைகளினதும் வாயில்கடோறும் வாயில்கடோறும், நீடு கண்ணுளர் ஆம் என நின்றுநின்று ஆடு சித்திரப்பத்தி—நெடியகூத்தர்களைப்போல (நின்றவிடத்திற்றானே) நின்றுநின்றுநடிக்கின்ற சித்திரப்பாவைவரிசை, அமரரும் நாடி நோக்கி நயந்திடப்பட்டது—தேவர்களாலும்தேடிப்பார்த்து விரும்பப்பட்டது எ—று.

ஏ அசை. வாயிலென்பதைப் பிந்தியதொறுவுக்குமொட்டுக. ஒவ்வொருவாயில்களினுமென்பார் 'வாயிறொறுந்தொறும்' எனவும், அதற்கேற்ப 'நின்றுநின்று'எனவும் அடுக்கினர். அமரருமென்பதில் உம்மை உயர்வுசிறப்பு. (சஎ)

எல்லை தீர்ந்த விரவிக டேண்டிய
சில்லி யாழித் திகிரிகண் மானுமான்
மல்லன் மாநகர் மைந்தர்க ளூர்தரும்
பல்வ கைச்சுடர்ப் பண்ணுறு தேர்களே.

இ—ள்: மல்லல் மா நகர் மைந்தர்கள் ஊர்தரும் பல்வகை சுடர் பண்ணுறு தேர்கள்—வளப்பத்தினையுடைய பெரிய (அந்தக்)காஞ்சிநகரிலுள்ளசிறுவர்கள் உருட்டுகின்றபலவகைப்பட்ட ஒளிபொருந்திய பண்ணமைக்கப்பட்ட சிறுதேர்களானவை, எல்லை தீர்ந்த இரவிகள் தூண்டிய சில்லி ஆழி திகிரிகள் மானும்—அளவிறந்த சூரியர்கள்செலுத்திய வட்டித்த உருளையினையுடைய தேர்களைப்போலும் எ—று.

சிறுவர்கள் சிறுதேருருட்டிவிளையாடுகின்றனரென்பது தாற்பரியம்.

ஆல் ஏ அசைகள். பண்ணுறுத்தல் செலுத்துதற்கேற்ப அலைமதிப்படுத்துதல். மற்றையவுலகங்களிலுள்ள நகரங்களெவற்றினும்வளத்தாற்சிறந்தமையின் 'மல்லன்மாநகர்' என்றார். இதனை மேல்வரும் ஐம்பத்தைந்தாஞ்செய்யுளுரையிற்றெள்ளிதிற்காண்க. இரத்தினாபரணங்களை அணிந்துவிளங்குதலால் மைந்தர்க்குச் சூரியர்களையும் இரத்தினங்களிழைக்கப்பெற்று விளங்குதலால் அம்மைந்தர்களூருந் தேர்கட்குச் சூரியர்களூருந் தேர்களையுமுபமித்தார். (சஅ)

வெள்ளை யாதி வியன்கவி யாவையுந்
தெள்ளி தின்மொழி தென்கலை யேமுத
லுள்ள பல்கலை யோதுகின் றார்களும்
வள்ளி யோர்களு மன்றுதொ றீண்டுவார்.

இ—ள்: வெள்ளை ஆதி வியன் கவி யாவையும் தெள்ளிதில் மொழி தென்கலையே முதல் உள்ள பல் கலை ஓதுகின்றார்களும்— வெண்பாமுதலிய சிறந்தபாக்களனைத்தையும் தெளிவுபெறப் பாடுதற்கேற்ற தமிழ்ப்பாஷைநூல்களே முதலாகவுள்ள பல பாஷைநூல்களையும் படிக்கின்றவர்களும், வள்ளியோர்களும்— (அவரது கல்வித்திறத்திற்கேற்பப்) பொருள்கொடுக்கின்றவர்களும், மன்றுதொறு ஈண்டுவார்—(அந்நகரிலுள்ள) சபைகடோறும்நெருங்குவார்கள் எ—று.

ஏகாரம் தேற்றம். கவியென்னுஞ் சொல்லை வெள்ளையென்பதனோடுமியைத்துப் பொருளுணர்க. ஆதியென்றதனால் ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா என்பனவும், அவற்றினமாகிய தாழிசை துறை விருத்தங்களுங்கொள்ள

ற்பாலன. பல்கலையென்றது தேவபாஷையாகிய ஆரியத்தையும் பதினெண்பாஷைகளுட்டமிழொழிந்தவற்றையுமென்க. தமிழொழிந்த பதினெழுபாஷைகளாவன: சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுவம் குடகம் கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம் கங்கம் மகதம் கடாரம் கவுடம் கௌசலம் என்பனவாம். பாஷைகளனைத்திற்கும் முதலிலெண்ணப்படுவது ஆரியமேயாகவும், ஆசிரியர் 'தென்கலையேமுதலுள்ளபல்கலை' எனக்கூறினார் யாதுபற்றியெனின், அந்நகரின்கண்ணே அப்பாஷையொன்றே மிகவும்பரந்து தேங்குதலினென்க. "அமிழ்தமுங்கைப்பக்குழாங்குழாமாகிய றிஞர்தாங்கழகக்கடோறுந்-தமிழ்தெரிகாஞ்சிவரைப்பு" என்றார் பிறரும்.

காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்- பேசு முலாவிற் பெதும்பைபுலி-யாசு-வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்-புலவர்க்கும் வெண்பா புலி" என்றும் "வேறுமறையோராதிநாற்சாதிவெள்ளை முதல்" என்றும் ஆன்றோர்கூறியவிசேடமுடைமையின் அவ்வெண்பாவை முதலாகஎடுத்து 'வெள்ளையாதி-கவி' எனவும், பிறபாஷைப்பாடல்களைப் படிக்குந்தோறுங் கேட்குந்தோறுந் தோன்றுஞ்சுவையினும் பன்மடங்கதிகமான பெருஞ்சுவையைத்தரவல்லனவாதலின் 'வியன்கவி' எனவும், 'தெள்ளிதின்மொழிதென்கலை' எனவும் கூறினர். (சக)

இகலும் வேழத் தெயிற்றினை யெய்ந்திடு
நகிலி னார்க ணறுங்குழன் மேலிடு
மகிலி னாவியு மாய்மணி மாடமேன்
முகிலும் வேற்றுமை யின்றி முயங்குமே.

இ—ள்: இகலும் வேழத்து எயிற்றினை எய்ந்திடும் நகிலினார்கள்—(ஒன்றோடொன்று)பகைக்கின்ற யானையினது கோடுகளைநிகர்த்த தனங்களையுடையமங்கையர்கள், நறும் குழல் மேல் இடும் அகிலின் ஆவியும்— (இயற்கை)மணங்கமழுங் கூந்தலில் (ஈரம்புலருமாறு) ஊட்டியஅகிற்புகையும், ஆய் மணி மாடமேல் முகிலும்—தெரிந்தெடுக்கப்பட்ட இரத்தினங்கள்பதிக்கப்பெற்ற மாடங்களின்மேற்படிந்த மேகங்களும், வேற்றுமை இன்றி முயங்கும்—வேற்றுமைதோன்றாது கலந்திருக்கும் எ—று.

ஏ அசை. அத்து சாரியை.

கண்டமாத்திரத்தே ஒன்றோடொன்றுபகைத்துப் பொருமியல்பினையுடைய மதகரிகளின்கோடுகள் எதிர்நேர்ந்த யானைகளையெல்லாங் குற்றுதல்போலக் கட்பொறிப்பட்டமாத்திரத்திற் காளையர் மனத்தைவருத்துவவாகலின், 'இகலும்வேழத்தெயிற்றினையெய்ந்திடுநகிலினார்கள்' எனவும், உத்தமசாதிப்பெண்களின்கூந்தல் இயற்கைமணங்கமழப்பெறுதலின் 'நறுங்குழல்' எனவும், விண்ணளவோங்கியிருத்தலால் மலையென்று கருதிப்படிந்தனவென்பது போதர 'ஆய்மணிமாடமேன்முகில்' எனவும், அம்முகில் எத்துணைச்செறிவுங் கருமையுமுடைத்தாமோ அத்துணையாகச் செறிந்திருண்டபுகையென்பதுபோதர 'அகிலினாவியும்-முகிலும்வேற்றுமையின்றிமுயங்கும்' எனவும் கூறினர். "அகிலிடுகொழும்புகையளாய்மயங்கின-முகிலொடுவேற்றுமைதெரிகலா" என்றார் கம்பநாட்டாழ்வாரும்.

இச்செய்யுளாற் பெண்கள்சிறப்பும் மாளிகையுயர்வுங்குறிக்கப்பட்டன. (ருO)

பண்ணி னோசையும் பானலை வென்றிடுங்
கண்ணி னார்கள் களிநட வோசையுந்
தண்ண ரம்பிய றந்திரி யோசையும்
விண்ணு ளோர்க்கும் விருந்தென லாயவே.

இ—ள்: பண்ணின் ஓசையும்—சங்கீதத்திஜெலியும், பானலே வென்றிடும் கண்ணினார்கள் களி நட ஓசையும்—கருங்குவளைமலரைவென்ற கண்களையுடைய கணிகையர்களது களிப்பைத்தருகின்ற கிருத்தத்திஜெலியும், தண் நரம்பு இயல் தந்திரி ஓசையும்—இனியநரம்புகள்பொருந்திய யாழிஜெலியும், விண்ணுளோர்க்கும் விருந்து எனல் ஆய—விண்ணுலகவாசிகளாகிய தேவர்களுக்கும் செவிவிருந்தென்று சொல்லத்தக்கனவாயின எ—று.

ஏ அசை. பண்-(கெஞ்சுமுதலிய தானங்களெட்டானும் எடுத்தன்முதலிய கிரியைகளெட்டானும்) பண்ணப்படுவது. இதனை "பெருந்தானமெட்டானும்-பாவாய்-எடுத்தன்முதலாவிருகான்கும்பண்ணிப்-படுத்தமையாற்பண்ணென்றுபார்" என்பதனுனுணர்க. பானல் ஆகுபெயர். விண்ணுளோர்க்கும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. விருந்து: புதிதாய்வந்தோர்க்கூட்டும் விசேடபோசனம். ஈண்டுச் செவிக்கின்பமாகியகேள்வியையுணர்த்திநின்றது.

நாடகமன்றின்கண்வந்துகுழீஇய காளையர் வயமழிந்துதம்மைநோக்கியவழியும் அவரைவிரும்பிநோக்குதலின்றி நடனத்திற்கேற்றவாறு புடைபெயர்வன என்பது போதர 'பானலேவென்றிடுங்கண்' எனவும், இணை கிளை பகை நட்பு ஆதிய பகுதிகளைத்தெரிந்து ஏற்றவாறவீக்கிய நரம்பினையுடைய யாழென்பதுபோதர 'தண்ணரம்பியறந்திரி' எனவும், கந்தருவர் கின்னரர் முதலிய தேவகாயகரிசைக்கும் பாட்டிசைகளையும் உருப்பசி திலோத்தமை முதலிய தேவரம்பையர்களியற்றும் நடனத்தையும் பிரத்தியக்ஷமாகக் கண்டுகேட்டுக்களித்த தேவர்க்கும் பரோக்ஷத்திலிருந்துகேட்டமாத்திரத்தே செவிவிருந்தாமேல், செவி கண்ணிரண்டிற்கும் புலப்பட அம்மன்றின்கணிருந்து கண்டு கேட்டோர்பெற்ற இன்பம் எத்துணைப்பேரின்பமாமோ என அதன்பெருமைவிளக்க 'விண்ணுளோர்க்கும்விருந்தெனலாய' எனவுங்கூறினர். (ருக)

அணிகு லாவு மரம்பையர் காளையர்
நணிய தோளை நயப்புற நாகருங்
கணிகை மாதரைக் காமுற மேவலான்
மணிகொள் காஞ்சி மதனர சாயதே.

இ—ள்: அணி குலாவும் அரம்பையர் காளையர் நணிய தோளை நயப்புற—(எவரையும்மயக்கத்தக்க)பேரழகுவிளங்கப்பெற்றதேவகணிகையர்கள் இளைஞர்களதுசெறிந்தபுயங்களைத் (தமக்கேற்றனவென்று) விரும்ப, நாகரும் கணிகைமாதரை காமுற மேவலால்— (அவ்வரம்பையரைவிரும்பும்) தேவர்களும் (அவர்களைவிட்டு) பொதுமகளிரை விரும்பச்சிறந்திருத்தலால், மணிகொள் காஞ்சி—அழகுபொருந்திய அக்காஞ்சிபுரம், மதன் அரசு ஆயது—மன்மதனுடைய இராசதானியாயிருந்தது எ—று.

காஞ்சிநகரிலுள்ள காளையரும் மங்கையரும் விண்ணுலகிலுள்ள தேவர்களினும் கணிகையரினும் மிக்க வனப்புடையராயினர் என்பது தாற்பரியம்.

ஏ அசை. ரம்பா என்னும் வடசொல் அரம்பை எனத்தற்பவமாயிற்று; விரும்பப்படுபவள் என்பதுபொருள். நண்ணிய என்பது நணிய எனத்தொக்கது. காமம் என்பது காம் எனக்கடைக்குறையாயிற்று. அரசு என்பது அரசியலெனப்பொருள்படுதலின் உகரவீற்றுப்பாவதத்திதன்; அது தானியாகுபெயராய் இராசதானியை உணர்த்திற்று. உம்மை எச்சத்தோடுயர்வுசிறப்பு.

கல்லென இறுகித்திரண்டபுயமென்பார், 'நணியதோள்' எனவும், கீழுலகத்தாரை மேலுலகத்தார்காமுறல் யாண்டுமின்றாகவும் இக்காஞ்சிநகர் அவ்வாறுவிரும்புதற்கிடனாயிருத்தலின் 'மதனரசாயதே' எனவுங்கூறினர். அழகின்மிக்க காளையரை

க்கண்டவழி அவாவும் மங்கையரது கண்கள் அக்காளையர்தோளிற்சேறலியல்பாதலின் 'அரம்பையர்காளையர்நணியதோளைநயப்புற' என்றார். "நோக்கியநோக்கெனுநுதிகொள் வேலினை-ஆக்கியமதுகையான்றோளினாழ்ந்தன" என்றார் கம்பநாட்டாழ்வாரும். (ருஉ)

கூற்றிற் செல்லுங் கொலைக்கரித் தானமு
மேற்றிற் செல்லு மிடையர்தஞ் சேரியி
னூற்றிற் செல்லுமொண் பாலு முடனுறு
வாற்றிற் செல்லுமவ் வாவணத் தோறுமே.

இ—ள்: கூற்றில் செல்லும் கொலை கரி தானமும்- யமனைப்போலக் (கோரரூபத்துடன்)நடக்கின்ற கொலைத்தொழின்முற்றிய யானைகளின் மதநீரும்,ஏற்றில் செல்லும் இடையர்தம் சேரியின் ஊற்றில் செல்லும் ஒண் பாலும் உடன் உறு— இடபத்தைப்போல (உல்லாசம்பொருந்த) நடக்கின்ற இடையர்களதுசேரிகளினின்றும் ஊற்றுநீர்போலப் (பெருக்கெடுத்துப்)பாய்கின்ற ஒளிபொருந்தியபாலும் ஒருங்குகலந்து, அ ஆவணம் தோறும் ஆற்றில் செல்லும்— அந்நகர்வீதிகடோறும் ஆற்றைப்போலப் பாயும் எ—று.

ஏ அசை. கூற்றிற்செல்லுங்கரி கொலைக்கரி எனத்தனித்தனி இயைக்க. எண்ணிச்சென்றஉயிரைத் தவறாதுகொண்டுமீளுதலின் 'கூற்றிற்செல்லுங்கொலைக்கரி' என்றார்.

இச்செய்யுளால் யானைகளினதும் பசுக்களினதும் செழிப்புணர்த்தப்பட்டது.

வேறு.

பண்ணுளர் நரம்பியல் பாணிக் கேற்றிட
வெண்ணுள கணிகைய ரினத்தொ டாடலுங்
கண்ணுள ராடலுங் காம னாடலும்
விண்ணுள ராடலும் வெறுப்ப மேவுமே.

இ—ள்: பண் உளர் நரம்பு இயல் பாணிக்கு ஏற்றிட— பண்ணைவிளைக்கின்ற யாழ்நரம்புகள் இயற்றும் பாடலுக்கிசைய, எண் உள கணிகையர் இனத்தொடு ஆடலும்— மதிப்புள்ள நடனமாதர்கள் கூட்டமாகநின்று நடித்தலும், கண்ணுளர் ஆடலும்—கூத்தர்கள்நடித்தலும் (ஆகிய இரண்டும்),காமன் ஆடலும் விண்ணுளர் ஆடலும் வெறுப்ப மேவும்—மன்மதனது நடனத்தையும் தேவரம்பையர்களது நடனத்தையும் வெறுக்கும்படி (அந்நகரில் எந்நாளும்) பொருந்தும் எ—று.

ஏ. அசை. நடனசாமர்த்தியமெண்பார் 'எண்ணுள கணிகையர்' என்றார். தனது மகனாகிய அநிருத்தனைச் சிறைமீட்பான் வாணாசுரனகர்புகுந்து ஆண்மைத்தன்மை திரிந்தபெண்மைக்கோலத்துடன் மன்மதன் ஆடினன்;இது பேடியாடலெனப்படும். இதனை "சுரியற்றாடிமருள்படுபூங்குழற்-பவளச்செவ்வாய்த்தவளவொண்ணகை-நீணிலமளந்தோன்மகன்முன்னாடிய-பேடிக்கோலம்" எனமணிமேகலையும், "ஆண்மைதிரிந்தபெண்மைக்கோலத்துக்-காமனாடியபேடியாடலும்" எனச்சிலப்பதிகாரமும் கூறுதலானுணர்க. இப்பொருளுணராதார் இன்னும் பலவாறுபொருளுரைப்பர். அவைபொருந்தாவென்க. (ருச)

அரிவையர் மைந்தர்க ளணிந்து நீத்தவே
திருமகள் காமுறுஞ் செல்வ மாகுமேற்
கருதரு நான்முகக் கடவுட் காயினும்
பொருவரு நகர்வளம் புகலற் பாலதோ.

இ—ள்: அரிவையர் மைந்தர்கள் அணிந்து நீத்ததே திருமகள் காமுறும் செல்வம் ஆகுமேல்—(அங்குள்ள) மங்கையர்களும் காளையர்களுந் தரித்துக் கழித்தவைகளே இலக்குமியும் விரும்பத்தக்க போக்கியப்பொருளாகுமானல், பொரு அரு நகர் வளம்—ஒப்பற்ற (அந்தக்)காஞ்சிநகரின் வளமானது, கருதரும் நான்முகக்கடவுட்கு ஆயினும் புகலற்பாலதோ—நினைத்தற்கரிய நான்குமுகங்களையுடைய பிரமதேவராலாயினும் சொல்லத்தக்கதாகுமா? (ஆகாதே) எ—று.

உலகினரெவர்க்குஞ் செல்வத்தையருளுந்தேவியாகிய திருமகள் தானும் அக்காஞ்சிநகரிலுள்ளார் அணிந்து புராதனமாயபின் நீக்கிய ஆடை ஆபரணம் சுகந்தமாலை முதலியவைகளைச் சிறந்தபோக்கியப்பொருளென்று விரும்புவளேயானல் அந்நகர்வளம் யாராற்கூறமுடியும், எவராலுமரிதாம் என்பதுகருத்து.

ஏகாரம் பிரிநிலை. திருமகள் காமுறும் என்பதிற் சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. ஆகுமேல் எதிர்காலவினையெச்சம். உம்மை உயர்வுசிறப்பு. ஓ எதிர்மறை. கடவுட்கென்பதில் நான்கனுருபு மூன்றனுருபாகத்திரிக்கப்பட்டது. நான்குமுகங்களையுடையவரும் கலைமகட்குக்கணவருமாதலின் பிரமாவை விசேடமுடையராகத் தெரிந்து 'கருதருநான்முகக்கடவுட்காயினும் பொருவருநகர்வளம்புகலற்பாலதோ' எனக்கூறினர். 'தோட்டலர்வனசத்திசைமுகன்முன்னஞ்சொற்றனன்' என மேல் நூற்றுமூன்றாஞ் செய்யுளிற்கூறுதலின், அக்காஞ்சிமான்மியத்தைக்கூறிய பிரமதேவர்தானும் முற்றாய் வருணித்துமுடிக்க வன்மையுடையாரல்லரென்னுங் கருத்துப்போதர அங்ஙனங்கூறினரெனினுமாம். காஞ்சிநகரம் வளத்தாற்சிறந்ததென்பதை "புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ்-பரம்பு நீள்புவ னம்பதி னான்கினும்-வரம்பில் போக வளப்பின் வளமெலா-நிரம்பு கொள்கல மென்ன நிறைந்ததால்" என்னுஞ்சேக்கிழார்பெருமான்றிருவாக்கானுமுணர்க. (௫௫)

வேறு.

மாறாய்ச் சிறார்க ளெறிந்தாடிய மான்ம தத்தாற்
சேறாய்ப்பொற் சுண்ணத் துலர்வாய்ப்பனி நீர்கள் சிந்த
வாறாய்ப் பளிதத் தினில்வாலுகத் தாறு மாகி
வேறாய்ப் புவியோ ருணர்வாமென மேய வீதி.

இ—ள்: சிறார்கள் மாறாய் எறிந்து ஆடிய மான்மதத்தால் சேறு ஆய்-சிறுவர்கள் எதிர்த்து (ஒருவர்மேலொருவர்) வீசிவிளையாடிய கஸ்தூரிக்குழம்பு சிந்துதலாற் சேறாகி, பொற்சுண்ணத்து உலர்வு ஆய்—பொற்சுண்ணஞ்சிதறுதலால் (அச்சேறு) புலர்ந்து, பனிநீர்கள் சிந்த ஆறு ஆய்-(சிவிறியிலுள்ள)பனிநீர்த்திவலைகள் சிதறுதலால் யாறாகி, பளிதத்தினில் வாலுகத்து ஆறும் ஆகி—பச்சைக்கர்ப்பூரப்பொடி சிதறுதலால் வெண்மணல்வழியுமாகி, வேறாய்—(இவ்வாறேகணந்தோறும்) வேறுபாடுற்று, புவியோர் உணர்வு ஆம் என மேய—பூவுலகத்தில் வாழ்கின்ற மானுடரது அறிவுபோல நிலைதிரிந்தன, வீதி—(அந்நகரிலுள்ள) வீதிகள் எ—று.

விளையாட்டின்பொருட்டுக் கஸ்தூரிக்குழம்புமுதலிய ஒவ்வோரினங்களையுஞ் சிறுவர்வீச, அவைபரவுந்தோறும்,அந்நகரவீதிகள் வெவ்வேறுவடிவாய்த் தன்னியன்மாறுதல் எதுபோலுமெனில், மாந்தரதுசிந்தை விஷயங்களிற் செல்லுந்தோறும் வெவ்வேறுதன்மையை அடைதல்போலும் என்பதுகருத்து.

'மாறாய்ச்சிறார்களெறிந்தாடிய' என்பதனைப் பனிநீர்க்கும், 'சிந்த' என்பதை மான்மதத்திற்கும், இவ்விரண்டையுந்தனித்தனி பொற்சுண்ணம் பளிதம் என்பவற்றிற்கும் ஏற்றவாறொட்டிப் பொருளுணர்க. சிந்தஎன்னும் வினையெச்சம் ஏதுப்பொருளி

ல்வந்தது. ஆறு யாறு என்பதன்விகாரம். மேய-மேவியஎன்னும் வினைமுற்றின்விகாரம். சேருய் உலர்வாய் ஆருய் ஆறுமாகி வேருய் என்னும்வினையெச்சங்கள் முறையே ஒன்றையொன்றுகொண்டு மேயஎன்னும் வினைமுற்றுடன்முடிந்தன. (௫௬)

தண்டா மரையேந் தியவானவன் றன்னை யொத்தா
னெண்டா வியமா மதனேந்திழை யாரி லஞ்சி
வண்டா மரைபூத் தனவொத்தனர் வந்து செந்தே
னுண்டா டியதேன் களையொத்தன ரோங்கன் மைந்தர்.

இ—ள்: எண் தாவிய மா மதன்—(திருமாலினது)சிந்தையிற்றோன்றிய பெருமையினையுடைய மன்மதனானவன், தண் தாமரை ஏந்திய வானவன்றன்னை ஒத்தான்—குளிர்ந்த தாமரைமலர்களைக் (கைகளில்) தாங்கிய சூரியனை நிகர்த்தான், ஏந்து இழையார் இலஞ்சி வண் தாமரை பூத்தன ஒத்தனர்— ஆபரணங்களையணிந்த மங்கையர்கள் தடாகத்தில் வளப்பத்தினையுடைய தாமரைப்பூ மலர்ந்திருத்தலை நிகர்த்தார்கள், ஓங்கல் மைந்தர் வந்து செம் தேன் உண்டு ஆடிய தேன்களை ஒத்தனர்— வலிமையினையுடைய இளைஞர்கள் (அம்மலரின்கண்) வந்துகூடிச் செம்மையாகிய தேனைப் பருகிவிளையாடிய வண்டுகளைநிகர்த்தார்கள் எ—று.

அந்நகரிலுள்ள ஆடவர்களும் பெண்களும் காமவிகாரமுற்றுக்கலந்து இன்புறுகின்றனரென்பது தாற்பரியம்.

தாமரை ஆகுபெயர்கள். ஏந்திழையார்—ஏந்திய இழையினையுடையார். எண்டாவிய என்பதற்கு மகளிர்சிந்தையிற்புகுந்தமன்மதனென வுரைப்பினுமிழுக்காது. பூத்தன வினைமுற்றுத்தொழிற்பெயர். நாளத்துடன்கூடிய இரண்டு வெண்டாமரைமலர்களை இரண்டுகைகளினுஞ் சூரியன் தரித்திருத்தலின் 'தண்டாமரையேந்தியவானவன்' என்றார். இதனை "தவளாம்போருகாருடம்டாடிமீகுஸுமப்ரபம்| ஸ்புரத்ரக்தமஹாதேஜோவ்ருத்தமண்டலமத்யகம்| அம்ஸாஸக்தஸ்புடசுவேதஸநாளாப்ஜகரத்வயம்| ஏகாஸ்யம்சிந்தயேத்பாநும்த்விநேத்ரம்ரக்தவாஸஸம்|" என்பதனுலறிக.

தாமரைமலர்தற்குச் சூரியனுதித்தல்காரணமாதல்போலக் காமவிச்சையுண்டாதற்கு மன்மதனுதித்தலே காரணமாதலின் 'தண்டாமரையேந்தியவானவன்றன்னையொத்தானெண்டாவியமாமதன்' எனவும், சூரியனது கிரணங்களால் தாமரைப்பூக்கள் மலர்த்தப்படுவதுபோல மன்மதனுடைய பூங்கணைகளால் மாதர்களது மனம் நெகிழ்க்கப்படுதலின் 'ஏந்திழையாரிலஞ்சிவண்டாமரைபூத்தனவொத்தனர்' எனவும், தாமரைமலரைவந்தணைந்து தேனைப்பருகி வண்டுகள்விளையாடுதல்போல, மகளிரைக்கூடி அதரபானஞ்செய்து ஆடவர் லீலைபுரிதலின், 'வந்துசெந்தேனுண்டாடியதேன்களையொத்தனரோங்கன்மைந்தர்' எனவும் கூறினார். (௫௭)

ஏமங் குலவு முரசங்க ளிரட்ட வாசத்
தாமங் கமழ்பந் தரினூடு தமக்கி யன்ற
வோமங் களின்மா மணஞ்செய்தன ரூர்கு லாவு
மாமங் கலமே யுலப்பின்றி மலிந்த தன்றே.

இ—ள்: ஏமம் குலவும் முரசங்கள் இரட்ட—சுபகரம்பொருந்திய முரசவாத்தியங்கள் முழங்க, வாச தாமம் கமழ் பந்தரின் ஊடு—சுகந்தமாலைகள் (தூக்கப்பட்டுப்) பரிமளிக்கின்ற மணப்பந்தல்களில், தமக்கு இயன்ற ஓமங்களின் மா மணம் செய்தனர்—தத்தமக்கேற்ற ஆகுதிகளுடன் பெருமைபொருந்திய விவாகத்தைச்செய்து, ஊர்கு

லாவும் மா மங்கலமே உலப்பு இன்றி மலிந்தது—ஊர்வலம் வருகின்ற பெரியமங்கலக் காட்சியே குறைவின்றி (அந்நகரமெங்கும்) நிறைந்திருந்தது எ—று.

அன்றும் பின்னைய ஏகாரமும் அசைகள். முன்னைய ஏகாரம் தேற்றம். க்ஷேமம் என்னும்வடசொல் ஏமமெனவழங்கிற்று. பந்தல், பந்தரெனப்போலியாயிற்று. ஊடு ஏழனுருபின் பொருள்படவின்றதோரிடைச்சொல். ஓமங்களின் என்பதில் ஐந்தனுருபு உடனிகழ்ச்சிப்பொருளில்வரும் மூன்றனுருபாகத் திரிக்கப்பட்டது. செய்தனர் முற்றெச்சம்..மங்கலம் ஆகுபெயர்.

வீரமுரசு கொடைமுரசு மணமுரசு என்னுமூவகையுள் மணமுரசென்பது போதரப் பிறிதினியைபுநீக்கியவிசேடணம்புணர்த்தி 'ஏமங்குலவுமுரசங்கள்'எனவும், தங்கள் தங்கள் சூத்திரானுட்டானத்திற்கும் குலமுறைக்குமியைந்த ஆகுதியென்பது போதர 'தமக்கியன்றஓமம்' எனவும், உறவினர் நண்பினர் முதலாயினோரனைவரும் பெருமகிழ்வுடன் கொண்டாடுதலின் 'மாமங்கலம்' எனவும் கூறினர்.

மணங்கள் எண்வகையின,அவையாவன:—பிரமம் தெய்வம் ஆரிடம் பிராசாபத்தியம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்பனவாம். அவற்றுட்பிரமமாவது: ஓர்வரனுக்கு ஆபரணங்களாலலங்கரித்துக் கன்னிகையைத் தீமுன்னர்க்கொடுத்தல். தெய்வமாவது: யாககருமங்களைமுறைப்படி நடப்பித்தவர்க்குக் கன்னியைத்தீமுன்னர்க்கொடுத்தல். ஆரிடமாவது: இரண்டுபசுக்களையும் பொருளையும் வாங்கிக்கொண்டு தன்மகளைத்தீமுன்னர்க்கொடுத்தல். பிராசாபத்தியமாவது: பெண்ணைக்கேட்டவர்களிடம் பொருள்பெறாது கன்னியைத்தீமுன்னர்க்கொடுத்தல். காந்தருவமாவது: கேட்பாருங்கொடுப்பாருமின்றித் தலைவனுந்தலைவியுமாக ஒருப்பட்டுத்தம்முட்கூடுவது. ஆசுரமாவது: பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டிய பொன்னைக்கொடுத்துக்கொள்வது. இராக்கதமாவது: பெண்ணும் பெண்ணின் இனத்தாருமுடன்படாதிருப்ப வலிதிற்கொள்வது. பைசாசமாவது: துயிலும்போதும் கள்ளுண்டுகளித்திருக்கும்போதும் கன்னிகையைக்கூடுவது. இவற்றுள், பிரமமுதனான்கும் உத்தமமணமும் காந்தருவம் மத்திமமணமும் ஆசுரமுதலியமூன்றும் அதமமணமும் ஆம். உத்தமமணங்களுள்ளும் பிரமமணமொன்றே மிகச்சிறந்தது. இது கன்னியைக்கொடுப்போனும் முன்பத்துத்தலைமுறையும் பின்பத்துத்தலைமுறையுமாகிய இருபத்தொருதலைமுறையாரையும் நற்கதியிற்சேர்ப்பது; ஆதலின், அதனை 'மாமணம்' என்றுவிசேடித்தார். (௫௮)

மாகந் திகழு மகிலாவிகொண் மாட மீதிற்
பாகின் மொழியா ரிளமைந்தர்தம் பாலி னோச்சப்
போகுஞ் சிவிறிப் பனிநீர்புறஞ் சிந்த வென்று
மேகஞ் சிதறும் பெயலென்ன விளங்கும் வீதி.

இ—ள்: மாகம் திகழும் அகில் ஆவி கொள் மாடமீதில்—ஆகாயத்தில் (உயர்ந்துசென்று) விளங்குகின்ற அகிற்புகையையுடைய மேன் மாடங்களில், பாகு இன்மொழியார் இளம் மைந்தர் தம் பாலின் ஓச்ச—பால்போன்ற இன்சொற்களைப்பேசுகின்ற மங்கையர்கள் இளமைப்பருவத்தினையுடைய காளையர்மேல் (விளையாட்டின்பொருட்டு) விசிறும்போது, போகும் சிவிறி பனிநீர்—வெளிப்படுகின்ற சிவிறியிலுள்ள பனிநீரானது, புறம் சிந்த—(அம்) மாடங்களின்வெளியே சிந்துதலால், என்றும் மேகம் சிதறும் பெயல் என்ன விளங்கும்— எஞ்ஞான்றும் மேகங்கள்சொரியுந்திவலைகளையுடையதென்றுசொல்லும்படி விளங்கும், வீதி—(அந்நகரத்திலுள்ள) வீதிகள் எ—று.

மாகந்திகழுமாடம் அகிலாவிகொண்மாடம் எனத்தனித்தனி இயையும். மாடமீதில் என்பது ஓச்ச என்பதனோடியையும். ஓச்ச சிந்த என்னுஞ்செயவெனெச்சங்கள்

காரணப்பொருளவாய் போகும் விளங்கும் என்னும் வினைகளை முறையேகொண்டன. சிவிறி-பனிநீர்த் துருத்தி.

அகிற்புகையென்றும்பனிநீரென்றுந்தோன்றாமையின், அவற்றை முறையே மேகங்களென்றும் மழைத்துளிகளென்றும் ஐயுறுதற்கேற்ப, மிகஉயர்ந்ததென்பார்'மாகந்திகழும்-மாடம்' என்றார். (ருக)

வன்மா முலையேந் தியமங்கையர் மைந்த ராேனார்
தொன்மாட மீதி லெறிந்தாடுபொற் சுண்ண மோடு
நன்மா மலர்த்தாது விசும்புற நண்ண மேகம்
பொன்மா முகிலாய்ப் பனிநீரிற் பொழியு மன்றே.

இ—ள்: வல் மா முலை ஏந்திய மங்கையர் மைந்தர் ஆனோர்— சூதாடுகருவியை விகர்த்த பெரியதனங்களையுடைய மாதர்களும் காளையர்களும், தொல் மாடமீதில் எறிந்து ஆடு பொற்சுண்ணமோடு நல் மா மலர் தாது விசும்புற நண்ண—பழைய மேன்மாடங்களில் (ஒருவர்மேலொருவர்) வீசிவிளையாடிய பொற்சுண்ணத்தினுடனே நல்லபெரிய மலர்களின் மகரந்தங்களானவை ஆகாயத்திற்புகுந்து நெருங்குதலால், மேகம் பொன் மா முகில் ஆய்—(அங்குள்ள) மேகங்கள் (இயற்கைநிறம்மாறிப்) பொன்னிறமுடைய பெரியமேகங்களாகி, பனிநீரில் பொழியும்—(அவர்கள்வீசிய) பனிநீரினால் (மழையைப்)பெய்யும் எ—று.

மங்கையரும் மைந்தரும் வீசிவிளையாடிய பொற்சுண்ணமும் பூம்பராகமும் செறிந்துபற்றுதலால் மேகம் பொன்மேகம் ஆயிற்று. அதன்மேல் அவர்கள் வீசிய பனிநீர்த்திவலைகள் பரந்துசிந்துதல்,அம்மேகம் மழைபெய்வதுபோன்றது என்பதுகருத்து.

அன்று ஏ அசைகள். ஆனோர் என்பது எழுவாய் வேற்றுமையுணர்த்தவந்த சொல்லுருபு. உற என்னும் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத்திரிக்கப்பட்டது. நண்ண என்னும் எச்சம் ஆய் என்னும் பிறகருத்தாவினைகொண்டது; அது பொழியும் என்னும் தன்கருத்தாவினைகொண்டுமுடிந்தது. மங்கையர் மைந்தராேனார் எறிந்தாடு என்பதை ஏற்றவாறுவேறுபடுத்திப் பனிநீர்க்கும் ஒட்டுக.

முற்செய்யுளிற்கூறிய இலக்கணமுடையனவென்பார் 'தொன்மாடம்' எனவும், சுகந்தமலருட்சிறந்தனவென்பார் 'நன்மாமலர்' எனவும், மழைபெய்தற்கேற்ற கோலமின்றிச் சிதறிக்கிடந்த வெண்ணிறமேகங்கள் பொற்சுண்ணமும் மகரந்தமும் படலமாகப்பற்றுதலாற் கனங்கொண்டு இடைவெளிமாறி ஒன்றாய்த்தொடர்ந்து பொன்னிறத்துடன் விளங்குதலால் 'மேகம்பொன்மாமுகிலாய்' எனவும் கூறினார்.

இச்செய்யுளாலும் முற்செய்யுளாலும் மாடங்களினுயர்ச்சியும் அங்குள்ள ஆடவர்களதும் மகளிரதும் விளையாட்டின் சிறப்புங்குறிக்கப்பட்டன. (சுO)

தாராற் பொலிபொற் புயவீரர் தவாது செல்லுந்
தேரார்ப்பு நால்வாய்க் கரியார்ப்பும்வெஞ் சேனை யார்ப்பு
மோரார்ப்பு மிக்க பதிமானவ ரீண்டு மார்ப்புங்
காரார்ப்பும் வேலைக் கடலார்ப்புங் கடுத்த வன்றே.

இ—ள்: தாரால் பொலி பொன் புய வீரர் தவாது செல்லும் தேர் ஆர்ப்பும்—மாலைகளாற்பொலியப்பெற்ற அழகிய புயங்களையுடையவீரர்கள் ஓயாது ஊர்ந்துசெல்கின்ற தேர்களினொலியும், நால் வாய் கரி ஆர்ப்பும்—தூங்குகின்றவாயினையுடைய யா

னைகளினொலியும், வெம்சேனை ஆர்ப்பும்—கொடிய சேனைகளினொலியும், ஏர் ஆர்ப்பு மிக்க பதி மானவர் ஈண்டும் ஆர்ப்பும்—அழகின் அமைதிமிகுந்த பலதேசங்களிலுமுள்ள மனிதர்கள் (வந்து) நெருங்குதலாலுண்டாகிய ஒலியும் (என்னுமிவைகள்), கார் ஆர்ப்பும் வேலை கடல் ஆர்ப்பும் கடுத்த- மேகத்தின்முழக்கத்தையும் சமுத்திரத்தினொலியையும் நிகர்த்துள்ளன எ—று.

அன்று ஏ அசைகள். நாலுதல் தூங்குதல். ஏரார்ப்பு என்பதில் ஆர்ப்பு-கட்டுப்பாடு. வேலை கடல் என்பன ஒருபொருட்சொற்கள். வேலையைக்கரையெனினுமாம்.

எஞ்ஞான்றும் வெற்றிமாலையையணிந்திருத்தலின் 'தாரார்ப்பொலிபொற்புயவீரர்' எனவும், போவனவும் வருவனவுமாக இடையறாது சஞ்சரிப்பனவென்பதுபோதர 'தவாதுசெல்லுந்தேர்' எனவும், உத்தமலக்கணமமையத் துதிக்கை நிலம்வரையுந்தூங்கப்பெற்றனவென்பது போதர 'நால்வாய்க்கரி' எனவும், கோபகுணத்தை இயல்பாயுடையனவாதலின் 'வெஞ்சேனை' எனவும், உலகத்திற்சிறந்துள்ள ஐம்பத்தாறு தேயங்களினின்றும் வந்து கூடினோரென்பதுபோதர 'ஏரார்ப்புமிக்கபதிமானவர்' எனவும் கூறினார். (௬௧)

வானோக்கி நிற்கு முலகென்னவு மன்ன வன்செங்
கோனோக்கி நிற்குங் குடியென்னவுங் கோதி லும்ப
ரானோர்க்கு நாக ருலகோர்க்கு மவனி யோர்க்கு
மேனோர்க்கு நாடு நகராகி யிருந்த தவ்வூர்.

இ—ள்: வான் நோக்கி நிற்கும் உலகு என்னவும்-மழையைநாடிநிற்கும் உயிர்களைப்போலவும், மன்னவன் செங்கோல் நோக்கி நிற்கும் குடி என்னவும்—அரசனது செங்கோலை நாடிநிற்கும் பிரசைகளைப்போலவும், கோது இல் உம்பர் ஆனோர்க்கும்—குற்றமில்லாத தேவர்களுக்கும், நாகருலகோர்க்கும்— நாகலோகத்திலுள்ளவர்களுக்கும், அவனியோர்க்கும்—(இப்) பூவுலகத்திலுள்ளவர்களுக்கும், ஏனோர்க்கும்—மற்றையவுலகங்களில் உள்ளவர்களுக்கும், நாடும் நகர் ஆகி இருந்தது—விரும்பித்தேடப்படுகின்ற நகரமாயிருந்தது, அ ஊர்—அக்காஞ்சிநகரம் எ—று.

உயிர்கட்கு மழைவளமும் பிரசைகட்குச் செங்கோலும் இன்றியமையாமைபோலத் தேவர்க்கும் நாகர்க்கும் மாநுடர்க்கும் பிறர்க்கும் அக்காஞ்சிநகர் இன்றியமையாததாயிற்றென்பது கருத்து. மழைவளமில்வழி உயிர்கள் பசியாலிறந்துபடும்; செங்கோலில்வழிப் பிரசைகள் களவு பகை முதலியவற்றானேருந் தீங்கைத்தீர்த்தற்குப் பற்றுக்கோடின்றியலக்கணுறும்; காஞ்சிநகரில்வழி, தேவராதியோர் தமக்கு நேரும் பாவமுதலிய குறைகளைத்தீர்த்தற்கும் இஷ்டசித்திகளைப்பெறுதற்கும் ஏற்ற தலமின்றித் துயருழப்பரென்க.

உயிர்கள் வானோக்கிநிற்றலையும், குடிகள் கோனோக்கிநிற்றலையும் "வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்செங்— கோனோக்கி நிற்குங் குடி" என்னுந் திருக்குறளாலுமுணர்க.

வானினுயவுணவை வானென்றுங் கோலினுயவேமத்தைக் கோலென்றுங் கூறினார். நோக்கிநிற்றலாவது: உளதாயவழிநிலைபெறுதல், இன்றி அமையாமை. உலகு ஆகுபெயர். செங்கோல்- செம்மையாகியகோல். ஒருபாற்கோடாது செவ்வனே நிற்றலிற் செங்கோலெனப்பட்டது. இதனை வடநூலாருந் தண்டமென்பர். நாகருலகோரென்றது கீழுலகவாசிகளாகிய சர்ப்பர்களை. ஏனோரென்றது தபோலோகமுதலிய பிறலோகங்களில் வசிக்கும் முனிவர்முதலாயினோரை. (௬௨)

கோடு நெறியு மிகலும்மனக் கோட்ட மாய
கேடும் பிணியு முதலாகிய கேதம் யாவு
நீடும் பரிவோ டுறைவாரிடை நீங்க லாலே
வீடந் நகரே யெனிலென்னின் விளம்ப வற்றே.

இ—ள்: கோடும் நெறியும்— துன்மார்க்கமும், இகலும்— பகையும், மனக் கோட்டம் ஆய கேடும்— அழுக்காறாகிய குற்றமும், பிணியும் முதலாகிய கேதம் யாவும்— நோயும் முதலாகப் பொருந்திய தீமைகளனைத்தும், நீடும் பரிவோடு உறைவாரிடை நீங்கலால்— மிக்க விருப்பத்தினுடனே வசிப்பவர்களிடத்துச் சாராதொழிதலால், வீடு அ நகரே எனில்—முத்தித்தலம் அக்காஞ்சீபுரமேயென்று (பெரியோர்கள்) சொல்வார்களேயானால், என்னின் விளம்ப வற்றே—(அந்நகர்ப்பெருமை) என்னாற் சொல்லக்கூடியதாகுமா? (ஆகாதே) எ—று.

ஏகாரங்களுள் முன்னையது அசை; பின்னையது பிரிநிலை. கோடும்நெறி- வளைந்தநெறி, நேர்மையில்லாதநெறி; எனவே துன்மார்க்கமென்பதுபெற்றும். கேதம் கித் என்னுந் தாதுவினடியாகப்பிறந்த வடசொல். கேதம் யாவுமென்றது மனம் வாக்குக் காயமென்னு மூக்கரணங்களாலும் விளையுங் குற்றங்களுள் ஈண்டுக்கூறப்படாதனவற்றை. வீடு முதனிலைதிரிந்ததொழிற்பெயர்; விடுதலென்பதுபொருள்; இது வீட்டைத்தருந்தலத்தின்மேனிற்றலினாகுபெயர். கோடுநெறி முதலியவனைத்தையுநீக்குதற்கேற்ப 'வீடந்நகரே' என்றார்.

காஞ்சிநகரில்வாழ்வோர்க்கு அக்குற்றமனைத்துமணுகாவென்பதை "அக்காஞ்சிகலிநாசப்பொருட்டுநோம்படைத்துவைத்ததாதலாலே- யெக்காலுமந்நகரினகத்துயரும் வினைத்துயருமெய்தாவாகும்" எனக் காஞ்சிப்புராணங்கூறும். இந்நகர் முத்தித்தலமென்பதை மேல் எழுபத்தைந்தாஞ்செய்யுளாலுணர்க. வற்று-அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக்குறிப்புவினைமுற்று. வன்மையையுடைத்தென்பதுபொருள். ஓ எதிர்மறை.(-)

வேறு.

எமமே தருவாச் சினைகளு மனைத்தா விலைதளிர் செய்யபூந் துகிராக்
காமர்பூ மணியா வுதித்தொரு காஞ்சி கண்ணரோ ரைவர்முன் கண்டு
தாமினி தருளும் பொய்கையின் மருங்கே தன்னிழல் பிரிகிலா துறலாற்
பூமியெண் காஞ்சி மாபுர மெனும்பேர் புனைந்ததப் பொருவிலா நகரம்.

இ—ள்: தரு எமமே ஆ— மரம் பொன்னேயாகவும், சினைகளும் அனைத்து ஆ—கிளைகளும் அப்பொன்னேயாகவும், இலை தளிர் செய்ய பூ துகிர் ஆ—இலைகளும் தழைகளும் சிவந்த பொலிவார்ந்த பவளமேயாகவும், காமர் பூ மணியா—அழகிய மலர்கள் நீலரத்தினமேயாகவும், ஒரு காஞ்சி உதித்து—ஓர் காஞ்சிமரமானதுதோற்றி, ஓரைவர் கண்ணர் முன் கண்டு—ஐந்துவிஷ்ணுக்களை முன்னேகண்டு, தாம் இனிது அருளும் பொய்கையின் மருங்கு-அவ்விஷ்ணுக்கள் நன்றாக அமைத்த தடாகங்களின் பக்கத்தில், தன் நிழல் பிரிகிலாது உறலால்—தன்னுடையநிழலானது இடம்விட்டுப்பிரியப்பெறாது நிற்றலால், பூமி எண் மா காஞ்சி புரம் எனும் பேர் புனைந்தது— பூவுலகத்தார் மதிக்கின்ற மகத்தாகிய காஞ்சீபுரமென்னும் பெயரைக்கொண்டது, அ பொரு இலா நகரம்— அந்த ஒப்பற்றநகரம் எ—று.

காஞ்சிமரநிற்குங்காரணத்தாற் காஞ்சீபுரமெனப் பெயரெய்திற்றென்பது தாற்பரியம். இதனை "முழங்குமறையாகமநூல்வடிவமாகிமூல்முதன்முழுவதுஞ்செங்கணகமாகிச்- செழுங்கனிபூத்தளிர்கணவமணிகளாகிச்சேர்ந்தவர்க்குநாற்பயனுமளிப்பதாகி.

வழங்கி ரவிமண்டலத்தின்காறுமோங்கவளர்ந்துநிழல்பிரியாதவண்மைத்தாய- தழங்குபுகழ்த்திருக்காஞ்சிநிலைபேறெய்துந்தன்மையினாற்காஞ்சியெனும்பெயரிற்றூமால்" எனக் காஞ்சிப்புராணங் கூறுதலாலுணர்க.

இப்பெயர்க்காரணம் ஷை புராணத்திற் பிறவாறுங் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:—க-பிரமம், அஞ்சி-பூசித்தல்=பிரமமானது பூசிக்கப்படுவது; இதனை "கறங்குவண்டிமிர்கமலமுந்துழாயுங்கடுக்கைமாலையுந்துயல்வருபுயத்தீர்- பிறங்குகவ்வெனுமொழிப்பொருள்பிரமம்பிரமமானயாமஞ்சிக்கப்படலா- லுறங்கிடாப்புகழ்க்காஞ்சியென்றுரைக்குமொருதிருப்பெயரெய்துமிந்நகரம்" என்பதனாலறிக. அன்றியும், க என்பதற்குப் பிரமா சிரசு இன்பம் எனவும், அஞ்சி என்பதற்கு, கவ்வென்பதன்முன்னிருபொருள்களிலும் பூசித்தல் பிற்பொருளில் அடைதல் எனவும் கொண்டு, அவற்றிற்கேற்ப, பிரமனாற் பூசிக்கப்படுவது, (உத்தமாங்கமாகிய) சிரம்போல (எவராலுங்) கொண்டாடப்படுவது, வசிப்பவர்க்கு இன்பத்தைப்பயப்பது எனவுங்கூறும். இதனை "மற்றுங்கவ்வெனல்சென்னியோடின்பமலரவன்றனையுணர்த்துமஞ்சித்தல்-சொற்றபூசனையடைவுமாம்யாருஞ்சென்னிமேற்கொடுதொழத்தகுஞ்சிறப்பாற்- பற்றிவைகுநர்பேரின்பமுறலாற்பங்கயத்தவன்வழிபடலாலும்-பெற்றதாகுமித்திருப்பெயர்" என்பதனாலறிக. இன்னும்,காஞ்சியென்பது மகளிர் அரைநாபியை ஆதலின், ஏனையநகரங்கள் பிற அவயவங்களாக, இந்நகர் நிலமகட்கு நாபித்தானமாய்விளங்குவது என்பதுமொன்று. இதனை "இலகுவாணகையரிமதர்மழைக்கணிருண்டவார்குழல்வேய்மருள்பணைத்தோட்- கலபமாமயிலியலெழின்மடவாருந்தித்தானத்தைக்காஞ்சியென்றுரைப்ப- சுலவுவெண்டிரைப்பணிக்கடலுடுக்கைத்தொல்லைநானிலமடக்கொடிதனக்குக்- குலவுகாஞ்சிநற்றானமாய்ப்பொலிந்தகொள்கையானுமத்திருப்பெயர்வழங்கும்" என்பதனாலறிக.

இப்பெயர்க்காரணங்களிவ்வாறு பலதிறப்படினும் அவற்றுட் சிறந்ததொன்றையே ஆசிரியர் தெரிந்துகூறினரென்க.

ஏகாரங்கள் தேற்றம். ஏமமே என்பதிலுள்ள ஏகாரத்தை, பின்வரும் அனைத்து துகிர் மணி என்பவற்றோடுந் தனித்தனியியைக்க. ஒன்றுபலவடுக்கிய ஈறுதொக்க ஆக என்னும் வினையெச்சங்கள் உதித்து என்னுந் தன்கருத்தா வினைகொண்டன. உதித்து கண்டு உறலால் புனைந்தது எனஇயையும். உம்மைஎச்சம். ஒரைவர் ஒன்றாலுறழ்ந்த ஐவர். பூமி ஆகுபெயர். பேர் பெயரென்பதன் விகாரம்.

"நற்பாலனநல்லவர்பாலணுகிற்-பொற்பூமணமும்பெறல்போலுமெனுஞ்-சொற்பாரினிநீஇபதுதாயவிதன்-விற்பாய்மணமேதகுபொன்மலரே" எனக்காஞ்சிப்புராணம் விசேடித்தலின் 'காமர்பூ' என்றார்.

தாவரவகையின்பாற்பட்ட பிறமரங்கள்போல வித்துவேர் முதலியவற்றினுற்பத்தியாகாது, "வண்டார்தருமாலதிமென்கொடியும்- விண்டாழ்கயிலைக்கிரிவிட்டெவருங்-கொண்டாடுபிலத்தயலிற்குறுகி-யுண்டாயதொளிர்ந்தெழுகாஞ்சியென" என ஷை புராணங்கூறியவாறு திருக்கைலாசகிரியிற்றேவியார்வளர்த்த மல்லிகைக்கொடியேதெய்வீகமான ஓர் காஞ்சிமரமாக உதித்தலின், ஏனைக்காஞ்சிமரங்கள்போல நீலமலருடைத்தன்றென்று, முன்னர்க்கூறிய பொன் பவளம் என்பவற்றினிறத்திற்கேற்ப, மணி என்பதற்கு மாணிக்கமெனப்பொருள் கூறினுமாம்.

ஐந்துகண்ணராவார் வாசுதேவர் நாராயணர் பிரத்தியுமநர் அநிருத்தர் சங்கருஷணர் என்பவர்கள். அவர்களமைத்த பொய்கைகளும் ஐந்து. அவையாவன:—சூரியபுஷ்கரணி சந்திரபுஷ்கரணி அக்கினிபுஷ்கரணி சுவர்ணபுஷ்கரணி அமிர்தபுஷ்கரணி என்பன. இவற்றை "உரைக்குமிரவிமதிகனலிசுவணமமிழ்தமூறுபெயரான்-வரப்புட்க

ரணித்தடமைந்தும்வாசுதேவனாரணனே- பிரத்துமினனோடனிருத்தன்சங்கருடணனென னப்பீதாம்-பரத்தன்பகுப்பினைவர்தொடும்பஞ்சதீர்த்தம்" எனக் காஞ்சிப்புராணங்கூறுத லாலுணர்க. காஞ்சிமரந்தோன்றியபின் இச்செய்யுளிற்கூறிய ஐந்துவிஷ்ணுக்களுந் தம் வாணாண்முடிந்துவீந்தனராதலின் 'கண்ணரோரைவர்முன்கண்டு' என்றார்.

சூரியசந்திரர்களின் உதயாஸ்தமனங்களுக்கிடைப்பட்ட காலங்கடோறும் இடம்பெயர்ந்து அவரது கிரணங்கள் பரவுந்திசைக்கெதிரே தோன்றாது, எஞ்ஞான்றும்ம ரத்தின் கீழிடத்திற்றானே சாயைநிற்றலின் 'தன்னிழல்பிரிகிலாதுறலால்' என்றார். இதனை "உலகேதுறினுங்கலையோவியரு-ணிலையேநிலையாகநிலைத்தவர்க-ளலையாரதுபோ லொளியாங்குறினுஞ்-சலியாதடிநின்றொளிர்தண்ணிழலே" எனக் காஞ்சிப்புராணங்கூறுதலாலுணர்க. (சுச)

சுருதியா னுறங்கு மிராத்தொறு முடிவிற் றுஞ்சிய வூழிக டோறும்
விரையவந் துலக மழித்திடுங் கடலவ் வியன்பதி யெல்லையுட் சிறிதும்
வருவதை யஞ்சிப் புறந்தனிற் சூழ வந்தொரு சத்திகாத் திடலாற்
பிரளய சித்தென் றொருதிரு நாமம் பெற்றதக் காஞ்சியம் பேரூர்.

இ—ள்: சுருதியான் உறங்கும் இரா தொறும்—பிரமதேவர் நித்திரைசெய்கின்ற இராக்காலமாகிய தினகற்பங்கடோறும், முடிவில் துஞ்சிய ஊழிகள் தோறும்—(அப்பிரமதேவர்) வாழ்நாண்முடிவில் இறக்கின்ற பிரமகற்பங்கடோறும், விரைய வந்து உலகம் அழித்திடும் கடல்—விரைந்துவந்து உலகங்களை அழிக்கின்ற சமுத்திரமானது, அ வியன் பதி எல்லையுள் சிறிதும் வருவதை அஞ்சி புறந்தனில் சூழ—அந்தப் பெரிய காஞ்சிநகரின் எல்லையினுள் அற்பமாயினும் பிரவேசித்தற்குப்பயந்து வெளியே வளைந்து நிற்கும்படி, ஒரு சத்தி வந்து காத்திடலால்—(காளியாகிய) ஒரு சத்தியானவள் வந்து காவல்செய்திருத்தலால், பிரளயசித்து என்று ஒரு திருநாமம் பெற்றது—பிரளயசித்து என ஒரு சிறந்தபெயரைப்பெற்றது, அ காஞ்சியம் பேர் ஊர்—அந்தக்காஞ்சிமாநகரம் எ—று.

பிரளயத்தாலழிவுறாவண்ணங் காளிகாவல்செய்தகாரணத்தாற் பிரளயசித்தெனப்பெயர்பெற்றதென்பது தாற்பரியம். முன்னொருழிகாலத்திலே பிரளயவெள்ளம்பெருக, விஷ்ணு பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் கண்டு நடுநடுங்கிக் காஞ்சீபுரத்தில்வந்து ஏகாம்பரநாதரைப்பணிந்து "பெருமானே! முழங்கியதிர்ந்து பெருகிவராநின்ற பிரளயவெள்ளத்தால் அடியேங்கள் அழியாவண்ணம் அருள்செய்தருளுக" என்று பிரார்த்தித்தனர். அக்கடவுள் அக்கடல்களை அடக்கும்படி தமதுசத்திகளுளொன்றாகிய காளியை ஏவினர். அக்காளி அக்கினிப்படையைக் கைக்கொண்டு சென்று பெருகிவரும்பிரளயக்கடலை அழிக்கநினைப்ப ,அது பயந்தொடுங்கிப்புறத்தேநின்றது. அதனால் இப்பெயரெய்திற்று. இதனை "செழுவண்டுமுரன்றுகிளைப்பமதுப்-பொழியுந்தொடைவேய்ந்தெழில்பூத்தகுழன்-மழையுண்விழிமாதொளிர்காளிதனை-யெழுவேலையடக்கெனவேவினரே,———முன்னுற்றுமுருக்கமுயன்றருளும்-வன்னித்திரள்கால்படைமங்கையினைக்- கன்னிக்கடல்கண்டுகலங்கியவ- டன்னைத்தொழுதுய்ந்துதணிந்ததுவே,———எற்றித்திரைபாயிலயப்புனலை- வெற்றித்திறல்காட்டிவிலக்குதலாற்-றொத்துப்பொழில்சூழ்நகர்தானிலய-சித்துப்பெயர்வாய்ந்துதிகழ்ந்ததுவே" எனக் காஞ்சிப்புராணங்கூறும். பிரளயசித்தெனினும் லயசித்தெனினுமொக்கும்.

சுருதியான்-வேதங்களை அறிந்தவன். சுருதி-கேட்கப்படுவது; எழுதாக்கேள்வியாதலின் வேதத்தை அங்ஙனங்கூறுவது. விரைய என்னுஞ்செயவெனெச்சம் செய்

தெனெச்சமாகவும், வருவதை என்பதில் இரண்டனுருபு நான்கனுருபாகவும் திரிக்கப்பட்டன. சூழஎன்னும் எச்சம் காரியப்பொருட்டு; அது காத்திடலால் என்னும் பிறகருத்தாவின் வினைகொண்டது. பிரளயம் என்பதில் பிர என்னும் உபசர்க்கம் மிகுதியையுணர்த்தும். லயம் ஒடுக்கம். ளகரவொற்றுமைபற்றிப் பிரளயமெனவழங்கிற்று; எல்லாமொடுங்குங்காலமென்பது பொருள். சித்-சென்றது; இது தமிழில் உகரவீறாகவழங்கிற்று. அம் சாரியை.

பிரமன் வாழ்நாளளவை "ஈண்டுமோரிருபானுயிரந்தலையிட்டியன்றநாற்பத்துமூன்றிலக்க-யாண்டெனப்படுவநான்குகத்தளவையிம்முறையாயிரமிறந்தாற்-காண்டகு மயனுக்கொருபகலதுவேகற்பமாமிரவுமத்துணைத்தவ்- வாண்டகைக்கந்நாண்முப்பதோர்திங்களஃதொருபன்னிரண்டாண்டே,-பகர்ந்தவாண்டொருநூறிருவகைப்பரார்த்தம்பற்றறில்வெள்ளிவண்டோடு- தகர்ந்திடவுடைத்துமுடங்குகான்ஞிமிறுதழங்கிசைப்பேட்டொடுநெறுந்தே- னுகர்ந்துபண்பயிற்றும்பொகுட்டலர்கமலநோன்மலரணங்கினுக்கரங்க-லிகர்ந்தநாவகத்துப்பழமறைகொழிக்குநெடுந்தகைக்கிறுதிவந்தெய்தும்" எனக் காஞ்சிப்புராணங்கூறலானறிக.

"இறுதிசெய்திடவேசீற்றமின்பமேயாண்மையென்னு-வறைதருசத்திநான்காமரன்றனக்கையைகாளி-முறைபுரிகவுரியின்னோர்மும்மையும்பெற்றோரேனைப்-பெறலருஞ்சத்தியானிப்பெற்றியுமறைகள்பேசும்" என்றபடி,சிவபெருமானது நால்வகைச்சத்திகளுட் காளியுமொன்றாதலின், 'ஒருசத்தி' என்றார். (ருரு)

கயிலையி லரனை யம்மைபூங் காவிற் கண்களை மூட-லு முலகிற்
பயிலுறு கொடிய வினையிரு ளகலும் பான்மையால் வந்துமா நிழற்கீ
ழியலொடும் பரமன் பூசனை யியற்றி யிரைத்தெழு கம்பைகண் டஞ்சிச்
செயன்முறை தழுவக் குழைந்தருள் செய்யச் சிவபுர மானதச் சீரூர்.

இ—ள்: அம்மை—உமாதேவியார், கயிலையில் பூங்காவில் அரனை கண்களை மூடலும்- திருக்கைலாசகிரியிலுள்ள திருநந்தனவனத்திற் சிவபெருமானது திருக்கண்களிரண்டையும் (தமதிருகைகளாலும் விளையாட்டின்பொருட்டு) மூடியவுடன், உலகில் பயிலுறு கொடிய வினை இருள் அகலும் பான்மையால்— உலகங்களிற் பயின்ற தீவினையாகிய குற்றம் நீங்கும்படி, வந்து—(பூவுலகத்தில்) வந்து, மாநிழற்கீழ் இயலொடும் பரமன் பூசனை இயற்றி—காஞ்சிமாமரநீழலில் வேதாகமவிதிப்படி சிவபூசைசெய்து, இரைத்து எழு கம்பை கண்டு அஞ்சி—(அவரது பூசாபத்தியைப்பரீக்ஷித்தற்பொருட்டுச் சிவபெருமானழைப்பக் கங்கைமுதலிய நதிகளுடன்) முழங்கியெழுந்த கம்பாநதியைப்பார்த்துப்பயந்து, செயன் முறை தழுவ— அப்பொழுதுசெய்யவேண்டிய கிரமப்படி அப்பெருமானைத்தழுவ, குழைந்து அருள்செய்ய— (அச்சிவபெருமான்) திருமேனிகுழைந்து கருணைபுரிதலால், சிவபுரம் ஆனது—சிவபுரமென்னும் பெயரைப்பெற்றது, அ சீர் ஊர்—அந்தச்சிறந்த காஞ்சிநகரம் எ-று.

தேவியார்வழிபடக்கருணைசெய்துகொண்டு சிவபெருமான் வீற்றிருக்குங் காரணத்தாற் சிவபுரமெனப்பெயர்பெற்றதென்பதுதாற்பரியம். இதனை "மருளுமைவகைமலப்பெருந்தொடக்கினைக்கடந்து-தெருளுமானந்தச்சுடர்ப்பிழம்பாய்வினைத்தீமை-யொருவிஞரகவிளக்கதாயிருசுடருயிர்வான்- பெருகு காலழல்புனனில்மாயபேரொளிதான்,———மலக்கணத்திறுற்சிமிழ்ப்புண்டுமயங்குமாருயிரை- யலக்கணீத்தெடுத்தாளமிக்கலர்ந்தபேரருளா-னலக்குமாமறைமாவடிநறுநிழன்முளைத்து-விலக்கரும்புகழேகம்பனெனப்பெயர்மேவி,———தாயவைந்தொழிலுயிர்க்கெலாமியற்றிமின்றுறுத்த- பாய

மேகலைவழிபடப்பரிந்துவீற்றிருக்கு-மாயசீர்மையாலகிலமும்புகழ்திருக்காஞ்சி- மேயதாற்சிவபுரமெனுமேதகுநாமம்" என்பதனாலறிக.

அரனை என்பதிலுள்ள இரண்டனுருபு ஆறனுருபாகத்திரிக்கப்பட்டது. அம்பா என்னும் வடசொல் அம்மையெனவழங்கிற்று; (சகலலோகங்கட்கும்) தாயென்பது பொருள். கொடியவினை- பாவம். இயல்-முறை. பரமன்- பரையென்னுஞ்சத்தியையுடையவன், அல்லது பரவுணர்வால் உணரப்படுபவனென்பதுபொருள்; பரவுணர்வாவது வேதாந்தசித்தாந்தங்களின் உண்மையைத் தெளிதலாலுண்டாகும் ஞானம். கம்பா என்னும்வடமொழி ஈற்றாகாரமைகாரமாகி 'கம்பை' எனநின்றது. கம்— பா. கம் என்பது நீர் சிரம் உயிர் மோக்ஷம் எனவும், பா என்பது சுத்தப்படுத்துதல் காத்தல் பருகுதல் எனவும் பொருள்படுமாதலின், கம்பை என்பதன்பொருள் முறையே, நீரினாற் சுத்தப்படுத்துவது, தன் சிரசில் தொட்டவர்களைச்சுத்தப்படுத்துவது, பருகினோருயிரைக் காப்பது, மோக்ஷத்தைநுகர்விப்பது எனக் காஞ்சிப்புராணங்கூறும். மூடலும் என்னும் எச்சம் பயிலுறஎன்பதனோடும், பான்மையால் வந்து என்னுமெச்சங்கள் இயற்றி என்பதனோடும், இயற்றி அஞ்சி என்னுமெச்சங்கள் தழுவ என்பதனோடும், தழுவ குழைந்து என்னுமெச்சங்கள் செய்ய என்பதனோடும் இயைந்தன. செய்ய என்னுமெச்சம் காரணப்பொருட்டாய், ஆனது என்னும் பிறகருத்தாவினைகொண்டு முடிந்தது.

அவ்விடத்தைவிட்டுத் தூரத்தில் ஓடியவழியே நதிப்பிரவாகத்திற்றானமிழ்ந்தாது உய்திபெறுதல் கூடுமாகவும், அங்ஙனஞ்செய்தக்கால், தாம்தொடங்கிய பூசைபங்கப்படுமெனவும், பூசையையேற்றிருந்த பெருமானாரும் கங்கையாற்றின் வேகத்தினாலலைக்கப்படுவரெனவும் எண்ணி, அகன்றுசெல்லாது தாம்பூசித்த சிவலிங்கத்திருமேனியை இறுகத்தழுவியிருந்தனரென்பது தோன்ற 'செயன்முறைதழுவ' என்றார்.

உமாதேவியார் சிவபெருமானது கண்களைமூடினரென்பதை "கைம்மிக்கெழுகாதல்விருப்புமீதூர்குறிப்பின்- விம்மிப்பணைத்துப்புடைவீங்கியெழுந்தகொங்கைப்- பொம்மற்பெருமாட்டிவெரிக்புறத்தெய்திவல்லே- செம்மற்பிறைவேணியனார்திருக்கண்புதைத்தாள்" என்பதனாலும், அவ்வாறு கண்புதைத்தலால் அவர்க்குத் தீவினைக்குற்றஞ்சார்ந்ததென்பதை "இருசுடர்தமக்காதாரமாகியவெமதுகஞ்சத்- திருவிழிபுதைத்தவாற்றாற்படைப்பாதிச்செய்கைமாறி- யுருகெழுதீமைநின்னையுற்றதாலதற்குத்தீர்வு-மருமலர்க்குழலினாய்நீமரபுளியியற்றல்வேண்டும்" என்பதனாலும், அப்பாவத்தைநீக்கும்படி ஏகம்பநாதரைப் பூசித்தனரென்பதை "வழுவறுதோற்றமாதிவழுக்கியபாவத்தீமை- கழுவநின்பூசையிங்காட்கடைப்பிடித்தருளாற்செய்கேன்- முழுதருள்வழங்கியூறுநீக்கிமுன்னின்றுகோடி- செழுமதிமுடியாயென்றுசங்கற்பஞ்செய்துகொண்டாள், ——— அகிற்புகைதீபமெல்லாமினிதளித்தரக்குநன்னீர்- மகிழ்ச்சியிற்சுழற்றிப்பல்கால்வலஞ்செய்துவணங்கிப்போற்றி-யிகப்பிலஞ்செழுத்துமெண்ணியின்னனபிறவுமாற்றி- முகிழ்த்தபேரன்பினான்றபூசனைமுற்றச்செய்தாள்" என்பதனாலும், அவ்வாறு பூசைசெய்கின்றுழி ஓர்நாட் கம்பைநதி பெருகியதென்பதை "மருமலர்த்தனிமாநீழல்வள்ளலார்மேன்மேலன்பு-பெருகியகருத்தினாட்குப்பேரருட்கருணைகூர்ந்த- வொருதிருவிளையாட்டாலேபத்தியினுறுதிநோக்கித்- திருவருள்புரிவானெண்ணியிதுதிருவுள்ளஞ்செய்தார், ——— விழுமியவண்டத்துள்ளும்புறத்தினும்விரவுந்தீர்த்த- முழுவதுமொருங்குகண்ணமுன்னினார்முன்னமேலோடு-மொழுகுநீர்க்கம்பையாற்றினுடன்விராய்க்கடைக்கால்வெள்ள- மெழுவதுகடுப்பவெல்லாப்புனலும்வந்திறுத்தவன்றே" என்பதனாலும், அவ்வாறு பெருகும்போது சிவலிங்கத்திருமேனியைத் தழுவினரென்பதை "துன்புறநோக்கிநெஞ்சந்துண்ணெனத்துளங்கியாவா-வும்பர்வான்றடவிச்செல்லுமொப்பரும்பெருநீர்வெள்ள- மெ

ப்பிரான்மிசையேநண்ணுமினிச்செய்வதென்னேயென்ற-தம்பிராஞர்பாலன்புதழைத்தெழுமுள்ளத்தோடும்,——ஒருகொடியெழுந்துசெம்பொனுயர்வரைக்குவடுதன்னே-யிருகொழுந்திருபாற்போக்கித்தழீஇயெனவெழுந்தவல்லே-முருகலர்வேதியும்பர்த்தன்வலமுழந்தாருேன்றிக்- கருமணிப்பாவையன்ஞள்கணவரைத்தழுவிக்கொண்டாள்,——மணிமுலேக்குவட்டிஞேடுவளேக்கையாலெருக்கிப்புல்லித்-தணிவருங்காதல்விம்மக்காதலிதழுவலோடுந்- திணியிருளறுக்குஞ்சோதித்திருவுருக்குழைந்துகாட்டி-யணிவளேத்தழும்பிஞேடுமுலேச்சுவடணிந்தாரையர்" என்பதஞலும் காஞ்சிப்புராணம் விளங்கக்கூறும். (சுசு)

விண்ணுறை மகவான் கரிபுரி தவத்தால் வெற்பதாய்த் தன்ஊமுன் ருங்கு
புண்ணிய கோடி யிபகிரி மிசையே பொருவிலா வேதியுத் தரத்தி
லண்ணலங் கமலத் திசைமுகன் வேள்வி யாற்றலு மவற்கருள் செய்வான்
கண்ணன்வந் திடலால் விண்டுமா புரமாங் கட்டுரை பெற்றதக் காஞ்சி.

இ—ள்: விண் உறை மகவான் கரி புரி தவத்தால் வெற்பது ஆய் தன்னே முன் தாங்கு புண்ணியகோடி இபகிரி மிசை— சுவர்க்கலோகத்தில்வாழுகின்ற இந்திரனது ஐராவதயானே செய்துகொண்ட தவப்பயஞல் மலேவடிவுகொண்டு தம்மை முற்காலத்திற்சுமந்த புண்ணியகோடியாகிய அத்திகிரியின்மேலுள்ள, பொரு இலா வேதியுத்தரத்தில்— ஒப்பில்லாத உத்தரவேதியின்கண், அண்ணல் அம் கமல திசைமுகன் வேள்வி ஆற்றலும்—பெருமைபொருந்திய அழகிய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர் யாகஞ்செய்ய, கண்ணன் அவற்கு அருள் செய்வான் வந்திடலால்—விஷ்ணுமூர்த்தி அப்பிரமதேவர்க்குக் கருணைபுரியும்படி எழுந்தருளிவந்திருத்தலால், மா விண்டுபுரம் ஆம் கட்டுரை பெற்றது— பெருமைபொருந்திய விண்டுபுரமென்னுஞ்சிறந்தபெயரைப்பெற்றது, அ காஞ்சி—அந்தக்காஞ்சிபுரம் எ—று.

விஷ்ணுமூர்த்தி பிரமதேவரது யாகத்தில் வரங்கொடுக்குமாறு எழுந்தருளியிருத்தலால் விண்டு புரம் எனப்பெயர்பெற்றதென்பது தாற்பரியம். இதனே "தயங்குசெஞ்சடையாரருடாங்கியங்-கியங்குவேள்வியினின்னவிப்பாகமேற்- றயங்குசிற்றிடையொண்டிருமாதொடும்-வயக்குமுத்தரவேதிவதிந்தனன்,——ஆங்கணன்னணங்கம்பரருளிஞற்-பூங்கள்வார்துளவப்புயல்வைகலா- லோங்குவிண்டுபுரமெனவோர்பெயர்—தீங்குதீர்திருக்காஞ்சிபுனேந்ததே" எனக்காஞ்சிப்புராணங்கூறும்.

மகவான்-(நூறு) யாகங்களே உடையவன். கரி-(நூதிக்)கரத்தையுடையது. அது பகுதிப்பொருள்விகுதி. புண்ணியகோடி புண்ணியதீர்த்தத்தின் கோடியிலுள்ளது, கோடி-நுனி; ஓர் புண்ணியஞ்செய்தவழிக் கோடிமடங்காய் மல்குதலின் அப்பெயராயிற்றெனினுமாம். இது விஷ்ணுமூர்த்தி சக்கரப்படையைப் பெறும்பொருட்டுப் பூசித்து அச்சக்கரத்துடன் வரதராசப்பெருமாளென்னும் பெயரையும்பெற்றதலம். உத்தரவேதி வடக்கின்கணுள்ள வேதிகை; இது செய்யுளமைதிக்கேற்ப வேதியுத்தரமெனச்சொன்மாறிநின்றது. கிருஷ்ணன் விஷ்ணு என்னும் வடமொழிகள் முறையே கண்ணன் விண்டு என வழங்கின. ஏ அசை.

முன்னொருகாலத்தில் முருகவேளுக்கும் இந்திரனுக்கும் போர் மூண்டவழி முருகவேளேவிய குலிசாயுதத்தான் மோதுண்ட ஐராவதயானே அவ்வூறுபாடுநீங்கும்பொருட்டு, சிவபூசைசெய்துகொண்டு புண்ணியகோடியிலிருந்த விஷ்ணுவை மலேயாய்ச்சுமந்துநின்றதஞல், புண்ணியகோடியை அத்திகிரியெனவழங்குதலின் 'விண்ணுறை மகவான்கரிபுரிதவத்தால்வெற்பதாய்த்தன்னேமுன்ருங்கு- புண்ணியகோடியிபகிரி' எ

ன்றார். இதனை "முன்னொருநாளிற்செவ்வேன்முருகனும்விண்ணுடாளு- மன்னனுமூண்டபோரில்வலாரிதன்மீதிலோச்சு- மின்னவிர்குலிசத்தண்டின்வீறழித்துமையாளீன்ற-பின்னவன்புடைத்தான்றன்கைபிடித்தவெங்குலிசத்தண்டால்,———வானவர்க்கரசனோடுமெறுகிமொழாந்துமூர்ச்சித்-தீனமுற்றிரங்கும்வெள்ளையிபமொருசிறுவன்கையால்-யானுமெம்மிறையும்பட்டேமின்னவனூர்தியாகி-லூனமொன்றாறுதென்றெண்ணியொப்பருங்காஞ்சியெய்தி,———வம்பலர்ந்துலவும்வேகவதிப்புனற்றிருத்தமாடி- யம்பிகைபாகற்போற்றியருள்பெறுநீலமேனி-யும்பனைமலையிற்போற்றியவ்வரமுற்றதற்றா- னம்புமக்கிரியையத்திகிரியெனநவிலுவாரால்" எனக்காஞ்சிப்புராணங்கூறுதலானறிக.

பிரமதேவர் படைத்தற்றொழில் சித்திபெறுமாறு காஞ்சிபுரத்தில்வந்து புண்ணியகோடியின்கண்ணே யாகஞ்செய்யத்தொடங்க, அந்தயாகத்திற்குரியபரியை மாயாவியென்னுமவுணன் திருடிச்சென்று நன்னீர்க்கடலிலொளித்தனன். அதனாற் பிரமதேவர் மனமாழ்கி மாமரநீழலில்வீற்றிருக்கின்ற ஏகாம்பரேசுரர் சந்நிதானத்திற் சென்று குறையிரப்ப, அப்பெருமான்,'பரியைமீட்டுக்கொடுத்து யாகத்தைநிறைவேற்றுவை; அந்தயாகத்தில் நமக்குக்கிடைக்கும் அவிப்பாகத்தையும் நீயேயேற்றுக்கொள்' என்றுகட்டளையிட்டுத் திருமாலை ஏவினர். திருமால் அவுணனைத்தேடிக் கண்டு பொருது அவனுயிரைமாய்த்து யாகப்பரியைமீட்டுப் பிரமதேவர்க்குதவி, யாகத்தை நிறைவேற்றி அருள்செய்தனர். ஆதலின் 'திசைமுகன்வேள்வியாற்றலுமவற்கருள்செய்வான்கண்ணன்வந்திடலால்' என்றார். (௬௭)

கார்த்திரு மேனித் தண்டுழாய் மௌலிக் கண்ணனுங் கமலமே லயனு
மார்த்திடுந் தரங்கப் பகிரதி மிலைந்த வவிர்சடை யமலனு மாகு
மூர்த்திக டத்த முலகமே போல முன்னியப் பதியமர் செயலாற்
சீர்த்திரி மூர்த்தி வாசமா கியபேர் சிறந்ததக் கச்சிமா நகரம்.

இ—ள்: கார் திருமேனி தண் துழாய் மௌலி கண்ணனும்—கரிய திருமேனியையும் குளிர்ந்த துளசிமாலையையும் அணிந்த முடியினையுடைய விஷ்ணுமூர்த்தியும், கமலமேல் அயனும்—செந்தாமரை மலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், ஆர்த்திடும் தரங்க பகிரதி மிலைந்த அவிர் சடை அமலனும் ஆகும் மூர்த்திகள்—ஒலிக்கின்ற திரைகளையுடைய கங்காநதியைச் (சிறுதிவலையாகஅடக்கி) அணிந்த விளங்குகின்ற சடாமுடியையுடைய சிவபெருமானும் ஆகிய மும்மூர்த்திகளும், தத்தம் உலகமே போல முன்னி அ பதி அமர் செயலால்—தங்கள் தங்கள் உலகங்களையேபோல நினைத்து அந்நகரத்தில் வாழ்ந்திருக்குந்தன்மையினால், சீர் திரிமூர்த்திவாசம் ஆகிய பேர் சிறந்தது—சிறப்பினையுடைய திரிமூர்த்திவாசமென்னும் பெயர்விளங்கப்பெற்றது, அ கச்சி மா நகரம்—அந்தக் காஞ்சிமாபுரம் எ—று.

மும்மூர்த்திகளும் நிலைபெற்றுவாழ்தலால் திரிமூர்த்திவாசமெனப் பெயர்பெற்றதென்பது தாற்பரியம். இதனை "அன்பருக்கருள்புரிந்தமலநாயகர்-பொன்பொதியிளமுலைப்பூவைதன்னொடு-மின்பழங்கனிந்துதேனிறைக்குமாவடி-முன்புபோல்வைகினார் முகிழ்த்தகாதலால்,———பாற்றரும்பவத்தொடர்பாறவல்வினை- நீற்றிடுமெழுப்படைநிமலநாயகர்-போற்றரும்பதமலர்போற்றியன்பினா-லாற்றரும்வேள்விசெய்தயனிருந்தனன்,———பாவியவுத்தரவேதிப்பாங்கரிற்- பூவலர்துளவினான்பொற்பவைகினான்,———இருவருநாடொறுமிறைவரோடுமற்றிருவருமின்னணம்வதியுமேதுவான்- மருமலிகாஞ்சிமும்மூர்த்திவாசமென்றொருபெயர்படைத்ததாலுலகம்போற்றவே" எனக்காஞ்சிப்புராணங் கூறுதலாலறிக.

மௌலி-மூலசம்பந்தமானது; மூலம்-நுனி. பாகீரதி என்னும் வடமொழி பகீரதி எனவும் வழங்கப்படும். ஏ தேற்றம். திரிமூர்த்திவாசம்-மும்மூர்த்திகளது இருப்பிடம். உலகத்தையழிக்கும்படியெழுந்த நஞ்சை அடக்குமாறெதிர்த்துத்திருமேனிகறுத்தவராதலின் 'கார்த்திருமேனி' என்றார். (௬௮)

தரணிகண் முழுதும் புரிதரும் விரிஞ்சன் றன்மனம் புனிதமாம் பொருட்டாற்
றிருமகள் கணவன் கமடமாய்ப் பூசை செய்திடு கச்சபா லயத்தி
லரனடி பரவி யருச்சனை யியற்றி யங்கண்வீற் றிருந்திடு நெறியால்
வரமிகு பிரம புரமென வொருபேர் மன்னிய தன்னதோர் நகரம்.

இ—ள்: தரணிகள் முழுதும் புரிதரும் விரிஞ்சன்— உலகங்களனைத்தையும் படைத்த பிரமதேவர், தன் மனம் புனிதம் ஆம் பொருட்டால்—(பொய்கூறுதலாற் குற்றமடைந்த) தமதுமனம் பரிசுத்தமுறும்படி, திருமகள் கணவன் கமடம் ஆய் பூசைசெய்திடு கச்சபாலயத்தில் அரன் அடி பரவி அருச்சனை இயற்றி— இலக்குமிதேவிக்குநாயகராகிய விஷ்ணுமூர்த்தி கூர்மவடிவங்கொண்டு பூசித்த கச்சபாலயத்தின்கண்ணே சிவபெருமானது திருவடிகளைத் தொழுது பூசித்து, அங்கண் வீற்றிருந்திடும் நெறியால்— அத்தலத்திலெழுந்தருளியிருந்த காரணத்தால், வரம் மிகு பிரமபுரம் என ஒரு பேர் மன்னியது—மேன்மைமிக்க பிரமபுரம் என்று ஒருபெயரைப்பொருந்தியது, அன்னது ஓர் நகரம்—அந்த ஒப்பற்ற காஞ்சிநகரம் எ—று.

பிரமதேவர் எந்நாளும் வசித்திருத்தலாற் பிரமபுரம் எனப் பெயர்பெற்றதென்பதுதாற்பரியம். இதனை "நாறுதாமரைச்சேக்கையான்றன்பதநாடி- யேறுயர்த்தவனருள்கிடைத்திருந்தகாரணத்தாற்-பேறுதந்தருள்பிரமமாபுரமெனுநாம— மீறுகண்டிடாக்காஞ்சிமாநகரமெய்தியதே" என்பதனாலறிக.

தரணி (தன்னிடத்திலுள்ள பொருள்களைத்)தரிப்பது; தரித்தல்-சுமத்தல். விரிஞ்சன்=(உலகங்களைத்)தோற்றுவிப்பவன். பொருட்டால்என்னும் ஆலீற்றுவினையெச்சம் இயற்றி என்னும் வினைகொண்டது. கமடம்=நீரிற்சஞ்சரிப்பது. கச்சபாலயம்-ஆமையினாற்பூசிக்கப்பட்ட கோயில். அன்னது அதுஎன்பதன் விகாரம்; ஈண்டுச் சுட்டுமாத்திரையாய்நின்றது.

### விஷ்ணுமூர்த்தி ஆமையுருக்கொண்டு பூசித்த சரித்திரம்.

தேவேந்திரன் ஒருநாள் ஐராவதயானைமேல் நகருலாவரும்போது துருவாசமுனிவர்முற்பட, அவரை உபசரிக்காது, வாகனத்திலிருந்தபடியே இறுமாப்பினுடன் போயினன். உடனே அந்தமுனிசிரேட்டர் சாபமிட, சுவர்க்கலோகத்திலுள்ள செல்வங்களெல்லாம் அழிந்தன. அதனால் இந்திரன் வறுமையுற்றுவருந்தி, முன்போலச்செல்வங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சிவபெருமானைவழிபட்டுத்துதித்தனன். சிவபெருமான் பிரசன்னமாகி, 'இந்திரனே! பாற்கடலைக்கடைந்து அமிர்தம்புசித்தால் முனிவர்சாபந்தீரும். அக்கடலைக்கடைதலும் விஷ்ணுவாலன்றிப்பிறராலரிது' என்றுதிருவாய்மலர்ந்தருளினார். பின்பு இந்திரன் விஷ்ணுமூர்த்தியைவேண்ட, அவர் ஓர்பெரிய ஆமைவடிவுகொண்டு சிவபெருமானைப் பூசித்து வலிபெற்று அமிர்தங்கடைந்தனர். அந்த விஷ்ணுமூர்த்தியாகியஆமைபூசித்தலாற் கச்சபாலயமெனப்பெயர்பெற்றது என்பதாம்.

### பிரமதேவர் பூசித்த சரித்திரம்.

முன்னொருகாலத்தில் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் தருக்குற்று யாமே பிரமம் யாமே பிரமம் என்று கூறி ஒருவரோடொருவர் பன்னாட்போர்புரிய, சிவ

பெருமான் அவ்விருவர்க்குநடுவே சோதிவடிவாய்வளர்ந்து, அவர்கள்செலுத்தும் படைகளையெல்லாம் விழுங்கிநின்றனர். அதுகண்டவிஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் விம்மிதமுற்று, 'இச்சோதியின்அடியையும்முடியையும் தேடுவோம்; கண்டவரே பிரமமாவார்' என்று நிச்சயித்து, முறையே,பன்றியாயகழ்ந்தும்,அன்னமாய்மேற்பறந்தும் தேடினர். பலகாலமாகத்தேடியும் காணப்படாமையாற் பிரமதேவர் பறவையுருவின்சிறைமுரிந்து,மேலுயர்தற்கு வன்மையின்றி ஒய்ந்து,இழிந்தனர்; அப்பொழுது சிவபெருமானதுமுடியினின்றும் ஒர்தாழைமலர் நழுவிவிழுந்தது. பிரமதேவர் அம்மலரைநோக்கி, 'தாழைமலரே! நீ நம்முடன்கீழிழிகின்றனையாதலின் இச்சோதியின் அடியைத்தேடுகின்ற விஷ்ணுவைக் காண்பாய்;அவ்வாறு காணும்போது யான் இச்சோதியின் முடியைக் கண்டதாக ஒர்பொய்கூறக்கடவாய்' என்றுகற்பித்து, அம்மலருடன்இழிந்து, அடியைக்காணலாற்றாதோய்ந்து தளரும் விஷ்ணுமூர்த்தியையணுகி 'விஷ்ணுவே! யான் முடிகண்டுவந்தேன் நீயே தோல்வியடைந்தாய்' என்று பொய்கூறிப் பழித்தனர். தாழைமலரும் சான்றுகூறிற்று. உடனே சிவபெருமான் கோபித்து,'பூசைக்குபயோகப்படாதொழிவாய்' என்றுதாழைமலரையும், 'படைத்தற்றொழிலும் சத்தியலோகவாழ்வையும்நீக்குதி' என்று பிரமதேவரையும் சபித்தனர். அவ்வாறே தாழைமலர் உபயோகமற்றதாய் விலக்கப்பட்டது. பிரமதேவர் அச்சாபந்தீருமாறு காஞ்சிநகரில்வந்து கச்சபாலயத்திற் சிவபூசைசெய்து, சஞ்சாபநீங்கி முன்போலச் சத்தியலோகவாழ்வையும் படைத்தற்றொழிலையும்பெற்றனர் என்பதாம். (௬௧)

வீடுறு முத்தி போகமென் றவற்றுள் வெஃகிய வெஃகியாங் கென்றுங்
கூடுறு தவத்தால் வழிபடு வோர்க்குக் கொடுத்திடுந் தன்மையாற் காம
பீடமென் றொருபேர் பெற்றது மலர்மேற் பிரமனே முதலினோர் தவத்தை
நாடினர் செயலாற் றபோமய மெனும்பேர் நணியது கச்சிமா நகரம்.

இ—ள்: கூடுறு தவத்தால் வழிபடுவோர்க்கு—(பூருவசன்மத்திற்) கைகூடிய தவப்பயனாற் பூசிக்கின்றவர்களுக்கு, வீடு உறும் முத்தி போகம் என்றவற்றுள்— பாசங்களினீங்குதலாகிய மோக்ஷமும் போகமுமென்று (சொல்லப்படுகின்ற) இருவகைப்பொருள்களுள்ளும், வெஃகிய-விரும்பியபொருள்களை, வெஃகியாங்கு என்றும் கொடுத்திடும் தன்மையால்—விரும்பியவாறு எஞ்ஞான்றும் ஈந்தருளுந்தன்மையினால், காம பீடம் என்று ஒரு பேர் பெற்றது—காமபீடமென்று ஒரு பெயரைப்பெற்றுள்ளது (அன்றியும்), மலர்மேல் பிரமனே முதலினோர் நாடினர் தவத்தை செயலால்—தாமரைமலராசனத்தில்வசிக்கும் பிரமாவேமுதலாகிய தேவர்கள் தேடி (வந்திருந்து) தவத்தைச்செய்தலால், தபோமயம் எனும் பேர் நணியது— தபோமயமென்னும் பெயரைப்பெற்றது, கச்சி மா நகரம்—(அந்தக்) காஞ்சிமாநகரம் எ—று.

விரும்பியபொருளனைத்தையுங் கொடுத்தலாற் காமபீடமெனவும் பிரமாமுதலாயினோர் தவஞ்செய்திருத்தலாற்றபோமயமெனவும் பெயர்பெற்றதென்பது தாற்பரியம். இவற்றை "இவ்வாறுகாமுற்றநாற்பயனுமொருங்கீந்த- வவ்வாய்மையாற்காமபீடமெனவலங்கியதாற்-செவ்வாய்மைக்காசிமுதற்றிருத்தகுமூவிருநகரு- மொவ்வாதமேன்மையதாயோங்குபுகழ்த்திருக்காஞ்சி" எனவும், பிறைநுதல்வாணிநீத்தப்பெருக்கினைத் தடுப்பச்செய்யு-நறைமலர்ப்பொகுட்டுமேலானற்றவம்வளர்ந்தவாற்ற- விறையினிலிடும்பையோம்புந்தபோமயமென்னுநாம- மறைபுனற்பழனக்காஞ்சியணிநகரணிந்ததன்றே" எனவும் காஞ்சிப்புராணங்கூறும்.

முத்தி- முச் என்னுந் தாதுவினடியாகப்பிறந்த வடசொல்; விடுதலென்பது பொருள். போகம்-புசிக்கப்படுவது. வெஃகிய-வினையாலணையும்பெயர், வெஃகியாங்கெ

ன்பதில் வெஃகிய என்னும் பெயரெச்சவீற்றகரமும், நண்ணிய என்பதில் ணகரமெய்யுந்தொக்கன. தவப்பயனைத் தவமென்றது காரணகாரியவுபசாரம். காமபீடம் விரும்பியவற்றைக்கொடுக்குந்தானம். ஏ-தேற்றம். நாடினர்-முற்றெச்சம். தபோமயம்-தவவடிவானது. 'கச்சிமாநகரம்' என்பதைப் பெற்றது என்னும் வினைமுற்றிற்குமொட்டுக.

முன்னோர் கற்பகாலத்திலே மாவிரதரென்னும்பெயருடைய ஓரந்தணசிரேட்டர் வறுமையினால் மிகவுந்துன்புழந்து, செல்வத்தைப்பெறவிரும்பி, காசியிற்சென்று விசுவநாதப்பெருமானைக்குறித்துத் தவம்புரிந்தார். அவ்வாறு தவம்புரியுநாளில் உமையம்மையார் வெளிப்பட்டு 'அந்தணசிரோமணியே! நீ இத்தலத்திற்றவம்புரியின் முத்தியேகிடைக்கும்; செல்வப்பேறு கிடைக்கமாட்டாது' என்றருளினர். அதன்மேல் அவ்வந்தணர் மதுரை அயோத்தி மாயை அவந்திகை துவாரகை என்னுந் தலங்களினுஞ்சென்று தவம்புரிய, ஆங்காங்குள்ளதெய்வங்களெல்லாம்,காசியிற்கூறியவாறு ஒவ்வோர்பலனையே அருளலாமெனவும் செல்வமருளுதல் தம்மாற்கூடாதெனவுங் கூறின. அதன்மேல் அவ்வந்தணர் காஞ்சிநகரில்வந்து பூசித்துத் தவம்புரிந்து, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பயன்களையும் ஒருங்கே பெற்றனரெனக் காஞ்சிப்புராணங்கூறுதலால் 'வெஃகியவெஃகியாங்கென்றுங்கூடுறுதவத்தால்வழிபடுவோர்க்குக்கொடுத்திடுந்தன்மை' உணர்க.

## பிரமதேவர் தவஞ்செய்த சரித்திரம்.

தன்னைவிட்டு, காயத்திரி சாவித்திரி என்னும் பெண்களோடு தீக்கையுற்றுப் பிரமதேவர் யாகந்தொடங்க, சரசுவதி கோபித்துக் காமாக்ஷியம்மையாரை வழிபட்டு யாகத்தை அழிக்கும்படி அருள்பெற்று நதிவடிவாகப் பெருகிவந்தனள். அப்போது அந்தயாகத்தைக் காவல்செய்திருந்த விஷ்ணுமூர்த்தி அவள் வரும்வழியிற் பள்ளிகொண்டு தடுப்பவும் அந்நதிஅமையாது, அவர்கிடக்கும் இடத்தைவிட்டு ஓர் புடையொதுங்கி விரைந்துவந்தது. பிரமதேவர் அதுகண்டு ஏகம்பநாதரைத் தோத்திரஞ்செய்ய, அவர் காமாக்ஷியம்மையாரைவழிபட்டு அருள்பெறும்படிகூறினர். பிரமதேவர் அவ்வாறே அவ்வம்மையாரைவழிபட்டுத் தவமியற்றலும், அம்மையார்வெளிப்பட்டு 'பிரமனே! நீ சரசுவதிக்கு இன்சொற்கூறி அவளையுஞ்சேர்த்துத் தீக்கையுற்று யாகமுடிப்பாயாக' என்றருளினர். அவ்வாறே பிரமதேவர் சரசுவதிதேவியை மகிழ்வித்து யாகமுடித்தனர் என்பதாம்.

பிரமாவேயன்றிப் பிறருந் தவஞ்செய்திருத்தலை மேல்எழுபத்தொன்பதாஞ்செய்யுளிற் காண்க. (எ0)

சகங்களோர் மூன்றி லறம்பெரி துளதித் தரணியித் தரணிமா நகர்க்குண்
மிகுந்தரு மத்தின் பலத்தினைத் தரலால் வியன்சகற் சாரமென் றொருபேர்
புகும்பரி சுடைய தட்டசித் திகளும் பொருவின்மா தவர்க்கரு டிறத்தாற்
பகர்ந்திடுஞ் சகல சித்தியென் றொருபேர் படைத்தது கச்சியம் பதியே.

இ—ள்: சகங்கள் ஓர் மூன்றில் பெரிது அறம் உளது இ தரணி—(சுவர்க்க மத்திய பாதலங்களாகிய) மூவுலகங்களுள்ளும் மிகவுந் தருமத்தையுடையது இப் பூவுலகமேயாகும், இ தரணி மா நகர்க்குள்—(அத்தகைய) இப்பூவுலகத்திலுள்ள பெரிய நகரங்களுள், மிகும் தருமத்தின் பலத்தினை தரலால்—விசேடித்த தருமப்பயனைத்தருதலினால், வியன் சகற்சாரம் என்று ஒருபேர் புகும் பரிசு உடையது- பெருமைபொருந்திய சகற்சாரமென்று ஒரு பெயர் எய்துந்தன்மையையுடையது (அன்றியும்),பொருவில் மாதவர்க்கு அட்டசித்திகளும் அருள் திறத்தால்— ஒப்பில்லாத பெருந்தவத்தினையுடைய மகான்களுக்கு (அணிமாமுதலிய) எண்வகைச்சித்திகளையுங்கொடுத்தருளுங்கார

ணத்தால், பகர்ந்திடும் சகலசித்தி என்று ஒரு பேர் படைத்தது (எவரும்) எடுத்துரைக்கின்ற சகலசித்தியென ஒருபெயரைப்பெற்றது, கச்சியம்பதி-(அந்தக்) காஞ்சீபுரம் எ—று.

மூவுலகங்களுள்ளும் புண்ணியபூமியாகிய பூவுலகஞ்சிறந்தது; அப்பூவுலகிலுள்ளநகரங்களுள்ளும் ஓர்புண்ணியம்புரியிற் கோடிபுண்ணியமாய் மல்குகின்ற இக்காஞ்சிநகரே சிறந்தது; ஆதலாற் சகற்சாரமெனப் பெயர்பெற்றது என்பது முதற்றொடரின்கருத்து. இப்பெயர்க்காரணத்தை, "கற்பமுடிவின்முச்சகத்தின்சாரமுழுதுங்கசிந்துருகி- யற்புமுதிர்விற்றொழுதெழுவார்க்கருளானந்தப்பெருவாழ்வு- பொற்பவுதவும் பெருமாட்டிபொலம்பூட்காமக்கண்ணிமகிழ்-சிற்பந்திகழ்பீடத்தினெதிர்வித்தாயடங்கிச்செறிந்ததுவே,———மற்றைக்கற்பத்தினின்றுஞ்சிறிதுவாங்கிவண்டினங்கண்-முற்றமதுநண்டுளிதுவற்றிமுருகுநாறியிதழ்துறுமிப்- பொற்றமலர்ப்பூஞ்சேக்கையினுன்புவனம்படைத்தகாரணத்தா-லற்றமறுஞ்சீர்முப்புவனசாரமெனும்பேரணைந்ததுவே" எனக் காஞ்சிப்புராணங்கூறும்.

எண்வகைச்சித்திகளையுங்கொடுத்தலாற்சகலசித்தியெனப்பெயரெய்திற்றென்பதுபிற்றொடரின்றாற்பரியம். இதனை "காதரமிரிக்குங்காமக்கண்ணிதனருளால்வேந்தன்- றீதறுசித்தியெட்டுந்திருத்தகப்பெற்றவாற்றான்- மேதகுசருவசித்திகரமெனவிளங்குநாம-மாதர்வண்மதில்சூழ்காஞ்சிமாநகர்பூண்டதன்றே" எனவும், "பூவலர்தனிமாமூலப்புதுவிழற்புராணரோடு-நாவியங்கூத்தற்காமக்கண்ணியைநாளும்போற்றி- யாவையினின்னும்பல்லோரணவருஞ்சித்தியெல்லா- மேவரப்பெறுதலானும்விளங்கியதனையநாமம்" எனவும் காஞ்சிப்புராணங்கூறும்.

ஏ அசை. மூன்றிலுமென்பதில் முற்றும்மையும், பெரிதுமென்பதிற்சிறப்பும்மையும், தரணியேயென்பதிற்பிரிநிலையேகாரமும் விகாரத்தாற்றொக்கன. சகற்சாரம் உலகங்களுட்சிரேட்டமானது, தெரிவானது எனப்பொருள்படும். கச்சியம்பதி என்பதனை முதற்றொடர்க்கும் ஒட்டுக. "வானிடத்தவருமண்மேல்வந்தரன்றனையர்ச்சிப்பர்" என்பவாகலின் 'சகங்களோர்மூன்றிலறம்பெரிதுளதித்தரணி' என்றார்.

அட்டசித்திகளாவன: அணிமா மகிமா கரிமா இலகிமா பிராப்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்பனவாம். இவற்றுள், அணிமா என்பது அணுப்போலாதல்; மகிமா மகத்தாதல்; கரிமா கனமுடைத்தாதல்; இலகிமா-இலகுவாதல்; பிராப்தி வேண்டியஇடத்தை அடைதல்; பிராகாமியம் தான்விரும்பியவாறு (ஒன்றினின்றுஒன்றிற்) புகுதல், அல்லது விரும்பியவாறு (அனைத்தையும்) அநுமானித்தறிதல்; ஈசத்துவம் ஆளுதல்; வசித்துவம் வசமாக்குதல். இவற்றை "அணிமாமகிமாவிலகிமாவரியகரிமாப்பிராத்திமலப்-பிணிமாசுடையோர்க்கடைவரியபிராகாமியமீசத்துவமெய்- துணிமாயோகர்க்கெளியவசித்துவமென்றெட்டாமிவையுளக்கண்- மணிமாசறுத்தோர்விளையாட்டின்வகையாமவற்றின்மரபுரைப்பாம்,——— அறவுஞ்சிறியவுயிர்தொறுந்தான்பரமகாட்டையணுவாய்ச்சென்-றுறையுஞ்சிறுமையணிமாவாமுவரிஞாலமுதன்மேலென்-றறையுஞ்சிவாந்தமாறாறுமுள்ளும்புறனுமகலாதே-யிறையும்பெருமைதனையன்றோமகிமாவென்னுளிரம்பியநூல்,———இலகுமேருபாரம்போலிருக்கும்யோகிதனையெடுத்தா- லிலகுவானதூலமெனவிருப்பதிலகிமாவாகு-மிலகுவானபரவணுப்போலிருக்கும்யோகிதனையெடுத்தா-லிலகுமேருபாரமெனவிருப்பதன்றோகரிமாவாம்,—பிலத்திலிருந்தோனயனுலகிற்புகுதன்மீண்டப்பிலமடைதல்-பலத்தின்மிகுந்தபிராத்தியதாம்பரகாயத்தினண்ணுதல்வான்-புலத்திலியங்கலிச்சித்தபோகமனைத்துந்தானிருக்குந்- தலத்தினிணைந்தபடிவருதல்பிராகாமியமாந்தவக்கொடியீர்,——— விண்ணிலிரவிதன்னுடம்பின்வெயிலாலனைத்தும்விளக்குதல்போன்- மண்ணிலுளவாம்பொருள்பலவுங்காலமூன்றும்வானத்தின்-க

ண்ணிலுளவாம்பொருளுந்தன்காயத்தொளியாலிருந்தறித-லெண்ணிலிதுவுமறையொருசார்பிராகாமியமென்றியம்புமால்;——— ஈசனெனமூத்தொழிலுந்தனிச்சைவழிசெய்தெழுபுரவித்-தேசன்முதற்கோள்பணிகேட்பத்திகழ்வதீசத்துவமாகும்-பூசலவுணர்புள்விலங்குபூதமனிதர்முதலுலகும்-வாசவாதியெண்மருந்தன்வசமாக்கொள்கைவசித்துவமாம்" எனத் திருவிளையாடற்புராணங்கூறுதலாலறிக.

சூரியகுலத்திற்பிறந்த சூரியச்சோதி என்னும் அரசனுக்கு, யசோவதி என்னும்மனைவிவயிற்றில் இராச்சியவர்த்தனனென்னும் புதல்வனும், கலாவதியென்னும் மற்றைமனைவிவயிற்றிற் சுதரிசனனென்னும்புதல்வனும் பிறந்து வளர்ந்து, தம்மைப் போன்ற சிறுவர்களுடன் பூஞ்சோலைகளிலும் வீதிகளிலும் விளையாடிவருநாளில் ஒருநாள் அவ்விரு குமாரர்களும் ஒருவரையொருவர் தாக்கிக் கலகம் விளைத்துக்கொண்டு மாளிகைசேர்ந்தனர். அப்பொழுது சுதரிசனன்றாய் இராச்சியவர்த்தனனை மிகவுங்கோபித்து வைதனள். அரசனும் அதற்கிசைந்திருந்தனன். நம் வேற்றுத்தாய் குற்றஞ்செய்யாத நம்மைச்சினந்துபேச,பிதாவும்அதற்கிணங்கினரேஎன நினைத்து, இராச்சியவர்த்தனன் மனங்கவன்றுசென்று,நற்றாய்க்கு இந்நிகழ்ச்சிகளைமுறையிட்டு, அவளுடன் அவ்விடம்விட்டகன்று பாரியாத்திரவரையில் வாழுந்தீர்க்கதவன் என்னும்மகானிடஞ்சேர்ந்தனன். வருங்காரணத்தை ஞானத்தினால் அறிந்த அம்முனிவர் அவனை உபசரித்து,தாம்பயின்றிருந்த அட்டமாசித்திகளையும் நன்குகப்பயிற்றி, பிதாவின் அரசியலையும் பெற்றுக்கொள்ளும்படி வரமருளினர். உடனே அக்குமாரன் தாயுடன் தனதூர்புக,பிதா எதிர்கொண்டு அழைத்துத்தனதரசியலை ஒப்பித்தனன். அக்குமாரன் சிறிதுகாலஞ் செங்கோல்செலுத்தி, பின், பகைவரின்மையாலும் செல்வமிகுதியாலும் அகந்தையுற்றுக் கொடுங்கோல்செலுத்துவானாயினன். அதனால் அவனிடமிருந்த அட்டமாசித்திகளும் நீங்கின. அவ்விராசகுமாரன் அச்சித்திகளை முன்போலப்பெற்றுக்கொள்ளுமாறு நினைந்து முன் அவற்றைத்தனக்குக் கற்பித்த முனிவரையணுகிப் பிரார்த்திக்க, அவர் இனி அவற்றைத்தருதல்நம்மாற்கூடாது; ஆதலின், காஞ்சிநகர்சேர்ந்து காமாக்ஷியம்மையை வழிபடுவாயாயின் உன்கருத்துமுற்றுப்பெறுமென்றனர். உடனே இராச்சியவர்த்தனன் சென்று, அவ்வம்மையாரை வழிபட்டு அட்டமாசித்திகளையும் பெற்று அரசியல்செய்தனன். இவ்வாறே இன்னும் பலர்பெற்றுள்ளார் எனக்காஞ்சிப்புராணங்கூறும். (௭௧)

உன்னருங் கயிலை நாயக னுமையை யொருபக னீலியென் றுரைப்ப
வன்னவ டனது காளிமங் கழிப்ப வங்கதி லைபவந் தெழலு
முன்னவ னவளை யிந்நக ரிருந்து முறைபுரிந் தருளென விடுப்பக்
கன்னிகாத் திடலாற் கன்னிகாப் பென்னுங் கவின்பெய ருடையது கச்சி.

இ—ள்: உன்னரும் கயிலை நாயகன் ஒருபகல் உமையை நீலி என்று உரைப்ப—தியானித்தற்கரிய கைலாசபதியாகிய சிவபெருமான் ஓர்நாள் உமாதேவியாரைப் (பார்த்து) நீ காளியென்றுகூற, அன்னவள் தனது காளிமம் கழிப்ப—அதுகேட்டிருந்த தேவியார் (நம்மை இறைவர் பழித்தனரேயென்றுநினைந்து) தமது கருநிறத்தை நீக்க, அங்கதில் ஐயை வந்து எழலும்—அக்கருநிறத்தில் துர்க்கைவந்து தோற்றுதலும், முன்னவன்—முதற்கடவுளாகிய சிவபெருமான், இந்நகர் இருந்து முறைபுரிந்தருள் என அவளை விடுப்ப—(நீ) இந்நகரத்திலிருந்து காவல்செய்தருளுக என்று திருவாய்மலர்ந்து அவளையனுப்ப, கன்னி காத்திடலால்—அத்துர்க்கை காவல்செய்தலால், கன்னிகாப்பு என்னும் கவின் பெயர் உடையது—கன்னிகாப்பென்னும் சிறந்த பெயரையுடைத்தாயிற்று, கச்சி—(அக்) காஞ்சிநகரம் எ—று.

துர்க்கை காவல்செய்தலாற் கன்னிகாப்பெனப் பெயர்பெற்றதென்பது தாற்பரியம். இச்சரித்திரத்தையும் இப்பெயர்க்காரணத்தையும் "வாளைவென்றுமதர்த்துக்குடங்கையி-னீளும்வேல்விழி வித்திலவெண்ணகைத்- தாளமென்முலைப்பார்ப்பதித்தையலைக்- காளியென்றுகரைந்துவிளித்தனர்,——— கருணைநாயகர்காளியென்றோதிய-வுரைசெவித்துளையேறலுமொய்யெனப்-பொருமியுள்ளம்புழுங்கித்தவம்புரிந்-தருளினாலவ்வுருத்தனை நீக்கினாள்,———கோங்கைவென்றகுவிமுலையாள்வயி-னீங்கிவேறுறு நீலுருவாயிடை- யோங்கியாயிரங்கால்கரமொண்முகந்- தாங்கியச்சுறத்தையலொன்றாயதே,———அன்னகன்னியடுக்கற்குலவரை- மன்னனீன்றருண்மாதுநல்லாளிரு- பொன்னஞ்சீறடிபோற்றியெழுந்துநின்-றென்னைசெய்பணியென்றனக்கென்றலும்,——— விமலநாயகிநோக்கிவியந்துநீ-சமரினேற்றுத்தறுகணவுணர்தங்- குமரியாவிருடித்துச்சகமிசை-யமருமின்னன்முழுதுமகற்றியே,——— தொழுதகுந்திருத்துர்க்கையென்றோர்பெயர்-தழுவிவையகந்தாண்மலரேத்திட-வழுவில்காஞ்சிவளம்பதிகாவல்பூண்-டழிவிலநகர்வைகென்றருளினாள்,———அருளும்வண்ணமவுணரையாவியுண்-டிருளுமென்மலர்ச்சோலைகளீண்டிய- தெருளுலாந்திருக்காஞ்சியைக்காவல்பூண்- டொருமையன்பினுறைந்தனள்கன்னியே,———அன்னைகாளிமவாக்கையிற்றோன்றிய-கன்னிகாத்தருள்காரணத்தாற்றிருக்-கன்னிகாப்பெனுநாமங்கைக்கொண்டதா- லன்னமாடுமகன்றுறைக்காஞ்சியே" எனக் காஞ்சிப்புராணங்கூறும்.

உன்ன என்பதிலீற்றகரந்தொக்கது. நீலி காளி என்பனவொருபொருட்சொற்கள்; கருநிறமுடையவளென்பது பொருள். கருநிறநீங்கி வெண்ணிறம்பெறுதலால் உமாதேவியார்க்குக் கவுரியென்னும் பெயர்உண்டாயிற்று. அங்கென்பது படர்க்கையிடத்தையுணர்த்தி அதுவென்னுஞ்சொல்லோடு ஒருசொன்னீர்மையாய்நின்றது. உரைப்ப தழிப்ப எழலும் விடுப்ப காத்திடலால் என்பன முறையே ஒன்றையொன்றுகொண்டு, உடையது என்னும் வினைமுற்றோடுமுடிந்தன. (௭௨)

அரியதோர் கயிலைக் கணங்களி லொருவ னனதுண் டீரன்மா லதிபாற்
பெருமயல் கொள்ளச் சிவனிவ ளொடுநீ பிறந்திருந் தின்பமுற் றெம்பால்
வருகென நிலமேன் மன்னர்பாற் றோன்றி மற்றவ ளோடுசேர்ந் தரசு
புரிதரு செயலாற் காஞ்சிதுண் டீர புரமெனப் புகலநின் றதுவே.

இ—ள்: அரியது ஓர் கயிலை கணங்களில் ஒருவன் ஆன துண்டீரன்—(எவராலும் அடைதற்கு) அரிய திருக்கைலாசகிரியினகணுள்ள சிவகணத்தவர்களுளொருவனாகிய துண்டீரனென்பவன், மாலதியால் பெரு மயல் கொள்ள—(அங்குள்ள) மாலதியென்னும் பெண்ணிடத்தே பேராசைவைப்ப, சிவன்—(அதனையறிந்த) சிவபெருமான், நீ இவளொடும் பிறந்து இருந்து இன்பமுற்று எம்பால் வருகென—(துண்டீரனே!) நீ (காமித்த) இந்த மாலதியோடும்(பூமியிற்)பிறந்து வாழ்ந்திருந்து கலவியின்பத்தை அநுபவித்து (அதன்மேல்) எம்மிடத்தே வருவாயென்றுகட்டளையிட, நிலமேல் மன்னர்பால் தோன்றி—(அத்துண்டீரன்) பூவுலகத்தில் அரசர்குலத்திற்பிறந்து, மற்றவளோடு சேர்ந்து— தன்போற்பூமியிற்பிறந்த அந்த மாலதியோடுகூடி, அரசு புரிதரு செயலால்—அரசியல்செய்ததன்மையினால், காஞ்சி துண்டீரபுரம் என புகல நின்றது—(அக்) காஞ்சிநகரம் துண்டீரபுரமென்று(எவரும்)வழங்கநின்றது எ—று.

துண்டீரன் அரசுபுரிதலால் துண்டீரபுரமெனப்பெயர்பெற்றதென்பது தாற்பரியம். இதனை "எற்றுதெண்டிரைவேலைசூழ்ஞாலமேந்துதோளிணைபரித்திகல்கடந்து-முற்றுசீர்த்தியன்வயங்குதுண்டீரன்முழுத்தகேள்வியனண்டகாரணத்தாற்- கற்றை

வார்சடைத்தெய்வநாயகரேகம்பநாயகர்காக்குநாயகர்வாழ்-பொற்றமாநகர்க்காஞ்சிதுண்டீ ரபுரமெனும்பெயர்பூண்டதுமாதோ" எனக்காஞ்சிப்புராணங்கூறும்.

ஓர் ஏ அசைகள். அரியது குறிப்புமுற்றுப்பெயரெச்சம். மையல் மயலெனப் போலியாயிற்று. மயல்கொள்ள வருகென தோன்றி சேர்ந்து அரசுபுரிதருசெயலால் புகலகின்றது என இயையும்.

## துண்டீரன் அரசுசெய்தசரித்திரம்.

திருக்கைலாசமலையிலுள்ள திருக்கோயிலில், நந்தி பிருங்கி துண்டீரன்முதலிய கணத்தவர்கள் சூழ்ந்து துதிக்கச் சிவபெருமான் திருவோலக்கம் வீற்றிருந்தருளினர். அவரது வாமபாகத்தில்,சயை மாலதி முதலியபெண்கள் பணிசெய்யத்தேவியார் வீற்றிருந்தனர். அப்போது துண்டீரனென்பவன் தேவிபாற்பணிசெய்துநின்ற மாலதியென்பாளைக்கண்டு மோகமுற்றான். அந்தமாலதியும் அத்துண்டீரனைக் கண்டுமோகித்தாள். இருவரும் ஒருவரையொருவர் காமுற்றுப் பின் ஒருவாறு மனந்தெளிந்தனர். அவருள் துண்டீரன் சிவசன்னிதானத்திற்றவறுசெய்தேனேயென்று கவன்று அக்குற்றந்தீருமாறுசிவனைத் துதித்தனன். பெருமான் அவனுக்கருள்செய்து'கணநாதனே! நீயும் மாலதியும் பூவுலகிற்காஞ்சீபுரத்திற்பிறந்து சேர்ந்து இன்பமனுபவித்து அரசியற்றிப்பின் ஈண்டுவருக' என்றருளினர். அவ்வாறே காஞ்சிநகரில் வந்து பிறந்து மாலதியைமணந்து அரசியற்றிப்பின் சிவபதஞ்சேர்ந்தனன் என்பதாம்.

அறுபத்துநான்காஞ்செய்யுண்முதலிதுகாறும் பத்துச்செய்யுட்களால், காஞ்சிநகர்க்குரிய விசேடநாமங்கள் பன்னிரண்டும் எடுத்துக்காட்டி விளக்கப்பட்டன. பன்னிருநாமங்கள் சிறந்தனவென்பதை "காயெரிமழுமானேந்துங்கடவுளார்க்கரங்க மாகி-மாயிருஞாலம்போற்றவயங்குமக்கச்சிமூதூர்க்-காயிரநாமமெய்துமூழிதோறவற்றுண்மேலாம்- பாயசீர்நிலைபெற்றோங்கும்பன்னிருபெயர்கண்மாதோ" எனவும், "சித்திகள்வேண்டினுஞ்செல்வநீர்பர-முத்தியேவேண்டினுமூசுவண்டலாங்-தொத்தலர்த்தாரிஞய்துனையநல்குமா- லத்தகுகாஞ்சியின்பெயரிராறுமே" எனவும் காஞ்சிப்புராணங் கூறுதலாலறிக. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட நாமங்களாதலின் அவ்வச்செய்யுட்களிற் பெரும்பான்மையும் கட்டுரை கவின்பெயர் என்றின்னோரன்னவாறு அடைபுணர்த்திக் கூறினார். பன்னிருநாமங்களிவைதாமென்பதை "உருக்காஞ்சிமுப்புவனசாரங்காமபீடமுயர்தபோமயமும்மூர்த்திவாச- மிருக்காலுந்துண்டீரபுரம்வாழ்வெய்துமிலயசித்துப்பிரமபுரமிருண்டநெஞ்சிற்- றிருக்கிரும்விண்டுபுரமருளானந்தசிவபுரமேசகலசித்திகரமேயுள்ளப்- பருக்காழைத்தபுங்கன்னிகாப்பென்றோதப்பட்டனபன்னிருதிருப்பேராகுமாலோ" என சைவபுராணங்கூறுதலாலுணர்க. இவற்றுள் துண்டீரபுரமென்னும் பெயரைநீக்கி, கலிசித்தென்னும்பெயரைச்சேர்த்து, சைவபுராணம் வேறோரிடத்திற்பன்னிருநாமங்களைக் கூறுகின்றது.

பன்னிருநாமங்களுள்ளும் சிறந்ததென்பதுதோன்ற, முதனாமத்திற்கு 'பூமியெண்காஞ்சிமாபுரம்' எனச் சிறந்தஅடைபுணர்த்திக் கூறினார். (௭௩)

தன்னையே யருச்சித் திட மலர்க் கேகித் தடந்தனிற் கராவின்வாய்ப் பட்டுத்
தன்னையே நினைந்து தன்னையே யழைத்த தந்தியைக் காத்தவொண் புயமா
றன்னையே வேண்டித் தழன்மகஞ் செய்யத் தண்டகற் கெண்டிசை யரசு
தன்னையீந் திடலாற் றண்டக புரமாந் தனிப்பெயர் பெற்றதுந் தனியூர்.

இ—ள்: தன்னையே அருச்சித்திட மலர்க்கு ஏகி—(விஷ்ணுவாகிய) தம்மையே பூசிக்கும்வண்ணம் பூக்கொய்யச்சென்று, தடந்தனில் கராவின்வாய் பட்டு— தாம்

ரைத்தடாகத்தில் முதலையின்வாயில் அகப்பட்டு, தன்னையே நினைந்து தன்னையே அழைத்த தந்தியை—தம்மையே சிந்தித்துத் தம்மையே (ஆதிமூலமே! என்று) அழைத்த (கயேந்திரனென்னும்) யானையை, காத்த ஒண் புய மால் தன்னையே வேண்டி— இரக்ஷித்தருளிய ஒளிபொருந்திய புயங்களையுடைய விஷ்ணுமூர்த்தியையே குறித்து, தழல் மகம் செய்ய—அக்கினிவளர்க்கின்ற யாகத்தைச் செய்ய, தண்டகற்கு எண்திசை அரசு தன்னை ஈந்திடலால்—(அந்தயாககருத்தாவாகிய) தண்டகனுக்கு எட்டுத்திக்கையும் ஆளுகின்ற அரசுரிமையைக்கொடுத்த காரணத்தால், தண்டகபுரம் ஆம் தனி பெயர்பெற்றது—தண்டகபுரம் என்று சொல்லப்படுகின்ற ஒப்பற்றபெயரைப்பெற்றது, அதனி ஊர்—அந்த ஒப்பற்ற காஞ்சீபுரம் எ—று.

தண்டகனென்பான் விஷ்ணுமூர்த்தியைக்குறித்து வேள்விசெய்து, அவரருளால் அரசியல் பெற்று வாழ்தலால், தண்டகபுரமெனப் பெயர்பெற்றதென்பது தாற்பரியம். இப்பெயர்க்காரணத்தை "அண்டரும் புகழ்த்துண் டீர ஞெண்டுதுண் டீர நாடாய்த்- தண்டகன் பின்னராண்டு தண்டக நாடாய்ப் பின்னைத்- தொண்டைமா னாண்டு தொண்டை நாடெனத் துலங்கிற் றென்ப-பண்டயன் படைப்புத் தொட்டுப் பயிலுமித் தொல்லைநாடு" என விநாயகபுராணங் கூறுதலாலுணர்க.

ஏகாரங்கள் நான்குந்தேற்றம். ஏகி பட்டு நினைந்து அழைத்த தந்தி என இயையும்.

### விஷ்ணுமூர்த்தி யானையைக்காத்த சரித்திரம்.

முன்னொருகாலத்திலே விஷ்ணுமூர்த்தி காஞ்சீபுரத்திற் புண்ணியகோடியிற் சிவபூசைசெய்துவருநாளிற் கயேந்திரனென்னும் யானை அந்த விஷ்ணுவுக்குப்பணிசெய்துவந்தது; அது ஒருநாள் தாமரைத்தடாகத்திற்சென்று மலர்கொய்யும்போது, ஓர் பெரியமுதலைபற்றி இழுத்தது. அதனால் துன்புற்றயானை 'ஆதிமூலமே!' என்றுகூவி அலற, விஷ்ணுமூர்த்திவந்து, சக்கரத்தால் அம்முதலையைத்துணித்து யானையைக்காத்தனர் என்பதாம். (எச)

அழகிய வயோத்தி மதுரையே மாயை யவந்திகை காசிநற் காஞ்சி
விழுமிய துவரை யெனப்புவி தன்னில் மேலவாய் வீடருள் கின்ற
வெழுநக ரத்துட் சிறந்தது காஞ்சி யென்றுமுன் னெம்பிரா னுமைக்கு
மொழிதரு நகரந் நகரெனி லதற்கு மூவுல கத்துநே ருளதோ.

இ—ள்: அழகிய அயோத்தி—அழகுவாய்ந்த அயோத்தியாபுரியும், மதுரையே—மதுராபுரியும், மாயை—மாயாபுரியும், அவந்திகை—அவந்திகாபுரியும், காசி—காசிநகரும், நல் காஞ்சி—நல்ல காஞ்சிநகரும், விழுமிய துவரை என—சிறந்த துவாரகாபுரியும் என்று, புவி தன்னில் மேல ஆய் வீடு அருள்கின்ற எழுநகரத்துள்—பூவுலகில் மேன்மையுடையனவாய் மோக்ஷத்தைக்கொடுக்கின்ற இந்த எழு நகரங்களுள், சிறந்தது காஞ்சி என்று—சிறப்புற்றது காஞ்சிநகரேயென்று, முன் எம்பிரான் உமைக்கு மொழிதரும் நகர் அ நகர் எனில்—முற்காலத்தில் எம்மிறைவராகிய சிவபெருமான் உமாதேவியார்க்குக்கூறிய நகரம் அந்தநகரமேயானால், அதற்கு மூ உலகத்தும் நேர் உளதோ—அதற்குச் (சுவர்க்கமத்தியபாதலங்களென்னும்) மூன்றுலகங்களினும் ஒப்பான நகரம் (பிறிது) உண்டா? (இல்லையே) எ—று.

புண்ணியபூமியாகிய பூவுலகத்தில் விசேடித்துள்ள முத்தித்தலங்களேழுள்ளும் காஞ்சி சிறந்ததென்று சிவபெருமானே உமாதேவிக்குக் கூறுதலின், அத்தகைய நகர்க்கு ஒப்பானநகரம் வேறில்லை என்பதுகருத்து.

மதுரையேயென்பதில் ஏகாரம் எண். மேல குறிப்புவினையாலணையும் பெய

ர். எழுநகரத்துட்சிறந்தது காஞ்சியே என்பதிலும், மொழிதருநகரங்களரே என்பதிலும், பிரிவிலே ஏகாரங்கள் தொக்கன. ஒ எதிர்மறை.

எழுநகருள்ளுங் காஞ்சிசிறந்ததென்பதை "விலத்திடைச்சிறந்தநகரெனப்படுவதீள் புகழயோத்திமாமதுரை-மலர்ப்பொழிற்காசியவந்திகைதுவரைமாயைவண்காஞ்சியென்றுரைப்ப- மலக்குறும்பறுக்குநகரமேழுள்ளுமேம்படுங்காஞ்சி" எனவும், பவம்விளைத்திடாப்பெரும்பதியெனத்திசைபோய-சிவம்விளைத்திடுநகரங்களேழுளுஞ்சிறந்து-தவம்விளைத்திடுகாஞ்சி" எனவும் காஞ்சிப்புராணங்கூறும்.

திருக்கைலாசத்திற் சிவபெருமான்றிருவோலக்கம்வீற்றிருக்கும்போது, ஒருநாள், உமாதேவியார் அவரைநோக்கி, 'இறைவரே! தேவரீரைச்சேவித்துமுத்திபெறுதல் வேதாந்தத்தையுணர்ந்து வீட்டைகூடிய மகான்களாலன்றி ஏனையோரான்முடியாது; அவ்வாறு பரிபக்குவமுறாதவர்களும் விலங்கு புள் முதலியவைகளும் நற்கதிபெறுவதெவ்வாறெனவினவினள். அப்போது பெருமான், நாம் எழுந்தருளியிருக்கும் உத்தம சிவஸ்தலங்கள் பூமியிற்பல உள; அவற்றிற் கதிபெறுதல்கூடுமென்றருளினர். அவற்றுள்ளும் விசேடமானதலம் யாதென மீட்டுந் தேவியார்வினவ, காஞ்சிநகரேசிறந்ததெனக்கூறினர். இதனை "எண்ணிலவாம்யாமருவுமிடங்களெனவுரைத்தருளவிறைவிகேளா-வண்ணவேலயிவற்றுள்ளுஞ்சிறந்ததலம்யாதென்னவருளிச்செய்வான்-புண்ணியமெய்த்திருக்காஞ்சியெவற்றினுமேம்படுபுரியாமவ்வூர்தன்னை- யெண்ணினுங்கேட்பினுஞ்சொலினும்வணங்கினும்பேரின்பவீடெவர்க்குநல்கும்"எனக் காஞ்சிப்புராணங்கூறும்; இதுபற்றியே 'எழுநகரத்துட்சிறந்ததுகாஞ்சியென்றுமுன்னெம்பிரானுமைக்குமொழிதருநகரங்கள்' என்றார். (௭௫)

பங்கமில் வசிட்டன் பசுப்பொழி பாலி படர்ந்திடு முத்தரஞ் சேயைச்
செங்கம லத்தோன் முதலினோ ராட்டுந் திருநதி தென்றிசைச் செல்லு
மங்கவற் றிடையே கம்பமே முதலா மாலயத் தந்தரு வேதி
கங்கைகா ளிந்தி யிடைப்படுந் தலத்தின் முற்படுங் காஞ்சிமா நகரம்.

இ—ள்: பங்கம் இல் வசிட்டன் பசு பொழி பாலி உத்தரம் படர்ந்திடும்—குற்றமற்ற வசிட்டமுனிவரதுகாமதேனு பொழிந்த பாலியாறனது வடதிசையிற்பாயும், செம் கமலத்தோன் முதலினோர் சேயை ஆட்டும் திரு நதி தென்றிசை செல்லும்- செந்தாமரைமலராசனராகிய பிரமாமுதலியதேவர்கள் குமாரக்கடவுளை அபிடேகித்தசேயாறு தென்றிசையிற்பாயும், அங்கு அவற்று இடை— அவ்விரண்டாற்றுக்குநடுவில், ஏகம்பமே முதல் ஆம் ஆலயத்து அந்தருவேதி காஞ்சிமாநகரம்— திருவேகம்பமேமுதலாகிய திருக்கோயில்களையுடைய அந்தர்வேதியாகிய காஞ்சிமாபுரமானது, கங்கை காளிந்தி இடைப்படும் தலத்தில் முற்படும்—கங்காநதி யமுனாநதி என்னும் இரண்டுக்கும் நடுவிற்பொருந்திய காசிநகரினின்றும் முதன்மைபொருந்தப்பெறும் எ—று.

வடதிசையிற் பாலியாறுந் தென்றிசையிற் சேயாறுங் கிழக்குநோக்கிப்பாய அவ்விரண்டாற்றிற்குமிடையிற் காஞ்சிநகர் அந்தர்வேதியாயிருக்கின்றது; காசிப்பதியும் அவ்வாறே,வடதிசையிற் கங்காநதியுந் தென்றிசையில் யமுனாநதியுங் கிழக்குநோக்கிப்பாய,இரண்டுக்குமிடையில் அந்தர்வேதியாயிருக்கின்றது. இக்காரணத்தால் முற்செய்யுளிற்சுட்டி ஒவ்வாவெனவிலக்கப்பட்ட நகரங்களுளொன்றாகியகாசி காஞ்சியையொக்குமாயினும், காஞ்சியேசிறந்துவிளங்கும் என்பதுகருத்து. இதன்காரணம் மேல் எண்பத்துநான்காஞ்செய்யுளிற் கூறப்படும்.

"மருமலர்க்குவையயல்கொட்டும்வளந்திரைப்பாலியொன்றா- வுருகெழுமணிகளுந்தியொழுகுபூஞ்சேயாறென்றா-விருவகைநதியுங்காஞ்சியெழினகர்வடபாற்றென்பான்-மருவிடுமெல்லையாகித்தீர்த்தமாய்வயங்குமன்றே,———அச்செழுநதிகளுப்பணந்த

ருவேதியாகி-யெச்சமில்யமுனை கங்கையிடைப்படுமந்தர்வேதிக்-குச்சமாய்முதுவதாயெவ்வூழியுமழிவின்ரேங்குங்-கச்சிமாநகரம்"எனவும், "எங்கணுமிறைந்துசிற்குமெம்பிராற்கினியவாய பங்கமில்வரைப்புமண்மேற்பலவுளவவற்றுட்காசி- யங்கதிற்காஞ்சிமேலாங்காஞ்சியினதிகமில்லை" எனவும் காஞ்சிப்புராணங்கூறும்.

ஏகாரம் தேற்றம். அந்தர்வேதி=(இரண்டாற்றுக்கும்)நடுவிலுள்ள சமபூமி. காளிந்தி=களிந்தமலையினின்றுந் தோன்றுவது.

'வசிட்டன்பசுப்பொழிபாலி' என்றதை "மாதவத்தினுயர்ந்தவசிட்டன்மகத்தினுக்- கேதமில்சுவைத்தீம்பயமீந்திடுதேனுவங்- கோதநஞ்சமிடற்றவனூர்விடையேற்றினைக்-காதலாலொருநாள்விழிமுந்துறக்கண்டதால்,——— கண்டுபீமிசைமிக்குலவாதெழுகாமநோய்- கொண்டுநொந்துவிம்மாந்துமெலிந்துகுழைந்துபான்-மண்டியூறுசெருத்தலும்வற்றியுலர்ந்ததா-லண்டர்யாருமுறப்பிலடங்கியதேனுவே,——— அன்னதன்மைவசிட்டனறிந்துதருப்பையை-மன்னுமாமனுவாலொருகன்றின்வரச்செய்து- முன்னருய்த்தனுமோந்துடனக்கிமுகிழ்த்தெழு-நன்னரன்பினயந்ததுகாமநலிந்ததே,——— யமையெலாங்குழமிச்சொரிமாண்பெனவோகையாற்- கழியநீண்முலைத்தாரைகள்கான்றனகான்றபான்-முழுதுமோர்நதியாயவணின்றுமுந்நீர்புகுந்-தழிவிலும்பருமாட்டயர்தீர்த்தமதாயதே" எனவருங் காஞ்சிப்புராணச்செய்யுட்களாலறிக. முன்னர் ஆற்றுப்படலத்துப்பதினொராஞ்செய்யுளில்'வசிட்டனென்றுரைக்குஞ்-சீலமாமுனிபடைத்ததோர்தேனுவின்றீம்பால்-சாலநீடியேதொல்லைநாட்படர்ந்திடுதன்மைப்-பாலிமாநதி'என்றதூஉமிதுபற்றியேயென்க.

'சேயைச்செங்கமலத்தோன்முதலினோராட்டுந்திருநதி' என்பதனை, "பொருதாரகாசுரனைப்பொன்றமலர்ப்பொகுட்டணையி- னொருதேவும்பாப்பணையினுத்தமனும்வானவருங்-கருதார்முப்புரங்கடந்தகண்ணுதல்சீரருள்வாய்ந்து- பெருகார்வத்தொடுங்குழிப்பேணுசிவாகமமுறையின்,—— காசறுசீர்வளக்காஞ்சிக்கடிநகருக்காயிரமாம்- யோசனையிற்சுமேருவெனுமோங்கலிடையுமையீன்ற-மாசின்மணிவேற்கரத்துவள்ளலைச்சேடுபதியா-வாசறுநீராட்டினரத்தீர்த்தஞ்சேயாருய்"எனவரும் ஷைபுராணச்செய்யுளாலுணர்க. (எகூ)

தொல்லையோர் பிரமன் றுஞ்சிய காலைத் தோன்றிய நீத்தமே லரிபோற்
செல்லுமார்க் கண்டன் கரத்தினிற் கம்பை சேர்ந்ததோர் தனிப்பெருஞ் சூத
மெல்லைநீ ரிகந்து வளர்தலு மருப்பொன் றெய்தவக் கொம்பர்தொட் டிழிந்து
நல்லுமை குறிக்கொண் முதல்வனை வணங்கி நயந்தவ ணிருந்ததந் நகரம்.

இ—ள்: தொல்லை ஓர் பிரமன் துஞ்சியகாலை—முற்காலத்தில் ஒரு பிரமதேவர் (ஆயுண்முடிந்து) இறந்தபோது, தோன்றிய நீத்தமேல் அரி போல் செல்லும் மார்க்கண்டன் கரத்தினில்— பெருகிய பிரளய வெள்ளத்தின்மீது தவளைபோல மிதந்து சென்ற மார்க்கண்டமுனிவரது கைகளில், கம்பை சேர்ந்தது ஓர் தனி பெரும் சூதம் எல்லை நீர் இகந்து வளர்தலும்—கம்பாநதியை அணுகின்ற ஒப்பற்ற பெரியமாமரமானது நகவெல்லையினிற்கும் நீரைக்கடந்து வளர்ந்துசிற்றலும், மருப்பு ஒன்று எய்த [அம்மரத்தின்]கிளை ஒன்று அகப்பட, அவன் அ கொம்பர் தொட்டு இழிந்து—அம்மார்க்கண்டமுனிவர் அக்கிளையைப்பற்றி (உள்ளே) இறங்கி, நல் உமை குறி கொள் முதல்வனை வணங்கி—நன்மையினையுடைய உமாதேவியாரது (முலைவளைச்)சுவடுகளைப்பெற்ற முதல்வராகிய ஏகாம்பரநாதரை வழிபட்டு, நயந்து இருந்தது அ நகரம்—விரும்பி (ஊழிநீங்கும்வரையும்) இருக்கப்பெற்றது அந்தக்காஞ்சிநகரம் எ—று.

சேர்ந்தோர் என்பதில் ஓர் அசை. சேர்ந்தது முற்றுப்பெயரெச்சம். மார்க்கண்டன் கரத்தினில் மருப்பொன்று எய்த எனஇயையும். கம்பை சேர்ந்தோர் தனிப்பெருஞ்சூதம் எல்லைநீரிகந்துவளர்தலும் என்பது இடைப்பிறவரல். மார்க்கண்டேயர் என்றும் பதினாறுபிராயத்துடன்வாழுஞ் சிரஞ்சீவியாதலின், பிரளயவெள்ளத்தாலழியாது தவளைபோன் மிதந்துசென்றனரென்க. பிரளயவெள்ளம் நகரெல்லையினிற்க, மாமரத்தின்கிளைகள் அதற்கப்பாலும்நீண்டுவளர்ந்திருந்தனவென்பார் 'எல்லைநீரிகந்துவளர்தலும்' என்றார். வணங்கி என்றது ஈண்டு வழிபட்டு என்னும்பொருளுணர்த்திநின்றது.

பிரமப்பிரளயகாலத்தில் மார்க்கண்டேயமுனிவர் மாமரக்கொம்பர்தொட்டிழிந்து பூசித்திருந்தனரென்பதை "முள்ளரைச்செழுந்தாண்மலர்முளரிவீற்றிருக்கும்-வள்ளல்கற்பமொன்றிறுதலும்யாவையுமலங்கப்- பொள்ளெனப்பரந்துலகெலாம்விழுங்கிய புணரி-வெள்ளநீர்மிசைமிதந்தனன்மார்க்கண்டிமேலோன்,—— செல்லுமெல்லைநீர்மிசைத்தோன்றும்வேதமாஞ்சினைப்-பல்லவங்கள்கண்டவைபற்றியுள்ளிழிந்தன-னெல்லையங்கணேக்கினனெளிப்பிழம்பினீடிய- மல்லலம்பொனிஞ்சிசூழ்மாடக்காஞ்சிமாநகர்,—— எற்றுதெண்டிரைப்புனலிஞ்சியின்வளைப்பவெண்-புற்புதத்தினுள்வெளிப்பொற்பெனத்திகழ்ந்துநீ-ளொற்றைமாவினொருளொளிதுளும்பமன்னுமூ- ரற்புதத்தைநோக்குதோறற்புதத்தனையினன்,——அங்கணெய்ப்புநீத்தபினண்ணல்கம்பவாணரை- யுங்கணெய்திப்பர்ச்சனையுஞற்றியவ்விராவெலாந்-துங்கமாவினீழல்வாழ்சோதிமுன்னர்வைகினன்" எனவருங் காஞ்சிப்புராணச்செய்யுட்களானுணர்க. (எஎ)

சமயமா றினையுந் தாயென வளர்த்துச் சராசர வணுக்களுய்ந் திடுவா
னமைதரு மெண்ணான் கறத்தினைப் போற்றி யாதிபீ டத்தில்வீற் றிருக்கு
முமையமர் காமக் கோட்டியைக் கதிரோ னுடுபதி கணங்கள்சூழ் தரலா
லிமையவர் தமக்குந் திசைமயக் கறாத வியல்புடைத் தந்நக ரென்றும்.

இ—ள்: சமயம் ஆறினையும் தாய் என வளர்த்து—உட்சமயங்களாறையுந்தாய் (மகவைவளர்ப்பது) போல [விரும்பி] வளர்த்து, சர அசர அணுக்கள் உய்ந்திடுவான் அமைதரும் எண்ணான்கு அறத்தினை போற்றி—சரமும் அசரமும் ஆகிய இருவகை ஆன்மாக்களும் உய்யும்பொருட்டு அமைந்த முப்பத்திரண்டு தருமங்களையும் பேணி, ஆதி பீடத்தில் வீற்றிருக்கும் உமை அமர் காமக்கோட்டியை—ஆதிபீடத்திலெழுந்தருளிய உமாதேவியார் வசித்தருளுங் காமக்கோட்டத்தை, கதிரோன் உடுபதி கணங்கள் சூழ்தரலால்—சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் சூழ்ந்துசெல்லுதலால், என்றும்—எஞ்ஞான்றும், இமையவர் தமக்கும் திசைமயக்கு அறாத இயல்புடைத்து—தேவர்களுக்குந் திசைமயக்கம் மாறாததன்மையையுடையது, அந்நகர்—அக்காஞ்சிநகர் எ—று.

உம்மை, சமயமாறினையுமென்பதில் முற்று; இமையவர்தமக்குமென்பதிற் சிறப்பு. சராசரம் வடநூன்முடிபு. சரம்-இயங்கியற்பொருள்; அசரம்-நிலையியற்பொருள். அணு-உயிர். உய்ந்திடுவான் என்னும் வினையெச்சம் போற்றி என்பதனோடியையும். அறத்தினையுமென்பதின் முற்றும்மை தொக்கது. காமக்கோட்டி- விரும்பியபயன்களைக்கொடுக்குந்தானம்; காஞ்சிப்புராணத்தில் வேறும்பலபொருள்கள் கூறப்பட்டுள்ளன. கணம்-நக்ஷத்திரம்.

அகம் புறம் என்னும்வகுப்பினவாய எல்லாச்சமயங்களையும் உண்டாக்கியது இறைவியேயாயினும் புறச்சமயங்களினின்றுஞ் சிறந்தனவாக அகச்சமயங்களை விரும்பிவளர்த்தனராதலின் 'சமயமாறினையுந்தாயெனவளர்த்து' எனவும், சிலதருமங்கள் மானுடான்மாக்களுக்கும் சில தருமங்கள் விலங்குமுதலிய பிற ஆன்மாக்களுக்கும் பயன்படுவனவாகலின் 'சராசரவணுக்களுய்ந்திடுவான்...அறத்தினைப்போற்றி' எனவும்,

அவற்றை இயற்றியக்கால் அவ்வுயிர்கட்கு ஓர்குறையும்வாராவென்பார் 'அமைதரு மெண்ணான்கறம்' எனவும், சத்திபீடம் அறுபத்துநான்குள்ளும் காமக்கோட்டிபீடமே முதற்கணுள்ளதாதலின் 'ஆதிபீடத்தின்வீற்றிருந்தஉமையமர்காமக்கோட்டி' எனவும் கூறினார்.

காமக்கோட்டி முதற்பீடமென்பதை "விந்துவின்மயங்கியம்மைவீற்றிருக்கும்வியன்றிருச்சக்கரவடிவாம்- அந்தவான்பிலந்தானியம்பியகாமமனைத்திற்குமாதரமாகிப்-பந்தமில்காமக்கோட்டமென்றொருபேர்பரித்திடுமெற்றெவற்றினுக்கு- முந்தியபீடமாதலினுதிபீடமுமொழிந்திடப்படுமால்" எனவருங் காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க.

**சத்திபீடம் அறுபத்துநான்காவன:—** க-காமக்கோட்டிபீடம், உ-அன்னபூரணிபீடம் (ஸ்ரீகாஞ்சியிலுள்ளன), ௩-லட்சுமிபீடம் (கோபாலபுரத்திலுள்ளது), ௪-ரேணுகாபீடம், ௫-துளஜாபீடம், ௬-சப்தசிருங்கபீடம் (மாதுபுரத்திலுள்ளன), ௭-ஜ்வாலாமுகிபீடம் (இங்குலையிலுள்ளது), அ-பிராமரிபீடம் (சாகம்பரியிலுள்ளது), ௯-துர்க்காபீடம், க0-விந்தியாசலபீடம் (ஸ்ரீரர்த்ததந்திகையிலுள்ளன), கக-பீமாதேவிபீடம் (விமலையிலுள்ளது), கஉ-கௌசிகிபீடம் (ஸ்ரீ சந்திரலையிலுள்ளது), க௩-நீலாம்பரிபீடம் (நீலபர்வதத்திலுள்ளது), க௪-சாம்புநதேசுவரிபீடம் (ஸ்ரீநகரத்திலுள்ளது), க௫-இரகசியகாளிபீடம் (நேபாளத்திலுள்ளது), க௬-மீனாக்ஷிபீடம் (மதுரையிலுள்ளது), க௭-சுந்தரிபீடம் (வேதாரணியத்திலுள்ளது), கஅ-யோகேசுவரிபீடம் (மகாலசத்திலுள்ளது), க௯-நீலசரசுவதிபீடம் (சீனவிலுள்ளது), உ0-வகலைபீடம் (வைத்தியநாதத்திலுள்ளது), உக-புவனேசுவரிபீடம், உஉ-காமயோனிமண்டலமென்னுந் திரிபுரபைரவிபீடம் (மணித்தீபத்திலுள்ளன), உ௩-காயத்திரிபீடம் (புஷ்கரத்திலுள்ளது), உ௪-சண்டிகாபீடம் (அமரேசத்திலுள்ளது), உ௫-புஷ்கரேக்ஷணிபீடம் (பிரபாசத்திலுள்ளது), உ௬-தேவிபீடம் (நைமிசத்திலுள்ளது), உ௭-புருகூதபீடம் (புஷ்கராக்ஷத்திலுள்ளது), உஅ-இரதிபீடம் (ஆஷாடத்திலுள்ளது), உ௯-தண்டினிபீடம் (சண்டமுண்டியிலுள்ளது), ௩0-பூதிபீடம் (பாரபூதியிலுள்ளது), ௩க-நகுலேசுவரிபீடம் (நாகுலத்திலுள்ளது), ௩உ-சந்திரிகாபீடம் (அரிச்சந்திரத்திலுள்ளது), ௩௩-சாரதாபீடம் (ஸ்ரீகிரியிலுள்ளது), ௩௪-திரிசூலபீடம் (பஞ்சநதத்திலுள்ளது), ௩௫-சூக்ஷ்மபீடம் (ஆம்ராதகேசுவரத்திலுள்ளது), ௩௬-சாங்கரிபீடம் (மாகாளத்திலுள்ளது), ௩௭-சர்வாணிபீடம் (மத்தியமத்திலுள்ளது), ௩அ-மார்க்கதாயினிபீடம் (கேதாரத்திலுள்ளது), ௩௯-பைரவிபீடம் (பைரவத்திலுள்ளது), ௪0-மங்களாபீடம் (கயையிலுள்ளது), ௪க-ஸ்தாணுப்பிரியாபீடம் (குருக்ஷேத்திரத்திலுள்ளது), ௪உ-ஸ்வாயம்புவபீடம் (வியபிநாகுலத்திலுள்ளது), ௪௩-உக்கிரபீடம் (கனகலத்திலுள்ளது), ௪௪-விசுவேசைபீடம் (விமலேசுவரத்திலுள்ளது), ௪௫-மகாநந்தைபீடம் (அட்டகாசத்திலுள்ளது), ௪௬-மகாந்தைபீடம் (மகேந்திரத்திலுள்ளது), ௪௭-பீமபீடம் (பீமத்திலுள்ளது), ௪அ-பவானிபீடம் (வஸ்திராபதத்திலுள்ளது), ௪௯-உருத்திராணிபீடம் (அர்த்தகோடிகையிலுள்ளது), ௫0-விசாலாக்ஷிபீடம் (அவிமுத்தத்திலுள்ளது), ௫க-மகாபாகைபீடம் (மகாலயத்திலுள்ளது), ௫உ-பத்திரகாளிபீடம் (கோகர்ணத்திலுள்ளது), ௫௩-பத்திராபீடம் (பத்திரிகர்ணிகத்திலுள்ளது), ௫௪-உற்பலாக்ஷிபீடம் (ஸ்வர்ணாக்ஷத்திலுள்ளது), ௫௫-ஸ்தாண்வீசைபீடம் (ஸ்தாணுவிலுள்ளது), ௫௬-கமலாபீடம் (கமலாலயத்திலுள்ளது), ௫௭-பிரசண்டாபீடம் (சகலண்டத்திலுள்ளது), ௫அ-திரிசந்திரிகைபீடம் (குரண்டலத்திலுள்ளது), ௫௯-மகுடேசுவரிபீடம் (மாகோடத்திலுள்ளது), ௬0-சாண்டிகைபீடம் (மண்டலேசத்திலுள்ளது), ௬க-காளிபீடம் (காலஞ்சரத்திலுள்ளது), ௬உ-தொனிபீடம் (சங்குகர்ணத்திலுள்ளது), ௬௩-தூலபீடம் (தூலகேசுவரத்திலுள்ளது), ௬௪-பரமேசுவரிபீடம் (சிவஞானிகளிதயகமலத்திலுள்ளது) என்க.

அம்மையார் தருமம்புரிந்து வீற்றிருக்குந் தானத்திற்குமேலாக யாங்கள் செல்வது தகாதென்றுகருதி அக்காமக்கோட்டத்தின்மருங்கேவிலகிச் செல்லுவனவென்பார் 'காமக்கோட்டியைக்கதிரோனுடுபதிகணங்கள் சூழ்தரலால்' என்றார். இதனை "அந்தமின்றிநல்லறம்புரிந்தளிக்குமம்மைதன்றிருக்காமக்கோட்டத்தில்- வந்துசந்திரசூரியர் மீதுவழிக்கொளாததன்மருங்குபோதலினுற்-சந்தமாதிரமயங்கியெம்மருங்குஞ்சாயைமாறியதன்றிசைமயக்க-மிந்தமாநிலத்தவரெலாங்காணவென்றுமுள்ளதொன்றின்றுமங்குளதால்" என்னுந் திருத்தொண்டர்புராணச்செய்யுளானுணர்க.

முப்பத்திரண்டுதருமங்களை "ஆதுலர்சாலையோதுவார்க்குணவறு- சமயத்தார்க்குண்டிபசுவிற்குவாயுறை-சிறைச்சோறையநடைதின்பண்ட- மறவைச்சோறுமகப்பெறுவித்தன்-மகவுவளர்த்தன்மகப்பால்வார்த்த-லறவைப்பிணஞ்சுடுதலறவைத்தூரியஞ்-சுண்ணநோய்மருந்துவண்ணார்நாவிதர்- கண்ணாடிகாதோலைகண்மருந்துதலைக்கெண்ணெய்-பெண்போகமற்றும்பிறர்துயர்காத்த-றண்ணீர்ப்பந்தர்மடந்தடங்காவே-யாவுரிஞ்சுதறிவிலங்கிற்குணவோ-டேறுவிடுத்தல்விலைகொடுத்துயிர்விடுத்த-றன்னிலையுயர்ந்தகன்னிகாதான-மிந்நான்கெட்டுமிறைவிசெய்தருமம்" என்னும் பிங்கலந்தைச்சூத்திரத்தானுணர்க. இதனைச்சிறிது வேறுபாடாகக்காஞ்சிப்புராணம்விரித்துக்கூறும். (எஅ)

பாவமோர் கோடி புரியினு மொன்றாம் பரிவினிற் றருமமொன் றியற்றி
னேவரும் வியப்பக் கோடியாய் மல்கு மின்னதோர் பெற்றியை நாடித்
தேவர்கண் முனிவர் தம்பதம் வெறுத்துச் சிவனருச் சனைபுரிந் தங்கண்
மேவினர் தவஞ்செய் திருத்தலாற் காஞ்சி வியனகர்ப் பெருமையார் விரிப்பார்.

இ—ள்: ஓர் கோடி பாவம் புரியினும் ஒன்று ஆம்—(அக்காஞ்சிநகரிலிருந்து) ஒருகோடி பாவத்தைச்செய்தாலும் (அவையனைத்துஞ்சுருங்கி) ஒன்றாகும், பரிவினில் தருமம் ஒன்று இயற்றில் ஏவரும் வியப்ப கோடி ஆய் மல்கும்-மெய்யன்பினுடன் ஒரு தருமத்தைச்செய்தால்(அதுஒன்றே)யாவரும்அதிசயிக்கும்படி கோடிதருமமாகப்பெருகும், தேவர்கள் முனிவர் இன்னது ஓர் பெற்றியை நாடி— (மேலுலகிலுள்ள) தேவர்களும் முனிவர்களும் இவ்வாறாகியதன்மையைச்சிந்தித்து, தம் பதம் வெறுத்து அங்கண் மேவினர்—தங்கள்பதவிகளை வெறுத்துவிட்டு அங்கே வந்து, சிவன் அருச்சனை புரிந்து தவஞ்செய்து இருத்தலால்—சிவபூசைசெய்துகொண்டும் தவஞ்செய்துகொண்டும் வசித்தலினால், வியன் காஞ்சி நகர் பெருமை யார் விரிப்பார்—சிறந்த காஞ்சிநகரத்தின் மான்மியத்தை யார்தான் விஸ்தரித்துக்கூறவல்லவர்? (ஒருவரும் வல்லராகார்) எ—று.

இன்னதோர் என்பதில் ஓர் அசைநிலை. புரியினும் என்பதிலும்மை இழிவுசிறப்பு. ஏவருமென்பதிலும்மை முற்று. மேவினர் முற்றெச்சம்.

அன்பில்லாவழித் தருமசித்தி இன்றாதலின் 'பரிவினிற்றருமமொன்றியற்றி னேவரும்வியப்பக்கோடியாய்மல்கும்'என்றார்.தருமத்திற்கு அன்புஇன்றியமையாததென்பதை "ஆதரவேபரமானவறமதாகுமாதிநடுவந்தமிவற்றனைத்துமாகு- மாதரவற்றவர்கையறமேயாகாதாதலினாலாதரவேமூலமாகு- மாதரவேபிரகிருதியான்மாவீசனெனும்பொருளுமறிவிக்குமமலன்றாளு- மாதரவேயடைவிக்குமாதலாலேயனைத்தினுக்குமாதரவேமூலமாமே,—— மகவினையாலாகத்தின்வருத்தந்தன்னான்மாநிதியான்மற்றுமுளபொருள்களாலுந்- தகைபெறுவானவராலுங்காதலின்றேற்சாதிக்கப்படுவதலதருமந்தானே- யுவகையுறவாதரவாற்சிறிதேதேனுமுதவியிடுமறமதனாற்பெரிதுண்டாகு- மகநெகலுமாதரவேயரியபேறென்றறியாதாரென்பெறுவரன்றேவன்றே" எனவருஞ் சிவதருமோத்தரச் செய்யுட்களானுணர்க. (எகூ)

கங்கைதன் சிறுவ னருள்பெறு வேதாக் கண்படை கொண்டகா லையினு
மங்கவன் றுஞ்சும் பொழுதினுங் காஞ்சி யழிவுறா திருந்தபான் மையினற்
றுங்கவெண் பிறையு மிதழியு மரவுஞ் சுராதிபர் முடிகளு மணிந்த
மங்கையோர் பங்கன் படைத்ததே யன்றி மலரயன் படைத்ததன் றதுவே.

இ—ள்: கங்கைதன் சிறுவன் அருள் பெறு வேதா கண்படை கொண்ட காலையினும்—கங்காதேவியின் குமாரராகிய சுப்பிரமணியக்கடவுளினது கிருபையைப் பெற்ற பிரமதேவர் நித்திரைசெய்த தினகற்பத்தினும், அங்கவன் துஞ்சும் பொழுதினும்-அப்பிரமதேவர்[ஆயுண்முடிந்து] இறந்த பிரமகற்பகாலத்தினும், காஞ்சி அழிவுறாது இருந்த பான்மையினல்—[அக்] காஞ்சிநகரம் அழிவுபெறாது நிலைத்திருந்ததன்மையினல், துங்க வெண் பிறையும் இதழியும் அரவும் சுராதிபர் முடிகளும் அணிந்த மங்கை ஓர் பங்கன் படைத்ததே அன்றி— உயர்ச்சிபொருந்திய வெள்ளிய பாலசந்திரனையும் கொன்றைமலரையும் சர்ப்பங்களையும் [பிரமாவிஷ்ணுமுதலிய] தேவத்தலைவர்களின் சிரமாலையையுந்தரித்தருளிய பார்வதிபாகராகிய சிவபெருமான் சிருட்டித்ததே அல்லாமல், மலர் அயன் படைத்தது அன்று—தாமரை மலராசனத்தில் வீற்றிருக்கும் பிரமதேவர் சிருட்டித்ததன்று, அது—அக்காஞ்சிநகரம் எ—று.

பிரமதேவர் துயிலும்போதும் இறக்கும்போதும் அழிவுபெறும் பிறநகரங்களைப்போல, என்றுமழியாத்தகைமைத்தாயஇந்நகரையும் பிரமதேவர்படைத்தாரெனக் கூறுதல் பொருந்ாது. என்றுமழியாப்பதியாகியசிவபெருமான் படைத்தாரெனவேகூறவேண்டுமென்பது கருத்து.

காஞ்சிநகர் சிவபெருமானற் படைக்கப்பட்டதென்பதை "ஆதிநாண்முக்கணெம்மானயன்றனைப்படைத்துவேத- மோதுவித்தருளிஞேக்கியுலகெலாம்படையென்றே வும்-போதிதுபார்த்திவ்வாறுபடையெனப்புகன்றுவைத்தா- னீதெனலாருங்காஞ்சியென்னுரையளாவைத்தாமோ" என்னுங் காஞ்சிப்புராணச் செய்யுளானுணர்க.

ஏகாரங்களிரண்டனுண் முன்னையது தேற்றம்; பின்னையது அசை. காலையினும் பொழுதினும் என்பவற்றில் உம்மை சிறப்போடெண்ணுமாம். வேதா=[உலகங்களைப்] படைக்கின்றவர். கண்படை=கண் துயிலுதல். இதழி—ஆகுபெயர். சுர— அதிபர்=சுராதிபர்; வடநூன்முடிபு. பான்மையினல் படைத்ததன்று எனஇயையும்.

சிவபெருமானது நேத்திரங்களினின்று அனற்பொறிவடிவாயவதரித்த சுப்பிரமணியப்பெருமான் கங்கையினற் சரவணதடத்திற் சேர்க்கப்பட்டவழிக் குழந்தையுருவாதலின், 'கங்கைதன்சிறுவன்' எனவும், பிரமதேவர் தம்மை மதியாதுசென்றவழிக்குட்டிச்சிறைப்படுத்திப்பின் தந்தையார் கேள்விப்படி சிறைநீக்கி அருள் புரிந்தனராதலின் 'கங்கைதன்சிறுவனருள்பெறுவேதா' எனவும் கூறினர். (அ௦)

அரியபல் லிசையு மறைபுனல் கங்கை யருஞ்சிலை யிலிங்கமங் குறைவோர்
சுரர்தரு வனைத்துங் கற்பக மின்பந் துய்ப்பது வெள்விபூண் பூசை
யுறைசெப நடத்தல் வலம்வருந் தன்மை யுன்னலே தியானம்வீழ்ந் திடுதல்
பரனடி வணக்க மாவது காஞ்சிப் பதிக்கலா லெந்நகர்க் குளதே.

இ—ள்: அரிய பல் இசையும் மறை—அரியனவாகிய பலவகைப்பட்ட ஒலிகள் அனைத்தும் வேதமும், புனல் கங்கை-நீர்கள்[அனைத்தும்]கங்கையும், அரும் சிலை இலிங்கம்—அரிய கற்கள் [அனைத்தும்] சிவலிங்கமும், அங்கு உறைவோர் சுரர்—அந்நகரில்வசிப்பவர்கள்[அனைவரும்] தேவர்களும், தரு அனைத்தும் கற்பகம்— மரங்களனைத்

தும் கற்பகமும், இன்பந்துய்ப்பது வேள்வி— இன்பமனுவித்தல் [அனைத்தும்] யாகமும், ஊண் பூசை—போசனஞ்செய்தல்[அனைத்தும்] சிவபூசையும், உரை செபம்—வார்த்தைகள்[அனைத்தும்] மந்திரசெபமும், நடத்தல் வலம்வரும் தன்மை— நடத்தல் [அனைத்தும்] பிரதக்ஷிணமும், உன்னல் தியானம்—நினைத்தல்[அனைத்தும்]தியானமும், வீழ்ந்திடுதல் பரன் அடி வணக்கம் ஆவது—விழுதல் [அனைத்தும்] சிவபெருமானது பாதங்களை நமஸ்கரித்தலும் ஆக அமைவது, காஞ்சிப்பதிக்கு அலால் ஏ நகர்க்கு உளது— காஞ்சிநகரமொன்றிற்கேயன்றி வேறெந்தநகரத்திற்குள்ளது? [ஒருநகர்க்குமின்று] எ—று.

ஒலிகளுட்சிறந்தது வேதகீதமும், நதிகளுட்சிறந்தது கங்கையும், கற்களுட்சிறந்தது சிவலிங்கமும், உயர்திணையான்மாக்களுட்சிறந்தார் தேவரும், மரங்களுட்சிறந்தன தேவலோகவிருக்ஷமாகிய கற்பகமும், கடவுளைத்திருப்திப்படுத்துதலிற் சிறந்தது வேள்வியும் பூசையும், நாவினுலுச்சரிக்கப்படுவனவற்றுட் சிறந்தது மந்திரசபமும், காஃனடையிற்சிறந்தது பிரதக்ஷிணமும், மனத்தினல் நினைப்பவைகளுட்சிறந்தது தியானமும், பூமியில் அங்கங்கள்பட விழுதலிற்சிறந்தது நமஸ்காரமும் ஆம்;ஆகவே,அங்குள்ள சாமானியமான ஒலிமுதலியனவெல்லாம் விசேடமுடையனவாகிய வேதகீதமுதலியவற்றிற்குச்சமமாகச் சிறந்திருந்தன என்பதுதாற்பரியம். "எல்லைதீர்காஞ்சியுள்ளார் யாவருமுனிவரங்கட்- கல்லெலலாமிலிங்கஞ்சீதப்புனலெலாங்கங்கைசொல்லுஞ்-சொல்லெலாமனுக்கள்கைகாற்றொழிலெலாம்விடையோனேவல்" என்றார்காஞ்சிப்புராணத்தாரும்.

ஏகாரங்கள் இரண்டும் அசைகள். அல்லால் என்பதில் லகரவொற்றுத்தொக்கது. (அக)

கணமுகில் செக்கர் போர்த்தெனுங் கரிய கஞ்சுகச் செந்நிறக் கடவுண்
மணிசுடர் வயிரக் கிம்புரி மருப்பு மால்கரி முகத்தவன் வருசூர்
துணிபட வெறிந்த வேலவ னயன்போற் றோன்றிய சாத்தன்மால் விசயை
யிணையில்சீர்க் காளி முதலினோ ரென்று மினிதுகாத் திடுவதந் நகரம்.

இ—ள்:கண முகில் செக்கர் போர்த்து எனும் கரிய கஞ்சுக செம் நிற கடவுள்-(நீருண்டு)சூழ்மிய மேகங்கள் செக்கர்மேகத்தைச் சூழ்ந்தாற்போன்ற கருநிறச்சட்டையைத்தரித்த செவந்தநிறத்திருமேனியையுடைய வைரவக்கடவுளும்,மணி சுடர் கிம்புரி வயிர மருப்பு மால் கரி முகத்தவன்—இரத்தினங்கள் ஒளிர்கின்ற கிம்புரியையணிந்த வைரித்த[ஒற்றைக்]கொம்பினையுடைய பெரிய யானைமுகக்கடவுளும்,வரு சூர் துணிபட எறிந்த வேலவன்— எதிர்த்தசூரபன்மன் இருதுணியாகும்படி எறிந்த வேற்படையையுடைய சுப்பிரமணியக்கடவுளும், அயன் போல் தோன்றிய சாத்தன்—பிரமதேவர்போலத் தோற்றிய ஐயனாரும், மால்—திருமாலும், விசயை—துர்க்கையும், இணை இல் சீர் காளி முதலினோர்—ஒப்பில்லாத கீர்த்தியினையுடையகாளியும் முதலாயினோர், என்றும் இனிது காத்திடுவது அ நகரம்— எக்காலத்தும் செவ்வனே காவல்செய்யப்பெறுவது அக்காஞ்சிநகரம் எ—று.

முகில் செக்கர்போர்த்தெனும் கடவுள் கஞ்சுகக்கடவுள் செந்நிறக்கடவுள் எனத்தனித்தனி இயையும். உந்தியங்கமலத்திற் பிரமதேவர் தோன்றியதுபோலவே, சிவபெருமான்கூடியவழித் திருமாலிடத்துதித்தனராதலின் 'அயன்போற்றோன்றியசாத்தன்' என்றார். காத்திடுவதந்நகரம் என்றது செயப்படுபொருளைச் செய்ததுபோலக்கூறிய கருமகருத்தா.

வைரவக்கடவுள் கருநிறச்சட்டையையணிந்தாரென்பதை "வெஞ்சினப்பரியழன்மீதுபோர்த்திடு- மஞ்சனப்புகையெனவாலமாமெனச்- செஞ்சுடர்ப்படிவமேற்செ

றித்தமாமணிக்- கஞ்சுகக்கடவுள்" என முன்னர்க் கூறியதனானும், "தெளியுமாவலியைச்செற்றோற்செருத்தரிக்கவயம்போர்த்த-வளியுளர்கச்சிகாவல்வயிரவர்" எனக்காஞ்சிப்புராணங்கூறுதலானுமறிக. வைரவக்கடவுளும் விநாயகக்கடவுளும் ஐயனாரும் துர்க்கையும் காஞ்சிநகரைக்காவல்செய்தலை "துர்க்கையுஞ்சாத்தனுமிரவியும்வயிரவத்தோன்றலு-நற்கயமுகனுடனைவருங்கச்சபநாயகன்- பொற்கமலப்பதம்பூசனையாற்றியங்குடனமர்ந்-தொற்கமில்கணங்களோடப்புரிகாவல்பூண்டுறுவரால்" எனவும், சுப்பிரமணியக்கடவுள் காவல்செய்தலை "வைத்தவேற்றடக்கைவள்ளல்வார்கழ்பைமணிப்புனனதிக்கரைமருங்கு- பத்திவாய்ந்திறைஞ்சியேகம்பநாதப்பவனிடைக்குருமொழிகேட்டுத்-தத்துநீர்வரைப்பின்மேதகுங்காஞ்சித்தனிநகர்காவல்பூண்டின்ப- முத்தியீந்தருளுங்குமரகோட்டத்தின்முகிழ்த்தபேரன்பின்வீற்றிருந்தான்" எனவும், காளி காவல்செய்தலை "இலயப்புனல்வெள்ளமெழாதுதணிந்- துலயப்புரியுத்தமிமீண்டருளா- லலயப்பணிவார்திருமுன்னமர்பூ-வலயத்தவர்போற்றவதிந்தனளே" எனவும் காஞ்சிப்புராணங்கூறுதலாலறிக. விஷ்ணுமூர்த்தி காவல்செய்தலை மேல்வரும் எண்பத்தேழாஞ்செய்யுளிற்காண்க. (அஉ)

அறுசம யத்திற் கடந்தசை வத்தி னன்றிவீ டிலதெனத் தெளிந்து
பிறரறி யாது தொன்மைபோ லிருந்து பிஞ்சகன் மீதுகன் மலரா
லெறிதரு தேர னன்பர்தங் கலிங்க மெழிலிக ணனைத்தலுஞ் சிரத்தை
முறைபுரி சிலைமேன் மோதினோன் முதலோர் முத்திபெற் றுடையதம் மூதூர்.

இ—ள்: அறுசமயத்தில் கடந்த சைவத்தின் அன்றி—அறுவகை உட்சமயங்களினின்றும் மேம்பட்டுள்ள சைவசமயத்திலேயன்றி, வீடு இலது என தெளிந்து—[பிறசமயங்களில்] முத்திப்பேறு இல்லையென்று நிச்சயித்து, பிறர் அறியாது தொன்மைபோல் இருந்து—பிறரொருவரும் அறியாவண்ணம் முன்னைய இயற்கைபோல இருந்துகொண்டு, பிஞ்சகன் மீது கல் மலரால் எறிதரு தேரன்—சிவபெருமான்மீது கல்லாகியபூவினால் எறிந்த சாக்கியநாயனாரும், அன்பர்தம் கலிங்கம் எழிலிகள் நனைத்தலும்—சிவனடியாரது உடையை மேகங்கள் [மழைபொழிந்து] நனைக்க, முறைபுரி சிலைமேல் சிரத்தை மோதினோன் முதலோர்—[சூரியாஸ்தமனத்தின்முன் ஆடைதருவோமென்று தாம்செய்த வாக்குத்தவறியதனாற் சிவனடியார் குளிர்பொறுது வருந்துதலைச் சகிக்கலாற்றாது] பணிசெய்கின்ற கற்பாறையின்மேல் தமது தலையைமோதிய திருக்குறிப்புத்தொண்டநாயனாரும்முதலிய பலபெரியோர்கள், முத்தி பெற்று உடையது அம் முதுஊர்—வீடுபெற்ற தானமாயுள்ளது அந்தப்பழைய காஞ்சிநகரம் எ—று.

சிவநேசர்கள் பலரும் சிவனடியார்நேசர்கள் பலரும் முத்திபெற்றுள்ளது அக்காஞ்சிநகரென்பது தாற்பரியம்.

பிறர் என்றது தம்முடன்பயின்றிருந்த புத்தர்குழுவை.

அறுசமயம் என்றது அகச்சமயங்களை. அகச்சமயங்களிற்சிறந்ததெனவே புறச்சமயங்களினுஞ் சிறந்ததென்பது அமையும். அகச்சமயங்களாவன: சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் என்னுமாறுமாம். புறச்சமயங்களாவன: உலோகாயதம் பௌத்தம் ஆருகதம் மீமாஞ்சம் மாயாவாதம் பாஞ்சராத்திரம் என்னுமாறுமாம். சைவமதம் வைஷ்ணவமதம் சௌரமதம் சக்திமதம் காணபத்தியமதம் காபாலிகமதம் என்னுமாறுமே அகச்சமயங்களென்பரொருசாரார். அகச்சமயம் அகப்புறச்சமயம் புறச்சமயம் புறப்புறச்சமயம் என நான்குதிறப்படுமென்றும், அவை ஒவ்வொன்றுந்தனித்தனி அறுவகைப்படுமென்றும், அவற்றுள் அகச்சமயம் பாடாணவாதசைவம் சங்

இராந்தவாதசைவம் அவிகாரவாதசைவம் பரிணாமவாதசைவம் சுத்தசைவம் பேதவாதசைவம் என்பன என்றும் கூறுவர் மற்றோர்சாரார். இன்னோரன்னவாறு பலகுழுவினரும் பலபடவழங்குவர்; அவற்றின்றிறம்விரிப்பிற்பல்கும்.

சமயங்களெவற்றினும் வைதிகசைவஞ்சிறந்ததென்பதை "செப்பரியசமயநெறியெல்லாந்தன்றன்றெய்வமேதெய்வமெனுஞ்செயற்கையான- வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பாலடுத்ததந்நூல்களும்விரித்தேயநுமானாதி- யொப்பவிரித்துரைப்பரிங்ஙன் பொய்மெய்யென்னவொன்றிலையொன்றெனப்பார்ப்பதொவ்வாதார்க்கு- மிப்பரிசாஞ்சமயமுமாயல்லவாகியாதுசமயமும்வணங்குமியல்பதாகி,- இயல்பென்றுந்திரியாமலியமமாதியெண்குணமுங்காட்டியன்பாலின்பமாகிப் - பயனருளப்பொருள்கள்பரிவாரமாகிப்பண்புறவுஞ்சௌபானபக்ஷங்காட்டி-மயலறுமந்திரஞ்சிக்ஷைசோதிடாதிமற்றங்கநூல்வணங்கமௌனமோலி- யயர்வறச்சென்னியில்வைத்துராசாங்கத்திலமர்ந்ததுவைதிகசைவமழகிதந்தோ,-----அந்தோவீததிசயமிச்சமயம்போலின்றறிஞரெலாநடுவறியவணிமாவாதி-வந்தாடித்திரிபவர்க்கும்பேசாமோனம்வைத்திருந்தமாதவர்க்குமற்றுமற்று- மிந்த்ராதிபோகநலம்பெற்றபேர்க்குமிதுவன்றித்தாயகம்வேறில்லையில்லை- சந்தானகற்பகம்போலருளைக்காட்டத்தக்கநெறியிந்நெறியேதான்சன்மார்க்கம்" என்னுந்தாயுமானவர் திருவாக்காலும், பல்லுயிர்த்தொகுதியும்பயன்கொண்டுய்கெனக்- குடிலையென்னுந்தடவயனுப்ப-ணருள்வித்திட்டுக்கருணைநீர்பாய்ச்சி-வேதமென்னும்பாதபம்வளர்த்தனை- பாதபமதனிற்படுபயன்பலவே- அவற்றுள்- இலைகொண்டுவந்தனர்பலரேயிலையொரீஇத்- தளிர்கொண்டுவந்தனர்பலரேதளிரொரீஇ-யரும்பொடுமலர்பிஞ்சுகாயென்றிவை- விரும்பினர்கொண்டுகொண்டுவந்தனர்பலரே-யவ்வாறுறுப்புமிவ்வாறுபயப்ப- ஓரும்வேதாந்தமென்றுச்சியிற்பழுத்த-வாராவின்பவருங்கனிபிழிந்து-சாரங்கொண்டசைவசித்தாந்தத்-தேனமுதருந்தினர்சிலரே" என்னும் பண்டாரமும்மணிக்கோவையாலும், "சைவத்தின்மேற்சமயம்வேறிலை" என்னுந்திருவருணைக்கலம்பகத்தாலும் உணர்க.

ஏனைச்சமயநூல்களெல்லாம் வேதத்தின்பொருளை உள்ளவாறு கொள்ளாமையான் முத்திநெறியைக்காட்டாதுமயக்க, வைதிக சைவசித்தாந்தமொன்றே வேதத்தெளிவாய், அம்முத்திநெறியை உள்ளபடிகாட்டுதலால் 'சைவத்தினன்றிவீடிலது' என்றார். முத்திநெறியைக் காட்டுவது வைதிகசைவசித்தாந்தமேயென்பதை, "தன்மையுமுன்னிலையுந்தானாய்ப்படர்க்கையுமா- யென்மொழிவிலின்பமாயின்புமிது- வென்றுத-வேதாந்தசித்தாந்தமேபிறவாவீடென்றான்-ஓதாமல்வேதமுணர்ந்தோன்" என ஒழிவிலொடுக்கமும், "விண்ணவரிந்திரன்முதலோர்நாரதாதிவிளங்குசப்தரிஷிகள்கனவினைவல்லோ-ரெண்ணரியசித்தர்மனுவாதிவேந்தர்நிருக்காதிமறைமுனிவரெல்லாமிந்தக்- கண்ணகன்ஞாலம்மதிக்கத்தானேயுள்ளங்கைநெல்லிக்கனிபோலக்காட்சியாகத்- திண்ணியநல்லறிவாலிச்சமயத்தன்றேசெப்பரியசித்திமுத்திசேர்ந்தார்" எனத்தாயுமானசுவாமிகள்பாடலும், "எடுத்ததோராக்கைதன்னிலிருண்மலசத்திதன்னைத்-தடுத்தருள்சைவநூலின்சாதனமதனைத்தள்ளி-விடுத்துவீறற்றநூலின்சாதனம்விரும்புவார்முன்- அடுத்தவாரமிர்தம்விட்டுப்புற்கையாதரிப்பாரன்றே" எனச்சிவதருமோத்தரமுங் கூறுதலானறிக.

"ஆருயிர்க்குறுதிப்பேறுமரும்பயனெவற்றினுள்ளுஞ்-சீரியமுத்தியொன்றேசிறந்ததாமேனைப்பேறு- பேரிடர்ப்பாலவாகும்" எனக் காஞ்சிப்புராணநிச்சயித்தவாறு சமயாநுசாரத்தாலெய்தும் பயன்களுட்சிறந்தது முத்திப்பேறொன்றேயென்பதையும், அம்முத்தியைப்பயக்குஞ் சமயஞ் சைவசமயமேயென்பதையும் உணர்ந்து, பரமதாநுசாரத்தை அறிந்தவுடனே கடியத்தக்க புத்தர் குழுவுள்ளிருந்துகொண்டே, அந்தரங்கமாயனுசரித்த உத்தமரென்பதுபோதர 'சைவத்தினன்றிவீடிலதெனத்தெளிந்து-பி

றரறியாதுதொன்மைபோலிருந்துபிஞ்சகன்மீது-எறிதருதேரன்' என்றார். இதனை "எந்நிலையினின்றாலுமெக்கோலங்கொண்டாலு-மன்னியசீர்ச்சங்கரன்றாண்மறவாமைபொருளென்றே- துன்னியவேடந்தன்னைத்துறவாதேதூயசிவந்- தன்னைமிகுமன்பினான்மறவாமைதலைநிற்பார்" என்னும் சேக்கிழார்நாயனார் திருவாக்கானறிக.

அவ்வுத்தமகுணத்தையுடைய மெய்யன்பராதலின் அவரதுகல்லெறியும் பூசையாயிற்றென்பார் "கன்மலராலெறிதருதேரன்" என்றார். இதனை "கல்லாலெறிந்ததுவுமன்பானபடிகாணில்-வில்வேடர்செருப்படியுந்திருமுடியின்மேவிற்றா-னல்லார்மற்றவர்செய்கையன்பாலேநயந்ததனை- யல்லாதார்கல்லென்பரரனார்க்கஃதலராமால்" எனவரும் ஷை நாயனார் திருவாக்கானும், "அன்பினுக்கன்றிநான்புனைமலருக்கருளுவையலைமலர்க்கருளின்-முன்பெடுத்தெறிந்தசாக்கியன்கல்லின்முருகலர்மிகவுமின்றேதோ - துன்பமுற்றிடுசிற்றின்பவெவ்விடயந்துறந்துளோர்மனத்தெழுதருபே-ரின்பநற்கடலேயென்கரத்திருக்குமீசனேமாசிலாமணியே" எனவும், மாசற்றநெஞ்சுடையார்வன்சொலினிதேயவர்- பேசுற்றவின்சொல்பிறிதென்க-வீசற்கு- நல்லனெறிசிலையோநன்னுதாலொண்கருப்பு- வில்லோன்மலரோவிருப்பு" எனவும் வரும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுமுணர்க.

சிவனடியார் படுந்துயரைப்பார்த்துநிற்பதினும் இறந்துபடுவதே நன்றென்றுதுணிந்த தொண்டரென்பார் "சிரத்தைமுறைபுரிசிலைமேன்மோதினேன்" என்றார்.

### சாக்கியநாயனார் சரித்திரம்.

இந்நாயனார் திருச்சங்கமங்கையென்னும் பதியில் வேளாளர்குலத்தில் அவதரித்து வளர்ந்து சற்சமயம் யாதென்று ஆராய்ச்சிசெய்துவருகின்றுழி, ஒருநாட் காஞ்சிநகரையணைந்து அங்குள்ள புத்தர்கள் செய்த துர்ப்போதனையான்மயங்கி அம்மதத்திற்பிரவேசித்து அச்சமயநூல்களைப் பன்னாட்பயின்று, அவற்றிற்கூறப்பட்ட முத்திநெறி தவறென்பதையும், பூர்வீகசமயமாகிய சைவசமயத்திற்கூறப்பட்ட முத்திநெறியே உண்மையென்பதையுமுணர்ந்து; தாம் சிவமதத்தினேசமுற்றதன்மையை அறிந்தவழித் தங்குழுவினராய புத்தர் கடிவரென்பதுபற்றி, எந்நிலையினிற்பினும் எவ்வேடத்துடனிருப்பினும் சிவனடியை மறவாமையே சிறந்தசாதனமென்று அகத்துட்கொண்டு புறவேடத்தைமாற்றாது அந்தரங்கத்திலொழுகுவாராய், தினந்தோறும் போசனஞ்செய்யுமுன் சிவலிங்கதரிசனஞ்செய்து அதற்குக்கல்லெறிதலையே விரதமாகக்கொண்டார். இவ்வடியார் மெய்யன்புடன் எறியுங்கல்லைச் சிவபெருமான் மலராக ஏற்றுவந்தார். இவ்வாறு பலநாள் நிகழ்கின்றுழி ஒருநாள், கல்லெறியமறந்துபுசிக்கப்புகுந்த நாயனார் 'எம்பிராற்குக்கல்லெறிந்திலேனே' என்று புசிக்காதெழுந்து சென்று முன்போற்கல்லெறிய, இவரது பத்திவிளைவையறிந்தபெருமானார் தேவியாருடன் எழுந்தருளி முத்திதந்தருளினர் என்பதாம். இவர் வீராட்டகாசமென்னுந்தலத்தின் முத்தியெய்தினர். இதனை "பேரின்பச்சாக்கியனார்கல்லெறிக்கும்பேறுதவு- வார்தங்கும்வீராட்டகாசம்" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க.

### திருக்குறிப்புத்தொண்டநாயனார் சரித்திரம்.

இந்நாயனார் காஞ்சிபுரத்தில் ஏகாலியர்குலத்தில் அவதரித்து, சிவனடியார்க்குச்செய்யவேண்டிய திருத்தொண்டுகளைக் குறிப்பறிந்துசெய்தலாற் றிருக்குறிப்புத்தொண்டரெனப்பெயர்பெற்று, சிவபத்தர்களது வஸ்திரங்களை மிக்கவிருப்பத்துடன் ஒலித்துக்கொடுத்து வந்தார். அவ்வாறு தொண்டுசெய்துவருநாளில் ஒருநாள் இவரது திருத்தொண்டினுறுதியைச் சோதிக்கவிரும்பிய சிவபெருமான் ஓரடியார்வேடங்கொண்டு அழுக்காடையுடன் அணைந்தார். அணைதலும் அவர்பாலணுகி இன்சொற்கூறி 'பெ

ரியவரே! இந்தஅழுக்காடையைத்தருக. ஒலித்துத்தருகின்றேன்' என்றனர். பெருமான் இவரைநோக்கி 'அன்பனே! இவ்வாடைமிகவும்அழுக்கேறிவிட்டது; ஆயினும், அழுக்குநீக்கும்படி கொடுப்பின் நமக்குக்கிடைக்கும் வரையும் உடுத்தற்கு வேறுடையில்லை; குளிர்பொறுக்கமாட்டேன்; சூரியாஸ்தமனத்தின்முன் தருவீரேல் தருகின்றேன்' என்றனர். அதுகேட்ட நாயனார் 'ஸ்வாமீ! அவ்வாறுதருகின்றேன்; தருக' என்று வாங்கி அழுக்குப்போக்கி உலர்த்துதற்கிடையிற் பெருமானருளால் விடாமழைபெய்ய, அவ்வாடை உலராமையால் அடியார்க்கு ஆடைகொடுப்பத்தவறினார். அதனால் அவ்வடியார் குளிர்பொறாது வருந்த அதுகண்ட திருக்குறிப்புத்தொண்டர் 'இவ்வடியார் என்பிழையாற்படுந்துயரைக் காண்பதினும் யானிறந்துபடுவதே நல்லது' என்று துணிந்து ஆடையொலிக்குங்கற்பாறையிற்றமதுதலையைமோத, சிவபெருமான் அக்கற்பாறையினின்றும் தமது திருக்கரத்தை நீட்டித்தடுத்து உடனே சாந்நித்தியமாகி முத்திகொடுத்தருளினார். இவர் முத்திசேர்ந்ததலம் முத்தீசம். இதனை "கச்சிவைப்பினையெய்தியாதீபதக்கடிநகர்வடகீழ்பா-னச்சுமன்னைதன்சிறைக்குவீடருளுமுத்தீசனைநயந்தேத்தி-யிச்சையாற்றினிற்பெருவரம்பெற்றனனெறுழ்வலிப்பணிக்கூட்ட- மச்சமுற்றிடச்சிறகெழுவளியினிலலைத்தெழுபுள்வேந்தன்,— சித்தமாசோரீஇவிளங்குமேகாலியார்திருக்குறிப்புத்தொண்ட-ரத்தலத்தினில்வீடுபேறெய்தினர்" எனக்காஞ்சிப்புராணங்கூறும். (அ௩)

ஈசன தருளாற் கயிலையை நீங்கி யிமையமா மயிலறம் புரிவான்
காசியி லிருந்து முடிவுறா தேகிக் கனகமா நீழலிற் பரனைப்
பூசனை புரிந்து கம்பைகண் டஞ்சிப் பூண்முலை வளைக்குறிப் படுத்தி
யாசிலா வருள்பெற் றின்னுநோற் றிடலா லனையகாஞ் சிக்குநே ரதுவே.

இ—ள்: மா இமைய மயில்—பெருமைபொருந்திய இமையமலையரசன்புதல்வியாகிய உமாதேவியார், ஈசனது அருளால் கயிலையை நீங்கி-(பூவுலகத்திற்சென்று நம்மைப்பூசித்துப்பாவத்தைநீக்குதியென்றுபணித்த) சிவபெருமானது திருவருளின்படியே திருக்கைலாசமலையை நீங்கி, அறம் புரிவான் காசியில் இருந்தும் முடிவுறாது ஏகி—தருமங்களைச் செய்தற்பொருட்டுக் காசிப்பதியில்வந்திருந்தும் (அவை)முற்றுப்பெறாமையினால் (அத்தலத்தைவிட்டு)வந்து, கனக மா நீழலில் பரனை பூசனை புரிந்து—பொன்மயமாகிய மாமரநீழலிற் சிவபெருமானைப் பூசைசெய்து, கம்பைகண்டு அஞ்சி-(அப் பூசையைப் பரீக்ஷித்தற்பொருட்டு எம்பிரான் அனுப்பிய) கம்பாநதியைக்கண்டு பயந்து, பூண் முலை வளை குறி படுத்தி—ஆபரணங்களையணிந்த முலைகளினதும் வளையல்களினதும் சுவடுகளை (அப்பெருமானுக்கு) உண்டாக்கி, ஆசு இலா அருள் பெற்று—குற்றமற்ற திருவருளைப்பெற்று, இன்னும் நோற்றிடலால்—இன்னுந்தவஞ்செய்திருத்தலால், அனைய காஞ்சிக்கு நேர் அதுவே— அக்காஞ்சிநகருக்கு ஒப்பு அத்தலம் ஒன்றே எ—று.

பூவுலகத்திலுள்ள தலங்களுட் காசி காஞ்சி இரண்டுமே சிறந்தன; அவ்விரண்டனுள்ளுஞ் சிறந்தது யாதெனை யாம் ஆராயுமிடத்து, உலகமாதாவாகிய உமையம்மையார் தமது பாவத்தைக் காசியிற் போக்கிக்கொள்ள இயலாது காஞ்சியில்வந்து சிவபூசைசெய்து போக்கியதனாற் காஞ்சியே சிறந்ததென்பது கருத்து.

மயில்-மயில்போலுஞ்சாயலையுடையாள்; உவமவாகுபெயர். ஏ பிரிநிலை. தேவியார் காசிப்பதியிலிருந்து காஞ்சிப்பதிக்கு வந்தனரென்பதை "மண்ணகத்துவைகுமாந்தரின்னராகமாணிழைப்- பெண்ணினல்லவள்விமானவின்றுமிப்பெரும்புவிப்- புண்ணியத்தலங்கடோறிழிந்திழிந்துபோர்விடை- யண்ணலாரிலிங்கபூசைசெய்துகாசியண்மினாள்,—மூச்சகம்புகழ்ந்துபோற்றுமொய்கொள்காசிமாநகர்- விச்சுவேசர்பூசையாற்றி

வேறிலிங்கமொன்றமைத்-தர்ச்சனைத்திறத்தினைத்திவைகியங்ககன்றுசேர்க்- கச்சியம்பதிக்கண்வைத்தகாதலுய்ப்பவேகினுள்" என்னுங் காஞ்சிப்புராணச் செய்யுட்களானறிக.

பூவுலகத்திற்சென்று நம்மைப்பூசித்துப் பாவத்தைநீக்குதியென்று சிவபெருமான் கட்டளையிட்டவாறு ஏகினரென்பதுபோதர 'ஈசனதருளாற்கயிலையைநீங்கி' எனவும், காசியிற்றீராதபாவத்தையும் போக்கியதென்பதுபோதர 'அனையகாஞ்சி' எனவும் கூறினர். உமாதேவியார் கயிலையைநீங்கிப் பூவுலகில்வந்தகாரணத்தையும், காஞ்சியிற் பூசித்ததையும்,பிறவற்றையும் முன்னர் அறுபத்தாறுஞ்செய்யுளிற்காண்க. (௮௬)

ஆருயிர் முழுதும் வீடுபெற் றுய்வா னறம்புரி சாலைய தணித்தாப்
பேரர விறைவன் றவத்தின்மு னிருந்த பிலத்திடைக் கோயில்கொண் டென்று
பூரணி நோற்று வழிபட வனையாள் பூசனை கொண்டியா வர்க்கும் [ம்
காரண மான பரசிவ னனந்த கலையொடு நிலையதங் காஞ்சி.

இ—ள்: ஆர் உயிர் முழுதும் வீடு பெற்று உய்வான்— நிறைந்த ஆன்மாக்களனைத்தும் முத்தியின்பத்தைப்பெற்று உய்யுமாறு, அறம் புரி சாலையது அணித்தா— முப்பத்திரண்டுதருமங்களையும் இயற்றுகின்ற அறச்சாலையின்மருங்கே, பேர் அரவு இறைவன் முன் தவத்தில் இருந்த பிலத்திடை—பெரிய (மாபதுமனென்னும்) சர்ப்பராசன் முன்னைநாளிற்றவஞ்செய்துகொண்டிருந்த பிலத்தின்கண், பூரணி கோயில்கொண்டு என்றும் நோற்று வழிபட—காமாக்ஷியம்மையார் திருக்கோயில்கொண்டு எப்போதும் தவஞ்செய்து பூசிக்க, யாவர்க்கும் காரணன் ஆய பரசிவன்—அனைவர்க்குங்காரணப்பொருளாகிய பரமசிவன், அனையாள் பூசனை கொண்டு— அப்பெருமாட்டியினதுபூசையை ஏற்று, அநந்த கலையொடு நிலையது அ காஞ்சி—அளவற்றகலைகளோடும்நிலைத்திருக்கப்பெற்றது அந்தக் காஞ்சிநகரம் எ—று.

ஆருயிர் வினைத்தொகை. ஆர்தல்-நிறைதல். அணித்தா இருந்த பிலத்திடை. கோயில்கொண்டு வழிபட எனஇயையும்.

அந்நகரில்வசிக்கும் பக்குவான்மாக்களேயன்றி அபக்குவான்மாக்களும் விலங்கு புள் தாவரம் முதலியனவும் முத்திபெறும்பொருட்டுப் பூசிப்பவரென்பதுபோதர 'ஆருயிர்முழுதும்வீடுபெற்றுய்வான்- வழிபட' என்றார். காஞ்சிநகரிலவையனைத்தும்முத்திபெறுதலை "பற்றறத்துறந்தோர்பற்றுட்பட்டவரேனுஞானம்- பெற்றவர்மடவரேனும்பெரும்பன்றிகழுதைஞாளி-புற்றராப்புல்லுப்பூடுபுழுமரமேனுங்காஞ்சி- நற்றலத்திறுதிகூடினம்மடிகலப்பதுண்மை" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க.

மாபதுமன்முன்னிருந்தபிலத்திடைத்தேவிகோயில்கொண்டனளென்பதை "துன்னுபல்லுயிர்வானவர்முதலாச்சூழ்ந்துடன்செலக்காஞ்சியிலணையத்- தன்னைநேர்வரும்பதுமமாநாகந்தம்பிராட்டிதாடலைமிசைவைத்தே- யன்னையாயுலகனைத்தையுமீன்றுயடியனேனுறைபிலமதனிடையே- மன்னுகோயில்கொண்டருளுவாயென்னமலைமடந்தைமற்றதற்கருள்புரிந்து,———அங்குமண்ணுலகத்துயிர்தழைப்பவளவிலின்பத்தினருட்கருவிருத்தித்-திங்கடங்கியபுரிசடையார்க்குத்திருந்துபூசனைவிரும்பினள்செய்ய-வெங்குநாடவுந்திருவிளையாட்டாலேகமாமுதலெதிர்ப்படாதொழியப்- பொங்குமாதவஞ்செய்துகாண்பதற்கேபுரிவுசெய்தனள்பொன்மலைவல்லி" என்னுந்திருத்தொண்டர்புராணச்செய்யுளானும்,தேவியாரென்றும்பூசித்துத்தவஞ்செய்து அக்கோயிலில்வீற்றிருத்தலை 'மாறிலாதவிப்பூசனையென்றுமன்னவெம்பிரான்மகிழ்ந்துகொண்டருளி-யீறிலாதவிப்பதியினுளெல்லாவறமும்யான்செயவருள்செயவேண்டும்' எனவும், விடையின்மேலவர்மலைமகள்வேண்டவிரும்புபூசனைமேவிவீற்றிருந்தே- யிடையறுவறம்வளர்க்கும்வி

த்தாகவிகபரத்திருநாழிகெல்லளித்துக் - கடையராகியுமுயர்ந்தவராயுங்காஞ்சிவாழ்பவர் தாஞ்செய்தீவினையுந்-தடைபடாதுமெய்ந்நெறியடைவதற்காந்தவங்களாகவுமுவந்தருள் செய்தார்" எனவும் வரும் ஷை புராணச்செய்யுட்களானும் அறிக. (௮௫)

இன்னமு முமையா ணோற்றிடு மாங்கே யிறப்பினும் பிறப்பினு நிலையாய்
மன்னியே யுறினு மொருகண மேனும் வைகினு மறைகளாந் தனிமா
நன்னிழ லிருந்த பரஞ்சுடர் புரியு நடந்தரி சிக்கினு மதனை
யுன்னினு முத்தி வழங்குகாஞ் சியைப்போ லுலகில்வே றொருநக ருளதே.

இ—ள்: உமையாள் இன்னமும் நோற்றிடும் ஆங்கு— உமாதேவியார் இன்னுந்தவஞ்செய்யும் அத்தலத்திலே, இறப்பினும்—இறந்தாலும், பிறப்பினும்— பிறந்தாலும், நிலையாய் மன்னி உறினும்—(எப்போதும்) நிலைப்பட்டு வசித்திருந்தாலும், ஒருகணமேனும் வைகினும்—ஒருகணப்பொழுதளவாயினும் வசித்தாலும், மறைகள் ஆம் தனி மா நல் நிழல் இருந்த பரஞ்சுடர் புரியும் நடம் தரிசிக்கினும்—வேதரூபமாகிய ஒப்பற்ற மாமரத்தின் நல்லநிழலில் எழுந்தளியிருக்கின்ற பரஞ்சோதியாகிய சிவபெருமான் செய்தருளுகின்ற அருணடனத்தைத்தரிசித்தாலும், அதனை உன்னினும் முத்தி வழங்கு காஞ்சியை போல்—அந்நடனத்தைச்சிந்தித்தாலும் மோக்ஷத்தைப்பயக்கின்ற காஞ்சிநகரைப்போல, உலகில் வேறு ஒருநகர் உளதோ—இந்நிலவுலகத்தில் வேறொரு புண்ணியபுரி இருக்கின்றதா? (இல்லையே) எ—று.

ஏகாரமிரண்டும் அசை. உம்மை, இன்னமும் என்பதில் உயர்வுசிறப்பும், கணமேனும் என்பதில் இழிவுசிறப்பும், ஏனையவற்றில் எச்சமுமாம். ஓ எதிர்மறை.

"தில்லையைக்காணக்காசியிலிறக்கச்சிறக்குமாரூர்தனிற்பிறக்க- எல்லையிலருணகிரிதனைநினைக்கவெய்தலாமுத்தி" என்றபடி, ஒவ்வொன்றன் முத்திதரும்பிறதலங்கள் போலாது,அவற்றுள் எதனைச்செய்யினும் பேரின்பவீட்டைப்பயக்கும் பெருந்தலமென்பார்,"இறப்பினும்பிறப்பினு நிலையாய்- மன்னியேயுறினுமொருகணமேனும் வைகினுமறைகளாந்தனிமா- நன்னிழலிருந்தபரஞ்சுடர்புரியுநடந்தரிசிக்கினுமதனை- யுன்னினுமுத்திவழங்குகாஞ்சியைப்போலுலகில்வேறொருநகருளதோ" என்றார். "பிறந்துளோர்கள்வதியப்பெறுநரங்- கிறந்துளோருளத்தெண்ணுநர்யாவரு-மறந்தழைக்குமேகம்பருளினுற்-சிறந்தமுத்தியுறுவதுதேற்றமே" எனவும், 'அவ்வூர்தன்னை- யெண்ணினுங்கேட்பினுஞ்சொலினும்வணங்கினும்பேரின்பவீடவர்க்குநல்கும்'எனவும், "அங்கட்-போற்றியொருநாளேனுமமர்ந்துறையின்முத்திநிலைபுகுதலாமால்" எனவும், "வழிச்செலவிற்புகுந்தேனுமறந்தேனும்பொருளாசைமருவியேனுங்- கழிப்பருஞ்சீர்க்காஞ்சியினிற்கணப்பொழுதுவதிந்தோருங்கலப்பர்முத்தி-பழிப்பிலாக்காஞ்சியெனத்தன்னியல்பாவொருபொழுதுபகரிற்கண்ணி- லொழிப்பரும்பாதகமனைத்துமொழிந்துபெருந்துறக்கவீடுறுதலுண்மை"எனவும் காஞ்சிப்புராணங்கூறுதலானுணர்க. 'மறைகளாந்தனிமா'என்றதை "தாவரும்பழமாமறைதம்பிரானருளான்- மேவருந்தனிச்சூதமாய்மயானத்தின் மேல்பாற்-பூவரும்பிமென்றளிர்கனிபுதுமலர்துறுமி- யோவருங்குளிர்நிழல்குலாயோங்கியதன்றே" எனவும் ஷை புராணங்கூறுதலாலறிக. (௮௬)

கண்ணுதற் பரனுந் தண்டுழாய் மௌலிக் கடவுளுங் கமலமே லயனும்
விண்ணவர்க் கிறையுங் கொற்றமா லினியு மேலைநாட் பிறந்ததொன் மனுவுந்
தண்ணளி புரிதுண் டீரனு நள்ளார் சமர்த்தொழில் கடந்ததண் டகனு
மண்ணலங் கரிகால் வளவனும் பிறரு மரசுசெய் தளித்ததந் நகரம்

இ—ள்: கண்ணுதல் பரனும்—நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும், தண் துழாய் மௌலி கடவுளும்—குளிர்ந்த துளசிமாலையையணிந்தமுடியினையுடைய திருமாலும், கமலமேல் அயனும்—தாமரைமலராசனத்தின்மேல் வீற்றிருக்கும் பிரமதேவரும், விண்ணவர்க்கு இறையும்—தேவர்க்கரசனாகிய இந்திரனும், கொற்ற மாலினியும்—வெற்றியையுடைய துர்க்கையும், மேலைநாள் பிறந்த தொல் மனுவும்— முற்காலத்திற்பிறந்த பழைய மனுவும், தண்ணளி புரி துண்டீரனும்— (பிரசைகளிடத்துப்)பேரன்பைவைத்த துண்டீரராசனும், நள்ளார் சமர்த்தொழில் கடந்த தண்டகனும்-பகைவரது போர்த்தொழிலைவென்ற தண்டகராசனும், அண்ணல் அம் கரிகால் வளவனும்—பெருமைபொருந்திய கரிகாற்சோழனும், பிறரும்—மற்றையோரும், அரசு செய்து அளித்தது அ நகரம்—அரசியல்புரிந்து காக்கப்பெற்றது அக்காஞ்சிநகரம் எ—று

அளித்ததந்நகரமென்பது கருமகருத்தா; எண்பத்திரண்டாஞ்செய்யுளிற்போல. துழாய் ஆகுபெயர். அம் சாரியை. முதன்மனுவாகலால் 'மேலைநாட்பிறந்ததொன்மனு' எனவும், சிவபெருமானது திருவருளாணையாற் கயிலையினின்றும்வந்துபிறந்து செங்கோல்செலுத்தி அரசியற்றினனாதலால் 'தண்ணளிபுரிதுண்டீரன்' எனவும், திருமாலினது திருவருளைப்பெற்றுத் திக்குவிசயம்புரிந்து சக்கிரவர்த்தியாயிருந்தனனாதலின் 'நள்ளார்சமர்த்தொழில்கடந்ததண்டகன்' எனவும், பார்க்கவமுனிவர்சாபத்தாற் காடாய்க்கிடந்தகாஞ்சியை முன்போலத்திருத்தி அரசியற்றினனாதலின் 'அண்ணலங்கரிகால்வளவன்' எனவும் கூறினார். (அஎ)

வேலைசூ ழுலகி னெங்கணு மிருபால் வீட்டினை வெஃகினோர்க் குதவு
மாலய நூற்றெட் டுள்ளமற் றவற்று ளைம்முகப் பரஞ்சுட ரமருங்
கோலமார் நிலய மிருபது மாயோன் கோநக ரெட்டுமாய்க் குழுமி
நாலெழு தான முள்ளவந் நகர்போ னம்புகழ் நகரமற் றெவனே.

இ—ள்: வெஃகினோர்க்கு இருபால் வீட்டினை உதவும் ஆலயம்— விரும்பியவர்களுக்கு இருவகைத்தாய முத்திகளைக்கொடுக்கின்ற தேவாலயங்கள், வேலை சூழ் உலகின் எங்கணும் நூற்றெட்டு உள்ள— சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகத்தின் எவ்விடங்களினும் நூற்றெட்டு உள்ளன, அவற்றுள்-அவ்வாலயங்களுள். ஐ முக பரஞ்சுடர் அமரும் கோலம் ஆர் நிலயம் இருபதும் மாயோன் கோநகர் எட்டும் ஆய் குழுமி நாலெழு தானம் உள்ள அ நகர் போல்—ஐந்து திருமுகங்களையுடைய பரஞ்சோதியாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற அழகிய கோயில்கள் இருபதும் விஷ்ணுமூர்த்தியின் கோயில்கள் எட்டும் ஆகக்கூடி இருபத்தெட்டுத்தேவாலயங்கள் இருக்கின்ற அக்காஞ்சிநகர் போல, நம்புகழ் நகரம் மற்று எவன்—நாம் புகழத்தக்க தலம்வேறியாது ஒருதலமுமில்லையே எ—று.

பூவுலகத்துள்ள சிறந்ததலங்கள் நூற்றெட்டினுள் மிகச்சிறந்தது காஞ்சிநகரமே என்பதுதாற்பரியம்.

மற்று இரண்டனுள் முன்னையதும் ஒகாரமும் அசைகள். இருபால் வீடாவன பதமுத்தி பரமுத்தி என்பன. பரமுத்தியை முத்திமுடிவெனவுங்கூறுப. பதமுத்தியென்பது சாலோக சாமீப சாரூபப்பேறுகளை; பரமுத்தி அல்லது முத்திமுடிவென்பது அத்துவிதசாயுச்சியமுத்தியை. அவற்றுள் அந்நகர்போல் மற்று எவன் என இயையும். எவனென்னும் வினைப்பெயர் ஈண்டின்மைகுறித்துநின்றது.

நூற்றெட்டுந்தலங்களாவன: காசி பிரயாகை கங்கை நைமிசம் வஞ்சம் புஷ்கரம் பிரபாசம் குருக்ஷேத்திரம் மகேந்திரம் அட்டகாசம் சங்குகன்னம் உச்சயினி கோ

கர்ணம் ருத்திரகோடி மகாகூடம் கேதாரம் சருவபுரி தலேசுரம் ஹர்ஷதம் வைரவம் உருத்திராலயம் சுவர்ணபுரம் இடபம் தேவதாரு மருவாங்கலம் கனகலம் பத்திரகர்ணம் காளாஞ்சனம் ஸ்ரீகண்டம் சங்ககிரி சோமபுரி சந்திரபுரம் அரிச்சந்திரம் காசுமீரம் கோடிதர்மா பிரமகிரி திரிசந்தி கிரதுபுரம் ஸ்ரீபர்வதம் சித்தவடம் திரிபுராந்தகம் ராசமஹேந்திரம் காளேசம் பட்டசம் அலம்புரம் அகிலேசம் சங்கமேசம் செப்பியேசம் கரவீரம் ஏமலிங்கம் மாகேசம் கராகளம் அமரேசம் சத்தநதி தேவிகை நேபாளம் சலலிங்கம் கன்னிகாரம் கயிலாசம் இலங்கை வடவாமுகம் பூதேசம் கோடீசம் புஷ்பகிரி கந்தமாதனம் ஏமகூடம் விந்தம் சௌராஷ்ட்ரகம் சித்தர்காப்பு ஆகாசம் பாதாளம் தீர்க்காராமம் நிரந்தரம் சாகளம் இடபகிரி சுசிந்திரம் படிகை கருவாச்சிரமம் சீகண்டி தக்ஷிணகைலாசம் பாசூர் திருவாலங்காடு விரிஞ்சை பூர்வாசலம் திருக்கழுக்குன்றம் திருவண்ணமலை திருவாரூர் திருவெண்காடு சேது வழுவூர் வியாக்கிரவனம் ஆதிபுரி பவளவனம் மல்லநகரம் யூதிகாத்துவாரம் மதுரை நாகீசம் திரிசிராப்பள்ளி மயூரவிருத்தம் சித்திநி சத்திவனம் காரிகிரி பொதியமலை திருவோத்தூர் மகாப்பிரளை புண்டரீகபுரம் பரமேசம் காஞ்சீபுரம் என்பனவாம். இந்தஸ்தலங்களெவற்றினுங் காஞ்சிசிறந்ததென்பதை "சிறந்தெடுத்துரைக்குமினைய நூற்றிருநாற்றலத்துளுஞ்சிறந்ததாற்பாவ-மறந்தபமுருக்கிமுத்திவீடெளிதின்வழங்குசீர்க்காஞ்சிமாநகரம்' எனக் காஞ்சிப்புராணங்கூறுதலாலறிக. (௮௮)

கச்சபா லயமே கம்பமே மயானங் கவின்கொள்கா ரோணமா காளம்
பச்சிமா லயநல் லநேகபங் கடம்பை பணாதர மணிச்சரம் வராக
மெய்ச்சுர கரமுன் னிராமம்வீ ரட்டம் வேதநா புரமுருத் திரர்கா
வச்சிர னகரம் பிரமமாற் பேறு மறைசையாஞ் சிவாலய மிருபான்.

இ—ள்: கச்சபாலயம்—கச்சபாலயமும், ஏகம்பம்—திருவேகம்பமும், மயானம்—திருமயானமும், கவின் கொள் காரோணம்—அழகுபொருந்திய திருக்காயாரோகணமும், மாகாளம்-மகாகாளேசமும், பச்சிமாலயம்—திருமேற்றளியும், நல் அநேகபம்—நல்ல அநேகபேசமும், கடம்பை—கடம்பையும், பணாதரம்—பணாதரேசமும், மணிச்சரம்—மணிசமும், வராகம்—வராகேசமும், மெய் சுரகரம்—மெய்ம்மையினையுடையசுரகரேசமும், முன் இராமம்— பரசுராமேசமும், வீரட்டம்—வீராட்டகாசமும், வேதநாபுரம், வேதநாபுரமும், உருத்திரர்கா-உருத்திரர்காவும், வச்சிரன் நகரம்-இந்திராலயமும், பிரமம்—சதுர்முகசங்கரமும், மாற்பேறு—திருமாற்பேறும், மறைசை ஆம் சிவாலயம் இருபான்—திருவோத்தூருமாகிய சிவாலயங்கள் இருபதாம் எ—று.

திருமால் திருப்பாற்கடலைக்கடையும்பொருட்டுக் கூர்மரூபங்கொண்டு சிவபெருமானைப்பூசித்தகாரணத்தால் விளங்கும் **கச்சபாலயமும்**, உமாதேவியார் வேதவடிவமாகிய மாமரத்தடியிற் சிவபெருமானைப்பூசித்துக் கம்பாநதியைக்கண்டு தழுவிக்கொள்ள அச்சிவபெருமான் அவ்வம்மையாரது முலைச்சுவடும் வளைச்சுவடும் பெற்று வீற்றிருந்தருளும் **திருவேகம்பமும்**, பிரமனிடத்து வரம்பெற்ற பண்டாசுரனுலுண்டாகிய துன்பத்தைநீக்கும்பொருட்டுச் சிவபெருமான் சகலஆன்மாக்களிலுங்கலந்துநின்ற அவ்வசுரனையழிக்கத்திருவுள்ளங்கொண்டு அவ்வுயிர்களனைத்தையும் யாகாக்கினியிற்செலுத்தி அழித்தகாரணத்தால் விளங்கும் **திருமயானமும்**, பிரளயவெள்ளத்திற்கஞ்சியடைந்த பிரமவிஷ்ணுக்களைச் சிவபெருமான் தமது திருத்தோண்மீதேற்றிவைத்திருந்து அவ்வெள்ளநீங்கியபின் இறக்கி அருள்செய்தகாரணத்தால் விளங்கும் **திருக்காயாரோகணமும்**, திடவிரதனென்னும் அரசன் தனது விடப்பிணிநீங்கச் சிவபெருமானைப்பூசித்து அந்நோயைநீக்கிக்கொண்டகாரணத்தால் விளங்கும் **மகாகாளேசமும்**, திருமால் சி

வசாருபம்பெறவேண்டித் தவஞ்செய்து திருஞானசம்பந்தப்பிள்ளையாரது திருப்பதிகத்தினால் அச்சிவசாருபம்பெற்ற மேன்மையால் விளங்குந் திருமேற்றளியும், விநாயகப்பெருமான் கயமுகாசுரனைக்கொன்று அவனது கோட்டின்கண்ணுள்ள முத்துக்களாற் சிவபெருமானைப் பூசித்தகாரணத்தால் விளங்கும் அநேகபேசமும், குமாரக்கடவுள் வேல்பெறக்கருதிச் சிவபெருமானைப் பூசித்தகாரணத்தால் விளங்கும் கடம்பையும், ஆதிசேடன் வாயுவினாலிழந்தவலிபெறும்பொருட்டுச் சிவபெருமானைப்பூசித்துத் தனதாயிரம் பணாமுடிகளையும் பெருமான்றிருமுடிமீது குடையாகக்கவித்துத் திருவருள்பெற்றகாரணத்தால் விளங்கும் பணாதரேசமும், வாசுகியென்னும் நாகராசன் தன்சுடிகாரத்தினங்களாற் சிவபெருமானைப்பூசித்து அட்டநாகங்களுண்முதன்மையும் அப்பெருமான்றிருமார்பிலாரமாகவிளங்கும்பேறும் பெற்றகாரணத்தால் விளங்கும் மணீசமும், சிவபெருமானது திருவடியைக்காண்பேனென்றுசென்ற திருமாலாகியவராகம் பூசித்துப்பேறுபெற்றகாரணத்தால் விளங்கும் வராகேசமும், தனது பார்வையினால் உயிர்களுக்குச் சுரநோய்விளைத்து வருத்திய சுரலோசனனென்னும் அசுரனைச் சிவபெருமான் குபேரனைக்கொண்டழித்து அக்குபேரனுக்குவேண்டிய வரங்களைக்கொடுத்தருளியகாரணத்தால்விளங்குஞ் சுரகரேசமும்,பரசுராமன் தனதுதந்தையாகிய சமதக்கினிமுனிவரைக் கார்த்தவீரியார்ச்சுனன்கொன்ற வைரத்தினாற் சூரியவம்சத்தரசர்களைக் கொல்லும்பொருட்டுச் சிவபெருமானைப்பூசித்துப் பரசு என்னும்ஆயுதம்பெற்றகாரணத்தால் விளங்கும் பரசுராமேசமும், எல்லாப்பொருள்களுமொடுங்கும் மகாப்பிரளயகாலத்துச் சிவபெருமான் ஒருவரேநின்று வீராட்டகாசத்தோடு திருநடனஞ்செய்தருளியகாரணத்தால் விளங்கும் வீராட்டகாசமும், வேதங்களைத் திருவடிச்சிலம்பாக அணிந்த சிவபெருமானைப் பிரமன்பூசித்து அவ்வேதங்களைப் பெற்றகாரணத்தால் விளங்கும் வேதநூபுரமும், பிரமனது சிருட்டிகாரணமாகச் சிவபெருமான் ஏகாதசருத்திரர்களைத்தந்தருளிய காரணத்தால் விளங்கும் உருத்திரர்காவும், தேவேந்திரன் சிவபெருமானைப்பூசித்து இந்திரபதம்பெற்றகாரணத்தால் விளங்கும் இந்திராலயமும், பிரமன் தனது சிருட்டித்தொழில் சித்திக்கும்பொருட்டுச் சிவபெருமானைப்பூசித்து அவர்கிருபையினால் தன்முகங்களில் வேதங்கள்தோன்றப்பெற்ற காரணத்தால் விளங்குஞ் சதுர்முகசங்காரமும், திருமால் ஆயிரந்தாமரைமலர்களாற் சிவபெருமானைப் பூசித்தபொழுது அவரது சோதனையினால் ஒருமலர்குறையத் தமதுகண்ணை அம்மலருக்குப்பதிலாக இடந்துசாத்திச் சக்கரம்பெற்றகாரணத்தினால் விளங்குந் திருமாற்பேறும், சிவபெருமான் அரிபிரமேந்திராதிதேவர்களுக்கும் முனிவர்களுக்கும் சந்தைகூட்டி வேதங்களை ஓதுவித்த காரணத்தால் விளங்குந் திருவோத்தூரும் ஆகிய இருபதுசிவக்ஷேத்திரங்கள் காஞ்சிமாநகரிலுள்ளனவென்க.

"கருணைகூர் திருவேகம்பங் கச்சபாலயங்கா ரோணம் - பரவுமேற் றளியோடிந்திராலயம்பணாதரேசந்-தரவுடுத்துயர்மணீசநான்முகசங்கரஞ்சேர்- விரவியசுரகரீசமேதகுபரசிராமம்,———உருத்திர னகர்மா காளம் வராகமோத் தூர்மாற் பேறு-விரித்தசீ ரநேக பேசம் வேதநூ புரம யானங்-கருத்தபு கடம்பை மன்னும் வீராட்ட காசமென்னத்-தெரித்திடு மிவைநா லைந்துஞ் சிவபிரான் றளிக ளாமால்" எனக் காஞ்சிப்புராணங்கூறும். (௮௧)

கரிகிரி யட்ட புயந்திரு வெஃகாக் கருதுமூ ரகஞ்சகா ளாங்கஞ்
சுரர்புகழ் நிராகா ரந்நிலாத் திங்கட் டுண்டநற் பாடக மினைய
வரிதிரு முற்ற மெட்டவை யன்றி யறுபதி னாயிர நிலயம்
பரசிவன் சத்தி குமரர்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பதப் பதியே.

இ—ள்: கரிகிரி— அத்திகிரியும், அட்டபுயம்— அட்டபுயமும், திருவெஃகா—திருவெஃகாவும், கருதும் ஊரகம்—(யாவரும்) சிந்திக்கின்ற திருவூரகமும், சகாளாங்கம்—சகாளாங்கமும், சுரர் புகழ் நீராகாரம்—தேவர்கள் புகழுகின்ற நீராகாரமும், நிலா திங்கள் துண்டம்—சந்திரகண்டமும், நல் பாடகம்—நல்ல திருப்பாடகமும், இனைய அரி திருமுற்றம் எட்டு—என்னுமித்த விஷ்ணுவாலயங்கள் எட்டாகும், அவை அன்றி—அவைகளேயன்றி, அறுபதினாயிரம் நிலயம்— அறுபதினாயிரந் திருக்கோயில்களில், பரசிவன் சத்தி குமரர் மால் புறத்தோர் பலரும் வீற்றிருப்பது அ பதி—பரமசிவன் உமாதேவி (அவர்களது)குமாரர்கள் திருமால் புறத்தெய்வங்கள் ஆகிய பலரும் வீற்றிருக்கப்பெறுவது அக்காஞ்சிமாநகரம் எ—று.

நிலாத்திங்கள்=சந்திரன்; துண்டம்=கண்டம். குமரரென்றது விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் வைரவக்கடவுள் ஐயனார்முதலியவர்களை. புறத்தோரென்றது அருகன் புத்தன் முதலியவர்களை.

இந்திரனது வெள்ளையானை திருமாலைப்பூசித்துத் தனது ஒருஅம்சத்தால் அத்திருமாலைத்தாங்கப்பெற்ற அத்திகிரியும், பாற்கடலிற்றோன்றிய திருமகளைத் திருமால் எட்டுப்புயங்களோடிருந்து மணம்புரிந்தமேன்மையால் விளங்கும் அட்டபுயமும், பிரமன்செய்த வேள்வியையழித்தற்பொருட்டுவந்த வேகவதியைத்தடுக்கவேண்டித் திருமால் பள்ளிகொண்ட திருவெஃகாவும், மாவலிச்சக்கிரவர்த்தியினிடத்து மூன்றடியாகப்பெற்ற மண்ணையளந்து நின்றகோலத்தோடு திருமால் எழுந்தருளிய திருவூரகமும், கிருஷ்ணசன்மா என்னும் வேதியன் தன்னுடன்சபதங்கூறிய வேதியர்கள்பொருட்டுக் கம்பாநதிக்கரையில் யாவருங்காணப் பாலகிருஷ்ணனை அழைப்ப, திருமால் அக்கோலத்தோடு எழுந்தருளிய சகாளாங்கமும், திருமால் சிவபெருமானைப்பூசித்துத் தனது கரியவண்ணநீங்கிப் பவளவண்ணம்பெற்று எழுந்தருளிய நீராகாரமும், திருப்பாற்கடலிற்றோன்றிய விடவேகத்தைத் தணித்தற்பொருட்டுத் திருமால் சிவபெருமானது திருச்சடையிலுள்ள சந்திரகலை தன்மேற்படும்வண்ணம் அப்பெருமானைப்பூசித்த சந்திரகண்டமும், சுற்றத்தாரிறப்பரென்றுஎண்ணிப் போர்செய்யக்கூசிய அருச்சுனன் வைராக்கியத்துடன் பொரும்படி திருமால் போதனைசெய்த திருப்பாடகமும், ஆகிய எட்டுவிஷ்ணுக்ஷேத்திரங்கள் அக்காஞ்சிநகரிலுள்ளனவென்க.

இதனை "நடைமலை யோங்கல் வெஃகா நகைநிலாத் துண்ட மேன்மை- யடைநீரா கார மட்ட புயஞ்சகா ளாங்கந் தீமை-யிடையுமூ ரகமேர் தங்கும் பாடக மிவையோ ரெட்டுங்- குடையெனப் பறம்பு தாங்குங் குரிசிலுக் கினிய தானம்" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க. சிவன்முதலினோர்க்குள்ள ஆலயத்தொகையை "செப்ப ரும்புகழ் பூண்டமற் றவற்றினுட் சினகர முளவான-முப்ப திற்றுமூன் றிரட்டிய பத்துநா றெனப்படு முறைசான்ற- வப்பெ ருந்தகு தளிகளுட் பனிவரை யணங்குபூண் முலைதோய்ந்த-துப்பு வார்சடை யண்ணலார் தளிகளெட் டிரட்டியா யிரஞ்சூழல்,—காமக் கோட்டத்தி னிருந்தறம் புரிந்தருள் காமகோக் குடைமென்பூந்- தாமப் பூங்குழலம்பிகைக் குரியநற் சத்திக ளமர்கின்ற-வேமக் கோயில்களைந்தற ழாயிர மெரிதவழ் சுடராழி- நாமத் திண்படை நாயக னிருக்கைமுந் நான்குபத் தறழ்நூறே,——உலகெலாந்தரு நான்முகற் கொருபதி னாயிரத் தெழுநூறு- விலகுமுக்குடைவானவற்கொன்பதினாயிரத்தெழுநூற்- றலைமை சால்புகழ்ப் புத்தனுக் கெட்டற ழாயிரஞ் சகம்போற்றக்-குலவு கொற்றவை வயிரவன் சாத்தனுக் கொவ்வொரா யிரங்கோயில்,—வயங்கு நெட்டிலை வேற்படைப் பண்ணவன் வாணிலாப் பிறைக்கோட்டா- னுயங்க வெம்பணை முடித்தரு ளோங்கரத் தொருமுத லுபர்வானத்- தியங்கு செங்கதி ரிருக்கைகள் வேறுவே

றைந்துநா றெனச்சொல்வர்-தயங்கு மேதகை யனந்தன்வாழ் மந்திரஞ் சாற்றி லொன்
றொழிநூறே" என வை புராணங்கூறும். (க0)

ஒன்றுதீ விளக்க மீரிட மொருமூன் றுற்றிடு தெற்றிநான் கரண
நின்றிடு தருவைந் தாறுபுள் ளேழு நெடுநதி யெண்பொது வொன்பான்
மன்றலம் பொய்கை வியன்சிலை யொருபான் மன்றவை பத்தின்மே லொன்று
நின்றமர்ந் தொழுகு நெறியிலற் புதமாய் நிகரிலா துறையுமந் நகரம்.

இ—ள்: ஒன்று தீ விளக்கம்—ஒரு தூண்டாவிளக்கும், ஈர் இடம்— இரண்டு இடங்களும், உற்றிடு ஒருமூன்று தெற்றி— பொருந்திய மூன்று திண்ணைகளும், நான்கு அரணம்-நான்கு அரண்களும், நின்றிடு ஐந்து தரு-நிற்கின்ற ஐந்துமரங்களும், ஆறு புள்—ஆறுபறவைகளும், நெடும் ஏழு நதி—நெடிய ஏழுநதிகளும், எண் பொது-எட்டுப்பொதுக்களும், மன்றல் அம் ஒன்பான் பொய்கை—வாசனைபொருந்திய ஒன்பது தடாகங்களும், வியன் ஒருபான் சிலை— பெரிய பத்துக்கற்களும், பத்தின்மேல் ஒன்று மன்றவை-பதினொருமன்றுகளும் (ஆகிய இவைகள்), நின்று அமர்ந்து ஒழுகும் நெறியில் அற்புதம் ஆய்—நின்று இருந்து நடக்கின்றமுறையினால் அதிசயமாகி, நிகர் இலாது உறையும் அ நகரம்—ஒப்பின்றிச்(சிறந்து) இருக்கும் அக்காஞ்சிநகரம் எ—று.

ஒன்றுமுதற் பதினொன்றீறாக எடுத்துக்காட்டப்பட்ட அதிசயப் பொருள்களை யுடையனவாகி விளங்கும் அக்காஞ்சிபுரம் என்பது தாற்பரியம்.

இரண்டு இடம், ஈரிடம் எனப்புணர்ந்தது. அம் சாரியை. மன்றவை என்பதில் அவை பகுதிப்பொருள்விகுதி. நின்றமர்ந்தொழுகுநெறியிலற்புதமாய் எனவே, சிலபொருள்கள்நின்றும் சிலபொருள்கள் இருந்தும் சிலபொருள்கள் நடந்தும் அதிசயங்காட்டுவனவென்பது கருத்தாயிற்று. (கக)

சிறந்திடு மதியு மிரவியு மாழ்கச் செகமெலாந் தனதொளி பரப்பி
யறம்புரி காமக் கோட்டமந் திரத்து ளம்மைவாழ் பிலத்தினு ளழியா [மொன்
துறைந்திடு தூண்டா விளக்கமொன் றுதித்த வுயிர்த்தொகை யிறந்திடா விட
றிறந்திடு முயிர்கள் பிறந்திடா விடமொன் றெம்பிரா னிருந்தவீ ரிடமே.

இ—ள்: சிறந்திடும் மதியும் இரவியும் மாழ்க செகம் எலாம் தனது ஒளி பரப்பி—சிறப்புப்பொருந்திய சந்திரனும் சூரியனும் ஒளிமழுங்கும்படி உலகமுழுதும் தனது பேரொளியைப்பரப்பி, அறம்புரி காமக்கோட்டி மந்திரத்துள் அம்மை வாழ் பிலத்தினுள்-முப்பத்திரண்டு தருமங்களையும் செய்தற்கிடமாகிய காமக்கோட்டி என்னும் ஆலயத்திற் காமாக்ஷியம்மையார் எழுந்தருளியிருக்கின்ற பிலத்துவாரத்தில், அழியாது உறைந்திடு தூண்டாவிளக்கம் ஒன்று—கெடாதிருக்கின்ற தூண்டாவிளக்கு ஒன்றும், உதித்த உயிர்த்தொகை இறந்திடா இடம் ஒன்று- பிறந்த உயிர்க்கூட்டங்கள் இறவாத தானம் ஒன்றும், இறந்திடும் உயிர்கள் பிறந்திடா இடம் ஒன்று—இறந்தஉயிர்க்கூட்டங்கள் பிறவாத தானம் ஒன்றும்(ஆகியஇவைகள்), எம்பிரான் இருந்த ஈர் இடம்—எங்கள் கடவுளாகிய சிவபெருமான் வீற்றிருந்த இரண்டு இடங்களாம் எ—று.

ஏ அசை. ஒளிபரப்பி உறைந்திடு என இயையும். உதித்தவுயிர்த்தொகையிறந்திடாவிடம் என்றது இறவாத்தானமென்னுந் தேவாலயத்தை. "ஆயுண் மாய்வி னின்று மங்க ணெண்ணிலர்-தூய வன்பிற் றொழுது நிலைமை பெற்றன- ரேய வாற்றலாயுள் வேட்டோர் யாவரும்-பாய சீர்த்தி யிறவாத் தானம் பணிகவே" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க. இறந்திடுமுயிர்கள் பிறந்திடாவிடமொன்று என்றது பி

றவாத்தானமென்னும் ஆலயத்தை. "இலிங்க மங்க ணினிதி ருத்திநூற்- புலங்கொண் முறையிற் பூசை யாற்றுபு- கலங்கு பிறவிக் கரிசி னீங்கினன்- மலங்க ருஞ்சீர் வாமதேவனே,——————அன்ன வாற்றாற் பிறவாத் தான மாயதா-லின்ன தானம் வழிபட் டேத்தப் பெற்றவர்-பின்னர் மாதர் கருவி னெய்திப் பேதுறார்-கன்னி பாகன் கருணை வெள்ளங் காண்பரே" என்னும் ஷை புராணச்செய்யுட்களானுணர்க. (௯௨)

தோற்றுயிர்க் குணவு நல்குமோர் தெற்றி சொற்றவை யுதவுமோர் தெற்றி
தேற்றுசொன் மூகர்க் களிக்குமோர் தெற்றி தெற்றிமூன் றிவைநக ரெல்லை
யீற்றினிற் கீழ்பா லளக்கருந் தென்பா லியற்பெரும் பெண்ணைநன் னதியு
மேற்றிசைப் பவள சயிலமும் வடபால் வேங்கட வெற்புநான் கரணே.

இ—ள்: தோற்று உயிர்க்கு உணவு நல்கும் ஓர் தெற்றி—(தன்னிடம்வந்து) தோன்றிய உயிர்களுக்கு உணவைக்கொடுக்கின்ற ஒரு திண்ணையும், சொற்றவை உதவும் ஓர் தெற்றி-கேட்டபொருளைக்கொடுக்கும் ஒருதிண்ணையும், மூகர்க்கு தேற்று சொல் அளிக்கும் ஓர் தெற்றி—ஊமைகளுக்குத்தெளிவான சொற்சாதுரியத்தைக் கொடுக்கின்ற ஒரு திண்ணையும், இவை—ஆகிய இவைகள், மூன்று தெற்றி—மூன்றுதிண்ணைகளாம், நகர் எல்லை—நகரெல்லைகளாவன:, கீழ்பால் ஈற்றினில் அளக்கரும்-கிழக்குப்பக்கமுடிவிற்கடலும், தென்பால்(ஈற்றினில்)இயல் பெரும் பெண்ணை நல் நதியும்-தெற்குப்பக்கமுடிவில் தகுதிபொருந்திய பெரிய நல்ல பெண்ணைநதியும், மேற்றிசை(ஈற்றினில்)பவளசயிலமும்-மேற்குப்பக்கமுடிவிற்பவளமலையும், வடபால் (ஈற்றினில்) வேங்கட வெற்பும்— வடக்குப்பக்கமுடிவில் திருவேங்கடகிரியும் ஆகிய, நான்கு அரண்—நான்கு அரண்களாம் எ—று.

ஏ அசை. தெற்றி மூன்றென்பதனை "ஊங்க ணைந்தவர்க் கமுதுநீ ருதவிடு மொன்று—பாங்கின் வேட்டன யாவையும் பயந்திடு மொன்று-மூங்கை பேசவும் பேசினேன் மூங்கைமை யுறவும்-ஆங்க ளிப்பதொன் றாகமுத் தெற்றியு முளவால்" எனக் காஞ்சிப்புராணங்கூறும். அரண் காவற்றானம். (௯௩)

மறைகளி னுருவாய்ப் பொன்மலர் தனிமா மலரொடு காயிலா தென்றுஞ்
செறிதரு பலங்க ளுதவிநுங் கினர்க்குச் சித்திகள் வழங்குறு மெகினம்
வெறிமலர் பலவு மலர்ந்திடு மதூகம் விண்ணினை நோக்குமோ ரத்தி
நறுநிழல் பிரியா திருந்ததோர் காஞ்சி நன்னகர் தன்னிலைந் தருவே.

இ-ள்: மறைகளின் உரு ஆய் பொன் மலர் தனி மா-வேதங்களின்வடிவாகிப்பொன்மலரைமலருகின்ற ஒப்பற்ற மாமரமும், மலரொடு காய் இலாது என்றும் செறிதரு பலங்கள் உதவி நுங்கினர்க்கு சித்திகள் வழங்குறும் எகினம்—மலர்களும் காய்களும் இன்றி எஞ்ஞான்றும் நெருங்கியிருக்கின்ற பழங்களைக் கொடுத்து அவற்றைப்புசித்தவர்களுக்கு விரும்பிய சித்திகளைப்பயக்கின்ற புளியமரமும், வெறி மலர் பலவும் மலர்ந்திடும் மதூகம்—வாசனைபொருந்திய பலவகைமலர்களையும்மலர்கின்ற இருப்பைமரமும், விண்ணினை நோக்கும் ஓர் அத்தி—ஆகாயத்தை நோக்கி உயர்ந்திருக்கின்ற ஒரு அத்திமரமும், நறு நிழல் பிரியாது இருந்தது ஓர் காஞ்சி—நல்ல நிழல் (இடம்விட்டுப்) பிரியப்பெறாதிருக்கின்ற ஒரு காஞ்சிமரமும் (ஆகியஇவைகள்), நல் நகர் தன்னில் ஐ தரு-நல்ல அக்காஞ்சிநகரில் ஐந்து மரங்களாம் எ—று.

ஏ அசை. மலர் தனிமா என்பதில் மலர் வினைத்தொகை. ஐந்தருக்கள் இவையென்பதை "ஒவாமை யமுதொழுக்கும் பொலம்பூச் சூதந் தன்னிழலைப் பிறர்க்குதவாக்

காஞ்சி யென்றும்-பூவாது காயாது கனிக ணல்கும் பூம்புளிபல் வகைப்போதுந் தரும் தாகந்- தாவாத செம்பொன்மல ரத்தி யென்ரு சாற்றரிய தெய்வதமாத் தருக்க ளேந்துந்-தேவாதி தேவரினி தமருங் காஞ்சித் திருநகரி னிறும்பூது திகழ வோங்கும்" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானுமுணர்க. (௧௪)

உம்பரூண் பகிருஞ் சாதக மணிக ளுதவிடு மன்னநூ லுரைத்துக்
கொம்புறு கிள்ளை யலருசொல் லாந்தை குறைபெறிற் கூவுறாக் கோழி
யிப்பரிற் பாவந் துடைத்திடு நேமி யிவையறு புள்ளெழு நதிதான்
கம்பைநற் பம்பை மஞ்சணீர் பிச்சி கலிச்சிபொன் மண்ணிவெஃ காவே.

இ—ள்: உம்பர் ஊண் பகிரும் சாதகம்—தேவாமிர்தத்தைப்பங்கிட்டுக்கொடுக்கின்ற சாதகப்பறவையும், மணிகள் உதவிடும் அன்னம்— ரத்தினங்களைக்கொடுக்கின்ற அன்னப்பறவையும், நூல் உரைத்து கொம்பு உறு கிள்ளை—சகலசாஸ்திரங்களையும் போதித்துக்கொண்டு மரக்கொம்பில் வசிக்கின்ற கிளியும், அலரு சொல் ஆந்தை—சோதிடஞ்சொல்லுகின்ற ஆந்தையும், குறை பெறில் கூவுரு கோழி— யாதேனும் குறைவருமாயின் (அக்காலத்திற்) கூவாத கோழியும், இம்பரில் பாவம் துடைத்திடும் நேமி—இவ்வுலகிற்செய்கின்ற பாவங்களை நீக்குகின்ற சக்கரவாகப்பறவையும் (ஆகிய இவைகள்), அறுபுள்—ஆறுபறவைகளாம், எழுநதி தான்—எழுநதிகளாவன:, கம்பை—கம்பாநதியும், நல் பம்பை—நல்ல பம்பாநதியும், மஞ்சணீர்—மஞ்சணதியும், பிச்சி— பிச்சிநதியும், கலிச்சி—கலிச்சிநதியும், பொன் மண்ணி—அழகியமண்ணிநதியும், வெஃகா-வெஃகாநதியும் (ஆம்) எ—று.

ஏ அசை. தான் சாரியை. மஞ்சணீர் என்பது உமாதேவி மஞ்சட்காப்பணிந்துகொண்டு நீராடியதால்வந்தநாமம். இதனை "கம்பை மாநதி யின்க ரைப்பெருங் காதல் கூர்தவ மாற்று மால்வரைக்-கொம்பு மஞ்சளின் காப்ப ணிந்துமெய் குளிர வாடுநீர் மணாக்க மழ்ந்தெழுஉப்-பம்பு மஞ்சணீர் நதியெ னப்புடை பரந்து சேறலும்" எனக்காஞ்சிப்புராணக்கூறுதலானுணர்க. (௧௫)

குரைபுனல் வேட்டோர்க் குதவி யே திரியுங் கூவலம் பொதுக்குறு முயல்போய்க், கரிதொடர் பொதுவே ழிசையுறு பொதுமால் கண்டுயின் றிடுபொது வேறோ, ருருவுசெய் பொதுவோர் புற்றின்மா முழவ மொலித்திடும் பொதுத்திசை மயக்கம், புரிதரு பொதுவென் னம்மைநோற் றருளும் பொற்பொது விவைகளெண் பொதுவே.

இ—ள்: குரை புனல் வேட்டோர்க்கு உதவி திரியும் கூவல் அம் பொது- ஒலிக்கின்ற நீரைவிரும்பியவர்களுக்குக் கொடுத்துத்திரியுங் கிணற்றையுடைய பொதுவும், குறு முயல் போய் கரி தொடர் பொது—சிறியமுயல் சென்று (பெரிய) யானையைத் துரத்துகின்ற பொதுவும், ஏழ் இசை உறு பொது-சப்தசுரங்களுமுள்ள பொதுவும், மால் கண் துயின்றிடு பொது-விஷ்ணுமூர்த்திஅறிதுயில்செய்திருக்கும்பொதுவும், வேறு ஓர் உருவு செய் பொது—(ஒரு உருவத்தை) வேறோருருவமாகச்செய்கின்ற பொதுவும், ஓர் புற்றில் மா முழவம் ஒலித்திடும் பொது—ஒருபுற்றின்கண் பெரிய முரசு ஒலிக்கின்ற பொதுவும், திசை மயக்கம் புரிதரு பொது- திசைமயக்கத்தைச்செய்கின்ற பொதுவும், என் அம்மை நோற்றருளும் பொன் பொது— எமது தாயாகிய ஸ்ரீகாமாக்ஷியம்மையார் தவஞ்செய்தருளுகின்ற அழகிய பொதுவும், இவைகள்—ஆகிய இவைகள், எண்பொது—எட்டுப்பொதுக்களாம் எ—று.

ஏகாரம் இரண்டும் அசைகள், அம் சாரியை; அழகெனினுமாம். (௧௬)

முன்னுறு பிணிகண் மாற்றிடும் பொய்கை முதல்வர்கண் முடிவுறுங் கா
லைச், செந்நிற மாகும் பொய்கைமுக் காலந் தெரித்திடும் பொய்கைகண் ணுத
லோன், றன்னடி காட்டும் பொய்கைவேண் டியது தந்திடும் பொய்கைமெய்
ஞ் ஞானம், பொன்னிறஞ் செல்வம் வசீகரந் தருநாற் பொய்கையோ டொன்
பதாம் பொய்கை.

இ—ள்: முன் உறு பிணிகள் மாற்றிடும் பொய்கை— பழைய வியாதிகளை நீக்குகின்ற தடாகமும், முதல்வர்கள் முடிவுறும் காலை செந்நிறம் ஆகும் பொய்கை— அரசர்களிறக்குங்காலத்துச் சிவந்தநிறமுடைத்தாகின்ற தடாகமும், முக்காலம் தெரித்திடும் பொய்கை—முக்காலங்களையுந் தெரிவிக்கின்ற தடாகமும், கண்ணுதலோன் தன் அடி காட்டும் பொய்கை— சிவபெருமானது திருவடிகளைத் தெரிவிக்கின்ற தடாகமும், வேண்டியது தந்திடும் பொய்கை—விரும்பிய பொருள்களைக்கொடுக்கின்ற தடாகமும், மெய்ஞ்ஞானம் பொன்னிறம் செல்வம் வசீகரம் தரும் நாற்பொய்கையோடு—உண்மைஞானத்தையும் பொன்னிறத்தையும் செல்வத்தையும் வசியத்தையும் (முறையே) தருகின்ற நான்கு தடாகமுமாகிய இவற்றுடன், பொய்கை ஒன்பது ஆம்—தடாகங்கள் ஒன்பதாம் எ—று.

முன்னுறுபிணி - தீராப்பிணி. முக்காலம் - இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்பன. அம்முக்காலங்களினிகழும் விருத்தாந்தங்களை உணர்த்தலால் ஆகுபெயர். கண்ணுதலோன்றன்னடிகாட்டல் என்றது முத்திப்பேற்றை. வசீகரம் - பிறரைத்தன்வயமாக்கல். மூழ்குவோர்க்கு அவ்வப்பயன்களைக் கொடுப்பன என்க. (௧௭)

விடந்தனை யகற்று மொருகலா ருயிர்கண் மெய்ப்பிணி மாற்றிடு மொருக
லடைந்தவ ரெல்லா மிமையவ ராக வளித்திடு மொருகல்வெம் படையாற்
றடிந்திட வேறுய்த் துணிபடு முடலஞ் சந்துசெய் வித்திடு மொருக
னெடும்படை வரினு மவையிரிந் தோட நிலைபெறீஇ நிற்குமாங் கொருகல்.

இ—ள்: விடந்தனை அகற்றும் ஒரு கல்— (சர்ப்பங்கடித்தலாலுண்டாகிய) நஞ்சைப்போக்குகின்ற ஒருகல்லும், ஆர் உயிர்கள் மெய் பிணி மாற்றிடும் ஒருகல்— நிறைந்த ஆன்மாக்களின் சரீரத்திலுள்ளநோயைத்தீர்க்கின்ற ஒருகல்லும், அடைந்தவர் எல்லாம் இமையவர் ஆக அளித்திடும் ஒரு கல்-(தன்மாட்டு)வந்தவர்களனைவரும் தேவராகும்படி செய்கின்ற ஒருகல்லும், வெம் படையால் தடிந்திட வேறு ஆய் துணிபடும் உடலம் சந்துசெய்வித்திடும் ஒரு கல்— கொடிய ஆயுதங்களினல் வெட்ட வேருக வெட்டுப்பட்டசரீரத்தைப் பொருத்துவிக்கின்ற ஒருகல்லும், நெடும் படை வரினும் அவை இரிந்து ஓட நிலைபெறீஇ ஆங்கு நிற்கும் ஒருகல்—நெடிய படைக்கலங்கள் வந்தாலும் அவைகள் அஞ்சியோடும்படி நிலைபெற்று அவ்விடத்தே நிற்கின்ற ஒருகல்லும் எ—று.

பெறீஇ பெற்று என்பதன்விகாரம். இச்செய்யுளும் பிற்செய்யுளும் ஒருதொடராதலிற் குளகமெனப்படும். இதனை "குளகம்பலபாட்டொருவினைகொள்ளும்" என்னுந் தண்டியலங்காரச் சூத்திரத்தானுணர்க.

கண்டவுடன் அஞ்சத்தக்க கூரியபடையென்பார்'வெம்படை' எனவும், நாராயணாஸ்திரம் பிரமாஸ்திரம்முதலிய தெய்வப்படையென்பார் 'நெடும்படை'எனவும் கூறினர். பின்னுள்ளபடையைச் சேனையென்பாருமுளர். (௧௮)

துஞ்சினர் தம்மை யெழுப்புமாங் கொருக றொல்வழக் கறுத்திடு மொருக
லெஞ்சலி னிதியங் கெடுத்துளோர் வினவி னீதெனக் காட்டிடு மொருகல்
விஞ்சிய வினைக டீர்த்திடு மொருகல் வேந்தருக் கரசிய லுதவித்
தஞ்சம தாக நின்றிடு மொருக றக்ககல் லைபிரண் டவையே.

இ—ள்: துஞ்சினர் தம்மை எழுப்பும் ஒரு கல்—இறந்தவர்களை எழுப்புகின்ற ஒருகல்லும், தொல் வழக்கு அறுத்திடும் ஒரு கல்—பழைய வழக்குகளைத்தீர்க்கின்ற ஒருகல்லும், எஞ்சல் இல் நிதியம் கெடுத்துளோர் வினவில் ஈது என காட்டிடும் ஒரு கல்—குறைவற்றதிரவியங்களை இழந்தவர்கள் (வந்து)கேட்பின் இது என்று (அப்பொருள்களைக்)காட்டுகின்ற ஒருகல்லும், விஞ்சிய வினைகள் தீர்த்திடும் ஒரு கல்-மிகுந்த தீவினைகளைநீக்குகின்ற ஒருகல்லும், வேந்தருக்கு அரசியல் உதவி தஞ்சமது ஆக நின்றிடும் ஒரு கல்— அரசர்க்கு இராச்சியத்தைக்கொடுத்து (அதற்குத்)துணையாக நிற்கின்ற ஒருகல்லும் ஆக, தக்க கல் அவை ஐயிரண்டு—சிறந்தகற்கள் பத்தாம் எ—று.

ஆங்கு ஏ அசைகள். அது அவை- பகுதிப்பொருள்விகுதிகள்.

தீராவழக்கென்பார் 'தொல்வழக்கு' எனவும், பெரும்பொருளென்பார் 'எஞ்சலினிதியம்' எனவும், கழுவாயினாலும் போக்குதற்கரிய பெருவினையென்பார் 'விஞ்சியவினைகள்' எனவும் கூறினார். (௯௯)

அயன்மனைச் சென்றோர் கணவரைப் பிழைத்தோ ரடிகளை யிகழ்ந்துளோ ரணு
றுயருறு மூகை யாக்குமோர் மன்றஞ் சோரர்முன் சுழலுமோர் மன்றம் [கிற்
வியனிறம் பலவாத் தோன்றுமோர் மன்றம் விஞ்சைகள் வழங்குமோர் மன்ற
மயல்புரி கின்ற பொழுதொடு திசையின் மயக்கறத் தெளிக்குமோர் மன்றம்.

இ—ள்: அயல் மனை சென்றோர் கணவரை பிழைத்தோர் அடிகளை இகழ்ந்துளோர் அணுகில்—அயல்வீட்டிற்புகுந்தவர்களும் நாயகர்களுக்குத் தவறுசெய்தவர்களும் பெரியோர்களை நிந்தித்தவர்களும் வந்தால், துயர் உறும் மூகை ஆக்கும் ஓர் மன்றம்—கிலேசம்பொருந்திய ஊமையாகச்செய்கின்ற ஒருமன்றும், சோரர் முன் சுழலும் ஓர் மன்றம்—திருடர்களுக்குமுன்னே சுழலுகின்ற ஒருமன்றும், வியன் பல நிறம் ஆ தோன்றும் ஓர் மன்றம்— பெரிய பலநிறங்களாகக் காணப்படுகின்ற ஒரு மன்றும், விஞ்சைகள் வழங்கும் ஓர் மன்றம்—வித்தைகளைப்போதிக்கின்ற ஒருமன்றும், மயல் புரிகின்ற பொழுதொடு திசையின் மயக்கு அற தெளிக்கும் ஓர் மன்றம்— காலமயக்கமும் திசைமயக்கமும் நீங்கத்தெளிவிக்கின்ற ஒருமன்றும் எ—று.

ஒடு எண். கணவரை என்பதில் ஐயுருபு குவ்வுருபாகத் திரிக்கப்பட்டது. மயல்புரிகின்றபொழுது=பொழுதுபுரிகின்றமயல். அயன்மனைச்சென்றோர் என்றது எற்புழிக்கோடலான் மகளிரைச்சுட்டியதென்க. அயன்மனைச்சேறல் மகளிர்க்கிழுக்கென்பதை, காசிகண்டம்:— "எய்து மிற்றுறந் தேகல ரில்லக- மையு லார்முகங் காணினுஞ் சாம்புவார்" என்பதனானும், திரிகடுகம் "கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்- உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்-இல்லிருந்தெல்லை கடப்பாளு மிம்மூவர்-வல்லே மழையருக்குங் கோள்" என்பதனானுமுணர்க. இடையின் மூகரானோர்க்குப் பிறவிமூகரினும்மிக்க பெருந்துயர்விளையுமாதலின் 'துயருறுமூகை' என்றார். இது முதலிருசெய்யுள் குளகம். (௧00)

நாகரு ருய்க்கும் பிலத்ததோர் மன்ற நவமணி யுதவுமோர் மன்ற
மாகர்பே ரமிர்த மிருக்குமோர் மன்றம் வடிவினை மறைப்பதோர் மன்ற

மேகநின் றருது பொழியுமோர் மன்றம் வியன்பகல் கங்குலாக் கங்கு
லாகிய பகலா விருப்பதோர் மன்ற மையிரண் டொன்றுமன் றவையே.

இ—ள்: நாகர் ஊர் உய்க்கும் பிலத்தது ஓர் மன்றம்—நாகலோகத்திற் சேர்க்கின்ற பிலத்துவாரத்தையுடைய ஒருமன்றும், நவமணி உதவும் ஓர் மன்றம்—நவரத்தினங்களையுந்தருகின்ற ஒருமன்றும், பேர் மாகர் அமிர்தம் இருக்கும் ஓர் மன்றம்- பெரிய தேவாமிர்தம் இருக்கின்ற ஒருமன்றும், வடிவினை மறைப்பது ஓர் மன்றம்-(அடைந்தவர்களது) உருவத்தைப்(பிறர்காணாதபடி) மறைக்கின்ற ஒருமன்றும், மேகம் நின்று அருது பொழியும் ஓர் மன்றம்—மேகங்கள்பொருந்தி ஓயாது மழையைப்பெய்கின்ற ஒருமன்றும், வியன் பகல் கங்குல் ஆ கங்குல் ஆகிய பகல் ஆ இருப்பது ஓர் மன்றம்— பெரியபகல் இரவாகவும் இரவு சிறந்தபகலாகவும் இருக்கப்பெறுகின்ற ஒருமன்றும் (ஆக), மன்று அவை ஐயிரண்டு ஒன்று—மன்றுகள் பதினொன்றும் எ—று.

ஏ அசை. பிலத்தது மறைப்பது இருப்பது என்பன வினைமுற்றுப் பெயரெச்சம். அமிர்தம்- இறத்தலைத்தவிர்ப்பது; மிர்தம்- இறப்பு, அ-இன்மைப்பொருளைத் தருமோருபசர்க்கம். சூரியகிரணந்தேங்கிவிளங்கும் பகலென்பார் 'வியன்பகல்'எனவும் 'ஆகியபகல்' எனவும் விசேடித்தார். (கOக)

ஈங்கிவை யன்றிச் சிலைகளுந் தருவு மிடங்களுங் கூவலு நதியும்
பாங்குறு குளனுந் தீர்த்தமும் பிலமும் பழனமுஞ் சோலையும் பிறவு
மாங்கவை யநந்த கோடியுண் டொரொன் றளவிலற் புதத்தன வவற்றைப்
பூங்கம லத்தோன் சுருக்கற விரித்துப் புகலினு முலப்புற வற்றோ.

இ—ள்: ஈங்கிவை அன்றி-(நாம் எடுத்துக்கூறிய)இந்த அற்புதங்களையன்றி, சிலைகளும்-கற்களும், தருவும்—மரங்களும், இடங்களும்—தானங்களும், கூவலும்—கிணறுகளும், நதியும்—யாறுகளும், பாங்கு உறு குளனும்—பக்கங்களிலுள்ள குளங்களும், தீர்த்தமும்—தீர்த்தங்களும், பிலமும்—பிலத்துவாரங்களும், பழனமும்—வயல்களும், சோலையும்—சோலைகளும், பிறவும்--இவைபோன்றனபிறவும் (ஆகிய), ஆங்கவை—அவைகள், அநந்தகோடி உண்டு—அநேககோடி உள்ளன, ஒரொன்று அளவில் அற்புதத்தன-- அவையொவ்வொன்றும் அளவிடப்படாத அதிசயத்தையுடையன, அவற்றை-அவ்வதிசயங்களை, பூ கமலத்தோன் சுருக்கு அற விரித்து புகலினும் உலப்புற வற்றோ—தாமரைமலராசனராகிய பிரமதேவர் சுருக்கநீங்க விரிந்துச்சொல்லினும்(அதனால் அவை) முடிவுபெறத்தக்கனவா? (இல்லையே) எ—று.

குளம் குளன் எனப்போலியாயிற்று. புகலினுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. பூங்கமலத்தோன்=கமலப்பூவோன். வற்று என்னும் ஒன்றன்பாற்படர்க்கைக்குறிப்பு வினைமுற்று, வருவிக்கப்பட்ட அவையென்னும்பன்மைப்பெயரை எழுவாயாகக்கொண்டேற்றலின், பன்மைஒருமைமயக்கம். இதுகாறுங்கூறப்பட்டனவேயன்றி வேறும்பல அதிசயப்பொருள்கள் காஞ்சிநகரிலுள்ளன என்பதை "திண்டில் யாவையுஞ் செய்யபொன் னுக்குவ திறலின்-மாண்ட சித்தர்க ளெண்ணிலர் வழிபடப் படுவ-வேண்டி லென்னவு மளிப்பன மெய்த்தவ முடையோர்-காண்ட கும்பல விலிங்கமக் கடிநக ருளவால்" எனவும், "மீன மீளநெல் லரிதொறும் விளைவதோர் பழன-நாளின் வித்துமன் றேபய னல்குமோர் கழனி-நாளி னேருழ வின்றியே தகும்பயிர் விளைக்குங்-கோள தொன்றெனு வயல்கண்மூன் றுள்ளன குறிக்கில்"எனவும், தன்பகுப்பின் மூவரொடு முனிவர் விண்ணோர் பழிச்சிடவாழ் சதுர்முகனைக் காட்டுமொன்று- தன்பகுப்பின் மூவர்திரு முதலோர் சூழுந் திருமாலைச் சார்ந்தோர்க்குக் காட்டுமொன்று-தன்பகுப்பின் மூவரொடு க

ணங்கள் போற்றுந் தழற்கால ருத்திரனைக் காட்டு மொன்று- தன்பகுப்பின் மூர்த்திக ளோடென்றாழ் காட்டுந் தவிசொன்று மடங்கலனை நான்கு மன்னும்" எனவும், "எல் லியிடைப் பங்கயமும் பகற்கா லத்தி னிருங்கு முதச்செழும்போது மலர்ந்து தீந்தேன்- பில்குவதொன் றொருகாம்பின் முளரி மூன்று பிறங்குபுனற் றடமொன்று குளித்தோ ரெய்த-வல்லைவா னரத்துருவ மளிப்ப தொன்று மூழ்கினோர் மாற்றூர்க்குக் கொடிய தீ மை-நல்குவதொன் றூடினோ ருற்றூர்க் கின்ப நலந்தருவ தொன்றெனலாந் தடாக மை ந்தே" எனவும், "ஒன்றினோர் பெறக்கனக மாரி யொன்றி லிரசதமா மழையொன்றின் முத்து மாரி-யொன்றிலொளிர் குருவிந்த மாரி யொன்றில் வயிரமழை யொன்றில்வயி டூயமாரி-யொன்றிலொளி விடும்புருட ராக மாரி யொன்றிலடற் புள்ளேற்றுப் பச்சை மாரி-யொன்றினிலிந் திரநீல மாரி யொன்றிற் பொழியுமலர்ப் பொழிலிவையோ ரா ன்ப தோங்கும்" எனவும், தயிர்க்கூவல் பாற்கூவ னறுநெய்க் கூவன் மதுக்கூவல் செ ழுங்கருப்புச் சாற்றுக் கூவன்-மயக்கமற முத்திநெறி துறக்க மார்க்க மற்றுலகின் கதிகா ட்டு மும்மைக் கூவல்-வியப்பெய்த விழல் பிணிக்குங் கூவல் பாரின் வித்தின்றி நாறு செயும் விரிநீர்க் கூவ-லயர்ப்பின்றி யங்கணைந்தோர் மீளச் செய்யு மருங்கூவ லொடுங் கூவல் பதினொன் றூமால்" எனவும், "தன்னிடையெள் ளினைப்பெய்யின் மற்றோர் ஞா ங்கர்த் தயிலமெழச் செய்வதொரு செக்கு மொண்டு-மன்னுயிர்செய் வினைப்பயனைத் தா மே நல்குஞ் சிலையொன்று சிலைப்பாவை யொன்று மன்னுங்- கன்னிமதிற் காஞ்சிநகர் காவல் பேணுங் கருமேனி வயிரவமாக் கடவுள் பாத-நன்னடனச் சிலம்போசை யிடை யறாது நானிலத்தோர் வியப்பெய்தக் கேட்கு மோர்பால்" எனவும், "இன்னனவா மதிசய ங்கண் மற்று முள்ள வெல்லையிலை யவைமுழுது மறிவார் யாரே-முன்னுகத்தி னெல் லார்க்குங் காட்சி யெய்து மூண்டகொடுங் கலியுகத்திற் படிமை வாழ்க்கை- மன்னி னோர் சிலர்க்கன்றித் தோன்றா முத்தி மருவினர்க்கு மேலுலகின் வைத்த வண்ண- ம ன்னமலி வயற்காஞ்சி வரைப்பின் வாழ்வா ரகங்களிப்பக் கண்ணுதலா ரமைத்த வாறு ம்" எனவும் காஞ்சிப்புராணங்கூறுதலானறிக. (௧0௨)

தோட்டலர் வனசத் திசைமுகன் முன்னஞ் சொற்றன னவனடி வணங்கிக்
கேட்டருள் சனகன் வியாதனுக் குரைப்பக் கேடில்சீர் வியாதனங் குணர்ந்து
மாட்டுறு சூதன் றனக்கியம் புதலு மற்றவன் முனிவரர்க் கிசைத்த
பாட்டினி லடங்காக் காஞ்சியின் பெருமை பகர்ந்திடத் தமியனுக் கெளிதோ.

இ—ள்: தோடு அலர் வனச திசைமுகன் முன்னம் சொற்றனன்— இதழ் விரிந்ததாமரைமலரில் வீற்றிருக்கின்ற நான்குமுகங்களையுடைய பிரமதேவர் முற்கால த்திலே சொல்லினராக, அவன் அடி வணங்கி கேட்டருள் சனகன் வியாதனுக்கு உ ரைப்ப—அப்பிரமதேவரது பாதங்களை வணங்கிக் கேட்டருளிய சனகமுனிவர் வியாச முனிவர்க்குப் போதிக்க, கேடு இல் சீர் வியாதன் அங்கு உணர்ந்து மாட்டு உறு சூதன் தனக்கு இயம்புதலும்—அழிதலில்லாத கீர்த்தியினையுடைய வியாசமுனிவர் அச்சனக முனிவரிடத்துக் கேட்டுத் தம்பக்கத்திற்பொருந்திய சூதமுனிவர்க்குப் போதிக்க, அவ ன் முனிவரர்க்கு இசைத்த பாட்டினில் அடங்கா காஞ்சியின் பெருமை— கேட்ட சூத முனிவர் முனிசிரேட்டர்களுக்குப்போதித்த செய்யுளிலடங்காத காஞ்சிமான்மியமான து, பகர்ந்திட—சொல்லுதற்கு, தமியனுக்கு எளிதோ—சிறியேனுக்கு எளிதாகுமா? (ஆ காதே) எ—று.

முனிவரர் என்பதில் வரர் - தலைவர். ஓ எதிர்மறை. கெடுதலெ ன்னுந்தொழிற்பெயர் விகுதிகெட்டு முதனீண்டு கேடு என முடிந்தது. "அழலி னீங்கா னணுகா னஞ்சி-நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ டெத்திறத் தா சா னுவக்கு மத்

திற-மறத்திற்றிரியாப்படர்ச்சிவழிபாடே" என்றவாறு குருபத்திபூண்டு கேட்டவரென் பார் 'அவனடிவணங்கிக்கேட்டருள்சனகன்' எனவும் 'மாட்டுறுசூதன்' எனவும், அடித லைதடுமாறி நிலையழிந்த வேதங்களைப் பண்டுபோல் நிரைப்படுத்தி வகுத்தலால் வி யாதனென்னுங் காரணப்பெயர் பெற்றவராதலின் 'கேடில்சீர்வியாதன்' எனவும் கூ றினார்.

பாரம்பரியக்கிரமமாகக் கேட்ட சூதமுனிவராலுங் கூறிமுடித்தற்கரிதான காஞ்சிமான்மியத்தைச் சிறியேன் கூறிமுடிப்பதுமிக அரிது. ஆதலின், நமக்குப்புலப் பட்ட சிற்சில மான்மியங்களையே கூறினுமென்பதுதாற்பரியம்.

"உவரிசூ ழுலக வைப்பி னுரையமை கேள்வி சான்ற- கவிகளென் றுரைப் போர் தம்முட் காஞ்சியைப் புகழா ரில்லை-யவரெலாம் புகழ்ந்து மின்னு முலப்புறு வத ன்சீர் முற்றுஞ்-சிவசிறை கல்வி சாலாச் சிறியனோ ஒளக்க வல்லேன்" என்றார் காஞ்சி ப்புராணத்தாரும். (௧0௫)

வேறு.

சொற்படு மினைய காஞ்சித் தொன்னக ரதற்கு நாப்பண்
கற்புறு மிமைய வல்லி கருணையால் வைகி நோற்கும்
பொற்புறு காமக் கோட்டம் போலவே யதற்கோர் சாரி
லெற்படு குமர கோட்ட மென்றோரா லயமுண் டன்றே.

இ—ள்: சொல் படும் இனைய தொல் காஞ்சிநகர் அதற்கு நாப்பண்— புகழ் பொருந்திய இந்தப்பழைய காஞ்சீபுரத்தினடுவே, கற்பு உறும் இமையவல்லி கருணை யால் வைகி நோற்கும் பொற்பு உறு காமக்கோட்டம் போலவே—கற்புமிக்க இமையம லையரசன்புதல்வியாகிய உமாதேவியார் கிருபையோடுவீற்றிருந்து தவம்புரிகின்ற அ ழகுபொருந்திய காமக்கோட்டத்தைப்போலவே, அதற்கு ஓர் சாரில்— அக்காமக்கோட் டத்திற்கொருபக்கத்தில், எல் படு குமரகோட்டம் என்று ஒரு ஆலயம் உண்டு— ஒளி பொருந்திய குமரகோட்டம் என்று ஒரு திருக்கோயிலுள்ளது எ—று.

ஏகாரங்களிரண்டனுண் முன்னையது தேற்றம். பின்னையதும் அன்றும் அ சைகள். நகரதற்கு என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. வல்லி உவமவாகுபெயர். கருணையால் என்பதின் மூன்றனுருபு உடனிகழ்ச்சிப்பொருட்டு; "பண்டறியேன் கூற் றென் பதனை யினியறிந்தேன்-பெண்டகையாற் பேரமர்க் கட்டு" என்னுந் திருக்குறளி ற்போல. குமரகோட்டம்-குமாரக்கடவுளின் கோயில்.

தமதுதலைவராகிய சிவபெருமானையிகழ்ந்த தக்கனுக்கு மகளாயிருந்து பெற் ற தாக்ஷாயணியென்னும்பெயரையொழிப்பான் கருதி இமையமலையரசன்மகளாயவ தரித்தலின் 'கற்புறுமிமையவல்லி' எனவும், அத்தேவியார் ஆன்மாக்கள் நற்கதிபெறுத ற்பொருட்டுக் காமக்கோட்டத்திற்றவஞ்செய்தலால் 'இமையவல்லி கருணையால் வைகி நோற்கும் பொற்புறு காமக்கோட்டம்' எனவும், அக்காமக்கோட்டம்போலவே விசேடா லயமென்பார் 'காமக்கோட்டம்போலவே-குமரகோட்டமென்றோராலயமுண்டு' என வுங் கூறினார். (௧0௬)

ஆவதோர் குமர கோட்ட மதனிடை யரண்கண் வந்து
தூவுடை யெஃக மொன்றூற் சூர்முத றோலையச் செற்றுத்
தேவர்வெஞ் சிறையை மாற்றிச் சேண்மக பதிக்கு நல்கி
மேவிய குமர மூர்த்தி வியத்தக வுறையு மாதோ.

இ—ள்: அரன் கண் வந்து— சிவபெருமானுடைய நெற்றிக்கண்களினின்று (அனற்பொறிவடிவாக) அவதரித்து, தூ உடை எஃகம் ஒன்றால் சூர் முதல் தொலைய செற்று— தூய்மைபொருந்திய ஓர் வேற்படையினாற் சூரபன்மனாகிய முதல்வன் அழியும்படி கொன்று, தேவர் வெம் சிறையை மாற்றி—(அவனாலிடப்பட்டிருந்த) தேவர்களது கொடிய சிறையைநீக்கி, மகபதிக்கு சேண் நல்கி— தேவேந்திரனுக்குச் சுவர்க்கலோகராச்சியத்தைக் கொடுத்து, மேவிய குமர மூர்த்தி—எழுந்தருளிய குமாரக்கடவுள், ஆவது ஓர் குமரகோட்டம் அதனிடை— அத்தன்மையையுடைய குமரகோட்டத்தில், வியத்தக உறையும்—சிறப்புப்பொருந்த வீற்றிருப்பார் எ—று.

ஓர் மாது ஓ அசைகள். ஆவது அதுஎன்பதன்விகாரம். சூர்முதல் இருபெயரொட்டு. சேண் ஆகுபெயர். நூற்றெட்டுகங்காறும் நீக்கமின்றிக் கடுந்துயர்விளைத்த சிறையென்பார் 'வெஞ்சிறை' என்றார். (௧௦௫)

மேவருங் கூடன் மேலை வெற்பினி லலைவாய் தன்னி
லாவினன் குடியி னல்லே ரகந்தனிற் றணிகை யாதிப்
பூவுல குள்ள வெற்பிற் பொற்புறு மேனை வைப்பிற்
கோவில்கொண் டருளி வைகுங் குமரகோட் டத்து மேயோன்.

இ—ள்: மேவரும் கூடல் மேலை வெற்பினில்—அடைதற்கரிய மதுராபுரியின் மேற்றிசையிலுள்ள திருப்பரங்குன்றிலும், அலைவாய் தன்னில்—திருச்சீரலைவாயிலும், ஆவினன்குடியில்— திருவாவினன்குடியிலும், நல் ஏரகம் தனில்— நல்ல திருவேரகத்திலும், தணிகை ஆதி பூவுலகு உள்ள வெற்பில்—திருத்தணிகைமுதலிய நிலவுலகத்துள்ள மலைகளிலும், பொற்பு உறும் ஏனை வைப்பில்—அழகுபொருந்திய மற்றைய இடங்களிலும், கோயில் கொண்டருளி வைகும்— திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருப்பார், குமரகோட்டத்து மேயோன்—குமரகோட்டத்தில்வீற்றிருந்தருளுஞ் சுப்பிரமணியக்கடவுள் எ—று.

மேவ என்பதனீற்றகரந்தொக்கது. கூடன்மேலை வெற்பு- திருப்பரங்குன்று. "மாடமலிமறுகிற்கூடற்குடவயி-னிருஞ்சேற்றகல்வயல்விரிந்துவாயவிழ்ந்த-முட்டாட்டாமரைத்துஞ்சிவைகறைக்- கட்கமழ்நெய்தலூதியெற்படக்- கண்போன்மலர்ந்த காமர்சுனைமல-ரஞ்சிறைவண்டினரிக்கணமொலிக்குங்-குன்றமர்ந்துறைதலுமுரியன்" எனத் திருமுருகாற்றுப்படையாருங்கூறினர். அலைவாய்-திருச்செந்தூர். ஆவினன்குடி-பழனி. ஏரகம்-மலைநாட்டகத்தோர் திருப்பதி. தணிகையாதிப் பூவுலகுள்ளவெற்பு-குன்றுதோறாடற்றலங்கள். ஏனைவைப்பு- பழமுதிர்சோலைமுதலிய திருப்பதிகள். குமரகோட்டத்து மேயோன் திருப்பரங்குன்றாதியவற்றிற் கோயில்கொண்டருளுவரெனவே அத்தலங்களினுங் குமரகோட்டம்விசேடமுடைத்தென்பது குறிப்பாயிற்று. (௧௦௬)

வச்சிர மெடுத்த செம்மல் வைகிய துறக்கந் தன்னி
லச்சுதன் பதத்துக் கப்பா லானதன் பதத்தில் விண்ணோர்
மெச்சுறு கந்த வெற்பில் வீற்றிருந் தருளு மாபோற்
கச்சியிற் குமர கோட்டங் காதலித் தமருங் கந்தன்.

இ—ள்: வச்சிரம் எடுத்த செம்மல் வைகிய துறக்கம் தன்னில்—வச்சிராயுதத்தையேந்திய தேவேந்திரன் வசிக்கின்ற சுவர்க்கலோகத்திலும், அச்சுதன் பதத்துக்கு அப்பால் ஆன தன் பதத்தில்— விஷ்ணுலோகத்திற்குமேலுள்ள தமது கந்தலோகத்திலும், விண்ணோர் மெச்சுறு கந்தவெற்பில் வீற்றிருந்தருளுமா போல்- தேவர்கள் புகழ்ந்துகூறுகின்ற கந்தகிரியிலும் (விரும்பி) எழுந்தருளியிருப்பதுபோல, கச்சியில் குமர

கோட்டம் காதலித்து அமரும்— காஞ்சிநகரத்துள்ள குமரகோட்டத்தில் விரும்பி வீற்றிருந்தருளுவார், கந்தன்—சுப்பிரமணியக்கடவுள் எ—று.

மாதுலன்பதத்திலும் தம்பதத்திலும் பிதாவின்பதத்திலும் வசிப்பதுபோலக் குமரகோட்டத்திலும் உரிமைபூண்டு வசிப்பரென்பது தாற்பரியம்.

செம்மல்-தலைவன். வைகிய-இயற்கையான்வந்த காலவழுவமைதி. இவ்வாறு மேல்வருவனவுமன்ன. அச்சுதன் அழியாதவர்; அஃதுபசாரம். அருளுமாறுளன்பதி லீற்றுயிர்மெய்தொக்கது. (௧௦௭)

ஈண்டுளை தரணி முற்று மெல்லைதீர் வான வைப்பு
மாண்டகை மகவான் சீரு மம்புயன் முதலோர் வாழ்வு
மாண்டிடல் பிறத்த லின்றி மன்னிய வீடும் போற்றி
வேண்டினர் வேண்டி யாங்கு வேலவன் புரிந்து மேவும்.

இ—ள்: ஈண்டு உள தரணி முற்றும்— இங்குள்ள பூவுலகமுழுதையும், எல்லை தீர் வானவைப்பும்—முடிவில்லாத வானுலகமுழுதையும், ஆண்டகை மகவான் சீரும்—ஆண்டகைமையினையுடைய தேவேந்திரனது சிறப்பையும், அம்புயன் முதலோர் வாழ்வும்—தாமரைமலராசனராகிய பிரமாமுதலிய தேவர்களது வாழ்க்கையையும், மாண்டிடல் பிறத்தல் இன்றி மன்னிய வீடும்—இறத்தலும் பிறத்தலுமின்றி நிலைபெற்ற முத்தியையும், போற்றி வேண்டினர் வேண்டியாங்கு புரிந்து— (தம்மைத்) துதித்து யாசித்தோர் யாசித்தவாறே அருளி, வேலவன் மேவும்— வேலாயுததரராகிய குமாரக்கடவுள் (அக்குமரகோட்டத்தில்) எழுந்தருளியிருப்பார் எ—று.

தரணிமுற்றும் என்றது பூவுலகராச்சியத்தை; வானவைப்பாதியனவுமன்ன. வேண்டிய என்பதில் அகரந் தொக்கது. புண்ணியப்பயனுகர்ந்தொழிந்தபின் மீட்டும் பிறவியைத்தரும் போகபதவிகள் போலாது என்றுமழியாப் பேரின்பமாய் விளங்குதலின் 'மாண்டிடல்பிறத்தலின்றிமன்னியவீடு' என்றார். (௧௦௮)

கொண்டலை யளக்கு மொச்சிக் குமரகோட் டத்துச் செவ்வேள்
கண்டிகை வடமுந் தூநீர்க் கரகமுங் கரத்தி லேந்திப்
பண்டையி லயனை மாற்றிப் படைத்தருள் வேடந் தாங்கி
யண்டர்க ளெவரும் போற்ற வருள்புரிந் தமர்ந்தா னன்றே.

இ—ள்: கொண்டலை அளக்கும் ஒச்சி குமரகோட்டத்து—மேகமண்டலத்தை அளாவிய(உயர்ந்த)மதிலாற்சூழப்பெற்றஅக்குமரகோட்டத்தில், செவ்வேள்-குமாரக்கடவுள், கண்டிகை வடமும் தூ நீர் கரகமும் கரத்தில் ஏந்தி- சபமாலையையும் சுத்தமாகிய நீரினையுடைய கமண்டலத்தையுந் திருக்கரத்திற்றாங்கி, பண்டையில் அயனை மாற்றி படைத்தருள் வேடம் தாங்கி—முன்னாளிற்(பிரணவப்பொருள்கூறாமையாற்) பிரமதேவரைவிலக்கிப் படைத்தற்றொழினடாத்தியருளிய திருக்கோலத்தைக்கொண்டு, அண்டர்கள் எவரும் போற்ற அருள்புரிந்து அமர்ந்தான்— தேவர்கள்யாவருந்துதிக்க (அவ்வவர்க்கேற்றவாறு) திருவருள்செய்து வீற்றிருந்தருளினார் எ—று.

அன்று ஏ அசைகள். குமரகோட்டத்து அமர்ந்தான் என இயையும். குமாரக்கடவுள் படைத்தற்றொழில்செய்த திருக்கோலத்துடன் குமரகோட்டத்தில் வீற்றிருத்தலை "புள்ளிமான் றோலுடுக்கை முஞ்சிநாணரைப்பொலிய வக்கமாலை-தெள்ளுநீர்க் குண்டிகையுங் கரத்தொளிரத் திருக்குமர கோட்ட மென்னு- முள்ளியோர் பிறப்பறுக்கு மாச்சிரமந் தனிதிருந்தா னுறுவர் போற்ற- வள்ளியா ரிணைக்களப

மணிக்கலச முலைதிளைக்கும் வாகைத் தோளான்" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானறிக. படைத்தற்றொழில் செய்தகாலத்திற் பெருமான்கொண்டருளிய வேடமிது வென்பதை மேல் அயனைச்சிறைபுரிபடலத்துப் பதினேழாஞ்செய்யுளாலுணர்க. ')

ஆயதோர் காஞ்சி மூதூ ரதனிடை யம்பு யத்தின்
மேயவன் றனது புந்தி விமலமாம் பொருட்டான் மேனாண்
மாயவன் கமட மாகி வழிபடு தலத்தின் முக்க
ணாயகன் றனையர்ச் சித்து நாமக ளுடனாங் குற்றான்.

இ—ள்: அம்புயத்தில் மேயவன்—தாமரைமலராசனத்தில் வசிக்கும் பிரமதேவர், தனது புந்தி விமலம் ஆம் பொருட்டால்— தம்முடைய மனம் பரிசுத்தமுறும் பொருட்டாக, ஆயது ஓர் மூது காஞ்சி ஊர் அதனிடை— அத்தன்மைத்தாகிய பழைய காஞ்சிநகரின்கண், மாயவன் மேனாள் கமடம் ஆகி வழிபடு தலத்தில்-விஷ்ணுமூர்த்தி முன்னைநாளில் ஆமையுருக்கொண்டு பூசித்த கச்சபாலயத்தில், முக்கண் நாயகன் தனை அர்ச்சித்து-மூன்றுதிருக்கண்களையுடைய தலைவராகிய சிவபெருமானைப் பூசித்துக்கொண்டு, நாமகளுடன் ஆங்கு உற்றான்- சரசுவதிதேவியுடன் அத்தலத்தில் இருந்தார் எ-று.

ஆயது அது என்பதன்விகாரம். கச்சபாலயத்தில் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் பூசித்தன ரென்பதை முன் அறுபத்தொன்பதாஞ்செய்யுளாற்றெள்ளிதினுணர்க. (கக0)

உற்றிடு கின்ற நாளி னுலகினில் லறத்தை யாற்றி
நற்றவம் பலவும் போற்றி நண்ணிய முனிவ ரெல்லா
மற்றவ ணேகிக் கஞ்ச மலர்மிசை யிருந்த வையன்
பொற்றிரு வடியைத் தாழ்ந்து போற்றினர் புகல லுற்றார்.

இ—ள்: உற்றிடுகின்ற நாளில்—(அவ்வாறு பிரமதேவர்) வசிக்கின்ற நாட்களில், இல்லறத்தை ஆற்றி நல் தவம் பலவும் போற்றி உலகில் நண்ணிய முனிவர் எல்லாம்—கிருகஸ்ததருமத்தை இயற்றி நல்ல பலவகைத்தவங்களையும் பேணிப் பூவுலகத்திலிருந்த முனிவரனைவரும், அவண் ஏகி—அவ்விடத்திற்போய், கஞ்சமலர் மிசை இருந்த ஐயன் பொன் திரு அடியை தாழ்ந்து போற்றினர் புகலலுற்றார்—தாமரைமலராசனத்தின்மேல் வீற்றிருக்கின்ற தலைவராகிய பிரமதேவரது அழகிய திருவடிகளை வணங்கித்துதித்து விண்ணப்பஞ்செய்வாராயினார் எ—று.

மற்று அசை. போற்றினர்-முற்றெச்சம். ஈண்டு நற்றவம் என்றது இல்லறத்திற்செயற்பாலனவாகிய கடவுள்வழிபாடு விரதானுட்டானம் முதலியவற்றை. இல்லறத்தை இனிது நடாத்திச்சித்திபெற்றுத் துறவறத்திற்பிரவேசிக்கும் பரிபக்குவமுடையரென்பார் 'இல்லறத்தையாற்றிநற்றவம்பலவும்போற்றிநண்ணியமுனிவர்' என்றார். (ககக)

அத்தகே ளிந்நாள் காறு மடியமில் லறத்தை யாற்றி
யித்தல நகர மெங்கு மிருந்தன மினிமே னாங்கள்
சித்தம தொருங்க நோற்றுச் செய்கட னிபற்றி வைக
மெய்த்தவ வனம தொன்றை விளம்பியே விடுத்தி யென்றார்.

இ—ள்: அத்த கேள்—ஐயனே! கேட்டருளுக, அடியம் இந்நாள் காறும் இல்லறத்தை ஆற்றி இ தல நகரம் எங்கும் இருந்தனம்—அடியேங்கள் இன்றுவரையும் இல்லறத்தை நடாத்திக்கொண்டு இந்தப்பூவுலகத்திலுள்ள நகரங்களெங்கும் இருந்

தோம்—இனிமேல் நாங்கள் சித்தமது ஒருங்க நோற்று செய் கடன் இயற்றி வைக— இனி யாங்கள் மனமொருவழிப்படத் தவஞ்செய்து செய்யவேண்டியநித்தியகர்மங்களை யுமியற்றி வசித்தற்கு, மெய் தவவனமது ஒன்றை விளம்பி விடுத்தி என்றார்—மெய்ம் மையாகிய ஒருதபோவனத்தைச்சொல்லி அனுப்புவீராக என்று விண்ணப்பஞ்செய்தா ர்கள் எ—று.

ஏ அசை. அத்த-அண்மைவிளி. இனிமேல் ஒரு பொருட்கிளவிகள். வைக என்னுமெச்சங்காரியப்பொருட்டு. துறவறத்திற்புகுந்து செய்யுந்தவமாதலின் 'சித்தம தொருங்கநோற்று' எனவும், அதற்கேற்ற புண்ணியஸ்தானமென்பார் 'மெய்த்தவவன ம்' எனவும் கூறினர். (கக௨)

என்றலுந் தருப்பை யொன்றை யேழுல களித்தோன் வாங்கி
யொன்றொரு திகிரி யாக்கி யொய்யென வுருட்டிப் பாரி
லின்றிதன் பின்ன ராகி யெல்லிரு மேகி யீது
நின்றிடும் வனத்தி னூடே நிலைப்பட விருத்தி ரென்றான்.

இ—ள்: என்றலும்— என்றிவ்வாறு முனிவர்கள் வேண்டுதலும், ஏழுலகு அளித்தோன் தருப்பை ஒன்றை வாங்கி—ஏழுலகங்களையும் படைத்த பிரமதேவர் ஒரு தருப்பையைக் (கையில்) எடுத்து, ஒன்றொரு திகிரி ஆக்கி பாரில் ஒய்யென உருட்டி- (வளைத்து) ஒருசக்கரமாக்கி விரைவிற் பூமியில் உருட்டி, எல்லிரும் இன்று இதன்பின் னர் ஆகி ஏகி—(முனிவிர்காள்!)நீவிர் அனைவீரும் இப்பொழுது இந்தத் தருப்பைநேமி யின்பின்னாகத்தொடர்ந்துபோய்,ஈது நின்றிடும் வனத்தின் ஊடே நிலைப்பட இருத்திர் என்றான்— இதுஒய்கின்றவனத்தின்கண்ணே நிலையாகவசிப்பீர் என்று கூறினர் எ-று.

இது ஈது எனநீண்டது. ஏ தேற்றம். ஏழுலகெனப் பொதுப்படக் கூறின மையால் மேலேழுலகங்களையும் கீழேழுலகங்களையும் கொள்க. (ககங)

திருப்பது மத்து வள்ளல் சேவடிக் கமலந் தாழா
விருப்பொடு விடைகொண் டேக விரைவினி லன்னான் விட்ட
தருப்பையி னேமி சென்றோர் தனிவனத் திறுத்த லோடு
மிருப்பிட மெமக்கீ தென்னா விருந்தவ ரிருந்தா ரங்ஙன்.

இ—ள்: திரு பதுமத்து வள்ளல் சே அடி கமலம் தாழா—(அதுகேட்ட மு னிசிரேட்டர்கள்) அழகிய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற அருள்வள்ளலாகிய பிரம தேவரது சிவந்த பாதாரவிந்தங்களை வணங்கி, விருப்பொடு விடை கொண்டு ஏக—வி ருப்பத்தினுடனே அநுமதிபெற்றுக்கொண்டு (பின்) செல்ல, அன்னான் விட்ட தருப் பையின் நேமி விரைவினில் சென்று ஓர் தனி வனத்து இறுத்தலோடும்—அப்பிரமதே வர் உருட்டிய தருப்பைச்சக்கரம் சீக்கிரத்திற்போய் ஒரு ஒப்பற்றவனத்தில் ஒய்தலும், இரும் தவர்— பெரிய தவத்தையுடைய முனிவர்கள், எமக்கு இருப்பிடம்ஈது என்னா- எமக்கு இருப்பிடம் இதுவேயென்று மதித்து, அங்ஙன் இருந்தார்—அவ்விடத்தில் இரு ந்தார்கள் எ—று.

தக்கதபோவனத்தை எளிதினிச்சயித்தனராதலின், பிரமதேவரை 'வள்ள ல்' எனவும், தருப்பைநேமியாண்டு தங்குமோ எவ்வனம் நமக்கிருக்கையாகுமோ என் று, விரைவிற்றெளிந்துகொள்ளுமாவலோடு சென்றனரென்பார் 'விருப்பொடு ஏக' எ னவும், அவ்வாறுசென்றுழி, அச்சக்கரம் அவர் வசித்துத் தவம்புரிதற்கேற்ற வனத்தி ற்றங்கியதென்பார் 'தனிவனத்திறுத்தலோடும்' எனவும், அதனல் அம்முனிவர்க

ள்யாவருந் தமதாசங்கைதவிர்ந்து வசித்தனரென்பார் 'இருப்பிடமக்கீதென்ன-இருந் தாரக்ஙன்' எனவும் கூறினர்.

நைமிசாரணியச்சிறப்பை, "கங்காஹிமவதோயத்ரசந்த்ரமண்டலவிஸ்ருதா|| அவதீர்ணாவநீபாகேபகீரதபதாநுகா| சம்போ:கபர்த்தவிலஸத்கிருதமாலாஸ்ரகந்திநீ|| தயாதந்நைமிசம்புண்யம்ஸர்வலோகைகபாவனம்| நாநாமுனிகணைகீர்ணம்நாநாமிருகஸமாகுலம்|| நாநாபக்ஷிகணாலாபமுகரீகிருதபாதபம்| ஸ்னிக்தச்சாயாதருலதாஸம்சன்னப்ருதுவீதலம்|| அச்சாச்சஸ்வாதுபாநீயமதிஸ்னிக்ததருச்சடம்| ததாஸீத்தபஸஸ்தேஷாமுசிதந்நைமிசந்ததா||" என முதனூல்கூறுதலாலறிக. (ககச)

> தாமரை யண்ண லுய்த்த தருப்பைபி னேமி தன்னு
> ணாமம தொன்று பெற்ற நைமிசா ரணியம் வைகுந்
> தூமுனி வரர்க ளெல்லாஞ் சொல்லருந் தவத்தை யாற்றி
> மாமறை நெறியி னின்று மகமொன்று புரித லுற்றார்.

இ—ள்: தாமரை அண்ணல் உய்த்த தருப்பையின் நேமிதன்னால் ஒன்று நாமமது பெற்ற நைமிசாரணியம் வைகும்--தாமரைமலரிலிருக்கின்ற பிரமதேவர் உருட்டிய தருப்பைச்சக்கரத்தால் ஓர் பெயரைப்பெற்றுக்கொண்ட நைமிசாரணியத்தில்வசிக்கின்ற, தூ முனிவரர்கள் எல்லாம்—தூய்மையினையுடைய முனிசிரேட்டர்கள் யாவரும், சொல்லரும் தவத்தை ஆற்றி மா மறை நெறியில் நின்று—சொல்லுதற்கரிய தவத்தைச்செய்து மகிமையினையுடைய வைதிகமார்க்கத்தில் அமைந்துநின்று, மகம் ஒன்று புரிதலுற்றார்—ஓர் யாகத்தைச்செய்வாராயினர் எ—று.

நைமிசாரணியம்- சக்கரமோய்ந்துவிழுந்தவனம். நேமி-சக்கரம். ச- ஶோ என்னுந்தாதுவினடியாகப் பிறந்தது; ஒழிதல் என்பது பொருள். அரணியம்-வனம். இப்பொருளடங்கிய காரணப்பெயராதலின் 'தாமரையண்ணலுய்த்ததருப்பையினேமிதன்னா-ணாமமதொன்றுபெற்றநைமிசாரணியம்' என்றார். இதனை "ததஸ்துநேமிஸ்ஸாக்வாபிசாருச்லக்ஷணசிலாதலே| சீர்ணதைரந்விதாரண்யேதத்வநந்தேநநைமிசம்" என முதனூல்கூறுதலாலுமுணர்க.

"மற்றதிற் பிரமா கமமுறை தருமம் விசேடமா மாயனு கமஞ்சொ-னற்றருமந்தா னதனினும் விசேட மதனினு நயச்சைவா கமஞ்சொல்-பொற்றருமந்தான் விசேடமாம் புகலி ததசுரோ தோபவ மென்றும்-பற்றறு சீர்சா லூர்த்துவ சுரோதோ பவமென்று மிருவகைப் படுமால்,———மூன்னது காபா லாதியே தத்தான் மொழிபல விதப்படு மதனிற்-பின்னது காமி காதியே தத்தாற் பேசிடு மிருபத்தெண் வகையாய்-மன்னிடு மீது விசேடமா மிதனின் வைதிக தருமமுந் தமமாம்" எனச் சூதசங்கிதையும், "மறைவழி மதங்கட் கெல்லா மறைபிர மாணம் பின்சென்-றறைதரு மிருதி யெல்லா மவைக்கறு குணமா மின்ன- முறையினன் மார்த்த மென்று மொழிவதம் மார்த்தஞ் சேர்ந்த-துறைகள்ளவ திகமா மேலாச் சொல்வதிச் சுத்த மார்க்கம்"எனத்திருவிளையாடற்புராணமுங் கூறியவாறு சிறப்புடைமையின் 'மாமறைநெறி' என்றார்.

மகமொன்று என்றது பதினெண்யாகங்களுட் சிறந்த சத்திரயாகத்தை "ததஸ்ஸத்ரம்ஸமாரப்தம்ஸஹஸ்ரஸமஸம்ஜ்ஞிதம்|" என முதனூலும், "சீற்றங்காமமயக்கமறவெறிந்துஞானப்பொருடேர்ந்து-மாற்றவரியபுலனைந்துமடக்குமறைதேர்முனிவோர்கள்- போற்றும்பருவமீராறுபுரியுமுயர்சத்திரயாக- மாற்றுநைமிசாரணியத்தருள்கூர்சூதமுனியடைந்தான்" எனக்கூர்மபுராணமுங்கூறும். (ககரு)

அகனமர் புலனோர் நான்கு மான்றமை பொருட்டா லாங்கோர்
மகவினை செய்து முற்றி வாலிதா முணர்ச்சி யெய்தி
யிகலறு முளத்த ராகி யிருந்தன ரிதனை நாடிச்
சுகனென வுணர்வு சான்ற சூதமா முனிவன் போந்தான்.

இ—ள்: அகன் அமர் புலன் ஓர் நான்கும் ஆன்று அமை பொருட்டால்—தமக்குள்ளே பொருந்திய கரணங்களுன்கும் ஒருமித்து அடங்கும்பொருட்டு, ஆங்கு ஓர் மகவினை செய்து முற்றி— அந்த நைமிசாரணியத்து ஒரு வேள்வியைச் செய்துமுடித்து, வாலிது ஆம் உணர்ச்சி எய்தி—களங்கமற்ற அறிவைப்பொருந்தி, இகல் அறும் உளத்தர் ஆகி இருந்தனர்—குற்றமற்ற மனத்தையுடையவர்களாகி இருந்தார்கள், சுகன் என உணர்வு சான்ற சூத மா முனிவன் இதனை நாடி போந்தான்—சுகப்பிரமரிஷியைப்போலப் பேருணர்வுசிறந்த சூதமாமுனிவர் இத்தன்மையை அறிந்து (அவ்வனத்தில்) வந்தார் எ—று.

அகனமர் புலன்=அந்தக்கரணம்; அவைநான்காவன: மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன. இகல்என்றது-காமமுதலிய அறுவகைக்குற்றங்களை. சுகன்-கிளிமுகமுடையவர்; சுகம் - கிளி. பிறக்கும்போதே பூர்வஞானத்தோடும் பிறந்தவராதலால் அவரையுதாகரித்து 'சுகனென்னவுணர்வுசான்றசூதன்' என்றார். (ககசு)

முழுதுணர் சூதன் றன்னை முனிவரர் கண்டு நேர்போய்த்
தொழுதனர் பெரியோ யெம்பாற் றுன்னலா லின்ன வைகல்
விழுமிது சிறந்த தென்று வியத்தகு முகமன் கூறித்
தழையொடு தருப்பை வேய்ந்த தம்பெருஞ் சாலை யுய்த்தார்.

இ—ள்: முனிவரர் முழுது உணர் சூதன்றன்னை கண்டு- (அங்குள்ள சௌனகாதி) முனிசிரேட்டர்கள் எல்லாநூல்களையும் (ஒருங்கு) உணர்ந்த அந்தச் சூதமாமுனிவரைப்பார்த்து, நேர்போய் தொழுதனர்—எதிர் சென்று வணங்கி, பெரியோய் எம்பால் துன்னலால் இன்ன வைகல் விழுமிது சிறந்தது என்று வியத்தகும் முகமன் கூறி—ஸ்வாமீ!(தேவரீர்) எம்மிடத்து வருதலால் இந்தத்தினம் நன்மையுடைத்தாய்ச்சிறந்ததென்று பெருமைமிக்க உபசாரவார்த்தைகளைக்கூறி, தழையொடு தருப்பை வேய்ந்த தம்பெரும் சாலை உய்த்தார்-தழைகளாலும் தருப்பைகளாலும் வேயப்பட்டுள்ள தமதுபெரிய பன்னசாலையினுட்புகுவித்தார்கள் எ—று.

விழுமிது குறிப்புமுற்றெச்சம். தொழுதனர் தெரிநிலைவினைமுற்றெச்சம். ஒடு எண். (ககஎ)

திருக்கிளர் பீட மொன்று திகழ்தர நடுவ ணிட்டுச்
சுருக்கமில் கேள்வி சான்ற சூதனை யிருத்தி யாங்கே
யருக்கிய முதல நல்கி யவனது பாங்க ராகப்
பொருக்கென யாருஞ் வைகி யிஃதொன்று புகல லுற்றார்.

இ—ள்: திரு கிளர் பீடம் ஒன்று திகழ்தர நடுவண் இட்டு—சிறப்புமிக்க ஓராசனத்தை விளங்கும்படி நடுவே இட்டு, சுருக்கம் இல் கேள்வி சான்ற சூதனை ஆங்கு இருத்தி—சுருங்குதலில்லாத நூற்கேள்வி மிகுந்த சூதமுனிவனை அவ்வாசனத்திலெழுந்தருளச்செய்து, அருக்கியம் முதல நல்கி—அருக்கிய முதலிய மூன்றையுங் கொடுத்து, அவனது பாங்கர் ஆக யாரும் பொருக்கென வைகி— அச்சூதமுனிவரது பக்கத்தில் அம்முனிவர்கள் யாவரும் விரைவில் இருந்து, இஃது ஒன்று புகலலுற்றார்—இந்த ஓர் வார்த்தையைச் சொல்வாராயினார்கள் எ—று.

அருக்கியமுதலஎன்றது அர்க்கியம் பாத்தியம் ஆசமனம் என்பனவற்றை.பொருக்கு-விரைவுக்குறிப்பு.இஃதொன்றுஎன்றது மேல்வரும்வாசகத்தை. தமதாசனங்களினுஞ்சிறந்ததொன்றைக்கொணர்ந்து தாம் இருபுடைகளினுஞ் சூழ்ந்திருத்தற்கேற்றவாறிட்டனரென்பார் 'திருத்திகழ்பீடமொன்று திகழ்தரநுவணிட்டு' எனவும், அவ்வாறு அம்முனிவரவையில்அக்கிராசனத்திருத்தற்கும், உபசரிக்கப்படுதற்குமேற்ற பேரறிவாளரென்பார் 'சுருக்கமில் கேள்விசான்றசூதன்' எனவும் கூறினர். (கக௮)

முந்தொரு ஞான்று தன்னின் முளரியந் தேவன் சொல்லால்
வந்திவ ணிருந்தே மாக மற்றியாம் புரிந்த நோன்பு
தந்தது நின்னை யற்றாற் றவப்பயன் யாங்கள் பெற்றேஞ்
சிந்தையி னுவகை பூத்தேஞ் சிறந்ததிப் பிறவி யென்றார்.

இ—ள்: முந்து ஒரு ஞான்று தன்னில்—முன்னொருதினத்தில், முளரியம் தேவன் சொல்லால் இவண் வந்து இருந்தேமாக— தாமரைமலரிலிருக்கின்ற பிரமதேவரது கட்டளைப்படி இவ்விடத்துவந்து இருக்க, யாம் புரிந்த நோன்பு நின்னை தந்தது—யாஞ்செய்த தவம் தேவரீரை(இங்கே)கொணர்ந்தது, அற்றால் யாங்கள் தவப்பயன் பெற்றேம்-அதனால் யாங்கள்(இந்நாள்காறுஞ்செய்த) தவத்தின்பிரயோசனத்தைப்பெற்றுக்கொண்டோம், சிந்தையின் உவகை பூத்தேம்-மனத்தில் மகிழ்ச்சிமிகுந்தோம், இ பிறவி சிறந்தது என்றார்-இந்தப்பிறவி சிறப்புற்றது என்று இன்சொற்கூறினர்கள் எ-று.

புராணசரித்திரங்களைப்போதித்தருளுமாறு பின்னர்ப்பிரார்த்திக்குங்கருத்துடையராதலின் அதற்கேற்ப, ஸ்வாமிகளது வரவினுற் பெரும்பேறுடையமாயினமென்பதுதொனிப்ப, 'யாம்புரிந்தநோன்புதந்தநின்னையற்றாற்றவப்பயன்யாங்கள்பெற்றேஞ் சிந்தையினுவகைபூத்தேஞ்சிறந்ததிப்பிறவி' என்று முனிவர் முகமன்கூறினர். ()

அன்னது சூதன் கேளா வாதியம் பரனை யேத்தி
மன்னிய வேள்வி யாற்றி வாலறி வதனை யெய்தித்
துன்னிய முனிவிர் காணுந் தொல்குழு வடைத லன்றோ
வென்னிக ராயி னோருக் கிம்மையிற் பெறும்பே றென்றான்.

இ—ள்: சூதன் அன்னது கேளா-சூதமுனிவர் அவ்வார்த்தையைக்கேட்டு,ஆதியம் பரனை ஏத்தி மன்னிய வேள்வி ஆற்றி வால் அறிவு அதனை எய்தி துன்னிய முனிவிர்காள்— முதற்கடவுளாகிய சிவபெருமானைத்துதித்து நிலைபெற்ற யாகங்களைச்செய்து (அதனாற்) பரிசுத்தமாகிய அறிவைப்பெற்று வசிக்கின்ற முனிவர்களே!, நும் தொல் குழு அடைதல் அன்றோ—(சற்சனர்களாகிய)உங்களது பழையகூட்டங்களைச் சார்தலல்லவா, எம் நிகர் ஆயினோருக்கு இம்மையில் பெறும் பேறு என்றான்—எம்மைப்போன்றவர்களுக்கு இப்பிறப்பிற் பெற்றுக்கொள்ளவேண்டிய பிரயோசனம் என்று கூறினர் எ-று.

"எச்சமொன்றேயிருமையினு மேலாமிமையோர்க் குவப்பாவ-தெச்சமொன்றேமகத்திறையா மெம்மான் விழையப் படுமெதுவு-மெச்சமொன்றே நனிசாலச் சிறந்த பொருளு மிருங்கரும-வெச்ச நிகர்வே றில்லையெனப் பரத்து வாச னியம்பினனால்" என்றுகூறிய விசேடமுடைமையின் 'மன்னியவேள்வி' என்றார். (க௨0)

அவ்வழி முனிவர் சொல்வா ரருமறை கண்ட வண்ணல்
செவ்விய மாணுக் கர்க்குட் சிறந்துளோய் திறற்சூ ராவி
வவ்விய நெடுவே லண்ணன் மாண்கதை தேர்வான் பன்னா
ளிவ்வொரு நசைகொண் டுள்ளே மியம்புதி யெமக்க தென்றார்.

இ—ள்: அவ்வழி முனிவர் சொல்வார்-அவ்வாறு சூதமுனிவர் கூறியபொழுது சௌனகாதிமுனிவர்கள் கூறுவார்கள் (எவ்வாறெனில்), அரு மறை கண்ட அண்ணல் செவ்விய மாணாக்கர்க்குள் சிறந்துளோய்-அரியவேதங்களை ஓதாதுணர்ந்த வியாசமுனிவரது நல்ல மாணாக்கருட் சிறந்தவரே!, திறல் சூர் ஆவி வௌவிய நெடு வேல் அண்ணல் மாண் கதை தேர்வான்— வலிமைபொருந்திய சூரபன்மனது உயிரைக்கவர்ந்த நெடிய வேற்படையைத்தரித்த குமாரக்கடவுளின் மாட்சிமைபொருந்திய சரித்திரத்தைக்கேட்கும்படி, இ ஒரு நசை பல் நாள் கொண்டுள்ளேம்—இந்த ஒருவிருப்பத்தைப் பலநாளாகக்கொண்டிருக்கின்றோம் (ஆதலால்), எமக்கு அது இயம்புதி என்றார்—எங்களுக்கு அச்சரித்திரத்தைச்சொல்வீராக என்று பிரார்த்தித்தார்கள் எ—று.

தம் பிரார்த்தனையை வெளிப்படுத்தியவழி மறாதுஅருள்புரிவரென்பதை அவர்கூறியவசனத்தாலுணர்ந்தபின் கூறினரென்பார் 'அவ்வழி-சொல்வார்'எனவும்,புராணம் போதித்தற்கேற்ற தகைமையுடையீரென்பார் 'அருமறைகண்டவண்ணல்செவ்வியமாணாக்கர்க்குட்சிறந்துளோய்' எனவும், திருவவதாரமுதற்றிருமணமீறாகவுள்ள சரித்திரமென்பார் 'மாண்கதை' எனவுங் கூறினார். (க௨க)

அம்மொழி சூதன் கேளா வழல்படு மெழுகே யென்னக்
கொம்மென வுருக வுள்ளங் குதூகலித் தவச மாகி
மெய்ம்மயிர் பொடிப்பத் தூநீர் விழித்துணை யரும்ப வாசான்
பொய்ம்மையில் படிவ முன்னித் தொழுதிவை புகல லுற்றான்.

இ—ள்: சூதன் அ மொழி கேளா—சூதமுனிவர் அந்த வாசகத்தைக்கேட்டு, உள்ளம் அழல் படும் மெழுகே என்ன கொம்மென உருக-மனமானது அக்கினியிற்பட்ட மெழுகையேபோல விரைவாக இளக— குதூகலித்து அவசம் ஆகி—பெருமகிழ்ச்சிகொண்டு பரவசமாகி, மெய் மயிர் பொடிப்ப—சரீரத்திலுள்ள ரோமங்கள் புளகங்கொள்ள, தூ நீர் விழித்துணை அரும்ப—சுத்தமாகிய ஆநந்தபாஷ்பம் இரண்டுகண்களினும் தோன்ற, ஆசான் பொய்ம்மை இல் படிவம் முன்னி தொழுது—தமது ஆசிரியராகிய வியாசமுனிவரது பொய்யற்றசொரூபத்தைத் தியானித்துக் கைதொழுது, இவை புகலலுற்றான்—இவ்வாசகங்களைக் கூறத்தொடங்கினார் எ—று.

கொம்-ஒலிக்குறிப்பு. பொய்ம்மையில்படிவம்-மெய்வேடம். இவை என்றது மேற்கூறப்படுவனவற்றை. (க௨௨)

மன்னவன் மதலை யாசான் மாமகன் றனது மைந்தன்
பன்னுசொற் கொள்வோ னீவோன் வழிபடு பண்பின் மிக்கோ
னென்னுமிங் கிவருக் கீவ தேனைநூ லுங்கள் போலச்
செந்நெறி யொழுகு வார்க்கே செப்புவன் புராண முற்றும்.

இ—ள்: மன்னவன் மதலை—அரசனது புதல்வனும், ஆசான் மா மகன்—ஆசிரியனது சிறந்த புதல்வனும், தனது மைந்தன்—தன்னுடைய புதல்வனும், பன்னு சொல் கொள்வோன்— கூறியசொற்களை இனிது விளங்கிக்கொள்பவனும், ஈவோன்—பொருள்கொடுப்பவனும், வழிபடு பண்பில் மிக்கோன்—வழிபாடுசெய்கின்ற குணத்தின்மேம்பட்டவனும், என்னும் இங்கிவருக்கு ஈவது ஏனை நூல்—என்று சொல்லப்படுகின்ற இந்த நன் மாணாக்கர்களுக்குப் போதிப்பது மற்றையநூல்களாம், உங்கள் போல செம் நெறி ஒழுகுவார்க்கே புராணம் முற்றும் செப்புவன்— உங்களைப்போலச்சன்மார்க்கத்திலொழுகுவோர்களுக்கே புராணங்கள் முழுவதையும் போதிப்பேன் எ—று.

"தன்மக ளுசான் மகனே மன்மகன்- பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே-யுரைகோ ளாளற் குரைப்பது நூலே" என்றின்னவாறு பிறர்வரையறுத்துக் கூறிய நன்மாணுக்கரனைவரும் புராணமல்லாத பிறநூல்களையே கேட்டற்குரியர்; அவருள், ஐம்புலனடக்கியருந்தவம்புரியுந் தூய்மையுடைய மகான்களே புராணங்கேட்டற் குரியரென்பதாம்.

இங்கிவர் ஒருசொல்; இவ்வாறு பின்வருவனவுமன்ன. ஏ பிரிநிலை. புராண முற்றும் என்றது பதினெண்புராணங்களை. (கஉரு)

தனைநிகர் பிறரின் றாய சண்முகற் கன்பு சான்ற
முனிவிர்கா ளுரைப்போர் கேட்போர் முத்திசேர் காந்தத் துண்மை
வினவினீ ரதனை யின்னே விளம்புவன் புலன்வே றின்றி
யினிதுகேண் மின்க ளென்று வெடுத்திவை யியம்ப லுற்றான்.

இ—ள்: தனை நிகர் பிறர் இன்று ஆய சண்முகற்கு அன்பு சான்ற முனிவிர்காள்—தம்மையொப்பார் பிறர் (ஒருவரும்) இல்லாத ஆறுமுகப்பெருமானிடத்து அன்புமிகுந்த முனிவர்களே!, உரைப்போர் கேட்போர் முத்தி சேர் காந்தத்து உண்மை வினவினீர்—போதிப்பவர்களும் கேட்பவர்களும் மோக்ஷமடைதற்கேற்ற காந்தபுராணத்தின் மெய்ச்சரித்திரத்தைக் (கூறும்படி) கேட்டீர்கள் (ஆதலால்), அதனை இன்னே விளம்புவன்—அச்சரித்திரத்தை இப்பொழுதே சொல்வேன், புலன் வேறு இன்றி இனிது கேண்மின்கள் என்று— ஐம்புலன்களையும் வேறுவிஷயத்திற் செலுத்துதலின்றி நன்றாகக்கேட்குதிரென்றுகூறி, இவை எடுத்து இயம்பலுற்றான்—இவற்றை எடுத்துக் கூறுவாராயினர் எ—று.

விசேடப்பயனாகிய முத்தியைக்கூறினரேனும் முன்னையவாய அறமுதலியவற்றையும் உபலக்கணத்தானமைத்துக்கொள்க. புலன்வேறின்றியென்றது ஐம்புலன்களையும் செவிவழிச்செலுத்துதலை. இவை-மேற்கூறப்படுவன.

காப்பியத்தலைவராதற்கேற்ற சிறப்புடையரென்பதுபோதர 'தனைநிகர்பிறரின்றாயசண்முகன்' எனவும், கேட்போராகிய நைமிசாரணியவாசிகட்கேயன்றித்தமக்கும் பயன்றருமென்பார் 'உரைப்போர்கேட்போர்முத்திசேர்காந்தம்' எனவும், புராணங்கேட்பார்க்குவேண்டிய இலக்கணம்யாவுங் குறைவற அமையவென்பார் 'இனிது' எனவுங் கூறினர்.

காந்தபுராணம் படித்தோருங்கேட்டோரும் பெறும் நன்மைகளை "ஏவம்ச்ருதேபுராணேஸ்மிக்சுலோகம்சுலோகார்த்தமேவவா|| சதுர்ணாமபிவேதாநாம் ஷடங்கபதவிக்ரமை:| ஜபதோயத்பலம்லோகேசிரத்தயாகோடிஸம்க்யயா|| தத்பலம் கோடிகுணிதம்சிரத்தாவாங்லபதேபலம்| சதாநாமபியஜ்ஞாநாமச்வமேதாபிதாவதாம்|| ஷோடசாநாஞ்சதாநாநாம்பலம்கோடிகுணம்பவேத்| புத்ரமித்ரகளத்ராத்யைர்புக்த்வா போகாநநேகதா|| இகலோகேபரத்ராபிஸ்கந்தஸாயுச்யமாப்நுயாத்| புத்ரகாமோலபேத் புத்ராந்தநகாமோலபேத்தநம்|| அந்தேசிவஸாயுஜ்யம்மோக்ஷம்விந்தந்திமாநவா:|" எனமுதனூல்கூறுதலாலறிக.

புராணங்கேட்போர்க்கு வேண்டிய இலக்கணங்களை "நாய கன்கதை காதொடாறங் கேட்குநர்-தூய நீரினிற் றோய்ந்துவெண் ணீறணிந்-தேய வித்த கருமமியற்றிப்பின்-காய வைம்புல னுங்கருத் தொன்றியே,———வல்ல தேசிக னுக்கு மணித்தவி-சொல்லை நல்கி யுறுபொரு ளீந்துநன்-கல்ல லாணி இளத்த லடக்கிவன்-புல்ல ரானவு

லைரப்புறம் போக்கியே,——— பத்தியோடொல்கு பாவகத் தோடுரு-வொத்த நற்றவி சேற லொழித்துநூல்- வித்த கற்குக்கீழ் மென்றவி சொன்றியே-சித்தம் வேறறக் கேட்பது செவ்விதால்" என்னும் பிரமோத்தரகாண்டச் செய்யுட்களாலறிக. (கஉச)

திருநகரப்படலம்மு[illegible]ிற்று.

ஆகவிருத்தம் [illegible]ro.

---

# பாயிரப்படலம்.

பாயிரமாவது வரலாறு. [illegible]தனூலிற் கூறப்பட்ட புராணவரலாற்றையும், மேல்வருஞ்சரித்திரத்தின் பொழிப்[illegible]யுங் கூறுதலாற் பாயிரப்படலமென்னும் பெயர்த்தாயிற்று. நூல்கேட்பான்புக்கமாணாக்கன், பாயிரங்கேளாக்கால், நூல்வந்தவழியையும் அந்நூலின்பெருமையையும் [illegible]நூல் கேட்டலாலெய்தும் பயனையுமுணராது ஊக்கங்குன்றுவனாதலின் அப் பாயி[illegible]மொருதலையான்வேண்டப்படும்; "ஆயிரமுகத்தானகன்றதாயினும்-பாயிரமில்லது [illegible]லன்றே" என்றார் பவணந்தியும்.

## இப்படலப்பொழிப்பு.

ஆதிகற்பத்திற் றுவாபரயுகத்தில் வேதங்கள்யாவுநெறிதவறின. அதனால் வைதிகசைவமார்க்கங்கள்குன்றின. தேவர் முனிவர் மாநுடர் முதலினோர்பலரும் உண்மை தோன்றாமையாற் றம்முளக்கருத்தையே மெய்யெனக்கொண்டு பலநூல்களை இயற்றினர். உலகினர் அந்நூல்களையநுசரித்தலாற் சமயங்களும்பலவாயின. அவற்றையெல்லாந்தெரிந்த விஷ்ணுமூர்த்தி, பிரமாமுதலிய தேவருடன் திருக்கைலாசகிரியிற்சென்று, சிவபெருமானுக்குமுறையிட்டனர். அதுகேட்ட பெருமான், திருமாலை, ஓர் கலையுடன் முனிவராகப்பூமியிற்பிறந்து அவற்றைத்தீர்க்கும்படி பணித்தனர். திருமால் அவரருளிச்செய்தபடியே பராசரர்க்குப்புதல்வராயவதரித்து, வேதங்களை நால்வகைப்படுத்தி, அவற்றின்பொருளைச் சுருக்கிச் சூத்திரங்களாக்கி, பைலர் முதலிய நான்குமுனிவர்க்குபதேசித்து, பதினெண்புராணங்களையும் சனற்குமாரமுனிவரிடம் கேட்டுத்தெளிந்து சூதமுனிவர்க்குப்போதித்தனர். அவர்கள், கேட்டற்கேற்ற தகுதியுடையார்க்குப்போதித்து உலகிற்பரப்பினர். ஓர்நாட் சூதமுனிவர் நைமிசாரணியஞ்சேர்ந்து அங்குள்ள சௌனகாதிமுனிவர்கள் வேண்ட, இப்புராணசரித்திரத்தை முதலிற் பதிகமாகத்திரட்டிக்கூறினர். பின்னரும் அம்முனிவர்கள் விரித்துக்கூறும்படி வேண்ட அவ்வாறே கூறத்தொடங்கினர் என்பதாம்.

முந்தொரு காலத்தின் மூவுலகந் தன்னில்
வந்திடு முயிர்செய்த வல்வினை யதனாலே
யந்தமின் மறையெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்.

இ—ள்: முந்து ஒரு காலத்தில்—முன்னொருகாலத்தில், மூ உலகம் தன்னில் வந்திடும் உயிர் செய்த வல்வினை அதனால்—(சுவர்க்கமத்திய பாதலங்களாகிய) மூவகையுலகங்களினுஞ் சென்மித்த ஆன்மாக்கள் இயற்றிய தீவினையினால், அந்தம் இல் மறை எல்லாம் அடிதலைதடுமாறி சிந்திட—முடிவில்லாத வேதமுழுதும் நிலைகெட்டுச்சி

றைய, முனிவோரும் தேவரும் மருள் உற்ருர்—(அதனல்) முனிவர்களும் தேவர்களும் மனமயக்கங்கொண்டார்கள் எ—று.

ஏனையநூல்களின்முரணை அறுத்தற்குக் கருவிநூலாகிய வேதம் நிலைகெட, உண்மைதெளித்து ஐயந்தீர்த்தற்கேற்ற பிறநூலின்றி மருண்டனரென்பதாம்.

ஏ அசை. இவ்வாறே பே வருஞ் செய்யுட்களினும் பதச்சேதத்து விடப்பட்டனவற்றையெல்லாம் அசைநிலையெ க. 'வல்வினையதனல்-சிந்திட' என இயையும். மிகவிரிந்த நூலென்பார் 'அந்தமின்மல ' என்ருர். (க)

நெற்றியில் விழிகொண நிமலன தருளாலே
யற்றமின் மறையெல்லா மாதியின் வரலாலே
மற்றத னியல்பெல்லா ப லற வேநாடித்
தெற்றென வெவராலுஞ் செப்புவ தரிதாமால்.

இ—ள்: அற்றம் இல் மறை எல்லா ம்—குற்றமில்லாத வேதங்கள் யாவும், நெற்றியில் விழி கொண்ட நிமலனது அருளால் ஆதியின் வரலால்—நெற்றிக்கண்ணையுடைய மலரகிதராகிய சிவபெருமானது திருவரு ால் முற்காலத்திற்ரேன்றுதலால், அதன் இயல்பு எல்லாம் மயல் அற நாடி தெற்றென செப்புவது—அவ்வேதங்களின்தன்மை அனைத்தையும் ஐயந்திரத்தேர்ந்து தெளிவாக சொல்வது, எவராலும் அரிது ஆம்—எத்தகையினராலும் அருமையாகும் எ—று.

சிவனருளிய வேதங்களினுண்மையைப் பிறர் ர்ந்து கூறுவது கூடாதென்பதாம். ஆதி-சிருட்டியாரம்பம். உம்மை உயர்வுசிறப்பு. (உ)

ஆனதோர் பொழுதின்க ணமரரு முனிவோரு
மாநில மிசைவைகு மாக்களு மிறையுள்ள
ஞானம திலராகி நவின்மறை நெறிமாற்றித்
தீநெறி பலவாற்றிப் பனுவல்கள் சிலசெய்தார்.

இ—ள்: ஆனது ஒர் பொழுதின் கண்—அக்காலத்தில், அமரரும் முனிவோரும் மா நிலமிசை வைகும் மாக்களும்—தேவர்களும் முனிவர்களும் பெரிய பூவுலகத்தில் வசிக்கின்ற மானுடர்களும், இறை உள்ளம் ஞானமது இலர் ஆகி—சிறிதும் மனத்தில் நல்லறிவில்லாதவர்களாய், நவில் மறை நெறி மாற்றி—விதிக்கப்பட்டவைதிகமார்க்கத்தை விலக்கி, பல தீ நெறி ஆற்றி—(விலக்கப்பட்ட) பல தீயமார்க்கங்களை உண்டாக்கி, சில பனுவல்கள் செய்தார்—(அம்மார்க்கங்கட்கேற்பச்) சில சமயநூல்களை இயற்றினர்கள் எ—று.

ஆனதோர் பொழுதென்றது முதலாஞ்செய்யுளிற் கூறியகாலத்தை. இறை என்பதில் இழிவுசிறப்பும்மை தொக்கது. (ங)

அவனியி லறமெல்லா மருவினை யெனநீக்கிப்
பவநெறி யறமென்றே பற்பல ருஞ்செய்யப்
புவனம துண்டோனும் போதனு மதுகாணுச்
சிவனரு ளாலன்றித் தீர்கில திதுவென்ருர்.

இ—ள்: அவனியில் பற்பலரும்—பூவுலகத்திற் பலபலமானுடர்களும், அறம் எல்லாம் அரு வினை என நீக்கி—புண்ணியங்கள் முழுதுங்கொடும்பாவமாமென்றெண்ணிச் செய்யாதுவிடுத்து, பவ நெறியே அறம் என்று செய்ய—பாவமார்க்கங்களை தருமமாமென்று நம்பிச் செய்ய, புவனமது உண்டோனும் போதனும் அது கா

ணு—பூவுலகத்தை உண்டவராகிய விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் அத்தன்மையைத்தெரிந்து, இது சிவன் அருளால் அன்றி தீர்கிலது என்றூர்—இது சிவபெருமானது திருவருளாலன்றி (மற்றொன்றாலும்) தீராதென்று நிச்சயித்தார்கள் எ—று.

இதனைத்தீர்த்தல் தம்மாலுங்கூடாதென நிச்சயித்தனர் என்பதாம். அறமென்றே என்பதிலுள்ள பிரிநிலையேகாரம் பவநெறி என்பதோடு கூட்டப்பட்டது. (ச)

வேறு.

இன்ன பான்மையை யெண்ணி யிருவரும்
பொன்னி னாடு புரந்திடு மன்னனுந்
துன்னு தேவருஞ் சுற்றினர் வந்திடக்
கன்னி பாகன் கயிலையி லேகினார்.

இ—ள்: இருவரும் இன்னபான்மையை எண்ணி—(விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவருமாகிய) இருதேவத்தலைவர்களும் இத்தன்மையைச் சிந்தித்து, பொன்னின்நாடு புரந்திடும் மன்னனும் துன்னு தேவரும் சுற்றினர் வந்திட— சுவர்க்கலோகத்தை அரசியல்செய்கின்ற தேவேந்திரனும் நெருங்கிய மற்றைத்தேவர்களும் தம்மைச்சூழ்ந்து வர, கன்னி பாகன் கயிலையில் ஏகினார்—உமாதேவியை வாமபாகத்திலுடைய சிவபெருமானது திருக்கைலாசமலையிற் போயினார்கள் எ—று.

இன்னபான்மை என்றது சிவனருளாலன்றித்தீராமையை. பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் திரிமூர்த்திகளுட் சேர்ந்த தேவத்தலைவராதலிற் றம்முட்சிந்தித்துப் பின்னர் இந்திராதியருடன்வரக் கயிலையையடைந்தனரென்க. (ரு)

அந்தில் செம்பொ னணிமணிக் கோயிலின்
முந்து கோபுர முற்கடை யிற்புகா
நந்தி தேவரை நண்பொடு கண்டுநீ
ரெந்தை யார்க்கெம் வரவிசைப் பீரென்றார்.

இ—ள்: அந்தில் செம் பொன் அணி மணி கோயிலின் முந்து கோபுர முற்கடையில் புகா—அத்திருக்கைலாசகிரியிற் செம்பொன்னாற்செய்யப்பட்ட அழகிய இரத்தினமிழைத்த ஆலயத்தின்முன்னுள்ள திருக்கோபுரத்தின் முதல்வாயிலிற்புகுந்து, நந்திதேவரை நண்பொடு கண்டு-(அங்குள்ள) திருநந்திதேவரை நண்பினுடன் தரிசித்து, நீர் எம் வரவு எந்தையார்க்கு இசைப்பீர் என்றார்—(எம்பெருமானே!) தேவரீர் சிறியேங்களது வருகையை எங்கள் தலைவராகிய சிவபெருமானுக்குச் சொல்வீராக என்று கூறினார்கள் எ—று.

அந்தில்-அவ்விடத்து; அசைநிலையெனினுமாம். எந்தை- எந்தந்தை என்பதன் மரூஉ. சிவபெருமானைத்தரிசித்தற்கும் அருள்பெறுதற்குமுடனின்று உதவிபுரிய வேண்டுதலின், அத்திருநந்திதேவர் தம்மாட்டுநேசமுறுமாறு இன்சொற்கூறி இன்முகங்காட்டித்தரிசித்தனரென்பார் 'நந்திதேவரைநண்பொடுகண்டு' என்றார். (சு)

தேவ தேவன் றிருமுன்ன ரேகியே
காவ னந்திக் கடவுள் பணிந்தெழீஇப்
பூவை வண்ணனும் போதனும் புங்கவ
ரேவ ருஞ்செறிந் தெய்தின ரீண்டென்றான்.

இ—ள்: காவல் நந்தி கடவுள்— (முதல்வாயிலைக்) காவல்செய்திருக்கின்ற திருநந்திதேவர், தேவதேவன் திருமுன்னர் ஏகி—தேவநாயகராகிய சிவபெருமானது

சந்நிதானத்திற்போய், பணிந்து எழீஇ—வணங்கி எழுந்து, பூவை வண்ணனும் போதனும் புங்கவர் ஏவரும் செறிந்து ஈண்டு எய்தினர் என்றான்—(ஸ்வாமீ!) காயாம்பூவையொத்த (கருநிறமமைந்த) திருமேனியையுடையவிஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் மற்றையதேவர்கள் யாவரும் நெருங்கி (தேவரீரைத்தரிசிக்குநோக்கமாக) இவ்விடத்து வந்தார்களென்று விண்ணப்பஞ்செய்தார் எ—று.

எழீஇ-எழும்பி என்பதன்விகாரம். பூவை-காயாம்பூ; ஆகுபெயர். புங்கவர்=உயர்வுடையோர். எவருமெனற்பாலது ஏவருமெனமுதனீண்டது. (எ)

என்ற காலையில் யாரையு மிவ்விடைக்
கொன்றை சூடி கொணர்கெனச் செப்பலு
நன்ற தேயென நந்தி வணங்கியே
சென்று மான்முதற் றேவரை யெய்தினான்.

இ—ள்: என்ற காலையில்— என்று (திருநந்திதேவர்) விண்ணப்பஞ்செய்தபொழுது, கொன்றைசூடி—கொன்றைமலர்மாலையையணிந்த சிவபெருமான், யாரையும் இவ்விடை கொணர்கென செப்பலும்— (நந்தியே!) அத்தேவரனைவரையும் இவ்விடத்து அழைத்துவருகுதியென்று கட்டளைசெய்ய, நந்தி—(கேட்ட) திருநந்திதேவர், அது நன்று என வணங்கி—அது நல்லதென்றுகூறிப் பணிந்து, சென்று— (அவ்விடத்தைநீங்கிப்) போய், மால் முதல் தேவரை எய்தினான்—விஷ்ணுமூர்த்தி முதலிய தேவர்களை அணுகினார் எ—று.

கொன்றை-ஆகுபெயர். கொணர்க என்னும்வியங்கோளீற்றகரந்தொக்கது. நன்று என்பது ஈண்டு உடன்பாட்டையுணர்த்திநின்றது. (அ)

செம்மை போகிய சிந்தைய ரைக்கெழீஇ
யெம்மை யாளுடை யானரு ளெய்தினா
னும்மை யங்கு வரநுவன் றானினி
வம்மி னீரென வல்லையிற் கூவினான்.

இ—ள்: செம்மை போகிய சிந்தையரை கெழீஇ-(அத்திருநந்திதேவர்) செப்பம் நீங்கிய மனத்தையுடைய (திருமான்முதலிய) தேவர்களை அணுகி, எம்மை ஆள் உடையான் அருள் எய்தினான்—எங்களை அடிமையாகவுடைய சிவபெருமான் கருணைகூர்ந்தவராய், நும்மை அங்கு வர நுவன்றான்—உங்களை அவ்விடத்து வரும்படி கட்டளை செய்தார் (ஆதலால்), இனி நீர் வம்மின் என வல்லையில் கூவினான்—இனி நீவிரனைவீரும் வாருங்களென்று விரைவிலழைத்தார் எ—று.

கெழீஇ-கெழுமி என்பதன்விகாரம். எய்தினான் முற்றெச்சம். நந்திதேவர் தம்வரவை விண்ணப்பிக்கும்போது சிவபெருமான் யாதுகட்டளைசெய்வாரோ என்னுமாசங்கையோடு நின்றனரென்பார் 'செம்மைபோகியசிந்தையர்' என்றார். (கூ)

விளித்த காலை விழிவழி போதநீர்
துளிக்க நின்று தொழுது கவலொரீஇக்
களிக்கு நெஞ்சினர் கண்ணுத லெந்தைமுன்
னளித்தி யாலென் றவனுட னேகினார்.

இ—ள்: விளித்த காலை— (திருநந்திதேவர்) அழைத்தபொழுது, விழிவழி போதநீர் துளிக்க நின்று தொழுது—(அத்தேவர்கள்) கண்களின்வழியே ஆனந்தபாஷ்பம் அரும்ப நின்று கைதொழுது, கவல் ஒரீஇ களிக்கும் நெஞ்சினர்— (எண்ணியகரு

மந்தவருது முற்றுப்பெறுமென்னுமுறுதிப்பாட்டானே) கவலையைவிடுத்து மகிழ்கின்ற மனத்தையுடையராய், கண்ணுதல் எந்தை முன் அளித்தி என்று— (நந்தியம்பெருமானே!) நெற்றிக்கண்ணையுடைய எம்பரமபிதாவாகிய சிவபெருமானுக்குமுன்னே (எங்களை) ஒப்பிப்பீராக என்றுகூறி, அவனுடன் ஏகினர்— அத்திருநந்திதேவரோடுகூடச் சென்றார்கள் எ—று.

நெஞ்சினர்-முற்றெச்சம். (௪0)

புடைக டந்திடு பூதர்கள் போற்றுமத்
தடைக டந்து தடுப்பரும் வேனிலான்
படைக டந்தவர் பாற்படு மெண்ணிலாக்
கடைக டந்தபி னண்ணலைக் கண்டனர்.

இ—ள்: புடைகள் தந்திடு பூதர்கள் போற்றும் அ தடை கடந்து—பக்கங்களிற் பொருந்திய பூதவீரர்கள்காக்கின்ற அந்த முதல்வாயிலைக்கடந்து, தடுப்பரும் வேனிலான் படை கடந்தவர் பால் படும் எண்ணிலா கடை கடந்து— (எத்தகைய துறவிகளாலும்) தடுத்தற்கரிய மன்மதனது ஐங்கணைகளையும் (தம்பாற்சாரவொட்டாதகற்றி) வென்ற முனிசிரேட்டர்கள் தம்மிடத்து வசிக்கப்பெற்ற அளவிறந்த வாயில்களைக்கடந்து, பின் அண்ணலை கண்டனர்—அதன்பின்னர்ச் சிவபெருமானைத் தரிசித்தார்கள் (அத்தேவர்கள்) எ—று.

ஐம்பொறிகளையுமடக்கி அருந்தவம்புரியும் முனிகணத்தருள்ளுஞ் சிலர் சிற்சிலகாலங்களில் மதனவிகாரத்தான் மயங்குதலுளதாயினும், இம்மலையில்வசிக்கும் முனிகணத்தினரனைவரும் ஓர்காலத்திலும் அவ்வாறு மனந்திறம்புதலின்றென்பார் 'தடுப்பரும்வேனிலான்படைகடந்தவர்பாற்படுமெண்ணிலாக்கடை' என்றார். இத்தகைய பத்திலக்ஷம் முனிவர்கள் அக்கைலாசகிரியில் வசிக்கின்றனரென முதனூலுபதேசகாண்டத்திற் கூறப்பட்டது. (௧௧)

முன்ன ரெய்தித் தொழுது முறைமுறை
சென்னி தாழ விறைஞ்சினர் சேண்மிசைத்
துன்னு மாதரந் தூண்டவந் தண்மினு
ருன்னு மன்பி னுததியி னாழ்ந்துளார்.

இ—ள்: முன்னர் எய்தி தொழுது—(அச்சிவபெருமானது) திருமுன்னிலையிற்சென்று கைதொழுது, முறைமுறை சென்னி தாழ இறைஞ்சினர்— வரிசைவரிசையாகச் சிரம் பூமியிற்றாழும்படி வணங்கி, சேணிடை துன்னும் ஆதரம் தூண்ட— தூரத்திலேபொருந்திய பெருவிருப்பானதுசெலுத்த, உன்னும் அன்பின் உததியின் ஆழ்ந்துளார் வந்து அணமினார்— (இடையறாது)சிந்திக்கின்ற பேரன்பாகிய கடலுள் அமிழ்ந்தினவர்களாய் வந்து அணுகினார்கள் எ—று.

இறைஞ்சினர் ஆழ்ந்துளார் என்பன முற்றெச்சங்கள். ஒருமுறை இருமுறை வணங்குதல் வழுவாதலால் மூன்று ஐந்து ஏழு ஒன்பதுமுதலாக விதிக்கப்பட்ட கணக்கமையவணங்கினரென்பார் 'முறைமுறைசென்னிதாழவிறைஞ்சினர்' எனவும், ஆநந்தமேலீட்டினாலே பரவசராகிச் சிவபெருமான்மேற்கொண்ட பெருங்காதலே தம்மையுந்தச்சென்றணுகினரென்பார் 'துன்னுமாதரந்தூண்ட உன்னுமன்பினுததியினாழ்ந்துளார் வந்தண்மினார்' எனவும் கூறினார். (௧௨)

ஈர்க்கும் பாசத் திருவினை யின்றொடே
தீர்க்கின் றாமிவ னென்னுஞ் செருக்கினாற்

றார்க்கின் றார்மலர் சோதிபொற் றாண்மிசைப்
போர்க்கின் றார்மெய்ப் பொடிப்பெனும் போர்வையே.

இ—ள்: ஈர்க்கும் பாசத்து இருவினை—(சன்மார்க்கத்திற்பிரவேசிக்குமாறு மனத்தை) இழுக்கின்றபாசத்தொடர்பாலுண்டாகின்றஇருவினைகளையும், இன்றொடே இவண் தீர்க்கின்றாம் என்னும் செருக்கினால்- இற்றைத்தினத்தோடே இவ்விடத்து ஒழிக்கின்றோமென்னும் மதர்ப்பினால், சோதி பொன் தாள்மிசை மலர் தூர்க்கின்றார்—சோதிசொரூபராகிய சிவபெருமானது அழகிய திருவடிகளிற் புஷ்பங்களைச்சொரிகின்றவர்களாய், மெய்ப்பொடிப்பு எனும் போர்வை போர்க்கின்றார்— சரீரப்புளகமாகிய போர்வையைப்போர்க்கின்றார்கள் எ—று.

முன்னைய ஏகாரம் தேற்றம். மெய்ப்பொடிப்பு- மெய்யிற்றோன்றும்பொடிப்பு.

துறக்கவின்பமுதலியவற்றைப் பயப்பனவாய வேள்விமுதலிய காமியவினைகளும் தீவினைகளும் முறையே, பொன்விலங்கும்இரும்புவிலங்கும்போலநின்று, முத்திநெறியிற்புகவிடாது பந்தமுறுத்தலின்‘ஈர்க்கும்பாசத்திருவினை’என்றார். இவ்விருவினைகளையுந்தீர்த்தல் எதுபோலுமெனில், ஓர் வைப்பாட்டியைக்காமித்து அவள்வீட்டிற் பன்னாளும் மனையாள்வீட்டிற்சின்னாளுமாக வாழ்பவனொருவன், வைப்பாட்டியுடன் கூடுதல் இல்லறத்திற் கிழுக்காமென்பதை யுணர்ந்தவழி, முன்னரவண்மேலாரியிருக்கப்பெறினும் பொருடோச்சும் நேசத்தைவிடுத்து, அவளையீனர்பிடித்தீர்த்து வருத்தியபோதும் இரங்காது வெறுத்து, மனையாட்டியோடு இல்லறநடாத்துவன். மேல் துறவறமேசிறந்ததென்பதையுணர்ந்தவழி, தன்மனையாட்டியையும் வைப்பாட்டியைப்போல வெறுத்து நீக்குவன். பாவபுண்ணியங்களிரண்டையுஞ் செய்துவருவானும் அவ்வாறே, கருமகாண்டத்தையுணர்ந்தவழிப் பாவத்தை வெறுத்து வேள்விமுதலிய புண்ணியங்களைச்செய்வன். ஞானகாண்டத்தையுணர்ந்தவழி, அப்புண்ணியங்களிலும் வெறுப்புற்று ஞானநிலையைக்கடைப்பிடிப்பன் என்க. (௧௫)

நேய முந்த நெடும்பக னீங்கிய
தாயெ திர்ந்திடு கன்றின் றகைமையாய்த்
தூய வந்தனை யோடு தொழுமவர்
வாயின் வந்தன வந்தன போற்றினார்.

இ—ள்: நெடும் பகல் நீங்கிய தாய்—நெடுநாள் (வரையும்) பிரிந்த தாய்ப்பசுவை, நேயம் உந்த எதிர்ந்திடு கன்றின் தகைமை ஆய்—பேரன்புதூண்ட நேர்பட்ட இளங்கன்றின்றன்மை பொருந்தி, தூயவந்தனையோடு தொழும் அவர்— தூய்மையாகி வணக்கத்துடன் கைதொழுகின்ற அத்தேவர்கள் யாவரும், வாயின் வந்தன வந்தன போற்றினார்—தமது வாயில் எழுந்த எழுந்த பிரபாவங்களைக்கூறித் தோத்திரஞ்செய்தார்கள் எ—று.

தாயெதிர்ந்திடு கன்றின்றகைமையென்றது அடங்காக்காதலை. தூயவந்தனையென்றது அட்டாங்கபஞ்சாங்க நமஸ்காரக்கிரமத்தை. நமஸ்கார விதியை “வலஞ்செய்து தண்டனை மானவிதி வழிதழுவத்-தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற்றிருகன்னந்-துலங்குமுக வாய்புயங்க ளோனுமெட்டுந் தோயமயி-ரிலங்குசிரங் கரமுழந்தா ளோனுமைந்து மிசைந்திடவே” என்னுஞ் சிவதருமோத்தரச் செய்யுளானறிக. வந்தனையோடுதொழுமவர்போற்றினாரெனவே முற்செய்யுளிற்கூறியவாறு பாதபூசை செய்தபின் வணங்கி எழுந்து கூப்பிநின்று தோத்திரஞ்செய்தனரென்பது பெற்றாம்.

இன்னவை கூறுவோமென்றெண்ணிக் கூறாது அன்பின்மிகுதியால் நேர்ந்தவாறு துதித்தனராகலின் 'வாயில்வந்தனவந்தனபோற்றினார்' என்றார். (கச)

அண்ண லீசன் வடிவை யகந்தனி
லெண்ணி னெல்லையி லின்பம் பயக்குமாற்
கண்ணி னேர்வரு காட்சிய ராயிடி
னெண்ணு மோவவர் தஞ்செய லோதவே.

இ—ள்: அண்ணல் ஈசன் வடிவை அகந்தனில் எண்ணின்— பெருமையிற் சிறந்தவராகிய சிவபெருமானது திருவுருவத்தை மனத்தில் நினைத்தாற்றானே, எல்லையில் இன்பம் பயக்கும்- (அது) அளவிறந்த பேரின்பத்தைத்தரும், கண்ணில் நேர்வரு காட்சியர் ஆயிடின்— (அத்திருவுருவம் தமது) கண்களில் முற்படப்பெற்ற காட்சியையுடையவரானால், அவர்தம் செயல் ஓத ஒண்ணுமோ—அத்தேவர்களது பேரானந்தச்செயல் (எவராலாயினும்) சொல்ல முடியுமா; (முடியாதே) எ—று.

சிவபிரானைப்பாவனையாற் சிந்திப்போர்க்கே பரமானந்தம் விளையுமாயின் நேரே தரிசிக்கப்பெற்றோர்க்கு எத்துணைப்பேரானந்தந் தோன்றுமென அவர்கொண்ட இன்பத்தின் பெருமையை விளக்கினரென்க. (கரு)

மேலை வானவர் வேந்தொடு மெம்பிரான்
சீல மேய திருமுன்பு மேவினார்
மாலு நான்முகத் தண்ணலும் வந்திரு
பாலு மாகிப் பரவின ரென்பவே.

இ—ள்: மேலை வானவர்-மேலுலகில்வசிக்கின்றதேவர்கள், வேந்தொடும் எம்பிரான் சீலம் மேய திருமுன்பு மேவினார்—தங்கள் தலைவனாகிய இந்திரனோடும் எமது கடவுளாகிய சிவபெருமானது பரிசுத்தமிருந்த சந்நிதானத்தில் (துதித்து) நின்றார்கள், மாலும் நான்முகத்து அண்ணலும் வந்து இருபாலும் ஆகி பரவினர்—விஷ்ணுமூர்த்தியும் நான்குமுகங்களையுடைய பிரமதேவரும் வந்து இருபுடையினுமாகிநின்று துதித்தார்கள் எ—று.

இருபாலுமெனப் பொதுப்படக்கூறினரேனும்,உரிமைபற்றிப்பிரமதேவர் வலப்பக்கத்தினும் விஷ்ணுமூர்த்தி இடப்பக்கத்தினும் நின்றனரென்க. (கசு)

வேறு.

அம்புயா சனமுடை யண்ண லாழியா
னும்பரோ டித்திற முற்றுப் போற்றுழிச்
செம்பொனேர் முடிமிசைத் திங்கள் சேர்த்திய
வெம்பிரா னருள்புரிந் தினைய கூறுவான்.

இ—ள்: அம்புய ஆசனம் உடை அண்ணல்—தாமரைமலராசனத்தையுடைய பிரமதேவரும், ஆழியான்— சக்கராயுதத்தையுடைய விஷ்ணுமூர்த்தியும், உம்பரோடு இ திறம் உற்று போற்றுழி— (இந்திரன்முதலிய) தேவர்களுடன் இவ்வாறு நின்று துதிக்கும்பொழுது, செம்பொன் நேர் முடிமிசை திங்கள் சேர்த்திய எம்பிரான்—செம்பொன்னைப்போன்ற (சிவந்த) சடாமுடியின்கண்ணே பாலசந்திரனையணிந்த எங்கள்கடவுளாகிய சிவபெருமான், அருள் புரிந்து இனைய கூறுவான்— (அவர்க்குத்) திருவருள்செய்து இவற்றைத் திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

அம்புயாசனம் வடநூன்முடிபு. இத்திறமுற்று என்றது முற்செய்யுளிற்கூட்

டியவாறுவிற்றலை, 'செம்பொனேர்முடிமிசைத்திங்கள்சேர்த்தியஎம்பிரான்' என்றதனால் அடியார்க்குநேருங்குறைகளை நீக்கும் அருண்மூர்த்தியென்பது குறிக்கப்பட்டது. (கஎ)

ஒன்றொரு குறைகளு முறாத பான்மையா
னன்று நம் மரசிய னடந்த வோவெனுக்
குன்றவில் லுடையவோர் குழகன் செப்பலு
நின்றமா றொழுதிவை நெறியிற் கூறுவான்.

இ—ள்: ஒன்றொரு குறைகளும் உறாத பான்மையால்—யாதொரு குறைகளும் நேரிடாவண்ணம், நம் அரசியல் நன்று நடந்தவோ எனு—நமது அரசாட்சிகள் செவ்வனே நடைபெற்றனவா? என்று, குன்றவில் உடைய ஓர் குழகன் செப்பலும்—மேருமலையாகிய வில்லை உடைய ஒப்பற்ற அழகராகிய சிவபெருமான் (அறியாதார் போல) வினவுதலும், நின்ற மால் தொழுது இவை நெறியில் கூறுவான்—(பக்கத்தில்) நின்ற திருமால் கைதொழுது இவ்வாசகங்களை முறைப்படி கூறுவாராயினர் எ—று.

நம்மரசியலென்றது படைத்தன்முதலிய அதிகாரங்களை. சிவபெருமான் பொதுப்பட வினவிய வழியும் தலைமைபற்றித் திருமாலொருவரே விடைகூறினரென்க. தாஞ்செய்யும்விண்ணப்பத்தைப்பொருட்படுத்தியருள்புரியுமாறு தாழ்ந்தவசனமாகக்கூறுவாரென்பார் 'நெறியிற்கூறுவான்'என்றார். (கஅ)

ஆதியி லயன்படைப் பல்ல தென்னருண்
மேதிய னடுதொழி லேனை விண்ணவ
ரேதமில் செயன்முறை யாவுங் கண்ணுத
னாதநின் னருளினா னடந்த நன்றரோ.

இ—ள்: கண்ணுதல் நாத—நெற்றிக்கண்ணையுடைய தலைவரே!, ஆதியில் அயன் படைப்பு— முதலிற் பிரமதேவரது சிருட்டித்தொழிலும், அல்லது என் அருள்—அன்றியும் அடியேன்செய்யுந் திதித்தொழிலும், மேதியன் அடு தொழில்—எருமைக்கடாவாகனத்தையுடைய கூற்றுவனது கொலைத்தொழிலும், ஏனை விண்ணவர் ஏதம் இல் செயன்முறை யாவும்—(இந்திரன்முதலிய) மற்றைத்தேவர்களது குற்றமற்ற தொழின்முறைகளுமாகிய எல்லாம், நின் அருளினால் நன்று நடந்த—தேவரீரது கிருபையினால் இனிது நடைபெற்றன எ—று. (கக)

கருமணி மிடறுடைக் கடவு ளின்னுநீ
யருளுவ தொன்றுள ததனைக் கூறுவ
னிருநில மேலவர் யாரு நின்றனைப்
பரமென வுணர்கிலர் மாயைப் பான்மையால்.

இ—ள்: கரு மணி மிடறு உடை கடவுள்— (சரணடைந்தாரைக் காப்பதற்கோரிலச்சினையாக நஞ்சுண்டு)கறுத்த நீலரத்தினம்போலுந் திருக்கண்டத்தையுடைய இறைவரே!, இன்னும் நீ அருளுவது ஒன்று உளது—(முன் வேண்டியகாலங்களிலருள்புரிந்ததுபோல) இன்னும் கிருபைசெய்யவேண்டிய ஒருகுறை உள்ளது, அதனை கூறுவன்—அதனை (யானெடுத்துச்)சொல்வேன் (கேட்டருள்க), இருநில மேலவர் யாரும்— பெரிய பூவுலகத்தின்கணுள்ளார் அனைவரும், மாயைப் பான்மையால் நின்றனை பரம் என உணர்கிலர்— அஞ்ஞானவசத்தால் தேவரீரைப் பரம்பொருளென்று தெளிகின்றிலார் எ—று.

கடவுள்-அண்மைவிளி. முற்காலங்களில் நேர்ந்தகுறைகளை நீக்கியதுபோலி க்குறையையும் நீக்குதிரென்பார், கருத்துடையடைபுணர்த்தி 'கருமணிமிடறுடைக்கடவுள்' என்றார். மணிமிடறு-அழகியமிடறெனினுமாம். (உ௦)

நின்றனை துரிமையை நிகழ்த்தி மேன்மையா
வென்றனை யயன்றனை யெண்ணு வார்சில
ரன்றியு நின்னுட னநேகர் தம்மையு
மொன்றென வேநினைந் துரைக்கின் றார்சிலர்.

இ—ள்: நின்றனது உரிமையை நிகழ்த்தி-தேவரீரது இயல்புகளைச்சார்த்திக் கூறி, என்றனை அயன்றனை மேன்மையா எண்ணுவார் சிலர்-அடியேனையும் பிரமனையும் பரம்பொருளாக மதிப்பார்கள் சிலர், அன்றியும்—அவ்வாறன்றியும், நின்னுடன் அநேகர்தம்மையும் ஒன்றே என நினைந்து உரைக்கின்றார் சிலர்—தேவரீரோடு (சாமானியராகிய பிறதேவர்கள்) பலரையும் ஒன்றேயென்றுகருதிக் கூறுகின்றார்கள்சிலர் எ-று.

நின்றனதுரிமை என்றது சருவஞ்ஞைதமுதலிய பதிக்குணங்களை. அவையெல்லாம் எனையோர் மாட்டுளவெனக்கூறுவது கற்பிதமேயென்பதுதோன்ற 'நின்றனதுரிமையைநிகழ்த்தி' என்றார். ஒன்றெனநினைத்தலாவது அபேதமாக நினைத்தல். ஏகாரம் தேற்றம்; பிரிநிலையென்பாருமுளர்.

'என்றனை-எண்ணுவர்சிலர்' என்றது வைணவரை. இவர்கள், திருமாலே கருத்தா; எனையோர் அவராலாக்கப்படுவோரென்பர். "உந்தியா லயனை யீன்றங் கவனைக்கொண் டுலகுண் டாக்கி-யந்தநல் லுலக ழிக்க வரனையு மாக்கு வித்துத்-தந்திடுஞ் சகத்தி னுக்குத் திதிகர்த்தா தானே யாகி-வந்திடுந்தோற்ற மீறு நிலைமையும் பண்ணு மாயன்" என்பதனுலறிக.

'அயன்றனையெண்ணுவார்சிலர்' என்றது இரணியகர்ப்பவாதிகளை; இவர்கள், "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரேபூதஸ்யஜாத:பதிரேகஆஸீத் ஸதாதாரப்ருதிவீந்த்யாமுதேமாம்கஸ்மைதேவாயஹவிஷாவிதேம:॥" என்பதாதி சாமானியசுருதிவாக்கியங்களை விசேடப்பிரமாணமாகக்கொண்டு பிரமாவே கருத்தாவென்பர்.

'நின்னுடனநேகர்தம்மையு மொன்றெனவேநினைந்துரைக்கின்றார்சிலர்' என்றது அநேகேச்சுரவாதிகளை. இவர்கள், பலர்கூடி ஒரில்லத்தை இயற்றுதல்போல உலகங்களையும் பலர்கூடி அமைத்தல்வேண்டுமென்பர். "இல்லத்தைப் பல்லோர் கூடி யியற்றுதல் கண்டா மத்தாற்-செல்லொத்த குழலாய் வையஞ் செய்தவர் பலரே யன்னார்-தொல்லைக்கு ளாத னீங்கித் துயரறன் முத்தி யென்பா-ரல்லுற்ற மனத்தா ரான வநேகேச வாத ரன்றே" என்பதனுலறிக. (உக)

காலமுங் கருமமுங் கடந்த தோர்பொருண்
மூலமுண் டோவென மொழிகின் றார்சிலர்
மேலுமுண் டோசில விளம்ப விஞ்சையின்
பாலுறு முணர்ச்சியே பரமென் பார்சிலர்.

இ—ள்: காலமும் கருமமும் கடந்தது ஓர் மூலப்பொருள் உண்டோ என மொழிகின்றார் சிலர்—காலத்தையும் இருவினைகளையும் வென்ற வேறொருமுதற்பொருள் இருக்கின்றதா? (இல்லையே) என்றுகூறுகின்றார்கள் சிலர், விஞ்சையின் பால் உறும் உணர்ச்சியே பரம்—மாந்திரிகத்தின் வழிப்பட்ட அறிவே பரம்பொருளாகும், விளம்ப- (இதனினுஞ்சிறந்தனவென்று) சொல்வதற்கு, வேறும் சில உண்டோ என்பார் சிலர்—வேறுஞ்சிலபொருள் களிருக்கின்றனவா? (இல்லையே) என்றுகூறுவார்கள் சிலர் எ-று.

ஒகாரங்கள் எதிர்மறைகள். ஏகாரம் பிரிநிலை.

காலத்தின்மேலாய பொருள் வேறில்லையென்பார் காலவாதிகள். இவர்கொள்கையை, "காலமெனுங்கடவுளினைக்கழியவுளதேதுமில்லை-யாலநீழலமர்ந்தவருமரிபிரமாதியரெவருஞ்-சீலமுடைச்சிருட்டிமுதற்றிகழ்வனவாகச்சுழற்றத்- தூலமொடுசூக்குமமாய்த்தொடர்ந்துதொடர்ந்தேவருமால்" என்பதனுலுணர்க.

கருமத்தின் மேலாயபொருள் வேறில்லையென்பார் கருமவாதிகள். இவர்கள், ஆன்மாக்களை மேலுலகினுங் கீழுலகினும் முறையே நியோகித்து நடத்துவன இருவினைகளென்றும், அவையே பரமென்றுங்கூறுவர்.

விஞ்சையின்பாலுறுமுணர்ச்சியே பரமென்பார் மந்திரவாதிகள். இவர்கொள்கையை, "மந்திரத்தா லழைத்திடவே வானவரும் வந்திடுவர்- மந்திரத்தால் வசீகரணமுதல்வலிகள் வந்தெய்து-மந்திரத்தா லாக்கி யழித்திடலு மாகியிடு-மந்திரத்தின் வலியேகாண் வானவரு மானவர்தாம்" என்பதனுலுணர்க. (உஉ)

ஆற்றுறு புனல்படிந் தழுக்கு நீக்கலார்
சேற்றிடை வீழ்ந்தென மறைகள் செப்பிய
நீற்றொடு கண்டிகை நீக்கி வன்மையால்
வீற்றொரு குறிகொடு மேவு வார்சிலர்.

இ—ள்: ஆற்று உறு புனல் படிந்து அழுக்கு நீக்கலார் சேற்றிடை வீழ்ந்து என-ஆற்றுநீரின்மூழ்கி (தம் மேனியிலுள்ள) அழுக்கைப்போக்காதவர்களாய்(அவ்வழுக்கைமேலும் வருவிக்கின்ற) சேற்றுநீரில் விழுந்தாற்போல, மறைகள் செப்பிய நீற்றொடு கண்டிகை நீக்கி—வேதங்கள் விதித்த திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் (தரியாது) கழித்து, வன்மையால் வீற்று ஒரு குறி கொடு மேவுவார் சிலர்—தறுகண்மையினுல் வேறோர் சின்னத்தைத் தாங்கியிருப்பார்கள்சிலர் எ—று.

வீழ்ந்தாலென்னும் வினையெச்சத்தில் ஆல் விகுதிதொக்கது. ஒடு எண். ஆற்றுறுபுனலென்றது பெருநீரை. சேறென்றது சின்னீரை. வேதவிரோதமானசின்னமென்பார் 'வீற்றொருகுறி' எனவும், அதனைத்தரிப்பார்க்கு மலநீக்கமின்றென்பார் 'ஆற்றுறுபுனல்படிந்தழுக்குநீக்கலார்சேற்றிடைவீழ்ந்தென-கொடு' எனவும் கூறினுர்.

இச்செய்யுளிற்சுட்டிய குறியாவையென்பதை "எண்டிகழ் மறையீறெல்லாமியம்பும்வெண் ணீற்று மும்மைப்-புண்டர மக்க மாலை சிவலிங்க பூசை தம்மின்-விண்டிடா வயிரங் கொண்டு திகிரியான் வெந்த புண்ணைத் தண்டுசங் காழி கஞ்சக் குறிகளைத் தனுவிற் றாங்கி" என்னுஞ்செய்யுளானுணர்க. இக்குறி தாங்குவோர் வைணவருளொருசாரார்; இவர் பகுப்புக்களைச் சங்கரவிஜயத்தில் விரிவாகக்காண்க. (உ௩)

காமமோ டுவகையுங் களிப்பு நல்கலால்
வாமமே பொருளென மதிக்கின் றார்சிலர்
தோமிலா மூவகைத் தொழிலும் வேள்வியு
மேமமார் பொருளென வியம்பு வார்சிலர்.

இ—ள்: காமமோடு உவகையும் களிப்பும் நல்கலால்— காமத்தையும் மகிழ்வையும் வெறியையுந்தருதலினுல், வாமமே பொருள் என மதிக்கின்றார் சிலர்—வாமசமயமே சற்சமயமென்று கருதுகின்றார்கள்சிலர், தோம் இலா மூவகை தொழிலும் வேள்வியும் ஏமம் ஆர் பொருள் என இயம்புவார் சிலர்—குற்றமில்லாதமூன்று வகையினையுடைய தொழில்களும் யாகமுமே பேரின்பத்தைத்தருகின்ற பொருளென்றுகூறுவார்கள் சிலர் எ—று.

ஒடு என். பிரிநிலையேகாரம் பின்றொடர்க்குங் கூட்டியுரைக்கப்பட்டது. மூவகைத்தொழிலென்றது- நித்திய நைமித்திககாமியங்களை. படைத்தன் முதலியவற்றையென்பர் சிலர்.

வாமசமயக்கோட்பாட்டை "வலைபுலை வண்ணார் செம்மார் மற்றுமிப் படியில் வந்த-குலமதிற் றைய லாரைக் குறித்துநா யகிதா னென்றே-யலமர வவரை யர்ச்சித் தவரெழிற் சேடம் வாங்கித்- தலையுறக் கொண்டங் குண்ண றலைவிசந் நிதியா மன்றே" என்பதனாலும், "தண்ணிய சுட்கச் சமயிகா ளெவ்வுருவும்-பெண்ணுருவிற் காணும் பிறப்பதெலாம்-உண்ணறவே-புத்தியுடன் முத்திப் பொருளுந் தரும்பிணமே-சத்தி யிலாததெலாந் தான்" என்பதனாலுமறிக.

முத்தொழிலையும் வேள்வியையும் பரமென்போர் பூருவமீமாஞ்சகர். இவர் கொள்கையை,"நீதியா னித்த கன்ம நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்-தீதிலா விச்சா கன்மஞ் செந்தழ லோம்பிச் செய்ய-வேதுதான் வேண்டிற் றெல்லா மெய்தலாஞ் சோம யாக- மாதிதா னுசை வீசி யமைத்திட வீட தாமே" என்பதனாலும், "பசுப்படுத் தியாகம் பண்ணப் புண்ணிய மாவ தென்று-வசிப்பினுன் மறைகள் சொன்ன வழக்கினால் வாய்மை யாக-நசிப்பிலா மந்தி ரங்க ணவிற்றலி னின்ப மாகும்-பசிப்புளா னொருவனுண்ணப் பசியது தீர்ந்த பண்பே" என்பதனாலுமறிக. (௨௪)

உரையிசை யாதியா மொலிகள் யாவையும்
பிரமம தேயெனப் பேசு வார்சில
ரரிதுசெய் நோன்பினு லடைந்த சித்திகள்
பொருள்பிறி திலையெனப் புகல்கின் றார்சிலர்.

இ—ள்: உரை இசை ஆதியாம் ஒலிகள் யாவையுமே பிரமமது என பேசுவார்சிலர்-சொல் கீதம் முதலாகிய ஒலிகளனைத்துமே பிரமமென்று சொல்வார்கள் சிலர், அரிது செய் நோன்பினால் அடைந்த சித்திகள் பொருள்—அருமையாக அநுட்டித்த தவத்தினாற் பெற்ற(அணிமைமுதலிய எண்வகைச்) சித்திகளே சிறந்தபொருளாம், பிறிது இலை என புகல்கின்றார் சிலர்—(இதனினுஞ் சிறந்தபொருள்) வேறொன்றுமில்லை என்று சொல்கின்றார்கள் சிலர் எ—று.

பிரிநிலையேகாரம் இச்செய்யுளின் பின்றொடர்க்கும் மேல்வருமிருசெய்யுட்களுக்குங்கூட்டியுரைக்கப்பட்டது.

'ஒலிகள்யாவையும் பிரமமதேயெனப்பேசுவார்சிலர்' என்றது சத்தப்பிரமவாதிகளை. "தருமொலி பிரமம தெனச்ச மைந்திடு-மகமுறு மறிவிலி யகில மூலமு-மிகுதரு மொலியல திலது வேறென-விகபர மதுவறி யாம லோதுவான்" என்னுஞ்செய்யுளானுணர்க.

'சித்திகள் பொருள்பிறிதின்றெனப்பேசுவார்சிலர்' என்றது சித்தவாதிகளை; இவர்கள், அவுடதாதிகளையுண்டு பத்தியயோகாதிகளோடிருந்து உடலழியாமற்காத்து அணிமாதி சித்திகளைப்பெறுவதே முத்தியென்பர்; "கோதறு செம்பு தன்னைக் குலவிய விரதஞ் சேர்ந்து- வேதகஞ் செய்யு மாபோன் மெய்யெனுங் காயந் தன்னை- வேதக மருந்தாற் செய்து மேவுநன் முத்தி சித்தி- நாதனு யிருக்க நாத னுகவே நவிலு மன்றே" என்பதனாலுணர்க. (௨௫)

பெருமைகொள் குலந்தொறும் பிறந்து செய்திடும்
விரதமுஞ் சீலமும் வினைகண் மாற்றிட
வருகனும் பிறவுமா யங்கம் விட்டுயிர்
பரவுதல் வீடெனப் பகரு வார்சிலர்.

இ—ள்: பெருமைகொள் குலம் தொறும் பிறந்து செய்திடும் விரதமும் சிலமும் வினைகள் மாற்றிட—உயர்குலங்கடோறுஞ் செனித்துச் செய்கின்ற (சுடுபாறையிற்கிடத்தன்முதலிய) தவங்களும் (கொல்லாமை முதலிய) ஒழுக்கங்களும் (தமக்குவரும்)பாவங்களைப்போக்க, அருகலும் பிறவும் ஆய்— தேய்தலும் (வளர்தன்முதலிய) பிறவுமாகி, அங்கம்விட்டு உயிர் பரவுதல் வீடு என பகருவார் சிலர்—(முடிவில்) சரீரத்தைவிட்டுஆன்மாப்பரவுதலே முத்தியென்று கூறுவார்கள் சிலர் எ—று.

இச்செய்யுளிற் கூறியது அருகசமயத்தாரை. இவர்கள், அருகனென்னொருகடவுள் அநாதியேயுள்ளவரெனவும், சீவனென்னொருபதார்த்தம் அநாதியே குற்றமுடைத்தாயிருக்குமெனவும், அச்சீவன் சரீரந்தேயத்தேயும் வளர வளருமெனவும், தூலதேகமொன்றேயன்றிச் சூக்குமதேகமுதலியன இல்லையெனவும், தூலதேகத்தைவிட்டு ஆன்மாப்பரவுதலே முத்தியெனவுங் கூறுவர். (உசு)

அறிந்தறிந் துயிர்தொறு மதுவ தாகியே
பிறந்திறந் துணர்வெலாம் பெற்று நோன்பொடு
துறந்துகொன் றிட்டன துய்த்துக் கந்தமற்
றிறந்திடன் முத்தியா மென்கின் றார்சிலர்.

இ—ள்: அறிந்து அறிந்து— தெரிந்து தெரிந்து, உயிர்தொறும் அது அது ஆகியே பிறந்து—(பலவகைப்பட்ட)யோனிகடோறும் அவ்வவ்வான்மாக்களாகியேபிறந்து, இறந்து—மரணித்து, உணர்வு எலாம் பெற்று— (அவ்வவ்யோனிபேதத்திற்குரிய) அறிவுமுழுவதையும்பெற்று, நோன்பொடு துறந்து— விரதநியமத்துடன் துறவறம்பூண்டு, கொன்று இட்டன துய்த்து— பிறர் கொன்றுதந்தனவற்றைப் புசித்து, கந்தமற்று இறந்திடல் முத்தி ஆம் என்கின்றார் சிலர்— பஞ்சகந்தங்களுமொழிந்துஇறந்தலே முத்தியாகுமென்று கூறுகின்றார்கள் சிலர் எ—று.

ஏகாரம் தேற்றம். மாநுடயோனியில் மாநுடசென்மமும், மிருகயோனியில் மிருகசென்மமும், ஏனையயோனிகளினுமிவைபோலவே ஏற்றசென்மமுமாகப்பிறந்தென்பார் ‘உயிர்தொறுமதுவதாகியே பிறந்து’ என்றார்.

இச்செய்யுளிற் கூறியது புத்தசமயத்தாரை. இவர்கள், உயிர்கட்கு அருள் செய்யும்பொருட்டுக் கடவுள் பலவகையோனிகடோறும் பிறப்பாரெனவும், அவ்வுயிர்கள் பஞ்சகந்தங்களுடன்கூடி அறிவுகளைப்பெற்று இழப்பது பிறவித்துன்பமெனவும்,அப்பஞ்சகந்தங்களுங்கெட்டுஇறப்பது முத்தியெனவுங்கூறுவர். “அறந்திகழ் பிடக நன்னூ லோதியன் புடைய னாகிப்-பிறங்குபல் யோனி தோறும் பிறந்துயிர்க் குறுதி செய்து-மறந்தரு கோற லாதி நால்வகை யொழித்த மாண்பு-சிறந்துள போதி நீழற் சேர்வனெம் மிறைவ னுவான்,———மேவிய கருவிற் சேரு முருவம்வே தனைகு றிப்புப்-பாவனை யுடன்விஞ் ஞானப் பஞ்சகந் தங்கள் கூடி-யோவில்பல் லுணர்வுண் டாகி யொழிவது பிறவித் துன்ப-மாவது பொன்றக் கேடா யழிவது முத்தி யென்றான்” என்பதனாலறிக. (உஎ)

நன்னல மாதரை நண்ணு மின்பமே
யுன்னரு முத்தியென் றுட்கொள் வார்சில
ரின்னன துறைதொறு மெய்தி யாவருந்
துன்னரும் பிறவியுட் டுன்ப நீங்கலார்.

இ—ள்: நல் நல மாதரை நண்ணும் இன்பமே உன்னரும் முத்தி என்று உட்கொள்வார் சிலர்— பேரழகினையுடைய மங்கையரை (மதனாகமவிதிப்படி) புணரும்

போகமே வீனைத்தற்கரிய மோக்ஷமென்று சிந்திக்கின்றார்கள் சிலர், இன்னன துறைதொறும் யாவரும் எய்தி-இன்னோரன்ன மார்க்கங்கடோறும் அனைவரும்புகுந்து, துன்னரும் பிறவியுள் துன்பம் நீங்கலார்— அடைதற்கரிய இம்மாநுடப்பிறவியிற்றானே துன்பத்தை நீங்குகின்றிலார் எ—று.

நல் நலம்-நல்ல அழகு;எனவே பேரழகென்பதுபெற்றாம். ஏ-பிரிநிலை. இன்ன அன்ன என்பது இன்னன எனவும், துன்ன அரும் என்பது துன்னரும் எனவுந் தொக்கன. பிறவியுட்டுன்பம் என்பதற்குப் பிறவித்துன்பமெனக் கூறினுமாம்.

தாந்தாம்விரும்பிய மகளிரையென்பார் 'நன்னலமாதரை' எனவும், தமது காமத்தையொழித்தற்பொருட்டு அம்மகளிரைக் கலத்தலாலாகிய சிற்றின்பத்தையே சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைய பேரின்பமுத்தியென்று பிராந்திகொண்டு பிதற்றுகின்றனரென்பார் 'மாதரைநண்ணுமின்பமேயுன்னருமுத்தியென்றுரைக்கின்றார்' எனவும், எண்பத்துநான்கு நூறாயிரயோனிபேதங்களிற் பிறந்திறந்துழலுமான்மா விசேடயோனியாகிய மாநுடசன்மத்தில் வருவதும், அங்ஙனம் வந்தவழியும், சிவனைப் பூசித்தற்கேற்ற புண்ணியபூமியினும் உயர்குலத்திலும் பிறப்பதும் பூருவசன்மங்களிலார்ச்சித்த புண்ணியபலத்தாலன்றிப் பிறவாற்றானரிதாகலின் 'துன்னரும்பிறவி' எனவும், அத்தகைய பிறவியைப்பெற்றுஞ்சிவனைப்பூசித்து முத்திநெறியைப் பெறமுயலாது வாழ்நாளை வீணாளாக்குகின்றனரென்பார் 'பிறவியுட்டுன்பநீங்கலார்' எனவும் கூறினார்.

மாநுடராகப்பிறத்தலரிதென்பதை "அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ-டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயி ரத்தா-லுண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா நுடத்து தித்தல்-கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்" என்னுஞ் சிவஞானசித்தியார்ச் செய்யுளானும், அதனுள்ளும், புண்ணியபூமியினும் உயர்குலத்தினும் பிறத்தலரிதென்பதை "நரர்பயி றேசந் தன்னி னன்மறை பயிலா நாட்டில்-விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியந்தா னுகுந்-தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து-பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே" என்னும் அந்நூற்செய்யுளானும், அப்பிறவியெடுத்தலாற் பெறவேண்டியபயன் சிவனைப்பூசித்தருள்பெறுதலேயென்பதை "ஒழியாப் பிறவி யெடுத்தெடுத் தேங்கி யுழன்ற நெஞ்சே-யழியாப் பிறவிக் கவுடதங் கேட்டி யனாதியனை-மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்தி லுன்னி-விழியாற் புனல்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டு மன்றே" என்னும் பட்டணத்தடிகள் திருவாக்கானுமுணர்க.

இச்செய்யுளிற்கூறியது உலோகாயதரை. இவர்கள், கடவுளும் மறுபிறப்பும் சுவர்க்கநரகங்களும் இல்லையென்றும், இம்மையிலனுபவிக்கப்படுமின்பதுன்பங்களே சுவர்க்கநரகங்களாமென்றுங் கூறுவர். "இறந்தார் பிறவா ரிலதுவா னீசன்-அறம்பாவ மாயிழையார் கூடல்-சிறந்த-நலமார் சுவர்க்க நரகம் பிரித-லுலகாய தன்ற னுணர்வு" என்பதனானுணர்க. (௨௮)

இறந்தன வரம்புல கெவரும் வேதநூன்
மறந்தனர் பவநெறி மல்கி நாடொறுஞ்
சிறந்தன வவையுயிர் செய்த தொல்வினை
யறிந்தரு ளாயநீ யமைத்த வாயினும்.

இ—ள்: உலகு வரம்பு இறந்தன—மண்ணுலகத்தில் நூனியதிகள் கெட்டன, எவரும் வேதநூல் மறந்தனர்—அனைவரும் வேதசாஸ்திரத்தை மறந்துவிட்டார்கள், பவநெறி நாள் தொறும் மல்கி சிறந்தன—பாவமார்க்கங்கள் தினந்தோறும் விருத்தி

யாய்ச்சிறப்புற்றன, அவை உயிர் செய்த தொல் வினை— அச்செயல்கள் ஆன்மாக்கள் செய்த பழைய தீவினைப்பயனேயாம், ஐய—ஸ்வாமீ!, நீ அமைத்த ஆயினும் அறிந்தருள்—(அவையெல்லாம்) தேவரீரால் அமைக்கப்பட்டனவேயாயினும் (சிறியேன்கூறவும்) அறிந்தருளுக எ—று.

வரம்பு-வருணாச்சிரமங்கட்கேற்ற ஒழுக்கத்தின் கட்டுப்பாடு. உம்மை இழிவு சிறப்பு. ஆன்மாக்கள்செய்த தீவினைகளை முற்றறிவானுணர்ந்து அவற்றிற்கேற்ப இச்செயல்களை அமைத்த ஆண்டவனாகிய தேவரீர் அறியாதார்போல் வினாவியதனால், அடியேன் சிற்றறிவிற்றோன்றியவாறு கூறினன். அவற்றில் யாதுங் குறையுளதாயினும் பாலர்கூறும் மழலைமொழியைக்கேட்டுப் பெற்றோர்மகிழ்வதுபோலக் கருணைகூர்ந்தருளுகவென்பார் 'அவையுயிர்செய்ததொல்வினையறிந்தருளையநீயமைத்தவாயினும்' என்றார்.

வினைப்பயன்களை ஆன்மாக்களுக்கு ஊட்டுகின்றவர் சிவபெருமானேயென்பதை "இதமகி தங்க ளென்ப திகன்மன வாக்குக் காயத்-திதமுயிர்க் குறுதி செய்த லகிதமற் றதுசெய் யாமை- யிதமகி தங்க ளெல்லா மிறைவனே யேற்றுக் கொண்டங்-கிதமகி தத்தா லின்ப துன்பங்க ளீவ னன்றே,—அறமலி யிதஞ்செய் வோருக் கநுக்கிர கத்தைச் செய்வன்- மறமலி யகிதஞ் செய்யி னிக்கிர கத்தை வைப்பன்" என்னுஞ் சிவஞானசித்தியார்ச்செய்யுட்களானும், "இகலு மன்பு மிறையு மின்றி யெவ்வு யிர்க்கு முள்ளதோர்-புகுதி காடி முறையினைப் புரிந்துசேர் பவற்குமேற்-றகுதிசெய்து கருணைகூர் சயம்பு" என மேற் காமதகனப்படலத்து வருஞ்செய்யுளானு முணர்க. (௨௯)

அங்கவர் போதமுற் றுசெரீஇமனச்
சங்கையு மகன்றுநின் சரண மேயுறப்
புங்கவ சிறிதருள் புரிய வேண்டுமா
லெங்கடம் பொருட்டென விறைவன் கூறுவான்.

இ—ள்: புங்கவ—கடவுளே!, அங்கவர் போதம் உற்று ஆசு ஒரீஇ— அம்மானுடர்கள் மெய்ஞ்ஞானத்தைப்பெற்று அஞ்ஞானத்தையொழித்து, மன சங்கையும் அகன்று—மனச்சந்தேகமும்நீங்கி, நின் சரணமே உற— தேவரீரது திருவடிகளையே சரண்புகுமாறு, எங்கள் தம் பொருட்டு சிறிது அருள் புரிய வேண்டும் என— அடியேங்கள்பொருட்டுச் சற்றே கருணைசெய்யவேண்டுமென்று (திருமால்) விண்ணப்பஞ்செய்ய, இறைவன் கூறுவான்- தலைவராகியசிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுவார் எ-று.

உம்மை எச்சம். ஏ பிரிநிலை. (௩௰)

இனியொரு திறமதற் கிசைத்து மாருயி
ரனையவும் புரப்பவ னாத லாலவர்
வினையறு நெறிமையால் வேண்டு கிற்றிநின்
மனனுறு மெண்ணினை மறுத்தி மாசிலாய்.

இ—ள்: மாசு இலாய்—குற்றமற்ற திருமாலே!, ஆர் உயிர் அனையவும் புரப்பவன் ஆதலால்—(நீ) உலகில் நிறைந்த ஆன்மாக்களெல்லாவற்றையும் காப்பவனாகையால், அவர் வினை அறும் நெறிமையால் வேண்டுகிற்றி—அந்த மானுடர்களது தீவினை நீங்கும் வகையாக (நம்மைப்) பிரார்த்திக்கின்றனை, அதற்கு இனிது ஒரு திறம் இசைத்தும்— அதற்குச் சிறந்த ஒருபாயத்தை (யாம்)சொல்வேம், நின் மனன் உறும் எண்ணினை மறுத்தி—(அதுசித்திபெறுமோ பெறாதோ என) உனதுமனத்திற்பொருந்திய ஆசங்கையை ஒழிப்பாய் எ—று.

உன்றொழிற்குவேண்டியதொன்றையே பிரார்த்தித்தனையாதலின், அதற்கு வேண்டிய உபாயத்தைக்கூறுதுமென்பதாம்.

இனிது- குறிப்புமுற்றுப்பெயரெச்சம். இசைத்தும்-எதிர்காலத் தன்மைப்பன்மைவினைமுற்று. மனம் என்பது மனன் எனப்போலியாயிற்று. (ங-க)

காதலி னருளுமுன் கலையின் பன்மையிற்
கோதறு மோர்கலை கொண்டு நேமிசூழ்
மேதினி யதனிடை வியாத னென்றிடு
போதக முனியெனப் போந்து வைகுதி.

இ—ள்: காதலின் அருளும் உன் கலையின் பன்மையில் கோது அறும் ஓர் கலை கொண்டு—விருப்பத்துடன் காவற்றொழில்செய்கின்ற உனது பலகலைகளுள்ளே குற்றமற்ற ஒருகலையைவகித்து, நேமி சூழ் மேதினி அதனிடை— சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகத்தில், வியாதன் என்றிடு போதக முனி என போந்து வைகுதி— வியாசனென்றுசொல்லப்படுகின்ற ஞானமுனிவனாகஉதித்து வசிக்கக்கடவாய் எ—று.

மேதினி-மேதையையுடையது; மது கைடவரென்னும் அசுரர்களது மேதை முற்காலத்திற் பரவப்பெறுதலாலிப்பெயர்வந்தது. உலகிற்பரந்தஅஞ்ஞானங்களையகற்ற வல்ல ஞானமுனியென்பார் 'போதகமுனி' என்றார். (ங-உ)

போந்தவ ணிருந்தபின் புகரி லாமறை
யாய்ந்திடின் வந்திடு மவற்றை நால்வகை
வாய்ந்திட நல்கியே மரபி னோர்க்கெலா
மீந்தனை யவரகத் திருளை நீத்தியால்.

இ—ள்: அவண் போந்து இருந்தபின்—(நீ) அங்ஙனம்போய்ப் பிறந்திருந்தபின்பு, ஆய்ந்திடின் புகர் இலா மறை வந்திடும்— சிந்தித்தாற் குற்றமற்றவேதம் (உன்னகத்தில்)தெரியவரும், அவற்றை நால்வகை வாய்ந்திட நல்கி—அவ்வேதத்தை நான்குவகைபொருந்தப்பகுத்து, மரபினோர்க்கு எலாம் ஈந்தனை—(ஓதற்கேற்ற) சாதியார்க்கெல்லாமுபதேசித்து, அவர் அகத்து இருளை நீத்தி—அவரது மனத்திலுள்ள அஞ்ஞானத்தைப்போக்குதி எ—று.

ஈந்தனை-முற்றெச்சம். சற்குருவைச்சார்ந்து எண்ணில்காலங் கேட்டுத்தெளிந்தாலொப்பச் சிந்தித்தமாத்திரத்தேபுலப்படுமென்பார் 'புகரி லாமறை யாய்ந்திடின் வந்திடும்' என்றார். மரபினோரென்றது அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூவருணத்தாருள் உரியகாலத்திலுபநயனஞ்செய்யப்பெற்றோரை. "அதீயீரங்ஸ்வ கர்மஸ்தாஸ்த்ரயோவர்ணாத்விஜாதய:"எனமநுஸ்மிருதியும்,"அந்தணர்முன்மூவர்க்குமாமறையுமாகமமுஞ்-சந்தையுற வோதுமது சால்பு" எனச் சைவசமயநெறியும் "வேதியர்கண்முதன்மூவருமைமயாதிவீடுபெறடைக" எனக் காஞ்சிப்புராணமுங்கூறும். "செய்யா மொழிக்குந்திருவள்ளுவர் மொழிந்த- பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா-வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை-யிதற்குரிய ரல்லாதா ரில்" எனத் திருவள்ளுவமாலையும், இன்னோரன்னவாறு வேறு சிலநூல்களும் அந்தணரைமாத்திரங் கூறுகின்றனவேயெனின், அரசர்க்கும் வணிகர்க்கும் ஓதுவித்தற்கண்ணதிகாரமின்மையின் அந்நூலார் அவரைவிடுத்து அவ்விருதொழிற்குமுரியராந் தலைமைபற்றி அந்தணரைமாத்திரங் தெரிந்துகூறினரென்க. (ங-ங)

அன்னதோர் மறையினை யறிந்து மையமா
வுன்னிய நிலையின ருள்ளந் தேறவு

மன்னவ ரல்லவர் மரபிற் றேரவு
மின்னமோர் மறையுள திதுவுங் கேண்மதி.

இ—ள்: அன்னது ஓர் மறையினை அறிந்தும் ஐயமா உன்னிய நிலையினர் உள்ளம் தேறவும்—அந்த வேதத்தையோதியுணர்ந்தும்(அதன்பொருளிற்) சந்தேகிக்குந் தரத்தினரது மனந்தெளிதற்கும், மன்னவர் அல்லவர் மரபில் தேரவும்—(அவ்வேதத்திற்கு) அதிகாரிகளல்லாத சூத்திரர் முறைப்படி ஆராய்தற்கும் (ஆக), இன்னம் ஓர் மறை உளது—இன்னும் ஒரு இரகசியம் இருக்கின்றது, இதுவும் கேள்- இதனையும்(யாங்கூறுதும்) கேட்குதி எ—று.

மதி-முன்னிலையசை. உம்மை, அறிந்துமென்பதிலுயர்வுசிறப்பு; இதுவுமென்பதிலெச்சம். ஐயமாவுன்னுதல்-சந்தேகித்தல். முதன்மூவருணத்தாரும் வேதமோதல்போலவே நான்காம்வருணத்தார் புராணபடனஞ்செய்வது முறையாதலின் 'மன்னவரல்லவர்மரபிற்றேரவும்' எனவும், அவையும் வேதம்போற் சிறந்தனவென்பதுதோன்ற 'இன்னமோர்மறையுளது' எனவுங் கூறினார்.

"சுகஸ்யததநாதரச்ரவணாத்ததாத்ரவணாத்ஸூச்யதேஹி"எனவும்"சம்ஸ்காரபராமர்சாத்ததபாவாபிலாபாச்ச"எனவும் "ததபாவநிர்த்தாரணேசப்ரவிர்த்தே:"எனவும்"ச்ரவணாத்யயநார்த்தப்ரதிஷேதாத்"எனவும் வேதாந்தசூத்திரமும், "யத:சூத்ரேத்யாமந்த்ரணம்நஜாதியோகேந தத:சூத்ரஸ்யப்ர்ம்மோபாஸநம்நாஸ்தி"எனவும் உபநயநாபாவேபிசூத்ரஸ்யமஹாவாக்யச்ரவணேசூத்ராபிகவிதி:"எனவும் "அநுபசுருண்வத:சூதோத்யயநாதிப்ரவிர்த்தி:"எனவும் "சூத்ரசமீபேத்யயநாதிநிஷேதாத் சூதஸ்தேஷாம்வேதார்த்தவிசாராதிகம்" எனவும் "சூத்ராப்ரம்மவித்யாயாமநதிகாரிணஏவ" எனவும் ஷை சூத்திரத்திற்கு நீலகண்டாசாரியரியற்றியபாஷ்யமும், "கபிலாக்ஷீரபாநேந ப்ராஹ்மணீகமநேநது | வேதாக்ஷரவிசாரேண சூத்ரஸ்யநரகந்த்ருவம் ‖"எனப் பராசரஸ்மிருதிமுதலியவைகளும்,"நவிஸ்பஷ்டமதீயீதநசூத்ரஜநசந்நிதௌ" என மநுஸ்மிருதியும், "அநத்யாயேஷ்வதீதம்யத் யச்சசூத்ரஸ்யஸந்நிதௌ| ப்ரதிக்ரகநிமித்தஞ்ச நரகாயததுச்யதே" எனவியாசஸ்மிருதியும், "அமேத்யசவசூத்ராந்த்யச்மசாநபதிதாந்திகே.......................ஷ்த்தத்ரிம்சதநத்யாயா:" என யாஜ்ஞவல்க்யஸ்மிருதியும், "சூத்ரம்ப்ரகிருத்யயம:" என உபக்கிரமித்து, தஸ்மாதஸ்பாதிகாரோஸ்தி நவேதேஷூநசஸ்மிருதௌ" என வைத்தியநாததீக்ஷிதமும், "வைதிகமறையைப்பின்னவர்க்குரைத்தலிருதையால்வன்றலைசொறிதல்-கையினன்மெய்யிலடிக்கடிபுடைத்தல்கண்மயிர்பறித்திடன்மலநீ- ரெய்திமுன்னோக்கல்பிறர்மனைவிழைதல்பகைவர்பாற்சேவைசெய்திருத்தல்-பொய்தவறுரைத்தன்மடிமையினொழுகநீதெனப்புகன்றனர்புலவோர்" எனக்காசிகண்டமும், "நெறியிலோர் போலக் கற்றோய் கலிங்கமெய்ந் நிலவச்சுற்றிக்-கறைவியறி வெண்பல் லோடும் பின்னவர் காலை யேகி-யறைபுனல் படிந்து நீதி யந்தணர்தம்மை யெள்ளி- மறையினை மறையோர் தம்பாற் கற்பர்மா நிரைய மெய்த" எனக்கூர்மபுராணமும், "தெரியவருமறைப்பொருளைச்செவிப்புலத்திலுறநான்காம்-வருணமுடையவர்கேட்கலாகாதவாறேபோல்" என நைடதமுங்கூறுதலாலும், அவ்வேதத்தை ஓதுமிடங்களினின்று கேட்டோரும் அதனைப் பிரசங்கித்தோருமாகிய சூத்திரர்க்கு"அதஹாஸ்யவேதமுபசுருண்வதஸ்த்ரபுஜதுப்யாம்சுரோத்ரப்ரதிபூரண முதாகரணேஜிஹ்வாச்சேத:" எனச்சுருதியும், "ஸ்மிருதேச்ச" என வேதாந்தசூத்திரமும், "ஸ்மர்யதேசசூத்ரஸ்யவேதவாக்யச்ரவணாதௌதண்ட:"என அச்சூத்திரத்திற்கு நீலகண்டாசாரியரியற்றிய பாஷ்யமும் தண்டனைவிதித்தலாலும்,வேதமோதல் கேட்ட

ல் பொருளாராய்தன் முதலியவற்றிற்கு நான்காம் வருணத்தார் உரியரல்லரென்பதை இனிதுதுணிந்து, மன்னவரல்லவர் சூத்திரரென்றும். (௫௪)

ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனஞ்
சாற்றிய வாகமந் தனக்கு மாங்கது
வீற்றுற வருவது மன்று மேன்மையா
லாற்றவு நமதிய லறையு நீரதே.

இ—ள்: ஏற்றமது ஆகிய மறைக்கும்—உயர்வுடைத்தாகிய வேதத்திற்கும், யாம் முனம் சாற்றிய ஆகமம் தனக்கும்—யாம் முற்காலத்தில் அருளிச்செய்த ஆகமத்திற்கும், ஆங்கது வீற்றுற வருவதும் அன்று— அவ்விரகசியம் வேற்றுமைபொருந்தத் தோன்றுவதுமன்று, மேன்மையால் ஆற்றவும் நமது இயல் அறையும் நீரது — மேன்மையுடனே பெரும்பான்மையும் நமது பிரபாவத்தைக் கூறுந்தன்மையையுடையது எ—று.

வருவதுமென்பதிலும்மை எச்சம். ஆலுருபு உடனிகழ்ச்சிக்கண்வந்தது. தன்னைப்பிரமாணமாகக்கொள்ளும் நூல்களனைத்திற்கும் முதனூலாய்ச் சுயம்பு எனப்படுதலின்‘ஏற்றமதாகியமறை’எனவும்,மகாசங்காரமுடிவிற் சாதாக்கியதத்துவத்திலுள்ள பிரணவர்முதலியபத்துச்சிவன்களுக்கும் ஈசுரதத்துவத்திலுள்ள மகாருத்திரர்முதலிய பதினெட்டுருத்திரர்களுக்குமாகச் சிவபேதம் உருத்திரபேதம் என்னும்பகுப்பமைய ஒவ்வொன்றொவ்வொருவர்க்காய் அசிரௌதமாக வாக்கிந்திரியமின்றி விரதிகரண சிற்சத்திபரிசத்தினாலநுக்கிரகிக்கப்படுதலின் ‘யாமுனஞ்சாற்றியவாகமந்தனக்கும்’ எனவும், அவ்விருவகைநூல்களினின்றும் வேறுயெண்ணப்படினும் அவற்றின்சாரங்களையே கதாரூபமாகத்திரட்டிக்கூறுதல்பற்றி அபேதமாதலின் ‘ஆங்கதுவீற்றுறவருவதுமன்று’ எனவும், சிவாதிட்டானமாத்திரையாற் றிருமான் முதலாயினோரைப்பரமெனக்கூறும்பாகஞ் சிறிதுஞ்சாமானியமுமாக, சிவபிரானது சுயம்பிரகாசபரத்துவவைபவத்தைக் கூறும்பாகமே பெரிதும் விசேடமுமாகி நிலவுவதென்பார் ‘மேன்மையாலாற்றவுநமதியலறையுநீரது’ எனவுங்கூறினார். (௫௫)

என்பெய ரதற்கெனி லினிது தேர்ந்துளோர்
துன்பம தகற்றிடுந் தொல்பு ராணமா
மொன்பதிற் றிருவகை யுண்ட வற்றினை
யன்புடை நந்திமுன் னறியக் கூறினேம்.

இ—ள்: அதற்கு பெயர் என் எனில்—அதற்குப்பெயர் யாதெனில், இனிது தேர்ந்துளோர் துன்பமது அகற்றிடும் தொல் புராணம் ஆம்—நன்குணர்ந்தவர்களது கிலேசத்தைப்போக்குகின்ற பழைய புராணமென்பதாம், ஒன்பதிற்றிரு வகை உண்டு—(அந்நூலிற்) பதினெட்டுவகுப்புள்ளன, அவற்றினை—அவ்வகையனைத்தையும், அன்பு உடை நந்தி அறிய முன் கூறினேம்—பேரன்பினையுடைய நந்தியானவன் அறிந்துகொள்ளும்படி முற்காலத்திற் சொல்லியருளினேம் எ—று.

நன்குபயின்றார்க்கு இகபரமிரண்டினுஞ் சாதனமாய்ப் போகமோக்ஷங்களைக் கொடுத்தலின் ‘இனிதுதேர்ந்துளோர்துன்பமதகற்றிடும்-புராணம்’ எனவும், அவற்றைக்கேட்டுக்கொள்ளுமாறு பிரார்த்தித்த நந்தியென்பார் ‘அன்புடைநந்தி’ எனவுங்கூறினார். (௫௬)

ஆதியி னந்திபா லளித்த தொன்மைசேர்
காதைகள் யாவையுங் கருணை யாலவன்

கோதற வுணர்சனற் குமாரற் கீந்தன
னீதியோ டவனிடை நிலத்திற் கேட்டியால்.

இ—ள்: ஆதியில் நந்தி பால் அளித்த தொன்மைசேர் காதைகள் யாவையும்—முற்காலத்தில் நந்திக்கு (யாம்) உபதேசித்த பழைமைபொருந்திய புராணங்களனைத்தையும், அவன்—அந்தநந்தியானவன், கோது அற உணர் சனற்குமாரற்கு கருணையால் ஈந்தனன்—குற்றந்தீரக்கற்றுணர்ந்த சனற்குமாரமுனிவனுக்குக் கிருபையோடு உபதேசித்தான் (ஆதலின்), நிலத்தில் அவனிடை நீதியோடு கேட்டி—பூவுலகத்தில் அச்சனற்குமாரமுனிவனிடத்தில் முறைமையுடன் (அவற்றை நீ) கேட்டுணர்குதி எ—று.

நந்திபால் வேற்றுமைத்திரிபு. கருணையால் என்பதில் ஆல் உடனிகழ்ச்சிப்பொருட்டு. எல்லாநூல்களையும் ஐயமுதலியகுற்றங்கணீங்கக் கேட்டுணர்ந்தவரென்பார் 'கோதறவுணர்சனற்குமாரன்' எனவும், அத்தகையமுனிவனை ஆசிரியனாகக்கோடலுனக்கிழுக்காகாது, அவனிடம் மாணாக்கனாயமைந்து கேட்குதியென்பார் 'நீதியோடு-கேட்டி' எனவுங் கூறினார். (௩௭)

என்னலு நன்றென விசைந்து தாழ்ந்தெழீஇ
முன்னவன் விடைகொடு முளரி யான்முதற்
றுன்னிய வானவர் தொகையொ டேகியே
தன்னுல கத்தின்மால் சார்தன் மேயினான்.

இ—ள்: என்னலும்—என்று (சிவபெருமான்) அருளிச்செய்தலும், மால்—விஷ்ணுமூர்த்தி, நன்று என இசைந்து தாழ்ந்து எழீஇ—நல்லதென்று சம்மதித்து வணங்கியெழுந்து, முன்னவன் விடை கொடு—முதற்கடவுளாகிய அச்சிவபெருமானது அநுமதியைப்பெற்றுக்கொண்டு, முளரியான் முதல் துன்னிய வானவர் தொகையொடு ஏகி—பிரமாமுதலாக நெருங்கிநின்ற தேவர்கூட்டத்துடன் மீண்டுபோய், தன் உலகத்தில் சார்தல் மேயினான்—தமது வைகுண்டலோகத்திற் பிரவேசித்தார் எ—று.

சார்தலு மயன்றனைச் சதமகத்தனை
யார்தரு மமரரை யருளி னவ்வவர்
சேர்தரு புரந்தொறுஞ் செல்லற் கேவிப்பின்
கார்தரு மெய்யுடைக் கடவுள் வைகினான்.

இ—ள்: சார்தலும்—அவ்வாறு பிரவேசித்தவுடன், கார் தரு மெய் உடை கடவுள்—கரியதிருமேனியையுடையவிஷ்ணுமூர்த்தி, அயன் தனை—பிரமதேவரையும், சதமகத்தனை—நூறுயாகங்களையுடைய இந்திரனையும், ஆர்தரும் அமரரை—நிறைந்த தேவர்களையும், அவ்வவர் சேர்தரு புரம் தொறும் செல்லற்கு அருளின் ஏவி—அவரவர்வசிக்கின்ற நகரங்கடோறும் போகும்பொருட்டுக் கிருபையுடன் அனுப்பி, வைகினான்—(அங்கு) வீற்றிருந்தார் எ—று.

தழுவியும் இன்சொற்கூறியும் தலையசைத்தும் பிறவாறும் அவரவர்தகுதிக்கேற்ப உபசரித்துவிடுத்தனரென்பார் 'அருளின்-ஏவி' என்றார். (௩௯)

திருவொடு மருவியோன் செயிவுற் றெங்கணும்
பரவுறு மியல்பெறு பகவ னுதலாற்
றரணியி லருளினுற் றனது சத்தியி
லொருகலை தன்னுட னுதிக்க வுன்னியே.

இ—ள்: திருவொடு மருவியோன்— இலக்குமிதேவியுடன் கூடியிருக்கின்ற திருமால், எங்கணும் செறிவுற்று பரவுறும் இயல் பெறு பகவன் ஆதலால்— எல்லாவிடங்களினுஞ் செறிந்துபரந்ததன்மையையுடைய கடவுளாதலின், தனது சத்தியில் ஒரு கலை தன்னுடன் தரணியில் உதிக்க—தமது சத்திகளுள் ஒருகலையோடு பூவுலகத்தில் அவதரிக்கும்படி, அருளினால் உன்னி— (ஆன்மாக்கண்மீதுகொண்ட) கருணையினாற்றிருவுளங்கொண்டு எ—று.

பகவனாதலால் உன்னி என இயையும். சத்தியோடுகூடியவழியே தொழிலியற்றும் வன்மையுளதாமாகலின், அவ்வாறிருப்பவரென்பார் 'திருவொடுமருவியோன்' எனவும், சர்வவியாபகமுடைமையால் விஷ்ணுஎன்னுங்காரணப்பெயர்பெற்ற கடவுளாதலின், 'செறிவுற்றெங்கணும்பரவுறுமியல்பெறுபகவன்' எனவும், பலகலைகள்பண்டுபோற்றிதித்தொழில்புரிய ஓர்கலையுடனேயுதிக்க நினைத்தெனன்பார், 'தமதுசத்தியிலொருகலைதன்னுடனுதிக்கவுன்னி' எனவுங்கூறினார்.

விஷ்ணுசர்வவியாபகமுடையரென்பதை "விஷ்ணுர்விச்வஜகத்யோநிஸ்வாம்சபூதைஸ்வகைஸ்ஸஹ- மமாம்சஸம்பவோபூத்வாபாலயத்யகிலம்ஜகத்" எனவும், ஏகோவிஷ்ணுர்மகத்பூதம்பிருதக்பூதாங்யநேகச:| த்ரீங்லோகாந்வ்யாப்யபூதாத்மாபுங்க்தே விச்வபுகவ்யய:|| எனவும் வரும் உபநிஷத் பிரமாணங்களாலுமறிக. சிவபிரானுக்கே இயற்குணமாயுள்ள சர்வவியாபகத்தை விஷ்ணுமூர்த்திக்குஞ் சார்த்திகூறுதல்பொருந்தாதேயெனின், "சிவாயவிஷ்ணுரூபாயசிவரூபாயவிஷ்ணவே| சிவஸ்யஹ்ருதயம்விஷ்ணுர்விஷ்ணோச்சஹ்ருதயம்சிவ:| யதாந்தரம்நபச்யாமிததாமேஸ்வஸ்திராயுஷி" எனவும், "யதாந்தரம்நபேதாச்யு:சிவகேசவயோஸ்ததா" எனவும் ஷை உபநிஷத்தேகூறுதலாற் பொருந்துமென்க. அருளினாலென்பதற்கு சிவனருட்படியெனினுமாம். (உo)

பங்கயத் தயன்வழிப் பாரா சரப்பெயர்த்
துங்கநன் முனிபனித் தூவ லெல்லையிற்
கங்கையி லியோசன கந்தி யோடுற
வங்கவர் தம்மிடை யவத ரித்தனன்.

இ—ள்: பங்கயத்து அயன் வழி பராசர பெயர் துங்க நல் முனி—தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரது சந்ததியிலுள்ள பராசரரென்னும்பெயரையுடைய மகிமைவாய்ந்த நல்லமுனிவர், பனித்தூவல் எல்லையில்—பனித்தூவலையுடைய பகற்காலத்தில், கங்கையில் இயோசனகந்தியோடு உற — கங்கைநதிக்கரையில் யோசனகந்தியென்னுங்கன்னிகையுடன்சேர, அங்கவர் தம்மிடை அவதரித்தனன்—அவர்களிடத்திற் (புத்திரராக) அவதாரஞ்செய்தார் எ—று.

பங்கயம் ஆகுபெயர். யோசனகந்தியைப் பரிமளகந்தியெனவும் வழங்குப.

பிரமகுலதிலகரென்பார்'பங்கயத்தயன்வழி-முனி'எனவும், கலியுகதருமங்களையும் பற்பல சோதிடரகசியங்களையும் நூல்களாகஇயற்றிப் பரப்பித் தந்தையாதற்கேற்ற புகழ்வாய்ந்துடையமுனியென்பார் 'துங்கநன்முனி' எனவும், உலகத்திற்கு நன்மையுண்டாக்குமுத்தமகுமாரனைத் தோற்றுவித்தல்வேண்டுமென்று தாமெண்ணியிருந்த சுபமுகூர்த்தஞ்சமீபித்தமையால் நதியைக்கடந்து செல்லாதுநின்று, விபூதியைத் தூவிச் சூரியகிரணங்களைப்பனியினான்மறையச்செய்து,ஓடம்விடுப்பாளாயங்குநின்ற மற்சகந்தியென்னுங்கன்னிகையை மங்கைப்பருவமுடையபரிமளகந்தியாக்கிச் சேர்ந்தனராதலின், 'பனித்தூவலெல்லையிற் கங்கையிலியோசனகந்தியோடுற' எனவுங்கூறினார்.

மற்சகந்தி பரதவமாதன்றோ அம்மாதினிடத்தவதரித்தகுமாரர் முனிகுலத்தவராதலெங்ஙனமெனின், அறியாதுகடாயினாய், அம்மாது பரதவரால் வளர்க்கப்

பட்டனளேயன்றி அவர்வயிற்றிற் பிறந்தாளல்லள், இழிகுலத்தாரிடம் இருந்து வளர்ந்தகுற்றம் பராசரமுனிவராற் போக்கப்பட்டது, அதற்குச்சான்று அவள்மற்சகந்தம் நீக்கிப் பரிமளகந்தம்பெற்றதே, "தேஜோமயாநிபூர்வேஷாம்சரீராணீந்த்ரியாணிச" எனத்தருமசாஸ்திரம்விதித்த மகத்துவமமைந்த பராசரமுனிவருக்குக்குமாரராயவதரித்தலின் அவர்முனிகுலத்தவரேயாமென்க. பரிமளகந்தியின்வரலாற்றை "வாசவனளித்தவிமானமீதொருவன்வசுவெனுஞ்சேதிமாமரபோன்-கேசவனெனப்போம்விசும்பிடைமனையாள்கிரிகையையினைந்துடல்கெழுமி- நேசமோடிதயமுருகுமக்கணத்தினிலவறவிழுந்தவீரியமெய்த்-தேசவனளித்தநதியிடைத்தரளத்திரளெனச்சிந்தியதொருபால், ——ஒருமுனிமுனிவாலரமகளொருத்திமீனமாயுற்பவித்துழல்வா-ளிரையெனவதனைவிழுங்குமுன்கருக்கொண்டுடன்முதிர்காலையிலதனைப்- பரதவர்வலையினகப்படுத்தரியப்பாவகனொருவனுமிவளு-மிருவருமிந்தமீன்வயிற்றுதித்தார்யமுனையும்மனுநேரெனவே, ——மானவர்பதியாம்வசுவினுக்கிவரைமகிழ்வொடுகாட்டலுமதனை- மீனவனெனப்பேர்கொடுத்தனன்கொண்டுமெல்லியலிவளைமீட்டளித்தான்-யானுமின்றளவுமென்மகளென்னுமியற்கையாலினிமையின்வளர்த்தேன்- கானமென்குயில்போல்வந்துமீளவுந்தன்காவலர்குலத்திடைக்கலந்தாள்" என்னுமகாபாரதச்செய்யுட்களானும், பராசரமுனிவர் இவளையேசேர்ந்து வியாசமுனிவரைப்பெற்றாரென்பதை "பரிதிதந்தமாநதிமருங்கொருபகற்பராசரன்மகப்பேறு- கருதிவந்துகண்டென்னையுமெனதுமெய்க்கமழ்புலவையுமாற்றிச்- சுருதிவாய்மையின்யோசனைப்பரப்பெழுசுகந்தமுமெனக்கீந்து-வருதிநீயெனப்பனியினான்மறைத்தொருவண்டுறைக்குறைசேர்ந்தான், ——முரணிறந்தமெய்க்கேள்வியோனருளினான்முஞ்சியும்புரிநூலு- மிரணியஞ்செழுங்கொழுந்துவிட்டனவெனவிலங்குவேணியுந்தானுந்- தரணியெங்கணும்வியாதனென்றுரைகெழுதபோதனமுனியப்போ-தரணியின்புறத்தனலெனவென்வயினவதரித்தனனம்மா" என்னும் ஷைநூற்செய்யுட்களானுமுணர்க. (சுக)

மற்றவன் வதரிகா வனத்தில் வைகியே
யற்றமில் வாதரா யணனெ னும்பெயர்
பெற்றன னாகியெம் பிரான்ற னாணையாற்
கற்றிடா துணர்ந்தனன் கரையில் வேதமே.

இ—ள்: அவன் வதரிகா வனத்தில் வைகி—அக்குமாரர் வதரிகாச்சிரமத்தில் (பலகாலம்)இருந்து, அற்றம் இல் வாதராயணன் எனும் பெயர் பெற்றனன் ஆகி—குற்றமில்லாத வாதராயணரென்னும்பெயரைப்பெற்று, எம் பிரான் தன்ஆணையால்—எமதுகடவுளாகிய சிவபெருமானது கட்டளையினால், கரை இல் வேதம் கற்றிடாது உணர்ந்தனன்--கரையற்றவேதக்கடலைப் (பிறரிடம்) ஓதாது(தாமாகவே) அறிந்தார் எ-று.

வதரிகா-இலந்தை; வதரமென்பதுமது. வாதரம்-இலந்தைவனம். அயனம்-இருக்கை. ஆகவே வாதராயணன் என்பதற்கு இலந்தைவனத்தை இருக்கையாகவுடையவனென்பதுபொருள். 'கரையில்' என்னுமடைக்கேற்ப வேதத்தைக்கடலென்றும். (சுஉ)

மோனக முற்றிய முனிவர் மேலவன்
றானுணர் மறையெனுந் தரங்க வேலையி
லானதோர் பொருளினை யறிஞர் பெற்றிடத்
தூநெறி கொண்டநாற் றுறைசெய் தானரோ.

இ—ள்: மோனகம் முற்றிய முனிவர் மேலவன்—மௌனத்தன்மைசித்திக்கப்பெற்ற முனிசிரேட்டராகிய அவ்வாதராயணர், தான் உணர் மறை எனு

ம் தரங்க வேலையில் ஆனது ஓர் பொருளினை— தாம் ஓதாதுணர்ந்த வேதமென்கின்ற திரைபொருந்திய கடலிற்றோன்றிய சாரத்தை, அறிஞர் பெற்றிட— பேரறிவுடையோர் பெற்றுக்கொள்ளும்படி, தூ நெறி கொண்ட நால் துறை செய்தான்—தூய்மையான வழிபொருந்திய நான்குவகுப்பாகச்செய்தார் எ—று.

தரங்கவேலை-பெருங்கடல். வேதக்கடலினுழ்ந்துதெரிந்தெடுத்த மெய்ப்பொருளாகிய கருத்தை அறிஞரெளிதினுணர்தற்கேற்ற வழிமுறையமைய நான்காகவகுத்தாரென்பதாம்: மோனகம்-மோனத்தன்மை.

அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பே சொரூபமெனவும், ஏனைய உருவத்திருமேனிமுதலியனவெல்லாந் தாலாருந்ததிநியாயமாய் அதனையுணர்தற்பொருட்டும் வழிபடுதற்பொருட்டுங்கொண்ட திருமேனிகளாமெனவுமுணர்ந்து, புறக்கரணமாகிய காயத்தொழிலையும் அகக்கரணமாகிய மனத்தொழிலையுங் கைவிட்டு, சிரவணம் மனனம் நிதித்தியாசனம் சமாதி என்னும் நால்வகை ஞானநிலைகளையுங் கடைப்பிடித்தொழுகிய ஞானியென்பார் 'மோனகமுற்றியமுனிவர்மேலவன்' என்றார். வரையறையின்மை பொருளாழம் அரும்பொருட்கிடக்கையாதிய இயல்புகள்பொருந்துதலால் வேதத்தைக் கடலாக உருவகித்தார். (௨௩)

கரையறு வேதமாங் கடலை நான்கவாய்ப்
பிரிநிலை யாக்கியே நிறுவு பெற்றியாற்
புரைதவிர் முனிவரன் புகழ்வி யாதனென்
றொருபெயர் பெற்றன னுலகம் போற்றவே.

இ—ள்: புரை தவிர் முனிவரன்— (காமமுதலிய) குற்றங்களற்ற அவ்வாதராயணமுனிவர், கரை அறு வேதம் ஆம் கடலை— கரையில்லாத வேதமாகிய சமுத்திரத்தை, நான்க ஆய் பிரிநிலையாக்கி நிறுவு பெற்றியால்—நால்வகையினவாகப்பிரித்து நிறுத்தியகாரணத்தால், உலகம் போற்ற—உலகத்தவர்கள் துதிக்கும்படி, புகழ் வியாதன் என்று ஒரு பெயர் பெற்றனன்—புகழையுடைய வியாசரென்று ஒரு பெயரைப்பெற்றார் எ—று.

வியாதன்-வேதங்களை வேறுகூறாக்கினவன். வியாசனெனற்பாலது வியாதனெனவும்வழங்கிற்று. வி என்னுமுபசர்க்கமும் அஸ் என்னுந்தாதுவுங்கூடியவழி வ்யஸ் எனநிற்கும்; அஃதீண்டு வெவ்வேறுகூறாக்கிவைத்தலென்னும் பொருளில்வந்தது.

மெய்ஞ்ஞானமுடைய முனியென்பார் 'புரைதவிர்முனிவரன்' எனவும், விபரீதஞானத்தான் மருண்டு வேதவிருத்தமாகப் பற்பலசமயநூல்களையியற்றி யிழுக்குற்றார்போலாது, எத்துணை நுண்ணறிவாளிகட்கும் வழுஉத்தெரித்தற்கிடமின்றெனவகுத்து,உலகினரெவரும் வியந்துபுகழும்படி சிறப்புற்றனராதலின் 'புகழ்வியாதனென்றொருபெயர்பெற்றனனுலகம்போற்ற' எனவுங்கூறினார். (௨௪)

விரவிய மறைதெரி வியாத னவன்
குரவனே யாஞ்சனற் குமாரன் றன்னிடை
யிருவகை யொன்பதா யியல்பு ராணமு
மரபொடு கேட்டவை மனத்துட் கொண்டபின்.

இ—ள்: விரவிய மறை தெரி வியாதன் ஆம் அவன்—(வரம்பிகந்து) கலந்த வேதங்களை ஓதாதுணர்ந்த வியாதராகிய அம்முனிவர், குரவனே ஆம் சனற்குமாரன் தன்னிடை—ஆசிரியரேயாகிய சனற்குமாரமுனிவரிடத்து, இருவகை ஒன்பதாய் இயல் புராணமும் மரபொடு கேட்டு—பதினெண்வகையாகப்பொருந்திய புராணங்கள்மூ

முவகையும் முறைப்படி கேட்டு, அவை மனத்துள் கொண்டபின்— அவற்றைத்தம் முளத்திலமைத்தபின்பு எ—று.

ஏகாரம் தேற்றம். உம்மை முற்று. இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம்.

முறைபிறழ்ந்த வேதங்களை ஓதாதுணர்ந்தார்க்கு அதன்சாரமாயமைந்துள்ள புராணங்களையுணர்தற்கோராசிரியர் வேண்டப்படாதிருப்பவும், குருசிட பாரம்பரியத்தை உலகிஞட்டுதற்பொருட்டே குரவனுகக்கொண்டுபாடங்கேட்டனரென்பார் 'வீர வியமறைதெரிவியாதனுமவன்- சனற்குமாரன்றன்னிடைட்இருவகையொன்பதாயியல்புராணமுமரபொடுகேட்டு'எனவும், சனற்குமாரமுனிவரும் இவர்க்குக்குரவராதற்கேற்ற தேவாம்சமுங்கல்வியறிவுமுடையரென்பார் 'குரவனேயாஞ்சனற்குமாரன்' எனவுங்கூறினர்.

சனற்குமாரரின் மகிமையை, "அருள்பெறுசனற்குமாரனறுமுகன்கூறென் றுன்னைச்-சுருதியிற்கிளந்தவாற்ருலறிவினிற்றூயமுற்று-மிருளறவுணர்ந்தாய்" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க. (சரு)

ஏத்திடு சுருதிக ளிசைக்கு மாண்பொருண்
மாத்திரைப் படாவெனு மாசில் காட்சியர்
பார்த்துணர் பான்மையாற் பலவ கைப்படச்
சூத்திர மானவுஞ் சொற்று வைகினன்.

இ—ள்: ஏத்திடு சுருதிகள் இசைக்கும் மாண் பொருள் மாத்திரைப்படா எனு—(யாவராலுந்) துதிக்கப்படுகின்ற வேதங்கள் கூறுகின்ற மாட்சிமைபொருந்தியபொருளனைத்தும் அளவுபடாவென்று சிந்தித்து, மாசு இல் காட்சியர் பார்த்து உணர் பான்மையால்—குற்றமற்றகாட்சியினையுடைய பெரியோர்கள் கண்டுணருமாறு, பலவகைப்பட சூத்திரம் ஆனவும் சொற்று வைகினன்—பலவகுப்புப்பொருந்தச் சூத்திரங்களையுங்கூறி வசித்திருந்தார் எ—று.

பான்மையால்=ஆலீற்றுவினையெச்சம். உம்மை-எச்சம். ஏத்திடுசுருதி என்பதற்குக் கடவுளைத்துதிக்கின்ற வேதங்களெனினுமாம்.

ஆழ்ந்துணரவேண்டியபொருளென்பார் 'மாண்பொருள்' எனவும், அத்தகையபொருளை எவருந்தெற்றெனவுணர்தலரிதென்பார் 'மாத்திரைப்படா' எனவும், குலம் ஒழுக்கம் அறிவு என்னுமுத்திறத்தானுங் குற்றம்நீங்கிவிளங்குபவரென்பார் 'மாசில் காட்சியர்' எனவும், ஊன்றிநோக்காது கண்டவுடன் அல்லதுகேட்டவுடன் எளிதிற்பொருளுணர்தற்கேற்றவாறென்பார் 'பார்த்துணர்பான்மையால்' எனவும் கூறினர்.

சூத்திரம் என்றது வியாசசூத்திரத்தை. இது வேதாந்தசூத்திரமெனவும் பிரமசூத்திரமெனவும் உத்தரமீமாஞ்சையெனவும் பெயர்பெறும். இதற்குப் பலர்பாஷ்யஞ்செய்தனர். சங்கராசாரியர் நீலகண்டாசாரியர் இராமாநுஜாசாரியர் மத்துவாசாரியர் என்னும் நால்வர் பாஷ்யங்களே பரந்துவழங்குகின்றன. இவற்றுட் சங்கரபாஷ்யத்தை அத்வைதிகளும், நீலகண்டபாஷ்யத்தைச் சைவவிசிட்டாத்வைதிகளும், இராமாநுஜபாஷ்யத்தை வைஷ்ணவவிசிட்டாத்வைதிகளும், மாத்துவபாஷ்யத்தை மாத்துவர்களும் அநுசரிக்கின்றனர். (சசு)

மயலறு பயிலரே வைசம் பாயனர்
சயிமினி சுமந்துவாந் தவத்தர் நால்வர்க்கும்
வியலிருக் காதியாம் வேத நான்கையு
முயர்வுறு தவத்தினன் முறையி னேதினன்.

இ—ள்: உயர்வு உறு தவத்தினன்— மகிமைபொருந்தியதவத்தினையுடைய வியாசமுனிவர், மயல் அறு பயிலரே வைசம்பாயனர் சயிமினி சுமந்து ஆம் தவத்தர் நால்வர்க்குமு—அறியாமைநீங்கப்பெற்ற பைலரும் வைசம்பாயனரும் சைமினியும் சுமந்துவுமாகிய நான்குமுனிவர்களுக்கும், வியல் இருக்கு ஆதியாம் வேதம் நான்கையும் முறையின் ஓதினன்—பெரிய இருக்குமுதலாகிய நான்குவேதங்களையும் முறைப்படி உபதேசித்தார் எ—று.

முறை- நிரனிறை. உபதேசிக்கப்பட்டவற்றையுள்ளவாறுளத்தமைத்துக் கொள்ளுமதிநுட்பமுடையவரென்பார் ‘மயலறுபயிலர்’ என்றார். இவ்வடையை ஏனையோர்க்குமொட்டுக. (௬௭)

தோல்வரு மறைகளின் சூத்தி ரத்தையு
மேல்வரு சயிமினி முதல மேதையர்
நால்வரு முணரிய நவின்று நல்கினு
னல்வரு கடவுளை யனைய தன்மையான்.

இ—ள்: ஆல் வரு கடவுளை அனைய தன்மையான்— கல்லாலவிருக்ஷநீழலிற் (குருமூர்த்தியாய்) எழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியைப்போன்ற இயல்பினையுடைய வியாசமுனிவர், தோல் வரும் மறைகளின் சூத்திரத்தையும்— பழைமைபொருந்திய பிரமசூத்திரத்தையும், மேல் வரு சயிமினி முதல மேதையர் நால்வரும் உணரிய நவின்று நல்கினன்—மேன்மைபொருந்திய சைமினிமுனிவர் முதலாகிய பேரறிவாளிகள் நால்வரும் அறியும்படி உபதேசித்தருளினார் எ—று.

தோல் இழுமென்மொழியால் விழுமியது நுவறல்; நீட்டல்விகாரமெனினுமாம். மேல்வரு என்பதற்கு முற்செய்யுளிற் கூறப்பட்டுப்போந்த எனப் பொருளுரைப்பினுமாம். இருக்குமுதலிய பெயர்களுடன் வியாதமுனிவரால் வகுக்கப்பட்டதாயினும், அது, பண்டைக்காலத்திற்சிவனருளியதே பிறிதன்றென்பார் ‘தோல்வருமறை’ எனவும், சனகாதிநால்வர்க்குந் தக்ஷிணாமூர்த்தி வேதாகமசாரங்களை ஐயமறத் தெருட்டியதுபோலவே தெருட்டினரென்பார் ‘ஆல்வருகடவுளையனையதன்மையான்—நவின்று நல்கினன்’ எனவுங்கூறினார். (௬௮)

மெய்ம்முனி யனையரை விளித்து நீரினி
யிம்மறை யியல்பினோ ரெவர்க்கு மீமென
வம்முறை நால்வரு மனைய வேதநூல்
செம்மையொ டளித்தனர் சிறந்து ளோர்க்கெலாம்.

இ—ள்: மெய் முனி அனையரை விளித்து—மெய்ம்மையினையுடைய வியாசமுனிவர் அந்த மாணாக்கரையழைத்து, நீர் இனி இயல்பினோர் எவர்க்கும் இ மறை ஈம் என—(முனிவிர்காள்!) நீவிர் இனித் தகுதியுடையோர்யாவர்க்கும் இந்த வேதங்களையுபதேசியுங்களென்று கட்டளைசெய்ய, நால்வரும்—அந்த நான்குமுனிவர்களும், சிறந்துளோர்க்கு எலாம் அனைய வேதநூல் அம்முறை செம்மையொடு அளித்தனர்—தகுதிபெற்றுள்ளோர்களுக்கெல்லாம் அந்த வேதநூலை அந்தப்பிரகாரம் செப்பமாக உபதேசித்தார்கள் எ—று.

ஈயும் என்னும் முன்னிலையேவல்வினைமுற்று ஈமெனநின்றது. களிப்பு கவலை ஆசை பயம் கோபம் என்பவற்றைத்தவிர்ந்த திரசித்தரே முனியெனப்படுவரென்பது நூற்றுணிபாதலின், அவ்விலக்கணமுடையரென்பதுபோதர‘மெய்ம்முனி’ எனவும், முன்னர் முப்பத்துமூன்றாஞ்செய்யுளுரையில் நாமெடுத்துக்காட்டியாங்கு வாய்ந்தவ

ரென்பார் 'இயல்பினோர்' எனவும், ஆசிரியர் உபதேசித்தவாறேயென்பார் 'அம்முறை' எனவுங் கூறினார். தகுதியில்லார் வேதமோதினும் ஓதுவிக்கினும் மரணம் அல்லது தீராப்பவையுண்டாமென்பது தருமநூற்றுணிபு. (௫௯)

அன்னதோர் முனிவர னதற்குப் பின்னரே
பன்னருந் தொகையினாற் பதினெண் பான்மையாய்
முன்னுறு புராணநூன் முழுது முற்றிய
வின்னரு ணிலைமையா லெனக்கு நல்கினான்.

இ—ள்: அன்னது ஓர் முனிவரன்-அந்த வியாசமுனிவர், அதற்கு பின்னர்-அதன்பின்பு, பன்னரும் தொகையினால் பதினெண் பான்மை ஆய்—சொல்லுதற்கரிய கிரந்தசங்கியையினாற் பதினெண்வகையாக, முன் உறு புராண நூல் முழுதும்—முன்னர்த்தோன்றிய புராணசாஸ்திரமனைத்தையும், முற்றிய இன் அருள் நிலைமையால் எனக்கு நல்கினான்—முதிர்ந்த இனிய காருண்ணியத்தோடும் எனக்குப் போதித்தருளினார் எ—று.

பன்ன என்பதனீற்றகரந்தொக்கது. பன்னருந்தொகையென்றது நான்கிலக்கத்தெண்ணாயிரமென்னுங் கிரந்தசங்கியையை. மற்றைய மாணாக்கரிடத்துவைத்த அருளினும் மிகச்சிறந்த அருளென்பார் 'முற்றியவின்னருள்' என்றார். (௬௦)

வேதம துணர்தரு வியாத மாமுனி
காதல னாமெனைக் கருணை செய்திவை
யோதுதி யாவரு முணர வென்றன
னாதலி னுலகினி லவற்றைக் கூறினேன்.

இ—ள்: வேதமது உணர்தரு வியாத மா முனி-வேதத்தையோதாதுணர்ந்த வியாசமகாமுனிவர், காதலன் ஆம் எனை கருணை செய்து—புத்திரனாகிய எனக்குத் திருவருள்புரிந்து, யாவரும் உணர இவை ஓதுதி என்றனன்—அனைவருமறியும்படி இப்புராணங்களைப்போதிப்பாயாக என்று பணித்தார், ஆதலின்—ஆதலினால், உலகினில் அவற்றை கூறினேன்—இப்பூவுலகத்தில் அவற்றைச்சொல்லினேன் எ—று.

'எனை'என்பதில் ஐயுருபு குவ்வுருபாகத்திரிக்கப்பட்டது. வித்தைகற்பித்தோனையும்பிதாவெனக்கோடன்மரபாகலின் அங்ஙனங்கொண்டொழுகினேனென்பதுதோன்ற 'காதலனாமெனை' எனவும், அத்தகைய குருபத்தி விளைவையுணர்ந்தமையின், பற்பலமாணாக்கருளராகவும், இத்தொழிலை எனக்கே பணித்தனரென்பார் 'எனைக்கருணைசெய்திவையோதுதி—என்றனன்' எனவும், வேதாதிகாரமற்ற நான்காம்வருணத்தாருமுணரவென்பார் 'யாவருமுணர' எனவுங்கூறினார். காதலனாமெனை என்பதற்குக் காதலுடையோனாகிய என்னையெனப்பொருள்கூறுவாருமுளர். (௬௧)

காமரு தண்டுழாய்க் கண்ண னாகிய
மாமுனி யருளினான் மறைகள் யாவையுந்
தோமறு புராணநூற் றொகுதி யாவையு
நேமிகொ ளுலகெலா நிலவி யுற்றவே.

இ—ள்: காமரு தண் துழாய் கண்ணன் ஆகிய மா முனி அருளினால்— அழகுபொருந்திய குளிர்ந்த துளசிமாலையையணிந்த விஷ்ணுமூர்த்தியாகிய சிறந்த வியாசமுனிவரது கருணையினால், மறைகள் யாவையும்—வேதங்கள்முழுதும், தோம் அறு புராண நூல் தொகுதி யாவையும்—குற்றமற்ற புராணசாஸ்திரங்களின் தொகைமுழு

தும், நேமி கொள் உலகு எலாம் கிலவி உற்ற— சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகமெங்கும் பரவி வழங்கின எ—று. (௰௨)

நம்பனுர்க் கொருபது நார ணற்குநான்
கம்புயத் தவற்கிரண் டலரி யங்கியா
மும்பர்வான் சுடர்களுக் கோரொன் றென்பரா
லிம்பரி லிசைக்குமப் புராணத் தெல்லையே.

இ—ள்: இம்பரில் இசைக்கும் அ புராணத்து எல்லை— இப் பூவுலகத்தில் (அறிஞராற்) புகழ்ந்துகூறப்படுகின்ற அந்தப்புராணங்களின்கணக்கானது, நம்பனுர்க்கு ஒருபது-சிவபெருமானுக்குப்பத்து, நாரணற்கு நான்கு-விஷ்ணுமூர்த்திக்கு நான்கு, அம்புயத்தவற்கு இரண்டு—பிரமதேவர்க்கிரண்டு, அலரி அங்கி ஆம் உம்பர் வான் சுடர்களுக்கு ஒரொன்று என்பர்—சூரியனும் அக்கினியுமாகிய மேலுள்ள சிறந்த சோதிகளுக்கு ஒவ்வொன்று என (அறிஞர்) கூறுவர் எ—று.

நம்பனுர் என்பதில் ஆர் விகுதி உயர்வுபற்றிவந்தது. நாராயணன் என்னும் வடசொல்லே நாரணனெனவும் வழங்குப. (௰௩)

வேறு.

எதிரில் சைவமே பவிடிய மார்க்கண்ட மிலிங்க
மதிகொள் காந்தநல் வராகமே வாமன மற்சம்
புதிய கூர்மமே பிரமாண்ட மிவைசிவ புராணம்
பதும மேலவன் புராணமாம் பிரமமே பதுமம்.

இ—ள்: எதிர் இல் சைவம்—ஒப்பற்ற சைவபுராணமும், பவிடியம்—பவிடியபுராணமும், மார்க்கண்டம்—மார்க்கண்டேயபுராணமும், இலிங்கம்—இலிங்கபுராணமும், மதி கொள் காந்தம்—மதிப்பினையுடைய காந்தபுராணமும், நல் வராகம்—நல்ல வராகபுராணமும், வாமனம்—வாமனபுராணமும், மற்சம்—மற்சபுராணமும், புதிய கூர்மம்—புதிதாகிய கூர்மபுராணமும், பிரமாண்டம்—பிரமாண்டபுராணமும், இவை சிவபுராணம்— என்னுமிவை சிவபுராணங்களாம், பிரமம்— பிரமபுராணமும், பதுமம்—பதுமபுராணமும் (என்னுமிவை), பதுமமேலவன் புராணம் ஆம்— தாமரைமலரின்மேலிருக்கின்ற பிரமதேவரது புராணங்களாம் எ—று.

மதி முதனிலைத்தொழிற்பெயர். மதிகொள்-புத்தியிலமைத்துக்கொள்ளுதற்கேற்ற எனினுமாம். (௰௪)

கருது காருட நாரதம் விண்டுபா கவத
மரிக தைப்பெய ராக்கினே யம்மழற் கதையா
மிரவி தன்கதை பிரமகை வர்த்தமா மிவைதாந்
தெரியு மொன்பதிற் றிருவகைப் புராணமாந் திறனே.

இ—ள்: கருது காருடம்—(யாவருஞ்) சிந்திக்கின்ற காருடபுராணமும், நாரதம்—நாரதியபுராணமும், விண்டு—விஷ்ணுபுராணமும், பாகவதம்—பாகவதபுராணமும் (என்னுமிவை), அரி கதை பெயர்— விஷ்ணுபுராணங்களின் பெயர்களாம், ஆக்கினேயம் அழல் கதை ஆம்—ஆக்கினேயபுராணம் அக்கினிபுராணமாம்; பிரமகைவர்த்தம் இரவிதன்கதை ஆம்—பிரமகைவர்த்தபுராணம் சூரியபுராணமாம், தெரியும் ஒன்பதிற்றிருவகை புராணம் ஆம் திறன் இவைதாம்— ஆராயப்படுகின்ற பதினெண் புராணங்களாகிய விவரம் இவையேயாம் எ—று.

## பதினெண்புராணசூசனம்.

௧—சைவபுராணம். சிவசம்பந்தமுடைமையாலிப்பெயர்பெற்றது. இருபத்துநாலாயிரங்கிரந்தங்களையுடையது. வித்தியேசுரசங்கிதை ருத்திரசங்கிதை விநாயகசங்கிதை உமாசங்கிதை மாதிருசங்கிதை ஏகாதசருத்திரசங்கிதை கைலாசசங்கிதை சதருத்திரசங்கிதை கோடிருத்திரசங்கிதை சகஸ்ரகோடிருத்திரசங்கிதை வாயுசங்கிதை தருமசங்கிதை எனப் பன்னிருசங்கிதையாக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத்தினின்று யாவுமுற்பத்தியாதல் சிவலிங்கவழிபாடு புண்ணியகாலம் புண்ணியக்ஷேத்திர தீர்த்தங்கள் சரியைமுதலியபாதங்கள் உருத்திரர்களினிலக்கணம் தேவி விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் என்பவர்களின்மான்மியம் விதிவிலக்கு என்னுமிவற்றைக் கூறுவது.

௨—பவிடியபுராணம். பவிஷ்யத் என்னும் வடமொழி பவிடியமெனவழங்கிற்று. லோகவிருத்தாந்தங்களைக் கூறுதலாலிப்பெயர்பெற்றது. முப்பத்தோராயிரங்கிரந்தங்களையுடையது. சர்வபூதலக்கணம் உலகநீதி ஆதித்தியமான்மியம் அகோரகற்பத்தில் உலகமுண்டாகுமுறை சிருட்டிபேதமுதலியவற்றைக்கூறுவது.

௩—மார்க்கண்டேயபுராணம். மார்க்கண்டேயமுனிவருக்குபதேசிக்கப்பட்டமையாலிப்பெயர்பெற்றது. முப்பத்தீராயிரங் கிரந்தங்களையுடையது. ஒரு சாபத்தினற்பறவையுருவான இருவிப்பிரர் வியாசமுனிவரின் மாணாக்கரான சைமினியையடைந்து "ஸ்வாமீ! விஷ்ணுமூர்த்திமாநுடசரீரமெடுத்ததற்கும் பாண்டவரைவர்க்குந் திரௌபதியொருத்தியே மனைவியாயதற்கும் பலராமர் மதுவுண்டுமயங்கிப் பிரமகத்திசெய்துவருந்திப் பின்னர்ப்பிராயச்சித்தஞ்செய்ததற்கும் கிருஷ்ணார்ச்சுனரிருவர்க்கும் அகாலமரணமெய்துதற்குங் காரணம்யாது" என்றுவினவ, அக்காலத்தில், ஒன்பதினாயிரங்கிரந்தங்களாகக்கூறப்பட்டது.

௪—இலிங்கபுராணம். சிவலிங்கமகிமையையுணர்த்துதலாலிப்பெயர்பெற்றது. பதினோராயிரங்கிரந்தங்களையுடையது. சிவபெருமான் இலிங்கத்தினின்றுந்தோன்றி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களையுரைத்தருளியது. சிவலிங்கமகிமை துருவன் ஆதித்தன் முதலியவர்களினிலை அரசபாரம்பரியம் விரதம் நித்தியகர்மம் திரிபதார்த்தவுண்மை தானலக்ஷணம் என்பனவற்றைக்கூறுவது.

௫—காந்தபுராணம். கந்தசம்பந்தமுடைமையாலிப்பெயர்பெற்றது. இதனலம் முன்னருபோற்காதத்துரைக்கப்பட்டது.

௬—வராகபுராணம். வராகவுருவெடுத்த விஷ்ணுமூர்த்தியாற் பூமிதேவிக்குபதேசிக்கப்பட்டு இப்பெயர்பெற்றது. இருபத்துநாலாயிரங் கிரந்தங்களையுடையது. மானவகற்பநீதிகள் விஷ்ணுமூர்த்தியின்வாயிற்காவலாளராகிய சயன் விசயன் என்னுமிருவருஞ் சாபமேற்று முறையேஇரணியனும் இரணியாக்கனுமாய்த்திதிவயிற்றிற்றோன்றியது இரணியாக்கன் வராகமூர்த்தியால் வதைக்கப்பட்டது திதிக்கும் விஷ்ணுமூர்த்திக்கும்நிகழ்ந்தயுத்தம் விஷ்ணு வராகரூபத்தைநீக்கியதுமுதலியவற்றைக்கூறுவது.

௭—வாமனபுராணம். வாமனராகிய விஷ்ணுமூர்த்தியாற்கூறப்பட்டு இப்பெயர்பெற்றது. பதினாலாயிரங்கிரந்தங்களையுடையது. தக்கன்யாகம் விஷ்ணுமூர்த்தியின்அவதாரம் திரிவிக்கிரமாவதாரம் திரிமூர்த்திகளின்மகிமை அவர்களருளும்பலன் திருக்கேதாரத்துள்ள சிவலிங்கப்பெருமானதும் வதரிகாச்சிரமத்தினதும் பெருமை காமதகனம் உமாமகேசுரர்திருமணம் தாணுகோதாவரிதீர்த்தங்களின்சிறப்பு குமாரக்கடவுளின் அவதாரம் மாவலிச்சக்கிரவர்த்தியின்சரித்திரம் முதலியவற்றைக்கூறுவது.

௮—மற்சபுராணம். மற்சாவதாரமெடுத்த விஷ்ணுமூர்த்தியால் வைவச்சுவதமனுவுக்குபதேசிக்கப்பட்டு இப்பெயர்பெற்றது. பதினாலாயிரங் கிரந்தங்களையுடையது. மற்சாவதாரம் விஷ்ணுமூர்த்திமனுவரசனையும்பிறவுயிர்களையுஞ்சலப்பிரளயத்தாலழியாவண்ணங்காத்தது திரிபுரசங்காரம் சதுர்வேததாற்பரியங்கள் நரசிங்காவதாரம் பார்வதிதேவிதிருமணம் தாரகனென்னுமசுரனுக்குந்தேவர்களுக்குநடந்தயுத்தம் முதலியவற்றைக்கூறுவது.

௯—கூர்மபுராணம். கூர்மரூபமெடுத்த விஷ்ணுமூர்த்தியாலுபதேசிக்கப்பட்டு இப்பெயர்பெற்றது. ஆறாயிரங்கிரந்தங்களையுடையது. பூருவகாண்டம் உத்தரகாண்டமென இருகாண்டங்களாகவும் தொண்ணூற்றேழத்தியாயங்களாகவும் வகுக்கப்பட்டது. விஷ்ணுமூர்த்தி கூர்மரூபமெடுத்துப் பாற்கடலைக்கடைந்து அமிர்தமளித்து நாரதமுனிவருக்கும் இந்திரனுக்கும் இந்திரத்துய்மனுக்கும் இலக்குமிகற்ப விருத்தாந்தங்களையெல்லாமுபதேசித்தமையைக்கூறுவது.

௧0—பிரமாண்டபுராணம். பிரமாண்டங்களின் மகிமைகளைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது. பன்னீராயிரங்கிரந்தங்களையுடையது. பிரமாண்டங்களின்மகிமை மேல்வருங்கற்பங்கடோறும்நிகழுஞ்சரித்திரங்கள் வராகவதம் பஞ்சகிருத்தியங்கள் சரபவடிவெடுத்துநாரசிங்கத்தின்வலியடக்கியது பிரமகாலப்பிரமாணம் பூகோளவியற்கைமுதலியவற்றைக்கூறுவது.

௧௧—பிரமபுராணம். இது பிராமியபுராணமெனவும் வழங்கப்படும். பிரமதேவரது புராணமாதலாலும் அவரால் மரீசிமுனிவர்க்குபதேசிக்கப்பட்டமையாலும் இப்பெயர்பெற்றது. பதினாயிரங்கிரந்தங்களையுடையது. உலகசிருட்டி மங்வந்தரம் கிருஷ்ணமூர்த்திகாலம்வரையுமிருந்த சூரியசந்திரவம்சத்தரசர்பாரம்பரியம் சூரியாலயம் சிவாலயம் ஜகந்நாதாலயம் திருநந்தனவனம் முதலியவற்றினியல்பைக்கூறுவது.

௧௨—பதுமபுராணம். பிரமதேவர் சிருட்டிநிமித்தம் ஓர் தாமரைமலரிற்றோற்றியதைக்கூறியதாலிப்பெயர்பெற்றது. ஐம்பத்தையாயிரங்கிரந்தங்களையுடையது. பிரமதேவர்தாமரைமலரில்வந்தது தீர்த்தவிசேடம் ஆலயவிசேடம் அண்டவளவு இலக்ஷுமீநாராயணமந்திரங்கள் திலீபராசனுக்கும்வசிட்டருக்கும்நடந்தசம்பாஷணை முதலியவற்றைக் கூறுவது.

௧௩—காருடபுராணம். விஷ்ணுமூர்த்தியாற் கருடனுக்குபதேசிக்கப்பட்டு இப்பெயர்பெற்றது. ஆறாயிரங்கிரந்தங்களையுடையது. உலகசிருட்டி விரதவிவரணம் சோதிர்விஷயம் புண்ணியக்ஷேத்திரம் அந்தியக்கிரியைகள் பிதிர்பூசை சாமுத்திரிகாலக்ஷணம் இரத்தினலக்ஷணமுதலியவற்றைக்கூறுவது.

௧௪—நாரதீயபுராணம். நாரதமுனிவராற் கூறப்பட்டு இப்பெயர்பெற்றது. இருபத்தையாயிரங்கிரந்தங்களையுடையது. விஷ்ணுஸ்தோத்திரங்கள் விஷ்ணுவைப்பூசித்தற்குரிய காலநியதிகள் துருவப்பிரகலாதசரித்திரம் முதலியவற்றைக்கூறுவது.

௧௫—வைணவபுராணம். விஷ்ணுசம்பந்தமுடைமையாலிப்பெயர் பெற்றது. வைஷ்ணவபுராணமெனவும் விஷ்ணுபுராணமெனவும் வழங்கப்படும். ஆறாயிரங்கிரந்தங்களையுடையது. அண்டநிலைமை வேதசாகைகளின்பிரிவு தருமாதருமம் ஆச்சிரமம் விஷ்ணுமூர்த்தியின்பிரபாவங்கள் முதலியவற்றைக்கூறுவது.

௧௬—பாகவதபுராணம். பகவத்சம்பந்தமுடைமையாலிப்பெயர் பெற்றது. இது சுகர்பாகவதமெனவும் வழங்கப்படும். பதினெண்ணாயிரங்கிரந்தங்களையுடையது. பன்னிருஸ்கந்தங்களாலும் இருநூறு அத்தியாயங்களாலும் சுருதிகீதைமுதலிய பன்னிருகீதைகளாலும் புனையப்பட்டது. ஏழுதினங்களுட் சர்ப்பந்தீண்டியிறக்குமாறு பெற்றசாபத்தினின்றும்நீங்கிப் பரிசித்துமகாராசனுய்யும்பொருட்டு, கங்காதீரத்திருந்த சுக

முனிவராலுபதேசிக்கப்பட்டது. விஷ்ணுவின் நான்குஅவதாரம் நான்குபத்தர்களின் சரித்திரம் காயத்திரிமகிமை முதலியவற்றைக்கூறுவது. தேவீபாகவதத்தையே விஷ்ணுபுராணத்துளொன்றாய பாகவதமென்பர்சிலர்.

௧௭—ஆக்கினேயபுராணம். அக்கினிசம்பந்தமுடைமையாலிப்பெயர்பெற்றது. எண்ணாயிரங்கிரந்தங்களையுடையது. யாகம் அக்கினியின்பெருமை விஷ்ணுவின் அவதாரங்கள் சிவனைக்குறித்துச்செய்யும் ஞானபூசை பிரபஞ்சலக்கணம் அரசாிறை முதலியவற்றைக்கூறுவது.

௧௮—பிரமகைவர்த்தபுராணம். பன்னீராயிரங் கிரந்தங்களையுடையது. மனுக்களுளொருவர் நாரதமுனிவர்க்குபதேசித்த கிருஷ்ணசரிதம் ஆதித்தர்வரலாறு பிரமவராகமான்மியம் முதலியவற்றைக்கூறுவது. (௫௫)

இத்தி றத்தவாம் புராணங்க ளொன்பதிற் றிரண்டி
னத்த னுக்குள புராணமீ ரைந்தினி லடல்வேற்
கைத்த லத்தவன் காந்தத்து ளன்னவன் கதையை
மெய்த்தொ கைப்பட வுரைப்பனென் றேமுனி விளம்பும்.

இ—ள்: இத்திறத்த ஆம் புராணங்கள் ஒன்பதிற்றிரண்டின்— இத்தன்மையினவாகிய பதினெண்புராணங்களுள், அத்தனுக்கு உள புராணம் ஈரைந்தினில்— சிவபெருமானுக்குள்ள பத்துப்புராணங்களுள், அடல் வேல் கைத்தலத்தவன் காந்தத்துள்—வலிமைபொருந்திய வேற்படையைத்தரித்த திருக்கரத்தையுடைய சுப்பிரமணியக்கடவுளது காந்தபுராணத்துள், அன்னவன் கதையை—அவரதுசரித்திரத்தை, மெய் தொகை பட உரைப்பன் என்று—மெய்ம்மையாகிய தொகையென்னுமிலக்கணம்பொருந்தக் கூறுவேனென்று, முனி விளம்பும்—சூதமுனிவர் கூறுவார் எ—று.

சிவபுராணந்தானே சுப்பிரமணியபுராணமெனவும் வழங்கலிற்கும் அபேதத்தை விளக்குவார் 'அத்தனுக்குளபுராணமீரைந்தினிலடல்வேற்கைத்தலத்தவன்காந்தம்' என்றார். தொகைப்படவுரைத்தலாவது: பதிகமாகக்கூறுதல். இதனிலக்கணத்தை "பதிகக்கிளவிபல்வகைப்பொருளைத்- தொகுதியாகத்தொகுத்துரைப்பதுவே" என்பதனாலறிக. இதனைப் பதிகமென்னும்பெயரோடு வேறாகக்கூறினார் பரஞ்சோதிமாமுனிவர்முதலிய சில ஆசிரியர். (௫௬)

வேறு.

பூமிசை யிருந்த புத்தேள் புரிந்திடு புதல்வர் தம்மு
ளேழுறு தக்க னீன்ற விருந்தனிக் குமரி யான
தீமையை யகற்ற வம்மை சிந்தைசெய் திமைய மன்னன்
மாமக ளாகி நோற்று வைகினாள் வைகு நாளில்.

இ—ள்: பூ மிசை இருந்த புத்தேள் புரிந்திடு புதல்வர் தம்முள்— தாமரைமலரின்மேல் வீற்றிருக்கின்ற பிரமதேவர்சிருட்டித்த பத்துப்புத்திரருள், எழுறு தக்கன் ஈன்ற இரும் தனி குமரி ஆன தீமையை அகற்ற— இறுமாப்படைந்த தக்கன் பெற்ற பெரிய ஒப்பற்ற மகளாகிய குற்றத்தை நீக்கும்படி, அம்மை சிந்தைசெய்து— உமாதேவியார் திருவுள்ளம்பற்றி, இமைய மன்னன் மா மகள் ஆகி நோற்று வைகினாள்—இமையமலையரசனது சிறந்தபுதல்வியாகிச் (சிவபெருமான்திருமணம்புரிந்துகொள்ளுமாறு) தவஞ்செய்திருந்தார், வைகும் நாளில்—அப்படியிருக்குநாட்களில் எ—று.

பிரமபுத்திரர்பதின்மரையுந் தசப்பிரமரெனவும்வழங்குப. ஏமமென்பது ஏமெனக்கடைக்குறையாயிற்று. தக்கனீன்றவிருந்தனிக்குமரி- தாக்ஷாயணி. அருந்தவ

ஞ்செய்துபெற்ற புதல்வியாதலின் 'இருந்தனிக்குமரி' எனவும் 'மாமகள்' எனவும், பின்னர்ச் சிவனையிகழ்ந்தகுற்றத்தினாற் றந்தையாதற்குத் தகவற்றனனாதலின் 'எமு றுதக்கன்' எனவுங் கூறினார்.

இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம். (௫௭)

அவுணர்க ளோடு சூர னவனிமேற் றோன்றி நோற்றுச்
சிவன்வர மளிக்கப் பெற்றுத் தேவர்யா வரையும் வென்று
புவிதனி லுவரி தன்னிற் புங்கவர் புனைவன் செய்த
தவலரு மகேந்தி ரத்தில் வைகினான் றானை சூழ.

இ—ள்: சூரன் அவுணர்களோடு அவனிமேல் தோன்றி நோற்று—சூரபன் மன் சிங்கமுகன் தாரகன் முதலிய அசுரர்களுடன் இப்பூவுலகத்திற்பிறந்து தவஞ்செய்து, சிவன் வரம் அளிக்க பெற்று—சிவபெருமான் (எளிவந்து) வரங்களைக் கொடுத்தருளப்பெற்றுக்கொண்டு, தேவர் யாவரையும் வென்று—(அவ்வரப்பிரசாதத்தினால்)தேவரனைவரையும் வெற்றிகொண்டு, புவிதனில் உவரிதன்னில் புங்கவர் புனைவன் செய்த தவல் அரும் மகேந்திரத்தில்—இப்பூவுலகத்திலுள்ள உவர்க்கடலினடுவே தேவத்தச்சனியற்றிய கெடுதலில்லாத மகேந்திரபுரியில், தானை சூழ வைகினான்— சேனைகள் சூழ வாழ்ந்திருந்தான் எ—று.

பகையரசராலகப்படுத்தற்கரிய அரணமைந்த புரியென்பார் 'தவலருமகேந்திரம்' என்றார். (௫௮)

அனையதோர் காலை வெள்ளி யடுக்கலிற் சனகனாதி
முனிவரர் தமக்குத் தொல்லை மூவகைப் பதமுங் கூறி
யினியதோர் ஞான போத மித்திற மென்று மோனத்
தனிநிலை யதனைக் காட்டித் தற்பர னிருந்தானன்றே.

இ—ள்: அனையது ஓர் காலை—அக்காலத்தில், தற்பரன்— சிவபெருமான், சனகன் ஆதி முனிவரர் தமக்கு தொல்லை மூவகை பதமும் கூறி—சனகர்முதலிய முனிசிரேட்டர்களுக்குப் பழைய (சரியைமுதலிய) மூவகைப்பட்ட பாதங்களையுமுபதேசித்து, இனியது ஓர் ஞானபோதம் இ திறம் என்று—நல்ல ஞானபோதமிப்படியென்று, தனி மோனநிலையதனை காட்டி—ஒப்பற்ற மௌனநிலையைக் காண்பித்து, வெள்ளிய டுக்கலில் இருந்தான்—திருக்கைலாசமலையிற் (கல்லாலவிருக்ஷநீழலில்) வீற்றிருந்தருளினார் எ—று.

அனையதோர்காலை என்றது சூரன் மகேந்திரத்தில் வாழ்ந்தகாலத்தை. சனகனாதிமுனிவரர்:—சனகர் சனந்தர் சனாதனர் சனற்குமாரரென்னுநால்வர். மூவகைப்பதம்:— சரியை கிரியை யோகம் என்பன. ஞானம்- சிவனையுணர்தல். போதம்- அங்ஙனமுணர்ந்ததைத்தெளிதல். ஆகவே ஞானபோதமென்பதற்குச் சிவஞானத்தெளிவென்பதுபொருள். மோனத்தனிநிலை- ஞானமுத்திரை. இதன்றிறத்தை மேருப்படலத்துப் பன்னிரண்டாஞ்செய்யுளிற் காண்க. தற்பரன்-ஆன்மாவிற்கு மேலானவன்.

ஆகமசாரமாகிய சரியைமுதலியநான்கனுள் முன்னையமூன்றையும் வாக்கானும், பின்னையஞானத்தை,வாசாமகோசரமாதலிற்காயக்குறியானுமுணர்த்தினரென்பார் 'மூவகைப்பதமுங்கூறி - மோனத்தனிநிலையதனைக்காட்டி' எனவும், அந்தஞானம் முன்னைய மூன்றினுஞ் சிறந்ததாய் உணர்ந்தார்க்கு அத்துவிதசாயுச்சியத்தைப் பயத்தலின் 'இனியதோர்ஞானபோதம்' எனவுங் கூறினார். (௫௯)

வீற்றிருந் தருளு மெல்லை வெய்யசூர் முதலா வுள்ளோ
ராற்றவுந் தீங்கு செய்தே யமரர்கள் சிலரைப் பற்றிப்
போற்றிடுஞ் சிறையி னுய்ப்பப் புரந்தரன் முதலா வுள்ளோர்
மாற்றருந் துயரின் மூழ்கி மறைந்தன ராகி வைகி.

இ—ள்: வீற்றிருந்தருளும் எல்லை—அவ்வாறு சிவபிரான் வீற்றிருக்குங்காலத்தில், வெய்ய சூர் முதலா உள்ளோர் ஆற்றவும் தீங்கு செய்து— கொடிய சூரபன்மன் முதலாகவுள்ள அசுரர்கள் மிகவும் பொல்லாங்குகளை இயற்றி, அமரரில் சிலரை பற்றி போற்றிடும் சிறையில் உய்ப்ப— தேவர்களுள்ளே சிலரைப்பிடித்துக் காக்கப்படுகின்ற சிறையில்வைப்ப, புரந்தரன் முதலா உள்ளோர்— இந்திரன்முதலாகவுள்ள தேவர்கள், மாற்றரும் துயரில் மூழ்கி மறைந்தனராகி வைகி—விலக்குதற்கரிய துன்பக்கடலிலமிழ்ந்தி ஒளித்திருந்து எ—று.

ஆக என்னுமெச்சங்களினீற்றுயிர்மெய்களும் மாற்ற என்னுமெச்சத்தினீற்றுயிருங்கெட்டன. புரந்தரன்-பகைவரதுசரீரத்தைப்பிளப்பவன். மூழ்குதல்வினைக்கேற்பத் துயரைக் கடலென்றும். கடுஞ்சிறையென்பார் 'போற்றிடுஞ்சிறை' என்றார்.

இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (௬0)

சங்கரன் மோனத் தன்மை சதுர்முகற் குரைப்ப வன்னோன்
வெங்கணை வேளை யுய்ப்ப விழித்தவன் புரநீ றாக்கிப்
பங்கயன் முதலா வுள்ளோர் பலரும்வந் திரங்கிப் போற்ற
வங்குறை மோன நீங்கி யவர்க்கருள் செய்தா னையன்.

இ—ள்: சங்கரன் மோன தன்மை சதுர்முகற்கு உரைப்ப— சிவபெருமானது மௌனநிலையைப் பிரமதேவர்க்குக்கூற, அன்னோன் வெம் கணை வேளை உய்ப்ப— அப்பிரமதேவர் (அந்நிலையைத்தவிர்க்குமாறு) கொடிய பஞ்சபாணங்களையுடைய மன்மதனை அனுப்ப, விழித்து அவன் புரம் நீறாக்கி—(சிவபெருமான் நெற்றிக்கண்ணாற்) பார்த்து அவனதுமேனியைப்பொடியாக்கி,பங்கயன் முதலா உள்ளோர் பலரும் வந்து இரங்கி போற்ற—(பின்) பிரமாமுதலாகவுள்ள தேவர்கள்பலரும்வந்து பரிந்து துதிக்க, ஐயன் அங்கு உறை மோனம் நீங்கி அவர்க்கு அருள் செய்தான்—சிவபெருமான் அத்திருக்கைலாசகிரியில்வீற்றிருந்த மௌனநிலையைவிடுத்து அத்தேவர்க்குக் கருணைசெய்தார் எ—று.

முற்செய்யுளிலுள்ள உய்ப்ப என்பதும் இச்செய்யுளிலுள்ள உரைப்ப உய்ப்ப நீறாக்கி என்பனவும் முறையே ஒன்றையொன்று கொண்டு செய்தான் என்னும்வினைமுற்றோடுமுடிந்தன. வெங்கணை-விருப்பத்தைத்தருங்கணையெனினுமாம். சங்கரன்-(ஆன்மாக்களுக்குச்) சுகத்தைச்செய்பவன். (௬௧)

ஒரெழு முனிவர் தம்மை யோங்கலுக் கிறைவன் றன்பாற்
பேரருண் முறையாற் றூண்டிப் பெருமணம் பேசு வித்துப்
பாரறு நோன்பின் மிக்க பராபரை யன்பு தேர்ந்து
காரணி கண்டத் தெந்தை கணங்களோ டிமையம் புக்கான்.

இ—ள்: கார் அணி கண்டத்து எந்தை—(நஞ்சுண்டு) கருநிறத்தைத்தாங்கிய திருமிடற்றையுடைய சிவபெருமான், ஒரெழு முனிவர் தம்மை ஓங்கலுக்கு இறைவன் தன் பால் பேர் அருள் முறையால் தூண்டி—சப்தரிஷிகளை இமையமலையரசனிடத்துப் பெருங்கருணையின்முறையினால் ஏவி, பெரு மணம் பேசுவித்து—பெரிய திருமணத்தைப்பேசச்செய்து, பார் அறு நோன்பில் மிக்க பராபரை அன்பு தேர்ந்து— ஒப்பற்ற

தவத்தின்மேம்பட்ட பார்வதிதேவியாரின் அன்பைப்பரீக்ஷித்து, கணங்களோடு இமையம் புக்கான்—சிவகணங்களோடும் இமையமலையிற்சென்றருளினர் எ—று.

எழுமுனிவராவார்:—மரீசி அத்திரி புலகர் புலத்தியர் கிரது அங்கிரா வசிட்டர் என்பவர்கள்; இவற்றுட் சிலபெயர்களைச் சிலர் வேறுபடவுங் கூறுகின்றனர். பாரநோன்பு- பூமியில் (இதுபோன்றதுபிறிது)இல்லாத தவம். மலையரசன்பார்ப்பதியைத் தமக்குமணஞ்செய்வதாக நிச்சயித்திருத்தலையுணர்ந்தும், வேதவிதிப்படி மணஞ்செய்யத்தொடங்கியகருணைக்கேற்ப, முதற்கண்ணதாகிய வரப்பிரேக்ஷணமென்னுங்கிரியையையுந் தவறாதுநடத்தினரென்பார் 'பேரருண்முறையாற்றூண்டிப்பெருமணம் பேசுவித்து' என்றார். (௬௨)

புடையக லிமையந் தன்னிற் புவனங்கள் முழுது மீண்ட
வடபுவி தாழ்ந்து தென்பா லுயர்தலு மலயந் தன்னிற்
கடமுனி தன்னை யேவிக் கவுரியை மணந்து பின்ன
ரடன்மத வேளை நல்கி யநங்கனே யாகச் செய்தான்.

இ—ள்: புடை அகல் இமையந்தன்னில் புவனங்கள் முழுதும் ஈண்ட—இடமகன்ற இமையமலையில் எல்லாவுலகத்தார்களும்வந்து நெருங்குதலால், வடபுவி தாழ்ந்து தென்பால் உயர்தலும்—வடதிசைப்பூமிதாழ்ந்து தென்றிசைப்பூமியுயர, கடமுனிதன்னை மலயந்தன்னில் ஏவி— (அதனைச்சமப்படுத்துமாறு) அகத்தியமுனிவரைப் பொதியமலையிற்றூண்டி, கவுரியை மணந்து-உமாதேவியாரைத்திருமணஞ்செய்து, பின்னர் அடல் மத வேளை நல்கி-அதன்பின்பு வலியமன்மதனைத்தோற்றுவித்து, அநங்கனே ஆக செய்தான்-அருபியேயாயிருக்கும்படி கற்பித்தருளினர் (சிவபெருமான்) எ-று.

புவனம்-ஆகுபெயர். கடமுனி-கும்பத்திற்றோன்றியமுனி. மித்திராவருணரென்னுமுனிவர் சமுத்திரதீரத்திலுலாவியபோது ஊர்வசியென்னுந் தேவகணிகைவர அவள்மீதுகொண்டமோகமேலீட்டினால் அம்முனிவர்க்கு இந்திரியங்கலிதமாயிற்று; அதனை அவர் குடத்தில்விட அகத்தியமுனிவர்தோன்றினர். பிரமதேவரியற்றியயாகத்திற் கும்பத்தினின்றுந்தோற்றினரெனவுஞ் சிலர்கூறுவர். மதவேள்-மதனாகிய வேள். அநங்கன்-அவயவமற்றவன். ஏ-தேற்றம். (௬௩)

மன்புனை கயிலை தன்னின் மலைமக ளோடு மீண்டு
முன்பென வமர்ந்து நாதன் முழுதுல குயிர்கட் கெல்லா
மின்பமும் புணர்ப்பு நல்கி யிமையவர் யாரும் வேண்டத்
தன்பெரு நுதற்கட் டீயாற் சரவண பவனைத் தந்தான்.

இ—ள்: நாதன்—சிவபெருமான், மன் புனை கயிலைதன்னில் மலைமகளோடு மீண்டு—நிலைபெற்ற திருக்கைலாசகிரியிற் பார்ப்பதிதேவியாரோடு திரும்பிப்போய், முன்பு என அமர்ந்து—முன்போலவீற்றிருந்து, முழுது உலகு உயிர்கட்கு எல்லாம் இன்பமும் புணர்ப்பும் நல்கி- சகலலோகங்களிலுமுள்ள ஆன்மாக்களுக்கெல்லாஞ் சுகத்தையும் புணர்ச்சியையும் அருளி, இமையவர் யாரும் வேண்ட—தேவர்களனைவரும் வந்து பிரார்த்திக்க, தன் பெரும் நுதற்கண் தீயால் சரவணபவனை தந்தான்— தமது பெரிய நெற்றிக்கண்ணில்வந்த அக்கினிப்பொறிகளாற் குமாரக்கடவுளையுதிப்பித்தார் எ—று.

சரவணபவன்-சரவணதடாகத்திற்பிறந்தவன். சனகாதிமுனிவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்தலால் ஆணும் பெண்கூடாதிருந்த ஆன்மாக்களையெல்லாம் பண்டுபோற்கூடியின்புறச்செய்தனராதலின் 'முழுதுலகுயிர்கட்கெல்லாமின்பமும்புணர்ப்புநல்கி' எனவும்; நுதற்கண்ணிலவதரித்துஞ் சரவணத்திற் கங்கையாலுய்க்கப்பட்டவழியே மகவாயினராதலின் 'நுதற்கட்டீயாற்சரவணபவனைத்தந்தான்' எனவுங்கூறினார். ()

அந்தமில் விளையாட் டுள்ள வறுமுகக் கடவு டன்னைத்
தந்திடு மெல்லை யன்னோன் றானையந் தலைவ ராக
முந்திய விறல்சேர் மொய்ம்பன் முதலிய விலக்கத் தொன்பா
னந்திதன் கணத்தி னோரை நங்கைபா லுதிப்பச் செய்தான்.

இ—ள்: அந்தம் இல் விளையாட்டு உள்ள அறுமுகக்கடவுள் தன்னை தந்திடும் எல்லை— அளவற்ற திருவிளையாடலையுடைய சண்முகக்கடவுளையுதிப்பித்தபோதே, அன்னோன் தானையம் தலைவர் ஆக—அவரது சேனைத்தலைவர்களாக, முந்திய விறல்சேர்மொய்ம்பன் முதலிய இலக்கத்தொன்பான் நந்திதன்கணத்தினோரை—முதன்மைபொருந்திய வீரவாகுதேவர்முதலாகிய இலக்கத்தொன்பது பிரமதகணவீரரை, நங்கை பால் உதிப்ப செய்தான்—உமாதேவியாரிடத்து அவதரிக்கச்செய்தருளினார் எ—று.

அனற்பொறிகளினழற்சியைச் சகிக்கலாற்றாதஞ்சியோடிய தேவியின்றிருவடிச்சிலம்பினின்றுதிர்ந்த நவமணிகளில் அவ்வம்மணிநிறத்துடன் றேவிவடிவும் அம்சமுமாக அவதரித்த நவசத்திகள் சிவனருளாற் கருப்பமெய்திப்பெற்ற வீரவாகுமுதலிய ஒன்பதின்மரும், உமையம்மையார் சாபமிட்டபோது அச்சத்திகளின்வெயர்விலுதித்த இலக்கருமாக இலக்கத்தொன்பதின்மர்தொகையுணர்க. சுப்பிரமணியக்கடவுளைத் தேவியார்பாலுதிக்கச்செய்யாது தாமேயுதிப்பித்தனராதலின் முற்செய்யுளில் 'தன்பெருநுதற்கட்டீயாற்சரவணபவனைத்தந்தான்' எனவும், அவர்படைத்தலைவரை அவ்வாறன்றித் தேவிவடிவாகவந்த சத்திகளின்வயிற்றிலுதிப்பித்தனராதலின் 'இலக்கத்தொன்பானந்திதன்கணத்தினோரைநங்கைபாலுதிப்பச்செய்தான்' எனவுங்கூறினார். (௪௫)

அண்ணலங் குமரப் புத்தே ளலகிலா வாடல் செய்து
மண்ணுறு கடலும் வெற்பும் வானமுந் திரிபு செய்து
துண்ணெனக் குழவி யேபோற் றோன்றிட வதனை நோக்கி
விண்ணவர் யாருஞ் சூழ்ந்து வெஞ்சமர் புரிந்து நின்றார்.

இ—ள்: அண்ணலம் குமர புத்தேள்—பெருமையிற்சிறந்த குமாரக்கடவுள், அலகு இலா ஆடல் செய்து—அளவற்ற திருவிளையாடல்களைச்செய்து, மண் உறு கடலும் வெற்பும் வானமும் திரிபு செய்து— பூவுலகத்துள்ள சமுத்திரங்களையும் மலைகளையும் வானுலகங்களையும் வேற்றுமைப்படுத்தி, துண்ணென குழவியே போல் தோன்றிட—விரைவாக ஓர் குழந்தையேபோலத்தோற்ற, விண்ணவர் யாரும் அதனை நோக்கி—(இந்திரன்முதலிய) தேவரனைவரும் அத்தன்மையைப்பார்த்து, சூழ்ந்து வெம் சமர் புரிந்து நின்றார்—(அக்குமாரரை) வளைந்து கொடும்போர்செய்து நின்றார்கள் எ—று.

வானம் ஆகுபெயர். திரிபுசெய்து என்றது-முன்னிருந்தஇடத்தினின்றுமாற்றி வேறிடத்துவைத்தன்முதலியவற்றை. துண்ணென்னுமச்சக்குறிப்பீண்டு விரைவையுணர்த்திநின்றது. சுப்பிரமணியக்கடவுளென்பதைச்சிறிதுமறியாதவாறென்பார்,தேற்றேகாரங்கொடுத்து 'குழவியேபோல்' என்றார். (௪௬)

ஆரமர் செய்து ளாரை யட்டுட னுயிரு நல்கிப்
பேருரு நிலைமை காட்டிப் பெறலருங் காட்சி நல்கி
நாரதன் மகத்திற் றோன்றி நடந்ததோர் செச்சை தன்னை
யூர்தியு தாகக் கொண்டே யூர்ந்த தனுப்பி லாதான்.

இ—ள்: ஆர் அமர் செய்துளாரை அட்டு—(தம்முடன்) பெரும்போர்செய்த தேவர்களைக்கொன்று, உடன் உயிரும் நல்கி— (வியாழபகவான்வேண்ட) உடனே ஆன்மாவையுங்கொடுத்து (எழுப்பி), பேர் உரு நிலைமை காட்டி--பாரமேச்சுரரூபத்தை

க் காண்பித்து, பெறல் அரும் காட்சி நல்கி— (அத்தேவர் தரிசிக்கமாட்டாது வருந்த) பெறுதற்கரிய தரிசனத்தையுங் கொடுத்து, நாரதன் மகத்தில் தோன்றி நடந்தது ஓர் செச்சை தன்னை ஊர்தியது ஆக கொண்டு ஊர்ந்தனன்—நாரதமுனிவரது யாகத்திற்றோன்றித்திரிந்த ஒப்பற்ற ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டு செலுத்தினார், ஒப்பு இலாதான்—சமானமற்றவராகிய குமாரக்கடவுள் எ—று.

உம்மை-எச்சம். பேருருவிலமை-பெரியவடிவத்தினிலே. நடந்தது முற்றுப்பெயரெச்சம். (௯௭)

மறைமுதற் குடிலை தன்னின் மாண்பொருண் முறைக டாவி
வெறிகமழ் கமலப் புத்தேள் விடைகொடான் மயங்கக் கண்டு
சிறையிடை யவனை வைத்துச் செகமெலா மளித்துத் தாதை
குறையிரந் திடவே விட்டுக் குறுமுனிக் கதனை யீந்தான்.

இ—ள்: மறைமுதல் குடிலை தன்னில் மாண் பொருள் முறை கடாவி—வேதத்தின்முதற்கண்ணதாகிய பிரணவத்தினது சிறந்த பொருண்முறைமையைக்கேட்டு, வெறி கமழ் கமல புத்தேள் விடைகொடான் மயங்க—நறுமணங்கமழுகின்ற தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர் (அதற்கு)உத்தரங்கூறாதுபிரமிக்க, கண்டு—(அதனைப்)பார்த்து, அவனை சிறையிடை வைத்து—அப்பிரமதேவரைச்சிறையிலிட்டு, செகம் எலாம் அளித்து—எல்லாவுலகங்களையும் (தாமே) படைத்து, தாதை குறையிரந்திட விட்டு—தமதுதந்தையாகிய சிவபெருமான் குறையிரத்தலினால் (அச்சிறையினின்று) விடுத்து, அதனை குறுமுனிக்கு ஈந்தான்— அப்பிரணவப்பொருளை அகத்தியமுனிவர்க்குபதேசித்தார் (குமாரக்கடவுள்) எ—று.

கொடான்-குறிப்புமுற்றெச்சம். (௯௮)

ஆவதோர் காலை யீச னறுமுகப் பரனை நோக்கி
யேவரு முடிக்க வொண்ணா திருந்தசூர் முதலோர் தம்பான்
மேவினை பொருது வென்று விரிஞ்சனே முதலா வுள்ள
தேவர்த மின்ன னீக்கிச் செல்லுதி குமர வென்றான்.

இ—ள்: ஆவது ஓர் காலை—அவ்வாறாகியகாலத்தில், ஈசன்—சிவபெருமான், அறுமுக பரனை நோக்கி—ஆறுதிருமுகங்களையுடைய கந்தஸ்வாமியைப்பார்த்தருளி, குமர—குமாரனே, ஏவரும் முடிக்க ஒண்ணாது இருந்த சூர் முதலோர் தம்பால் மேவினை— எவர்களாலுமழித்தற்கியலாதிருக்கின்ற சூரபன்மன்முதலிய அசுரர்களிடத்துச் சென்று, பொருது வென்று—அவருடன்போர்செய்து வெற்றிகொண்டு, விரிஞ்சனே முதலா உள்ள தேவர்தம் இன்னல் நீக்கி—பிரமனேமுதலாகவுள்ளதேவர்களது துன்பத்தையகற்றி, செல்லுதி என்றான்—(இங்கு) வருகுதியென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

இருந்த-காலவழுவமைதி. மேவினை-முற்றெச்சம். ஏ-தேற்றம். (௯௯)

விராவிய விலக்கத் தொன்பான் வீரரை வெய்ய பூத
ரிராயிர வெள்ளத் தோரை யிகற்படை மான்றே ரோடு
பராபர னுதவித் தூண்டப் பன்னிரு புயத்த னேகித்
தராதலம் புக்கு வெற்பைத் தாரக னோடு செற்றான்.

இ—ள்: பராபரன்—சிவபெருமான், விராவிய இலக்கத்தொன்பான் வீரரை—செறிந்த இலக்கத்தொன்பது வீரர்களையும், வெய்ய பூதர் இராயிர வெள்ளத்தோரை—கொடிய இரண்டாயிரவெள்ளம் பூதர்களையும், இகல் படை மான் தேரோடு உதவி

தாண்ட—(அவ்வவர்க்குவேண்டிய)வலிய ஆயுதங்களுடனும் குதிரைபூண்ட தேர்களுடனும் கொடுத்தனுப்ப, பன்னிருபுயத்தன் ஏகி—பன்னிரண்டுதிருப்புயங்களையுடைய குமாரக்கடவுள் சென்று, தராதலம் புக்கு— பூவுலகத்திற்பிரவேசித்து, வெற்பை தாரகனோடு செற்றான்—கிரவுஞ்சகிரியைத் தாரகாசுரனோடுமழித்தருளினார் எ—று.

பராபரன்- பரைக்குப்பரனாயுள்ளவர். (எ0)

பூவினன் முதலா வுள்ள புங்கவர் வழிபட் டேத்தத்
தேவர்தங் கிரியின் வைகித் தென்றிசை நடந்து தாதை
மேவரு மிடங்கள் போற்றி மேதகு சேய்ஞ லூரணண்ணி
மூவிரு முகத்தன் முக்கண் முன்னவன் படையைப் பெற்றான்.

இ—ள்: மூவிரு முகத்தன்— ஆறுதிருமுகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுள், பூவினன் முதலா உள்ள புங்கவர் வழிபட்டு ஏத்த—பிரமாமுதலாகவுள்ள தேவர்கள் வழிபாடுசெய்து துதிக்க, தேவர்தம் கிரியின் வைகி—தேவகிரியில்வீற்றிருந்து, தென்றிசை நடந்து— பின் தெற்குத்திசையைநோக்கிச் சென்று, தாதை மேவரும் இடங்கள் போற்றி—தமது பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற (திருக்கேதாரமுதலிய) தலங்களைத் தொழுது, மேதகு சேய்ஞல் நண்ணி—மேன்மைபொருந்திய திருச்சேய்ஞலூரையடைந்து, முக்கண் முன்னவன் படையை பெற்றான்— மூன்றுதிருக்கண்களையுடைய முதல்வராகிய சிவபெருமானது படைக்கலத்தைப் பெற்றருளினார் எ—று.

சேய்நலூரென்றது போலியாய்ச் சேய்ஞலூரெனவழங்கிற்று. செய்யுளாகலினீண்டுச் சேய்ஞலெனவின்றது. குமாரக்கடவுளுக்கு நல்ல ஊர் என்பதுபொருள். முக்கண்முன்னவன்படை-சர்வசங்காரப்படை. சேய்ஞலூரில்வந்து சிவனைப்பூசித்து இப்படையைப்பெற்றனரென்க. (எக)

பரனருள் படையைப் பெற்றுப் பராசரன் சிறார்வந் தேத்தத்
திருவருள் புரிந்து சென்று செந்திலின் மேவிச் சூரன்
வரமொடு திருவுஞ் சீரும் வாசவன் குறையும் வானோர்
குரவனை வினவி யன்னோன் கூறவே குமரன் றேர்ந்தான்.

இ—ள்: குமரன்—குமாரக்கடவுள், பரன் அருள் படையை பெற்று—சிவபெருமான்கொடுத்தருளிய சர்வசங்காரப்படையைப் பெற்று, பராசரன் சிறார் வந்து ஏத்த திருவருள் புரிந்து—பராசரமுனிவருடைய புத்திரர்கள் வந்துதுதிக்க (அவர்க்குத்) திருவருள்செய்து, சென்று-அப்பாற்போய், செந்திலில் மேவி—திருச்செந்தூரில்வீற்றிருந்து, சூரன் வரமொடு திருவும் சீரும்— சூரபன்மனது வரங்களையும் வளங்களையுஞ் சிறப்பையும், வாசவன் குறையும்—தேவேந்திரனது துன்பத்தையும், வானோர் குரவனை வினவி—தேவகுருவாகிய வியாழபகவானைக்கேட்டு, அன்னோன் கூற தேர்ந்தான்— அவர்விரித்துக்கூற அறிந்தருளினார் எ—று.

பராசரன்சிறாரென்றது தத்தன்முதலிய அறுவரை. இவர் வரலாற்றைச் சுரம்புகுபடலத்திற் காண்க. சூரன் வரமொடு திருவுஞ் சீரும் வாசவன் குறையுமென்பதில் அசுரருற்பத்தி முதலியவற்றையுமுபலக்கணத்தானமைத்துக்கொள்க. (எஉ)

அறத்தினை யுன்னி யைய னுடல்சேர் மொய்ம்பன் றன்னை
யுறத்தகு மரபிற் றாண்டி யொன்னலன் கருத்தை யோர்ந்து
மறத்தொடு கடலுள் வீர மகேந்திர மணுகி யேதன்
புறத்துள தானை யோராற் சூர்கிளை யொன்றச் செற்று.

இ—ள்: ஐயன்—குமாரக்கடவுள், அறத்தினை உன்னி—தருமநெறியை நினைத்து, ஆடல் சேர் மொய்ம்பன் தன்னை உறத்தகும் மரபில் தூண்டி— வீரவாகுதேவரைச் செல்லுதற்கேற்ற முறைப்படியேவி, ஒன்னலன் கருத்தை ஓர்ந்து—பகைவனாகிய சூரபன்மனது எண்ணத்தையறிந்து, மறத்தொடு கடலுள் வீரமகேந்திரம் அணுகி—கோபத்துடன் சமுத்திரத்திலுள்ள வீரமகேந்திரத்தைச் சமீபித்து, தன் புறத்து உள தானையோரால் சூர் கிளை பொன்ற செற்று— தமது பக்கத்திற் சூழ்ந்துள்ள சேனாவீரர்களாற் சூரபன்மனது சுற்றத்தவர்களழியும்படி கொன்று எ—று.

உறத்தகுமுறையென்றது தூதாகப்போதலை. அறக்கருணைக்கேலாமையின் மறக்கருணை புரிவான்றுணிந்து போந்தனரென்பார் 'அறத்தினையுன்னி- தூண்டி- ஓர்ந்து- மறத்தொடு- அணுகி' என்றார். இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம். (எங)

சீயமா முகத்த னென்னுஞ் செருவலான் றனையு மட்டு
மாயையுந் திருவுஞ் சீரும் வரங்களும் பிறவு மாற்றி
யாயிர விருநா லண்டத் தரசனாஞ் சூரன் றன்னை
யேயெனு மளவில் வேலா லிருதுணி படுத்து நின்றான்.

இ—ள்: மா சீய முகத்தன் என்னும் செருவலான் தனையும் அட்டு—பெரிய சிங்கமுகாசுரனென்னும் போர்வீரனையுங் கொன்று, மாயையும் திருவும் சீரும் வரங்களும் பிறவும் மாற்றி-மாயங்களையும் வளங்களையும் சிறப்புக்களையும் வரங்களையும் பிறவற்றையுமொழித்து, ஆயிர இருநால் அண்டத்து அரசன் ஆம் சூரன்றன்னை-ஆயிரத்தெட்டண்டங்களுக்கரசனாகிய சூரபன்மனை, ஏ எனும் அளவில் வேலால் இரு துணி படுத்து நின்றான்—விரைவில் வேற்படையினாலிருபிளவாக்கிநின்றார் எ—று.

ஏ- விரைவையுணர்த்தவந்த ஓரொலிக்குறிப்பு. (எச)

துணிபடு சூர னோர்பால் சூட்டுவா ரணமா யோர்பால்
பிணிமுக மாகி நிற்பப் பெருந்தகை யவற்றை யூர்தி
யணிபடு துவசமாக்கி யப்பகல் செந்தில் வந்து
மணிசொரி யருவி தூங்கும் வான்பரங் குன்றஞ் சேர்ந்தான்.

இ—ள்: துணிபடு சூரன் — அவ்வாறு இருபிளவாக்கப்பட்டசூரபன்மன், ஓர்பால் சூட்டு வாரணம் ஆய்— ஒருபாதி சூட்டினையுடைய சேவலாகியும், ஓர்பால் பிணிமுகம் ஆகி நிற்ப—மற்றோர்பாதி மயிலாகியும் நிற்க, பெருந்தகை—பெருந்தகைமையினையுடைய குமாரக்கடவுள், அவற்றை ஊர்தி அணி படு துவசம் ஆக்கி—அவற்றை வாகனமும் அழகுபொருந்திய கொடியுமாகக்கொண்டு, அ பகல் செந்தில் வந்து- அத்தினத்திலே திருச்செந்திப்பதியில் வந்து, மணி சொரி அருவி தூங்கும் வான்பரங்குன்றம் சேர்ந்தான்— இரத்தினங்களைச் சொரிகின்ற அருவிநீரிழியப்பெற்ற பெரிய திருப்பரங்குன்றையடைந்தார் எ—று.

பிணிமுகம்-மயில். சேவலைக்கொடியாகவும் மயிலையூர்தியாகவுங்கொண்டனராதலின், எதிர்நிரனிறை. வலப்பால் மயிலும் இடப்பால் சேவலுமாயினவெனன்க. பெருந்தகை-பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (எரு)

தெய்வத யானை யென்னுஞ் சீர்கெழு மடந்தை தன்னை
யவ்விடை வதுவை யாற்றி யங்ஙனஞ் சிலநாள் வைகி
மெய்விய னுலகிற் சென்று விண்ணவர்க் கரச னாக்கி
யெவ்வமின் மகுடஞ் சூட்டி யிந்திரன் றன்னை வைத்தான்.

இ—ள்: தெய்வயானை என்னும் சீர் கெழு மடந்தை தன்னை-தெய்வயானையென்று சொல்லப்படுகின்ற சிறப்புப்பொருந்திய கன்னிகையை, அவ்விடை வதுவை ஆற்றி—அத்திருப்பரங்குன்றத்திற் றிருமணமியற்றி, அங்ஙனம் சில நாள் வைகி—அம்மலையிற் சிலநாளாக வீற்றிருந்து, மெய் வியனுலகில் சென்று— பின் மெய்ம்மையாகிய சுவர்க்கலோகத்திற்போய், இந்திரன்றன்னை விண்ணவர்க்கு அரசன் ஆக்கி எவ்வம் இல் மகுடம் சூட்டி வைத்தான்—(முன்னர்ச் சூரனுதியராலரசியலிழந்த) இந்திரனைத்தேவர்களுக்கரசனுக்கிக் குற்றமற்றமுடியைச்சூட்டிவைத்தார் (குமாரக்கடவுள்) எ-று.

மடந்தை-ஈண்டுப்பருவங்குறியாது பெண்ணென்னும்பொருளினின்றது. ()

சில்பக லங்கண் மேவிச் சேனையோ டணங்குந் தானு
மல்லலங் கயிலை யேகி மங்கைபங் குடைய வண்ணன்
மெல்லடி வணங்கிக் கந்த வெற்புறை நகரி னேகி
யெல்லையி லருளால் வைகித் தணிகையி லெந்தை வந்தான்.

இ—ள்: எந்தை—எம்பரமபிதாவாகிய குமாரக்கடவுள், சில்பகல் அங்கண் மேவி—சிலதினங்களாக அந்தச் சுவர்க்கலோகத்தில் வீற்றிருந்து, சேனையோடு அணங்கும் தானும் மல்லல் அம் கயிலை ஏகி—சேனைகளுடன் அம்மையாருந்தாமுமாக வளப்பமிக்க அழகிய திருக்கைலாசகிரியிற் சென்றருளி, மங்கை பங்கு உடைய அண்ணல் மெல் அடி வணங்கி— உமாதேவியாரை வாமபாகத்திலுடைய சிவபெருமானது மெல்லிய பாதங்களைநமஸ்கரித்து, கந்தவெற்பு உறை நகரின் ஏகி—கந்தவெற்பிலுள்ள திருக்கோயிலிற் பிரவேசித்து, எல்லை இல் அருளால்வைகி— அளவிறந்த கருணையோடும் (அங்கேசிலதினம்) வீற்றிருந்து, தணிகையில் வந்தான்— (பின் தனியே) செருத்தணிகைமலையில் வந்தருளினர் எ—று.

அம்- சாரியையெனினுமாம். ஆல்-உடனிகழ்ச்சிப்பொருட்டு. மலர்போலுமடியென்பார் 'மெல்லடி' என்றார். (௭௭)

சாரலி னோங்கு தெய்வத் தணிகைமால் வரையின் மீது
வீரம துடைய வேலோன் வீற்றிருந் திடலு மங்க
ணாரதன் வந்து தாழ்ந்து நவைதவி ரெயின மாதின்
சீரெழி னலத்தைக் கூற வவள்வயிற் சிந்தை வைத்தான்.

இ—ள்: வீரமது உடைய வேலோன்—வீரத்தினையுடைய வேற்படையையேந்திய குமாரக்கடவுள், சாரலின் ஓங்கு தெய்வ மால் தணிகை வரையின்மீது வீற்றிருந்திடலும்— சாரலினுலுயர்ந்திருக்கின்ற தெய்வத்தன்மைபொருந்திய பெரிய அந்தச்செருத்தணிகைமலையின்மேல்வீற்றிருத்தலும், நாரதன் அங்கண் வந்து தாழ்ந்து—நாரதமுனிவர் அவ்விடத்துவந்துவணங்கி, நவை தவிர் எயினமாதின் சீர் எழில் நலத்தை கூற—குற்றமற்ற வேட்டுவமகளாகிய வள்ளிநாயகியாரது பேரழகினன்மையைப் புகழ்ந்து சொல்ல, அவள் வயின் சிந்தை வைத்தான்— (அக்குமாரக்கடவுள்) அவ்வள்ளிநாயகியாரிடத்து மனத்தைப்பதித்தார் எ—று.

வேலோன் வீற்றிருந்திடலும் நாரதன் கூறினன்; கூற, குமாரக்கடவுள் சிந்தைவைத்தனரென்க. சிந்தைவைத்தல்- காமுறுதல். தெய்வத்தணிகைமால்வரையென்பதற்கு, மேல் வள்ளியம்மைதிருமணப்படலத்து இருநூற்றுப்பதினுருஞ் செய்யுண்முதற் பதின்மூன்றுசெய்யுட்களாற் கூறப்பட்ட விசேடங்களையுரைத்துக்கொள்க. அழியாவரம்பெற்ற சூரனையும்பிளந்தவேலாதலின் 'வீரமதுடையவேல்' எனவும், இப்பிறப்பிற் குறமகளாயினும் முற்பிறப்பில் அருந்தவஞ்செய்து அறுமுகற்குத் தேவியா

ம்பெருமை வாய்ந்துடையளென்பார் 'நவைதவிரெயினமாது' எனவும், சாமுத்திரிகா சாஸ்திரத்தில்விதிக்கப்பட்ட நல்லிலக்கணங்களொருங்கமைந்த நலமென்பார் 'சேரெழி னலம்' எனவுங்கூறினர். (௭௮)

வள்ளிமால் வரையிற் போந்து மானிடைப் பிறந்த தெய்வக்
கிள்ளையை யடைந்து போற்றிக் கேடில்பல் லுருவங் காட்டிக்
கள்ளமோ டொழுகிப் பன்னாட் கவர்ந்தனன் கொணர்ந்து பின்னர்த்
தெள்ளுசீர் வேடர் நல்கத் திருமணஞ் செய்து சேர்ந்தான்.

இ—ள்: மால் வள்ளிவரையில் போந்து—பெரிய வள்ளிமலையில்வந்து, மானிடை பிறந்த தெய்வ கிள்ளையை அடைந்து போற்றி— மான்வயிற்றிலவதரித்த தெய்வத்தன்மைபொருந்திய வள்ளிநாயகியாரையணுகித் துதித்து,கேடு இல் பல் உருவம் காட்டி—அழிவற்ற பலவடிவங்களைக்காண்பித்து, பல் நாள் கள்ளமோடு ஒழுகி—பலநாள்காறும் களவாக ஒழுகி, கவர்ந்தனன் கொணர்ந்து—(ஒருநாள் அவ்வம்மையைச் சிற்றூரினின்றும்) கவர்ந்துகொண்டுவந்து, பின்னர்—அதன்பின்பு, தெள்ளு சீர் வேடர் நல்க—(அம்மகளை மீட்குமாறு பொருதுமாண்டெழுந்த) சிறந்த கீர்த்தியினையுடைய வேடுவர்கள் தத்தஞ்செய்துகொடுப்ப, திருமணம்செய்து சேர்ந்தான்— (வேதவிதிப்படி) விவாகஞ்செய்துகலந்தார் (குமாரக்கடவுள்) எ—று.

கிள்ளை-உவமவாகுபெயர். பல்லுருவம் வேங்கைமரமுதலியன. கண்ணுவமுனிவர்சாபத்தான் மானுருவாய இலக்குமியினிடத்தவதரித்தலின் 'மானிடைப்பிறந்த தெய்வக்கிள்ளை' எனவும், ஒப்புயர்வில்லாக் கடவுளே இழிஞராகிய தமதுமகளைக்காமுற்றுக் கரவிற்கவர்தலாலும் அவரே மீட்டுந் தமதுவேண்டுகோட்கேற்பச் சிற்றூர்க்கு வந்து மணஞ்செய்துகோடலாலும் பரிபவமுறாது பெரும்புகழெய்தினராதலின் 'தெள்ளுசீர்வேடர்' எனவுங்கூறினர். (௭௯)

செருத்தணி வரையில் வந்து சிலபகல் வள்ளி தன்னோ
டருத்தியின் மேவிப் பின்ன ரவளொடுங் கந்த வெற்பின்
வரைத்தனிக் கோயில் புக்கு வானமின் பிரிவு நீக்கிக்
கருத்துற விருவ ரோடுங் கலந்துவீற் றிருந்தான் கந்தன்.

இ—ள்: கந்தன்—சுப்பிரமணியக்கடவுள், செருத்தணிவரையில் வந்து—செருத்தணிகைமலையில் எழுந்தருளிவந்து, சில பகல் வள்ளிதன்னோடு அருத்தியில் மேவி—சிலதினங்களாக வள்ளியம்மையாரோடு அன்புடன் வீற்றிருந்து, பின்னர்—அதன்பின்பு, அவளொடும் கந்தவெற்பின் வரை தனி கோயில் புக்கு—அவ்வள்ளிநாயகியாருடன் கந்தவெற்பாகிய மலையிலுள்ள ஒப்பற்ற கோயிலிற்பிரவேசித்து, வானமின் பிரிவு நீக்கி—தெய்வயானையம்மையாரின் பிரிவைத்தவிர்த்து, கருத்துற இருவரோடும் கலந்து வீற்றிருந்தான்—மனம்பொருந்த அவ்விருதேவிமார்களோடும் கூடி வீற்றிருந்தருளினர் எ—று.

வரைத்தனிக்கோயில்- மலைபோன்ற ஒப்பற்றகோயிலெனினுமாம். வள்ளிநாயகியாரை மணஞ்செய்து நெடுநாளாகப் பிரிந்திருந்தமையாலுண்டாய முனிவைநீக்கியென்பார் 'வானமின்பிரிவுநீக்கி' எனவும், இருவர்மாட்டும் ஒரேபடித்தாக அன்புவைத்தென்பார் 'கருத்துற' எனவுங்கூறினர். (௮0)

என்றிவை யனைத்துஞ் சூத னியம்பலு முனிவர் கேளாத்
துன்றிய மகிழ்வாற் சென்னி துளக்கியிங் கிதனைப் போல
வொன்றொரு கதையுங் கேளே முரைத்தனை சுருக்கி யாங்க
ணன்றித னகலங் கேட்க நனிபெருங் காதல் கொண்டேம்.

இ—ள்: என்று இவை அனைத்தும் சூதன் இயம்பலும்—என்று இச்சரித்திர முழுவதையுஞ் சூதமுனிவர் அருளிச்செய்தலும், முனிவர் கேளா—நைமிசாரணியமுனிவர்கள் கேட்டு, துன்றிய மகிழ்வால் சென்னி துளக்கி—மிகுந்த சந்தோஷத்தினாற் றலையசைத்து, இங்கிதனை போல ஒன்றொரு கதையும் கேளோம்—ஸ்வாமீ! இச்சரித்திரத்தைப்போலவேறொருசரித்திரத்தையுங் கேட்டிலோம், சுருக்கி உரைத்தனை—தொகுத்துக்கூறினீர், யாங்கள்—நாங்கள், நன்று இதன் அகலம் கேட்க— நன்றாக இச்சரித்திரத்தின் விரியைக்கேட்குமாறு, நனி பெரும் காதல் கொண்டேம்— மிகவும் பெருவிருப்பங்கொண்டோம் எ—று.

துன்றியமகிழ்வு-பெருமகிழ்வு. (௮௧)

என்னவே முனிவ ரானோர் யாவரு மெடுத்துக் கூற
மன்னிய வருள்சேர் சூதன் மற்றவ ரார்வ நோக்கி
யன்னவை சுருக்க மின்றி யறைந்தன னவ்வா றோர்ந்து
தொன்னெறி வழாதி யானும் வல்லவா தொகுத்துச் சொல்வேன்.

இ—ள்: என்ன முனிவரானோர் யாவரும் எடுத்து கூற— என்று நைமிசாரணியமுனிவரனைவரும் எடுத்துச்சொல்ல, மன்னிய அருள் சேர் சூதன்—நிலைபெற்ற கருணைபொருந்திய சூதமுனிவர், அவர் ஆர்வம் நோக்கி—அம்முனிவர்களது விருப்பத்தைப்பார்த்து, அன்னவை சுருக்கம் இன்றி அறைந்தனன்-அச்சரித்திரங்களைச் சுருக்குதலின்றி(விரித்துக்)கூறினார்,யானும் அவ்வாறு ஓர்ந்து—யானும் அவர்கூறியபடி ஆராய்ந்து, தொல் நெறி வழாது—பழையமுறைமைதவறாமல், வல்லவா தொகுத்து சொல்வேன்—இயன்றவரையிற்றிரட்டிக் கூறுவேன் எ—று.

வழாது=வழுவாது. வல்லவாறென்பதிலீற்றுயிர்மெய்தொக்கது. விரித்துக் கூறும்படி மீட்டும் வேண்டுதலால் அம்முனிவர்மாட்டு முன்னையினும்மிக்ககருணைசுரந்தனரென்பார் 'மன்னியவருள்சேர்சூதன்' எனவும், முதனூன்முறைபிறழாதென்பார் 'தொன்னெறிவழாது' எனவுங்கூறினார். யானும் ஓர்ந்து சொல்வேன் என இயையும். ()

பாயிரப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௫௨.

உ

திருச்சிற்றம்பலம்.

# உற்பத்திகாண்டம்.

உற்பத்திகாண்டமென்பது உற்பத்தியைக்கூறுங்காண்டமெனவிரியும். உற்பத்தி- (குமாரக்கடவுளின்) பிறப்பு. காண்டம்-பலபரிச்சேதங்களையடக்கியதோர் பிரகரணம். [பரிச்சேதம்- சிறுபிரிவு. பிரகரணம்- பெரும்பிரிவு.]

## திருக்கைலாசப்படலம்.

இது திருக்கைலாசமலையின் சிறப்பைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது. கைலாசமென்பது நீரிற்பிரகாசிப்பதெனவும், பளிங்குபோல் வெண்ணிறமுடையதெனவும், சிவபிரானது திருவிளையாடற்கிடமெனவும் பொருள்படும்.

பாச நீக்கித்தன் பாற்படு நல்லரு
ளீச னல்கு மியல்பென வெய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே.

இ—ள்: ஈசன்—சிவபெருமான், பாசம் நீக்கி—மலபந்தத்தையொழித்து, தன்பால் படும் நல் அருள் நல்கும் இயல்பு என— தம்மிடத்திற் பொருந்திய நல்ல அநுக்கிரகத்தை (அடியார்க்குப்) பயக்குந்தன்மைபோல, வெள்ளியம் குன்றம்— (அவரது வாசஸ்தானமாகிய) திருக்கைலாசமலையானது, எய்தினோர் தேசு மாற்றி—சார்ந்தவர்களது மேனிப்பிரகாசத்தையொழித்து, சிறந்த தன் மெய் ஒளி வீசுகின்றது — விசேடித்த தனது மெய்ம்மையாகிய சோதியைப் பரப்புகின்றது எ—று.

"காதனீங்கலாதலமருமாருயிர்க்கரண- மாதியீசனதருளினலவனதாகியபோல்" என்றார் சுரம்புகுபடலத்தும். ஐந்தொழின்முறையாலான்மாக்களையாளுமிறைவரென்பார் 'ஈசன்' எனவும், நெல்லினுமிபோலுற்பத்திக்கேதுவாயும், செம்பிற்களிம்புபோற்சகசமாயும், ஞானத்தைமறைத்துநிற்குமாணவமலத்தைப் பரிபாகதசையிற் சிற்சத்தியினலொழித்தென்பார் 'பாசநீக்கி' எனவும், என்றுமழியாப்பேரின்பமாதலின் 'நல்லருள்' எனவும், சார்ந்தார்வடிவமெல்லாந் தன்வண்ணமேயாகவிளங்கும் பெருஞ்சோதியாதலின் 'மெய்யொளி' எனவுங்கூறினர். மெய்யொளி- மேனியிலுள்ள ஒளியெனினுமாம். (க)

ஆறு சூடிய வாதியம் பண்ணவ
னேறு மூரிவெள் ளேறும கண்ணுத
னீறு சேர்தரு கோலமு நித்தனைத்
தேறு மன்பர்தஞ் சிந்தையும் போன்றதே.

இ—ள்: ஆறு சூடிய ஆதியம் பண்ணவன் ஏறும் மூரி வெள் ஏறும்—கங்காநதியைத்(திருச்சடையில்)அணிந்த ஆதிகடவுளாகிய சிவபெருமான் இவருகின்ற வலிய வெள்ளிய இடபத்தையும், அ கண்ணுதல் நீறு சேர்தரு கோலமும்—அந்தச் சிவபெருமானது திருநீறுபரந்த திருவேடத்தையும், நித்தனை தேறும் அன்பர்தம் சிந்தையும் போன்றது— அச்சிவபெருமானைத்தெளிந்த மெய்யடியார்களதுமனத்தையும் நிகர்த்தது (அத்திருக்கைலாசமலை) எ—று.

இம்மூன்றும்போல் வெண்ணிறமுடைத்தாயிற்றென்பதாம். மூரி- மூரிப்பெனினுமாம். "பன்னிறமேகாட்டும்படிகம்போலிந்திரியந்-தன்னிறமேகாட்டுந்தகைவினைந்து-பன்னிறத்துப்- பொய்ப்புலனைவேறுணர்ந்துபொய்பொய்யாமெய்கண்டான்- மெய்ப்பொருட்குத்தைவமாம்வேறு" என மெய்கண்டதேவராலும், "பன்னிறங்களவைகாட்டும்படிகம்போலுள்ளம்பலபுலன்கணிறங்காட்டும்பரிசுபார்த்திட்- டின்னிறங்களென்னிறமன்றென்றுதன்றனெழினிறங்கண்டருளினாலிந்நிறத்தின்வேறாய்ப்-பொய்ந்நிறவைம்புலநிறங்கள்பொய்யெனமெய்கண்டான்பொருந்திடுவன்சிவத்தினொடும்போதான் பின்னை- முன்னிறைநீர்சிறைமுறியமுடுகியோடிமுன்னீர்சேர்ந்தந்நீராய்ப்பின்மீளாமுறைபோல்" என அருணந்திசிவாசாரியராலும் கூறப்பட்ட இயல்பினையுடைய அன்பரென்பார் 'நித்தனைத்தேறுமன்பர்' என்றார். இவர்சிந்தை களங்கமற்றதாதலின் வெண்ணிறமெனவழங்குவது. இதனை, "மாசில்வெண்மைசேர்பேரொளியுலகெலாமலர்ந்திடவளர்மெய்ம்மை- யாசிலன்பர்தஞ்சிந்தைபோல்விளங்கியவணிதிகழ்மணிவாயில்" என்னுஞ் சேக்கிழார்வாக்கானுமுணர்க. (௨)

மோன நன்னிலை முற்றிய பெற்றியர்
ஞான மார்பிழம் பன்ன நலத்ததா
யூனு லாய வுயிர்த்தொகை மாசொரீஇத்
தானெ லாஞ்செறிந் தென்னவுஞ் சான்றதே.

இ—ள்: நல் மோன நிலை முற்றிய பெற்றியர் ஞானம் ஆர் பிழம்பு அன்ன நலத்தது ஆய்—நல்ல நிட்டைநிலைசித்திக்கப்பெற்ற இயல்பினையுடைய பெரியோர்களது(அகத்திலொளிரும்)ஞானச்சுடர்போன்ற சிறப்பையுடைத்தாய், ஊன் உலாய உயிர்த்தொகை எலாம் மாசு ஒரீஇ செறிந்து என்னவும் சான்றது-உடலிற்பொருந்திய ஆன்மவர்க்கங்கண்முழுதும் (தம்மைப்பந்தித்த) பாசத்தையொழித்துஒருங்குகூடினாற்போலவுஞ் சிறந்தது (அத்திருக்கைலாசமலை) எ—று.

நிட்டைகூடியவழிப் பெரியோரகத்தில் மெய்ஞ்ஞானச்சோதி எங்ஙனம்வளர்ந்தெய்துமோ அங்ஙனமாகவும், பிறவிக்கேதுவாகிய மலத்தைநீக்கியவழி ஆன்மாக்களெல்லாம் எங்ஙனஞ்சித்தாந்தன்மைவிளங்க விரிந்துதோன்றுமோ அங்ஙனமாகவும், நிஷ்களங்கமான வெண்ணிறச்சோதியுடன் அகன்றுயர்ந்து நின்றதென்பதாம்.

உலாவிய என்னும் பெயரெச்சம் உலாய எனவும், செறிந்தால் என்னும் வினையெச்சம் செறிந்து எனவுந்தொக்கன. ஒரீஇ-ஒருவியென்பதன்விகாரம். தானெலாம்- வழுவமைதி. 'மோனநன்னிலைமுற்றியபெற்றியர்'என்பதற்கு முன்னர்ப் பாயிரப்படலத்து நாற்பத்துமூன்றாஞ்செய்யுளில் 'மோனகமுற்றியமுனிவர்மேலவன்'என்பதற்குரைத்தாங்குரைக்க. (௩)

கான மார்ந்த கடுக்கைநற் கூவிளைத்
தேன வாம்பொழிற் றிண்சிக ரத்திடை
வான யாறு வருதலின் மாசிலா
ஞான நாயகன் போல நணியதே.

இ—ள்: கானம் ஆர்ந்த கடுக்கை நல் கூவிளை தேன் அவாம் பொழில் திண்சிகரத்திடை—வாசனை நிறைந்த கொன்றைமரங்களையும் நல்லவில்வமரங்களையுமுடைய வண்டுகள் விரும்புகின்ற சோலைசூழப்பெற்ற திண்ணியசிகரத்தில், வானயாறு வருதலின்— ஆகாயகங்கை(எஞ்ஞான்றும்)பாய்தலினால், மாசு இலா ஞானநாயகன் போல நணியது—குற்றமற்ற ஞானமுதல்வராகிய சிவபெருமான்போலவிளங்கியது (அத்திருக்கைலாசமலை) எ—று.

கடுக்கை நற்கூவிளைப்பொழில் தேனவாம்பொழில் எனத் தனித்தனியியையும். கொன்றைமலரையும் வில்வபத்திரத்தையுங் கங்காநதியையுமுடியிற்றரித்திருத்தலாற் சிவபெருமானையுவமித்தார். (௪)

தண்ண றுந்துள வாற்புனை தார்முடிப்
பண்ண வன்கண் படுத்திடு பாற்கடல்
கண்ணு தற்குமொர் காமரு பீடமாய்
நண்ணு கின்றது போலு நலத்ததே.

இ—ள்: தண் நறும் துளவால் புனை தார் முடி பண்ணவன் கண்படுத்திடு பாற்கடல்—குளிர்ந்த மணங்கமழுகின்ற துளசிமலராற்றொடுத்த மாலையையணிந்தமுடியினையுடைய திருமால் அறிதுயில்செய்கின்ற திருப்பாற்கடலானது, கண்ணுதற்கும் ஓர் காமரு பீடம் ஆய் நண்ணுகின்றது போலும் நலத்தது— நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கும் ஒரு சிறந்த இருக்கையாகப்பொருந்துதல்போன்ற சிறப்பினையுடையது (அத்திருக்கைலாசமலை) எ—று.

திருமாலுக்குச் சயனமானபாற்கடல் சிவபிரானுக்கிருக்கையானாற்போன்ற தோற்றத்துடன்விளங்கிற்றென்பதாம். "கண்பிசைந் தொருசே யின்னுங் கலுழினுந் தனைக்கொ டுப்பன்- மண்பிசைந் துண்ட மாயன் மறுத்திட வலிய னல்ல-னண்பிசைந் திறைவ னுக்கே நாமிட மாவ மென்று- பண்பிசைந் தலைதி ரண்ட பரிசினின் றிடுமக் குன்றம்" என்றார்பிறரும்.

கண்படுத்தல்-துயிலுதல். உம்மை எச்சம். நண்ணுகின்றது-வினைமுற்றுத்தொழிற்பெயர். (௫)

பொதியு மின்னமு தோடு பொருந்துவ
கதிரின் மிக்க கறையறு காட்சிய
மதிய மாயிர கோடி மணந்துதா
முதய மானது போன்றதவ் வொண்கிரி.

இ—ள்: பொதியும் இன் அமுதோடு பொருந்துவ— உண்ணிறைந்த இனிய அமிர்தத்தோடு கூடியிருப்பனவும், கதிரில் மிக்க கறை அறு காட்சிய— சூரியனினும் மேம்பட்ட களங்கமற்ற தோற்றத்தினையுடையனவுமாகிய, ஆயிரகோடி மதியம்—ஆயிரகோடியென்னுந் தொகைப்பட்ட பூரணசந்திரர்கள், மணந்து உதயமானது போன்றது—ஒன்றாய்த்திரண்டுதயஞ்செய்ததன்மையைப்போன்றது, அ ஒண் கிரி—அந்த ஒளிபொருந்திய திருக்கைலாசமலை எ—று.

அமிர்தகிரணமுஞ் சூரியப்பிரகாசமுமுடைய ஆயிரகோடிசந்திரர் ஒன்றாய்த்திரண்டுதித்ததுபோல வெண்மையுந்தண்மையும் மனோகரமுமார்ந்துவிளங்கிற்றென்பதாம்.

ஆனது-வினைமுற்றுத்தொழிற்பெயர். அமிழ்தமின்றாயிற் றட்பமின்றாமாதலின், 'பொதியுமின்னமுதோடுபொருந்துவ' என்றார். (௬)

நெற்றி மேனிமிர் கண்ணு நிலாவொளிர்
பொற்ற டம்புய நான்கும் பொருந்துறப்
பெற்றெம் மானரு ளாற்பிரம் பொன்றுகைப்
பற்று நந்தி பரிவொடு காப்பது.

**இ—ள்:** நெற்றிமேல் நிமிர் கண்ணும்—நெற்றியின்மீதுயர்ந்த திருக்கண்ணும், நிலா ஒளிர் பொன் தடம் புயம் நான்கும்—வெண்ணிறச்சோதிவிளங்குகின்ற அழகிய விசாலித்த நான்குபுயங்களும், எம்மான் அருளால் பொருந்துற பெற்று—எமது தலைவராகிய சிவபெருமானது கருணையினாற்கிடைக்கப்பெற்று, பிரம்பு ஒன்று கை பற்றும் நந்தி—ஒரு பிரம்பைக்கையிற்றாங்கிய திருநந்திதேவர், பரிவொடு காப்பது—அன்பினுடன் காவல்செய்யப்பெறுவது (அத்திருக்கைலாசமலை) எ—று.

சிவசாரூபம்பெற்ற திருநந்திதேவராற் காக்கப்படுவதென்பதாம். "நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மேனிய ரநேகர்-பெற்ற மேற்கொண்ட தம்பிரா னடியார் பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார்-மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியு மலர்க்கையிற் சுரிகையும் பிரம்பும்- கற்றைவார் சடையா னருளினாற் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான்" என்றார் சேக்கிழாரும்.

ஏனையகண்கள்போற் படிந்திராது மேனோக்கியிருத்தலின் 'நிமிர்கண்' என்றார். இவ்வாறு விகாரமுடைமையாலிக்கண்ணை விரூபாக்கமெனவும் வழங்குப. நந்திதேவர் சிவசாரூப்பியம்பெறுதன்முதலிய சரித்திரங்களை மேற் காமதகனப்படலத்துத் தொண்ணூற்றுநான்காஞ்செய்யுளுரையில் விளக்குதும். எம்மானருளால் காப்பது என இயைத்துப்பொருளுரைப்பாருமுளர். (எ)

புரந்த ரன்முத லாகிய புங்கவர்
வரம்பின் மாதவர் மாசறு காட்சியர்
நிரந்த பூத கணவர் நிரந்தரம்
பரிந்து போற்றிப் பயில்வதம் மால்வரை.

**இ—ள்:** புரந்தரன் முதல் ஆகிய புங்கவர்—இந்திரன்முதலாகவுள்ள தேவர்களும், மாசு அறு காட்சியர் வரம்பு இல் மா தவர்—குற்றமற்ற தோற்றத்தினையுடைய அளவற்ற சிறந்த தபோதனர்களும், நிரந்த பூதகணவர்—நிறைந்த பூதகணத்தவர்களும், நிரந்தரம் பரிந்து போற்றி பயில்வது—இடையறாது விரும்பித் துதித்துச்சேவிக்கப்பெறுவது, அ மால் வரை—அந்தப்பெரிய திருக்கைலாசமலை எ—று.

மாசறுகாட்சி-புனிதவேடம். நிர்- இன்மைப்பொருளைத்தருமோருபசர்க்கம் அந்தரம்-இடை; ஆகவே, நிரந்தரம்- இடையின்மை. அது வினையெச்சமாகநின்று இடையீடின்றியெனப் பொருள்பட்டது. (அ)

மின்ன ரம்பைய ராடலும் விஞ்சையர்
கின்ன ரம்பயில் பாடலுங் கீழ்த்திசை
மன்ன னாதியர் வாழ்த்துமவ் வானவ
ரின்னி யங்களு மெங்கணு மார்ப்பது.

**இ—ள்:** மின் அரம்பையர் ஆடலும்—மின்னலைப்போன்ற தோற்றத்தினையுடைய தேவரம்பையர்செய்யும் நடனமும், விஞ்சையர் கின்னரம் பயில் பாடலும்—வித்தியாதரர்கள் யாழிலிசைக்கின்ற கீதமும், கீழ்த்திசை மன்னன் ஆதியர் வாழ்த்தும்—கிழக்குத்திக்கிற்கதிபனாகிய இந்திரன்முதலிய தேவர்கள் கூறும் மங்கலவாழ்த்தும், அ வானவர் இன் இயங்களும்—அந்தத்தேவர்கள் இயம்பும் இனிய (துந்துபிமுதலிய) வா

த்தியங்களும், எங்கணும் ஆர்ப்பது—எவ்விடங்களினும் ஒலிக்கப்பெறுவது(அத்திருக் கைலாசமலை) எ—று. (கூ)

வேறு.

கீணி லாவுறு முலகெலா நீங்கியே கீழ்போய்ச்
சேணி லாவுறு பதமெலா முருவிமீச் சென்று
மாணி லாவுறு மண்டத்தி னடிமுடி மருவத்
தாணு வாயுல கிறுதியி னிற்பதச் சயிலம்.

இ—ள்: கீழ் நிலாவுறும் உலகு எலாம் நீங்கி கீழ் போய்—கீழேபொருந்திய எல்லாவுலகங்களையுங்கடந்து கீழ்ச்சென்றும், சேண் நிலாவுறு பதம் எலாம் உருவி மீச்சென்று—ஆகாயத்திற்பொருந்திய உலகங்களனைத்தையும் ஊடுருவி மேலோங்கியும், மாண் நிலாவுறும் அண்டத்தின் அடி முடி மருவ—மாட்சிமைவிளங்குகின்ற பிரமாண்டத்தின் அடியினும்முடியினும்பொருந்த, தாணுவாய்—நிலைப்பொருளாகி, உலகிறுதியில் நிற்பது அ சயிலம்--உலகமுடியுங்காலத்தில் நிற்பது அத்திருக்கைலாசமலை எ-று.

கீழுலகம் ஏழு. மேலுகமும் ஏழு. இவற்றை முறையே "அதலம் விதலஞ் சுதலநிதலந்-தராதலம் ரசாதலம் பாதாளவுலக-மென்றிவை கீழேழுலகெனப்படுமே" எனவும், பூலோகம் புவலோகஞ் சுவலோக மகலோகஞ்- சனலோகந் தவலோகஞ் சத்தியலோகமென-வித்திறத்தனவாமேலேழுலகே" எனவும்வரும் பிங்கலந்தைச்சூத்திரங்களானுணர்க. இம்மலை ஊழிகாலத்திலிவ்வாறுநிற்றலை "அவாந்தரேஷுப்ரளயேஷ்வேதந்தேண்டோபரித்விஜா:|"[அவாந்தரப்பிரளயகாலங்களில் அண்டத்தின்மேல்வளருகின்றது]" என முதனூல்கூறுதலாலுமுணர்க. (கO)

மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினு முலகெலா மழியினும் பரந்து
கூடு மண்டங்கள் குலையினுங் கொன்றைவே ணியன்போற்
கேடி லாமலே யமர்வது கயிலையங் கிரியே.

இ—ள்: மாடு சூழ்தரும் மேருவே ஆதியாம் வரைகள் பாடு சேரினும்—பக்கத்திற்சூழ்ந்திருக்கின்ற மேருவேமுதலாகிய மலைகள் அழிவெய்தினும், உலகு எலாம் அழியினும்—எல்லாவுலகங்களுமழிந்தாலும், பரந்து கூடும் அண்டங்கள் குலையினும்--பரவிக்குழுமியுள்ள அண்டங்களெல்லாம் நிலைதவறினும், கேடு இலாமல்— அழிவுபெறாது, கொன்றைவேணியன் போல் அமர்வது— கொன்றைமலர்மாலையையணிந்த சடாமுடியையுடைய சிவபிரான்போல என்றுமிருப்பது, கயிலையம் கிரி—அத்திருக்கைலாசமலை எ—று.

மேருவேயென்பதிலேகாரந்தேற்றம். உம்மைகளுயர்வுசிறப்பு. ஒன்றின்மேலொன்றாகாது ஒன்றின்புடையே மற்றொன்றாகநிரைத்த அண்டங்களென்பார் 'பரந்து கூடுமண்டங்கள்' என்றார். (கக)

நலம்வ ருங்கலை மதியமு மிரவியு நாகர்
குலம்வ ருந்தனுக் குறையலா மற்றைய கோளு
மலம ருஞ்சுட ருடுக்களு மமரரும் பிறரும்
வலம்வ ரும்படி யிருப்பது கயிலைமால் வரையே.

இ—ள்: நலம் வரும் கலை மதியமும்—நன்மைபொருந்திய கலைகளையுடைய சந்திரனும், இரவியும்—சூரியனும், நாகர் குலம் வரும் தனுக்குறை அலா மற்றைய

கோளும்—சர்ப்பகுலத்தில் வந்த (இராகுகேதுக்களாகிய) உடற்குறைகளல்லாத மற்றைய (செவ்வாய்முதலியஐந்து) கிரகங்களும், அலமரும் சுடர் உடுக்களும்—சுழலுகின்ற ஒளிபொருந்திய நக்ஷத்திரங்களும், அமரரும்—தேவர்களும், பிறரும்— (இருடிகள் முதலிய) ஏனையரும், வலம் வரும்படி இருப்பது— வலஞ்செய்யும்படியாக இருப்பது, மால் கயிலைவரை—பெரிய அத்திருக்கைலாசமலை எ-று.

அமிர்தகலையென்பார் 'நலம்வருங்கலை' எனவும், இராகு கேதுக்கள் பாவளுக்கிரகங்களாதலாலும் அவற்றிற்குச் சந்திரவிக்கேபபேதத்தாற் பாவிக்கப்படுங்கதி இடம்வருங்கதியாதலாலும் அவற்றைவிலக்குவார் 'தனுக்குறையலாமற்றையகோளும்' எனவும், பிரமாண்டத்தினடுவே கோளாகிருதியாக விரைக்கப்பட்டுப் பிரவகவாயுவினுதைப் பினலிடையறாது சுழன்றுகொண்டொளிர்தலின் 'அலமருஞ்சுடருடுக்களும்' எனவுங் கூறினர். (கஉ)

ஏற்ற மேருவே யாதியாம் வரைக ளேழ் வகையாற்
சாற்று நேமிக ளாழியங் கிரிபெருஞ் சலதி
நாற்றி சைக்கணு நொச்சிபோற் சூழ்தர நடுவண்
வீற்றி ருப்பது கயிலையா கியதனி வெற்பு.

இ—ள்: ஏற்ற மேருவே ஆதியாம் வரைகள்—தகுந்த மேருவேமுதலாகிய மலைகளும், ஏழ்வகையால் சாற்றும் நேமிகள்—ஏழுவகையாகச்சொல்லப்படுகின்ற சமுத்திரங்களும், ஆழியம் கிரி—சக்கரவாளமலையும், பெரும் சலதி— புறவாழியும் (என்னுமிவைகள்), நால் திசைக்கணும் நொச்சிபோல் சூழ்தர—நான்குதிக்குகளினுமரண் போலச்சூழ, நடுவண் வீற்றிருப்பது—(அவற்றிற்கெல்லாம்) நடுவே சிறந்திருப்பது, தனி கயிலை ஆகிய வெற்பு—ஒப்பற்ற கைலாசமாகிய அந்தமலை எ—று.

ஏகாரம் தேற்றம். ஆதியென்றதனற் குலாசலங்களும் பிறவுங் கொள்ளற்பாலன. அவற்றின்பெயர்களை மேல் அண்டகோசப்படலத்திற்காண்க. கடல்களெவற்றினும்பெரிதாதலாற் புறவாழியைப் பெருஞ்சலதியென்றார். (கரு)

படியெ லாமுண்டு மேனமாய்த் தாங்கியும் பண்டோ
ரடியி னுலகப் படுத்தியு மிடந்துமுற் றருளு
நெடிய மாயனு முலகிறு மெல்லையி னிமலன்
வடிவ மேயெனக் காணுதற் கரியதவ் வரையே.

இ—ள்: படி எலாம் உண்டும்— பூவுலகமுழுவதையும் விழுங்கியும், ஏனம் ஆய் தாங்கியும்— பன்றிவடிவாகிச் சுமந்தும், பண்டு ஓர் அடியினல் அகப்படுத்தியும்—முற்காலத்தில் ஓரடியினுளுட்படுத்தியும் [அளந்தும்],இடந்தும்-கிழித்தும், உற்று அருளும் நெடிய மாயனும்— நன்குபயின்றருளிய நெடிய திருமாலும், உலகு இறும் எல்லையில்— பிரளயகாலத்தில், நிமலன் வடிவமே என காணுதற்கு அரியது— சிவபெருமானது சோதிவடிவத்தையேபோலக் காணுதற்கரிதாயிருப்பது, அ வரை— அந்தத் திருக்கைலாசமலை எ—று.

முன்னர்ப் பத்தாஞ்செய்யுளிற் கூறியவாறு பிரளயகாலத்திற் கீழுமேலு நீண்டுசிற்றலால், பூவுலகத்தைப் பலவாற்றானும் பயின்றருளிய திருமாலும் நீட்சிதெரிதற்கரிதாய், சிவபெருமான் முற்காலத்திற்கொண்ட சோதிசொரூபம்போனின்றதென்பதாம்.

மாயனுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. மாயனும் காணுதற்கரியது எனஇயையும். ஏ தேற்றம். பூமியையுண்டது-பிரமனேடிகலிய காலத்தில். ஏனமாய்த்தா

ங்கியது சலப்பிரளயத்திலமிழ்ந்தியகாலத்தில். ஓரடியினுலகப்படுத்தியது மாவலியின் றருக்கையகற்றப்புகுந்தகாலத்தில். இடந்தது அடிமுடிதேடியகாலத்தில். இவையனைத்துமீண்டுவிரிப்பிற்பெருகும். (௧௪)

வேறு.

அன்னதோர் கயிலை நாப்ப ணம்பொனின் சுடர்மேல் கொண்ட
நன்னெடுஞ் சிமயத் தோங்க னவையொரீஇ நண்ணிற் றென்னக்
கன்னியங் காப்பு மேவிக் கதிர்மணிக் கற்றை சுற்றப்
பொன்னெடுங் கோயி லொன்று பொலிவொடும் பொருந்திற் றன்றே.

இ—ள்: அன்னது ஓர் கயிலை நாப்பண்— அத்தன்மையையுடைய திருக்கைலாசமலையினடுவில், பொன் நெடும் கோயில் ஒன்று—பொன்மயமாகிய நெடிய ஒரு திருக்கோயிலானது, கன்னியம் காப்பு மேவி—புதிதாகிய காவலைப்பொருந்தி, கதிர் மணி கற்றை சுற்ற—ஒளிபொருந்திய இரத்தினக்கூட்டங்கள் சூழ, அம் பொனின் சுடர் மேல் கொண்ட நல் நெடும் சிமயத்து ஓங்கல் நவை ஒரீஇ நண்ணிற்று என்ன—சிறந்த பொன்னினொளியை மேலாகப் பொருந்திய நல்ல நெடியசிகரங்களையுடைய மேருமலை குற்றநீங்கி வந்திருந்தாற்போல, பொலிவொடும் பொருந்திற்று— பொலிவினுடனே பொருந்தியது எ—று.

கயிலைநாப்பண் பொருந்திற்று எனவியையும். அம்பொன்- மாற்றுயர்ந்தபொன். காப்பு-மதிலெனினுமாம். (௧௫)

திணிகதி ராரந் தன்னிற் சிறந்தவச் சிரத்திற் செக்கர்
மணிதனின் முழுநீ லத்தின் மற்றைய வெறுக்கை தன்னிற்
பணிபட வருளாற் றானே பலித்திடு சிகர மாதி
யணியினுக் கணியாய் மல்கு மாலயச் சூழ லெங்கும்.

இ—ள்: திணி கதிர் ஆரம் தன்னில்—செறிந்த ஒளியினையுடைய முத்தினாலும், சிறந்த வச்சிரத்தில்— மற்றெல்லாவிரத்தினங்களினுஞ்சிறந்த வைரத்தினாலும், செக்கர் மணிதனில்-மாணிக்கரத்தினத்தினாலும், முழு நீலத்தில்-முழுதாகிய நீலரத்தினத்தினாலும், மற்றைய வெறுக்கை தன்னில்—மற்றையபொருள்களாலும், பணிபட-தொழின்முற்ற, அருளால் தானே பலித்திடு சிகரம் ஆதி—சிவனருளாற்றானேதோன்றிய கொடுமுடிமுதலியவைகள், ஆலய சூழல் எங்கும்—அத்திருக்கோயிலின் சுற்றிடங்களெங்கும், அணியினுக்கு அணி ஆய் மல்கும்—அழகுக்கழகாக மிகும் எ-று.

செக்கர்மணி- சிவந்தநிறமுடையமணி. வெறுக்கை- பொன்னெனினுமாம். பெரிய நீலமென்பார் 'முழுநீலம்' எனவும், கைத்தொழிற் சித்திரமமையவென்பார் 'பணிபட' எனவும், கைத்தொழிலானன்றித் தானே தோன்றியவென்பார் 'அருளாற்றானேபலித்திடு' எனவும், அழகாகியமங்கைக்கு மேலுமழகுறுமாறு சாத்திய பூஷணம்போலவென்பார் 'அணியினுக்கணியாய்' எனவுங்கூறினார். (௧௬)

என்றுமீ றென்ப தின்றி யிருந்திடுங் கயிலை வெற்பிற்
பொன்றிகழ் நகரந் தன்னுட் பொருவிலாக் கோளு நாளுந்
துன்றிய தன்மைத் தென்னத் தூமணிக் கதிர்கள் சூழ
மன்றம ருறையு ளொன்று வனப்பொடு வைகிற் றன்றே.

இ—ள்: என்றும் ஈறு என்பது இன்றி இருந்திடும் கயிலை வெற்பில்— எக்காலத்திலும் அழிவானதுஇல்லாமல் நிலைபெற்றிருக்கின்றதிருக்கைலாசமலையில், பொன் திகழ் நகரம் தன்னுள்—பொன்மயம்விளங்குகின்ற அத்திருக்கோயிலில், பொரு இலா

கோளும் நாளும் துன்றிய தன்மைத்து என்ன தூ மணி கதிர்கள் சுற்ற—ஒப்பில்லாத கிரகங்களும் நக்ஷத்திரங்களும்வந்து நெருங்கியதன்மையையுடையதென்று சொல்லும் படி, சுத்தமாகிய நவரத்தினங்களினொளிகள்சூழ, மன்று அமர் உறையுள் ஒன்று வனப்பொடு வைகிற்று—சபாமண்டபமொன்று அழகுடன் இருந்தது எ—று.

நிறங்கள்பலவகைப்படுதலாற் கிரகங்களையும் நக்ஷத்திரங்களையுமுவமித்தார்.()

வேறு.

சோதி சேருமத் தூமணி மண்டபத், தாதி யான வரியணை யும்பரிற்
காத லாகுங் கவுரியோர் பாங்குற, வேத நாயகன் வீற்றிருந் தானரோ.

இ—ள்: சோதி சேரும் அ தூ மணி மண்டபத்து— ஒளிபொருந்திய அந்தச்சுத்தமாகிய இரத்தினமண்டபத்தில், ஆதி ஆன அரியணை உம்பரில்—முதன்மைபொருந்திய சிங்காசனத்தின்மேல், காதல்ஆகும் கவுரி ஓர் பாங்கு உற—தமதிச்சாரூபமாகிய உமாதேவி ஒரு [வாம]பாகத்திலிருப்ப, வேத நாயகன் வீற்றிருந்தான்— வேதமுதல்வராகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்தார் எ—று.

ஆசனங்களெவற்றினுஞ்சிறந்ததாதலின் 'ஆதியானவரியணை' எனவும், ஞாயிறொன்றுதானே விடயங்களைவிளக்குழிக்கதிரெனவுந் தன்னைவிளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தாலிருதிறப்பட்டியைந்துநிற்றல்போல, பேரறிவாகிய சைதன்னியமொன்றே,புறப்பொருளைநோக்கிநிற்குநிலையிற் சத்தியெனவும், புறப்பொருளை நோக்காதறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுஞ் சமவாயத்தாலிருதிறப்பட்டியைந்துநிற்றலின் 'காதலாகுங்கவுரி' எனவும், வேதத்தைப் பாதுகையாகவும் பீடமாகவும் விடையாகவும் வாசகமாகவும் திருமேனியாகவுமுடையராதலின் 'வேதநாயகன்' எனவும் விசேடித்தார். (கஅ)

பீடு கொண்ட பெருந்தவப் பெற்றியோர், தேடு கின்ற சிறப்புடைத் தாம்புகழ்
நாடு தும்புரு நாரதர் விஞ்சையர், பாடு கின்றனர் பாணியின் பாற்பட.

இ—ள்: பீடு கொண்ட பெரும் தவப் பெற்றியோர் தேடுகின்ற சிறப்புடைத் தாம் புகழ்—மகிமையையுடைய பெரிய தவத்தைச்செய்யுமியல்பினையுடைய பெரியோர்களாற் றேடப்படுகின்ற விசேடத்தையுடையதாகிய (அவரது)கீர்த்தியை, நாடு தும்புரு நாரதர் விஞ்சையர்—எவராலும் (விரும்பி)நாடப்படுகின்ற தும்புருவும் நாரதரும் வித்தியாதரரும், பாணியின் பாற்பட பாடுகின்றனர்—(பாற்றியக்கமுநீழலும்போலப்) பாடலின்வழிப்படத்(தத்தம்யாழிலமைத்துப்) பாடுகின்றார்கள் எ—று.

புகழ் பாடுகின்றனர் என இயையும். (கக)

அதிகன் வேணியி லார்தரு கங்கையை, விதிபு ரந்தரன் விண்டுல கத்துள
நதிக டாழ்ந்தென நன்னயத் தேவல்செய், கதியி னோர்கள் கவரிகள் வீசினர்.

இ—ள்: அதிகன் வேணியில் ஆர்தரு கங்கையை—முதற்கடவுளாகிய சிவபிரானது சடாமுடியிற்பொருந்திய கங்காநதியை, விதி புரந்தரன் விண்டு உலகத்து உள நதிகள் தாழ்ந்து என-பிரமாவினதும் இந்திரனதும் திருமாலினதும் உலகங்களிலுள்ள கங்கைகள்வந்துபணிந்தாற்போல, நல் நயத்து ஏவல் செய் கதியினோர்கள் கவரிகள் வீசினர்— நல்ல காதலோடும் ஏவற்றொழில்புரிகின்ற பேறுடையவர்கள் சாமரங்களைவீசினார்கள் எ—று.

நன்னயத்தேவல்செய்கதி-சாமீப்பியப்பேறு. வேணியிலார்தருகங்கையைத் தாழ்ந்தென வீசினாரெனவே முகத்திற்குநேர்படவீசினரென்பதுபெறப்பட்டது. நதிகடாழ்தல், அந்நதியின்சகாயத்தாற்றானுஞ்சிவன்சடையிலிவர்ந்துயர்வுபெறுதற்பொருட்டென்க. வணக்கஞ்செய்வோர் தாழ்தலுமெழுதலுமாகிய தொழில்களை மாறிமாறியியற்றுதல்போலத் தாழ்ந்துமுயர்ந்துஞ்சேறலின் கவரிவீச்சு வணக்கம்போன்றது. அங்ஙனஞ்செல்லும்போது கவரிமயிர்கள் வெண்ணிறமுடையனவாய்ப்பரத்தலின் நதிவணக்கம்போன்றது. (உ0)

சீல வட்ட முடிப்பிறை தேடுவான், ஞால வட்டத் தெழுதரு நாகர்போ
லேல வட்ட முகத்தரு கெங்கணும், மால வட்ட மசைத்தன ரன்பினோர்.

இ—ள்: சீல வட்ட முடி பிறை தேடுவான் ஞாலவட்டத்து எழுதரும் நாகர் போல் ஏல--தூய்மையாகிய வட்டித்த சடாமுடியிற்றங்கிய பாலசந்திரனைத்தேடும்பொருட்டுப் பூமண்டலத்தினின்றுகிளருகின்ற சர்ப்பங்களைப்போலப்பொருந்துமாறு, அன்பினோர்—அடியார்கள், வட்ட முகத்து அருகு எங்கணும்—(அச்சிவபெருமானது) வட்டித்த திருமுகத்தின்பக்கமெங்கும், ஆலவட்டம் அசைத்தனர்—ஆலவட்டங்களை அசைத்தார்கள் எ—று.

நம்மால்விழுங்கப்படுஞ்சந்திரன் சிவபெருமானது சடைக்காட்டுட்புக்கொளித்தனனென்றெண்ணி, அதனைப்பற்றுமாறு, பூவுலகிலுள்ள சர்ப்பங்களெல்லாமொருங்குகுழீஇப் படம்விரித்துயர்ந்தெழுந்து தேடுதல்போல, அடியார்கள் சிவபெருமானது திருமுகத்தின்மருங்கே ஆலவட்டங்களையசைத்தனரென்பதாம்.

ஆலவட்டங்கள் தலையகன்று கால்நீண்டிருத்தலாற் படம்விரித்தெழுந்துநிற்குஞ்சர்ப்பங்கள்போன்றன. சடைகள் விருத்தாகாரமாகச்சுற்றிமுடிக்கப்பட்டிருத்தலின் 'வட்டமுடி' என்றார். அட்டமுகமெனச் சொல்வகுத்து எண்டிசையெனப்பொருள்கூறுவாருமுளர். (உக)

ஆதி தன்னரு ளெய்தி யவன்றிருப், பாத தாமரை சூடியப் பண்ணவன்
கோதி லாத திருவுருக் கொண்டுளோர், பூத ராதியர் போற்றிமு னீண்டினார்.

இ—ள்: ஆதிதன் அருள் எய்தி—முதற்கடவுளாகிய சிவபெருமானது திருவருளைப்பெற்று, அவன் திரு பாததாமரை சூடி-அவரது திருவடிகளாகிய தாமரைமலர்களைச் சிரமேற்சூடி, அ பண்ணவன் கோது இலாத திருவுரு கொண்டுளோர்— அந்தச்சிவபெருமானது குற்றமற்ற திருவுருவத்தைப்பெற்றுள்ளவர்களும், பூதர் ஆதியர்—பூதர்முதலானவர்களும், போற்றி முன் ஈண்டினார்— துதித்து அவரது திருமுன்னிலையில் நெருங்கினார்கள் எ—று.

அப்பண்ணவன் திருவுருக்கொண்டுளோரென்றது சாரூபப்பேறுடையவர்களை. பூதராதியர் என்றார் நந்திகணத்தவரையுமடக்குதற்கு. விரும்பிமகிழ்ந்து சிரமேற்சூடினரென்பதையுணர்த்த, 'பாததாமரைசூடி' என உருவகித்துக்கூறினார். அருளெய்தலாற் பாததாமரைசூடி, அங்ஙனஞ்சூடும் பேற்றால் அப்பண்ணவன்றிருவுருக்கொண்டுளோர் என்க; அப்பண்ணவன்றிருவுருக்கொண்டுளோரும் பூதராதியரும் அருளெய்தி சூடி போற்றி ஈண்டினார் என இயைப்பினுமாம். (உஉ)

திருக்கைலாசப்படலம் முற்றிற்று.

ஆகவிருத்தம் ௩௱௪.

# பார்ப்பதிப்படலம்.

இது, பார்வதிதேவியின்வரலாற்றைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது. பர்வதத்தின்மகள் பார்வதி. பர்வதமென்றது இமையமலையை. பார்வதியெனினும் பார்ப்பதியெனினுமொக்கும்.

## இப்படலப்பொழிப்பு.

திருக்கைலாசமலையிற் சிவபெருமான்றிருவோலக்கம் வீற்றிருக்கும்பொழுது ஒருநாள், உமாதேவியார், 'ஸ்வாமீ! தேவரீரைத்தூஷித்ததக்கனுக்கு மகளாதலால் எனக்கு அபவாதம் நேர்ந்தது. அதனைநீக்குதற்கோருபாயங்கூறவேண்டும்' என்றுபிரார்த்தித்தனர். சிவபெருமான், 'உன்னை மகளாகப்பெற்றுவளர்த்து எமக்கு மணஞ்செய்துதருமாறு இமையமலையரசன்றவம்புரிகின்றான். அவனிடங்குழந்தைவடிவாய்ச்சென்றுவளர்ந்து ஐந்துவயசு கழிந்தபின் நம்மைக்குறித்துத் தவம்புரிகுதி. யாம் வந்து மணஞ்செய்து ஈண்டு அழைத்துக்கொணர்வேம்' என்று திருவாய்மலர்ந்தருளினர். தேவியார் நன்றென்று சம்மதித்துச்சென்று இமையமலையரசன்றவம்புரிகின்ற தடாகத்திலோர் தாமரைமலரின்மேற் குழந்தையுருவாகவதிந்தனர். மலையரசன் அக்குழந்தையைக்கண்டவுடன், தேவியாரே தனதுதவத்திற்குவந்து குழந்தையாயினரெனத்துணிந்து, ஆநந்தபரவசனாய், கையிலெடுக்கிச்சென்று, மனைவியாகிய மேனைகையிற்கொடுத்தான். மேனை அக்குழந்தையின்வரலாற்றைஅவனிடங்கேட்டுணர்ந்துமனங்களித்துத் தனத்திலூறியபாலையூட்டிவளர்த்துவந்தாள். ஐந்துவயசு கழிந்தபின் பார்ப்பதிதேவியார் 'தவஞ்செய்தற்கு விடைதருக' என்றுபிதாவைவேண்டினர். அவன் 'இச்சிறுபிராயத்திற்றவம்புரியத்துணிவதுதகாது' என்று மறுத்தனன். பின்னர்ப்பார்ப்பதிதேவி தாம் தவமியற்றத்துணிந்தது சிவாஞ்ஞையேயென்பதைக்கூறி விளக்கி, மலையரசனையிசைவித்து, தவச்சாலையையமைப்பித்து, பலகன்னியர்கள் புடைசூழ அத்தவச்சாலையிற்போயிருந்து, சிவன் தம்மைமணஞ்செய்துகொள்ளுமாறு தவமியற்றினர் என்பதாம்.

அன்னுழி யுமையவ ளகத்து ளோர்செய
லுன்னின டுணுக்கமுற் றொல்லை தானெழீஇத்
தன்னிக ரில்லவன் றாளி றைஞ்சியே
முன்னுற நின்றிவை மொழிதன் மேயினாள்.

இ—ள்: அன்னுழி—அவ்வாறு சிவபிரான்றிருவோலக்கம்வீற்றிருக்கும்பொழுது, உமையவள் அகத்துள் ஓர் செயல் உன்னினள்— உமையம்மையார் திருவுள்ளத்தில் ஒரு கருமத்தை நினைத்து, துணுக்கம் உற்று ஒல்லை எழீஇ— நடுக்கங்கொண்டு விரைவில் எழுந்து, தன் நிகர் இல்லவன் தாள் இறைஞ்சி— தம்மையொப்பார் பிறரில்லாதவராகிய சிவபெருமானது திருவடிகளைவணங்கி, முன்னுற நின்று— அவரது திருமுன்னிலையினின்று, இவை மொழிதல் மேயினாள்—இவ்வாசகங்களைச் சொல்லத்தொடங்கினார் எ—று.

அன்ன என்பதனீற்றகரந்தொக்கது. உன்னினள் முற்றெச்சம். எழீஇ-எழுப்பியென்பதன்விகாரம். நிகர் என்னும்பண்புப்பெயர் பண்பியையுணர்த்திநின்றது.(௧)

கற்பனை முதலிய கடந்த கண்ணுதற்
றற்பர நினையிகழ் தக்கன் றன்னிடைப்
பற்பகல் வளர்ந்தவன் பயந்த மாதெனச்
சொற்படு நாமமுஞ் சுமந்து ளேனியான்.

இ—ள்: கற்பனை முதலிய கடந்த கண்ணுதல் தற்பர— கற்பனைமுதலியவற்றைக் கடந்துநின்ற நெற்றிக்கண்ணையுடைய கடவுளே!, யான்— சிறியேன், நினை

இகழ் தக்கன் தன் இடை பற்பகல் வளர்ந்து— தேவரீரையிகழ்ந்த தக்கனிடத்துப்பல பலதினங்களாக வளர்ந்து, அவன் பயந்த மாது என சொல் படும் நாமமும் சுமந்துளேன்— அத்துட்டன்பெற்ற மகளென்று சொல்லமைந்த (தாக்ஷாயணியென்னும்) பெயரையும் வகித்துள்ளேன் எ—று.

கற்பனை-பாவனை. உம்மை எச்சம். அப்பெயர் தமக்கோர் பாரமென்பதுதோன்ற 'சுமந்துளேன்' என்றார்.

சிவநிந்தகனைக் காணுதல் அவனுடன் பேசுதல் இருத்தல் அவனன்னம்புசித்தன்முதலியன ஒவ்வோர்காலியற்றினுங் கொடும்பாதகமாகுமேல், அவனுக்கு மகளாய் வளர்ந்து, பற்பலநாள் அவனாற் போஷிக்கப்பட்ட உடலையும் பெயரையுஞ்சுமந்திருப்பது எத்துணைப்பெரும்பாதகம். இதனையிதுகாறுஞ்சிந்தியாது யான் காலங்கழித்தேனேயென்பார் 'நினையிகழ்தக்கன்றன்னிடைப் பற்பகல்வளர்ந்தவன்பயந்தமாதெனச் சொற்படுநாமமுஞ்சுமந்துளேன்' என்றார். இதுபற்றியே முற்செய்யுளிலும் 'துணுக்கமுற்றெரல்லைதானெழீஇ' என்றார். (உ)

ஆங்கதோர் பெயரையு மவன்க ணெய்தியே
யோங்கிநான் வளர்ந்தவிவ் வுடலந் தன்னையுந்
தாங்கினன் மேலவை தரித்தற் கஞ்சினே
னீங்குவ னவ்வகை பணித்தி நீயென்றாள்.

இ—ள்: ஆங்கது ஓர் பெயரையும்— அத்தன்மைத்தாகிய பரிபவநாமத்தையும், அவன்கண் எய்தி ஓங்கி வளர்ந்த இ உடலம் தன்னையும்—அத்தக்கனிடத்திற் (குழந்தையாகப்) போய் உயர்ந்துவளர்ந்த இச்சரீரத்தையும், நான் தாங்கினன்—யான் (இதுகாறுஞ்) சுமந்தேன், மேல் அவை தரித்தற்கு அஞ்சினன்— இனி அவற்றைச்சுமத்தற்குப்பயந்தேன், (எவ்வகை) நீங்குவன் அவ்வகை நீ பணித்தி என்றாள்-(அவற்றை) எவ்வாறுநீங்குவேனே அவ்வாறுகட்டளையிட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்தார் எ—று.

அவ்வகையென்பதற்கேற்ப எவ்வகையென்பது வருவிக்கப்பட்டது. (௩)

மன்னுயி ராகிய மரபு முற்றவு
முன்னுற வருளிய முதல்வி யன்பினு
லின்னண மியம்பலு மிதனைத் தேர்ந்திடாத்
தன்னிக ரில்லதோர் தலைவன் கூறுவான்.

இ—ள்: மன் உயிர் ஆகிய மரபு முற்றவும் முன்னுற அருளிய முதல்வி—நிலைபெற்ற ஆன்மாக்களாகியவகுப்பனைத்தையும் பண்டைக்காலத்திற்பெற்ற இறைவியாகிய உமாதேவியார், அன்பினுல் இன்னணம் இயம்பலும்- அவற்றின்மீதுகொண்ட கருணையினுலிவ்வாறு விண்ணப்பஞ்செய்ய, தன் நிகர் இல்லது ஓர் தலைவன்— தம்மையொப்பார்பிறரில்லாத தலைவராகிய சிவபெருமான், இதனை தேர்ந்திடா கூறுவான்— (தேவிகூறிய) இவ்வாசகத்தையுணர்ந்து அருளிச்செய்வார் எ—று.

ஆன்மாக்கள் நித்தியமாதலால் 'மன்னுயிர்' எனவும், சரம் அசரம் என்றும் தேவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்றும் வகுக்கப்பட்டு, எண்பத்துநான்குநூறுயிர யோனிபேதமுடையனவாய் அளவிறந்திருத்தலின் 'உயிராகியமரபுமுற்றவும்' எனவும், சிவசத்தியே துணைக்காரணமாகநின்று ஆதியிலவற்றைத்தோற்றுவித்தலின் 'முன்னுறவருளியமுதல்வி' எனவும், அத்தகையஇறைவி தம்மாற்சிருட்டிக்கப்பட்டசீவவர்க்கங்கள்போலப் பாவத்திற்கும்பழிக்குமஞ்சியது, அவை தம்மைச்சாருமென்றன்று; உலகமாதாவாகியதேவியாரே சிவநிந்தகனது கேண்மையா

லுண்டாகும்பழிபாவங்கட்கஞ்சினராயின் யாமதற்கஞ்சா திருப்பதெங்ஙனமெனு நன்மதி கொண்டு நம்மனேருய்தற்கும், தம்மைக்குறித்து மலையரசனியற்றுந்தவத்திற் கருளுதற்குமேயாமென்பார் 'அன்பினலின்னணமியம்பலும்' எனவும், அவ்வுட்கிடக்கையைத் தமது சர்வஞ்ஞத்துவத்தாலுணர்ந்தென்பார் 'இதனைத்தேர்ந்திடா' எனவுங் கூறினர்.

உயிராகியமரபுமுற்றவுமுன்னுறவருளியமுதல்வியென்றதை "ஒளியா லுலகின் றுயிரனைத்து மீன்போற் செவ்வி யுறநோக்கி—யளியால் வளர்க்கு மங்கயற்க ண்ணே கன்னி யன்னமே— யளியா லிமவான் றிருமகளா யாவி யன்ன மயில்பூவை—தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட் டயருஞ் செயலென்னே" எனவருந் திருவிளையாடற்புராணச்செய்யுளாலுமுணர்க. (ச)

பத்திமை யெம்வயிற் பழுத்த பண்பினற்
சத்தியே நின்னிகர் சகத்தி னில்லைநீ
யித்திற முயலுத லெல்லை தீர்ந்தநின்
புத்திரர் வீடுறு பொருட்டுப் போலுமால்.

இ—ள்: சத்தியே—தேவியே!, எம் வயின் பத்திமை பழுத்த பண்பினல்—எம்மிடத்தில் அன்புமுதிர்ந்த தன்மையினல், நின் நிகர் சகத்தின் இல்லை— உன்னையொப்பார் (ஒருவரும்) உலகத்தில் இல்லை, நீ இத்திறம் முயலுதல்— (அத்தகைய) நீ இவ்வாறு முயற்சிசெய்வது, எல்லை தீர்ந்த நின் புத்திரர் வீடு உறு பொருட்டு—அளவிறந்த உன் புத்திரராகிய ஆன்மாக்கள் முத்திபெறும்பொட்டேயாம் எ—று.

சிவதூஷகனுக்கு மகளாயினும் இறைவராகிய நம்மிடத்து இடைவிடாத பேரன்புவைத்தொழுகினையாதலின் 'அக்குற்றந்தீர்ந்து பெரும்புகழ் படைத்துடையை. இதனை நீ உணர்ந்திருந்தும் உணராதார்போலிங்ஙனமுயன்றது ஆன்மாக்கள்பொருட்டே நின்பொருட்டன்றென்பது கருத்து.

மைவிகுதி பகுதிப்பொருளில்வந்தது. ஆன்மாக்களுக்கருள்செய்தலிற் பெருங்காதலுடையரென்பதை விளக்குவார், பிறவாறுகூருது, 'நின்புத்திரர்' என்ருர். (ரு)

நற்றிற மேயிது நங்கை சிந்தனை
முற்றிய வேண்டுமேன் மொழிது மேருவின்
சுற்றம தாகிய விமையத் தொல்வரைக்
கொற்றவன் புரிவனற் கொடிய மாதவம்.

இ—ள்: நங்கை—தேவியே!, இது நல் திறமே— இது நன்முயற்சியே, சிந்தனை முற்றிய வேண்டுமேல் மொழிதும்— இவ்வெண்ணம் நிறைவேறவேண்டுமேயானல் (ஒருபாயங்) கூறுவோம், (எவ்வாறெனில்), மேருவின் சுற்றமது ஆகிய தொல் இமையவரை கொற்றவன் கொடிய மா தவம் புரிவன்-மேருமலையின் கிளையாகிய பழைய இமையமலையரசன் கொடிய பெருந்தவத்தைச் செய்கின்ருன் எ—று.

வேண்டுமேல் எலீற்றுவினையெச்சம். மொழிதும்- எதிர்காலத்தன்மைப்பன்மைவினைமுற்று. புடைசூழ்ந்திருக்குங் கிளைஞர்போல மேருமலையினற்றிசைச்சூழ்விற்றங்கியுள்ள மாலியவான்முதலிய எண்மலைகளுள் இமையமுமொன்ருதலின் 'மேருவின் சுற்றமதாகியவிமையம்' எனவும், மெய்வருந்தச்செய்யுமருந்தவமென்பார் 'கொடிய மாதவம்' எனவும் விசேடித்தார். இதுசிந்தனை நற்றிறமேயெனக்கூட்டிப்பொருளுரைப்பாருமுளர். கொடுந்தவத்தினியல்பை "மலர்தலையுலகத்துப்பலயலமாக்கண்- மக்களைமனைவியையொக்கலையொரீஇ- மனையும்பிறவுந்துறந்துவினை வருங்—காடுமலையும்புக்குக்

கோடையிற்- கைம்மேனிமிர்த்துக்காலொன்றுமுடக்கி- யையவகைநெருப்பினமுவத்தி னின்று- மாரிநாளிலும்வார்பனிநாளிலு- நீரிடைமூழ்கியுநெடிதுகிடந்துஞ்- சடையைப்புனைந்துந்தலையைப்பறித்து- முடையைத்துறந்துமுண்ணுதுழன்றுங்- காயுங்கிழங்குங்காற்றுதிர்சருகும்- வாயுவுநீரும்வந்தனவருந்தியுங்- களரிலுங்கல்லிலுங்கண்படைகொண்டுந்- தளர்வுறுமியாக்கையைத்தளர்வித்தாங்கவ- ரம்மைமுத்தியடைவதற்காகத்- தம்மைத்தாமேசாலவுமொறுப்பர்" எனவருந் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையானுணர்க. (௬)

ஏதவன் பெறத்தவ மியற்று மென்றியேன்
மாதுனை மகண்மையா மரபிற் போற்றியே
காதலொ டெமக்கருள் கருத்த தாகுமா
லாதலிற் குழவியா யவன்க ணெய்துநீ.

இ—ள்: மாது—பெண்ணே!, அவன் ஏது பெற தவம் இயற்றும் என்றியேல்—அம்மலையரசன் ஏதனைப்பெறும்பொருட்டுத் தவஞ்செய்கின்றனனெனவினவுவையேல்-உனை மகண்மையா மரபில் போற்றி காதலொடு எமக்கு அருள் கருத்தது ஆகும்-உன்னை மகளாந்தன்மையமைய முறைப்படிவளர்த்து அன்பினுடன் எமக்கு மணஞ்செய்துதருகின்ற எண்ணமேயாம், ஆதலில்— ஆதலினால், நீ குழவியாய் அவன்கண் எய்து—நீ குழந்தைவடிவாக அவனிடத்திற்செல்லுதி எ—று.

உன்மகத்துவத்திற்குச்சிறிதுங் குறைவுநேரிடாதவாறு போற்றியென்பார்'மரபிற்போற்றி' எனவும், நம்மையெண்ணுதவமதித்த தக்கன்போலகங்காரமின்றித் தாழ்மையுடன்றருக்குறிப்பென்பார்'காதலொடெமக்கருள்கருத்தது'எனவும், அத்தகைய அன்பனிடம் வளர்தலேயுனக்கேற்றதென்பார் 'ஆதலில்- அவன்கணெய்துநீ' எனவுங் கூறினார். (௭)

தளர்ந்துடன் மெலிவுறத் தவஞ்செய் வெற்பினு
னிளஞ்சிறு குழவியா யெய்தி மற்றவ
னுளங்களி கூரவாண் டோரைந் தின்றுணை
வளர்ந்தனை புரிதிமேன் மாசின் மாதவம்.

இ—ள்: உடல் தளர்ந்து மெலிவு உற தவம் செய் வெற்பினன் இளம் சிறு குழவி ஆய் எய்தி—சரீரம் இளைத்து வாடும்படி அருந்தவஞ்செய்கின்றமலையரசனது இளைய சிறிய குழந்தையாகப்போய், அவன் உளம் களிகூர ஆண்டு ஓரைந்தின் துணை வளர்ந்தனை— அம்மலையரசன் மனமகிழும்படி ஐந்துவயசு முடியும்வரையும் வளர்ந்து, மேல் மாசு இல் மா தவம் புரிதி-அதன்மேற்குற்றமற்ற பெரியதவத்தைச்செய்குதி எ-று.

வளர்ந்தனை முற்றெச்சம். உடன்பெற்ற குழந்தையாயென்பார் 'இளஞ்சிறு குழவியாய்' எனவும், நெடுங்காலம் மகட்பேறின்றியிருந்த அவாத்திரவென்பார் 'உளங்களிகூர' எனவுங்கூறினார். (௮)

அணங்குநீ நோற்றுழி யகிலத் துள்ளதோர்
கணங்களுந் தலைவருங் கணிப்பி றேவரு
மிணங்கினர் சூழ்தர வெய்தி நின்னையா
மணம்புரிந் தேகொடு வருது மீண்டென.

இ—ள்: அணங்கு—பெண்ணே!, நீ நோற்றுழி—நீ அவ்வாறுதவஞ்செய்யுங் காலத்தில்—அகிலத்து உள்ளது ஓர் கணங்களும் தலைவரும் கணிப்பு இல் தேவரும் இணங்கினர் சூழ்தர யாம் எய்தி—எல்லாவுலகங்களினுமுள்ள உருத்திரகணத்தவர்களும் அக்கணத்தலைவர்களும் அளவிறந்ததேவர்களும் ஒருமித்துச்சூழ யாம் வந்து, நின்

னை மணம்புரிந்து—உன்னை விவாகஞ்செய்து, ஈண்டு கொடுவருதும் எ-ரு—இவ்விடத்திற் கொண்டுவருவோமென்று எ—று.

இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (௯)

கடல்விட முண்டிடு கடவு ளித்திற
நடைமுறை யருளலு நன்றெ னுமகிழ்ந்
தடியிணை வணங்கிநின் றன்பிற் போற்றியே
விடையது பெற்றனள் விமலை யேகினாள்.

இ—ள்: கடல் விடம் உண்டிடு கடவுள்—பாற்கடலிற்றோன்றிய நஞ்சை (அமுதாக) அயின்ற சிவபெருமான், இத்திறம் நடைமுறை அருளலும்— இவ்வாறு நடக்கவேண்டிய கிரமத்தைக் கட்டளையிடுதலும், விமலை— (கேட்ட) உமாதேவியார், நன்று எனு மகிழ்ந்து—அது நல்லதென்று சந்தோஷித்து, அடியிணை வணங்கி நின்று அன்பில் போற்றி—இரண்டுபாதங்களையும்பணிந்து எழுந்துநின்று அன்பினுடன் துதித்து, விடையது பெற்றனள் ஏகினாள்—அநுமதிபெற்றுக்கொண்டு போயினார் எ-று.

கயிலையைநீங்கன்முதற் கயிலைசேர்தலீறாகிய கிரமமென்பார்'நடைமுறை' என்றார். பெற்றனள் முற்றெச்சம். (௧௦)

அல்லலு முவகையு மன்பு மெம்பிரா
னெல்லையி லருளுமா யீண்டி முன்செல
மெல்லிய லுமையவள் வெள்ளி வெற்பொரீஇ
வல்லையி னிமையமால் வரையிற் போயினாள்.

இ—ள்: அல்லலும்—(இறைவரைப்பிரிகின்றோமேயென்னுந்) துன்பமும், உவகையும்—(பிரியினுஞ்சில்லாண்டிற்கூடுவோம் நம்மெண்ணமுமுற்றும் என்னும்) மகிழ்வும், அன்பும்— (சில்லாண்டிற் கூடுவமாயினும் அதுகாறும் பிரிந்துவாழ்வதெங்ஙனமென்னும்) நேசமும், எம்பிரான் எல்லை இல் அருளும் ஆய் ஈண்டி முன்செல—(அந்நேசத்திற்கேற்ப எம்பெருமான்சுரந்த) அளவிறந்தகருணையுமாக நெருங்கி முன்னேநடக்க, மெல் இயல் உமையவள்—மெல்லியசாயலினையுடைய உமாதேவியார், வெள்ளி வெற்பு ஒரீஇ—திருக்கைலாசமலையை நீங்கி—வல்லையில் மால் இமையவரையில் போயினாள்—விரைவிற் பெரிய இமையமலையிற்சென்றார் எ—று.

இறைவரைப் பிரிந்துபோகின்றுழி இந்நான்கும் முறையேநிகழ்ந்தனவாதலின்'அல்லலும் * * அருளுமாயீண்டிமுன்செல-போயினார்' என்றார். இவைநான்குமேதுணை பிறிதொருதுணையுமின்றென்பதைக் குறிப்பானுணர்த்தற்கிங்ஙனங்கூறினாரெனினுமாம். (௧௧)

வள்ளியன் கடகரி வடிவின் வீழ்தரு
துள்ளியம் பனிமழைச் சோனை சூழ்தலா
லெள்ளருந் தன்மைசே ரிமைய மால்வரை
வெள்ளியங் கிரியென விளங்கு கின்றதே.

இ—ள்: வள் இயன் கட கரி வடிவின் வீழ்தரு துள்ளியம் பனி சோனைமழை சூழ்தலால்-வளவிய இயல்பினையுடைய மதயானைப்பிரமாணமாகச்சிந்துகின்ற துளிகளையுடைய பனியாகியவிடாமழை எங்கும்பரவுதலால், எள்ளரும் தன்மைசேர் மால் இமையவரை— இகழ்தற்கரிய தன்மைபொருந்திய பெரிய இமையமலையானது, வெள்ளியங்கிரி என விளங்குகின்றது—திருக்கைலாசமலையைப்போலப் பிரகாசிக்கின்றது எ—று.

பொன்மலையாகிய இமையம் பனிப்படலத்தான்மறைப்புண்டு வெள்ளிமலைபோல் விளங்குகின்றதென்பதாம். 'வள்ளியன்கடகரி' என்பதற்கு இந்திரனுடைய ஐராவதயானையெனப் பொருள் கூறுவாருமுளர். (கஉ)

எண்டரு மிமையமு மிமைய மேலுறு
கொண்டலு மொன்றியே குலவு காட்சிய
தெண்டிரை மிசையெழு நஞ்சுந் தீயநஞ்
சுண்டிடு மணிமிடற் றிறையு மொக்குமால்.

இ—ள்: எண் தரும் இமையமும் இமையமேல் உறு கொண்டலும் ஒன்றி குலவு காட்சிய-மதிப்புவாய்ந்த இமையமலையும் அவ்விமையமலையின்மேற்பொருந்தியமேகங்களும் ஒன்றுபட்டுவிளங்குந் தோற்றத்தையுடையன (ஆதலின்), தெண் திரை மிசை எழும் நஞ்சும்—தெளிந்த திரையையுடைய பாற்கடலிற்றோன்றிய ஆலாகலத்தையும், தீய நஞ்சு உண்டிடு மணி மிடற்று இறையும் போலும்—கொடியநஞ்சையுண்ட கரியதிருக்கண்டத்தையுடைய சிவபெருமானையும் போலும் எ—று.

இமையமலையில் மேகங்கள் படிந்திருத்தல் பாற்கடலிலுஞ் சிவபெருமானது திருமிடற்றிலும் நஞ்சுதோன்றுதல்போலுமென்பதாம். இமையமலைக்குப்பாற்கடலும் சிவபிரானது மேனியும், மேகத்திற்கு நஞ்சுமுபமானம். நீற்றொளிபரத்தலாற் சிவன்மேனியை வெண்ணிறமலைக்குவமித்துக்கூறியது. தெண்டிரை-அன்மொழித்தொகை. ()

நீலுறு மழைமுகி னிலவு மின்னொடு
மேலுற விளங்கிய விமைய வெற்பது
மாலவன் றிருவொடு மருவிக் கண்டுயில்
பாலுறு பன்னகப் பாயல் போன்றதே.

இ—ள்: நீல் உறு மழை முகில் நிலவும் மின்னொடு மேல் உற விளங்கிய இமைய வெற்பு அது—கருநிறம்பொருந்திய மழைபெய்யும்பருவம்வாய்ந்த மேகங்கள் ஒளிர்கின்ற மின்னலுடன் தன்மேற்படிந்திருக்கப்பிரகாசிக்கின்ற அந்த இமையமலையானது, மாலவன் திருவொடு மருவி கண் துயில் பால் உறு பன்னக பாயல் போன்றது—விஷ்ணுமூர்த்தி இலக்குமிதேவியோடுஞ்சேர்ந்து அறிதுயில்செய்கின்ற பாற்கடலிற்பொருந்திய சர்ப்பசயனத்தை ஒத்தது எ—று.

இமையமலைக்குப் பாற்கடலையும் அதன்சிகரத்திற்குச் சர்ப்பசயனத்தையும் மேகத்திற்குத் திருமாலையும், மின்னற்கு இலக்குமியையுமுபமித்தார். (கச)

கரும்புய லார்த்துறு காட்சித் தாகியே
யிரும்பனி யிடையறு மிமையப் பொன்வரை
சுரும்பின மிசையொடு துவன்றிச் சுற்றிட
வரும்பவி ழாதவெண் கமல மன்னதே.

இ—ள்: கரும் புயல் ஆர்த்து உறு காட்சித்து ஆகி—கரிய மேகங்கள் முழங்கிப்படிந்த தோற்றத்தையுடைத்தாய், இரும் பனி இடையறு பொன் இமைய வரை—பெரிய பனிமழை இடையீடின்றிச்செறியப்பெற்ற பொன்மயமாகிய இமையமலையானது, சுரும்பினம் இசையொடு துவன்றி சுற்றிட அரும்பு அவிழாத வெண்கமலம் அன்னது—வண்டுக்கூட்டங்கள் பண்பாடுதலுடன்செறிந்துசூழ முகைவிரியப்பெறாதிருக்கின்ற வெண்டாமரைமலர்போன்றது எ—று.

மேகத்திற்குவண்டுத்திரளையும், முழக்கத்திற்கு இசையையும், இமையமலைக்கு வெண்டாமரைமுகையையுமுவமித்தார். முகையவிழின்வடிவொவ்வாதாதலின் 'அரும்பவிழாதவெண்கமலம்' என்றார். (௧௫)

நீடிய மண்மக ணிதியின் குப்பையைப்
பாடுறு தண்ணிலாப் படாம தொன்றினன்
மூடினள் வைத்திடு முறைய தேயெனக்
கோடுயர் பனிகொள்பொற் குன்ற நின்றதே.

இ—ள்: நீடிய மண்மகள்—நெடிய பூமிதேவியானவள், நிதியின் குப்பையை—(தன்னிடத்துள்ள) பொற்குவையை, பாடு உறு தண் நிலா படாமது ஒன்றினால் மூடினள் வைத்திடும் முறையதே என- பெருமைபொருந்திய குளிர்ந்த வெள்ளைவஸ்திரமொன்றால் மூடிவைத்ததன்மையையேபோல,கோடு உயர் பனிகொள் பொன் குன்றம் நின்றது-சிகரமுயரப்பெற்ற பனிசெறிந்த(அப்)பொன்மலையானதுநின்றது எ-று.

பொன்மயமாகிய இமையமலை பனியினான்மூடப்பட்டிருத்தல், தன்னிடத்துள்ளபொற்குவை பிறர்க்குத்தோன்றாவண்ணம் நிலமகள் வெண்ணிறத்துகிலால் மூடிவைத்ததுபோன்றதென்பதாம். நிதிக்குவைக்கு இமையத்தையும் வெண்டுகிற்குப் பனிப்பரப்பையுமுவமித்தார். முறையதேயென்பதிலேகாரந்தேற்றம். (௧௬)

பொன்னெடுங் கிரியென மீண்டும் புங்கவர்
துன்னினர் சூழ்வரென் றுன்னித் தொன்மனு
வன்னதை மறைத்தன னிரதத் தாவியா
லென்னவு நின்றதா லிமையப் பொன்வரை.

இ—ள்: புங்கவர்—தேவர்கள், நெடும் பொன்கிரி என மீண்டும் துன்னினர் சூழ்வர் என்று உன்னி— நெடியமேருமலையென்றையுற்று இம்மலையினும்வந்துசுற்றுவரென்றெண்ணி, தொல் மனு-பழைய சுவாயம்புவமனுவானவன், அன்னதை இரதத்து ஆவியால் மறைத்தனன் என்னவும்—அம்மலையை இரசப்புகையினால் மறைத்தானென்றுசொல்லும்படியும், இமைய பொன் வரை நின்றது—பொன்மயமாகியஇமையமலையானது (பனியான்மறைப்புண்டு) நின்றது எ—று.

உலகமனைத்தையுமொருகுடையின்கீழமைத்தரசியற்றிய முதன்மனுவாகிய சுவாயம்புவானவன், 'மேருமலையும் இமையமலையும் நிறம்வடிவாதியவற்றாற் சிறிதும் வேற்றுமைதோன்றாதுநிற்றலின் மேருமலையைத் தேடிச்செல்லுந்தேவர்கள் இமையமலைக்கண்ணும்வந்திருப்பர். இருந்தக்கால் மாற்றாராகிய அசுரர்கைப்பட்டலக்கணுறுவர்' என்றுகருதி, அவர்க்குத் தோன்றாதவாறு இரதப்புகையூட்டிமறைத்ததுபோல, பனிப்படலத்தாற் பொன்னிறம் மறைப்புண்டு, அவ்விமையமலைநின்றதென்பதுகருத்து. 'பொன்னெடுங்கிரியெனவீண்டும்புங்கவர்துன்னினர்சூழ்வர்' என்பதனால் மேருவைப்போல இம்மலையும் மிக உயர்ந்ததென்பதூஉம்பெற்றாம். (௧௭)

குடகடல் குணகடல் கூடு றாவகை
யிடையொரு வாலிதா மேன மெய்தியே
தடைபுரி சிறப்பென விமையத் தாழ்வரை
நெடுநில வளவைபு நிமிர்ந்து போயதே.

இ—ள்: குட கடல் குண கடல் கூடுறா வகை—மேற்றிசைக்கடலுங் கீழ்த்திசைக்கடலும் (ஒன்றோடொன்று) பொருந்தாவண்ணம், இடை ஒரு வாலிது ஆம் ஏனம் எய்தி தடைபுரி சிறப்பு என— அவற்றிற்கிடையே ஒருவெண்ணிறப்பன்றி வந்து த

டைசெய்துநிற்குஞ்சிறப்புப்போல, தாழ் இமைய வரை-(அவ்விருகடல்களினாழத்தினுமதிகமாக)ஆழ்ந்துள்ள இமையமலையானது, நெடு நில அளவையும் நிமிர்ந்து போயது-நெடிய பூமியின் கிழக்குமேற்கந்தம்வரையும் நீண்டுயர்ந்தது எ-று.

கிழக்குமேற்குக்கடல்கள்காறும் நீண்டு, அக்கடல்களினுமதிகமாக ஆழ்ந்து, அவற்றிற்கேற்றஉயரமுடைத்தாயிற்றென்பதுதாற்பரியம். முன்னோர்கற்பத்திற் பிரளயவெள்ளத்தாழ்ந்த பூமியைத்தூக்கிக்காத்தது திருமாலவதாரமாகிய சுவேதவராகமாதலால்,அவ்வினையைநோக்கிப்பன்றியாகவுவமித்தார். நிமிர்ந்துபோயது=போய்நிமிர்ந்தது.

பன்னிரண்டாஞ்செய்யுண்முதலிதுகாறுமேழுசெய்யுட்களால் இமையமலைச்சிறப்புக்கூறப்பட்டது. (௧௮)

விண்ணவர் ததிக்கடல் கடைந்த வெண்ணெயு
ளண்ணலம் பாற்கட லமுதம் வைத்தெனக்
கண்ணகன் பெரும்பணி கவைஇய வெற்பின்மே
லுண்ணிறை புனற்றட மொன்று வைகிற்றே.

இ-ள்: விண்ணவர்—தேவர்கள், ததிக்கடல் கடைந்த வெண்ணெயுள்—தயிர்க்கடலைக் கடைந்தெடுத்த வெண்ணெயினுள்ளே, அண்ணலம் பாற்கடல் அமுதம் வைத்து என— பெருமையிற்சிறந்த பாற்கடலிற்றோன்றிய அமிர்தத்தை வைத்தாற்போல, கண் அகன் பெரும் பனி கவைஇய வெற்பின்மேல்— இடம்பரந்த மிகுந்தபனியினான்மூடப்பெற்ற அவ்விமையமலையின்மேல், உள் நிறை புனல் தடம் ஒன்று வைகிற்று—உள்ளேநிறைந்த நீரையுடைய ஒருதடாகம் இருந்தது எ-று.

இமையமலைக்குவெண்ணெயையும் தடாகத்திற்குஅமிர்தத்தையுமுவமித்தார். அமிர்தம் என்பது அமுதமெனவழங்கிற்று. கண்ணகன்வெற்பு பெரும்பனி கவைஇய வெற்பு எனத் தனித்தனி இயையும். இத்தடாகத்தின்பெயரைமானதமெனமுதனூல்கூறும்; பத்மையென்பார்சிலர். (௧௯)

அன்னதோர் தடத்திடை யசல மன்னவன்
மன்னிய கௌரிதன் மகண்மை யாகவுந்
தன்னிக ரிலாவரன் றனக்கு நல்கவு
முன்னுற வருந்தவ முயன்று வைகினான்.

இ-ள்: அசல மன்னவன்—இமையமலையரசன், மன்னிய கௌரி தன் மகண்மை ஆகவும், நிலைபெற்ற உமாதேவியார் தனதுமகளாந்தன்மையையடைதற்கும், தன் நிகர் இலா அரன் தனக்கு நல்கவும்— (அம்மகளைத்) தன்னையொப்பாரில்லாத சிவபெருமானுக்கு மணஞ்செய்துகொடுத்தற்குமாக, அன்னது ஓர் தடத்திடை—அந்தத்தடாகத்தில், முன்னுற அரும் தவம் முயன்று வைகினான்—(தேவியார் சிவபெருமானிடத்து விடைபெறுதற்கு) முன்றொடங்கியே செய்தற்கரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தான் எ-று.

அசலமன்னவன் வைகினான் என இயையும். அசலம்-சலமற்றது. சலம்=அசைவு. பிறப்பிறப்பில்லாத்தலைவியென்பார் 'மன்னியகௌரி' என்றார். அரசியற்குரிய முடிமுதலியவற்றையொழித்து, சடாதாரியாய், முஞ்சிப்புற்கயிற்றையும் மான்றோலுடையையும் விபூதிருத்திராக்கங்களையுமணிந்து, பழம் சருகு நீர் வாயு என்பவற்றைமுறையே உட்கொண்டு, முதுவேனிற்காலத்திற் பஞ்சாக்கினிமத்தியத்திலும் இளவேனிற்காலத்தில் வெய்யிலிலும் கார்க்காலத்தில் மழையிலும் பனிக்காலத்திற்பனியிலும் கு

னிர்க்காலத்தில் நீரிலுமாக நின்று, தேவிசூக்தத்தை இடைவிடாது பாராயணஞ்செய்து தவமியற்றினனென்றுமுதனூல்கூறுதலின் 'அருந்தவமுயன்றுவைகினான்' என்றார்.(உ0)

மெய்த்தவ மியற்றிய வெற்பன் காணிய
வத்தட மலருமோ ரரவிந் தத்தின்மேற்
பைத்ததோர் குழவியின் படிவத் துற்றன
ளெத்திறத் துயிரையு மீன்ற தொன்மையாள்.

இ—ள்: மெய் தவம் இயற்றிய வெற்பன் காணிய— அவ்வாறு மெய்ம்மையாகிய தவத்தைச்செய்திருந்த மலையரசன்காணும்பொருட்டு, அ தடம் மலரும் ஓர் அரவிந்தத்தின்மேல்— அந்தத்தடாகத்தின்மலர்ந்துள்ள ஒரு தாமரைமலரின்மீது, பைத்தது ஓர் குழவியின் படிவத்து உற்றனள்— பசுமையாகிய ஒருகுழந்தையின் உருவங்கொண்டு எழுந்தருளியிருந்தார், எத்திறத்து உயிரையும் ஈன்ற தொன்மையாள்—எவ்வகைப்பட்ட ஆன்மாக்களையும் பெற்ற பழையவராகிய உமாதேவியார் எ—று.

பைத்தகுழவி- இளங்குழவி. எல்லாவுயிர்கட்குந் தாயாகிய தேவியார் மலையரசனுக்கு மகளாயவாறு பேரற்புதமென்பதுதோன்ற 'எத்திறத்துயிரையுமீன்றதொன்மையாள் பைத்ததோர்குழவியின்படிவத்துற்றனள்' எனவும், அதற்கேற்ற அருந்தவமென்பார் 'மெய்த்தவம்' எனவுங் கூறினார். (உக)

வேறு.

ஆங்கவட் கண்டு வெற்ப னடியனேன் பொருட்டா லம்மை
நீங்கினள் போலு முக்க ணிருமலன் றன்னை யென்னா
வேங்கினன் றனது நோன்புக் கிரங்கின னிவைக ளீச
னோங்குபே ரருளே யென்னா வுவகையங் கடலுட் பட்டான்.

இ—ள்: வெற்பன் ஆங்கவள் கண்டு— இமையமலையரசன் அவ்விடத்தில் அக்குழந்தையைக்கண்டு, அம்மை அடியனேன் பொருட்டால் முக்கண் நிருமலன் றன்னை நீங்கினள் போலும் என்னா— உமாதேவியார் எளியேன்பொருட்டாக மூன்று திருக்கண்களையுடைய மலரகிதராகிய சிவபெருமானை நீங்கியருளினார்போலுமென்று நினைத்து, ஏங்கினன்—ஏக்கங்கொண்டு, தனது நோன்புக்கு இரங்கினன்—தனது தவப்பெருமையைநினைத்துஇரக்கங்கொண்டு, இவைகள் ஈசன் ஓங்கு பேர் அருளே என்னா—இவையனைத்துஞ் சிவபெருமானது சிறந்த பெருங்கருணையேயாமென்று சிந்தித்து, உவகையம் கடலுள் பட்டான்—சந்தோஷசாகரத்திலமிழ்ந்தினான் எ—று.

ஏங்கினன் இரங்கினன் முற்றெச்சம். ஏ-தேற்றம். ஆன்மாக்களைத்திற்கும் அருள்செய்யுநிமித்தமாக நீரிற்றண்மைபோற் சிவத்துடன்பிரிவின்றிக்கூடியிருக்குஞ் சத்தியார் என்னொருவன்பொருட்டாகப் பிரிந்தனரே. அதனால் யாதாமோ என்றேங்கினனென்பார் 'அடியனேன்பொருட்டாலம்மை நீங்கினள்போலுமுக்கணிருமலன் றன்னையென்னாவேங்கினன்' எனவும், சிறியேனியற்றிய தவத்தாலன்றோ அச்செயனிகழ்ந்தது. யானவ்வரத்தைவிரும்பித் தவமியற்றியவாறென்னை! என்று மனங்கசிந்தனனென்பார் 'தனதுநோன்புக்கிரங்கினன்' எனவும், சிறியேனது தவத்தானிகழ்ந்ததாயினும் அது பெருமானருளேயாமாதலின் ஓர்குறையுமின்றென்று துணிந்து மகிழ்ந்தனனென்பார் 'இவைகளீசனோங்குபேரருளேயென்னாவுவகையங்கடலுட்பட்டான்' எனவுங்கூறினார். (உஉ)

கண்ணுறு போத வாரி கான்றிட வுரோம ராசி
யுண்ணிறை யன்பு மிக்குப் புறந்தனி லொழுகிற் றென்ன

வண்ணன்மெய் பொடிப்பத் துள்ளி யடியனே னுய்ந்தே னென்றுத்
துண்ணெனப் பாடி யாடி யமலையைத் தொழுது நின்றான்.

இ—ள்: அண்ணல்— இமையமலையரசன், கண் உறு போதவாரி கான்றிட—கண்ணிற்றோன்றிய ஆனந்தபாஷ்பஞ்சிந்த, உள் நிகழ் அன்பு மிக்கு புறந்தனில் ஒழுகிற்று என்ன உரோமராசி மெய் பொடிப்ப— உள்ளத்தினிகழுகின்ற அன்பானது (நிறைந்து)மிஞ்சிப் புறத்தே ஒழுகியதுபோல ரோமக்கூட்டங்கள் பெருமையிற்சிறந்த சரீரத்திற்புளகமுற, துள்ளி—குதித்து, அடியனேன் உய்ந்தேன் என்று துண்ணென பாடி— சிறியேன் உய்ந்தேன் என்றுசொல்லி விரைவாகத் தோத்திரங்களைப் பாடி, ஆடி— ஆனந்தக்கூத்தாடி, அமலையை தொழுது நின்றான்— உமாதேவியாரைக் கை தொழுதுநின்றான் எ—று.

உண்ணிகழன்புமிக்குப்புறந்தனிலொழுகிற்றென்னக் கண்ணுறுபோதவாரி கான்றிட எனக்கூட்டியுரைப்பாருமுளர். (உங)

பங்கயத் தவிசின் வைகும் பராபரை தனைத்த னது
செங்கையி னெடுத்து வல்லே சென்னிமேற் றாங்கி யேகித்
துங்கநல் லிமையத் தண்ண றொன்முறை யிருக்கை புக்கு
மங்கல மேனை யென்னு மனைவிகைக் கொடுத்தான் மாதோ.

இ—ள்: துங்க நல் இமையத்து அண்ணல்— உயர்ச்சிபொருந்திய நல்ல இமையமலையரசன், பங்கய தவிசின் வைகும் பராபரைதனை தனது செம் கையின் எடுத்து— தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற உமாதேவியாரைத் தனது சிவந்த கைகளாலெடுக்கி, வல்லே சென்னிமேல் தாங்கி ஏகி— விரைவாகச் சிரமேற்றாங்கிப் போய், தொன் முறை இருக்கை புக்கு—பழையமுறைப்படி மாளிகையையடைந்து, மங்கல மேனை என்னும் மனைவி கை கொடுத்தான்— மங்கலத்தினையுடைய மேனையென்று சொல்லப்படுகின்ற பத்தினியின்கையிற்கொடுத்தான் எ—று.

தபோவேஷத்தைவிடுத்தென்பார் 'தொன்முறை' எனவும், பாத்தியங்கொடுத்தன்முதலிய அநுசரிப்புக்களைச்செய்து கற்புடைமகளிர் குணம்பொருந்தவின்ற மேனையென்பார் 'மங்கலமேனை' எனவும் விசேடித்தார். தொன்முறையிருக்கை- பழையமுறையினையுடைய இருக்கை=அரண்மனையெனினுமாம். (உச)

கொடுத்தலுந் தொழுது வாங்கிக் கொற்றவ விவணின் பாங்க
ரடுத்ததெங் கெவனோ வென்ன வரசனு நிகழ்ந்த வெல்லா
மெடுத்துரை செய்யக் கேளா வீசன தருளோ வென்று
வடுத்தவிர் கற்பின் மேனை மனமுற மகிழ்ச்சி கொண்டாள்.

இ—ள்: கொடுத்தலும்—அவ்வாறு கொடுத்தவுடன், தொழுது வாங்கி—(மேனாதேவி) கைதொழுது வாங்கி, கொற்றவ—தலைவரே!, இவள் நின் பாங்கர் அடுத்தது எவனோ என்ன— இக்குழந்தை தேவரீரிடத்து அணுகியது எவ்வாறோ என்றுவினவ, அரசனும் நிகழ்ந்த எல்லாம் எடுத்து உரைசெய்ய—மலையரசனும் நிகழ்ந்தசெயல்களனைத்தையுமெடுத்துச்சொல்ல, வடு தவிர் கற்பில் மேனை கேளா—குற்றமற்ற கற்பினையுடைய மேனாதேவிகேட்டு, ஈசனது அருளோ என்று—இது சிவபெருமானதுதிருவருளா என்றுவியந்து, மனம் உற மகிழ்ச்சி கொண்டாள்—மனத்தில் மிகவுஞ் சந்தோஷங்கொண்டாள் எ—று.

சிவசத்தி குழந்தையாயிற்றென்றதிசயித்து மகிழ்ந்தனளென்பார் 'ஈசனதருளோவென்று-மகிழ்ச்சிகொண்டாள்' என்றார். (உரு)

சுரந்தன கொங்கை பாலுந் தண்ணென வொழுகிற் றெங்கும்
பரந்தன பொடிப்பின் போர்வை பரைதன தருளே யுள்ள
நிரந்தன கவலை யாவு நீங்கின பவமுன் னுள்ள
கரந்தன விமையத் தண்ணல் காதலி தனக்கு மாதோ.

இ—ள்: இமையத்து அண்ணல் காதலி தனக்கு—இமையமலையரசனது மனைவியாகிய மேனைதேவிக்கு, கொங்கை சுரந்தன—(அக்குழந்தையைவாங்கியவுடன்) தனங்கள்சுரந்தன, பாலும் தண்ணென ஒழுகிற்று—(அத்தனங்களினின்று) பாலும் விரைவாகச்சிந்தியது, பொடிப்பின் போர்வை எங்கும் பரந்தன— புளகமாகிய போர்வை மேனிமுழுதும் பரந்தன, பரை தனது அருளே உள்ளம் நிரந்தன-உமாதேவியினது கருணையே மனத்தில்நிரம்பின, கவலை யாவும் நீங்கின—மனவருத்தங்களெல்லாமொழிந்தன, முன் உள்ள பவம் கரந்தன— முன்னுள்ளனவாகிய சஞ்சிதவினைகள் ஒழிந்தன எ—று.

சுரத்தல்-ஊறுதல். கவலை-பெண்மகவின்மையாதியன. பாலுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. ஏகாரம் தேற்றம். (௨௬)

பரிபுரந் தண்டை யம்பொற் பாடகம் பாத சாலம்
விரவிய தொடியே சங்கு வியன்மணிச் சுட்டி யார
மரிகெழு மதாணி பொற்றோ டங்கதம் பிறவுஞ் சாத்தி
வரையுறழ் தனப்பா லார்த்தி வரம்பெறு காப்பு நேர்ந்தாள்.

இ—ள்: பரிபுரம்—காற்சிலம்பையும், தண்டை—தண்டையையும், அம்பொன் பாடகம்—சிறந்த பொன்னாலாகிய பாடகத்தையும், பாதசாலம்— பாதசரத்தையும், விரவிய தொடி—செறிந்த கடகத்தையும், சங்கு—வளையலையும், வியன் மணி சுட்டி—பெரிய இரத்தினங்களழுத்திச்செய்த சுட்டியையும், ஆரம்—முத்துமாலையையும், அரிகெழு மதாணி—மரகதமணிவிளங்குகின்ற மார்பணியையும், பொன் தோடு—பொன்மயமாகிய காதணியையும், அங்கதம்—தோளணியையும், பிறவும் சாத்தி—பிற அணிகளையும் சாத்தி, வரை உறழ் தன பால் ஆர்த்தி—மலைபோன்றதனங்களிற்சுரக்கின்ற பாலையூட்டி, வரம் பெறு காப்பு நேர்ந்தாள்—மேன்மைபொருந்திய காப்பைத்தரித்தாள் எ—று.

நெகிழ்வும் இறுக்கமுமின்றி அளவமைந்ததொடியென்பார் 'விரவியதொடி' எனவும், குழந்தையைக்காத்தற்குரியதாதலின் 'வரம்பெறுகாப்பு' எனவும் விசேடித்தார். காப்புநேர்தலை "சாதரூ றுந்திவசத் துக்கேழாநாளிற்றக்கபகலேகுழவி தனக்குச்சாலவேதமுறுநமனுலென்றறிந்தக்காலத்திருங்காப்புத்தரித்ததற்பினாந்திநேர- மோதுமறைவிளங்கவருகணேசனுக்கன் புறுபூசைபுரிந்துமணிமுசலமேந்தித்- தீதறுசீப்பிடுங்கதவிற்புடைக்கநன்மைதிழ்ந்தமகவுய்யுமெனத்தேருவாயே" என்பதனாலறிக. (௨௭)

வனைதரு பவளங் காலா வயிரமே மருங்கிற் கோலாப்
புனையிரும் பலகை நீலாப் புரிந்தபொற் றொட்டின் மேலா
வனையவ டன்னை யுய்த்து மங்கையிற் கொண்டுந் தன்கோன்
மனமகிழ் திறனுற் போற்றி மதியென வளர்க்க லுற்றாள்.

இ—ள்: வனைதரு பவளம் காலா-தொழிற்படுத்தப்பட்ட பவளங்களே நான்கு கால்களாகவும், வயிரமே மருங்கில் கோல் ஆ—வைரரத்தினமே பக்கத்திற் பொருந்தியசட்டங்களாகவும், புனை இரும் பலகை நீல் ஆ- அலங்கரிக்கப்பட்டபெரியபலகை நீலரத்தினமாகவும், புரிந்த பொன் தொட்டில் மேல் ஆ—இயற்றப்பட்ட பொன்மயமாகி

ய தொட்டிலின்மேற்பொருந்த, அனையவடன்னை உய்த்தும்—அக்குழந்தையைக்கிடத்தி யும், அங்கையில் கொண்டும்—அழகிய கைகளிலேந்தியும், தன் கோன் மனம் மகிழ் திறனுல் போற்றி—தனதுநாயகன் மனமகிழும்வண்ணம் பாதுகாத்து, மதி என வளர்க்கலுற்ருள்—(வளர்பக்கச்)சந்திரனைப்போல வளர்த்தாள் எ—று.

நீல்- கடைக்குறை. யான் வைத்துடையகாதலினும் பெருங்காதல்வைத்துப் போற்றுகின்ருளென்று மலையரசனினைக்குமாறென்பார் ‘தன்கோன்மனமகிழ்திறனுல்’ எனவும், முதனுளினும் மறுநாள் வளர்வுதோன்றுமாறென்பார் ‘மதியென’ எனவுங் கூறினுர். அங்கை-அகங்கையெனினுமாம். (௨௮)

மன் னுயிர் புவன மேனை மற்றுள பொருளுக் கெல்லா
மன்னையா யுதவி நாளு மவற்றினை வளர்த்து நிற்பா
டன்னையும் வளர்ப்பா ருண்டோ வளர்ந்தது சழக்கே யந்தக்
கன்னிதன் னருளி னீர்மை காட்டினள் போலு மன்றே.

இ—ள்: மன் உயிர் புவனம் ஏனை மற்று உள பொருளுக்கு எல்லாம் அன்னையாய் உதவி—நிலைபெற்ற ஆன்மாக்களுக்கும் உலகங்களுக்கும் எஞ்சிய பிறபொருள்களுக்குமெல்லாந் தாயாகிப்பெற்று, நாளும் அவற்றினை வளர்த்து நிற்பாள் தன்னையும்— தினந்தோறும் அவற்றைவளர்த்துநிற்கின்ற இறைவியையும், வளர்ப்பார் உண்டோ—வளர்ப்பவருண்டா? (இல்லை ஆதலின்), வளர்ந்தது சழக்கே— அவரங்ஙனம் வளர்ந்தனரென்பது பொய்யே, அந்த கன்னி தன் அருளின் நீர்மை காட்டினள்— அந்த உமாதேவியார் தமது கிருபைத்திறத்தைக்காண்பித்தனர் எ—று.

மலையரசன்செய்ததவத்திற்காக மகளாய்வந்து வளர்ந்ததுபோலத்தோன்றினரென்பதே மெய். அங்ஙனம் வளர்ந்தனரென்பதுபொய்யென்பதாம். நிற்பாள்-வினையாலணையும்பெயர். (௨௯)

இந்தவா றினையர் பாலா யெம்பெரு மாட்டி வைகி
யைந்தியாண் டகன்ற பின்றை யயன்முதற் றேவர்யார்க்குந்
தந்தையா ரருளை யுன்னித் தவமினிப் புரிவ னென்னுச்
சிந்தியா விமையத் தோங்கற் செம்மலுக் குரைக்க லுற்ருள்.

இ—ள்: எம் பெருமாட்டி—எமதிறைவியாகிய உமாதேவியார், இந்தவாறு இனையர் பால் ஆய் வைகி—இவ்வாறு இவர்களிடத்துச் சென்றிருந்து, ஐந்தியாண்டு அகன்ற பின்றை— ஐந்துவயசுகழிந்தபின், அயன் முதல் தேவர் யார்க்கும் தந்தையார் அருளை உன்னி—பிரமாமுதலிய தேவரனைவர்க்கும் பிதாவாகிய சிவபெருமானது திருவருளை எண்ணி, இனி தவம் புரிவன் என்னு சிந்தியா—இனித் தவத்தைச்செய்வேனென்று நினைத்து, இமையத்து ஓங்கல் செம்மலுக்கு உரைக்கலுற்ருள்—(பிதாவாகிய)இமையமலையரசனுக்கு (பின்வருமாறு) அருளிச்செய்வார் எ—று.

ஓங்கல்-மலை. செம்மல்-அரசன். ‘அவனுளங்களிகூரவாண்டோரைந்தின்றுணைவளர்ந்தனை புரிதிமேன்மாசில்மாதவம்’ எனச் சிவபெருமான்செய்த கட்டளையைநினைந்தென்பார் ‘தந்தையாரருளையுன்னி’ என்ருர். (௩௦)

நாற்பெருந் தடந்தோ ளண்ண லலத்தக வரைந்து கொள்வா
னேற்பன வினைய வெற்பி னுவலரு மொருசார் வைப்பி
னேற்பதோர் கன்னி மாரோ டெனைவிடுத் தருண்மோ வென்னுப்
பார்ப்பதி யியம்ப லோடும் பனிவரை யரசன் சொல்வான்.

இ—ள்: நால் பெரும் தடம் தோள் அண்ணல் நலத்தக வரைந்துகொள்வான்—பெரிய விசாலித்த நான்குபுயங்களையுடைய சிவபெருமான் நன்மைபொருந்தத் திருமணஞ்செய்துகொள்ளும்படி, இனைய வெற்பில் நுவலரும் ஒருசார் வைப்பில் நோற்பன்-இம்மலையின்கண் சொல்லுதற்கரிய ஒருபாகமானஇடத்திற்றவஞ்செய்வேன், ஏற்பது ஓர் கன்னிமாரோடு எனை விடுத்தருள் என்னு பார்ப்பதி இயம்பலோடும்— இசைந்தகன்னியர்களுடன் என்னை அனுப்பியருளுக என்று பார்ப்பதிதேவியார் கூறியருள, பனிவரை அரசன் சொல்வான்—இமையமலையரசன் சொல்வானாயினன் எ—று.

நுவல என்பதனீற்றகரந்தொக்கது. மோ முன்னிலையசை. எனது தவநிலை இடையூறடையாவண்ணம் வேண்டியபணிகளைச்செய்கின்ற சிறந்த தோழியரென்பார் 'ஏற்பதோர்கன்னிமார்' என்றார். (௫௧)

அன்னைகே ளெம்பி னீங்கி யருந்தவ மாற்றற் கொத்த
தின்னதோர் பருவ மன்றா லியாண்டுமோ ரைந்தே சென்ற
நின்னுடல் பொறாதா லீண்டிந் நிலைமையைத் தவிர்தி யென்னக்
கன்னிகை நகைத்துக் கேண்மோ விஃதெனக் கழற லுற்றாள்.

இ—ள்: அன்னை கேள்—தாயே கேட்பாயாக, இன்னது ஓர் பருவம்—இந்தச்சிறுபிராயமானது, எம்மில் நீங்கி அரும் தவம் ஆற்றற்கு ஒத்தது அன்று-எங்களினின்றுபிரிந்திருந்து அரியதவத்தைச்செய்தற்கு ஏற்றதல்ல, யாண்டும் ஓர் ஐந்தே சென்ற—வயதும் ஐந்துதான் கழிந்தன, நின் உடல் பொறாது— உன்னுடைய பாலியசரீரம் (உணவொறுத்தன்முதலிய பெருந்துன்பங்களைச்) சகிக்கமாட்டாது (ஆதலால்), ஈண்டு இ நிலைமையை தவிர்தி என்ன— இப்பொழுது இந்தக்கருத்தை விடுக்குதி என்று (மலையரசன்) கூற, கன்னிகை நகைத்து—கேட்டபார்வதிதேவியார் சிரித்து, இஃது கேள் என கழறலுற்றாள்—(பிதாவே) இதனைக்கேட்பீராகவென்று கூறியருளுவார் எ-று.

ஈண்டு என்பதிலடிப்பட்டுநின்ற இகரம் காலத்தைச்சுட்டிற்று. மோ முன்னிலையசை. ஏனையகன்னியர்க்குள்ள பிராயவியற்கையைச் சிவசத்தியாகிய தமக்குஞ்சார்த்திக்கூறுதலானகைத்தனரென்க. (௫௨)

ஈசனே காப்ப னல்லால் யாரையும் பிறராற் றம்மா
லாசறப் போற்ற லாகா ததுதுணி வாகு மீண்டுப்
பேசிய திறனு மன்னோன் பேரருள் மறுதி யென்ன
நேசமோ டியைந்திட் டன்னை நினைந்த நோன் பியற்று கென்றான்.

இ—ள்: யாரையும் ஈசனே காப்பன்—எல்லோரையுஞ்சிவபெருமானே இரட்சிப்பார், அல்லால்—அங்ஙனமன்றி, பிறரால் தம்மால் ஆசு அற போற்றல் ஆகாது—பிறராலாயினுந் தம்மாலாயினுந் தீமைநீங்க இரட்சித்துக்கொள்ளுதலரிது, அது துணிவாகும்—அது நிச்சயமாகும், ஈண்டு பேசிய திறனும் அன்னோன் பேர் அருள்-இவ்விடத்து யான்சொல்லியஇயல்பும் அச்சிவபெருமானது பெரிய அருளேயாம்(ஆதலால்), மறுதி என்ன-அதற்குத்தடைசொல்லாதீரென்றுகூறியருள, நேசமோடு இயைந்திட்டு-(கேட்டமலையரசன்) மனஅன்புடன் சம்மதித்து, அன்னை நினைந்த நோன்பு இயற்றுகென்றான்—(மகளைநோக்கி) தாயே! (நீ) நினைந்ததவத்தைச்செய்குதி என்று கூறுனர் எ—று.

யாவரையுங்காப்பவர் சிவபெருமானேயாதலின் அவரருட்படி தவஞ்செய்யப் புகுமெனக்குச்சிறிதுந் தீங்குநேரிடாது. தடைகூறாது விடுக்குதி என்று பார்வதியார் வேண்ட மலையரசன் இசைந்தனனென்பது கருத்து.

‘ஈசனேகாப்பனல்லால்யாரையும் பிறராற்றம்மாலாசறப்போற்றலாகாது’ என்றதை “நவிலினிம்மனை மக்களுக் கொருதுணை நாமல திலையென்றே-கவலை யுற்றரன் றாண்மறந் தனையுனைக் காலனூர் கொடுபோகிற்- குவலயத்தடைத் திவரைநா டொறும்புரந் திடுவையோ குறிக்குங்காற்-சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர் தானுமோர் துணையாமே” என்பதனாலுமறிக. இயற்றுக என்பதனீற்றகரந்தொக்கது. (௩௩)

மன்னனு மியைந்து பின்னர் மால்வரை யொருசார் தன்னி
லன்னமென் னடையி னாளுக் கருந்தவச் சாலை யாற்றித்
தன்னுறு கிளைஞர் தம்பாற் றவத்தினால் வந்த பான்மைக்
கன்னியர் பலரைக் கூவிக் கௌரிபா லாகச் செய்தான்.

இ—ள்: மன்னனும் இயைந்து—மலையரசனும் சம்மதித்து, பின்னர்—அதன்பின்பு, மால் வரை ஒருசார் தன்னில்—பெரிய இமையமலையினொருபக்கத்தில், அன்ன மெல் நடையினாளுக்கு அரும் தவச்சாலை ஆற்றி— அன்னம்போலுங் கோமளநடையினையுடைய பார்வதியார்க்கு அரிய தவச்சாலையையமைப்பித்து, தன் உறு கிளைஞர் தம் பால் தவத்தினால் வந்த பான்மை கன்னியர் பலரை கூவி—தனது நெருங்கியசுற்றத்தவர்களிடத்திற்றவப்பயனால்வந்துபிறந்த இயல்பினையுடைய பல கன்னியரையழைத்து, கௌரிபால் ஆக செய்தான்— பார்ப்பதிதேவியாரின் பக்கத்திற்பொருந்தும்படி ஏவினான் எ—று.

மன்னனுமென்பதிலும்மை எச்சம், மேனைமுதலினோரிசைவையும்விளக்குதலால். உறுகிளைஞர்-மிக்ககேண்மையுடையவர். தவம்-ஆகுபெயர். ‘ஏற்பதோர்கன்னிமாரோடெனைவிடுத்தருண்மோ’ என்று பார்ப்பதியார்கேட்டுக்கொண்டபடிசிறந்த அருருமைக்கன்னியரென்பார் ‘தன்னுறுகிளைஞர்தம்பாற்றவத்தினால்வந்தபான்மைக்கன்னியர்’ என்றார். (௩௪)

நீலுறு மணிதோய் மேனி நிமலையங் கிமையத் துச்சி
மேலுறு மரசன் றேவி விடையினான் மடவார் பல்லோர்
பாலுறு பணியிற் சூழப் பரமனை யுன்னியந்தச்
சாலையை யடைந்து மிக்க தவத்தினை யிழைக்க லுற்றாள்.

இ—ள்: நீல் உறு மணி தோய் மேனி நிமலை— கருநிறம்பொருந்திய அழகமைந்த தேகத்தையுடைய பார்ப்பதிதேவியார், அங்கு-அப்போது, இமையத்து உச்சி மேல் உறும் அரசன் தேவி விடையினால்—இமையமலைச்சிகரத்தில் வசிக்கின்ற அரசனதுமனைவியாகிய மேனையின் அநுமதியினால், மடவார் பல்லோர் பால் உறு பணியில் சூழ, பலபெண்கள் தம்பக்கத்தில் வேண்டிய ஏவல்களைச்செய்து சூழ்ந்துவர, அந்த சாலையை அடைந்து- அத்தவச்சாலையையணுகி, பரமனை உன்னி மிக்க தவத்தினை இழைக்கலுற்றாள்—சிவபெருமானைத்தியானித்து மிருந்த தவத்தைச்செய்வாராயினார் எ-று.

நீலுறுமணிதோய்மேனி-நீலமணிபோலும் மேனியெனினுமாம். அங்கென்பதில் அடிப்பட்டுநின்ற அகரம் காலத்தைச்சுட்டிற்று. (௩௫)

தங்கிய வைக றோறுந் தாதையுந் தாவில் கற்பின்
மங்கையும் போற்றி யேக மாதுநோற் றிருந்தா ளிப்பா
லங்கவட் பிரிந்த பின்றை யருட்பெருங் கயிலை மேய
வெங்கடம் பெருமான் செய்த பரிசினை யியம்ப லுற்றேன்.

இ—ள்: தங்கிய வைகல் தோறும்— தவச்சாலையிற்றங்கியிருந்த தினமொவ்வொன்றினும், தாதையும் தாஇல் கற்பில் மங்கையும் போற்றி ஏக— பிதாவாகிய மலையரசனும் (மாதாவாகிய) குற்றமற்ற கற்பினையுடைய மேனுதேவியுந் துதித்துச்செல்ல, மாது நோற்று இருந்தாள்—பார்வதிதேவியார் தவஞ்செய்திருந்தார், இப்பால்—(இஃதித்துணைநிற்க) இனி, அங்கவள் பிரிந்த பின்றை-அந்தத்தேவியாரைப் பிரிந்தபின்பு, அரும் பெரும் கயிலை மேய எங்கடம்பெருமான்— அரிய பெரிய திருக்கைலாசமலையில் தனியே வீற்றிருந்த எங்கள்தலைவராகிய சிவபிரான், செய்த பரிசினை இயம்பலுற்றேன்—செய்த செயலைக்கூறுவேன் எ—று.

தேவியார்செயலையிதுகாறுங்கூறினம். இனிச்சிவன்செயலைக் கூறுவமென்பதாம். சிவசத்தியேமகளாதலானும், விளையாட்டயரும் பாலியப்பிராயத்திற்றானே அருந்தவமியற்றுதலாலுந் தந்தைதாயர் போற்றினரென்க. போற்றியென்பதற்குக் காத்தெனப்பொருள்கூறுவாருமுளர். அங்ஙனங்கூறிற் காத்தல் க்ஷேமவிசாரணை முதலியனவென்க. (௩௬)

பார்ப்பதிப்படலம் முற்றிற்று.

ஆக விருத்தம் சகO.

---

# மேருப்படலம்.

இது மேருமலையினிகழ்ந்தசெயல்களைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது.

## இப்படலப்பொழிப்பு.

உமாதேவியார் மலையரசனுக்கு மகளாய்த் தவமியற்றுங்காலத்தில், சிவபெமான், தக்ஷிணாமூர்த்தியாய்க் கல்லாலவிருக்ஷநீழலில் வீற்றிருந்து சனகாதிமுனிவர்களுக்குச் சரியை கிரியை யோகமென்னுமூன்றுபாதங்களையுமுபதேசித்து, பின்னர்,ஞானபாதத்தையுணர்த்துமாறு சின்முத்திரைகாட்டி யோகநிலையில் வீற்றிருந்தனர். சூரபன்மன்,ஆயிரத்தெட்டண்டங்களுக்கதிபதியாய் வீரமகேந்திரபுரியிலிருந்து, தேவர் முதலியோரைவருத்திக் கொடுங்கோல்செலுத்தி, இந்திரனைச்சிறையிடவும் அவன் மனைவியாகிய இந்திராணியைக்கவர்ந்துகொள்ளவுமுயன்றனன். இந்திரன் அதற்கஞ்சிச் சுவர்க்கலோகத்தை விட்டுப் பூவுலகத்தில்வந்து, சிவபெருமானுக்கு முறையிடும்படி திருக்கைலாசகிரியிற்சென்றும் அங்கே அவரைத் தரிசிக்குஞ் சமயமின்மையான்மீண்டு மேருகிரியில்வந்திருந்து, தன்மகனாகிய சயந்தனைப் பானுகோபன் சிறைசெய்தமையைக் கேள்வியுற்றுக் கவலைகூர்ந்து, சிவபெருமானைத் தியானித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தான். சிவபெருமான் அத்தவத்திற்கெளிவந்து 'இந்திரனே! நம்மிடத்து ஒரு குமாரன் அவதரித்து அசுரரைச்சங்கரித்து உங்கள் துயரை நீக்குவன்' என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். பின்பும், சிவபிரான் கல்லாலவிருக்ஷநீழலிற் சனகாதியர்க்கு ஞானநிலைகாட்டிக்கொண்டும் தேவியார் இமையமலையிற்றவஞ்செய்துகொண்டுமிருப்ப, இவர்க்கிடையிற் புத்திரோற்பத்தி எங்ஙனமாம் என்று தேவேந்திரன் சிந்தித்து, மனோவதிபுகுந்து, பிரமதேவரைத் தரிசித்து 'ஸ்வாமீ! சூரபன்மனாதியோர்செய்யுந்தீங்கு நம்மாற் சகித்தற்கரிது. அதனையெண்ணித் தவம்புரிந்தவழிச் சிவபெருமான், தன்னிடத்தவதரிக்குங் குமாரன் அசுரரைவென்று துயரைநீக்குவ

ன் என்று திருவாய்மலர்ந்தருளி, முனிவர்க்கு ஞானவீட்டைகாட்டி வீற்றிருக்கின்றனர். தேவியார் இமையமலையிற்றவமியற்றுகின்றனர். இவர்க்குப் புத்திரரவதரிப்பதெங்ஙனம்' என்றுவினவினன். உடனே பிரமதேவர் இந்திரனையுமழைத்துக்கொண்டு வைகுண்டலோகத்திற்போய்,அவற்றையெல்லாந் திருமாலுக்குமுறையிட்டனர். திருமால் 'பிரமனே! மன்மதனை ஏவுதி. அவன், மோனநிலையைத்தவிர்த்துத் தேவியை மணமியற்றச்செய்வன். அவ்வாறுசெய்யினுன்கருத்துநிறைவேறும்' என்றுகூறினர். பிரமதேவர் அதுநன்றென்று சம்மதித்து விடைபெற்று மனோவதிசேர்ந்தனர் என்பதாம்.

பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை யரசன் றன்பாற்
கன்னியம் புதல்வி யாகிக் கௌரிநோற் றிருந்த காலைத்
துன்னிய வவுணர் சூழச் சூரபன் மாவாம் வெய்யோ
னிந்நில வரைப்பி னண்டத் திறைவனே யாகி யுற்றான்.

இ—ள்: கௌரீ—உமாதேவியார், பன்னரும் சிறப்பில் மிக்க பனிவரை அரசன் தன் பால்—சொல்லுதற்கரிய சிறப்பின்மேம்பட்ட இமையமலையரசனிடத்து, கன்னியம் புதல்வி ஆகி நோற்று இருந்தகாலை—இளமைபொருந்திய மகளாகித் தவஞ்செய்திருந்தகாலத்தில், சூரபன்மா ஆம் வெய்யோன்—சூரபன்மனாகிய கொடியவன், துன்னிய அசுரர் சூழ-நெருங்கியஅசுரர்(தன்பக்கத்திற்)சுற்ற, இ நில வரைப்பின் அண்டத்து இறைவன் ஆகி உற்றான்— இந்நிலவுலகத்தில் ஆயிரத்தெட்டண்டங்கட்குத்தலைவனாகியிருந்தான் எ—று.

தேவர்முதலிய பெரியோரையொறுத்துக் கொடுங்கோல்செலுத்தினனென்பதுதோன்ற 'வெய்யோன்' என்றார். (க)

மற்றது போழ்திற் றொல்லை மறைப்பொருள் வடத்தின் பாங்கர்ப்
பெற்றிடு சனக னாதி முனிவரர் பின்னும் பன்னா
ளற்றமி றவஞ்செய் தெந்தை யருளினாற் கயிலை நண்ணி
முற்றுணர் நந்தி போற்று முதனிலை வாயில் புக்கார்.

இ—ள்: அது போழ்தில்—அக்காலத்தில், தொல்லை மறை பொருள் வடத்தின் பாங்கர் பெற்றிடு சனகன் ஆதி முனிவரர்— பழைய வேதங்களினுண்மைப்பொருளைக் கல்லாலவிருக்ஷத்தினருகே (முற்காலத்திலுபதேசக்கிரமமாகப்) பெற்றுக்கொண்ட சனகர்முதலிய முனிசிரேட்டர்கள் நால்வரும், பின்னும் பல் நாள் அற்றம் இல் தவம் செய்து— பின்னரும் பலகாலமாகச் சோர்வற்ற தவத்தைச்செய்து, எந்தை அருளினால் கயிலை நண்ணி-எம்பரமபிதாவாகிய சிவபெருமானதுகருணையினாற்றிருக்கைலாசகிரியையடைந்து, முற்று உணர் நந்தி போற்றும் முதனிலைவாயில் புக்கார்— எல்லாமுணர்ந்த திருநந்திதேவராற்காக்கப்படுகின்ற முதற்கடைவாயிலையடைந்தார் எ—று.

மற்றதுபோழ்தில்-தவஞ்செய்து எனஇயையும். சிவபெருமான் சாந்நித்தியமாகி, நுந்தவத்திற்குவந்தேம், கயிலையில்வந்து நம்பாற் சரியைமுதலிய நால்வகைப்பாதங்களைக் கேட்டுணர்ந்தையநீங்குதிரென அருளிச்செய்தவாறென்பார் 'எந்தையருளினால்' எனவும், அச்சிவபெருமானிடம் எல்லாநூல்களையும் உபதேசக்கிரமமாகக்கேட்டுத் தெளிந்தநந்தியென்பார் 'முற்றுணர்நந்தி' எனவுங்கூறினார். (உ)

நோன்மையின் முனிவ ரானோர் நுவலருங் காட்சி நந்தி
தான்முறை வணங்கி நிற்ப வனையவன் கருணை தன்னால்
வான்மலி கடவுட் கோயின் மந்திரங் கொண்டு செல்ல
நான்முகன் முதலோர்க் கெய்தா ஞானநா யகனைக் கண்டார்.

இ—ள்: நோன்மையின் முனிவர் ஆனோர்-தவத்தினையுடைய அம்முனிவர்கள் நால்வரும், நுவலரும் காட்சி நந்தி கால் முறை வணங்கி நிற்ப— சொல்லுதற்கரிய அறிவினையுடைய திருநந்திதேவரது பாதங்களை முறைப்படி நமஸ்கரித்து நிற்க, அனையவன்—அத்திருநந்திதேவர், கருணைதன்னால் வான் மலி கடவுள் கோயில் மந்திரம் கொண்டு செல்ல—(சிவபிரானது) அருளினாற் பெருமைமிகுந்த தெய்வத்தன்மையார்ந்த திருக்கோயிலிலுள்ள மன்றின்கண் அழைத்துக்கொண்டுபோக, நான்முகன் முதலோர்க்கு எய்தா ஞானநாயகனை கண்டார்— (முனிவர்கள்) நான்குமுகங்களையுடைய பிரமா முதலிய தேவத்தலைவர்க்கும் எளிவராத ஞானமுதல்வராகிய சிவபெருமானைத் தரிசித்தார்கள் எ—று.

இன்-சாரியை. நுவல என்பதனீற்றகரந்தொக்கது. நான்முகன்முதலோர்க்கென்பதிற் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

சிவபிரானைத் தரிசித்தற்குமருள்பெறுதற்குமேற்ற பரிபக்குவமெய்தினோரென்பார் 'நோன்மையின்முனிவரானோர்' எனவும், அட்டாங்கம் பஞ்சாங்கம் முதலியகிரமமமையவணங்கியென்பார் 'முறைவணங்கி' எனவும், சிவபிரானிடம் போய்வரவுணர்த்தி, அவரநுமதிசெய்தபின்னென்பார் 'கருணைதன்னால்' எனவும், ஞானசாதனத்தானன்றித் தருக்காலுணர்தற்கேலாதவரென்பார் 'நான்முகன்முதலோர்க்கெய்தாஞானநாயகன்' எனவுங்கூறினார். (௫)

மொழியது தவறல் செல்ல முற்றுடல் பொடிப்புக் கொள்ள
விழிபுனல் பெருகத் தீசேர் மெழுகென வுள்ளம் விள்ள
வழகிய மறைக்கு மெட்டா வாதிநா யகனை நோக்கித்
தொழுதன ருவகை பூத்துத் துள்ளினர் துளக்க முற்றார்.

இ—ள்: மொழியது தவறல் செல்ல—சொல்லானது தடுமாற, முற்று உடல் பொடிப்புக்கொள்ள— தேகமுழுதும் புளகமுற, விழி புனல் பெருக—கண்களில் ஆனந்தபாஷ்பந்ததும்ப, உள்ளம் தீ சேர் மெழுகு என விள்ள—மனம் அக்கினியிற்பட்ட மெழுகுபோலுருக, அழகிய மறைக்கும் எட்டா ஆதிநாயகனை நோக்கி தொழுதனர்-சிறந்தவேதங்கட்கும் (பிரமாணித்தற்கு) அதீதமானஆதிகடவுளாகிய சிவபெருமானைத் தரிசித்துக் கைதொழுது, உவகை பூத்து—மகிழ்ச்சிமிகுந்து, துள்ளினர்-ஆனந்தக்கூத்தாடி, துளக்கம் உற்றார்—மெய்ந்நடுக்கங்கொண்டார்கள் (அம்முனிவர்கள்)எ—று

உம்மை உயர்வுசிறப்பு. தொழுதனர் துள்ளினர் முற்றெச்சங்கள். அன்பிற் சிறந்தபத்தர்களுக்கு இக்குறியுளவாதலை "மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்-கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்- பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியெனுங்- கைதா னெகிழ விடேனுடையாயென்னைக் கண்டுகொள்ளே" எனவும், ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்-பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்-சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே-தேடுகின்றிலை தெருவுதொறலறிலை செய்வதொன் றறியேனே" எனவும்வருந் திருவாதவூரடிகள் திருவாக்கானும், மறைக்குமெட்டாவாதிநாயகன் என்பதை "அல்லையீதல்லையீதெனமறைகளுமன்மைச்- சொல்லினாற்றுதித்திளைக்குமிச்சுந்தரன்" எனவும், "பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின்-பேதங்களல்ல விவையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்-வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்-பாதங்க ளோவ வளையிந்த ஞதி பகர்வாரை யாயு மவரே"எனவும், நின்றான் மொழிந்தமறை நின்னடிக

ள் வந்தித்தும்- பன்னு ளருச்சித்தும் பாதந் தலைசுமந்து-முன்னும் வாசித்து முன்னை யறி யேனென்று-சொன்ன லடியனேன் சோதனைத்தோ யின்னியல்பே" எனவும்வரு ந் திருவிளையாடற்புராணச் செய்யுட்களானுமுணர்க. (ச)

மண்ணவ ரமரர் யாரை வணங்கினு மவைக ளெல்லா
நண்ணிய பரமன் றாளி னாற்பெருந் தவத்தி னோருந்
தண்ணளி நெறியிற் பல்காற் றாழ்ந்தன ரெழுந்து நின்று
பண்ணிசை மறைக டம்மாற் றுதித்திவை பகர்த லுற்றார்.

இ—ள்: மண்ணவர் அமரர் யாரை வணங்கினும்— பூவுலகத்துள்ளவர்கள் எந்தத்தேவரைவணங்கினாலும், அவைகள் எல்லாம் நண்ணிய பரமன் தாளில்—அவ்வணக்கமனைத்துஞ்சாரப்பெற்றசிவபெருமானது திருவடிகளில், நால் பெரும் தவத்தினோரும் —பெரிய தவத்தினையுடைய சனகாதி நான்குமுனிவர்களும், தண்ணளிநெறியில் பல்கால் தாழ்ந்தனர்—அன்பின்முறைப்படிபலதரம்வணங்கி, எழுந்து நின்று—(அதன்மேல்) எழும்பிநின்று, பண் இசை மறைகள் தம்மால் துதித்து-சந்தத்தின்பாற்பட்டகீதத்தினையுடைய வேதவாக்கியங்களாற்றோத்திரஞ்செய்து, இவை பகர்தலுற்றார்—இவற்றை விண்ணப்பஞ்செய்வாராயினர் எ—று.

வணங்கினுமென்பதிலும்மை இழிவுசிறப்பு. தாழ்ந்தனர் முற்றெச்சம். கருணைசெய்தற்கேற்றவாறென்பார் 'தண்ணளிநெறியில்' எனவும், மூன்றுமுதலாக விதிக்கப்பட்ட கணக்கமையவென்பார் 'பல்கால்' எனவும், சிவபிரானை உவப்பித்தற்கேற்ற துதிகளாலென்பார் 'பண்ணிசைமறைகடம்மால்' எனவுங்கூறினார்.

அமரர் யாரைவணங்கினுமவைகளெல்லா நண்ணியபரமன் என்றதை "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே-மாதொரு பாக னார்தாம் வருவர்" என்பதனாலும், "எவ்வெவர் தம்மை யேனும் யாவரே யெனினும் போற்றி-னவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கரு டருவாய் போற்றி" என்பதனாலுமறிக. (ரு)

இருட்பெருங் கடலுள் யாமத் தெறிமருத் திடைப்பட் டாங்குப்
பொருட்பெருங் கடலாம் வேதம் புடைதொறு மலைப்ப விந்நா
ளருட்பெருங் கடலே யெய்த்தே மமைந்தில துணர்வி யாங்கண்
மருட்பெருங் கடலி னீங்கும் வண்ணமொன் றருடி யென்றார்.

இ—ள்: பெரும் அருட்கடலே—பெரிய கிருபாசமுத்திரமே, இருள் பெரும் கடலுள் யாமத்து எறி மருத்திடை பட்டு ஆங்கு—இருண்ட பெரிய சமுத்திரத்துள் அர்த்தராத்திரியிற் சுழல் காற்றிலகப்பட்டால் (எவ்வாறலைக்கப்படுவேமோ) அவ்வாறு, பெரும் பொருள் கடல் ஆம் வேதம் புடைதொறும் அலைப்ப—பெரியபொருட்கடலாகிய வேதமானது பக்கங்கடோறுமலைவுசெய்ய, இந்நாள் எய்த்தேம்—இந்தநாட்களில் இளைத்தேம், உணர்வு அமைந்திலது—அறிவு ஒருவழிப்பட்டிலது (ஆதலால்), யாங்கள் பெரும் மருட்கடலில் நீங்கும்வண்ணம் ஒன்று அருடி என்றார்—நாங்கள் பெரிய மயக்கமாகியசமுத்திரத்தினின்று கரையேறும்படி ஒருபாயத்தைக் கூறியருளுகவென்று பிரார்த்தித்தார்கள் எ—று.

பட்டால் என்னும் வினையெச்சத்தின் ஆல்விகுதிதொக்கது. அருளைக்கடலென உருவகித்தது வற்றாவியல்புபற்றி. ஆழமிகுதியாலிருண்டுகரைதோன்றாதகன்ற கடலென்பார் 'இருட்பெருங்கடல்' எனவும், இருட்காலத்தென்பார் 'யாமத்து' எனவும், ஓர்திசைப்படாது கணந்தோறும் பலதிசைகளினும்பெயர்ந்து மோதுங்காற்றென்பார்

'எறிமருந்து' எனவும், இரத்தினமுதலிய அரும்பொருள்களை, இனிதுபயின்றோர் அரிதிற்பெறுதற்கேற்றவாறமைத்துடைய கடல்போல, நுண்ணறிவினர் அரிதினுணர்தற்கேற்ற மறைபொருள்களை யமைத்துடைமையின் 'பொருட்பெருங்கடலாம்வேதம்' எனவும், அப்பொருடோன்றுமையால், ஊன்றிநோக்கியவழி ஒவ்வோர்வாக்கியமும் பலபொருள்கட்கிடனாய் மனத்தை நிலைப்படவொட்டாது அவ்வப்பொருட்பகுதிகளின்னெல்லாஞ்செலுத்தி உலைக்கவென்பார் 'புடைதொறுமலைப்ப' எனவும், அவ்வுலைவுநீங்கி அறிவுநிலை பெறுதல் தேவரீரதுகருணையானன்றிக் கைகூடாதென்பார் 'யாங்கண்மருட்பெருங்கடலினீக்கும்வண்ணமொன்றருடி' எனவுங்கூறினார். (௬)

நவையறு தவங்க ளாற்றி நல்லருள் படைத்த தொல்லோ
ரிவைபுகன் றிடலு மன்பர்க் கெளிவருங் கருணை வள்ள
லவர்முகந் தெரிந்து நுங்க ளறிவமைந் தடங்கு மாறு
தவலருஞ் சிறப்பி னன்னூல் சாற்றுது மிருத்தி ரென்றான்.

இ—ள்: நவை அறு தவங்கள் ஆற்றி நல் அருள் படைத்த தொல்லோர் இவை புகன்றிடலும்- குற்றமற்ற தவங்களைச்செய்து நல்ல கருணையைப்பெற்ற ஆன்றோர்களாகிய சனகாதிமுனிவர்கள் நால்வரும் இவ்வாசகங்களை விண்ணப்பஞ்செய்தலும், அன்பர்க்கு எளிவரும் கருணை வள்ளல்—அடியார்க்கு எளிதிற்காட்சிப்படும் அருள்வள்ளலாகிய சிவபெருமான், அவர் முகம் தெரிந்து—அம்முனிவர்களதுமுகத்தைப்பார்த்தருளி, நுங்கள் அறிவு அமைந்து அடங்குமாறு தவல் அரும் சிறப்பின் நல் நூல் சாற்றுதும்—(முனிவிர்காள்!)உங்கள் அறிவானது அடங்கியொடுங்கும்படி கெடுதலில்லாதசிறப்பினையுடைய நல்லஞானசாஸ்திரத்தைக் கூறுவோம், இருத்திர் என்றான்—இருக்கக்கடவீர்களென்று திருவாய் மலர்ந்தருளினார் எ—று.

பக்குவமெய்தினோரென்பது போதர 'நவையறுதவங்களாற்றிநல்லருள்படைத்ததொல்லோர்' எனவும், அப்பக்குவமுதிர்வைநோக்கி அவர்க்குக்கருணைசெய்வான்றுணிந்தனனென்பார் 'அன்பர்க்கெளிவருங்கருணைவள்ளல்' எனவும், பொருட்பகுதிகளிற் சென்றுசென்றுலையாவண்ணம் மெய்ப்பொருட்டுறைகண்டு நிலைப்படுமாறென்பார் 'அறிவமைந்தடங்குமாறு'எனவும், ஈசாவாஸ்யமுதலிய பரமோபநிடதங்கள் பொதுவுநச்சூத்திரம்போல்நிற்ப அவற்றின்பொருளைத் திரிபின்றிவிரித்துரைக்கப்புகுந்த ஆகமஞ்சிறப்புறப் பாடியம்போலநிற்றலானும், மனுமுதலிய தருமநூல்கள் அபரதருமமாகிய கருமகாண்டத்தினுபபிருங்கணமாகச் சிவாகமங்கள் பரதருமமாகிய ஞானகாண்டத்தை விரித்துபபிருங்கிக்குநூலாய்ச் சிறப்புறுதலாலும் 'தவலருஞ்சிறப்பினன்னூல்' எனவுங் கூறினார். சிவாகமங்கள் வேதோபபிருங்கணங்களுட் சிறந்தனவென்பதை "ஸசாயமபரோதர்ம:பரதர்மஸ்யஸாதகம்| தர்மசாஸ்த்ராதிபிஸ்ஸம்யக்ஸாங்கவேோபபிரும்ஹித:| தத்ராத்யோய:பரோதர்மச்சிரேஷ்டாநுஷ்டானசஸ்ஸ்தித:| இதிகாசபுராணப்யாங்கதஞ்சிதுபபிரும்ஹித:| சைவாகமைஸ்துசபுநஸ்ஸஸாங்கோபாங்கவிஸ்தர:| ஸஸம்ஸ்காராதிகாரச்சஸம்யகேவோபபிரும்ஹித:|[அபரதருமம் பரதருமத்துக்குச்சாதகமாம். இவ்வபரதருமம் மனுமுதலியதருமநூல்களாற் சாங்கமாகவிரித்துபபிருங்கிக்கப்பட்டது. பரமாநுஷ்டானமாய்நின்ற பரதருமமானது இதிகாசங்களாலும் புராணங்களாலுஞ் சிறிதுசிறிதுபபிருங்கிக்கப்பட்டது. அப்பரதருமந்தானே சைவாகமங்களாற் சாங்கோபாங்கமாகச் சடத்துவசோதனையாதியாஞ் சம்ஸ்காராதிகாரத்தோடு விரித்துபபிருங்கிக்கப்பட்டது.]"எனவாயுசங்கிதைகூறுதலானும், ஆகமஞ்சிறப்புநூலென்பதை "வேதமொடாகமமெய்யாமிறைவனூ-லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக-நாத னுரையிவை நா

டிலிரண் டந்தம்-பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே"எனத்திருமந்திரமும், "வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்களாதிநூ லனாதியம லன்றருநூ லிரண்டு மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்"எனச்சிவஞானசித்தியாருங்கூறுதலானுமறிக. (௭)

என்றிவை யருள வெந்தை யிணையடி தனாது முன்னர்
நன்றுணர் காட்சி கொள்ளு நால்வரு மிருந்தா ரங்கட்
சென்றிடு நந்திப் புத்தேள் சிறப்புடை வதன நோக்கிக்
கொன்றையந் தொடையல் வேய்ந்த குழகனொன் றியம்பு கின்றான்.

இ—ள்: என்று இவை அருள—என்று இந்தவாசகங்களைச் (சிவபெருமான்) திருவாய்மலர்ந்தருள, நன்று உணர் காட்சி கொள்ளும் நால்வரும்—(சிவஞானத்தை)நன்றாகஅறியும் அறிவினையுடைய நான்குமுனிவர்களும், எந்தை இணை அடி தனாது முன்னர் இருந்தார்-எம்பரமபிதாவாகியசிவபெருமானது இரண்டு பாதாரவிந்தங்களினதும் திருமுன்னிலையில் இருந்தார்கள் (அப்பொழுது), கொன்றையம் தொடையல் வேய்ந்த குழகன்—கொன்றைமலர்மாலையையணிந்த அழகராகிய சிவபெருமான், அங்கண் சென்றிடும் நந்தி புத்தேள் சிறப்பு உடை வதனம் நோக்கி—அவ்விடத்து வந்து நின்ற திருநந்திதேவரது சிறப்பினையுடைய முகத்தைப்பார்த்தருளி, ஒன்று இயம்புகின்றான்—ஒருவார்த்தையைக் கூறுவாராயினார் எ—று.

பரமாசாரியராகிய சிவபெருமான் பணித்தவாறே அவரிடஞ் சாத்திரதீக்ஷை பெறச்சம்மதித்துச் சீடபாவமமைந்திருந்தனரென்பார் 'நன்றுணர்காட்சிகொள்ளுநால்வருமிருந்தார்' எனவும், அவரைச் சிவசந்நிதியிற்சேர்க்குமாறு வந்த நந்தியந்தேவரென்பார் 'அங்கட்சென்றிடுநந்திப்புத்தேள்' எனவுங்கூறினார். (௮)

பூங்கணைக் கிழவ னன்றிப் புங்கவர் யார்போந் தாலு
மீங்குறத் தருதி யல்லை யீதுனக் கடைத்த தென்ன
வாங்கது புரிவ னென்னா வமலனை யிறைஞ்சி யங்க
ணீங்கியக் கணத்தி னந்தி நெறிமுதல் போற்றல் செய்தான்.

இ—ள்: பூ கணை கிழவன் அன்றி புங்கவர் யார் போந்தாலும் ஈங்கு உற தருதி அல்லை—(அன்பனே!) பஞ்சபுஷ்பபாணங்களுக்குரிய மன்மதனையன்றி வேறெந்தத் தேவர்கள் (நம்மைத்தரிசிக்க)வரினும், இவ்விடத்தணுகும்படி கொணராதொழி, ஈது உனக்கு அடைத்தது என்ன—இது உனக்கிட்டகட்டளையாமென்று திருவாய்மலர்ந்தருள, நந்தி— (கேட்ட) திருநந்திதேவர், ஆங்கது புரிவன் என்னா— அக்காவலையான் செய்வேனென்று விண்ணப்பஞ்செய்து, அமலனை இறைஞ்சி—மலரகிதராகிய சிவபெருமானை வணங்கி, அக்கணத்தில் அங்கண் நீங்கி—அந்தக்கணத்திற்றானே அவ்விடத்தினின்றும் நீங்கிப்போய், முதல் நெறி போற்றல் செய்தான்—முதல்வாயிலைக்காவல்செய்தார் எ—று. (௯)

நந்திமுற் கடையைப் போற்ற ஞானநா யகனா மண்ணல்
முந்துறை சனக னாதி முனிவரர் தொழுது கேட்ப
வந்தமி லாக மத்தி னரும்பத மூன்றுங் கூறப்
புந்திய தொடுங்கு ஞான போதகம் போதி யென்றார்.

இ—ள்: நந்தி முற்கடையை போற்ற—நந்திதேவர் முதல்வாயிலைக்காக்க, ஞானநாயகன் ஆம் அண்ணல்—ஞானமுதல்வராகிய சிவபெருமான், முந்து உறை சனக

ன் ஆதி முனிவரர் தொழுது கேட்ப—தமது திருமுன்னிலையில் வசிக்கின்ற சனகர் முதலிய நான்குமுனிவர்களும் கைதொழுது கேட்கும்படி, அந்தம் இல் ஆகமத்தின் அரும் பதம் மூன்றும் கூற—முடிவில்லாத சைவாகமங்களினது அரிய மூன்று பாதங்களையுமுபதேசிக்க, புந்தியது ஒடுங்கும் ஞானபோதகம் போதி என்றார்—(கேட்டுத்தெளிந்த அம்முனிவர்கள் அவரைநோக்கி ஸ்வாமீ! இனி) மனமடங்குதற்கேற்ற ஞானபோதத்தை உபதேசித்தருள்க என்று பிரார்த்தித்தார்கள் எ—று.

அண்ணல்- கூற என இயையும். ஆகமமென்பதற்கு முற்றுமுணர்தற்கு அல்லது முற்றும்வருவித்தற்குக் கருவியென்பது பொருள். இங்ஙனமன்றிப்பிறவாறும் பொருளமைத்துக்கூறுவர்.

சமுத்திரசங்கியையான கிரந்தமுடைமையால் 'அந்தமிலாகமம்' எனவும்,"விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கு- மரும்புமலர்காய்கனிகளன்றோபராபரமே" என்னுந் தாயுமானவர்திருவாக்கின்படி ஞானபோதமாகிய கனியைத்தருதற்கேற்றனவாய் நிற்றலின் 'அரும்பதமூன்றும்' எனவும், ஞானத்துட் சிறந்ததாகிய வரிஷ்டநிலையைத்தருதற்குரியதாதலின் 'புந்தியதொடுங்குஞானபோதகம்' எனவும் விசேடித்தார்.

அரும்பதமூன்றென்றது, சரியை கிரியை யோகம் என்பனவற்றை. ஞானபோதகமென்றது ஞானத்தை. இந்நான்குபாதங்களுஞ்சிவாகமங்களிற்பேசப்படுவனவன்றோ? வேதப்பொருளினையநீக்குமாறுவேண்டினோர்க்குச் சிவாகமசாரமான இவற்றைக்கூறியவழி ஐயந்தீர்தல் யாங்ஙனமெனின், சிவாகமங்கள் வேதத்தின் விசேடோபபிருங்கணமாயும் கருத்தாலபேதமாயும் அவ்வேதம் உட்கிடையாகவுணர்த்துஞ் சரியைமுதலிய நான்குபாதங்களையும் விளக்கிக்கூறுவதாயுமிருத்தலின் அவற்றைக் கூறியவழி வேதப்பொருளினையந்தீர்தல் துணியப்படுமென்க. வேதமானது கருமகாண்டம் உபாசனைகாண்டம் ஞானகாண்டம் என முத்திறப்படுமாறுபோலக் காமிகாதியாகமங்களும் கருமகாண்டம் உபாசனைகாண்டம் ஞானகாண்டம் எனமுத்திறப்படும். படவே, வேதசிவாகமங்களிரண்டினுங் கன்மகாண்டம்பற்றிஉபக்கிரமோபசங்காரங்களுக்கிடையே முன்பின்விரோதமற ஆராய்ந்து ஒரேவாக்கியமுறச் சப்தசாமர்த்தியத்தினாலும் அர்த்தசாமர்த்தியத்தினாலும் வஸ்துசாமர்த்தியத்தினாலுங்கொள்ளப்பட்ட அக்கினிஷ்டோமம் சிவபூசையாதியன சரியாக்கிரியாபாதங்களெனவும், உபாசனைகாண்டம்பற்றி, மனமுதலியகரணங்களைத்தடுத்துநிறுத்தி வழிபடுதெய்வத்துக்குரிய நியாசம் இருடி சந்தசு அதிதேவதை பீசம் சத்தி முதலியவற்றினுண்மையையுணர்த்தி அத்தெய்வத்தின் சோதிமயத்தையுந் தன்னையும் அபேதபாவனைசெய்துபாசித்தலை முற்சுட்டியவாறு கொள்ளப்பட்டவழி யோகபாதமெனவும், ஞானகாண்டப்பற்றிச் சிவபெருமான் எண்குணங்களையுடையராதன் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறும் முற்சுட்டியவாறு கொள்ளப்படுவது ஞானபாதமெனவும் பெயர்பெறுமென்க. (கO)

என்னலு நகைத்தி யாது மெதிர்மொழி புரிந்தா னல்லன்
பன்னுவ தன்றான் மற்றிப் பரிசினு லிருத்தல் கண்டீ
ரந்நெறி யாகு மென்றே யனையவர்க் குணர்த்து மாற்றா
லுன்னரும் பரத்தின் மேலோ னொருசெயல் புரித லுற்றான்.

இ—ள்: என்னலும்—என்று முனிவர்கள்கூறியவுடன், உன்னரும் பரத்தின் மேலோன்—நினைத்தற்கரிய பரத்துவத்தின்மேம்பட்டவராகிய சிவபெருமான், நகைத்து—மந்தகாசஞ்செய்து, யாதும் எதிர்மொழி புரிந்தான் அல்லன்— யாதாயினும் பிரதிவசனங்கூறாதவராய், அந்நெறி பன்னுவது அன்று— (முனிவிர்காள்!) அந்த ஞானபாதம் வாயாற்சொல்லிக்காட்டுந்தரத்தினதன்று, இ பரிசினால் இருத்தல் ஆகும் என்று—இத்தன்மையாக இருத்தலேயாமென்று திருவாய்மலர்ந்தருளி, அனையவர்க்கு உ

ணர்த்துமாற்றால் ஒரு செயல் புரிதலுற்றான்— அம்முனிவர்களுக்குப்போதிக்கும் வண்ணம்ஒருசெயலைச் செய்வாராயினார் எ—று.

போதித்தற்கரிதாகிய ஞானத்தைப்போதிக்குமாறுவேண்டுதலானகைத்தனரென்க. எதிர்மொழியென்றதீண்டு மறுப்புமொழியை. "மோனமென்பது ஞானவரம்பு" என்பவாகலின் 'பன்னுவதன்று' என்றார். ஒருசெயல்-மேற்செய்யுளிற்கூறப்படுஞ் செயல். தன்னின்மேம்பட்டதோர் பரமுளதாயவழியே அதனை ஞானநிலையான்வழிபடலொக்கும். அஃதின்றாகவும், சிவபெருமான் ஞானநிட்டைபுரிந்தது முனிவருணருமாறேயென்பார் 'அனையவர்க்குணர்த்துமாற்றால்' என்றார். (கக)

இருவரு முணரா வண்ண லேனவெள் ளெயிறி யாமை
சிரநிரை யநந்த கோடி திளைத்திடு முரத்திற் சீர்கொள்
கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
யொருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான்.

இ—ள்: இருவரும் உணரா அண்ணல்—பிரமவிஷ்ணுக்களிருவரும் (முடியுமடியுந்தேடி) அறிதற்கரியவராகிய சிவபெருமான், ஏன வெள் எயிறு யாமை அநந்த கோடி சிர நிரை திளைத்திடும் உரத்தில்-வெள்ளியபன்றிக்கோடும் ஆமையோடும் அநேககோடி தலைநிரைகளுஞ்செறியப்பெற்ற தமதுஇருதயத்தில், சீர் கொள் கரதலம் ஒன்று சேர்த்தி-சிறப்புப்பொருந்திய ஒரு திருக்கரத்தைவைத்து, மோனமுத்திரையை காட்டி—ஞானமுத்திரையைக்காண்பித்து, ஒரு கணம் செயல் ஒன்று இன்றி யோகுசெய்வாரின் உற்றான்—ஒருகணப்பொழுது ஒருசெயலுமின்றி யோகஞ்சாதிப்பவர்களைப்போல வீற்றிருந்தார் எ—று.

யாமை ஆகுபெயர். சிரநிரையநந்தகோடியென்றது வெண்டலைமாலையை. மோனமுத்திரையாவது: அங்குட்டத்தைத் தர்ச்சனியோடுசேர்த்து ஏனையமூன்றுவிரல்களையும் விரித்திருத்தல். வலக்கரமென்பதுதோன்ற 'சீர்கொள்கரதலம்' எனவும், அகம் புறமாகிய இருவகைக் கரணங்களின்செயலுமின்றியென்பார் 'செயலொன்றின்றி' எனவுங்கூறினார். (கஉ)

இனையதோர் தன்மை காட்டி யெம்பிரா னுணர்த்தக் கண்டு
சனகனே முதலா வுள்ளோர் தவலரு ஞான போதம்
பனுவலி னளவன் றென்னும் பான்மையைத் தெரிந்து முக்கட்
புனிதன தருளாற் றத்தம் புந்தியி னொடுக்கம் பெற்றார்.

இ—ள்: எம்பிரான் இனையது ஓர் தன்மை காட்டி உணர்த்த—எங்கள்கடவுளாகிய சிவபெருமான் இத்தன்மையைக்காட்டிப் போதிக்க, சனகனே முதலா உள்ளோர் கண்டு—சனகரே முதலாகவுள்ள முனிவர்கள்நால்வரும் தரிசித்து, தவல் அரும் ஞானபோதம் பனுவலின் அளவு அன்று என்னும் பான்மையை தெரிந்து—கெடுதலில்லாத ஞானபோதமானது சொல்லின் அளவினதன்றென்னுந்தன்மையை அறிந்து, முக்கண் புனிதனது அருளால்—மூன்றுதிருக்கண்களையுடைய பரிசுத்தராகிய சிவபெருமானது திருவருளால், தத்தம் புந்தியின் ஒடுக்கம் பெற்றார்—தங்கள்தங்கள் மனத்தில் அடக்கத்தைப்பெற்றார்கள் எ—று.

பனுவலினளவன்றென்னும்பான்மை- வாக்கானுணர்த்தற்கேலாதென்னுந்தன்மை. புந்தியினொடுக்கம்பெறுதல்-மனோலயம்பெறுதல். (கங)

தத்தமுள் ளொடுங்கல் பெற்ற தாபத கணத்தர் யாரு
முத்தொழில் புரியு மூவா முதல்வனு முக்கண் மூர்த்தி

மெய்த்தவ வடிவ முன்னி மேவினர் சூழ்ச்சி மேலோன்
சித்திரம் புணர்த்த பாவை செயலற விருக்கு மாபோல்.

இ—ள்: தத்தம் உள் ஒடுங்கல் பெற்ற தாபதகணத்தர் யாரும்—தங்கள் தங்கள் மனம் அடங்கப்பெற்ற முனிகணத்தினர் நால்வரும், முத்தொழில் புரியும் மூவா முதல்வன் ஆம் முக்கண்மூர்த்தி மெய் தவவடிவம் உன்னி— படைத்தன்முதலிய முத்தொழில்களையுமியற்றுகின்ற கெடாத முதல்வராகிய மூன்றுதிருக்கண்களையுடைய சிவபெருமானது மெய்ம்மையாகிய தபோவேடத்தைத் தியானித்து, சூழ்ச்சி மேலோன் சித்திரம் புணர்த்த பாவை செயலற இருக்குமாபோல் மேவினர்—நுண்மதியின்மேம்பட்ட சிற்பனொருவன் சித்திரித்தபாவையானதுதொழிலற்றிருத்தல்போலக் கரணச்சேட்டையற்றிருந்தார்கள் எ—று.

சிவனருளான்மனோலயம்பெற்றபின். நிட்டைநிலையினராய் அவரைத்தியானஞ்செய்தனரென்பதாம். மூவா-மூப்படையாத. முன்னி எனச்சொல்வகுப்பினுமாம்.

முத்தொழில்புரியுமூவாமுதல்வன் என்பதை "நிலவு கின்றதன் னருளுருக் கொண்டிடு விமலன்- றலைமை பெற்றிடு புங்கவர் தம்மைமுன் றந்தே- யுலகம்யாவையு மளித்தருள் செய்திடவுதவி-யலகிலா வுயிர்யாவையு மயன் கணின்றளிப்பான்,—மாய வன்கணின் றவையெலாம் போற்றிமற் றவைக்குத்-தூய துப்புர வருத்தியே மேல்வினை தொலைச்சி-யாயி ரத்திலோர் பற்பல வீடுற வருளி-மேய வாருயி ருலகெலாம் பின்னரே வீட்டும்,-அன்ன வேலையி லவையெலா மழித்தபி னளிப்போ-ரென்ன நின்றவர் தம்மையு மொடுக்குறு மிதற்பின்-முன்ன ருள்ளதோ ரேகமா யுறையுமெம் மூர்த்தி-பின்னு மிம்முறை புரிந்திடு மென்றுமிப் பெற்றி" என மேல் ததீசியுத்தரப்படலத்தும், "அகில லோகமும் படைத்தளித் தழிப்பவ னவனே- யகில நூல்களு முரைத்திடுந் துணிவிது வாமால்" எனக்காஞ்சிப்புராணத்தும்வருஞ் செய்யுட்களாலறிக. (கச)

தற்பர னினைய வாற்றாற் றபத ருணருந் தன்மை
யற்புத ஞான போத மளித்திடுங் கணமொ தொன்றின்
முற்படு கமலப் புத்தேண் முதலிய வமரர்க் கெல்லாம்
பற்பல யுகங்கள் சென்ற பிறர்க்கினிப் பகர்வ தென்னே.

இ—ள்: தற்பரன்—சிவபெருமான், தாபதர் உணரும் தன்மை—சனகாதிமுனிவர்கள் நால்வருமறியும்படி, அற்புத ஞான போதம்—அதிசயகரமாகிய ஞானபோதத்தை, இனையவாற்றால் அளித்திடும் கணமது ஒன்றில்—இவ்வாறு உபதேசித்த ஒரு கணப்பொழுதினுள், முற்படு கமல புத்தேள் முதலிய அமரர்க்கு எல்லாம்— முதன்மை பொருந்திய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமாமுதலியதேவர்களுக்கெல்லாம், பற்பல யுகங்கள் சென்ற—பலபல யுகங்கள்கழிந்தன, பிறர்க்கு இனி பகர்வது என்—மற்றையோர்க்கு இனிச்சொல்வதென்னை? எ—று.

ஓர்பிரமதினந் தேவர்க்கிரண்டாயிரம்யுகமும், ஓர்தேவதினம் மானுடர்க்கோராண்டுமாம். சிவபிரான் ஞானோபதேசஞ்செய்த கணப்பொழுதில் பிரமதேவர்க்கும் பற்பலயுகங்கள் கழிந்தன என்பதைக்கூறவே அவர் தினமொன்றிற்றானே தோன்றி மாயுஞ் சில்வாழ்நாளையுடைய மானுடாதியோர்க்கு எப்பெருந்தொகைக்காலங் கழிந்ததாமென்பது கூறாதேவிளங்கக் கிடக்கின்றதென்பதுபெறப்பட்டது.

சிவபெருமானுடைய கணப்பொழுது பிரமனாதியோர்க்குப் பற்பலயுகமாமெ

ன்பதை "கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண-ஞேடி வடவா லுறங்குமே- நாடி யே- யக்கண்ணர் கோடி யழியி னருணகிரி நக்கனருள் சற்றே நகும்" என்பதனுனுமுணர்க. (௧௭)

இத்திற ஞான போத மென்றுதொன் முனிவர்க் கெந்தை
கைத்தலங் கொண்டு காட்டுங் கணத்தினி லமரர்க் கெல்லா
மெத்துபல் லுகங்கள் சென்ற விழுமிய காஞ்சி தன்னி
லத்தன்மெய் குழைத்த நங்கை யவன்விழி புதைத்த நாட்போல்.

இ—ள்: ஞானபோதம் இ திறம் என்று—ஞானபோதம் இத்தகையினதென்று, தொல் முனிவர்க்கு—பழைய சனகாதிமுனிவர்களுக்கு, எந்தை—எம்பரமபிதாவாகிய சிவபிரான், கைத்தலம் கொண்டு காட்டும் கணத்தினில்—திருக்கரத்தாற் காட்டியருளிய ஒருகணப்பொழுதினுள், அமரர்க்கு எல்லாம்—தேவர்கள் யாவர்க்கும், மெத்து பல் உகங்கள் சென்ற—மிகப்பலயுகங்கள் கழிந்தன, விழுமிய காஞ்சி தன்னில் அத்தன் மெய் குழைத்த நங்கை— சிறந்த காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கின்ற சிவபிரானது திருமேனியை முலைவளைத்தழும்புறத்திக்குழைவித்த உமாதேவியார், அவன் விழி புதைத்த நாள் போல்—(திருக்கைலாசகிரியில்) அச்சிவபெருமானது திருக்கண்களைமூடிய முன்னைநாளிற்போல எ—று.

உமாதேவியார் சிவபிரானது திருக்கண்களைமூடியகணப்பொழுதிற் பற்பலயுகங்கள்கழிந்ததுபோலவே இப்பொழுதும் தேவர்க்கெல்லாம்பற்பலயுகங்கள்கழிந்தன என்பதாம்.

காமாக்ஷியம்மையார் காஞ்சீபுரத்தில் ஏகம்பநாதரைப்பூசித்ததும், அப்பூசைக்குமகிழ்ந்து அப்பெருமான்குழைந்ததும், திருக்கண்புதைத்தகணத்திற் பற்பலயுகங்கள் கழிந்தனவென்பதற்கறிகுறியாகவிற்றலின் 'காஞ்சிதன்னிலத்தன்மெய்குழைத்தநங்கையவன்விழிபுதைத்தநாட்போல்' என்றூர். நாட்போல்-சென்ற எனஇயையும். இச்சரித்திரத்தைத் திருநகரப்படலத்து அறுபத்தாறுஞ்செய்யுளிற் காண்க. திருக்கண்புதைத்த கணத்திற் பற்பலயுகங்கள்சென்றனவென்பதை "வெறிமலர்த் தளவ மூரல் விழியினை மறைத்து நீக்குஞ்-சிறுபொழு தலகுக் கெல்லா மெண்ணில்பல் லூழி சென்ற" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானறிக. (௧௮)

காரண முதல்வன் மோனக் காட்சியா லமர ரெல்லாஞ்
சூரர மகளிர் தங்க டுணைமுலைப் போக மின்றி
யாரிடர் நிலைமை தன்னை யடைந்தன ரளக்கர் சூழ்ந்த
பாரிடை யுயிருங் காமப் பற்றுவிட் டிருந்த வன்றே.

இ—ள்: காரண முதல்வன் மோன காட்சியால்—காரணக்கடவுளாகிய சிவபெருமானது மௌனநிலையினுல், அமரர் எல்லாம்—தேவர்கள் யாவரும், சூர் அரமகளிர் தங்கள் துணை முலை போகம் இன்றி—தேவப்பெண்களது இரண்டுதனங்களிற்ரோயும் புணர்ச்சியில்லாமல், ஆரிடர் நிலைமை தன்னை அடைந்தனர்— இருடிகளினியற்கையைப்பெற்றூர்கள், அளக்கர் சூழ்ந்த பார் இடை உயிரும்—சமுத்திரத்தாற்சூழப்பட்ட இப்பூவுலகத்திலுள்ள ஆன்மாக்களும், காம பற்று விட்டு இருந்த—காமவிச்சையையொழித்திருந்தன எ—று.

சூரரமகளிர் இருபெயரொட்டு. உம்மை-எச்சம். எவ்வுயிர்கட்குங்காரணர் சிவபிரானேயாதலின் அவர்போலவையுமிருந்தனவென்பார் 'காரணமுதல்வன்மோனக் காட்சியால் * * * இருந்த' என்றூர். காரணக்கடவுள் சிவபிரானேயென்பதை 'நன்றேரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் ஞர்தப்பிஞற்-றன்ஞலு மாடிச் சலித்திடு மோவந்தத்

தன்மையைப்போ-லுன்னொ லியானு முலாவிட லன்றி யுனைப்பிரிந்தா- லென்னொலிங் காவதுண் டோவிறை வாகச்சி யேகம்பனே" என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கானுணர்க. (௧௭)

ஆரணன் றனது மைந்தர்க் கருப்பெறன் ஞான போத
மோரிறை காட்டு முன்ன ருலகெலா மொருப்பா டொன்றி
யீருடன் முயங்கு மார்வ மின்றியே யிருந்த யார்க்குங்
காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற் பாற்றோ.

இ—ள்: ஆரணன் தனது மைந்தர்க்கு—பிரமதேவரது புதல்வராகிய சனகாதிமுனிவர்களுக்கு, பெறல் அரும் ஞானபோதம் ஓர் இறை காட்டும் முன்னர்—பெறுதற்கரிய ஞானபோதத்தை ஒருகணம்வரையுஞ் (சிவபிரான்) காட்டியருளுதற்குள்ளே, உலகு எலாம்—எல்லாவுலகங்களும், ஒருப்பாடு ஒன்றி—மனோலயம்பொருந்தி, ஈர் உடல் முயங்கும் ஆர்வம் இன்றி இருந்த—ஆணும் பெண்ணுமாகிய இரண்டுடலுங் கூடுதலாகிய புணர்ச்சிவிருப்பம் ஒழிந்திருந்தன (ஆதலின்), யார்க்கும் காரணன் சிவனே என்கை கழறவும் வேண்டற்பாற்றோ— எவர்கட்குங்காரணக்கடவுள் சிவபெருமானேயென்பது சொல்லவும்வேண்டியதா (சொல்லாதிருப்பவே விளங்கும்) எ—று.

சிவனேயென்பதிலேகாரம் பிரிநிலை. உம்மை இழிவுசிறப்பு. (௧௮)

பிணைவிழைச் சூழ்தந் துய்ப்பப் பெருமறை விதிவ ழாம
லணைவிழைச் சடங்கிற் கொண்ட வரிவைய ரோடு தேவ
ரிணைவிழைச் சியற்கை கூடா திரங்கினர் கவற்சி யெய்திப்
புணைவிழச் சலதி யாழ்ந்து புலம்புகொண் மாக்க ளேபோல்.

இ—ள்: பிணைவு இழைச்சு—இயைபை உண்டாக்கி, ஊழ் தந்து உய்ப்ப—ஊழானது (ஒரேயிடத்தில்) வருவித்துத்தூண்ட, பெரு மறை விதி வழாமல் அணை விழ சடங்கில் கொண்ட அரிவையரோடு—பெரிய வேதவிதிதவறாமலமைந்த விவாகச்சடங்கில் ஏற்றுக்கொண்ட மனைவியர்களுடன், தேவர்—தேவர்கள், இணை விழைச்சு இயற்கை கூடாது—புணர்ச்சி கைகூடப்பெறாது, கவற்சி எய்தி இரங்கினர்— மனக்கவலையடைந்து வருந்தினார்கள், புணை விழ சலதி ஆழ்ந்து புலம்பு கொள் மாக்களே போல்—(தமக்காதாரமாயிருந்த) மரக்கலந்தாழ நடுக்கடலிலாழ்ந்து வருந்துகின்ற மாந்தரையேபோல எ—று.

மரக்கலங் கடலினாழ்ந்தழி வேறு பற்றுக்கோடின்மையாற் றுமுழுமுடனாழ்ந்து வருந்தும் மாந்தர்போல, சிவன் யோகிருந்தழித் தம்மைச்சேர்க்கித்துநடத்துவோர் பிறரின்றித் துயர்க்கடலினாழ்ந்து வருந்தினரென்க.

மாக்களேபோல் இரங்கினர் எனஇயையும். ஏ-தேற்றம். பின் மூன்றுசெய்யுட்களிலுமின்ன. இழைத்து-இழைச்சு எனப்போலியாயிற்று. ஊழ்-வினைப்பயன்செய்தவனையே சென்றடைதற்கேதுவாகியநியதி. இதனைத் தெய்வம் விதி எனவும்வழங்குப. ஊழ்சந்துய்த்தலை "வளைபயில் கீழ்கட லின்றிட மேல்கடல் வானுகத்தின்- றுளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்- கிளைவயி னீக்கியிக் கொண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த-விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே" என்னுந் திருக்கோவையார்ச்செய்யுளானுணர்க. இணை-ஆண்பெண். விழைச்சு-விரும்புதல். இணைவிழைச்சியற்கை-ஆணும்பெண்ணும் ஒருவரையொருவர் விரும்புமியல்பு=புணர்ச்சி. (௧௯)

வன்முலை யணங்கி னோரும் வானவர் யாருங் காமத்
தன்மையும் புணர்ப்பு மின்றித் தளர்ந்தனர் வறிஞர் தம்பா
லின்மைகொண் டோர்கள் செல்ல வீவது கூடா வெல்லைப்
புன்மையொ டிருவர் தாமும் புலம்புறு தன்மை யேபோல்.

இ—ள்: வல் முலை அணங்கினோரும்—சூதாடுகருவியை நிகர்த்த தனங்களையுடைய தேவமாதர்கள்யாவரும், வானவர் யாரும்—தேவர்கள் யாவரும், காமத்தன்மையும் புணர்ப்பும் இன்றி தளர்ந்தனர்—காமவியற்கையும் புணர்ச்சியுமின்றிச்சோர்ந்தார்கள், வறிஞர் தம் பால் இன்மைகொண்டோர்கள் செல்ல— தரித்திரரிடத்து யாசகர்கள் சென்றிரப்ப, ஈவது கூடா எல்லை—அவர்க்குப் பொருளீதலியலாதபொழுது, புன்மையொடு இருவர் தாமும் புலம்புறு தன்மையே போல்—சிறுமையுடன் அவ்விருவரும் (ஒருவர்க்கொருவர் தத்தங்குறைகளைக்கூறிப்) புலம்புகின்ற தன்மையையேபோல எ—று.

ஈவோனுமேற்போனும் வறிஞராயின் அவ்விருதொழிலுநிகழாமைபோல, தேவமங்கையருந் தேவருங் காமமற்றனராதலின் கலவியின்பத்தையீதலுநுகர்தலுமின்றித்தளர்வுற்றனரென்க. யாருமென்பது அணங்கினோர்க்குங் கூட்டியுரைக்கப்பட்டது. புலம்புறு தன்மையேபோல் தளர்ந்தனர் என இயையும். காமவிச்சையை வளர்விக்குநலனுடையரென்பதுதோன்ற மகளிருறுப்புக்களுள் தனத்தைச்சிறப்பித்து 'வன்முலையணங்கினோர்' என்றார். (உ0)

பொற்புருக் குறைவின் றுற்றும் புவனமேன் மகளிர் மைந்த
ரற்பொடு கலந்து காமத் தரும்பயன் கோட றேற்றார்
தற்பர வடுக னாணைத் தன்மையா லலகை யீட்ட
நற்புன னீழல் பெற்று நணுகருந் தன்மை யேபோல்.

இ—ள்: புவனமேல் மகளிர் மைந்தர்—பூவுலகத்திலுள்ள மங்கையர்களுங் காளையர்களும், பொற்பு உரு குறைவின்று உற்றும்—அழகார்ந்த ரூபத்தைக்குறைவறப்பெற்றிருந்தும், அற்பொடு கலந்து காமத்து அரும் பயன் கோடல் தேற்றார்-அன்போடு புணர்ந்து சிறந்த காமவின்பத்தைப்பெற்றுக்கொள்ளச் சிந்தியாதவராயினர், அலகை ஈட்டம் நல் புனல் நீழல் பெற்றும்—பேய்க்கூட்டங்கள் நல்ல நீரையும் நிழலையும் பெற்றிருந்தும், தற்பர வடுகன் ஆணைத்தன்மையால் நணுகரும் தன்மையே போல்—வைரவக்கடவுளின்கட்டளையினால் அவற்றை அணுகுதற்கரியதன்மையையேபோல எ-று.

பேய்கள் நீர்ச்சார்பையும் மரநிழலையும் பெற்றிருந்தும் காவற்கடவுளாகிய வைரவமூர்த்தியின் கட்டளையினால் அணுகாமைபோல மங்கையருங் காளையரும் ரூபலாவண்ணியத்தைப்பெற்றிருந்துஞ் சிவனது ஞானநிலையாற்கலவியின்பத்தை யனுபவிக்கப்பெற்றிலர் என்பதுகருத்து.

அற்பு வலித்தல்விகாரம். நணுகருந்தன்மையேபோல் கோடறேற்றார் எனஇயையும். சிவமூர்த்திபேதங்களுளொன்றாதலின் 'தற்பரவடுகன்' என்றார். (உக)

மாடக வெழாலை யன்ன பணிமொழி மகளிர் மைந்தர்
கூடின ரிருந்து மின்பங் கொண்டிலர் சிறார்கு ழாமு
மாடவர் குழாமும் வாட்க ணரிவையர் குழாமு மேனைப்
பேடியர் குழாமும் வெவ்வே றுற்றிடு பெற்றி யேபோல்.

இ—ள்: மாடக எழாலை அன்ன பணி மொழி மகளிர்—முறுக்காணிபொருந்திய யாழைப்போன்ற மெல்லிய வசனத்தினையுடைய மங்கையரும், மைந்தர்—காளையரும், கூடினர் இருந்தும்—(ஒரிடத்திற்றனே) இணங்கியிருந்தும், இன்பம் கொண்டிலர்—புணர்ச்சியின்பத்தை அநுபவித்திலார், சிறார் குழாமும்—சிறுவர்கூட்டமும், ஆடவர் குழாமும்—புருடர் கூட்டமும், வாள் கண் அரிவையர் குழாமும், வாள்போலுங் கண்களையுடைய பெண்கள்கூட்டமும், ஏனை பேடியர் குழாமும்— ஒழிந்த பேடியர் கூட்டமும், வெவ்வேறு உற்றிடு பெற்றியே போல்— தனித்தனியிருக்கின்றதன்மையையேபோல எ—று.

பேடி-அலி. தனித்தனி யிருந்தவழிக் கலப்பற்றிருத்தல்போலவே, ஒருங்கிருந்தவழியுங் கலப்பற்றிருந்தனரென்பது தாற்பரியம். பெற்றியேபோல் இன்பம் கொண்டிலர் எனவியையும். (௨௨)

இருந்திட விரிஞ்சன் மாயோ னிருவரு மீசன் றன்பாற்
பொருந்திடு முணர்ச்சி கொண்டு முத்தியிற் புக்க சேயுந்
திருந்துசீர் வசிட்டன் சொல்லாற் சிலையெனப் பன்னா ணின்ற
வருந்ததி மாதும் போன்றா ராடவர் மகளிரெல்லாம்.

இ—ள்: விரிஞ்சன் மாயோன் இருவரும் இருந்திட—பிரமவிஷ்ணுக்களாகிய இருவருமிருக்கவும், ஈசன் தன் பால் பொருந்திடும் உணர்ச்சி கொண்டு முத்தியில் புக்க சேயும்—அவர்களைக்கடவுளென்றுமதியாது (முதற்கடவுளாகிய) சிவபெருமானிடத்தேபதிந்த ஞானவுணர்வையுடையராய் மோக்ஷத்திற்சேர்ந்த சுகப்பிரமரிஷியும், திருந்து சீர் வசிட்டன் சொல்லால் சிலை என பல் நாள் நின்ற அருந்ததி மாதும் போன்றார்—சிறந்த கீர்த்தியினையுடைய வசிட்டமுனிவரது சொற்படி கல்லைப்போல (அசைவறப்) பலகாலமாகநின்ற அருந்ததியாகிய பெண்ணையும் ஒத்தார்கள், ஆடவர் மகளிர் எல்லாம்—எல்லாக்காளையர்களும் எல்லாமங்கையர்களும் எ—று.

சுகப்பிரமரிஷியையொத்தார் ஆடவரெல்லாம், அருந்ததிமாதையொத்தார்மகளிரெல்லாம் என்க. பூருவஞானத்துடன்பிறந்து இல்லறத்திற்புகாது என்றும் பரமஞானியாயிருத்தலிற் சுகப்பிரமரிஷியை ஆடவர்க்கும் எண்ணிறந்தகாலம் போகவிச்சையின்றிக் கற்போலசைவறநிற்றலின் அருந்ததியை மகளிர்க்குமுவமித்தனர். (௨௩)

ஏமரு புவன மூன்று மினிதருள் கமலக் கண்ணர்
பூமட மாதர் தம்பாற் புணர்கிலர் பொருவில் வேளுங்
காமரு மகளிர் கூட்டங் கருதல னிவர்போற் சிந்தை
யாமையி னொடுங்கல் பெற்றா ராசையுள் ளோர்க ளெல்லாம்.

இ—ள்: ஏமரு புவனம் மூன்றும் இனிது அருள் கமலக்கண்ணர்— இன்பம்பொருந்திய மூவுலகங்களையுஞ் செவ்வனே அருளுகின்ற தாமரைக்கண்ணர்களிருவரும், பூ மட மாதர் தம் பால் புணர்கிலர்—மடமையினையுடைய பூமாதரிடத்துச்சேர்ந்திலார், பொரு வில் வேளும் காமரு மகளிர் கூட்டம் கருதலன்—காமப்போரை விளைக்கின்ற கருப்புவில்லினையுடைய மன்மதனும் அழகிய மங்கையரது கலவியை விரும்பாதிருந்தான், இவர் போல்—இவர்களைப்போலவே, ஆசையுள்ளோர்கள் எல்லாம்—திக்குப்பாலகரனைவரும், ஆமையில் சிந்தை ஒடுங்கல் பெற்றார்— ஆமைபோல மனமடங்குதலைப்பெற்றார்கள் எ—று.

கமலக்கண்ணரும் வேளும் ஆமைபோன் மனமொடுங்கப்பெற்றனர். அவர்போலவே திசைக்காவலரும் ஒடுங்கப்பெற்றனரென்க. ஆமையானது ஐந்துறுப்புக்களையும் உள்ளடக்குதல்போல ஐம்புலன்களையும் புறத்தேசெல்லவிடாதுள்ளமைத்தலின் 'சிந்தையாமையினொடுங்கல்பெற்றார்' என்றார். ஏமம் மருவு என்பது-ஏமரு என விகாரமாயிற்று. காமரு என்பதில் உகரஞ்சாரியை; இவ்வாறன்றி, காமம் மருவு என்பதன்விகாரமெனினுமாம். 'இனிதருள் கமலக் கண்ணர் பூமடமாதர் தம்பாற் புணர்கிலர்' என்பதற்கு நன்றாகப்படைக்கின்ற பிரமதேவர் சரசுவதியைப் புணர்ந்திலரெனவும் நன்றாகக்காக்கின்ற திருமால் பூமிதேவியையும் இலக்குமிதேவியையும் புணர்ந்திலரெனவும் இரட்டுறமொழிந்துகொள்க. பிரமற்கியையப் பொருள்கொள்ளுங்கால், கமலக்கண்ணர்- தாமரைமலரின்கணுள்ளவர், பூமடமாதர்-வெண்டாமரைமலரில் வாழுஞ்சரசுவதி. திருமாலுக்கியையப்பொருள்கொள்ளுங்கால், கமலக்கண்ணர்- தாமரைக்கண்ணையுடையவர். பூமடமாதர்-பூமிதேவி, செந்தாமரைமலரில்வாழுமிலக்குமி. (௨௪)

மண்ணகத் துயிர்கண் முற்று மாதிரத் துயிர்கண் முற்றும்
விண்ணகத் துயிர்கண் முற்றும் வேற்றகத் துயிர்கண் முற்றும்
பெண்ணகத் தாண்மை கூடுஞ் சிறுநலம் பிழைத்த ஞானக்
கண்ணகத் திறைவற் கண்டு கடைநின்ற காட்சி யார்போல்.

இ—ள்: மண்ணகத்து உயிர்கள் முற்றும்—பூவுலகின்கணுள்ள ஆன்மாக்கள்யாவும், மாதிரத்து உயிர்கள் முற்றும்—எண்டிசையினுமுள்ள ஆன்மாக்கள் யாவும், விண்ணகத்து உயிர்கள் முற்றும்—ஆகாயவுலகத்துள்ள ஆன்மாக்கள்யாவும், வேற்றகத்து உயிர்கள் முற்றும்—மற்றையிடங்களிலுள்ள ஆன்மாக்கள் யாவும், பெண்ணகத்து ஆண்மை கூடும் சிறுநலம் பிழைத்த—பெண்ணினுடன் ஆண் புணர்தலாகிய சிற்றின்பத்தையிழந்தன, ஞானக்கண்ணகத்து இறைவன் கண்டு கடைநின்ற காட்சியார் போல்-ஞானக்கண்ணினாற் சிவபெருமானைத் தரிசித்துக் கடைத்தேறிய காட்சியினையுடைய பெரியோர்களைப்போல எ—று.

வேற்றகம்-பாதலமுதலியன. ஆண்மை என்பதில் மைவிகுதி பகுதிப்பொருளில்வந்தது. பெண்ணகத்து கண்ணகத்து என்பன வேற்றுமைத்திரிபுகள். காட்சியார்போல் பிழைத்த எனஇயையும். இறைவனை ஊனக்கண்ணாற் காண்பதரிதாகலின் 'ஞானக்கண்ணகத்திறைவற்கண்டு'என்றார். இதனை "ஊனக்கண்பாசமுணராப்பதியை-ஞானக்கண்ணினிற்சிந்தைநாடி" என்னும் மெய்கண்டதேவர்திருவாக்கானும், "முகத்திற்கண்கொண்டுபார்க்கின்றமூடர்காள்அகத்திற்கண்கொண்டுபார்ப்பதேயானந்தம்" என்னும்பிறர்வாக்கானுமறிக. (௨௫)

நாகமார் சடிலத் தண்ண னாற்பெருந் தவரு முய்ய
யோகுசேர் நிலைமை காட்டு மொருகணத் துயிரின் பொம்மல்
வாகைவே டானு நிற்க மையலும் புணர்ப்பு மற்ற
வாகையா லகில மெல்லா மவன்றன்னைத் தெரிந்த தன்றே.

இ—ள்: நாகம் ஆர் சடிலத்து அண்ணல்—சர்ப்பங்கள் (ஆபரணமாகப்)பொருந்தப்பெற்ற சடாமுடியையுடைய சிவபெருமான், நால் பெரும் தவரும் உய்ய—பெரிய சனகாதிநான்குமுனிவர்களும் உய்யும்படி, யோகு சேர் நிலைமை காட்டும் ஒரு கணத்து—யோகநிட்டையைக்காண்பித்த ஒருகணப்பொழுதினுள், உயிரின் பொம்மல்—ஆன்மவர்க்கங்கள், வாகை வேள் தானும் நிற்க—(எவரையும்மயக்கும்) வெற்றியையுடைய மன்மதன்தொழிலியற்றிநிற்பவும், மையலும் புணர்ப்பும் அற்ற-காமவிச்சையையும்

புணர்ச்சியையுமிழந்தன, ஆகையால்—ஆதலினால், அகிலம் எல்லாம் அவன் என்கை தெரிந்தது— உலகமுழுதும் அவரேயென்பது புலப்பட்டது எ—று.

சிவபெருமான் யோகநிலையினராகச் சீவவர்க்கங்களுமங்ஙனமாதலால், அவர் விசுவரூபியென்பது கண்கூடாயிற்றென்க. "எல்லா வுயிர்க்கு மூயிராரு ளீசர் வரசைவி- னல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே-வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாட்- புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" என்றார் திருவருணைக்கலம்பகத்தாரும். வாகைவேடானுமென்பதிலும்மை-உயர்வுசிறப்பு. ஒருகணத்து அற்ற எனஇயையும். (௨௬)

சிலையொடு பகழி வாடத் திருமதிக் குடைசீர் குன்ற
வலிதளர் வெய்தத் தென்றன் மறிகடற் சுறவு தூங்க
வலைபுரி யாணை நீங்கி யாடன்மா மதனு மாதின்
கலவிய தொழிந்தா னென்னிற் பிறர்செயல் கழறற் பாற்றோ.

இ—ள்: சிலையொடு பகழி வாட— கருப்புவில்லும் பூங்கணைகளும் வாட்டமுற, திரு மதி குடை சீர் குன்ற—அழகிய சந்திரனாகிய குடையானது சிறப்புக்குறைய, தென்றல் வலி தளர்வெய்த—தென்றற்காற்றானது வலிமைகுன்ற, மறிகடல் சுறவு தூங்க— திரைமோதுகின்ற சமுத்திரத்திலுள்ள மகரக்கொடி தூக்கமுற, ஆடல் மா மதனும்—வெற்றியையுடைய பெரிய மன்மதனும், அலைபுரி ஆணை நீங்கி—(உயிர்களை) அலைக்கின்ற தனதரசியலையிழந்து, மாதின் கலவியது ஒழிந்தான் என்னில்—இரதிதேவியின் புணர்ச்சியை நீங்கினானாயின், பிறர் செயல் கழறற்பாற்றோ- ஏனையோரதுசெயல் கூறவேண்டியதா (அன்று) எ—று.

காமத்தினாலெவரையும் மயக்கிவெல்லும் மன்மதனியல்பிங்ஙனமாயின் அவனான்மயக்கப்படும் பிறர்செயலெங்ஙனமாமென்பதுகருத்து. (௨௭)

சாலிகள் வளரு மெல்லைத் தடம்புனல் வறுமைத் தாக
வாலிது குரல்வாங் காது வருத்தொடு மாய்வ தேபோன்
மேலவ னருளாற் போகம் வெறுத்தலிற் கருமல் கின்றி
ஞாலமன் னுயிர்கண் முற்று நாடொறுங் குறைந்த வன்றே.

இ—ள்: சாலிகள் வளரும் எல்லை—நெற்பயிர்கள் வளருங்காலத்தில், தடம் புனல் வறுமைத்து ஆக—மிகுந்த நீர் வற்றியதாக, வாலிது குரல் வாங்காது வருத்தொடு மாய்வதே போல்- (அப்பயிர்கள்)இளங்கதிர்களையீனாமல் வாட்டத்துடனழிவதுபோல, ஞால மன் உயிர்கள் முற்றும்— பூவுலகத்திலுள்ள நிலைபெற்ற ஆன்மாக்கள்முழுதும், மேலவன் அருளால் போகம் வெறுத்தலில்—பரமபதியாகிய சிவபெருமானது கருணையினாற் போகத்தைவெறுத்திருத்தலின், கரு மல்கின்றி— கருப்பவிருத்தியில்லாமல், நாள்தொறும் குறைந்த—தினந்தோறும் குறைவுபட்டன எ—று.

நிறைந்துநிற்கவேண்டியகாலத்திற் சிறிதுமிலதாகவென்பார் 'தடம்புனல்வறுமைத்தாக' என்றார். உயிர்கட்குநெற்பயிரையும் நீர்வளத்திற்குக் காமவின்பத்தையும் உவமித்தார். (௨௮)

முள்ளரை முளரிப் புத்தேண் முதற்புரி துணையே யன்றித்
தள்ளரு முயிர்கள் பின்னுந் தலைத்தலை மல்கா தூற்ற
தெள்ளிதி னுலக மீன்ற தேவியின் றாகி யீசன்
வெள்ளியங் கயிலை தன்னின் மேவிய வேலை நாட்போல்.

இ—ள்: முன் அரை முளரி புத்தேள் முதல் புரி துணையே அன்றி—முட்கள்பொருந்திய நாளத்தினையுடைய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர் சிவன் யோகிருத்தற்குமுன்னர்ப்படைத்த அளவேயன்றி, தள்ளரும் உயிர்கள் பின்னும் தலைத்தலை மல்காது உற்ற—விலக்குதற்கரிய ஆன்மாக்கள் பின்னருங்காலந்தோறும் பெருகாதிருந்தன, ஈசன்—சிவபெருமான், தெள்ளிதின் உலகம் ஈன்ற தேவி இன்று ஆகி—நன்றாக உலகத்தைப்பெற்ற தாயாகிய உமாதேவியாரைப்பிரிந்து,வெள்ளியம் கயிலை தன்னில் மேவிய மேலைநாள் போல்— வெண்ணிறமாகிய திருக்கைலாசமலையில் வீற்றிருந்த முற்காலத்திற்போல எ—று.

தள்ள என்பதனீற்றகரந்தொக்கது. தலையென்பதிண்டுக் காலத்தையுணர்த்திற்று. மேலைநாளென்றது தக்கனுக்கு மகளாயகாலத்தை. கருப்பாசயத்தில்வைத்துச் சுமத்தல் பிரசவவேதனை முதலாயின இன்றியென்பார் 'தெள்ளிதின்' என்றார். (உகூ)

இம்முறை நிகழ நாத னீரிரு தவத்தி னோர்க்கு
மெய்ம்மைகொ ளுணர்ச்சி காட்டி வீற்றிருந் தருளு மெல்லை
தெம்முயல் சூரன் றீங்கு செய்தலான் மகவான் வானோர்
தம்மொடுந் துறக்கம் விட்டுச் சசியொடுந் தரணி புக்கான்.

இ—ள்: இம்முறை நிகழ—இந்நிகழ்ச்சிகள் நடைபெற, நாதன்—சிவபெருமான், ஈரிரு தவத்தினோர்க்கும் மெய்ம்மைகொள் உணர்ச்சி காட்டி வீற்றிருந்தருளும் எல்லை— சனகாதிநான்குமுனிவர்களுக்கும் உண்மையையுடைய ஞானபோதத்தைக் காண்பித்து எழுந்தருளியிருக்கும்பொழுது, தெவ் முயல் சூரன் தீங்கு செய்தலால்—பகைமையைமுயலுகின்ற சூரபன்மன் தீமைசெய்தலினால், மகவான்—இந்திரன், வானோர் தம்மொடும்—சில தேவர்களுடனும், சசியொடும்—(மனைவியாகிய) இந்திராணியுடனும், துறக்கம்விட்டு தரணிபுக்கான்—சுவர்க்கலோகத்தைவிடுத்துப் பூவுலகத்தில் வந்தான் எ—று.

ஏனையபோதங்களெல்லாம் பொய்யாகச் சிவஞானபோதமொன்றேமெய்யாதலால் 'மெய்ம்மைகொளுணர்ச்சி' எனவும், தேவர்கள் அரசனைக்கொண்டு பணிந்தொழுகியவழியும் சிறிதுமிரங்காது வன்கண்மைபூண்டு குலப்பகைமையையே சாதிக்க முயன்றனனாதலின் 'தெம்முயல்சூரன்' எனவுங்கூறினார். தீங்கென்றது இந்திரனைச் சிறையிடவும் இந்திராணியைப்புணரவுங்கருதியதை. தரணிபுக்கானென்றது சீகாழிப்பதியில் மூங்கிலுருவாய் மறைந்துநின்றமையை. இவற்றின்விரிவை அசுரகாண்டத்து இந்திரன் கரந்துறைபடலத்திற்காண்க. (௩0)

மேகமூர் கடவுள் வெள்ளி வெற்பினி லேகி முக்க
ணேகநா யகனைக் காணு மெல்லையின் றாக மீண்டு
சோகமோ டம்பொன் மேருத் துன்னிமே சூரன் மைந்தன்
மாகநா டழித்துச் சேனைச் சிறைசெய்த வணணந் தேர்ந்தான்.

இ—ள்: மேகம் ஊர் கடவுள்—மேகத்தை (வாகனமாகக்கொண்டு) செலுத்துகின்ற தேவேந்திரன், வெள்ளி வெற்பினில் ஏகி— திருக்கைலாசமலையிற் போய், முக்கண் ஏகநாயகனை காணும் எல்லை இன்று ஆக—(அங்கே) மூன்றுதிருக்கண்களையுடைய முதற்கடவுளாகிய சிவபெருமானைக்காணுஞ் சமயமிலதாக, மீண்டு— திரும்பி, சோகமோடு அம் பொன் மேரு துன்னி— மனத்துயருடன் செம்பொன்மயமாகிய மேருமலையையடைந்து, சூரன் மைந்தன் மாகநாடு அழித்து சேனை சிறைசெய்த வண்ணம் தேர்ந்தான்— சூரபன்மனது முதற்குமாரனாகிய பானுகோபன் சுவர்க்கலோக

த்தையழித்துத் தனது மகளுகிய சயந்தனைச்சிறையிட்ட நிகழ்ச்சியைக் கேள்வியுற்றான் எ—று.

"பூங்கணைக்கிழவனன்றிப்புங்கவர்யார்போந்தாலு-மீங்குறத்தருதியல்லை" எனச்சிவபிரான் கட்டளைசெய்தபடி திருநந்திதேவராற் றடைப்படுத்தப்பட்டு மீண்டனனென்பார் "முக்கணேனகநாயகனைக்காணுமெல்லையின்றாகமீண்டு" என்றார். சீகாழிப்பதியிலிருந்தமை சூரபன்மனுக்கு வெளிப்பட்டமையாலஞ்சி மேருவிலொளித்திருந்தனனென்க. தேவர்க்கு மேரு ஒளிப்பிடமாகுங்காரணத்தை மேல் அசுரகாண்டத்து இந்திரன்மீட்சிப்படலத்தில் விளக்குதும். (௫௧)

தமனிய மேரு வெற்பிற் றன்னுள மொருப்பா டெய்த
நிமலனை யுன்னிப் பன்னா ணெடுந்தவ முழத்த லோடு
மிமில்விடை மிசைக்கொண் டங்க ணெம்பிரா னேகக் காணூஉ
வமரர்கோன் வணங்கிப் போற்ற வனையவ னருளிச் செய்வான்.

இ—ள்: தமனிய மேரு வெற்பில்—பொன்மயமாகிய மேருமலையில், தன் உளம் ஒருப்பாடு எய்த—தன்னுடையமனம் ஒருவழிப்படும்படி, நிமலனை உன்னி—சிவபெருமானைத்தியானித்து, பல் நாள் நெடும் தவம் உழத்தலோடும்-பலகாலமாக நெடிய தவத்தை (அவ்விந்திரன்) செய்தலும், எம்பிரான்—எங்கள்கடவுளாகிய சிவபெருமான், இமில் விடை மிசை கொண்டு அங்கண் ஏக—(அதற்கருள்செய்யுமாறு) முரிப்பினையுடைய இடபவாகனத்திலெழுந்தருளி அங்கே சாந்நித்தியமாக, அமரர்கோன் காணூஉ-(தேவேந்திரன் அவரைத்)தரிசித்து, வணங்கி போற்ற—நமஸ்கரித்துத்துதிக்க, அனையவன் அருளிச்செய்வான்—அந்தச்சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுவார் எ-று.

நொந்தனை யளப்பில் கால நோற்றனை யாற்ற றீர்ந்தா
யிந்திர நினக்கு வேண்டிற் றென்னைய தியம்பு கென்று
வந்தமி லறிவின் மேலோ னறிகிலன் போலக் கேட்ப
வந்தனை புரிந்து போற்றி மகபதி புகல லுற்றான்.

இ—ள்: இந்திர—இந்திரனே!, அளப்பு இல் காலம் நோற்றனை— அளவிறந்தகாலந்தவஞ்செய்து, நொந்தனை- வருந்தி, ஆற்றல் தீர்ந்தாய்— வலிகுன்றப்பெற்றாய், நினக்கு வேண்டிற்று என்னை— உனக்குவேண்டிய வரம்யாது, அது இயம்புக என்று—அதனைக்கூறுதியென்று, அந்தம் இல் அறிவில் மேலோன்-முற்றுணர்வினையுடைய கடவுளாகிய சிவபெருமான், அறிகிலன் போல கேட்ப-அறியாதார்போலவினவியருள, மகபதி—தேவேந்திரன், வந்தனை புரிந்து—வழிபாடுசெய்து, போற்றி—துதித்து, இவை புகலலுற்றான்— இவற்றை விண்ணப்பஞ்செய்வானுயினன் எ—று.

நொந்தனை நோற்றனை- முற்றெச்சங்கள். இயம்புக என்னும்வியங்கோளீற்ற கரந்தொக்கது. அந்தமிலறிவு-முடிவற்ற அறிவு=முற்றறிவு. இந்திரன்றவஞ்செய்த காரணத்தைத் தமதுமுற்றறிவாலினிதுணர்ந்திருந்தும், அவன்வாயாற்கூறுவிப்பதோர் திருவிளையாடலாகக்கொண்டு வினவியருளினரென்பதுதோன்ற 'அந்தமிலறிவின்மேலோனறிகிலன்போலக்கேட்ப' என்றார். (௫௫)

பன்னரும் பழிசேர் சூரன் பருவரற் படுத்திப் பின்ன
ரென்னொரு புதல்வன் றன்னை யிமையவர் பலரை வாட்டித்
தன்னகர்ச் சிறையிட் டெம்மூர் தழல்கொளீஇத் தவறு செய்தா
னன்னவன் றன்னை யட்டே யளித்தியா லெம்மை யென்ன.

இ—ள்: பன்னரும் பழி சேர் சூரன்—(இத்துணைத்தென எவராலுஞ்) சொல்லிமுடித்தற்கரிய பெருநிந்தையினையுடைய சூரபன்மன், பருவரற் படுத்தி—(சிறியேங்களைத்) துன்பப்படுத்தி, பின்னர்- அதன்மேல், என் ஒரு புதல்வன் தன்னை இமையவர் பலரை வாட்டி—எனதுஒருகுமாரனாகிய சயந்தனையும் பலதேவர்களையும் வருத்தி, தன்நகர் சிறை இட்டு, தனது மகேந்திரபுரியிற்சிறைவைத்து, எம்மூர் தழல் கொளீஇ—சிறியேங்களது சுவர்க்கலோகத்தை எரித்து, தவறுசெய்தான்—குற்றஞ்செய்தான் (ஆதலின்), அன்னவன்றன்னை அட்டு—அவனைச்சங்கரித்து, எம்மை அளித்தி என்ன—சிறியேங்களைக் காத்தருளவேண்டுமென்று (தேவேந்திரன்) பிரார்த்திக்க எ—று.

கொளீஇ-கொளுவியென்பதன் விகாரம். அருமைப்புதல்வனென்பான் 'ஒரு புதல்வன்' எனவும், துட்டரையொறுத்தலுஞ் சிட்டரைக்காத்தலுமே நெறியாதலின் அங்ஙனஞ்செய்தருள்கவென்பான் 'தவறுசெய்தானன்னவன்றன்னையட்டேயளித்தருளெம்மை' எனவுங்கூறினான்.

இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (ரு௪)

மெய்ம்மைய தகன்ற தக்கன் வேள்வியி னிருந்த பாவ
நம்பிடை யிருந்த தற்றா னோதக வுழந்தீர் மேனா
ணம்பிடை யொருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக் காதி
யிம்மென வும்மைக் காப்ப னெனப்புகன் றிறைவன் போனான்.

இ—ள்: மெய்ம்மையது அகன்ற தக்கன் வேள்வியின் இருந்த பாவம் நம்மிடை இருந்தது—உண்மைநெறியினின்றும் நீங்கிய தக்கனியற்றியயாகத்தில் இணங்கியிருந்த பாவமானது உங்களிடத்திருந்தது, அற்றால் நோதகவு உழந்தீர்—அதனால் அசுரர்செய்யுந்துன்பத்தை அனுபவித்தீர்கள், மேல் நாள்—பின்னாளில், நம்மிடை ஒரு சேய் வந்து நணுகி—நம்மிடத்து ஒரு புத்திரன்வந்துதோன்றி, வெம் சூரை காதி—கொடிய சூரபன்மனைச்சங்கரித்து, இம்மென உம்மை காப்பன்—விரைவாக உங்களை இரட்சிப்பான், என புகன்று—என்று (அவ்விந்திரனுக்குத்) திருவாய்மலர்ந்தருளி, இறைவன் போனான்—தலைவராகிய சிவபெருமான் மறைந்தருளினார் எ—று.

சிவனே முதற்கடவுளென்னுமுண்மையைச் சிறிதுமெண்ணாது அவமதித்தனாதலின் 'மெய்ம்மையதகன்றதக்கன்' எனவும், அவனியற்றிய வேள்வியிலவியுண்டபாவம் வீரபத்திரக்கடவுள்செய்த தண்டனையானற் றீராதெஞ்சியுள்ளதென்பது தோன்ற 'வேள்வியினிருந்தபாவ-நும்மிடையிருந்தது' எனவும், அப்பாவந்தொலையுநாளென்பதுதோன்ற 'மேனாள்' எனவும், நங்குமாரனுக்கு அசுரரைவெல்வதும் நும்மைக்காப்பதுமோர் பெருங்கருமமாகாது, விளையாட்டேயாமென்பதுதோன்ற 'இம்மெனவும்மைக்காப்பன்' எனவும் கூறியருளினார். (ரு௫)

மறைந்தன னிறைவ னேக மகபதி யிரக்க மெய்திக்
குறைந்தன னுணர்வு துன்பங் கூர்ந்தனன் குமர னங்கட்
பிறந்துமைக் காப்ப னென்றே பிரானருள் புரிந்த பெற்றி
சிறந்ததன் மனத்தி லுன்னித் தேறின னுவகை செய்தான்.

இ—ள்: இறைவன் மறைந்தனன் ஏக—சிவபெருமான் (அவ்வாறு) அந்தர்த்தானமாகிச்செல்ல, மகபதி இரக்கம் எய்தி-இந்திரன் கவலைகொண்டு, உணர்வு குறைந்தனன்—அறிவுமாழ்கி, துன்பம் கூர்ந்தனன்— துன்பமிகப்பெற்று, நங்கண் குமரன் பிறந்து உமை காப்பன் என்று பிரான் அருள்புரிந்த பெற்றி-எம்மிடத்துப் புதல்வனொருவன் அவதரித்து உம்மைக்காப்பானென்று சிவபிரான் அநுக்கிரகஞ்செய்ததன்மையை,

சிறந்த தன் மனத்தில் உன்னி— சிறப்புப்பொருந்திய தனது மனத்திற்சிந்தித்து, தேறினன் உவகை பூத்தான்—மனந்தெளிந்து மகிழ்ச்சியுற்றான் எ—று.

தனதுவேண்டுகோட்படி அசுரரையழிக்காது மறைந்தனரேயென்பதை நினைந்து துன்புற்று, சிலநாளிற் குமாரர்தோன்றியருள்செய்வரென்பதை நினைந்து மகிழ்ந்தனனென்பதாம். மறைந்தனன் குறைந்தனன் கூர்ந்தனன் தேறினன் என்பன முற்றெச்சங்கள். (௩௬)

மாசறு காட்சி கொண்ட மாதவர்க் கருளி யெங்கோன்
றேசுறு கயிலை யுற்றா னுமையவ ளிமையஞ் சேர்ந்தா
ளாசறு குமர னன்னார்க் கடைவதெத் தன்மை யென்னா
வாசவ னிருந்து நாடி மனமிசைக் கவலை கூர்ந்தான்.

இ—ள்: எம் கோன்—எங்கள் தலைவராகிய சிவபெருமான், மாசு அறு காட்சி கொண்ட மா தவர்க்கு அருளி—குற்றமற்ற அறிவினையுடைய பெரிய சனகாதிமுனிவர்களுக்குபதேசித்துக்கொண்டு, தேசு உறு கயிலை உற்றான்—ஒளிபொருந்திய திருக்கைலாசமலையிலெழுந்தருளியிருக்கின்றார், உமையவள் இமையம் சேர்ந்தாள்—அவரதுசத்தியாகிய உமையம்மையார் இமையமலையையடைந்திருக்கின்றார், அன்னார்க்கு ஆசு அறு குமரன் அடைவது எ தன்மை என்னா— அங்ஙனம்பிரிந்திருக்கும் இருவரிடத்தும் குற்றமற்ற புத்திரர்தோன்றுவதெப்படியென்று, வாசவன் இருந்து நாடி—தேவேந்திரன் இருந்து ஆலோசித்து, மனமிசை கவலை கூர்ந்தான்—மனத்திற்றுன்பமிகப்பெற்றான் எ—று.

சிவபிரானுந் தேவியாருமிவ்வாறு பிரிந்திருப்பிற் குமாரரவதரிப்பதில்லை. ஆகவே அசுரரிறப்பதும் நந்துயர்நீங்குவதுமெப்படி? என்று சிந்தித்துக் கவலைகொண்டனனென்க. (௩௭)

மயர்வொடு துறக்க மன்னன் மனோவதி யென்னு மாண்டை
வியனக ரெய்தி யாங்கண் வீற்றிருந் தருளும் பொன்னி
னியன்முறை மனைவி தன்பா லில்லினை யிருத்தல் செய்தாங்
கயனுறு கடிமாண் கோயி லடைந்தன னமர ரோடும்.

இ—ள்: துறக்க மன்னன்- சுவர்க்கலோகாதிபனாகியஇந்திரன், மயர்வொடு- மனக்கவலையுடன், ஆண்டை மனோவதி என்னும் வியன் நகர் எய்தி—அம்மேருமலையிலுள்ள மனோவதியென்னும்பெயரையுடைய சிறந்த நகரத்தையடைந்து, ஆங்கண் வீற்றிருந்தருளும் பொன்னின் இயல் முறை மனைவி தன் பால் இல்லினை இருத்தல் செய்து—அவ்விடத்து வீற்றிருக்கின்ற வியாழபகவானது இல்லொழுக்கமுறையினையுடைய பத்தினியிடத்துத் தன்மனைவியாகிய இந்திராணியையிருக்கவைத்து, அமரரோடும்—(தன்னைச்சூழ்ந்த)தேவர்களுடன், ஆங்கு அயன் உறு கடி மாண் கோயில் அடைந்தனன்—அம்மனோவதியிற் பிரமதேவர்வீற்றிருக்கின்ற காவலையுடைய சிறந்தகோயிலை அடைந்தான் எ—று.

இந்திரன் மனைவியையிருத்துதற்கேற்ற தகுதியுமொழுக்கமுமுடையளென்பார் 'இயன்முறைமனைவி' என்றார். பிரமனவைக்கு மனைவியுடன்சேறலாகாமையாற் குருபத்தினியாகிய தாரையிடத்திருத்திப் போயினனென்க. (௩௮)

இனையதோர் காலை முக்க ணெம்பிரான் ஞான போத
முனிவரர்க் குணர்த்தி வைகு முறையினாற் படைப்பின் றாகித்
தனியொடு வேதா வைகுந் தொன்முறை யவையை நண்ணி
யினையவன் கழன்முன் றாழூஉ வளப்பில வழுத்தி நின்றான்.

இ—ள்: இனையது ஓர் காலை—இவ்வாறாகியகாலத்தில், முக்கண் எம்பிரான் முனிவரர்க்கு ஞானபோதம் உணர்த்தி வைகும் முறையினால்—மூன்றுதிருக்கண்களையுடைய எமதுகடவுளாகியசிவபெருமான் சனகாதிமுனிவர்களுக்குஞானபோதத்தைக்காட்டி வீற்றிருக்கின்றமுறைமையினால், படைப்பு இன்று ஆகி துனியொடு வேதா வைகும் தொல் முறை அவையை நண்ணி— படைப்புத்தொழினடைபெறுதலின்றி மனத்துயருடன் பிரமதேவர் வீற்றிருக்கின்ற பழைய முறையினையுடைய சபையிற்சென்று, அனையவன் கழல் முன் தாழூஉ—அப்பிரமதேவரது பாதங்களின்முன்னாக வணங்கி, அளப்பு இல வழுத்தி நின்றான்—அளவற்றதோத்திரங்களைக்கூறிநின்றான் எ—று.

இனையதோர்காலை வைகு முறையினால் என இயையும். முதனூலிற் பற்பல தோத்திரங்களுளவாதலின் 'அளப்பிலவழுத்தி' என்றார். (௩௯)

நிற்றலு மகவான் றன்னை நீடருள் புரிந்து நோக்கிப்
பொற்றனிக் கமல மேய புங்கவர் முதல்வன் வானோர்
கொற்றவ வந்த தென்னை கூறுதி யென்ன லோடுஞ்
சொற்றனன் சூர பன்மன் செய்திடுந் துன்ப மெல்லாம்.

இ—ள்: நிற்றலும்—அவ்வாறு துதித்துநிற்றலும், பொன் தனி கமலம் மேய புங்கவர் முதல்வன்— அழகிய ஒப்பற்ற தாமரைமலரில் வீற்றிருக்கின்ற தேவத்தலைவராகிய பிரமா, மகவான்தன்னை நீடு அருள் புரிந்து நோக்கி—இந்திரனை மிகுந்தகருணைசெய்து பார்த்து, வானோர் கொற்றவ—தேவர்க்கரசனே, வந்தது என்னை கூறுதி என்னலோடும்—நீ இங்குவந்தகாரணம்யாது சொல்லக்கடவையென்று வினவுதலும், சூரபன்மன் செய்திடும் துன்பம் எல்லாம் சொற்றனன்— சூரபன்மன் தங்களுக்குச்செய்த தீமைகளெல்லாவற்றையும் (அவ்விந்திரன் விரித்துக்)கூறினான் எ—று.

சூரபன்மன்செய்யுந்தீங்குகளைமுறையிட்டமை முதனூலில் விரித்துக்கூறப்பட்டது. (௪0)

வெய்யதோர் சூரன் செய்கை விளம்பியே முனிவர்க் கீச
னையமி லுணர்வு காட்டி யமர்வது முரைத்துத் தான்பின்
செய்யுறு தவங்கண் டன்னா னருளிய திறனுஞ் செப்பி
யுய்வதோர் பரிச தென்னோ வும்பரும் யானு மென்றான்.

இ—ள்: வெய்யது ஓர் சூரன் செய்கை விளம்பி—கொடிய சூரபன்மனது செயலை விரித்துரைத்து, ஈசன் முனிவர்க்கு ஐயம் இல் உணர்வு காட்டி அமர்வதும் உரைத்து—சிவபெருமான் சனகாதிமுனிவர்களுக்கு ஞானபோதத்தைக் காண்பித்துக் கொண்டிருப்பதையுங் கூறி, பின் தான் செய்திடு தவம் கண்டு அன்னான் அருளிய திறனும் செப்பி—அதன்பின்பு தானியற்றியதவத்தைக்கண்டு அச்சிவபெருமான் கருணைசெய்ததன்மையையுஞ்சொல்லி, உம்பரும் யானும் உய்வது ஓர் பரிசது என்னோ என்றான்-தேவர்களும்யானும் உய்யத்தக்க உபாயம்யாது? (ஆராய்ந்துகூறியருளுதிர்) என்று வேண்டினான் (அவ்விந்திரன்) எ—று.

ஓர் இரண்டும் அசைநிலைகள். அமர்வதும் திறனும் என்பவற்றிலும்மைகள் எச்சம். பரிசது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (௪௧)

என்றலு மலரோன் கேளா வெவர்க்குமே லாகு மீச
னொன்றிய வருளி னோனு முற்றவர்க் குதவு வோனு
மன்றியு முறைசெய் வோனு மாதலின் முனிபோல் வெள்ளிக்
குன்றிடை யெம்மை யாளுங் குறிப்பின்வீற் றிருந்தா னன்றே.

இ—ள்: என்றலும்—என்று இந்திரன்கூறுதலும், மலரோன் கேளா—பிரமதேவர்கேட்டு, எவர்க்கும் மேல் ஆகும் ஈசன்— எக்கடவுளருக்கும் முதற்கடவுளாகிய சிவபெருமான், ஒன்றிய அருளினேனும்—பொருந்திய கருணையையுடையவரும், உற்றவர்க்கு உதவுவோனும்—தம்மைச்சார்ந்தவர்களுக்குத் துணைசெய்பவரும், அன்றியும்—அல்லாமலும், முறைசெய்வோனும் ஆதலின்—முறைமையை நடாத்துபவருமாதலால், எம்மை ஆளும் குறிப்பின்—எங்களை அடிமைக்கொள்ளுங்கருத்துடன், வெள்ளிக்குன்றிடை-திருக்கைலாசமலையில், முனிபோல் வீற்றிருந்தான்—யோகிபோல வீற்றிருந்தருளினர் எ—று.

தமதுசந்நிதியிற் சிருட்டிமுதலிய தொழில்களையியற்றும் பரமபதியென்பார் 'எவர்க்குமேலாகுமீசன்' எனவும், பஞ்சகிருத்தியங்களுளிறுதிக்கண்ணதாகிய அநுக்கிரககிருத்தியத்தையுடையரென்பார் 'ஒன்றியவருளினேனும்' எனவும், அவ்வநுக்கிரகத்தைத் தம்மைச்சார்ந்தபக்குவிகளுக்கே கொடுப்பவரென்பார் 'உற்றவர்க்குதவுவோனும்' எனவும், ஒருவனிட்டபயிரின்பயனை மற்றொருவனநுபவியாவண்ணம் அரசனாணை செலுத்துதல்போலச் செய்தவினைப்பயனை அவரவரேயநுபவிக்கும்படி அளந்தூட்டி நடத்துபவரென்பார் 'முறைசெய்வோனும்' எனவுங்கூறினர். ஆகவே சனகாதிமுனிவர்க்கருளுதற்கும் நமது தீவினைப்பயனை அனுபவிப்பித்தற்குமாக யோகநிலையில் வீற்றிருக்கின்றனரென்பது கருத்தாயிற்று. (சஉ)

செங்கண்மா றானு நானுந் தேடுதற் கரிதாய் நின்ற
வெங்கடம் பிராற்கு மேலா வெண்ண வோர் தேவு முண்டோ
வங்கவன் ஞான போத மறிவருக் குணர்த்தி வைக
னங்குறை முழுது மாற்று நல்லரு ளாகு மன்றே.

இ—ள்: செம் கண் மால் தானும் நானும் தேடுதற்கு அரிது ஆய் நின்ற-சிவந்தகண்ணையுடைய விஷ்ணுமூர்த்தியும்யானுந் தேடுதற்கருமையாகின்ற, எங்கள் தம்பிராற்கு மேலா எண்ண—எங்கள் தலைவராகிய சிவபெருமானுக்குமேலாகமதித்தற்கு, ஓர் தேவும் உண்டோ—ஒருதெய்வமும் இருக்கின்றதா? (இல்லை அங்ஙனமாகவும்), அங்கவன்—அந்தச்சிவபெருமான், அறிவருக்கு ஞானபோதம் உணர்த்தி வைகல்— சனகாதிமுனிவர்களுக்கு ஞானபோதத்தைக் காட்டிக்கொண்டிருத்தல், நம் குறை முழுதும் மாற்றும் நல் அருள் ஆகும்—எங்கள் குறைமுழுதையும் நீக்குகின்ற நல்லகருணையேயாம் எ—று.

தேவுமென்பதில் உம்மைஉயர்வுசிறப்பு. சர்வதேவோத்தமராகிய சிவபெருமானுக்கு, முனிவரையத்தையொழித்தலிற் பெருமுயற்சிவேண்டற்பாற்றன்று. ஆகவும் அவர்யோகிருந்தது தீவினைப்பயனை ஒருங்கே அனுபவித்துத்தீர்த்துக்கொள்ளாது இடையில் தம்மிடம்வந்துமுறையிடுவரென்றெண்ணியேயாமென்பதுகருத்து. (சங)

படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பகவனா ருயிர்க ளெல்லா
மடுவதும் வருத்தந் தீர்க்கு மாரரு ளான வாபோற்
கொடியவெஞ் சூான் றன்னைக் கொண்டிடமக் கலக்கண் செய்கை
விடலரும் பவப்பே றூர்த்தி விடருள் கருணை யன்றே.

இ—ள்: படர் மதி மிலைச்சும் சென்னி பகவன்—கலைவளரும் இளம்பிறையையணிந்த திருமுடியினையுடைய சிவபெருமான், ஆர் உயிர்கள் எல்லாம் அடுவதும்—நிறைந்த ஆன்மாக்கள்முழுவதையுஞ் சங்கரிப்பதும், வருத்தம் தீர்க்கும் ஆர் அருள் ஆனவா போல்—அவ்வுயிர்களது இளைப்பையாற்றுகின்ற பெருங்கருணையேயானதன்மை

போல, கொடிய வெம் சூரன்றன்னை கொண்டு எமக்கு அலக்கண் செய்கை— மிகக் கொடியசூரபன்மனால் எமக்குத் துன்பஞ்செய்வித்தலும், விடல் அரும்பவ பேறு ஆர்த்தி வீடு அருள் கருணை—(பிறவாற்றால்) நீக்குதற்கரிய தீவினைப்பயனை அநுபவிப்பித்து (முடிவில்) முத்தியைத்தந்தருளுங்கிருபையேயாம் எ—று.

ஆனவாறு என்பதிலீற்றுயிர்மெய்தொக்கது. ஆருயிர்களெல்லாமடுவது என்றதனால் மகாசங்காரமென்பது பெறப்பட்டது. பிறத்தல் இறத்தல் முதலியவற்றானேரும் இளைப்பையொழித்தற்பொருட்டுச் சிவபிரான்சங்காரகிருத்தியஞ்செய்தலின் 'ஆருயிர்களெல்லாமடுவது ம்வருத்தந்தீர்க்குமாறருளானவாபோல்' என்றார். இதனை "விச்ராந்த்யைபவிநாஞ்சகிங்கமகஸாம்பாகாயகர்மாவலேர்-மாயாவாக்பலசம்பவாயகுருதேசம்பூர்மகாசம்ஹ்ருதிம் [பிறப்பாதிய சம்ஸார துக்கங்களையுடையவர்களும் அவற்றால் தளர்ந்த மனத்தையுடையவர்களுமாகிய ஆன்மாக்கள் இளைப்பாறுதற்பொருட்டும் கன்மங்கள் பரிபாக முறும்பொருட்டும் சுத்தாசுத்தமாயைகளுக்குத் தனுகரணாதிகளையுண்டாக்க வல்லமையுண்டாகும்பொருட்டுமே பரமசிவன் மகாசங்காரகிருத்தியத்தைச் செய்கின்றார்]" எனச்சித்தாந்தசாராவலி கூறுதலாலுமறிக.

சங்காரத்தொழில் தீயசெயலாகத்தோன்றினும் நற்செயலாவதுபோலச் சூரனாதியரால் எம்மைவருத்துவதும் நற்செயலேயாமென்பது தாற்பரியம். (௪௪)

பெற்றிடுங் குரவ ரானோர் பிள்ளைக டம்பா னொன்
றுற்றிடிற் பிறரைக் கொண்டு முறுதுயர் செய்து தீர்ப்பார்
மற்றவர் தம்பா லன்போ வன்கணோ வதுபோ னம்பாற்
பற்றிய பவங்க டீர்ப்பான் பரமனு மிவைகள் செய்தான்.

இ—ள்: பெற்றிடும் குரவர் ஆனோர்-பெற்றதாய்தந்தையர்கள், பிள்ளைகள் தம்பால் நோய் ஒன்று உற்றிடின்—குழந்தைகளிடத்து ஒருநோய்வந்தால், பிறரைக்கொண்டும் உறு துயர் செய்து தீர்ப்பார்—(வைத்தியர்முதலிய) பிறராலாயினும் பெருந்துன்பத்தையியற்றி (அந்நோயை)மாற்றுவார்கள், அவர் தம்பால் அன்போ வன்கணோ—அங்ஙனஞ்செய்தல் அக்குமாரரிடத்துக்கொண்ட அன்பா? அல்லது தறுகண்மையா? (அன்பேயாம்), அது போல்-அத்தன்மைபோல, பரமனும்—சிவபெருமானும், நம்பால் பற்றிய பவங்கள் தீர்ப்பான் இவைகள் செய்தான்—நம்மிடத்துத்தொடர்ந்துள்ள பாவங்களை நீக்கும்படி இத்தீங்குகளைஉண்டாக்கினார் எ—று.

உறுதுயர் என்றது அறுத்தல் சுடுதல் காரமிடுதல் முதலியவற்றை. பெற்றோர் குழந்தைகளது நோயைமாற்றும்பொருட்டு வைத்தியர்முதலாயினோராற்றுயர்செய்தல்போலச் சிவபெருமானும் எங்கள்பாவத்தைத்தொலைக்கும்பொருட்டுச் சூரனாதியோராற்றுயர்விளைக்கின்றனரென்பது கருத்து. "மகவை யீன்றதாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப்-பகைப டும்பிணி யகற்றிடும் பான்மைபோ லென்னை-யிகலி ழைத்தறி வுறுத்தினுய்க் கேழையேன் செய்பத்- தகுவ தியாதென வரம்பிலா மகிழ்ச்சியுட் டாழ்ந்தான்" என்றார் பரஞ்சோதிமுனிவரும். உம்மைகளிரண்டும் எச்சம். (௪௫)

தெருமரு கின்ற நம்பாற் றீங்கெலா நீங்கு மெல்லை
யொருசிறி தணுகிற் றாகு மாதலா லுணர்வின் மேலோன்
பரிவொடு நின்பால் வந்து பரிசிவை யருளிப் போனா
னிருவினைப் பௌவ வேலை யேறினம் போலு மன்றே.

இ—ள்: தெருமருகின்ற நம் பால் தீங்கு எலாம் நீங்கும் எல்லை, ஒருசிறிது அணுகிற்று ஆகும்—வருந்துகின்ற எங்களிடத்துள்ள பாவங்களெல்லாந் தொலையுங்கா

லம் (முன்னையினும்) மிகச்சிறிதே நெருங்கிற்றும், ஆதலால்—ஆனதன்மையினால், உணர்வில் மேலோன்- அறிதற்கெட்டாதவராகிய சிவபெருமான், பரிவொடு நின்பால் வந்து இவை பரிசு அருளி போனான்— கருணையோடும் உன்னிடத்துவந்து இவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளிப் போயினார், இருவினை பௌவ வேலை ஏறினம்- (இனி) இருவினைகளாகிய கடலின் கரையில்ஏறினோம் எ—று.

தெருமரல்-மனமலைதல். வேலை- ஈண்டு கரை. போலும் அன்று ஏ-அசைகள். பரிசிவை என்றது 'நம்மிடை யொருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக் காதி-யிம்மென வும்மைக் காப்பன்' என்றதை. முத்திசித்திக்குமென்பது துணிபாதலால் இருவினைப்பௌவவேலை யேறினமென இறந்தகாலத்தாற்கூறினார். (௪௬)

ஆதலி னிறைவ னேமே லருள்செயு மதற்கி யாமுந்
தீதற முயலு மாறு சிறிதுள திவற்றை மாயோற்
கோதினம் வேண்டுஞ் செய்கை யொல்லையிற் செய்து மென்னா
வேதமில் கமலப் புத்தே ளிருக்கைவிட் டெழுந்தா னன்றே.

இ—ள்: ஆதலின்—ஆதலினால், இறைவனே மேல் அருள்செயும்— சிவபெருமானே இனிக் கிருபைசெய்வார், அதற்கு—அங்ஙனங்கிருபைசெய்தற்பொருட்டாக, யாமும் தீது அற முயலுமாறு சிறிது உளது— நாமுங் குற்றமற முயற்சிசெய்யும்வழி சற்றே இருக்கின்றது, இவற்றை மாயோற்கு ஓதினம்— இவைகளெல்லாவற்றையும் விஷ்ணுமூர்த்திக்குமுறையிட்டு, வேண்டும் செய்கை ஒல்லையில் செய்தும் என்னா — அதற்குவேண்டிய செயலை விரைவிற்செய்வோமென்றுகூறி, ஏதம் இல் கமல புத்தேள் இருக்கை விட்டு எழுந்தான்—குற்றமற்ற தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவர் தாமிருந்த ஆசனத்தைவிட்டு எழும்பினார் எ—று.

இறைவனேயென்பதிலேகாரம்பிரிநிலை. யாமுமென்பதிலும்மை எச்சம். ()

வேறு.

அன்ன காலை யதுநன் றி நன்றெனாத்
துன்னும் வானவர் சூழவொ டிந்திரன்
பின்ன ராகப் பெயர்ந்துடன் வந்திடச்
சென்னி நான்கினன் செல்லுதன் மேயினான்.

இ—ள்: அன்னகாலை—அச்சமயத்தில், இந்திரன்—இந்திரனானவன், அது நன்று நன்று எனா—அச்செயல் நல்லது நல்லதென்றுகூறி, துன்னும் வானவர் சூழலொடு பின்னர் ஆக பெயர்ந்திட-நெருங்கிய தேவர்கூட்டத்துடன் தமக்குப்பின்னேவர, சென்னி நான்கினன்—நான்கு சிரங்களையுடைய பிரமதேவர், செல்லுதல் மேயினான்— (வைகுண்டத்தைநோக்கிப்) போவாராயினார் எ—று. (௪௮)

ஞாலம் யாவையு நல்கிய புங்கவன்
வாலி தாந்தன் மனோவதி நீங்குறா
மேலை வைகுந்த மென்னும் வியனக
ரால யத்தி னகன்கடை யேகினான்.

இ—ள்: ஞாலம் யாவையும் நல்கிய புங்கவன்-எல்லாவுலகங்களையும் படைத்த பிரமதேவர், வாலிது ஆம் தன் மனோவதி நீங்குறா—தூய்மையினையுடைய தமது மனோவதிநகரத்தை நீங்கி, மேலை வைகுந்தம் என்னும் வியன் நகர் ஆலயத்தின் அகன் கடை ஏகினான்—(தன்னுலகத்திற்கு)மேலுள்ளதாகிய வைகுண்டமென்னும்பெரிய நகரத்தின்கணுள்ள கோயிலின் அகன்ற வாயிலையடைந்தார் எ—று.

முதல்வாயிலென்பார் 'அகன்கடை' என்றார். (௪௯)

அந்த வெல்லை யதுகண்டு நேமியுஞ்
சங்கு மேந்திய தானையங் காவலன்
செங்கண் மாயன்முன் சென்றுவிண் ணோருடன்
பங்க யத்தன் படர்ந்தது செப்பினன்.

இ—ள்: அந்த எல்லை—அச்சமயத்தில், நேமியும் சங்கும் ஏந்திய தானையம் காவலன்—சக்கரப்படையையுஞ் சங்கையுந்தரித்த சேனைத்தலைவனாகியவிடுவசேனன், அது கண்டு—அதனைப்பார்த்து, செங்கண் மாயன் முன் சென்று-சிவந்தகண்ணையுடைய விஷ்ணுமூர்த்தியினது திருமுன்னிலையிற்போய், விண்ணோருடன் பங்கயத்தன் படர்ந்தது செப்பினன்—இந்திரன்முதலியதேவர்களுடன் தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர் வந்ததன்மையை அறிவித்தான் எ—று.

விஷ்ணு சாரூப்பியம்பெற்றவென்பார் 'நேமியுஞ்சங்குமேந்திய' எனவும், தாமரைக்கண்ணனென்பார் 'செங்கண்' எனவும் கூறினர். (ருO)

பணில மேந்திய பண்ணவ னன்னரைக்
கொணர்தி யாலெனக் கூறி விடுத்துழி
யிணையில் காவல னுய்த்திட விந்திரன்
கணமொ டேகினன் காசினி நல்கியோன்.

இ—ள்: பணிலம் ஏந்திய பண்ணவன்—(பாஞ்சசன்னியமென்னுஞ்) சங்கைத்தாங்கிய திருமால், அன்னரை கொணர்தி என கூறி விடுத்துழி— அவர்களை (ஈண்டு) அழைத்துக்கொணர்வாயாகவென்றுசொல்லியனுப்பியபொழுது, இணை இல் காவலன் உய்த்திட—ஒப்பற்ற வாயிற்காவலாளனாகிய விடுவசேனன் உட்புகுவிக்க, காசினி நல்கியோன்—உலகங்களைப்படைத்த பிரமதேவர், இந்திரன் கணமொடு ஏகினன்—இந்திரன்முதலிய தேவர்கூட்டத்தோடு சென்றார் எ—று.

அன்னர்- அத்தன்மையர். (ருக)

பொருவின் மாமுனி புங்கவர் போற்றுதன்
னுருவு கொண்ட வுலப்பறு கண்ணர்கண்
மரபி னேத்த மணிப்பணிப் பீடமே
லரியி ருந்த வவைக்கள நண்ணினன்.

இ—ள்: பொரு இல் மா முனிபுங்கவர் போற்று தன் உருவு கொண்ட உலப்பு அறு கண்ணர்கள்—ஒப்பற்ற சிறந்த முனிசிரேட்டர்களாற்றுதிக்கப்படுகின்ற தமது சாரூபத்தைப்பெற்ற அளவிறந்தவிஷ்ணுக்கள், மரபின் ஏத்த—முறைப்படி துதிக்க, அரி-திருமால், மணி பணி பீடம் மேல் இருந்த—அழகிய அனந்தசயனத்தின்மேலெழுந்தருளியிருந்த, அவைக்களம் நண்ணினன்—சபாமண்டபத்தையடைந்தார் எ—று.

சாரூபம்பெற்ற கண்ணர்களை நித்தியசூரிகளெனவும் வழங்குப. (ருஉ)

அன்ன மூர்தி யமருல காளுறு
மன்ன னோடுமவ் வானவர் தம்மொடும்
பன்ன காசனப் பங்கயக் கண்ணவன்
பொன்னின் மாணடி போற்றி வணங்கினன்.

இ—ள்: அன்னம் ஊர்தி- அன்னவாகனத்தையுடையபிரமதேவர், அமருலகு ஆளுறும் மன்னனோடும்-தேவருலகத்தைஅரசியல்செய்யும் இந்திரனுடனும், அ வான

வர் தம்மொடும்—அவனுடன்வந்ததேவர்களுடனும், பன்னக ஆசன பங்கயக்கண்ணவன் பொன்னின் மாண் அடி போற்றி வணங்கினான்— சர்ப்பசயனத்திலெழுந்தருளியிருக்கின்ற தாமரைக்கண்ணராகிய திருமாலினது பொன்போன்ற சிறந்த திருவடிகளைத் துதித்துப் பணிந்தார் எ—று.

அமரருலகென்றது அமருலகெனத்தொக்கது. அன்மொழித்தொகை.

தரைய ளந்திடு தாளின னவ்வழிக்
கருணை செய்துதன் காதல னாகிய
பிரம னுக்கொரு பீடிகை பெற்றியா
லருளி யங்க ணவனை யிருத்தினான்.

இ—ள்: தரை அளந்திடு தாளினன்—பூவுலகத்தை ஓரடியாக அளந்த திருவடியையுடைய திருமால், அவ்வழி கருணை செய்து—அப்பொழுது (அவர்க்குக்) கிருபைசெய்து, தன் காதலன் ஆகிய பிரமனுக்கு ஒரு பீடிகை பெற்றியால் அருளி—தனது புதல்வராகிய பிரமதேவருக்கு ஒரு ஆசனத்தை முறைப்படி இடுவித்து, அங்கண் அவனை இருத்தினான்—அதில் அப்பிரமதேவரை இருக்கச்செய்தார் எ—று.

அங்குவந்தார்க்குள்ளே பிரமதேவர் சிறந்தவரும் படைத்தற்றொழிற்கதிபருமாதலின் அவர்க்கேற்ற ஆசனமொன்றைக் கொடுத்தனரென்பார் 'பிரமனுக்கொருபீடிகைபெற்றியாலருளி' என்றார். (௫௪)

துல்லை மாமுடிக் கொண்டவ னத்துணை
யல்லி மாமல ரண்ணலை நோக்குறீஇ
யொல்லு நின்விதி யூறில தாகியே
செல்லு கின்றகொ லென்றலுஞ் செப்புவான்.

இ—ள்: துல்லை மா முடி கொண்டவன்—துளசிமலர்மாலையைச் சிறந்த திருமுடியிலணிந்தவராகிய திருமால், அ துணை— அப்பொழுது, அல்லி மா மலர் அண்ணலை நோக்குறீஇ—அகவிதழ்பொருந்திய பெரிய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரைப்பார்த்து, ஒல்லும் நின் விதி ஊறு இலது ஆகி செல்லுகின்ற கொல் என்றலும்—இசைந்த உனதுபடைத்தற்றொழில் இடையூறின்றி நடைபெறுகின்றதா?என்று வினவுதலும், செப்புவான்—(அதுகேட்ட பிரமதேவர்) விடைகூறுவார் எ—று.

கொல்லென்னுமிடைச்சொல் ஐயப்பொருளில்வந்தது. (௫௫)

கனக னச்சுறக் கந்திடை வந்தெழு
மனக வித்திறங் கேட்க வறிவுடைச்
சனகன் முற்படு தாபதர் நால்வரு
மெனக ருத்திடை முற்பக லெய்தினார்.

இ—ள்: கனகன் அச்சுற கந்து இடை வந்து எழும் அனக—இரணியன் பயப்படும்படி தூணின்கண்ணே (நரசிங்கவடிவுடன்) வந்து தோன்றிய கடவுளே, இத்திறம் கேட்க—இவ்வாசகத்தைக் கேட்டருளுக, அறிவு உடை சனகன் முன் படு தாபதர் நால்வரும்—பேரறிவினையுடைய சனகர் முதலாகிய முனிவர்கள் நால்வரும், எனது கருத்திடை முற்பகல் எய்தினார்—எனது மனத்தின்கண்ணே முன்னாளிலுதித்தார்கள் எ—று.

இரணியனென்னுமசுரன் உயிர்களைவருத்திக் கொடுங்கோல்செலுத்தி அரசாளுநாளிற் பிரகலாதனென்ன ஓர் புத்திரன் பிறந்து திருமாலிடத்தன்புடையவனாயொ

ழுகினன். அதுகண்டு இரணியன் அவனைக்கடிய, திருமால் அவன்முன்னிலையிலிருந் த தூணினின்றும் நரசிங்கரூபத்துடன்றோன்றி இரணியனை வதைத்தனராதலின் 'க னகனைச்சுறக்கந்திடைவந்தெழு-மனக' என்றார். (௫௬)

அறிவின் மிக்க வனையரை நோக்கியான்
பெறுவ தாமிப் பெருந்தொழி லாற்றியீண்
டுறுதி ரென்ன வுளத்தது கொண்டிலர்
முறுவல் செய்து மொழிந்தன ரிவ்வுரை.

இ—ள்: அறிவில் மிக்க அனையரை நோக்கி—அறிவினாற்சிறந்த அப்புதல்வ ர்நால்வரையும் பார்த்து, யான் பெறுவது ஆம் இ பெரும் தொழில் ஆற்றி ஈண்டு உறு திர் என்ன—யான்பெற்றுக்கொண்டதாகிய இந்தப்பெரிய படைப்புத்தொழிலையியற்றி க்கொண்டு இவ்விடத்திலிருங்களென்றுகூற, அது உளத்து கொண்டிலர்-(அவர்கள்) அ வ்வார்த்தையை மனத்திற்பொருட்படுத்தாதவர்களாய், முறுவல்செய்து— சிரித்து, இ உரை மொழிந்தனர்— இவ்வாசகத்தைக்கூறினார்கள் எ—று. (௫௭)

பாச வன்சிறைப் பட்டுப் படைப்பெனப்
பேச லுற்ற பெருந்தளை பூணல
மீசன் மாணடி யெய்துதும் யாமென
மாசில் காட்சியர் வல்விரைந் தேகினார்.

இ—ள்: யாம்—நாங்கள், பாச வன் சிறை பட்டு—பாசமாகிய வலியசிறைச் சாலையிலகப்பட்டு, படைப்பு என பேசலுற்ற பெரும் தளை பூணலம்— படைப்புத்தொ ழிலென்றுசொல்லநின்ற பெரியவிலங்கைப்பூணமாட்டோம், ஈசன் மாண் அடி எய்து தும் என—சிவபெருமானது மாட்சிமைபொருந்திய திருவடிகளை அடைவோமென்று கூறி, மாசு இல் காட்சியர் வல்விரைந்து ஏகினார்— குற்றமற்ற அறிவினையினையுடை ய அப்புதல்வர்நால்வரும் (நம்மைவிட்டு)மிகவிரைந்து போயினர் எ—று.

அநாதியே பாசமாகிய தீராச்சிறையிலகப்பட்ட யாங்கள், அதனையொழிக்கமு யல்வதேயன்றி, அவற்றுடன், படைத்தற்றொழிலாகிய பெரியவிலங்கையும் பூண்கில மென்பார் 'பாசவன்சிறைப்பட்டு * * * பூணலம்' எனவும், சிவனடிப்பேறேநித்தியம் பி ரமபதம் அநித்தியமென்பதுதோன்ற 'ஈசன்மாணடி' எனவும், நமக்கு இப்பொழுதே த ந்தைவழியாய்க்கிடைக்கின்ற தொழிலைவிடுத்துப் பெறற்கரிதாயமுத்தியைவிரும்பியவ ழி அது எக்காலங்கைகூடுமோ எனச் சிறிதுஞ்சிந்தியாது துணிந்து போயினரென் பார் 'வல்விரைந்தேகினார்' எனவுங்கூறினார். சிவனடியார் பிரமனதியர்பதத்தைவிரும் பாமையை 'கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வு' என்னும் அருள்வாக்கானறிக. ()

மாத வத்தினை மைந்தர்க ளாற்றலு
மாதி நாயக னவ்வழி வந்துமக்
கேது வேண்டிய தென்றலு மெண்ணிலா
வேத வுண்மை விளம்புதி யாலென்றார்.

இ—ள்: மைந்தர்கள் மா தவத்தினை ஆற்றலும்— (அவ்வாறுசென்ற) பு த்திரர்நால்வரும் பெரியதவத்தைச்செய்ய, ஆதி நாயகன் அவ்வழி வந்து— ஆதிகடவு ளாகிய சிவபெருமான் அப்பொழுது எழுந்தருளிவந்து, உமக்கு வேண்டியது ஏது எ ன்றலும்—(முனிவிர்காள்!) நுமக்குவேண்டிய பொருள்யாது (அதனைக்கூறுதிர்) என் று திருவாய்மலர்ந்தருளுதலும், எண் இலா வேத உண்மை விளம்புதி என்றார்--அளவற்

34

ற வேதத்தின்மெய்ப்பொருளையுபதேசித்தருள்கவென்று பிரார்த்தித்தார்கள் (அப்புத்திரர்கள்) எ—று.

உழி ஈண்டுக்காலமென்னும் பொருளில்வந்தது. இவ்வாறுமேல்வருவனவுமன்ன. (௫௯)

என்ற லோடு மிறையவன் வெள்ளியங்
குன்ற மீதுதென் கோட்டிடை நிற்புறு
மொன்றொ ராலிழ லுற்று மறையெலா
நன்று ணர்த்திட நால்வருந் தேர்ந்தனர்.

இ—ள்: என்றலோடும்—என்று (முனிவர்கள்) பிரார்த்தித்தலும், இறையவன்—தலைவராகிய சிவபெருமான், வெள்ளியம் குன்றமீது தென்கோட்டிடை நிற்புறும் ஒன்றொரு ஆல் நிழல் உற்று—திருக்கைலாசமலையின்மேல் தக்ஷிணசிகரத்தில்நிற்கின்ற ஒரு கல்லாலவிருக்ஷநீழலிற்போயிருந்து, மறையெலாம் நன்று உணர்த்திட—வேதப்பொருள்களையெல்லாம் நன்றாக உபதேசிக்க, நால்வரும் தேர்ந்தனர்-அப்புதல்வர்நால்வருந்தெளிந்தார்கள் எ—று. (௬0)

முந்தை வேத முழுது முணர்த்தியே
யெந்தை யேக விருநிலம் போந்துதஞ்
சிந்தை யொன்றுந் திறனரி தாதலி
னொந்து பின்னரு நோற்றலை மேயினார்.

இ—ள்: எந்தை—எம்பரமபிதாவாகிய சிவபெருமான், முந்தை வேதம் முழுதும் உணர்த்தி ஏக—பழைமைபொருந்திய வேதப்பொருண்முழுவதையும் உபதேசித்து எழுந்தருளியவுடன், இரு நிலம் போந்து—(அவர்கள்) பெரியபூவுலகத்திற்சென்று, தம் சிந்தை ஒன்றும் திறன் அரிது ஆதலின்—தங்கள்மனம் ஒருவழிப்படுவதருமையாயிருத்தலால், நொந்து—வருந்தி, பின்னரும் நோற்றலை மேயினார்—பின்னுந் தவஞ்செய்யத்தொடங்கினார்கள் எ—று. (௬௧)

பின்னு மைந்தர் பெருந்தவ மாற்றியே
தொன்ன லம்பெறு தூய வுளத்தரா
யென்னை யாளுடை யீச னருளினான்
மன்னு வெள்ளி வரையிடை யேகினார்.

இ—ள்: மைந்தர்—அப்புதல்வர்நால்வரும், பின்னும் பெரும் தவம் ஆற்றி—பின்னரும்பெரியதவத்தைச்செய்து, தொல் நலம் பெறு தூய உளத்தர் ஆய்—பழைய நன்மையைப்பெற்ற பரிசுத்தமாகிய மனத்தையுடையவர்களாய், என்னை ஆள் உடை ஈசன் அருளினால்—என்னையடிமையாகவுடைய சிவபிரானது கருணையினால், மன்னு வெள்ளி வரை இடை ஏகினார்—நிலைபெற்ற திருக்கைலாசமலையிற்சென்றார்கள் எ-று

முன்னர் வேதப்பொருளுணருமாறு தவஞ்செய்தபோதுதோன்றிய மனப்பரிபக்குவமுடையராயென்பார் 'தொன்னலம்பெறுதூயவுளத்தராய்' என்றார். 'ஈசனருளினால்மன்னுவெள்ளிவரை' என்பதற்குச் சிவபிரான் அடியார்க்கருளுமாறு எழுந்தருளியிருக்கின்ற கயிலைமலையெனினுமாம். (௬௨)

ஏகல் பெற்றிடு மக்கட் கினிதுளம்
பாக முற்ற பரிசுணர்ந் தெம்பிரா
னாக மத்தி னரும்பத மூன்றையு
மோதை பற்றி யுணர்வகை கூறியே.

இ—ள்: எம்பிரான்—எங்கள் தலைவராகிய சிவபெருமான், வகல் பெற்றிடும் மக்கட்கு—தம்மிடம்வந்த சனகர்முதலிய அந்தப்புத்திரர் நால்வர்க்கும், இனிது உளம் பாகம் உற்ற பரிசு உணர்ந்து— நன்றாகமனம் பரிபக்குவமுற்றதன்மையையறிந்து, ஒகை பற்றி உணர்வகை—மனமகிழ்ச்சிகொண்டு அறியும்வண்ணம், ஆகமத்தின் அரும் பதம் மூன்றையும் கூறி—ஆகமங்களிற்கூறப்படுகின்ற (சரியை கிரியை யோகம் என்னும்) அருமையாகிய மூன்றுபாதங்களையும் உபதேசித்து எ—று.

இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம்.

இனிதுளம்பாகமுற்றபரிசு என்றது சத்திநிபாதத்தை. சத்திநிபாதமாவது இருவினையொத்து, ஞானத்தைத்தடுக்குமாணவமலசத்திநழுவுமவசரத்திற் சிவத்தினது சிற்சத்திபதிந்து அவ்வான்மாவினதுநித்தியஞானக்கிரியையைவிளக்குதல். அது மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரமென நால்வகைத்து. அவற்றுள் மந்தமாவது:—வாழைத்தண்டிற்றீப்பற்றுதல்போல்வது. மந்ததரமாவது:—பச்சைவிறகிற்றீப்பற்றுதல்போல்வது. தீவிரமாவது:—காய்ந்தவிறகிற்றீப்பற்றுதல்போல்வது. தீவிரதரமாவது:—கரியிற்றீப்பற்றுதல்போல்வது. இவற்றை "நாலு வகைச்சத்தி நிபாதத்து நாற்பருவ-மூல குருவே மொழியெனக்குக்-கோல-வரம்பைத்தண் டொண்பச்சைக் காட்ட முலர்காட்ட-கிரம்புகரி கோர நீனை" என்பதனாலறிக. இனிதுளம்பாகமுற்றபரிசு- தீவிரதரசத்திநிபாதம். அப்பக்குவமெய்தினோர்திறத்தை "உறினே பருவ முடல்சிறையென் றொல்கி-யறுமாறுந் தேடுவனு ராய்ந்து,———மெய்புளக மாகும் விழிமொழியும் வாய்குளறுங்-கைதொழூஉக் கூச்சங் களைந்து,— விரும்புந் திருநீறு மெய்க்கணிந்தார் தம்மை-யரும் புமவர் தம்பா லருள்" என்னுஞ் சைவசமயநெறித் திருக்குறள்களாலுணர்க. (கூந)

கூனல் மாமதிக் கோடு மிலைச்சிய
வான நாயகன் மற்றவர் காண்டக
ஞான போத நவிலருந் தன்மையான்
மோன மேய முதற்குறி காட்டினன்.

இ—ள்: கூனல் மா மதி கோடு மிலைச்சிய வானநாயகன்- வளைவினையுடைய சிறந்த பாலசந்திரனையணிந்த தேவத்தலைவராகிய சிவபெருமான், ஞானபோதம் நவிலரும் தன்மையால்— ஞானபோதமானது (வாக்கினால்) சொல்லுதற்கரியதன்மையையுடைமையால், அவர் காண்டக—அம்முனிவர்கள் காணும்படி, மோனம் மேய முதல் குறி காட்டினன்—முதன்மைபொருந்திய சின்முத்திரையைக்காண்பித்தார் எ—று. ()

அந்த வெல்லை யரனருள் கண்டுதம்
புந்தி யொன்றியப் புங்கவன் றாண்மலர்
சிந்தை செய்து செயலற்று வைகினார்
முந்தி யாப்புறு முத்தளை மூட்டற.

இ—ள்: அந்த எல்லை—அச்சமயத்தில், அரன் அருள் கண்டு—சிவபெருமானது திருவருட்செயலைத்தரிசித்து, தம் புந்தி ஒன்றி—தமது மனம் ஒடுங்கப்பெற்று, அபுங்கவன் தாள் மலர் சிந்தைசெய்து—அந்தச்சிவபெருமானது பாதகமலங்களைத் தியானித்து, முந்து யாப்புறும் முத்தளை மூட்டு அற—அநாதியே பந்தித்த மூவகைப்பந்தங்களும் பொருத்தற, செயலற்று வைகினர்—கரணச்சேட்டைகளின்றி (மோனநிலையெய்தி) இருந்தார்கள் எ—று.

முத்தளை- ஆணவம் மாயை கன்மம் என்பன. (கூ௫)

வேத நாயகன் மெய்த்தவர்க் கோர்கணம்
போத யோகின் பொருண்மையைக் காட்டுழி
யோத லாகு முகம்பல சென்றன
சீத வானதி சேர்ந்ததொன் னாளினே.

இ—ள்: வேதநாயகன்— வேதமுதல்வராகிய சிவபெருமான், மெய் தவர்க்கு—மெய்ம்மையாகிய தவத்தினையுடைய சனகாதி முனிவர்களுக்கு, ஓர் கணம் —ஒரு கணமாத்திரம், போத யோகின் பொருண்மையை காட்டுழி— ஞானயோகத்தினியல்லைக்காண்பித்தபொழுது, ஓதல் ஆகும் உகம் பல சென்றன— வியந்து சொல்லுதற்கேற்ற பலயுகங்கள் கழிந்தன, சீத வான் நதி சேர்ந்த தொல் நாளின்—குளிர்ச்சியினையுடைய பெரியகங்கைதோன்றிய முன்னைநாளிற்போல எ—று.

நதிதோன்றிய காரணத்தையும் அந்நாளிற் பலயுகங்கழிந்தன என்பதையும் மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற்காண்க. (௬௬)

அன்னை தன்னை யகன்றரன் யோகிபோ
லென்ன துஞ்செய லின்றி யிருத்தலான்
முன்னை யாண்பெண் முயக்கம தின்மையாய்
மன்னு யிர்த்தொகை மல்கலின் றுயதே.

இ—ள்: அரன்—சிவபெருமான், அன்னை தன்னை அகன்று— உலகமாதாவாகிய உமாதேவியாரைப் பிரிந்து, என்னதும் செயல் இன்றி — யாதொருசெயலுமின்றி, யோகிபோல் இருத்தலால்—ஞானிபோலவீற்றிருத்தலினால், முன்னை ஆண் பெண் முயக்கமது இன்மை ஆய்—முன்னர்க்கூடிவாழ்ந்த ஆணும் பெண்ணுங்கூடுதலின்றி, மன் உயிர் தொகை மல்கல் இன்று ஆயது—நிலைபெற்ற உயிர்க்கூட்டங்கள் விருத்தியடைந்தில எ—று.

என்னது- எது என்பதன்விகாரம். (௬௭)

நவிற லென்னினி ஞாலம் விசும்புளா
ரிவறு காமப் புணர்ச்சிய தின்றியே
கவறல் கொண்டு கலங்கலு ரெய்தினார்
தவறல் கொண்டது நல்குந் தனிச்செயல்.

இ—ள்: ஞாலம் விசும்பு உளார்—மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலுமுள்ள மானுடர் தேவரனைவரும், இவறு காம புணர்ச்சியது இன்றி—விரும்புதலாகியகாமத்தினால் நிகழுங்கலவியில்லாமல், கவறல் கொண்டு கலங்கு அலுர் எய்தினார்—மனக்கவலைகொண்டு பெருந்துயரமடைந்தார்கள், நல்கும் தனி செயல் தவறல்கொண்டது—ஒப்பற்ற என்படைப்புத்தொழில் பிழைபட்டது, இனி நவிறல் என்—இதன்மேல் யாஞ்சொல்வதென்னை (சொல்லாதிருப்பவுமே காத்தலாதியபிறதொழில்களும் பிழைபட்டனவென்பது விளங்கும்) எ—று.

"ஸ்திரீபும்ஸபாவரஹிதேஜகத்யஸ்மிந்சராசரே| கதம்ஸ்ருஷ்டிர்ப்பவேத்ஸ்ருஷ்டிரக்ஷாகார்யாமமாத்யகா| கருபாமதிபாநாஞ்சகோதிகாரோவிரஜ்யதாம்| [தாவரசங்கமரூபமாகிய இவ்வுலகத்தில் ஆண்பெண்சேர்க்கையில்லாவிடின் பிரமாவுக்கு எப்படிப்படைத்தற்றொழில் சித்திக்கும். விஷ்ணுவாகிய எனக்கு எப்படிக்காத்தற்றொழில் சித்திக்கும். திக்குப்பாலகர் எப்படி அதிகாரஞ்செய்யக்கூடும்]" என்றார் முதனூலாரும். (௬அ)

நல்கல் பெற்ற தமியனு நாமகட்
புல்கல் பெற்ற புணர்ச்சியின் றாகியே
யல்கல்பெற்ற வருந்தவ யோகரி
னொல்கல் பெற்றன னுண்மையி தாகுமால்.

இ—ள்: நல்கல் பெற்ற தமியனும்—படைப்புத்தொழிலையுடைய அடியேனும், நாமகள் புல்கல் பெற்ற புணர்ச்சி இன்று ஆகி—சரசுவதியைத்தழுவுகின்றபுணர்ச்சியில்லாமல், அல்கல் பெற்ற அரும் தவ யோகரின் ஒல்கல் பெற்றனன்—மன அமைதியைப்பெற்ற அரியதவத்தினையுடைய யோகிகளைப்போல ஒடுங்குதலைப் பெற்றேன், இது உண்மை ஆகும்—இது சத்தியமேயாம் எ—று. (௬௯)

நிற்க விங்கிது நித்தன் வரத்தினா
லொற்க மில்வள னுண்டிடு வெய்யசூ
ரெற்கு நித்தலு மேவலொன் றிட்டனன்
சொற்க நாட்டிற் றுயரினை நாட்டினான்.

இ—ள்: இங்கிது நிற்க—இஃதித்துணைநிற்க, நித்தன் வரத்தினால் ஒற்கம் இல் வளன் உண்டிடு வெய்ய சூர்—சிவபெருமானதுவரத்தினாலே ஒடுங்காத செல்வத்தை அநுபவிக்கின்ற கொடிய சூரபன்மன், எற்கு நித்தலும் ஏவல் ஒன்று இட்டனன்—எனக்குத்தினந்தோறும் ஒரு ஏவற்றொழிலைக்கற்பித்தான் (அதுவன்றியும்), சொற்க நாட்டில் துயரினை நாட்டினான்—சுவர்க்கலோகத்திற்றுன்பத்தைநிலைப்படுத்தினான் எ-று.

ஏவலொன்றென்றது பஞ்சாங்கஞ்சொல்லுதலை. துயரென்றது தீயினாலெரிக்கப்படுதலை. (௭0)

தேசு நீங்குறு தேவரை யீண்டுள
வாச வன்றனை மாதிரத் தோர்களைப்
பாச னத்தொடு பற்றின னித்தலுங்
கூச லின்றிக்குற் றேவல்கொண் டானரோ.

இ—ள்: தேசு நீங்குற தேவரை—(தமதுபெருமைகுன்றுதலால்) ஒளிமாழ்கிய தேவர்களையும், ஈண்டு உள வாசவன் தனை—(இதுபொழுதில்)இவ்விடத்தேநிற்கின்ற இந்திரனையும், மாதிரத்தோர்களை—திக்குப்பாலகர்களையும், பாசனத்தொடு பற்றினன்—சுற்றத்தாருடன்பிடித்து, நித்தலும் கூசல் இன்றி குற்றேவல் கொண்டான்—தினந்தோறும் மனங்கூசாது குற்றேவல்களைச்செய்வித்தான் எ—று. (௭௧)

கறைபு ரிந்த நிலவினை வாளரா
மறைபு ரிந்தென வானகத் தோருட
னிறைபு ரிந்தவிவ் விந்திரன் மைந்தனைச்
சிறைபு ரிந்தனன் றீத்தொழி லாற்றியே.

இ—ள்: கறைபுரிந்த நிலவினை வாள் அரா மறைபுரிந்து என—களங்கத்தையப்பெற்றமுழுமதியை ஒளிபொருந்திய ராகுவானதுமறைத்தாற்போல, வானகத்தோருடன்—தேவர்களுடன், இறைபுரிந்த இ இந்திரன் மைந்தனை— (சுவர்க்கலோகத்து) அரசியற்றிய இந்த இந்திரனதுகுமாரனாகிய சயந்தனை, தீத்தொழிலாற்றி சிறை புரிந்தனன்—கொடுந்தொழிலியற்றிச் சிறைவைத்தான் எ—று.

உலகமனைத்திற்கும் நன்மைபுரிதலாற் சயந்தனுக்குச்சந்திரனையும், அவனுக்கிடர்செய்தலால் அசுரர்க்கு ராகுவையுமுவமித்தார். (௭௨)

நிரந்த பல்லுயிர் தங்கட்கு நித்தனு
மரந்தை மல்க வறிகிலன் போலவே
யிருந்த னன்சிவ னென்னினிச் செய்வது
விரைந்து கூறுதி யென்று விளம்பினன்.

இ—ள்: நிரந்த பல் உயிர் தங்கட்கு நித்தனும் அரந்தை மல்க—நிறைந்த பலஆன்மவர்க்கங்களுக்கு எப்போதுந்துன்பமிக, சிவன்— சிவபெருமான், அறிகிலன் போல இருந்தனன்—(முற்றறிவாலதனையுணர்ந்தும்) உணராதார்போலிருக்கின்றார், இனி செய்வது என்—இனி யாங்கள்செய்யத்தக்கதுயாது, விரைந்து கூறுதி என்று விளம்பினன்—அதனை விரைவிற்சொல்வீராகவென்று கூறினர் எ—று. (எங)

அரிய தத்துவ மையைந்தின் பேதமு
மரபி னாடினர் வாலுணர் வெய்திய
திருவி னாயகன் செங்கம லந்திகழ்
பிரமன் மாமுக நோக்கினன் பேசுவான்.

இ—ள்: அரிய தத்துவம் ஐயைந்தின் பேதமும் மரபில் நாடினர் வால் உணர்வு எய்திய திருவின் நாயகன்— அருமையாகிய இருபத்தைந்துதத்துவங்களின் பாகுபாடனைத்தையும் முறையே ஆராய்ந்துணர்ந்த பாஞ்சராத்திரிகளுடைய தூய்மையாகிய அறிவில் தோன்றியருளுகின்ற இலக்குமிதேவியின் நாயகராகியவிஷ்ணுமூர்த்தி, செம் கமலம் திகழ் பிரமன் மா முகம் நோக்கினன் பேசுவான்-செந்தாமரைமலராசனத்தில் விளங்குகின்ற பிரமதேவரது சிறந்தமுகத்தைப்பார்த்துக்கூறுவாராயினர் எ—று.

தத்துவங்கள் இருபத்தைந்தெனவும், இருபத்துநான்காவதாகிய குணதத்துவத்தின்மேல் வாசுதேவதத்துவமொன்றுளதெனவும்,அதுவேபரம்பொருளெனவும் பாஞ்சராத்திரர்கூறுதலால் ‘அரியதத்துவமையைந்தின்பேதமு-மரபினாடினர்’ என்றார்.()

வேறு.

ஆவிக ளனைத்து மாகி யருவமா யுருவ மாகி
மூவகை யியற்கைத் தான மூலகா ரணம தாகுந்
தேவர்க டேவன் யோகின் செயன்முறை காட்டு மென்னி
லேவர்கள் காமங் கன்றித் தொன்மைபோ லிருக்கு நீரார்.

இ—ள்: ஆவிகள் அனைத்தும் ஆகி—எல்லாவுயிர்களுமாகி, அருவம் ஆய்— அருவமாகி, உருவம் ஆகி— உருவமுமாகி, மூவகை இயற்கைத்து ஆன மூலகாரணமது ஆகும்—பிரமா விஷ்ணு உருத்திரர் என மூவகைப்படுமியல்பினையுடைய முதற்காரணமுமாய்நின்ற, தேவர்கள் தேவன்— தேவத்தலைவராகியசிவபெருமான், யோகின் செயல் முறை காட்டும் என்னில்—யோகச்செயலின்முறைமையைக்காட்டிக்கொண்டிருப்பரேயாயின்—காமம் கன்றி தொன்மைபோல் இருக்கும் நீரார் ஏவர்கள்—காமமிகுந்து முன்போற்புணர்ச்சியின்பமனுபவித்திருக்கத்தக்கவர் யாவர்? எ—று.

அனைவருமவர்போல் யோகியராயினரென்பதாம்.

சரம் அசரம் என்னும் இருவகைப் பிரபஞ்சமுமாயென்பார் ‘ஆவிகளனைத்துமாகி’ எனவும், பக்குவான்மாக்களாகிய விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னுமூவகையினருள் விஞ்ஞானகலர்க்கு அருவமாயும் பிரளயாகலர்க்குஞ்சகலர்க்கும் உருவமாயும் நின்றருள்செய்பவரென்பார் ‘அருவமாயுருவமாகி’ எனவும், அபக்குவான்மாக்களுக்குப் பக்குவமெய்துங்காறும் படைத்தன்முதலாகிய முத்தொழில்களையு

ம் மும்மூர்த்திகளாய்நின்றியற்றியும்அவரின் மேலாய்விளங்குமுழுமுதற்கடவுளென்
பார் 'மூவகையியற்கைத்தானமூலகாரணமதாகுந்தேவர்கடேவன்' எனவும், அத்தகை
ய கடவுள் ஆன்மாக்களுக்குச் சுகதுக்கங்களையூட்டுங்கருத்திலராய் யோகிருப்ப, அவ
ர்வயமின்றித் தம்வயமாகச் சிற்றின்பத்தை நுகரவல்லாரொருவருமிலரென்பார் 'தே
வர்கடேவன்யோகின்செயன்முறைகாட்டுமென்னி- லேவர்கள்காமங்கன்றித்தொன்
மைபோலிருக்குநீரார்' எனவுங்கூறினர்.

ஆவிகளனைத்துமாய்நிற்றலை "நிற்பனநடப்பனயாவுநேர்ந்திடிற்- பொற்புறுச
டையவனுருவம்போலுமால்" என வாயுசங்கிதையும் "வானாகிமண்ணாகிவளியாகியொளி
யாகி-யூனாகியுயிராகி" எனத்திருவாசகமும் "ஏகநாயகனெவ்வுயிர்களுந்தானேயென்ப
தும்மன்பினுக்கெளிய-னாகியதிறனுங்காட்டுவானடிப்பட்டு"எனத்திருவிளையாடற்புராண
முங்கூறுதலானும், விஞ்ஞானகலர்க்கு அருவமாயும் பிரளயாகலர்க்குஞ் சகலர்க்கும்
உருவமாயுந்தோன்றி அருள்செய்தலை "நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலமொன்
றினையு-மங்நிலையே யுண்ணின் றறுத்தருளிப்-பின்னன்பு-மேவா விளங்கும் ப்ரளயா கல
ருக்குத்- தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப்- பூவலயந்-தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்
போல-முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை-அன்னவனுக்-காதிகுணம்" என்னும்
போற்றிப்பஃறொடையானும், மும்மூர்த்திகளாய்நிற்றலை முன்னர்ப்பதினான்காஞ்செ
ய்யுளுரையிலெடுத்துக்காட்டிய செய்யுளானும், மூலகாரணனென்பதை "உண்மைநூ
லுணர்ந்தருள் கூடுஞ்- செம்மையோ ரெல்லாம் விடமிடற் றடக்கித் தேவரைப் புரந்து
யர் குணங்கண்-மும்மையுங் கடந்த முதல்வனே யெவர்க்கு மூலகாரணமெனத் தெளி
வார்' என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானுமுணர்க. (௭௫)

ஊழ்வினை நெறியான் முன்ன மொருபெரு வேள்வி யாற்றித்
தாழ்வினை யடைந்த தக்கன் றன்புடை யிருந்தோர் தம்பாற்
சூழ்வினை யெச்ச முற்று மருத்தியே தொலைத்துத் தொல்லை
வாழ்வினை யருள நாதன் மனத்திடை நினைந்தா னன்றே.

இ—ள்: முன்னம்—முற்காலத்தில், ஊழ் வினை நெறியால்—பிராரத்தகன்
மவசத்தால், ஒரு பெரு வேள்வி ஆற்றி-(சிவனையின்றி) ஒரு பெரிய யாகத்தைநடாத்
தி, தாழ்வினை அடைந்த தக்கன் தன் புடை இருந்தோர் தம்பால்— அதனால் இழிவை
ப்பெற்ற தக்கனிடத்து இணங்கியிருந்ததேவர்களிடத்து, சூழ் வினை எச்சம் முற்றும்-
தொடர்ந்தபாவசேடமுழுமையும், அருத்தி தொலைத்து-அநுபவிப்பித்துமுடித்து, தொ
ல்லை வாழ்வினை அருள—பழையசுகவாழ்வைக்கொடுக்கும்படி, நாதன் மனத்திடை நி
னைந்தான்—சிவபெருமான் (தமது)திருவுள்ளத்தில் நினைத்தார் எ—று. (௭௬)

சூரெனு மவுணர்க் காற்றல் புரிந்ததுஞ் சுரர்கள் யாருஞ்
சார்வருந் திறத்தா னீசன் றவத்தருக் குணர்வு காட்டி
யாருயி ரெவைக்கு மின்ன லாக்கிய வாறுந் தூக்கிற்
பேரருண் முறையே யன்றிப் பிறிதொரு செயலு மன்றால்.

இ—ள்: ஈசன்—சிவபெருமான், சூர் எனும் அவுணர்க்கு ஆற்றல் புரிந்த
தும்—சூரபன்மனென்னும் அசுரனுக்கு வரங்கொடுத்ததையும், சுரர்கள் யாரும் சார்
வு அரும் திறத்தால்—தேவர்கள்யாவரும் அணுகுதற்கரியதன்மையாக, தவத்தருக்கு
உணர்வு காட்டி—சனகாதிமுனிவர்களுக்கு ஞானபோதத்தைக்காண்பித்து, ஆர் உயிர்
எவைக்கும் இன்னல் ஆக்கியவாறும் தூக்கில்—அரிய ஆன்மாக்களனைத்திற்குந் துன்
பத்தைஉண்டாக்கிய தன்மையையும் ஆராயுங்கால், பேர் அருள் முறையே அன்றி பி
றிது ஒருசெயலும் அன்று-மிக்ககருணைமுறையேயாமன்றிவேறோர்திறமுமன்று எ-று.

கன்மசேடத்தை நுகர்வித்துத்தொலைக்குங் கருணையேயாமென்றபடி. (எஎ)

முனிவருக் குணர்வு காட்டு மோனத்தை முதல்வ னீங்கிப்
பனிவரை யணங்கை மேவிற் படைப்பயன் முற்று மன்னோர்க்
கினியொரு குமரன் றோன்றிற் சூர்கிளை யனைத்தும் பொன்றுந்
துனியுறு முலக மெல்லாந் தொன்மைபோ லுய்யு மாதோ.

இ—ள்: அயன்—பிரமனே, முதல்வன்—முத்தற்கடவுளாகிய சிவபெருமான், முனிவருக்கு உணர்வு காட்டும் மோனத்தை நீங்கி—சனகாதிமுனிவர்களுக்கு ஞானபோதத்தைக்காண்பிக்கின்ற மோனநிலையைத்தவிர்ந்து, பனிவரை அணங்கை மேவின்—இமையமலையரசனதுமகளைமணம்புரியின், படைப்பு முற்றும்—படைப்புத்தொழில்சித்திபெறும், அன்னோர்க்கு இனி ஒரு குமரன் தோன்றில் சூர் கிளை எனைத்தும் பொன்றும்-அவர்கட்கு இனி ஒருகுமாரன்பிறந்தாற் சூரபன்மனதுசுற்றமுழுதும் இறக்கும், துனி உறும் உலகம் எல்லாம் தொன்மை போல் உய்யும்—துயரமெய்தியஉலகங்களெல்லாம் முன்போல உய்திபெறும் எ—று.

விநாயகர் வீரபத்திரர்முதலிய குமாரர்கள் முன்னர் அவதரித்திருத்தலின் 'இனியொருகுமரன்றோன்றில்' என்றார். (எஅ)

அத்திற முற்று மாறொன் றறைகுவ னகிலந் தன்னி
லெத்திறத் தருமால் கொள்ள வெய்திடுங் காமன் றன்னை
யுய்த்திடின் முனிவர் தங்கட் குணர்வுசெய் மோன நீங்கிச்
சத்தியை மணந்து சேயைத் தந்திடு மெந்தை யென்றான்.

இ—ள்: அ திறம் முற்றுமாறு ஒன்று அறைகுவன்— அத்தன்மை முடிவுபெறும்பொருட்டு ஒருபாயத்தைக்கூறுவேன், அகிலம் தன்னில் எ திறத்தரும் மால் கொள்ள எய்திடும் காமன் தன்னை உய்த்திடின்— உலகத்திலுள்ளாரெவரும்மயங்கும்படி அம்பையெய்கின்ற மன்மதனை ஏவினால், எந்தை— எம்பரமபிதாவாகிய சிவபெருமான், முனிவர் தங்கட்கு உணர்வு செய் மோனம் நீங்கி— சனகாதி முனிவர்களுக்குப் போதிக்கின்ற மோனநிலையைத்தவிர்ந்து, சத்தியை மணந்து— உமாதேவியாரைத் திருமணஞ்செய்து, சேயை தந்திடும் என்றான்—குமாரரைத்தோற்றுவிப்பாரென்று கூறினார் (திருமால்) எ—று. (எகூ)

பதுமபீ டிகையோ னன்ன பரிசுதேர்ந் துவகை யெய்தி
யிதுசெயன் முறையே யெந்தா யேற்றன புகன்றா யென்ன
வதுபொழு தவனை நோக்கி யச்சுத னமலன் றன்பாற்
மதனனை விளித்து வேண்டி விடுத்திநீ வல்லை யென்றான்.

இ—ள்: பதும பீடிகையோன் அன்ன பரிசு தேர்ந்து—தாமரைப்புஷ்பாசனராகிய பிரமதேவர் அத்தன்மையையுணர்ந்து, உவகை எய்தி—மனமகிழ்ந்து, எந்தாய்-எம்பரமபிதாவே!, இது செயல் முறையே-(தேவரீர்கூறிய) இதனைச்செய்வதுதக்கதே, ஏற்றன புகன்றாய் என்ன—இயைந்தனவற்றைக்கூறினீர் என்றுகூற, அச்சுதன் - விஷ்ணுமூர்த்தி, அது பொழுது அவனை நோக்கி—அச்சமயத்தில் அப்பிரமதேவரைப்பார்த்து, நீ மதனனை விளித்து வேண்டி—நீ மன்மதனையழைத்து (உதவிபுரியுமாறு) வேண்டுதல்செய்து, அமலன் தன் பால் வல்லை விடுத்தி என்றான்-சிவபெருமானிடத்துவிரைவாக அனுப்புதியென்றுகூறினார் எ—று. (அ0)

என்னலு மலரோ னுள்ளத் திசைவுகொண் டெழுந்து மாயன்
பொன்னடி வணக்கஞ் செய்து விடைகொடு புலவ ரோடு
மன்னொடு மங்க ணீங்கி மனோவதி யதன்பாற் சென்று
தன்னக ரடைந்து கஞ்சத் தவிசின்வீற் றிருந்தா னன்றே.

இ—ள்: என்னலும்—என்று திருமால்கூறுதலும், மலரோன்—தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர், உள்ளத்து இசைவு கொண்டு எழுந்து—மனத்திற்சம்மதமுற்று எழும்பி, மாயன் பொன் அடி வணக்கம் செய்து—திருமாலினுடைய பொன்மயமாகிய திருவடிகளை நமஸ்கரித்து, விடை கொடு—அநுமதிபெற்றுக்கொண்டு, புலவரோடும் மன்னொடும் அங்கண் நீங்கி—தேவர்களுடனும் தேவத்தலைவனாகிய இந்திரனுடனுங்கூட அவ்விடத்தினின்று நீங்கி, மனோவதி அதன் பால் சென்று—மனோவதிநகரத்திற்போய், தன் நகர் அடைந்து—தனதுகோயிலுட்புகுந்து, கஞ்ச தவிசின் வீற்றிருந்தான்—தாமரைமலராசனத்தில் வீற்றிருந்தார் எ—று. (அக)

மேருப்படலம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௪௯௧.

---

## காமதகனப்படலம்.

இது காமனது தகனத்தைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது. காமன்-மன்மதன். தகனம்-எரிதல்.

### இப்படலப்பொழிப்பு.

பிரமதேவர் மனோவதிசேர்ந்தபின் மன்மதனை வரும்படி நினைப்ப, அவன் உடனேவந்து அவரைப்பணிந்து 'ஸ்வாமீ! தேவரீர் சிறியேனைச்சிந்தித்தகாரணம்யாது' என்று வினவினன். பிரமதேவர் 'அன்பனே! நீ திருக்கைலாசகிரியிற்சென்று, பூங்கணைகளையெய்து, சிவபெருமான் யோகநிலையினின்றுநீங்கித் தேவியை மணமியற்றுமாறு செய்துவருகுதி' என்றனர். மன்மதன் உடனே தனதிருகைகளாலுஞ் செவிகளைப்பொத்திச் சிவசிவ என்றுச்சரித்து, பிரமதேவரைநோக்கி, 'ஸ்வாமீ! மற்றையோர்களைப்போல அவரைமயக்குதலரிது. என்னுழிநடப்பது அவரருள்கொண்டே. அவரருளில்லாவிடில் ஒருசெயலுங்கூடாது. அவரோடெதிர்த்தார் யாவரும் அழிவெய்தினரன்றி உய்ந்ததில்லையே. யான் எதிர்ப்பினுய்வதெப்படி' என்று பற்பலநியாயங்கள்கூறி மறுத்தனன். பிரமதேவர் பின்னும் 'அன்பனே! சிவனருளின்றியொன்றும் நிகழ்வதில்லை. நீ யோகநிலையையகற்றுமாறுசெல்வதும் அவரருளே. எங்கள் இடரைத்தீர்க்குமாறு இரங்கி இவ்வுதவியைச்செய்' என்று பல நீதிகள் கூறி வேண்டினர். பின்னும் மன்மதன்மறுக்க, பிரமதேவர் சாபமிடமுயன்றனர். மன்மதன், இவரது சாபமேற்றுவருந்துவதினும் சிவனையெதிர்த்துச்சாதலே தக்கதென்றுதுணிந்து, பிரமதேவரிடம் விடைபெற்றுத் தனதூர்புகுந்து, யோர்க்கோலம்புனைந்து, பிரியாதுடன்வரும் மனைவியுடன் கயிலைசேர்ந்து, அங்குள்ள பறவைகளும் மிருகங்களும் புணர்ச்சியைவிரும்புமாறு பாணங்களையேவிநின்றனன். நந்திதேவர் அதுகண்டு சிறிதுரப்பினர். உடனே அப்பாணங்களெல்லாம் பறவைகள்மேலும் மிருகங்கள்மேலுஞ்செல்லாது பயனற்று ஆகாயத்திற்போயின. மன்மதன் அதுகண்டு திருநந்திதேவரையணுகிப்பணிந்து தான்வந்

தகாரணத்தையுணர்த்தி, உட்புகுதற்கநுமதிசெய்யுமாறு வேண்ட, அத்திருநந்திதேவர் மேற்றிசைக்கோபுரவாயிலாற் செல்லுதியென்றுவிடுத்தனர். மன்மதன் அவ்வாறே சென்று சிவபிரான் மோனநிலையில் வீற்றிருப்பதைக்கண்டுஅஞ்சி மெய்சோர்ந்துவில்லைக் கீழேதவறவிட்டு விழுந்து, பின்னர் இரதிதேவி தெளிவிக்க ஒருவாறு தெளிந்தெழுந்து, தனக்கிவ்வாறுவிபத்துநேர்ந்ததேயென்று துயருற்று, 'நடந்தவாறுநடக்க யான் எண்ணிவந்தகருமத்தைச்செய்வேன்' என்று துணிந்து, கீழேவிழுந்த வில்லையெடுத்துச் சிவனையணுகி, மலர்க்கணைகள்தொடுத்துஏவினன். சிவபிரான் சிறிதே அவனைப் பார்த்தனர். பார்த்தவுடன் அவரது நெற்றிக்கண்ணினின்றுதோன்றிய அக்கினியினால் மன்மதன் எரிந்து நீறாயினன். உடனின்ற இரதிதேவி ஆற்றாளாய்ப்பெருந்துயர்கொண்டு பலவாறுபுலம்பினள் என்பதாம்.

இந்திரன் வானவ ரீட்டமோ டேகி
முந்துறு கஞ்ச முகட்டிடை யுற்றோ
னைந்திற னாகிய வாசுக வில்வேள்
வந்திடு மாறு மனத்தி னினைந்தான்.

இ—ள்: இந்திரன் வானவர் ஈட்டமொடு ஏகி—இந்திரனோடுந் தேவர்கூட்டத்தோடும்போய், முந்து உறு கஞ்ச முகட்டு இடை உற்றோன்-முதன்மைபொருந்தியதாமரைமலர்ப்பொகுட்டின்மீது வீற்றிருந்த பிரமதேவர், ஐ திறன் ஆகிய ஆசுக வில் வேள் வந்திடுமாறு—ஐந்துவகையாகிய புஷ்பபாணங்களையும் கருப்புவில்லையுமுடையமன்மதன் முன்வரும்படி, மனத்தில் நினைந்தான்—தன்மனத்தில் நினைத்தார் எ—று.

ஆசுகம்-விரைவிற்செல்வது. (௧)

நினைந்திடு கின்றுழி நீனிற மாயோன்
முனந்தரு கின்ற முரண்டகு வில்வேண்
மனந்தனி லுன்னு மலர்ப்பக வன்முன்
னினந்தரு சூழலொ டிம்மென வந்தான்.

இ—ள்: நினைந்திடுகின்றுழி—இவ்வாறு நினைத்தபொழுது, நீல் நிற மாயோன் முனம் தருகின்ற முரண் தகு வில் வேள்—கருநிறத்தையுடைய திருமால் முற்காலத்திற் பெற்றருளிய வலிமைபொருந்திய கருப்புவில்லையுடைய மன்மதனானவன், மனந்தனில் உன்னும் மலர் பகவன் முன்—மனத்தின்கண்ணேசிந்தித்த தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர்க்குமுன்னாக, இனம் தரு சூழலொடு இம் என வந்தான்—கூட்டமாகிய பரிவாரங்களுடன் விரைவில்வந்தான் எ—று.

நீல்-கடைக்குறை. முனம்-தொகுத்தல். இம்-விரைவுக்குறிப்பு. (௨)

மாமறை யண்ணன்முன் வந்து பராவித்
தாமரை நேர்தரு தாடொழு தென்னை
நீமன மீது நினைந்ததெ னென்னாக்
காமன் வினவ வயன்கழ றுற்றான்.

இ—ள்: காமன்—மன்மதனானவன், மா மறை அண்ணல் முன் வந்து பராவி—பெருமைபொருந்திய வேதங்களையுணர்ந்த பிரமதேவர்க்குமுன்னாக வந்து துதித்து, தாமரை நேர்தரு தாள் தொழுது—செந்தாமரைமலர்போன்ற பாதங்களைக்கைதொழுது; நீ என்னை மனமீது நினைந்தது என் என்னா வினவ—ஸ்வாமீ! தேவரீர் சிறியேனை மனத்திற் சிந்தித்தகாரணம்யாதென்று கேட்ப, அயன் கழறுற்றான்— பிரமதேவர் சொல்லத்தொடங்கினார் எ—று. (௩)

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவநின் வாளிக டூவி
யங்குறை மோன மகற்றினை யின்னே
யெங்கள் பொருட்டினி யேகுதி யென்றான்.

இ—ள்: கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின் மங்கையை மேவ— கங்காநதியைத் திருச்சடையிலணிந்த நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் மலையரசனது மகளைத் (திருமணஞ்செய்து) சேரும்பொருட்டு, எங்கள் பொருட்டினில்—எங்கள் காரணமாக, நின் வாளிகள் தூவி—உனது புஷ்பபாணங்களைச்செலுத்தி, அங்கு உறை மோனம் அகற்றினை-அவ்விடத்தில் வீற்றிருக்கின்ற மோனநிலையைத்தவிர்த்து, இன்னே ஏகுதி என்றான்—இப்பொழுதே மீண்டுவருகுதியென்று கூறினார் எ—று.

வேதனிவ் வாறு விளம்பிய கூற்றுந்
தீதுறு பொங்கழல் செய்யவள் சேயோன்
காதிடை யேநெறி யாக்கடி திற்போ
யேதமி லுள்ள மெரித்ததை யன்றே.

இ—ள்: வேதன் இவ்வாறு விளம்பிய கூற்று ஆம் தீது உறு பொங்கு அழல்—பிரமதேவரிவ்வாறு கூறிய சொல்லாகிய கொடிய சொலிக்கின்ற அக்கினியானது, செய்யவள் சேயோன் காதிடையே நெறியா கடிதில் போய்— இலக்குமிகுமாரனாகிய மன்மதனது காதத்துவாரமே வழியாக விரைவிற்சென்று, ஏதம் இல் உள்ளம் எரித்தது—குற்றமில்லாத (அவனது) மனத்தை எரித்தது எ—று.

சிவபத்தியுடையவனாகிய மன்மதனுக்குச் சிவத்துரோகமமைந்த பிரமன் சொல் அக்கினிபோற் கொடிதாயிற்றென்பதாம். ஐகாரம் சாரியை. (௫)

கிட்டி யரன்செயல் கேடுசெ யென்னுங்
கட்டுரை யேவரு காமனு ளெங்குஞ்
சுட்ட தெனிற்பிறை சூடி யவன்மெய்
யட்டிடு கின்றது மற்புத மாமோ.

இ—ள்: கிட்டி அரன் செயல் கேடுசெய் என்னும் கட்டுரையே—அணுகிச் சிவபெருமானது செயலைக் கெடுப்பாயாகவென்றுகூறிய கொடுமொழிதானே, வரு காமன் உள் எங்கும் சுட்டது எனில்—அங்குவந்துநின்றமன்மதனது மனமுழுதையுஞ்சுட்டதாயின், பிறைசூடி அவன் மெய் அட்டிடுகின்றதும் அற்புதமாமோ—பாலசந்திரனைச் சடாமுடியிற்றரித்தசிவபெருமான் அவனதுமேனியை எரிப்பதும் ஒரு அதிசயமாகுமா? (ஆகாதே) எ—று.

அட்டிடுகின்றது-வினைமுற்றுத்தொழிற்பெயர். பின்னையஉம்மை- இழிவுசிறப்பு. (௬)

இத்திற மாமல ரேந்த லியம்பக்
கைத்துணை கொண்டிரு கன்னமும் வல்லே
பொத்தி யினைந்து புராந்தக னுமஞ்
சித்தச வேளுரை செய்தன னம்பா.

இ—ள்: மா மலர் ஏந்தல் இத்திறம் இயம்ப—பெரிய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர் இவ்வாறுகூற, சித்தசவேள்— திருமாலின்மனத்திற்றோன்றிய

மன்மதன், கைத்துணை கொண்டு இருகன்னமும் வல்லே பொத்தி— இரண்டுகைக ளாலும் இரண்டுகாதுகளையும்விரைவில்மூடி, இனைந்து—இக்கொடுமொழியையும் யான்கேட்கலாயிற்றேயென்று)வருந்தி, புராந்தகன் நாமம் உரைசெய்தனன் —(அப்பாவந் தீருமாறு) முப்புரங்களையெரித்த சிவபெருமானது திருநாமத்தை உச்சரித்தான் எ-று.

சிவசிவ என்றுச்சரித்தான் என்க. சித்தசவேள்-இருபெயரொட்டு. அம்மா-வியப்பிடைச்சொல். (௭)

ஈட்டுறு பல்பவ மெய்துவ தோர்சொற்
கேட்டன னென்று கிலேசம தாகி
வாட்டிய மென்மலர் போலணி மாழ்கிப்
பூட்டுவி லண்ணல் புகன்றிடு கின்றான்.

இ—ள்: பூட்டு வில் அண்ணல்—நாண்பூட்டிய வில்லையுடைய மன்மதன், ஈட்டு உறு பல் பவம் எய்துவது ஓர் சொல் கேட்டனன் என்று—கூட்டமாகிய பலபாவங்களுஞ் சார்தற்கேற்ற ஒரு கொடுமொழியைக் கேட்டேனேயென்று, கிலேசமது ஆகி—மனத்துன்பங்கொண்டு, வாட்டிய மெல் மலர் போல் அணி மாழ்கி—(தீயில்) வாட்டப்பெற்ற மெல்லியபூவைப்போல அழகுகுன்றப்பெற்று, புகன்றிடுகின்றான்— (இவற்றைக்)கூறுகின்றான் எ—று.

ஈட்டு-முதனிலைத்தொழிற்பெயர்; இங்ஙனமன்றி, பலநாளாகப் பலதீவினைகளைச்செய்தலாலீட்டும் பலபாவத்தைக் கேட்டமாத்திரத்தேயெய்துவிக்குஞ் சொல்லெனப்பொருள்கூறினுமாம். (௮)

வேறு.

வன்கண் ணருமா சறுகாட் சியர்பா
னன்கண் ணுறினுய் யுநலம் புகல்வா
ருன்கண் ணுறினித் தவறோ தினையா
லென்கண் ணடிகட் கிலையோ வருளே.

இ—ள்: மாசு அறு காட்சியர் பால் வன்கண்ணர் நன்கு அண்ணுறினும்—குற்றமற்ற அறிவினையுடைய சிட்டரிடத்துத் தறுகண்மையையுடைய துட்டர் நன்றாக அணுகினாலும், உய்யும் நலம் புகல்வார்— உய்தற்கேற்ற நன்மதியையேபோதிப்பர் (அங்ஙனமாகவும்), உன்கண் உறின்—தேவரீரிடத்துச் சிறியேன்வர, இ தவறு ஓதினை—இந்தக்கொடுமொழியைக்கூறினீர் (ஆதலால்), அடிகட்கு என்கண் அருள் இலையோ—தேவரீருக்குச் சிறியேனிடத்தில் அன்பில்லையா எ—று.

சற்சனர் தம்மைச்சார்ந்த துர்ச்சனர்க்கும் நன்மதியையேபோதிப்பராகவும், தேவரீரையொருபெரியவரென்றுநம்பிவந்த எனக்கு இக்கொடுமொழியைக்கூறினீரே, அங்ஙனங்கூறும்படி யான் யாது தீங்குசெய்தேன் என்பதாம்.

உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. உறின் செயவெனெச்சத்திரிபு. அமைவுடனென்பார் 'நன்கு' என்றார். (௯)

வன்னப் புவிமங் கையைமா மலர்மேற்
பொன்னைப் பிறரைப் புணர்வுற் றிடுவான்
கன்னற் சிலைபூங் கணைகொண் டமர்செய்
தென்னத் தனைவென் றிசைகொண் டிலனே.

இ—ள்: வன்ன புவி மங்கையை—அழகிய பூமிதேவியையும், மா மலர் மேல் பொன்னை-பெரியதாமரைமலரில்வீற்றிருக்கின்ற இலக்குமியையும், பிறரை புணர்வுற்றிடுவான்-மற்றையபெண்களையும் புணருப்படி, கன்னற்சிலை பூங்கணை கொண்டு அமர் செய்து—கருப்புவில்லையும் புஷ்பபாணங்களையுங்கைக்கொண்டு பொருது, என் அத்தனை வென்று இசை கொண்டிலனே—எனதுபிதாவாகிய திருமாலைவென்று (யான்) கீர்த்திபெற்றிலேனு (பெற்றேனே) எ—று.

பிறரென்றது சலந்தரன்மனைவி கோபிகாஸ்திரீகள்முதலாயினோரை. (௧0)

வெள்ளைக் கமலத் தியைமெய் யுறவுந்
தெள்ளுற் றணிசெய் ததிலோத் தமைபா
லுள்ளப் புணர்வுற் றிடவும் முனையான்
பிள்ளைச் சமர்செய் திசைபெற் றிலனே.

இ—ள்: வெள்ளை கமலத்தியை மெய்யுறவும்—வெண்டாமரைமலராசனியாகிய சரசுவதியைப்புணரவும், அணி தெள்ளுற்று செய்த திலோத்தமை பால் உள்ளப்புணர்வு உற்றிடவும்—அழகுகளைத்திரட்டிச்சிருட்டித்த திலோத்தமையினிடத்து மனவிகாரமுண்டாகவும், உனை யான் பிள்ளைச்சமர் செய்து—உம்மோடு நான் சிறுபோர்செய்து, இசை பெற்றிலனே—கீர்த்திபெற்றிலேனு (பெற்றேனே) எ—று.

எட்பிரமாணமாக அழகுகளை எடுத்தெடுத்துத்திரட்டிச்செய்த சிறந்தபெண்ணாதலால் 'தெள்ளுற்றணிசெய்ததிலோத்தமை' என்றார். உனை-உருபுமயக்கம். (௧௧)

சீர்பெற் றிடுசெந் திருவைத் திருமான்
மார்பிற் குடியா யுறவைத் திலனோ
கார்பெற் றவிழிக் கலைமங் கையையுன்
னேர்பெற் றிடுநா விலிருத் திலனோ.

இ—ள்: சீர் பெற்றிடு செம் திருவை— சிறப்புப்பொருந்திய சிவந்தநிறத்தினையுடைய இலக்குமியை, திருமால் மார்பில் குடியாய் உற வைத்திலனோ-விஷ்ணுமூர்த்தியினுடைய நெஞ்சிற்குடியாயிருக்கும்படி இருத்திலேனு? (இருத்தினேனே), கார்பெற்ற விழி கலைமங்கையை-கருநிறம்பொருந்திய கண்களையுடைய சரசுவதியை, உன் னேர்பெற்றிடு நாவில் இருத்திலனோ—உமது அழகுபொருந்திய நாக்கில்வைத்திலேனு? (வைத்தேனே) எ—று. (௧௨)

தண்ணின் றகுழற் சசியென் றுரைசெய்
பெண்ணின் றலையுற் றிடுபெற் றியலால்
விண்ணின் றலைவற் குளமெய் முழுதுங்
கண்ணென் றிடுபல் குறிகண் டிலனோ.

இ—ள்: தண் நின்ற குழல் சசி என்று உரைசெய் பெண்ணின்றலை உற்றிடு பெற்றி அலால்—குளிர்ச்சிபொருந்திய கூந்தலையுடைய இந்திராணியென்றுசொல்லப்படுகின்றபெண்ணினிடத்துப் புணர்தலேயன்றி, விண்ணின் தலைவற்கு-சுவர்க்கலோகாதிபனாகிய இந்திரனுக்கு, உள மெய் முழுதும்—சரீரமெங்கும், கண் என்றிடு பல் குறி கண்டிலனோ--கண்ணென்றுசொல்லப்படுகின்ற பலபெண்குறிகளை உண்டாக்கிலேனு (உண்டாக்கினேனே) எ—று.

பேரழகியாகிய இந்திராணிமனைவியாயிருப்பவும் பிறபெண்களைக் கரவிற்புணர்ந்து கடுஞ்சாபமேற்கச்செய்தேன் என்பதாம்.

உளமெய் முழுதும்-மெய் உள முழுதும்=சரீரமாகவுள்ள இடமெங்கும். சூற்கொண்டமுகில்போற் பசுமையார்ந்தகூந்தலென்பார் 'தண்ணின்றகுழல்' என்றார்.

### இந்திரன் சாபமேற்றசரித்திரம்.

முன்னொருகாலத்தில் இந்திரன் கௌதமமுனிவரது மனைவியாகிய அகலிகையைப் புணரவிரும்பி ஓரிரவிற் கோழிவடிவுகொண்டு சென்று கூவ, முனிவர் நித்திரைவிட்டெழுந்து நித்தியகருமங்கள் செய்யும்பொருட்டுப்போயினர். உடனே இந்திரன் கௌதமமுனிவருருக்கொண்டு அவர் மீண்டுவருவதுபோல் வார்த்தையாடி அகலிகையுடன் சேர்ந்திருக்கையில், புலரிக்காலமணுகாமையால், முனிவர் மீண்டுவந்தனர். அப்பொழுது இந்திரன் பூனையுருக்கொண்டு ஓட, முனிவர் உண்மையுணர்ந்து அவனைநோக்கி 'ஒருயோனியைவிரும்பி நம்மனைவியின் கற்பையழித்தனையாதலின் உன்மேனியில் ஆயிரம்யோனி அமையக்கடவது' என்றுசபித்து, கொழுநனன்றென்பதைக்குறிப்பானுணர்ந்தும் அதற்கிணங்கியிருந்தமையால், தன்மனைவியையுங் கல்லாகும்படி சபித்தனர் என்பதாம். (கரு)

விசையுற் றிடுசெங் கதிர்மே லவர்கீழ்த்
திசையுற் றவராங் கொருசே யிழைபோ
லிசையுற் றிடுபா கனிடைப் புணரா
வசையுற் றிடுபான் மைமயக் கிலனே.

இ—ள்: விசை உற்றிடு செம் கதிர் மேலவர்—விசையாகச்செல்லுகின்ற சிவந்தகிரணங்களையுடைய சூரியனாகியமேலவரும், கீழ்த்திசை உற்றவர்—கிழக்குத்திக்கிற்குத்தலைவனாகிய இந்திரனும், ஒரு சேயிழை போல் இசையுற்றிடு பாகனிடை புணரா—ஒரு பெண்போலவடிவெடுத்துவந்த சாரதியாகிய அருணனோடுசேர்ந்து, வசையுற்றிடு பான்மை மயக்கிலனே— வசைபெறும்படி மயக்காதுவிட்டேனோ (மயக்கினேனே) எ—று.

பெண்வடிவுகொண்ட ஆடவனோடும்புணர்ந்த இழிவைவிளக்குதற்குப் பன்மைப்பாற்படுத்திக்கூறினார்.

### சூரியனும் இந்திரனும் அருணனைப்புணர்ந்தசரித்திரம்.

முன்னொருகாலத்திற் சுவர்க்கலோகத்தில் இந்திரனதுசபையில் அரம்பையர்கள்செய்யும் நடனத்தைக்காணவிரும்பிச்சென்ற சூரியனது தேர்ப்பாகனாகிய அருணன், அச்சபையிற்றானிருந்து காணுதற்கிடமின்மையாற் பெண்வடிவுகொண்டு அரம்பையர்குழுவினின்று பார்க்க, இந்திரன் அப்பெண்வடிவத்தைக்கண்டு காமமுற்று விருத்தமுடிந்தவுடன் புணர்ந்தான். பின்பு அருணன் முன்னைவடிவுகொண்டு சூரியனிடத்துச்செல்ல, சூரியன் அங்குநிகழ்ந்தவைகளை வினவியறிந்து 'அவ்வடிவத்தை இப்பொழுதுங்கொள்ளுதி' என்றனன். அருணன் அவ்வாறே பெண்வடிவுகொள்ளச்சூரியனும் மையலுற்றுப்புணர்ந்தனன் என்பதாம். (கஎ)

கதனத் தொடுவந் துகலந் தவர்பா
லிதநட் புறுமா மதியென் கணையான்
மதனத் தொடுதே சிகன்மா தையுறாப்
புதனைத் தருபான் மைபுணர்த் திலனே.

இ—ள்: கதனத்தொடு வந்து கலந்தவர் பால் இத நட்பு உறும் மா மதி-துரிதமாகவந்து புணர்ந்தவர்களிடத்திற் பிரியமான நேசத்தைப்பொருந்துகின்ற பெரிய சந்திரன், என் கணையால்—நானேவிய அம்புகளால், மதனத்தொடு தேசிகன் மாதை உறு—காமவிகாரத்துடன் குருபத்தினியைப்புணர்ந்து, புதனை தரு பான்மை புணர்த்தி

லனோ—புதனைப்பெறும்படியாக மயக்கிலேனோ? (மயக்கினேனே) எ—று.

பிரிந்தாரைவருத்துஞ் சந்திரனையே, குருபத்தினியைப் புணரும்படி மயக்கினேனாயின் பிறரை மயக்குவது அரிதா என்பதாம்.

சந்திரன் வியாழபகவானிடத்திற்கல்விகற்குங்காலத்தில் அவரது மனைவியாகிய தாரையென்பாளைக் கூடிப்புதனென்னும் புத்திரனைப்பெற்றனன். பின்பு வியாழபகவான்அதனையறிந்து அச்சந்திரனை க்ஷயரோகத்தால் வருந்தும்படி சபித்தனரென்பது சரித்திரம். (கரு)

முற்றே தின்மறைத் தொகைமு தறிவாற்
கற்றே தாமுணர்ந் திடுகாட் சிபெறு
நற்றே வர்கள்யா ரையுநா ரியர்தங்
குற்றே வல்செயும் படிகூட் டிலனோ.

இ—ள்: ஏது இல் மறைத்தொகை முற்று—குற்றமில்லாத வேதக்கூட்டங்கள் முழுவதையும், முது அறிவால் கற்று—பேரறிவினாற்படித்து, ஏதும் உணர்ந்திடு காட்சி பெறும்— எல்லாவற்றையுமறிந்த அறிவினையுடைய, நல் தேவர்கள் யாரையும்—நல்லதேவர்களெல்லோரையும், நாரியர் தம் குற்றேவல் செயும்படி கூட்டிலனோ—பெண்களது சிற்றேவலைச்செய்யும்படி சேர்த்திலேனோ? (சேர்த்தேனே) எ—று.

ஏதம் ஏது எனக்கடைக்குறையாயிற்று. (கசு)

மறைதே ரும்வசிட் டன்மரீ சிமிகக்
குறிதா முனியத் திரிகோ தமனல்
லறிவா லுயர்கா சிபனா தியராந்
துறவோர் தமதாற் றலொலைத் திலனோ.

இ—ள்: மறை தேரும் வசிட்டன்—வேதங்களையுணர்ந்த வசிட்டமுனிவரும், மரீசி—மரீசிமுனிவரும், மிக குறிது ஆம் முனி—மிகவுங்குறுமையாகிய வடிவத்தையுடைய அகத்தியமுனிவரும், அத்திரி—அத்திரிமுனிவரும், கோதமன்—கௌதமமுனிவரும், நல் அறிவால் உயர் காசிபன்—நல்ல உணர்வினாற்சிறந்த காசிபமுனிவரும், ஆதியர் ஆம் துறவோர் தமது—முதலியவர்களாகிய முனிவர்களது, ஆற்றல் தொலைத்திலனோ—சிலையைக்கெடுத்து வென்றிலேனோ? (வென்றேனே) எ—று.

ஆதியரென்றது விசுவாமித்திரர் முதலியவர்களை. (கஎ)

மன்னான் மரபுற் றிடுமா னவரைப்
பின்னா கியமும் மைகொள்பே தகரை
மின்னார் கண்மயக் கினில்வீட் டிலனோ
வென்னா ணைகடந் தவர்யா ருளரே.

இ—ள்: மன் நால் மரபு உற்றிடும் மானவரை—நிலைபெற்ற நால்வகைச்சாதிகளிலுதித்த மானுடர்களையும், பின் ஆகிய மும்மை கொள் பேதகரை— அவரிற் பின்வந்த மூவகைப்பட்ட பேதமுடையவர்களையும், மின்னார்கள் மயக்கினில் வீட்டிலனோ—பெண்மயக்கத்தில் அகப்படுத்தாது விட்டேனோ? (அகப்படுத்தினேனே) என் ஆணை கடந்தவர் யார் உளர்—எனது கட்டளையைமீறியவர்கள் யாரிருக்கின்றார்கள்? (ஒருவருமிலர்) எ—று.

நான்மரபுற்றிடுமானவரென்றது அந்தணர் அரசர் வணிகர் சூத்திரர் என்பவர்களை. மும்மைகொள்பேதகரென்றது அநுலோமர் பிரதிலோமர் சங்கரர் என்பவர்களை. அவருள் அநுலோமராவார்:—அந்தணன் தன்னிற்றாழ்ந்த அரச வணிக சூத்திரசா

திப்பெண்களையும், அரசன் றன்னிற்றாழ்ந்த வணிக சூத்திரசாதிப்பெண்களையும், வணிகன் றன்னிற்றாழ்ந்த சூத்திரசாதிப்பெண்ணையும் மணஞ்செய்துபெற்ற பிள்ளைகள் அறுவருமாம். பிரதிலோமராவார்:- பிராமணப்பெண் அரச வணிக சூத்திரசாதி ஆடவரையும், அரசப்பெண் வணிக சூத்திரசாதி ஆடவரையும், வணிகப்பெண் சூத்திரசாதி ஆடவனையும் மணஞ்செய்துபெற்ற பிள்ளைகள் அறுவருமாம். சங்கரராவார்:—முற்கூட்டிய அநுலோமருள்ளும் பிரதிலோமருள்ளும் ஆணும்பெண்ணுங்கூடிப்பெற்ற பிள்ளைகளாம். மும்மைகொள் பேதகரிவரேயென்பதை "உத்தமகுலத்துகாற்பெருங்குடியுமுயர்ந்தவுமிழிந்தவுமயங்க-வைத்தவுமானபுறக்குடிமூன்றும்" எனத்திருவிளையாடற்புராணங் கூறுதலானுமறிக. (௧௮)

அறைபெற் றிடுமித் திறமா னவெலா
முறைபெற் றிடுமென் னின்முடிந் திடுமோ
பிறைபெற் றிடுகின் றபெருஞ் சடையெம்
மிறைபெற் றிடுசத் தியியற் றிடுமே.

இ—ள்: அறைபெற்றிடும் இ திறம் ஆன எலாம்—இதுகாறும் எடுத்தோதப்பட்ட இச்செயல்களெல்லாம், முறை பெற்றிடும் என்னில் முடிந்திடுமோ—முறையைப்பெற்றுக்கொண்ட என்னால் நடைபெறுமா? (நடைபெறாது), பிறை பெற்றிடுகின்ற பெரும் சடை எம் இறை பெற்றிடு சத்தி இயற்றிடும்—பாலசந்திரனையணிந்த பெரிய சடாமுடியையுடைய எமதுகடவுளாகிய சிவபெருமான் பெற்றுள்ள சத்தியேசெய்தருளும் எ—று.

அவராணையைச்சிரமேற்கொண்டொழுகும் என்னால் முடியாது. என் யசமானராகிய அவராலே முடிவுபெறும் என்பதாம்.

முறை-அரசன் தனதரசியற்குவேண்டிய பலவகைத்தொழில்களையுமியற்றுமாறு பலரைத்தெரிந்து நியோகித்தல்போன்ற நியோகிப்பு. "சிவமெனும்பொருளுமாதிசத்தியொடுசேரினெத்தொழிலும்வல்லதாம்" என்றபடி சிவம் சத்தியோடுகூடியே தொழிலியற்றுதலின் 'இறைபெற்றிடுசத்தியியற்றிடுமே' என்றார். (௧௯)

மாலே முதலா கியவா னவர்தம்
பாலே யடல்வா கைபடைப் பதலான்
மேலே நதிசூ டியமே லவன்மேற்
கோலே வினன்வென் றிடல்கூ டுமதோ.

இ—ள்: மாலே முதல் ஆகிய வானவர்தம் பால்— விஷ்ணுவே முதலாகிய தேவர்களிடத்தில், அடல் வாகை படைப்பது அலால்—வலிய வெற்றியைப்பெறுவதன்றி, மேலே நதி சூடிய விண்ணவன் மேல்—திருச்சடையிலே கங்காநதியையணிந்தமுதற்கடவுளாகிய சிவபெருமான்மீது, கோல் ஏவினன் வென்றிடல் கூடுமதோ—பாணங்களைப் பிரயோகித்துவெல்லுதல் இயலுமா? (இயலாதே) எ—று.

உலகமனைத்தையுமொருகணத்திலழித்துவிடுமெனும்படி பெருகிய கங்காநதியைச்சிறிதாக்கி அடக்கிச்சடையிலணிந்த மகத்துவமுடைய சிவபிரானை, ஏனையதேவரைவென்றதுபோல வெல்லுதல் கூடாதென்பதாம். மாலே மேலே என்பவற்றில் ஏகாரம்-தேற்றம். (௨0)

ஐதா கியசீர் கொடவன் முறைசெய்
நொய்தா னவர்போ லநுவன் றனையால்
வெய்தா மழலா கியமே லவன்மே
லெய்தா லுமென்வா ளிகளெய் திடுமோ.

இ—ள்: ஐது ஆகிய சீர் கொடு—அற்பமாகிய கீர்த்தியைவகித்து, அவன் முறை செய் தொய்து ஆனவர் போல நுவன்றனை—அவரது பணியைச்செய்கின்ற அற்பதேவர்களைப்போல (நினைத்துக்) கூறினீர், வெய்து ஆம் அழல் ஆகிய மேலவன் மேல் எய்தாலும்—கொடிய அக்கினிமயமாகிய [அந்த] முதற்கடவுளின்மேற் பிரயோகித்தாலும், என்வாளிகள் எய்திடுமோ— எனது புஷ்பபாணங்கள் (அவரை) அணுகுமா? (அணுகாதே) எ—று. (௨௧)

கையுந் நகையுங் கதிரார் விழியு
மெய்யுந் தழலாம் விமலன் றனையா
னெய்யும் படிசென் றிடினிவ் வுயிர்கொண்
டுய்யுந் திறமு முளதோ வுரையாய்.

இ—ள்: கையும்—திருக்கரமும், நகையும்—திருநகையும், கதிர் ஆர் விழியும்—ஒளிபொருந்திய திருக்கண்ணும், மெய்யும்—திருமேனியும், தழல் ஆம் விமலன் தனை-அக்கினிமயமாகப்பெற்ற மலரகிதராகிய சிவபெருமானை, யான் எய்யும்படி சென்றிடின்—யான்(அம்பினால்)எய்யும்படிபோனால், இ உயிர் கொண்டு உய்யும் திறமும் உளதோ—இந்தஆன்மாவை (உடலில்) வைத்துக்கொண்டு உய்ந்துவருந்தன்மையுமுண்டா?, உரையாய்—கூறக்கடவீர் எ—று.

இவற்றுளொருதழலானிறந்துபடுவதன்றியுய்வில்லையென்பதாம். சிவபிரானது கைமுதலியவற்றில் அக்கினிபொருந்துதலை "தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே-தீத்தானு முன்றன் சிரிப்பிலே-தீத்தானுன்-மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா வுன்னையிந்தத் தையலா ளெப்படிச்சேர்ந் தாள்" என்னுந்தனிவெண்பாவானுமுணர்க. உய்யுந்திறமும் என்பதில் உம்மை-எச்சம். (௨௨)

பற்றோ டிகலற் றபரம் பொருளை
யெற்றோ மயல்செய் குவதீ சனையு
மற்றோ ரெனநின் னின்மதித் தனையாற்
சற்றோ வவனாற் றறவிர்த் திடவே.

இ—ள்: பற்றோடு இகல் அற்ற பரம்பொருளை மயல்செய்குவது எற்று—விருப்பும் வெறுப்புமில்லாத பரம்பொருளாகிய சிவபெருமானை மயக்குவதெப்படி?, ஈசனையும் மற்றோர் என நின்னில் மதித்தனை—சிவபெருமானையும் ஏனைய அற்பதேவர்களைப்போல உமதுமனத்தில்நினைத்தீர், அவன் ஆற்றல் தவிர்த்திட சற்றோ-அவரதுவலிமை ஒழிக்கப்படுதற்கு இலகுவானதா? (அன்றே) எ—று.

விருப்புவெறுப்பற்றவரும் முடிவிலாற்றலுடையவருமாதலின், தேவியானை விரும்புவித்தலும் வெல்லுதலுங்கூடாதென்பதாம்.

ஈசனையும் என்பதில் உம்மை-உயர்வுசிறப்பு. தவிர்த்திட என்பது படுவிகுதிதொக்கவினையெச்சம். இன்னோரன்னவற்றை நயக் என்பர் வடநூலார்.

சிவபெருமான் விருப்புவெறுப்பற்றவரென்பதை, முன்னர்க்கடவுள்வாழ்த்தில் மூன்றாஞ்செய்யுளானும் அதனுரையிற்காட்டிய 'பேறிழவின்பம்' என்னுஞ்செய்யுளானும், முடிவிலாற்றலுடையவரென்பதை "முடிவிலாற்றலை" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானுமறிக. (௨௩)

சூறா வளிவை கியசூ ழலின்வா
யேறா வொருபூ ளையெதிர்ந் துளதே
னீறா டியமெய் யுடைநின் மலன்மேல்
வீறாய் வினையேன் பொரமே வுவனே.

இ—ள்: சூறுவளி வைகிய சூழலின்வாய்—சுழல்காற்று ஓயாதுவீசுகின்றஇடத்தில், ஒரு பூளை எறு எதிர்ந்துளதேல்-ஒருபஞ்சுசென்று எதிருன்றிநின்றதுண்டாயின், வினையேன்—பாவியேன், வீறு ஆய்-இறுமாப்புற்று, நீறு ஆடிய மெய் உடை நின்மலன் மேல்—விபூதியை எங்கும்பூசிய திருமேனியையுடைய மலரகிதராகிய சிவபிரான்மீது, பொரமேவுவன்-போர்செய்யச்செல்வேன் எ—று.

சுழல்காற்றின்முன் பஞ்சு எதிர்க்கலாற்ருததுபோல, யானுஞ் சிவபிரான்முன் எதிர்க்கலாற்றேன் என்பதாம். (௨௪)

ஆறுற் றிடுசெஞ் சடையண் ணலுடன்
மாறுற் றவருண் டெனின்மற் றவர்தா
மூறுற் றனரல் லதுளத் துயர்கொண்
டிறுற் றனரல் லதிருந் துளர்யார்.

இ—ள்: ஆறு உற்றிடு செம் சடை அண்ணல் உடன் மாறு உற்றவர் உண்டு எனில்—கங்கைநதிதங்கிய சிவந்தசடைமுடியினையுடைய சிவபிரானோடு எதிர்த்தவர்(சிலர்) உளரென்பீரேல், அவர்—அவர்கள், ஊறு உற்றனர்—ஊறுபாடெய்தினோரும், அல்லது உளத் துயர் கொண்டு ஈறு உற்றனர் அல்லது— அத்தன்மையரன்றேல் மனத்துன்பங்கொண்டிறந்தவரும் ஆயினரன்றி, இருந்துளர் யார்-வெற்றிபெற்றிருந்தவர்கள்யாவர்? (ஒருவருமில்லையே) எ—று.

வெற்றிபெற்றூர்யாருமுளராயினன்றேசிறியேனையனுப்பத்தகும்என்பதாம். ஊறுற்றூர்-இராவணன்முதலாயினோர். ஈறுற்றூர்- முப்புரத்தசுரர்முதலாயினோர். (௨௫)

இந்நா ரணனா தியர்யா வர்களு
மந்நா ளமலன் பணியாற் றிடலு
முன்னா வவர்சிந் தனைமொய்ந் நகையா
லொன்னார் புரமட் டதுணர்ந் திலையோ.

இ—ள்: இ நாரணன் ஆதியர் யாவர்களும்—இந்தத்திருமால்முதலியதேவர்களெல்லோரும், அ நாள் அமலன் பணி ஆற்றிடலும்-அக்காலத்தில் மலரகிதராகிய சிவபிரானது ஏவற்ருெழிலைச்செய்தலும், அவர் சிந்தனை முன்னா—(அச்சிவபிரான்) அவர்களதுமனக்கருத்தையறிந்து, மொய் நகையால் ஒன்னார் புரம் அட்டது உணர்ந்திலையோ—புன்சிரிப்பினுற்பகைவரது முப்புரங்களையும் எரித்தழித்தமையை (நீர்) அறிந்திலீரா? (அறிந்திருப்பீரே)எ—று.

மொய்நகை=முகிழ்த்தசிரிப்பு. இதனியல்பை "முகைமொக்குளுள்ளதுநாற்றம்போற்பேதை-நகைமொக்குளுள்ளதொன்றுண்டு" என்னுந்திருக்குறளானுணர்க. அவர்சிந்தனையென்றது-அசுரரைச்சங்கரிக்கவேண்டுமென்பதை. கழிந்தகற்பங்களின்மாண்டாரல்லர், இற்றைஞான்று என்னைக்கயிலைக்கனுப்புமாறு நமக்குப்பணித்தவரேயென்பான்'இந்நாரணன்'எனவும், சிவபத்தியற்றூரென்பான் 'ஒன்னார்' எனவுங்கூறினன். திரிபுரத்தசுரர்சரித்திரம் முன்னர்க்காட்டப்பட்டது. (௨௬)

எந்தா யருளென் றொரிளங் குமரன்
வந்தா தியையேத் தலும்வை துகினக்
கொந்தா ரழல்போல் வருகூற் றுவனை
யந்தாள் கொடுதைத் ததறிந் திலையோ.

இ—ள்: ஒரு இளம் குமரன் வந்து—ஒருசிறுபாலகன்அடைக்கலம்புகுந்து, எந்தாய் அருள் என்று—எம்பரமபிதாவே காத்தருளுமென்று, ஆதியை ஏத்தலும்—மு

தற்கடவுளாகிய சிவபெருமானைத் துதிக்க, வைது சின கொந்து ஆர் அழல் போல் வரு கூற்றுவனை—கடுஞ்சொற்கூறி அழற்சியையுடைய கூட்டமாகிய நிறைந்த அக்கினியைப்போல (உக்கிரரூபத்துடன்) வந்தயமனை, அம் தாள் கொடு உதைத்தது அறிந்திலையோ—(அச்சிவபெருமான்) அழகிய இடத்திருவடியினால் உதைத்தருளியதன்மையை (நீர்) அறிந்திலீரா? (அறிந்திருப்பீரே) எ—று.

ஒரிளங்குமரன் என்றது-மார்க்கண்டேயமுனிவரை. இவர்சரித்திரம் மேல் அசுரகாண்டத்து மார்க்கண்டேயப்படலத்தாலுணரநிற்றலின் ஈண்டுவிரித்திலம். (௨௭)

முன்னைப் பகனீ யுமுகுந் தனுமாய்ப்
பன்னற் கரிதா யபரம் பொருள்யா
மென்னச் சிவனெய் தியிகழ்ந் தவுனைச்
சென்னித் தலைகொண் டதுதேர் கிலையோ.

இ—ள்: முன்னை பகல்—முன்னொருகாலத்தில், நீயும் முகுந்தனும் ஆய்—நீரும் (தந்தையாகிய) விஷ்ணுமூர்த்தியுமாக, பன்னற்கு அரிது ஆய பரம்பொருள் யாம் என்ன— சொல்லுதற்கரிய பரப்பிரமம் நாமேயென்று (ஒருவர்க்கொருவர்) வாதுசெய்ய, சிவன் எய்தி—(அவ்விடத்துச்) சிவபெருமான் எழுந்தருளிவந்து, இகழ்ந்த உனை சென்னித்தலை கொண்டது தேர்கிலையோ—நிந்தித்த உமது நடுத்தலையைக்கிள்ளியதன்மையை (நீர்) அறியீரா (அறிவீரே) எ—று.

நும்மைப்போலத்தருக்கியதிருமால்தருக்குநீங்கிப்பணிந்தபின்னும் பணியாத நும்மையென்பான் 'இகழ்ந்தவுனை' எனவும், நாற்றிசைத்தலைகளினுஞ் சிறந்ததென்பான் 'சென்னித்தலை' எனவுங்கூறினான்.

உச்சித்தலையைக் கிள்ளியது வைரவக்கடவுளாயிருப்பவும், சிவபெருமானோடபேதமாதல்பற்றிச் சிவன்செயலாகக்கூறினான். இச்செய்யுளினும் பிற்செய்யுளினுங் குறிக்கப்பட்ட சரித்திரங்களை மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற்காண்க.

அடன்மே வுசலந் தரனா தியராய்ப்
படிமே லுளதோர் பஃறா னவர்தா
முடிவா ரரனோ டுமுரண் டிடலுங்
கெடுமா றுபுணர்த் ததுகேட் டிலையோ.

இ—ள்: அடல் மேவு சலந்தரன் ஆதியராய் படிமேல் உளது ஓர் பல் தானவர்—வலிமைபொருந்திய சலந்தராசுரன்முதலாகப் பூமியிலுள்ள பலஅசுரர்கள், முடிவார்— இறக்கும்விதியினராய், அரனோடு முரண்டிடலும்— சிவபெருமானோடு பகைத்தலும், கெடுமாறு புணர்த்தது கேட்டிலையோ—(அச்சிவபெருமான்) அவர்களிறக்கும்படி சூழ்ச்சிசெய்ததை (நீர்) கேள்வியுற்றிலீரா? (கேள்வியுற்றிருப்பீரே) எ-று. ()

வீடெய் துறுநின் மகன்வேள் விநிலத்
தூடெய் தினர்யா வருமொப் பிலரன்
மாடெய் தியவீ ரனின்மா னமொரீஇப்
பாடெய் தியபுன் செயல்பார்த் திலையோ.

இ—ள்: வீடு எய்துறும் நின் மகன் வேள்விநிலத்து ஊடு எய்தினர் யாவரும்—அழிதலைப்பெற்ற உமது குமாரனாகிய தக்கனதுயாகசாலையிற் சென்றோர் அனைவரும், ஒப்பு இல் அரன் மாடு எய்திய வீரனில்—சமானமில்லாத சிவபெருமானிடத்துதித்த வீரபத்திரக்கடவுளால், மானம் ஒரீஇ—மதிப்பையிழந்து, பாடு எய்திய புன் செ

யல் பார்த்திலேயோ—அழிவடைந்த எளியசெய்கையை (நீர்) கண்டிலீரா? (கண்டிருப்பீரே) எ—று.

இச்சரித்திரத்தை மேல் தக்ஷகாண்டத்து யாகசங்காரப்படலத்திற்காண்க. ()

அண்டா தவகந் தையொடா ழியின்வாய்
விண்டா னவரச் சுறமே வவிட
முண்டா னிகழ்கங் கையையோ ரணுவிற்
கொண்டா னவன்வன் மைகுறிக் கிலேயோ.

இ—ள்: விண்டு ஆனவர் அச்சுற—திருமாலும் பயப்படும்வண்ணம், ஆழியின்வாய்—திருப்பாற்கடலில், அண்டாத அகந்தையொடு மேவு விடம்— அடங்காத தருக்கினோடுதோன்றிய நஞ்சை, உண்டான்—(அமுதுபோல்)அயின்றார், நிகழ் கங்கையை ஓர் அணுவில் கொண்டான்— பெருகிப்பாய்ந்த கங்காநதியை ஓரணுவளவாக அடக்கிச் (சடையில்) அணிந்தார், அவன் வன்மை குறிக்கிலேயோ— (அத்தகைய சிவபெருமானது)வலிமையை (நீர்) அறியீரா? (அறிவீரே) எ—று.

அண்டாதவகந்தை-பெருந்தருக்கு. உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. (௩௧)

தரியா வுளமால் கொடுதன் னிகழு
மரியோ டுகைம்மா வையடற் புலியை
யுரியா மிசைபோர் வையுடுக் கையெனப்
பரியா வரனுற் றதுபார்த் திலேயோ.

இ—ள்: தரியா உளமால் கொடு தன் இகழும் அரியோடு— அடங்காத மனமயக்கத்தைக்கொண்டு தம்மை நிந்தித்த (திருமாலாகிய) நரசிங்கத்தையும், கைம்மாவை—(கயாசுரனாகிய) யானையையும், அடல் புலியை — (தாருகவனத்திருடிகளேவிய) வலிய புலியையும், உரியா-உரித்து, மிசை போர்வை உடுக்கை என பரியா- (அத்தோல்களைத்) தம்மேற்போர்வையாகவும் ஆடையாகவும் தரித்து, அரன் உற்றது பார்த்திலேயோ-சிவபெருமானெழுந்தருளியதன்மையை (நீர்)கண்டிலீரா? (கண்டிருப்பீரே) எ-று.

நரசிங்கத்தோலையும் யானைத்தோலையும் போர்வையாகவும், புலித்தோலை ஆடையாகவுங்கொண்டனரென்க.

நரசிங்கத்தைவதைத்தசரித்திரம்:- திருமால் நரவடிவுஞ்சிங்கவடிவும்பொருந்தி நரசிங்கமெனப்பெயர்பெற்றுத் தூணினின்றுவெளிப்பட்டு, இரணியனைக்கொன்று,நகங்களால் மார்பைக்கிழித்து, குடரைப்பிடுங்கி, ஒரு துளியுதரமுங் கீழேசிந்தாவண்ணம்பருகி, அதனால்வெறிகொண்டு செருக்குற்றுத்திரிய, அதுகண்டஞ்சியோடிய தேவர்கள், கயிலையையடைந்து சிவபிரானுக்குமுறையிட்டனர். அவர், இரண்டுசிரங்களும் பெரியசிறகுகளும் கூரியநகங்களும் எட்டுக்கால்களும் பொருந்திய சரபவுருக்கொண்டு, நரசிங்கத்தைக்கொன்று, தோலையுரித்துத் தமது திருமேனியிற் போர்வையாக அணிந்து, மீண்டு கயிலைசேர்ந்தனரென்பதாம். ஏனையசரித்திரமிரண்டையும் மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற்காண்க. (௩உ)

ஓரார் தனதுண் மையையுள் ளமிசை
யாரா யினுமாற் றவகந் தைபெறின்
வாரா வவர்தம் வலிமாற் றிடுமாற்
றேராய் கொல்பரஞ் சுடர்செய் கையதே.

இ—ள்: ஆர் ஆயினும்-எத்தகையினராயினும், தனது உண்மையை ஓரார்--தமது உண்மைகளை உணராதவர்களாய், உள்ளமிசை ஆற்ற அகந்தைபெறில்—மனத்தில் மிகவுங்கர்வங்கொண்டால், வாரா—முன்வந்து, அவர்தம் வலி மாற்றிடும்—அவர்களது வலிமையையடக்குவார், பரஞ்சுடர் செய்கையது தேராய் சொல்-பரஞ்சோதிரூபராகிய சிவபெருமானது [அச்] செயலை (நீர்) அறியீரா? (அறிவீரே) எ—று.

ஓரார்-முற்றெச்சம். உண்மை-பதியிலக்கணங்கள். உம்மை-உயர்வுசிறப்பு. ()

இறுகின் றகடைப் பகலீ றிலதோர்
கறைதுன் றுமிடற் றிறைகண் ணினும்வீழ்
பொறியொன் றதனாற் பொடிபட் டிடுநீ
யறிகின் றிலையோ வகிலங் களுமே.

இ—ள்: இறுகின்ற கடைப்பகல்— அழிகின்ற ஊழிகாலத்தில், ஈறு இலது ஓர் கறை துன்றும் மிடற்று இறை கண்ணினும் வீழ் பொறி ஒன்று அதனால்— அழிவற்ற நஞ்சார்ந்த திருக்கண்டத்தையுடைய தலைவராகிய சிவபிரானது நெற்றிக்கண்ணினின்றும் விழுகின்ற ஒரு அக்கினிப்பொறியால், அகிலங்களும்பொடிபட்டிடும்—எல்லாவுலகங்களுஞ் சாம்பராகும், நீ அறிகின்றிலையோ— (இதனை) நீர் அறியீரா? (அறிவீரே) எ—று.

ஈறிலதோரிறை, கறைதுன்றுமிடற்றிறை எனத்தனித்தனி இயையும். இறுகின்ற கடைப்பகல் இறை கண்ணினும் வீழ்பொறியொன்றதனால் அகிலங்களும் பொடிபட்டிடும் என்பதை "விரித்தல கனைத்து மாக்கி வீக்குநாட் சராச ரங்கள்-பரித்துள புவன மூன்றும் பாலனேத் திரத்தீ யூட்டி-யெரித்துநீ றாக்கிப் பூசி யென்பணிந் திலங்கு சூலந்- திரித்துநின் றாடு நின்பொற் சேவடி போற்றி போற்றி" என்னும் வரதபண்டிதர்வாக்கானுமறிக. (௫௪)

இப்பெற் றியனா கியவீ சனையென்
கைப்பற் றியவிற் கொடுகந் தமலர
ரப்பிற் பொருகின் றிலனா ருயிர்மேன்
மெய்ப்பற் றிலரிச் செயல்வேண் டுவரே.

இ—ள்: இ பெற்றியன் ஆகிய ஈசனை--இத்தன்மையராகியசிவபெருமானை, என் கை பற்றிய வில் கொடு—எனதுகையிற்பிடித்த வில்லைக்கொண்டு, கந்த மலர் அப்பில் பொருகின்றிலன்— மணம்பொருந்திய புஷ்பபாணங்களாற் போர்செய்யமாட்டேன், ஆர் உயிர் மேல் மெய் பற்று இலர் இ செயல் வேண்டுவர்—அரிய உயிரினிடத்து மெய்ம்மையாகிய அன்பில்லாதவர்கள் இந்தச்செயலைச்செய்யவிரும்புவார்கள் எ-று.

அப்பு அப்பெனநின்றது. (௫௫)

மேனா ளகிலந் தரமெல் லியலா
ளானா வருடன் னையளித் தொருபாற்
றானா கவிருத் தியதற் பரனை
நானா மயல்செய் வதுநன் றிதுவே.

இ—ள்: மேல் நாள்—முற்காலத்தில், அகிலம் தர—எல்லாப்பிரபஞ்சங்களையுஞ் சிருட்டிக்கும்பொருட்டு, ஆனா அருள் தன்னை மெல்லியலா அளித்து— குறைவுபடாத திருவருளைப்பெண்ணுருவாகப்படைத்து, தானாக ஒருபால் இருத்திய தற்பரனை--தாமாக ஒருபக்கத்திலிருக்கவைத்த கடவுளை, நானா மயல் செய்வது—(அவரிடமிரந்து தொழில்பெற்ற) சிறியேனாமயக்குவது?, இது நன்று—இச்செயல் நல்லது எ—று.

நன்றென்பது குறிப்பாற்கூடாதென்னுங் கருத்தையுணர்த்திற்று. ஆகவே, சிவபிரான் தேவியை வாமபாகத்திற்கொண்டது காமத்தினலன்றாதலின் அவரையயக்குவது என்னுற்கூடாதென்பது கருத்தாயிற்று. அகிலந்தரமெல்லியலாவாளுவருடன்னையளித்தொருபாற் றனகவிருத்தியதற்பரன் என்பதை "ஏகனையாகிவைகுமெந்தைதன்னிடப்பாலான-வாகுவைநோக்குமெல்லைமற்றவணுமையாடோன்றப்-பாகமதிருத்தி" எனவும், "நாதனதருளேயெல்லாநண்ணுவித்தருளும்வண்ணம்- பேதகமாகித்தானேர்பெண்ணுருக்கொண்டுமேவும்" எனவும் மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்தில் வருவனவற்றானுமுணர்க. (௫௬)

வேறு.

என்னு மதவே ளிசையா மறுத்திடலும்
பொன்னார் கமலப் பொருட்டுத் தலைவந்த
மன்னன வேதா மனக்கவலை கொண்டுசில்போ
தூன்னு நெடிதே யுயிரா வுரைக்கின்றான்.

இ—ள்: என்னு மதவேள் இசையா மறுத்திடலும்—என்றிவ்வாறு மன்மதன் சியாயங்கூறிமறுக்க, பொன் ஆர் கமல பொருட்டு தலை வந்த மன் ஆன வேதா—அழகுபொருந்திய தாமரைமலர்ப்பொருட்டின்மேல் எழுந்தருளியிருக்கின்ற முதல்வராகிய பிரமதேவர், மனக்கவலை கொண்டு- மனத்துயர்கொண்டு, சில் போது உன்னு—சிறிதுநேரம் ஆலோசித்து, நெடிது உயிரா—பெருமூச்செறிந்து, உரைக்கின்றான்— இவ்வாறுகூறுகின்றார் எ—று.

மதவேள் இருபெயரொட்டு. கமலப்பொருட்டுத்தலைவந்த என்பதற்குத் (திருமாலின்) உந்தியங்கமலத்திற்றோன்றிய எனப்பொருள்கூறுவாருமுளர். (௫௭)

வெண்மை யறிவாற் றமைவியக்கும் விண்ணவர்பா
லண்மை யிலனாகு மண்ணலியல் கூறினையா
லுண்மை யிதுவா முவனைப் பொருவதுவு
மெண்மை யதுவோ வெவர்க்கு மரிதன்றோ.

இ—ள்: வெண்மை அறிவால் தமை வியக்கும் விண்ணவர் பால் அண்மை இலன் ஆகும் ஐயன் இயல் கூறினை-(மன்மதனே! நீ, தமக்குமிறைவர்க்குமுள்ள தாரதம்மியத்தைச்சிந்தியாது) மந்தபுத்தியினூற்றம்மைப் புகழுகின்ற தேவர்களிடத்து அணுகுதலில்லாத சிவபெருமானது இலக்கணங்களையெடுத்துச்சொல்லினை, இது உண்மை ஆம்—இது சத்தியமேயாம், உவனை பொருவதுவும் எண்மையதுவோ— அச்சிவபெருமானைப் போரியற்றிவெல்வதும் எளிதானகாரியமா?, எவர்க்கும் அரிது அன்றோ—எவர்களுக்கும் அருமையானகாரியமல்லவா! எ—று. (௫௮)

அன்ன பரிசே யெனினு மடைந்தோர்த
மின்ன லகற்று மிறையருளா லிக்கரும
முன்னின் முடியு மொழிந்தோரான் முற்றுவதோ
முன்னி னிதற்கு முதற்கா ரணநீகாண்.

இ—ள்: அன்ன பரிசே எனினும்—அவ்வாறே (அவரை வெல்வது அரிது) ஆயினும், அடைந்தோர் தம் இன்னல் அகற்றும் இறை அருளால்—தம்மைச்சார்ந்த அடியார்களது துன்பத்தைப்போக்குகின்ற சிவபெருமானது திருவருளைமுன்னிட்டு, உன்னில் இ கருமம் முடியும்—உன்னாலிக்காரியம் நிறைவேறும், ஒழிந்தோரால் முற்று

வதோ—மற்றையோர்களால் நிறைவேறக்கூடியதா? (அன்றே), முன்னின்— சிந்திக்குங்கால், இதற்கு முதற்காரணம் நீ—இச்செயலைச்செய்தற்கு முதற்காரணம் நீயேயாம் எ—று.

காமமுண்டாக்கிக் கலவிபுரிவிக்குஞ்செயலைச் சிவபிரான் உனக்கேதந்திருத்தலால் அவரையங்ஙனஞ்செய்வதும் உன்னாலாகும், பிறராலாகாதென்பதாம். காண்-முன்னிலையசை. உம்மை-உயர்வுசிறப்பு. (௩௯)

எல்லார் செயலு மிறைவ னியற்றுவதே
யல்லா திலையோ ரணுவுமசை யாதெவையு
நில்லா தருளின்றே னீயின் றவன்பாலிற்
செல்லா யுனது செயலுமவன் செய்கையதே.

இ—ள்: எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே—(நம்மனோர்) அனைவருஞ்செய்யுஞ் செயல்களெல்லாஞ் சிவன்செயலே, அல்லாது இலை— அங்ஙனமன்றி வேறில்லை, அருள் இன்றேல்-(அவரது) கருணையில்லாவிடின், ஓர் அணுவும் அசையாது-ஒருஅணுவாயினும்அசையமாட்டாது, எவையும் நில்லாது-(சராசரப்பிரபஞ்சங்கள்) யாவும் நிலைபெறமாட்டாது (ஆதலின்), உனது செயலும் அவன் செய்கையது ஏ- உன்னுடையசெயலும் அச்சிவபெருமானது செயலேயாம், நீ இன்று அவன் பாலில் செல்லாய்—நீ இற்றைஞான்று அச்சிவபெருமானிடத்து (யோகந்தவிர்க்கப்) போகுதி எ-று.

எல்லார்செயலுஞ் சிவன்செயலாதலின் உன்செயலும் அவர்செயலென்பதைத் துணிபாகக்கொண்டுசெல்லுதி என்பதாம்.

ஏகாரங்கள் தேற்றம். உம்மை, எல்லார்செயலும் எவையும் என்பவற்றில் முற்று; அணுவுமென்பதில் இழிவுசிறப்பு; உனதுசெயலுமென்பதில் எச்சம். விசுவாந்தர்யாமியாதலின் 'எல்லார்செயலுமிறைவனியற்றுவதே' என்றார். எல்லாஞ்சிவன்செயலேயென்பதை"என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே- யுன்செயலேயென்றுணரப்பெற்றேன்"என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கானும், அருளின்றேலோரணுவுமசையாது என்பதை "அவனன்றியோரணுவுமசையாது"என்னுந்தாயுமானசுவாமிகள் திருவாக்கானுமுணர்க. (௪௦)

செம்மாந்து தற்புகழுந் தேவர்குழு வும்மருள
வெம்மான் பிறன்போ லிருந்தோர் துரும்புநீஇ
யம்மாதன் செய்கை யனைத்துமெனக் காட்டினனே
நம்மாலு முற்றுஞ் சிலவென்கை நாணன்றே.

இ—ள்: செம்மாந்து தன் புகழும் தேவர் குழுவும் மருள—இறுமாப்புற்றுத் தம்மைப்புகழ்ந்த தேவர்கூட்டங்களும் அதிசயமுறும்படி, எம்மான்—எம்பெருமான், பிறன் போல் இருந்து—வேறொருவர்போல் வந்திருந்து, ஓர் துரும்பு நீஇ—ஒரு துரும்பைநாட்டி, அனைத்தும் தன் செய்கை என காட்டினன்—எல்லாச்செயல்களுந் தன் செயல்களேயென்று காண்பித்தார் (ஆதலின்), நம்மாலும் சில முற்றும் என்கை நாண் அன்றே—எங்களாலுஞ் சிலகருமம் நிறைவேறுமென்பது வெட்கமன்றோ எ—று.

அங்ஙனமாகவும் நின்செயலை அவர்செயலாகப் பாவியாததென்னையென்பது எஞ்சிநின்றது. அம்மா வியப்பிடைச்சொல். உம்மை, தேவர்குழுவுமென்பதில்-உயர்வுசிறப்பு; நம்மாலுமென்பதில்-இழிவுசிறப்பு.

சிவபெருமான் துரும்பைநாட்டி அனைத்துந் தஞ்செயலெனக்காட்டிய சரித்திரம்:—முன்னொருகாலத்திலே தேவர்களும் அசுரர்களும் யுத்தஞ்செய்தபொழுது, தேவர்களை அசுரர்கள் வென்றார்கள். பின்பு சிவபெருமானுடைய திருவருளினால் அசுரர்

களைத்தேவர்கள்வென்று, தங்கள்தங்களையே புகழ்ந்து, செருக்கி, ஒருவரோடொருவர்பிணக்குற்றார்கள். அப்பொழுது சிவபிரான் ஓரியக்கவடிவங்கொண்டெழுந்தருளிவந்து,அவர்கள் முன்னிலையில் ஒரு துரும்பைநாட்டி இறுமாந்திருந்துகொண்டு அவர்களைநோக்கி 'தேவிர்காள்! இத்துரும்பைத் துணித்தவனே அசுரரைவென்ற வீரன்' என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்டு, திசைகாவலரும் பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் பிறருந் தனித்தனி தத்தம்படைகளைத்தூண்டி, அவற்றால் அத்துரும்பை அசைக்கவுமாற்றலிலராய்ச் செருக்கழிந்தனர் என்பதாம். இதனை "எவனேனு மாக வருநா னுமாது வலியின் றளக்க லுறுவேன்-றுவளாது நம்மு னடுமித் துரும்பு துணிசெய்ய வல்ல னெவனோ-வவனே தயித்தி யரைவென்ற மீளி யறிகென் றுரைப்ப மகவா-னிவரா வெழுந்து குலிசத்தை வீசி வறிதே யிளைத்த னனரோ,———மற்றைத் திசைக்க ணுறைவோரும் வன்மை முழுதுஞ் செலுத்தி வலியி-லொற்றைத் துரும்பை யசைவிக்கு மாற்ற லிலரா யுடைந்து விடலுஞ்-செற்றந் தெழுந்த வயனார் தமாது படையைச் செலுத்த வரியு-மற்றப் படாத படைவீசி யார்ப்ப வவைகூர் மழுங்கி யனவே" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுட்களானறிக. (௪௧)

பாடுதிகழ் பாவை பல்லுயிரு மல்லனவு
மாடல்புரி விப்பா னருவுருவாய் நின்றபர
னாடி லவனையின்றி நம்மாலொன் றாகவற்றோ
வேடவிதனிலைமை யிந்நாளு மோர்ந்திலையோ.

இ—ள்: பல் உயிரும் அல்லனவும்—பலவகைப்பட்ட உயிருடைப்பொருள்களும் உயிரில் பொருள்களும், பாடு திகழ் பாவை—பெருமைவிளங்குகின்ற பாவைகளாம், ஆடல் புரிவிப்பான்-அப்பாவைகளையாட்டுவிப்பவர், அருவுருவாய் நின்ற பரன்-அருவமாகியும் உருவமாகியும் அருவுருவமாகியும் (மூத்திறப்பட) நின்ற சிவபெருமானேயாம், நாடில்—ஆராயுங்கால், அவனை இன்றி நம்மால் ஒன்று ஆக வற்றோ—அச்சிவபெருமானைத்தவிர்த்து எம்மால் ஒருசெயல்முடியத்தக்கதா? (இல்லையே), எட—அடா! [மன்மதனே!], இதன் நிலைமை இ நாளும் ஓர்ந்திலையோ—இதனியற்கையை இந்நாள்காறும் (நீ) அறிந்திலாயா? (அறிந்திருப்பாயே) எ—று.

நீ அவராலாட்டப்படுபவனாதலின் நின்செயலுமவர்செயலேயாமென்பதுகுறிப்பு. ஏட ஈண்டு உயர்ந்தோர் தாழ்ந்தோரைவிளித்தலில்வந்தது.

அருவுருவாய் என இரட்டுறமொழிந்தமையால் அருவுருவாய்நிற்றலுங்கொள்ளப்பட்டது; படவே, அருவம்நான்கும் உருவம்நான்கும் அருவுருவமொன்றுமாக நவந்தருபேதமாய்நடிப்பவரென்பது விளங்கிற்று. அருவநான்காவன:- சிவம் சத்தி நாதம் விந்து என்பன. உருவம்நான்காவன:—மகேசுரன் உருத்திரன் திருமால் பிரமன் என்பன. அருவுருவம் ஒன்றாவது சதாசிவம். இம்மூத்திறத்தொன்பதுவர்க்கங்களானவேடம்பூண்டு சிவபிரானொருவரே நடித்தலை "சிவன்சத்திநாதம்விந்துசதாசிவன்றிகழுமீசன்-உவந்தருளுருத்திரன்றன்மாலயனொன்றினொன்றாய்ப்-பவந்தருமருவநாலிங்குருவநாலுபயமொன்று-நவந்தருபேதமேகநாதனேநடிப்பனென்பர்" என்னுஞ் சிவஞானசித்தியார்ச்செய்யுளானுணர்க.

பாடுதிகழ்பாவைபல்லுயிருமல்லனவும் ஆடல்புரிவிப்பானருவுருவாய்நின்றபரன் என்பதை "ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே" என்னுந்திருநாவுக்கரசுஸ்வாமிகள்தேவாரத்தானும்,"காட்டவனல்போலுடல்கலந்துயிரையெல்லா-மாட்டுமொருநட்டுவனெம்மண்ணலெனவெண்ணாய்"என்னுந் திருவாதவூரடிகள்புராணச்செய்யுளானுமறிக. (௪௨)

கையம்பு பூட்டிக் கருப்புச் சிலைகோட்டி
யெய்யும் படிவழிக்கொண் டேகா யிறுதியிலா
வையன் றனைநீ யதுவு மவனருள் காண்
மெய்யங் கதற்கேது மேனாளே கண்டனம்யாம்.

இ—ள்: கருப்பு சிலை கோட்டி—கருப்புவில்லை வளைத்து, கை அம்பு பூட்டி—கையிலெடுத்த புஷ்பபாணங்களை (அவ்வில்லிற்) றொடுத்து, இறுதி இலா ஐயன் தனை எய்யும்படி—அழிவற்ற சிவபெருமானை எய்து மயக்கும்படியாக, நீ வழிக்கொண்டு ஏகாய்— நீ வழிப்பட்டுச்செல்வாய், அதுவும் அவன் அருள்—அவ்வாறுசெய்தலும் அச்சிவபிரானது கருணையேயாம், மெய்-இது சத்தியம், அங்கு அதற்கு ஏது மேனாளே யாம் கண்டனம்—அதன்காரணத்தை முன்னாளிற்றானே யாம் தெரிந்துள்ளேம் எ—று.

ஓர்புதல்வரைத்தோற்றுவிப்போமென முன்னைநாளில் இந்திரனுக்குச் சிவபிரான் அருளினரென்பதையுள்ளிட்டு 'அங்கதற்கேதுமேனாளே கண்டனம்யாம்' என்றார். உம்மை-எச்சம். (சரு)

ஈங்கிதுவு மன்றி யெவரேனுந் தம்மடங்காத்
தீங்கு பெறினுதவி செய்யென் றிரந்திடலு
மாங்கொருவன் செய்யா ததுமறுத்துத் தன்னுயிரைத்
தாங்க லுலக நடைதனக்குத் தக்கதுவோ.

இ—ள்: ஈங்கிதுவும் அன்றி—இதுவுமல்லாமல், எவரேனும் தம் அடங்கா தீங்குபெறின்— எத்தகையினராயினும் தமக்கடங்காத இடரைப்பெற்றால், உதவிசெய் என்று இரந்திடலும்- (அவர் அப்பொழுது அதனைத்தீர்த்தற்குவேண்டிய)உதவியைச்செய்யென்று மெலிய, ஒருவன்—எவனாயினுமொருவன், அது செய்யாது மறுத்து தன் உயிரை தாங்கல்—அவ்வுதவியைச்செய்யாமல் மறுத்துவிட்டுத் தனதுயிரைப் (பொருளென்று) பேணியிருத்தல், உலகநடை தனக்கு தக்கதுவோ—உலகநீதிக்கேற்றதா? (ஏற்றதல்லவே) எ—று.

ஈங்கிது என்றது நீ மயக்கப்புகுவதும் அவரருளேயென முற்செய்யுளிற் கூறியதை. எனினும் என்பது ஏனும் என விகாரமாயிற்று. உம்மை, ஈங்கிதுவும் என்பதில் எச்சம்; எவரேனுமென்பதில் உயர்வுசிறப்பு. உலகமென்றதுயர்ந்தோர்மேற்று. தம் மாற்பரிகரித்தற்கரிய பெருந்தீங்கென்பார் 'தம்மடங்காத்தீங்கு' என்றார். (சச)

என்னானு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே.

இ—ள்: யாதொருவன்—எவனாவதொருவன், யார்க்கு எனினும்—எத்தகையினார்க்காயினும், என்னானும் ஓர் உதவி—யாதாயினுமொரு உதவி, தன்னால் முடிவது எனில்—தன்னால் நிறைவேறத்தக்கதாயின், தானே முடித்தல் தலை-(அவர்கேட்குமுன் அதனைத்) தானாகவேசெய்துமுடிப்பது உத்தமமாம், சொன்னால் முடித்தல் இடை ஆகும்-கேட்டபின்செய்துமுடிப்பது மத்திமமாகும், சொல்லுகினும் பல் நாள் மறுத்து புரிதல் கடைப்பான்மையதே—கேட்டவழியும் பலநாளாகமறுத்துப் (பின் அவரதுவலாற்காரத்தினாற்) செய்வதுஅதமமேயாம் எ—று.

ஆயினுமென்பது ஆனுமெனவிகாரமாயிற்று. உம்மை, என்னானும் யார்க்கெனினும் என்பவற்றில்-உயர்வுசிறப்பு; சொல்லுகினும் என்பதில் இழிவுசிறப்பு. "சொ

ல்லாமலேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்-சொல்லியுஞ் செய்யார் கயவரே" என்றார் ஔவையாரும், (சரு)

ஏவ ரெனினு மிடருந் றனராகி
யோவில் குறைபொன் றுளரே லதுமுடித்தற்
காவி விடினு மறனே மறுத்துளரேற்
பாவ மலது பழியு மொழியாதே.

இ—ள்: எவர் எனினும்—எத்தகையினராயினும், இடர் உற்றனர் ஆகி—துன்பமுற்றவர்களாய், ஓ இல் குறை ஒன்று உளரேல்—தீர்தலில்லாத ஒரு குறையையுடையவர்களானால், அது முடித்தற்கு ஆவி விடினும் அறனே—(அறிந்தோர்) அக்குறையைத்தீர்த்தற்குத் (தம்) உயிரை விட்டாலும் புண்ணியமேயாம், மறுத்துளரேல்—(தமக்கிடருண்டாமென்றஞ்சி அதனைச்செய்ய) மறுத்தார்களேயாயின், பாவம் அலது பழியும் ஒழியாது— பாவமேயன்றி நிந்தையும் (ஒருகாலும்) நீங்காது சூழும் எ—று.

உம்மை, ஏவரெனினும் என்பதில் உயர்வுசிறப்பு; ஆவிவிடினும் என்பதில் இழிவுசிறப்பு. ஓ முதனிலைத்தொழிற்பெயர். (சசு)

உய்கை பொருளா வொருவர்க்கு மோருதவி
செய்கை யிலனேற் சிறியோன் கழித்தபகல்
வைக லதுவோ வறிதே யவன்வாழ்க்கை
பொய்கை மலர்ந்தகொட்டி போலும் பொலிந்துளதே.

இ—ள்: உய்கை பொருளா—தான் உய்ந்திருப்பதையே பொருளென்றெண்ணி, ஒருவர்க்கும் ஓர் உதவி செய்கை இலனேல்-(ஒருவன்)ஒருவருக்காயினும் ஒருஉதவியைச் செய்யாதொழிவானாயின், சிறியோன் கழித்த பகல் வைகலதுவோ—அந்த அற்பன் போக்கிய நாள் வாணாளாகுமா?(ஆகாது), வறிதே—வீணாளேயாம், அவன் வாழ்க்கை பொலிந்துளது—அவனுடைய வாழ்வு பொலிவுபெற்றிருத்தல் (எதுபோலுமெனில்), பொய்கை மலர்ந்த கொட்டி போலும்—தடாகத்திற்பூத்த கொட்டி மலர்போலும் எ—று.

கொட்டிமலர் தாமரை முதலியவற்றைப்போலப் பொலிவினையுடையதாய்ப் பொய்கையின்மலர்ந்திருப்பினும், அது எவர்க்கும்பயன்படாமையின் வீணாவதுபோல, பிறர்க்குதவிசெய்யாதான் அங்ஙனஞ்செய்வாரோடொப்பவாழினும் ஒருவர்க்கும்பயன்படாது வீணாவன் என்பதாம்.

உம்மை இழிவுசிறப்பு. கொட்டி-ஆகுபெயர். (சஎ)

அந்நா ரணனோ டமர்முற் றியமுனியைப்
பொன்னா டருளும் புலவோ ரிறையிரப்ப
வென்னாரு மென்பு விருத்திரனுக் காவுதவித்
தன்னா ருயிர்விட்ட தன்மைதனைக் கேட்டிலையோ.

இ—ள்: அ நாரணனோடு அமர் முற்றிய முனியை—அந்த விஷ்ணுமூர்த்தியுடன் போர்செய்துவென்ற ததீசிமுனிவரை, பொன்னாடு அருளும் புலவோரிறை இரப்ப—சுவர்க்கலோகத்தை அரசியற்றுகின்ற தேவேந்திரன் யாசிக்க, விருத்திரனுக்காவென் ஆரும் என்பு உதவி—(அம்முனிவர் அவனது பகைவனாகிய) விருத்திராசுரனைக்கொல்லும்பொருட்டாகத் (தமது)முதுகிற்பொருந்திய எலும்பைக்கொடுத்து, தன் ஆர் உயிர் விட்ட தன்மைதனை கேட்டிலையோ— தமது அரிய உயிரைவிட்டிறந்ததன்மையை (நீ இதுகாறும்) கேட்டிலாயா? (கேட்டிருப்பாயே) எ—று.

அகரச்சுட்டு ஈண்டுயர்வுகுறித்துநின்றது.

ததீசிமுனிவர் விஷ்ணுவைவென்ற சரித்திரம்:—ததீசிமுனிவர் குபன் என்னும் அரசனோடு நெடுங்காலம் நண்புபூண்டு அளவளாவிவருநாளில் ஒருநாள், அவ்வரசன் முனிவரைநோக்கி, அந்தணர் அரசர் என்னுமிருபாலாருட்சிறந்தவர் யாவரென்று வினவ, முனிவர் 'அந்தணரே சிறந்தவர்' என்று விடையிறுத்தனர். அரசன் அதனை மறுத்து 'அரசரே சிறந்தவர்' என்றனன். அதுகேட்டமுனிவர் சகியாது அரசனையடிக்க, அரசன் அவர்மேல் வச்சிராயுதத்தைவீசினன். வீச, முனிவர் இறந்தவரையெழுப்பும்வன்மையுடையராகிய சுக்கிரபகவானைத் தியானித்துக்கொண்டு அப்படையாலிருதுணியாகிமாண்டனர். உடனே சுக்கிரபகவான்வந்து அவர்யாக்கையைப் பொருத்தியெழுப்பி 'முனிவனே! நீ காஞ்சிபுரத்தில் இட்டசித்திதீர்த்தத்தில் முழுகி இட்டசித்தீசரைப்பூசிப்பின் வச்சிரயாக்கைபெறுவாய். அவ்வாறுபெற்றுவந்து இவ்வரசனைவெல்லுதி' என்றுகூறிப்போயினர். முனிவர் அவ்வாறே மூழ்கிப்பூசித்து வச்சிரயாக்கைபெற்றுவந்து, ராசசபையிலிருந்த குபனென்பவனை இடத்தாளாலுதைத்தனர். உதைக்க, அவ்வரசனுக்காய் விஷ்ணுமூர்த்திவந்தெதிர்த்தனர். முனிவர் அவரையும்பொருதுவென்றனர் என்பதாம். இதன்விரிவைக் காஞ்சிப்புராணத்து இட்டசித்தீசப்படலத்திற்காண்க.

ஷை முனிவர் இந்திரனுக்கு முதுகெலும்புகொடுத்தசரித்திரம்:—முன்னொருகாலத்தில் விருத்திரனென்னும் அசுரனுடன் போர்செய்திளைத்த இந்திரன் பிரமதேவரிடஞ்சென்று 'ஸ்வாமீ! விருத்திராசுரனுடன் பொருது தோல்வியடைந்தேன். அவனைக்கொல்வதற்குபாயம்யாது' என்றுவினவ, பிரமதேவர் அவனையும் அழைத்துக்கொண்டு வைகுண்டஞ்சேர்ந்து விஷ்ணுமூர்த்திக்கு அதனை முறையிட்டனர், அவர், 'இந்திரனுடையவச்சிராயுதம் மிகவும் பழையதாய்வலிகுன்றிற்று. பாற்கடல்கடைந்தகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் படைக்கலங்களைக் கையில்வைத்துக்கொண்டுநிற்பிற் கலகமுண்டாகுமென்று ததீசிமுனிவரிடம் ஒப்பித்துப்போய்ப் பின் அவற்றைப்பெற்றுக்கொள்ளாததனால் அம்முனிவர் அவைகளைவிழுங்க, அவையெல்லாம் அவரதுமுதுகெலும்புடன் ஒன்றாய்த்திரண்டு வைரமாயிற்று. அதனைப்பெற்றுப்படையாக்கினால் அசுரனைக்கொல்லுதல்கூடும்' என்றனர். உடனே இந்திரன் முனிவரிடஞ்சென்றிரப்ப, அம்முனிவர், என்னுடல் பரோபகாரமாகின்றதேயென்று மகிழ்ந்து, யோகமார்க்கத்தாலுடலைவிட்டு, விண்ணுலகடைந்தனர். பின்பு, இந்திரன் அவரதுமுதுகெலும்பையெடுத்துப் படையாக்கி, அதனால் விருத்திராசுரனைக்கொன்றனன் என்பதாம். இதன் விரிவைத் திருவிளையாடற்புராணத்து இந்திரன் பழிதீர்த்தபடலத்திற்காண்க. (௪௮)

மேலொன் றுளதோ விளம்ப வெவரெவர்க்கு
மூலந் தலைதெரியா முன்னோன் கடலெழுந்த
வாலந் தனையுண் டமரர்க் கமுதளித்த
சீலந் தனைநீ சிறிதுந் தெளிந்திலையோ.

இ—ள்: எவர் எவர்க்கும் மூலம் தலை தெரியா முன்னோன்—எத்தகையினர்க்கும் முதலுமுடிவுந்தோன்றப்பெறாத முதல்வராகிய சிவபெருமான், கடல் எழுந்த ஆலந்தனை உண்டு—பாற்கடலிற்றோன்றிய நஞ்சையுண்டு, அமரர்க்கு அமுது அளித்த சீலம் தனை—தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுத்தருளிய நன்மையை, நீ சிறிதும் தெளிந்திலையோ—நீ சிறிதாயினும் அறிந்திலாயா? (அறிந்திருப்பாயே), விளம்ப மேல் ஒன்று உளதோ—சொல்லுதற்கு இதனினும்மேம்பட்ட வேறொருதிருட்டாந்தம் இருக்கின்றதா? (இல்லையே) எ—று.

கடவுளுமே பரோபகாரங்கருதிநஞ்சுண்டனராகவும், நீ எமக்குதவிசெய்யத் துணியாததென்னே? என்பதாம். உம்மையிரண்டனுள், முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையது இழிவுசிறப்பு. (௪௯)

தேக்குஞ் சலதியிடைத் தீப்போ லெழுந்தவிடந்
தாக்கும் பொழுது தளரே லெனவுரையா
வூக்கங் கொடுமா லொருகணநின் றேநம்மைக்
காக்கும் படிக்குக் கறுத்தசெயல் கண்டிலையோ.

இ—ள்: தேக்கும் சலதியிடை தீ போல் எழுந்த விடம் தாக்கும்பொழுது—நீர்நிறையப்பெற்ற பாற்கடலில் அக்கினிபோலுருத்தெழுந்த ஆலாகலமானது வருத்தும்பொழுது, மால்— விஷ்ணுமூர்த்தி, தளரேல் என உரையா— வருந்தன்மின் என்று அபயங்கூறி, நம்மை காக்கும்படிக்கு ஊக்கம் கொடு— எங்களைக்காக்கும்படி மனஉற்சாகங்கொண்டு, ஒரு கணம் நின்று—ஒருகணமளவுநின்று, கறுத்த செயல் கண்டிலையோ— திருமேனிகறுக்கப்பெற்றதன்மையை (நீ) தெரிந்திலாயா?(தெரிந்திருப்பாயே) எ—று.

ஆலாகலந் தம்மையடர்க்குமென்பதைத்தெரிந்தும், காவற்கடவுளாகிய திருமால், நம்மைக்காக்கும்பொருட்டு மனத்தைரியத்துடன் அதனையெதிர்த்து மேனிகறுத்தனரன்றோ. நீ நமக்குதவிசெய்யத்தலைப்படாததென்னே? என்பதாம்.

தேங்கும் என்பது தேக்கும் என வலித்தது. (௫0)

ஆரா யினுமொருவ ரன்பிற் றலைப்பட்டுப்
பேரா தரத்தாற் பிறர்க்குதவி செய்வாரேற்
றீராத வெந்துயரிற் சேர்தலே மாய்தலிவை
பாரார் புகழே பயனென்று கொள்வாரே.

இ—ள்: ஆராயினும் ஒருவர்—எத்தகையினராயினும் ஒருவர், அன்பில் தலைப்பட்டு—அன்பின்மேம்பட்டு, பேர் ஆதரத்தால் பிறர்க்கு உதவி செய்வாரேல்—மிகுந்த ஆவலுடன் பிறருக்குதவிசெய்யத் தலைப்படுவராயின், தீராத வெம் துயரில் சேர்தல்—நீங்காத கொடியதுன்பத்திலழுந்துதலும், மாய்தல்-இறத்தலுமாகிய, இவை—இத்தீமைகளை, பாரார்—சிந்தியார், புகழே பயன் என்று கொள்வார்—கீர்த்தியையே பொருளென்றுதுணிவார்கள் எ—று.

பிறர்க்குதவிசெய்வோர் துயரமும் மரணமுஞ்சம்பவிக்குமென்றஞ்சாது புகழையேவிரும்புவர் என்பதாம்.

உம்மை-உயர்வுசிறப்பு. (௫௧)

சூரந் தனில்வலிசேர் சூரபன்ம னேவலின்யா
மாருந் துயர்கொண் டழுங்கினே மன்னதினித்
தீரும் படிக்குச் சிவனொருசே யைத்தருவா
னோரைம் படைசெலுத்த வுன்னையாம் வேண்டினமே.

இ—ள்: சூரந்தனில் வலி சேர் சூரபன்மன் ஏவலின்—வீரத்தினால்வலிமைபெற்ற சூரபன்மனது ஏவலினாலே, யாம் ஆரும் துயர் கொண்டு அழுங்கினோம்—யாங்களெல்லேமுந் துன்பமுற்றுவருந்தினேம், அன்னது இனி தீரும்படிக்கு—அத்துன்பம் இனி நீங்கும்படியாக, சிவன் ஒரு சேயை தருவான்—சிவபெருமான் ஒருபுத்திரனைத் தோற்றுவித்தற்கு, ஓர் ஐம்படை செலுத்த உன்னை யாம் வேண்டினம்—பஞ்சபுஷ்பபாணங்களைச்செலுத்தும்படி உன்னை யாங்கள்வேண்டிக்கொண்டோம் எ—று.

இந்திரனுதியரையுமுளப்படுத்துவார் 'யாம்வேண்டினம்' என்றார். (டுஉ)

ஆதலி னெலங்க ளலக்கணகற் றும்பொருட்டுச்
சாதல் வரினுந் தவறே புகழ்செய்வா
ரேது வரினு மெதிர்செல்வா ரெம்பணியிற்
போதி யினிமாறு புகலே லெனவுரைத்தான்.

இ—ள்: ஆதலினல்—ஆனகாரணத்தால், எங்கள் அலக்கண் அகற்றும்பொருட்டு—எங்களுடைய துன்பத்தைநீக்கும்பொருட்டாக, சாதல் வரினும் தவறே—மரணந்தான்நேரிட்டாலுங்குற்றமாகுமா? (ஆகாதே), புகழ் செய்வார் ஏது வரினும் எதிர் செல்வார்—கீர்த்தியை ஈட்டுகின்றவர்கள் யாதுதீங்குவந்தாலும் (பின்னிடாது) முற்செல்வார்கள், எம்பணியில் போதி—எங்கள்கட்டளைப்படி செல்லுதி, இனி மாறுபுகலேல் என உரைத்தான்—இனி எதிர்வார்த்தை சொல்லாதொழி என்றுசொல்லினர் (பிரமதேவர்) எ—று.

உம்மைகளிரண்டும் உயர்வுசிறப்பு. முன்னையதை எதிர்மறையெனினுமாம். ()

வேறு.

பங்கயப் பொகுட்டிருந்த பகவனீது புகறலு
மைங்கணைக் கரத்தினே னரந்தையெய்தி யாதியாம்
புங்கவற்கு மாறுகொண்டு பொருகிலேனி தன்றியே
யிங்கெனக் கடுத்ததொன் றியம்புசெய்வ லென்றனன்.

இ—ள்: பங்கய பொகுட்டு இருந்த பகவன் ஈது புகறலும்—தாமரைமலர்ப்பொகுட்டில்வீற்றிருந்த பிரமதேவர் இவ்வார்த்தையைக்கூறுதலும், ஐங்கணை கரத்தினேன்—பஞ்சபுஷ்பபாணங்களைத்தாங்கிய கையையுடையமன்மதன், அரந்தை எய்தி—மனவருத்தமுற்று, ஆதி ஆம் புங்கவற்கு மாறுகொண்டு பொருகிலேன்—(ஸ்வாமீ!) முதற்கடவுளாகிய சிவபெருமானேடு எதிர்த்துப்போர்செய்யமாட்டேன், இது அன்றி—இவ்வொருபணியைமாத்திரமொழிந்து, இங்கு எனக்கு அடுத்தது ஒன்று இயம்பு— இப்பொழுது யான்செய்தற்கேற்ற வேறொருபணியைக்கூறுதி, செய்வல் என்றனன்—(அதனைச்) செய்வேனென்று கூறினன் எ—று.

புங்கவற்கு-உருபுமயக்கம். (டுச)

என்னும்வேலை யமரரோ டிருந்தவேதன் முனிவுறு
நன்னயந் தழீஇயுரைத்த நமதுசொன் மறுத்தியா
லன்னபான்மை புரியினுய்தி யல்லதே லுனக்கியாந்
துன்னுசாப மிடுதும்யாது துணிவுசொல்லு கென்றனன்.

இ—ள்: என்னும் வேலை—என்று (மன்மதன்) சொல்லியபொழுது, அமரரோடு இருந்த வேதன் முனிவுறு—தேவர்களுடனிருந்த பிரமதேவர்கோபித்து, நல் நயம் தழீஇ உரைத்த நமது சொல் மறுத்தி—(மன்மதனே! நீ) நல்ல நீதியைத்தழுவிக்கூறிய எமதுவாசகத்தை மறுத்தாய், அன்னபான்மை புரியின் உய்தி— (யான்சொல்லிய) அச்செயலைச்செய்தால் உய்வாய், அல்லதேல்—செய்யாதொழிவையேல், உனக்கு யாம் துன்னு சாபம் இடுதும்—உனக்கு யாம் நெருங்கியசாபத்தை இடுவோம், துணிவு யாது சொல்லுக என்றனன்—இவற்றுள் உன்மனநிச்சயம்யாதோ அதனைச்சொல்லுதி என்றுவினவினர் எ-று.

பல நீதிமொழிகளையெடுத்துக்காட்டி நீ இப்பணியை மறுப்பது தக்கதன்றென வற்புறுத்தியும் அதனையொருசிறிதும் பொருட்படுத்தாது மறுத்தனையென்பார்

'நன்னயந்தழீஇயுரைத்தநமதுசொன்மறுத்தி' எனவும், தவறுதுபலிக்குங் கொடுஞ்சாபமென்பார் 'துன்னுசாபம்' எனவும், நம்பணியை மறுதுசெய்தல் சாபமேற்றல் என்னுமிவ்விரண்டனுட்டக்கதுயாதென்று நன்குதேர்ந்து நிச்சயித்துக்கூறுதியென்பார் 'யாது துணிவுசொல்லுகென்றனன்' எனவுங்கூறினார். (ருரு)

வெய்யசாப மிடுதுமென்று வெகுளியான் மொழிந்தகேட்
டையமேனி மதனவே ளழுங்கிவெய் துயிர்த்தினிச்
செய்யலாவ தென்னெனத் தெரிந்துசிந்தை தேற்றியே
வையகம் படைத்தவண்ணல் வதனநோக்கி யுரைசெய்வான்.

இ—ள்: ஐய மேனி மதனவேள்—அழகியரூபத்தையுடைய மன்மதன், வெய்ய சாபம் இடுதும் என்று வெகுளியால் மொழிந்த கேட்டு— கொடிய சாபத்தையிடுவேமென்று கோபத்தோடு (பிரமதேவர்) கூறியவார்த்தையைக்கேட்டு, அழுங்கி வெய்துயிர்த்து— (இவர்கட்டளைக்கிசையிற் சிவபிரானலழிவும் மறுப்பினிவராற்சாபமும் நேரிடுகின்றதேயென்று) மனம்வருந்திப் பெருமூச்சுவிட்டு, இனி செய்யலாவது என் என தெரிந்து— இனி யாம்செய்யத்தக்கது யாதென்று ஆராய்ந்து, சிந்தை தேற்றி—மனத்தைத்தெளிவித்து, வையகம் படைத்த அண்ணல் வதனம் நோக்கி உரை செய்வான்-பூவுலகத்தைப்படைத்தபிரமதேவரது முகத்தைப்பார்த்துக்கூறுவான் எ-று.

மொழிந்த-வினையாலணையும்பெயர். ஐய-பண்படியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். (ருசு)

கேளிதொன் றுரைப்பல்வேத கேடுசூழ் நினதுவாய்ச்
சூளின்மேலை யியல்பகன்று துன்புழந்து படுதலிற்
காளகண்டன் முன்புசென்று கடியவெய்ய கணைகடூஉய்
மாளினுஞ் சிறந்ததம்ம மற்றுமுய்ய லாகுமே.

இ—ள்: வேத—பிரமதேவரே, இது ஒன்று உரைப்பல் கேள்—இந்த ஒரு வாசகத்தைச்சொல்வேன் கேட்பீராக, கேடு சூழும் நினது வாய் சூளில்—கேட்டைவிளைக்கின்ற உமதுவாயினின்றுதோன்றுஞ் சாபமொழியால், மேலை இயல்பு அகன்று துன்புழந்து படுதலில்—முன்னுள்ளபெருமையைநீங்கித் துன்பத்தையனுபவித்திறப்பதினும்பார்க்க, காளகண்டன் முன்பு சென்று—நீலகண்டராகிய சிவபிரானது சந்நிதியிற்போய், கடிய வெய்ய கணைகள் தூஉய் மாளினும்—வேகத்தையுடைய கொடியபாணங்களைச்செலுத்தி இறந்தாலும், சிறந்தது—(அது)உத்தமமாம், மற்றும் உய்யல் ஆகுமே—வேறும் உய்வு உண்டா? (இல்லையே) எ—று.

உமதுசாபத்திற்குத் தப்பிச் சிவபிரானையும் மாறுகொள்ளாதிருத்தற்கு யாதொருவழியுமில்லையென்பான் 'மற்றுமுய்யலாகுமே'என்றான். இஃதறியாதார், சிவபிரானோடு பொருதுமாளிற் பின்னுய்தல்கூடுமெனவுரைப்பர்.

உம்மைகளிரண்டனுள் முன்னையது இழிவுசிறப்பு; பின்னையது எச்சம். மற்று வினைமாற்று. ஏகாரம் வினா. (ருஎ)

செற்றநீர்மை கொள்ளலைய செஞ்சடைப் பிரானிடத்
திற்றைவைக லமரியற்ற வேகுவே னியானெனக்
கொற்றவே ளுரைத்தலுங் குளிர்ந்தபூ விருக்கைமே
லுற்றபோதன் மகிழ்சிறந் துளங்களித்து மொழிகுவான்.

இ—ள்: ஐய—தலைவரே, செற்றநீர்மை கொள்ளல்—கோபங்கொள்ளற்க, யான்—நான், செம் சடை பிரான் இடத்து அமர் இயற்ற— சிவந்தசடையினையுடைய

சிவபிரானேடுபோர்செய்ய, இற்றை வைகல் ஏகுவேன் என— இத்தினத்திற்றனே போவேனென்று, கொற்ற வேள் உரைத்தலும்—வெற்றியினையுடைய மன்மதன் கூறுதலும், குளிர்ந்த பூ இருக்கைமேல் உற்ற போதன்— குளிர்ந்த தாமரைமலராசனத்தின்மேல் வீற்றிருந்த பிரமதேவர், மகிழ்சிறந்து உளம் களித்து மொழிகுவான்—மகிழ்ச்சிமிகுந்து மனக்களிப்புற்றுச் சொல்வார் எ—று.

பிரானிடத்து-உருபுமயக்கம்; அங்ஙனங்கூறுது பிரானிடத்து ஏகுவேன் என இயைப்பினுமாம். (௫௮)

பணிந்தசொல்ல ளுகிநாம் பணித்தவா புரிந்திடத்
துணிந்தவாறு நன்றுநன்று சூலிபாலி னுனைவிடாத்
தணந்திடேந் தொடர்ந்துபின்பு சார்துமஞ்சல் போகெனு
வுணர்ந்துகூறி மாரவேளை யோவிலன்பொ டேவினன்.

இ—ள்: பணிந்த சொல்லன் ஆகி-(மன்மதனே! இதுகாறும் மறுத்துப் பேசிய நீ, இப்பொழுது) தாழ்ந்தசொல்லையுடையவனாய், நாம் பணித்தவா புரிந்திட துணிந்தவாறு நன்று நன்று— யாம் கற்பித்தபடி செய்யத் துணிந்தது மிகநன்று, சூலிபாலின் உனை விடா தணந்திடேம்—சிவபெருமானிடத்து உன்னைத் (தனியே) அனுப்பிவிட்டு யாம் பிரிந்திருக்கமாட்டேம், தொடர்ந்து பின்பு சார்தும்— தொடர்ந்து பின்னேவருவோம், அஞ்சல்-பயப்படாதே, போக எனு உணர்ந்து கூறி-செல்லுதியென்று ஆராய்ந்து சொல்லி, மார வேளை ஓ இல் அன்பொடு ஏவினன்—மன்மதனை ஒழிதலில்லாத அன்பினுடன் அனுப்பினர் (அப்பிரமதேவர்) எ—று.

நம்வலிவாலொருப்பட்ட இவனைத்திடப்படுத்தற்குக் கூறவேண்டியதிதுவேயென்று தெரிந்துகூறினரென்பார் 'உணர்ந்துகூறி' என்றார். (௫௯)

ஏவுகாலை மதனை வேள்வி யிறைதெரிந்து மைந்தயான்
றேவரோடு துயருழந்து சிறுமைபெற்ற தறிதியே
யோவில்வாழ்வு தருதியென்னி னுமைமடந்தை தனையரன்
மேவுமாறு புரிகெனு விரைந்துசெல்ல நல்கினன்.

இ—ள்: ஏவுகாலை—இவ்வாறு (பிரமதேவர்) அனுப்பியபொழுது, வேள்வி யிறை—யாகாதிபனாகிய இந்திரன், மதனை தெரிந்து—மன்மதனைப்பார்த்து, மைந்த—குழந்தாய்!, யான் தேவரோடு துயருழந்து சிறுமை பெற்றது அறிதியே- யான் தேவர்களோடு துன்பத்தையனுபவித்து இழிவுபெற்றதை நீயும் அறிவாயே, ஓ இல் வாழ்வு தருதி என்னின்-ஒழிவில்லாத நல்வாழ்வைத்தர விரும்புவையாயின், உமை மடந்தை தனை அரன் மேவுமாறு புரிக எனு—உமாதேவியாரைச் சிவபெருமான் திருமணஞ்செய்து சேரும்வண்ணஞ்செய்வாயென்றுகூறி, விரைந்து செல்ல நல்கினன்— விரைவிற் போகும்படி விடைகொடுத்தான் எ—று.

மன்மதனது தந்தையாகிய திருமால் முன்னொருகாலத்திற்றனக்குத்தம்பியாய் உபேந்திரனென்னும்பெயருடன் காசிபமுனிவரிடத்தவதரித்தலின் அம்முறை நோக்கி 'மைந்த' என்றான். (௬0)

நல்கலுங் கரங்கள்கூப்பி நான்முகத்த னுலகொரீஇ
யல்குதன் புரத்துநண்ணி யவ்வியற்கை கூறியே
யொல்குதே வியைத்தெளித் தொருப்படுத்தி நறியதேன்
பில்குவாளி யிட்டதூணி பின்னியாத் திறுக்கினன்.

இ—ள்: நல்கலும்— (இந்திரன்) விடைகொடுத்தலும், கரங்கள் கூப்பி— (மன்மதன்) கைகளைக்குவித்துத் தொழுது, நான்முகத்தன் உலகு ஒரீஇ—நான்கு மு

கங்கைளயுடைய பிரமதேவரது மனோவதிபுரியைநீங்கி, அல்கு தன் புரத்து நண்ணி—தான்வாழுகின்ற நகரத்திற்போய், அ இயற்கை கூறி—அந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, ஒல்கு தேவியை தெளித்து ஒருப்படுத்தி—(அதுகேட்டலால்) மனந்தளர்ந்த இரதிதேவியைப் (பலநீதிமொழிகளால்) தேற்றி உடன்படுத்தி, நறிய தேன் பில்கு வாளி இட்ட தூணி பின் யாத்து இறுக்கினன்—சுகந்தத்தையுடைய தேனைச்சிந்துகின்ற புஷ்பபாணங்களைச்செறித்த அம்புக்கூட்டை முதுகிற்கட்டி இறுக்கினன் எ—று.

அவ்வியற்கையென்றது பிரமதேவருடைய கற்பனையை. அல்கல்- தங்குதல்=வசித்தல். அல்குதன் புரம்=தான் அல்குபுரம். (௬௧)

கயக்கணின்ற பூவின்மிக்க காமகாண்டங் கன்னல்வில்
லியக்கமான பாரவில் லெடுத்துமொய்ம்பி னேந்தியே
தயக்கமுற் றுலாயசெய்ய தண்ணென்மா விளந்தளிர்
வயக்கடுங்கண் வாளமொன்று மாமருங்கு வைத்தரோ.

இ—ள்: கயக்கண் நின்ற பூவில் மிக்க காமகாண்டம்-தடாகத்திலுள்ள தாமரைமலரால்(ஆகிச்)சிறந்த காமகாண்டமென்னும்வில்லையும், கன்னல்வில்-கருப்புவில்லையும், இயக்கம் ஆன பார வில்-பயிற்சியான இருப்புவில்லையும், எடுத்து மொய்ம்பில் ஏந்தி—எடுத்துத் தோளிற்றூங்கி, தயக்கம் உற்று உலாய—பிரகாசம்பொருந்தி விளங்குகின்ற, செய்ய—சிவந்தநிறத்தையுடைய, தண் என் இளம் மா தளிர்-குளிர்ந்த இளமையான மாந்தளிராகிய, வய கடுங்கண் வாளம் ஒன்று—வெற்றிபொருந்திய தறுகண்மையினையுடைய ஒருவாளை, மா மருங்கு வைத்து—பெரிய அரையிற் சேர்த்தி எ—று.

மலர்வில்லென்றது தாமரைமலரை நாளத்தோடெடுத்துவளைக்கும்வில். உலாய செய்ய தண்ணென் என்னும்பெயரெச்சங்கள் மூன்றும் தனித்தனி தளிர் என்னும்பெயர்கொண்டன. வாளம் என்பதில் அம் பகுதிப்பொருள்விகுதி. இதுமுதன்மூன்றுசெய்யுட்கள் குளகம். (௬௨)

கோகிலங்க ளானவுங் குழாங்கொள்வேலை யானவுங்
காகளங்கண் முரசமாய்க் கறங்கவோதம் யாவதுஞ்
சீகரங்க ளாயசைந்து செல்லமீன கேதன
மாகவும்ப ருலவவெண் மதிக்குடை நிழற்றவே.

இ—ள்: கோகிலங்கள் ஆனவும்—குயில்களும், குழாம் கொள் வேலை ஆனவும்—கூட்டமாகிய சமுத்திரங்களும், காகளங்கள் முரசம் ஆய் கறங்க— (முறையே) காகளங்களும் முரசும் ஆகி இயம்ப, ஓதம் யாவதும் சீகரங்களாய் அசைந்து செல்ல-அலைகளெல்லாஞ் சாமரங்களாக அசைந்துவீச, மீன கேதனம் மாக உம்பர் உலவ—மகரக்கொடியானது ஆகாயத்திலுலாவ, வெள் மதி குடை நிழற்ற—வெள்ளிய பூரணசந்திரனாகிய குடை நிழலைச்செய்ய எ—று,

யாவதுமென்பதில் அது பகுதிப்பொருள்விகுதி. மாகவும்பர்-இருபெயரொட்டு. (௬௩)

பொருவில்கிள்ளை யென்னுமாக்கள் பூண்டதென்றல் வையமே
லிரதியோடு மேறிவே ளிருந்ததொல்லை யுலகினை
யரிதகன்று குறிகள்வெய்ய வளவையின்றி நிகழவே
பரமன்வைகு கயிலையம் பருப்பதத்தை யணுகினன்.

இ—ள்: வேள்—மன்மதன், பொரு இல் கிள்ளை என்னும் மாக்கள் பூண்ட தென்றல் வையமேல்—ஒப்பற்ற கிளிகளாகிய குதிரைகள் பூட்டப்பட்ட தென்றற்காற்றாகிய தேரின்மேல், இரதியோடும் ஏறி—இரதிதேவியோடும் இவர்ந்து, வெய்யகுறிகள் அளவை இன்றி நிகழ—துர்ச்சகுனங்கள் அளவின்றி (அதிகமாக) நடைபெற, இருந்த தொல்லை உலகினை அரிது அகன்று—தானிருந்த பழையநகரத்தை அருமையாக நீங்கி, பரமன் வைகு கயிலையம் பருப்பதத்தை அணுகினான்—சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக்கைலாசமலையையடைந்தான் எ—று.

முற்செய்யுளிலுள்ள கறங்க செல்ல உலவ நிழற்ற என்னும் செயவெனெச்சங்கள், இச்செய்யுளிலுள்ள ஏறி என்பதனோடியைந்தன. அதன்முற்செய்யுளில் ஏந்தி வைத்து எனவும், இச்செய்யுளில் ஏறி அகன்று எனவும் வந்த செய்தெனெச்சங்கள் ஒன்றையொன்றுகொண்டு அணுகினான் என்னும்முற்றோடு முடிந்தன.

புறப்படும்போதுண்டாகிய துர்ச்சகுனங்களால் எண்ணிச்செல்லுங்காரியஞ் சித்திபெறாதென்பதைச் சோதிடநூன்முறைப்படி தெரிந்து தன்னூர்விட்டுப்போதலின் மிகவும் பிரியமற்றவனாயினும், தேவர்க்குச்செய்தவாக்கை நிறைவேற்றுதற்காகச் சென்றனனாதலின் 'குறிகள்வெய்யவளவையின்றிநிகழ-இருந்ததொல்லையுலகினையரிதகன்று' என்றார். (௯௬)

கயிலைகண்டு தொழுதுதே ரிழிந்துகாம வேடனக்
கயலின்வந்த பரிசனத்தை யவணிறுத்தி மாதுடன்
பயிலுப்வில்லும் வாளியும் பரித்துவல் லியத்தினைத்
துயிலுணர்த்து மானெனத் துணிந்துபோதன் மேயினான்.

இ—ள்: காமவேள்—மன்மதன், கயிலை கண்டு தொழுது—திருக்கைலாசமலையைத் தரிசித்துக் கைதொழுது, தேர் இழிந்து-(ஏறிவந்த) தேரினின்றுமிறங்கி, தனக்கு அயலின் வந்த பரிசனத்தை அவண் நிறுத்தி—தன்பக்கத்தில்வந்த பரிவாரங்களை அவ்விடத்துநிறுத்தி, பயிலும் வில்லும் வாளியும் பரித்து—(முன் பற்பலகாலங்களில் எய்து) பயின்றவில்லையும் பாணங்களையும் (கையில்) தாங்கி, வல்லியத்தினை துயிலுணர்த்தும் மான் என துணிந்து-புலியை நித்திரையினின்றுமெழுப்புகின்றமானைப்போல மனந்துணிந்து, மாதுடன் போதல் மேயினான்-இரதிதேவியுடன் போவானாயினான் எ-று.

தெரிந்துகொண்டு தனக்குத்தானே தீங்கைவருவிக்கப்புகுதலின் 'வல்லியத்தினைத்துயிலுணர்த்துமானெனன' என்றார். (௯௭)

கூறுலாவு மதிமிலைந்த குழகன்வைகு கயிலைமே
லேறியே தனதுகை யிருந்தகார் முகம்வளைஇ
மாறிலேவு பூட்டியங்கண் வைகுபுள்ளு மாக்களு
மூறிலா திருந்தகாம முன்னுவித்தன் முன்னினான்.

இ—ள்: கூறு உலாவும் மதி மிலைந்த குழகன் வைகு கயிலைமேல் ஏறி—பாலசந்திரனையணிந்த அழகராகிய சிவபெருமான்வீற்றிருக்கின்ற திருக்கைலாசகிரியின் மேலிவர்ந்து, தனது கை இருந்த கார்முகம் வளைஇ—தனதுகையிலிருந்த கருப்புவில்லை வளைத்து, மாறு இல் ஏவு பூட்டி-ஒப்பற்ற அம்புகளைத்(தெரிந்து) தொடுத்து, அங்கண் வைகு புள்ளும் மாக்களும் ஊறு இலாது இருந்த காமம்-அம்மலையிலிருந்த பறவைகளும் மிருகங்களும் அடைதலின்றியிருந்த புணர்ச்சிவிருப்பத்தை, உன்னுவித்தல் முன்னினான்—நினைவித்தலைச் சிந்தித்தான் எ—று.

வளை இ-வளைத்து என்பதன்விகாரம். ஊறு முதனிண்ட முதனிலைத்தொழிற்பெயர். குறிதவறாதுசென்றுபடும் பாணமென்பார் 'மாறிலேவு' என்றார். (௯௬)

பொருவில்காம னின்னதன்மை புந்திகொண்டு மற்றவண்
விரவுபுள்ளின் மீதினும் விலங்கின்மீதி னும்மலர்ச்
சரமெலாம் விடுப்பவாதி தனதுமந் திரத்துமுன்
னருளினோ டிருந்தநந்தி யடிகளன்ன கண்டரோ.

இ—ள்: பொரு இல் காமன்— ஒப்பில்லாத மன்மதன், இன்னதன்மை புந்தி கொண்டு—இத்தன்மையை நினைத்து, அவண் விரவு புள்ளின் மீதினும்— அவ்விடத்துப்பொருந்திய பறவைகளின்மேலும், விலங்கின்மீதினும்-மிருகங்களின்மேலும், மலர் சரம் எலாம் விடுப்ப—புஷ்பபாணங்களெல்லாவற்றையுஞ்செலுத்த, ஆதிதனது மந்திரத்துமுன் அருளினோடு இருந்த நந்தி அடிகள்—முதற்கடவுளாகிய சிவபெருமானது திருக்கோயிலின் முதல்வாயிலிற் கிருபையுடனெழுந்தருளியிருக்கின்ற திருநந்திதேவர், அன்ன கண்டு—அச்செயலைப்பார்த்தருளி எ—று.

அன்னது என்பதில் ஈற்றுயிர்மெய்தொக்கது. இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம். (௯௭)

கொம்மெனச் சினம்புரிந்து கொடியபூசன் மதனனார்
தம்மியற்கை யாமிதம்ம சாதமென்று நினைவுறா
வும்மெனத் தெழித்துரப்ப வொலிகொள்புள் விலங்கின்மேல்
வெம்மையிற் செலாதுமாரன் விசிகம்விண்ணி னின்றவே.

இ—ள்: கொம் என சினம் புரிந்து—விரைவாகக்கோபித்து, கொடிய பூசல்— (இக்கேவிகழும்) கொடியகலகம், மதனனார் தம் இயற்கை ஆம்—மன்மதனதுசெயலேயாம், இது சாதம் என்று நினைவுறா—இது சத்தியமென்று சிந்தித்து, உம் என தெழித்து உரப்ப—உம்மென்னும் அநுகரணத்தொனியுண்டாகும்படி ஆரவாரித்து உரப்ப, மாரன் விசிகம்—(அம்)மன்மதனதுபாணங்கள், ஒலிகொள் புள் விலங்கின் மேல் வெம்மையில் செலாது— ஓசையையுண்டாக்குகின்ற பறவைகளின்மேலும் மிருகங்களின்மேலும்வெப்பத்தோடுஞ் செல்லாமல் (தடைப்பட்டு), விண்ணில் நின்ற—அந்தரத்தில் நின்றன எ—று.

ஆர்விகுதிஇழிவுபற்றிவந்தது. இது கொடியபூசல்மதனனார்தம் இயற்கையாமெனக்கூட்டி, இச்செயல் கொடிய கலகத்தையுடைய மன்மதனதுசெயலேயாமெனப் பொருள்கூறுவாருமுளர். (௯௮)

நிற்றலோடு மவ்வியற்கை நின்று நோக்கி நெடியவேள்
கொற்றநீடு சூரலொன்று கொண்டுகோ புரத்தலைத்
தெற்றிமே லிருந்தநந்தி தேவர்காப்பு மாணையு
முற்றுநோக்கி நெடிதுயிர்த் துளந்துளங்கி விம்மினான்.

இ—ள்: நிற்றலோடும்—(பாணங்கள்) தடைப்பட்டுநிற்றலும், நெடிய வேள்—நெடியமன்மதன், நின்று அ இயற்கை நோக்கி—(சிறிதுநேரம்) நின்று அத்தன்மையைப்பார்த்து, கோபுரத்தலை தெற்றிமேல் கொற்றம் நீடு சூரல் ஒன்று கொண்டு இருந்த நந்திதேவர் காப்பும் ஆணையும்—கோபுரவாயிற்றிண்ணையில் வெற்றிமிகுந்த ஒரு பொற்பிரம்பைக் கையிற்றாங்கிக்கொண்டிருந்த திருநந்திதேவரது காவலையும் கட்டளையையும், உற்று நோக்கி— உற்றுப்பார்த்து, நெடிது உயிர்த்து—பெருமூச்செறிந்து, உளம் துளங்கி விம்மினான்—மனம்நடுங்கி வருந்தினான் எ—று. (௯௯)

விம்மிநந்தி தேவர்முன் விரைந்துசென்று தாழ்ந்தெழூஉச்
செம்மைசெய் கருத்தனைத் திகழ்ந்துபோற் றெடுத்தலு
மிம்மலைக்கண் வந்ததென்னை யெனவயன் புணர்ப்பெலா
மெய்ம்மையா வுணர்த்தலும் வினவியீ துளங்கொள்வான்.

இ—ள்: விம்மி—(மன்மதன் இவ்வாறு) மனம்வருந்தி, நந்திதேவர்முன் விரைந்து சென்று—திருநந்திதேவர்க்கு முன் விரைவாகப்போய், தாழ்ந்து எழூஉ—வணங்கியெழுந்து,செம்மைசெய் கருத்தன் ஆய் திகழ்ந்து போற்றெடுத்தலும்-தூய்மைபொருந்திய மனத்தையுடையவனைப் பொலிந்துநின்று துதிக்க, இ மலைக்கண் வந்தது என்னை என—(அத்திருநந்திதேவர்,மன்மதனே! நீ) இந்தமலையின்கண்வந்த காரணம்யாதென்று வினவ, அயன்புணர்ப்பு எலாம் மெய்ம்மையா உணர்த்தலும்- (அவன்)பிரமதேவரது சூழ்ச்சிகளெல்லாவற்றையும் உள்ளவாறு கூறுதலும், வினவி ஈது உளம்கொள்வான்—(திருநந்திதேவர்) கேட்டு இதனைச் சிந்திப்பாராயினர் எ—று.

எழூஉ-எழுந்து என்பதன்விகாரம். போற்றெடுத்தல்-ஒருசொல். (எ0)

வேதனாதி யானதேவர் விழுமநோ யகன்றிடு
மேதுவால் விடுத்துளார்க ளிவனையீசன் யோகுறும்
போதில்யாவர் வருகினும் புகாதுசெய்தி மதனவேள்
சாதலெய்து வான்வரிற் றடேலெனா வியம்பினான்.

இ—ள்: வேதன் ஆதி ஆன தேவர்- பிரமாமுதலிய தேவர்கள், விழும நோய் அகன்றிடும் ஏதுவால் இவனை விடுத்துளார்கள்-(தங்கள்) துன்பமாகிய நோய் நீரும்பொருட்டு இந்த மன்மதனை அனுப்பியுள்ளார், ஈசன்—சிவபெருமான், யோகு உறும் போதில்—ஞானயோகத்திலெழுந்தருளியிருக்கும் பொழுது, யாவர் வருகினும் புகாது செய்தி-எவர் (இங்கே)வந்தாலும் உட்புகாவண்ணந் தடைசெய்குதி, சாதல் எய்துவான் மதனவேள் வரின்—இறக்குங்காலமணுகியவனாகிய மன்மதன் வந்தால், தடேல் எனா இயம்பினான்—தடைசெய்யற்கவென்று(எனக்குக்)கட்டளையிட்டருளினார் எ—று.

உம்மை-உயர்வுசிறப்பு. (எக)

புன்மையாம் பசுத்தடிந்து புரையில்வேள்வி யாற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு சுருதிசொற்ற வாறுபோன்
மன்மதன் றனைப்படுத்து மாதைவேட்டு மற்றதன்
பின்முறைக்க ணல்கவெம் பிரானினைந்த னன்கொலாம்.

இ—ள்: புன்மை ஆம் பசு தடிந்து—எளிய பசுவைக்கொன்று, புரை இல் வேள்வி ஆற்றி—ஒப்பற்ற யாகத்தைச்செய்து, தொன்மைபோல் எழுப்புமாறு சுருதி சொற்றவாறு போல்—முன்போல எழுப்பும்படி வேதங்கள் கூறிய தன்மைபோல, மன்மதன் தனை படுத்து—மன்மதனையெரித்து, மாதை வேட்டு—பார்ப்பதிதேவியைத்திருமணஞ்செய்து, அதன் பின் முறைக்கண் நல்க—அதன்பின்பு முறையாக எழுப்பும்படி, எம்பிரான் நினைந்தனன் கொல்—எங்கள் கடவுளாகிய சிவபெருமான் திருவுள்ளம்பற்றினர்போலும் எ—று.

ஆம்- அசைநிலை. ஆடு முதலிய அற்பமிருகமென்பார் 'புன்மையாம்பசு' எனவும், அதனை வதைத்தியற்றும் வேள்வி சுவர்க்காதி புண்ணியபதப்பேறுகளைத் தருதலின் 'புரையில்வேள்வி' எனவும், அப்பசுவதை மீளவும் எழுப்பியவழிப் புண்ணியமாவதுபோல, மன்மதனையழிப்பதும் தேவியைமணமியற்றியபின் எழுப்பியவழித்திருவ

ருளாய் முடிதலின் 'தொன்மைபோலெழுப்புமாறுசுருதிசொற்றவாறுபோல்- வினைந்தனன்கொலாம்' எனவுங்கூறினர். (௭௨)

ஆகையாலி தருளதே யிவன்வரத்து மாணையென்
றோகையா லுணர்ந்துவேளை நோக்கியும்ப ராகுலம்
போகுமா றியற்றல்செய்த பொருவிலாத கருணைசே
ரேகநா யகன்றன்முன்ன ரேகல்வேண்டு மோவென்றான்.

இ—ள்: ஆகையால்—ஆதலினால், இது அருளதே—இச்செயலும் (சிவபிரானது) திருவருளேயாம், இவன் வரத்தும் ஆணை என்று—இந்த மன்மதனது வருகையும் (அவரது) கட்டளையேயாமென்று, ஓகையால் உணர்ந்து—ஞானத்தினாலறிந்து; வேளை நோக்கி—மன்மதனைப்பார்த்து, உம்பர் ஆகுலம் போகுமாறு இயற்றல் செய்த—தேவர்களது துன்பங்கள் நீங்கும்படி செய்தருளிய, பொரு இலாத கருணை சேர் ஏகநாயகன் தன் முன்னர்—ஒப்பில்லாத கிருபைமிகுந்த முதற்கடவுளாகிய சிவபிரானது திருமுன்னிலையில், ஏகல் வேண்டுமோ என்றான்—நீ போதல்வேண்டுமோ என்று வினவியருளினர் (திருநந்திதேவர்) எ—று.

உம்மை-எச்சம். சிவபிரான் யோகிருத்தல் தேவர்களது வினைச்சேடத்தைத்தொலைத்தருளுதற்கேயென்பதும் அவர்நிலையை நீ தவிர்க்கப்புகுவது தவறென்பதுந் தோன்ற 'உம்பராகுலம்போகுமாறியற்றல்செய்தபொருவிலாதகருணை சேரேகநாயகன்றன்முன்னரேகல்வேண்டுமோ' என்றார். (௭௩)

நந்திதேவ னினையவாறு நவிலவே யுணர்ந்துவே
ளெந்தைகேட்டி யாவதொன் றெனக்கொரீறு குறுகினு
மந்திவேணி யண்ணன்முன்ன மணுகுமா றமைந்திவண்
வந்தனன் னதற்கியைந்த வகைமைநல்கு வாயென.

இ—ள்: நந்தி தேவன் இனையவாறு நவில—திருநந்திதேவர் இவ்வாறு வினவியருள, வேள் உணர்ந்து—மன்மதன் கேட்டு, எந்தை-எம்பெருமானே!, இது ஒன்று கேட்டி—இவ்வாசகமொன்றைக் கேட்பீராக, எனக்கு ஒரு ஈறு குறுகினும்—சிறியேனுக்கு யாதேனுமொரு அழிவுவந்தாலும், அந்தி வேணி அண்ணல் முன்னம் அணுகுமாறு அமைந்து—செக்கர்மேகத்தைப்போலுஞ் சடைமுடியையுடைய சிவபெருமானது திருமுன்னிலையிற்போகும்படி துணிந்து, இவண் வந்தனன்—இவ்விடத்தில் (யான்) வந்தேன், அதற்கு இயைந்த வகைமை நல்குவாய் என—அதற்கேற்றவழியை அருள் செய்குதிரென்று பிரார்த்திக்க எ—று.

உம்மை-இழிவுசிறப்பு. வகைமை என்பதில் மை தன்மையையுணர்த்தாது தன்மையுடைப்பொருளையுணர்த்தலின் பகுதிப்பொருள் விகுதி. இன்னோரன்னவற்றை வடநூலார் சுவார்த்தத்தில்வந்த பாவதத்திதப்பிரத்தியயமென்பர். இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (௭௪)

இகலுமன்பு மிறையுமின்றி யெவ்வுயிர்க்கு முள்ளதோர்
புகுதிநாடி முறையினைப் புரிந்துசேர் பவர்க்குமேற்
றகுதிசெய்து கருணைகூர் சயம்புமுன்பு சார்தியேன்
மிகுதிகொண்ட மேலைவாய்தன் மேவியேகு கென்றனன்.

இ—ள்: இகலும் அன்பும் இறையும் இன்றி—பகையுமுறவுஞ் சிறிதுமின்றி, எ உயிர்க்கும் உள்ளது ஓர் புகுதி நாடி—எல்லாவுயிர்களுக்கும் அமைந்துள்ள பிராரத்தகன்மங்களையறிந்து, முறையினை புரிந்து-(அவற்றிற்கேற்ற) வியதிகளைச்செய்து, சே

ர்பவர்க்கு மேல் தகுதி செய்து—தம்மையடையும் பக்குவிகட்கு மேலாகியமுத்தியைக் கொடுத்து, கருணை கூர் சயம்பு முன்பு சார்தியேல்—கிருபைசெய்கின்ற சிவபெருமானது திருமுன்னிலையிற் போகவிரும்புவையாயின், மிகுதி கொண்ட மேலை வாய்தல் மேவி ஏகுக என்றனன்—பெருமைபொருந்திய மேற்றிசைக்கோபுரவாயிலையணுகி உட்செல்லுதி என்று கூறியருளினார் (திருநந்திதேவர்) எ—று.

சுயம்பு என்பது சயம்பு எனவின்றது; தானேதோன்றியவன் என்பதுபொருள். (௭௫)

என்றலுங் கரங்குவித் திறைஞ்சிமார னேர்புறீஇ
நன்றிலங்கு வேத்திரக்கை நந்திதேவர் விடைதரச்
சென்றுமேலை வாயில்சார்ந்து தேவதேவ னீற்றழற்
குன்றமென்ன மோனமோ டிருந்தவெல்லை குறுகினான்.

இ—ள்: என்றலும்—என்று (திருநந்திதேவர்) கூறுதலும், மாரன்—மன்மதன், கரம் குவித்து இறைஞ்சி—இருகரங்களையுங்கூப்பி வணங்கி, நேர்புறீஇ—(அதற்கு) உடன்பட்டு, நன்று இலங்கு வேத்திர கை நந்திதேவர் விடைதர—செவ்வனேபிரகாசிக்கின்ற பொற்பிரம்பைத்தாங்கியதிருக்கரத்தையுடைய(அத்)திருநந்திதேவர் அநுமதிகொடுக்க, சென்று-போய், மேலைவாயில் சார்ந்து—மேற்றிசைக்கோபுரவாயிலையடைந்து, தேவதேவன் நீற்று அழல் குன்றம் என்ன மோனமோடு இருந்த எல்லை குறுகினான்—தேவாதிதேவராகிய சிவபெருமான் நீறுபூத்த அக்கினிமலையைப்போல மோனநிலையுடன் வீற்றிருந்த இடத்தை அடைந்தான் எ—று.

சிவந்தநிறத்திருமேனியில் விபூதியணிந்திருத்தலால் 'நீற்றழற்குன்றமென்ன' என்றார். (௭௬)

வேறு.

ஒருதனிச் சிம்புள் வேந்த னுறைந்தது கண்ட சீயக்
குருளையி னமலன் றன்னைக் கோலமால் புதல்வன் காணா
வெருவரு முளத்த னாகி வியர்த்துமெய் பனியா வுட்கிப்
பருவர லுழந்து கொண்ட படையொடுங் கடிதில் வீழ்ந்தான்.

இ—ள்: ஒரு தனி சிம்புள்வேந்தன் உறைந்தது கண்ட சீயக் குருளையின்—ஒப்பற்ற சரபராசனிருந்ததைக்கண்ட சிங்கக்குட்டியைப்போல, அமலன் தன்னை கோல மால் புதல்வன் காணா—மலரகிதராகிய சிவபெருமானை அழகினையுடைய விஷ்ணுமூர்த்தியின் குமாரனாகிய மன்மதன்பார்த்து, வெருவரும் உளத்தன் ஆகி—அச்சமுற்ற மனத்தையுடையவனாய், வியர்த்து மெய் பனியா உட்கி—வெயர்வைகொண்டு சரீரம்நடுங்கி ஒடுங்கி, பருவரல் உழந்து-கிலேசமுற்று, கொண்ட படையொடும் கடிதில் வீழ்ந்தான்—கையிலேந்திய ஆயுதங்களுடன் விரைவிற் (கீழே) விழுந்தான் எ—று.

சிங்கம் மிருகராசனாயிருப்பினுஞ் சரபப்பட்சியைக்கண்டவுடனஞ்சுதல்போல, மன்மதனும் ஏனையோரைவெல்லுந்தரத்தினனாயினுஞ் சிவபிரானைக் கண்டவுடனஞ்சிவீழ்ந்தனனென்பதாம். (௭௭)

எழுதரு மதனா மேக மிறைவனைக் கண்டே யஞ்சி
விழியிருண் மூடக் கோல வில்லிட்டு வியர்ப்பின் வாரி
மழைபட விடிபார்ப் பெய்த மார்புமற் றதுவீழ் கின்ற
தொழின்முறை புதரங் காட்டத் துளங்கிவீழ்ந் திட்ட தன்றே.

இ—ள்: எழுதரும் மதன் ஆம் மேகம்—எழுந்துநின்ற மன்மதனாகிய மேகமானது, இறைவனை கண்டு அஞ்சி—சிவபிரானைக்கண்டு பயந்து, விழி இருள் மூட—

கண்களை இருளானதுமறைக்க, கோல வில் இட்டு—அழகியவில்லைக்(கீழே)தவறவிட்டு, வியர்ப்பின்வாரி மழைபட—வெயர்வை வெள்ளமாகிய மழை உண்டாக, மார்பு இடி ஆர்ப்பு எய்த—நெஞ்சு இடிபோலும் பேரொலியைப்பெற, அது வீழ்கின்ற தொழில்முறை புதரம் காட்ட—அவ்விடிவிழுதலாகிய தொழின்முறையைத் திருக்கைலாசகிரிகாண்பிக்க, துளங்கி வீழ்ந்திட்டது—நடுங்கி விழுந்தது எ—று.

அது மேகமெனினுமாம். பூதரம் என்பது புதரம் எனக்குறுகிநின்றது. கடனீரைப்பருகியெழுகின்றமேகம் மலையிற்படியுங்கால், உலகினர்கண்களுக்கிருள்தோன்றுதலும் இந்திரவில்லிடுதலும் மழைபெய்தலும் முழங்குதலும் இடிவிழுதலும் உளவாதலின், நிலைதவறிவீழ்ந்த மன்மதனை மேகமாகவுருவகித்தார். (எஅ)

அஞ்சிவீழ் குற்ற மார னறிவிலா தவச மாகத்
துஞ்சினன் கொல்லோ வென்னாத் துயருழந் தெடுத்துத் தேவி
கஞ்சநேர் கரத்திற் றாங்கிக் கடிவகை யுய்த்துத் தேற்ற
நெஞ்சமே லுணர்ச்சி கூட வினையவை நினைந்து நைவான்.

இ—ள்: அஞ்சி வீழ்குற்ற மாரன் அறிவு இலாது அவசம் ஆக-(அவ்வாறு) பயந்துவிழுந்த மன்மதன் அறிவுகெட்டு மூர்ச்சையாக, தேவி-(அவனது) மனைவியாகிய இரதியானவள், துஞ்சினன் கொல் என்னா துயருழந்து— (நங்கணவன்) இறந்தானோவென்று துன்பப்பட்டு, எடுத்து—பின் (அவசமேயென்பதையுணர்ந்து) எடுத்து, கஞ்சம் நேர் கரத்தில் தாங்கி கடி வகை உய்த்து தேற்ற—தாமரைமலர்போன்ற கைகளிற்றாங்கி மடியில் முறைப்படிவைத்துத் தெளிவிக்க, நெஞ்சம் மேல் உணர்ச்சி கூட— (அதன்பின்) மனத்தில் அறிவுதோன்ற, இனையவை நினைந்து நைவான்- இவற்றை நினைத்துவருந்துகின்றான்(மன்மதன்) எ—று. (எகூ)

முறுவலி னெயின்மூன் றட்ட முதல்வனைப் பொருதி யென்றே
நறைமல ரயனு மேனைத் தேவரு நாகர் கோனு
முறுதுய ரகல விங்ங னுய்த்தனர் வினையேற் கின்னே
யிறுதிவந் தணுகிற் றாகு மிதற்குமோ ரையமுண்டோ.

இ—ள்: முறுவலின் எயில் மூன்று அட்ட முதல்வனை பொருதி என்று—புன்சிரிப்பினால் முப்புரங்களையுமழித்த சிவபெருமானைப் போர்செய்துவெல்லுதியென்று, நறை மலர் அயனும்—தேன்பொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், ஏனை தேவரும்-மற்றையதேவர்களும், நாகர் கோனும்—தேவேந்திரனும், உறு துயர் அகல இங்ஙன் உய்த்தனர்—(தங்களுக்கு)வந்ததுன்பந்தீருமாறு (என்னை)இங்கே அனுப்பினார்கள், வினையேற்கு இன்னே இறுதி வந்து அணுகிற்று ஆகும்—(ஆதலால்) பாவியேனுக்கு இப்பொழுதே மரணம்வந்து நெருங்கிற்று, இதற்கும் ஓர் ஐயம் உண்டோ—இதற்கும் ஒரு சந்தேகமிருக்கின்றதா? (இல்லையே) எ—று.

பொருதியென்று உய்த்தனர் எனஇயையும். இதற்கும் என்பதில் உம்மை தெரிநிலை. நம்மால்வெல்லுதற்கரியனென்பான் 'முறுவலினெயின்மூன்றட்டமுதல்வன்' என்றான். (அ௦)

எண்டகு குணத்தின் மேலா மிறையவ னிருந்த வண்ணங்
கண்டலும் வெருவி யாவி காண்கில னவனை யென்கைக்
கொண்டதோர் கணைகள் வாகை கொள்ளுமோ வினைய பான்மை
யண்டரு மயனும் யாரு மறிகிலர் போலு மன்றே.

இ—ள்: எண் தகு குணத்தின் மேல் ஆம் இறையவன் இருந்த வண்ணம் கண்டலும்— மதிக்கத்தகுந்த முக்குணங்களினின்றும் மேம்பட்ட சிவபெருமான் வீற்றிருந்த தன்மையைப் பார்த்தவுடன், வெருவி ஆவி காண்கிலன்—பயந்து அவசமானேன், அவனை-அத்தகையகடவுளை, என் கை கொண்டது ஓர் கணைகள் வாகைகொள்ளுமோ—எனதுகையிலெடுக்கப்பட்ட பாணங்கள்வெற்றிகொள்ளுமா? (கொள்ளாவே); இனைய பான்மை—இத்தன்மையை, அண்டரும் அயனும் யாரும் அறிகிலர் போலும்—தேவர்களும் பிரமதேவரும் பிறரும் அறியார்போலும் எ—று.

கண்டவுடன் அஞ்சி அறிவிழந்தயான்பாணமெய்து வெல்வதியலாதென்பது தாற்பரியம். 'எண்டகுகுணத்தின்மேலாமிறையவன்' என்பதற்கு எண்குணங்களையுடைய தலைவராகிய சிவபெருமான் எனப்பொருள் கூறுவாருமுளர். (அக)

தாக்கினல் வலிபெற் றுள்ள மருத்தின்முன் றனித்த தீபம்
போக்கினை னிற்ப துண்டோ வனையது போலத் தேவர்
வாக்கினன் மனத்தா லெட்டா வள்ளன்மு னுய்த்தா ரன்னோ
னோக்கினு லினிச்சில் போதி னுண்பொடி யாவன் போலாம்.

இ—ள்: தாக்கினல் வலி பெற்று உள்ள மருத்தின் முன்— வீசுந்தன்மையினல் வலிமையைப்பெற்றுள்ள காற்றின்முன்னுக, தனித்த தீபம் போக்கினல்— தனிமையாயிருக்கின்ற விளக்கைப்புகுவித்தால், நிற்பது உண்டோ—(அது) தணியாமல் நிலைபெறுவதுண்டா? (இல்லையே), அனையது போல — அத்தன்மையைப்போல, தேவர்— (பிரமாமுதலிய) தேவர்கள், வாக்கினல் மனத்தால் எட்டா வள்ளல் முன் உய்த்தார்--வாக்கினலும் மனத்தினலும் பிரமாணித்தற்கரீதரான சிவபெருமானுக்கு முன்னே (என்னை) ஏவினர்கள், அன்னேன் நோக்கினல் இனி சில் போதில் நுண் பொடி ஆவன்-அச்சிவபெருமானது பார்வையினல் இனிச்சிறிதுநேரத்துள் நுண்மையான சாம்பராவேன் எ—று.

பெருங்காற்றின்முன் தனித்தீபம் நிலைப்படாதொழிதல்போல யானும் இறந்துபடுவனென்பதாம்.

வாக்கினன்மனத்தாலென்பதில் உபலக்கணத்தாற் காயத்தாலுணர்தற்கெட்டாமையையுமமைக்க. சிவபிரான் இம்மூன்றிற்குமெட்டாதவரென்பதை "நோக்கினு நுழைகில நுவலு கின்றதோர்-வாக்கினு மமைகில மதிப்ப வொண்கில" என மேல் திருவவதாரப்படலத்திற் கூறுதலாலுமுணர்க. (அஉ)

ஏமுற வுலக மெல்லா மீறுசெய் முதல்வன் றன்னைப்
பூமலர் கொண்டி யானே பொருகின்றே னகையீ தன்றோ
வாமிது விதியின் செய்கை யதனையார் கடக்க வல்லார்
தாமரை முதல்வற் கேனுந் தள்ளருந் தகைய தன்றோ.

இ—ள்: ஏமுற உலகம் எல்லாம் ஈறுசெய் முதல்வன் தன்னை-இன்பம் பொருந்தும்படி உலகமனைத்தையுஞ் சங்கரிக்கின்ற தலைவராகிய சிவபெருமானை, பூ மலர் கொண்டு யானே பொருகின்றேன்—புஷ்பபாணங்களால் யானே பொருதுவெல்வேன், ஈது நகை அன்றோ—இவ்வண்ணம் (எவராலும்) பழிக்கப்படுவதன்றோ?, இது விதியின் செய்கை ஆம்—இவ்வாபத்து நமக்கு நேர்ந்தது ஊழின் செயலேயாம், அதனை கடக்க வல்லார் யார்—அவ்வூழைக்கடக்கத்தக்கவர் யாவர், தாமரை முதல்வற்கேனும் தள்ளரும் தகையது அன்றோ—தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவராலாயினும், விலக்குதற்கரியதன்மையை யுடைத்தன்றோ எ—று.

எல்லாவுலகங்களையுஞ் சங்கரிக்கும் பேரழற்பிழம்பாகிய கடவுளை அவ்வக்கினிவெப்பந்தாவியவுடனழிகின்ற மலர்க்கணைகளால் வெல்வது கூடாதென்றபடி.

சிவபெருமான் சங்காரகிருத்தியத்தை ஆன்மாக்கட் கிளைப்பாற்றுகையின் பொருட்டியற்றுதலின் 'ஏமுறவுலகமெல்லாமீறுசெய்முதல்வன்' என்றார். விதியைக் கடத்தலியலாதென்பதை "ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று- சூழினுந்தான்முந்துறும்" என்னுந்திருக்குறளானும், "வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலா-வனைத்தாய நூலகத்து மில்லை" எனவும்———"தாந்தாமுன்செய்தவினை தாமேயனுபவிப்பார்-பூந்தாமரையோன்பொறிவழியே-வேந்தே- யொறுத்தாரையென்செயலாமூரெல்லாமொன்றாய்-வெறுத்தாலும்போமோவிதி" எனவும் வரும் ஔவையார் வாக்கானுமுணர்க.

சிவபிரானது கண்ணழலால் இறக்தும் விதி மன்மதனுக்கு நேர்ந்தசரித்திரம்:—முற்காலத்திலே, திருமால் புத்திரப்பேறின்மையாற் சிவபிரானைக்குறித்து எண்ணில்காலம் அருந்தவஞ்செய்ய, சிவபிரான் அவர்க்கருள்செய்யும்படி தேவியுடன் எழுந்தருளிவந்தனர். அப்பொழுது திருமால், உடன்வந்த உமாதேவியாரைவிட்டுச் சிவபிரானைமாத்திரம் பணிந்து துதிக்க, சிவபிரான் 'அன்பனே! நீ தவமியற்றிய காரணம் யாது' என்று வினவியருளினர். திருமால் 'ஸ்வாமீ! சிறியேன் புத்திரப்பேறின்றி வருந்துகின்றேன் தந்தருள்க' என்று பிரார்த்தித்தனர். சிவபிரான் அவ்வாறே ஒருபுத்திரனைத்தருகின்றோமென்றருள, உமாதேவியார் தம்மைமதியாத காரணத்தாற் கோபமுடையவராய்த் திருமாலைநோக்கி 'உன் புதல்வன் எம்பெருமானது கோபாக்கினியாலழியக்கடவது' என்றுசாபமிட்டுச் சிவபிரானுடன் மறைந்தருளினர். பின்னர்த்திருமால் துக்கமுற்று, சிவபிரானையும் தேவியாரையும் குமாரக்கடவுளையும் விதிப்படியமைத்துப் பலகாலம்பூசித்துவர, அவர் சாந்நித்தியமாயினர். அப்பொழுது திருமால் முன்னர்த் தேவியாரையும், பின்னர்ச் சிவபிரானையும்பணிந்து துதிக்க, உமாதேவியார் மனமகிழ்ந்து 'அன்பனே! எமதுசாபத்திற்கு அழிவில்லையாதலின், உன்குமாரன் எம்பெருமானது கண்ணழலாலிறந்து மீட்டும் எழுக' என்று திருவாய்மலர்ந்து சிவபிரானுடன் மறைந்தருளினர் என்பதாம். இதன்விரிவை மேல் தக்ஷகாண்டத்துக் கந்தவிரதப்படலத்திற் காண்க. (௮௩)

ஈங்கிவை யமலன் சூழ்ச்சி யாவதோ முடிவ தோரேன்
றூங்கியான் கிடத்த லொல்லா துண்ணென வெழுந்து வில்லும்
வாங்கினன் சரமும் பூட்டி வல்லவா றிழைப்ப னையன்
பாங்குற நின்று மேலே பட்டவா படுக வென்றான்.

இ—ள்: ஈங்கிவை அமலன் சூழ்ச்சி— இவையெல்லாஞ் சிவபெருமானது புணர்ப்பேயாம், முடிவது யாவதோ-(இனி) நிகழ்ந்து முடிவதுயாதாமோ, ஓரேன்—அறியமாட்டேன், யான் தூங்கி கிடத்தல் ஒல்லா-யான் சோம்பல்கொண்டுகிடத்தல் தகாது, துண்ணென எழுந்து—விரைவில் எழும்பி, வில்லும் வாங்கினன்—வில்லையும் வளைத்து, சரமும் பூட்டி—பாணத்தையுந்தொடுத்து, ஐயன் பாங்கு உற நின்று—சிவபெருமானது பக்கத்தில் நின்று, வல்லவாறு இழைப்பன்—இயன்ற முயற்சியைச்செய்வேன், மேல் பட்டவா படுக என்றான்—அதன்மேல் முடிந்தபடிமுடிக என்று சிந்தித்தான் (மன்மதன்) எ—று.

ஒல்லாது பட்டவாறு என்பவற்றில் ஈற்றுயிர்மெய்கள் தொக்கன. ஈங்கிவை என்றது தேவரேவியதும் தான்வந்ததும்முதலியவற்றை. உம்மைகள் எச்சங்கள். (௮௪)

இனையன பலவு முன்னி யெழுந்துமா மதவே ளிட்ட
தனுவினை யெடுத்து வாங்கித் தண்மலர் விசிகம் பூட்டி
மனைவிதன் னகலாள் செல்ல மதிக்குறை தவழ்ந்த சென்னிப்
புனிதனை தொருசார் போகிப் பொருவகை முயன்று நின்றான்.

இ—ள்: மா மதவேள்—பெருமைபொருந்திய மன்மதன், இனையன பலவும் உன்னி—இவைபோல்வன பலவற்றையுஞ் சிந்தித்து, எழுந்து—எழும்பி, இட்ட தனுவினை எடுத்து வாங்கி—கீழேதவறவிட்ட வில்லை எடுத்துவளைத்து, தண் மலர் விசிகம் பூட்டி—குளிர்ந்த புஷ்பபாணங்களைத்தொடுத்து, மனைவி தன் அகலாள் செல்ல—இரதிதேவி தன்னைவிட்டுப்பிரியாதுடன்வர, மதிக்குறை தவழ்ந்த சென்னி புனிதனது ஒருசார் போகி- பாலசந்திரன்பொருந்திய திருமுடியினையுடைய பரிசுத்தராகியசிவபெருமானது ஒரு பக்கத்திற்போய், பொருவகை முயன்று நின்றான்— போர்செய்யும்படி முயற்சிசெய்து நின்றான் எ—று.

மதிக்குறை=குறைமதி; அகலாள்-முற்றெச்சம். (௮௫)

மாரவே ளீண்டு நிற்ப மனோவதி நகரின் மேய
வாரண முதல்வன் றன்னை யமரர்கோன் றொழுது நோக்கிக்
காருறழ் கண்டன் றன்பாற் காமனை விடுத்தி யன்னான்
போரிய லுணர்வா னங்கட் போதரல் வேண்டு மென்றான்.

இ—ள்: மாரவேள் ஈண்டு நிற்ப- மன்மதன் இங்கே(இவ்வாறு)நிற்க, மனோவதிநகரில் மேய ஆரணமுதல்வன் தன்னை- மனோவதியென்னும் நகரத்தில் வீற்றிருக்கின்ற வேதங்களையுணர்ந்த தலைவராகிய பிரமதேவரை, அமரர்கோன் தொழுது நோக்கி—தேவேந்திரன் கைதொழுது பார்த்து, கார் உறழ் கண்டன் தன் பால் காமனை விடுத்தி- (ஸ்வாமீ! தேவரீர்) கருநிறம்பொருந்திய திருக்கண்டத்தையுடைய சிவபெருமானிடத்து மன்மதனை அனுப்பினீர்(ஆதலின்), அன்னான் போர் இயல் உணர்வான்-அவனது போர்ச்சாமர்த்தியத்தைப் பார்க்கும்படி, அங்கண் போதரல் வேண்டும் என்றான்—(யாங்கள்) அங்கே போதல்வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான் எ—று. (௮௬)

சதமக னினைய கூறத் தண்மலர்க் கடவு ளேராக்
கதுமென வெழுந்து வானோர் கணத்துட னனையன் போற்றப்
பொதிதரு கயிலை யந்தண் பொருப்பின்மே லொருசார் போகி
மதனிய றெரிந்து முக்கண் வள்ளலை வழுத்தி நின்றான்.

இ—ள்: சதமகன் இனைய கூற—நூறுயாகங்களையுடைய இந்திரன் இவ்வாறு விண்ணப்பஞ்செய்ய, தண் மலர் கடவுள் நேரா—குளிர்ந்த தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவர் (அதற்குச்) சம்மதித்து, கதுமென எழுந்து—விரைவிலெழும்பி, வானோர் கணத்துடன் அனையன் போற்ற-தேவர்கூட்டத்துடன் அவ்விந்திரன் துதித்துடன்வர, பொதிதரு தண் கயிலையம் பொருப்பின்மேல் ஒருசார் போகி-(சோலைகளான்) மூடப்பெற்ற குளிர்ந்த திருக்கைலாசமலையின்மீது ஒருபுடையிற் போய்நின்று, மதன் இயல் தெரிந்து—மன்மதனது போர்முயற்சியைக்கண்டு, முக்கண் வள்ளலை வழுத்தி நின்றான்— மூன்றுதிருக்கண்களையுடைய அருள்வள்ளலாகிய சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து நின்றார் எ—று.

அம்-சாரியை; அழகெனினுமாம். (௮௭)

எறிதரு கணிச்சிச் செங்கை யீசன்மே லிலக்க நாடிக்
குறிவினர் போல நின்ற கொடுந்தொழின் மாரன் றுஞ்ச

நெறியினர்க் கச்ச முண்டோ நினைத்தது முடிப்ப னென்று
நறுமலர் வாளி யைந்து நாதன்மேற் செல்ல விட்டான்.

இ—ள்: எறிதரு கணிச்சி செம் கை ஈசன்மேல் இலக்கம் நாடும் குறியினர் போல நின்ற கொடுந்தொழில் மாரன்—(எதிர்ந்தார்மேல்) வீசுதற்கேற்ற மழுப்படையைத்தாங்கிய சிவந்த திருக்கரத்தையுடைய சிவபிரான்மீது இலக்குப்பார்க்குங் குறிப்புடையார்போலநின்ற தீத்தொழிலையுடைய மன்மதன், துஞ்சும் நெறியினர்க்கு அச்சம் உண்டோ—இறக்குங்கருத்துடையார்க்குப் பயமுண்டா? (இல்லையே), நினைத்தது முடிப்பன் என்று—யானெண்ணிய தொழிலை (விரைவிற்) செய்துமுடிப்பேனென்று சிந்தித்து, நறு மலர் வாளி ஐந்தும் நாதன் மேல் செல்ல விட்டான்—நறுமணங்கமழும் புஷ்பபாணங்களைந்தையுஞ் சிவபெருமான்மேற் போகும்படி ஏவினன் எ—று.

வில்லிற் கணைகளைப்பூட்டியவாறே சிவனருகில் நெடுநேரம்நின்று ஆலோசித்தலால் 'ஈசன்மேலிலக்கநாடுங்குறியினர்போலநின்றகொடுந்தொழின்மாரன்' என்றார்.()

விட்டவெம் பகழி யைந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடுங்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே.

இ—ள்: விட்ட வெம் பகழி ஐந்தும்—மன்மதன்செலுத்திய கொடிய ஐந்து பாணங்களும், வியத்தகு விமலன் மீது பட்டலும்—பெருமைமிக்க மலரகிதராகிய சிவபெருமான்மேற்படுதலும், சிறிதே வேளை பார்த்தனன்— (அச்சிவபெருமான்) சற்றே மன்மதனைப்பார்த்தருளினார், பார்த்தலோடும்—(அவ்வாறு)பார்த்தவுடன், கடு அழல் பொதிந்த நெற்றி கண் அது—பேரழல்பொதியப்பெற்ற நெற்றிக்கண்ணானது, கடிதே காமன் சுட்டது—விரைவில் மன்மதனை எரித்தது, கயிலைமுற்றும் சூழ் புகை பரவிற்று—(அதனால்)திருக்கைலாசமலைமுழுவதும் சூழ்ந்த புகையானது பரந்தது எ—று.

சம்மோகனாஸ்திரமாதலின் 'வெம்பகழி' என்பதற்கு விருப்பத்தைத்தரும்பாணமெனினுமாம். (அக)

ஆலையஞ் சிலைவே ளாக மழல்படக் கயிலை யின்க
ணேலவெம் புகையுந் தீயு மெழுதரு மியற்கை நாடின்
மாலயன் முதலோர் யாரு மதித்துழி விரைந்து பாலின்
வேலையி னடுவு தீய விடமெழுந் தனைய தம்மா.

இ—ள்: ஆலையம் சிலை வேள் ஆகம் அழல்பட—கருப்புவில்லையுடைய மன்மதனது சரீரம் எரிய, கயிலையின்கண்—திருக்கைலாசமலையில், ஏல வெம் புகையும் தீயும் எழுதரும் இயற்கை நாடின்—மிகுதியாகக் கொடியபுகையும் அக்கினியுந்தோன்றுந்தன்மையை (எதுபோலுமென) ஆராயின், மால் அயன் முதலோர் யாரும் மதித்துழி—விஷ்ணுமூர்த்தி பிரமாமுதலாயினோரெல்லோருங் கடைந்தபொழுது, விரைந்து—விரைவாக, பாலின் வேலையின் நடுவு—பாற்கடலினடுவே, தீய விடம் எழுந்து அனையது—கொடிய நஞ்சுதோன்றினாற் போன்றது எ—று.

அம்-சாரியை. ஆலை-ஆகுபெயர். எழுந்தால் என்னும் வினையெச்சத்தின் ஆல்விகுதிதொக்கது. அக்கினிச்சுவாலைபரம்பப்பெறுங் கயிலைமலை கடையப்படாநின்ற பாற்கடலையும், அம்மலையின்மேலெழும்புகை நஞ்சையும் நிகர்த்தனவென்க. (கூ0)

செறிந்ததீப் புகையின் மாலை செல்லலுங் குணபால் வாய்த
லுறைந்ததோர் நந்தி தேவ னொல்லையி லதனைப் பாரா
விறந்துபா டாயி னன்கொ லேகிய மதன னென்று
வறிந்தபோ வடைந்தார்க் கோதி யொருசெய லறைய லுற்றான்.

இ—ள்: செறிந்த தீ புகையின் மாலை செல்லலும்-எங்கும்பரவிய அக்கினியினின்றெழுந்த புகைப்படலம் போதலும், குணபால் வாய்தல் உறைந்தது ஓர் நந்திதேவன்—கீழ்த்திசைவாயிலைக் காவல்செய்திருந்த திருநந்திதேவர், ஒல்லையில் அதனை பாரா—விரைவில் அத்தன்மையைப்பார்த்து, ஏகிய மதனன் இறந்து பாடாயினன் கொல் என்று—உட்புகுந்த மன்மதன் இறந்து அழிந்தானோஎன்றுசிந்தித்து, அறிந்து—(நிகழ்ந்தசெயலை)உணர்ந்து, அடைந்தார்க்கு ஓதி—தம்மைச்சார்ந்திருக்கின்ற கணத்தவர்களுக்கு (அதனைக்) கூறி, ஒருசெயல் அறையல் உற்றான்—பின்னுமொருசெயலைக் கூறத்தொடங்கினார் எ—று. (௧௧)

நண்ணிய வுணர்வின் மிக்கீர் நமக்கிது புகல்வ னெங்கோன்
கண்ணுத லுமிழ்ந்த செந்தீக் காமனைப் பொடித்த தன்றா
லண்ணலை யெய்வ னென்று வனையவன் றுணிவிற் கூறித்
துண்ணென வீண்டு வந்த செயற்கையே சுட்ட போலும்.

இ—ள்: நண்ணிய உணர்வில் மிக்கீர்—நட்பமான அறிவிற்சிறந்தவர்களே, நமக்கு இது புகல்வன்—உங்களுக்கு இவ்வாசகத்தைச்சொல்வேன் (கேளுங்கள்), எம் கோன் கண் நுதல் உமிழ்ந்த செம் தீ காமனை பொடித்தது அன்று—எங்கள் தலைவராகிய சிவபெருமானது நெற்றிக்கண்கான்ற சிவந்த அக்கினிப்பொறி மன்மதனை எரித்ததன்று, அனையவன்—அந்தமன்மதன், அண்ணலை எய்வன் என்று துணிவில் கூறி—சிவபெருமானைப் பாணமெய்து வெல்வேனென்று துணிவுடன்பேசி, துண்ணென ஈண்டு வந்த செயற்கையே சுட்ட—விரைவாக இங்கேவந்தசெயலே சுட்டது எ—று.

செய்தகுற்றத்திற்காகவே தண்டித்தாரென்பது தாற்பரியம். சுட்ட என்பதில் ஈற்றுயிர்மெய்தொக்கது; ஒருமைபன்மை மயக்கமெனினுமாம். (௧௨)

இன்னினி மகிழ்நன் றுஞ்சு மியற்கையை யிரதி நாடி
வன்னிபெய் யலங்கல் போலாய் வயிறலைத் திரங்கி யெங்கோன்
றன்னைவந் திரப்ப வேளைத் தருகுவன் காண்டி ரந்த
முன்னவ னணுக்கட் காய முறைபுரி யருளா லென்றான்.

இ—ள்: இன்னினி—இனி, இரதி—இரதிதேவியானவள், மகிழ்நன் துஞ்சும் இயற்கையை நாடி—தன் கணவனிறந்ததன்மையைப்பார்த்து, வன்னி பெய் அலங்கல் போல் ஆய்-அக்கினியிலிட்ட பூமாலையைப்போல்வாடி, வயிறு அலைத்து இரங்கி-வயிற்றை அலைத்துப்புலம்பி, எம் கோன் தன்னை வந்து இரப்ப—எங்கள் தலைவராகிய சிவபெருமானையடைந்து பிரார்த்திக்க, அந்த முன்னவன்—அந்தக்கடவுள், அணுக்கட்கு ஆய முறை புரி அருளால்—ஆன்மாக்கட்கேற்ற முறைமையைச்செய்கின்ற திருவருளால், வேளை தருகுவன்—மன்மதனையெழுப்புவார், காண்டிர் என்றான்— பாருங்களென்று கூறியருளினார் (திருநந்திதேவர்) எ—று.

தம்மையெதிர்த்துப்பாணமெய்த குற்றந்தீர்ந்தபின்னெழுப்புவரென்பார் 'அணுக்கட்காயமுறைபுரியருளாலெழுப்புவன்' என்றார். (௧௩)

ஐந்தொகை யாற்றின் மாடே யமலனை நினைந்து நோற்ற
நந்தியந் தேவ னின்ன நவிறலு மவற்சூழ் கின்ற
வந்தமில் கணத்தோர் கேளா வகிலமுய் பொருட்டா லெங்கோன்
புந்திகொ ளருளின் செய்கை போற்றெடுத் தனரா யுற்றார்.

இ—ள்: ஐந்தொகை ஆற்றின் மாடு அமலனை நினைந்து நோற்ற நந்தியந்தேவன்—திருவையாறென்னுந்தலத்திற் சிவபெருமானை நினைந்துத் தவஞ்செய்த திருநந்திதேவர், இன்ன நவிறலும்—இவ்வாசகங்களைக் கூறுதலும், அவன் சூழ்கின்ற அந்தம் இல் கணத்தோர் கேளா—அவரைச்சூழ்ந்திருக்கின்ற அளவற்ற சிவகணத்தவர்கள் கேட்டு, அகிலம் உய் பொருட்டால் எம்கோன் புந்தி கொள் அருளின் செய்கை போற்றெடுத்தனர் ஆய் உற்றார்—எல்லாவுலகங்களுமுய்யும்பொருட்டு எங்கள் தலைவராகிய சிவபெருமான் திருவுள்ளம்பற்றிய காருண்ணியச்செயலைத் துதித்தவர்களாயிருந்தார்கள் எ—று.

தம்மைமதியாதெதிர்த்த பாவத்தைத்தீர்த்தற்கும் அவ்வாறெதிர்த்தோர் தண்டிக்கப்படுவரென்பதையெவருமுணர்ந்துய்தற்குமாகவே மன்மதனையெரித்தனராதலின் 'அகிலமுய்பொருட்டாலெங்கோன்புந்திகொளருளின்செய்கை' என்றார்.

நந்திதேவர் தவஞ்செய்தசரித்திரம்:—முற்காலத்திற் சிலாதரென்னும் முனிவர் புத்திரப்பேறின்றி வருந்தித் திருவையாற்றையடைந்து தீர்த்தஸ்நாநஞ்செய்து சிவபூசையியற்றித் திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து சிவசந்நிதானத்தில்வந்து வணங்கி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச்செபித்துப் பலகாலந்தவமியற்ற, சிவபெருமான் அத்தவத்திற்கிரங்கி இடபாரூடராய்ப் பார்வதியாரோடெழுந்தருளிவந்து 'முனிவனே! நீ விரும்பியபொருள்யாது' என்றனர். முனிவர் 'எம்பெருமானே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைத் தந்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதற்குப்பெருமான் மகிழ்ந்து, 'முனிவனே! நீ புத்திரகாமேட்டியாகஞ் செய்யும்பொருட்டுப்பூமியையுழு; அப்பொழுது ஒருபுத்திரன் வெளிப்படுவான் அவனுக்கு வயசுபதினாறு' என்றுகூறி மறைந்தருளினார். பின்னர்ச்சிலாதமுனிவர் சிவபிரானதுகட்டளைப்படி புத்திரகாமேட்டியாகஞ் செய்யும்பொருட்டுப் பொன்னேர்பூட்டிப் பூமியையுழும்பொழுது உழுபடையிற் கொழுவாய்ப்பட்டு ஒருமாணிக்கப்பெட்டி கிளம்பியது. முனிவர் அதனையெடுத்துத் திறந்துபார்த்து, நெற்றிக்கண்ணும் இளம்பிறைதவழுஞ் சடைமுடியும் நான்குபுயங்களுமமைந்த ஒருசிவமூர்த்தமிருப்பக்கண்டு பிரமித்துப் பரமேசுரரைத் தோத்திரஞ்செய்துநின்றனர். அப்பொழுது 'முனிவனே! இப்பெட்டியைமூடிப் பின்னொருமுறை திறப்பாயாக' என்று ஒரசரீரிவாக்குத்தோன்றிற்று. முனிவர் அவ்வாறேமூடித் திறப்ப, அப்பெருமான் அப்பெட்டியுள் ஓர் குழந்தையுருவாகத்தோன்றி அழுதனர். முனிவர் அக்குழந்தையையெடுத்து சாருலக்ஷணையென்னும் தமது பத்தினியாரிடங்கொடுத்து வளர்த்து வந்தார். பின்னர்ப்பதினாறும்வயசு சமீபித்தபொழுது தந்தைதாயரிருவரும் வருந்த, அதனையறிந்த குமாரர் 'யான் அழியாவரம்பெற்றுவருகின்றேன்' என்று பெற்றோர்க்குக்கூறி, திருவையாற்றில் அயனரிதீர்த்தமத்தியினின்று அருந்தவஞ்செய்ய, சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளிவந்து, நித்தியகாயங்கொடுத்து, சிரசிற்றிருக்கரம்வைத்துத் தீக்ஷபுரிந்து, சாரூப்பியமருளி, திருநந்திதேவரெனத் தமதுதிருநாமத்தைஅவர்க்கிட்டு, குருசந்தானம்விளங்க வேதசிவாகமங்களைச் சனற்குமாரர்முதலிய முனிவர்களுக்குபதேசிக்கக்கட்டளையிட்டு, சுயசையென்னுங் கன்னிகையைத்திருமணமியற்றுவித்து, சிவகணங்களுக்குத்தலைவராய்த்தமது திருக்கோயிற்றிருவாயிலினின்று அதிகாரஞ்செலுத்தும்படி சுரிகையும் பிரம்புங்கொடுத்தருளினர் என்பதாம். இச்சரித்திரம் திருவையாற்றுப்புராணமுதலியவற்றிற் கூறப்பட்டுளது. (௬௪)

வாவலங் கிள்ளை மான்றேர் மதன்புரி வினையா லன்னோன்
வேவரப் புணர்த்து நோக்கி மிகைபடா தலன்சா ரான
தேவியை முடிக்கு மாற்றல் செய்தில னிகல்பற் றின்றி
மூவரை விடுத்துத் தொன்னாண் முப்புரம் பொடித்த முன்னோன்.

இ—ள்: வாவல் அம் கிள்ளை மான் தேர் மதன் புரி வினையால்— தாவுதலையுடைய அழகிய கிளிகளாகிய குதிரைபூண்ட (தென்றலாகிய) தேரினையுடைய மன்மதன்செய்த பாவத்திற்காக, அன்னோன் வேவர புணர்த்து நோக்கி—அவன் எரியும்படி குறிச்செய்து பார்த்தருளி, மிகைபடாது அவன் சார் ஆன தேவியை முடிக்கும் ஆற்றல் செய்திலன்— குற்றமுறாமல் அம்மன்மதனது பக்கத்தினின்ற இரதிதேவியை அழிக்குந்திறத்தைச்செய்திலார், தொல் நாள்—முன்னைநாளில், இகல் பற்று இன்றி—வெறுப்பும் விருப்புமின்றி, மூவரை விடுத்து முப்புரம் பொடித்த முன்னோன்— மூன்றசுரர்களைத் தவறவிடுத்து முப்புரங்களையும் அழித்த முதல்வராகிய சிவபெருமான் எ—று.

முப்புரமெரித்தகாலத்தில் அங்கிருந்த சிவபத்தர்களாகிய தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்தியுன்மாலி என்னும் மூன்றசுரரையும் எரிக்காதுவிடுத்ததுபோல, மன்மதனையெரித்தபோதும் நிரபராதியாய் அவனுடனின்ற இரதிதேவியை எரிக்காது விடுத்தனர் என்பதாம். (௩௫)

கண்ணழல் சுடுத லோடுங் காமவேள் யாக்கை முற்றுஞ்
சுண்ணம தாகி வீழத் துஞ்சினன் போய பின்னை
யண்ணலம் பகவன் றொல்லை யமைதியி னிருந்தா னெல்லா
மெண்ணினின் றியற்று மெங்கோற் கினையதோ வரிது மாதோ.

இ—ள்: கண் அழல் சுடுதலோடும்—நெற்றிக்கண்ணிலுள்ள அக்கினியானது எரிக்க, காம வேள் யாக்கை முற்றும் சுண்ணமது ஆகி வீழ—மன்மதனது தேகமுழுவதுஞ் சாம்பராய்க் (கீழே) விழ, துஞ்சினன் போய பின்னை—இறந்துபோன பின்பு, அண்ணலம் பகவன்—பெருமையிற்சிறந்த சிவபெருமான், தொல்லை அமைதியின் இருந்தான்—பழையஞானநிலையில் வீற்றிருந்தார், எல்லாம் எண்ணி நின்று இயற்றும் எம் கோற்கு இனையதோ அரிது-சிருட்டிமுதலிய எல்லாத்தொழில்களையும் (ஒரேகாலத்தில்) உணர்ந்துநின்று செய்கின்ற எங்கள் தலைவராகியசிவபெருமானுக்கு இச்செயலா அரிது? (அரிதன்று) எ—று.

யோகநிலையிலிருந்தபடியே மன்மதன் செய்தகுற்றத்தை அறிவதும், தண்டிப்பதும், பின்னும் யோகநிலைதவறாதிருத்தலும், முற்றறிவுடைய கடவுளுக்கு அருமையாகாது என்பதாம். (௩௬)

பாடுறு கணவன் செய்கை பார்த்தலு மிரதி யுள்ளங்
கூடின துயரம் வீந்த கொண்டதொ லுணர்ச்சி கண்ணீ
ரோடின வியர்த்த மெய்மூக் குயிர்த்தன வொடுங்கிற் றாவி
வீடின னிவளு மென்ன விரைந்துகீழ்த் தலத்தின் வீழ்ந்தாள்.

இ—ள்: கணவன் பாடு உறு செய்கை பார்த்தலும்—(தன்) கொழுநனாகிய மன்மதன் இறந்ததன்மையைக் கண்டவுடன், இரதி உள்ளம் துயரம் கூடின—இரதிதேவியின் மனத்தில் துக்கம் நிறைந்தது, கொண்ட தொல் உணர்ச்சி வீந்த—முன்னுள்ள அறிவுகெட்டது, கண்ணீர் ஓடின—சோகபாஷ்பஞ் சிந்திற்று, மெய் வியர்த்த—சரீரம் வியர்த்தது, மூக்கு உயிர்த்தன—மூக்குப்பெருமூச்சுவிட்டது, ஆவி ஒடுங்கி

ற்று—உயிர் அடங்கியது (இக்குறிகளெல்லாந்தோன்ற), இவளும் வீடினள் என்ன—(மன்மதன்மாத்திரமன்று அவன் மனைவியாகிய) இவளும் இறந்தாளென்று கண்டோர் சொல்லும்படி, விரைந்து கீழ்த்தலத்தின் வீழ்ந்தாள்—விரைவிற் பூமியில் விழுந்தாள் எ—று.

துயரம் கூடினமுதலிய ஐந்து தொடர்கள் ஒருமைபன்மை மயக்கம். (௬௭)

சுரிதரு குடிஞை யாற்றிற் சுழித்தலைப் பட்ட மான்போற்
பருவரல் வாரி நாப்பட் படிந்துபற் றின்றிச் சோரு
மிரதிசில் பொழுதிற் பின்ன ரிறந்ததொல் லுணர்வு தன்பால்
வருதலு மறித்துச் செங்கை வயிறலைத் திரங்க லுற்றாள்.

இ—ள்: சுரி தரு குடிஞை ஆற்றில் சுழித்தலை பட்ட மான் போல்— சுரித்துப்பாய்கின்ற யாற்றின் சுழியிலகப்பட்ட மானைப்போல, பருவரல் வாரி நாப்பண் படிந்து—துன்பமாகிய சமுத்திரத்துள் அமிழ்ந்தி, பற்று இன்றி சோரும் இரதி—பற்றுக்கோடின்றி வருந்துகின்ற இரதியானவள், சில் பொழுதில் பின்னர்— சிறிதுநேரத்தின்பின், இறந்த தொல் உணர்வு தன் பால் வருதலும்—அழிந்த பழைய அறிவு (மீட்டும்) தன்னிடத்திற்றோன்ற, செம் கை மறித்து-சிவந்த கையையுதறி, வயிறு அலைத்து இரங்கலுற்றாள்—வயிற்றையடித்துப் புலம்பத்தொடங்கினாள் எ—று.

சுரித்தல் வளைந்துபாய்தல். குடிஞை யாறு ஒருபொருட்கிளவிகள். அச்சக்குணமியல்பாகவுண்மையின் ஆற்றின்சுழிப்பட்டுழி மிக்கதுயரைப்பெறுமாதலானும், நோக்கவொப்புமையுடைமையானும் ஏனையவிலங்குகளைக்கூறாது மானையெடுத்துக்கூறினார்.

வேறு.

செம்பதுமை திருக்குமரா தமியேனுக் காருயிரே திருமான் மைந்தா
சம்பரனுக் கொருபகைவா கன்னல்வரிச் சிலைபிடித்த தடக்கை வீரா
வம்பவளக் குன்றனைய சிவன்விழியால் வெந்துடல மழிவுற் றாயே
யும்பர்கடம் விழியெல்லா முறங்கிற்றோ வயனு முவப்புற் றானோ.

இ—ள்: செம் பதுமை திரு குமரா—செந்தாமரைமலரில் வசிக்கின்ற இலக்குமியின்சிறந்த புதல்வரே!, தமியேனுக்கு ஆர் உயிரே-அடியேனது அரிய உயிர்போன்றவரே, திருமால் மைந்தா—ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் குமாரரே!, சம்பரனுக்கு ஒரு பகைவா—சம்பராசுரனது ஒரு பகைவரே!, வரி கன்னல் சிலை பிடித்த தட கை வீரா-வரியப்பட்ட கருப்புவில்லையேந்திய விசாலித்த கையையுடைய வீரரே!, அம் பவள குன்று அனைய சிவன் விழியால்—அழகிய பவளமலைபோன்ற சிவபெருமானது திருக்கண்ணினால், உடலம் வெந்து அழிவுற்றாயே—சரீரம் எரிந்து இறந்தீரே, உம்பர்கள் தம் விழி எல்லாம் உறங்கிற்றோ—(உம்மையேவிய) தேவர்களது கண்களெல்லாந் துயின்றனவா?, அயனும் உவப்பு உற்றானோ—(நீர் மறுத்துரையாடியவழிக்கோபித்த) பிரமனும் (இப்போது) மகிழ்ந்தாரா? எ—று.

தமியேனுக்கு சம்பரனுக்கு என்பவற்றில் குவ்வுருபு, உடையஎன்பதுபோற் சட்டியர்த்தமாய்வந்தன. விழியெல்லாமுறங்கிற்றோ- பன்மையொருமைமயக்கம். அருமைக்குமாரனென்பாள் 'திருக்குமரா'எனவும், எவராலுஞ்சயித்தற்கரிய சம்பரனைச்சயித்தவரேயென்பாள் 'சம்பரனுக்கொருபகைவா' எனவும், பிரமனும் தேவர்களும் நும்மையேவிவிட்டுத் தூரத்தேநின்றனரன்றி இறந்துபடும்பொழுது அதனைத்தவிர்க்க ஒருபாயமுஞ்செய்திலரென்பாள் 'உம்பர்கடம்விழியெல்லாமுறங்கிற்றோ வயனுமுவப்புற்றானோ' எனவுங்கூறினாள். மன்மதன் சம்பராசுரனையழித்தமையை "நம்பி கருப்புவினல்லிசை பாடுந்-தும்பிகொணுணின் வளைத்தெதிர் தோன்றி-யம்பென மென்மலரை

ந்தும் விடுத்துச்-சம்பர னுவி தடிந்தன னன்றே" என்னுங் கூர்மபுராணச்செய்யுளானு ணர்க. (௯௯)

முன்னாளிற் புரமூன்று மட்டவன்மேற் பொரப்போதன் முறையோ வென்று
சொன்னாலுங் கேட்டிலையே யமரர்பணி புரிவதுவே துணிந்திட் டாயே
யுன்னாகம் பொடியாகிப் போயினதே யிதுகண்டு முய்வாருண் டோ
வென்னாவி யாகியநீ யிறந்தபின்னும் யான்றனியே யிருப்ப தேயோ.

இ—ள்: முன்னாளில் புரம் மூன்றும் அட்டவன் மேல்—முற்காலத்தில் முப்புரங்களையுமெரித்தருளிய சிவபெருமான்மீது, பொர போதல் முறையோ என்று சொன்னாலும் கேட்டிலை-போர்செய்யச்செல்வது தக்கதன்றென்று யான்சொல்லியவழியுங் கேட்டிலீர், அமரர் பணி புரிவதுவே துணிந்திட்டாய்-தேவர்களது ஏவலைச் செய்வதே (நன்றென்று) துணிந்தீர், (அங்ஙனந் துணிந்தமையால்) உன் ஆகம் பொடி ஆகி போயினதே-உமதுதேகஞ் சாம்பராய்ப்போயிற்றே, இது கண்டும் உய்வார் உண்டோ-இந்தப் பரிதாபச்செயலைப் பார்த்தும் (இறவாது) உய்ந்திருப்பவருண்டா? (இல்லையே), என் ஆவி ஆகிய நீ இறந்த பின்னும் யான் தனியே இருப்பதே—என் உயிர்போன்ற (துணைவராகிய) நீர் இறந்தபின்பும் யான் தனியேயிருக்கக்கூடுமா? (கூடாதே) எ—று.

முப்புரங்களையும் எரித்தருளியதுபோல நும்மையும் எரிப்பரென்றை யுற்றுரைக்கவுங் கேட்டிலீரென்பாள் 'முன்னாளில் * * * சொன்னாலுங்கேட்டிலை' எனவும், சுற்றத்தினரல்லாத பிறர்காணினுஞ் சோகஞ்சகித்தலாற்றாதிறந்துபடத்தக்க இம்மரணத்தை மனைவியாகியயான் கண்டும் இறவாது சகித்திருப்பதுகூடாதென்பாள் 'இதுகண்டுமுய்வாருண்டோ- வென்னாவியாகியநீயிறந்தபின்னும்யான்றனியேயிருப்பதேயோ' எனவுங்கூறினாள். (௧௦௦)

மாறாகப் பரமன்விழி நின்னாற்ற லிலதாக மற்றுன் மெய்யு
நீறாக விண்டெல்லா நெருப்பாகக் கவலை விண்ணோர் நெஞ்சத் தாக
வாறாத பெருந்துயர மெனக்காக வெங்கொளித்தா யருவா யேனுங்
கூறாயோ வறிதிருந்தா யென்கணவா யான்செய்த குறையுண் டோதான்.

இ—ள்: பரமன் விழி மாறு ஆக—சிவபெருமானுடைய நெற்றிக்கண் பகையானவுடன், நின் ஆற்றல் இலது ஆக—உமதுவலிமை கெட, உன் மெய்யும் நீறாக—உமதுசரீரமுஞ் சாம்பராக, விண்டு எல்லாம் நெருப்பு ஆக-இம்மலையெங்கும் நெருப்புண்டாக, விண்ணோர் நெஞ்சத்து கவலை ஆக—தேவர்களது மனத்திற் கவலை உண்டாக, எனக்கு ஆறாத பெரும் துயரம் ஆக—எனக்கு நீங்காத பெருந்துன்பமுண்டாக, எங்கு ஒளித்தாய்—எங்கே சென்றொளித்தீர், அருவாயேனும் கூறாயோ- (உமதுடல் எரிக்கப்பட்டொழிந்ததேல்) அருவமாயேனும் ஒருவார்த்தையைச் சொல்லமாட்டீரா, வறிது இருந்தாய்—வாளாவிருந்தீர், என் கணவா—எனது நாயகரே!, யான் செய்த குறை உண்டோ—யான்செய்தகுற்றம் (யாதேனும்) உண்டா? (இல்லையே) எ—று.

குற்றஞ்செய்திலேனாதலின் என்னுடனுரையாடாதிருப்பது தக்கதன்றென்பதாம். (௧௦௧)

உம்பர்கடம் பாலேயோ விந்திரனார் பாலேயோ வுன்னையுய்த்த
செம்பதுமத் திசைமுகத்தோன் பாலேயோ வரன்செயலைச் சிதைப்ப னென்னு
விம்பரிடை வல்விரைந்து வந்திடுநின் பாலேயோ வீசன் கண்ணால்
வெம்பொடியாய் நீயிறந்த விப்பழிதா னெவர்பாலின் மேவிற் றையோ.

இ—ள்: நீ ஈசன் கண்ணால் வெம்பொடி ஆய் இறந்த இ பழி—(என்கணவரே!) நீர் சிவபெருமானது கண்ணழலால் வெவ்விய சாம்பராயிறந்த இந்த அபவாதமானது, உம்பர்கள் தம்பாலேயோ—தேவர்களிடத்திலேயா, இந்திரனார்பாலேயோ—இந்திரனிடத்திலேயா, உன்னை உய்த்த செம் பதும திசைமுகத்தோன்பாலேயோ-உம்மையேவிய செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரிடத்திலேயா, அரன் செயலை சிதைப்பன் என்று இம்பரிடை வல்விரைந்து வந்திடும் நின்பாலேயோ— சிவபெருமானது யோகச்செயலைக்கெடுப்பேனென்று இவ்விடத்தே மிகவிரைந்துவந்த உம்மிடத்திலேயா, எவர் பாலில் மேவிற்று—யார்மாட்டுத்தங்கியது, ஐயோ—ஐயகோ! எ—று.

கண் ஆகுபெயர். தேவர் சுகம்பெறும் பொருட்டு வந்து மாண்டமையாதலின் இப்பழி அத்தேவர்மாட்டதாம்; ஈண்டுவரும்படி நம்மையேவுதற்குப் பிரமனைத் தூண்டினனாதலின் இந்திரன்மாட்டதாம். நீர் பலகான்மறுத்துரைக்கவும் வலிந்தேவினராதலின் பிரமன்மாட்டதாம்; அவர் வலிந்தேவியவழியும் முடித்தற்கரியகருமத்தை முடிப்பேனென்று துணிந்துவருதலின் நும்மாட்டதாம். இவ்வாறு பலர்மாட்டுஞ்சார்த்தியுரைக்கற்பாலதாய்நிற்கின்ற இப்பழியை யார்மாட்டதென்று நிச்சயித்துரைக்கவகையறியாது மயங்குகின்றேனென்பதாம். (௧௦௨)

வில்லான்முப் புரமெரித்த பரம்பொருள்யோ கந்தவிர்க்க வேண்டில் விண்ணோ
ரெல்லாரு மிறந்தனரோ வென்கணவா நீயோதா னிலக்காய் நின்றாய்
கொல்லாது போலவுனைக் கொன்றனரே யென்னுயிர்க்குங் கொலைசூழ்ந் தாரே
பொல்லாத பேர்க்குநன்றி செய்வதுதம் முயிர்போகும் பொருட்டே யன்றோ.

இ—ள்: வில்லால் மூப்புரம் எரித்த பரம்பொருள் யோகம் தவிர்க்க வேண்டில்—(மேருமலையாகிய) வில்லினால் மூப்புரங்களையுமெரித்தருளிய பரம்பொருளாகிய சிவபெருமானது யோகநிலையையொழிக்கவேண்டுமாயின், விண்ணோர் எல்லாரும் இறந்தனரோ—தேவர்கள்யாவரும் இறந்தார்களா? (இறந்திலரேற் றாமொழிக்கலாகுமே), என் கணவா—எனது நாயகரே!, நீ தானோ இலக்காய் நின்றாய்—நீர்தானா இலக்காய் நின்றீர்?, கொல்லாது போல உனை கொன்றனரே— கொல்லாததுபோலிருந்து கொண்டு உம்மைக்கொன்றுவிட்டார்களே, என் உயிர்க்கும் கொலை சூழ்ந்தாரே—(அதனால்) எனது ஆன்மாவிற்கும் கொலையைத்தேடினார்களே, பொல்லாதபேர்க்கு நன்றி செய்வது தம் உயிர் போகும் பொருட்டே அன்றோ— தூர்ச்சனருக்குபகாரஞ்செய்யப் புகுவது தம் உயிர் நீக்கும்பொருட்டேயல்லவா எ—று.

கொல்லாதது என்பது கொல்லாது எனத்தொக்கது. பெயரென்பது பேர் என விகாரமாயிற்று. (௧௦௩)

என்னபவஞ் செய்தேனோ வென்போல்வார் தமக்கென்ன விடர்செய் தேனோ
முன்னையுள விதிப்பயனை யறிவேனோ விப்படியே முடிந்த தையோ
கன்னல்வரிச் சிலைபிடித்த காவலவோ தமியேனைக் காத்தி டாயோ
வன்னிவிழி யாவுடைய பெருமானை நோவதற்கு வழக்கொன் றுண்டோ.

இ—ள்: என்ன பவம் செய்தேனோ—(என் துணைவராகிய நீர் இறக்கும்படி யான்) என்னபாவத்தைச்செய்தேனோ, என்போல்வார்தமக்கு என்ன இடர் செய்தேனோ—என்னைப்போன்ற மங்கையர்களுக்கு என்னதுயரத்தைச்செய்தேனோ, முன்னை உள விதி பயனை அறிவேனோ—முற்பிறவியிற்செய்த பாவத்தாலுளதாய விதியின் பயனை (இன்னவாறென்று யான்) அறிவேனோ?, இப்படியே முடிந்தது-(அவ்விதியின்றீமைதான் இதுபொழுது) இவ்வாறு நடந்து முடிந்தது, ஐயோ—ஐயகோ, வரி கன்னல் சி

லை பிடித்த காவலவோ-வரியப்பட்டகருப்புவில்லைக்கைக்கொண்ட தலைவரே, தமியேனை காத்திடாயோ-துணையற்றேனாகிய என்னை இரட்சிக்கமாட்டீரா? வன்னி விழியா உடைய பெருமானை நோவதற்கு வழக்கு ஒன்று உண்டோ-அக்கினியை ஒருகண்ணாகவுடைய சிவபெருமானைக்குறைகூறுதற்கு ஙியாயஞ் சிறிதாயினும் உண்டா (இல்லையே) எ-று.

யாதும் வினைப்பயனின்றியித்துயர் ஒருகாலும்வரமாட்டாது. ஆதலின், அவ்வினையைச்செய்துடைய என்னைக் குறைகூறுவதன்றிக் கடவுளைக்குறைகூறுவது ஙியாயமன்று என்பதாம்.

"புலம்பினேவுமாகும்"என்னும் விதிபற்றிக் காவலவோஎன விளியில் ஒகாரம் வந்தது. ஒன்று-ஈண்டு அற்பம். (௧0௪)

பொன்செய்தார் முடிகாணே னழகொழுகுந் திருமுகத்துப் பொலிவு காணேன்
மின்செய்பூ ணணிகுலவும் புயங்காணே னகன்மார்பின் மேன்மை காணேன்
கொன்செய்பூங் கணைகாணேன் சிலைகாணே னாடல்புரி கோலங் காணே [யே.
னென்செய்வே னென்கணவா வென்னையொழித் தெவ்விடத்தே யிருக்கின்றா

இ—ள்: பொன் செய் தார் முடி காணேன்—பொன்னாற்செய்யப்பட்ட மாலையையணிந்தகிரீடத்தைக் காணுகின்றிலேன், அழகு ஒழுகும் திருமுகத்து பொலிவு காணேன்—அழகுவழிகின்றதிருமுகத்தினது பொலிவையுங்காணுகின்றிலேன், மின் செய் பூண் அணி குலவும் புயம் காணேன்—ஒளியைப்பரப்புகின்ற ஆபரணங்களின் அழகுவிளங்குகின்ற புயங்களையுங்காணுகின்றிலேன், அகல் மார்பின் மேன்மை காணேன்—அகன்றமார்பினதுசிறப்பையுங் காணுகின்றிலேன், கொன் செய் பூங்கணை காணேன்—அச்சத்தைவிளைக்கின்ற புஷ்பபாணங்களையுங் காணுகின்றிலேன், சிலை காணேன்—கருப்புவில்லையுங்காணுகின்றிலேன், ஆடல் புரி கோலம் காணேன்— போர்செய்யும்வேடத்தையுங் காணுகின்றிலேன்—என் செய்வேன்—(யான்) யாதுசெய்வேன், என் கணவா—எனது நாயகரே, என்னை ஒழித்து எவ்விடத்தேஇருக்கின்றாய் (நீர்) தமியேனை விடுத்து எங்கேசென்றிருக்கின்றீர்? (சொல்லுதிர்.) எ—று.

அளவின்மேலாக அழகுஙிறைந்திருத்தலால் 'அழகொழுகுந்திருமுகம்' என்றான். (௧0௫)

அந்நாளி லழற்கடவுள் கரியாக வானவரோ டயன்மால் காணப்
பொன்னாரு மங்கலநாண் பூட்டியெனை மணஞ்செய்து புணர்ந்தகாலை
யென்நாளு மினியுன்னைப் பிரியலமென் றேவாய்மை யிசைத்தாய் வேனின்
மன்னவோ மன்னவோ வெனைத்தனியே விட்டேகல் வழக்கோ சொல்லாய்.

இ—ள்: அ நாளில்—அக்காலத்தில், அழற்கடவுள் கரி ஆக— அக்கினிதேவன் சான்றாக, வானவரோடு அயன் மால் காண—தேவர்களும் பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் பார்த்திருக்க, பொன் ஆரும் மங்கலநாண் பூட்டி—பொன்னாலாகிய மங்கலயசூத்திரத்தைக்(கழுத்திற்)பூட்டி,எனை மணம் செய்து புணர்ந்த காலை—என்னை விவாகஞ்செய்து சேர்ந்தகாலத்தில், இனி உன்னை எ நாளும் பிரியலம் என்று—இனி உன்னை எஞ்ஞான்றும் பிரியமாட்டேமென்று, வாய்மை இசைத்தாய்—சத்தியங்கூறினீர், வேனில் மன்னவோ—வேனிற்காலத்தலைவரே, மன்னவோ—என் அரசரே, எனை தனியே விட்டு ஏகல் வழக்கோ—(அந்தச்சத்தியவசனத்திற்குமாறாக) (இப்பொழுது)என்னைத் தனியாகவிடுத்து (நீர்) போவது நீதியா?, சொல்வாய்—சொல்லுதிர் எ—று.

ஆக காண என்னும் எச்சங்களிரண்டுங் காரணகாரியமிரண்டுமின்றி ஙின்றன; அவை, மணஞ்செய்து என்பதனோடியைந்தன. மன்னன் என்பது'ஒருசார்னவ்வீற்

றுயர்திணைப்பெயர்க்கண்' என்னும் நன்னூற்சூத்திரத்தில் 'அயனிட்சியதனோ-டறுபோத லவற்றோடோவுறல்' என்னும் விதிப்படி, விளிக்கண் மன்னுவோவென்றாயிற்று. (௧0௬)

போவென்று வரவிட்ட தேவரெலாம் பொடியாகிப் போன வுன்னை
வாவென்று கடிதெழுப்ப மாட்டாரோ நின்றாதை வலிய னென்பா
ரோவென்று நானிங்கே யரற்றிடவும் வந்திலனோ லுறங்கி னானோ
வேவென்று நின்சிரத்தில் விதித்திருந்தா லவரையெலாம் வெறுக்க லாமோ.

இ—ள்: போ என்று வர விட்ட தேவர் எலாம்—போ என்றுகூறி (இம்மலையில்)வரும்படி ஏவிய தேவர்கள் யாவரும், பொடி ஆகி போன உன்னை வா என்று கடிது எழுப்ப மாட்டாரோ— சாம்பராய்ப்போன உம்மை வா என்றுகூறி விரைவில்எழுப்பமாட்டார்களா?, நின் தாதை வலியன் என்பார்— உமது பிதா மிகவுஞ் சாமர்த்தியமுடையவரென்று(உலகினர்) கூறுவர், நான் இங்கே ஓ என்று அரற்றிடவும் வந்திலன்— (அதுமெய்யாயின்) யான் இங்கே ஓ என்று அறலவும் வந்திலார், உறங்கினனோ— துயின்றாரோ, வே என்று நின் சிரத்தில் விதித்திருந்தால் அவரை எல்லாம் வெறுக்கல் ஆமோ—எரிந்திறப்பாயென்று உமது தலையில் எழுதியிருந்தால் அவர்களையெல்லாம் (யான்)வெறுப்பது தகுமா? (தகாதே) எ—று.

போ வா வே என்பன ஆய்விகுதிகுன்றிய முன்னிலையேவல் வினைமுற்றுக்கள். உம்மை இழிவுசிறப்பு. வலிந்தேவுதலால் நம்மையெழுப்புவதவர்கடனேயாமென்பாள் 'போவென்றவரவிட்டதேவரெலாம்பொடியாகிப்போனவுன்னை-வாவென்றுகடிதெழுப்பமாட்டாரோ' என்றாள். (௧0௭)

நேயமொடு மறைபயிலுந் திசைமுகனைப் புரந்தரனை நின்னைத் தந்த
மாயவனை முனிவர்களை யாவரையு நின்கணையான் மருட்டி வென்றா
யாயதுபோன் மதிமுடித்த பரமனையு நினைந்திவ்வா றழிவுற் றாயே
தீயழலின் விளக்கத்திற் படுகின்ற பதங்கத்தின் செயலி தன்றோ.

இ—ள்: நேயமொடு மறை பயிலும் திசைமுகனை- அன்பினுடன் வேதத்தையோதுகின்ற நான்குமுகங்களையுடைய பிரமதேவரையும், புரந்தரனை—இந்திரனையும், நின்னை தந்த மாயவனை—உம்மைப்பெற்ற விஷ்ணுமூர்த்தியையும், முனிவர்களை—முனிவர்களையும், யாவரையும்—(மாருடர்முதலிய) மற்றும் எல்லோரையும், நின் கணையால் மருட்டி வென்றாய்—உமதுபாணங்களால்மயக்கி வெற்றிகொண்டீர், ஆயது போல்— அத்தன்மையைப்போல, மதி முடித்த பரமனையும் நினைந்து இவ்வாறு அழிவுற்றாயே- பாலசந்திரனையணிந்த சிவபெருமானையும் நினைத்துப்(பொருது)இப்படி இறந்தீரே, இது-இச்செயல்,தீ அழலின் விளக்கத்தில் படுகின்ற பதங்கத்தின் செயல் அன்றோ-எரிகின்றஅக்கினியாகிய விளக்கிற்பட்டுமாய்கின்ற விட்டிற்பறவையின்செய்கைபோலும் அல்லவா! எ-று.

தீ வினைத்தொகை. விளக்கம் என்பதில் அம் பகுதிப்பொருள்விகுதி. பரமனையும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. விட்டிற்பறவை தானளவளாவுதற்கேற்ற மனோகரப்பொருளென்று விளக்கையெண்ணி அதிற்பட்டுமாய்வதுபோல, நீரும் ஏனையதேவர்போற் சிவபெருமானைநினைத்தெதிர்த்து மாண்டீர் என்பதாம். (௧0௮)

தண்பனிநீர்ச் சிவிறிகொண்டு விளையாடி மலர்கொய்து தண்கா நண்ணி
யெண்படும்பூம் பள்ளிமிசைச் சிறுதென்றல் தவரிகளா யினிது செல்ல

வெண்பளித நறுஞ்சாந்தச் சேறுடி யிருவருமாய் விழைந்து கூடிக்
கண்படைகொண் டமர்வாழ்வும் பொய்யாகிக் கனவுகண்ட கதையா யிற்றே.

இ—ள்: தண் பனிநீர் சிவிறி கொண்டு விளையாடி—குளிர்ந்த பனிநீர்நிரம்பிய சிவிறியைக்கைக்கொண்டு(ஒருவர்மேலொருவர்)வீசி, தண் கா நண்ணி மலர் கொய்து—குளிர்ந்த சோலையிற்சென்று பூக்களைக்கொய்து, வெண் பளித நறும் சாந்த சேறு ஆடி—வெள்ளிய பச்சைக்கர்ப்பூரப்பொடிவிரவிய மணங்கமழ்கின்ற சந்தனக்குழம்பைப்பூசி, சிறுதென்றல் கவரிகளாய் இனிது செல்ல—இளந்தென்றற்காற்றானது சாமரங்களாய் நன்றாகவீச, எண் படும் பூம்பள்ளி மிசை-மதிக்கத்தகுந்த புஷ்பசயனத்தின்மேல்-இருவரும் ஆய் விழைந்துகூடி-(நாம்)இருவேமுமாகவிரும்பிச்சேர்ந்து, கண்படைகொண்டு அமர் வாழ்வும்—துயின்றிருந்தவாழ்க்கையும், பொய் ஆகி—பொய்பட்டு, கனவுகண்ட கதை ஆயிற்றே—கனக்கண்டசரித்திரம்போல் முடிந்ததே! எ—று.

எண் முதனித்தொழிற்பெயர். விளையாடி கொய்து ஆடி கூடி அமர் வாழ்வு எனஇயையும். வாழ்வும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு.

கனவுக்காட்சி, விழிக்குங்காறும் மெய்யாகவும் மேற் பொய்யாகவுந்தோன்றி உண்மையைஊகிக்குமிடத்துப் பொய்யுமெய்யுமன்றாய்நிற்பதுபோல, மன்மதனோடுகூடியிருந்தவாழ்வும், சிறிதுகாலம்மெய்யாகவும் மேற்பொய்யாகவுந்தோன்றி உண்மையிற்பொய்யுமெய்யுமன்றாய்நிற்றலின் 'கண்படைகொண்டமர்வாழ்வும்பொய்யாகிக்கனவுகண்டகதையாயிற்றே' என்றாள். "மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ் செந்தீ-யையாவின் மாயை யுருவெளித் தோற்ற மகிலந் துள்ளே-மெய்யா யிருந்தது நாட்செல்ல நாட்செல்ல வெட்டவெறும்- பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே" என்றார் பட்டினத்தடிகளும். (௧0௧)

மருகென்றே யவமதித்த தக்கனார் வேள்விசெற்ற வள்ள றன்னைப்
பொருகென்றே தேவரெலாம் விடுத்தாரே யவராலே பொடிபட் டாயே
யெரிகின்றே னுனைப்போல வாறாத பெருந்துயரால் யானு மங்கே
வருகின்றேன் வருகின்றே னென்னுயிரே யெனப்புலம்பி வருந்து கின்றாள்.

இ—ள்: மருகு என்று அவமதித்த தக்கனார் வேள்வி செற்ற வள்ளல் தன்னை பொருக என்று— மருகனென்றிகழ்ந்த தக்கனது யாகத்தையழித்த அருள்வள்ளலாகிய சிவபிரானைப்பொருது வெல்லுதியென்று, தேவர் எலாம் விடுத்தாரே—தேவர்களெல்லோரும் (உம்மை) அனுப்பினார்களே!, அவராலே பொடிபட்டாயே—அத்தேவர்களாற் சாம்பராயினீரே!, ஆறாத பெரும் துயரால் உனை போல யானும் எரிகின்றேன்—தணியாதபெருஞ்சோகமாகியதீயினால்உம்மைப்போல நானும் எரிகின்றேன், என் உயிரே-எனதுயிர்போன்ற நாயகரே!, யானும் அங்கே வருகின்றேன் வருகின்றேன்—நானும் (நீர்சென்ற) அவ்விடத்தே வருகின்றேன் வருகின்றேன், என புலம்பி வருந்துகின்றாள்—என்று அரற்றி வருந்தினாள் எ—று.

உகரவீற்றுப்பாவதத்திதனாகிய மருகு என்னுஞ்சொல், ஈண்டு, தன்மையையுணர்த்தாது தன்மையுடைப்பொருளையுணர்த்திநின்றது. பொருக என்பதனீற்றகரந்தொக்கது. அவராலென்பதற்கு அச்சிவபிரானாலெனினுமாம். எரிதல்வினைக்கேற்பத் துயரைத் தீயென்றாம். யானும் தாப்பிசை. உம்மை எச்சம். வருகின்றேன் வருகின்றேனென்றவை காலசாமீப்பியம்பற்றி நிகழ்காலமாய் அடுக்கின; குமாரசம்பவமென்னும் வடநூற்காவியத்தினும் இரதிபுலம்பலில் இன்னோரன்னவற்றிற்கு வர்த்தமானக்கிரியைபுணர்த்துக்கூறப்பட்டிருத்தல் காண்க. வருந்துகின்றாள் காலமயக்கவழுவமைதி.

தம்மையிகழ்வாரைத்தவறாது தண்டிப்பவரென்பாள் 'மருகென்றேயவமதித்ததக்கனார்வேள்விசெற்றவள்ளல்' எனவும், அத்தகையினரென்பதையுணர்ந்தும் நம்முயிர்க்குறுந்தீங்கையெண்ணாது தமக்குய்திதேடுதலையே பொருட்படுத்தித் தூண்டினரென்பாள் 'வேள்விசெற்றவள்ளறன்னைப்பொருகென்றேதேவரெலாம்விடுத்தாரே' எனவும், இறந்துபடுகின்றேனென்பாள் 'யானுமங்கேவருகின்றேன்' எனவுங் கூறினாள். (௧௪௦)

காமதகனப்படலம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௩௦௧.

---

# மோனநீங்குபடலம்.

சிவபிரான் சனகனாதியோர்க்குக்காட்டிய மோனநிலையினின்றுநீங்குதலைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது.

## இப்படலப்பொழிப்பு.

மன்மதன் எரிந்திறந்தபின், சிவபெருமான் முன்போல யோகநிலையில் வீற்றிருந்தனர். இருக்க, மன்மதனது செயலைக்காணும்படி கயிலையின்புறத்தேவந்துநின்ற பிரமனாதியதேவர்கள் யாவரும் இந்நிகழ்ச்சிகளைக்கண்டு, பெருந்துயருழந்து, பின்னொருவாறுதெளிந்து, 'எமதுதுயரைத்தீர்க்கவேண்டுமாயின் சிவபெருமானைத்துதித்தலே முறையாம்' என்று துணிந்து, அவர் வீற்றிருக்குந் திருக்கோயிலின் கோபுரவாயிலிற் சென்று நின்று பலவாறுதுதித்தனர். சிவபெருமான் அவற்றைத் திருச்செவிசாத்தி, இரங்கி, அவரையழைத்துவரும்படி திருநந்திதேவரையேவினர். அவர் அவ்வாறே அழைத்துக்கொண்டுவந்து சிவபிரானது சந்நிதியில்நிறுத்தினர். தேவர்கள் அவரைத்தரிசித்துவணங்கித் துதித்தனர். பெருமான் அவரைநோக்கி,'தேவிர்காள்! நுமதுகுறையை முறையிடுங்கள்' என்றருளினர். தேவர்கள் அதுகேட்டு, 'ஸ்வாமீ! பார்ப்பதியாரைத்திருமணஞ்செய்து ஒரு குமாரரைத்தந்து, அவராற் சூரனாதியரையழித்து அருள்புரிக' என்று பிரார்த்தித்தனர். சிவபிரான் அவ்வாறுசெய்கின்றோமென்று திருவாய்மலர்ந்தருளி விடைகொடுப்ப, தேவர்கள் மீண்டு மேருமலையையடைந்தனர். அதன்மேல் இரதிதேவி சிவபிரானைவணங்கி, 'ஸ்வாமீ! என்கணவன் தேவரேவலால் தேவரீருக்கு மாறுசெய்யவந்தவரேயன்றித் தன்கருத்தாகவந்தவரல்லர், ஆதலின், அதனைச்சகித்து அருள்செய்க' என்றுவேண்டினள். சிவபெருமான், 'யான் பார்ப்பதியை மணஞ்செய்யும்பொழுது உன்கணவனை எழுப்புவோம்' என்று அருள்செய்தனர். இரதி அதுகேட்டு, இமையமலையிற்சென்று திருமணத்தை எதிர்பார்த்திருந்தனள். பின்னர்ச் சிவபெருமான் சனகனாதியோரை நோக்கி, 'முனிவிர்காள்! யாங்காட்டியவாறே நிட்டைகூடி முத்திபெறுதிர்' என்று அருள்செய்து, விடைகொடுத்தனுப்பினர் என்பதாம்.

இரதி யின்னணம் வருந்திடத் தொன்மைபோ லெங்கோமான்
விரத மோனமோ டிருத்தலு முன்னரே விறற்காமன்
கருது முன்பொடி பட்டது கண்டனர் கலக்குற்றார்
சுருதி நன்றுணர் திசைமுகன் முதலிய சுரரெல்லாம்.

இ—ள்: இரதி இன்னணம் வருந்திட—இரதிதேவி இவ்வாறு துயருழப்ப, எம் கோமான் தொன்மைபோல் விரத மோனமோடு இருத்தலும்— எங்கள்தலைவராகி

ய சிவபிரான் முன்போலவே ஞானநிலையுடன் வீற்றிருத்தலும், முன்னரே விறல் காமன்கருதுமுன் பொடிபட்டது கண்டனர்- அதற்குமுன் வலிமைபொருந்தியமன்மதன் விரைவிற் சாம்பராயழிந்ததன்மையைப் பார்த்து, கலங்குற்றார்-மனக்கலக்கமெய்தினார்கள், சுருதி நன்று உணர் திசைமுகன் முதலிய சுரர் எல்லாம்— வேதங்களைச்செவ்வனே (ஓதி) உணர்ந்த நான்குமுகங்களையுடைய பிரமனாதிய தேவர்கள்யாவரும் எ—று.

இன்னணம் இன்னவண்ணம் என்பதன்விகாரம். விரதமோனம்-மோனவிரதம். கருதும்முன்-வினைக்குமுன்=விரைவில். கண்டனர்-முற்றெச்சம். (௫)

சிதலை மெய்த்தொகை வன்மிகத் தெழுந்தெனச் செலக்கண்ணீர்
பதலை யொத்தன வல்லல்கூர்ந் தரற்றிடப் பகுவாய்கள்
விதலை யுற்றுமெய் வியர்ப்புற வுளநனி விதிர்ப்பெய்த
மதலை யிற்றுழி நாயகர்போற் றுயர்க்கடன் மறிகின்றார்.

இ—ள்: மெய் சிதலைத்தொகை வன்மிகத்து எழுந்து என—மெய்ம்மையாகிய கறையானதுகூட்டம் புற்றினின்று வெளிப்பட்டுச்சென்றாற்போல, கண் நீர் செல—கண்களிலெழுஞ் சோகபாஷ்பம் ஒழுக, பகு வாய்கள்—பகிர்ந்தவாய்கள், பதலை ஒத்தன அல்லல் கூர்ந்து அரற்றிட—ஒரு கட்பறைபோன்று சோகமிகுந்துபுலம்ப, மெய் விதலை பெற்று வியர்ப்புற—சரீரம்நடுங்கி வியர்வைகொள்ள, உளம் நனி விதிர்ப்பு எய்த—மனம்மிகவுஞ் சுழல, மதலை இற்றுழி நாய்கர் போல்—(தமக்காதாரமாயிருந்த) மரக்கலம் உடைந்தபொழுது (நடுக்கடலிலகப்பட்ட)வணிகரைப்போல, துயர்க்கடல் மறிகின்றார்—துன்பமாகிய சமுத்திரத்தில் அமிழ்ந்தினார்கள் எ—று.

இற்ற உழி என்பதுவிகாரமாய் இற்றுழி எனநின்றது. எழுந்தாலென்னும்வினையெச்சத்தின் ஆல்விகுதிதொக்கது. ஒத்தன முற்றெச்சம். மறிகின்றார் காலமயக்கவழுவமைதி. பிற்செய்யுளில் அயர்கின்றார் என்பதுமது. ஓரினக்கூட்டமென்பார் 'மெய்த்தொகை' எனவும், புற்றினின்று மீட்டும் மீட்டுமெழுந்து தொடர்ந்துசெல்லுஞ் செல்லினங்கள்போலக் கண்ணீர் மேலும்மேலுந் தோன்றி இடைவிடாதுவழிதலின் 'சிதலைமெய்த்தொகைவன்மிகத்தெழுந்தெனச்செலக்கண்ணீர்' எனவும், தமது மனோரதங்கள்யாவும் மன்மதனால்முற்றுமென்று எதிர்பார்த்திருந்த தேவர்க்கு, அவனிறந்தவுடன், இனியெவ்வாற்றானும் ஈடேற்றமின்றென்னும் எண்ணந்தோன்றுதலின் 'மதலையிற்றுழிநாய்கர்போற்றுயர்க்கடன்மறிகின்றார்' எனவுங்கூறினார். (௨)

மையு லாவரு கறைமிடற் றிறையவன் மருங்காக
வெய்யு மாரனை விடுத்தன மவனையு மிறச்செய்தான்
பொய்யி றன்னிலை தவிர்ந்திலன் றொன்மைபோ லுற்றா
னைய கோவினிச் செய்வதென் னேவென வயர்கின்றார்.

இ—ள்: மை உலாவரு கறை மிடற்று இறையவன் மருங்கு ஆக—கருநிறம்பொருந்திய நஞ்சையயின்ற திருக்கண்டத்தையுடைய சிவபெருமானிடத்துச் செல்லும்படி, எய்யும் மாரனை விடுத்தனம்—(மலர்க்கணைகளைப்) பிரயோகிக்கின்ற மன்மதனை அனுப்பினோம், அவனையும் இற செய்தான்—(அச்சிவபெருமான்) அந்தமன்மதனையும் எரியச்செய்தார், பொய் இல் தன் நிலை தவிர்ந்திலன்—(அங்ஙனஞ்செய்தும்) பொய்ம்மையற்ற தமது யோகநிலையையொழித்தாரல்லர், தொன்மைபோல் உற்றான்—முன்போலவேயிருக்கின்றார், ஐயகோ—ஐயோ, இனி செய்வது என் என அயர்கின்றார்—இனி யாம்செய்யத்தக்கது யாது என்றசோர்ந்தார்கள் எ—று.

உம்மை உயர்வுசிறப்பு. சிவபிரானைமயக்கிவெல்லுஞ் சாதுரியமுடையனை னைநம்பியேவினமென்பார் 'எய்யுமாரனைவிடுத்தனம்' என்றார். (௩)

பூத்த ருங்கணை மாரனை விழியினாற் பொடிசெய்த
வாத்த னாற்றலைப் புணர்ப்பினா னீக்குவ தரிதன்னான்
காத்து நந்துய ரகற்றிட வேண்டுமேற் கடிதேயா
மேத்தல் செய்வதே கடனென யாவரு மிசைவுற்றார்.

இ—ள்: பூ தரும் கணை மாரனை விழியினால் பொடிசெய்த ஆத்தன் ஆற்றலை—மலர்களாலமைக்கப்பெற்ற பாணங்களையுடைய மன்மதனைக்கண்ணழலாலெரித்த சிவபெருமானது வலிமையை, புணர்ப்பினால் நீக்குவது அரிது—உபாயத்தினாலொழிப்பது கூடாது, அன்னான்—அக்கடவுள், நம் துயர் அகற்றி காத்திட வேண்டுமேல்— சிறியேங்களது துன்பத்தைநீக்கி ரட்சிக்கவேண்டுமாயின், யாம் கடிது ஏத்தல்செய்வதே கடன் என—யாம் விரைவில் (அவரைத்) துதிப்பதே முறையாகுமென்று, யாவரும் இசைவுற்றார்—அனைவருஞ் சம்மதித்தார்கள் எ—று.

ஆப்தன் என்னும்வடமொழி ஆத்தன் எனத்தமிழில் வழங்கிற்று; உயிர்த்துணைவன் மெய்யன் விருப்புவெறுப்பற்றோன் என்பனபொருள். 'காத்துநந்துயரகற்றிட வேண்டுமேல்' என்பது பொருளமைதிக்கேற்ப 'நந்துயரகற்றிக்காத்திடவேண்டுமேல்' எனப்பிரித்துக்கூட்டப்பட்டது. பின்னைய ஏகாரம் தேற்றம். வேறுசூழ்ச்சிபுரியினும் மன்மதனையேவியதுபோல் விஷ்பலமாகுமென்பார் 'பூத்தருங்கணைமாரனைவிழியினாற் பொடிசெய்த-வாத்தனாற்றலைப்புணர்ப்பினானீக்குவதரிது' என்றார். (௪)

எகின மூர்பவன் முதலிய கடவுள ரெல்லோரு
மகன மர்ந்திவை யிசைந்துதொல் கயிலையி னகநாப்பட்
புகல தாயபொன் னகரிடைக் கோபுரப் புறனேகித்
தொகுதி யோடெம திறைவனை யொல்லெனத் துதிக்கின்றார்.

இ—ள்: எகினம் ஊர்பவன் முதலிய கடவுளர் எல்லோரும்— அன்னப்பறவையை (வாகனமாகக்கொண்டு) செலுத்துகின்ற பிரமாமுதலாகியதேவர்கள்யாவரும், அகன் அமர்ந்து இவை இசைந்து—மனமுவந்து இவ்வாசகங்களுக்குடன்பட்டு, தொல் கயிலையின் அகம் நாப்பண்— பழைய திருக்கைலாசமலையினடுவே, புகலது ஆய பொன் நகர் இடை கோபுர புறன் ஏகி—(இடுக்கணுற்றார்க்கு) அடைக்கலத்தானமாயிருக்கின்ற பொன்மயமான நகரத்திற் கோபுரவாயிலின் புறத்தேசென்று, தொகுதியோடு எமது இறைவனை ஒல் என துதிக்கின்றார்—கூட்டமாகநின்று எங்கள் தலைவராகிய சிவபெருமானை ஒல்லென்னும் அநுகரணத்தொனியுண்டாகத் தோத்திரஞ்செய்கின்றார்கள் எ—று.

அகம்-மலை. அது-பகுதிப்பொருள்விகுதி. தொகுதியோடு என்பதில் ஒடு வேறுவினையுடனிகழ்ச்சியென்னும் பின்னக்கிரியையில் வந்தது; காவொடறக்குளந்தொட்டான் என்பதிற்போல. பேரொலியுண்டாகவென்பார் 'ஒல்லென' என்றார். (௫)

நஞ்ச ருந்திய நதியினைச் சூடிய நடுநெற்றித்
துஞ்சும் வெங்கனல் பரித்தும்வெவ் வலியனைத் தொலைத்திட்டு
மஞ்ச லென்றுமுங் காத்தனை யின்றெமக் கருளாயேற்
றஞ்ச மாருளர் தாதைய ரல்லது தனயர்க்கே.

இ—ள்: நஞ்சு அருந்தியும்—ஆலாகலத்தை அயின்றும், நதியினை சூடியும்—கங்கைநதியைத்(திருச்சடையிற்) புனைந்தும், நடு நெற்றி துஞ்சும் வெம் கனல் பரித்தும்—நெற்றியினடுவே (எவற்றையும்)அழிக்கும் கொடிய அக்கினியைத்தாங்கியும், வெவ் வலியரை தொலைத்திட்டும்-(சலந்தராசுரன்முதலிய) கொடிய வன்கண்ணரைக்கொன்றும், அஞ்சல் என்று முன் காத்தனை—பயப்படாதீரென்று (அபயந்தந்து) முன்னாளில் ரட்சித்தருளினீர், இன்று எமக்கு அருளாயேல்-(அதுபோல)இற்றைஞான்றிலுஞ்சிறியேங்களுக்குக் கருணைசெய்யீராயின், தஞ்சம் ஆருளர்- அடைக்கலமாவார் யாவரிருக்கின்றனர், தனயர்க்கு தாதையர் அல்லது தஞ்சம் ஆர் உளர்—சிறுபாலர்க்குத் தாய் தந்தையரேயன்றி அடைக்கலமாவார் வேறுயாரிருக்கின்றனர் எ—று.

தனயர்க்குத்தாதையரே தஞ்சமாவதுபோல எமக்கு நீரேதஞ்சம் என்பதாம். நெற்றி நடு எனற்பாலது-நடுநெற்றி என மாறிநின்றது. துஞ்சும்- பிறவினை விகுதிதொக்கபெயரெச்சம்; இன்னோரன்னவற்றை அந்தர்ப்பாவிதணிச்சென்பர் வடநூலார். தஞ்சமாருளர் என்றது தாப்பிசையாக நிற்றலின் முன்னும்பின்னுங்கூட்டி யுரைக்கப்பட்டது. 'பிதரௌ' என்பதற்கு மாதாபிதாக்கள் எனப்பொருள்கொள்ளும் வடநூல்வழக்குப்போல ஏகசேடபதத்துவந்துவமாகக்கொண்டு, தாதையர் என்பதற்குத் தாய்தந்தையர் எனப்பொருளுரைத்தாம்.

இச்செய்யுளிற்சுட்டிய சரித்திரங்களை மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற்காண்க. (௬)

கோளி லன்பர்க ளிழுக்கிய புரியினுங் குணனுக்கொண்
டாளு மெம்பிரா னின்னடி யரணமென் றடைந்தேங்க
ளாளும் வெந்திறற் சூரபன் மாவினா னலிவெய்தி
மாளு கின்றதோ சிறிதுமெம் முறு துயர் மதியாயோ.

இ—ள்: கோள் இல் அன்பர்கள் இழுக்கிய புரியினும்—கபடமில்லாத மெய்யடியார்கள் தவறுகளைச்செய்தாலும், குணனு கொண்டு ஆளும் எம் பிரான்— அவற்றைக்குணமாக ஏற்று அடிமைக்கொள்ளும் எங்கள் கடவுளே!, நின் அடி அரணம் என்று அடைந்தேங்கள்—தேவரீரது பாதங்களைத்தஞ்சமென்று நம்பி வந்தசிறியேங்கள், வெம் திறல் சூரபன்மாவினால் நாளும் நலிவு எய்தி மாளுகின்றதோ— மிக்கவலியினையுடைய சூரபன்மனால் தினந்தோறும் வருத்தமடைந்து இறத்தல் தக்கதா?, எம் உறு துயர் சிறிதும் மதியாயோ—எங்களது பெருந்துன்பத்தைச் சற்றேனுந் திருவுள்ளங்கொள்ளமாட்டீரா? எ—று.

இழுக்கிய-வினையாலணையும்பெயர். குணன் மொழியீற்றுப்போலி, எம்பிரான்-அண்மைவிளி. உம்மை, புரியினும் சிறிதும் என்பவற்றில் இழிவுசிறப்பு. நாளும் என்பதில் முற்று; சாக்கியநாயனார் கல்லெறிந்ததையுங் கண்ணப்பநாயனார் வேதாகமவிதியின்றிப் பத்திமார்க்கமாகப்பூசித்ததையுங்குணமாகக்கொண்டுஅருள்செய்ததுபோல, நாம் அறியாதுசெய்தகுற்றங்களையும்பொறுத்து அருள்செய்க என்பதையுள்ளிட்டு'கோளிலன்பர்களிழுக்கியபுரியினுங்குணனுக்கொண்டாளுமெம்பிரான்'என்றார். (௭)

தைய லைப்பிரி இ யோகியல் காட்டிடு தனிச்செய்கை
யைய நிற்கிதோ ரிறைவரை யாகுமாலதுகாலை
நையு மெங்களுக் குகம்பல சென்றன நாமெல்லா
முய்வ தெப்படி யின்னுநீ புறக்கணித் துறுவாயேல்.

இ—ள்: ஐய— கடவுளே! தையலை பிரீஇ யோகியல் காட்டிடு தனி செய்கை இது—உமாதேவியாரைப்பிரிந்து யோகநிலையை (முனிவர்க்குக்) காட்டியிருக்கின்ற ஒப்பற்ற இச்செயல், நிற்கு ஓர் இறைவரை ஆகும்—தேவரீருக்கு ஒரு கணப்பொழுதேயாம், அது காலை—அந்தக்கணப்பொழுதினுள், நையும் எங்களுக்கு பல உகம் சென்றன—வருந்துகின்ற சிறியேங்களுக்குப் பலயுகங்கள் கழிந்தன, இன்னும் நீ புறக்கணித்து உறுவாயேல்—இனியும் தேவரீர் பராமுகமாயிருப்பீராயின், நாம் எல்லாம் உய்வது எப்படி— சிறியேங்களனைவேமும் உய்ந்திருப்பதெவ்வாறு? (இறந்துபடுவேம்) எ—று. (அ)

நோற்று மாயவன் முதலினோர் யாவரு நுனதாளைப்
போற்றி யர்ச்சனை புரியவித் திருவெலாம் புரிந்துற்றாய்
தோற்ற மின்றியே யைந்தொழி லியற்றிய தொல்லோய்நீ
யாற்று கின்றதோர் தவநிலை யெம்பொருட் டளவன்றோ.

இ—ள்: தோற்றம் இன்றி ஐந்தொழில் இயற்றிய தொல்லோய்—(உற்பத்தியின்றிச் (சுயம்புவாய்நின்று) பஞ்சகிருத்தியங்களையுஞ்செய்தருளிய பழம்பொருளே!, மாயவன் முதலினோர் யாவரும்— திருமால் முதலிய தேவத்தலைவர்கள் எல்லோரும், நோற்று—தவஞ்செய்து, நுன தாளை போற்றி அர்ச்சனைபுரிய—தேவரீருடைய பாதங்களைத்துதித்துப்பூசிக்க, இ திரு எலாம் புரிந்து உற்றாய்—இந்தச் செல்வங்களெல்லாவற்றையும் கொடுத்தருளியிருந்தீர், நீ ஆற்றுகின்றது ஓர் தவநிலை— (அத்தகைய) தேவரீர் இயற்றுகின்ற ஒப்பற்ற யோகநிலையானது, எம்பொருட்டளவு அன்றோ—எங்கள் பொருட்டுமாத்திரமேயாம் அல்லவா? எ—று.

சனனமரணத்துன்பங்களை யொழித்தற்பொருட்டு நம்மனோராலியற்றற்பாலதாகிய யோகநிலையைப் பிறப்பிறப்பில்லாப் பரமபதியாகிய தேவரீரியற்றியது பிறர்பயன்கருதியே நும்பயன்கருதியன்று என்பதாம்.

ஆற்றுகின்றது - வினைமுற்றுப்பெயரொச்சம்.

திருமால்முதலினோர் சிவபிரானைப்பூசித்துச் சகலவளங்களையும் பெற்றனரென்பதை "வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்-புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பு-மண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலால-முண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்" என்னுந் திருவிளையாடற்புராணச் செய்யுளானும், "வானமேத்தயான் வைகுந்த வாழ்வுபெற் றதுவு-ஞான நான்முகன் சத்திய வுலகநண் ணியது-மேனை விண்ணவர் தத்தம வாழ்க்கையெய் தியது-மானு யர்த்தவ னருட்குறி யருச்சனைப் பயனால்" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானுமறிக. (கூ)

எய்த்தி டுஞ்சிறி யேங்களைத் தவறுகூ ரிடர்வாளா
னித்த லுந்துணித் தீருதி செய்வினை நெறிநேடி
யத்த வின்கினிக் காத்தரு ளல்லதே லடுவல்லே
சித்த மென்னுனக் கன்னவா றென்றினைச் செய்வாயே.

இ—ள்: அத்த—எம்பரமபிதாவே, எய்த்திடும் சிறியேங்களை—(துயரஞ்சகிக்கலாற்றாமையால்) இளைப்புற்ற அற்பர்களாகிய எங்களை, செய்வினை நெறி நேடி—செய்துகொண்ட தீவினையின் பகுப்பையறிந்து (அதற்கேற்ப), தவறுகூர் இடர் வாளால்—குற்றம்மிகுந்த துன்பமென்னும் வாளினால், நித்தலும் துணித்து ஈருதி—தினந்தோறுக்கண்டித்து அரிகின்றீர், இனி காத்தருள்—இனி (அங்ஙனஞ்செய்யாது) ரட்சித்தருளுக, அல்லதேல் வல்லே அடு—அங்ஙனஞ்செய்யத் திருவுள்ளமில்லையேல் விரைவில்

அழிக்குதிர், உனக்கு சித்தம் என்—இவ்விரண்டினுள்ளுந் தேவரீர்க்குத் திருவுள்ளம் எவ்வாறோ, அன்னவாறு ஒன்றினை செய்வாய்—அவ்வாறே யாதேனுமொன்றைச் செய்தருளுக எ—று.

சிறியேங்கள் துயரத்தைத் தாங்கலாற்றேமாகவும், வினைப்பயன்றொலையாமையின் வருத்துவதைத் தவிர்கின்றிலீர். இனி அங்ஙனஞ்செய்யாது காத்தருள்க; அதற்குத்திருவுள்ளமில்லையேல் இவ்வாறு துயருழப்பிப்பதினும் அழித்துவிடுவதே நலம் என்பதாம்.

உபத்திரவமிகுதியை விளக்க 'தவறுகூரிடர்வாளாணித்தலுந்துணித்தீருதி' என்றார். (௧௦)

கங்கை வேணியா யம்மையை மணந்தெமைக் கடிகொள்ளத்
திங்கள் வெண்குடை மதனனை விடுத்தனந் தெளிவில்லேம்
அங்க வன்புரம் பொடித்தனை முன்புபோ லமர்ந்துற்று
இங்கி யாந்தளர் கின்றதே யினிச்சிறி திரங்காயோ.

இ—ள்: கங்கை வேணியாய்—கங்கை நதியையணிந்த சடைமுடியையுடையவரே, அம்மையை மணந்து எமை கடிகொள்ள—(தேவரீர்) உமாதேவியாரைத்திருமணமியற்றி எங்களை ரட்சிக்கும்பொருட்டு, தெளிவு இல்லேம்— மனத்தெளிவில்லாத சிறியேங்கள், வெண் திங்கள் குடை மதனனை விடுத்தனம்— வெள்ளிய சந்திரனாகிய குடையினையுடைய மன்மதனை ஏவினேம், அங்கவன் புரம் பொடித்தனை முன்புபோல் அமர்ந்துற்றாய்-(தேவரீர்) அந்த மன்மதனது சரீரத்தை நீறாக்கி முன்போல யோகநிலையில் வீற்றிருந்தருளினீர், யாம் இங்கு தளர்கின்றதே— யாங்கள் இங்கே நின்று வருந்துகின்றது தக்கதா?, இனி சிறிது இரங்காயோ— இனியாயினும் சற்றே இரக்கங்கொள்ளமாட்டீரா? எ—று.

மெலிந்து பெறாது, வலிந்துபெறச் சிந்தித்ததுகுற்றமாயினும் அதனைப்பொறுத்து அருள்செய்க என்பதாம். தெளிவில்லேம் வினையாலணையும்பெயர். பொடித்தனை-முற்றெச்சம். ஏகாரம் வினா. (௧௧)

ஆர ழற்சின வயப்புலி முதலிய வடன்மாவின்
பேரு ரித்திறந் தரித்தனை சிறுவிதி பெருவேள்வி
வீர னைக்கொடு தடிந்தனை யஃதென மிகவெய்ய
சூர பன்மனைத் தொலைவுசெய் தெந்துயர் தொலைக்கென்றார்.

இ—ள்: ஆர் அழல் சின வய புலி முதலிய அடல் மாவின் பேர் உரி திறம் தரித்தனை-நிறைந்த அக்கினியைப்போன்ற கோபம்பொருந்திய வெற்றியையுடைய புலி முதலாகிய வலியமிருகங்களின் பெரியதோல்களைத்தரித்தருளினீர், சிறுவிதி பெரு வேள்வி வீரனை கொடு தடிந்தனை- தக்கனியற்றிய பெரியயாகத்தை வீரபத்திரக்கடவுளாற்றண்டித்தீர், அஃது என-அத்தன்மையைப்போல, மிக வெய்ய சூரபன்மனை தொலைவு செய்து—மிகக்கொடிய சூரபன்மனைச்சங்கரித்து, எம் துயர் தொலைக்க என்றார்—சிறியேங்களது துன்பத்தை நீக்குக என்று விண்ணப்பஞ்செய்தார்கள் எ—று.

முதலிய என்பதனால் யானையும் நரசிங்கமுங்கொள்ளற்பாலன. தொலைக்க என்னும் வியங்கோளீறுதொக்கது. (௧௨)

மூரற்கொள் வண்டுசூழ் சததளப் பண்ணவன் முதலோர்க
ளூருக்க ரக்கென மெய்தளர்ந் திவ்வகை யுளநொந்தே
யரற்றி யேத்தலு மவர்பவ முடிவுதற் கணித்தாக
விரக்க மாயரு ளாந்தியை நினைந்தன னிறையோனே.

இ—ள்: முரல் கொள் வண்டு சூழ் சததள பண்ணவன் முதலோர்கள் - பண்ணைப் பாடுகின்ற வண்டுகள் சூழப்பெற்ற நூறிதழினையுடைய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமாமுதலியதேவர்கள், உருக்கு அரக்கு என மெய்தளர்ந்து— தீயில் உருக்கிய மெழுகைப்போலச் சரீரம்வாடி, உளம் நொந்து—மனம்வருந்தி, இவ்வகை அரற்றி எத்தலும்—இவ்வாறு புலம்பித்துதிக்க, அவர் பவம் முடிவதற்கு அணித்து ஆக— அவர்களது பாவம் ஒழிதற்குக்(காலம்)நெருங்க, இரக்கம் ஆய்—(அத்துதிகளைக்கேட்டுத்) திருவுள்ளமிரங்கி, அருள் நந்தியை விளைந்தனன்—கிருபையினையுடைய திருநந்திதேவரை (வரும்படி) நினைத்தருளினார், இறையோன்—சிவபெருமான் எ—று. (௧௩)

எந்தை நந்தியை யுன்னலு மவனறிந் திறைவன்முன்
வந்து வந்தனை செய்துகை தொழுதலு மறைமேலோன்
கந்த மாமலர்க் கடவுளா தியர்தமைக் கடிதெம்முன்
றந்தி டென்றன னன்றென முதற்கடை தனில்வந்தான்.

இ—ள்: எந்தை நந்தியை உன்னலும்—எம்பரமபிதாவாகிய சிவபெருமான் திருநந்திதேவரைநினைத்தருளியவுடன், அவன் அறிந்து—அத்திருநந்திதேவர் (அதனை) யுணர்ந்து, இறைவன்முன் வந்து வந்தனைசெய்து கைதொழுதலும்— சிவபெருமானது திருமுன்னிலையில்வந்து வழிபாடுசெய்து கைகுவித்துநிற்க, மறைமேலோன்—வேதங்களுக்கதீதராகிய சிவபிரான், கந்த மா மலர் கடவுள் ஆதியர் தமை—வாசனைபொருந்திய பெரிய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமாமுதலியதேவர்களை, கடிது—விரைவாக, எம்முன் தந்திடு என்றனன்— எமது முன்னிலையில் அழைத்துவரக்கடவை யென்று (அவர்க்குத்)திருவாய்மலர்ந்தருளினார், நன்றென முதற்கடைதனில் வந்தான்- (திருநந்திதேவர்அதுகேட்டு)நன்றென்றுசம்மதித்து முதல்வாயிலில்வந்தருளினார் எ-று.

கணங்கள் காப்புறு முதற்கடை குறுகலுங் கண்டேத்தித்
தணங்கொள் பங்கயன் வாசவன் விண்ணவர் தாமெல்லாம்
வணங்க வெம்பிரா னுமைத்தரு கென்றனன் வறிதேனு
மணங்கு கொள்ளலீர் வம்மினோ நீவிரென் றருள்செய்தான்.

இ—ள்: கணங்கள் காப்புறு முதல் கடை குறுகலும்—(திருநந்திதேவர்) சிவகணத்தவர்களாற் காக்கப்படுகின்ற முதற்றிருவாயிலில் வந்தவுடன், தணம் கொள் பங்கயன் வாசவன் விண்ணவர் எல்லாம்—குளிர்ச்சிபொருந்திய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரும் இந்திரனும் மற்றையதேவர்களுமாகிய யாவரும், கண்டு எத்தி வணங்க—தரிசித்துத்துதித்து நமஸ்கரிக்க, எம்பிரான் உமை தருக என்றனன்—(அத்திருநந்திதேவர் அவர்களைநோக்கி தேவிர்காள்!) எங்கள்தலைவராகிய சிவபெருமான் உங்களை அழைத்துவருக என்று பணித்தருளினர், நீவிர் வறிதேனும் அணங்கு கொள்ளலீர்—நீங்கள் சிறிதாயினும் வருத்தமுறாதீர், வம்மின் என்று அருள்செய்தான்—வாருங்களென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

தணம்-தண்மை. (௧௫)

சீர்த்த நந்திவந் திவ்வகை யுரைத்தசொற் செவிதோறும்
வார்த்த பேரமு தாதலு முவகையின் மதர்ப்பாகிப்
பேர்த்தொர் மாற்றமு முரைத்திலர் பிரமனே முதற்றேவ
ரார்த்து நாதனைப் பாடின ராடின ரலமந்தார்.

இ—ள்: சீர்த்த நந்தி வந்து இவ்வகை உரைத்த சொல்—சிறப்புப்பொருந்திய திருநந்திதேவர்வந்து இவ்வாறு கூறியருளியவார்த்தை, செவிதோறும் வார்த்த பேர்

அமுது ஆதலும்—காதுகடோறும் வார்க்கப்பட்ட பெருமைபொருந்திய அமிர்தம்போல மைதலும், பிரமனே முதல் தேவர்—பிரமாவேமுதலாகிய தேவர்கள், உவகையில் மதர்ப்பு ஆகி—மகிழ்ச்சியினாற் பூரிப்படைந்து, பேர்த்து ஒர் மாற்றமும் உரைத்திலர்—பதில்வார்த்தையொன்றுங் கூறாதவர்களாய், ஆர்த்து—ஆரவாரித்து, நாதனை பாடினர்—சிவபெருமானைத்தோத்திரஞ்செய்து, ஆடினர் அலமந்தார்- ஆநந்தக்கூத்தாடிச் சுழன்றார்கள் எ-று.

பெயர்த்து என்பது பேர்த்து என விகாரமாயிற்று. உம்மை இழிவுசிறப்பு. உரைத்திலர் பாடினர் ஆடினர் என்பன முற்றெச்சங்கள். கேட்டவுடன்வருத்தத்தைத் தீர்த்தலால் 'செவிதோறும்வார்த்தபேரமுதாதலும்' என்றார். (௧௬)

பெரிது நோயுழந் தருள்பவ ரின்றியே பெருங்கால
நிரய முற்றுளோர் தங்களை யெடுத்திடு நிலைத்தன்றோ
வருளி னீர்மையா லுமையரன் விளித்தன னனைவிரும்
வருதி ரென்றசொற் பங்கயன் முதலிய வானோர்க்கே.

இ—ள்: அரன் அருளின் நீர்மையால் உமை விளித்தனன் அனைவீரும் வருதிர் என்ற சொல்—சிவபெருமான் திருவருட்டன்மையால் உங்களையழைத்தருளினார் எல்லீரும் வாருங்கள் என்று (திருநந்திதேவர்)கூறிய வார்த்தையானது, பங்கயன் முதலிய வானோர்க்கு—பிரமாமுதலிய தேவர்களுக்கு, பெரிதும் நோய் உழந்து அருள்பவர் இன்றி பெருங்காலம் நிரயம் உற்றுளோர் தங்களை எடுத்திடும் நிலைத்து அன்றோ—மிகவுந்துயருழந்து காப்பவரில்லாமல் நெடுங்காலமாக நரகத்தில் அமிழ்ந்திக்கிடந்தவர்களைத் தூக்கிவிட்டதன்மைபோலுமல்லவா! எ—று.

நெடுநாளாக அத்தேவர்மனத்திற் குடிகொண்டிருந்த பெருந்துயரைத் தீர்த்ததாதலின், அம்மொழியை 'நிரயமுற்றுளோர்தங்களையெடுத்திடுநிலைத்தன்றோ' என்றார். சொல் நிலைத்தன்றோ என இயையும். (௧௭)

செய்ய லாவதொன் றின்றியே மகிழ்ச்சியிற் றிளைத்தோராய்
மைய லாகிய பண்ணவர் தங்களை வல்லைகொண்
டையன் முன்னுற வுய்த்தன னிருவகை யறத்தோரு
முய்ய வெஞ்சம னுடைதரப் புவியினி லுதிக்கின்றோன்.

இ—ள்: செய்யலாவது ஒன்று இன்றி மகிழ்ச்சியில் திளைத்தோர் ஆய் மையல் ஆகிய பண்ணவர்தங்களை—செயற்பாலது யாதொன்றுமின்றிச் சந்தோஷசாகரத்தில் அமிழ்ந்தினவர்களாய் அறிவுமயங்கிய தேவர்களை, வல்லை கொண்டு—விரைவில் அழைத்துக்கொண்டு சென்று, ஐயன் முன் உற உய்த்தனன்—சிவபெருமானது திருமுன்னாகவிடுத்தார், இருவகை அறத்தோரும் உய்ய—இருவகைப்பட்ட தருமத்தின்வழிப்பட்டொழுகுகின்ற மாநுடர்யாவரும் உய்திபெறவும், வெம் சமன் உடைதர—கொடிய மன்மதன் இறக்கவும், புவியினில் உதிக்கின்றோன்—பூவுலகத்தில் அவதரித்த திருநந்திதேவர் எ—று.

இருவகையறத்தோர் என்றது இல்லறத்தினரையுந் துறவறத்தினரையும். உதிக்கின்றோன் உய்த்தனன் எனஇயையும். திளைத்தல்வினைக்கேற்ப மகிழ்ச்சியைக்கடலென்றாம். (௧௮)

வேறு.

வண்டுளர் கமலமேன் மதலை வாசவ
னண்டர்க ளனைவரு மன்பொ டேகியே
பண்டுயிர் முழுதருள் பரனைக் கண்களாற்
கண்டனர் வழுத்தினர் கரங்கள் கூப்பினார்.

இ—ள்: வண்டு உளர் கமல மேல் மதலை— வண்டுகள் பண்ணைப்பாடுகின்ற
தாமரைமலரின்மேல் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், வாசவன்—இந்திரனும், அண்ட
ர்கள் அனைவரும்—மற்றையதேவர்களும் ஆகிய எல்லோரும், அன்பொடு ஏகி—மன
அன்பினுடன் போய், பண்டு உயிர் முழுது அருள் பரனை கண்களால் கண்டனர்—மு
ற்காலத்தில் ஆன்மாக்களெல்லாவற்றையும்படைத்தருளிய சிவபெருமானைக் கண்களி
னுற்றரிசித்து, கரங்கள் கூப்பினர் வழுத்தினர்—கைகுவித்தவர்களாய்த் துதித்தார்கள்
எ—று.

கண்டனர் கூப்பினர் என்பன முற்றெச்சங்கள். (௧௯)

விண்மதி படர்சடை வேத கீதனை
யண்மினர் வணங்கின ரரிமு னாற்றிய
வுண்மகிழ் பூசனை யொப்பப் போதநீர்
கண்மல ரதனொடு கழல்கள் சேரவே.

இ—ள்: விண் மதி படர் சடை வேதகீதனை அண்மினர்—ஆகாயத்திற்சஞ்ச
ரிக்கின்ற பாலசந்திரன்தவழப்பெற்ற சடைமுடியினையுடைய வேதகீதராகிய சிவபிரா
னையணுகி, அரி முன் ஆற்றிய உள் மகிழ் பூசனை ஒப்ப—திருமால் முற்காலத்திற்செய்
த மனமகிழ்தற்கேற்றபூசையைப்போல, போதநீர் கண்மலரதனொடு கழல்கள் சேர—
ஆநந்தபாஷ்பம் கண்களாகிய மலர்களோடு திருவடிகளிற்பொருந்த, வணங்கினர்—
நமஸ்கரித்தார்கள் எ—று.

வேதகீதன்-வேதங்களின் கீதத்தையுடையவன்=வேதமோதுபவன். "வேத
மோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறி-பூதஞ்சூழப்பொலியவருவார்புலியின்னு
ரித்தோலார்" என்னுந் தேவாரத்தானுமறிக. அண்மினர் முற்றெச்சம். ஒப்ப சேர என
இயையும். அது பகுதிப்பொருள்விகுதி.

திருமால் சக்கரப்படையைப்பெறும்பொருட்டுத் தினந்தோறும் ஆயிரந்தாம
ரைமலராற் சிவபிரானைப்பூசித்துவருங்காலத்தில் ஒருநாள், அவரது சோதனையால் ஒ
ருமலர்குறைய, அத்திருமால் தமது வலக்கண்ணையே மலராக இடந்துசாத்தி உடனே
திருவருள்பெற்றதனால் 'அரிமுனாற்றியவுண்மகிழ்பூசனையொப்ப' என்றார். திருமால் க
ண்ணிடந்துசாத்தியதை "பன்னுமொரு திருப்பெயர்க்கு நறுங்கமலங் காணுமைப் பதை
த்துநோக்கி-யென்னினிமேற் செயலென்று தெரிந்துணர்ந்து தனதுவிழி யிடந்து பெ
ம்மான்-கொன்மலர்த்தாண் மிசைச்சாத்திக் களிகூர்ந்தான்" என்னுங்காஞ்சிப்புராணச்
செய்யுளானுமுணர்க. (௨௦)

வணங்கிய பண்ணவர் வல்ல வல்லவா
பணங்கிள ரரவரைப் பரமற் போற்றலு
முணங்கிய சிந்தையீ ருமது வேண்டலு
மணங்குறு நிலைமையு மறைமி னென்னவே.

இ—ள்: வணங்கிய பண்ணவர்—(அங்ஙனம்) நமஸ்கரித்ததேவர்கள், வல்ல
வல்லவா பணம் கிளர் அரவு அரை பரமன் போற்றலும்—(தங்கள் தங்களால்) இயன்ற
இயன்றபடி படம்விளங்கப்பெற்ற சர்ப்பத்தைக் (கச்சாகஅணிந்த) அரையினையுடையசி
வபெருமானைத்துதித்தலும், உணங்கிய சிந்தையீர்—(அப்பெருமான் அவர்களைநோக்கி)
வாடியமனத்தையுடைய தேவிர்காள்!, உமது வேண்டலும் அணங்கு உறும் நிலைமையு
ம் அறைமின் என்ன—உங்கள்வேண்டுகோளையும் துன்பமுற்றிருக்குந்தன்மையையும்
சொல்வீர்களென்று திருவாய்மலர்ந்தருள எ—று.

வல்லவாறுவல்லவாறு என்றது வல்லவல்லவா எனவிகாரமாய்நின்றது. சிவப்பிரபாவங்களை முற்றாய்க்கூறித் துதிப்பதரிதாகலின் நினைவில்வந்தனவற்றைக்கூறித் துதித்தனரென்பார் 'வல்லவல்லவா-போற்றலும்'என்றார். இதனை 'வாயில்வந்தனவந்தனபோற்றினார்' என முன்னர்ப்பாயிரப்படலத்திற் கூறுதலானுமறிக. இதுமுதனான்கு செய்யுட்கள் குளகம். (௨௧)

பேருக மளப்பில பெயர்த லின்றியே
சூரன தாணையிற் றுயர்ப்பட் டாழ்ந்தனங்
காருறழ் கந்தரக் கடவு ணீயலா
தாருள ரடியரே மலக்க ணீக்குவார்.

இ—ள்: அளப்பு இல பேர் உகம்—அளவில்லாத பெரியயுகங்களாக, பெயர்தல் இன்றி—ஒய்தலின்றி, சூரனது ஆணையில் துயர்ப்பட்டு ஆழ்ந்தனம்—சூரபன்மனது கட்டளையினாற்றுன்பமுற்றுத் தாழ்வடைந்தோம், கார் உறழ் கந்தர கடவுள்—கருநிறம்பொருந்திய திருக்கண்டத்தையுடைய பெருமானே!, நீ அலாது—தேவரீரேயன்றி அடியரேம் அலக்கண் நீக்குவார் ஆர் உளர்—சிறியேங்களது துன்பத்தைத் தவிர்க்கத்தக்கவர் (வேறு) யாவர் இருக்கின்றனர் (ஒருவருமில்லையே) எ—று.

அளப்பில=பல. கடவுள் அண்மைவிளி. நீக்குவார் வினையாலணையும்பெயர்.

ஆயவெஞ் சூரன தாவி நீக்கவோர்
சேயினை யருளுவான் சிமைய மாகிய
மீயுயர் வரையிடை மேவி நோற்றிடு
மாயையின் முதல்வியை மணத்தல் வேண்டுநீ.

இ—ள்: ஆய வெம் சூரனது ஆவி நீக்க ஓர் சேயினை அருளுவான்— அந்தக்கொடிய சூரபன்மனது உயிரைத்தொலைத்தற்கு (ஏற்ற) ஒருகுமாரரைத் தோற்றுவிக்கும் வண்ணம், மீ உயர் சிமையம் ஆகிய வரையிடை மேவிநோற்றிடும் மாயையின் முதல்வியை—ஆகாயமளவுமுயர்ந்த இமையமலையில் வீற்றிருந்து தவஞ்செய்கின்றமாயையின்தலைவியாகிய பார்ப்பதிதேவியை, நீ மணத்தல் வேண்டும்—தேவரீர் திருமணஞ்செய்தருளுதல்வேண்டும் எ—று.

மாயை பெருமாயை என்னுமிரண்டிற்குமப்பாற்பட்டுநிற்பவரென்பார் 'மாயையின்முதல்வி' என்றார். இதனை "அப்பாலைக்கப்பாலைக்கப்பாலாயறிவரியவமலைதன்னை" என்னுஞ்சிவதருமோத்தரச்செய்யுளானுமுணர்க. (௨௩)

என்றிவை கூறியே யாரு மெம்பிரான்
மன்றலந் தாண்மலர் வணங்கிப் போற்றலு
மின்றிகழ் பசுங்கதிர் மிலைச்சும் வேணியா
னன்றென விசைந்திவை நவிறன் மேயினான்.

இ—ள்: என்று இவை யாரும் கூறி—என்று இந்தவாசகங்களை எல்லாத்தேவர்களும் விண்ணப்பஞ்செய்து, எம்பிரான் மன்றலம் தாள் மலர் வணங்கி போற்றலும்—எங்கள் தலைவராகிய சிவபெருமானது நறுமணங்கமழுகின்றதிருவடிகளாகிய தாமரைமலர்களை வணங்கித்துதிக்க, மின் திகழ் பசுங்கதிர் மிலைச்சும் வேணியான்-ஒளிவிளங்குகின்ற குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனையணிந்த சடைமுடியையுடைய (அச்) சிவபெருமான், நன்று என இசைந்து இவை நவிறல் மேயினான்-நல்லதென்றுடன்பட்டு இவற்றைத் திருவாய்மலர்ந்தருளுவாராயினார் எ—று. (௨௪)

புங்கவர் யாவரும் பொருமல் கொள்ளவீ
ருங்கடம் பொருட்டிலவ் வோங்கல் வைகிய

மங்கையை மணந்துநும் வருத்த நீக்குது
மிங்கினி யாவரு மேகு கென்றனன்.

இ—ள்: புங்கவர் யாவரும் பொருமல்கொள்ளலீர்—தேவிர்காள்! நீவிரெல்லீருந் துன்பமுறாதீர்கள், அ ஒங்கல் வைகிய மங்கையை உங்கள்தம்பொருட்டினில் மணந்து—அந்த இமையமலையிலிருக்கின்ற பார்வதிதேவியை உங்கள்காரணமாகத் திருமணம்புரிந்து, நும் வருத்தம் நீக்குதும்—உங்கள் துன்பத்தை யொழிப்போம், இனி யாவரும் ஏகுக என்றனன்—இனி எல்லீரும் (நும்மிருக்கைநோக்கிச்)செல்லுங்களென்று திருவாய்மலர்ந்தருளினார் (சிவபெருமான்) எ—று.

ஏகுக என்னும் வியங்கோளீறுதொக்கது. (௨௫)

முழுதுணர் பரனிது மொழியப் போதனுஞ்
செழுமையில் பொன்னகர்த் தேவும் யாவருந்
தொழுதனர் விடைகொடு துயரஞ் சிந்தியே
விழுமிய மேருவின் மிசைக்க ணேகினார்.

இ—ள்: முழுது உணர் பரன் இது மொழிய—எல்லாவற்றையும் (ஒரேகாலத்தில்) அறிகின்ற சிவபிரான் இவ்வாசகத்தைக்கூறியருள, போதனும்—பிரமதேவரும், செழுமை இல் பொன்னகர் தேவும்-(அசுரராலழிக்கப்பட்டுப்)பொலிவிழந்த சுவர்க்கலோகத்திற்கதிபனாகிய இந்திரனும், யாவரும்— மற்றைய தேவர்கள் எல்லோரும், தொழுதனர் விடை கொடு-கைதொழுது(அவரிடம்) அநுமதிபெற்றுக்கொண்டு, துயரம் சிந்தி-(தமது) துன்பத்தையொழித்து, விழுமிய மேருவின் மிசைக்கண் ஏகினார்—சிறந்த மேருமலையின் மேலிடத்துச்சென்றார்கள் எ—று.

தொழுதனர் முற்றெச்சம். (௨௬)

வேறு.

அன்னார் விடைகொண் டேகியபி னதுகண் டிரதி யெம்பெருமான்
முன்னா வினறஞ்சிப் போற்றிசெய்து முறையோ முறையோ விறையோனே
பொன்னார் கமலத் தயன்முதலோர் புணர்ப்பா லெங்கோன் போந்திங்கே
யுன்னால் முடிந்தா னவன்பிழையை யுளங்கொ ளாம லருளென்றாள்.

இ—ள்: அன்னார் விடை கொண்டு ஏகியபின்—அத்தேவர்கள் (சிவபிரானிடம்) அனுமதிபெற்றுக்கொண்டு சென்றபின், இரதி அது கண்டு—இரதிதேவி அந்நிகழ்ச்சிகளைப்பார்த்து, எம்பெருமான் முன்னா இறைஞ்சி போற்றிசெய்து— எமது தலைவராகிய சிவபிரானது திருமுன்னிலையிற் (சென்று) வணங்கித்துதித்து, இறையோனே—கடவுளே!, முறையோ முறையோ—இது நீதியா! நீதியா!! (நீதியல்லவே), பொன் ஆர் கமலத்து அயன் முதலோர் புணர்ப்பால்—அழகுபொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமாமுதலியதேவர்களது சூழ்ச்சியினால், எம்கோன் இங்கே போந்து உன்னால் முடிந்தான்—எனது நாயகர் இங்கே (போர) வந்து தேவரீராலிறந்தார் (ஆதலின்),அவன் பிழையை உளங்கொளாமல் அருள் என்றாள்-அவர் அறியாதியற்றிய குற்றத்தைத் திருவுள்ளங்கொள்ளாது எழுப்பியருளவேண்டுமென்றுபிரார்த்தித்தாள் எ-று.

யானென்பதன்விகாரமாகிய என் என்பது ஈறுவேறுபட்டு எம் எனநின்றது; அன்றி, இஃது உளப்பாட்டுத்தன்மையன்று. போற்றிசெய்து-என்றாள் என இயையும்.

அருள்செய்யுஞ்சமயநோக்கியென்பார்'அதுகண்டு' என்றார். நங்கணவரைநம்முடன் பொருமாறேவுதலாகிய பெருங்குற்றத்தையுடைய பிரமனாதியர்க்கருள்செய்துவிட்டு, அவர்சொற்படி தேவரீரையெதிர்த்த அற்பகுற்றத்தையுடைய நங்கணவர்க்கருள்செய்யாது விடுவது நீதியன்றென்பாள் 'முறையோமுறையோ' என்றாள். (௨௭)

வேறு.

இனைய கூறின ளிரதிவேண் டிடுதலு மிணைதீர்ந்த
புனித னல்லரு ளெய்தியே மங்கைநீ புலம்பாய்கேள்
வனைக ருங்குழற் கவுரியை மேவியாம் வரைபோதி
னுனது கேள்வனை யளிக்குதும் போதியென் றுரைசெய்தான்.

இ—ள்: இரதி இனைய கூறினள் வேண்டிடுதலும்—இரதிதேவி இவ்வாசகங்களைக்கூறி வேண்டுதல்செய்ய, இணை தீர்ந்த புனிதன் நல் அருள் எய்தி—ஒப்பற்ற சிவபெருமான் நல்லகருணைகூர்ந்து, மங்கை நீ புலம்பாய் கேள்—(இரதியைநோக்கி) பெண்ணே! நீ புலம்பாதே; (இதனைக்)கேட்குதி, யாம்—நாம், வனை கரும் குழல் கவுரியை மேவிவரைபோதில்-அலங்கரிக்கப்பட்ட கரிய கூந்தலையுடைய உமாதேவியையணுகி மணஞ்செய்யும்பொழுது, உனது கேள்வனை அளிக்குதும்— உனது கணவனாகிய மன்மதனை எழுப்புவோம், போதி என்று உரைசெய்தான்— செல்லக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளினர் எ—று. (௨௮)

தன்னை யேதனக் கொப்பவ னிரதியைத் தளரேலென்
றின்ன வாறருள் செய்தலு மகிழ்ந்தடி யிறைஞ்சிப்போய்ப்
பொன்னின் மாலிமை யக்கிரி புகுந்தொரு புடையுற்றாள்
வன்ன மாமுகில் வரவுபார்த் துறைதரு மயிலேபோல்.

இ—ள்: தன்னையே தனக்கு ஒப்பவன்—தம்மையே தமக்குநிகராகவுடைய சிவபெருமான், இன்னவாறு—இப்படி, இரதியை தளரேல் என்று அருள் செய்தலும்—இரதியைத் (திருநோக்கஞ்செய்து) வருந்தாதே என்று கருணைசெய்ய, மகிழ்ந்து அடி இறைஞ்சி போய்-(அவ்விரதி) மனச்சந்தோஷங்கொண்டு (அவரது)பாதங்களை வணங்கிச்சென்று, பொன்னின் மால் இமையக்கிரி புகுந்து-பொன்மயமாகிய பெரிய இமையமலையையடைந்து, வன்ன மா முகில் வரவு பார்த்து உறைதரும் மயிலே போல் ஒரு புடை உற்றாள்-அழகிய கரிய மேகத்தின்வருகையை எதிர்நோக்கியிருக்கின்ற மயிலையேபோல ஒருபக்கத்தில் இருந்தாள் எ—று.

மயில் காரகாலமேகத்தை எதிர்நோக்கியிருப்பதுபோல, இரதியும் சிவபிரான் திருமணத்தை எதிர்நோக்கியிருந்தாள் என்க. ஏகாரங்கள் தேற்றம். (௨௯)

வேறு.

தமியளா யிரதிபோய்த் தானங் குற்றிட
வமரர்க ளாயுளா ரரந்தை தீர்க்கவு
மிமையமால் வரைமிசை யிருந்து நோற்றிடு
முமைதனை மணப்பவு முதல்வ னுன்னினான்.

இ—ள்: இரதி தமியளாய் போய் அங்கு உற்றிட—இரதிதேவி தனித்தவளாகச்சென்று அவ்விமையமலையிலிருக்க, முதல்வன்—தலைவராகிய சிவபெருமான், அமரர்களாய் உளார் அரந்தை தீர்க்கவும்—தேவர்களது துன்பத்தையொழிக்கவும், மால் இமையவரைமிசை இருந்து நோற்றிடும் உமைதனை மணப்பவும்—பெரிய இமையமலையின்மேலிருந்து தவமியற்றுகின்ற பார்வதிதேவியைத் திருமணஞ்செய்யவும், உன்னினான்—திருவுள்ளம்பற்றினர் எ—று.

தான் அசைநிலை. (௩0)

மனத்தனி வித்திற மதித்து வானதி
புனைந்தவன் சனகனென் றுரைக்கும் புங்கவன்

சனந்தனற் சனாதனன் சனற்கு மாரனா
மினந்தரு முனிவரை யினிதுநோக்கினான்.

இ—ள்: வான் நதி புனைந்தவன்-பெரிய கங்கைநதியைத் (திருச்சடையில்) அணிந்த சிவபெருமான், மனந்தனில் இ திறம் மதித்து—திருவுள்ளத்திலிவ்வாறு சிந்தித்து, சனகன் என்று உரைக்கும் புங்கவன்—சனகரென்று சொல்லப்படுகின்ற தலைவரும், சனந்தன்—சனந்தரும், நல் சனாதனன்-நல்ல சனாதனரும், சனற்குமாரன் ஆம்-சனற்குமாரருமாகிய, இனம் தரும் முனிவரை—தொகுதிபொருந்திய நான்குமுனிவர்களையும், இனிது நோக்கினான்—நன்றாகத் திருநோக்கஞ்செய்தார் எ—று.

கிருபையுடனென்பார் 'இனிது' என்றார். (௩௧)

நன்னலை மைந்தர்காண் ஞான போதகஞ்
சொன்னடை யன்றது துயர நீங்கியே
யிந்நிலை மோனமோ டிருந்து நந்தமை
யுன்னுத லேயென வுணர வோதினான்.

இ—ள்: நல் நல மைந்தர்காள்—(அங்ஙனந்திருநோக்கஞ்செய்த சிவபிரான்) மிக்க நன்மையினையுடைய சிறுவர்களே, ஞானபோதகம் சொல் நடை அன்று—ஞானபோதமானது வாயாற்சொல்லுந்தரத்தினதன்று, அது—அந்தஞானபோதமானது, துயரம் நீங்கி—மனத்துன்பத்தையொழித்து, இ நிலை மோனமொடு இருந்து—இவ்வண்ணம் மௌனநிலையோடிருந்து, நந்தமை உன்னுதலே என—எம்மைத் தியானித்தலேயாமென்று, உணர ஓதினான்—(அவர்கள்) அறியும்படி திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

சிஷ்யபுத்திரர்களாதலின் 'நன்னலமைந்தர்' என்றார். (௩௨)

கட்படு மிமைத்துணைக் காட்சி யோகினை
நுட்பம தாகவே நுதலிக் காட்டினோ
னொட்பமொ டிவ்வகை யுரைப்ப வாற்றவுந்
தெட்பம தடைந்தனர் விதியின் சேயினோர்.

இ—ள்: கண் படும் இமை துணை காட்சி யோகினை நுட்பமது ஆக நுதலி காட்டினான்— கண்ணிமைப்பொழுதளவும் ஞானயோகத்தை நுட்பமாகக்குறித்துக் காட்டியருளிய சிவபெருமான், ஒட்பமொடு இவ்வகை உரைப்ப—சிறப்புடன் இவ்வாறு திருவாய்மலர்ந்தருள, விதியின் சேயினோர் ஆற்றவும் தெட்பமது அடைந்தனர்—பிரமபுத்திரர்களாகிய சனகாதிமுனிவர்கள் மிகவுந் தெளிவுபெற்றார்கள் எ—று.

அது இரண்டும் பகுதிப்பொருள் விகுதிகள். (௩௩)

அந்தநல் வேலையி லாற்று நோன்பினோர்
சிந்தைகொ ளன்பொடு சிவன்பொற் றாண்முறை
வந்தனை செய்துநம் மருட்கை நீங்கியே
யுய்ந்தனம் யாமென வுரைத்துப் போற்றினார்.

இ—ள்: அந்த நல் வேலையில்—அந்த நற்சமையத்தில், ஆற்றும் நோன்பினோர்—தவத்தைச்செய்துடைய சனகாதிமுனிவர்கள், சிந்தைகொள் அன்பொடு—மனத்திற்பொருந்திய அன்பினுடன், சிவன் பொன் தாள் முறை வந்தனைசெய்து-சிவபிரானது பொன்மயமாகிய திருவடிகளை முறைப்படி வழிபாடுசெய்து, நம் மருட்கை நீங்கி யாம் உய்ந்தனம் என உரைத்து—(எம்பெருமானே!) எங்கள் மனச்சந்தேகம் நீங்கப்பெற்று நாங்கள் உய்ந்தோமென்றுகூறி, போற்றினார்—துதித்தார்கள் எ—று.

முறை-அட்டாங்கம் பஞ்சாங்கம் முதலிய கிரமங்கள். பிரதமாதற்புருடன்தத்திதஞ்கி ஆற்றும் வேள்வியரெனவின்றது. இவ்வாறு வருவனபிறவற்றிற்குமிவ்விதிகொள்க. (௩௪)

போற்றது மத்துணைப் புனித னின்னினி
யேற்றிடு நிட்டையி லிருந்து வீடுறீஇ
மேற்றிக ழெம்பத மேவு வீரெனுச்
சாற்றினன் விடுத்தனன் றவத்தி னோர்தமை.

இ—ள்: போற்றலும்—(முனிவர்கள்) துதித்தலும், அத்துணை-அப்பொழுது, புனிதன்—பரிசுத்தராகிய சிவபெருமான், இன்னினி ஏற்றிடும் நிட்டையில் இருந்து வீடு உறீஇ-(முனிவிர்காள்! நீவிர்) இனித்தருந்த நிட்டைநிலையிலிருந்து பந்தநீக்கமுற்று, மேல் திகழ் எம் பதம் மேவுவீர் எனு சாற்றினன்—மேலாகவிளங்குகின்ற எமது திருவடிகளை அடைகுதிரென்று திருவாய்மலர்ந்தருளி, தவத்தினோர்தமை விடுத்தனன்—அம்முனிவர்களை (இருக்குமிடத்திற்கு) அனுப்பினுர் எ—று.

சாற்றினன்-முற்றெச்சம். உறீஇ-உற்று என்பதன்விகாரம். (௩௫)

மோனநீங்குபடலம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௬௱௬.

---

# தவங்காண்படலம்.

பார்வதிதேவியாரது தவநிலையைச் சிவபிரான்சோதித்துக்கண்ட சரித்திரத்தைக்கூறுதலினிப்பெயர்பெற்றது.

## இப்படலப்பொழிப்பு.

சனகாதிமுனிவர்கள் தம்மிருக்கைகோக்கிப் போனபின், சிவபிரான் தேவியாரது அன்பின்றிறத்தைச்சோதிக்கும்படி திருவுளம்பற்றி, ஓர் விருத்தப்பிராமணவேடங்கொண்டு தவச்சாலையையணுகினர். அப்பொழுது, அச்சாலையின்வாயிலைக் காவல்செய்திருந்த கன்னியர்கள் அவர்வந்தகாரணத்தை வினுவியறிந்து தேவியார்க்குரைப்ப, அவர் 'அவரையழைத்துவாருங்கள்' என்று கட்டளைசெய்தனர். கன்னியர்கள் அவ்வாறே அழைத்துவர, தேவியார் அவரைக் கைதொழுது உபசரித்தனர். அப்பொழுது அங்குநின்ற தோழியாகிய விசயையென்பவள் ஒரு ஆசனமிட்டு அவரையிருத்தினள். தேவியாரும் பக்கத்தில்நின்றனர். பின்னர் அவ்விருத்தப்பிராமணர் தேவியாரைப் பார்த்து 'தேவீ! உன்மேனிவாட, அழகுகு[illegible], உணவுமுதலியவற்றையொறுத்துத் தவஞ்செய்கின்றகாரணம்யாது?' என்றுவினுவினர். உடனே தேவியார் அவர்க்குப்பிரதிவசனங்கூறும்படி தோழியாகிய விசயைக்குக்கண்குறிப்புக்காட்ட, அவள் அவரைநோக்கி 'ஸ்வாமீ! சிவபிரான்வந்து மணஞ்செய்யும்பொருட்டு இவர் தவஞ்செய்கின்றனர்' என்றுகூறினள். விருத்தப்பிராமணர் அதுகேட்டு, 'நங்காய்! சிவபிரான் இவள்தவத்திற்கெளிவரமாட்டார், மணஞ்செய்யவுமாட்டார், இத்தவத்தைவிடுவதேமுறை' என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே தேவியார் கோபமுற்று, 'முதியவரே! எம்பெருமான் என்னை மணஞ்செய்யாவிடின் அருந்தவஞ்செய்துமாளுவதன்றித் தவத்தைவிடுவதில்லை' என்றனர். விருத்தப்பிராமணர் பின்பு, சிவபிரானை மிகவும் இழித்துப்பேசி, 'ராசகன்னி

கையாகிய உனக்குக் கணவனாதற்கு அவர் யோக்கியமுடையரல்லர்' என்றனர். தேவியார் அதுகேட்டவுடன் முன்னையினும் மிகச்சினந்து, சிவபிரானது பிரபாவத்தையறியாது கூறினையென்றுவைது, அவரை அவ்விடத்தினில்லாது அப்பாற்போகுமாறு பணித்தனர். விருத்தப்பிராமணர் அதுகேட்டும்போகாதிருந்து 'நங்காய்! யான் உன்னை மணஞ்செய்யவந்தேன் வந்தகாரணத்தை வினவாது துரத்துவதுநீதியா?' என்றனர். தேவியார் 'இவனைப்போம்படிகூறியும் போகின்றிலான்யான்போவேன்'என்று அப்பானடந்தனர். உடனே சிவபிரான் விருத்தப்பிராமணவேடத்தைவிடுத்துத் தமது சுயரூபத்துடன் பிரசன்னமாயினர். தேவியார் அதுகண்டு வணங்கி, 'எம்பெருமானே! அறியாமையால் யான்செய்தகுற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்'என்றனர். பெருமான் 'தேவீ! நீ கூறியவற்றைத் துதிபோலேற்றுக்கொண்டோம். நாளைவந்து மணஞ்செய்வோம்' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். இதனைச் சிலதோழியர் மலையரசனுக்குக்கூற, அவன் மனைவியுடன்வந்து பார்ப்பதியையழைத்துக்கொண்டு தனதுமாளிகைசேர்ந்தனன் என்பதாம்.

தீதறு முனிமைந்தர் செல்லலு மதுபோழ்தின்
மாதவ நெறிநிற்கு மலைமக டனியன்புங்
காதலு மெனைவோர்க்குங் காட்டுத லருளாகிச்
சோதனை புரிவாரிற் றுண்ணென வெழலுற்றான்.

இ—ள்: தீது அறும் முனிமைந்தர் செல்லலும்—குற்றமற்ற புத்திரராகியமுனிவர்நால்வரும் (தம்மிருக்கைநோக்கிப்) போதலும், அது போழ்தில்— அப்பொழுது, மா தவ நெறி நிற்கும் மலைமகள் தனி அன்பும்— பெரிய தவநெறியில்நிற்கின்ற பார்வதிதேவியாரது ஒப்பற்ற அன்பையும், காதலும்—விருப்பத்தையும், எனைவோர்க்கும் காட்டுதல் அருள் ஆகி—யாவர்க்கும்(விளங்க) வெளிப்படுத்துதலையே திருவருளாகக்கொண்டு, சோதனை புரிவாரில்—பரீக்ஷிப்பவரைப்போல, துண்ணென எழலுற்றான்—விரைவாகத் திருவேடங்கொண்டருளினார் எ—று.

முனிமைந்தர் என்றது மைந்தராகிய முனிவரெனவிரிதலின் முன்மொழிவிசேடியமென்னும் பண்புத்தொகை. இன்னோரன்னவற்றை வடநூலார் விசேடியபூருவபதகருமதாரயமென்பர். பிரமனதுபுதல்வரென ஆறும்வேற்றுமைத்தொகையாகப் பொருள் கூறுவாருமுளர். போழ்து-பொழுது என்பதன்விகாரம்.

பார்ப்பதிதேவிதம்மேல்வைத்த அன்பையுங் காதலையும் முற்றறிவானுணர்ந்திருந்தும், உலகினர்க்கு வெளிப்படுத்துதற்காகவே சிவபிரான் சோதித்தனர்; தாமறிதற்காகவன்று என்பதுதோன்ற 'எனைவோர்க்குங்காட்டுதலருளாகி' எனவும் 'சோதனைபுரிவாரில்' எனவுங்கூறினார். (௧)

செறிதுவ ருடையாளன் சிகையின னணிநீற்றின்
குறியின னொளிர்நூலன் ண்டிகை யசைகைய
னுறைபனி கதிர்போற்று மாலைய னுயர்கோலன்
மறைபயின் முதியோர்போல் வடிவிது கொடுபோனான்.

இ—ள்: துவர் செறி உடையாளன்— காவிதோயப்பெற்ற வஸ்திரத்தைத்தரித்தவராயும், சிகையினன்—குடுமியையுடையவராயும், அணி நீற்றின் குறியினன்-அழகிய திருவெண்ணீற்றின் திரிபுண்டரத்தையுடையவராயும், ஒளிர் நூலன்- (வெண்ணிறம்) விளங்குகின்ற உபவீதத்தையணிந்தவராயும், குண்டிகை அசை கையன்- கமண்டலம் (தூங்கி)அசையப்பெற்ற கையையுடையவராயும், உறை பனி கதிர் போற்றும் ஓலையன்—மழையையும் பனியையும் வெய்யிலையும் (தம்மேற்படாது) காக்கின்ற ஓ

லக்குடையயுடையவராயும், உயர் கோலன்—நீண்ட தண்டத்தையுடையவராயும், மறை பயில் முதியோர் போல்—வேதங்களையோதுகின்ற விருத்தவேதியரைப்போல, இது வடிவு கொடு போனான்—இந்தத்திருவுருவத்தைக்கொண்டுசென்றருளினர் எ—று.

தவருடையாளன்முதலியகுறிப்புமுற்றெச்சங்கள், தனித்தனி, போனான் என்னும் வினைமுற்றோடியைந்தன. இது என்னுஞ் சுட்டுப்பெயர் ஈண்டுச்சுட்டுமாத்திரையாய்நின்றது. (௨)

போயினா னிமையத்திற் புவனமொ டுயிர்நல்குந்
தாய்தளர் வொடுநோற்குஞ் சாலையி னிடைசாரத்
தூயவ ரிவரென்றே தோகையர் கடைகாப்போ
ராயவர் பலர்வந்தே யடிதொழு துரைசெய்வார்.

இ—ள்: போயினன்-(இவ்வாறு சிவபிரான்)போய், இமையத்தில்-இமையமலையில், புவனமொடு உயிர் நல்கும் தாய் தளர்வொடு நோற்கும் சாலையினிடை சார—உலகங்களையும் (அவற்றிலுள்ள) ஆன்மவர்க்கங்களையுமீன்றருளிய அன்னையாகிய உமாதேவியார் மெலிவுடன் தவஞ்செய்கின்ற சாலையினிடத்து அணுக, கடைகாப்போர் ஆயவர் தோகையர் பலர்—வாயிலைக்காவல்செய்பவராகிய கன்னியர்கள் அநேகர், இவர் தூயவர் என்று வந்து-இவர் தூய்மையையுடையபெரியவரென்று சிந்தித்து (அவர்மாட்டு)வந்து, அடி தொழுது உரை செய்வார்—வணங்கி (இவ்வாறு)கூறுவார்கள் எ—று.

போயினன் முற்றெச்சம்; அது சார என்பதனோடியையும். அடிதொழுதல்-பாதங்களைத்தொழுதல்=வணங்குதல். உணவொழுத்தன்முதலிய நியமத்துடனென்பார் 'தளர்வொடு' என்றார்; இதுகாறுஞ் சிவபிரான்வந்திலரேயென்னும் வருத்தத்துடனென்பார் அங்ஙனங்கூறினரெனினுமாம். (௩)

தளர்நடை முதியீரித் தடவரை யிடைசேற
லெளிதல வடிகேள்வந் தெய்திய தெவனென்ன
வளமலை யரசன்றன் மகள்புரி தவநாடற்
குளமுட னிவண்வந்தே னுவகையி னுடனென்றான்.

இ—ள்: அடிகேள்—பெரியவரே, தளர் நடை முதியீர்—சோர்ந்தநடையினையுடையவிருத்தராகியநீர், இ தட வரை இடை சேறல் எளிது அல—(ஏற்றிழிவுமுதலியனமிகுதலாற் காளையர்க்குஞ்செல்லுதற்கரிதாகிய) விசாலித்த இம்மலையின்கண்ணே நடந்துவருதல் (நுமக்கு) இலகுவன்று, வந்து எய்தியது எவன் என்ன—(அங்ஙனமாகவும் ஆயாசத்தைச்சிந்தியாது) வந்துசேர்ந்தகாரணம் யாதென்று (வாயிற்காவற்கன்னியர்) வினவ, வள மலை அரசன் தன் மகள் புரி தவம் நாடற்கு உளமுடன்—வளப்பமிக்க மலையரசனதுபுத்திரிசெய்கின்ற தவத்தைக்காணுதற்கு மனங்கொண்டு, உவகையினுடன் இவண் வந்தேன் என்றான்—மகிழ்ச்சியுடன் இவ்விடத்துவந்தேனென்று அருளிச்செய்தார் (விருத்தப்பிராமணவேடங்கொண்ட சிவபிரான்) எ—று.

எவன் வினாவினைக்குறிப்பு. "ளஃகானுயர்பெயர்க்கு *** அயலிலகரமேயாதலும்விளித்தனு" என்னும் நன்னூற்சூத்திரவிதிப்படி, அடிகள் என்பது விளிக்கண் அடிகேள் எனவந்தது. தேவியார்செய்யுந்தவத்தைப் பரீக்ஷித்தற்குவந்தேனெனக் குறிப்புப்பொருளுந்தோன்ற 'வளமலையரசன்றன்மகள்புரிதவநாடற்குளமுடனிவண்வந்தேன்" என்றார். (௪)

என்றலு மினிதென்றே யிமையவ ளிடைசில்லோர்
சென்றனர் கிழவோன்றன் செயலினை யறைகாலை

யொன்றிய முதியோரே லுய்க்குதி ரிவணென்ன
நின்றதொர் பெரியோனை நேரிழை முனமுய்த்தார்.

இ—ள்: என்றலும்—என்று (விருத்தப்பிராமணவேடங்கொண்ட சிவபிரான்) அருளிச்செய்தலும், இனிது என்று—இது நன்று என்றுகூறி, சில்லோர் இமையவள் இடைசென்றனர்—சிலகன்னியர்கள் பார்ப்பதிதேவியிடத்துப்போய், கிழவோன் தன் செயலினை அறை காலை-விருத்தப்பிராமணரது செயலைக்கூறியபொழுது, ஒன்றிய முதியோரேல் இவண் உய்க்குதிர் என்ன—(அவ்வம்மையார்) விருத்தராயின் (அவரை) இவ்விடத்துவரவிடுக்குதிரென்றுகூறியருள நின்றது ஒர்பெரியோனை நேர் இழை முனம் உய்த்தார்- (அக்கன்னியர்கள்) வாயிலில்நின்ற விருத்தவேதியரை நேரிய ஆபரணங்களையணிந்த பார்வதி தேவியாரது திருமுன்னிலையில் விடுத்தார்கள் எ-று.

இமையவள்-இமையமலையரசன்மகள். சென்றனர்-முற்றெச்சம். ஒன்றியமுதியோர்=முதுமையொன்றினோர். நேரிழை-அன்மொழித்தொகை. முன்னம் முனமெனத்தொக்கது. நரையானன்றி அறிவானும் முதியோரேலென்பார் 'ஒன்றியமுதியோரேல்' என்றார், அதனை அறிந்துள்விடுத்தனரென்பார் 'நின்றதொர்பெரியோனைநேரிழைமுனமுய்த்தார்' என்றார். (௫)

உய்த்தலு மிவரெந்தைக் குறுபரி வினரென்றே
பத்திமை படுபாலாற் பார்ப்பதி தொழலோடு
மெய்த்துணை யெனநின்ற விசையையொர் தவிசிட்டு
நித்தனை யுறைவித்தா ணிமலையு மயனின்றாள்.

இ—ள்: உய்த்தலும்—(அவ்வாறு) விட்டவுடன், பார்ப்பதி—பார்ப்பதிதேவியார், இவர் எந்தைக்கு உறு பரிவினர் என்று பத்திமை படு பாலால்—இவர் எம்பரமபிதாவாகிய சிவபிரானிடத்துப் பேரன்புடையவரென்று (தம்மனத்திற்)பத்திதோன்றுந்தன்மையால், தொழலோடும்—கைதொழுதலும், மெய் துணை என நின்ற விசயை—மெய்ம்மையாகிய துணைவியாகநின்ற விசயையென்பவள், ஒர் தவிசு இட்டு—(அவ்விடத்தே) ஒராசனத்தை இட்டு, நித்தனை உறைவித்தாள்—(விருத்தவேதியவடிவங்கொண்ட) சிவபெருமானை (அதில்) இருத்தினாள், நிமலையும் அயல்நின்றாள்—பார்ப்பதிதேவியாரும் (அவரது)பக்கத்தில் நின்றார் எ—று.

நித்தன்-என்றுமுள்ளவன். நிமலை-மலசம்பந்தமில்லாதவள். உம்மை-எச்சம். சிவபிரானென்னுமுண்மையுணராது சிவனடியாரென்றேநம்பினராதலின் 'எந்தைக்குறுபரிவினரென்றேபத்திமைபடுபாலால்' எனவும், குறிப்பறிந்தேவல்செய்யுமுயிர்த்தோழியென்பாள் 'மெய்த்துணையெனநின்றவிசயை' எனவும் கூறினார். (௬)

அப்பொழு துமைதன்னை யாதர வொடுபாராச்
செப்புத லரிதாமுன் றிருநல னழிவெய்த
மெய்ப்படு தசையொல்க மிகுதவ முயல்கின்றாய்
யெப்பொருள் விழைவுற்றா யெண்ணிய துரையென்றான்.

இ—ள்: அப்பொழுது-அச்சமயத்தில், உமைதன்னை ஆதரவொடு பாரா-(விருத்தவேடங்கொண்ட சிவபெருமான்) பார்ப்பதிதேவியாரைத் தண்ணளியோடும் பார்த்து, செப்புதல் அரிது ஆம் உன் திருநலன் அழிவெய்த--வருணித்தற்கரிதாகிய உனது பேரழகு கெடவும், மெய் படு தசை ஒல்க—சரீரத்திற்பொருந்திய தசை ஒடுங்கவும், மிகு தவம் முயல்கின்றாய்—மிகுந்ததவத்தைச் செய்கின்றாய், எப்பொருள் விழைவுற்று

ய்—எந்த வஸ்துவைவிரும்பினை, எண்ணியது உரை என்றான்— நீ நினைத்ததைச் சொல்லுதியென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று. (எ)

வேறு.

முடிவி லானிவை யுரைத்தலும் விசயையை முகநோக்கிக்
கொடியி னொல்கிய நுசுப்புடை யுமையவள் குறிப்பாலே
கடிதி னீங்கிவர்க் கெதிர்மொழி யீகெனக் கண்காட்ட
வடிய னேற்கிது பணித்தன ளெனவறிந் தவள்சொல்வாள்.

இ—ள்: முடிவு இலான் இவை உரைத்தலும்—அழிவற்ற சிவபெருமான் இவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளுதலும், கொடியின் ஒல்கிய நுசுப்பு உடை உமையவள்—பூங்கொடிபோல் நுண்மையான இடையினையுடைய பார்ப்பதிதேவியார், விசயையை முகம் நோக்கி—(காதற்றோழியாகிய) விசயையைமுகத்தின்கட்பார்த்து, ஈங்கிவர்க்கு கடிதின் எதிர் மொழி ஈக என—இவருக்கு விரைவில் விடைபகருதியென்று, குறிப்பால் கண்காட்ட— குறிப்பினாற் கண்ணைக்காட்ட, அவள்—அவ்விசயை, அடியனேற்கு இது பணித்தனள் என அறிந்து சொல்வாள்— அடியேனுக்கு இப்பணியைக் கற்பித்தாரென்றுணர்ந்து (மேல்வருமாறு) கூறுவாள் எ—று.

ஈக என்னும் வியங்கோள் ஈறுதொக்கது. விசயையைமுகநோக்கி என்பது, "முதலையையுறிற்சினையைக்கண்ணுறும்" என்றவிதிப்படி கண்ணுருபுவிரித்துப் பொருள்கொள்ளப்பட்டது; விசயையின்முகத்தை நோக்கியென்பது கருத்து. தான்விடைகூறநாணினளாதலின் அவ்விறைக்கட்கு விடைகூறும்படி விசயைக்குக்கண்குறிகாட்டினள்; மேல் பன்னிரண்டாஞ்செய்யுளில் தேவி கூறத்தொடங்குமிடத்து 'நாணிக்கியே பொறுதுமைநுவல்கின்றாள்' எனக்கூறுதலாலும் இக்கருத்துணர்க. (அ)

மன்னு யிர்க்குயி ராகிய கண்ணுதன் மணஞ்செய்து
தன்னி டத்தினி லிருத்தினன் கொள்வதே தானுன்னிக்
கன்னி மெய்த்தவ மியற்றின ளென்றுகா தலிகூற
முன்ன வர்க்குமுன் னானவ னகைத்திவை மொழிகின்றான்.

இ—ள்: மன் உயிர்க்கு உயிர் ஆகிய கண்ணுதல்—நிலைபெற்ற ஆன்மாக்களுக்குப் பரமான்மாவாய் நிற்கின்ற நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான், மணஞ்செய்து-திருமணமியற்றி, தன் இடத்தினில் இருத்தினன் கொள்வதே உன்னி— தமது இடப்பாகத்திலமைத்துக் கொள்வதையேநினைத்து, கன்னி— (இந்தப்) பார்ப்பதிதேவியார், மெய் தவம் இயற்றினள் என்று—மெய்ம்மையாகிய தவத்தைச் செய்தாரென்று, காதலி கூற—காதற்றோழியாகிய விசயை விண்ணப்பஞ்செய்ய, முன்னவர்க்கும் முன் ஆனவன்—முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாகிய சிவபிரான், நகைத்து இவை மொழிகின்றான்—மந்தகாசஞ்செய்து இவ்வாசகங்களைத்திருவாய்மலர்ந்தருளுகின்றார் எ—று.

ஏ தேற்றம், தான் அசை. இருத்தினன் முற்றெச்சம். (௯)

புவிய ளித்தருள் முதல்வரு நாடரும் புனிதன்றா
ணிவட வத்தினுக் கெய்துமோ வெய்தினு மினையாளை
யவன்வி ருப்பொடு வரையுமோ வுமையவ ளறியாமே
தவமி யற்றின ளெளியளோ சங்கரன் றனக்கம்மா.

இ—ள்: புவி அளித்து அருள் முதல்வரும் நாடரும் புனிதன்—உலகத்தைப்படைத்தும் காத்தும் அருளுகின்ற தலைவர்களாகிய பிரமவிஷ்ணுக்களாலுந்தேடியறித

ற்கரியரான சிவபிரான், இவள் தவத்தினுக்கு எய்துமோ— இந்தப்பார்ப்பதிதேவியினது தவத்திற்குப்பிரசன்னமாவாரா? (ஆகார்), எய்தினும்—(அங்ஙனம்) பிரசன்னமாயினும், அவன்—அச்சிவபெருமான், விருப்பொடு இனையாளை வரையுமோ—விருப்பத்துடன் இப்பார்ப்பதியை மணஞ்செய்வாரா? (செய்யார்), உமையவள் அறியாமே தவம் இயற்றினள்-பார்ப்பதிதேவி (இவைகளை) அறியாது தவஞ்செய்தாள், சங்கரன் தனக்கு எளியனோ—சிவபிரான் இப்பார்ப்பதிக்கு எளியவரா? (அல்லரே!) எ—று.

உம்மை, முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையது எதிர்மறை. நாட என்பதனீற்றகரந்தொக்கது. அறியாமே மேயீற்றுவினையெச்சம். தனக்கு- தேவிக்கு. அளித்தல்-பிரமற்காம்போதுபடைத்தல், விஷ்ணுவுக்காம்போதுகாத்தல்; அளித்தலைப் படைத்தலெனவும், அருளலைக்காத்தலெனவுங் கூறுவாருமுளர். (௧௦)

அல்லல் பெற்றிட நோற்றிடு பகுதியா லாம்பாலொன்
றில்லை யித்துணைப் பெறலரும் பொருளிவட் கெளிதாமோ
பல்ப கற்றன தெழினலம் வறிதுபட் டனவன்றே
யொல்லை யித்தவம் விடுவதே கடனினி யுமைக்கென்றான்.

இ—ள்: அல்லல் பெற்றிட நோற்றிடு பகுதியால்—வருத்தமுண்டாகத் தவஞ்செய்தலினால், ஆம் பால் ஒன்று இல்லை—சிறைவேறற்பாலது யாதொன்றுமில்லை, இதுணை பெறலரும் பொருள் இவட்கு எளிதாமோ—இத்தகைய பெறுதற்கரிய பொருள் இவளுக்கு எளிதிற்கிடைக்குமா? (கிடையாதே!), பல்பகல் தனது எழில் நலம் வறிதுபட்டன அன்றே—பலநாளாக இவளது அழகின் நலம் வீணாயிற்றன்றே?, இனி ஒல்லை இ தவம் விடுவதே உமைக்கு கடன் என்றான்—இனி விரைவில் இந்தத்தவத்தைச்செய்யாதுவிடுவதே பார்ப்பதிக்கு முறைமையாமென்று திருவாய்மலர்ந்தருளினார் (சிவபிரான்) எ—று.

ஏகாரம் தேற்றம். தன் இளநலத்திற்கேற்ற ஓர்காளையை மணஞ்செய்தின்புறாது பெறுதற்கரியவரைப் பெறவிரும்பி உணவொறுத்தலாதிய நியமம் பூண்டமையால் இவளது இளமை இதுகாறுங் கொன்னே கழிந்தது, இன்னுமிவ்வாறிருப்பின் உடல்சுருங்கி இளமைபோய்விட, மேல் எவராயினும் மணஞ்செய்யவுடன்படாராதலின், இப்பொழுதே இத்தவத்தைவிடவேண்டுமென்பார் 'பல்பகற்றனதெழினலம்வறிதுபட்டனவன்றேயொல்லையித்தவம்விடுவதேகடனினியுமைக்கு' என்றார். ()

இந்த வாசகங் கேட்டலு மெம்பிராற் கிவரன்ப
ரந்தண் மாமுது குரவரென் றுன்னின னறியேனால்
வந்து வெய்மொழி கூறுத லெனச்சின மனங்கொண்டு
நொந்து யிர்த்துநா ணீக்கியே பொறுதுமை நுவல்கின்றாள்.

இ—ள்: உமை—பார்ப்பதிதேவியார், இந்த வாசகம் கேட்டலும்—இவ்வார்த்தையைக் கேட்டவுடன், இவர் எம்பிராற்கு அன்பர் அந்தண் மா முது குரவர் என்று உன்னினன்—இவர் எமது தலைவராகிய சிவபெருமானுக்கு அடியவரும் அழகிய தண்ணளியையுடைய பெரிய முதியகுருவும் (ஆகும்) என்று (இதுகாறும்) எண்ணியிருந்தேன், வந்து வெம்மொழி கூறுதல் அறியேன் என— (இங்ஙனம்) வந்து கொடுஞ்சொற்பேசுவரென்பதை அறிந்திலேனென்று, மனம் சினம் கொண்டு—மனத்திற்கோபமுற்று, நொந்து உயிர்த்து—வருந்திப் பெருமூச்சுவிட்டு, நாண் நீக்கி—வெட்கத்தையொழித்து, பொறாது— சகிக்காது, நுவல்கின்றாள்— (பின்வருமாறு) கூறுகின்றார் எ-று.

கேட்டலும் கொண்டு என இயையும். அந்தண்மாமுது குரவர் என்பதற்கு அந்தணகுலத்தவராகிய பெரிய முதியகுரு எனினுமாம். ஓர் புருடனது சிறப்பையும் அவனைத்தான் கணவனாகக்கொள்ளுமாறு காதலித்தமையையும் கன்னியர்கூறத்தொடங்குதல் கழிபெருநாண்விளையுமாகவும், அடியார்வேடம்பூண்ட சிவபிரான் கூற்றைச்சகிக்காமையின், அந்நாணைத்தவிர்த்துக் கூறத்தொடங்கினரென்பார் 'நாணீக்கியேபொருதுமைநுவல்கின்றாள்' என்றார். (௧௨)

முடிவி லாதுறை பகவனென் வேட்கையை முடியாது
விடுவ னென்னினுந் தவத்தினை விடுவனோ மிகவின்னங்
கடிய நோன்பினை யளப்பில செய்துயிர் கழிப்பேனா
னெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீயென்றாள்.

இ—ள்: முடிவு இலாது உறை பகவன் என் வேட்கையை முடியாது விடுவன் என்னினும்—அழிவின்றி (நித்தியராய்) இருக்கின்ற சிவபெருமான் எனது விருப்பத்தை நிறைவேற்றாமல்விட்டவழியும், தவத்தினை விடுவனோ—யான் தொடங்கிய தவநியமத்தை நீக்குவேனோ? (நீக்கமாட்டேன்), மிக கடிய அளப்பில நோன்பினை இன்னம் செய்து—(இதுகாறுமியற்றியதினும்) மிகக்கொடிய பலதவங்களை இன்னுஞ்செய்து, உயிர் கழிப்பேன்—(எனது) உயிரைப்போக்குவேன், நெடிது மூத்தலின் மயங்கினை—மிகவும் வயதுகழிந்தமையாலறிவுமயங்கப்பெற்றாய், நீ பித்தனோ என்றாள்—நீ பைத்தியனோ? என்று (இழித்துப்) பேசினாள் (பார்ப்பதிதேவியார்) எ—று.

வார்த்திகதசையானுண்டான மதிமயக்கமும் பைத்தியமும் ஆகிய இரண்டொன்றின்றேல் இங்ஙனமுரையாடமாட்டீரென்பதாம். உம்மை எதிர்மறை. (௧௩)

ஈட்டு மாருயிர்த் தொகையெலா மளித்தவ ளிவைகூற
மீட்டு மோர்புணர்ப் புன்னியே மாதுநீ வெஃகுற்ற
நாட்ட மூன்றுடைப் பிஞ்ஞகன் வளத்தியல் நன்றாய்ந்து
கேட்டி லாய்கொலா முணர்ந்துவ னஃதெனக் கிளக்கின்றான்.

இ—ள்: ஈட்டும் ஆர் உயிர் தொகை எலாம் அளித்தவள் இவை கூற—தொகுக்கப்படுகின்ற நிறைந்த ஆன்மவர்க்கங்களையெல்லாம் பெற்றருளிய (தாயாகிய) பார்ப்பதிதேவியார் இவற்றைப்பேச, மீட்டும் ஓர் புணர்ப்பு உன்னி—(விருத்தவேடங்கொண்ட சிவபிரான்) பின்னரும் ஒரு உபாயத்தை நினைத்து, மாது-பெண்ணே!, நீ வெஃகுற்ற நாட்டம் மூன்று உடை பிஞ்ஞகன் வளத்து இயல் நன்று ஆய்ந்து கேட்டிலாய்கொல்—நீ விரும்பிய மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரானது வளப்பத்தின் தகுதியை நன்றாக ஆராய்ந்து கேட்டிலாய்போலும், அஃது உணர்த்துவன் என கிளக்கின்றான்—அதனைத்தெரிவிக்கின்றேனென்று திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

ஈட்டும் என்பதற்கு இருவினைகளையீட்டுகின்ற எனினுமாம். பிஞ்ஞகன்- தலைக்கோலத்தையுடையவர்; பிறை கங்கை சர்ப்பம் கொன்றைமாலை தலைமாலை கொக்கிறகு முதலியவற்றைச் சடைமுடியிலணிந்திருத்தலினிவர்க்கிப்பெயர் வழங்கிற்று. (௧௪)

ஆடை தோல்விடை யேறுவ தணிகல மரவென்பு
கேடில் வெண்டலை மாவிகை கேழலின் மருப்பின்ன
வோடு கொள்கல முண்பலி வெய்யகஞ் சுலப்புற்றோர்
காட தேநடம் புரியிடங் கண்ணுதற் கடவுட்கே.

இ—ள்: கண்ணுதல் கடவுட்கு—நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கு, ஆடை தோல்—வஸ்திரம் தோல், ஏறுவது விடை—வாகனம் இடபம், அணிகலம் அரவு என்பு கேடு இல் வெண்டலைமாலிகை கேழலின்மருப்பு இன்ன—ஆபரணங்கள் சர்ப்பமும் எலும்புமாலையும் கெடுதலில்லாத வெண்டலைமாலையும் பன்றிக்கோடும் இவைபோல்வன பிறவும், கொள்கலம் ஓடு—பிக்ஷாபாத்திரம் பிரமகபாலம், ஊண் பலி வெய்ய நஞ்சு—உணவு பிக்ஷான்னமும் கொடிய நஞ்சும், நடம் புரி இடம் உலப்புற்றோர் காடதே—நடனசாலை இறந்தவர்களது சுடுகாடே எ—று.

மாலிகை என்பது என்பு என்பதனோடுங்கூட்டியுரைக்கப்பட்டது. தோலென்றது புலித்தோலையும் நரசிங்கத்தோலையும். நரசிங்கத்தோலைப்போர்வையென்பாருமுளர். ஆமையோடுமுதலியவற்றையுமடக்க, இன்ன என்றார்.

சிவபிரான் தோலை ஆடையாகக்கொண்டது முதலியவற்றின் காரணங்களை மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்தில் விரிவாகக்காண்க. (௧௫)

வேய்ந்து கொள்வது வெள்ளெருக் கறுகுநீர் வியன்கொன்றை
பாந்த ணொச்சியே மத்தமென் றினையன பலவுண்டாற்
சாந்தம் வெண்பொடி சூலமான் மழுத்துடி தழலங்கை
யேந்து கின்றது பாரிடஞ் சூழ்படை யிறையோற்கே.

இ—ள்: இறையோற்கு—சிவபெருமானுக்கு, வேய்ந்து கொள்வது—புனைந்துகொள்ளும் பொருள்கள், வெள்ளெருக்கு—வெள்ளெருக்கம்பூவும், அறுகு—அறுகும், நீர்—கங்கையும், வியன் கொன்றை—சிறந்த கொன்றைமலரும், பாந்தள்—சர்ப்பங்களும், நொச்சி—நொச்சியும், மத்தம்—ஊமத்தையும், என்று இனையன பல உண்டு—என்று இவைபோல்வன பல இருக்கின்றன, சாந்தம் வெண் பொடி—(பூசும்) சந்தனம் வெள்ளிய சாம்பர், அங்கை ஏந்துகின்றது—அகங்கையிற்றாங்குவன, சூலம் மான் மழு துடி தழல்—சூலமும் மானும் மழுவும் தமருகமும் அக்கினியும், சூழ் படை பாரிடம்—சூழ்ந்துள்ள சேனை பூதங்கள் எ—று. (௧௬)

அன்னை தாதைகேள் வடிவொடு குணங்களி லனையானுக்
கின்ன வாகிய பலவள னுண்டவை யெவையுந்தா
னின்ன வாகவோ தவம்புரிந் தெய்த்தனை நெடுந்தொல்சீர்
மன்னன் மாமகட் கியைவதே யித்துணை வழக்கென்றான்.

இ—ள்: அன்னை தாதை கேள் வடிவொடு குணங்கள் இல் அனையானுக்கு—தாயும் தந்தையும் சுற்றமும் உருவமும் குணங்களும் இல்லாத அந்தச்சிவனுக்கு, இன்ன ஆகிய பல வளன் உண்டு—இவை போன்ற பல வளப்பங்கள் உள்ளன, அவை எவையும் இன்ன ஆகவோ தவம் புரிந்து எய்த்தனை—அவ்வளப்பங்களெல்லாம் உன்னுடையனவாதற்கா அருந்தவஞ்செய்து இளைப்புற்றாய்?, நெடும் தொல் சீர் மன்னன் மாமகட்கு—நெடிய பழைய கீர்த்தியினையுடைய ராசகுமாரியாகிய உனக்கு, இத்துணை வழக்கு இயைவதே என்றான்—இத்தகைய இயல்பு இசைவதா? (இசையாதே!) என்று திருவாய்மலர்ந்தருளினார் (விருத்தப்பிராமணவேடங்கொண்ட சிவபிரான்) எ—று.

வளம் என்பது வளனெனப்போலியாயிற்று. தான் அசை. ஏகாரம் வினா. வடிவு அழகெனினுமாம். இன்னவாகிய பல்வளம் என்றதற்கு முயலகன் முதலியவற்றையுரைக்க.

'அன்னை தாதைகேள் வடிவொடுகுணங்களிலனையான்' என்பதை "தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடி" என்னுந்திருவாசகத்தானும், "வடிவனைத்துந்தந்த வடிவில்லாச்சுத்தவான்பொருளே" எனவும், "குலமி லான்குணங் குறியிலான் குறை

விலான் கொடிதாம்-புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து-மிலமி லான்மைந்தர் மனைவியில் லானென வனவன்சஞ்-சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தருமே" என்னுந்தாயுமானவர் திருவாக்கானுமுணர்க.

தாய் தந்தை சுற்றம் வடிவம் நற்குணம் என்பனவை மணமகனுக்குவேண்டப் படுவனவாதலின், அவையொன்றுமில்லாரென்பதை யுணர்த்தினர். சிவனை வரனாகக் கொண்டு மன்றலியற்றுழி, புலித்தோலும் நரசிங்கத்தோலுமே மணச்சடங்கிற்கிடைக்கும் ஆடையாமெனவும், சர்ப்பமே காப்புநாணும் மங்கலநாணுமாமெனவும், கிழத்தன்மைமிக்க இடபமே வாகனமாமெனவும், உயர்ந்தபட்டாடையையுடுத்து பட்டுநூலிழையாற் காப்புநாணும் மாற்றுயர்ந்த பொன்னூல் மங்கலநாணுமணிந்து யானைமேலிவர்ந்து பரிசனர்சேவிக்க வீதிவலம்வருதற்குரிய ராசகன்னிகையாகிய உனக்கு இவையெல்லாமேற்றனவா எனவும், இன்னவாறு முதனூற்கருத்தையமைத்து அவ்வப்பொருள்களினியைபையூகித்துணர 'அவையெவையுந்தானின்னவாகவோ தவம்புரிந்தெய்த்தனைநெடுந்தொல்சீர்மன்னன்மாமகட்கிவையவதேயித் துணைவழக்கென்றான்' என்றார்.

## வேறு.

புரங்கண்மூன் றினையு மட்ட புங்கவ னினைய கூற
வரங்கண்மே தகைய வெற்பின் மடமயில் கேட்ட லோடுங்
கரங்களாற் செவிகள் பொத்திக் கண்ணுத னாமம் போற்றி
யிரங்கிவெஞ் சினத்த ளாகி யிடருழந் தினைய சொல்வாள்.

இ—ள்: புரங்கள் மூன்றினையும் அட்ட புங்கவன் இனைய கூற—முப்புரங்களையும் எரித்தருளிய சிவபிரான் இவற்றைத்திருவாய்மலர்ந்தருள, வரங்கள் மேதகைய வெற்பில் மட மயில் கேட்டலோடும்—பெருமையிற்சிறந்த மடமையினையுடைய இமையமலையரசனது புதல்வியாகிய பார்ப்பதிதேவியார் கேட்டவுடன், கரங்களால் செவிகள் பொத்தி—இருகைகளினாலுங் காதுகளைமூடி, கண்ணுதல் நாமம் போற்றி — சிவநாமத்தையுச்சரித்து, இரங்கி—இரக்கங்கொண்டு, வெம் சினத்தள் ஆகி—கொடுங்கோபத்தையுடையவராய், இடர் உழந்து—துன்பப்பட்டு, இனைய சொல்வாள்—இவ்வாசகங்களைக்கூறுவார் எ—று.

சிவபிரானது திருவருட்சோதனையை அறிந்திலரென்பதை விளக்க, 'மடமயில்' என்றார். மயில் உவமவாகுபெயர். சிவநாமமுச்சரித்தது, சிவதூஷணங்கேட்டபாவந்தீர்தற்பொருட்டென்க. (௧அ)

கேட்டியா லந்த ணாள கேடிலா வெம்பி ரான்றன்
மாட்டொரு சிறிது மன்பு மனத்திடை நிகழ்ந்த தில்லை
காட்டுறு புள்ளின் சூழல் கவருவான் புதன்மேற் கொண்ட
வேட்டுவ னியல்போன் மேலோன் வேடநீ கொண்ட தன்மை.

இ—ள்: அந்தணாள கேட்டி—வேதியனே!கேட்பாயாக, மனத்திடை—உன் மனத்தில், கேடு இலா எம்பிரான் தன் மாட்டு ஒருசிறிதும் அன்பு நிகழ்ந்ததில்லை—அழிவற்ற எங்கள் தலைவராகிய சிவபிரானிடத்து மிகஅற்பமாயேனும் பத்திதோன்றியதன்று, நீ மேலோன் வேடம் கொண்ட தன்மை—நீ சிவனடியானுடைய வேடத்தைப் பூண்டிருக்குந்தன்மை, காட்டு உறு புள்ளின் சூழல் கவருவான் புதல் மேற்கொண்ட வேட்டுவன் இயல் போல்—காட்டிற்பொருந்திய பறவைக்கூட்டங்களை அகப்படுத்தும்படி புற்களைமேற்புனைந்திருக்கும் வேட்டுவனது தன்மைபோலும் எ—று.

கேடு முதனீண்டமுதனிலைத்தொழிற்பெயர். போல் என்னுமுதனிலை முற்றாய் முடிந்தது, "கொள்வாருங் கள்வருநேர்" என்னுந்திருக்குறளிற்போல.

வேடன் பறவைகளையகப்படுத்துமாறு புதலைமேற்புனைந்து மறைந்திருத்தல் போல, நீயும் என்போல்வாரை வஞ்சிக்குமாறு இவ்வேடம்பூண்டனையேயன்றி உண்மையிற் சிவபத்தனன்றென்பதாம். (௧௯)

நேசமி லாது தக்க னிமலனை யிழித்து நின்போற்
பேசிய திறனு மன்னோன் பெற்றதுங் கேட்டி லாயோ
யீசனை யிங்ங னென்மு னிகழ்ந்தனை யிந்நாள் காறு
மாசறு மறைக ளேது மாய்ந்திலை போலு மன்றே.

இ—ள்: தக்கன்—தக்கனென்பான், நேசம் இலாது—பத்தியில்லாமல், நின்போல் நிமலனை இழித்து பேசிய திறனும்—உன்னைப்போலச் சிவபிரானை யிகழ்ந்து பேசியதன்மையையும், அன்னோன் பெற்றதும் கேட்டிலாயோ—அவனடைந்த தண்டனையையும் (நீ இதுகாறும்) கேள்வியுற்றிலாயா?, ஈசனை இங்ஙன் என்முன் இகழ்ந்தனை—சிவபிரானை இவ்விடத்து என்முன்னிலையில் நிந்தித்தாய், இ நாள் காறும் ஆசு அறும் மறைகள் ஏதும் ஆய்ந்திலை போலும்— இந்நாள்வரையும் குற்றமற்ற வேதங்களொன்றையும் அறிந்திலாய் போலும் எ—று.

சிவபிரானையிகழ்ந்த தக்கன் தண்டிக்கப்பட்டதைக் கேள்வியுற்றிருப்பின் அத்தண்டனையுண்டாமென்றஞ்சுவை, அவரதுபிரபாவங்களை விளக்கும்வேதங்களையோதியுணர்ந்திருப்பின் நீ கூறியவெல்லாம் அவர்க்குப்புகழேயென்பதை நன்குணர்வை, இவ்விரண்டுமின்மையாற்றான் இவ்வாறிகழ்ந்துகூறினை என்பதாம்.

திறம் திறனெனப்போலியாயிற்று. இங்ஙனம் என்பது இங்ஙனெனக்கடைக்குறையாயிற்று. (௨௦)

முறைபடு சுருதி யெல்லா மொழியினு மதுவே சார்வா
வுறுகில ராகிப் பொல்லா வொழுக்கமே கொண்டு முக்க
ணிறைவனை யிகழ்ந்து முத்தி யெய்திடா துழல முன்னாண்
மறையவர் பெற்ற சாப நின்னையு மயக்கு றாதோ.

இ—ள்: முறைபடு சுருதி எல்லாம் மொழியினும்—முறைமை பொருந்திய வேதங்களெல்லாவற்றையும் ஓதினும், அதுவே சார்வு ஆ உறுகிலர் ஆகி— அவ்வேதநெறியையே நன்மார்க்கமென்று கடைப்பிடியாதவர்களாய், பொல்லா ஒழுக்கமே கொண்டு—தீயவொழுக்கத்தையேஅநுசரித்து, முக்கண் இறைவனை இகழ்ந்து—மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரானை நிந்தித்து, முத்தி எய்திடாது உழல—மோக்ஷமடையாமற் (பிறந்திறந்து) உழலும்படி, முன் நாள் மறையவர் பெற்ற சாபம்—முற்காலத்திற் பிராமணர்கள் பெற்றுக்கொண்ட சாபமானது, நின்னையும் மயக்குறாதோ—உன்னையும் மயக்கமாட்டாதா? (மயக்குமே) எ—று.

உம்மை, முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையது எச்சம். ஏகாரங்கள் தேற்றம். பொல்லாவொழுக்கமென்றதீண்டு வைணவமதாசாரத்தை. கிரமமாயும் ஆதியந்தமாயும் ஓதினுமென்பார் 'முறைபடுசுருதியெல்லாமொழியினும்' என்றார். மறையவர் சாபம்பெற்றதை மேல் தக்ஷகாண்டத்துத்ததீசிப்படலத்திற்காண்க. (௨௧)

* தாதையாய்த் தம்மை நல்கித் தந்தொழிற் குரிய னாகி
யாதியாய்த் தங்கட் கின்றி யமைவுறாச் சிவனை நீங்கி

யேதிலார் பக்க மாகி யில்லொழுக் கிறந்தார் போலும்
வேதியர் முறையே செய்தாய் வெறுப்பதெ னின்னை யானே.

இ—ள்: தாதை ஆய் தம்மை நல்கி—பரமபிதாவாயிருந்து தம்மைத்தோற்றுவித்து, தம் தொழிற்கு உரியன் ஆகி—தாங்களியற்றுகின்ற (வேள்விமுதலிய) தொழில்களுக்குரியவராய், ஆதி ஆய்—முதற்கடவுளுமாகி, தங்கட்கு இன்றியமையாச் சிவனை நீங்கி—தங்களுக்கு இன்றியமையாத சிவபிரானைவிலக்கி, ஏதிலார் பக்கம் ஆகி இல்லொழுக்கு இறந்தார் போலும் வேதியர் முறையே செய்தாய்—அன்னியபுருடர்மாட்டு மனம்வைத்து இல்லறநெறிகோடியகற்பின்மகளிர்போன்ற வைணவப்பிராமணர்களது முறையையே (நீயும்)செய்தனை, நின்னை யான் வெறுப்பது என்—உன்னை யான்வெறுப்பது எவ்வாறு? எ—று.

முன்னைய ஏகாரம் தேற்றம். குலதெய்வமாதலின் 'தங்கட்கின்றியமையாச்சிவன்' என்றார். குலதெய்வத்தைவிடுத்துப் பிறதெய்வத்தை முதலாகக் கொள்ளுதலின், அவர்க்கு, ஏதிலார்பக்கமாகியில்லொழுக்கிறந்த மகளிரையுவமித்தார். ஏதிலார் பக்கமாகி என்பதை வேதியர்க்கடையாக்கி 'பிறதேவர்மேல் அன்புவைத்து' எனவுரைப்பாருமுளர். தாதையாய் என்பதுமுதலிய எச்சங்கள் 'இன்றியமையாச்' என்னும் எதிர்மறைவினையோடியைந்தன. (உஉ)

ஆயினு மறையோர் தம்மி னருமறை முறையே வேடந்
தூயன தாங்கி யெங்கோன் றொண்டுசெய் வோரு முண்டா
னீயவர் தன்மைத் தாயு நித்தனை யிகழ்ந்தா யென்னிற்
றீயவ ருனைப்போ லில்லை யவுணர்தந் திறத்துமாதோ.

இ—ள்: ஆயினும்—அங்ஙனமாயினும், மறையோர் தம்மில்—வேதியர்களுள், அரு மறை முறையே தூயன வேடம் தாங்கி—அரிய வேதவிதிப்படி புனிதமான வேடத்தைப்பூண்டு, எம் கோன் தொண்டு செய்வோரும் உண்டு—எங்கள் தலைவராகிய சிவபிரானது பணிகளைச்செய்கின்ற மெய்யடியாருமுளர், நீ அவர்தன்மைத்து ஆயும்—நீ அந்தமெய்யடியாரது இயல்பைப்பொருந்தியிருந்தும், நித்தனை இகழ்ந்தாய் என்னில்—நித்தியராகிய சிவபிரானை நிந்தித்தனை ஆதலின், அவுணர்தம் திறத்தும் உனை போல் தீயவர் இல்லை-அசுரர்களுள்ளும் உன்னைப்போலக்கொடியவர்கள் இல்லை எ-று.

கபடஞ்செய்தலை இயல்பாகவுடைய அசுரகுலத்தார்தாமும் உன்போற்கபடவேடம்பூண்டு சிவபிரானை நிந்தித்திலராதலின், நீ அவரினுங் கொடியை என்பதாம். உம்மை, ஆயினும் அவுணர்தந்திறத்தும் என்பனவற்றில் இழிவுசிறப்பு; தொண்டுசெய்வோரும் என்பதில் எச்சம்; தன்மைத்தாயும் என்பதில் உயர்வுசிறப்பு. (உங)

வேண்டுதல் வேண்டி டாமை யில்லதோர் விமலன் றன்னை
யீண்டுநீ யிகழ்ந்த வெல்லாம் யாரையு மளிக்கு மன்பு
பூண்டிடு குறிகா ணற்றாற் புகழ்ச்சியா மன்றி முக்க
ணாண்டகை யியற்கை யெல்லா மார்கொலோ வறியகிற்பார்.

இ—ள்: வேண்டுதல் வேண்டிடாமை இல்லது ஓர் விமலன் தன்னை—விருப்புவெறுப்புமில்லாத நிர்மலராகிய சிவபிரானை, ஈண்டு நீ இகழ்ந்த எல்லாம்— இவ்விடத்து நீ நிந்தித்துக்கூறிய இயல்புகள்யாவும், யாரையும் அளிக்கும் அன்பு பூண்டிடு குறி—நம்மனோரனைவரையுங் காக்கின்ற கிருபையை மேற்கொண்ட முத்திரையாம், அற்றால் புகழ்ச்சி ஆம்—அதனால் (அவருக்குப்) புகழுண்டு, அன்றி— அங்ஙனமன்றி, முக்கண் ஆண்டகை இயற்கை எல்லாம் அறியகிற்பார் ஆர்— மூன்றுதிருக்கண்க

லேயுடைய சிவபிரானது தன்மைகளெல்லாவற்றையும் அறிய வல்லுநர் யாவர் (ஒருவருமிலர்) எ—று.

ஆண்டகை-அன்மொழித்தொகை; ஆண்டன்மையினையுடையவன் என்பது பொருள். விருப்புவெறுப்பற்ற சிவபிரான் அவற்றைவிரும்பிக்கொண்டது தாமேபரமபதியென்பதை எவருமுணர்ந்தீடேறும்பொருட்டேயாதலின், அவை அவர்க்குப்புகழாமென்பார் 'வேண்டுதல்வேண்டிடாமை * * * * புகழ்ச்சியாம்' எனவும், எண்ணிறந்தகாலம் அருந்தவமியற்றிப் பக்குவமெய்தினோர்க்கும் உணர்தற்கரிதாய சிவப்பிரபாவமெல்லாம், அவரைத்தூஷித்துக்கொண்டு வாளாதிரியும் வஞ்சகனாகிய உனக்குப்புலப்படாதென்பார் 'முக்கணாண்டகையியற்கையெல்லாமார்கொலோவறியகிற்பார்' எனவுங் கூறினார். (௨௪)

போதனே முதலா வுள்ள புங்கவர் வழிபட் டேத்த
வேதமி லிறைமை யாற்ற லியாவையும் புரிந்த நாதன்
காதலும் வெறுப்பு மின்றிக் கருணைசெய் நிலைமை யேகாண்
பேதைநீ யிகழ்ச்சி யேபோற் பேசிய தன்மை யெல்லாம்.

இ—ள்: போதனே முதலா உள்ள புங்கவர் வழிபட்டு ஏத்த—பிரமனேமுதலாகவுள்ள தேவர்கள் (யாவரும்) வழிபாடுசெய்து துதிக்க, ஏதம் இல் இறைமை ஆற்றல் யாவையும் புரிந்த நாதன்—குற்றமற்ற அதிகாரத்தையும் வல்லமையையும் (வேண்டிய)பிறவற்றையுங்கொடுத்தருளிய சிவபிரான், காதலும் வெறுப்பும் இன்றி கருணை செய் நிலைமையே—விருப்பும் வெறுப்புமின்றி (ஆன்மாக்களுக்குத்) திருவருள்செய்கின்ற இயல்பேயாம், பேதை நீ இகழ்ச்சி போல் பேசிய தன்மை எல்லாம்—அறிவிலியாகிய நீ நிந்தைபோல (எண்ணிக்)கூறிய செயல்கள்யாவும் எ—று. (௨௫)

இம்முறை மறைக ளாதி யிசைத்தன வினைய வெல்லாஞ்
செம்மைகொ ளுணர்வி னன்றோர் தெளிகுவ ரிறையை யெள்ளும்
வெம்மைகொள் குணத்தாய் நிற்கு விளம்பொணா விளம்பிற் பாவம்
பொய்ம்மறை வேடத் தோடும் போதிநீ புறத்தி லென்றாள்.

இ—ள்: இ முறை மறைகள் ஆதி இசைத்தன—இவ்வாறு வேதமுதலிய நூல்கள்கூறின, இனைய எல்லாம் செம்மைகொள் உணர்வின் ஆன்றோர் தெளிகுவர்-இவைகளனைத்தையும் தூய்மைபொருந்திய அறிவினையுடைய பெரியோர் உணர்வார்கள், இறையை எள்ளும் வெம்மை கொள் குணத்தாய்—சிவபிரானை இகழுகின்றதுர்க்குணனே!, நிற்கு விளம்ப ஒணா—உனக்குவிரித்துக்கூறுதல் தகாது, விளம்பில் பாவம்—அங்ஙனங்கூறினாற் பாவமுண்டாம், நீ பொய் மறை வேடத்தோடும் புறத்தில் போதி என்றாள்—நீ பொய்ம்மையான வேதியவடிவத்துடன் வெளியே போ என்றுகூறினார் (பார்ப்பதிதேவியார்) எ—று.

விளம்ப என்பதனீற்றகரந்தொக்கது. செம்மைகொளுணர்வினன்றோர் தெளிகுவர் என்பதை "தமக்ரது:பச்யதிவீதசோகோதாது:ப்ரஸாதாந்மஹிமாநமாத்மந:" என்னுங் கடவல்லியுபநிஷத்தாலும், "இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேனெனருசித் திடவலியவந்-தின்பங் கொடுத்தநினை யென்னேர ரின்னன்ப ரிடையறா தருகிநாடி-யுன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கு மோய்ந்தயர்ந் தவசமாகி-யுணர்வரிய பேரின்ப வனுபூதி யுணர்விலே யுணர்வார்க ளுள்ள படிகாண்" என்னுந்தாயுமானவர்திருவாக்காலுமுணர்க. (௨௬)

அறத்தினைப் புரிவா ளிவ்வா றறைதலு மணங்கே யீங்குன்
றிறத்தினி லார்வஞ் செய்து சென்றவென் செயல்கே ளாது
புறத்திடைப் போதி யென்றி புரைவதோ புகுந்த பான்மை
மறைச்சடங் கியற்றி நின்னை வரைந்திடற் காகு மென்றான்.

இ—ள்: அறத்தினை புரிவாள் இவ்வாறு அறைதலும்—(காஞ்சீபுரத்தின்கண்ணே) முப்பத்திரண்டுதருமங்களையுஞ்செய்தருளிய உமாதேவியார் இவ்வாறு கூறுதலும், அணங்கே—(விருத்தவேதியராகிய சிவபிரான் அவரைநோக்கி) பெண்ணே!, உன்திறத்தினில் ஆர்வம் செய்து ஈங்கு சென்ற என்செயல் கேளாது— உன்மாட்டுக்காதல்கொண்டு இங்குவந்த எனது வரவை வினவாது, புறத்திடை போதி என்றி— வெளியிற்போவென்று கூறினை, புரைவதோ—இது தக்கதா?, புகுந்த பான்மை—யான்வந்தகாரணம் (யாதெனில்), மறை சடங்கு இயற்றி நின்னை வரைந்திடற்கு ஆகும் என்றான்—வேதவிதிப்படி கிரியைகளைநடாத்தி உன்னைப் பாணிக்கிரகணஞ்செய்தற்காமென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

இங்கு ஈங்கு என முதனீண்டது. (௨௭)

வஞ்சக முதல்வன் சொற்ற வாசக மிறைவி கேளா
வஞ்செவி பொத்தி யாற்றா தழுங்கிமெய் பதைப்ப விம்மி
யெஞ்சலின் முதியோன் போகா னேகுவன் யானே யென்னாப்
பஞ்சடி சேப்ப வாண்டோர் பாங்கரிற் படர்த லுற்றாள்.

இ—ள்: இறைவி—பார்ப்பதிதேவியார், வஞ்சக முதல்வன் சொற்ற வாசகம் கேளா—கபடவேடங்கொண்டசிவபிரான் திருவாய்மலர்ந்தருளிய வார்த்தையைக்கேட்டு, அம் செவி பொத்தி—அழகிய காதுகளைக் (கைகளால்)மூடி, ஆற்றாது அழுங்கி—பொறாது வருந்தி, மெய் பதைப்ப விம்மி—சரீரம் பதற மனம்புழுங்கி, எஞ்சலில் முதியோன் போகான்—மிகவும் வார்த்திகனாகிய இவன் போகமாட்டான், யானே ஏகுவன் என்னா—யானே போவேனென்றுகூறி, பஞ்சு அடி சேப்ப—செம்பஞ்சூட்டிய திருவடிகள் சிவப்பேற, ஆண்டு ஓர் பாங்கரில் படர்தலுற்றாள்— அவ்விடத்தில் ஒருபக்கத்திற் போயினார் எ—று.

எஞ்சலின்முதியோன்-குறைவில்லாதமுதியோன்=மிகமூத்தோன். ஏகாரம் பிரிநிலை. (௨௮)

படர்ந்தனள் போத லோடும் பனிபடு மிமையம் வைகு
மடந்தைதன் னியற்கை நோக்கி வரம்பிலா வருண்மீ தூர
வடைந்ததொல் பனவக் கோல மகன்றுமால் விடைமேல் கொண்டு
தொடர்ந்துபல் கணங்கள் போற்றத் தோன்றினன் றொலைவி லாதோன்.

இ—ள்: படர்ந்தனள் போதலோடும்—இவ்வாறு நடந்துசெல்ல, தொலைவு இலாதோன்—அழிவில்லாத சிவபிரான், பனி படும் இமையம் வைகும் மடந்தைதன் இயற்கை நோக்கி—பனிபொருந்தியஇமையமலையில் வீற்றிருக்கின்ற பார்ப்பதிதேவியின் தவநியமத்தைப்பார்த்து, வரம்பு இலா அருள் மீது ஊர—அளவற்றகிருபை மேன்மேலுங்கிளர, அடைந்த தொல் பனவ கோலம் அகன்று—தாங்கொண்டருளிய பழையவிருத்தப்பிராமணவேடத்தைநீங்கி, மால் விடை மேல் கொண்டு—பெருமைபொருந்திய இடபவாகனத்தின்மேல் இவர்ந்தருளி, பல் கணங்கள் தொடர்ந்து போற்ற—பல பூதகணங்கள் பின்றொடர்ந்து துதிக்க, தோன்றினன்—பிரசன்னமாயினர் எ—று.

படர்ந்தனள் முற்றெச்சம். மால்விடை-விஷ்ணுவாகிய இடபமெனினுமாம். ()

தொலைவறு பகவன் வான்மீத் தோன்றலுந் துளங்கி நாணி
மலைமகள் கண்டு பல்கால் வணங்கியஞ் சலியாற் போற்றி
யலகிலா வுணர்வா லெட்டா வாதிநின் மாயை தேறேன்
புலனிலாச் சிறியே னின்னை யிகழ்ந்தவா பொறுத்தி யென்றாள்.

இ—ள்: தொலைவு அறு பகவன் வான் மீ தோன்றலும்—அழிவில்லாத சிவபெருமான் ஆகாயத்திலெழுந்தருள, மலைமகள் கண்டு—பார்ப்பதிதேவியார் தரிசித்து, துளங்கி நாணி—நடுங்கி வெட்கமுற்று, பல்கால் வணங்கி—பலமுறை நமஸ்கரித்து, அஞ்சலியால் போற்றி—அஞ்சலியோடுநின்று துதித்து, அலகு இலா உணர்வால் எட்டா ஆதி—அளவிடப்படாத பேரறிவாலும் உணர்தற்கரிதமான முதற்கடவுளே!, புலன் இலா சிறியேன்—உய்த்துணர்வில்லாத சிறியேனாகியயான், நின் மாயை தேறேன்—தேவரீரதுமாயத்தை அறிந்திலேன் (ஆதலின்), நின்னை இகழ்ந்தவா பொறுத்தி என்றாள்-தேவரீரையிகழ்ந்தமையைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார் எ—று.

அஞ்சலி-கைகுவித்தல். அஞ்சலியால் என்பதில் ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருட்டு. போற்றி-என்றாள் என இயையும். இகழ்ந்தவாறு என்பதில் ஈற்றுயிர்மெய்யும் உணர்வாலென்பதில் உயர்வுசிறப்பும்மையுந்தொக்கன. (௯0)

நற்றவ மடந்தை கேண்மோ நம்மிடத் தன்பா னீமுன்
சொற்றன யாவு மீண்டே துதித்தன போலக் கொண்டாங்
குற்றமுண் டாயி னன்றே பொறுப்பது கொடிய நோன்பான்
மற்றினி வருந்த னாளை மணஞ்செய வருது மென்றான்.

இ—ள்: நல் தவ மடந்தை கேள்—நல்லதவத்தினையுடைய நங்கையே! கேட்பாயாக, நம்மிடத்து அன்பால் நீ முன் சொற்றன யாவும்-எம்மிடத்துவைத்த பேரன்பினால் நீ முன்னர்க்கூறிய வாசகங்களெல்லாவற்றையும், ஈண்டு துதித்தன போல கொண்டாம்—இப்பொழுது துதிசெய்ததுபோலங்கீகரித்தோம், குற்றம் உண்டாயின் அன்றே பொறுப்பது—குற்றமிருந்தாலன்றோ (யாம்) பொறுக்கவேண்டியது?, இனி கொடிய நோன்பால் வருந்தல்-இனிக்கொடியதவஞ்செய்தலால் வருந்தற்க, நாளை மணஞ்செய வருதும் என்றான்-நாளைக்குத்திருமணஞ்செய்யும்பொருட்டு வருவோம் என்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

மோ-முன்னிலையசை. ஈண்டு என்னுமிடைச்சொல் காலத்தையுணர்த்திநின்றது. (௯௧)

சிறந்தநின் வதுவை முற்றச் செல்லுது மென்று தொல்லோன்
மறைந்தனன் போத லோடு மலைமக ளுள்ளந் தன்னி
னிறைந்திடு மகிழ்ச்சி கொண்டு நித்தனை நினைந்து போற்றி
யுறைந்தன ளிதனை வேந்தற் குரைத்திடச் சிலவர் போனார்.

இ—ள்: தொல்லோன்—பழையவராகிய சிவபிரான், சிறந்த நின் வதுவை முற்ற செல்லுதும் என்று—சிறப்புப்பொருந்திய உனது விவாகம்நிறைவேறும்படி (நாளை) வருவேமென்று திருவாய்மலர்ந்தருளி, மறைந்தனன் போதலோடும்— அந்தர்த்தானமாய்ச்செல்லுதலும், மலைமகள்—பார்ப்பதிதேவியார், உள்ளம் தன்னில் நிறைந்திடும் மகிழ்ச்சி கொண்டு—மனத்தில்நிறைந்த சந்தோஷத்தைக்கொண்டு, நித்தனை நினைந்து போற்றி உறைந்தனள்— நித்தியராகிய சிவபிரானைத்தியானித்துத் துதித்துக்கொண்டிருந்தார், இதனை வேந்தற்கு உரைத்திட சிலவர் போனார்—இந்நிகழ்ச்சியை மலையரசனுக்குக்கூறுமாறு சிலதோழியர்கள் சென்றார்கள் எ—று. (௯௨)

அண்ணல்வந் தருளிச் செய்கை யரசனுக் குரைத்த லோடு
முண்ணிக ழயர்ச்சி நீங்கி யொல்லைதன் னில்லி னோடு
நண்ணின னுமையைக் கொண்டு நலங்கொடன் னகரத் துய்த்தான்
கண்ணுத லிறைவ னங்கட் செய்தன கழற லுற்றேன்.

இ—ள்: அண்ணல் வந்து அருளிச்செய்கை அரசனுக்கு உரைத்தலோடும்—சிவபிரான் எழுந்தருளிவந்து திருவருள்செய்தமையைத் (தோழியர்) மலையரசனுக்குக் கூறுதலும், உள் நிகழ் அயர்ச்சி நீங்கி—(அவன்) தன்மனத்திற்பொருந்திய வருத்தம் நீங்கப்பெற்று, ஒல்லை தன் இல்லினோடு நண்ணினன்—விரைவில் தனது மனைவியாகிய மேனையுடன் (தவச்சாலையிற்) போய், உமையை கொண்டு நலம் கொள் தன் நகரத்து உய்த்தான்-பார்ப்பதிதேவியை அழைத்துக்கொண்டு சென்று நன்மைபொருந்திய தனது மாளிகையிற்சேர்த்தான், கண்ணுதல் இறைவன் அங்கண் செய்தன கழறலுற்றேன்—(இஃதித்துணைசிறக்க இனி) நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் அவ்விடத்துச் செய்த செயல்களை யான் சொல்லத்தொடங்கினேன் எ—று.

செய்தன-வினையாலணையும்பெயர். அங்கணென்றது கயிலையை. இது கவிக்கூற்று. நம்மகளார் இதுகாறும் அருந்தவமியற்றியும் சிவபிரானருள்செய்திலரேயென மனக்கவலைகூர்ந்திருந்தனனாதலின் 'உண்ணிகழயர்ச்சிநீங்கி' என்றார். (௩௩)

தவங்காண்படலம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௬௬௯.

# மணம்பேசுபடலம்.

எழுமுனிவர்களுஞ் சிவபிரானேவற்படிசென்று திருமணம்பேசியசரித்திரத்தைக் கூறுதலினிப்பெயர்பெற்றது.

## இப்படலப்பொழிப்பு.

சிவபிரான் தேவியின்தவத்தைப்பரீக்ஷித்தபின் திருக்கைலாசமலையின்கட்சென்று எழுமுனிவரையும் வரும்படி சிந்தித்தருள, அவர்கள் அங்ஙனம்வந்து வணங்கி 'ஸ்வாமீ! சிறியேங்களைத் திருவுள்ளம்பற்றியகாரணம்யாது?' என்றுவினவினர். பெருமான் அவர்களைநோக்கி 'முனிவிர்காள்! நீவிர் இமையமலையரசனிடத்துச்சென்று பார்ப்பதியை நமக்கு மணப்பேசிவருதிர்' என்று திருவாய்மலர்ந்தருளினர். முனிவர் அவ்வாறேசென்று அவ்வரசனையணுக, அவன் தேவியுடன் எதிர்கொண்டுவணங்கி, ஆசனத்திருத்தி, வந்தகாரணத்தை வினவியுணர்ந்து, தன்மகளை மணமியற்றிக்கொடுக்க உடன்பட்டனன். அப்பொழுது அவன் மனைவியாகிய மேனை 'முனிவிர்காள்! தக்கனென்பான் மகட்கொடுத்துப் பின்னர் அவராற்றண்டிக்கப்பட்டானாதலின், யாம் மகட்கொடுப்பினும் யாதாமோ என்றஞ்சுகின்றேன்' என்றனள். முனிவர் அதுகேட்டு, அவளுக்குத்தேற்றமொழிகூறி உடன்படுத்தி, கயிலைசேர்ந்து, அந்நிகழ்ச்சிகளைச் சிவபிரானுக்கு விண்ணப்பஞ்செய்து, விடைபெற்று, தம்மிருப்பிடங்களுக்குப்போயினர் என்பதாம்.

பொருடரு மலைக்கொடி புரியு நோன்புகண்
டருடனை நல்கிய வாதி நாயகன்

றெருடரு கயிலையிற் சேர்வுற் றேழ்வகை
யிருடிக டங்களை யிதயத் துன்னினான்.

இ—ள்: பொருள் தரும் மலை கொடி. புரியும் நோன்பு கண்டு அருள் தலை நல்கிய ஆதிநாயகன்— சராசரப்பொருள்களனைத்தையுமீன்றருளிய இமையமலையரசனதுமகளாகியபார்ப்பதிதேவி செய்ததவத்தைப் பரீக்ஷித்தறிந்து கிருபையைச்செய்தருளிய முதற்கடவுளாகியசிவபிரான், தெருள் தரு கயிலையில் சேர்வுற்று—மனத்தெளிவை உண்டாக்குகின்ற திருக்கைலாசமலையிற்புகுந்து, எழ்வகை இருடிகள் தங்களை இதயத்து உன்னினான்—சப்தரிஷிகளையுந் திருவுள்ளத்திற் சிந்தித்தார் எ—று.

பொருடரு என்பதை மலைக்கடையாக்கி, மணிமுதலிய திரவியங்களைத்தருகின்றமலையெனவும், பொன்மயமானமலையெனவும் பொருள் கூறினுமாம். கொடி உவமவாகுபெயர்; கொடிபோன்ற இடையினையுடையாளென்பதுபொருள். சப்தரிஷிகள் யாவரென்பதை மேற்பாயிரப்படலத்துரைத்தனம். சிவபிரானைத் தன்னிடத்துடையதும், மெய்ஞ்ஞானியர் கட்புலத்திற்குத்தோன்றுவதும், அவரருள்பெறுதற்கேற்ற புண்யத்தானமும் ஆதலின் 'தெருடருகயிலை' என்றார். (௧)

நினைதலுங் கண்ணுத னிமல னேழ்பெரு
முனிவரு மன்னதை முன்னி யுள்வெரீஇப்
பனிவரு மெய்யொடு படர்ந்து வல்லையி
லனையனை யிறைஞ்சிநின் றறைதன் மேயினார்.

இ—ள்: கண்ணுதல் நிமலன் நினைதலும்— நெற்றிக்கண்ணையுடைய மலரகிதராகிய சிவபிரான் நினைத்தருளுதலும், ஏழ் பெரு முனிவரும் அன்னதை முன்னி உள் வெரீஇ—பெருமைபொருந்திய சப்தரிஷிகளும் அத்தன்மையைச்சிந்தித்து மனம் பயந்து, பனிவரும் மெய்யொடு வல்லையில் படர்ந்து—நடுங்குகின்றதேகத்தோடும் விரைவில்வந்து, அனையனை இறைஞ்சி நின்று அறைதல் மேயினார்—அச்சிவபெருமானை நமஸ்கரித்துநின்று சொல்லத்தொடங்கினார்கள் எ—று.

முனிகுலத்தினருட்சிறந்தாரென்பார் 'பெருமுனிவர்' எனவும், சிவபிரான் நம்மைத் திருவுள்ளம்பற்றியது அருளுதற்கா? யாதுந் தீங்குசெய்துடையோமேல் அல்லற்படுத்துதற்கா? என்றாலோசித்துக்கொண்டு போயினரென்பார் 'உள்வெரீஇப்பனிவருமெய்யொடுபடர்ந்து' எனவுங்கூறினார். (௨)

பங்கயன் மான்முதற் பகரும் பண்ணவ
ருங்குன தேவலுக் குரிய ராயுற
வெங்களை யுன்னினை யாங்கள் செய்தவ
மங்கவர் தவத்தினு மதிகம் போலுமால்.

இ—ள்: பங்கயன் மால் முதல் பகரும் பண்ணவர் உங்கு உனது ஏவலுக்கு உரியர் ஆய் உற—தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் முதலாகச்சொல்லப்படுகின்ற தேவத்தலைவர்கள் உவ்விடத்தில் தேவரீரது பணிக்கு ஏற்றவர்களாயிருக்கவும், எங்களை உன்னினை—(புழுத்தநாயினுங்கடையேமாகிய) சிறியேங்களைத் திருவுள்ளம்பற்றினீர் (ஆதலின்), யாங்கள் செய் தவம் அங்கவர் தவத்தினும் அதிகம் போலும்—அடியேங்கள் செய்த தவம் அத்தேவர்களியற்றியுள்ள தவத்தினுஞ் சிறந்ததுபோலும் எ—று.

உம்மை உயர்வுசிறப்பு. உற என்பதில் உயர்வுசிறப்பும்மைதொக்கது. (௩)

எந்தையெம் பெருமநீ யெம்மை வம்மென
முந்துறு கருணையின் முன்னிற் றுதலி
னுய்ந்தன மடியரே முடைய தீப்பவஞ்
சிந்தின மினியொரு தீதுண் டாகுமோ.

இ—ள்: எந்தை எம்பெரும—எங்கள் பரமபிதாவே! எங்கள்கடவுளே!, நீ எம்மை வம் என முந்துறு கருணையில் முன்னிற்று ஆதலின்—தேவரீர் சிறியேங்களைவாருங்களென்று முதன்மைபொருந்திய கிருபையோடு திருவுள்ளம்பற்றியதனுல், அடியரேம் உய்ந்தனம்—அடியேங்கள் உய்திபெற்றேம், உடைய தீ பவம் சிந்தினம்—(அன்றியும்) செய்துள்ள கொடிய பாவங்களையொழித்தோம், இனி ஒரு தீது உண்டாகுமோ—இனி யாதேனுமொருதீமை நேரிடுமா? (நேரிடாதே) எ—று.

முன்னிற்று வினைமுற்றுத்தொழிற்பெயர். வம்மின் என்னும் முன்னிலையேவல்வினைமுற்று விகுதிதொக்கு வம் எனநின்றது. (௪)

ஒருதலை யைந்தொழி லுலப்பு றுவகை
புரிதரு பகவநம் புன்மை நீக்குவான்
கருணையொ டுன்னினை கடிதிற் செய்பணி
யருளுதி யென்றன ராற்று நோன்பினோர்.

இ—ள்: ஒருதலை ஐந்தொழில் உலப்புறுவகை புரிதரு பகவ—ஓர்காலத்திற்றானே (சிருட்டிமுதலிய) பஞ்சகிருத்தியங்களையுங் குறைவுபடாவண்ணஞ்செய்தருளுகின்ற கடவுளே!, நம் புன்மை நீக்குவான் கருணையொடு உன்னினை—எங்கள்பாவத்தை நீக்கியருளும்பொருட்டுக் கிருபையுடன் திருவுள்ளம்பற்றினீர், கடிதில் செய் பணி அருளுதி என்றனர்—(ஆதலின்) விரைவில் யாங்கள்செய்யத்தக்கதொண்டைக் கூறியருளவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார்கள், ஆற்றும் நோன்பினோர்-தவத்தைச்செய்கின்ற முனிவரெழுவரும் எ—று.

உலப்புறுவகை-வகையீற்றுவினையெச்சம். உலகமெங்கணுமுள்ள சீவராசிகளியற்றும் இருவினைகளையெல்லாம் தாமொருவரே ஒரேகாலத்திற் சிறிதுந்தவறுதுணர்ந்து,அவ்வான்மாக்களின்வினைப்பயன்கட்கேற்ப, பிரமன் திருமால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என ஐவராய்நின்று, பஞ்சகிருத்தியங்களையியற்றி ஆட்கொள்ளுமிறைவரேயென்பார் 'ஒருதலையைந்தொழிலுலப்புறுவகைபுரிதருபகவ' எனவும், அத்தகைய தேவரீர் நமது தீவினைதொலையுங்காலம் அணுகியது தெரிந்து அருளுதற்கே இங்ஙனமைத்தீரென்பார் 'நம்புன்மைநீக்குவான்கருணையொடுன்னினை' எனவும் கூறினர். (௫)

வேறு.

அமலனம் முனிவர் மாற்றங் கேட்டலு மவரை நோக்கி
யிமையமே லிறைவன் றன்பா லேகியே யெமக்கிவ் வைக
லுமைதனை வதுவை நீரா லுதவுவான் வினவி வல்லே
நமதுமுன் வம்மி னென்று நன்றருள் புரிந்தா னன்றே.

இ—ள்: அமலன் அ முனிவர் மாற்றம் கேட்டலும்—மலரகிதராகியசிவபிரான் அந்தச்சப்தருஷிகளுடையவார்த்தையைத் திருச்செவிசாத்தியவுடன், அவரை நோக்கி—அவர்களைப்பார்த்தருளி, இமையமேல் இறைவன் தன் பால் ஏகி—(நீவிர்) இமையமலையரசனிடத்திற்போய், எமக்கு உமைதனை வதுவைநீரால் இவைகல் உதவுவான் வினவி—நமக்குப் பார்ப்பதிதேவியை விவாகச்சடங்கியற்றி இற்றைத்தினத்திலே த

ரும்படிகேட்டு, வல்லே நமது முன் வம்மின் என்று—விரைவில் எமக்குமுன்னாக வாருங்களென்று, நன்று அருள் புரிந்தான்—நன்றாகக் கருணைசெய்தார் எ—று. (௬)

நாயக னருளக் கேளா நன்றென விறைஞ்சி யேகி
யேயதொன் முனிவர் யாரு மிமையமே லிறைமு னண்ண
வாயவன் மனைவி யோடு மடைந்தெதிர் கொண்டு தாழ்ந்து
நேயமொ டருச்சித் தேத்தி நின்றிது புகலு கின்றான்.

இ—ள்: நாயகன் அருள—சிவபிரான் இவ்வாறு கருணைசெய்ய, ஏய தொல் முனிவர் யாரும் கேளா—பழமைபொருந்திய முனிவரெழுவரும் கேட்டு, நன்று என இறைஞ்சி இமையமேல் ஏகி—இது நல்லதென்று வணங்கி இமையமலையிற் போய், இறை முன் நண்ண—அம்மலையரசனுக்குமுன்னாக அணுக, ஆயவன்—அவன், மனைவியோடும் எதிர்கொண்டு அடைந்து தாழ்ந்து-தேவியாகிய மேனையுடன் எதிர்கொண்டு சென்று பணிந்து, நேயமொடு அருச்சித்து ஏத்தி நின்று-அன்பினுடன் பூசித்துத்துதித்துநின்று, இது புகலுகின்றான்—இவ்வாசகத்தைக்கூறுகின்றான் எ—று.

ஏயதொல்முனிவர்=தொன்மையேயமுனிவர். மலையரசனிருக்கும் அரமனையினருகேசெல்லவென்பார் 'இறைமுனண்ண' என்றார். 'நேயமொடருச்சித்து' என்றதனால் ஆசனத்திருத்தன்முதலியனவும் போதரும். (௭)

படியறு நுந்தா ளீண்டுப் படுதலா லிமைய மேருத்
தடவரை யதனிற் றாய்தாய்த் தலைமையும் பெற்ற தன்றே
நெடியவென் பவமு மின்னே நீங்கின நீவி ரெல்லா
மடியனே னென் றன்பால் வந்த நிமித்தமென் னறைய மென்றான்.

இ—ள்: படி அறும் நும் தாள் ஈண்டு படுதலால்—(முனிவிர்காள்!) ஒப்பற்ற உங்களுடைய திருவடிகள் இங்கேபட்டதனால், இமையம் தட மேருவரை அதனில் தூய்து ஆய்—இவ்விமையமலை விசாலித்த மேருமலையினின்றும் பரிசுத்தமுடைத்தாய், தலைமையும் பெற்றது—முதன்மையையும்பெற்றுக்கொண்டது, நெடிய என் பவமும் இன்னே நீங்கின—நெடிதாகிய எனதுபாவங்களும் இப்பொழுதே நீங்கின, நீவிர் எல்லாம் அடியனேன் தன் பால் வந்த நிமித்தம் என்—(இவைநிற்க,) நீங்களெல்லீரும் அடியேனிடத்துவந்தகாரணம்யாது?, அறையும் என்றான்—அதனைக்கூறுதிரென்று பிரார்த்தித்தான் எ—று.

பன்னெடுங்காலம் இடைவிடாது தொடர்ந்துவளர்ந்த என்பார் 'நெடிய' என்றார். உம்மைகள் எச்சத்தோடுயர்வுசிறப்பு. பவம் பிறவியெனினுமாம். (௮)

அங்கது வினவு மெல்லை யருந்தவ ரகில மீன்ற
மங்கையை வதுவை செய்வான் மன்னுயிர்க் குயிராய் நின்ற
சங்கர னினைந்துன் னோடு சாற்றுதற் கெம்மை யுய்த்தா
னிங்கிதெம் வரலா றென்ன விசைவுகொண் டிறைவன் சொல்வான்.

இ—ள்: அங்கது வினவும் எல்லை—(மலையரசன்) அதனைவினவும்போது, அருந் தவர்—அரியதவத்தினையுடைய முனிவர்கள் எழுவரும் (அவனைநோக்கி), மன் உயிர்க்கு உயிர் ஆய் நின்ற சங்கரன்—நிலைபெற்ற ஆன்மாக்களுக்குப் பரமான்மாவாக நின்ற சிவபெருமான், அகிலம் ஈன்ற மங்கையை வதுவைசெய்வான் நினைந்து—சகலலோகங்களையும்பெற்றருளிய (தாயாகிய) பார்ப்பதிதேவியைத்திருமணஞ்செய்யும்படி திருவுளம்பற்றி, உன்னோடு சாற்றுதற்கு எம்மை உய்த்தான்-உன்னுடன்பேசும்படி எங்களை ஏவினார், இங்கிது எம் வரலாறு என்ன—இதுவே எங்கள்வருகையின் காரணம் எ

ன்றுகூற, இறைவன் இசைவுகொண்டு சொல்வான்——மலையரசன் அதற்குச்சம்மதமுற்றுப் (பின் வருமாறு) கூறுவான் எ—று. (௯)

துன்னிய வுயிர்கள் யாவுந் தொல்லுல கனைத்து மீன்ற
கன்னிகை யுமையா டன்னைக் கடிமண முறையி னல்கி
யென்னையு மடிமை யாக வீகுவ னிறைவற் கென்ன
மன்னவ னயலே நின்ற மனைவியி துரைக்க லுற்றாள்.

இ—ள்: மன்னவன்——மலையரசன், துன்னிய உயிர்கள் யாவும் தொல் உலகு அனைத்தும் ஈன்ற கன்னிகை உமையாள் தன்னை-நெருங்கிய ஆன்மாக்களெல்லாவற்றையும் பழைய உலகங்களெல்லாவற்றையும் பெற்றருளிய கன்னிகையாகியபார்ப்பதியாரை, இறைவற்கு கடி மண முறையில் நல்கி—சிவபிரானுக்குத் திருமணமுறைப்படிகொடுத்து, என்னையும் அடிமை ஆக ஈகுவன் என்ன— சிறியேனையும் அடிமையாகச் சமர்ப்பிப்பேனென்றுகூற, அயலே நின்ற மனைவி ஈது உரைக்கலுற்றாள்— அவனதுபக்கத்தில்நின்ற மனைவியாகியமேனையென்பாள் இதனைச் சொல்லத்தொடங்கினாள் எ—று.

என்னையும் என்பதில் உம்மை எச்சம். எல்லாச்சீவகோடிகளையும் அவற்றிற்கு வாழ்விடமாகிய எல்லா உலகங்களையும் ஈன்றும் கன்னிப்பிராயங்கழியாதாரென்பான் 'துன்னியவுயிர்கள்யாவுந்தொல்லுலகனைத்துமீன்றகன்னிகையுமையாள்' என்றான். இதன்கருத்தை "பெற்றாள் சகதண்டங்களனைத்தும்மவைபெற்று- முற்றாமுகிழ்முலையாள்" என்னுமகாபாரதச்செய்யுளாலும், 'சிவஞ்சத்திதன்னையீன்றுஞ்சத்திதான்சிவத்தையீன்று-முவக்திருவரும்புணர்ந்திங்குலகுயிரெல்லாமீன்றும்-பவன்பிரமசாரியாகும்பான்மொழிகன்னியாகும்' என்னுஞ் சிவஞானசித்தித்திருவிருத்தத்தானுமுணர்க. (௧௦)

மலரயன் புதல்வன் றன்னோர் மடந்தையை மணத்தி னல்க
வலைபுனற் சடிலத் தண்ண லவன்றலை கொண்டா னென்பர்
நிலைமையங் கதனை யுன்னி நெஞ்சக மஞ்சு மெங்கள்
குலமக ளனைய வற்குக் கொடுத்திட லெவனோ வென்றாள்.

இ—ள்: மலர் அயன் புதல்வன்-தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரதுமகனாகிய தக்கன், தன் ஓர் மடந்தையை மணத்தில் நல்க——தனது ஒருமகளைத் திருமணமுறைப்படிகொடுக்க, அலை புனல் சடிலத்து அண்ணல் அவன் தலை கொண்டான் என்பர்—அலைகின்ற கங்கைநதியையணிந்த சடைமுடியையுடையசிவபிரான் அவனது தலையைவெட்டினாரென்று (பலரும்) கூறுவார்கள், நிலைமை அங்கு அதனை உன்னி நெஞ்சகம் அஞ்சும்—அத்தன்மையைச்சிந்தித்து மனம்பயப்படும்(ஆதலின்), எங்கள் குலமகள்தனை அவற்கு கொடுத்திடல் எவன் என்றாள்— எங்கள்குலமகளாகிய பார்ப்பதியை அவர்க்கு மணஞ்செய்துகொடுப்பது எவ்வாறு? என்று வினவினாள் எ—று.

குலமகள்-குலத்தைவிளக்கவந்தமகள்=அருமைமகள். மடந்தை ஈண்டுப்பருவங்குறியாதுநின்றது. (௧௧)

என்றலு மவளை நோக்கி யெழுமுனி வோருஞ் சொல்வா
ரொன்றுநீ யிரங்கல் வாழி யொப்பிலா முதல்வன் செய்கை
நன்றுதேர்க் கிலையாற் றக்க னலத்தரு மவியை மாற்றி
யன்று தன் னிகழ்த லாலே யவன்றலை முடிவு செய்தான்.

இ—ள்: என்றலும்—என்றுகூறுதலும், அவளை நோக்கி எழு முனிவோரும் சொல்வார்-அந்தமேனையைப்பார்த்துச் சப்தருஷிகளும் இவ்வாறு கூறுவார்கள், ஒ

ன்றும் நீ இரங்கல்—(நங்காய்!) நீ சிறிதும்வருந்தற்க, ஒப்பு இலா முதல்வன் செய்கை நன்று தேர்ந்திலை—ஒப்பற்ற சிவபிரானதுசெயலை நன்றாக உணர்ந்திலாய், தக்கன் நல த்தரும் அவியை மாற்றி அன்று தன் இகழ்தலால்—தக்கனானவன் நன்மைபொருந்திய அவிப்பாகத்தைக் கொடாதுநீக்கி அந்நாளிற்றம்மை நிந்தித்தலால், அவன் தலை முடிவு செய்தான்—அவனதுதலையை வெட்டினார் எ—று.

வாழி முன்னிலையசை. ஒன்று அற்பமென்னும்பொருளில்வந்தது. (௧௨)

அடைந்துளோர்க் கருளு மாறு மல்லவர் தமக்குத் தண்டம்
படுந்துணை தெரிந்து கூட்டும் பான்மையும் பரமன் செய்கை
மடந்தையித் தன்மை யாரு மனப்படுத் துணர்வ ரீதே
திடம்பட வுணர்தி வேறு சிந்தனை செய்யே லென்றார்.

இ—ள்: அடைந்துளோர்க்கு அருளுமாறும்— தம்மைச்சார்ந்த சிட்டர்க்கு அருள்செய்யுந்தன்மையும், அல்லவர் தமக்கு படுந்துணை தெரிந்து தண்டம் கூட்டும் பான்மையும்— சாராததுட்டர்க்கு அனுபவிக்கவேண்டிய காலவெல்லையைத்தெரிந்து (அதுகாறும்) தண்டனையைச்சேர்விக்குந்தன்மையும், பரமன் செய்கை—சிவபிரானதுசெயலாகும், மடந்தை—பெண்ணே!, இ தன்மை யாரும் மனப்படுத்து உணர்வர்—இத்தன்மையை எல்லோரும் மனத்தில் ஆராய்ந்துதெளிவார்கள், ஈதே திடம்பட உணர்தி—இதனையே உறுதியாக உணரக்கடவாய், வேறு சிந்தனை செய்யேல் என்றார்—வேறொன்றையுஞ் சிந்தியாதேயென்று கூறினார்கள் (சப்தருஷிகள்) எ—று.

ஏ தேற்றம். சிவபிரான் சிட்டர்க்கு அருளையுந் துட்டர்க்குத் தண்டனையையுஞ்செய்தலை "அறமலியிதஞ்செய்வோருக்கநுக்கிரகத்தைச்செய்வன்- மறமலியகிதஞ்செய்யினிக்கிரகத்தைவைப்பன்" என்னுஞ் சிவஞானசித்திச்செய்யுளானுமுணர்க. படுந்துணைகூட்டும் பான்மையும் என இயைத்து அதற்கேற்பப் பொருள்கூறினுமாம். (௧௩)

வேறு.

இயலுறு முனிவோர்க ளிவைமொழி தலுமோரா
மயலறு வரையண்ணல் வாய்மையி தெனவோடு
மயலுறு மனைமேனை யஞ்சின ளமலன்றன்
செயலிது வுணராதே செப்பின னிவை யென்றே.

இ—ள்: இயல் உறு முனிவோர்கள் இவை மொழிதலும்—தகுதிபொருந்திய எழுமுனிவர்களும் இவ்வாசகத்தைக்கூற, மயல் அறு வரை அண்ணல் ஓரா—அறியாமைநீங்கிய இமையமலையரசன்கேட்டுணர்ந்து, இது வாய்மை எனவோடும்—இதுசத்தியமேயென்றுகூறுதலும், அயல் உறும் மனை மேனை-அவனருகில்நின்ற மனைவியாகிய மேனையானவள், அமலன்தன் செயல் இது உணராது இவை செப்பினன் என்று—மலரகிதராகியசிவபிரானது இச்செய்கையை அறியாது இவற்றைக்கூறினேனென்று, அஞ்சினள்—பயந்தாள் எ—று.

செயலிது என்றது முற்செய்யுளிற்கூறியசெயலை. (௧௪)

உன்னலி னொடுநீமனை யுவர்மல ரடிதாழூஉப்
பென்னரி வெனையேனும் பேதைமை வழியன்றோ
வன்னா னருணீர்மை யணுவது மறிகிலேன்
புன்னிய முனிவீரென் புன்மொழி பொறுமென்றாள்.

இ—ள்: மேனை—மேனாதேவி, உன் நலிவொடு—மனவருத்தத்தோடு, உவர் மலர் அடி தாழூஉ—அம்முனிவர்களது தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்கி, பு

ண்ணிய முனிவீர்— புண்ணியத்தையுடைய முனிவிர்காள்!, பெண்ணறிவு எவையேனும் பேதைமைவழி அன்றே—பெண்ணறிவு எவையாயினும் மடமையின்பாற்பட்டன வல்லவா?, அண்ணல் தன் அருள் நீர்மை அணுவதும் அறிகில்லேன்—(யான்) சிவபிரானதுகாருண்ணியத்தைச் சிறிதாயினும் அறியுமாற்றலில்லேன், என் புன்மொழி பொறும் என்றாள்— (ஆதலின்) எனது எளியவசனத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தாள் எ—று.

தாழூஉ தாழ்ந்து என்பதன்விகாரம். பெண்ணறிவெவையேனும் பேதைமை வழியன்றே என்பதை "பேதைமையென்பதுமாதர்க்கணிகலம்" என்னும் ஔவையார்வாக்கானும், நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னாலும்- பெண்ணறி வென்பதெல்லாம் பேதைமைத்து" என்னுந் திருவிளையாடற்புராணச் செய்யுளானுமறிக. ()

பணிவுட னிவைமேனை பகர்தலு மவடன்பாற்
கணிதமி லருள்செய்யக் காவல னதுகாணு
விணைதவிர் முனிவீர்கா ளிவளுரை கருதன்மின்
மணமிய லிறையோனை வரமொழி குதிரென்றான்.

இ—ள்: மேனை பணிவுடன் இவை பகர்தலும்—மேனாதேவி வணக்கத்துடன் இவ்வார்த்தைகளைக்கூற, அவள் தன் பால் கணிதம் இல் அருள் செய்ய—(முனிவர்கள்) அவளிடத்து அளவிறந்த கிருபையைப்புரிய, காவலன் அது காணு—மலையரசன் அத்தன்மையைப்பார்த்து, இணை தவிர் முனிவீர்காள்—ஒப்பற்ற முனிவர்களே!, இவள் உரை கருதன்மின்—(நீவிர்) இவளதுவார்த்தையைச் சிந்தியாதீர்கள், மணம் இயல் இறையோனை வர மொழிகுதிர் என்றான்—திருமணக்கோலம்பூண்ட சிவபிரானை (இங்கே) வரும்படி விண்ணப்பஞ்செய்யுங்களென்று கூறினான் எ—று. (௧௬)

பனிபடு வரையண்ணல் பகர்மொழி யதுகேளா
மனமிக மகிழ்வாகி மற்றவர் தமையங்க
ணினிமையொ டுறநல்கி யெழுவரு மவணீங்கித்
தனைநிகர் பிறிதில்லாத் தண்கயி லையில்வந்தார்.

இ—ள்: பனிபடு வரை அண்ணல் பகர் மொழி அது எழுவரும் கேளா—இமையமலையரசன்கூறிய அவ்வார்த்தையை ஏழுமுனிவர்களும்கேட்டு, மனம் மிக மகிழ்வு ஆகி—மனத்தில் மிகவுஞ்சந்தோஷம்பொருந்தி, அவர்தமை அங்கண் இனிமையொடு உற நல்கி—அவர்களை அங்கே மங்கலத்தோடும் வாழ்ந்திருக்கும்படி ஆசீர்வதித்து, அவண் நீங்கி—அவ்விடத்தினின்றும்நீங்கி, தனை நிகர் பிறிது இல்லா தண் கயிலையில் வந்தார்—தன்னையொத்தது வேறில்லாத (சிறந்த) குளிர்ந்த திருக்கைலாசமலையில் வந்தார்கள் எ—று. (௧௭)

வந்தெழு முனிவோரு மாநக ரிடைசாரா
நந்திகண் முறையுய்ப்ப நாதனை நணுகுற்றே
யந்தமி லளியோடு மவனடி தொழுதேத்தி
யெந்தையை யிதுகேளென் றியாவது முரைசெய்தார்.

இ—ள்: எழு முனிவோரும் வந்து—சப்தருஷிகளும்வந்து, மா நகரிடை சாரா—பெரிய திருக்கோயிலிற் சார்ந்து, நந்திகள் முறை உய்ப்ப நாதனை நணுகுற்று—திருநந்திதேவர் முறைப்படி உள்ளேவிடச்சிவபிரானையணுகி, அந்தம் இல் அளியோடும் அவன் அடி தொழுது ஏத்தி—அளவற்ற அன்புடன் அப்பெருமானது பாதங்களைவணங்கி

த்துதித்து, எந்தையை இது கேள் என்று யாவதும் உரைசெய்தார்-எம்பரமபிதாவே இதனைக் கேட்டருளுதிரென்று எல்லாநிகழ்ச்சிகளையும் விண்ணப்பஞ்செய்தார்கள் எ-று.

எந்தையையென்பதில் ஐகாரம் சாரியை. சிவபிரானது அநுமதிபெற்றுள்விடுப்பவென்பார் 'முறையுய்ப்ப' என்றார். (௧௮)

வரைமிசை யரசாள்வோன் மணவினை யிசைவெல்லா
முரைசெய வருள்செய்தே யும்பரின் முனிகாணீர்
புரிதரு செயலாற்றப் போகுதி ரெனவோடு
மரனடி தொழுதேத்தி யவர்பத மணுகுற்றார்.

இ—ள்: வரைமிசை அரசு ஆள்வோன் மணவினை இசைவு எல்லாம் உரைசெய—இமையமலையரசனது திருமணச்சம்மதம் முழுவதையும் (எழுமுனிவர்களும்) விண்ணப்பஞ்செய்ய, அருள் செய்து—(சிவபிரான்) கிருபைசெய்து, உம்பரில் முனிகாள்—தேவருஷிகளே!, நீர் புரிதரு செயல் ஆற்ற போகுதிர் எனவோடும்—நீவிர் செய்யுந்தொழில்களைச் செய்யும்பொருட்டுப் போங்களென்று திருவாய்மலர்ந்தருளுதலும், அவர்—அம்முனிவர்கள், அரன் அடி தொழுது ஏத்தி—அச்சிவபிரானது பாதங்களைவணங்கித்துதித்து, பதம் அணுகுற்றார்—(தங்கள் தங்கள்) பதவிகளை அடைந்தார்கள் எ—று. (௧௯)

வேறு.

எங்குறை தீர்ந்ததென் றெழுதவத்தருந்
தங்கடம் பதத்திடைத் தணப்பின் றெய்தினா
ரிங்கிது நின்றிட விமைய மேலிறை
யங்கினிச் செய்தவா றறியக் கூறுவாம்.

இ—ள்: எழு தவத்தரும்—எழுமுனிவர்களும், எம் குறை தீர்ந்தது என்று—எங்கள்குறை நிறைவேறிற்றென்றுகூறி, தங்கள்தம் பதத்திடை தணப்பின்று எய்தினார்—தங்கள்பதவிகளில் தவறாது போயினார்கள், இங்கிது நின்றிட—இதுநிற்க, இனி—மேல், அங்கு இமைய மேல் இறை செய்தவாறு அறிய கூறுவாம்—அவ்விடத்தே இமையமலையரசன்செய்தனவற்றை விளங்கக்கூறுவோம் எ—று.

குறையென்றது தமக்குவிதித்ததொண்டை. இன்றியென்னும் வினையெச்சத்திறுதி இகரம் உகரமாகி, இன்று எனநின்றது. (௨௦)

மணம்பேசுபடலம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௩௮௯.

---

## வரைபுனைபடலம்.

சிவபிரானது திருமணத்தின்பொருட்டு, இமையமலையை அலங்கரித்தமையைக்கூறுதலாலிப்பெயர்பெற்றது.

### இப்படலப்பொழிப்பு.

இமையமலையரசன் தேவத்தச்சனை வரும்படி சிந்திக்க, அவன் உடனேவந்து கைதொழுது 'அரசனே! யான்செய்யவேண்டியதென்னை?' என்றுவினவினன். மலையரசன் அதுகேட்டு, 'தேவகம்மியனே! என்மகளாகிய பார்ப்பதியைச் சிவபிரானுக்குத்திருமணமியற்றுமாறு நிச்சயித்திருக்கின்றேனாதலின் அதற்குவேண்டிய அலங்காரங்களை

ச்செய்குதி' என்றுகூறினன். உடனே தேவகம்மியன், அம்மலையின்கண், பலகோபுரங்களையும் மண்டபங்களையும் மன்றுகளையும் மலர்ப்பந்தர்களையும் வீதிகளையும் சாலைகளையும் அரமனையினருகே பதினுயிரம்யோசனைப்பரப்பினதாக ஓர் கோயிலையும் அக்கோயிலினடுவே ஓர்விவாகமண்டபத்தையும் அம்மண்டபத்தில் தம்பதிகளிருத்தற்கேற்ப இந்திரநீலரத்தினத்தால் ஓர் சிங்காசனத்தையும் ஏனையோரிருத்தற்கேற்ற பல ஆசனங்களையும் வேதிகைகளையும் வேண்டற்பாலன பிறவற்றையும் சுவர்க்கலோகமும் நாணும்படி அணிபெறச்செய்தனன். மலையரசன் அவற்றையெல்லாங்கண்டு மிகவுஞ்சந்தோஷங்கொண்டு, விஷ்ணு பிரமாமுதலிய தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அவரது மனைவியர்க்கும் பிறர்க்கும் தூதரையேவி விவாகசோபனத்தை அறிவித்தனன். உடனே துர்க்கை யாமளை காளிகள் சப்தநதிகள் இலக்குமி சரசுவதி இந்திராணி முனிபத்தினிகள்முதலாயினோர் அங்குவந்து, பார்ப்பதிதேவியை மணவணிசெய்தனர். மேருமுதலிய மலையினங்களும் சமுத்திரங்களும் நாகராஜர்களும் திசையானைகளும்வந்தன. அப்பொழுது மலையரசன் சுற்றத்தாரோடுந் திருக்கைலாசமலையிற்போய்ச் சிவபிரானைத்தரிசித்து, 'ஸ்வாமீ! இற்றைத்தினம் பங்குனியுத்தரமாதலால் இச்சுபமுகூர்த்தத்திலே திருமணத்திற்கெழுந்தருளிவரவேண்டுமென்று பிரார்த்தித்து, அவர்சம்மதித்தபின் தன்னிருக்கைநோக்கிவந்தனன் என்பதாம்.

கண்ணுத லுமைதவங் கண்டு நின்னையா
மண்ணவர் புகழ்வகை மணத்து மென்றதும்
விண்ணெழு முனிவரின் வினவி விட்டது
மெண்ணினன் மகிழ்ந்தன னிமையத் தண்ணலே.

இ—ள்: கண்ணுதல்—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான், உமை தவம் கண்டு-உமாதேவியின் தவத்தைச்சேர்தித்து, மண்ணவர் புகழ்வகை யாம் நின்னை மணத்தும் என்றதும்—பூவுலகத்திலுள்ளார்புகழும்படி யாம் உன்னை மணஞ்செய்வோமென்று அருள்செய்தமையையும். விண் எழு முனிவரின் வினவி விட்டதும் எண்ணினன்—விண்ணுலகத்தில்வசிக்கின்ற சப்தருஷிகளை மணம்பேசுமாறனுப்பியதையும் சிந்தித்து, மகிழ்ந்தனன்—மனச்சந்தோஷங்கொண்டான், இமையத்து அண்ணல்—இமையமலையரசன் எ—று.

முனிவரின்-உருபுமயக்கம். வினவி செயவெனெச்சத்திரிபு. (க)

கணிதமி லுயிரெலாங் கலந்து மற்றவை
யுணர்வுதொ றிருந்தவற் கொருதன் கன்னியை
மணமுறை புரிதிற மதித்துத் தேவர்தம்
பணிபுரி தச்சனைப் பரிவொ டுன்னினான்.

இ—ள்: கணிதம் இல் உயிர் எலாம் கலந்து—அளவற்ற ஆன்மாக்கள் எவற்றினும் வியாபித்து, அவை உணர்வுதொறு இருந்தவற்கு—அவற்றின் அறிவுகடோறும் வியாபித்திருந்தசிவபிரானுக்கு, ஒரு தன் கன்னியை முறை மணம் புரி திறம் மதித்து—ஒப்பற்ற தனதுமகளை முறைப்படி திருமணஞ்செய்யச் சிந்தித்து, தேவர்தம் பணி புரி தச்சனை பரிவொடு உன்னினான்—தேவர்களுக்கு வேண்டிய ஏவல்களைச் செய்யும் விச்சுவகன்மாவை அன்புடன் சிந்தித்தான் எ—று. (உ)

உன்னிய போதினி லும்பர் கம்மியன்
மன்னவ னெதிருற வந்து கைதொழு

தென்னைகொல் கருதினை யாது செய்பணி
யன்னதை மொழிகென வறைதன் மேயினன்.

இ—ள்: உன்னிய போதினில்—அவ்வாறு சிந்தித்தபொழுது, உம்பர்கம்மியன்—தேவத்தச்சன், மன்னவன் எதிருற வந்து—மலையரசனுக்கு முன்னாகவந்து, கை தொழுது—கைகுவித்து, என்னை கருதினை—யாதுகாரணம்பற்றி (என்னைச்) சிந்தித்தீர்?, செய் பணி யாது—யான்செய்யவேண்டிய ஏவல்யாது?, அன்னதை மொழிக என—அதனைச்சொல்லுக என்றுவினவ, அறைதல் மேயினன்— (மலையரசன்) அதற்கு விடைகூறுவானாயினன் எ—று.

மொழிக என்னும் வியங்கோளீறுதொக்கது. (௪)

என்னையாள் கண்ணுத லிறைவற் கியான்பெறு
மன்னையா முமைதனை யளிப்ப னிவ்வரைக்
கன்னிமா நகரெலாங் கவின்சி றந்திடப்
பொன்னினு டாமெனப் புனைதி யாலென்றான்.

இ—ள்: என்னை ஆள் கண்ணுதல் இறைவற்கு—என்னை அடிமைக்கொள்ளும் நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானுக்கு, யான் பெறும் அன்னை ஆம் உமைதனை அளிப்பன்—யான்பெற்ற சர்வலோகமாதாவாகிய பார்ப்பதிதேவியைத் திருமணஞ்செய்துகொடுக்க நிச்சயித்திருக்கின்றேன் (ஆதலின்), இ வரை கன்னி மா நகர் எலாம்— இந்தமலையின்கணுள்ள புதிய பெரியநகரங்களெல்லாவற்றையும், கவின் சிறந்திட—(முன்னையினும்) அழகு மிக, பொன்னினுடு ஆமென புனைதி என்றான்—சுவர்க்கலோகம்போல அலங்கரிக்குதி என்றுகூறினன் எ—று.

அருந்தவத்தாற்பெற்றமகளென்பான் 'யான்பெறுமன்னையாமுமை' என்றான்.

அப்பொழு தத்தினி லடுக்கன் மேலையோன்
செப்பிய வாசகஞ் செவிக்கொண் டுள்ளமேன்
மெய்ப்பெரு மகிழ்ச்சியை மேவி யந்நக
ரொப்பனை செய்திட வுன்னி னானரோ.

இ—ள்: அ பொழுதத்தினில்—அந்தச்சமயத்தில், அடுக்கல் மேலையோன் செப்பிய வாசகம் செவிக்கொண்டு—மலையரசன்கூறிய வார்த்தையைக்கேட்டு, உள்ள மேல் மெய் பெரு மகிழ்ச்சியை மேவி—மனத்தில் மெய்ம்மையான பெருஞ்சந்தோஷத்தைக்கொண்டு, அ நகர் ஒப்பனை இயற்றிட உன்னினன்—அந்நகரத்தை அலங்கரிக்கும்படி சிந்தித்தான் எ—று.

சிவபிரான்றிருமணத்தைக்கேட்டலால் மகிழ்ந்தனனென்க. ஒப்பனை-அலங்காரம். (௫)

நீடுறு தருநிரை நிமிருங் கால்களாய்ப்
பாடுறு கழிகளாய்ப் பரம்பும் பல்பணை
மூடுற வதன்மிசை முகில்க ளெங்கணும்
பீடுறு பந்தர்போற் பிறங்கும் வெற்பின்மேல்.

இ—ள்: நீடுறு தருநிரை நிமிரும் கால்களாய்—நெடிய மரநிரைகள் உயர்ந்தகால்களாகவும், பரம்பும் பல் பணை பாடு உறு கழிகளாய்-பரந்த பலகிளைகள் குறுக்கேபொருந்தியகழிகளாகவும் (இருக்க), அதன்மிசை முகில்கள் மூடுற—அதன்மேல் மேகங்கள்மூடிக்கொள்ள, எங்கணும் பீடு உறு பந்தர்போல் பிறங்கும் வெற்பின் மேல்-எல்லாவிடங்களும் பெருமைபொருந்திய பந்தரிட்டதுபோலவிளங்குகின்ற அம்மலையின்மேல் எ—று.

எங்கணும் மூடிற என இயைத்துப்பொருள் கூறினுமாம். இதுமுதலிருசெய்யுட்கள் குளகம். (௬)

மலையுறழ் கோபுர மன்றஞ் சூளிகை
நிலைகெழு செய்யதேர் நிழற்று மண்டபம்
பலவுட னறுமலர்ப் பந்த ரன்னவை
தொலைவறு மாவணந் தோறு நல்கினன்.

இ—ள்: மலை உறழ் கோபுரம்—மலையைப்போன்ற கோபுரங்களையும், மன்றம்—சபைகளையும், சூளிகை—சூளிகைகளையும், செய்ய நிலை கெழு தேர்— செப்பமாகிய நிலைத்தேர்களையும், நிழற்றும் மண்டபம் பலவுடன்—நிழலைச்செய்கின்ற பலமண்டபங்களையும், நறு மலர் பந்தர்—மணங்கமழுகின்ற பூம்பந்தர்களையும், அன்னவை-அவைபோன்ற பிறவற்றையும், தொலைவு அறும் ஆவணம் தோறும் நல்கினன்—முடிவில்லாத வீதிகடோறும் அமைத்தான் எ—று.

சூளிகை சிகரமுடையனவாகச் செய்யப்பட்டமாளிகை, உடன் ஈண்டு எண்ணுப்பொருட்டு. விசாலத்தாலும் உயரத்தாலும் மிக்கனவாதலின் 'மலையுறழ்கோபுரம்' என்றார். (௭)

நீக்கமில் கதலிகை நெடிய கேதன
மேக்குயர் காவண மிசைத்தந் துள்ளிடை
யாக்குறு கம்பல மணிசெய் தாயிடைத்
தூக்கினன் கவரியுஞ் சுடர்கொண் மாலையும்.

இ—ள்: நீக்கம் இல் கதலிகை—இடைவெளியின்றி நெருங்கிய துகிற்கொடிகளையும், நெடிய கேதனம்—பெருங்கொடிகளையும், மேக்கு உயர் காவண மிசை தந்து—மேலாக உயர்ந்த நடைப்பந்தரின்மீதமைத்து, உள்ளிடை ஆக்குறு கம்பலம் அணிசெய்து—அப்பந்தரினுள்ளே இணைக்கப்பட்ட மேற்கட்டியை அழகுறக்கட்டி, கவரியும் சுடர்கொள் மாலையும் ஆயிடை தூக்கினன்—சாமரங்களையும் ஒளிபொருந்திய மாலைகளையும் அந்த மேற்கட்டியில் (இடையிடையே) நாற்றினான் எ—று. (௮)

குரகத முகம்புரை குலைக ணேங்கிய
மரகத வொளிபடு வாழை பூகநன்
னிரைகெழு தன்மையி னிறுவிப் பூந்துணர்
விரைகெழு தோரணம் விசும்பி னாற்றினன்.

இ—ள்: குரகதமுகம் புரை குலைகள் தூங்கிய மரகத ஒளி படு வாழை—குதிரையின் முகம்போன்ற (வடிவமைந்த) குலைகள் தூங்கப்பெற்ற மரகதரத்தினப்பிரகாசத்தையுடைய வாழைகளையும், பூகம்—கமுகுகளையும், நல் நிரை கெழு தன்மையில் நிறுவி—நல்ல நிரைபொருந்திய தன்மையாக நிறுத்தி, பூ துணர் விரை கெழு தோரணம் விசும்பில் நாற்றினன்—பூந்தாதுக்களின் நறுமணங்கமழப்பெற்ற தோரணங்களை மேலே தூக்கினன் எ—று.

குரகதம்-குளம்பினாற்செல்வது. வாழைக்குலைகள் சுற்றளவால் அடிவிரிந்து நுனி ஒடுங்கித்தோன்றலிற் குதிரைமுகத்தை நிகர்க்குமென்க. சுகந்தமலர்மாலைதூக்கிய தோரணமென்பார் 'பூந்துணர்விரைகெழுதோரணம்' என்றார். விசும்பு-ஈண்டு மேலிடம். (௯)

ஒண்ணிதி யியக்கர்கோ னுறையு ளானதும்
விண்ணவர் தொழுதிட வீற்றி ருந்திடு
மண்ணறன் கோயிலு மாக வீதிக
ளெண்ணருந் திருவுற வெழில்ப டுத்தினன்.

இ—ள்: ஒள் நிதி இயக்கர்கோன் உறையுள் ஆனதும்—சிறந்த செல்வத்தினையுடைய குபேரனது மாளிகையையும், விண்ணவர் தொழுதிட வீற்றிருந்திடும் அண்ணல் தன் கோயிலும் ஆக—தேவர்கள் கைதொழும்படி வீற்றிருக்கின்ற இந்திரனது மாளிகையையும் போல, எண்ணரும் திரு உற—அளவிடுதற்கரிய வளங்கள்பொருந்த, வீதிகள் எழில் படுத்தினன்—வீதிகளை அலங்கரித்தான் எ—று.

வீதிகள் குபேரனதும் இந்திரனதும் மாளிகைபோலமைக்கப்பட்டனவாகவே அவ்வீதிகளையுடையனவாய மாளிகை மண்டபம் முதலியவற்றிற்குவமையின்றென்பது பெற்றாம். உறையுள் கோயில் என்பனவற்றை ஆகுபெயராகக்கொண்டு அவற்றின் வீதிகள்போல எனக்கூறுதலித்துணைச்சிறப்பினதன்று. (௧௦)

ஒருபுறத் தினையினி யுமைக்கு நல்குவோ
னிருபுறத் தினும்வரு மெண்ணி றேவருந்
தருபுறப் பொருளெலாஞ் சாரச் சாலைக
டிரிபுறத் திரிபுறச் செய்த மைத்தனன்.

இ—ள்: இனி உமைக்கு ஒரு புறத்தினை நல்குவோன் இருபுறத்தினும் வரும் எண்ணில் தேவரும்-இனி உமாதேவியாருக்குத் (தமது) ஒருபாகத்தைக்கொடுத்தருளுஞ் சிவபிரானது இருபுடைகளிலுஞ் சூழ்ந்துவருகின்ற அளவிறந்த தேவர்கள் யாவரும், தரு புறப்பொருள் எலாம் சார—கொணர்கின்ற காணிக்கைப்பொருள் யாவும் அடங்குமாறு, திரிபுற திரிபுற சாலைகள் செய்து அமைத்தனன்—வெவ்வேறுகச்சாலைகளை வகுத்து அமைத்தான் எ—று.

உம்மைகள் முற்று. மணவாளர் என்பதுதோன்ற 'ஒருபுறத்திணையினியுமைக்குநல்குவோன்' எனவும், ஒவ்வோரினப்பொருளை ஒவ்வோர் சாலையிலமைத்து வைத்தற்கேற்றவாறென்பார் 'திரிபுறத்திரிபுற' எனவும் கூறினர். (௧௧)

ஆயிரப் பத்தென வறையும் யோசனை
போயதோ ரளவையிற் புரிசை யொன்றினைக்
கோயிலி னொருபுடை குயிற்றிக் கோபுரம்
வாயில்க ணான்கினு மரபி னல்கினன்.

இ—ள்: ஆயிரப்பத்து என அறையும் யோசனை போயது ஓர் அளவையில்-பதினாயிரம்யோசனைவரையும் நீண்டஅளவாக, கோயிலின் ஒருபுடை புரிசை ஒன்றினை குயிற்றி—அரமனையினொருபக்கத்தில் ஒருமதிலைச்செய்து, வாயில்கள் நான்கினும்-(அதனுற்றிசைகளினுமுள்ள) நான்குவாயில்களினும், மரபின்— சிற்பநூன்முறைப்படி, கோபுரம் நல்கினன்—கோபுரங்களையமைத்தான் எ—று.

ஆயிரப்பத்து-பதினாயிரம். அளவெனப்பொதுமையிற் கூறுதலின் நீட்சி அகற்சி இரண்டுங்கொள்க. (௧௨)

அங்கத னடுவுற வகன்ப ரப்பினின்
மங்கல மணஞ்செய வதுவைச் சாலையைச்
செங்கன கத்தினாற் றிகழச் செய்தனன்
கங்கையஞ் சடையினன் கயிலைக் கோயில்போல்.

இ—ள்: அங்கதன் நடுவுற—அம்மதிலெல்லையினடுவிற்பொருந்த, அகன் பரப்பினில்-மிகுந்த விசாலமமைய, மங்கல மணம் செய-சுபகரமாகிய திருமணச்சடங்கையியற்றுமாறு, செம் கனகத்தினால் திகழ—செம்பொன்னினாற்பிரகாசிக்கும்படி, கங்கையம் சடையினன் கயிலை கோயில் போல்—கங்கைநதியையணிந்தசடைமுடியையுடைய சிவபிரானது திருக்கைலாசகிரியின்கணுள்ள கோயிலைப்போல, வதுவைச்சாலையை செய்தனன்—விவாகமண்டபத்தை இயற்றினான் எ—று.

திருமணங்காணிய வந்தாரெல்லாம் அமைதற்கேற்றவாறு இடம்பெறவென்பார் 'அகன்பரப்பினில்' எனவும், நால்வகைப்பொன்களுட்சிறந்த சாம்பூநதமென்பார் 'செங்கனகம்' எனவும் கூறினார். நடுவுற, பரப்பினில், மணஞ்செய, திகழ, போல், என்பன தனித்தனி செய்தனன் என்னும் முற்றோடியைந்தன. (௧௩)

சாலையி னிலத்திடைச் சந்த மான்மத
மேலுறு நாவிநீர் விரவிப் பூசியே
கோலமென் மலர்கடூஉய்க் குறுகும் வானவர்க்
கேலுறு பலதவி சிருப்பச் செய்தனன்.

இ—ள்: சாலையின் நிலத்திடை— அத்திருமணச்சாலையின் நிலத்தின்கண்ணே, சந்தம்—சந்தனமும், மான்மதம்—கஸ்தூரியும், மேல் உறு நாவி—மேன்மைபொருந்திய புனுகும் ஆகிய இவற்றை, நீர் விரவி பூசி—பனிநீருடன்கலந்து மெழுகி, கோல மெல் மலர்கள் தூஉய்—அழகிய மெல்லிய புஷ்பங்களைத்தூவி, குறுகும் வானவர்க்கு ஏலுறு பல தவிசு இருப்ப செய்தனன்—வரும் தேவர்களுக்கு (உயர்வுதாழ்வுமுதலியவற்றிற்கேற்ற) பலவிதமாகிய ஆசனங்களை இருக்கும்படி இயற்றினான் எ—று.

மெழுக்கிடுதற்காகப் பூசிக் கோலமிடுதற்காய் மலர்தூவினனென்க. (௧௪)

வானவின் மணிமுகில் வனச மாமலர்
நீனிறம் விரிதரு நெய்தல் சண்பக
மேனைய நிறங்களா லெண்ணில் வேதிகை
யானவை புரிந்தன னயனு நாணவே.

இ—ள்: வானவில்—இந்திரவில்லும், மணி முகில்—கரியமேகமும், மா வனச மலர்—சிறந்த தாமரைப்பூவும், நீல் நிறம் விரிதரு நெய்தல்—கருநிறம் மிக்க நெய்தற்பூவும், சண்பகம்—சண்பகப்பூவும், ஏனைய நிறங்களால்—பிறவுமாகிய இவற்றினிறங்களால், எண் இல் வேதிகை ஆனவை—அளவற்ற திண்ணைகளை, அயனும் நாண புரிந்தனன்—(படைத்தற்றொழிற்கிறைவராகிய) பிரமதேவரும் வெட்கமுறும்படி செய்தான் எ—று.

நீல் கடைக்குறை. நெய்தல் சண்பகம் ஆகுபெயர்கள். உம்மை உயர்வுசிறப்பு.

கண்ணாடி பூந்தொடை கவரி பந்துகின்
மண்ணிய செழுமணி மாலை தூங்குறப்
பண்ணுறு வித்தனன் பரமன் பால்வரும்
விண்ணவர் விழியெலாம் விருந்து கொள்ளவே.

இ—ள்: கண்ணடி—கண்ணாடிகளையும், பூந்தொடை—பூமாலைகளையும், கவரி—சாமரங்களையும், பல் துகில்—பலவகையானவஸ்திரக்குஞ்சங்களையும், மண்ணிய செழு மணி மாலை—சாணைதீர்ந்த செழிய இரத்தினங்களாலாகிய மாலைகளையும், பரமன் பால் வரும் விண்ணவர் விழி எலாம் விருந்து கொள்ள—சிவபிரானது பக்கத்தில் வருகின்ற தேவர்களது கண்களெல்லாம் விருந்துகொள்ளும்படி, தூங்குறப்பண்ணுறுவித்தனன்—தூக்கினான் எ—று.

கண்ணாடி என்பது தொடைநோக்கிக்கண்ணடியெனக்குறுகிற்று. மண்ணிய என்பதை மாலைக்கடையாக்கி அலங்கரித்த எனினுமாம். முன்னொருபோதுங் கண்டறியாதனவும் பெருவனப்பினவுமாதலின் 'விழியெலாம்விருந்துகொள்ள' என்றார். ()

தேவரு முனிவருந் திருவ னார்களும்
பாவையி னுயிருறு பண்பி னாக்கியே
மேவரு கவரிதார் வீணை யேந்தியே
யேவலர் தொழின்முறை யியற்ற நல்கினான்.

இ—ள்: தேவரும்—தேவர்களையும், முனிவரும்—முனிவர்களையும், திரு அனார்களும்— இலக்குமியைப்போன்ற பேரழகினையுடைய பெண்களையும், பாவையின் உயிர் உறு பண்பின் ஆக்கி-பிரதிமைகளால்உயிரோடிருக்குந்தன்மைபோலுண்டாக்கி, மேவரு கவரி தார் வீணை ஏந்தி— கிடைத்தற்கரியசாமரங்களையும் மாலைகளையும் வீணைகளையுந்தாங்கி, ஏவலர் தொழின்முறை இயற்ற நல்கினான்— ஏவலாளர்செய்யுந்தொழில்களை முறையே செய்யுமாறு அமைத்தான் எ—று.

கவரிகளைவீசவும், மாலைகளைநாற்றவும், வீணைகளையிசைக்கவுஞ்செய்தானென்றபடி. மேவ என்பதனீற்றகரந்தொக்கது. (௧௭)

பெண்ணிய லாரெனப் பிறங்கும் பாவைக
டண்ணுமை முதலிய தாக்கித் தண்டியல்
பண்ணொடு களிநடம் பயினு வித்தனன்
விண்ணவ ரரம்பையர் யாரும் வெஃகவே.

இ—ள்: பெண் இயலார் என பிறங்கும் பாவைகள்—பெண்களைப்போல விளங்குகின்ற பிரதிமைகள், தண்ணுமை முதலிய தாக்கி— மத்தளமுதலியவைகளை அடித்து, தண்டு இயல் பண்ணொடு—யாழிலுண்டாகின்ற இசையுடன், விண்ணவர் அரம்பையர் யாரும் வெஃக-தேவரும் அரம்பையரும்பிறரனைவரும் விரும்பும்படி, களிநடம் பயிலுவித்தனன்—களிப்பைத்தருகின்ற நடனத்தையியற்றுமாறமைத்தான் எ-று.

பெண்ணியலார்-பெண்டன்மையையுடையார். (௧௮)

நெருங்கிய கிளிமயி னேமி தண்புறாப்
பொருங்கரி யரிபரி பொருநர் வானுளோ
ரொருங்குடன் மணிகளா லோவி யப்பட
வருங்கடி யிருக்கையு ளமர நல்கினான்.

இ—ள்: நெருங்கிய கிளி—செறிந்திருக்கின்ற கிளிகளையும், மயில்—மயில்களையும், நேமி—சக்கரவாகங்களையும், தண் புறா—குளிர்ந்த புறாக்களையும், பொரும் கரி-(ஒன்றோடொன்று) அமரியற்றுகின்ற யானைகளையும், அரி—சிங்கங்களையும், பரி—குதிரைகளையும், பொருநர்—கூத்தர்களையும், வானுளோர்—தேவர்களையும், ஒருங்கு—ஒ

ன்றுசேர, உடன்—உடனே, மணிகளால்—இரத்தினங்களால், ஓவியப்பட—சித்திரப்பட, அரும் கடி இருக்கையுள் அமர—அரிய விவாகமண்டபத்தில் அமைந்திருக்கும்படி, நல்கினன்—அமைத்தான் எ—று.

பொருநர் வீரரெனினுமாம். ஒன்றுடனொன்றுதொடர்புறவென்பார்'ஒருங்கு' என்றார். ஒருங்கு, உடன், மணிகளால், ஓவியப்பட, அமர என்பன-தனித்தனி நல்கினன் என்னும் முற்றோடியைந்தன. (௧௯)

குறைதவிர் நிலைமையாற் குயிற்றுஞ் சாலையு
ணிறைதரு மிந்திர நீலத் தாலொரு
திறலரி யணையினைச் சிறப்பிற் செய்தன
னிறைவனு மிறைவியு மினிது மேவவே.

இ—ள்: குறை தவிர் நிலைமையால் குயிற்றும் சாலையுள்—(வேண்டியவனப்புக்களிற் சிறிதாயினும்) குறைவில்லாதவாறமைத்த அத்திருமணமண்டபத்தில், இறைவனும் இறைவியும்இனிது மேவ—சிவபிரானும் பார்ப்பதிதேவியும் நன்கு வீற்றிருக்கும்படி, சிறப்பில்—சிறப்பினுடன், ஒரு திறல் அரி அணையினை—வலிய ஒருசிங்காசனத்தை,நிறைதரும் இந்திர நீலத்தால்— நிறைந்த இந்திரநீலரத்தினங்களால், செய்தனன்—செய்தான் எ—று.

திறல் அரிக்கடை. இதுகாறுங்கூறிப்போந்தவற்றுடன், விரிவஞ்சிவிடுத்த பிறஇலக்கணங்களுமொருங்கமையவென்பார் 'குறைதவிர்நிலைமையால்' எனவும், பிறமணிகளுட் சிற்சிலவேண்டுமிடங்களில் விராவப் பெரும்பான்மையமைந்தவென்பார் 'நிறைதரும்' எனவும், அவ்வவைக்கணுள்ள ஆசனங்களெவற்றினும் உயர்ச்சியும் அழகும் பொலிவும் மிகவென்பார் 'சிறப்பில்' எனவும் கூறினர். (௨0)

குண்டமும் வேதிகை வகையுங் கோதில்சீர்
மண்டல மானதும் வகுத்து வேள்விசெய்
பண்டம தானதும் படுத்திப் பண்ணவ
ரெண்டொகை மங்கல மிருத்தி னனரோ.

இ—ள்: குண்டமும்—ஓமகுண்டத்தையும், வேதிகை வகையும்—வேதிகையின் வகுப்புக்களையும், கோது இல் சீர் மண்டலம் ஆனதும் வகுத்து—குற்றமற்ற சிறப்புப்பொருந்திய மண்டலத்தையும் இயற்றி, வேள்வி செய் பண்டமது ஆனதும் படுத்தி— திருமணச்சடங்குசெய்தற்குரிய பொருள்களையும் வருவித்து, பண்ணவர் எண்தொகை மங்கலம் இருத்தினன்—தேவாட்டமங்கலங்களையும் (இருத்தற்கேற்ற இடங்களில்) அமைத்தான் எ—று.

சிறிதும் பெரிதுமாய்ப் பலவகைப்படுதலின் 'வேதிகைவகை' என்றார். மண்டலம் என்றது நவக்கிரகமண்டலமுதலியவற்றை. வேள்விசெய்பண்டம்: நெய் சமித்து தருப்பை முதலாயின. தேவாட்டமங்கலங்கள்; கண்ணடி இடபம் தீபம் ஸ்ரீவற்சம் இரட்டைச்சாமரம் சங்கு சுவத்திகம் பூரணகும்பம்என்பன. இதனை "கண்ணடிவிடைகிளர்சுடர்சீவற்ச-நீள்விற்சாமரம்வலம்புரிசுவத்திகநிறைகுடமெனவெட்டு வாள்விட்டோங்குமங்கலம்" என்னுந் திருவிளையாடற்புராணச்செய்யுளானுமுணர்க. அட்டமங்கலம் தேவர்க்கும் அரசர்க்கும் பேதமுடையனவாதலின் இவையாவையென்னுமையநீக்குதற்கு 'பண்ணவரெண்டொகைமங்கலம்' என்றார். (௨௧)

கண்டெறு கதிர்மதிக் காந்தங் காஞ்சன
மொண்டுகிர் நித்தில மொளிறு வச்சிர
முண்டக வெயின்மணி முதல்வெ றுக்கையான்
மண்டப மெண்ணில மருங்கி னல்கினன்.

இ—ள்: கண் தெறு கதிர் மதி காந்தம்—கண்களை ஒளிமழுக்குகின்ற சூரிய காந்தமும் சந்திரகாந்தமும், காஞ்சனம்—பொன்னும், ஒள் துகிர்—ஒளிபொருந்திய பவளமும், நித்திலம்—முத்தும், ஒளிறு வச்சிரம்— பிரகாசிக்கின்ற வைரரத்தினமும், முண்டக வெயில் மணி முதல் வெறுக்கையால்—பதுமராகரத்தினமும் முதலாகியபொருள்களால், எண் இல மண்டபம் மருங்கில் நல்கினன்—அளவற்றமண்டபங்களை (அத்திருமணச்சாலையின்) பக்கங்களிலமைத்தான் எ—று.

காந்தமென்பது கதிர் என்பதனேடுமொட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. வெம்மைமிக்கபேரொளியையுடைமையின் 'கண்டெறுகதிர்' என்றார். (உஉ)

காவிகண் மலர்தரு கயங்க ளோர்பல
வோவறு முற்பல வோடை யோர்பல
பூவியல் வாரிசப் பொய்கை யோர்பல
வாவிக ளோர்பல மருங்கி லாக்கினன்.

இ—ள்: காவிகள் மலர்தரு கயங்கள் ஓர் பல—கருங்குவளைமலர்கள் அலரப்பெற்ற தடாகங்கள்பலவற்றையும், ஓ அறும் உற்பல ஓடை ஓர் பல-(எக்காலத்திலும்) தவருது மலர்கின்ற செங்கழுநீர்மலர்நிறைந்த தடாகங்கள் பலவற்றையும், வாரிச பூ இயல் பொய்கை ஓர் பல-தாமரைமலர்நிறைந்த தடாகங்கள் பலவற்றையும்,வாவிகள் ஓர் பல-பிறதடாகங்கள் பலவற்றையும், மருங்கில் ஆக்கினன்--(அம்மண்டபங்களின்) பக்கத்தில் அமைத்தான் எ—று. (உங)

பாசடை மரகதம் பளிங்கு வச்சிரங்
காசறு நன்மணி கனக மன்னதாற்
றேசுறு நளிமலர் செறிந்த பூந்தடம்
வாசவன் கண்டுள மருளத் தந்தனன்.

இ—ள்: மரகதம் பாசடை— மரகதமணியாற் பசிய இலைகளும், பளிங்கு வச்சிரம் காசு அறு நல் மணி கனகம் அன்னதால் தேசு உறு நளி மலர்—படிகம் வைரம் குற்றமற்ற மாணிக்கம் பொன் ஆதியவற்ருல் ஒளிபொருந்திய குளிர்ந்தபூவும், செறிந்த-நெருங்கப்பெற்ற, பூ தடம்-மலர்த்தடாகங்களை, வாசவன் கண்டு உளம் மருள தந்தனன்—இந்திரனுங்கண்டு மனமருளும்படி அமைத்தான் எ—று.

வாசவனுமென்பதிற் சிறப்பும்மைதொக்கது. குற்றம் பிறவிறச்சார்புமுதலியன. மதர்ப்புமிக்க இலையென்பார் 'பாசடை' எனவும், உடன்மலர்ந்தாலன்ன ஒளியும் தட்பமும்வாய்ந்தனவென்பார் 'தேசுறுநளிமலர்' எனவும், அவை மணிமலராயினும் மதுமலரேயெனமருளுநறவித்தலின் 'பூந்தடம்' எனவும், அன்னோரன்ன தன்னகர்த்தடங்களைப் பன்னுட்பயின்றபண்பினனுகிய இந்திரனும், கண்ணுற்றக்கால் நீர்த்தடமேயென்று துணியவிற்றலின் 'வாசவன்கண்டுளமருள' எனவும் கூறினர். வாசவன்கண்டுளமருளத்தந்தனன் என்றதனுல் இத்தடங்கள் பொன்னகரிலுள்ள மணிமலர்த்தடங்களினும் மாட்சியுடையனவென்பது போதருமென்க. (உச)

கற்பகஞ் சந்தகில் கதலி பூகமே
பொற்புறு வருக்கைமாப் புன்னை யாதிய
பற்பல மணிகளாற் படுத்தி யன்னவை
நற்பயன் வழங்கவு நல்கி னானரோ.

இ—ள்: கற்பகம்—கற்பகமும், சந்து—சந்தனமும், அகில்—அகிலும், கதலி—வாழையும், பூகம்—கமுகும், பொற்பு உறு வருக்கை—அழகுபொருந்திய பலாவும், மா—மாவும், புன்னை ஆதிய—புன்னையும்முதலாகிய மரங்களை, பற்பல மணிகளால் படுத்தி—பலபல இரத்தினவகைகளாலியற்றி, அன்னவை நல் பயன் வழங்கவும் நல்கினான்—அவைகள் நல்லபிரயோசனங்களைக் கொடுக்கவுஞ்செய்தான் எ—று.

உம்மை உயர்வுசிறப்பு. பயன்வழங்குதலாவது மலர்தல் காய்த்தல் பழுத்தல் முதலியன. (௨௫)

இன்னவா றளப்பில வினைய வர்க்கெலா
முன்னுறு கம்மியன் முன்னிச் செய்தலும்
பொன்னிய லிமகிரிப் புரத்து மேவிய
மன்னவன் கண்டவை மகிழ்ச்சி யெய்தினான்.

இ—ள்: இமையவர்க்கு எலாம் முன் உறு கம்மியன்—தேவரனைவர்க்கும்முற்படுகின்ற விச்சுவகன்மா, முன்னி—கருதி, இன்னவாறு அளப்பு இல செய்தலும்—இவ்வாறு பலவற்றையும் அமைத்தலும், பொன் இயல் இமகிரி புரத்து மேவிய மன்னவன்—பொன்வரினாலாகிய இமையமலையிலுள்ள (ஔஷதிப்பிரஸ்தமென்னும்)நகரத்தில் இருந்த மலையரசன், அவை கண்டு—அவற்றைப்பார்த்து, மகிழ்ச்சி எய்தினான்— சந்தோஷங்கொண்டான் எ—று.

இமகிரி புரம் என்பன வடசொற்களாயினும் தமிழிலக்கணவிதிப்படி வல்லெழுத்துமிக்குப்புணர்ந்தன. தேவருள் யாவர்நினைப்பினும் உடனே அவர் முற்றோன்றி வேண்டியபணிகளைச் செய்துமுடிப்பவனென்பார் 'இமையவர்க்கெலாமுன்னுறுகம்மியன்' எனவும், கைத்தொழிலின்றிச் சிந்தித்தமாத்திரையானேயென்பார் 'முன்னி' எனவும், முன்னரும் பெருவனப்புடைத்தென்பது தோன்ற அடைகொடுத்து 'பொன்னியலிமகிரிப்புரம்' எனவும், அதனைப் பண்டையினும் பன்மடங்கு வனப்புறுமாறு புதுக்குதலின் மகிழ்ந்தனனென்பார் 'பொன்னியலிமகிரிப்புரத்துமேவியமன்னவன்கண்டவைமகிழ்ச்சியெய்தினான்' எனவுங்கூறினார். (௨௬)

சீதர னயன்முதற் றேவர் மாத்தொகை
மாதவ முனிவரர் மடந்தை மாரொடு
காதலி னுமைமணங் காண வந்திடத்
தூதரை யெங்கணுந் தூண்டி னானரோ.

இ—ள்: சீதரன் அயன் முதல் தேவர் மா தொகை— விஷ்ணுமூர்த்தி பிரமா முதலாகிய பெரிய தேவர்கூட்டத்தினரும், மா தவ முனிவரர்—சிறந்ததவத்தையுடைய முனிகணத்தினரும், மடந்தைமாரொடு— தங்கள் தங்கள்பத்தினிகளுடன், காதலின் உமை மணம் காண வந்திட—ஆசையோடும் உமாதேவியாரது திருமணத்தைத் தரிசிக்கவரும்பொருட்டு, எங்கணும் தூதரை தூண்டினான்—எவ்விடத்தும் தூதுவரை அனுப்பி அறிவித்தான் எ—று.

தொகையென்பது முனிவர்க்குங்கூட்டியுரைக்கப்பட்டது. பிற்செய்யுளில் யாவருமென்பதுமிவ்வாறே. சீதரன்-இலக்குமியை மார்பிற்றரித்தவன், (௨௭)

ஒற்றர்தம் முரைதெரிந் தும்பர் யாவருங்
குற்றமின் முனிவருங் குன்ற வில்லினாற்
பற்றலர் புரமடு பரமற் போற்றியே
மற்றவன் றன்னொடு வருது மென்றனர்.

இ—ள்: உம்பர் யாவரும்—தேவரனைவரும், குற்றம் இல் முனிவரும்—(காமமுதலிய) குற்றங்களில்லாத முனிவர்களனைவரும், ஒற்றர் தம் உரை தெரிந்து—தூதுவர்கூறிய வார்த்தையைக்கேட்டு, குன்ற வில்லினால் பற்றலர் புரம் அடு பரமன் போற்றி அவன்றன்னொடு வருதும் என்றனர்—மேருமலையாகிய வில்லினாற் பகையசுரரது முப்புரங்களையுமெரித்த சிவபிரானைத்துதித்து அவரோடும் (யாம்) வருவோமென்று கூறினார்கள் எ—று. (உஅ)

வெற்றிகொள் வயப்புலி மிசையு யர்த்திடுங்
கொற்றவை யாமளை குழீஇய காளிகள்
சுற்றுறு மெழுநதி யிமையத் தொல்கிரி
யுற்றனர் தொழுதன ருமைமு னண்ணினார்.

இ—ள்: வெற்றிகொள் வயப்புலி மிசை உயர்த்திடும் கொற்றவை—வெற்றியையுடைய சிங்கக்கொடியைமேலுயர்த்திய துர்க்கையும், யாமளை—யாமளையும், குழீஇய காளிகள்—கூட்டமாகியகாளிகளும், சுற்றுறும் எழுநதி-சூழ்ந்துள்ள சப்தநதிகளும், தொல் இமையக்கிரி உற்றனர்—பழைய இமையமலையில்வந்து, தொழுதனர் உமைமுன் நண்ணினார்—கைகுவித்துக்கொண்டு பார்ப்பதியார்க்குமுன்னேசென்றார்கள் எ—று.

வயப்புலி-சிங்கம்; இது ஆகுபெயராய்க்கொடியையுணர்த்திற்று. எழுநதிகளாவன: கங்கை யமுனை சரசுவதி நருமதை காவேரி குமரி கோதாவரி என்பன; சில நூல்கள் சிறிதுபேதமாகவுங்கூறுகின்றன. (உக)

செந்திரு நாமகள் சீர்பெ றுஞ்சசி
பந்தமி றாபத பன்னி யாயுளா
ரந்தமி லணங்கினர் யாரு மவ்வரை
வந்தன ரவரவர் மகிழ்ந ரேவலால்.

இ—ள்: செம் திரு—செக்கிறத்தையுடைய இலக்குமியும், நாமகள்—சரசுவதியும், சீர் பெறும் சசி—சிறப்புப்பொருந்திய இந்திராணியும், பந்தம் இல் தாபத பன்னி ஆய் உளார்—மலவாதனையில்லாத முனிவர்களது பத்தினிகளாயுள்ளவர்களும், அந்தம் இல் அணங்கினர் யாரும்—அளவிறந்த தேவப்பெண்களும் ஆகிய எல்லோரும், அவர் அவர் மகிழ்நர் ஏவலால் அவ்வரை வந்தனர்—தங்கள் தங்கள் கணவரது ஏவலின்படி அந்த இமையமலையில் வந்தார்கள் எ—று.

கணவன்சொற்கடத்தல் கடும்பாவமாதலின் அவரிடம் அனுமதிபெற்று வந்தனரென்பார் 'அவரவர்மகிழ்நரேவலால்வந்தனர்' என்றார். (௩0)

பங்கய மிசைவரு பாவை யேமுத
னங்கையர் யாவரு நற்ற வத்தினா
லங்கணொந் துறைதரு மம்மை தாடொழா
மங்கல வதுவையின் வனப்புச் செய்தனர்.

இ—ள்: பங்கயமிசை வரு பாவையே முதல் நங்கையர் யாவரும்— செந்தாமரைமலரின்மேல்வீற்றிருக்கின்ற இலக்குமியேமுதலாகிய மாதர்களனைவரும், நல் தவத்தினுல் அங்கம் நொந்து உறைதரும் அம்மை தாள் தொழா— நல்லதவத்தைச்செய்தலினுற் சரீரமெலிந்திருக்கின்ற பார்ப்பதியாரின் திருவடிகளைவணங்கி, மங்கல வதுவையின் வனப்பு செய்தனர்—சுபகரமாகிய திருமணத்திற்கேற்ற அலங்காரத்தைச்செய்தார்கள் எ—று.

பாவை ஆகுபெயர். அழகிற்சிறந்தாளாதலின் இலக்குமியை முன்வைத்துத் தேற்றேகாரம்புணர்த்தி 'பங்கயமிசைவருபாவையேமுதனங்கையர்யாவரும்' எனவும், உணவொறுத்தலாதியவியமந்தவறாத தவமாதலின் 'நற்றவம்' எனவும், தம்மின்மேதக்கார்க்கணியியற்றழித் தாழ்ந்துசெய்வதே நலமாதலின், அங்ஙனஞ்செய்தனரென்பார் 'தாடொழா-வனப்புச்செய்தனர்' எனவும் கூறினார். (௩௧)

நெறிதரு தவத்துரு நீக்கிக் காமருக்
குறையுள தாகிய வுமைதன் மெய்யினைக்
குறைதவிர் நிலைமையிற் கோலஞ் செய்தன
ரிறைவனை வழிபடு மியல்பி னரென.

இ—ள்: காமருக்கு உறையுளது ஆகிய உமைதன் மெய்யினை—அழகுக்கிருப்பிடமாகிய பார்ப்பதியாரது திருமேனியை, நெறி தரு தவத்து உரு நீக்கி-ஒழுக்கத்தையுடைய தபோவேடத்தையகற்றி, இறைவனை வழிபடும் இயல்பினுர் என— சிவபிரானைப்பூசிக்கின்ற இயற்கையினையுடையோர்போல, குறை தவிர் நிலைமையில் கோலம் செய்தனர்—குறைவில்லாவண்ணம் அலங்கரித்தார்கள் எ—று.

அது பகுதிப்பொருள்விகுதி. மெய்யினை-கோலஞ்செய்தனர் என இயையும். நீக்கியென்பது கோலஞ்செய்தற்குத் துணைவினை. "உற்றநோய்நோன்றலுயிர்க்குறுகண்செய்யாமை-யற்றேதவத்திற்குரு"என்னுந் திருக்குறளிற்கூறியஇலக்கணம் வாய்ந்ததுவமாதலின் 'நெறிதருதவம்' எனவும், அத்தவநிலையாலாய கூந்தற்சிக்காதியவற்றை நீக்கியென்பார் 'தவத்துருநீக்கி' எனவும், மேனியாடி அணிமுதலியன தவிர்ந்திருப்பினும் அழகிற்சிறிதுங்குறைவுபடாமையின் 'காமருக்குறையுளதாகிய-மெய்' எனவும், அம்மேனிக்கு இயற்கையழகே அமையுமாகவுந் தம்பேரன்மையாற் பின்னருமழகுசெய்தனராதலின் 'காமருக்குறையுளதாகியவுமைதன்மெய்யினை-கோலஞ்செய்தனர்' எனவும், அணிமுதலியவற்றானும் அவற்றையணியும்வகையானுஞ் சிறிதுங் குறைவாராவண்ணமென்பார் 'குறைதவிர்நிலைமையில்' எனவும், சிவபூசைசெய்வோர் சிவலிங்கப்பெருமானுக்கு முன்னர்ச்சாத்திய ஆடைமுதலியவற்றைக் கழித்து விதிப்படி அபிடேகமியற்றித் திருவொற்றாடைசாத்திப் புதுவஸ்திரந்தரித்து மேலும் வேண்டிய அணிகளை அணிந்து அருச்சித்தல்போல, தேவமாதர்களும் பார்ப்பதியாரது தவக்கோலத்தைநீக்கி மங்கலாபிடேகமியற்றிக் கூந்தலையொற்றிப் புத்தாடையுடுத்தி அணிகளையணிந்து முடிவிற்பணிந்தனராதலின் 'இறைவனைவழிபடுமியல்பினுரென' எனவும் கூறினார். (௩௨)

மேதகு பொலஞ்சுடர் மேரு மந்தர
மாதிய வாகிய வலகில் சுற்றமு
மோதருங் கடல்களு முரக வேந்தரு
மாதிர யானையும் பிறவும் வந்தவே.

இ—ள்: மேதகு பொலம் சுடர் மேரு மந்தரம் ஆதிய ஆகிய அலகு இல் சுற்றமும்—உயர்ச்சிபொருந்திய பொன்னொளியினையுடைய மேருமலை மந்தரமலை முதலியனவாகிய அளவிறந்த இனங்களும், ஓத அரும் கடல்களும்—சொல்லுதற்கரிய சமுத்திரங்களும், உரக வேந்தரும்—சர்ப்பராசர்களும், மாதிர யானையும்—திக்குயானைகளும், பிறவும் வந்த—ஏனையவைகளும் (திருமணக்காட்சியின்பொருட்டு அவ்விமையமலையில்) வந்தன எ—று.

மலைகளுட்சிறந்ததாதலின்'மேதகுபொலஞ்சுடர்மேரு'எனவும், பெருங்கடல்களாதலின் 'ஓதருங்கடல்கள்' எனவும் கூறினார். உரகவேந்தரென்றது வாசுகி அநந்தன் தக்ஷன் சங்கபாலன் குளிகன் பதுமன் மகாபதுமன் கார்க்கோடகன் என்பவர்களை. பிற என்றது ஆதிகூர்மமுதலியவற்றை. (௩௩)

வேறு.

ஈங்கிது காலை தன்னி லிமகிரி புரக்கு மன்னன்
பாங்குறு தமர்க ளோடும் பரிவொடுஞ் சென்று வெள்ளி
யோங்கலி னந்தி யுய்ப்ப வுயிர்க்குயி ரான வண்ணல்
பூங்கழல் வணங்கி நின்றாங் கினையன புகல லுற்றான்.

இ—ள்: ஈங்கிது காலை தன்னில்—இச்சமயத்தில், இமகிரி புரக்கும் மன்னன்—இமையமலையரசன், பரிவொடும்—அன்புடன், பாங்குறு தமர்களோடும் வெள்ளி ஓங்கலில் சென்று—உரிமையான சுற்றத்தாரோடும் திருக்கைலாசமலையிற்போய், நந்தி உய்ப்ப-திருநந்திதேவர்(சிவபிரானனுமதிபெற்று) உள்ளேவிட, உயிர்க்கு உயிர் ஆன அண்ணல் பூ கழல் வணங்கி நின்று—ஆன்மாக்களுக்குப் பரமான்மாவாய்நிற்கின்ற சிவபிரானது தாமரைமலர்போலுந் திருவடிகளை நமஸ்கரித்து எழுந்துநின்று, இனையன புகலலுற்றான்—இவ்வாசகங்களை விண்ணப்பஞ்செய்யத்தொடங்கினான் எ—று.

ஈங்கிது ஒருசொல். சென்று வணங்கி என இயையும். முற்செய்யுளிற்கூறிய மேருமுதலிய சிறந்தசுற்றத்தினரென்பார் 'பாங்குறுதமர்' என்றார். இதற்கு, பக்கத்தில்வந்துகூடிய சுற்றத்தினரெனப் பொருள்கூறினுமாம். (௩௪)

ஆதியி னுலக மெல்லா மளித்திடு மன்னை தன்னைக்
காதலின் வதுவை செய்யக் கருதினை கணித நூலோ
ரோதுபங் குனியின் றிங்க ளுத்தர மின்றே யாகு
மீதுநன் முகூர்த்த மெந்தா யிமையமேல் வருதி யென்றான்.

இ—ள்: எந்தாய்—எம்பரமபிதாவே, ஆதியின் உலகம் எல்லாம் அளித்திடும் அன்னை தன்னை காதலின் வதுவைசெய்ய கருதினை—முற்காலத்தில் எல்லாவுலகங்களையுமீன்றருளிய மாதாவாகிய பார்ப்பதியாரை விருப்பத்துடன் திருமணஞ்செய்யுமாறு திருவுள்ளம்பற்றினீர், கணித நூலோர் ஓது பங்குனியின் திங்கள் உத்தரம் இன்றே ஆகும்—சோதிசாஸ்திரவிற்பன்னர்கூறிய பங்குனியுத்தரம் இற்றைத்தினமேயாம், ஈது நல் முகூர்த்தம்—இது சுபமுகூர்த்தம் (ஆதலின்), இமையமேல் வருதி என்றான்—இமையமலையின்மேல் எழுந்தருளிவருக என்று விண்ணப்பஞ்செய்தான் எ—று.

இது ஈது என முதனீண்டது. அகந்தைகொண்டழிவுற்ற தக்கன்போல் மகளும் மருகனுமென்றெண்ணாது, இறைவனுமிறைவியுமென்றே யெண்ணுதலின் சிவபிரானையும் தேவியையும் முறையே 'எந்தாய்-அன்னை' எனவும், விருப்புவெறுப்பற்றதேவரீர் இதனைவிரும்பியதோர் திருவிளையாடலாமென்பான் 'காதலின்வதுவைசெய்யக்கருதினை' எனவும், மணம்பேசவந்த முனிவர்மாட்டுவினவியறிந்த சுப

தினமென்பான் 'கணிதநூலோரோதுபக்குனியின்றிங்களுத்தரம்' எனவும், அத்தகைய இச்சுபதினத்திலும் இன்னேவிகழும் இலக்கினமே ஏழாமிடத்தூய்மைமுதலிய குணநிறைந்ததென்பான் 'ஈதுநன்முகூர்த்தம்' எனவும், இச்சுபலக்கினங்கழியுமுன் எழுந்தருளிவருக என்பான் 'இமையமேல்வருதி' எனவும் கூறினான். (௩௫)

அல்லுறழ் கண்டத் தெந்தை யரசனை நோக்கி யின்னே
யெல்லையில் கணங்கள் சூழ விமையமேல் வருது முன்னஞ்
செல்லுதி யென்ற லோடுந் திருவடி வணங்கிப் போற்றி
வல்லையின் மீண்டு போய்த்தன் வளநக ரிருக்கை புக்கான்.

இ—ள்: அல் உறழ் கண்டத்து எந்தை—நஞ்சார்ந்த கண்டத்தையுடைய எம்பரமபிதாவாகிய சிவபிரான், அரசனை நோக்கி—மலையரசனைப்பார்த்தருளி, எல்லை இல் கணங்கள் சூழ இன்னே இமையமேல் வருதும்-அளவிறந்த கணத்தவர்கள்சுற்ற இப்பொழுதே இமையமலையின்மேல் (யாம்)வருவோம், முன்னம் செல்லுதி என்றலோடும்-நீ முந்திப்போவாயாக என்று திருவாய்மலர்ந்தருளியவுடன், திருவடி வணங்கி போற்றி-(அம்மலையரசன் அவரது) அழகிய பாதங்களைவணங்கித்துதித்து, வல்லையில் மீண்டு போய்—விரைவிற்றிரும்பிச்சென்று, தன் வள நகர் இருக்கை புக்கான்—தனது வளப்பம்பொருந்திய நகரத்திலுள்ள மாளிகையையடைந்தான் எ—று.

அல் ஆகுபெயர்; அங்ஙனங்கொள்ளாது, அல்லுறழ்கண்டம்-இருள்போலுங்கரிய கண்டமெனினுமாம். நீகூறிய முகூர்த்தங்கழியுமுன்னெனன்பார் 'இன்னே' எனவும், மணவெழுச்சியமையவென்பார் 'எல்லையில்கணங்கள்சூழ' எனவும், நம்முடன்வருவையேல் ஆங்குவிகழுங்கருமங்களிற்குறைவுறுமாதலின் முன்செல்லுதியென்பார் 'முன்னஞ்செல்லுதி' எனவும், சிவபிரானைவரவெதிர்கொள்ளவேண்டுமென்னுங்கருத்தினனாய்ச் சென்றானாதலின் 'வல்லையின்மீண்டுபோய்' எனவும் கூறினார். (௩௬)

வரைபுனைபடல முற்றிற்று.

ஆக விருத்தம் ௭௨௫.

---

# கணங்கள்செல்படலம்.

கணத்தவர்களனைவரும் கயிலையில்வருதலைக்கூறுதலினிப்பெயர்பெற்றது.

## இப்படலப்பொழிப்பு.

சிவபிரான் உருத்திரர்களையும் தேவர்களையும் பிறரையும் அழைக்கும்படி திருநந்திதேவர்க்குப் பணிக்க, அந்நந்திதேவர் அவரனைவரையும் வரும்படி சிந்தித்தனர். உடனே, காலாக்கினி ஆடகேசர் வீரபத்திரர் மகாசாத்தர் முதலிய ருத்திரர்களும், குண்டோதரன் கண்டகன்னன் பிருங்கி பானுகம்பன் சங்குகன்னன் முதலிய பூதத்தலைவர்களும், விஷ்ணு பிரமா திசைகாவலர் முதலியதேவர்களும், சூரியன் சந்திரன்முதலிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும், சப்தமாதர்களும், அட்டவசுக்

களும், வித்தியாதரரும், முனிவர்களும், பிறரும், தங்கள் தங்கள் பரிசனங்களுடன் அங்குவந்தனர். அதுகண்ட நந்தியந்தேவர் சிவபிரானிடம் அனுமதிபெற்று அவர்களை உள்விட, அவரனைவரும் அச்சிவபிரானைவணங்கித் துதித்துப் பக்கத்தினின்றனர். அப்பொழுது பிரமதேவர் மணக்கோலத்திற்கேற்ற கிரீடமுதலிய பல அணிகளைப் படைத்துச் சிவபிரானது திருமுன்னிலையில்வைத்து 'ஸ்வாமீ! இவற்றைப் புனைந்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தனர். சிவபிரான் அவற்றைத்திருக்கரத்தாற்றீண்டி அணிந்ததாகப்பாவித்து அருள்செய்து, வேண்டிய மணவணிகள்யாவும் தம்மேனியிலமையுமாறு திருவுளம்பற்றினர். உடனே அவ்வாறமைந்தன. அதன்பின்னர்த் திருமணத்திற்கெழுந்தருளினர் என்பதாம்.

அந்த வேலையிற் கயிலையி லெம்பிரா னருளா
னந்தி தேவரை விளித்துநம் மணச்செய லுடை
முந்து சீருடை யுருத்திர கணங்கண்மான் முதலோ
ரிந்தி ராதியர் யாரையுந் தருதியென் றிசைத்தான்.

இ—ள்: அந்த வேலையில்—அச்சமயத்தில், கயிலையில்—திருக்கைலாசமலையில், எம்பிரான்—எமதுகடவுளாகிய சிவபெருமான், அருளால் நந்திதேவரை விளித்து—கிருபையோடும் திருநந்திதேவரையழைத்தருளி, முந்து சீர் உடை உருத்திரகணங்கள்—முதன்மைபொருந்திய கீர்த்தியினையுடைய உருத்திரகணத்தவர்களையும், மால் முதலோர்—திருமால்முதலியவர்களையும், இந்திராதியர் யாரையும் தருதி என்று இசைத்தான்—இந்திரன்முதலியதேவர்களையும் பிறரனைவரையும் அழைக்குதி என்று கட்டளையிட்டருளினர் எ—று.

வேலையில் கயிலையில் என்பன விளித்து என்பதனோடியைந்தன. அங்குவந்தாருட்சிறந்தாராதலின் 'முந்துசீருடையுருத்திரகணங்கள்' என்றார். கிருத்தியாதிகாரிகளாதலின் மான்முதலோரை வேறுகூறினர். (க)

இன்ன லின்பமின் றாகிய பரமனீ துரைப்ப
நன்ன யப்புட னிசைந்துபி னந்தியம் பெருமா
னன்னர் யாவரு மணப்பொருட் டுற்றிட வகத்து
ளுன்னல் செய்தன னவரெலா மவ்வகை யுணர்ந்தார்.

இ—ள்: இன்னல் இன்பம் இன்று ஆகிய பரமன் ஈது உரைப்ப— துக்கமுஞ் சுகமுமாகிய இரண்டுமில்லாத சிவபிரான் இவ்வாசகத்தைத் திருவாய்மலர்ந்தருள, நந்தியம் பெருமான்-கேட்ட திருநந்திதேவர், நல் நயப்புடன் இசைந்து-நல்ல விருப்பத்துடன் சம்மதித்து, பின்-பின்னர், அன்னர் யாவரும் மணப்பொருட்டு உற்றிட அகத்துள் உன்னல் செய்தனன்—அவரனைவருந் திருமணத்திற்குவரும்படி தம்மனத்திற்சிந்தித்தார், அவர் எலாம் அ வகை உணர்ந்தார்—அவர்கள் யாவரும் அத்தன்மையை [திருநந்திதேவர் சிந்தித்ததை] அறிந்தார்கள் எ—று.

இன்று என்னும் வினைமுற்றுப்பெயர் இன்மை என்னும் பொருள்பட நின்றது.

இன்னலின்பமின்றாகியபரமன் என்றதனால் நிர்விகாரியென்பது பெற்றாம்; அப்பெருமானது திருமணத்தை அனைவருந்தரிசித்து ஆமோதிக்க விரும்பினராதலின் 'நன்னயப்புடனிசைந்து' என்றார். (உ)

உலக முய்ந்திட வெம்பிரான் மணம்புரி யுண்மை
புலன தாதலு மவனருண் முறையினைப் போற்றி
மலியும் விம்மிதம் பத்திமை பெருமித மகிழ்ச்சி
பலவு முந்திடக் கயிலையை முன்னியே படர்வார்.

இ—ள்: எம் பிரான்—எங்கள் கடவுளாகிய சிவபிரான், உலகம் உய்ந்திட மணம்புரி உண்மை புலனது ஆதலும்—உலகத்தார் உய்யும்பொருட்டுத் திருமணஞ் செய்கின்ற உண்மையானது புலப்படுதலும், அவன் அருள் முறையினை போற்றி—அச்சிவபிரானது திருவருட்டிறத்தைத் துதித்து, மலியும் விம்மிதம் பத்திமை பெருமிதம் மகிழ்ச்சி பலவும் உந்திட—நிறைந்த ஆச்சரியம் அன்பு பெருமை உவகை ஆகிய இவையெல்லாம் முன்றள்ள, கயிலையை முன்னி படர்வார்—திருக்கைலாசமலையைக் குறித்துப்போவாராயினர் எ—று.

உலகம் ஆகுபெயர். பத்திமைஎன்பதில் மை பகுதிப்பொருள்விகுதி. இகல்பற்றிரண்டுமில்லா விறைவராகிய சிவபிரான் மணம்புரியத் திருவுளம்பற்றியது ஆன்மாக்களெல்லாம் இன்பநுகரும் பொருட்டேயாதலின் 'உலகமுய்ந்திடவெம்பிரான்மணம்புரியுண்மை' என்றார்.

முன்னொருகாலுங் காட்டாததோர் அற்புதத்திருக்கோலத்தை யின்றுகாண்பேமேயெனக்கருதியவழி விம்மிதமும், அதனை நாயேங்கட்குக்காட்டுமாறுதிருவுளம்பற்றினரேயெனக் கருதியவழிப்பத்தியும், அக்காட்சியை நாங்காணும்பேறுபெற்றேமேயெனக்கருதியவழிப்பெருமிதமும் மகிழ்ச்சியும் உளவாயினவென்க. (௩)

பாலத் தீப்பொழி விழியுடைப் பஞ்சவத் திரனே
மூலத் தீப்புரை விடைப்பெருங் கேதுவே முதலாஞ்
சூலத் திக்கரத் தாயிர கோடியோர் சூழக்
காலத் தீப்பெய ருருத்திரன் வந்தனன் கடிதில்.

இ—ள்: தீ பொழி பாலவிழி உடை பஞ்சவத்திரனே— அக்கினிப்பொறியைச்சிந்துகின்ற நெற்றிக்கண்ணையுடைய பஞ்சானனரும், மூலத்தீ புரை பெரும் விடைக்கேதுவே முதல் ஆம்—வடவாமுகாக்கினியை நிகர்த்த பெரியஇடபகேதுவும் முதலாகிய, தீ சூல கரத்து ஆயிரகோடியோர் சூழ— கொடிய சூலப்படையையேந்திய கையையுடைய ஆயிரகோடி பரிசனர்கள் சூழ்ந்துவர, காலத்தீ பெயர் உருத்திரன் கடிதில் வந்தனன்—காலாக்கினிருத்திரர் விரைவில் வந்தார் எ—று.

சிவசாரூப்பியமுடையவென்பார் 'பாலத்தீப்பொழிவிழியுடை' எனவும், பெருஞ்சீற்றமுடையவென்பார் 'மூலத்தீப்புரை' எனவும், எதிர்ந்தாரை முருக்குங்குறிப்பினரென்பார் 'சூலத்தீக்கரத்து' எனவும் கூறினர்.

மேற்கூறப்படுங் கணதிபர்முதலியோரினுஞ் சிறந்தாராதலின் உருத்திரர்களின்வருகையை முன்னர்க்கூறுவான் புக்க ஆசிரியர், அவருள்ளுஞ் சிறந்தாராகிய காலாக்கினிருத்திரரின் வரவை இச்செய்யுளாற் கூறினரென்க. (௪)

சுழல லுற்றிடு சூறையும் வடவையுந் தொலைய
முழுது யிர்த்தொகை யலமர வுயிர்க்குமொய்ம் புடையோ
ரெழுப திற்றிரு கோடிபா ரிடத்தொகை யீண்ட
மழுவ லத்தின னையகூர் மாண்டனும் வந்தான்.

இ—ள்: சுழலல் உற்றிடு சூறையும் வடவையும் தொலைய—சுழலுகின்ற பிரசண்டமாருதமும் வடவாமுகாக்கினியும் அழியவும், முழுது உயிர் தொகை அலமர-எல்லா ஆன்மாக்களும் நிலைபெயரவும், உயிர்க்கும் மொய்ம்பு உடையோர்— சுவாசம் விடுகின்ற வலிமையையுடையவர்களாகிய, எழுபதிற்று இரு கோடி பாரிடத்தொகை ஈண்ட—எழுபத்திரண்டுகோடி பூதகணங்கள் சூழ, மழு வலத்தினன் ஆய கூர்மாண்டனும் வந்தான்—மழுப்படையை வலக்கரத்திலேந்திய கூர்மாண்டருத்திரரும் வந்தார் எ—று.

சூறைதொலைதலாவது சுவாசவேகத்திற் றன்வேகமடங்கப்பெறுதல். உயிர்த்தழியித்துணைத்தீங்காமேல் உருத்தழியென்னுமோவென்பதை ஊகித்துணர'சுழலலுற்றிடு * * * உயிர்க்குமொய்ம்புடையோர்' எனவும், சிவசாரூப்பியமுடையரென்பது போதர 'மழுவலத்தினன்' எனவும் கூறினார். 'மழுவலத்தினன்' என்பதற்கு மழுவாற் கொண்டவென்றியையுடையனெனினுமாம். (௫)

நீடு பாதலத் துறைபவர் நெற்றியங் கண்ணர்
பீடு தங்கிய பல்வகை நிறத்தவர் பெரியர்
கோடி கோடியா முருத்திர கணத்தவர் குழுவோ
டாட கேசனு முருத்திரன் கயிலையி லடைந்தான்.

இ—ள்: நீடு பாதலத்து உறைபவர்—நெடிய பாதாளவுலகத்தில் வசிப்பவர்களும், நெற்றியம் கண்ணர்—நெற்றிக்கண்ணையுடையவர்களும், பீடு தங்கிய பல்வகை நிறத்தவர்— பெருமைபொருந்திய பலவகைப்பட்ட நிறங்களையுடையவர்களும், பெரியர்—பெரியவர்களுமாகிய, கோடி கோடி ஆம் உருத்திரகணத்தவர் குழுவோடு—கோடிகோடியென்னுங்கணக்கமைந்த உருத்திரகணத்தவரின் தொகுதியுடன், ஆடகேசன் ஆம் உருத்திரன் கயிலையில் அடைந்தான்—ஆடகேசனென்னும் பெயரிய உருத்திரர் திருக்கைலாசமலையில் வந்தார் எ—று.

கண்ணுக்கணிபெறத்தோன்றும் பலநிறங்களையுடையரென்பார் 'பீடுதங்கிய பல்வகைநிறத்தவர்' என்றார். (௬)

கோர மிக்குயர் நூறுபத் தாயிர கோடி
சார தத்தொகை சூழ்தரச் சதுர்முகன் முதலோ
ராரு மச்சுறச் சரபமாய் வந்தருள் புரிந்த
வீர பத்திர வுருத்திரன் வந்தனன் விரைவில்.

இ—ள்: கோரம் மிக்கு உயர் நூறுபத்து ஆயிர கோடி சாரதத்தொகை சூழ்தர— உக்கிரமிகப்பெற்றுச் சிறந்த பத்திலக்ககோடி பூதகணங்கள் சூழ்ந்துவர, சதுர்முகன் முதலோர் ஆரும் அச்சுற சரபம் ஆய் வந்து அருள்புரிந்த வீரபத்திர உருத்திரன்-நான்குமுகங்களையுடைய பிரமா முதலிய தேவர்களனைவரும் அஞ்சும்படி சரபப்பறவைவடிவுகொண்டு வந்து கருணைசெய்த வீரபத்திரருத்திரர், விரைவில் வந்தனன்-சீக்கிரத்தில் வந்தருளினார் எ—று.

சூழ்தர-வந்தனன் எனஇயையும். 'சரபமாய்வந்தருள்புரிந்தவீரபத்திரன்' என்றதை "நன்னவிரண்டுதிருவடியுநனிநீள்வாலுமுகமிரண்டுங்- கொன்னார்சிறகுமுருத்திரமுங்கொடும்பேரார்ப்புமெதிர்தோற்றிச்-செந்நீர்பருகிச்செருக்குநரமடங்கலாவிசெகுத்துரிகொண்-டொன்னார்குலங்கண்முழுதழிக்குமுடையான்சரபத்திருவுருவம்" என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானுணர்க. துட்டநிக்கிரகத்தின்பொருட்டு உக்கிரமூர்த்தியா

ய்த்தோன்றியும் சிட்டரைப் பரிபாலித்தனரென்பதுபோதர ‘சதுர்முகன்முதலோராரு மச்சுறச்சரபமாய்வந்தருள்புரிந்த’ என்றார். (எ)

விண்டு தாங்குறு முலகுயிர் முழுதுமோர் விரலிற்
கொண்டு தாங்குறு குறட்படை கோடிநூ றீண்டப்
பண்டு தாங்கலந் தரியர னிருவரும் பயந்த
செண்டு தாங்குகைம் மேலையோன் மால்வரை சென்றான்.

இ—ள்: விண்டு தாங்குறும் உலகு உயிர் முழுதும்— விஷ்ணுமூர்த்தியினாற் பரிபாலிக்கப்படுகின்ற உலகங்களையும் ஆன்மாக்களையும் முற்றாக, ஓர் விரலில் கொண்டு தாங்குறு கோடிநூறு குறட்படை ஈண்ட—ஒருவிரலின்கண்ணேவைத்துச் சுமக்கவல்ல நூறுகோடியென்னுந்தொகைப்பட்ட பூதசேனைகள்நெருங்க, அரி அரன் இருவரும் பண்டு கலந்து பயந்த-விஷ்ணுமூர்த்தியும் சிவபிரானுமாகிய இருவரும் முற்காலத்திற் கூடிப்பெற்ற, செண்டு தாங்கு கை மேலையோன்-செண்டையேந்திய திருக்கரத்தினையுடைய தலைவராகிய மகாசாத்தா், மால் வரை சென்றான்—பெரிய திருக்கைலாசகிரியில் வந்தருளினார் எ—று.

ஈண்ட-சென்றான் எனஇயையும். திருமாலரிதிற்றாங்குமுலகுயிர்களை யெளிதிற்றாங்கும் பேராற்றலுடையரென்பார் ‘விண்டுதாங்குறுமுலகுயிர்முழுதுமோர்விரலிற்-கொண்டுதாங்குறுகுறட்படை’என்றார். அரியரனிருவரும் பண்டுகலந்துபயந்தமையை மேல் அசுரகாண்டத்து மகாசாத்தாப்படலத்தானுணர்க. (அ)

முந்தை நான்முகன் விதிபெறான் மயங்கலு முக்கட்
டந்தை யேவலா லாங்கவ னெற்றியந் தலத்தின்
வந்து தோன்றிநல் லருள்செய்து வாலுணர் வளித்த
வைந்து மாறுமா முருத்திரர் தாமும்வந் தடைந்தார்.

இ—ள்: முந்தை—முன்னொருகாலத்தில், நான்முகன் விதிபெறான் மயங்கலும்—நான்குமுகங்களையுடைய பிரமதேவர் படைத்தற்றொழின்முற்றாது மயங்க, முக்கண் தந்தை ஏவலால் ஆங்கவன் நெற்றியம் தலத்தின் வந்து தோன்றி- மூன்றுதிருக்கண்களையுடைய பரமபிதாவாகிய சிவபிரானது ஏவலின்படி அப்பிரமதேவரதுநெற்றியினிடத்து வந்தவதரித்து, நல் அருள் செய்து— அவர்க்கு நல்ல கிருபையைப்புரிந்து, வால் உணர்வு அளித்த—தூய்மையான அறிவைக்கொடுத்தருளிய, ஐந்தும் ஆறும் ஆம் உருத்திரர் தாமும்—பதினொருருத்திரர்களும், வந்து அடைந்தார்—வந்துசேர்ந்தார்கள் எ—று.

ஈண்டு, முந்தையென்பதில் ஐகாரம் சாரியை. பெறான்-முற்றெச்சம். பதினோருருத்திரராவார்:—மகாதேவன் அரன் உருத்திரன் சங்கரன் நீலலோகிதன் ஈசானன் விசயன் வீமதேவன் பவோற்பவன் காபாலி சௌமியன் என்பவர்கள். இவர் வரலாற்றைமேல் அசுரகாண்டத்து உருத்திரர்கேள்விப்படலத்தானுணர்க. (கூ)

இத்தி றத்தரா முருத்திர ரல்லதை யேனை
மெத்து பல்புவ னங்களு மளித்தவண் மேவி
நித்த னன்புறு முருத்திர கணங்களு நெறிசேர்
புத்தி யட்டக முதல்வரும் வந்தனர் பொருப்பில்.

இ—ள்: இத்திறத்தர் ஆம் உருத்திரர் அல்லதை—இத்தன்மையராகிய உருத்திரர்களேயன்றி, ஏனை மெத்து பல் புவனங்களும் அளித்து அவண் மேவி நித்தன்

அன்பு உறும் உருத்திரகணங்களும்-முற்கூறப்படாதெஞ்சிய மிருந்த பலபுவனங்களையு ங்காத்து அவ்விடத்திற்பொருந்திச் சிவபத்திவாய்ந்த உருத்திரர்கூட்டத்தினரும், நெறி சேர் புத்தியட்டக முதல்வரும்— முறைமைபொருந்திய புத்தியட்டகத்தலைவர்களும், பொருப்பில் வந்தனர்—திருக்கைலாசமலையில் வந்தார்கள் எ—று.

அல்லதை என்பதில் ஐகாரம் சாரியை. உம்மைகள் முற்றேெச்சம். புத்தி யட்டகமாவன:--புத்திதத்துவத்திலுள்ள பைசாசம் இராக்ஷசம் யாக்ஷம் காந்தருவம் மா கேந்திரம் சௌமியம் பிராசேசுவரம் பிராமம் என்னுஞ் சூக்குமபுவனமெட்டுமாய்; இவ ற்றின்றலைவராவார்: அநந்தன் சூக்குமன் சிவோத்தமன் ஏகநேத்திரன் ஏகருத்திரன் தி ரிமூர்த்தி ஸ்ரீகண்டன் சிகண்டி என்பவர்கள். அகோசிருலாதமுதற் காலாக்கினியீறாகிய இருநூற்றிருபத்துநான்கு புவனங்களுள் முற்கூறப்பட்ட உருத்திரர்களது புவனங்க ளொழிந்த பிறவென்பார் 'ஏனை' என்றார். புவனங்களெல்லாவற்றையும் பரிபாலிப்பவர் உருத்திரரேயாகலின் 'ஏனைமெத்துபல்புவனங்களுமளித்தவண்மேவிவித்தனன்புறமு ருத்திரகணங்கள்' என்றார். (௧௦)

தொட்ட தெண்கடல் யாவையுந் துகளினிற் றூர்க்கு
மெட்டு நூறெனுங் கோடிபா ரிடத்தொகை யீண்டக்
கட்டு செஞ்சடைப் பவர்முத லாகவே கழறு
மட்ட மூர்த்திக டாங்களு மொருங்குட னடைந்தார்.

இ—ள்: தொட்ட தெண் கடல் யாவையும் துகளினல் தூர்க்கும் எட்டுநூறு எனும் கோடி பாரிடத்தொகை ஈண்ட—(சகரரால்) தோண்டப்பட்ட தெள்ளிய சமுத் திரங்களெல்லாவற்றையும் காற்றூளியினற்றூர்க்கின்ற எண்ணூறுகோடி பூதகணங்கள் சூழ, கட்டு செம் சடை பவர் முதலாக கழறும் அட்டமூர்த்திகள் தாங்களும்— கட்ட ப்பட்ட சிவந்தசடைமுடியையுடைய பவர்முதலாகச்சொல்லப்படுகின்ற அட்டமூர்த்திக ளும், ஒருங்கு உடன் அடைந்தார்—ஒருசேர உடனே வந்தார்கள் எ—று.

அட்டமூர்த்திகளாவார்:—பவன் சருவன் ஈசானன் பசுபதி பீமன் மகாதேவ ன் உக்கிரன் உருத்திரன் என்பவர்கள். ஆழ்ந்தகடலென்பார் 'தொட்டதெண்கடல்' எ னவும், அதிர்ந்தநடையினவென்பார் 'கடல்யாவைந்துகளினற்றூர்க்கும்-பாரிடம்' எனவு ம் கூறினர். (௧௧)

ஏறு கொண்டிடு தெழிப்பின ரெம்பிரான் விழிநீர்
நாறு கொண்டுள கலத்தொடு பொடிபுனை நலத்தோர்
நூறு கொண்டிடு கோடிபூ தத்தொடு கொடிப்பின்
வீறு கொண்டகுண் டோதரன் போந்தனன் வெற்பில்.

இ—ள்: ஏறு கொண்டிடு தெழிப்பினர்—இடியைப்போன்ற பேரொலியை யுடையவர்களும், எம்பிரான் விழி நீர் நாறுகொண்டு உள கலத்தொடு பொடி புனை நல த்தோர்—எம்பெருமானாகிய சிவபிரானது கண்ணினின்றுந்தோற்றிய உருத்திராக்கத் தையும் திருவெண்ணீற்றையும் அணிந்த சீலத்தினையுடையவர்களுமாகிய, நூறு கொ ண்டிடு கோடி பூதத்தொடு—நூறுகோடியென்னுந் தொகைப்பட்ட பூதசேனைகளுடன், வீறு கொண்ட குண்டோதரன்-பெருமையையுடையகுண்டோதரனென்னும்பூதசேனா பதி,கொடிப்பின் வெற்பில் போந்தனன்--விரைவிற்றிருக்கைலாசமலையில்வந்தானெ-று.

முன்னொருகாலத்தில், திரிபுரத்தசுரரால் வருந்தியதேவர்கள் சிவபிரானைச்சரணடைந்து அவ்வசுரரைச்சங்கரிக்கும்படி வேண்ட, அவர், அடைக்கலம்புகுந்த தேவர்களைக்காத்தல்வேண்டும் நம்மேலன்புவைத்தொழுகும் அசுரரைக் கொல்லுதலுந் தவறாகும் என்றுசிந்தித்து மௌனமாகி ஆயிரந்தேவவருடங்காறும் தமது மூன்றுதிருக்கண்களையும் மலர்த்திக்கொண்டிருப்ப, அக்கண்களினின்றும் நீர்சிந்த, அந்நீரில் உருத்திராக்கங்கள் தோன்றினவாதலின் 'எம்பிரான்விழிநீர்நாறுகொண்டுளகலம்' என்றார்.

ஏறு ஆண் சிங்கமெனினுமாம். பூதகணாதிபருட்சிறந்தவனும், சிவபிரான்றிருமுன்னிலையிற் சங்கீதம்பாடல் குடைபிடித்தல் இடபத்தெழுந்தருளும்போதுமுதுகு வளைந்துகொடுத்துப் பாதப்பரிசமேற்றல் முதலிய மகிமைகளையுடையவனுமாதலின் அவனதுவருகையை ஏனைக்கணாதிபர்க்குமுன்வைத்து 'வீறுகொண்டகுண்டோதரன்' என விசேடித்துக் கூறினார். (கஉ)

அண்டம் யாவையு முயிர்த்தொகை யனைத்தையு மழித்துப்
பண்டு போலவே தந்திட வல்லதோர் பரிசு
கொண்ட சாரதர் நூற்றிரு கோடியோர் குழுமக்
கண்ட கன்னனும் பிஙகியும் வந்தனர் கயிலை.

இ—ள்: அண்டம் யாவையும் உயிர்த்தொகை அனைத்தையும்— எல்லாஅண்டங்களையும் (அவற்றில்வாழும்) எல்லா ஆன்மாக்களையும், அழித்து பண்டு போலவே தந்திட வல்லது ஓர் பரிசு கொண்ட- சங்கரித்து முன்போலப்படைக்கவல்லதன்மையையுடைய, நூற்றிருகோடியோர் சாரதர் குழும—இருநூறுகோடிபூதர்கள் சூழ்ந்துவர, கண்டகன்னனும் பிஙகியும் கயிலை வந்தனர்— கண்டகன்னனும் பிஙகியுமென்னும்பூதசேனாதிபர்கள் திருக்கைலாசமலையில் வந்தார்கள் எ—று.

அண்டங்களையும் உயிர்களையும் அழித்தலும் பின்னர்ப பண்டுபோலாக்கலும் அருஞ்செயல்களாதலின் அவற்றையெடுத்துக்கூறினார். ஆகவே அப்பூதர்கள் எல்லாம் வல்லவரென்பதுபெற்றாம். ஏகாரம் தேற்றம். (கங)

ஆன னங்களோ ராயிர மிராயிர மங்கை
மேனி வந்தபொன் மால்வரை புரைநிற மேவித்
தானை வீரர்நூற் றைம்பது கோடியோர் சாரப்
பானு கம்பனாந் தலைவனொண் கயிலையிற் படர்ந்தான்.

இ—ள்: ஓர் ஆயிரம் ஆனனங்கள்—ஆயிரம்முகங்களையும், அம் இராயிரம் கை—அழகிய இரண்டாயிரங்கைகளையும், மேல் நிவந்த மால் பொன்வரை புரை நிறம் மேவி— மேலோங்கிய பெரிய மேருமலையையொத்த நிறத்தையும்பொருந்தி, நூற்றைம்பது கோடியோர் தானைவீரர் சார-நூற்றைம்பதுகோடி பூதசேனாவீரர்கள்சூழ, பானுகம்பன் ஆம் தலைவன்---பானுகம்பனென்னும் பூதசேனாதிபன், ஒண் கயிலையில் படர்ந்தான்—ஒளிபொருந்திய திருக்கைலாசகிரியில் வந்தான் எ—று.

மேவி வந்தான் என இயையும். (கச)

தங்கள் சீர்த்தியே மதித்திடு கடவுளர் தலையும்
பங்கி யாகிய கேசமும் படைகளும் பறித்துத்
துங்க மெய்திய கணங்கள்பல் கோடியோர் சூழச்
சங்கு கன்னன்வந் திறுத்தனன் றடவரை தன்னில்.

இ—ள்: தங்கள் சீர்த்தியே மதித்திடு கடவுளர் தலையும்—தங்கள்கீர்த்தியையே (பெரிதென்று) சிந்தித்த தேவர்களதுதலைகளையும், பங்கி ஆகிய கேசமும்—பங்கியென்னும்பெயரையுடையசிகைகளையும், படைகளும்—படைக்கலங்களையும், பறித்து-கவர்ந்து, துங்கம் எய்திய-(அதனால்) உயர்ச்சியைப்பெற்ற, பல் கோடியோர் கணங்கள் சூழ—பலகோடி பூதசேனைகள்சுற்றிவர, சங்குகன்னன்—சங்குகன்னனென்னும்பூதசேனாதிபன், தடவரை தன்னில் வந்து இறுத்தனன்—விசாலித்த திருக்கைலாசமலையில் வந்துசேர்ந்தான் எ—று.

தருக்குற்றவென்பார் 'தங்கள்சீர்த்தியேமதித்திடு' என்றார். (௧௫)

காள கண்டனுந் தண்டியு நீலனுங் கரனும்
வாள்வ யம்பெறு விச்சுவ மாலியு மற்று
மாளி மொய்ம்பின ராயபல் பூதரு மனந்த
நீளி ருங்கடற் றானையோ டணைந்தனர் நெறியால்.

இ—ள்: காளகண்டனும்—காளகண்டனென்பவனும், தண்டியும்—தண்டியென்பவனும், நீலனும்—நீலனென்பவனும், கரனும்—கரனென்பவனும், வாள் வயம்பெறு விச்சுவமாலியும்— வாட்போரில் வெற்றியைப்பெற்ற விச்சுவமாலியென்பவனும், ஆளி மொய்ம்பினர் ஆய மற்றும் பல் பூதரும்—சிங்கத்தைப்போன்ற வலிமையினையுடையராகிய ஏனைய பலபூதர்களும், அனந்தம் நீள் இரும் கடல் தானையோடு-அனந்தமாகிய நெடிய பெரியகடல்போன்ற பூதசேனைகளோடு, நெறியால் அணைந்தனர்-முறைப்படி வந்தார்கள் எ—று.

வாள் ஆகுபெயர். அனந்தம் ஓரெண்; அளவின்மையெனினுமாம். சேனாதிபரென்பார் 'ஆளிமொய்ம்பினராய' எனவும், முன்வரற்பாலார் முன்னும் பின்வரற்பாலார் பின்னுமாகவென்பார் 'நெறியால்' எனவும் கூறினார். (௧௬)

கூற்றின் மொய்ம்பினைக் கடந்திடு சாரதக் குழுவோர்
நூற்று முப்பது கோடியோர் சூழ்ந்திட நொய்தின்
மாற்ற லார்புர மட்டவன் றாளிணை வழிபட்
டேற்ற மிக்கவீ சானனக் கயிலையி லிறுத்தான்.

இ—ள்: கூற்றின் மொய்ம்பினை கடந்திடு நூற்றுமுப்பதுகோடியோர் சாரதக் குழுவோர் சூழ்ந்திட— யமனது வலிமையையும்வென்ற நூற்றுமுப்பதுகோடி பூதகணத்தவர்கள் சூழ்ந்துவர, மாற்றலார் புரம் அட்டவன் தாள் இணை வழிபட்டு ஏற்றம் மிக்க ஈசானன்—பகைவரது முப்புரங்களையும் அழித்த சிவபிரானது இரண்டுதிருவடிகளையும் பூசித்தலாலுயர்ச்சிபெற்ற ஈசானரென்பவர், நொய்தில்—விரைவாக, அ கயிலையில் இறுத்தான்—அந்தத் திருக்கைலாசமலையில் வந்துசேர்ந்தார் எ—று.

உயர்வுசிறப்பும்மைதொக்கது. நூற்றுமுப்பதுமூவாயிரமெனினுமாம். சூழ்ந்திட இறுத்தான் என இயையும். தாளிணை பின்மொழிநிலையல். வழிபட்டு என்னும் எச்சம் எதுப்பொருளில்வந்தது. திசைகாவலருள் இந்திராதியரை முன்னர்க்கூறுதிவரை முற்கூறிய காரணந்தோன்ற, 'மாற்றலர்புரமட்டவன்றாளிணைவழிபட்டேற்றமிக்கவீசானன்' என்றார். (௧௭)

ஏகின மாகிய மாலயன் வாசவ னிமையோர்
புகலு மாதிரங் காவலர் கதிர்மதி புறக்கோள்
மிகைய தாரகை யன்னைகள் வசுக்கள்வே றுள்ளார்
மகிழும் விஞ்சையர் முனிவரர் யாவரும் வந்தார்.

இ—ள்: எகினம் ஆகிய மால் அயன்—அன்னப்பறவையுருக்கொண்ட திருமாலும் பிரமதேவரும், வாசவன்—இந்திரனும், இமையோர்—தேவர்களும், புகலும் மாதிரம் காவலர்—(எவராலும்) வியந்துகூறப்படுகின்ற திக்குப்பாலகர்களும், கதிர்—சூரியனும், மதி—சந்திரனும், புறக்கோள்—(செவ்வாய்முதலிய)ஏனையகிரகங்களும், மிகைய தாரகை—மேன்மையினையுடைய நட்சத்திரங்களும், அன்னைகள்— சப்தமாதர்களும், வசுக்கள்—அட்டவசுக்களும், வேறு உள்ளார்—பிறரும், மகிழும் விஞ்சையர்—உவகையுற்றவித்தியாதரர்களும், முனிவரர்—முனிவர்களுமாகிய, யாவரும் வந்தார்—எல்லோரும் வந்தார்கள் எ—று.

முன்னொருகாலத்தில் வேதங்களை வெளிப்படுத்தற்பொருட்டுத் திருமால் அன்னப்பறவையுருக்கொண்டனராதலின் 'எகினமாகியமால்' எனவும், அச்சுவினி முதலிய இருபத்தேழுநக்ஷத்திரங்களென்பார் 'மிகையதாரகை' எனவுங்கூறினர். விஞ்சையருவகையுற்றது திருமணக்கேள்வியாலென்க. சப்தமாதர்களாவார்:—பிராமி மாகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வாராகி இந்திராணி சாமுண்டி என்பவர்கள். அட்டவசுக்களாவார்:—அனலன் அனிலன் ஆபச்சைவன் சோமன் தரன் துருவன் பிரத்தியூஷன் பிரபாசன் என்பவர்கள். (கஅ)

வாலி தாகிய மறைகளா கமங்கண்மந் திரங்கண்
ஞால மாதிய பூதங்க ளுலகங்க ணகர்கள்
கால மானவை யேனைய பொருளெலாங் கடவுட்
கோல மெய்தியவந் திறுத்தன கயிலையிற் குறுகி.

இ—ள்: வாலிது ஆகிய மறைகள்-தூய்மையினையுடைய நால்வேதங்களும், ஆகமங்கள்—இருபத்தெட்டாகமங்களும், மந்திரங்கள்—சப்தகோடி மகாமந்திரங்களும், ஞாலம் ஆதிய பூதங்கள்—(பிருதுவிமுதலிய) ஐம்பூதங்களும், உலகங்கள்—பதினன்குலகங்களும், நகர்கள்—(அவ்வுலகங்களிலுள்ள) நகரங்களும், காலம் ஆனவை—காலங்களும், ஏனைய பொருள் எலாம்—பிறபொருள்களும் ஆகிய எல்லாம், கடவுள் கோலம் எய்தி—தேவருபத்தைக்கொண்டு, கயிலையில் குறுகி வந்து இறுத்தன—திருக்கைலாசமலையில் அணுகிவந்து தங்கின எ—று.

எல்லாநூற்கு முதனூலாதலின் 'வாலிதாகியமறை' என்றார். மந்திரங்கள் என்றது சுவாஹா பட் வௌஷட் ஹூம்பட் நம: என்பதுமுதலியபல்லவங்களையுடைய சப்தகோடிமகாமந்திரங்களை. காலம் என்றது வருடம் அயனம் பக்ஷம் மாசம் முதலியவற்றை. எலாமென்பதை மறைமுதலியவற்றிற்குந் தனித்தனியியைக்க. (கக)

இந்த வாற்றினாற் கயிலையில் யாவரும் யாவும்
வந்த தன்மையை நோக்கியே யாற்றவு மகிழ்ந்து
நந்தி யுள்புகுந் தமலனுக் கித்திற நவில
முந்தை யன்னவர் யாரையுந் தருகென மொழிந்தான்.

இ—ள்: நந்தி—திருநந்திதேவர், இந்தவாற்றினால் கயிலையில் யாவரும் யாவும் வந்ததன்மையை நோக்கி— இவ்வாறு திருக்கைலாசமலையில் எல்லா உயர்திணைப்பொருள்களும் எல்லா அஃறிணைப்பொருள்களும் வந்துசேர்ந்ததன்மையைப் பார்த்து, ஆற்றவும் மகிழ்ந்து—மிகவுஞ் சந்தோஷித்து, உள் புகுந்து—உட்சென்று, அமலனுக்கு இத்திறம் நவில—சிவபிரானுக்கு இத்தன்மையை விண்ணப்பஞ்செய்ய, முந்தை—முதற்கடவுளாகிய சிவபிரான், அன்னவர் யாரையும் தருக என மொழிந்தான்—அவரனைவரையும் (ஈண்டு) அழைத்துவருகுதியென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று. (உ0)

புராரி யித்திற மொழிதலுஞ் சிலாதனார் புதல்வ
னோராய்மு தற்கடை குறுகியே யுருத்திர கணங்கண்
முராரி யாதியாம் விண்ணவர் முனிவரெல் லோரும்
விராவு நீர்மையிற் சென்றிடக் கோயிலுள் விடுத்தான்.

இ—ள்: புராரி இத்திறம் மொழிதலும்—முப்புரங்களையுமெரித்தருளிய சிவபிரான் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளுதலும், சிலாதனார் புதல்வன்— சிலாதமுனிவரது புத்திரராகிய திருநந்திதேவர், ஓராய் முதல் கடை குறுகி—அவ்விடத்தினின்றும்நீங்கி முதல்வாயிலில்வந்து, உருத்திரகணங்கள்—உருத்திரகணத்தவர்கள், முராரி ஆதி ஆம் விண்ணவர்—விஷ்ணுமூர்த்திமுதலாகிய தேவர்கள், முனிவர் எல்லோரும்— முனிவர்கள் ஆகிய அனைவரும், விராவும் நீர்மையில் சென்றிட—ஒருமித்ததன்மையாகப் போம்படி, கோயிலுள் விடுத்தான்—திருக்கோயிலினுள் அனுப்பினார் எ—று.

சிலாதன்-கல்லை உண்டவன். சிலா-கல். அதன்-உண்டவன். ஆர் விகுதிமேல்விகுதி. முன்னொருகாலத்தில் திருமறைக்காடென்னுந் திருப்பதியில் வேதியர்குலத்தில் ஒரு புத்திரர்தோன்றி வளர்ந்து ஐந்தாண்டுநிறைவேறும் பிராயத்தில், ஒருநாள் ஒரு அந்தணர் அவர்வீட்டிற் பிக்ஷைக்குவர, அப்பொழுது அப்புத்திரர் அவரது பிக்ஷான்னத்தில் ஒரு கல்லையிட்டனர். அந்தணர் அதனையுணராது பிக்ஷையேற்றுச்சென்று அந்தச்சிறுகல்லுடன் அவ்வன்னத்தை உண்டனர். பின்னர் அப்புத்திரர் வளர்ந்து, வேதமுதலிய நூல்களை நன்குணர்ந்து, பெருந்தவமியற்றி, அதுகாரணத்தாற் கோரதபசியென்னும் பெயர்பெற்று, அட்டமாசித்திகளிலும்வல்லவராய், அவற்றின்வல்லமையால் யமபுரத்தைப்பார்க்கவிருப்புற்றுச் சென்று, அங்குள்ள பலதண்டனைகளையும் பார்த்துவருகையில், ஓர் பெரியகல்மலையிருக்கக்கண்டு, அங்குள்ள தண்டத்தலைவரைநோக்கி, 'இப்பெரும்பாறையின் வரலாறென்னை?' என்றுவினவ, அவர்கள், 'ஐயரே! கோரதபசியென்னும் ஒரு பாபி பிக்ஷையேற்கவந்த ஒரு அந்தணனது அன்னத்திற் கல்லெறிய, அந்தணன் அதனை அறியாது புசித்தனன். அக்கல்லே இங்குப்பெருமலையாக வளருகின்றது. அக்கோரதபசி இறந்தபின் இங்குவந்து இதனையுண்பான்' என்றனர். அதுகேட்ட கோரதபசி தாம் இளமையிற்செய்ததீங்கு இவ்வாறு விளைந்ததேயென்று துக்கித்து, அவர்களைநோக்கி 'இப்பாவத்தைச்செய்தவன் இத்தீங்கினின்று நீங்குதற்குவழியாது' என்று வினவினர். அவர்கள் 'இவ்வளவினதாகிய ஒருமலையைப் பூமியிற்கரைத்துண்பானாயின் இது கரைந்துவிடும்' என்றனர். கோரதபசி அங்குள்ள அற்புதங்களையெல்லாம் பார்த்துமுடித்தபின் பூமியில்வந்து, ஒரு பெருமலையைக் குறிப்பிட்டுத் தினந்தோறும் இடித்து நீரிற்கரைத்துப் பருகிமுடித்தனர். யமபுரத்தில் அவர்க்காய்வளர்ந்தமலையுங் கரைந்தொழிந்தது. இதுகாரணத்தாலிவர்க்கிப்பெயருண்டாயதென்க.

ஓராய்-ஒருவிஎன்பதன்விகாரம். முர அரி=முராரி;வடநூன்முடிபு. முரனென்னுமசுரனைக்கொன்றவன் என்பதுபொருள். எல்லோருமென்றதனாற் பூதராதியரையுமமைக்க. வேறுவேறாய்க்குழீஇநின்றோரெல்லாமொருங்குகுழீஇப்போயினரென்பார் 'விராவுநீர்மையிற்சென்றிட' என்றார். (உக)

விடுத்த காலையி லரியணை மீமிசை விளங்கிக்
கடுத்த யங்கிய கண்டன்வீற் றிருப்பது காணூஉ
வடுத்த வன்புடன் யாவரு மிறைஞ்சியே யவன்சீ
ரெடுத்து நீடநின் றேத்தியே யணுகின ரிமைப்பில்.

இ—ள்: விடுத்த காலையில்—திருநந்திதேவர் உள்விடுத்தவுடன், கடுநயக்கிய கண்டன் அரியணை மீமிசை விளங்கி வீற்றிருப்பது யாவரும் காணூஉ—நஞ்சார்ந்த திருமிடற்றையுடைய சிவபிரான் சிங்காசனத்தின்மேற் பிரகாசித்து எழுந்தருளியிருத்தலை அனைவருந் தரிசித்து, அடுத்த அன்புடன் இறைஞ்சி—தம்மகத்தில்விளைந்தகாதலுடன் வணங்கி, அவன் சீர் எடுத்து நீடநின்று ஏத்தி— அவரதுகீர்த்தியைத்தெரிந்து நெடுநேரநின்று துதித்து, இமைப்பில் அணுகினர்—விரைவிற்சமீபித்தார்கள் எ-று. (௨௨)

நீண்ட சீருருத் திரர்தமை நிறைந்தபல் கணத்தை
யீண்டு தேவரை முனிவரை வீற்றுவீற் றிசையா
வாண்டு தன்விரற் சுட்டியே யாதிநா யகற்குக்
காண்டல் செய்துநின் றேத்தினன் வேத்திரக் கரத்தோன்.

இ—ள்: நீண்ட சீர் உருத்திரர் தமை—மிகுந்த சிறப்பினையுடைய உருத்திரர்களையும், நிறைந்த பல் கணத்தை—நிறைந்துள்ள பலபூதர்களையும், ஈண்டு தேவரை—நெருங்கிய தேவர்களையும், முனிவரை—முனிவர்களையும், வீற்று வீற்று இசையா—வெவ்வேறாக எடுத்துக்கூறி, ஆண்டு தன் விரல் சுட்டி—அவர்நிற்குமிடத்துத் தமது விரலினாற்குறிப்பிட்டு, ஆதி நாயகற்கு காண்டல்செய்து நின்று— ஆதிகடவுளாகிய சிவபிரானுக்குக்காண்பித்து நின்று, ஏத்தினன்—துதித்தார், வேத்திர கரத்தோன்—பொற்பிரம்பையேந்திய கையையுடைய திருநந்திதேவர் எ—று.

அங்குவந்தாரனைவரினுஞ் சிறந்தாரென்பதுபோதர 'நீண்டசீருருத்திரர்' என்றார். (௨௩)

ஆர ழற்பெய ரண்ணல்கூர் மாண்டனா டகத்தோன்
வீர பத்திரன் முதலுருத் திரர்கண்மே தக்க
பாரி டத்தவர் யாவரு மெம்பிரான் பாங்கிற்
சேர லுற்றுநின் றேத்தினர் பணிந்தசிந் தையராய்.

இ—ள்: ஆர் அழல் பெயர் அண்ணல்—நிறைந்த அக்கினியின்பெயரை [காலாக்கினியென்னும்பெயரை] உடையதலைவர், கூர்மாண்டன்—கூர்மாண்டேசர், ஆடகத்தோன்—ஆடகேசர், வீரபத்திரன் முதல் உருத்திரர்கள்— வீரபத்திரர் முதலாகிய உருத்திரர்களும், மேதக்க பாரிடத்தவர்— மேன்மைமிக்க பூதர்களும், யாவரும்-பிறரனைவரும், எம்பிரான் பாங்கில் சேரலுற்று—எங்கள் தலைவராகிய சிவபிரானது பக்கத்திற் சார்ந்து, பணிந்த சிந்தையராய் நின்று ஏத்தினர்—தாழ்ந்தமனத்தையுடையவர்களாய் நின்று துதித்தார்கள் எ—று.

பூதகணாதிபரென்பார் 'மேதக்கபாரிடத்தவர்' எனவும், அகந்தைநீங்கியென்பார் 'பணிந்தசிந்தையராய்' எனவும் கூறினார். 'உருத்திரர்கண்மேதக்க' என்பது அச்சுப்புஸ்தகங்களில் 'உருத்திரகணமேத்த' எனக் காணப்படுகின்றது. உருத்திரகணமும் பாரிடத்தவர்யாவருமேத்தினரென்னாது, உருத்திரகணமேத்தப்பாரிடத்தவர்யாவருமேத்தினர் என்றது மிகைபடக்கூறலாமேயெனவும், பூதகணங்கண்மாத்திரம் எம்பிரான் பாங்கிற்சேர்ந்ததாகக்கூறி அவரிற்சிறந்த உருத்திராதியரை அங்ஙனங்கூறாதொழிந்தமை யாதுபற்றியெனவும், வினாநிகழ்தற்கிடனாதலின் அப்பாடஞ்சிறந்ததன்றென்க. ()

அன்ன காலையி னன்முக னெம்பிரா னணிவா
னுன்னி யேமுடி முதலிய பல்கல னுதவிப்

பொன்னி னுயதோர் பீடிகை யிற்கொடு போந்து
முன்ன ராகவைத் திறைஞ்சியே யித்திற மொழிவான்.

இ—ள்: அன்ன காலையில்—அச்சமையத்தில், நான்முகன்—நான்குமுகங்களையுடைய பிரமதேவர், எம்பிரான் அணிவான் உன்னி—எங்கள் கடவுளாகிய சிவபிரான் அணிந்துகொள்ளும்படி சிந்தித்து, முடி முதலிய பல் கலன் உதவி- கிரீடமுதலாகிய பல ஆபரணங்களைச்சிருட்டித்து, பொன்னின் ஆயது ஓர் பீடிகையில் கொடு போந்து-பொன்னாற்செய்யப்பட்ட ஒரு பீடத்தில்வைத்துக்கொண்டுபோய், முன்னர் ஆகவைத்து—(அப்பெருமானது) திருமுன்னிலையில் வைத்து, இறைஞ்சி—வணங்கி, இத்திறம் மொழிவான்—இவ்வாறு விண்ணப்பஞ்செய்வார் எ—று.

அணிவான் உன்னி என்பவற்றைத்தனித்தனி உதவியென்பதனோடியைத்து,சிந்தையானுதவியென்பார் 'உன்னி-உதவி' என்றாரென அகலங்கூறினுமாம். (௨௫)

ஐய கேளுனக் கில்லையாற் பற்றிக லடியே
முய்யு மாறிவண் மணஞ்செய வுன்னினை யுன்பான்
மையன் மாசுணப் பணியெலா மாற்றிமற் றிந்தச்
செய்ய பேரணி யணிக்தரு ளென்றுசெப் பினனே.

இ—ள்: ஐய கேள்—பெருமானே! கேட்டருள்க, உனக்கு பற்று இகல் இல்லை—தேவரீருக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை, அடியேம் உய்யுமாறு இவண் மணஞ்செய உன்னினை—அடியேங்களுய்யும்படி இப்பொழுது திருமணஞ்செய்யநினைத்தருளினீர் (ஆதலின்), உன் பால் மையல் மாசுண பணி எலாம் மாற்றி—தேவரீரிடத்துள்ள மயக்கத்தைத்தருகின்ற சர்ப்பங்களாகிய ஆபரணங்களையெல்லாம் நீக்கி, இந்த செய்ய பேர் அணி அணிந்தருள் என்று செப்பினன்—இந்தச் செப்பமாகிய பெருமைபொருந்திய ஆபரணங்களை அணிந்தருள்க என்று பிரார்த்தித்தார் எ—று.

மணஞ்செய்யமுயன்றது சிறியேங்கள் வேண்டுகோட்காகவே தேவரீரது விருப்பமன்றாதலின் இவ்வேண்டுகோளையுமேற்றருள்கவென்பதாம்.
மையலைத்தருவதுகடித்தழியென்க.

மற்று அசை; வினைமாற்றெனினுமாம். குராஅதியமைச்சங்கரிக்கவல்ல குமாரரைத்தோற்றுவித்தற்கேதுவாதலின் 'அடியேமுய்யுமாறு' எனவும், அணிக்குதவாதனவென்பார் 'மையன்மாசுணப்பணி' எனவும்; மணவணிக்கேற்றனவென்பார் 'செய்யபேரணி' எனவும் கூறினார். (௨௬)

பங்க யாசனன் குறையிரந் தினையன பகர
வங்கண் மூரல்செய் தன்புட னீயளித் திடலா
லிங்கு நாமிவை யணிந்தென மகிழ்ந்தன மென்றுச்
செங்கை யாலணி கலத்தினைத் தொட்டருள் செய்தான்.

இ—ள்: பங்கய ஆசனன் குறையிரந்து இனையன பகர-தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவர் குறையிரந்துநின்று இவ்வாசகங்களை விண்ணப்பஞ்செய்ய, அங்கண் மூரல் செய்து—அப்பொழுது (சிவபிரான்) குறுநகைசெய்து, நீ அன்புடன் அளித்திடலால் இங்கு நாம் இவை அணிந்தென மகிழ்ந்தனம் என்று—(பிரமனே!) நீ பத்தியுடன் தருதலால் இப்பொழுது நாம் இவ்வணிகளை அணிந்தாற்போல உவகையுற்றே

மென்று "திருவாய்மலர்ந்தருளி, செம் கையால் அணிகலத்தினை தொட்டு அருள் செய்தான்— சிவந்த திருக்கரங்களால் அவ்வாபரணங்களைத்தீண்டி அநுக்கிரகஞ்செய்தார் எ—று.

பங்கய ஆசனன்=பங்கயாசனன்; வடநூன்முடிபு. அணிந்தாலென என்பதில் ஆல் விகுதிதொக்கது. குறையிரத்தல் குறையைத்தீர்க்குமாறு மெலிந்துவிற்றல். கண் ஈண்டுக்காலத்தையுணர்த்திற்று. இவற்றினும் பன்மடங்கழகினவாகிய அணிகளை வினைக்குமுன்னமைக்கும் ஆற்றலுடையேமென்பதைச்சிந்தியாது கொணர்ந்தனனே! இவனறிவிருந்தவாறென்னையெனச் சிந்தித்துக் குறுநகைசெய்தனர்; அங்ஙனங்கொணர்ந்தது தாம் பேரணியுடன்செல்லவேண்டுமென்னுங் காதலினாதலின் 'அன்புடனீயளித்திடலால்' என்றார். அதுபற்றி அவர்வேண்டுகோளை ஒருவாறு நிறைவேற்றவேண்டுதலின் இவையணிந்தெனமகிழ்ந்தனமென்னச்செங்கையாலணிகலத்தினைத்தொட்டனர் என்க. ()

பிரம னன்புகண் டிவ்வகை யருள்செய்த பின்ன
ரொருதன் மெய்யணி பணிகளே யணிகளா யுறுவான்
றிருவு ளங்கொள வவ்வகை யாகிய செகத்தை
யருள்பு ரிந்திடு பராபரற் கிச்செய லரிதோ.

இ—ள்: பிரமன் அன்பு கண்டு இவ்வகை அருள்செய்தபின்னர்—பிரமதேவரது மெய்யன்பையுணர்ந்து இவ்வாறு திருவருள்செய்தபின்பு, ஒரு தன் மெய் அணி பணிகளே அணிகளாய் உறுவான் திருவுளங்கொள—ஒப்பற்ற தமதுதிருமேனியிற்புனைத சர்ப்பங்களே ஆபரணங்களாகப்பொருந்தும்படி திருவுள்ளம்பற்ற, அவ்வகை ஆகிய-(அவைகள்) அவ்வாறே ஆயின, செகத்தை அருள் புரிந்திடு பராபரற்கு இ செயல் அரிதோ-உலகமனைத்தையும்படைத்த இறைவருக்கு இச்செய்கைஅரியதா? (அன்றே!) எ-று.

எல்லாவுலகங்களையும் படைக்கும் இறைவர் இவ்வணிகளைப்படைப்பதோரற்புதமாகாதென்றபடி. ஏ தேற்றம். பராபரன்-பரைக்குப்பரன். (௨௮)

கண்டி யாவரு மற்புத மடைந்துகை தொழலும்
வண்டு லாங்குழற் கவுரிபா லேகுவான் மனத்திற்
கொண்டு பாங்குறை தலைவருக் குணர்த்தியே குறிப்பாற்
பண்டு மாலயற் கரியவ னெழுந்தனன் படர.

இ—ள்: யாவரும் கண்டு—(அச்செய்கையை) அனைவரும்பார்த்து, அற்புதம் அடைந்து கைதொழலும்—அதிசயங்கொண்டு கைகுவித்தலும், பண்டு மால் அயற்கு அரியவன்—முற்காலத்தில் விஷ்ணுமூர்த்திக்கும் பிரமதேவர்க்கும் அறிதற்கருமையாய்நின்ற சிவபிரான், வண்டு உலாம் குழல் கவுரிபால் ஏகுவான் மனத்தில் கொண்டு—வண்டுகள்மொய்க்கின்ற கூந்தலையுடைய பார்ப்பதியாரிடத்துத் திருமணஞ்செய்யப்போம்படி திருவுளம்பற்றி, பாங்கு உறை தலைவருக்கு குறிப்பால் உணர்த்தி—பக்கத்தினிற்கின்றதலைவர்களுக்குத் திருக்கண்குறிப்பினாலறிவித்து, படர எழுந்தனன்—செல்லும்படி எழுந்தருளினார் எ—று.

அத்புதம் என்னும் வடசொல் தகரவொற்று றகரவொற்றாகத்திரிந்து, தமிழில் அற்புதமெனவழங்கிற்று. (௨௯)

கணங்கள்செல்படல முற்றிற்று.

ஆக விருத்தம் ௭௱௪.

# திருக்கல்யாணப்படலம்.

சிவபிரான் பார்ப்பதியாரைத் திருமணஞ்செய்தசரித்திரத்தைக் கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

திருமணத்திற்கெழுந்தருளியசிவபிரான், திருநந்திதேவர் முன்சென்று வழியொதுக்கத் தேவர்கள் துதிக்கத் தும்புருநாரதரிசைபாடத் திருக்கோயிலினின்று வெளியே வந்து, குண்டோதரனென்னும் பூதசேனாபதி முதுகுவளைந்துகொடுக்க அவனதுதோளிற்றமது திருவடியையவைத்து இடபவாகனத்திலிவர்ந்தருளி, அந்நகரின் புறத்தேநின்ற பூதகணத்தினர்யாவருந் தரிசித்து நமஸ்கரித்து ஆரவாரிக்க, விநாயகக்கடவுள் பூதசேனைகளுடன் முன்செல்ல, சூரியனுஞ்சந்திரனுங் குடைபிடிக்க, வாயுதேவன் சாமரமிரட்ட,வருணன் விசிறிவீச, இந்திரன் ஆலவட்டமசைக்க, பூதர்கள் பலவகை வாத்தியங்களையுமியம்ப, உருத்திரர்முதலாக அங்குவந்தார் தத்தமக்குரியவாகனமுதலியவற்றிற் சிவபிரானனுமதிப்படியிவர்ந்து வந்துசூழ, இமையமலையிற்சென்றருளினர். மலையரசன் அந்நகரினரனைவரும் விழாக்கொண்டாடுமாறு அழைத்துப்போயினன். அப்பொழுது அவரைக்கண்டபெண்களெல்லாங் காமமுற்றனர். சிவபிரான் அந்நகர்ச்சிறப்பனைத்தையுந் திருநோக்கஞ்செய்து, அரமனைக்கணித்தாகச்சென்று மங்கையர்கள் ஆராத்திரிகஞ்சுற்றியபின் மணச்சாலையின்முன்சென்று இடபவாகனத்தினின்றுமிழிந்தருளினர். உடனே அவரைச்சூழ்ந்துவந்தோர்களும் தத்தம்வாகனங்களினீங்கினர். அப்பொழுது மேனாதேவி பலபெண்களுடன்வந்து காமதேனுப்பொழிந்த பாலினால் அபிடேகமியற்றினள். பின், சிவபிரான் திருநந்திதேவரிட்ட பாதுகையிற்றிருவடிகளைச்சேர்த்தி, பிரமவிஷ்ணுக்கள் இருபாலுங் கைகொடுத்துவரத் திருமணச்சாலையுட்சென்று, அப்பிரமவிஷ்ணுக்களது வேண்டுகோட்படி அங்குள்ள சிறப்பனைத்தையுந் திருநோக்கஞ்செய்து, தமக்கேற்றவாறமைத்திருந்த இரத்தினசிங்காசனத்தில் வீற்றிருந்தனர். உடனே அவருடன்வந்த உருத்திரர்முதலிய அனைவருந் தத்தமக்கேற்ற ஆசனங்களிலிருந்தனர். அப்பொழுது, உலகத்திலுள்ளாரனைவரும் வந்திருக்கப்பெறுதலாற் பாரந்தாங்கலாற்றாது இமையமலைதுளங்கப் பூமியின்வடபாகம் தாழ்ந்தது; தென்பாகம் உயர்ந்தது. அச்சமயத்திற் சிவபிரான் அகத்தியமுனிவரை அழைப்பித்துப்பொதியமலையிற்போயிருக்குமாறனுப்பிப்பூமியைச்சமப்படுத்தினர். அதன்மேல், தூர்க்கைவாள்பிடிக்க, இந்திராணி அடைப்பைதாங்க, கங்காநதிகள் சாமரம்வீச, காளிகள் குடைபிடிக்க, இலக்குமிதேவி திருக்கைபிடித்துவரப் பார்ப்பதியார்மணச்சாலைக்கெழுந்தருளிவந்து சிவபிரானது பாதங்களைவணங்கி அவரனுமதிப்படி அவரதுபக்கத்தில் வீற்றிருந்தனர். அதன்பின்பு மேனாதேவி கரகத்தினின்று தீர்த்தத்தைவார்க்க, மலையரசன் சிவபிரானது பாதங்களைவிளக்கி, கந்தம் புஷ்பம் முதலியவற்றைச்சாத்திப் பூசித்து, தன்மகளைத் தத்தஞ்செய்துகொடுத்து,அதன்மேல் காமதேனுப்பொழிந்தபால் வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழமுதலிய பொருள்களைப் பொற்பாத்திரத்துடன் திருமுன்னிலையில்வைத்து 'ஸ்வாமீ! இவற்றைத் திருவமுதுசெய்தருள்க' என்று பிரார்த்தித்தனன். சிவபிரான் அவற்றை அமுதுசெய்ததாகப் பாவித்துத் திருக்கரத்தாற்றொட்டனர். அதன்மேல் மலையரசன் அவற்றையெல்லாம் வந்தார்க்குவழங்குமாறு வேறிடத்துச் சேமித்துவைத்தனன். பின்பு பிரமதேவர் சிவபிரானிடம் அனுமதிபெற்று, வியாழபகவான் சுக்கிராசாரியர்முதலிய மகான்கள் தம்பக்கத்திற் சூழ்ந்திருக்க, ஆசாரியராயிருந்து,விவாகச்சடங்கனைத்தையும் நட

ப்பித்தனர். பின்பு அங்குள்ளாரனைவரும் முறைப்படி சிவபிரானையுந் தேவியாரையும் நமஸ்கரித்தனர். இமையமலையரசனுஞ் சுற்றத்தாருடன் அவரை நமஸ்கரித்துச் சிவநிர்மாலியங்களையெல்லாம் அங்குவந்தாரனைவர்க்கும் வழங்கினன். அப்பொழுது இரதிதேவி வந்து குறையிரப்ப, சிவபிரான் மன்மதனை எழுப்பி அவளுக்குமாத்திரம் உருவமாயும் ஏனையோர்க்கு அருவமாயும் இருக்கும்படி கட்டளையிட்டு, விடைகொடுத்தனுப்பி, உருத்திரர்முதலியயாவருஞ்சூழ்ந்துவரத் திருக்கைலாசமலையிற்சென்று, உடன்வந்தாரனைவரையுந் தம்மூர்க்குப்போகுமாறு விடைகொடுத்தனுப்பி முன்போலவீற்றிருந்தனர். அதன்மேல், ஆணொடுபெண் கலப்பற்றிருந்த உலகமெல்லாம்போகமனுபவித்து இன்பமுற்றன என்பதாம்.

நாற்ற டம்புயக் கண்ணுத னந்தியம் பெருமான்
போற்றி முன்செல வமரரு முனிவரும் புகழ
வேற்ற தும்புரு நாரதர் விஞ்சையர் யாரும்
பாற்றி யக்கமு நீழலு மாமெனப் பாட.

இ—ள்: தடம் நால் புய கண்ணுதல் நந்தியம்பெருமான் போற்றி முன் செல—விசாலித்த நான்குபுயங்களையும் நெற்றிக்கண்ணையுமுடைய திருநந்திதேவர் துதித்து முன்னேநடக்க, அமரரும் முனிவரும் புகழ—தேவர்களும் முனிவர்களும் புகழ, ஏற்ற தும்புரு நாரதர் விஞ்சையர் யாரும் பாற்றியக்கமும் நீழலும் ஆம் எனபாட—தகுதி பொருந்திய தும்புரு நாரதர் வித்தியாதரர்முதலிய எல்லோரும் பருந்தினியக்கத்தையும் நிழலையும்போலத் (தொடர்புறப்) பாட எ—று.

சிவரூபத்தையறிதற்குச் சிறந்தவிலக்கிணைகளாதலின் நாற்புயங்களையும் நுதற்கண்ணையும் எடுத்துக்கூறினார். கூறவே, சிவசாரூப்பியமுடைமைபோதருமென்க. தட என்னுமுரிச்சொல்லைத்தொல்காப்பியர் முதலாயினோர் அ க ர வீ று ம் நிகண்டாசிரியர் மகரவீறும்வழங்கினர். நுதற்கண் என்பது கண்ணுதலென மொழிமாறிநின்றவின் இலக்கணப்போலி; அங்ஙனங்கொள்ளாது, கண்பொருந்தியநெற்றியெனவிரிப்பர் சிலர், அஃதித்துணைச்சிறப்பின்றன்று. அம் சாரியை. திருநந்திதேவர் முன்சென்றமை வழியொதுக்குதற்கென்க. ஏற்ற என்னுமடையை ஏனையோர்க்குமொட்டுக; தேவகாயகருட் சிறந்தமையானிங்ஙனம் விதந்தார். பருந்து பறக்குங்கால் மெல்லெனப் பலமுறை வட்டமிட்டு,ஒவ்வோர்வட்டத்தினும் முறையே சிறிதுசிறிதாக உயர்ந்து அல்லது தாழ்ந்துசெல்வதுபோல, காலமுறைக்குஞ் சுரமுறைக்குமேற்ப, மாத்திரைதவறுபடாது உதாத்தமாகவும் அநுதாத்தமாகவும் இசைக்கப்படுதலின் மிடற்றிசைபாற்றியக்கம்போல்வது. அப்பருந்தை நீழல் ஒத்துத்தொடர்தல்போலத்தழீஇநடத்தலின் யாழிசை நீழல்போல்வது.

இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம். (க)

சொன்ம றைத்தொகை யாகம முதலிய துதிப்பப்
பொன்மை பெற்றதன் கோநகர் நீங்கியே பொற்றாள்
வன்மை பெற்றகுண் டோதரன் மொய்ம்பிடை வைத்துச்
சின்ம யத்தனி மால்விடை யேறினன் சிவனே.

இ—ள்: சொல் மறைத்தொகை ஆகமம் முதலிய துதிப்ப—ஓதப்படுகின்ற நால்வேதங்களும் இருபத்தெட்டாகமங்களுமுதலாகிய நூல்கள் தோத்திரஞ்செய்ய, பொன்மை பெற்ற தன் கோநகர் நீங்கி—பொன்னிறமமைந்த தமது திருக்கோயிலைநீங்கி, வ

ன்மை பெற்ற குண்டோதரன் மொய்ம்பிடை பொன் தாள் வைத்து— வலிமையைப் பெற்ற குண்டோதரனென்னும் பூதசேனாதிபனுடைய தோளின்மேற் பொன்போன்ற ஒருதிருவடியைத்தூக்கிவைத்து, சின்மய தனி மால் விடை ஏறினன்— ஞானவடிவாகிய ஒப்பற்ற பெரிய இடபவாகனத்திலெழுந்தருளினார், சிவன்—சிவபிரான் எ—று.

முதலிய என்றதனாற் புராணங்களையும் மிருதிகளையும் பிறவற்றையுங்கொள்க. குண்ட உதரன்=குண்டோதரன்,குணசந்தி; குடம்போன்றவயிற்றையுடையவனென்பது பொருள். சித் மயம்=சின்மயம்,வடநூன்முடிபு. முற்செய்யுளில் செல புகழ பாட என்னுமெச்சங்களும், இச்செய்யுளில் துதிப்ப என்னுமெச்சமும், ஏறினன் என்னுமுற்றோடுமுடிந்தன.

எழுதாக்கேள்வியாதலின் 'தொன்மறை' என்றார். இதற்கு, எவராலு முதனூலென வியந்துரைக்கப்படுகின்றமன்ற, சொற்களையுடையமறை எனவுரைப்பினுமாம். எவ்வொளியையுமடக்கிவிளங்குந் திருக்கைலாசகிரியினடுவணிருந்துந்தன்னொளிகுன்றாமையின் 'பொன்மைபெற்றதன்கோநகர்' எனவும், செந்நிறமுடைமையாலும் பெறுதற்கருமையாலும் 'பொற்றாள்' எனவும், சிவபிரான் திருவடிவைத்திவர்ந்துழித் தளர்வறநிற்கும் பேராற்றலை அருந்தவஞ்செய்துபெற்றுடையனாதலின் 'வன்மைபெற்றகுண்டோதரன்' எனவும், தருமவடிவாதலின் 'சின்மயத்தனிமால்விடை' எனவும் விசேடித்தார். மால்விடையென்பதற்குத் திருமாலாகிய இடபமெனக்கூறினுமாம். திருமால் இடபமாய்த்தாங்கியசரித்திரத்தைக் காஞ்சிப்புராணத்திற் காண்க. (௨)

விடையின் மீமிசைத் தோன்றியே யெம்பிரான் விளங்கப்
புடையின் வந்தவ ரல்லது திருநகர்ப் புறத்துக்
கடையி னின்றவர் யாவருங் கண்டுகண் களியா
வடைய வேபணிந் தேத்தின ரளக்கரி னார்த்தார்.

இ—ள்: எம்பிரான் விடையின் மீமிசை தோன்றி விளங்க—எங்கள் தலைவராகிய சிவபிரான் இடபவாகனத்தின்மீதெழுந்தருளிக் காட்சிப்பட, புடையின் வந்தவர் அல்லது திரு நகர் புறத்து கடையில் நின்றவர் யாவரும் கண்டு—பக்கத்தில் உடனின்றுவந்தவர்களேயன்றிச்சிறந்த அந்நகரத்தின்புறத்திலுள்ளவாயிலில் நின்றவர்களனைவரும் அதனைத்தரிசித்து, கண் களியா—நேத்திரானந்தமுற்று, அடைய பணிந்து ஏத்தினர்—ஒருசேர வணங்கித்துதித்து, அளக்கரின் ஆர்த்தார்—கடல்போல ஆரவாரித்தார்கள் எ—று.

ஏத்தினர்-முற்றெச்சம். நகர்ப்புறத்துநின்றார்க்குப் பரிசனச்சூழ்வான் மறைக்கப்படாது தரிசனப்படவென்பார் 'விடையின்மீமிசைத்தோன்றியேயெம்பிரான்விளங்க' என்றார். நகர்ப்புறத்துக்கடையினின்றோர் உட்புகுந்த உருத்திரர் பூதத்தலைவர் முதலியோரின்சேனைகளும் பிறருமாம். (௩)

நந்தி மேல்கொண்டு நந்திமே வுறுதலு நந்தித்
தந்தி மாமுகத் தவுணர்கோ னலமரத் தடிந்தோ
னைந்து நூற்றெழு கோடிபூ தப்படை யணுக
வந்து வந்தனை செய்துமுன் போயினன் மாதோ.

இ—ள்: நந்தி—சிவபிரான், நந்திமேல்கொண்டு மேவுறுதலும்— இடபவாகனத்தின்மீதெழுந்தருளியிருத்தலும், மா தந்திமுகத்து அவுணர்கோன் நந்தி அலமர த

டிங்தோன்—பெரிய யானைமுகத்தையுடைய அசுரத்தலைவன் [கயமுகாசுரன்] விலைகெட்டுத் துன்பப்படும்வண்ணங்கொன்றவராகிய விநாயகக்கடவுள், ஐந்நூற்று எழுகோடி பூதப்படை அணுக வந்து—ஐஞ்ஞூற்றேழுகோடி பூதசேனைகள்சூழ அங்கனம்வந்து, வந்தனைசெய்து முன் போயினன்—வழிபாடுசெய்து முன்சென்றார் எ—று.

நந்துதலென்பது ஆக்கம் கேடு இரண்டிற்கும் பொதுமொழியாயினுந் தகுதிநோக்கி ஈண்டுக் கெடுதலென்னும் பொருடந்தது. வழியினேரும் விக்கினங்களைத் தீர்க்கவல்லரென்பதுபோதர 'நந்தித்தந்திமாமுகத்தவுணர்கோனலமரத்தடிந்தோன்' எனவும், எக்கருமங்களினுமுன்னிற்குமதிகாரத்தைச் சிவபிரானிடம் பெற்றவாறே சென்றனராதலின் 'முன்போயினன்' எனவும் கூறினர். (௪)

கதிருஞ் சோமனுங் கவிகையுஞ் சீகரங் காலு
முததி யண்ணல்சாந் தாற்றியு மும்பர்தங் கோமான்
புதிய கால்செயும் வட்டமு மெடுத்தனர் புடைபோய்
முதிரு மார்வமோ டப்பணி புரிந்தனர் முறையால்.

இ—ள்: கதிரும் சோமனும் கவிகையும்-சூரியனுஞ்சந்திரனுங்குடையையும், கால் சீகரமும்—வாயுதேவன் சாமரத்தையும், உததி அண்ணல் சாந்தாற்றியும்—சமுத்திரராஜனுகிய வருணன் சிற்றாலவட்டத்தையும், உம்பர்தம் கோமான் புதிய கால் செயும் வட்டமும் எடுத்தனர்—தேவேந்திரன் புதிதாகிய பேராலவட்டத்தையுங் கைக்கொண்டு, புடை போய்—சிவபிரானதுபக்கத்திற்சென்று, முதிரும் ஆர்வமோடு—மிகுந்தஅன்புடன், முறையால் அ பணி புரிந்தனர்—முறைப்படி அவ்வப்பணிகளைச்செய்தார்கள் எ—று.

கால்செயும்வட்டம்-காற்றை உண்டாக்கும் வட்டம். கவிகையைவிழற்றினர், சாமரத்தையுஞ்சிற்றாலவட்டத்தையும் வீசினர், பேராலவட்டத்தை அசைத்தனர் என்பார் 'அப்பணிபுரிந்தனர்முறையால்' என்றார். அவ்வப்பணி, அப்பணியெனத்தொக்கது.

பேரி கொக்கரை சல்லிகை கரடிகை பீலி
சாரி கைத்துடி தண்ணுமை குடமுழாத் தடாரி
போரி யற்படு காகளம் வயிர்முதற் புகலுஞ்
சீரி யத்தொகை யியம்பினர் பாரிடத் திறலோர்.

இ—ள்: பேரி—பேரிகையும், கொக்கரை—கொக்கரையும், சல்லிகை—சல்லரியும், கரடிகை—கரடிகையும், பீலி—பீலியும், சாரிகை துடி—(இருபுறமும்) வட்டவடிவாயமைந்தஉடுக்கும், தண்ணுமை-மத்தளமும், குடமுழா-குடமுழாவும், தடாரி-தடாரியும், போர் இயல் படு காகளம்-போர்க்குரிமையாமியல்பினையுடைய காகளமும், வயிர் முதல் புகலும் சீர் இய தொகை-கொம்புமுதலாகச்சொல்லப்படுகின்ற சிறந்தவாத்தியபேதங்களை, பாரிட திறலோர் இயம்பினர்-பூதவீரர்கள் முழக்கினார்கள் எ-று.

அத்த னேவலா லுருத்திரர் குழுவுமா லயனு
மெய்த்த வம்புரி முனிவரு மேனைவிண் ணவரு
மொய்த்த தேரொடு மானமாப் புள்ளிவை முதலாந்
தத்த மூர்திமேல் கொண்டனர் செய்பணி தவாதோர்.

இ—ள்: உருத்திரர் குழுவும்-உருத்திரகணத்தவர்களும், மாலும் அயனும்—விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும், மெய் தவம் புரி முனிவரும் ஏனை விண்ணவரும்—மெய்ம்மையாகிய தவத்தைச்செய்கின்ற முனிவர்களும் ஏனைய [மாலயனல்லாத]தேவர்களும், அத்தன் ஏவலால்—சிவபிரானது ஏவலின்படி, செய் பணி தவாதோர்—தாங்

தாஞ்செய்யுந்தொண்டுகளிற் குறைவுபடாதவர்களாய், மொய்த்த தேரொடு மாவும் மா புள் இவை முதல் ஆம் தத்தம் ஊர்தி மேல்கொண்டனர்—கூட்டமாகிய தேரும் விமானமும் மிருகமும் பறவையுமென்னு மிவைமுதலாகிய தங்கள் தங்கள் வாகனங்களிலேறினார்கள் எ—று.

மா: ஐராவதமுதலியன. புள்: கருடன் அன்னமுதலியன. நீவிரனைவீரும் நும்வாகனங்களிலேறி வருகவென்று சிவபிரான் பணித்தபின்னென்பார் 'அத்தனேவலால்' எனவும், குடைபிடித்தல் கவரிவீசன்முதலாகிய திருத்தொண்டுகளையெல்லாம் வாகனரூடராயியற்றினராதலின் 'தத்தமூர்திமேல்கொண்டனர்செய்பணிதவாதோர்' எனவும் கூறினார். அயனுமென்பதிலுள்ள எண்ணும்மை மாலுக்குங்கூட்டப்பட்டது. (எ)

> தாழ்ந்து தன்பணி புரியுமத் தலைவருந் தவத்தாற்
> காழ்ந்த நெஞ்சுடைப் பூதரு மேனைய கணமுஞ்
> சூழ்ந்து சென்றிடக் கயிலையை யகன்றுதொல் லுலகம்
> வாழ்ந்தி டும்படி யேகின னிமையமால் வரைமேல்.

இ—ள்: தாழ்ந்து தன் பணி புரியும் அ தலைவரும்—பணிந்து தமது திருத்தொண்டுகளைச்செய்கின்ற அந்தத் தலைவர்களும், தவத்தால் காழ்ந்த நெஞ்சு உடை பூதரும்—தவத்தினால் நிலையான சித்தத்தினையுடைய பூதர்களும், ஏனைய கணமும்—ஏனைய கூட்டத்தார்களும், சூழ்ந்து சென்றிட—தம்மைச்சூழ்ந்துவர, கயிலையை அகன்று—(சிவபிரான்) திருக்கைலாசமலையைநீங்கி, தொல் உலகம் வாழ்ந்திடும்படி—பழைய உலகத்திலுள்ளார்வாழும்படியாக, மால் இமையவரைமேல் ஏகினன்—பெரிய இமையமலையின்மேற் சென்றருளினார் எ—று.

தவத்தாற்காழ்ந்தநெஞ்சென்றது ஈசுஞானத்திரயங்களிற்புகாது திடமுற்றமனத்தை. வைரமான என்னும்பொருளதாய காழ்த்த என்பது தாற்பரியவிலக்கணையாய் நிலையையுணர்த்தியது. உலகம் ஆகுபெயர். சென்றிட-எகினனென்னவினையும். அகன்றென்பது ஏகுதற்குத்துணைவினை. வாழ்ந்திடும்படி-படியீற்றுவினையெச்சம்; தாமுன் பிரத்தியயாந்தமென்பர் வடநூலார். இது காரியப்பொருட்டான செயவெனெச்சம்வருமிடத்தில்வரும். தன்மாணாக்கர் பயிலும்வண்ணம் நாடகமொருவன் நடித்துக்காட்டியாங்கு, உலகத்தார் வேதவிதிப்படி மணமியற்றிச்சிறப்பின்பநுகரும்வண்ணஞ் சிவபிரான்றிருமணமியற்றப்புகுந்தனராதலின் 'தொல்லுலகம்வாழ்ந்திடும்படியேகினனிமையமால் வரைமேல்' என்றார்; முன்னர்க் கணங்கள்செல்படலத்திலும் 'உலகமுய்ந்திடவெம்பிரான்மணம்புரியுண்மை' என்றார். இவ்வுண்மையை "தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ- பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ" எனவும், "மலையரையன்பொற்பாவைவாணுதலாள்பெண்டிருவை-யுலகறியத்தீவேட்டானென்னுமதுவென்னேடீ-யுலகறியத்தீவேளாதொழிந்தனனேலுலகனைத்துங்-கலைவின்றபொருள்களெல்லாங்கலங்கிடுங்காண்சாழலோ" எனவும்வருந் திருவாசகத்தானுமுணர்க. (அ)

> வார்ப்பெ ரும்பணை யாதிய வரம்பில்பல் லியத்தி
> னார்ப்பு மெங்கணும் வெள்ளிடை யின்றியே யகல்வான்
> ஆர்ப்பி னீண்டிய தானையி னோதையுஞ் சுரர்க
> ளார்ப்பும் வாழ்த்தொலி யாவுமும் புணரியுண் டெழுமால்.

இ—ள்: வார் பெரும் பணை ஆகிய வரம்பு இல் பல் இயத்தின் ஆர்ப்பும்—வாரிறுக்கிய பெரிய முரசுமுதலாகிய அளவிறந்த பலவாத்தியங்களின் முழக்கமும், எங்கணும்வெள்ளிடை இன்றி அகல் வான் ஆர்ப்பின் ஈண்டிய தானையின் ஓதையும்—எவ்

விடத்தும் வெளியிடமில்லாமல் அகன்ற ஆகாயத்தைமறைப்பதுபோல நெருங்கிய சேனைகளின்றொசையும், சுரர்கள் ஆர்ப்பும்—தேவர்களது ஆரவாரமும், வாழ்த்தொலி அரவமும்—மங்கலவாழ்த்தினோசையும், புணரி உண்டு எழும் —சமுத்திரவொலியையும் அடக்கி மேற்படும் எ—று.

ஒலி அரவம் ஒருபொருட்கிளவிகள். உண்டு என்பது அடக்கியென்னும்பொருள்படநிற்றலின் தாற்பரியவிலக்கணை. வெள்ளிடையின்றிமீண்டிய, ஆர்ப்பினீண்டிய எனத்தனித்தனியியையும். புணரி ஆகுபெயர். உயர்வுசிறப்பும்மைதொக்கது. ஆகாயமார்க்கமாகச் சென்றனவென்பதுபோதர 'அகல்வான் றார்ப்பினீண்டியதானை' என்றார்.

வேறு.

அனைய தன்மையி லாதியம் பண்ணவன்
பனிகொள் வெற்பிற் படரவம் மன்னவ
னினிய கேளொ டெதிர்கொடு தாழ்ந்துதன்
புனித மாநக ரிற்கொடு போயினன்.

இ—ள்: ஆதியம் பண்ணவன்—முதற்கடவுளாகிய சிவபிரான், அனைய தன்மையில் பனிகொள் வெற்பில் படர—அத்தன்மைகளமைய இமையமலையில்வர, அம்மன்னவன்—அம்மலையரசன், இனிய கேளொடு எதிர்கொடு தாழ்ந்து—சிறந்த சுற்றத்தினரோடு வரவெதிர்கொண்டுவணங்கி, தன் புனித மா நகரில் கொடுபோயினன்—தனது தூய்மையாகிய பெரிய நகரத்திலழைத்துக்கொண்டு சென்றான் எ—று.

படர-கொடுபோயினன் எனவியையும். மேருமந்தரமுதலிய சிறந்தசுற்றமென்பார் 'இனியகேள்' என்றார். (௧௦)

போத லோடும் புனிதன் வரத்தினைக்
காத லாற்கண்டு கண்களிப் பாகியே
யாத மெய்தினின் றஞ்சலித் தேத்தியே
வீதி யாவும் விழாவயர்ந் திட்டவே.

இ—ள்: போதலோடும்—அங்ஙனம் அழைத்துக்கொண்டுசெல்லுதலும், வீதி யாவும்—அந்நகர்வீதிகளனைத்தும், புனிதன் வரத்தினை காதலால் கண்டு கண்களிப்பு ஆகி—சிவபிரானது வருகையை ஆசையுடன் தரிசித்து நேத்திரானந்தமுற்று, ஆதம் எய்தி நின்று அஞ்சலித்து ஏத்தி—அன்புகொண்டுநின்று கைகூப்பித்துதித்து, விழா அயர்ந்திட்ட—விழாக்கொண்டாடின எ—று.

ஆல் உடனிகழ்ச்சிப்பொருட்டு. வீதியிலுள்ளமாக்களயர்ந்த விழாவை வீதியயர்ந்ததாக,இடத்துநிகழ்பொருளின்றொழிலிடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது. (௧௧)

மிண்டி நின்றிடும் வீதியின் மாதரா
ரண்டர் நாயக னற்புதப் பேருருக்
கண்டு தாழ்ந்து கரைதவிர் காதலாந்
தெண்டி ரைப்படிந் தார்செயல் வேறிலார்.

இ—ள்: வீதியில் மிண்டி நின்றிடும் மாதரார்—அந்நகர்வீதியில் நெருங்கிநிற்கின்ற பெண்களனைவரும், அண்டர் நாயகன் அற்புத பேர் உரு கண்டு தாழ்ந்து—தேவநாயகராகிய சிவபிரானது அதிசயத்தைத்தருகின்ற பெரிய மணக்கோலத்தைத்தரிசித்து வணங்கி, கரை தவிர் காதல் ஆம் தெண்டிரை படிந்தார்—கரையற்ற காமமாகிய கடலிலமிழ்ந்தி, வேறு செயல் இலார்-வேறொருதொழிலுமில்லாதவராயினர் எ-று

தெண்டிரை, தெள்ளியதிரையையுடையதென விரிந்து கடலுக்காதலால் அன்மொழித்தொகை. படிந்தார் முற்றெச்சம். இதனை முற்றாக்கி, இலார் என்னுங்குறிப்புமுற்றை எச்சமாக்கினுமாம். முன்னொருபோதுங்கண்டறியாத சுந்தரரூபமாதலின் 'அற்புதப்பேருரு' எனவும், பெருங்காதலென்பார் 'கரைதவிர்காதலாந்தெண்டிரை' எனவும், ஐம்புலவுணர்வையுமொருங்குபடுத்தி அவர்மாட்டேசெலுத்தினரென்பார் 'காதலாந்தெண்டிரைப்படிந்தார்செயல்வேறிலார்' எனவும் கூறினர். செயல் வேறிலாரென்பதை "பைத்தழ கெறிக்கு மாடப் பந்திமே னின்று காண்பார்-கைத்தலங் கூப்பி யாங்கே கண்களு நோக்கி யாங்கே-சித்தமுங் குடிபோய்ச் சொல்லுஞ் செயலுமாண் டங்கண் மாண-வைத்தமண் பாவை யோடு வடிவுவே றற்று நின்றார்" என்னுந்திருவிளையாடற்புராணச்செய்யுளானுணர்க. (௧௨)

நிறைத்த பூண்களு நேர்ந்தபொன் னுடையு
நறைத்த சாந்தமு நாண்மலர்க் கண்ணியும்
பிறைத்தி ருச்சடைப் பிஞ்ஞகன் பேரெழின்
மறைத்த தென்று மனந்தளர் வார்சிலர்.

இ—ள்: நிறைத்த பூண்களும்—நிறையத்தரிக்கப்பட்ட ஆபரணங்களும், நேர்ந்த பொன்னுடையும்—சிறந்த பீதாம்பரமும், நறைத்த சாந்தமும்— மணங்கமழுகின்ற சந்தனமும், நாள் மலர் கண்ணியும்—அன்றலர்ந்த மலராற் றொடுக்கப்பட்ட மாலையும் ஆகிய இவைகள், பிறை திரு சடை பிஞ்ஞகன் பேரெழில் மறைத்தது என்று மனந்தளர்வார்— பாலசந்திரனையணிந்த அழகிய சடைமுடியையுடைய சிவபிரானது பேரழகை மறைத்தனவேயென்று மனவாட்டங்கொள்வார்கள், சிலர்--சிலபெண்கள் எ-று.

இயற்கையழகுமுற்றொருங்கமைதலிற்செயற்கையழகனைத்துமிவர்க்குமிகையாயினவென்பதாம்.

நிறைத்த படுவிகுதிதொக்கபெயரெச்சம். பூண்களும் ஆடையும் சாந்தமும் கண்ணியும் மறைத்ததென்றது பன்மையிெனொருமைமயங்கிய வழுவமைதி.

ஒன்றுந்தவறாதணிந்தவென்பார் 'நிறைத்த' எனவும், உடுத்துழிப்பேரழகையுண்டாக்குகின்றவென்பார் 'நேர்ந்த' எனவும், கத்தூரி பனிநீர் முதலிய சுகந்தங்கள் கலந்தவென்பார் 'நறைத்த' எனவும், புதுமலரென்பார் 'நாண்மலர்' எனவும், இத்தகையனவெல்லாம் இவரது மேனியிலணிந்துழி, முன்னையின்மிக்க அழகுசெய்யாமையின், மறைத்தன்மாத்திரையே பயனாய், இவர்மேனிச்சிறப்பையொருங்கேகண்டுகளித்தற்குத்தடையாயினவேயென்பார் 'பிஞ்ஞகன்பேரெழின்மறைத்தது' எனவுங்கூறினர். (௧௩)

உய்யு மாறெ னுவர்தமைக் காண்டலும்
வெய்ய காமக் கனல்சுட வேவுறுந்
தைய லார்க டனுவுறு நீறுகொ
லைய ராகத் தணிந்ததென் பார்சிலர்.

இ—ள்: ஐயர் ஆகத்து அணிந்தது—இத்தலைவர் தமது திருமேனியிற் பூசியிருப்பது, உவர்தமை காண்டலும் வெய்ய காமக்கனல் சுட வேவுறும் தையலார்கள் தனு உறும் நீறு கொல்—இவரைக்கண்டவுடன் கொடிய காமாக்கினி தகித்தலினெரிந்த மாதர்களது சரீரத்திலுளதாய சாம்பர்போலும் (ஆதலின்), உய்யுமாறு என்—யாமுய்யும்வழியாது? (ஒருவழியுமின்று காமக்கனலால்வேவது திண்ணம்), என்பார் சிலர்-என்று சொல்வார்கள் சிலபெண்கள் எ—று.

எவனென்னும் வினைப்பெயரின் விகாரமாகிய என் என்பது ஈண்டின்மைகுறித்துநின்றது. காண்டலும் சுட எனஇயையும். சுட என்னுமெச்சமேதுப்பொருட்டு.

காமத்தீயால் வெந்திறக்குஞ்சமயத்துங் கருணைபுரியத் தலைப்படாரென்பது போதர 'ஐயராகத்தணிந்ததுதையலார்கடனுவுறுநீறுகொல்' என்றார். அதுவே உய்யுமாறின்மையைத் துணிவித்ததென்க.

யாதேனுமோர் விஷயத்திற் சிந்தையை விடுத்தோர் பிறகாரணங்களானிகழ்ந்தவற்றையெல்லாந் தங்கருத்திற்றோன்றிய காரணங்களானிகழ்ந்தவாகத் திரித்துணர்தலியல்பாதலின், ஐயராகத்தணிந்ததைத் தையலார்கடனுவுறுநீறென்றையுற்றனரென்க. இன்னோரன்னவாறு மேல்வருமிடங்களினுமுரைக்க. (௧௪)

எழாலை யன்னசொ லேந்திழை மாதரார்
குழாம கன்று குழகனைச் சேர்தலுங்
கழாலு கின்றபல் காழுடை மேகலை
விழாதி றைஞ்சினர் மெல்லிய லார்சிலர்.

இ—ள்: எழாலை அன்ன சொல் ஏந்திழை மாதரார் குழாம் அகன்று குழகனை சேர்தலும்—யாழிசையைப்போன்ற இன்சொல்லைவசனிக்கின்ற ஆபரணங்களையணிந்தபெண்களது குழுவைவிட்டுப்பிரிந்துநடந்து அழகராகிய சிவபிரானைக்கிட்டியவுடன், கழாலுகின்ற பல் காழ் உடை மேகலை விழாது இறைஞ்சினர்—நெகிழுகின்ற பல வைரமணிகளிழைக்கப்பெற்ற மேகலாபரணங் கீழேவிழாவண்ணம் (மெல்லென)வணங்கினார்கள், மெல் இயலார் சிலர்—மெல்லியசாயலையுடைய சிலபெண்கள் எ—று.

எழால் ஆகுபெயர். கழலுகின்ற என்பது எதுகைநோக்கிநீண்டது. காழுடை என்பதற்கு இறுகத்தரித்திருந்தவெனினுமாம். காமமிகுதியால் வணங்கினர் பத்தியினலன்றென்பார் 'கழாலுகின்றபல்காழுடைமேகலைவிழாதிறைஞ்சினர்' என்றார். (௧௫)

அல்லி சேர்தரு மம்புய மீமிசை
வல்லி யன்னவர் வான்றுகில் சோர்வுறு
மெல்ல வீழ்தலு மின்னிடை யார்க்கெலா
மில்லை யோபுனை யென்றுரைப் பார்சிலர்.

இ—ள்: அல்லி சேர்தரும் அம்புய மீமிசை வல்லி அன்னவர் சிலர்— அகவிதழ்பொருந்திய தாமரைமலரின்மேல் வீற்றிருக்கின்ற இலக்குமியைநிகர்த்த சிலபெண்கள், வான் துகில் சோர்வுறு மெல்ல வீழ்தலும்—சிறந்த வஸ்திரம் நழுவி மெல்லெனவிழ, மின் இடையார்க்கு எலாம் புனை இல்லையோ என்று உரைப்பார்— மின்னலைப்போன்ற இடையினையுடைய பெண்களுக்கெல்லாம் வஸ்திரமில்லையா? என்று கூறுவார்கள் எ—று.

பேரழகினரென்பார் 'அம்புயமீமிசைவல்லியன்னவர்' எனவும், விலையுயர்ந்தவஸ்திரமென்பார் 'வான்றுகில்' எனவும், காமக்கைமிகுதலாற் புலப்படாவண்ணமென்பார் 'மெல்ல' எனவும், ஆடவரெல்லாந்துகிலுடீஇநிற்பமாதர்களெல்லாமஃதின்றிநிற்பதோரற்புதமென்பார் 'மின்னிடையார்க்கெலாமில்லையோபுனை' எனவும் கூறினார்.

தாமுந்தங்குழுவாருந் துகிலின்றிநிற்றலால் 'மின்னிடையார்க்கெலாமில்லையோபுனை' எனக்கூறினர். சிலர், தாந்துகிலிழந்தமையையுணரிற் பெருநாணுற்றேவர் இங்ஙனங்கூறாராதலின், தாந்துகிலிழந்தமையையுணராது பிறரைநோக்கி யிங்ஙனங்கூறினரென்பர். வேறுசிலர், தஞ்செயல்காணார் பிறர்செயல் காண்பதெங்ஙனமெனமறுத்துத் தாந்துகிலொடுநின்றே பிறரைநகையாடினரென்பர். (௧௬)

வாசம் வீழ்தலும் வந்துவந் தில்லிடைத்
தூசு டுத்தில மென்றோர் துகில்புனைந்
தாசை யோடுசென் றன்னதும் விட்டியே
யூசல் போன்றன ரொண்டொடி மார்சிலர்.

இ—ள்: வாசம் வீழ்தலும்—தாமுடுத்தவஸ்திரம் நழுவிவிழுந்தபின், தூசு உடுத்திலம் என்று இல்லிடை வந்து வந்து— யாம் வஸ்திரத்தை உடாது போயினேமே யென்று சிந்தித்து வீட்டில் வந்து வந்து, ஓர் துகில் புனைந்து-ஒவ்வொருவஸ்திரத்தை உடுத்து, ஆசையோடு சென்று-(சிவபிரான்மேற்கொண்ட) காமத்துடன்போய், அன்னதும் விட்டு-அவ்வஸ்திரத்தையும்விழவிட்டு, ஊசல் போன்றனர்-ஊஞ்சலைப்போலத்திரிந்தார்கள், ஒண்டொடிமார் சிலர்-ஒளிபொருந்திய வளையலையணிந்த சிலபெண்கள் எ-று.

ஊஞ்சல் நிலையின்றியங்குமிங்குமாடுதல்போலத் துகில்வீழுந்தோறும் உடுக்குமாறு வீட்டிற்போய்வந்து திரிந்தனரென்க. (கஎ)

மாண்ட சாயன் மடந்தைய ரேதனை
வேண்டி மால்கொடு வீடுறும் வேலையி
னீண்டு போற்றுகெனவுமென் னுதநோ
வாண்ட கைக்கிய லாகுமென் பார்சிலர்.

இ—ள்: மாண்ட சாயல் மடந்தையரே தமை வேண்டி மால்கொடு— மாட்சிமைபொருந்திய இயலினையுடையபெண்கள் தாமே இவரை விரும்பி மனமயக்கமுற்று, வீடுறும் வேலையில் ஈண்டு போற்றுக எனவும்—(காமவிகாரந்தாங்கலாற்றாது) இறந்துபடுஞ்சமயத்தில் (தலைவரே!) இப்பொழுது எம்மைக்காத்தருளுக [கலவிசெய்க] என்று வேண்டவும், என்னுதநோ—அவ்வேண்டுகோளைச் சிறிதுஞ்சிந்தியாது நடப்பது, ஆண்டகைக்கு இயலாகுமோ என்பார் சிலர்— (இவரது) ஆண்டகைமைக்கியற்கையாகுமா? (ஆகாதே) எனக்கூறுவார்கள் சிலபெண்கள் எ—று.

ஏகாரம் பிரிநிலை. தலையென்றது சிவபிரானை. இடப்பொருளுணர்த்தும் ஈண்டென்னுமிடைச்சொல்காலத்தைச்சுட்டிற்று. போற்றுக என்னும் வியங்கோளீறுதொக்கது. எதிர்மறையோகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. பேரழகுவாய்ந்தவென்பார் 'மாண்டசாயன்மடந்தையர்' எனவும், அவரைக்கண்டுழிக் கழிபெருங்காதலுற்றுக்கலவியைவேண்டிவிற்குமியல்பினராகிய ஆடவரை அம்மங்கையர்தாமே காமுற்றுச்சென்று, கலவிசெய்யாவழித்தம்முயிர்க்குறுந் தீங்கையுணர்த்தியிரந்துழியும், பொருட்படுத்தாமை பேடியர் குணமென்பார் 'மாண்டசாயன்மடந்தையரே **** ஆண்டகைக்கியலாகும்' எனவும் கூறினர். (கஅ)

கரும்பு நேர்மொழிக் காரிகை மாதரார்
விரும்பி வேண்டவு மேவலர் போனுமா
லரும்பொன் மேனியெம் மண்ணலுக் குள்ளமு
மிரும்பு கொல்லென் றியம்பிடு வார்சிலர்.

இ—ள்: கரும்பு நேர் மொழி காரிகை மாதரார் விரும்பி வேண்டவும் மேவலர்— கரும்பைப்போன்ற இன்சொல்லைப்பேசுகின்றபெண்கள் விரும்பி வேண்டுதல்செய்யவும் (அவர்வேண்டுகோட்கியைந்து) சேருகின்றிலார், அரும் பொன் மேனி எம் அண்ணலுக்கு—அரிய பொன்னிறத்திருமேனியையுடைய எமதுசிவபிரானுக்

உள்ளம் இரும்புகொல் என்று இயம்பிடுவார் சிலர்—மனம் இரும்பா? என்றுகூறுவார்கள் சிலபெண்கள் எ—று.

காரிகை மாதர் ஒருபொருட்கிளவிகள்; உம்மை, முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையது அசை. பின்னையதையெச்சமாக்கிப் பொருள்கூறல்பொருந்தாது, அகம்புறமிரண்டிற்கும் வேற்றுமைதோன்றக்கூறுதலின். எவரையு நெகிழ்விக்குமின்சொலென்பார் 'கரும்புநேர்மொழி'எனவும், பேரழகினரென்பார் 'காரிகைமாதரார்' எனவும், ஆடவர் மெலிந்திரந்துழியும் நாணிமறுக்குங்குணத்தை விடுத்து, தாமாக வாயாற்கூறியிரந்துழியுமென்பார் 'மாதரார்விரும்பிவேண்டவும்' எனவும், மாற்றுயர்ந்தபொன்னென்பார் 'அரும்பொன்'எனவும், தாம்படுந்துயரைத்தீர்க்க வல்லவராயிருந்தும் மனமிரங்காமையின் 'உள்ளமுமிரும்புகொல்' எனவும் கூறினர். 'எம்மண்ணலுக்கு மேனி அரும்பொன் உள்ளமிரும்பு'எனவியைத்து, எம்பெருமானுக்கு மேனி பொன்போலும், மனம் (அதற்கியையாத) கரும்பொன்போலுமெனவுரைப்பினுமாம். (௧௯)

நெருக்கு பூண்முலை நேரிழை யார்க்குமால்
பெருக்கி னாரவர் பேதுற லோர்கிலா
ருரைப்ப தென்கொ லுயிர்க்குயி ராகியே
யிருக்கு மிங்கிவ ரென்றுரைப் பார்சிலர்.

இ—ள்: உயிர்க்கு உயிர் ஆகி இருக்கும் இங்கிவர்-ஆன்மாக்களனைத்திற்கும் பரமான்மாவாகவியாபித்திருக்கின்ற இச்சிவபிரான், நெருக்கு பூண் முலை நேரிழையார்க்கு மால் பெருக்கினார்—(ஒன்றையொன்று) நெருக்குகின்ற ஆபரணங்களையணிந்த தனங்களையுடைய பெண்கட்குக் காமத்தைவளர்வித்தார், அவர் பேதுறல் ஓர்கிலார்—அவர்கள் வருந்துவதை யுணர்கின்றிலார், உரைப்பது என்—இனி யாங்கூறுவதென்னை?, என்று உரைப்பார் சிலர்—என்று கூறுவார்கள் சிலபெண்கள் எ—று.

நெருக்குமுலை பூண்முலையெனத்தனித்தனியியையும். நெருக்குதல்வினைக்குக் கச்சென்னுஞ் செயப்படுபொருள் வருவித்துரைப்பர்சிலர்; நெருக்கு என்பதை வலித்தல் விகாரமெனக்கொண்டு ஒன்றோடொன்று நெருங்கியமுலையெனவுரைப்பர்சிலர்; அவ்வினையைப் பூணுக்கடையாக்கிக்கூறுவர்சிலர். அவரென்பதையெழுவாயாக்கி அச்சிவபிரானெனப்பொருள்கூறினுமாம். நேரிழையார்-நேரிய [சிறந்த] ஆபரணங்களையுடையார். காமந்தோன்றிற்கலவிசெய்தன்றி யாற்றுப்பருவத்தினரென்பார் 'நெருக்குபூண்முலைநேரிழையார்' எனவும், எவர்கருத்தையுந்தாமே யுணரவல்லவிறைவரென்பார் 'உயிர்க்குயிராகியேயிருக்குமிங்கிவர்' எனவும், அவர் நம்மனோர் கருத்தையுணராமையோரற்புதமென்பார் 'அவர்பேதுறலோர்கிலார்'எனவும், அவரவ்வாறிருப்பின், நம்மையலையொழித்தற்குச் செயற்பாலதாஞ் சூழ்ச்சியிறிதொன்று மின்றென்பார் 'உரைப்பதென்கொல்' எனவும் கூறினர். (௨0)

திருகு வார்சடைச் செய்யனை நோக்கிநின்
றுருகு வார்சில ருள்ளுற வெம்பியே
கருகு வார்சிலர் காதலி மாரொடும்
பெருகு காதலைப் பேசுகின் றார்சிலர்.

இ—ள்: திருகு வார் சடை செய்யனை நோக்கி நின்று உருகுவார் சிலர்—முறுகிய நீண்டசடைமுடியையுடைய சிவபிரானைத்தரிசித்து (நின்றநிலையில்) நின்று உருகுவார்கள் சிலபெண்கள், உள் உற வெம்பி கருகுவார் சிலர்—மனமானது மிகவும் வெதும்பி வாடுவார்கள் சிலபெண்கள், பெருகு காதலை காதலிமாரொடும் பேசுகின்ற

ர் சிலர்—தமக்கு மேன்மேலும் மிகுகின்ற ஆசையை உயிர்த்தோழியர்க்குக் கூறுவார்கள் சிலபெண்கள் எ—று.

செய்யன்-சிவந்தநிறமுடையவன். மனமுதலியகருவிகளெல்லாந் தம்மாற்காமிக்கப்பட்ட சிவபிரான் மாட்டேசென்றொடுங்க, அசைவறநின்று, அனலிடைப்பட்ட மெழுகுபோலுருகினரென்பார் 'திருகுவார்சடைச்செய்யனைநோக்கிநின்றுருகுவார்' எனவும், தமதாசையைப் பிறர்க்குக்கூறநாணி மனத்துளடக்கிநின்று புழுங்கி வாடினரென்பார் 'உள்ளூறவெம்பியேகருகுவார்' எனவும், தம்மனத்துளடக்கலாற்றாமையின், நாணைநீக்கி, அயனின்றதோழியர்க்குரைத்தனரென்பார் 'காதலிமாரொடுமெபருகுகாதலைப்பேசுகின்றார்' எனவும் கூறினார். (௨௧)

வேறு ளார்மெய் விளர்ப்பினை நோக்கியே
யீறி லாரை யிவரணைந் தார்கொலோ
நீறு மெய்யி னிலவிய தென்றவர்ச்
சீறி யேயிகல் செய்திடு வார்சிலர்.

இ—ள்: வேறு உளார் மெய்விளர்ப்பினை நோக்கி—வேறாகவுள்ள சிலபெண்களது மேனியிற்றோன்றும் வெளுப்பைப்பார்த்து, இவர் ஈறு இலாரை அணைந்தார்கொல்--இப்பெண்கள் அழிவில்லாத சிவபிரானைக்கூடினார்போலும் (எனெனில்), மெய்யில் நீறு நிலவியது என்று—இவரது மேனியில் விபூதிவிளங்கியதென்று சிந்தித்து, அவர் சீறி இகல்செய்திடுவார் சிலர்— அப்பெண்களைக்கோபித்துக் கலகஞ்செய்வார்கள் சிலபெண்கள் எ—று.

விளர்ப்பென்னுமுண்மையையுணராது, சிவபிரானைமெய்யுற்றுப்புணர்ந்தழிப்பட்ட நீறேயிதுவென்றுகருதி, 'மங்கைமீர்! யாங்காமித்ததலைவரைநீர் கூடியது நீதியா?' என்றிவ்வாறுபேசிக் கலகமிட்டனரென்பதாம். தம்மேனிவெளுத்திருப்பதை நோக்காது பிறர்மேனிவெளுப்பையே நோக்கினராதலின் 'வேறுளார்மெய்விளர்ப்பினைநோக்கி' என்றார். (௨௨)

கட்டு செஞ்சடைக் கான்மிசை யூர்தர
விட்ட வெண்மதி மெல்லிய லார்தமைச்
சுட்ட தம்ம சுமப்பதெ னீரெனாக்
கிட்டி நின்று கிளத்திடு வார்சிலர்.

இ—ள்: கட்டு செம் சடை கான் மிசை ஊர்தர விட்ட வெள் மதி—கட்டப்பட்ட சிவந்தசடையாகிய காட்டின்கண்ணே தவழவிடுத்த வெள்ளிய சந்திரனானது, மெல் இயலார் தமை சுட்டது—மெல்லிய சாயலினையுடைய பெண்களைத்தகித்தது, நீர் சுமப்பது என் எனா—தேவரீரதனைத்தரித்திருப்பது யாதுபற்றியென்று, கிட்டிநின்று கிளத்திடுவார் சிலர்-(சிவபிரானை) அணுகிநின்று சொல்வார்கள் சிலபெண்கள் எ-று.

அடர்ந்து படர்ந்த சடையென்பார் 'சடைக்கான்' எனவும், மனைவியரிடுவித்த சாபமொழிக்கஞ்சிச் சரண்புக்கமதியென்பார் 'சடைக்கான்மிசையூர்தரவிட்டவெண்மதி' எனவும், அச்சந்திரன் மகளிர்க்கிழைத்த மானவீனத்தாற்றான்பட்ட துயரையெண்ணாது, ஒரு சிறிதேனுமெதிரூன்றிநிற்கலாற்றாப்பேதையரை வருத்தியதேயென்பார் 'மெல்லியலார்தமைச்சுட்டது' எனவும், அப்புன்றொழிலியற்றியவனைச்சுமப்பது அடிகட்கிழுக்காமென்பார் 'சுமப்பதெனீர்' எனவும் கூறினார்.

காமத்தான் மிகவருந்தினரென்பதிச் செய்யுட்குறிப்பு. (௨௩)

கஞ்ச மேலய னாதிக் கடவுளர்
தஞ்ச மென்று சரண்புக வுண்டதோர்
நஞ்சின் வெய்யகொ னங்கையர் கொங்கைமேற்
றுஞ்சு கின்ற துயிலதென் பார்சிலர்.

இ—ள்: கஞ்ச மேல் அயன் ஆதி கடவுளர் தஞ்சம் என்று சரண்புக—தாமரைமலரின்மேல் வீற்றிருக்கின்ற பிரமாமுதலிய தேவர்கள் அடைக்கலமென்று சரணடைய, உண்டது ஓர் நஞ்சின்—(அவரிடரைத்தீர்க்குமாறு) விழுங்கிய நஞ்சினும்பார்க்க, நங்கையர் கொங்கைமேல் துஞ்சுகின்ற துயில் வெய்யகொல்—பெண்களது தனங்களின்மேற்றுயிலுகின்ற நித்திரை கொடியது போலும், என்பார் சிலர்-என்று கூறுவார்கள் சிலபெண்கள் எ—று.

தேவரைக்காக்குமாறு ஆலாகலத்தையுண்ட தேவரீர் சிறியேங்களைக்காக்குமாறு இன்பக்கலவிசெய்யமுயலாததென்னையென்பதாம்.

கொங்கைமேற்றுஞ்சுகின்ற துயிலென்றது-புணர்ச்சிமுடிவிலவசமாய் முலைமேற்றுயிறலை. அது பகுதிப்பொருள்விகுதி. (உச)

பின்ன ருள்ள பெருந்தொழி லாற்றுவான்
றுன்னு வீரெனிற் றொல்குழு வாடவர்
நன்ன லத்தொடு நண்ணமின் னாரையே
யின்னல் செய்வதெ னென்றுரைப் பார்சிலர்.

இ—ள்: பின்னர் உள்ள பெருந்தொழில் ஆற்றுவான் துன்னுவீரெனில்-(ஸ்வாமீ! தேவரீர்) இறுதிக்கண்ணதாகிய சங்காரகிருத்தியத்தை யியற்றுமாறு முயல்வீரேல், தொல் ஆடவர்குழு நல் நலத்தொடு நண்ண—பழைய ஆடவர்கூட்டம் சிறந்த சுகத்தோடிருக்க, மின்னாரையே இன்னல்செய்வது என்—பெண்களைமாத்திரம் வருத்துவதென்னை?, என்று உரைப்பார் சிலர்—என்று சொல்வார்கள் சிலபெண்கள் எ—று.

காமங்கைமிகலாலிறக்குந்துணையான துயரெய்தினரென்பதிச் செய்யுட்குறிப்பு. ஆற்றுவான்-வானீற்று வினையெச்சம். மின்னார்-மின்போன்ற இடையையுடையார். ஏகாரம் பிரிநிலை. (உரு)

சாற்றி யிங்கினி யாவதென் னையன்மீ
ரேற்றின் மேவின ரெம்மை மணந்திட
மாற்றி லாத மலைமகள் போலயா
நோற்றி லோமென நொந்துயிர்ப் பார்சிலர்.

இ—ள்: ஐயன்மீர்—பெண்காள்!, ஏற்றில் மேவினர் எம்மை மணந்திட—இடபவாகனத்தி லெழுந்தருளியிருக்கின்ற இச்சிவபிரான் எங்களைமணமியற்றும்படி, மாற்று இலாத மலைமகள் போல யாம் நோற்றிலோம்— ஒப்பில்லாத பார்ப்பதியாரைப் போல நாங்கள் தவஞ்செய்திலோம், இங்கினி சாற்றி ஆவது என்—இனிப்பேசுதலாலாம்பயன்யாது?, என நொந்து உயிர்ப்பார் சிலர்—என்று கூறி வருந்திப் பெருமூச்சுவிடுவார்கள் சிலபெண்கள் எ—று.

ஐயன்மார் என்னும் பலர்பாற்படர்க்கைப்பெயர், விளிக்கண் ஈற்றயலாகாரமீகாரமாகித் ஐயன்மீரெனநின்றது. முன்னர்ப்பெருந்தவஞ் செய்துடையேமேல் இவர்க்குமனைவியராம்பேறுபெற்றுய்வேம், அஃதின்றிவிற்கும்யாம் வெற்றுரைபேசுதலாலாம்பயனென்றுமின்றென்பார் 'சாற்றியிங்கினியாவதென்' எனவும், இவ்வழக

ரைத் தமக்குவரனுக்கொள்ளும் பெரும்பேறுடையரென்பது கருதி 'மாற்றிலாதமலைமகள்' எனவும் கூறினார். (உ௬)

தேவ ருய்யத் திருமணஞ் செய்திட
மேவு கின்றவர் மெல்லியன் மங்கைய
ராவி கொள்ள வமைந்தன ரித்திற
மேவர் செய்வ ரெனவுரைப் பார்சிலர்.

இ—ள்: தேவர் உய்ய திருமணம் செய்திட மேவுகின்றவர்—தேவர்கள் வாழுமாறு திருமணஞ்செய்யப்புகுகின்ற இவ்விறைவர், மெல் இயல் மங்கையர் ஆவி கொள்ள அமைந்தனர்—மெல்லிய சாயலையுடைய பெண்களது உயிரைக்கவருமாறு முயன்றார், இத்திறம் எவர் செய்வர் என உரைப்பார் சிலர்—இவ்வாறு யார்தான் செய்வரென்று கூறுவார்கள் சிலபெண்கள் எ—று.

செயவெனெச்சங்கள் காரியப்பொருளன. நேருந்துயரையொருசிறிது தாங்கவும் அதற்குமாறுசெய்யவும் வல்லராகிய தேவரைக்காக்குமாறு மணஞ்செயச்செல்லுமிவர் மிகநொய்ய பேதையரைக்கொல்லமுயல்வது அடாப்பழியன்றே! இழிஞர்தாமுஞ் செய்யாத இப்பழித்தொழிலையிவரியற்றுவது, தேவரையுய்வித்தலாலாகும் புகழுக்கும் பங்கமாகுமே! எனச்சாற்றினரென்பதாம். (உஎ)

மையல் வேழம் வயப்புலி போல்வரும்
வெய்யர் தம்மை மெலிவிப்ப தன்றியே
நொய்ய மான்புரை நோக்கியர்க் குந்துயர்
செய்யு மோவெனச் செப்புகின் றார்சிலர்.

இ—ள்: மையல் வேழம் வயப்புலி போல் வரும் வெய்யர்தம்மை மெலிவிப்பதே அன்றி—மதமயக்கம்பொருந்திய யானையையும் வெற்றிபொருந்திய புலியையும் போல வந்த கொடியவர்களை வருத்துவதேயன்றி, நொய்ய மான் புரை நோக்கியர்க்கும் துயர் செய்யுமோ என செப்புகின்றார் சிலர்—மிருதுவான மானின்பார்வைபோலும் பார்வையையுடைய மகளிர்க்குக் துன்பஞ்செய்வாரா? என்று சொல்வார்கள் சிலபெண்கள் எ—று.

பிரிநிலையேகாரம்பிரித்துக்கூட்டப்பட்டது. உம்மை எச்சத்தோடிழிவுசிறப்பு. மான் ஆகுபெயர். ஒறுத்தற்பாலரென்பார் 'மையல்வேழம்வயப்புலிபோல்வரும்வெய்யர்' எனவும், அத்தகையவலியாரைக்கோறலேதருமம் மெலியாரைக்கோறல் பாவமன்றோவென்பார் 'வெய்யர்தம்மைமெலிவிப்பதன்றியேநொய்யமான்புரைநோக்கியர்க்குந்துயர்செய்யுமோ' எனவும் கூறினார். (உஅ)

நங்கள் கொற்றவ னற்றவத் தாற்பெறு
மங்கை பாலின் மணப்பொருட் டேகின
ரிங்கெ மக்கினி மைத்திறஞ் செய்கலார்
சங்க ரர்க்குத் தகாதிதென் பார்சிலர்.

இ—ள்: நக்கள் கொற்றவன் நல் தவத்தால் பெறும் மங்கைபாலின் மணப்பொருட்டு ஏகினர்—எங்களரசன் நல்ல தவப்பயனாற்பெற்றுக்கொண்ட பார்ப்பதியாரிடத்து மணஞ்செய்தல்காரணமாகச்சென்றார், இங்கு எமக்கு இனிமைத்திறம் செய்கலார்—இங்கே [வழியில்] நிற்கின்ற எங்களுக்கு நன்மைசெய்திலார், இது சங்கரர்க்கு தகாது என்பார் சிலர்—இவ்வாறு ஒருபாற்கோடிநடத்தல் சங்கரரென்னும்பெயரையுடைய இவர்க்கியையாதென்பார்கள் சிலபெண்கள் எ—று.

யாவர்க்குஞ் சுகத்தைச்செய்தலாற் சங்கரரென்னும்பெயர்பெற்ற இவர் எங் காதலைநிறைவேற்ருது பார்ப்பதியின்காதலை நிறைவேற்றப்புகுந்தது தவமென்பதாம். தவம் ஆகுபெயர். (௨௯)

பேதை நீரவர் பேரிளம் பெண்மையோ
ராதி யந்தத் தணங்கின ரின்னணம்
வீதி தோறும் விரவியத் தாருக
மாத ராரினு மாதர்பெற் ருரரோ.

இ—ள்: பேதைநீரவர் ஆதி பேரிளம் பெண்மையோர் அந்தத்து அணங்கின ர்—பேதைப்பருவத்தினர்முதற் பேரிளம்பெண்மைப்பருவத்தினரிறுவாயாகவுள்ள மாத ரனைவரும், வீதிதோறும் விரவி—வீதிகடோறும்நெருங்கி, இன்னணம்—இவ்வாறு, அ தாருகமாதராரினும் மாதர் பெற்ருர்—அந்தத் தாருகவனத்திருந்தபெண்களினும் மிக்க காமமயக்கத்தைப்பொருந்திஞர்கள் எ—று.

பேதைநீரவர்பேரிளம்பெண்மையோராதியந்தத்தணங்கினரென்றது நிரனி றை. அதனாற்போந்த அணங்கினராவார்: பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்னுமெழுவகுப்பினருமாம். ஐந்துவயதின்மேல் ஏழுவ யதுநிறைதற்குட்பட்ட பிராயத்தினள் பேதை எனவும், மேற் பதிஞெராம்வயதுநி றைதற்குட்பட்டபிராயத்தினள் பெதும்பை எனவும், மேற் பதின்மூன்ரும்வயதுநி றைதற்குட்பட்டபிராயத்தினள் மங்கை எனவும், மேற் பத்தொன்பதாம்வயதுநிறைத ற்குட்பட்டபிராயத்தினள் மடந்தை எனவும், மேல் இருபத்தைந்தாம்வயதுநிறைதற்கு ட்பட்டபிராயத்தினள் அரிவை எனவும், மேல் முப்பத்தோராம்வயதுநிறைதற்குட்பட் டபிராயத்தினள் தெரிவை எனவும், மேல் நாற்பதாம்வயதுநிறைதற்குட்பட்டபிராயத்தி னள் பேரிளம்பெண் எனவும் பெயர்பெறுவர். இதனை "பகருங்கா லைந்தேழ் பதிஞென் று பன்மூன்-றகலாத பத்தொன்பா னையைந்-திகலாத-முப்பத்தொன் றீரிருபான் பேதை முதலோர்க்குச்-செப்புவரான் டெல்லைத் திறம்" என்னும் வச்சணந்திமாலையானறிக. நாற்பதாமாண்டின்மேற்பட்டோர்க்குக் காமமீதூர்தலின்மையினவரைக்கூருதொழிந்த னர்.

அகரம் பண்டறிசுட்டு. தாருகமாதரார்மையல்பெற்றசரித்திரம் மேல் த க்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற் கூறப்படும்.

பன்னிரண்டாஞ்செய்யுண்முதலிதுகாறும் பத்தொன்பதுசெய்யுட்களால், வீ தியின்மகளிர் கண்டுகாமித்தமை வருணிக்கப்பட்டது. (௩௰)

பண்டை வேதன் பதத்தினும் பேரெழில்
கொண்டு நின்றவக் கோநகர் வீதியி
னண்டம் வெஃக வணிபடுத் திட்டவை
கண்டு போந்தனன் கண்ணுத லண்ணலே.

இ—ள்: பண்டை வேதன் பதத்தினும் பேர் எழில் கொண்டு நின்ற அ கோ நகர் வீதியின்—பழைய பிரமதேவரதுபதவியினும்பார்க்க மிக்க அழகுபடைத்துள்ள அ க்கோயிலின்வீதியில், அண்டம் வெஃக அணிபடுத்திட்டவை— அண்டங்களிலுள்ளார னைவரும் விரும்புமாறு அலங்கரித்துள்ளவைகளை, கண்டு போந்தனன்— பார்த்தருளி ப் போயிஞர், கண்ணுதல் அண்ணல்—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் எ—று.

அண்டம் ஆகுபெயர். உம்மை உயர்வுசிறப்பு. சிருட்டித்தொழிலிற் கைவந்த வரென்பார் 'பண்டைவேதன்' எனவும், அவர் பெருவனப்புறப்படைக்குமாற்றலுடைய

ராதலின் தன்னகரை இணையில்லாதவாறணிபடுத்தியிருப்பரென்பதுகருதி 'வேதன் பதத்தினும்பேரெழில்கொண்டுகின்ற' எனவும், அவ்வணிகளையெல்லாம்நோக்குதல்பற்றிவாளாகூறுது 'கண்ணுதல்' என அடைகொடுத்தும் கூறினர். (௩௧)

செய்ய தான செழுங்கம லாசனத்
தையல் காமுறத் தக்கன வீதிகள்
பைய நீங்கிப் பராபரை யாகிய
வையை கோயி லணித்தென நண்ணினன்.

இ—ள்: செய்யது ஆன செழும் கமலாசன தையல் காமுறத்தக்கன வீதிகள்— சிவந்தநிறத்தினையுடைய செழிய தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமியும்விரும்பத்தக்க வீதிகளை—பைய நீங்கி—மெல்லெனக்கடந்து, பராபரை ஆகிய ஐயை கோயில் அணித்தென நண்ணினன்— பராபரையாகிய பார்ப்பதியாரதுகோயில் அணுகியதெனும்படி சென்றருளினர் எ—று.

ஆர்யா என்னும்வடமொழி ஐயையெனத்தற்பவமாயிற்று. காமம் என்பது கடைக்குறையாயிற்று. இடைக்குறையென்பர் சிலர். தக்கன வினைமுற்றுப்பெயரெச்சம். செய்யதான கமலம் செழுங்கமலம் எனவும், நீங்கி நண்ணினன் எனவுமியையும். வனப்புமிக்கவிடங்களைத்தேர்ந்துவசிக்குமியல்பினளென்பார் 'செய்யதானசெழுங்கமலாசனத்தையல்' எனவும், அவள் முன்விரும்பியமர்ந்ததானங்களைவிட்டு, இதனையேயிருக்கையாக்கிக்கொள்ளவிரும்பும் அத்துணைப்பேரழகினவென்பார் 'கமலாசனத்தையல்காமுறத்தக்கனவீதிகள்' எனவும், பராபரனுகியதமக்குத் தேவியாம்பக்குவமெய்தியவென்பார் 'பராபரையாகிய' எனவும் கூறினர். (௩௨)

வேந்த னேவலின் வேதங்க ளின்றுகா
ணுய்ந்து நாடற் கரியவெம் மண்ணன்முன்
பூந்த டம்புனல் பூரித்த பல்குட
மேந்தி வந்தனர் மாதவ ரெண்ணிலார்.

இ—ள்: வேதங்கள் இன்றுகாறு ஆய்ந்தும் நாடற்கு அரிய எம் அண்ணல் முன்—நால்வேதங்களும் இன்றுவரையும் ஆராய்ந்தும் உணர்தற்கரியரான எங்கள் சிவபிரானுக்குமுன், வேந்தன் ஏவலின்—மலையரசனது ஏவற்படி, எண் இலார் மாதவர்—அளவிறந்த முனிவர்கள், பூ தடம் புனல் பூரித்த பல் குடம் ஏந்தி வந்தனர்— மலர்கள்பொருந்திய சிறந்த நீர் (குறைவற) நிறைக்கப்பெற்ற பலகும்பங்களைத் தாங்கிவந்தார்கள் எ—று.

வேந்தனேவலின் ஏந்திவந்தனரென இயையும். புனல்பூரித்தகுடமேந்திவந்தது புரோக்ஷணத்தின்பொருட்டென்க. சுகந்தமுறும்படி மலர்தூவப்பெற்றதும் கங்கைமுதலியநதியின்மொண்டுவந்ததுமாகிய தீர்த்தமென்பார்'பூந்தடம்புனல்' என்றார். பூந்தடம் மலர்த்தடாகமெனவுரைப்பர் சிலர்; அதுபொருளாயின், தடப்புனலெனப்பாடமிருத்தல்வேண்டும். அங்ஙனமிருப்பினுமித்துணைப் பொருட்சிறப்பைத்தாராது; ஆதலின், அது பொருளன்றென்க. ஓர் கும்பங்கொண்டுவருவது குற்றமாதலின் 'எண்ணிலார்பல்குடமேந்திவந்தனர். (௩௩)

இருவ கைப்படு மெண்வகை மங்கலப்
பொருண்மை முற்றவும் பூவையர் பற்பலர்
வரிசை யிற்கொடு வந்தெதி ரெய்தினு
ரரிய யற்கரி தாகிய வண்ணன்முன்.

இ—ள்: பற்பலர் பூவையர்—பலபல பெண்கள், இருவகைப்படும் எண்வகை மங்கலப்பொருண்மை முற்றவும்—இருவகையான அட்டமங்கலப் பொருள்களனைத்தையும், வரிசையில் கொடு—வரிசையாக எடுத்துக்கொண்டு, அரி அயற்கு அரிது ஆகிய அண்ணல் முன் வந்து எதிர் எய்தினர்—திருமாற்கும் பிரமதேவர்க்கும் அரியராகிய சிவபிரானது திருமுன்னிலையில்வந்து எதிராகஅணுகினார்கள் எ—று.

சிவபிரான் சர்வதேவோத்தமராதலாலும் அவர் மணம்புரிவது ராசகன்னிகையையாதலாலும், அவ்விரண்டிற்குமேற்ப முறையே, தேவாட்டமங்கலங்களையும் ராசாட்ட மங்கலங்களையுங்கொடுவந்தனரென்பார் 'இருவகைப்படுமெண்வகைமங்கலப்பொருண்மைமுற்றவும்-கொடுவந்தெதிரெய்தினர்' என்றார். ராசாட்டமங்கலமாவன:—கொடி முரசு கண்ணாடி குடம் மணி தீபம் அங்குசம் கவரி என்பன. இதனை 'கொடிமுரசாடியம்பொற் குடமணி செய்யிற் பூத்த-கடிமல ரனையதீப மங்குசங் கவரியென்னும்-படிவமங் கலங்க ளெட்டு' என்னுந் திருவிளையாடற்புராணச்செய்யுளானுணர்க. தேவாட்டமங்கலங்கள் முன்னர்வரைபுனைபடலத்துரைக்கப்பட்டன. முன்னையமங்கலமுன்னும் பின்னையமங்கலம் அதற்பின்னுமாகப் பிறழாதென்பார் 'வரிசையில்' என்றார். (௩௪)

> அறுகு நிம்ப மடிசி லரிசனஞ்
> சிறுகு மையவி செம்பஞ்சின் வித்திவை
> குறுகு தண்புனற் கொள்கல மேந்தியே
> மறுகில் வந்தனர் மங்கைய ரெண்ணிலார்.

இ—ள்: அறுகு—அறுகங்கொழுந்தும், நிம்பம்—வேப்பிலையும், அடிசில்—அன்னமும், அரிசனம்—மஞ்சளும், சிறுகும் ஐயவி—சிறிதாகிய வெண்கடுகும், செம்பஞ்சின் வித்து—செம்பஞ்சின் விதையுமாகிய, இவை குறுகு தண் புனல் கொள்கலம் ஏந்தி—இப்பொருள்கள் செறியப்பெற்ற குளிர்ந்தநீர்நிறைந்த ஆராத்திரிகத்தட்டைக்கையிற்றாங்கி, மங்கையர் எண் இலார்—அளவிறந்த பெண்கள், மறுகில் வந்தனர்—வீதியில் வந்தார்கள் எ—று.

அறுகு நிம்பம் ஆகுபெயர்கள். குறுகுகொள்கலம் தண்புனற்கொள்கலமெனத்தனித்தனியியையும். (௩௫)

> நெருக்கு பூண்முலை நேரிழை யாரவர்
> பொருக்கெ னவெதிர் போந்துயிர் யாவினு
> மிருக்கு மாதி யிறைவனை யேத்தியே
> தருக்கொ டேநின்று தந்தொழி லாற்றினார்.

இ—ள்: நெருக்கு பூண் முலை நேரிழையார் அவர்—(ஒன்றையொன்று)நெருக்குகின்ற அணிகளையணிந்த தனங்களையுடைய அம்மங்கையர்கள், பொருக்கென எதிர் போந்து—விரைவிலெதிரேபோய், உயிர் யாவினும் இருக்கும் ஆதி இறைவனை ஏத்தி-எல்லா ஆன்மாக்களினும் பரமான்மாவாகவியாபித்திருக்கின்ற ஆதிகடவுளாகிய சிவபிரானைத்துதித்து, தருக்கொடு நின்று தம் தொழில் ஆற்றினார்-மகிழ்வுடனின்று தாஞ்செய்யவேண்டிய தொழிலையியற்றினார்கள் [சுற்றினார்கள்] எ—று.

நெருக்குபூண்முலைநேரிழையாரென்பதற்கு முன்னர் இருபதாஞ்செய்யுளினுரைத்தாங்குரைக்க. தந்தொழில் பிற்படாதவாறென்பார் 'பொருக்கென' எனவும், முகம்வாடி சிற்றன்முதலிய அசுபக்குறியின்றியென்பார் 'தருக்கொடு' எனவுங்கூறினார்.

> எங்க ணுதனெ திருற வெண்ணிலா
> மங்கை யார்சுடர் மன்னிய தட்டைகள்

செங்கை யிற்கொடு சென்று வலன்வளை இ
யங்கண் மும்முறை யன்பொடு சுற்றினார்.

இ—ள்: எண் இலா மங்கை மார்—அளவிறந்தமாதர்கள், சுடர் மன்னிய தட்டைகள் செம் கையில் கொடு—தீபமேற்றியதட்டங்களைச் சிவந்தகரத்திலேந்தி, எங்கள் நாதன் எதிர் உற சென்று—எங்கள் தலைவராகிய சிவபிரானது திருமுன்போய், அன்பொடு—மனஅன்பினுடன், அங்கண் வலன் வளை இ—அவ்விடத்துநின்று வலமுறையாகவளைத்து, மும்முறை சுற்றினார்—மூன்றுமுறை சுற்றினார்கள் எ—று.

அங்கண் சுற்றினாரென இயையும். நின்றென்பது சொல்லெச்சம். வளைஇ-வளைத்து என்பதன்விகாரம். (௩௭)

ஆன காலை யருமணச் சாலைமுன்
ஞான நாயக னட்பொடு நண்ணியே
வானு லாய மழவிடை நீங்கினான்
யான மீதினின் றியாரு மிழிந்திட.

இ—ள்: ஆன காலை—அத்தொழில்கணிகழும்பொழுது, ஞான நாயகன்—ஞானமுதல்வராகிய சிவபிரான், நட்பொடு—கருணையுடன், அரு மணச்சாலைமுன் நண்ணி—அரிய திருமணமண்டபத்தின் முன் சென்று, யாரும் யானமீதில் நின்று இழிந்திட—தம்முடன் வந்தாரனைவருந் தத்தம்வாகனங்களினின்றுமிறங்க, வான் உலாய மழவிடைநீங்கினான்—பெருமைபொருந்திய இளமையாகிய இடபவாகனத்தினின்று மிழிந்தருளினார் எ—று.

கைத்தொழில்வல்லோரெவராலுஞ் செயற்கரிய சித்திரங்களமைந்த சாலையென்பார் 'அருமணச்சாலை' எனவும், விருப்பற்றவரென்பார் 'ஞானநாயகன்' எனவும், அங்குநிகழ்ந்த உபசாரங்களால் அகமுமுகமுமலர்ந்தென்பார் 'நட்பொடு' எனவும், எனையரது ஊர்திகளினைத்தினுஞ் சிறந்தவென்பார் 'வானுலாய' எனவுங் கூறினார். வானுலாய என்பதற்கு ஆகாயமார்க்கமாயுலாவிவந்த எனப்பொருள்கூறுவது சிறப்பன்று. மீதினின்றென்பது மேனின்றென்பதுபோலந்தனுருபு. (௩௮)

விடையி ழிந்துழி மேனைவிண் ணாட்டவர்
மடமின் னாரொடு வந்து பராபர
னடிகண் மீதினி லான்பொழி பால்கொடு
கடிதி னாட்டினள் கைதொழு தேகினாள்.

இ—ள்: விடை இழிந்துழி— (சிவபிரான்) இடபவாகனத்தினின்றுமிறங்கியபொழுது, மேனை-மேனாதேவியானவள், மட விண்ணாட்டவர் மின்னாரொடு வந்து-மடமைக்குணத்தையுடைய தேவப்பெண்களோடும் வந்து, பராபரன் அடிகள் மீதினில்—பராபரராகிய சிவபிரானது திருவடிகளில், ஆன் பொழி பால் கொடு கடிதின் ஆட்டினள்—காமதேனுப்பொழிந்த பாலினால் விரைவிலபிடேகமியற்றி, கைதொழுது ஏகினாள்—கைகூப்பி அப்பாற்போயினாள் எ—று.

உழி ஏழனுருபுக்காலத்தின்மேற்று. ஆட்டினள்-முற்றெச்சம். சிவபிரான் தனக்கு மருகராதல்பற்றி அவர்முன்னெடுநேரநிற்பாளல்லளாதலிற் கடிதினாட்டினளென்க. உத்தமிகளென்பார் 'மடமின்னார்' என்றார். (௩௯)

நாத னவ்வழி நந்திக ளுய்த்திடும்
யாது கைக்கட் பதமலர் சேர்த்தியே

போதன் மாதவன் பொற்கரந் தந்திடக்
கோதின் மாமணக் கோயிலு ளெய்தினன்.

இ—ள்: அவ்வழி—அப்பொழுது, நாதன்—சிவபிரான், நந்திகள் உய்த்திடு ம் பாதுகைக்கண் பதமலர் சேர்த்தி—திருநந்திதேவரிட்ட பாதரக்ஷையின்மேற் பாததாமரைகளை வைத்து, போதன் மாதவன் பொன் கரம் தந்திட— பிரமதேவருந்திருமாலு ம் அழகிய கையைக்கொடுத்து வர, கோது இல் மா மணக்கோயிலுள் எய்தினன்—கு ற்றமற்ற பெரிய திருமணச்சாலையினுட்சென்றருளினர் எ—று.

நாதன்-தலைவன். நந்திகள் என்பதிற் கள் உயர்வுபற்றிவந்தவிகுதி. போத ன்-தாமரைமலரிலிருப்பவன். மாதவன்-இலக்குமிக்கு நாயகன். மேனை அபிடேகமியற் றி மீண்டவுடனென்பார் 'அவ்வழி' யெனவும், எம்பிரான் பற்றுதற்கேற்றகரமென்பார் 'பொற்கரம்' எனவும், சிற்பநூன்முறைதவறாதியற்றப்பட்டதும், திருமணங்காணியவந் தாரனைவருமமைதற்கேற்றதுமாகியகோயிலென்பார் 'கோதின்மாமணக்கோயில்' என வும் கூறினர். வலப்பக்கத்திற் பிரமதேவரும் இடப்பக்கத்திற்றிருமாலுங் கரங்கொடு த்தனரென்க. (௪0)

வேறு.

பல்லிய மியம்ப வானோர் பரவவிஞ் சையர்கள் பாட
வொல்லெனக் கணங்க ளார்ப்ப வுருத்திரர் யாருஞ் சூழ
மெல்லெனச் செல்லு மண்ணல் விரிஞ்சனு மாலும் வேண்ட
மல்லலங் கோயி லுள்ள வனப்பெலா நோக்க லுற்றான்.

இ—ள்: பல் இயம் இயம்ப—பலவாத்தியங்கள் ஒலிக்க, வானோர் பரவ—தே வர்கள் துதிக்க, விஞ்சையர்கள் பாட—வித்தியாதரர்கள் சங்கீதம்பாட, கணங்கள் ஒல் லென ஆர்ப்ப—பூதசேனைகள் ஒல்லென்னும் அநுகரணம்பொருந்த ஆரவாரிக்க, உரு த்திரர் யாரும் சூழ—உருத்திரர்களனைவரும் புடைசூழ்ந்துவர, மெல்லென செல்லும் அண்ணல்—மிருதுவாகநடக்குஞ் சிவபிரான், விரிஞ்சனும் மாலும் வேண்ட— (இருபா லுங்கைலாகுதந்துவரும்)பிரமதேவரும்விஷ்ணுமூர்த்தியும் பிரார்த்திக்க, மல்லலம் கோ யில் உள்ள வனப்பு எலாம் நோக்கலுற்றான்—வளப்பமிக்க அத்திருமணமண்டபத்தின் கணுள்ள அலங்காரங்களனைத்தையுந் திருநோக்கஞ்செய்தார் எ—று.

வேண்ட என்னுமெச்சங் காரணப்பொருட்டு. மணவணிக்கேற்ற ஒய்யாரமு றவென்பார் 'மெல்லென' எனவும், முற்றறிவுடைய தாம் அனைத்தையுமுணர்ந்திருப்பி னும், உடன்செல்லுமுகத்தானே காணவிரும்பிய பிரமனுந் திருமாலுஞ்செய்தவேண்டு கோட்காகவே தரிசித்தனரென்பார் 'விரிஞ்சனுமாலும்வேண்ட-நோக்கலுற்றான்' என வும் கூறினர். (௪௧)

உலாவுறு சுரும்பு மூசா வொண்மலர்ச் சோலை வாவி
நிலாவுறழ் புனல்சே ரோடை நெடுந்தட நிறம்வே றாகிக்
குலாவுமண் டபங்க ளின்ன கொண்டியல் வனப்புக் காட்டிச்
சிலாதனன் மதலை கூறச் சென்றுசென் றிறைவன் கண்டான்.

இ—ள்: உலாவுறு சுரும்பு மூசா ஒள் மலர் சோலை—சஞ்சரிக்கின்ற வண்டு கள் இசைபாடப்பெறாத ஒளிபொருந்திய பூக்களையுடைய சோலைகளையும், வாவி-வாவி களையும், நிலா உறழ் புனல் சேர் ஓடை-நிலவைப்போன்ற (தெளிந்த) நீர்பொருந்திய ஓ டைகளையும், நெடும் தடம்-நெடியதடாகங்களையும், நிறம் வேறு ஆகி குலாவும் மண்டப

ங்கள்-பலவேறுசிறங்கள்பொருந்திவிளங்குகின்ற மண்டபங்களையும், இன்ன-இவைபோ ன்றனபிறவற்றையும், கொண்டு இயல் வனப்பு காட்டி-தன்னிடத்தமைத்துத்தோற்றுகி ன்ற அலங்காரத்தைக்காண்பித்து, சிலாதன் நல் மதலை கூற-சிலாதமுனிவரது உத்த மகுமாரராகிய திருநந்திதேவர்சொல்ல, இறைவன் சென்று சென்று கண்டான்-தலைவ ராகிய சிவபிரான் அங்கங்கெல்லாம் போய்ப்போய்த் திருநோக்கஞ்செய்தார் எ---று.

வாவி மிகப்பெரியநீர்நிலை. ஓடை நீண்டவடிவாயமைந்தநீர்நிலை. தடம் வட்ட வடிவாகவுஞ் சதுரவடிவாகவுமமைந்த நீர்நிலை. கூற கண்டான் எனவியையும்.

நாண்மலர்களைத்தேடிமொய்க்கும்வண்டென்பார் 'உலாவுறுசுரும்பு' எனவு ம், மணிமுதலியவற்றாணியன்றனவும் மதுமலர்போலும் பொற்புடையனவுமென்பார் சுரும்புமூசாவொண்மலர்' எனவும், அழுக்கற்றநீரென்பார் 'விலா வுறழ்புனல்' எனவும், பெருந்தடமென்பார் 'நெடுந்தடம்' எனவும், பல்வேறுசிறமுடை ய இரத்தினங்களாற் சித்திரமுறச்செய்துவிளங்குகின்றவென்பார் 'சிறம்வேறாகிக்குலா வும்' எனவும், அருந்தவத்தாலவதரித்தகுமாரரென்பார் 'நன்மதலை' எனவும் கூறினார். சிறம்வேறாகிக்குலாவுமண்டபங்கள் என்பதற்கு ஒன்றனொளிமற்றொன்றிற்கதுவுதலா லிதனிறமிதுதாவெனத்துணிதற்கரியதாய் இயற்கைசிறமாறுபட்டுத்தோன்றுமண்ட பங்களெனவகலமுரைப்பினுமாம்.

சிலாதனென்னும் பெயர்க்காரணத்தைக் கணங்கள்செல்படலத்து இருபத் தோராஞ்செய்யுளினும், திருநந்திதேவரவர்க்கு மதலையாயவதரித்தசரித்திரத்தைக்காம தகனப்படலத்துத் தொண்ணூற்றுநான்காஞ்செய்யுளினுமுரைத்தனம். (௪௨)

கண்டனுந் தம்போற் றங்கள் காமர்விண் ணகரந் தானு
மண்டல வரைப்பின் வந்து வைகிய தாங்கொ லென்னு
வண்டர்கள் வாவி கேணி யகன்புனல் குடைந்துங் காமர்
தண்டலை யாடல் செய்துந் தலைத்தலை திரிதந் துற்றார்.

இ—ள்: கண்டலும்-(அவ்வாறு சிவபிரான்) திருநோக்கஞ்செய்தலும், அண்ட ர்கள்-உடன்வந்ததேவர்கள், தங்கள் காமர் விண்ணகரம் தானும் தம்போல் மண்டலவ ரைப்பின் வந்து வைகியது ஆம் கொல் என்னு-தமதிருப்பிடமாகிய அழகிய சுவர்க்கலோ கமும் தம்மைப்போலப் பூவுலகத்தில் வந்துதங்கியதா? என்றதிசயித்து, வாவி கேணி அகன் புனல் குடைந்தும்— வாவிகளினுங்கேணிகளினுமுள்ள விசாலித்தநீரில்மூழ்கி யும், காமர் தண்டலை ஆடல்செய்தும்—அழகியசோலைகளில் விளையாட்டயர்ந்தும், தலை த்தலை திரிதந்து உற்றார்—இடமிடங்கடோறும் உலாவினார்கள் எ—று.

அதிசயித்தென்பது சொல்லெச்சம். பெருவனப்புடைமையால் 'விண்ணக ரந்தானுமண்டலவரைப்பின்வந்துவைகியதாங்கொல்' என்றதிசயித்தனர். விண்ணகர ந்தானுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. தண்டலை அன்மொழித்தொகை; தண்ணிய கொம்பரையுடையதெனவிரியும்.

நீராடியும் பூக்கொய்துந்திரிந்தனரென்க. (௪௩)

நந்தியந் தேவு காட்ட நல்வனப் பனைத்து நோக்கிக்
கந்தமென் போது வேய்ந்த கடிமணச் சாலை தன்னி
லிந்திர நீலத் திட்ட வெழினலத் தவிசி னும்பர்
வந்துவீற் றிருந்தா னெல்லா மறைகட்கு மறையாய் நின்றான்.

இ—ள்: எல்லா மறைகட்கும் மறை ஆய் நின்றான்-எல்லாவேதங்கட்கும் மறைபொருளாய்நின்றசிவபிரான், நந்தியந்தேவு காட்ட நல் வனப்பு அனைத்தும் நோக்கி-திருநந்திதேவர் காண்பிக்க (அங்குள்ள) நல்ல அலங்காரங்களனைத்தையுந் திருநோக்கஞ்செய்து, கந்த மென் போது வேய்ந்த கடிமணச்சாலை தன்னில்-பரிமளத்தையுடைய மெல்லிய மலர்மாலைகளாலலங்கரிக்கப்பட்ட திருமணச்சாலையின்கண், இந்திரநீலத்து இட்ட எழில் நல தவிசின் உம்பர்--இந்திரநீலரத்தினத்தாலியற்றிவைத்த அழகிய சிறந்த சிங்காசனத்தின்மேல், வந்து வீற்றிருந்தான்—வந்திருந்தருளினார் எ—று.

போது ஆகுபெயர். வேய்ந்த படுவிகுதிதொக்க பெயரெச்சம். இந்திரநீலம் தலைமையாகிய நீலரத்தினம். இது பாணிறைந்த பாத்திரத்துள்விட்டவழி அப்பால்முழுவதையும் நீலநிறமாகக்காட்டுமென்பர். அச்சாலைக்கணிருந்த ஆசனங்களனைத்தினும் பேரழகுபடைத்துயர்ந்ததென்பார் 'எழினலத்தவிசு' என்றார். உம்பரிருந்தான் வந்திருந்தானெனத் தனித்தனியியையும். மறைகட்குமறையாய்நின்றார் எவருங்கண்டு களிக்குமாறு இங்ஙன்வந்து வீற்றிருந்ததற்புதமென்பதிச்செய்யுளினுட்கிடை. (௪௪)

வீற்றிருந் தருளு மெல்லை வீரபத் திரன்றீப் பேரோ
னாற்றல்கொள் கூர்மாண் டேச னாடக னைய னேனோர்
போற்றிசெ யயனே மாலே புரந்தரன் முனிவர் தேவ
ரேற்றிடு தவிசு தோறு மிருந்தன ரிறைவற் சூழ.

இ—ள்: வீற்றிருந்தருளும் எல்லை—(சிவபிரான் அவ்வாறு) எழுந்தருளியிருந்தபொழுது, வீரபத்திரன்—வீரபத்திரருத்திரரும், தீப்பேரோன்— காலாக்கினிருத்திரரும், ஆற்றல்கொள் கூர்மாண்டேசன்—வலிமைபொருந்திய கூர்மாண்டேசருத்திரரும், ஆடகன்— ஆடகேசருத்திரரும், ஐயன்—ஐயனாரும், ஏனோர்—பிறரும், போற்றிசெய் அயன்—துதிக்கப்படுகின்ற பிரமதேவரும், மால்—திருமாலும், புரந்தரன்—இந்திரனும், முனிவர்—முனிவர்களும், தேவர்—தேவர்களும், இறைவன் சூழ—சிவபிரானைப் புடைசூழ்ந்து, ஏற்றிடு தவிசு தோறும் இருந்தனர்—தத்தமக்கேற்ற ஆசனங்கடோறுமிருந்தார்கள் எ—று.

செய் படுவிகுதிதொக்கபெயரெச்சம். ஏகாரங்கள் அசை; எண்ணெனக்கொண்டு புரந்தரன்முதலியவற்றோடுங்கூட்டியுரைப்பினுமாம். உயர்ந்தோர் அணிமையிலுயர்ந்த ஆசனங்களினும், தாழ்ந்தோர் சேய்மையிற்றாழ்ந்த ஆசனங்களினுமாகவிருந்தனரென்பார் 'ஏற்றிடுதவிசுதோறுமிருந்தனர்' என்றார். (௪௫)

வேறு.

அமையப் படுமப் பொழுதக்கினி லாதி யண்ணல்
விமலத் திருமா மணங்காணுற மேலை யண்டச்
சுமையுற் றிடுமப் புவனத்தருந் தொக்க நீரா
லிமையச் சயிலந் துளங்குற்ற திடுக்க ணெய்தி.

இ—ள்: அமையப்படும் அ பொழுதத்தினில்-அமைதிபெற்ற அச்சமயத்தில், மேலை அண்ட சுமை உற்றிடும் அ புவனத்தரும்—பழைய அண்டத்தொகைகளிற்றங்கிய எல்லாப்புவனங்களிலுமுள்ள அனைவரும், ஆதி அண்ணல் விமல மா திருமணம் காணுற தொக்க நீரால்—ஆதிகடவுளாகிய சிவபிரானது மலசம்பந்தத்தைநீக்கும் பெருமைவாய்ந்த திருமணத்தைக்காணும்படி வந்துகூடியகாரணத்தால், இமையச்சயிலம்-இமயமலையானது, இடுக்கண் எய்தி துளங்குற்றது-வருத்தமடைந்துநடுங்கியது எ—று.

அமையப்படுமென்பதற்கு அனைவரும் வந்தமைந்திருக்கப்பெற்ற எனக்கூறு தலித்துணைச்சிறப்பினதன்று; எப்புவனத்தருந்தொக்கநீரலென அக்காரணம் பின்னருணர்த்தப்படுதலின்.

சுபமுகூர்த்தமென்பார் 'அமையப்படுமப்பொழுதத்தினில்' எனவும், பிறவித்துயரைநீக்கிப் பேரின்பமுத்தியைப்பயக்கும் அற்புதமணமாதல்பற்றிக் குழீஇயினரென்பார் 'விமலத்திருமாமணங்காணுற- தொக்கநீரால்' எனவும் கூறினர். (௪௬)

பொன்பா லிமையந் துளங்குற்றுழிப் போற்று சேடன்
றன்பா லவனி யெனலாந்துலைத் தட்டி ரண்டின்
வன்பால தான வடபாலது தாழ மற்றைத்
தென்பால தாற்ற வுயர்ந்திட்டது தேவ ருட்க.

இ—ள்: பொன் பால் இமையம் துளங்குற்றுழி—பொன்னின்பகுதியதாகிய [பொன்னுலாகிய] இமையமலை நடுங்கியபோது, போற்று சேடன் தன் பால் அவனி எனல் ஆம் இரண்டு துலைத்தட்டின்—சுமக்கின்ற ஆதிசேடனது தலையிற்பொறுத்ததாகிய பூமியென்கின்ற இரண்டுதராசுத்தட்டுகளுள், வன்பாலது ஆன வடபாலது தாழ—கனத்த இயல்பினையுடைத்தாய வடதிசைப்பாகந்தாழ்வடைய, மற்றை தென்பாலது—ஒழிந்த [கனமற்ற] தென்றிசைப்பாகமானது, தேவர் உட்க ஆற்ற உயர்ந்திட்டது—தேவர்களும் பயப்படுமாறு மிகவுயர்ந்தது எ—று.

உயர்வுசிறப்பும்மைதொக்கது. சேடனுற்றலைகொடுக்கப்படுமிடத்தினின்று இருபுடையும் பாரமொத்தாலன்றிச் சமப்படலில்லாமையின் 'போற்றுசேடன்றன்பாலவனியெனலாந்துலைத்தட்டிரண்டு' என்றார். (௪௭)

ஒங்குற் றதுதென் புவியாதலு மும்ப ரெல்லா
மேங்குற் றனர்மண் ணுலகோர்க ளிடுக்க ணுற்றுத்
தீங்குற் றனவோ வெமக்கென்று தியக்க முற்றார்
பாங்குற் றிடுதொன் முனிவோரும் பரிய லுற்றார்.

இ—ள்: தென்புவி ஓங்குற்றது ஆதலும்—தென்றிசைப்பூமி உயர, உம்பர் எல்லாம் ஏங்குற்றனர்-(அதனைக்கண்ட) தேவரனைவரும் ஏக்கமடைந்தார்கள், மண்ணுலகோர்கள்-பூமியிலுள்ளமாந்தர்கள், இடுக்கண் உற்று-வருத்தமடைந்து, எமக்கு தீங்கு உற்றனவோ என்று தியக்கமுற்றார்—எங்களுக்குத்தீமை சம்பவித்ததாவென்று வாடினார்கள், பாங்கு உற்றிடு தொல் முனிவோரும் பரியலுற்றார்—பக்கத்திற்பொருந்திய பழைய முனிவர்களும் வருந்தினார்கள் எ—று.

உம்மை எச்சம். (௪௮)

இன்னோ ரெவருஞ் சிவனேயென் றிரங்க லோடு
முன்னோனு மன்ன செயல்கண்டு முறுவ லெய்தி
யன்னோர் குறைநீத் திடநந்தியை நோக்கி யாழி
தன்னோர் கரத்திற் செறித்தானைத் தருதி யென்றான்.

இ—ள்: இன்னோர் எவரும் சிவனே என்று இரக்கலோடும்—இவரனைவருஞ் சிவனே! என்று ஓலமிடுதலும், முன்னோனும் அன்ன செயல் கண்டு முறுவல் எய்தி—முதற்கடவுளாகிய சிவபிரானும் அச்செய்கையைப்பார்த்துக் குறுநகைசெய்து, அன்

ஞோர் குறை தீர்த்திட-அவர்களது குறையையொழிக்கும்படி திருவுளம்பற்றி, நந்தியை நோக்கி—திருநந்திதேவரைத் திருநோக்கஞ்செய்து, தன் ஓர் கரத்தில் ஆழி செறித்தானை தருதி என்றான்—தமது ஓர்கையிற் சமுத்திரத்தை அடக்கியுண்ட அகத்தியமுனிவரை அழைத்துவருகுதியென்று பணித்தருளினார் எ—று.

திருவுளம்பற்றியென்பது சொல்லெச்சம். உம்மை எச்சம். எளிதிற்றீர்த்தற்பாலதாமித்தீங்கிற்கஞ்சினரேயென்றெண்ணிக் குறுநகைசெய்தனரென்க. இத்தீங்கைத்தீர்க்குமாற்றலுடையரென்பார் 'ஆழிதன்னோர்கரத்திற்செறித்தான்' என்றார்.

முன்னொருகாலத்தில், தேவேந்திரன் தன்னுடன்பொருதலாற்றாது கடலுளொளித்த விருத்திராசுரனைத்தேடும்பொருட்டு அகத்தியமுனிவரைக் குறையிரப்ப, அம்முனிவர், சிவபிரானது காலாக்கினிரூபத்தைத் தியானித்துச் சமுத்திரத்தை உழுந்தளவாகக்கையிலமைத்துப் பருகினர். இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணத்து இந்திரன்பழிதீர்த்தபடலத்திற்காண்க. (௪௯)

என்றா னதுகா லையினந்தி யிறைஞ்சி யேகிக்
குன்றாத கும்ப முனிவன்றனைக் கூவ வங்கட்
சென்றா னவனைக் கொடுபோய்ச்சிவன் முன்ன ருய்ப்ப
மன்றார் கழல்கள் பணிந்தான்மல யத்து வள்ளல்.

இ—ள்: என்றான்—என்று சிவபிரான்றிருவாய்மலர்ந்தருளினார், அது காலையில்—அப்பொழுது, நந்தி இறைஞ்சி ஏகி—திருநந்திதேவர்வணங்கிச்சென்று, குன்றாத கும்பமுனிவன்றனை கூவ—தாழ்வடையாத அகத்தியமுனிவரையழைக்க, அங்கண் சென்றான்—அம்முனிவர் அவ்விடத்தில் வந்தார், அவனை கொடுபோய் சிவன் முன்னர் உய்ப்ப—(திருநந்திதேவர்) அம்முனிவரை அழைத்துச்சென்று சிவபிரானது திருமுன்னிலையில்விட, மலயத்து வள்ளல்—பொதியமலையில் வசிக்கின்ற தலைவராகிய அவ்வகத்தியமுனிவர், மன்று ஆர் கழல்கள் பணிந்தான்—கனகசபையிற்றிருநிருத்தஞ்செய்கின்ற (அப்பெருமானது) திருவடிகளை வணங்கினார் எ—று.

கடலைப்பருகல் தமிழைவளர்த்தல் விந்தகிரியையடக்கல் வில்வலன்வாதாவியென்னுமசுரரைக்கோறல் முதலாகிய அருஞ்செயல்களைச்செய்து பெரும்புகழ்படைத்தவென்பார் 'குன்றாத' என்றார். தவத்தாற்குறைவுபடாத எனவுரைப்பினுமாம். கும்பமுனியென்னும் பெயர்க்காரணத்தைப் பாயிரப்படலத்து அறுபத்துமூன்றாஞ்செய்யுளிற் கடமுனி என்பதற்குரைத்தவாறுகொள்க. (௫௦)

தாழுந் தவத்தோன் றனைக்கண்ணுதற் சாமி நோக்கித்
தாழுங் குறியோ யிவண்யாவருஞ் சார்த லாலே
தாழும் புவிதக் கிணமுத்தரஞ் சால வோங்கத்
தாழுஞ் சுவர்க்க நிலனுந்தனி தாழு மன்றே.

இ—ள்: கண்ணுதல் சாமி தாழும் தவத்தோன் தனை நோக்கி—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் தம்மை வணங்கிய அகத்தியமுனிவரைத்திருநோக்கஞ்செய்து, தாழும் குறியோய்-மிகவுங் குறியரூபத்தையுடைய முனிவனே!, இவண் யாவரும் சார்தலால்-இவ்விடத்து எல்லாரும் வருதலால், தாழும்புவி-கீழுள்ளதாகிய இப்பூவுலகம், தக்கிணம் சால ஒங்க உத்தரம் (சால) தாழும்—தென்பாகம் மிக உயர வடபாக

ம் மிகத்தாழுகின்றது, சுவர்க்கநிலனும் நனி தாழும்—(இதனால் மேலுள்ள) சுவர்க்கலோகமும் மிகஇழுக்கடையும் எ—று.

தக்கிணமுத்தரஞ்சாலவோங்கத் தாழுமென்பது தக்கிணஞ்சாலவோங்க உத்தரஞ்சாலத்தாழுமெனக்கூட்டப்பட்டது. உம்மை உயர்வுசிறப்பு. (௫௧)

தெருமந் துழலுந் தரைமன் னுயிர் செய்த தொல்லைக்
கருமந் தனைவிட் டயர்வெய்திக் கலங்கு கின்ற
பெருமந் தரமே முதலாய பிறங்கல் யாவு
மருமந்த மேரு வரையுந்தவ றாகு மம்மா.

இ—ள்: தெருமந்து உழலும் தரை மன் உயிர்—இயங்கித்திரிகின்ற பூவுலகத்திலுள்ள நிலைபெற்ற ஆன்மாக்கள், செய்த தொல்லை கருமந்தனை விட்டு அயர்வெய்தி கலங்குகின்ற—தாஞ்செய்த பழைய தொழில்களை இடையில்விட்டுச்சோர்வடைந்து கலங்குகின்றன, பெரு மந்தரம் முதலாய பிறங்கல் யாவும்— பெரிய மந்தரமுதலாகிய மலைகளனைத்தும், அருமந்த மேருவரையும் தவறு ஆகும்-அருமருந்துபோன்ற மேருமலையுந்தவறுபடும் எ—று.

தெருமந்துழலுமுயிர் தரையுயிர் மன்னுயிரெனத்தனித்தனியியையும். அருமருந்தன்ன என்பது அருமந்த என மரீஇயது. நோயைப்போக்கி உயிரைப்புரத்தற்கு அருமருந்து வேண்டப்படுமாறுபோலப் பூமியைநிலைப்படுத்திக் காத்தற்கு மேருமலைவேண்டப்படுதலின் 'அருமந்தமேருவரை' என்றார். (௫௨)

ஆனான் முனிகே ளொருநீயிவ் வசல நீங்கித்
தேனார் மருத வளமேயதென் னாடு நண்ணி
வானார் பொதிய மலைமேவுதி வைய மெல்லா
மேனா ளெனவே நிகராகி விளங்கு மென்றான்.

இ—ள்: ஆனால்—அவையங்ஙனமாயினும், முனி கேள்—முனிவனே! கேட்குதி, ஒருநீ—நீ யொருவனே, இ அசலம் நீங்கி—இந்த இமையமலையை விட்டுநீங்கி, தேன் ஆர் மருத வளம் மேய தென்னாடு நண்ணி—தேன்பொருந்திய வயல் வளமிகப்பெற்ற பாண்டிநாட்டையடைந்து, வான் ஆர் பொதியமலை மேவுதி—ஆகாயமளவுமோங்கிய பொதியமலையில் வீற்றிருப்பாயாக (அங்ஙனமிருப்பின்), வையம் எல்லாம் மேல் நாள் என நிகர் ஆகி விளங்கும் என்றான்—உலகமெல்லாம் முன்னைநாள்போலச் சமப்பட்டு விளங்குமென்றருளிச்செய்தார் எ—று.

தேன் பெருக்கால் நெற்பயிர்வளரும் பெருவளத்தையுடைய நாடென்பார் 'தேனார்மருதவளமேயதென்னாடு' என்றார். தேனார் நாடு என இயைப்பினுமாம். (௫௩)

பிறையொன்று வேணிப் பரனிங்கிது பேச லோடு
மறையொன்று தீஞ்சொற் றமிழ்மாமுனி யச்ச மெய்திக்
குறையொன் றியான்செய் துளனோகொடி யேனை யீண்டே
யுறையென் றிலைசே ணிடைச்செல்ல வுரைத்தி யெந்தாய்.

இ—ள்: பிறை ஒன்று வேணி பரன் இங்கிது பேசலோடும்— பாலசந்திரன் தங்கப்பெற்ற சடைமுடியையுடைய சிவபிரான் இவ்வாசகத்தைத் திருவாய்மலர்ந்தரு

ள, தீம் சொல் ஒன்று தமிழ் அறை மா முனி அச்சம் எய்தி—இனிய சொற்கள்பொருந்திய தமிழை அருளிச்செய்த அகத்தியமகாமுனிவர் பயந்து, எந்தாய்-எம்பெருமானே! யான் குறை ஒன்று செய்துளனோ—யான் யாதேனுமொருகுற்றஞ் செய்திருக்கின்றேனோ?, கொடியேனை ஈண்டே உறை என்றிலை—பாவியேனை இவ்விடத்திரு என்று பணித்திலீர், சேணிடை செல்ல உரைத்தி—தூரத்திற்போயிருக்குமாறுபணித்தீர் எ-று.

குறைசெய்திலனேற்றமியேனைச் சேய்மைக்கணேகுமாறு கட்டளையிடமாட்டீரென்பதாம். பெருமான்றிருமணத்தைத்தரிசிக்கும் பேறில்லேனென்பார் 'கொடியேன்' என்றார். (௫௪)

என்னக் குறிய முனிவன்றனை யெந்தைநோக்கி
யுன்னைப் பொருவு முனிவோருல கத்தி லுண்டோ
வன்னத் தவனு முனைநேர்கில னாத லானீ
முன்னிற் றெவையுந் தவறின்றி முடித்தி மன்னோ.

இ—ள்: என்ன—என்றிவ்வாறு விண்ணப்பஞ்செய்ய, எந்தை— எம்பரமபிதாவாகிய சிவபிரான், குறிய முனிவன்றனை நோக்கி— அகத்தியமுனிவரைப்பார்த்து, உன்னை பொருவும் முனிவோர் உலகத்தில் உண்டோ—உன்னைப்போன்ற [சிறந்த] முனிவர்கள் எவ்வுலகத்திலாவது இருக்கின்றார்களா? (இல்லையே), அன்னத்தவனும் உனை நேர்கிலன்—அன்னவாகனராகிய பிரமதேவரும் உன்னை ஒக்கமாட்டார், ஆதலால்-ஆதலினால், நீ முன்னிற்று எவையும் தவறு இன்றி முடித்தி— நீ நினைத்தசெயலனைத்தையும் தப்பாது நிறைவேற்றவல்லாய் எ—று.

அன்னத்தவனுமென்பதில் உம்மை உயர்வுசிறப்பு. சிருட்டிகர்த்தராதலாற் பிரமதேவரையெடுத்துக்காட்டினார். (௫௫)

வேறுற் றிடுதொல் முனிவோர்களின் விண்ணு ளோரி
னீறுற் றிடுமோ விதுசெய்கை யெவர்க்கு மேலாம்
பேறுற்ற நின்னான் முடிவாகும் பெயரு கென்று
கூறுற் றிடலு முனியீது குறித்து ரைப்பான்.

இ—ள்: வேறு உற்றிடு தொல் முனிவோர்களின்—(உன்னையொழிந்த) பிற பழையமுனிவர்களாலும், விண்ணுளோரில்—தேவர்களாலும், இது செய்கை ஈறுற்றிடுமோ—இச்செயல் முடிவுபெறுமா? (பெறாது), எவர்க்கும் மேல் ஆம் பேறு உற்ற நின்னால் முடிவாகும்—அவரெல்லாரினும் மேலாகிய தவப்பேற்றைப்பெற்றுள்ள உன்னாற்றான் முடிவுபெறும், பெயருக என்று கூறுற்றிடலும்—போகுதியென்று திருவாய் மலர்ந்தருளுதலும், முனி குறித்து ஈது உரைப்பான்—(கேட்ட அகத்தியமுனிவர்) ஆராய்ந்து இதனைக்கூறுவார் எ—று.

திருமணக்கோலத்தைத் தரிசித்தற்கேற்ற வரம்பெறுமாறுதேர்ந்து கூறினரென்பார் 'குறித்துரைப்பான்' என்றார். (௫௬)

வான்செய்த மேனி நெடுமான்மக வேள்வி மன்னன்
றேன்செய்த கஞ்சத் தயனிற்கவிச் செய்கை தீயேன்
றான்செய் திடவே பணித்திட்டனை தன்மை யீதே
னான்செய் ததுவே தவம்போலு நலத்த தெந்தாய்.

இ—ள்: எந்தாய்—எம்பெருமானே!, வான் செய்த மேனி நெடு மால்—மேகம்போன்ற கருநிறத்திருமேனியையுடைய நெடிய திருமாலும், மகவேள்வி மன்னன்— நூறுயாகங்கட்கதிபனாகிய இந்திரனும், தேன் செய்த கஞ்சத்து அயன் இற்க—தேன்பொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும் ஆகிய தலைவர்கள்யாவரும் இருக்கவும், இ செய்கை தீயேன் தான் செய்திட பணித்திட்டனை— (அவரனைவரையும் விடுத்து) இச்செயலைக்கொடியேனாகிய யான் செய்யுமாறு கட்டளையிட்டருளினீர், ஈது தன்மையேல்—இவ்வாறாயின், நான் செய்தது தவமே நலத்ததுபோலும்—யானியற்றிய தவமே சிறந்ததுபோலும் எ—று.

வான் ஆகுபெயர். செய்த என்பதீண்டுவமைகுறித்துநின்றது. மகம் வேள்வி ஒருபொருட்கிளவிகள். நெடியவடிவத்தையுடையவரும் திரிவிக்கிரமரூபங்கொண்டு பூமியையோரடியானளந்தவருமாதலின் திருமாலையும், நூறுயாகஞ்செய்த பேறுடையனாதலின் இந்திரனையும், நினைத்தவாறு சிருட்டிக்குமாற்றலுடையராதலிற் பிரமதேவரையும் தெரிந்துகூறினரென்க. (௫௭)

ஈங்கிப் பணியை யளித்தாயெனி லெந்தை யுன்றன்
பாங்குற்ற புத்தேள் மணக்காட்சி பணிந்தி டாம
னீங்கற் கரிதாங் கவல்கின்றதென் னெஞ்ச மென்ன
வோங்கற் கயிலைத் தனிநாயக னோத லுற்றான்.

இ—ள்: எந்தை—எம்பரமபிதாவே!, ஈங்கு இப்பணியை அளித்தாய் எனில்-இப்பொழுது இவ்வேலையெமக்குக்கட்டளையிட்டருளினீரேல், உன்றன் பாங்கு உற்ற புத்தேள் மணக்காட்சி பணிந்திடாமல்—தேவரீரிடத்துள்ள தெய்வீகமாகிய திருமணக்காட்சியைத்(தரிசித்து)வணங்காமல், நீங்கற்கு அரிது—நீங்குதல்அருமை, என் நெஞ்சம் கவல்கின்றது என்ன—எனது மனங்கவலைப்படுகின்றதென்று விண்ணப்பஞ்செய்ய, கயிலை ஓங்கல் தனி நாயகன் ஓதலுற்றான்—திருக்கைலாசமலையிலெழுந்தருளியிருக்கின்ற ஒப்பற்ற தலைவராகிய சிவபிரான் (இவ்வாறு) திருவாய்மலர்ந்தருளுவார் எ-று.

இடப்பொருளுணர்த்தும் ஈங்கென்னுமிடைச்சொல் ஈண்டுக்காலத்தைச்சுட்டிற்று: பாங்கு-ஏழனுருபு. (௫௮)

வேறு.

சிந்தைய தழுங்க லின்றித் தென்மலைச் சேறி யங்கண்
வந்துநம் வதுவைக் காட்சி வழங்குது மகிழ்ந்து காண்டி
நந்தமை யுன்னி யாங்கே நாள்சில விருத்தி பின்னர்
முந்தையி லெமது பாங்கர் வருதியான் முனிவ வென்றான்.

இ—ள்: முனிவ—முனிவனே!, சிந்தையது அழுங்கல் இன்றி தென்மலை சேறி—மனம்வருந்தாது பொதியமலையிற்செல்லுதி—அங்கண் வந்து நம் வதுவைக்காட்சி வழங்குதும்—அவ்விடத்தேவந்து எமது மணக்கோலத்தைக் காட்டுவோம், மகிழ்ந்து காண்டி—(அப்பொழுது அக்கோலத்தை) மனமுவந்து தரிசிப்பாய், ஆங்கே நந்தமை உன்னி சிலநாள் இருத்தி—அப்பொதியமலையில் எம்மைத்தியானித்துச்சிலதினமிருப்பாய், பின்னர் முந்தையில் எமது பாங்கர் வருதி என்றான்— பின்பு முன்போல எம் பக்கத்தில் வருவாயாக என்று கூறியருளினார் எ—று. (௫௯)

என்றிவை யமலன் செப்ப விசைதரு புலத்த னாகி
மன்றமர் கழல்க டம்மைப் பன்முறை வணக்கஞ் செய்து
நின்றுகை தொழுது போற்றி நெடிதுயிர்த் தரிதி னீங்கித்
தென்றிசை யெல்லை நோக்கிச் சிறுமுனி கடிது போனான்.

இ—ள்: என்று இவை அமலன் செப்ப—என்று இவ்வாசகங்களைச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருள, சிறுமுனி—குறியவடிவத்தையுடைய அகத்தியமுனிவர், இசைதரு புலத்தன் ஆகி—சம்மதித்த மனத்தையுடையவராய், மன்று அமர் கழல்கள் தம்மை பன்முறை வணக்கஞ்செய்து—கனகசபையின்கண்ணே ஆனந்ததாண்டவஞ்செய்தருளுகின்ற (அச்சிவபிரானது) திருவடிகளைப் பலதரம்பணிந்து, நின்று கைதொழுது போற்றி—எழுந்துநின்று கைகுவித்துத்துதித்து, நெடிது உயிர்த்து—பெருமூச்சுவிட்டு, அரிதில் நீங்கி—அருமையாக (அவ்விடத்தினின்றும்)பிரிந்து, தென்றிசை எல்லை நோக்கி கடிது போனான்—தெற்குத்திக்கினெல்லையைநோக்கி விரைவாகச்சென்றார் எ—று.

அரிதினீங்கலாவது:- போதற்கியையாததம்மனத்தைத் தாமாகவேவலிந்தொருப்படுத்திச்செல்லுதல். ஒருமுறையிருமுறைவணங்குதல் குற்றமாதலிற் பன்முறைவணங்கினர். திருமணக்காட்சியை அங்குவந்தாரனைவருந்தரிசிப்பத் தாமாத்திரந்தரிசியாதுசெல்லநேர்ந்ததேயென்பதுபற்றி நெடிதுயிர்த்தனர். காலதாமசஞ்செய்யினுலகந்தனெல்லாமழியுமாதலிற்கடிதுபோயினர். (௬0)

கிற்புறு மாயை வல்ல கிரவுஞ்ச வரையும் விந்த
வெற்பதும் வன்மை சிந்த வில்வல னொடுவா தாவி
கற்பனை யகன்று மாயக் காவிரி நீத்தத் தோடு
முற்பகல் படர்ந்த தென்ன முனிவரன் றென்பாற் போனான்.

இ—ள்: கிற்புறு மாயை வல்ல கிரவுஞ்சவரையும் விந்தவெற்பதும் வன்மை சிந்த- (அணைந்தாரை)அகப்படுத்துதற்கேற்ற மாயத்தொழிலிற்சாமர்த்தியமுடைய கிரவுஞ்சமலையும் விந்தமலையும் வலிகுன்ற, வில்வலனொடு வாதாவி கற்பனை அகன்று மாய—வில்வலனும் வாதாவியுஞ்சூழ்ச்சிகெட்டு அழிய, முற்பகல் காவிரிநீத்தத்தோடு படர்ந்தது என்ன—முன்னைநாளிற் காவேரிநதியோடு (மேருமலையினின்று) சென்றாற்போல, முனிவரன்—அகத்தியமுனிவர், தென்பால் போனான்—தென்றிசைநோக்கிப்போயினார் எ—று.

கிற்றல் செய்தலெனவும், அது தன்னைச்சொல்லும்பெயர்ப்பொருட்டாய்ப் புடைபெயர்ந்து ஏழனுருபேற்றதெனவும் கொண்டு, 'கிற்புறுமாயைவல்ல' என்பதை மாயைகிற்புறுதலில்வல்ல எனக்கூட்டி, மாயஞ்செய்தலில்வல்ல எனப் பொருள் கூறினுமாம். அது பகுதிப்பொருள்விகுதி. கிரவுஞ்சவரை வன்மைசிந்தியதாவது:—முன்போலவுணருருஞ் சத்தியற்றுக் குமாரக்கடவுளது வேற்படையாற் பிளக்கப்படும்படி சாபமேற்றல். விந்தவரை வன்மைசிந்தியதாவது:—தன்னுயர்ச்சிநீங்கி நிலத்துட்டாழ்தல். கற்பனை அகத்தியமுனிவரை மாய்க்கக்கருதிச்செய்தசூழ்ச்சிகள். முன்னைநாட்போக்கமைமேல் அசுரகாண்டத்துவிரித்துணர்த்தப்படும். உலகினர்க்கிதமான பற்பலசெயல்கள் முன்னர்ச்சென்றபோதுநிகழ்ந்தமையின் அதனையுவமைகூறினார். (௬௧)

மறைபுகல் வேள்வி யாற்று மாவலி வலிகொள் காட்சிக்
குறியவன் றுணையாய் மற்றோர் குறளுருவுண் டாங்கொ லென்னு

நெறியெதி ரவுணர் தம்மு ளொருசிலர் நில்லா தோடச்
சிறுமுனி வான நீந்திச் சிமயமா மலையம் புக்கான்.

இ—ள்: மறை புகல் வேள்வி ஆற்றும் மாவலி வலி கொள் காட்சி குறியவன் துணை ஆய்—வேதங்களால்விதிக்கப்பட்ட யாகத்தையியற்றிய மாவலிச்சக்கிரவர்த்தியின்வலிமையையடக்கிய தோற்றத்தினையுடைய வாமனனுக்குத்துணையாக, மற்று ஓர் குறளும் உண்டாம் கொல் என்று—வேறொருவாமனனுமுண்டோவென்றையுற்று, நெறி எதிர் அவுணர்தம்முள் ஒருசிலர் நில்லாது ஓட—வழியிலெதிர்ப்பட்ட அசுரர்களுட்சிலர் முன்னிற்காது இரிந்தோட, சிறுமுனி—அகத்தியமுனிவர், வானம் நீந்தி—ஆகாயமார்க்கத்தைக் கடந்து, சிமய மா மலையம் புக்கான்-கொடுமுடிகளையுடைய பெரிய பொதியமலையையடைந்தார் எ—று.

வானம் ஆகுபெயர். என்று ஓட புக்கான் எனவினையும். பேருருவத்தைச் சூழ்ச்சியான்மறைத்துப் பின்னர்க்காட்டிய வாமனனென்பார் 'காட்சிக்குறியவன்' எனவும், அவன் நம்மனோர்பலரை மாய்த்தனன், இவனுமவன்போறலின், எதிர்ப்பட்ட நமக்கென்னுமோவென்றையுற்றென்பார் 'குறியவன்றுணையாய்மற்றோர்குறளுமுண்டாங்கொலென்று' எனவும் கூறினர். திருமால் வாமனரூபங்கொண்டு மாவலியையடக்கியது முன்னர்த்திருநகரப்படலத்துப் பதினொருஞ்செய்யுளினும் பிறாண்டுஞ்சுருக்கியுணர்த்தப்பட்டது. அதன்விரிவைக் கூர்மபுராணத்து மாவலி மூவடிமண்ணளித்தவத்தியாயத்திற்காண்க. (௩௨)

முண்டகன் வலிகொண் டுற்ற மூவெயி லழிப்பான் முன்னி
யண்டரும் புவன முற்று மாகிய கொடிஞ்சி மான்றேர்
பண்டொரு பதத்தா லூன்றிப் பாதலத் திட்ட வண்ணல்
கொண்டதொ லுருவ முன்னிக் குறுமுனி யங்க ணுற்றான்.

இ—ள்: முண்டகன் வலி கொண்டு உற்ற மூ எயில் அழிப்பான் முன்னி—பிரமதேவராற்கொடுக்கப்பட்ட வலிமையைப்பெற்றுள்ள முப்புரங்களையுஞ்சங்கரிக்கும்படி திருவுளம்பற்றி, அண்டரும் புவனம் முற்றும் ஆகிய கொடிஞ்சி மான் தேர்—தேவர்களும் எல்லாவுலகங்களுமாக அமைந்த கூம்பினையுடைய குதிரைபூண்டதேரை, ஒரு பதத்தால் ஊன்றி-ஒருதிருவடியினான்மிதித்து, பண்டு பாதலத்து இட்ட—முற்காலத்திற் பாதாளவுலகத்திலமிழ்த்திய, அண்ணல் கொண்ட தொல் உருவம் உன்னி—சிவபிரான்கொண்டருளிய பழைய திருவுருவத்தைத் தியானித்து, குறுமுனி அங்கண் உற்றான்—அகத்தியமகாமுனிவர் அப்பொதியமலையிலிருந்தார் எ—று.

அழிப்பான் பானீற்றுவினையெச்சம். இட்டஉருவம் கொண்டஉருவம் எனத் தனித்தனியியையும். திரிபுரசங்காரரூபத்தைத்தியானித்தது தாமிருக்கும்பாகம் பாரமேதிச் சமப்படுதற்பொருட்டென்க. 'அண்டரும்புவனமுற்றுமாகியகொடிஞ்சி மான்றேர்' என்றதை "கந்துல்பருதிவெயிற்கதிர்கள்கக்குங்கதிரோரீராறுந்-திங்களொடுமுயர்சுடர்த்தேர்ச்சில்லியாகவிருத்தக்க- வங்கணிலகுஞ்சந்திகளாய்விசும்பாசனமாயத்தவரை-தூங்கவுதயவரைகூம்பாய்த்துகளிமயக்கொடிஞ்சியாய்,——— காட்டைமுகூர்த்தக்கணமிலவமச்சராய்க்கணக்கினந்திதங்க- ளீட்டுகொடியாயுடுக்கணங்கள்விதானமாகவிருந்துறக்கம்-வாட்டமறுசிர்மேல்விரியாய்மகங்கள்கிடுகாய்நாட்பக்க- மீட்டும்வருடங்கடுப்பாகப்பூதமியன்றவலியாக,———நேமிவரையுமந்தரமுமிகழ்த்துமீளதண்டமாய்த்-தாமவரைகடீண்களாய்த்தரங்கக்கடல்களேழுந்-தாமம்புரையுமெழிலிகளாய்த்துலங்குஞானவித்தியங்கள்-காமம்வெகுளிமயக்கமிவைகலன்களாகக்கலைமுழையாய்,—— மனமாங்காரமவ்வியத்தம்வழங்குமண்டியோர்மாய-வினைதற்கரியதத்துவங்களினைத்துவிகழ்

த் தங்குழிசியாய்ப்-புனையாவேதமொருநான் குப்புரவியாகப்புராணங்கள்-வனையுமங்கஞ் சாத்திரங்கள் பனுநூலிவைகண் மணியாக,——— சத்தமருத் துக்களும்படியாய்த் தணப் பில்லையய் ஐயமாய்-முத்தமுரிஞ்சுமுகிழ்முலையகங்கையதிநிமுதலாய- பைத்தபாம்பி னகலல்குற்றெய்வமகளிர்டரிவிரைஞடுக்- தத்தங்கையிற்சாந்தாற்றிகவரியேந்தரத்தி னராய்,——— உலகம்பூத்தமறைக்கிழவன்பாகனுகவுயர்குடிலை-குலவும்வேதப்பரிகடவு முட்கோலாகக்குளிர்விசும்பி- லலகில்மரரெல்லாருமம்பொற்சுணங்கார்பொம்மன்முலை க்-சலவபஞ்ஞனுபாகனுக்குக்கடிதிற்றடந்தேரினிதமைத்தார்” என்னுங் கூர்மபுராணச் செய்யுட்களானுணர்க. அத்தகையதேரிற் சிவபிரானிவர்ந்தூழி, திரிபுரசங்காரஞ்செய்த ற்குத்தாமே கருவிகளாயமைந்தமைகருதித்தேவர்கள் அகந்தைகொள்ள, அச்சிவபிரான் அவரகந்தையையொழிக்கும்பொருட்டு அத்தேரைப் பாதத்தாலூன்றிப் பாதலத்திலாழ்த்தினரென்க. விநாயகரைச் சிந்தியாதிவர்ந்தமையாற் பாதலத்திலமிழ்ந்தியதெனவும் பின்னரவரைச்சிந்திக்கப் பண்டுபோலாயிற்றெனவும் அதன் பின்னர் அத்தேரிலிவர்ந்து சென்று முப்புரங்களைச் சங்கரித்தனரெனவுஞ் சிலர்கூறுவர். (௬௩)

பொதியம தென்னும் வெற்பிற் புனிதமா முனிவன் வைகத்
துதியுறு வடபாற் றென்பாற் புவனியோர் துலைபோ லொப்ப
வதுபொழு துயிர்க ளானோ ரணங்கொரீஇ யரனை யேத்தி
மதியகிழ்ந் தமர்ந்தார் தொல்லை வதுவையின் செய்கை சொல்வாம்.

இ—ள்: புனித மா முனிவன் பொதியமது என்னும் வெற்பில் வைக— தூய்மையினையுடைய அகத்தியமகாமுனிவர் பொதியமலையிலிருக்க, துதி உறு வடபால் (புவனி) தென்பால் புவனி ஓர் துலை போல் ஒப்ப—புகழப்படுகின்ற வடதிசைப்பூமியுந் தென்றிசைப்பூமியும் ஒரு தராசுக்கோல்போலச் சமப்பட, அதுபொழுது— அப்பொழுது, உயிர்கள் ஆனோர் அணங்கு ஒரீஇ—ஆன்மாக்களாயுள்ளாரனைவரும் வருத்தநீங்கி, அரனை ஏத்தி மதிமகிழ்ந்து அமர்ந்தார்— சிவபிரானைத்துதித்து மனமுவந்திருந்தார்கள், தொல்லை வதுவையின் செய்கை சொல்வாம்— (இஃதித்துணைசிறக்க இனி) பழைய திருமணத்தின்செயலைச் சொல்வாம் எ—று.

துலை ஆகுபெயர். தராசுக்கோல் சமனிலையாயமைந்தாற்போல இருதிசைப்பூமியுஞ்சமப்பட்டதென்பார் ‘வடபாற்றென்பாற்புவனியோர்துலைபோலொப்ப’ என்றார். ()

கதுமென மலையந் தன்னிற் கடமுனி சேற லோடு
முதுமைகொ ளிமையம் புக்க முனிவருஞ் சுரருந் தேர்ந்து
மதிமலி சடையெம் மண்ணல் வரம்பில்பே ரருளு மன்னோன்
பதமுறை வழிபட் டோர்தம் பான்மையும் பரவ லுற்றார்.

இ—ள்: கடமுனி கதுமென மலையந்தன்னில் சேறலோடும்—அகத்தியமுனிவர் விரைவாகப்பொதியமலையிற்போதலும், முதுமை கொள் இமையம் புக்க முனிவரும் சுரரும் தேர்ந்து—பழமைபொருந்திய இமையமலையிற்சென்றிருந்த முனிவர்களுந் தேவர்களும் அதனையாராய்ந்து, மதி மலி சடை எம் அண்ணல் வரம்பு இல் பேர் அருளும்—சந்திரன் தவழுகின்ற சடைமுடியினையுடைய எமது கடவுளாகிய சிவபிரானது அளவிறந்த பெரியகிருபையையும், அன்னோன் பதம் முறை வழிபட்டோர் தம் பான்மையும் பரவலுற்றார்—அவரது திருவடிகளை முறைப்படி பூசித்தவர்களது மகிமையையுந் தோத்திரஞ்செய்தார்கள் எ—று.

தங்கட்குநேர்ந்த விபத்தைநீக்கிக்கருணைசெய்தனரேயெனச் சிவபிரானையும், மிகவுங்குறியவடிவத்தையுடையமுனிவர் சிவனருள்பெற்றமையானன்றே இங்குள்ளா

ரனைவரோடுமொத்த பாரமுடையராய்ப் பூமியைச்சமப்படுத்தினரெனச் சிவனடியார் மகிமையையும் வியந்து துதித்தனரென்க. (௬௫)

அங்கது பொழுது தன்னி லரசன திசைவா லெங்கள்
சங்கரி யையை காப்பச் சசியென்பா ளடைப்பை யேந்தக்
கங்கைகள் கவரி வீசக் காளிகள் கவிகை பற்றப்
பங்கய மான்கை பற்றிப் பாரதி பரவ வந்தாள்.

இ—ள்: அங்கது பொழுது தன்னில்—அச்சமையத்தில், எங்கள் சங்கரி—எங்கள் பரமமாதாவாகிய பார்ப்பதியார், அரசனது இசைவால்—மலையரசனது அநுமதிப்படி, ஐயை காப்ப—துர்க்கைகாவல்செய்ய, சசி என்பாள் அடைப்பை ஏந்த— இந்திராணியானவள் அடைப்பையைத்தாங்கிவர, கங்கைகள் கவரி வீச—கங்காநதிகள் சாமரங்களைவீச, காளிகள் கவிகை பற்ற— காளிகள் குடையைப்பிடிக்க, பாரதி பரவ—சரசுவதி துதிக்க, பங்கயமான் கை பற்றி வந்தாள்— செந்தாமரைமலரில்வாழு மிலக்குமியினது கையைப்பிடித்துக்கொண்டு வந்தருளினார் எ—று.

சங்கரி-சங்கரன்மனைவி. அடைப்பை-தாம்பூலப்பை. அரசனதிசைவால்வந்தாள் எனவியையும். காத்தலாவது வாளேந்திவருதல். துர்க்கை பராக்கிரமமுடையவளாதலினித்தொழிலைச் செய்தனள், இந்திராணி போகரூபியாதலின் போகப்பொருளாகிய அடைப்பையையேந்தினள், கங்கைகள் சீதளமும் வெண்ணிறமுமுடையனவாய்த் தாபத்தையாற்றுவனவாதலின் சாமரத்தை வீசின, இலக்குமி மைத்துனியாமுரிமையுடையவளும் அழகின்மிக்கவளுமாதலின் கைகொடுத்துவந்தனள், சரசுவதி கலைமகளாதலின் துதித்தனள், எஞ்சியகாளி இவராற் செய்யப்படாதெஞ்சிய குடைபிடித்தலாகிய ஏவலைச்செய்தனள் என்க. (௬௬)

வந்திடு முலகை யீன்றாள் வதுவையஞ் சாலை நண்ணி
யந்தமொ டாதியில்லா னடிகளை வணங்க முன்னோன்
முந்துறு தவிசின் றன்பான் முற்றிழை யிருத்தி யென்ன
விந்திரை முதலோர் யாரு மேத்திட விருந்தா ளன்றே.

இ—ள்: வந்திடும் உலகையீன்றாள்— இவ்வாறு வந்தருளிய பார்ப்பதிதேவியார், வதுவையம் சாலை நண்ணி—திருமணச்சாலையையடைந்து, அந்தமொடு ஆதி இல்லான் அடிகளை வணங்க—முடிவுமுதலுமில்லாத சிவபிரானை நமஸ்கரிக்க, முன்னோன்—முதற்கடவுளாகிய அச்சிவபிரான், முற்றிழை—தொழின்முற்றிய ஆபரணங்களையணிந்தபெண்ணே!, முந்துறு தவிசின் தன் பால் இருத்தி என்ன- முதன்மைபொருந்திய இவ்வாசனத்திலிருக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்தருள, இந்திரை முதலோர் யாரும் ஏத்திட இருந்தாள்—இலக்குமிமுதலிய தேவப்பெண்களெல்லோருந்துதிக்கவீற்றிருந்தார் எ—று.

உலகையீன்றாள்-எல்லாவுலகங்களையும்பெற்றவள். முற்றிழை அன்மொழித்தொகை. இதற்கு (ஒன்றுந்தவறாது) எல்லாவணிகளையுமணிந்த இறைவியெனினுமாம். முந்துறு தவிசென்பதற்கு முன்னரிடப்பட்டிருந்த ஆசனமென்பர் சிலர்; முன் வரைபுனைபடலத்து இருபதாஞ்செய்யுளில் 'இந்திரநீலத்தாலொருதிறலரியணையினைச்சிறப்பிற்செய்தனனிறைவனுமிறைவியுமினிதுமேவ' எனக்கூறுதலினது பொருந்தாதென்க. (௬௭)

இருந்திடு மெல்லை தன்னி லேலவார் குழலி யென்னுங்
கருந்தடங் கண்ணினாளைக் கண்ணுதற் பராப ரற்கு

விரைந்தருள் செய்ப வுன்னி வேந்தன திசைவான் மேனை
பெருந்தடம் புனலுஞ் சந்து மலர்களும் பிறவுந் தந்தாள்.

இ—ள்: இருந்திடும் எல்லை தன்னில்— அவ்வாறிருந்த பொழுது, மேனை—மேனாதேவியானவள், ஏல வார் குழலி என்னும் கரும் தடம் கண்ணினாளை— மயிர்ச்சாந்து பூசப்பட்ட நீண்ட கூந்தலையுடையராகிய அப்பார்ப்பதியாரை, கண்ணுதல் பராபரற்கு விரைந்து அருள்செய்ய உன்னி— நெற்றிக்கண்ணையுடைய பராபரவஸ்துவாகிய சிவபிரானுக்கு விரைவாகத்தத்தஞ்செய்ய நினைத்து, வேந்தனது இசைவால்—மலையரசனது அநுமதிப்படி, பெரும் தடம் புனலும் சந்தும் மலர்களும் பிறவும் தந்தாள்—பெரிய சிறந்த திருமஞ்சனத்தையும் சந்தனத்தையும் புஷ்பங்களையும் பிறவற்றையுங்கொணர்ந்தாள் எ—று.

கருந்தடங்கண்ணினாள்-கருநிறமமைந்த விசாலித்த கண்ணையுடையாள். கங்கைமுதலிய புண்ணியநதியின் மொண்டுவந்ததீர்த்தமென்பார் 'பெருந்தடம்புனல்' எனவும், சுபமுகூர்த்தங்கழியுமுனென்பார் 'விரைந்து' எனவும், மணவலங்காரமுடையரென்பார் 'ஏலவார்குழலியென்னுங்கருந்தடங்கண்ணினாள்' எனவும் கூறினார். வார்குழலுந்தடங்கண்ணுமகளிர்க்குச் சிறந்தவிலக்கணங்களென்க. (௬௮)

தருதலு மிமையத் தண்ண றாழ்ந்தன னிருந்து தேவி
கரகநீர் விடுப்ப வாதி திருவடி விளக்கிச் சாந்தம்
விரைமலர் புனைந்து நின்ற வியன்கடன் பலவுஞ் செய்து
பொருவரு மகிழ்ச்சி யோடு பூசனை புரிந்தான் மாதோ.

இ—ள்: தருதலும்—மேனாதேவி கொணர்ந்தவுடன், இமையத்து அண்ணல் தாழ்ந்தனன் இருந்து— இமையமலையரசன் தாழ்ந்திருந்து, தேவி கரக நீர் விடுப்ப ஆதி திருவடி விளக்கி—தன்மனைவியாகிய மேனையானவள் கரகத்திலுள்ளநீரை வார்க்க முதற்கடவுளாகிய சிவபிரானது திருவடிகளைவிளக்கி, சாந்தம் விரை மலர் புனைந்து--சந்தனத்தையும் வாசனைபொருந்திய புஷ்பங்களையுஞ்சாத்தி, நின்ற வியன் கடன் பலவும் செய்து—ஒழிந்தனவாகிய சிறந்ததொழில்களனைத்தையுமியற்றி, பொருஅரு மகிழ்ச்சியோடு பூசனை புரிந்தான்—ஒப்பற்ற மனச்சந்தோஷத்தோடும் பூசைசெய்தான் எ—று.

சிவபிரானாசனத்திருப்ப அரசன்கீழிருந்தனென்பார் 'தாழ்ந்தனனிருந்து' என்றார்; இதற்கு வணங்கியிருந்தெனக் கூறுவாருமுளர். நின்றவியன்கடன்பல என்றது அர்க்கியங்கொடுத்தல் தூபதீபங்காட்டன்முதலியன. பன்னெடுங்காலமெண்ணியிருந்த மனோரதமின்றன்றோ முற்றியதென மகிழ்ந்தனனென்க. (௬௯)

பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் றாடன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமோ டளித்தே னென்று நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்த்தான் மருகனென் றவனை யுன்னி.

இ—ள்: பூசனை புரிந்த பின்னர்—அவ்வாறு பூசைசெய்தபின்பு, புவனம் ஈன்றாள் தன் கையை பாசமது அகன்ற தொல் சீர் பரஞ்சுடர் கரத்துள் வைத்து—உலகங்களைப்பெற்றவராகிய உமாதேவியாரது திருக்கரத்தைப்பாசசம்பந்தமற்ற பழைய கீர்த்தியினையுடைய பரஞ்சோதிரூபராகிய சிவபிரானது திருக்கரத்தில்வைத்து, நேசமொடு அளித்தேன் என்று நெடு மறை மனுக்கள் கூறி—(ஸ்வாமீ! என்கன்னிகையை) அன்புடன் தத்தஞ்செய்து தந்தேனென்று நெடிய வேதமந்திரங்களைச்சொல்லி, அவ

னை மருகன் என்று உன்னி-அச்சிவபிரானை மருகராகப்பாவித்து, வாச நல் உதகம் உய்த்தான்—நறுமணமூட்டப்பெற்ற நல்ல தீர்த்தத்தை விடுத்தான் எ—று.

பரமமாதாவென்பார் 'புவனமீன்றாள்' எனவும், பரமபிதாவும் சிற்றின்பமை மவிர்சிக்காதாருமென்பார் 'பாசமதகன்றதொல்சீர்ப்பரஞ்சுடர்' எனவும், அத்தகைய இறைவர்க்கு மகட்கொடுத்தமைபற்றி 'மருகனென்றவனையுன்னி' எனவும், மணமகனுக்கும் மணமகளுக்கும் வேண்டற்பாலதாஞ் சம்பாவனையுடனென்பார் 'நேசமொடு' எனவும், ஈண்டுச்சுருக்கிக்கூறிய தாற்பரியத்தை விரித்துணர்த்து மந்திரங்களென்பார் 'நெடுமறைமனுக்கள்' எனவும் கூறினார். (௭0)

எங்குள பொருளுங் கோளு மீதலுந் தானே யாகுஞ்
சங்கர னுலக மெல்லாந் தந்திடுங் கன்னி தன்னை
மங்கல முறையாற் கொண்டான் மலைமகன் கொடுப்ப வென்று
லங்கவ னருளி னீர்மை யாரறிந் துரைக்கற் பாலார்.

இ—ள்: எங்கு உள பொருளும் கோளும் ஈதலும் தானே ஆகும் சங்கரன்—எவ்விடத்தினுமுள்ள பொருள்களும் அவற்றைஎற்போனுங் கொடுப்போனுந்தாமேயாய்நிற்கின்ற சிவபிரான், மலைமகன் கொடுப்ப—இமையமலையரசன் தத்தஞ்செய்ய, உலகம் எல்லாம் தந்திடும் கன்னிதன்னை மங்கலமுறையால் கொண்டான் என்றால்—உலகங்களனைத்தையும் பெற்றருளிய கன்னிகையாகிய பார்ப்பதியாரைத் திருமணச்சடங்கின்முறைப்படி எற்றுக்கொண்டாரானால், அங்கவன் அருளின் நீர்மை அறிந்து உரைக்கற்பாலார் ஆர்—அச்சிவபிரானது கிருபையினியல்பை (முழுதாக) உணர்ந்து கூறவல்லார்யாவர்? (ஒருவருமில்லை) எ—று.

கோள் ஈதல் என்பன ஆகுபெயர்கள். ஏகாரம் தேற்றம். மலையரசனை மலைமகனென்றதிலக்கணை. ஈயப்படும்பொருளும் ஈவோனும் எற்போனுமென்னுமுத்திறப்பொருளுந்தாமேயாய் [அகண்டாகாரமூர்த்தியாய்] அப்பொருள்களின் றொழினிகழ்ச்சியாவெய்தற்பாலதாமின்பத்தைச் செய்யுமிறைவரென்பார் 'எங்குளபொருளுங் கோளுமீதலுந்தானேயாகுஞ்சங்கரன்' எனவும், அவரங்ஙனமீற்றதற்குஞ் செய்தற்குமின்றியமையாது அபேதமாய்நிற்குஞ்சத்தியென்டார் 'உலகமெல்லாந்தந்திடுங்கன்னி' எனவும், அத்தகைய அபின்னசத்தியை, பின்னையும், தமதடிமையாகிய மலையரசனுக்கு மகளுமாக்கி, தாம் மருகராய்ச்சென்று மணமுறைப்படி எற்ற இத்திருவிளையாடல் அடியார்கருத்தைமுற்றுவிக்கும்பொருட்டுச்செய்யும் மற்றைத்திருவிளையாடலெவற்றினுமிக்கதென்பார் 'உலகமெல்லாந்தந்திடுங்கன்னிதன்னைமங்கலமுறையாற்கொண்டான் மலைமகன்கொடுப்பவென்று- லங்கவனருளினீர்மையாரறிந்துரைக்கற்பாலார்' எனவும் கூறினார். எங்குளபொருளுங்கோளுமீதலுந்தானேயாகுஞ்சங்கரன், உலகமெல்லாந்தந்திடுங்கன்னி என்பன பொருளான்முரண்டொடை. இங்ஙனந்தொடுத்தல்செய்யுட்கலங்காரமென்க. (௭௧)

ஆனதோ ரமையந் தன்னி லாடின ரமரர் மாதர்
கானம திசைத்தார் சித்தர் கந்தரு வத்த ரானோ
ரேனைய விருவர் தாமு மேழிசைக் கீதஞ் செய்தார்
வானவர் முனிவர் யாரு மறைகளை யறைய லுற்றார்.

இ—ள்: ஆனது ஓர் அமையம் தன்னில்— அத்தகைய கன்னிகாதானசமயத்தில், அமரர்மாதர் ஆடினர்—தேவரம்பையர்கள் கூத்தாடினார்கள், சித்தர் கந்தருவத்தர் ஆனோர் கானமது இசைத்தார்—சித்தர்களும் கந்தருவர்களும் இசைபாடினார்கள், ஏனைய இருவர் தாமும் எழிசை கீதம் செய்தார்—மற்றைய தும்புருநாரதரிருவரும் சப்த சுரங்களையுடைய கீதங்களை (யாழில்) இசைத்தார்கள், வானவர் முனிவ

ர் யாரும் மறைகளை அறையலுற்றார்—தேவர்களும் முனிவர்களும் வேதமந்திரங்களைக் கூறினார்கள் எ—று.

ஆனோர் எழுவாயுருபு. மறையென்றதீண்டுச்சுவத்திவாசகங்களை. பெருங்கோஷமாக ஓதினரென்பார் 'அறையலுற்றார்' என்றார். (௭௨)

அல்லியங் கமலந் தன்னி லரிவையும் புண்ட ரீக
வல்லியு மற்று ளோரு மங்கலம் பாட லாற்றார்
சல்லரி திமிலை காளந் தண்ணுமை சங்க மாதிப்
பல்லிய மியம்பிச் சூழ்ந்து பாரிடத் தொகையோ ரார்த்தார்.

இ—ள்: அல்லியம் கமலம் தன்னில் அரிவையும்—அகவிதழ்பொருந்திய செந்தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியும், புண்டரீக வல்லியும்— வெண்டாமரைமலரிலிருக்கின்ற சரசுவதியும், மற்றுளோரும்—பிறபெண்களும், மங்கலம் பாடலுற்றார்—சோபனவாழ்த்துக்களைப்பாடினார்கள், பாரிடத்தொகையோர் பூதகணத்தினர்கள், சல்லரி திமிலை காளம் தண்ணுமை சங்கம் ஆதி பல் இயம் இயம்பி—சல்லரியுந் திமிலையுங் காகளமும் மத்தளமுஞ் சங்கும் முதலாகிய பலவாத்தியங்களைமுழக்கி, சூழ்ந்து ஆர்த்தார்—வளைந்துநின்று ஆரவாரித்தார்கள் எ—று.

மங்கலம் ஆகுபெயர். (௭௩)

அதுபொழு திமையத் தண்ண லாபொழிந் திட்ட தீம்பால்
கதலிமாப் பலவின் றீய கனிவகை நெய்தே னாதி
மதுரமாஞ் சுவையின் வர்க்கம் வரம்பில வீற்று வீற்று
நிதிகொள்பா சனத்தி லிட்டு நிருமலன் முன்ன ருய்த்தான்.

இ—ள்: அது பொழுது—அச்சமயத்தில், இமையத்து அண்ணல்— இமையமலையரசன், ஆ பொழிந்திட்ட தீம் பால்—காமதேனுப்பொழிந்த இனியபாலையும், கதலி மா பலவின் தீய கனிவகை—வாழை மா பலா என்னுமிவற்றினது இனியபழவர்க்கங்களையும், நெய் தேன் ஆதி மதுரம் ஆம் வரம்பில சுவையின்வர்க்கம்— நெய் தேன் முதலிய தித்திப்பாகிய அளவிறந்த சுவைப்பொருள்வகைகளையும், நிதிகொள் பாசனத்தில் வீற்று வீற்று இட்டு—பொற்பாத்திரங்களில் வேறுவேறாகப்படைத்து, நிருமலன் முன்னர் உய்த்தான்— மலரகிதராகிய சிவபெருமானது திருமுன்னிலையில் வைத்தான் எ—று.

ஆ என்பது பசுக்கட்கெல்லாம் பொதுமொழியாயினுந் தலைமைபற்றியீண்டுக் காமதேனுவையுணர்த்திற்று. கனியென்பதைக் கதலி மா பலவு என்னுமூன்றோடுந்தனித்தனியியைத்துப் பொருளுணர்க. பிறராற்கறக்கப்படாது தானாய்ப்பொழிந்தவென்பார் 'பொழிந்திட்ட' எனவும், சிறந்தனவாகத்தெரிந்தெடுத்தவென்பார் 'தீய' எனவும், அறுவகைச்சுவைப்பொருள்களுள் மதுரச்சுவையுடையபொருள்களென்பார் 'மதுரமாஞ்சுவையின்வர்க்கம்' எனவுங்கூறினார். ஆதியென்றதனாற் சர்க்கரைமுதலியனவுங்கொள்க (௭௪)

மறைநெறி யினைய வெல்லா மலைமக னுய்த்து மற்றெம்
மிறையிவை நுகர்தல் வேண்டு மெனத்தொழ வினிதே யென்னாக்
கறைமிடற் றணிந்த மேலோன் காத்தினை லவற்றைத் தொட்டாங்
குறுபெருங் கருணை செய்தே யுவந்தனங் கோடி யென்றான்.

இ—ள்: மலைமகன்—இமையமலையரசன், மறைநெறி இனைய எல்லாம் உய்த்து—வேதவிதிப்படி இவைகளனைத்தையுமுன்வைத்து, எம் இறை இவை நுகர்தல் வேண்டும் என தொழ—எம்பெருமானே! (தேவரீர்) இப்பொருள்களைத்திருவமுது செய்த

ருளுதல்வேண்டுமென்று கைதொழ, கறை மிடற்று அணிந்த மேலோன்— ஆலாகலத்தைத்திருமிடற்றிலணிந்த முதல்வராகிய சிவபிரான், ஆங்கு— அப்பொழுது, இனிதேஎன்னு--நன்றென்று (உடன்பட்டு), அவற்றை கரத்தினால் தொட்டு—அப்பொருள்களைத் திருக்கரத்தினாற்றீண்டி, உறுபெருங் கருணை செய்து---மிகப்பெரிதாகிய கிருபையைச்செய்து, உவந்தனம் கோடி என்றான்-(நீ வைத்தநிவேதனப்பொருள்களால்) யாஞ்சந்தோஷமானேம் (இனி) ஏற்றுக்கொள்ளுதி என்றுதிருவாய்மலர்ந்தருளினார் எ-று.

வைதிக விவாகவிதியில் மதுபர்க்கப்பிராசனமும் விதிக்கப்படுதலின் அக்கிரியையேயிதுவென்பது போதர 'மறைநெறி' எனவும், அணுகினோரையுமழிப்பதாகிய ஆலாகலத்தைத் தேவருய்யுமாறு திருமிடற்றிலணிந்தார் அதிமதுரப்பொருளாகிய இவற்றை மலையரசனுய்யுமாறு தீண்டியுவந்தனரென, வெறுக்கப்படும்பொருளை வெறுக்காமையும், விரும்பத்தகும்பொருளை விரும்பாமையுந்தோன்ற 'கறைமிடற்றணிந்தமேலோன்கரத்தினாலவற்றைத்தொட்டு' எனவும் கூறினார். (௭௫)

தொன்மைகொ ளருளி னீராற் றுய்த்தன வாகத் தொட்ட
நின்மல வுணவை மன்ன னேயமோ டங்கண் மாற்றி
யின்மலர் கந்தந் தீர்த்த மிவற்றொடு பொருசா ருய்ப்ப
நன்மகிழ் வோடு வேதா நாயகற் குரைக்க லுற்றான்.

இ—ள்: தொன்மைகொள் அருளின் நீரால் துய்த்தனவாக தொட்ட நின்மல உணவை—பழமையாகிய திருவருட்டன்மையால் நிவேதனமாகத் திருக்கரத்தினாற்றொட்டருளிய நிர்மாலியப்பொருள்களை, மன்னன்—இமையமலையரசன், நேயமோடு அங்கண் மாற்றி—அன்புடன் அவ்விடத்தினின்றுமகற்றி, இன் மலர் கந்தம் தீர்த்தம் இவற்றொடும் ஒருசார் உய்ப்ப—மனோகரமாகிய பூக்களும் சந்தனமும் பாததீர்த்தமுமாகிய இப்பொருள்களோடு ஓரிடத்தில்வைக்க, வேதா—பிரமதேவர், நல் மகிழ்வோடு நாயகற்கு உரைக்கலுற்றான்—பெருமகிழ்ச்சியோடுஞ் சிவபிரானுக்கிவ்வாறு திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

நின்மலவுணவு-நின்மலனாலேற்றுக்கொள்ளப்பட்ட உணவுப்பொருள். மலர்முதலியன பாதபூசைக்குபயோகிக்கப்பட்டன. இயற்குணமாகியகாருண்ணியமென்பார் 'தொன்மைகொளருள்' எனவும், திருமணங்காணவந்தார்க்குவழங்குமாறுபேணியென்பார் 'நேயமோடு' எனவும், சுகந்தமலரென்பார் 'இன்மலர்' எனவும்கூறினார். தம்மாணடத்துவித்தற்பாலதாகிய சடங்கிற்குச் சமயம்வாய்ந்ததென்றெண்ணிப் பிரமதேவர் பெருமகிழ்வெய்தினரென்க. (௭௬)

படங்கிளர் சேடன் றாங்கும் பார்விசும் புறையு நீரா
ரடங்கலு மணஞ்செய் போதத் தவ்வவர்க் கடுத்த தாற்றி
நடந்திடு மொழுக்க மெந்தை நடத்திடல் வேண்டு மன்றற்
சடங்கினி யுளது முற்றத் தண்ணளி புரிதி யென்றான்.

இ—ள்: படம் கிளர் சேடன் தாங்கும் பார் விசும்பு உறையும் நீரார் அடங்கலும்— படம்விளங்குகின்ற ஆதிசேடனாற் சுமக்கப்படுகின்ற இந்தமண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் வசிக்குமியல்பினையுடையோரனைவரும், மணஞ்செய்போதத்து அவ்வவர்க்கு அடுத்தது ஆற்றி நடந்திடும் ஒழுக்கம்—விவாகஞ்செய்யும்பொழுது அவரவர்க்கேற்ற கிரியைகளைச்செய்து வழங்குகின்ற அநுசரிப்பை, எந்தை நடத்திடல் வேண்டும்—எம்பெருமானாகிய தேவரீரும் அநுசரித்தல்வேண்டும் (ஆதலின்), இனி உளது மன்றற்சடங்கு முற்ற தண்ணளிபுரிதி என்றான்— இனிநிகழ்தற்பாலதாகிய விவாகச்சடங்குநிறைவேறுமாறு திருவருள்செய்க என்று பிரார்த்தித்தார் எ—று.

எச்சத்தோடுயர்வுசிறப்புப்பொருளைத்தரும் உம்மைதொக்கது. தத்தங்குலாசாரத்திற்கேற்றவாறொழுகு மொழுக்கமென்பார் 'அவ்வவர்க்கடுத்ததாற்றிநடந்திடுமொழுக்கம்' எனவும், அது, மண்ணினும் விண்ணினுமுள்ளார்க்கொருதலையான்வேண்டற்பாலது, தேவரீர்க்கங்ஙனமன்றென்பார்'பார்விசும்புறையுநீரார் * * * * நடந்திடுமொழுக்கம்' எனவும், அங்ஙனமாயினும், அதனைத்தேவரீரியற்றாக்கால் உலகினருமியற்றாதொழிவராதலின், இயற்றுதல்வேண்டுமென்பார் 'எந்தைநடத்திடல்வேண்டும்' எனவும் கூறினார். மணமகன் ஆசாரியரதும் சபையாரதும் அநுஞ்ஞைபெற்றுச் சடங்கியற்றுமியல்பிற்குமாறாக, ஆசாரியராய்வரும் பிரமதேவர் மணமகனாகிய சிவபிரானிடம் அநுஞ்ஞைபெற்றது பரமபதியாதல் கருதியென்க. (எஎ)

என்னலு முறுவல் செய்தே யிறையருள் புரிய வேதன்
வன்னியு மதற்கு வேண்டும் பொருள்களு மரபிற் றந்து
பொன்னொடு புகரு மேனை முனிவரும் புடையிற் சூழத்
தன்னிக ரில்லா மன்றற் சடங்கெலா மியற்றல் செய்தான்.

இ—ள்: என்னலும்—என்றிவ்வாறு பிரமதேவர் பிரார்த்திக்க, இறை முறுவல் செய்து அருள்புரிய—சிவபிரான் குறுநகைசெய்து (அங்ஙனமாகுக என்று) கிருபைசெய்ய, வேதன்-பிரமதேவர், வன்னியும் அதற்கு வேண்டும் பொருள்களும் மரபில் தந்து—அக்கினியையும் அச்சடங்கிற்குவேண்டிய பிறதிரவியங்களையும் முறைப்படி வருவித்து, பொன்னொடு புகரும் ஏனை முனிவரும் புடையில் சூழ— வியாழகுருவுஞ் சுக்கிராசாரியரும் மற்றைய முனிவர்களுந் தம்பக்கத்திற்சூழ்ந்திருக்க, தன் நிகர் இல்லா மன்றல் சடங்கு எலாம் இயற்றல் செய்தான்—தனக்கொப்பானதுபிறிதில்லாத திருமணச்சடங்கனைத்தையும் (ஆசாரியராய்) நடாத்தினார் எ—று.

முறுவல்செய்தது பிரமதேவரது கேள்வி தமக்குமியைந்தமையாலென்க. அதற்குவேண்டும்பொருளென்றது சமித்து தர்ப்பை நெய்முதலியன. தேவகுருவும் அசுரகுருவுமாதலின் பொன்னையும் புகரையும் எடுத்துக்கூறினார். திருமாலும் உருத்திரர்களுமிருப்பவும் வேதவிதிகளைநன்குணர்ந்த தலைமைபற்றிப் பிரமதேவர் ஆசாரியராயினரென்பது போதர, அவரை 'வேதன்' என்னும்பதத்தாற்கூறினர்.

பெரும்பான்மை மந்திரபேதமுஞ் சிறுபான்மை கிரியாபேதமுமுற, வேதநெறியானும் ஆகமநெறியானும் இருவகைப்படுமணச்சடங்கினுள், சிறப்புடைத்தாகிய வேதநெறிச்சடங்கையே யியற்றினராதலின் 'தன்னிகரில்லாமன்றற்சடங்கு' என்றார். ()

அந்தணர் கரண மெல்லா மாற்றியே முடிந்த பின்னர்த்
தந்தையுந் தாயு மாகி யுலகெலாந் தந்தோர் தம்மை
முந்துற வயனும் பின்னர் முகுந்தனு மதற்குப் பின்ன
ரிந்திரன் முனிவர் வானோர் யாவரு மிறைஞ்ச லுற்றார்.

இ—ள்: அந்தணர் கரணம் எல்லாம் ஆற்றி முடிந்த பின்னர்- பிராமணர்க்குச் செயற்பாலனவாஞ்சடங்கனைத்துஞ்செய்துமுடிந்தபின்பு, தந்தையும் தாயும் ஆகி உலகு எலாம் தந்தோர் தம்மை-பரமபிதாவும் பரமமாதாவுமாகி உலகங்களெல்லாவற்றையும்படைத்த சிவபிரானையும் தேவியாரையும், முந்துற அயனும்—முதலிற்பிரமதேவரும்,பின்னர் முகுந்தனும்—பின்பு திருமாலும், அதற்கு பின்னர் இந்திரன் முனிவர் வானோர் யாவரும்—அதன்பின்பு இந்திரனும் முனிவர்களுந்தேவர்களும் பிறரனைவரும், இறைஞ்சலுற்றார்—வணங்கினார்கள் எ—று.

சிவபிரான் தேவப்பிராமணராதல்பற்றி அந்தணர் கரணமெல்லாமாற்றினர். அவர் தேவப்பிராமணரென்பதை "பிராமணனீயே கடவுளர் தம்முட் பிஞ்ஞகா" என்னுங்காஞ்சிப்புராணச்செய்யுளானறிக. மணவாளனும் மணவாட்டியும் அவைக்கணுள்ள பெரியோரையும் ஆசாரியரையும் பணிவதியல்பாகவும் அங்கு ஆசாரியராயிருந்த பிரமதேவரும் திருமால்முதலிய பிறரும் அவ்விருவரையும் பணிந்தமைக்குக்காரணந்தோன்ற 'தந்தையுந்தாயுமாகியுலகெலாந்தந்தோர்' என்றார். (எக)

அரனுட னுமையா டன்னை யாங்கவர் பணித லோடு
முருகெழு நிலையுட் கொண்ட வுருத்திரத் தலைவ ரேனோர்
பரிசனர் கணங்கள் யாரும் பணிந்தன ரதன்பின் னாகக்
கிரியுறை யிறைவன் மைந்தன் கேளொடு வணக்கஞ் செய்தான்.

இ—ள்: ஆங்கவர்—அவரனைவரும், அரனுடன் உமையாள் தன்னை பணிதலோடும்—சிவபிரானையும் உமாதேவியாரையும் வணங்குதலும், உரு கெழு நிலை உட்கொண்ட உருத்திரத்தலைவர்—அஞ்சத்தக்க நிலைமையைத் தம்மாட்டுடையஉருத்திரகணத்தலைவர்களும், பரிசனர்—அவரது பரிவாரமாயுள்ளவர்களும், கணங்கள்—பூதர்களும், ஏனோர் யாரும்—பிறருமாகிய எல்லோரும், பணிந்தனர்—வணங்கினார்கள், அதன் பின் ஆக—அதன்பின்பு, கிரி உறை இறைவன்—இமையமலையில் வாழுகின்றஅரசன், மைந்தன் கேளொடு வணக்கம் செய்தான்—புத்திரனாகிய மைநாகனோடும் ஏனையசுற்றத்தவர்களோடும் நமஸ்காரஞ்செய்தான் எ—று.

பணிதலோடும் உம்மீற்றுவினையெச்சம். உள் ஈண்டு இடமென்னும்பொருளில்வந்தது. உரு-அச்சம். ஒராசனத்துப்பிரிவின்றியிருத்தலின் உடனிகழ்ச்சிப்பொருடருமொடுக்கொடுத்து 'அரனுடனுமையாள்' என்றார். (அO)

தமதுமுன் பணிகின் றோர்க டமக்கெலா மீசன் றானு
முமையு நல் லருளைச் செய்ய வோர்ந்திது பதமென் றுன்னி
யிமகிரி புரந்த வண்ண லீண்டுறை நீரர்க் கெல்லா
மமலன துணவு மற்று மளிப்பனென் றகத்துட் கொண்டான்.

இ—ள்: ஈசன் தானும் உமையும்—சிவபிரானும் உமாதேவியாரும், தமது முன் பணிகின்றோர்கள் தமக்கு எலாம் நல் அருளை செய்ய—தமது திருமுன்னிலையில் (வந்து) வணங்குகின்றவர்களனைவர்க்கும் சிறந்த கிருபையைப்புரிய, இமகிரி புரந்த அண்ணல்—இமையமலையை ரட்சிக்கின்ற அரசன், ஓர்ந்து இது பதம் என்று உன்னி—ஆராய்ந்து இதுவே சமயமென்று சிந்தித்து, அமலனது உணவும் மற்றும் ஈண்டு உறை நீரர்க்கு எல்லாம் அளிப்பன் என்று அகத்துள் கொண்டான்—சிவபிரானுக்கு நிவேதித்த உணவுப்பொருள்களையும் பிறபொருள்களையும் இச்சபையின்கண்ணே வசிக்கின்ற இயல்பினையுடையாரனைவர்க்கும் வழங்குவேனென்று தன்மனத்திற்கருதினான் எ—று.

வந்து என்பது சொல்லெச்சம். சடங்குமுற்றியசமயமாதலின் இது பதமென்றுன்னினன். மற்று என்றது மலராதியனவற்றை. (அக)

ஆய்ந்திடு மறைகள் போற்று மாதிதன் றீர்த்தம் போது
சாந்தமொ டவிக டம்மைச் சதுர்முகன் முதல்வா னோர்க்கும்
வாய்ந்திடு முனிவர் யார்க்கு மற்றுளார் தமக்கு மன்ன
னீந்திட வவற்றை யன்னோ ரியாவரு மணிந்துட் கொண்டார்.

இ—ள்: ஆய்ந்திடும் மறைகள் போற்றும் ஆதிதன் தீர்த்தம் போது சாந்தமொடு அவிகள் தம்மை—ஆராய்ந்துணர்தற்பாலவாகிய வேதங்களாற்றுதிக்கப்படுகின்ற முதற்கடவுளாகிய சிவபிரானது தீர்த்தமும் மலரும் சந்தனமும் நைவேத்தியமுமாகிய இவைகளை, சதுர்முகன் முதல் வானோர்க்கும்—நான்குமுகங்களையுடைய பிரமனாதிய தேவர்களுக்கும், வாய்ந்திடும் முனிவர் யார்க்கும்—சிறந்த முனிவரனைவர்க்கும், மற்று உளார் தமக்கும்—ஏனையோர்க்கும், மன்னன் ஈந்திட—இமையமலையரசன் வழங்க, அன்னோர் யாவரும்—அவரனைவரும், அவற்றை அணிந்து உட்கொண்டார்— அப்பொருள்களையணிந்து உட்கொண்டார்கள் எ—று.

எத்துணை நுண்ணறிவினராலும் பொருளுணர்தற்கரிய மறைகளென்பார் 'ஆய்ந்திடுமறைகள்' எனவும், சிவபிரானது பாதபூசைக்கும் நிவேதனத்திற்கும் நியோகிக்கப்பட்டனவென்பார் 'ஆதிதன்றீர்த்தம்போதுசாந்தமொடவிகள்' எனவும், அணிதற்பாலனவாகிய மலரையுஞ் சந்தனக்குழம்பையும் அணிந்தனர். பருகற்பாலனவாகிய தீர்த்தமுதலியவற்றைப் பருகினர், புசித்தற்பாலனவாகிய கனிமுதலியவற்றைப் புசித்தனரென்பார் 'அணிந்துட்கொண்டார்' எனவும் கூறினார். (அஉ)

ஆலமா மிடற்றோற் கான வமலமாம் பொருளை யேற்றுச்
சீலமோ டணிந்துட் கொண்டு சிந்தையுண் மகிழ்ந்து நந்த
மூலமாம் வினைகட் கின்றே முடிபொருங் குற்ற தென்றார்
மேலவ ரன்று பெற்ற வியப்பினை விளம்ப லாமோ.

இ—ள்: ஆல மா மிடற்றோற்கு ஆன அமலம் ஆம் பொருளை ஏற்று—நஞ்சார்ந்த கரிய திருக்கண்டத்தையுடைய சிவபிரானுக்குபயோகமான (அந்த) நிர்மாலியப்பொருள்களைவாங்கி, சீலமோடு அணிந்து உட்கொண்டு—ஒழுக்கத்துடனே (அணியவேண்டியனவற்றை) அணிந்து,(உட்கொள்ளவேண்டியனவற்றை)உட்கொண்டு, சிந்தையுள் மகிழ்ந்து—மனத்திற் சந்தோஷங்கொண்டு, நந்தம் மூலம் ஆம் வினைகட்கு இன்றே ஒருங்கு முடிபு உற்றது என்றார்—எங்களது தொன்றுதொட்டுள்ளவாகிய வினைகளுக்கு இற்றைஞான்றே ஒருசேர அழிவுநேர்ந்ததென்று ஆநந்தித்தார்கள், மேல்-இதன்மேல், அவர் அன்று பெற்ற வியப்பினை விளம்பல் ஆமோ—அவர்கள் அற்றைத்தினத்திற்பெற்ற பெருமிதத்தைச்சொல்வது கூடுமா? (கூடாதே) எ—று.

கீழ்ச்சிந்தல் மிதித்தல் முதலியதவறுகளின்றி அன்புடனென்பார் 'சீலமோடு' எனவும், சஞ்சிதவினை, அநாதிதொடுத்துச் சனனந்தோறுமார்ச்சித்தவைகளிற் புசித்தெஞ்சி, ஆறத்துவாவிலுங்கட்டுப்பட்டு, பயிர்வினைஞனொருவன் விளைந்ததானியத்திலெடுத்தெஞ்சியவற்றைச் சேர்ப்பித்திருக்கும் நெற்களஞ்சியம்போறலின், 'மூலமாம்வினைகள்' எனவும், பலபல சன்மங்களின்முற்றியபதிபுண்ணியமேலீட்டாற் பக்குவமுதிர்ந்தழித் தொலைதற்பாலதாகிய அவ்வினை இக்காட்சியொன்றாற்றானேதொலைந்ததென்பார் தேற்றேகாரங்கொடுத்து 'இன்றேமுடிபு-உற்றது' எனவும், அச்சஞ்சிதவினை தான்மாத்திரமன்று, தன்னுடைய பிராரத்தம் ஆகாமியமென்பவற்றோடுமுடன்றொலைந்ததென்பார் 'ஒருங்குமுடிபுற்றது' எனவும், பெறுதற்கரியபொருள் இதனைவிடப்பிறிதின்றாதலின் அவர்பேற்றையும் மகிழ்வையும் இதன்மேல் யாஞ்சிறப்பித்துக்கூற இடமின்றென்பார் 'மேலவரன்றபெற்றவியப்பினைவிளம்பலாமோ' எனவும் கூறினார். மேலவர் என்பதற்கு மேன்மையினையுடைய அவரெனப்பொருள்கூறுவாருமுளர்.()

அனைய தோர் காலை தன்னி லமலமாம் பொருள்க டம்மைப்
பனிவரை யிறைவன் றானும் பன்னியுந் தமரு ளாரு

மெனைவரு மருந்தி மேற்கொண் டெல்லையி லின்ப முற்றார்
வினைவலி யொருவி மேலாம் வீடுபே றடைந்து ளார்போல்.

இ—ள்: அனையது ஓர் காலை தன்னில்—அவ்வாறாகியசமயத்தில், பனிவரை இறைவன் தானும் பன்னியும் தமர் உளாரும் எனைவரும்—இமையமலையரசனும் (அவனது) மனைவியாகிய மேனையுஞ்சுற்றமாயுள்ளவர்களுமாகியயாவரும், அமலம் ஆம் பொருள்கள் தம்மை அருந்தி மேற்கொண்டு-நிர்மாலியப்பொருள்களை உட்கொண்டும் மேற்கொண்டும், வினை வலி ஒருவி மேல் ஆம் வீடுபேறு அடைந்துளார் போல் எல்லை இல் இன்பம் உற்றார்- இருவினைகளின் வலிமைநீங்கப்பெற்று மேலாகிய மோக்ஷத்தையடைந்தவர்கள்போல அளவிறந்த இன்பத்தை அடைந்தார்கள் எ—று.

பேரின்பமென்பது அத்துவிதமுத்தியையாதலின் அதனையடைந்தாருறுமின்பை மலையரசன்முதலியோருற்றவின்பத்துக்குவமித்துக்கூறினார். (௮௪)

தன்னுறு கணவன் றுஞ்சத் தாபத நிலைய ளாகி
யின்னலை யடைந்தங் குற்ற விரதியவ் வெல்லை வந்து
மன்னுயிர் முழுது மீன்ற மங்கையை மணந்த வள்ளல்
பொன்னடி வணங்கித் தீயேன் புன்கணைத் தவிர்த்தி யென்றாள்.

இ—ள்: தன் உறு கணவன் துஞ்ச—தன்னைச்சேருகின்ற நாயகன் இறக்க, தாபதநிலையள் ஆகி—விதவை விரதத்தையுடையவளாய், இன்னலை அடைந்து அங்கு உற்ற இரதி—மனத்துயரைப்பொருந்தி அம்மலையிலிருந்த இரதியானவள், அ எல்லை வந்து—அச்சமையத்தில்வந்து, மன் உயிர் முழுதும் ஈன்ற மங்கையை மணந்த வள்ளல் பொன் அடி வணங்கி—நிலைபெற்ற ஆன்மாக்களனைத்தையும் பெற்றபரமமாதாவாகிய பார்ப்பதியாரைத் திருமணமியற்றிய அருள்வள்ளலாகிய சிவபிரானது பொன்போன்ற திருவடிகளை நமஸ்கரித்து, தீயேன் புன்கணை தவிர்த்தி என்றாள்—கொடியேனாகிய எனது துன்பத்தை நீக்கியருள்க என்று பிரார்த்தித்தாள் எ—று.

தாபதநிலை விதவைவிரதமென்பதை "காதலனிழந்ததாபதநிலையும்" எனத் தொல்காப்பியனார் கூறுதலானுமுணர்க. மணநிகழ்ச்சியிற் சிந்தைசெலுத்தாது கணவனிறந்ததுயரால் வாடியிருந்தாளென்பதுபோதர 'இன்னலையடைந்தங்குற்றவிரதி' என்றார். பார்ப்பதியை மணமியற்றும்பொழுது உன்கணவனையெழுப்புவோமென முன்னர்ச் சிவபிரான்றிருவாய்மலர்ந்தருளியபடி எதிர்பார்த்திருந்தாளாதலின் அப்பொழுது வந்து வேண்டினளென்க. (௮௫)

சீருறு கணவ னில்லாள் செப்பிய மாற்றங் கேளா
வாருயிர் முழுது நின்றே யனைத்தையு முணர்ந்து கூட்டும்
பேரரு ளுடைய நாதன் பேதுறன் மடந்தை யென்னா
மாரன்வந் துதிக்கும் வண்ண மனத்திடை நினைந்தா னன்றே.

இ—ள்: ஆர் உயிர் முழுதும் நின்று அனைத்தையும் உணர்ந்து கூட்டும் பேர் அருள் உடைய நாதன்—நிறைந்த ஆன்மாக்களனைத்திலும் வியாபித்து நின்று (அவை செய்யும் வினைகள்) எல்லாவற்றையும் (முற்றறிவான்) அறிந்து (அவ்வவற்றிற்கேற்ற சுகாசுகங்களை அவ்வவர்க்கு) அடைவிக்கின்ற பெருங்கருணையையுடைய சிவபிரான், சீர் உறு கணவன் இல்லாள் செப்பிய மாற்றம் கேளா— சிறப்புப்பொருந்திய நாயகனில்லாதவளாகிய இரதிதேவி விண்ணப்பஞ்செய்த வாசகங்களைக்கேட்டு, மடந்தை பேதுறல் என்னா—நங்காய்! வருந்தற்க என்று திருவாய்மலர்ந்தருளி, மாரன் வந்து உதிக்கும் வ

ண்ணம் மனத்திடை நினைந்தான்—மன்மதன் வந்து தோற்றும்படி திருவுள்ளத்திற்சிந்தித்தார் எ—று.

மடந்தை அண்மைவிளி. ஆருயிர்முழுதுநின்றேயனைத்தையுமுணர்ந்துகூட்டும் பேரருளுடைய நாதன் என்றதனால் மன்மதன் உயிர்பெற்றெழவேண்டிய காலவெல்லையைத்தெரிந்து அருள்செய்தனரென்பது போதரும். (௮௬)

நினைதரு மெல்லை தன்னி னெடியமான் முதலா வுள்ள
வனைவருந் மருட்கை யெய்த வழுங்கிய விரதி நோக்கி
மனமகிழ் சிறந்து கார்காண் மஞ்ஞையிற் களிப்ப வங்கட்
குனிசிலை கொண்ட மாரன் கொம்மெனத் தோன்றி னானே.

இ—ள்: நினைதரும் எல்லை தன்னில்—(அவ்வாறுசிவபிரான்) சிந்தித்தருளியபொழுது, நெடிய மால் முதலா உள்ள அனைவரும் மருட்கை எய்த—நெடியவடிவத்தையுடைய திருமால்முதலாகவுள்ள எல்லோரும் வெருட்சிகொள்ள, அழுங்கிய இரதி நோக்கி மனம் மகிழ்சிறந்து கார் காண் மஞ்ஞையில் களிப்ப—வருத்தமுற்றுநின்ற இரதிதேவிகண்டு மனமகிழ்ச்சிமிக்குமேகத்தைக்கண்டமயில்போலக் களிப்படைய, குனி சிலை கொண்ட மாரன்—வளைந்த வில்லைக்கையிலேந்திய மன்மதன், அங்கண் கொம்மென தோன்றினான்—அவ்விடத்து விரைவாகத்தோற்றினான் எ—று.

எய்த களிப்ப-என்னுங்காரியப்பொருளவாகிய எச்சங்கள் தனித்தனி தோன்றினான் என்னுமுற்றோடுமுடிந்தன. (௮௭)

முன்பொடு தோன்று மாரன் முதல்வியோ டிருந்த நாதன்
பொன்புனை கமலத் தாண்முன் போந்தனன் றாழ்ந்து போற்றி
யென்பிழை பொறுத்தி யென்ன யாமுனை முனியி னன்றோ
பின்பது தணிவ துள்ளம் பேதுறன் மைந்த வென்றான்.

இ—ள்: முன்பொடு தோன்றும் மாரன்—முதன்மையோடுத்தோற்றியமன்மதன், முதல்வியோடு இருந்த நாதன் பொன் புனை கமல தாள் முன் போந்தனன்—தலைவியாராகிய பார்ப்பதியாருடன்வீற்றிருந்த சிவபிரானது அழகுமிக்க தாமரைமலர்போலுந் திருவடிகளின்முன்னுகச்சென்று, தாழ்ந்து போற்றி—வணங்கித்துதித்து, என் பிழை பொறுத்தி என்ன-(பரமபிதாவே!) யானியற்றியகுற்றங்களைப்பொறுத்தருளுக என்று பிரார்த்திக்க, மைந்த—(சிவபிரான் அவனைநோக்கி) மகனே!, யாம் உனை முனியின் அன்றோ பின்பு அது தணிவது—யாம் உன்னைக்கோபித்தாலன்றோ பின்னர் அக்கோபத்தைநீங்குவது, உள்ளம் பேதுறல் என்றான்—மனம்வருந்தற்க என்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

போந்தனன்-முற்றெச்சம். பாணமெய்யப்புகுந்தழித்தனியேதரிசித்தான் ஈண்டுத்தேவி சமேதமாய்த் தரிசித்தானுதலின் 'முதல்வியோடிருந்தநாதன்' என விசேடித்தார். நுதற்கண்விழித்தமாத்திரத்திலிறந்தானன்றிக்கோபித்தழித்திலராதலின், 'யாமுனைமுனியினன்றோபின்பதுதணிவது-என்றான்' என்றார். (௮௮)

எரிபுனை நமது நோக்கா லிறந்தநின் னுடல நீறாய்
விரைவொடு போயிற் றன்றே வேண்டின ளிரதி யன்னாட்
குருவமா யிருத்தி யேனை யும்பரோ டிப்பர்க் கெல்லா
மருவினை யாகி யுன்ற னரசியல் புரிதி யென்றான்.

இ—ள்: எரி புனை நமது நோக்கால் இறந்த நின் உடலம்—அக்கினியையுட்கொண்டுள்ள எமது நெற்றிக்கண்பார்வையாலெரிந்தழிந்த உனதுசரீரம், விரைவொடு நீறாய் போயிற்று—சீக்கிரத்திற் சாம்பராய்ப்போயிற்று, இரதி வேண்டினள்—இரதி

தேவி (வடிவுபெற்றெழுமாறு) விரும்பினாள் (ஆதலின்), அன்னாட்கு உருவமாய் இருத்தி—அவளுக்கு உருவத்தோடுதோன்றக்கடவாய், ஏனை உம்பரோடு இம்பர்க்கு எல்லாம்—மற்றையதேவர் மாநுடர் எல்லார்க்கும், அருவினை ஆகி உன்றன் அரசியல் புரிதி என்றான்—அரூபியாயிருந்து உனதரசாட்சியைச்செய்குதியென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

உன்னை உருவுடன்காணவிரும்பிமுயன்றஇரதிக்குமாத்திரம் உருவமாயும், அங்ஙனமுயலாத ஏனையோர்க்கருவமாயுமிருந்து தொழில்செய்குதியென்றாரென்க.

உம்பர்-மேலுலகிலுள்ளவர். இம்பர்-இவ்வுலகிலுள்ளவர். அன்றேயென்பதை அசைநிலையாக்காது அற்றைஞான்றேயெனப் பொருள்கூறினுமாம். (௮௯)

செய்வினை முறையா லீசன் சித்தசற் கினைய கூறி
யவ்வவ னரசுஞ் சீரு மாணையும் வலியு நல்கி
மைவிழி யிரதி யோடு மன்னுதொல் புரத்துச் செல்ல
மெய்விடை யுதவ வன்னோர் விரைந்துடன் றொழுது போனார்.

இ—ள்: ஈசன்—சிவபிரான், செய்வினை முறையால் சித்தசற்கு இனைய கூறி—செய்யவேண்டிய தொழின்முறைக்கேற்ப மன்மதனுக்கிவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளி, அவ்வவன் அரசும் சீரும் ஆணையும் வலியும் நல்கி—அந்தமன்மதனது அரசியலையுஞ் சிறப்பையும் ஆஞ்ஞையையும் வலிமையையுங்கொடுத்து, மை விழி இரதியோடும் மன்னு தொல்புரத்து செல்ல மெய் விடை உதவ—மைதீட்டியகண்களையுடைய இரதிதேவியோடும் நிலைபெற்ற பழைய நகரத்திற்போகுமாறு மெய்ம்மையாகிய அநுமதியைக்கொடுக்க, அன்னோர் உடன் தொழுது விரைந்து போனார்—அவ்விருவரும் உடனே அவரைக்கைதொழுது விரைவாகப்போனார்கள் எ—று.

சித்தசன்-(திருமாலினது) மனத்திற்பிறந்தவன். அவ்வவனென்றது அவனென்னும்பொருள்பட்டு ஒருசொன்னீர்மையாய்நின்றது. ஆணை-கட்டளை. பலகாலங்காணாமையாற் கணவனை மேலும்மேலும் ஆவலோடுபார்த்தனளாதலின் 'மைவிழியிரதி' என அடைகொடுத்துக்கூறினார். (௯0)

இரதியு மதனு மேக விந்திர நீலத் திட்ட
வரியணை யிருந்த நாத னம்மையொ டிழிந்து தன்னேர்
திருவுரு வுடைய மேலோர் தேவர்மா முனிவ ரேனோர்
பரவினர் செல்லப் பூதர் பல்லியந் தெழிப்பச் சென்றான்.

இ—ள்: இரதியும் மதனும் ஏக— இரதிதேவியுமன்மதனுந்தம்மூர்க்குச்செல்ல, இந்திரநீலத்து இட்ட அரி அணை இருந்த நாதன்-இந்திரநீலரத்தினத்தாலியற்றிவைக்கப்பட்ட சிங்காசனத்திலிருந்த தலைவராகிய சிவபிரான், அம்மையொடு இழிந்து—தேவியாரோடுமிறங்கி, தன் நேர் திருவுரு உடைய மேலோர் தேவர் மா முனிவர் ஏனோர் பரவினர் செல்ல—தன்னைப்போன்ற திருவுருவத்தையுடைய மேலவர்களாகிய உருத்திரர்களும் தேவர்களும் சிறந்தமுனிவர்களும் பிறருந் துதித்துவர, பூதர் பல் இயம் தெழிப்ப சென்றான்—பூதர்கள் பலவாத்தியங்களைமுழக்க நடந்தருளினார் எ—று. (௯௧)

மன்னுயிர்க் குயிராய் நின்றோன் பால்விடை யேறி மாதைத்
தன்னொரு பாங்கிற் கொண்டு தழீஇக்கொடு நடத்தி வானோர்
தொன்னிலை யமைந்து செல்லத் துவன்றியே கணங்கள் சுற்றப்
பொன்னிய லிமையந் தீர்ந்து வெள்ளியம் பொருப்பில் வந்தான்.

இ—ள்: மன் உயிர்க்கு உயிர் ஆய் நின்றோன்— நிலைபெற்ற ஆன்மாக்களோடும் பரமான்மாவாய்நின்ற சிவபிரான், மால் விடை ஏறி— பெரிய இடபவாகனத்திவிவர்ந்தருளி, மாதை தன் ஒரு பாகத்தில் கொண்டு தழீஇக்கொடு கடத்தி— பார்ப்பதி தேவியாரைத் தமது ஓர்பக்கத்திலேற்றித் தழுவிக்கொண்டு செலுத்தி, வானோர் தொல் நிலை அமைந்து செல்ல— தேவர்கள் பழைய நிலைமைப்படி அமைந்துவர, கணங்கள் துவன்றி சுற்ற—பூதர்கள் நெருங்கிச் சூழ்ந்துவர, பொன் இயல் இமையம் நீங்கி—பொன்மயமாகியஇமையமலையைநீங்கி, வெள்ளியம் பொருப்பில் வந்தான்—திருக்கைலாசமலையில் வந்தருளினார் எ—று.

திருமணத்தின்பொருட்டுக் கயிலையினின்றுஞ்சென்றருளியபொழுது சென்றவாறே உபசரணையியற்றன்முதலிய அமைதியுடன் செல்லவென்பார் 'தொன்னிலையமைந்துசெல்ல' என்றார். (கஉ)

அன்னதோர் காலை மாலை யயனைவெற் பரசை வேள்வி
மன்னனை யமரர் தம்மை முனிவரை மாத ரார்க
ளென்னவர் தமையுந் தத்த மிடந்தொறு மேகும் வண்ண
முன்னுற விடுத்தா னென்ப மூலமு முடிவு மில்லோன்.

இ—ள்: அன்னது ஓர் காலை—அச்சமயத்தில், மூலமும் முடிவும் இல்லோன்—உற்பத்தியும் நாசமுமில்லாதவராகிய சிவபெருமான், மாலை— திருமாலையும், அயனை—பிரமதேவரையும், வெற்பரசை—இமையமலையரசனையும், வேள்வி மன்னனை—யாகாதிபனாகிய இந்திரனையும், அமரர்தம்மை—தேவர்களையும், முனிவரை— முனிவர்களையும், மாதரார்கள் என்னவர்தமையும்—பெண்களனைவரையும், தத்தம் இடம் தொறும் ஏகும்வண்ணம்— தங்கள்தங்கள் இருப்பிடங்களோறும்போகுமாறு, முன்னுற விடுத்தான்—(தாந்திருக்கோயிலுட் புக)முன்னரே அனுப்பியருளினார் எ—று. (கங)

அடுகன லவன்கூர் மாண்ட னாடக னையன் சிம்புள்
வடிவின னாதி யான வரம்பிலா வுருத்தி ரர்க்குங்
கடகரி முகத்தி னாற்குங் கணங்களிற் றலைமை யோர்க்கும்
விடையினை யுதவி யையன் வியன்பெருங் கோயில் புக்கான்.

இ—ள்: அடு கனலவன் கூர்மாண்டன் ஆடகன் ஐயன் சிம்புள்வடிவினன் ஆதி ஆன வரம்பு இலா உருத்திரர்க்கும்—காலாக்கினி கூர்மாண்டேசர் ஆடகேசர் ஐயனார் சரபப்பறவையுருக்கொண்ட வீரபத்திரர்முதலாகிய அளவிறந்த உருத்திரர்களுக்கும், கடகரி முகத்தினாற்கும்—மதத்தைப்பிலிற்றுகின்ற யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்கும், கணங்களில் தலைமையோர்க்கும்—பூதர்களுட்டலைமையுடையோர்க்கும், விடையினை உதவி-அநுமதியைக்கொடுத்தனுப்பி, ஐயன்-சிவபிரான், வியன் பெரும் கோயில் புக்கான்—சிறந்த பெரிய திருக்கோயிலினுட்சென்றருளினார் எ—று. ()

ஏறெனுங் கடவுண் மீதி னிம்மென விழிந்து தன்னோர்
கூறுடை முதல்வி யோடுங் கோநகர் நடுவ ணெய்தி
யாறணி சடையெம் மண்ண லரியணைப் பீட மீதில்
வீற்றிடு தொன்மை யேபோல் வீற்றிருந் தருளி னானே.

இ—ள்: ஆறு அணி சடை எம் அண்ணல் கங்கைநதியையணிந்த சடைமுடியையுடைய எங்கள்தலைவராகிய சிவபிரான், ஏறு எனும் கடவுள் மீதின் இம்மென இழிந்து—இடபமாகியதெய்வத்தினின்றும் விரைவாக இறங்கி, தன் ஓர் கூறு உடை மு

தல்வியோடும் கோநகர் நடுவண் எய்தி—தமது ஒருபாகத்தை உரிமையாகவுடைய உமாதேவியாரோடுந் திருக்கோயிலினடுவேசென்று, அரி அணை பீடம் மீதில்—சிங்காசனத்தின்மேல், வீறொடு தொன்மை போலே வீற்றிருந்தருளினன்-பெருமையுடன் பழமைபோலவே வீற்றிருந்தருளினார் எ—று.

தருமவடிவாதலின்'ஏறெனுங்கடவுள்'என்றார். மீதில் என்பது மேனின்றென்பதுபோல் ஐந்தனுருபாகவந்தது. இம் விரைவுக்குறிப்பு. ஓர்கூறு என்றது வாமபாகத்தை. அரியணைப்பீடமீதில், வீறொடு, தொன்மையேபோல் என்பன தனித்தனி வீற்றிருந்தருளினன் என்னுமுற்றோடியைந்தன. முன்னைய ஏகாரம் தேற்றம். அணை பீடம் ஒருபொருட்சொற்கள். (கரு)

அன்பினர்க் கெளிவந் துள்ள வாதியம் பரமன் மாது
தன்புடை யாகச் சீயத் தவிசின்வீற் றிருந்த லோடுந்
துன்பகன் றிருபா லாகித் துவன்றிய வுயிர்க ளெல்லா
மின்பொடு போக மாற்றி யினிதமர் வுற்ற வன்றே.

இ—ள்: அன்பினர்க்கு எளிவந்துள்ள ஆதியம் பரமன்—அடியார்க்குக் காட்சிப்பட்டருளுகின்ற ஆதிகடவுளாகிய சிவபிரான், மாது தன்புடை ஆக சீயத்தவிசின் வீற்றிருந்தலோடும்-உமாதேவியார் தமது பக்கத்திலமையச்சிங்காசனத்திலெழுந்தருளியிருத்தலும், இருபால் ஆகி துவன்றிய உயிர்கள் எல்லாம்-ஆணும்பெண்ணுமென இருபகுதியவாய்நெருங்கிய ஆன்மாக்களெல்லாம், துன்பு அகன்று-துயரநீங்கி, இன்பொடு போகம் ஆற்றி இனிது அமர்வுற்ற—சுகத்துடனே போகத்தைநுகர்ந்து நன்றாக வாழ்ந்திருந்தன எ—று.

'அன்பினர்க்கெளிவந்துள்ளவாதியம்பரமன்' என்றதை 'அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்கொற்றங்- குடியார்க்கெழுதியகைச்சீட்டுப்-படியின்மிசைப்-பெற்றான்சாம்பானுக்குப்பேதமறத்தீக்கைசெய்து-முத்திகொடுக்கமுறை" என உமாபதிசிவாசாரியர்க்குச் சிவபிரானருளிய திருவாக்கானுமுணர்க. (கசு)

திருக்கல்யாணப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் அருo.

---

# திருவவதாரப்படலம்.

குமாரக்கடவுள் திருவவதாரஞ்செய்தசரித்திரத்தைக் கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

இப்படலப்பொழிப்பு.

தேவர் முனிவர் முதலாயினோரனைவரும் மேருமலையிற்குழுமி, சிவபிரானைத்தரிசிக்கவும்,புத்திரரைத்தோற்றுவிக்கும்படி பிரார்த்திக்கவுஞ் சமயம்பார்க்குமாறு வாயுதேவனைத்தூண்ட, அவன் திருக்கைலாசகிரியின் முதல்வாயிலிற்சென்று திருநந்திதேவராலச்சுறுத்தப்பெற்று உட்புகாது மீண்டனன். பின்னர்த்தேவரனைவரும்அத்திருக்கைலாசமலையிற்சென்று திருநந்திதேவரிடம் அநுமதிபெற்று உட்புகுந்து சிவபிரானைத்தரிசித்துத் தோத்திரஞ்செய்து ஓர் குமாரரையுதிப்பித்தருள்க என்று வேண்டினர். உ

டனே சிவபிரான் ஆறுமுகத்திருவுருவங்கொண்டு அவற்றிலுள்ள நுதற்கண்களாறினும் ஆறு அக்கினிப்பொறிகளையுதிப்பிக்க, அவை உலகமெங்கும்பரந்தன. தேவியார் அவற்றின் வெம்மையாற்ருது ஓடிப்போய்த் தமதுகோயிலையடைந்தனர். தேவர்களும் பிறருங்கலங்கினர். சிவபிரான் அதுகண்டு அபயங்கொடுத்து, முன்போலாறுபொறிகளாக்கித்தம்முன் வருவித்து, கங்கைநதியிற்சேர்க்குமாறு வாயுதேவனுக்கும் அக்கினிதேவனுக்குங் கட்டளையிட்டு 'இப்பொறிகளைக்கங்கைநதி சரவணதடாகத்திற் சேர்த்தவுடன் புத்திரன்தோன்றுவன்' என்று அருளிச்செய்து தேவர்முதலாயினோர்க்கு விடைகொடுத்தனர். உடனே வாயுதேவன் அவரனைவருஞ்சூழ்ந்துவர அப்பொறிகளைச்சிறிதுதூரஞ்சுமந்துசென்று மேற்சுமத்தலாற்ருது அக்கினிதேவனிடம் ஒப்பிக்க, அவன் அரிதிற்கொடுசென்று கங்கையிற்சேர்த்தனன். கங்கை சரவணத்திற்சேர்த்தது. அப்பொழுது ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டுதிருக்கரங்களுமமைய ஒருகுமாரர்தோன்றி, ஓர் தாமரைமலரின்மேல் வீற்றிருந்தனர். அதன்பின், அவர்க்குப்பாலூட்டி வளர்க்குமாறு கார்த்திகைப்பெண்களாறுவர்க்குந் தேவர்கள் பணிக்க, அக்குமாரரொருவரே ஆறுகுமாரராகத்தோன்றி, அவர்முலைப்பாலைப்பருகி வளர்ந்தனர் என்பதாம்.

பற்பக லினைய வாற்ருற் படர்தலும் பின்னோர் வைகன்
முற்படு மயன்மால் வேள்வி முதலவன் றிசைகாப் பாளர்
சொற்படு முனிவர் வானோர் யாவருந் தொல்லை மேரு
வெற்பினிற் குழுமிச் சூரான் மிகமெலிந் திரங்கிச் சொல்வார்.

**இ—ள்:** இனையவாற்ருல் பல் பகல் படர்தலும்—இவ்வாறு பலதினங்கள்கழிதலும், பின் ஓர் வைகல்—பின்னொருதினத்தில், முற்படும் அயன் மால் வேள்வி முதலவன் திசைகாப்பாளர் சொல்படும் முனிவர் வானோர் யாவரும்—முதன்மைபொருந்திய பிரமதேவர் திருமால் யாகாதிபனாகிய இந்திரன் (ஏனைய) திக்குப்பாலகர்கள் புகழ்பெற்ற முனிவர்கள் தேவர்கள் ஆகிய எல்லாரும், சூரால் மிக மெலிந்து இரங்கி—சூரபன்மனது கொடுமையினால் மிகவுந்தளர்ந்து புலம்பி, தொல்லை மேரு வெற்பினில் குழுமி இனையசொல்வார்—பழைய மேருமலையிற்கூடியிருந்து இவ்வாறு பேசுவார்கள் எ—று.

பிரமன்மான்முதலாயினோர் முன்னர்க்கூறப்படுதலின் வானோரென்றது ஏனோரையென்க. சூர் ஆகுபெயர். தேவசபையில் உடனிருக்குமகத்துவம் வாய்ந்தாரென்பார் 'சொற்படுமுனிவர்' எனவும், அசுரரிடர்ப்படுத்தியக்கால் அவர்க்ககப்படாதொளித்திருத்தற்கிடமாகிய மலையென்பார் 'தொல்லைமேருவெற்பு' எனவும் கூறினர். (௧)

உலகினை யவுணர்க் கீந்தே யோகிபோல் வைகி நம்பான்
மெலிவினைப் படுத்தி யாம்போய் வேண்டலு மிரக்க மெய்தி
மலைமக டன்னை வேட்டான் மைந்தனைத் தந்து நம்மைத்
தலையளி புரியான் வாளா விருப்பதென் றுனு வானோன்.

**இ—ள்:** தாணு ஆனோன்—சிவபிரானானவர், அவுணர்க்கு உலகினை ஈந்து—அசுரர்க்கு உலகத்தை (அரசியற்றுமாறு) கொடுத்து, யோகிபோல் வைகி—ஞானியைப்போல வீற்றிருந்து, நம்பால் மெலிவினை படுத்தி—எம்மிடத்துத்துன்பத்தை வருவித்து, யாம் போய் வேண்டலும்—சிறியேங்கள் போய்ப்பிரார்த்தித்தலும், இரக்கம் எய்தி மலைமகள் தன்னை வேட்டான்—அதற்குமனக்கருணைகூர்ந்து பார்ப்பதியாரைத்திருமணஞ்செய்தார் (அங்ஙனமியற்றியும்), மைந்தனை தந்து நம்மை தலையளி புரியான் வாளா இருப்பது என்—புத்திரரைப்பெற்று எம்மை இரக்ஷிக்காது கொன்னேயிருத்தல் யாதுபற்றி? எ—று.

உலகு ஆகுபெயர். தாணு நிலைப்பொருள். இதனை "பிறப்போ டிறப்பு மிலனாகிப் பிரமன் மாயன் முதலெவர்க்குஞ்-சிறப்பா லுயர்ந்து சலியானாகித் தீதொன் றின்

றியே-யறத்தோ ரறிய வுறைவனால் யாவு மேவி யாதலினு-லுறத்தா னுணர்ந்தோர் தானு
வென வுணர்ந்தே நாளு முரைப்பரால்" என்னும் வாயுசங்கிதைச்செய்யுளானறிக. நம்
வேண்டுகோட்படி புத்திரரைத்தோற்றுவிக்குமாறு மணமியற்றினர் பின்பங்ஙனஞ்செய்
யாதிருக்கின்றார்,யாங்கள்யாதுங் குறைசெய்தோமோவென்பார் 'யாம்போய்வேண்ட லுமிர
க்கமெய்திமலைமகடன்னைவேட்டான்-வாளாவிருப்பதென்' என்றார். (உ)

இவறலு மிகலு மின்றி யார்க்குமோர் பெற்றித் தாகி
யவரவர் வினைக ணாடி யதற்படு பொருளை நல்குஞ்
சிவனையாம் வெறுத்தல் குற்றஞ் சிறந்தநோன் பியற்றி டாதே
தவறுசெய் தனமென் றெம்மை நோவதே தக்க தென்றார்.

இ—ள்: இவறலும் இகலும் இன்றி—விருப்பும்வெறுப்புமில்லாமல், யார்க்கும்
ஓர் பெற்றித்து ஆகி—அனைவர்க்குமொருதன்மையராகி, அவர் அவர் வினைகள் நாடி அத
ற்படு பொருளை நல்கும் சிவனை—அவரவர்செய்த நல்வினை தீவினைகளையாராய்ந்து அதனால்
விளைகின்ற பயன்களைக்கொடுக்கின்ற சிவபிரானை, யாம் வெறுத்தல் குற்றம்—யாம் வெறு
ப்பது தவறாகும், சிறந்த நோன்பு இயற்றிடாது தவறு செய்தனம் என்று எம்மை நோவ
தே தக்கது—சிறப்பினையுடைய தவத்தைச்செய்யாது குற்றஞ்செய்தேமென்று எங்களை
நொந்துகொள்வதே தகுதியாம், என்றார்—என்றுகூறினார்கள் எ—று.

சிவபிரான் அசுரர்மாட்டுவிருப்பும் நம்மாட்டுவெறுப்புமுற்றாரென யாமெண்ணு
வதுபேதைமை. அவர்செய்த தவத்திற்கேற்றவரத்தை அவர்க்குக்கொடுத்தனர். அதனினு
ஞ்சிறந்ததவத்தைச்செய்யின் எமக்கும் அவ்வாறு நன்மைசெய்வர் என்பதாம்.

பின்னைய ஏகாரம் பிரிநிலை. (ங)

ஆயினு மவன்றாள் போற்றி யடையினன் கனைத்து மாகுந்
தீயன வகலு மீது திண்ணமா மதனா லின்னுங்
காய்கதிர் மதிசூழ் கின்ற கயிலையங் கிரியின் முக்க
ணாயகற் கிதனைக் கூற நாமெலாம் போது மென்றார்.

இ—ள்: ஆயினும்—அங்ஙனமாயினும், அவன் தாள் போற்றி அடையில் நன்
கு அனைத்தும் ஆகும்—அச்சிவபிரானது பாதங்களைத்துதித்துச்சேவித்தால் வேண்டிய ந
ன்மைகள் யாவும் எமக்குண்டாம், தீயன அகலும்—தீமைகள்யாவும் நீங்கும், ஈது திண்ண
ம் ஆம்-இது நிச்சயமாம், அதனால்-ஆதலினால், காய் கதிர் மதி சூழ்கின்ற கயிலையங்கிரியில்
முக்கண் நாயகற்கு இதனை இன்னும் கூற-சுடுகிரணங்களையுடைய சூரியனுஞ்சந்திரனும்
(தினந்தோறும்) வலஞ்செய்கின்ற திருக்கைலாசமலையில் வீற்றிருக்கின்ற மூன்றுதிருக்க
ண்களையுடைய தலைவராகிய சிவபெருமானுக்கு இதனை மேலும் விண்ணப்பஞ்செய்யுமா
று, நாம் எலாம் போதும் என்றார்-யாமனைவேமும் போவேமென்று நிச்சயித்தார்கள் எ-று.

நன்கு குவ்விகுதியீற்றுப்பண்புப்பெயர். போதும் தன்மைப்பன்மையெதிர்கா
லத்தெரிநிலைவினைமுற்று. முன்னர்க் குறையிரந்துழிச் சிறிதுபொருட்படுத்தித் திருமண
ஞ்செய்தாராதலின் இனியுங்குறையிரப்போமேல் நன்குகருணைபுரிவரெனத் துணிந்தன
ரென்க. மிக உயர்ந்த மலையென்பார் 'காய்கதிர்மதிசூழ்கின்றகயிலையங்கிரி' என்றார். (ச)

போதரா விசைந்த காலைப் பொன்னலர் கமலப் புத்தேண்
மேதகு பரமன் செய்கை வினவியே யகல்வேண்டுந்
தூதுவ னொருவன் றன்னைத் தூண்டிமுன் னறிது மென்றே
யூதையங் கடவு டன்னை நோக்கியீ துரைக்க லுற்றான்.

இ—ள்: போதர இசைந்தகாலை— அவ்வாறு அனைவரும் கயிலைக்கேகவுடன்பட்டபொழுது, பொன் கமல அலர் புத்தேள்—பொன்மயமாகிய தாமரைமலரில்வீற்றிருக்கின்றபிரமதேவர்,மேதகு பரமன் செய்கை வினவியே ஏகல் வேண்டும்-மேன்மைபொருந்திய சிவபிரானது செய்கையை ஆராய்ந்துணர்ந்தே செல்லுதல்வேண்டும் (ஆதலின்), முன் தூதுவன் ஒருவன் தன்னை தூண்டி அறிதும் என்று-முன்னர் ஒரு தூதுவனையேவி அறிவோமென்று சிந்தித்து, ஊதையம் கடவுள் தன்னை நோக்கி ஈது உரைக்கலுற்றான்- வாயுதேவனைப்பார்த்து இவ்வாசகத்தைக் கூறுவாராயினார் எ—று.

செய்கைவினவலாவது யாதுதொழிலைச் செய்துகொண்டிருக்கின்றாரென்னுஞ் சமயத்தையாராய்தல். (௫)

வடவரை யதனின் மூன்று மாண்குவ டெறிந்து வெளவி
யுடல்சின வரவ முட்க வுததியி லுய்த்த மைந்த
படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பண்ணவன் செயலை வெள்ளிக்
கடிவரை நகரத் தெய்திக் கண்டனை மீடி யென்றான்.

இ—ள்: உடல் சின அரவம் உட்க எறிந்து—பகைக்கின்றகோபத்தினையுடைய ஆதிசேடன் பயப்படும்படி மோதி, வடவரை அதனில் மாண் மூன்று குவடு வெளவி-மேருமலையின்கண்ணே மாட்சிமைபொருந்திய மூன்று கொடுமுடிகளைக் கவர்ந்து, உததியில் உய்த்த மைந்த—சமுத்திரத்திலெறிந்த வீரனே!, கடி வெள்ளி வரை நகரத்து எய்தி— காவலையுடைய திருக்கைலாசமலையிலுள்ள கோயிலிற்போய், படர் மதி மிலைச்சும் சென்னி பண்ணவன் செயலை கண்டுமீடி என்றார்— தம்மாட்டுச்சரண்புக்க பிறையையணிந்த திருச்சடையையுடைய சிவபிரானதுதொழிலைப்பார்த்துத் திரும்புதி என்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

மதியென்றதீண்டுப் பிறையை. "இருகோட்டொருமதியெழில்பெறமிலைச்சினை" என்பதிற்போல.

வௌவுதற்கரிய குவடென்பார் 'மாண்குவடு' எனவும், ஆதிசேடன் காத்துநிற்பவும்அவனது வலியைத் தொலைத்துக்கவர்ந்த வென்றிப்பாடுதோன்ற 'உடல்சின வரவமுட்க எறிந்துவெளவி' எனவும், எவரும் உட்புகுதற்கரிதாகிய காவலமைந்தகோயிலென்பார் 'கடிவரைநகரம்' எனவும், அக்காவலை உன்வீரத்தானுஞ் சூழ்ச்சியானுங் கடந்து சென்றுகண்டுமீளுதியென்பார் 'கடிவரைநகரத்தெய்திக்கண்டனைமீடி' எனவும் கூறினார்.

முன்னொருகாலத்தில் வாயுதேவனும் ஆதிசேடனும் யானேவலியன் யானேவலியன் எனத்தம்முள்வாதிட்டு, 'மேருமலைச்சிகரங்களை ஆதிசேடன் காப்ப வாயுதேவன் பிடுங்குவது, வென்றவரேவலியர்'என நிச்சயித்துழி, ஆதிசேடன் தனது ஆயிரம்பணாமகுடங்களாலும் ஆயிரஞ்சிகரங்களையுங் காத்துக்கொள்ள, வாயுதேவன், அவற்றினுள் மூன்றுசிகரங்களைப்பிடுங்கித்தென்றிசைக்கடலில் வீழ்த்தினன். அவைமூன்றும் மூன்றுதலங்களாயின. இதனை "வந்து வாயுவும் வந்தவந் தறைந்தனன் வரையை-முந்தி வேரறப் பறித்தனன் கொடுமுடி மூன்றை- யந்த மூன்றையுங் கொடுசமன் றிசையினி லடைவே-சிந்தினான்றல மூன்றிலே விழுந்தன சிகரம்" எனவருஞ்செவ்வந்திப்புராணச்செய்யுளானுணர்க.

பல்லிதழ் வனச மேலோ னினையன பகரநோன்றாள்
வில்லுடை மதன வேளை விழித்தடு கடவுண் முன்னஞ்
செல்லுவ தரிது செல்லிற் றீமையே பயக்கு மென்பா
லொல்லுவ தன்றிச் செய்கை யுள்ளமும் வெருவு மென்றான்.

இ—ள்: பல் இதழ் வனச மேலோன் இனையன பகர—பல இதழ்களையுடைய தாமரைமலரின்மேல் வீற்றிருக்கின்ற பிரமதேவர் இவ்வாசகங்களைக்கூற, நோன் தாள் வி

ல் உடை மதனவேளை விழித்து அடு கடவுள் முன்னம் செல்லுவது அரிது— (வாயுதேவன் அவரைநோக்கி தலைவரே!) வலிய குதைபொருந்திய வில்லையுடைய மன்மதனைப்பார்த் தமாத்திரத்தில் எரித்தசிவபிரானுக்கு முன்னாகப்போவதரிது, செல்லின் தீமையே படக்கும்—போனால் அது தீங்கையேதரும் (ஆதலின்), என்பால் இச்செய்கை ஒல்லுவது அன்று - என்னால் இச்செயல்கூடியதன்று, உள்ளமும் வெருவும் என்றான் —மனமும் பயப்படுமென்று கூறினான் எ—று.

ஏகாரம் பிரிநிலை. என்பாலொல்லுவதன்று உருபுமயக்கம். என்னாலொல்லுவதன்றென யாண்டேனும்பாடபேதங்காணப்படுமாயின் அதுவேசிறந்ததென்க. உள்ளமும் என்பதிலும்மை எச்சம்; அசையெனினுமாம். (எ)

கூற்றிது நிகழ்ந்த வேலைக் கோகன தத்து மேலோன்
காற்றினுக் கரசை நோக்கிக் கம்பலை கொள்ளேல் யாண்டு
மூற்றமொ டுலவல் செய்யு மொருவனை நீயே யன்றி
வீற்றொரு தேவ ருண்டோ மேலிது புரிதற் பாலோர்.

இ—ள்: இது கூற்று நிகழ்ந்த வேலை—இவ்வாசகஞ்சொல்லப்பட்டபொழுது, கோகனதத்து மேலோன்—தாமரைமலரின்மேல்வீற்றிருக்கின்ற பிரமதேவர், காற்றினுக்கு அரசை நோக்கி—வாயுதேவனைப்பார்த்து, கம்பலை கொள்ளேல்—வருந்தாதே, யாண்டும் ஊற்றமொடு உலவல் செய்யும் நீ ஒருவனே அன்றி—எவ்விடத்தினும் உற்சாகத்தோடு உலாவுகின்ற நீயொருவனேயல்லாமல், மேல் இது புரிதற்பாலோர்—உன்னின்மேலாக இச்செயலைச்செய்யவல்லவராக, வீற்று ஒரு தேவர் உண்டோ—வேறொருதேவரிருக்கின்றாரா? (இல்லையே) எ—று.

ஏனையோர் உன்னைப்போல எல்லாவிடங்களினுந்துணிந்துலாவுதலரிதாதலின், நீயே சிவபிரானைத்தரிசித்தற்குச் சமயம்பார்த்துவரத்தக்காயென்பதாம். ஐ சாரியை.கோகனதம்-சக்கரவாகப்பறவையையுவப்பிப்பது. (அ)

உற்றுழி யுதவி செய்வோ ருலப்புறு தெவையு மீவோ
ரற்றமி றவத்தா றுற்றோ ரமர்புரி வீர ராவோர்
மற்றொரு பொருளும் வெஃகார் வருத்தமு மோரா ராவி
யிற்றிட வரினு மெண்ணா ரினிதென மகிழ்வ ரன்றே.

இ—ள்: உற்றுழி உதவிசெய்வோர்—ஆபத்துவந்தவிடத்துதவுகின்றவர்களும், உலப்பு உறுது எவையும் ஈவோர்—குறைவின்றி எல்லாப்பொருள்களையுங் கொடுக்கின்றவர்களும், அற்றம் இல் தவத்து ஆறு உற்றோர்—குற்றமற்ற தவநெறியிற்பிரவேசித்தவர்களும், அமர் புரி வீரர் ஆவோர்—போரைச்செய்கின்ற சுத்தவீரர்களும் ஆகிய இவர்கள், மற்று ஒரு பொருளும் வெஃகார்— (தாங்குறித்த பொருளொன்றையேயன்றி)வேறொரு பொருளையும் விரும்பார்கள், வருத்தமும் ஓரார்—(அம்முயற்சியாலுளதாகிய) மெய்வருத்தத்தையுஞ் சிந்தியார்கள், ஆவி இற்றிட வரினும் எண்ணார்— (அதனால்) உயிர்போம்படி நேர்ந்தாலும் அவ்வாபத்தைச் சிந்தியார்கள், இனிது என மகிழ்வர்—(அவற்றையெல்லாம்) நன்மையெனக்கருதி உவகையுறுவார்கள் எ—று.

இற்றிடவரினுமென்பதில் உம்மை உயர்வுசிறப்பு. ஏனைய எச்சம். (கூ)

ஆதலி னெங்கட் கெல்லா மாற்றிடு முதவிக் காகப்
போதியா லையவென்று புகழ்ச்சியா லினைய பல்வே
றோதிடு பொருண்மை கூற விசைந்தன னெழுந்து தீயின்
காதலன் விடைகொண் டேகிக் கயிலைமால் வரையிற் சென்றான்.

இ—ள்: ஆதலின்—ஆனகாரணத்தால், ஐய—ஐயனே, எங்கட்கு எல்லாம் ஆற்றிடும் உதவிக்கு ஆக போதி என்று— எங்களுக்கெல்லாம் உதவிசெய்தற்பொருட்டுப் போவாயென்று, புகழ்ச்சியால் இனைய பல் வேறு எதிடு பொருண்மை கூற--முகமனோடும் இவைபோன்ற பலவேறுவகைப்பட்ட ஏதுக்களையுடைய நீதிமொழிகளை எடுத்துச்சொல்ல, தீயின் காதலன் இசைந்தனன் எழுந்து— அக்கினியினது நண்பனாகிய வாயுதேவன்சம்மதித்தெழுந்து, விடை கொண்டு ஏகி—அநுமதியைப்பெற்றுக்கொண்டு சென்று, மால் கயிலை வரையில் சென்றான்—பெரிய திருக்கைலாசமலையிற் போனான் எ-று.

ஆற்றிடுமுதவிக்காக என்பது உதவியாற்றிடுதற்காகவெனப் பிரித்துக்கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. ஆல் உடனிகழ்ச்சிப்பொருட்டு. (௧௦)

குன்றதன் புடையில் வீழுங் குரைபுன லாற்றி னாடி
மன்றலங் காமர் காவின் மலர்மண மளாவி வாரித்
தென்றியா யசைந்து மெல்லச் சினகரம் புகுது மெல்லை
நின்றதோர் நந்தி காணாஉ வுரப்பின னெடிது சீறி.

இ—ள்: குன்று அதன் புடையில் வீழும் குரை புனல் ஆற்றின் ஆடி- அத்திருக்கைலாசமலையின்பக்கத்தில் இழிகின்ற ஒலிக்கின்ற அருவிநீராகிய ஆற்றிற்படிந்து, மன்றலம் காமர் காவின் மலர் மணம் அளாவி வாரி—வாசனைபொருந்திய அழகியசோலையின்கணுள்ள பூக்களின் மணத்தை அளவளாவிக்கவர்ந்துகொண்டு, தென்றி ஆய் அசைந்து—தென்றற்காற்றாக அசைந்து, மெல்ல சினகரம் புகுதும் எல்லை— மெல்லவாகத்திருகோயிலினுட்பிரவேசிக்குஞ்சமயத்தில், நின்றது ஓர் நந்தி காணாஉ-அங்குநின்ற திருநந்திதேவர்பார்த்து, நெடிது சீறி உரப்பினன்--மிகவுங்கோபித்து அதட்டினார் எ-று.

அருவிநீரிற்படிந்ததும் மலர்மணமளாவியதும் வாயிற்காவலராதியோரை வசப்படுத்தற்கென்க. வீழுமாறு குரைபுனலாறெனத் தனித்தனியியையும். (௧௧)

பொற்பிரம் பொன்று பற்றிப் பொலன்முதற் கடையைப் போற்றி
நிற்புறு மாணை வள்ள னெடுஞ்சினத் துரப்ப லோடும்
கற்பொழி யெழிலி கான்ற கனையொலி கேட்ட பாம்பின்
முற்படர் கின்ற காலோன் மொய்ம்பிலன் வெருவி வீழ்ந்தான்.

இ—ள்: பொன் பிரம்பு ஒன்று பற்றி பொலன் முதற்கடையை போற்றி நிற்புறும் ஆணை வள்ளல்—ஒருபொற்பிரம்பைத் திருக்கரத்திற்றாங்கி அழகிய முதல்வாயிலைக்காத்துநிற்கின்ற ஆஞ்ஞையினையுடைய திருநந்திதேவர், நெடும் சினத்து உரப்பலோடும்—மிக்க கோபத்துடன் அதட்டுதலும், முன் படர்கின்ற காலோன்— முன்னாகச் செல்லுகின்ற வாயுதேவன், கல் பொழி எழிலி கான்ற கனை ஒலி கேட்ட பாம்பில்-கன்மழையைவருஷிக்கின்ற மேகத்தினாலுமிழப்பெற்ற இடியோசையைக்கேட்ட சர்ப்பத்தைப்போல, மொய்ம்பு இலன் வெருவி வீழ்ந்தான்—வலிமையில்லாதவனாய்ப் பயந்து விழுந்தான் எ—று. (௧௨)

வேறு.

ஒல்லென வீழ்வுறு முயிர்ப்பின் காவல
னெல்லையி லச்சமொ டிரங்கி யெழீஇத்
தொல்லையி னுருக்கொடு தோன்றி நந்திதன்
மல்லலங் கழல்களை வணங்கிக் கூறுவான்.

இ—ள்: ஒல் என வீழ்வுறும் உயிர்ப்பின் காவலன்—விரைவாகவிழுந்த வாயுதேவன், எல்லை இல் அச்சமொடு இரங்கி எழீஇ— அளவிறந்த பயத்தோடும் வருந்தியெழுந்

து, தொல்லையின் உரு கொடு தோன்றி—பழைய சுயரூபத்தைக்கொண்டு தோற்றி, நந்தி தன் மல்லல் அம் கழல்களை வணங்கி கூறுவான்—திருநந்திதேவரது வலிய அழகிய திருவடிகளை நமஸ்கரித்து இவ்வாறுசொல்வான் எ—று.

ஒல் விரைவுக்குறிப்பு. மல்லல் வளமெனினும் அம் சாரியையெனினுமாம். ()

மாலயன் மகபதி வானு ளோரெலா
மாலமர் கடவுளை யடைதன் முன்னிநீ
காலைய தறிந்தனை கடிது செல்கென
மேலுரை செய்தனர் வினையி னேனுடன்.

இ—ள்: மால் அஜன் மகபதி வான் உளோர் எலாம்—விஷ்ணுமூர்த்தி பிரமா தேவேந்திரன் மற்றையதேவர்கள் ஆகிய அனைவரும், ஆல் அமர் கடவுளை அடைதல் முன்னி—கல்லாலவிருக்ஷகீழவில்வீற்றிருக்கின்ற சிவபிரானையணுகுமாறு ஆலோசித்து, மேல்—அதன்பின், நீ காலையது அறிந்தனை கடிது செல்க என— நீ சமயம்பார்த்து விரைவில்வருகுதியென்று, வினையினேனுடன் உரைசெய்தனர்—பாவியேனோடு வார்த்தையாடினர் எ—று.

செல்க என்னும் வியங்கோளீறுதொக்கது. (கச)

கறுத்திடு மிடறுடைக் கடவு ளாடலைக்
குறிக்கரி தஞ்சுவல் குறுக வென்றியான்
மறுத்தன னனையர்தம் வருத்தங் கூறியே
யொறுத்தெனை விடுத்தன ருடைய வன்மையால்.

இ—ள்: கறுத்திடும் மிடறு உடை கடவுள் ஆடலை குறிக்க அரிது—(நஞ்சுண்டு)கறுத்த திருமிடற்றையுடைய சிவபிரானது திருவிளையாடலை ஆராய்ந்துணர்தலருமை, குறுக அஞ்சுவல் என்று யான் மறுத்தனன்—அவரை அணுகுதற்குப் பயப்படுவேனென்று யான் மறுத்துக்கூறினேன், அனையர்—அத்தேவர்கள், தம் வருத்தம் கூறி—தாம்படுந்துயரைச்சொல்லி, உடைய வன்மையால் எனை ஒறுத்து விடுத்தனர்—தமக்குள்ள சாமர்த்தியத்தினால் என்னைக்கடிந்து அனுப்பினார்கள் எ—று.

குறிக்க என்னுமெச்சத்தினீற்றகரந்தொக்கது. அஞ்சுவல் தன்மையொருமையெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று. சிவபிரானைத்தரிசித்தற்கேற்ற சமயம்பார்த்தலரிதென்பான் 'கறுத்திடுமிடறுடைக்கடவுளாடலைக்குறிக்கரிது' என்றான். (கரு)

ஆதலி னடியனே னஞ்சி யஞ்சியே
மேதகு தென்றியாய் மெல்ல வந்தன
னோதிட நினைந்தில னுனக்கு மற்றிது
பேதைமை யுணர்வினேன் பிழைபொ றுத்திநீ.

இ—ள்: ஆதலின்—அனகாரணத்தினால், அடியனேன் அஞ்சி அஞ்சி மேதகு தென்றி ஆய் மெல்ல வந்தனன்—சிறியேன் பயந்து பயந்து மேன்மைமிக்க தென்றற்காற்றாகி மெல்லெனவந்தேன், இது ஓதிட நினைந்திலன்—இதனைத்தேவரீர்க்குவிண்ணப்பஞ்செய்ய நினைத்திலேன், பேதைமை உணர்வினேன் பிழை நீ பொறுத்தி-அறியாமைமிக்க சிற்றறிவினையுடைய தமியேனியற்றியகுற்றத்தைத் தேவரீர் க்ஷமித்தருளுக எ—று.

தேவாதுவலாற்காரத்தால்வந்து எனதுமூடபுத்தியினால் அவ்வுண்மையைத்தேவரீர்க்குணர்த்தாது உட்புகநினைந்தகுற்றத்தைப் பொறுத்தருள்கவென்பதாம். வாடைமுதலிய ஏனையகாற்றினைத்தினுஞ்சிறந்ததாதலின் 'மேதகுதென்றி' என்றார். (கசு)

தானவர் தொழவரு தகையில் சூரனுன்
மானம தொருவியே வருத்துற் றோய்ந்தன
னானதொன் றுணர்கிலே னறிவு மாழ்கினே
னேனைய தேவரு மினைய நீரரே.

இ—ள்: தானவர் தொழ வரு தகை இல் சூரனால் மானமது ஒருவி வருத்துற்று ஓய்ந்தனன்—அசுரர்கள் கைதொழும்படிதோன்றிய தகுதியில்லாத சூரபன்மனால் மதிப்பையிழந்து வருந்தித்தளர்ந்தேன், ஆனது ஒன்று உணர்கிலேன் அறிவு மாழ்கினேன்—செய்யவேண்டிய கருமங்களொன்றையும் அறியுமாற்றலில்லாதேனாயறிவுமயங்கப்பெற்றேன், ஏனைய தேவரும் இனையநீரரே—(யான்மாத்திரமன்று) மற்றையதேவர்களும் இத்தன்மையரே எ—று.

அசுரரணிந்துகழித்த ஆடை மாலை முதலியவற்றையகற்றலாகிய இழிதொழிலைச் சூரபன்மன் தனக்குக்கற்பித்தமையின் 'சூரனுன்மானமதொருவியேவருத்துற்றோய்ந்தனன்' என்றான். (௧௭)

அறைதரு கணத்தரு ளாதி யாகிய
விறைவநின் முனிவினுக் கிலக்குற் றாரிலை
சிறியவென் பொருட்டினாற் சீற்றங் கோடியோ
பொறைபுரிந் தருளெனப் போற்றி வேண்டினான்.

இ—ள்: அறைதரு கணத்தருள் ஆதி ஆகிய இறைவ— வியந்துகூறப்பட்ட சிவகணத்தினருட்டலைவராகிய பெருமானே! நின் முனிவினுக்கு இலக்குற்றார் இலை—தேவரீரதுகோபத்திற்கு எதிர்நிற்பார் ஒருவருமிலர், சிறிய என் பொருட்டினால் சீற்றம் கோடியோ—அத்தகையதேவரீர் சிறியேனாகிய என்பொருட்டாகக் கோபங்கொள்கின்றீரா?, பொறைபுரிந்து அருள் என போற்றி வேண்டினான்—(யானியற்றியகுற்றத்தைப்) பொறுத்தருளவேண்டுமென்று துதித்து வேண்டுதல்செய்தான் எ—று.

தேவரீரது முனிவிற்கிலக்காவாரையன்றிச் சிறியேனைமுனிவதுதக்கதன்றென்பதாம். (௧௮)

ஆண்டகை நந்தியெம் மடிக ளவ்வழி
மூண்டெழு தன்பெரு முனிவு தீர்ந்தியா
மீண்டுநின் னுயிர்தனை யீது நிற்கலை
மீண்டனை போகென விடைதந் தேவினான்.

இ—ள்: ஆண்டகை நந்தி எம் அடிகள்—ஆண்டகைமையினையுடைய எமதுதலைவராகிய திருநந்திதேவர், அவ்வழி—அப்பொழுது, மூண்டு எழு தன் பெரு முனிவு தீர்ந்து—அதிகரித்துக்கிளருகின்ற தமது பெருங்கோபநீங்கப்பெற்று, யாம் ஈண்டு நின் உயிர்தனை ஈதும்— யாம் இப்பொழுது உனது ஆன்மாவைத் தந்தோம், நிற்கலை மீண்டனை போக என—நில்லாது திரும்பிப்போகுதியென்று, விடைதந்து ஏவினான்— அநுமதிகொடுத்தனுப்பினார் எ—று.

இடப்பொருளுணர்த்தும் ஈண்டென்னுமிடைச்சொல் காலத்தைச்சுட்டிற்று. நிற்கலை மீண்டனை முற்றெச்சங்கள். போக என்னும் வியங்கோளீறுதொக்கது. வேண்டுதல்செய்யாவழியுன்னுயிரொழிக்கப்படற்பாலதென்பதுதோன்ற 'ஈண்டுநின்னுயிர்தனையீதும்' என்றார். (௧௯)

சீரிய நந்தியந் தேவ னேவலு
மாருத னவனடி வணங்கி வல்லையி

னேரறு கயிலையி னீங்கி நீடுபொன்
மேருவில் விண்ணவர் குழுவை மேவினன்.

இ—ள்: சீரிய நந்தியம்தேவன் ஏவலும்—சிறப்புப்பொருந்திய திருநந்திதேவர் விடைகொடுத்தனுப்புதலும், மாருதன்—வாயுதேவன், அவன் அடி வணங்கி—அவரது பாதங்களை நமஸ்கரித்து, நேர் அறு கயிலையின் வல்லையில் நீங்கி—ஒப்பற்ற திருக்கைலாசமலையினின்றும் விரைவாகநீங்கி, நீடு பொன் மேருவில் விண்ணவர் குழுவில் மேவினன்—நெடிய பொன்மயமாகிய மேருமலையிற்றேவர்கூட்டத்தையடைந்தான் எ—று.

சிவபிரான் விரும்பிவீற்றிருக்குந்தானமாதலின் 'நேரறுகயிலை' எனவும், இன்னுமிம்மலையினிற்கினென்னுமோவென்றஞ்சியேகுதலின் 'வல்லையினீங்கி' எனவுங்கூறினார். (௨௦)

மேவரு காலினன் விரிஞ்சன் மாயவன்
பூவடி வந்தனை புரிந்து நந்திதன்
காவலின் வன்மையு நிகழ்ந்த காரியம்
யாவது முறைபட வியம்பி னனரோ.

இ—ள்: மேவரு காலினன்—அவ்வாறுசென்ற வாயுதேவன், விரிஞ்சன் மாயவன் பூ அடி வந்தனை புரிந்து—பிரமதேவரதும் விஷ்ணுமூர்த்தியினதும் பொலிவார்ந்த பாதங்களைவணங்கி, நந்திதன் காவலின் வன்மையும்—திருநந்திதேவரது காவலின்திறமையையும், நிகழ்ந்த காரியம் யாவதும் முறைபட இயம்பினன்—அங்கேநிகழ்ந்தகாரியமனைத்தையுங் கிரமமாகக்கூறினன் எ—று. (௨௧)

காற்றுரை வினவியே கமலக் கண்ணனு
நாற்றிசை முகத்தனு நாகர் செம்மலுஞ்
சாற்றருந் துன்பினர் தம்மி லோர்ந்திடாத்
தேற்றமொ டினையன செப்பன் மேயினர்.

இ—ள்: கமலக்கண்ணனும் நால் திசை முகத்தனும் நாகர் செம்மலும்-தாமரைக்கண்ணையுடையராகிய திருமாலும் நான்குதிசைகளினும்முகங்களையுடைய பிரமதேவரும் தேவேந்திரனும், காற்று உரை வினவி—வாயுதேவன்கூறிய வார்த்தையைக்கேட்டு, சாற்ற அரும் துன்பினர் தம்மில் ஓர்ந்திடா— சொல்லுதற்கரிய பெருந்துயருற்றவர்களாய்த் தங்களுள் ஆலோசித்து, தேற்றமொடு இனையன செப்பல் மேயினர்—தெளிவாக இவ்வாசகங்களைச் சொல்லத்தொடங்கினர்கள் எ—று.

சிவபிரானைத் தரிசித்தற்குச் சமயம்பார்த்தலரிதாய்முடிந்தமையின் துன்புற்றனரென்க. திசைமுகம் திசைகளைநோக்கிய முகங்களெனினுமாம். (௨௨)

எந்தைதன் செய்கைதேர்ந் தேகு நீயென
வெந்திறன் மருத்தினை விடுத்து மாங்கவ
னந்திந ளாணையா னடுக்க முற்றிவண்
வந்தன னச்சுறு மனத்த னாகியே.

இ—ள்: நீ எந்தை தன் செய்கை தேர்ந்து ஏகு என வெந்திறல் மருத்தினை விடுத்தும்-நீ எம்பெருமானது செயலை ஆராய்ந்துவருகுதியென்று வெவ்விய திறலினையுடைய வாயுபகவானை ஏவினேம், ஆங்கவன்—அவ்வாயுதேவன், நந்திதன் ஆணையால் நடுக்கமுற்று—திருநந்திதேவரது ஆஞ்ஞையினால் மனநடுக்கங்கொண்டு, அச்சுறும் மனத்தன் ஆகி இவண் வந்தனன்—அச்சமெய்தியமனத்தையுடையவனாகி இவ்விடத்து வந்தான் எ—று.

ஏகு ஆய்விகுதிகுன்றியமுன்னிலையேவல்வினைமுற்று. விடுத்தும் இறந்தகாலத்தன்மைப்பன்மைவினைமுற்று. எம்பிரான் செயலைத்தேர்ந்துவரத்தக்கசாமர்த்தியமுடையனென்பதுபோதர 'வெந்திறன்மருத்து' என்றார். (உ௩)

மன்னிய கயிலைமால் வரையின் யாமெலா
மின்னினி யேகியே யீசன் றன்முனா
முன்னருங் காலமொ டுற்ற நங்குறை
பன்னுத றுணிபெனப் பலருங் கூறினார்.

இ—ள்: யாம் எலாம்—யாங்களனைவேமும், இன்னினி—இனி, மன்னிய மால் கயிலை வரையில் ஈசன் தன் முனம் ஏகி—நிலைபெற்ற பெரிய திருக்கைலாசமலையிற் சிவபிரானது திருமுன்னிலையிற்போய், உன்ன அரும் காலமொடு உற்ற நம்குறை பன்னுதல் துணிபு என-நினைத்தற்கரிய காலமாகநேர்ந்திருக்கின்ற எமதுகுறைகளைமுறையிடுதலே உறுதியென்று, பலரும் கூறினார்—அனைவரும் (ஒருமித்துச்) சொல்லினார்கள் எ—று.

பிரிநிலையேகாரந்தொக்கது. எண்ணிறந்தகாலமாகநேர்ந்தவென்பார் 'உன்னருங்காலமொடுற்ற' என்றார். (உ௪)

இவ்வகை யவரெலா மிசைந்து செம்பொனின்
மெய்வரை நீங்கியே வெள்ளி வெற்பினிற்
றெய்வதக் கோயின்முன் சென்று நந்தியை
யவ்விடை தொழுதிவை யறைதன் மேயினார்.

இ—ள்: அவர் எலாம் இவ்வகை இசைந்து—அத்தேவரனைவரும் இவ்வாறுசம்மதித்து, செம்பொனின் மெய் வரை நீங்கி-செம்பொன்னாலமைந்த மெய்ம்மையாகிய மேருமலையினின்றும்நீங்கி, வெள்ளி வெற்பினில் தெய்வத கோயில் முன் சென்று- திருக்கைலாசமலையிலுள்ள தெய்வீகமாகிய திருக்கோயிலின்முன்னரேபோய், அவ்விடை நந்தியை தொழுது—அவ்விடத்திலேநின்று திருநந்திதேவரைக்கைதொழுது, இவை அறைதல் மேயினார்—இவற்றைக் கூறுவாராயினார் எ—று.

நின்றென்பது சொல்லெச்சம். (உ௫)

வேறு.

நந்தியந் தேவுகே ணங்கள்பாற் றுன்பெலாஞ்
சிந்தைசெய் திடுதியத் தேவதே வற்கியாம்
வந்தவா றோதியே வல்லைநீ யெமையவன்
முந்துறக் காட்டென முகமனோ டுரைசெய்தார்.

இ—ள்: நந்தியம் தேவு கேள்—திருநந்திதேவரே! கேட்டருள்க, நீ நங்கள் பால் துன்பு எலாம் சிந்தைசெய்திடுதி—தேவரீர் எம்மாட்டணுகிய துன்பங்களெல்லாவற்றையுந் திருவுள்ளம்பற்றியருளுக, யாம் வந்தவாறு அ தேவதேவற்கு ஓதி— யாம் இங்குவந்த தன்மையைத் தேவாதிதேவராகிய அச்சிவபிரானுக்கு விண்ணப்பஞ்செய்து, எமை அவன் முந்து உற வல்லை காட்டு என—சிறியேங்களை அவரது திருமுன்னிலையிற்கொடுசென்று விரைவிற் காண்பிப்பீராகவென்று, முகமனோடு உரைசெய்தார்—உபசாரவார்த்தைகளோடு கூறினார்கள் எ—று.

நந்தியந்தேவு அண்மைவிளி. உகரம் சாரியை. தேவதேவன் தேவரனைவர்க்குமுதற்றேவன். கேட்டுச் சிந்தைசெய்து ஓதிக்காட்டென இயைக்க. கேள் சிந்தைசெய்திடுதி என்னுமுற்றுக்களை எச்சமாக்காது முற்றாகக்கொண்டவழிப்பின்னவாக்கியமாகிப் பொருள்சித்தியாது. இங்ஙனங்கொள்வது பிரயோகவிவேகத்தார்க்குமுடன்ப

டென்க. முகமனுரைசெய்தலாவது முகமன் மொழிகளோடு இம்மொழியையுஞ்சேர்த்துமொழிதல். (௨௬)

மற்றிவா றுரைசெயும் வானவத் தொகையினை
நிற்றிரா லென்றவ ணிறுவியே யுறையுள்போய்க்
கற்றைவார் சடைமுடிக் கண்ணுதற் கடவுடன்
பொற்றடந் தாள்களைத் தொழுதனன் புகலுவான்.

இ—ள்: இவ்வாறு உரைசெயும் வானவத்தொகையினை நிற்றிர் என்று அவண் நிறுவி—(திருநந்திதேவர்) இவ்வாறுகூறிய தேவர்கூட்டத்தாரை நில்லுங்களென்று அவ்விடத்துநிறுத்தி, உறையுள் போய்—திருக்கோயிலினுட்சென்று, கற்றை வார் சடைமுடி கண்ணுதல் கடவுள் தன் பொன் தடம் தாள்களை தொழுதனன்—கூட்டமாகிய நீண்டசடைமுடியினையும் நெற்றிக்கண்ணையுமுடைய சிவபிரானது பொன்போன்ற விசாலித்ததிருவடிகளைக் கைதொழுது, புகலுவான்—இவ்வாறு விண்ணப்பஞ்செய்வார் எ—று.

தொகையினை நிறுவி எனவும், கடவுடன்முள் பொற்முள் தடந்தாள் எனத்தனித்தனியுமியையும். தொழுதனன்-முற்றெச்சம். இவ்வாறென்பதில் வகரந்தொக்கது.()

அண்ணலே யுனதுபொன் னடிகளைக் காணிய
விண்ணுளோர் யாவரும் வேந்தன்மா லயனொடு
நண்ணினா ரென்றலு நந்தியைத் தெரிகுறீஇத்
தண்ணிலா வேணியான் றருதியென் றருள்செய்தான்.

இ—ள்: அண்ணலே—கடவுளே!, விண் உளோர் யாவரும்—தேவரனைவரும், வேந்தன் மால் அயனொடு—தமதுதலைவனாகிய இந்திரனோடும் விஷ்ணுமூர்த்தியோடும் பிரமதேவரோடுங்கூட, உனது பொன் அடிகளை காணிய நண்ணினார் என்றலும்—தேவரீரது பொன்மயமாகியபாதங்களைத் தரிசிக்கும்பொருட்டுவந்தார்களென்று கூறுதலும், தண்நிலா வேணியான்—குளிர்ந்த பாலசந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் (அதுகேட்டு), நந்தியை தெரிகுறீஇ—திருநந்திதேவரைப்பார்த்து, தருதி என்று அருள் செய்தான்—(அவர்களை) அழைத்துவருகுதியென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

உறீஇ-உற்று என்பதன்விகாரம். திருவருண்மிக்க சிந்தையரென்பதுபோதர 'தண்ணிலாவேணியான்' எனக் கருத்துடையடைபுணர்த்தினார். உனைக்காணிய என்னாது உனதடிகளைக்காணியவென்றது தம்மொழிதாழ்ந்தவசனமாதற்பொருட்டென்க. (௨.௮)

அருள்புரிந் திடுதலு மாதியம் பண்ணவன்
றிருமலர்த் தாள்களைச் சென்னியிற் சூடியே
விரைவுடன் மீண்டுறு வேதன்மா லாதியாஞ்
சுரரெலாம் வம்மெனத் தூயவன் கூவினான்.

இ—ள்: ஆதியம்பண்ணவன் அருள்புரிந்திடுதலும்—ஆதிகடவுளாகியசிவபிரான் இவ்வாறு திருவாய்மலர்ந்தருள, தூயவன்—பரிசுத்தராகிய திருநந்திதேவர், ஆதியம்பண்ணவன் திரு மலர் தாள்களை சென்னியில் சூடி—ஆதிகடவுளாகிய அச்சிவபிரானது அழகிய தாமரைமலர்போலும் பாதங்களைச் சிரமேற்புனைந்து, விரைவுடன் மீண்டு உறு— விரைவாகத்திரும்பிவந்து, வேதன் மால் ஆதி ஆம் சுரர் எலாம் வம் என கூவினான்—பிரமாவிஷ்ணு முதலாகிய தேவர்கள்யாவரும் உள்ளே வருக என்று அழைத்தார் எ—று.

ஆதியம்பண்ணவன்-தாப்பிசை. வம்மின் என்னுமுன்னிலையேவற்பன்மைவினைமுற்று வம்மெனநின்றது. திரு-அழகு; கண்டாரால்விரும்பப்படுந்தன்மை நோக்கமென்றார் பிறரும். (௨௯)

கூவியே யருடலுங் கொண்டல்பே ரொலியினாற்
றாவிலா மகிழ்வுறுஞ் சாதகத் தன்மையாய்ப்
பூவினா யகன்முதற் புகலும்வா னவரெலாந்
தேவதே வன்முனஞ் செல்லுதன் மேயினார்.

இ—ள்: கூவி அருடலும்—இவ்வாறழைத்தருளுதலும், பூவின் நாயகன் முதல் புகலும் வானவர் எலாம்—தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமாமுதலாகச்சொல்லப்படுகின்ற தேவரனைவரும், கொண்டல் பேர் ஒலியினால் தா இலா மகிழ்வு உறும் சாதக தன்மை ஆய்—மேகத்தினது பெருமுழக்கத்தாற் குறைவற்ற உவகையைப்பெறுகின்ற வானம்பாடிப்பறவையினியல்பினராய், தேவதேவன் முனம் செல்லுதல் மேயினார்—தேவாதிதேவராகிய சிவபிரானது திருமுன்னிலையிற் போவாராயினார் எ—று.

வானம்பாடிப்பறவை மேகமுழக்கங்கேட்டமாத்திரத்தே மழைபெய்யுமெனக்கருதி மகிழ்தல்போலத் திருநந்திதேவரழைத்தமாத்திரத்தே சிவனருள்தவறாது கிடைக்குமென்றுதுணிந்து மகிழ்ந்தனரென்க. (௩௰)

அம்மையோர் பங்குற வரியணைக் கண்ணுறு
மெம்மையா ளிறைவன்முன் னெய்தியே யாங்கவன்
செம்மைசேர் தாள்களைச் சென்னியாற் றாழ்ந்தெழீஇப்
பொய்ம்மைதீ ரன்பினா லினையவா போற்றுவார்.

இ—ள்: அம்மை ஓர் பங்கு உற அரியணைக்கண் உறும் எம்மை ஆள் இறைவன் முன் எய்தி—உமாதேவியார் வாமபாகத்திலிருப்பச் சிங்காசனத்தின்கண்ணேவீற்றிருக்கின்ற எங்களை அடிமைக்கொள்ளுகின்ற தலைவராகியசிவபிரானதுசந்நிதானத்திற்போய், ஆங்கவன் செம்மை சேர் தாள்களை சென்னியால் தாழ்ந்து எழீஇ-அப்பெருமானது செப்பம்பொருந்திய பாதங்களைத்தலையாரவணங்கி எழுந்து, பொய்ம்மை தீர் அன்பினால் இனையவா போற்றுவார்—மெய்யன்பினால் இவ்வாறு தோத்திரஞ்செய்வார்கள் எ—று.

அரியணைக்கண்ணுறுமிறைவன் எம்மையாளிறைவன் எனத்தனித்தனியியையும். பொய்ம்மைதீரன்பு பொய்த்தலில்லாதஅன்பு=மெய்யன்பு. (௩௧)

வேறு.

நோக்கினு நுழைகிலை நுவலு கின்றதோர்
வாக்கினு மமைகிலை மதிப்ப வொண்கிலை
நீக்கரு நிலைமையி னிற்றி யெந்தைநீ
யாக்கிய மாயமீ தறிகி லேமரோ.

இ—ள்: நோக்கினும் நுழைகிலை—(தேவரீர் சிறியேங்களது) பார்வைக்குமகப்படுகின்றிலீர், நுவலுகின்றது ஓர் வாக்கினும் அமைகிலை—சொல்லப்படுகின்ற சொல்லிற்கும் அகப்படுகின்றிலீர், மதிப்ப ஒண்கிலை—அனுமானித்தற்கு மகப்படுகின்றிலீர், நீக்க அரும் நிலைமையில் நிற்றி—விலக்குதற்கரிய தன்மையாக (எங்கும்) வியாபித்துநிற்கின்றீர், எந்தை—எம்பெருமானே!, நீ ஆக்கிய மாயம் ஈது அறிகிலேம்— தேவரீருண்டாக்கிய இந்த மாயையை இன்னவாறெனத் (தமியேம்) உணருமாற்றலில்லேம் எ—று.

பிரமாணாதீதராயும் விசுவாந்தர்யாமியாயும் நிற்கின்றீரென்பதாம்.

சிவபிரான் பிரமாணாதீதரென்பதை "நிகழ்சிவம்பராபரஞ்சுருக்குமநித்திய- மெங்கும்பூரணநாசமில்லாதது-நின்மலவனுபவநிகழ்பிரமாணந்-தன்னிலுணர்ந்திடுதற்கரிதானது" எனச் சதாசிவரூபங்கூறுதலானும், விசுவாந்தர்யாமியென்பதை "ஸொஹநாஉஹ

ஙம வ்ருத்தி" [அந்தப்பிரமம் உள்ளினுள்ளாக வியாபித்தது] என்னுஞ் சுருதிவாக்கியத்தானுமுணர்க. சூரியப்பிரகாசம் கண்ணுள்ள சர்வான்மாக்கட்கும் பௌதிகப்பிரபஞ்சத்திலுள்ள பொருளனைத்தையுங்காட்டிநிற்பினுங் கூகைப்புள்ளுக்குத் தோன்றாமைபோல, சிவபிரான் சர்வாந்தர்யாமியாய் நிற்பினும், பெத்தான்மாக்கட்குத் தோன்றப்பெறாதலின் 'எந்தைநீயாங்கியமாயமீதறிகிலேம்' என்றார். இதனை "பொல்லா விருளகற்றுங்கதிர் கூகையென் புட்கண்ணினுக்-கல்லா யிருந்திடு மாறொக்கு மேயறி வோருளத்தில்-வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டா-யெல்லாம் விழிமயக் கேயிறைவாகச்சி யேகம்பனே" என்னும்பட்டணத்தடிகள் திருவாக்கானுமறிக. (நஉ)

> இருமையு மொருமையு மிரண்டு மொன்றிய
> வொருமையு மன்றென வுலகம் யாவையும்
> பெருமையி னியற்றிய பெரும நின்செய
> லருமறை யானவு மறிதற் பாலவோ.

இ—ள்: இருமையும் ஒருமையும் இரண்டும் ஒன்றிய ஒருமையும் அன்று என—பேதமும் அபேதமும் பேதாபேதமுமாகிய முப்பகுப்புமல்லவென்று தருக்கிக்குமாறு நின்று, உலகம் யாவையும் பெருமையின் இயற்றிய பெரும—எல்லாவுலகங்களையும் மேன்மையோடுஞ்சிருட்டித்தகடவுளே!, நின் செயல் அரு மறை ஆனவும் அறிதற்பாலவோ-தேவரீரதுதிருவிளையாடலை அரியனவாகியவேதங்களும் அறியவல்லனவா?(அல்லவே) எ—று.

தேவரீர் உலகத்தோடு பேதமாய்நிற்கின்றீரா? அபேதமாய்நிற்கின்றீரா? பேதாபேதமாய்நிற்கின்றீரா? என ஆசங்கித்துழி அம்மூன்றினியல்புமமைதலால், அவற்றுளொன்றுநிச்சயிக்காது, தேவரீரருளிய வேதங்கடாமே தடுமாறுமாயின், சிறியரேமறிவது எங்ஙனமென்பதாம்.

இருமை-இரண்டாய்நிற்றல். ஒருமை-ஒன்றாய்நிற்றல். இரண்டுமொன்றியவொருமை-முற்கூறிய இருதன்மையுங்கலப்பநிற்றல். இம் மூவகையுட் சிவபிரானமையாதுநிற்றலை "ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை யாருனை யறியகிற் பாரே" எனத் திருவாசகமும், "பொற்பணிபோ லபேதப் பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன வறத்தினால் விளைவதாம்" எனச்சிவப்பிரகாசமுங் கூறுதலானறிக. இயற்றிய என்பதில் உபலக்கணத்தாற் காத்தலாதியவற்றையுமமைக்க. வாளாவிருப்பவே பரிதிமுற்பதுமமலர்தல்போலத்தொழில்கணிகழ்தலின் 'பெருமையினியற்றியபெரும' எனவும், "நாவேதவிந் மனுதே தம் ப்ருஹந்தம்" [வேதத்தையறியாதவன் அந்தப்பிரமத்தையறியான்] என்னுஞ் சுருதிவாக்கியப்படி பதியிலக்கணத்தையுணர்தற்குச்சிறந்தன வேதங்களேயாதலின், வாளாகூறாது, அடையும் உயர்வுசிறப்பும்மையுங்கொடுத்து 'அருமறையானவுமறிதற்பாலவோ' எனவும் கூறினர். (நந)

> உருவொடு தொழில்பெய ரொன்று மின்றியே
> பரவிய நீயவை பரித்து நிற்பது
> விரவிய வுயிர்க்கெலாம் வீடு தந்திடுங்
> கருணைய தேயலாற் கருமம் யாவதே.

இ—ள்: உருவொடு தொழில் பெயர் ஒன்றும் இன்றி பரவிய நீ—உருவமும் முயற்சியும் நாமமுமாகிய இவையொன்றுமில்லாது (எங்கும்) நிறைந்த தேவரீர், அவை பரித்து நிற்பது— அவற்றைக்கொண்டுநிற்பது, விரவிய உயிர்க்கு எலாம் வீடு தந்திடும் கருணையதே அலால்—(உலகத்திற்) பரந்துள்ள ஆன்மாக்களனைத்திற்கும் முத்தியின்பத்

தைக்கொடுக்கின்ற திருவருளேயாமன்றி, கருமம் யாவது—பிறிதுசெயலென்னை? ஒன்றுமின்று) எ—று.

நிட்களராகிய சிவபிரான் சகளரூபங்கொண்டது தமியேங்களையுய்வித்தற்பொருட்டே பிறிதொன்றுக்குமன்றென்பதாம். இதனை "உருவருள் குணங்களோடுமுணர்வரு ளுருவிற் றோன்றுங்-கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்- தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி-யருளுரு வுயிருக் கென்றே யாச்சுவ னமலன் றானே,———ஆரண மாக மங்க ளருளினா லுருவு கொண்டு-கார ண னருளா னாகிற் கதிப்பவ ரில்லை யாகு-நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாஞ்-சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சித்தி யாதே"என்னுஞ்சிவஞானசித்திச்செய்யுட்களானுமுணர்க. கருணையதே என்பதிலேகாரம் தேற்றம். (ருச)

அவ்வுயிர் யாவுநின் னருளி லாவழிச்
செய்வினை புரிகில சிறிது மாதலால்
வெவ்விய நயப்பொடு வெறுப்பி லாதநீ
யெவ்வகை யோவுல கியற்றுந் தன்மையே.

இ—ள்: அ உயிர் யாவும்—அந்த ஆன்மாக்களனைத்தும், நின் அருள் இலாவழி சிறிதும் செய்வினை புரிகில—தேவரீரது அனுக்கிரகமில்லாதபொழுது சற்றாயினுந் தாஞ்செய்யவேண்டிய தொழிலைச் செய்கின்றில, ஆதலால்- ஆதலினால், வெவ்விய நயப்பொடு வெறுப்பு இலாத நீ—கொடிதாகிய விருப்பும் வெறுப்புமில்லாத தேவரீர், உலகு இயற்றும் தன்மை எவ்வகை—உலகத்தை நடாத்துந்தன்மை எப்படி? எ—று.

விருப்புவெறுப்பற்ற தேவரீர்க்குத்தொழிலியற்றலிலிச்சைபிறவாதாதலின், உலகத்தைச் சிருட்டிமுதலிய கிருத்தியங்களால் நடாத்துவதெங்ஙனமென்பதாம். தோன்றியவழி அநுபவித்தன்றியாற்றுதற்கரிய விருப்பென்பார் 'வெவ்வியநயப்பு' என்றார்.(ருரு)

முன்னதின் முன்னென மொழிது மேயெனிற்
பின்னதின் பின்னுமாய் பேச நிற்றியா
லன்னவை யேயெனி லொழிந்த தல்லையோ
வென்னென நின்னையா மேத்து கின்றதே.

இ—ள்: முன்னதின் முன் என மொழிதும் எனில்— முன்னைப்பழம்பொருளவற்றினும்முன்னைப்பழம்பொருளென்றுசொல்வேமேயானால், பின்னதின் பின் ஆ பேசவும் நிற்றி—பின்னைப்புதுப்பொருளவற்றினும் பின்னைப்புதுப்பொருளென்று சொல்லவும் இயைந்துநிற்கின்றீர், அன்னவையே எனில் ஒழிந்தது அல்லையோ—அவ்விரண்டுமொய்த்தானிற்கின்றீரென்பேமாயின் இடையினிடைப்பொருளும் தேவரீரன்றோ, நின்னை யாம் என் என ஏத்துகின்றது—தேவரீரை யாம் எவ்வாறு துதிக்கின்றது? எ—று.

தேவரீர் ஆதி நடு ஈறு என்னுமுக்காலத்துப்பொருளுமாயிருத்தலின் இங்கே காட்டிய வகையுளொன்றாக நிச்சயித்துத் துதிப்பது தகாதென்பதாம். அன்னவையேயென்பதில் ஏகாரம் தேற்றம். (ருசா)

புல்லிய புரம்பொடித் ததுவுங் காமனை
யொல்லென வெரித்தது முனக்குச் சீர்த்தியோ
வெல்லையில் விதிமுத லெனைத்து மீண்டுநின்
னல்லரு ளாணையே நடாத்து மென்கையால்.

இ—ள்: எல்லை இல் விதி முதல் எனைத்தும் ஈண்டு நின் நல் அருள் ஆணையே நடாத்தும் என்கையால்-அளவிறந்த சிருட்டி முதலிய தொழில்களெல்லாவற்றையும் இவ்விடத்துத் தேவரீரது நல்ல திருவருட்சத்தியாகிய ஆஞ்ஞையே நடப்பிக்குமெனக் கூறுதலால், புல்லிய புரம் பொடித்ததுவும் காமனை ஒல்லென எரித்ததும் உனக்கு சீர்த்தியோ-புன்மையுடையனவாகிய முப்புரங்களை நீறாக்கியதும் மன்மதனை விரைவிலெரித்ததுந்தேவரீருக்குக் கீர்த்தியாகுமா? (ஆகாவே) எ—று.

வாளாவிருந்து சிருட்டிமுதலிய கிருத்தியங்களையியற்று நமக்கு, சிரித்தமாத்திரத்தில் முப்புரங்களையும், பார்த்தமாத்திரத்தில் மன்மதனையுமெரித்தமை ஒருபுகழெனவியக்கற்பாலதன்றென்பதாம்.

ஏகாரம் பிரிநிலை. விதிமுதலெனைத்துமீண்டு நின்னல்லருளாணையே நடாத்துமென்பதை "தோற்றுவித்தளித்துப்பின்னுந்துடைத்தருடொழில்கண்மூன்றும்- போற்றவேயுடையனீசன்புகுந்ததுவிகாரமென்னிற்-சாற்றியகதிரோனிற்கத்தாமரையலருங்காந்தங்-காற்றிடுங்கனலைநீருங்காந்திடுங்காசினிக்கே" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுமுணர்க. (௫௭)

எங்களை முன்னரே யியல்பி னீந்தனை
யெங்களை யிவ்வர சியற்று வித்தனை
யெங்களோ டொருவனென் றிருத்தி நின்செய
லெங்களி னறிவரி தென்று போற்றினார்.

இ—ள்: எங்களை முன்னரே இயல்பின் ஈந்தனை—சிறியேங்களைமுற்காலத்திற்றகுதியுடன்படைத்தீர், எங்களை இவ் அரசு இயற்றுவித்தனை—எம்மால் இவ்வரசியலைச் செய்வித்தீர், எங்களொடு ஒருவன் என்று இருத்தி—(அவ்விரண்டுடன்)சிறியேங்களோடு ஒருவராகவுமிருக்கின்றீர், நின் செயல் எங்களின் அறிவு அரிது என்று போற்றினார்—(ஆதலின்) தேவரீரதுசெயல் அடியேங்களாலறிதற்கரியது என்று கூறித்துதித்தார்கள் எ-று.

ஈந்து இயற்றுவித்து இருத்தி என முற்றுக்களைஎச்சமாக்கியியைக்க. எங்களையீந்ததேவரீராற் பிறரையீதல் காத்தன்முதலியன கூடுமாகவும் எமக்கே அத்தொழில்களைத்தந்து இயற்றுவிக்கின்றீர். அங்ஙனமியற்றுந்தேவரீர் எமக்கிறைவராய் நிற்பதன்றி, நம்முடன்றொழிலியற்றுமொருவராக நிற்றல்வேண்டாற்பாற்றன்று, ஆகவும் அவ்வாறுநிற்கின்றீர்; ஆதலின், தேவரீரது திருவிளையாடல்கள் நம்மாலுணர்தற்கரியனவென்று கூறித்துதித்தனரென்க. எங்களை இயற்றுவித்தனை-உருபுமயக்கம். (௫௮)

வேறு.

அவ்வகை யமரரெல்லா மன்புசெய் தேத்து மெல்லை
மைவரு மிடற்றுப் புத்தேண் மற்றவர் வதன நோக்கி
நொவ்வுற லெய்திச் சிந்தை நுணங்கினீர் நுங்கட் கின்னே
யெவ்வர மெனினு மீதும் வேண்டிய திசைத்தி ரென்றான்.

இ—ள்: அவ்வகை அமரர் எல்லாம் அன்புசெய்து ஏத்தும் எல்லை— அவ்வாறு தேவரனைவரும் அன்புகூர்ந்து துதிக்கும்பொழுது, மை வரும் மிடற்று புத்தேள்—நஞ்சார்ந்தகண்டத்தையுடைய சிவபிரான், அவர் வதனம் நோக்கி—அவர்களது முகத்தைப்பார்த்து, நொ உறல் எய்தி சிந்தை நுணங்கினீர்—(தேவிர்காள்!)துன்பம்பொருந்தி மனம்வாடினீர்கள், நுங்கட்கு இன்னே எ வரம் எனினும் ஈதும்-உங்களுக்கிப்பொழுதே எந்தவரத்தையாயினுந்தருவோம், வேண்டியது இசைத்திர் என்றான்— வேண்டியவரத்தைக் கேட்பீர்களாகவென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

நொ- துன்பம். உம்மை உயர்வுசிறப்பு. (௫௯)

என்றலு மமரர் சொல்வார் யாமெலா மிந்நாள் காறும்
வன்றிற லவுணர் தம்மால் வருந்தின மதனை நீங்கி
நன்றிகொ டொல்லை யாக்க நண்ணுவா னாக நின்பா
லொன்றொரு வரம்வேண் டுற்று மதனியல் புரைத்து மன்றே.

இ—ள்: என்றலும் அமரர் சொல்வார்—என்றிவ்வாறு சிவபிரான் திருவாய்மலர்ந்தருளத் தேவர்கள் விண்ணப்பஞ்செய்வார்கள், யாம் எலாம் இ நாள் காறும் வன் திறல் அவுணர்தம்மால் வருந்தினம்—யாமனைவேமும் இத்தினம்வரையும் மிக்கவலிமையினையுடைய அசுரர்களால் வருத்தமுற்றேம், அதனை நீங்கி நன்றிகொள் தொல்லை ஆக்கம் நண்ணுவான் ஆக— அவ்வருத்தத்தைநீங்கி நன்மைமிக்க பழைய செல்வத்தைப்பெறுமாறு, நின் பால் ஒன்றொரு வரம் வேண்டுற்றும்— தேவரீரிடத்து ஒரு வரத்தையிரந்தோம், அதன் இயல்பு உரைத்தும்—அவ்வரத்தினியல்பைவிண்ணப்பஞ்செய்வோம் எ—று.

மும்மையி னுயிர்கள் பெற்ற முகிழ்முலைக் கன்னி யாகு
மம்மையை மணந்த தன்மை யாங்கவ ளிடமா விங்கோர்
செம்மலை யளித்தற் கன்றே தீவினைக் கடற்பட் டுள்ள
வெம்மையா ளுவதற் கேதுக் காட்டிய வியற்கை யல்லால்.

இ—ள்: மும்மையின் உயிர்கள் பெற்ற முகிழ் முலை கன்னி ஆகும் அம்மையை மணந்த தன்மை- மூவகைப்பட்ட ஆன்மாக்களையெல்லாம் பெற்றருளிய அரும்பியதனங்களையுடைய கன்னிகையாகிய பார்ப்பதியாரைத்திருமணஞ்செய்ததன்மையானது, தீவினை கடல் பட்டு உள்ள எம்மை ஆளுவதற்கு ஏது காட்டிய இயற்கை அல்லால்—பாவமாகிய சமுத்திரத்தில் அகப்பட்டுள்ள சிறியேங்களை அடிமைக்கொள்வதற்குக் காரணங்காட்டிய தன்மையேயன்றி, ஆங்கவள் இடமா ஈங்கு ஓர் செம்மலை அளித்தற்கு அன்று—அத்தேவியார்வழியாக இங்கே ஒருபுதல்வரைத் தோற்றுவித்தற்கன்று எ—று.

மும்மையினுயிர்களென்றது விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னுமூவகையினரை. இதனை 'உரைதருமிப்பசுவர்க்கமுணரின்மூன்றாமுயரும்விஞ்ஞானகலர்பிரளயாகலர்சகலர்' என்னுஞ்சிவஞானசித்தித்திருவிருத்தத்தானறிக. அவருள் விஞ்ஞானகலராவார்:—அட்டவித்தியேசுரரும் அணுசதாசிவரும் சத்தகோடி மகாமந்திரர்களும். இவர்கள் ஆணவமலமொன்றையேயுடையவர்கள். பிரளயாகலராவார்:—நூற்றுப்பதினெட்டுருத்திரர்கள். இவர்கள் ஆணவம் கன்மமென்னுமிருமலங்களையுடையவர்கள். சகலராவார்:—பிரமவிஷ்ணுக்கள் முதற்பிபீலிகையீறாகவிருப்பவர்கள். இவர்கள் ஆணவம் கன்மம் மாயையென்னுமும்மலங்களையுமுடையவர்கள். மும்மையினுயிர்களென்பதற்கிவ்வாறன்றி, அவன் அவள் அது எனமூவகைப்படுமுயிரெனக்கூறுவாருமுளர். இத்தகையஆன்மவர்க்கங்களனைத்தையும் உந்தியிற்சுமந்துபெற்றாரல்லராதலின், கன்னிப்பிராயத்தைச் சிறப்பித்தற்கேற்றவடைபுணர்த்தி 'முகிழ்முலைக்கன்னி' என்றார். தேவிபாலுதிப்பிப்பது தமக்குக்கருத்தாகாமையையுணர்த்துவார் 'அம்மையைமணந்ததன்மை-செம்மலையளித்தற்கன்று' என்றார். ()

ஆதியு நடுவு மீறு மருவமு முருவு மொப்பு
மேதுவும் வரவும் போக்கு மின்பமுந் துன்பு மின்றி
வேதமுங் கடந்து நின்ற விமலவோர் குமரன் றன்னை
நீதரல் வேண்டு நின்பா னின்னையே நிகர்க்க வென்றார்.

இ—ள்: ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி—முதலும் இடையும் கடையும் அருபமும் ரூபமும் சமானமும் காரணமும் பிறப்பும் இறப்பும் சுகமும் துக்கமுமாகிய இவைகளொன்றுமின்

றி, வேதமும் கடந்து நின்ற விமல-வேதங்களுக்குமதீதமாய்நின்ற கடவுளே!, நீ—தேவரீர், நின்னையே நிகர்க்க— தேவரீரையேபோலுமாறு, நின்பால் ஓர் குமரன்தன்னை தரல்வேண்டும் என்றார்— தேவரீரிடத்து ஒரு குமாரரைத்தோற்றுவிக்கவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

வேதமுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. ஏகாரம் பிரிநிலை. இன்னகாலத்தே தோன்றினார் இன்னகாலத்தேயழிவர் இன்னகாலத்தை இவ்விரண்டிற்குமிடையாகவுடையர் என வரையறைசெய்தற்கமையாது பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளாய்நிற்றலின் 'ஆதியுநடுவுமீறும்-இன்றி' எனவும், 'எல்லாவுலகமுமானாய்நீயே' என்பதாதிய அருள்வாக்கின்படி விச்சுவரூபியாய் நிற்றலால் அருவப்பொருளன்றெனவும், அங்ஙனம்நின்றவழியும் பாஞானமெய்திய பக்குவிகளுய்த்துணரும்வழி அறிவேமயமாய் அரூபியாய்முடிதலால் உருவப்பொருளன்றெனவுமாசங்கிக்கநிற்றலின் 'அருவமுமுருவும்-இன்றி' எனவும், முற்றறிவுமுதலாகிய இறைமைக்குணங்களனைத்துமொருங்கமைந்தார்பிறரின்மையின் 'ஒப்பு-இன்றி' எனவும், சர்வான்மாக்களையுந்தோற்றுவித்தற்குத் தாமே பரமகாரணராய்த் தமக்கோர் காரணம்வேண்டப்படாதுநிற்றலின் 'ஏது-இன்றி' எனவும், பாசசம்பந்தத்தாலுளதாய பிறப்பிறப்புக்களும் இருவினையனுபவங்களுமின்றி, அநாதியே பாசங்களினீங்கி நித்தியானந்தராய்விளங்குதலின் 'வரவும்போக்குமின்பமுந்துன்புமின்றி' எனவும், இத்தகைய இறைமைக்குணங்களை வேதங்கடாமும் வரையறுத்துக்கூறுதலருமையாதலின் 'வேதமுங்கடந்துநின்றவிமல' எனவும், தேவியார்பாலுதிப்பியாது தேவரீர்பாலுதிப்பித்தருள்கவென்பார் 'நின்பால்-தரல்வேண்டும்' எனவும், தேவரீர்க்குரிய ஆற்றல் அறிவு முதலியவற்றிற் சிறிதுங்குறைவறவென்பார் 'நின்னையேநிகர்க்க' எனவும் கூறினார்.()

வந்திக்கு மலரோ னாதி வானவ ருரைத்தல் கேளாப்
புந்திக்கு ளிடர்செய் யற்க புதல்வனைத் தருது மென்னா
வந்திக்கு நிகர்மெய் யண்ண லருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்.

இ—ள்: அந்திக்கு நிகர் மெய் அண்ணல்— செக்கர்மேகத்தைநிகர்த்த திருமேனியையுடைய சிவபிரான், வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளா—தம்மைத்துதிக்கின்ற பிரமாமுதலிய தேவர்கள் விண்ணப்பஞ்செய்வதைக்கேட்டு, புந்திக்குள் இடர் செய்யற்க புதல்வனை தருதும் என்னா அருள் புரிந்து—(தேவிர்காள்! நீவிர்) மனத்தில் வருத்தங்கொள்ளாதீர்கள் குமாரனைத்தோற்றுவிப்போமென்று அனுக்கிரகித்து, அறிஞர் ஆயோர் சிந்திக்கும் தனது தொல்லை ஆறு திருமுகமும் கொண்டான்- அறிவின்மிக்க பெரியோர்கள் தியானிக்கின்ற தமது பழைய ஆறுதிருவதனங்களையுங் கொண்டருளினார் எ—று.

ஆறுதிருமுகங்களாவன: ஊர்த்துவமுகமாகிய ஈசானமுகமும் நான்குதிக்கினுமுள்ள தற்புருடமுதலிய நான்குமுகங்களும் அதோமுகமுமாம். இதனை "பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்- பாங்குறையு முக்கட் பரஞ்சோதி-யாங்கொருநாள்-வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி- யைந்து முகத்தோ டதோமுகமுந்-தந்து-திருமுகங்களாறாகிச் செந்தழற்கண்ணாறு- மொருமுகமாய்த்தீப்பொறியாறுய்ப்ப" எனவருங் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானறிக. அந்தி ஆகுபெயர். அந்திக்குநிகர் உருபுமயக்கம்.

நிற்புறு மமரர் யாரு நெஞ்சுதுன் னென்ன நீடு
மற்புத நீர ராகி யருண்முறை யுன்னிப் போற்றச்
சிற்பரன் றான்கொண் டுள்ள திருமுக மாறு தன்னிற்
பொற்புறு நுதற்கண் டோறும் பொறிகளோன் றொன்று தந்தான்.

இ—ள்: நிற்புறும் அமரர் யாரும்— திருமுன்னிலையினிற்கின்ற தேவரனைவரும், நெஞ்சு துண்ணென்ன—மனம்நடுங்க, நீடும் அற்புத நீரர் ஆகி அருள்முறை உன்னி போற்ற—மிகுந்த அதிசயத்தையுடையவர்களாய்க் கிருபைத்திறத்தை நினைந்து துதிக்க, சிற்பரன்—ஞானவடிவினராகிய சிவபிரான், தான் கொண்டு உள்ள ஆறு திருமுகம் தன்னில் பொற்பு உறும் நுதற்கண் தோறும்—தாங்கொண்டருளிய ஆறுதிருவதனங்களினும் பொலிகின்ற நெற்றிக்கண்கடோறும், ஒவ்வொன்று புலிங்கம் தந்தான்—ஒவ்வொரு அக்கினிப்பொறிகளைத் தோற்றுவித்தார் எ—று.

அமரர் யாரும் போற்ற என இயையும். (௪௪)

ஆவதோர் காலை யீச னறுமுக நுதற்கண் மாட்டே
மூவிரு பொறிக டோன்றி முளரியான் முதலா வுள்ளோ
ரேவரு மணுகல் செல்லா வெல்லைதீர் வெம்மைத் தாகிப்
பூவுல கண்ட முற்றும் பொள்ளெனப் பராய வன்றே.

இ—ள்: ஆவது ஓர் காலை—அச்சமயத்தில், ஈசன் அறுமுக நுதற்கண் மாட்டு மூவிரு பொறிகள் தோன்றி—சிவபிரானது ஆறுதிருவதனங்களினுமுள்ள நெற்றிக்கண்களில் ஆறு அக்கினிப்பொறிகள் தோன்றி, முளரியான் முதலா உள்ளோர் எவரும் அணுகல்செல்லா எல்லை தீர் வெம்மைத்து ஆகி—பிரமாமுதலாகவுள்ளாரனைவருஞ்சமீபித்தற்கியலாத அளவிறந்த வெப்பத்தையுடையனவாய், பூவுலகு அண்டம் முற்றும் பொள்ளென பராய-பூவுலகத்திலுள்ள அண்டங்களெவற்றினும் விரைவாகப்பரந்தன எ-று.

பொறிகள் வெம்மைத்தாகி-பன்மையொருமைமயக்கம். (௪௫)

மாதண்டங் குலவு நேமீ வால்வளை வயிர வொள்வாள்
கோதண்டம் பரித்தோன் வேதாக் குறித்துணர் வரிய சோதி
வேதண்டம் பரவிற் றென்ன மேதினி சூழ்ந்து விண்போய்
மூதண்டங் காறுஞ் சென்ற முதல்வன்கண் ணுதலிற் செந்தீ.

இ—ள்: மா தண்டம் குலவும் நேமி வால் வளை வயிர ஒள் வாள் கோதண்டம் பரித்தோன்—பெரியதண்டு விளங்குகின்றசக்கரம் வெள்ளியசங்கு வைரித்த ஒளிபொருந்தியவாள் வில் என்னும் பஞ்சாயுதங்களைத்தரித்ததிருமாலும், வேதா—பிரமதேவரும், குறித்து உணர்வரிய சோதி வேதண்டம் பரவிற்று என்ன—தேடியறிதற்கரிதாகிய சோதிமலை (எல்லாவுலகங்களிலும்) பரந்தாற்போல, முதல்வன் கண் நுதலில் செம் தீ—முதல்வராகிய சிவபிரானது நெற்றிக்கண்ணினின்றுந்தோற்றிய சிவந்த அக்கினிப்பொறிகள், மேதினி சூழ்ந்து விண் போய் மூது அண்டம் காறும் சென்ற-பூவுலகமெங்கும்வளைந்து (பின்னர்) ஆகாயவுலகத்திற்சென்று பழைய அண்டகடாகம்வரையும் பரந்தன எ—று.

சோதிமலையின்வரலாற்றை, மேல் தக்ஷகாண்டத்து அடிமுடிதேடுபடலத்திற்காண்க.

வேறு.

மங்கையோர் பங்குடை வள்ள லேந்திய
செங்கன லூழியிற் செறிவ தாமென
வங்கவன் விழிபொழி யனலம் யாவையு
மெங்குள வுலகமு மீண்ட லுற்றவே.

இ—ள்: மங்கை ஓர் பங்கு உடை வள்ளல் ஏந்திய செம் கனல் ஊழியில் செறிவது ஆமென—உமாதேவியை வாமபாகத்திலுடைய சிவபிரான் (திருக்கரத்திற்)றாங்கிய சிவந்த அக்கினியானது ஊழிகாலத்தில் (அனைத்தையுமழிக்குமாறு) பரவுதல்போல, அங்கவன் விழி பொழி அனலம் யாவையும்-அச்சிவபிரானது நுதற்கண்களாலுமிழப்பெற்ற அக்கினிப்பொறியாறும், எங்கு உள உலகமும் ஈண்டல் உற்ற-எல்லாவுலகங்களினும்பரந்தன எ-று.

ஊழியிற்செறிவது சிவபிரான்றிருக்கரத்திலேந்திய அக்கினியேயென்பதை "சாற்றியிடமெங்கியிலேசங்காரம்" என உண்மைவிளக்கமும், தோற்றுபு நின்றவத்தொல்லுலகடங்கலு-மாற்றுவதாரழலமைத்ததோர்கரமே" எனச் சிதம்பர மும்மணிக்கோவையும் கூறுதலானறிக. (௪௭)

ஆங்கனந் தழலெழ வகில முற்றுமா
யோங்கிய கால்களு முலைவுற் றோய்ந்தன
வாங்கிய திரைக்கடல் வறந்த தாயிடைத்
தீங்கனல் வடவையுஞ் செருக்கு நீங்கிற்றால்.

இ—ள்: ஆங்கனம் தழல் எழ—அவ்வாறு அக்கினிபரம்ப, அகிலம் முற்றும் ஆய் ஓங்கிய கால்களும் உலைவுற்று ஓய்ந்தன—உலகமெங்குமாகி நிறைந்தவாயுக்களும் உலைந்து தளர்ந்தன, வாங்கிய திரை கடல் வறந்தது—வளைந்துநிற்கின்ற திரையையுடையசமுத்திரம்வற்றியது, ஆயிடை தீ வடவைக்கனலும் செருக்கு நீங்கிற்று—அச்சமுத்திரத்திலுள்ளகொடிய வடவாமுகாக்கினியுந் தருக்கொழியப்பெற்றது எ—று.

கால்களும் வடவையும் என்பனவற்றில் உம்மைகள் உயர்வுசிறப்பு. வாங்கியகடல் திரைக்கடலெனத் தனித்தனியியையும். அங்ஙனமென்பது சுட்டுநீண்டு எதுகைநோக்கி ஙகரம் வலித்தது. (௪௮)

பக்கன பாரகம் பதலை முற்றுற
நெக்கன பணிகண்மெய் நெளித்து நீங்கிய
திக்கய மரற்றியே தியக்க முற்றன
தொக்கன வுயிர்த்தொகை துளக்க முற்றவே.

இ—ள்: பாரகம் பக்கன—பூமி பிளவுபட்டது, பதலை முற்றுற நெக்கன—மலைகளெல்லாம் வெடித்தன, பணிகள் மெய் நெளித்து நீங்கிய—அட்டமாநாகங்கள் உடலைநெளித்துக்கொண்டு (நின்றநிலையினின்றும்) விலகின, திக்கயம் அரற்றி தியக்கமுற்றன—திக்குயானைகள் புலம்பி வாடின, தொக்கன உயிர்த்தொகை துளக்கம் உற்ற—கூட்டமாகிய ஆன்மவர்க்கங்கள் நடுங்கின எ—று.

பாரகம் பக்கன-ஒருமைபன்மைமயக்கம். பாரகம்-பூமியாகிய இடம். தொக்கன வினைமுற்றுப்பெயரெச்சம். தீயின்வெம்மையாற்றுமையாலிவ்வாறுயினவென்க. (௪௯)

காரண மில்லவன் கண்ணிற் கான்றதீப்
பேரருள் புரிந்திடப் பிறந்த பான்மையா
லோருயிர் தன்னையு மொழிவு செய்தில
வாரையு மெவற்றையு மச்சஞ் செய்தவே.

இ—ள்: காரணம் இல்லவன் கண்ணில் கான்ற தீ—தமக்கோர்காரணமின்றித் (தாமே அனைத்திற்கும் பரமகாரணராய்)நிற்கின்ற சிவபிரான் நெற்றிக்கண்ணினின்றுமுதிப்பித்த அக்கினிப்பொறிகள், பேர் அருள் புரிந்திட பிறந்தபான்மையால்—மிகுந்த கருணையைச்செய்யும்படி தோற்றியதன்மையினால், ஓர் உயிர்தன்னையும் ஒழிவுசெய்தில—ஒரு ஆன்மாவையுங்கொன்றில, ஆரையும் எவற்றையும் அச்சஞ்செய்த— எல்லாவுயர்திணைப்பொருள்களையும் எல்லாவஃறிணைப்பொருள்களையும்பயமுறுத்தின எ—று. (௫௰)

அன்னதன் வெம்மைகண் டமலன் பாங்குறை
கன்னியும் வியர்த்தனள் கலங்கி யேயெழீஇப்
பொன்னடி நூபுரம் புலம்பித் தாக்குறத்
தன்னதோ ருறையுளைச் சார வோடினள்.

இ—ள்: அமலன் பாங்கு உறை கன்னியும் அன்னதன் வெம்மை கண்டு-சிவபிரானது வாமபாகத்தில்வீற்றிருக்கின்ற உமாதேவியாரும் அவ்வக்கினியின் வெப்பத்தைப்பார்த்து, வியர்த்தனள் கலங்கி எழீஇ—மெய்வியர்த்து மனங்கலங்கி எழும்பி, பொன் அடி நூபுரம் புலம்பி தாக்குற—அழகிய பாதங்களிலணிந்த சிலம்புகள் ஒலித்து (ஒன்ருெடொன்று) மோத, தன்னது ஓர் உறையுளை சார ஓடினள்—தமது ஒப்பற்ற கோயிலைச்சேருமாறு ஓடியருளினுர் எ—று.

உம்மை உயர்வுசிறப்பு. பொன்னடி-பொன்போலுமடியெனினுமாம். (ருக)

மூண்டக னுதியா முன்னர் நின்றுள
வண்டர்கள் யாருமவ் வழல்கண் டஞ்சியே
விண்டனர் தலைத்தலை வெருவி யோடினுர்
பண்டெழு விடத்தினுற் பட்ட பான்மைபோல்.

இ—ள்: மூண்டகன் ஆதியா முன்னர் நின்று உள அண்டர்கள் யாரும்— பிரமாமுதலாகச் (சிவபிரானது) திருமுன்னிலையினின்ற தேவர்களனைவரும், அ அழல் கண்டு அஞ்சி-அந்த அக்கினியைப்பார்த்துப்பயந்து, பண்டு எழு விடத்தினுல் பட்ட பான்மைபோல்-முற்காலத் திற்ருேன்றிய நஞ்சினுற்றுயருழந்ததன்மையைப்போலத் (துயருழந்து), தலைத்தலை விண்டனர்-பலவிடங்களினுஞ்சிதறி, வெருவி ஓடினுர்-பயந்து ஓடினுர்கள் எ-று.

விண்டனர் முற்றெச்சம். ஈண்டு, இடமென்னும்பொருளைத்தருந்தலையென்னுஞ் சொல் பன்மைபற்றியிரட்டியது. பட்டபான்மைபோற்பட்டு விண்டோடினரென்க. பண்டென்னுஞ்சொல்லெஞ்சிநின்றது. அமிர்தம்பெறப்புக்குழி விடந்தோன்ற அதனுலலக்கணுற்றதுபோல, குமாரரையுதிப்பிக்கவேண்டியவழித்தீப்பொறிகடோன்ற அலக்கணுற்றதனுல் ‘பண்டொருவிடத்தினுற்பட்டபான்மைபோல்’ என்ருர். (ருஉ)

தீங்கன லடர்தலுஞ் செம்பொற் கோயிலின்
யாங்கணு மாகியே யிரிந்த பண்ணவர்
வீங்கிய வுயிர்ப்பொடு மீண்டு மெந்தைதன்
பாங்கரில் வந்தனர் பரியு நெஞ்சினுர்.

இ—ள்: தீ கனல் அடர்தலும்—வெப்பத்தினையுடைய (அந்த) அக்கினி (எங்கும்)பரவுதலும், செம் பொன் கோயிலின் யாங்கணும் ஆகி இரிந்த பண்ணவர்—செம்பொன்னலாகிய கோயிலில் எவ்விடங்களினுமாகிக் குலைந்தோடியதேவர்கள், வீங்கிய உயிர்ப்பொடு—பெருமூச்சுடன், பரியும் நெஞ்சினுர்—வருந்துகின்றமனத்தையுடையவர்களாய், மீண்டும் எந்தைதன் பாங்கரில் வந்தனர்—பின்பும் எம்பரமபிதாவாகிய சிவபிரானதுபக்கத்தில்வந்தார்கள் எ—று.

தீங்கனல்-மெலித்தல்விகாரம். நெஞ்சினுர்-முற்றெச்சம். (ருங)

வலைத்தலை மானென வன்னி சூழ்ந்துழித்
தலைத்தலை யிரிந்துளோர் தம்மின் மீள்குறு
நலத்தகு கண்ணுத னுதற் சேர்ந்தனர்
கலத்தலை யகன்றிடாக் காகம் போலவே.

இ—ள்: வன்னி சூழ்ந்துழி வலைத்தலை மான் என தலைத்தலை இரிந்துளோர்—அக்கினி தம்மைச்சூழ்ந்துகொண்டபொழுது வலையிலகப்பட்டமானைப்போற் பலவிடங்களினுங்குலைந்தோடிய தேவர்கள், தம்மில் மீள்குறு— தாமாகவே திரும்பிவந்து, கலத்தலை அகன்றிடா காகம் போல-மரக்கலத்தம்பத்தினுச்சியைவிட்டுப்பிரியாத காகத்தைப்போல,

நலத்தகு கண்ணுதல் நாதன் சேர்ந்தனர்-நன்மைமிக்க நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானையணுகினர்கள் எ—று.

மான் வலைச்சூழலைக்கடந்துசெல்லுமாற்றலின்றியலைதல்போலத் தேவரும் அக்கினிப்பொறிச்சூழ்வையகன்று அப்பாற்செல்லுமாற்றலின்றியலைந்தனராதலின் 'வலைத்தலைமானென-இரிந்துளோர்' எனவும், தானிருத்தற்கேற்ற சிறந்த இடம் வேறுவேண்டுமென்றுதேடிச்செல்லுங் கலத்தலைக்காகம் வேறிடங்காணுமையால் மீண்டும் அத்தலையிற்றானேவந்துசேர்தல்போல, தீயின்வெம்மைபடாது நிற்றற்கு வேறிடந்தேடிச்சென்றதேவர்கள் அத்தகைய வேறிடமின்மையாற் பண்டையதானமாகிய சிவசந்நிதானத்தேவந்துசேர்ந்தனராதலின் 'கண்ணுதனுதற்சேர்ந்தனர்கலத்தலையகன்றிடாக்காகம்போல' எனவும் கூறினர். (௫௪)

தோற்றிய நுதல்விழிச் சுடரின் சூழ்வினுக்
காற்றல ராகியே யடைந்த வானவர்
நாற்றடம் புயமுடை ஞான நாயகற்
போற்றிசெய் தினையன புகல்வ தாயினர்.

இ—ள்: நுதல் விழி தோற்றிய சுடரின் சூழ்வினுக்கு ஆற்றலர் ஆகி அடைந்த வானவர்— நெற்றிக்கண்ணினின்றுந்தோற்றிய அக்கினிப்பொறிகள் வளைந்துகொள்ளுதலால் வெம்மைதாங்கப்பெருதவர்களாய்ச் சரண்புகுந்ததேவர்கள், தடம் நால் புயம் உடை ஞானநாயகன் போற்றிசெய்து—விசாலித்த நான்குபுயங்களையுடைய ஞானமுதல்வராகிய சிவபிரானைத்துதித்து, இனையன புகல்வது ஆயினர்— இவ்வாறு விண்ணப்பஞ்செய்யத்தொடங்கினர்கள் எ—று. (௫௫)

வெந்திற லவுணரை வீட்டு தற்கொரு
மைந்தனை யருள்கென வந்து வேண்டினே
மந்தமி லழலைநீ யருடல் செய்தனை
யெந்தையே யெங்ஙனம் யாங்க ளுய்வதே.

இ—ள்: எந்தையே—எம்பெருமானே!, வெம் திறல் அவுணரை வீட்டுதற்கு ஒரு மைந்தனை அருள்க என வந்து வேண்டினேம்—கொடிய வலிமையினையுடைய (சூரபன் மனுதிய) அசுரரைச்சங்கரித்தற்கு ஒரு புத்திரனைத்தருகவென்று வந்து பிரார்த்தித்தோம், நீ அந்தம் இல் அழலை அருடல் செய்தனை-(அதனைத்திருச்செவிசாத்திய) தேவரீர் அளவிறந்த அக்கினியைத்தோற்றுவித்தீர் (ஆதலின்), யாங்கள் உய்வது எங்ஙனம்—யாங்கள் உய்ந்திருப்பது எப்படி? எ—று.

துயரைநீக்குமாறிரப்பத் தேவரீர் மேலுந் துயரைவிளைத்தலால், யாம் உய்திபெறுதலொருவாற்றானுங்கூடாதென்பதாம். வேண்ட அருடல்செய்தனையென, முற்றெச்சமாக்கியும், வெம் அவுணர் திறல் அவுணர் எனத்தனித்தனியுமியைக்க. வெந்திறல்-மிக்கதிறலெனினுமாம். அருள்க என்னும் வியங்கோளீற்றகரந்தொக்கது. (௫௬)

பங்குறை யுமையவள் பாணி யின்வரு
கங்கையெவ் வுலகமுங் கலந்த தாமென
விங்குநின் னுதல்விழி யிருந்து நீங்கிய
பொங்கழ லெங்கணும் பொள்ளென் றீண்டிய.

இ—ள்: பங்கு உறை உமையவள் பாணியின் வரு கங்கை எ உலகமும் கலந்தது ஆமென- தேவரீரது வாமபாகத்தில்வீற்றிருக்கின்ற உமாதேவியாரது திருக்கரத்திற்றோன்றிய கங்கைநதியானது எல்லாவுலகங்களினும்பரந்தாற்போல, இங்கு-இவ்விடத்தில், நின்

நுதல்விழி இருந்தும் நீங்கிய பொங்கு அழல்—தேவீரது நெற்றிக்கண்களினின்றுந்தோன்றிய சொலிக்கின்ற அக்கினிப்பொறிகள், எங்கணும் பொள்ளென்று ஈண்டிய—எவ்விடங்களினும் விரைவாகப்பரந்தன எ—று.

உமாதேவியாரது திருக்கரங்களிற் கங்கைதோன்றியதைத் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற்காண்க. (௫௭)

கற்றையஞ் சுடர்பொழி கனல்க ளின்றொகை
சுற்றியெவ் வுலகமுந் துவன்ற லுற்றவான்
மற்றொரு கணத்தவை மாற்றி டாயெனின்
முற்றுயிர்த் தொகையையு முடிவு செய்யுமால்.

இ—ள்: கற்றையம் சுடர் பொழி கனல்களின் தொகை— கூட்டமாகிய சுவாலையை உமிழுகின்ற அக்கினிப்பொறிக்கூட்டங்கள், எ உலகமும் சுற்றி துவன்றலுற்ற—எல்லாவுலகங்களினுஞ்சூழ்ந்து நெருங்கின, ஒருகணத்து அவை மாற்றிடாய் எனில்—ஒருகணப்பொழுதினுள் அவைகளை விலக்காதொழிவீரேல், முற்று உயிர்த்தொகையையும் முடிவுசெய்யும்—எல்லாஆன்மாக்களையுமழிக்கும் எ—று. (௫௮)

விஞ்சிய பேரழல் வெம்மை யாற்றலா
தஞ்சின மிரிந்தயா மைய நின்னிரு
செஞ்சர ணடைந்தனந் தெரியி னீயலாற்
றஞ்சம துளதுகொ லெம்மைத் தாங்கவே.

இ—ள்: ஐய—பரமபிதாவே!, விஞ்சிய பேர் அழல் வெம்மை ஆற்றலாது அஞ்சினம் இரிந்த யாம்—மிகுந்த பெரிய அக்கினியின்வெப்பத்தைத்தாங்கலாற்றாது பயந்தோடிய நாங்கள், நின் இருசெம் சரண் அடைந்தனம்-தேவீரது சிவந்த இரண்டுபாதங்களையுந் (தஞ்சமென்று) சேர்ந்தோம், தெரியில்—ஆராயுங்கால், நீ அலால்—தேவீரேயன்றி, எம்மை தாங்க தஞ்சமது உளது கொல்—சிறியேங்களைக்காத்தற்கு அடைக்கலம் வேறுண்டா? (இல்லையே) எ—று.

அஞ்சினம் முற்றெச்சம். (௫௯)

மலக்குறு மனத்தினேம் வருத்த முற்றவு
முலக்குற நீக்குநீ யொல்லை யெம்மிடை
யலக்கண தியற்றுதி யாயி னன்னதை
விலக்குறு நீரினர் வேறி யாவரே.

இ—ள்: மலக்கு உறும் மனத்தினேம் வருத்தம் முற்றவும் உலக்குற நீக்கும் நீ—(சூரனாதியர் விளைத்ததுயரால்) வாட்டமுற்ற மனத்தினையுடைய தமியேங்களது துன்பமனைத்தையுங் கெடும்படி அழிக்கவேண்டிய தேவீர், ஒல்லை எம்மிடை அலக்கணது இயற்றுதி ஆயின்—விரைவில் எமக்குத் துன்பத்தைச்செய்வீரேயானால், அன்னதை விலக்குறும் நீரினர் வேறு யாவர்—அதனைநீக்குந் திறமுடையவர் வேறெவர்? (ஒருவருமிலர்) எ—று.

மனத்தினேம் வினையாலணையும்பெயர். எம்மிடை இயற்றுதி-உருபுமயக்கம்.()

நிறைமுடிப் பணிமிசை நிலனும் வானமு
மிறைமுடிக் கின்றவிவ் வெரியை நீக்கியே
பிறைமுடிக் கொண்டிடு பெரும வெம்முடைக்
குறைமுடித் தருளெனக் கூறி வேண்டினர்.

இ—ள்: பிறை முடி கொண்டிடு பெரும—பாலசந்திரனைச் சடைமுடியிலணிந்த பெருமானே!, பணி நிறை முடி மிசை நிலனும் வானமும் இறை முடிக்கின்ற இ எரியை நீக்கி— ஆதிசேடனது நிறைந்த தலைகளின்மேற் பொறுத்துளதாகிய இப்பூவுலகத்தையும் ஆகாயவுலகத்தையும் கணப்பொழுதில் அழிக்கின்ற இந்த அக்கினியை விலக்கி, எம்முடை குறை முடித்தருள் என கூறி வேண்டினர்- எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றியருளுகவென்று சொல்லித்துதித்தார்கள் எ—று.

ஆதிசேடன் ஆயிரஞ்சிரங்களையுடையனாதலால் 'நிறைமுடிப்பணி' எனவும், சூரியனால் விளைந்ததாபத்தையகற்றித் தண்மையைப்புரியும் பிறையைமுடியிற்றரித்திராதலின் இவ்வெம்மையையும்நீக்கியருளுதிரென்னுங் கருத்தொருவாறுதொனிப்ப, அடைபுணர்த்தி 'பிறைமுடிக்கொண்டிடுபெரும' எனவும் கூறினர். (சுக)

அஞ்சலி னவர்புக ழண்ண லாதியோ
ரஞ்சலி செய்திவை யறைந்து வேண்டலு
மஞ்சலி லஞ்சடை யணிந்த நாயக
னஞ்சலி ரென்றுகை யமைத்துக் கூறினன்.

இ—ள்: அஞ்சலினவர் புகழ் அண்ணல் ஆதியோர்-பாஞ்சராத்திரர்களாற் புகழப்படுகின்ற திருமால் முதலிய தேவர்கள், அஞ்சலி செய்து இவை அறைந்து வேண்டலும்-கைகூப்பி இவற்றை விண்ணப்பஞ்செய்துபிரார்த்தித்தலும், அம் சலிலம் சடை அணிந்த நாயகன்—அழகிய கங்கைநதியைச் சடைமுடியிற்றரித்த சிவபிரான் (அதுகண்டு), கை அமைத்து அஞ்சலிர் என்று கூறினன்— அபயகஸ்தங்கொடுத்துப் பயப்படாதீர்களென்று திருவாய்மலர்ந்தருளினர் எ—று.

திருமால் ஐந்திராத்திரியிற் கூறிமுடித்தமையாற் பாஞ்சராத்திரமெனப் பெயர்பெற்ற ஆகமத்தை அநுசரிப்போராதலால் வைணவரை அஞ்சலினவர் என்றது. (சுஉ)

பொன்மலை வில்லினன் புதிதின் வந்திடு
தன்முக மைந்தையுங் கரந்து தாவில்சீர்
நன்முக மொன்றொடு நண்ணி யத்துணைத்
தொன்மையி னியற்கையாய்த் தோன்றி வைகினன்.

இ—ள்: பொன்மலை வில்லினன்— மேருமலையை வில்லாகவுடைய சிவபிரான், அ துணை—அப்பொழுது, புதிதின் வந்திடு தன் முகம் ஐந்தையும் கரந்து— புதிதாகத்தோன்றிய தமது ஐந்துதிருவதனங்களையும் மறைத்து, தா இல் சீர் நல் முகம் ஒன்றொடு நண்ணி-குற்றமற்ற சிறப்பினையுடைய நல்ல ஒருதிருமுகத்துடன் அமைந்து, தொன்மையின் இயற்கை ஆய் தோன்றி வைகினன்—பழைய இயல்போடெழுந்தருளியிருந்தார் எ—று.

வந்திடு முகம் என இயையும். (சுங)

தன்னருணிலைமையாற் சண்முகத்திடை
நன்னுதல் விழிகளி னல்கு தீப்பொறி
யிந்நில வரைப்புவா னீண்ட லுற்றவை
மூன்னுற வரும்வகை முதல்வன் முன்னினன்.

இ—ள்: முதல்வன்—தலைவராகிய சிவபிரான், தன் அருள் நிலைமையால் சண்முகத்திடை நல் நுதல்விழிகளால் நல்கு—தமது காருண்ணியத்தினால் ஆறுதிருமுகங்களினுமுள்ள நல்ல நெற்றிக்கண்களினின்றுந் தோற்றுவித்த, இ நில வரைப்பு வான் ஈண்டலுற்றவை தீப்பொறி—இப்பூவுலகத்திலும் ஆகாயவுலகத்திலும் நெருங்கியுள்ளனவாகிய

அக்கினிப்பொறிகளை, முன்னுற வரும் வகை முன்னினன்—திருமுன்னிலையில் வரும்படி திருவுள்ளம்பற்றினர் எ—று.

முதல்வனல்கியனவும் நிலவரைப்பினும்வானினுமீண்டியனவுமாகியதீப்பொறியெனவினைக்க. (௬௪)

அந்தியம் பெருநிறத் தமல னவ்வகை
சிந்தைகொண் டிடுவழிச் செறிந்த பேரழன்
முந்தையின் வெம்பொறி மூவி ரண்டவாய்
வந்துமுன் குறுகலு மகிழ்ந்து நோக்கினன்.

இ—ள்: அந்தியம் பெரு நிறத்து அமலன் அவ்வகை சிந்தைகொண்டிடுவழி—செக்கர்மேகத்தைப்போன்ற பெருமையார்ந்த நிறத்தினையுடைய சிவபிரான் அவ்வாறு திருவுளம்பற்றியபொழுது, செறிந்த பேர் அழல்—எங்கும் பரவிய பெரிய அக்கினியானது, முந்தையில்—முன்போல, வெம் மூவிரண்ட பொறி ஆய்—கொடிய ஆறு பொறிகளாகி, முன்வந்து குறுகலும்— திருமுன்னிலையில் வந்துசேர்தலும், மகிழ்ந்து நோக்கினன்—மனமுவந்து (அவற்றைத்) திருநோக்கஞ்செய்தார் எ—று.

மூவிரண்டபொறி-ஆறென்னுந்தொகையினையுடையனவாகிய பொறிகள். ()

ஆதகு காலையி லமரர் தங்களு
ளோதகு செயலிலா வுலவைத் தேவையு
மூதகு தீயையு முகத்தை நோக்குறு
மேதகு கருணையால் விமலன் கூறுவான்.

இ—ள்: ஆதகு காலையில்—அத்தகைய சமயத்தில், விமலன்—சிவபிரான், அமரர்தங்களுள்—(அங்குநின்ற) தேவர்களுள், ஓதகு செயல் இலா உலவைத்தேவையும்-ஒயுஞ்செயலில்லாத வாயுதேவனையும், மூதகு தீயையும் முகத்தை நோக்குறு-பழைமைபொருந்திய அக்கினிதேவனையும் பார்த்தருளி, மேதகு கருணையால் கூறுவான்—சிறந்த கிருபையோடும் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

ஓ முதனிலைத்தொழிற்பெயர்; ஒழிதலென்பதுபொருள். இடையறுதலீசுமென்பார் 'ஓதகுசெயலிலா' என்றார். அ தகு என்பது சுட்டுநீண்டியல்பாகி ஆதகுஎனமுடிந்தது.

நீங்களிச் சுடர்களை நெறியிற் றாங்கியே
வீங்குநீர்க் கங்கையில் விடுத்தி ரன்னவை
யாங்கவள் சரவண மமர வுய்க்குமா
லீங்கிது நும்பணி யென்றி யம்பினன்.

இ—ள்: நீங்கள் நெறியில் இ சுடர்களை தாங்கி வீங்கும் நீர் கங்கையில் விடுத்திர்—(தேவிர்காள்!) நீவிரிருவீருமுறைப்படி இப்பொறிகளைச்சுமந்துபோய் மிகுந்த நீரையுடைய கங்கைநதியிலிடுவீராக, ஆங்கவள்—அக்கங்காதேவி, அன்னவை சரவணம் அமர உய்க்கும்—அவற்றைச்சரவணதடாகத்திற்புகும்படி சேர்ப்பாள், ஈங்கிது நும் பணி என்று இயம்பினன்—இது உமக்கு விதித்த ஏவலென்று திருவாய்மலர்ந்தருளினர் எ—று.

முன் வாயுதேவனும் பின் அக்கினிதேவனுமாகச் சுமந்தெனபார் 'நெறியிற்றாங்கி' என்றார். (௬௭)

கூற்றுயி ருண்டதாட் குழக னிவ்வகை
சாற்றிய துணர்தலுந் தாழ்ந்து மும்முறை

போற்றினர் நடுங்கினர் புலம்பு நெஞ்சினர்
காற்றொடு கனலிவை சுழறன் மேயினர்.

இ—ள்: கூற்று உயிர் உண்ட தாள் குழகன் இவ்வகை சாற்றியது— யமனது ஆன்மாவைக்கவர்ந்த பாதங்களையுடைய அழகராகிய சிவபிரான் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளியதை, காற்றொடு கனல் உணர்தலும்—வாயுதேவனும் அக்கினிதேவனுங்கேட்டவுடன், மும்முறை தாழ்ந்து— மூன்று தரம் வணங்கி, போற்றினர்— துதித்து, நடுங்கினர்—மனநடுங்கி, புலம்பும் நெஞ்சினர்—புலம்புகின்ற மனத்தையுடையவர்களாய், இவை சுழறல் மேயினர்—இவற்றை விண்ணப்பஞ்செய்வாராயினர் எ—று.

போற்றினர் நடுங்கினர் நெஞ்சினர் என்பன முற்றெச்சங்கள். புலம்புதல் ஈண்டு வருந்துதல். இப்பொறிகளைச்சிறியேஞ் சுமந்துசெல்வதரிதென்று வருந்தினரென்க. ()

ஒருநொடி யளவையி னுலகம் யாவுமாய்ப்
பெருகிய வித்தழல் பெரும நின்னுடைத்
திருவரு ணிலைமையாற் சிறுகிற் றுதலா
லரிதரி தடியரே மாற்ற லாகுமோ.

இ—ள்: பெரும—பெருமானே!, ஒருநொடி அளவையின் உலகம் யாவும் ஆய் பெருகிய இ தழல்—ஒருகணப்பொழுதினுள் உலகமெங்குமாகிப்பரவிய இவ்வக்கினி, நின்னுடை திருவருள் நிலைமையால் சிறுகிற்று—தேவரீரது திருவருட்டன்மையாற்குறுகியது, ஆதலால்—ஆதலினால், அடியரேம் ஆற்றல் ஆகுமோ-சிறியேங்கள் இதனைச்சுமப்பது கூடுமோ?, அரிது அரிது—அருமை! அருமை!! எ—று. (௬௯)

ஈற்றினை யுலகினுக் கிழைக்கு நின்கணே
தோற்றிய கனலினைச் சுமத்தற் கோர்கண
மாற்றலை யுடையரோ வவனி கேள்வனு
நாற்றிசை முகமுடை நளினத் தேவுமே.

இ—ள்: உலகினுக்கு ஈற்றினை இழைக்கும் நின்கணே தோற்றிய கனலினை ஓர் கணம் சுமத்தற்கு—உலகத்திற்குச் சங்காரகிருத்தியத்தைச்செய்கின்ற தேவரீரிடத்துத் தோற்றிய இவ்வக்கினியை ஒருகணமளவாயினுஞ் சுமப்பதற்கு, அவனி கேள்வனும்—பூமிதேவிக்குநாயகராகிய திருமாலும், நால் திசை முகம் உடை நளின தேவும்—நான்குதிக்குகளினும் முகங்களையுடைய பிரமதேவரும், ஆற்றலை உடையரோ-வலிமையையுடையவர்களா? (அன்று) எ—று.

இழிவுசிறப்பும்மைதொக்கது. (எ0)

பண்டெழு விடத்தினிற் பரந்த தீச்சுடர்
கண்டலு நின்றிலங் கவலுற் றோடினம்
மண்டவும் வெருவுது மவற்றை யாந்தலைக்
கொண்டன மேகுதல் கூடற் பாலதோ.

இ—ள்: பண்டு எழு விடத்தினில் பரந்த தீ சுடர் கண்டலும்- முற்காலத்திற் றோன்றிய நஞ்சைப்போலப்பரவிய அக்கினிப்பொறிகளைக்கண்டவுடன், நின்றிலம் கவலுற்று ஓடினம்—(நின்றநிலையில்) நில்லாது கவலைகூர்ந்து ஓடினோம், அண்டவும் வெருவுதும்—அணுகவும் பயப்படுகின்றோம், அவற்றை யாம் தலைக்கொண்டனம் ஏகுதல் கூடற்பாலதோ—அவைகளையாந்தலைமேற் சுமந்துபோதல் கூடுமோ? (கூடாதே)எ—று.

நின்றிலம் கொண்டனம் என்பன முற்றெச்சங்கள். உம்மை இழிவுசிறப்பு.(எக)

அப்பெருங் கனலினை யடைதற் குன்னினும்
வெப்புறு மெமதுளம் வியர்க்கும் யாக்கையு
மெப்பரி சேந்துவம் யாங்க ளென்றலுந்
துப்புறழ் படர்சடைப் பகவன் சொல்லுவான்.

இ—ள்: அ பெரும் கனலினை அடைதற்கு உன்னினும்—அந்தப்பெரிய அக்கினிப்பொறிகளை அணுகுதற்கு நினைத்தாலும், எமது உளம் வெப்புறும்—எமது மனம்வெதும்பும், யாக்கையும் வியர்க்கும்—சரீரமும் வெயர்வைகொள்ளும், யாங்கள் எப்பரிசு எந்துவம் என்றலும்—யாங்கள் எவ்வாறு சுமப்போமென்றுகூறுதலும், துப்பு உறழ் படர் சடை பகவன் சொல்லுவான்—பவளம்போன்ற பரந்த சடையினையுடைய சிவபிரான் (அவர்களைநோக்கி இவ்வாறு) திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

உம்மையிரண்டனுள், முன்னையது இழிவுசிறப்பு; பின்னையது எச்சம். (எஉ)

ஒன்றொரு நொடியினி லுலக முற்றுமாய்த்
துன்றிய விச்சுடர் சுமந்து கங்கையிற்
சென்றிட நுங்கள்பாற் றிண்மை யெய்துக
வென்றலு நன்றென விசைந்து போற்றினர்.

இ—ள்: ஒன்றொரு நொடியினில் உலகம் முற்றும் ஆய் துன்றிய இ சுடர் சுமந்து கங்கையில் சென்றிட—ஒருநொடிப்பொழுதினுள் உலகமுழுதுமாய்ப்பரந்த இந்த அக்கினிப்பொறிகளைச்சுமந்து கொண்டு கங்காநதியாறுஞ் செல்லுதற்கு, நுங்கள்பால் திண்மை எய்துக என்றலும்— உம்மிடத்து வலிமையுண்டாகுகவென்று திருவாய்மலர்ந்தருளுதலும், நன்றென் இசைந்து போற்றினர்—(அதுகேட்ட வாயுதேவனும் அக்கினிதேவனும்) நன்றென்றுசம்மதித்துத் துதித்தார்கள் எ—று. (எ௩)

மற்றது தெரிதலு மால யன்முதற்
சொற்றிடு மமரர்க ளுக்க நீங்குறு
விற்றது கொல்லலம் தின்ன லின்றெற
வுற்றன ருவகையை யுடலம் விம்மினர்.

இ—ள்: மால் அயன் முதல் சொற்றிடும் அமரர்கள்—திருமாலும் பிரமதேவருமுதலாகச்சொல்லப்படுகின்ற தேவர்கள், அது தெரிதலும்—அந்நிகழ்ச்சியையறிந்தவுடன், துளக்கம் நீங்குறு—நடுக்கம் நீங்கப்பெற்று, எமது இன்னல் இன்று இற்றது எனு—எமதுதுன்பம் இற்றைத்தினத்தில் நீங்கியதென்று, உவகையை உற்றனர்— சந்தோஷம்பொருந்தி, உடலம் விம்மினர்—சரீரம் பூரித்தார்கள் எ—று.

கொல் அசைநிலை. (எ௪)

அங்கன மவர்தமை யாதி நோக்கியித்
தீங்கனல் சரவணஞ் செறிந்தோர் செம்மலா
யோங்குபு சூர்க்கிளைக் கொழிவு செய்யுமா
லீங்கினி யாவரு மேகு வீரென்றான்.

இ—ள்: அங்கனம்—அப்பொழுது, ஆதி அவர்தமை நோக்கி—முதற்கடவுளாகிய சிவபிரான் அத்தேவர்களைப்பார்த்து, இ தீ கனல் சரவணம் செறிந்து— இந்த வெவ்விய அக்கினிப்பொறிகள் சரவணதடாகத்திற்போய், ஓர் செம்மல் ஆய் ஓங்குபு— ஒரு குமாரனுகிவளர்ந்து, சூர் கிளைக்கு ஒழிவு செய்யும்—சூரபன்மனதுசுற்றத்திற்கு அழிவைச்செய்யும், இனி யாவரும் ஏகுவீர் என்றான்— இனி நீவிரனைவீரும் போவீராகவென்று திருவாய்மலர்ந்தருளினர் எ—று. (எ௫)

இறையவ னினையன வியம்ப வுய்ந்தனங்
குறையில மினியெனக் கூறிக் கஞ்சமே
லுறைபவ னாதியா மும்ப ரன்னவ
னறைகழ லடிதொழு தங்க ணீங்கினார்.

இ—ள்: இறையவன் இனையன இயம்ப—சிவபிரான் இவைகளைத் திருவாய்மலர்ந்தருள, கஞ்சம் மேல் உறைபவன் ஆதி ஆம் உம்பர்—தாமரைமலரின்மேல்வீற்றிருக்கின்ற பிரமாமுதலிய தேவர்கள் (அவற்றைக்கேட்டு), இனி குறை இலம் உய்ந்தனம் என கூறி—இனி ஒருகுறையுமில்லாதேமாகி (யாங்களனைவேமும்) உய்திபெற்றேமென்று விண்ணப்பஞ்செய்து, அன்னவன் அறை கழல் அடி தொழுது—அச்சிவபிரானது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த பாதங்களைவணங்கி, அங்கண் நீங்கினார்—அவ்விடத்தினின்று நீங்கினார்கள் எ—று.

இலம்-முற்றெச்சம். உய்ந்தனம் என்றது துணிவுபற்றி வந்த இறந்தகாலம். (௭௬)

முன்னுற மாருதன் முதல்வன் றாள்களை
வன்னியந் தேவொடு வணங்கி யேயெழீஇ
யன்னவ னருளினாற் சுடர்க ளாறையுஞ்
சென்னியின் மேற்கொடு சேறன் மேயினான்.

இ—ள்: மாருதன்—வாயுதேவன், வன்னியம் தேவொடு முதல்வன் தாள்களை வணங்கி எழீஇ—அக்கினிதேவனுடன் முதற்கடவுளாகிய சிவபிரானதுபாதங்களை நமஸ்கரித்தெழுந்து, அன்னவன் அருளினால்—அச்சிவபிரானது அநுக்கிரகத்தினால், சுடர்கள் ஆறையும் சென்னியின்மேல் கொடு—ஆறக்கினிப்பொறிகளையுஞ்சிரமேற்கொண்டு, முன்னுற சேறல் மேயினான்—முந்திப்போவானாயினான் எ—று. (௭௭)

அரனுறு கடிநக ரதனைத் தீர்ந்தோரா
யெரிகெழு சுடர்முடி யேந்தி மாருதன்
வருதலு மயன்முதல் வானு ளோரெலாங்
கருதரு மகிழ்வொடு கண்டு கூறுவார்.

இ—ள்: மாருதன்-வாயுதேவன், எரி கெழு சுடர் முடி ஏந்தி-சுவாலைமிகுந்த அக்கினிப்பொறிகளைச்சிரமேற்றாங்கி, அரன் உறு கடி நகர் அதனை தீர்ந்து ஓராய் வருதலும்-சிவபிரான்வீற்றிருக்கின்ற காவலையுடைய அத்திருக்கோயிலைநீங்கிவெளியேவருதலும், அயன் முதல் வான் உளோர் எலாம் கருதரும் மகிழ்வொடு கண்டு கூறுவார்-பிரமாமுதலிய தேவரனைவரும் நினைத்தற்கரிய சந்தோஷத்துடன்பார்த்து இவ்வாறு கூறுவாராயினார் எ-று.

பெருமகிழ்வென்பார்'கருதருமகிழ்வு'என்றார். தீர்ந்து ஓராய் ஒருபொருண்மொழிகள்.

செந்தழன் மேனியன் றீயின் வண்ணமாத்
தந்தனன் குமரனைத் தனது கண்ணினா
லுய்ந்திட யாமெலா முலகின் முன்னரே
வந்திடு வீரனா மதலை மானவே.

இ—ள்: செந்தழல் மேனியன்-சிவந்த அக்கினியைப்போலுந் திருமேனியையுடைய சிவபிரான், யாம் எலாம் உய்ந்திட-சிறியேங்களனைவேமுமுய்யும்பொருட்டு, முன்னரே உலகின் வந்திடு வீரன் ஆம் மதலை மான—முற்காலத்தில் உலகத்திற்றிருவவதாரஞ்செய்தவீரபத்திரக்கடவுளாகியகுமாரரைப்போல, தனது கண்ணினால்—தமதுநெற்றிக்கண்களினின்றும், தீயின் வண்ணம் ஆ குமரனை தந்தனன்—அக்கினிமயமாகப் புதல்வரைத்தோற்றுவித்தார் எ—று.

கண்ணினால் உய்ந்திட மான் என்பன தனித்தனி தந்தனனென்னுமுற்றோடியைந்தன. சிவபிரான் தம்மைப்போன்றகுமாரரையே தோற்றுவித்தனரென்பார் 'செந்தழன்மேனியன் நீயின்வண்ணமாத்தந்தனன்குமரனை' எனவும், வீரபத்திரக்கடவுள் சிவபிரானது நுதற்கண்ணினின்றும் உக்கிரரூபத்துடனுதித்தனராதலின் 'வீரனுமதலைமான' எனவும் கூறினார். இவரதுவரலவை மேல் தக்ஷகாண்டத்து வீரபத்திரப்படலத்தாலுணர்க. உய்ந்திடயாமெலாமென்பதைத்தாப்பிசையாக்கிப்பின்னுங் கூட்டியுரைப்பினுமாம். (௭௯)

தொன்னிலை யாம்பெறச் சூரன் பாடுற
வின்னமுஞ் சில்பக லிருத்த லாலரன்
றன்னிகர் திருமகன் சரவ ணத்திடை
மன்னுபு குழவியாய் வளர நல்கினான்.

இ—ள்: யாம் தொல் நிலை பெற—சிறியேங்கள் பழைய இயற்கைகளைப்பெற்றுக்கொள்ளவும், சூரன் பாடு உற—சூரபன்மனிறக்கவும், இன்னமும் சில் பகல் இருத்தலால்—இன்னுஞ் சிலதினங்கள்கழியவேண்டியிருத்தலால், அரன்—சிவபிரான், தன் நிகர் திருமகன் சரவணத்திடை மன்னுபு குழவியாய் வளர நல்கினான்—தம்மையேபோன்ற சிறந்தபுதல்வர் சரவணதடாகத்திற்பொருந்திக் குழந்தையாயிருந்துவளரும்படி அருள்செய்தார் எ—று.

நிலை அரசியன்முதலியன. உம்மை எச்சம். பிரிநிலையேகாரந்தொக்கது. சர+வனம்=சரவணம். சரம் நாணற்புல். வனம் காடு. நாணற்புற்செறிந்த வனத்தையுடைய தடாகமென்பதுபொருள். ரகரசம்பந்தநோக்கி வடநூல்விதிப்படி நகரம் ணகரமாயிற்று. மன்னுபு-செய்பு என்னும் வாய்பாட்டுவினையெச்சம். தோற்றியவுடனே சூரனுதியரைச்சங்கரிக்கவல்லகுமாரரென்பார் 'தன்னிகர் திருமகன்' எனவும், அவரை அங்ஙனமுதிப்பியாது, சரவணதடாகத்திற்குழந்தையாய்த்தோன்றிச் சிலகாலம் அங்கிருந்துவளரும்படியருளியது, நமது தீவினையுஞ்சூரனுதியரது வரமுந்தொலையுங் காலவெல்லையைத்தெரிந்தேயென்பார் 'தொன்னிலையாம்பெறச்சூரன்பாடுறவின்னமுஞ்சில்பகலிருத்தலால்- சரவணத்திடைமன்னுபுகுழவியாய்வளரநல்கினான்' எனவும் கூறினார். (௮௰)

போற்றலர் புரமடு புனித நாயக
னாற்றிடு செய்கைக ளருளி னீர்மையா
லேற்றதோர் சான்றிவ ணெரியைத் தந்ததுஞ்
சாற்றருங் கருணையிற் றலைமை யானதே.

இ—ள்: போற்றலர் புரம் அடு புனித நாயகன் ஆற்றிடு செய்கைகள் அருளின் நீர்மை—பகைவரது முப்புரங்களையுமெரித்த பரிசுத்தராகிய சிவபிரான்செய்தருளுந் தொழிலனைத்துந் திருவருட்டிறமேயாம், எற்றது ஓர் சான்று—அதற்குத்தகுந்தசாக்ஷி (யாதெனில்), இவண் எரியை தந்ததும் சாற்றரும் கருணையில் தலைமை ஆனதே— இவ்விடத்தில் அக்கினிப்பொறியையுதிப்பித்ததுஞ் சொல்லுதற்கரிய சிறந்த கிருபையாய்முடிந்தமையேயாம் எ—று.

சிவபிரான் ஆன்மாக்களுக்குத் துன்பஞ்செய்வதும், இன்பந்தருதற்கேயாமென்பதற்கு, அக்கினிப்பொறிகளைத்தோற்றுவித்தமை உலகிற்குய்தியாய்முடிந்தமையே தக்க சான்றாயிற்றென்பதாம். ஏகாரம் தேற்றம். (௮௧)

என்றிவை பற்பல வியம்பி யின்னினிப்
பொன்றின ரவுணர்கள் புலம்பு நங்குறை
நன்றிவண் முடிந்தது நாமு மத்தடஞ்
சென்றிடு வாமெனச் செப்பி னாரரோ.

இ—ள்: என்று இவை பற்பல இயம்பி— என்று இத்தகைய பலபலவார்த்தைகளைக்கூறி, இன்னினி அவுணர்கள் பொன்றினர்— இனி அசுரர்கள் இறந்தார்கள், புலம்பும் நம் குறை நன்று இவண் முடிந்தது— வருந்துகின்ற தமியேங்களது குறை நன்றாக இவ்விடத்தே தீர்ந்தது, நாமும் அ தடம் சென்றிடுவாம் என செப்பினர்—யாங்களும் அந்தச் சரவணதடாகத்திற்போவோமென்று பேசினார்கள் எ—று.

பொன்றினர் முடிந்தது என்பன துணிவுபற்றிய இறந்தகாலம். உம்மை எச்சம். எண்ணியதிற்சிறிதுங் குறைவறமுடிந்ததென்பார் 'நன்றுமுடிந்தது' என்றார். (௮௨)

உருப்பம தாகிய வொளிறு தீஞ்சுடர்
தரிப்பதோர் மருத்துவன் றம்முன் சென்றிடத்
திருப்பயின் மான்முதற் றேவர் வெள்ளியம்
பருப்பத மொருவியே படர்தன் மேயினார்.

இ—ள்: திரு பயில் மால் முதல் தேவர்-திருமகள்(மார்பிற்)பயிலப்பெற்ற விஷ்ணுமூர்த்திமுதலாகிய தேவரனைவரும், உருப்பமது ஆகிய ஒளிறு தீ சுடர் தரிப்பது ஓர் மருத்துவன் தம் முன் சென்றிட— வெப்பத்தினையுடைய பிரகாசிக்கின்ற அக்கினிப்பொறிகளைத்தாங்கிச்செல்லுகின்ற வாயுதேவன் தங்களுக்குமுன்னேசெல்ல, வெள்ளியம் பருப்பதம் ஒருவி படர்தல் மேயினார்-திருக்கைலாசமலையைநீங்கிப் போவாராயினார் எ-று.

அது பகுதிப்பொருள்விகுதி. வாயுதேவன் முன்சென்றமைக்குக்காரணந்தோன்ற 'சுடர்தரிப்பதோர்மருத்துவன்' என்றார். (௮௩)

இறத்தலுங் கன்னலொன் றெரியின் றீஞ்சுடர்
பொறுத்திட லரிதெனப் புலம்பிக் காலினோன்
மறுத்தவிர் பிறைமுடி வரத னாணையாற்
றிறற்படு வன்னிதன் சென்னி சேர்த்தினான்.

இ—ள்: கன்னல் ஒன்று இறத்தலும்—ஒருநாழிகைசென்றவுடன், காலினோன்—வாயுதேவன், எரியின் தீ சுடர் பொறுத்திடல் அரிது என புலம்பி— வெவ்விய அக்கினிப்பொறிகளைச்சுமப்பது கூடாதென்று வருந்தி, மறு தவிர் பிறை முடி வரதன் ஆணையால்—குற்றமற்ற பாலசந்திரனையணிந்த சடைமுடியினையுடைய சிவபிரானதுகட்டளையினால், திறல் படு வன்னிதன் சென்னி சேர்த்தினான்—வலிமைபொருந்திய அக்கினிதேவனது சிரமேற்சுமத்தினான் எ—று.

வரதன்-வரங்களைக்கொடுப்பவன். (௮௪)

சேர்த்தலு மொருபதந் தீயின் பண்ணவன்
வேர்த்துடல் புழுங்குற மெலிவிற் றாங்கியே
பேர்த்தொரு பதமிடப் பெறாது வல்லைபோ
யார்த்திடு கங்கையி னகத்துய்த் தானரோ.

இ—ள்: சேர்த்தலும்-அவ்வாறு சுமத்தியபொழுது, தீயின் பண்ணவன்—அக்கினிதேவன், உடல் வேர்த்து புழுங்குற—சரீரம் வெயர்வையரும்பிப்புழுங்க, மெலிவில் ஒருபதம் தாங்கி—வருத்தத்தோடு ஒருநாழிகையளவுஞ் சுமந்து, பேர்த்து ஒரு பதம் இட பெறாது— மீட்டு ஒரு கால்தூக்கிவைக்கவும் இயலாமல், வல்லைபோய்—விரைந்து சென்று, ஆர்த்திடு கங்கையின் அகத்து உய்த்தான்— ஒலிக்கின்ற கங்கைநதியிலிட்டான் எ—று.

தன்னாற்சுமந்துகொள்வது கூடாதாயினும் கங்கைநதியையணுகும்வரையும் ஒருவாறு சுமந்துசெல்லவேண்டுமென்றுகருதி விரைந்துசென்றானதலின் 'வல்லைபோய்' என

வும், அங்ஙனஞ்சென்றபின்னர் ஓரடிதானுந்தூக்கிவைத்தற்கேலாத பெருஞ்சிரமமுடைய ளாயினளென்பார் 'பேர்த்தொருபதமிடப்பெறாது' எனவும் கூறினார். இடவுமென்பதிலி ழிவுசிறப்பும்மைதொக்கது. (அரு)

கூர்சுடர்ப் பண்ணவன் கொடுவந் துய்த்திடு
மார்சுடர்த் தொகுதிவந் தடைய மூவெயி
லூர்சுடச் சிவந்தகண் ணொருவன் றுப்புறழ்
வார்சடைக் கரந்தென வறந்த கங்கைநீர்.

இ—ள்: கூர் சுடர் பண்ணவன் கொடுவந்து உய்த்திடும் ஆர் சுடர் தொகுதி வந்து அடைய—மிகுந்த ஒளியினையுடைய அக்கினிதேவன்கொண்டுவந்திட்ட நிறைந்த பொறிக்கூட்டங்கள்வந்துசேர, மூ எயில் ஊர் சுட சிவந்த கண் ஒருவன் துப்பு உறழ் வார் சடை கரந்து என—முப்புரங்களை எரிக்கும்பொருட்டுச் சிவந்த கண்ணினையுடைய ஒப்பற்றசிவபிரானது பவளம்போன்ற நீண்டசடையில் (முற்காலத்தில்) மறைந்தாற்போல, கங்கைநீர்வறந்த—கங்காநதிவற்றியது எ—று.

எயில் ஊர் ஒரு பொருண்மொழிகள். கண்சிவத்தல்கோபக்குறியாதலின் 'மூவெயிலூர்சுடச்சிவந்தகண்' என்றார். "சூரன்மாயச்சிறிதுகடைக்கண்சிவந்தசேவகன்" என்றார் பிரமோத்தரகாண்டத்தாரும். சிவந்தசடையென்பார் 'துப்புறழ்-சடை' என்றார். பொறிக்குச்சடையுபமானமென்க. சடைக்கரந்த சரித்திரமுன்னருரைக்கப்பட்டது. (அசு)

அரனருண் முறையினை யறிந்து கங்கைதன்
சிரமிசை யேந்தியே சென்றோர் கன்னலிற்
சரவண மெனுந்தடந் தன்னிற் சேர்த்தனண்
மரையித ழாயிடை மல்குற் றாலென.

இ—ள்: கங்கை-கங்காதேவி, அரன் அருள் முறையினை அறிந்து-சிவபிரானருள் செய்த முறைமையையுணர்ந்து, தன் சிரமிசை ஏந்தி ஓர் கன்னலில் சென்று-தனது சிரசின்மேற்றாங்கி ஒருநாழிகையளவிற்போய், மரை இதழ் ஆயிடை மல்குற்றால் என-தாமரைமலரினிதழ்கள் அத்தடாகத்தே செறிந்தாற்போலிருக்கும்படி, சரவணம் எனும் தடம் தன்னில் சேர்த்தனள்-சரவணமென்னும்பெயரையுடையதடாகத்திற்புகுவித்தாள் எ-று.

அரனருண்முறையென்றது கங்கை-சரவணத்திற்சேர்ப்பளெனச் சிவபிரான் வாயுதேவனுக்கும் அக்கினிதேவனுக்குங்கூறியதை. மரை முதற்குறை. (அஎ)

ஆவயின் காறும்வந் தரிய யன்முதற்
றேவர்க ளுவகையாற் றெரிந்து சூழ்ந்தனர்
மேவர வணியதாம் விளைவு நாடியே
காவல்கொ ணிரப்புடைக் காத லோரென.

இ—ள்: அரி அயன் முதல் தேவர்கள்—விஷ்ணுமூர்த்தி பிரமாமுதலியதேவர்கள், ஆவயின்காறும் வந்து—அவ்விடம்வரையும்வந்து, உவகையால் தெரிந்து—(அந்நிகழ்ச்சிகளை) மகிழ்வோடுங்கண்டு, மேவர அணியது ஆம் விளைவு நாடி காவல்கொள் நிரப்பு உடை காதலோர் என- பயன்பெறுதற்குக் காலநெருங்கப்பெற்ற விளைவின்பருவத்தைநோக்கிக் காவல்செய்கின்ற வறுமையினையுடைய பேராசையாளர்போல, சூழ்ந்தனர்—வளைந்து காத்தார்கள் எ—று.

நிரப்பு-வறுமை. காதல்-பேராசை. (அஅ)

ஆரணன் விண்ணக மச்சு தன்புவி
வாரணன் முதலிய மாதி ரத்துளோ

ரோண வமரர்க ளெண்டிக் காகியே
சீரணி சரவணஞ் சேர்ந்து போற்றினார்.

இ—ள்: ஆரணன் விண்ணகம்—பிரமதேவர் ஆகாயத்தினும், அச்சுதன் புவி—விஷ்ணுமூர்த்தி பூமியினும், வாரணன் முதலிய மாதிரத்து உளோர்—இந்திரன்முதலிய திக்குப்பாலகர்களும், எர் அணவு அமரர்கள்— அழகுபொருந்திய (ஏனைத்) தேவர்களும், எண் திக்கு ஆகி—எட்டுத்திக்குகளினுமாகி, சீர் அணி சரவணம் சேர்ந்து போற்றினார்—சிறப்புப்பொருந்திய சரவணதடாகத்திற்பொருந்தியிருந்து •காவல்செய்தார்கள் எ—று.

வாரணன்-வாரணத்தையூர்தியாகவுடையவன். வாரணம் ஐராவதயானை. (௮௯)

வேறு.

கங்கையு மொல்கப் புக்க கடுங்கனற் கடவுட் சோதி
யங்கிரு மூன்று முன்ன ரம்மைவா ழிமையச் சாரற்
றங்கிய கமலம் பூத்த சரவணம் புகலு முக்கட்
புங்கவ னருளாற் றொன்மை போன்றது வறத்த லின்றி.

இ—ள்: கங்கையும் ஒல்க புக்க கடும் கடவுள் கனல் சோதி இருமூன்றும்-கங்கைநதியும் வற்றும்படி வந்த கடுமையாகிய தெய்வீகமமைந்த அக்கினிப்பொறிகளாறும், முன்னர் அம்மை வாழ் இமைய சாரல் தங்கிய கமலம் பூத்த சரவணம் புகலும்—முன்னரே பார்ப்பதிதேவியார் வாழ்ந்திருந்த இமையமலைச்சாரலிற் பொருந்திய தாமரைமலர்களலர்ப்பெற்ற சரவணதடாகத்திற்சேர்தலும், முக்கண் புங்கவன் அருளால்—மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரானது கிருபையினால், வறத்தல் இன்றி தொன்மை போன்றது—(அக்கங்கைநதியானது) வற்றுதலின்றிப்பழைமைபோலப்பெருகியது எ—று.

அங்கு-அசைநிலை, முன்னைய உம்மை உயர்வுசிறப்பு. (௯௰)

விண்ணிடை யிழிந்த காலின் மேவரு கனலிற் றோன்றும்
வண்ணவொண் கமலஞ் செய்ய முளரியை மாற தாகத்
தண்ணளி யோடு நல்கித் தரித்தெனச் சரவ ணப்பேர்க்
கண்ணகன் பொய்கை யீசன் கட்ட ழன் மிசைக் கொண் டன்றே.

இ—ள்: விண்ணிடை இழிந்த காலில் மேவரு கனலில் தோன்றும் வண்ண ஒண் கமலம்—ஆகாயத்தினின்றுதித்த காற்றினின்றுந்தோன்றிய அக்கினியிலுற்பவித்தஅழகிய ஒளிபொருந்திய நீரானது, மாறது ஆக—தோற்றமுறைக்கு விபரீதமாக, செய்ய முளரியை தண்ணளியோடு நல்கி தரித்து என—சிவந்த அக்கினியை இரக்கத்தினுடன்றோற்றுவித்துச்சுமந்துகொண்டாற்போல, கண் அகன் சரவண பேர் பொய்கை—இடமகன்ற சரவணமென்னும் பெயரினையுடைய தடாகம், ஈசன் கட்டழல் மிசை கொண்டன்று—சிவபிரானருளியபேரழலை மேலேதரித்துளது எ—று.

ஈண்டு, கமலம் நீர்; முளரி அக்கினி; தத்துவங்கடோன்றும்பொழுது, ஆகாசதத்துவத்தினின்றும் வாயுதத்துவமும், வாயுதத்துவத்தினின்றுந் தேயுதத்துவமும், தேயுதத்துவத்தினின்றும் அப்புதத்துவமுந் தோன்றுதலியல்பாதலின் 'விண்ணிடையிழிந்தகாலின்மேவருகனலிற்றோன்றும்வண்ணவொண்கமலம்' என்றார். மாறென்றது தன்றோற்றத்துக்கு முதலாயிருக்கின்ற அக்கினியைத்தான்றோற்றுவித்தலை. அங்ஙனந்தோற்றுவித்துத்தரித்தவழி அவ்வக்கினி தன்னாலழிவுபடாதவாறென்பார் 'தண்ணளியோடு' என்றார். கடு—அழல்=கட்டழல் கடுமையாகிய அக்கினி. கண் தழல் *எனச்சொல்வகுத்துக் கண்ணினின்றுந்தோன்றிய அக்கினியெனினுமாம். (௯௧)

அருவமு முருவு மாகி யனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்

கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

இ—ள் அருவமும் உருவும் ஆகி—அரூபமும் ரூபமுமாகியும், அநாதி ஆய்—தமக்கோர் முதலற்றதாகியும், பல ஆய்—பலபொருளாகியும், ஒன்றாய்-ஒருபொருளாகியும், பிரமம் ஆய் நின்ற சோதி பிழம்பது ஓர் மேனி ஆக—பிரமமென்னும் பெயர்த்தாகியநின்ற சோதிப்பிழம்பே ஒரு திருமேனியாக, கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு—கிருபைமிக்க ஆறுதிருமுகங்களையும் பன்னிரண்டு திருக்கரங்களையுங்கொண்டு, உலகம் உய்ய-உலகத்தார் உய்யும்படி, ஆங்கு ஒரு திரு முருகன் வந்து உதித்தனன்—அவ்விடத்து ஒரு சிறந்தகுமாரர் வந்து தோற்றியருளினார் எ—று.

சிவபிரான் மெய்ஞ்ஞானியர்களாலருவமாகவும் ஏனையோரானுருவமாகவும்பாவிக்கப்படுதலின் 'அருவமுமுருவுமாகி' எனவும், எல்லாத்தத்துவங்களுந்தம்மிற்றோன்றத் தாம் அவற்றிற்குமுதலாகித்தனக்குமுதல் பிறிதொன்றிலதாய் நிற்றலின் 'அநாதியாய்' எனவும், "ஏகம்ஸத்விப்ரா பஹுதா வதந்தி" [ஒருகடவுளையே அறிஞர் பலவாகக்கூறுகின்றார்கள்] என்றபடி பலபொருளாய்நிற்றலின் 'பலவாய்' எனவும், "ஏக ஏவ ருத்ர:" [சிவபிரான் ஒருவரே] என்றபடி ஒன்றாய்நிற்றலின் 'ஒன்றாய்' எனவும், "நிரஸ்தஸமஸ்தோபப்லவஸ்ய நிரதிசயஜ்ஞாநாநந்தாதி ஸக்திவிசிஷ்டஸ்யைவ ப்ரஹ்மத்வம்" [எல்லாத்துயர்களையும் மலங்களையும் நீங்கி மிகமேலாகிய ஞானம் ஆநந்தம் முதலிய சத்திமகிமைகளை மிகுதியாகவுடைமையே பிரமத்துவமாம்.] எனப்பிரமசூத்திர பாஷ்யகர்த்தராகிய ஸ்ரீகண்டசிவாசாரியருரைத்த இலக்கணத்தையுடையவென்பார் 'பிரமமாய்நின்ற' எனவும், "ஸூர்யேண ரஹிதோ யத்வத் லோகஸ் தமோமய:। ஸிவேந ரஹிதஸ் தத்வல்லோகஸ் தமோமய:" [சூரியனில்லாதவழி உலகம் இருளாதல்போலச் சிவமில்லாதவழியும் இவ்வுலகம்இருண்மயமாம்] எனப்புராணங்கள் கூறுதலின் 'சோதிப்பிழம்பு' எனவும், அப்பிழம்பு ஐந்து திருமுகங்களும் பத்துத்திருக்கைகளுமமையச் சிவரூபமாயிருப்பதுபோலவே ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டுதிருக்கைகளுமமையக்குமாரரூபமாய்த்தோன்றியதென்பார் 'சோதிப்பிழம்பதோர்மேனியாகக்-கருணைகூர் முகங்களாறுங்கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே-யொருதிருமுருகன்வந்தாங்குதித்தனன்' எனவும் கூறினார். சிவபிரானே குமாரக்கடவுளாயினரென்பதை "செம்மைய ஞானசத்தித் திருவுருக் கொண்டசெம்ம-லெம்மின் வேறல்லன் யாமு மவனின்வே றல்லேங் கண்டாய்" எனவும், "உருவம்வே றன்றி யைந்து முகனறு முகனென் றேதுந்-திருவுரு விரண்டன் மாட்டுஞ் சிவமெனும் யாமே மன்ற-பொருவிலா ருயிராய் நிற்பேம்" எனவும் தணிகைப்புராணங்கூறுதலானறிக. உலகம் ஆகுபெயர். (கஉ)

தோன்றல்வந் திடலும் விண்பாற் றுந்துபி கறங்க லுற்ற
வான்றதொன் மறைக ளெல்லா மார்த்தன வயனு மாலும்
வான்றிகழ் மகத்தின் றேவு முனிவரு மலர்க டூவி
யேன்றெனை யருளு கென்றே யெத்திசை யெடுத்துச் சூழ்ந்தார்.

இ—ள்: தோன்றல் வந்திடலும்-இவ்வாறு குமாரக்கடவுள் திருவவதாரஞ்செய்தலும், விண்பால் துந்துபி கறங்கலுற்ற—தேவதுந்துபிகள் முழங்கின, ஆன்ற தொல் மறைகள் எல்லாம் ஆர்த்தன—சிறந்த பழையவேதங்களெல்லாம் ஆரவாரித்தன, அயனும் மாலும் வான் திகழ் மகத்தின் தேவும் முனிவரும்—பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் [illegible]

வி என்று—புஷ்பாஞ்சலிசெய்துநின்று, எமை அருளுக என்று எத்திசை எடுத்து சூழ்ந்தார்— எம்மைக்காத்தருள்கவென்று துதிசெய்து வளைந்தார்கள் எ—று.

எலுதல்-பொருந்துதல் = நிற்றல். (கூரு)

ஏவர்தம் பாலு மின்றி யெல்லைதீ ரமலற் குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகு மைய
னாவிக ளருளு மாற்று லறுமுகங் கொண்டா னன்றே.

இ—ள்: ஏவர்தம் பாலும் இன்றி எல்லை தீர் அமலற்கு உள்ள மூவிரு குணனும்—மற்றெவரிடத்திலுமில்லாமற் பிரமாணதீதராகிய சிவபிரானிடத்துமாத்திரமமைந்துள்ள ஆறு குணங்களும், சேய்க்கு முகங்கள் ஆய் வந்தது என்ன—குமாரக்கடவுளுக்கு ஆறுமுகங்களாகப் பொருந்தினாற்போல, பூ இயல் தண் சரவண பொய்கையில் வைகும் ஐயன்—மலர்கள்பொருந்திய குளிர்ந்த சரவணதடாகத்தில்வீற்றிருக்கின்ற குமாரக்கடவுள், ஆவிகள் அருளும் ஆற்றால் அறுமுகம் கொண்டான்—ஆன்மாக்களை ரக்ஷிக்கும்பொருட்டு ஆறு திருமுகங்களைக்கொண்டவதரித்தார் எ—று.

ஏவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்குள்ளமூவிருகுணனுஞ்சேய்க்குமுகங்களாய்வந்ததென்ன-அறுமுகங்கொண்டானெனவே, இவ்வாறு குணங்களையும் பிறர்க்குச்சார்த்திக்கூறுதறவறுமென்பதும், குமாரக்கடவுளுக்குச் சார்த்திக்கூறுதறவறுகாதென்பதும்பெற்றும். ஆறுகுணங்கள் யாவையென்பது முன்னர்க்கடவுள்வாழ்த்தின் மூன்றாஞ்செய்யுளினுரைக்கப்பட்டது. (கூச)

மல்லலம் புவனத் துள்ள மன்னுயிர்க் கணங்கட் கெல்லா
மொல்லையின் மகிழ்ச்சி யெய்தி யுவகையின் குறிப்புண் டான
தொல்லையி லவுண னாகுஞ் சூரனே முதலா வுள்ள
வெல்லவர் தமக்கு மாயு மிருங்குறிப் புற்ற வந்நாள்.

இ—ள்: மல்லலம் புவனத்து உள்ள மன் உயிர் கணங்கட்கு எல்லாம்—வளப்பம்பொருந்திய உலகத்திலுள்ள நிலைபெற்ற ஆன்மவர்க்கங்களனைத்திற்கும், ஒல்லையில் மகிழ்ச்சி எய்தி உவகையின் குறிப்பு உண்டான—விரைவில் மகிழ்ச்சிதோன்றிச் சந்தோஷநிமித்தங்களுண்டாயின, தொல்லையில் அவுணன் ஆகும் சூரன் முதலா உள்ள எல்லவர் தமக்கும்—பழமைபொருந்திய அசுரனாகிய சூரபன்மன்முதலாகவுள்ள அனைவர்க்கும், அந்நாள்—அத்தினத்தில், மாயும் இரும் குறிப்பு உற்ற—இறத்தற்கேற்ற பெரிய நிமித்தங்களுண்டாயின எ—று.

உவகையின்குறிப்பு- நன்னிமித்தம்; அவையாவன:-வலத்தோள்துடித்தன்முதலியன. மாயுங்குறிப்பு-துன்னிமித்தம்; அவையாவன:-இடத்தோள்துடித்தன்முதலியன.

மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தினு லளக்கொ ணுமை
னிறைவுடன் யாண்டு மாகி நின்றிடு நிமல மூர்த்தி
யறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே.

இ—ள்: மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்—வேதாந்தத்தினாலும்வாக்கினாலும் மனத்தினாலும் அளவிடுதற்கரிதமாகி, நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடும் நிமல மூர்த்தி-வியாபகத்துடன் எங்குமாய்நின்ற நிருமலராகிய சிவபிரான், அறுமுக உருவாய் தோன்றி-ஆறுமுகத்திருவுருவங்கொண்டெழுந்தருளி, அருளொடு-கிருபையினுடன், சரவணத்தின் வெறி கமழ் கமலப்போதின் வீற்றிருந்தருளினான்-சரவணதடாகத்திலுள்ள வாசனைகமழுகின்ற தாமரைமலரில் வீற்றிருந்தருளினார் எ-று.()

பாங்குறு தருச்சூழ் காலாப் பஃறழைச் சினைமென் கொம்பர்
நீங்கறப் புடைபோய் வானி னிரந்தன பந்த ராகத்
தூங்கிய பழனுங் காயுந் துணர்களு மகத்துட் டுன்ன
வாங்கத னடுவட் பொய்கை யணிநிழ லமர்ந்தா னையன்.

இ—ள்: பாங்கு உறு தரு சூழ் கால் ஆ—(அப்பொய்கையின்)பக்கங்களிற்பொருந்திய மரங்கள் சூழநாட்டியதூண்களாகவும், வானில் நீங்கு அற புடை போய் நிரந்தன சினை பல் தழை மென் கொம்பர் பந்தர் ஆக—ஆகாயத்தில் இடைவெளியின்றியெதிரோக்கிநீண்டு நிரம்பியிருக்கின்ற கிளைகளிலுள்ள பல தழைகளையுடைய மெல்லிய கொம்புகள் பந்தராகவுமமைய, தூங்கிய பழனும் காயும் துணர்களும் அகத்துள் துன்ன— தூங்குகின்ற பழங்களும் காய்களும் பூங்கொத்துகளும் (அப்பந்தரை அலங்கரிப்பனவாய்) உள்ளேபொருந்த, ஐயன்—குமாரக்கடவுள், ஆங்கதன் நடுவண்-அப்பந்தரினடுவே, பொய்கை அணி நிழல் அமர்ந்தான்—சரவணதடாகத்திலுள்ள அழகிய நிழலிலவீற்றிருந்தார் எ—று.

பாங்கென்றது கரையை. சூழ்கால் என்றமையால் வட்டவடிவான பந்தரென்பதுபெற்றும். நீங்கு முதனிலைத்தொழிற்பெயர். பந்தர் பழன் என்பன மொழியீற்றுப்போலி. கரையினிற்கின்ற மரங்கள் தடாகத்தின் மேல்வெளிமுற்றினும்பரக்குமாறு கிளைகளைப்பரப்பியிருக்க, அக்கிளைகளிலுள்ள கொம்பர்கள் இடைவெளிநீங்குமாறு பலதழைகளைப்பரப்பி, பழங்களுங் காய்களும் பூங்கொத்துகளும்உள்ளேதூங்க அமைதலின், பந்தர்போன்றதென்க. (௬எ)

முடிபொறு தசையு நாகர் முதியகால் பலகை வையந்
தொடர்கரை மரனே வானந் தூங்குபன் னாணந் தெண்ணீர்த்
தடமலர் பாய லாகச் சரவண மஞ்ச மீதி
னடைதரு மைந்தன் மென்கா லசைப்பவீற் றிருந்தா னன்றே.

இ—ள்: முடி பொறுது அசையும் நாகர் முதிய கால் (ஆக)— பாரஞ்சுமத்தலாற்றாமையாலசையப்பெறுகின்ற சர்ப்பங்கள் பழையகால்களாகவும், வையம் பலகை (ஆக)— பூமி பலகையாகவும், கரை தொடர் மரனே வானம் தூங்கு பல் நாணம் (ஆக)—கரையின்கண்ணே நிரைபட்டுநிற்கின்றமரங்களே ஆகாயத்திற்றூங்குகின்ற பல கயிறுகளாகவும், தெள் நீர் தட மலர் பாயல் ஆக—தெளிந்த நீர்பொருந்திய தடாகத்திலுள்ள தாமரைமலர் சயனமாகவும், சரவண மஞ்சம் மீதின் அடைதரும் மைந்தன்—(இங்ஙனமேயமைந்த) சரவணப்பொய்கையாகிய மஞ்சத்திலெழுந்தருளிய குமாரக்கடவுள், மென் கால் அசைப்ப வீற்றிருந்தான்—இளந்தென்றற்காற்றசைக்க வீற்றிருந்தருளினார் எ—று.

முடிபொறாமை- தலையினாற்சுமத்தற்கியலாமை. மரன் மொழியீற்றுப்போலி. ஏகாரம் தேற்றம். நாணமென்பதில் அம் பகுதிப்பொருள்விகுதி. அட்டமாநாகங்களும் ஆதிசேடனும் தண்டாகிருதியாகப் பூமியின்கீழ்நிற்பனவாதலின் அவற்றைக்கால்களாகவும், அவற்றின்றலைமேற்பொறுத்துள்ளதாதலிற் பூமியைப்பலகையாகவும், அப்பூமியினடுவணதாகிய சரவணப்பொய்கையின்மலர்ந்திருத்தலின் தாமரைமலரைச் சயனமாகவும், அணுகியும்அகன்றுமின்றி ஒன்றோடொன்றொத்ததூரத்தினவாய்க் கரையினிற்றலின் மரங்களை ஊஞ்சற்கயிறுகவும், அவற்றையசைத்தலின் இளந்தென்றலை ஊஞ்சலாட்டுவோராகவும் வருணித்துக்கூறினர். பலகையுங்காலும் அசைதற்கேதுத்தோன்ற 'முடிபொறுதசையுநாகர்'என்றார். (௬அ)

எண்பெரு நாகர் சேட னேந்தெழி லரிமா னாகத்
தண்பொலி புனற்பூம் பொய்கை தவிசுரு வாக நாள்கோள்
விண்படர் விதான மாக வேலையந் தலைவன் காலை
யொண்பக லாடி காட்ட வுமைமக னங்க னுற்றான்.

இ—ள்: எண் பெரும் நாகர் சேடன் ஏந்து எழில் அரிமான் ஆக—அட்டமாநாகங்களும் ஆதிசேடனும் சுமக்கின்ற அழகிய சிங்கங்களாகவும், தண்பொலி புனல் பூம் பொய்கை தவிசு உரு ஆக—குளிர்ச்சிமிகுந்த நீரினையுடைய மலர்த்தடாகம் ஆசனமாகவும், நாள் கோள் விண் படர் விதானம் ஆக— நட்சத்திரங்களுங் கிரகங்களும் மேலேகட்டிய விதானமாகவும் (அமைய), வேலையம் தலைவன் சாலை ஒண் பகல் ஆடி காட்ட-சமுத்திரராஜனாகிய வருணன் காலையிலே ஒளிபொருந்திய சூரியனாகியகண்ணாடியைக்காட்ட, உமை மகன் அங்கண் உற்றான்—உமாதேவியாரது திருக்குமாரராகிய முருகக்கடவுள் அத்தடாகத்தில் வீற்றிருந்தார் எ—று.

விண்படரென்பதை நாள்கோள்களுக்கடையாக்கி விண்ணிற்சஞ்சரிக்கின்றவெனப்பொருள் கூறினுமாம். கீழே சிங்கமும் மேலே தவிசும்பொருந்த விதானமுதலிய அலங்காரமுள்ளஇடத்திற் சிங்காசனமமைதலும், அவ்வாசனத்திலிருப்போர் ஒவ்வோர்தினத்திலுங்கண்ணாடிபார்ப்பதும் இயல்பாதலானிங்ஙனங்கூறினர். (கக)

தரணியி னடுவண் வைகுஞ் சரவணப் பொய்கை தன்னில்
விரைசெறி கமலப் போதில் வீற்றிருந் தருளுஞ் செவ்வேள்
பெருவடி வமைந்த மாயன் பிறங்கிய மனத்திற் றண்ணென்
றெரிசுடர் விளக்கத் துச்சி யிருந்திடு மீசன் போன்றான்.

இ—ள்: தரணியில் நடுவண் வைகும் சரவணப்பொய்கை தன்னில்- பூமியினடுவேதங்கிய சரவணதடாகத்தில், விரை செறி கமலப்போதில் வீற்றிருந்தருளும் செவ்வேள்—வாசனைபொருந்திய தாமரைமலரின்மேலெழுந்தருளியிருந்த குமாரக்கடவுள், பெருவடிவு அமைந்த மாயன் பிறங்கிய மனத்தில் தண்ணென்று எரி சுடர்விளக்கத்து உச்சி இருந்திடும் ஈசன் போன்றான்—திரிவிக்கிரமரூபங்கொண்ட திருமாலினது பிரகாசிக்கின்ற இருதயத்தில் தண்மைபெற்றெரிகின்ற ஞானதீபத்தினுச்சியில்வீற்றிருக்கின்ற சிவபிரானையொத்தார் எ—று.

தரணிக்கு மாயனும், சரவணப்பொய்கைக்கு மனமும், கமலப்போதிற்கு ஞானதீபமும், செவ்வேளுக்குச்சிவனுமுபமானமென்க. திருமால் திரிவிக்கிரமரூபங்கொண்டமை முன்னருரைக்கப்பட்டது. (க00)

பெருந்தரை நடுவ ணாகிப் பிறங்கிய சரவ ணத்தி
லிருந்தனிக் கமல மொன்றிற் குமரவே ளிருந்த பான்மை
திருந்துநல் லண்டப் புத்தேள் சிந்தையாம் புண்ட ரீக
புரந்தனில் விரும்பித் தாதை வைகிய வியற்கை போலும்.

இ—ள்: குமரவேள்— குமாரக்கடவுள், பெரும் தரை நடுவண் ஆகி பிறங்கிய சரவணத்தில்- பெரிய பூமியினடுவேபொருந்திவிளங்குகின்ற சரவணதடாகத்தில், இரும் தனி கமலம் ஒன்றில் இருந்தபான்மை—பெரிய ஒப்பற்ற ஓர் தாமரைமலரின்மேல் வீற்றிருந்ததன்மை, திருந்தும் நல் அண்டப்புத்தேள் சிந்தை ஆம் புண்டரீகபுரம் தனில்—சிறந்த நல்ல பிரமாண்டமாகிய விராட்புருடனது இருதயகமலத்தானமாகிய சிதம்பரத்தலத்தில், தாதை விரும்பி வைகிய இயற்கை போலும்— பிதாவாகிய சிவபிரான் விரும்பி வீற்றிருக்கின்றதன்மையைப்போலும் எ—று.

விராட்புருடனுக்கு இருதயத்தானஞ் சிதம்பரமென்பதை "திருவளராரூர் மூலந் திருவானைக் காவே நாபி-மருவளர் பொழில்சூழண்ணா மலைமணி பூரகீவி-ரிருவருங் கண்ட மன்ற மிதயமாம்" என்னுந் திருவிளையாடற்புராணச்செய்யுளாலும், விண்டலமே போற்றும் விராட்புருட னிதய-புண்டரிக மான புலியூரே" என்னும் புலியூர்வெண்பாவாலுமறிக. (க0க)

பாசிலை பரவித் துள்ளி படுவன வுடுவைப் பாக
வீசுசை வலங்கா ராக வேறுசூழ் கமல மெல்லா
மாசறு பகலோ ராக வவற்றிடை மலர்ந்த கஞ்சந்
தேசுடை யிரவி யாகச் சிவனெனச் சேயங் குற்றான்.

இ—ள்: பாசு இலை பரவி படுவன துள்ளி உடுவைப்பு ஆக—பசிய இலைகளிற்பரந்து தோன்றுவனவாகிய நீர்த்துளிகள் நக்ஷத்திரமண்டலமாகவும், வீசு சைவலம் கார் ஆக—அசைகின்ற பாசிகள் மேகமாகவும், வேறு சூழ் கமலம் எல்லாம் ஆசு அறு பகலோர் ஆக—வேறாகச் சூழ்ந்திருக்கின்ற தாமரைமலர்களெல்லாங் குற்றமற்ற சூரியர்களாகவும், அவற்றிடை மலர்ந்த கஞ்சம் தேசு உடை இரவி ஆக—அவற்றினடுவே மலர்ந்திருக்கின்றதாமரைமலர் ஒளிபொருந்திய சிவசூரியனாகவும் இருப்ப, சேய்—குமாரக்கடவுள், அங்கு—அத்தாமரைமலரில், சிவன் என உற்றான்—சிவபிரான் வீற்றிருப்பதுபோல வீற்றிருந்தார் எ—று.

தாமரையிலையிற்பட்ட நீர்த்துளிகள் அவ்விலையிற்பற்றாது வேறாகித் திரண்டு பலவிடங்களினும் பரவியிருத்தலின் நக்ஷத்திரமண்டலங்களாகவும், பாசிகள் கருநிறமுடையனவாய்ப்படர்ந்து நீரசையுந்தோறுமசைதலின் மேகமாகவும், தாமரைமலர்கள் வட்டவடிவினவாய் மலர்ந்து ஒளிபெறநிற்றலின் சூரியர்களாகவும், அவற்றினடுவிலுள்ள மலர் சிறப்புந்தலைமையுமிகவுடைத்தாதலின் சிவசூரியனாகவும், குமாரக்கடவுள் அத்தாமரைமலரினடுவே எழுந்தருளியிருத்தலின் சிவபிரானாகவும் உவமிக்கப்பட்டமைகாண்க. (௧௦௨)

மாலய னெழிலி மேலோன் வானவ ரேனோர் யாரும்
பாலுற மானு மாவும் பறவையும் பிறவுஞ் சூழ
வேலுறு குமரன் கஞ்சத் திருந்தது பரம னாதிக்
காலையி னுயிர்க ணல்கிக் கமலமே லிருத்தல் போலும்.

இ—ள்: மால் அயன் எழிலிமேலோன் வானவர் ஏனோர் யாரும் பால் உற—விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் மேகவாகனனாகிய இந்திரனும் இவரல்லாததேவர்களும் முனிவர்முதலிய பிறரனைவரும் பக்கத்திலமைய, மானும் மாவும் பறவையும் பிறவும் சூழ—விருக்ஷங்களும் மிருகங்களும் பறவைகளும் நீர்வாழ்வனமுதலிய பிறபிராணிகளும் சூழ்ந்திருப்ப, வேல் உறு குமரன் கஞ்சத்து இருந்தது—இயல்புபொருந்திய குமாரக்கடவுள் தாமரைமலரில் வீற்றிருந்ததன்மை, பரமன்—சிவபிரான், ஆதி காலையின் உயிர்கள் நல்கி கமலமேல் இருத்தல் போலும்—பிரதமசிருட்டிகாலத்தில் ஆன்மாக்களைப்படைத்துத் தாமரைமலரில் வீற்றிருந்ததன்மையைநிகர்க்கும் எ—று.

பிரதமசிருட்டிகாலத்திற் றாமரைமலரில்வீற்றிருந்து சிவபிரான் சிருட்டிக்கும்போது தேவர் மக்கள் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரம் எனப் பல பகுப்புக்களையுடைய சீவன்களெல்லாந்தோன்றிச் சூழுமாதலின் இவ்வாறு வருணித்தார். (௧௦௩)

சலங்கிளர் தரங்கத் தெய்வச் சரவணக் கமலப் போதி
னலங்கிளர் குமரன் சேர்த னான்முகற் சிறைமேல் வீட்டிப்
புலங்கிள ருயிர்க ணல்கப் பொருந்துநற் பகலின் முன்ன
ரிலங்கெழிற் பதும பீடத் தேறிய வியற்கை போலும்.

இ—ள்: சலம் கிளர் தரங்க தெய்வ சரவண கமலப்போதில்—நீர்மிகுந்த திரைமோதுகின்ற தெய்வீகமாகிய சரவணதடாகத்திலுள்ள தாமரைமலரின்கண்ணே, நலம் கி

ளர் குமரன் சேர்தல்--நன்மைமிக்க குமாரக்கடவுளெழுந்தருளியிருத்தல், நான்முகன் சிறைமேல் வீட்டி புலம் கிளர் உயிர்கள் நல்க பொருந்தும் நல் பகலின் முன்னர்— நான்கு முகங்களையுடைய பிரமதேவரைச் சிறையிலிட்டு அறிவினையுடைய ஆன்மாக்களைப்படைக்குமாறுதொடங்கும் நல்லதினத்திற்குமுன்னர்த்தானே, இலங்கு எழில் பதுமபீடத்து ஏறிய இயற்கை போலும்—விளங்குகின்ற அழகினையுடைய தாமரைமலராசனத்திலெழுந்தருளியிருந்ததன்மையைப்போலும் எ—று.

பின்னர்ப் பதுமாசனத்திலெழுந்தருளவேண்டுதலின் முன்னர்த்தானே அவ்வாறெழுந்தருளியிருந்தமைபோல் விளங்கினரென்பதாம்.

சலங்கிளர்சரவணம் தரங்கச்சரவணம் தெய்வச்சரவணம் எனத் தனித்தனியியையும். ஓரறிவுமுதல் ஐயறிவீறாகவுள்ள உயிர்களென்பார் 'புலங்கிளருயிர்கள்' என்றார். அவற்றின்பேதங்களை "புன்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர்" "மூரணந்தாதிநாவறிவொடீரறிவுயிர்" "சிதலெறும்பாதிமூக்கறிவின்மூவறிவுயிர்" "தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர்" "வானவர் மக்க ணரகர் விலங்குபுள்-ளாதி செவியறிவோ டையறிவுயிரே" என்னும் நன் னூற்சூத்திரங்களானுணர்க. (௧௦௪)

முண்டக மொன்றில் வைகு முருகனைச் சுற்றிச் செங்கேழ்
வண்டுளர் கமலக் காடு வான்புனற் றடத்தி னிற்ற
லண்டர்கண் முதல்வ வோர்பா லன்றியெம் மெல்லாம் பீடங்
கொண்டருண் முறையி னென்று நோற்றிடுங் கொள்கைத் தன்றே.

இ—ள்: செம் கேழ் வண்டு உளர் கமலக்காடு—சிவந்தநிறத்தினையுடைய வண்டுகளொலிக்கப்பெற்ற தாமரைமலர்க்கூட்டம், முண்டகம் ஒன்றில் வைகும் முருகனை சுற்றி—ஓர் தாமரைமலரில்வீற்றிருக்கின்ற குமாரக்கடவுளைச்சூழ்ந்து, வான்புனல் தடத்தில் நிற்றல்—பெரிய நீர்நிறைந்த தடாகத்தினிற்பது, அண்டர்கள் முதல்வ- தேவத்தலைவரே, ஓர்பால் அன்றி—ஓர் மலரின்மாத்திரம்வீற்றிருக்காது, முறையின் எம் எல்லாம் பீடங்கொண்டு அருள் என்று நோற்றிடும் கொள்கைத்து—முறைப்படி சிறியேமனைவேமையும் இருக்கையாகக்கொண்டருளுகவென்றுபிரார்த்தித்துத் தவமியற்றுந்தன்மைபோலும் எ—று.

செங்கேழ்க்கமலம் வண்டுளர்கமலம் எனத் தனித்தனியியையும். நீர்மேனிற்றல் தவமியற்றுவார்க்குந்தாமரைமலர்க்குமொக்குமாதலினிவ்வாறுவமித்தார். (௧௦௫)

அணங்குசெய் தோற்றத் துப்பி னவிர்சுடர்க் குமரற் சூழ
மணங்கிளர் கமலக் காடு மலர்ந்தன வவனைச் சேர்வான்
றணங்கெழு புனலிற் புக்குத் தபனன்மே னாட்டஞ் சேர்த்தி
நுணங்கிடை மடவார் பல்லோர் நோற்றவ ணிற்றல் போலும்.

இ—ள்: அணங்கு செய் தோற்ற துப்பின் அவிர் சுடர் குமரன் சூழ—அழகைச்செய்கின்ற தோற்றத்தினையும் பவளம்போல் விளங்குகின்ற சோதியினையுமுடைய முருகக்கடவுளைச்சூழந்து, மணம் கிளர் கமலக்காடு மலர்ந்தன—வாசனைமிகுந்த தாமரைமலர்க்கூட்டங்கள் அலர்ந்திருத்தல், நுணங்கு இடை மடவார் பல்லோர்- நுண்மையான இடையினையுடைய பலபெண்கள், தணம் கெழு புனலில் புக்கு—குளிர்ச்சிபொருந்திய நீரின்கண்ணேபோய், தபனன்மேல் நாட்டம் சேர்த்தி—சூரியன்மேற் பார்வையைவைத்து, அவனை சேர்வான் நோற்று நிற்றல் போலும்— அக்குமாரக்கடவுளைச்சேருமாறு தவஞ்செய்துநிற்பதுபோலும் எ—று.

மலர்ந்தன-வினைமுற்றுத்தொழிற்பெயர். தணம் என்பதில் அம் பண்புப்பெயர் விகுதி. குமாரக்கடவுளைச்சேருமாறு விரும்பியது அழகும் நிறமுமுடைமையானென்பது போதர அடைகொடுத்து, 'அணங்குசெய்தோற்றத்துப்பினவிர்சுடர்க்குமரன்' என்றார். தா மரைமலர் மகளிர்முகம்போறலானும், தடாகத்தினின்று நோற்போர் முகமல்லாதவுறுப்பு முற்றையும் நீருண்மறைத்து மேனோக்கிநிற்றலுண்மையானும், 'மடவார்பல்லோர்நோற்று நிற்றல்போலும்' என்றார். (௧௦௬)

ஒண்ணகை யுயிர்க்குஞ் சங்க மொருசில கமலம் வைகத்
தண்ணுறு நறவைப் பன்றாட் டாமரை பரித்துச் சூழ்த
லண்ணலம் பொய்கை தற்சே ரறுமுகப் பிள்ளை துய்ப்ப
வெண்ணெயுஞ் சங்குஞ் சூழ விட்டது போலு மன்றே.

இ—ள்: ஒள் நகை உயிர்க்கும் சங்கம் ஒருசில கமலம் வைக-பேரொளியைப்பரப்புகின்ற சங்குகள் சிற்சிலதாமரைமலர்களில் இருப்ப, பல் தாள் தாமரை தண் உறும் நறவை பரித்து சூழ்தல்—காளத்லைதயுடைய பற்பலதாமரைமலர்கள் குளிர்ச்சிபொருந்திய தேனை த்தாங்கி (அவரைச்) சூழ்ந்துநிற்றல், அண்ணலம் பொய்கை— பெருமையினையுடைய சரவணதடாகம், தன் சேர் அறுமுக பிள்ளை துய்ப்ப— தன்னிடத்துவந்த ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள் உண்ணும்பொருட்டு, வெண்ணெயும் சங்கும் சூழ விட்டது போலும்—வெண்ணெயையும் பாலடைச்சங்கையும் சூழ்ந்திருக்குமாறு விடுத்ததுபோலும் எ—று.

ஒள் நகை ஒருபொருண்மொழிகள். தன்னையணைந்த மகவுக்குவப்பான உணவுப்பொருளைக்கொடுக்குமியல்பிற்கேற்பவென்பார் 'தற்சேர்-பிள்ளை துய்ப்ப' எனவும், அங்ஙனங்கொடுக்குங்காற் பலபாத்திரங்களில் வெண்ணெயும் பலசங்கும் வேண்டுமென்பது போதர, 'அறுமுகப்பிள்ளை' எனவும் கூறினர். (௧௦௭)

ஆரமும் வனசத் தோடு மணிமக ரந்தச் சேறும்
வேரியம் பூந்தண் டேனு முறைமுறை வீசிக் கையாற்
சேரவே கொண்டு மேலோன் றிருவடி திளைப்ப வுய்த்தல்
வாரியந் தடாக மன்பால் வழிபடும் வண்ணம் போலும்.

இ—ள்: ஆரமும்—முத்துக்களையும், வனச தோடும்—தாமரைமலரினிதழ்களையும், அணி மகரந்த சேறும்—அழகிய பூந்தாதின்குழம்பையும், வேரியம் பூ தண் தேனும்-சுகந்தத்தினையுடைய மலர்களிலுள்ள குளிர்ந்ததேனையும், வீசிக்கையால் சேர கொண்டு-திரையாகிய கையினால் ஒருசேர வாரி, மேலோன் திருவடி திளைப்ப உய்த்தல்— மேலவராகிய குமாரக்கடவுளது சிறந்த பாதங்கள்மறையுமாறு வீசுதல், வாரியம் தடாகம் அன்பால் வழிபடும் வண்ணம் போலும்—நீரையுடைய அந்தச்சரவணதடாகமானது அன்பினுடன் பூசைசெய்கின்றதன்மையைப்போலும் எ—று.

வழிபாட்டிற்காம்போது ஆரம் சந்தனமெனக. அன்பால் என்பதில் ஆல் உடனிகழ்ச்சிப்பொருட்டு. வழிபாடுசெய்வோர் ஒவ்வோரினப்பொருளை ஒவ்வோர்முறைசாத்துதல்போலத் தடாகமும் ஒவ்வோரினப்பொருளை ஒவ்வோர்முறை வீசியதென்பதாம், ()

பங்கயச் செம்மற் போது பதனழிந் தவிழ்ந்து பாங்க
ரங்குள விலைமேல் வீழ வவைபுறத் தசையு நீர்மை
சங்கரன் குமாற் சூழச் சரவணம் பசும்பூந் தட்டிற்
றங்ககல் விளக்க மாட்டித் திரைக்கையாற் சுலவல் போலும்.

இ—ள்: செம்மல் பங்கய போது—பழைய தாமரைமலர்கள், பதன் அழிந்து அவிழ்ந்து—பருவந்தப்பியுதிர்ந்து, பாங்கர் அங்கு உள இலைமேல் வீழ—பக்கத்தில் அவ்விடத்தேயுள்ள இலைகளின்மேல் விழ, அவை புறத்து அசையும் நீர்மை—அவ்விலைகள் புறத்தே அசையுந்தன்மை, சரவணம்—சரவணதடாகமானது, சங்கரன் குமரன் சூழ—சிவகுமாரராகிய முருகக்கடவுளை வளைய (நாற்புறங்களினும்), பசும் பூ தட்டில் துங்க நல் விளக்கம் மாட்டி—பச்சைநிறமான பூந்தட்டில் உயர்ச்சிபொருந்திய நல்ல தீபத்தையேற்றி, திரைக்கையால் சுலவல் போலும்—திரையாகிய கையினாற் சுற்றுதல்போலும் எ—று.

அங்கு என்றது மலரிருக்குமிடத்தை. புறமென்றது அதற்கருகிலுள்ள இடங்களை. சங்கரன்குமரன் ஆறும்வேற்றுமைத்தொகை. தாமரையிதழுக்குத் தீபமும் இலைகளுக்குத்தட்டமும்முபமானமென்க. தீபத்தட்டஞ் சுற்றுதலுமோருபசரணையாதலினிவ்வாறு வருணித்தார். (௧௦௯)

காசுறழ் பதுமப் போது களாசிய தாக மீச்செல்
பாசடை கவிகை யாகப் பலநனை விளக்க மாக
வீசிகள் கவரி யாக மிழற்றுபுள் ளியம தாக
மாசறு பொய்கை சேய்க்கு வளம்பட வொழுகிற் றன்றே.

இ—ள்: காசு உறழ் பதுமப்போது களாசியது ஆக-மாணிக்கரத்தினத்தைப்போன்ற தாமரைமலர்கள் காளாஞ்சியாகவும், மீ செல் பாசு அடை கவிகை ஆக-மேலாக வளர்ந்திருக்கின்ற பசிய இலைகள் குடையாகவும், பல நனை விளக்கம் ஆக—பல அரும்புகள் தீபமாகவும், வீசிகள் கவரி ஆக—திரைகள் சாமரமாகவும், புள் மிழற்று இயமது ஆக—பறவைகளின்னொலி வாத்தியமாகவும் (இன்னோரன்னவாறே), மாசு அறு பொய்கை—குற்றமற்ற சரவணதடாகமானது, சேய்க்கு வளம்பட ஒழுகிற்று—குமாரக்கடவுளுக்கு வளப்பம் பொருந்த ஒழுகிற்று எ—று.

செம்பொற்கோயிலிலரசிருப்போர்க்குளவாய உபசாரங்களெல்லாம் தடாகத்தில் வீற்றிருக்குங் குமாரங்கடவுட்குமமைந்திருந்தனவென்பதாம்.

அது பகுதிப்பொருள்விகுதி. செந்தாமரைமலரென்பார் 'காசுறழ்பதுமப்போது' எனவும், குடைகள் மேற் கவிக்கப்படுவனவாதலின் அதற்கேற்றனவென்பதுதோன்ற 'மீச்செல்பாசடை' எனவும் விசேடித்தார். (௧௧௦)

அழனிவந் தன்ன கஞ்சத் தகன்றடத் திரைக ணாப்ப
ணுழிபட ராது சூழ்போந் துலவுவ தானை நீரால்
விழுமிய குமரன் பொய்கை வெளியுறா தமர ரிட்ட
வெழினிகள் புடையே மென்கா லெறிதலி னிரட்டல் போலும்.

இ—ள்: அழல் நிவந்து அன்ன கஞ்சத்து அகன் தட திரைகள்—அக்கினியானது கிளர்ந்தாற்போன்ற தாமரைமலர்களையுடைய அகன்ற சரவணதடாகத்திலெழுகின்ற அலைகள், நாப்பண் உழி படராது சூழ்போந்து உலவுவ—நடுவிடங்களிற்செல்லாது கரையோரங்களில் வீசுதல், விழுமிய குமரன் பொய்கை வெளியுறாது—மகிமையினையுடைய குமாரக்கடவுள் வீற்றிருக்கின்ற சரவணதடாகம் வெளியேதோன்றுவண்ணம், அமரர் தானை நீரால் இட்ட எழினிகள்—தேவர்கள் திரையாக இட்டவஸ்திரம், மென்கால் எறிதலின்-மிருதுவான காற்றுவீசுதலினல், புடையே இரட்டல்போலும்— பக்கங்களில் அசைதல்போலும் எ—று.

சரவணப்பொய்கையின் நாற்றிசைக்கரைகளினும் அலைவீசுதல் திரை வஸ்திரமிடப்பட்டுக்காற்றினாலசைவது போன்றிருந்ததென்பதாம். (௧௧௧)

கொன்படை சேவ லாகு மெகினமோர் கோடி யீசன்
றன்பெருங் குமரற் சூழத் தடத்தினின் மிழற்ற லெந்தை
பொன்பிறழ் பதுமன் செய்கை புரியுநா ளூர்தி யாவ
லென்புடை யிருத்தி யென்றே தமித்தமி யிரத்தல் போலும்.

இ—ள்: கொன் படை சேவல் ஆகும் எகினம் ஓர் கோடி-பெருமைபொருந்திய ஒருகோடிக்கணக்கான அன்னங்கள், ஈசன் தன் பெரும் குமரன் சூழ தடத்தினில் மிழற்றல்—சிவபிரானது பெருமையமைந்த திருக்குமாரராகிய முருகக்கடவுளைச்சூழ்ந்து சரவணதடாகத்தினின்று ஒலித்தல், எந்தை பொன் பிறழ் பதுமன் செய்கை புரியும் நாள் ஊர்தியாவல்—எம்பெருமானுடையதேவரீர் பொன்போலச் (சிவந்தநிறத்துடன்) பிரகாசிக்கின்ற தாமரைமலராசனத்தில்வீற்றிருக்கின்ற பிரமதேவரதுபடைப்புத்தொழிலையியற்றுங் காலத்தில் (அடியேன்)வாகனமாவேன் (ஆதலின்), என்புடை இருத்தி என்று— என்மேல் எழுந்தருளுகவென்று, தமித்தமி இரத்தல் போலும்- தனித்தனியே பிரார்த்திப்பதுபோலும் எ—று.

ஓர்கோடியென்றது மிகுதிபற்றி. பிறழ் என்னும் வினைத்தொகை பதுமன் என்னும் பெயரின்பகுதியோடியைந்தது. என்மேலிவர்தலிப்பொழுது வேண்டப்படாவிடினும் பின்னரொருதலையான்வேண்டப்படுமாதலின், அதற்காக இப்பொழுதேயிவர்ந்தருளுகவென்று வேண்டுதல்போலுமென்பார் "பொன்பிறழ்பதுமன்செய்கைபுரியுநாளூர்தியாவ-லென்புடையிருத்தியென்றேதமித்தமியிரத்தல்போலும்" என்றார். (௧௧௨)

வளஞ்செறி யினைய பாலால் வான்சர வணமாம் பொய்கைத்
தளஞ்செறி பதும மொன்றிற் சராசரம் யாவுங் காப்பா
னுளஞ்செறி கருணை யெய்தி யொப்பிலாக் குமர மூர்த்தி
யிளஞ்சிறு மதலை போல வினிதுவீற் றிருந்தான் மன்னோ.

இ—ள்: ஒப்பு இலா குமரமூர்த்தி—சமானரஹிதராகிய குமாரக்கடவுள், வளம் செறி இனையபாலால்—வளப்பமிக்க இத்தன்மைகளமைய, வான் சரவணம் ஆம் பொய்கை தளம் செறி பதுமம் ஒன்றில்—பெரிய சரவணமென்னும் பெயர்த்தாகிய தடாகத்தில் இதழ்நெருங்கப்பெற்ற ஓர் தாமரைமலரின்கண், சராசரம் யாவும் காப்பான் உளம்செறி கருணை எய்தி—இயங்கியற்பொருள் நிலையியற்பொருளாகிய இருவகையுயிர்களையும் ரக்ஷிக்கும்படி திருவுள்ளத்திற்றோன்றிய கிருபையைப்பொருந்தி, இளம் சிறு மதலை போல இனிது வீற்றிருந்தான்-பாலியப்பருவத்தையுடைய சிறுகுழந்தையைப்போலச் செவ்வனே எழுந்தருளியிருந்தார் எ—று.

அப்பொய்கையிலுள்ள மலர்களனைத்தினுஞ் சிறந்ததென்பார் 'தளஞ்செறிபதுமம்' எனவும், தம்பயன்சிறிதுங்கருதாது ஆன்மாக்கள் உய்தற்பொருட்டே வீற்றிருந்தனரென்பார் 'சராசரம்யாவுங்காப்பானுளஞ்செறிகருணையெய்தி' எனவுங்கூறினார். (௧௧௩)

தீர்த்திகைக் கங்கை தன்னிற் றிகழ்சர வணத்தில் வந்த
மூர்த்திகைக் குழவி யேபோன் முதற்புரி யாட னோக்கி
யார்த்திகை யுறாத வுள்ளத் தரிமுத லமரர் யாருங்
கார்த்திகைத் தெரிவை மாரை விழித்திவை கழற லுற்றார்.

இ—ள்: ஆர்த்திகை உறாத உள்ளத்து அரி முதல் அமரர் யாரும்— வருத்தம் பொருந்தப்பெறாத [மகிழ்ந்த] மனத்தினையுடைய திருமால்முதலாகிய தேவரனைவரும், கங்கை தீர்த்திகை தன்னில் திகழ் சரவணத்தில் வந்த மூர்த்தி கைக்குழவியேபோல் முதல் புரி ஆடல் நோக்கி—கங்கைநதியிலும் விளங்குகின்ற சரவணதடாகத்திலுந்தோன்றி

யருளிய குமாரக்கடவுள் கைக்குழந்தையைப்போல முதலிற்செய்த திருவிளையாடலைப்பார்த்து, கார்த்திகை தெரிவை மாரை விளித்து இவை கழறலுற்றான்—கார்த்திகைப்பெண்களையழைத்து இவ்வாசகங்களைச்சொல்லத்தொடங்கினூர் எ—று.

குமாரக்கடவுள் பின்னரும் பற்பலதிருவிளையாடல்களைச்செய்பவராதலின் 'முதற்புரியாடல்' என்ருர். (௧௧௪)

சாற்றருஞ் சரவ ணத்திற் சண்முகத் தொருவ னூகி
வீற்றிருந் தருளு கின்ற விமலனோர் குழவி போலத்
தோற்றின னவனுக் குங்க டுணைமுலை யமுத மூட்டிப்
போற்றுதிர் நாளு மென்ன நன்றெனப் புகன்று வந்தார்.

இ—ள்: சாற்றரும் சரவணத்தில் சண்முகத்து ஒருவன் ஆகி வீற்றிருந்தருளுகின்ற விமலன்-சொல்லுதற்கரிய(மேன்மையையுடைய) சரவணதடாகத்தில் ஆறுதிருமுகங்களையுடைய ஒருகுமாரராகி எழுந்தருளியிருக்கின்ற நிருமலராகியமுருகக்கடவுள், ஓர் குழவி போல தோற்றினன்—ஒரு குழந்தையைப்போலுதித்தார் (ஆதலின்), அவனுக்கு உங்கள் துணை முலை அமுதம் ஊட்டி நாளும் போற்றுதிர் என்ன—அக்குமாரருக்கு உங்கள் இரண்டுதனங்களிலுமூறுகின்ற பாலையூட்டித் தினந்தோறும் வளர்ப்பீர்களாகவென்றுகூற, நன்று என புகன்று வந்தார்—(அம்மாதர்கள்) நல்லதென்று சம்மதங்கூறி(அச்சரவணப்பொய்கையினிடத்து) வந்தார்கள் எ—று. (௧௧௫)

மறுவறு மாத ராகு மாதர்மூ விருவர் தாமு
நிறைதரு சரவ ணத்தி னிமலனை யடைந்து போற்ற
வுறுநர்க டமக்கு வேண்டிற் றுதவுவோ னாத லாலே
யறுமுக வொருவன் வேறா யறுசிறு ருருவங் கொண்டான்.

இ—ள்: மறு அறும் ஆறல் ஆகும் மாதர் மூவிருவர் தாமும்—குற்றமற்ற கார்த்திகைப்பெண்களறுவரும், நிறை தரு சரவணத்தில் நிமலனை அடைந்து போற்ற—நிறைந்த சரவணதடாகத்திலெழுந்தருளியிருக்கின்ற மலரகிதராகிய குமாரக்கடவுளையடைந்து துதிக்க, அறுமுக ஒருவன்—ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற குமாரக்கடவுள், உறுநர்கள் தமக்கு வேண்டிற்று உதவுவோன் ஆதலால்—தம்மையடைந்தவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுப்பவராதலினூல் (அவ்விறைமைக்குணத்திற்கேற்ப), வேறாய் அறு சிறுர் உருவம் கொண்டான்—வெவ்வேறாக ஆறுகுழந்தைகளின் வடிவத்தைக்கொண்டருளினூர் எ—று.

ஆறுபெண்களுமுவந்து போற்றுதற்காகவே ஆறுருக்கொண்டனரென்பதுதோன்ற 'உறுநர்கடமக்குவேண்டிற்றுதவுவோனுதலாலே-அறுசிறுருருவங்கொண்டான்' என்ருர். அதற்கேற்பப் பிற்செய்யுளினும் 'அறுவருமகிழ்ந்து' என்ருர். (௧௧௬)

ஆறுரு வாத லோடு மறுவரு மகிழ்ந்து வேறு
வேறுதா மெடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென் கொங்கை
யூறுபா லமுத மன்னோற் குதவலு முறுவல் செய்து
மாறிலா வருளா லாற்ற வருந்தினன் போல வுண்டான்.

இ—ள்: ஆறு உரு ஆதலோடும்—குமாரக்கடவுள் ஆறுகுழந்தைகளின் வடிவத்தைக்கொண்டருளியவுடன், அறுவரும் மகிழ்ந்து—கார்த்திகைப்பெண்களறுவரும் மனமகிழ்ந்து, வேறுவேறு எடுத்து—வெவ்வேறாக எடுக்கி, தத்தம் வியத்தகு மென் துணை கொங்கை ஊறு பால் அமுதம் அன்னோற்கு உதவலும்—தங்கள் தங்களது பெருமைமிக்க மென்மையான இரண்டுதனங்களிலும் ஊறிய பாலாகிய அமிர்தத்தை அக்குமாரக்கடவுளுக்

கு ஊட்ட, முறுவல் செய்து— (அவர்) புன்னகைசெய்து, மாறு இலா அருளால்—ஒப்பில்லாத கருணையுடன், ஆற்ற வருந்தினன் போல உண்டான்— மிகவும்வருந்தியவர்போலப் பருகினார் எ—று.

ஒவ்வோர் மாதரும் ஒவ்வோர்குழந்தையாக எடுக்கியென்பார் 'வேறுவேறுதாமெடுத்து' எனவும், தாம்பெற்றிலராகவும் கண்டமாத்திரத்தே அன்பின்மிகுதியாற் பால்சுரந்தவிசேடந்தோன்ற, அடைகொடுத்து, 'வியத்தகு கொங்கை' எனவும் கூறினார். (௧௭)

உண்டபி னறுவ ராகு மொருபெரு முதல்வன் றன்னைத்
தண்டழை பொதுளு நீபத் தண்ணிழற் பொய்கை தன்னில்
வண்டயி லுறாத கஞ்ச மாமலர்ப் பள்ளி சேர்த்திக்
கண்டுயில் செய்வித் தேத்தக் கருணையா லினைய செய்வான்.

இ—ள்: உண்டபின்—பாலைப்பருகியபின்பு, அறுவர் ஆகும் ஒரு பெரும் முதல்வன் தன்னை— ஆறு குழந்தைகளாகிய ஒப்பற்ற பெருமைவாய்ந்த குமாரக்கடவுளை, தண் தழை பொதுளும் நீப தண் நிழல் பொய்கை தன்னில்—குளிர்ந்த தழைகள்செறியப்பெற்ற கடப்பமரங்களின் குளிர்ந்த நிழல்பொருந்திய தடாகத்தில், வண்டு அயில் உறாத கஞ்ச மா மலர் பள்ளி சேர்த்தி—வண்டுகள் தேனைப்பருகப்பெறாத பெரிய தாமரைமலராகிய சேக்கையிற்கிடத்தி, கண்டுயில் செய்வித்து எத்த—நித்திரைசெய்வித்துத் துதிக்க, கருணையால் இனைய செய்வான்—(அக்குமாரக்கடவுள்) கிருபையோடும் இத்திருவிளையாடல்களைச்செய்தருளுவார் எ—று.

புதுமலரென்பார் 'வண்டயிலுறாதகஞ்சமாமலர்' என்றார். (௧௮)

துயிலவோ ருருவந் துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவ நக்காங் கமரவோ ருருவ மாட
லியலவோ ருருவம் வாளா விரங்கவோ ருருவஞ் செய்தான்.

இ—ள்: ஓர் உருவம் துயில—ஒருவடிவம் நித்திரைசெய்யவும், ஓர் உருவம் துஞ்சி துண் என எழுந்து மென் சொல் பயில— ஒருவடிவம் நித்திரைசெய்து விரைவிலெழும்பி மிருதுவான சொற்களைப்பேசவும், ஓர் உருவம் யாய் தன் பயோதரம் பவள வாய் வைத்து அயில—ஒருவடிவம் தாயினதுதனத்தைப் பவளம்போன்ற வாயின்கண்ணே வைத்துப்பருகவும், ஓர் உருவம் நக்காங்கு அமர— ஒருவடிவம் சிரித்தவாறேயிருக்கவும், ஓர் உருவம் ஆடல் இயல— ஒருவடிவம் விளையாட்டயரவும், ஓர் உருவம் வாளா இரங்க செய்தான்-- ஒருவடிவம் வீணாக அழவும்செய்தருளினார் எ—று.

காரணமின்றியழவென்பார் 'வாளாவிரங்க' என்றார். (௧௯)

ஒருருத் தவழ மெல்ல வோருருத் தளர்ந்து செல்ல
வோருரு நிற்றல் செல்லா தொய்யென வெழுந்து வீழ
வோருரு விருக்கப் பொய்கை யோருரு வுழக்கிச் சூழ
வோருருத் தாய்கண் வைக வொருவனே புரித லுற்றான்.

இ—ள்: ஓர் உரு தவழ— ஒருவடிவம் தவழவும், ஓர் உரு மெல்ல தளர்ந்து செல்ல—ஒருவடிவம் மெல்லவாகத் தளர்ந்துநடக்கவும், ஓர் உரு ஒய் என எழுந்து நிற்றல்செல்லாது வீழ— ஒருவடிவம் விரைவிலெழும்பி நிற்கலாற்றாது விழவும், ஓர் உரு இருக்க-ஒருவடிவம் இருக்கவும், ஓர் உரு பொய்கை உழக்கி சூழ—ஒருவடிவம் சரவணவாவியைக்காலாலுழக்கிக்கொண்டு சுற்றிவரவும், ஓர் உரு தாய்கண் வைக- ஒருவடிவம் தாய்மடியி

விருக்கவும், ஒருவனே புரிதல் உற்றான்—ஒருகடவுளே (பல்வேறு தொழில்களைச்)செய்தருளினார் எ—று. (௧௨௦)

ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்க
ணோடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரித லுற்றான்.

இ—ள்: ஓர் உருவம் ஆட-ஒரு வடிவம் கூத்தாடவும், ஓர் உருவம் செம் கை அறைய-ஒருவடிவம் சிவந்த கைகளைக்கொட்டவும், ஓர் உருவம் நின்று பாட-ஒருவடிவம் நின்று பாடல்களைப்பாடவும், ஓர் உருவம் நாடி பார்க்க-ஒருவடிவம் விரும்பிப்பார்க்கவும், ஓர் உருவம் ஆங்கண் ஓட—ஒருவடிவம் அவ்விடத்து ஓடவும், ஓர் உருவம் ஓர் பால் ஒளிக்க—ஒருவடிவம் ஒருபக்கத்திற் சென்றொளிக்கவும், ஓர் உருவம் யாண்டும் தேட ஆக—ஒருவடிவம் (ஒளித்தவடிவத்தை) எங்குந்தேடவுமாக, சிவன்மகன் புரிதல் உற்றான்—சிவபிரானது குமாரராகிய முருகக்கடவுள் செய்தருளினார் எ—று.

திருவுருவங்களின் வளர்ச்சிக்கேற்பத் தொழினிகழ்ச்சிகளைப் பலவாறுகூறுதலின், அதற்கு மூன்றுசெய்யுட்கள் வேண்டப்பட்டன. (௧௨௧)

இத்திற மிருமூன் றான யாக்கையுங் கணமதொன்றிற்
பத்துநா றாய பேதப் படும்வகை பரமாய் நின்ற
வுத்தம குமரன் றானெவ் வுயிர்தொறு மாட லேபோல்
வித்தக விளையாட் டின்ன மாயையால் விரைந்து செய்தான்.

இ—ள்: பரம் ஆய் நின்ற உத்தம குமரன்—பரம்பொருளாய்நின்ற உத்தமராகிய குமாரக்கடவுள், இருமூன்று ஆன யாக்கையும் கணமது ஒன்றில் இத்திறம் பத்துநூறு ஆய பேதப்படும் வகை—ஆறு திருவுருவங்களும் ஒரு கணப்பொழுதினுள் இவ்வாறே ஆயிரக்கணக்கான தொழிற்பேதத்தையடையுமாறு, எவ் உயிர்தொறும் ஆடலே போல்—எல்லாவுயிர்களிலுநின்று திருவிளையாடல்செய்வதையேபோல, மாயையால்-மாயையினாலே, வித்தக விளையாட்டு இன்ன-அற்புதமாகிய இன்னோரன்ன திருவிளையாடல்களை, விரைந்து செய்தான்—விரைவிற்செய்தருளினார் எ—று.

உத்தமன் விசேடமுடையவன். ஏ-தேற்றம். பேதப்படும்வகை செய்தான் என இயையும். அநேகபேதமுறவென்பார் 'பத்துநூறாயபேதப்படும்வகை' எனவும், பதியாகிய தாம் தமது மாயையினாற் பசுவர்க்கங்களை உண்ணின்றியக்குதல்போலவென்பார் 'எவ்வுயிர்தொறுமாடலேபோல்' எனவும், அங்ஙனஞ்செய்யுமிது எவராலும் வியக்கற்பாலதென்பார் 'வித்தகவிளையாட்டு' எனவும், கணமதொன்றிற்பத்துநூறாய பேதப்படுதற்கேற்ப 'விரைந்து' எனவும் கூறினார். (௧௨௨)

சிற்பர னாகி வந்த செய்யவே ளாடற் றன்மை
பற்பல திறமு நாடிப் பங்கயத் தயனு மாலுஞ்
சொற்படு மகத்தின் றேவு முனிவருஞ் சுரரும் யாரு
மற்புத மகிழ்ச்சி கொண்டாங் கின்னவா றறைத லுற்றார்.

இ—ள்: பங்கயத்து அயனும் மாலும்—தாமரைமலராசனத்தில்வீற்றிருக்கின்ற பிரமதேவரும் திருமாலும், சொல் படும் மகத்தின் தேவும் சுரரும் முனிவரும் யாரும்—புகழ்பெற்ற யாகாதிபனாகிய இந்திரனும் ஏனைய தேவர்களும் முனிவர்களும் ஆகிய அனைவரும், சிற்பரன் ஆகி வந்த செய்ய வேள் ஆடற்றன்மை பற்பலதிறமும் நாடி—ஞானவடிவினராகித்தோன்றிய சிவந்தநிறத்தினையுடைய குமாரக்கடவுளது திருவிளையாடலினைத்

னதயும்பார்த்து, அற்புத மகிழ்ச்சி கொண்டு— ஆச்சரியத்தோடுகூடிய சந்தோஷத்தை க்கொண்டருளி, இன்னவாறு அறைதலுற்றார்— இவ்வாறு சொல்லத்தொடங்கினார்கள் எ— due.

அற்புதமகிழ்ச்சி என்பதை உம்மைத்தொகையாக்கினுமாம். (கஉ௩)

சேயிவ னொருவ னேபல் சிறாருருக் கொண்டு நம்மு
னேயெனு மளவை தன்னி லெண்ணில்பே தத்த னாகு
மாயினிக் குமர னாட லறிவரி தெமக்கு மெல்லா
மாயமு மியற்ற வல்லன் வரம்பிலா வறிவன் மாதோ.

இ—ள்: சேய் இவன் ஒருவனே—இக்குமாரரொருவரே, பல் சிறார் உரு கொண்டு— பல குழந்தைகளின் வடிவங்களைக்கொண்டு, நம்முன்—எமக்குமுன்னே, ஏ எனும் அளவை தன்னில் எண் இல் பேதத்தன் ஆகும் ஆயின்—ஏ என்றுச்சரிக்கின்ற காலவெல்லையினுள் [விரைவில்] அளவில்லாத [பல] வேறுபாடுகளையுடையவராகின்றார்; ஆதலின், இ குமரன் ஆடல் எமக்கும் அறிவரிது—இந்தக்குமாரக்கடவுளது திருவிளையாடல் எம்மாலும் அறிதற்கரியது, எல்லா மாயமும் இயற்ற வல்லன்-(அவர்) எல்லாமாயங்களையுஞ்செய்யவல்லவர், வரம்பு இலா அறிவன்—அளவிடப்படாத ஞானத்தினையுடையவர் எ—று.

இறைமைக்குணமுடையரென்பதாம். ஆயின் ஆராயினெனினுமாம். ஏகாரம் பிரிநிலை. முன்னைய உம்மை உயர்வுசிறப்பு. (கஉ௪)

கைப்பயில் குழவி போலக் காட்டிய கடவுள் செய்யு
மிப்பெரு மாயை போல யாவரும் புரித றேற்றார்
செப்பியென் வேறி யாமுஞ் செய்ததொன் றில்லை யன்னு
னொப்பறு பரனே யாமென் றுரைசெய்து தொழுது நின்றார்.

இ—ள்: கை பயில் குழவி போல காட்டிய கடவுள் செய்யும் இ பெரும் மாயை போல— கையின்கண்ணே பயிலப்பெறுகின்ற குழந்தையைப்போலத் தோன்றிய குமாரக்கடவுள்செய்தருளுகின்ற இந்தப் பெரிய மாயத்தொழிலைப்போல, யாவரும் புரிதல் தேற்றார்—எவராயினுஞ் செய்யமாட்டார்கள், வேறு செப்பி என்— வேறு (பலவாசகங்களைக்)கூறியென்னை?, அன்னான் ஒப்பறு பரனே—அவர் ஒப்புற்ற கடவுளேயாம் (ஆதலின்), யாம் செய்தது ஒன்றும் இல்லை— யாங்கள்(இவரை ரக்ஷித்தற்பொருட்டுச்) செய்தசெயல் யாதொன்றுமில்லை, என்று உரைசெய்து தொழுது நின்றார்—என்றிங்ஙனங் கூறிக் கைதொழுது நின்றார்கள் எ—று.

உம்மை பிரித்துக்கூட்டப்பட்டது.

மிகவுஞ் சிறுபிராயமானகுழந்தையென்பார் 'கைப்பயில்குழவி' எனவும், அவரது இயற்கைவடிவம் இஃதன்றென்பார் 'குழவிபோலக்காட்டியகடவுள்' எனவும், இத்துணையிற்றானேயிவரிறைவரென்பது கிரிதீபம்போலவிளங்குதலின் இதன்மேல் இவரது மகத்துவத்தைக்குறித்து யாங்கள்பேசுதல் வேண்டற்பாற்றன்றென்பார் 'செப்பியென்வேறு' எனவும், இவரை ஓர் சிறுவரென்றெண்ணிக் காத்தல் பாலூட்டுவித்தல் முதலியவற்றைச்செய்தேம், அவற்றாலிவர்க்கு யாதும்பயனின்றென்பார் 'யாமுஞ்செய்ததொன்றில்லை' எனவும் கூறினார். (கஉ௫)

அழலெனு மீன வர்க்கத் தனுவருங் குமர னூடன்
முழுவது நோக்கி நோக்கி முதிருமற் புதநீ ரெய்திக்
குழவிக ளென்றே யுள்ளங் கோடல்விட் டகலா தஞ்சி
வழிபடு கடவு ளோரிற் போற்றினர் மனங்கொ ளன்பால்.

இ—ள்: அழல் எனும் மீனவர்க்கத்து அறுவரும்— அக்கினி என்றுசொல்லப்படுகின்ற நக்ஷத்திரத்தின்வகுப்பிலுள்ள ஆறுபெண்களும், குமரன் ஆடல் முழுவதும் நோக்கி நோக்கி—குமாரக்கடவுளது திருவிளையாடலனைத்தையும் பார்த்துப் பார்த்து, முதிரும் அற்புதநீர் எய்தி அஞ்சி—மிகுந்த ஆச்சரியமடைந்து பயந்து, குழவிகள் என்று உள்ளம் கோடல் விட்டு—குழந்தைகளென்று மனத்திற் சிந்திப்பதையொழித்து, அகலாது—அவரைவிட்டுப்பிரியாமல், வழிபடு கடவுளோரில்-தாம்வழிபடுகின்ற தேவரைப்போல, மனம் கொள் அன்பால் போற்றினர்-மனத்திற்பொருந்திய அன்பினுடன்பேணினர்கள் எ-று

அக்கினிநக்ஷத்திரமெனவழங்குதலால்,கார்த்திகைநக்ஷத்திரத்தை 'அழலெனுமீனம்' என்றார். நோக்கிநோக்கியென் னுமடுக்கு ஒருதொழில் பலகானிகழ்தல்பற்றிவந்தது. கடவுளை வழிபடும்பொழுது,இதனல் நமக்கேபயனுண்டு, கடவுட்கு யாதும் பயனின்றென்று கருதுவதுபோல, கார்த்திகைமாதரும், குழந்தையன்றென்பதையுணர்ந்தபின் தாஞ்செய்யும்போஷணையாற் றமக்கேபயனென்றுகருதிப் போற்றினராதலின், 'வழிபடுகடவுளோரிற்போற்றினர்' என்றார். (கஉகூ)

அம்புய முறழுஞ் செங்கே ழறுமுகம் படைத்த கோல
நம்பிதன் வரவு தன்னை நவின்றன மினிமே லங்க
ணெம்பெரு முதல்வி தன்பா லிலக்கத்தொன் பதின்மர் செவ்வே
டம்பிய ராகி வந்த தன்மையை விளம்ப லுற்றாம்.

இ—ள்: அம்புயம் உறழும் செம் கேழ் அறுமுகம் படைத்த கோல நம்பிதன் வரவு தன்னை நவின்றனம்—தாமரைமலரைப்போன்ற சிவந்தநிறத்தினையும் ஆறு திருமுகங்களமைந்த வடிவத்தினையுமுடைய குமாரக்கடவுளது திருவவதாரத்தைக்கூறினோம், இனிமேல்—இனி, அங்கண்-அத்திருக்கைலாசமலையில், இலக்கத்தொன்பதின்மர்—இலக்கத்தொன்பது நந்திகணவீரர்கள், செவ்வேள் தம்பியர் ஆகி—குமாரக்கடவுளுக்குத் தம்பிமாராகி, எம் பெரு முதல்வி தன் பால் வந்த தன்மையை விளம்பலுற்றாம்- பெருமைபொருந்திய எங்கள் தலைவியாராகிய உமாதேவியாரிடத்து அவதரித்ததன்மையைச் சொல்லத்தொடங்கினோம் எ—று. (கஉஎ)

திருவவதாரப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் கூஎஎ.

---

# துணைவர்வருபடலம்.

குமாரக்கடவுளின் தம்பியர்கள் இலக்கத்தொன்பதின்மர் அவதரித்தசரித்திரத்தைக் கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

அக்கினிப்பொறிகளின் வெப்பத்திற்காற்றாதோடிய உமாதேவியார், சிவபிரான் தம்மையகற்றிப்புதல்வரையுதிப்பித்தது தேவர் வேண்டுகோளாலென்பதைத்தெரிந்து, அத்தேவர்களது பெண்களனைவரும் புதல்வரைப்பெறுதவாறுசபித்து, அக்கினிப்பொறியின் வெப்பம்நீங்கியபின் சிவபிரானது வாமபாகத்தில் வந்துவீற்றிருந்தனர். அப்பொழுது, அத்தேவியாரது வடிவம் சிலம்பினின்றுதிர்ந்த நவமணிகளிற்காணப்பட, சிவபிரான் அவற்றைச்சத்திகளாய் வருமாறு அருள்செய்தனர். உடனே நவசத்திகள்வந்து சிவபிரானைக்காமி

த்துக்கருப்பமெய்தினர். உமாதேவியார் அதுகண்டு, இவர்கள் நம்மிறைவரைக்காமித்துக்க ருப்பமுற்றனரேயென்று சினந்து, 'உரியகாலத்திற்பெறாது இக்கருப்பத்தைப்பலகாலஞ் சுமந்துகொண்டிருங்கள்' என்றுசபித்தனர். சத்திகள் அதுகேட்டு அஞ்சி மெய்வியர்த்தபொழுது அந்தவியர்ப்பினின்றும் இலக்கம்வீரருதித்தனர். பின்னர், சத்தியர்களது கருப்பத்தில் நந்திகணத்தவரொன்பதின்மர் குழந்தைகளாகிச் சிவபிரானைக்குறித்து யோகசாதனை செய்துகொண்டு பலகாலமிருப்ப, அச்சத்தியர்கள் பாரந்தாங்கலாற்றாதவர்களாய்ச் சிவபிரானையுந்தேவியாரையும் வணங்கிக்குழந்தைகளைப்பெறுமாறு அருள்புரிகவென்று பிரார்த்தித்தனர். அப்பொழுது சிவபிரான் அவர்களுக்கருள்செய்யுமாறுபணிக்கத் தேவியார் புதல்வரைப்பெறும்படி அருள்செய்தனர். பின்னர் மாணிக்கவல்லி முதலிய ஒன்பதுசத்திகளும் முறையே வீரவாகுமுதலிய ஒன்பதுவீரரையும் பெற்றனர். சிவபிரான் அவர்களுக்குத் தனித்தனி வாட்படைகொடுத்து இலக்கம்வீரர்களும் நீவிரும் நம்புதல்வனுக்குப் பரிசனமாதிரென்று அருள்செய்தனர். பின்னர் அவ்விலக்கத்தொன்மதின்மருமொருமித்து அங்கே வசித்தனர். சத்தியரொன்பதின்மரும் தேவியார்க்குப்பணிசெய்தனர் என்பதாம்.

நஞ்ச யின்றவ னெற்றிநாட் டத்தினு னல்கு
வெஞ்சு டர்ப்பொறி வெம்மையை யாற்றலள் விமலை
செஞ்சி லம்படி தாக்கலி னவமணி சிதற
வஞ்சி யோடின ளித்திற முணர்ந்தன ளகத்துள்.

இ—ள்: விமலை—உமாதேவியார், நஞ்சு அயின்றவன் நெற்றிநாட்டத்தினுல் நல்கு வெம் சுடர் பொறி வெம்மையை ஆற்றலள்—நஞ்சையுண்டருளிய சிவபிரான் நெற்றிக்கண்ணினின்றுந் தோற்றுவித்த வெவ்விய அக்கினிப்பொறிகளாலுண்டான வெப்பத்தைத்தாங்கலாற்றாதவளாய், செம் சிலம்பு அடி தாக்கலில் நவமணி சிதற முந்தி ஓடினள்—செவ்விய சிலம்புகள் கால்களிற்றாக்குதலால் நவரத்தினங்கள் உதிரப்பயந்தோடி, அகத்துள் இத்திறம் உணர்ந்தனள்—தம்மனத்திலிவ்வாறு சிந்தித்தார் எ—று.

ஓடினள் முற்றெச்சம். தெய்வத்தன்மையுடையோராலுஞ் சகித்தற்கரிய பொறியென்பார் 'வெஞ்சுடர்ப்பொறி' என்றார். (௧)

மாய வன்முத லமரர்க ளீசனை வணங்கி
நீயொர் மைந்தனைத் தருகென நெற்றிநாட் டத்தா
லாய வன்சுட ருதவியோர் மதலையா யமர்வா
னேயி னன்சர வணத்தெனத் தெரிந்தன ளிறைவி.

இ—ள்: மாயவன் முதல் அமரர்கள்—திருமால் முதலாகிய தேவரனைவரும், ஈசனை வணங்கி—சிவபிரானை நமஸ்கரித்து, நீ ஓர் மைந்தனை தருக என—(ஸ்வாமீ!) தேவரீர் (தனியே) ஒருபுதல்வரைத்தோற்றுவித்தருள்கவென்று பிரார்த்திக்க, ஆயவன்—அச்சிவபிரான், நெற்றிநாட்டத்தால் சுடர் உதவி— நெற்றிக்கண்களினின்றும் அக்கினிப் பொறிகளைத்தோற்றுவித்து, ஓர் மதலை ஆய் சரவணத்து அமர்வான் எயினன் என— ஒருகுமாரராய்ச்சரவணதடாகத்திலிருக்கும்படியனுப்பினனென்று, இறைவி தெரிந்தனள்—தலைவியாகிய உமாதேவியார் அறிந்தார் எ—று. (௨)

அன்ன தற்பின ருமையவ் வௌனதுபா லமலன்
றன்ன ருட்பெறு மதலைதோன் றுவகை தடுத்த
பொன்ன கர்க்கிறை விரிஞ்சன்மான் முதலபுத் தேளிர்
பன்னி யர்க்கெலாம் புதல்வரின் றாகெனப் பகர்ந்தாள்.

இ—ள்: அன்னதன் பினர்—அதன்பின்பு, உமையவள்—உமாதேவியார், அமலன் தன் அருள் பெறும் மதலை எனதுபால் தோன்றுவதை தடுத்த பொன்னகர்க்கு இறை விரிஞ்சன் மால் முதல புத்தேளிர் பன்னியர்க்கு எலாம்—சிவபிரான் தமது கிருபையினுற் பெற்றபுதல்வன் என்னிடத்தேதோற்றுவண்ணந்தடைசெய்த சுவர்க்கலோகாதிபனாகிய இந்திரன் பிரமா விஷ்ணுமுதலாகிய தேவர்களது மனைவியரனைவர்க்கும், புதல்வர் இன்று ஆக என பகர்ந்தாள்—புத்திரரில்லாதொழிகவென்று சபித்தார் எ—று.

பின்னர் என்பதில் னகரவொற்றும் ஆக என்பதிலீற்றுயிர்மெய்யுந் தொக்கன. குமாரக்கடவுள் உமாதேவியாரிடத்துதியாது சிவபிரானிடத்தேயுதிக்குமாறு தேவர்கள் பிரார்த்தித்தமையை "ஓர்குமரன் றன்னை-நீதரல்வேண்டுநின்பானின்னையேநிகர்க்க" என முன்னர்த்திருவவதாரப்படலத்துக்கூறுதலானறிக. (௫)

இமைய மாமக ளித்திறம் புகன்றுமீண் டேகிச்
சமயம் யாவையு நிறுவிய கண்ணுதற் றலைவ
னமல மாந்திரு முன்னர்வந் தரிக்குமுன் னரிதாங்
கமல மாரடி கண்டனள் பணிந்துகண் களித்தாள்.

இ—ள்: மா இமைய மகள் இத்திறம் புகன்று—பெரிய இமையமலையரசனது புதல்வியாகிய உமாதேவியார் இவ்வாறு சபித்து, மீண்டு ஏகி—திரும்பிப்போய், சமயம் யாவையும் நிறுவிய கண்ணுதல் தலைவன் அமலம் ஆம் திருமுன்னர் வந்து—எல்லாச்சமயங்களையும் (அவரவர்வினைப்பயன்கட்கேற்ப உலகத்தில்) நிறுத்திய நெற்றிக்கண்ணையுடைய தலைவராகிய சிவபிரானது பரிசுத்தமமைந்த சன்னிதானத்தில் வந்து, அரிக்கும் உன்ன அரிது ஆம் கமலம் ஆர் அடி கண்டனள்-விஷ்ணுமூர்த்தியாலும் தியானித்துணர்தற்கரிதான தாமரைமலர்போன்ற திருவடிகளைத்தரிசித்து, பணிந்து கண்களித்தாள்—வணங்கி நேத்திரானந்தமுற்றார் எ—று.

உன்ன என்பதனீற்றகரந்தொக்கது. ஆர் உவமவுருபு. சிவபிரான் சமயம்யாவையுநிறுவினரென்பதை "கருகிருணிறத்து மாயனு கமமே கமலம்வாழ் பிரமனு கமமே- யருகனு கமமே புத்தனு கமமே யறையுலோ காயத னாமே-மருவுசாங் கியமே தருக்கசாத் திரமீமாஞ்சமே யிவைசளு மின்னு-மிருநிலத் துளபன் னூல்களுஞ் சயமே யெம்பிரான் படைத்தனன் மாதோ" என்னுஞ்சூதசங்கிதைச்செய்யுளானும், 'எம்மத நிலையு நின்னருணிலையி விலங்குத லறிந்தனன்' என்னும் இராமலிங்கபிள்ளையவர்கள் வாக்கானும் அறிக. (௬)

உம்பர் யாவருங் குறையிரந் திடலுநீ யுதவுஞ்
செம்பொ றித்தொகை யாற்றலும் வெம்மையுந் தெரிந்து
வெம்பி முற்றுடல் பதைப்புற வகன்றிவண் மீண்டே
னெம்பெ ருந்தகை யவ்வழ னீக்கலா லென்றாள்.

இ—ள்: உம்பர் யாவரும் குறையிரந்திடலும் நீ உதவும் செம் பொறித்தொகை ஆற்றலும் வெம்மையும் தெரிந்து—(அவ்வுமாதேவியார் சிவபிரானைநோக்கி இறைவரே!) தேவர்களனைவரும் பிரார்த்திக்கத் தேவரீர் தோற்றுவித்த செவ்விய அக்கினிப்பொறிக்கூட்டத்தினது வலிமையையும் வெப்பத்தையுங் கண்டு, முற்று உடல் வெம்பி பதைப்புற அகன்று—சரீரமுழுதும் வெதும்பிப்பதைக்க ஓடிச்சென்று, எம் பெருந்தகை அவ் அழல் நீக்கலால் இவண் மீண்டேன்—எமது தலைவராகிய தேவரீர் அவ்வக்கினியை யகற்றுதலால் இவ்விடத்துத்திரும்பினேனென்று கூறியருளினார் எ—று.

பெருந்தகை-அன்மொழித்தொகை. பெருமையாகிய தகுதியையுடையவனென்பது பொருள். (௭)

கன்னி யிங்ஙனம் பகர்தலுங் கருணைசெய் தருளித்
தன்னி டத்தினி லிருத்தின னிருந்திடு தையன்
முன்ன மோடலிற் சிதறுநூ புரமணி முழுது
மென்னை யாளுடை நாயகன் முன்னிலங் கினவால்.

இ—ள்: கன்னி இங்ஙனம் பகர்தலும்—உமாதேவியாரிவ்வாறு விண்ணப்பஞ் செய்ய, கருணை செய்தருளி தன் இடத்தினில் இருத்தினன்—கிருபைசெய்தருளித் தமது இடப்பாகத்தில் அத்தேவியாரை இருத்தியருளினார், இருந்திடு தையல் முன்னம் ஓடலில் சிதறும் நூபுர மணி முழுதும்—அவ்வாறிருந்த உமாதேவியார் முன்னரே [அக்கினிப்பொறிதோன்றியபொழுது] பயந்தோடுதலாற் சிலம்பினின்றுஞ்சிதறிய இரத்தினங்களெல்லாம், என்னை ஆள் உடை நாயகன் முன் இலங்கின—எங்களை அடிமையாகவுடைய தலைவராகிய சிவபிரானது திருமுன்னிலையில் விளங்கின எ—று. (௬)

தளிரின் மெல்லடிப் பரிபுர மாயின தணந்து
மிளிரு மந்நவ மணிகளி னாணையால் விமலை
யொளிரு நல்லுருத் தோன்றின வைம்முகத் தொருவன்
றெளிரு முச்சுட ரகத்திடை யமர்ந்திடுஞ் செயல்போல்.

இ—ள்: ஐம் முகத்து ஒருவன் தெளிரும் முச்சுடர் அகத்திடை அமர்ந்திடும் செயல்போல்—ஐந்து திருமுகங்களையுடைய ஒப்பற்ற சிவபிரான் பிரகாசிக்கின்ற சோமசூரியாக்கினிமண்டலங்களின் மத்தியத்திற் பரஞ்சோதியாய் வீற்றிருந்தருளுந்தன்மையைப்போல, தளிரில் மெல் அடி பரிபுரம் ஆயின தணந்து மிளிரும் அ நவமணிகளின்—மாந்தளிரைப்போன்ற மெல்லிய பாதங்களிலுள்ள சிலம்புகளினின்றும் உதிர்ந்து விளங்குகின்ற அந்த நவரத்தினங்களில், ஆணையால்—(சிவபிரானது) கட்டளையினால், விமலை ஒளிரும் நல் உரு தோன்றின—உமாதேவியாரது பிரகாசிக்கின்ற நல்ல சாயை தோற்றின எ—று.

"பரப்பியகா-லஞ்சநறுந் தூவி யனிச்சமசோ கங்கமலம்-பஞ்சிலவு மாந்தளிரொப் பாம்" என உபமானசங்கிரகங்கூறுதலின் தளிரைமாந்தளிரென்றும்; அசோகந்தளிரெனினுமாம். ஆயின-வினையாலணையும்பெயர். செயல்போல் தோன்றின என இயையும். ()

எண்ணி லாநவ மணிகளி னுமையுரு வெனைத்துங்
கண்ணி னாற்றெரிந் தருளினால் வம்மெனக் கழற
வண்ண லோர்வகை மணிக்கொரு சத்திக ளாக
நண்ணி னார்நவ சத்திக ளமரர்நற் றவத்தால்.

இ—ள்: அண்ணல்—சிவபிரான், எண் இலா நவமணிகளின்— அளவிடப்படாத நவரத்தினங்களில், உமை உரு எனைத்தும் கண்ணினால் தெரிந்து—உமாதேவியாரது சாயையனைத்தையுங் கண்ணினாற்பார்த்து, அருளினால் வம் என கழற- கிருபையோடும் வருதிரென்று திருவாய்மலர்ந்தருள, ஓர்வகை மணிக்கு ஒரு சத்திகள் ஆக— ஒவ்வோரிரத்தினங்களுக்கொவ்வொருசத்தியாக, நவசத்திகள்— ஒன்பது சத்தியர்கள், அமரர் நல் தவத்தால் நண்ணினார்-தேவர்களியற்றிய நல்ல தவத்தினாற்றோன்றினார்கள் எ—று.

அருளினால் கழற எனவியையும். சூரனுதியரைச்சங்கரித்தற்குரிய படைவீரரைப்பெறுபவராதலின் 'அமரர்நற்றவத்தால்நண்ணினார்' என்றார். (௮)

பருப்ப தக்கொடி புரைநவ சத்திகள் பரமன்
றிருப்ப தத்திடை வணங்கினின் றவனிடைச் சிந்தை

விருப்பம் வைத்தலு முனிவர்த மகளிர்போல் விரைவிற்
கருப்ப முற்றனர் யாவது முமையவள் கண்டாள்.

இ—ள்: பருப்பதக்கொடி புரை நவசத்திகள்—இமையமலையரசன் புதல்வியாகிய உமாதேவியாரைப்போன்ற ஒன்பது சத்தியர்களும், பரமன் திரு பதத்திடை வணங்கி நின்று—சிவபிரானது சிறந்த பாதங்களில் நமஸ்கரித்துநின்று, அவனிடை சிந்தை விருப்பம் வைத்தலும்—அச்சிவபிரானிடத்து மனவிருப்பம் வைத்தவுடன், முனிவர்தம் மகளிர் போல் விரைவில் கருப்பம் உற்றனர்— (தாருகவனத்து) முனிபத்தினிகளைப் போலச் சீக்கிரத்திற் கருப்பமாயினர், யாவதும் உமையவள் கண்டாள்- அந்நிகழ்ச்சிகளனைத்தையும் உமாதேவியார் பார்த்தருளினர் எ—று.

தாருகவனத்துமுனிபன்னியர் பிக்ஷாடனத்திருவுருவங்கொண்டருளிய சிவபிரானைத்தரிசித்துக் காமங்கொண்டமாத்திரத்தே கருப்பமெய்தியதுபோல, நவசத்திகளும் சிவபிரானைக்காமித்தமாத்திரத்தே கருப்பமெய்தினராதலின் 'முனிவர்தமகளிர்போல்விரைவிற்கருப்பமெய்தினர்' என்றார். (௰)

முனம்பு ரிந்துல களித்தவ ளனையர்பான் முதிருஞ்
சினம்பு ரிந்திவ ணெமக்குமா றாகிய திறத்தாற்
கனம்பு ரிந்தவிக் கருப்பமோ டிருத்திர்பல் கால
மினம்பு ரிந்தநீர் யாவரு மென்றுசூ ளிசைத்தாள்.

இ—ள்: முனம் புரிந்து உலகு அளித்தவள்— முற்காலத்திலே விரும்பி உலகங்களைப்படைத்தவராகிய உமாதேவியார், அனையர்பால் முதிரும் சினம் புரிந்து-அச்சத்தியர்மாட்டு மிகவுங்கோபமுற்று, இனம் புரிந்த நீர்— கூட்டமாகிய நீவிரொன்பதின்மரும், இவண் எமக்கு மாறு ஆகிய திறத்தால்—இவ்விடத்து நமக்கு விரோதிகளான காரணத்தால், கனம் புரிந்த இ கருப்பமோடு பல்காலம் இருத்திர் என்று—பாரமாகிய இந்தக்கருப்பத்தைச்சுமந்துகொண்டு பலகாலம் இருக்கக்கடவீர்களென்று, சூள் இசைத்தாள்- சாபங்கூறினர் எ—று.

எமக்குமாறுகியதிறமென்றது தமது தலைவரைக்காமித்துக்கருப்பமெய்தியதை.

ஆவ தெல்லையி னடுக்கமுற் றஞ்சியே யங்கண்
மேவு மாதர்மெய் வியர்த்தன ரவ்வியர்ப் பதனிற்
றேவ தேவன தருளினாற் றினகரத் திரள்போ
லோவி லாவிறல் வீரர்க ளிலக்கர்வந் துதித்தார்.

இ—ள்: ஆவது எல்லையில்-அச்சமயத்தில், அங்கண் மேவும் மாதர் நடுக்கமுற்று அஞ்சி மெய் வியர்த்தனர்-அவ்விடத்துநின்ற சத்தியர்கள் ஒன்பதின்மரும் நடுங்கிப்பயந்து சரீரம் வெயர்க்கப்பெற்றார்கள், அவ் வியர்ப்பு அதனில்-அந்த வெயர்வையினின்றும், ஓ இலா விறல் வீரர்கள் இலக்கர்-ஒழிதவில்லாத வலிமையினையுடைய இலக்கம்வீரர்கள், தேவ தேவனது அருளினால்—தேவாதிதேவராகிய சிவபிரானது அனுக்கிரகத்தினால், தினகரத்திரள் போல் வந்து உதித்தார்—சூரியர்கூட்டம் உதயஞ்செய்தாற்போல வந்து அவதரித்தார்கள் எ—று.

தேவதேவனதருளினால் உதித்தார் என இயையும். பேரொளியோடு தோன்றினராதலின் 'தினகரத்திரள்போல்' என்றார். (கக)

வடுத்த னைப்பொருங் கண்ணினர் வியர்ப்பினில் வந்தாங்
கடுத்த மானவ ரோரிலக் கத்தரு மசனி
கடுத்த சொல்லினர் பொற்றுகி லுடையினர் கரத்தி
லெடுத்த வாளினர் பலகைய ராகியீண் டினரால்.

இ—ள்: வடி தனை பொரும் கண்ணினர் வியர்ப்பினில் வந்து அடுத்த மானவர் ஓர் இலக்கத்தரும்— மாவடுப்பிளவைநிகர்த்த கண்ணினையுடைய நவசத்தியர்களது வெயர்வையிற்றோற்றி நெருங்கிய இலக்கம்வீரர்களும், அசனி கடுத்த சொல்லினர்—இடியைப்போன்ற வார்த்தையைப்பேசுகின்றவர்களும், பொன் துகில் உடையினர்— பீதாம்பரத்தை உடுத்தவர்களும், கரத்தில் எடுத்த வாளினர் பலகையர் ஆகி— கையிலேந்திய வாட்படையையுடையவர்களும் பரிசையையுடையவர்களுமாய், ஈண்டினர்—நெருங்கினார்கள் எ—று.

காத்திலெடுத்த என்பதைப்பலகையரென்பதனோடுமொட்டுக. வடி ஆகுபெயர்.

அனையர் யாவரு மீசனை யடைந்தன ரன்புற்
றினிய வாகிய வமலனு மங்களை யேத்தி
வனைக ருங்கழல் வணங்கிமுன் னிற்றலு மற்றப்
புனித நாயக னவர்தமை நோக்கியே புகல்வான்.

இ—ள்: அனையர் யாவரும் ஈசனை அடைந்தனர்—அவ்வீரரனைவருஞ் சிவபிரானையணுகி, அன்பு உற்று—அன்புவைத்து, இனிய ஆகிய அமலன் நாமங்களை எத்தி— நல்லனவாகிய சிவநாமங்களையோதி, வனை கரும் கழல் வணங்கி முன் நிற்றலும்— அலங்கரிக்கப்பட்ட பெரிய பாதங்களைவணங்கித் திருமுன்னிலையினிற்க, அ புனிதநாயகன்—தூய்மையினையுடைய இறைவராகிய அச்சிவபிரான், அவர்தமை நோக்கி புகல்வான்-அவ்வீரர்களைப்பார்த்து இவ்வாறு அருளிச்செய்வார் எ—று.

ஒதினோர்க்குய்திகொடுத்தலின் 'இனியவாகியவமலனுமம்' எனவும், அனாதியே பாசங்களினீங்கிநிற்றலின் 'புனிதநாயகன்' எனவும் கூறினார். (௧௩)

மைந்தர் கேண்மினோ நீவிர்கள் யாவரும் வயத்தா
லிந்தி ராதியர் பகைவரை யடுவதற் கெமது
கந்த வேள்படை யாகுதி ரென்னவே கழறி
முந்து பேரருள் புரிந்தனன் யாவர்க்கு முதல்வன்.

இ—ள்: மைந்தர் கேண்மின்—புதல்விர்காள்! (யாஞ்சொல்வதைக்)கேளுங்கள், நீவிர்கள் யாவரும்—நீவிரனைவீரும், வயத்தால் இந்திராதியர் பகைவரை அடுவதற்கு—வீரத்தோடும் இந்திரன்முதலிய தேவர்களது சத்துருக்களாகிய அவுணரைச்சங்கரித்தற்கு, எமது கந்தவேள் படை ஆகுதிர் என்ன கழறி—எமது குமாரராகிய முருகவேளுக்குச் சேனாவீரராவீரென்று திருவாய்மலர்ந்தருளி, முந்து பேர் அருள் புரிந்தனன்— முதன்மைபொருந்திய சிறந்த கிருபையைச்செய்தார், யாவர்க்கும் முதல்வன்—அனைவர்க்குந் தலைவராகிய சிவபெருமான் எ—று. (௧௪)

இன்ப நீருட னிவையருள் புரிதலு மிலக்க
நன்பெ ருந்திறன் மைந்தர்க ளாயினோர் நாளு
மன்பு மேதகு பரிசின ராகியே யமலன்
முன்பு நீங்கலா தொழுகினர் செய்பணி முறையால்.

இ—ள்: இன்ப நீருடன் இவை அருள்புரிதலும்—காருண்ணியத்துடன் இவ்வாசகங்களைச் (சிவபிரான்) அருளிச்செய்தலும், நன் பெரும் திறல் இலக்கம் மைந்தர்கள் ஆயினோர்—நல்ல பெருவலியினையுடைய இலக்கம்வீரர்களும், நாளும் அன்பு மேதகு பரிசினர் ஆகி—தினந்தோறும் அன்புவளருந் தன்மையையுடையவர்களாய், அமலன் முன்பு—சிவபிரானது திருமுன்னிலையில், நீங்கலாது—விலகாமல், செய் பணி முறையால் ஒழுகினர்—ஏவல்செய்யுமுறைமையோடு ஒழுகினார்கள் எ—று.

பரிசனராகியெனவும் பாடம். (௧௫)

மாற்ற ருஞ்சினத் தம்மைமுன் கொடுமொழி வழங்கத்
தோற்று நன்மணி யுருவமாந் தோகையர் துளங்கிப்
போற்றி வந்தனை செய்துபின் னவள்பணி புரிந்தே
யாற்று தொல்கருப் பத்துடன் பற்பக லமர்ந்தார்.

இ—ள்: மாற்ற அரும் சினத்து அம்மை முன் கொடுமொழி வழங்க— விலக்குதற்கரிய கோபத்தைக்கொண்ட உமாதேவியார் முன்னரே சாபங்கூறுதலால், தோற்றம் நல் மணி உருவம் ஆம் தோகையர் துளங்கி—பிரகாசிக்கின்ற சிறந்த நவரத்தினங்களினிறமமைந்த சத்தியர்கள் ஒன்பதின்மரும் நடுங்கி, போற்றி வந்தனை செய்து— துதித்து வழிபாடுசெய்து, பின் அவள் பணி புரிந்து— அதன்மேல் அவரது ஏவல்களைச்செய்து, ஆற்று தொல் கருப்பத்துடன் பற்பகல் அமர்ந்தார்— சுமக்கின்ற பழைய கருப்பத்தோடு பலநாளாக இருந்தார்கள் எ—று.

தோற்றுநன்மணியுருவமாந்தோகையரென்பதை நன்மணியுருவமாய்த்தோற்றுந்தோகையரெனப் பிரித்துக்கூட்டி ஏற்றவாறு பொருளுரைப்பினுமாம். பெருங்கோபமென்பார் 'மாற்றருஞ்சினம்' எனவும், பெறவேண்டியகாலத்திற்பெருதகருப்பமாதலின்'தொல்கருப்பம்' எனவும் கூறினர். (கசு)

இகலு மாமணி மகளிர்தங் கருவினு ளிறைவற்
புகழு நந்தியங் கணத்தவர் குழவியாய்ப் போந்து
நிகரில் காளைய ராகிவீற் றிருந்தனர் நெறிசேர்
சுகனெ னும்படி பரமனை முன்னியே தொழுது.

இ—ள்: இகலும் மா மணி மகளிர்தம் கருவினுள்-(ஒன்றோடொன்று) மாறுபடுகின்ற பெரிய நவரத்தினங்களில் வந்த சத்தியர்களது கருப்பத்தில், இறைவன் புகழும் நந்தியம் கணத்தவர் குழவி ஆய் போந்து— சிவபிரானைப்புகழுகின்ற நந்திகணத்தவர்கள் குழந்தைவடிவாய்ப்புகுந்து, நிகர் இல் காளையர் ஆகி— ஒப்பில்லாத காளைப்பருவத்தையுடையவர்களாய், நெறி சேர் சுகன் எனும்படி பரமனை முன்னி தொழுது வீற்றிருந்தனர்-ஞானநெறியிற்புக்க சுகப்பிரமருஷியைப்போலச் சிவபிரானைத் தியானித்துக்கைதொழுது வீற்றிருந்தார்கள் எ—று.

மணிகளிகலுதல் நிறவேற்றுமையால். காளைப்பிராயமெய்தியவழியும் கருப்பத்திற்றானே தங்கினராதலின் 'நிகரில்காளையராகிவீற்றிருந்தனர்' எனவும், சுகப்பிரமருஷி கருப்பத்திற்றானே சிவத்தியானமுடையராயிருந்தமையின் அவரையுவமித்து, 'நெறிசேர்சுகனெனும்படிபரமனைமுன்னியேதொழுது' எனவும் கூறினர். (கஎ)

அரத னங்களிற் றோன்றிய மங்கைய ரகட்டிற்
கருவின் வந்திடு மாடவ ரீசனைக் கருதிப்
புரியும் யோகுட னிருத்தலி னாற்றரும் பொறையாய்ப்
பரம தாதலு முமையுடன் பரமனைப் பணிந்தார்.

இ—ள்: அரதனங்களில் தோன்றிய மங்கையர் அகட்டில் கருவின் வந்திடும் ஆடவர்—இரத்தினங்களினின்றுந்தோற்றிய நவசத்திகளது வயிற்றிலுள்ளகருப்பத்திற் புகுந்த நந்திகணவீரர்கள், ஈசனை கருதி புரியும் யோகுடன் இருத்தலின்—சிவபிரானைக்குறித்தியற்றுகின்ற யோகசாதனையோடிருத்தலால், ஆற்ற அரும் பொறை ஆய்- தாங்கலாற்றாத சுமையாகி, பரமது ஆதலும்— பாரமேறுதலும், உமையுடன் பரமனை பணிந்தார்—(அக்கருப்பத்தைப்பெறுமாறு)உமாதேவியாரையுஞ் சிவபிரானையும் வணங்கினார்கள் எ-று.

ரத்னம் என்னும் ஆரியமொழி தமிழில் அரதனமெனத்தற்பவமாயிற்று. யோகு உகரவீற்றுப்பாவதத்திதன், அமைச்சு என்பதுபோல. ஆற்ற என்பதனீற்றகரந்தொக்கது.

இருவர் தம்மையும் பணிந்தவ ரின்றுகா றினைய
கருவி னொந்தன மின்னினி யாம்பரிக் கல்லே
மருள்பு ரிந்திடு மென்றலு மாதியங் கடவுள்
பரிவி னாலுமை திருமுக நோக்கியே பகர்வான்.

இ—ள்: இருவர் தம்மையும் பணிந்தவர்— சிவபிரானையுந் தேவியாரையும் வணங்கிய நவசத்தியர்கள், இன்றுகாறு இனைய கருவில் நொந்தனம்-- இற்றைத் தினம்வரையும் இந்தக் கருப்பத்தைச் சுமத்தலால் வருந்தினோம், இன்னினி யாம் பரிக்கல்லேம்—இனி யாங்கள் சுமத்தலாற்றேம், அருள்புரிந்திடும் என்றலும்—கிருபைசெய்தருளுகவென்று பிரார்த்தித்தவுடன், ஆதியம் கடவுள்—முதற்கடவுளாகிய சிவபெருமான், பரிவினால் உமை திருமுகம் நோக்கி பகர்வான்—கருணையோடும் உமாதேவியாரதுஅழகிய முகத்தைப்பார்த்து (இவ்வாறு) திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

தேவியார் முகங்கோடற்கேற்ப நோக்கியென்பார் 'பரிவினால்-நோக்கி' என்றார். அதற்கேற்பவே பிற்செய்யுளினும் 'ஏலவார்குழற்கவுரி' எனவிளித்தார். (௧௧)

ஏல வார்குழற் கவுரிநின் செய்யதா ளிடையிற்
சாலு நூபுரத் துதித்தவ ருனதுசா பத்தாற்
சூலி னான்மிக மெலிந்தனர் பற்பகல் சுமந்தார்
பால ரைப்பெற வினியருள் புரிகெனப் பணித்தான்.

இ—ள்: ஏல வார் குழல் கவுரி—மயிர்ச்சாந்தையணிந்த நீண்ட கூந்தலையுடைய தேவியே!, நின் செய்ய தாள் இடையில் சாலும் நூபுரத்து உதித்தவர்—உனது சிவந்த பாதத்திற்பொருந்திய சிலம்பின்கண்ணேதோற்றிய இப்பெண்கள், உனது சாபத்தால் சூலினால் மிக மெலிந்தனர்—உன்னுடைய சாபத்தினாற் கருப்பத்தைத்தாங்கலாற்றாது மிகவுந்தளர்ந்து, பற்பகல் சுமந்தார்—பலநாளாகச்சுமந்தார்கள் (ஆதலின்), இனி பாலரை பெற அருள்புரிக என பணித்தான்—இனிச்சிறுவரைப்பெறுமாறு கிருபைசெய்கவென்று கட்டளையிட்டருளினார் எ—று.

கவுரி-அண்மைவிளி. மெலிந்தனர் முற்றெச்சம். சாபத்தாற்சுமந்தார் என வினையும். நின்மாட்டேதோன்றினாரை நீ சாபமிட்டதும்,இதுகாறுமதனைத்தவிர்க்காதிருப்பதுந் தவறுமென்பதுதோன்ற 'நின்செய்யதாளிடையிற்சாலு நூபுரத்துதித்தவருனதுசாபத்தாற் சூலினான்மிகமெலிந்தனர்' என்றார். (௨௰)

இறைவ னிங்கிது பணித்தலு நன்றென விசையா
முறுவல் செய்துமை மாதரை நோக்கிமொய்ம் பினரைப்
பெறுதி ராலினி யென்றலு மவர்வயிற் பெயரா
துறையும் யோகுடை வீரர்க ளித்திற முணர்ந்தார்.

இ—ள்: இறைவன் இங்கிது பணித்தலும்—சிவபிரான் இதனைக்கட்டளையிடுதலும், உமை— உமாதேவியார், நன்று என இசையா— நல்லதென்றுசம்மதித்து, முறுவல் செய்து—குறுநகைசெய்து, மாதரை நோக்கி— சத்தியர்களைப்பார்த்து, இனி மொய்ம்பினரை பெறுதிர் என்றலும்- இனி வீரர்களைப் பெறுங்களென்று கூறியருள, அவர்வயின் பெயராது உறையும் யோகு உடை வீரர்கள் இத்திறம் உணர்ந்தார்—அச்சத்தியர்களது வயிற்றின்கண்ணே அசைவின்றி வசிக்கின்ற யோகசாதனையையுடைய வீரர் ஒன்பதின்மரும் இத்தன்மையை அறிந்தார்கள் எ—று.

கோபந்தணிந்தமைதோன்ற முறுவல்செய்தனரென்க. இத்திறமென்றது சிவபிரான் தேவியார்க்குக் கட்டளையிடத் தேவியார் சத்தியர்க்கருளியதை. (௨௧)

மறத்த லில்லதோ ருணர்வுடை வீரர்கண் மற்றித்
திறத்தை நாடியே யோகுவிட் டுளமகிழ் சிறப்ப
விறத்த னீங்கிய பரம்பொரு ளருண்முறை யிறைஞ்சிப்
பிறத்த லுன்னியே முயன்றன ராயிடைப் பெயர்வார்.

இ—ள்: மறத்தல் இல்லது ஓர் உணர்வு உடை வீரர்கள்— மறதியற்ற பேரறிவினையுடைய வீரர்கள், இ திறத்தை நாடி—இத்தன்மையையறிந்து, யோகு விட்டு—யோகசாதனையை நீங்கி— உளமகிழ் சிறப்ப— மனமகிழ்ச்சி மிக, இறத்தல் நீங்கிய பரம்பொருள் அருள் முறை இறைஞ்சி—அழிவற்ற சிவபிரானது கிருபைமுறையைத் துதித்து, பிறத்தல் உன்னி முயன்றனர் ஆயிடை பெயர்வார்— பிறக்குமாறு சிந்தித்து முயன்று அக்கருப்பத்தினின்றும் நீங்குவாராயினூர் எ—று.

இத்திறத்தை நாடினரென்பதற்கேற்ப 'மறத்தலில்லதோருணர்வுடைவீரர்' என்றூர். (உஉ)

பரிபு ரந்தனின் முன்வரு மங்கையர் பரைதன்
கருணை கொண்டசொற் கேட்டலுங் கவற்சியை யகன்று
விரைவின் மேலவர் பதம்பணிந் தேத்தியே விடைகொண்
டொருவி மைந்தரை யளித்தனர் யாவரு மொருசார்.

இ—ள்: பரிபுரம் தனில் முன் வரும் மங்கையர் யாவரும்— திருவடிச்சிலம்பினின்றும்முன்னைநாளிற்றோன்றிய சத்தியரொன்பதின்மரும், பரைதன் கருணை கொண்ட சொல் கேட்டலும்—உமாதேவியாரது கிருபையமைந்த வார்த்தையைக்கேட்டவுடன், கவற்சியை அகன்று—மனவருத்தத்தைநீங்கி, விரைவில் மேலவர் பதம் பணிந்து ஏத்தி— சீக்கிரத்தில் மேன்மையினையுடையவர்களாகிய சிவபிரானதும் அத்தேவியாரதும் பாதங்களைவணங்கித் துதித்து, விடை கொண்டு ஒருவி—(அவர்களிடத்து) அநுமதிபெற்றுக்கொண்டு (அவ்விடத்தினின்றும்)நீங்கி, ஒருசார் மைந்தரை அளித்தனர்—ஓர்பக்கத்திலேபோய்ப் புத்திரர்களைப் பெற்றூர்கள் எ—று.

சாபநிவிர்த்தியைத்தரும் வசனமாதலின் 'கருணைகொண்டசொல்' எனவும், அவ்வசனந்தோன்றியவுடன் புதல்வருந்தோன்றுவாதலின் 'விரைவில்......ஒருவி' எனவும் கூறினூர். (உங)

நந்தி தன்கண முதல்வர்க ளாகியே நணியோர்
பந்த நீங்கியே சனித்தன ரொன்றிலாப் பதின்ம
ரெந்தை யாரருள் பெயர்கொடே யிருநில வரைப்பிற்
சுந்த ரன்விடை முகத்தவன் றோன்றிய வாபோல்.

இ—ள்: சுந்தரன் விடை முகத்தவன்— சுந்தரமூர்த்தியும் இடபமுகத்தையுடைய திருநந்திதேவரும், எந்தையார் அருள் பெயர் கொடு இரு நிலவரைப்பில் தோன்றியவா போல்—எம்பெருமானாகிய சிவபிரானருளிய திருநாமத்தைக்கொண்டு (முற்காலத்திலே) பெரிய பூவுலகத்திற்றோன்றிய தன்மைபோல, நந்திதன்கண முதல்வர்கள் ஆகி நணியோர் ஒன்று இலா பதின்மர்— நந்திகணத்தலைவர்களாகியுள்ள ஒன்பதின்மரும், பந்தம் நீங்கி சனித்தனர்—தடைநீங்கப்பெற்றுப் பிறந்தார்கள் எ—று.

சுந்தரமூர்த்தியுந் திருநந்திதேவரும் முன்னுள்ள திருநாமங்களுடன் பூமியிற் பிறந்தாற்போல நந்திகணவீரரும் முன்னுள்ளபெயர்களுடன் தோன்றினரென்பதாம். பந்தம் பாசமென்பாருமுளர். தோன்றியவாறென்பதில் ஈற்றுயிர்மெய் தொக்கது.

ஆலாலசுந்தரரென்பவர் திருக்கைலாசமலையிற் சிவபிரானைச் சேவித்துவருநாளில், உமாதேவியாரது சேடியர்களாகிய அநிந்திதை கமலினி என்னும் பெண்களிற் காதல்கொண்டமையின், சுந்தரமூர்த்தியென்னும் பெயருடனே பூமியிற்பிறந்து, தாம்விரும்பிய இருபெண்களும் பரவையார் சங்கிலியார் என்னுமிருபெயருடன் பிறந்துவளர, அவர்களைமணஞ்செய்து, சிவபெருமானாற்றடுத்தாட்கொள்ளப்பட்டனர். இச்சரித்திரவிரிவைத் திருத்தொண்டர்புராணத்திற் காண்க. திருநந்திதேவருதித்த சரித்திரத்தை முன்னர்க்காமதகனப்படலத்திற் காட்டினம். (உச)

பேர வாகுவை யுடையவ னிளவல்பே ரருளாற்
சூர வாகுலம் வானவர் பெருவகை தொலைப்பா
னேர வாகுறுஞ் செம்மணிப் பாவைதன் னிடத்தில்
வீர வாகுவந் துதித்தன னுலகெலாம் வியப்ப.

இ-ள்: பேர ஆகுவை உடையவன் இளவல் பேர் அருளால்-பெரிய மூஷிகத்தை வாகனமாகவுடைய விநாயகக்கடவுளது தம்பியாகிய சுப்பிரமணியக்கடவுளது சிறந்த திருவருளால், சூர ஆகுலம் வானவர் பெருவகை தொலைப்பான்— சூரபன்மனால் விளையுந்துன்பத்தைத் தேவர்கள்பெருவண்ணம்அழிக்கும்பொருட்டு, ஏர ஆகு உறும் செம்மணிப்பாவை தன் இடத்தில்- அழகின்சிறப்பமைந்த மாணிக்கவல்லியினிடத்தே, உலகு எலாம் வியப்ப—உலகத்திலுள்ளாரனைவரும் புகழும்படி, வீரவாகு வந்து உதித்தனன்— வீரவாகுவென்பவர் வந்து அவதரித்தார் எ—று.

பேர குறிப்புப்பெயரெச்சம். சூர ஏர என்பவற்றில் அகரம் ஆறனுருபு. இளவல்பேரருளால் என்றதனாற் குமாரக்கடவுளது படைவீரரென்பதும், சூரவாகுலம் வானவர் பெருவகை தொலைப்பானென்றதனாற் சூர்படையைத்தொலைக்குமாறென்பதும் பெற்றாம். அருளால் தொலைப்பான் உதித்தனன் எனஇயையும். பாவை உலகு ஆகுபெயர்கள்.

விரள வல்லியார் தந்திசூ ரரிவியன் படையாங்
கரள வல்லிரு ளகற்றுவா னெழுந்தவெண் கதிர்போற்
றிரள வல்லினை யணையபூண் முலையுடைத் தெய்வத்
தரள வல்லிபாற் றோன்றினன் வீரகே சரியே.

இ—ள்: விரள வல்லி ஆர் தந்தி சூர் அரி வியன் படை ஆம் கரள வல் இருள் அகற்றுவான் எழுந்த வெண் கதிர் போல்— நெகிழ்வான விலங்குபொருந்திய யானையின் முகத்தையுடைய தாரகாசுரன் சூரபன்மன் சிங்கமுகாசுரன்என்னுமிவர்களது பெரிய சைனியமாகிய கரிய வலிய இருளைப் போக்கும்படி தோன்றிய பூரணசந்திரனைப்போல, திரள வல்லினை அனைய பூண் முலை உடை தெய்வ தரளவல்லி பால்-திரட்சியினையுடைய சூதாடுகருவியைநிகர்த்த ஆபரணங்களையணிந்த தனங்களையுடைய தெய்வத்தன்மைபொருந்திய முத்துவல்லியினிடத்து, வீரகேசரி தோன்றினன்— வீரகேசரியென்பவர் அவதரித்தார் எ—று.

விரளம் நெகிழ்வு. நெகிழ்வான விலங்கையுடைய யானையெனவே விலங்கை நெகிழ்க்கின்ற யானை [மதயானை] என்பது பெற்றாம். தந்தி அரி கரளம் என்பன ஆகுபெயர்கள். விரளம் நீக்கமெனப் பொருள்கொண்டு விலங்குபூணுதல்நீங்கிய யானையெனப் பொருள்கூறுவர் சிலர்; அவர் விரளவல்லியார்தந்தியென்பது பாயாவேங்கையென்புழிப் போற் குறிப்புமொழியாய், தாரகனையுணர்த்திற்றென்பர். அரசென்னும் பண்புப்பெயர் பண்பியையுணர்த்தினாற்போலச் சூரென்பது சூரனையுணர்த்திற்று. வெண்கதிர்- அன்மொழித்தொகை. வெண்மையான கதிர்களையுடையது எனவிரியும். திரள-குறிப்புப்பெய

ரெச்சம். வெண்கதிர்போல் தோன்றினன் என இயையும். கரளவல்லிருளகற்றுதற்கேற்பச் சந்திரனை 'வெண்கதிர்' என்றார். (உசு)

மக்கள் வானவர்க் கருந்துயர் புரியும்வல் லவுணர்
தொக்க வீரமா மகேந்திரப் பெருவளந் தொலையச்
செக்கர் நூபுரப் புட்பரா கத்திபாற் சிறப்பாற்
றக்க வீரமா மகேந்திரன் வந்தவ தரித்தான்.

இ—ள்: மக்கள் வானவர்க்கு அரும் துயர் புரியும் வல் அவுணர் தொக்க வீரமா மகேந்திர பெரு வளம் தொலைய—மனிதர்க்குந்தேவர்க்கும் பெருந்துன்பத்தைச்செய்த வலிய அசுரர்கள் குழுமிய வீரமாமகேந்திரத்திலுள்ள பெரிய வளங்களழியும்படி, செக்கர் நூபுர புட்பராகத்திபால்—சிவந்தநிறத்தையுடைய சிலம்பினின்றுந்தோற்றிய புட்பராகவல்லியினிடத்து, சிறப்பால் தக்க வீரமாமகேந்திரன் வந்து அவதரித்தான்—சிறப்பின் மேம்பட்ட வீரமாமகேந்திரரென்பவர் வந்துபிறந்தார் எ—று.

மக்கட்கு வானவர்க்கு எனக் குவ்வுருபைத் தனித்தனியொட்டுக. தொலைய அவதரித்தானெனவியையும். நூபுரப்புட்பராகத்தி-நூபுரத்தையணிந்த புட்பராகத்தியெனினுமாம். (உஎ)

ஆதவத்தனிக் கடவுளும் வடவையா ரழலுஞ்
சீதளப்புது மதியமும் வெள்குறத் திகழ்கோ
மேதகத்தமர் பாவைபால் விண்ணவர் புரியு
மாதவத்தினால் வீரமா மகேச்சுரன் வந்தான்.

இ—ள்: தனி ஆதவக்கடவுளும் வடவை ஆர் அழலும் சீதள புது மதியமும் வெள்குற திகழ்— ஒப்பற்ற சூரியனும் வடவாமுகாக்கினியும் குளிர்ச்சியையுடைய புதிய சந்திரனும் வெட்கும்படி ஒளிருகின்ற, கோமேதகத்து அமர் பாவை பால்—கோமேதகரத்தினத்திற்றோன்றியபெண்ணினிடத்து, விண்ணவர் புரியும் மா தவத்தினால் வீரமாமகேச்சுரன் வந்தான்—தேவர்கள் செய்த பெரியதவத்தினால் வீரமாமகேச்சுரரென்பவர் அவதரித்தார் எ-று.

வடவை ஆர் அழல்-பெண்குதிரையிற்றோன்றிய அக்கினி. நிறைமதியென்பார் 'சீதளப்புதுமதியம்' என்றார். கோமேதகத்தமர்பாவை-கோமேதகவல்லி. அவுணரையழித்துத் தேவரைப்புரத்தலின் 'விண்ணவர்புரியுமாதவத்தினால் வந்தான்' என்றார். (உஅ)

தான மாநிலத் தேவர்கண் மகிழ்வுறத் தருவ
ரான பேரெலா முடிவுற வறந்தலை யெடுப்பக்
கானல் சேர்வயி ரேரிய மின்னிடைக் கழற்கான்
மான வீரமா புரந்தர னென்பவன் வந்தான்.

இ—ள்: மா தானநில தேவர்கள் மகிழ்வு உற—பெரிய சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்கள் உவகையடையவும், தருவர் ஆன பேர் எலாம் முடிவு உற-அசுரகுலத்தினரனைவரும் இறக்கவும், அறம் தலையெடுப்ப—தருமம் வளரவும், கானல் சேர் வயிரேரிய மின் இடை—ஒளிபொருந்திய வயிரேரியரத்தினத்திற்றோன்றிய பெண்ணினிடத்து, கழல் கால் மான வீரமாபுரந்தரன் என்பவன் வந்தான்—வீரக்கழலையணிந்த பாதத்தையுடைய மதிக்கப்படுகின்ற வீரமாபுரந்தரரென்பவர் அவதரித்தார் எ—று.

வயிரேரியமின்-வயிரேரியவல்லி. மகிழ்வுற முடிவுற தலையெடுப்ப என்னுஞ் செயவெனெச்சங்கள் காரியப்பொருளவாய், வந்தான் என்னுமுற்றோடியைந்தன. பகைவரை அறநெறிகோடாதடர்த்து வெல்லுமாற்றலுடையரென்பார் 'கழற்கால்மானவீரமாபுரந்தரன்' என்றார். (உகூ)

சூர ராக்கமுந் துணைவர்த மாக்கமுஞ் சூழுந்
தீர ராக்கமும் வானவ ரேக்கமுஞ் சிதைய
வார ராக்கமழ் கொன்றைவே ணியனரு ளதனால்
வீர ராக்கதன் வந்தனன் வயிரமெல் லியல்பால்.

இ—ள்: சூரர் ஆக்கமும் துணைவர்தம் ஆக்கமும் சூழும் தீரர் ஆக்கமும் வானவர் ஏக்கமும் சிதைய— சூரபன்மனது வளமும் தம்பிமாரதுவளமும் அவர்களைச்சூழ்ந்திருக்கும் வீரர்களது வளமும் தேவர்களது துயருந் தீரும்பொருட்டு, வார் அரா கமழ் கொன்றை வேணியன் அருள் அதனால்—நீண்ட சர்ப்பத்தையும் மணம்வீசுகின்ற கொன்றை மலரையுமணிந்த சடையையுடைய சிவபிரானது கிருபையினால், வயிரமெல்லியல் பால்-வச்சிரவல்லியினிடத்து, வீரராக்கதன் வந்தனன்— வீரராக்கதரென்பவர் அவதரித்தார் எ—று.

சிதைய வந்தனன் என இயையும். சூரரெனப்பன்மைபடுத்தியது இழிவுபற்றி.

கரக தத்தனி மால்வரை யெடுத்தொரு கணத்திற்
புரக தத்தினை யிழைத்தவ னருளினாற் புணரிக்
குரக தத்திடைப் பைங்கனல் கொம்மென வெழல்போன்
மரக தத்திபால் வீரமார்த் தாண்டன்வந் தனனே.

இ—ள்: கர கத தனி மால் வரை எடுத்து—திருக்கரத்தினாலே வேகத்தோடும் ஒப்பற்ற பெரிய மேருமலையைத் தூக்கி, ஒரு கணத்தில் புர கதத்தினை இழைத்தவன் அருளினால்—ஒருகணப்பொழுதில் திரிபுரசங்காரத்தையியற்றிய சிவபிரானது கருணையினால், புணரி குரகதத்திடைப் பைங்கனல் கொம்மென எழல் போல்—சமுத்திரத்தின்கண் வடவாமுகாக்கினி விரைவிற்றோன்றுதல்போல, மரகதத்திபால் வீரமார்த்தாண்டன் வந்தனன்—மரகதவல்லியினிடத்து வீரமார்த்தாண்டரென்பவர் அவதரித்தார் எ—று.

கரகதத்தனிமால்வரை என்பதற்கு, கையகப்பட்டதாகிய ஒப்பற்ற பெரியமலை யெனினுமாம். குரகதத்திடைப்பைங்கனல்-குதிரையினின்றுந்தோன்றிய பசிய நெருப்பு. மரகதவல்லிக்குச் சமுத்திரமும் வீரமார்த்தாண்டருக்கு வடவாமுகாக்கினியுமுபமானம். வீரமார்த்தாண்டருக்கு வடவையையுவமித்தது உக்கிரரூபம்பற்றி, நிறத்தாலன்று. நிறத்தாலெனில் 'தந்தமன்னையர்நிறங்கொடே' எனப் பின்னர்க்கூறுவதோடுமுரணுமென்க. 'அருளினால்-வந்தனன்' என இயையும். புரஹதம் என்னும் ஆரியமொழி புரகதம் எனத் தமிழில்வழங்கிற்று. (ஙக)

மையன் மால்கரி வாம்பரி விரவிய மணித்தேர்
வெய்ய தானவர் பஃறொகை யிமைப்பினில் விளிய
மொய்யி னார்த்தடு மானவன் பவளமா மொழிப்பேர்த்
தைய றன்வயின் வலியவீ ராந்தகன் சனித்தான்.

இ—ள்: மையல் மால் கரி-மதமயக்கம்பொருந்திய பெரிய யானையும், வாம் பரி-தாவிச்செல்கின்ற குதிரையும், மணி விரவிய தேர்— மணிகள் நெருங்கிய தேர்களும், வெய்ய தானவர் பல் தொகை இமைப்பினில் விளிய—கொடிய அசுரர்களது பல கூட்டங்களும் கொடிப்பொழுதிலழியும்பொருட்டு, மொய்யின் ஆர்த்து அடும் மானவன்—போரில் ஆரவாரித்துக்கொல்லுகின்ற வீரராகிய, வலிய வீராந்தகன்— வலிமையையுடைய வீராந்தகரென்பவர், பவள மா மொழி பேர் தையல் தன் இடை சனித்தான்—பவளவல்லியினிடத்து அவுதரித்தார் எ—று.

கரி பரி தேர் தானவர் பலெருகையெனவே சதுரங்க சைனியங்களென்பதூ பெற்றும். பவளமாமொழிப்பேர்த்தையல்- பெரிய பவளமென்னுஞ்சொல்லைத் தன்பெயரா கவுடையபெண். (௩௨)

கந்து தித்திடு வியனர மடங்கலுங் கடலின்
முந்து தித்திடு மாலமும் வடவையு முரண
நந்து தித்தன களமணிப் பாவைநற் றவத்தால்
வந்து தித்தனன் வீரதீ ரப்பெயர் வலியோன்.

இ—ள்: கந்து உதித்திடு வியன் நரமடங்கலும் கடலில் முந்து உதித்திடும் ஆலமும் வடவையும் முரண—தூணின்கட்டோன்றிய பெரிய நரசிங்கத்தையும் சமுத்திரத்தில் முற்காலத்திற்றோன்றிய ஆலாகலத்தையும் வடவாமுகாக்கினியையும்போல, நந்து உதித்து அன களமணிப்பாவை நல் தவத்தால்—சங்கு தோன்றினாற்போன்ற [சங்குபோன்ற] கழுத்தினையுடைய இந்திரநீலவல்லியியற்றிய நல்ல தவத்தினால், வீரதீர பெயர் வலியோன் வந்து உதித்தனன்—வீரதீரரென்னும்பெயரையுடையவலியவர் வந்து அவதரித்தார் எ—று.

முரண என்னும் வினையெச்சம் உவமைகுறித்துநின்றது. மணி- இந்திரநீலம். நந்துதித்தநற்களமணி எனவும்பாடம். அது பாடமாங்கால், உதித்தவென்பதற்குப் போன்ற எனப்பொருளுரைக்க. நரமடங்கல் முதலியனபோல்வது பகைவரைமுருக்குந்திறனால்.

இந்த வீரரொன் பதின்மரு மீசன தருளாற்
றந்த மன்னையர் நிறங்கொடே பொலந்துகி றூங்கி
வந்து பற்பகல் வளர்தரு முறுப்பொடு மடவா
ருந்தி யின்வழி நான்முகத் தண்ணல்போ லுதித்தார்.

இ—ள்: இந்த வீரர் ஒன்பதின்மரும்— இந்த ஒன்பதுவீரர்களும், ஈசனது அருளால்—சிவபிரானது அநுக்கிரகத்தால், தம் தம் அன்னையர் நிறம் கொடு- தங்கள் தங்கள் தாயரதுநிறத்தைப்பொருந்தி, பொலம் துகில் தாங்கி-பொன்னுடையையுடுத்து, பற்பகல் வளர்தரும் உறுப்பொடு-பலநாளாக வளர்ந்த அவயவங்களோடும், நான்முகத்து அண்ணல் போல்—நான்குமுகங்களையுடைய பிரமதேவரைப்போல, மடவார் உந்தியின்வழி வந்து உதித்தார்-நவசத்தியர்களது நாபியின்வழியே வந்து அவதரித்தார்கள் எ—று.

ஈசனதருளால், நிறங்கொடு, தாங்கி, உறுப்பொடு, உந்தியின்வழி என்பன உதித்தாரென்னும் வினைமுற்றொடு தனித்தனியியைந்தன. பிரமதேவர் திருமாலினது உந்திக்கமலத்துதித்தமையால் 'நான்முகத்தண்ணல்போல்' என்றார். தந்தமன்னையர்நிறமென்றதனால் மாணிக்கவல்லியினிடத்துத் தோன்றிய வீரவாகுதேவர் செந்தாமரைமலர்நிறமும்,முத்துவல்லியினிடத்துத்தோன்றிய வீரகேசரி பால்நிறமும், புருடராகவல்லியினிடத்துத்தோன்றிய வீரமாமகேந்திரர் பொன்னிறமும், கோமேதகவல்லியினிடத்துத்தோன்றிய வீரமாமகேச்சுரர் மஞ்சளுஞ்சிவப்புங்கலந்த நிறமும், வயிடூரியவல்லியினிடத்துத்தோன்றிய வீரமாபுரந்தரர் மயிலின்கழுத்துப்போன்றநிறமும், வயிரவல்லியினிடத்துத்தோன்றிய வீரராக்கதர் இந்திரவில்லினிறமும், மரகதவல்லியினிடத்துத்தோன்றிய வீரமார்த்தாண்டர் பசுங்கிளிநிறமும், பவளவல்லியினிடத்துத்தோன்றிய வீராந்தகர் முருக்கம்பூவினிறமும், இந்திரநீலவல்லியினிடத்துத்தோன்றிய வீரதீரர் காயாம்பூவினிறமுமுடையரென்க. பிறக்குங்காலவெல்லையின்மேலும் பலகாலங்கருப்பத்திலிருந்து வளர்ந்தமையின் 'பற்பகல்வளர்தருமுறுப்பொடு' என்றார். (௩௪)

## வேறு.

உதிதருமத் திறல்வீர ரரியணைமே லம்மையுட னுறைந்த நாதன்
பதமலர்கள் பணிந்தெழலு மவர்க்கண்டு பார்ப்பதியைப் பரிவா னோக்கி
மதியுடையர் திறலுடையர் மானவருங் கலத்தினர்நம் மைந்த ரின்னோர்
புதியரலர் நந்திதனிக் கணத்தவரென் றான்சுருதிப் பொருளாய் நின்றான்.

இ—ள்: உதிதரும் அ திறல் வீரர்—இவ்வாறவதரித்த வலிமையினையுடைய அந்த வீரர்கள் ஒன்பதின்மரும், அரியணைமேல் அம்மையுடன் உறைந்த நாதன் பதமலர்கள் பணிந்து எழலும்—சிங்காசனத்தின்மேல் தேவியாருடன் வீற்றிருந்த சிவபிரானது பாததாமரைகளை வணங்கியெழும்ப, சுருதிப்பொருள் ஆய் நின்றான்— வேதத்தின்பொருளாய்நிற்கின்ற சிவபிரான், அவர் கண்டு—அந்த வீரர்களைத்திருநோக்கஞ்செய்து, பார்ப்பதியை பரிவால் நோக்கி—(அதன்மேல்) உமாதேவியாரைக் கருணையோடும் பார்த்தருளி, இன்னோர்— இவர்கள், மதி உடையர்— (மிகுந்த) புத்தியையுடையவர்கள், திறல் உடையர்—(மிகுந்த) வலிமையையுடையவர்கள், மான அரும் கலத்தினர்—மானத்தையே அரிய ஆபரணமாகவுடையவர்கள், நம் மைந்தர்—நமது புத்திரர்கள், புதியர் அலர்—புதியவர்களல்லர், தனி நந்தி கணத்தவர் என்றான்— ஒப்பற்ற நந்திகணத்தவர்களாமென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

தனக்குமாறாகத்தோன்றிய புதல்வரென்று தேவியார் சினம்புரியாது அன்புசெய்யுமாறு நோக்கியென்பார் 'பரிவானோக்கி' எனவும், அதற்கேற்ப, உளப்படுத்தி, 'நம்மைந்தர்' எனவும் கூறினார். (௫௫)

தேவியது கேட்டுமைந்தர்க் கருள்புரிய வவர்க்கெல்லாஞ் சிவன்வெவ் வேறு
தாவில்சுடர் வாளுதவி வியர்ப்பில்வரு மோரிலக்கந் தனைய ரோடு
நீவிர்களு மொன்றிநுங்கட் கிறையவனா கியசேயை நீங்க லின்றி
யேவலவன் பணித்தனசெய் தொழுகுதிரென் றானவரு மிசைந்து தாழ்ந்தார்.

இ—ள்: தேவி அது கேட்டு மைந்தர்க்கு அருள்புரிய—உமாதேவியார் அவ்வாசகத்தைக்கேட்டுப் புதல்வர்களாகிய ஒன்பதுவீரர்க்குந்திருவருள்செய்ய, சிவன்—சிவபிரான், அவர்க்கு எல்லாம் தா இல் சுடர் வாள் வெவ்வேறு உதவி—அவர்களுக்கெல்லாம்கெடுதலில்லாத ஒளிபொருந்திய வாட்படைகளை வேறுவேறாகக்கொடுத்து, வியர்ப்பில் வரும் ஓர் இலக்கம் தனயரோடும் நீவிர்களும் ஒன்றி—வியர்வையிற்றோன்றிய இலக்கம் புதல்வருடன் நீங்களுமொருமித்து, நுங்கட்கு இறையவன் ஆகிய சேயை நீங்கல் இன்றி— உங்களுக்கு முதல்வனாகிய குமரவேளைப்பிரியாது, அவன் பணித்தன ஏவல் செய்து ஒழுகுதிர் என்றான்- அவனேவிய ஏவல்களைச்செய்து ஒழுகுவீரென்று திருவாய்மலர்ந்தருளினார், அவரும் இசைந்து தாழ்ந்தார்— அவ்வீரர்களும் அதற்குச் சம்மதித்து வணங்கினார்கள் எ—று.

பணித்தன-முற்றுப்பெயரெச்சம். (௫௬)

ஒன்பானா மிலக்கத்தோ ரோரிலக்கத் தோர்தம்மோ டொன்றிப் புல்லி
யன்பாகி யெம்பெருமான் சினகரத்தை யகலாம லங்கண் வைக
மென்பானல் புரையும்விழிச் சத்திகளோன் பதின்மர்களும் விமலக் கன்னி
தன்பாலை யிகவாம லவள்பணித்த தொழில்புரிந்து சார்த லுற்றார்.

இ—ள்: ஒன்பான் ஆம் இலக்கத்தோர்— ஒன்பதென்னுமெண்ணினையுடைய வீரர்கள், ஓர் இலக்கத்தோர் தம்மோடு ஒன்றி புல்லி—இலக்கம் வீரர்களுடன் ஒருமித்து

த்தழுவி, அன்பு ஆகி-(ஒருவரோடொருவர்) அன்புகூர்ந்து, எம்பெருமான் சினகரத்தை அகலாமல் அங்கண் வைக— எங்கள் தலைவராகிய சிவபிரானது திருக்கோயிலை நீங்காமல் அவ்விடத்தேவீற்றிருக்க, மென் பானல் புரையும் விழி சத்திகள் ஒன்பதின்மர்களும்—மென்மையான கருங்குவளைமலர்போன்றசண்களையுடைய ஒன்பதுசத்தியர்களும், விமல கன்னி தன் பாலை இகவாமல்—நின்மலையாகிய உமாதேவியாரது பக்கத்தை நீங்காமல், அவள் பணித்த தொழில் புரிந்து சார்தல் உற்றார்—அவ்வம்மையாரேவிய ஏவல்களைச்செய்துகொண்டு (அங்கே) இருந்தார்கள் எ—று.

வைக உற்றார் என இயையும். பானல் ஆகுபெயர். இலக்கமென்னுஞ்சொல்முன்னர்ப்பொதுப்பட எண்ணையும் பின்னர் ஓர் தொகையையுமுணர்த்திற்று. ஒன்பதின்மர்களுமென்பதிலும்மை முற்றேடெச்சம். (௩௭)

துணைவர்வருபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௧௦௧௪.

---

# சரவணப்படலம்.

சரவணதடாகத்தினிகழ்ந்த சம்பவங்களைக் கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

சிவபிரான் தேவிசமேதராய் இடபவாகனத்திவர்ந்து பரிசனங்கள்சூழச் சரவணவாவிக்கரையிற்சென்று ‘குமாரனைக்கொண்டுவருதி’ என்று தேவியார்க்கருள, தேவியார்சென்று, குமாரக்கடவுளது ஆறு திருவுருவங்களையுஞ் சேர்த்து ஆறு திருமுகங்களும் பன்னிரண்டுதிருப்புயங்களுமமைந்த ஒருவடிவாக்கி, உச்சிமோந்து, முதுகுநீவி, தமதுதனத்தினின்றுபெருகியபாலைக் கிண்ணத்திலேந்திப்பருக்கி, அழைத்துக்கொண்டு சிவபிரான்முன்சென்று, அவரைவணங்குவித்தனர். சிவபிரான் அவரையுந்தேவியாரையும் எடுக்கிப்பக்கத்திருத்தினர். அதன்மேற் கார்த்திகைப்பெண்கள் வந்து வணங்க, அருள்செய்து, அப்பெண்கள் வளர்த்தகாரணத்தாற்கார்த்திகேயனென்னுந் திருநாமத்தையும் அப்பெண்களது நக்ஷத்திரமாகிய கார்த்திகைநாளில் அவரைக்குறித்து விரதநோற்போர்க்கு எண்ணியசித்திகளை எளிதிலருள்வேமென்னும் வரத்தையுமருளி, அவரை இருக்குமிடத்திற்கனுப்பினர். தேவியாரது தனங்களினின்று சிந்தியபால் ஆறுபோற்பெருகிச்சரவணதடாகத்திற்புக, பராசரமுனிவரதுசாபமேற்று மீனுயிருந்த ஆறுகுமாரர்களும் அதனைப்பருகி மீனுருநீங்கிவந்து சிவபிரானைவணங்கினர். சிவபிரான் ‘திருப்பரங்குன்றத்திற்போயிருந்து தவம்புரிதிர். இக்குமாரன் அங்குவந்து அருள்செய்வன்’ என்று திருவாய்மலர்ந்தருளி அவர்களையனுப்பி, அதன்பின்னர்த் தேவியாரோடும் குமாரக்கடவுளோடுந் திருக்கைலாசமலைசேர்ந்து, திருக்கோயிலில் வீற்றிருந்தனர். இலக்கத்தொன்பதுவீரரும் அதுகண்டு குமாரக்கடவுளைச்சேவித்தனர் என்பதாம்.

ஏற்ற மானவ ரொன்றொழி பதின்மரோ டிலக்கர்
தோற்ற மெய்திய தன்மையை யித்துணை சொற்று
மாற்றல் சேர்புனற் சரவணத் தடந்தனி லறுவர்
போற்ற வைகினோன் கயிலையிற் புகுந்ததை புகல்வாம்.

இ—ள்: எற்ற மானவர் ஒன்று ஒழி பதின்மரோடு இலக்கர் தோற்றம் எய்திய தன்மையை இத்துணை சொற்றும்—தகுதியையுடைய இலக்கத்தொன்பது வீரர்களவதரித்த செயலையிதுகாறுங் கூறினோம் (இனி), ஆற்றல் சேர் புனல் சரவணத்தடம் தனில் அறுவர் போற்ற வைகினோன்—வலிமைபொருந்திய நீரையுடைய சரவணதடாகத்திற்கார்த்திகைப்பெண்களறுவரும் வளர்க்க வீற்றிருந்த குமாரக்கடவுள், கயிலையில் புகுந்தமை புகல்வாம்--திருக்கைலாசமலையிற் சென்றசரித்திரத்தைச் சொல்வாம் எ—று.

எவற்றையுமழிக்கும் வன்மையுடைய பெருநீரென்பார் 'ஆற்றல்சேர்புனல்' என்றார். (௧)

தருப்ப மிக்குளார் காணுறாத் தாவில்சீர் வெள்ளிப்
பொருப்பி லுற்றிடு பரம்பொருள் கருணையாற் பொறைகூர்
கருப்ப மற்றுயிர் முழுவதுந் தந்திடுங் கன்னிப்
பருப்ப தக்கொடிக் கவ்வழி யினையன பகர்வான்.

இ—ள்: தருப்பம் மிக்கு உளார் காணுறா-அகங்காரத்தை மிகுதியாகவுடைய தீயோர்களாலறியப்பெறாத, தா இல் சீர் வெள்ளிப்பொருப்பில் உற்றிடு பரம்பொருள்- கெடுதலில்லாத சிறப்பினையுடைய திருக்கைலாசமலையில் வீற்றிருக்கின்ற பரம்பொருளாகிய சிவபிரான், பொறை கூர் கருப்பம் அற்று உயிர் முழுவதும் தந்திடும் கன்னி பருப்பதக்கொடிக்கு—சுமைமிகுந்த கருப்பமில்லாமல் ஆன்மாக்களனைத்தையும்பெற்ற கன்னிகையாகிய பார்ப்பதிதேவியாருக்கு, அவ்வழி—அப்பொழுது, கருணையால் இனையன பகர்வான்—கிருபையோடும் இவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

காணுறா பரம்பொருள் என இயையும். பருப்பதக்கொடி அடையடுத்தவாகுபெயர். சிந்தித்தமாத்திரையானே பெற்றவென்பார் 'கருப்பமற்றுயிர்முழுவதுந்தந்திடும்' என்றார். (௨)

பொம்ம லுற்றிடு நான்முக னாதியோர் புந்தி
விம்ம லற்றிட முந்துநம் விழியிடைத் தோன்றிச்
செம்ம லர்ப்பெருஞ் சரவணத் திருந்தநின் சேயை
யிம்ம லைக்கணே யுய்க்குதும் வருகென விசைத்தான்.

இ—ள்: பொம்மல் உற்றிடும் நான்முகன் ஆதியோர் புந்தி விம்மல் அற்றிட—நெருங்கிய பிரமாமுதலிய தேவர்களது மனத்துயரந்தீருமாறு, முந்து நம் விழியிடை தோன்றி—முன்னாளில் எமது நெற்றிக்கண்களினின்றுமுதித்து, செம் மலர் பெரும் சரவணத்து இருந்த நின் சேயை—சிவந்த தாமரைமலர்களையுடைய பெரிய சரவணதடாகத்திலிருக்கின்ற உனது குமாரனை, இ மலைக்கண் உய்க்குதும்— இந்தத் திருக்கைலாசமலையினிடத்துக் கொணர்வோம், வருக என இசைத்தான்-வருவாயென்றுதிருவாய்மலர்ந்தருளினார் எ—று.

வருக என்னும் வியங்கோளீறுதொக்கது. முன்னர்த் தம்மைநீக்கிப் புதல்வரையுதிப்பித்தமையாற் கோபமுற்றனராதலின், ஈண்டுத் தங்கேள்விக்குடன்படாரென்பதுகருதி, உடன்படுத்துவார், தன்சேயை 'நின்சேய்' எனவும், அவன்றங்குதற்கேற்ற தடமென்பார் 'செம்மலர்ப்பெருஞ்சரவணம்' எனவுங்கூறினார். நஞ்சேய் எனவும்பாடம். (௩)

வேறு.

செம்புலி யதளினன் செப்பிற் றேர்தலு
மம்பிகை யுவகையோ டன்பு கொண்டெழீஇ
நம்பெரு மதலையை நாங்கொண் டேகுது
மெம்பெரு முதல்வநீ யெழுதி யாலென்றாள்.

இ—ள்: அம்பிகை—உமாதேவியார், செம் புலி அதளினன் செப்பிற்று ஓர்தலும்—செம்மையாகிய புலித்தோலை ஆடையாகவுடைய சிவபிரான்கூறிய வார்த்தையைக்கேட்டவுடன், உவகையோடு அன்பு கொண்டு எழீஇ—மகிழ்ச்சியையும் அன்பையுமுடையராகியெழுந்து, எம் பெரு முதல்வ—எமது சிறந்த தலைவரே!, நம் பெரு மதலையை நாம் கொண்டு எகுதும்—எங்களது பெரிய குழந்தையை யாங்கள் அழைத்துவருவோம், நீ எழுதி என்றாள்—தேவரீரெழுந்தருள்கவென்று பிரார்த்தித்தார் எ—று.

செப்பிற்று வினைமுற்றுத்தொழிற்பெயர். முற்செய்யுளிற் சரவணத்தமர்ந்த நின்சேயெனச் சிவபிரான்கூறியதையுளங்கொண்டமையின், 'நம்பெருமதலை' எனவும், அதுபற்றி, ஈன்றதாய்க்கு மகவின்கணுளதாய மகிழ்ச்சியையும் அன்பையுங்கொண்டு, காணவேண்டுமென்னுமாவன்மீதூர விரைந்தெழுந்தனராதலின் 'உவகையோடன்புகொண்டெழீஇ' எனவும் கூறினர் (௪)

கொம்மைவெம் முலையினாற் குறிப டுத்திய
வம்மையீ துரைத்துழி யருளி னலெழா
மைம்மலி மிடறுடை வான நாயக
னிம்மென வவளொடு மேற தேறினன்.

இ—ள்: கொம்மை வெம் முலையினால் குறிபடுத்திய அம்மை ஈது உரைத்துழி-திரண்ட விரும்பத்தக்க தனங்களினாற்றழும்புபடுத்திய உமாதேவியார் இதனைக் கூறிய பொழுது, மை மலி மிடறு உடை வானநாயகன்— நஞ்சார்ந்த திருக்கண்டத்தையுடைய தேவநாயகராகிய சிவபிரான், அருளினல் எழா—கருணையோடுமெழுந்து, இம்மென—விரைவாக, அவளொடும் ஏறது ஏறினன்—அத்தேவியாரோடும் இடபவாகனத்திலெழுந்தருளினர் எ—று.

உரைத்த உழி என்பதில் அகரந்தொக்கது. மைம்மலியென்பதில் மகரம் விரிந்தது. முலையினாற் குறிபடுத்தியசரித்திரம் முன்னருரைக்கப்பட்டது. (௫)

நந்தியி னெருத்தமே னங்கை யாளொடு
நந்திவந் திடுதலு நாக மேலுளார்
நந்திய வினைத்தொகை நந்திற் றென்றிடா
நந்திதன் கணத்தொடு நண்ணிப் போற்றினர்.

இ—ள்: நந்தி—சிவபிரான், நந்தியின் எருத்தமேல் நங்கையாளொடு வந்திடுதலும்—இடபவாகனத்தின் பிடரின்மீது உமாதேவியாருடனெழுந்தருளுதலும், நாகமேல் உளார்—சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள், நம் தீய வினை தொகை நந்திற்று என்றிடா— நாமியற்றிய தீவினைகளனைத்தும்(இப்போதே) அழிந்தனவென்றுகூறி, நந்திதன் கணத்தொடு நண்ணி போற்றினர்—நந்திகணத்தவர்களோடு கூடித் துதித்தார்கள் எ—று.

தீயவினையென்பது தொடைநோக்கி விகாரமாயிற்று. நந்தியவென்பதை ஒருமொழியாகக்கொண்டு வளர்ந்த எனப் பொருள்கூறுவாருமுளர். நந்திற்று என்றது, துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. (௬)

அந்தமில் விடத்தினை யடக்கு கையுடைச்
சுந்தர னதியாந் தொல்க ணத்தினோ
ரெந்தைத னுருவுகொண் டிருந்த மேலவர்
வந்திரு மருங்குமாய் வழுத்தி யீண்டினர்.

இ—ள்: அந்தம் இல் விடத்தினை அடக்கு கை உடை சுந்தரன் ஆதி ஆம் தொல் கணத்தினோர்-முடிவற்ற ஆலாகலத்தை அடக்கிய திருக்கரத்தினையுடைய சுந்தரர்முத

லாகிய பழைய கணத்தவர்களும், எந்தை தன் உருவு கொண்டு இருந்த மேலவர்—எம்பரமபிதாவாகிய சிவபிரானது சாரூபத்தைப்பொருந்தியிருந்த உருத்திரர்களும், இரு மருங்கும் ஆய் வந்து வழுத்தி ஈண்டினர்— இருபக்கத்தினும்வந்து துதித்து நெருங்கினர்கள் எ—று.

சுந்தரன்-அழகுடையவன். உலகமெங்கும்பரந்த நஞ்சென்பார் 'அந்தமில்விடம்' எனவும், அதனைச் சிற்றுருவாக்கி அகங்கையினடக்கிக்கொணர்ந்து சிவபிரானிடங்கொடுத்தமையானே ஆலாலசுந்தரரெனக் காரணப்பெயர்படைத்தவரென்பார் 'அந்தமில்விடத்தினையடக்குகையுடைச்சுந்தரன்' எனவும் கூறினர். இச்சரித்திரத்தை மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற்காண்க. (எ)

ஆன்முக நந்தியெம் மடிக ளுய்த்திடத்
தேன்முக நறுமலர் சிதறிச் செங்கையாற்
நான்முறை வணங்கியே கமலக் கண்ணவ
னான்முகன் மகபதி பிறரு நண்ணினர்.

இ—ள்: ஆன்முக நந்தி எம் அடிகள் உய்த்திட—இடபமுகத்தையுடைய நந்தியெம்பெருமான் உட்புகுவிக்க, கமலக்கண்ணவன் நான்முகன் மகபதி பிறரும்— தாமரைக்கண்ணராகிய திருமாலும் நான்குமுகங்களையுடைய பிரமதேவரும் இந்திரனும் ஏனையோரும், செம்கையால் தேன் முக நறு மலர் சிதறி—சிவந்தகைகளால் தேனைத் தன்னிடத்துடைய மணங்கமழுகின்ற பூக்களைச்சிந்தி, சால் முறை வணங்கி—திருவடிகளை முறைப்படி நமஸ்கரித்து, நண்ணினர்—அணுகினர்கள் எ—று.

பிறரென்றது ஏனைத் தேவர்களையும் முனிவர்களையும். செங்கையாலென்பதைத் தாப்பிசையாக்கிப் பின்னுங்கூட்டினுமாம். (அ)

சல்லரி வயிர்துடி தடாரி சச்சரி
கல்லென விரங்குறு கரடி காகளஞ்
செல்லுறழ் பேரிகை திமிலை யாதியாம்
பல்லிய மியம்பின பாரி டங்களே.

இ—ள்: சல்லரி—சல்லரியும், வயிர்—ஊதுகொம்பும், துடி—உடுக்கும், தடாரி—தடாரியும், சச்சரி—சச்சரியும், கல் என இரங்குறு கரடி—கல்லென்னும் அநுகரணம்பொருந்த ஒலிக்கின்ற கரடிகையும், காகளம்— காகளமும், செல் உறழ் பேரிகை—இடிபோன்ற(அதிர்ந்த ஒலியினையுடைய) பேரியும், திமிலை ஆதி ஆம் பல் இயம்—திமிலையுமுதலாகிய பல வாத்தியங்களை, பாரிடங்கள் இயம்பின- பூதங்கள் இயம்பின எ-று.

பல்லியம் என்பதை ஒருமொழியெனினுமாம். (கூ)

வேறு.

வேத நான்குங் குடிலையும் வேறுள
பேத மாய கலைகளும் பேரிசை
நாத மோடு நணுகின விஞ்சையர்
கீதம் யாவு மிசைத்துக் கெழுமினர்.

இ—ள்: வேதம் நான்கும்-நான்கு வேதங்களும், குடிலையும்-பிரணவமும், வேறு உள பேதம் ஆய கலைகளும்—மற்றுமுள்ள பல பேதங்களையுடைய சாத்திரங்களும், பேர் இசை நாதமோடு நணுகின—பேரி ஒலியுடன் வந்தன, விஞ்சையர் கீதம் [illegible]

சைத்து கெழுமினர்—வித்தியாதரர்கள் கீதமனைத்தையும் (யாழிலமைத்துப்) பாடிக்கொண்டு நெருங்கினர்கள் எ—று.

வேறுளபேதமாயகலைகளென்றது புராணம் மிருதி முதலியனவற்றை. வேத முதலியன தேவருபங்கொண்டுவந்தனவென்க. இசை நாதம் ஒரு பொருண்மொழிகள்.()

வள்ளல் வேணியின் மாமதி யீண்டியே
பிள்ளை வெண்பிறை யைப்படர் பேரராக்
கொள்ளு மென்று குறித்தது போற்றல் போல்
வெள்ளி வெண்குடை வெய்யவ ரேந்தினர்.

இ—ள்: மா மதி—பூரணசந்திரன், படர் பேர் அரா வெண் பிள்ளைப்பிறையை கொள்ளும் என்று குறித்து—பரந்த பெரியசர்ப்பங்கள் வெள்ளிய இளம்பிறையைப்பற்றுமென்று சிந்தித்து, வள்ளல் வேணியின் ஈண்டி— சிவபிரானது திருச்சடையில்நெருங்கி, அது போற்றல் போல்—(அவை)அப்பிறையைப்(பற்றுவண்ணங்) காப்பதுபோல், வெய்யவர் வெள்ளி வெண் குடை எந்தினர்-சூரியர்கள் வெள்ளியாலாகிய வெண்குடையைக்கவித்தார்கள் எ—று.

சிவபிரான் ஒன்றற்கொன்று பகைமையுடையனவாகிய அரவையும் பிறையையுமணிந்திருத்தலின், தம்மினத்ததாகியபிறையைச் சர்ப்பங்கள்பற்றுதல்கூடுமெனக்கருதி, அதன்முன்னரே காத்துக்கொள்ளுமாறு பூரணசந்திரன்புக்கதுபோல, சூரியர் குடைபிடித்தனரென்பதாம். (கக)

சகர ரென்னுந் தலைவர்க டம்வழிப்
பகிர தப்பெயர்ப் பார்த்திவன் வேண்டலு
நிகரி லோனரு ணீத்தத் தொழுக்கெனப்
புகரில் சாமரம் பூதர்கள் வீசினர்.

இ—ள்: சகரர் என்னும் தலைவர்கள் தம் வழி பகிரத பெயர் பார்த்திவன் வேண்டலும்—சகரரென்று சொல்லப்படுகின்ற அரசர்களது மரபிற்றோன்றிய பகீரதனென்னும்பெயரையுடைய அரசன் பிரார்த்திக்க, நிகர் இலோன் அருள் நீத்தத்து ஒழுக்கு என—ஒப்பில்லாத சிவபிரான் கொடுத்தருளிய கங்கைநதியினொழுக்கைப்போல, பூதர்கள் புகர் இல் சாமரம் வீசினர்—பூதர்கள் குற்றமற்ற சாமரங்களை வீசினர்கள் எ—று.

பகீரதனென்பதில் ஈகாரம் எதுகைநோக்கிக்குறுகிற்று. வெண்ணிறச்சாமரமென்பார் 'புகரில்சாமரம்' என்றார். அதுவே நீத்தத்தொழுக்குப்போலுமென்க. கங்கை சிவபிரானது சடையினின்றிழிந்தமையால், அவரது திருமுகங்கட்குநேர்படவீசுஞ்சாமரத்திற்கு உபமானமாயிற்று. (கஉ)

சீறு மால்கரி சீயம் வயப்புலி
யேறு பூட்கை யிரலையெண் கேமுதல்
வேறு கொண்ட வியன்முகச் சாரதர்
நூறு கோடியர் நொய்தெனச் சுற்றினர்.

இ—ள்: சீறும் மால் கரி—சினக்கின்ற மதமயக்கத்தினையுடைய யானையும், சீயம்—சிங்கமும், வய புலி—வெற்றியினையுடைய புலியும், ஏறு—இடபமும், பூட்கை—யாளியும், இரலை—கலைமானும், எண்கே முதல் வேறு கொண்ட வியன் முக சாரதர் நூறுகோடியர்— கரடியுமுதலாகிய பலவகைப்பட்ட பெரிய முகங்களையுடைய நூறுகோடி பூதர்கள், நொய்தென சுற்றினர்—விரைவிற் சூழ்ந்தார்கள் எ—று.

ஏகாரம் எண். (கங)

இமிலு டைட்பல வேற்றிருங் கேதனந்
திமில விண்புன னக்கிச் சிதறுவ
வமல னைத்தொழு தாற்றுமெய் யன்பினுற்
கமல முய்த்திடுங் காட்சியர் போன்றவே.

இ—ள்: இமில் உடை எற்று இரும் கேதனம் பல—முரிப்பினையுடைய இடபந்திட்டப்பெற்ற பெரியகொடிகள் பல, திமில விண் புனல் நக்கி சிதறுவ- பேரொலியினையுடைய ஆகாயகங்கையிற்றேய்ந்து(அந்நீரைத்திவலையாகச்)சிந்துவன(ஆதலின் அவை), அமலனை தொழுது—சிவபிரானைத்தொழுது, ஆற்றும் மெய் அன்பினுல் கமலம் உய்த்திடும் காட்சியர் போன்ற- அவர்மாட்டுவைத்த மெய்யன்பினுல் ஆனந்தக்கண்ணீரைச்சிந்துந்தன்மையையுடைய அடியார்களைப்போன்றன எ—று.

கொடியாடைகள் ஆகாயகங்கையிற்றேய்ந்து நீர்த்திவலைகளைச்சிந்துதல், அடியார் ஆனந்தக்கண்ணீர்சிந்துதல்போலுமென்பதாம்.இமிலுடை என்பது எற்றிற்கடை. திமிலவிண்புனனக்கிச்சிதறுவ என்றமையால் அக்கொடிகள் மிகவுமுயர்ந்தனவென்பதுபோதரும். (கச)

அன்ன காலை யகிலமு மீன்றருள்
கன்னி தன்னொடு காமர்வெள் ளேற்றின்மேன்
மன்னி வைகு மதிமுடி வானவன்
றன்ன தாலயத் தைத்தணந் தேகினுன்.

இ—ள்: அன்ன காலை—அச்சமயத்தில், அகிலமும் ஈன்றருள் கன்னிதன்னொடு காமர் வெள் ஏற்றின்மேல் மன்னி வைகும் மதி முடி வானவன்— எல்லாவுலகங்களையும்பெற்றருளிய கன்னிகையாகிய உமாதேவியாரோடு அழகியவெள்ளிய இடபவாகனத்திலெழுந்தருளியிருந்த சந்திரனையணிந்த சடைமுடியினையுடைய சிவபிரான், தன்னது ஆலயத்தை தணந்து ஏகினுன்—தமது திருக்கோயிலைநீங்கி (அப்பாற்)போயினுர் எ-று.

மன்னிவைகும் வானவன் என இயையும். தன்னது-விரித்தல்விகாரம். (கரு)

வேறு.

தன்ன தாலய நீங்கியே கயிலையைத் தணந்து
பொன்னி னீடிய விமையமால் வரைப்புறத் தேகி
யன்ன மாடுறுஞ் சரவணப் பொய்கையை யடைந்தா
னென்னை யாளுடை நாயக னிறைவியுந் தானும்.

இ—ள்: என்னை ஆள் உடை நாயகன்—சிறியேனையடிமையாகவுடைய தலைவராகிய சிவபிரான், இறைவியும் தானும்— தேவியாருந் தாமுமாக, தன்னது ஆலயம் நீங்கி—தமது திருக்கோயிலைநீங்கி, கயிலையை தணந்து—(அதன்மேல்) திருக்கைலாசமலையை நீங்கி, பொன்னில் நீடிய மால் இமையவரை புறத்து ஏகி—பொன்னுலாகி நீண்ட பெரிய இமையமலையினருகிற்போய், அன்னம் ஆடுறும் சரவணப் பொய்கையை அடைந்தான்—அன்னப்பறவைகள் விளையாடுகின்ற சரவணவாவியையணுகினுர் எ—று.

இறைவியுந் தானும் அடைந்தான் என்பது ஆண்பாலும் பெண்பாலும் விரவிச் சிறப்பினுல் ஆண்பான்முடிபேற்றது. (கசு)

பிறையு லாஞ்சடைத் தேவனு மவன்றனைப் பிரியா
துறையு மாதுமோ ரறுவகை யுருவுகொண் டுற்ற
சிறுவ னீர்மையை நோக்கியே திருவருள் செய்து
நிறையும் வான்புனற் பொய்கையங் கரையிடை நின்றுர்.

இ—ள்: பிறை உலாம் சடை தேவனும்—பாலசந்திரன் தவழுகின்ற சடைமுடியினையுடைய சிவபிரானும், அவன்றனை பிரியாது உறையும் மாதும்— அச்சிவபிரானை நீங்காதிருக்கின்ற தேவியாரும், ஓர் அறு வகை உருவு கொண்டு உற்ற சிறுவன் நீர்மையை நோக்கி—ஒப்பற்ற ஆறுபேதமாகிய திருவுருவங்களைக்கொண்டருளிய குமாரக்கடவுளது தன்மையைப்பார்த்து, திருவருள் செய்து—சிறந்தகருணையைப்புரிந்து, நிறையும் வான் புனல் பொய்கையம் கரையிடை நின்றார்— நிறைந்த பெரிய நீரினையுடைய சரவணவாவியின் கரையில் நின்றார்கள் எ—று.

உலாவும் என்னும் பெயரெச்சம் ஈற்றுயிர்மெய்கெட்டு உலாம் எனநின்றது. உருவு என்பதி லுகரஞ்சாரியை. அறுபெண்களும் வளர்த்தற்பொருட்டு ஒருவரே ஆறுவடிவான சாதுரியத்தை நினைந்தென்பார் 'அறுவகையுருவுகொண்டுற்ற சிறுவனீர்மையை நோக்கி' எனவும், அதற்குவந்து கருணைசெய்தனராதலின் 'திருவருள்செய்து' எனவும் கூறினார். (கஎ)

முண்டக சரவ ணந்தனின் மூவிரு வடிவங்
கொண்டு லாவிவீற் றிருந்திடு மொருபெருங் குமர
னண்டர் நாயகன் றன்னுட னகிலமீன் றாளைக்
கண்டு மாமுக மலர்ந்தனன் றனதுளங் களித்தான்.

இ—ள்: முண்டக சரவணம் தனில் மூவிரு வடிவம் கொண்டு உலாவி வீற்றிருந்திடும் ஒரு பெரும் குமரன்-தாமரைமலர்களையுடைய சரவணவாவியில் ஆறுதிருவுருவங்களைக்கொண்டு சஞ்சரித்து எழுந்தருளியிருந்த ஒப்பற்ற பெரிய குமாரக்கடவுள், அண்டர் நாயகன் தன்னுடன் அகிலம் ஈன்றாளை கண்டு—தேவநாயகராகிய சிவபிரானுடன் எல்லாவுலகங்களையும் பெற்ற தாயாராகிய உமாதேவியாரைத்தரிசித்து, மா முகம் மலர்ந்தனன்—சிறந்த திருமுகங்கள் மலர்ந்து, தனது உளம் களித்தான்—தமது திருவுள்ளமகிழ்ப்பெற்றார் எ—று.

மலர்ந்தனன் முற்றெச்சம். (கஅ)

அந்த வேலையிற் கவுரியை நோக்கியெம் மைய
னிந்த நின்மகன் றனைக்கொடு வருகென வியம்பச்
சுந்த ரங்கெழு விடையினுந் துண்ணென விழிந்து
சிந்தை கொண்டபே ராதரந் தன்னொடுஞ் சென்றாள்.

இ—ள்: அந்த வேலையில்—அச்சமயத்தில், எம் ஐயன்—எங்கள் பரமபிதாவாகிய சிவபிரான், கவுரியை நோக்கி—உமாதேவியாரைத் திருநோக்கஞ்செய்து, இந்த நின் மகன் தனை கொடுவருக என இயம்ப—(தேவீ! நீ சென்று) இந்த உன் குமாரனை அழைத்துவருகுதியென்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரம் கெழு விடையினும் துண் என இழிந்து—(அத்தேவியார்) அழகுமிக்க இடபவாகனத்தினின்றும் விரைவாக இறங்கி, சிந்தை கொண்ட பேர் ஆதரம் தன்னொடும் சென்றாள்—மனத்திற்பொருந்திய பேரன்போடுஞ் சென்றருளினார் எ—று.

ஈண்டுநிற்பவனே நின்மகனென்பதையுணர்த்துவார் 'இந்தநின்மகன்' எனவும், சிவபிரான் கட்டளையிடமுன்னரே குமாரரைத்தழுவவேண்டுமென்னும் பேராவலுதிக்கப்பெற்றனராதலின் 'சிந்தைகொண்டபேராதரந்தன்னொடு' எனவும் கூறினார். (கக)

சரவ ணந்தனிற் றனதுசே யாறுருத் தனையு
மிருக ரங்களா லன்புட னெடுத்தனள் புல்லித்
திருமு கங்களோ ராறுடன் னிருபுயஞ் சேர்த்த
வுருவ மொன்றெனச் செய்தன ளுலகமீன் றுடையாள்.

இ-ள்: உலகம் ஈன்று உடையாள்-எல்லாவுலகங்களையும்பெற்றருளிய உமாதேயார், சரவணம் தனில் தனது சேய் ஆறு உரு தனையும் இருகரங்களால் அன்புடன் எடுத்தனள் புல்லி—சரவணதடாகத்தில்வீற்றிருக்கின்ற தமது குமாரரது ஆறுதிருவுருவங்களையும் இரு திருக்கரங்களாலும் அன்பினுடன் எடுத்தணைத்து, ஓராறு திருமுகங்கள் பன்னிரு புயம் சேர்ந்த உருவம் ஒன்று என செய்தனள்—ஆறுதிருமுகஙும் பன்னிரண்டுதிருப்புயங்களுமமைந்த ஒருதிருவுருவமாகச்செய்தருளினூர் எ—று. (உ0)

எந்தை சத்திக ளுயிரெலா மொடுங்குறு மெல்லை
முந்து போலவொன் ருகியே கூடிய முறைபோ
லந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் ருகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.

இ—ள்: எந்தை சத்திகள்-எம்பெருமானது சத்திகளெந்தும், உயிர் எலாம் ஒடுங்குறும் எல்லை-எல்லாவுயிர்களுமொடுங்கும் மகாசங்காரகாலத்தில், முந்துபோலவே ஒன்ருகி கூடிய முறை போல்—முன்போலவே [தோற்றியவாறே] ஒன்ருய்ச்சேர்ந்ததன்மையைப்போல, அந்தம் இல்லது ஓர் மூவிரு வடிவும் ஒன்ருகி—முடிவில்லாத ஆறுதிருவுருவங்களும் ஒன்றுபட்டு, கந்தன் என்று பேர் பெற்றனன்—கந்தனென்று திருநாமத்தைப் பெற்ருர், கவுரி தன் குமரன்—உமாதேவியாரது திருக்குமாரராகிய முருகக்கடவுள் எ—று.

"மாயோன் பகலி லோர்மறையோன் மாய்வான் மாயோன் மாய்ந்திடுவான்-காயுமழுவா ளுருத்திரனேர் பகலிற் கணிச்சி மற்றவனுந்-தூய நீருர் மகேச்சுரன்றன் பகலி லிறப்பான் சொல்லவனு-மேய வுறையுஞ் சதாசிவன்றன் பகலி லிறப்பா னெண்ணுங்கால்,-மறிமா னேந்து சதாசிவனு மாய்வான் சிவன்ற னேர்பகலில்" எனவாயுசங்கிதைகூறியவாறே ஐந்தொழின்மூர்த்திகளும் அடங்குங்காலத்து, அத்தொழில்களையியற்றுவிப்பான் ஐவகையவாய்ப்பிரிந்து அவரையதிட்டித்துநின்ற சத்திகள், யாது யாண்டுற்பத்தியாம் அது அதனினொடுங்குமென்னும்அவிஞபாவம்பற்றிச் சிவனிடத்தேஒன்றுதல்போல, குமாரக்கடவுளது ஓருருவத்திற்பிரிந்துதோன்றிய ஆறுருவங்களுந் தேவியாரணைக்கும்போது ஒருருவாய்க்கூடின என்பதாம்.

பின்னையசெய்தெனெச்சம் எதுப்பொருட்டு.'ஸ்கந்த'என்னும் ஆரியமொழி தமிழில் 'கந்தன்' எனவழங்கிற்று. ஒன்ருக்கப்பட்டவனென்பது பொருள். இதற்கு, பாய்ந்துசெல்பவனெனவும் பிறவாறும்பொருளுரைப்பர்சிலர். முன்னர்ச்சிவபிரானிடத்துத்தோற்றினும் ஈண்டுத்தேவியாராலோருருவாக்கப்பட்டமையின், அதற்கேற்ப 'கவுரிதன்குமரன்' என்ருர். தேற்றேகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. (உக)

முன்பு புல்லிய குமரவேண் முடிதொறு முயிர்த்து
மின்பி றங்கிய புறந்தனை நீவலும் விமலை
தன்பெ ருந்தனஞ் சுரந்துபால் சொரிந்தன தலையா
மன்பெ னப்படு கின்றதித் தன்மையே யன்ருே.

இ—ள்: முன்பு புல்லிய குமரவேள் முடிதொறும் உயிர்த்து மின் பிறங்கிய புறம் தனை நீவலும்—முன்னர்த்தழுவிய [ஒன்ருக்கிய] குமாரக்கடவுளது உச்சிகடோறும் மோந்து ஒளிபொருந்திய முதுகைத்தடவ, விமலை தன் பெரும் தனம் சுரந்து பால் சொரிந்தன—உமாதேவியாரது பெரிய முலைகள் சுரந்துபாலைச்சிந்தின, தலை ஆம் அன்பு எனபடுகின்றது இத்தன்மையே அன்ருே—தலையன்பென்று சொல்லப்படுவது இத்தகைமையேயன்ருே! எ—று.

எ தேற்றம். பிரசவவேதனையுற்றுப் பெருதவழியும் அன்பின்மிகுதியாற் பால் சுரந்தமையின் 'தலையாமன்பெனப்படுகின்றதித்தன்மையேயன்றே' என்றார். (௨௨)

ஆதி நாயகன் கருணையா யமலமாய்ப் பரம
போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபா
லேதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதன் மாமகற் கன்பினா லருத்தினாள் கவுரி.

இ—ள்: ஆதிநாயகன் கருணை ஆய்—ஆதிகடவுளாகிய சிவபிரானது அருண்மயமாயும், அமலம் ஆய்—நின்மலமாயும், பரம போத நீரது ஆய் இருந்த தன் கொங்கையில் பொழி பால்—மேலாகிய ஞானரூபமாயுமிருக்கின்ற தமது முலைகளினின்றுஞ்சிந்தியபாலை, ஏது இலாதது ஓர் குரு மணி வள்ளமீது ஏற்று—குற்றமற்ற நிறம்விளங்குகின்ற அழகிய பொற்கிண்ணத்திலேந்தி, காதல் மா மகற்கு அன்பினால் அருத்தினாள்—தம்மால் விரும்பப்பட்ட சிறந்த குமாரருக்கு அன்பினுடன் பருக்கினார், கவுரி—உமாதேவியார் எ-று.

தேவியார் முலையிற் சுரக்கும்பாலின்பெருமையை "முத்தமுலை செப்புவதெனக்களிறு பிற்குமரன் முற்புதல்வர் துய்த்தவமுதா-லத்தலைமை பெற்றன ரதிற்றிவலை கிட்டினுமெ னற்பவுயிர் முத்திபெறுமே" எனவும், "தருண மங்கலை யுனது சிந்தை தனைழந்த பாலமு தாகினா-லருண கொங்கையி லதுபெ ருங்கவி யலைநெ டுங்கட லாகுமே-வருணனன்குறு கவுணி யன்சிறு மதலை யம்புயல் பருகியே-பொருண யம்பெறு கவிதை யென்றொரு புனித மாரி பொழிந்ததே" எனவும் வரும் சௌந்தரியலகரித்திருவிருத்தத்தானுமுணர்க. அம்மையாரது தனங்களிரண்டையும் முறையே பரஞானமும் அபரஞானமுமென வழங்குவர். (௨௩)

கொங்கை யூறுபா லருத்தியே குமரனைக் கொடுசென்
றெங்க ணாயகன் முன்னரோ யிறைஞ்சுவித் திடலு
மங்கை யாலவன் றனையெடுத் தகலமே லணைத்துப்
பொங்கு பேரரு ணீர்மையா லிருத்தினன் புடையில்.

இ—ள்: கொங்கை ஊறு பால் அருத்தி—தனங்களினின்றுஞ்சுரந்த பாலைப்பருக்கி, குமரனை எங்கள் நாயகன் முன்னர் கொடு சென்று- அக்குமாரக்கடவுளை எங்கள் தலைவராகிய சிவபிரானது திருமுன்னிலையில் அழைத்துக்கொண்டுபோய், இறைஞ்சுவித்திடலும்-வணங்குவித்தலும், அங்கையால் அவன் தனை எடுத்து-(அச்சிவபிரான்) அகங்கையால் அவரையெடுக்கி, அகலமேல் அணைத்து-மார்பிலணைத்து, பொங்கு பேர் அருள் நீர்மையால் புடையில் இருத்தினன்- மிகுந்த திருவருட்டிறத்தாற்றமது பக்கத்திலிருத்தினார் எ-று.

'எல்வார்குழலிறைவிக்குமெம்பிரான்றனக்கும்பாலனாகிய குமரவேணடுவுறும்பான்மை' என மேற்கூறுதலின், ஈண்டுப்புடையென்றது இடப்பாகத்தையென்க. (௨௪)

அருத்தி தந்திடு குமரவே ளொருபுடை யமரப்
பெருத்த மன்னுயிர் யாவையு முன்னரே பெற்ற
வொருத்தி தன்னையுங் கையினா லொய்யென வாங்கி
யிருத்தி னான்றன திடந்தனி லெம்மையா ளிறைவன்.

இ—ள்: அருத்தி தந்திடு குமரவேள் ஒருபுடை அமர—காதலையுண்டாக்குகின்ற குமாரக்கடவுள் ஓர்பக்கத்திலிருக்க, எம்மை ஆள் இறைவன்— எங்களையடிமைக்கொள்கின்ற சிவபிரான், பெருத்த மன் உயிர் யாவையும் முன்னர் பெற்ற ஒருத்திதன்னையும்

கையினால் ஓய் என வாங்கி—மிகுந்த நிலைபெற்ற ஆன்மாக்களனைத்தையும் முற்காலத்திற்பெற்ற ஒப்பற்ற உமாதேவியாரையும் திருக்கரத்தினால் விரைவிற்றூக்கி, தனது இடம் தனில் இருத்தினான்—தம்முடைய இடப்பாகத்திலிருத்தியருளினார் எ—று.

பெருமை-எண்டெண்ணின்பெருமை. முன்னர் என்பதில் அர் பகுதிப்பொருள்விகுதி. பின்னைய உம்மை இறந்ததுதழீஇயவெச்சம். நோக்குந்தோறுந் தந்தைதாயர்க்கு நேத்திரானந்தத்தைத்தருதலின் 'அருத்திதந்திடு' எனவும், அதற்கேற்ப 'குமரவேள்' எனவும் கூறினார். குமாரவேள் என்பது குமரவேளெனக்குறுகிற்று. மன்மதனையுங்குற்சிதமாக்கும்பேரழகுடையவேளெனப் பொருள்கொள்க; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (௨௫)

ஏல வார்குழ லிறைவிக்கு மெம்பிரான் றனக்கும்
பால னாகிய குமரவே ணடுவுறும் பான்மை
ஞால மேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்.

இ—ள்: பாலன் ஆகிய குமரவேள்—சிறுவராகிய சுப்பிரமணியக்கடவுள், ஏல வார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும் நடு உறும் பான்மை— மயிர்ச்சாந்துபூசப்பெற்ற நீண்ட கூந்தலையுடைய உமாதேவியார்க்கும் எங்கள் தலைவராகிய சிவபிரானுக்கும் நடுவே வீற்றிருந்ததன்மை, மாலை ஆனது ஒன்று—மாலையென்கின்ற ஒருகாலம், ஞால மேல் உறும் இரவொடு பகலுக்கும் நடு ஆய்—பூமியிற்றோன்றுகின்ற இராப்பகலென்னுமிருகாலங்களுக்குமிடையேதோன்றி, அழிவு இன்றி வைகுமாறு ஒக்கும்—அழிதலின்றித்தங்கியிருத்தல்போலும் எ—று.

உமாதேவியார் நீலநிறத்தையும் சிவபிரான் நீற்றொளிபரந்தமேனியையும் குமாரக்கடவுள் செந்நிறத்தையுமுடையராதலின், முறையே இரவும்பகலும் மாலையுமாக உவமிக்கப்பட்டனர். ஏனையுலகங்களிற் பகலிரவின்மையின் 'ஞால மேலுறு மிரவொடு பகல்' எனவும், அவ்விருகாலங்கட்குமிடையிற்றோன்றுமாலை விரைவிலழியுந்தரத்தினதாதலின் நிகராகாது, நீடித்துநிற்குமாலையொன்றுண்டேலதுவே நிகராமென்பார் 'மாலையானதொன்றழிவின்றிவைகுமாறொக்கும்' எனவும் கூறினார். (௨௬)

வேறு.

விடையுற்றிடு பரமற்குமவ் விமலைக்கும் விறற்சே
யிடையுற்றது கண்டாரயன் மகவான்முத லிமையோர்
கடையுற்றிடு கடலாமெனக் கல்லென்றிரைத் தணுகாப்
புடையுற்றன ரெதிருற்றனர் புறனுற்றனர் புகழ்வார்.

இ—ள்: விறல் சேய்—வலிய குமாரக்கடவுள், விடை உற்றிடு பரமற்கும் அவ் விமலைக்கும் இடை உற்றது—இடபவாகனத்திலெழுந்தருளுகின்ற சிவபிரானுக்கும் அந்த உமாதேவியாருக்கும் இடையே வீற்றிருந்ததன்மையை, அயன் மகவான் முதல் இமையோர் கண்டார்—பிரமா இந்திரன் முதலிய தேவர்கள்பார்த்து, கடை உற்றிடு கடல் ஆம் என கல் என்று இரைத்து அணுகா— ஊழிகாலத்திற்பெருகுகின்ற சமுத்திரத்தைப்போலக்கல்லென்னும் அனுகரணவோசைபொருந்த ஆரவாரித்துக்கிட்டி; புடை உற்றனர்- பக்கத்தில் நின்றும், எதிர் உற்றனர்—முன்னின்றும், புறன் உற்றனர்— பின்னின்றும், புகழ்வார்—துதிப்பாராயினர் எ—று.

உற்றனர் மூன்றும் முற்றெச்சங்கள். 'புடையுற்றனரெதிருற்றனர்புறனுற்றனர்' என்றதனாற் சூழ்ந்துநின்றாரென்பது பெறப்பட்டது. புறன்-இறுதிப்போலி. (௨௭)

காமாரிதன் விழிதந்திடு கழிகாதல வொழியாத்
தேர்மாரியல் புளனுகிய சூரன்கொடுந் தொழிலால்
யாமாரினு மிழுக்குற்றன மெமையாளினி யென்னுப்
பூமாரிகள் பொழிந்தார்பணிந் தெழுந்தாசிகள் புகன்றார்.

இ—ள்: காமாரி தன் விழி தந்திடு கழி காதல—சிவபிரானது நெற்றிக்கண்கள் தந்தருளிய சிறந்த குமாரரே!, யாம்—தமியேம், ஒழியா தோம் ஆர் இயல்பு உளன் ஆகிய சூரன் கொடுந்தொழிலால்- அழியாவரம்பெற்ற குற்றம்பொருந்துந் தன்மையினையுடையனுகிய சூரபன்மனியற்றிய கொடுமையினுல், ஆரினும் இழுக்கு உற்றனம்— தாழ்வுடையாரெவரினுமிக்க தாழ்வைப்பெற்றேம், இனி எமை ஆள் என்று—இனி எங்களை அடிமைக்கொண்டருளுமென்று, பூமாரிகள் பொழிந்தார்—புஷ்பமழைகளைச்சிதறி, பணிந்து எழுந்து ஆசிகள் புகன்றார்—வணங்கியெழும்பி வாழ்த்துக்களைக்கூறினுர்கள் எ—று.

காமாரி-மன்மதனுக்குப் பகைவன். காம+அரி=காமாரி; தீர்க்கசந்தி. உம்மை இழிவுசிறப்பு. பொழிந்தார் முற்றெச்சம். யாவர் என்பது ஆரென விகாரமாயிற்று. ஒழியா-சூரன் என இயையும். (உஅ)

வாரற்புத முறவீங்கிய வன்னத்தன முருந்தின்
மூரற்பவ ளச்சேயிதழ் முழுமாமதி வதனத்
தாரற்பெயர் பெறுமங்கைய ரதுகாலையி லரன்முன்
பேரற்பொடு பணிந்தேயெழப் பெருந்தண்ணளி புரிந்தான்.

இ—ள்: வார் அற்புதம் உற வீங்கிய வன்ன தனம்— கச்சானது அதிசயமுறும்படி விம்மிய அழகிய தனங்களையும், முருந்தின் மூரல்—மயிலிறகினடிக்குருத்தையொத்த பற்களையும், பவள சேய் இதழ்—பவளம்போன்ற [சிவந்த] அதரத்தையும், மா முழுமதி வதனத்து—பெரிய பூரணசந்திரன்போன்றமுகத்தையுமுடைய, ஆரல் பெயர் பெறும் மங்கையர்-கார்த்திகைப்பெண்கள், அதுகாலையில்-அப்பொழுது, அரன்முன் பேர் அற்பொடு பணிந்து எழ—சிவபிரானதுதிருமுன்னிலையிற் பேரன்போடும் வணங்கியெழும்ப, பெரும் தண்ணளி புரிந்தான்—(அச்சிவபிரான்) மிக்க கிருபையைச்செய்தார் எ—று.

வார் அற்புதமுறல்- உள்ளமைக்குந்தொழிலையுடைய தமக்கும் அமையாது விம்முதலின். ஆரற்பெயர்பெறுமங்கையர் கார்த்திகையின்பெயரைப்பெற்ற பெண்கள். அன்பு எனற்பாலது மென்றொடர் வன்றொடராகி அற்பு என நின்றது. (உகூ)

கந்தன்றனை நீர்போற்றிய கடனுலிவ னுங்கண்
மைந்தன்னெனும் பெயராகுக மகிழ்வாலெவ ரேனு
நுந்தம்பக லிடையின்னவ னுென்றுள்வழி படுவோர்
தந்தங்குறை முடித்தேபரந் தனைநல்குவ மென்றான்.

இ—ள்: கந்தன் தனை நீர் போற்றிய கடனுல்--(எமது குழந்தையாகிய இம்) முருகவேளை நீவிர்வளர்த்த முறைமையினுல், இவன் உங்கள் மைந்தன் எனும் பெயர் ஆகுக—இவன் உங்கள்மகனெனப்பொருள்படும் [கார்த்திகேயனென்னும்] பெயரைப்பெறுக, நும்தம்பகல் இடை மகிழ்வால் இன்னவன் நோன் தாள் வழிபடுவோர் எவரேனும்—உங்கள் கார்த்திகைத்தினத்தில் உவகையுடன் இக்குமாரனது வலிய பாதங்களைப்பூசிப்பவர்கள் எத்துணை இழிவரவுடையராயினும், தம் தம் குறை முடித்து பரம் தனை நல்குவம் என்றார்-(யாம்) அவரவரது குறைகளனைத்தையுந்தீர்த்து (இறுதியில்) முத்தியைக்கொடுப்போமென்று அருளிச்செய்தார் எ-று.

கிருத்திகா என்னும் பெயரடியாகக் கார்த்திகேயனென்னும் வடசொற்றேன்றும். இன்னேரன்னவை தத்திதபதமெனப் பெயர்பெறும். மைந்தன்னெனுமென்பது விரித்தல். நோன்மை-தம்மையடைந்தாரைக் காத்தன்முதலியன. ஈண்டு மகிழ்வு-பத்தி.(௩௦)

என்னுவருள் புரிகின்றுழி யிமையத்தவள் சேயைத்
தன்னாரு ளொடுசென்றெதிர் தழுவித்தனத் திழிபால்
பொன்னார்மணி வள்ளத்துமுன் பூரித்தருத் திடவே
யன்னுண்முலை யமுதுக்கவை யாறொத்தொழு கினவே.

இ—ள்: என்னு அருள் புரிகின்றுழி—என்று சிவபிரானருளிச்செய்தபொழுது, இமையத்தவள் சென்று—பார்ப்பதிதேவியார்போய், சேயை தன் ஆர் அருளொடு எதிர் தழுவி—குமாரக்கடவுளைத் தன்னிடத்துள்ள நிறைந்த கருணையோடும் எதிரேயணைத்து, தனத்து இழி பால் பொன் ஆர் மணி வள்ளத்து பூரித்து—தனங்களினின்றுஞ்சிந்தியபாலைப் பொன்னாலாகிய அழகிய கிண்ணத்தினிறைத்து, முன் அருத்திட—முன்னரே பருக்க, அன்னுள்முலை உக்கவை அமுது—அவரது தனங்களினின்றுஞ்சிந்திய பாற்றுளிகள், ஆறு ஒத்து ஒழுகின—யாறுபோற் பாய்ந்தன எ—று.

அருத்திட உக்கவை அமுது, புரிகின்றுழி ஒழுகின என இயையும். (௬௧)

வானார்சுர நதிபோற்சர வணத்தூடவை புகலுந்
தூநான்மறை கரைகண்டவன் முதல்வந்திடு துணைவ
ராணுவறு சிறுவோர்தமை யளித்தோன்சபித் திடலான்
மீனுயவண் வதிகின்றவர் புகும்பாலினை மிசைந்தார்.

இ—ள்: வான் ஆர் சுரநதி போல் அவை சரவணத்து ஊடு புகலும்—விண்ணுலகத்திலுள்ள தேவகங்கையைப்போல அப்பால்வெள்ளஞ் சரவணதடாகத்திற்பாய, தூ நால் மறை கரைகண்டவன் முதல் வந்திடு துணைவர்—தூய்மையாகிய நான்குவேதங்களை முற்றவுணர்ந்த வியாசமுனிவருக்குமுன்பிறந்த துணைவராகிய, ஆனு அறு சிறுவோர்—கெடுதலில்லாத ஆறு குமாரர்களும், தமை அளித்தோன் சபித்திடலால் மீன் ஆய் அவண் வதிகின்றவர்— தங்களைப்பெற்ற பராசரமுனிவர் சாபங்கூறுதலால் அத்தடாகத்தில் மீனுயிருக்கப்பெற்றவர்களாய், புகும் பாலினை மிசைந்தார்—பாய்ந்துவந்த பாலைப்பருகினுர்கள் எ—று.

மிக்க மகத்துவமும் பெருக்குமுடைத்தாதலிற் சுரநதியையுவமைகூறினுர். துணைவரும் வதிகின்றவருமாகிய சிறுவோரென இயைத்துரைப்பினுமாம். இக்குமாரர் பெயர்களையும் இவர் சாபமேற்று மீனுருவாயசரித்திரத்தையும் மேற் சுரம்புகுபடலத்திற் காண்க. (௬௨)

கயிலைக்கிறை யவண்மெய்த்தன கலசத்தினு முகுபா
லயிலுற்றிடு பொழுதத்தினி லறலிற்புடை பெயரு
மயிலைத்தனு வொருவித்தவ வடிவுற்றெழு தருவார்
துயிலுற்றுணர் பவரொத்தனர் மயலற்றிடு தொடர்பால்.

இ—ள்: கயிலைக்கு இறையவள் மெய் தனகலசத்தினும் உகு பால் அயிலுற்றிடு பொழுதத்தினில்—திருக்கைலாசமலைக்கு முதல்வியாகிய உமாதேவியாரது மெய்ம்மையானதனங்களாகிய கும்பங்களினின்றுஞ்சிந்தியபாலைப் பருகியபொழுது, அறலில் புடைபெயரும் மயிலைத்தனு ஒருவி தவவடிவு உற்று எழுதருவார்— நீரிலியங்குகின்ற மீனுருவத்தைநீங்கி முனிரூபத்தைப்பெற்றெழுந்த ஆறு குமாரர்களும், மயல் அற்றிடு தொடர்பால் துயிலுற்று உணர்பவர் ஒத்தனர்— அறியாமைநீங்கியகாரணத்தால் நித்திரைசெய்து விழிப்பவர்களை நிகர்த்தார்கள் எ—று.

ஞானமயமாகியபாலைப்பருகியவுடன் அஞ்ஞானந்தீர்ந்தமையின் 'மயலற்றிடு தொடர்பால்' என்றுர். துயிலும்போது மறப்பதும் துயிலுணரும்போது அம்மறப்

பொழிவதுமியல்பாதல்போல, மீனுருவாயவழித் தம்மியல்பைமறந்தார் அவ்வுருநீங்கியபி ன்னர்ப் பண்டையுணர்வுதிக்கப்பெற்றாரென்க. (௩௩)

அன்னாரறு வருமாயெழுந் தகன்பொய்கைவிட் டமலன்
முன்னாய்வணங் கினர்போற்றலு முனிமைந்தர்கள் பரங்கோ
டென்னவுரை பெறுகுன்றிடை யிருந்தேதவம் புரிமின்
சின்னாண்மிசை யிவன்வந்தருள் செயுமென்றருள் செய்தான்.

இ—ள்: அன்னார் அறுவரும் ஆய் எழுந்து—அந்த ஆறுகுமாரர்களும் ஒருமித்தெழுந்து, அகன் பொய்கை விட்டு—அகன்ற தடாகத்தைவிடுத்து, அமலன்முன் ஆய் வணங்கினர் போற்றலும்—சிவபெருமானது திருமுன்னிலையிற்சென்று வணங்கித்துதிக்க, முனிமைந்தர்கள்— (சிவபிரான் அவர்களைநோக்கி) முனிபுத்திரர்களே!, பரங்கோடு என்னு உரைபெறு குன்றிடை இருந்து தவம் புரிமின்— (நீவிர்) திருப்பரங்குன்றென்று பெயர்பெற்ற மலையின்கட்போயிருந்து தவஞ்செய்யுங்கள், சில் நாள் மிசை இவன் வந்து அருள்செயும் என்று அருள்செய்தான்- சிலநாளின்மேல் இந்தக் கந்தவேள்வந்து கிருபைசெய்வானென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

அகன் அகல் என்பதன்விகாரம். முனிமைந்தர்கள் அண்மைவிளி. (௩௪)

நன்றாமெனத் தொழுதன்னவர் நாதன்விடை பெற்றே
சென்றாருடு மடவாரொடு திருமாலயன் முதலா
நின்றார்தமக் கருள்செய்தவர் நிலயம்புக வருளிப்
பொன்றாழ்சடை யினன்வெள்ளியம் பொருப்பின்றலை புக்கான்.

இ—ள்: அன்னவர்— அந்த முனிபுத்திரர்கள், நன்று என தொழுது—நல்லதென்று வணங்கி, நாதன் விடை பெற்று சென்றார்—சிவபிரானது அநுமதியைப்பெற்றுப் போயினார் (அதன்பின்), பொன் தாழ் சடையினன்—பொன்னிறமான நீண்டசடையினையுடைய சிவபிரான், உடு மடவாரொடு திருமால் அயன் முதலா நின்றார் தமக்கு அருள் செய்து-கார்த்திகைப்பெண்களுக்கும் விஷ்ணுபிரமாமுதலாகின்ற தேவர்களுக்குங் கருணைசெய்து, அவர் நிலயம் புக அருளி—அவர்கள் தத்தமிருப்பிடத்திற்குப் போகுமாறு கட்டளையிட்டு, வெள்ளியம் பொருப்பின்றலை புக்கான்—திருக்கைலாசமலையிற்சென்றருளினார் எ—று. (௩௫)

அடையார்புர மெரிசெய்திடு மமலன்கயி லையிற்போய்
விடையூர்தியி னிழிந்தேதனி விறற்சேயொடும் வெற்பின்
மடவாளொடு நடவாப்பொலன் மாமந்திரத் தவையி
னிடையாரரி யணைமீமிசை யிருந்தானருள் புரிந்தே.

இ—ள்: அடையார் புரம் எரிசெய்திடும் அமலன்—பகைவர்களது முப்புரங்களையுமெரித்தருளிய சிவபிரான், கயிலையில் போய்—திருக்கைலாசமலையிற்சென்று, விடை ஊர்தியின் இழிந்து—இடபவாகனத்தினின்றுமிறங்கி, தனி விறல் சேயொடும் வெற்பின் மடவாளொடும் நடவா—ஒப்பற்ற வலிமையினையுடைய குமாரக்கடவுளோடும் பார்ப்பதிதேவியாரோடும் நடந்து, பொலன் மா மந்திரத்து அவையினிடை ஆர் அரி அணை மீமிசை—பொன்னாலாகிய பெரிய கோயிலிற் சபாமண்டபத்தின்கட்பொருந்திய சிங்காசனத்தின்மேல், அருள் புரிந்து இருந்தான்-கிருபைசெய்து வீற்றிருந்தார் எ—று. (௩௬)

சேயோனெனு முன்னோன்றனைச் சிலம்பின்வரு மொன்பான்
மாயோருத வியமைந்தரு மற்றுள்ள விலக்கத்

தூயோர்களுந் தொழுதேமலர் தூவிப்பணிந் தேத்தி
யாயோர்தம துயிரேயென வவனைக்குறித் தணைந்தார்.

இ—ள்: சிலம்பின் வரும் ஒன்பான் மாயோர் உதவிய மைந்தரும்—(தேவியார திருவடிச்சிலம்பிற்றோன்றிய நவசத்தியர்கள்பெற்ற புத்திரர்களும், மற்று உள்ள இலக்க தூயோர்களும்--மற்றுமுள்ள இலக்கம்வீரர்களும், முன்னோன் எனும் சேயோன் தனை தொழுது—முதல்வராகிய குமாரக்கடவுளைக் கைதொழுது, மலர் தூவி பணிந்து எத்தி-புஷ்பங்களைச்சொரிந்து வணங்கித்துதித்து, ஆயோர்—அவர்கள், தமது உயிரே என அவனை குறித்து அணைந்தார்—[தங்களுடைய] ஆன்மாவையேபோல அக்குமாரக்கடவுளைச்சிந்தித்து அணுகினார்கள் எ—று.

மாயோர்-பெண்கள். பின்னைய எகாரம் தேற்றம். மற்றெந்தப்பொருளினுஞ்சிறந்தபொருளாகத் தம்முயிரைப்பேணுதலியல்பாதலின், அங்ஙனம் பேணினரென்பார் 'தமதுயிரேயெனவவனைக்குறித்தணைந்தார்' என்றார். (ஙஎ)

சரவணப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் க௦ருக.

# திருவிளையாட்டுப்படலம்.

குமாரக்கடவுளது மேன்மையான விளையாட்டைக்கூறுதலினிப்பெயர்த்தாயிற்று. விளையாட்டு முதனிலைதிரிந்ததொழிற்பெயர்.

## இப்படலப்பொழிப்பு.

குமாரக்கடவுள் பற்பலதிருவிளையாடல்களைச்செய்து, கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் பிறவற்றையும் நிலைபிறழ்வித்துலாவ, தேவியார் அதுகண்டு ஆச்சரியமுற்று, அவரது பெருமைகளைச் சிவபிரானிடங்கேட்டுணர்ந்து மகிழ்ந்தனர். தேவரும் அவுணரும் பிறரும் ஆச்சரியமுற்றனர். அவருள் தேவர்கள் மேருமலையிற்சென்று இந்திரனுக்குமுறையிட, அவன், அதனைப்பிரமதேவர்க்கு முறையிடுமாறு அவருடனெழுந்தனன். அப்பொழுது, குமாரக்கடவுள் அவர்முன்னிலையிற் குழந்தையுருவாகத்தோன்றி, மேருமலையின் சிகரங்களைப் பிடுங்கிவீசினின்றனர். இந்திரன் அதுகண்டு, தேவர்களோடும் அவரைவளைந்து போர்தொடங்க, குமாரக்கடவுள் அவருடன் பொருது சிலரைக்கொன்றனர். எஞ்சினோர் இரிந்தோடினர். இந்நிகழ்ச்சிகளையெல்லாம்நாரதமுனிவர்கண்டுபோய்த்தேவகுருவுக்குக்கூற, அவர்வந்து குமாரக்கடவுளைப்பிரார்த்தித்து, இறந்ததேவரனைவரையுமெழுப்புவித்தனர். உடனே தேவர்கள்யாவரும் எழுந்து தமது பிழையைப்பொறுக்குமாறு குமாரக்கடவுளைவேண்ட, அவர் அங்ஙனமே அருள்செய்து, பாரமேச்சுரரூபத்தைக்காட்டி, நிலைபிறழ்ந்த உலகமுதலியவற்றைப்பண்டுபோனிறுத்தினர். அதன்மேல் தேவரீரைப்பூசித்தற்கு அருள்புரிகவென்று இந்திரன் பிரார்த்திக்க, குமாரக்கடவுள் சம்மதித்துத்திருக்கைலாசமலையினருகில் ஓர்மலையிற்போய் வீற்றிருந்தனர். இந்திரன்முதலிய தேவர்களும் அவர்பின்சென்று, தேவத்தச்சனலோர்கோயிலமைப்பித்து, அக்கோயிலிலவரையெழுந்தருளுவித்துப்பூசித்தனர். அதனால் அம்மலை கந்தவெற்பெனப்பெயர்பெற்றது. மேல் குமாரக்கடவுள் திருக்கைலாசமலையிற்சென்றனர். தேவர்கள் மனோவதி சேர்ந்தனர் என்பதாம்.

அனந்தரம தாகவுமை யம்மையொடு பெம்மா
னனந்தலையில் வைகிய நலங்கொள்கும ரேச
னினங்கொடு தொடர்ந்தவிளை யாரொடு மெழுந்தே
மனங்கொளரு ணீர்மைதனி னாடலை மதித்தான்.

இ—ள்: அனந்தரமது ஆக—அதன்பின்பு, உமை அம்மையொடு பெம்மான் நனந்தலையில் வைகிய நலம் கொள் குமரேசன்—உமாதேவியார்க்குஞ் சிவபிரானுக்கும் நடுவிலெழுந்தருளியிருந்த நன்மையினையுடைய குமாரக்கடவுள், இனம் கொடு தொடர்ந்த இளையாரொடும் எழுந்து—கூட்டமாகித் (தன்பின்)தொடர்ந்துவந்த தம்பியர்களோடும் புறப்பட்டு, மனம் கொள் அருள் நீர்மை தனின் ஆடலை மதித்தான்— தமது திருவுள்ளத்திற்கொண்ட காருண்ணியத்தினாலே திருவிளையாட்டுக்களைச்செய்யக் கருதினார் எ—று.

அனந்தரம் வடமொழியிடைச்சொல். அது பகுதிப்பொருள்விகுதி. ஆக என்னும் எச்சம் ஈண்டுப்பொருளின்றி அசைநிலைத்தன்மைபடநின்றது. உமை- என்பதற்கு சிவபிரானது தேவியென்பதுபொருள். உ சிவபிரான். மா தேவி. இங்ஙனமன்றி, உ மா என்பதற்கு அம்ம வேண்டாமெனப்பொருள்கொண்டு, மலையரசன் மகளாய்வளருநாளில் ஐந்துபிராயமானவுடன், சிவபிரானை மணம்புரியுமாறு தவஞ்செய்யப்புகுவேனென்று தன்கருத்தைப்பெற்றார்க்குரைத்துழி, 'அன்னைகேளெம்மினீங்கியருந்தவமாற்றற்கொத்ததின்னதோர்பருவமன்று' என அவரால் மறுக்கப்பட்டதனால் இப்பெயரெய்திற்றென்பர் சிலர்; அவர் தவம்புரியுநாளிற் சிவபிரானெழுந்தருளி 'கொடியகோன்பான்மற்றினிவருந்தல்' என அருளிச்செய்தலின் இப்பெயரெய்திற்றென்பரொருசிலர். பெம்மான்- பெருமானென்பதன்மரூஉ. நலம் என்பது நற்குணம் நற்செய்கை அழகு புகழ் என்பவற்றையுணர்த்தும். அருள்-தொடர்புபற்றாமல் இயல்பாகஎல்லாவுயிர்களின்மேலுஞ் செல்லுங்கருணை.

இலக்கத்தொன்பதின்மரும் அடைந்து அன்புபூண்டொழுகியபின்னென்பார் 'அனந்தரமதாக' எனவும், குமாரனென்பதற்கு விளையாட்டயர்பவரென்னும் பொருளுமுண்மையின், ஆடலைமதித்தானென்பதற்கேற்ப 'குமரேசன்' எனவும், இறைவன்செயலனைத்தும் ஆன்மாக்கண்மீதுகொண்ட அருள்பற்றிநிகழ்கின்றனவென்பது சித்தாந்தமாதலின் 'அருணீர்மைதனினாடலைமதித்தான்' எனவும் கூறினார். (௧)

தட்டைநெகி ழுங்கழல் சதங்கைகள் சிலம்பக்
கட்டழகு மேய வரை ஞாண்மணி கறங்க
வட்டமணி குண்டல மதாணிநுதல் வீர
பட்டிகை மினக்குமர னாடல்பயில் கின்றான்.

இ—ள்: தட்டை நெகிழும் கழல் சதங்கைகள் சிலம்ப—தண்டையும் சிலம்பும் வீரக்கழலும் சலங்கைகளும் ஆகிய காலணிகள் ஒலிக்கவும், கட்டழகு மேய அரைஞாண் மணி கறங்க—பேரழகுபொருந்திய அரைஞாணிற்கோத்த மணிகள் ஒலிக்கவும், வட்டம் அணி குண்டலம் மதாணி நுதல் வீரபட்டிகை மின—வட்டவடிவைப்பொருந்திய காதணியும் பதக்கமும் நெற்றியிலணிந்த வீரபட்டமும் ஒளிர, குமரன் ஆடல் பயில்கின்றான்— குமாரக்கடவுள் திருவிளையாட்டியற்றுகின்றார் எ—று.

தட்டை- எதுகைநோக்கிவந்த வலித்தல்விகாரம். நெகிழும்-நெகிழுந்தன்மையையுடையது. கழல் வீரர்காலணி. "வீரத்தின்வீக்கிய-கழலேயாடவர்கான்மிசையணிவடம்' என்பதனாலறிக. இப்பெயர் கழலுந்தன்மையையுடைமையால் வந்தகாரணப்பெயர். கழலிலணிதலால் இடவாகுபெயராய் வழங்கியதெனினுமாம். சிலம்ப கறங்க என்பனவற்றிற் செவ்வெணும்மையும் மின்ன என்பதில் இடையொற்றுஞ் செவ்வெணும்மையுந்தொக்

கது. அரைஞாண் அரையிற்றரிக்கப்படுங்கயிறு. அரையென்னும் பாதியின்பெயர் உடம்பினடுவிடத்தையுணர்த்தலால் ஆகுபெயர். ஞாண் நாண் என்பதன்போலி. அரைஞாண் மணியை அரைச்சதங்கையெனவுங் கிங்கிணியெனவுங்கூறுப. மணியெனச்சொல்வருத்து மணிகளையுடையகுண்டலமெனப் பொருள்கூறுவாருமுளர். வட்டம் விருத்தமென்னும் வடமொழிச்சிதைவு; இயற்சொலென்பாருமுளர். (உ)

மன்றுதொ றுலாவுமலர் வாவிதொ றுலாவுந்
துன்றுசிறு தென்றறவழ் சோலைதொ றுலாவு
மென்றுமுல வாதுலவும் யாறுதொ றுலாவுங்
குன்றுதொ றுலாவுமுறை யுங்குமர வேளே.

இ—ள்: குமரவேள்—முருகக்கடவுள், மன்று தொறு உலாவும்—சபைகளெங்குமுலாவுவார், மலர் வாவி தொறு உலாவும்— பூக்களையுடைய வாவிகளெங்குமுலாவுவார், துன்று சிறுதென்றல் தவழ் சோலை தொறு உலாவும்—நெருங்கிய இளந்தென்றற்காற்றுவீசப்பெற்ற சோலைகளெங்குமுலாவுவார், என்றும் உலவாது உலவும் யாறு தொறு உலாவும்— எஞ்ஞான்றுங் குறையாதுபாய்கின்ற ஆறுகளெங்குமுலாவுவார், குன்று தொறு உலாவும்—மலைகளெங்குமுலாவுவார், உறையும்— (மேற்கூறிய இடங்களில்) தங்கியிருப்பார் எ—று.

மன்று-புலவர்சபை நீதித்தலம்முதலியன. தோறுமென்னும் இடைச்சொல் தொறு எனநின்றது. உலாவல்-உல்லாசமாக நடத்தல். வாவி-வாபீ என்னும் வடசொற்றிரிபு. 'சேயோன்மேயமைவரையுலகமும்' எனத் தொல்காப்பியத்தினும் "விண்பொருநெடுவரைக்குறிஞ்சிக்கிழவன்" எனவும் "குன்றுதொறாடலுநின்றதன்பண்பே' எனவும் திருமுருகாற்றுப்படையினுங் கூறுதல்பற்றி, உறையுமென்பதைப் பிறவிடங்களுடன்கூட்டாமல் குன்றுதொறு என்பதோடுமாத்திரங் கூட்டியுரைப்பினுமாம். அதனைப் பெயரெச்சமாக்கி, எங்கும் வியாபகமாயிருக்கும் முருகக்கடவுள் இங்ஙனமுலாவுவரெனக்கூறினும் பொருந்தும். (ஈ)

குளத்தினுல வுந்நதி குறைந்திடு துருத்திக்
களத்தினுல வுந்நிரைகொள் கந்துடை நிலைத்தாந்
தளத்தினுல வும்பனவர் சாலையுல வும்மென்
னுளத்தினுல வுஞ்சிவ னுமைக்கினிய மைந்தன்.

இ—ள்: என் உளத்தின் உலவும் சிவன் உமைக்கு இனிய மைந்தன்—தமியேனது மனத்தில்வந்துலாவுகின்ற சிவபிரானுக்கும் உமாதேவியாருக்கும் இனிய குமாரராகிய கந்தவேள், குளத்தின் உலவும்— குளங்களிலுலாவுவார், நதி குறைந்திடு துருத்தி களத்தின் உலவும்— ஆற்றுநீர்குறைதலினாற்றோன்றுகின்ற மணல்மேடாகிய இடங்களிலுலாவுவார், நிரை கொள் கந்து உடை நிலைத்து ஆம் தளத்தின் உலவும்— ஆத்தீண்டுகுற்றியையுடையதாகிய முல்லைநிலத்திலுலாவுவார், பனவர் சாலை உலவும்— அந்தணர்களது சாலைகளிலுலாவுவார் எ—று.

உலவுந்நதி உலவுந்நிரை என்டவற்றில் நகரவொற்றும், உலவும்மென் என்பதில் மகரவொற்றும் விரித்தல். துருத்திக்களம் இருபெயரொட்டு. நிரைகொள்கந்து-பசுக்கள் (தினவுதீர்த்தற்குரியதாகக்)கொள்ளுகின்ற தறி. கந்து-ஸ்கந்தம் என்னும் வடமொழித்திரிபு. பனவர்சாலை- பர்ணசாலை யாகசாலை வேதமோதுமிடமுதலியன. தாம் அப்பெருமான்மேற்கொண்ட அன்புதோன்ற என்னுளம் என்றாரேனும், உபலக்கணத்தால் அன்புடையாரது உளத்தெல்லாம் நினைந்தவடிவோடுலாவுபவரென்பது கொள்ளப்படும். இதனை இவ்வாறுவருமேனையிடங்களினுமுரைக்க. உளத்தினுலவும் என்பது மைந்தன் என்ப

தனேடியையும். மைந்தன் மைந்தையுடையவன். மைந்து-இளமை, வலி. இனியமைந்த னென்றதனால் மூத்ததிருக்குமாரராகிய விநாயகக்கடவுளினும் இவர்மாட்டே பேரன்புடையரென்பது பெற்றாம். (ச)

இந்துமுடி முன்னவ னிடந்தொறு முலாவுந்
தந்தையுடன் யாயமர் தலங்களி னுலாவுங்
கந்தமலர் நீபமுறை கண்டொறு முலாவுஞ்
செந்தமிழ் வடாதுகலை சேர்ந்துழி யுலாவும்.

இ—ள்: இந்து முடி முன்னவன் இடம் தொறும் உலாவும்— சந்திரனையணிந்த சடைமுடியினையுடைய சிவபிரான்வீற்றிருக்கின்ற ஆலயங்கடோறுமுலாவுவார், தந்தையுடன் யாய் அமர் தலங்களின் உலாவும்—பிதாவாகிய சிவபிரானுடன் மாதாகிய உமாதேவியார்வீற்றிருக்கின்ற ஆலயங்கடோறுமுலாவுவார், கந்த மலர் நீபம் உறை கண் தொறும் உலாவும்— நறுமணம்வீசுகின்ற பூக்களையுடைய கடப்பமரங்கள்பொருந்திய இடங்கடோறுமுலாவுவார், செம் தமிழ் வடாது கலை சேர்ந்துழி உலாவும்-செவ்விய தமிழ்மொழியும் வடமொழியும் வழங்குமிடங்களிலுலாவுவார் எ—று.

இந்து தலம் கந்தம் நீபம் கலை என்பன வடசொற்கள். இந்து என்பதற்கு, சந்திரிகையினால் நிலமகளின்மேனியைக் குளிர்விப்பதென்பதுபொருள். முடி-முடியப்படுவது; செயப்படுபொருள் விகுதிபுணர்ந்துகெட்டது. சிவன்முடி கபர்த்தமென்னும்பெயர்த்து. முன்னவன் அநாதியேயுள்ளவன். ஈண்டு முன் காலமுன்; இடமுன்னாகக்கொண்டு, அனைவர்க்குந்தலைவராதல்பற்றி முதலில்வைக்கப்படுபவரெனினுமிழுக்காது. தந்தை என்பது, தாம் என்னும் பகுதி முதல்குறுகி தை என்னுமுறைப்பெயர்விகுதியுடன்கூடிமுடிந்தது. தந்தையுடன் யாயமர் தலம் என்றதனால் முன்னர்க்கூறியது சிவபிரான்றனித்துறையுந்தலங்களையென்பதுபெற்றாம். மலர் என்பதிற் கருத்தாப்பொருள் விகுதிபுணர்ந்து கெட்டது. செந்தமிழாவது:-கொடுந்தமிழ்க்கெதிரியது. திரமிளமென்னும்வடமொழி தமிழெனத்திரிந்ததென்பர் பிரயோகவிவேகநூலார். அதனைமறுத்து, தமி என்னும் வினைப்பகுதியடியாய்ப்பிறந்து வினைமுதற்பொருளுணர்த்தும் விகுதிகுன்றி ழகரவொற்றெழுத்துப் பேறுபெற்றுத் தனக்கிணையில்லாப்பாஷையென்னும் பொருடந்துநின்றதென்பாரும், அன்மொழித்தொகையாகக்கொண்டு, தனித்த ழகரத்தையுடையதெனவிரித்து, பிறபாஷைகளிலிலதாய ழகரவொற்றையுடைமையினிப்பெயர்த்தாயிற்றென்பாரும், தமிழென்னுஞ்சொற்கு இனிமையென்பதுபொருள், அது ஆகுபெயராய் அப்பண்பையுடையபாஷையையுணர்த்திற்றென்பாருமுளர். வடக்கிலுள்ளது வடாது; மரூஉமொழி. கலை-நூல்; ஈண்டுப்பாஷையையுணர்த்திநின்றது. இயற்கையாகவழங்கும்பாஷையாதலிற் செந்தமிழ்க்குத் திசைகூறாராயினர்; அதனை முன்வைத்ததூஉமிக்கருத்தேபற்றியென்க. சேர்ந்த என்னும் பெயரெச்சத்து ஈறுதொக்கது. (ரு)

மண்ணிடை யுலாவுநெடு மாதிர முலாவு
மெண்ணிடை யுறுதகட லெங்கணு முலாவும்
விண்ணிடை யுலாவுமதி வெய்யவ னுடுக்கோள்
கண்ணிடை யுலாவுமிறை கண்ணில்வரு மண்ணல்.

இ—ள்: இறை கண்ணில் வரும் அண்ணல்—சிவபிரானது நுதற்கண்களினின்றுந்தோற்றியருளிய முருகக்கடவுள், மண் இடை உலாவும்—பூவுலகத்திலுலாவுவார், நெடு மாதிரம் உலாவும்—நெடிய திக்குகளிலுலாவுவார், எண் இடை உறுத கடல் எங்கணும் உலாவும்—மதிப்பில் அளவுபடாத சமுத்திரங்களெங்கும் உலாவுவார், விண் இடை உலாவும்—ஆகாயத்திலுலாவுவார், மதி வெய்யவன் உடு கோள் கண் இடை உலா

வும்— சந்திரன் சூரியன் நாண்மீன்கள் கிரகங்கள் என்னுமிவற்றின் மண்டலங்களிலுலா
வுவார் எ—று.

ம்ருத் என்னும் வடமொழி சிலவடமொழிகளுடன் புணரும்போது ம்ருண் எ
னவிகாரப்படும், அங்ஙனம் விகாரம்பெற்றபதம் தமிழில் மண் எனத்திரிந்து ஓர்பெயரா
யிற்று. இயற்சொலென்பாருமுளர். எக்கண் என்பது எங்கணெனமெலிந்தது. ஈண்டு எ
கரவினு எஞ்சாமையையுணர்த்திற்று. மதி-யாவராலுமதிக்கப்படுவதென்னுங் காரணத்
தான்வந்தபெயர். சந்திரன் அங்ஙனமதிக்கப்படுதலை "குறைபலமாமதிகொளினுமன்னதா-
லுறுபயனோக்கியேயுலகம்போற்றல்போல்"என ஆசிரியர் முன்னர்க்கூறுதலானும், "ஒண்
கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய-வங்கண்விசும்பின்முயலுந்தொழப்படூஉம்" என நா
லடியாரும் "அங்கண்விசும்பினிருள்போழ்ந்தகல்வானெழுந்த- திங்கண்மறுவுஞ்சிலர்கை
தொழச்செல்லுமன்றே" எனச் சூளாமணியாருங் கூறுதலானும் காண்க. சந்திரன் இளம்
பிறையாகத்தோன்றுங்காலத்திற் கன்னியரும் பிறருங் கைதொழுது எண்ணியசித்திகளை
ப்பெறுதலியல்பென்க. வெய்யவன்-வெப்பத்தையுடையவன்=சுடுகிரணங்களைப்பரப்புகி
ன்றவன். உடு-உட் என்னுந் தாதுவினடியாகப்பிறந்த வடசொல். தொகுக்கப்பட்டுள்ள
தென்பதுபொருள். கோள்-(காலத்தையளந்து)கொள்வது. இக்கருத்துப்பற்றியே வடநூ
லாருங் கிரகமெனவழங்குவர். இதனை, முதனிலைதிரிந்ததொழிலாகுபெயரென்றுவது வி
னைமுதற்பொருள்விகுதி புணர்ந்துகெட்டு முதனீண்டபெயரென்றுவது கொள்க. க
ண்-ஈண்டு, மண்டலம். இறை-தலைமை; அண்ணல் பெருமை. அவை பண்பாகுபெயரா
ய் அக்குணங்களையுடையாரையுணர்த்தின. இறை என்பதை இறு என்னும் பகுதியும் ஐ
என்னுங் கருத்தாப்பெயர்விகுதியுங்கூடிமுடிந்த பதமெனக்கொண்டு, (எல்லாப்பொருள்
களினும் அந்தர்யாமியாய்த்) தங்குகின்றவனெனப் பொருளுரைப்பினுமாம். கண்ணில் எ
ன்பதில் இல் ஐந்தனுருபு; நீக்கப்பொருட்டு. சினையிடமான பிறிதின்கிழமை ஏழாம்வேற்று
மையுருபென்றுகொள்ளினுமிழுக்காது. வரும்-இயற்கையான்வந்த காலவழுவமைதி.

திகந்தங்காறுமுலாவுவரென்பது போதர 'நெடுமாதிரமுலாவும்' எனவும், நீட்
சி அகற்சி ஆழம் என்பவற்றான் இத்துணையவென மதித்துணர்தற்கரிதான பெருங்கடலெ
ன்பார் 'எண்ணிடையுறுதகடல்' எனவும் கூறினர். (௯)

கந்தருவர் சித்தர்கருட டத்தொகைய ரேனோர்
தந்தமுல காதிய தலந்தொறு முலாவு
மிந்திர னிருந்ததொல் லிடந்தனி லுலாவு
முந்துதவர் வைகுமுல கந்தொறு முலாவும்.

இ—ள்: கந்தருவர் சித்தர் கருடத்தொகையர் ஏனோர் தம் தம் உலகு ஆதிய த
லம் தொறும் உலாவும்—கந்தருவலோகம் சித்தலோகம் கருடலோகம் எனைத் தேவகணத்
தினருலகம்முதலாகிய இடங்களெங்குமுலாவுவார், இந்திரன் இருந்த தொல் இடம் த
னில் உலாவும்—தேவேந்திரன் அரசிருந்த பழைய சுவர்க்கலோகத்திலுலாவுவார், உந்து
தவர் வைகும் உலகம் தொறும் உலாவும்—நல்வழியிற்செலுத்துகின்ற தவத்தினையுடைய
முனிவர்கள் இருக்கின்ற உலகமெங்குமுலாவுவார் எ—று.

'கந்தருவர்சித்தர்கருடத்தொகையரேனோர்' என்றது பதினெண்கணங்களை;
அவர்:—தேவர் அசுரர் தைத்தியர் கருடர் கின்னரர் கிம்புருடர் இயக்கர் விஞ்சையர் இரா
க்கதர் கந்தருவர் சித்தர் சாரணர் பூதர் பைசாசர் தாராகணம் நாகர் ஆகாயவாசிகள் போக
பூமியார் என்பவர்கள்; பிறவாறுமுரைப்பர். கந்தருவத்தொகையினர்தம்உலகு சித்தத்
தொகையினர்தம்உலகு என்றிவ்வாறு தனித்தனியியைத்துப் பொருளுணர்க. கந்தருவ
ர்-இசைபாடுஞ் சிறகுடைத்தேவசாதியார். கருடர் நீண்டமூக்கும் பெருஞ்சிறகுமுடைய

தேவசாதியார். தம் தம் அடுக்கிவந்தசாரியை; ஆறனுருபென்பாருமுளர். உலகு-லோகம் என்னும் வடமொழித்திரிபு; இயற்சொலென்பர் நச்சினார்க்கினியர். தவர்வைகுமுலகம் தபோலோகம். சூரனிழைத்த தீங்கால் அரசிழந்தொளித்தனனாதலின், 'இந்திரனிருந்த தொல்லிடம்' என,இறந்தகாலத்தால் அடைபுணர்த்தியும், தபோலோகத்துய்ப்பது தவமே யாதலின் 'உந்துதவர்வைகுமுலகு' எனவும் கூறினர். (எ)

அங்கமல நான்முக னரும்பத முலாவு
மங்கல நிறைந்ததிரு மால்பத முலாவு
மெங்கள்பெரு மாட்டித னிரும்பத முலாவுந்
திங்கண்முடி மேற்புனை சிவன்பத முலாவும்.

இ—ள்: அம் கமல நான்முகன் அரும் பதம் உலாவும்— அழகிய தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரது சிறந்த பதவியிலுலாவுவார், மங்கலம் நிறைந்த திருமால் பதம் உலாவும்—சுபகரம்நிறையப்பெற்ற இலக்குமிநாயகராகிய விஷ்ணுமூர்த்தியின் பதவியிலுலாவுவார், எங்கள் பெருமாட்டி தன் இரும் பதம் உலாவும்—எங்கள் தலைவியாராகிய உமாதேவியார்வீற்றிருக்கின்ற பெரிய உலகத்திலுலாவுவார், திங்கள் முடி மேல் புனை சிவன் பதம் உலாவும்—சந்திரனைச் சடையின்மேற்றரித்தருளிய சிவபிரானது உலகத்திலுலாவுவார் எ—று.

நான்முகன்பதம்- சத்தியலோகம். திருமால்பதம்-வைகுண்டலோகம். பெருமாட்டிபதம்- சத்திலோகம். சிவன்பதம்-சிவலோகம். கமலநான்முகனென்பதற்கு உந்திக்கமலத்திற்றோன்றிய பிரமனெனக்கூறினுமாம். கமலம் ஆகுபெயர். அருமை ஈண்டு மகிமை. காத்தற்றொழிற்கருத்தராதலின் 'மங்கலநிறைந்ததிருமால்' என்றார்; இதனைத் திருவுக்கடையென்பாருமுளர். பெருமாட்டி-பெருமானென்பதன் பெண்பாற்பெயர்.

முன்னர் ஐந்தாஞ்செய்யுளில் 'இந்துமுடிமுன்னவனிடந்தொறுமுலாவுந்- தந்தையுடன்யாயமர்தலங்களினுலாவும்' எனக்கூறி, ஈண்டும் 'எங்கள்பெருமாட்டிதனிரும்பதமுலாவுந்- திங்கண்முடிமேற்புனைசிவன்பதமுலாவும்' என்றது மிகையாம்பிறவெனின், பூவுலகிலுள்ள ஆலயங்களிலுலாவியதை முன்னைச்செய்யுளிற்கூறி ஈண்டு அண்டமுடிக்கணுளவாய சத்தியலோகத்தையுஞ் சிவலோகத்தையும் கூறினாராதலின் மிகையாதல் யாங்ஙனமென்க. 'எங்கள்' என்ப் பன்மையாற்கூறியது உலகிலுள்ள எல்லாவுயிர்களையுமுளப்படுத்தி. (அ)

இப்புவியி லண்டநிரை யெங்கணு முலாவு
மப்புவழ லூதைவெளி யண்டமு முலாவு
மொப்பில்புவ னங்கள்பிற வுள்ளவு முலாவுஞ்
செப்பரிய வோர்பர சிவன்றனது மைந்தன்.

இ—ள்: செப்ப அரிய ஓர் பரசிவன் தனது மைந்தன்—எவராலும் வரையறுத்துக்கூறுதற்கரிய(மகிமையினையுடைய)ஒப்பற்ற பரமசிவனது திருக்குமாரராகிய முருகக்கடவுள், இ புவியில் அண்டநிரை எங்கணும் உலாவும்—இந்தப் பூமியின்கூறுகிய அண்டங்களெங்குமுலாவுவார், அப்பு அழல் ஊதை வெளி அண்டமும் உலாவும்- அப்புவண்டம் தேயுவண்டம் வாயுவண்டம் ஆகாயவண்டம் என்பவைகளினுமுலாவுவார், ஒப்பு இல் புவனங்கள் பிற உள்ளவும் உலாவும்— உவமையில்லாத மற்றுமுள்ளஉலகங்களினுமுலாவுவார் எ—று.

வடமொழியில் ஏழாம்வேற்றுமையொருமையுருபேற்றுநின்ற 'புவி' என்பது தமிழிற்பெயராய்வழங்கிற்று. பின்னைய உம்மைகள் இரண்டும் எச்சங்கள்.

அப்பு என்பதிற்குற்றியலுகரம் உயிர்வரக்கெடாமை வடசொல்லாதலின். உள்ள-உண்மை என்னும் பண்புப்பெயரடியாகப்பிறந்த பலவின்பாற்படர்க்கைக்குறிப்புவினையாலணையும்பெயர். செப்ப என்பதனீற்றகரந்தொக்கது. 'புவனங்கள்பிற' என்றது பஞ்சபூதங்களையொழிந்த மற்றைத்தத்துவங்களின் தானங்களை. (௯)

வேறு.

இருமூவகை வதனத்தொடு மிளையோனெனத் திரியு
மொருமாமுக னொடுசென்றிடு முயர்காளையி னுலவும்
பெருமாமறை யவரேயென முனிவோரெனப் பெயருந்
தெரிவார்கணை மறவீரரிற் றிரிதந்திடுஞ் செவ்வேள்.

இ—ள்: செவ்வேள்—குமாரக்கடவுள், இருமூவகை வதனத்தொடும் இளையோன் என திரியும்—ஆறென்னுந்தொகைப்பட்ட திருமுகங்களுடன் பாலரைப்போல உலாவுவார், ஒரு மா முகனொடு சென்றிடும்—பெரிய ஒரு திருமுகத்துடனுலாவுவார், உயர் காளையின் உலவும்—உயர்ந்த காளைப்பிராயமுடையானைப்போலவுலாவுவார், பெருமா மறையவரேஎன முனிவோர் (ஏ) என பெயரும்—வயதுமுதிர்ந்த சிறந்த அந்தணரையேபோலவும்முனிவரையேபோலவுமுலாவுவார், தெரிவார் கணை மறவீரரில் திரிதந்திடும்— ஆராய்ந்தெடுத்த நீண்டபாணங்களையும் தறுகண்மையையுமுடைய வீரர்களைப்போல உலாவுவார் எ—று.

இருமூவகைவதனம்-பண்புத்தொகைப்பன்மொழித்தொடர். வதனம்-வடசொல்; பேசுதற்குக்கருவியென்பதுபொருள். முகன்-முகம் என்பதன் இறுதிப்போலி. காளையின்என்பதற்கு எருதுபோல்எனவுரைப்பர்சிலர். இளையோனென காளையின் பெருமாமறையவரேயென என்பவற்றில்,பாலியம் கௌமாரம் வார்த்திகம் என்னுமூன்றுபிராயங்களுமடங்கின. பெரு மா என்பனவற்றை மறைக்கடையெனினுமாம். ஏ தேற்றம்; அது முனிவோரோடுங் கூட்டப்பட்டது. தெரிவார்கணைமறவீரர் என்றது வடசொன்னடை; வார்கணைதெரிமறவீரரென மாற்றியுரைப்பினுமாம். சென்றிடும் என்பதில் இடு என்பதும், திரிதந்திடும் என்பதில் தா இடு என்பனவும் பகுதிப்பொருளவாய்நின்றன. (௧0)

காலிற்செலும் பரியிற்செலுங் கரியிற்செலுங் கடுந்தேர்
மேலிற்செலுந் தனியாளியின் மிசையிற்செலுந் தகரின்
பாலிற்செலு மானத்திடை பரிவிற்செலும் விண்ணின்
மாலிற்செலும் பொருசூரொடு மலையச்செலும் வலியோன்.

இ—ள்: பொரு சூரொடும் மலைய செலும் வலியோன்—எதிர்த்த சூரபன்மனொடும் போர்செய்யப்புகும் வலியவராகிய சுப்பிரமணியக்கடவுள், காலில் செலும்— பாதங்களால் நடப்பார், பரியில் செலும்—குதிரையின்மேலிவர்ந்து செல்வார், கரியில் செலும்—யானையின்மேலிவர்ந்து செல்வார், கடும் தேர் மேலில் செலும்— விரைந்துசெல்லுந் தேரின்மேலிவர்ந்துசெல்வார், தனி ஆளியின் மிசையில் செலும்—ஒப்பற்ற சிங்கத்தின்மேலிவர்ந்து செல்வார், தகரின் பாலில் செலும்-ஆட்டுக்கடாவின்மேலிவர்ந்து செல்வார், பரிவில் மானத்திடை செலும்—விருப்பத்துடன் விமானத்தின்மேலிவர்ந்து செல்வார், விண்ணில் மாலில் செலும்—ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற மேகத்தின்மேலிவர்ந்து செல்வார் எ—று.

காலிற்செலும்பரியிற்செலுமென்பதை ஒருதொடராக்கி, வாயுவைப்போல (வேகமாய்ச்) செல்லுகின்ற குதிரையின்மேலிவர்ந்து செல்வாரெனவும், விண்ணின் மாலிற்செலும் என்பதைச் சூரனுக்கடையாக்கி, அஞ்ஞானவசத்தாற்றேவர்மீது பகைமைவி

ளைத்த எனவும் பொருள்கூறுவர்சிலர். பரி-(பாரத்தைச்) சுமப்பது. பரித்தல்- சுமத்தல். யாளியெனச்சொல்வதுப்பின்,யானையைக்கொல்வதும் சிங்கம்போல்வதும் துதிக்கையையுடையதுமாகியதொரு மிருகவிசேடமாம். தகர் ஆட்டினாண்மைப்பெயர். மானம் என்பது- விமானமென்பதன்முதற்குறை. தகரின்பாலில்-உருபுமேலுருபு. சூரியனது ஏழ்பரிகளினும் சந்திரனது தேரினும் திசையானைகளினும் இவர்ந்துசென்றாரென முதனூல்கூறுதலின், ஈண்டும், பரி சூரியன்குதிரையெனவும் கரி திசையானையெனவும் தேர் சந்திரனது தேரெனவுமுரைக்க. பிறவற்றையுமிவ்வாறே யூகித்துரைக்க. (௧௧)

பாடின்படு மணியார்த்திடும் பணைமென்குழ லிசைக்குங்
கோடங்கொலி புரிவித்திடுங் குரல்வீணைகள் பயிலு
மீடொன்றிய சிறுபல்லிய மெறியும்மெவ ரெவரு
நாடும்படி பாடுங்களி நடனஞ்செயு முருகன்.

இ—ள்: முருகன்—சுப்பிரமணியக்கடவுள், பாடு இன் படும் மணி ஆர்த்திடும்—ஓசை இனிதாகிய மணியை அடிப்பார், மென் பணை குழல் இசைக்கும்— மெல்லோசையினையுடைய வேய்ங்குழலை ஊதுவார், கோடு ஒலி புரிவித்திடும்-கொம்பை ஊதுவார், குரல் வீணைகள் பயிலும்—இன்னிசையையுடைய வீணைகளை இசைப்பார், ஈடு ஒன்றிய சிறு பல் இயம் எறியும்—மகிமைபொருந்திய சிறிய பலவாத்தியங்களை முழக்குவார், எவர் எவரும் நாடும்படி பாடும்—யார் யாரும் விரும்பிக்கேட்கும்படி கீதம்பாடுவார், களி நடனம் செயும்—மனமகிழ்ச்சியைத்தருகின்ற நாடகத்தையியற்றுவார் எ—று.

பாடு ஓசை; இதனை, திருமுருகாற்றுப்படையில், "பாடின்படுமணியிரட்டவொருகை" என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறியவுரையானுமறிக. பணை-மூங்கில். கோடு சங்கெனினுமாம்; வளைதலையுடையதென்பது பொருள். குரல்-ஈண்டு, ஓசை. இயமென்பது அடிப்பன ஊதுவன முதலியவனைத்திற்கும் பொதுமொழியாயினும், எறியும் என வினைபுணர்த்தியதனால், ஈண்டு அடிப்பனவற்றையுணர்த்தும். எறியும்மெவர் என்பதின் மகரமெய் சந்தவின்பநோக்கிவந்த விரித்தல். எவரெவரும் என்பதிலும்மை உயர்வுசிறப்பு. அது சங்கீதசாமர்த்தியரையேனும் புலனுகர்ச்சியான்வருமின்பங்களை வெறுத்தாரையேனுங் குறிக்கும். எவரெவருநாடும்படி என்பதைக்களிநடனஞ்செயுமென்பதனோடுமியைத்து, ஏற்றவாறுரைக்க. களிநடனம்-களிப்பினாற்செய்யுநடனமுமாம். (௧௨)

இன்னேபல வுருவங்கொ டியாண்டுங்கும ரேச
னன்னேயமொ டாடுற்றுழி நனிநாடினள் வியவா
முன்னேயுல கினையீன்றவண் முடிவின்றுறை முதல்வன்
பொன்னேர்கழ லிணைதாழ்ந்தனள் போற்றிப்புகல் கின்றாள்.

இ—ள்: குமரேசன்—சுப்பிரமணியக்கடவுள், இன்னே பல உருவம் கொடு— இவ்வாறு பலவடிவங்களைக்கொண்டு, நல் நேயமொடு யாண்டும் ஆடுற்ற உழி—மிக்கவிருப்பத்துடன் எங்கும்திருவிளையாட்டியற்றியபொழுது, முன் உலகினை ஈன்றவள்-பண்டைக்காலத்தில் உலகங்களைப்பெற்ற (பரமமாதாவாகிய) உமாதேவியார், முடிவு இன்று உறை முதல்வன் பொன் நேர் கழல் இணை தாழ்ந்தனள்—அழிவின்றி (என்றுமோர்படித்தாய்) இருக்கின்ற சிவபிரானது பொன்போன்ற இரண்டுபாதங்களையும் வணங்கி, போற்றி—துதித்து, புகல்கின்றாள்—இவ்வாறு விண்ணப்பஞ்செய்வார் எ—று.

உருவம்-ரூபமென்னும் வடமொழித்திரிபு. இது உருவு உரு எனவுஞ்சிதைந்து வழங்கும். யாண்டும் என்பதில் யாவினு எஞ்சாமையையுணர்த்திற்று. குமர + ஈசன் = குமரேசன்; குணசந்தி. ஆடுற்றுழி-தொகுத்தல். நாடினள் தாழ்ந்தனள் முற்றெச்சம். மூன்

ருஞ்செய்யுண்முதலிதுகாறுங் கூறிப்போந்த திருவிளையாடல்கள், மூதனூலில் விரித்து ணர்த்தப்பட்டன. அவற்றையீண்டெடுத்துரைப்பின் மிகவிரியும். (௧௩)

கூடுற்றநங் குமரன்சிறு குழவிப்பரு வத்தே
யாடற்றொழி லெனக்கற்புத மாகும்மவன் போல்வார்
நேடிற்பிற ரிலைமாயையி னினைநேர்தரு மனையான்
பீடுற்றிடு நெறிதன்னையெம் பெருமான்மொழி கென்றாள்.

இ—ள்: எம் பெருமான்—எமது தலைவரே!, கூடுற்ற நம் குமான்— (ஆறுரு வுமொன்றாய்க்) கூடப்பெற்ற எங்கள் புதல்வன், சிறு குழவிப்பருவத்தே ஆடல் தொழில் எனக்கு அற்புதம் ஆகும்—இ ள ங் கு ழ ந் தை ப் பி ர ா ய த் தி ற் றா னே (மிகப்பெரி ய) விளையாட்டுக்களையியற்றுவது எனக்கு ஆச்சரியமாகவிருக்கின்றது, நேடில்—ஆராயுங் கால், மாயையில் அவன் போல்வார் பிறர் இலை—மாயத்தொழிலில் அவனையொப்பார் பி றரொருவரும் இல்லை, நினை நேர்தரும்— தேவரீரையேபோல்வான் (ஆதலின்), அனையா ன் பீடு உற்றிடும் நெறி தன்னை மொழிக என்றாள்-அப்புதல்வன் மகிமைபெற்ற காரணத் தைக் கூறியருளுகவென்று பிரார்த்தித்தார் எ—று.

நம்-முன்னிலையாகிய சிவபிரானையுளப்படுத்திய தன்மைப்பன்மை. குழவி- இ ளமையையுடையது. குழ-இளமை. இ-விகுதி. "மழவுங்குழவுமிளமைப்பொருள" என்னு ந்தொல்காப்பியச்சூத்திரத்தானுமுணர்க. பருவத்தே என்பதில் ஏகாரம் பருவக்குறைவை வற்புறுத்தியது. அற்புதம்-அத்புதம் என்னும் வடமொழித்திரிபு. ஆகும்மவன் என்பதில் மகரம்விரித்தல். மொழிகஎன்னும் வியங்கோளீற்றகரமும்,இல்லை என்பதில் லகரவொற் றும்,நினையே என்பதிற்பிரிநிலையேகாரமும் தொக்கன. மாயையாவது செய்தற்கரியகாரிய ங்களை எளிதிற்செய்துமுடித்தல். நேர்தரும் என்பதில் தா பகுதிப்பொருட்டு. இச்சொ ல்லைப் பெயரெச்சமாக்கி அனையானென்பதற்கடையாக்கினுமாம். எம்பெருமான் அ ண்மைவிளியாதலினியல்பாயிற்று. பெருமான்-பெருமையுடையவன். பெரு-பகுதி; மான் விகுதி. ஆன் விகுதியெனக்கொள்ளின் பெருமையென்னும் பண்புப்பெயரீற்றைகாரமா த்திரங்கெட்டு 'பெரும்' எனநின்றதென்க. (௧௪)

அல்லார்குழ லவளின்னண மறியார்களின் வினவ
வொல்லார்புர மடுகண்ணுத லுன்றன்மக னியல்பை
யெல்லாவுயிர் களுமுய்ந்திட வெமைநீகட வினையா
னல்லாயிது கேண்மோவென வருளாலிவை நவில்வான்.

இ—ள்: அல் ஆர் குழலவள் அறியார்களின் இன்னணம் வினவ— இருள்போ ன்ற [கரிய] கூந்தலையுடைய உமாதேவியார் அறியாதார்போல இவ்வாறு வினவ, ஒல்லா ர் புரம் அடு கண்ணுதல்-பகைவரது முப்புரங்களையுமழித்தருளிய சிவபிரான்(அவரைநோக் கி), நல்லாய்—தேவீ!, நீ எல்லா உயிர்களும் உய்ந்திட எமை கடவினை—நீ எல்லா ஆன் மாக்களும் உணர்ந்துய்யும்படி எம்மை வினவினை, இது கேள் என— இதனைக் கேட்குதி யென்று, அருளால் இவை நவில்வான்—கிருபையுடன் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளு வார் எ—று.

ஆர் உவமவுருபு. ஒல்லார்-பொருந்ாதவர்=பகைவர். மகன்-இளமையையுடை யவன். மக இளமை. மோ முன்னிலையசை. வினவ நவில்வான் எனஇயையும். தாங்கே ட்டலாகியவியாசத்தாற் பிறர்க்கு அவரதுமான்மியத்தை வெளிப்படுத்தி அ தனையுணர்ந்தபின் அவரைச் சேவித்துய்விக்குமாறேயன்றி, அறியாதுகடாயினுயல்லையெ

ன்பார் 'எல்லாவுயிர்களுமுய்ந்திடவெமைநீகடவினை' எனவும், அது தமக்குமுடன்பாடாயிற்றென்பதுதோன்ற 'அருளாலிவைநவில்வான்' எனவும் கூறினார். (௧௫)

வேறு.

ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுத லாலே
காங்கெய னெனப்பேர் பெற்றான் காமர்பூஞ் சரவ ணத்தின்
பாங்கரில் வருத லாலே சரவண பவனென் றானான்.

இ—ள்: ஈங்கனம் நமது கண்ணில் எய்திய குமரன்—இவ்விடத்து எமது கண்களினின்றுந்தோற்றிய குமாரன், கங்கை தாங்கினள் கொண்டு சென்று சரவணத்து இடுதலால்—கங்காதேவி சுமந்துசென்று சரவணதடாகத்திலிடப்பெற்றகாரணத்தால், காங்கெயன் என பேர் பெற்றான்—காங்கேயனென்று பெயரைப்பெற்றான், காமர் பூ சரவணத்தின் பாங்கரில் வருதலால்—அழகிய தாமரைமலர்களையுடைய சரவணதடாகத்தினிடத்துத் தோன்றுதலால், சரவணபவன் என்று ஆனான்—சரவணபவனென்று பெயர்பெற்றான் எ—று.

சிவபிரான் முருகக்கடவுளின் மகிமையைத்தேவியார்க்குரைத்தமை,முதனூலில், அயனைச்சிறைநீக்கியபின் விரிவாகக் கூறப்பட்டுளது. இங்ஙனம் என்பதன் நீட்டலாகிய ஈங்ஙனமென்பது, ஈண்டு, எதுகைநோக்கி ஈங்கனமெனத்திரிந்தது. "யாங்கனமொத்தியோவீங்குசெலன்மண்டிலம்" எனப்புறநானூற்றில்வருவதுபோல. இதுபோலவே ஓரோவிடத்து ஆங்கனமென்பதும் வழங்கும். இவற்றை ஈங்கு ஆங்கு என்பனபோல ஒருசொல்லென்பாருமுளர். சரவணமென்பதற்கு நாணற்காடென முன்னர்ப்பொருளுரைத்தாம். நாணல்களினிடையேயுள்ள நீர் எனவும் பொருளுண்டு. பேர்-பெயரென்பதன்விகாரம். காமர்-காமம்என்னும் வடமொழியின்விகாரம். காமமருவு என்பது சிதைந்து மரூஉவாயிற்றென்பாருமுளர். நதிக்குரியதெய்வம் பெண்பாலாதலால் 'தாங்கினள்' என்றது. காங்கெயன்-காங்கேயன் என்பதன் குறுக்கல்; கங்கையின்புத்திரன் என்னும்பொருளையுடையதத்திதாந்தபதம். இதுமுதல் ஆறுசெய்யுட்கள் ஒருதொடர். (௧௬)

தாயென வாரல் போந்து தனங்கொள்பா லருத்த லாலே
யேயதோர் கார்த்தி கேய னென்றொரு தொல்பேர் பெற்றான்
சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றாச் செய்தா
யாயத னாலே கந்த னெனு நாமம் பெற்றான்.

இ—ள்: ஆரல் தாய் என போந்து தனம் கொள் பால் அருத்தலால்— கார்த்திகைநக்ஷத்திரம் தாயின்வடிவமாகவந்து தனங்களிற் பொருந்திய பாலையூட்டுதலால், ஏயது ஓர் கார்த்திகேயன் என்று ஒரு தொல் பேர் பெற்றான்—பொருந்தியதாகிய ஒப்பற்ற கார்த்திகேயன் என்னும் ஒரு பழைய நாமத்தை வகித்தான், நீ சேய் அவன் வடிவம் ஆறும் திரட்டி ஒன்றா செய்தாய்— நீ அக்குமாரனது ஆறுவடிவங்களையுஞ்சேர்த்து ஒருவடிவமாக்கினை, ஆயதனால்—அக்காரணத்தால், கந்தன் எனும் நாமம் பெற்றான்—கந்தனென்னும்பெயரை வகித்தான் எ—று.

போந்து புகுந்து என்பதன்விகாரம். தனம்-ஸ்தனம் என்னும்வடசொல்லின்திரிபு. ஆம் அசை. இப்பெயர்க்காரணங்கள் முன்னர்ச்சரவணப்படலத்துங்கூறப்பட்டனகாண்க. சிற்சிலபெயர்க்காரணங்களைக்கூறினார். முதனூலுணர்ந்தோர், ஆண்டுக்கூறிய பிறபெயர்க்காரணங்களையும் ஈண்டெடுத்துரைக்க. அவையுரைப்பிற்பல்கும். (௧௭)

நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்றா
யுன்மக னாமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே.

இ—ள்: நமக்கு நல் முகம் இருமூன்று உண்டு ஆல்-எமக்கு நல்லமுகங்கள் ஆறுண்டன்றோ?, அவைதாமே கந்தன் தன் முகம் ஆகி உற்ற—அந்த(முகங்களே) முருகவேளது ஆறுமுகங்களாயமைந்தன, தாரக பிரமம் முன் ஆகி மொழிகின்ற நம் தம் மூவிரண்டு எழுத்தும் ஒன்று ஆய்—பிரணவம் முதலிற்சேர்ந்து உச்சரிக்கப்படுகின்ற எமது (பஞ்சாக்ஷரமந்திரமாகிய) ஆறெழுத்துக்களுமொருங்குகூடி, உன் மகன் நாமத்து ஓராறு எழுத்து என உற்ற—உனதுகுமாரனது பெயரில் ஆறெழுத்துக்களாகப்பொருந்தின எ—று.

ஆலும் முன்னைய ஏகாரமும் தேற்றம்; ஆல் அசையெனினுமாம். ஐம்முகமுடையமாயினும், எண்டோளுடன்வருவதுபோல, ஒரோவிடத்துஅறுமுகத்துடனுமெழுந்தருளுவமென்பது தோன்ற 'நன்முகமிருமூன்றுண்டால்'என்றார். தம்முகம் ஐந்துடன் தேவியாரதுமுகமொன்றுங்கூட்டிக்கூறினரென்பர்சிலர்; முதனூலிலுமங்ஙனங்கூறப்பட்டுளது.

பிரமம்-பிரஹ்மமென்னும்வடமொழித்திரிபு. தாரகப்பிரமம்- தாரகமாகியபிரமம். ஒன்றுதல்-ஓரெழுத்தும் ஐந்தெழுத்துமாகிய இரண்டுமந்திரங்கள்கூடி ஆறெழுத்தாகிய ஒருமந்திரமாதல். தந்தையேமகனாகின்றானெனவேதங்கூறுவதையும்,விளக்கிலிருந்துவேறு விளக்குத்தோன்றினாற்போலச் சிவபிரானினின்று முருகக்கடவுள்தோன்றினரென முதனூல்கூறுவதையும் ஈண்டுய்த்துரைக்க. "ஆறுமாமுகஞ்சேர்த்துள்ளநமக்கவையவன்முகங்க-ளாறுமாயிருந்தவேதமறையுந்தாரகவெழுத்தோ- ராறுமாங்கவனாமத்தாறெழுத்துமாயிருந்தவன்றே" என்றார் தணிகைப்புராணத்தாரும். (௧௮)

ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றா
னேதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

இ—ள்: ஆதலின்—ஆகையினால், அறுமுகன் நமது சத்தி— முருகவேள் எம்முடையசத்தியேயாம், அவனும் யாமும் பேதகம் அன்று— அக்குமாரனும் யாமும் வேறுபாடுடையமல்லேம், நம் போல் பிரிவு இலன் யாண்டும் நின்றான்— எம்மைப்போல நீங்குதலின்றி எங்கும்(வியாபித்து)நிற்கின்றான், ஏதம் இல் குழவி போல்வான்-குற்றமற்ற குழந்தையைப்போலிருக்கின்றான் (அங்ஙனமிருப்பினும்), யாவையும் உணர்ந்தான்—எல்லாவற்றையும் அறிந்தவன், போற்றினர்க்கு சீரும் போதமும் அழிவு இல் வீடும் அருள வல்லான்— துதித்த அன்பர்க்குச் சிறப்பையும் ஞானத்தையும் அழிவற்ற முத்தியையும் பயக்கவல்லவன் எ—று.

தேற்றேகாரந்தொக்கது. சத்தியென்பதை-விளியாக்கி,தேவியே! எனவுரைப்பினுமாம். பேதம் என்னும் வடசொல் கப்பிரத்தியயம்பெற்றுப் பேதகம் எனநின்றது. அவனும் யாமும் பேதகமன்று-குணிகுணமாக உபசரிக்கப்பட்டது. சீர் என்றது இம்மையின் பங்களை; மேல் வீடும் அதற்குக்காரணமாய போதமுங்கூறப்பட்டமையின். கபடவுணர்ச்சி சிறிதுந்தோன்றாதகுழந்தையென்பார் 'ஏதமில்குழவி' எனவும், காலமிடையிட்டனவற்றையுந் தேயமிடையிட்டனவற்றையுமுணருமுற்றறிவினரென்பார் 'யாவையுமுணர்ந்தான்' எனவுங்கூறினார். இறைமைக்குணங்களெட்டனுள் ஈண்டுச்சிலகூறினாரேனும் ஏனையவற்றையுமுடையரென்பதை உபலக்கணத்தாலுரைக்க. (௧௯)

மேலினி யனைய செவ்வேள் விரிஞ்சனைச் சுருதிக் கெல்லா
மூலம தாகி நின்ற மொழிப்பொருள் வினவி யன்னோன்
மாலுறச் சென்னி தாக்கி வன்சிறைப் படுத்தித் தானே
ஞாலமன் னுயிரை யெல்லா நல்கியே நண்ணும் பன்னாள்.

இ—ள்: மேல் இனி--இனி, அனைய செவ்வேள்—அந்தமுருகவேள், விரிஞ்சனை சுருதிக்கு எல்லாம் மூலமது ஆகி நின்ற மொழி பொருள் வினவி—பிரமனை வேதங்கட்கெல்லாம் முதற்கண்ணதாய்நிற்கின்ற பிரணவத்தின்பொருளைச்(சொல்லுமாறு) வினவி, அன்னோன் மால் உற—அவன் அப்பொருளைக்கூறலாற்றாது மயங்க, சென்னி தாக்கி—தலையிற்குட்டி, வன் சிறை படுத்தி—வலிய காவற்சாலையில்வைத்து, பல் நாள்— அநேககாலமாக, ஞால மன் உயிரை எல்லாம் தானே நல்கி நண்ணும்—பூவுலகத்திலுள்ள நிலைபெற்ற ஆன்மாக்களையெல்லாந் தானே படைத்துக்கொண்டிருப்பான் எ—று.

மேல் இனி ஒருபொருட்பன்மொழிகள். தானே என்பதில் ஏகாரம் பிரிநிலை. 'விரிஞ்சனைச்சுருதிக்கெல்லாமூலமதாகிநின்றமொழிப்பொருள்வினவி' என்றது 'ஆசிரியனை ஐயுற்றபொருளைவினவினான்' என்பதுபோல்நின்றது. (௨௰)

தாரகன் றன்னைச் சீயத் தடம்பெரு முகத்தி னானைச்
சூரபன் மாவை யேனை யவுணரைத் தொலைவு செய்தே
யாரணன் மகவா னேனை யமரர்க ளிடுக்க ணீக்கிப்
பேரருள் புரிவ னின்சேய் பின்னர்நீ காண்டி யென்றான்.

இ—ள்: நின் சேய்—உனதுகுமாரன், தாரகன் தன்னை சீய தடம் பெரு முகத்தினானை சூரபன்மாவை ஏனை அவுணரை தொலைவு செய்து—தாரகாசுரனையும் சிங்கமுகாசுரனையும் சூரபன்மனையும் மற்றைய அசுரர்களையும் அழித்து, ஆரணன் மகவான் ஏனை அமரர்கள் இடுக்கண் நீக்கி—பிரமாவினதும் இந்திரனதும் ஏனையதேவர்களதும் துன்பத்தையொழித்து, பேர் அருள் புரிவன்-சிறந்த கிருபையைச்செய்வான், பின்னர் நீ காண்டி என்றான்-பிற்காலத்தில் நீ (அதனைப்)பார்த்தறிவாயாகவென்று கூறியருளினார் எ-று.

சீயம் சூரபன்மா வடசொற்சிதைவுகள். சீயத்தடம்பெருமுகத்தினான்-சிங்கத்தின்முகம்போன்ற மிகப் பெரியமுகத்தையுடையவன். தட பெரு ஒருபொருட்பன்மொழிகள். தட என்பதற்குப்பொருள் பெருமையென்பதை "தடவுங்கயவுநளியும்பெருமை" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தானுமுணர்க. உரிச்சொற்புணர்ச்சியாதலின் இனமெல்லெழுத்துமிக்கது. இடுக்கண்-இடுங்குகண் என்பதன்விகாரம். துன்பமுண்டாயகாலத்துக்கண்ணிடுங்குதல்பற்றி அப்பெயர்வழங்கியது. (௨௧)

என்றலு மிளையோன் செய்கை யெம்பெரு மாட்டி கேளா
நன்றென மகிழ்ச்சி கொண்டு நணுகலு முலக மெல்லாஞ்
சென்றரு ளாடல் செய்யுந் திருத்தகு குமரன் பின்ன
ரொன்றொரு விளையாட் டுள்ளத் துன்னியே புரித லுற்றான்.

இ—ள்: என்றலும்—என்றுசிவபிரான் திருவாய்மலர்ந்தருள, எம்பெருமாட்டி இளையோன் செய்கை கேளா—எமது தலைவியாகிய உமாதேவியார் குமாரக்கடவுளதுமகிமையைக்கேட்டருளி, நன்று என மகிழ்ச்சி கொண்டு நணுகலும்—நல்லதென்றுகூறிச் சந்தோஷங்கொண்டிருக்க, உலகம் எல்லாம் சென்று அருள் ஆடல் செய்யும் திருத்தகு குமரன்—எல்லாவுலகங்களினும்போய்த் திருவருளினாற் றிருவிளையாட்டியற்றுகின்ற மேன்மைமிக்க முருகக்கடவுள், பின்னர் ஒன்று ஒரு விளையாட்டு உள்ளத்து உன்னி புரிதலுற்றான்—பின்பு ஒருதிருவிளையாடலை மனத்தினினைத்துச் செய்வாராயினார் எ—று.

எல்லாம் என்னும் பெயர்ச்சொல் ஈண்டு, இரட்டுறமொழிதலென்னுமுத்தியால், பொருட்பன்மையோடு ஒருபொருளின் பலவிடத்தையுங்குறித்துநின்றது. இதனை எஞ்சாமைப்பொருளுணர்த்துமுரிச்சொலென்பாருமுளர். (௨௨)

குலகிரி யனைத்து மோர்பாற் கூட்டிடு மவற்றைப் பின்னர்த்
தலைதடு மாற்ற மாகத் தரையிடை நிறுவு மெல்லா
வலைகட றனையு மொன்றா வாக்குறு மாழி வெற்பைப்
பிலனுற வழுத்துங் கங்கைப் பெருநதி யடைக்கு மன்றே.

இ—ள்: குலகிரி அனைத்தும் ஓர் பால் கூட்டிடும்—(திசைதோறுமுள்ள) குலாசலங்களெல்லாவற்றையும் ஓரிடத்தேசேர்ப்பார், பின்னர் அவற்றை தலைதடுமாற்றம் ஆக தரையிடை நிறுவும்-பின்பு அம்மலைகளைத் தலைதடுமாற்றமாகப் பூமியில் நிறுத்துவார், எல்லா அலை கடல் தனையும் ஒன்று ஆக்குறும்— அலைகின்ற எல்லாக்கடல்களையும் ஒன்றுகச்செய்வார், ஆழிவெற்பை பிலன் உற அழுத்தும்—சக்கரவாளமலையைப் பாதலத்திற்புகுமாறு அழுத்துவார், கங்கை பெரு நதி அடைக்கும்— பெரிய கங்கைநதியைப் (பாயாவண்ணம்) தடைசெய்வார் எ—று.

குலகிரி:—கயிலை இமையம் மந்தரம் விந்தம் நிடதம் ஏமகூடம் நீலகிரி கந்தமாதனம் என்பன. தலைதடுமாற்றம்-இடந்தடுமாறுதல்=ஓர்திசையிலுள்ளதைப் பிறிதோர்திசையில்வைத்தல். தரை-வடசொல். எல்லாப்பொருளையுந்தரிப்பதென்பதுபொருள். அலைகடல் வினைத்தொகை; வேற்றுமைத்தொகையாயின் அலைக்கடலென வலிமிக்குப்புணரும். கடல் சாதியொருமையாதலின் ஒருமைச்சாரியைபெற்றது. பிலன்-பிலம் என்பதன் இறுதிப்போலி. ஓர்மலைநின்றவிடத்தின் மற்றோர்மலையாய்வைக்காது,வேறிடத்தே,பிறழநிறைத்தனராதலின் 'தலைதடுமாற்றமாகத்தரையிடைநிறுவும்' எனவும், அடைத்தற்கரியபெருக்கினையுடையநதியென்பார் 'பெருநதி' எனவும் கூறினர். கடல்களையொன்றாக்குவது இடையிலுள்ளநிலமாகிய வரம்பையுடைத்தலால். (௨௩)

இருள்கெழு பிலத்துள் வைகு மெண்டொகைப் பணியும் பற்றிப்
பொருள்கெழு மேரு வாதி யடுக்கலிற் பூட்டி வீக்கி
யருள்கெழு குமர வள்ள லாவிகட் கூறின் றாக
வுருள்கெழு சிறுதே ராக்கொண் டொல்லென வுருட்டிச் செல்லும்.

இ—ள்: அருள் கெழு குமரவள்ளல்- கருணைமிக்க குமாரக்கடவுள், இருள் கெழு பிலத்துள் வைகும் எண் தொகை பணியும் பற்றி—இருணிறைந்த பாதலலோகத்திலுள்ள அட்டமாநாகங்களையும்பிடித்து, பொருள் கெழு மேரு ஆதி அடுக்கலில் பூட்டி வீக்கி— பொன்மயமாகிய மேருமுதலியமலைகளில் (வடமாகக்)கட்டியிறுக்கி, உருள் கெழு சிறு தேர் ஆ கொண்டு—உருளைகள்பொருந்திய சிறுதேராகக்கொண்டு, ஆவிகட்கு ஊறு இன்று ஆக ஒல் என உருட்டி செல்லும்— ஆன்மாக்களுக்கிடையூறுவிளையாவண்ணம் விரைவிலுருட்டிச்செல்வார் எ—று.

பணி-பணத்தையுடையது. பணம்=படம். பொருள்கெழு-மேருவுக்கடை; அடுக்கற்கடையாக்கி, பலவகைத்திரவியங்களும்பொருந்திய எனக்கூறினுமாம். சிறுதேருருட்டல் சிறுவர்விளையாட்டுளொன்று. பெருமலைகளைச்சிறுதேராக்கிவிரைவிலுருட்டியவழியும் ஆவிகட்கூறின்றாதற்குக்காரணந்தோன்ற 'அருள்கெழுகுமரவள்ளல்' என்றார். ஒல் ஒலிக்குறிப்பு. (௨௪)

ஆசையங் கரிக டம்மை யங்கைகொண் டொன்றோ டொன்று
பூசல்செய் விக்கும் வானிற் போக்கிடுங் கங்கை நீராற்

காய்சின வடவை மாற்றுங் கவின்சிறைக் கலுழ னோடு
வாசுகி தன்னைப் பற்றி மாறிகல் விளைக்கு மன்றே.

இ—ள்: ஆசையம் கரிகள் தம்மை-திக்குயானைகளை, அங்கை கொண்டு ஒன்றோடு ஒன்று பூசல்செய்விக்கும்-அழகிய துதிக்கையினால் ஒன்றோடொன்று போரைச்செய்விப்பார், வானில் போந்திடும் கங்கைநீரால் காய் சின வடவை மாற்றும்—ஆகாயத்திற் பாய்கின்ற கங்கைநதியின்நீரினால் அழலுகின்ற சினத்தினையுடைய வடவாமுகாக்கினியைத்தணிப்பார், கவின் சிறை கலுழனோடு வாசுகி தன்னை பற்றி மாறு இகல் விளைக்கும்— அழகியசிறகினையுடைய கருடனையும் வாசுகியென்னுஞ்சர்ப்பத்தையும்பிடித்து மாறாகிய போரைமூட்டுவார் எ—று.

கலுழன்-வடசொற்றிரிபு. சினம்-ஈண்டு, வெப்பம். மழைவெள்ளம்ஆற்றுநீர்முதலியனபாய்தலாற்கடல்பொங்காவண்ணம்பருகுவதும் ஊழிகாலத்தில் உலகங்களெவற்றையுமழிப்பதுமாதலின் 'காய்சினவடவை' எனவும், திருமாலின்வாகனமாகிய கருடனென்பதுபோதர 'கவின்சிறைக்கலுழன்' என விசேடித்தும், ஒன்றையொன்றுவெல்லுமூக்கமுண்டாக்கிப் பொருவித்தனராதலின் 'மாறிகல்விளைக்கும்' எனவும் கூறினார். (உ௫)

பாதல நிலயத் துள்ள புயங்கரைப் படியிற் சேர்த்திப்
பூதல நேமி யெல்லாம் புகுந்திடப் பிலத்தி னுய்க்கு
மாதவ முதல்வன் றன்னை யவிர்மதிப் பதத்தி லோச்சுஞ்
சீதள மதியை வெய்யோன் சென்னெறிப் படுத்திச் செல்லும்.

இ—ள்: பாதலநிலயத்து உள்ள புயங்கரை படியில் சேர்த்தி— பாதாளவுலகத்தில்வசிக்கின்ற சர்ப்பங்களைப் பூமியில்வருவித்து, பூதல நேமி எல்லாம் பிலத்தில் புகுந்திட உய்க்கும்—பூமியிலுள்ள மலைகளெல்லாவற்றையும்பாதலத்திற்செல்லுமாறழுத்துவார், ஆதவ முதல்வன் தன்னை அவிர் மதி பதத்தில் ஓச்சும்— முதல்வனாகிய சூரியனை விளங்குகின்ற சந்திரன்செல்லுமார்க்கத்திற் புகுவிப்பார், சீதள மதியை வெய்யோன் செல்நெறி படுத்தும்—குளிர்ச்சிபொருந்தியசந்திரனைச் சூரியன்செல்லுமார்க்கத்திற்புகுவிப்பார் எ—று.

பாதலம் ஆதவன் வடசொற்றிரிபு. புயங்கர்-மார்பினால் ஊர்பவர். பதம்-ஈண்டு, வழி. பூதலமென்பதைப் பூமியினது இடமெனவிரிப்பின், உடைமையும் உடையதும்வேறாகாத ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத்தொகையென்றும், பூமியாகிய இடமெனவிரிப்பின், இருபெயரொட்டுப்பண்புத்தொகையென்றுங்கொள்க. நேமி கடலெனல்சிறப்பின்று. அதிதியின்குமாரருட்சிறந்து ஆதித்தியனெனப் பெயர்பெற்றமையின்'ஆதவமுதல்வன்' என்றார். சூரியன்சந்திரன்முதலிய கிரகங்கள்செல்லுமார்க்கங்களைக் கக்ஷாமார்க்கமெனவழங்குப. (உ௬)

எண்டிசை புரந்த தேவ ரிருந்ததொல் பதங்க ளெல்லாம்
பண்டுள திறத்தி னீங்கப் பறித்தனன் பிறழ வைக்குங்
கொண்டலி னிருந்த மின்னின் குழுவுட னுருமுப் பற்றி
வண்டின முறாத செந்தண் மாலைசெய் தணியு மன்றே.

இ—ள்: எண் திசை புரந்த தேவர் இருந்த தொல் பதங்கள் எல்லாம்—எட்டுத்திக்குகளையுங்காக்கின்ற (இந்திரன்முதலிய)தேவர்களிருந்த பழைய உலகங்களெல்லாவற்றையும், பண்டு உள திறத்தில் நீங்க பறித்தனன் பிறழ வைக்கும்—பண்டைய இயல்பினின்றுநீங்குமாறுபெயர்த்து நிரைதவறநிறுத்துவார், கொண்டலின் இருந்த மின்னின் குழு உடன் உருமு பற்றி—மேகங்களிலிருந்த மின்னற்கூட்டங்களையும் இடியையும்பிடி

த்து, வண்டு இனம் உறாத செம் தண் மாலை செய்து அணியும்—வண்டுக்கூட்டங்கள்மொய்க்கப்பெறாத செவ்விய குளிர்ந்த மாலையாக்கித்தரிப்பார் எ—று.

உறாஉ என்பதில் உகரம் சாரியை. தேன்பொருந்தாமையேயன்றிப் பிறவாற்ற் சிறிதும் வேற்றுமைதோன்றாதமாலையென்பார் 'வண்டினமுறாதசெந்தண்மாலை'என்றார். (உஎ)

வெய்யவர் மதிகோ ளேனோர் விண்படர் விமானத் தேர்கண்
மொய்யுறப் பிணித்த பாச முழுவதுந் துருவ னென்போன்
கையுறு மவற்றில் வேண்டுங் கயிற்றினை யிடைக்க ணீர்ந்து
வையகந் திசைமீச் செல்ல வானியில் விடுக்கு மைந்தன்.

இ—ள்: வெய்யவர் மதி கோள் ஏனோர் விண் படர் விமானம் தேர்கள் மொய் உற பிணித்த பாசம் முழுவதும்—சூரியர்களும் சந்திரர்களும் (செவ்வாய்முதலிய) கிரகங்களும் பிறரும் ஆகாயத்திற்செல்லுதற்கேற்ற விமானங்களையும் தேர்களையும் இறுகக்கட்டிய கயிறெல்லாம், துருவன் என்போன் கை உறும்-துருவனென்பவனது கையிற்பொருந்தும், அவற்றுள்—அக்கயிறுகளுள், வேண்டும் கயிற்றினை இடைக்கண் ஈர்ந்து—தாம்விரும்பிய கயிறுகளை இடையே அரிந்து, வையகம் திசை மீ செல்ல வானியில் விடுக்கும்—பூமியிலும் திக்குகளிலும் மேலிடத்திலும் போகும்படி கொடிபோலவிடுவார், மைந்தன்—குமாரக்கடவுள் எ—று.

ஏனோர் என்றது நக்ஷத்திரதேவதைகளை. வையகம் (எல்லாப்பொருள்களையும்) வைக்குமிடம். வானி-வானிற்செல்வது. பன்னிருவகையினராதலின் 'வெய்யவர்' எனப் பலர்பாற்படுத்திக்கூறினார். விமானம்-தேவரூர்தி. துருவன்- சுவாயம்புவமனுவின் குமாரனாகிய உத்தானபாத மகாராசனது மூத்தமனைவியின்புத்திரன்; இவன் மாற்றாந்தாயுந் தந்தையுந் தன்னைப்பொருட்படுத்தாமையால் மனமழிந்து, இளம்பிராயத்திற்றானே காட்டிற்புகுந்து அருந்தவம்புரிந்து வரம்பெற்று மேருமலையின்சிகரத்திலிருந்து கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும்பிறவற்றையுஞ்செலுத்துபவன். பிரவகவாயுவினாலியங்குங்கால் வரையறுத்தமார்க்கத்தினின்றுவிலகாவண்ணம்கட்டியவென்பார் 'மொய்யுறப்பிணித்த'என்றார்.

வடுத்தவிர் விசும்பிற் செல்லும் வார்சிலை யிரண்டும் பற்றி
யுடுத்திரள் பலகோ ளின்ன வுண்டையாக் கொண்டு வானோர்
முடித்தலை யுரந்தோள் கண்ட முகம்படக் குறியா வெய்தே
யடற்றனு விஞ்சை காட்டு மாறிரு தடந்தோ ளண்ணல்.

இ—ள்: ஆறு இரு தடம் தோள் அண்ணல்— விசாலித்த பன்னிரண்டுதிருப்புயங்களையுடைய குமாரக்கடவுள், வடு தவிர் விசும்பில் செல்லும் வார் சிலை இரண்டும் பற்றி—குற்றமற்ற ஆகாயத்திற்செல்லுகின்ற நீண்ட இரண்டு விற்களையும்பிடித்து, உடுத்திரள் பல கோள் இன்ன உண்டையா கொண்டு—நக்ஷத்திரக்கூட்டங்களையும் அநேகமாகிய கிரகங்களையும் இவைபோன்ற பிறவற்றையும் உருண்டையாகக்கொண்டு, வானோர் முடி தலை உரம் தோள் கண்டம் உரம் பட—தேவர்களது கிரீடத்தையணிந்த தலையினும் மார்பினும் புயங்களினும் கழுத்தினும் முகத்தினும்படும்படி, குறி ஆ எய்து— இலக்கு நோக்கிப்பிரயோகித்து, அடல் தனுவிஞ்சை காட்டும்—வலிமைபொருந்திய வில்வித்தையைக்காட்டுவார் எ—று.

இந்திரவில்லிரண்டாதல்பற்றி 'சிலையிரண்டு' என்றார். ஒன்றென்பர்சிலர்; அது முதனூற்குவிரோதமாம். (உக)

இத்திற முலகந் தன்னி லிம்பரோ டும்ப ரஞ்சிச்
சித்தமெய் தளர்த லன்றிச் சிதைவுறா வகைமை தேர்ந்து

வித்தக வெண்ணி லாடல் வியப்பொடு புரிந்தா னாவி
முத்தர்தம் விழியி னன்றி முன்னுரு நிமல மூர்த்தி.

இ—ள்: ஆவிமுத்தர் தம் விழியின் அன்றி முன் உரு நிமலமூர்த்தி—சீவன்முத்தர்களது கண்களிலன்றி (ஏனையோர்கண்களிற்) புலப்படாத நிருமலரூபத்தையுடைய குமாரக்கடவுள், உலகம் தன்னில் இம்பரோடு உம்பர் அஞ்சி சித்தம் மெய் தளர்தல் அன்றி சிதைவு உறு வகைமை தேர்ந்து- இவ்வுலகத்தாராகிய மானுடரும் மேலுலகத்தாராகிய தேவர்களும்பயந்து மனமுஞ்சரீரமுந்தளர்தலேயன்றி அழிவுபடாவண்ணம் ஆலோசித்து, வித்தக எண் இல் ஆடல்—சாமர்த்தியமாகிய அளவற்ற திருவிளையாடல்களை, வியப்பொடு—அதிசயத்துடன், இத்திறம்புரிந்தான்—இவ்வாறுசெய்தருளினர் எ—று.

ஆவிமுத்தர்-விருப்புவெறுப்பற்றுத் தத்துவஞானமெய்தி, சரீரத்துடனிருக்கும்போதே அநவரதம் சிவனடித்துணைகளிற் சிந்தையைப்பதித்து, அதனால்வரும் பேரின்பநுகர்வோர். "ஆரா வியற்கை யவாநீப்பி னன்னிலையே-பேரா வியற்கை தரும்" "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்னுந்திருக்குறட்களானுமுணர்க. இவரியல்பை நீலகண்டபாடியம் விரித்துணர்த்தும். நிமலமூர்த்தி-பண்புத்தொகையன்மொழி. இத்திறம் தேர்ந்து என்னும் எச்சங்கள் புரிந்தான் என்னுமுற்றோடுதனித்தனியியைந்தன. (௫0)

ஆயது காலை ஞாலத் தவுணர்க ளதனை நோக்கி
யேயிது செய்தார் யாரே யென்றுவிம் மிதரா யெங்க
ணாயகன் வடிவந் தன்னை நனிபெரும் பவத்துட் டங்குந்
தீயவ ராத லாலே கண்டிலர் தியக்க முற்றார்.

இ—ள்: ஆயது காலை தன்னில்—அச்சமயத்தில், ஞாலத்து அவுணர்கள் அதனை நோக்கி—பூவுலகத்திலுள்ள அசுரர்கள் அந்நிகழ்ச்சிகளைப்பார்த்து, ஏ இது செய்தார் யார் என்று விம்மிதர் ஆய்—ஏ! இதனைச்செய்தவர்யாவரென்று ஆச்சரியமுற்றவர்களாய், நனி பெரும் பவத்துள் தங்கும் தீயவர் ஆதலால்—மிகவும் பெரிதான பாவத்திலமிழ்ந்திய கொடியவர்களாதலால், எங்கள் நாயகன் வடிவம் தன்னை கண்டிலர் தியக்கம் உற்றார்—எங்கள் தலைவராகியகுமாரக்கடவுளது திருவுருவத்தைக்காணப்பெறுதுமயங்கினர்கள் எ-று.

ஆயது என்பதை ஆகியது என்றதன்விகாரமாயேனும், ஆ என்னும் நீண்டசுட்டினடியாகப்பிறந்த வினையாலணையும்பெயராயேனுங்கொள்க. காலம் காலை என ஈறுதிரிந்தது. ஏகாரமூன்றனுள் முன்னையது இசைநிறை; இடையது ஐயப்பொருட்டு. விம்மிதர்-விஸ்மிதர் என்னும்வடமொழித்திரிபு. முற்செய்யுளில் 'ஆவிமுத்தர்தம்விழியினன்றிமுன்னுருநிமலமூர்த்தி' என்றதற்கேற்ப,இச்செய்யுளிலும் 'நனிபெரும்பவத்துட்டங்குந்தியவராதலாலேகண்டிலர்' என்றார். (௫௧)

சிலபகல் பின்னும் வைகுந் திறத்திய லாயுள் கொண்டே
யுலகினி லவுணர் யாரு முறைதலி னவர்க்குத் தன்மெய்
நிலைமைகாட் டாது செவ்வே ணிலாவலு நேடி யன்னோர்
மலரயன் றெரியா வண்ணன் மாயமே யினைய தென்றார்.

இ—ள்: உலகினில் அவுணர் யாரும்—உலகத்திலுள்ள அசுரர்களனைவரும், பின்னும் சில பகல் வைகும் திறத்து இயல் ஆயுள் கொண்டு உறைதலின்— மேலுஞ்சிலகாலம் வாழ்தற்கேற்றவாறுபொருந்திய ஆயுளையுடையராயிருத்தலால், அவர்க்கு தன் மெய் நிலைமை காட்டாது—அவர்களுக்குத்தமது சரீரத்தினிலையைக்காட்டாமல், செவ்வேள் நிலாவலும்—குமாரக்கடவுள் உலாவுதலும், அன்னோர் நேடி—அவ்வசுரர்கள் ஆராய்ந்து,

இனையது மலர் அயன் தெரியா அண்ணல் மாயமே என்றார்—இது தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவராலுந் தேடியுணர்தற்கரியரான சிவபிரானது மாயமேயாமென்று நிச்சயித்தார்கள் எ—று.

ஆயுஸ் என்னும்வடமொழி ஆயுள் எனவழங்கிற்று. இது சிலவிடங்களில் ஆயு எனவும்வழங்கும். உயர்வுசிறப்பும்மைதொக்கது. மாயமேயென்பதிலேகாரந்தேற்றம். மாயா என்னும்வடமொழி மாயை எனத்திரிந்ததுபோல மாயம் எனவுந்திரிந்துவழங்கிற்று.

தம்முருக்காட்டிற் பொருதுமாள்வரென்பதுகருதிக் காட்டாதுலாவினரென்பார் 'சிலபகல் **** நிலாவலும்' என்றார். (௬௨)

ஆயதோர் குமரன் செய்கை யவனியின் மாக்கள் காணுத்
தீயன முறையால் வெங்கோல் செலுத்திய வவுண ரெல்லா
மாய்வது திண்ணம் போலு மற்றதற் கேது வாக
மேயின விம்மி தங்கொ லிதுவென வெருவ லுற்றார்.

இ—ள்: அவனியில் மாக்கள்—பூவுலகத்திலுள்ள மாந்தர்கள், ஆயது ஓர் குமரன் செய்கை காணு—அக்குமாரக்கடவுளது செயலைப்பார்த்து, தீயன முறையால் வெம்கோல் செலுத்திய அவுணர் எல்லாம் மாய்வது திண்ணம் போலும்— தீயமார்க்கங்களாற் கொடுங்கோலைநடாத்திய அசுரர்களெல்லாமிறப்பது நிச்சயம்போலும், இது அதற்கு ஏது ஆக மேயின விம்மிதம் கொல் என—இந்நிகழ்ச்சி அவ்விறப்புக்குக் காரணமாகத்தோன்றியகுறியோவென்று, வெருவல் உற்றார்—அச்சமுற்றார்கள் எ—று.

தீ அன முறையால் எனச்சொல்வகுத்து, அக்கினியைப்போன்ற இயல்பமையவெனவுரைப்பதுமொன்று. அசுரரிறத்தற்காய விம்மிதமோவென்றையுற்றார் மகிழவேண்டியதாகவும், வெருவியது, அப்பொழுது அக்குறியாற்றமக்குண்டாயதுயர்பற்றியென்க. ()

புவனியின் மாக்க ளின்ன புகறலுந் திசைகாப் பாளர்
தவனனே மதிய மேனோர் சண்முகன் செய்கை நாடி
யவனுரு வதனைக் காணு ரவுணர் தம் வினையு மன்றா
லெவரிது செய்தார் கொல்லென் றிரங்கினர் யாருங் கூடி.

இ—ள்: புவனியில் மாக்கள் இன்ன புகறலும்—பூவுலகத்திலுள்ள மானுடர்கள் இவ்வாசகங்களைக்கூற, திசைகாப்பாளர் தவனன் மதியம் ஏனோர் சண்முகன் செய்கை நாடி—திக்குப்பாலகர்களும் சூரியனும் சந்திரனும் பிறரும் ஆறுதிருமுகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுளது செயலைக்கண்டு, அவன் உரு அதனை காணார்—அவரது திருவுருவத்தைக்காணாதவர்களாய், யாரும் கூடி—அனைவரும் ஒருங்குசேர்ந்து, அவுணர் தம் வினையும் அன்று—அசுரர்களது தொழிலுமன்று; இது செய்தார் எவர் என்று— இம்மாறுபாட்டைச்செய்தவர் யாவரென்று, இரங்கினர்—மனம்வருந்தினார்கள் எ—று.

புவனம் தபனன் என்னும்வடசொற்கள், முறையே, புவனி தவனன் எனத்திரிந்தன. ஏகாரம் எண். "எண்ணேகார மிடையிட்டுக் கொளினு-மெண்ணைக்குறித்தியலு மென்மனார் புலவர்" என்றாராசிரியர் தொல்காப்பியனாராதலின். மதியம்என்பதில் அம் சாரியை. 'அவுணர்தம்வினையுமன்றால்' என்றது-அவருமிதுபுரிதற்காற்றலிலரென்பதுகருதி; அவர்செய்யிற்றமக்குப்புலப்படுமென்பது கருதியெனினுமாம். வினையுமென்பதில் உம்மை எச்சம்; மானுடராதியோர் செயலுமன்றென்பது தோன்றநிற்றலின். (௬௩)

தேருறு மனைய தேவர் தேவர்கோன் சிலவ ரோடு
மேருவி லிருந்தான் போலும் வேதனு மங்கண் வைகு
மாருமங் கவர்பா லேகி யறைகுது மென்று தேறிச்
சூரர்கோன் றனக்கு மஞ்சித் துயரொடு பெயர்த லுற்றார்.

இ—ள்: தேருறும் அனைய தேவர்—இவ்வாறு ஐயுற்ற அந்தத்தேவர்கள், தேவர்கோன் சிலவரோடும் மேருவில் இருந்தான் போலும்—தேவேந்திரன் சிலதேவர்களுடன் மேருமலையில் இருக்கின்றான்போலும், வேதனும் அங்கண் வைகும்— பிரமதேவரும் அவ்விடத்திருக்கின்றார், ஆரும் அங்கவர் பால் ஏகி அறைகுதும் என்று தேறி— யாமெல்லேமும் அவர்களிடஞ்சென்று முறையிடுவோமென்று துணிந்து, சூரர் கோன் தனக்கும் அஞ்சி துயரொடு பெயர்தலுற்றார்—சூரபன்மனுக்கும் பயந்து துன்பத்துடனே நடந்தார்கள் எ—று.

கோன் என்பதில் னகரஞ்சாரியை. போலும் ஒப்பில்போலி. இவ்வாறுவரும்பதங்களை வடநூலார் வாக்கியாலங்காரமென்பர். அங்கண்-அக்கண் என்பதன்மெலித்தல். ஆர்-யாரென்பதன்விகாரம். சூரர்கோன்றனக்கும் என்பதில் உம்மை எச்சம்; குமாரக்கடவுளியற்றிய திருவிளையாடற்குமஞ்சினரென்பது தோன்றநிற்றலின். (௬௫)

வடவரை யும்பர் தன்னில் வானவ ரானோ ரேகி
யடைதரு கின்ற காலை யாறுமா முகங்கொண் டுள்ள
கடவுள்செய் யாட னோக்கி யவனுருக் காணா னாகி
யிடருறு மனத்தி னோடு மிருந்தவிந் திரனைக் கண்டார்.

இ—ள்: வானவர் ஆனோர்—தேவர்கள், வடவரை உம்பர் தன்னில் ஏகி அடைதருகின்ற காலை—மேருமலையின்மேற் போய்ச்சேர்ந்தபொழுது, மா ஆறு முகம் கொண்டு உள்ள கடவுள் செய் ஆடல் நோக்கி அவன் உரு காணான் ஆகி இடர் உறும் மனத்தினோடும் இருந்த இந்திரனை கண்டார்—பெரிய ஆறுதிருமுகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுளியற்றிய திருவிளையாடலைப்பார்த்து அவரது திருவுருவத்தைக் காணப்பெறாதவனாய்த் துன்பமுற்றமனத்தினுடனிருந்த தேவேந்திரனைக்கண்டார்கள் எ—று.

இப்பரதகண்டத்திற்கு வடதிசைக்கணுளதாதலின் வடவரையெனவழங்குவது.

அரிதிரு முன்ன ரெய்தி யடிதொழு தங்கண் வைகி
விரிகட லுலகின் வானின் மேவுதொன் னிலைமை யாவுந்
திரிபுற வெவரோ செய்தார் தெரிந்தில மவரை யீது
புரிகல ரவுணர் போலும் புகுந்தவிப் புணர்ப்பென் னென்றார்.

இ—ள்: அரி திரு முன்னர் எய்தி—(அத்தேவர்கள் யாவரும்) இந்திரனது திருமுன்னிலையிற்போய், அடிதொழுது அங்கண் வைகி-(அவனது) பாதங்களைவணங்கி அவ்விடத்திருந்து, விரி கடல் உலகின் வானில் மேவு தொல் நிலைமை யாவும் திரிபுற எவரோ செய்தார்—(தேவராசனே!) பரந்த சமுத்திரத்தாற் சூழப்பெற்ற பூவுலகத்திலும் ஆகாயவுலகத்திலும் அமைந்த பழையநிலைமைகளெல்லாம்மாறுபாடடையும்படியாவரோசெய்தனர், அவரை தெரிகிலம்—அவரை அறிந்திலேம், அவுணர் ஈது புரிகலர்போலும்—அசுரர்கள் இதனைச்செய்யமாட்டார்போலும், புகுந்த இ புணர்ப்பு என் என்றார்—நேர்ந்த இந்த மாற்றம் எவ்வாற்றானிகழ்ந்ததென்று வினவினார்கள் எ—று.

அரி-வடசொல்; (அசுராதியோரை) அழிப்பவனென்பதுபொருள். ஒகரம்-ஐயம். இது ஈதுஎனநீண்டது. புணர்ப்பு-செயல். வினாவடியாகப்பிறந்த எவனென்னுங்குறிப்புமுற்று இடைகுறைந்து என் எனநின்றது. (௬௭)

வானவ ரிறைவ னன்னோர் மாற்றமங் கதனைக் கேளா
யானுமிப் பரிசு நாடி யிருந்தன னிறையுந்தேரே
னனதை யுணர வேண்டி னனைவரு மேகி யம்பொன்
மேனிகொள் கமலத் தோனை வினவுது மெழுதி ரென்றான்.

இ—ள்: வானவர் இறைவன்—தேவத்தலைவனாகிய இந்திரன், அன்னோர் மாற்றம் அங்கதனை கேளா—அவர்கள் கூறிய அவ்வார்த்தையைக்கேட்டு, யானும் இ பரிசு நாடி இருந்தனன்-(தேவிர்காள்!) யானும் இத்தன்மையை ஆராய்ந்துகொண்டிருந்தேன், இறையும் தேரேன்—(உண்மையைச்) சிறிதாயினும் அறியேன், ஆனதை உணரவேண்டின்—அதனையறியவேண்டுமாயின், அனைவரும் ஏகி—யாமனைவேரும்போய், அம் பொன் மேனி கொள் கமலத்தோனை வினவுதும்—செம்பொன்மயமான வடிவத்தையுடைய பிரமதேவரைவினவுவோம், எழுதிர் என்றான்—எழும்புங்களென்று கூறினான் எ—று.

இருந்தனன்-ஈண்டு, தன்மையொருமையிறந்தகாலத்தெரிநிலைவினைமுற்று. இறையுமென்பதில் உம்மை இழிவுசிறப்பு. அனைவரும் வினவுதும்-தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. (௩௮)

எழுதிரென் றுரைத்த லோடு மிந்திரன் முதலா வுள்ளோர்
விழியிடைத் தெரிய வன்னோர் மெய்த்தவம் புரிந்த நீரா
லழிவற வுலகி லாடு மறுமுகன் வதன மொன்றிற்
குழவிய தென்ன வன்ன குன்றிடைத் தோன்றி னானால்.

இ—ள்: எழுதிர் என்று உரைத்தலோடும்—எழும்புங்களென்று கூறியவுடன், அன்னோர் மெய் தவம் புரிந்த நீரால்—அவர்கள் மெய்ம்மையாகியதவத்தைச்செய்துள்ளதன்மையினால், அழிவு அற உலகில் ஆடும் அறுமுகன்—அழிவுநேரிடாவண்ணம் உலகங்களிற்றிருவிளையாட்டியற்றுகின்ற சுப்பிரமணியக்கடவுள், இந்திரன் முதலா உள்ளோர் விழி இடை தெரிய—இந்திரன்முதலியதேவர்களது கண்களிற்றோன்றுமாறு, வதனம் ஒன்றில்—ஒரு திருமுகத்துடன், குழவியது என்ன—குழந்தைபோல, அன்ன குன்று இடை தோன்றினான்—அந்த மேருமலையின்கண்ணே காணப்பட்டார் எ—று.

எழுதிரென்றுரைத்தலோடும் என்றது அநுவாதம். விரைவுங் கதைத்தொடர்ச்சியும்விளங்கமீண்டுங்கூறியது. இவ்வாறு பிறவிடங்களின்வருவனவற்றிற்குமிவ்விதிகொள்க. தவம்-தபஸ் என்னும் வடமொழித்திரிபு. வேடமாத்திரையானெழுகும்பொய்த்தவர்க்குப் புலப்படாராதலின் 'மெய்த்தவம்புரிந்தநீரால்' என்றார். உரைத்தலோடும் தோன்றினான் என இயையும். நீர்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் நீர் எனநின்றது. (௩௯)

வாட்டமொ டமரர் கொண்ட மயக்கறத் தனது செய்கை
காட்டிய வந்தோன் மேருக் கனவரை யசைத்துக் கஞ்சத்
தோட்டிதழ் கொய்து சிந்துந் துணையென வுயர்ந்த செம்பொற்
கோட்டினைப் பறித்து வீசிக் குலவினன் குழவி யேபோல்.

இ—ள்: அமரர் வாட்டமொடு கொண்ட மயக்கு அற—தேவர்கள் மனவாட்டத்துடன்கொண்டுள்ள ஐயந் தீருமாறு, தனது செய்கை காட்டிய வந்தோன்—தமது ஆடற்செயலைத் தெரிவிக்கும்வண்ணந்தோன்றிய குமாரக்கடவுள், கன மேருவரை அசைத்து—உரத்த மேருமலையையசைத்து, கஞ்ச தோட்டு இதழ் கொய்து சிந்தும் துணை என—தாமரைமலரினிதழ்களைப்பிடுங்கிச் சிதறுந்தன்மைபோல, உயர்ந்த செம் பொன் கோட்டினை பறித்து வீசி—உயர்ந்த செம்பொன்மயமாகிய சிகரத்தைப்பிடுங்கியெறிந்து, குழவியே போல் குலவினன்—குழந்தையையேபோல உலாவினார் எ—று.

மயக்கு- முதனிலைதிரிந்ததொழிற்பெயர். தோடு இதழ் ஒருபொருண்மொழிகள். ஏ-தேற்றம். வாளாநிற்பினிவ்வாடல்களைச்செய்தானிவனெனத்துணியாராதலின் மேருமலையையசைத்துச் சிகரங்களைப்பிடுங்கியெறிந்தனரென்பதுபோதர 'தனதுசெய்கைகாட்டியவந்தோன்' எனவும், எளிதிற்பிடுங்கியெறிந்தனரென்பார் 'கஞ்சத்தோட்டிதழ்கொய்துசிந்துந்துணையென' எனவுங்கூறினார். (௪௦)

தோன்றிய குமரன் றன்னைச் சுரபதி சுரரா யுள்ளோ
ரான்றதோர் திசைகாப் பாள ரனைவருந் தெரிகுற் றன்னோ
வான்றரை திரிபு செய்தோன் மற்றிவ னாகு மென்னக்
கான்றிரி யரியை நேரும் விலங்கெனக் கலங்கிச் சொல்வார்.

இ—ள்: தோன்றிய குமரன் தன்னை-எதிர்ப்பட்ட அக்குமாரக்கடவுளை, சுரபதி சுரர் ஆய் உள்ளோர் ஆன்றது ஓர் திசைகாப்பாளர் அனைவரும் தெரிகுற்று—தேவேந்திரனும் தேவர்களாயுள்ளவர்களும் சிறந்த திக்குப்பாலகர்களும் ஆகிய எல்லோரும்பார்த்து, அன்னோ—ஐயோ!, வான் தரை திரிபுசெய்தோன் இவன் ஆகும் என்ன— விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் மாறுபடுத்தினோன் இவனேயாமென்றுதுணிந்து, கான் திரி அரியை நேரும் விலங்கு என கலங்கி சொல்வார்— காட்டிற்றிரிகின்ற சிங்கத்தையெதிர்த்த (யானைமுதலிய) மிருகங்களைப்போல மனங்கலங்கி (ஒருவரோடொருவர்) பேசுவார்கள் எ—று.

சுரர்-(திருப்பாற்கடல்கடைந்தகாலத்தெழுந்த) சுரையைப் [மதுவை] பானஞ்செய்தவர். "வாருணிநறவம்பிறந்ததுபின்னர்மற்றதுநுகர்தலாற்றேவர்-சீர்கெழுசுரராயினர்" என்றார் கூர்மபுராணத்தாரும். ஆன்றது-ஆல் என்னும் பகுதியாற்பிறந்தவினைமுற்றுஈண்டுப் பெயரெச்சமாய்நின்றது. சிலர், ஆல்-சால் என்பதன் மரூஉவென்பர். அன்னோ-கழிவிரக்கப்பொருளில்வந்த இடைச்சொல். அரி-ஹரி என்னும்வடமொழித்திரிபு. (யானைமுதலியமிருகங்களை) அழிக்கவல்லதென்பதுபொருள். விலங்கு-குறுக்காகநடப்பது. இக்காரணம்பற்றியே வடநூலாரும் திர்யக் எனவழங்குவர். (௪௧)

வேறு.

கொய்தாங் குழவி யெனக்கொள்கில நோன்மை நாடின்
வெய்தா மவுணக் குழூவோரினும் வெய்யன் யாரு
மெய்தாத மாய முளனாலிவன் றன்னை வெம்போர்
செய்தாடல் கொள்வ மிவனென்று தெரிந்து சூழ்ந்தார்.

இ—ள்: நொய்து ஆம் குழவி என கொள்கிலம்—நொய்மையானகுழந்தையென்று (இவனை) எண்ணமாட்டோம், நோன்மை நாடின்—வலிமையை ஆராயுமிடத்து, வெய்து ஆம் அவுணக்குழூவோரினும் வெய்யன்-கொடுமைபொருந்திய அவுணர்கூட்டத்தாரினுங்கொடியவன், யாரும் எய்தாத மாயம் உளன்—எவரும்பெற்றிராத மாயவித்தைகளையெல்லாமுடையவன், இவண் வெம் போர் செய்து இவன்றன்னை ஆடல் கொள்வம்— இவ்விடத்திற் கொடிய போரைச்செய்து இவனை வெற்றிகொள்வோம், என்று தெரிந்து சூழ்ந்தார்—என்றுநினைத்துக்கூடினார்கள் எ—று.

நொய்மை- மிருதுத்தன்மை. போர் பொரு என்னுமுதனிலைதிரிந்த தொழிற்பெயர். முருகக்கடவுளைவிளைந்தமை நாற்பத்துநான்காஞ்செய்யுளிற் கூறப்படுதலின், ஈண்டு, சூழ்ந்தாரென்பதற்கு அங்ஙனமுரைத்தல் பொருந்தாது. குழவியெனக்கொள்ளாமை பெருவலிபடைத்துடையாராலுஞ் செயற்கரிய தொழிலைச்செய்தலினென்பதுதோன்ற 'நோன்மைநாடின்வெய்தாமவுணக்குழூவோரினும்வெய்யன்' எனவும், தொழிற்கேற்ற உருவமின்றுதலின், இவன்கொண்டதுமாயவுருவென்பதுபோதர 'யாருமெய்தாதமாயமுளன்' எனவும், அத்தகைய இவனை யாம் எளிதில்வெல்வதரிது, கடுஞ்சமர்செய்தேவெல்லவேண்டுமென்பார் 'வெம்போர்செய்தாடல்கொள்வம்' எனவும் கூறினார். (௪௨)

சூழுற்ற வெல்லை யிமையோர்க்கிறை தொல்லை நாளிற்
காழுற்ற தந்த மறவேகிவெண் காட்டி லீசன்

கேழுற்ற தாளர்ச் சனைசெய்து கிடைத்து வைகும்
வேழத்தை யுன்ன வதுவந்தது மேரு வின்பால்.

இ—ள்: சூழுற்ற எல்லை—(அ ளை வ ரு ம்) ஒருங்குகூடியசமயத்தில், இமையோர்க்கு இறை—தேவேந்திரன், தொல்லை நாளில் காழ் உற்ற தந்தம் அற வெண்காட்டில் எகி ஈசன் கேழ் உற்ற தாள் அர்ச்சனைசெய்து கிடைத்து வைகும் வேழத்தை உன்ன—முற்காலத்திலே வைரித்தகோடுகள்முரிய (அதனைப்பெறுமாறு) திருவெண்காட்டிற்போய்ச் சிவபிரானது செந்நிறம்விளங்குகின்ற பாதங்களைப்பூசித்து அவற்றைப்பெற்றிருக்கின்ற ஐராவதயானையைநினைக்க, அது மேருவின்பால் வந்தது—அந்தயானை மேருமலையில்வந்துசேர்ந்தது எ—று.

சூழுற்றவெல்லை உன்ன என இயையும். சயந்தன் பானுகோபனுடன்பொருதநாளிற் கோடுகள்முரிந்தன; இச்சரித்திரத்தை மேல் அசுரகாண்டத்து அமரர்சிறைபுகுபடலத்திற்காண்க. (சங)

தந்தங்கள் பெற்று வருகின்ற தனிக்க ளிற்றின்
கந்தந் தனிற்போந் தடல்வச்சிரங் காம ரொள்வாள்
குந்தஞ் சிலைகொண் டிகல்வெஞ்சமர்க் கோல மெய்தி
மைந்தன் றனைவா னவரோடும் வளைந்து கொண்டான்.

இ—ள்: தந்தங்கள் பெற்று வருகின்ற தனி களிற்றின் கந்தம் தனில் போந்து—கோடுகளைப்பெற்றுவருகின்ற ஒப்பற்ற யானையின்பிடரின்மேலிவர்ந்து, அடல் வச்சிரம் காமர் ஒள் வாள் குந்தம் சிலை கொண்டு—வலிமையையுடைய வச்சிராயுதம் அழகிய ஒளிபொருந்திய வாள் வேல் வில் என்னும் படைகளைக்கையிலெடுத்து, இகல் வெம் சமர் கோலம் எய்தி—வலிய கொடியபோர்க்கோலத்தைக்கொண்டு, வானவரோடும்-தேவர்களுடன், மைந்தன் தனை வளைந்து கொண்டான்—முருகக்கடவுளைச் சூழ்ந்துகொண்டான் எ—று.

தனதுபடைகளுட் சிறந்ததாதலின் முதலிற்றெரிந்து கைக்கொண்டனனென்பதுபோதர, அடல்வச்சிரமென அடைகொடுத்து, ஏனைப்படைகட்கு முற்கூறினர். (சச)

வன்னிச் சுடர்கால் விசையோடு மரீ இய பாங்கிற்
பன்னற் படுகுன் றவைசூழ்தரு பான்மை யேபோ
லுன்னற் கரிய குமரேசனை யும்பர் கோனு
மின்னற் படுவா னவரும்மிகல் செய்ய வுற்றார்.

இ—ள்: வன்னி சுடர் கால்விசையோடு மரீஇய பாங்கில்— அக்கினிப்பிழம்பு காற்றுவேகத்துடன்பொருந்திய இடத்திலே, பன்னல் படு குன்று அவை சூழ்தரு பான்மையே போல்-பஞ்சினலாகியமலைகள்(அதனைஅடக்குமாறு)வளைந்ததன்மையையேபோல, உன்னற்கு அரிய குமரேசனை—நினைத்தற்கரிய குமாரக்கடவுளை, உம்பர் கோனும்— தேவேந்திரனும், இன்னல் படு வானவரும்—துன்பப்படுகின்ற தேவர்களும், இகல்செய்ய உற்றார்—போர்செய்யுமாறு சூழ்ந்தார்கள் எ—று.

பெருங்காற்றுடன் கூடிய பெருநெருப்பையவிக்குமாறுசூழ்ந்த பஞ்சுத்திரள், அதனையவிக்குமாற்றலின்றி, ஒருங்கேயழிவதுபோல, குமாரக்கடவுளைவெல்லுமாறெதிர்ப்பட்ட தேவர்கள் அவரைவெல்லுமாற்றலின்றி விரைவிலழிதலின் இவ்வாறுவமித்துக் கூறினர்.

வன்னி-வஹ்நி என்னும் வடசொற்றிரிபு. மரீஇய-மருவிய என்பதன்விகாரம்; சொல்லிசையளபெடை. பன்னல்-பன்னப்படுதல்பற்றிவந்ததொழிலாகுபெயர். அல் செ

யப்படுபொருள் விகுதியெனினுமாம். பெருநெருப்பென்பார் 'வன்னிச்சுடர்' எனவும், பெருந்திரளென்பார் 'குன்று' எனவும், இவனை யாமெப்படிவெல்வோமென்னுமையமுள்ளிட்டனராதலின் 'இன்னற்பாடுவானவர்' எனவுங்கூறினார். (௬௫)

தண்ணார் கமலத் துணைமாதரைத் தன்னி ரண்டு
கண்ணா வுடைய வுமையாடரு கந்தன் வானோர்
நண்ணா ரெனச்சூழ் வதுநோக்கி நகைத்தி யாது
மெண்ணாது முன்போற் றனதாட லிழைத்த வேலை.

இ—ள்: தண் ஆர் கமல துணை மாதரை தன் இரண்டு கண் ஆ உடைய உமையாள் தரு கந்தன்— குளிர்ச்சிபொருந்திய (செந்தாமரை வெண்டாமரையென்னும்) இரண்டு மலர்களிலும் வாழ்கின்ற திருமகளையுங் கலைமகளையும்(முறையே) தமது இரு கண்களாகவுடைய உமாதேவியார்பெற்ற முருகக்கடவுள், வானோர் நண்ணார் என சூழ்வது நோக்கி—தேவர்கள் பகைவர்போலவளைவதைப்பார்த்து, நகைத்து—சிரித்து, யாதும் எண்ணாது-(அதனைக்குறித்துச்) சிறிதுஞ்சிந்தியாமல், முன் போல் தனது ஆடல் இழைத்த வேலை—முன்போலத் தாமியற்றுந் திருவிளையாடலைச் செய்துநின்றபொழுது எ—று.

தண்மையென்னும்பண்புப்பெயர் ஈறுபோயிற்று. உமாதேவியார் திருமகளையுங் கலைமகளையும் இருகண்ணாகவுடையரென்பதை "திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்-பெருமக ளுதற்க ணாகப் பெற்றுவான் செல்வங் கல்வி-யருமைவீ டளிப்பா ளாவ ளவளுயிர்த் துணைவன் காண-வொருமுலை மறைந்து நாணி யொசிந்தபூங் கொம்பி னின்றாள்" என்னுந் திருவிளையாடற்புராணச்செய்யுளானறிக. தமது திருவிளையாட்டினைக்கண்டபோதேவெல்லுந்தரத்தினரன்றென்பது புலப்படத்தக்கதாகவும் அதனை யூகித்துணராமையைக்குறித்து நகையாடினரென்க. (௬௬)

எட்டே யொருபான் படைதம்மு ளெறிவ வெல்லாந்
தொட்டே கடவுட் படைதன்னொடுந் தூர்த்த லோடு
மட்டே றுபோதிற் படுகின்றுழி வச்சி ரத்தை
விட்டே தெழித்தான் குமரன்மிசை வேள்வி வேந்தன்.

இ—ள்: வேள்வி வேந்தன்—யாகாதிபனாகிய இந்திரன், எட்டே ஒருபான் படைதம்முள் எறிவ எல்லாம் கடவுள் படை தன்னொடும் தொட்டு தூர்த்தலோடும்—பதினெண்வகையான ஆயுதங்களுட்செலுத்தவேண்டியவற்றையெல்லாம் தேவப்படைக்கலங்களுடன்தொடுத்துச்செலுத்துதலும், மட்டு ஏறு போதில் படுகின்ற உழி-(அவையெல்லாம்) தேன்நிறைந்த மலர்களைப்போல (மென்மையாகப்)படுகின்றபொழுது, வச்சிரத்தை விட்டு தெழித்தான்—வச்சிராயுதத்தைச்செலுத்தி ஆரவாரித்தான் எ—று.

எட்டேயொருபான்-உம்மைத்தொகை. பதினெண்படையாவன:—வில் வாள் வேல் அம்பு ஈட்டி சக்கரம் கதை உடைவாள் மழு உலக்கை கப்பணம் வளைதடி தோமரம் சூலம்முதலியன. படை-படுத்தற்குக்கருவி. இந்திரனேவியவை அரத்தையுந்தெறுங்கடும்படைகளாயினும், முருகவேளது யாக்கையினின்று மிக நொய்யனவாதலின் அவர்மார்பகத்தூறுசெய்யாது தாமும் ஊறுபடாது வீழ்ந்தனவென்பார் 'மட்டேறுபோதிற்படுகின்றுழி' என்றார். (௬௭)

வயிரத் தனிவெம் படையெய்தைதன் மார்பு நண்ணி
யயிரிற் றுகளாய் விளிவாக வதனை நோக்கித்
துயரத் தழுங்க விமையோரிறை தொல்லை வேழஞ்
செயிருற் றியம்பி முருகேசன்முன் சென்ற தன்றே.

இ—ள்: தனி வெம் வயிரப்படை—ஒப்பற்ற கொடியவச்சிராயுதம், எந்தைதன் மார்பு நண்ணி— எம்பெருமானாகிய குமாரக்கடவுளதுமார்பிற்பட்டு, அயிரில் துகள் ஆய் விளிவு ஆக—நுண்மணல்போலச் சிறுதுகளாகி அழிய, இமையோர் இறை அதனை நோக்கி துயரத்து அழுங்க-தேவேந்திரன் அத்தன்மையைப்பார்த்துத்துன்பத்தினால்மனம்வருந்த, தொல்லை வேழம்— பழைய ஐராவதயானை, செயிர் உற்று இயம்பி முருகேசன்முன் சென்றது—(அதுகண்டு) கோபித்து முழங்கிக்கொண்டு குமாரக்கடவுளுக்கு முன்சென்றது எ—று.

முன்னேவியபடைகள் மிக நொய்யனவாதலின் ஒடியாதுவீழ்ந்தன, இப்படை அவர்நெஞ்சிற்கொருசிறிதொத்தவலியினதாதலின் துகளாயிற்று என்க. முருக+ஈசன்=முருகேசன்குணசந்தி. முன்னையது தமிழ்ச்சொல்லாயினும் பின்னையது வடசொல்லாதல்பற்றி வடநூன்முடிபேற்றது. (௪௮)

செல்லுங் கரிகண் டுமையாண்மகன் சிந்தை யாலோர்
வில்லுங் கணைகள் பலவும்விரை வோடு நல்கி
யொல்லென் றிடநா ணொலிசெய்துயர் சாபம் வாங்கி
யெல்லென்று கோலொன் றதனெற்றியு ளேக வுய்த்தான்.

இ—ள்: உமையாள் மகன்— உமாதேவியாரது குமாரராகிய முருகக்கடவுள், செல்லும் கரி கண்டு—(தம்மைநோக்கி) வரும் யானையைப்பார்த்து, ஓர் வில்லும் கணைகள் பலவும் சிந்தையால் விரைவோடு நல்கி—ஒருவில்லையும் பல அஸ்திரங்களையும் மனத்தினால் விரைவில் உண்டாக்கி, உயர் சாபம் வாங்கி—உயர்ந்த வில்லைவளைத்து, ஒல் என்றிட நாணொலி செய்து-ஒல்லென்னும் அனுகரணம் பொருந்த நாணோசையைச்செய்து, எல் ஒன்று கோல் ஒன்று அதன் நெற்றியுள் ஏக உய்த்தான்-ஒளிபொருந்திய ஒருபாணத்தை அந்தயானையினெற்றியினுள்ளே புகும்படி செலுத்தினார் எ—று.

யானைவாராமுன்னர்ப்பாணமெய்தல்வேண்டுமெனத் திருவுளம்பற்றினாராதலின், விரைவோடுநல்கினர். இதுகாறும்வந்த படைகட்கெல்லாம் வாளாநின்றார் யானைமேற்பாணமெய்யப்புகுந்தது தமதுவிற்போர்த்திறத்தை அவர்க்குப்புலப்படுத்துவான் கருதியே, அச்சத்தாலன்றென்க. (௪௯)

அக்கா லையில்வேள் செலுத்துங்கணை யண்டர் தம்மின்
மிக்கா னயிரா வதநெற்றியுண் மேவி வல்லே
புக்காவி கொண்டு புறம்போதப் புலம்பி வீழா
மைக்கார் முகிலச் சுறவேயது மாண்ட தன்றே.

இ—ள்: அ காலையில்—அப்பொழுது, வேள் செலுத்தும் கணை—சுப்பிரமணியக்கடவுளேவியபாணம், அண்டர் தம்மில் மிக்கான் அயிராவத நெற்றி உள் மேவி—தேவராசனாகிய இந்திரனது ஐராவதயானையின்நெற்றியினுள்நுழைந்து; வல்லே புக்கு— விரைந்துசென்று, ஆவி கொண்டு புறம் போத— உயிரைக்கவர்ந்து புறத்தே செல்ல, அது—அந்தயானை, மை கார் முகில் அச்சுற புலம்பி வீழா—கரியமேகமும்பயப்படும்படி அலறிக்கொண்டு விழுந்து, மாண்டது—இறந்தது எ—று.

அயிராவதம்-முதற்போலி. நெற்றியின்வழியே உட்சென்றபாணம் ஊடுருவிப் பின்புறத்தால் வெளிப்பட்டதென்க. அச்சு முதனிலைதிரிந்ததொழிற்பெயர். மை-கார்-ஒருபொருட்கிளவிகள். உயர்வுசிறப்பும்மைதொக்கது. (௫௦)

தன்னோர் களிறு மடிவெய்தலுந் தான வேந்த
னன்னே வெனவே யிரங்காவயல் போகி நின்று

மின்னே டுறழ்தன் சிலைதன்னை வெகுண்டு வாங்க
முன்னோன் மதலை யொருகோலவன் மொய்ம்பி லெய்தான்.

இ—ள்: தன் ஓர் களிறு மடிவு எய்தலும்—தனது ஒப்பற்றயானை இறத்தலும், தானவேந்தன்—சுவர்க்கலோகாதிபனாகிய இந்திரன், அன்னோ என இரங்கா— ஐயோ வென்று அழுது, அயல் போகி நின்று—(அவரது)பக்கத்திற்போய்நின்று, மின்னோடு உறழ் தன் சிலைதன்னை வெகுண்டு வாங்க— மின்னலையொத்த தனதுவில்லைக் கோபித்து வளைக்க, முன்னோன் மதலை— சிவபிரானது திருக்குமாரராகிய முருகக்கடவுள், அவன் மொய்ம்பில் ஒரு கோல் எய்தான்— அவனது புயங்களில் ஒரு பாணத்தைச்செலுத்தினார் எ—று. (ருக)

கோலொன்று விண்ணோர்க் கிறைமேற்குமரேச னுய்ப்ப
மாலொன்று நெஞ்சன் வருந்திப்பெரு வன்மை சிந்திக்
காலொன்று சாபத் தொழினீத்தனன் கையி லுற்ற
வேலொன் றதனைக் கடிதேகுகன் மீது விட்டான்.

இ—ள்: குமர ஈசன்—குமாரக்கடவுள், விண்ணோர்க்கு இறைமேல் கோல் ஒன்று உய்ப்ப—தேவேந்திரன்மீது ஒரு பாணத்தையேவ, மால் ஒன்றும் நெஞ்சன்-(அவ்விந்திரன்) மயக்கம்பொருந்திய மனத்தையுடையவனாய், வருந்தி பெருவன்மை சிந்தி-வருத்தமுற்றுப் பெரிதாகிய வலிமையையிழந்து, கால் ஒன்று சாப தொழில் நீத்தனன்- குதை பொருந்திய வில்லின்தொழிலைவிடுத்து, கையில் உற்ற வேல் ஒன்று அதனை குகன் மீது கடிது விட்டான்— கையிலிருந்த ஒரு வேலாயுதத்தைக் குமாரக்கடவுளின்மேல் விரைவிற்றூண்டினான் எ—று.

கோல்-கொல்லுவது. வேல்-வெல்லுவது. உய்ப்ப நீத்தனன் எனஇயையும். குகம்-தகராகாசம் (உள்ளக்கமலம்); அதில் வாழ்தலாற் குகனெனமுருகவேட்குப்பெயரெய்திற்று. இது முதனூலிற்கூறப்பட்டுளது; சிலர் பிறவாறுங்கூறுப. பெருவன்மையின்றி விற்போர்புரிவது கூடாமையாலொழித்தனனென்பார் 'பெருவன்மைசிந்திச்-சாபத்தொழினீத்தனன்' என்றார். (ருஉ)

குந்தப் படையோர் சிறுபுற்படு கொள்கை யேபோல்
வந்துற் றிடவற் புதமெய்தினர் மற்றை வானோர்
கந்தக் கடவுள் சிலையிற்கணை யொன்று பூட்டித்
தந்திக் கிறைவன் றடம்பொன்முடி தள்ளி யார்த்தான்.

இ—ள்: குந்தப்படை—வேலாயுதம், ஓர் சிறு புல் படு கொள்கையே போல் வந்து உற்றிட-ஒரு சிறுபுல்லானது பட்டதன்மையேபோல (மென்மையாக)வந்துபட, மற்றை வானோர் அற்புதம் எய்தினர்—மற்றையதேவர்கள் ஆச்சரியமுற்றார்கள், கந்தக்கடவுள்—குமாரக்கடவுள், சிலையில் கணை ஒன்று பூட்டி—வில்லில் ஒருபாணத்தைத் தொடுத்து (எவி), தந்திக்கு இறைவன் தடம் பொன் முடி தள்ளி ஆர்த்தான்—ஐராவதயானைக்குத்தலைவனாகிய இந்திரனது விசாலித்த பொன்மயமாகிய கிரீடத்தைவிழுத்தி ஆரவாரித்தார் எ—று.

புல்-புல்லியதென்பதுபற்றிவந்தபெயர். 'சிறுபுற்படுகொள்கையேபோல்' என்பதற்கு முன்னர் நாற்பத்தேழாஞ்செய்யுளில் 'மட்டேறுபோதிற்படுகின்றுழி' என்பதற்குரைத்ததுபோலுரைக்க. ஏ-தேற்றம். (ருங)

துவசந் தனையோர் கணைகொண்டு துணித்து மார்பிற்
கவசந் தனையோர் கணையாற்றுகள் கண்டு விண்ணோ

னவசம் படவேழ் கணைதூண்டினா னாழிவேண்டிச்
சிவசங் கரவென் றரிபோற்றிய செம்மன் மைந்தன்.

இ—ள்: ஆழி வேண்டி சிவ சங்கர என்று அரி போற்றிய செம்மல் மைந்தன்-சக்கராயுதத்தைப்பெறவிரும்பிச் சிவனே சங்கரனே என்றிவ்வாறு திருமாலாற்றுதிக்கப்பட்ட சிவபிரானது குமாரராகிய முருகக்கடவுள், துவசம் தனை ஓர் கணை கொண்டு துணித்து—கொடியை ஒரு பாணத்தினால்வெட்டி, மார்பில் கவசம் தனை ஓர் கணையால் துகள் கண்டு—மார்பிலணிந்துள்ள சட்டையை ஓர் பாணத்தினாற்றுகளாக்கி [அழித்து], விண்ணோன் அவசம் பட ஏழ் கணை தூண்டினன்—தேவேந்திரன் மூர்ச்சையாகும்படி ஏழுபாணங்களைச்செலுத்தினார் எ—று.

கொண்டு-மூன்றாம்வேற்றுமைச்சொல்லுருபு. கண்டு- ஈண்டு, செய்துஎன்னும் பொருளது. ஏழென்னுமெண்ணுப்பெயர் ழகரவீறென்பது தொல்காப்பியனார்கொள்கை. உகரவீறென்பர் நன்னூலார். பிற்காலத்தில் உகரவீறே பெருவழக்காயதுபற்றி நன்னூலாரங்ஙனங்கொண்டனர்போலும். அரி-(அடியார்களது துயரத்தையும் அவர்க்கிடர்செய்யும் அசுராதியோரையும்) அழிப்பவன். (௫௪)

தீங்கா கியவோ ரெழுவாளியுஞ் செல்ல மார்பி
னாங்கார மிக்க மகவானயர் வாகி வீழ்ந்தா
னோங்கார மேலைப் பொருண்மைந்தனை யும்ப ரேனோர்
பாங்காய் வளைந்து பொருதார்படு கின்ற தோரார்.

இ—ள்: தீங்கு ஆகிய ஓர் எழு வாளியும் மார்பில் செல்ல— தீமையைப்பயப்பனவாகிய ஏழுபாணங்களும் நெஞ்சினுளழுந்த, ஆங்காரம் மிக்க மகவான் அயர்வு ஆகி வீழ்ந்தான்—அகங்காரமிகப்பெற்ற இந்திரன் அவசமாகிவிழுந்தான் (அப்பொழுது), ஏனோர் உம்பர்—எஞ்சியதேவர்கள் (யாவரும்), படுகின்றது ஓரார்—தமக்குநேருந்துயரையெண்ணாதவர்களாய், பாங்கு ஆய் வளைந்து—பக்கத்திற்சென்றுசூழ்ந்து, மேலை ஓங்கார பொருள் மைந்தனை பொருதார்—பழைய பிரணவத்தின் பொருளாகிய குமாரக்கடவுளுடன், போர் செய்தார்கள் எ—று.

தீமையைத்தருதற்கேதுவாகிய வாளியைத்தீங்காகிய வாளியென்றது காரணகாரிய உபசாரம். ஆங்காரம் அகங்காரமென்னும் வடமொழியின்சிதைவு. மேலை என்பதில் ஐகாரஞ்சாரியை. காலசாமீப்பியம்பற்றிப் படுவதைப்படுகின்றதென்றார். (௫௫)

இவ்வா றமரர் பொருமெல்லையி லீசன் மைந்தன்
கைவார் சிலையைக் குனித்தேகணை நான்கு தூண்டி
மெய்வா ரிதிகட் கிறைவன்றனை வீட்டி மற்று
மைவா ளியினாற் சமனாற்ற லடக்கி னானால்.

இ—ள்: இவ்வாறு அமரர் பொரும் எல்லையில்—இப்படித்தேவர்கள் போரியற்றும்பொழுது, ஈசன் மைந்தன்—சிவகுமாரராகிய முருகக்கடவுள், கை வார் சிலையை குனித்து—கையிலுள்ள நீண்டவில்லை வளைத்து, கணை நான்கு தூண்டி மெய்வாரிதிகட்கு இறைவன் தனை வீட்டி—நான்குபாணங்களைச்செலுத்தி மெய்ம்மையாகிய சமுத்திரங்கட்கு அரசனாகிய வருணனை அழித்து, மற்றும் ஐ வாளியினால் சமன் ஆற்றல் அடக்கினான்—பின்பும் ஐந்துபாணங்களால் யமனது வலிமையை அடக்கினார் எ—று.

வாரிதி- நீர்தங்குமிடம். சமன்- (ஒருபாற்கோடாது) ஒப்பநடப்பவன். வடநூலாருஞ் சமவர்த்தி என்பர். நடுவனென்னும் பெயர்க்காரணமுமிதுவே.

ஶமனன் யமன் என்னும் வடமொழிகளின் திரிபென்பாருமுளர். அங்ஙனங்கொள்ளின் (எல்லோரையும்) ஒடுங்கச்செய்பவனென்பது பொருள். (௫௬)

ஓரம் பதனுன் மதிதன்னையு மொன்றி ரண்டு
கூரம் பதனாற் கதிர்தன்னையுங் கோதின் மைந்த
னீரம் பதனு லனிலத்தையு மேவு மூன்றால்
வீரம் பகர்ந்த கனலோனையும் வீட்டி நின்றான்.

இ—ள்: கோது இல் மைந்தன்—குற்றமற்ற குமாரக்கடவுள், ஓர் அம்பு அதனால் மதிதன்னையும்—ஒருபாணத்தினாற் சந்திரனையும், ஒன்று இரண்டு கூர் அம்பு அதனால் கதிர் தன்னையும்—கூர்மையாகிய மூன்று பாணங்களாற்சூரியனையும், ஈர் அம்பு அதனால் அனிலத்தையும்— இரண்டுபாணங்களால் வாயுவையும், ஏவு மூன்றால் வீரம் பகர்ந்த கனலோனையும் வீட்டி நின்றான்—மூன்றுபாணங்களால் வீரம்பேசிநின்ற அக்கினியையும் அழித்துநின்றார் எ—று.

ஒன்றிரண்டு உம்மைத்தொகை. பண்புத்தொகையாகக்கொண்டு இரண்டெனின் முதனூற்குவிரோதமாம். ஏவு என்பதில் உகரஞ்சாரியை. (௫௭)

நின்றா ரெவருங் குமரேச னிலைமை நோக்கி
யின்றா ரையுமற் றிவனேயடு மென்று தேறி
யொன்றான சிம்புள் விறல்கண்டரி யுட்கி யோடிச்
சென்றா லெனவே யிரிந்தோடினர் சிந்தை விம்மி.

இ—ள்: நின்றார் எவரும் குமரேசன் நிலைமை நோக்கி—(இறவாது) எஞ்சிநின்றாரனைவரும் குமாரக்கடவுளது போர்நிலைமையைப்பார்த்து, இன்று ஆரையும் இவனே அடும் என்று தேறி—இற்றைத்தினத்தில் எல்லோரையும் இவனொருவனே அழிப்பானென்று நிச்சயித்து, சிந்தை விம்மி—மனம்வருந்தி, ஒன்று ஆன சிம்புள் விறல் கண்டு அரி உட்கி ஓடி சென்றால் என—ஒப்பற்ற சரபப்பறவையின் வலியைக்கண்டு சிங்கமானது பயந்தோடிப்போனாற்போல, இரிந்து ஓடினர்—அஞ்சியோடினார்கள் எ—று.

இன்று-ஏழாம்வேற்றுமையுணர்நின்ற இடைச்சொல். இவனேயென்பதில் ஏகாரம் தேற்றம். தன்னினமிருகங்களுட் பலவற்றையட்டு விறல்படைத்துநிற்குஞ்சரபத்தையெதிர்ப்பட்டசிங்கம், சிறிதுபோழ்துநிற்பினுந் தவறவிடாது கொல்லுமென்றஞ்சி வல்விரைந்தோடுமாறுபோல, தங்குழுவினர்பலரையட்டுநிற்குங் கந்தவேட்கெதிரே இன்னுஞ்சிறிதுபோழ்துநிற்பினுந்தப்பாது கொல்வனென்றஞ்சி வல்விரைந்தோடினரென்பார் 'ஒன்றானசிம்புள்விறல்கண்டரியுட்கியோடிச்சென்றாலெனவேயிரிந்தோடினர்' என்றார். ()

ஓடுஞ் சுரர்க டிறநோக்கி யுதிக்கும் வெய்யோ
னீடுங் கதிர்க ணிலவைத்துரக் கின்ற தேபோ
லாடுங் குமர னவரைத்துரந் தண்டர் முன்னர்
வீடுங் களத்தி னிடையேதனி மேவி நின்றான்.

இ—ள்: ஆடும் குமரன்—திருவிளையாடல்செய்கின்ற முருகக்கடவுள், ஓடும் சுரர்கள் திறம் நோக்கி-இரிந்தோடுகின்ற தேவர்களது தன்மையைப்பார்த்து, உதிக்கும் வெய்யோன் நீடும் கதிர்கள் நிலவை துரக்கின்றதே போல்-உதயஞ்செய்கின்றசூரியனது நெடிய கிரணங்கள் சந்திரகிரணங்களைத்துரத்துவதையேபோல, அவரை துரந்து-அத்தேவர்களைத்துரத்தி, அண்டர் முன்னர் வீடும் களத்தின் இடையே தனி மேவி நின்றான்— தேவர்கள்முன்னே இறந்த சமர்க்களத்திற்றனியேபொருந்திநின்றார் எ—று.

ஆடுங்குமரன் என்பதற்கு, போரியற்றியகுமாரக்கடவுளெனினுமாம். முன்னைய ஏ-தேற்றம். செந்நிறமுடைய சூரியன் உதயவெற்பிற்றோன்றிநிற்ப, அவனது கிரணங்கள் முன்னுதித்தெழுந்த சந்திரனது கிரணங்களைக்கீட்டிசையினின்று மேற்றிசைகாறுமொதுக்குதல்போல, செந்நிறமுடைய குழவியாகிய கந்தவேள் மேருவெற்பிற் சமர்க்களத்தி லெதிர்ந்தாரையட்டுநின்றுழி, அவரது வீராவேசம் எஞ்சியதேவரைத் துரந்ததென்பார் 'நீடுங்கதிர்கணிலவைத்துரக்கின்றதேபோலாடுங்குமரனவரைத்துரந்து' என்றார். (ருக)

ஒல்லா தவரிற் பொருதேசில வும்பர் வீழ
நில்லா துடைந்து சிலதேவர்க ணீங்க நேரில்
வில்லாளி யாகித் தனிநின்ற விசாகன் மேனா
ளெல்லா ரையுமட் டுலவுந்தனி யீச னொத்தான்.

இ—ள்: சில உம்பர்—சிலதேவர்கள், ஒல்லாதவரில் பொருது வீழ— பகைவர் போலெதிர்த்துப்பொருது மாண்டுவிழ, சில தேவர்கள் நில்லாது உடைந்து நீங்க—வேறு சிலதேவர்கள் எதிர்நிற்கலாற்றாது குலைந்தோட, நேர் இல் வில் ஆளி ஆகி தனி நின்ற விசாகன்—ஒப்பற்ற வில்வீரனாகித்தனியேநின்ற சுப்பிரமணியக்கடவுள், மேல் நாள் எல்லாரையும் அட்டு தனி உலவும் ஈசன் ஒத்தான்—பிற்காலத்தில் எல்லோரையும் அழித்துத்தனியேயுலாவுஞ் சிவபிரானைநிகர்த்தார் எ—று.

வில்லாளி-விற்றொழிலை ஆள்பவன். விசாகன்-விசாகநாளிற் பிறந்தவனெனவும், மயிலாகிய பறவையிலிவர்ந்துசஞ்சரிப்பவனெனவும் பொருள்படும். மேல் நாள் என்றதற்கு முற்காலத்தெனினுமாம்; அது சர்வசங்காரகாலம். (ரு0)

**வேறு.**

சூரர்கள் யாருந் தொலைந்திட வென்றுதா
னொருவ னாகி யுமைமகன் மேவுழி
யருளி னார த னச்செயல் கண்டுவான்
குருவை யெய்திப் புகுந்தன கூறினன்.

இ—ள்: உமைமகன்—உமாதேவியாரது திருக்குமாரராகிய முருகக்கடவுள், சூரர்கள் யாரும் தொலைந்திட வென்று—தேவரனைவரும் அழியும்படி வெற்றிகொண்டு, தான் ஒருவன் ஆகி மேவுழி-தாமொருவரேயாய்நின்றபொழுது, நாரதன்-நாரதமுனிவர், அருளின் அ செயல் கண்டு— கருணையுடன் அச்செய்கையைப்பார்த்து, வான் குருவை எய்தி—தேவகுருவை அடைந்து, புகுந்தன கூறினன்—நிகழ்ந்த செயல்களை (அவருக்குச்) சொல்லினார் எ—று.

நாரம்-தத்துவஞானம். தன்-கொடுப்பவன். நாரதன்-தத்துவஞானத்தைக்கொடுப்பவன். குமாரக்கடவுளது திருவிளையாடலென்றறியாது எதிர்த்துமாண்டனரேயென்றிரக்கமுற்று அவரையெழுப்புவிக்கமுயன்றனராதலின் 'அருளின்-அச்செயல்கண்டு' என்றார்.

நற்ற வம்புரி நாரதன் கூற்றினை
யற்ற மில்லுணர் வந்தணன் கேட்டெழீஇ
யிற்ற தேகொ லிமையவர் வாழ்வெனாச்
சொற்று வல்லை துயருழந் தேகினான்.

இ—ள்: நல் தவம் புரி நாரதன் கூற்றினை—சிறந்ததவத்தைச்செய்கின்ற நாரதமுனிவரது வார்த்தையை, அற்றம் இல் உணர்வு அந்தணன் கேட்டு எழீஇ—குற்றமற்ற அறிவினையுடைய வியாழன் செவிசாத்தி எழுந்து, இமையவர் வாழ்வு இற்றது கொ

ல் எனு சொற்று—தேவர்களது வாழ்க்கை முடிந்ததா! என்று கூறி, துயருழந்து—மனத் துன்பமுற்று, வல்லை ஏகினன்—விரைவிற்போயினர் எ—று.

அற்றம் சோர்வெனினுமாம். எழீஇ எழுந்துஎன்பதன்விகாரம்; சொல்லிசைய ளபெடை. குமாரக்கடவுள் சமர்க்களத்தை நீங்குமுன்னர் எதிர்ப்படவேண்டுமென்றெண் ணியேகினராதலின் 'வல்லைஏகினன்' என்றார். (௧௨)

ஆதபன்மதி யண்டர் தமக்கிறை
மாதி ரத்தவர் மால்கரி தன்னுடன்
சாதல் கொண்ட சமர்க்களந் தன்னிடைப்
போதன் மேயினன் பொன்னெனும் பேரினன்.

இ—ள்: ஆதபன்—சூரியனும், மதி—சந்திரனும், அண்டர் தமக்கு இறை—தேவேந்திரனும், மாதிரத்தவர்—(ஏனைத்) திக்குப்பாலகர்களும், மால் கரி தன்னுடன் சாதல் கொண்ட—பெரிய ஐராவதயானையோடுமிறந்துகிடக்கின்ற, சமர்க்களம் தன் இடை—போர்நிலத்தில், பொன் எனும் பேரினன் போதல் மேயினன்— வியாழபகவான் போயினர் எ—று.

பொன்-பொன்னிறமுடையவன். (௧௩)

ஆவி யின்றி யவர்மறி குற்றது
தேவ ராசான் றெரிந்து படருறுத்
தாவி லேர்கெழு சண்முக னவ்விடை
மேவி யாடும் வியப்பினை நோக்கினன்.

இ—ள்: தேவர் ஆசான்—தேவகுரு, அவர் ஆவி இன்றி மறிகுற்றது தெரிந்து—அத்தேவர்கள் உயிரிழந்து வீழ்ந்துகிடப்பதைப்பார்த்து, படர் உறு—மனத்துயர்கொண்டு, தா இல் ஏர் கெழு சண்முகன் அ இடை மேவி ஆடும் வியப்பினை நோக்கினன்—குற்றமற்ற அழகுபொருந்திய ஆறுமுகக்கடவுள் அவ்விடத்தேநின்று விளையாடுகின்றஅதிசயத்தைப்பார்த்தார் எ—று.

தேவர் என்பது விளங்குபவரெனவும், வானுலகத்தில் வசிப்பவரெனவும் பொருள்படும். தேவரிறந்தமையைக்கண்டதனுலெழுந்ததுன்பம் குமாரக்கடவுளைத் தரிசித்தமையாற்றெலைந்ததென்பதுபோதர 'வியப்பினைநோக்கினன்' என்றார். (௧௪)

முழுது ணர்ந்திடு மொய்சுடர்ப் பொன்னவ
னெழுதொ ணுத வெழினலந் தாங்கியோர்
குழவி தன்னுருக் கொண்ட குமரனைத்
தொழுது நின்று துதித்திது சொல்லுவான்.

இ—ள்: முழுது உணர்ந்திடும் மொய் சுடர் பொன்னவன்—எல்லாவற்றையும் அறிந்த கூட்டமாகிய ஒளியினையுடைய வியாழன், எழுத ஒணுத எழில் நலம் தாங்கி ஓர் குழவி தன் உருகொண்ட குமரனை தொழுது- சித்திரித்தற்குமரிய அழகின்சிறப்பைப்பொருந்தி ஒரு குழந்தைவடிவத்தைக்கொண்ட குமாரக்கடவுளைக் கைதொழுது, நின்று துதித்து இது சொல்லுவான்—நின்று தோத்திரஞ்செய்து இவ்வாசகத்தைக்கூறுவார் எ—று.

முழுதுணர்ந்திடும் பொன்னவன் என இயையும். இழிவுசிறப்பும்மைதொக்கது. தாங்கிய ஓர்குழவி எனச்சொல்வருத்தூப் பெயரெச்சத்து ஈற்றகரந்தொக்கதெனினுமாம்.

வேறு.

கரியரி முகத்தினன் கடிய சூரனென்
னுரைபெறு தானவ ரொருப்ப வல்கலும்

பருவர லுழந்துதன் பதிவிட் டிப்பெரு
வரையிடை மகபதி மறைந்து வைகினான்.

இ—ள்: கரி (முகத்தினன்) அரி முகத்தினன் கடிய சூரன் என்று உரைபெறு தானவர் ஒறுப்ப—யானைமுகத்தையுடையதாரகனும் சிங்கமுகனும் கொடிய சூரபன்மனு மென்றுசொல்லப்படுகின்ற அசுரர்கள்கடிய, மகபதி—இந்திரன், அல்கலும் பருவரல் உழந்து—தினந்தோறுந்துன்பத்தையனுபவித்து, தன் பதி விட்டு—தனதுநகரமாகிய அமராவதியைநீங்கி, இ பெரு வரை இடை மறைந்து வைகினன்—இந்தப்பெரிய மேருமலையில் (வந்து) மறைந்திருந்தான் எ—று.

தானவர்- (காசிபமுனிவரது மனைவிமார்களுளொருத்தியாகிய) தனு என்பவளது புதல்வர். இப்பெயர், காரணங்கருதாது அசுரர் என்னும் பொருளில் வழங்கிற்று. அல்கல்-நாள். (௬௬)

அன்னவ னின்னடி யடைந்து நிற்கொடே
துன்னலர் தமதுயிர் தொலைத்துத் தொன்மைபோற்
றன்னர செய்தவுந் தலைவ னாகவு
முன்னினன் பிறிதுவே றொன்று முன்னலான்.

இ—ள்: அன்னவன்-அவ்விந்திரன், நின் அடி அடைந்து-தேவரீரதுபாதங்களைச் சரண்புகுந்து, நின் கொடு ஏ துன்னலர் தமது உயிர் தொலைத்து—தேவரீரைக்கொண்டே பகைவராகிய அவுணரது உயிரைஅழித்து, தொன்மை போல் தன் அரசு எய்தவும் தலைவன் ஆகவும் உன்னினன்— முன்போலத் தனது அரசியலைப்பெறுதற்கும் தேவத்தலைவனாதற்குஞ் சிந்தித்தான், பிறிது வேறு ஒன்றும் உன்னலான்—அவையன்றி வேறொன்றையுஞ் சிந்தித்திலான் எ—று.

உம்மால் உதவிபெறக்கருதினனேயன்றி உமக்குத் தீங்கிழைக்கநினைத்தானல்லனென்பதாம். ஏகாரம்-பிரிநிலை. துன்னலர்-சேராதவர். (௬௭)

பற்பக லருந்தவம் பயின்று வாடினன்
றற்பர சவணத் தடத்திற் போந்தவுன்
னுற்பவ நோக்கியே யுவகை பூத்தனன்
சொற்படு துயரெலாந் தொலைத்து ளானென.

இ—ள்: தற்பர—கடவுளே!, பல் பகல் அரும் தவம் பயின்று வாடினன்—பலகாலமாக அரியதவத்தைச்செய்து வாடி, சரவணத்தடத்தில் போந்த உன் உற்பவம் நோக்கி—சரவணதடாகத்திலுதித்தருளிய தேவரீரது திருவவதாரத்தைப்பார்த்து, சொல் படு துயர் எலாம் தொலைத்துளான் என உவகை பூத்தனன்—சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றையும்போக்கியவன்போல மகிழ்ச்சிபெற்றான் எ—று.

தத்பரன் உத்பவம் என்னும்வடசொற்கள்-தற்பரன் உற்பவம் எனத்திரிந்தன. குமாரக்கடவுளைக்கொண்டு பகைவரையழித்து அரசுபெறக்கருதித்தவமியற்றினனாதலின் 'உன்உற்பவநோக்கியேயுவகைபூத்தனன்' எனவும், உணவொறுத்து மேனியைவருத்திச் செய்யுங் கடுந்தவமென்பார் 'அருந்தவம்' எனவும், நேர்ந்ததுயர்களனைத்துமென்பார் 'சொற்படுதுயரெலாம்' எனவும் கூறினார். (௬௮)

கோடலு மராத்தொடு குரவுஞ் செச்சையுஞ்
சூடிய குமரநின் றொழும்பு செய்திட
நேடுறு மிந்திர னீயித் தன்மையி
னூடல்செய் திடுவதை யறிகி லானரோ.

இ—ள்: கோடலும் மராத்தொடு குரவும் செச்சையும் சூடிய குமர— காந்தட்பூவையும் கடப்பம்பூவையும் குராம்பூவையும் வெட்சிப்பூவையுமணிந்தருளிய குமாரக்கடவுளே!, நின் தொழும்பு செய்திட கேடுறும் இந்திரன்-தேவரீரது திருத்தொண்டுகளைச் செய்தற்குக்காலம்பார்த்திருக்கின்ற இந்திரன், நீ இ தன்மையின் ஆடல்செய்திடுவதை அறிகிலான்—தேவரீர் இவ்வாறு திருவிளையாட்டியற்றுவதை அறியமாட்டான் எ—று.

கோடல் மரா குரவு செச்சை என்பன ஆகுபெயர்கள். (சுகூ)

நாரணன் முதலினோர் நாடிக் காணொணு
வாரண முதல்வனு முமையு மன்னவர்
சீரரு ளடைந்தனர் சிலரு மல்லதை
யாருன தாடலை யறியு நீரினர்.

இ—ள்: நாரணன் முதலினோர் நாடி காண ஒணு ஆரண முதல்வனும்—திருமால்முதலிய தேவத்தலைவர்களாலுந் தேடியறிதற்கரிய வேதமுதல்வராகிய சிவபிரானும், உமையும்—உமாதேவியாரும், அன்னவர் சீர் அருள் அடைந்தனர் சிலரும் அல்லதை-அவ்வுமாமகேச்சுரரது சிறந்தகருணையைப்பெற்றோர்சிலருமேயன்றி, உனது ஆடலை அறியும் நீரினர் ஆர்—தேவரீரதுதிருவிளையாட்டை அறியுந்தகையினர் வேறு யாவருளர்? (ஒருவருமில்லை) எ—று.

நாரணன் நாராயணன் என்னும் வடசொற்றிரிபு. இதற்கு, கடலைத்தங்குமிடமாகக்கொண்டவனென்பதுபொருள். பிறவாறுமுரைப்பர். உயர்வுசிறப்பும்மையும், காணொ என்னும் வினையெச்சத்தினீற்றகரமும், ஒண்ணுத என்னும் பெயரெச்சத்தீற்றுயிர்மெய்யும் ணகரவொற்றும் தொக்கன. அன்னவர்சீரருளடைந்தனர்சிலர் என்றது தத்துவஞானமுற்றியபெரியோர்களை. (எ0)

பற்றிய தொடர்பையு முயிரை யும்பகுத்
திற்றென வுணர்கில மேதந் தீர்கிலஞ்
சிற்றுணர் வுடையதோர் சிறியம் யாமெலா
முற்றுன தாடலை யுணர வல்லமோ.

இ—ள்: சிறு உணர்வு உடையது ஓர் சிறியம்—சிற்றறிவினையுடைய எளியேங்கள், பற்றிய தொடர்பையும் உயிரையும் பகுத்து இற்று என உணர்கிலம்— அநாதியே பற்றியுள்ளபாசத்தையும் (அதனாற்பந்திக்கப்பட்ட) ஆன்மாவையும் வேறுபிரித்து இவ்வியல்பிற்றென அறிகின்றிலேம், ஏதம் தீர்கிலம்—(அங்ஙனமுணர்ந்தபின்னர் ஒழித்தற்பாலதாகிய) பாசக்குற்றத்தைத்தவிர்கின்றிலேம், யாம் எலாம் உனது ஆடலை உற்று உணர வல்லமோ—அத்தகைய யாங்களனைவேமும் தேவரீரது திருவிளையாடல்களை ஆராய்ந்தறிய வல்லேமா? (வல்லமல்லேம்) எ—று.

பதிபசுபாசவிவேகமும் மலநீக்கமுமில்லாதேம் தேவரீரதியல்பை உணர்தல் கூடாதென்பதாம். கடவுளியல்பையுணர்தற்கதுவேண்டப்படுமென்பதை "கண்டவிவையல்லேனு னென்றகன்று காணுக் கழிபரமு நானல்லேனெனக் கருதிக் கசிந்து-தொண்டினொடு முளத்தவன்ற னின்றகலப் பாலே சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றன்றி-விண்டகலு மலங்களெலாங் கருடதியா னத்தின் விடமொழியு மதுபோல விமலதையுமடையும்" என்னுஞ் சிவஞானசித்தித்திருவிருத்தத்தானுமுணர்க. (எக)

ஆதலால் வானவர்க் கரச னுற்றவு
மோதிதா ளின்மையா லுன்ற னுடலைத்
தீதெனு வுன்னிவெஞ் செருவி னைத்தன
னீதிசேர் தண்டமே நீபு ரிந்தனை.

இ—ள்: ஆதலால்-ஆதலினால், வானவர்க்கு அரசன்-தேவர்க்கரசனாகிய இந்திரன், ஆற்றவும் ஓதி இன்மையால் உன் தன் ஆடலை தீது என உன்னி வெம் செரு இழைத்தனன்—மிகவும் ஞானமில்லாமையினால் தேவரீரது திருவிளையாட்டைக் கொடுஞ்செய்கையென்றுகருதி வெவ்வியபோரைச்செய்தான், நீ நீதி சேர் தண்டமே புரிந்தனை-தேவரீர் (அதற்கு) நியாயமான தண்டனையையேசெய்தீர் எ—று.

தான் அசை. செய்தகுற்றத்திற்கேற்றதண்டமென்பார் 'நீதிசேர்தண்டம்'என்றார். (௭௨)

மற்றுள தேவரு மலைந்து தம்முயி
ரற்றன ரவர்களு மறிவி லாமையாற்
பெற்றிடுங் குரவரே பிழைத்த மைந்தரைச்
செற்றிடி னெவரருள் செய்யற் பாலினோர்.

இ—ள்: மற்று உள தேவரும் மலைந்து தம் உயிர் அற்றனர்— ஏனையதேவர்களும்பொருது தங்கள் ஆன்மாவையிழக்கப்பெற்றார்கள், அவர்களும் அறிவு இலாமையால்-அவர்களும் (அவ்வாறிறந்தது) நல்லறிவின்மையாற்றான், பெற்றிடும் குரவரே பிழைத்த மைந்தரை செற்றிடின்—பெற்றதாய்தந்தையரே தவறியற்றிய சிறுவரைக்கொன்றால், அருள் செய்யல் பாலினோர் எவர்-அநுக்கிரகஞ்செய்யவல்லார் வேறியாவர்? (ஒருவருமில்லை) எ—று.

காக்குங்கடவுளாகியதேவரீரே தேவர்செய்த பிழையைப்பொறுத்தருளாதுகொன்றீராயின் இவர்க்கினியருள்செய்தற்பாலார் வேறியாவரென்பதை உபமானமுகத்தாலுய்த்துணரவைத்தலின் இது பிறிதினவிற்சியென்னுமணி. (௭௩)

சின்மய மாகிய செம்மல் சிம்புளாம்
பொன்மலி சிறையுடைப் புள்ளி னாயகன்
வன்மைகொள் விலங்கினை மாற்ற லல்லது
மின்மினி தனையடல் விசய மாகுமோ.

இ—ள்: சித் மயம் ஆகிய செம்மல்—ஞானவடிவாகிய கடவுளே!, பொன் மலி சிறை உடை புள்ளின் நாயகன் ஆம் சிம்புள்—அழகுமிக்க சிறகுகளையுடைய பறவைகட்கரசனாகியசரபம், வன்மை கொள் விலங்கினை மாற்றல் அல்லது மின்மினி தனை அடல் விசயம் ஆகுமோ—(விலங்குகளுள்) வலிபடைத்துளதாகிய சிங்கத்தைக்கொல்வதேயன்றி மின்மினியைக்கொல்வது ஒருவீரமாகுமா? (ஆகாதே) எ—று.

சித் + மயம் = சின்மயம். வடநூல்விதிப்படி சந்திபெற்றது. செம்மல்-அண்மைவிளி. சிறந்ததை அரசனெனல்மரபாதலின் 'புள்ளினாயகன்' என உயர்திணையாற்கூறினார். உலகத்துள்ளாரனைவரையுமடக்கிப் பெருவிறல்படைத்த சூரனாதியவன்கண்ணரையழிப்பதேயன்றி, வலியற்ற இத்தேவர்களையழித்தது நமக்கு வென்றியாகாதென்பதனை உபமானமுகத்தானுய்த்துணரவைத்தலின் இச்செய்யுளும் முற்செய்யுளிற்காட்டிய அணியேயாம். (௭௪)

ஒறுத்திடு மவுணர்க ளொழிய வேரொடு
மறுத்தரு ளுணர்விலா வளிய ருன்னடி
மறத்தலி லன்பினர் மற்றி னோர்பிழை
பொறுத்தருள் கருணையாற் புணரி போன்றுளாய்.

இ—ள்: கருணையால் புணரி போன்று உளாய்— தண்ணளியினாற் கடல்போன்றவரே!, ஒறுத்திடும் அவுணர்கள் ஒழிய வேரொடும் அறுத்து அருள்—எங்களைவருத்து

கின்ற (சூரனாதிய) அசுரர்கள் அழியும்படி அடியோடுஞ்சங்கரித்தருளுவீர், உணர்வு இலா அளியர்—உய்த்துணர்வில்லாத எளியவர்களும், உன் அடி மறத்தல் இல் அன்பினர்-தேவரீரதுபாதங்களை (எப்போதும்) மறவாத பேரன்புடையவர்களுமாகிய, இன்னோர் பிழை பொறுத்து அருள்—இவர்கள்செய்தகுற்றத்தைப் பொறுத்தருளுக எ—று.

மற்று வினைமாற்று. புணரி-(நதிகளோடு)புணர்வது. அளவிடற்கரிய பெருங்கருணையினையுடையாயென்பார் 'கருணையாற்புணரிபோன்றுளாய்' என்றார். (௭௫)

பரமுற வணிகரைப் பரித்துப் பல்வளந்
தருகலங் கவிழ்ந்திடச் சாய்த்து மற்றவ
ரொருதலை விளிதல்போ லுன்னிற் பெற்றிடுந்
திருவினர் பொருதுனைச் செருவிற் றுஞ்சினார்.

இ—ள்: பரம் உற வணிகரை பரித்து பல் வளம் தரு கலம் கவிழ்ந்திட சாய்த்து—பாரமிகும்படி வர்த்தகரைத்தாங்கிப்பலவளப்பங்களையுங்கொடுக்கின்ற மரக்கலம் கவிழும்படி புரட்டுதலினால், அவர் ஒருதலை விளிதல் போல்—அம்மரக்கலத்தை ஆதாரமாகக் கொண்ட வர்த்தகர்கள் நிச்சயமாகஇறப்பதுபோல, உன்னில் பெற்றிடும் திருவினர்—தேவரீராற்பெறுஞ்சிறப்பினையுடையதேவர்கள், உனை பொருது செருவில் துஞ்சினார்-தேவரீருடன்போர்செய்து அப்போரிலிறந்தார்கள் எ—று.

மரக்கலத்தால் வளம்பெறவிரும்பிய வர்த்தகர்கள் அறிவீனத்தாற் கவிழ்த்து அதனால்வரும்வளத்தையுந் தம்முயிரையுமொருங்கேயிழப்பதுபோல, நம்மாற் சூரனாதியரைத்தொலைப்பித்துப் பழைய ஆக்கத்தைப்பெறவிரும்பியதேவர்கள் அறியாமையாற் பகைத்து நம்மாலெய்தும்வளத்தையுந் தம்முயிரையுமொருங்கேயிழந்தனரென்பதாம். பயனுவமையணி. (௭௬)

தொழுதகு நின்னடித் தொண்ட ராற்றிய
பிழையது கொள்ளலை பெரும சிந்தையு
ளழிதரு மினையவ ரறிவு பெற்றிவ
ணெழுவகை யருளென விறைஞ்சிக் கூறினான்.

இ—ள்: பெரும—இறைவரே!, தொழுதகு நின் அடி தொண்டர் ஆற்றிய பிழையது சிந்தையுள் கொள்ளலை— வணங்கத்தக்க உனது அடியார்களியற்றிய குற்றத்தைத்திருவுள்ளத்திற்கொள்ளாது, அழிதரும் இனையவர் அறிவுபெற்று இவண் எழுவகை அருள்—இறந்த இத்தேவர்கள் உணர்வுபெற்று இவ்விடத்தெழும்பும்படிகருணைசெய்க, என-என்று, இறைஞ்சி கூறினான்—வணங்கி விண்ணப்பஞ்செய்தார் எ—று.

கொள்ளலை-முற்றெச்சம். அடித்தொண்டு-அடிமைத்தொழில். (௭௭)

பொன்னவ னின்னன புகன்று வேண்டிட
முன்னவர் முன்னவன் முறுவல் செய்துவான்
மன்னவ னாதியர் மால்க ளிற்றொடு
மந்நிலை யெழும்வகை யருள்செய் தானரோ.

இ—ள்: பொன்னவன் இன்னன புகன்று வேண்டிட—வியாழபகவான் இவ்வாசகங்களைக்கூறிக்குறையிரப்ப, முன்னவர் முன்னவன் முறுவல் செய்து— முதல்வர்க்குமுதல்வராகிய குமாரக்கடவுள் குறுநகைசெய்து, வான் மன்னவன் ஆதியர் மால் களிற்றொடும் அ நிலை எழும் வகை அருள் செய்தான்-இந்திரன்முதலியதேவர்கள் மதமயக்கத்தினையுடைய ஐராவதயானையோடும் அப்பொழுது எழும்பும்வண்ணம்கருணைபுரிந்தார் எ-று.

வியாழனது வேண்டுகோட்கிசைந்தமையால் முறுவல்செய்தனர். நிலை-இடமுமாம். (எஅ)

வேறு.

அந்தியின் வனப்புடைய மெய்க்குக னெழுப்புதலு மன்ன பொழுதே
யிந்திர னு மாதிர வரைப்பினரும் வானவரும் யாவரு மெழாஅச்
சிந்தைதனின் மெய்யுணர்வு தோன்றுதலு முன்புரி செயற்கை யுணராக்
கந்தனொடு கொல்சமர் புரிந்ததென வுன்னினர் கலங்கி யெவரும்.

இ—ள்: அந்தியின் வனப்பு உடைய மெய் குகன் எழுப்புதலும்— செவ்வானம்போன்ற நிறமமைந்த திருமேனியையுடைய குமாரக்கடவுள் எழுப்புதலும், அன்ன பொழுதே-அப்பொழுதே, இந்திரனும் மாதிரவரைப்பினரும் வானவரும் யாவரும் எழா-இந்திரனும் திக்குப்பாலர்களும் ஏனைத்தேவர்களுமாகிய எல்லோரும் எழும்பி, சிந்தை தனில் மெய் உணர்வு தோன்றுதலும்—மனத்தில் நல்லறிவுண்டானவுடன், முன் புரி செயற்கை உணரா-முன்னரேயியற்றிய செயலையறிந்து, எவரும் கலங்கி-அனைவரும் மனம்வருந்தி, சமர் புரிந்தது கந்தனொடு கொல் என உன்னினர்-(யாங்கள்)போரியற்றியது முருகவேளுடனோ? என்று நினைத்தார்கள் எ—று.

அந்தி-ஆகுபெயர். வனப்பு-ஈண்டு, நிறத்தையுணர்த்திற்று. ஏ-தேற்றம். அளபெடைசெய்யுளோசைநிறைக்கவந்தது. (எகூ)

கலங்கின ரிரங்கினர் கலுழ்ந்தனர் புலர்ந்தனர் கவன்ற னருள
மலங்கினர் விடந்தனை யயின்றவ ரெனும்படி மயர்ந்த னலிசே
ருலங்கென வுலைந்தன ரொடுங்கினர் நடுங்கின ருரந்த னையிழந்
திலங்கெழின் முகம்பொலி விழந்தனர் பொருந்தமை யிகழ்ந்த னர்களே.

இ—ள்: கலங்கினர்—கலங்கி, இரங்கினர்—இரங்கி, கலுழ்ந்தனர்—அழுது, புலர்ந்தனர்—மேனிவாடி, கவன்றனர்—கவலையுற்று, உளம் மலங்கினர்—மனஞ்சோர்ந்து, விடம் தனை அயின்றவர் எனும்படி மயர்ந்து—நஞ்சையுண்டவரென்று (கண்டோர்) சொல்லுமாறு மயங்கி, அனலி சேர் உலங்கு என உலைந்தனர்— நெருப்பையணுகிய கொசுகுபோலலைந்து, ஒடுங்கினர்— ஒடுங்கி, நடுங்கினர்—நடுங்கி, உரம் தனை இழந்து— வலிமையையிழந்து, இலங்கு எழில் முகம் பொலிவு இழந்தனர்— விளங்குகின்ற அழகியமுகம் பொலிவுகுன்றப்பெற்று, பொரும் தமை இகழ்ந்தனர்கள்—போர்செய்த தம்மை நிந்தித்தார்கள் எ—று.

கலங்கினர் முதலிய முற்றுக்களை எச்சமாக்காது முற்றாய்க்கூறினுமாம். (அ0)

துஞ்சியெழு மன்னவர்க ளேழுலகு முன்னுதவு சுந்த ரிதரு
மஞ்சனரு ளோடுவிளை யாடுவது காண்டலும் வணங்கி யனையான்
செஞ்சர ணிரண்டினையு முச்சிகொடு மோயினர் சிறந்த லர்துணைக்
கஞ்சமல ரிற்பல நிறங்கொளரி யின்றொகை கவைஇய தெனவே.

இ—ள்: துஞ்சி எழும் அன்னவர்கள்—இறந்து (பின்) உயிர்பெற்றெழுந்த அத்தேவர்கள், எழு உலகும் முன் உதவு சுந்தரி தரும் மஞ்சன் அருளோடு விளையாடுவது காண்டலும்—எழுலகங்களையும் முன்னரேயீன்ற உமாதேவியார்பெற்றருளிய புதல்வராகிய முருகக்கடவுள் கருணையுடன் திருவிளையாடல்செய்வதைத் தரிசித்தவுடன், வணங்கி—பணிந்து, சிறந்து அலர் துணை கஞ்சமலரில் பல நிறம் கொள் அரியின் தொகை கவைஇயது என—சிறப்புற்றுமலர்ந்த இரண்டுதாமரைமலர்களிற் பலநிறங்களையுடைய வண்டுக்கூட்டங்கள் மொய்த்ததுபோல, அனையான் செம் சரண் இரண்டினையும் உச்சிகொ

டு மோயினர்—அக்கடவுளது சிவந்த இரண்டுபாதங்களையுஞ் சிரமேற்கொண்டு மோந்தார்கள் எ—று.

துஞ்சல்-நித்திரைசெய்தல். இறத்தலைத்துஞ்சலென்பது மங்கலவழக்கு. எழுலகு எனப்பொதுப்படக்கூறியதனால் மேலேழுலகங்களுங் கீழேழுலகங்களுங்கொள்க. மஞ்சன்-மைந்தன் என்பதன்போலி. கவைஇயது- கவைத்தது என்பதன்விகாரம். சொல்லிசையளபெடை. அடிகளுக்கு மலர்களும் தலைகளுக்கு வண்டுகளும் உருவொத்தலாலும், தேவர்கள் பாதத்தைமுகத்தற்கு வண்டுகள் மலரைமுகத்தல் தொழிலொத்தலாலும், இது வினையுமுருவும்பற்றிவந்தவுவமையணி. ஒருவமையிற் பலவொப்புமையுள்வாதலுமரபென்பதை 'விரவியும்வரூஉமரபினவென்ப' என்னுந்தொல்காப்பியச்சூத்திரத்தானுமுணர்க.

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம வாறுமுக வாதிநம சோதிநம தற்ப ரமதா
மெந்தைநம வென்றுமிளை யோய்நம குமாரநம வென்று தொழுதார்.

இ—ள்: கந்த நம—கந்தனே! வணக்கம், ஐந்து முகர் தந்த முருகேச நம—ஐந்து திருமுகங்களையுடைய சிவபிரான்பெற்றருளிய முருகேசனே! வணக்கம், கங்கை உமை தன் மைந்த நம—கங்காதேவியினதும் உமாதேவியினதும் குமாரரே! வணக்கம், பன்னிரு புயத்த நம—பன்னிரண்டு திருத்தோள்களையுடையவரே! வணக்கம், நீப மலர் மாலை புனையும் தந்தை நம—கடப்பமலர்மாலையையணிந்த பரமபிதாவே! வணக்கம், ஆறுமுக ஆதி நம—ஆறுதிருமுகங்களையுடைய முதற்கடவுளே! வணக்கம், சோதிநம—சோதிரூபரே! வணக்கம், தற்பரம் அது ஆம் எந்தை நம—பதிப்பொருளாகிய எங்கள்கடவுளே! வணக்கம், என்றும் இளையோய் நம—எஞ்ஞான்றும் இளமைப்பிராயத்தையுடையவரே! வணக்கம், குமார நம—குமாரக்கடவுளே! வணக்கம், என்று தொழுதார்— என்றுதுதித்தார்கள் எ—று. (அஉ)

பொருந்துதலை யன்புட னெழுந்தவர்க ளிவ்வகை புகழ்ந்து மனமே
லரந்தைகொடு மெய்நடு நடுங்குதலு மன்னதை யறிந்து குமரன்
வருந்தலிர் வருந்தலி ரெனக்கருணை செய்திடலு மற்றவர்கடாம்
பெருந்துயரு மச்சமு மகன்று தொழு தேயினிய பேசி னர்களால்.

இ—ள்: எழுந்தவர்கள்—உயிர்பெற்றெழுந்த தேவர்கள், பொருந்து தலை அன்புடன் இ வகை புகழ்ந்து—தம்மாட்டுப்பொருந்திய பேரன்புடனே இவ்வாறு புகழ்ந்து, மனமேல் அரந்தை கொடு மெய் நடுநடுங்குதலும்—மனத்திற்றுன்பங்கொண்டு சரீரம் நடுநடுங்கலும், குமரன் அன்னதை அறிந்து—குமாரக்கடவுள் அத்தன்மையைப்பார்த்து, வருந்தலிர் வருந்தலிர் என கருணை செய்திடலும்—வருந்தாதீர் வருந்தாதீரென்று கிருபைசெய்ய, அவர்கள்—அத்தேவர்கள், பெரும் துயரும் அச்சமும் அகன்று— பெருந்துன்பத்தையும் மனப்பயத்தையும் நீங்கி, இனிய பேசினர்கள்— இவ்வார்த்தைகளைக்கூறினார்கள் எ—று.

எழுந்தவர்கள் வணங்கியெழுந்தவர்களெனினுமாம். நடுநடுங்கு- இரட்டைக்கிளவி. வருந்தலிர் வருந்தலிர் என்னும் அடுக்கு அச்சந்தீர்த்தற்கண்வந்தது. (அங)

ஆயவமு தத்தினொடு நஞ்சளவி யுண்குநரை யவ்வி டமலாற்
றாயவமு தோவுயிர் தொலைக்குமது போலுனது தொல்ல ருளினு
லேயதிரு வெய்திட விருந்தனமுன் னோடம ரியற்றி யதனு
னீயெமை முடித்தியலை யன்னதவ றெம்முயிரை நீக்கி யதரோ.

இ—ள்: ஆய அமுதத்தினொடு நஞ்சு அளாவி உண்குநரை—(உண்ணுதற்கு) ஏற்ற அமிர்தத்தினுடனே(உண்ணத்தகாத)நஞ்சையுங்கலந்துட்கொள்ளுகின்றவர்களை, அவிடம் அலால் தூய அமுது உயிர்தொலைக்குமோ-அந்தநஞ்சேயன்றிச் சுத்தமான அமிர்தங்கொல்லுமா?(கொல்லாது), அது போல்—அதுபோல, உனது தொல் அருளினால் ஏய திருவெய்திட இருந்தனம் உன்னோடு அமர் இயற்றியதனால்— தேவரீரது பழைய கருணையினாற் பெருஞ்செல்வத்தைப்பெற எண்ணியிருந்தயாங்கள் தேவரீரோடு போர்செய்ததனால், நீ எமை முடித்தி அலை—தேவரீர் எம்மைக்கொன்றீரல்லீர், அன்ன தவறு எம் உயிரை நீக்கியது— அந்தக்குற்றமே எங்களுயிரைக்கொன்றது எ—று.

ஓகாரம் எதிர்மறை. பிரிநிலையேகாரங்கள்தொக்கன. மறுபொருளுவமையணி. வாணாள்வளரும்பொருட்டு அமுதுண்டுவருவார் ஒருகால் அதனோடுவிடத்தையும் அறியாமையாற்கலந்துண்ண அவ்விடம் அந்நாள்காறுமுண்ட அமுதின்பயனையும் உயிரையும் ஒருங்கேயழிக்குமாறுபோல, பண்டையவளத்தைப்பெறும்பொருட்டு நும்மைநேசித்த நாம் இற்றைஞான்று அந்நேசமிருந்தவாறிருக்கவே அறியாமையாற் பகைகொள்ள அப்பகை பண்டுவைத்தநேசத்தாலாம்பயனையும் உயிரையும் ஒருங்கேதொலைத்ததென்பதாம். (௮௬)

பண்டுபர மன்றனை யிகழ்ந்தவன் மகத்திலிடு பாக மதியா
முண்டபவ மின்னமு முடிந்தில வதன்றியு முனைப்பொ ருதுநேர்
கொண்டிகல் புரிந்தன மளப்பில்பவம் வந்தகும ரேச வெமைநீ
தண்டமுறை செய்தவை தொலைத்தனை யுளத்துடைய தண்ண ளியினால்.

இ—ள்: பண்டு பரமன் தனை இகழ்ந்தவன் மகத்தில் இடு பாகமது யாம் உண்ட பவம் இன்னமும் முடிந்தில— முற்காலத்திற் சிவபிரானை நிந்தித்த தக்கன் வேள்வியிற்கொடுத்த அவிப்பாகத்தை யாம் உண்டபாவம் இன்னும் நீங்கவில்லை, அது அன்றியும்—அஃதல்லாமலும், உனை நேர்கொண்டு பொருது இகல் புரிந்தனம்—தேவரீரைஎதிர்த்துப்போர்செய்து பகைத்தேம், அளப்பு இல் பவம் வந்த—(அதனாலும்) அளவிறந்தபாவங்கள்நேர்ந்தன, குமர ஈச—குமாரக்கடவுளே!, நீ—தேவரீர், உளத்து உடைய தண்ணளியினால் எமை முறை தண்டம் செய்து அவை தொலைத்தனை—திருவுள்ளத்திற்பொருந்திய கருணையினால் எங்களை முறைப்படி தண்டித்து அப்பாவங்களைத்தீர்த்தருளினீர் எ—று.

ஆதலி னெமக்கடிகள் செய்தவரு ளுக்குநிக ராற்று வதுதா
னேதுளது மற்றெமை யுனக்கடிய ராகவிவ ணீது மெனினு
மாதிபர மாகிய வுனக்கடியம் யாம்புதி தளிப்ப தெவனோ
தாதையர் பெறச்சிறுவர் தங்களை யவர்க்கருள்கை தக்க பரிசோ.

இ—ள்: ஆதலின்-ஆதலினால், எமக்கு அடிகள் செய்த அருளுக்கு நிகர் ஆற்றுவது ஏது உளது-எங்களுக்குத் தேவரீர்புரிந்தகருணைக்குக் கைம்மாறாகச்செய்யத்தக்கதியாதிருக்கின்றது(யாதுமில்லை?), எமை உனக்கு அடியர் ஆக இவண் ஈதும் எனினும்—எங்களைத் தேவரீருக்கு அடியவர்களாக இப்பொழுது ஒப்பிப்போமென்றாலும், யாம் ஆதிபரம் ஆகிய உனக்கு அடியம்—நாங்கள் ஆதிகடவுளாகியதேவரீருக்கு அடியேம், புதிது அளிப்பது எவன்-புதிதாகஒப்பிப்பது எப்படி?, சிறுவர்-புத்திரர்கள், தாதையர் பெற- தாய்தந்தையர் ஏற்றுக்கொள்ளும்படி, தங்களை அவர்க்கு அருள்கை தக்க பரிசோ-தங்களை அவர்களுக்குக்கொடுப்பது தகுந்தமுறையா? (அல்லவே) எ—று.

மற்று வினைமாற்று. தாதையர் என்பது ஏகசேடபதத் துவந்துவமாகநின்று தாய்தந்தையரைச்சுட்டும். அடிமைகளாகிய நாங்கள் ஆண்டவனாகிய நுமக்கு எங்களைமீட்டும்அடிமைகளாக ஒப்பிப்பது,மைந்தர்கள் தாய்தந்தையர்க்குத் தம்மை மீட்டும் புதல்வராக ஒப்பி

த்தல்போலாமென உபமான உபமேயதருமங்களை இரண்டுவாக்கியங்களால் ஒப்பித்துக்கூறலின், இது எடுத்துக்காட்டுவமையணி. (௮௬)

அன்னதெனி னுந்தெளிவில் பேதையடி யேம்பிழை யனைத்து முளமே
லுன்னலை பொறுத்தியென வேகுமர வேளவை யுணர்ந்து நமைநீர்
முன்னமொரு சேயென நினைந்துபொரு தீர்நமது மொய்ம்பு முயர்வு
மின்னுமுண ரும்படி தெரித்துமென வோருருவ மெய்தி னனரோ.

இ—ள்: அன்னது எனினும்-அவ்வாறாயினும், தெளிவு இல் பேதை அடியேம் பிழை அனைத்தும் உளமேல் உன்னலை பொறுத்தி-நல்லறிவில்லாத மூடபுத்தியினையுடைய அடியேங்களியற்றிய குற்றங்களெல்லாவற்றையுந் திருவுள்ளத்தில்நினையாது பொறுத்தருளுக, என—என்று வேண்டுதல்செய்ய, குமரவேள் அவை உணர்ந்து—குமாரக்கடவுள் அவற்றை அறிந்து, நீர் நமை ஒரு சேய் என நினைந்து முன்னம் பொருதீர்—நீவிர் எம்மை ஒருகுழந்தையென்றுநினைத்து முன்னே போர்செய்தீர்கள், நமது மொய்ம்பும் உயர்வும் இன்னும் உணரும்படி தெரித்தும் என—எமதுவலிமையையும் மகிமையையும் இன்னும் அறியும்படி காட்டுவோம் என்று, ஓர் உருவம் எய்தினன்—ஒரு வடிவத்தைக்கொண்டார் எ—று.

தேவரீர்செய்த உதவிக்கு நாஞ்செயற்பாலதாகியகைம்மாறு பிறிதின்றாயினுமென்பார் 'அன்னதெனினும்' எனவும், போரியற்றிக்காட்டியதேயன்றிப்பிறிதொருவகையானுங்காட்டுதுமென்பார் 'இன்னுமுணரும்படிதெரித்தும்' எனவும் கூறினார். (௮௭)

எண்டிசையு மீரெழு திறத்துலகு மெண்கிரியு மேழு கடலுந்
தெண்டிரையு நேமிவரை யும்பிறவும் வேறுதிரி பாகி யுளசீ
ரண்டநிரை யானவு மனைத்துயிரு மெப்பொருளு மாகி யயனும்
விண்டுமர னுஞ்செறிய வோருருவு கொண்டனன் விறற்கு மரனே.

இ—ள்: எண் திசையும்— எட்டுத்திக்குகளும், ஈரெழுதிறத்து உலகும்—பதினான்குவகைப்பட்ட உலகங்களும், எண் கிரியும்—எட்டுக்குலமலைகளும், எழு கடலும்—எழுசமுத்திரங்களும், தெள் திரையும்—தெளிவான அலைகளையுடைய புறக்கடலும், நேமிவரையும்— சக்கரவாளமலையும், பிறவும்—பிறபொருள்களும், வேறு திரிபு ஆகி உள சீர் அண்டநிரையும்—வெவ்வேறான மாறுபாடுகளையுடைய சிறந்த அண்டநிரைகளும், அனைத்து உயிரும் எ பொருளும் ஆகி—எல்லாவுயிர்ப்பொருள்களும் எல்லாவுயிரல்பொருள்களும் வடிவமாகி, அயனும் விண்டும் அரனும் செறிய—பிரமதேவரும் திருமாலும் சிவபிரானும் அமைய, ஓர் உருவு கொண்டனன்—ஒரு திருவுருவத்தைக்கொண்டார், விறல் குமரன்—வலிய குமாரக்கடவுள் எ—று.

இவ்வுருப் பாரமேச்சுரரூபமெனவும் விச்சுவரூபமெனவும் பெயர்பெறும். (௮௮)

மண்ணளவு பாதல மெலாஞ்சரண மாதிர வரைப்பு மிகுதோள்
விண்ணள வெலாமுடிகள் பேரொளி யெலாநயன மெய்நடு வெலாம்
பண்ணளவு வேதமணி வாயுணர்வெ லாஞ்செவிகள் பக்க மயன்மா
லெண்ணளவு சிந்தையுமை யைந்தொழி னல்கியரு ளீச னுயிரே.

இ—ள்: மண் அளவு பாதலம் எலாம் சரணம்—பூவுலகம் வரையுமுள்ள கீழுலகங்களெல்லாம் (அத்திருவுருவத்திற்கு)த்திருவடிகளாம், மாதிர வரைப்பு மிகு தோள்—திக்கினெல்லைகள் சிறந்தபுயங்களாய், விண் அளவு எலாம் முடிகள்—மேலுலகத்தினெல்லைமுழுதுஞ்சிரசுகளாம், பேர் ஒளி எலாம் நயனம்—பெரியமுச்சுடர்களுங் கண்களாம், நடு எலாம் மெய்— (மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும்) இடையிலுள்ளவெளிமுழு

துந் திருமேனியாம், பண் அளவு வேதம் அணி வாய்—இசைபொருந்திய வேதங்கள் அழகிய வாய்களாம், உணர்வு எலாம் செவிகள்—(பிரபஞ்சத்திலுள்ள) புத்திதத்துவமுழுவதுங் காதுகளாம், அயன் மால் பக்கம்—பிரமதேவருந் திருமாலும் (முறையே வலம் இடம் என்னும்) இருபக்கங்களாம், உமை எண் அளவு சிந்தை—உமாதேவியார்கருதுந்தன்மையமைந்த மனமாம், ஐந்தொழிலும் நல்கி அருள் ஈசன் உயிர்—பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்தருளுகின்ற சிவபிரான் ஆன்மாவாம் எ—று.

மணிவாய் எனச்சொல்வகுப்பினுமாம். முற்செய்யுளிற் சுருக்கிக்கூறியவடிவை இச்செய்யுளால் விரித்துணர்த்தினர். (அகூ)

ஆனதொரு பேருருவு கொண்டுகும ரேசனுற வண்டர் பதியு
மேனையரு மற்புதமி தற்புதமி தென்றுதொழு தெல்ல வருமாய்
வானமிசை நோக்கினர்கண் மெய்வடிவம் யாவையும் வனப்பு முணரார்
சானுவள வாவரிது கண்டனர் புகழ்ந்தினைய சாற்றி னர்களால்.

இ—ள்: குமர ஈசன்—முருகக்கடவுள், ஆனது ஒரு பேர் உருவு கொண்டு உற—அவ்வியல்பினதாகிய பெரிய ஒருதிருவுருவத்தைக்கொண்டுநிற்ப, அண்டர்பதியும் ஏனையரும் இது அற்புதம் இது அற்புதம் என்று தொழுது—இந்திரனும் மற்றையதேவர்களும் இது ஆச்சரியம் இது ஆச்சரியம் என்றுகூறிக் கைதொழுது, எல்லவரும் ஆய் வானமிசை நோக்கினர்கள்—அனைவரும் ஒருங்குகூடி ஆகாயத்தின்மேற்பார்த்து, மெய் வடிவம் யாவையும் வனப்பும் உணரார்—மெய்ம்மையாகிய அத்திருவுருவமுழுதையும் அதனழகையுங் காணப்பெறுதவர்களாய், சானு அளவா அரிது கண்டனர்—முழங்கால்வரையும் அரிதாகநோக்கி, புகழ்ந்து இனைய சாற்றினர்கள்-வியந்து இவ்வாசகங்களை விண்ணப்பஞ்செய்தார்கள் எ—று.

அற்புதத்திற்குக்காரணமாகிய வடிவத்தை அற்புதமென்றது காரணகாரிய உபசாரம். அடுக்குவியப்பின்கண்வந்தது. நோக்கினர்கள் உணரார் கண்டனர் என்பன முற்றெச்சங்கள். முன்னொருகாலும் இத்தகையவடிவத்தைத் தரிசித்திலராதலின் 'அற்புதமிதற்புதம்' எனவும், முழுதுந்தரிசிக்கவேண்டுமென்னுமாவலுடன் பார்வைசெலுத்தியவழியும் முழந்தாளின்மேலுள்ளவடிவத்தைத்தரிசித்திலரென்பார் 'சானுவளவாவரிதுகண்டனர்' எனவும் கூறினர். (கo)

### வேறு.

சேணலம் வந்த சோதிச் சிற்பர முதல்வ வெம்முன்
மாணல முறநீ கொண்ட வான்பெருங் கோலந் தன்னைக்
காணல மடியேங் காணக் காட்டிடல் வேண்டுமென்ன
நீணலங் கொண்டு நின்ற நெடுந்தகை யதனைக் கேளா.

இ—ள்: சேண் அலம்வந்த சோதி சிற்பர முதல்வ—ஆகாயமளைத்தும்பரவிய சோதியினையுடைய ஞானவடிவான முதல்வரே!, நீ மாண் நலம் உற எம்முன் கொண்ட வான் பெரும் கோலம் தன்னை—தேவரீர் பேரழகுபொருந்த எங்களுக்குமுன் கொண்டருளிய மிகப்பெரிய திருவுருவத்தை, அடியேம் காணலம்—சிறியேங்கள் காணுமாற்றலிலேம் (ஆதலின்), காண காட்டிடல்வேண்டும் என்ன—தரிசிக்கும்படி காட்டியருளுதல் வேண்டுமென்று முறையிட, நீள் நலம் கொண்டு நின்ற நெடுந்தகை—நெடிய நல்வடிவத்தைக் [விசுவரூபத்தை]கொண்டுநின்ற பெருந்தகைமையையுடையமுருகக்கடவுள், அதனை கேளா—அவ்வாசகத்தைக்கேட்டருளி எ—று.

அலம் வருதல்- அமையுமென்னும்படிபொருந்துதல்=பரவுதல். நெடுந்தகை-அன்மொழித்தொகை. பரஞ்சோதியென்பார் 'சேணலம்வந்தசோதி' என்றார். இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (கக)

கருணைசெய் தொளிகண் மிக்க கண்ணவர்க் கருளிச் செவ்வே
ளருணமார் பரிதிப் புத்தே ளனந்தகோ டிகள்சேர்ந் தென்னத்
தருணவில் வீசி நின்ற தனதுரு முற்றுங் காட்ட
விரணிய வரைக்க ணின்ற விந்திரன் முதலோர் கண்டார்.

இ—ள்: செவ்வேள்—குமாரக்கடவுள், அவர்க்கு கருணைசெய்து— அத்தேவர்களுக்குக் கிருபைசெய்து, ஒளிகள் மிக்க கண் அருளி— ஒளிமிகுந்த கண்ணைக்கொடுத்தருளி, அருணம் ஆர் பரிதிப்புத்தேள் அனந்தகோடிகள் சேர்ந்து என்ன தருணவில் வீசி நின்ற தனது உரு முற்றும் காட்ட—செங்கிறம்நிறையப்பெற்ற அநேககோடிசூரியர்கள் ஒருங்குகூடினாற்போல இளங்கிரணங்களைப்பரப்பிநின்ற தமது வடிவமுழுதையுங்காண்பிக்க, இரணிய வரைக்கண் நின்ற இந்திரன் முதலோர் கண்டார்—மேருமலையின் கணின்ற இந்திரன்முதலியதேவர்கள் (அதனைத்) தரிசித்தார்கள் எ—று.

அருளி காட்ட கண்டார் எனஇயையும். பௌதிகசோதியைமாத்திரம்பார்க்கவல்ல மாமிசநேத்திரத்தையொழித்துப் பரஞ்சோதியின்மேலுஞ்செல்லவல்ல ஞானநேத்திரத்தையருளினராதலின்'ஒளிகண்மிக்ககண்-அருளி' எனவும், உதயசூரியனென்பார்'அருணமார்பரிதிப்புத்தேள்' எனவும், தழைவுமிக்க ஒளியென்பார் 'தருணவில்' எனவும் கூறினர். (௬உ)

அடிமுதன் முடியின் காறு மறுமுக னுருவ மெல்லாங்
கடிதவ னருளா னோக்கிக் கணிப்பிலா வண்ட முற்று
முடிவறு முயிர்கள் யாவு மூவருந் தேவர் யாரும்
வடிவினி லிருப்பக் கண்டு வணங்கியே வழுத்திச் சொல்வார்.

இ—ள்: அறுமுகன் உருவம் எல்லாம்—ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுளின் திருவுருவமுழுதையும், அடிமுதல் முடியின் காறும்—பாதமுதற்கேசமீறாக, அவன் அருளால் கடிதில் நோக்கி—அந்தக்கடவுளதுகருணையினால்விரைவிற்பார்த்து, கணிப்பு இலா அண்டம் முற்றும் முடிவு அறும் உயிர்கள் யாவும் மூவரும் தேவர் யாரும் வடிவினில் இருப்ப கண்டு—அளவிடப்படாத அண்டங்களனைத்தும் அளவிறந்த உயிர்களனைத்தும் மும்மூர்த்திகளும் தேவரனைவரும் அத்திருவுருவத்திலமைந்திருப்பதுகண்டு, வணங்கி வழுத்தி சொல்வார்—நமஸ்கரித்துத்துதித்து (இவ்வாறு) கூறுவார்கள் எ-று.(௬௩)

அம்புவி முதலாம் பல்பே ரண்டமு மங்கங் குள்ள
வும்பரு முயிர்கள் யாவு முயிரலாப் பொருளு மாலுஞ்
செம்பது மத்தி னோனுஞ் சிவனொடுஞ் செறிதல் கண்டோ
மெம்பெரு மானின் மெய்யோ வகிலமு மிருப்ப தம்மா.

இ—ள்: எம்பெருமான்—எங்கள் கடவுளே!, அம்புவி முதல் ஆம் பல் பேர் அண்டமும்-அழகிய பிருதுவியண்டமுதலாகிய பலவகைப்பட்ட பெரிய அண்டங்களும், அங்கு அங்கு உள்ள உம்பரும்—அவ்வவ்வண்டங்களில் வசிக்கின்ற தேவர்களும், உயிர்கள் யாவும்—உயிருடைப்பொருள்களனைத்தும், உயிர் அலா பொருளும்—உயிரில்லாப்பொருள்களனைத்தும், மாலும்—திருமாலும், செம் பதுமத்தினோனும்—செந்தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரும், சிவனொடும் செறிதல கண்டோம்—சிவபிரானுடன் அமைந்திருப்பதுகண்டோம் (ஆதலின்), அகிலமும் இருப்பது நின் மெய்யோ—எவ்விடங்களினும் இருப்பனவெல்லாந் தேவரீரது திருவுருவமா? எ—று.

புவி-ஆகுபெயர். அங்கங்கென்னுமடுக்குத் தொறுப்பொருளது. அகிலம்-எஞ்சுதலற்றது. அதிலுள்ள உம்மை-முற்று. அம்மா-வியப்பின்கண்வந்தது. (௬௪)

அறிகில மிந்நாள் காறு மகிலமு நீயே யாகி
யுறைதரு தன்மை நீவந் துணர்த்தலி னுணர்ந்தா மன்றே
பிறவொரு பொருளுங் காணேம் பெருமநின் வடிவ மன்றிச்
சிறியம்யா முனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்.

இ—ள்: பெரும—பெருமானே!, அகிலமும் நீயே ஆகி உறைதரு தன்மை-எல்லாப்பொருளுந்தேவரீரேயாயிருக்குந்தன்மையை, இ நாள் காறும் அறிகிலம்-இந்நாள்வரையும் அறிந்திலோம், நீ வந்து உணர்த்தலின் உணர்ந்தாம்—தேவரீர் வந்து அறிவித்தலினலறியப்பெற்றேம், நின் வடிவம் அன்றி பிற ஒரு பொருளும் காணேம்—தேவரீரது திருவுருவத்தையேயன்றி (அதனின்வேறுகிய) ஒருபொருளையுங்காணுகின்றிலோம், சிறியம் யாம்—சிறியேமாகிய யாங்கள், உனது தோற்றம் தெரிந்திட வல்லமோ—(பெரியோராகிய) தேவரீரது திருவுருவத்தை (அருளின்றி)உணர வன்மையுடையேமா? (வன்மையில்லேம்) எ—று.

பொருளுமென்பதில் உம்மை இழிவுசிறப்பு. (கரு)

முண்டக னொருவன் றுஞ்ச முராரிபே ருருவாய் நேமிக்
கண்டுயி லகந்தை நீங்கக் கண்ணுதற் பகவ னெல்லா
வண்டமு மணிப்பூ ணார மாகவே யாங்கோர் மேனி
கொண்டன னென்னுந் தன்மை குமரநின் வடிவிற் கண்டேம்.

இ—ள்: முண்டகன் ஒருவன் துஞ்ச—ஒருபிரமா இறக்க, ஆங்கு—அப்பிரளயகாலத்தில், முராரி பேர் உரு ஆய் நேமிக்கண் துயில் அகந்தை நீங்க—திருமால் பெரியவடிவங்கொண்டு பாற்கடலில் அறிதுயில்செய்கின்ற அகங்காரம்நீங்கும்பொருட்டு, கண் நுதல் பகவன்—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான், எல்லா அண்டமும் மணி பூண் ஆரம் ஆக—எல்லா அண்டங்களும் இரத்தினமழுத்தப்பெற்ற ஆரமென்னுமணியாக, ஓர் மேனி கொண்டனன் என்னும் தன்மை— ஒரு திருவுருவத்தைக்கொண்டாரென்று சொல்லுந்தன்மையை, குமர—முருகக்கடவுளே!, நின் வடிவில் கண்டேம்—தேவரீரது திருவுருவத்திற்றரிசித்தோம் எ—று.

மணி அழகெனினுமாம். அணியெனச்சொல்வருத்து அங்ஙனம் பொருள்கூறினுமாம். பூணாரம்=ஆரப்பூண். ஆங்கென்னுமிடைச்சொல் ஈண்டுக் காலத்தைச்சுட்டிற்று. (கசு)

நாரணன் மலரோன் பன்ன ணாடவுந் தெரிவின் றாகிப்
பேரழ லுருவாய் நின்ற பிரான்றிரு வடிவே போலுன்
சீருரு வுற்ற தம்மா தெளிகில ரவரு மெந்தை
யாரரு ளெய்தி னம்போ லடிமுடி தெரிந்தி டாரோ.

இ—ள்: நாரணன் மலரோன் பல் நாள் நாடவும் தெரிவு இன்று ஆகி பேர் அழல் உரு ஆய் நின்ற பிரான் திருவடிவே போல்—திருமாலும் பிரமதேவரும் பலகாலமாகத்தேடியவழியும் அறிதற்கரிதாகிப் பெரிய சோதிரூபமாய்நின்ற சிவபிரானது திருவுருவத்தையேபோல, உன் சீர் உரு உற்றது—உமது சிறந்தவடிவம் அமைந்தது, அவரும் தெளிகிலர்—அந்தப் பிரமவிஷ்ணுக்களும் (அச்சோதிரூபத்தினடிமுடிகளைக்) கண்டிலார், எந்தை ஆர் அருள் எய்தின்-எம் பரமபிதாவாகிய அச்சிவபிரானது நிறைந்தகருணைகிடைத்தால், நம் போல் அடி முடி தெரிந்திடாரோ—எங்களைப்போல அடியையுமுடியையுங் காணமாட்டார்களா? (காண்பார்களே) எ—று.

உம்மைகள்-உயர்வுசிறப்பு. எ-பிரிநிலை. தேவரீரது திருவுருவத்தை முற்றுய்க் காணுமாற்றலிச்சேம் அருள்பெற்றுக்கண்டவாறுபோலச் [illegible]

ண்டுணரும் ஆற்றலில்லாத பிரமவிஷ்ணுக்களும் அவரருள்பெறிற் காண்பார்களென்றன ரென்க. சிவபிரான்கொண்ட சோதிரூபத்தைப் பிரமவிஷ்ணுக்கள்காணுமையால் அதற்குப்பெருமையும் முருகவேள்கொண்டபாரமேச்சுரரூபத்தைத் தேவர்கண்டமையால் அதற்குச்சிறுமையுஞ் சார்த்திக்கூறலாகாதென்பது இதனுற்பெறப்பட்டது. (௬௭)

அரியொடு கமலத் தேவு மாடல்செய் தகிலந் தன்னே
டொருவரை யொருவர் றுங்கி யுந்தியான் முகத்தா னல்கி
யிருவரு மிகலு மெல்லை யெடுத்தபே ருருநீ கொண்ட
திருவுரு விதனுக் காற்றச் சிறியன போலு மன்றே.

இ—ள்: அரியொடு கமலத்தேவும் ஆடல்செய்து— திருமாலும் பிரமதேவரும் போர்புரிந்து, அகிலம் தன்னேடு ஒருவரை ஒருவர் துங்கி—உலகத்துடன் ஒருவரையொருவர் விழுங்கி, உந்தியால் முகத்தால் நல்கி— உந்திக்கமலத்தாலும் முகத்தாலுந் தோற்றுவித்து, இகலும் எல்லை—மாறுபட்டபொழுது, இருவரும் எடுத்த பேர் உரு- அப்பிரமவிஷ்ணுக்களிருவருங்கொண்ட பெரியதிருவுருவங்கள், நீ கொண்ட திருவுரு இதனுக்கு ஆற்ற சிறியன-தேவரீர்கொண்ட இத்திருவுருவத்திற்கு மிகவுஞ் சிறியனவேயாம் எ—று.

திருமால் உந்தியாலும் பிரமதேவர் முகத்தாலும் நல்கினரென்க. முற்செய்யுளிற் சிவபிரான்கொண்டசோதிவடிவமொன்றையே ஒக்குமென்றதற்கேற்ப, இச்செய்யுளில், ஏனைய பிரமவிஷ்ணுக்கள்கொண்டவடிவங்கள் ஒவ்வாமைகூறப்பட்டது. (௬௮)

ஆகையா லெம்பி ரானீ யருவுரு வாகி நின்ற
வேகநா யகனே யாகு மெமதுமா தவத்தா லெங்கள்
சோகமா னவற்றை நீக்கிச் சூர்முதற் றடிந்தே யெம்மை
நாகமே லிருத்து மாற்ற னண்ணினை குமர னேபோல்.

இ—ள்: ஆகையால்—ஆதலினுல், எம்பிரான்—எங்கள்தலைவரே!, நீ—தேவரீர், அரு உரு ஆகி நின்ற ஏகநாயகனே ஆகும்— அருவமாகியும் உருவமாகியும் (அருவுருவமாகியும்)நின்ற முதற்கடவுளேயாம், சூர்முதல் தடிந்து எங்கள் சோகம் ஆனவற்றை நீக்கி எம்மை நாகமேல் இருத்தும் ஆற்றல்-சூரபன்மனுகியமுதல்வனைச் சங்கரித்து எங்கள் துயரத்தைநீக்கி எங்களைச் சுவர்க்கலோகத்திற்குடியேற்றுமாறு, எமது மாதவத்தால்—யாங்களியற்றிய பெரியதவத்தினுல், குமரன்போல் நண்ணினை—குழந்தைபோலவதரித்தருளினீர் எ—று.

மாதவத்தால் நண்ணினைஇருத்துமாற்றல் நண்ணினை எனத்தனித்தனி இயையும். நீ ஆகும் என்பது இடவழுவமைதி. ஆகுமென்பதை அசையென்பாருமுளர். முன்னைய ஏகாரம் தேற்றம். அருவுருவாகிநிற்றல் முன்னர் விரித்துரைக்கப்பட்டது. (௬௯)

எவ்வுரு வினுக்கு மாங்கோ ரிடனதா யுற்ற வுன்றன்
செவ்வுரு வதனைக் கண்டு சிறந்தன மறம்பா வத்தி
னவ்வுரு வத்தின் றுப்பு மகலுது மின்னும் யாங்கள்
வெவ்வுரு வத்திற் செல்லேம் வீடுபே றடைது மன்றே.

இ—ள்: எ உருவினுக்கும் ஓர் இடனது ஆய் உற்ற உன் தன் செவ் உரு அதனை கண்டு சிறந்தனம்—எல்லாவடிவங்களுக்கும் ஓராதாரமாயிருக்கின்ற தேவரீரது செம்மையாகிய திருவுருவத்தைத்தரிசித்துச்சிறப்படைந்தேம், அறம் பாவத்தின் அ உருவத்தின் துப்பும் அகலுதும்—புண்ணியமும் பாவமுமாகிய அந்தவடிவங்களின் வலிமையையும் நீங்குகின்றேம் (ஆதலின்), இன்னும் யாங்கள் வெவ் உருவத்தில் செல்லேம்— மேலும் யா

ங்கள் கொடிய பிறவியிற்புகமாட்டோம், வீடுபேறு அடைதும்— முத்திப்பேற்றை அடைவேம் எ—று.

இடன்- இறுதிப்போலி. முத்திக்கு இருவினைகளுந்தடையாதல் முன்னர்விளக்கப்பட்டது. காலந்தோறுமீட்டித் தொகுக்கப்பட்ட தொகுதியென்பதுதோன்ற 'அறம்பாவத்தினவ்வுருவம்' என்முர். (௧௦௦)

இனையன வழுத்தித் கூறி யிலங்கெழிற் குமர மூர்த்தி
தனதுபே ருருவை நோக்கிச் சதமகன் முதலா வுள்ளோர்
தினகரன் மலர்ச்சி கண்ட சில்லுணர் வுயிர்க ளென்ன
மனமிக வெருவக் கண்க ளலமர மயங்கிச் சொல்வார்.

இ—ள்: சதமகன் முதல் ஆ உள்ளோர்— இந்திரன்முதலாகவுள்ள தேவர்கள், இனையன கூறி வழுத்தி—இன்னோரன்னவாசகங்களைக்கூறித் துதித்து, இலங்கு எழில் குமரமூர்த்தி தனது பேர் உருவை நோக்கி—விளங்குகின்ற அழகினையுடைய குமரக்கடவுளது பெரிய திருவுருவத்தைப்பார்த்து, தினகரன் மலர்ச்சி கண்ட சில் உணர்வு உயிர்கள் என்ன மிக மனம் வெருவ- சூரியனது பிரகாசத்தைநோக்கிய அற்பவுணர்ச்சியையுடையபிராணிகளைப்போல மிகவும் மனம்பயப்பட, கண்கள் அலமர—கண்கள் சுழல, மயங்கி சொல்வார்—திகைத்து இவ்வாறுவிண்ணப்பஞ்செய்வார்கள் எ—று.

தினகரன்- நாளைச்செய்பவன். சூரியோதயமே நாளின் ஆதியந்தங்கட்செல்லையாதலின் இப்பெயர்வழங்கிற்று. சில்லுணர்வுயிர்கள் என்றது புழுமுதலியவெயில்பொருச்சீவராசிகளை. (௧௦௧)

எல்லையி லொளிபெற் றன்று லெந்தைநின் னுருவ மின்னு
மொல்லுவ தன்றுற் காண வொளியிழந் துலைந்த கண்க
ளல்லதும் பெருமை நோக்கி யஞ்சுது மடிய முய்யத்
தொல்லையி னுருவங் கொண்டு தோன்றியே யளித்தி யென்றார்.

இ—ள்: எந்தை— எங்கள்கடவுளே!, நின் உருவம் எல்லை இல் ஒளி பெற்றன்று—தேவரீரது திருவுருவம் அளவிறந்த ஒளியைப்பெற்றது (ஆதலினுல்), இன்னும் காண ஒல்லுவது அன்று— மேலுஞ் (சிறிதுபொழுது) பார்த்துநிற்கத்தக்கதன்று, கண்கள் ஒளி இழந்து உலைந்த— எங்கள் கண்கள் ஒளியையிழந்து உலைவுபெற்றன, அல்லதும்— அன்றியும், பெருமை நோக்கி அஞ்சுதும்— வடிவப்பெருமையைப்பார்த்துப் பயப்படுகின்றேம் (ஆதலின்), அடியம் உய்ய—அடியேங்களுய்யும்படி, தொல்லையின் உருவம் கொண்டு தோன்றி அளித்தி என்றார்— பழையவடிவத்தைக்கொண்டுதோற்றிக் காத்தருள்க என்றுவேண்டினார்கள் எ—று.

பெற்றன்று- பெறு என்னும்பகுதி தன்னொற்றிரட்டி இறந்தகாலங்காட்டி, அன்சாரியையும் றுகரவிகுதியும்பெற்றுவந்ததெரிநிலை ஒன்றன்பால்வினைமுற்று. (௧௦௨)

என்றிவை புகன்று வேண்ட வெம்பிரா னருளால் வான்போய்
நின்றபே ருருவந் தன்னை நீத்தறு முகத்தோ னாகித்
தொன்றுள வடிவத் தோடு தோன்றலுந் தொழுது போற்றிக்
குன்றிருஞ் சிறைக ளீர்ந்த கொற்றவன் கூற லுற்றான்.

இ—ள்: என்று இவை புகன்று வேண்ட— என்று இவ்வாசகங்களைக்கூறிப் பிரார்த்திக்க, எம் பிரான்—எங்கள் தலைவராகிய குமரக்கடவுள், அருளால்— கிருபையோடு, வான் போய் நின்ற பேர் உருவம் தன்னை நீத்து—ஆகாயத்தின்மேலுயர்ந்துநின்ற பெரிய வடிவத்தைவிடுத்து, அறுமுகத்தோன் ஆகி—ஆறு திருமுகங்களையுடையவராய், தொ

ன்று உள வடிவத்தோடு தோன்றலும்—முன்னைய திருவுருவத்துடனெழுந்தருளுதலும், குன்று இரும் சிறைகள் ஈர்ந்த கொற்றவன்—மலைகளின் பெரிய சிறகுகளையரிந்த இந்திரன், தொழுது போற்றி கூறலுற்ருன்—வணங்கித்துதித்து இவ்வாறு சொல்லத்தொடங்கிஞன் எ—று. (௧௦௩)

தொன்னிலை தவாது வைகுஞ் சூரனேமுதலா வுள்ள
வொன்னல ருயிரை மாற்றி யும்பரும் யானும் பாங்கர்
மன்னிநின் றேவல் செய்ய வானுயர் துறக்க் நண்ணி
யென்னர சியற்றி யெந்தா யிருத்தியென் குறையீ தென்ருன்.

இ—ள்: எந்தாய்—எங்கள்தலைவரே!, தொல் நிலை தவாது வைகும் சூரனே முதலா உள்ள ஒன்னலர் உயிரை மாற்றி—பழையநிலையிற் குறைவுபடாது வாழ்ந்திருக்கின்ற சூரபன்மனே முதலாகவுள்ள பகைவர்களது உயிரையொழித்து, உம்பரும் யானும் பாங்கர் மன்னி நின்று ஏவல் செய்ய—தேவர்களும் யானும்பக்கத்திலமைந்துநின்று குற்றேவல்களைச்செய்ய, வான் உயர் துறக்கம் நண்ணி—ஆகாயத்திலுயர்ந்துள்ளதாகிய சுவர்க்கலோகத்தையடைந்து, என் அரசு இயற்றி இருத்தி—எனதுஅரசாட்சியைச்செய்திருப்பீராக, என் குறை ஈது என்ருன்—எனதுவேண்டுகோள் இதுவென்றுகூறிஞன் எ—று.

சூரனே என்பதில் ஏ-உயர்வுசிறப்பு. பாங்கர் பாங்கு என்பதனிறுதிப்போலி.

இகமொடு பரமும் வீடு மேத்தினர்க் குலப்பு ருமை
லகனம ரருளா னல்கு மறுமுகத் தவற்குத் தன்சீர்
மகபதி யளிப்பான் சொற்ற வாசகஞ் சுடரொன் றங்கிப்
பகவனுக் கொருவ னல்கப் பராவிய போலு மாதோ.

இ—ள்: எத்தினர்க்கு— தம்மைத்துதித்த அன்பர்களுக்கு, அகன் அமர் அருளால்—தமது திருவுள்ளத்திற்பொருந்திய கருணையிஞல், இகமொடு பரமும் வீடும்—இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் முத்தியையும், உலப்பு உருமல் நல்கும் அறுமுகத்தவற்கு—குறையாதுகொடுக்கின்ற ஆறுதிருவதனங்களையுடைய குமாரக்கடவுளுக்கு, மகபதி—இந்திரன், தன் சீர் அளிப்பான் சொற்ற வாசகம்—தனது அரசியற்சிறப்பைக்கொடுக்கும்படி கூறிய வசனம், ஒருவன் அங்கிப்பகவனுக்கு சுடர் ஒன்று நல்க பராவிய போலும்—ஒரு புருடன் அக்கினிதேவனுக்கு ஒரு விளக்கைக்கொடுத்தற்குவேண்டியதன்மையைப்போலும் எ—று.

சுடர்முழுதையுந் தன்னதாகவுடைய அக்கினிதேவனுக்கு ஒருவன் ஓர்சுடரையுதவுமாறு வாக்களித்தலால் முன்னையின் மிக்கசிறப்புருமைபோல, உலகமனைத்தையும் ஆளும்பரமபதியாகிய குமாரக்கடவுளுக்கும் இந்திரன் தனதுலகராச்சியத்தையேற்றுக்கொள்ளுமாறு வாக்களித்தலால் முன்னையின் மிக்கதொருசிறப்புவாராதென்பதுகருத்து உலப்புருமை-தவருதுகொடுத்தல். அகன்- இறுதிப்போலி. பராவிய-பரவியது என்பதன் விகாரம். (௧௦௫)

வானவர் கோனை நோக்கி வறிதுற நகைத்துச் செவ்வே
ளீமக் களித்த தொல்சீர் நினக்குநா மளித்து நீவிர்
சேனைக ளாக நாமே சேனையந் தலைவ ஞகித்
தானவர் கிளையை யெல்லாம் வீட்டுதுக் தளரே லென்ருன்.

இ—ள்: செவ்வேள்—குமாரக்கடவுள், வானவர் கோனை நோக்கி வறிது உற நகைத்து—தேவேந்திரனைப்பார்த்துக் குறுநகைசெய்து, நீ நமக்கு அளித்த தொல் சீர் நி

னக்கு நாம் அளித்தும்-(இந்திரனே) நீ எமக்குத்தந்த பழைய சிறப்பை உனக்கு யாம் மீட்டுந்தந்தோம், நீவிர் சேனைகள் ஆக-நீங்கள் சேனைகளாயமைய, நாமே சேனையந்தலைவன் ஆகி—யாமே சேனைத்தலைவராகி, தானவர் கிளையை எல்லாம் வீட்டுதும்—அசுரர்கூட்டமெல்லாவற்றையுஞ் சங்கரிப்போம், தளரேல் என்றான்—வருந்தற்கவென்று கூறியருளினார் எ—று.

வறிது சண்டுச் சிறுமை. "வறிது சிறிதாகும்" என்றாராசிரியர்தொல்காப்பியனாரும். (௧0௬)

கோடலங் கண்ணி வேய்ந்த குமரவே ளினைய கூற
வாடியல் கடவுள் வெள்ளை யடற்களிற் றண்ணல் கேளா
வீடுற வவுண ரெல்லாம் வியன்முடி திருவி னோடுஞ்
சூடின னென்னப் போற்றிச் சுரரொடு மகிழ்ச்சி கொண்டான்.

இ—ள்: கோடல் அம் கண்ணி வேய்ந்த குமரவேள் இனைய கூற—காந்தண்மலர்மாலையையணிந்த குமாரக்கடவுள் இவ்வாசகங்களைக்கூறியருள, ஆடு இயல் கடவுள் அடல் வெள்ளைக்களிற்று அண்ணல் கேளா-(எதிர்ந்தாரை)அழிக்குந்தன்மைபொருந்திய தெய்வீகமாகிய வலிய ஐராவதயானையை ஊர்தியாகவுடைய இந்திரன் கேட்டு, சுரரொடு போற்றி—தேவர்களுடன் துதித்து, அவுணர் எல்லாம் வீடு உற திருவினோடும் வியன்முடி சூடினன் என்ன மகிழ்ச்சி கொண்டான்— அசுரர்யாவருமிறக்கச் செல்வத்துடன் பெரியமுடியைச் சூடியவன்போலப் பேருவகையுற்றான் எ—று.

முருகக்கடவுள்அருளிச்செய்தவாறு முடிப்பரெனத்துணிந்தனனாதலின் 'வியன்முடிசூடினனென்னமகிழ்ச்சிகொண்டான்' என்றார். (௧0௭)

அறுமுகத் தேவை நோக்கி யமரர்கோ னிந்த வண்டத்
துறைதரு வரைக ணேமி யுலகுயிர் பிறவு நின்னால்
முறைபிறழ்ந் தனவா லிந்நாண் முன்புபோ லவற்றை யெல்லா
நிறுவுதி யென்ன லோடு நகைத்திவை நிகழ்த்த லுற்றான்.

இ—ள்: அமரர்கோன்—தேவேந்திரன், அறுமுக தேவை நோக்கி— ஆறுதிருமுகங்களையுடைய குமாரக்கடவுளைப்பார்த்தருளி, இந்த அண்டத்து உறைதரு வரைகள்-இவ்வண்டத்திற் பொருந்திய மலைகளும், நேமி—கடல்களும், உலகு—உலகங்களும், உயிர்—ஆன்மாக்களும், பிறவும்—மற்றைய பொருள்களும், இ நாள்—இத்தினத்தில், நின்னால் முறை பிறழ்ந்தன—தேவரீரது திருவிளையாட்டினால் நிரைதவறின (ஆதலின்), அவற்றை எல்லாம் முன்புபோல் நிறுவுதி என்னலோடும்— அவைகளையெல்லாம் முன்போல நிறுத்தியருளுகவென்று கூறுதலும், நகைத்து இவை நிகழ்த்தல் உற்றான்-சிரித்து இவ்வாசகங்களைக் கூறியருளுவார் எ—று.

நகைத்தது, பண்டுபோனிறுவுதல் தமக்கு எளிதாதலின். (௧0௮)

இன்னதோ ரண்டந் தன்னி லெம்மில்வே றுற்ற வெல்லாந்
தொன்னெறி யாக வென்றோர் தூமொழி குமரன் கூற
முன்னுறு பெற்றித் தான முறையிறந் திருந்த தெல்லா
மந்நிலை யெவரு நோக்கி யற்புத மடைந்து நின்றார்.

இ—ள்: இன்னது ஓர் அண்டம் தன்னில் எம்மில் வேறு உற்ற எல்லாம் தொல் நெறி ஆக என்று—இந்த அண்டத்தில் எம்மால் வேறுபாடெய்திய எல்லாப்பொருள்களும் முன்னைய இயல்பினவாகுகவென்று, ஓர் தூ மொழி குமரன் கூற- தூய்மையாகிய ஒருவாசகத்தை முருகக்கடவுள் திருவாய்மலர்ந்தருள, முறை இறந்து இருந்தது எல்லாம்

முன் உறு பெற்றித்து ஆன—நிரைதவறியிருந்தபொருள்களெல்லாம் முன்னிருந்த இயல்பையுடையனவாயின, எவரும் அநிலைநோக்கி அற்புதம் அடைந்து நின்றார்— யாவரும் அத்தன்மையைப்பார்த்து ஆச்சரியமுற்றுநின்றார்கள் எ—று.

உற்ற-வினையாலணையும்பெயர்; பெயரெச்சமெனினுமாம். பெற்றித்தான, இருந்ததெல்லாம்-ஒருமைபன்மைமயக்கங்கள். எவரும்-என்றது தேவரைமாத்திரமன்று, அசுரர் மானுடர் முதலியோரையுமென்க. (௧௦௯)

வேறு.

நிற்கு மெல்லையி னிலத்திடை யாகிப்
பொற்கெ னத்திகழ் பொருப்பிடை மேவுஞ்
சிற்குணக் குரிசில் சேவடி தாழூஉச்
சொற்க நாடுள சுரேச னுரைப்பான்.

இ—ள்: நிற்கும் எல்லையில்—ஆச்சரியமுற்று நிற்கும்பொழுது, சொற்க நாடு உள சுர ஈசன்—சுவர்க்கலோகத்தை தன்னதாகவுடைய தேவேந்திரன், நிலத்திடை ஆகி பொற்கு என திகழ் பொருப்பு இடை மேவும் சித் குண குரிசில் சே அடி தாழூ—பூவுலகத்தினடுவணதாகிப் பொன்னிறமாய்விளங்குகின்ற மேருமலையினிற்கின்ற ஞானக்குணத்தினையுடைய குமாரக்கடவுளது சிவந்த பாதங்களைவணங்கி, உரைப்பான்— இவ்வாறு கூறுவான் எ—று.

பொற்கெனத்திகழ்தல்-பொன்னுக்குள்ள பிரகாசம்போலப்பிரகாசித்தல். தாழூஉ என்பதில் அளபெடை செய்யுளோசைகுன்றுத விடத்ததாதலால் இன்னிசைக்குவந்ததென்க. இதனைச்சொல்லுடன்பிறந்த இயற்கையளபெடையென்றுங்கூறுவர்சிலர். ஸ்வர்க்கம் என்னும்வடமொழித்திரிபான சொர்க்கம் என்பது எதுகைத்தொடையமைதிநோக்கி ரகரந்திரிந்து ககரம் நீங்கிச்சொற்கம் என நின்றது. சுர-ஈசன் = சுரேசன்; குணசந்தி. (௧௧௦)

ஆண்ட கைப்பகவ வாரண மெய்ந்நூல்
பூண்ட நின்னடிகள் பூசனை யாற்ற
வேண்டு கின்றும்வினை யேமது செய்ய
வீண்டு நின்னருளை யீகுதி யென்றான்.

இ—ள்: ஆண் தகை பகவ-ஆண்டகைமையினையுடைய கடவுளே!, வினையேம்-பாவியேம், மெய் ஆரண நூல் பூண்ட நின் அடிகள் பூசனை ஆற்ற வேண்டுகின்றும்-உண்மையாகிய வேதநூல்களை (ஆபரணமாகத்)தரித்துள்ள தேவரீரது திருவடிகளைப் பூசைசெய்யவிரும்புகின்றேம், அது செய்ய—அதனையியற்றுமாறு, ஈண்டு நின் அருளை ஈகுதி என்றான்-இப்பொழுது தேவரீரதுகருணையைச்செய்தருளவேண்டுமென்று வேண்டினான் எ-று.

ஆரணநூல்பூண்ட என்பதற்கு வேதநூலினாற்சுமக்கப்பெற்ற என்றும் அந்நூலடைந்து துதிக்கின்ற என்றும் பொருள்கூறினுமிழுக்காது. கடவுள் வேதத்தைநூபுரமாகவும் பாதுகையாகவுமணிந்தவரென்பது நூற்கொள்கை. (௧௧௧)

என்ன லுங்குக னிசைந்து நடந்தே
பொன்னி னுயர் பொருப்பினை நீங்கித்
தன்ன தொண்கயிலை சார்ந்திடு ஞாங்கர்
மன்னி நின்றதொரு மால்வரை புக்கான்.

இ—ள்: என்னலும்—என்று (இந்திரன்) பிரார்த்திக்க, குகன் இசைந்து நடந்து—சுப்பிரமணியக்கடவுள் (அதற்கு) உடன்பட்டுச்சென்று, பொன்னினுல் உயர் பொ

ருப்பினை நீங்கி—பொன்மயமாக உயர்ந்துள்ள மேருமலையைநீங்கி, தன்னது ஒண் கயிலை சார்ந்திடும் ஞாங்கர் மன்னி நின்றது ஒரு மால் வரை புக்கான்- தனது ஒளிபொருந்தியதிருக்கைலாசகிரியின்பக்கத்திற்பொருந்திநிற்கின்ற ஒருபெரியமலையிற்சென்றருளினான் எ-று.

தன்னது எதுகைநோக்கிவந்தவிரித்தல். கயிலைசார்ந்திடுஞாங்கர்-கயிலையைச் சேர்ந்திருக்கும் அருகிடம். (௧௧௨)

குன்றி ருஞ்சிறை குறைத்தவ னேனோ
ரொன்றி யேதொழு துவப்புள மெய்தி
யென்றுநல் லிளைய னாகிய வெங்கோன்
பின்றொ டர்ந்தனர் பிறங்கலில் வந்தார்.

இ—ள்: குன்று இரும் சிறை குறைத்தவன் ஏனோர் ஒன்றி தொழுது—மலைகளினது பெரியசிறகையரிந்த இந்திரனும் பிறரும் ஒருங்குகூடிக் கைதொழுது, உளம் உவப்பு எய்தி—மனச்சந்தோஷங்கொண்டு, என்றும் நல் இளையன் ஆகிய எம் கோன் பின் தொடர்ந்தனர்—எப்போதும் நல்ல இளமைப்பிராயத்தையுடையராகிய சுப்பிரமணியக்கடவுளின் பின்தொடர்ந்துநடந்து, பிறங்கலில் வந்தார்—அம்மலையில்வந்தார்கள் எ—று.

எங்கோன்-எங்கள்தலைவன். என்றும் பாலியவடிவினராய், குமாரக்கடவுள் முருகக்கடவுள் என்னுந்திருநாமங்களைப்பெற்றமையின் ‘என்றுநல்லிளையன்’ என்றார். ()

சூரல் பம்புதுறு கன்முழை கொண்ட
சாரல் வெற்பினிடை சண்முகன் மேவ
வாரும் விண்ணவ ரவன்கழ றன்னைச்
சீரி தர்ச்சனை செயற்கு முயன்றார்.

இ—ள்: சண்முகன்—சுப்பிரமணியக்கடவுள், சூரல் பம்பு துறுகல் முழை கொண்ட சாரல் வெற்பின் இடை மேவ-பிரம்புகள்அடர்ந்துள்ள துறுகல்லாலாகிய முழைகளையுடைய சாரல்சூழ்ந்த அம்மலையினிடத்துச்சென்றருள, விண்ணவர் ஆரும்—(அதுகண்ட) தேவரனைவரும், அவன் கழல் தன்னை சீரிது அர்ச்சனை செயற்கு முயன்றார்— அக்கடவுளதுபாதங்களைச் செவ்வனே பூசைசெய்ய முயன்றார்கள் எ—று.

துறுகல்-ஓர்சாதிக்கல். சூரல்பம்புவெற்பு, துறுகன்முழைகொண்டவெற்பு, சாரல்வெற்பு எனத் தனித்தனியியையும். (௧௧௪)

அந்த வேலையம ரர்க்கிறை தங்கண்
முந்து கம்மியனை முன்னுற வன்னான்
வந்து கைதொழலு மந்திர மொன்று
நந்த மாநகரி னல்கிவ னென்றான்.

இ—ள்: அந்தவேலை—அப்பொழுது, அமரர்க்கு இறை—தேவேந்திரன், தங்கள் முந்து கம்மியனை முன்னுற—தங்கள் பழைய விச்சுவகன்மாவைநினைக்க, அன்னான் வந்து கைதொழலும்—அவன்வந்து கைகுவித்துத் தொழுதலும், இவண்—இவ்விடத்து, நம் தம் மா நகரில்— எங்கள் பெரியஅமராவதிபுரியைப்போலச் (சிறப்புற), மந்திரம் ஒன்று நல்கு என்றான்—ஓர்கோயிலையமைக்குதியென்று (இந்திரன்) கூறினான் எ—று.

கம்மியன்-கர்மம் என்னும் வடசொல்லின்திரிபாகிய கம்மம் என்பதனடியாகப் பிறந்தபெயர். கைத்தொழில்செய்வோனென்பது பொருள். (௧௧௫)

அருக்கர் தந்தொகை யனைத்தையு மொன்று
வுருக்கி யாற்றியென வொண்மணி தன்னாற்

திருக்கி ளர்ந்துலவு செய்யதொர் கோயில்
பொருக்கெ னப்புனைவர் கோன்புரி குற்றான்.

இ—ள்: அருக்கர் தம் தொகை அனைத்தையும் ஒன்று உருக்கி ஆற்றி என—சூரியர்களது தொகுதிமுழுவதையும் ஒன்றாகவுருக்கிச்செய்ததுபோல, திரு கிளர்ந்து உலவு செய்யது ஓர் கோயில்—அழகுமிகுந்துவிளங்குகின்ற சிறந்த ஒருதிருக்கோயிலை, ஒள் பணி தன்னால்—ஒளிபொருந்திய மாணிக்கரத்தினத்தால், பொருக்கு என—விரைவாக, புனைவர்கோன் புரிகுற்றான்—தேவத்தச்சன்செய்தான் எ—று.

ஆற்றியெனப்புரிகுற்றான் ஒண்மணிதன்னாற்புரிகுற்றான் பொருக்கெனப்புரிகுற்றான் எனத்தனித்தனி இயையும். பன்னிருசூரியரும் அவரது பரிவாரசூரியர்களும் அடங்க, 'அருக்கர்தந்தொகையனைத்தையும்' என்றார். கோயில்-இலக்கணப்போலி. பொருக்கு-விரைவுக்குறிப்பு. புரிகுற்றான் என்பதில் கு-சாரியை. விகாரவுவமை. (கககூ)

குடங்கர் போன்மகு டங்கெழு வுற்ற
விடங்கொள் கோபுர விருக்கையி னப்பண்
கடங்க லுழ்ந்திடு கரிக்குரு குண்ணு
மடங்கல் கொண்டதொர் மணித்தவி சீந்தான்.

இ—ள்: குடங்கர் போல் மகுடம் கெழுவுற்ற இடம் கொள் கோபுர இருக்கையின் நாப்பண்-குடங்களைப்போலச்சிகரங்கள் செறியப்பெற்ற விசாலமாகியகோபுரத்தினையுடைய அத்திருக்கோயிலினடுவே, கடம் கலுழ்ந்திடு கரி குருகு உண்ணும் மடங்கல் கொண்டது ஓர் மணி தவிசு ஈந்தான்—மதத்தைப்பிலிற்றுகின்ற யானையின் மூளையையுண்ணுகின்ற சிங்கங்களாற்றாங்கப்பட்ட அழகிய ஓராசனத்தை அமைத்தான் எ—று.

மகுடங்கெழுவுற்ற கோபுரம் இடங்கொள்கோபுரம் எனத்தனித்தனி இயையும்.

ஈந்த வெல்லைதனி லிந்திர னேவப்
போந்து வானெறி புகுந்திடு தூநீர்
சாந்த மாமலர் தழற்புகை யாதி
யாய்ந்து தந்தனர்க ளண்டர்கள் பல்லோர்.

இ—ள்: ஈந்த எல்லை தனில்—அவ்வாறமைத்தவுடன், இந்திரன் ஏவ— இந்திரன் அனுப்ப, அண்டர்கள் பல்லோர் போந்து—பலதேவர்கள் போய், வான் நெறி புகுந்திடு தூ நீர்—ஆகாயமார்க்கமாகச்செல்லுகின்ற பரிசுத்தமாகிய கங்கைநீரும், சாந்தம்— சந்தனமும், மா மலர்— சிறந்தபுஷ்பங்களும், தழல் புகை ஆதி—தூபமும்முதலிய உபகரணங்களை, ஆய்ந்து தந்தனர்கள்— (சிறந்தனவாகத்)தெரிந்து கொணர்ந்தார்கள் எ—று.

தழற்புகை இருபெயரொட்டு. ஆதி என்றதற்கு தீபம் நைவேத்தியம் தாம்பூலம் முதலியவற்றையுரைக்க. (ககஅ)

## வேறு.

அன்ன காலையி லண்டர்கள் மேலையோன்
சென்னி யாறுடைத் தேவனை வந்தியா
வுன்ன தாளருச் சித்தியா முய்ந்திட
விந்தி கேதன மேகுதி நீயென்றான்.

இ—ள்: அன்னகாலையில்—அச்சமயத்தில், அண்டர்கள் மேலையோன்—தேவத்தலைவனாகிய இந்திரன், ஆறு சென்னி உடை தேவனை வந்தியா— ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுளைவணங்கி, யாம் உன்ன தாள் அருச்சித்து உய்ந்திட-நாங்கள் தே

வர்ருடைய திருவடிகளைப்பூசித்துய்யும்படி, நீ இ நிகேதனம் எகுதி என்ருன்— தேவரீர் இந்தக்கோயிலில் எழுந்தருளுக என்று வேண்டினன் எ—று.

மேலையோன் என்பதில் ஐகாரஞ்சாரியை. உன்ன என்பதில் அ-ஆறனுருபு. அது தாள் என்னும் பால் பகாவஃறிணைப்பெயரைக்கொண்டது. (கககூ)

கூற்ற மன்னதுட் கொண்டுவிண் ணோரெலாம்
போற்ற மந்திரம் புக்கு நனந்தலை
யேற்ற ரித்தொகை யேந்தெழிற் பீடமேல்
வீற்றி ருந்தனன் வேதத்தின் மேலையோன்.

இ—ள்: வேதத்தின் மேலையோன்—வேதத்திற்கதீதரான சுப்பிரமணியக்கடவுள், அன்னது கூற்றம் உட்கொண்டு—அவ்வார்த்தையைத் திருவுளம்பற்றி, விண்ணோர் எலாம் போற்ற மந்திரம் புக்கு—தேவரனைவருந் துதிக்க அத்திருக்கோயிலினுட்பிரவேசித்து, நனந்தலை—அதனடுவே, எற்று அரி தொகை எந்து எழில் பீடம் மேல் வீற்றிருந்தனன்—ஆண்சிங்கங்களாற் சுமக்கப்படுகின்ற அழகிய ஆசனத்தின்மேல் எழுந்தருளியிருந்தார் எ—று. (கஉ0)

ஆன காலை யமரர்கள் வாசவன்
ஞான நாயக நாங்க ளுனக்கொரு
தானை யாகுந் தலைவனை நீயென
வான நீத்தத்து மஞ்சன மாட்டினர்.

இ—ள்: ஆனகாலை—அப்பொழுது, அமரர்கள்—தேவர்களும், வாசவன்—இந்திரனும் (முருகக்கடவுளைநோக்கி), ஞானநாயக-ஞானமுதல்வரே, நாங்கள் உனக்கு ஒரு தானை ஆகும்—யாங்கள் தேவரீருக்குச் சேனையாகவிருக்கின்றோம், நீ தலைவன் என—தேவரீர் சேனாதிபராமென்றுகூறி, வான நீத்தத்து மஞ்சனம் ஆட்டினர்—ஆகாயகங்கையினீரினால் அபிஷேகஞ்செய்தார்கள் எ—று.

வாசவன்-அட்டவசுக்களுக்குத்தலைவன். செல்வங்களையுடையவனெனினுமாம். ஞானநாயகன்-இயற்கைஞானத்தையுடைய தலைவன். அல்லது, தத்துவஞானத்தாலுணரப்படுந்தலைவன். நாங்கள் தானையாகும் இடவழுவமைதி. ஈண்டு, ஆகும் என்பதை அசையென்றும், கும் என்னுந்தன்மைப்பன்மை யெதிர்காலவிகுதிபெற்றுவந்தமுற்றென்றுங்கொள்வர்சிலர். தலைவனை என்பதில் ஐ சாரியை. நீத்தம்-நீந்தப்படுவது; அம் செயப்படுபொருள்விகுதி. (கஉக)

நொதுமல் பெற்றிடு நுண்டுகில் சூழ்ந்தனர்
முதிய சந்த முதலமட் டித்தனர்
கதிரு நன்பொற் கலன்வகை சாத்தினர்
மதும லர்த்தொகை மாலிகை சூட்டினர்.

இ—ள்: நொதுமல் பெற்றிடும் நுண் துகில் சூழ்ந்தனர்—மிருதுத்தன்மையமைந்த நுட்பமான பட்டுவஸ்திரத்தைச்சாத்தினார்கள், முதிய சந்தம் முதல மட்டித்தனர்—முதிர்ந்த சந்தனக்குறட்டிலரைத்த தேய்வுமுதலாகிய சுகந்தப்பொருள்களைத் (திருமேனியிற்) பூசினார்கள், கதிரும் நன் பொன் கலன் வகை சாத்தினர்—ஒளிருகின்ற நல்ல பொன்னாலாகிய ஆபரணவகைகளைத்தரித்தார்கள், மது மலர் தொகை மாலிகை சூட்டினர்—தேனிறைந்த மலர்க்கூட்டடங்களாலாகிய மாலையை அணிவித்தார்கள் எ—று.

சூழ்ந்தனர் முதலியமூன்றுமுற்றுக்களை எச்சமாக்கிப் பொருள்கூறினுமாம். சந்தம்-ஆகுபெயர்; அதற்குவிசேடணமாகிய முதிய என்னும்பெயரெச்சம் ஆகுபெயர்ப்

பொருளைவிசேடியாது இயற்பெயர்ப்பொருளை விசேடித்துநின்றது. *திரும்- எதிர்காலப் பெயரெச்சம். கலன் இறுதிப்போலி. (கஉஉ)

ஐவ கைப்படு மாவியும் பாளித
மெய்வி ளக்கமும் வேறுள பான்மையு
மெவ்வெ வர்க்கு மிறைவற்கு நல்கியே
செவ்வி தர்ச்சனை செய்தன ரென்பவே.

இ—ள்: ஐ வகை படும் ஆவியும்—ஐந்துவகைப்பட்ட தூபங்களையும், பாளித மெய் விளக்கமும்—மெய்ம்மையாகிய கர்ப்பூரதீபத்தையும், வேறு உள பான்மையும்—மற்றுமுள்ள உபசாரங்களையும், எவ்வெவர்க்கும் இறைவற்கு நல்கி- எத்தகைமேம்பாட்டார்க்குந்தலைவராகிய குமாரக்கடவுளுக்குச்சமர்ப்பித்து, செவ்விது அர்ச்சனை செய்தனர்—நன்ருகப் பூசைசெய்தார்கள் எ—று.

என்ப அசை; இதனை "கிளந்தவல்ல வேறுபிறதோன்றினுங்-கிளந்தவற்றியலானுணர்ந்தனர்கொளலே" எனத்தொல்காப்பியத்து இடையியலில்வரும்புறனடைச்சூத்திரத்தாற்கொள்க. ஐவகைத்தூபமாவன:—சந்தனம் அகில் பச்சைக்கர்ப்பூரம் குந்துருக்கம் குங்குலியம் என்னுமிவற்ருலாய ஐந்துமாம். இதனை மேல் தேவகிரிப்படலத்து இருபத்தொன்பதாஞ்செய்யுளினுங்காண்க. (கஉ௩)

புரந்த ரன்முதற் புங்கவர் தம்முளத்
தரந்தை நீங்க வருச்சனை செய்துபின்
பரிந்து தாழ்ந்து பரவலு மாயிடைக்
கரந்து வள்ளல் கயிலையிற் போயினன்.

இ—ள்: புரந்தரன் முதல் புங்கவர்—இந்திரன்முதலிய தேவர்கள் (யாவரும்), தம் உளத்து அரந்தை நீங்க அருச்சனை செய்து— தமது மனத்தின்கணுள்ள துன்பந்திருமாறு பூசைசெய்து, பின்—அதன்பின்பு, பரிந்து தாழ்ந்து பரவலும்—அன்புகொண்டு வணங்கித்துதித்தலும், வள்ளல்—சுப்பிரமணியக்கடவுள், ஆயிடை கரந்து கயிலையில் போயினன்—அவ்விடத்தினின்றும் அந்தர்த்தானமாய்த் திருக்கைலாசகிரியிற்சென்ருர் எ-று.

தம்முளத்தரந்தையென்றது சூரனுதியர்செய்யுமிடராற் குடிகொண்டதுக்கத்தை. (கஉ௪)

வெற்பின் மிக்குயர் வெள்ளியம் பொற்றையிற்
சிற்ப ரன்மறைந் தேகலுந் தேவரும்
பொற்பின் மேதகு பொன்னக ரண்ணலு
மற்பு தத்துட னவ்வரை நீங்கினர்.

இ—ள்: சிற்பரன்-ஞானவடிவினராகிய குமாரக்கடவுள், மறைந்து—அந்தர்த்தானமாய், வெற்பில் மிக்கு உயர் வெள்ளியம் பொற்றையில் ஏகலும்-மலைகளிற்சிறந்தன திருக்கைலாசகிரியிற் சென்றருளியவுடன், தேவரும்—தேவர்களும், பொற்பில் மேதகு பொன்னகர் அண்ணலும்—அழகின்மேம்பட்ட சுவர்க்கலோகத்திற்கிறைவனுகிய இந்திரனும், அற்புதத்துடன் அ வரை நீங்கினர்-அதிசயத்துடன் அந்தமலையினின்றும் நீங்கிப்போயினர்கள் எ—று.

மேன்மை என்னும் பண்புப்பெயர் முதலெழுத்துமாத்திரமாய் மே என நின்றது. பூசைமுற்றுங்காறும் வெளிப்பட்டிருந்தார் மேல் மறைந்தமையின் அற்புதமெய்தினார். (கஉ௫)

ஈசன் மைந்த னிளைய னிமையவர்
பூசை செய்யப் பொருந்தலி னவ்வரை
மாசில் கந்த வரையென யாவரும்
பேச வாங்கொர் பெயரினைப் பெற்றதே.

இ—ள்: ஈசன் மைந்தன் இளையன்— சிவபிரானது இளையதிருக்குமாரராகிய முருகக்கடவுள், இமையவர் பூசைசெய்ய பொருந்தலின்—தேவர்கள்பூசிக்க எழுந்தருளியிருத்தலால், அ வரை—அந்தமலையானது, மாசு இல் கந்தவரை என யாவரும் பேச—குற்றமற்ற கந்தவெற்பென்று அனைவருஞ்சொல்லுமாறு, ஓர் பெயரினை பெற்றது—ஒரு திருநாமத்தைப்பெற்றது எ—று.

மைந்தனிளையன்=இளையமைந்தன். (கஉசு)

ஆன கந்த வடுக்கலைத் தீர்ந்துபோய்
வான மன்னன் மனோவதி நண்ணினு
னேனை வானவர் யாவரு மவ்வவர்
தான மெய்தினர் தொன்மையிற் றங்கினர்.

இ—ள்: வான மன்னன்—விண்ணுலகத்திற்கிறைவனாகிய இந்திரன், ஆன கந்த அடுக்கலை தீர்ந்து போய் மனோவதி நண்ணினன்—அந்தக்கந்தவெற்பை நீங்கிப்போய் (மகாமேருமலையிலுள்ள) மனோவதிநகரை அடைந்தான், ஏனை வானவர் யாவரும்—மற்றைய தேவரனைவரும், அவ்வவர் தானம் எய்தினர்— தத்தம் இருக்கைகளையடைந்து, தொன்மையில் தங்கினர்—முன்போல இருந்தார்கள் எ—று.

மனோவதி-மனத்தையுடையது. காண்போர் மனத்தைக்கவருங் கட்டழகினையுடையதென்பது கருத்து. இது மேருமலையிற்பிரமதேவர் வசிக்குந்தானம். (கஉஎ)

உயவ லூர்திகொண் டொய்யென முன்னரே
கயிலை யங்கிரி யேகிய கந்தவேள்
பயிலும் வீரரும் பாரிட மள்ளரு
மயலின் மேவர வாயிடை வைகினன்.

இ—ள்: உயவல் ஊர்தி கொண்டு— தமதுபிணிப்பையே வாகனமாகக்கொண்டு, ஒய்யென முன்னரே கயிலையம் கிரி ஏகிய கந்தவேள்—விரைவாகத் திருக்கைலாசகிரியிற் சென்றருளிய முருகக்கடவுள், பயிலும் வீரரும் பாரிடமள்ளரும் அயலில் மேவர—உடன் பயிலுகின்ற வீரர்களும் பூதத்தலைவர்களும் பக்கத்திற்பொருந்த, ஆயிடை வைகினன்—அவ்விடத்து வீற்றிருந்தருளினர் எ—று.

நினைத்தமாத்திரத்திற் போயினராதலின் 'உயவலூர்திகொண்டொய்யெனமுன்னரே-கயிலையங்கிரியேகிய' என்றார். ஒய் என முன்னர்-ஒய் என்று உச்சரித்துமுடித்தற்கிடையில்=விரைவில். (கஉஅ)

திருவிளையாட்டுப்படலமுற்றிற்று.

**ஆக விருத்தம் ககஎசு.**

---

# தகரேறுபடலம்.

குமாரக்கடவுள் ஆட்டுக்கடாவாகனத்திலெந்தருளியசரித்திரத்தைக்கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

ஒருநாள் நாரதமுனிவர் ஒரு வேள்வியையியற்ற, அவ்வேள்வித்தீயினின்றும் ஒரு ஆட்டுக்கடாத்தோன்றி அனைவரையும் அடர்த்தது. அதுகண்டஞ்சியமுனிவர்களும் தேவர்களும் குமாரக்கடவுளிடஞ்சென்று முறையிட, அவர், தமது துணைவரான வீரவாகுவையேவி ஆட்டுக்கடாவைக்கொணர்வித்து, அவர்கள் கேள்விப்படி வாகனமாகக்கொண்டருளினர் என்பதாம்.

சூரன்முத லோருயிர் தொலைக்கவரு செவ்வே
ளாருமகிழ் வெள்ளியச லத்தினமர் போழ்தின்
மேருவி லுடைப்பரன் விரும்பவகி லத்தே
நாரதனோர் வேள்வியை நடாத்தியிட லுற்றான்.

இ—ள்: சூரன் முதலோர் உயிர் தொலைக்க வரு செவ்வேள்—சூரபன்மன் முதலிய அசுரர்களது உயிரை அழிக்கும்வண்ணந் திருவவதாரஞ்செய்த குமாரக்கடவுள், ஆரும் மகிழ் வெள்ளி அசலத்தின் அமர் போழ்தில்—அனைவரும் மகிழ்தற்கேற்ற திருக்கைலாசமலையில் வீற்றிருக்கும்பொழுது, நாரதன்—நாரதமுனிவர், மேரு வில் உடை பரன் விரும்ப—மகாமேருமலையை வில்லாகவுடைய சிவபிரான் மகிழுமாறு, அகிலத்தே— பூவுலகத்தில், ஓர் வேள்வியை நடாத்தியிடல் உற்றான்—ஒருயாகத்தையியற்றினார் எ—று.

யார்என்பதன்விகாரமாகிய ஆர் ஈண்டு எஞ்சாமையையுணர்த்திற்று. மகிழ் என்னுங்காலங்கரந்த பெயரெச்சம் வெள்ளியசலம் என்னும் ஏதுப்பெயர்கொண்டது. போழ்து-பொழுது என்பதன்விகாரம். போழ்தில் நடாத்தியிடலுற்றான் என இயையும். யாகமுதலிய புண்ணிய கருமங்களைச்செய்தற்கேற்றது பூமியேயாதலின் அங்குவந்தியற்றினர். நடாத்தி-நடத்தி என்பதன் நீட்டல்விகாரம். தத்தங்குறைகளைச்சிவபிரானிடம் முறையிட்டு அனைவருந் தீர்த்துக்கொள்ளுதற்கிடமாதலால் 'ஆருமகிழ்வெள்ளியசலம்' என்றார். (க)

மாமுனிவ ருஞ்சுரரு மாநில வரைப்பிற்
றோமறு தவத்தினுயர் தொல்லைமறை யோரு
மேமமொடு சூழ்தர வியற்றிய மகத்திற்
றீமிசை யெழுந்ததொரு செக்கர்புரை செச்சை.

இ—ள்: மா முனிவரும் சிறந்தமுனிவர்களும், சுரரும்—தேவர்களும், மா நில வரைப்பில் தோம் அறு தவத்தின் உயர் தொல்லை மறையோரும்—பெரியபூவுலகத்திற் குற்றமற்ற தவத்தினாற்சிறந்த பழைய பிராமணர்களும், ஏமமொடு சூழ்தர—மகிழ்ச்சியுடன் சூழ்ந்திருக்க, இயற்றிய மகத்தில்—செய்த அந்தயாகத்தில், தீமிசை— ஓமாக்கினியினின்றும், செக்கர் புரை ஒரு செச்சை எழுந்தது—செவ்வானத்தைநிகர்த்த ஒரு ஆட்டுக்கடாத்தோன்றியது எ—று.

தவத்திற்குக்குற்றங்கூடாவொழுக்கமுதலியன. தொன்மை- அறிவுமுதிர்ச்சிதொன்றுதொட்டுவரும் ஒழுக்கம் முதலின. தபோலோகத்திருடிகளென்பார் 'மாமுனிவர்' எனவும், பூலோகத்திருடிகளுட்சிறந்தாரென்பார் 'மாநிலவரைப்பில்தோமறுதவத்தி

னுயர்தொல்லைமறையோர்' எனவும், பலநன்மைகள் சம்பவிக்குமென்றெண்ணிச் சூழவென்பார் 'எமமொடுசூழ்தர' எனவும் கூறினர். (உ)

அங்கிதனில் வந்ததக ராற்றுமகந் தன்னி
னங்களின மேபலவு நாளுமடு கின்று
ரிங்கிவரை யானடுவ னென்றிசைவு கொண்டே
வெங்கனலை யேந்துபரி மீதெழுதல் போலும்.

இ—ள்: அங்கிதனில் வந்த தகர்—அவ்வாறு வேள்வித்தீயினின்றெழுந்த ஆட்டுக்கடா, ஆற்றும் மகம் தன்னில் நங்கள் இனம் பலவுமே நாளும் அடுகின்றார்—செய்யப்படுகின்ற யாகத்தில் எங்களினமாகிய பல ஆடுகளையே எப்பொழுதும் (இவர்கள்) கொல்லுகின்றார்கள் (ஆதலின்), யான் இங்கு இவரை அடுவன் என்று இசைவு கொண்டு—யான் (வைரந்தீருமாறு) இவர்களை அழிப்பேனென்று மனந்துணிந்து, வெம் கனலை ஏந்து பரி—கொடிய அக்கினியைச்சுமக்கின்ற[வாகனமாகிய] ஆட்டுக்கடா, மீது எழுதல் போலும்—அவ்வக்கினியின்மேற் கிளம்புவதுபோலும் எ—று.

இனமே என்பதில் ஏகாரம் பிரிநிலை. பலவும் என்பதில் உம்மை-முற்று. நாளும் என்பதிலும்மை-தொறுப்பொருளது. முக்காலத்தினுமொத்தியல்வதாகலின் 'அடுகின்றார்' என நிகழ்காலத்தாற்கூறியது. அடுவன்-தன்மையொருமைவினைமுற்று. அங்கிதனில்தகர்வருதல் கனலையேந்துபரிஎழுதல்போலும் என்க. தற்குறிப்பேற்றவணி. (௩)

மாருதமு மூழிதனில் வன்னியும் விசும்பிற்
பேருமுரு மேறுமொரு பேருருவு கொண்டே
யாருவது போல்விரைவு மத்தொளியு மார்ப்புஞ்
சேரவெழு மேடமடு செய்கைநினைந் தன்றே.

இ—ள்: மாருதமும்—ஊழிக்காற்றும், ஊழிதனில் வன்னியும்—வடவாமுகாக்கினியும், விசும்பில் பேரும் உரும் ஏறும்-மேகத்திற்றோன்றும் இடியும் ஆகிய இவைகள், ஒரு பேர் உருவு கொண்டு ஆருவது போல்—ஒருபெரிய வடிவத்தைக்கொண்டு வருவதுபோல, விரைவும் அத்து ஒளியும் ஆர்ப்பும் சேர எழும் மேடம்—வேகமும் சிவந்தநிறமும் பேரொலியும்பொருந்தத்தோன்றிய ஆட்டுக்கடாவானது, அடு செய்கை நினைந்தன்று—கொலைத்தொழிலைச் செய்யநினைந்தது எ—று.

ஊழிதனில் என்பது தாப்பிசையாய் மாருதத்தோடுமியையும். ஊழிக்காற்றுப்போல் வேகமும், வடவைபோற்செந்நிறமும், இடிபோற்பேரொலியுமெனநிரனிறையாகப்பொருள்கொள்க. பேரும்-பெயருமென்பதன்விகாரம். பெரியதையுஞ் சிறந்ததையும் ஆனெனவழங்குமரபுபற்றி 'உருமேறு' என்றார். நினைந்தன்று-ஒன்றன்பாற்படர்க்கை இறந்தகாலவினைமுற்று. (௪)

கல்லெண மணித்தொகை களத்திடை தூங்கச்
சில்லரிபெய் கிங்கிணி சிலம்படி புலம்ப
வல்லைவரு கின்றதகர் கண்டுமகத் துள்ளோ
ரெல்லவரு மச்சமொ டிரிந்தனர்க ளன்றே.

இ—ள்: மணித்தொகை—சிறுமணிக்கூட்டங்கள், கல் என—கல்லென்னுங்குறிப்பொலியுண்டாகும்படி, களத்தின் இடை தூங்க—கழுத்தில் அசையவும், சில் அரிபெய் கிங்கிணி சிலம்பு அடி புலம்ப—சிலபருக்கைக்கற்கள் உள்ளிடப்பெற்ற கிங்கிணியும்

சிலம்பும் கால்களில் ஒலிக்கவும், வல்லை வருகின்ற தகர்—விரைந்து எழுந்து வருகின்ற ஆட்டுக்கடாவை, மகத்து உள்ளோர் எல்லவரும் கண்டு—யாகசாலையிலுள்ளோரனைவரும் பார்த்து, அச்சமொடு இரிந்தனர்கள்—பயத்துடன் ஓடினூர்கள் எ—று.

நிரம்பாவண்ணம் இடப்பட்டமையின் 'சில்லரிபெய் கிங்கிணி' என்றூர். கிங்கிணி-அற்பமாக ஒலித்தலால் வந்தகாரணப்பெயர். சிலம்பு என்பதும் ஒலிபற்றிவந்த பெயரே; இதிற்கருத்தாப்பொருள்விகுதிபுணர்ந்து கெட்டது. சில அரி-நிலைமொழியீற்றகரங் கெட்டுச்சில்லரியெனப்புணர்ந்தது. வல் என்னும்விரைவுப்பொருளுணர்த்துமிடைச்சொல் ஐகாரச்சாரியைபெற்று வல்லை எனநின்றது. அச்சமொடு என்பதில் ஒடு அடைமொழிப்பொருட்டு; பயமுடையராய் என்பது கருத்து. (௫)

இரிந்தவர்கள் யாவரையு மிப்புவியும் வானுந்
துரந்துசிலர் வீழ்ந்துதொலை வாகநனி தாக்கிப்
பரந்ததரை மால்வரை பராகமெழ வோடித்
திரிந்துயிர் வருந்தவடல் செய்தது செயிர்த்தே.

இ—ள்: இரிந்தவர்கள் யாவரையும்—(அவ்வாறு) அஞ்சியோடினோர் எல்லோரையும், இ புவியும் வானும் துரந்து—இந்தப்பூமியிலும் ஆகாயத்திலுந்துரத்தி, சிலர் வீழ்ந்து தொலைவு ஆக நனி தாக்கி—அவருட்சிலர் கீழேவிழுந்து அழியும்படி மிகவும் மோதி, பரந்த தரை மால் வரை பராகம் எழ ஓடி திரிந்து—விசாலமாகிய பூமியினும் பெரிய மலைகளினுந்துகளெழும்படி ஓடித்திரிந்து, செயிர்த்து— கோபித்து, உயிர் வருந்த அடல் செய்தது—ஆன்மாக்கள் வருந்தும்படி அழிவுசெய்தது எ—று. (௬)

எட்டுள திசைக்கரி யிரிந்தலறி யேங்கக்
கிட்டியெதிர் தாக்குமதி கேழ்கிளர் விமானத்
தட்டிரவி தேரொடு தகர்ந்துமுரி வாக
முட்டுமவர் தம்பரியை மொய்ம்பினொடு பாயும்.

இ—ள்: எட்டு உள திசைக்கரி இரிந்து அலறி ஏங்க கிட்டி எதிர் தாக்கும்—அட்டதிக்குயானைகளும் பயந்தோடிக்கதறி ஏக்கமுறும்படி அணுகி எதிரேமோதும், மதி கேழ் கிளர் விமான தட்டு இரவி தேரொடு தகர்ந்து முரிவு ஆக முட்டும்— சந்திரனது நிறம் விளங்குகின்ற விமானத்தின் தட்டும் சூரியனதுதேரும் உடைந்து சிதையும்படி தாக்கும், அவர் தம் பரியை மொய்ம்பினொடு பாயும்—அவர்களுடைய குதிரைகளின்மேல் வலிமையோடுபாயும் எ—று.

முன்னைய ஒடு எண். அவர்என்றது சந்திரசூரியர்களை. சந்திரன்றேரை விமானம் எனவழங்குப. அது மூன்றுசக்கரங்களையுடைத்தாய் முல்லைப்பூநிறமான பத்துக்குதிரைகள்பூட்டப்பெற்றுள்ளதெனவிஷ்ணுபுராணங்கூறும். (எ)

இனையவகை யாற்றக ரியாண்டுமுல வுற்றே
சினமொடுயிர் கட்கிறுதி செய்துபெயர் காலை
முனிவர்களு நாரதனு மொய்ம்புமிகு வானோ
ரனைவர்களு மோடின ரருங்கயிலை புக்கார்.

இ—ள்: தகர்—ஆட்டுக்கடா, இனையவகையால் யாண்டும் உலவுற்று—இவ்வாறு எங்கும் உலாவி, சினமொடு உயிர்கட்கு இறுதி செய்து பெயர் காலை—கோபத்துடன் ஆன்மாக்களுக்கு அழிவைச்செய்துதிரியும்பொழுது, முனிவர்களும்—அதுகண்ட முனிவர்களும், நாரதனும்—நாரதமுனிவரும், மொய்ம்பு மிகு வானோர் அனைவர்களும்—வலிமை

மிக்குள்ள தேவர்களெல்லோரும், ஓடினர் அரும் கயிலை புக்கார்—ஓடி அரியதிருக்கைலாச மலையிற்போயினர்கள் எ—று.

காலம்-காலையென ஈறுதிரிந்தது. முனிவர்கள் அனைவர்கள் என்பவற்றில் கள் விகுதிமேல்விகுதி. முனிவருள் நாரதரும் அமைவராயினும் யாகாதிபராதலின் வேறுகூறினர். (அ)

ஊறுபுக வன்னவ ருலைந்துகயி லைக்க
ணேறிவரு காலையி லிலக்கமுட னென்பான்
வீறுதிறல் வீரரொடு மேவியுல வுற்றே
யாறுமுக வண்ணல்விளை யாடலது கண்டார்.

இ—ள்: ஊறுபுக—(ஆட்டுக்கடாவினால்) தீமைநேரிட, அன்னவர் உலைந்து கயிலைக்கண் ஏறி வரு காலையில்-அவரனைவருமலைந்து திருக்கைலாசகிரியில் ஏறிவருகின்ற பொழுது, ஆறுமுக அண்ணல்—ஆறுதிருமுகங்களையுடைய குமாரக்கடவுள், வீறு திறல் வீரரொடு மேவி உலவுற்று விளையாடல் அது கண்டார்-பெருமையையும் வலிமையையுமுடைய இலக்கத்தொன்பதுவீரர்களுடன் கூடியுலாவிவிளையாடுதலைத்தரிசித்தார்கள் எ-று.

ஊறு-உறு என்னும் பகுதியுடன் கருத்தாப்பொருள்விகுதிபுணர்ந்துகெட்டு முதனீண்டபெயர். உறுதல்-தடைநேர்தல். வீறுதிறல் உம்மைத்தொகை. வினைத்தொகையாகக்கொண்டு, வீறுகின்றதிறல்—சிறப்படைகின்ற வலி எனப்பொருள்கூறினுமாம். (கூ)

ஈசனிடை நண்ணுகில மீண்டுகும ரேச
னேசமொடு நந்துயர நீக்கவெதிர் வந்தா
னுசிறுவ னல்லனிவ னண்டர்பல ரோடும்
வாசவனை வென்றுயிரை மாற்றியெழு வித்தான்.

இ—ள்: ஈசனிடை நண்ணுகிலம்—(யாம்) சிவபிரானிடத்துச்செல்லோம், குமா ஈசன் நம் துயரம் நீக்க நேசமொடு ஈண்டு எதிர்வந்தான்—குமாரக்கடவுள் எமது துன்பத்தை நீக்குமாறு கருணையுடன் இங்குமுற்பட்டார், ஆ-ஆகா!, இவன் சிறுவன் அல்லன்-இவர் பாலியரல்லர், அண்டர் பலரோடும் வாசவனை வென்று உயிரை மாற்றி எழுவித்தான்—பலதேவர்களுடன் இந்திரனை வெற்றிகொண்டு சங்கரித்துப் பின் எழுப்பியவர் எ—று.

நண்ணுகிலம்-தன்மைப்பன்மையெதிர்மறைவினைமுற்று. (௧0)

எங்குறை முடித்திட லிவற்கெளிது நாமிப்
புங்கவனொ டுற்றது புகன்றிடுது மென்னாத்
தங்களி லுணர்ந்துசுரர் தாபதர்கள் யாரு
மங்கவன்மு னேகின ரருந்துதிகள் செய்தே.

இ—ள்: எம் குறை முடித்திடல் இவற்கு எளிது—எமது துன்பத்தைத்தீர்த்தருளுதல் இவருக்கு இலகுவாகும் (ஆதலின்), நாம் இ புங்கவனொடு உற்றது புகன்றிடுதும் என்னா—யாங்கள் இக்கடவுளிடத்து நமக்குநேர்ந்த துயரைமுறையிடுவோமென்று, சுரர் தாபதர்கள் யாரும்—தேவர்களும் முனிவர்களுமாகிய எல்லோரும், தங்களில் உணர்ந்து-தங்களுள் ஆலோசித்து, அரும் துதிகள் செய்து அங்கு அவன் முன் ஏகினர்—சிறந்த தோத்திரங்களைக்கூறி அச்சுப்பிரமணியக்கடவுளுக்குமுன் சென்றனர் எ—று.

உற்றது-வினையாலணையும்பெயர். (கக)

வந்துபுகழ் வானவரு மாமுனிவர் தாமுந்
தக்கிமுக வற்கிளவ றன்னடி வணங்கக்

கந்தனவர் கொண்டதுயர் கண்டுமிக நீவிர்
நொந்தனிர் புகுந்தது நவன்றிடுதி ரென்ருன்.

இ—ள்: வந்து புகழ் வானவரும் மா முனிவர் தாமும்-(இவ்வாறு)வந்துதுதித்த தேவர்களும் சிறந்த முனிவர்களும், தந்திமுகவற்கு இளவல் தன் அடி வணங்க—விநாயகக்கடவுளது தம்பியாகிய முருகக்கடவுளது திருவடிகளை நமஸ்கரிக்க, கந்தன்—முருகக்கடவுள், அவர் கொண்ட துயர் கண்டு—அந்தத்தேவராதியோர் அடைந்துள்ள துன்பத்தைப்பார்த்து, நீவிர் மிக நொந்தனிர்—நீங்கள் மிகவும் வருந்தினீர்கள், புகுந்தது நவன்றிடுதிர் என்ருன்—நமக்குநேர்ந்த இடரைக்கூறுதிரென்று அருளிச்செய்தார் எ—று. ()

கேட்டியிளை யோய்மறை கிளத்துமொரு வேள்வி
வேட்டன மியாங்களது வேலையிடை தன்னின்
மாட்டுகன லூடொரு மறித்தக ரெழுந்தே
யீட்டமுறு மெம்மையட வெண்ணியதை யன்றே.

இ—ள்: இளையோய் கேட்டி-குமாரக்கடவுளே! கேட்டருளுக, யாங்கள் மறைகிளத்தும் ஒரு வேள்வி வேட்டனம்-நாங்கள் வேதங்களாற் கூறப்படுகின்ற ஒருயாகத்தைச் செய்தோம், அது வேலை இடை தன்னில்—அப்பொழுது, மாட்டு கனல் ஊடு ஒரு மறிதகர் எழுந்து—வளர்க்கப்பெற்ற யாகாக்கினியில் ஒரு ஆட்டுக்கடாத்தோன்றி, ஈட்டம் உறும் எம்மை அட எண்ணியது— கூட்டமாகப்பொருந்திய எங்களைக் கொல்லக்கருதியது எ—று.

மறித்தகர் இருபெயரொட்டு. எண்ணியதை என்பதில் ஐகாரம்சாரியை. சிறந்தவறுருவண்ணமியற்றினமென்பதுதோன்ற 'மறைகிளத்துமொருவேள்வி' எனவும், கண்டுழித்தானே வெருவியோடுதற்கேற்றபெருங்குழுவாக நாமிருந்தும் அஞ்சாது துணிவுடைத்தாய் நம்மை அழிக்கத்தலைப்பட்டதென்பதுதோன்ற 'ஈட்டமுறுமெம்மையடவெண்ணியது' எனவும் கூறினர். (௧௩)

ஆடெழு கிளர்ச்சியை யறிந்துமகம் விட்டே
யோடியிவ ணுற்றன முருத்தது துரந்தே
சாடியது சிற்சிலவர் தம்மையத னலே
வீடிய தளப்பிலுயிர் விண்ணினொடு மண்மேல்.

இ—ள்: ஆடு எழு கிளர்ச்சியை அறிந்து—அந்த ஆட்டுக்கடா எழுகின்ற எழுச்சியை (யாங்கள்) உணர்ந்து, மகம் விட்டு இவண் ஓடி உற்றனம்—யாகத்தை இடையில் விட்டு இவ்விடத்து ஓடிவந்தோம், அது உருத்து துரந்து—அந்த ஆடு கோபித்துத்துரத்தி, சிற்சிலவர் தம்மை சாடியது—சிலசிலபேர்களை அழித்தது, அதனலே— அக்காரணத்தினல், விண்ணினொடு மண்மேல்-ஆகாயவுலகத்திலும் பூவுலகத்திலும், அளப்பு இல் உயிர் வீடியது—அளவிறந்த பிராணிகள் இறந்தன எ—று.

விண் ஆகுபெயர். உயிர் என்பது சாதியொருமையாதலால் வீடியது என்னும் ஒன்றன்பால்முற்றைக்கொண்டது. (௧௪)

நீலவிட மன்றிது நிறங்குலவு செக்கர்க்
கோலவிட மேயுருவு கொண்டதய மேபோ
லோலமிட வெங்குமுல வுற்றதுயி ரெல்லாங்
காலமுடி வெய்துமொரு கன்னன்முடி முன்னம்.

இ—ள்: இது நீல விடம் அன்று—இது கருநிறத்தையுடைய நஞ்சன்று, செக்கர் நிறம் குலவு கோல விடமே அயம் போல உருவு கொண்டது—சிவந்த நிறமார்ந்த வ

டிவத்தினையுடையதொருநஞ்சே ஆடுபோல் வடிவுகொண்டுவந்து, ஒலமிட எங்கும் உலவுற்றது—கண்டோர் ஒலமிடும்படி எவ்விடத்தினும் உலாவியது, உயிர் எல்லாம் ஒரு கன்னல் முடி முன்னம் காலம் முடிவு எய்தும்—(இது இன்னுமுலாவுமேல்)ஆன்மாக்களெல்லாம் ஒருநாழிகை முடிதற்குமுன் அழியும் எ—று.

செக்கர்க்கோலவிடம்-இல்பொருள். முன்னையஏகாரம் பிரிநிலை. கொண்டது-முற்றெச்சம். ஒலமிடுதல்-அச்சத்தாற்கதறுதல். காலமுடிவெய்தல்-வாழ்நாளின் முடிவைப்பெறுதல்=இறத்தல். (௧௫)

சீற்றமொ டுயிர்க்கிறுதி செய்துலவு மேடத்
தாற்றலை யடக்கியெம தச்சமு மகற்றி
யேற்றகுறை வேள்வியையு மீறுபுரி வித்தே
போற்றுதி யெனத்தொழுது போற்றிசெயும் வேலை.

இ—ள்: சீற்றமொடு உயிர்க்கு இறுதி செய்து உலவும் மேடத்து ஆற்றலை அடக்கி—கோபத்துடன் ஆன்மாக்களுக்கு அழிவைச்செய்து உலாவுகின்ற ஆட்டின்வலிமையையடக்கி, எமது அச்சமும் அகற்றி—எமது பயத்தையும்நீக்கி, ஏற்ற குறை வேள்வியையும் ஈறு புரிவித்து-ஏற்றுக்கொண்ட [தொடங்கிய] குறையாகத்தையுமுடிவுபெறச்செய்து, போற்றுதி-எங்களைக்காத்தருள்வாய், என—என்று, தொழுது போற்றிசெயும் வேலை—(தேவராதியோர்) கைதொழுது துதிக்கும்பொழுது எ—று.

உம்மைகள் எச்சங்கள். இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம். (௧௬)

எஞ்சுமவர் தம்மையிளை யோன்பரிவி னோக்கி
யஞ்சல்விடு மின்களென வங்கைய தமைத்தே
தஞ்சமென வேபரவு தன்பரி சனத்துண்
மஞ்சுபெறு மேனிவிறல் வாகுவொடு சொல்வான்.

இ—ள்: இளையோன்—குமாரக்கடவுள், எஞ்சும் அவர் தம்மை பரிவில் நோக்கி-மனந்தளர்ந்த அத்தேவர்களைக்கருணையுடன்பார்த்து, அஞ்சல் விடுமின்கள் என அங்கையது அமைத்து—பயத்தையொழிகுதிரென்று அருளிச்செய்து அழகிய கையையமைத்து, தஞ்சம் என பரவு தன் பரிசனத்துள்—அடைக்கலமாகக்கொண்டு துதிக்கின்ற தனதுபரிவாரங்களுள், மஞ்சு பெறு மேனி விறல்வாகுவொடு சொல்வான்-வலிமையார்ந்த சரீரத்தையுடைய வீரவாகுதேவர்க்கு இவ்வாறு அருளிச்செய்வார் எ—று.

மஞ்சு அழகெனினுமாம். (௧௭)

மண்டுகனல் வந்திவர் மகந்தனை யழித்தே
யண்டமொடு பாருலவி யாருயிர்க டம்மை
யுண்டுதிரி செச்சைதனை யொல்லைகுறு குற்றே
கொண்டணைதி யென்றுமை குமாரனுரை செய்தான்.

இ—ள்: மண்டு கனல் வந்து—மூண்டெரிகின்ற அக்கினியிற்றோன்றி, இவர் மகம் தனை அழித்து—இவர்களுடைய யாகத்தையழித்து, அண்டமொடு பார் உலவி—ஆகாயவுலகத்தினும் பூவுலகத்தினுமுலாவி, ஆர் உயிர்கள் தம்மை உண்டுதிரி செச்சைதனை-நிறைந்த உயிர்களை அழித்துத்திரிகின்ற ஆட்டுக்கடாவை, ஒல்லை குறுகுற்று—விரைவில் அணுகி, கொண்டு அணைதி என்று-(அடக்கிக்)கொணர்வாயென்று, உமைகுமாரன் உரை செய்தான்—உமாதேவியாரது திருக்குமாரராகிய முருகக்கடவுள் அருளிச்செய்தார் எ—று.

பார் என்பது பார்க்கப்படுவதென்னுங்காரணம்பற்றிப் பூமிக்குப்பெயராயிற்று; எல்லாப்பொருள்களுங்காணப்படுதலால் லோகம் என்னுஞ்சொல்லை வடநூலார் வழங்கு

வதுபோல. கருமையுடையதைக் கார் என்றாற்போலப் பருமையுடையதைப் பார் என்றதெனினுமாம். உயிர்களையுண்ணுதலாவது உடம்பினின்றொழித்தல். உமையம்மையாரதுவயிற்றிற் பிறவாவிடினும் அவராற்பாலூட்டிவளர்க்கப்பட்டமையின் முருகக்கடவுளை 'உமைகுமாரன்' என்றார். (கஅ)

வேறு.

குன்றெழு கதிர்போன் மேனிக் குமரவே ளினைய கூற
மன்றலந் தடந்தோள் வீர வாகுவாந் தனிப்பேர் பெற்றா
னன்றென விசைந்து கந்த ஞண்மலர்ப் பாதம் போற்றிச்
சென்றனன் கயிலை நீங்கிச் சினத்தகர் தேடலுற்றான்.

இ—ள்: குன்று எழு கதிர் போல் மேனி குமரவேள் இனைய கூற—உதயகிரியிற்றோன்றுகின்ற இளஞ்சூரியனைநிகர்த்த செந்நிறத்திருவுருவத்தையுடைய முருகக்கடவுள் இவற்றைத் திருவாய்மலர்ந்தருள, மன்றல் அம் தடம் தோள் வீரவாகு ஆம் தனி பேர் பெற்றான்—வாசனைபொருந்திய அழகிய விசாலித்தபுயங்களையுடைய வீரவாகுதேவர், நன்று என இசைந்து—நல்லதென்று சம்மதித்து, கந்தன் நாள் மலர் பாதம் போற்றி—முருகக்கடவுளது புதுமலர்போலுந் திருவடிகளைவணங்கி, கயிலை நீங்கி சென்றனன்—திருக்கைலாசமலையைநீங்கிப்போய், சின தகர் தேடலுற்றான்—கோபத்தினையுடைய ஆட்டுக்கடாவைத் தேடத்தொடங்கினார் எ—று.

இனைய-குறிப்புவினையாலணையும்பெயர். வீரவாகுவாந்தனிப்பேர்பெற்றான்-வீரவாகுவாகிய ஒப்பற்றபெயரைப்பெற்றவன். மலர் ஈண்டுத்தாமரை. (கக)

மண்டல நேமி சூழு மாநில முற்று நாடிக்
கண்டில னாகிச் சென்றேழ் பிலத்தினுங் காண கில்லா
னண்டர்தம் பதங்க ணாடி யயன்பத முன்ன தாகத்
தண்டளிர்ச் செக்கர் மேனித் தகர்செலுந் தன்மை கண்டான்.

இ—ள்: மண்டல நேமி சூழும் மா நிலம் முற்றும் நாடி கண்டிலன் ஆகி-வட்டவடிவாகிய சமுத்திரஞ்சூழ்ந்த பெரிய பூமிமுழுவதினுந்தேடிக்காணப்பெறாதவராய், ஏழ் பிலத்தினும் சென்று காணகில்லான்-ஏழுபாதலவுலகங்களினுஞ்சென்று (தேடிக்) காணப்பெறாதவராய், அண்டர்தம் பதங்கள் நாடி-தேவர்களது உலகங்களிலுந்தேடி (அங்குங்காணப்பெறாதவராய்), அயன்பதம் முன்னது ஆக—பிரமதேவரது உலகத்திற்குமுன்னாக, தண் தளிர் செக்கர் மேனி தகர் செலும் தன்மை கண்டான்—இளந்தளிர்போன்ற சிவந்தவடிவத்தினையுடைய ஆட்டுக்கடாப்போகுந்தன்மையைப் பார்த்தார் எ—று.

பிலத்தினும் என்பதிலும்மை முற்றேச்சம். (உ0)

ஆடலந் தொழின்மேல் கொண்டே யனைவரு மிரியச் செல்லு
மேடமஞ் சுறவே யார்த்து விரைந்துபோய் வீர வாகு
கோடவை பற்றி யீர்த்துக் கொண்டுராய்க் கயிலை நண்ணி
யேடுறு நீபத் தண்டா ரினையவன் முன்ன ருய்த்தான்.

இ—ள்: வீரவாகு—வீரவாகுதேவர், ஆடலம் தொழில் மேல் கொண்டு அனைவரும் இரிய செல்லும் மேடம் அஞ்சுற ஆர்த்து-போர்த்தொழிலைமேற்கொண்டு எல்லோரும் பயந்தோடும்படிநடக்கின்ற ஆட்டுக்கடாப்பயப்படும்படி ஆரவாரித்து, விரைந்து போய்—விரைவிற்கிட்டி, கோடு அவை பற்றி ஈர்த்து கொண்டு உராய் கயிலை நண்ணி— இருகொம்புகளையும் பிடித்திழுத்துக்கொண்டு அவ்விடத்தைநீங்கித் திருக்கைலாசமலையைப

ஆகி, எடு உறு நீப தண் தார் இளையவன் முன்னர் உய்த்தான்—இதழ்மிகுந்த குளிர்ந்த கடப்பமலர்மாலையையணிந்த குமாரக்கடவுளின் முன்விடுத்தார் எ—று.

கோடவை என்பதில் அவை பகுதிப்பொருள்விகுதி. (உக)

உய்த்தனன் வணங்கி நிற்ப வுளமகிழ்ந் தருளித் தேவர்
மெய்த்தவர் தொகையை நோக்கி யேழக மேவிற் றெம்பா
லெய்த்தினி வருந்து கில்லீர் யாருநீர் புவனி யேகி
முத்தழல் கொடுமுன் செய்த வேள்வியை முடித்தி ரென்றான்.

இ—ள்: உய்த்தனன் வணங்கிநிற்ப—(வீரவாகுதேவர் ஆட்டுக்கடாவை) முன் விடுத்து நமஸ்கரித்துநிற்க, உளம் மகிழ்ந்து அருளி—(குமாரக்கடவுள்) மனமகிழ்ந்தருளி, தேவர் மெய் தவர் தொகையை நோக்கி-தேவர்களதும் மெய்ம்மையாகிய தவத்தையுடையமுனிவர்களதும் கூட்டத்தைப்பார்த்து, ஏழகம் எம் பால் மேவிற்று- ஆட்டுக்கடா எம்மிடத்துவந்துசேர்ந்தது, நீர் யாரும் இனி எய்த்து வருந்துகில்லீர்— நீவிரனைவீரும் இனி மனஞ்சோர்ந்து வருந்தாதீர், புவனி ஏகி முத்தழல் கொடு முன் செய்த வேள்வியை முடித்திர் என்றான்— பூவுலகத்தையடைந்து மூன்றுவகையான அக்கினியைக்கொண்டு முன் செய்யத்தொடங்கிய யாகத்தை நிறைவேற்றுங்களென்று கட்டளைசெய்தார் எ—று.

வேடமாத்திரையானெழுகும் பொய்த்தவரைநீக்க 'மெய்த்தவர்' என்றார். முத்தழல் ஆகவனீயம் காருகபத்தியம் தக்ஷிணாக்கினியம் என்பன. இப்பிரிவுகள், இடவேறுபாட்டானும் மந்திரவேறுபாட்டானுஞ் செய்தொழில் வேறுபாட்டானுமாயினவென்க. ()

ஏர்தரு குமரப் புத்தே ளிவ்வகை யிசைப்ப வன்னோர்
கார்தரு கண்டத் தெந்தை காதல வேள்வித் தீயிற்
சேர்தரு தகரி னேற்றைச் சிறியரே முய்யு மாற்றா
லூர்திய தாகக் கொண்டே யூர்ந்திடல் வேண்டு மென்றார்.

இ—ள்: ஏர் தரு குமர புத்தேள் இ வகை இசைப்ப—அழகுபொருந்திய சுப்பிரமணியக்கடவுள் இவ்வாறு கூறியருள, அன்னோர்—அத்தேவர்முதலினோர் (அவரைநோக்கி), கார்தரு கண்டத்து எந்தை காதல—(நஞ்சுண்டமையாற்) கருநிறம்பொருந்திய திருமிடற்றையுடைய சிவபிரானது குமாரரே!, சிறியரேம் உய்யும் ஆற்றால்— சிறியேங்களுய்யும்வண்ணம், வேள்வித்தீயில் சேர்தரு தகரின் ஏற்றை ஊர்தியது ஆக கொண்டு—யாகாக்கினியிற்றோன்றிய ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டு, ஊர்ந்திடல் வேண்டும் என்றார்—நடாத்தியருளுதல்வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் எ—று.

சிவபிரான் நஞ்சையடக்கித்தம்மைக்காத்தவாறே கந்தவேளும் வேள்வித்தீயிற்றோன்றியடர்த்த ஆட்டுக்கடாவையடக்கிக் காத்தருளினரென்பதை யுள்ளிட்டமையின் 'கார்தருகண்டத்தெந்தைகாதல' எனவும், நமக்கூர்திவேண்டற்பாலதன்றாயினும் விடுப்பின் மீண்டுமெம்மையடர்க்குமாதலின் ஊர்தியாகக்கொண்டருளுதிரென்பார் 'சிறியரேமுய்யுமாற்றாலூர்தியதாகக்கொண்டேயூர்ந்திடல்வேண்டும்' எனவும் கூறினர். (உரு)

என்னலுந் தகரை யற்றே யானமாக் கொள்வம் பார்மேன்
முன்னிய மகத்தை நீவிர் முடித்திரென் றருள யார்க்கு
நன்னய மாடல் செய்யு நாரதன் முதலோர் யாரு
மன்னதோர் குமர னெந்தை யடிபணிந் தருளாற் போந்தார்.

இ—ள்: என்னலும்— என்று பிரார்த்தித்தலும், தகரை அற்றே யானம் ஆகொள்வம்—(சுப்பிரமணியக்கடவுள் அவர்களைநோக்கி) ஆட்டுக்கடாவை நீவிர்கூறியவாறே வாகனமாகக்கொள்வோம், பார்மேல்—பூவுலகத்தில், நீவிர் முன்னிய மகத்தை முடித்திர் கான்று அருள—நீவிர் செய்யக்கருதியயாகத்தை நிறைவேற்றுதிரென்று கருணைபுரிய, யார்க்கும் நல் நயம் ஆடல் செய்யும் நாரதன் முதலோர் யாரும்—எவர்க்கும் நல்லநீதிமொழிகளைச்சொல்லுகின்ற நாரதர்முதலாயினோரனைவரும், அன்னது ஓர் குமரன் எந்தை அடி பணிந்து—அந்தக்குமரக்கடவுளது பாதங்களைவணங்கி, அருளால் போந்தார்— அவர் விடைகொடுத்தருளியவாறே சென்றூர்கள் எ—று.

அற்று-அகரச்சுட்டடியாய்ப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். கொள்வம்-தனித்தன்மைப்பன்மை; உயர்வுதோன்றநின்றது. ஆடல்செய்தல்-சொல்லுதல். திரிலோகசஞ்சாரியாய்ஆங்காங்குள்ளார்க்கு வேண்டியநன்மைகளைக்கூறுதலின் 'யார்க்குநன்னயமாடல்செய்யுநாரதன்' என்றூர். (உச)

நவையில்சீர் முனிவர் தேவர் நயப்பநா ரதனென் றுள்ளோன்
புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன் முன்னர் வேள்வி
யவர்புரி தவத்தி னீரா லன்றுதொட் டமல மூர்த்தி
யுவகையா லனைய மேட மூர்ந்தன னூர்தி யாக.

இ—ள்: நவை இல் சீர் முனிவர் தேவர் நயப்ப—குற்றமில்லாத சிறப்பினையுடைய முனிவர்களுந் தேவர்களும் விரும்ப, நாரதன் என்று உள்ளோன்—நாரதனென்றுபெயர்பெற்றமுனிவர், புவிதனில் வந்து-பூமியிற்சென்று, முன்னர் வேள்வி முற்ற புரிந்தனன்—முன்செய்யத்தொடங்கிய யாகத்தைநிறைவேற்றினூர், அவர் புரி தவத்தின் நீரால்-அந்த முனிவர்களுந்தேவர்களுமியற்றிய தவத்தின்விசேடத்தால், அன்று தொட்டு-அன்றுமுதலாக, அமல மூர்த்தி-மலரகிதராகிய குமாரக்கடவுள், உவகையால்-மகிழ்ச்சியோடும், அனையமேடம் ஊர்தியாக ஊர்ந்தனன்— அந்த ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டு நடாத்தியருளினூர் எ—று. (உரு)

தகரேறுபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் கஉ0ச.

---

# அயவணச்சிறைபுரிபடலம்.

குமாரக்கடவுள் பிரமதேவரைச் சிறைசெய்தசரித்திரத்தைக்கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

ஒருகாலத்திற் பிரமாமுதலியதேவரனைவருந் திருக்கைலாசமலையிற்போய்ச் சிவபிரானைத்தரிசித்து மீண்டுசெல்லும்போது, பிரமதேவர் அங்கிருந்த முருகக்கடவுளை மதியாது சென்றனர். அதுகண்ட முருகக்கடவுள் அவருக்கு நல்லுணர்வுவருவிக்கநினைந்து, பிரணவப்பொருளைவினவி, அவர் விடைகூறலாற்றுது மயங்க 'நீ பிரணவப்பொருளையறியாது படைப்புத்தொழில்செய்வதெங்ஙனம்' என்றுகூறித் தலையிற்குட்டிச் சிறையிட்டுத் தாமே படைப்புத்தொழிலைநடாத்தினர் என்பதாம்.

மேடமூர்தி யாகவுய்த்து விண்ணுமண்ணு முருகவே
ளாடல்செய் துலாவிவெள்ளி யசலமீதி லமர்தரு
நீடுநாளி லொருபகற்க ணெறிகொள்வேதன் முதலினோர்
நாடியீச னடிவணங்க வவ்வரைக்க ணண்ணினார்.

இ—ள்: முருகவேள்—குமாரக்கடவுள், மேடம் ஊர்தி ஆக உய்த்து— ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டுநடத்தி, விண்ணும் மண்ணும் ஆடல் செய்து உலாவி—ஆகாயவுலகத்திலும் பூவுலகத்திலுந் திருவிளையாடல்செய்துலாவி, வெள்ளி அசலம் மீதில் அமர்தரும் நீடு நாளில்— திருக்கைலாசமலையில்வீற்றிருந்த பலநாட்களில், ஒரு பகற்கண்-ஒருநாள், நெறி கொள் வேதன் முதலினோர்—நல்லொழுக்கத்தையுடைய பிரமாமுதலியதேவர்கள், ஈசன் அடி வணங்க நாடி— சிவபிரானதுபாதங்களை வணங்குமாறுகருதி, அ வரைக்கண் நண்ணினார்—அத்திருக்கைலாசமலையில் வந்தார்கள் எ—று.

விண்ணுமண்ணும் உய்த்து என இயைப்பினுமாம். (க)

எனதியா னெனுஞ்செருக் கிகந்துதன் னுணர்ந்துளார்
மனதிகொண்ட செய்கைதாங்கி மரபின்முத்தி வழிதரு
மனதியீச னடிவணங்கி யருளடைந்து மற்றவன்
றனதுமன்ற நீங்கிவாயில் சாருகின்ற வேலையில்.

இ—ள்: எனது யான் எனும் செருக்கு இகந்து— என்னுடையதென்றும் யானென்றும் எண்ணுதற்கேதுவாகியமயக்கத்தை(நல்லாசிரியர்பாற்பெற்ற உறுதிமொழியானும் யோகப்பயிற்சியானும்) ஒழித்து, தன் உணர்ந்து உளார் மன ஆதி கொண்ட செய்கை தாங்கி- தன்னையுணர்ந்தவர்களாகிய தத்துவஞானிகளுடைய மனமுதலிய கருவிகள்நடாத்துந்தொழிலை (அவர்தொழிலாக்காது தந்தொழிலாக) ஏற்றுக்கொண்டு, மரபில் முத்தி வழி தரும் அனாதி ஈசன் அடி வணங்கி-முறைப்படி(அவர்களுக்கு)மோக்ஷநெறியைக்கொடுத்தருளுகின்ற அநாதிகடவுளாகிய சிவபிரானது பாதங்களைப்பணிந்து, அருள் அடைந்து— அவரது கருணையைப்பெற்று, அவன் தனது மன்றம் நீங்கி— அச்சிவபிரான் வீற்றிருக்கின்ற சபாமண்டபத்தைநீங்கி, வாயில் சாருகின்ற வேலையில்—வாயிலையடைகின்றபொழுது எ—று.

எனது என்பதில் ஆது ஆறனுருபு. என்றுகருதுதற்கேதுவாகிய செருக்கை 'எனுஞ்செருக்கு' என்றது காரணகாரிய உபசாரம். எனதென்னுஞ் செருக்கைமமகாரம் புறப்பற்று எனவும், யானென்னுஞ்செருக்கை அகங்காரம் அகப்பற்று எனவும் வழங்குவர். தானெனச்சுட்டியது பதியை; ஆன்மாவையெனினுமாம். மனஸ் ஆதி என்னும் வடசொற்கள், தமிழில், மனதி என விகாரப்பட்டுத்தொடர்ந்து வழங்கின. இல்வாய் என்பது முன்பின்னாகமாறி வாயிலென நின்றது. இதனை இலக்கணப்போலியென்பர். இல்லினது முன்னிடமென்பதுபொருள்.

தன்னுடையையில்லாதபொருளைத் தனதென்றும் தானல்லாத உடம்பைத் தானென்றும்மயங்கினார்க்குப் பதியையுணர்தல்கூடாமையின் 'எனதியானெனுஞ்செருக்கிகந்துதன்னுணர்ந்துளார்' எனவும், அங்ஙனமுணர்ந்தாருடைய மனமொழிமெய்கள் செயுஞ்செயல்கள் பாசவறிவால் விளையாதிருத்தலின் அவற்றைத் தஞ்செயலெனச்சிவபிரான் ஏற்றுக்கொள்கின்றாரென்பார் 'மனதிகொண்டசெய்கைதாங்கி' எனவும், அவ்வடியாரதுபரிபாகத்திற்கேற்பக் குருலிங்கசங்கம வடிவுகளுளியைந்தவடிவுடனெழுந்தருளி முத்திகொடுப்பவரென்பார் 'மரபின்முத்திநெறிதரும்-ஈசன்' எனவும், தமக்கோர் முதலின்றித்தாமே முழுமுதலாய்நிற்பவரென்பார் 'அனாதியீசன்' எனவும் கூறினார். அகங்காரமமகாரங்களை யொழித்தார்க்கே முத்திசித்திக்குமென்பதை "யானெனதென்னுஞ் செருக்கறுப்பா

ன்வானோர்க்-குயர்ந்தவுலகம்புகும்" என்னுந்திருக்குறளானும், மெய்ஞ்ஞானியர்களது திரிகரணச்செயல்களைச் சிவபிரான் தஞ்செயலாகவேற்றுக்கொள்வரென்பதை "சிவனுமிவன் செய்தியெலாமென்செய்தியென்றுஞ்செய்தமெதனக்கிவனுக்குச்செய்தமெதன்றும்- பவமகலவுடனாகிநின்றுகொள்வன்" என்னுஞ்சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுமுணர்க. (௨)

ஒன்பதோ டிலக்கமான வனிகவீர ருண்மகிழ்ந்
தன்பினோடு சூழ்ந்துபோற்ற வமலனம்பொ னாலய
முன்புநீடு கோபுரத்துண் முழுமணித் தலத்தின்மே
லின்பொடாடி வைகினா னிராறுதோள் படைத்துளான்.

இ—ள்: ஒன்பதோடு இலக்கம் ஆன அனிக வீரர் உள் மகிழ்ந்து அன்பினோடு போற்றிசெய்ய—இலக்கத்தொன்பது சேனாவீரர்களும் மனமுவந்து அன்பினுடன்றுதிசெய்ய, அமலன் அம் பொன் ஆலய முன்பு நீடு கோபுரத்துள் முழுமணி தலத்தின் மேல்-சிவபிரானது செம்பொன்னாலாகிய திருக்கோயிலின்முன்னாக நீண்டிருக்குங் கோபுரவாயிலின்கண்ணே அமைக்கப்பட்டுள்ள மாணிக்கநிலத்தின்மேல், இன்பொடு ஆடி வைகினான்—ஆனந்தத்துடன் திருவிளையாடல்செய்திருந்தார், இராறு தோள் படைத்து உளான்—பன்னிரண்டு திருப்புயங்களைப்பொருந்தியுள்ள முருகக்கடவுள் எ—று.

முழுமணி-மாணிக்கம். போற்ற வைகினான் என இயையும். (௩)

அங்கண்வைகு முருகனம்ப னடிவணங்கி வந்திடும்
புங்கவர்க்கு ளாதியாய போதினானை நோக்குறா
விங்குநம்முன் வருதியா லெனாவிளிப்ப வேகியே
பங்கயா சனத்தினான் பணிந்திடாது தொழுதலும்.

இ—ள்: அங்கண் வைகும் முருகன்—அவ்விடத்தெழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுள், நம்பன் அடி வணங்கி வந்திடும் புங்கவர்க்குள் ஆதி ஆய போதினானை நோக்குறா—சிவபிரானது திருவடிகளை நமஸ்கரித்து வெளியேவருகின்ற தேவர்களுட்சிறந்தவராகிய பிரமதேவரைப்பார்த்து, இங்கு நம் முன் வருதி எனா விளிப்ப—இவ்விடத்து எமக்குமுன்னேவருவாயாக என்று அழைக்க, பங்கய ஆசனத்தினான்—தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவர், ஏகி—முன்சென்று, பணிந்திடாது தொழுதலும்- அக்குமாரக்கடவுளை வணங்காது கைதொழுதல்மாத்திரஞ்செய்துநிற்ப எ—று.

பங்கயாசனம் வடநூன்முடிபு. (௪)

ஆதிதேவ னருளுமைந்த னவனுளத்தை நோக்கியே
போதனை யிருக்கெனாப் புகன்றிருத்தி வைகலு
மேதுநீ புரிந்திடு மியற்கையென்ன நான்முக
னாதனாணை யாலனைத்து நான்படைப்ப னென்றனன்.

இ—ள்: ஆதிதேவன் அருளும் மைந்தன்— முதற்கடவுளாகிய சிவபிரான்பெற்ற திருக்குமாரராகிய முருகக்கடவுள், அவன் உளத்தை நோக்கி— அந்தப்பிரமதேவரது மனச்செருக்கையுணர்ந்து, போதனை இருக்க எனா புகன்று இருத்தி— பிரமனே! இருப்பாயாகவென்றுசொல்லி இருக்கச்செய்து, நீ வைகலும் புரிந்திடும் இயற்கை ஏது என்ன- நீ தினந்தோறுஞ்செய்யுந்தொழில் யாதென்று வினாவ, நான்முகன்—(அதுகேட்ட)பிரமதேவர், நாதன் ஆணையால் அனைத்தும் நான் படைப்பன் என்றனன்— சிவபிரானது ஆஞ்ஞையினால் எல்லாப்பொருள்களையும் யான்சிருட்டிப்பேனென்று விடைகூறினார் எ-று.

உளம்- ஆகுபெயர். இருக்க என்னும் வியங்கோள் ஈற்றகரம் தொக்கது. ஈாதனை யாற் படைப்பனெனவே சிவனையுங்குமாரக்கடவுளையும்பேதமாகப் பிரமதேவர்மதித் தனரென்பது பெறப்பட்டது. (ரு)

வேறு.

முருக வேளது கேட்டலு முறுவல்செய் தருளித்
தரணி வானுயிர் முழுவதுந் தருதியே யென்னிற்
சுருதி யாவையும் போகுமோ மொழிகெனத் தொல்சீர்ப்
பிரம னென்பவ னித்திறம் பேசுத லுற்றான்.

இ—ள்: முருகவேள் அது கேட்டலும் முறுவல் செய்து அருளி-குமாரக்கடவுள் அவ்வார்த்தையைக்கேட்டவுடன் குறுநகைசெய்தருளி, தரணி வான் உயிர் முழுவதும் தருதியே என்னில்—(பிரமனே! நீ)பூவுலகத்திலும் ஆகாயவுலகத்திலுமுள்ளஆன்மாக்களை யெல்லாம் படைப்பாயேயானால், சுருதி யாவையும் போகுமோ— வேதங்களெல்லாந் தெரியவருமா? மொழிக என—சொல்வாயென்று கூறியருள, தொல் சீர் பிரமன் என்ப வன் இ திறம் பேசுதல் உற்றான்—பழையசிறப்பினையுடைய பிரமதேவர் இவ்வாறு சொல் லத்தொடங்கினார் எ—று.

பிரமனது அறிவின்மையைக்கருதி, அவரை அவமதித்தல்காரணமாக நகைசெ ய்தனர். ஏ தேற்றம். மொழிகஎன்னும்வியங்கோளீற்றகரம் தொக்கது. என்பவன்-எழுவா ய்வேற்றுமைச்சொல்லுருபு. (சு)

ஐய கேளினி யாதிகா லந்தனி லளித்த
மைய லாவரு களத்தின னளப்பிலா மறைகள்
செய்ய வாகமம் பற்பல புரிந்ததிற் சிலயா
னுய்யு மாறருள் செய்தன னவையுணர்ந் துடையேன்.

இ—ள்: ஐய கேள்—தலைவரே! யான்சொல்வதைக்கேட்டருள்க, இனி ஆதி காலம் தனில் அளித்த மை உலாவரு களத்தினன்—என்னைமுற்காலத்திற் படைத்தருளி ய கருமையார்ந்த கண்டத்தையுடைய சிவபிரான், அளப்பு இலா மறைகள் செய்ய ஆகமம் பற்பல புரிந்து—அளவில்லாத வேதங்களையுஞ் சிறந்த மிகப்பலவாகிய ஆகமங்களையுங் கூ றி, அதில் சில யான் உய்யுமாறு அருள்செய்தனன்—அவற்றுட்சிலவற்றை நான் ஈடேறு ம்படி அருளிச்செய்தார், அவை உணர்ந்து உடையேன்— அவற்றை அறிந்துள்ளேன் எ—று.

ஆதிகாலம்-சிருட்டியாரம்பகாலம். 'அவையுணர்ந்துடையேன்' எனக்கூறியத னாலும் பிரமதேவரது அகந்தைதோன்றிற்று. (எ)

என்று நான்முக னிசைத்தலு மவற்றினு ளிருக்கா
மொன்று நீவிளம் புதியென முருகவே ளுரைப்ப
நன்றெ னாமறை யெவற்றிற்கு மாதியி னவில்வா
னின்ற தோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்.

இ—ள்: என்று நான்முகன் இசைத்தலும்—இவ்வாறு பிரமதேவர்கூறியவுட ன், முருகவேள்—குமாரக்கடவுள், அவற்றினுள் இருக்கு ஆம் ஒன்று நீ விளம்புதி என உரைப்ப—அவ்வேதங்களுள் ஒரு இருக்கை நீ சொல்லுதியென்றுகூற, நன்று எனா— அது நன்றென்றுடன்பட்டு, மறை எவற்றிற்கும் ஆதியில் நவில்வான் நின்றது ஓர் தனி மொ ழியை—வேதங்களெல்லாவற்றிற்கும் முதலிற்சொல்லவேண்டி நின்றதாகிய ஒப்பற்ற த னிமொழியாகிய பிரணவத்தை, நெறியால்—முறைப்படி, முன் ஓதினன்—முதலிற்கூறி னார் எ—று.

விதிப்படியமைந்த அக்ஷரசங்கியையையும்பாதங்களையுமுடையதாய்ப்பொருண்முடிவுபெறும் வேதமந்திரங்களை இருக்கெனவழங்குப. 'மறையெவற்றிற்குமாதியினவிவ்வானின்றது' என்றதனால், பிரணவம் அனைத்திற்குமுதலாஞ்சிறப்புடைத்தென்பதும், அதுபற்றியே அதனைமுதலிற்கூறும்நியதி உண்டாயிற்றென்பதும் பெறப்படும். நெறி-சுரமுறைக்கேற்ப உச்சரித்தல். அது சந்தோகபரிசிட்டமுதலிய நூல்களிற் கூறப்பட்டுளது; ஈண்டு விரிப்பிற்பெருகும். பிரணவத்தின் விசேடத்தை, "ப்ரணவாத்யாஸ்ஸர்வே மந்த்ராஶ்சதுர்வர்க்கப்ரதாயகா:। ததா ப்ரணவஸம்பூதாஸ் ததோ லயமுபாகதா:॥ [பிரணவமுதலாக உச்சரிக்கப்படும் மந்திரங்கள் நால்வகைப் புருஷார்த்தங்களையுங்கொடுக்கும். பிரணவத்தினின்றே எல்லாந்தோன்றின. அங்ஙனந்தோன்றியயாவும் மீட்டும் அப்பிரணவத்திற்றனே யொடுங்குகின்றன]" எனவும், "ஓங்கார: பரம்ப்ரஹ்மஸர்வமந்த்ரைகநாயக:। [பிரணவம் பரப்பிரமசொரூபமாயும் எல்லாமந்திரங்கட்கும் நாயகமாயும் உள்ளது]" எனவும்,பிராமணசர்வஸ்வத்திற்கூறப்பட்டது. யாஞ்ஞவற்கியரும், "யதா பர்ணம் பலாஶஸ்ய ஶங்குனைகேன தார்யதே। ததா ஜகதிதம் ஸர்வமோங்காரேணைவ தார்யதே॥ [பெரிய பலாசமிலைகள் ஓர்காம்பிற்றங்கியிருத்தல்போல இவ்வுலகமுழுதும் பிரணவமந்திரத்திற்றங்கியிருக்கின்றது]" எனவும், "ப்ரணவாத்யாஸ்ததா வேதா: ப்ரணவே பர்யவஸ்திதா:। வாங்மயம் ப்ரணவம் ஸர்வம் தஸ்மாத் ப்ரணவமப்யஸேத்॥ [வேதங்களெல்லாம் பிரணவத்தைமுதலிலுடையனவாய் அப்பிரணவத்தினின்றே தோன்றின. ஒலிவடிவாயிருப்பனவெல்லாம் பிரணவரூபத்தடங்கியவேயாம். ஆதலாற்பிரணவத்தை உச்சரிக்கக்கடவன்]" எனவுங் கூறியுள்ளார். அதனைமுதலிற்கூறும்நியதியை, "ஸர்வேஷாமேவ மந்த்ராணாமாதாவந்தே ச ஸர்வதா। ஓங்காரோ யத்ர நியதோ தத்ர ஶாந்திர்ன ஸம்ஶய:॥ [மந்திரங்களை உச்சரிக்கும்பொழுது ஆதியிலும் அந்தத்திலும் பிரணவமுச்சரித்தவழியே அமைதிபெறுகின்றது]" என யாஞ்ஞவற்கியரும், "யதோங்காரஸ்ஸமாரப்த: ஸ மந்த்ரோ வஜ்ரஸம்மித:। தஸ்மாதோங்காரமுச்சார்ய மந்த்ராரம்பம் ஸமாசரேத்॥ [பிரணவத்தையுச்சரிக்காது தொடங்கப்பட்டமந்திரம் வச்சிராயுதமாகும். ஆதலின் அதற்கஞ்சிப்பிரணவத்தைமுதலிலுச்சரிக்கவேண்டும்]" எனச்சந்தோகபரிசிட்டத்தாரும், "ஓங்காரம் ஸ்வர்கத்வாரம் தஸ்மாத் ஸர்வேஷு கர்மஸு ஆதௌ ப்ரயுஞ்ஜீத [பிரணவம் மோக்ஷத்துக்கு வாயிலாம் ஆதலின் எல்லாக்கருமங்களிலும் அதனை முதலிற்பிரயோகிக்கவேண்டும்]" என வியாசரும் கூறியுள்ளார். இன்னோரன்னகருத்துகள் பல உபநிடத்துக்களிலுங் காணப்படுகின்றன. ஈண்டு விரிவஞ்சிவிடப்பட்டன. (அ)

தாமரைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாமறைத்தலை யெடுத்தனன் பகர்தலும் வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவே ணிற்றிமுன் கழறு
மோமெனப்படு மொழிப்பொரு ளியம்புகென் றுரைத்தான்.

இ—ள்: தாமரை தலை இருந்தவன்—தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவர், குடிலை முன் சாற்றி—பிரணவமந்திரத்தை முதலிலுச்சரித்து, மா மறை தலை எடுத்தனன் பகர்தலும்—சிறந்த வேதமந்திரத்தின் முதலைச்சொல்லத்தொடங்குதலும், வரம்பு இல் காமர் பெற்று உடை குமரவேள்—அளவிடப்படாத அழகைப்பெற்றுள்ள குமாரக்கடவுள், நிற்றி—(பிரமனே!) அவ்வளவில்நிற்பாய், முன் கழறும் ஓம் என படு

ம் மொழி பொருள் இயம்புக என்று உரைத்தான்—முதலிலுச்சரித்த ஓம் என்னும் பிரணவமந்திரத்தின்பொருளைக் கூறுதியென்று வினவினர் எ—று. (க)

முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருக
னகைத்து முன்னெழுத் தினுக்குரை பொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
திகைத்தி ருந்தனன் கண்டில னப்பொருட் டிறனே.

இ—ள்: முகத்தில் ஒன்று அது ஆ அ எழுத்து உடையது ஓர் முருகன்—ஆறு திருமுகங்களுள் ஒன்றாக அந்தப்பிரணவாக்ஷரத்தையுடைய குமாரக்கடவுள், நகைத்து—குறுநகைசெய்து, முன் எழுத்தினுக்கு பொருள் உரை என நவில—முதலிற்கூறிய எழுத்திற்குப்பொருளைச் சொல்லுதியென்றுவினவ, மிகைத்த கண்களை விழித்தனன்— மிகுதியாயுள்ள கண்களை (மருட்சியினால்) மலர்த்தி, வெள்கினன்-வெட்கங்கொண்டு, விக்கி—விக்கலுற்று, திகைத்து இருந்தனன்—பிரமித்திருந்தார், அ பொருள் திறன் கண்டிலன்—அப்பிரணவத்தின்பொருட்பகுப்பை அறிந்திலார் எ—று.

பிரணவப்பொருளை வேறுபாடாகக்கூறினரெனமுதனூலிற்கூறப்பட்டது. நான்குமுகங்களினும் எட்டுக்கண்களுளவாதலின் 'மிகைத்தகண்கள்'என்றார். விக்கல்-நாவெழாமை. விழித்தனன் வெள்கினன்-முற்றெச்சங்கள். பிரணவமந்திரமாகிய ஓரெழுத்தும் பஞ்சாக்ஷரமாகிய ஐந்தெழுத்தும் ஆக ஆறெழுத்துக்களும் முருகக்கடவுளுக்கு ஆறுமுகங்களாதலின் 'முகத்திலொன்றதாவவ்வெழுத்துடையதோர்முருகன்' என்றார். மேல் மகேந்திரகாண்டத்தும் 'ஓமெனப்படுங்குடிலையேயொப்பிலாமுருகன்- மாமுகத்துளொன்றாம்' என்றார். (௧0)

ஈசன் மேவரு பீடமா யேனையோர் தோற்றும்
வாச மாயெலா வெழுத்திற்கு மறைகட்கு முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறு
மாசி றாரகப் பிரமமா மதன்பய னாய்ந்தான்.

இ—ள்: ஈசன் மேவரு பீடம் ஆய்—சிவபிரானெழுந்தருளியிருக்கின்ற ஆசனமாய், ஏனையோர் தோற்றும் வாசம் ஆய்-மற்றையதேவர்கள் உதிக்கும் இடமாய், எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதல் ஆய்—எல்லா எழுத்துக்களுக்கும் வேதங்களுக்கும் முன்னதாகி, காசி தன் இடை முடிபவர்க்கு எம் பிரான் கழறும்—காசிப்பதியிலிறப்பவர்களுக்கு எங்கள்கடவுளாகிய சிவபிரான் உபதேசிக்கின்ற, மாசு இல் தாரக பிரமம் ஆம் அதன் பயன் ஆய்ந்தான்-குற்றமற்ற தாரகப்பிரமமாகிய அப்பிரணவத்தின்பொருளை (யாதென்று) ஆலோசித்தார் எ—று.

இச்செய்யுளிற் பிரணவத்திற்குக்கூறிய மகத்துவங்கள், முன்னர் எட்டாஞ்செய்யுளுரையானும்போதரும். சிவபிரான் காசியிலிறப்பார்க்குக்காதிற் பிரணவமந்திரமுச்சரித்து முத்திகொடுப்பரென்பதைக் காசிமான்மியத்திற்காண்க. (கக)

தெருள தாகிய குடிலையைச் செப்புத லன்றிப்
பொருள றிந்தில னென்செய்வான் கண்ணுதற் புனித
னருளி னலது முன்னரே பெற்றில னதனா
மருளு கின்றனன் யாரதன் பொருளினை வகுப்பார்.

இ—ள்: தெருளது ஆகிய குடிலையை செப்புதல் அன்றி—ஞானமயமாகிய பிரணவமந்திரத்தை உச்சரிப்பதுமாத்திரமேயன்றி, பொருள் அறிந்திலன்- அதன்பொருளை

ப்(பிரமதேவர்) அறிந்திலார், என்செய்வான்—யாதுசெய்வார், கண் நுதல் புனிதன் அருளினால் அது பெற்றிலன்—நெற்றிக்கண்ணையுடைய பரிசுத்தராகிய சிவபிரானது கருணையினால் அப்பொருளை (முற்காலத்தில்) அறிந்திலார், அதனால் மருளுகின்றனன்-அக்காரணத்தால் மயங்குகின்றார், அதன் பொருளினை வகுப்பார் யார்—அதன்பொருளைக் கூற வல்லார் யாவர்? (எவருமில்லை) எ—று. (கஉ)

தூம றைக்கெலா மாதியு மந்தமுஞ் சொல்லு
மோமெ னப்படு மோரெழுத் துண்மையை யுணரான்
மாம லர்ப்பெருங் கடவுளு மயங்கினா னென்றா
லாமி னிச்சில வறிந்தன மென்பது நகையே.

இ—ள்: மா மலர் பெரும் கடவுளும்— சிறந்த தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பெரிய பிரமதேவரும், தூ மறைக்கு எலாம் ஆதியும் அந்தமும் சொல்லும் ஓம் என படும் ஓர் எழுத்து உண்மையை உணரான்—பரிசுத்தமான வேதங்களெல்லாவற்றிற்கும் முதலிலுமுடிவிலும் உச்சரிக்கப்படுகின்ற ஓம் என்னும் ஒருஎழுத்தினது மெய்ப்பொருளை அறியாதவராய், மயங்கினான் என்றால்—திகைத்தாரென்றால், இனி—மேல், நாம் சில அறிந்தனம் என்பது நகை— நாங்கள் சிலவற்றை அறிந்துள்ளோமென்பது சிரிப்புக்கேதுவேயாம் எ—று.

பின்னைய உம்மை சிறப்பு. ஏ-தேற்றம். நகைக்கேதுவை நகையென்றது காரணகாரிய உபசாரம். (கங)

எட்டொ டாறுதவக் குடிலையிற் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலு மிதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வ தித்தன்மைய தோவெனாச் செவ்வேள்
குட்டி னானய னான்குமா முடிகளுங் குலுங்க.

இ—ள்: எட்ட ஒடு ஆறுதவ குடிலையின் பயன் இனைத்து என்று கட்டுரைத்திலன் மயங்கலும்-ஆராய்ந்தறியமுடியாத அந்தப்பிரணவத்தின்பொருளை இன்னதென்று நிச்சயித்துக் கூறலாற்றாதவராய்ப்(பிரமதேவர்) மயங்குதலும், இதன் பொருள் கருதாய்-(பிரமனே!நீ) இப்பிரணவத்தின்பொருளை ஆராய்ந்திலாய், சிட்டி செய்வது இத்தன்மையதோ எனா-படைத்தற்றொழிலை நடாத்துவதும் இப்படித்தானோ? என்றுகூறி, செவ்வேள்—குமாரக்கடவுள், அயன் நான்கு மா முடிகளும் குலுங்க குட்டினான்—பிரமதேவரது பெரிய நான்குதலைகளுங்குலுங்கும்படி குட்டினார் எ—று.

எட்டு ஒடு ஆறு எனச்சொல்வகுப்பினுமாம். எச்சவும்மைதொக்கது. சிட்டிசெய்வதித்தன்மையதோ எனப்பாடங்கொள்ளின், கருதாய் என்பதை வினையாலணையும்பெயராக்கி எச்சவும்மைவருவிக்காது பொருளுரைக்க. (கச)

மறைபு ரிந்திடுஞ் சிவனருண் மதலைமா மலர்மே
லுறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினா லுதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன ரைக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்.

இ—ள்: மறை புரிந்திடும் சிவன் அருள் மதலை—வேதங்களையருளிச்செய்த சிவகுமாரராகிய முருகக்கடவுள், மா மலர் மேல் உறை புரிந்தவன் வீழ்தர பதத்தினால் உதைத்து—சிறந்த தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவர்விழும்படி தமதுகால்களாலுதைத்து, நிறை புரிந்திடு பரிசனரை கொடே—கூட்ட மாகிய தன் பரிவா

ரத்தவர்களைக்கொண்டு, கந்தமாம் சிலம்பில்—கந்தவெற்பில், நிகள சிறை புரிந்திடுவித்த னன்—விலங்கினையுடைய சிறையில்வைப்பித்தார் எ—று.

மறைபுரிந்திடும் என்பதற்கு 'வேதங்களால்விரும்பிப்புகழப்படுகின்ற' எனினுமாம்.

அல்லி மாமலர்ப் பண்ணவன் றனையருஞ் சிறையில்
வல்லி பூட்டுவித் தியாவையும் புரிதர வல்லோ
னெல்லை தீர்தரு கந்தமால் வரைதனி லேகிப்
பல்லு யிர்த்தொகை படைப்பது நினைந்தனன் பரிவால்.

இ—ள்: யாவையும் புரிதர வல்லோன்— எல்லாத்தொழில்களையுஞ்செய்யவல்லவராகிய முருகக்கடவுள், அல்லி மா மலர் பண்ணவன் தனை அரும் சிறையில் வல்லி பூட்டுவித்து—அகவிதழ்பொருந்திய சிறந்த தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரைஅருமையாகிய சிறையில் விலங்குபூட்டிவைப்பித்து, எல்லை தீர்தரு மால் கந்தவரை தனில் ஏகி—அளவிடப்படாத பெரிய கந்தவெற்பின்கட்போய், பரிவால்—கிருபையோடும், பல் உயிர் தொகை படைப்பது நினைந்தனன்—பல ஆன்மவர்க்கங்களையுஞ்சிருட்டிக்க நினைத்தார் எ—று.

கடுஞ்சிறையென்பார் 'அருஞ்சிறை' எனவும், மிக உயர்ந்தமலையென்பார் 'எல்லைதீர்தருவரை' எனவும், எல்லாத்தொழில்களையுந் தனியேசெய்யவல்லார்க்கு 'இத்தொழில்செய்தற்கட் பெருமுயற்சிவேண்டற்பாற்றன்றென்பதுதோன்ற 'யாவையும்புரிதரவல்லோன்-படைப்பதுநினைந்தனன்' எனவும் கூறினர். (கசு)

ஒருக ரந்தனிற் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனிற் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம்பொருண் மகனோர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்.

இ—ள்: பரம்பொருள் மகன்- சிவபிரானது குமாரராகிய முருகக்கடவுள், தன் ஒரு கரம் தனில் கண்டிகை வடம் பரித்து- தமது ஒருதிருக்கரத்தில் உருத்திராக்கமாலையைத்தாங்கி, ஒரு கரதலம் தனில் குண்டிகை தரித்து— ஒரு திருக்கரத்திற் கமண்டலத்தைத்தாங்கி, இரு கரங்கள் வரதமோடு அபயம் தர— மற்றைய இருதிருக்கரங்களும் வரதமுத்திரையையும் அபயமுத்திரையையுங்காட்ட, ஓர் திருமுகம் கொடு—ஒரு திருவதனத்தைக்கொண்டு, சதுர்முகன் போல் விதிசெய்தான்—பிரமதேவரைப்போலப் படைத்தற்றொழிலையியற்றினர் எ—று.

ஒருதிருமுகமும் நான்குதிருக்கரங்களுமமைந்தவடிவத்துடனிருந்து படைத்தற்றொழினடாத்தினரென்பது கருத்து. வலப்பால் மேற்கரத்திற் கண்டிகையும், இடப்பால் மேற்கரத்திற் குண்டிகையும், வலப்பாற்கீழ்க்கரத்தில் அபயமுத்திரையும், இடப்பாற்கீழ்க்கரத்தில் வரதமுத்திரையும் எனவறிக. வரதமுத்திரையாவது:— உள்ளங்கை வெளித்தோன்றுமாறு கையைவிரித்து விரல்களைக்கீழ்நோக்கும்படிவைத்திருக்குநிலை. இது, தம் திருவடியைச்சுட்டிக்காட்டி, 'இத்திருவடியை யாவருஞ்சேவித்து வேண்டியவற்றைப்பெறுங்கள்' எனக்குறிக்கும் அடையாளம். அபயமுத்திரையாவது:—கையைவிரித்து விரல்களை மேனோக்கும்படிவைத்திருக்குநிலை. இது, அடியார்களை அஞ்சாதீர்களெனக்குறிக்கும் அடையாளம். (கஎ)

உயிரி னுக்குயி ராகியே பரஞ்சுட ரொளியாய்
வியன்ம றைத்தொகைக் கிறதாய் விதிமுத லுரைக்குஞ்

செயலி னுக்கெலா மாதியாய் வைகிய செவ்வே
ளயனெ னப்படைக் கின்றது மற்புத மாமோ.

இ—ள்: உயிரினுக்கு உயிர் ஆகி—ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாய், பரம் சுடர் ஒளி ஆய்—எவ்வொளிகளினுஞ்சிறந்த சோதிப்பிழம்பாய், வியல் மறை தொகைக்கு ஈறது ஆய்—பெரிய வேதக்கூட்டங்களுக்கு முடிவாகி, விதி முதல் உரைக்கும் செயலினுக்கு எலாம் ஆதி ஆய்—படைத்தல்முதலாகச்சொல்லப்படுகின்ற தொழில்களுக்கெல்லாம் மூலமாய், வைகிய செவ்வேள்—வீற்றிருக்கின்ற முருகக்கடவுள், அயன் என படைக்கின்றதும் அற்புதம் ஆமோ—பிரமதேவர்போலச் சிருட்டிப்பதும் ஓரதிசயமாகுமா (ஆகாதே) எ—று.

முழுமுதற்கடவுளாகிய முருகவேட்குப் படைத்தற்றொழில் மிக எளிதாமென்பதுகருத்து. உம்மை இழிவுசிறப்பு. உயிரினுக்குயிராதல் முன்னர்க் கடவுள்வாழ்த்தில் விளக்கப்பட்டது. உலகிற்கொளிசெய்வனவாகிய சூரியன்முதலிய சோதிகட்கெல்லாம் ஒளியைக்கொடுத்தியக்கும் பெருஞ்சோதியாயென்பார்'பரஞ்சுடரொளியாய்' எனவும், இவரே பதியென வேதங்களான்முடிவுரைகூறப்பட்டவராயென்பார் 'வியன்மறைத்தொகைக்கீறதாய்' எனவும், ஐந்தொழின்மூர்த்திகளுளமையாது அவற்றின்மேம்பட்ட பரப்பிரமமாயென்பார் 'விதிமுதலுரைக்குஞ்செயலினுக்கெலாமாதியாய்' எனவும் கூறினர். (௧௮)

தண்ணெ னம்புயத் தவிசினோன் சிறைபுகத் தானே
யெண்ணி லாவுயிர்த் தொகையளித் தறுமுக னிருந்தா
னண்ண லந்திசை முகனொடு வந்துசூ ழமர
ருண்ண டுங்கியே தொழுதுதம் பதங்களி னுற்றார்.

இ—ள்: தண் என் அம்புய தவிசினோன் சிறை புக—குளிர்ந்த தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவர் சிறையிருப்ப, அறுமுகன்—ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள், தானே எண் இலா உயிர் தொகை அளித்து இருந்தான்— தாமாகவே அளவிறந்த உயிர்க்கூட்டங்களைப் படைத்திருந்தார், அண்ணலம் திசைமுகனொடு வந்து சூழ் அமரர்—பெருமையையுடைய பிரமதேவரோடுவந்து சூழ்ந்ததேவர்கள், உள் நடுங்கி- (இனி எமக்கும் யாதுதீங்குவிளையுமோவென்று) மனம்பயந்து, தொழுது- (அம்முருகக்கடவுளை) கைதொழுது, தம் பதங்களில் உற்றார்—தங்கள் இருப்பிடங்களிற் போயினார்கள் எ—று.

தேவர்வந்துசூழ்ந்தது, பிரமதேவரை முருகக்கடவுளழைத்தபோதென்க. (௧௯)

அயனைச்சிறைபுரிபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௧௨௨௬.

---

## அயனைச்சிறைநீக்குபடலம்.

முருகக்கடவுள் பிரமதேவரைச் சிறையினின்றுவிடுவித்தசரித்திரத்தைத்கூறுதலினிப்பெயர்த்தாயிற்று.

### இப்படலப்பொழிப்பு.

பின்பு திருமால் தேவர்முதலிய கூட்டத்தாருடன் திருக்கைலாசமலையிற்போய்ப் பிரமதேவரது சிறையைவிடுக்குமாறு சிவபிரானைவேண்ட, அச்சிவபிரான் உடன்பட்டு,

திருநந்திதேவரிடஞ்சொல்லியனுப்பி, குமாரக்கடவுள் உடன்படாமையால், தாமே எழுந்தருளிச்சென்று இன்சொற்கூறிச் சிறையினின்றுவிடுவித்து, முருகக்கடவுளை உச்சிமோந்தகழுவி, பிரணவப்பொருளை நீ கூறக்கடவாயென்று வினவினர். முருகக்கடவுள் அதனை இரகசியமாகச் சிவபிரானுக்குக்கூற, சிவபிரான் அதுகேட்டு மனமகிழ்ந்து தம்மிருப்பிடத்திற்குச்சென்றருளினர். முருகக்கடவுள் பின்னரும் தம்மைவணங்கிக்கேட்ட அகத்தியமாமுனிவருக்கு அப்பொருளை உபதேசித்தருளினர் என்பதாம்.

ஆல் மாமிடற் றண்ணல்சே யித்திற மளப்பில்
காலம் யாவையு மளித்தன னிருத்தலுங் கரியோ
ஞலு மாமுக னுவளக நீக்குவா னுடிச்
சீல வானவர் முனிவரைச் சிந்தனை செய்தான்.

இ—ள்: ஆல மா மிடற்று அண்ணல் சேய்—நஞ்சார்ந்த சிறந்த திருமிடற்றையுடைய சிவபிரானது திருக்குமாரராகிய முருகக்கடவுள், இத்திறம் அளப்பு இல் காலம் யாவையும் அளித்தனன் இருத்தலும்—இவ்வாறு அளவிறந்தகாலமாக எல்லாப்பொருள்களையுஞ் சிருட்டித்துக்கொண்டிருக்க, கரியோன்—விஷ்ணுமூர்த்தி, மா நாலு முகன் உவளகம் நீக்குவான் நாடி—சிறந்த நான்குமுகங்களையுடைய பிரமதேவரது சிறையைநீக்கும்படிகருதி, சீல வானவர் முனிவரை சிந்தனை செய்தான்—நல்லொழுக்கத்தையுடைய தேவர்களையும் முனிவர்களையும் (வரும்படி) நினைத்தார் எ—று.

நீக்குவான்-வானீற்றுவினையெச்சம். (க)

சீத ரத்தனிப் பண்ணவன் சிந்தனை தேறி
யாத பத்தினர் பரிமுகர் வசுக்களன் னையர்க
ளேத மற்றிடும் விஞ்சைய ருவணரோ டியக்கர்
மாதி ரத்தவர் யாவரும் விரைந்துடன் வந்தார்.

இ—ள்: ஆதபத்தினர்—பன்னிருசூரியர்களும், பரிமுகர்—அச்சுவினிதேவர்களும், வசுக்கள்—அட்டவசுக்களும், அன்னையர்கள்—சப்தமாதிருக்களும், ஏதம் அற்றிடும் விஞ்சையர்—குற்றமற்ற வித்தியாதரர்களும், உவணரோடு இயக்கர்—கருடர்களும் இயக்கர்களும், மாதிரத்தவர் யாவரும்—திக்குப்பாலகரெண்மரும், சீதர தனி பண்ணவன் சிந்தனை தேறி— இலக்குமியைமார்பிற்றரித்த ஒப்பற்ற திருமால் தம்மைநினைப்பதை அறிந்து, உடன் விரைந்து வந்தார்—உடனே (புறப்பட்டு) விரைவில் வந்தார்கள் எ—று.

பண்ணவன்சிந்தனை-ஆறும்வேற்றுமைத்தொகை. (உ)

மதியு மேனைய கோள்களுங் கணங்களும் வான்றோய்
பொதிய மேயவ னுதியாம் பொருவின்மா தவரும்
விதிபு ரிந்திடு பிரமரொன் பதின்மரும் வியன்பா
ரதனை யேந்திய சேடனு முரகரு மடைந்தார்.

இ—ள்: மதியும்—சந்திரனும், ஏனைய கோள்களும்—மற்றைய [செவ்வாய்முதலிய] கிரகங்களும், கணங்களும்—தேவகணத்தவர்களும், வான் தோய் பொதியம் மேயவன் ஆதி ஆம் பொரு இல் மா தவரும்— ஆகாயத்தையளாவிய (உயர்ந்த) பொதியமலையில்வசிக்கின்ற அகத்தியமுனிவர்முதலாகிய ஒப்பற்ற சிறந்தமுனிவர்களும், விதி புரிந்திடு பிரமர் ஒன்பதின்மரும்—(பிரமதேவர்க்குதவியாகப்) படைத்தற்றொழிலைச்செய்கின்ற நவப்பிரமர்களும், வியன் பார் அதனை ஏந்திய சேடனும்—பெரியபூமியைத்தாங்குகின்ற ஆதிசேடனும், உரகரும்—நாகர்களும், அடைந்தார்—வந்தார்கள் எ—று.

கணங்கள் என்றது பதினெண்கணத்தவர்களுள் இச்செய்யுளினும் முற்செய்யுளினுங் கூறப்படாதொழிந்த ஏனையரை. நவப்பிரமர்கள்: பிருகு புலத்தியர் கிரது அங்கிரா மரீசி அத்திரி தக்ஷர் வசிட்டர் நாரதர் என்பவர்கள். சேடன்- என்பதற்குப்பிரளயத்தில் அழியாது மிருந்துநிற்பவனென்பதுபொருள். (௩)

இன்ன தன்மையி லமரரு முனிவரு மெய்த
வன்னர் தம்மொடுஞ் செங்கண்மால் கயிலையை யடைந்து
முன்னர் வைகிய நந்திகண் முறையினுய்த் திடப்போய்த்
தன்னை யேதனக் கொப்பவன் பொற்கழ றாழ்ந்தான்.

இ—ள்: இன்ன தன்மையில் அமரரும் முனிவரும் எய்த—இவ்வாறுகத்தேவர்களும் முனிவர்களும் வந்துகூட, செம் கண் மால்—சிவந்தகண்களையுடைய திருமால், அன்னர் தம்மொடும் கயிலையை அடைந்து—அவர்களுடனே திருக்கைலாசகிரியை யணுகி, முன்னர் வைகிய நந்திகள் முறையின் உய்த்திட போய்—முதல்வாயிலில் வீற்றிருக்கின்ற திருநந்திதேவர் முறைப்படி உள்விடுப்பப்போய், தன்னையே தனக்கு ஒப்பவன் பொன் கழல் தாழ்ந்தான்—தம்மையே தமக்கு உவமையாகவுடைய சிவபிரானது அழகிய திருவடிகளை வணங்கினர் எ—று.

நந்திகள் என்பதிற் கள் விகுதி-உயர்வுபற்றிவந்தது. பொற்கழல்- பொன்போலும் பாதமெனினுமாம். மேல் வருவனவற்றிற்குமிவ்வாறுரைக்க. சிவபிரானுக்கறிவித்து அவர் உள்விடுத்தி எனப் பணித்தபின் விடுப்பவென்பார் 'முறையினுய்த்திட' என்ருர். தன்னையே தனக்கொப்பவன்-இயைபின்மையணி. இதனை வடநூலார் அநந்வயாலங்காரமென்பர். சமானரஹிதரென்பது கருத்து. (௪)

பொற்றி ருப்பத மிறைஞ்சியே மறைமுறை போற்றி
நிற்ற லுஞ்சிவ னருள்கொடே நோக்குறீஇ நீவி
ரெற்றை வைகலு மில்லதோர் தளர்வொடு மெம்பா
லுற்ற தென்கொலோ வென்றலு மாலிவை யுரைப்பான்.

இ—ள்: பொன் திரு பதம் இறைஞ்சி மறை முறை போற்றி நிற்றலும்—(திருமால்) அழகிய திருவடிகளைவணங்கி வேதமுறைப்படி தோத்திரஞ்செய்துநிற்ப, சிவன் அருள்கொடே நோக்குறீஇ—சிவபிரான் கருணைகொண்டு (அவர்களைப்) பார்த்தருளி, நீவிர்—நீங்கள், எற்றை வைகலும் இல்லது ஓர் தளர்வொடும் எம் பால் உற்றது என் என்றலும்—எந்தநாளிலும் இல்லாத பெருந்தளர்ச்சியுடன் எம்மிடம்வந்தது யாதுகாரணம்பற்றியென்று வினவுதலும், மால் இவை உரைப்பான்—அத்திருமால் இவற்றைக் கூறுவார் எ—று.

நோக்குறீஇ-நோக்குற்று என்பதன்விகாரம்; சொல்லிசையளபெடை. என்றஎன்னுமென்ருெடர் வன்ருெடராய் ஐகாரச்சாரியைபெற்று எற்றை எனநின்றது. திருமாலின்வேண்டுகோளை நிறைவேற்றவேண்டுமென்னுங் கருத்துடையராய் நோக்குதலின் 'அருள்கொடேநோக்குறீஇ' என்ருர். (௫)

வேறு.

இறைவ நின்மக னீண்டுறு போதனை
மறைமு தற்பத வான்பொருள் கேட்டலு
மறிகி லானுற வன்னவன் றன்னைமுன்
சிறைபு ரிந்தனன் சிட்டியுஞ் செய்கின்ருன்.

இ—ள்: இறைவ—கடவுளே!, நின் மகன்—தேவரீரது குமாரராகிய முருகக்கடவுள், முன்—முன்னொருகாலத்தில், ஈண்டு உறு போதனை மறை முதல் பத வான்பொருள் கேட்டலும்—இங்குவந்த பிரமனைப் பிரணவப்பொருள் கூறும்படி வினவுதலும், அறிகிலான் உற— (பிரமன்) அறியாதவனாயிருக்க, அன்னவன் தன்னை சிறை புரிந்தனன்-அப்பிரமனைச்சிறையில் வைத்து, சிட்டியும் செய்கின்றான்—(அவன்செய்த)படைத்தற்றொழிலையுந் தாமே செய்கின்றார் எ—று.

உம்மை எச்சம். சிட்டி-சிருட்டிஎன்னும் வடமொழிச்சிதைவு. (௬)

கந்த வேளெனக் கஞ்சனு மையநின்
மைந்த னுமவன் வல்வினை யூழினா
லந்த மில்பக லாழ்சிறைப் பட்டுள
நொந்து வாடின னோவுழந் தானரோ.

இ—ள்: ஐய—கடவுளே!, கஞ்சனும்—பிரமனும், கந்தவேள் என— முருகக்கடவுளைப்போல, நின் மைந்தன் ஆம்—தேவரீரது புதல்வனும், அவன்—அப்பிரமன், வல்வினை ஊழினால் அந்தம் இல் பகல் ஆழ் சிறை பட்டு— தீவினைப்பயனால் அளவிறந்த காலமாக ஆழமாகியசிறையிலகப்பட்டு, உளம் நொந்து வாடினன்—மனம்வருந்தி மெலிந்து, நோ உழந்தான்— துன்பத்தை யனுபவித்தான் எ—று.

வல்வினை தீவினை. ஊழ்-அதனாலுளதாயவிதி. ஆழ்சிறை-நீங்காச்சிறை. பிரமதேவர் சிவபிரானது வலப்புயத்தினின்றுந்தோன்றினராதலின் 'கந்தவேளெனக்கஞ்சனும்-நின்மைந்தனும்' என்றார். நோவு உழந்தான் எனச்சொல்வகுப்பினுமாம். (௭)

ஆக்க மற்ற வயன்றன் சிறையினை
நீக்கு கென்று நிமலனை வேண்டலுந்
தேக்கு மன்பிற் சிலாதனற் செம்மலை
நோக்கி யொன்று நவலுதன் மேயினான்.

இ—ள்: ஆக்கம் அற்ற அயன் தன் சிறையினை நீக்குக என்று நிமலனை வேண்டலும்—செல்வத்தையிழந்த பிரமதேவரது சிறையைநீக்கியருளுகவென்று (திருமால்) சிவபிரானைப்பிரார்த்தித்தலும், தேக்கும் அன்பில் சிலாதன் நல் செம்மலை நோக்கி—(அது கேட்ட சிவபிரான்) தம்மாட்டுநிறைந்த அன்பினையுடைய சிலாதமுனிவரது புதல்வராகிய திருநந்திதேவரைப்பார்த்து, ஒன்று நவலுதல் மேயினான்—ஒருவாசகத்தைக் கூறுவாராயினார் எ—று.

படைத்தற்றொழிலையிழந்து துன்புழத்தலின் 'ஆக்கமற்றவயன்' எனவும், தாம் விதிக்கும்பணியை முடிக்குமாறமைந்துநின்ற நந்தியென்பார் 'தேக்குமன்பிற் சிலாதனற்செம்மல்' எனவுங்கூறினார். (௮)

குடிகைச் செங்கையி னானைக் குமரவே
ளிடுவித் தான்சிறை யென்றன ராண்டுநீ
கடிதிற் சென்றுநங் கட்டுரை கூறியே
விடுவித் தேயிவண் மீள்கெனச் சாற்றினான்.

இ—ள்: குமரவேள்—முருகக்கடவுள், குடிகை செம் கையினானை—கமண்டலத்தையேந்திய சிவந்ததிருக்கரத்தையுடைய பிரமனை, சிறை இடுவித்தான் என்றனர்—சிறையில்வைத்தாரென்று (இத்தேவர்கள்) கூறினர் (ஆதலின்), நீ ஆண்டு கடிதில் சென்று—நீ அவ்விடத்து விரைவிற்போய், நம் கட்டுரை கூறி— நமதுகட்டளை

யைச்சொல்லி, விடுவித்து—(சிறையினின்றும்) நீக்குவித்து, இவண் மீள்க என சாற்றினன்—இவ்விடத்துத்திரும்பிவருகுதியென்று அருளிச்செய்தார் எ—று.

நாம் சிறையினின்றுவிடுக்கும்படி கட்டளைசெய்ததாகக்கூறியென்பார் 'நங்கட்டுரைகூறி' என்றார். (௯)

எந்தை யன்ன திசைத்தலு நன்றென
நந்தி யக்கண நாதனைத் தாழ்ந்துபோ
யந்த மற்ற வடற்கணஞ் சூழ்தரக்
கந்த வெற்பிற் கடிநக ரெய்தினன்.

இ—ள்: எந்தை அன்னது இசைத்தலும்—எம்பரமபிதாவாகிய சிவபிரான் அவ்வாசகத்தை அருளிச்செய்தவுடன், நந்தி—திருநந்திதேவர், நன்று என—நல்லதென்றுகூறி [உடன்பட்டு], அக்கணம் நாதனை தாழ்ந்து போய்—அப்பொழுதே சிவபிரானை வணங்கிச்சென்று, அந்தம் அற்ற அடல் கணம் சூழ்தர—அளவிறந்த வலியகணத்தவர்கள் (தம்மைச்)சூழ்ந்துவர, கந்தவெற்பில் கடி நகர் எய்தினன்-கந்தகிரியிலுள்ள சிறந்த கோயிலையடைந்தார் எ—று.

போய்-எய்தினன் என இயையும். (௧௦)

எறுழு டைத்தனி யேற்று முகத்தின
னறுமு கத்த னமர்ந்த நிகேதனங்
குறுகி மற்றவன் கோல மலர்ப்பத
முறைத னிற்பணிந் தேத்தி மொழிகுவான்.

இ—ள்: எறுழ் உடை தனி எற்று முகத்தினன்—வலிமைபொருந்திய ஒப்பற்ற திருநந்திதேவர், அறுமுகத்தன் அமர்ந்த நிகேதனம் குறுகி—சுப்பிரமணியக்கடவுள் எழுந்தருளியிருந்த திருக்கோயிலையடைந்து, அவன் கோல மலர் பதம் முறை தனில் பணிந்து—அவரது அழகிய தாமரைமலர்போலுந் திருவடிகளை முறைப்படி வணங்கி, எத்தி—துதித்து, மொழிகுவான்—இவ்வாறு விண்ணப்பஞ்செய்வார் எ—று.

எற்றுமுகத்தினன்-இடபமுகத்தையுடையவன். 'எறுழுடைத்தனியேற்றுமுகத்தினன்குறுகி' எனவே, தம்முடன்வந்த கணத்தவர்களை வாயிலில்நிறுத்திவிட்டுத்தனியே உட்சென்றனரென்பதும், முருகவேட்குவப்பாகாதவசனத்தைக்கூறப்புகுதல்பற்றி அச்சந்தோன்றாது சென்றனரென்பதும் பெற்றும். மற்று அசை; வினைமாற்றுமாம். (௧௧)

கடிகொள் பங்கயன் காப்பினை யெம்பிரான்
விடுதல் கூறி விடுத்தன னீங்கெனைத்
தடைப டாதவன் றன்சிறை நீக்குதி
குடிலை யன்னவன் கூறற் கெளியதோ.

இ—ள்: எம்பிரான்—எமது தலைவராகிய சிவபிரான், கடி கொள் பங்கயன் காப்பினை விடுதல் கூறி—வாசனைபொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமனது சிறையை விடுவிக்கும்படி அருளிச்செய்து, ஈங்கு எனை விடுத்தனன்—இவ்விடத்துஎன்னை அனுப்பினர் (ஆதலின்), தடைபடாது அவன் தன் சிறை நீக்குதி—தாமசப்படாதுஅப்பிரமனது சிறையை நீக்குக, குடிலை அன்னவன் கூறற்கு எளியதோ— பிரணவப்பொருள் அப்பிரமனாற்சொல்லப்படுதற் கெளியதா? (அன்றே) எ—று.

விடுவித்தல் என்பதிற் பிறவினைவிகுதிதொக்கது. குடிலை-ஆகுபெயர். (௧௨)

என்னு முன்ன மிளையவன் சீறியே
யன்ன வூர்தி யருஞ்சிறை நீக்கல
னின்னை யுஞ்சிறை வீட்டுவ னிற்றியே
லுன்னி யேகுதி யொல்லையி லென்றலும்.

இ—ள்: என்னும் முன்னம்—என்று திருநந்திதேவர் கூறிமுடிக்கமுன், இளையவன் சீறி—குமாரக்கடவுள் கோபித்து, அன்ன ஊர்தி அரும் சிறை நீக்கலன்— அன்னவாகனனாகிய பிரமனது அரிய சிறையை யாம் நீக்கமாட்டேம், நிற்றியேல் நின்னையும் சிறை வீட்டுவன்—இங்குநிற்பாயானால் உன்னையுஞ்சிறைப்படுத்துவோம், உன்னி-இதனை நினைத்து, ஒல்லையில் ஏகுதி என்றலும்-விரைவிற் போவாயென்று கூறியவுடன் எ—று.

இச்செய்யுளும் பிற்செய்யுளும் குளகம். அன்னவூர்தி- பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. அருஞ்சிறை=கடுஞ்சிறை. என்றலும்என்னும் வினையெச்சம், மேற்செய்யுளில் சென்றனன் என்னும் முற்றோடியையும். (௬௩)

வேற தொன்றும் விளம்பில னஞ்சியே
யாறு மாமுகத் தண்ணலை வந்தியா
மாறி லாவெள்ளி மால்வரை சென்றன
னேறு போன்முக மெய்திய நந்தியே.

இ—ள்: ஏறு போல் முகம் எய்திய நந்தி—இடபமுகத்தைப்போன்ற முகத்தையுடைய திருநந்திதேவர், அஞ்சி—பயந்து, வேறது ஒன்றும் விளம்பிலன்— வேறொருவார்த்தையையுங்கூறாதவராய், மா ஆறு முகத்து அண்ணலை வந்தியா—சிறந்த ஆறுதிருவதனங்களையுடைய குமாரக்கடவுளை வணங்கி, மாறு இலா மால் வெள்ளி வரை சென்றனன்—ஒப்பில்லாத பெரிய திருக்கைலாசமலையிற் சென்றருளினார் எ—று.

ஏறு-ஆகுபெயர். (௬௪)

மைதி கழ்ந்த மணிமிடற் றண்ணன்முன்
வெய்தெ னச்சென்று மேவி யவன்பதங்
கைதொ ழூஉநின்று கந்தன் மொழிந்திடுஞ்
செய்தி செப்பச் சிறுநகை யெய்தினன்.

இ—ள்: மை திகழ்ந்த மணி மிடற்று அண்ணல் முன் வெய்தென சென்று மேவி—(திருநந்திதேவர்) கருநிறம்விளங்கப்பெற்ற அழகிய கண்டத்தையுடைய சிவபிரானுக்குமுன் விரைவிற்போய்ச்சேர்ந்து, அவன் பதம் கை தொழூஉ நின்று— அவரது பாதங்களைவணங்கி எழுந்துநின்று, கந்தன் மொழிந்திடும் செய்தி செப்ப— குமாரக்கடவுள்கூறிய வாசகத்தைச்சொல்ல, சிறுநகை எய்தினன்—(கேட்ட சிவபிரான்) புன்சிரிப்புச்செய்தார் எ—று.

புன்சிரிப்பு முருகக்கடவுளது இளமைக்கேற்ற திருவிளையாடலைநினைந்து நிகழ்ந்தது. (௬௫)

தெழுத கைச்சுடர்க் கேசரிப் பீடமேல்
விழுமி துற்ற விமலன் விரைந்தெழீஇ
யழகு டைத்தன தாலய நீங்கியே
மழவி டைத்தனி மால்வரை யேறினன்.

இ—ள்: தகை கெழு சுடர் கேசரி பீடம் மேல் விழுமிது உற்ற விமலன்—தகுதிபொருந்திய சோதியினையுடைய சிங்காசனத்தின்மேற் சிறப்பாகவீற்றிருந்த சிவபிரான்

விரைந்து எழீஇ—விரைவிலெழுந்து, அழகு உடை தனது ஆலயம் நீங்கி—சிறப்பினையுடைய தமது திருக்கோயிலை நீங்கி, மழ விடை தனி மால் வரை ஏறினான்—இளமையையுடைய இடபமாகிய ஒப்பற்ற பெரிய மலையின்மேல் இவர்ந்தருளினார் எ—று.

விடை வரை-ரூபகம்; மலைபோன்ற இடபமென்பதுகருத்து. (கசு)

முன்னர் வந்த முகில்புரை வண்ணனுங்
கின்ன ரம்பயில் கேசர ராதியோர்
நன்னர் கொண்டிடு நாகரு நற்றவ
ரென்ன ருந்தொழு தெந்தைபின் னேகினார்.

இ—ள்: முன்னர் வந்த முகில் புரை வண்ணனும்-முன்னேவந்துநின்ற மேகவர்ணராகிய திருமாலும், கின்னரம் பயில் கேசரர் ஆதியோர் நன்னர் கொண்டிடும் நாகரும்—யாழைப்பயின்றுள்ள வித்தியாதரர்முதலாகிய நன்மையினையுடைய தேவர்களும், நல் தவர் என்னரும்—நல்லதவத்தையுடைய முனிவர்கள்யாவரும், தொழுது எந்தை பின் ஏகினார்-கைதொழுது எங்கள் பரமபிதாவாகிய சிவபிரானுக்குப்பின்சென்றார்கள் எ-று.

கேசரர்-ஆகாயத்தில் உலாவுபவர். நன்னர்-பண்புப்பெயர்; நர் விகுதி. கேசரராதியோரும் நாகருமெனப் பொருள்கூறினுமாம். அங்ஙனங்கூறுங்கால், நாகர் கீழுலகவாசிகளாகியநாகரென்க. என்னர்-எகரவினாவடியாய்ப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். ()

படைகொள் கையினர் பன்னிறக் காழக
வுடையர் தீயி னுருகெழு சென்னிய
ரிடிகொள் சொல்லின ரெண்ணரும் பூதர்கள்
புடையி லீண்டினர் போற்றுதன் மேயினார்.

இ—ள்: படைகொள் கையினர்—ஆயுதங்களையேந்திய கையையுடையவர்களும், பல் நிற காழக உடையர் — பலநிறமமைந்த வஸ்திரத்தைத் தரித்தவர்களும், தீயின் உரு கெழு சென்னியர்-அக்கினியைப்போன்ற நிறமமைந்த குடுமியையுடையவர்களும், இடி கொள் சொல்லினர்— இடியைப்போன்ற வன்சொற்களைப்பேசுகின்றவர்களும் (ஆகிய), எண்ண அரும் பூதர்கள்-அளவிடுதற்கரிய [பெருந்தொகையான] பூதர்கள், புடையில் ஈண்டினர் போற்றுதல் மேயினார்-பக்கத்திற் சூழ்ந்துநின்று துதித்தார்கள் எ-று.

காழகம் உடை ஒருபொருட்சொற்கள். சென்னி ஆகுபெயர். (கஅ)

இனைய காலை யினையவர் தம்மொடும்
வனிதை பாதியன் மால்விடை யூர்ந்துராய்ப்
புனித வெள்ளியம் பொற்றை தணந்துபோய்த்
தனது மைந்தன் றடவரை யெய்தினான்.

இ—ள்: இனைய காலை—இவ்வாறாகியசமயத்தில், வனிதை பாதியன்—உமாதேவியை வாமபாகத்திலுடைய சிவபிரான், மால் விடை ஊர்ந்து உராய்—பெரிய இடபவாகனத்தை நடாத்திச்சென்று, இனையவர் தம்மொடும்-இந்தத் [திருமால்முதலிய] தேவர்களுடன், புனித வெள்ளியம் பொற்றை தணந்து போய்—பரிசுத்தமாகிய திருக்கைலாசமலையைநீங்கிப்போய், தனது மைந்தன் தடவரை எய்தினான்—தமது புதல்வராகியமுருகக்கடவுள்வீற்றிருக்கின்ற விசாலித்த கந்தவெற்பையடைந்தார் எ—று.

இனையவர்தம்மொடும் எய்தினான் என இயையும். (கக)

சாற்ற ருந்திறற் சண்முக வெம்பிரான்
வீற்றி ருந்த வியனகர் முன்னுறு

வேற்றி னின்று மிழிந்துவிண் ணோரெலாம்
போற்ற முக்கட் புனிதனுட் போயினான்.

இ—ள்: முக்கண் புனிதன்—மூன்று திருக்கண்களையுடைய சிவபிரான், சாற்ற அரும் திறல் சண்முக எம் பிரான் வீற்றிருந்த வியன் நகர் முன் உறு—(எத்தகையினராலும்) சொல்லிமுடித்தற்கரிய வலியினையும் ஆறுதிருமுகங்களையுமுடைய எங்கள்தலைவராகிய முருகக்கடவுள் எழுந்தருளியிருந்த சிறந்த திருக்கோயிலின்முன்சென்று, ஏற்றில் நின்றும் இழிந்து—இடபவாகனத்தினின்றும் இறங்கி, விண்ணோர் எலாம் போற்ற—தேவரனைவருந்துதிக்க, உள் போயினான்—உட்சென்றருளினார் எ—று.

ஈண்டு, நகர்-கோயில். (௨௰)

அந்தி போலு மவிர்சடைப் பண்ணவன்
கந்தன் முன்னர்க் கருணையொ டேகலு
மெந்தை வந்தன னென்றெழுந் தாங்கவன்
வந்து நேர்கொண் டடிகள் வணங்கியே,

இ—ள்: அந்தி போலும் அவிர் சடை பண்ணவன்—செக்கர்மேகம்போன்றுதிறம்விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபிரான், கந்தன் முன்னர் கருணையொடு ஏகலும்— குமாரக்கடவுளுக்குமுன் அருளுடன்செல்லுதலும், அவன்— அம்முருகக்கடவுள், எந்தை வந்தனன் என்று எழுந்து வந்து— எமது தந்தையார்வந்தருளினரென்று சிந்தித்து எழும்பிவந்து, நேர்கொண்டு— எதிர்கொண்டு, அடிகள் வணங்கி— (அச்சிவபிரானது) திருவடிகளைநமஸ்கரித்து எ—று.

அந்தி-மாலைக்காலம். அது அக்காலத்துத்தோன்றுஞ் செவ்வானத்தையுணர்த்தலின் ஆகுபெயர். இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (௨௧)

பெருத்த தன்மணிப் பீடிகை மீமிசை
யிருத்தி நாதனை யேழுல கீன்றிடு
மொருத்தி மைந்த னுயிர்க்குயி ராகிய
கருத்த நீவந்த காரியம் யாதென்றான்.

இ—ள்: எழு உலகு ஈன்றிடும் ஒருத்தி மைந்தன்—ஏழுலகங்களையும்பெற்றருளிய ஒப்பற்ற உமாதேவியின்புதல்வராகிய குமாரக்கடவுள், பெருத்த தன் மணி பீடிகை மீமிசை—பெரிய இரத்தினமழுத்தப்பெற்ற தமது சிங்காசனத்தின்மேல், நாதனை இருத்தி—சிவபிரானை இருக்கச்செய்து, உயிர்க்கு உயிர் ஆகிய கருத்த—எல்லா ஆன்மாக்களுக்கும் பரமான்மாவாகிய கடவுளே!, நீ வந்த காரியம் யாது என்றான்—தேவரீர் இங்குஎழுந்தருளிவந்தது யாதுகாரியம்பற்றியென்று வினவினார் எ—று.

மீமிசை ஒருபொருட்பன்மொழி. ஏழுலகெனப் பொதுப்படக்கூறியதனாற் கீழேழுலகங்களும் மேலேழுலகங்களுங் கொள்ளப்படும். உலகமென்றது ஈண்டு இடத்தையும் இடத்தில்வாழுமுயிர்களையுமுணர்த்தும். (௨௨)

மட்டு லாவு மலரய னைச்சிறை
யிட்டு வைத்தனை யாமது நீக்குவான்
சுட்டி வந்தன மாற்சுரர் தம்முடன்
விட்டி டையவென் றெந்தை விளம்பினான்.

இ—ள்: எந்தை—எங்கள் பரமபிதாவாகிய சிவபிரான் (முருகக்கடவுளைநோக்கி), ஐய—புதல்வனே!, மட்டு உலாவும் மலர் அயனை சிறை இட்டு வைத்தனை—தேன்பொரு

ந்திய தாமரைமலராசனத்தில்வீற்றிருக்கின்ற பிரமதேவரைச் சிறையிலகப்படுத்தினைத்தாய் (ஆதலின்), யாம்—நாம், அது நீக்குவான் சுட்டி—அச்சிறையைநீக்குமாறுகருதி, சுரர் தம் உடன் வந்தனம்—தேவர்களோடு வந்தேம், விட்டிடு என்று—(அவனது சிறையை)நீக்குதியென்று, விளம்பினன்—திருவாய்மலர்ந்தருளினர் எ—று.

மைந்தனை 'ஐய' என்றது அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. மட்டு வாசனையெனினுமாம். (௨௫)

நாட்ட மூன்றுடை நாயக னிவ்வகை
யீட்டு மன்பொ டிசைத்திடு மின்சொலைக்
கேட்ட காலையிற் கேழ்கிளர் சென்னிமேற்
சூட்டு மௌலி துளக்கினன் சொல்லுவான்.

இ—ள்: நாட்டம் மூன்று உடை நாயகன்—மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரான், ஈட்டும் அன்பொடு—பேரன்பினுடன், இவ்வகை இசைத்திடும் இன்சொலை—இவ்வாறுகூறியருளிய இனிமையானவாசகத்தை, கேட்டகாலையில்-(குமாரக்கடவுள்) கேட்டவுடன், கேழ் கிளர் சென்னி மேல் சூட்டும் மௌலி துளக்கினன் சொல்லுவான்-நிறம்விளங்குகின்ற சிரசின்மேலணிந்துள்ள கிரீடத்தை அசைத்து இவ்வாறு கூறுவார் எ-று.

ஈட்டுமன்பு-தொகுக்கப்பட்ட அன்பு. எனவே, பேரன்பென்பதுபெற்றும். முடிதுளக்கியது அம்மொழிக்குடன்படாமையினென்க. (௨௬)

உறுதி யாகிய வோரெழுத்தின் பய
னறிகி லாதவ னுவிகள் வைகலும்
பெறுவ னென்பது பேதைமை யாங்கவன்
மறைகள் வல்லது மற்றது போலுமால்.

இ—ள்: உறுதி ஆகிய ஓர் எழுத்தின் பயன் அறிகிலாதவன்—உறுதியைப்பயப்பதாகிய பிரணவமந்திரத்தின்பொருளை அறியாத பிரமன், ஆவிகள் வைகலும் பெறுவன் என்பது பேதைமை—ஆன்மாக்களைத் தினந்தோறுஞ்சிருட்டிப்பேனென்பது அறியாமையேயாம், அவன் மறைகள் வல்லதும் அது போலும்—அப்பிரமன் வேதங்களில்வல்லவனுயிருத்தலும் அதுபோலவேயிருக்கும் எ—று.

பிரணவத்தின்பொருளையறியாமையாற் படைத்தற்றொழிலியற்றவல்லனுகாமைபோலவே வேதவறிவிலும்வல்லனுகானென்பதுகருத்து. உறுதியைத்தருவதாகியவோரெழுத்தை 'உறுதியாகியவோரெழுத்து' என்றது உபசாரம். தேற்றேகாரந்தொக்கது. பின்னைய உம்மை எச்சம். பெறுவன் என்பதைப்படர்க்கைவினைமுற்றுகக்கொண்டு பொருள்கூறினுமாம். (௨௭)

அழகி தையநின் னருள் வேதமுன்
மொழிய நின்ற முதலெழுத் தோர்கிலா
னிழிவில் பூசை யியற்றலு நல்கிய
தொழில்பு ரிந்து சுமத்தினை யோர்பரம்.

இ—ள்: ஐய—பிதாவே!, வேதம் முன் மொழிய நின்ற முதல் எழுத்து ஓர்கிலான்—வேதங்களின் முதலிற்கூறநின்ற தலையெழுத்தாகிய பிரணவத்தின்பொருளை அறியாத இவன், இழிவு இல் பூசை இயற்றலும்—தாழ்மையில்லாத [சிறந்த] பூசையைச்செய்ய, நல்கிய தொழில் புரிந்து—சிருட்டித்தொழிலைச்செய்யும்படி, ஓர் பரம் சுமத்தினை—ஒரு பாரத்தைச்சுமத்தியருளினீர், இது அழகு—இது நன்றுயிருக்கின்றது! எ—று.

அழகிது என்பதைக் குறிப்புமுற்றுகக்கொண்டு, அழகுடையது எனப்பொருள் கூறுவாருமுளர். கு றி ப் பா ல் அ ழ க ன் ெ ற ன் ப தை த ச் சுட்டிநிற்றலின் இது எதிர்மறையிலக்கணை. முதலெழுத்து-ஆகுபெயர். ஓர்கிலான்-வினையாலணையும்பெயர். புரிந்து-எச்சத்திரிபு. படைத்தற்றொழில்பிரமனினும்மேம்பட்டார்க்கேயீதற்பாலதெனக் கருதுதலின் 'சுமத்தினையோர்பரம்' என்றார். (உகா)

ஆவி முற்று மகிலமு நல்கியே
மேவு கின்ற வியன்செயல் கோடலாற்
றாவில் கஞ்சத் தவிசுறை நான்முக
னேவர் தம்மையு மெண்ணலன் யாவதும்.

இ—ள்: ஆவி முற்றும் அகிலமும் நல்கி மேவுகின்ற வியன் செயல் கோடலால்——எல்லாவுயிர்களையும் எல்லாவுலகங்களையும் படைத்துக்கொண்டிருத்தலாகிய பெரிய தொழிலை ஏற்றுக்கொள்ளுதலால், தா இல் கஞ்ச தவிசு உறை நான்முகன்— குற்றமற்ற தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவன், எவர் தம்மையும் யாவதும் எண்ணலன்-எத்தகைமேம்பாடுடையாரையுஞ் சிறிதும் மதிக்கின்றிலன் எ—று.

உம்மை, எவர்தம்மையும்என்பதில் உயர்வுசிறப்பு. யாவதும்என்பதில் இழிவுசிறப்பு. எவர்-எகாரவினவடியாய்ப்பிறந்தபெயர். இவனின் மேதக்கார்புரிதற்பாலதாஞ்செயலென்பார் 'வியன்செயல்' எனவும், தம்மைச் சிறிதும் மதியாதுபோயினனாதலிற் சிறையிட்டேனென்பதுதோன்ற 'எவர்தம்மையுமெண்ணலன்யாவதும்' எனவும் கூறினார். (உஎ)

நின்னை வந்தனை செய்யினு நித்தலுந்
தன்ன கந்தை தவிர்கில னாதலா
லன்ன வன்ற னருஞ்சிறை நீக்கல
னென்ன மைந்த னியம்பிய வேலையே.

இ—ள்: நித்தலும் நின்னை வந்தனை செய்யினும்—தினந்தோறும் தேவரீரைவழிபாடுசெய்யினும், தன் அகந்தை தவிர்கிலன்—தனது அகங்காரம்நீங்கப்பெற்றிலான், ஆதலால்-ஆதலினால், அன்னவன் தன் அரும் சிறை நீக்கலன்-அப்பிரமனது அருமையாகிய சிறையை நீக்கமாட்டேன், என்ன—என்று, மைந்தன் இயம்பிய வேலை—குமாரக்கடவுள் கூறியபொழுது எ—று.

செய்யினும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. அருஞ்சிறை-கடுஞ்சிறை. இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (உஅ)

வேறு.

மைந்தநின் செய்கை யென்னே மலரயன் சிறைவி டென்று
நந்திநம் பணியா லேகி நவின்றதுங் கொள்ளாய் நாமும்
வந்துரைத் திடினுங் கேளாய் மறுத்தெதிர் மொழிந்தா யென்னாக்
கந்தனை வெகுள்வான் போலக் கழறினன் கருணை வள்ளல்.

இ—ள்: கருணை வள்ளல்—அருள்வள்ளலாகிய சி வ பி ரா ன் (குமாரக்கடவுளை நோக்கி), மைந்த—மகனே!, நந்தி நம் பணியால் ஏகி மலர் அயன் சிறை விடு என்று நவின்றதும் கொள்ளாய்—நந்தியானவன் எமது ஆஞ்ஞையினாற்சென்று தாமரைமலரில்வீற்றிருக்கும் பிரமனது சிறையைநீக்குதியென்று கூறியவசனத்தையும் கேட்டிலாய், நாமும் வந்து உரைத்திடினும்— நாமும்வந்து அவ்வாறுகூறினாலும், கேளாய் மறுத்து எதிர் மொழிந்தாய்-கேளாதுமறுத்து எதிர்வார்த்தைபேசினாய், நின் செய்கை என் என்னா—

உன்செயல் என்னை? என்று, கந்தனை வெகுள்வான் போல கழறினன்—குமாரக்கடவுளை க் கோபிப்பவர்போலப் பேசினார் எ—று.

நின்செய்கையென்னே என்பதற்கு நின்செயல் தக்கதன்றென்பதுகருத்து. உம்மை,நவின்றதும் நாமும் என்பவற்றில் எச்சம்; உரைத்திடினும்என்பதில் உயர்வுசிறப்பு. கேளாய்-முற்றெச்சம்; அவ்வாறுகொள்ளாது முற்றாகவேபொருள்கூறினுமாம். உள்ளன்புடையராய்க்கூறினரென்பார், வெகுண்டுகூறினனென்னாது வெகுள்வான்போலக்கழறினனென்றார். அதற்கேற்ப, 'கருணைவள்ளல்' எனவும் விசேடித்தார். (௨௯)

அத்தனை தியல்பு நோக்கி யறுமுகத் தமல னைய
சித்தமிங் கிதுவே யாகிற் றிசைமுகத் தொருவன் றன்னை
யுய்த்திடு சிறையி னீக்கி யொல்லையிற் றருவ னென்னாப்
பத்தியி னிறைஞ்சிக் கூறப் பராபரன் கருணை செய்தான்.

இ—ள்: அறுமுகத்து அமலன்—ஆறு திருமுகங்களையுடைய நின்மலராகிய குமாரக்கடவுள், அத்தனது இயல்பு நோக்கி—தந்தையாரது கோபத்தன்மையைப்பார்த்து, ஐய-பிதாவே!, சித்தம் இங்கு இதுவே ஆகில்-தேவரீர்க்குத்திருவுள்ளம் இதுவேயாயின், திசை முகத்து ஒருவன் தன்னை உய்த்திடு சிறையில் நீக்கி ஒல்லையில் தருவன் என்னா பத்தியின் இறைஞ்சி கூற—நான்குமுகங்களையுடைய ஒருவனாகிய பிரமனை வைத்தசிறையினின்றும்விடுவித்து விரைவிற்கொணர்வேனென்று அன்புடன் வணங்கி விண்ணப்பஞ்செய்ய, பராபரன் கருணை செய்தான்—சிவபிரான் (அதுகேட்டுக் கோபக்குறிப்புநீங்கித்) திருவருள்செய்தார் எ—று.

பிரமனைச் சிறைநீக்குதல் எனக்குடன்பாடன்றாயினும் தேவரீரதுகட்டளைக்கு மாறியற்றலாகாதென்பதுகருதி விடுக்கின்றேனென்பார் 'சித்தமிங்கிதுவேயாகில்-ஒல்லையிற்றருவன்' என்றார். (௩௰)

நன்சிறை யெகின மேன நாடுவா னருளை நல்கத்
தன்சிறை நின்றோர் தம்மைச் சண்முகக் கடவு ணோக்கி
முன்சிறை யொன்றிற் செங்கேழ் முண்டகத் தயனை வைத்த
வன்சிறை நீக்கி நம்முன் வல்லைதந் திடுதி ரென்றான்.

இ—ள்: நன் சிறை எகினம் ஏனம் நாடுவான் அருளை நல்க—நல்லசிறகினையுடைய (பிரமனாகிய) அன்னப்பறவையாலும், (விஷ்ணுவாகிய) பன்றியாலும் (முற்காலத்தில்) தேடப்பட்ட சிவபிரான் கிருபையைச்செய்ய, சண்முக கடவுள்— ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுள், தன் சிறை நின்றோர் தம்மை நோக்கி— தம்பக்கத்தினின்ற பரிசனர்களைப்பார்த்து, முன்— முற்காலத்தில், சிறை ஒன்றில்—ஒருபுறத்தில், செம் கேழ் முண்டகத்து அயனை வைத்த வன் சிறை நீக்கி—சிவந்தநிறத்தினையுடைய தாமரைமலராசனத்திலிருக்கின்ற பிரமனைவைத்துள்ள வலிய சிறையைவிடுவித்து, நம் முன் வல்லை தந்திடுதிர் என்றான்—எமக்குமுன் விரைவிற்கொணர்வீராகவென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

மிகவும் உயர்ந்து நெடுநோம்பறத்தற்கேற்ற வன்மையுடைத்தென்பார் 'நன்சிறை' என்றார். வன்சிறை-பிறரெவராலும் மீட்டற்கரிய கடுங்காவலமைந்தசிறை. சிறையென்னுஞ்சொல் அடிதோறும் வந்தது மடக்கு என்னுஞ் சொல்லணி. (௩௧)

என்றலுஞ் சார தர்க்குட் சிலவர்க ளேகி யங்க
ணென்றொரு பூழை தன்னு ளொடுங்கின னுறையும் வேதா
வன்றனை விடுத்தல் செய்து மற்றவன் றனைக்கொண் டேகிக்
குன்றுதொ றாடல் செய்யுங் குமரவேண் முன்ன ருய்த்தார்.

இ—ள்: என்றலும்—என்று குமாரக்கடவுள் கட்டளையிட்டவுடன், சாரதர்க் குள் சிலவர்கள் ஏகி—பூதர்களுள்ளே சிலர்சென்று, அங்கண் ஒன்று ஒரு பூழை தன் உள் ஒடுங்கினன் உறையும் வேதா வன் தளை விடுத்தல் செய்து—அவ்விடத்தில் ஒருதுவாரத் தில் அடங்கியிருக்கின்ற பிரமதேவரது வலியசிறையைநீக்கி, அவன் தனை கொண்டு ஏகி—அப்பிரமதேவரைக்கொண்டுவந்து, குன்றுதொறு ஆடல் செய்யும் குமரவேள் முன்னர் உய்த்தார்—மலைகள்பலவற்றினுந் திருவிளையாடல்செய்கின்ற குமாரக்கடவுளின்முன் விடுத்தார்கள் எ—று. (௩௨)

உய்த்தலுங் கமலத் தண்ண லொண்கரம் பற்றிச் செவ்வே
ளத்தன்முன் விடுத்த லோடு மாங்கவன் பரமன் றன்னை
மெய்த்தகு மன்பாற் றாழ்ந்து வெள்கின னிற்ப நோக்கி
யெய்த்தனை போலும் பன்னா ளிருஞ்சிறை யெய்தி யென்றான்.

இ—ள்: உய்த்தலும்— முன்விடுதலும், செவ்வேள்—குமாரக்கடவுள், கமலத்து அண்ணல் ஒண் காம் பற்றி அத்தன் முன் விடுத்தலோடும்— தாமரைமலராசனராகிய பிரமதேவரது விளங்குகின்ற கைகளைப்பிடித்துச் சிவபிரானுக்குமுன் விடுதலும், ஆங்கவன் பரமன் தன்னை மெய் தகும் அன்பால் தாழ்ந்து வெள்கினன் நிற்ப—அப்பிரமதேவர் சிவபிரானை உண்மைதக்க அன்போடும்வணங்கி வெட்கமுற்றுநிற்க, நோக்கி-(சிவபிரான் அவரைப்)பார்த்து, பல் நாள் இரும் சிறை எய்தி எய்த்தனை போலும் என்றான்- அநேகநாளாகப் பெரிய சிறையிலகப்பட்டு இளைத்தாய்போலுமென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

ஆல் உடனிகழ்ச்சிப்பொருட்டு. போலும்-ஒப்பில்போலி. சிவபிரானுக்குமுற்படுங்கால் முன்னருளவாய இயல்பு குன்றிநிற்றலாலும், அதனை அங்குள்ளார்கண்டுநகைப்பரென்றுகருதுதலாலும் வெட்கமுற்றனரென்க. (௩௩)

நாதனித் தன்மை கூறி நல்லருள் புரித லோடும்
போதினை னைய வுன்றன் புதல்வனாற் றியவித் தண்ட
மேதமன் றுணர்வு நல்கி யானெனு மகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகண் மாற்றிச் செய்தது புனித மென்றான்.

இ—ள்: நாதன் இ தன்மை கூறி நல் அருள் புரிதலோடும்— சிவபிரான் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளி நல்ல கருணையைச்செய்ய, போதினன்— தாமரைமலராசனராகிய பிரமதேவர், ஐய— கடவுளே!, உன் தன் புதல்வன் ஆற்றிய இ தண்டம் ஏதம் அன்று-தேவரீரதுகுமாரர் எனக்குச்செய்தஇந்தத்தண்டனை குற்றமானதன்று, உணர்வு நல்கி—நல்லறிவைத்தந்து, யான் எனும் அகந்தை வீட்டி—நானென்கின்ற செருக்கைஅழித்து, தீது செய் வினைகள் மாற்றி—தீமையைத்தரும் பாவங்களைப்போக்கி, புனிதம் செய்தது என்றான்—பரிசுத்தமாக்கிற்றென்று கூறினார் எ—று.

குற்றஞ்செய்தோர் இம்மையிற்றண்டிக்கப்படின் மறுமையிற்றுன்பமனுபவிக்கமாட்டாராதலின், 'தீதுசெய்வினைகண்மாற்றிச்செய்ததுபுனிதம்' என்றார். (௩௪)

அப்பொழு தயனை முக்க ணாதியம் பரமன் காணூஉ
முப்புவ னத்தின் மேவு முழுதுயிர்த் தொகைக்கு மேற்ற
துப்புர வதனை நன்று தூக்கினை தொன்மை யேபோ
லிப்பக றொட்டு நீயே யீந்தனை யிருத்தி யென்றான்.

இ—ள்: அப்பொழுது—அச்சமயத்தில், முக்கண் ஆதியம் பரமன்—மூன்றுதிருக்கண்களையுடைய ஆதிகடவுளாகிய சிவபிரான், அயனை காணூஉ— பிரமதேவரைப்பா

ர்த்து, மு புவனத்தில் மேவும் முழுது உயிர் தொகைக்கும்— மூவுலகங்களிலும்வாழ்கின்ற எல்லாவுயிர்களுக்கும், எற்ற துப்புரவு அதனை நன்று தூக்கினை—இயைந்த அனுபவங்களை நன்றாக ஆராய்ந்துணர்ந்து, தொன்மையே போல்—பழமையையேபோல, இ பகல் தொட்டு—இன்றுமுதலாக, நீயே சுந்தனை இருத்தி என்றான்—நீயேபடைத்துக்கொண்டிருப்பாயென்று அருளிச்செய்தார் எ—று.

ஏகாரம், தொன்மையே என்பதில்-தேற்றம்; நீயே என்பதில்-பிரிநிலை. தூக்கினை சுந்தனை முற்றெச்சங்கள். முற்பிறப்பிற்செய்தவினைக்கேற்ப நால்வகைத்தோற்றத்து எழுவகைப்பிறப்பில் அமைத்துப்படைக்கவேண்டுதலால் 'எற்றதுப்புரவதனைநன்றுதூக்கினை-சுந்தனை இருத்தி' என்றார். தூக்கினை சுந்தனை என இயையும். (௰௫)

அருளுரு வாகு மீச னயற்கிது புகன்ற பின்னர்
முருகவேண் முகத்தை நோக்கி முறுவல்செய் தருளை நல்கி
வருதியா லைய வென்று மலர்க்கையுய்த் தவனைப் பற்றித்
திருமணிக் குறங்கின் மீது சிறந்துவீற் றிருப்பச் செய்தான்.

இ—ள்: அருள் உரு ஆகும் ஈசன் அயற்கு இது புகன்ற பின்னர்—கருணையே வடிவமாகிய சிவபிரான் பிரமதேவருக்கு இதனைக்கூறியபின்பு, முருகவேள் முகத்தை நோக்கி முறுவல் செய்து—முருகக்கடவுளது முகத்தைப்பார்த்துக் குறுநகைசெய்து, அருளை நல்கி—கிருபையைச்செய்து, ஐய வருதி என்று மலர் கை உய்த்து அவனை பற்றி—மைந்தனே!வருவாயாகவென்றுகூறித்தாமரைமலர்போலுந் திருக்கரங்களைநீட்டி அம்முருகக்கடவுளை எடுக்கி, திரு மணி குறங்கின் மீது சிறந்து வீற்றிருப்ப செய்தான்—சிறந்த அழகிய தொடையின்மேல் சிறப்புடன் இருத்தினார் எ—று.

தொடையென்றது மடியை. நகை அன்புபற்றியெழுந்ததென்க. (௰௬)

காமரு குமரன் சென்னி கதுமென வுயிர்த்துச் செக்கர்த்
தாமரை புரையுங் கையாற் றழுவியே யயனுந் தேற்றா
வோமெனு வுரைக்குஞ் சொல்லி னுறுபொரு ளுனக்குப் போமோ
போமெனி லதனை யின்னே புகலென விறைவன் சொற்றான்.

இ—ள்: இறைவன்— சிவபிரான், காமரு குமரன் சென்னி கதும் என உயிர்த்து-அழகுபொருந்திய முருகக்கடவுளது உச்சியை விரைவில்மோந்து, செக்கர் தாமரை புரையும் கையால் தழுவி—செந்தாமரைமலர்போன்ற திருக்கரங்களால் அணைத்து, அயனும் தேற்றா ஓம் என உரைக்கும் சொல்லின் உறு பொருள் உனக்கு போமோ—(மைந்தனே!) பிரமதேவரும் அறியாத ஓம் என்றுசொல்லப்படுகின்ற பிரணவமந்திரத்தின் சிறந்தபொருள் உனக்குத்தெரியுமா?, போம் எனில்-தெரியுமாயின், அதனை இன்னே புகல் என—அப்பொருளை இப்பொழுதே கூறுதியென்று, சொற்றான்—கூறியருளினார் எ—று.

கதும் விரைவுக்குறிப்பு. தாமரை ஆகுபெயர். தேற்றா என்பதை, தன்வினைப் பொருளில்வந்த பிறவினையென்றேனும், றகரவொற்றுவிரித்தல் விகாரமென்றேனும், இருவினைக்கும் பொதுவானது இங்கே தன்வினைக்குவந்ததென்றேனும் கொள்க. (௰௭)

முற்றொருங் குணரு மாதி முதல்வகே ளுலக மெல்லாம்
பெற்றிடு மவட்கு நீமுன் பிறருணரா த வாற்றாற்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப
விற்றென வியம்ப லாமோ மறையினு விசைப்ப தல்லால்.

இ—ள்: முற்று ஒருங்கு உணரும் ஆதி முதல்வ கேள்—எல்லாவற்றையும் ஒருசேர அறிந்துள்ள முதற்கடவுளே! கேட்டருளுக, நீ—தேவரீர், முன்—முற்காலத்தில், பிறர் உணராத ஆற்றல்-பிறரறியாவண்ணம், உலகம் எல்லாம் பெற்றிடும் அவட்கு சொற்றது-உலகங்களெல்லாவற்றையும்பெற்ற அந்த அம்மையார்க்குக்கூறிய, இனைய மூல தொல்பொருள்—இந்தப்பிரணவமந்திரத்தின் பழையபொருளை, மறையினால் இசைப்பது அல்லால்—இரகசியமாகக்கூறுவதன்றி, யாரும் கேட்ப இற்று என இயம்பல் ஆமோ-(இங்குள்ளார்) அனைவருங் கேட்கும்படி இன்னதென்றுசொல்லுதல் தகுமா? (தகாதே) எ—று.

முற்றும் என்பதில் முற்றும்மைதொக்கது. மூலம்-எல்லாவற்றுக்கும் ஆதாரமாயுள்ளது. இற்று-இகரச்சுட்டடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. (௫௮)

என்றலு நகைத்து மைந்த வெமக்கருண் மறையி னென்னாத்
தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னு
மொன்றொரு பதத்தி னுண்மை யுரைத்தன னுரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனா மண்ணல்.

இ—ள்: என்றலும்—என்று குமாரக்கடவுள் கூறுதலும், நகைத்து- (சிவபிரான்)சிரித்து, மைந்த—குமாரனே!, மறையில் எமக்கு அருள் என்னா—இரகசியமாக எனக்குக்கூறுதியென்றுவினவி, தன் திரு செவியை நல்க—தமது சிறந்த காதைச் சாய்த்துக்கொடுக்க, சண்முகன்—குமாரக்கடவுள், குடிலை என்னும் ஒன்று ஒரு பதத்தின் உண்மை உரைத்தனன்—பிரணவமென்று சொல்லப்படுகின்ற ஏகாக்ஷரமந்திரத்தின் உண்மைப்பொருளைக்கூறினார், உரைத்தல் கேளா—அவ்வாறு கூறுவதைக்கேட்டு, ஞான நாயகன் ஆம் அண்ணல்—ஞானமுதல்வராகிய சிவபிரான், நன்று அருள் புரிந்தான்—நன்றாக க்கிருபைசெய்தார் எ—று.

உண்மை-ஆகுபெயர். 'பிரணவத்தின்பொருளாவார் சிவபிரானாகிய தேவரீரும் குமாரனாகியயானுமே' என்று குமாரக்கடவுள் கூறியதாக முதனூலாற்பெறப்படுகின்றது. அக்கருத்தைச்சிவபிரான் அங்கீகரித்தமையின் நன்றருள்புரிந்தனர் என்க. (௫௯)

அன்னதோ ரைய மாற்றி யகமகிழ் வெய்தி யங்கட்
டன்னிளங் குமரன் றன்னைத் தலைமையோ டிருப்ப நல்கி
யென்னையா ளுடைய நாதன் யாவரும் போற்றிச் செல்லத்
தொன்னிலை யமைந்து போந்து தொல்பெருங் கயிலை வந்தான்.

இ—ள்: என்னை ஆள் உடைய நாதன்—எங்களை அடிமையாகவுடைய சிவபிரான், அன்னது ஓர் ஐயம் மாற்றி—அந்தச்சந்தேகத்தை நீக்கி, அகம் மகிழ்வு எய்தி— மனமகிழ்ந்து, தன் இளம் குமரன் தன்னை தலைமையோடு அங்கண் இருப்ப நல்கி—தனது இளையகுமாரராகிய சுப்பிரமணியக்கடவுளை முதன்மையோடும் அக்கந்தவெற்பிலிருக்கும்படி அருள்செய்து, யாவரும் போற்றி செல்ல—(திருமால் முதலிய) அனைவருந்துதித்து உடன்வர, தொல் நிலை அமைந்து போந்து—பழைய இயல்பமைந்து சென்று, தொல் பெரும் கயிலை வந்தான்—பழைய பெரிய திருக்கைலாசகிரியில் வந்தருளினார் எ—று.

ஐயம்-குமாரக்கடவுளுக்குப் பிரணவப்பொருள் தெரியுமோ தெரியாதோ என்பது. தம்புதல்வர் உண்மைப்பொருளையுணர்ந்து கூறுதலால் அகமகிழ்ந்தனர். (௬௦)

முன்புறு மயன்மா றேவர் முனிவரை விடுத்து முன்னோன்
றன்பெருங் கோயில் புக்கான் றுவில்சீர்க் கந்த வெற்பிற்

பொன்புனை தவிசி னேறிப் புடைதனில் வயவர் போற்ற
வின்பொடு குமர மூர்த்தி யினிதுவீற் றிருந்தா னன்றே.

இ—ள்: முன்னோன்—முதற்கடவுளாகிய சிவபிரான், முன்பு உறும் அயன் மால் தேவர் முனிவரை விடுத்து, முதன்மைபொருந்திய பிரமதேவரையும் விஷ்ணுமூர்த்தியையும் ஏனையதேவர்களையும் முனிவர்களையும் விடைகொடுத்தனுப்பி, தன் பெரும் கோயில் புக்கான்—தமது பெரிய திருக்கோயிலினுட்சென்றார், குமரமூர்த்தி—குமாரக்கடவுள், தா இல் சீர் கந்தவெற்பில்—அழிதலில்லாத சிறப்பினையுடைய கந்தவெற்பின்கண், பொன் புனை தவிசின் ஏறி—பொன்னாற்செய்யப்பட்ட சிங்காசனத்திலெழுந்தருளி, புடைதனில் வயவர் போற்ற—பக்கத்தில் இலக்கத்தொன்பது வீரர்களும் நின்றுதுதிக்க, இன்பொடு—மகிழ்ச்சியுடன், இனிது வீற்றிருந்தான்—செவ்வே எழுந்தருளியிருந்தார் எ—று. (சச)

ஆங்குறு குமரப் புத்தே ளருமறைக் காதி யாகி
யோங்குமெப் பொருட்கு மேலா மோரெழுத் துரையி னுண்மை
தீங்கற வணங்கிக் கேட்பச் சிறுமுனிக் குதவி மற்றும்
பாங்குறு மிறைவ னூலும் பரிவினு லுணர்த்தி னுனல்.

இ—ள்: ஆங்கு உறு குமர புத்தேள்—அங்கே எழுந்தருளியிருந்த குமாரக்கடவுள், தீங்கு அற வணங்கி கேட்ப—குற்றமின்றி நமஸ்கரித்துக்கேட்க, அரும் மறைக்கு ஆதி ஆகி—சிறந்த வேதங்கட்கு முதலாகி, ஓங்கும் எ பொருட்கும் மேல் ஆம் ஓர் எழுத்து உரையின் உண்மை—சிறந்த எல்லாப்பொருள்களினுஞ் சிறந்ததாகிய ஏகாக்ஷரமகாமந்திரத்தினது உண்மைப்பொருளை, சிறு முனிக்கு உதவி—அகத்தியமுனிவருக் குபதேசித்து, மற்றும்—இன்னும், பாங்கு உறும் இறைவன் நூலும் பரிவினுல் உணர்த்திஞன்—உரிமை பொருந்திய பதிசாஸ்திரங்களையும் கருணையோடும் உபதேசித்தார் எ—று.

ஓரெழுத்துரையினுண்மை என்பதற்கு-ஏகாக்ஷரமந்திரத்தின் பொருளினுண்மையை எனக்கூறினுமாம். தீங்கறவணங்கிக்கேட்டல்- குருசிஷ்யக்கிரமமாகக் கேட்டல். இறைவனூல்-வேத சிவாகமமுதலியன. அவையும் பிரணவம்போலக்கடவுளியல்பை விளக்குவனவாதலால் ‘பாங்குறுமிறைவனூல்’ என்றார். (சஉ)

அயனைச்சிறைநீக்குபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் கஉசுரு.

---

## விடைபெறுபடலம்.

அசுரர்களையழிக்கும்பொருட்டுச் சிவபிரானிடம் குமாரக்கடவுள் அனுமதிபெற்றசெயலைக் கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

### இப்படலப்பொழிப்பு.

திருமாலின் புதல்வியர்களிருவர், சுப்பிரமணியக்கடவுளை மணஞ்செய்யும்பொருட்டுச் சரவணப்பொய்கையில் தவமியற்ற, சுப்பிரமணியக்கடவுள் அவர்க்கெளிவந்து ‘இந்திரனிடத்தும் வேடரிடத்தும் முறையே புதல்வியராய்வளர்திர், யாம் வந்து மணஞ்செய்வேம்’ என்று அருள்செய்து அனுப்பிவிட்டு, கந்தவெற்பிற்போய் வீற்றிருந்து, பின்னு

ருநாள் தமது இருமுதுகுரவர்களையுந் தரிசிக்குமாறு திருக்கைலாசமலையிற்போய், அங்கே சிவபிரானுக்கும்உமாதேவியார்க்கும் நடுவிலெழுந்தருளியிருந்தனர். அப்பொழுது திருமால்முதலிய தேவரனைவரும் சிவபிரானிடஞ்சென்று, சூரபன்மனுதியரைச்சங்கரிக்குமாறு வேண்ட, சிவபிரான் அவ்வசுரரையழிக்கும்படி வேல்முதலிய படைக்கலங்களையும் மனோவேகப்பொற்றேரையும் படைத்தலைவர்களையும் ஈந்து விடைகொடுத்தனுப்பினர் என்பதாம்.

எல்லை யன்னதின் மாலருள் கன்னிய ரிருவர்
சொல்ல ரும்பெரு வனப்பினர் சுந்தரி யமுத
வல்லி யென்றிடும் பெயரினர் கந்தவேள் வரைத்தோள்
புல்லு மாசையாற் சரவணத் தருந்தவம் புரிந்தார்.

இ—ள்: அன்னது எல்லையில்—அக்காலத்தில், மால் அருள் கன்னியர்— திருமால்பெற்ற புதல்வியர்களுள், சொல்ல அரும் பெரு வனப்பினர்—சொல்லுதற்கரிய பேரழகையுடையவர்களும், சுந்தரி அமுதவல்வி என்றிடும் பெயரினர்—சுந்தரவல்லி அமுதவல்லியென்னும் பெயர்களையுடையவர்களுமாகிய, இருவர்—இருகன்னியர்கள், கந்தவேள் வரை தோள் புல்லும் ஆசையால்—முருகக்கடவுளது மலைபோன்ற புயங்களைத்தழுவவேண்டுமென்னும் ஆசையினால், சரவணத்து அரும் தவம் புரிந்தார்— சரவணதடாகத்தில் அருமையாகிய தவத்தைச்செய்தார்கள் எ—று.

எல்லையன்னதில்-உருபுபிரித்துக்கூட்டப்பட்டது. சுந்தரவல்லி-அழகுடையபெண். அமிர்தவல்லி-அமிர்தம்போலும் மகத்துவமமைந்தபெண். அமிர்தம்போன்ற இனிய மொழியைவசனிப்பவளெனினுமாம். அமுதம்-அமிர்தமென்னும்வடமொழித்திரிபு. அமுதவல்லி மூத்தவளும் சுந்தரவல்லி இளையவளுமாயினும் செய்யுட்கேற்ப முறைபிறழவைத்தார். திரட்சியினாலும் உயர்ச்சியினாலும் வலியினாலும் தோளுக்கு மலை உபமானமாயிற்று. சிவபிரானால் அம்மையார்க்குக்கூறப்பட்ட சுப்பிரமணியப்பிரபாவம், கேட்டுகின்றோர் பிறர்க்குக்கூற உலகமெங்கும் வெளிப்பட்டதெனவும், வைகுண்டபதவியிலுள்ள விஷ்ணுபத்தர்களான சிலமங்கையர்களால் அது வீணைகளிலமைத்துப்பாடப்பட்டதெனவும், தேவேந்திரனுக்குத்தம்பியும் திருமாலின் அவதாரமுமான உபேந்திரரது கண்களிற்றோன்றிய கன்னியரிருவரும் அங்கேயாழிசையிலமைத்துப்பாடப்பட்டதும் பிறவிடங்களிற் பிறராற்பேசப்பட்டதுமாகிய பிரபாவங்களைக் கேள்வியுற்று அவரை வரனாகக்கொள்ளும்படி தவமியற்றினரெனவும் முதனூலிற்கூறப்பட்டுளது. (க)

என்னை யாளுடை மூவிரு முகத்தவ னிரண்டு
கன்னி மாருமா யொன்றிநோற் றிடுவது கருத்தி
லுன்னி யேயெழீ இக் கந்தமால் வரையினை யொருவி
யன்னை தோன்றிய விமகிரிச் சாரலை யடைந்தான்.

இ—ள்: என்னை ஆள் உடை மூ இரு முகத்தவன்— என்னையடிமையாகவுடைய ஆறுதிருவதனங்களையுடைய குமாரக்கடவுள், இரண்டு கன்னிமாரும் ஆய் ஒன்றி நோற்றிடுவது கருத்தில் உன்னி-(முற்கூறிய) இரண்டு கன்னியர்களுமாக ஒருப்பட்டுத்தவஞ்செய்வதைத் திருவுள்ளத்திலெண்ணி, எழீஇ-எழுந்தருளி, மால் கந்தவரையினை ஒருவி—பெரிய கந்தவெற்பைநீங்கி, அன்னை தோன்றிய இமகிரி சாரலை அடைந்தான்— (தமது தாயாகிய) உமாதேவி அவதரித்த இமையமலையின்சாரலை அணுகினர் எ—று.

என்னையாளுடைமூவிருமுகத்தவன் என்றதனால் ஆசிரியர் சுப்பிரமணியக்கடவுள்மாட்டு மிகுந்த பத்தியுடையரென்பது விளங்கிற்று. தன்னால் விரும்பப்பட்ட வரனைப்பிறர்விரும்பியவழிப்பகைமையுண்டாவதியல்பாகவும் அவ்விருகன்னியரும் அங்ஙனம் பகைமைகொள்ளாது இணங்கித் தவமியற்றினரென்பதும், அச்செயல் முருகவேட்குப்

பெருமகிழ்வை விளைத்ததென்பதும் போதர 'இரண்டுகன்னிமாருமாயொன்றிநோற்றிடு வதுகருத்திலுன்னியேயெழீஇ' என்றார். (உ)

பொருவில் சீருடை யிமையமால் வரைக்கொரு புடையாஞ்
சரவ ணந்தனிற் போதலுந் தவம்புரி மடவா
ரிருவ ரும்பெரி தஞ்சியே பணிந்துநின் றேத்த
வரம ளிப்பதென் கூறுதி ரென்றனன் வள்ளல்.

இ—ள்: பொரு இல் சீர் உடை மால் இமையவரைக்கு ஒரு புடை ஆம் சரவணம் தனில் போதலும்-ஒப்பில்லாத சிறப்பினையுடைய பெரிய இமையமலையினொருசாரிலுளதாகிய சரவணதடாகத்தில் (குமாரக்கடவுள்) வருதலும், தவம் புரி மடவார் இருவரும் பெரிது அஞ்சி பணிந்து நின்று ஏத்த—தவஞ்செய்துகொண்டிருந்த கன்னியரிருவரும் மிகவும் அச்சங்கொண்டு வணங்கிநின்றுதுதிக்க, வள்ளல்-குமாரக்கடவுள், அளிப்பது வரம் என் கூறுதிர் என்றனன்—(கன்னியீர்!) நுமக்குத்தரற்பாலதாகிய வரம்யாது? அதனைச் சொல்லுங்களென்று வினவியருளினர் எ—று.

பெரியராகியகடவுளைச் சிறியேங்கள் தவத்தாலழைத்தது தவறுகுமோவெனக் கருதியஞ்சினரென்க. வரம்-வேண்டுவனகொள்ளுதல். வரமீயத்தலைப்பட்டதற்கேற்ப 'வள்ளல்' என்றார். (௩)

மங்கை மார்தொழு தெம்மைநீ வதுவையான் மருவ
விங்கி யாந்தவம் புரிந்தனங் கருணைசெய் யென்ன
வங்கவ் வாசகங் கேட்டலு மாறுமா முகத்துத்
துங்க நாயக னவர்தமை நோக்கியே சொல்வான்.

இ—ள்: மங்கைமார் தொழுது- அக்கன்னியர்கள் இருவரும் (குமாரக்கடவுளை) வணங்கி, நீ வதுவையால் எம்மை மருவ இங்கு யாம் தவம் புரிந்தனம்—தேவரீர் விவாகமியற்றி எங்களைக்கூடும்பொருட்டு இவ்விடத்து நாங்கள் தவஞ்செய்தோம், கருணை செய் என்ன—(அங்ஙனமே) கிருபைசெய்க என்று பிரார்த்திக்க, மா ஆறுமுகத்து துங்க நாயகன்—பெரிய ஆறுதிருமுகங்களையுடைய உயர்ச்சிமிக்க தலைவரான முருகக்கடவுள், அவர் தமை நோக்கி சொல்வான்—அப்பெண்களைப்பார்த்துச் (சிலவார்த்தைகளைக்) கூறுவார் எ—று. (௪)

மூந்து மின்னமு தக்கொடி மூவுல கேத்து
மிந்தி ரன்மக ளாகியே வளர்ந்தனை யிருத்தி
சுந்த ரிப்பெய ரிளையவ டொல்புவி தன்னி
லந்தண் மாமுனி புதல்வியாய் வேடர்பா லமர்தி.

இ—ள்: மூந்தும் இன் அமுத கொடி—மூத்தவளாகிய இனிய அமிர்தவல்லியே! (நீ), மூ உலகு ஏத்தும் இந்திரன் மகள் ஆகி வளர்ந்தனை இருத்தி—மூவுலகத்தாராலுந் துதிக்கப்படுகின்ற தேவேந்திரனது புதல்வியாய் வளர்ந்திருப்பாயாக, சுந்தரி பெயர் இளையவள்—சுந்தரவல்லியென்னும் பெயரையுடைய இளைய கன்னிகையே! (நீ), தொல் புவி தன்னில் அம் தண் மா முனி புதல்வி ஆய் வேடர் பால் அமர்தி—பழைய பூவுலகத்தில் அழகிய தண்ணளியினையுடைய சிறந்த சிவமுனிவரது மகளாகி வேட்டுவர்களிடத்தில் வளர்ந்திருப்பாயாக எ—று.

இனிமை-மொழிபேசுங்காலென்க. அன்றி, அமிர்தத்திற்கடையாக்கிக்கூறினுமாம். அமுதக்கொடி, இளையவள்-அண்மைவிளிகள். வேடர்- வேடு என்னுந்தொழிலையுடையவர். வேடு-மிருகங்களையும் பறவைகளையும் பிடித்துவருத்துதல்" (௫)

நன்று நீவிர்கள் வளர்ந்திடு காலையா நண்ணி
மன்றல் நீர்மையா லுங்களை மேவுது மனத்தி
லொன்று மெண்ணலீர் செல்லுமென் றெம்பிரா னுரைப்ப
நின்ற கன்னியர் கைதொழு தேகினர் நெறியால்.

இ—ள்: நீவிர்கள் நன்று வளர்ந்திடு காலை—நீவிரிருவீரும் நன்றாகவளருங்காலத்தில், யாம் நண்ணி—நாம் வந்து, மன்றல் நீர்மையால் உங்களை மேவுதும்— விவாகமுறைப்படி உங்களைச்சேர்வோம், மனத்தில் ஒன்றும் எண்ணலீர் செல்லும் என்று—மனத்திற் சிறிதும் ஆலோசியாது போங்களென்று, எம்பிரான் உரைப்ப-எங்கள் தலைவராகிய குமாரக்கடவுள்கூற, நின்ற கன்னியர்-அங்குநின்ற இருபெண்களும், கை தொழுது—கைகூப்பி, நெறியால் ஏகினர்—முறைப்படி போயினார்கள் எ—று.

எண்ணலீர்-முற்றெச்சம். மணஞ்செய்தற்கேற்ற பிராயமெய்தியவழியென்பார் 'நன்றுநீவிர்கள்வளர்ந்திடுகாலை' எனவும், இவர் சட்டளைப்படி சென்றுவளருங்கால் நம்மைமணஞ்செய்வாரோ செய்யாதுவிடுவாரோ என்றையுறாது போதிரென்பார் 'மனத்திலொன்றுமெண்ணலீர்செல்லும்' எனவுங்கூறினார். நெறியால் என்பதை கைதொழுது என்னும் எச்சத்தோடியைத்துக்கூறினுமாம். (௬)

ஏகு மெல்லையி லமுதமா மென்கொடி யென்பாள்
பாக சாதனன் முன்னமோர் குழவியாய்ப் படர்ந்து
மாக மன்னநின் னுடன்வரு முபேந்திரன் மகள்யா
னுகை யாலெனைப் போற்றுதி தந்தையென் றடைந்தாள்.

இ—ள்: ஏகும் எல்லையில்—(இவ்வாறு) செல்லும்பொழுது, மா மெல் அமுதக்கொடி என்பாள்—சிறந்த மென்மையான அமிர்தவல்லியானவள், பாகசாதனன் முன்னம் ஓர் குழவி ஆய் படர்ந்து—இந்திரனுக்கு முன்னாக ஒருகுழந்தைவடிவுகொண்டுசென்று, மாக மன்ன—சுவர்க்கலோகாதிபனே!, யான் நின்னுடன் வரும் உபேந்திரன் மகள்—யான் உன்னுடன்பிறந்த உபேந்திரனது புதல்வியாம், ஆகையால்—ஆதலினால், தந்தை—பிதாவே!, எனை போற்றுதி என்று அடைந்தாள்—என்னை வளர்க்குதியென்று கூறி அணுகினாள் எ—று.

அமுதமாமென்கொடி என்பதை அமுதம் ஆம் மென் கொடி - என வகுத்து அதற்கேற்பப்பொருள்கொள்ளினுமாம். பாகசாதனன்-பாகனென்னும் அசுரனைத் தண்டித்தவன், தண்டித்தல்-இங்கே, கொல்லுதல். தேவர்களுக்கு வேண்டியவடிவத்தைக்கொள்ளும் வல்லமையுளதாதலின், இவளும் குழந்தையுருக்கொண்டு போயினளென்க. திருமால், இந்திரனைக்காத்தற்பொருட்டுக் காசிபமுனிவர்க்குப்புதல்வராக அதிதியினிடம் அவதரித்து, அவனது பகைவரையழித்து, உபேந்திரனென்னும்பெயருடன் அவனருகிலிருக்கின்றனரென்க. உப+இந்திரன்-உபேந்திரன்; குணசந்தி. இந்திரனுடன் பிறந்தவனெனவும் இந்திரனருகிலிருப்பவனெனவும் பொருள்படும். தந்தை-ஈண்டு, பெரியதந்தை.

பொன்னின் மேருவி லிருந்தவன் புதல்வியை நோக்கி
யென்னை யீன்றயா யிங்ஙனம் வருகென விசைத்துத்
தன்ன தாகிய தனிப்பெருங் களிற்றினைத் தனது
முன்ன ராகவே விளித்தன னித்திற மொழிவான்.

இ—ள்: பொன்னின் மேருவில் இருந்தவன்—பொன்மயமான மகாமேருமலையில் வீற்றிருந்த இந்திரன், புதல்வியை நோக்கி—(அந்த) மகளைப்பார்த்து, என்னை ஈன்

றயாய் இங்ஙனம் வருக என இசைத்து—என்னைப்பெற்றதாயே! இங்குவருவாயாகவென்று கூறி, தன்னது ஆகிய தனி பெரும் களிற்றினை தனது முன்னர் ஆக விளித்தனன்—தன்னுடையதாகிய ஒப்பற்ற பெரிய ஐராவதயானையைத் தனக்குமுன் வரும்படி அழைத்து, இ திறம் மொழிவான்—இவ்வாறு சொல்வான் எ—று.

தன்றம்பிபெற்ற புதல்வியை 'என்னையீன்றயாய்' என்றது அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. யாய்-அண்மைவிளி. தன்னது-ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். களிறு-களிப்பையுடையது. களி-பகுதி. று-பெயர்விகுதி. சுவர்க்கலோகத்தையிழந்து மேருமலையிலொளித்திருந்தனனாதலின் 'பொன்னின்மேருவிலிருந்தவன்' என்றார். ()

இந்த மங்கைநந் திருமக ளாகுமீங் கிவளைப்
புந்தி யன்பொடு போற்றுதி யினையவள் பொருட்டா
லந்த மில்சிறப் பெய்துமே லென்றலு மவளைக்
கந்த மேற்கொடு நன்றெனப் போயது களிறு.

இ—ள்: இந்த மங்கை நம் திரு மகள் ஆகும்—இந்தக்கன்னிகை எமது சிறந்த புதல்வியாகும், ஈங்கு இவளை புந்தி அன்பொடு போற்றுதி—இவளை மனத்தில் அன்புகூர்ந்து வளர்ப்பாய், இனையவள் பொருட்டால் மேல் அந்தம் இல் சிறப்பு எய்தும்— இவள் காரணமாகப்பின்பு அளவற்ற பெருமை கிடைக்கும், என்றலும்—என்றுகூறுதலும், களிறு—ஐராவதயானை, நன்று என—நல்லதென்று கூறி [உடன்பட்டு], அவளை கந்தம் மேல் கொடு போயது—அப்புதல்வியைப்பிடரின்மேல் வைத்துக்கொண்டு சென்றது எ—று.

மங்கை-ஈண்டுப்பருவங்குறியாது நின்றது. தன்றம்பிமகளாயினுந் தன்னிடம் வளருமாறு குழந்தையாய் வருதலின் 'நந்திருமகளாகும்' என்றான். புந்தி - புத்தியென்னும் வடமொழித்திரிபு. அந்தமில்சிறப்பெய்துமென்றது குமாரக்கடவுள் திருமணஞ் செய்வரென்பதுகருதியென்க.

கொவ்வை போலிதழ்க் கன்னியை மஞ்ஞைவதி கொடுபோ
யவ்வி யானையே போற்றிய தனையகா ரணத்தாற்
றெய்வ யானையென் றொருபெய ரெய்தியே சிறிது
நொவ்வு றாதுவீற் றிருந்தனள் குமரனை நுவன்றே.

இ—ள்: கொவ்வை போல் இதழ் கன்னியை மஞ்ஞைவதி கொடு போய்—கொவ்வம்பழம்போன்ற அதரத்தினையுடைய அப்புதல்வியை மஞ்ஞைவதிநகரிற்கொண்டுசென்று, அ யானையே போற்றியது—அந்த ஐராவதயானையே வளர்த்தது, அனையகாரணத்தால்—அக்காரணத்தால், தெய்வயானை என்று ஒரு பெயர் எய்தி—தெய்வயானையென்று ஒரு பெயரைப்பெற்று, சிறிதும் நொ உறாது—சற்றேனும் வருத்தமடையாமல், குமரனை நுவன்று வீற்றிருந்தனள்—குமாரக்கடவுளைத் துதித்துக்கொண்டு இருந்தாள் எ—று.

கொவ்வை-ஆகுபெயர். யானையே என்பதில் ஏகாரம் தேற்றம். மஞ்ஞைவதி- மேருமலையில் தேவர்க்கு இருப்பிடமாயுள்ளநகரம். தெய்வீகமாகிய யானை வளர்த்தகாரணத்தாற் றெய்வயானை யென்னும்பெயரெய்தினளென்க. (௪௦)

பெருமை கொண்டிடு தெண்டிரைப் பாற்கடல் பெற்ற
திரும டந்தையை யன்புடன் வளர்த்திடுந் திறம்போற்
பொருவில் சீருடை யடலயி ராவதம் போற்ற
வரிசை தன்னுட னிருந்தன டெய்வத மடந்தை.

இ—ள்: பெருமை கொண்டிடு தெள் திரை பாற்கடல்—மகிமை பொருந்திய தெளிந்ததிரையையுடைய பாற்கடலானது, திரு மடந்தையை பெற்று—இலக்குமிதேவியைப்பெற்று, அன்புடன் வளர்த்திடும் திறம் போல்— அன்பினுடன் வளர்த்ததன்மைபோல, தெய்வத மடந்தை—தெய்வதயானையம்மை, பொரு இல் சீர் உடை அடல் அயிராவதம்போற்ற—ஒப்பில்லாத சிறப்பினையுடைய வலிய ஐராவதயானைவளர்க்க, வரிசை தன் உடன் இருந்தனள்—உபசாரத்தோடு (அங்கே) இருந்தாள் எ—று.

அயிராவதம்-ஐராவதம் என்னும்வடசொல்லின் போலி. திருமால் பள்ளிகொள்ளுதற்கிடமாதல் தேவர்க்கமுதங்கொடுத்தல் முதலிய மகிமைகளையுடைமையால் 'பெருமைகொண்டிடு-பாற்கடல்' என்றார். ஆழமிக்ககடலின்திரைகள் தெளிவுடையனவென்க. தெள்ளுகின்றதிரை என வுரைப்பாருமுளர்; அவர் சங்கு ஒக்கோலைமுதலியவற்றைச் செயப்படுபொருளாகக்கூறுவர். ஐராவதம் வெண்ணிறத்தையுடைமையாற் பாற்கடலைப்போன்றது, தெய்வயானை பேரழகையும் கடவுட்குமனைவியாதலையுமுடைமையாற் திருமகளைப்போன்றனர் என்க. (கக)

முற்று ணர்ந்திடு சுந்தரி யென்பவண் முருகன்
சொற்ற தன்மையை யுளங்கொடு தொண்டைநன் னாட்டி
லுற்ற வள்ளியஞ் சிலம்பினை நோக்கியாங் குறையு
நற்ற வச்சிவ முனிமக ளாகவே நடந்தாள்.

இ—ள்: முற்று உணர்ந்திடு சுந்தரி என்பவள்-எல்லாவற்றையும் அறிந்தசுந்தரவல்லியென்பவள், முருகன் சொற்ற தன்மையை உளம் கொடு—குமாரக்கடவுள் கூறிய வாசகத்தை மனத்திலமைத்து, நல் தொண்டை நாட்டில் உற்ற வள்ளியம் சிலம்பினை நோக்கி—நல்ல தொண்டைமண்டலத்திலுள்ள வள்ளிமலையைக்குறித்து, ஆங்கு உறையும் நல் தவ சிவமுனி மகள் ஆக நடந்தாள்—அங்கே வசிக்கின்ற நல்லதவத்தினையுடைய சிவமுனிவரது புதல்வியாகச்சென்றாள் எ—று.

மூக்காலநிகழ்ச்சியையு மூணரவல்லவென்பார் 'முற்றுணர்ந்திடு' என்றார். எல்லாக்கலைகளையுமுணர்ந்தவென்பார் அங்ஙனங்கூறினரெனினுமாம். தனது தெய்வத்தன்மைக்குக் குறைவுண்டாகப்பூமியிற் பிறப்பினும் பின்னர்ப்பண்டையினும் பன்மடங்குசிறப்பெய்துவேனென்பதை ஊகித்துணர்ந்தாளாதலால் இவ்வாறு விசேடித்தார். தொண்டைக்கொடியை அடையாளமாகப்பெற்ற தொண்டைமானென்பவனது நாடாதலாலும், தொண்டர்கள்பலர்வாழ்ந்த இடமாதலாலும் தொண்டைநாடென்னும் பெயர்வழங்கிற்று. வள்ளிக்கொடியை மிகுதியாகவுடைமையால் வள்ளிமலையென்னும் பெயர்வழங்கிற்று. சிவமுனி-சிவஞானத்தையுடையமுனிவன். (கஉ)

இந்த வண்ணமிவ் விருவர்க்கும் வரந்தனை யீந்து
கந்த மால்வரை யேகியே கருணையோ டிருந்தான்
றந்தை யில்லதோர் தலைவனைத் தாதையாய்ப் பெற்று
முந்து பற்பக லுலகெலாம் படைத்திடு முதல்வன்.

இ—ள்: தந்தை இல்லது ஓர் தலைவனை தாதை ஆய் பெற்று முந்து பல் பகல் உலகு எலாம் படைத்திடும் முதல்வன் — தமக்குப்பிதா இல்லாத இறைவராகிய சிவபிரானைப் பிதாவாகக்கொண்டு முன் பலகாலம் உலகங்களெல்லாவற்றையும் படைத்துக்கொண்டிருந்த தலைவராகிய கந்தவேள், இந்தவண்ணம் இ இருவர்க்கும் வரம் தனை ஈந்து—இவ்வாறு இந்த இருகன்னியர்க்கும் வரத்தைக்கொடுத்து, மால் கந்தவரை ஏகி—பெரியகந்தவெற்பிற்போய், கருணையோடு இருந்தான்—அருள்செய்துகொண்டுவீற்றிருந்தார் எ—று. (கங)

வேறு.

இத்திறஞ் சிலபக லிருந்து பன்னிரு
கைத்தல முடையவன் கயிலை மேலுறை
யத்தனொ டன்னைதன் னடிப ணிந்திடச்
சித்தம துன்னின னருளின் செய்கையால்.

இ—ள்: பன்னிரு கை தலம் உடையவன்-பன்னிரண்டு திருக்கரங்களையுடைய முருகக்கடவுள், இ திறம் சில பகல் இருந்து—இவ்வாறு சிலநாளாகக் கந்தவெற்பில் வீற்றிருந்து (பின்னொருநாளில்), அருளின் செய்கையால்— (ஆன்மாக்கண்மீதுகொண்ட)கருணைத்திறத்தால், கயிலை மேல் உறை அத்தனொடு அன்னைதன் அடி பணிந்திட—திருக்கைலாசமலையில் வீற்றிருக்கின்ற தந்தைதாயர்களது பாதங்களைவணங்குமாறு, சித்தமது உன்னினன்—திருவுள்ளம்பற்றினார் எ—று.

கந்தவேள் தந்தைதாயரைத்தரிசிக்கநினைந்தது, அவரேவியபின் ஞானநியமைச்சங்கரித்துப்பெரியோர்களைக் காத்தற்கேயாதலின் 'அருளின்செய்கையால்-உன்னினன்' என்றார். (௧௪)

எள்ளருந் தவிசினின் றிழிந்து வீரரா
யுள்ளுறும் பரிசன ரொருங்கு சென்றிடக்
கொள்ளையஞ் சாரதர் குழாமும் பாற்பட
வள்ளலங் கொருவியே வல்லை யேகினான்.

இ—ள்: வள்ளல்—சுப்பிரமணியக்கடவுள், எள்ள அரும் தவிசில் நின்று இழிந்து—இகழப்படுதலில்லாத [குற்றமற்ற] சிங்காசனத்தினின்றுமிறங்கி, வீரர் ஆய் உள் உறும் பரிசனர் ஒருங்கு சென்றிட-வீரமுடையவர்களாகமதிக்கப்படுகின்ற இலக்கத்தொன்பது பரிசனர்களும் ஒருசேர உடன்வர, கொள்ளையம் சாரதர் குழாமும் பால் பட— மிகுதியாகவுள்ள பூதர்கூட்டமும் பக்கத்தில்வர, அங்கு ஒருவி— அவ்விடத்தினின்றும் நீங்கி, வல்லை ஏகினான்—விரைவிற் சென்றார் எ—று.

எள்ள என்னுஞ்செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளில்நின்றது. அருமை-ஈண்டு இன்மைப்பொருட்டு. உள்ளுறும்பரிசனரென்பதற்கு-பூதர்சூழவு புறத்ததாக உட்சூழ்ந்திருக்கின்ற பரிசனர் எனினுமாம். (௧௫)

ஏயென வெள்ளிவெற் பெய்தி யாங்கணங்
கோயிலி னவைக்களங் குறுகிக் கந்தவே
டாயொடு தந்தையைத் தாழ்ந்து போற்றியே
யாயவர் நடுவுற வருளின் வைகினான்.

இ—ள்: கந்தவேள்—முருகக்கடவுள், ஏ என வெள்ளிவெற்பு எய்தி—விரைவிற்றிருக்கைலாசமலையிற்போய், ஆங்கணம்—அவ்விடத்தில், கோயிலின் அவை களம் குறுகி-திருக்கோயிலிலுள்ள சபாமண்டபத்தையணுகி, தாயொடு தந்தையை தாழ்ந்து போற்றி—மாதாவாகிய உமையம்மையாரையும் பிதாவாகிய சிவபிரானையும் வணங்கித்துதித்து, ஆயவர் நடு உற அருளின் வைகினான்— அவ்விருவர்க்குநடுவே (அவரது) திருவருட்படி வீற்றிருந்தார் எ—று.

ஏ-விரைவுக்குறிப்பு. அருளின்வைகினான் என்பதற்குக்கருணையோடும் வீற்றிருந்தாரெனினுமாம். அம்மையார்க்கும் சிவபிரானுக்கும் நடுவிற் குமாரக்கடவுள் வீற்றிருத்தலை "உமையம்மையொடுபெம்மானனந்தலையில்வைகியநலங்கொள்குமரேசன்" என முன்னர்த்திருவிளையாட்டுப்படலத்திற் கூறுதலானுமறிக. இவ்வாறிருப்பது சோமாஸ்கந்தரூபமெனப்படும். (௧௬)

அண்ணலங் குமரவே ளங்கண் வைகலும்
விண்ணவர் மகபதி மேலை நாண்முத
லுண்ணிகழ் தங்குறை யுரைத்து நான்முகன்
கண்ணனை முன்கொடு கயிலை யெய்தினார்.

இ—ள்: அண்ணல் அம் குமரவேள் அங்கண் வைகலும்— பெருமையையுடைய குமாரக்கடவுள் அங்கே வீற்றிருக்க, விண்ணவர் —தேவர்களும், மகபதி—இந்திரனும், மேலை நாள் முதல் தம் உள் நிகழ் குறை உரைத்து-பண்டைக்காலந்தொடங்கித் தம்மகத்திற்பொருந்திய குறையைமுறையிட்டு, நான்முகன் கண்ணனை முன் கொடு—பிரமதேவரையும் விஷ்ணுமூர்த்தியையும் முன்னிட்டுக்கொண்டு, கயிலை எய்தினார்—திருக்கைலாசமலையை அடைந்தார்கள் எ—று.

திருக்கைலாசமலைக்குத் தம்முடன்வருமாறு வேண்டி அவரை உடன்படுவித்து அழைத்துக்கொண்டுசென்றாரென்பார் 'தங்குறையுரைத்துநான்முகன்கண்ணனைமுன்கொடுகயிலையெய்தினார்' என்றார். (கஎ)

அடைதரு மவர்தமை யமல னாலய
நடைமுறை போற்றிடு நந்தி நின்மெனத்
தடைவினை புரிதலுந் தளர்ந்து பற்பக
னெடிதுறு துயரொடு நிற்றன் மேயினார்.

இ—ள்: அடைதரும் அவர் தமை— வந்த அத்தேவர்களை, அமலன் ஆலய நடை முறை போற்றிடும் நந்தி—சிவபிரானது திருக்கோயில் வாயிலை முறைப்படி காவல்செய்கின்ற திருநந்திதேவர், நின்ம் என தடைவினை புரிதலும்— நில்லுங்களென்று தடைசெய்தலும், தளர்ந்து— சோர்ந்து, நெடிது உறு துயரொடு— மிகுதியாகப்பொருந்திய துன்பத்துடன், பல் பகல் நிற்றல் மேயினார்-பலநாளாக நின்றார்கள் எ-று.

நில்லும் என்னும் செய்யுமென்வாய்பாட்டு ஏவற்பன்மைமுற்று,ஈற்றுயிர்மெய்கெட, லகரம்னகாமாய் நின்ம் என நின்றது. இதிலுள்ளமகரமெய் கால்மாத்திரையுடையதாய் மகரக்குறுக்கமெனப் பெயர்பெறும். புரிதலும் மேயினார் என இயையும். நந்தியந்தேவர்தடைசெய்தமாத்திரத்தில் துயரம் முன்னையினும் அதிகரித்ததாதலின் 'நெடிதுறு துயர்' என்றார். (கஅ)

அளவறு பற்பக லங்க ணின்றுளார்
வளனுறு சிலாதனன் மதலை முன்புதம்
முளமலி யின்னலை யுரைத்துப் போற்றலுந்
தளர்வினி விடுமினென் றிதனைச் சாற்றினன்.

இ—ள்: அளவு அறு பல் பகல் அங்கண் நின்று உளார்-அளவிடப்படாத பலநாட்களாக அவ்விடத்தேநின்ற தேவர்கள், வளன் உறு சிலாதன் நல் மதலை முன்பு-வளத்தையுடைய சிலாதமுனிவரதுசிறந்தபுதல்வராகிய திருநந்திதேவருக்குமுன், தம் உளம் மலி இன்னலை உரைத்து போற்றலும்-தங்கள் மனத்திற்பொருந்திய துன்பத்தைக்கூறி[உள்விடுக்குமாறு]பிரார்த்தித்தலும், இனி தளர்வு விடுமின் என்று—இனி மனவாட்டத்தை நீக்குங்களென்றுகூறி, இதனை சாற்றினன்—(பின்னரும்) இவ்வாசகத்தைக்கூறினார் எ—று.

மிகப் பலநாளென்பார் 'அளவறுபற்பகல்' என்றார். வளம்-ஈண்டு அதிகாரமுதலியன. (கக)

தங்குறை நெடும்புனற் சடில மேன்மதி
யங்குறை வைத்திடு மாதி முன்புபோய்

நுங்குறை புகன்றவ ணெய்தி னுய்ப்பனு
லிங்குறை வீரென வியம்பிப் போயினுன்.

இ—ள்: உறை தங்கு நெடும் புனல் சடில மேல்—துளிகள்பொருந்திய நெடிய கங்கைநதியையணிந்த சடைமுடியின்மேல், குறை மதியம் வைத்திடும் ஆதி முன்பு போய்—பாலசந்திரனையணிந்த ஆதிகடவுளாகிய சிவபிரானுக்குமுன்னுக (யான்) சென்று, நும் குறை புகன்று—உங்கள் குறையைச்சொல்லி, அவண் நொய்தின் உய்ப்பன்—அவ்விடத்து விரைவிற்புகுவிப்பேன், இங்கு உறைவீர் என இயம்பி போயினுன்—(அது காறும்) இவ்விடத்தேயிருங்களென்றுகூறி உட்சென்ருர் எ—று.

தேவர்குறையைத்தவருதுதீர்ப்பரென்பதுபோதர, 'புனற்சடிலமேன்மதியங்குறைவைத்திடுமாதி' எனக் கருத்துடையடைபுணர்த்திக்கூறினுர். (உ௦)

போயின னந்தியம் புனிதன் கண்ணுதற்
றூயனை வணங்கினன் றொழுது வாசவன்
மாயவ னுன்முகன் வானு ளோரெலாங்
கோயிலின் முதற்கடை குறுகி னுரென்ருன்.

இ—ள்: நந்தியம் புனிதன்—பரிசுத்தராகிய திருநந்திதேவர், போயினன்—உட்சென்று, கண் நுதல் தூயனை வணங்கினன்—நெற்றிக்கண்ணையுடைய பரிசுத்தராகிய சிவபிரானை நமஸ்கரித்து, தொழுது—கைகூப்பி, வாசவன்—இந்திரனும், மாயவன்—திருமாலும், நான்முகன்—பிரமதேவரும், வான் உளோர் எலாம்—ஏனைத்தேவர்களுமாகிய எல்லோரும், கோயிலின் முதல் கடை குறுகினுர் என்ருன்-இக்கோயிலின் முதல்வாயிலில்வந்துள்ளாரென்று விண்ணப்பஞ்செய்தார் எ-று. (உக)

அருளுடை யெம்பிரா னனையர் யாரையுந்
தருதிநம் முன்னரே சார வென்றலும்
விரைவொடு மீண்டனன் மேலை யோர்களை
வருகென வருளினன் மாசில் காட்சியான்.

இ—ள்: அருள் உடை எம் பிரான்—கருணையினையுடைய எங்கள்கடவுளாகிய சிவபிரான் (அதுகேட்டு), அனையர் யாரையும் நம் முன்னரே சார தருதி என்றலும்—அவரனைவரையும் எமக்குமுன்வரும்படி கொணர்வாயாகவென்று கூறுதலும், மாசு இல் காட்சியான்—குற்றமற்ற அறிவினையுடைய திருநந்திதேவர், விரைவொடு மீண்டனன்—விரைவிற்றிரும்பிவந்து, மேலையோர்களை வருக என அருளினன்—பழைய தேவர்களை உள்ளேவாருங்களென்று சொல்லியருளினுர் எ—று.

காட்சி தோற்றமுமாம். முன்னர்த் தம்மால் வாயிலிற்றடைசெய்யப்பட்டோ ரென்பார் 'மேலையோர்' என்ருர். (உஉ)

விடைமுக னுரைத்தசொல் வினவி யாவருங்
கடிதினி லேகியே கருணை வாரிதி
யடிமுறை வணங்கின ரதற்குள் வாசவ
னிடருறு மனத்தின னினைய கூறுவான்.

இ—ள்: யாவரும்—எல்லாத்தேவர்களும், விடைமுகன் உரைத்த சொல் வினவி—இடபமுகத்தையுடைய திருநந்திதேவர்கூறிய வார்த்தையைக்கேட்டு, கடிதினில் ஏகி—விரைந்து உட்சென்று, கருணை வாரிதி அடி முறை வணங்கினர்- திருவருட்கடலாகிய சிவபிரானது பாதங்களை முறைப்படி பணிந்தார்கள் (பின்பு), அதற்குள்— அத்தேவர்

கூட்டத்துள், வாசவன்—இந்திரன், இடர் உறும் மனத்தினன் இனைய கூறுவான்—துன்பமிக்க மனத்தையுடையவனாய் இவ்வாறு முறையிடுவான் எ—று.

கடல் நீரானிரம்பியிருத்தல்போலக் கடவுள் கருணையானிரம்பியிருத்தலின் 'கருணைவாரிதி' என்றார். அதற்குள்-அவ்வாறு வணங்கிமுடித்தற்குள் எனினுமாம். (௨௩)

பரிந்துல கருள்புரி பரையொ டொன்றியே
யிருந்தருள் முதல்வகே ளெண்ணி லாவுக
மருந்திறற் சூர்முத லவுணர் தங்களால்
வருந்தின மொடுங்கினம் வன்மை யின்றியே.

இ—ள்: பரிந்து உலகு அருள் புரி பரையொடு ஒன்றி இருந்து அருள் முதல்வ கேள்—அன்புகொண்டு உலகங்களைப்பெற்ற தேவியாருடன் ஒன்றுபட்டு இருந்து அருள்செய்கின்றதலைவரே! கேட்டருள்க, அரும் திறல் சூர் முதல் அவுணர் தங்களால்—(பிறரால் அடக்குதற்கு) அரிய வலிமையையுடைய சூரபன்மன்முதலாகிய அசுரர்களால், எண் இலா உகம் வருந்தினம்—அளவிறந்த யுகம்வரையும் வருத்தமுற்று, வன்மை இன்றி ஒடுங்கினம்—வலிமைகெட்டு வாடினோம் எ—று.

உகம்-யுகம் என்னும் வடசொல்லின் திரிபு. பரிந்து என்பது புரி என்பதனோடியையும்; இருந்தருள் என்பதனோடியைப்பினுமாம். நெருப்பும் சூடும், சூரியனும் ஒளியும், பண்ணும் இசையும், நீரும்தண்மையும், பாலும் சுவையும், பூவும் மணமும் போல அபேதமாய்நிற்றலின் 'பரையொடொன்றியேயிருந்தருண்முதல்வ' என்றான். (௨௪)

அந்தமி லழகுடை யரம்பை மாதரு
மைந்தனு மளப்பிலா வானு ளோர்களும்
வெந்தொழி லவுணர்கள் வேந்தன் மேவிய
சிந்துவி னகரிடைச் சிறைக்கண் வைகினார்.

இ—ள்: அந்தம் இல் அழகு உடை அரம்பைமாதரும்—அளவிடப்படாத அழகினையுடைய தேவப்பெண்களும், மைந்தனும்—என் புதல்வனாகிய சயந்தனும், அளப்பு இலா வான் உளோர்களும்-அளவிறந்த தேவர்களும், வெம்தொழில் அவுணர்கள் வேந்தன் மேவிய சிந்துவில் நகர் இடை—கொடுந்தொழிலையுடைய அசுரர்க்கரசனாகிய சூரபன்மனிருக்கின்ற கடனடுவிலுள்ள வீரமகேந்திரபுரத்தில், சிறை கண் வைகினார்—சிறையிலிருக்கின்றார்கள் எ—று.

வேந்தன்மேவியநகர் சிந்துவில்நகர் எனத் தனித்தனி இயையும். அரம்பை என்பது தேவதாசிகளுளொருத்திக்குப்பெயர், ஈண்டுத் தேவப்பெண்களைப் பொதுமையினுணர்த்திநின்றது. (௨௫)

இழிந்திடு மவுணரா லியாதொர் காலமு
மொழிந்திட லின்றியே யுறைந்த சீரொடு
மழிந்ததென் கடிநக ரதனை யானிவண்
மொழிந்திடல் வேண்டுமோ வுணர்தி முற்றுநீ.

இ—ள்: யாது ஓர் காலமும் ஒழிந்திடல் இன்றி உறைந்த சீரொடு—எக்காலத்தும் அழிதலின்றி நிலைபெற்ற சிறப்புடன், என் கடிநகர்—எனது சிறந்தநகரம், இழிந்திடும் அவுணரால் அழிந்தது—இழிவினையுடைய அசுரர்களால் அழிவுபெற்றது, அதனை யான் இவண் மொழிந்திடல் வேண்டுமோ—அதனை யான் இங்கே விரித்துக்கூறவேண்டுமா? (வேண்டியதன்று), நீ முற்றும் உணர்தி—தேவரீர் எல்லாவற்றையும் அறிவீர் எ—று.

எல்லாமறிந்த தேவரீர்க்கு நான் கூறுதல்வேண்டற்பாற்றன்றென்பதாம். (௨௬)

முன்னுற யான்றவ முயன்று செய்துழித்
துன்னினை நங்கணோர் தோன்ற லெய்துவா
னன்னவ னைக்கொடே யவுணர்ச் செற்றுநம்
மின்னலை யகற்றுது மென்றி யெந்தைநீ.

இ—ள்: எந்தை—எமது தலைவரே!, யான் முன் உற தவம் முயன்று செய்துழி—யான் முற்காலத்தில் தவத்தைப் பெருமுயற்சிகொண்டு செய்தபொழுது, நீ துன்னினை—தேவரீர் பிரசன்னராய், நம் கண் ஓர் தோன்றல் எய்துவான்—எம்மிடத்து ஒரு புத்திரன் அவதரிப்பான், அன்னவனை கொடு அவுணர் செற்று நம் இன்னலை அகற்றுதும்-அவனைக்கொண்டு அசுரர்களைச்சங்கரித்து நமக்குநேர்ந்த துன்பத்தையொழிப்போம், என்றி—என்று அருள்செய்தீர் எ—று.

செய்த உழி என்பதில் அகரம்தொக்கது. துன்னினை முற்றெச்சம். பலகாலம் மெய்வருந்திச்செய்யவென்பார் 'முயன்றுசெய்துழி' என்றார். (௨௭)

அப்படிக் குமரனு மவத ரித்துள
னிப்பகல் காறுமெம் மின்ன றீர்த்திலை
முப்புவ னந்தொழு முதல்வ தீயரேந்
துப்புறு பவப்பயன் றொலைந்த தில்லையோ.

இ—ள்: அப்படி குமரனும் அவதரித்து உளன்—தேவரீர் அருளிச்செய்தவாறு குமாரரும் உதித்துள்ளார் (அங்ஙனம் உதித்தும்), இ பகல் காறும் எம் இன்னல் தீர்த்திலை—இத்தினம்வரையும் எமது துன்பத்தை ஒழித்திலீர், மு புவனம் தொழும் முதல்வ-மூவுலகத்தாராலும் வணங்கப்படுந் தலைவரே!, தீயரேம் துப்பு உறு பவ பயன் தொலைந்தது இல்லையோ—பாவியேங்களது வலிமைமிக்க தீவினைப்பயன் (இப்போதும்) அழிந்திலதா? எ—று.

காறு-காலவெல்லையைக்காட்டுமோரிடைச்சொல். குமரனும் என்பதில் உம்மை எச்சம். முப்புவனமும் என்பதில் முற்றும்மைதொக்கது. "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று-சூழினுந் தான்முந் துறும்" என்றவாறு வினைப்பயன்தடுக்கவொண்ணாவலியுடைத்தாதலின் 'துப்புறுபவப்பயன்' என்றார். அனுபவிக்கப்படுகின்ற தீவினைப்பயனெனப் பொருள்கூறினுமாம். (௨௮)

சூருடை வன்மையைத் தொலைக்கத் தக்கதோர்
பேருடை யாரிலை பின்னை யானினி
யாரொடு கூறுவ னாரை நோகுவ
னீருடை முடியினோய் நினது முன்னலால்.

இ—ள்: நீர் உடை முடியினோய்—கங்கைநதியையணிந்த சடைமுடியையுடையவரே!, சூர் உடை வன்மையை தொலைக்க தக்கது ஓர் பேர் உடையார் இலை—சூரபன்மனது வலிமையை அழிக்கத்தக்க பெருமையையுடையவர் இல்லை (ஆதலின்), நினது முன் அலால்-தேவரீரது திருமுன்னிலையிற்கூறுவதும் நோவதுமேயன்றி, பின்னை ஆரொடு கூறுவன்- வேறு யாரிடத்து (என்குறைகளைச்) சொல்வேன், ஆரை நோகுவன்— யாரை (என் துன்பத்தைத்தீர்த்திலரென்று) குறைகூறுவேன் எ—று.

பெயர் யார் என்பன-பேர் ஆர் என விகாரமாயின. பின்னை என்பதில் ஐகாரம்சாரியை. பின்-ஈண்டு வேறென்னும் பொருளில்வந்தது. நீருடை முடியினோய் எனக்கருத்துடையடைபுணர்த்தியதனால் நீரே எமது துன்பத்தை மாற்றவல்லீரென்பது பெறப்படும்.()

சீகர மறிகடற் சென்று நவ்விசேர்
காகம தென்னவுன் கயிலை யன்றியே
யேகவோ ரிடமிலை யெமக்கு நீயலாற்
சோகம தகற்றிடுந் துணைவ ரில்லையே.

இ—ள் சீகரம் மறி கடல் சென்று நவ்வி சேர் காகமது என்ன— திரைமறியாநின்ற சமுத்திரத்திற்புகுந்து மரக்கலநுனியை (ஆதாரமாக) அடைந்த காகம்போல, எமக்கு—எங்களுக்கு, உன் கயிலை அன்றி ஏக ஓர் இடம் இலை— தேவரீரது இக்கைலாசகிரியையன்றிச் சரண்புக வேறோரிடமும் இல்லை, நீ அலால் சோகமது அகற்றிடும் துணைவர் இல்லை—தேவரீரேயன்றித் துன்பத்தையொழிக்க வல்ல துணைவரும் வேறில்லை எ—று.

இழிவு சிறப்பும்மையும் எச்சவும்மையுந் தொக்கன. பெருங்கடலினடுவிற் சென்று மரக்கலக்கூம்பிற்றங்கிய காகத்திற்கு அம்மரக்கலக்கூம்பேயன்றி வேறு ஆதாரமில்லாமைபோல, துயர்க்கடற்பட்ட எமக்கும் தேவரீர்வாழும்இம்மலையேயன்றி வேறு புகலிடமும், தேவரீரேயன்றி வேறு துணையும் இன்றென்பதுகருத்து. "நலத்தகுகண்ணுதனுதற்சேர்ந்தனர்- கலத்தலையகன்றிடாக்காகம்போலவே" எனத்திருவவதாரப்படலத்திலும் இவ்வுவமை புணர்த்திக்கூறினர். "எங்குப்போயுய்கேனுன்னிணையடியேயடையலலால்-எங்கும்போய்க்கரைகாணதெறிகடல்வாய்மீண்டேயும்- வங்கத்தின்கூம்பேறுமாப்பறவைபோன்றேனே" என்றார்பிறரும். (௩௦)

எற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாந்
தோற்றிய வெவ்விட மெனினுந் துய்க்கலா
மாற்றல ரலைத்திட வந்த வெந்துய
ராற்றரி தாற்றரி தலமிப் புன்மையே.

இ—ள்: எற்று எழு வன்னி மேல் இனிது துஞ்சல் ஆம்— கிளர்ந்தெரிகின்ற அக்கினியின்மேல் நன்றாகப் படுத்துறங்கலாம், தோற்றிய வெவ் விடம் எனினும் துய்க்கல் ஆம்—தோற்றப்பட்ட கொடியநஞ்சையேனும் புசிக்கலாம், மாற்றலர் அலைத்திட வந்த வெம் துயர் ஆற்ற அரிது ஆற்ற அரிது—பகைவர்கள் வருத்துதலால் நேர்ந்த கொடுந்துன்பம் சகித்தற்கரிது சகித்தற்கரிது, இ புன்மை அலம்—இந்த எளிமை போதும் எ-று.

அக்கினியின்மேற்கிடத்தலாலும் நஞ்சையுண்பதாலும் விளையுந்துயரினும் பகைவரால் விளையுந்துயர்கொடிதென்பதாம். அலைத்திட என்னும் எச்சம் ஏதுப்பொருட்டு. அலம்-வடசொல். உம்மை-உயர்வுசிறப்பு. சேய்மையிற்றானே சுடத்தக்கபெருநெருப்பென்பார் 'எற்றெழுவன்னி' எனவும், கண்ணுக்குங் கருத்திற்கும் புலப்பட்ட விடமென்பார் 'தோற்றிய-விடம்' எனவும், உண்டவுடன் கொல்லுந்தரத்ததென்பார் 'வெவ்விடம்' எனவும் கூறினர். (௩௧)

தீதினை யகற்றவுந் திருவை நல்கவுந்
தாதைய ரல்லது தனயர்க் காருள
ராதலி னெமையினி யளித்தி யாவென
வோதினன் வணங்கின னும்பர் வேந்தனே.

இ—ள்: தனயர்க்கு—பிள்ளைகளுக்கு, தீதினை அகற்றவும் திருவை நல்கவும்—தீமையையொழிக்கவும் வளத்தைக்கொடுக்கவும், தாதையர் அல்லது ஆர் உளர்—பிதாமாரேயன்றி வேறியாருளர், ஆதலின்—ஆதலால், எமை இனி அளித்தி என ஓதினன்—எங்களை இனிக்காத்தருள்கவென்றுகூறி, வணங்கினன்—நமஸ்கரித்தான், உம்பர் வேந்தன்-தேவர்க்கரசனாகிய இந்திரன் எ—று.

தாதையர் என்றது ஏகசேடபதத்துவந்துவனுதலின் தாய்தந்தையென்னுமிரு வரையுமுணர்த்தும். நோய்முதலிய தீமைகளைநீக்கி மைந்தர்க்கு நன்மைபுரிவது பெற்றோர் கடனாதல்போல, சூரனுதியரால்நேர்ந்த இடரையொழித்து எமக்குப் பழையவளத்தைத் தருவதும் தேவரீர்கடனேயாம் என்பதுகருத்து. (ஙஉ)

அப்பொழு தரியய னைய வெய்யசூர்
துப்புட னுலகுயிர்த் தொகையை வாட்டுதல்
செப்பரி தின்னினிச் சிறிதுந் தாழ்க்கலை
யிப்பொழு தருள்கென வியம்பி வேண்டினர்.

இ—ள்: அ பொழுது—அச்சமயத்தில், அரி அயன்— திருமாலும் பிரமதேவரும் (சிவபிரானைநோக்கி), ஐய—கடவுளே!, வெய்ய சூர் துப்பு உடன் உலகு உயிர் தொகையை வாட்டுதல் செப்ப அரிது— கொடிய சூரபன்மன் வலிமையுடன் உலகத்திலுள்ள பிராணிவர்க்கங்களை வருத்துதல் சொல்லமுடியாது (ஆதலின்), இன்னினி சிறிதும் தாழ்க்கலை—இனிச் சற்றுயினுந் தாமசஞ்செய்யாமல், இப்பொழுது அருள்க என இயம்பி வேண்டினர்—இப்பொழுதே கருணைசெய்குதிரென்றுகூறிப் பிரார்த்தித்தார்கள் எ—று.

இனி என்னுஞ்சொல் அடுக்கி இன்னினி எனத் தொக்கது. “இன்னினியே செய்க வறவினை-இன்னினியே” என நாலடியாரிலும் வருதல்காண்க. (ஙங)

இகபர முதவுவோ னிவற்றைக் கேட்டலு
மிகவரு ளெய்தியே விடுமி னீரினி
யகமெலி வுறலென வருளி யாங்கமர்
குகன்முக நோக்கியே யினைய கூறுவான்.

இ—ள்: இக பரம் உதவுவோன் இவற்றை கேட்டலும்—இம்மை மறுமையின் பங்களை (வேண்டியாங்கு) கொடுப்பவராகிய சிவபிரான் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன், மிக அருள் எய்தி— மிகவுங் கிருபைகூர்ந்து, நீர் இனி அகம் மெலிவு உறல் விடுமின் என அருளி—நீங்கள் இனி மனவருத்தமுறுதலை நீங்குங்களென்று அருள்செய்து, ஆங்கு அமர் குகன் முகம் நோக்கி-அவ்விடத்துவீற்றிருக்கின்ற சுப்பிரமணியக்கடவுளது முகத்தைப்பார்த்து, இனைய கூறுவான்-இவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளுவார் எ-று.

இகபரம் வடசொற்றொடர். தேவர்க்கருள்செய்யுமாறு திருவுளம்பற்றியதற்கேற்ப ‘இகபரமுதவுவோன்’ என்றார். (ஙச)

## வேறு.

பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும் பருவரல் செய்துவிண் ணவர்த
மூரினை முருக்கித் தீமையே யியற்றி யுலப்புறு வன்மைகொண் டுற்ற
சூரனை யவுணர் குழுவொடுந் தடிந்து சுருதியி னெறிநிறீஇ மகவான்
பேரர சளித்துச் சுரர்துய ரகற்றிப் பெயர்தியென் றனனெந்தை பெருமான்.

இ—ள்: பாரினை அலைத்து—பூவுலகத்தை வருத்தி, பல் உயிர் தமக்கும் பருவரல் செய்து— பல ஆன்மாக்களுக்கும் துன்பத்தையுண்டாக்கி, விண்ணவர் தம் ஊரினை முருக்கி—தேவர்களது சுவர்க்கலோகத்தையழித்து, தீமையே இயற்றி—தீவினையையே செய்து, உலப்பு உறு வன்மை கொண்டு உற்ற— அளவிடப்படாத வலிமையைக்கொண்டிருக்கின்ற, சூரனை—சூரபன்மனை, அவுணர் குழுவொடும் தடிந்து—அசுரர்கூட்டத்தோடுஞ் சங்கரித்து, சுருதியின் நெறி நிறீஇ—வேதநெறியை நிலைபெறச்செய்து, மகவான் பேர் அரசு அளித்து—இந்திரனுக்குச் சிறந்த அரசியலைக்கொடுத்து, சுரர் து

யர் அகற்றி—தேவர்களது துன்பத்தைநீக்கி, பெயர்தி என்றனன்—வருக என்று கூறியருளினர், எந்தை பெருமான்—எங்கள் பரமபிதாவாகிய சிவபிரான் எ—று.

பருவரல் தொழிற்பெயர். பருவா பகுதி. சுருதியினெறி-வைதிகமார்க்கம். நீஇ-நிறுவி என்பதன்விகாரம். அலைத்து செய்து முருக்கி இயற்றி கொண்டு என்னும் எச்சங்கள் உற்ற என்னும் பெயரெச்சத்தோடியைந்தன. (கூரு)

அருத்திகொள் குமர னினையசொல் வினவி யப்பணி புரிகுவ னென்னப்
புரத்தினை யட்ட கண்ணுதல் பின்னர்ப் பொள்ளென வுள்ளமேற் பதினோ
ருருத்திரர் தமையு முன்னலு மன்னோ ருற்றிட விவன்கையிற் படையா
யிருத்திரென் றவரைப் பலபடை யாக்கி யீந்தன னெம்பிரான் கரத்தில்.

இ—ள்: அருத்தி கொள் குமரன் இனைய சொல் வினவி— (எல்லாவுயிர்களிடத்தும்) அன்பையுடைய முருகக்கடவுள் இவ்வாசகத்தைக்கேட்டு, அ பணி புரிகுவன் என்ன—அந்தக் கட்டளையைச்செய்வேனென்று உடன்பட, புரத்தினை அட்ட கண் நுதல்—முப்புரங்களையுமெரித்த நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான், பின்னர்—அதன் பின்பு, பொள் என—விரைவாக, பதினோர் உருத்திரர் தமையும் உள்ளம் மேல் உன்னலும்—பதினோருருத்திரர்களையும் திருவுள்ளத்தில் நினைத்தருளுதலும், அன்னோர் உற்றிட—அவர்கள் வந்துசேர, இவன் கையில் படை ஆய் இருத்திர் என்று— (சிவபிரான்) இவனது கைகளில் (நீவிர்) ஆயுதங்களாக இருங்களென்றுகூறி, அவரை பல படை ஆக்கி—அவ்வுருத்திரர்களைப் பல ஆயுதங்களாகச்செய்து, எம்பிரான் கரத்தில் ஈந்தனன்—எமது தலைவராகிய குமாரக்கடவுளது திருக்கரங்களிற் கொடுத்தருளினர் எ—று.

அருத்திகொள் என்பதற்கு, சிவபிரான்மாட்டன்புடைய குமாரக்கடவுள் எனவும், சிவபிரானது அன்புக்கிடமாகிய குமாரக்கடவுள் எனவும் பொருள்கூறினுமாம். அசுரரையழிப்பிக்கமுயன்றதற்கேற்ப 'புரத்தினையட்டகண்ணுதல்' என்றார். எம்பிரான் ஈந்தனன் என இயைத்துப் பொருள்கூறினுமாம். பதினோருருத்திரர்யாவரென்பதை முன்னர்க் கணங்கள்செல்படலத்துக்காட்டினம். (கூசு)

பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும் பொருவிலா வுருவமுந் தொன்னா
ணன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர் நவிலருந் தோமரங் கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு மணிமலர்ப் பங்கயந் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார் விறன்மிகு மறுமுகன் கரத்தில்.

இ—ள்: பொன் திகழ் சடிலத்து அண்ணல் தன் பெயரும் பொரு இலா உருவமும் தொல் நாள் நன்று பெற்று உடைய உருத்திரகணத்தோர்— பொன்போல்விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபிரானது திருநாமத்தையும் ஒப்பில்லாத சாரூபத்தையும் முற்காலத்தில் நன்றாகப்பெற்றுள்ள உருத்திரர்கூட்டத்தவர்கள் பதினொருவரும், நவில் அரும் தோமரம்—சொல்லுதற்கரிய (சிறப்பினையுடைய) தோமரமும், கொடி—கொடியும், வாள்—வாளும், வன் திறல் குலிசம்—மிக்க வலிமையையுடைய வச்சிரமும், பகழி—அம்பும், அங்குசமும்—அங்குசமும், மணி—மணியும், பங்கயமலர்—தாமரைப்பூவும், தண்டம்—தண்டும்; வென்றி வில்—வெற்றியைத்தருகின்ற வில்லும், மழுவும் ஆகி—மழுவும் என்னும் படைக்கலங்களாகி, விறல் மிகும் அறுமுகன் கரத்தில் வீற்றிருந்தார்—வலிமைமிக்க சண்முகப்பெருமானது திருக்கரங்களில் தங்கியிருந்தார்கள் எ—று.

பதினோருருத்திரர்களும் பதினொரு படைகளாயமைந்திருந்தனரென்பதாம். தொன்னாள் என்றது படைப்புக்காலத்தை. கொடி மணி பங்கயம் என்பன அவ்வவ்வடிவுடையனவாய்ச் செயப்பட்ட ஆயுதங்கள். (கூஎ)

ஆயதற் பின்ன ரேவின்மு தண்டத் தைம்பெரும் பூதமு மடுவ
தேயபல் லுயிரு மொருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினு மவர்த
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயி ருண்பதெப் படைக்கு
நாயக மாவ தொருதனிச் சுடர்வே னல்கியே மதலைகைக் கொடுத்தான்.

இ—ள்: ஆயதன் பின்னர்—அதன்மேல், ஏவில்—செலுத்தினால், முது அண்டத்து ஐம் பெரும் பூதமும் அடுவது—பழைய அண்டகோளத்திலுள்ள பெரிய பஞ்சபூதங்களையும் அழிக்கவல்லதும், ஏய பல் உயிரும் ஒருதலை முடிப்பது—(உலகத்திற்)பொருந்திய பல பிராணிகளையும் நிச்சயமாக அழிக்கவல்லதும், எவர் மேல் விடுக்கினும்—எந்த வீரர்மேற்செலுத்தினாலும், அவர் தம் மா இரும் திறலும் வரங்களும் சிந்தி மன் உயிர் உண்பது—அவர்களது மிகச்சிறந்த வலிமையையும் வரங்களையும்கெடுத்து நிலைபெற்ற உயிரைக்கொல்வதும், எ படைக்கும் நாயகம் ஆவது—எல்லாப்படைக்கலங்களுக்கும் அரசும் ஆகிய, ஒரு தனி சுடர் வேல்-ஒப்பற்ற ஒளிபொருந்திய ஒரு வேற்படையை, நல்கி-உண்டாக்கி, மதலை கை கொடுத்தான்—குமாரக்கடவுளது (எஞ்சிய) திருக்கரத்திற் கொடுத்தருளினார் எ—று.

ஏவின் அடுவது ஏவின் முடிப்பது எனவும், ஆயதற்பின்னர்-நல்கி-கொடுத்தான் எனவும்இயையும். திறல்-ஈண்டு, தேகபலம் மனோபலம் ஆயுதபலம் சேனாபலம் முதலியன. உண்பது என்பது இலக்கணையாற் கொல்லுதலையுணர்த்தும். உடல் அழியினும் உயிர் அழியாது நித்தியமாயிருத்தலால் 'மன்னுயிர்' என்றார். (௧௮)

அன்னதற் பின்ன ரெம்பிரான் றன்பா லாகிநின் றேவின புரிந்து
மன்னிய விலக்கத் தொன்பது வகைத்தா மைந்தரை நோக்கியே யெவர்க்கு
முன்னவ னாமிக் குமரனோ டேகி முடிக்குதி ரவுணரை யென்னாத்
துன்னுபல் படையு முதவியே சேய்க்குத் துணைப்படை யாகவே கொடுத்தான்.

இ—ள்: அன்னதன் பின்னர்—அதன்பின்பு, எம்பிரான்—எங்கள் தலைவராகிய சிவபிரான், தன் பால் ஆகி நின்று ஏவின புரிந்து மன்னிய இலக்கத்து ஒன்பது வகைத்து ஆம் மைந்தரை நோக்கி— தமதுபக்கத்திற்சேர்ந்துபணித்த தொழில்களைச்செய்துநின்ற இலக்கத்தொன்பதென்னுந் தொகையினராகிய புதல்வர்களைப்பார்த்து, எவர்க்கும் முன்னவன் ஆம் இ குமரனோடு ஏகி—அனைவர்க்குந் தலைவராகிய இந்தக்குமாரக்கடவுளுடன்சென்று, அவுணரை முடிக்குதிர் என்னா—அசுரர்களை அழிப்பீர்களாகவென்றுகூறி, துன்னு பல் படையும் உதவி—நெருங்கிய பல படைக்கலங்களையுங் கொடுத்து, சேய்க்கு துணைப்படை ஆக கொடுத்தான்—(அவர்களைக்) குமாரக்கடவுளுக்குத்துணைச்சேனையாகக்கொடுத்தார் எ—று.

குமாரக்கடவுள் கயிலைசேர்ந்தபின் அவரது தம்பியரான இலக்கத்தொன்பதின்மர்களும் சிவபிரானைப் புடைசூழ்ந்து ஏவல்செய்துநின்றனராதலின் 'தன்பாலாகிநின்றேவினபுரிந்துமன்னிய-மைந்தர்' என்றார். படையும் என்பதில் உம்மை முற்று. (௧௯)

நாயக னதற்பி னண்டவா பரண னந்தியுக் கிரனொடு சண்டன்
காயெரி விழியன் சிங்கனே முதலாங் கணப்பெருந் தலைவரை நோக்கி
யாயிர விரட்டி பூதவெள் ளத்தோ டறுமுகன் சேனையாய்ச் சென்மி
னீயிரென் றருளி யவர்தமைக் குகற்கு நெடும்படைத் தலைவரா வளித்தான்.

இ—ள்: நாயகன்—சிவபிரான், அதன் பின்—அதன்பின்பு, அண்ட ஆபரணன்—அண்டாபரணனும், நந்தி—நந்தியும், உக்கிரனொடு—உக்கிரனும், சண்டன்—சண்

டனும், காய் எரி விழியன்—அக்கினிநேத்திரனும், சிங்கன்—சிங்கனும், முதல் ஆம்—முதலாகிய, பெரும் கணத்தலைவரை நோக்கி—சிறந்த பூதத்தலைவர்களைப்பார்த்து, நீயிர்—நீங்கள், ஆயிர இரட்டி பூதவெள்ளத்தோடு அறுமுகன் சேனை ஆ செல்மின்—இரண்டாயிரவெள்ளம் பூதர்களுடன் கந்தவேட்குச் சேனைகளாகப்போங்கள், என்று அருளி—என்று திருவாய்மலர்ந்தருளி, அவர்தமை குகற்கு நெடும் படைத்தலைவர் ஆ அளித்தான்—அவர்களை முருகக்கடவுளுக்குப்பெரியசேனைத்தலைவர்களாகக் கொடுத்தார் எ—று.

காயெரிவிழியன்-சுடுகின்ற அக்கினியைக்காலுங் கண்களையுடையவன்; அக்கினிபோற் சிவந்தகண்ணையுடையனெனினுமாம். நீயிர்-எழுவாய்வேற்றுமைக்குமாத்திரம் வரும் முன்னிலைப்பன்மைப்பெயர். கணப்பெருந்தலைவரென்றது நூற்றெண்மரை. (௪௦)

ஐம்பெரும் பூத வன்மையு மங்க ணமர்தரும் பொருள்களின் வலியுஞ்
செம்பது மத்தோ னாதியா மமரர் திண்மையுங் கொண்டதோர் செழுந்தேர்
வெம்பரி யிலக்கம் பூண்டது மனத்தின் விரைந்துமுன் செல்வதொன் றதனை
யெம்பெரு முதல்வன் சிந்தையா லுதவி யேறுவான் மைந்தனுக் களித்தான்.

இ—ள்: ஐம் பெரும் பூத வன்மையும்—பஞ்சமகாபூதங்களின் வலிமையையும், அங்கண் அமர்தரும் பொருள்களின் வலியும்—அப்பூதங்களினிடத்திருக்கின்ற பொருள்களின் வலிமையையும், செம் பதுமத்தோன் ஆதி ஆம் அமரர் திண்மையும்—செந்தாமரை மலரில்வாழ்கின்ற பிரமாமுதலிய தேவர்களது வலிமையையும், கொண்டது—உடையதும், வெம் பரி இலக்கம் பூண்டது—கொடிய இலக்கங்குதிரைகள்பூட்டப்பெற்றதும், மனத்தின் விரைந்து முன் செல்வது— மனோவேகத்தினும் விரைந்து முந்திச்செல்வதும் ஆகிய, ஓர் செழும் தேர் ஒன்று அதனை—ஒப்பற்ற சிறந்த ஒருதேரை, எம் பெரு முதல்வன்-எமது சிறந்ததலைவரான சிவபிரான், சிந்தையால் உதவி—மனத்தாற்படைத்து, ஏறுவான்—ஏறிச்செல்லும்பொருட்டு, மைந்தனுக்கு அளித்தான்—குமாரக்கடவுளுக்குக் கொடுத்தருளினர் எ—று.

மனம் ஆகுபெயர். நினைத்தமாத்திரத்தில் எங்குஞ்செல்லுதலால் மனவேகம் தேர்வேகத்திற்குபமானமாயிற்று. அதுபற்றியே அத்தேர்க்கு மனோவேகப்பொற்றேர் என்னும் பெயருமுளதாயிற்று. (௪௧)

இவ்வகை யெல்லாம் விரைவுட னுதவி யேகுதி நீயெனக் குமரன், மைவிழி யுமையோ டிறைவனைத் தொழுது வலங்கொடே மும்முறை வணங்கிச்,
செவ்விதி னெழுந்து புகழ்ந்தன னிற்பத் திருவுளத் துவகையாற் றழுவிக், கைவரு கவா னுய்த் துச்சிமே லுயிர்த்துக் கருணைசெய் தமலைகைக் கொடுத்தான்.

இ—ள்: இ வகை எல்லாம் விரைவு உடன் உதவி—(சிவபிரான்) இவ்வாறு எல்லாப்பொருள்களையும் விரைவிற்கொடுத்து, நீ ஏகுதி என-நீ செல்வாயாகவென்றுவிடைகொடுக்க, குமரன்-முருகக்கடவுள், மை விழி உமையோடு இறைவனை தொழுது-மைதீட்டிய கண்களையுடைய உமாதேவியையுஞ் சிவபிரானையும் கைகூப்பி, வலம்கொடு-பிரதக்ஷிணஞ்செய்து, மும்முறை வணங்கி—மூன்றுதரம் நமஸ்காரஞ்செய்து, செவ்விதின் எழுந்து புகழ்ந்தனன் நிற்ப—செப்பமாக எழும்பித் துதித்துநிற்க, திருவுளத்து உவகையால் தழுவி—(சிவபிரான் தமது) திருவுள்ளத்திற்றோன்றிய மகிழ்ச்சியோடும் அணைத்து, கைவரு கவான் உய்த்து—பயிலப்பெற்ற தமது மடியின்கண்ணேவைத்து, உச்சிமேல் உயிர்த்து—உச்சிமோந்து, கருணை செய்து—திருவருள்புரிந்து, அமலை கை கொடுத்தான்—உமாதேவியின் கையிற்கொடுத்தருளினர் எ—று.

குமாரக்கடவுள் நாடோறும் இருந்துபயின்றமடியென்பார் 'கைவருகவான்' என்றார். ஒழுக்கம்பொருந்திய மடியெனினுமாம். பகைவராற் பேதிக்கப்படாத இரத்தினமிழைத்த பொற்கவசத்தையும் எக்காலத்தும் அம்புகள் குறைவுபடாத இரண்டு தூணிகளையும் தரவாரி என்னும் ஆயுதத்தையும் கொடுத்ததாக முதனூலிற்கூறப்பட்டுளது. அதனை 'இவ்வகையெல்லாமுதவி' என்பதில் அமைத்துரைத்துக்கொள்க. (சஉ)

கொடுத்தலும் வயின்வைத் தருளினாற் புல்விக் குமரவேள் சென்னிமோ
ந் துன்பா, லடுத்திடு மிலக்கத் தொன்பது வகையோ ரனிகமாய்ச் சூழ்ந்திட
ப் போந்து, கடக்கரு மாற்ற லவுணர்தங் கிளேயைக் காதியிக் கடவுளர் குறை
யை, முடித்தனை வருதி யென்றருள் புரிந்தாண் மூவிரு சமயத்தின் முதல்வி.

இ—ள்: கொடுத்தலும்—சிவபிரான் கொடுத்தவுடன், மூ இரு சமயத்தின் முதல்வி—அறுவகை மதங்கட்குந்தலைவியாகிய உமாதேவியார், வயின் வைத்து—மடியிலிருத்தி, அருளினால் புல்வி—கிருபையுடன் தழுவி, குமரவேள் சென்னி மோந்து— அக்குமாரக்கடவுளது உச்சியை மோந்து, உன் பால் அடுத்திடும் இலக்கத்து ஒன்பது வகையோர் அனிகம் ஆய் சூழ்ந்திட— உன்பக்கத்திற் சூழ்ந்த இலக்கத்தொன்பதுவீரர்களும் சேனையாய்ச்சூழ்ந்துவர, போந்து—(நீ போர்செய்யப்) போய், கடக்க அரும் ஆற்றல் அவுணர்தம் கிளையை காதி—வெல்லுதற்கரிய வலிமையையுடைய அசுரர்கூட்டத்தையழித்து, இ கடவுளர் குறையை முடித்தனை வருதி—இந்தத்தேவர்களது குறையைநீக்கி வருவாய், என்று அருள் புரிந்தாள்—என்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

அறுவகைச்சமயங்களாவன:—சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் என்பனவாம். சமயங்கள் புறப்புறம் புறம் அகப்புறம் அகம் எனநாற்றிறப்படுமெனவும் அந்நான்குந்தனித்தனி அறுவகைப்படுமெனவும் அந்த நாற்றிறத்தறுவகைச்சமயங்களையும் அடக்கி 'அறுவகைச்சமயம்' எனக்கூறினரெனவும் உரைப்பர் சிலர். சமயத்தின்முதல்வி என்பதற்கு அவ்வச்சமயத்தெய்வமாய்நிற்பவளென்பதுகருத்து. (சங)

அம்மையித் திறத்தா லருள்புரிந் திடலு மறுமுகன் றொழுதெழீஇ யனையோர்
தம்விடை கொண்டு படர்ந்தனன் றானைத் தலைவரா மிலக்கமே லொன்பான்
மெய்ம்மைகொள் வீரர் யாவருங் கணங்கள் வியன்பெருந் தலைவரு மிருவர்
செம்மல ரடிகண் மும்முறை யிறைஞ்சிச் சேரவே விடைகொடு சென்றார்.

இ—ள்: அம்மை இ திறத்தால் அருள்புரிந்திடலும்— உமாதேவியார் இவ்வாறு கருணைசெய்தவுடன், அறுமுகன்—சண்முகப்பெருமான், தொழுது எழீஇ—வணங்கியெழுந்து, அனையோர் தம் விடை கொண்டு படர்ந்தனன்— அவ்வுமாமகேச்சுரர்களது அனுமதியைப்பெற்றுச்சென்றார் (அப்பொழுது), தானை தலைவர் ஆம் மெய்ம்மை கொள் இலக்கம் மேல் ஒன்பான் வீரர் யாவரும்—சேனைத்தலைவர்களாகிய உண்மைநெறியிலொழுகின்ற இலக்கத்தொன்பது வீரர்களும், கணங்கள் வியன் பெரும் தலைவரும்— சிறந்த பெரிய பூதத்தலைவர்களும், இருவர் செம் மலர் அடிகள் மும் முறை இறைஞ்சி— (சிவபிரான் உமையம்மையார் என்னும்) இருவரதும் சிவந்த தாமரைமலர்போலும் பாதங்களை மூன்றுதரம் வணங்கி, சேர—ஒருங்கே, விடை கொடு—(அவர்களிடம்) அனுமதிபெற்றுக்கொண்டு, சென்றார்—உடன்போயினார் எ—று.

எதிர்ந்தாரை அறநெறிகோடாதடர்த்துவெல்லும் ஆற்றலுடையரென்பார் 'மெய்ம்மைகொள்வீரர்' என்றார். (சச)

நின்றிடு மயன்மான் மகபதி யெந்தாய் நீயெமை யளித்தனை நெஞ்சத்
தொன்றொரு குறையு மில்லையா லிந்நா ளுய்ந்தன முய்ந்தன மென்று
பொன்றிகழ் மேனி யுமையுட னிறைவன் பொன்னடி பணிந்தெழ நமக்கு
நன்றிசெய் குமரன் றன்னுட னீரு நடமென விடையது புரிந்தான்.

இ—ள்: நின்றிடும் அயன் மால் மகபதி—(அப்பொழுது) அங்குநின்ற பிரமதேவரும் திருமாலும் இந்திரனும், எந்தாய்—எம் பரமபிதாவே!, நீ எமை அளித்தனை-தேவரீர் எங்களைப்பாதுகாத்தருளினீர், நெஞ்சத்து ஒன்று ஒரு குறையும் இல்லை—எங்கள் மனத்தில் யாதொருகுறையும் இல்லை, இ நாள் உய்ந்தனம் உய்ந்தனம் என்று— இற்றைத்தினத்தில் உய்ந்தோம் உய்ந்தோம் என்றுகூறி, பொன் திகழ் மேனி உமை உடன் இறைவன் பொன் அடி பணிந்து எழ-பொன்போல ஒளிவிளங்குகின்ற திருமேனியையுடைய உமாதேவியாரதும் சிவபிரானதும் அழகிய திருவடிகளைவணங்கி எழுந்திருக்க, நமக்கு நன்றி செய் குமரன் தன் உடன் நீரும் நடம் என விடை அது புரிந்தான்— உமக்கு நன்மையைச்செய்கின்ற குமாரனுடன் நீங்களும் போங்களென்று அனுமதிசெய்தார் எ—று.

அளித்தனை உய்ந்தனம் என இறந்தகாலத்தாற்கூறியது, விரைவுந்தெளிவும் பற்றி. உய்ந்தனம் உய்ந்தனம்-உவகைபற்றிவந்த அடுக்கு. நடவும் என்னுஞ்செய்யுமென் முற்றில் ஈற்றுயிர்மெய்கெட்டது. (சரு)

விடைபெறுபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் கஙுகo.

---

# படையெழுபடலம்.

குமாரக்கடவுள் சூரபன்மனுதியோரைச் சங்கரிக்கும்பொருட்டுச் சேனையோடு புறப்பட்டுச்சென்றமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

திருமால் குமாரக்கடவுளுக்குத் தேர்ப்பாகனுகும்படி வாயுதேவனைப் பணிக்க, அவன் அவ்வாறேயமைந்து தேரைச்செலுத்தினன். குமாரக்கடவுள் அத்தேரின்மேலிவர்ந்து, இலக்கத்தொன்பது வீரர்களும் தேவர்களும் இரண்டாயிரவெள்ளம் பூதசேனைகளும் அவற்றின்றலைவர்களும் உடன்வர, அசுரருடன் போர்செய்யுமாறுசென்றருளினர் என்பதாம்.

கண்ணுதல் விடைபெற் றரியயன் மகவான் கடவுளர் தம்மொடு கடிதி
னண்ணலங் குமரன் றன்னொடு சென்றே யயல்வரு மருத்தினை நோக்கித்
தண்ணளி புரியு மறுமுகத் தெந்தை தனிப்பெருந் தேர்மிசை நீபோய்ப் [ன்.
பண்ணொடு முட்கோன் மத்திகை பரித்துப் பாகனுய்த் தூண்டெனப் பணித்தா

இ—ள்: அரி-திருமால், கண் நுதல் விடை பெற்று-நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது அனுமதியைப்பெற்று, அயன் மகவான் கடவுளர் தம்மொடு-பிரமதேவரோடும் இந்திரனேடும் ஏனைய தேவர்களோடும், அண்ணலம் குமரன் தன்னொடு-பெருமையிற்சிறந்த முருகக்கடவுளோடும், கடிதில் சென்று—விரைவிற்போய், அயல் வரும் மருத்தினை நோக்கி—

பக்கத்தில்வருகின்ற வாயுதேவனைப்பார்த்து, நீ-(வாயுவே!) நீ, தண் அளி புரியும் அறுமுகத்து எந்தை தனி பெரும் தேர்மிசை போய்-திருவருளைச்செய்கின்ற ஆறுதிருமுகங்களையுடைய எங்கள் பரமபதியாகிய முருகக்கடவுளது ஒப்பற்ற பெரிய தேரின்மேல் ஏறி, பண்ணொடு முட்கோல் மத்திகை பரித்து—கடிவாளத்தையும் முட்கோலையும் சம்மட்டியையும் கைக்கொண்டு, பாகன் ஆய் தூண்டு என பணித்தான்— சாரதியாய்ச் செலுத்துதியென்று கட்டளையிட்டான் எ—று.

முட்கோல்-இருப்புமுள்ளை நுனியிலுடையதடி. (௧)

மன்புரி திருமா லினையன பணிப்ப மாருத னிசைந்துவான் செல்லும்
பொன்பொலி தேரின் மீமிசைப் பாய்ந்து பொருக்கென மருத்துவர் நாற்பா
னொன்பது திறத்தார் புடைவரத் தூண்டி யுவகையோ டறுமுகத் தொருவன்
முன்புற வுய்த்துத் தொழுதுமற் றிதன்மேன் முருகநீ வருகென மொழிந்தான்.

இ—ள்: மன் புரி திருமால் இனையன பணிப்ப— காத்தற்றொழிலைச்செய்கின்ற விஷ்ணுமூர்த்தி இவ்வாசகங்களைக்கூற, மாருதன் இசைந்து—(கேட்ட)வாயுதேவன் உடன்பட்டு, நாற்பான் ஒன்பது திறத்தார் மருத்துவர் புடை வர— நாற்பத்தொன்பதுவகையினராகிய வாயுக்கள் தம்பக்கத்தில்வர, பொருக்கு என—விரைவில், வான் செல்லும் பொன் பொலி தேரின் மீமிசை பாய்ந்து—ஆகாயமார்க்கத்திற்செல்லுகின்ற பொன்னலைமைந்துவிளங்குகின்ற தேரின்மேற்றாவி, தூண்டி--(அத்தேரைச்)செலுத்தி, உவகையோடு-மகிழ்ச்சியுடன், அறுமுகத்து ஒருவன் முன்பு உற உய்த்து-ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற குமாரக்கடவுளுக்குமுன்னுகை விடுத்து, தொழுது—கைகுவித்து, முருக-குமாரக்கடவுளே!, நீ இதன் மேல் வருக என மொழிந்தான்-தேவரீர் இத்தேரின்மேல் எழுந்தருளுகவென்று விண்ணப்பஞ்செய்தான் எ—று.

நாற்பத்தொன்பது வாயுக்களும் வாயுதேவனது பரிசனங்களென்க. (௨)

மாருத னினைய புகன்றுகை தொழலு மற்றவன் செயற்கையை நோக்கிப்
பேரருள் புரிந்து கதிரிளம் பரிதி பிறங்குசீ ருதயமால் வரைமேற்
சேருவ தென்னக் குமரவே ளனைய செழுமணி யிரதமேற் செல்லச்
சூரினி யிறந்தா னென்றுவா சவனுஞ் சுரர்களு மார்த்தனர் துள்ளி.

இ—ள்: மாருதன் இனைய புகன்று கைதொழலும்-- வாயுதேவன் இவ்வார்த்தைகளைக்கூறிக் கைகூப்பிநிற்றலும், குமரவேள்--முருகக்கடவுள், அவன் செயற்கையை நோக்கி—அவ்வாயுதேவனது செயலைப்பார்த்து, பேர் அருள் புரிந்து— மிக்க கிருபையைச்செய்து, இளம் கதிர் பரிதி பிறங்கு சீர் மால் உதய வரை மேல் சேருவது என்ன—இளங்கிரணங்களையுடைய சூரியன்விளங்குகின்ற சிறப்பினையுடைய உதயமலையின்மேலுதிப்பதுபோல, அனைய செழு மணி இரத மேல் செல்ல—செழுமையாகிய இரத்தினமழுத்தப்பெற்ற அந்தத்தேரின்மேலெழுந்தருள, வாசவனும் சுரர்களும்—இந்திரனும் மற்றைய தேவர்களும், இனி சூர் இறந்தான் என்று— இனிச் சூரபன்மன் இறந்தானென்று துணிந்து, துள்ளி ஆர்த்தனர்—(மனமகிழ்ச்சியாற்) குதித்து ஆரவாரித்தார்கள் எ—று.

செயற்கை என்னுந் தொழிற்பெயரில் அல் சாரியை. செழுமணி மாணிக்கமெனினுமாம். இறந்தான்-காலவழுவமைதி. இளங்கதிர்ப்பரிதி செந்நிறத்துடன் உதயகிரியிலுதித்து இருளையழித்து ஒளிர்வதுபோல, கந்தவேள் சிவந்தநிறத்துடன் பொற்றேரிலெழுந்தருளி அசுரரையழித்துக் கீர்த்திபெறுதலின் ‘கதிரிளம்பரிதி-உதயமால்வரைமேற்சேருவதென்ன-குமரவேள்-இரதமேற்செல்ல’ என்றார். (௩)

வேறு.

ஓங்கு தேர்மிசைக் குமரவேண் மேவலு முவப்பா
லாங்க வன்றன தருள்பெறுந் திறலினோ ரணுகிப்
பாங்கர் நண்ணினர் முனிவருந் தேவர்கள் பலரு
நீங்க லின்றியே யவர்புடை சூழ்ந்தனர் நெறியால்.

இ—ள்: ஓங்கு தேர் மிசை குமரவேள் மேவலும்— உயர்ந்த அத்தேரின்மேற் குமரக்கடவுள் எறியவுடன், ஆங்கவன் தனது அருள் பெறும் திறலினோர்-அக்குமரக்கடவுளது கருணையைப்பெற்ற இலக்கத்தொன்பதுவீரர்களும், உவப்பால் அணுகி—மகிழ்ச்சியுடன் நெருங்கி, பாங்கர் நண்ணினர்—பக்கத்திற்சேர்ந்தார்கள், முனிவரும்—முனிவர்களும், தேவர்கள் பலரும்—பலதேவர்களும், நீங்கல் இன்றி—பிரியாது, நெறியால் அவர் புடை சூழ்ந்தனர்—முறைப்படி அவரது பக்கத்திற்சூழ்ந்தார்கள் எ—று.

ஆல்-ஒடு உருபின்பொருளில் வந்தது. வீரர்க்குப்புறத்தே திருமால் முதலிய தேவர்களும் தேவர்க்குப்புறத்தே முனிவருஞ்சூழ்ந்துசென்றனரென முதனூல் கூறிய கருத்தையுள்ளிட்டு 'நெறியால்-சூழ்ந்தனர்' என்றார். (௪)

இனைந்த னோடவர் முருகனை யடைதலு மிருநீர்
புனைந்த சென்னியன் கயிலையி லிருந்தவெம் பூத
ரனந்த வெள்ளத்தி லிராயிர மாகும்வெள் ளத்தர்
வனைந்த வார்கழற் றலைவர்தம் முரைகொடு வந்தார்.

இ—ள்: அவர் இனந்தனோடு முருகனை அடைதலும்—அவர்களெல்லாம் கூட்டமாகக் குமரக்கடவுளைச்சூழ்தலும், இரு நீர் புனைந்த சென்னியன் கயிலையில் இருந்த வெம் பூதர் அனந்த வெள்ளத்தில்-பெரிய கங்கைநதியையணிந்த திருமுடியையுடைய சிவபிரானது திருக்கைலாசமலையிலிருந்த கொடிய அநேகவெள்ளம்பூதர்களுள், இராயிரம் ஆகும் வெள்ளத்தர்—இரண்டாயிரவெள்ளமென்னுந் தொகையினர், வனைந்த வார் கழல் தலைவர் தம் உரை கொடு வந்தார்— நீண்ட வீரக்கழலையணிந்த சேனாதிபர்களது சொற்படி எழுந்துவந்தார்கள் எ—று.

வார்கழல்வனைந்ததலைவர்எனற்பாலது வனைந்தவார்கழற்றலைவர் என வடசொன்னடையாய் வைக்கப்பட்டது. (௫)

எழுவி யன்கதை நேமிவெஞ் சூலம்வா ளெறிவேன்
மழுமு தற்படை யாவையு மேந்திய வலியோர்
நிழன்ம திப்பிறை ஞெலிந்தென நிலாவுமி ழெயிற்ற
ரழலு குத்திடும் விழியின ரசனியி னறைவார்.

இ—ள் எழு வியன் கதை நேமி வெம் சூலம் வாள் எறிவேல் மழு முதல் படை யாவையும் ஏந்திய வலியோர்—(அப்பூதர்கள்) எழுவும் பெரிய தண்டும் சக்கரமும் கொடிய சூலமும் வாளும் எறியீட்டியும் மழுவும் முதலாகிய படைக்கலங்களெல்லாவற்றையுந் தாங்கிய வீரர்கள், நிழல் பிறை மதி ஞெலிந்து என நிலா உமிழ் எயிற்றர்— சாயையினையுடைய இளம்பிறையைக் கடைந்துவைத்தாற்போல ஒளிவீசுகின்ற வக்கிரதந்தங்களையுடையவர்கள், அழல் உகுத்திடும் விழியினர்—அக்கினிப்பொறியைச்சிதறுகின்ற கண்களையுடையவர்கள், அசனியின் அறைவார்—இடியைப்போல [வல்லெனப்] பேசுகின்றவர்கள் எ—று.

நிழல் குளிர்ச்சியெனினுமாம். (௬)

நெடியர் சிந்தினர் குறியின ரைம்பெரு நிறனும்
வடிவில் வீற்றுவீற் றெய்தினர் வார்சடைக் கற்றை
முடியர் குஞ்சியர் பலவத னத்தரோர் முகத்தர்
கொடிய ரென்னினு மடைந்தவர்க் கருள்புரி குணத்தோர்.

இ—ள்: நெடியர்—மிக நீண்டவடிவத்தையுடையவர்கள், சிந்தினர்—மிகக்குறியவடிவத்தையுடையவர்கள், குறியினர்—சமரூபத்தையுடையவர்கள், ஐம் பெரு நிறனும் வடிவில் வீற்று வீற்று எய்தினர்—ஐவகையினவாகிய சிறந்த நிறங்களெல்லாவற்றையும் சரீரத்தில் வெவ்வேருகப்பொருந்தப்பெற்றவர்கள், வார் கற்றை சடை முடியர்— நீண்ட அடர்ந்த சடைமுடியையுடையவர்கள், குஞ்சியர்— குடுமியையுடையவர்கள், பலவதனத்தர்—பலமுகங்களையுடையவர்கள், ஓர் முகத்தர்— ஒருமுகத்தையுடையவர்கள், கொடியர் என்னினும் அடைந்தவர்க்கு அருள் புரி குணத்தோர்— கொடுந்தன்மையையுடையவர்களாயினும் தம்மைச்சரணடைந்தவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்கின்ற குணத்தையுடையவர்கள் எ—று.

ஐம்பெருநிறமாவன:—வெண்மை கருமை செம்மை பொன்மை பசுமை என்பன. சிலர் நெடியர், சிலர் சிந்தினர் என்றிவ்வாறுமுதன்மூவடிகட்கும் உரைத்துக்கொள்க. (எ)

நீறு கண்டிகை புனைதரும் யாக்கையர் நெடுநஞ்
சேறு கண்டனை யன்றிமற் றெவரையு மெண்ணார்
மாறு கொண்டவ ருயிர்ப்பலி நுங்குவோர் மறலி
வீறு கொண்டதொல் படைதனைப் படுத்திடு மேலோர்.

இ—ள்: நீறு கண்டிகை புனைதரும் யாக்கையர்—விபூதியையும் உருத்திராக்கத்தையும் அணிந்த சரீரத்தையுடையவர்கள், நெடு நஞ்சு ஏறு கண்டனை அன்றி மற்று எவரையும் எண்ணார்— பெரிய ஆலாகலம்பொருந்திய திருமிடற்றையுடைய சிவபிரானையேயன்றிப்பிறரெவரையும் மதியாதவர்கள், மாறு கொண்டவர் உயிர் பலி நுங்குவோர்—எதிர்த்தபகைவரது உயிரைப் பலியாகஉண்ணுகின்றவர்கள், மறலி வீறு கொண்ட தொல் படைதனை படுத்திடும் மேலோர்—யமனது மேன்மைபொருந்திய பழைய சேனைகளை அழித்த மேன்மையையுடையவர்கள் எ—று.

தேகம் (எலும்புநரம்புமுதலிய எழுவகைத்தாதுக்களால்) யாக்கப்பட்டமையால் யாக்கை எனப்பெயர்பெற்றது. யா-பகுதி. கை தொழிற்பெயர்விகுதி. தொழிலாகுபெயர். ஐ- செயப்படுபொருள்விகுதியெனக்கொண்டால், கு-சாரியை. யமன்படையைப்படுத்தது, சிவபிரான் யமனையுதைத்தபொழுதென்க. (அ)

அண்டம் யாவையு மாண்டுறை யுயிர்த்தொகை யனைத்து
முண்டு மிழ்ந்திட வல்லவ ரன்றியு முதரச்
சண்ட வங்கியா லடுபவ ரட்டவை தம்மைப்
பண்டு போற்சிவ னருளினல் வல்லையிற் படைப்போர்.

இ—ள்: அண்டம் யாவையும் ஆண்டு உறை உயிர் தொகை அனைத்தும் உண்டு உமிழ்ந்திட வல்லவர்—அண்டங்களெல்லாவற்றையும் அவ்வண்டங்களில்வசிக்கின்ற உயிர்க்கூட்டங்களெல்லாவற்றையும் (ஒருங்கே) தின்று பின்பு உமிழவல்லவர்கள், அன்றியும்—அல்லாமலும், உதர சண்ட அங்கியால் அடுபவர்—வயிற்றிலுள்ள கொடிய பசித்தீயினல் (அவற்றைச்) சீரணமாக்க வல்லவர்கள், அட்டவை தம்மை- அவ்வாறு அழிக்கப்பட்ட

வைகளை, ஈவன் அருளினல் பண்டு போல் வல்லையில் படைப்போர்—சிவபிரானது அனுக்கிரகத்தினல் முன்போல விரைவிற் படைக்கவல்லவர்கள் எ—று. (௯)

முன்னை வைகலி னிறந்திடு மிந்திரன் முதலோர்
சென்னி மாலைகந் தரத்தினி லுரத்தினிற் சிரத்திற்
கன்ன பீதினிற் கரத்தினின் மருங்கினிற் கழலிற்
பொன்னின் மாமணிக் கலனெடும் விரவினர் புனைவார்.

இ—ள்: முன்னை வைகலின் இறந்திடும் இந்திரன் முதலோர் சென்னிமாலை—முற்காலத்தில் இறந்த இந்திரன்முதலிய தேவர்களது தலைமாலைகளை, கந்தரத்தினில்—கழுத்திலும், உரத்தினில்-மார்பிலும், சிரத்தில்-தலையிலும், கன்னம் பீதினில்-காதுகளிலும், கரத்தினில்-கைகளிலும், மருங்கினில்- அரையிலும், கழலில்—கால்களிலும், பொன்னில் மா மணி கலனெடும் விரவினர் புனைவார்— பொன்னலாகிய சிறந்த இரத்தினபரணங்களுடன் கலந்து தரிப்பவர்கள் எ—று.

இப்பூதர்கள் இந்திரன்முதலிய தேவர்களினும் நீண்டவாளுளுடையரென்பது இச்செய்யுளாற்பெறப்பட்டது. (௧௦)

இந்த வண்ணமாஞ் சாரதப் படையின ரீண்டித்
தந்தம் வெஞ்சமர்த் தலைவர்க ளோடுசண் முகன்பால்
வந்து கைதொழு தேத்தியே யிறுதிசேர் வைக
லந்த மில்புன லண்டம துடைந்தென வார்த்தார்.

இ—ள்: இந்த வண்ணம் ஆம் சாரத படையினர் ஈண்டி— இவ்வியல்பினையுடைய பூதசேனவீரர்கள் நெருங்கி, தம் தம் வெம் சமர் தலைவர்களோடு—கொடிய போரில்வல்ல தங்கள் தங்கள் அதிபர்களுடன், சண்முகன் பால் வந்து— ஆறுமுகப்பெருமானது பக்கத்தில்வந்து, கைதொழுது எத்தி— கைகுவித்துத் துதித்து, இறுதி சேர் வைகல் அந்தம் இல் புனல் அண்டமது உடைந்து என ஆர்த்தார்—கற்பாந்தத்தில் அளவிறந்த அப்புவண்டம் உடைந்தாற்போல [பேரொலியுண்டாக] ஆரவாரித்தார்கள் எ—று. (௧௧)

ஆர்த்த சாரத ரெந்தைபா லாயின ரதுகாற்
பேர்த்து மாயவ ரிடித்தெனப் பூதரிற் பெரியோர்
வார்த்த யங்கிய தண்ணுமை திமிலைவான் படகஞ்
சீர்த்த காகள முதலிய வியம்பினர் சிலரே.

இ-ள்: ஆர்த்த சாரதர் எந்தை பால் ஆயினர்-(அவ்வாறு)ஆரவாரித்த பூதர்கள் எம்பரமபிதாவாகிய குமாரக்கடவுளது பக்கத்திற் சூழ்ந்தார்கள், அதுகால்-அப்பொழுது, ஆயவர் பேர்த்தும் இடித்து என— அப்பூதர்கள் பின்னரும் முழங்கினற்போல, பூதரில் பெரியோர் சிலர்—பூதர்களுட்சிறந்தவர்கள் சிலர், வார் தயங்கிய தண்ணுமை— வாருடன்விளங்குகின்ற மத்தளமும், திமிலை—திமிலையும், வான் படகம்—பெரிய பேரிகையும், சீர்த்த காகளம் முதலிய இயம்பினர்—சிறந்த காகளமுமுதலாகிய வாத்தியங்களை இயம்பினூர்கள் எ—று.

காகளம் ஊதுவதும் ஏனையன முழக்குவனவும் ஆதலின் இயம்பினர் எனப்பொதுவினைகொடுத்துமுடித்தார். வார்த்தயங்கிய என்பதில் தகரவொற்று-தொடைநோக்கிவந்த விரித்தல்விகாரம். 'ஆயவரிடித்தென-இயம்பினர்' என்றதனல் வாத்தியவோசையும் பேரொலியாயிற்றென்பதுபோதரும். (௧௨)

ஆன காலையி லதுதெரிந் தறுமுகத் தொருவன்
வான ளாவிய புணரிகள் சூழ்ந்திட வயங்கும்
பானு நாயகன் வந்தெனப் பரந்துபா ரிடத்துச்
சேனை சூழ்தரக் கயிலைநீத் தவனிமேற் சென்றான்.

இ—ள்: ஆன காலையில்—அப்பொழுது, அறுமுகத்து ஒருவன்—ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற முருகக்கடவுள், அது தெரிந்து—அதனைப்பார்த்து, வயங்கும் பானுநாயகன்— விளங்குகின்ற சூரியபகவான், வான் அளாவிய புணரிகள் சூழ்ந்திட வந்து என—ஆகாயத்தையளாவியெழுந்த சமுத்திரங்கள்சூழவந்தாற்போல, பாரிடத்து சேனை பரந்து சூழ்தர—பூதசேனைகள் பரம்பிச்சூழ, கயிலை நீத்து அவனிமேல் சென்றான்—திருக்கைலாசகிரியைநீங்கிப் பூவுலகத்தில் வந்தருளினார் எ—று.

பேரொலியுடைமையானும் மிகுதியானும் சேனை கடல்போன்றது, சிவந்தநிறமுடைமையால் முருகக்கடவுள் சூரியன்போன்றனர் என்க. ஆகாயமார்க்கமாகச்செல்லுதற்கேற்ப 'வானளாவியபுணரி' என்றார். (௧௩)

கொள்ளை வெஞ்சினச் சாரத ரிராயிரங் குணித்த
வெள்ளம் வந்திடக் கந்தவே ளவனிமேன் மேவக்
கள்ள வான்படை யவுணர்கள் கலந்துசூழ்ந் தென்னப்
பொள்ளெ னத்துக ளெழுந்தது வளைந்தது புவியை.

இ—ள்: கொள்ளை வெம் சின சாரதர் இராயிரம் குணித்த வெள்ளம் வந்திட-மிகுந்த கொடிய கோபத்தையுடைய இரண்டாயிரவெள்ளம் பூதர்கள் உடன்வர, கந்தவேள் அவனிமேல் மேவ—முருகக்கடவுள் பூ வு ல க த் தி ற் செல்ல, கள்ள வான் படை அவுணர்கள் கலந்து சூழ்ந்து என்ன—வஞ்சகத்தையுடைய பெரிய அசுரசேனைகள் எங்கும் விரவிச்சூழ்ந்தாற்போல, துகள் பொள் என எழுந்தது—தூளிவிரைவாகக்கிளம்பி, புவியை வளைந்தது—பூமியைச் சூழ்ந்தது எ—று.

இராயிரங்குணித்த வெள்ளம்-இரண்டாயிரமென்றுகணக்கிடப்பட்ட வெள்ளம். எழுந்தது-முற்றெச்சம். (௧௪)

எழுத ருந்துகண் மாதிர வரைப்பெலா மேகி
யொழியும் வான்பதஞ் சென்றதா லாங்கவை யுறுதல்
குழுவின் மல்கிய சாரத ரார்ப்புமுன் குறுகி
மொழிதல் போன்றன விண்ணுளோ ரிமைப்பில்கண் மூட.

இ—ள்: எழுதரும் துகள்—மேற்கிளம்பிய தூளி, மாதிர வரைப்பு எலாம் ஏகி-திக்கினெல்லைகளெங்குஞ்சென்று, ஒழியும் வான் பதம் சென்றது-(அதன்மேல்) எஞ்சிய தேவருலகத்துஞ்சென்றது, குழுவில் மல்கிய சாரதர் ஆர்ப்பு— கூட்டமாகப்பொருந்திய பூதர்களது ஒலிகள், முன் குறுகி—(அத்தூளிகளின்) முன்சென்று, விண் உளோர் இமைப்பு இல் கண் மூட—தேவர்கள் இமைத்தலில்லாதகண்களை மூடுமாறு, ஆங்கவை உறுதல் மொழிதல் போன்றன-அப்பூழியின்வருகையைச்சொல்வனபோன்றன எ-று.

எச்சவும்மைதொக்கது. பூதர் பேரொலிசெய்தனரென்பதும் கண்ணிமையாத தேவர்களும் அது கேட்ட அச்சத்தாற் கண்ணிமைத்தனரென்பதும் பிற்கூற்றின் கருத்து. ()

கழிய டைத்திடு நேமிகள் பலவொடு ககன
வழிய டைத்திடு பூழியு மொலியுமன் னுயிர்கள்
விழிய டைத்தன நாசியை யடைத்தன விளம்பு
மொழிய டைத்தன வடைத்தன கேள்வியின் மூலம்.

இ—ள்: கழி அடைத்திடு நேமிகள் பலவொடு ககன வழி அடைத்திடு பூழியும் ஒலியும்—கழிநிலங்களாற் சூழப்பெற்றிருக்கின்ற சமுத்திரங்கள் பலவற்றையும் ஆகாயமார்க்கத்தையும் அடைத்ததூளியும் ஓசையும், மன் உயிர்கள் விழி அடைத்தன— (உலகத்திற்)பொருந்திய பிராணிகளது கண்களை அடைத்தன, நாசியை அடைத்தன— மூக்கையும் அடைத்தன, விளம்பும் மொழி அடைத்தன-பேசுகின்ற பேச்சையும் அடைத்தன, கேள்வியின் மூலம் அடைத்தன—செவித்துவாரங்களையும் அடைத்தன எ—று.

தூளி,.கடலையும் ஆகாயமார்க்கத்தையும் நாசியையும் காதையும் மூடிச்செறிந்தது கண்ணைமூடச்செய்தது வாயைப்பேசாமற்றடுத்தது எனவும், ஒலி, கடலொலியையும் வாய்ப்பேச்சையும் அடக்கிற்று ஆகாயத்தினும் நாசியினும்நிரம்பிற்று கண்ணைப்பயத்தினால்மூடுவித்தது காதைச் செவிடுபடுத்திற்று எனவும் ஏற்றவாறுரைத்துக்கொள்க. தூளியும் ஒலியும் எங்கும்பரந்தனவென்பது தாற்பரியம். (௧௬)

பேரி டங்களாந் தனுவுடைப் பூதர்கள் பெயரப்
பாரி டங்கடா மிடம்பெறு வாதலிற் பல்லோர்
காரி டங்கொளும் வான்வழிச் சென்றனர் கண்டோ
ரோரி டங்களும் வெள்ளிடை யிலதென வுரைப்ப.

இ—ள்: பேர் இடங்கள் ஆம் தனு உடை பூதர்கள் பெயர—மிகப்பெரிய சரீரத்தையுடைய பூதர்கள்செல்லுதற்கு, பார் இடங்கள் தாம் இடம் பெறு ஆதலில்-பூவுலகம் விசாலம்போதாமையால், பல்லோர்— (அவர்களுட்) பலபூதர்கள், ஓர் இடங்களும் வெள் இடை இலது என கண்டோர் உரைப்ப— ஓரிடத்திலும் வெற்றிடம் இல்லையென்று கண்டோர் சொல்லுமாறு, கார் இடம் கொளும் வான் வழி சென்றனர்— மேகங்கள்சஞ்சரிக்கின்ற ஆகாயமார்க்கமாகச் சென்றார்கள் எ—று.

பேரிடங்களாந்தனு-அதிகமான இடத்தைத் தன்னுளமைத்தற்கேற்றசரீரம். ()

அவனி வானெலாம் பூழியான் மறைத்தலு மதனைச்
சிவன்ம கன்றன தொளியினு லகற்றினன் செல்வான்
கவன வாம்பரி யிரதமேற் பனிபடுங் காலைத்
தவன நாயக னதுதடிந் தேகுதன் மையைப்போல்.

இ—ள்: அவனி வான் எலாம் பூழியால் மறைத்தலும்—மண்ணுலகமும் விண்ணுலகமும் ஆகிய எல்லாஇடங்களுந் தூளியால் மறைக்கப்பட்டவுடன், சிவன் மகன் தனது ஒளியினால் அதனை அகற்றினன் செல்வான்-சிவபிரானது குமாரராகிய முருகக்கடவுள் தமது திருமேனிப்பிரகாசத்தால் அம்மறைப்பைநீக்கிப்போவார், கவன வாம் பரி இரத மேல் பனிபடும் காலை—வேகம்பொருந்திய தாவிச்செல்லுகின்ற குதிரைபூண்ட (தனது) தேரின்மேற் பனித்திவலைகள் படும்பொழுது, தவன நாயகன் அது தடிந்து ஏகு தன்மையை போல்—சூரியபகவான் அதனை விலக்கிச்செல்லுமியல்பைப்போல எ—று.

தன்மையைப்போல்-செல்வான் என இயையும். தவனன்-தபனன்என்பதன்விகாரம். முருகக்கடவுளுக்குச் சூரியனும் தூளிக்குப்பனியும் உபமானம். (௧௮)

படையெழுபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௧௱௨௮.

# தாரகன்வதைப்படலம்.

முருகக்கடவுள் தாரகாசுரனைக் கொன்ற சரித்திரத்தைக் கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

முருகக்கடவுள் கிரவுஞ்சமலையையணுகி, வீரவாகுவை நோக்கி, 'ஆயிரவெள்ளம் பூதர்களும் அவர்க்குரியதலைவர்களும் இலக்கத்தெண்மரும் உடன்வரப்போய் அசுரரோடு போரியற்றுதி' என்று அருளிச்செய்து, அவர்களுக்குவேண்டிய தேர்களைத்தேவத்தச்சனுலியற்றுவித்துதவ, அவர் அவ்வாறே முன்சென்று மாயமாபுரியை வளைந்தனர். தாரகாசுரனும் சேனைகளுடன் யுத்தசன்னத்தனுய்வந்து எதிர்த்தனன். அப்பொழுது அசுரசேனைகளும் பூதசேனைகளும் எதிர்த்துப்பொர, இருபகுதியினும் பற்பலர் மாண்டனர். அதுகண்ட தாரகாசுரன் ஓர் தண்டாயுதத்தைக்கைக்கொண்டு தேரினின்றுமிழிந்து பூதர்களையும் பூதசேனுதிபர்களையும் தாக்க, பற்பலர் இறந்தனர்; எஞ்சினேர் பின்னிட்டனர். பின் இலக்கம்வீரர்கள்எதிர்த்துப்போரியற்றத் தாரகாசுரன் தன் துதிக்கையினுல் அவர்களைவாரிக்கடலிலெறிந்தனன். அதன்மேல் வீரகேசரியென்பவர் எதிர்க்க, அவரையும் தண்டத்தாற் புடைத்துவீழ்த்தினன். மேல் வீரவாகுதேவர் எதிர்த்துப்பொர, தாரகன் ஒருசூலப்படையையேவி அறிவுமயங்கச்செய்தனன். அப்பொழுது அவரது தம்பிமாருட் பொராதெஞ்சிநின்ற எழுபேரும் பொருது தோற்றனர். பின் வீரவாகுதேவர் அறிவுதெளிந்து பொருதனர். அப்பொழுது தாரகன் எதிர்நின்றுபொருது, பற்பலதேவப்படைகளைச்செலுத்தியும் இவரைவெல்வதரிதானமையால் அளவிறந்த மாயவடிவங்களைக்கொள்ள, வீரவாகுதேவர் வீரபத்திரப்படைக்கலத்தைக் கையிலெடுத்தனர். உடனே அவனது மாயையெல்லாம் அழிந்தன. அதன்மேல் தாரகன் வேறேர்சூழ்ச்சியைநினைத்துத் தேரினின்றுமிறங்கிக்கிரவுஞ்சமலையிலோடினன். வீரவாகுதேவர், தோற்றேடுபவன்மேற் படையேவுதல் தக்கதன்றென்று வீரபத்திரப்படையைத் தூணியில்வைத்துவிட்டு, அவனைப்பற்றுமாறு பின்சென்று,கிரவுஞ்சமலையில் தாரகன் உட்சென்றவாயிலாற்புகுந்து,மீண்டுவருதற்கியலாதவராய்,அம்மலையின்மாயையினுல்மயங்கினர்.நெடுநேரங்கழிந்தும் அவர் மீளாமையால் அவர்தம்பியராகியஇலக்கத்தெண்மரும் பூதவீரர்களும் அவரைத்தேடிப்போய் அவர்போலவேமயங்கினர். தாரகாசுரன், அவர்களெல்லோரும் இறந்தனரென்றுதுணிந்து, வெளியேவந்து,தேரிலேறி,அங்குநின்றபூதர்மேற் பாணங்களையேவினன். அப்பொழுதுநாரதமுனிவர் முருகக்கடவுளின்முன்சென்றுஇந்நிகழ்ச்சியையறிவிக்க, அவர், விரைந்துதேரைச்செலுத்துவித்துத் தாரகனிற்கும் போர்க்களத்தையணுகினர். அப்பொழுது பூதசேனைகளுடன் அசுரசேனை யுத்தஞ்செய்துதோற்க, தாரகன், பாணங்களைச்செலுத்திப்பூதர்களை அடர்த்து, குமாரக்கடவுளுக்கெதிர்சென்று சிறிதுநேரம் போர்செய்து, [illegible]கையும் கோடும் வெட்டுப்பட்டு, பின் அவரேவிய பாணங்கள் நெற்றியிலழுந்[illegible]கிவிழுந்தனன். அப்பொழுது அவனைச்சூழ்ந்துநின்ற அசுரர்கள் பொருது [illegible]ன்பு தாரகாசுரன் மயக்கந்தீர்ந்து பலதேவப்படைகளைச்செலுத்த,அவை குமாரக்கடவுளுக்கு ஊறுசெய்யாது அவரைத்துதித்துப்பக்கத்தினின்றன. பின் சிவப்படைக்கலத்தைச்செலுத்த, குமாரக்கடவுள் அப்படைக்கலத்தைத்தமதுகையாற்பற்றினர். அதன்மேல், தாரகன்'இவனை இனி மாயத்தாலன்றிவெல்வதரிது' என்று கி[illegible]பலமாயைகளைச்செய்ய, குமாரக்கடவுள் வேற்படையையேவி, அத்தாரகனைக்கொன்று, கிர

வுஞ்சமலையைப்பிளந்து, வீரர்களைமீட்டு, தான்பற்றிய சிவப்படைக்கலத்தை வீரவாகுதேவர்க்குக்கொடுத்து, இறந்தபூதர்களையெழுப்பிக்கொண்டு, போர்க்களத்தைநீங்கி அப்பாற்சென்றார் என்பதாம்.

வெம்மை தீர்ந்திடு மப்பெரு நெறியிடை விரைந்து
செம்மை சேர்தரு குமரவேள் படையொடு செல்ல
வம்ம சேர்ந்தது தாரகற் குறையுளா யடைந்தோர்
தம்மை வாட்டியே யமர்கிர வுஞ்சமாஞ் சயிலம்.

இ—ள்: செம்மை சேர் தரு குமரவேள்—செந்நிறம்பொருந்திய குமாரக்கடவுள், வெம்மை தீர்ந்திடும் அ பெரும் நெறி இடை—தீமையில்லாத அந்தப் பெரியவழியில், படையொடு விரைந்து செல்ல—சேனைகளுடன் விரைவிற்செல்லும்பொழுது, அடைந்தோர் தம்மை வாட்டி தாரகற்கு உறையுள் ஆய் அமர் கிரவுஞ்சம் ஆம் சயிலம்-தன்னிடத்துவந்தவர்களை வருத்திக்கொண்டு தாரகாசுரனுக்கு இருப்பிடமாயிருக்கின்ற கிரவுஞ்சமலையானது, சேர்ந்தது—அணுகிற்று எ—று.

வெம்மை-வெப்பமும், செம்மை-நற்குணமும் ஆம். அப்பெருநெறி திருக்கைலாசகிரியினின்றும் பூவுலகத்தில் தென்கடலிடையிலுள்ள மகேந்திரபுரியைநோக்கிச்செல்லும் நீண்டவழி, அம்ம-உரையசை, சேர்ந்தது-சேர்தற்குரியதல்லாததன்மேற் சேர்தலையேற்றிச்சொன்ன மரபுவழுவமைதி. (௧)

விண்டு லாய்நிமிர் கிரவுஞ்ச கிரியினை விண்ணோர்
கண்டு ளம்பதை பதைத்தனர் மகபதி கலக்கங்
கொண்டு நின்றன னாரத னணுகியே குமரன்
புண்ட ரீகநேர் பதந்தொழு தின்னன புகல்வான்.

இ—ள்: விண்டு உலாய் நிமிர் கிரவுஞ்சகிரியினை—ஆகாயத்தையளாவியுயர்ந்த கிரவுஞ்சமலையை விண்ணோர் கண்டு உளம் பதைபதைத்தனர்— தேவர்கள்பார்த்து மனம்நடுநடுங்கப்பெற்றார்கள், மகபதி கலக்கம் கொண்டு நின்றனன்—இந்திரன் மனக்கலக்கமுற்று நின்றான், நாரதன் அணுகி—(அப்பொழுது) நாரதமுனிவர் சமீபித்து, குமரன் புண்டரீகம் நேர் பதம் தொழுது இன்னன புகல்வான்—குமாரக்கடவுளது தாமரைமலர் போலுந் திருவடிகளைவணங்கி இவற்றைக்கூறுவார் எ—று.

பதைப்பதைத்தல்-இரட்டைக்கிளவி. (௨)

தூய நான்மறை யந்தணர் முனிவரிச் சுரத்திற்
போய வெல்லையி னெறியதாய் வரவரப் புணர்த்து
மாய்வு செய்துபின் குறுமுனி சூளினிவ் வடிவா
யேய தொல்பெயர்க் கிரவுஞ்ச மால்வரை யிதுகாண்.

இ—ள்: தூய நால் மறை அந்தணர் முனிவர் இ சுரத்தில் போய எல்லையில்—பரிசுத்தமாகிய நான்குவேதங்களையுமறிந்த பிராமணர்களும் முனிவர்களும் இந்தக்காட்டிற்செல்லும்பொழுது, நெறியது ஆய் வர வர புணர்த்து—வழிகளாகத்தோன்றி (அவ்வழியில் அவர்கள்) வருந்தோறும் மாயம்புரிந்து, மாய்வு செய்து—அழிவுசெய்து, பின்—சிலகாலங்களின்பின், குறுமுனி சூளின் இ வடிவு ஆய் ஏய—அகத்தியமுனிவரது சாபத்தினால் இந்த மலையுருவமாயமைந்த, தொல் கிரவுஞ்ச பெயர் மால் வரை இது—பழையகிரவுஞ்சமென்னும் பெயர்பெற்ற பெரிய மலை இதுவேயாம், காண்—கண்டருள்க எ—று.

காண் முன்னிலையசையுமாம். கிரவுஞ்சனென்னும் அசுரன் மாயையால் ஒரு மலைவடிவுகொண்டு, முனிவர்முதலியவர்கள் அங்குவரும்போது வழியுடைத்தாகக்காணப்பட்டு,அவ்வழியால் அவர்கள் உள்வந்தவுடன் வழியில்லாதபடிசெய்து, அவர்களை வருத்திவந்தான். அங்ஙனுஞ்செய்து வருங்காலத்தில்,விந்தமலையின் செருக்கையொழிக்கும்பொருட்டு அகத்தியமுனிவர் மேருமலையினின்று தென்றிசைநோக்கிவர, அவன் அவரையும் வஞ்சிக்கத்தொடங்கினன். அவர் தமது கையிலுள்ள பிரமதண்டத்தாற்குத்திப் பலதுவாரங்களைச்செய்து 'நீ மலைவடிவத்தோடு அசுரர்க்கிருப்பிடமாய்ப்பலகாலம் இருந்து தேவர் முனிவர் முதலாயினோர்க்குத் தீங்குசெய்து, பின் சுப்பிரமணியக்கடவுளது வேற்படையால் அழிவாய்' என் று சபிக்க, அச்சாபப்படியே அவ்வசுரன் மலையாயிருந்தனன். இதன்விரிவை மேல் அசுரகாண்டத்திற் கிரௌஞ்சப்படலத்திற்காண்க. (௩)

நேரி லிக்கிரிக் கொருபுடை மாயநீ ணகரிற்
சூரெ னப்படு மவுணனுக் கிளவலாந் துணைவன்
போரி லச்சுத னேமியை யணியதாப் புனைந்தோன்
றூர கப்பெயர் வெய்யவன் வைகினன் சயத்தால்.

இ—ள்: நேர் இல் இ கிரிக்கு ஒரு புடை—ஒப்பில்லாத இந்தமலைக்கு ஒருபக்கத்திலுள்ள, மாய நீள் நகரில்—நீண்ட மாயமாபுரியில், சூர் என படும் அவுணனுக்கு இளவல் ஆம் துணைவன்—சூரபன்மனென்னும் அசுரனுக்கு இளையசகோதரனும், போரில் அச்சுதன் நேமியை அணியது ஆ புனைந்தோன்-யுத்தத்தில் திருமாலின் சக்கரப்படையைத் தனக்கு ஆபரணமாகத்தரித்தவனும் ஆகிய, தாரக பெயர் வெய்யவன்— தாரகனென்னும்பெயரையுடைய கொடிய அசுரன், சயத்தால் வைகினன்— வெற்றியோடுதங்கியுள்ளான் எ—று.

சயத்தால் என்பதில் ஆல் ஒடு என்னும் உருபின்பொருளில்வந்தது. சூரபன்மன் தம்பியரோடுசென்று திக்குவிசயஞ்செய்தநாளில் திருமால் தாரகனுடனெதிர்த்துப் போர்செய்து பலபடைகளைப் பிரயோகித்தும் வெற்றிபெறுமையாற் சக்கராயுதத்தையேவ, அது, அவனது கழுத்திற்சேர்ந்து அவனையழிக்க வலியின்றி ஆபரணம்போலத்தங்கிற்று. இச்சரித்திரத்தை மேல் அசுரகாண்டத்தில் திக்குவிசயப்படலத்திற்காண்க. (௪)

இன்ன வன்றனை யடுதியே லெளிதுகா ணினையோன்
முன்ன வன்றனை வென்றிட லெனமுனி மொழிய
மின்னு தண்சுடர் வேலவ னவற்றினை வினவி
யன்ன வன்றனை முடிக்குது மிவணென வறைந்தான்.

இ—ள்: இன்னவன் தனை அடுதியேல்—இத்தாரகாசுரனை அழிப்பீரேயானால், இனையோன் முன்னவன் தனை வென்றிடல் எளிது காண்—இவனது தமையனாகிய சூரபன்மனைவெற்றிகொள்ளுதல் இலகுவாம், என முனி மொழிய—என்று நாரதமுனிவர்கூற, மின்னு தண் சுடர் வேலவன்-விளங்குகின்ற குளிர்ந்த ஒளியினையுடைய வேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள், அவற்றினை வினவி-அவ்வாசகங்களைக்கேட்டு, அன்னவன் தனை இவண் முடிக்குதும் என அறைந்தான்-அவ்வசுரனை இவ்விடத்து அழிப்போம் என்று சொல்லியருளினார் எ—று.

காண் என்னும் ஒருமையேவல் இடைச்சொற்றன்மைப்பட்டு தேற்றப்பொருளில்வந்தது. வினவி என்றது இலக்கணையாய்ச் செவியுற்று என்னும் பொருளில்வந்தது. இது இங்ஙனம்வருதற்குக்காரணம் இதன்பரியாயமான கேட்டு என்னுஞ்சொல் இவ்விரு பொருட்குமுரியதாதலே. (௫)

வேறு.

சிறந்திடு முருகவே ளினைய செப்பலு
நிறைந்திடு மமரரு மிறையு நெஞ்சினி
லுறைந்திடு கவலொரீ இ யுவகை யெய்தின
ரிறந்தனன் றாரக னின்றொ டேயென.

இ—ள்: சிறந்திடும் முருகவேள் இனைய செப்பலும்—(எவரினும்)மேம்பட்ட குமாரக்கடவுள் இச்சொற்களைக்கூறியவளவில், நிறைந்திடும் அமரரும் இறையும்— நிறைந்த தேவர்களும் அவர்க்கரசனாகிய இந்திரனும், நெஞ்சினில் உறைந்திடு கவல் ஒரீஇ—மனத்திற்பொருந்திய கவலைநீங்கி, தாரகன் இன்றொடே இறந்தனன் என உவகை எய்தினர்—தாரகாசுரன் இன்றைக்கே இறந்தான் என்று கூறி மகிழ்ச்சியடைந்தார்கள் எ—று.

கவல்-முதனிலைத்தொழிற்பெயர். ஒரீஇ-ஒருவி என்பதன்விகாரம். இறந்தனன்-விரைவுந்தெளிவும்பற்றிய காலவழுவமைதி. இன்றொடே என்பதில் மூன்றனுருபு இடப்பொருளில்வந்ததனால் உருபுமயக்கம். (சு)

ஐயர்கள் பெருமகிழ் வடைய வாறிரு
கையுடை முருகனக் காலை தன்புடை
மெய்யரு ளெய்திய வீர வாகுவாந்
துய்யனை நோக்கியே யினைய சொல்லுவான்.

இ—ள்: ஐயர்கள் பெரு மகிழ்வு அடைய—தேவர்கள் மிக்கமகிழ்ச்சியையடைய, ஆறு இரு கை உடை முருகன்—பன்னிரண்டுதிருக்கரங்களையுடைய முருகக்கடவுள், அ காலை—அப்பொழுது, தன்புடை—தம்பக்கத்திலுள்ள, மெய் அருள் எய்திய துய்யன் ஆம் வீரவாகுவை நோக்கி-உண்மையான கருணையைப்பெற்ற பரிசுத்தராகிய வீரவாகுதேவரைப்பார்த்து, இனைய சொல்லுவான்—இவ்வார்த்தைகளைக் கூறியருளுவார் எ—று.

மெய்யருளெய்திய என்பதற்கு ஆன்மாக்களிடத்து உண்மையாகிய கருணையை வைத்துள்ள எனக்கூறினுமாம். வீரவாகுவாந்துய்யன் என்பது துய்யனும் வீரவாகு என மாற்றப்பட்டது. (எ)

உற்றவக் கிரிகிர வுஞ்ச மாகுமான்
மற்றத னொருபுடை மாய நொச்சியுட்
செற்றிய வசுரர்தஞ் சேனை தன்னுட
னற்றமி றாரக னமர்தன் மேயினான்.

இ—ள்: உற்ற அ கிரி கிரவுஞ்சம் ஆகும்— சேர்பட்டுள்ள அந்தமலை கிரவுஞ்சமென்னும்பெயருடைத்தாம், அதன் ஒரு புடை—அம்மலையினொருபக்கத்தில், மாய நொச்சியுள்-மாயமாபுரியில், செற்றிய அசுரர்தம் சேனை தன் உடன்—நெருங்கிய அசுரசேனைகளுடன், அற்றம் இல் தாரகன் அமர்தல் மேயினான்—சோர்வில்லாத தாரகாசுரன் இருக்கின்றான் எ—று.

மாயநொச்சி-மாயையமைந்த ஊர். நொச்சி-மதில், இலக்கணையாய் நகர்க்காயிற்று.()

ஏயநின் றுணைவர்க ளிலக்கத் தெண்மர்க
ளாயிர வெள்ளமா மடல்கொள் பூதர்கள்
சாய்வறு தலைவர்க டம்மொ டேகியே
நீயவன் பதியினை வளைத்தி நேரிலாய்.

இ—ள்: நேர் இலாய்—ஒப்பில்லாதவனே!, ஏய நின் துணைவர்கள் இலக்கத்து எண்மர்கள் (தம்மொடு)-பொருந்திய உனது தம்பியர்களாகிய இலக்கத்தெட்டுவீரர்களுட

னும், ஆயிரவெள்ளம் ஆம் அடல் வெம் பூதர்கள் (தம்மொடு)—ஆயிரவெள்ளமென்னுங் கணக்கமைந்த வலிய கொடிய பூதர்களோடும், சாய்வு அறு தலைவர்கள் தம்மொடு —பின்னிடுதலில்லாத பூதத்தலைவர்களோடும், நீ ஏகி—நீ போய், அவன் பதியினை வளைத்தி—அத்தாரகாசுரனது நகரத்தை வளைப்பாயாக எ—று.

வளைத்தல்-முற்றுகையிடுதல். (௯)

தடுத்தெதிர் மலைந்திடு மவுணர் தானையைப்
படுத்தனை தாரகப் பதக னெய்துமே
லடுத்தம ரியற்றுதி யரிய தேலியா
முடித்திட வருகுது முந்து போவென்றான்.

இ—ள்: தடுத்து எதிர் மலைந்திடும் அவுணர் தானையை படுத்தனை—தடைசெய்து எதிர்த்துப்போர்செய்யும் அசுரசேனைகளை அழித்து, தாரக பதகன் எய்துமேல்—தாரகாசுரனாகிய பாதகன்வரின், அடுத்து அமர் இயற்றுதி-நெருங்கி (அவனோடும்) போர்செய்வாய், முடித்திட அரியதேல் யாம் வருகுதும்— அவனையழித்தல் அரிதாயின் யாம் வருவோம், முந்து போ என்றான்—முன்செல்வாயென்று கூறியருளினார் எ—று.

படுத்தனை-முன்னிலையொருமை முற்றெச்சம். பாதகன் என்பது பதகன் எனக்குறுகிற்று. பாதகம்-தீவினை. அரியதேலியாமுடித்திடவருகுதும் என்றதனால் வீரவாகுதேவர் தாரகனையழிக்கவல்லரல்லரென்பதைக் குறிப்பானுணர்த்தினர். (௧௰)

நலமிகு குமரவே ணவில வின்னணம்
வலமிகு சிறப்புடை வாகு நன்றெனாத்
தலைமிசைக் கூப்பிய கரத்தன் றாழ்ந்துமுன்
னிலமிசை யிறைஞ்சின னேர்ந்து நிற்பவே.

இ—ள்: நலம் மிகு குமரவேள் இன்னணம் நவில—நற்குணங்கள்மிகுந்த குமாரக்கடவுள் இவ்வாறு திருவாய்மலர்ந்தருள, வலம் மிகு சிறப்பு உடை வாகு— வீரவாகுதேவர், நன்று எனா—நல்லதென்றுகூறி, தலைமிசை கூப்பிய கரத்தன்— சிரமேற்கூப்பிய கையையுடையவராய், முன்—திருமுன்னிலையில், நில மிசை தாழ்ந்து இறைஞ்சினன்-பூமியில்விழுந்து வணங்கி, நேர்ந்து நிற்ப—(போர்க்குச்செல்ல) உடன்பட்டுநிற்க எ—று.

நலம்-அழகெனினுமாம். வலமிகுசிறப்புடைவாகு-வீரவாகு என்னும் பெயர்க்குப் பரியாயநாமமாய்நின்றது. வலிமை மிகுந்தசிறப்பினையுடைய புயங்களையுடையவன் என்பதுபொருள். (௧௧)

ஏந்தலங் துணைவரா மிலக்கத் தெண்மரை
யாய்ந்திடு பூதரை யாதி நோக்கியே
வாய்ந்திடு பெருந்திறல் வாகு தன்னுடன்
போந்திடு மவுணரைப் பொரவென் றேவினான்.

இ—ள் ஆதி— முதல்வராகிய சுப்பிரமணியக்கடவுள், ஏந்தலம் துணைவர் ஆம் இலக்கத்து எண்மரை—உயர்ச்சியையுடைய தம்பியராகிய இலக்கத்தெட்டுவீரர்களையும், ஆய்ந்திடு பூதரை-(சிறந்தவராகத்)தெரிவுசெய்யப்பட்ட பூதர்களையும், நோக்கி- பார்த்து, அவுணரை பொர-அசுரருடன் போரியற்றுமாறு, பெரும் திறல் வாய்ந்திடு வாகு தன் உடன்—வீரவாகுவினுடன், போந்திடும் என்று ஏவினான்—போங்களென்றுகூறி அனுப்பினார் எ—று.

பெருந்திறல்வாய்ந்திடுவாகு என்பது வடசொன்னடையாய் வாய்ந்திடுபெருந்திறல்வாகு எனநின்றது. பெரிய வலிமைவாய்ந்த புயங்களையுடையவனென்பதுபொருள். வாய்ந்திடு பெரும் என்னும் அடைகளைத் திறற்கடையாக்காது வீரவாகுதேவர்க்கடையாக்கிக்கூறுவாருமுளர். (௧௨)

ஏவலு மனையவர் யாரு மெம்பிரான்
பூவடி வணங்கியே போதற் குன்னலு
மாவியு ளாவியா மமலன் பாங்குறுந்
தேவர்கள் கம்மியற் கிதனைச் செப்புவான்.

இ—ள்: ஏவலும்—அனுப்புதலும், அனையவர் யாரும்-அவரனைவரும், எம் பிரான் பூ அடி வணங்கி — எங்கள்கடவுளாகிய குமரவேளது தாமரைமலர்போன்ற திருவடிகளை நமஸ்கரித்து, போதற்கு உன்னலும்—போர்க்குச்செல்லநினைத்தலும், ஆவியுள் ஆவி ஆம் அமலன்-சீவான்மாக்களுட்பரமான்மாகவீற்றிருக்கின்ற குமாரக்கடவுள், பாங்கு உறும் தேவர்கள் கம்மியற்கு இதனை செப்புவான்— தம்பக்கத்தினிற்கின்ற தேவத்தச்சனுக்கு இக்கட்டளையைக்கூறுவார் எ—று.

உடம்பினுள்நிற்கும் உயிர்க்கு அவ்வுடம்பின்குணமாகிய கருமை செம்மை குறுமை நெடுமை முதலியனபற்றுமைபோல, ஆன்மாக்களுட்பரமான்மாவாகநிற்கும் கடவுளுக்கும் அவ்வுயிரைப்பந்தித்தனவாகிய மலமுதலியவை பற்றுவென்பார் ‘ஆவியுளாவியாமமலன்’ எனவும், குமாரக்கடவுளது கட்டளையை எதிர்நோக்கிநின்ற கம்மியனென்பார் ‘பாங்குறுந்தேவர்கள்கம்மியன்’ எனவுங்கூறினார். (௧௩)

மேதகு பெருந்திறல் வீர வாகுவை
யாதியர் தமக்கெலா மளிக்கும் பான்மையா
லேதமி லாதபல் விரத நல்கென
வோதினா னுலகெலா முதவுந் தொன்மையோன்.

இ—ள்: உலகு எலாம் உதவும் தொன்மையோன்—உலகங்களெல்லாவற்றையும்படைத்த பழையவராகிய குமாரக்கடவுள், மேதகு பெரும் திறல் வீரவாகுவை ஆதியர் தமக்கு எலாம் அளிக்கும் பான்மையால்— சிறந்த பெருவலியினையுடைய வீரவாகுமுதலாயினோர்க்கெல்லாங் கொடுக்கும்படி, ஏதம் இலாத பல் இரதம் நல்கு என ஓதினன்-குற்றமில்லாத பலதேர்களை அமைப்பாயாகவென்று கட்டளையிட்டருளினார் எ—று.

ஏதம்-சிற்பநூலில்விதிக்கப்படுங் குற்றங்கள். ‘வீரவாகுவையாதியர்தமக்கெலாமளிக்கும்பான்மையால்-நல்கு’என்றதனால்,அவரவர்தகுதிக்கேற்பப்படைக்குதியென்றுரைன்பது பெறப்படும். ஒப்புயர்வற்ற முழுமுதற்கடவுளாகிய சிவபிரானுக்குரிய படைத்தன் முதலாகிய தொழில்களெல்லாம் அவரதுகுமாரராகிய முருகக்கடவுட்குமேற்குமெனக்கொள்ளுதலின் ‘உலகெலாமுதவுந்தொன்மையோன்’ என்றார். முன்னர் அயனைச்சிறைபுரிபடலத்திலும் ‘விதிமுதலுரைக்குஞ்செயலினுக்கெலாமாதியாய்வைகியசெவ்வேள்’ என்றார். அன்றி, பிரமனைச் சிறைசெய்தகாலத்திற் படைத்தற்றொழிலியற்றுதலின் அங்ஙனங்கூறினரெனினுமாம். உலகமெல்லாவற்றையும் படைத்தகடவுள் வீரர்க்குவேண்டிய தேரைப்படைப்பது அருமையன்றாகவும், தம்பணிசெய்யநின்ற தேவத்தச்சன்மேல்வைத்த கருணையால் அங்ஙனங்கூறினரென்பதுதோன்றவே, ‘உலகெலாமுதவுந்தொன்மையோன்-ஓதினன்’ என்றார். (௧௪)

அத்திறங் கேட்டதோ ரமரர் கம்மிய
னெத்தனோர் மாத்திரை யொடுங்கு முன்னரே

சித்திர வயப்பரி சீயங் கூளிக
ளித்திறம் பூண்டபல் லிரத நல்கினன்.

இ—ள் அ திறம் கேட்டது ஓர் அமரர் கம்மியன்—அக்கட்டளையைக் கேட்ட தேவத்தச்சன், ஒத்தது ஓர் மாத்திரை ஒடுங்கும் முன்னர்-சரியான ஒரு மாத்திரைப்பொழுது கழிவதற்குள், சித்திர வய பரி சீயம் கூளிகள் இ திறம் பூண்ட பல் இரதம் நல்கினன்—அழகிய வலிய குதிரைகளும் சிங்கங்களும் பேய்களும் என்னும் இவ்வகைகள் பூட்டப்பட்ட பலதேர்களை அமைத்தான் எ—று.

கேட்டது அமரர்கம்மியன்-திணைவழுவமைதி. ஒத்ததோர்மாத்திரை என்றதை "இயல்பெழுமாந்தரிமைநொடிமாத்திரை" என்பதனுலுணர்க. வயம்-வெற்றியுமாம். கையாற்செய்துமுடிக்காது மனத்தாற்படைத்தனனென்பது தோன்ற 'ஒத்ததோர்மாத்திரையொடுங்குமுன்னரே-நல்கினன்' என்றார். (௧௫)

வேறு.

அன்ன தேர்த்தொகை யதனை யெம்பிரான்
மின்னு காலவேல் வீர வாகுவும்
பின்ன ரெண்மரும் பிறருஞ் சாரத
மன்ன ரும்பெற வழங்கி னனரோ.

இ—ள்: எம் பிரான்—எமது தலைவராகிய முருகக்கடவுள், மின்னு கால வேல் வீரவாகுவும் பின்னர் எண்மரும் பிறரும் சாரதமன்னரும் பெற—ஒளிருகின்ற யமனைப் போன்ற [கொலைத்தொழிலிற்சிறந்த] வேற்படையையேந்திய வீரவாகுதேவரும் அவரது தம்பியரான எட்டுவீரர்களும் மற்றைய [இலக்கம்] வீரர்களும் பூதத்தலைவர்களும் பெற்றுக்கொள்ளும்படி, அன்ன தேர் தொகை அதனை வழங்கினன்—அந்தத் தேர்க்கூட்டங்களைக் கொடுத்தருளினர் எ—று. (௧௬)

பாகர் தூண்டிடப் படருந் தேர்கண்மேல்
வாகை சேர்தரும் வாகு வேமுத
லாகி னோரடைந் தம்பொன் மால்வரைத்
தோகை மைந்தனைத் தொழுது போற்றினர்.

இ—ள்: வாகை சேர்தரும் வாகுவே முதல் ஆகினோர்—வீரவாகு முதலிய வீரர்கள், பாகர் தூண்டிட படரும் தேர்கள் மேல் அடைந்து-சாரதிகள்செலுத்தச் செல்லுகின்றதேர்களின்மேல் ஏறி, அம் பொன் மால் வரை தோகை மைந்தனை தொழுது போற்றினர்—செம்பொன்மயமான பெரிய இமையமலையின்புதல்வியான உமாதேவியாரதுதிருக்குமாரராகிய முருகக்கடவுளைத் தொழுது துதித்தார்கள் எ—று.

வாகை சேர்தரும் வாகு-வீரவாகு. இமையமலை பனிப்படலத்தான் மறைக்கப்பட்டு வெண்ணிறமாகத்தோன்றினும் உண்மையிற்பொன்னிறமாதலின் 'அம்பொன்மால் வரை' என்றார். தோகை-ஆகுபெயர். (௧௭)

தொழுது வள்ளலைச் சூழ்ந்து மும்முறை
விழுமி தாகிய விடைபெற் றேகினர்
பழுதி னீத்தமோர் பத்து நூறெனக்
குழுமிப் பாரிடங் குலவிச் செல்லவே.

இ—ள்: வள்ளலை தொழுது—(அவ்வீரர்கள்) முருகக்கடவுளைக் கைதொழுது, மும் முறை சூழ்ந்து—மூன்றுதரம்வலம்வந்து, விழுமிது ஆகிய விடைபெற்று-சிறந்த அ

னுமதியைப்பெற்று, பாரிடம்—பூதசேனை, பழுது இல் ஓர் பத்துநூறு நீத்தம் என குழுமி—குற்றமற்ற ஆயிரவெள்ளமென்னுங்கணக்காகக்கூடி, குலவி செல்ல— ஊக்கங்கொண்டு உடன்செல்ல, ஏகினார்—சென்றார்கள் எ—று.

விழுமிது-விழும என்னும் உரிச்சொல்லடியாகப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். (௧௮)

பாய பூதர்தம் படைக்கு வேந்தரா
யேயி னார்க்குவீ றிலக்கத் தெண்மராய்
மேயி னார்க்கெலாம் வீர வாகுவோர்
நாய கம்பெறீஇ நடுவட் போயினான்.

இ—ள்: வீரவாகு—வீரவாகுதேவர், பாய பூதர் தம் படைக்கு (எலாம்)—பரந்த பூதசேனைகளெவற்றிற்கும், வேந்தர் ஆய் ஏயினார்க்கு (எலாம்)— அச்சேனைத்தலைவர்களாயுள்ளோரனைவர்க்கும், வீறு இலக்கத்து எண்மர் ஆய் மேயினார்க்கு எலாம்—பெருமைபெற்ற இலக்கத்தெட்டென்னுந் தொகையினராயுள்ள வீரரனைவர்க்கும், ஓர் நாயகம் பெறீஇ—ஒரு தலைவராந்தன்மையைப்பெற்று, நடுவண் போயினான்— அவர்களுக்கு நடுவே சென்றார் எ—று.

பெறீஇ-பெற்று என்பதன்விகாரம்; சொல்லிசையளபெடை. (௧௯)

அமர்வி ளைக்கமுந் தவனை யேவியே
தமர வேலையிற் றானை சூழ்தர
விமைய வர்க்கிறை யேனை யோர்தொழக்
குமர வேள்கடைக் கூழை யேகினான்.

இ—ள்: குமரவேள்— குமாரக்கடவுள், அமர் விளைக்க முந்து அவனை ஏவி— போரைத்தொடங்கும்படி முன்னே அவ்வீரவாகுவை அனுப்பி, தமர வேலையில் தானை சூழ்தர-ஒலியையுடைய கடல்போலச்சேனைகள்சூழ்ந்துவரவும், இமையவர்க்கு இறை ஏனையோர்தொழ-தேவேந்திரனும் மற்றையதேவர்களும் கைதொழுதுவரவும், கடைக்கூழை ஏகினான்—பின்னணியிற்சென்றார் எ—று. (௨௦)

வேறு.

பிற்பட வெம்பிரான் பெயர வேவலான்
முற்படு வீரனை முயங்கிப் பாரிடச்
சொற்படை படர்வன தூமந் தன்னொடு
சிற்பர னகையழல் புரத்துச் சென்றபோல்.

இ—ள்: எம் பிரான் பிற்பட பெயர—எங்கள் தலைவரான குமாரக்கடவுள் பின்செல்ல, ஏவலால் முற்படு வீரனை முயங்கி—அவரது கட்டளையினால் முந்திச்செல்லுகின்ற வீரவாகுதேவரைச்சூழ்ந்து, சொல் பாரிட படை படர்வன—புகழ்பெற்ற பூதசேனைகள்செல்லுவன, சிற்பரன் நகை அழல் தூமம் தன்னொடு புரத்து சென்ற போல்— ஞானரூபராகிய சிவபிரானது புன்சிரிப்பினின்றுதோன்றிய அக்கினியானது புகையுடன் முப்புரங்களினுஞ் சென்றதன்மைபோல எ—று.

சென்றபோல்-படர்வன என இயையும். வீரவாகுதேவர் குமாரக்கடவுளாலே வப்பட்டு அவர்க்குமுன்னே பூதசேனைகள் சூழச்செல்லுதல், அக்கினி சிவபிரானது கண்களினின்றுதோன்றிப் புகைப்படலஞ்சூழத்திரிபுரத்தையழிக்குமாறுசென்றதுபோலும் என்பதாம். சிவபிரான் செந்நிறமுடையவரும் அசுரரை ஒருங்கே அழிக்கச்சென்றவரும் ஆ

தலால் முருகக்கடவுளுக்கும், நகைத்தீ அவராற்செலுத்தப்பட்டு முன்சென்றமையானும் பகைவரையடர்த்தலாலும் செந்நிறமுடைமையாலும் வீரவாகுவுக்கும் உவமையாயிற்று. புகை, கருநிறமுடைத்தாய் அவ்வக்கினியைச்சூழ்ந்துசென்றமையாற் பூதசேனைக்கு உவமையாயிற்று. (உக)

அரிநிரை பூண்டதே ரலகை பூண்டதேர்
பரிநிரை பூண்டதேர் படைக்கு ளேகுவ
விரிகடல் வரைப்பினின் மேக ராசியுங்
கிரியுறழ் கலங்களுங் கெழுமிச் செல்வபோல்.

இ—ள்: மேகராசியும் கிரி உறழ் கலங்களும்—மேகக்கூட்டங்களும் மலைபோன்ற மரக்கலங்களும், விரி கடல் வரைப்பினில் கெழுமி செல்வ போல்—பரந்த கடலினெல்லையில் நெருங்கிப்போவனபோல, அரிநிரை பூண்ட தேர்—சிங்கக்கூட்டங்கள் பூட்டப்பெற்றதேரும், அலகை பூண்ட தேர்—பேய்கள்பூட்டப்பெற்ற தேரும், பரிநிரை பூண்ட தேர்—குதிரைக்கூட்டங்கள் பூட்டப்பெற்றதேரும், படைக்குள் ஏகுவ— அப்பூதசேனைகளூட்செல்வன எ—று.

சேனைக்குக் கடலும், தேர்களுக்கு மேகங்களும் மரக்கலங்களும் உவமையென்க.()

இடையக லிரதமோ டிரதந் தாக்கிய
படையொடு படைவகை செறிந்த பல்வகைக்
கொடியொடு கொடிநிரை துதைந்த கூளிய
ரடுசமர் பயின்றிடு மமைதி போலவே.

இ—ள்: கூளியர் அடு சமர் பயின்றிடும் அமைதி போல—படைவீரர்கள் கொலைத்தொழில்பொருந்திய போரைச்செய்யுந்தன்மையைப்போல, இடை அகல் இரதமோடு இரதம் தாக்கிய—இடமகன்ற தேர்களோடு தேர்கள்முட்டின, படையொடு படைவகை செறிந்த-ஆயுதவகைகளோடு ஆயுதவகைகள் முட்டின, பல் வகை கொடியொடு கொடிநிரை துதைந்த— பலவகையான கொடிக்கூட்டங்களோடு கொடிக்கூட்டங்கள் தாக்கின எ—று.

பெருந்தேரென்பார் 'இடையகலிரதம்' எனவும், எய்வன எறிவன வெட்டுவன குத்துவன எல்லாவற்றையும் அடக்குதற்கு 'படைவகை' எனவும், ஒருவீரரோடு மற்றொருவீரர் போரியற்றும்போது தேர்களும் படைகளும் கொடிகளும்தாக்குதல்போல, மிகநெருங்குண்டு தாக்கினவாதலின் 'கூளியரடுசமர்பயின்றிடுமமைதிபோல' எனவும் கூறினார். கூளியர் பூதரென்பர்சிலர்; அவரைவிதந்தோதற்குக்காரணமின்மையின் படைவீரரெனப்பொதுப்படக்கூறுவதேசிறப்பென்க. (உ௩)

சங்கொடு பணைதுடி தடாரி காகளம்
பங்கமி றண்ணுமை யாதிப் பல்லிய
மெங்கணு மியம்பின வெழுந்து பூழிபோய்ச்
செங்கம லத்தவன் பதத்தைச் செம்மிற்றே.

இ—ள்: சங்கொடு—சங்கும், பணை—முரசும், துடி—உடுக்கும், தடாரி—பேரிகையும், காகளம்—ஊதுகுழலும், பங்கம் இல் தண்ணுமை—குற்றமில்லாத மத்தளமும், ஆதி பல் இயம்—முதலாகிய பலவாத்தியங்கள், எங்கணும் இயம்பின— எல்லாவிடங்களிலும் ஒலித்தன, பூழி எழுந்து போய்—தூளியானது கிளம்பிச்சென்று, செம் கமலத்தவன் பதத்தை செம்மிற்று—செந்தாமரைமலராசனராகிய பிரமதேவரதுஉலகத்தை மூடியது எ—று.

மேலேழுலகங்களுள்ளும் மேலதாகியசத்தியலோகத்தைமூடிற்றெனவே, அத ன்கீழுள்ள மற்றையுலகங்களைமூடிற்றென்பதும் விளங்கும். (உச)

சாற்றுமிவ் வியல்புறத் தானை வீரருஞ்
சீற்றவெம் பூதருஞ் செல்ல வாகையான்
கோற்றொழி லகற்றிய கோட்டு மாமுகன்
போற்றிய மாயமா புரியைச் சேர்ந்தனன்.

இ—ள்: சாற்றும் இ இயல்பு உற—முன்சொல்லிய இத்தன்மைகள்பொருந்த, தானைவீரரும் சீற்ற வெம் பூதரும் செல்ல— சேனாவீரர்களும் கோபத்தினையுடைய கொடியபூதர்களும் உடன்வர, வாகையான்—வீரவாகுதேவர், கோல் தொழில் அகற்றிய கோட்டு மா முகன் போற்றிய மாயமாபுரியை சேர்ந்தனன்—செங்கோன்மையைவிலக்கிய யானைமுகத்தையுடைய தாரகாசுரனால் அரசியற்றப்பட்ட மாயமாபுரியை அடைந்தார் எ—று.

கோற்றொழில்-கோல்போல [நேர்மையாக] நடக்குந்தொழில். கோட்டுமா- தந்தத்தையுடைய மிருகம்=யானை. கோற்றொழிலகற்றிய என்பது தாரகனுக்கடை. (உரு)

வேறு.

சேர்ந்திடு மெல்லை பூதர் சேனைபோய் நகரம் புக்கு
நேர்ந்திடு மவுண ரோடு நின்றமர் விளைத்து நின்று
ரோர்ந்தன ரதனைத் தூத ரோடித்தங் கோயில் புக்குச்
சார்ந்திடு திருவில் வைகுந் தாரகற் றொழுது சொல்வார்.

இ—ள்: சேர்ந்திடும் எல்லை—(இவ்வாறு)அடைந்தவுடன், பூதர் சேனை போய் நகரம் புக்கு—பூதசேனாவீரர்சென்று அம் மாயமாபுரியினுட்புகுந்து, நேர்ந்திடும் அவுணரோடு நின்று அமர் விளைத்து நின்றார்— எதிர்ப்பட்ட அசுரர்களோடு நிலைத்துப் போர் தொடங்கிநின்றார்கள், தூதர் அதனை ஓர்ந்தனர்— (அங்குள்ள) தூதுவர்கள் அதனையறிந்து, ஓடி தம் கோயில் புக்கு—ஓடிப்போய்த் தமது அரசவையிற் புகுந்து, சார்ந்திடு திருவில் வைகும் தாரகன் தொழுது சொல்வார்—தன்னைச்சேர்ந்த செல்வச்சிறப்புடன் வீற்றிருக்கின்ற தாரகாசுரனை வணங்கிச் சொல்வார்கள் எ—று.

பூதர்சேனை என்பதைச் சேனைப்பூதர்எனமாற்றி, நின்றார் என்னும் வினைமுற்றிற்கு எழுவாயாக்குக. (உசு)

எந்தைமற் றிதுகே ளும்மு னிமையவர் தொகையை யிட்ட
வெந்துயர்ச் சிறையை நீக்க விரிசடைக் கடவுண் மைந்தன்
கந்தனென் றொருவன் வந்தா னவுணரைக் கடக்கு மென்னு
வந்தர நெறிசெல் விண்ணோ ரறைந்திடக் கேட்டு மன்றே.

இ—ள்: எந்தை இதுகேள்—எமது அரசனே! யாஞ்சொல்லும் இதனைக்கேட்டருளுக, நும் முன் இமையவர் தொகையை இட்ட வெம் துயர் சிறையை நீக்க—உமது தமையனாகிய சூரபன்மன் தேவர்கூட்டத்திற்குச்செய்த கொடுந்துன்பத்தைவிளைக்குஞ் சிறையைநீக்கும்படி, விரி சடை கடவுள் மைந்தன்—பரந்த சடையையுடைய சிவபிரானது குமாரராகிய, கந்தன் என்று ஒருவன்—முருகவேளென்னும் ஒருபாலர், வந்தான்— வந்திருக்கின்றார், அவுணரை கடக்கும் என்னா-(அவர்) அசுரரைவெல்வாரென்று, அந்தர நெறி செல் விண்ணோர் அறைந்திட கேட்டும்—ஆகாயமார்க்கத்திற்செல்லுகின்ற தேவர்கள்கூறக் கேள்வியுற்றோம் எ—று.

ஐவகைத்தந்தையருள் அரசனும் அடங்குதல்பற்றி 'எந்தை' எனவிளித்தனர். முன்-முன்பிறந்தானைக்குறித்தலின், ஈண்டுக் காலவாகுபெயர். கேட்டும்- தன்மைப்பன்மைமுற்று. டும் விகுதி இறந்தகாலங்காட்டும். (உஎ)

என்னிவர் மாற்ற மென்னு யாந்தெரி குற்றே மாக
வன்னவ ரியம்பி யாங்கே யாயிரத் திரட்டி யென்னப்
பன்னுறு பூத வெள்ளம் படர்ந்திடக் குமரன் போந்தான்
முன்னுறு தூசி நந்த முதுநக ரலைத்த தென்றார்.

இ—ள்: யாம்—நாங்கள், இவர் மாற்றம் என் என்னு தெரிகுற்றேம் ஆக—இத்தேவர்களதுவார்த்தை என்னை? என்று ஆராய்ந்துகொண்டிருக்க, அன்னவர் இயம்பியாங்கே—அத்தேவர்கள் கூறியவாறே, ஆயிரத்து இரட்டி என்ன பன்னுறு பூத வெள்ளம் படர்ந்திட—இரண்டாயிரவெள்ளமென்றுசொல்லப்படுகின்ற பூதசேனை உடன்வர, குமரன் போந்தான்—அப்பாலகன் வந்தான், முன் உறு தூசி நம் தம் முது நகர் அலைத்தது என்றார்— முந்திவந்த தூசிப்படை எங்கள் பழையநகரத்தை அழித்தது என்று கூறினார்கள் எ—று.

முன்னொருகாலத்திலும் பகைவராலழிக்கப்படாதிருந்தநகரென்பார் 'முதுநகர்' என்றார். (உஅ)

என்றலும் வடவைத் தீயி லிழுதெனு மளக்கர் வீழத்
துன்றிய வெழுச்சி மானத் துண்ணெனச் செற்றந் தூண்ட
மின்றிக ழரிமா னேற்று வியன்றவி சிருக்கை நீங்கிக்
குன்றுறழ் மகுட மண்ட கோளகை தொடவெ ழுந்தான்.

இ—ள்: என்றலும்—என்று தூதர்கள்கூறியவுடன், வடவை தீயில் இழுது எனும் அளக்கர் வீழ துன்றிய எழுச்சி மான— வடவாமுகாக்கினியில் நெய்க்கடல்விழும்போது பொருந்திய கிளர்ச்சியைப்போலாக, துண் என செற்றம் தூண்ட- விரைவிற் கோபம் உந்த, மின் திகழ் வியன் அரிமான் ஏற்று தவிசு இருக்கை நீங்கி- ஒளிவிளங்குகின்ற பெரிய சிங்காசனத்திலிருத்தலைவிட்டு, குன்று உறழ் மகுடம் அண்ட கோளகை தொட எழுந்தான்—மலையைப்போன்ற கிரீடம் அண்டமுகட்டைத்தொடும்படி எழும்பினான் எ—று.

அக்கினியைக்கிளர்ந்தெரியச்செய்வதாகிய நெய்யை மற்றையஅக்கினிகளினும் மிகப்பெரிதும் அழற்சியுடையதுமாகிய வடவாமுகாக்கினியின்மேல் அதிகமாகப் பெய்தால் உடனே அவ்வக்கினி கண்டோர் அஞ்சுமாறு எத்துணைச்சீற்றத்துடன் எழுமோ அத்துணைப் பெருஞ்சீற்றத்துடனெழுந்தனனென்பார் 'வடவைத்தீயிலிழுதெனுமளக்கர்வீழத்துன்றியவெழுச்சிமானத்துண்ணெனச்செற்றந்தூண்ட-எழுந்தான்' என்றார். (உகூ)

எழுந்துதன் மருங்கு நின்ற வொற்றரை நோக்கி யிந்தச்
செழுந்திரு நகர்மேல் வந்த சேனையை முளிபுற் கானிற்
கொழுந்தழல் புகுந்த தென்னக் கொல்வனந் தானை முற்று
முழுந்துருள் கின்ற முன்ன ரொல்லைதந் திடுதி ரென்றான்.

இ—ள்: எழுந்து—எழும்பி, தன் மருங்கு நின்ற ஒற்றரை நோக்கி—தனது பக்கத்திினின்ற தூதுவர்களைப்பார்த்து, இந்த செழும் திரு நகர் மேல் வந்த சேனையை—இந்த வளப்பமிக்க சிறந்த நகரத்திற் போர்க்குவந்தசேனையை, முளி புல் கானில் கொழு தழல் புகுந்தது என்ன கொல்வன்— காய்ந்த புற்காட்டிற் பெருந்தீப்பற்றினாற்போ

லக்கொல்வேன், உழுந்து உருள்கின்ற முன்னர்— (கண்ணுடியிலிட்ட) உழுந்து உருள்கின்றகாலவெல்லைக்குள், ஒல்லை—விரைவாக, நம் தானை முற்றும் தந்திடுதிர்—எமதுசேனைமுழுவதையும் வருவியுங்கள், என்றான்—என்றுகூறினான் எ—று.

புற்கான்-புற்றெருகுதி என்பாருமுளர். (௫0)

வேறு

அன்னபணி முறைபுரிவா னொற்றுவர்கள் போயிடலு மவுண னின்ற
கொன்னுறுவேற் பரிசனரைக் கொடுவருதி ரிரதமெனக் கூற லோடு
முன்னமொரு நொடிவரையிற் றந்திடலு மதனிடையே மொய்ம்பிற் புக்குப்
பின்னர்வரு மமைச்சர்கடந் தொகைபரவ மதர்ப்பினொடு பெயர்த லுற்றான்.

இ—ள்: அன்ன பணி முறை புரிவான் ஒற்றுவர்கள் போயிடலும்—அந்த ஏவன்முறையைச்செய்யும்பொருட்டுத் தூதுவர்கள் சென்றவுடன், அவுணன்- தாரகாசுரன், நின்ற கொன் உறு வேல் பரிசனரை— அங்குநின்ற அச்சத்தைவிளைக்கின்ற வேற்படையையேந்திய பரிசனர்களைப் (பார்த்து), இரதம் கொடுவருதிர் என கூறலோடும்—தேரைக்கொண்டுவாருங்களென்று கூற, ஒரு நொடி வரையில் முன்னம் தந்திடலும்-(அவர்கள்) ஒருநொடிப்பொழுதின்முன்னேகொணர்தலும், அதன் இடையே மொய்ம்பில் புக்கு- (தாரகாசுரன்) அத்தேரின்மேல் வலிமையுடன் ஏறி, பின்னர் வரும் அமைச்சர்கள் தம் தொகை பரவ—பின்னாகவருகின்ற மந்திரிமார்களின்தொகுதி துதிக்க, மதர்ப்பினொடு பெயர்தலுற்றான்—செருக்கினுடன்(போர்க்குச்)சென்றான் எ—று.

பணிமுறை-முறைமையாகிய ஏவல். கொன்னுறுவேல்- அச்சத்தை உறுவிக்கும்வேல்; பிறவினை விகுதிதொக்கது. பரிசனர்-சூழ்ந்துநிற்குஞ்சனங்கள். (௫௧)

வீடுவான் போலுமினித் தாரகனென் றவன்சீர்த்தி விரைவில் வந்து
கூடியே புரள்வதுவு மரற்றுவதுங் காப்பதுமாங் கொள்கைத் தென்ன
நீடுசா மரத்தொகுதி பலவிரட்ட வெள்ளொலிய னிமிர்ந்து வீசப்
பீடுசேர் தவளமதிக் குடைநிழற்ற வலம்புரிகள் பெரிது மார்ப்ப.

இ—ள்: இனி தாரகன் வீடுவான் போலும் என்று—இனித் தாரகாசுரன் இறப்பான்போலுமென்றுகருதி, அவன் சீர்த்தி— அவ்வசுரனுடைய கீர்த்திகள், விரைவில் வந்து கூடி-விரைவாகவந்து சேர்ந்து, புரள்வதுவும் அரற்றுவதும் காப்பதும் ஆம் கொள்கைத்து என்ன—புரளுவதும் புலம்புவதும் (அவனைக்) காப்பதுமாகியதன்மைபோல, நீடு பல சாமர தொகுதி இரட்ட— நீண்ட பலசாமரக்கூட்டங்கள்வீசவும், வெள் ஒலியல் நிமிர்ந்து வீச—வெண்ணிறமான வஸ்திரத்தூக்குகள் உயர்ந்து அசையவும், பீடு சேர் தவள மதி குடை நிழற்ற—பெருமைபொருந்திய வெண்ணிறமான சந்திரவட்டக்குடை நிழலைச்செய்யவும், வலம்புரிகள் பெரிதும் ஆர்ப்ப— வலம்புரிச்சங்குகள் மிகவும் ஒலிக்கவும் எ—று.

போலும்-ஒப்பில்போலி. சாமரம்- சமரமென்னும்மானின் வால்மயிரினற் செய்யப்பட்ட இராசசின்னம். வலம்புரி-வலமாய் உட்சுழிந்திருக்குஞ்சங்கு. இது இடம்புரிச்சங்கினும் ஆயிரமடங்குசிறந்தது. "இப்பியாயிரமேசூழ்ந்தஇடம்புரியென்றுகூறு-மொப்பில்சங்காயிரஞ்சூழுறும்வலம்புரியென்றேதும்" என்னும் நிகண்டுச்செய்யுளானறிக. வெண்சாமரங்களும் வெள்ளாடைத்தூக்குகளும் வீசுதலைப் புரள்வதாகவும், வெண்சங்குகள் ஒலிப்பதை அரற்றுவதாகவும், வெண்குடைநிழற்றுதலை

க் காப்பதாகவும் வருணித்தார். இது தற்குறிப்பேற்றவணி. கீர்த்தியை வெண்ணிறமாகக் கூறுதல் கவி மரபு. இதுமுதல் ஆறுகவிகள் குளகம். இரட்ட வீச நிழற்ற ஆர்ப்ப என்ற எச்சங்கள் முப்பத்தேழாஞ்செய்யுளில் வகியது என்றதொழிற்பெயரைக்கொண்டுமுடியும். அடுத்த நான்குகவிகளில் இதுபோலுள்ள செயவெனெச்சங்களுமிப்படியே. (௬௨)

ஈமத்தே நடம்புரியுங் கண்ணுதலோ னெடாதசிலை யென்ன மாலோன்
மாமத்தே யெனக்கிடந்த முழுவயிரத் தண்டமொன்று வயிரக் கண்டைத்
தாமத்தேர் பெறுகின்ற மடங்கல்பல வீர்த்துவருஞ் சகடத் திண்காற்
சேமத்தேர் மிசைப்போத வேனையபல் படைக்கலமுஞ் செறிந்து நண்ண.

இ—ள்: ஈமத்தே நடம் புரியும் கண் நுதலோன் எடாத சிலை என்ன—மயானத்திலே திருநிருத்தஞ்செய்தருளுகின்ற சிவபிரான் எடுத்துவளையாத மேருமலை (ஒன்றுண்டேல் அதனைப்)போலவும், மாலோன் மா மத்தே என—திருமால்(பாற்கடலைக்கடைந்தபோது)கொண்டபெரிய மத்தாகிய மந்தரமலையையேபோலவும், கிடந்த முழு வயிர தண்டம் ஒன்று—இருந்த முழுதாகிய வைரித்த ஒருதண்டாயுதம், வயிர கண்டை தாமத்து ஏர் பெறுகின்ற மடங்கல் பல ஈர்த்து வரும் சகட திண் கால் சேம தேர் மிசை போத—வைரரத்தினம்பதித்த மணிமாலைகளின் அழகைப்பொருந்திய பலசிங்கங்கள் இழுத்துச்செல்லுகின்ற உருளைகளையும் வலியகால்களையுமுடைய (ஒரு)சேமத்தேரின்மேல் ஏற்றப்பட்டுவரவும், ஏனைய பல் படைக்கலமும் செறிந்து நண்ண—மற்றைய பல ஆயுதங்களும் (ஏனைய சேமத்தேர்களில்) நெருங்கிவரவும் எ—று.

சிவபிரான், சர்வசங்காரகாலத்தில் எல்லாப்பிராணிகளும் அழியப்பெற்ற உலகமாகிய மயானத்தில்நின்று ஆனந்ததாண்டவஞ்செய்தருளுவர். இதனை "கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை- யுடலுயி ரகிலம் யாவு மொடுங்கிய விடமதன்றே-சுடலைய தாகு மந்தச் சுடலைகா ணனைய சோதி- நடநவில் கின்ற வெல்லை" எனவும், அங்கது மன்றி யெந்தை யகிலமு முடித்த ஞான்றி-னெங்கும்வெள் ளிடைய தாகி யீமமா மவ்வீ மத்து-மங்கையுந் தானு மேவும்" எனவும் மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்துவருஞ்செய்யுட்களானுணர்க. பாற்கடல்கடையும்பொழுது மந்தரமலையைமத்தாகக்கொள்ளும்படிகட்டளையிட்டவரும் தேவர்க்கும்அசுரர்க்கும்இடைப்புகுந்து கடைகயிறுபிடித்தவரும் திருமாலாதலால் மந்தரம், 'மாலோன்மாமத்து' எனப்பட்டது. வயிரம் என்னுஞ்சொல் இரண்டனுள் முன்னையது வைரம் என்னும்வடசொல்லின் முதற்போலி. பின்னையது வஜ்ரம் என்னும் வடசொல்லின் திரிபு. கால்-ஏர்க்காலும் சுற்றிநாட்டிய கால்களுமாம். சேமத்தேர்-சமயத்திலுதவும்படி துணைக்காவலாக அமைக்கப்பட்டுள்ளதேர். 'தண்டமொன்றுபோத' எனவும், மடங்கல்பலஈர்த்துவரும்தேர், சகடத்தேர், திண்காற்றேர் எனவும் இயைத்துணர்க. சிவபிரானெடுத்தகாலத்தில் வளைந்த மேருமலை ஒருகாலும்வளையாத இத்தண்டிற்குவமையாகாதென்பதுபோதர 'கண்ணுதலோனெடாதசிலையென்ன' என்றார். பருமையினாலும், வலியினாலும், தனக்கிலக்காகும் பகைவரின்றி எண்ணிறந்தகாலம் வைக்கப்பட்டவிடத்தேகிடந்தமையானும், மேருமலையையும் மந்தரமலையையும் உவமித்தார். அத்தண்டு ஏற்றுதற்கேற்ற வலியுடைய'பசேமத்தேரென்பார் 'சகடத்திண்காற்சேமத்தேர்' எனவும், அத்தேரில் அத்தண்டை ஏற்றிய வழியும் இழுத்துச்செல்லுதற்குவல்லசிங்கங்களென்பார் 'வயிரக்கண்டைத்தாமத்தேர்பெறுகின்றமடங்கல்' எனவும், அத்தண்டம் அத்தேர்க்குப் பெரும்பாரமானமையின் பிறபடைகளைப் பிறதேர்களிலேற்றினரென்பதுபோதர 'தண்டமொன்று- தேர்மிசைப்போத' எனவும் கூறினார். (௬௩)

ஒற்றர்கூ வியவேலை யேற்றெழுந்த வவுணர்கட லொருங்கு செல்லக்
கொற்றமால் கரிபரிதே ரினத்தினொடு வந்தீண்டக் குழவித் திங்கட்
கற்றைவார் சடைக்கடவுள் வாங்கியபொன் மால்வரையைக் காவ லாகச்
சுற்றுமால் வரையென்னப் படைத்தலைவர் பஃறேரிற் றுவன்றிச் சூழ.

இ—ள்: ஒற்றர் கூவிய வேலை எற்று எழுந்த அவுணர் கடல் ஒருங்கு செல்ல—தூதுவர்கள் அழைத்தபொழுது எதிர்த்துப்புறப்பட்ட அசுரசேனாசமுத்திரம் ஒன்று சேர்ந்துவரவும், கொற்ற மால் கரி பரி தேர் இனத்தினொடு வந்து ஈண்ட—வெற்றிபொருந்திய பெரிய யானையும் குதிரையும் தேரும் கூட்டமாகவந்து நெருங்கவும், குழவி திங்கள் கற்றை வார் சடை கடவுள் வாங்கிய பொன் மால் வரையை காவல் ஆக சுற்றும் மால் வரை என்ன—பாலசந்திரனையணிந்த அடர்ந்த நீண்டசடையினையுடைய சிவபிரான்வளைத்த பொன்மயமான பெரியமேருமலையைக் காவலாகச்சூழுகின்ற பெரிய குலாசலங்கள்போல, படைத்தலைவர் பல் தேரில் துவன்றி சூழ—சேனைத்தலைவர்கள் பலதேர்களில் நெருங்கிச் சூழ்ந்துவரவும் எ-று.

அவுணர்கடல்-உருவகம். தாரகாசுரன் நடுவில் உயர்ந்ததேரிலும், படைத்தலைவர் அவனைச்சூழ்ந்து சிறிதுதாழ்ந்ததேரிலும் செல்லுதலின் 'பொன்மால்வரையைக்காவலாகச்-சுற்றுமால்வரையென்னப்படைத்தலைவர்பஃறேரிற்றுவன்றிச்சூழ' என்றார். (௩௪)

மொய்யமர்செய் கோலமொடு முப்புரமே னடந்தருளு முக்கண் மூர்த்தி,
பையரவின் றலைத்துஞ்சுங் கணைதூண்ட மூண்டதழல் பதக ராஞோர், மெய்யு
டல முழுதுநுங்கித் தலைக்கொள்ளப் பெருந்தூம மிசைக்கொண் டென்னச்,
செய்யமுடி யவுணர்பெருங் கடலினிடை யெழும்பூழி சேட்சென் றோங்க.

இ—ள்: மொய் அமர் செய் கோலமொடு முப்புரமேல் நடந்தருளும் முக்கண் மூர்த்தி—வலிய போரைச்செய்தற்குரியகோலத்துடன் திரிபுரசங்காரஞ்செய்யும்படிசென்றருளிய மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரான், பை அரவின் தலை துஞ்சும் கணை தூண்ட—படம்பொருந்திய (அனந்தனென்னுஞ்) சர்ப்பத்தின்மேல் அறிதுயில்செய்கின்ற திருமாலாகிய பாணத்தைச்செலுத்தியபோது, மூண்ட தழல்—எழுந்த அக்கினியானது, பதகர் ஆனோர் மெய் உடலம் முழுதும் நுங்கி தலைக்கொள்ள—பாவியர்களாகிய அசுரரது சரீரமுழுவதையும் விழுங்கிப் பரவ, பெரும் தூமம் மிசைக்கொண்டு என்ன—பெரும்புகையானது மேலெழுந்தாற்போல, செய்ய முடி அவுணர் பெரும் கடலின் இடை எழும் பூழி—சிவந்த மயிர்முடியையுடைய அசுரர்களாகிய பெரிய சமுத்திரத்திற்றோன்றிய தூளி, சேண் சென்று ஓங்க—ஆகாயத்திலெழுந்து பரக்கவும் எ—று.

மெய் உடலம் ஒருபொருட்சொற்கள். உடலம் என்பதில் அம்-சாரியை. பெருந்தொகுதியாதலின் 'அவுணர்பெருங்கடல்' என்றார். அசுரர்க்குத் திரிபுரத்தசுரரும்செம்பங்கிக்கு அக்கினியும் பூழிக்குப் புகையும் உவமையென்க. (௩௫)

கார்க்குன்ற மன்னதிறற் கரிமீதும் பரிமீதுங் கடிதிற் றூண்டுந்
தேர்க்குன்ற மதன்மீதும் வயவர்கடங் கரங்களினுஞ் செறிப தாகை
யார்க்கின்ற துயர்ந்தோங்கி யசைகின்ற தெம்மருங்கு மம்பொ னட்டிற்
றார்க்கின்ற பூழியினைத் துடைக்கின்ற பரிசேபோற் றுவன்றித் தோன்ற.

இ—ள்: கார் குன்றம் அன்ன திறல் கரி மீதும்—கருநிறமுடைய மலையைப்போன்ற வலிய யானைகளின்மேலும், பரிமீதும்—குதிரைகளின்மேலும், கடிதில் தூண்டும் தேர் குன்றம் அதன் மீதும்—விரைவாகச்செலுத்தப்படுகின்ற தேர்களாகிய மலைகளி

ன்மேலும், வயவர்கள் தம் கரங்களினும்-காலாள்வீரர்களது கைகளிலும், செறி பதாகை- நெருங்கிய கொடிகள், ஆர்க்கின்றது—ஒலிவிளைக்கின்றனவாய், உயர்ந்து ஓங்கி அசைகின்றது—மிகவுயர்ந்து அசைகின்றதன்மை, அம் பொன் நாட்டில் எ மருங்கும் தூர்க்கின்ற பூழியினை துடைக்கின்ற பரிசே போல் துவன்றி தோன்ற—அழகிய சுவர்க்கலோகத்தில் எவ்விடங்களையும் மூடுகின்றதூளியைத் துடைக்குந்தன்மைபோல நெருங்கிக்காணப்படவும் எ—று.

கார்க்குன்றம் என்பதற்கு மேகங்கள்படியப்பெற்றமலை எனவும், மேகமண்டலத்தையளாவியமலை எனவும் பொருள்கூறலாம். தேர்க்குன்றம்-ரூபகம். அசைகின்றது- நிகழ்காலத்தொழிற்பெயர். பதாகை சாதியொருமையாதலின், ஆர்க்கின்றது என ஒருமை வினைபுணர்த்திக்கூறினர். (௫௬)

வாகையுள பல்லியமு மியம்பத்தன் னகர்நீங்கி மன்னர் மன்ன
னேகியதோர் படிநோக்கி யுவரிமிசைக் கங்கைகள்வந் தெய்து மாபோற்
சாகையுள பன்மரனும் பல்படையுங் குன்றுகளுந் தடக்கை யேந்திச்
சேருடைய பெருஞ்சீற்றப் பூதர்படை யார்த்தெதிர்ந்து சென்ற தன்றே,

இ—ள்: வாகை உள பல் இயமும் இயம்ப—வெற்றிக்கறிகுறியாயுள்ள பலவாத்தியங்களும் ஒலிக்க, மன்னர் மன்னன்—அரசர்க்கரசனாகிய தாரகாசுரன், தன் நகர் நீங்கி ஏகியது ஓர் படி நோக்கி—தனது நகரத்தைவிட்டு வெளியேவந்ததன்மையைப்பார்த்து, சேரு உடைய பெரும் சீற்ற பூதர் படை—வைரமமைந்த பெருங்கோபத்தையுடைய பூதசேனை, சாகை உள பல் மரனும் பல் படையும் (பல்) குன்றுகளும் தட கை ஏந்தி—கிளைகளையுடைய பல மரங்களையும் பல ஆயுதங்களையும் பல மலைகளையும் விசாலித்தகையிற்றுங்கி, உவரி மிசை கங்கைகள் வந்து எய்துமா போல்—உவர்ச்சமுத்திரத்திற் கங்கைநதிகள் வந்துசேருமாறுபோல, ஆர்த்து எதிர்ந்து சென்றது— ஆரவாரித்து எதிர்த்துச்சென்றது எ—று.

தாரகன்சேனைக்கு உவர்க்கடலை உவமைகூறியதால் அவனதுசேனையின் பெருக்கமும் இழிவும்,கங்கையைப் பூதர்சேனைக்குவமைகூறியதனால் அச்சேனையின்சுருக்கமும் உயர்வும் தோன்றின. கங்கைநதி பலகிளைகளாகப்பிரிந்து கடலிற்பாய்தலால் ‘கங்கைகள்வந்தெய்துமாபோல்’ என்றார். ஆ-ஆறுஎன்பதன்விகாரம். மரன்-இறுதிப்போலி. பல என்பது குன்றுகட்குங்கூட்டப்பட்டது. (௫௭)

எல்லோருந் தொழுதகைய குமரனடி யிணைவழுத்தி யிகல்வெம் பூதர்
கல்லோடு மரனோடுங் கதையோடுங் கணிச்சியொடுங் கழுமுள் வீச
வில்லோடுங் கணையோடும் வேலோடு நேமியொடு மிக்க வெல்லா
மல்லோடும் புரையுமனத் தவுணர்படை யெதிர்சிதறி யமர்செய் திட்டார்.

இ—ள்: இகல் வெம்பூதர்—வலிமையையுடைய கொடியபூதர்கள், எல்லோரும் தொழுதகைய குமரன் அடி இணை வழுத்தி— யாவரும் வணங்கத்தக்கதன்மையையுடைய முருகக்கடவுளது இரண்டுதிருவடிகளையுந் துதித்து, கல்லோடும் மரனோடும் கதையோடும் கணிச்சியொடும் கழுமுள் வீச—மலைகளையும் மரங்களையும் தண்டுகளையும் மழுக்களையும் சூலங்களையுஞ்செலுத்த, அல்லோடும் புரையும் மனத்து அவுணர் படை—இருளையொத்த வஞ்சகமனத்தையுடைய அசுரசேனாவீரர்கள், வில் ஒடும் கணையோடும் வேலோடும் நேமியொடும் மிக்க எல்லாம்—விற்களினின்றுசெல்லுகின்ற பாணங்களையும்வேல்களையும் சக்கரங்களையும் மற்றைய எல்லாப்படைகளையும், எதிர் சிதறி— எதிரேசெலுத்தி, அமர் செய்திட்டார்—போரைச்செய்தார்கள் எ—று. (௫௮)

### வேறு.

எண்ணுறு படைக ளிவ்வா றெதிர்தழீஇ யடரும் வேலை
விண்ணுறு பூழி யென்னும் விரிதரு புகைமீச் செல்ல
மண்ணுறு குருதி யான வன்னியை மாற்று வார்போற்
கண்ணுறு மிமையோர் கண்கள் கடிப்புனல் கான்ற வன்றே.

இ—ள்: எண் உறு படைகள்—மதிக்கத்தக்கசேனைகள், இவ்வாறு எதிர் தழீஇ அடரும் வேலை— இப்படி எதிர்த்துச்சென்று நெருங்கும்பொழுது, விண் உறு பூழி என்னும் விரிதரு புகை மீ செல்ல—ஆகாயத்திற்சென்ற தூளிகளாகிய பரந்தபுகை மேற்கிளம்ப, மண் உறு குருதி ஆன வன்னியை மாற்றுவார் போல்—பூமியிற்பரந்த இரத்தவெள்ளமாகிய அக்கினியைத்தணிப்பவர்போல, கண் உறும் இமையோர் கண்கள் கடி புனல் கான்ற—(போரைப்)பார்த்திருந்த தேவர்களதுகண்கள் மிக்கநீரைச்சிந்தின எ—று.

எளிதிற்றூளிபடிந்து வருத்தத்தக்கணவென்பதுபோதர 'இமையோர்கண்கள்' என்றார். இமையோர் இமைத்தலில்லாதவர். நெருப்பு நன்றுகப்பற்றுமுன் புகையெழுதலும் பின்புகையெழாமையும்போல இரத்தவெள்ளம் பரவுதற்குமுன் புழுதியெழுதலும் பின் புழுதியெழாமையுமாகிய இயல்பையும், புகையெழுதல் நெருப்பைக்காணுதற்கறிகுறியாதல்போலப் புழுதியெழுந்தது போர்நிகழ்ந்துஇரத்தப்பெருக்குண்டாதற் கறிகுறியாதலையும், புகைபடிந்துழிப்போலப்புழுதிபட்டவுடனும் கண்கள் நீர் சிந்துவதையும்,நிறவியைபையும்நோக்கி, பூழியைப்புகையாகவும் இரத்தத்தைஅக்கினியாகவும்உருவகித்தார். கான்றார் எனற்பாலது, முதல் சினையியைபுபற்றிச் சினைவினையாகமுடிக்கப்பட்டது. (௫௯)

இரிந்திட லின்றி நேர்வந் தேற்றமர் புரித லாலே
சொரிந்திடு குருதி பொங்கத் தோளொடு சென்னி துள்ளச்
சரிந்திடுங் குடர்கள் சிந்தத் தானவர் பல்லோர் மாயப்
பொருந்திறல் வயத்தான் மேலாம் பூதருஞ் சிலவர் பட்டார்.

இ—ள்: இரிந்திடல் இன்றி நேர் வந்து எற்று அமர் புரிதலால்— பின்னிட்டோடுதலின்றி முன்வந்து எதிர்த்துப்போர்செய்தலால், சொரிந்திடு குருதி பொங்க—சிந்திய இரத்தம் பெருகவும், தோளொடு சென்னி துள்ள—புயங்களுந்தலைகளும் (துணிபட்டுத்) துடிக்கவும், சரிந்திடும் குடர்கள் சிந்த—சரிந்த குடல்கள் கீழேசிதறவும், தானவர் பல்லோர் மாய—பல அசுரர்கள் இறக்க, பொரும் திறல் வயத்தால் மேல் ஆம் பூதரும் சிலவர் பட்டார்—போர்செய்யும் வலிமையினாலும் வெற்றியினாலும் மேம்பட்டவர்களாகிய பூதர்களுள்ளும் சிலர் இறந்தார்கள் எ—று.

குடர்-இறுதிப்போலி. சிலவர் என்பதில் அகரம் சாரியை. புரிதலால் மாய பட்டார் என இயையும். பூதர் பலர் படாமைக்குக்காரணந்தோன்ற 'பொருந்திறல்வயத்தான்மேலாம்பூதர்' என்றார். உம்மை-எச்சம். (௬௦)

தேருடைத் தெறிந்து பாய்மாத் திறத்தினைச் சிதைத்து நீக்கி
யாருடைத் திகிரிச் சில்லி யங்கையா லெடுத்துச் சுற்றிப்
போருடைத் திறலோர் தம்பாற் பொம்மென நடாத்தும் பொற்பாற்
காருடைப் பூதர் சில்லோர் கண்ணனே போன்று ரன்றே.

இ—ள்: தேர் உடைத்து எறிந்து—தேர்களைத்தகர்த்தெறிந்து, பாய்மா திறத்தினை சிதைத்து நீக்கி—குதிரைக்கூட்டங்களை அழித்துத்தள்ளி, ஆர் உடை திகிரி சில்லி அங்கையால் எடுத்து சுற்றி—கடைத்துளையையுடைய வட்டித்த உருளைகளை அகங்கையாலெடுத்துச்சுழற்றி, போர் உடை திறலோர் தம் பால் பொம் என நடாத்தும் பொற்பா

ல்—போர்செய்யுந்தன்மையினையுடைய வீரர்கள்மீது விரைவிலெறிகின்ற சிறப்பினல், கார் உடை பூதர் சில்லோர்—கருநிறத்தையுடைய சிலபூதர்கள், கண்ணனே போன்றார்- திருமாலையே நிகர்த்தார்கள் எ—று.

பாய்மா-பாய்கின்ற மிருகம்=குதிரை. "ஆரேகூர்மையாத்தியுமாகும்- தேராழி யகத்திற்செறியுறுப்புமாகும்" என்ற திவாகரத்தால் ஆரென்பதுதேர்ச்சக்கரத்தின் அகவாயையுணர்த்துதலறிக. நடாத்தும்-நடத்தும் என்பதன்விகாரம். கண்ணனேஎன்பதில் ஏ- பிரிநிலை. கருநிறமுடைமையாலும், வண்டிவடிவமாய்வந்த சகடாசுரனையும் குதிரைவடிவமாய்வந்த கேசி என்னும் அசுரனையும் அழித்தமையாலும், பகையசுரர்மீது சக்கரத்தைச் செலுத்துதலாலும் திருமாலை உவமைகூறினர்.

**கண்ணன் தேருடைத்தெறிந்தகதை:**—நந்தகோபன்மனையில் ஒருவண்டியின் கீழ்ப்புறத்தே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி, கஞ்சனலேவப்பட்ட ஒரு அசுரன் அச்சகடத்தில் ஆவேசித்துத் தன்மேல்விழுந்து கொல்லமுயல்வதைஅறிந்து, பாலுக்கு அழும்பாவனையாகத் தமது சிறியபாதங்களை மேலேதூக்க, அப்பாதங்களின் உதைப்பினல் அச்சகடம் திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரனுள்படஅழிந்தது என்பதாம்.

**கண்ணன் பாய்மாச்சிதைத்துநீக்கியகதை:**—ஒருகால், கஞ்சனலேவப்பட்ட கேசி என்னும் அசுரன் குதிரையினுருவத்தோடு ஆய்ப்பாடிக்குவந்து ஆயர்கள் அஞ்சியோடும்படி கலைத்துக் கிருஷ்ணமூர்த்தியின்மேற் பாய்தற்குமுயல அவர், தமது கையைநீட்டி அம்மாயக்குதிரையின்வாயில் அடித்துப்பற்களையுதிர்த்து, உதட்டைப்பிளந்து அதனுடம்பையும் இருபிளவாகவகிர்ந்துதள்ளினர் என்பதாம். (௪௧)

தேர்பரித் தெழுந்து மண்ணிற் செல்லுறாப் பவளச் செங்காற்
கார்பரித் தன்ன தோகைக் கவனவாம் புரவி யீட்டம்
போர்பரித் தொழுகு சீற்றப் பூதர்கள் புடைத்துச் சிந்திப்
பார்பரித் திடவே செய்தார் படிமக ளிடும்பை தீர்ப்பார்.

இ—ள்: தேர் பரித்து எழுந்து மண்ணில் செல்லுறா பவள செம் கால்—தேர்களைத்தாங்கிக்கொண்டு உயர்ந்து பூமியில் நடவாதிருக்கின்ற பவளம்போற்சிவந்தகால்களையும், கார் பரித்து அன்ன தோகை—மேகத்தைச்சுமந்து கொண்டிருந்தாற்போன்ற வாலையுமுடைய, கவன வாம் புரவி ஈட்டம்—வேகம்பொருந்திய தாவிச்செல்லுகின்ற குதிரைக்கூட்டங்களை, படிமகள் இடும்பை தீர்ப்பார்—பூமிதேவியின் துன்பத்தை நீக்குபவராகிய, போர் பரித்து ஒழுகு சீற்ற பூதர்கள்—யுத்தஞ்செய்தலைமேற்கொண்டொழுகுகின்ற கோபத்தினையுடையபூதர்கள், புடைத்து சிந்தி—அடித்துத்தள்ளி, பார் பரித்திட செய்தார்—பூமிசுமக்கும்படி செய்தார்கள் எ—று.

மண்ணிற்செல்லுறா என்பதைப்புரவிக்கடையாக்கினுமாம். கால்சிவந்தும் வால் கறுத்துமிருத்தல் குதிரைக்கு நல்லிலக்கணங்களென்க. வாவும்என்னுஞ்செய்யுமெனெச்சம் ஈற்றுயிர்மெய்கெட்டது. பாவியர்மிகுந்துவாழ்தல் பூமிக்குப்பாரமும் அவரழிதல் பாரநீக்கமும் ஆமாதலின் அசுரர் சேனையைக்கொல்லும்பூதரை 'படிமகளிடும்பைதீர்ப்பார்' என்றார். படிமகளிடும்பைதீர்ப்பார் பார்பரித்திடவே செய்தார் என்பன ஒன்றோடொன்று முரணுகத்தோன்றி, கருத்தைநோக்குமிடத்து அம்முரண் அழிதலின் முரண்விளைந்தழிவணி. இதனை விரோதாலங்காரமென்பார் தண்டியாசிரியர். (௪௨)

வாலுடைக் களிற்றி னீட்டம் வாரியே கரத்தா லெற்றிக்
காலுடைத் திகிரித் திண்டேர் கழல்களா லுருட்டிக் காமர்

பாலுடைப் புரவித் தானை பதங்களா லுழக்கிச் சென்றார்
வேலுடைத் தடக்கை யண்ணல் விடுத்தருள் வீர வீரர்.

இ—ள்: வேல் உடை தட கை அண்ணல் விடுத்து அருள் வீரவீரர்-வேலாயுதத்தையேந்திய விசாலித்தகையையுடைய குமாரக்கடவுளாற்போருக்கேவியருளப்பட்ட சிறந்தவீரர்களாகியபூதர்கள், வால் உடை களிற்றின் ஈட்டம் கரத்தால் வாரி எற்றி-வாலினையுடைய யானைக்கூட்டங்களைக்கையாலள்ளிமோதியும், கால் உடை திகிரி திண் தேர் கழல்களால் உருட்டி—கால்களையுடைய உருளைகளமைந்த வலியதேர்களைக்கால்களால் உருட்டியும், காமர் பால் உடை புரவி சேனை பதங்களால் உழக்கி சென்றார்— அழகியவெண்ணிறத்தையுடைய குதிரைச்சேனைகளைக் கால்களாலுழக்கியும் நடந்தார்கள் எ—று.

வீரவீரர்-வீரருள்தெரிவுசெய்யப்பட்ட வீரர்=சிறந்தவீரர். (சரு)

வாருறு புரசை பூண்ட வன்களிற் றொருத்தல் யாவுஞ்
சூருறு நிலைய வாகித் துஞ்சிய தொகுதி சூழப்
பேருறு குருதி நீத்தம் பிறங்கழற் கதிர்கா ணாது
காருற வூர்கோ ளோன்றுங் காட்சியை யொத்த தன்றே.

இ—ள்: வார் உறு புரசை பூண்ட வன் களிற்று ஒருத்தல் யாவும்-- நீண்ட கழுத்திடுகயிற்றைத்தரித்த வலிய ஆண்யானைகளெல்லாம், சூர் உறு நிலைய ஆகி துஞ்சிய தொகுதி சூழ—அச்சத்தைவிளைக்குமியல்பினவாகி இறந்துவிழுந்த பிணக்கூட்டங்கள் சுற்றிக்கிடக்க, பேருறு குருதி நீத்தம்—அவற்றினிடையேயிழிகின்ற இரத்தநீராது,பிறங்கு அழல் கதிர் காணாது கார் உற—விளங்குகின்ற சுடுகிரணங்களையுடைய சூரியன் காணப்பெறுவண்ணம் மேகம் மூடிக்கொள்ள, ஊர்கோள் தோன்றும் காட்சியை ஒத்தது— பரிவேடந்தோன்றுந் தன்மையை நிகர்த்தது எ—று.

யாவும் துஞ்சிய என இயையும். மேகங்கள் எங்குஞ்சூழ்ந்திருக்க இடையிற்பரிவேடங்காணப்படுவதுபோல, யானைகளினுடலங்கள் நாற்புறங்களினுஞ் சூழ்ந்துகிடக்க அவற்றினிடையே இரத்தவெள்ளம் பெருகிற்றென்பதாம். (சசு)

கண்ணெதிர் நின்று போர்செய் கார்கெழு மவுணர்ப் பற்றித்
துண்ணெனப் பூதர் வீசத் துளங்கிய கலன்க ளோடும்
விண்ணிடை யிறந்து நொய்தின் வீழ்வது விசும்பிற் றப்பி
மண்ணிடை மின்னு வோடும் வருமுகில் போன்ற தன்றே.

இ—ள்: பூதர்—பூதவீரர்கள், கண் எதிர் நின்று போர் செய் கார் கெழும் அவுணர் பற்றி—கண்ணுக்கெதிரேநின்று போரைச்செய்கின்ற கருநிறமிக்க அசுரர்களைப்பிடித்து, துண் என விண் இடை வீச—விரைவாக ஆகாயத்திலெறிய, இறந்து—அவ்வசுரர்கள் உயிர்பிரிந்து, துளங்கிய கலன்களோடும் நொய்தின் வீழ்வது—விளங்குகின்ற ஆபரணங்களுடன் விரைவாகப்பூமியில் விழுதல், விசும்பில் தப்பி—ஆகாயத்தினின்றுந்தவறி, மின்னுவோடும்--மின்னலுடன், மண் இடை வரும் முகில் போன்றது— பூமியில் வந்துவிழுகின்ற மேகத்தைநிகர்த்தது எ—று.

கருநிறமுள்ள அவுணர் பூதர்களாலெறியப்பட்டு இறந்து ஆப்ரணங்களுடன் விழுதல், மேகங்கள் மின்னலுடன் பூமியில்விழுதல்போலும் என்பதாம். மின்னு என்பதில் உகரம் சாரியை. மாயையான்மறையாதுநின்று பொருதவரென்பதுதோன்ற 'கண்ணெதிர்நின்றுபோர்செய்-அவுணர்' என்றார். வீச-வீழ்வது-போன்றது என இயையும். ()

ஆயிர வெள்ள மாகுங் கணவரு மாங்க ணுள்ள
பாயிருங் குன்ற மெல்லாம் பன்முறை பறித்து வீசி
மாயிருந் தகுவர் தானை வரம்பில படுத்து நின்றா
ரேயென வுலகைச் சிந்து மிறுதிநா ளெழிலி போல்வார்.

இ—ள்: ஆயிர வெள்ளம் ஆகும் கணவரும்—ஆயிரவெள்ளமென்னுந் தொகையினராகிய பூதர் அனைவரும், ஆங்கண் உள்ள பாய் இரும் குன்றம் எல்லாம் பல் முறை பறித்து வீசி—அவ்விடத்திருக்கின்ற பரந்த பெரியமலைகளையெல்லாம் பலதரம்பிடுங்கியெறிந்து, மா இரும் வரம்பு இல தகுவர் தானை படுத்து—மிகப்பெரிய அளவிறந்த அசுரசேனைகளைஅழித்து, ஏ என உலகை சிந்தும் இறுதிநாள் எழிலி போல்வார் நின்றார்—விரைவாக உலகத்தையழிக்கின்ற ஊழிகாலத்து மேகங்களைப்போன்று நின்றார்கள் எ—று.

ஊழிகாலத்துமேகங்கள் கன்மழையை இடைவிடாதுசொரிந்து உலகத்தையழித்தல்போல, பூதரும் மலைகளை மழைபோலஇடைவிடாது சொரிந்து அசுரரையழித்தனர் என்பதாம். பாய்தல்-பரவுதல். மா இரு என்பது உரிச்சொற்புணர்ச்சியாதலால் வகரவுடம்படுமெய்பெறாது யகரம்பெற்றுமுடிந்தது. (௪௬)

நிணங்கவர் ஞமலி யோர்சார் ஞெரேலெனக் குரைப்பப் புள்ளின்
கணங்களு மலகை தானுங் கறங்கிடக் ககனத் தோங்கிப்
பிணங்களி னடுக்க லீண்டிப் பேரமர் விலக்கி யார்க்கு
மணங்குறு நிலைய வாகி யடுத்தன நடுவ ணம்மா.

இ—ள்: நிணம் கவர் ஞமலி ஓர் சார் ஞெரேல் என குரைப்ப—தசையைக்கவரவந்த நாய்கள் ஒருபக்கத்தில் ஞெரேலென்னும் ஓசைபடக்குரைக்கவும், புள்ளின் கணங்களும் அலகைதானும் கறங்கிட—பறவைக்கூட்டங்களும் பேய்க்கூட்டங்களும் உலாவவும், பிணங்களின் அடுக்கல் ஈண்டி—பிணமலைகள் நெருங்கி, ககனத்து ஓங்கி—ஆகாயமளவும் உயர்ந்து, பேர் அமர் விலக்கி—பெரிய போரைத்தடுத்து, யார்க்கும் அணங்கு உறும் நிலைய ஆகி—எவர்க்கும் அச்சத்தைவிளைக்குமியல்பினவாய், நடுவண் அடுத்தன—இடையிலே பொருந்தின எ—று.

ஞெரேல்-விரைவுக்குறிப்புமாம். ஒருவரோடொருவர் எதிர்த்துப் பகைமையூண்டு பொரும்பொழுது அவர்க்கிடையே மலைபோலத்தோன்றி ஒருவரையொருவர் காணவொட்டாது தடுத்துநிற்றலால் 'பேரமர்விலக்கி' என்றார். (௪௭)

தரைத்தடஞ் சிலைய தாகத் தறுகண்வெம் பூத ரானோர்
வரைத்துணை யன்ன தாளே வலிகெழு குழவி யாகத்
திரைத்திழி குருதி நீராத் தீர்ந்திடு திறலோர் யாக்கை
யரைத்தென நடப்ப வேற்றா ரவுணரு மடுபோர் செய்வார்.

இ—ள்: தறுகண் வெம் பூதர் ஆனோர்—அஞ்சாத்தன்மையையுடைய கொடிய பூதர்கள், தரை தடம் (ஏ) சிலையது ஆக—பூமியே மலையாகவும், வரை துணை அன்ன தாளே வலி கெழு குழவி ஆக—இரண்டுமலைகள்போன்ற கால்களே வலிமைபொருந்திய குழவியாகவும், திரைத்து இழி குருதி (ஏ) நீர் ஆ—பெருகிப்பாய்கின்ற இரத்தமே நீராகவும், தீர்ந்திடு திறலோர் யாக்கை அரைத்து என நடப்ப—இறந்த அசுரவீரர்களுடையசரீரத்தை அரைத்தாற்போல நடக்க, அவுணரும் ஏற்றார் அடு போர் செய்வார்—அசுரர்களும் எதிர்த்துக்கொலைத்தொழின்மிக்க போரைச்செய்வார்கள் எ—று.

பிரிதிலேயேகாரம் ஒவ்வொன்றுக்குங்கூட்டப்பட்டது. அரைத்தற்கருவியாதற் கேற்ப 'வரைத்துணையன்னதாள்' எனவும், முன்னேயினும் மிக்க அபிமானங்கொண்டு பொருதனராதலின் 'அடுபோர்' எனவும் விசேடித்தார். சிலமலையாயினும் ஈண்டு இயைபுபற்றி அம்மியின்மேற்று. (௫௮)

தத்துறு புரவித் திண்டேர்த் தானவர் நிகளத் தந்தி
பத்துநூ றொன்றில் வீழப் பழுமரப் பணைகொண் டெற்றி
முத்தலை யெஃகம் வீசி முசலத்திற் புடைத்து மொய்ம்பாற்
குத்திநின் றுழக்கிப் பாய்ந்து கொன்றனர் பூத வீரர்.

இ—ள்: பூதவீரர்—பூதசேனைவீரர்கள், தத்து உறு புரவி திண் தேர் தானவர் நிகள தந்தி—தாவிச்செல்லுகின்ற குதிரைகள்பூண்ட வலிய தேரையுடைய அசுரர்களது விலங்குபூட்டப்படுகின்ற யானைகள், ஒன்றில் பத்து நூறு வீழ— ஓரடியில் ஆயிரக்கணக்காக விழும்படி, பழுமர பணை கொண்டு எற்றி— மராமரங்களின் கிளைகளால் அடித்தும், முத்தலை எஃகம் வீசி—மூன்றுதலைகளையுடைய சூலப்படைகளைச்செலுத்தியும், முசலத்தில் புடைத்து—இருப்புலக்கைகளாலடித்தும், மொய்ம்பால் குத்தி—கைகளாற்குத்தியும், நின்று உழக்கி—நின்று துவைத்தும், பாய்ந்து—மேலே பாய்ந்தும், கொன்றனர்—கொன்றார்கள் எ—று.

பத்துநூறு-எண்ணையுணர்த்தாது மிகுதியையுணர்த்திநின்றது. பழுமரம்-பழையமரம். எனவே, பெரியமரம்என்பதுபெற்றும். ஆலமரமென்பாருமுளர். மொய்ம்பு இலக்கணையாற்கையைக்குறித்தது; வலிமையோடு எனக்கூறினுமாம். (௫௯)

விழுந்தன படிவம் யாண்டும் விரிந்தன கவந்த மேன்மே
லெழுந்தன குருதித் தாரை யீர்த்தன நீத்த மாக
வழுந்திய விறந்தோர் யாக்கை யார்த்தன பறவை செய்ய
கொழுந்தசை மிசைந்து நின்று குரவையாட் டயர்ந்த கூளி.

இ—ள்: விழுந்தன படிவம் யாண்டும் விரிந்தன—(உயிர்பிரிந்து) விழுந்தனவாகிய உடம்புகள் எவ்விடங்களினும் பரவின, கவந்தம் மேல் மேல் எழுந்தன—உடற்குறைகள் மேலும்மேலும் எழுந்துகூத்தாடின, குருதி தாரை—இரத்ததாரைகள், நீத்தம் ஆக-வெள்ளமாய்ப்பெருகி, அழுந்திய இறந்தோர் யாக்கை ஈர்த்தன—அழுந்திக்கிடந்த இறந்தவர்களது சரீரங்களை இழுத்தன, பறவை ஆர்த்தன—பக்ஷிக்கூட்டங்கள் ஒலித்தன, கூளி—பேய்கள், செய்ய கொழும் தசை மிசைந்து நின்று குரவையாட்டு அயர்ந்த—செந்நிறமுள்ள கொழுத்த இறைச்சிகளைப்புசித்து நின்று குரவைக்கூத்தாடின எ—று.

கவந்தம்-கபந்தமென்னும் வடசொல்லின்திரிபு. தாரை-துளி. ஆக-எச்சத்திரிபு. குரவை-கைகோத்தாடல். கோபாவேசத்தோடு போர்செய்துநின்ற வீரரது உடல்கள் தலையறுபட்டபின்னும் தமது ஊக்கம் குறையாது மேலெழுந்துநின்று கூத்தாடுவன. அன்றியும் "பேரொத்தவாயிரம்பேர்மடிந்தாற்பிறக்குங்கவந்த-நேரொத்தவாடும்" "ஆனையாயிரந் தேர்பதி னாயிர மடர்பரி யொருகோடி-சேனை காவல ராயிரம் பேர்படிற் செழுங்கவந்தமொன்றாடும்" "அனேகமாயிரம்பேர்படக்கவந்தமொன்றாடும்" என்றவாறு பலசேனையிறந்தபொழுது ஒருகவந்தம் ஆக மிகப்பலசேனைஇறக்கப்பலகவந்தம் ஆடினவெனினுமாம். தசை-சதை என்றதன் எழுத்துநிலைமாறிய இலக்கணப்போலி. அயர்தல் செய்தல். இச்செய்யுளைப் பிறவாறுகொண்டுகூட்டிப் பொருள்கூறுவாருமுளர். (௬0)

கண்டன னினைய தன்மை தாரகன் கடிய சீற்றங்
கொண்டனன் வைய நீங்கிக் குவலய மிசைக்குப் புற்றுத்
தண்டமொன் றெடுத்துப் பூதப் படையினைத் தரையில் வீட்டி
யண்டமுங் குலுங்க வார்த்திட் டடிகளா லுழக்கிச் சென்றான்.

இ—ள்: தாரகன் இனைய தன்மை கண்டனன்—தாரகாசுரன் இத்தன்மையை ப்பார்த்து, கடிய சீற்றம் கொண்டனன்—கடுங்கோபத்தைக்கொண்டு, வையம் நீங்கி—தேரினின்றும் நீங்கி, குவலய மிசை குப்புற்று—பூமியிற்குதித்து, தண்டம் ஒன்று எடுத்து—ஒருதண்டாயுதத்தைக்கையிலெடுத்து, பூதப்படையினை தரையில் வீட்டி—பூதசேனைகளை (அடித்துப்)பூமியில் விழுத்தி, அண்டமும் குலுங்க ஆர்த்திட்டு-அண்டகோளங்களும் நடுங்கும்படி ஆரவாரித்து, அடிகளால் உழக்கி சென்றான்-கால்களால் உழக்கிக்கொண்டு போனான் எ—று.

இனையதன்மை-தன்பக்கத்தாருட்பெரும்பாலார் மாண்டமை. குவலயம்- வடசொல். கு-பூமி. வலயம்-மண்டலம். (ருச)

அல்லெனப் பட்ட மேனி யவுணர்கட் கரசன் கையிற்
கல்லெனப் பட்ட தண்டாற் புடைத்தலுங் கரங்கள் சென்னி
பல்லெனப் பட்ட சிந்திப் பாய்புன லொழுக்கிற் சாய்ந்த
புல்லெனப் பட்ட வம்மா பூதர்தஞ் சேனை யெல்லாம்.

இ—ள்: அல் என பட்ட மேனி அவுணர்கட்கு அரசன்—இருள்போன்ற கரிய சரீரத்தையுடைய அசுரர்க்கரசனாகிய தாரகன், கையில் கல் என பட்ட தண்டால் புடைத்தலும்—தன்கையிலுள்ள மலைபோன்ற தண்டாயுதத்தாலடித்தலும், பூதர் தம் சேனை எல்லாம்—பூதசேனைமுழுதும், கரங்கள் சென்னி பல் என பட்ட சிந்தி—கைகளும் தலைகளும் பற்களுமாகிய இவ்வுறுப்புகள் சிதறப்பெற்று, பாய் புனல் ஒழுக்கில் சாய்ந்த புல் என பட்ட—வேகமாய்ப்பாய்கின்ற நீரோட்டத்தாற்றலைசாய்ந்த புற்கள்போலாயின எ—று.

அம்மா-வியப்பிடைச்சொல். முன்னர் அசுரரோடு மிக்கவீரத்துடன் பொருதுநின்ற பூதரனைவரும் தாரகனொருவனால் இங்ஙனமாக்கப்பட்டது வியப்பாமென்க. நீரோட்டத்தாற் சாய்ந்த புற்கள் அந்நீர் பாய்ந்துமுடிந்தபின் எழுதல்போல, தாரகனால்அழிந்துவிழுந்தபூதர்கள் அவனிறந்தபின் மீண்டுமெழுதலின் 'பாய்புனலொழுக்கிற்சாய்ந்தபுல்லெனப்பட்ட' என்றார். (ருஉ)

பிடித்திடு வயிரத் தண்டம் பெருங்கடற் பூத வெள்ள
முடித்திடல் புகழோ வன்றாற் றாரக மொய்ம்பின் மேலோ
னடித்திடுங் காலை கீண்ட தம்புவி யடிப்பா னோங்கி
யெடுத்திடுங் காலை கீண்ட தெண்டிசை யண்டச் சூழல்.

இ—ள்: தாரக மொய்ம்பின் மேலோன்—வலிமையின்மேம்பட்ட தாரகாசுரன், அடித்திடும் காலை-அடித்தபொழுது, அம்புவி கீண்டது-அழகிய பூவுலகங்கிழிந்தது, அடிப்பான் ஓங்கி எடுத்திடும் காலை-அடிக்கும்படி உயர்த்தித் தூக்கியபொழுது, எண் திசை அண்ட சூழல் கீண்டது-எட்டுத்திக்குகளிலுமுள்ள அண்டகடாகம் பிளவுபட்டது (ஆதலின்), பிடித்திடு வயிர தண்டம்—(அவன்)கையிலெடுத்த வைரித்த தண்டாயுதம்,பெரும் கடல் பூதவெள்ளம் முடித்திடல் புகழோ-பெரிய கடல்போன்ற பூதசேனைவெள்ளத்தையழிப்பது ஒருகீர்த்தியாகுமா?, அன்று—ஆகாது எ—று.

புகழோ என்பதில் ஓகாரமே எதிர்மறையைவிளக்க, பின்னரும் அன்று என்றது, வற்புறுத்தற்பொருட்டென்க. "முனிவர்சொற் பொய்க்குமோ பொய்யாதே" என்றிவ்வாறுபிறருங்கூறியுள்ளார். (ருசு)

தாரிடங் கொண்ட மார்பத் தாரகன் வயிரத் தண்டம்
போரிடங் கொண்டோர் சென்னி புயமுரங் கரங்கள் சிந்திக்

காருடங் கண்ட பார்தட் கணமெனத் துடிப்ப வீட்டிப்
பாரிடந் தன்னை யெல்லாம் பாரிட மாக்கிற் றம்மா.

இ—ள்: தார் இடம் கொண்ட மார்ப தாரகன் வயிர தண்டம்—மாலையைத் தன்னிடத்திற்றுங்கிய மார்பினையுடைய தாரகாசுரனது வைரித்த தண்டாயுதமானது, போர் இடம் கொண்டோர் சென்னி புயம் உரம் கரங்கள்-போர்க்களத்தினின்ற பூதர்களது தலைகளையும் தோள்களையும் மார்புகளையும் கைகளையும், சிந்தி—சிதைத்து, காருடம் கண்ட பார்தன் கணம் என துடிப்ப வீட்டி—கருடவடிவைக் [கருடனை] கண்ட சர்ப்பக் கூட்டங்களைப்போலத் துடிக்கும்படி விழுத்தி, பார் இடம் தன்னை எல்லாம் பார் இடம் ஆக்கிற்று-அப்பூதகணங்களையெல்லாம் பூமியிற்கிடக்கும்படி விழுத்தியது எ—று.

காருடம்-கருடசம்பந்தமானது; தத்திதாந்தநாமம். அம்மா-வியப்பிடைச்சொல். பாரிடத்தைப் பாரிடமாக்கிற்றெனப் பொருத்தமில்லாததோர் பொருடோன்றி, அப்பொருள்முரண், பாரிடம் என்றதன் சிலேடைக்கருத்தைநோக்குமிடத்து நீங்குதலால் முரண்விளைந்தழிவணி. முன்னர்ப் பாரிடமென்றுபெயர்பெற்றிருந்த பூதகணத்தைப் பின்னர்ப் பூமியிற்கிடத்தலாற் பாரிடமென்னும் பெயர்பெறச்செய்ததென நிருத்தியலங்காரத்தின்போக்குத்தோன்ற உரைகூறினுமமையும். (௬௪)

அன்றரி விடுத்த வாழி யாரமா வணிந்த தீயோன்
கொன்றன னனிக மென்னுங் கொள்கையு மவன்மேற் செல்லும்
வன்றிற றம்பா லில்லா வண்ணமு மதித்து நோக்கி
நின்றிலர் பூதர் வேந்தர் நெஞ்சழிந் துடைந்து போனார்.

இ—ள்: அன்று அரி விடுத்த ஆழி ஆரம் ஆ அணிந்த தீயோன்- முற்காலத்திலே திருமால்செலுத்திய சக்கராயுதத்தைப் பதக்கமாகத்தரித்த கொடிய தாரகாசுரன், அனிகம் கொன்றனன் என்னும் கொள்கையும்-(தமது)சேனைகளைக்கொன்றானென்னுந்தன்மையையும், அவன் பால் செல்லும் வன் திறல் தம் பால் இல்லா வண்ணமும்— அவன்மேற் போர்க்குச்செல்லுதற்கேற்ற பெருவலி தம்மாட்டிலதாயதன்மையையும்,மதித்து நோக்கி- சிந்தித்துப் பார்த்து, பூதர் வேந்தர்-பூதசேனைத்தலைவர்கள், நெஞ்சு அழிந்து- மனநிலைகுலைந்து, நின்றிலர் உடைந்து போனார்—முன்னிற்காது தோற்றோடினார்கள் எ—று.

நெஞ்சு-ஆகுபெயர். (௬௫)

திண்கண நிரையின் வேந்தர் சிந்துழிச் சீற்றந் தூண்ட
வெண்கண மாகியுள்ள விலக்கருஞ் சிலைகா லூன்றி
மண்கணை முழவம் விம்ம வயிரெழுந் திசைப்ப வாங்கி
யொண்கணை மாரி தூவி யவுணனை யொல்லை சூழ்ந்தார்.

இ—ள்: திண் கணநிரையின் வேந்தர் சிந்துழி— வலிய பூதகணத்தலைவர்கள் இரிந்தோடும்பொழுது, எண் கணம் ஆகி உள்ள இலக்கரும்—மதிக்கத்தக்க கூட்டமாகியுள்ள இலக்கம்வீரர்களும், சீற்றம் தூண்ட-கோபம் உந்த, மண் கணை முழவம் விம்ம-மார்ச்சனை மண்பூசிய முரசவாத்தியம் ஒலிக்க, வயிர் எழுந்து இசைப்ப- ஊதுகொம்புகள் பேரொலிசெய்ய, சிலை கால் ஊன்றி வாங்கி—வில்லைக்கால்விரலால் மிதித்துவளைத்து, ஒண் கணைமாரி தூவி— ஒளிபொருந்திய அம்புமழையைச்சொரிந்துகொண்டு; அவுணனை ஒல்லை சூழ்ந்தார்—தாரகாசுரனை விரைவில் வளைந்தார்கள் எ—று.

வில்லின் ஒருகோடியை இடக்கால்விரலாலூன்றி மற்றொருகோடியை இடக்கையாற் பிடித்திழுத்துவளைத்தலியல்பென்க. (௬௬)

சூழ்ந்தனர் துரந்த வாளி தோன்முகத் தவுணன் யாக்கை
போழ்ந்தில வூற தேனும் புணர்த்தில புன்மை யாகித்
தாழ்ந்திடு நிரப்பின் மேலோ னொருமகன் றலைமை தாங்கி
வாழ்ந்தவர் தமக்குச் சொல்லுஞ் சொல்லென வறிது மீண்ட.

இ—ள்: சூழ்ந்தனர் துரந்த வாளி-(இவ்வாறு இலக்கம்வீரர்கள்) சூழ்ந்துநின்று செலுத்தியபாணங்கள், தோல் முகத்து அவுணன் யாக்கை போழ்ந்தில—யானைமுகத்தையுடைய தாரகாசுரனது சரீரத்தைப் பிளவாதனவாய், ஊறது எனும் புணர்த்தில—ஊறுபாட்டைத்தானுஞ்செய்யாதனவாய், புன்மை ஆகி—எளிமைப்பட்டு, தாழ்ந்திடு நிரப்பின் மேலோன் ஒரு மகன்— கீழ்மையைத்தருகின்ற வறுமையைமிகவுடையனாகிய ஒருமனிதன், தலைமை தாங்கி வாழ்ந்தவர் தமக்கு சொல்லும் சொல் என— தலைமைபூண்டுவாழுகின்ற செல்வர்களுக்குச் சொல்லுஞ்சொற்போல, வறிது மீண்ட—பயன்பெறாது திரும்பின எ-—று.

வறிஞர்கூறியசொல் நன்மொழியாயினும் செல்வராற்பொருட்படுத்தப்படாமைபோல, இலக்கரேவியபாணங்கள் கூர்மையுடையனவாயினும் தாரகனாற்பொருட்படுத்தப்பட்டில என்பதாம். "நற்பொருள்நன்குணர்ந்துசொல்லினுநல்கூர்ந்தார்-சொற்பொருள்சோர்வுபடும்" என்னுந் திருக்குறளையும், "ஏழைசொல்அம்பலமேறாது" என்னும் பழமொழியையும் ஈண்டுய்த்துணர்க. ஊறுபுணர்த்தல்-அடையாளப்படுத்தல். எல்லாப்பொருள்களும் நிரம்பியிருத்தலைக்குறிக்கும் நிரப்பு என்னுஞ்சொல் எதிர்மறையிலக்கணையாய்ச் செல்வஞ் சிறிதுமில்லாமையைக்குறிக்கும். (௬௭)

தரைபடப் புகழ்வைத் துள்ள தாரகன் றடமார் பத்தைப்
புரைபடச் செய்தி டாது பொள்ளெனப் பட்டு மீண்டு
நிரைபடத் திறலோ ருய்த்த நெடுங்கணை யான வெல்லாம்
வரைபடச் சிதறுங் கல்லின் மாரிபோ லான வன்றே.

இ—ள்: திறலோர் நிரை பட உய்த்த நெடும் கணை ஆன எல்லாம்—இலக்கம்வீரர்கள் நிரையாகச்செலுத்திய நெடிய பாணங்களெல்லாம், தரை பட புகழ் வைத்து உள்ள தாரகன் தட மார்பத்தை புரைபட செய்திடாது—உலகமெங்கும்பரவும்படி கீர்த்தியை நாட்டியுள்ள தாரகாசுரனது விசாலித்த நெஞ்சகத்தைத் துளைபடுத்தாமல், பொள் என பட்டு மீண்டு-விரைவிற்பட்டுத் திரும்பி, வரை பட சிதறும் கல்லின் மாரி போல் ஆன— மலையிற்பட்டுச்சிதறுங் கன்மழைபோலச் சிதறின எ—று.

ஏனையஇடங்களை அழிக்கவல்ல கன்மழை மலையின்மேற்பெய்யப்பட்டவழி யாதோரூறுஞ்செய்யாது அயலிற்சிதறிக்கிடத்தல்போல, ஏனையவீரரை அழிக்கவல்லபாணங்கள் தாரகன்மேலேவப்பட்டவழிச் சிறிதூறுசெய்யாது அயலில்வீழ்ந்துகிடந்தன என்பதாம். (௬௮)

விடுகணை மாரி யாவு மீண்டிட வெகுண்டு விண்ணோர்
படைமுறை வழங்கி நிற்பப் பதகன்மே லவைக ளெய்தா
வுடையதம் வலியுஞ் சிந்தி யொல்லென மறிந்து செல்லக்
கடவுள ரதனை நோக்கிக் கரங்குலைத் திரங்க லுற்றார்.

இ—ள்: விடு கணை மாரி யாவும் மீண்டிட-இலக்கம்வீரர்கள்செலுத்திய அம்புமழைமுழுவதும் (ஊறுசெய்யாது) திரும்ப, வெகுண்டு— (அவர்கள்) கோபித்து, விண்ணோர் படை முறை வழங்கி நிற்ப— தேவப்படைக்கலங்களை முறைப்படி பிரயோகித்துநிற்க, அவைகள் பதகன் மேல் எய்தா—அந்தப்பாணங்கள் பாதகனாகிய தாரகா

சுரன்மேற்பட்டு, தம் உடைய வலியும் சிந்தி— தமது வலிமையுங்கெட்டு, ஒல் என மறிந்து செல்ல—விரைவாகத் திரும்பிப்போக, கடவுளர் அதனை நோக்கி—தேவர்கள் அத்தன்மையைப்பார்த்து, கரம் குலைத்து இரங்கலுற்றார்—கைகுலைத்து வருந்தினார்கள் எ—று.

மழைபோலப் பெருந்தொகையாகச்செலுத்துதலின் கணையை மாரியாக உருவகித்தார். தம்பக்கத்தாராகிய இலக்கம்வீரர்க்கும் தோல்விநேரிடுவதைச் சிந்தித்துத் தேவர் கைகுலைத்திரங்கினரென்க. வலியும் என்பதில் உம்மை-மாற்றான்வலியைச்சிந்தாமையைவிளக்கிநின்றது. (௫௯)

மற்றது காலை தன்னில் வலியினன் வயிரத் தண்டஞ்
சுற்றினன் றற்சூழ் கின்ற சுடர்மணிக் கடுமான் றேர்க
ளெற்றினன் புழைக்கை நீட்டி யிலக்கர்தந் தொகையும் வாரிப்
பொற்றனு வோடும் வீழப் புணரியின் மீது விட்டான்.

இ—ள்: அது காலை தன்னில்—அப்பொழுது, வலியினன்— வலிமையினையுடைய தாரகாசுரன், வயிர தண்டம் சுற்றினன்—வைரித்த (தனது) தண்டாயுதத்தைச் சுழற்றி, தன் சூழ்கின்ற சுடர் மணி கடு மான் தேர்கள் எற்றினன்— தன்னைவளைகின்ற ஒளிபொருந்திய இரத்தினமழுத்தப்பெற்ற வேகம்பொருந்திய குதிரைபூண்டதேர்களை அடித்து, புழைக்கை நீட்டி இலக்கர் தம் தொகையும் வாரி—துதிக்கையைநீட்டி இலக்கம்வீரர்களது தொகுதிமுழுவதையும் (ஒருங்கே) அள்ளி, பொன் தனுவோடும் வீழ புணரியின் மீது விட்டான்—அழகிய வில்லினுடன்விழும்படி சமுத்திரத்திலெறிந்தான் எ—று.

புணரி-(நதிகளோடு) புணருந் தன்மையையுடையது. நதிகளாகிய பெண்கட்குக் கடலைக் கணவனென்பதுமரபு. (௬௦)

துளும்பிய வளக்கர் தன்னிற் சூழுற நின்ற தெங்கின்
வளம்படு பழுக்காய் வர்க்க மாருத மெறியச் சிந்திக்
குளம்புகு தன்மை யென்ன வீழ்தரு கொற்ற வீர
ரிளம்பிறை புரையும் வில்லோ டெழுந்தொரு புடையிற் போனார்.

இ—ள்: சூழுற நின்ற தெங்கின் வளம் படு பழு காய் வர்க்கம்— சுற்றிநிற்கின்ற தென்னைமரங்களின் செழிப்பமைந்த முதிர்ந்த காய்களின்தொகுதி, மாருதம் எறிய சிந்தி குளம் புகு தன்மை என்ன— காற்றுவீசும்பொழுது உதிர்ந்து குளத்தில்விழுகின்றதன்மையைப்போல, துளும்பிய அளக்கர் தன்னில் வீழ்தரு கொற்ற வீரர்— அலைவீசப்பெற்ற கடலில்விழுந்த வெற்றியினையுடையவீரர்கள், இளம் பிறை புரையும் வில்லோடு—இளம்பிறைச்சந்திரனையொத்த வில்லுடன், எழுந்து—அக்கடலினின்றும் எழும்பி, ஒரு புடையில் போனார்—ஒருபக்கத்திற் போனார்கள் எ—று.

தென்னைமரங்களிற் பழுத்தகாய்கள் காற்றுவீசும்போது உதிர்ந்து குளத்தில்விழுவதுபோல, தேர்களில்நின்ற வீரர்கள், அத்தாரகாசுரன் துதிக்கையாலள்ளி வீசும்போது கடலில்வீழ்ந்தனர் என்பதாம். அளக்கர்தன்னில் வீழ்தரு எனஇயையும். பழுக்காய்-பழுத்தலையுடையகாய். பழு-முதனிலைத்தொழிற்பெயர். (௬௧)

கொற்றவி லுழவன் வீர கோளரி யதனை நோக்கிச்
செற்றமொ டேகிச் செவ்வேள் சேவடி மனத்துட் கொண்டு
பற்றிய தனுவை வாங்கிப் பகழிநூ றய்த்துத் தீயோன்
பொற்றட மவுலி தள்ளிப் புணரியு நாண வார்த்தான்.

இ—ள்: கொற்ற வில் உழவன் வீரகோளரி அதனை நோக்கி—வெற்றியையுடைய வில்வீரனாகிய வீரகேசரியென்பவர் அத்தன்மையைப்பார்த்து, செற்றமொடு ஏகி—கோ

பத்தோடுசென்று, செவ்வேள் சே அடி மனத்துள் கொண்டு— முருகக்கடவுளது சிவந்த திருவடிகளை மனத்திலே தியானித்துக்கொண்டு, பற்றிய தனுவை வாங்கி— கையிலெடுத்த வில்லைவளைத்து, நூறு பகழி உய்த்து— நூறுபாணங்களைச்செலுத்தி, தீயோன் பொன் தட மவுலி தள்ளி—கொடியவனாகிய தாரகாசுரனது பொன்னாலாகிய பெரிய கிரீடத்தைக் கீழேவிழுத்தி, புணரியும் நாண ஆர்த்தான்—கடலும் வெட்கமுறும்படி ஆரவாரித்தார் எ—று.

வில்லுழவன்-விற்போரிற் சாமர்த்தியமுடையவன். வீர கோளரி-பகைவீரராகிய யானைகளுக்குச் சிங்கம்போல்வான். செவ்வேள்சேவடிமனத்துட்கொண்டது தாம்வெற்றிபெறுதற்பொருட்டென்க. (௬௨)

ஆர்த்திடு மோதை கேளா வண்டர்க ளனையன் மீது
தூர்த்தனர் மலரின் மாரி தோன்முக னதனைக் காணா
வேர்த்தனன் மான முற்றான் வீரகே சரிமே லங்கைத்
தார்த்தடந் தண்ட முய்த்துத் தனதுமான் றேரிற் சென்றான்.

இ—ள்: ஆர்த்திடும் ஓதை கேளா— ஆரவாரித்த ஒலியைக்கேட்டு, அண்டர்கள்—தேவர்கள், அனையன் மீது மலரின் மாரி தூர்த்தனர்—அவ்வீரகேசரியின்மேற் பூமழையைச் சொரிந்தார்கள், தோன்முகன் அதனை காணா— யானைமுகத்தையுடைய தாரகாசுரன் அத்தன்மையைப்பார்த்து, வேர்த்தனன் மானம் உற்றான்—கோபித்து அபிமானங்கொண்டவனாய், அங்கை தார் தடம் தண்டம் வீரகேசரிமேல் உய்த்து— அகங்கையிற்பொருந்திய மாலைதூக்கப்பெற்ற விசாலித்த தண்டாயுதத்தை வீரகேசரிமேற்செலுத்தி, தனது மான் தேரில் சென்றான்- தன்னுடைய குதிரைபூண்ட தேரில் ஏறினான் எ-று.

மலர்மாரிசொரிந்தது தங்கள் மாற்றானுக்கு மகுடபங்கம்நேர்ந்தமகிழ்வாலென்க.()

## வேறு.

சென்றோர் மாமுடி புனைவுழித் தண்டமத் திறலோன்
மன்றன் மார்பகம் படுதலும் வீழ்ந்தனன் மயங்கி
வென்றி மொய்ம்புடை யாண்டகை யதுகண்டு வெகுண்டு
குன்ற மன்னதோட் டாரக னொடுபொரக் குறித்தான்.

இ—ள்: சென்று ஓர் மா முடி புனைவுழி—(தாரகாசுரன்) தேரிலேறி ஒரு பெரியகிரீடத்தைத்தரிக்கின்றசமயத்தில், தண்டம்-தண்டாயுதம், அ திறலோன் மன்றல் மார்பகம் படுதலும்-அவ்வீரகேசரியினது வாசனைபொருந்திய மார்பிற்படுதலும், மயங்கி வீழ்ந்தனன்—மயங்கி விழுந்தார், வென்றி மொய்ம்பு உடை ஆண் தகை—வீரவாகுதேவர், அது கண்டு வெகுண்டு—அதனைப்பார்த்துக்கோபித்து, குன்றம் அன்ன தோள் தாரகனொடு பொர குறித்தான்—மலைபோன்ற புயங்களையுடைய தாரகாசுரனோடு போர்செய்யநினைத்தார் எ—று.

வென்றிமொய்ம்புடையாண்டகை-வெற்றிபொருந்திய புயங்களையுடைய ஆண்டகை. ஆண்டகை-ஆண்மைக்குணமுடையவன். (௬௪)

## வேறு.

குறித்தேவிறற் புயன்றாரகக் கொடியோனெதிர் குறுகி
வெறித்தேன்மலர்த் தொடைதூங்குதன் விறற்கார்முகங் குனியாப்
பொறித்தேயுறு கனல்வாளிகள் பொழிந்தேயவன் புரத்திற்
செறித்தேயுற வளைத்தானொரு சிலைதானவர் தலைவன்.

இ—ள்: விறல் புயன்—வீரவாகுதேவர், குறித்து—அங்ஙனம் எண்ணி, தாரக கொடியோன் எதிர் குறுகி—தாரகாசுரனாகிய பாவிக்குமுன் சமீபித்து, வெறி தேன் மலர் தொடை தூங்கு தன் விறல் கார்முகம் குனியா—வாசனையையுந்தேனையுமுடைய பூமாலை தூங்கப்பெற்ற தமது வலிய வில்லைவளைத்து, பொறித்தே உறு கனல் வாளிகள் பொழிந்து—அக்கினிப்பொறியைக் கான்றுகொண்டேயிருக்கின்ற சுடுசரங்களைச்சொரிந்து, அவன் புரத்தில் செறித்து உற-அத்தாரகாசுரனது சரீரத்திலழுத்திநிற்க, தானவர் தலைவன்-அசுரர்க்கரசனாகிய தாரகன், ஒரு சிலை குனித்தான்-ஒரு வில்லைவளைத்தான் எ-று.

கார்முகமென்னும் வடசொல்-தொழில்செய்தற்குச் சிறந்ததெனப்பொருள்படும். பொறித்தே என்பதில் ஏகாரம் இடைவிடாமையைக்குறித்தது. (௬௫)

பொழிந்தான்சர மழைநம்மவன் புரமேலது பொழுதி
னிழிந்தான்சிலை யுயர்ந்தான்கணை யீரேழுதொட் டிறுப்ப
வழிந்தாயெனை யெதிர்ந்தாயிதற் கையம்மிலை யென்று
மொழிந்தானொரு சூலந்தனை மொய்ம்பிற்செல வுய்த்தான்.

இ—ள்: நம்மவன் புரமேல் சர மழை பொழிந்தான்—(இவ்வாறு வில்லைவளைத்ததாரகாசுரன்) எம்மவராகிய வீரவாகுதேவரது சரீரத்திற்படும்படி பாணமழையைச்சொரிந்தான், அது பொழுதில்—அப்பொழுது, உயர்ந்தான்— மேம்பாடுடையவராகிய வீரவாகுதேவர், ஈரேழு கணை தொட்டு—பதினான்கு பாணங்களைச்செலுத்தி, இழிந்தான் சிலை இறுப்ப—இழிவுடையனாகிய தாரகாசுரனது வில்லைவெட்ட, எனை எதிர்ந்தாய்—(தாரகாசுரன் வீரவாகுதேவரைநோக்கி) நீ என்னை எதிர்த்தாய் (ஆதலின்), அழிந்தாய்—இறந்தாய், இதற்கு ஐயம் இலை என்று—இதற்குச்சந்தேகமில்லையென்று, மொழிந்தான்—சொல்லி, ஒரு சூலம் தனை மொய்ம்பில் செல உய்த்தான்—ஒரு சூலப்படையை வலிமையோடும் தாக்கும்படி விடுத்தான் எ—று.

ஆசிரியர் சுப்பிரமணியக்கடவுளின்மேல் இடைவிடாத பத்தியுடையராதலின் அவரது தம்பியராகிய வீரவாகுதேவரை 'நம்மவன்' என்றார். அழிந்தாய்- விரைவுந்தெளிவும்பற்றி எதிர்காலம் இறந்தகாலமான வழுவமைதி. ஐயம்மிலை-விரித்தல்விகாரம். மொய்ம்பிற்செல என்பதற்கு தோளின்மேற்பாய எனல்பொருந்தாது. மேற்செய்யுளில் 'மார்புற' என்றதனால். (௬௬)

பொருமூவிலை வேலங்கவன் பொன்மார்புறப் பொருமிப்
பெருமோகமொ டேநின்றிடப் பின்னங்கது காணு
வுருமேறென வதிர்தாரக னுடனேயவன் றுணையாய்
வருமூவரு மொருநால்வரு மாறுற்றம ரிழைத்தார்.

இ—ள்: பொரு மூ இலை வேல் அங்கவன் பொன் மார்பு உற— போரிற்சிறந்த முக்கவர்பொருந்திய சூலப்படை அவ்வீரவாகுதேவரது அழகிய மார்பிலழுந்தியபொழுது, பொருமி-(அவர்)வருந்தி, பெரு மோகமொடு நின்றிட—மிகுந்தமயக்கத்தோடும் நிற்க, பின்—அதன்பின்பு, அவன் துணை ஆய் வரும் மூவரும் ஒரு நால்வரும்— அவருக்குத்தம்பியராயுள்ள எழுவரும், அங்கது காணு—அத்தன்மையைப்பார்த்து, உரும் ஏறு என அதிர் தாரகன் உடன்—பேரிடிபோல முழங்கிவருகின்ற தாரகாசுரனுடன்; மாறு உற்று அமர் இழைத்தார்—எதிர்த்துப்போரைச்செய்தார்கள் எ—று.

பின் = உடன். மூவருமொருநால்வருமென்றது-வீரவாகுதேவரின் தம்பியரெண்மருள் முன்பொருதுதோற்ற வீரகேசரியொழிந்த எழுவரையென்க. உருமேறு-ஆணிடி; எனவே சிறந்த இடி, பேரிடிஎன்பதுபெற்றாம். (௬௭)

அமர்செய்திடு மெழுவீரரு மவுணன்றனக் குடையக்
குமரன்பதந் தலைக்கொண்டிடுங் கோமானது காணு
வெமர்மற்றிவ ரெல்லோர்களு மிரிந்தார்பொரு தென்னுச்
சமர்முற்றிட வருதாரகத் தகுவன்முன மடைந்தான்.

இ—ள்: அமர் செய்திடும் எழு வீரரும் அவுணன் தனக்கு உடைய-போர்செய்த எழுவீரர்களும் அத்தாரகாசுரனுக்குத்தோற்க, குமரன் பதம் தலை கொண்டிடும் கோமான்-முருகக்கடவுளது திருவடிகளைச்சிரமேற்கொள்ளுகின்ற [வணங்குகின்ற] தலைவராகிய வீரவாகுதேவர், அது காணு-அதனைப்பார்த்து, எமர் இவர் எல்லோர்களும் பொருது இரிந்தார் என்னு—எம்மவராகிய இவர்களெல்லோரும் (இவ்வசுரனேடு) போர்செய்து தோற்ருர்களென்று நினைத்து, சமர் முற்றிட வரு தாரக தகுவன் முனம் அடைந்தான்—போரைமுடிக்கும்படி வருகின்ற தாரகாசுரனுக்குமுன் போயினர் எ—று.

எமர்-யாம் என்பதனடியாகப்பிறந்த பலர்பாற்கிளைப்பெயர். (சுஅ)

ஒருகார்முக மிருகால்வளை வுறவேகுனித் தருதே
னருகாதொழு கியதன்மையி னவிர்நாணெலி யெடுப்பத்
திருகாநெடு வரையானவுந் தெருமந்தன வவுண
ரிருகாதையு நனிபொத்தின ரேங்குற்றன ரிரிவார்.

இ—ள்: இரு கால் வளைவுற ஒரு கார்முகம் குனித்து—இரண்டுநுனிகளும் வளையும்படி ஒருவில்லை வளைத்து, உகு தேன் அருகாது ஒழுகிய தன்மையின் அவிர் நாண் ஒலி எடுப்ப—ஊற்றியதேன் இடைவிடாமற் சிந்தியதன்மைபோல விளங்குகின்ற நாணேசையைச்செய்ய, திருகா நெடு வரை ஆனவும் தெருமந்தன—சலனமில்லாத பெரியமலைகளும் சுழன்றன, அவுணர்—அசுரர்கள், இரு காதையும் நனி பொத்தினர் ஏங்குற்றனர் இரிவார்—தமது இரண்டுகாதுகளையும் மிகவும் மூடிக்கொண்டு திகைப்படைந்து அஞ்சியோடுவாராயினர் எ—று.

இடைவிடாதொழுகுந்தேன்ருரை வடிவத்தால் வில்நாணுக்குவமையென்க. திருகா என்பதைச்செய்யாவென்வாய்பாட்டு வினையெச்சமாகக்கொண்டு, நெடியமலைகளும் நிலைகெட்டுச்சுழன்றன எனப்பொருள்கூறினுமாம். (சுகூ)

நாண்கொண்டிடு மொலிகேட்டலு நடுங்காவெரு வுற்ருர்
பூண்கொண்டிடு சிலைவாங்கலு மகிழ்வுற்றிடு புலவோர்
சேண்கொண்டிடு முகில்வேண்டின ரதுவந்திடச் சிறந்தே
மாண்கொண்டத னுருமுச்செல மயங்கித்தளர் வதுபோல்.

இ—ள்: சேண் கொண்டிடும் முகில் வேண்டினர்—ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற மேகத்தின் வருகையை (மழையின்பொருட்டு) விரும்பியவர்கள், அது வந்திட சிறந்து மாண்கொண்டு—அம்மேகம் வந்தபொழுது சிறப்புற்று மாட்சிமையெய்தி, அதன் உருமு செல மயங்கி தளர்வது போல்—அம்மேகத்தினின்று தோன்றும் இடியானது வர அதனல் மயக்கங்கொண்டு தளர்ச்சியடைதல்போல, பூண் கொண்டிடு சிலை வாங்கலும் மகிழ்வு உற்றிடு புலவோர்—குதைபொருந்திய வில்லைவளைத்தவுடன் மனமகிழ்ந்த தேவர்கள், நாண் கொண்டிடும் ஒலி கேட்டலும் நடுங்கா வெருவுற்ருர்—நாணினின்றுண்டான ஓசையைக்கேட்டவுடன் நடுங்கிப்பயந்தார்கள் எ—று.

உலகத்தில் வெப்பநீங்குதற்பொருட்டு மேகத்தின்வரவை எதிர்பார்த்திருந்த மானுடர் அம்மேகங்கள்மழைக்கோலங்கொண்டுவர மகிழ்ந்திருந்து சிறிதுநேரத்தில் அம்மேகத்தினின்றுந்தோன்றிய இடியைக்கேட்டு அச்சங்கொண்டு தளர்தல்போல, அ

சுரரிறக்கும்பொருட்டுப் போர்தொடங்குதலையெதிர்பார்த்திருந்த தேவர்கள் வீரவாகுதேவர் வில்வளைத்தவுடன் மகிழ்ந்து சிறிதுநேரத்துள் அவர்செய்த நாணொலியால் அச்சமெய்தித்தளர்ந்தனரென்க. உருமு என்பதில் உகரம்-சாரியை. (௭௰)

வேறு.

மேதா வியர்கள் பரவுந்திறல் வீர வாகு
மாதாரு வன்ன சிலைதன்னை வளைத்து வாகைத்
தாதார் பிணையல் புனைதாரகன் றன்னை நோக்கித்
தீதா மழல்போல் வெகுண்டேயிது செப்பு கின்றான்.

இ—ள்: மேதாவியர்கள் பரவும் திறல் வீரவாகு—அறிவுடையோராற்றுதிக்கப்படுகின்ற வலிமையையுடைய வீரவாகுதேவர், மா தாரு அன்ன சிலைதன்னை வளைத்து—பெரியமரம்போன்றவில்லை வளைத்து, தாது ஆர் வாகை பிணையல் புனை தாரகன் தன்னை நோக்கி—பராகம்நிறைந்த வாகைப்பூமாலையைச்சூடிய தாரகாசுரனைப்பார்த்து, தீது ஆம் அழல் போல் வெகுண்டு—அழற்சியையுடைய அக்கினியைப்போலக்கோபித்து, இது செப்புகின்றான்—இவ்வார்த்தையைக்கூறுகின்றார் எ—று.

மேதாவி என்னும் வடசொற்கு அறிவுடையான் என்பதுபொருள். மேதா அறிவு. முருகவேளேவிய படைவீரருள் வீரவாகுவொழிந்த அனைவரையும் வென்றுநிற்றலின் 'வாகைத்தாதார்பிணையல்புனைதாரகன்' எனவும், அதுபற்றி வீரவாகுதேவர் பெருங்கோபமுற்றாரென்பார் 'தீதாமழல்போல்வெகுண்டு' எனவும் கூறினார். வாகைமாலை வெற்றியுடையாராற் சூடப்படுவதென்க. (௭௧)

பொன்றா வலிகொண் டமராடிய பூதர் தம்மை
வன்றாழ் சிலைகொண் டிடுவீரரை வன்மை தன்னால்
வென்றா மெனவுன் னினைபோலும் விரைந்து நின்னைக்
கொன்றாவி யுண்ப னெனலுங்கொடி யோனு ரைப்பான்.

இ—ள்: பொன்றா வலி கொண்டு அமர் ஆடிய பூதர் தம்மை—அழியாத வலிமையையுடையராய்நின்று போரியற்றியபூதர்களையும், வன் தாழ் சிலை கொண்டிடு வீரரை—வலிய நீண்டவில்லையுடைய இலக்கத்தெட்டுவீரர்களையும், வன்மை தன்னால் வென்றாம் என உன்னினை போலும்—வலிமையினால் வெற்றிகொண்டோமென்று நினைத்தாய்போலும், விரைந்து நின்னை கொன்று ஆவி உண்பன்- விரைவில் உன்னைக்கொன்று உயிர்குடிப்பேன், எனலும்—என்றுகூறுதலும், கொடியோன் உரைப்பான்— தீயவனாகிய தாரகாசுரன் (அதற்கு) எதிர்கூறுவான் எ—று.

உன்னால் வெல்லப்பட்டார்போலென்னையெண்ணற்க என்பதாம். உண்ணப்படாத உயிரை உண்ணப்படுவதாகக்கூறியது மரபுவழுவமைதி. "உண்டற்குரிய வல்லாப் பொருளை-யுண்டன போலக் கூறலு மரபே" என்றார் தொல்காப்பியனார். (௭௨)

மாயன் றனைவென் றவனேமியை மாசில் கண்டத்
தேயும் படியே புனைந்தேன்வலி யெண்ணு றாதே
நீயிங் கடுவா மெனக்கூறினை நீடு மாற்றஞ்
சீயந் தனையு நரிவெல்வது திண்ண மாமோ.

இ—ள்: மாயன் தனை வென்று—திருமாலையும் வெற்றிகொண்டு, அவன் நேமியை மாசு இல் கண்டத்து எயும்படி புனைந்தேன் வலி எண்ணுறாது—அவரது சக்கரப்படையைக் குற்றமற்ற கழுத்திற் (பதக்கமாகப்)பொருந்தும்படிதரித்துள்ள எனதுவலிமை

யைப் பொருட்படுத்தாமல், நீ இங்கு அடுவாம் என நீடு மாற்றம் கூறினை-நீ இவ்விடத்து (என்னை) அழிப்போமென்று நெடிய வசனத்தைச்சொல்லினாய், சீயந்தனை நரி வெல்வதும் திண்ணம் ஆமோ—சிங்கத்தை நரிவெல்வதும் நிச்சயமாகுமா? (ஆகாதே) எ—று.

சிறப்புள்மைதொக்கது. மாசில்கண்டம்-நல்லிலக்கணமுடையகழுத்து. நீடுமாற்றம்- பெருவலிபடைத்துள்ளார் பேசுதற்கேற்றவார்த்தை. சீயந்தனையும் என்ற உம்மை பிரித்துக்கூட்டப்பட்டது. அவ்வும்மை இயலாதகாரியமென்பதை வற்புறுத்திற்று. யானைமுதலிய பெரிய மிருகங்களையெல்லாம்வெல்வதாகிய சிங்கத்தை நரிவெல்வது ஒருகாலும் கூடாமைபோல. அசுரரைவெல்லுதலால் தைத்தியாரியென்னும் பெயர்பெற்ற திருமாலையும்வென்றஎன்னை நீவெல்வது ஒருகாலுங்கூடாதென்பதாம். வேற்றுப் பொருள்வைப்பணி. (௭௫)

சாருங் குறள்வெம் படையாவையுஞ் சாய்ந்த வீர
ராருந் தொலைவுற் றனர்நீயு மயர்ந்து நின்றாய்
வீரம் புகல்வாய் விளிகின்ற விளக்க நேர்வாய்
பாரென் வலியா லுனதாவி படுப்ப னென்றான்.

இ—ள்: சாரும் வெம் குறள் படை யாவையும் சாய்ந்த— அணுகுகின்ற கொடிய பூதசேனைமுழுதும் பின்னிட்டன, வீரர் ஆரும் தொலைவு உற்றனர்— (உன்னுடன் வந்த) வீரரனைவரும் தோற்றார்கள், நீயும் அயர்ந்து நின்றாய்—நீயும் (என் சூலப்படையால் இதுகாறுஞ்)சோர்ந்துநின்றாய் (அங்ஙனம்நின்றும்), வீரம் புகல்வாய்-வீரம்பேசுகின்றாய், விளிகின்ற விளக்கம் நேர்வாய்—தணிகின்றதீபத்தைப்போல்வாய், என் வலியால் உனது ஆவி படுப்பன்—எனதுவலிமையினால் உன்னுடைய உயிரையழிப்பேன், பார் என்றான்—இதனைச் (சிறிதுநேரத்துட்) காணுதியென்று (தாரகாசுரன்) வீரங்கூறினான் எ—று.

தீபம் தணியுஞ்சமயத்திற்பிரகாசமாகஎரிதல்போல, நீயும் இறக்குஞ்சமயத்தில் வீரம்பேசுகின்றாய் என்பதாம். விளக்கம்-(பொருள்களை) விளங்கச்செய்வது; அம் கருத்தாப்பொருள்விகுதி. (௭௪)

என்னுந் துணையிற் சரமாயிர மேந்த லுய்ப்பத்
தன்னங் கையிலோர் சிலைவாங்கினன் றார கப்பேர்
மன்னன் கடிது கணையாயிர மாறு தூண்டிச்
சின்னம் புரிந்து கணை நூறு செலுத்தி னானால்.

இ—ள்: என்னும் துணையில்—என்று தாரகாசுரன் கூறியவுடன், ஏந்தல்—வீரவாகுதேவர், ஆயிரம் சரம் உய்ப்ப-ஆயிரம்பாணங்களைச்செலுத்த, தாரக பேர் மன்னன்- தாரகனென்னும்பெயரையுடைய அசுரத்தலைவன், தன் அம் கையில் ஓர் சிலை வாங்கினன்-தனது அகங்கையில் ஒருவில்லை (எடுத்து) வளைத்து, கடிது ஆயிரம் கணை மாறு தூண்டி—விரைவில் ஆயிரம்பாணங்களைஎதிராகச்செலுத்தி, சின்னம் புரிந்து— (தன்மேல் வரும் ஆயிரம்பாணங்களையும்) வெட்டி, நூறு கணை செலுத்தினான்—(பின்னும்) நூறுபாணங்களை ஏவினான் எ—று.

வீரவாகுதேவர்செலுத்தியபாணங்கள் தன் மேனியிற்படுமுன்னரென்பார் 'கடிது' என்றார். (௭௬)

எவ்வக் கொடியோன் றொடுவாளியை யேந்தல் காணா
வவ்வக் கணைகள் விடுத்தேயவை முற்று மாற்றக்
கைவிற் கொருவ னிவனாகுமிக் காளை தன்னைத்
தெய்வப் படையான் முடிப்பேனெனச் சிந்தை செய்தான்.

இ—ள்: ஏந்தல்—வீரவாகுதேவர், எவ்வ கொடியோன் தொடு வாளியை காணு—குற்றம்நிறைந்த கொடியவனுகிய தாரகாசுரன் செலுத்தியபாணங்களைக்கண்டு, அ அ கணைகள் விடுத்து அவை முற்றும் மாற்ற—அவ்வவற்றிற்கேற்ற அம்புகளைச்செலுத்தி அந்த அம்புகளையெல்லாம் அழிக்க, இவன் கை விற்கு ஒருவன் ஆகும்—இவன்கையிலேந்திய வில்லின்போரில் ஒருசிறந்த வீரனும் (ஆதலின்), இ காளை தன்னை— இவ்வீரனை, தெய்வ படையால் முடிப்பேன் என சிந்தை செய்தான்-(இனித்) தெய்வப்படைக்கலங்களால் அழிப்பேனென்று நினைத்தான் எ—று.

விற்கு-உருபுமயக்கம். ஏனைப்படைகளான் முடித்தலரிதாதலின் தெய்வப்படையான் முடிப்பேனென்று சிந்தித்தனனென்பதாம். (எசு)

வேறு.

வெங்க னற்படை தார கன்விட வீர வாகு வெகுண்டுபின்
செங்க னற்படை யேவி யன்னது சிந்த வேவரு ணப்படை
யங்க ணுய்த்திட வவுணர் கோமக னடுபு னற்கிறை படையினைத்
துங்க முற்றிய வீர னுய்த்தது துண்ட மாம்வகை கண்டனன்.

இ—ள்: தாரகன்—(அங்ஙனமெண்ணிய) தாரகாசுரன், வெம் கனல் படை விட—கொடிய அக்கினிப்படைக்கலத்தைச்செலுத்த, வீரவாகு வெகுண்டு—வீரவாகுதேவர் (அதுகண்டு) கோபித்து, பின்—உடனே, செம் கனல் படை ஏவி—சிவந்த அக்கினிப்படைக்கலத்தைத்(தாமுஞ்)செலுத்தி, அன்னது சிந்த—அவனேவியதையழிக்க, அங்கண்-அப்பொழுது, அவுணர் கோமகன்—அசுரத்தலைவனுகிய தாரகன், வருணப்படை உய்த்திட-வருணப்படைக்கலத்தைச்செலுத்த, துங்கம் முற்றிய வீரன்—உயர்ச்சிமிகுந்த வீரவாகுதேவர், அடு புனற்கு இறை படையினை உய்த்து—(முடிவுகாலத்தில் எல்லாவற்றையும்) அழிக்கின்ற சமுத்திரராசனுகிய வருணனதுபடைக்கலத்தைச்செலுத்தி, அது துண்டம் ஆம் வகை கண்டனன்—அதனைத் துணிபடும்படி வெட்டினுர் எ—று.

கனற்படை-அக்கினிமயமானபடை. பிறபடைகளும் இவ்வாறே அவ்வத்தேவமயமாயினவென்க. காணுதல்-செய்தல். (எஎ)

இரவி தன்படை யவுணன் விட்டன னிவனு மப்படை யேவியே
விரைவி லன்னது தொலைவு கண்டனன் வீர மேதகு தாரக
னுரமி குந்தனி யூதை வெம்படை யுந்தி னனது கந்தவே
ளருண்மி குந்தனி யடியன் மாற்றின னனைய தொல்படை தனைவிடா.

இ—ள்: அவுணன் இரவிதன் படை விட்டனன்—தாரகாசுரன் (பின்னர்ச்) சூரியப்படைக்கலத்தைச் செலுத்தினன், இவனும் அ படை ஏவி விரைவில் அன்னது தொலைவு கண்டனன்—இந்த வீரவாகுதேவரும் அந்தச்சூரியப்படைக்கலத்தைச் செலுத்திச்சீக்கிரத்தில் அப்படைக்கலத்தையழித்தார், வீரம் மேதகு தாரகன் உரம் மிகும் தனி வெம் ஊதை படை உந்தினன்—வீரத்தினற்சிறந்த தாரகாசுரன் வலிமைமிகுந்த ஒப்பற்ற கொடிய வாயுப்படைக்கலத்தைச்செலுத்தினன், கந்தவேள் அருள் மிகும் தனி அடியன்—குமாரக்கடவுண்மேற்பத்திமிகுந்த ஒப்பற்ற அடியவராகிய வீரவாகுதேவர், அனைய தொல் படை தனை விடா—அந்தப்பழைய வாயுப்படைக்கலத்தைச்செலுத்தி, அது மாற்றினன்—அவனேவிய படைக்கலத்தை விலக்கினுர் எ—று. (எஅ)

அனில வெம்படை வீற ழிந்திட வவுணர் கோமக னம்புயன்
றனது தொல்படை யேவி னனது தணிவில் செற்றமொ டேகலும்

வனைக ருங்கழல் வீரவாகுவு மற்ற வன்படை தூண்டியே
நினையு முன்னது தொலைவு செய்தன னிகரில் வானவர் புகழவே.

இ—ள்: வெம் அனில படை வீறு அழிந்திட—கொடிய வாயுப்படைக்கலம் வலிமைகெட, அவுணர் கோ மகன்-அசுரத்தலைவனாகிய தாரகாசுரன் (அதுகண்டு), அம்புயன் தனது தொல் படை ஏவினன்—பழைய பிரமப்படைக்கலத்தைச் செலுத்தினன், அது தணிவு இல் செற்றமொடு ஏகலும்-அப்படைக்கலம் அடங்காத கோபத்துடன் போக, வனை கரும் கழல் வீரவாகுவும்—அலங்கரிக்கப்பட்ட பெரிய வீரக்கழலையுடைய வீரவாகுதேவரும், நினையும் முன்-ஒன்றை மனத்தினால் நினைக்கும்பொழுதிற்குள் [மிகவிரைவில்], அவன் படை தூண்டி—அந்தப்பிரமதேவரது படைக்கலத்தைச்செலுத்தி, நிகர் இல் வானவர் புகழ—ஒப்பில்லாத தேவர்கள் துதிக்க, அது தொலைவு செய்தனன்—அவனேவிய படைக்கலத்தை யழித்தான் எ—று.

தணிவில் செற்றம்=பெருங்கோபம். (எகூ)

ஆய தன்மைகள் கண்டு தாரக னற்பு தத்தின னாகியே
மேய வானவர் படைகள் யாவையும் வீரன் மற்றிவன் வென்றனன்
மாய நீர்மையி னிங்கி வன்றிறல் வன்மை கொள்ளுது மினியெனாத்
தீய புந்தியி லினைய வாறு தெரிந்து சிந்தனை செய்து மேல்.

இ—ள்: தாரகன்—தாரகாசுரன், ஆய தன்மைகள் கண்டு—அந்நிகழ்ச்சிகளைப் பார்த்து, அற்புதத்தினன் ஆகி—அதிசயமுடையவனாய், இவன் வீரன்-இந்தவீரன், மேய வானவர் படைகள் யாவையும் வென்றனன்—எம்மிடத்திற்பொருந்திய தேவப்படைக்கலங்களெல்லாவற்றையும் வெற்றிகொண்டான் (ஆதலின்), இனி—மேல், மாய நீர்மையின் இங்கிவன் திறல் வன்மை கொள்ளுதும்— மாயத்தன்மையினால் இவனது வலிமையை அடக்குவோம், எனா—என்று, இனையவாறு-இவ்வாறு, தீய புந்தியில் தெரிந்து சிந்தனைசெய்து—(தனது) கொடியமனத்தில் ஆலோசித்து நினைத்து, மேல்—பின்பு எ—று.

இதுமுதன்மூன்றுசெய்யுட்கள் குளகம். திறல் வன்மை-ஒருபொருட்பன்மொழி.

தொல்லை மாயையின் விஞ்சை தன்னை நவின்று ளங்கொடு துண்ணென
மல்லன் மேவரு தார காசுரன் வடிவ மெண்ணில தாங்கியே
யெல்லை தீர்தரு படைவ ழங்கின னெங்குமாகி யிருட்குழா
மொல்லை வந்து பரந்த போலவ னொருவ னின்றமர் புரியவே.

இ—ள்: மல்லல் மேவரு தாரகாசுரன்—வலிமைபொருந்திய தாரகாசுரன், தொல்லை மாயையின் விஞ்சை தன்னை நவின்று உளம் கொடு—பழைய மாயவித்தையைச்செபித்துத் தியானித்து, துண் என—திடீரென்று, எண் இல வடிவம் தாங்கி— அளவிறந்த மாயரூபங்களைக்கொண்டு, எல்லை தீர்தரு படை வழங்கினன்—அளவிறந்த ஆயுதங்களைச்செலுத்தி, இருட்குழாம் ஒல்லை வந்து பரந்த போல்—இருட்கூட்டங்கள் விரைவில்வந்து பரந்ததன்மைபோல, எங்கும் அவன் ஒருவன் ஆகி நின்று அமர் புரிய—எவ்விடங்களிலுந் தானொருவனேயாய்நின்று போரைச்செய்ய எ—று.

விஞ்சை- வித்தை என்னும் வடசொல்லின்விகாரம். தாரகன் கருநிறமுடையனாதலால் அவன்பலவடிவமாய்நின்றதற்கு இருட்குழாம்பரவுதலை உவமைகூறினார். அமர்புரிய என்றது மேற்செய்யுளில் கண்டு என்பதனோடியையும். (அக)

கண்டு மற்றது வானு ளோர்கள் கலங்கி யேங்கினர் முன்னரே
விண்டு நீளிடை நின்ற பூதர் வெருண்டு பின்னரு மோடினார்

மண்டு பேரமர் செய்த யர்ந்திடு மான வீரரு மச்சமேல்
கொண்டு நின்றனர் முறுவல் செய்தனர் குணலை யிட்டன ரவுணரே.

இ—ள்: அது கண்டு—அதனைப்பார்த்து, வான் உளோர்கள் கலங்கி எங்கினர்-தேவர்கள் மனங்கலங்கித்திகைத்தார்கள், முன்னரே விண்டு நீள் இடை நின்ற பூதர்—அதற்கு முன்னே நிலைகுலைந்து நெடுந்தூரத்திற்போய்நின்ற பூதர்கள், வெருண்டு பின்னரும் ஓடினார்— வெருட்சிகொண்டு பின்னும் ஓடினார்கள், மண்டு பேர் அமர் செய்து அயர்ந்திடும் மான வீரரும்—நெருங்கிய பெரியபோரைச்செய்திளைத்த மதிப்பினையுடைய இலக்கத்தெட்டுவீரர்களும், அச்சம் மேல்கொண்டு நின்றனர்—பயம்மிகப்பெற்று நின்றார்கள், அவுணர்—அசுரர்கள், முறுவல் செய்தனர் குணலையிட்டனர்-சிரித்துக் கொக்கரித்தார்கள் எ—று.

குணலை, வீராவேசத்தாற் கொக்கரித்தலும் ஒர்கூத்தும் கைதட்டிக்கூவுதலுமாம். இது குணலம் குணலை எனவும்வழங்கும். அதுகண்டு என்பதை ஒவ்வொருவாக்கியங்கட்குமியைக்க. கொள் என்னும்வினைப்பகுதி மேல் என்னும் உபசருக்கத்தோடுகூடி, அதிகரித்தல் என்னும் பொருளில்வந்தது. முன்னரே என்பதில் ஏகாரம்-பிரிநிலை. (அஉ)

வேறு.

தார கப்பெய ரவுணர்கோன் மாயையின் சமரு
மாரு மச்சுறு கின்றது மாடன்மொய்ம் புடையோன்
பேர ழற்பொறி கதுவுற நோக்கியே பிறங்கும்
வீர பத்திர னெடும்படை யெடுத்தனன் விடுவான்.

இ—ள்: ஆடல் மொய்ம்பு உடையோன்-வீரவாகுதேவர், தாரக பெயர் அவுணர் கோன் மாயையின் சமரும்-தாரகனென்னும்பெயரையுடைய அசுரத்தலைவனது மாயப்போரையும், ஆரும் அச்சுறுகின்றதும்-(அதனால்) எல்லோரும் அச்சமடைகின்றதன்மையையும், பேர் அழல் பொறி கதுவுற நோக்கி-பெரிய நெருப்புப்பொறிகள் சிதறப்பார்த்து, பிறங்கும் நெடும் வீரபத்திரன் படை-விளங்குகின்ற நெடிய வீரபத்திரப்படைக்கலத்தை, விடுவான் எடுத்தனன்-அவன்மேற் பிரயோகிக்கும்பொருட்டுக் கையிலெடுத்தார் எ—று.

கடுங்கோபத்துடன்பார்த்தென்பார் 'பேரழற்பொறிகதுவுறநோக்கி' என்றார்.()

துங்க வுக்கிரச் சிம்புண்மாப் படையினைத் தூயோன்
செங்கை பற்றலு மன்னது தாரகன் செயலா
லங்க ணின்றிடு மாயைகண் டச்சமுற் றழுங்கிப்
பொங்கு பானுமுன் னிருளென முடிந்ததப் பொழுதே.

இ—ள்: தூயோன்—தூய்மையையுடைய வீரவாகுதேவர், துங்க உக்கிர சிம்புள் மா படையினை செம் கை பற்றலும்— மிகுந்த உக்கிரத்தையுடைய சரபவடிவங்கொண்ட வீரபத்திரரது பெரிய படைக்கலத்தை (எவுமாறு) சிவந்த கையிலெடுத்தலும், அன்னது—அந்தப்படைக்கலத்தை, தாரகன் செயலால் அங்கண் நின்றிடும் மாயை கண்டு—தாரகாசுரனதுசெய்கையினால் அவ்விடத்திற்றோன்றிநின்ற மாயையானது பார்த்து, அச்சம் உற்று அழுங்கி—பயந்து வருந்தி, பொங்கு பானு முன் இருள் என—விளங்குகின்ற சூரியனது முன்னிலையில் இருள் அழிவதுபோல, அப்பொழுதே முடிந்தது—உடனே அழிந்தது எ—று.

தாரகன்கொண்ட மாயரூபங்களைத் தொலைக்கவல்லபடையென்பது போதர 'துங்கவுக்கிரச்சிம்புண்மாப்படை' எனவும், உதயசூரியனென்பார் 'பொங்குபானு' எனவும் கூறினார். (அ௩)

தன்பு ணர்ப்புறு மாயைதா னுடைதலுந் தமியாய்
முன்பு நின்றதோர் தாரகன் மொய்ம்புளான் றன்னைப்
பின்பு மாயையிற் படுத்தவோர் சூழ்ச்சியைப் பிடித்து
மின்பொ லிந்ததன் றேரைவிட் டோடினன் விரைவில்.

இ—ள்: தன் புணர்ப்பு உறும் மாயை தான் உடைதலும்—தனது உபாயத்தாற்றோன்றிய மாயை அழிந்தவுடன், தமி ஆய் முன்பு நின்றது ஓர் தாரகன்— தனித்து முன்னுகநின்ற தாரகாசுரன், மொய்ம்பு உளான் தன்னை பின்பும் மாயையில் படுத்த ஓர் சூழ்ச்சியை பிடித்து—(தன்னின்மிக்க) வலியுடையவராகிய வீரவாகுதேவரைப் பின்னரும் மாயத்தில் அகப்படுத்துதற்கு ஒருபாயத்தைக்கடைப்பிடித்து, மின் பொலிந்த தன் தேரை விட்டு—ஒளிமிகுந்த தனதுதேரைவிட்டு [இறங்கி], விரைவில் ஓடினன்—சீக்கிரத்தில் (பின்காட்டி) ஓடினுன் எ—று. (அ௫)

தார கன்றொலைந் தோடலுந் தனக்கிணை யில்லோன்
போர ழிந்துவென் னிட்டவன் றன்மிசைப் புத்தேள்
வீர வெம்படை விடுப்பது வீரமன் றென்னுச்
சீரி தாகிய தூணியு ளன்னதைச் செறித்தான்.

இ—ள்: தாரகன் தொலைந்து ஓடலும்—தாரகாசுரன்தோற்றோடுதலும், தனக்கு இணை இல்லோன்—தனக்கு நிகரானோர் பிறரில்லாதவீரவாகுதேவர், போர் அழிந்து வென் இட்டவன் தன் மிசை புத்தேள் வீர வெம் படை விடுப்பது வீரம் அன்று என்னு—போரிலேதோற்றுப் புறங்காட்டிய இவன் மீது தெய்வத்தன்மையமைந்த கொடிய வீரபத்திராஸ்திரத்தைப்பிரயோகிப்பது வீரமாகாதென்றுசிந்தித்து, அன்னதை சீரிது ஆகிய தூணியுள் செறித்தான்—அப்படைக்கலத்தைச் சிறப்புடைத்தான (தமது) அம்புக்கூட்டினுட்செருகினுர் எ—று. (அ௬)

அற்ற போர்வலித் தாரகன் பின்விரைந் தணுகிப்
பற்றி நாண்கொடு புயந்தனைப் பிணித்தெனைப் பணித்த
கொற்ற வேலன்மு னுய்க்குவன் யானெனக் குறித்து
மற்ற வன்றனைத் தொடர்ந்தன னெடுந்திறல் வாகு.

இ—ள்: யான்—நான், போர் வலி அற்ற தாரகன் பின் விரைந்து அணுகி—போரியற்றும்வலிமைநீங்கப்பெற்ற தாரகாசுரனுக்குப்பின் விரைவிற்போய், பற்றி—அவனைப்பிடித்து; நாண் கொடு புயம் தனை பிணித்து—கயிற்றினுற்கைகளைக்கட்டி, எனை பணித்த கொற்ற வேலன் முன் உய்க்குவன்—என்னைப் (போரியற்றுமாறு) கட்டளையிட்ட வெற்றிபொருந்திய வேலாயுதத்தையேந்திய முருகக்கடவுளது திருமுன்னிலையிற்கொண்டுபோய்விடுவேன், என குறித்து—என்றுசிந்தித்து, நெடும் திறல் வாகு— வீரவாகுதேவர், அவன் தனை தொடர்ந்தனன்—அத்தாரகாசுரனைப் பின்றொடர்ந்தார் எ—று.

அற்றபோர்வலித்தாரகன்- வடமொழிநடை. அது தமிழ்நடைக்கேற்ப மாற்றியுரைக்கப்பட்டது. புயம்-இலக்கணையாய்க்கையை யுணர்த்திற்று. உய்க்குவன் என்றதில் கு-சாரியை. நெடுந் திறல் வாகு-மிக்கவலிமையார்ந்த புயங்களையுடையவன். (அ௭)

வேழ மாமுகற் கிளவலே யுன்னியே வீர
ஞழி மால்கட லாமென வார்த்துவை தணுகச்
சூழு மாயையி னிருக்கையாந் தொல்கிர வுஞ்சப்
பாழி யொன்றுசென் றொளித்தனன் றூரகப் பதகன்.

இ—ள்: வீரன்—வீரவாகுதேவர், மா வேழமுகற்கு இளவலை உன்னி—சிறந்த யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளது தம்பியாகிய முருகக்கடவுளைத் தியானித்து, ஆழி மால் கடல் ஆம் என ஆர்த்து வைது அணுக—ஆழமாகிய பெரியகடல்போல ஆரவாரித்து நிந்தித்துக் கிட்டும்பொழுது, தாரக பதகன்—பாதகனாகியதாரகாசுரன், சூழும் மாயையின் இருக்கை ஆம் தொல் கிரவுஞ்ச பாழி ஒன்று சென்று ஒளித்தனன்—ஆலோசித்துச்செய்யப்படுகின்ற மாயைகளுக்கிருப்பிடமாகிய பழைய கிரவுஞ்சமலையிலுள்ள ஒருகுகையினுட்போய் மறைந்தான் எ—று.

சூழுமாயை-பகைவரைச்சூழ்ந்து வருத்துகின்றமாயை எனினுமாம். (அஅ)

முன்ன மாங்கவன் போகிய பூழையுண் முடுகிப்
பொன்னின் வாகையந் தோளுடை யாண்டகை புகலு
மன்ன தோர்வரை யகமெலா மாயிரங் கதிரின்
மன்ன னேகுறு விருணிலம் போன்றுவை கியதே.

இ—ள்: பொன்னின் வாகையம் தோள் உடை ஆண்டகை—பொன்போல்விளங்குகின்ற வீரமார்ந்த புயங்களையுடைய வீரர் [வீரவாகுதேவர்], அவன் முன்னம் போகிய பூழையுள் முடுகி புகலும்-அத்தாரகாசுரன் முந்திப்புகுந்த குகையினுள்ளே விரைவில் நுழைதலும், அன்னது ஓர் வரை அகம் எலாம்-அந்தமலையின் உள்ளிடமுழுதும், ஆயிரம் கதிரின் மன்னன் ஏகுறு இருள் நிலம் போன்று வைகியது—ஆயிரங்கிரணங்களையுடை சூரியபகவான் சஞ்சரிக்கப்பெறுத இருளுலகம்போன்றிருந்தது எ—று.

இருணிலமென்றது பாதலலோகத்தை. (அகூ)

நீளு மாவிருள் படர்தலுஞ் சில்லிடை நெறியாற்
றாளி னொற்றியே படர்ந்தனன் றாரகற் காணா
னாளி மொய்ம்புடை மேலையோ னடுக்கலின் புணர்ப்பான்
மீளு கின்றதோர் நெறியையுங் கண்டிலன் வெகுண்டான்.

இ—ள்: நீளும் மால் இருள் படர்தலும்-மிகுந்த பேரிருள்மூடுதலும், ஆளிமொய்ம்பு உடை மேலையோன்-வீரவாகுதேவர், நெறியால்—முன்காணப்பட்டவழியினால், தாளின் ஒற்றி சில் இடை படர்ந்தனன்—கால்களினால் தடவிக்கொண்டு சிறிதுதூரம்போய், தாரகன் காணான்—தாரகாசுரனைக் காணப்பெறுதவராய், அடுக்கலின் புணர்ப்பால் மீளுகின்றது ஓர் நெறியையும் கண்டிலன்—அம்மலையின்மாயத்தினால், திரும்பிவருதற்குரியவழியையுங் காணுதவராய், வெகுண்டான்—கோபங்கொண்டார் எ—று.

ஆளிமொய்ம்புடைமேலையோன்- சிங்கத்தின்வலிபோன்ற வலியமைந்த புயங்களையுடையமேலவன். (கூ0)

செற்ற மிக்கவன் மாயையிவ் வரையெனச் சிந்தித்
துற்ற காலையி லவுணனா கியகிர வுஞ்சப்
பொற்றை யன்னது கண்டுமோ கத்துயில் புரிந்து
மற்ற வன்றன துணர்வினை மையல்செய் ததுவே.

இ—ள்: செற்றம் மிக்கவன்—கோபமிகுந்த வீரவாகுதேவர், இ வரை மாயை என சிந்தித்து உற்ற காலையில்—இந்தமலை மாயமுடைத்தென்று சிந்தித்திருந்தபொழுது, அவுணன் ஆகிய கிரவுஞ்ச பொற்றை—அசுரனாகிய அந்தக்கிரவுஞ்சமலை, அன்னது கண்டு—அதனைப்பார்த்து, மோகத்துயில் புரிந்து—மயக்கநித்திரையை யுண்டாக்கி, அவன் தனது உணர்வினை மையல் செய்தது—அவரது அறிவை மயக்கியது எ—று.

கிரவுஞ்சனென்னும் அசுரனே அகத்தியமுனிவர்சாபத்தால் மலையாயினனாத லின் 'அவுணனாகியகிரவுஞ்சப்பொற்றை' என்றார். (௯௧)

இயலி சைத்தமிழ் முனிவர னிசைத்தசூ ளிசைவால்
வியலு டைத்திறல் வாகுவை யவ்வரை மிகவு
மயலு டைப்பெரு மாயம தியற்றலு மயங்கித்
துயில லுற்றனன் றொல்லையி னுணர்வெலாந் துறந்தே.

இ—ள்: இயல் இசை தமிழ் முனிவரன் இசைத்த சூள் இசைவால்-இயல் இசை நாடகம் என்னுமுத்தமிழையும் வளர்த்த அகத்தியமுனிவர் கூறிய சாபமொழிபொருந்து தலால், அ வரை-அந்தக்கிரவுஞ்சமலை, வியல் உடை திறல் வாகுவை—பெருமையினையு டைய வீரவாகுதேவருக்கு, மிகவும் மயல் உடை பெரு மாயமது இயற்றலும்-மிகுதியாக மயக்கத்தை விளைக்கின்ற பெரியமாயத்தைச்செய்ய, தொல்லையின் உணர்வு எலாம் துற ந்து—பழைய அறிவுமுழுவதையுமிழந்து, மயங்கி துயிலல் உற்றனன்— மதிமயங்கிநித்தி ரையாயினர் எ—று.

முத்தமிழ்களுள் முன்னைய இரண்டுங்கூறப்படவே, உபலக்கணத்தாற் பின்னை யதுங் கொள்ளப்பட்டது; இசையில் நாடகம் அடங்குமென்பாருமுளர். முன்னொருகால த்தில் முனிவர்கள் பலர்சேர்ந்து ஆரியபாஷையை அபிவிருத்திசெய்யுநோக்கமாகக்காசியி ல் வடமொழிச்சங்கமொன்று தாபித்து நடத்திவருநாளில், அச்சங்கத்தவருளொருவராகிய அகத்தியனார், மற்றையபுலவர்களோடு மாறுபட்டு, தென்றிசையிலுள்ள பொதியமலையிற் போயிருந்து, பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னும் இலக்கணநூல்களையியற்றி, அவற் றைத்தம்முதன்மாணாக்கராகிய தொல்காப்பியர் முதலிய பன்னிருவர்க்குங்கற்பித்துத்தமி ழ்ப்பாஷையைத்தழைத்தோங்கச்செய்தனராதலின் அவரை 'இயலிசைத்தமி ழ்முனிவரன்' என்றார். அகத்தியமுனிவர்சாபத்தால்மாயஞ்செய்தலை மேல் அசுரகாண் டத்திற் கிரவுஞ்சப்படலத்தில் "மாண்மதி பெருத வெய்யோய் மற்றுநின் றொன்மை நீங் கி-நீண்மலை யாகி யீண்டே நின்றுதீ யவுணர்க் கெல்லா-மேண்மிகு மிருக்கை யாகி யிருந் தவத் தோர்க்கு மேனைச்-சேண்மலி கடவு ளோர்க்குந் தீத்தொழி லிழைத்தி பன்னாள்" "மாற்படு நமது பாணி வலிகெழு தண்டா லுன்றன்-பாற்படு புழைகள் யாவும் பற்பல மா யைக் கெல்லா-மேற்புடை யிருக்கை யாக" எனவருஞ்செய்யுட்களாலுணர்க. (௯௨)

அம்ம லைக்கணே முன்னவ னுறங்கலு மனைய
செம்ம லுக்கிளை யோரிரு நால்வருஞ் சிறந்த
தம்மி னத்தரோ ரிலக்கருஞ் சாரதர் பலரும்
விம்ம லுற்றனர் சிறையிலாப் பறவையின் மெலிந்தார்.

இ—ள்: முன்னவன் அ மலைக்கணே உறங்கலும்—மூத்தவராகிய வீரவாகுதே வர் அந்தக்கிரவுஞ்சமலையில் மோகநித்திரைசெய்தலும், அனைய செம்மலுக்கு இளையோர் இருநால்வரும்—அந்தவீரரது தம்பியர்களெண்மரும், சிறந்த தம் இனத்தர் ஓர் இலக்கரு ம்—சிறப்புற்ற அவர்களது இனத்தவராகிய இலக்கம்வீரர்களும், சாரதர் பலரும்—பூதவீ ரர்கள் பலரும், விம்மல் உற்றனர்—மனப்பீடைகொண்டு, சிறை இலா பறவையில் மெலி ந்தார்—சிறகிழந்தபக்ஷிகளைப்போல வாடினார்கள் எ—று.

பறவைக்குச் சிறகு இன்றியமையாமைபோல வீரர்க்கும் வீரவாகுதேவர் இன் றியமையாமையின் 'சிறையிலாப்பறவையின்மெலிந்தார்' என்றார். (௯௩)

உடைந்து போயின தாரகன் றன்னைநம் முரவோன்
றொடர்ந்து சென்றனன் மீண்டில னவனொடுந் துன்னி

யடைந்து வெற்பினிற் போர்புரி வான்கொலோ வங்கட்
படர்ந்து நாடுதும் யாமுமென் றெண்ணினர் பலரும்.

இ—ள்: நம் உரவோன்— எங்கள் தலைவராகிய வீரவாகுதேவர், உடைந்து போயின தாரகன் தன்னை தொடர்ந்து சென்றனன்—தோற்றோடிய தாரகாசுரனைப்பின் றொடர்ந்துபோயினார், மீண்டிலன்—(இதுகாறும்) திரும்பிவந்திலார், அவனொடும் துன்னி அடைந்து வெற்பினில் போர் புரிவான் கொலோ—அவ்வசுரனுடனே எதிர்த்துநின்று கிரவுஞ்சமலையிற் போர்செய்கின்றாரோ?, யாமும் அங்கண் படர்ந்து நாடுதும்—நாமும் அவ்விடத்துப்போயறிவோம், என்று பலரும் எண்ணினர்—என்றிவ்வாறு பலரும் ஆலோசித்தார்கள் எ—று.

உரவோன்-வலியுடையவன். உரம்-வலி. உம்மை, யாமும் என்பதில் எச்சம்; பலருமென்பதில்முற்று. (௬௪)

எண்ணி யேயிசைந் திளையரோ ரெண்மரு மிலக்க
நண்ணும் வீரரும் பாரிடந் தன்னுணா யகரு
மண்ணல் வான்படை யேந்தியே யாயிடை யகன்று
விண்ணு லாவுறு கிரவுஞ்ச மெய்தினர் விரைவில்.

இ—ள்: எண்ணி இசைந்து—இவ்வாறுநினைத்து ஒருப்பட்டு, இளையர் ஓர் எண்மரும்—(வீரவாகுவின்) தம்பியரெண்மரும், இலக்கம் நண்ணும் வீரரும்— இலக்கமென்னுந்தொகையமைந்த வீரர்களும், பாரிடம் தன்னுள் நாயகரும்- பூதகணத்தவர்களுள் தலைவர்களும், அண்ணல் வான் படை ஏந்தி—சிறந்தபெரிய படைக்கலங்களைக்கையிலெடுத்துக்கொண்டு, ஆயிடை அகன்று—அவ்விடத்தினின்றும் நீங்கி, விரைவில்—சீக்கிரத்தில், விண் உலாவுறு கிரவுஞ்சம் எய்தினர்—ஆகாயத்தையளாவிய [உயர்ந்த] கிரவுஞ்சமலையையடைந்தார்கள் எ—று.

வீரவாகுதேவர் போர்செய்கின்றாரோ என்றையுறுதலின், சிறந்தபடைகளைக் கைக்கொண்டு சென்றனரென்க. (௬௫)

ஆய வெற்பினில் வீரவா குப்பெய ரடலோன்
போய பூழையுண் மற்றவர் யாவரும் புகலுந்
தீய தொல்வரை முன்னவற் கிழைத்திடு திறம்போன்
மாய மெண்ணில புரிதலு மயங்கியே வதிந்தார்.

இ—ள்: ஆய வெற்பினில்—அந்தக்கிரவுஞ்சமலையில், வீரவாகு பெயர் அடலோன் போய பூழையுள்— வீரவாகுவென்னும்பெயரையுடைய வீரர் (முன்னே) நுழைந்து சென்றகுகையினுள், அவர் யாவரும் புகலும்—அவர்களெல்லோரும் போக, தீய தொல் வரை—கொடிய பழைய அம்மலை, முன்னவற்கு இழைத்திடு திறம் போல்—தலைவராகிய வீரவாகுதேவர்க்குச்செய்ததன்மைபோலவே, எண் இல மாயை புரிதலும்— அளவிறந்தமாயங்களைச் செய்தலும், மயங்கி வதிந்தார்—(அவர்கள்) மயக்கமடைந்திருந்தார்கள் எ—று.

முன்னவன்-முன்புகுந்தவனெனினுமாம். (௬௬)

வெற்றி வீரவா குப்பெய ரண்ணலும் வீரர்
மற்றி யாவரு மயங்கலுந் தாரகன் வாரா
வுற்று நோக்கிநம் மாயையா லிவரெலா மொருங்கே
யிற்று ளாரென மகிழ்ந்துமால் வரைமிசை யெழுந்தான்,

இ—ள்: வெற்றி வீரவாகு பெயர் அண்ணலும்—வெற்றியினையுடைய வீரவாகுவென்னும் பெயரையுடையதலைவரும், மற்று வீரர் யாவரும்-ஏனைய வீரர்களனைவரும், மயங்கலும்—மயங்கிக்கிடக்க, தாரகன் வாரா—தாரகாசுரன் (அங்கு) வந்து, உற்று நோக்கி—(அவர்களை) உற்றுப்பார்த்து, இவர் எலாம் நம் மாயையால் ஒருங்கே இற்றுளார் என மகிழ்ந்து—இவர்களெல்லோரும் எமது மாயத்தினால் ஒருசேர இறந்தார்களென்று சிந்தித்து மனமகிழ்ச்சிகொண்டு, மால் வரை மிசை எழுந்தான்—பெரிய அந்த மலையின்மேல் வெளிப்பட்டான் எ—று.

நம்மாயை என்றது புறங்காட்டிவந்து மலைக்குகையினுட்புகுந்தமையை. (௧௭)

அண்ட மீமிசை நின்றவா னவர்களிவ் வனைத்துங்
கண்டு கட்புனல் பனிவர வரற்றியே கலங்கிக்
கொண்ட துன்பொடு பதைபதைத் தோடினர் கூளித்
தண்டம் யாவையும் வெருவின தலைவரின் மையினால்.

இ—ள்: அண்டம் மீமிசை நின்ற வானவர்கள்—ஆகாயத்தின்மேனின்ற தேவர்கள், இவ் அனைத்தும் கண்டு—இவைகளெல்லாவற்றையும் பார்த்து, கண் புனல் பனிவர அரற்றி—கண்ணீர்துளிக்கப்புலம்பி, கலங்கி—மனங்கலங்கி, கொண்ட துன்பொடு பதைபதைத்து ஓடினர்-அடைந்ததுன்பத்துடனே மிக நடுங்கி ஓடினார்கள், கூளி தண்டம் யாவையும்—பூதசேனையெல்லாம், தலைவர் இன்மையினால் வெருவின—தமக்குரியதலைவர்கள் ஒருவரும் இல்லாமையினாற்பயந்தன எ—று.

இவ்-வகரமெய்யீற்றுப்பலவின்பாற்சுட்டுப்பெயர். இங்ஙனங்கொள்ளாது, இ அனைத்தும் எனவகுப்பினுமாம். பனிவரல்-துளித்தல். (௧௮)

மலையின் மீமிசை யெழுதரு தாரகன் மற்றோர்
தலைமை யாகிய விரதமேல் கொண்டுதா னவர்கள்
பலரும் வந்துவந் தார்த்தனர் சூழ்தரப் பைம்பொற்
சிலைய தொன்றினை வாங்கியே செருநிலஞ் சென்றான்.

இ—ள்: மலையின் மீமிசை எழுதரு தாரகன்—கிரவுஞ்சமலையின்மேல் வெளிப்பட்டுவந்த தாரகாசுரன், தலைமை ஆகிய மற்று ஓர் இரதம் மேல்கொண்டு—சிறப்புடைத்தான வேறொருதேரின்மேலேறி, தானவர்கள் பலரும் வந்து வந்து ஆர்த்தனர் சூழ்தர-அசுரர்கள்பலரும் வந்துவந்து ஆரவாரஞ்செய்துதன்னைச்சூழ, பைம் பொன் சிலையது ஒன்றினை வாங்கி—பசும்பொன்மயமான ஒருவில்லைவளைத்துக்கொண்டு, செருநிலம் சென்றான்—போர்க்களத்தையடைந்தான் எ—று.

வந்து வந்து என்பதை வந்து உவந்து எனவகுப்பினுமாம். முன் எதிரிற்கப்பெருததேரென்பார் 'மற்றோர்-இரதம்' என்றார். (௧௯)

நீடு தன்சிலை நாணொலி கொண்டுநீள் சரங்கள்
கோடி கோடிமற் றொருதொடை யாகவே கொளுவி
யாடல் சேர்தரு பூதர்மேற் பொழிதலு மலமந்
தோட லுற்றனர் திசையினும் விண்ணினு மலைந்தே.

இ—ள்: நீடு தன் சிலை நாண் ஒலி கொண்டு—(அங்ஙனஞ்சென்றதாரகன்)நெடிய தனதுவில்லில் நாணோசையுண்டாக்கி, நீள் சரங்கள் கோடி கோடி ஒரு தொடை ஆக கொளுவி-நெடியபாணங்களைக் கோடிகோடியென்னுந்தொகை ஒவ்வொருதொடையினும்அமையத் தொடுத்து, ஆடல் சேர்தரு பூதர் மேல் பொழிதலும்—வலிமைபொருந்தி

ய பூதர்களின்மேற்சொரிய, அலமந்து—(அவரனைவரும்) மனஞ்சுழன்று, திசையினும் விண்ணினும் உலைந்து ஓடலுற்றனர்—திக்குகளினும் ஆகாயத்தினும் நிலைகுலைந்து ஓடினார்கள் எ—று.

கோடிகோடி-கோடியானுறழ்ந்தகோடி; எண்மிகுதியையுணர்த்திற்று. (௧௦௦)

ஆன காலையி னாரத னினையகண் டழுங்கி
மேனி துண்ணென வியர்ப்புற வழிக்கொடு விரைந்து
போன விண்ணவர் தம்மொடு சென்றுபுத் தேளிர்
சேனை காவல னின்றதோர் கடைக்கூழை சேர்ந்தான்.

இ—ள்: ஆன காலையில்—அப்பொழுது, நாரதன்—நாரதமுனிவர், இனைய கண்டு அழுங்கி—இத்தன்மைகளைப்பார்த்து வருந்தி, மேனி துண் என வியர்ப்பு உற—சரீரம் திடீரென்று வியர்வைகொள்ள, விரைந்து வழிக்கொடு—விரைவாக ஓடி, போன விண்ணவர் தம்மொடு சென்று—முன்போனதேவர்களுடன் கூடிப்போய், புத்தேளிர் சேனைகாவலன் நின்றது ஓர் கடைக்கூழை சேர்ந்தான்-தேவசேனாபதியாகிய முருகக்கடவுள் நின்றருளிய பின்னணியையடைந்தார் எ—று.

வழிக்கொளல்-செல்லுதல். விரைந்து என்பதைப் போன என்பதனோடியைப்பினுமாம். (௧௦௧)

அரிது மாதவம் புரிதரு நாரத னடலின்
விரவு மாயிரம் பூதவெள் ளத்தொடு மேவுங்
கருணை சேரறு முகத்தனைக் கண்டுகண் களித்துச்
சுரர்க ளோடுபோ யிறைஞ்சியே யினையன சொல்வான்.

இ—ள்: அரிது மா தவம் புரிதரும் நாரதன்— அரிதாகப் பெருந்தவத்தைச்செய்கின்ற நாரதமுனிவர், அடலின் விரவும் ஆயிரம் வெள்ளம் பூதத்தொடு மேவும் கருணை சேர் அறுமுகத்தனை கண்டு—வலிமையோடு செறிந்துள்ள ஆயிரவெள்ளமென்னுந்தொகையாகிய பூதசேனையோடு நின்ற கிருபைமிகுந்த ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுளைத்தரிசித்து, கண் களித்து—நேத்திரானந்தமுற்று, சுரர்களோடு போய் இறைஞ்சி—தேவர்களோடுசென்று வணங்கி, இனையன சொல்வான்—இவ்வார்த்தைகளைக்கூறுவார் எ—று.

அரிதுபுரிதல்— உணவொறுத்தலாதியனவற்றாற் சரீரத்தைவாட்டிச்செய்தல்.

ஐய நின்படை வீரர்கள் பெருஞ்சம ராடி
வெய்ய தானவர் தானைகள் வரவர வீட்டிச்
செய்ய தந்திரத் தலைவரை யமைச்சரைச் செற்றுப்
பொய்யின் மொய்ம்புடைத் தாரகன் றன்னொடும் பொருதார்.

இ—ள்: ஐய—கடவுளே!, நின் படை வீரர்கள்—தேவரீரது சேனைவீரர்கள், பெரும் சமர் ஆடி—பெரியபோரைச்செய்து, வெய்ய தானவர் தானைகள் வர வர வீட்டி-கொடிய அசுரசேனைகள் வருந்தோறும் அழித்து, செய்ய தந்திரத்தலைவரை அமைச்சரை செற்று—சிறந்த சேனைத்தலைவர்களையும் மந்திரிமார்களையுங்கொன்று, பொய் இல் மொய்ம்பு உடை தாரகன் தன்னொடும் பொருதார்—பொய்படுதலில்லாத வலிமையையுடைய தாரகாசுரனோடும் போர்செய்தார்கள் எ—று.

மந்திரித்தலைவரை எனவும்பாடம். (௧௦௩)

தலைக்க ணாகிய வீரனுந் தம்பியர் பிறரு
மிலக்க வீரரும் பாரிடத் தலைவர்கள் யாரும்

புலைக்கொ டுந்தொழிற் றாரகன் றன்னொடும் பொரத்தன்
மலைக்க ணுய்த்தன னவர்தமைச் சூழ்ச்சியின் வலியால்.

இ—ள்: தலைக்கண் ஆகிய வீரனும்—முதலிற்பொருந்தியுள்ள [தலைவராகிய] வீரவாகுதேவரும், தம்பியர் பிறரும்—(மற்றைய) தம்பிமாராகிய எட்டுவீரர்களும், இலக்க வீரரும்—இலக்கம்வீரர்களும், பாரிட தலைவர்கள் யாரும்— பூதத்தலைவர்களனைவரும், புலை கொடும் தொழில் தாரகன் தன்னொடும் பொர—இழிவான தீச்செயல்களையுடைய தாரகாசுரனேடும் போர்செய்ய, சூழ்ச்சியின் வலியால் அவர்தமை தன் மலைக்கண் உய்த்தனன்--(அவன்) தனது தந்திரத்தின் வல்லமையினால் அவர்களைத் தனதுகிரவுஞ்சமலையினுட்புகுவித்தான் எ—று.

புலை-புன்மை, ஐ விகுதிபெற்றபண்புப்பெயர். (௧0௪)

உய்த்த காலையி லவுணனு கியகிர வுஞ்ச
மெத்து மாயைக ளணையவர்க் கிழைத்தலும் வெருவிப்
பித்த ராமென மயங்கினர் போலுமாற் பின்ன
ரித்தி றந்தனை யுணர்ந்தனன் றாரக னென்போன்.

இ—ள்: உய்த்தகாலையில்—உட்புகுவித்தபொழுது, அவுணன் ஆகிய கிரவுஞ்சம்—அசுரனாகிய கிரவுஞ்சமலை, அனையவர்க்கு மெத்தும் மாயைகள் இழைத்தலும்— அவர்களுக்கு மிகுந்த மாயங்களைச்செய்ய, வெருவி—(அவர்களெல்லோரும்) பயந்து, பித்தர் ஆம் என மயங்கினர்—பைத்தியங்கொண்டவர்கள்போல மயங்கினார்கள், பின்னர்—அதன்பின்பு, தாரகன் என்போன்—தாரகனென்றுசொல்லப்படுகின்ற அசுரன், இ திறம் தனை உணர்ந்தனன்—இத்தன்மையை அறிந்தான் எ—று.

போலும்-ஒப்பில்போலி. இயற்கையறிவையிழப்பது பித்தரியல்பாதலால் அவரை உவமைகூறினார். (௧0௫)

தெரிந்து தாரகன் மகிழ்வொடு பறந்தலை சென்று
துரந்து நம்பெருந் தானையைக் கணைமழை சொரிய
முரிந்து போயின நிகழ்ச்சியீ துயிர்த்தொகை முற்று
மிருந்த நாயக வறிதியே யாவையு மென்றான்.

இ—ள்: தாரகன் தெரிந்து—தாரகாசுரன் (இந்நிகழ்ச்சிகளை) அறிந்து, மகிழ்வொடு பறந்தலை சென்று—மகிழ்ச்சியுடன் போர்க்களத்தையடைந்து, நம் பெரும் தானையை துரந்து கணைமழை சொரிய—நமது பெரிய பூதசேனைகளைத்துரத்தி அம்புமழைகளைச்சொரிய, முரிந்து போயின—(அச்சேனைமுழுவதும்) குலைந்தோடின, நிகழ்ச்சி ஈது—நடந்தசெயல் இதுவே, உயிர் தொகை முற்றும் இருந்த நாயக—ஆன்மவர்க்கங்களெல்லாவற்றிலும் (பரமான்மாவாக) வியாபித்திருக்கின்ற கடவுளே!, யாவையும் அறிதியே என்றான்-இவைகளெல்லாவற்றையுந் தேவரீர் அறிவீரன்றே? என்று (நாரதமுனிவர்) விண்ணப்பஞ்செய்தார் எ—று.

முற்றறிவுடையதேவரீர் யாங்கூறினவற்றையேயன்றிக் கூறாதுவிடுத்தனவற்றையும் அறிவீரென்பார் 'உயிர்த்தொகைமுற்றுமிருந்தநாயகவறிதியேயாவையும்' என்றார். அறிந்து அதற்கேற்ற பரிகாரஞ்செய்குதியென்பது குறிப்பு. (௧0௬)

என்ற காலையி னாரத னுள்ளமு மிமையோர்
நின்று தாமயர் கின்றது மமரர்கோ னெஞ்சிற்

றுன்று சோகமு நான்முக னாதியோர் துயரு
மொன்ற நோக்கியே யறுமுகப் பண்ணவ னுரைப்பான்.

இ—ள்: என்ற காலையில்—என்று விண்ணப்பஞ்செய்தபொழுது, அறுமுக பண்ணவன்—ஆறு திருமுகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுள், நாரதன் உள்ளமும்—நாரதமுனிவரது மனக்கருத்தையும், இமையோர் நின்று அயர்கின்றதும்—தேவர்கள் (தமது திருமுன்னிலையில்)நின்று வருந்துகின்றதையும், அமரர்கோன் நெஞ்சில் துன்று சோகமும்—தேவேந்திரனது மனத்திற்பொருந்திய துயரத்தையும், நான்முகன் ஆதியோர் துயரும்—பிரமாமுதலியதேவர்களது துன்பத்தையும், ஒன்ற நோக்கி—ஒருசேரப்பார்த்து, உரைப்பான்—(இவ்வாறு) திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

உள்ளம்-ஆகுபெயர். தாம் அசைநிலை. 'ஒன்றநோக்கி-உரைப்பான்' எனவே அவர்மனமுவக்குமாறு திருவாய்மலர்ந்தருளுகின்றுரென்பதுபெற்றும். (௧௦௭)

வேறு.

ஆருமிது கேண்மினம ராடுகள னேகித்
தாரகனை வேல்கொடு தடிந்தவுணர் வைகு
மோரரண மானகிர வுஞ்சகிரி செற்றே
வீரர்தமை யோரிறையின் மீட்டிடுவ னென்றுன்.

இ—ள்: ஆரும் இது கேண்மின்—நீவிரனைவீரும் இவ்வாசகத்தைக்கேளுங்கள், அமர் ஆடு களன் ஏகி—(யாம் இப்பொழுது) போர்க்களத்திற்போய், தாரகனை வேல் கொடு தடிந்து—தாரகாசுரனை வேற்படையாற்கொன்று, அவுணர் வைகும் ஓர் அரணம் ஆன கிரவுஞ்சகிரி செற்று—அசுரர்களிருக்கின்ற ஒரு கோட்டையாயுள்ள கிரவுஞ்சமலையை அழித்து, வீரர் தமை ஓர் இறையில் மீட்டிடுவன் என்றுன்— (வீரவாகுமுதலிய) வீரர்களை ஒருமாத்திரைப்பொழுதினுள் மீட்பேமென்று கூறியருளினுர் எ—று.

ஆரும் கேண்மின்-முன்னிலையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. அமராடுகளன்-போர்செய்கின்ற இடம். களன்-இறுதிப்போலி. (௧௦௮)

எந்தையிவை கூறுதலும் யாருமவை தேர்ந்து
சிந்தையுறு கின்றதுயர் செற்றுமுடி வில்லா
வந்தமின் மகிழ்ச்சியுட னாடியிசை பாடிக்
கந்தனடி வந்தனை புரிந்தனர் களிப்பால்.

இ—ள்: எந்தை இவை கூறுதலும்—எங்கள் பரமபிதாவாகிய சுப்பிரமணியக்கடவுள் இவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளுதலும், யாரும் அவை தேர்ந்து (அங்குநின்றோர்) அனைவரும் அவற்றைக்கேட்டுணர்ந்து, சிந்தை உறுகின்ற துயர் செற்று—மனத்திற்பொருந்திய துன்பங்களையொழித்து, முடிவு இல்லா அந்தம் இல் மகிழ்ச்சியுடன் ஆடி இசைபாடி—அழிவில்லாத அளவற்ற சந்தோஷத்தோடும் கூத்தாடித் தோத்திரங்களைக் கூறி, களிப்பால்—பேரானந்தத்தோடும், கந்தன் அடி வந்தனை புரிந்தனர்—சுப்பிரமணியக்கடவுளது பாதங்களை வணங்கினுர்கள் எ—று.

வந்தனம் என்னும்வடசொல் திரிந்தது. (௧௦௯)

கந்தமுரு கேசனது காலைமுது பாகாய்
வந்ததொரு வந்தினை மகிழ்ச்சியொடு நோக்கிச்
சிந்தைதனின் முந்தும்வகை தேரதனை வல்லே
யுந்துதி விரைந்தென வுரைத்தருள லோடும்.

இ—ள்: கந்த முருகேசன்—கந்தனென்னுந் திருநாமத்தையுடைய முருகக்கடவுள், அதுகாலை—அப்பொழுது, முது பாகு ஆய் வந்தது ஒரு வந்தினை மகிழ்ச்சியொடு நோக்கி—பழைய சாரதியாயமைந்த வாயுதேவனைச் சந்தோஷத்தோடுபார்த்து, சிந்தை தனில் முந்தும் வகை—மனத்தினும்முற்பட்டுச்செல்லும்படி, தேர் அதனை-நமதுதேரை, வல்லே விரைந்து உந்துதி என உரைத்தருளலோடும்— மிக விரைவிற்செலுத்துவாயாக வென்று கூறியருளியவுடன் எ—று.

முருகன் + ஈசன், நிலைமொழியீற்று னகரம்கெட்டு, குமரேசன் என்னும் வடமொழி போலக் குணசந்திபெற்றது. தமிழிலக்கணவிதிப்படியாயின் முருகவீசன் என்றாம். பாகு என்னும் உகரவீற்றுப்பண்புப்பெயர் பண்பையுணர்த்தாது பண்புடைப் பொருளையுணர்த்திநின்றது. மனம் எத்துணைத்தூரத்திலுள்ளபொருளையும் நினைத்தவுடன்சார்தலால், வேகத்திற்குச்சிறந்ததாக எடுத்துக்காட்டப்பட்டது. தேர்செலுத்துந்தன்மையை நன்குபயின்றபாகனென்பார் 'முதுபாகு' என்றார். இச்செய்யுளும் பிற்செய்யுளுங் குளகம். (௧௧0)

என்னையினி தென்றுதொழு தேழெழு வகைத்தாந்
தன்னினம தாகியவர் தாங்கள்புடை போதக்
கொன்னுனைய தாமுளவு கோல்கயிறு பற்றித்
துன்னுபரி மாநிரைக டூண்டிமிக வார்த்தான்.

இ—ள்: என்னை இனிது என்று தொழுது—என்தலைவரே! (தேவரீர்கூறியது) நன்றென்றுகூறிக் கைதொழுது, எழ் எழு வகைத்து ஆம் தன் இனமது ஆகியவர் தாங்கள் புடை போத—நாற்பத்தொன்பதுவகையினையுடைய தன்னினத்தவர்கள் பக்கத்திற்சூழ்ந்துவர, கொன் நுனையது ஆம் முளவுகோல் கயிறு பற்றி- அச்சத்தைத்தருகின்ற நுனியையுடையதாகிய முட்கோலையும் கசைக்கயிற்றையும்பிடித்து, துன்னு பரி மா நிரைகள் தூண்டி—நெருங்கிய குதிரைநிரைகளைச்செலுத்தி, மிக ஆர்த்தான்— மிகவும் ஆரவாரித்தான் எ—று.

என்னை என்னுஞ்சொல் இப்பொருளதாதலை "என்னைமுன்னில்லன்மின்" என்னுந் திருக்குறளானுமுணர்க; இது ஈண்டு அண்மைவிளி. என்ன எனப்பாடமோதி என்றுசொல்ல எனப்பொருள்கூறுதல், முற்செய்யுளில் 'எனவுரைத்தருளலோடும்' என்றதோடுகூறியதுகூறலாம். கொல்- நுனையது எனச்சொல்வகுத்து வருத்துகின்றநுனியையுடைய எனவும் பொருள்கூறலாம். முளவு என்பதில் அகரமும் உகரமும் சாரியைகள். மிகவுங்கூர்மையுடையதென்பார் 'கொன்னுனையது' எனவும், இலக்கங்குதிரைகள்பூட்டப்பட்டதாதலின் 'துன்னுபரியாநிரைகடூண்டி' எனவும் கூறினார். (௧௧௧)

வேறு.

ஆன காலைதனி லண்டமும் வையந்
தானு மங்குள தடங்கிரி யாவு
மேனை மாகடலு மெண்டிசை யுள்ள
மான வேழமு நடுங்கின மன்னோ.

இ—ள்: ஆன காலை தனில்— அச்சமையத்தில், அண்டமும்-ஆகாயவுலகமும், வையம் தானும்- பூவுலகமும், அங்கு உள தடம் கிரி யாவும்-அந்நிலவுலகத்திலுள்ள பெரிய மலைகளனைத்தும், ஏனை மா கடலும்-மற்றைய பெரிய சமுத்திரங்களும், எண் திசை உள்ள மான வேழமும்-எட்டுத்திக்குகளிலுமுள்ள மதிக்கத்தகுந்தயானைகளும், நடுங்கின- நடுக்கமுற்றன எ—று.

மலைமுதலியவற்றிற்கு வேற்றினமாந்தன்மையையுடைமையின் 'ஏனைமாகடல்' என்றார். நடுங்கியது தேரோடும் அதிர்ச்சியினாலென்க. (௧௧௨)

வாவு கின்றபல மாநிரை தூண்டத்
தேவர் தங்கள்சிறை தீரிய செல்வோன்
மேவு தொல்லிரதம் விண்ணெறி கொண்டே
யேவ ரும்புகழ வேகிய தன்றே.

இ-ள் வாவுகின்ற பல மா நிரை தூண்ட-தாவிச்செல்லுகின்ற பலவகையான குதிரைநிரைகளைச்செலுத்த, தேவர் தங்கள் சிறை தீரிய செல்வோன் மேவு தொல் இரதம்-தேவர்களதுசிறை நீங்கும்பொருட்டுச்செல்லுகின்ற சுப்பிரமணியக்கடவுள் ஏறியருளிய பழையதேரானது, ஏவரும் புகழ—யாவரும் வியக்கும்படி, விண் நெறி கொண்டு ஏகியது—ஆகாயமார்க்கமாகப் போயிற்று எ—று.

தூண்ட-ஏகியது என இயையும். (௧௧௩)

ஆதி யங்குமர னவ்வழி பொற்றேர்
மீது செல்லுதலும் விண்முகில் பல்வே
றோதும் வண்ணமுட னுற்றென வானிற்
பூத சேனைபுடை போயின வன்றே.

இ—ள்: ஆதியம் குமரன்—முதல்வராகிய குமாரக்கடவுள், அவ்வழி பொன் தேர் மீது செல்லுதலும்—அந்த ஆகாயமார்க்கமாக மனோவேகப்பொற்றேரின்மேற்போதலும், விண் முகில் பல் வேறு ஓதும் வண்ணம் உடன் உற்று என— ஆகாயத்திலுள்ளமேகங்கள் பல வேறுவகையாகச்சொல்லப்படுகின்றநிறங்களுடன் சென்றாற்போல, பூதசேனை-பூதசேனைகள், வானில்- ஆகாயமார்க்கத்தில், புடை போயின—(அவரது) பக்கங்களிற்சென்றன எ—று.

ஆகாயத்திற்பலநிறமுடையபூதர்விரவிச்செறிந்துசெல்வது பலநிறம்விரவப்பெற்ற மேகஞ்செல்வதுபோலுமென்க. பூதர் பலநிறமுடையரென்பதை "ஐம்பெருநிறனும்வடிவில்வீற்றுவீற்றெய்தினர்" என முன்னர்ப் படையெழுபடலத்திற்கூறுதலாலுமுணர்க. செல்லுதலும்-போயின என இயையும். (௧௧௪)

போர ழிந்துபுற கிட்டெதிர் பூத
ராரு நேர்ந்துதொழு தாற்றலொ டெய்த
நாரணன் றனது நன்மரு கானோன்
றார கன்றிகழ் சமர்க்கள முற்றான்.

இ—ள்: போர் அழிந்து புறகிட்டு எதிர் பூதர் ஆரும்—போரிலேதோற்றுப் புறங்காட்டியோடி முற்பட்டபூதர் அனைவரும், நேர்ந்து தொழுது—அணுகிக் கைதொழுது, ஆற்றலொடு எய்த—வலிமைபெற்று உடன்வர, நாரணன் தனது நல் மருகு ஆனோன்—திருமாலினது நல்ல மருகராகிய முருகக்கடவுள், தாரகன் திகழ் சமர்க்களம் உற்றான்—தாரகாசுரன்விளங்கிநிற்கின்ற போர்க்களத்தையடைந்தருளினார் எ—று.

வீரவாகுமுதலிய தலைவர்களையிழந்தமையாற் பூதர்கள் அஞ்சி வலிகுன்றியிரிந்தனராதலின், அவரினுஞ்சிறந்த தலைவராகிய குமாரக்கடவுளையெதிர்ப்பட்டபொழுது வலிபெற்றனரென்க. முருகக்கடவுளது தாயாராகிய உமையம்மையார் திருமாலுக்கு உடன்பிறந்தவராக வழங்குதலாலும், திருமாலின்புதல்வியரை முருகக்கடவுள் மணம்புரிதலாலும், அம்முருகக்கடவுளை 'நாரணன்றனதுநன்மருகானோன்' என்றார். தாரகன் எதிரூன்றிநிற்கவல்லாரின்மையாற் போரொழிந்து தனியேநிற்றலின் 'தாரகன்றிகழ்சமர்க்களம்' என்றார். மருகு உகரவீற்றுப்பண்புப்பெயர் பண்பியையுணர்த்திநின்றது. (௧௧௫)

கவண் மோடுபடர் காலினு முந்திச்
சிவன்ம கன்றனது சேனைய தாஞே
ருவரி யாமென வுறுந்திற நோக்கி
யவுணர் தானையை யணிந்தெதிர் சென்றார்.

இ—ள்: சிவன் மகன் தனது சேனையது ஆனோர்— சிவபிரானது திருக்குமார ராகிய முருகக்கடவுளது சேனையாகவுள்ளபூதர்கள், கவணமோடு படர் காலினும் முந்தி- வேகத்தோடுசெல்லுகின்ற காற்றினும்விரைந்து, உவரி ஆம் என உறும் திறம் நோக்கி— கடல்போலப் [பெருந்தொகுதியாக] வருந்தன்மையைப்பார்த்து, அவுணர்—அசுரர்கள், தானையை அணிந்து எதிர் சென்றார்— தங்கள்சேனைகளை அணிவகுத்துக்கொண்டு எதி ரே போனார்கள் எ—று.

உம்மை-உயர்வுசிறப்பு. (௧௧௬)

சகந்து திக்கவரு சாரதர் தாமு
மகந்தை யுற்றவவு ணத்தொகை யோரு
மிகந்த வன்மையொ டெதிர்ந்திக லெய்தி
வெகுண்டு பேரமர் விளைத்திட லுற்றார்.

இ—ள்: சகம் துதிக்க வரு சாரதர் தாமும்—உலகத்தாரனைவரும் புகழும்படி வருகின்ற பூதர்களும், அகந்தை உற்ற அவுண தொகையோரும்— அகங்காரம்பொருந்தி ய அசுரர்கூட்டத்தினரும், இகந்த வன்மையொடு எதிர்ந்து—அளவிறந்த வலிமையோடு ம் எதிர்த்து, இகல் எய்தி—மாறுபாடுகொண்டு, வெகுண்டு பேர் அமர் விளைத்திடல் உ ற்றார்—கோபித்துப்பெரியபோரைச்செய்யத்தொடங்கினார்கள் எ—று.

இகந்தவன்மை=பெருவலி. (௧௧௭)

கரங்கொ ணேமிகள் கணிச்சிக டீவாய்ச்
சரங்க ளாதியன தானவர் விட்டா
ருரங்கொண் மால்வரைக ளோங்கு மெழுக்கண்
மரங்கள் விட்டனர் மறங்கெழு பூதர்.

இ—ள்: தானவர்—அசுரர்கள், கரம் கொள் நேமிகள்—கையிலேந்திய சக்கரங் களும், கணிச்சிகள்—மழுப்படைகளும், தீ வாய் சரங்கள் ஆதியன—கொடிய முனையினை யுடைய அம்புகளும்முதலாகிய படைகளை, விட்டார்—(பூதர்மேல்) ஏவினார்கள், மறம் கெ ழு பூதர்—வலிமைமிக்க பூதர்கள், உரம் கொள் மால் வரைகள்—வலிமைபொருந்திய பெ ரிய மலைகளையும், ஓங்கும் எழுக்கள்—உயர்ந்த எழுப்படைகளையும், மரங்கள்—மரங்களையு ம், விட்டனர்—(அசுரர்மேல்) ஏவினார்கள் எ—று.

தீவாய்-தீயைக்காலும் வாயெனினுமாம். (௧௧௮)

முரிந்த தேர்நிரை முடிந்தன மாக்க
ளெரிந்த தானவர் நெடுந்தலை சோரி
சொரிந்த பூதர்மெய் துணிந்தன வானிற்
றிரிந்த பாறுகள் செறிந்தன வன்றே.

இ—ள்: தேர் நிரை முரிந்த—(இவ்வாறு இருதிறத்தாரும் எதிர்த்துப்பொரு தபொழுது) தேர்க்கூட்டங்கள் முரிந்தன, மாக்கள் முடிந்தன—குதிரைகள் அழிந்தன, தானவர் நெடும் தலை நெரிந்த—அசுரர்களது நெடியதலைகள் நெரிபட்டன, சோரி சொரி ந்த—இரத்தநீர்கள்சிந்தின, பூதர் மெய் துணிந்தன—பூதர்களது சரீரம்வெட்டுப்பட்டன,

வானில் திரிந்த பாறுகள் செறிந்தன—ஆகாயத்திலுலாவிய பருந்துகள் (தசையைவிரும்பிவந்து) நெருங்கின எ—று. (௧௧௯)

நிறங்கொள் செங்குருதி நீத்தம தாகிக்
கறங்கி யோடின கவந்தமொர் கோடி
மறங்கொ டாடுவ வயின்றொறு மாகிப்
பிறங்கு கின்றன பிணங்கெழு குன்றம்.

இ—ள்: செம் நிறம் கொள் குருதி நீத்தமது ஆகி கறங்கி ஓடின—சிவந்தநிறத்தையுடைய இரத்தங்கள் வெள்ளமாகி இரைந்துபாய்ந்தன, ஓர் கோடி கவந்தம் மறம் கொடு ஆடுவ- ஒருகோடிக்கணக்கான உடற்குறைகள் வீராவேசங்கொண்டு கூத்தாடுவன, பிணம் கெழு குன்றம் வயின் தொறும் ஆகி பிறங்குகின்றன—பிணமலைகள் இடந்தோறும் பொருந்தி (மிகச்சேய்மையினிற்பார்க்கும்) காணப்படுகின்றன எ—று. (௧௨0)

அனைய வாறிவ ரருஞ்சம ராற்றப்
புனையல் வாகையுள பூதர்க டம்மால்
வினையம் வல்லவுணர் வெவ்வலி சிந்தி
யினைத லோடுமிரி குற்றன ரன்றே.

இ—ள்: அனையவாறு இவர் அரும் சமர் ஆற்ற—அவ்வாறு இவ்விருதிறத்தாரும் பெரும்போரைச்செய்ய, வினையம் வல் அவுணர்—உபாயபுத்தியில் வல்ல அசுரர்கள், வாகை புனையல் உள பூதர்கள் தம்மால்—வெற்றிமாலையைத்தரித்துள்ள பூதர்களால், வெவ் வலி சிந்தி—கொடிய வலிமையழிந்து, இனைதலோடும் இரிகுற்றனர்— வருத்தத்தோடும் அஞ்சியோடினார்கள் எ—று.

பிறசேனைகளுடன் பொருதகாலங்களிற் புறங்காட்டாதாரென்பார் 'வினையம் வல்லவுணர்' எனவும், அவரை வெல்லுதற்கேற்ற வீரமுடையரென்பார் 'புனையல்வாகையுளபூதர்கள்' எனவும் அடை புணர்த்திக்கூறினர். (௧௨௧)

தன்ப டைத்தொலைவு தாரக னோக்கிக்
கொன்ப டைத்தகுனி விற்குனி வித்தே
மின்ப டைத்தபல வெங்கணை தூவி
வன்ப டைக்கணம் வருந்த நடந்தான்.

இ—ள்: தாரகன்—தாரகாசுரன், தன் படை தொலைவு நோக்கி—தனது சேனைகளின் தோல்வியைப்பார்த்து, கொன் படைத்த குனி வில் குனிவித்து— பெருமைபொருந்திய வளையுமியல்பினையுடைய வில்லைவளைத்து, மின் படைத்த பல வெம் கணை தூவி—ஒளிபொருந்திய கொடிய பலபாணங்களைச்செலுத்தி, வன் படை கணம் வருந்த நடந்தான்—வலியபூதசேனைசமூகம் வருந்தும்படி சென்றான் எ—று.

கொன்-அச்சந்தருந்தன்மையுமாம். (௧௨௨)

நடந்தெ திர்ந்தகண நாதரை யெல்லாந்
தொடர்ந்து பல்கணை சொரிந்து துரந்தே
யிடந்தி கழ்ந்தவிமை யத்திறை நல்கு
மடந்தை தந்ததிரு மைந்தன்மு னுற்றான்.

இ—ள்: நடந்து—(இவ்வாறு) சென்று, எதிர்ந்த கணநாதரை எல்லாம் தொடர்ந்து—முற்பட்ட பூதத்தலைவர்களையெல்லாம்எதிர்த்து, பல் கணை சொரிந்து துரந்து—பல பாணங்களைச்செலுத்திப்புறங்காட்டுவித்து, இடம் திகழ்ந்த இமையத்து இறை

நல்கும் மடந்தை தந்த திரு மைந்தன் முன் உற்றான்— (சிவபிரானது) இடப்பாகத்தில் விளங்குகின்ற இமையமலையரசன்பெற்ற புதல்வியாகிய உமாதேவியார்பெற்ற திருக்குமாரராகிய முருகக்கடவுளது திருமுன்னிலையிற்சென்றான் எ—று.

இடந்திகழ்ந்தமடந்தைஎனஇயையும். இடம் விசாலம் எனக்கொண்டு இமையத்திற்கடையாக்கினுமாம். (௧௨௩)

உற்ற காலைதனி லொற்றரை நோக்கிச்
சற்று நீதியறு தாரக வெய்யோன்
செற்ற மென்னுமழல் சிந்தையின் மூள
மற்றி வன்கொலரன் மாமக னென்றான்.

இ—ள்: உற்ற காலை தனில்—(அவ்வாறு) சென்றபொழுது, சற்றும் நீதி அறு தாரகவெய்யோன்— சிறிதாயினும் நீதியில்லாத கொடியவனாகிய தாரகாசுரன், செற்றம் என்னும்அழல் சிந்தையில் மூள—கோபமென்னும் அக்கினிதன்மனத்திற்பற்ற, ஒற்றரை நோக்கி—தூதுவர்களைப்பார்த்து, அரன் மாமகன் இவன் கொல் என்றான்—சிவபிரானது சிறந்தபுதல்வன் இவனோ? என்றுவினாவினான் எ—று.

வணங்குதற்கேற்ற கடவுளையும் பொரத்துணிந்தனனாதலின் 'சற்றுநீதியறுதாரகவெய்யோன்' என்றார். (௧௨௪)

என்ன லுங்குமர னிங்கிவ னேயா
மன்ன வென்றிட லு மற்றவ னேறுந்
துன்னு தேர்கடிது தூண்டி யெவர்க்கும்
முன்ன வன்மதலை முன்னுற வந்தான்.

இ—ள்: என்னலும்—என்றுவினாவியவுடன், மன்ன—(தூதுவர்கள் தாரகனை நோக்கி) அரசனே!, குமரன் இங்கிவனே ஆம் என்றிடலும்—சிவகுமாரன் இவனேயாமென்றுகூறுதலும், அவன்—அத்தாரகாசுரன், ஏறும் துன்னு தேர் கடிது தூண்டி—தானேறிய சிறந்ததேரை விரைவிற்செலுத்தி, எவர்க்கும் முன்னவன் மதலை முன் உற வந்தான்—அனைவர்க்கும் முதற்கடவுளாகிய சிவபிரானது திருக்குமாரரான முருகக்கடவுளுக்கு முன்னாக வந்தான் எ—று. (௧௨௫)

## வேறு.

முழுமதி யன்ன வாறு முகங்களு மூந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரு
மழகிய கரமீ ராறு மணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்றோ.

இ—ள்: முழு மதி அன்ன ஆறு முகங்களும்— பூரணசந்திரனைப்போன்ற ஆறு திருமுகங்களையும், மூந்நான்கு ஆகும் விழிகளின் அருளும்— பன்னிரண்டென்னுந் தொகையினவாகிய திருக்கண்களின் கருணையையும், வேலும்—வேலாயுதத்தையும், வேறு உள படையின் சீரும்—மற்றுமுள்ள படைக்கலங்களின் சிறப்பையும், அழகிய கரம் ஈராறும்—அழகார்ந்த பன்னிரண்டுதிருக்கரங்களையும், அணி மணி தண்டை ஆர்க்கும் செழு மலர் அடியும்—அழகிய இரத்தினங்களழுத்தப்பெற்ற தண்டையென்னுமாபரணமொலிக்கின்ற செழிப்பான தாமரைமலர்போன்ற பாதங்களையும், கண்டான்—(தாரகாசுரன்) தரிசித்தான் (ஆதலின்), அவன் தவம் செப்பல் பாற்றோ—அவன்செய்ததவம் (இத்துணைத்தென எம்மாற்) சொல்லுந்தரத்தினதா? அன்று எ—று.

தண்மை பொலிவு வசீகரம் முதலியவற்றைக்குறைவறவுடைமையால் 'முழுமதியன்ன-முகங்கள்' எனவும், எப்பொழுதும் கருணைசெய்யுங் குறிப்புடையனவாதலின் 'மூந்நான்காகும்விழிகளினருள்' எனவும், படைகட்கெல்லாம் நாயகமாய்விளங்குதலின் ஏனைப்படைகளிற்பிரித்து 'வேலும்' எனவும், ஏற்றஏற்றவாறுசிறப்புற அமைந்திருத்தலின் 'வேறுளபடையின்சீரும்' எனவும், அதுபற்றியே 'அழகியகரமீராறும்' எனவும், வேதமயமாகிய தண்டையென்னும் அணியானது அத்துவிதப் பேரானந்தம்பெறுதற்கிதுவேயிடமென்பதை எவருமுணருமாறு ஆர்த்துக்கொண்டிருத்தலின் 'அணிமணித்தண்டையார்க்கும்-அடி' எனவும், எண்ணிறந்தபாதகங்களையெல்லாமியற்றிய அவ்வசுரன் சிவஞானிகளாற் பலகால முயன்றுங் காண்டற்கரிய திருவுருவத்தை எளிதிற்கண்டானாதலின் 'அவன்றவஞ்செப்பற்பாற்றோ' எனவும் கூறினர். இவ்வசுரர்கள் இப்பிறப்பிற் பலபாதகங்களைச்செய்தாராயினும் முற்பிறப்பிற் சுப்பிரமணியக்கடவுளில் மிகுந்தபத்தியுடையராயொழுகித் தேவர்சூழ்ச்சியால் அசுரராய்ப்பிறந்தனரென்று மயூரகிரிப்புராணத்துக் கூறப்படுஞ்சரித்திரம் ஈண்டுய்த்துணர்தற்பாலது. வேறுளபடை-குலிசமுதலியன; அவற்றை விடைபெறுபடலத்து முப்பத்தேழாஞ்செய்யுளிற்காண்க. (௧௨௬)

தற்பம துடைய சிந்தைத் தாரக னினைய வாற்றாற்
சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு வனைத்து நோக்கி
யற்புத மெய்தி நம்மே லமர்செய வந்தா னென்றாற்
கற்பனை கடந்த வாதிக் கடவுளே யிவன்கொ லென்றான்.

இ—ள்: தற்பமது உடைய சிந்தை தாரகன்—செருக்குநிறைந்த மனத்தினையுடைய தாரகாசுரன், இனையவாற்றால்—இங்ஙனமாக, சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு அனைத்தும் நோக்கி—ஞானமுதல்வராகிய முருகக்கடவுள்கொண்ட திருக்கோலத்தைமுற்றுகப்பார்த்து, அற்புதம் எய்தி- ஆச்சரியமுற்று, இவன் நம் மேல் அமர் செய வந்தான் என்றால்—இவர் எம்மேற் போர்செய்யவந்தாரென்றால், கற்பனை கடந்த ஆதி கடவுளே கொல் என்றான்—கற்பனையைக்கடந்த முதற்கடவுளேபோலுமென்று கூறினான் எ—று.

தர்ப்பம் சித்பரன் அத்புதம் என்னும்வடசொற்கள் முறையே தற்பம் சிற்பரன் அற்புதம் எனத்திரிந்தன. 'சிற்பரமூர்த்திகொண்டதிருவுரு' என்றதற்கு, இயல்பில் தமக்கெனவோருருவமின்றி அகண்டாகாரமாய்நிற்குங் கடவுள் ஆன்மாக்களுய்திபெறுதற்பொருட்டுக்கொண்டருளிய திருவுருவம்என்பது கருத்து. கற்பனை-பாவனை. கடவுளேயன்றிப்பிறரெவரும் தம்மையெதிர்க்கத்தக்காரல்லரெனக்கருதினனாதலின் 'நம்மேலமர்செயவந்தானென்றாற்கற்பனைகடந்தவாதிக்கடவுளேயிவன்கொல்' என்றான். கொல் என்னுமிடைச்சொல் ஈண்டு ஊகித்தற்பொருளது. (௧௨௭)

இந்தவா றுன்னிப் பின்னர் யார்க்குமே லாகு மீசன்
றந்ததோர் வரமும் வீரத் தன்மையும் வன்மைப் பாடு
முந்துதாம் பெற்ற சீரு முழுவது நினைந்து சீறிக்
கந்தவே டன்னை நோக்கி யினையன கழற லுற்றான்.

இ—ள்: இந்தவாறு உன்னி—இப்படி நினைத்து, பின்னர்—அதன்பின்பு, யார்க்கும் மேல் ஆகும் ஈசன் தந்தது ஓர் வரமும்—எத்துணைமேம்பாடுடையார்க்கும் மேலவராகிய சிவபிரான், (தமக்குத்) தந்த ஒப்பற்றவரங்களும், வீரத்தன்மையும்—பராக்கிரமத்தினியல்பும், வன்மைப்பாடும்—வலிமையும், முந்து தாம் பெற்ற சீரும்—முன்னேதாங்கள்பெற்றகீர்த்தியும், முழுவதும் நினைந்து—ஆகிய இவையெல்லாவற்றையும் நினைத்து,

சீறி—கோபித்து, கந்தவேள் தன்னை நோக்கி—முருகக்கடவுளைப்பார்த்து, இனையன கழுறல் உற்ருன்—இவ்வார்த்தைகளைச்சொல்வானுயினுன் எ—று.

முன்னர்க்கடவுளென்று எண்ணியதற்குமாருகத் தன்பெருமைகளைச்சிந்தித்தனனென்பதுதோன்ற 'பின்னர்-நினைந்து' என்ருர். வரம்-நூற்றெட்டுகெங்காறும் அழிவின்றிவாழ்தல், சிவசத்தியொன்ருனன்றிப் பிறரால்வெல்லப்படாமை முதலியன. வீரத்தன்மை-பின்னிடாது ஊக்கத்துடன் பொருஞ்சாமர்த்தியம். வன்மை-தேகபலம். சீர்-திக்குவிசயம் தேவரைச்சிறைசெய்தல்முதலியன. (கஉஅ)

நாரணன் றனக்கு மற்றை நான்முகன் றனக்கும் வெள்ளை
வாரணன் றனக்கு மல்லான் மதிமுடி யமல னுக்குந்
தாரணி தனிலெ மக்குஞ் சமரினை யிழைப்ப விங்கோர்
காரண மில்லை மைந்தா வந்ததென் கழறு கென்ருன்.

இ—ள்: நாரணன் தனக்கும்—திருமாலுக்கும், மற்றை நான்முகன் தனக்கும்—மற்றொருமூர்த்தியாகிய பிரமதேவருக்கும், வெள்ளை வாரணன் தனக்கும் அல்லால்—ஐராவதயானையை ஊர்தியாகவுடைய இந்திரனுக்குமேயன்றி, மதி முடி அமலனுக்கும் தாரணிதனில் எமக்கும் சமரினை இழைப்ப இங்கு ஓர் காரணம் இல்லை—சந்திரனையணிந்தசடைமுடியையுடைய சிவபிரானுக்கும் நிலவுலகத்திலுள்ள எங்களுக்கும் போர்செய்தற்கு இங்கேஒருகாரணமுமில்லை, மைந்தா—பாலகனே!, வந்தது என்—நீ வந்தகாரணமென்னை?, கழறுக என்ருன்—சொல்லுதியென்று கூறினுன் எ—று.

பிரமவிஷ்ணுக்களையும் இந்திரனையும் முன்வென்றேமாதலால், அவர் எம்மேற்போர்செய்ய வருதற்குக்காரணமுண்டு; சிவபிரான் எம்மை எதிர்த்துப்போர்செய்ய உன்னையேவுதற்குக்காரணமில்லையே என்றுகூறினனென்க. 'மைந்தா' என்றதனுல் தன்னுடன் எதிர்க்கத்தக்கானல்லனென்று தருக்கியது தோன்றிற்று. கழறுக என்னும்வியங்கோளீறுதொக்கது. (கஉகூ)

அறவினை புரிந்தே யார்க்கு மருளொடு தண்டஞ் செய்யு
மிறையவ னுகு மீச னிமையவர் தம்மை நீங்கள்
சிறையிடை வைத்த தன்மை திருவுளங் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த விடுத்தன னெம்மை யென்ருன்.

இ—ள்: அறவினை புரிந்து யார்க்கும் அருளொடு தண்டம் செய்யும் இறையவன் ஆகும் ஈசன்—தருமநீதிகளை வகுத்து எல்லாப்பிராணிகளுக்கும் அநுக்கிரகத்தையும் நிக்கிரகத்தையுஞ்செய்கின்ற தலைவராகிய சிவபிரான், நீங்கள் இமையவர்தம்மை சிறையிடை வைத்த தன்மை திருவுளம் கொண்டு— நீவிர் தேவர்களைச் சிறையில்வைத்த தன்மையைச் சிந்தித்து, நும் தம் விறலொடு வன்மை சிந்த— உங்கள் வீரத்தையும் வலிமையையும் அழிக்கும்படி, எம்மை விடுத்தனன் என்ருன்—எம்மை அனுப்பினுரென்று (முருகக்கடவுள் தாரகாசுரனை நோக்கிக்) கூறியருளினுர் எ—று.

நீங்கள்- நீர்கள் என்பதன் விகாரம். தாம் வகுத்த தருமவழியிலொழுகினுர்க்கு அருளையும் அங்ஙனமொழுகாதார்க்குத் தண்டத்தையுஞ்செய்பவரென்பார் 'அறவினைபுரிந்தேயார்க்குமருளொடுதண்டஞ்செய்யுமிறையவனுகுமீசன்' என்ருர். இதனுல், நீவிர் தேவரைச்சிறையிட்டது தருமநெறிக்குவிரோதமென்பதும், அதுபற்றியே நும்மையழிக்குமாறு நம்மையேவினர் நும்மேற்பகைமையுண்டன்று என்பதும், சுப்பிரமணியக்கடவுளாற் ருரகனுக்குணர்த்தப்பட்டமைபோதரும். அறவி

னைபுரிந்து என்பதற்குப் பிறவாறும் பொருள்கூறுவர். அவை முதனூற்கிணங் காவென்க. (௧௫௦)

வேறு.

கூரிய வேற்படைக் குமர நாயகன்
பேரரு ணிலைமையா லினைய பேசலும்
போரினை யிழைத்திடும் பூட்கை மாமுகத்
தாரக னென்பவன் சாற்றன் மேயினான்.

இ—ள்: கூரிய வேற்படை குமர நாயகன்— கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள், பேர் அருள் நிலைமையால் இனைய பேசலும்—மிக்க கருணைத்திறத்தினால் இவ்வாசகங்களைக்கூறுதலும், போரினை இழைத்திடு மா பூட்கைமுக தாரகன் என்பவன்—போர்செய்யும்விருப்புடைய யானைமுகத்தினனாகிய தாரகனென்னும் அசுரன், சாற்றல் மேயினான்—இவ்வாறு சொல்லத்தொடங்கினான் எ—று.

பூட்கைமா-உட்டுளைபொருந்திய துதிக்கையையுடையயானை. தேவர்சிறையை நீக்கியவழிப் போரைச்செய்யாதுநிறுத்துங்கருத்தமையக் கூறினராதலின் 'பேரருணிலைமையாலினையபேசலும்' எனவும், தாரகன் அதனைக்கேட்டும் அங்ஙனஞ்செய்யாது போர் செய்தலையே துணிந்தனனாதலின் 'போரினையிழைத்திடும்-தாரகன்' எனவும், அங்ஙனந் துணிந்தது இழிதகவாமென்பதுதோன்ற அவன் விலங்குமுகமுடைமையைவிளக்கி 'பூட்கைமாமுகத்தாரகன்' எனவும் கூறினார். (௧௫௧)

செந்திருத் திகழுமார் புடைய செங்கணான்
சுந்தரக் கலுழன்மேற் றோன்றிப் போர்செய்தே
யந்தரக் கதிர்புரை யாழி யுய்த்ததென்
கந்தரத் தணிந்தது காண்கி லாய்கொலோ.

இ—ள்: செம் திரு திகழும் மார்பு உடைய செம் கணான்-சிவந்தநிறத்தையுடைய இலக்குமி (வீற்றிருந்து)விளங்கப்பெற்ற நெஞ்சினையுடைய திருமால், சுந்தர கலுழன் மேல் தோன்றி போர் செய்து—அழகிய கருடவாகனத்திலேறி(என்னுடன்)போரைச்செய்து, உய்த்தது-செலுத்தியதாகிய, அந்தர கதிர் புரை ஆழி—ஆகாயத்தில்விளங்குகின்ற சூரியனைப்போன்ற சக்கராயுதத்தை, என் கந்தரத்து அணிந்தது காண்கிலாய் கொல்—எனதுகழுத்தில் ஆபரணமாக (யான்) தரித்திருத்தலைப் பார்த்திலாய்போலும் எ—று.

பார்த்திருந்தால் என்னுடன் போர்புரியத்துணியமாட்டாயென்பது உட்கோள். செங்கணான்-செந்தாமரைக்கண்ணையுடையவன். கலுழன்-கருடன் என்னும்வடசொல்லின்விகாரம். கந்தரம்-தலையைத்தரித்திருப்பது. கம்-தலை. தரம்-தரித்திருப்பது. ()

இன்றுகா றெம்முட னிகலிப் போர்செயச்
சென்றுளார் யாவருஞ் சிறிது போழ்தினுட்
பொன்றுவா ரிரிந்தனர் போவ ரல்லது
வென்றுளா ரிலையது வினவ லாய்கொலோ.

இ—ள்: இன்றுகாறு எம்முடன் இகலி போர் செய சென்றுளார் யாவரும்—இற்றைத்தினம்வரையும் எங்களுடன்பகைத்துப் போர்செய்யவந்தவர்களெல்லோரும், சிறிது போழ்தினுள் பொன்றுவார்—சிறிதுநேரத்தில் இறப்பார்கள், இரிந்தனர் போவர்—(அல்லது) அஞ்சியோடுவார்கள், அல்லது— இவ்விரண்டுதன்மையுமெய்தினேரேயன்றி, வென்றுளார் இலை—வெற்றிகொண்டவர்களில்லை, அது வினவலாய் கொல்—அத்தன்மையை நீ கேள்விப்பட்டிலாய்போலும் எ—று.

கேள்விப்பட்டாயேல் இங்ஙனந்துணிந்தவராயென்பது உட்கோள். பொன்று வார் போவர் என்பவற்றில் வகரவிடைநிலை தன்மையையுணர்த்திற்று. (௧௩௩)

முட்டிவெஞ் சமரினை முயல முன்னநீ
விட்டிடு தலைவரை வென்று வெற்பினிற்
பட்டிட வியற்றினன் பலக ணங்களை
யட்டன னவற்றினை யறிந்தி லாய்கொலோ.

இ—ள்: முட்டி வெம் சமரினை முயல முன்னம் நீ விட்டிடு தலைவரை— எதிர்த்துக் கொடியபோரைச்செய்யுமாறு முன்னே நீ ஏவிய படைத்தலைவர்களை, வென்று— வெற்றிகொண்டு, வெற்பினில் பட்டிட இயற்றினன்—கிரவுஞ்சமலையில் மயக்கிக்கிடக்கும்படி(யான்)செய்தேன், பல கணங்களை அட்டனன்—அநேகபூதங்களைக்கொன்றேன், அவற்றினை அறிந்திலாய் கொல்—அந்தநிகழ்ச்சிகளை நீ அறிந்திலாய்போலும் எ—று.

அறிந்தாயேல் இங்ஙனம் எதிர்க்கமாட்டாயென்பது உட்கோள். (௧௩௪)

ஆகையா லெம்முட னமரி யற்றியே
சோகம தடையலை சூல பாணிபா
லேகுதி பாலநீ யென்று கூறலும்
வாகையங் குமரவேண் மரபிற் கூறுவான்.

இ—ள்: ஆகையால்—ஆதலினால், எம்முடன் அமர் இயற்றி சோகமது அடையலை-எம்மோடுபோரைச்செய்து துன்பமடையாதே, பால நீ-குழந்தையே! நீ, சூலபாணி பால் ஏகுதி என்று கூறலும்—(உனதுதந்தையாகிய) சிவபிரானிடத்துச்செல்லுதி என்று சொல்லுதலும், வாகையம் குமரவேள்—வெற்றியினையுடைய முருகக்கடவுள், மரபில் கூறுவான்—முறைப்படி பிரதிவசனங்கூறுவார் எ—று.

சூலபாணி-சூலத்தையேந்திய கையையுடையவன். வடமொழியன்மொழித்தொகை. தாரகனதுவீரவாதம் அழிதற்கேற்றவாறென்பார் 'மரபில்' என்றார். (௧௩௫)

தாரணி மறையவன் றதீசி தன்மிசை
நாரணன் விடுத்ததோர் நலங்கொ ளாழிதன்
கூரினை யிழந்துபோய்க் குலாலன் சக்கர
நீர்மைய தானது வினவ லாய்கொனீ.

இ—ள்: நாரணன்—திருமால், தாரணி மறையவன் ததீசி தன் மிசை விடுத்தது ஓர் நலம் கொள் ஆழி—பூவுலகத்திலுள்ள அந்தணனாகிய ததீசியென்பான்மேற்செலுத்திய ஒப்பற்ற சிறப்பினையுடைய சக்கரம், போய்- சென்று, தன் கூரினை இழந்து—தனது கூர்மையையிழந்து, குலாலன் சக்கர நீர்மையது ஆனது—குயவனது (மட்கலம்வனைதற்குக்கருவியாயுள்ள) சக்கரத்தின்றன்மையையடைந்ததை, நீ வினவிலாய் கொல்—நீ கேட்டிலாயா? எ—று.

கேட்டிருப்பாயேல் பூவுலகத்துமானுடனாகிய முனிவனுக்குந்தோற்ற சக்கரம் உன்னைக்கொல்லாமையைப் பெரும்புகழாகமதியாயென்பதாம். கொல்லுதற்காயினும் ஊறுசெய்தற்காயினுங் கருவியாகாமைபற்றிக்குலாலன்சக்கரத்தையுவமைகூறினார். (௧௩௬)

சூற்புயன் மேனியான் றுங்கச் செங்கையின்
பாற்படு திகிரிபோற் பழியிற் றஞ்சுமோ
வேற்புறு படைக்கெலா மிறைவ னருநம்
வேற்படை நின்னுயிர் விரைவி னுண்ணுமால்.

இ—ள்: ஏற்பு உறு படைக்கு எலாம் இறைவன் ஆகும் நம் வேற்படை—சிறந்த படைக்கலங்களுக்கெல்லாம் நாயகமாயிருக்கின்ற நமதுவேலாயுதம், சூல் புயல் மேனியான் துங்க செம் கையின் பால் படு திகிரிபோல் பழியில் துஞ்சுமோ—கருக்கொண்டமேகம் போன்ற கரியவடிவத்தையுடைய திருமாலினது சிறந்த சிவந்தகையிற்பொருந்திய சக்கரம்போலப்பழிபெற்று (உன்கழுத்தில்) தங்கிக்கிடக்குமா? கிடவாது, நின் உயிர் விரைவின் உண்ணும்—உனது உயிரை விரைவிற்கவரும் எ—று.

பழியிற்றுஞ்சுதல்-நிந்தனையிலழுந்துதல் எனினுமாம். வேற்படையை இறைவன் என்று உயர்திணையாற்கூறியது உயர்வுபற்றிவந்ததிணைவழுவமைதி. 'யானையுளரசன்' என்றாற்போல. (௬௭)

உங்கள்பே ராற்றலிவ் வுலகை வென்றன
விங்குநாம் வருதலு மிமைப்பின் மாய்ந்தன
வங்கண்மா ஞாலமுண் டமரு மாரிருள்
பொங்குபே ரொளிவர விளிந்து போனபோல்.

இ—ள்: அம் கண் மா ஞாலம் உண்டு அமரும் ஆர் இருள்—அழகிய இடமகன்ற பெரியபூவுலகத்தைமூடியிருக்கின்ற நிறைந்த இருள், பொங்கு பேர் ஒளி வர விளிந்து போனபோல்—மிகுந்த பெரியசூரியப்பிரகாசம் உண்டாக அழிந்ததன்மையைப்போல, இ உலகை வென்றன உங்கள் பேர் ஆற்றல்—இவ்வுலகமுழுதையும் வெற்றிகொண்டனவாகிய உங்கள் பெரியவல்லமையெல்லாம், நாம் இங்கு வருதலும் இமைப்பில் மாய்ந்தன—நாம் இவ்விடத்தில்வர ஒருமாத்திரைப்பொழுதினுள் அழிந்தன எ—று.

இமைப்பில்மாய்ந்தன என்றது முன்னிகழ்ந்தபோரிற்பற்பலசேனைகளையும் தலைவர்களையும் இழந்து ஆற்றல்குன்றிநிற்றலை; விரைவுந்தெளிவும்பற்றி எதிர்காலத்துக்கு இறந்தகாலம்வந்தவழுவமைதியாகவுங் கொள்ளலாம். உண்ணுதல்-இலக்கணை. (௬௮)

ஈட்டிய மாயைக ளெவையுந் தன்வழிக்
காட்டிய கிரியையுங் கள்வ நின்னையுந்
தீட்டிய வேல்கொடு செற்றுச் சேனையை
மீட்டிடு கின்றனன் விரைவி னென்றான்.

இ—ள்: கள்வ—வஞ்சகனே!, ஈட்டிய மாயைகள் எவையும் தன் வழி காட்டிய கிரியையும்—தொகுக்கப்பட்ட மாயங்களெல்லாவற்றையுந் தன்னிடத்தேகாண்பித்த கிரவுஞ்சமலையையும், நின்னையும்—உன்னையும், தீட்டிய வேல் கொடு செற்று—கூரியவேலாயுதத்தாலழித்து, விரைவினால் சேனையை மீட்டிடுகின்றனன் என்றான்—சீக்கிரத்திற்சேனைகளை மீட்கின்றேனென்று கூறியருளினார் எ—று.

மீட்டிடுகின்றனன்- விரைவுந்தெளிவும்பற்றி எதிர்காலத்துக்கு நிகழ்காலம்வந்தவழுவமைதி. விரைவினால்-உருபுமயக்கம். (௬௯)

என்றலுஞ் சீறியே யிகலித் தாரகன்
குன்றுறழ் தன்சிலை குனியக் கோட்டியே
மின்றிகழ் நாணொலி யெடுப்ப விண்மிசைச்
சென்றிடு மமருந் தியக்க மெய்தினார்.

இ—ள்: என்றலும்—என்று முருகக்கடவுள்கூறியவுடன், தாரகன்—தாரகாசுரன், சீறி இகலி—கோபித்து மாறுகொண்டு, குன்று உறழ் தன் சிலை குனிய கோட்டி—மலையையொத்த தனதுவில்லை வளையும்படிவளைத்து, மின் திகழ் நாண் ஒலி எடுப்ப-மின்னல்போலவிளங்குகின்ற நாணோசையைச்செய்ய, விண் மிசை சென்றிடும் அமரரும் தியக்கம் எய்தினார்—ஆகாயத்திற்செல்லுகின்ற தேவர்களுந் திகைப்படைந்தார்கள் எ—று.

மிசை-எழனுருபு. உம்மை-உயர்வுசிறப்பு. பருமையினலும் வலியினலும் வில்லிற்கு மலே உவமையாயிற்று. அமரர்விண்மிசைச்செல்லுதல் போர்நிகழ்ச்சியைப் பார்த்தற்கெனினுமாம். (௧௬0)

எய்திய காலேயி லெந்தை கந்தவேள்
கைதனி லிருந்ததோர் கார்மு கந்தனே
மொய்தனில் வாங்கிநாண் முழக்கங் கோடலு
மைதென வுலகெலா மழுங்கிற் றென்பவே.

இ—ள்: எய்திய காலேயில்—அங்ஙனந்திகைப்படைந்தபொழுது, எந்தை கந்தவேள்—எம்பரமபிதாவாகிய சுப்பிரமணியக்கடவுள், கை தனில் இருந்தது ஓர் கார்முகந்தனே மொய்தனில் வாங்கி—தன்கையிலிருந்த ஒருவில்லே வலிமையோடும்வளேத்து, நாண் முழக்கம் கோடலும்—நாணெலிசெய்ய, உலகு எலாம் ஐது என அழுங்கிற்று— உலகங்களிலுள்ள உயிர்களெல்லாம் விரைவில் வருந்தின எ—று.

ஐது-விரைவுக்குறிப்பு. உலகு-ஆகுபெயர். இவ்வோசையுண்டாயதற்குக்காரணம்யாதென்றுய்த்துணராது கேட்டவுடன் வருந்தினவாதலின் 'ஐதென-அழுங்கிற்று' என்றுர். உலகெலாமழுங்கிற்று-பன்மையிெனருமைமயங்கியவழுவமைதி. (௧௬௧)

நாரியின் பேரொலி நாதன் கோடலு
மாரணன் முதலினேர் தாமு மஞ்சினர்
பேருல கெங்கணும் பேதுற் றேங்கின
தாரக முதல்வனுந் தலேது ளக்கினன்.

இ—ள்: நாதன்—முருகக்கடவுள், நாரியின் பேர் ஒலி கோடலும்—வில்நாணினது பெரிய ஓசையையுண்டாக்குதலும், ஆரணன் முதலினேர் தாமும் அஞ்சினர்—பிரமாமுதலியதேவர்களும் பயந்தார்கள், பேர் உலகு எங்கணும் பேதுற்று ஏங்கின-பெரிய உலகத்தின் எல்லாஇடங்களினுமுள்ள பிராணிகளெல்லாம் மதிமயங்கி ஏங்கின, தாரக முதல்வனும் தலே துளக்கினன்-தாரகாசுரனுகிய தலேவனும் தலேயசைத்தான் எ-று.

தலேயசைத்தது- தன்னுடன் எதிர்நின்று போர்செய்யவல்லானென்பதுகருதி; அஞ்சியென்பாருமுளர். (௧௬௨)

துளக்கிய தாரக சூரன் கைத்தலங்
கொளற்குரி வில்லுமிழ் கொள்கைத் தாலென
வளக்கதிர் நுனேகெழு வயிர வான்கணே
யளக்கரு மெண்ணில வார்த்துத் தூண்டினன்.

இ—ள்: துளக்கிய தாரக சூரன்—அங்ஙனந்தலேயசைத்த தாரகாசுரனுகிய வீரன், கை தலம் கொளற்கு உரி வில் உமிழ் கொள்கைத்து என— கையிலேந்துதற்கேற்ற வில்லானது (கைம்முயற்சியின்றித்தானே அம்புகளேச்) சொரியுமியல்பினதென்று (கண்டோர்)சொல்லுமாறு வள கதிர் நுனே கெழு வயிர வான் கணே— மிக்க ஒளிபொருந்திய முனேயினேயுடைய வைரித்த பெரியஅம்புகளே, அளக்க அரும் எண்ணில—அளவிடுதற்கரிய பலதொகையாக, ஆர்த்து தூண்டினன்—ஆரவாரித்துச் செலுத்தினன் எ—று.

அம்புகளேத் தூணியினின்றும் கையில் எடுத்தலும் வில்லிற்றொடுத்தலும் நாணே இழுத்துவிடுத்தலும்தோன்றுது வில்லினின்றும் அம்புகள்வெளிப்படுதல்மாத்திரமேதோன்றுமாறு மிகவிரைவிற்செலுத்தினனென்பார் 'கைத்தலங்கொளற்குரிவில்லுமிழ்கொள்கைத்தாலென-தூண்டினன்' என்றுர். எண்ணில-அளவில்லாதன; ஈண்டுப் பலவென்னும்பொருளேமாத்திரந்தருகின்றது. கணேயளக்கர் எனச்சேர்த்து, அம்புவெள்ளம் எனப்பொருள்கூறுவாருமுளர். (௧௬௩)

ஆயதோர் காலையி லாறு மாமுகன்
மீயுயர் சிலைதனின் விரைவி லாயிரஞ்
சாயகந் தூண்டியே தார காசுர
னேயின பகழிக ளியாவுஞ் சிந்தினன்.

இ—ள்: ஆயது ஓர் காலையில்-அச்சமையத்தில், ஆறு மா முகன்—சிறந்த ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுள், மீ உயர் சிலைதனின்—மிகஉயர்ந்த (தமது) வில் லினின்றும், விரைவில்—சீக்கிரத்தில், ஆயிரம் சாயகம் தூண்டி—ஆயிரம் பாணங்களைச் செலுத்தி, தாரகாசுரன் ஏயின பகழிகள் யாவும் சிந்தினன்— தாரகாசுரன்தன்மேற்பிர யோகித்த அம்புகளையெல்லாம் அழித்தார் எ—று.

மிகநீண்ட வில்லென்பார் 'மீயுயர்சிலை' என்றார். (கசச)

சிந்திய காலையிற் செயிர்த்துத் தாரக
னுந்தினன் பின்னரு மொராயி ரங்கணை
கந்தனு மனையது கண்டு வல்லையி
னைந்திரு பகழிதொட் டவற்றை நீக்கினன்.

இ—ள்: சிந்திய காலையில்—அழித்தபொழுது, தாரகன் செயிர்த்து—தாரகாசுரன் கோபித்து, பின்னரும் ஓராயிரம் கணை உந்தினன்—பின்பும் ஆயிரம் அம்புகளைச்செலுத்தினன், கந்தனும் அனையது கண்டு— முருகக்கடவுளும் அத்தன்மையைப்பார்த்து, வல்லையின் ஐந்து இரு பகழி தொட்டு—விரைவிற் பத்தம்புகளைச்செலுத்தி, அவற்றை நீக்கினன்—அவனேவியஅம்புகளை விலக்கினார் எ—று.

ஐந்திருபகழி-பண்புத்தொகைப்பன்மொழித்தொடர். பின்னையஉம்மை எச்சம்.

மீட்டுமத் தாரகன் விசிகம் வெஞ்சிலை
பூட்டிய வாங்கலும் புராரி காதல
னீட்டமொ டொருகணை யேவி யாங்கவன்
றோட்டுணை வில்லினைத் துண்ட மாக்கினன்.

இ—ள்: அ தாரகன்—அந்தத்தாரகாசுரன், மீட்டும்—பின்பும், வெம் சிலை பூட்டிய விசிகம் வாங்கலும்—கொடிய வில்லிற்றொடுத்தற்பொருட்டு அம்பை எடுத்தலும், புராரிகாதலன்—சிவகுமாரராகிய முருகக்கடவுள், ஈட்டமொடு ஒரு கணை ஏவி-வலிமையுடன் ஒரு அம்பைப்பிரயோகித்து, ஆங்கவன் தோள் துணை வில்லினை துண்டம் ஆக்கினன்—அத்தாரகனது தோளளவாயிருக்கின்ற வில்லைவெட்டினார் எ—று.

பூட்டிய-செய்யியவென்வாய்பாட்டுவினையெச்சம். புராரி-முப்புரங்களையும் அழித்தவன். புரம்-முப்புரங்கள். அரி-பகைவன். ஈடு என்னும்நெடிற்றொடர் தன்னொற்றிரட்டி அம் சாரியைபெற்று ஈட்டம் எனநின்றது; வேடு-வேட்டம் என்றாற்போல. விற்களைத்தோளளவாக வளைத்தலியல்பாதலின் 'தோட்டுணைவில்' என்றார். (கசகூ)

வேறு.

அங்கோர் சிலையைக் குனித்தானது காலை தன்னி
லெங்கோ முதல்வ னொருபாணியி னேந்து வில்லிற்
செங்கோல் வகையா யிரம்பூட்டினன் செல்ல வுய்த்தான்
வெங்கோ னடாத்தி வருதாரக வெய்யன் மீதில்.

இ—ள்: அங்கு—அப்பொழுது, ஓர் சிலையை குனித்தான்—(தாரகாசுரன்) ஒரு வில்லையெடுத்துவளைத்தான், அதுகாலை தன்னில்-அச்சமையத்தில், எம் கோ முதல்வ

ன்—எமது சிறந்ததலைவராகிய முருகக்கடவுள், ஒரு பாணியின் ஏந்து வில்லில்- ஒருதிருக்கரத்திற்பிடித்துள்ள வில்லிலே, செம் கோல் வகை ஆயிரம் பூட்டினன்— செம்மையாகிய ஆயிரம் அம்புகளைத்தொடுத்து, வெம் கோல் நடாத்தி வரு தாரக வெய்யன் மீதில் செல்ல உய்த்தான்—கொடுங்கோலைநடாத்திவருகின்ற கொடியவனாகிய தாரகாசுரன் மேற்பாயும்படி செலுத்தினர் எ—று.

செங்கோல் வெங்கோல் என்பன சொல்லான்முரண்டொடை. (கசஎ)

சேரார் பரவுந் திறல்வேலவன் செய்கை நோக்கித்
தாரார் முடித்தா ரகவீரன் றனது வில்லி
லோரா யிரம்வா ளிகள்பூட்டின னொல்லை யுய்த்து
நேராய் விரவுங் கணையாவையு நீறு செய்தான்.

இ—ள்: சேரார் பரவும் திறல் வேலவன் செய்கை நோக்கி—பகைவர்களாலுந் துதிக்கப்படுகின்ற பெருவலியினையுடைய வேலாயுதத்தைத்தாங்கிய முருகக்கடவுளதுசெயலைப்பார்த்து, தார் ஆர் முடி தாரக வீரன்—மாலைபொருந்திய மயிர்முடியையுடைய தாரகாசுரனாகிய வீரன், தனது வில்லில் ஓராயிரம் வாளிகள் பூட்டினன்—தன்னுடையவில்லில் ஆயிரம் அம்புகளைத்தொடுத்து, ஒல்லை உய்த்து—விரைவிற்செலுத்தி, நேர் ஆய் விரவும் கணை யாவையும் நீறு செய்தான்—தனக்கெதிரேவந்த அம்புகளெல்லாவற்றையும் பொடிபடுத்தினன் எ—று.

முடி-கிரீடமுமாம். (கசஅ)

வெய்யா னனந்தங் கணைதூண்ட விமல னல்குந்
துய்யா னவைக ளறுத்துக்கணை கோடி தூண்டி
மையா ரவுணர் புகழ்தாரக மான வேழ
மெய்யாகும் வண்ணஞ் செறித்தானவன் யாக்கை யெங்கும்.

இ—ள்: வெய்யான் அனந்தம் கணை தூண்ட—கொடியவனாகிய தாரகாசுரன் (பின்னும்) அளவிறந்தபாணங்களைச்செலுத்த, விமலன் நல்கும் துய்யான்—சிவபிரானால் தோற்றுவிக்கப்பட்ட பரிசுத்தராகிய குமாரக்கடவுள், அவைகள் அறுத்து— (தானெய்த பாணங்களால்) அவற்றைத்துணித்து, கோடி கணை தூண்டி—(பின்னும்)கோடிபாணங்களைச்செலுத்தி, மை ஆர் அவுணர் புகழ் தாரக மான வேழம் எய் ஆகும் வண்ணம்— குற்றம்நிறைந்த அசுரர்களால் துதிக்கப்படுகின்ற தாரகாசுரனாகிய மதிக்கத்தகுந்த யானையானது முட்பன்றிபோலாம்படி, அவன் யாக்கை எங்கும் செறித்தான்—அவனது சரீரமுழுவதினும் அழுத்தினர் எ—று.

முட்பன்றியின் சரீரமுழுவதினும் முட்கள்செறிந்திருத்தல்போலத் தாரகனதுயானைவடிவமுழுவதினுங்கூரியஅம்புகள்செறிந்திருக்கும்படிஅழுத்தினரென்பதாம். (கசகூ)

ஒருகோடி வாளி யுறலோடு முருத்து நீச
னிருகோடி வாளி விடவன்னதை யேவி னீக்கி
முருகோ டியதா ரசுரேசன் முகங்கொள் கையும்
பொருகோடும் வீழ விடுத்தானிரு புங்க வாளி.

இ—ள்: ஒருகோடி வாளி உறலோடும்— (குமாரக்கடவுள்செலுத்திய) ஒருகோடியம்புகளும் (தன்மேனியெங்கும்) பட்டவுடன், நீசன்—இழிஞனாகிய தாரகாசுரன், உருத்து—கோபித்து, இருகோடி வாளி விட— இரண்டுகோடியம்புகளைச்செலுத்த, அன்னதை ஏவில் நீக்கி—அவற்றைக் (குமாரக்கடவுள் எதிரம்பெய்து) விலக்கி, முருகு ஓடிய தார் அசுரேசன் முகம் கொள் கையும் பொரு கோடும் வீழ—வாசனைபொருந்திய மலர்

மாலையைத்தரித்த அசுரத்தலைவனாகிய தாரகனது துதிக்கையும் போர்செய்யவல்ல தந்தங்களும் (துணிபட்டுக்) கீழேவிழும்படி, இருபுங்க வாளி விடுத்தான்—உயர்ச்சிபொருந்திய இரண்டுபாணங்களைச் செலுத்தினர் எ—று.

புங்கம்-அம்பின் அடியுறுப்புமாம். அன்னது-சாதியொருமை. (௧௫௦)

வந்தங் கிரண்டு சரமும்பட மாயை மைந்தன்
றந்தங்கள் கையோ டிறலோடுந் தளர்ச்சி யெய்தி
முந்துங் கணையா யிரந்தன்னை முனிந்து தூண்டிக்
கந்தன் றடந்தேர்த் துவசந்துகள் கண்டு நின்றான்.

இ—ள்: அங்கு இரண்டு சரமும் வந்து பட—அப்பொழுது இரண்டுபாணங்களும்வந்துபட்டதனால், தந்தங்கள் கையோடு இறலோடும்—கோடுகளும் துதிக்கையும் வெட்டுப்படுதலும், மாயை மைந்தன்—மாயவளது புதல்வனாகிய தாரகாசுரன், தளர்ச்சி எய்தி—சோர்வடைந்து, முனிந்து—கோபித்து, முந்தும் கணை ஆயிரம் தன்னை தூண்டி—விரைந்துசெல்லுகின்ற ஆயிரமம்புகளைச்செலுத்தி, கந்தன் தடம் தேர் துவசம் துகள் கண்டு நின்றான்—முருகக்கடவுளது விசாலித்ததேரிற்கட்டப்பட்டகொடியைப்பொடியாக்கிநின்றான் எ—று.

அங்கு-என்பதற்கு (தந்தங்களுங்கையுமாகிய) அவ்விடங்களில் எனினுமாம். பட-என்னும்எச்சம் ஏதுப்பொருட்டு. முந்துங்கணை-சிறந்தபாணமெனினுமாம். (௧௫௧)

மல்லற் கொடியிற் றதுகண்டு மறங்கொள் வெய்யோன்
வில்லைக் கணைநான் கிரண்டானில மீது வீட்டித்
தொல்லைக் கனலின் கணையாயிரந் தூண்டி யன்னோன்
செல்லுற்ற திண்டேர் பரிபாகொடு சிந்தி நின்றான்.

இ—ள்: மல்லல் கொடி இற்றது கண்டு— வளப்பம்பொருந்திய தேர்த்துவசம் வெட்டுப்பட்டதை (முருகக்கடவுள்)பார்த்து, மறம் கொள் வெய்யோன் வில்லை கணை நான்கு இரண்டால் நிலமீது வீட்டி—அஞ்சாத்தன்மையுடைய கொடிய தாரகாசுரனது வில்லை எட்டுப்பாணங்களால் (வெட்டிப்) பூமியில்விழுத்தி, தொல்லை கனலின் கணை ஆயிரம் தூண்டி—பழைய ஆயிரஞ்சுடுசரங்களைச்செலுத்தி, அன்னோன் செல்லுற்ற திண் தேர் பரி பாகொடு சிந்தி நின்றான்— அவ்வசுரனேறிவந்த வலியதேரையும் (அதிற்பூட்டிய) குதிரைகளையும் சாரதியையும் அழித்துநின்றார் எ—று.

கணைநான்கிரண்டால்=நான்கிரண்டுகணையால். (௧௫௨)

வேறங் கொருதேர் மிசையேறியொர் வில்லை வாங்கி
நூறைந் திருநீ விசிகந்தனை நொய்தி னேவி
மாறின்றி வைகும் பரமன்வடி வான செவ்வே
ளேறுந் தடந்தேர் வலவன்புயத் தெய்த வுய்த்தான்.

இ—ள்: அங்கு—அப்பொழுது, வேறு ஒரு தேர்மிசை ஏறி—வேறொருதேரின் மேல்(தாரகாசுரன்)ஏறி, ஓர் வில்லை வாங்கி—ஒருவில்லைவளைத்து, நூறு ஐந்து இரு நீ விசிகம் தனை நொய்தின் ஏவி—கொடிய ஆயிரம்பாணங்களை விரைவிற்செலுத்தி, மாறு இன்றி வைகும் பரமன் வடிவு ஆன செவ்வேள் ஏறும் தடம் தேர் வலவன் புயத்து எய்த உய்த்தான்—ஒப்பின்றியிருக்கின்ற சிவபிரானது சொரூபமாகிய குமாரக்கடவுள் ஏறியுள்ள பெரியதேரின்சாரதியாகிய வாயுதேவனது தோள்களிலழுந்தும்படி செலுத்தினான் எ-று.

வலவன்-வல்லவன்; பாகனுக்குக் காரணவிடுகுறியாய்வழங்கிற்று. சிவபிரானுங் குமாரக்கடவுளும் வேறன்றென்பதுபற்றி 'பரமன்வடிவானசெவ்வேள்' என்றார். (௧௫௩)

வென்றோர் புகழுங் குமரன்வியன் றேர்க டாவிச்
சென்றோன் வருத்தந் தெரிந்தாயிரந் தீய வாளி
வன்றோன் முகத்தா ரகனெற்றியுண் மன்ன வுய்ப்பப்
பொன்றோய் தனது தடந்தேரிற் புலம்பி வீழ்ந்தான்.

இ—ள்: வென்றோர் புகழும் குமரன்—வீரர்களாற்றுதிக்கப்படுகின்ற முருகக்கடவுள், வியன் தேர் கடாவி சென்றோன் வருத்தம் தெரிந்து—பெரிய தேரைச்செலுத்திக்கொண்டுவந்த வாயுதேவன் (தாரகனேவிய அம்புகளாற்) படுந்துன்பத்தைப்பார்த்து, வன் தோல் முக தாரகன் நெற்றியுள் மன்ன—வலிய யானைமுகத்தையுடைய தாரகாசுரனது நெற்றியிலழுந்துமாறு, ஆயிரம் தீய வாளி உய்ப்ப—கொடிய ஆயிரம் அம்புகளைச்செலுத்த, புலம்பி—(தாரகன் அவைகளழுந்துதலாற்) புலம்பி, பொன் தோய் தனது தடம் தேரில் வீழ்ந்தான்—அழகுபொருந்திய பெரிய தனதுதேரில் விழுந்தான் எ—று.

வென்றோர்-ஐம்புலன்களைவென்ற தத்துவஞானிகளெனினுமாம். (௧௫௪)

வீழுற் றிடலும் விழுசெம்புனல் வெள்ள மிக்கே
தாழுற்ற பாரிற் புகுந்தேபுடை சார்த லுற்ற
பாழிக் கடலிற் பரிமாமுகம் பட்ட செந்தீச்
சூழிக் களிற்றின் வதனத்தினுந் தோன்று மென்ன.

இ—ள்: வீழுற்றிடலும்—(தாரகாசுரன்) விழுந்தபொழுது, பாழி கடலில் பரி மா முகம் பட்ட செம் தீ சூழி களிற்றின் வதனத்தினும் தோன்றும் என்ன—பெரியசமுத்திரத்திற் குதிரைமுகத்தினின்று (முன்) தோன்றிய வடவாமுகாக்கினி (இப்பொழுது) முகபடாத்தையுடைய யானையின்முகத்திலுந் தோற்றுகின்றதென்று கண்டோர்கருதும்படி, விழு செம் புனல் வெள்ளம் மிக்கு— இழிகின்ற இரத்தவெள்ளம்பெருகி, தாழ் உற்ற பாரில் புகுந்து—கீழுள்ள பூமியிற்பாய்ந்து, புடை சார்தல் உற்ற—பக்கங்களிற் பரவியது எ—று.

தாரகனது முகத்தினின்றுமிழிகின்ற இரத்தவெள்ளம் வடவாமுகாக்கினிபோற் செந்நிறமுடைத்தாய்ப்பரவிற்றென்பது தாற்பரியம். அதனை, குதிரைமுகத்துத்தீ யானைமுகத்திலும் தோன்றிற்றெனும்படியென்று வருணித்தது தற்குறிப்பேற்றம். உற்ற- உற்றது என்பதன்விகாரம், வெள்ளமென்னும் பால்பகாவஃறிணைப்பெயர், உற்ற என்னும் பலவின்பால்முற்றோடுமுடிந்ததாகக்கொள்ளினுமாம். (௧௫௫)

மன்னா கியதா ரகனங்கண் மயங்கி வீழ
வன்னான் றனது படைவீர ரதனை நோக்கிக்
கொன்னார் சினங்கொண் டடுபோரைக் குறித்து நம்பன்
றென்னா ளுதவுந் திறன்மைந்தனைச் சூழ்ந்து கொண்டார்.

இ—ள்: மன் ஆகிய தாரகன் அங்கண் மயங்கி வீழ—தலைவனாகிய தாரகாசுரன் அவ்விடத்தில் மூர்ச்சையாகிவிழ, அன்னான் தனது படைவீரர் அதனை நோக்கி—அவனது சேனைவீரர்கள் அத்தன்மையைப்பார்த்து, கொன் ஆர் சினம் கொண்டு-அச்சத்தைவிளைக்கின்ற கோபத்தைக்கொண்டு, அடு போரை குறித்து—கொலைத்தொழின்மிக்க போரைச்செய்யக்கருதி, நம்பன் தொல் நாள் உதவும் திறல் மைந்தனை சூழ்ந்து கொண்டார்-சிவபிரான் முற்காலத்திற் றந்தருளிய வலிய குமாரக்கடவுளை வளைந்துகொண்டார்கள் எ—று.

நமதுதலைவனை வருத்தினனாதலின் இவனை எவ்வாற்றானுந்தவறாது கொல்லவேண்டுமென்றெண்ணியென்பார் 'அடுபோரைக்குறித்து' என்றார். (௧௫௬)

சூலந் திகிரிப் படைதோமரந் துய்ய பிண்டி
பாலஞ் சுடர்வே லெழுநாஞ்சில் பகழி தண்ட
மாலங் கணையங் குலிசாயுத மாதி யாக
வேனும் படைகள் பொழிந்தார்த்தன ரெங்கு மீண்டி.

இ—ள்: சூலம்—சூலப்படையும், திகிரி படை-சக்கராயுதமும், தோமரம்-தோமராயுதமும், துய்ய பிண்டி பாலம்—சிறந்த பிண்டிபாலமும், சுடர் வேல்-ஒளியையுடைய வேற்படையும், எழு—எழுப்படையும், நாஞ்சில்—கலப்பைப்படையும், பகழி— அம்பும், தண்டம்—தண்டும், ஆலம்—மழுவும், கணையம்—வளைதடியும், குலிசாயுதம்—வச்சிராயுதமும், ஆதி ஆக—முதலாக, எனும் படைகள் பொழிந்து— பொருந்திய ஆயுதங்களைச் சொரிந்து, எங்கும் ஈண்டி ஆர்த்தனர்-எவ்விடங்களினும்நெருங்கி ஆரவாரித்தார்கள் எ-று.

பொழிதல்-மிகுதியாக எவுதல். (௧௫௭)

கறுத்தா னவர்தஞ் செயல்கண்டுதன் கார்மு கத்தை
நிறுத்தா வளையாக் கணைமாமழை நீட வுய்த்து
மறுத்தா னுடைய கொடுந்தானவர் வாகை சிந்தி
யறுத்தான் விடுதொல் படையாவையு மாடல் வேலோன்.

இ—ள்: ஆடல் வேலோன்—வெற்றியைத்தரும் வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள், அவர்தம் செயல் கண்டு கறுத்தான்—அவ்வசுரர்களது செய்கையைப்பார்த்துக் கோபமுற்று, தன் கார்முகத்தை நிறுத்தா வளையா— தனதுவில்லை நிறுத்திவளைத்து, கணை மா மழை நீட உய்த்து—பெரிய அம்புமழையை மிகுதியாகச்சொரிந்து, மறு தான் உடைய கொடும் தானவர் வாகை சிந்தி—குற்றத்தையேயுடைய கொடிய அசுரர்களதுவீரத்தைப்போக்கி, விடு தொல் படை யாவையும் அறுத்தான்-(அவர்கள் தன்மேற்)பிரயோகித்த பழைய ஆயுதங்களையெல்லாந்துணித்தார் எ—று.

கறுப்பு-கோபம்; "கறுப்புஞ்சிவப்பும்வெகுளிப்பொருள" என் னு ந் தொல்காப்பிய உரிச்சொல்லியற்சூத்திரத்தாலறிக. கறுத்தான்-முற்றெச்சம். தான் பிரிநிலைப் பொருடந்துநின்றது. (௧௫௮)

வெய்தா கியதீங் கணைமாரி விசாகன் மீட்டும்
பெய்தா னவுணர் முடிதன்னைப் பிறங்கு மார்பைத்
துய்தா னுறும்வா யினையங்கையைத் தோளைத் தாளைக்
கொய்தான் குருதிக் கடலெங்கணுங் கொண்ட தன்றே.

இ—ள்: விசாகன்—முருகக்கடவுள், மீட்டும்—பின்னரும், வெய்து ஆகிய தீம் கணை மாரி பெய்தான்—மிகக்கொடிதாகிய பாணமழையைச்சொரிந்து, அவுணர் முடிதன்னை-அசுரர்களது தலைகளையும், பிறங்கும் மார்பை—விளங்குகின்ற மார்புகளையும், துய் உறும் வாயினை—உணவையுண்ணுகின்ற வாய்களையும், அம் கையை—அகங்கைகளையும், தோளை—புயங்களையும், தாளை—கால்களையும், கொய்தான்—துணித்தார், குருதி கடல் எங்கணும் கொண்டது—(அதனால்) இரத்தவெள்ளம் எவ்விடத்தும்பரவிற்று எ—று.

தான்-அசை. துய்-செயப்படுபொருள் விகுதிபுணர்ந்துகெட்டபெயர். முதனிலைத்தொழிற்பெயரெனினுமாம். விசாகன் என்பது விசாகநாளிற்பிறந்தவனெனவும் மயிலாகிய பறவையினால் எங்குஞ்செல்பவனெனவும் பொருள்படும். (௧௫௯)

வில்லோர் பரவுந் திறல்வேலவன் வெய்ய கோலா
லல்லோ டியதீ மனத்தானவ ராயி னோரிற்

பல்லோ ரிறந்தார் குருதிக்கடல் பாய்ந்து நீந்திச்
சில்லோர்க டத்த முயிர்கொண்டு சிதைந்து போனார்.

இ—ள்: வில்லோர் பரவும் திறல் வேலவன் வெய்ய கோலால்—வில்வீரர்களாற் புகழப்படுகின்ற வலிமையினையுடைய முருகக்கடவுளேவிய கொடியபாணங்களால், அல் ஒடிய தீ மன தானவர் ஆயினோரில் பல்லோர் இறந்தார்-அஞ்ஞானவிருள்பரவிய கொடியமனத்தினையுடைய அசுரர்களுட்பலரிறந்தார்கள், சில்லோர்கள்-சில அசுரர்கள், குருதி கடல் பாய்ந்து நீந்தி—இரத்தவெள்ளத்திற்பாய்ந்துநீந்தி, த்த்தம் உயிர் கொண்டு சிதைந்து போனார்-தங்கள்தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொண்டு குலைந்துபோயினார்கள் எ-று.

வில்லோர்பரவுந்திறலை வேலுக்கடையாக்கினுமாம். தானவராயினோரில் என்பதில் ஆயினோர் பகுதிப்பொருள்விகுதி. சிலர் என்பதின் ஈற்றயலகரம் ஒகாரமாயிற்று. கள்-விகுதிமேல்விகுதி. (௧௬௰)

மைக்கார் சிவந்த தெனுந்தாரகன் மைய னீங்கி
யக்காலை தன்னி லெழுந்தேயயல் போற்றி நின்று
தொக்கார் தமையா ரையுங்காண்கிலன் றுன்ப மெய்தி
நக்கா னவர்தஞ் செயல்கண்டு நவிற லுற்றான்.

இ—ள்: அ காலை தன்னில்—அப்பொழுது, மை கார் சிவந்தது எனும் தாரகன்—கரியமேகம் செந்நிறமடைந்துவந்தாற்போலக்கிடந்த தாரகாசுரன், மையல் நீங்கி எழுந்து—மயக்கம்நீங்கி எழும்பி, அயல் போற்றி தொக்கு நின்றார் தமை யாரையும் காண்கிலன்—தன்பக்கத்திற் காவல்செய்து தொகுதியாகநின்றோரெவரையுங் காணப்பெறாதவனாய், துன்பம் எய்தி—துயரமுற்று, அவர்தம் செயல் கண்டு நக்கான்—அவர்களது செய்கையைப்பார்த்துச் சிரித்து, நவிறல் உற்றான்—சொல்லத்தொடங்கினான் எ—று.

கருநிறமான மேனிமுழுதும் இரத்தவெள்ளத்திற்றோய்ந்தமைபற்றி 'மைக்கார் சிவந்ததெனுந்தாரகன்' என்றார். நின்றுதொக்கார்=தொக்குநின்றார். அவர்தஞ்செயல் என்றது-முருகக்கடவுளோடு பொருதுமாண்டமையை. (௧௬௧)

வேறு.

செய்ய வார்சடை யீச னல்கிய சிறுவ னிங்கொரு வன்பொரக்
கையி ழந்து முகத்தி னூடு கவின்கொள் கோடு மிழந்தனன்
மைய லெய்தி விழுந்த னன்பொரும் வலிய தானையு மாண்டன
வைய வீங்கொரு தமிய னின்றன னழகி தாலென தாண்மையே.

இ—ள்: இங்கு—இவ்விடத்தில், செய்ய வார் சடை ஈசன் நல்கிய சிறுவன் ஒருவன் பொர—சிவந்த நீண்டசடைமுடியையுடைய சிவபிரான்பெற்ற ஒருபாலகன் (வந்து) போர்செய்ய, கை இழந்து-துதிக்கையையிழந்து, முகத்தின் ஊடு கவின் கொள் கோடும் இழந்தனன்—முகத்திலுள்ள அழகுபொருந்திய தந்தங்களையுமிழந்தேனாகி, மையல் எய்தி விழுந்தனன்—மயங்கிவிழுந்தேன், பொரும் வலிய தானையும் மாண்டன— போர் செய்கின்ற வலிய சேனைகளுமிறந்தன, ஐய—ஐயோ!, ஈங்கு ஒரு தமியன் நின்றனன்—இவ்விடத்து யானொருவனே தப்பிநின்றேன், எனது ஆண்மை அழகிது—என்னுடைய வீரம் நன்றாயிருக்கின்றது எ—று.

ஊடு-எழனுருபு. அழகிது குறிப்பால் அழகன்றென்பதைக்குறிக்கும். உம்மைகள் எச்சங்கள். (௧௬௨)

தாவில் வெஞ்சிலை வன்மை கொண்டு சரங்க ளெண்ணில தூண்டியே
மேவ லானிவ னுயிர்கு டிப்பதும் வெல்லு கின்றது மரியதாற்
றேவர் மாப்படை தொடுவ னிங்கினி யென்று சிந்தனை செய்துபி
னேவ ரும்புகழ் தார காசுர னினைய செய்கை யியற்றினன்.

இ—ள்: தா இல் வெம் சிலை வன்மை கொண்டு சரங்கள் எண் இல தூண்டி—குற்றமற்ற கொடிய விற்போர்ச்சாமர்த்தியத்தினால் அளவிறந்த பாணங்களைச்செலுத்தி, மேவலான் இவன் உயிர் குடிப்பதும் வெல்லுகின்றதும் அரியது—இந்தப்பகைவனது உயிரைக்கவர்வதும் வெல்வதும் அருமையாம் (ஆதலின்), இனி தேவர் மா படை தொடுவன் என்று சிந்தனை செய்து—இனிப்பெரியதேவப்படைக்கலங்களைச் செலுத்துவேனென்று நினைத்து, பின்—அதன்பின்பு, ஏவரும் புகழ் தாரகாசுரன்—யாவராலும் புகழப்பெற்ற தாரகாசுரன், இனைய செய்கை இயற்றினன்—இச்செயலைச்செய்தான் எ—று.

உயிர்குடிப்பதும் அரியது;வெல்லுகின்றதும் அரியது எனத்தனித்தனி கூட்டியுரைக்க. ஒருமைச்சொல்லை வாக்கியபேதமாக இங்ஙனங்கூட்டிமுடித்தலைப் பிரத்தியேகபந்தான்வயமென்பர் வடநூலார். "நத்தம்போற்கேடுமுளதாகுஞ்சாக்காடும்-வித்தகர்க்கல்லாலரிது" என்னுந்திருக்குறளினுமிங்ஙனம்வந்தமைகாண்க. (கசு௩)

**வேறு.**

அடலரி நான்முக னாதி வானவப்
படையினை யாவையும் பவஞ்செய் தாரகன்
விடவிட வந்தவை வெருவி மேலையோன்
புடைதனி லொடுங்கியே போற்றி நின்றவே.

இ—ள்: பவம் செய் தாரகன்—பாவத்தைச்செய்கின்ற தாரகாசுரன், அடல் அரி நான்முகன் ஆதி வானவ படையினை யாவையும் விடவிட—வலிய திருமாலும் பிரமதேவருமுதலாகிய தேவர்களது படைக்கலங்களெல்லாவற்றையுஞ்செலுத்தச்செலுத்த, அவை வந்து—அவைகளெல்லாம் அணுகி, வெருவி—அஞ்சி, மேலையோன் புடைதனில் ஒடுங்கி போற்றி நின்ற—(எவரினும்) மேலவராகிய முருகக்கடவுளது பக்கத்தில் அடங்கித்துதித்து நின்றன எ—று.

படையினையாவையும்=படையாவையினையும். விடவிட என்னும் அடுக்குப்பன்மைபற்றி வந்தது. (கசுச)

செங்கண்மா லயன்முதற் றேவர் மாப்படை
துங்கமொ டேகியே துளங்கி வேலுடைப்
புங்கவன் பாங்கரிற் போற்றி நிற்றலு
மங்கது கண்டன னவுணர் மன்னவன்.

இ—ள்: செம் கண் மால் அயன் முதல் தேவர் மா படை—சிவந்தகண்ணையுடைய திருமால்பிரமதேவர் முதலியதேவர்களது சிறந்த படைக்கலங்கள், துங்கமொடு ஏகி—மேன்மையோடு சென்று, துளங்கி—நடுங்கி, வேல் உடை புங்கவன் பாங்கரில் போற்றி நிற்றலும்—வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளின்பக்கத்திற் றுதித்துக்கொண்டு நிற்க, அவுணர் மன்னவன்—அசுரத்தலைவனாகிய தாரகாசுரன், அங்கது கண்டனன்—அத்தன்மையைப்பார்த்தான் எ—று.

செங்கண்-தாமரைக்கண். எவ்வும்பொழுது பகையைவெல்லுதற்கேற்ற உக்கிரத்துடன்போய் முருகக்கடவுளையணுகும்பொழுது அஞ்சிநடுங்கினவாதலின் 'துங்கமொடேகியேதுளங்கி' என்றார். (கசுரு)

ஒருவின னகந்தையை யுள்ள மோரிறை
வெருவினன் விம்மித மிகவு மெய்தின
னெரிகலுழ் விழியின னிவனை வென்றிட
லரியது போலுமென் றகத்தி லுன்னினான்.

இ—ள்: அகந்தையை ஒருவினன்—செருக்கைநீங்கி, உள்ளம் ஓர் இறை வெருவினன்— மனம் ஒருசிறிது அஞ்சி, மிகவும் விம்மிதம் எய்தினன்—மிகவும் ஆச்சரியமுற்று, எரி கலுழ் விழியினன்— அக்கினியைச்சொரியுங்கண்களையுடையனாய், இவனை வெல்லுதல் அரியது போலும் என்று அகத்தில் உன்னினான்—இவனை வெற்றிகொள்வது அரிதுபோலுமென்று தன்மனத்தில் நினைத்தான் எ—று.

இப்பாலகனுடையவீரத்திற்குநமதுவீரந்தாழ்ந்ததேயென்றெண்ணுதலால் அகந்தையையொருவினன், இவன் நம்முயிரைச் சிதைக்கவல்லவனென்றெண்ணுதலால் வெருவினன், இளங்குழவியாகிய இவன்மாட்டு இத்துணைப்பேராற்ற லிருந்தவாறென்னையென்றெண்ணுதலால் விம்மிதமெய்தினன், இந்நாள்காறும் எவர்க்குந்தோலாதயான் இன்று இப்பாலகனுக்குத்தோற்பதா என்று அபிமானந்தோன்றுதலால் எரிகலுழ்விழியினனாயினன், தேவப்படைகளும் ஊறுசெய்திலவாதலின் இவனை வெல்லுதலரியதென்றுன்னினன் என்க. அருமை-இயலாமை. போலும்-ஒப்பில்போலி. (கசுசு)

பாங்கரின் மாதுடைப் பரமன் றொல்படை
யீங்கினி விடுதுமென் றெண்ணி யப்படை
வாங்கின னருச்சனை மனத்தி னாற்றின
னோங்கிருஞ் சினமுட னொல்லை யேவினான்.

இ—ள்: பாங்கரில் மாது உடை. பரமன் தொல் படை இனி விடுதும் என்று எண்ணி—வாமபாகத்தில் உமாதேவியாரையுடைய சிவபிரானது பழையபடைக்கலத்தை இனிமேற் செலுத்துவோமென்றுநினைத்து, அ படை வாங்கினன்— அந்தப்படைக்கலத்தையெடுத்து, மனத்தின் அருச்சனை ஆற்றினன்—மனத்தாற்பூசைசெய்து, ஓங்கு இரும் சினமுடன் ஒல்லை ஏவினான்—மிக்க பெருங்கோபத்துடன் விரைவிற்செலுத்தினான் எ—று.

மனத்தின் அருச்சனையாற்றுதல்-மானதபூசைசெய்தல். (கசுஎ)

சங்கரன் றொல்படை தறுக ணாலமும்
புங்கவர் படைகளும் பூத ராசியு
மங்கத நிரைகளு மளப்பில் சூலமும்
வெங்கன லீட்டமும் விரித்துச் சென்றதே.

இ—ள்: சங்கரன் தொல் படை—பழைய (அந்தச்) சிவப்படைக்கலம், தறுகண் ஆலமும்—கொடியநஞ்சையும், புங்கவர் படைகளும்—தேவப்படைக்கலங்களையும், பூத ராசியும்—பூதகணங்களையும், அங்கத நிரைகளும்—சர்ப்பக்கூட்டங்களையும், அளப்பு இல் சூலமும்—அளவிறந்த சூலப்படைகளையும், வெம் கனல் ஈட்டமும்—கொடிய அக்கினிக்கூட்டங்களையும், விரித்து—பரப்பிக்கொண்டு, சென்றது—போனது எ—று. (கசுஅ)

கலைகுலாம் பிறைமுடிக் கடவுண் மாப்படை
யலகிலா வுயிர்களு மண்டம் யாவையு
முலைகுறு தலமர வுருத்துச் சேறலு
மிலைகுலா மயிலுடை யெந்தை நோக்கினான்.

இ—ள்: கலை குலாம் பிறை முடி கடவுள் மா படை—கலைபொருந்திய இளஞ்சந்திரனையணிந்த சடைமுடியினையுடைய சிவபிரானது சிறந்தபடைக்கலம், அலகு இலா உயிர்களும் அண்டம் யாவையும் உலைகுறுது அலமர உருத்து சேறலும்— அளவிறந்த ஆன்மாக்களும் எல்லாவண்டங்களும் அழிவடையாது வருந்தும்படி உக்கிரங்கொண்டுவருதலும், இலை குலாம் அயில் உடை எந்தை நோக்கினான்— இலைவடிவமைந்த வேலாயுதத்தைத்தரித்த எங்கள்பரமபிதாவாகிய முருகக்கடவுள் அதனைக்கண்டார் எ—று.

கலை-சந்திரபிம்பத்தின் பதினாறிலொருபாகம். உலைகுறுது என்பதில் கு-சாரியை. இணைப்படையுடையரென்பதுபோதர 'இலைகுலாமயிலுடையெந்தை' என்றார். (௧௬௯)

கந்தவே ளனையது கண்டு தந்தையைச்
சிந்தையி லுன்னியோர் செங்கை நீட்டியே
யந்தவெம் படையினை யருளிற் பற்றினான்
றந்தவன் வாங்கிய தன்மை யென்னவே.

இ—ள்: கந்தவேள் அனையது கண்டு—முருகக்கடவுள் அத்தன்மையைப்பார்த்து, தந்தையை சிந்தையில் உன்னி— தமது பிதாவாகிய சிவபிரானை மனத்திற்றியானித்து, ஓர் செம் கை நீட்டி— சிவந்த ஒருதிருக்கரத்தைநீட்டி, தந்தவன் வாங்கிய தன்மை என்ன—கொடுத்தவரே மீண்டும் ஏற்றதன்மையைப்போல, அந்த வெம் படையினை அருளின் பற்றினான்—அந்தக் கொடியபடைக்கலத்தைக் கருணையுடன் பிடித்தார் எ—று.

யாதேனுமொருபொருளைக் கொடுத்தவன் ஏற்றுக்கொள்ளுங்கால் தன்பொருளேயென்றுகருதி வாங்குதல்போல, மாற்றானேவியபடையென்றஞ்சாது தந்தைபடையேயென்றெண்ணி இன்முகத்தோடேற்றனராதலின் 'தந்தவன்வாங்கியதன்மையென்ன-அருளிற்பற்றினான்' என்றார். சிவபிரானுக்கும் முருகக்கடவுளுக்கும் பேதமின்மை இதனானும்போதரும். (௧௭௦)

நெற்றியில் விழியுடை நிமலன் காதலன்
பற்றிய படையினைப் பாணி சேர்த்தினான்
மற்றது தாரக வலியன் கண்ணுறீஇ
யிற்றது நந்திரு வினியென் றேங்கினான்.

இ—ள்: நெற்றியில் விழி உடை நிமலன் காதலன்—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது குமாரராகிய முருகக்கடவுள், பற்றிய படையினை பாணி சேர்த்தினான்—பிடித்த படைக்கலத்தைக் கையில்வைத்துக்கொண்டார், தாரக வலியன் அது கண்ணுறீஇ-வலியவனாகிய தாரகாசுரன் அதனைப்பார்த்து, இனி நம் திரு இற்றது என்று ஏங்கினான்-இனி நமதுசெல்வம் அழிந்ததென்று ஏக்கங்கொண்டான் எ—று.

கண்ணுறீஇ-கண்ணுற்று என்பதன்விகாரம். இனி இற்றது-துணிவுபற்றி எதிர்காலத்தை இறந்தகாலமாகக்கூறியவழுவமைதி. சிவப்படையின்மேலானபடை வேறின்மையின் ஏங்கினானென்க. (௧௭௧)

தேவர்க டேவனார் தெய்வத் தொல்படை
யேவின னதனையு மெதிர்ந்து பற்றினான்
மூவிரு முகமுடை முதல்வன் வன்மையை
நாவினி லொருவரா னவிறற் பாலதோ.

இ—ள்: தேவர்கள் தேவனார் தெய்வ தொல் படை ஏவினன்-தேவாதிதேவராகிய சிவபிரானது தெய்வீகமாகிய பழையபடைக்கலத்தைப் பிரயோகித்தேன், அதனையும் எதிர்ந்து பற்றினான்-அப்படைக்கலத்தையும் எதிர்நின்றுபிடித்துக்கொண்டான், மூ இரு முகம் உடை முதல்வன் வன்மையை—ஆறு முகங்களையுடைய தலைவனாகிய இவனது வ

விமையை, நாவினில்—நாக்கினால், ஒருவரால் நவிறல் பாலதோ— ஒருவராற் சொல்லுதல் கூடுமா? (கூடாதே) எ—று.

உம்மை-உயர்வுசிறப்பு. நாவினில் நவிறல் என இயையும். (கஎஉ)

ஆயினு மரன்மக னறத்தின் போரலாற்
றீயதோர் கைதவச் செருவ துன்னலான்
மாயைக ளாற்றியே மறைந்து நின்றுநா
னேயென வியற்றுவ னமரொன் றெண்ணினான்.

இ—ள்: ஆயினும்—அங்ஙனமானலும், அரன்மகன்—இச்சிவகுமாரன், அறத்தின் போர் அலால் தீயது ஓர் கைதவ செருவது உன்னலான்-தருமநெறிக்கிணங்கிய போரையேயன்றிக் கொடிதாகிய வஞ்சகப்போரைச் (செய்தற்குச்) சிந்திக்கமாட்டான் (ஆதலால்), நான்—யான், மாயைகள் ஆற்றி மறைந்து நின்று—மாயங்களையுண்டாக்கி ஒளித்துநின்று, ஏ என அமர் இயற்றுவன் என்று எண்ணினான்-விரைவிற் போர்செய்வேனென்று கருதினான் எ—று.

தந்தைவகுத்தஅறநெறியை மைந்தன்விலக்கானென்றும், விலக்கினனேல் மாயப்போரிலுந் தனக்கே தோல்வியுறுமென்றும் எண்ணினனென்பதுபோதர 'அரன்மகனறத்தின்போரலாற்றீயதோர்கைதவச்செருவதுன்னலான்' என்றார். (கஎங)

கையனு மிவ்வகை கருத்தி லுன்னியே
யொய்யென வேகிர வுஞ்ச வெற்பின்முன்
வையமொ டேகிநீ வல்ல மாயைகள்
செய்குதி செய்குதி யென்று செப்பினான்.

இ—ள்: கையன் இ வகை கருத்தில் உன்னி—வஞ்சகனாகிய தாரகாசுரன் இவ்வாறு மனத்தில்நினைத்து, ஒய் என-விரைவாக, கிரவுஞ்ச வெற்பின்முன் வையமொடு ஏகி—கிரவுஞ்சமலையின்முன் தேருடன்சென்று, நீ வல்ல மாயைகள் செய்குதி செய்குதி என்று செப்பினான்—நீ செய்யவல்லமாயங்களையெல்லாம் செய்வாய் செய்வாயென்று கூறினான் எ—று.

உம்மை- அசைநிலை, அடுக்கு சினமும் விரைவும்பற்றிவந்தது. (கஎச)

## வேறு.

செப்பிய விறுவரை கிரவுஞ்சந் திகழ்வுறு மாயையி னிகழ்வுன்னி
முப்புர வகைபல வெனநிற்ப முரணுறு தாரக முதல்வன்று
னப்புர நிருதர்க ளெனநின்று னகல்வரை பலபல முகிலாக
வொப்பறு சூரன திளையோனு முருமென வவையிடை யுலவுற்றான்.

இ—ள்: செப்பிய இறுவரை—இவ்வாறு சொல்லிமுடிந்தவுடன், கிரவுஞ்சம்-கிரவுஞ்சமலை, திகழ்வுறும் மாயையின் நிகழ்வு உன்னி—சிறந்த மாயங்களைச்செய்யநினைத்து, முப்புர வகை பல என நிற்ப—பல திரிபுரவகைகள்போலநிற்க, முரண் உறு தாரக முதல்வன்—வலிமைமிக்க தலைவனாகிய தாரகாசுரன், அ புர நிருதர்கள் என நின்றான்—அந்த முப்புரங்களில்வசிக்கின்ற அசுரர்களைப்போலத் தோற்றிநின்றான், அகல் வரை பலபல முகில் ஆக—(பின்பும்) அகன்றகிரவுஞ்சமலை பலபல மேகவடிவமாகிநிற்ப, ஒப்பு அறு சூரனது இளையோனும் உருமு என அவையிடை உலவுற்றான்—நிகரற்ற சூரபன்மனது தம்பியாகிய தாரகனும் இடியைப்போல அம்மேகங்களில் உலாவினான் எ—று.

செப்பியவிறுவரை=சொல்லியமுடிவு. மலை திரிபுரமும் அசுரன் அசுரருமாக முருகக்கடவுள் அவற்றைத் திரிபுராந்தகரூபங்கொண்டு புன்னகையாலழித்தனரெனவும், அதன்மேல் தாரகன் பிறவடிவங்களாக, முருகக்கடவுளும் அவற்றிற்கேற்ற ஏற்ற உபாயங்களாலவற்றையழித்தனரெனவும் முதனூல்கூறும். (களரு)

வேலைக ளுருவினை வரை கொள்ள விசயம துடையதொ ரசுரேசன்
காலம திறுதியி னுலகுண்ணுங் கனையொலி யனலிக ளெனநின்றான்
சீலமின். முதுகிரி நெடுநேமித் திருவரை சூழ்தரு மிருளாக
மால்கரி முகமுள வவுணன்றான் வரையறு பாரிட நிரையானான்.

இ—ள்: வரை—கிரவுஞ்சமலை, வேலைகள் உருவினை கொள்ள— சமுத்திரங்களின்வடிவத்தையெடுத்துவர, விசயமது உடையது ஓர் அசுரேசன்— வெற்றியையுடைய அசுரத்தலைவனாகிய தாரகன், காலமது இறுதியின் உலகு உண்ணும் கனை ஒலி அனலிகள் என நின்றான்-ஊழிக்காலத்தில் எல்லாவுலகங்களையுமழிக்கின்ற பேரொலியையுடைய வடவாமுகாக்கினிகள்போல வடிவுகொண்டு (அச்சமுத்திரத்துள்) நின்றான், சீலம் இல் முது கிரி—ஒழுக்கமில்லாத பழைய கிரவுஞ்சமலை, நெடு நேமி திரு வரை சூழ்தரும் இருள் ஆக—நெடிய அழகிய சக்கரவாளமலையை வளைந்துள்ள இருள்போலாக, மால் கரி முகம் உள அவுணன்— பெரிய யானைமுகத்தையுடைய தாரகாசுரன், வரை அறு பாரிட நிரை ஆனான்-(அவ்விருளிற்சஞ்சரிக்கின்ற) அளவிறந்தபேய்க்கூட்டங்கள்போல் வடிவுகொண்டுநின்றான் எ—று. (களசு)

இந்திரன் முதலுள சுரர்வைகு மேழுட னொருதிசை வேழம்போ
லந்த நெடுங்கிரி வரலோடு மருகினி லுறுகுல கிரியாகித்
தந்தியின் முகமுள வவுணன்றான் சடசட முதிரொலி யுடன்வந்தான்
முந்திய தந்தம துருமாறி முறைமுறை நின்றதொர் திறனேபோல்.

இ—ள்: அந்த நெடும் கிரி-நெடிய அந்தக்கிரவுஞ்சமலை, இந்திரன் முதல் உள சுரர் வைகும் எழுடன் ஒரு திசை வேழம் போல் வரலோடும்-இந்திரன்முதலாகவுள்ள தேவர்கள்வசிக்கின்ற எண்டிசைகளினுமுள்ள எட்டியானைகளையும்போல வருதலும், தந்தியின் முகம் உள அவுணன்-யானைமுகத்தையுடைய தாரகாசுரன், அருகினில் உறு குலகிரி ஆகி—பக்கங்களிற்பொருந்திய குலாசலங்களாய், சடசட முதிர் ஒலி உடன் வந்தான்—சடசட என்னும் அநுகரணம்பொருந்தியஓசையுடன் வந்தான், முந்திய தம் தமது உரு மாறி முறை முறை நின்றது ஓர் திறனே போல்—பழைய தங்கள்தங்கள் வடிவமாறி முறைமுறையாகநின்றதன்மையையேபோல எ—று.

சடசட—ஈரடுக்கொலிக்குறிப்பு. அசுரன் யானைமுகவுருமாறிமலையாகவும் கிரவுஞ்சமலை மலையுருமாறியானையாகவும் நிற்றலின் 'தந்தமதுருமாறி முறைமுறைநின்றதொர்திறனேபோல்' என்றார். (களஎ)

வாயுவி னுருவென மலைசெல்ல மதகரி முகமுள பதகன்றான்
தேயுவி னுருவென வரலுற்றான் றிரியவு நெடுவரை விரைவோடுங்
காய்கன லுகுஞெகி ழிகளாகிக் ககனம திடையுற மிடைகாலை
யாயிர கோடிவெய் யவரேபோ லலமர லுற்றன னறமில்லான்.

இ—ள்: மலை வாயுவின் உரு என செல்ல—கிரவுஞ்சமலை காற்றின்வடிவுகொண்டுவர, மதகரி முகம் உள பதகன்— மதம்பொருந்திய யானையின்முகத்தையுடைய பாதகனாகிய தாரகாசுரன், தேயுவின் உரு என வரல் உற்றான்- (அவ்வாயுவின்சகாயனாகிய) அக்கினியின்வடிவமாய் வந்துசேர்ந்தான், திரியவும்—பின்பும், நெடுவரை—நெடியகிரவுஞ்சமலை, விரைவோடும்—சீக்கிரத்தில், காய் கனல் உகும் ஞெகிழிகள் ஆகி—சுடுகின்ற

நெருப்புப்பொறிகளைச்சிந்துங் கொள்ளிகளாகி, ககனமது இடை உற மிடைகாலை—ஆகாயத்திற்பொருந்தச் செறிந்தபொழுது, அறம் இல்லான்-தருமநெறியில்லாதவனாகிய தாரகாசுரன், ஆயிரகோடி வெய்யவரே போல் அலமரல் உற்றனன்—ஆயிரகோடி சூரியர்களைப்போலவடிவங்கொண்டு திரிந்தான் எ—று. (௧௭௮)

அவ்வகை தாரகன் வரையோடு மளவறு மாயையின் வடிவெய்தி
யெவ்விடை யுஞ்செறி தரலோடு மெம்பெரு மானவ னிவைகாணுத்
தெவ்வலி கொண்டிடு மிவனுவி சிந்துவ னென்றுள மிசைகொண்டே
கைவரு வேற்படை தனைநோக்கி யினையன சிலமொழி கழறுற்றான்.

இ—ள்: அவ்வகை—அவ்வாறாக, தாரகன்—தாரகாசுரன், வரையோடும்—கிரவுஞ்சமலையுடன், அளவு அறும் மாயையின் வடிவு எய்தி—அளவிறந்த மாயரூபங்களைக் கொண்டு, எ இடையும் செறிதரலோடும்- எல்லாவிடங்களினும் நெருங்கிநின்றபொழுது, எம்பெருமான் அவன் இவை காணா—எங்கள் தலைவராகிய அம்முருகக்கடவுள் இவற்றைப்பார்த்து, தெவ் வலி கொண்டு உறும் இவன் ஆவி சிந்துவன் என்று உளம் மிசை கொண்டு—பகைமுகத்தில்வலிபெற்றுநிற்கின்ற இவனது உயிரை அழிப்பேனென்று மனத்திலெண்ணி, கை வரு வேற்படை தனை நோக்கி—தமது திருக்கரத்திற்பொருந்திய வேலாயுதத்தைப்பார்த்து, இனையன சில மொழி கழறுற்றான்—இத்தன்மையான சிலவார்த்தைகளைக் கூறத்தொடங்கினார் எ—று.

முன்னர் நூற்றெழுபத்தைந்தாஞ்செய்யுளிற்குறித்த முதனூற்கருத்தின்படி, மாறுருக்கொண்டு அழிக்குந்தோறும் ஒழியாதுபின்னும்வெவ்வேறுருக்கொண்டுநிற்றலால் 'தெவ்வலிகொண்டுறுமிவன்' என விசேடித்தாரென அகலங்கூறல்பொருந்தும். (௧௭௯)

தாரக னென்பதொர் பேரோனைச் சஞ்சல முறுகிர வுஞ்சத்தை
யோரிறை செல்லுமு னுடல்கீறி யுள்ளுயி ருண்டு புறத்தேகிப்
பாரிடர் தம்மை யிலக்கத்தொன் பதின்மர்க ளாக வுரைக்கின்ற
வீரரை மீட்டிவண் வருகென்றே வேற்படை தன்னை விடுத்திட்டான்.

இ—ள்: தாரகன் என்பது ஓர் பேரோனை—தாரகனென்னும்பெயரையுடைய அசுரனையும், சஞ்சலம் உறு கிரவுஞ்சத்தை—நிலைபெயர்தலையுடைய கிரவுஞ்சமலையையும், ஓர் இறை செல்லுமுன் உடல் கீறி—ஒரு கணப்பொழுதுமுடியுமுன் உடம்பைப்பிளந்து, உள் உயிர் உண்டு புறத்து ஏகி-அவ்வுடம்பினுளிருக்கின்ற ஆன்மாவைக்கவர்ந்து கொண்டு வெளியேசென்று, பாரிடர் தம்மை—பூதவீரர்களையும், இலக்கத்து ஒன்பதின்மர்கள் ஆக உரைக்கின்ற வீரரை—இலக்கத்தொன்பதென்னுந்தொகையினராகச்சொல்லப்படுகின்ற வீரர்களையும், மீட்டு—(மயக்கந்தெளிவித்து) அழைத்துக்கொண்டு, இவண் வருக என்று—இவ்விடத்துவருவாயாகவென்றுகூறி, வேற்படை தன்னை விடுத்திட்டான்—வேலாயுதத்தைச் செலுத்தினார் எ—று. (௧௮௦)

சேயவன் விட்டிடு தனிவைவேல் செருமுய றாரகன் வரையோடு
மாயிடை செய்த புணர்ப்பெல்லா மகிலமு மழிதரு பொழுதின்கண்
மாயையி னாகிய வுலகெங்கு மலிதரு முயிர்களு மதிசூடுந்
தூயவன் விழியழல் சுடுமாபோற் றுண்ணென வட்டது சூர்போற்ற.

இ—ள்: சேயவன் விட்டிடு தனி வை வேல்—குமாரக்கடவுள்செலுத்திய ஒப்பற்ற கூரியவேலாயுதம், செரு முயல் தாரகன் வரையோடும் அ இடை செய்த புணர்ப்பு எல்லாம்—போர்த்தொழிலைமுயலுகின்ற தாரகாசுரன் கிரவுஞ்சமலையினுடன் அவ்விடத்திற்செய்த மாயைகளெல்லாவற்றையும், அகிலமும் அழிதரு பொழுதின்கண் மா

யையின் ஆகிய உலகு எங்கும் மலிதரும் உயிர்களும் மதி சூடும் தூயவன் விழி அழல் சுடு மாபோல்— சர்வசங்காரகாலத்தில் மாயையினலாகிய உலகமுழுவதையும் அவ்வுலகங்களில் நிறைந்த ஆன்மாக்கள்முழுவதையும் பிறையையணிந்த பரிசுத்தராகிய சிவபிரானது நுதற்கண்ணிற்றோன்றிய அக்கினி எரிக்குந்தன்மைபோல, சுரர் போற்ற—தேவர்கள் துதிக்க, துண் என அட்டது—விரைவிலழித்தது எ—று.

புணர்ப்பெல்லாம் அட்டது,சுரர்போற்ற அட்டது எனத் தனித்தனியியையும். சுடுமாறு என்பதில் ஈற்றுயிர்மெய்தொக்கது. உலகத்தோற்றத்திற்கு மாயை முதற்காரணமென்பது சைவசித்தாந்திகள்கருத்து. (௧௮௧)

வேறு.

அரண்டரு கழற்கா லைய னறுமுகத் தெழுந்த சீற்றந்
திரண்டொரு வடிவின் வேறாய்ச் சென்றதே யெனவு நான்கு
முரண்டரு தடந்தோ ளண்ணன் முத்தலை படைத்த சூல
மிரண்டொரு படையாய் வந்த தென்னவு மேகிற் றவ்வேல்.

இ—ள்: அரண் தரு கழல் கால் ஐயன் அறுமுகத்து எழுந்த சீற்றம் வேறு ஆய் ஒரு வடிவின் திரண்டு சென்றதே எனவும்— அடியார்க்கு அடைக்கலமாகிய வீரக்கழலையணிந்த கால்களையுடைய குமாரக்கடவுளது ஆறுமுகங்களினின்றுந்தோன்றிய கோபம் வேறுபட்டு ஒருருவமாகத்திரண்டுபோனதன்மைபோலவும், முரண் தரும் தட நான்கு தோள் அண்ணல் மு தலை படைத்த சூலம் இரண்டு ஒரு படை ஆய் வந்தது என்னவும்—வலிமைபொருந்திய விசாலித்த நான்குபுயங்களையுடைய சிவபிரானது முக்கவர்பொருந்திய சூலப்படைகளிரண்டு (முத்தலைகளும் இருபக்கங்களினும் குறுக்கே பொருந்துமாறு) ஒரு ஆயுதவடிவாயமைந்துசென்றாற்போலவும், அ வேல் ஏகிற்று— அந்த வேலாயுதஞ்சென்றது எ—று.

அரண்டரு என்பதைக் கழற்கடையாகக்கொள்ளின் காலுக்குப்பாதுகாப்பைச் செய்கின்ற எனவுரைக்க. வேற்படை ஒவ்வொருபக்கத்தும் மும்மூன்றுமுனைகளாக இருபக்கத்தும் ஆறுமுனையுடைமையால், அறுமுகத்தெழுந்தசீற்றம் ஒன்றானவடிவத்தையும், முத்தலைச்சூலமிரண்டொன்றானவடிவத்தையும் உவமித்தார். (௧௮௨)

முடித்திட லரிய மாய மூரிநீர்க் கடலை வற்றக்
குடித்திடு கின்ற செவ்வேற் கூற்றம்வந் திடுத லோடுந்
தடித்திடு மெயிற்றுப் பேழ்வாய்த் தாரக னிதனைப் பற்றி
யொடித்திடு கிற்பே னென்னு வொல்லென வுருத்து வந்தான்.

இ—ள்: முடித்திடல் அரிய மாய மூரி நீர் கடலை வற்ற குடித்திடுகின்ற செவ் வேல் கூற்றம் வந்திடுதலோடும்—(எவராலும்) அழித்தற்கரிய மாயமாகிய வலிய நீர்நிறைந்த சமுத்திரத்தை வற்றும்படி பருகுகின்ற சிவந்த வேலாயுதமாகிய (யமன்) எதிரே வருதலும், தடித்திடும் எயிற்று பேழ் வாய் தாரகன்—பருத்தபற்களையும் திறந்தவாயையுமுடைய தாரகாசுரன், இதனை பற்றி ஒடித்திடுகிற்பேன் என்னு— இவ்வேலாயுதத்தைப்பிடித்துமுரித்துவிடுவேனென்று, உருத்து— கோபித்து, ஒல் என வந்தான்—விரைவில் எதிரேவந்தான் எ—று.

நீர்க்கடல்-சாதியடை. மாயக்கடலைவற்றக்குடித்தல்=மாயரூபங்களையெல்லாம் ஒழித்தல். தவறாதழித்தல்பற்றி வேலைக்கூற்றமென்றார். கில்-ஆற்றலிடைநிலை. (௧௮௩)

அச்சமொர் சிறிது மில்லா வவுணர்கோ னுவண மேற்செ
னச்சர வென்னச் சீறி நணுகலு மவன்மார் பென்னும்

வச்சிர வரையின் மீது வானுரு மேறுற் றென்னச்
செச்சையந் தெரியல் வீரன் செலுத்தும்வேல் பட்ட தன்றே:

இ—ள்: ஒர் சிறிதும் அச்சம் இல்லா அவுணர்கோன்- மிகச்சிறிதும் பயமில்லாத அசுரத்தலைவனாகிய தாரகன், உவணமேல் செல் நச்சு அரவு என்ன சீறி நணுகலும்—கருடன்மீது எதிர்த்துச்செல்லுகின்ற விஷசர்ப்பம்போலக்கோபித்துச்சமீபித்தலும், அவன் மார்பு என்னும் வச்சிர வரையின் மீது—அவனுடையநெஞ்சாகிய வைரமலையின்மேல், வான் உருமேறு உற்று என்ன—பெரிய இடிவிழுந்தாற்போல, செச்சையம் தெரியல் வீரன் செலுத்தும் வேல் பட்டது—வெட்சிமலர்மாலையையணிந்த வீரராகிய முருகக்கடவுளேவிய வேலாயுதந்தாக்கியது எ—று.

நணுகலும்-பட்டது எனஇயையும்.தன்னையழிப்பதாகிய வேற்படையை அழிக்கக்கருதிச் சேறலின் 'உவணமேற்செனச்சரவென்ன-நணுகலும்' எனவும், பிறஆயுதவகைகளாலழியாமைபற்றித்தாரகன்மார்பை 'வச்சிரவரை' எனவும், அதனை வேற்படை பிளத்தலின் 'உருமேறென்ன-பட்டது'எனவும் கூறினர். (௧௮௪)

தாரகன் மார்ப மென்னுந் தடம்பெரு வரையைக் கீண்டு
சீரிய கிரவுஞ் சத்திற் சேர்ந்துபட் டுருவிச் சென்று
வீரமும் புகழுங் கொண்டு விளங்கிய தென்ன வங்கட்
சோரியுந் துகளு மாடித் துண்ணென மீண்ட தன்றே:

இ—ள்: தாரகன் மார்பம் என்னும் தடம் பெரு வரையை கீண்டு—தாரகாசுரனுடைய நெஞ்சாகிய மிகப்பெரியமலையைக்கிழித்து, சீரிய கிரவுஞ்சத்தில் சேர்ந்து பட்டு—சிறந்த கிரவுஞ்சமலையிற்போய்த்தாக்கி, உருவி சென்று—ஊடுருவிப்போய், வீரமும் புகழும் கொண்டு விளங்கியது என்ன—வீரத்தையுங்கீர்த்தியையும் பெற்றுவிளங்கியதன்மைபோல, அங்கண் சோரியும் துகளும் ஆடி—அவ்விடத்துள்ள இரத்தத்திலுந்தூளியிலும் படிந்து, துண் என மீண்டது—விரைவாகத்திரும்பியது எ—று.

தட பெரு ஒருபொருட்பன்மொழிகள். வீரத்தைச்செந்நிறமாகவும் புகழைவெண்ணிறமாகவும்வழங்குவது கவிவழக்கம். உபமானத்திற்கேற்பத் துகளைவெண்ணிறமென்க. சோரி தாரகனதுநெஞ்சினும் துகள் கிரவுஞ்சமலையினுந்தோன்றியன. (௧௮௫)

மீண்டிடு சீற்ற வைவேல் வெற்பினுட் டுஞ்சு கின்ற
வாண்டகை வீரர் தம்மை யாயிடை யெழுப்பி வான்போய்
மாண்டகு கங்கை தோய்ந்து வாலிய வடிவா யையன்
றாண்டிய கரத்தில் வந்து தொன்மைபோ லிருந்த தம்மா.

இ—ள்: மீண்டிடு சீற்ற வை வேல்—திரும்பிய கோபத்தையுடைய கூரிய வேற்படையானது, வெற்பினுள் துஞ்சுகின்ற ஆண்டகை வீரர் தம்மை அ இடை எழுப்பி-கிரவுஞ்சமலையினுள் மயங்கிக்கிடக்கின்ற ஆண்டகைமையினையுடைய வீரர்களை அப்பொழுது (மயக்கநீங்கி) எழுந்திருக்கச்செய்து, வான்போய்—ஆகாயத்திற்சென்று, மாண் தகு கங்கை தோய்ந்து—மாட்சிமைமிக்க தேவகங்கையில்மூழ்கி, வாலிய வடிவு ஆய்— தூய்மைபொருந்தியஉருவத்தையுடையதாய், ஐயன் தூண்டிய கரத்தில் வந்து—முருகக்கடவுள் ஏவிய திருக்கரத்திற்சேர்ந்து, தொன்மைபோல் இருந்தது-முன்போலிருந்தது எ-று.

முன்னர்ச்சோரியுந்துகளுமாடி மாசெய்துதலின், பின்னர்க்கங்கையிற்றோய்ந்து தூய்மையெய்தியதென்க. (௧௮௬)

தண்டம தியற்றுங் கூர்வே ருரக வவுணன் மார்பும்
பண்டுள வரையும் பட்டுப் பறிந்தபே ரோசை கேளா
விண்டது ஞால மென்பார் வெடித்தது மேரு வென்பா
ரண்டம துடைந்த தென்பா ராயின ரகிலத் துள்ளோர்.

இ—ள்: தண்டமது இயற்றும் கூர் வேல்—(துட்டர்க்குத்)தண்டனையைச்செய்கின்ற கூரியவேற்படை, தாரக அவுணன் மார்பும்—தாரகாசுரனது நெஞ்சினும், பண்டு உள வரையும்-முற்காலத்ததாயுள்ள கிரவுஞ்சமலையிலும், பட்டு—தாக்கி, பறிந்த பேர் ஓசை கேளா—பிளந்துசென்றதனாலாகிய பேரோசையைக்கேட்டு, அகிலத்து உள்ளோர்—உலகத்திலுள்ளவர்கள், ஞாலம் விண்டது என்பார்—பூமிபிளந்தது என்று சொல்பவர்களும், மேரு வெடித்தது என்பார்—மேருமலைவெடித்ததென்று சொல்பவர்களும், அண்டமது உடைந்தது என்பார் ஆயினர்—அண்டம் உடைந்ததென்று சொல்பவர்களுமானார்கள் எ—று.

தாரகன்மார்புங் கிரவுஞ்சமலையும் பிளவுபட்ட ஓசையென்பதையுணராது பலரும் பலவாறுகூறினரென்பதாம். (௧௮௭)

வடித்ததை யன்ன கூர்வேன் மார்பையூ டறுத்துச் செல்லத்
தடித்திடு கின்ற யாக்கைத் தாரக னனந்த கோடி
யிடித்தொகை யென்ன வார்த்திட் டிம்மென வெழுந்து துள்ளிப்
படித்தலந் தன்னில் வீழ்ந்து பதைபதைத் தாவி விட்டான்.

இ—ள்: வடித்தது அன்ன கூர் வேல்—அராவிக்கூர்செய்தாற்போன்ற கூரியவேற்படை, மார்பை ஊடறுத்து செல்ல—தன்னெஞ்சையூடுருவிப்போக, தடித்திடுகின்ற யாக்கை தாரகன்—பெருத்த சரீரத்தினையுடைய தாரகாசுரன், அனந்தகோடி இடித்தொகை என்ன ஆர்த்திட்டு— அனேககோடி இடிக்கூட்டங்களைப்போல ஆரவாரித்து, இம் என எழுந்து துள்ளி—விரைவிலெழும்பிக் குதித்து, படித்தலம் தன்னில் வீழ்ந்து பதைபதைத்து ஆவி விட்டான்—பூமியில் விழுந்து துடிதுடித்து உயிரை நீங்கினான் எ-று.

பதைபதைத்து-இரட்டைக்கிளவி. முருகக்கடவுளதுவேல் இயற்கையிற்கூர்மையுடைத்தாதலின் 'வடித்ததையன்ன' என்று உவமைகூறினார். (௧௮௮)

தடவரை யனைய மொய்ம்பிற் றாரகன் வேலாற் பட்டுப்
புடவியில் வீழா நின்றான் பொள்ளென வானிற் றுள்ளிக்
கடலுடைந் தென்ன வார்க்குங் காலையிற் கலக்க மெய்தி
யுடுகண முதிர்ந்த தஞ்சி யோடின னிரவி யென்போன்.

இ—ள்: தட வரை அனைய மொய்ம்பில் தாரகன்— பெரியமலையைப்போன்ற புயங்களையுடைய தாரகாசுரன், வேலால் பட்டு புடவியில் வீழாநின்றான்— வேலாயுதத்தினாலழிந்து பூமியில்விழுபவனாய், பொள் என வானில் துள்ளி—விரைவில் ஆகாயத்திலெழும்பி, கடல் உடைந்து என்ன ஆர்க்கும் காலையில்-சமுத்திரமுடைந்தாற்போல ஆரவாரிக்கும்பொழுது, உடு கணம் கலக்கம் எய்தி உதிர்ந்தது-நக்ஷத்திரக்கூட்டம் நிலைகலங்கிச்சிதறிற்று, இரவி என்போன் அஞ்சி ஓடினன்-சூரியன் பயந்தோடினான் எ—று.

மொய்ம்பு-வலியுமாம். வீழாநின்றான்-முற்றெச்சம். உடுகணம்-வடசொற்றொடர். (௧௮௯)

தளர்ந்திட லில்லா வீரத் தாரகன் பட்டு வானிற்
கிளர்ந்தனன் வீழ மெல்லைக் கீழுறு பிலமும் பாரும்

பிளந்தன வரைகள் யாவும் பிதிர்ந்தன வதிர்ந்த தண்ட
முளந்தடு மாறி யோலிட் டோடின திசையில் யானை.

இ—ள்: தளர்ந்திடல் இல்லா வீர தாரகன் பட்டு—சோர்வடைதலில்லாத வீரத்தையுடைய தாரகாசுரன்இறந்து, வானில் கிளர்ந்தனன் வீழும் எல்லை—ஆகாயத்திற் கிளம்பி விழுந்தபொழுது, கீழ் உறு பிலமும் பாரும் உடைந்தன- கீழுள்ள பாதலவுலகமும் பூவுலகமும் பிளவுபட்டன, வரைகள் யாவும் பிதிர்ந்தன—மலைகளெல்லாம் உதிர்ந்தன, அண்டம் அதிர்ந்தது-—அண்டகோளம் நடுங்கிற்று, திசையில் யானை உளம் தடுமாறி ஓலிட்டு ஓடின—திக்குயானைகள் மனங்கலங்கி வீரிட்டுக்கொண்டு ஓடின எ—று.(௧௧௰)

தண்ணளி சிறிது மில்லாத் தாரகன் கிளர்ந்து வான்போய்
மண்ணிடை மறிந்த தன்மை வன்சிறை யிழந்த நாளிற்
றிண்ணிய மேரு வின்னுஞ் செல்லலாங் கொல்லென் றுன்னி
விண்ணிடை யெழுந்து வல்லே வீழ்ந்ததே போலு மன்றே.

இ—ள்: சிறிதும் தண்ணளி இல்லா தாரகன்— சற்றுயினும் இரக்கமில்லாத தாரகாசுரன், கிளர்ந்து வான் போய் மண் இடை மறிந்த தன்மை—கிளம்பி ஆகாயத்திற் போய்ப் பூமியில் விழுந்ததன்மை, வன் சிறை இழந்த நாளில்—வலிய சிறகுகளை இழந்த காலத்தில், திண்ணிய மேரு—வலிய மேருமலை, இன்னும் செல்லல் ஆம் கொல் என்று உன்னி—பின்னும் பறந்து செல்லலாமோ என்று நினைத்து, விண் இடை எழுந்து— ஆகாயத்திற் கிளம்பி, வல்லே வீழ்ந்ததே போலும்—(பறக்கமாட்டாமையால்) விரைவில் விழுந்ததையேபோலும் எ—று.

இவ்வுவமை தாரகனது சரீரத்தின் பெருமையையுணர்த்திற்று. (௧௧௧)

வெற்றிய தாகுங் கூர்வேல் வெற்பினை யட்ட காலைச்
செற்றிய பூழி யீட்டஞ் சிதறிய பொறிக ளெங்கும்
பற்றிய புகையும் வந்து பரந்தன கரந்த தண்டம்
வற்றிய கடல்கள் வானிற் கங்கையும் வறந்த தன்றே.

இ—ள்: வெற்றியது ஆகும் கூர் வேல் வெற்பினை அட்டகாலை—வெற்றியையுடைத்தாகிய கூரிய வேலாயுதம் கிரவுஞ்சகிரியைப்பிளந்தபொழுது, பூழி ஈட்டம் செற்றிய—தூளிக்கூட்டங்கள் நெருங்கின, பொறிகள் எங்கும் சிதறிய— தீப்பொறிகள் எங்குஞ் சிதறின, பற்றிய புகையும் வந்து பரந்தன—மூண்ட புகைகளுந்தோன்றி(எவ்விடத்தும்) பரவின, அண்டம் கரந்தது—(அவற்றால்) ஆகாயம்மறைந்தது, கடல்கள் வற்றிய—சமுத்திரங்கள் வற்றின, வானில் கங்கையும் வறந்தது- ஆகாயத்திலுள்ள கங்கையும் வற்றியது எ—று.

சிதறியபொறிகள் எங்கும்பற்றிய என்பதை ஒருவாக்கியமாக்கிப் பொருள்கூறினுமாம். கங்கையும் என்றஉம்மை எச்சத்தோடுயர்வுசிறப்பு. (௧௧௨)

சிறந்திடு மாய வெற்பைத் திருக்கைவேல் பொடித்த காலைப்
பிறந்திடு கின்ற தீயைத் தீயெனப் பேச லாமோ
வறிந்தவர் தெரியிற் குன்ற மவுணனு கையினன் மெய்யி
லுறைந்திடு குருதி துள்ளி யுகுத்தவா றுகு மன்றே.

இ—ள்: திரு கை வேல் சிறந்திடும் மாய வெற்பை பொடித்த காலை—(முருகக்கடவுளின்)திருக்கரத்தினின்றுசென்றவேல் சிறந்த மாயங்களில்வல்ல கிரவுஞ்சமலையைத்தூள்படுத்தியபொழுது, பிறந்திடுகின்ற தீயை தீ என பேசல் ஆமோ—தோற்றிய அக்

கினியை அக்கினி என்று சொல்வதுதகுமா? (தகாது), அறிந்தவர் தெரியில்—அறிவுடையோர் ஆராயுமிடத்து, குன்றம் அவுணன் ஆகையினுல்— கிரவுஞ்சமலை முன்னர் அசுரனுயிருந்ததனல், மெய்யில் உறைந்திடு குருதி துள்ளி உகுத்தவாறு ஆகும்—அவனது உடம்பிற்பொருந்திய இரத்தம் மேலெழுந்து சிந்தியதன்மையேயாம் எ—று.

செந்தீக்குச்செந்நீரை உவமைகூறினர். தற்குறிப்பேற்றம். (௧௧௩)

யானுற்ற குன்றந் தன்னை யெறிந்தன னென்று செவ்வே
டானுற்ற நதியை வந்து தடிந்ததே யென்ன வெற்பி
னூனுற்ற நெடுவேல் பாய வுதித்திடும் பொறியி னீட்டம்
வானுற்ற கங்கை புக்கு வறந்திடு வித்த தன்றே.

இ—ள்: ஊன் உற்ற நெடு வேல் வெற்பில் பாய உதித்திடும் பொறியின் ஈட்டம்—தசைதோயப்பெற்ற நெடிய வேற்படை (கிரவுஞ்சமலையிற்)பட்டவுடன் தோன்றிய அக்கினிப்பொறிகளின்கூட்டம், யான் உற்ற குன்றம் தன்னை (செவ்வேள்) எறிந்தனன் என்று—நான்தோன்றுதற்கிடமாகிய கிரவுஞ்சமலையைக் குமாரக்கடவுள் பிளந்தாரென்றெண்ணி, செவ்வேள் உற்ற நதியை வந்து தடிந்ததே என்ன— அக்குமாரக்கடவுள் தோன்றுதற்கிடமாகிய கங்கையையணுகிப்பருகியதையேபோல, வான் உற்ற கங்கை புக்கு வறந்திடுவித்தது—ஆகாயவுலகத்திற்பொருந்திய கங்கைநதியிற்போய் (அதனை) வற்றச்செய்தது எ—று.

அக்கினிப்பொறிகளின் வெப்பத்தினுல் வற்றியதை, தனக்குச்செய்த தீங்கிற்குமாறுசெய்யவெண்ணி அக்கினிவற்றச்செய்ததாகக் கூறியது தற்குறிப்பேற்றம். (௧௧௪)

திறலுடை நெடுவே லட்ட சிலம்பினிற் சிதறித் தோன்றும்
பொறிகளுந் துகளு மார்ப்பும் பொள்ளெனச் செறிந்த தன்மை
மறிகடன் முழுது மங்கண் வடவையு மடைந்தொன் றாகி
யிறுதியி னுலகங் கொள்ள வெழுந்தது போலு மாதோ.

இ—ள்: திறல் உடை நெடு வேல் அட்ட சிலம்பினில் சிதறி தோன்றும் பொறிகளும்— வலிமையினையுடைய நெடிய வேற்படை பிளந்தழித்தகிரவுஞ்சமலையிற் பரந்து காணப்படுகின்ற அக்கினிப்பொறிகளும், துகளும்—தூளிகளும், ஆர்ப்பும்— ஆரவாரமும், பொள் என செறிந்த தன்மை—திடீரெனப்பரம்பியதன்மை, இறுதியில்-ஊழிக்காலத்தில், மறி கடல் முழுதும் அங்கண் வடவையும் அடைந்து ஒன்று ஆகி—அலைபுரளுகின்ற எல்லாச்சமுத்திரங்களும் அச்சமுத்திரங்களிலுள்ள வடவாமுகாக்கினியுஞ் சேர்ந்து ஒன்றுபட்டு, உலகம் கொள்ள எழுந்தது போலும்—உலகங்களையழிக்கும்படிகிளர்ந்ததன்மையைநிகர்க்கும் எ—று.

ஊழிக்காலத்தில் உலகமெவற்றையுமழிக்கும்படி திடீரெனத் தோன்றுதல்போல் ஈண்டுந்தோன்றினவென்பதாம். பொறிகளுக்கு வடவையும் துகளின்தொகுதிக்குக்கடலும் பிளவுபட்டபோதுண்டான ஓசைக்குக் கடல்பெருகுமோசையும் உவமையென்க. ()

தந்தியின் வதனங் கொண்ட தாரக வவுணன் மார்பிற்
சிந்துறு குருதிச் செந்நீர் திரைபொரு தலைத்து வீசி
யந்தமி னீத்த மாகி யயிற்படை யட்ட குன்றில்
வந்திடு பூழை புக்கு மறிகடன் மடுத்த தன்றே.

இ—ள்: தந்தியின் வதனம் கொண்ட தாரக அவுணன் மார்பில் சிந்துறு குருதி செம் நீர்—யானைமுகத்தையுடைய தாரகாசுரனது நெஞ்சினின்றும் பெருகிய சிவந்த

இரத்தநீர், திரை பொருது அலைத்து வீசி— திரைமோதி அலைத்து வீசி, அந்தம் இல் நீத்தம் ஆகி—அளவிறந்த வெள்ளமாகி, அயில் படை அட்ட குன்றில் வந்திடு பூழை புக்கு-வேற்படைபிளந்தழித்த கிரவுஞ்சகிரியில் உண்டாகிய துவாரங்களாற்போய், மறி கடல் மடுத்தது—திரைமறிகின்ற சமுத்திரத்தை நிறைத்தது எ—று.

அலைத்தல்-பக்கத்திலுள்ள பொருள்களைநிலைபெயர்த்தல். வீசுதல்-அவற்றைத் தூரத்திலெறிதல். குருதி செந்நீர் ஒருபொருட்கிளவிகளெனினுமாம். (கககூ)

விட்டவேன் மீண்டு கந்த வேள்கரத் திருப்பத் தீயோன்
பட்டதும் வெற்பு மாய்ந்த பான்மையு மவுணர் யாருங்
கெட்டது நோக்கி மாலுங் கேழ்கிளர் கமலத் தேவு
முட்டிலா மகத்தின் வேந்து முனிவருஞ் சுராரு மார்த்தார்.

இ—ள்: விட்ட வேல் மீண்டு—முருகக்கடவுளேவிய வேலாயுதந்திரும்பிவந்து, கந்த வேள் கரத்து இருப்ப—குமாரக்கடவுளது திருக்கையிலிருக்க, தீயோன் பட்டதும்—கொடிய தாரகாசுரன் இறந்ததன்மையையும், வெற்பு மாய்ந்த பான்மையும்— கிரவுஞ்சமலைபிளவுபட்டதன்மையையும், அவுணர் யாரும் கெட்டதும்-அசுரர்களெல்லோரும் அழிந்ததன்மையையும், நோக்கி—பார்த்து, மாலும்—திருமாலும், கேழ் கிளர் கமல தேவும்—நிறம்விளங்குகின்ற செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், முட்டு இலா மகத்தின் வேந்தும்—குறைவில்லாத யாகங்களுக்கதிபனாகிய இந்திரனும், சுரரும்—மற்றைத்தேவர்களும், முனிவரும்—முனிவர்களும், ஆர்த்தார்—ஆரவாரித்தார்கள் எ-று.

முட்டு-மகத்திற்கடையாகக்கொள்ளின், மந்திரலோபம் திரவியலோபம் கிரியாலோபமுதலியன; இந்திரனுக்கடையாகக்கொள்ளின் மனத்துயர், (ககள)

ஆடினர் குமரற் போற்றி யங்கைக ளுச்சி மீது
சூடினர் தண்பூ மாரி தூர்த்தன ரவனைச் சூழ்ந்து
பாடினர் தொழுது முன்னம் பன்முறை பணிந்து நின்றார்
நீடிய வுவகை யென்னு நெடுங்கட லாழு நீரார்.

இ—ள்: நீடிய உவகை என்னும் நெடும் கடல் ஆழும் நீரார்—பெருமகிழ்ச்சியாகிய நெடியகடலில் அமிழ்ந்தியவர்களாய், ஆடினர்—கூத்தாடி, குமரன் போற்றி—முருகக்கடவுளைத்துதித்து, அங்கைகள் உச்சி மீது சூடினர்—அகங்கைகளைச் சிரமேற்குவித்து, தண் பூமாரி தூர்த்தனர்—குளிர்ந்த புஷ்பமழையைச்சொரிந்து, அவனை சூழ்ந்து—அம்முருகக்கடவுளை வலம்வந்து, பாடினர்— கீதம்பாடி, தொழுது—அஞ்சலிசெய்து, முன்னம் பல் முறை பணிந்து நின்றார்— சந்நிதானத்திற் பலமுறை வணங்கி நின்றார்கள் எ—று. (ககஅ)

ஆங்கது காலை தன்னி லளப்பிலா மாயை வல்ல
வோங்கல திறப்ப வங்க ணுறங்கிய வீர ரெல்லாந்
தீங்குறு மைய னீங்கிக் கதுமெனச் சென்று செவ்வேள்
பூங்கழல் வணங்கி நின்று போற்றியே புடையி னின்றார்.

இ—ள்: ஆங்கு அது காலை தன்னில்—அப்பொழுது, அளப்பு இலா மாயை வல்ல ஓங்கலது இறப்ப—அளவிடுதற்கரிய மாயங்களில்வல்ல கிரவுஞ்சமலை அழிய, அங்கண் உறங்கிய வீரர் எல்லாம்—அம்மலையில்மயங்கிக்கிடந்த வீரர்களனைவரும், தீங்கு உறும் மையல் நீங்கி—தீமையைத்தருகின்ற மயக்கத்தினின்றும் நீங்கி, கதும் என சென்று—விரைவாகப்போய், செவ்வேள் பூ கழல் வணங்கி நின்று—முருகக்கடவுளது பொலிவார்ந்த

பாதங்களைப்பணிந்துநின்று, போற்றி—துதித்து, புடையில் நின்றார்—(அவரது) பக்கத்தில் நின்றார்கள் எ—று. (௧௯௯)

வாருறு கழற்கால் வீர வாகுவே முதலா வுள்ள
வீரர்க டம்மை யெல்லாம் வேலுடைக் கடவு ணோக்கித்
தாரகன் வரையுட் பட்டுத் தருமுணர் வின்றி நீவி
ராருநொந் தீர்கள் போலு மாயையூ டழுந்தி யென்றான்.

இ—ள்: வேல் உடை கடவுள்—வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள், வார் உறு கழல் கால் வீரவாகுவே முதல் ஆ உள்ள வீரர்கள் தம்மை எல்லாம் நோக்கி-வார்பொருந்திய வீரக்கழலையணிந்த பாதங்களையுடைய வீரவாகுவையேமுதலாகவுடைய வீரர்களையெல்லாம் பார்த்து, நீவிர் ஆரும்—நீங்களெல்லாம், தாரகன் வரை உள் பட்டு—தாரகாசுரனது கிரவுஞ்சமலையினுள் அகப்பட்டு, மாயை ஊடு அழுந்தி—மாயத்திற்சிக்கி, தரும் உணர்வு இன்றி-நல்லறிவில்லாமல், நொந்தீர்கள் போலும் என்றான்—வருந்தினீர்கள்போலுமென்றுகூறியருளினார் எ—று.

போலும்-ஒப்பில்போலி. (௨00)

செய்யவ னினைய வாறு சீரருள் புரிய வீர
ரையநின் னருளுண் டாக வடியமூ றடைவ துண்டோ
மையலோ டுறங்கு வார்போன் மருவுமின் புற்ற தன்றி
வெய்யதோர் கிரிமா யத்தான் மெலிந்தில மிறையு மென்றார்.

இ—ள்: செய்யவன் இனையவாறு சீர் அருள் புரிய— சிவந்தநிறத்தையுடைய முருகக்கடவுள் இவ்வாறு சிறந்த அருண்மொழியைக்கூற, வீரர்—(வீரவாகுமுதலிய) வீரரனைவரும், ஐய—கடவுளே!, நின் அருள் உண்டு ஆக அடியம் ஊறு அடைவது உண்டோ-தேவரீரது அனுக்கிரகம் உளதாயிருக்கத்தமியேங்கள் ஊறுபாடடைவதுண்டா?, மையலோடு உறங்குவார் போல் மருவும் இன்பு உற்றது அன்றி—மயக்கத்தோடுகூடி நித்திரைசெய்பவர்போலப் பொருந்திய இன்பத்தையடைந்திருந்ததேயல்லாமல், வெய்யது ஓர் கிரி மாயத்தால்—கொடிய கிரவுஞ்சமலையின் மாயத்தினால், இறையும் மெலிந்திலம் என்றார்—சிறிதேனுந் துயரடைந்திலோமென்று விண்ணப்பஞ்செய்தார்கள் எ—று.

புரிய என்றார் என இயையும். அருள்புரிய=அருளிச்செய்ய. (௨0௧)

என்றலும் வீர மொய்ம்பி னேந்தலை விளித்துச் செவ்வேள்
வென்றிகொள் சூரன் பின்னோன் விட்டிடத் தான்முற் கொண்ட
வன்றிறற் படையின் வேந்தை மற்றவன் கரத்தி னல்கி
நன்றிது போற்று கென்றே நவின்றுநல் லருள்பு ரிந்தான்.

இ—ள்: என்றலும்—என்று (வீரர்கள்) கூறியவுடன், செவ்வேள்—முருகக்கடவுள், வீர மொய்ம்பின் எந்தலை விளித்து—வீரவாகுதேவரையழைத்து, வென்றி கொள் சூரன் பின்னோன் விடுத்திட தான் முன் கொண்ட வன் திறல் படையின் வேந்தை அவன் கரத்தில் நல்கி-வெற்றியையுடைய சூரபன்மனதுதம்பியாகிய தாரகாசுரனேவத்தாம் முன்னர்ப்பற்றிய மிக்கவலிமையினையுடைய சிறந்த படையை[சிவப்படைக்கலத்தை] அவரதுகையிற்கொடுத்து, நன்று இது போற்றுக என்று நவின்று-நன்றாக இதனைப்பாதுகாத்துக்கொள்ளென்று கூறி, நல் அருள் புரிந்தான்- சிறந்தகருணையைச்செய்தார் எ-று.

வீரமொய்ம்பினேந்தல்-வீரமார்ந்த புயங்களையுடையதலைவன். (௨0௨)

தாரகன் போரிற் றுஞ்சுஞ் சாரதர் தம்மை யெல்லா
மாருநீ ரெழுதி ரென்னு வவரெலா மெழவே செய்து

பாரிட வனிகஞ் சூழப் பண்ணவர் பரவல் செய்யச்
சீரிய வயவ ரீண்டச் செருநில மகன்றான் செவ்வேள்.

இ—ள்: செவ்வேள்—முருகக்கடவுள், தாரகன் போரில் துஞ்சும் சாரதர் தம்மை எல்லாம்—தாரகாசுரனோடுநிகழ்ந்த யுத்தத்திலிறந்த பூதர்களனைவரையும், நீர் ஆரும் எழுதிர் என்று—நீவிரனைவீரும் எழும்புதிரென்றுகூறி, அவர் எலாம் எழ செய்து—அவரனைவரும் உயிர்பெற்றெழும்பும்படி செய்து, பாரிட அனிகம் சூழ-பூதசேனைகள் புடைசூழவும், பண்ணவர் பரவல் செய்ய—தேவர்கள் துதிக்கவும், சீரிய வயவர் ஈண்ட—சிறந்த இலக்கத்தொன்பது வீரர்கள் நெருங்கிவரவும், செருநிலம் அகன்றான்—போர்க்களத்தைநீங்கி அப்பாற்போயினார் எ—று.

எழுதிரென்றுகூறியவுடன் பூதர்களெழுந்தது முருகக்கடவுளின் கடவுட்டன்மையாலென்க. (௨௦௩)

தாரகன்வதைப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௧௫௬௧.

---

# தேவகிரிப்படலம்.

முருகக்கடவுள்போய்த் தேவகிரியில்வீற்றிருந்தசரித்திரத்தைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

முருகக்கடவுள் தேவர்முதலாயினோர்புடைசூழ்ந்துவரப் போர்க்களத்தை நீங்கித் தென்றிசைநோக்கிநடந்து தேவகிரியையடைந்து, தேவத்தச்சனுலோர் நகரமமைப்பித்து, அதனுள் தமக்காகவியற்றப்பட்டிருந்த திருக்கோயிலிற்புகுந்து, தேவர்களும் முனிவர்களும் பூசிக்க அருள்செய்து வீற்றிருந்தனர் என்பதாம்.

மாகவந் தங்கள் கூளி வாய்ப்பறை மிழற்ற வாடு
மாகவந் தங்கு மெல்லை யகன்றுசெங் கதிர்வே லண்ணல்
சோகவந் தங்கொண் டுள்ள சுரருட னனிகஞ் சுற்றி
யேகவந் தங்க ணின்ற விமகிரி யெல்லை தீர்ந்தான்.

இ—ள்: செம் கதிர் வேல் அண்ணல்—செவ்வொளியையுடைய வேலாயுதத்தைத்தாங்கிய முருகக்கடவுள், கூளி வாய் பறை மிழற்ற மா கவந்தங்கள் ஆடும் ஆகவம் தங்கும் எல்லை அகன்று—பேய்கள் வாய்ப்பறையறையப் பெரிய உடற்குறைகள் கூத்தாடுகின்ற போர்க்களத்தைநீங்கி, சோக அந்தம் கொண்டு உள்ள சுரர் உடன் அனிகம் சுற்றி ஏக வந்து—துன்பத்தின்முடிவைப்பெற்றுள்ள தேவர்களும் சேனைவீரர்களுஞ் சூழ்ந்துசெல்லப்போய், அங்கண் நின்ற இமகிரி எல்லை தீர்ந்தான்— அம்மார்க்கத்திலுள்ள இமையமலையினெல்லையைக்கடந்தார் எ—று.

வாய்ப்பறையறைதல்- வாயாகியபறையைமுழக்குதல்=ஆரவாரித்தல். ஆகவந்தங்குமெல்லை- போர் நிகழ்ந்த இடம். சோகாந்தம் எனத்தீர்க்கசந்தியாய் முடிதற்கேற்ற சோக அந்தம் என்னும்வடசொற்கள், தமிழிலக்கணவிதிப்படி வகரவுடம்படுமெய்பெற்றுச் சோகவந்தம் எனப்புணர்ந்தன. அசுரர்க்கழிவுநேர்ந்தமைகருதி அகமகிழ்ந்தாராதலால்

'சோகவந்தங்கொண்டுள்ள சுரர்' எனவும், இமையமலையில் ஒஷதிப்பிரஸ்தமென்னும் நகரத்திற்சென்று மலையாசனைக் கண்டுபேசி அப்பாற்சென்றனரெனமூதனூல்கூறுவதமைய 'இமகிரியெல்லைதீர்ந்தான்' எனவும் கூறினர். (௧)

அரியயன் மகத்தின் றேவ னமரர்க ளிலக்கத் தொன்பான்
பொருதிறல் வயவ ரேனைப் பூதர்கள் யாரும் போற்றத்
திருநெடு வேலோன் றென்பாற் செவ்விதி னடந்து மேல்பா
லிரவியி னிரவி செல்ல விமையவர் சயிலஞ் சேர்ந்தான்.

இ—ள்: அரி—திருமாலும், அயன்—பிரமதேவரும், மகத்தின் தேவன்—இந்திரனும், அமரர்கள்-தேவர்களும், இலக்கத்து ஒன்பான் பொரு திறல் வயவர்-போர்செய்யத்தக்க வீரத்தினையுடைய இலக்கத்தொன்பது வீரர்களும், ஏனை பூதர்கள் யாரும் போற்ற— மற்றையபூதர்களுமாகிய அனைவரும் துதிக்க, திரு நெடு வேலோன்—அழகிய நெடிய வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள், செவ்விதின்—சிறப்பாக, தென் பால் நடந்து-தென்றிசையைநோக்கிப்போய், இரவி மேல்பால் இரவியின் செல்ல—சூரியன் அத்தமனகிரியையடைய, இமையவர் சயிலம் சேர்ந்தான்—தேவகிரியையடைந்தார் எ—று.

மேல்பாலிரவி-மேற்றிசைக்கண் (சூரியன் மறைதற்குரியதாகவுள்ள) மலை. நடந்து சேர்ந்தான் என இயையும். (௨)

ஒப்பறு சூர்பின் றோனை யொருவன்வே லட்ட தன்மை
யிப்புற வுலகி னுள்ளார் யாவரு முணர்வ ரின்னே
யப்புற வுலகி னுள்ளா ரறிந்திட யானே சென்று
செப்புவ னென்பான் போலச் செங்கதிர் மறைந்து போனான்.

இ—ள்: ஒருவன் வேல்—ஒப்பற்ற முருகக்கடவுளது வேற்படை, ஒப்பு அறு சூர் பின்றோனை அட்ட தன்மை—நிகரற்ற சூரபன்மனது தம்பியாகிய தாரகாசுரனையழித்த தன்மையை, இப்புற உலகின் உள்ளார் யாவரும் உணர்வர்—இந்தப்பக்கத்திலுள்ள பூவுலகத்தில்வசிக்கின்றவர்களனைவரும் அறிவார்கள், அப்புற உலகின் உள்ளார் அறிந்திட—அந்தப்பக்கத்திலுள்ள உலகங்களிலுள்ளவர்கள் அறியும்படி, இன்னே-இப்பொழுது, யானே சென்று செப்புவன் என்பான் போல-நானேபோய்ச்சொல்வேனென்று கருதியவன்போல, செம் கதிர் மறைந்து போனான்— சிவந்த கிரணங்களையுடைய சூரியன் அத்தமனமானான் எ—று.

யானே என்பதில் ஏகாரம் பிரிநிலை. இப்புறவுலகிலுள்ளார் யாவருமுணர்வர் எனவே அப்புறவுலகிலுள்ளார் உணராரென்பதுபெறும். இச்செய்யுளும் பின்மூன்று செய்யுட்களுந் தற்குறிப்பேற்றம். (௩)

பானுவென் றுரைக்கு மேலோன் பகற்பொழு தெலாங்கைக் கொண்
டானேனைய மதியப் புத்தே ளிரவினுக் கரச னானா
னிவற் றிடையே சென்று நண்ணுவ னென்று செந்தீ
வானவன் போந்த தென்ன வந்தது மாலைச் செக்கர்.

இ—ள்: பானு என்று உரைக்கும் மேலோன் பகற்பொழுது எலாம் கைக்கொண்டான்— சூரியனென்றுசொல்லப்படுகின்ற மேலவன் பகற்காலமுழுதையும் தனக்குரியதாகக் கவர்ந்துகொண்டான், ஏனைய மதிய புத்தேள் இரவினுக்கு அரசன் ஆனான்—மற்றைய சந்திரன் இராக்காலத்திற்கதிபனாயினான், நான் இவற்று இடையே சென்று நண்ணுவன் என்று—யான் இவ்விருகாலங்களுக்குமிடையேபோய் (அரசனாகப்)பொருந்துவே

னென்று, செம் தீ வானவன் போந்தது என்ன— சிவந்தநிறத்தையுடைய அக்கினிதேவன்வந்தாற்போல, மாலே செக்கர் வந்தது— மாலேக்காலத்தில்வருஞ் செவ்வானந்தோன்றியது எ—று.

வானமெங்குஞ் செந்நிறம்பரவுதலே இங்ஙனம் வருணித்தார். பகன்முடிவிற் சூரியனதுசோதி அக்கினியிற்சேர்வதென்னுங்கொள்கையும் இதனுலூகித்துணரக்கிடக்கின்றது. (௪)

வம்பவிழ் குமுத மெல்லா மலர்ந்திடு மாலே தன்னில்
வெம்படை பயிலத் தோன்றும் வேளுக்குத் தான்முன் வந்த
வம்புதி முரச மாயிற் ருசையாற் ருனும் வெற்றிக்
கொம்பென விளங்கிற் றென்ன வெழுந்தது குழவித் திங்கள்.

இ—ள்: வம்பு அவிழ் குமுதம் எல்லாம் மலர்ந்திடும் மாலே தன்னில்—வாசனே விரிந்த ஆம்பன்மலர்களேனத்தும் மலருகின்ற மாலேக்காலத்தில், வெம் படை பயில தோன்றும் வேளுக்கு—கொடிய பூங்கணேகளே எவுமாறு வருகின்ற மன்மதனுக்கு, தான் முன் வந்த அம்புதி முரசம் ஆயிற்று ஆசையால்—தான்முன்னே தோற்றுதற்கிடமாகிய சமுத்திரம் முரசாக அமைந்தது ஆதலால், தானும் வெற்றிக்கொம்பு என விளங்கிற்று என்ன—தானும் (அதற்கேற்ப)வெற்றிக்கொம்பாக விளங்கினுற்போல, குழவித்திங்கள் எழுந்தது—பிறைச்சந்திரன் உதித்தது எ—று.

மாலேதன்னில் தோன்றும் என இயையும்; எழுந்தது என்பதோடியையப்பினுமாம். தன்னேத்தோற்றுவித்தகடல் முரசாயிருப்பத் தான் அதற்கியைபில்லாத குடையாயிருப்பது தக்கதன்றென்றுசிந்தித்து, இயைபுடைத்தாணஊதுகொம்பானதுபோலப் பிறையுதித்தது என்பதாம். (௫)

ஏற்றெதிர் மலேந்து நின்ற விகலுடை யவுணர் தம்மேற்
காற்றெனத் தேர்க டாவிக் கடுஞ்சமர் புரிந்த வெய்யோன்
மாற்றருஞ் செம்பொன் மார்பில் வச்சிரப் பதக்க மிற்று
மேற்றிசை வீழ்ந்த தென்ன விளம்பிறை விளங்கிற் றன்றே.

இ—ள்: ஏற்று எதிர் மலேந்து நின்ற இகல் உடை அவுணர் தம் மேல்—எதிர்த்து மாருகப் போரைச்செய்துநின்ற வலிமையினேயுடைய (மந்தேகரென்னும்) அசுரர்கள்மீது, காற்று என தேர் கடாவி—வாயுவேகம்போல (வேகமாகத்) தேரைச்செலுத்தி, கடும் சமர் புரிந்த வெய்யோன்—கடும்போரைச்செய்த சூரியனது, மாற்ற அரும் செம் பொன் மார்பில் வச்சிர பதக்கம்—நீக்குதற்கரிய செம்பொன்னுலாகிய மார்பிலணியப்பட்ட வைரப்பதக்கமானது, இற்று மேல் திசை வீழ்ந்தது என்ன-அறுபட்டு மேற்குத்திக்கில் விழுந்தாற்போல, இளம்பிறை விளங்கிற்று—இளஞ்சந்திரன் பிரகாசித்தது எ—று.

மாற்றரும் பதக்கம், செம்பொற்பதக்கம், மார்பிற்பதக்கம் எனத்தனித்தனி இயையும். உதிக்கும்போதும் அத்தமிக்கும்போதும் மந்தேகரென்னும் அசுரர்தடுக்க, சூரியன் அவருடன்பொருது, அந்தணராற்கொடுக்கப்படும் அர்க்கியசலமாகிய ஆயுதத்திஞல்வென்று செல்வனென்னுஞ் சரித்திரத்தைக்கொண்டு இங்ஙனம்வருணித்தார். காற்று-ஆகுபெயர்.

கானத்தி னேன மொத்த கணே யிருட் சூழன் மற்றவ்
வேனத்தி னெயிற்றை யொத்த திளம்பிறை யதனேப் பூண்ட
கோனெத்த தண்ட மந்தக் கூரெயி றுகுத்த முத்தந்
தானெத்து விளங்கு கின்ற தாரகா கணங்க ளெல்லாம்.

இ—ள்: கனை இருள் சூழல் கானத்தின் ஏனம் ஒத்த—நெருங்கிய இருளின்கூட்டம் காட்டிலுள்ள பன்றியைநிகர்த்தது, இளம் பிறை அ ஏனத்தின் எயிற்றை ஒத்தது—இளஞ்சந்திரன் அப்பன்றியின்கோட்டைநிகர்த்தது, அண்டம் அதனை பூண்ட கோன் ஒத்தது—ஆகாயம் அப்பன்றிக்கோட்டையணிந்த சிவபிரானைநிகர்த்தது, தாரகாகணங்கள் எல்லாம் அந்த கூர் எயிறு உகுத்த முத்தம் ஒத்து விளங்குகின்ற—நட்சத்திரக்கூட்டங்களெல்லாம் கூர்மையாகிய அந்தப்பன்றிக்கோடுவீழ்த்திய முத்தைப்போன்று ஒளிர்கின்றன எ—று.

காட்டுப்பன்றி கருநிறமுடைத்தாகலின் இருளுக்கும், அதன்கோடுகள் வெண்ணிறமும் வளைவுமுடையவாகலின் இளம்பிறைக்கும், சிவபிரான் செந்நிறமுடையராதலானும் பன்றிக்கோட்டைப்பூண்டாராதலானும் பிறையுடன்கூடிச்செந்நிறமாயிருந்தவானத்திற்கும், முத்துக்கள் பெரும்பாலும் வெண்ணிறமமைந்தனவாய்ச் சிதறிக்கிடத்தலியல்பாதலின் நக்ஷத்திரங்கட்கும் உவமையாயின. தம்முள் இயைபுடையனவாகிய பொருள்களையெடுத்து இங்ஙனம் உவமித்தல் இயைபுவமை. தாரககணம் வடநூன்முடிபு. (எ)

அல்லிது போந்த காலை யாரமா மாலை யென்னக்
கல்லென வருவி தூங்குங் கடவுள்வெற் பொருசா ரெய்தி
மெல்லிதழ் வனசத் தேவும் விண்டுவும் விண்ணின் றேவும்
பல்லிமை யோருஞ் செவ்வேள் பதமுறை தொழுது சொல்வார்.

இ—ள்: அல் இது போந்த காலை- இவ்வியல்பினதாகிய இராக்காலம்வந்தபொழுது, மெல் இதழ் வனச தேவும்—மென்மையான இதழ்களையுடைய செந்தாமரைமலரில்வீற்றிருக்கின்ற பிரமதேவரும், விண்டுவும்—திருமாலும், விண்ணின் தேவும்—சுவர்க்கலோகத்திற்குத் தலைவனாகிய இந்திரனும், பல் இமையோரும்-ஏனைய பலதேவர்களும்,ஆர மா மாலை என்ன கல் என அருவி தூங்கும் கடவுள் வெற்பு ஒருசார் எய்தி-பெரியமுத்துமாலைபோலக் கல்லென்னுங் குறிப்பொலியுடன் அருவிநீரிழிகின்ற தேவகிரியினோர்பக்கத்திற்போய், செவ்வேள் பதம் முறை தொழுது—முருகக்கடவுளது திருவடிகளை முறைப்படி வணங்கி, சொல்வார்—இவ்வாறு விண்ணப்பஞ்செய்வார்கள் எ—று.

ஆரமாமாலையென்ன தூங்கும் என இயைக்க. வெண்ணிறமுடைத்தாய் இடைவிடாது மேலிருந்து கீழிழிதலின் ஆரமாலை அருவிக்குவமையாயிற்று. இவ்வுவமையால் அம்மலை மிகுந்தவளமுடைத்தென்பது போதரும். (அ)

வன்கணே யுடைய சூர்பின் வருத்திட விந்நாள் காறும்
புன்கணே யுழந்தே மன்னோன் பொருப்பொடு முடியச் செற்று
யுன்கணே வழிபா டாற்ற வுன்னின மின்ன வெற்பின்
றன்கணே யிறுத்தல் வேண்டுந் தருதியிவ் வரம தென்றார்.

இ—ள்: வன்கணே உடைய சூர் பின் வருத்திட-தறுகண்மையினையேதன்செயலாகவுடைய சூரபன்மனது தம்பியாகிய தாரகாசுரன் வருத்த, இ நாள் காறும் புன்கணே உழந்தேம்—இந்தத்தினம்வரையுந் துன்பத்தையேயனுபவித்தேம், அன்னோன் பொருப்பொடு முடிய செற்றாய்—அவ்வசுரன் (தனக்காதாரமான) கிரவுஞ்சமலையோடும் அழியும்படி சங்கரித்தீர், உன்கண் வழிபாடு ஆற்ற உன்னினம்—(அதுபற்றிச் சிறியேங்கள்) தேவரீருக்குப்பூசைசெய்யநினைத்தேம், இன்ன வெற்பின் தன் கண் இறுத்தல் வேண்டும்-(ஆதலால்) தேவரீர்) இந்தமலையிலெழுந்தருளியிருத்தல்வேண்டும், இ வரம் தருதி என்றார்—இந்தவரத்தைத்தந்தருள்கவென்று பிரார்த்தித்தார்கள் எ—று.

ஏகாரங்கள், முன்னைய இரண்டும் பிரிநிலை; பின்னைய இரண்டும் அசை. உன்கண்—உருபுமயக்கம். (௯)

பசைந்திடு மார்வங் கொண்ட பண்ணவ ரினைய தன்மை
யிசைந்தனர் வேண்டு மெல்லை யெஃகுடை யண்ண லங்க
ணசைந்திடு தன்மை யுன்னி யருள்செய வதுகண் டன்னோர்
தசைந்துமெய் பொடிப்பத் துள்ளித் தணப்பில்பே ருவகை பூத்தார்.

இ-ள்: பசைந்திடும் ஆர்வம் கொண்ட பண்ணவர் இசைந்தனர் இனையதன்மை வேண்டும் எல்லை-பேரன்பினையுடைய தேவர்கள்யாவரும் ஒருமித்து இவ்வாறு வேண்டுதல் செய்ய, எஃகு உடை அண்ணல்—வேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள், அங்கண் அசைந்திடு தன்மை உன்னி அருள்செய— அவ்விடத்தெழுந்தருளியிருத்தலைத் திருவுளங்கொண்டு கருணைசெய்ய, அன்னோர் அது கண்டு—அத்தேவர்கள் அதனைப்பார்த்து, மெய் தசைந்து பொடிப்ப துள்ளி தணப்பு இல் பேர் உவகை பூத்தார்—சரீரம்பூரித்துப் புளகமுறக்குதித்துக் குறைவில்லாத பெருமகிழ்ச்சியைப்பெற்றார்கள் எ—று.

பசைந்திடுமார்வம்-குழைந்த அன்பு. அசைதல்-தங்குதல், இருத்தல். (௧0)

ஒண்ணில வுமிழும் வேலோ னொலிகழற் றானை யோடுங்
கண்ணனை முதலா வுள்ள கடவுளர் குழுவி னோடும்
பண்ணவர் கிரிமேற் சென்று பாங்கரிற் றொழுது போந்த
விண்ணவர் புனைவன் றன்னை விளித்திவை புகல லுற்றான்.

இ—ள்: ஒள் நிலவு உமிழும் வேலோன்— பேரொளியைக்காலும் வேற்படையையேந்திய முருகக்கடவுள், ஒலி கழல் தானையோடும்—- ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய சேனைகளோடும், கண்ணனை முதல் ஆ உள்ள கடவுளர் குழுவினோடும்—திருமாலைமுதலாகவுடைய தேவர்கூட்டத்தாரோடும், பண்ணவர் கிரி மேல் சென்று-தேவகிரியிற்போய், பாங்கரில் தொழுது போந்த விண்ணவர் புனைவன் தன்னை விளித்து—பக்கத்திற் கைதொழுதுகொண்டுவந்த தேவத்தச்சனையழைத்து, இவை புகலல் உற்றான்-இவ்வாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளுவார் எ—று.

ஒள் நிலவு-பிரகாசிக்கின்ற ஒளி=பேரொளி. ஒலி கழல் வினைத்தொகை.(௧௧)

புகலுறுஞ் சூழ்ச்சி மிக்கோய் புங்கவ ராயு ளோருந்
தொகலுறு கணர்கள் யாருந் துணைவரும் யாமு மேவ
வகலுறு மினைய வெற்பி னருங்கடி நகர மொன்றை
விகலம தின்றி யின்னே விதித்தியால் விரைவி னென்றான்.

இ—ள்: புகலுறும் சூழ்ச்சி மிக்கோய்—வியந்துசொல்லத்தக்க உபாயபுத்தியிற் சிறந்தவனே!, புங்கவர் ஆய் உளோரும் தொகல் உறு கணர்கள் யாரும் துணைவரும் யாமும் மேவ-தேவர்களாயுள்ளவர்களும் தொகுதியாகிய பூதர்கள்யாவரும் (எமது)தம்பிமாரும் யாமும் இருத்தற்கு, அகல் உறும் இனைய வெற்பின்—விசாலமான இந்தமலையில், அரும் கடி நகரம் ஒன்றை—அருமையாகிய சிறந்த ஒருநகரத்தை, விகலமது இன்றி—குறைபாடின்றி, இன்னே—இப்பொழுது, விரைவில் விதித்தி என்றான்- சீக்கிரத்திற் படைப்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினார் எ—று.

மேவ விதித்தி, விகலமதின்றி விதித்தி எனத் தனித்தனியியையும். பிறராற் செய்துமுடித்தற்கரியதொழிற்சித்திரங்களையெல்லாம்எளிதிலமைத்தற்கேற்ற விவேகபுத்தியுடையாயென்பார் 'புகலுறுஞ்சூழ்ச்சிமிக்கோய்' எனவும், நாமாத்திரமன்று நம்பரிசனருமொருங்குவசித்தற்கேற்றவாறமைக்குதியென்பார் 'புங்கவராயுளோருந் தொகலுறுகணர்கள்யாருந்துணைவரும்யாமுமேவ-விதித்தி' எனவும், அங்ஙனம் பெரிதாயமைத்தற்கேற்

ற இடப்பரப்பினையுடையதென்பார் 'அகலுறுமினையவெற்பு' எனவும், அந்நகர் பொன்னகரினுஞ்சிறந்த பொற்புடைத்தாதல் வேண்டுமென்பதுபோதர 'அருங்கடிநகரமொன்றை-விதித்தி' எனவும், அது சிற்பநூலிற்கூறியவுறுப்புக்களிற் சிறிதுங்குறைவுடைத்தாகாமைவேண்டுமென்பார் 'விகலமதின்றி-விதித்தி' எனவும் கூறினார். (கஉ)

வேறு.

குழங்கல் வேட்டுவக் கோதைய ராடலுங்
கழங்கு நோக்கிக் களிப்பவன் மற்றிது
வழங்கு மெல்லை வகுப்பனென் றன்னவன்
றழங்கு நூபுரத் தாள்பணிந் தேகினன்.

இ—ள்: குழங்கல் வேட்டுவ கோதையர் ஆடலும் கழங்கும் நோக்கி களிப்பவன்—குழங்கல்மாலையையணிந்த வேட்டுவமாதர்களது விளையாட்டையும் கழங்காடலையும் பார்த்து மகிழ்பவராகியமுருகக்கடவுள், இது வழங்கும் எல்லை— இவ்வாசகத்தையருளிச்செய்தபொழுது, அன்னவன்—அத்தேவத்தச்சன், வகுப்பன் என்று—அங்ஙனமே யமைப்பேனென்றுகூறி, தழங்கும் நூபுர தாள் பணிந்து ஏகினன்— சிலம்புகளொலிக்கப்பெற்ற (அவரது)பாதங்களைவணங்கிச்சென்றான் எ—று.

குழங்கல்- மாலைவிசேடம் "குழங்கன்மாலைமல் லுப்பூத்தகன் றமார்பீர்" என்றார் பிறரும். ஆடல்கூத்தெனவுரைப்பாருமுளர். அம்மலையில் வசித்தற்குத்திருவுளம்பற்றியதற்கிணங்கக் குறிஞ்சிநிலத்துநிகழும்ஆடல்களைநோக்கிமகிழ்தலைப்புணர்த்தி 'குழங்கல்வேட்டுவக்கோதையராட லுங்கழங்குநோக்கிக்களிப்பவன்' என்றார். அன்னவன் தாள் என இயைத்து அம்முருகக்கடவுளது பாதமெனவுரைப்பினுமாம். தழங்குநூபுரத்தாள்-வடசொன்னடை. (கங)

மகர தோரணம் வாரியின் மல்கிய
சிகர மாளிகை செம்பொனின் சூளிகை
நிகரில் பற்பல வெள்ளல்க ளீண்டிய
நகர மொன்றினை யாயிடை நல்கினன்.

இ—ள்: மகரதோரணம் வாரியில் மல்கிய சிகர மாளிகை— மகரதோரணங்கள் வாயில்களினிறையப்பெற்ற தூபியினையுடைய மாளிகைகளும், செம்பொனின் சூளிகை—செம்பொன்னாலாகிய சூளிகைகளும், நிகர் இல் பற்பல வெள்ளல்கள்—ஒப்பில்லாத பலபல வீதிகளும், ஈண்டிய—நெருங்கப்பெற்ற, நகரம் ஒன்றினை-ஒருநகரத்தை, ஆயிடை நல்கினன்—அவ்விடத்து அமைத்தான் எ—று.

மல்கிய மாளிகை என இயையும். மகரதோரணமும் சூளிகையும் முன்னர்த் திருநகரப்படலத்தில் விளக்கப்பட்டன. (கச)

அவ்வ ரைக்க ணகன்பெரு நொச்சியுட்
கைவல் வித்தகக் கம்மியர் மேலவ
னெவ்வெ வர்க்கு மிறைவ னிருந்திடத்
தெய்வ தக்குல மொன்றுசெய் தானரோ.

இ—ள்: கைவல் வித்தக கம்மியர் மேலவன்-கைத்தொழிலில்வல்ல நுண்மதியினையுடைய தேவத்தச்சன், அ வரை கண்-அந்தத்தேவகிரியின்கண், அகன் பெரும் நொச்சியுள்—அகன்றபெரிய மதிலினுள், எ எவர்க்கும் இறைவன் இருந்திட—எத்தகைமேம்பாடுடையார்க்குந் தலைவராகிய முருகக்கடவுள் வீற்றிருக்கும்படி, தெய்வத குலம் ஒன்று செய்தான்—ஓர் தேவாலயத்தை யமைத்தான் எ—று.

கை-ஆகுபெயர். கம்மியர்மேலவன்-கைத்தொழிலாளருட்சிறந்தவன். எவ்வெவர்க்குமிறைவனிருந்திட என்றதனல் மிக்கசிறப்பமைய என்பதுபோதரும். (சரு)

மாற்ற ரும்பொன் வரையுண் மணிக்கிரி
தோற்றி யென்னச் சுடர்கெழு மாழையி
னேற்ற கோட்டத் திழைத்தனன் கேசரி
யாற்று கின்ற வரதனப் பீடிகை.

இ—ள்: மாற்ற அரும் பொன்வரையுள் மணிக்கிரி தோற்றி என்ன— விலக்குதற்கரிய [சிறந்த] பொன்மலையினுள்ளே மாணிக்கமலையொன்று காணப்பட்டாற்போல, சுடர் கெழு மாழையின் ஏற்ற கோட்டத்து—ஒளிவிளங்குகின்ற பொன்னலியற்றப்பட்ட கோயிலினுள், கேசரி ஆற்றுகின்ற அரதன பீடிகை இழைத்தனன்—சிங்கத்தாற்சுமக்கப்படுகின்ற இரத்தினசனத்தைச் செய்துவைத்தான் எ—று.

மாற்றுஅரும் பொன் எனக்கண்ணழித்து மாற்றுயர்ந்த சிறந்த பொன்னெனினுமாம். மாணிக்கமலையையுவமைகூறியதனல், சிங்காசனம் மாணிக்கரத்தினத்தாலானமை போதரும். மணி நவரத்தினங்களெனக்கூறுவாருமுளர்; அவர் மேல் இருபதாஞ்செய்யுளில்வரும் மாமணிஎன்பதற்கும் சிறந்த நவரத்தினங்கள் எனவுரைப்பர். ரத்நம் என்னும் வடமொழி அரதனமெனவிகாரமாயிற்று. (சசு)

இனைய தன்மையு மேனவு நல்கியே
மனுவின் றாதை வருதலு மள்ளர்த
மனிக மோடு மமரர்க டம்மொடு
முனையின் வேற்படை மொய்ம்பனங் கேகினன்.

இ—ள்: மனுவின் தாதை—மனுவென்னுங்கம்மியனது பிதாவாகிய தேவத்தச்சன், இனைய தன்மையும் ஏனவும் நல்கி வருதலும்— இத்தன்மையுடையவைகளையும் பிறவற்றையும் படைத்துத் திரும்பிவருதலும், மள்ளர்தம் அனிகமோடும் அமரர்கள் தம்மொடும்—சேனைவீரர்களுடனும் தேவர்களுடனும், முனையின் வேல் படை மொய்ம்பன் அங்கு ஏகினன்-கூரிய வேலாயுதத்தையுடைய வீரராகிய முருகக்கடவுள் அந்நகரத்துட்பிரவேசித்தார் எ—று.

மள்ளர்தம் அனிகமோடும்=அனிக மள்ளர் தம்மொடும். மனுவென்பானுக்குத் தேவத்தச்சன் பிதாவென்பதை "தொட்டாமனுத்தொன்மயனைத்தனுதசுதனென்னமுன்னமுதவிக்-கட்டாமரைக்குள்விதிபோலநல்குகலைகற்றுளானை" என மேல் தக்ஷகாண்டத்துச்சாலைசெய்படலத்திற் கூறுதலாலுமுணர்க. வேற்படைமொய்ம்பன்-வேலையேந்திய கையையுடையரெனினுமாம். (சஎ)

அறுமு கத்தவ னன்னக ரேகியே
துறும லுற்றிடுந் தொல்பெருந் தானையை
யிறுதி யற்ற விருக்கைகொ ளாவண
நிறுவ லுற்று நிகேதனத் தெய்தினன்.

இ—ள்: அறுமுகத்தவன்—ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள், அ நகர் ஏகி-அந்தநகரத்தினுட்பிரவேசித்து, துறுமல் உற்றிடும் தொல் பெரும் தானையை இறுதி அற்ற இருக்கை கொள் ஆவணம் நிறுவல் உற்று—நெருக்கமாகிய பழைய பெரிய பூதசேனைகளை அளவற்றமாளிகைகளையுடைய வீதியில்நிறுத்தி, நிகேதனத்த எய்தினன்—(தமக்காயமைக்கப்பட்டிருந்த) கோயிலினுட்சென்றருளினர் எ—று.

பெருந்தொகைச்சேனையென்பார் 'துறுமலுற்றிடுந்தொல்பெருந்தானை' எனவும், அவையெல்லாந்தங்கியிருத்தற்கேற்ற வீதியென்பார் 'இறுதியற்றவிருக்கைகொளாவணம்' எனவும் கூறினர். மேற்செய்யுளில் 'தணப்பரும்வீரரும் சூழ்தர ஏகினன்' எனக்கூறுதலால் ஈண்டுத்தானையென்றதற்குப்பூதசேனையென்றும். (சஅ)

இரதம் விட்டங் கிழிந்துபொற் பாதுகை
சரணம் வைத்துத் தணப்பரும் வீரருஞ்
சுரரு முற்றுடன் சூழ்தரத் துங்கவே
லொருவன் மற்றவ் வுறையுளி னேகினன்.

இ-ள்: துங்க வேல் ஒருவன்-உயர்ச்சிபொருந்திய வேலாயுதத்தையுடைய ஒப்பற்ற முருகக்கடவுள், இரதம் விட்டு அங்கு இழிந்து-ஏறிவந்ததேரைவிட்டு அவ்விடத்திலிறங்கி, பொன் பாதுகை சரணம் வைத்து— (வீரவாகுதேவராலிடப்பட்ட) பொன்னாலாகிய பாதரக்ஷையில் திருவடிகளைத்தூக்கிவைத்து, தணப்பு அரும் வீரரும் சுரரும் உற்று உடன் சூழ்தர—பிரிதலில்லாத இலக்கத்தொன்பதுவீரர்களும் தேவர்களும் அணுகித்தம்முடன்சூழ்ந்துவர, அ உறையுளின் ஏகினன்—அந்தத்திருக்கோயிலினுட்சென்றருளினார் எ—று.

அங்கென்றது கோயில்வாயிலை. பூதசேனையைப்போலப் புறத்தேநிறுத்தற்பாலரல்லரென்பதுபோதர 'தணப்பரும்வீரர்' எனவும், முன் வருணிக்கப்பட்ட கோயிலென்பதுபோதர 'அவ்வுறையுள்' எனவுங்கூறினார். (கக)

ஊறில் வெய்யவர் யாரு மொரோவழிச்
சேற லெய்திச் செறிந்தென வில்விடு
மாறில் செஞ்சுடர் மாமணிப் பீடமே
லேறி வைகினன் யாரினு மேலையோன்.

இ—ள்: ஊறு இல் வெய்யவர் யாரும் ஒரோவழி சேறல் எய்தி செறிந்து என-மறுவில்லாத சூரியர்களெல்லாம் ஓரிடத்துச்சென்று நெருங்கியதன்மையைப்போல, வில்விடும்—ஒளிவீசுகின்ற, மாறு இல் செம் சுடர் மா மணி பீட மேல்—ஒப்பில்லாத செவ்வொளியையுடைய மாணிக்கரத்தினாசனத்தின்மேல், யாரினும் மேலையோன் ஏறி வைகினன்-எவரினும் மேலவராகிய முருகக்கடவுள் இவர்ந்துவீற்றிருந்தார் எ—று.

ஒளிசிறிதுங்குறைவுபடாமைவேண்டி 'ஊறில்வெய்யவர்' என்றார். யாருமென்றதனாற் பன்னிருசூரியரையுங்கொள்க. எல்லாவண்டத்துமுள்ளஎல்லாச்சூரியருமெனினுமாம். (உ0)

பொழுது மற்றதிற் பூவின னாதியா
விழுமை பெற்றிடும் விண்ணவர் யாவருங்
குழும லுற்றுக் குமரனை யவ்விடை
வழிப டத்தம் மனத்திடை யுன்னினார்.

இ—ள்: பொழுது அதில்—அந்தச்சமயத்தில், பூவினன் ஆதியா விழுமை பெற்றிடும் விண்ணவர் யாவரும் அ இடை குழுமலுற்று—பிரமாமுதலாகவுள்ள சிறப்பினையுடைய தேவர்களெல்லோரும் அவ்விடத்தில் ஒருங்குகூடி, குமரனை வழிபட தம் மனத்திடை உன்னினார்-முருகக்கடவுளைப்பூசிக்குமாறு தங்கள்மனத்தில் நினைத்தார்கள் எ-று.

பொழுது அதில் = அப்பொழுதில். (உக)

புங்க வன்விழி பொத்திய வம்மைதன்
செங்கை தன்னிற் சிறப்பொடு தோன்றிய
கங்கை தன்னைக் கடவுள ருன்னலு
மங்கண் வந்தனை யட்பெரு மாநதி.

இ—ள்: கடவுளர்— தேவர்கள், புங்கவன் விழி பொத்திய அம்மைதன் செம் கை தன்னில் சிறப்பொடு தோன்றிய கங்கை தன்னை உன்னலும்—சிவபிரானது திருக்க

ண்களை யுடைய உமாதேவியாரது சிவந்த திருக்கைவிரல்களினின்றுஞ்சிறப்பினுடனேதோன்றிய கங்கைநதியை (வருமாறு) நினைக்க, அ பெரு மா நதி— அந்தப்பெரிய சிறந்த கங்கைநதி, அங்கண் வந்தது—அவ்விடத்து வந்தது எ—று.

கங்கையின்வரலாற்றை மேல் தக்ஷகாண்டத்துத் ததீசியுத்தரப்படலத்திற் காண்க. ஐகாரம் சாரியை. (௨௨)

சோதி மாண்கலன் றாயன பொற்றுகில்
போது சாந்தம் புகைமணி பூஞ்சுட
ராதி யாக வருச்சனைக் கேற்றன
வேது மாயிடை யெய்துவித் தாரரோ.

இ—ள்: சோதி மாண் கலன்—ஒளிபொருந்திய சிறந்த ஆபரணங்களும், தூயன பொன் துகில்—தூய்மையினையுடைய பீதாம்பரங்களும்,போது—மலர்களும், சாந்தம்-சந்தனக்குழம்பும், புகை-தூபமும், மணி—மணியும், பூ சுடர்-பொலிவாகிய தீபமும், ஆதி ஆக—முதலாக, அருச்சனைக்கு ஏற்றன ஏதும்—பூசைக்கேற்ற உபகரணங்களெல்லாவற்றையும், ஆயிடை எய்துவித்தார்— அவ்விடத்தே வருவித்தார்கள் எ—று.

சாந்தம்-ஆகுபெயர். (௨௩)

அண்டர் தொல்லை யமுத மிருத்திய
குண்ட முற்ற குடங்கர் கொணர்ந்திடா
மண்டு தெண்புனல் வானதி தன்னிடை
நொண்டு கொண்டனர் வேத நுவன்றுளார்.

இ—ள்: அண்டர் தொல்லை அமுதம் இருத்திய குண்டம் உற்ற குடங்கர் கொணர்ந்திடா—தேவர்கள் பழைய அமிர்தத்தை வைத்த ஆழமாகிய குடங்களைக்கொண்டுவந்து, வான் நதி தன் இடை—தேவகங்கையில், வேதம் நுவன்று உளார்—வேதமந்திரங்களை உச்சரித்தவர்களாய், மண்டு தெண் புனல் நொண்டு கொண்டனர்— நிறைந்த தெளிந்தநீரை முகந்துகொண்டார்கள் எ—று.

மிகச்சிறந்தகுடமென்பார் 'அமுதமிருத்திய-குடங்கர்' எனவும், கலங்குதலின்றித்தெளிந்த நீரை நிறையமுகந்தனராதலின் 'மண்டுதெண்புனல்-நொண்டுகொண்டனர்' எனவுங் கூறினர். அமுதம்-அமிர்தம் என்னும்வடமொழித்திரிபு. (௨௪)

அந்த வெல்லை யயன்முதற் றேவரு
முந்து கின்ற முனிவருஞ் சண்முகத்
தெந்தை பாங்கரி னண்டி யவன்பெயர்
மந்தி ரங்கொடு மஞ்சன மாட்டினர்.

இ—ள்: அந்த எல்லை-அச்சமயத்தில், அயன் முதல் தேவரும்—பிரமாமுதலிய தேவர்களும், முந்துகின்ற முனிவரும்—முதன்மைபொருந்தியமுனிவர்களும், சண்முகத்து எந்தை பாங்கரின் அண்டி—ஆறுதிருமுகங்களையுடைய எம்பரமபிதாவாகிய முருகக்கடவுளதுபக்கத்திற் செறிந்து, அவன் பெயர் மந்திரம் கொடு மஞ்சனம் ஆட்டினர்- அவரது திருநாமமமைந்த வேதமந்திரங்களைக்கூறி அபிடேகஞ்செய்தார்கள் எ—று. (௨௫)

வெய்ய வேற்படை விண்ணவற் கின்னணை
மைய மஞ்சன மாட்டிமுன் சூழ்ந்திடுந்
துய்ய பொன்னந் துகிலினை நீக்கியே
நொய்ய பஞ்சுறுகி னூதனஞ் சாத்தினர்.

இ—ள்: வெய்ய வேற்படை விண்ணவற்கு-கொடியவேலாயுதத்தையுடையமுருகக்கடவுளுக்கு, இன்னணம் ஐய மஞ்சனம் ஆட்டி-இவ்வாறு அழகிய திருமஞ்சனஞ்செய்து, முன் சூழ்ந்திடும் தூய்ய பொன்னம் துகிலினை நீக்கி—முன்தரித்திருந்த தூய்மையாகிய பீதாம்பரத்தைக்கழித்து, நொய்ய பல் துகில் தூதனம் சாத்தினர்—மிருதுவாகிய பலவஸ்திரங்களைப் புதிதாகத்தரித்தார்கள் எ—று.

பலதுகில் என்றது இரண்டுவஸ்திரங்களை. இன்னணம்-இன்னவண்ணமென்பதன்விகாரம். (௨௬)

வீற்றொர் சீய வியன்றவி சின்மிசை
யேற்றி வேளை யிருத்தி யவன்பெயர்
சாற்றி மாமலர் சாத்தித் தருவிடைத்
தோற்று பூவின் றொடையலுஞ் சூட்டினார்.

இ—ள்: வேளை—முருகக்கடவுளை, வீற்று ஓர் சீய வியன் தவிசின் மிசை ஏற்றி—வேறொருபெரிய சிங்காசனத்தில் எழுந்தருளச்செய்து, இருத்தி— இருக்கச்செய்து, அவன் பெயர் சாற்றி— அவரது திருநாமங்களைக்கூறி, மா மலர் சாத்தி— சிறந்த மலர்களைச்சூட்டி, தரு இடை தோற்று பூவின் தொடையலும் சூட்டினார்-கற்பகதருவிற்றோன்றிய பூவினாலாகிய மாலையையும் சாத்தினார்கள் எ—று.

உம்மை-எச்சம். தரு-தலைமைபற்றி ஈண்டுக்கற்பகத்தையுணர்த்தும். தருவிடைத்தோற்றுபூ-பொற்பூ. முன்னிருந்தஆசனத்தினுஞ் சிறந்ததாகலின் 'வியன்றவிசு'எனவும், விலக்கப்பட்டனதவிர்ந்து விதிக்கப்பட்டனதெரிந்து கொள்ளப்பட்ட மலரென்பார் 'மாமலர்' எனவும் கூறினார். (௨௭)

செய்ய சந்தனத் தேய்வைமுன் கொட்டின
ரைய பாளித மப்பினர் நாவியுந்
தூய்ய நானமுந் துன்னமட் டித்தனர்
மெய்யெ லாமணி மேவரச் சாத்தினார்.

இ—ள்: செய்ய சந்தன தேய்வை முன் கொட்டினர்—செம்மையாகிய சந்தனக்குழம்பை முன்னே பூசினார்கள், ஐய பாளிதம் அப்பினர்—அழகிய பச்சைக்கர்ப்பூரத்தை அப்பினார்கள், நாவியும் தூய்ய நானமும் துன்ன மட்டித்தனர்—புனுகையும் தூய்மையாகிய கஸ்தூரியையும் மிகப்பூசினார்கள், மெய் எலாம் அணி மேவர சாத்தினார்—திருமேனிமுழுவதும் ஆபரணங்களை இயையச் சாத்தினார்கள் எ—று.

அழகுறவென்பார் 'மேவர' என்றார். (௨அ)

சந்து காரகி றண்ணென் கருப்புரங்
குந்து ருக்கமொண் குக்குலு வப்புகை
செந்த ழற்சுடர் சீர்மணி யார்ப்பொடு
தந்து பற்றித் தலைத்தலை சுற்றினார்.

இ—ள்: சந்து—சந்தனமும், கார் அகில்- கரிய அகிலும், தண் என் கருப்புரம்-பச்சைக்கர்ப்பூரமும், குந்துருக்கம்—குந்துருக்கமும், ஒண் குக்குலுவ புகை—ஒளிபொருந்திய குங்குலியமுமென்னுமிவற்றாலாகிய தூபத்தையும், செம் தழல் சுடர்— சிவந்தநிறத்தையுடைய தீபத்தையும், சீர் மணி ஆர்ப்பொடு தந்து பற்றி—சிறந்த மணியோசையுடன் எடுத்தேந்தி, தலைத்தலை சுற்றினார்—இடமிடங்கடோறுஞ் சுற்றினார்கள் எ—று.

தழற்சுடர்-இருபெயரொட்டு. தீபாராதனைசெய்யும்வழி முகம் கண்கள் மூக்கு தனி கழுத்து நெஞ்சு பாதங்கள் என்னுமுறுப்புக்கட்குநேர்படக்காட்டி. ஒவ்வோர்சுற்றும் பிரணவாகாரமமைய மூன்றுமுறை வலமாய்ச்சுற்றவேண்டுமென்னும்விதிப்படிசுற்றினராதலின் 'தலைத்தலைசுற்றினார்' என்றார். (௨௯)

இத்தி றத்தவு மேனவு மெஃகவேற்
கைத்த லத்துக் கடவுட்கு நல்கியே
பத்தி மைத்திற னாற்பணிந் தேத்தினர்
சித்தி சங்கற்பஞ் செய்திடுஞ் செய்கையோர்.

இ—ள்: இ திறத்தவும் ஏனவும்-இங்கே கூறிய உபசாரங்களையும் பிறவுபசாரங்களையும், எஃக வேல் கைத்தலத்து கடவுட்கு நல்கி-கூரியவேலாயுதத்தையேந்திய திருக்கரத்தையுடைய முருகக்கடவுட்குச்செய்து, சித்தி சங்கற்பம் செய்திடும் செய்கையோர்-காரியசித்தியை உறுதிப்படுத்தியதன்மையையுடையவர்களாய், பத்திமை திறனால் பணிந்து ஏத்தினர்—அன்புமேலீட்டினால் வணங்கித்துதித்தார்கள் எ—று.

ஏன என்றது நைவேத்தியமுதலியன. பத்திமை என்பதில் மை பகுதிப்பொருள்விகுதி. சூரனைச்சங்கரித்தலும் தேவரைச்சிறைமீட்டலுமாகிய சித்திகள் ஒருதலையாற்கிடைக்குமென்னும் உறுதிப்பாடுடையராய்வணங்கினராதலின் 'சித்திசங்கற்பஞ்செய்திடுஞ்செய்கையோர்' என்றார். இதற்கு, சித்தியையெண்ணிச்சங்கற்பஞ் செய்தவர்களெனவும்பொருள்கூறுவர். (௯0)

தேவு கொண்ட சிலம்பினிற் பண்ணவ
ரேவ ருங்குழீஇ யின்னணம் பூசனை
யாவ தாற்ற வதுகொண் டமர்ந்தனன்
மூவி ரண்டு முகனுடை மொய்ம்பினோன்.

இ—ள்: தேவு கொண்ட சிலம்பினில்-தேவகிரியில், பண்ணவர் ஏவரும் குழீஇ-தேவரனைவரும் ஒருங்குகூடி, இன்னணம் பூசனை ஆற்ற— இவ்வாறு பூசையைச்செய்ய, மூவிரண்டு முகன் உடை மொய்ம்பினோன்—ஆறு திருமுகங்களையுடைய வீரராகிய முருகக்கடவுள், அது கொண்டு அமர்ந்தனன்—அப்பூசையை ஏற்றுக்கொண்டெழுந்தருளியிருந்தார் எ—று.

குழீஇ-குழுமி என்பதன்விகாரம். ஆவது அசைநிலை. மொய்ம்பு-ஆகுபெயராய் வீரத்தையுணர்த்திற்று. (௯க)

அமரர் வெற்பி லயிற்படை யேந்திய
விமல னுற்றது சொற்றன மேலினிச்
சமரி டைப்படு தாரகன் றந்திடு
குமர னுற்றது மற்றதுங் கூறுகேம்.

இ—ள்: அயில் படை எந்திய விமலன்—வேலாயுதத்தைத்தாங்கிய முருகக்கடவுள், அமரர் வெற்பில் உற்றது சொற்றனம்—தேவகிரியிலெழுந்தருளியிருந்த சரித்திரத்தைக்கூறினோம், மேல் இனி—இனி, சமர் இடை படு தாரகன் தந்திடு குமரன் உற்றதும் மற்றதும் கூறுகேம்—போர்க்களத்திலிறந்த தாரகாசுரன்பெற்ற புதல்வனாகிய அசுரேந்திரன் (ஆசுரபுரத்தினின்றுமீண்டு)வந்ததையும் பிறவற்றையுஞ்சொல்வேம் எ—று.

மேல் இனி-ஒருபொருட்கிளவிகள். மற்றது என்றது தகனக்கிரியைகளை முடித்ததும் மகேந்திரபுரத்திற்குப்போய்த்தன்பெரியதந்தையாகியசூரபன்மனுக்குணர்த்தியதும் முதலாயின. (௯உ)

தேவகிரிப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் கருசுரு.

---

# அசுரேந்திரன் மகேந்திரஞ்செல்படலம்.

அசுரேந்திரன் தன்பிதாவின் மரணத்தைச்சூரபன்மனுக்குத் தெரிவிக்கும்பொருட்டு வீரமகேந்திரபுரத்திற்குச்சென்றசரித்திரத்தைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

தாரகாசுரனது முதன்மனைவியாகிய சவுரியென்பவளும் மற்றைமனைவியரும் கணவனிறந்ததைக் கேள்வியுற்றுப் போர்க்களத்திற்சென்று அவன்மேல்விழுந்து புலம்ப, சிங்கமுகாசுரனைக் காணும்பொருட்டு ஆசுரபுரிக்குச்சென்றிருந்த அசுரேந்திரனும் வந்து பலவாறுபுலம்பி, பின் ஒருவாறுதெளிந்து, அவனுடலைத்தகனஞ்செய்தனன். உடனே மனைவியருஞ்சககமனஞ்செய்தனர். பின் அசுரேந்திரன் மகேந்திரபுரத்தையடைந்து பெரியதந்தையாகிய சூரபன்மனுக்கு அந்நிகழ்ச்சிகளைக்கூற, அந்நகரிலுள்ளாரனைவரும் கேட்டு அழுது புலம்பினர். பின் சூரபன்மன் ஒருவாறுதெளிந்து, கோபமுற்று, என்றம்பியைக்கொன்றவனை யான் ஒருகணத்தில் அழித்துவருவேனென்றுகூறிப் போர்க்குச்செல்லமுயன்று, அமோகனென்னும் மந்திரி பலவாறுபுத்திகூறித்தடுக்கக் கோபந்தணிந்து, பகைவரதுதிறமையை அறிந்துவருமாறு பலதூதுவரையேவி, முன்போல் அரசிருந்தனன் என்பதாம்.

எந்தை குமர னெறிந்ததனி வேற்படையாற்
றந்தி முகமுடைய தாரகன்றான் பட்டதனை
முந்துசில தூதர் மொழிய வவன்றேவி
யந்தமிலாக் கற்பிற் சவுரி யலக்கணுற்றாள்.

இ—ள்: எந்தை குமரன் எறிந்த தனி வேற்படையால்—எமது பரமபிதாவாகிய முருகக்கடவுளேவிய ஒப்பற்ற வேலாயுதத்தினால், தந்திமுகம் உடைய தாரகன் பட்டதனை—யானைமுகத்தையுடைய தாரகாசுரனிறந்ததை, முந்து சில தூதர் மொழிய—முந்திச்சென்ற சிலதூதர்கள்கூற, அவன் தேவி அந்தம் இலா கற்பில் சவுரி அலக்கண் உற்றாள்—அத்தாரகனது (சிறந்த) மனைவியாகிய அழிவற்ற கற்பினையுடைய சவுரியென்பவள்(கேட்டுத்) துன்பமெய்தினாள் எ—று.

சமர்க்களத்தினின்று தாரகனிறந்ததை அறிவிக்குமாறு ஓடிவந்த தூதுவர்பலருள் முந்திவந்தசிலரென்பார் 'முந்துசிலதூதர்' என்றார். (க)

வாழ்ந்த துணைவியர்கண் மற்றுள்ளோ ரெல்லோருஞ்
சூழ்ந்து பதைத்திரங்கத் துன்பத் துடனேகி
யாழ்ந்த கடல்படியு மம்மென் மயிலென்ன
வீழ்ந்து கணவன் மிசையே புலம்புறுவாள்.

இ—ள்: வாழ்ந்த துணைவியர்கள் மற்று உள்ளோர் எல்லோரும் சூழ்ந்து பதைத்து இரங்க—உடன்வாழ்ந்திருந்த மற்றைய மனைவியர்யாவரும் தன்னைச்சூழ்ந்து பதைத்துப்புலம்ப, துன்பத்துடன் ஏகி—துக்கத்துடன் (போர்க்களத்திற்)போய், ஆழ்ந்த கடல் படியும் அம் மென் மயில் என்ன— ஆழமாகிய சமுத்திரத்தில்மூழ்குகின்ற அழகிய மெல்லிய மயிற்பறவையைப்போல, கணவன் மிசை வீழ்ந்து— நாயகன்மேல்விழுந்து, புலம்புறுவாள்—(பின்வருமாறு) புலம்புவாள் எ—று.

கடல்கிடந்தவிடத்திற்கிடப்ப மயில் பறந்துபோய்வீழ்ந்து பதறினாற்போல, தாரகன்யாக்கை சமர்க்களத்திற்கிடப்பச் சவுரி அதனைத்தேடி ஓடிப்போய்வீழ்ந்து அல

றிப் புலம்புதலானும், கருநிறமுடைமையானும், கடலும் மயிலும் தாரகன்யாக்கைக்குஞ் சவுரிக்குமுவமையாயின. (௨)

சங்குற் றிடுசெங்கைத் தண்டுளவோன் றன்பதமா
மங்குற் றனையன் றயன்பதஞ்செல் வாயன்று
கங்கைச் சடையான் கயிலையிற்சென் றுயல்லா
லெங்குற் றனையவ் விறைவனருள் பெற்றுயே.

இ—ள்: சங்கு உற்றிடு செம் கை தண் துளவோன் தன் பதம் ஆம் அங்கு உற்றனை அன்று—(பாஞ்சசன்னியமென்னுஞ்) சங்கையேந்திய சிவந்தகையினையும் குளிர்ந்த துளசிமாலையையுமுடைய திருமாலினது வைகுண்டபதத்திற்போனீரல்லீர், அயன் பதம் செல்வாய் அன்று—பிரமதேவரது சத்தியலோகத்தும் போவீரல்லீர், கங்கை சடையான் கயிலையில் சென்றுய் அல்லால்-கங்காநதியையணிந்த சடையினையுடைய சிவபிரானது திருக்கைலாசகிரிக்குப்போயினீரேயன்றி, அ இறைவன் அருள் பெற்றுய் எங்கு உற்றனை-அந்தச்சிவபிரானதுகருணையைப்பெற்ற நாயகரே! (நீர்)வேறெங்கேபோயினீர் எ-று.

சிவபிரானிடத்தருள்பெற்ற நீர் வேறெத்தேவர்மாட்டுச்செல்லீர், அச்சிவபிரானிடத்திற்றுனே மீண்டும் அருள்பெறச்சென்றிருப்பீர் என்பதாம். பெற்றுயே என்பதில் ஏகாரத்தை அசையாக்காது விளியுருபெனக்கொள்ளினுமாம். (௩)

உந்து தனியாழி யுனக்கணியாத் தந்தோனு
மிந்திரனு மேனை யிமையவர்க ளெல்லோரு
மந்தகனுர் தாமு மனைவர்களு மின்றன்றே
சிந்தைதனி லுள்ள கவலையெலாந் தீர்ந்தனரே.

இ—ள்: உந்து தனி ஆழி உனக்கு அணியா தந்தோனும்— சமர்முகத்திலேவிய ஒப்பற்ற சக்கராயுதத்தை உமக்கு ஆபரணமாகத்தந்த திருமாலும், இந்திரனும்—இந்திரனும், ஏனை இமையவர்கள் எல்லோரும்—மற்றைய தேவர்கள்யாவரும், அந்தகனுர் தாமும்—யமனுரும், அனைவர்களும்— உன் பகைஞராயுள்ளார்பிறர்யாவரும், சிந்தைதனில் உள்ள கவலை எலாம் இன்று அன்றே தீர்ந்தனர்-மனத்திலுள்ள துன்பங்களெல்லாவற்றையும்இற்றைத்தினத்திலல்லவா நீங்கினுர்கள்? எ—று.

தனக்கிலக்காகிய பகைவரது உயிரைக்கவர்ந்தன்றி மீளாவியல்பினதாதலின் ஏவியவழித் தாரகனு யிரைக்கவருமாற்றலின்றிக் கழுத்திற்பற்றியவாறே பதக்கம்போற்கிடந்த சக்கரத்தைத் திருமால் இன்று பண்டுபோன்மீளப்பெற்றுக்கொண்டனராதலானும், இந்திரனும் மற்றையதேவர்களும் தந்தலைமைநீங்கி மாற்றுர்க்கடிமைபூண்டிருந்த துயரைநீங்கினராதலானும், யமன் உயிர்கவருமாற்றல்பெற்றனனுதலாலும் இவ்வாறுகூறிப்புலம்பினள். (௪)

பொன்னகரோர் யாரும் புலம்புற் றிடவவுணர்
மன்னவரோ டென்பால் வரும்பவனி காணுதேன்
றுன்னு பறவையினஞ் சூழத் துயிலுமுனை
யின்ன பரிசேயோ காண்பேனு லெம்பெருமான்.

இ—ள்: எம் பெருமான்-எமதுதலைவரே!, பொன்னகரோர் யாரும் புலம்பு உற்றிட—சுவர்க்கலோகத்திலுள்ள தேவரனைவருந் துயருற, அவுணர் மன்னவரோடு என்பால் வரும் பவனி காணுதேன்-அசுரத்தலைவர்களோடு என்னிடத்துவருகின்ற பவனிவரவைக்காணுதவளாகி, துன்னு பறவை இனம் சூழ துயிலும் உனை-நெருங்கியபட்சிக்கூட்டங்

கள் சுற்ற இறந்துகிடக்கின்ற உம்மை, இன்னபரிசேயோ காண்பேன்-இத்தன்மையாகவா யான் காணுவேன்! எ—று.

திக்குவிசயமுதலிய காரணங்கருதிச்சென்றகாலங்களில் தேவரைவென்று அசுரத்தலைவர்சூழப் பவனிவருதலைக்கண்டயான், இப்பொழுது பறவைகள்சூழக்கிடத்தலைக்காணலாயிற்றேயென்று துக்கித்தனள் என்பதாம். (௫)

புல்லா திருந்தனையான் புல்லுவது கண்டுமது
39 பல்லோருங் காணிற் பழியென் றொழிந்தாயேன்
மல்லாருந் தோளாய் மயக்குற்றேற் கோருரையுஞ்
சொல்லாய் வறிதே துயின்றாய் துனியுண்டோ.

இ—ள்: மல் ஆரும் தோளாய்-வலிமைபொருந்திய புயங்களையுடைய நாயகரே!, யான் புல்லுவது கண்டும் புல்லாது இருந்தனை-யான் உம்மைத்தழுவுவதைப்பார்த்தும் நீர் என்னைத்தழுவாதுகிடக்கின்றீர், அது பல்லோரும் காணில் பழி என்று ஒழிந்தாயேல்—அதனைப்பலருங்காணச்செய்யில் நிந்தையாமென்று விடுத்திராயின், மயக்குற்றேற்கு ஓர் உரையும் சொல்லாய்—மயங்கிக்கிடக்கின்ற தமியேனுக்குத் (தேற்றரவாக) ஒருவாசகத்தையேனுங் (கூறவேண்டும் அங்ஙனமும்) கூறாது, வறிதே துயின்றாய்—வாளாகிடந்தீர், துனி உண்டோ—(என்மீது யாதேனும்) வெறுப்புண்டா? (கூறுதிர்) எ—று.

யான் தழுவுந்தோறும் எதிர்தழீஇக்கோடலாகிய இயல்பை ஈண்டொழித்ததற்குக்காரணமுளதாயினும், நம்முடன் உரையாடாதிருத்தற்குக் காரணம்பிறிதின்று. என்மேல் வெறுப்பேயுளதாதல்வேண்டும் அஃதுளதேற்கூறுதிரென்றுவினவிப்புலம்பினளென்க. சொல்லாய்-முற்றெச்சம். (௬)

மையோ டுறழு மணிமிடற்றோன் றந்தவர
40 மெய்யா மெனவே வியந்திருந்தே னிந்நாளும்
பொய்யாய் விளைந்ததுவோ பொன்றினையா லென்றுணைவா
வையோ விதற்கோ வருந்தவமுன் செய்தாயே.

இ—ள்: என் துணைவா—என்பிராணநாயகரே!, மையோடு உறழும் மணி மிடற்றோன் தந்த வரம் மெய் ஆம் என—இருளையொத்த காளகண்டத்தையுடைய சிவபிரான் உமக்குத்தந்தருளிய வரம் உண்மையாமென்று, இ நாளும் வியந்து இருந்தேன்—இந்நாள்வரையும் புகழ்ந்திருந்தேன், பொய் ஆய் விளைந்ததுவோ— அவ்வரம் இப்போது பொய்யாய்முடிந்ததா? பொன்றினை ஆல்— இறந்தீரே, ஐயோ—ஐயகோ, இதற்கோ அரும் தவம் முன் செய்தாய்—இப்படி இறத்தற்கா அரியதவத்தை முற்காலத்திற்செய்தீர் எ—று.

முழுமுதற்கடவுளாகிய சிவபிரானிடத்து இறவாவரம்பெற்றீரென்று யான் நம்பியிருக்க, அவ்வெண்ணத்திற்குமாறாய் முடிந்தீரேயெனப்புலம்பினளென்க. (௭)

தன்னோ டிணையின்றித் தானே தலையான
41 முன்னோ னருள்புரிந்த முன்னோ னிளவல்வரி
னென்னோ வவனோ டெதிர்ந்தா யிறந்தனையே
யன்னோ விதிவலியை யாரே கடந்தாரே.

இ—ள்: தன்னோடு இணை இன்றி தானே தலை ஆன முன்னோன் அருள்புரிந்த முன்னோன் இளவல் வரின்—தமக்கு நிகராவாரின்றித் தாமே முதலாயிருக்கின்ற சிவபிரான்பெற்ற விநாயகக்கடவுளின்தம்பியாகிய முருகவேள் போர்செய்யப்புகின், அவனோடு என்னோ எதிர்ந்தாய்—அவரோடு என் எதிர்த்தீர், இறந்தனையே— (அங்ஙனம் எதிர்த்

ததனால்) இறந்தீரே, அன்னோ-ஐயோ, விதி வலியை யாரே கடந்தார்-விதியின்வல்லமையையார்தான்வென்றவர்கள்? (ஒருவருமில்லையே) எ—று.

தன்னின்மிக்காரையெதிர்த்துப்பொரஎவருமஞ்சுவராகவும் நீர் கடவுளின்மகனென்பதைக்கருதாதெதிர்த்துமாண்டது, விதிவழி புந்திமேவுதலாலேயாமென்பதாம். தன்னோடு என்பதில் ஒடு குவ்வுருபாகத்திரிக்கப்பட்டது. (அ)

சந்தார் தடம்புயத்துத் தானவர்க டற்சூழ
வந்தார் கமழு மரியணைமேல் வைகியநீ·
சிந்தா குலத்திற் செருநிலத்திற் றுஞ்சினையா
லெந்தாய் புகலா யிதுவுஞ் சிலநாளோ.

**இ—ள்:** சந்து ஆர் தடம் புயத்து தானவர்கள் தன் சூழ-சந்தனக்குழம்புசெறிந்த பெரிய புயங்களையுடைய அசுரர்கள் உம்மைச்சூழ, அம் தார் கமழும் அரியணைமேல் வைகிய நீ—அழகியமாலைகள் மணம்வீசுகின்ற சிங்காசனத்தின்மேலாசிருந்தநீர், சிந்தாகுலத்தில் செருநிலத்தில் துஞ்சினை— மனத்துயரோடு போர்க்களத்தின் மாண்டுகிடக்கின்றீர், இதுவும் சில நாளோ-இவ்வாழ்க்கையுஞ் சிலநாள்வாழ்க்கையா?, எந்தாய் புகலாய்—எனதுதலைவரே சொல்வீராக எ—று.

சிந்தா-ஆகுலம் = சிந்தாகுலம்; வடநூன்முடிபு. (கூ)

வென்றிமழு வேந்தும் விமல னுனக்களித்த
துன்றும் வரத்தியலை யுன்னினையாற் சூழ்ச்சியினை
யொன்று முணரா துயிருந் தொலைந்தனையே
யென்று தமியே னினியுன்னைக் காண்பதுவே.

**இ—ள்:** வென்றி மழு ஏந்தும் விமலன் உனக்கு அளித்த துன்றும் வரத்து இயலை உன்னினை—வெற்றியினையுடைய மழுப்படையையேந்திய சிவபிரான் உமக்குத்தந்த சிறந்தவரத்தினியல்பை நினைத்தீர், சூழ்ச்சியினை ஒன்றும் உணராது-(அவ்வரந்தருதற்கணிகழ்ந்த) தந்திரங்களைச் சிறிதும் அறியாது, உயிரும் தொலைந்தனை—ஆன்மாவையும் இழந்தீர், தமியேன் இனி உன்னை என்று காண்பது—துணையற்றேனாகியயான் இனி உம்மை எக்காலத்திற் பார்ப்பது? (ஒருபோதும்பார்க்கமாட்டேனே) எ—று.

தேவர்குறையிரந்துழி நம்முயிரைத்தொலைத்தற்கேற்ற உபாயமுள்பட, நூற்றெட்டுகங்காலும் வாழ்திரெனவும் நஞ்சத்திவெல்லுமெனவும் சிவபிரான் வரந்தந்தமையையுணராது,அழியாவரமென்றுநினைத்திறந்தீரேயென்பதாம். ஒன்று- அற்பமென்னும் பொருளில்வந்தது. சூழ்ச்சியொன்றினையும் எனப்பிரித்துக்கூட்டினுமாம். உயிரும் என்பதில் உம்மை-உயர்வுசிறப்பு. (௧௦)

வன்னி விழியுடையான் மைந்த னமர்புரிய
முன்னை வலிதோற்று முடிந்தா யெனக்கேட்டுப்
பின்னுமிருந் தேனென்னிற் பேரன் புடையோர்யா
ரென்னினியான் செய்கே னெனவே யிரங்குற்றாள்.

**இ—ள்:** வன்னி விழி உடையான் மைந்தன் அமர் புரிய—அக்கினியைத் தமது திருக்கண்களுளொன்றாகவுடைய சிவபிரானதுபுதல்வர் போர்செய்தலால், முன்னை வலி தோற்று முடிந்தாய் என கேட்டு—பண்டுள்ள வலிமைகெட்டு இறந்தீரென்று தூதர் சொல்லக் கேள்வியுற்று, பின்னும் இருந்தேன்-மேலும் உயிருடனிருந்தேன் (ஆதலின்), என்னில் பேரன்பு உடையோர் யார்—(கணவர்மாட்டு என்னினும்பார்க்கப்) பேரன்புடை

யோர் வேறியாவர்? (ஒருவருமில்லை), இனி யான் என் செய்கேன்—இனி யான் யாதுசெய்வேன், என இரங்குற்றுள்—என்று புலம்பினுள் எ—று.

கணவரிறந்தாரென்னுஞ்சொல்லைக்கேட்டமாத்திரத்துயிரிழக்குந்தேவியரே பேரன் புடையர், அங்ஙனஞ்செய்யாத யான் சிறிதுமன்பில்லேன் என்பதுகுறிப்பு. பின்னுமிருந்தேனென்னில்-என்பதற்கு,பின்னும் உயிருடனிருந்தேனுயின் எனப்பொருள்கூறுவாருமுளர். என் எவனென்பதன் விகாரம். இனித் தானிருத்தலாற் பயனின்றுதலின் 'என்னினியான்செய்கேன்' என்றுள். (கக)

45 மற்றைத் துணைவியரும் வந்தீண்டி மன்னவனைச்
சுற்றிப் புலம்பித் துயருற் றிடும்வேலை
யற்றத் தினனுகி யாசுரத்தின் பாற்போன
கொற்றப் புதல்வன் வினவிக் குறுகினனுல்.

இ—ள்: மற்றை துணைவியரும் வந்து ஈண்டி—மற்றையமனைவியர்களும் வந்துநெருங்கி, மன்னவனை சுற்றி புலம்பி துயருற்றிடும் வேலை—தாரகாசுரனைச்சூழ்ந்து புலம்பித்துக்கப்படும்பொழுது, ஆசுரத்தின் பால் போன கொற்ற புதல்வன்-ஆசுரபுரிக்குச் சென்றிருந்த வெற்றியினையுடைய புத்திரனுகிய அசுரேந்திரன்,அற்றத்தினன் ஆகி-சமயம்வாய்த்தவனுகிப் (புறப்பட்டு),வினவி-வழியிற்கேள்வியுற்று, குறுகினன்-வந்தான் எ-று.

உம்மை எச்சம். தன்பிதா இறந்தது தெரியாது சென்றகாரியமுற்றிப்புறப்பட்டு, வரும்வழியிற்கேள்வியுற்றுனுதலால் 'அற்றத்தினனுகி-வினவிக்குறுகினன்' என்றுர். இதற்குச்சிலர் பிறவாறுமுரைப்பர்; அவைபொருந்தா. முதனூலாரும் "[illegible]" [தற்செயலாகப்பிதாவைக்காணுமாவலுடையவனுய் விரைவில்வந்து இடைவழியிற் பிதாவிறந்தமையைக்கேள்வியுற்று]" எனக்கூறியுள்ளார். அற்றத்தினனுகிக்குறுகினன் என இயையும். கொற்றப்புதல்வனென்றுர், முதன்மனைவியின் புதல்வனுதலின். (கஉ)

46 தண்டா விறல்சேருந் தன்றுதை வீந்ததனைக்
கண்டா னுயிர்த்தான் கலுழ்ந்தான் கரங்குலைத்தா
னண்டாத சோகத் தழுங்கினுன் வெய்யகன
லுண்டா னெனவீழ்ந் தயர்ந்தா னுணர்ந்தனனே.

இ—ள்: தண்டா விறல் சேரும் தன் தாதை வீந்ததனை கண்டான்-(எத்துணை வலியுடையாருடன் பொரினுங்)குறைவடையாத வலிமைபொருந்திய தன்பிதாவாகிய தாரகாசுரன் இறந்ததைப்பார்த்து, உயிர்த்தான்—பெருமூச்செறிந்து, கலுழ்ந்தான்— அழுது, கரம் குலைத்தான்—கைகளையுதறி, அண்டாத சோகத்து அழுங்கினுன்-அடங்காத துயரத்துள்மூழ்கி, வெய்ய கனல் உண்டான் என வீழ்ந்து அயர்ந்தான்-கொடியஅக்கினியை விழுங்கியவன்போல விழுந்து அறிவுமயங்கி, உணர்ந்தனன்— சிறிதுநேரத்திற்றெளிந்தான் எ—று.

அண்டாதசோகம்-பெருந்துக்கம். (கங)

47 என்றுமுறு வின்ன லிடைப்பட் டவனெழுந்து
சென்று தனதன்னை திருத்தா ளிடைவீழா
வுன்றலைவன் யாண்டையா னேதாயன் னேயென்று
நின்று புலம்பி நினைந்தினைய செய்கின்றுன்.

இ—ள்: அவன்—அவ்வசுரேந்திரன், என்றும் உறு இன்னல் இடைபட்டு—எக்காலத்தும் அடையாத பெருந்துயரிலகப்பட்டு, எழுந்து சென்று—எழும்பிப்போய், தன

து அன்னை திரு தாள் இடை வீழா— தனது தாயாகிய சவுரியென்பாளது சிறந்த கால்க ளில்விழுந்து, அன்னே—தாயே!, உன் தலைவன் யாண்டையான் ஓதாய் என்று புலம்பி- உன்கணவர் எங்கேபோயினர் சொல்லுதியென்று புலம்பி, நின்று—பின் எழுந்துநின்று, நினைந்து இனைய செய்கின்றான்—ஆலோசித்து இவற்றைச்செய்வானாயினன் எ-று. (௧௪)

48 அன்னை முதலோரை யகல்வித் தொருசாரிற்
றுன்னுதிரென் றேவித் தொலையாத தானவரிற்
றன்னுழையோர் தம்மாற் றழலிந் தனமுதலா
மன்னு கருவி பலவும் வருவித்தான்.

இ—ள்: அன்னை முதலோரை அகல்வித்து— தாய்முதலியவர்களை அவ்விடத் தினின்றும் விலக்கி, ஒருசாரில் துன்னுதிர் என்று ஏவி— ஒருபக்கத்திற்சென்றிருங்களென்றனுப்பிவிட்டு, தொலையாத தானவரில் தன் உழையோர் தம்மால்— போரிலழியாதெஞ்சிய அசுரர்களுள் தன்பக்கத்தினிற்கின்றசிலரால், தழல் இந்தனம் முதலா மன்னு கருவி பலவும் வருவித்தான்— நெருப்பு விறகுமுதலாகப்பொருந்திய உபகரணங்கள் பலவற்றையும் அழைப்பித்தான் எ—று. (௧௫)

49 வந்த பொழுதுதனில் வன்களத்திற் றுஞ்சுகின்ற
தந்தைதனை முன்போற் றகவுபெற வொப்பித்தோ
ரெந்திரத்தேர் மீதேற்றி யீமத் திடையுய்த்துச்
சந்தனப்பூம் பள்ளி மிசையே தருவித்தான்.

இ—ள்: வந்தபொழுது தனில்—உபகரணங்கள் வந்துசேர்ந்தவுடன், வன் களத்தில் துஞ்சுகின்ற தந்தைதனை முன்போல் தகவுபெற ஒப்பித்து—வலிய போர்க்களத்திலிறந்த பிதாவை முன்போலத்தகுதியுற அலங்கரித்து, ஓர் எந்திர தேர்மீது ஏற்றி—யந்திரத்தையுடைய ஒரு தேரின்மேலேற்றி, ஈமத்து இடை உய்த்து—சுடுகாட்டிற்கொண்டு சென்று, சந்தன பூம் பள்ளி மிசை தருவித்தான்—சந்தனக்கட்டைகளாலடுக்கிய அழகிய சயனத்திற்கிடத்தினன் எ—று.

முன்போல்-உயிருடனிருக்கும்பொழுதுபோல். எந்திரம்-உருளை; குதிரைமுதலியவற்றானீர்க்கப்படாதியங்குதற்கேற்ற பொறிகளெனினுமாம். (௧௬)

50 ஈமக் கடன்க ளியற்றித்தன் றாதைதனைத்
தாமக் கனலாற் றகனம் புரிந்திடலுங்
காமுற் றனனென் கணவனுடன் செல்வதற்குத்
தீமுற் றருதி யெனவன்னை சென்றுரைத்தாள்.

இ—ள்: ஈம கடன்கள் இயற்றி—சுடுகாட்டிற்செயற்பாலனவாகிய கிரியைகளைச்செய்து, தன் தாதை தனை—தன்பிதாவை, தாம கனலால் தகனம் புரிந்திடலும்— ஒளிபொருந்திய அக்கினியினாற்றகனஞ்செய்தலும், அன்னை-தாயாகிய சவுரியென்பாள், சென்று-போய், என் கணவனுடன் செல்வதற்கு காமுற்றனன்-என நாயகனுடன்சககமனஞ்செய்தற்கு (யான்) விரும்பினேன், தீ முன் தருதி என உரைத்தாள்- (இவ்வக்கினிக்கு) முன்னாக வேறுமோரக்கினியை வளர்க்கக்கடவையென்று(மைந்தற்குக்) கூறினள் எ—று.

ஈமக்கடன் என்றது விதிப்படி அக்கினியுண்டாக்குதன்முதலாயின. பேரன்புடைய மனைவியர் கணவனிறந்து தகனம்நிகழும்பொழுது தாமும் அக்கினிப்பிரவேசஞ்செய்வர். அது சககமனம் எனப்படும். (௧௭)

51 நற்றாய் மொழிந்ததனைக் கேட்டு நடுநடுங்கிப்
பொற்றாள் பணிந்தென்னைப் போற்றி யிருத்தியெனச்

சொற்றா னதுமறுத்துத் தோகை சுளித்துரைப்ப
வற்றாக வென்றா னசுரேந் திரனென்பான்.

இ—ள்: நற்றாய் மொழிந்ததனை கேட்டு நடுநடுங்கி—பெற்ற தாயானவள் கூறிய வசனத்தைக்கேட்டு மிகநடுங்கி, பொன் தாள் பணிந்து—அவளது பொன்போன்ற கால்களைவணங்கி, என்னை போற்றி இருத்தி என சொற்றான்—தாயே! நீஎன்னைப் பாதுகாத்துக்கொண்டிருக்கக்கடவாயென்று கூறினான், தோகை—சவுரியென்பாள், அது மறுத்து சுளித்து உரைப்ப— அவ்வாசகத்தைமறுத்துக் கடிந்துபேச, அசுரேந்திரன் என்பான் அற்று ஆக என்றான்—அசுரேந்திரனென்பவன் அப்படியேயாகுகவென்று உடன்பாட்டுமொழிகூறினான் எ—று.

தந்தையிறந்ததுயர்தணியுமுன்னர்த் தாயுமிறப்பத் துணிந்தாளாதலின் நடுநடுங்கி மறுத்து, அதற்கிணங்காது பின்னுங்கடிய, தாய்சொன்மறுப்பது தகவன்றென்றுகருதியொருப்பட்டனனென்க. (௧௮)

ஏனையதோர் தாயர்களும் யாமுங் கணவனுடன்
வானகம்போ யெய்த வழங்கென் றிடவிசையா
வான படியே யழலமைக்க வன்னையரா
மானனையா ரெல்லோரும் வான்கனலி னுள்புக்கார்.

இ—ள்: ஏனையது ஓர் தாயர்களும்—மற்றைய தாய்மார்களும், யாமும் கணவனுடன் வான் அகம் போய் எய்த—நாங்களும் எங்கள் நாயகனுடன் சுவர்க்கலோகத்திற் போயடையும்படி, வழங்கு என்றிட—தழல்வளர்க்குதியென்றுகூற, இசையா—(அசுரேந்திரன்) உடன்பட்டு, ஆனபடியே அழல் அமைக்க—அப்படியே தீயைவளர்க்க, அன்னையர் ஆம் மான் அனையார் எல்லோரும்— அவனது தாய்மார்களாகிய பெண்களெல்லோரும், வான் கனலின் உள் புக்கார்—பெரிய அக்கினியிற்பிரவேசித்தார்கள் எ—று.

தாயர்களும் என்றிட என இயையும். மானனையார்-மானினோக்கம்போன்ற நோக்கத்தையுடையவர். அப்பெண்களனைவரும் வீழ்தற்கேற்றவாறென்பார் 'ஆனபடியே' எனவும், அதற்கேற்ப 'வான்கனல்' எனவும் விசேடித்தார். (௧௧)

புக்கதொரு காலை புலம்பியே யந்நகரை
யக்கணமே நீங்கி யசுரேந் திரனென்போன்
றக்க கிளைஞர்சிலர் தற்சூழ வேயேகி
மைக்கடலுள் வைகு மகேந்திரமூ தூருற்றான்.

இ—ள்: புக்கது ஒரு காலை—தீயில் வீழ்ந்திறந்தபின், அசுரேந்திரன் என்போன்—அசுரேந்திரனானவன், புலம்பி—துன்புற்று, அ நகரை அ கணமே நீங்கி—அந்த மாயமாபுரியை அந்தக்கணத்திற்றானேவிட்டுநீங்கி, தக்க கிளைஞர் சிலர் தன் சூழ ஏகி—சிறந்த உறவினர்சிலர் தன்னைச்சூழ்ந்துவரப்போய், மை கடலுள் வைகும் மகேந்திர முது ஊர் உற்றான்-கரிய சமுத்திரத்தினடுவிலிருக்கின்ற பழைய வீரமகேந்திரபுரியையடைந்தான் எ—று.

அக்கணமே என்பதில் ஏகாரம் தேற்றம். பலரிறந்தனராதலின் 'சிலர்-சூழ' என்றார்.

வேறு.

உளந்தளர் வெய்தித் தொல்லை யொளிமுக னிழந்து மேனி
தளர்ந்தனன் வறியன் போன்று தாரக முதல்வன் றந்த
விளந்தனி மைந்தன் வல்லே யேகலு மனைய நீர்மை
வளந்திகழ் தொல்லை வீர மகேந்திரத் தவுணர் கண்டார்.

இ—ள்: தாரக முதல்வன் தந்த இளம் தனி மைந்தன்—தலைவனுகிய தாரகாசுரன்பெற்ற ஒப்பற்ற இளமைப்பருவத்தையுடைய புதல்வனுகிய அசுரேந்திரன், உளம் தளர்வு எய்தி—மனஞ்சோர்வடைந்து, தொல்லை ஒளி முகன் இழந்து-பழைய முகப்பொலிவுகுன்றி, மேனி தளர்ந்தனன்—சரீரம்வாடி, வறியன் போன்று—தரித்திரனைப்போன்றவனுய், வல்லே வகலும்—விரைவில் வருதலும், அனைய நீர்மை—அத்தன்மையை, வளம் திகழ் தொல்லை வீரமகேந்திரத்து அவுணர் கண்டார்—வளப்பம்விளங்குகின்ற பழைய வீரமகேந்திரபுரத்திலுள்ள அசுரர்கள் பார்த்தார்கள் எ—று.

முகன்-போலி. ஒளிமுகம்=முகவொளி. முன்வருங்காலங்களில் உளங்கிளர்வெய்தன்முதலாகிய இயல்பமைந்துவரப் பலகாலுங்கண்டவர்களென்பதுபோதர 'தொல்லைவீரமகேந்திரத்தவுணர்கண்டார்' என்முர். (௨௧)

உரங்கிள ரவுணர் காணூஉ வொய்யெனத் துளங்கி யேங்கிக்
கரங்களை விதிர்த்துக் கண்ணீர் காறெறி படர்ந்து செல்லப்
பெருங்கட லுடைந்த தேபோற் பேதுற வெய்தி யாற்ற
விரங்கியிக் குமர னுற்ற தென்கொலென் றிசைக்க லுற்ருர்.

இ-ள்: உரம் கிளர் அவுணர் காணூஉ-வலிமைமிக்க அசுரர்கள் அவனைப்பார்த்து, ஒய் என துளங்கி ஏங்கி-விரைவாக நடுங்கி ஏக்கமுற்று, கரங்களை விதிர்த்து-கைகளையுதறி, கண்ணீர் கால் நெறி படர்ந்து செல்ல-கண்களினின்றும் சிந்தும் நீர் கால்களின் வழியே பரவியோட, பேதுறவு எய்தி—வருத்தமடைந்து, பெரும் கடல் உடைந்ததே போல் ஆற்ற இரங்கி—பெரியசமுத்திரங் கட்டுடைந்தாற்போல மிகவும் புலம்பி, இ குமரன் உற்றது என் கொல் என்று இசைக்கல் உற்ருர்-இம்மைந்தன் வந்தது யாதுகாரணம்பற்றியோவென்று (ஒருவரோடொருவர்) பேசுவாராயினுர் எ—று.

ஒய்-விரைவுக்குறிப்பு. பெருங்கடலுடைந்ததேபோல் இசைக்கலுற்ருர் எனஇயைத்துக் கூறுவாருமுளர். (௨௨)

வஞ்சமுங் கொலையுஞ் செய்யான் மற்றிவ னிதற்குத் தாதை
வெஞ்சினங் கொடுபோ கென்று விடுத்தனன் போலு மென்பார்
தஞ்சம தாகி யுள்ள தாரகன் கொடுமை நோக்கி
யஞ்சியே யவனை நீங்கி யடைந்தனன் கொல்லோ வென்பார்.

இ—ள்: இவன் வஞ்சமும் கொலையும் செய்யான்—இப்புதல்வன் வஞ்சகத்தையுங்கொலையையுஞ்செய்யமாட்டான், இதற்கு தாதை வெம் சினம் கொடு போக என்று விடுத்தனன் போலும் என்பார்—இதற்காகப்பிதாவாகிய தாரகன் கொடுங்கோபமுற்று இவ்விடத்தைவிட்டகலுதியென்று துரத்தினுன்போலும் என்பார்கள் சிலர், தஞ்சமது ஆகி உள்ள தாரகன் கொடுமை நோக்கி-அடைக்கலமாயிருந்த தாரகாசுரனதுதீமையைப்பார்த்து, அஞ்சி அவனை நீங்கி அடைந்தனன் கொல் என்பார்—பயந்து அவனைவிட்டுப்பிரிந்து இங்குவந்தான்போலுமென்று சொல்வார்கள் சிலர் எ—று.

போலும்-ஒப்பில்போலி. போக என்னும் வியங்கோளீற்றகரம்தொக்கது. (௨௩)

சீரொடு துறக்க நீத்துத் தேவர்கோ னுருவ மாற்றிப்
பாரிடை யுழந்தா னென்பார் மற்றவன் பரனை வேண்டிப்
பேரிகன் மாயம் வன்மை பெற்றுவந் தடுபோர் செய்யத்
தாரக னிறந்தான் கொல்லோ தளர்ந்திவன் வந்தா னென்பார்.

இ—ள்: தேவர்கோன்—இந்திரன், சீரொடு துறக்கம் நீத்து—தனது சிறப்பையும் சுவர்க்கலோகத்தையுமிழந்து, உருவம் மாற்றி பாரிடை உழந்தான் என்பார்- வேற்று

ருவங்கொண்டு பூவுலகத்திற்றிரிந்தானென்று பலர்பேசினர்கள், அவன்—அந்தஇந்திரன், பரனை வேண்டி—சிவபிரானைப்பிரார்த்தித்து, பேர் இகல் மாயம் வன்மை பெற்று வந்து-பெரும்போர் செய்தற்குரிய மாயத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொண்டுவந்து, அடு போர் செய்ய—கொலைத்தொழில்பொருந்திய போரைச்செய்ய, தாரகன் இறந்தான் கொல்—தாரகாசுரன் இறந்தான்போலும், இவன் தளர்ந்து வந்தான் என்பார்— இப்புதல்வன் தளர்ச்சியடைந்துவந்தானென்று சொல்வார்கள்சிலர் எ—று. (௨௪)

மாண்கிளர் தார கப்பேர் மன்னவன் பகைஞ ராற்று
58 மேண்கிளர் சமரில் வீந்தா னென்பதற் கேது வுண்டாற்
சேண்கிளர் நிவப்பா லெங்குந் தெரிகிர வுஞ்ச வெற்பிற்
காண்கில மவுணர் தம்மைப் பூழியே காண்டு மென்பார்.

இ—ள்: மாண் கிளர் தாரக பேர் மன்னவன்—மாட்சிமைமிகுந்த தலைவனாகிய தாரகாசுரன், பகைஞர் ஆற்றும் ஏண் கிளர் சமரில் வீந்தான் என்பதற்கு ஏது உண்டு—பகைவர்செய்த இறுமாப்புமிக்க போரிலிறந்தானென்பதற்குக்காரணமுண்டு, சேண் கிளர் நிவப்பால் எங்கும் தெரி கிரவுஞ்சவெற்பில்—ஆகாயம்வரையும் கிளருகின்ற உன்னதத்தோடு எல்லாவிடங்களிலுங்காணப்படுகின்ற கிரவுஞ்சமலையில், அவுணர் தம்மை காண்கிலம்—அசுரர்களைக்காணுகின்றிலோம், பூழியே காண்டும் என்பார்—தூளியையே காணுகின்றோமென்று சொல்வார்கள் சிலர் எ—று. (௨௫)

பையர வணையிற் றுஞ்சும் பகவன தாழி தன்னை
59 யையபொன் னணிய தாக வணிந்திடு மவுண னோடு
மொய்யமர் புரிவார் யாரே முரணொடு வெம்போர் சில்லோர்
செய்யினு மவரா லன்னோன் முடிகிலன் றிண்ண மென்பார்.

இ—ள்: பை அரா அணையில் துஞ்சும் பகவனது ஆழிதன்னை ஐய பொன் அணியது ஆக அணிந்திடும் அவுணனோடு—படம்பொருந்திய அனந்தனென்னுஞ் சர்ப்பமாகிய சயனத்தில் அறிதுயில்செய்கின்ற திருமால் செலுத்தியசக்கரத்தை அழகிய பொன்னாபரணமாகத்தரித்துள்ள தாரகாசுரனுடனே, மொய் அமர் புரிவார் யார்—நெருங்கியபோரைச்செய்யவல்லவர்கள் யாவர், சில்லோர் முரணொடு வெம் போர் செய்யினும்— சிலர் வலிமையுடன் கொடியபோரைச்செய்தாலும், அவரால் அன்னோன் முடிகிலன்— அவர்களால் அத்தாரகன் இறக்கமாட்டான், திண்ணம் என்பார்—இதுநிச்சயமென்று சொல்வார்கள்சிலர் எ—று. (௨௬)

60 அங்கையை யொருவன் வாளா லறுத்திடப் புலம்பி நங்கோன்
றங்கைவந் தமரார் தம்மைச் சயந்தனைச் சிறைசெய் வித்தா
ளிங்கிவன் றானுந் துன்புற் றேகுவா னின்று மற்றே
புங்கவர் தமக்கே யின்னல் புரிகுவன் போலு மென்பார்.

இ—ள்: ஒருவன் அம் கையை வாளால் அறுத்திட—ஒருவீரன் அழகியகையை வாளினால்வெட்ட, நம் கோன் தங்கை—எங்களரசனாகிய சூரபன்மனது தங்கையாகிய அசமுகி, புலம்பி வந்து—அழுதுகொண்டுவந்து, அமரர் தம்மை சயந்தனை சிறைசெய்வித்தாள்—தேவர்களையுஞ்சயந்தனையுஞ்சிறைவைப்பித்தாள், இங்கு இவன் தானும் துன்புஉற்று ஏகுவான்—இவனுந் துன்பங்கொண்டு வருகின்றான் (ஆதலின்), இன்றும் அற்றே-இன்றைக்கும் அப்படியே, புங்கவர் தமக்கு இன்னல் புரிகுவன் போலும் என்பார்—தேவர்களுக்குத்துன்பத்தைச்செய்வான்போலுமென்று சொல்வார்கள் சிலர் எ—று.

ஒருவனென்றது-வீரமாகாளரை. அசுரர்க்குப்பயந்து சீகாழிப்பதியிலொளித்திருந்த இந்திரன் மனைவியைக்காக்கும்படி வீரமாகாளரை நிறுத்திவித்துத் தான் கயிலைக்குச்சென்ற இடையில், அசமுகிசென்று, சூரபன்மனுக்கு அவளைக்கூட்டுமாறு வலிந்து, கையிற்பற்றியிழுக்க, வீரமாகாளர் வந்து, அசமுகியின்கையைவெட்டி இந்திராணியை விடுவித்தனர். பின் அசமுகி அந்நிகழ்ச்சிகளைத்தமையனாகிய சூரபன்மனுக்குணர்த்த,அவன் கோபமுற்று, பானுகோபனையேவி, தேவரையுஞ் சயந்தனையுஞ்சிறைப்படுத்துவித்து, சுவர்க்கலோகத்தைத்தீக்கிரையாக்கினன். இச்சரித்திரத்தை மேல் வரும் அசுரகாண்டத்திற்காண்க. (உஎ)

மணிகிள ரெழிலி வண்ணன் மற்றவ னொடுபோ ராற்று
னணியுல களித்த செம்ம லமர்த்தொழில் சிறிதுந் தேருன்
றணிவறு செயிர்மீக் கொண்ட தாரக னொடுபோர் செய்யி
னிணையக லீச னன்றி யாவரே வல்ல ரென்பார்.

இ—ள்: மணி கிளர் எழிலி வண்ணன் அவனொடு போர் ஆற்றுன்— அழகுவிளங்குகின்ற மேகம்போலுங் கருநிறத்தையுடைய திருமால் அத்தாரகனோடு போர்செய்யமாட்டார், அணி உலகு அளித்த செம்மல் அமர்த்தொழில் சிறிதும் தேருன்—அழகிய உலகத்தைப்படைத்த பிரமதேவர் போர்த்தொழிலைச்சற்றுயினும் உணரார், தணிவு அறு செயிர் மீ கொண்ட தாரகனொடு போர் செய்யின்-குறைவில்லாத கோபத்தைமிகவுமுடைய தாரகாசுரனோடு போர்செய்யவெண்ணின், இணை அகல் ஈசன் அன்றி யாவரே வல்லர் என்பார்- ஒப்பற்ற சிவபிரானேயல்லாமல் வேறியார்தான்வல்லவர்களென்று சொல்வார்கள்சிலர் எ—று.

திருமால் முன்பொருது தோற்றனராதலாலும் பிரமதேவர் பஞ்சாங்கஞ்சொல்பவராதலாலும் தாரகனோடு பொரமாட்டாரென்றெண்ணினரென்க. (உஅ)

இமையவர் கருடர் நாக ரியக்கர்கந் தருவ ரேனோர்
நமரிடு பணிக ளாற்றி நாடொறுந் திரிந்தா ரற்றுற்
சமரெதி ரிழைப்பா ரின்றித் தளர்ந்தன மிந்நாள் காறு
மமரினி யுளது போலு மையம தில்லை யென்பார்.

இ—ள்: இமையவர்—தேவர்களும், கருடர்—கருடர்களும், நாகர்—நாகர்களும், இயக்கர்—இயக்கர்களும், கந்தருவர்-கந்தருவர்களும், ஏனோர்-பிறரும், நமர் இடு பணிகள் ஆற்றி நாள் தொறும் திரிந்தார்—நம்மவர்கள்விதித்த ஏவல்களைச்செய்து தினந்தோறும் அலைந்தார்கள், அற்றால்—அதனால், எதிர் சமர் இழைப்பார் இன்றி இ நாள் காறும் தளர்ந்தனம்—எதிர்த்துப்போர்செய்பவரில்லாமல் இன்றுவரையும் மனஞ்சோர்ந்திருந்தோம், இனி அமர் உளது போலும்-இனிப் போருண்டுபோலும், ஐயமது இல்லை என்பார்—(இதற்குச்) சந்தேகமில்லையென்று சொல்வார்கள் சிலர் எ—று. (உகூ)

சேயிவ னலக்க ணெய்திச் செல்லுறு பரிசா லங்க
ணையதோர் தீங்கு போலு மையமின் றிதனை நாடி
நாயகன் விடுக்கு முன்ன நம்பெருந் தானை யோடு
மாயமா புரிகா றேகி யறிந்தனம் வருது மென்பார்.

இ—ள்: சேய் இவன் அலக்கண் எய்தி செல்லுறு பரிசால்— இந்தப்புதல்வன் துன்பங்கொண்டுவருந்தன்மையினால், அங்கண் ஓர் தீங்கு ஆயது போலும்— அவ்விடத்து யாதேனுமொருதீமை நிகழ்ந்ததுபோலும், ஐயம் இன்று — (இதற்குச்)சந்தேகமில்லை, நாயகன் விடுக்கும் முன்னம்—நமது தலைவனாகிய சூரபன்மன் அனுப்புதற்குமுன்னே,

நம் பெரும் தானையோடு மாயமாபுரி காறு ஏகி—எமது பெரியசேனைகளுடன் மாயமாபுரி வரையும் போய், இதனை நாடி அறிந்தனம் வருதும் என்பார்—இதனை ஆராய்ந்து தெரிந்துவருவோமென்று சொல்வார்கள் சிலர் எ—று.

நாடிவிடுக்குமுன்னம் என இயைத்துப்பொருள்கூறுவாருமுளர். (௬௦)

எனைப்பல வினைய வாற்று லியாவரு மவுண ரீண்டி
மனப்படு பைத லோடும் வயின்வயி னுரையா நிற்ப
நினைப்பருந் திருமிக் குள்ள நெடுமகேந் திரத்திற் சென்று
வனைப்பெருங் கழற்காற் சூர மன்னவன் கோயில் போந்தான்.

இ—ள்: அவுணர் யாவரும்—அசுரர்களெல்லோரும், வயின் வயின் ஈண்டி—இடங்கடோறுங் குழுமி, மனப்படு பைதலோடும்—மனத்திற்பொருந்திய வருத்தத்துடன், இனையவாற்றால்—இங்ஙனமாக, எனைப்பல உரையா நிற்ப—வேறும்பலபல வாசகங்களைக்கூறுநிற்க, நினைப்பு அரும் திரு மிக்கு உள்ள நெடு மகேந்திரத்தில் சென்று-நினைத்தற்கரிய செல்வத்தான்மேம்பட்டுள்ள நீண்ட மகேந்திரபுரியில்(அசுரேந்திரன்) போய், வனை பெரும் கழல் கால் சூர மன்னவன் கோயில் போந்தான்—அலங்கரிக்கப்பட்ட பெரிய வீரக்கழலையணிந்த காலையுடைய சூரபன்மனாகிய தலைவனது கோயிலிற்போயினான் எ—று.

எனை என்பது முதல்குறுகிற்று. வனை பெரும் என்பது பகரவொற்றுவிரித்தது. (௬௧)

போந்துதா ரகன்றன் மைந்தன் பொள்ளெனப் படர்த லோடும்
வாய்ந்தபே ரவைய மன்றில் வரம்பிலா வவுணர் போற்ற
வேந்தெழி லரிக டாங்கு மெரிமணித் தவிசின் மீக்கண்
வேந்தர்கள் வேந்தன் சூரன் மேவிவீற் றிருந்தான் மாதோ.

இ—ள்: தாரகன் தன் மைந்தன்—தாரகாசுரனது புதல்வனாகிய அசுரேந்திரன், போந்து-போய், பொள் என படர்தலோடும்-விரைவாக உட்புகுதலும், வாய்ந்த பேர் அவைய மன்றில்—சிறந்த பெரிய சபாமண்டபத்தில், வரம்பு இலா அவுணர் போற்ற—அளவிறந்த அசுரர்கள் துதிக்க, ஏந்து எழில் அரிகள் தாங்கும் எரி மணி தவிசின் மீக்கண்—அழகுபொருந்திய சிங்கங்களாற்சுமக்கப்படுகின்ற ஒளிமிகுந்த இரத்தினாசனத்தின்மேல், வேந்தர்கள் வேந்தன் சூரன்—அரசர்க்கரசனாகிய சூரபன்மன், மேவி வீற்றிருந்தான்—ஏறி அரசிருந்தான் எ—று.

மன்றில் வீற்றிருந்தான், போற்ற வீற்றிருந்தான் எனத்தனித்தனி இயையும். ஏந்தெழிலரிகள் = எழில் ஏந்த அரிகள். (௬௨)

வீற்றிருந் தரசு போற்றும் வேந்தனை யெய்தி யன்னோன்
காற்றுணை முன்னர் வீழ்ந்து கரங்களா லவற்றைப் பற்றி
யாற்றவு மாற்றல் செய்ய வவுணர்கோ னதுகண் டைய
சாற்றுதி புகுந்த தன்மை தளர்ந்தனை புலம்ப லென்றான்.

இ—ள்: வீற்றிருந்து அரசு போற்றும் வேந்தனை எய்தி—சிங்காசனத்திலிருந்து அரசியலைச்செய்கின்ற சூரபன்மனையணுகி, அன்னோன் கால் துணை முன்னர் வீழ்ந்து-அச்சூரபன்மனது இரண்டுகால்களுக்குமுன்னேவிழுந்து, கரங்களால் அவற்றை பற்றி—இருகைகளாலும் அவ்விருகால்களையும் பிடித்துக்கொண்டு, ஆற்றவும் அாற்றல் செய்ய—மிகவும்புலம்ப, அவுணர்கோன் அது கண்டு—அசுரர்க்கரசனாகிய சூரபன்மன் அச்செயலைப்

பார்த்து, ஐய—புதல்வனே!, புகுந்த தன்மை சாற்றுதி-நிகழ்ந்தசம்பவத்தைச்சொல்லுதி, தளர்ந்தனை புலம்பல் என்றான்—வருந்திப்புலம்பாதேயென்று கூறினான் எ—று.

மைந்தனை ஐய என்பது அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. (௫௩)

என்றலு மைந்தன் சொல்வா னிந்திரன் புணர்ப்பா லீசன்
வன்றிறற் குமரன் பூத வயப்படை தன்னொ டேகி
யுன்றனை யிளவ றன்னை யொண்கிர வுஞ்ச மென்னுங்
குன்றொடும் வேலாற் செற்றுக் குறுகினன் புவியி லென்றான்.

இ—ள்: என்றலும் மைந்தன் சொல்வான்— என்று சூரபன்மன் கூறப்புதல்வனாகிய அசுரேந்திரன்சொல்வான், ஈசன் வன் திறல் குமரன்—மிக்க வலிமையினையுடைய சிவகுமாரராகிய முருகக்கடவுள், இந்திரன் புணர்ப்பால்—தேவேந்திரனது சூழ்ச்சியால், வய பூதப்படை தன்னொடு ஏகி—வெற்றியினையுடைய பூதசேனைகளோடுவந்து, உன்தனது இளவல் தன்னை—உமதுதம்பியை, ஒண் கிரவுஞ்சம் என்னும் குன்றொடும்—ஒளிபொருந்திய கிரவுஞ்சமாகிய மலையினுடன், வேலால் செற்று— வேற்படையினாலழித்து, புவியில் குறுகினன்—பூவுலகத்தில்வந்திருக்கின்றார், என்றான்—என்றுகூறினான் எ—று.

தாரகனைத்தன்றந்தையெனக்கூறின் சூரபன்மனைவேறுபிரித்துக்காட்டுமாதலானும் அத்தாரகன் வரத்தினுந் திறலினும் மாயத்தினுஞ் சூரனையேநிகர்த்தவனாதலாலும் ‘உன்றனதிளவறன்னை’ எனவும், மிகச்சேய்மையினுந்தோற்றுமலையாகலின் ‘ஒண்கிரவுஞ்சம்’ எனவும், அவர் அத்துணையினமையாது நம்மனோரையுங்கொல்லவெண்ணி வருகின்றாரென்பதுதோன்ற ‘குறுகினன்புவியில்’ எனவும் கூறினான். (௫௪)

வெய்யசூ ரதனைக் கேளா விழுமிதென் றுருமி னக்குச்
சையமா மவுண னோடு தாரக வலியோன் றன்னை
மையுறழ் கண்டத் தண்ணன் மைந்தனோ வடுதல் செய்வான்
பொய்யிது வெருவன் மைந்த வுண்மையே புகறி யென்றான்.

இ—ள்: வெய்ய சூர் அதனை கேளா-கொடியசூரபன்மன் அவ்வாசகத்தைக்கேட்டு, விழுமிது என்று உருமில் நக்கு—(இவ்வாசகம்) நன்றாயிருக்கின்றதென்று இடியைப்போலச்சிரித்து, சையம் ஆம் அவுணனோடு—மலையாகிய (கிரவுஞ்சனென்னும்) அசுரனுடன், தாரக வலியோன் தன்னை—வலியுடையனாகிய தாரகாசுரனை, மை உறழ் கண்டத்து அண்ணல் மைந்தனோ அடுதல் செய்வான்—இருள்போன்ற காளகண்டத்தையுடைய சிவபிரானது குமாரனா அழிப்பான்?, இது பொய்—இவ்வாசகம் பொய்யேயாம், மைந்த—பாலகனே, வெருவல்—பயப்படாதே, உண்மையே புகறி என்றான்-உண்மையையேசொல்லுதியென்று கூறினான் எ—று.

சிவகுமாரன் சிறுபாலனாதலின், பெருவலிபடைத்துடைய தாரகனையும் கிரவுஞ்சமலையையும் அழிக்கமாட்டானென்றுகருதி இங்ஙனங்கூறினனென்க. (௫௫)

தாதைகேள் சரத மீது தாரகத் தந்தை தன்னை
மேதகு கிரவுஞ் சத்தை வேல்கொடு பரமன் மைந்தன்
காதினன் சென்றா னீமக் கடன்முறை யெந்தைக் காற்றி
மாதுயர் கொண்டு நின்பால் வந்தன னென்றான் மைந்தன்.

இ—ள்: தாதை கேள்—பிதாவே! கேட்பீராக, பரமன் மைந்தன்— சிவகுமாரராகிய முருகக்கடவுள், தாரக தந்தை தன்னை—தாரகாசுரனாகிய என்பிதாவையும், மேதகு கிரவுஞ்சத்தை— உயர்ச்சிமிகுந்த கிரவுஞ்சமலையையும், வேல் கொடு காதினன் சென்

னான்—வேற்படையினாலழித்துப்போயினார், எந்தைக்கு ஈமக்கடன் முறை ஆற்றி-(அதன் பின் யான்) என்பிதாவுக்குத் தகனக்கிரியைகளை விதிப்படிசெய்து, மா துயர் கொண்டு நின் பால் வந்தனன்—பெருந்துன்பங்கொண்டு உம்மிடத்துவந்தேன், ஈது சரதம்— இது சத்தியம், என்றான்—என்று கூறினான், மைந்தன்—அசுரேந்திரன் எ—று.

தாதை-அண்மைவிளி. இது-ஈது என முதனீண்டது. (௫௬)

வேறு.

[70] தோட்டுணைவ னாமிளவ லாஞ்சின னெனுஞ்சொற்
கேட்டலு முளத்திடை கிளர்ந்தது சினத்தீ
நாட்டமெரி கால்வபுகை நண்ணுவன துண்ட
மீட்டுபொறி சிந்துவன யாக்கையு ளுரோமம்.

இ—ள்: தோள் துணைவன் ஆம் இளவல் துஞ்சினன் எனும் சொல் கேட்டலும்—புயத்துணைவனாகிய தம்பி இறந்தானென்று (அசுரேந்திரன்)கூறிய வார்த்தையைக் கேட்டவுடன், உளத்திடை—மனத்தில், சின தீ கிளர்ந்தது— கோபாக்கினி அதிகரித்தது, நாட்டம் எரி கால்வ—கண்கள் அக்கினிப்பொறியைக்கக்குவன, துண்டம் புகை நண்ணுவன—மூக்கினின்று புகைதோன்றுவன, யாக்கை உள் உரோமம் ஈட்டு பொறி சிந்துவன—சரீரத்திலுள்ள மயிர்த்துவாரங்களெல்லாம் நெருங்கிய நெருப்புப்பொறிகளைச்சிதறுவன எ—று.

உடன்பிறப்புடையானைத் தோள்வலியுடையனாகவழங்குவர் ஆன்றோர். 'உடன்வந்தோன்மரித்திடுகில்வாகுவலிபோம்' என்னும் நீதிவெண்பாவானுமறிக. மேன்மேலுமூண்டு பகைவரைமுருக்குதலாற் சினத்தைத் தீயென்றார். (௫௭)

[71] நெறித்தபுரு வத்துணைக ணெற்றிமிசை சென்ற
கறித்தன வெயிற்றினிரை கவ்விய தரத்தைச்
செறித்தன துடித்தன தெழித்தவிதழ் செவ்வாய்
குறித்தது மனங்ககன கூடமு முடிக்க.

இ—ள்: நெறித்த புருவத்துணைகள் நெற்றிமிசை சென்ற—நெறிப்புக்கொண்ட இரண்டுபுருவங்களும் நெற்றியின்மேலுயர்ந்துசென்றன, எயிற்றின் நிரை அதரத்தை கவ்வி கறித்தன செறித்தன—பல்நிரைகள் கீழுதட்டைக் கவ்விக்கடித்து உட்படுத்தின, இதழ் துடித்தன—உதடுகள் துடித்தன, செவ் வாய் தெழித்த— சிவந்தவாய் ஒலித்தது, மனம் ககனகூடமும் முடிக்க குறித்தது—மனம் அண்டகூடத்தையும் அழிக்கக்கருதியது எ—று.

நெறித்தல்-நேர்மைமாறி முரிந்துதோன்றல். அதரம்-ஈண்டு, கீழுதடு. துடித்தன தெழித்தவிதழ்செவ்வாய்-நிரனிறை. உம்மை-உயர்வுசிறப்பு. (௫௮)

[72] இவ்வகை சினத்தெரி யெழுந்துமிசை கொள்ள
வவ்வெரியி னாற்றலை யவித்ததது போழ்தில்
வெவ்வினைகொ டாரகன் மிசைத்தொடரு மன்பாற்
றெவ்வர்புகழ் சூரனிடை சேர்ந்ததுய ராழி.

இ—ள்: இ வகை—இப்படியாக, தெவ்வர் புகழ் சூரன் இடை—பகைவரும்புகழுகின்ற சூரபன்மனிடத்து, சினத்து எரி எழுந்து மிசை கொள்ள—கோபாக்கினி எழும்பி மேற்கொள்ள, அதுபோழ்தில்— அப்பொழுது, வெவ் வினை கொள் தாரகன் மிசை தொடரும் அன்பால் சேர்ந்த துயர் ஆழி—கொடிய தீவினையையுடைய தாரகாசுரன்மே

ற்பற்றியுள்ள அன்பினுற்றோன்றிய துன்பக்கடல், அவ் எரியின் ஆற்றலே அவித்தது— அந்தக்கோபாக்கினியின்வலியையழித்தது எ—று.

தன்னுட்பட்டாரை மீளவிடாதமிழ்த்துதலின், துயர் ஆழி எனப்பட்டது. சினத்தைத் தீயாக உருவகித்ததற்கு, அதனையவிக்குந்துயரைக் கடலாகவுருவகித்தது இயைபாதல்காண்க. தெவ்வரும் என்பதில் எச்சவும்மைதொக்கது. (௬௯)

73 துப்புநிகர் கண்புனல் சொரிந்தநதி யேபோன்
மெய்ப்புறம் வியர்த்தமிக வெள்ளமவை யீண்டி
யப்புணரி யானதுய ராழியது வென்றே
செப்புபொரு ளுண்மையது தேற்றியது போலும்.

இ—ள்: துப்புநிகர் கண் நதியே போல் புனல் சொரிந்த—பவளம்போற் சிவந்தகண்கள் ஆற்றையேபோல நீரைச்சொரிந்தன, மெய்ப்புறம் மிக வியர்த்த-சரீரம் மிகவும் வியர்வைகொண்டது, வெள்ளம் அவை ஈண்டி-அந்தவெள்ளங்கள் செறிந்து, அ புணரி ஆன—அந்தச்சமுத்திரம்போலாயின, அது-அத்தன்மை, துயர் ஆழியது என்று செப்பு பொருள் உண்மை தேற்றியது— துன்பத்தைச் சமுத்திரமென்றுசொல்லுகின்றகருத்தினுண்மையை விளக்கியது எ—று.

இடைவிடாது மிகச்சொரிதலின் 'நதியேபோற்சொரிந்த' என்றார். போலும் அசைநிலை. கண்ணீரும் வியர்வைநீருஞ்சேர்ந்து கடல்போற்பெருகி, துயரைக் கடலென்றுகூறும்வருணனையை உண்மையாக்கினவென்பதாம். அப்புணரியென்றதில் அகரம் உண்மையான கடலைச்சுட்டிற்று. (௭௦)

74 பருவர லெனும்புணரி யூடுபடி வுற்றே
யரியணை மிசைத்தவறி யம்புவியில் வீழா
வுருமென வரற்றின னுணர்ந்ததனை யஞ்சி
நரலையொடு பாரக நடுங்கியதை யன்றே.

இ—ள்: பருவரல் எனும் புணரி ஊடு படிவுற்று— துன்பமாகிய கடலில்முழ்கி, அரி அணை மிசை தவறி அம்புவியில் வீழா—சிங்காசனத்தினின்றுந்தவறி அழகிய பூமியில்விழுந்து, உரும் என அரற்றினன்—இடியைப்போலக் கதறினன், அதனை உணர்ந்து அஞ்சி—அவ்வோசையைக்கேட்டுப் பயந்து, நரலையொடு பாரகம் நடுங்கியது—கடலும் பூமியும் நடுங்கின எ—று.

நரலையொடுபாரகம்நடுங்கியது-பன்மையினொருமைவந்தவழுவமைதி. ஐகாரம் சாரியை. பெருமுழக்கமுறக்கதறினனுதலின் 'உருமெனவரற்றினன்' என்றார். (௭௧)

75 கூற்றுள நடுங்கிய குலைந்தது செழுந்தீக்
காற்றுவெரு வுற்றது கதிர்க்கடவுள் சோம
னேற்றமிகு கோளுடு விரிந்தபுவி முற்று
மாற்றிய பணிக்கிறையு மஞ்சிய தலைந்தே.

இ—ள்: கூற்று உளம் நடுங்கிய-யமன் மனம் நடுங்கியது, செழும் தீ குலைந்தது-செழுமையாகிய அக்கினி நிலைகெட்டது, காற்று வெருவுற்றது— வாயு பயந்தது, கதிர்க்கடவுள் சோமன் எற்றம் மிகு கோள் உடு இரிந்த—சூரியனுஞ் சந்திரனும் உயர்ச்சிமிகுந்தகிரகங்களும் நாண்மீன்களும் அஞ்சியோடின, புவிமுற்றும் ஆற்றிய பணிக்கு இறையும் அலைந்து அஞ்சியது—பூவுலகமுழுதையுஞ்சுமந்திருக்கின்ற ஆதிசேடனும் அலைந்து பயந்தது எ—று.

நடுங்கியது என்பதில் துவ் விகுதிதொக்கது. கூற்றுமுதலியன தெய்வப்பெயர்களாதலின் அஃறிணைவினைமுற்றேடுமுடிந்தது வழுவன்றென்க. இரிதல்-தாமிருக்குமிடத்தைவிட்டோடுதல். அலைதல்-நிலைபெயர்தல். (௪௨)

76 பாங்கருறு தானவர்கள் பாசறையின் மூழ்கி
யேங்கினர் விழுந்தன ரிரங்கினர் தளர்ந்தா
ராங்கனைய போழ்துதனி லந்நகர மெல்லா
மோங்குதுயர் கொண்டுகலு ழோசைமலிந் தன்றே.

இ—ள்: பாங்கர் உறு தானவர்கள்—பக்கங்களிலிருந்த அசுரர்கள், பாசறையில் மூழ்கி—துன்பத்திலழுந்தி, ஏங்கினர் விழுந்தனர் இரங்கினர் தளர்ந்தார்—ஏக்கமுற்று நிலத்தில்விழுந்து வருந்தித் தளர்ச்சியடைந்தார்கள், அனைய போழ்துதனில்-அப்பொழுது, அ நகரம் எல்லாம் ஓங்கு துயர் கொண்டு— அந்நகரத்திலுள்ளவர்களெல்லாரும் பெருந்துன்பங்கொள்ள, கலுழ் ஓசை மலிந்தன்று—அழுகையோசை மிகுந்தது எ—று.

கொண்டு எச்சத்திரிபு. திரிபாகக்கொள்ளாது கலுழ் என்னும் வினைத்தொகையோடியைப்பாருமுளர். மலிந்தன்று றவ்விகுதியும் தகரவிடைநிலையும் அன் சாரியையும் பெற்றுமுடிந்த அஃறிணையொன்றன்பாற்படர்க்கைவினைமுற்று. (௪௩)

77 ஆனபொழு தத்தினி லழுங்கலுறு சூரன்
போனதொரு சீற்றவழல் புந்தியிடை மூள
மானமொடு நாணமட வல்லையி லெழுந்தே
தானுடைய வேவலர் தமக்கிவை யுரைப்பான்.

இ—ள்: ஆன பொழுதத்தினில்—அச்சமயத்தில், அழுங்கல் உறு சூரன்—வருத்தமெய்திய சூரபன்மன், போனது ஒரு சீற்ற அழல் புந்தியிடை மூள—முன்னர்த்(தோன்றித்) தணிந்தகோபாக்கினி மனத்தில் (மீளவும்) கிளரவும், மானமொடு நாணம் அட-அபிமானமும் வெட்கமும் நலியவும், வல்லையில் எழுந்து— விரைவிலெழும்பி, தான் உடைய ஏவலர் தமக்கு இவை உரைப்பான்— தன்னுடைய ஏவலாளர்களைப்பார்த்து இவ்வாசகங்களைக்கூறுவான் எ—று.

தன்னுடைய எனற்பாலது-விகாரமின்றித் தானுடைய எனநின்றது. துயரத்தை உறுந்துணையுமுற்று ஒருசிறிதுதெளிந்தவனென்பதுபோதர 'அழுங்கலுறுசூரன்' என்றார். தன்றம்பியைக்கொன்றானைத்தப்பாது கொல்லவேண்டுமெனமானமும், ஒருசிறுபாலகன் உலகனைத்தையுமொருகுடைக்கீழ்ப்படுத்தியாளுமென்றம்பியைக்கொன்றானேயெனநாணமும் மிகக்கொண்டனனாதலின் 'மானமொடுநாணமட' என்றார். (௪௪)

78 மன்னிளவ லாருயிரை மாற்றிவரு கந்தன்
றன்னிகல் கடந்துசய மெய்திவரல் வேண்டு
மென்னிரதம் வெம்படை யிடுங்கவசம் யாவு
முன்னுகண மொன்றின்முன முய்த்திடுதி ரென்றான்.

இ—ள்: மன் இளவல் ஆர் உயிரை மாற்றி வரு கந்தன் தன் இகல் கடந்து—நிலைபெற்ற என்றம்பியின் அரிய உயிரை அழித்துவருகின்ற கந்தனது வலிமையையடக்கி, சயம் எய்தி வரல் வேண்டும்—வெற்றிபெற்றுவரவேண்டும் (ஆதலின்), என் இரதம்—எனதுதேரும், வெம் படை—கொடிய ஆயுதங்களும், இடும் கவசம்—அணிகின்ற சட்டையுமாகிய, யாவும்-எல்லாவற்றையும், உன்னு கணம் ஒன்றின் முனம் உய்த்திடுதிர் என்றான்—நினைக்கப்படுகின்ற ஒருகணப்பொழுதினுள்ளே கொணர்வீராகவென்று ஆஞ்ஞாபித்தான் எ—று.

முனம் தொகுத்தல். போர்முகத்திற் புறங்கொடாதுநின்று பொருமாற்றலுடையனென்பான் 'மன்னிளவல்' எனவும், தெய்வப்படைகளானுஞ் செகுத்தற்கரிதாயவுயிரென்பான் 'ஆருயிர்' எனவும், கழிந்ததோ அன்றோ என என்னுதற்கருதப்பட்டுக்கொண்டிருக்குங்கணமென்பான் 'உன்னுகணம்' எனவும் கூறினன். (௬௫)

79 இறையிவை புகன்றிடலு மேவலர்கள் யாரு
முறையிலவை யுய்த்திடுதன் முன்னினர்கள் போனு
ரறைகழ லுடைத்தகுவ ரன்னசெய னாடிக்
குறைவிலனி கங்களொடு கொம்மென வணைந்தார்.

இ—ள்: இறை இவை புகன்றிடலும்—சூரபன்மன் இவ்வாறுகூற, ஏவலர்கள் யாரும்—(கேட்ட) ஏவலாளர்கள்யாவரும், முறையில் அவை உய்த்திடுதல் முன்னினர்கள் போனார்—முறைப்படி அவற்றைக்கொண்டுவரும்பொருட்டுச் சிந்தித்துப் போயினார்கள், அறை கழல் உடை தகுவர்—ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய அசுரர்கள், அன்ன செயல் நாடி—அத்தன்மையயறிந்து, குறைவு இல் அனிகங்களொடு கொம் என அணைந்தார்—குறைவற்ற சேனைகளுடன் விரைவில்வந்து கூடினார்கள் எ—று.

கொம்-விரைவுக்குறிப்பு. (௬௬)

80 ஆயசெயல் காண்டலு மமைச்சரி லமோகன்
மாயைதரு சூரனடி வந்தனை புரிந்தே
யேயதொரு மாற்றம திசைப்பலது கேண்மோ
தீயசின மெய்திட லெனவினைய செப்பும்.

இ—ள்: அமைச்சரில் அமோகன்— அங்குள்ள மந்திரிமாருள் அமோகனென்பவன், ஆயசெயல் காண்டலும்—அச்செயலைப்பார்த்தவுடன், மாயை தரு சூரன் அடி வந்தனை புரிந்து—மாயவள்பெற்ற புதல்வனாகிய சூரபன்மனது கால்களைவணங்கி, ஏயது ஒரு மாற்றமது இசைப்பல்—(அரசனே! யான்) உமக்கேற்ற ஒருவார்த்தையைச்சொல்லுகின்றேன், அது கேள்—அதனைக் கேட்பீராக, தீய சினம் எய்திடல்—கொடுங்கோபங்கொள்ளற்க, என—என்றுகூறி, இனைய செப்பும்—(அதன்மேல்) இவ்வாசகத்தைச்சொல்வான் எ—று.

உமக்கு நன்மைபயக்கும்வாசகமென்பான் 'ஏயதொருமாற்றம்' எனவும், அது நுங்கோட்பாட்டிற்கிணங்காததென்பதுதோன்ற 'தீயசினமெய்திடல்' எனவும் கூறினன்.

வேறு.

81 நஞ்சுறை படைகள் கற்று நவையுறு தொன்ன லாரை
வஞ்சினத் தெறியும் வீரர் வளநக ரதனை மாற்றோ
ரிஞ்சியைச் சூழ்ந்து போருக் கெய்தினு மெண்ணி யன்றி
வெஞ்சினத் தினைமேல் கொண்டு விரைந்தம ரியற்றச் செல்லார்.

இ-ள்: நஞ்சு உறை படைகள் கற்று-நஞ்சுபூசப்பெற்ற படைக்கலங்களின்வித்தைகளைப்பயின்று, நவை உறுது-குற்றம்பொருந்தாமல், ஒன்னலாரை-பகைவர்களை, வஞ்சினத்து எறியும் வீரர்-சபதஞ்செய்து கொல்லுகின்றவீரர்கள், மாற்றோர் வளநகரதனை இஞ்சியை சூழ்ந்து போருக்கு எய்தினும்—பகைவர் வளப்பம்பொருந்திய நகரத்தினதுமதிலைவளைந்து போர்செய்யவந்தாலும், எண்ணி அன்றி— ஆலோசித்தல்லாமல், வெம் சினத்தினை மேல்கொண்டு விரைந்து அமர் இயற்ற செல்லார்— கொடுங்கோபத்தைத்தலைக்கொண்டு சீக்கிரத்திற் போர்செய்யப்போகமாட்டார்கள் எ—று.

படை ஆகுபெயர். நவை-புறங்காட்டிஞனைக்கோறல் மாயத்தாற்கோறல் முதலியன. சினைக்கு ஐயுருபுவிரித்ததற்கேற்ப முதலின்கணுள்ள ஐயுருபை ஆறனுருபாக்கிப் பொருள்கூறினும். உம்மை உயர்வுசிறப்பு. (சஅ)

82 குலத்தினை வினவி யுள்ளக் கோளினை வினவி வந்த
நிலத்தினை வினவித் தொல்லோர் நெறியினை வினவிக் கொண்ட
சலத்தினை வினவிப் போர்செய் தானையை வினவி யன்னோர்
வலத்தினை வினவி யல்லான் மற்றொன்று மனங்கொள் வாரோ.

இ—ள்: குலத்தினை வினவி—(பகைவரது) சாதியை ஆராய்ந்தும், உள்ளக்கோளினை வினவி—மனக்கோட்பாட்டை ஆராய்ந்தும், வந்த நிலத்தினை வினவி—இருக்கின்றதேசத்தை ஆராய்ந்தும், தொல்லோர் நெறியினை வினவி— முன்னோர்களது வரன்முறைகளை ஆராய்ந்தும், கொண்ட சலத்தினை வினவி— தம்மேற்கொண்டவிரோதத்தின் காரணத்தை ஆராய்ந்தும், போர் செய் தானையை வினவி—போர்செய்கின்றசேனைத்தொகையை ஆராய்ந்தும், அன்னோர் வலத்தினை வினவி அல்லால்— அவர்களதுவீரத்தை ஆராய்ந்தும் அன்றி, மற்று ஒன்று மனங்கொள்வாரோ—வேறொன்றைப் (பெரியோர்) மனத்தினினைப்பார்களா? (நினையார்கள்) எ—று.

இவற்றையெல்லாமுணருமுன் போர்செய்யத்துணியாரென்பதாம். (சகூ)

83 வரத்தினில் வலியி ஞரோ மாயையில் வலியி ஞரோ
கரத்தினிற் படைக்க லத்தின் கல்வியில் வலியி ஞரோ
வுரத்தினில் வலியி ஞரோ வுணர்ச்சிசே ரூக்க மான
சிரத்தினில் வலியி ஞரோ வென்றிவை தேர்வ ரன்றே.

இ—ள்: வரத்தினில் வலியிஞரோ— (பகைவர்) வரத்தாற்சிறந்தவர்களா?, மாயையில் வலியிஞரோ— மாயத்தாற்சிறந்தவர்களா?, கரத்தினில் படைக்கலத்தின் கல்வியில் வலியிஞரோ-கையிலேந்திய படைக்கலங்களின்பயிற்சியாற் சிறந்தவர்களா?, உரத்தினில் வலியிஞரோ-சரீரபலத்தாற்சிறந்தவர்களா?, உணர்ச்சி சேர் ஊக்கம் ஆன சிரத்தினில் வலியிஞரோ—உய்த்துணர்வுபொருந்திய உற்சாகமாகிய முதன்மையாற் சிறந்தவர்களா?, என்று இவை தேர்வர்-என்று இவற்றையெல்லாம் ஆராய்ந்துணர்வார்கள் எ-று.()

84 ஒற்றரைத் தூண்டி யன்னோ ருறுவலி யுணர்வ ரேனு
மற்றுமோ ரொற்றி னல்லா லன்னது மனத்துட் கொள்ளார்
சுற்றுறு மனிக மன்றி யொருபுடை துவன்றிச் சூழும்
பெற்றியு முளதோ வென்ன வேயொரீஇத் தேர்வர் பின்னும்.

இ—ள்: ஒற்றரை தூண்டி அன்னோர் உறு வலி உணர்வரேனும்— தூதுவரையனுப்பி அப்பகைவர்கொண்டுடைய வலிமைமுழுதையும் அறிந்தாரேயாயினும், மற்றும் ஓர் ஒற்றின் அல்லால் அன்னது மனத்துள் கொள்ளார்—வேறுமொரு தூதினலல்லாமல், அவற்றை மனத்தில் (நிச்சயமாகக்) கோள்ளமாட்டார்கள், சுற்றுறும் அனிகம் அன்றி—சூழ்ந்து நிற்கின்றசேனைகளேயல்லாமல், ஒருபுடை துவன்றி சூழும் பெற்றியும் உளதோ என்ற— ( சே னை க ள் ) வேறொருபுறத்தில் நெருங்கிச்சூழ்ந்திருக்கின்ற தன்மையுமுண்டோவென்று, வேய் ஒரீஇ—தூதனுப்பி, பின்னும் தேர்வர்-பின்னும் ஆராய்வார்கள் எ—று.

மூன்றுமுறை தூதனுப்பியறிந்தேதெளியவேண்டுமென்பதாம். "ஒருவ ரொருவர் தலையறியா தொருமை வினைக்கண் மூவர்தமை-மருவ விடுக்க மூவர்களும் வந்து மொ

ழிவ நேர்ந்துவிடிற்-கரும மதனை மிகத்தெளிக" என்றார் விநாயக புராணத்தாரும். ஒரீஇ-ஒருவியென்பதன்விகாரம்; விடுத்தென்பதுபொருள். பெற்றியும் பின்னும் என்பவற்றில் உம்மைகள்-எச்சங்கள். (௫௧)

வினையது விளைவை யென்று மெல்லிய வென்கை வெஃகா
ரணிகமு மனையர் தன்மை யதனையுஞ் சிறுமைத் தாக
நினைகிலர் தமக்கு மாற்றார் நேர்ந்தவ ராகின் மேலோர்
முனையுறு புலத்தி லாற்று மும்மையு முன்னிச் செய்வார்.

இ—ள்: மேலோர்—பெரியோர்கள், தமக்கு மாற்றார் நேர்ந்தவர் ஆகின்— தம்முடன் பகைவர் எதிர்த்தாராயின், வினையது விளைவை என்றும் மெல்லிய என்கை வெஃகார்—போரின் ஆரம்பத்தை எப்போதாயினுஞ் சிறிதென்றுசொல்லுதற்கு விரும்பார்கள், அனிகமும் அனையர் தன்மை அதனையும் சிறுமைத்து ஆக நினைகிலர்-சேனைகளையும் அப்பகைவரது இயல்புகளையுஞ் சிறியவைகளாகச்சிந்திக்கமாட்டார்கள், முனை உறு புலத்தில் ஆற்றும் மும்மையும் முன்னி செய்வார்—பகைவந்தகாலத்திற் செயற்பாலதாகிய மூவகை உபாயங்களையும் ஆலோசித்துச்செய்வார்கள் எ—று.

முனையுறுபுலத்திலாற்றுமும்மை-சாமம் பேதம் தானம் என்பன. சாமம்-எதிர்ந்தாருடன் நண்பூண்டு பகையைத்தீர்த்தல். பேதம்-பகைவருள் ஒருவர்க்கொருவர் விரோதமுண்டாக்குதலால் அவரைத்தம்மோடெதிர்க்க வலியிலராக்குதல். தானம்-பொருள்முதலியவற்றைக்கொடுத்துப் பகையைத்தீர்த்தல். முன்னிச்செய்தல்- எவ்வாறு செய்யிற்சித்திபெறலாமென்றுய்த்துணர்ந்துசெய்தல். (௫௨)

மூவியன் மரபி னாலு முற்றுறு தொழிந்த காலைக்
கோவியன் மரபுக் கேற்பக் கொடுஞ்சினந் திருகிக் கொட்புற்
றேவியல் படைஞ ரோடும் படையொடு மெதிர்ந்து சுற்றி
மேவலர் பான்மை யுன்னி வெற்றிகொண் டணைவ ரன்றே.

இ—ள்: மூவியல் மரபினாலும் முற்றுறுது ஒழிந்த காலை-(முற்கூறியசாமமுதலிய) மூன்றுவகைமுறைமைகளினாலும் முடியாதுபோனபொழுது, கோ இயல் மரபுக்கு ஏற்ப கொடும் சினம் திருகி கொட்புற்று—அரசியன் முறைக்கிசையக் கடுங்கோபமுறுகி மாறுபட்டு, ஏ இயல் படைஞரோடும் படையொடும் எதிர்ந்து சுற்றி—படைகளையேவுமியல்பினையுடைய வீரருடனும் படைக்கலங்களுடனும் எதிர்த்துவளைந்து, மேவலர் பான்மை உன்னி வெற்றிகொண்டு அணைவர்—பகைவரதுதன்மையைச்சிந்தித்து வெற்றிபெற்றுவருவார்கள் எ—று.

மரபினாலும் என்பதில் உம்மை முற்று. முதன்மூன்றுபாயங்களிற் பகைவர் அமையாவழி நான்காவதாகிய தண்டத்தாற்கோறல் அரசர்நீதியாதலின் 'கோவியன்மரபுக்கேற்ப' எனவும், அங்ஙனந்தண்டிக்கப்புகுங்கால் வலி படை சேனை முதலியவைகள் அவரினும்அதிகமாகத் தமக்குவேண்டுதலின் 'மேவலர்பான்மையுன்னி' எனவும் கூறினார். ()-

நேர்ந்திட வலியி லோரு ஞாட்பிடை நேர்தி ரென்னச்
சேர்ந்திடும் போழ்தும் வேந்தர் செருவினைக் குறித்துச் சென்று
சார்ந்திடல் பழிய தன்றோ வெல்லினுந் தானை தூண்டிப்
போர்ந்திடச் செய்வ ரஃதே பெறலரும் புகழ தன்றே.

இ—ள்: நேர்ந்திட வலியிலோர் ஞாட்பிடை நேர்திர் என்ன சேர்ந்திடும் போழ்து—எதிர்க்கவலிமையில்லாதவர்கள் போரில் எதிர்க்கக்கடவீர்களென்று (வீரம்பேசி) அ

டைந்தகாலத்து, வேந்தர் செருவினை குறித்து சென்று சார்ந்திடல் பழியது அன்றே— அரசர்கள் போரைக்குறித்துச்சென்றணுகுதல் நிந்தையாமல்லவா?, வெல்லினும்- அவரை வெல்லக்கருதினும், தானை தூண்டி பேர்ந்திட செய்வர்— சேனைகளையேவி நிலைகுலையச் செய்வர், அஃதே பெறல் அரும் புகழது—அதுவே அடைதற்கரியபுகழாகும் எ—று.

உம்மை மூன்றனுள், முன்னைய இரண்டும் அசை; பின்னையது எதிர்மறை. அஃதே என்பதில் ஏகாரம் பிரிநிலை. (௫௪)

88 ஈதரோ வுலகி லுள்ள விறைவர்த மியற்கை யாகு
மாதலா னின்னொப் பாரி லழிவிலா யகில மாள்வா
யேதமொன் றடையாய் வானோர் யாரையு மேவல் கொண்டாய்
போதனு நெடுமா லோனும் வைகலும் புகழ வுற்றாய்.

இ—ள்: ஈது அரோ உலகில் உள்ள இறைவர்தம் இயற்கை ஆகும்— இதுவே உலகத்திலுள்ள அரசர்களது இயல்பாம், ஆதலால்— ஆதலினால், நின் ஒப்பார் இல்—உம்மையொப்பார் பிறரில்லை, அழிவு இலாய்— இறத்தலில்லாதீர், அகிலம் ஆள்வாய்—எல்லாவுலகங்களையும் அரசியல்செய்வீர், ஏதம் ஒன்று அடையாய்—குற்றஞ்சிறிதும் அணுகாதீர், வானோர் யாரையும் ஏவல் கொண்டாய்-தேவாளைவரையும் ஏவல்செய்வித்தீர், போதனும் நெடி மாலோனும் வைகலும் புகழ உற்றாய்—பிரமதேவரும் நெடிய திருமாலுந் தினந்தோறுந் துதிக்க இருக்கின்றீர் எ—று.

ஒன்றும் என்பதில் இழிவுசிறப்பும்மைதொக்கது. ஆதலால் என்பது வருஞ்செய்யுளில் உனக்கதுவசையது என்பதனோடியையும். (௫௫)

89 இன்னதோர் மிடல்பெற் றுள்ள விறைவனீ யளிய னாகும்
பொன்னக ரவன்சொற் கேட்டுப் பூதமே படையா வீச
னென்னவி னுதவும் பிள்ளை நேர்ந்திடி னவனை வெல்ல
வுன்னினை போதி யென்னி னுனக்கது வசைய தன்றே.

இ—ள்: இன்னது ஓர் மிடல் பெற்று உள்ள இறைவ—இத்தன்மையாகிய வலிமையைப்பெற்றுள்ள தலைவரே, நீ—நீர், அளியன் ஆகும் பொன்னகரவன் சொல் கேட்டு—எளியவனாகிய இந்திரனதுசொல்லைக்கேட்டு, பூதமே படையா—பூதங்களே சேனைகளாக, ஈசன் நென்னலின் உதவும் பிள்ளை நேர்ந்திடின்—சிவபிரான் நேற்றுப்பெற்ற பாலகனெதிர்த்தால், அவனை வெல்ல உன்னினை போதி என்னின்— அவனைவெல்லும்படி நினைத்துப்போவீரேயானால், உனக்கு அது வசையது அன்றே—உமக்கு அது வசையாமல்லவா? எ—று.

நீ போதியென்னின் எனஇயையும். வசையைத்தருவதை வசையென்றது காரணகாரிய உபசாரம். (௫௬)

90 மாற்றலர் வன்மை யோராய் மற்றவர் படைஞர் தங்க
ளாற்றலை யுணராய் நின்ற னரும்பெருந் தலைமை யுன்னாய்
போற்றிடு மமைச்ச ரோடும் புரிவன சூழாய் வாளா
சீற்றமங் கதுமேல் கொண்டு செல்லலுந் திறலின் பாற்றே.

இ—ள்: மாற்றலர் வன்மை ஓராய்—பகைவரது வலிமையையுணராதும், அவர் படைஞர் தங்கள் ஆற்றலை உணராய்—அவரது சேனைவீரரின்வலியையுணராதும், நின் தன் அரும் பெரும் தலைமை உன்னாய்—உமது மிகச்சிறந்த தலைமையைநினையாதும், போற்றிடும் அமைச்சரோடும் புரிவன சூழாய்— துதிக்கப்படத்தக்க மந்திரிமாருடன்செய்யவேண்டுவனவற்றை ஆலோசியாதும், வாளா சீற்றம் மேல்கொண்டு செல்லலும் திறலின்

பாற்றே—வீணாகக் கோபமிக்குப் போர்க்குப்போதலும் வீரத்தின்வழிப்பட்டதா? (அன்று) எ—று.

ஓராய் உணராய் உன்றாய் சூழாய் என்பன முற்றெச்சங்கள். முற்றாகக்கொண்டவழிப் பின்னவாக்கியமாம். புரிவண வினையாலணையும்பெயர். போற்றிடும் என்பதற்கு கற்புத்திகூறுதலால் அரசனைக்காக்கின்றவெனப்பொருள்கூறினுமாம். செல்லலும் என்பதில் உம்மை இழிவுசிறப்பு. (௫௭)

91 வீரமும் வலியு மிக்கோ ராயினும் விதிவந் தெய்திற்
பாரிடை வலியி லோரும் படுத்திடப் படுவர் நின்போற்
பேருட லழியா வாற்றல் பெருமையா லிறுவா யெய்தத்
தாரகன் மழலை தேருச் சிறுவனுந் தடியப் பட்டான்.

இ—ள்: வீரமும் வலியும் மிக்கோர் ஆயினும்—வீரத்தாலும் வலிமையாலுஞ் சிறந்தோராயினும், விதி வந்து எய்தில்—விதிவந்தணுகினால், பாரிடை வலியிலோர் படுத்திடவும் படுவர்—பூவுலகத்தில் வலிமையில்லாதார் அழிக்கவும் அழிவார், தாரகன்—தாரகாசுரன், நின் போல் பேர் உடல் அழியா ஆற்றல் பெருமையால்—உம்மைப்போல வச்சிரயாக்கையையும் அழியாவரத்தையும் பெற்றுக்கொள்ளாமையினால், இறுவாய் எய்த—மரணகாலம் அணுக, மழலை தேரு சிறுவன் தடியவும் பட்டான்—குதலைவார்த்தைதிருந்தாதபாலகன் அழிக்கவும் அழிந்தான் எ—று.

ஆயினும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. பின்னைய இரண்டும்மைகளும் இழிவுசிறப்பு; அவை மாற்றிக்கூட்டப்பட்டன. விதிவந்தெய்திற் படுவர் எனவும், இறுவாயெய்தப்பட்டானெனவும் இயைத்துக்கொள்க. பெருமை ஈண்டுச்சிறப்பின்மேற்றாதலின் வச்சிரயாக்கையென்றாம். உருவப்பெருமையெனல் சிறப்பன்று. (௫௮)

92 கலகல மிழற்றுந் தண்டைக் கழலடிச் சிறுவன் கைம்மாத்
தலையுடை யிளவ றன்னைத் தடிந்ததற் புதத்த தன்றால்
வலியரு மொருகா லத்தில் வன்மையை யிழப்ப ராற்ற
மெலியரு மொருகா லத்தில் வீரராய்த் திகழ்வ ரன்றே.

இ—ள்: கலகல மிழற்றும் தண்டை கழல் அடி சிறுவன்— கலகலவென்றொலிக்கின்ற தண்டையையும் வீரக்கழலையுமணிந்தகால்களையுடைய பாலகன், கைம்மா தலை உடை இளவல் தன்னை தடிந்தது அற்புதத்தது அன்று-யானைத்தலையினையுடைய உமது தம்பியைக்கொன்றது வியப்பன்று (எனெனில்), வலியரும் ஒருகாலத்தில் வன்மையை இழப்பர்—வலியுடையோரும் ஒருகாலத்தில் தமதுவலியை இழந்துவிடுவார்கள், ஆற்ற மெலியரும் ஒருகாலத்தில் வீரர் ஆய் திகழ்வர்— மிகவலிகுறைந்தவர்களுஞ் சிலகாலத்தில் வீரராகிவிளங்குவார்கள் (ஆதலின்) எ—று.

கலகல-ஒலிக்குறிப்பு. கைம்மா-கையையுடையவிலங்கு=யானை. உம்மை, முன்னையது உயர்வுசிறப்பு. பின்னையது இழிவுசிறப்பு. (௫௯)

93 யாருநே ரன்றி வைகு மிறைவநீ சிறுவன் றன்மேற்
போரினை முன்னி யேகல் புகழ்மைய தன்று லன்னான்
சீரொடு மதுகை யாவுந் தேர்ந்துபின் னவனிற் றீர்ந்த
வீரரைப் படையொ டேவி வெற்றிகொண் டமர்தி யென்றான்.

இ—ள்: யாரும் நேர் அன்றி வைகும் இறைவ—எவரும் ஒப்பாகாவண்ணஞ்சிறந்திருக்கின்ற அரசனே!, நீ—நீர், சிறுவன் தன் மேல் போரினை முன்னி ஏகல் புகழ்மையது அன்று—சிறுபிள்ளையின்மேற் போர்செய்யநினைத்துப்போதல் சிறப்பன்று, அன்னான் சீரொடு மதுகை யாவும் தேர்ந்து— அவரதுகீர்த்தியும் வலியுமுதலிய எல்லாவற்றை

யும் ஆராய்ந்து, பின்-பின்பு, அவனில் தீர்ந்த வீரரை படையொடு ஏவி—அவனிலுஞ்சிறந்தவீரர்களைச் சேனைகளோடும் அனுப்பி, வெற்றிகொண்டு அமர்தி என்றான்-வெற்றிபெற்றிருப்பீராகவென்று கூறினன் எ—று.

புகழ்மையது என்பதில் மைவிகுதி பகுதிப்பொருட்டு. (௯௦)

94 அறிதரு மமைச்சர் தம்மு ளமோகனித் தன்மை தேற்ற
வுறுதியீ தென்று சூர னுள்ளுறு சினத்தை நீத்து
விறல்கெழு மரிமா னேற்று விழுத்தகு தவிசி னேறிச்
செறிதரு முழைஞர் தம்முட் சிலவரை நோக்கிச் சொல்வான்.

இ—ள்: அறிதரும் அமைச்சர்தம்முள் அமோகன் இத்தன்மை தேற்ற—அரசநீதிகளையறிந்த மந்திரிமார்களுள் அமோகனென்பவன் இவ்வாறுகூறித் தெளிவிக்க, சூரன்—சூரபன்மன், ஈது உறுதி என்று—இது உறுதிமொழியாமென்றுசிந்தித்து, உள் உறு சினத்தை நீத்து—மனத்திற்பொருந்திய கோபத்தைவிடுத்து, விறல் கெழும் அரிமான் ஏற்று விழுத்தகு தவிசின் ஏறி—வலிமைமிகுந்த ஆண்சிங்கங்களாற்சுமக்கப்படுகின்ற சிறப்புமிக்க ஆசனத்திலேறி, செறிதரும் உழைஞர்தம்முள் சிலவரை நோக்கி சொல்வான்-தன் பக்கத்தில்நெருங்கிய ஏவலாளர்களுட் சிலரைப்பார்த்து இவ்வாறுசொல்வான் எ-று. (௯௧)

95 பகனொடு மயூரன் சேனன் பரிதியம் புள்ளின் பேரோன்
சுகனிவர் முதலா வுள்ள தூதரைத் தருதி ரென்னப்
புகழ்புனை சூர பன்மன் பொன்னடி யிறைஞ்சி யேத்தித்
தகுவர்க டலைவர் மற்றச் சாரணர் தம்மை யுய்த்தார்.

இ—ள்: பகன்—பகனும், மயூரன்—மயூரனும், சேனன்—சேனனும், பரிதியம்புள்ளின்பேரோன்—சக்கரவாகனும், சுகன்—சுகனும், இவர் முதல் ஆ உள்ள தூதரை தருதிர் என்ன—என்னுமிவர்முதலாகவுள்ளதூதுவர்களை அழைத்துவருதிரென்று கட்டளைசெய்ய, தகுவர்கள் தலைவர்-(அதுகேட்ட) அசுரத்தலைவர்கள், புகழ் புனை சூரபன்மன் பொன் அடி இறைஞ்சி ஏத்தி—கீர்த்திமிக்க சூரபன்மனது அழகியபாதங்களை வணங்கித்துதித்து, அ சாரணர் தம்மை உய்த்தார்—அந்தத்தூதுவர்களை (அழைத்துக்கொணர்ந்து) முன்விடுத்தார்கள் எ—று.

பகன் கொக்குவடிவையும், மயூரன் மயில்வடிவையும், சேனன் பருந்துவடிவையும், சக்கரவாகன் சக்கரவாகப்பறவைவடிவையும், சுகன் கிளிவடிவையும் கொண்டுசென்று பகைவரியல்புகளை அறிபவர், பரிதியம்புள் வட்டவடிவுடையபறவை. (௯௨)

96 சாரண ரினையர் போந்து தாண்முறை பணிந்து நிற்பச்
சூரனங் கவரை நோக்கித் துண்ணென நீவி ரேகிப்
பாரிடை வந்த கந்தன் பான்மையும் படைவெம் பூதர்
சேருறு தொகையும் யாவுந் தேர்ந்திவண் வருதி ரென்றான்.

இ—ள்: இனையர் சாரணர் போந்து— இந்தத்தூதுவர்கள்வந்து, தாள் முறை பணிந்து நிற்ப—பாதங்களை முறைப்படி வணங்கிநிற்க, சூரன் அவரை நோக்கி—சூரபன்மன் அவர்களைப்பார்த்து, நீவிர் துண் என ஏகி—நீங்கள் விரைவிற்போய், பாரிடைவந்த கந்தன் பான்மையும்—பூவுலகத்தில்வந்த கந்தனது தன்மைகளையும், படை வெம் பூதர் சேருறு தொகையும்—சேனைகளாகிய கொடியபூதர்கள்சேர்ந்திருக்கின்ற தொகையையும், யாவும் தேர்ந்து இவண் வருதிர் என்றான்—பிறவற்றையும் ஆராய்ந்தறிந்து இவ்விடத்து வரக்கடவீர்களென்று கட்டளையிட்டான் எ—று.

யாவும் என்றதனால் போர்க்குவந்தகாரணம் முதலியவற்றையெல்லாம் அறியுமாறு கற்பித்ததுகொள்ளப்படும். (௯௫)

97 ஒற்றுவ ருணர்ந்தந் நீர்மை யுச்சிமேல் கொண்டு தங்கோன்
பொற்றடங் கழல்க டாழ்ந்து புடவியை நோக்கிச் சென்றார்
மற்றவர் போய பின்னர் மாறிலாச் சூர பன்மன்
வெற்றிகொ ளவுணர் போற்ற வீற்றிருந் தரசு செய்தான்.

இ—ள்: ஒற்றுவர் அ நீர்மை உணர்ந்து-தூதுவர்கள் அந்தக்கட்டளையைக்கேட்டு, உச்சிமேல் கொண்டு—சிரமேற்கொண்டு, தம் கோன் பொன் தடம் கழல்கள் தாழ்ந்து—தங்களரசனாகிய சூரபன்மனது அழகிய விசாலித்த பாதங்களைவணங்கி, புடவியை நோக்கி சென்றார்—பூமியைநோக்கிச்சென்றார்கள், அவர் போய பின்னர்— அவர்கள்போனபின்பு, மாறு இலா சூரபன்மன்—ஒப்பில்லாத சூரபன்மன், வெற்றிகொள் அவுணர் போற்ற வீற்றிருந்து அரசுசெய்தான்— வெற்றியையுடைய அசுரர்கள்துதிக்க வீற்றிருந்து அரசியலைநடாத்தினான் எ—று. (௯௬)

98 ஏதமில் சூர பன்ம னிளவறன் முடிவு நேடி
மாதுயர் கொண்டு தேறி வைகிய தன்மை சொற்றாம்
மாதியங் கடவுண் மைந்த னமரர்தங் கிரியை நீங்கிப்
பூதல மீது வந்த நெறியினைப் புகல லுற்றாம்.

இ—ள்: ஏதம் இல் சூரபன்மன்—குற்றமற்ற சூரபன்மன், இளவல் தன் முடிவு நேடி மா துயர் கொண்டு தேறி வைகிய தன்மை சொற்றாம்—தன்றம்பியாகிய தாரகனது மரணத்தையறிந்து பெருந்துக்கங்கொண்டு பின் தெளிந்திருந்ததன்மையை இதுகாறுங்கூறினோம் (இனி), ஆதியம் கடவுள் மைந்தன்—முதற்கடவுளாகிய சிவபிரானது புதல்வரான முருகவேள், அமரர்தம் கிரியை நீங்கி பூதலமீது வந்த நெறியினை புகலல் உற்றாம்—(தாமெழுந்தருளியிருந்த) தேவகிரியைநீங்கிப் பூமியில்வந்தவரலாற்றைச் சொல்லத்தொடங்கினோம் எ—று.

பகைவரால்நேரும் இடர் முதலியனவற்றை முன்னொருபோதும்பெறாது வாழ்ந்தவனென்பார் 'ஏதமில்சூரபன்மன்' என்றார். இச்செய்யுளால் மேற்கூறப்படுஞ்சரித்திரம் தேவகிரிப்படலத்தோடியைபுடைத்தாதல் விளங்கிற்று. (௯௭)

அசுரேந்திரன் மகேந்திரஞ்செல்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் ௧௯௨௮.

---

# வழிநடைப்படலம்.

முருகக்கடவுள் வழிநடந்தசெயலைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

தேவகிரியிலெழுந்தருளியிருந்த முருகக்கடவுள், சூரியனுதித்தவுடன் புறப்பட்டு, பரிசனர்கள்சூழநடந்து, கேதாரம் காசி திருப்பருப்பதம் முதலாகிய தலங்களைத்தரிசித்து, மண்ணியாற்றங்கரையில் வந்தனர் என்பதாம்.

99 குருமணி மகுட மாறுங் குழைகளுந் திருவில் வீசத்
திருமணி வரையின் மேவுந் திருக்கைவேற் பெருமா னுக்குக்
கருமணி யாழிப் புத்தேள் கையுறை யாக வாங்கோர்
பருமணி நீட்டிற் றென்னப் பானுவந் துதயஞ் செய்தான்.

இ—ள்: குரு மணி மகுடம் ஆறும் குழைகளும் திரு வில் வீச—நிறம்விளங்குகின்ற இரத்தினமிழைத்த ஆறுகிரீடங்களும் (பன்னிரண்டு) குண்டலங்களும் சிறந்த ஒளியைப்பரப்ப, திரு மணி வரையின் வைகும் வேல் திருக்கை பெருமானுக்கு—சிறந்த அழகிய தேவகிரியில்வீற்றிருக்கின்ற வேலாயுதத்தையேந்திய திருக்கரத்தையுடைய முருகக்கடவுளுக்கு, கையுறை ஆக—உபகாரப்பொருளாக, கருமணி ஆழி புத்தேள்—கரியஇரத்தினங்களையுடைய சமுத்திரத்திற்கிறைவனாகிய வருணன், ஓர் பரு மணி நீட்டிற்று என்ன—ஒருபெரிய இரத்தினத்தை நீட்டியதுபோல, பானு வந்து உதயம் செய்தான்—சூரியன்வந்துதோற்றினன் எ—று.

மேவும் பெருமான் எனவும், நீட்டிற்றென்ன உதயஞ்செய்தான் எனவும் இயையும். கையுறை-கையிலுறப்படுவது. வருணன், தாரகனையும் கிரவுஞ்சத்தையும் அழித்தமகிழ்வினால், தேவர் பூசைசெய்ததுபோலத்தானுமோருபகாரஞ்செய்யநினைந்து, கையினால் ஓர் பருமணியைநீட்டினாற்போலச் சூரியனுதித்தனன் என்பதாம். (௧)

வேறு.

100 மல்குல் வானமேல் வெய்யவன் கதிரென வழங்குஞ்
செங்கை கூப்பியே தொழுதிடு வானெனச் செல்ல
வங்கவ் வேலையி லறுமுகன் கடவுள்வெற் பகன்று
பொங்கு தானையு மமரருஞ் சூழ்தரப் போந்தான்.

இ—ள்: வெய்யவன்—சூரியன், கதிர் என வழங்கும் செம் கை கூப்பி தொழுதிடுவான் என—கிரணங்களென்று சொல்லப்படுகின்ற சிவந்தகையைக் குவித்துத்தொழுபவன்போல, மங்குல் வானமேல் செல்ல—மேகங்களுலாவுகின்ற ஆகாயத்திலுதிக்க, அவ்வேலையில்—அப்பொழுது, அறுமுகன்—முருகக்கடவுள், பொங்கு தானையும் அமரரும் சூழ்தர—மிகுந்தசேனைகளுந் தேவர்களுஞ் சூழ, கடவுள்வெற்பு அகன்று—தேவகிரியைநீங்கி, போந்தான்—சென்றருளினர் எ—று. (௨)

101 தன்னை நீக்கியே சூழ்வுறுந் தவமுடைப் பிருங்கி
யுன்னி நாடிய மறைகளின் முடிவினை யுணரா
வென்னை யாளுடை யானிடஞ் சேர்வனென் றிமையக்
கன்னி பூசனை செய்தகே தாரமுன் கண்டான்.

இ—ள்: தன்னை நீக்கி சூழ்வுறும் தவம் உடை பிருங்கி உன்னி நாடிய மறைகளின் முடிவினை உணரா—தம்மைவிட்டுச் (சிவபிரானைமாத்திரம்)வலம்வருகின்ற தவத்தினையுடைய பிருங்கிமுனிவர் ஆராய்ந்துணர்ந்த வேதங்களின்முடிவையுணர்ந்து, என்னை ஆளுடையான் இடம் சேர்வன் என்று—என்னையடிமையாகவுடைய சிவபிரானது இடப்பாகத்தில் (வேறுதலின்றிச்) சேர்ந்துகொள்வேனென்றெண்ணி, இமைய கன்னி பூசனை செய்த—பார்வதிதேவியார்பூசித்த, கேதாரம்-திருக்கேதாரத்தை, முன் கண்டான்—முதலிற்றரிசித்தார் எ—று.

பிருங்கிமுனிவர் தேவியாரைநீக்கிச் சிவபிரானைமாத்திரம் வலஞ்செய்ய, தேவியார் சிவபிரானைநோக்கி 'இறைவரே! இவன் என்னைநீக்கித் தேவரீரை வலஞ்செய்தற்குக்

காரணம்யாது' என்றுவினவ, சிவபிரான்'தேவீ! வேதாந்தத்தையுணர்ந்த மெய்ஞ்ஞானியர் நின்னைவழிபடார்'என்று அருளிச்செய்தனர். உடனே தேவியார்சினந்து பிருங்கிமுனிவரின்தேகத்தில்தமது கூறாயுள்ளசத்தியைக்கவர, அவர் வெற்றெலும்பும் தோலும் நரம்புமல்லது வேறொன்றுமின்றியொல்கி வலியற்றுத்தளர்ந்தனர். அப்பொழுது சிவபிரான் வேறுமொருகால்கொடுத்துத் தளராவண்ணஞ்சிறுவினர். அதன்மேல் தேவியார் திருக்கேதாரத்திற்சென்று, பலகாலம்பூசித்து, இடப்பாகம் தமதுருவும் வலப்பாகம் சிவனுருவும் ஆகிய அர்த்தநாரீசுரவடிவமெய்தினர். தேவகிரியினின்று தென்றிசைநோக்கிவரும்வழியில் முதலெதிர்ப்படுவது கேதாரமாதலின் 'முன்கண்டான்' என்றார். இவ்வாறே மேற்கூறப்படுந்தலங்களும் முறைநோக்கிவைக்கப்பட்டிருத்தல்காண்க. (௫)

பையரா வின்மேற் கண்டுயில் பண்ணவன் றனக்குந்
தையல் பாதிய னேபரம் பொருளெனுந் தன்மை
மையன் மானுட ருணர்ந்திட மறைமுனி யெடுத்த
கைய தேயுரைத் திட்டதோர் காசியைக் கண்டான்.

இ—ள்: பை அராவின் மேல் கண்துயில் பண்ணவன் தனக்கும் தையல்பாதியனே பரம்பொருள் எனும் தன்மை—படம்பொருந்திய அனந்தனென்னுஞ் சர்ப்பமாகிய சயனத்தின்மேல் அறிதுயில்செய்கின்ற திருமாலுக்கும் சிவபிரானே மேலானகடவுளென்று நூல்கள்கூறுந்துணிபை, மையல் மானுடர் உணர்ந்திட—மயக்கத்தையுடைய மாந்தர்கள் அறியும்பொருட்டு, மறைமுனி எடுத்த கையதே உரைத்திட்டது ஓர் காசியை கண்டான்—வியாசமுனிவருயர்த்தியகையேசான்றுகூறிய காசிப்பதியைத்தரிசித்தார் எ—று.

இச்சரித்திரத்தை முன்னர்க்கடவுள்வாழ்த்திற் பத்தொன்பதாஞ்செய்யுளிற் காட்டினம். மெய்ஞ்ஞானமுடையோர்க்கித்தகைய சான்றுகள்வேண்டற்பாற்றன்றாதலின் 'மையன்மானுடருணர்ந்திட' என்றார். தையல்பாதியன் உமாதேவியைப் பாதித்திருமேனியாகவுடையவன். மறைமுனி-வேதங்களைவகுத்தமுனி. ஏகாரமிரண்டனுள் முன்னையது தேற்றம்; பின்னையது பிரிநிலை. (௬)

பருப்ப தப்பெயர் சிலாதனற் பாலகன் பரம
னிருப்ப வோர்வரை யாவனென் றருந்தவ மியற்றிப்
பொருப்ப தாகியே யீசனை முடியின்மேற் புனைந்த
திருப்ப ருப்பதத் தற்புதம் யாவையுந் தெரிந்தான்.

இ—ள்: பருப்பத பெயர் சிலாதன் நல் பாலகன்—மலையின்பெயரையுடைய சிலாதமுனிவரின் அருமைப்புதல்வராகியதிருநந்திதேவர், பரமன் இருப்ப ஓர் வரை ஆவன் என்று—சிவபிரான்வீற்றிருத்தற்கேற்ப ஒருமலைவடிவாவேனென்றுசிந்தித்து, அரும் தவம் இயற்றி—அருமையாகிய தவத்தைச்செய்து, பொருப்பது ஆகி—மலையாகி, ஈசனை முடியின்மேல் புனைந்த—சிவபிரானைச் சிரமேற்சுமந்த, திருப்பருப்பதத்து-ஸ்ரீசைலத்தின்கணுள்ள, அற்புதம் யாவையும் தெரிந்தான்—அதிசயமனைத்தையுந் தரிசித்தார் எ—று.

சிலாதமுனிவரின்புதல்வரென்னுங் காரணம்பற்றிச் சைலாதியென்னும்பெயர் பெற்றவராதலின் 'பருப்பதப்பெயர்ச்சிலாதன்' என்றார். இப்பெயரில் சைல என்னும் மலைப்பெயர் அமைந்துகிடப்பதுகாண்க. (௭)

அண்டர் மன்னுயி ரீன்றவ ருடன்முனி வாகித்
தொண்ட கங்கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே யோர்குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்.

இ—ள்: அண்ட மன் உயிர் ஈன்றவள் உடன் முனிவு ஆகி— அண்டங்களையும் அவற்றிலுள்ள நிலைபெற்ற உயிர்களையும் பெற்றருளிய உமையம்மையாரோடுங்கோபித்து, தொண்டகம் கெழு சுவாமிதன் மால் வரை துறந்து— குறிஞ்சிப்பறைமுழங்குகின்ற சுவாமிமலையைநீங்கி, மண்டு பாதலத்து ஏகி—நெருங்கிய பாதலவுலகத்திற் சென்று, ஓர் குகை வழியே பண்டு தான் வரு—ஒருமுழையின்வழியாக முற்காலத்திற்றும் ஏறிவந்த, வேங்கடகிரியையும் பார்த்தான்—திருவேங்கடமலையையுந்தரிசித்தார் எ—று.

துறந்து வரு என இயையும். முருகக்கடவுள் மாதாவாகிய பார்ப்பதியாருடன் சினங்கொண்டு, பிதாவாகிய சிவபிரானைப்பூசித்திருந்தகாரணத்தாற் சுவாமிமலையென்னும் பெயர்வழங்கிற்று. வேங்கடமலையும் முருகக்கடவுட்குரியதே. அதைப்பிற்காலத்தார் திருமாலுக்காக்கிக்கொண்டனர். (௬)

சிலந்தி மாசுண மும்மதக் கரிசிவ கோசன்
மலைந்தி டுஞ்சிலை வேட்டுவன் கீரனே மடவார்
பலந்த ரும்வழி பாட்டினாற் பாட்டினாற் பரனைக்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையுங் கண்டான்.

இ—ள்: சிலந்தி—சிலந்தியும், மாசுணம்—பாம்பும், மும்மத கரி— மும்மதங்களையுடையயானையும், சிவகோசன்— சிவகோசரியாரும், மலைந்திடும் சிலை வேட்டுவன்-போர்செய்தற்குரிய வில்லையுடைய வேடுவராகிய கண்ணப்பநாயனாரும், கீரன்— நக்கீரதேவரும், மடவார்—கன்னியர்களும், பலம் தரும் வழிபாட்டினால்—பலனைக்கொடுக்கின்ற பூசனையினாலும், பாட்டினால்—தோத்திரத்தினாலும், பரனை கலந்து முத்திசேர்—சிவபிரானைச்சேர்ந்துவீடுபெற்ற, தென் பெரும் கயிலையும் கண்டான்—பெரிய திருக்காளத்தியையுந்தரிசித்தார் எ—று.

ஏ-எண். கீரன் பாட்டினாலும் ஏனையோர் வழிபாட்டினாலும் முத்திசேர்ந்தனர். சிவபிரான் கயாரணியத்திற் கல்லாலவிருக்ஷநீழலில் வீற்றிருந்து வசிட்டமுனிவருக்குத்திரிபதார்த்த விலக்கணங்களைநெடுங்காலம்போதிக்க, உமாதேவியார் பிரிவாற்றாது மைந்தருடன் அத்தலத்தில்வந்து வீற்றிருந்தனர். அதுகண்ட கயிலைமலையும் வந்திருந்தது. ஆதலால் இத்தலம் தென்கயிலையெனப்பெயர்பெற்றது.

**சிலந்திமுத்திபெற்றசரித்திரம்:**-பிரமதேவர் படைத்தற்றொழிலை நடத்திக்கொண்டிருக்கவும், விச்சுவகன்மனதுகண்ணிலுதித்த மாதவவூறனென்பவன் அவரைமதியாது தானும்படைக்க,அப்பிரமதேவர் அவனைவரும்படிசிந்தித்து, அக்கணமேவந்துநின்ற அவனைநோக்கி, ‘நீ சிறியநூலையுண்டாக்குஞ்சிலந்தியாகுக’ என்றுசபித்தனர். பின்னர், அவன்வணங்கிப் பெரிதும்பிரார்த்தித்தலால் உளங்களித்து, ‘பிள்ளாய்! கயாரணியத்திலுள்ள வில்வவனத்தையடைந்து சிலந்தியாகி நூலினால் ஆலயமமைத்துச் சிவபெருமானைவழிபட்டு முத்தியடைவாயாக’ என்று அருள்புரிய, அவன் அவ்வாறே சென்று வழிபட்டு முத்திசேர்ந்தனன் என்பதாம்.

**பாம்புமுத்திபெற்றசரித்திரம்:**—திருக்கைலாசமலையில், சிவபிரான், ஒருநாள் சிங்காசனத்திலெழுந்தருளத் திருவுளங்கொண்டு, திருமேனியிலே புலித்தோலாடைமுதலியவற்றைப்புனைந்து, ஆதிசேடன்முதலிய பாம்புகளை ஆபரணமாக அணியும்போது, காளனென்னும்பாம்பைக்காணாது, அது விரகங்கொண்டு மகளிர்பாலடைந்திருப்பதையறிந்து, அழைத்து, ‘நீ கயாரணியத்தையடைந்து பாம்பாயிருந்து எம்மை இரத்தினங்களால் வழிபட்டு, அங்கே எம்மைப்பூசிக்கவரும்யானையுடன் பகைகொண்டு அதனைக்கொல்ல இருவீருமிறந்து முத்திசேர்வீர்’ என்றுகட்டளையிட, அங்ஙனமேசென்று பூசித்து முத்திபெற்றது என்பதாம்.

**யானைமுத்திபெற்றசரித்திரம்:**—திருக்கைலாசமலையில் அத்தியென்னுங்கணத்தலைவன், சிவபிரானது கோயில்வாயிலையடைந்து, 'யான் பிரானை வணங்கல்வேண்டும். உள்விடுப்பீராக' என்றுகூற, வாயிற்காவலாளர், 'பெருமான் தேவியாருடன் தனித்துவீற்றிருக்கின்றார். அங்கேசெல்லுதல்தகாது' என்றனர். கணத்தலைவன் அதனைக்கேளாது உட்புக, தேவியார் முனிந்து, யானையாகும்படிசபித்து, பின்னும் அக்கணநாதனது பிரார்த்தனைக்கிரங்கி, 'நீ கயாரணியத்தில் யானையுருக்கொண்டு தென்கயிலாயப்பெருமானை வழிபடுங்காலத்தில், நினக்கும் அப்பானைவழிபடும் ஓர் பாம்புக்கும் பகைமைநிகழ, இருவருமடிந்து முத்திசேர்வீர்' என்று அருள்செய்ய, அக்கணநாதன் அவ்வாறே யானையாகிச்சென்று வழிபட்டு முத்தியடைந்தான் என்பதாம்.

**சிவகோசரியார் முத்திபெற்றசரித்திரம்:**—சிவகோசரியார் ஆகமவிதிப்படி தினந்தோறும் நித்தியபூசையியற்றிவருநாளில், ஒருநாட் பூசிக்கவரும்போது கண்ணப்பநாயனார் நிவேதித்த ஊன்களிருப்பக்கண்டு, மனம்வருந்தி, அவற்றையெல்லாம் அகற்றி, நீராடி, பிராயச்சித்தஞ்செய்து, பூசித்தார். பின்னாட்களினும் அவ்வாறே நிகழ, மிகவும் மனம்வருந்தி, 'எம்பெருமானே! தேவரீரது திருமுன்னிலையில் இவ்வாறு அசுசியைச்செய்கின்றனரே யான் யாதுசெய்வேன்' என்றுகூறித்துயரமுற்று நித்திரைசெய்ய, காளத்திநாதர் கனவிற்றோன்றி 'அன்பனே! திண்ணனென்னும்வேடன் எனக்கு நிவேதிக்கின்ற ஊன் யாகஞ்செய்வோர்தரும்அவிப்பாகத்தினுஞ்சிறந்தது. அவன் செய்யும்பூசையை மெய்யன்புடன் ஏற்றுக்கொண்டோம். அவனது பத்திமுதிர்வை உனக்குக்காண்பிப்போம். நாளைவந்து ஒளித்திருந்துகாணுதி'யென்று அருள்செய்து, மறுநாள் தமதுதிருக்கண் இரத்தம்பாய விருந்து திண்ணனார் கண்ணிடந்தப்பக்காட்டினர். பின்னும் அச்சிவகோசரியார்பலநாட்பூசித்து, தேகாந்தத்தில் முத்திபெற்றனர்.

**வேட்டுவன்முத்திபெற்றசரித்திரம்:**-பாண்டவர்களுளொருவனாகிய அருச்சுனன், துரியோதனன்முதலிய பகைவரைக்கொல்லும்பொருட்டுப் பாசுபதாஸ்திரம்பெறவிரும்பி, இந்திரநீலமலையில் அருந்தவஞ்செய்துவருநாளில், அவனைக்கொல்லும்படி துரியோதனனாலேவப்பட்ட மூகாசுரனென்பவன் பன்றியுருக்கொண்டு அக்காட்டிலே முனிவர்முதலியோர்க்குத் துயர்விளைத்திருப்ப, சிவபிரான் அருச்சுனனுக்குத் தீங்குநேரிடாவண்ணம் அதனையழிக்கவெண்ணி, வேடவுருக்கொண்டு, பன்றியையணுகி, அதன்மேல் ஒருபாணத்தையேவினர். அதுபட்டவுடன் பன்றி அஞ்சி மேகம்போலமுழங்கி முனிவரிருக்குமிடத்தையணுக, அவர்கள் அஞ்சியோடி அருச்சுனன்பாற்சென்றனர். அவனெழுந்து பாணமேவிப் பன்றியைக்கொல்ல, அதைத்தொடர்ந்துவந்த சிவபிரான் 'இப்பன்றியையான்கொன்றேன்' என்றனர். அருச்சுனன் சிவபிரானைநோக்கி 'வேடனே! நின்பாணம் இதையுருவும் ஆற்றலுடைத்தன்று. யான்விடுத்தபாணம் கொன்றது' என்றனன். உடனே இருவர்க்கும் கலகம்விளைந்துபோர்நிகழ, அருச்சுனன் நாணற்றதனதுவில்லால் அவருக்கடிக்க, அவ்வடி சராசரங்கட்கெல்லாம்பட்டது. அப்பொழுதுசிவபிரான் இடபாரூடராய்க்காட்சிதந்து, உனக்கு யாதுவேண்டும் என்றுவினவ, அருச்சுனன் 'வெந்துயர்ப்பிறவியில்மெலியாதுவீடுபெறஅருள்செய்க' என்று வேண்டினன். சிவபிரான் நீ பகைவரையழிக்கப் பாசுபதாஸ்திரத்தைவிரும்பித் தவம்புரிந்தனையாதலின் முன்னர் அதனைப்பெற்றுக்கொள்ளுதி. நீ என்னை வேடனென்றிகழ்ந்துகூறியதனால் வேடுவனாகி, தென்கயிலையில் பன்றிமுதலியவிலங்குகளின் ஊனைநிவேதித்து எம்மைப்பூசித்து முத்திபெறுவை' என்றனர். அவன் அவ்வாறே அவதரித்துப் பூசித்து முத்தியடைந்தனன். பூசித்தவிதத்தை ஆற்றுப்படலத்தாலுஞ்செய்யுளிற்காட்டினம்.

**நக்கீரதேவர்பாடிமுத்திபெற்றசரித்திரம்:**—பாண்டிநாட்டிலே மதுரைப்பதியிலே சங்கப்புலவர்க்குவேண்டிய சிறப்புக்களைநடாத்திவந்த வங்கியசூடாமணியென்னும் பாண்டி

யன் ஒருநாள் மேல்மாளிகையில் மனைவியோடிருக்கும்பொழுது சிறிய
தென்றலோடுகலந்து ஒரு திவ்வியமணம்வீச, அவன் அதைத் தனதுமனைவிகூந்தலின்ம
ணமென்றையுற்று, பிறர்க்குப்புலப்படுத்தாது தன்மனத்தடக்கிக்கொண்டு, ஆயிரம்பொன்
னை ஓர்முடிப்பாக்கி, 'யானையுற்றபொருளைவிளங்கச்செய்யுளியற்றும்புலவர்இதனைக்கொ
ள்க' என்றுகூறி, சங்கமண்டபத்திற்றூக்கினான். புலவர் அரசன்கருத்தையமைத்துப்பா
டாமையால் அக்கிழி தூக்கப்பட்டவாறேயிருந்தது. சிலநாளின்பின், மழை
யின்றி வளஞ்சுருங்க, மதுரைச்சோமசுந்தரக்கடவுளை வழிபடுந் தருமியென்பவர் பொரு
ள்வரவின்றிக் கவலையுற்று இனி யான் செழிப்புடைய பிறிதொருதேசத்திற்குச்சென்று
சீவிப்பதே தகுதியெனத்துணிந்து, ஆலயத்தையடைந்து சோமசுந்தரக்கடவுளைவணங்கி,
'தயாநிதியே!யான் இனி இங்கிருப்பேனாயிற் சாதலையடைவேன்; ஆதலால், பிறதேயத்தி
ற்போயிருந்து, செழித்தபின் ஈண்டுவருவேன்' என, சோமசுந்தரக்கடவுள் 'அன்ப
னே! பாண்டியன் தனதுகருத்தைவிளக்கிச்செய்யுள்செய்யும்புலவர் கைக்கொள்ளும்படிஆ
யிரம்பொன்னமைந்த ஓர்கிழியைச்சங்கமண்டபத்திற்றூக்கியிருக்கின்றான். இப்பாடலைக்
கூறிப்பெற்றுக்கொள்வாயாக' என்று கட்டளையிட்டு "கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்து
ம்பி-காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ-பயிலியதுகெழீஇயநட்பின்மயிலியற்- செறியெ
யிற்றரிவைகூந்தலி-னறியவுமுளவோநீயறியும்பூவே" என்னுந் திருப்பாசுரத்தையளித்த
னர். தருமி அப்பாடலை அரசன்முன்கூற, அரசன் தனது எண்ணத்தையடக்கியிருத்த
லாலுவந்து, 'இப்பாடலைச் சங்கப்புலவர்பாற்சென்று அரங்கேற்றுவீராக' என்றனன். தரு
மிசென்று அப்புலவர்கள்பாலுரைக்க அவர்கள் மகிழும்பொழுது, நக்கீரதேவர் 'இப்பாடல்
குற்றமுடைத்து' என்றார். அதுகேட்டதருமி வாட்டமுற்றுச் சோமசுந்தரக்கடவுளுக்கு வி
ண்ணப்பஞ்செய்ய, அப்பெருமான் புலவர்வடிவங்கொண்டு சங்கமண்டபத்திற்குவந்து 'கு
ற்றமற்ற நமதுகவியிற் குற்றங்கூறினார்யாவர்' என்றுவினாவினர். உடனே நக்கீரதேவர்
'யானேகூறினேன்' என்றுதருக்கிமொழிதலும், பெருமான் 'குற்றம்யாது' என்று வினாவி
னர். நக்கீரதேவர் 'கூந்தலுக்கியற்கைமணமில்லையாகவும் உள்ளதாகக்கூறியதுகுற்றம்' எ
ன்றனர். மீட்டும் பெருமான் 'அரம்பையர்கூந்தலுக்குமணம் இயற்கையன்றோ' என்றுகூ
ற, 'அதுவும் மந்தாரமலரொடுகலந்துமணத்தலாற் செயற்கையே' என்றனர். சோமசுந்த
ரக்கடவுள் 'நீ வழிபட்டேத்தும் காளத்திநாதரதுபாகத்தமர்ந்த ஞானப்பூங்கோதையம்மை
யினதுகூந்தல் எத்தன்மையது' எனவினாவ, அதுவுஞ் செயற்கையேயென்றனர். பின்ன
ர் நெற்றிக்கண்ணையுஞ் சடைமுடியையுங்காட்டியருள, 'நீர் வடிவமுழுதும் கண்களைக்காட்
டினாலும் குற்றமே. இதற்குப்பயந்து எனதுகொள்கையைவிடேன்' என்றுரைத்தனர். க
டவுள் அம்பிகையின் கூந்தலைப்பழித்தகாரணத்தாற் குட்டநோய்கொண்டலையும்படிசபி
க்க, உடனே நக்கீரதேவர் அஞ்சிப்பணிந்து 'இச்சாபப்பிணிநீங்கத் திருவருள்புரிக' எ
ன்றனர். பெருமான் திருவுளமிரங்கி, 'கயிலையைக்காணின் இப்பிணிநீங்கும்' என்றுபணி
த்து மறைந்தருளினர். நக்கீரதேவர் நோய்வருத்தமுன் கயிலையைத்தரிசிக்குநோக்கமாக
வடதிசைநோக்கிநடந்து, இமையமலைசேர்ந்து, ஓர் தடாகத்தில் நீராடி நியதிமுடித்து, அ
தன்கரையிலுள்ள ஆலமரத்தின்கீழ்த் தியானத்திருந்து, அம்மரத்திலையொன்று பாதிசல
த்திலும்பாதிகரையிலுமாகிவீழ்ந்து சலத்தில்வீழ்ந்தபாகம்மீனும் கரையில்வீழ்ந்தபாகம் ப
றவையுமாகி ஒன்றையொன்றீர்ப்பக்கண்டு, தியானநிலைதவறி, பூதத்தால் உணவினிமித்
தம் கவரப்பெற்று, திருமுருகாற்றுப்படையையருளிச்செய்து இடர்நீங்கி, தமக்குச் சா
பநேர்ந்தவரலாற்றை முருகக்கடவுளுக்கு விண்ணப்பஞ்செய்து, அவராற்காட்டப்பெற்ற
தடாகத்தில்மூழ்கி, தென்கயிலையைத்தரிசித்து, வியாதிநீங்கி 'கயிலைபாதிகா
ளத்திபாதி' என்னும் அந்தாதிப்பிரபந்தம்பாடி முத்திபெற்றார் என்ப
தாம்.

**கன்னியர்கள் முத்திபெற்றசரித்திரம்:**-மதுரைப்பதியிலே, மாணிக்கவல்லியென்னும் பரத்தைக்குப் புதல்வியரிருவருளர். அவர்கள் பாலியத்திற்றானே சிவபத்தியுடையராய், தன்னன்னையாற்பயிற்றப்படுங் காமக்கல்விகளையும் பொருள்தேடுமுபாயங்களையும் வெறுத்து,நக்கீரதேவர்பாடிய அந்தாதியையோதி, தென்கயிலையைத் தரிசிக்க ஆவல்கொண்டிருந்தனர். தாயாகிய மாணிக்கவல்லி, காளையரைமயக்கிப் பொருள்தேடாது இவ்விளமைப்பிராயத்தை வாளாபோக்குகின்றீர்களேயென்று பலவாறு சினந்துபேசி, அவர்கள் அதற்கிணங்காமையால் 'மணிமந்திரஔடதங்களால் இவர்களுக்குக் காமவிச்சையுண்டாக்குவோர் பொருள்கொடாமலே இவரை அனுபவிக்கக்கடவர்' என்று யாவர்க்கும் வெளிப்படுத்த, இதையறிந்த கன்னியர் 'இவளைநீங்கி என்று தென்கயிலையைத்தரிசிக்கப்பெறுவோம்' என்னுஞ்சிந்தனையோடு அரவின்வாய்த்தேரைபோலஞ்சியிருந்தனர். அக்காலத்தில் இரண்டுகள்வர் இவரணிந்திருக்கும் ஆடையாபரண முதலியவற்றைப்பறிக்கநினைத்து, தவவேடம்பூண்டு,'காளத்திகாக்க' என்றுரைத்துக்கொண்டு கன்னியரைச்சார்ந்து 'காளத்திக்குச்செல்கின்றோம்' என்றுகூறி, கன்னியரைமருட்டி, அன்னையறியாவண்ணம் அர்த்தயாமத்தில் தம்மையெதிர்ப்படுமாறு இடங்கற்பித்துப்போயினர். கன்னியர் தம்முயிர்போன்ற இரண்டுசேடியருடன் வேண்டியதிரவியங்களைக்கொண்டு, அன்னையறியாவண்ணம் அவருடனடந்து, வழியில் நாடோறும் எதிர்ப்படுந்தலங்களைத்தரிசித்து, காளத்திக்குச்சமீபமாகச்செல்லுங்கால், கள்வர் தம்முயிரைச்சிதைத்துப்பொருளைக்கவர்ந்துசெல்லமுயலுங்குறிப்பையுணர்ந்து பெருமானைத் தியானித்தனர். சிவபிரான் மலர்கொய்துதொடுக்குந் தொண்டர்வேடந்தாங்கிவந்து, அவர்களை யழைத்துக்கொண்டு காளத்திசேர்ந்து, அங்குள்ள அற்புதங்களைக்காட்டி மறைந்தருள, அக்கன்னியர் பெருமானைப்பூசித்து முத்தியெய்தினர் என்பதாம். (௭)

106 கொடிய வெஞ்சினக் காளியிக் குவலய முழுது
முடிவு செய்வனென் றெழுந்தநாண் முளரியான் முதலோ
ரடைய வஞ்சலு மவள்செருக் கழிவுற வழியாக்
கடவு ளாடலால் வென்றதோர் வடவனங் கண்டான்.

இ—ள்: கொடிய வெம் சின காளி—மிகக்கொடிய கோபத்தினையுடைய காளியானவள், இ குவலயம் முழுதும் முடிவுசெய்வன் என்று எழுந்தநாள்—- இப்பூவுலகமுழுதையும் அழித்துவிடுவேனென்றுகிளர்ந்தநாளில், முளரியான் முதலோர் அடைய அஞ்சலும்—-பிரமாமுதலியதேவர்கள் ஒருசேரப்பயப்படுதலும், அவள் செருக்கு அழிவுற—அவளதுகர்வம் அழியும்படி, அழியா கடவுள்—அழிவில்லாத சிவபிரான், ஆடலால் வென்றது—ஊர்த்துவதாண்டவத்தால் வெற்றிபெற்றருளிய, வடவனம்— திருவாலங்காட்டை, கண்டான்— தரிசித்தார் எ—று.

காளி செருக்கழிய ஆடலால்வென்றதை "மடிதரு முலக மென்ன வயங்கருணல்கி மெல்ல-வடிபெயர்த் தாடல் செய்ய வருகுறுங் காளி நோக்கி-யொடிவுறு நாணின் மேவி யொளிமுக மிறைஞ்சி யொல்கி- வடிவுறு பாவை போலச் செயலற மயங்கி நின்றுள்" என்னும் திருவாலங்காட்டுப்புராணச்செய்யுளானறிக. (௮)

107 அம்பு ராசிகொள் பிரளயத் தினுமழி வின்றி
யும்பர் மாலயற் குறையுளாய்க் கயிலைபோ லொன்று
மெம்பி ரான்றனி மாநிழ றன்னில்வீற் றிருக்குங்
கம்பை சூழ்தரு காஞ்சியந் திருநகர் கண்டான்.

இ—ள்: அம்புராசி கொள் பிரளயத்தினும் அழிவு இன்றி-(உலகத்தைக்) கடல் மூடுகின்ற இறுதிக்காலத்திலும் அழிதலின்றி, உம்பர் மால் அயற்கு உறையுள் ஆய்-தேவ

ர்கள் திருமால் பிரமா என்னுமிவர்களுக்கிருப்பிடமாய், கயிலைபோல் ஒன்றாய்—திருக்கைலாசமலையைப்போன்றவொருசிறந்தமலையாகி, எம்பிரான் தனி மா நிழல் தன்னில் வீற்றிருக்கும்—எங்கள்தலைவராகிய சிவபிரான் ஒப்பற்ற மாமரநிழலில் எழுந்தருளியிருக்கப்பெற்ற, கம்பை சூழ்தரு காஞ்சியம் திருநகர்—கம்பைநதிசூழ்ந்த சிறந்த காஞ்சீபுரத்தை, கண்டான்—தரிசித்தார் எ—று.

இச்செய்யுளிற்சுட்டிய காஞ்சிமகத்துவங்களையும், பிற்செய்யுளிற்சுட்டிய சரித்திரங்களையும் திருநகரப்படலத்துக்காண்க. (௯)

108 ஏல வார்குழ லுமையவள் பூசைகொண் டிருந்த
மூல கார ண மாகிய முதல்வனு லயமு
மாலும் வேதனு மமரரும் வழிபடு மற்றை
யால யங்களா யுள்ளவுங் கண்டன னையன்.

இ—ள்: ஏல வார் குழல் உமையவள் பூசை கொண்டு இருந்த மூலகாரணம் ஆகிய முதல்வன் ஆலயமும்— மயிர்ச்சாந்துபூசப்பெற்ற நீண்ட கூந்தலையுடைய காமாட்சியம்மையாரதுபூசையை ஏற்றுக்கொண்டிருந்த முதற்காரணராகிய திருவேகம்பநாதரதுதிருக்கோயிலையும், மாலும் வேதனும் அமரரும் வழிபடும் மற்றை ஆலயங்கள் ஆய் உள்ளவும்-திருமாலும் பிரமதேவரும் ஏனையதேவர்களும்பூசித்த ஏனையகோயில்களையும், ஐயன் கண்டனன்—முருகக்கடவுள் தரிசித்தார் எ—று.

மற்றையாலயங்களின்பெயர்களைத் திருநகரப்படலத்து எண்பத்தொன்பதாஞ்செய்யுளிற்காண்க. (௧௦)

வேறு.

என்னிக ரெவரு மில்லென் றிருவரு மிகலு மெல்லை
109 யன்னவர் நடுவு தோன்றி யடிமுடி தெரியா தாகி
யுன்னினர் தங்கட் கெல்லா மொல்லையின் முத்தி நல்கித்
தன்னிக ரின்றி நின்ற தழற்பெருஞ் சயிலங் கண்டான்.

இ—ள்: என் நிகர் எவரும் இல் என்று இருவரும் இகலும் எல்லை— என்னையொப்பார் ஒருவருமில்லையென்று பிரமவிஷ்ணுக்களிருவரும் பொருதபொழுது, அன்னவர் நடுவு தோன்றி—அவர்களுக்கு நடுவேதோற்றி, அடி முடி தெரியாது ஆகி—அடியுமுடியுங் காணப்படாததாய், உன்னினர் தங்கட்கு எல்லாம் ஒல்லையில் முத்தி நல்கி-நினைத்தார்க்கெல்லாம் விரைவில் வீடுபேற்றையுதவி, தன் நிகர் இன்றி நின்ற-தனக்கொப்பின்றி நிலைபெற்ற, பெரும் தழல் சயிலம்-பெரிய திருவண்ணாமலையை, கண்டான்-தரிசித்தார் எ-று.

உன்னினர்தங்கட்கெல்லாமொல்லையின்முத்திநல்குதலை "துவக்கறவறிந்துபிறக்குமாரூருருந்துயர்ந்திடாதடைந்துகாண்மன்று- முவப்புடனிலைத்துமரிக்குமோர்பதியுமொக்குமோநினைக்குநின்னகரைப்-பவக்கடல்கடந்துமுத்திமங்கரையிற்படர்பவர்திகைப்பறநோக்கித்-தவக்கலநடத்தவுயர்ந்தெழுஞ்சோணசயிலனேகயிலைநாயகனே" என்னுஞ் சிவப்பிரகசுவாமிகள் திருவாக்கானறிக. (௧௧)

மண்ணுல கிறைவன் செய்யு மணந்தனை விலக்கி யெண்டோ
ளண்ணலோர் விருத்தன் போல்வந் தாவண வோலை காட்டித்
துண்ணென வழக்கில் வென்று சுந்தரன் றனையாட் கொள்ளும்
பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப் பெரும்பதி தனையுங் கண்டான்.

இ—ள்: எண் தோள் அண்ணல்- எட்டுப்புயங்களையுடைய சிவபிரான், ஓர் விருத்தன்போல் வந்து-ஒருவிருத்தப்பிராமணர்போல் (வடிவங்கொண்டு)வந்து, ஆவணவோ

லை காட்டி—அடிமையோலையைக்காண்பித்து, துன் என வழக்கில் வென்று—விரைவாக வழக்கில் வெற்றிகொண்டு, மண் உலகு இறைவன் செய்யும் மணம் தனை விலக்கி—நிலவுலகத்தரசராகிய நரசிங்கமுனையரையராற்செய்விக்கப்பட்ட விவாகத்தைத்தடுத்து, சுந்தரன் தனை ஆட்கொள்ளும்-சுந்தரமூர்த்திநாயனாரை அடிமைக்கொண்டருளிய, பெண்ணையம் புனல் சூழ்— பெண்ணைநதிசூழ்ந்த, பெரும் வெண்ணெய்ப்பதியும்— பெரிய திருவெண்ணெய்நல்லூரையும், கண்டான்—தரிசித்தார் எ—று.

நரசிங்கமுனையரையர் தமக்குப்பிள்ளைமைபூண்டுவளர்ந்த சுந்தரமூர்த்திநாயனார்க்குச் சடங்கவிசிவாசாரியரதுமகளை மணஞ்செய்யுஞ்சபையிற் சிவபிரான் விருத்தப்பிராமணவேடங்கொண்டுவந்து, அச்சுந்தரமூர்த்திநாயனாரைத் தமக்கடிமையென்றுகூறி, மணஞ்செய்யாவண்ணந்தடுத்து, அவர் மறுக்க, அதற்குச் சாதனமாக அடிமையோலைகாட்டி, தாம்கூறிய வழக்கைவென்று, ஆட்கொண்டு, திருவெண்ணெய்நல்லூரிற் சென்று மறைந்தருளினர் என்பதாம். (௧௨)

தூசினா லம்மை வீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சு
மாசிலா வுயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி
யீசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையுங் கண்டான்.

இ—ள்: அம்மை தூசினால் வீச—உமாதேவியார் (சிரமந்தீர்த்தற்பொருட்டு) வஸ்திரத்தினால்வீச, தொடையின் மேல் கிடத்தி—தமது திருத்தொடைகளின்மேற்கிடத்தி, துஞ்சும் ஆசு இலா உயிர்கட்கு எல்லாம்—இறக்கின்ற குற்றமற்ற ஆன்மாக்களுக்கெல்லாம், அஞ்செழுத்து இயல்பு கூறி-பஞ்சாக்ஷரத்தின் மான்மியத்தை உபதேசித்து, ஈசனே—சிவபெருமானே, தனது கோலம் ஈந்திடும் இயல்பால்-தமது திருவுருவத்தையருளுகின்றதன்மையால், அந்த காசியின் விழுமிது ஆன— அந்தக்காசிப்பதியினுஞ்சிறந்ததாயிருக்கின்ற, முதுகுன்ற வரையும்-விருத்தாசலத்தையும், கண்டான்—தரிசித்தார் எ—று.

வீசக்கூறி எனஇயையும். ஏகாரம் ஆன்மாக்கள் விரும்பாதிருக்கவும் வலிந்தாட்கொள்ளுதலை விளக்கிற்று. விருத்தாசலங்காசியிற்சிறந்ததென்பதை "மாசி யதிகந் துறந்தார் மகிழ்குன்றை மாநகரோ-காசி யதிகங்கொ லோவென்பி ராயினக் காசியெனப்-பேசி யதிகந் தகன்றிருந் தான்பரன் பேரடலை-பூசி யதிகம் பரனீங்கி லானிப் புரியினையே" என்னுஞ்சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானறிக. (௧௩)

விரிகனல் வேள்வி தன்னில் வியன்றலை யரிந்து வீட்டிப்
பொருவறு தவத்தை யாற்றும் பதஞ்சலி புலிக்கா லண்ண
லிருவரு முணர்வாற் காண வெல்லையி லருளா லீசன்
றிருநட வியற்கை காட்டுந் தில்லைமூ தூரைக் கண்டான்.

இ—ள்: விரி கனல் வேள்வி தன்னில் வியன் தலை அரிந்து வீட்டி பொரு அறு தவத்தை ஆற்றும் பதஞ்சலி-பரந்த அக்கினியை வளர்த்துச் செய்கின்றயாகத்திற் பெரிய தலையையரிந்துவிழுத்தி ஒப்பற்ற தவத்தைச்செய்த பதஞ்சலிமுனிவரும், புலிக்கால் அண்ணல்—வியாக்கிரபாதமுனிவரும் ஆகிய, இருவரும்—இரண்டு அடியார்களும், உ... வால் காண—மெய்யறிவினாற்றரிசிக்கும்படி, எல்லை இல் அருளால்—அளவிறந்த கரு... யினால், ஈசன்-சிவபெருமான், திருநட இயற்கை காட்டும்- திருநிருத்தத்தினியல்பை... ண்பித்த, தில்லை முது ஊரை-பழைய சிதம்பரத்தை, கண்டான்—தரிசித்தார் எ—

பதஞ்சலி-அஞ்சலியில் வீழ்ந்தவர். பதத்+அஞ்சலி=பதஞ்சலி. முன்னொ... லத்தில், திருமால் பாற்கடலிற்சேடசயனத்தினின்றுமெழுந்து, கைகளைச்சிரத்திற்... த்து, பதுமாசனமாகி, அரகர சங்கரவென்றுச்சரித்தனர். சேடன் அஃதென்னையெ...

திருமால், தாருகவனத்திற் சிவபிரான்செய்தருளிய இன்பநிருத்தத்தின் ஆனந்தமெனசேடனும் அதனைத்தரிசிக்கத்தவங்கிடந்தான். பரமபதி அத்தவத்திற்கெளிவந்து, 'அன்பனே! ஆயிரம்பணுமகுடமுள்ள இவ்வுருவுடன் போவையேலுலகமஞ்சும். ஆதலால், நின்னைப்புத்திரனுக்கவிரும்பிய அத்திரிமுனிவரது மனையாரின் அஞ்சலியில்வீழ்ந்தமையாற் பதஞ்சலியெனப்பட்ட அவ்வுருவத்தோடுவந்து அங்குள்ள வியாக்கிரபாதனுடன் தரிசிப்பாயாக' என்றுகூறி, தைமாதத்திற்பூசநக்ஷத்திரமுங்குருவாரமுங்கூடிய சுபதினத்தில், மத்தியானத்தில் திருநிருத்தங்காட்டினர். புலிக்காலண்ணல்-புலிக்காலையுடையதலைவர். சிவபூசையின்பொருட்டுக்கொய்யுமலர்கள் பகற்காலத்தில் வண்டுகளாலெச்சிற்படுதலால் இரவிற்றானே எடுத்துக்கொள்ளவிரும்பி, சிவபிரானிடத்திற் புலிக்கண்ணும் புலிக்காலும்பெற்றவர். ஞானக்கண்ணூற்காணவென்பார் 'உணர்வாற்காண' என்றார். (௧௪)

தண்டளிர்ச் சோலைத் தில்லைத் தபனிய மன்றி லென்றுந்
தொண்டையங் கனிவாய் மாது தொழச்சுராட் புருட னுள்ளத்
தண்டரு மதிக்க லாற்று வற்புதத் தனிக்கூத் தாடல்
கண்டனன் கசிவா லுள்ளங் களிப்புற வணங்கிப் போனான்.

இ—ள்: தண் தளிர் சோலை தில்லை தபனிய மன்றில்—தண்மையான தளிர்களையுடைய சோலைசூழ்ந்த தில்லைப்பதியின்கணுள்ள கனகசபையில், என்றும்— எப்போதும், தொண்டையம் கனி வாய் மாது தொழ-கொவ்வங்கனியைப்போன்ற அதரத்தினையுடைய உமையம்மையார் (நிருத்தசாக்ஷியாய்நின்று)கைதொழ, சுராட்புருடன் உள்ளத்து-விராட் என்னும் புருடனது இருதயத்தில், அண்டரும் மதிக்கல் ஆற்று அற்புத தனி கூத்து ஆடல்—தேவர்களும் மதித்தற்கியலாத அதிசயத்தை விளைக்கின்ற ஒப்பற்ற திருநடனத்தையியற்றுதலை, கண்டனன்—தரிசித்து, கசிவால் உள்ளம் களிப்பு உற வணங்கி போனான்—அன்பினானேமனங்களிப்படையப்பணிந்து அப்பாற்போயினார் எ—று.

தண்மை-செழிப்பு. மன்றில் என்றும் ஆடல் என இயையும். விராட்புருடனுக்குச்சிதம்பரம்இருதயமும் பிறதலங்கள் பிறவுறுப்புக்களுமாம். இது முன்னோரிடத்திற்காட்டப்பட்டது. பஞ்சகிருத்தியநடனமாதலின் 'அண்டருமதிக்கலாற்றுவற்புதத்தனிக்கூத்து' என்றார். (௧௫)

குடமுனி கரத்தி லேந்துங் குண்டிகை யிருந்து நீங்கிப்
படிதனில் வேறு வேறாய்ப் பற்பல நாமந் தாங்கிக்
கடல்கிளர்ந் தென்னச் செல்லுங் காவிரி யென்னு மாற்றின்
வடகரை மண்ணி யின்பால் வந்தனன் கருணை வள்ளல்.

இ—ள்: குடமுனி கரத்தில் ஏந்தும் குண்டிகை இருந்தும் நீங்கி—அகத்தியமுனிவர் கையிற்றாங்கிய கமண்டலத்தினின்றும் இழிந்து, வேறு வேறு ஆய்— வெவ்வேறுபிரிவாகி, பற்பல நாமம் தாங்கி—பலபல பெயர்களைப்பெற்று, கடல் கிளர்ந்து என்ன படிதனில் செல்லும்—சமுத்திரம் எழுந்துவருவதுபோலப் பூமியிற்பாய்கின்ற, காவிரி என்னும் ஆற்றின்—காவேரியென்னும் நதியினது, வடகரை—வடபாகத்திலுள்ள, மண்ணியின்பால்—மண்ணிநதிக்கரையில், கருணை வள்ளல் வந்தனன்—அருள்வள்ளலாகிய முருகக்கடவுள் வந்துசேர்ந்தார் எ—று.

படிதனில் என்பதை நீங்கி என்பதோடு கூட்டியுரைப்பினுமாம். நீங்கிச்செல் என இயையும். (௧௬)

வழிநடைப்படலமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௧௬௪௪.

# குமாரபுரிப்படலம்.

குமாரக்கடவுளுக்கு ஓர்புரியமைத்தமையைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

முருகக்கடவுள் சூரியனத்தமிக்க மண்ணியாற்றங்கரையில்வந்து, பிரமாமுதலிய தேவர்வேண்டுகோட்படி அவ்விடத்தில் வீற்றிருக்கச்சம்மதித்து, தேவத்தச்சனைக்கொண்டு ஒரு நகரமமைப்பித்து, அதில் எழுந்தருளியிருந்தார். வீரவாகுமுதலிய வீரர்களும் பூதர்களுந் தேவர்களுந் தத்தமக்கு இயற்றப்பட்ட இருக்கைகளிற்போயிருந்தனர். பின்னர், சீகாழிப்பதியிலுள்ள வனதேவதை இந்திரனிடத்துவந்து, அவனதும் இந்திராணியினதும் ஆபரணங்கள்பொதிந்த ஒரு கிழியைமுன்வைத்து 'தேவராசனே! நீர் முன் என்னிடம் அடைக்கலமாகத்தந்த இக்கிழியைவற்றுக்கொள்க' என்று கூறிற்று. இந்திரன் அதனைவாங்கி அவிழ்த்து, மனைவியின் ஆபரணங்கள்மேலிருக்கக்கண்டு, அவளைநினைந்து காமமீறிக்கலங்கி, அக்கிழியைமுடிந்து சேமித்துவைக்கும்படி தன்பரிசனரிடங்கொடுத்து, வனதேவதையையனுப்பிவிட்டு, இரவுமுழுதும் காமநோயாற்கவன்று, சூரியோதயமானவுடன் மனந்தெளிந்து, முருகக்கடவுளையணுகினன். மேல், முருகக்கடவுள், ஒரு திருக்கோயிலமைப்பித்து, அதிற்சிவபிரானைப்பூசித்து, சர்வசங்காரப்படைக்கலம்பெற்று, சேனைகளுடன்புறப்பட்டு, வழியில், திருவிடைமருதூர் திருமயிலாடுதுறை முதலியதலங்களைத்தரிசித்து, பாலைவனத்திற் சென்றருளினர் என்பதாம்.

115 அளவில் பூதவெம் படையொடு மண்ணியா றதன்கட்
குளகன் வந்துழி யெழுந்திடு பூழிவான் குறுகி
யொளிரும் வெய்யவன் கதிர்தனை மறைத்தலா லோடி
வளைநெ டுங்கடன் மூழ்குவான் புக்கென மறைந்தான்.

இ—ள்: குளகன்—முருகக்கடவுள், அளவு இல் வெம் பூதப்படையொடு—எண்ணிறந்த கொடிய பூதசேனைகளுடன், மண்ணியாறு அதன் கண் வந்துழி—மண்ணியாற்றங்கரையில் வந்தபொழுது, எழுந்திடு பூழி வான் குறுகி—கிளம்பிய தூளிகள் ஆகாயத்திற்செறிந்து, கதிர்தனை மறைத்தலால்—கிரணங்களை மறைத்தலினால், ஓடி—ஓடிப்போய், வளை நெடும் கடல் மூழ்குவான் புக்கு என-(பூமியை) வளைந்திருக்கின்ற நீண்டசமுத்திரத்தில் நீராடும்படி சென்றாற்போல, ஒளிரும் வெய்யவன் மறைந்தான்—பிரகாசிக்கின்ற சூரியன் அத்தமித்தான் எ—று.

குழகன்-ழகரளகர வொற்றுமைபற்றி, எதுகைக்கிணங்கக்குளகனென்றாயிற்று. வந்துழி மறைந்தான் என இயையும். நீராடநினைத்தல்-மேனியிற்செறிந்த பூழியைக்கழுவுதற்கென்க. (க)

116 மறைந்த காலையிற் றோன்றிய மாலையு நிசியுங்
குறைந்த திங்கள்வந் துதித்தது தாரகை குறுகி
நிறைந்தெ ழுந்தவோர் மன்னவ னிறந்துழி நீங்கா
துறைந்த வொன்னலர் யாவருங் கிளர்ந்தவா றொப்ப.

இ—ள்: மறைந்த காலையில்—சூரியன் அத்தமித்தபொழுது, மாலையும் நிசியும் தோன்றிய—மாலைக்காலமும் இராக்காலமும்வந்தன, குறைந்த திங்கள் வந்து உதித்தது—பிறைச்சந்திரன்வந்துதோற்றியது, தாரகை குறுகி நிறைந்து எழுந்த—நக்ஷத்திரங்கள் செறிந்துநிறைந்து தோற்றின, ஓர் மன்னவன் இறந்துழி நீங்காது உறைந்த ஒன்னலர் யாவரும் கிளர்ந்தவாறு ஒப்ப—ஒருசக்கிரவர்த்தியிறந்தபோது விலகாமல் அமைந்திருந்த பகையரசர் யாவரும் நிமிர்ந்ததன்மையைப்போல எ—று.

மறைந்தகாலையில் ஒப்ப என்பன, தோன்றியமுதலியவினைமுற்றுக்களுடன் தனித்தனிஇயையும். ஓரரசன் உலகமனைத்தையுமொருகுடைக்கீழ்ப்படுத்தி யரசியற்றலால்அவன்வயத்தராயமைந்திருந்த சிற்றரசர் அவனிறந்தழித்தம்வயத்தராய்த்தலைப்படல்போல, சூரியனுதித்தலால் ஒளிகுன்றி மறைந்திருந்ததாரகைமுதலியன அவனத்தமித்தழி ஒளிபெற்று விளங்கின என்பதாம். (உ)

மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பிற்
117 றொக்க பேரிருண் மாதரொத் தனவுடுத் தோற்றஞ்
செக்க ரீசனை யொத்ததொண் போனகஞ் செறிந்த
கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே.

இ—ள்: விசும்பில் தொக்க பேர் இருள்-ஆகாயத்திற்செறிந்த பெரிய இருளானது, மிக்க தாருக வனத்தினை ஒத்தது—சிறந்த தாருகவனத்தைநிகர்த்தது, உடுத்தோற்றம் மாதர் ஒத்தன-நக்ஷத்திரங்களின்காட்சி (அவ்வனத்துள்ள) முனிபத்தினிகளைநிகர்த்தது, செக்கர் ஈசனை ஒத்தது—செவ்வானம் (அங்கேவந்த) சிவபிரானைநிகர்த்தது, கதிர் இளம் பிறை—ஒளிபொருந்திய பாலசந்திரன், ஒண் போனகம் செறிந்த கை கபாலமது ஒத்தது-ஒளிபொருந்திய அன்னம்நிறைந்த கையிலேந்திய பிரமகபாலத்தைநிகர்த்தது எ-று.

வனம் இருட்செறிவுபோற்காணப்படுதலின் 'மிக்கதாருகவனத்தினையொத்தது விசும்பிற்றொக்கபேரிருள்' எனவும், தாருகவனமாதர் சிவபிரானது பிக்ஷாடனவடிவத்தைக்கண்டவுடன் மனையினின்று புறப்பட்டு வெளியில்வந்து குழுமியதுபோல, நக்ஷத்திரங்களும் செவ்வானந்தோன்றியவுடன், மறைவுநீங்கிவெளிப்பட்டு விண்ணிற்செறிந்து கிடத்தலாலும் ஒளியுடைமையாலும் 'மாதரொத்தனவுடுத்தோற்றம்' எனவும், செக்கருஞ்சிவபிரானுஞ் செந்நிறமுடைமையால் 'செக்கரீசனையொத்தது' எனவும், கபாலமும் பிறையும் வெண்ணிறமும் வளைவுமுடையனவாதலின் 'போனகஞ்செறிந்தகைக்கபாலமதொத்ததுகதிரிளம்பிறை' எனவும் இயைபுற உவமித்துக்கூறினார். (௩)

நிலவு லாவிய ககனமா நீடுபாற் கடலிற்
குலவு கின்றதோர் பொருளெலாங் கொண்டுகொண் டேகி
118 யுலகி னல்குவான் முயலெனு மொருமக னுய்ப்பச்
செலவு கொண்டதோர் தோணிபோன் றதுசிறு திங்கள்.

இ—ள்: சிறு திங்கள்—இளம்பிறையானது, நிலவு உலாவிய ககனம் ஆம் நீடு பாற்கடலில் குலவுகின்றது ஓர் பொருள் எலாம் கொண்டுகொண்டு ஏகி உலகில் நல்குவான்-ஒளிபொருந்திய ஆகாயமாகிய நெடியபாற்கடலிலமைந்துள்ள திரவியங்களெல்லாவற்றையும் ஏற்றியேற்றிக்கொண்டுபோய்ப் பூவுலகத்திற்கொடுக்கும்படி, முயல் எனும் ஒரு மகன் உய்ப்ப—முயற்களங்கமாகிய ஒருமாலுமிசெலுத்த, செலவுகொண்டது—செல்லுதலைப்பொருந்திய, ஓர் தோணி போன்றது— ஒருமரக்கலத்தையொத்தது எ—று.

ஆகாயத்தைப் பாற்கடலாகவும், பிறையைத் தோணியாகவும், முயலை மாலுமியாகவும் இயைபுறஉவமித்தார். (௪)

ஆன காலையி லறுமுகப் புங்கவ னமல
119 மேனி சேரொளி நிலவொடு கங்குலை வீட்டிப்
பானு மேவரு மெல்லெனச் செய்தலிற் பரமாம்
வான நாயகன் கயிலைபோன் றிருந்ததவ் வையம்.

இ—ள்: ஆன காலையில்—அவ்வாறாகியசமையத்தில், அறுமுக புங்கவன் அமல மேனி சேர் ஒளி—ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுளது நின்மலமாகிய மேனியி

ற்பொருந்திய பிரகாசமானது, நிலவொடு கங்குலை வீட்டி— நிலவையும் இருளையும் ஒழித்து, பானு மேவரும் எல் என செய்தலின்—சூரியனுதித்திருக்கின்ற பகற்காலம்போலாக்குதலினால், அ வையம்—அந்தப்பூமி, பரமாம் வானநாயகன் கயிலை போன்று இருந்தது-பரம்பொருளாகிய சிவபிரானது திருக்கைலாசமலையையொத்திருந்தது எ—று.

அவ்வையமென்றது மண்ணிநதிச்சார்பானபூமியை. இரவு தன்குணத்தையிழந்து பகலின்குணத்தையெய்தியதாகக்கூறுதலின் இது பிறிதின்குணம்பெறலணி. (ரு)

வேறு.

120 வீசு பேரொளி விறற்குக னிவ்வா
றாசின் மண்ணியி னகன்கரை நண்ண
வீசனு மவனை யெய்துபு வேதாக்
கேசவன் முதல்வ ரின்ன கிளப்பார்.

இ—ள்: வீசு பேர் ஒளி விறல் குகன்—மிக்க சோதியைப்பரப்புகின்ற வலியகுமாரக்கடவுள், இவ்வாறு—இப்படி, ஆசு இல் மண்ணியின் அகன் கரை நண்ண— குற்றமற்ற அகன்ற மண்ணிநதிக்கரையையடைய, வேதா கேசவன் முதல்வர்-பிரமா திருமால் முதலாகிய தேவர்கள், ஈசன் ஆம் அவனை எய்துபு—கடவுளாகிய அந்தக்கந்தவேளையணுகி, இன்ன கிளப்பார்—இவ்வாசகங்களைக் கூறுவார்கள் எ—று.

வீசுபேரொளி விறற்குகன்=பேரொளிவீசுவிறற்குகன். வேதா-வடசொல். ()

121 ஆண்ட விந்நதி யகன்கரை யெல்லா
மாண்ட வாலுக மலிந்தினி தாகு
நீண்ட சோலைக ணிரந்தன தோன்றி
யீண்டி யீண்டையி னிறுத்துள வன்றே.

இ—ள்: ஆண்ட இ நதி அகன் கரை எல்லாம்—ஆழமாகிய இந்தயாற்றின் அகன்றகரையெங்கும், மாண்ட வாலுகம் மலிந்து இனிது ஆகும்—சிறந்த வெண்மணல்கள் நிறைந்து சிறந்திருக்கின்றது, நீண்ட சோலைகள் நிரந்தன—நெடிய சோலைகள்நிறைந்துள்ளன, தோன்றி ஈண்டையின் ஈண்டி இறுத்துள- காந்தள் இவ்விடத்து நெருங்கிப்பொருந்தியுள்ளன எ—று.

ஆண்ட=ஆழ்ந்த. (எ)

122 பிறைபு னைந்திடு பெருந்தகை தான
மிறுதி யில்லன விருந்தன வற்றா
னறிய தாகுமிந் நதிக்கரை தன்னி
லிறைவ விவ்விடை யிருந்தரு ளென்றார்.

இ—ள்: இறைவ—கடவுளே!, பிறை புனைந்திடு பெருந்தகை தானம் இறுதி இல்லன இருந்தன—பிறைச்சந்திரனையணிந்த சிவபிரானது ஆலயங்கள் அளவில்லாதனவாக இருக்கின்றன, அற்றால்—அக்காரணத்தால், நறியது ஆகும் இ நதி கரை தன்னில்—நன்மையுடைத்தாகிய இந்த மண்ணிநதிக்கரையில், இவ்விடை—இந்தஇடத்தில், இருந்தருள் என்றார்—வீற்றிருந்தருள்க என்று வேண்டினார்கள் எ—று.

பெருந்தகை-அன்மொழித்தொகை, பெரிதாகிய தகுதியையுடையவன் என்பதுபொருள். இவ்விடையென்றுசுட்டியது இவ்வேண்டுகோள் நிகழும்பொழுதெய்திய இடத்தை. (அ)

வனைய மேனியயன் மான்முதல் வானோ
ரினைய செப்புதலும் யாரினு மேலோன்
வினைய மெத்தவுள விச்சுவ கன்மப்
புனைவ னுக்கிது புகன்றிடு கின்றான்.

இ—ள்: வனையும் மேனி அயன் மால் முதல் வானோர் இனைய செப்புதலும்—அலங்கரிக்கப்பட்ட சரீரத்தினையுடைய பிரமாவுந் திருமாலுமுதலாகியதேவர்கள் இவ்வாசகத்தைக்கூற, யாரினும் மேலோன்— எத்தகையினரினுஞ் சிறந்தவராகிய முருகக்கடவுள், வினையம் மெத்த உள விச்சுவகன்ம புனைவனுக்கு இது புகன்றிடுகின்றான்-கைத்தொழிற்பயிற்சியைமிகவுமுடைய விச்சுவகன்மனாகிய தேவத்தச்சனுக்கு இவ்வாசகத்தைக் கூறியருளுவார் எ—று. (கூ)

மெய்விதித் தொழிலில் வேத னிகர்க்குங்
கைவ லோயொரு கணம்படு முன்ன
ரிவ்வி டத்தினி லெமக்கொரு மூதூர்
செவ்விதிற் புனைவு செய்குதி யென்றான்.

இ—ள்: மெய் விதித்தொழிலில் வேதன் நிகர்க்கும் கைவலோய்—மெய்ம்மையாகிய சிருட்டித்தொழிலிற் பிரமனையொத்த கைத்தொழிற்சாமர்த்தியனே!, ஒரு கணம் படும் முன்னர்—ஒருகணநேரங்கழியுமுன், இவ்விடத்தினில்—இங்கே, எமக்கு ஒரு முது ஊர்—எமக்கு ஒரு பழையநகரத்தை, செவ்விதில் புனைவு செய்குதி—அழகுறப்படைக்குதி, என்றான்—என்று திருவாய்மலர்ந்தருளினர் எ—று.

செவ்விதிற் புனைவுசெய்குதி என்றதற்கேற்ப 'மெய்விதித்தொழிலில்வேதனிகர்க்குங்கைவலோய்' என்றார். (௧௦)

என்ன லோடுமவ் விடந்தனி லெங்கோன்
துன்னு தொல்படை சுராதிப ரோடு
மன்ன வங்கணொரு மாநகர் நெஞ்சத்
துன்னி நல்கலு முவந்தனர் யாரும்.

இ—ள்: என்னலோடும்—என்று திருவாய்மலர்ந்தருளியவுடன், அவ்விடம் தனில்—அவ்விடத்தில், எம் கோன் துன்னு தொல் படை சுராதிபரோடும் மன்ன—எம்மிறைவராகிய முருகக்கடவுள் நெருங்கிய பழைய சேனைகளோடும் தேவத்தலைவர்களோடும் வீற்றிருக்கும்படி, அங்கண்—அந்த மண்ணியாற்றங்கரையில், ஒரு மா நகர்— ஒரு பெரிய நகரத்தை, நெஞ்சத்து உன்னி நல்கலும்—மனத்தாலினைத்து (விச்சுவகன்மன்) படைத்தலும், யாரும் உவந்தனர்—அனைவருமகிழ்ந்தார்கள் எ—று.

அவ்விடந்தனில்மன்ன அங்கண்நல்கலும் என இயையும். தொல்படையோடும் சுராதிபரோடும் எனத்தனித்தனிகூட்டுக. சுராதிபர்-வடநூன்முடிபு. (௧௧)

அப்பு ரத்தையறி வன்கடி தாற்றி
முப்பு ரத்தையடு முன்னவ னல்கு
மெய்ப்பு ரத்தவனை நோக்குபு மேலோ
யிப்பு ரத்திடை யெழுந்தரு ளென்றான்.

இ—ள்: அறிவன்—விச்சுவகன்மன், அ புரத்தினை கடிது ஆற்றி—அந்நகரத்தை விரைவிற்செய்து, முப்புரத்தை அடும் முன்னவன் நல்கும் மெய் புரத்தவனை நோக்குபு—முப்புரங்களையும் எரித்தழித்தமுதல்வராகிய சிவபிரான்பெற்றருளிய மெய்ம்மையா

கிய திருமேனியையுடைய முருகக்கடவுளைப்பார்த்து, மேலோய்—இறைவரே!, இ புரத்திடை எழுந்தருள் என்றான்-இந்நகரத்திற் புகுந்தருளுக என்று வேண்டினான் எ—று.

நோக்குபு- செய்பு என்வாய்ப்பாட்டுவினையெச்சம். அருளே திருமேனியாகவுடையாதலின் 'மெய்ப்புரத்தவன்' என்றார். (கஉ)

என்ற லோடுமிர தத்தி னிழிந்தே
துன்றும் வானவர் சுராதிப ரானோர்
சென்ற பூதர்கள் செறிந்துட னேக
மன்றன்மா நகரில் வள்ளல் புகுந்தான்.

இ—ள்: என்றலோடும்—என்று வேண்டியவுடன், வள்ளல்— முருகக்கடவுள், இரதத்தின் இழிந்து—தேரினின்றுமிறங்கி, துன்றும் வானவர்—நெருங்கிய தேவர்களும், சுராதிபர் ஆனோர்—தேவத்தலைவர்களும், சென்ற பூதர்கள்- வந்தபூதர்களும், செறிந்து உடன் ஏக—நெருங்கி உடன்செல்ல, மன்றல் மா நகரில் புகுந்தான்—மங்கலகரமாகிய பெரிய நகரத்தினுள்ளேபோயினார் எ—று. (கந)

செல்லு மாமுகில் செறிந்திடு காப்பின்
மல்லன் மாநகர் வளந்தனை நோக்கி
யெல்லை யில்லறிவன் யாமுறை தற்கு
நல்ல மாநகரி தென்று நவின்றான்.

இ—ள்: எல்லை இல் அறிவன்—அளவிறந்த அறிவினையுடைய முருகக்கடவுள், செல்லும் மா முகில் செறிந்திடு காப்பின் மல்லல் மா நகர் வளம் தனை நோக்கி-சஞ்சரிக்கின்ற கரிய மேகங்கள்நெருங்கிய மதிலையுடைய வளப்பமிக்க சிறந்த அந்நகரத்தினதுவளங்களெவற்றையும் பார்த்து, இது யாம் உறைதற்கு நல்ல மா நகர் என்று நவின்றான்-இது யாமிருத்தற்கேற்ற சிறந்தநகரமாமென்று கூறியருளினார் எ—று.

மிக உயர்ந்தமதிலென்பார் 'முகில்செறிந்திடுகாப்பு' எனவும், பேரறிவினனென்பார் 'எல்லையில்லறிவன்' எனவும் கூறினார். (கச)

வீர வேளிது விளம்புத லோடு
மாரும் வானவர்க ளம்மொழி கேளா
வேரெ லாமுடைய விந்நகர் சேய்ஞ
லூர தென்றுபெய ரோதின ரன்றே.

இ—ள்: வீர வேள் இது விளம்புதலோடும்—வீரத்தையுடைய முருகக்கடவுள் இவ்வாசகத்தைக் கூறியருள, வானவர்கள் ஆரும் அ மொழி கேளா—தேவர்களெல்லோரும் அவ்வாசகத்தைக்கேட்டு, ஏர் எலாம் உடைய இ நகர்—அழகனைத்தையுமுடைய இந்த நகரம், சேய்ஞலூர் அது என்று—திருச்சேய்ஞலூராகுமென்று, பெயர் ஓதினர்—பெயரைக்கூறினார்கள் எ—று.

சேய்நலூர் என்பது போலியாயிற்று. முருகக்கடவுளுக்கு நல்லநகரமென்பது பொருள். 'யாமுறைதற்குநல்லமாநகர்' என முருகக்கடவுள்கூறியதற்கேற்ப இப்பெயர் தேவர்களாற்கூறப்பட்டது. முதனூலிற்குமாரபுரியெனக்கூறியுள்ளார்; அதுபற்றியே இப்படலமும் அப்பெயர்த்தாயிற்று. (கரு)

ஆய காலையனி கப்படை சூழ
வேய பின்னிளை ஞரிந்திரன் வேதா
மாய னேனையர் வழுத்திட வாண்டைக்
கோயில் செல்லுபு குமார னிருந்தான்.

யகாலை—அவ்வாறாகிய சமயத்தில், குமாரன்—முருகக்கடவுள், அ
னைகள்சூழவும், எய பின் இளைஞர் இந்திரன் வேதா மாயன் ஏனை
பிறந்த (வீரவாகுமுதலிய)தம்பிமார்களும் இந்திரனும் பிரமதேவரும்
துதிக்கவும், ஆண்டை கோயில் செல்லுபு—அவ்விடத்திலுள்ள திரு
ாய், இருந்தான்—வீற்றிருந்தார் எ-—று.

அனிகப்படை-இருபெயரொட்டு. செல்லுபு-செய்பு என் வாய்பாட்டுவினையெ
. எயபின்னிளைஞர்=பின் எய இளைஞர். ஏனையர்-முனிவராதியோர். (கசு)

வேறு.

131 பன்னிரு புயத்தொகை படைத்தகும ரேசன்
றன்னரு ளடைந்துவிதி தன்னைமுத லானோ
ரன்னவன் விடுத்திட வகன்றுபுடை யேகித்
தொன்னிலை யிருக்கைகடொறுந்தொறு மடைந்தார்.

இ-—ள்: விதி தன்னை முதல் ஆனோர்—பிரமாமுதலாகிய தேவர்கள், பன்னிரு புய தொகை படைத்த குமரேசன் தன் அருள் அடைந்து—பன்னிரண்டு திருப்புயங்களையுடைய முருகக்கடவுளது கருணையைப்பெற்று, அன்னவன் விடுத்திட அகன்று—அக்கடவுள் விடைகொடுத்தனுப்ப (அவ்விடத்தினின்று)நீங்கி, புடை ஏகி—புறத்தேபோய், தொல் நிலை இருக்கைகள் தொறும் தொறும் அடைந்தார்—பழைய முறைப்படி அமைக்கப்பட்ட மாளிகைகடோறும் புகுந்திருந்தார்கள் எ—று.

அவரவரது உயர்வுதாழ்வுகளுக்கேற்ப, முன் தேவகிரியிலமைக்கப்பட்டவாறே அமைக்கப்பட்டிருத்தலின் 'தொன்னிலையிருக்கைகள்' என்றார். (கஎ)

தானைக டமக்குரிய சாரத ரிலக்க
132 ரேனையர் வழுத்தவெமை யாளுடைய வள்ளல்
கோநக ரிருக்கவிடை கொண்டுசெல் குழாத்துள்
வானவர் தமக்கிறை செயற்கையை வகுப்பாம்.

இ-—ள்: எமை ஆள் உடைய வள்ளல்—எம்மை அடிமையாகவுடைய முருகக்கடவுள், தானைகள் தமக்கு உரிய சாரதர் இலக்கர் ஏனையர் வழுத்த—சேனைகளுக்குரிய பூதர்களும் இலக்கம்வீரர்களும் மற்றைய (ஒன்பது)வீரர்களுந்துதிக்க, கோநகர் இருக்க-திருக்கோயிலில் வீற்றிருக்க, விடைகொண்டு செல் குழாத்துள்-(அவரிடம்) அனுமதிபெற்றுக்கொண்டுசென்ற கூட்டத்தவர்களுள், வானவர் தமக்கு இறை செயற்கையை வகுப்பாம்-தேவேந்திரன்செய்தசெயலை இனிக்கூறுவாம் எ—று.

சேனைத்தலைவரென்பார் 'தானைகடமக்குரியசாரதர்' என்றார். ஏனையர் என்றது நவவீரரை. இருக்க என்னும் எச்சம் செல்லென்னும்வினைத்தொகையோடியைந்தது. ()

வேறு

133 தாங்கரும் பெருந்திறற் றார காசுரன்
பாங்கமர் குன்றொடும் பட்ட பான்மையா
லாங்கனம் புரந்தர னவலம் யாவது
நீங்கின னுவகையா னிறைந்த நெஞ்சினன்.

இ—ள்: தாங்கரும் பெரும் திறல் தாரகாசுரன்—(எவராலும்) அடைதற்கரிய பெருவலியினையுடைய தாரகாசுரனானவன், பாங்கு அமர் குன்றொடும் பட்ட பான்மையால்—அருகிலிருந்த கிரவுஞ்சமலையினுடன் அழிந்ததன்மையினால், ஆங்கனம்—அப்பொழுது, புரந்தரன்—இந்திரன், அவலம் யாவதும் நீங்கினன்—துயரங்களெல்லாந்தீரப்பெற்று,

உவகையால் நிறைந்த நெஞ்சினன்—மகிழ்ச்சியினால்நிறைந்த மன,
ன் எ—று.

நெஞ்சினன்-குறிப்புமுற்று. தாங்க என்பதனீற்றகரந்தொ
பெருந்திறலென்பதற்கு,சமர்முகத்திற் பகைவராற்சகித்தற்கரிய பெரு

விருந்திய லமிர்தினை விழும மில்வழி
யருந்தின னுமென வாகந் தண்ணெனப்
புரந்தர னிருந்துழிப் புக்குத் தாழ்ந்தத்தால்
வரந்திகழ் சிரபுர வனத்திற் றெய்வதம்.

இ—ள்: புரந்தரன்-இந்திரன், விருந்து இயல் அமிர்தினை விழுமம் இல்வழி அருந்தினன் ஆம் என-புதிதாகக்கிடைத்த அமிர்தத்தைத் துக்கமில்லாதகாலத்திலுண்டானைப்போல, ஆகம் தண்ணென-சரீரம் குளிர்ச்சியடைய, இருந்துழி—இருந்தபொழுது, வரம் திகழ் சிரபுரவனத்தில் தெய்வதம்—மேன்மைவிளங்கப்பெற்ற சீகாழிவனத்திலிருந்ததேவதை, புக்கு தாழ்ந்தது—சென்று வணங்கியது எ—று.

பலகாலுண்டதை உண்டவழியும் துயரமிக்ககாலத்திலுண்டவழியும் மிக்கதண்மையைத்தாராதாகலின் 'விருந்தியலமிர்தினைவிழுமமில்வழியருந்தினனுமென' என்றார். (உ0)

முகில்பொதி விண்ணக முதல்வன் பூண்களு
நகில்பொதி சாந்துடை நங்கை பூண்களுந்
துகில்பொதி கிழியொடு தொல்லை வைத்தவை
யகில்பொதி காட்டகத் தடிக ளுய்த்ததே.

இ—ள்: முகில் பொதி விண்ணக முதல்வன் பூண்களும்—மேகங்கள்சூழப்பெற்ற சுவர்க்கலோகத்திற்கதிபனாகிய இந்திரனது ஆபரணங்களும், நகில் பொதி சாந்து உடை நங்கை பூண்களும்—தனங்களைமறைத்த சந்தனக்குழம்பையுடைய இந்திராணியினது ஆபரணங்களும், துகில் பொதி கிழியொடு தொல்லை வைத்தவை-வஸ்திரத்தில்முடியப்பட்ட முடிப்பினுடன் முன்னாளில்வைக்கப்பட்டன (அவற்றை), அகில் பொதி காட்டகத்து அடிகள் உய்த்தது—அகிலமரங்கள்செறிந்த சீகாழிவனத்திலுள்ள தேவதை முன்வைத்தது எ—று.

சந்தனத்தைத் தனங்களில் மிகுதியாகப்பூசியுள்ளாளென்பார் 'நகில்பொதிசாந்துடை நங்கை' என்றார்; இதனை 'சாந்துபொதிநகிலுடைநங்கை' என மாற்றியுரைப்பினுமாம். ()

முந்துற வுய்த்தபின் முதல்வ கேட்டிநீ
பைந்தொடி யணங்கொடு பரமன் காழியில்
வந்தனை நோற்றநாள் வைத்த பூணிது
தந்தனன் கொள்கெனச் சாற்றி நின்றதே.

இ—ள்: முந்து உற உய்த்தபின்—முன்னே கொண்டுவந்துவைத்தபின்பு, முதல்வ கேட்டி—அரசரே! கேட்பீராக, நீ பை தொடி அணங்கொடு பரமன் காழியில் வந்தனை நோற்றநாள்—நீர் பசிய வளையலையணிந்த இந்திராணியுடன் சிவபிரான்வீற்றிருக்கின்ற சீகாழிப்பதியில்வந்து தவஞ்செய்துகொண்டிருந்தகாலத்தில், வைத்த பூண் இது—(அடைக்கலமாக)வைத்த ஆபரணமிதுவாகும், தந்தனன் கொள்க என—தந்தேன் ஏற்றுக்கொள்ளுமென்று, சாற்றி நின்றது—சொல்லி நின்றது எ—று.

கொள்கஎன்னும்வியங்கோளீற்றகரம் தொக்கது. வந்தனை-முற்றெச்சம். உய்த்தபின் சாற்றிநின்றது என இயையும். (உஉ)

று கின்றுழி நேமி யண்ணற்கு
படு கின்றவன் முளரிப் பண்ணவன்
புறு செய்யபூண் கிழியை நோக்கினன்
கற்புடை யாள்விடுந் தூதின் காட்சிபோல்.

இ—ள்: நிற்புறுகின்றுழி—முன்னின்றபொழுது, நேமி அண்ணற்கு முற்ப றவன்—சக்கரத்தையேந்திய திருமாலுக்கு முன்பிறந்த இந்திரன், கற்பு உடையா ள் விடும் தூதின் காட்சி போல்—கற்புடைமகளிர்விட்ட தூதைக்கண்டாற்போல, முளரி பண்ணவன் கிற்புறு செய்ய பூண் கிழியை நோக்கினன்—தாமரைமலராசனராகிய பிரம தேவராற்செய்யப்பட்ட சிறந்த ஆபரணங்களமைந்த முடிப்பைப்பார்த்தான் எ—று.

இந்திரன் திருமாலினவதாரமாகிய உபேந்திரனுக்குமுன்பிறந்தானுதலின் 'நேமியண்ணற்குமுற்படுகின்றவன்' எனவும், எண்ணியபொருளை எளிதினியவல்ல கற்பகம் காமதேனுமுதலியவற்றையுடையான் இவ்வணிகளைப்பொருட்படுத்திப் பாதுகாப்புச்செய்ததற்கேற்ற விசேடந்தோன்ற 'முளரிப்பண்ணவன்கிற்புறுசெய்யபூண்' எனவும், கற்புடைமாது கணவனிடம் தனது அணிகளுளொன்றை அனுப்ப, அதுஅக்கணவனுக்குக் காமத்தைமிகுவிப்பதுபோலவே இவ்வணிகளும் கண்டமாத்திரத்தில் இந்திரனுக்கு விரகநோயைவிளைத்தலின் 'கற்புடையாள்விடுந்தூதின்காட்சிபோல்' எனவும் கூறினர். (உ௩)

138 எரிமணி யணிகல னிட்ட பூந்துகில்
விரிதரு பொதியினை விரலி னீக்கினன்
றிருமக ளமர்தரு தெய்வத் தாமரை
வரியளி சூழ்வுற மலர்ந்த தென்னவே.

இ—ள்: திருமகள் அமர்தரு தெய்வ தாமரை—இலக்குமிதேவி வீற்றிருக்கின்ற தெய்வத்தன்மையமைந்ததாமரைமலரானது, வரி அளி சூழ்வுற மலர்ந்த தன்மை போல்—வரிபொருந்திய வண்டுகள்மொய்க்க விரிந்ததன்மையைப்போல, எரிமணி அணிகலன் இட்ட பூ துகில் விரிதரு பொதியினை—ஒளிபொருந்திய இரத்தினுபரணங்கள் பொதியப்பெற்ற பொலிவாகிய வஸ்திரத்தினது பரந்த முடிப்பை, விரலில் நீக்கினன்—விரல்களாலவிழ்த்தான் எ—று.

தாமரைமலர் வண்டுகள்படிய மலர்தல்போல, ஆபரணப்பொதியும் இந்திரனதுகைவிரல்கள்அவிழ்க்க அவிழ்ந்ததென்பதாம். செந்நிறமுடைமையால் ஆபரணப்பொதி தாமரைமலரையும்,கருநிறமுடைமையால் இந்திரன்கைவிரல்கள் வண்டுகளையும் நிகர்த்தனவென்க. கலன்-போலி. (உ௪)

139 துண்ணெனக் கிழியதன் றொடர்பு நீக்கலு
மொண்ணுதற் றுணைவிபூ ணும்பர் தோன்றலுங்
கண்ணுறக் கண்டவட் கருதி னனரோ
வெண்ணுதற் கரியதோ ரின்பந் துய்த்துளான்.

இ—ள்: துண் என கிழி அதன் தொடர்பை நீக்கலும்—விரைவாக அந்தப் பொதியின் முடிப்பைஅகற்றியவுடன், ஒண் நுதல் துணைவி பூண் உம்பர் தோன்றலும்-ஒளிபொருந்திய நெற்றியினையுடைய இந்திராணியினது ஆபரணங்கள் மேலேதோற்ற, எண்ணுதற்கு அரியது ஓர் இன்பம் துய்த்துளான்—நினைத்தற்கரிய போகவின்பத்தை(முன்னே) அனுபவித்தவனாகிய இந்திரன், கண் உற கண்டு-(அவ்வாபரணங்களைக்)கண்ணுறப்பார்த்து, அவள் கருதினன்—அவ்விந்திராணியை நினைத்தான் எ—று.

இன்பநுகர்ச்சியின்பொருட்டுக் கருதினனென்பது போ
தோரின்பந்துய்த்துளான்கருதினன்' என்றார்.

140 பூட்கையின் முலையுடைப் பொன்னங் கொம்பி
வேட்கைய தாயினன் மிகவும் பற்பகல்
வாட்கையின் றிருந்தது மனத்தின் முன்னினான்
காட்கொளுங் காமநோய்க் கவலை யெய்தினான்.

இ—ள்: பூட்கையின் முலை உடை பொன்னங்கொம்பின் மேல்—யானைக்கோ
டுபோன்ற தனங்களையுடைய இந்திராணியின்மேல், மிகவும் வேட்கையது ஆயினன்—
மிகவும்விருப்பமுற்று, பற்பகல் வாட்கை இன்று இருந்தது மனத்தில் முன்னினான்—ப
லகாலம் கூடிவாழ்தலின்றிப் பிரிந்திருந்ததை மனத்தில்நினைத்து, காட்கொளும் காமநோ
ய் கவலை எய்தினான்— நிலைபெற்ற காமநோயாகிய கவலையையடைந்தான் எ—று.

பூட்கை பொன்னங்கொம்பு-ஆகுபெயர். பொன்னங்கொம்பு—பொற்கொம்பு
போல்வாள். வாழ்க்கையென்பது வாட்கையெனவும், காழ்கொளும் என்பது காட்கொ
ளும் எனவும் விகாரமாயின. காழ்-வயிரம்; ஈண்டுத் தாற்பரியவிலக்கணை. (உசு)

141 நெய்ம்மலி தழலென நீடிக் காமநோ
யிம்மென மிசைக்கொள விரங்கி யேங்கினான்
விம்மினன் வெதும்பினன் வெய்து யிர்த்தனன்
மைம்மலி சிந்தையன் மருட்கை யெய்தினான்.

இ—ள்: காமநோய்—காமநோயானது, நெய் மலி தழல் என நீடி—நெய்யைநி
றையப்பெய்த அக்கினிபோலப்பெருகி, இம்மென மிசைக்கொள—விரைவில் மேற்கொள்ள,
இரங்கி ஏங்கினான்— வருந்தி ஏக்கமுற்று, விம்மினன்—மனத்துன்பமுற்று, வெதும்பினன்—
புழுங்கி, வெய்துயிர்த்தனன்—பெருமூச்சுவிட்டு, மை மலி சிந்தையன்— குற்றம்நிறைந்
தமனத்தினனாய், மருட்கை எய்தினான்—மயக்கமடைந்தான் எ—று. (உஎ)

142 பசையற வுலர்வுறு பராரைப் பிண்டியிற்
றசைமலி முழுதுட றளர்ந்து வாடினா
னிசைவரு கைவலோ னெழுது பாவைபோ
லசைவில னிருந்தன னணங்குற் றென்னவே.

இ—ள்: பசை அற உலர்வுறு பரு அரை பிண்டியில்—பசுமைநீங்குமாறு காய்
ந்த பருத்த அடியினையுடைய அசோகமரத்தைப்போல, தசை மலி முழுது உடல் தளர்ந்
து வாடினான்—தசைநிறைந்த சரீரமுழுதும் தளர்ச்சியுற்று வாடி, இசை வரு கைவலோ
ன் எழுது பாவை போல் அசைவிலன்—புகழ்பெற்ற சித்திரகாரன் எழுதிய பாவையைப்
போல அசைவற்றவனாய், அணங்குற்று என்ன இருந்தனன்—பேய்தீண்டினாற்போல [வி
காரமுற்று] இருந்தான் எ—று.

முழுதுடல்-உடல்முழுதும். (உஅ)

143 முருந்துற ழெயிற்றினாண் முலைத்த டங்களிற்
பொருந்துற மூழ்கியே புணர்ந்து வைகலு
மிருந்திடு கின்றவ னிடர்ப்பட் டின்னணம்
பிரிந்திடின் வருந்துதல் பேசல் வேண்டுமோ.

இ—ள்: முருந்து உறழ் எயிற்றினாள் முலைத்தடங்களில்—மயிலிறகினடியைப்
போன்ற பற்களையுடைய இந்திராணியினது தனங்களாகிய தடாகத்தில், பொருந்துற

மூழ்கி--பொருந்தும்படி படிந்து, புணர்ந்து—சேர்ந்து, வைகலும் இருந்திடுகின்றவன்—எப்போதுஞ் சுகமுற்றிருந்த இந்திரன், இடர்ப்பட்டு இன்னணம் பிரிந்திடின்—துயரமுற்று இவ்வாறு பிரிந்திருப்பானாயின், வருந்துதல் பேசல் வேண்டுமோ—அவன் வருந்துந்தன்மையைச்சொல்லவேண்டுமோ? (சொல்லாமலேவிளங்கும்) எ—று.

என்றுமொன்றும்பிரியாதுகூடி இன்புற்றான் ஈண்டுப் பலநாட்பிரிந்திருந்தானாதலின், பெருந்துயரெய்துவனென்பது எவர்க்கும் விளங்குமென்பதாம். (௨௯)

144 மெய்ந்நனி யலசுற விரக மீக்கொள
வின்னணஞ் சசிபொருட் டினைய நீர்மையோன்
பொன்னணி தன்னையும் புனைதல் வேண்டலன்
றன்னுழை யவர்தமை நோக்கிச் சாற்றுவான்.

இ—ள்: மெய் நனி அலசுற—சரீரம் மிகவும் வாட, விரகம் மீக்கொள— காமநோய் மேலிட, இன்னணம் சசிபொருட்டு இனையும் நீர்மையோன்— இப்படி இந்திராணியைப்பிரிந்தமையால் வருந்துமியல்பினனாகிய இந்திரன், பொன் அணி தன்னையும் புனைதல் வேண்டலன்—பொன்னாபரணங்களையும் அணியவிரும்பாதவனாய், தன் உழையவர் தமை நோக்கி—தன்பக்கத்தினின்றவர்களைப்பார்த்து, சாற்றுவான்- (பின்வருமாறு) கூறுவான் எ—று.

உம்மை-உயர்வுசிறப்பு. (௩௦)

145 இக்கிழி யொன்றினை யேந்தி முந்துபோற்
சிக்குற வீக்கியே சேமித் துங்கள்பால்
வைக்குதி ரென்றலும் வணங்கி நன்றெனா
வக்கண மனையவ ரதனை யாற்றினார்.

இ—ள்: இ கிழி ஒன்றினை ஏந்தி—(நீவிர்) இந்தப்பொதியொன்றைக்கைக்கொண்டு, முந்து போல் சிக்குற வீக்கி—முன்போலிறுகக்கட்டி, சேமித்து—பாதுகாத்து, உங்கள் பால் வைக்குதிர் என்றலும்—உங்களிடத்தேவையுங்களென்று இந்திரன் கூறுதலும், அனையவர்—அப்பரிசனர்கள், வணங்கி நன்று எனா—அவனைத்தாழ்ந்து நல்லதென்று கூறி, அக்கணம் அதனை ஆற்றினார்—அப்பொழுதே அதனைச்செய்தார்கள் எ—று. (௩௧)

146 அன்னதோ ரளவையி லடவித் தேவினைக்
கொன்னுனை வச்சிரக் குரிசி னோக்குறு
நின்னுழை யளித்திட நீசெல் கென்றலு
மன்னவ நன்றென வணங்கிப் போயதே.

இ—ள்: அன்னதோர் அளவையில்—அந்தச்சமயத்தில், கொன் நுனை வச்சிர குரிசில்— அச்சத்தைவிளைக்கின்ற முனையினையுடைய வச்சிராயுதத்தையேந்திய இந்திரன், அடவித்தேவினை நோக்குறு—வனதேவதையைப்பார்த்து, நின் உழை அளித்திட நீ செல்க என்றலும்-உன்னிடத்தைக்காவல்செய்தற்கு நீபோவாயாகவென்றுகூறுதலும், மன்னவ—அரசனே!, நன்று என—இது நல்லது என்றுகூறி, வணங்கி போயது—நமஸ்கரித்துச்சென்றது எ—று.

கொல் நுனை எனவகுத்து, பகைவரைக்கொல்லுகின்ற முனையினையுடைய எனப்பொருள்கூறினுமாம். உழை ஈண்டுப்பெயராய்நின்றது. (௩௨)

147 போந்திடு காலையிற் புலோம சைப்பெய
ரேந்திழை காமநோ யெரியின் றுப்பினாற்
காந்திய வுளத்தினன் கனலும் யாக்கைய
னேய்ந்தனன் றட்பமே லுளம்வைத் தேகினான்.

இ—ள்: போந்திடுகாலையில்—(வனதேவதை) போனபொழுது, புலோமசை பெயர் எந்திழை காமநோய் எரியின் துப்பினல்—இந்திராணியென்னும் பெண்மேற்கொண்ட காமநோயாகிய அக்கினியின்சூட்டினல், காந்திய உளத்தினன்—எரிகின்ற மனத்தையுடையனும், கனலும் யாக்கையன்—அழலுகின்ற தேகத்தினையுடையனும், ஓய்ந்தனன்—தளர்ந்து, தட்பமேல் உளம் வைத்து ஏகினன்—சீதளத்தில் விருப்பமுற்றுத் (தன்னிருப்பிடத்தைவிட்டுப்) போயினன் எ—று.

எந்திழை-அன்மொழித்தொகை. புலோமசை-புலோமனென்னும் அசுரன்பெற்றபுதல்வி. அவ்வசுரனை இந்திரன்கொன்று புதல்வியைக்கவர்ந்து மனைவியாக்கிக்கொண்டனன். காமநோயெரி-உருவகவுருவகம். துப்பு-வலி. அககினிக்குவலிசூடென்க. (௯௩)

ஒளியிழை யுழத்திய ரொளிமென் கூந்தலி
னளியின நறவுதுய்த் தலரிற் கண்படு
நளியிருந் தண்டலை ஞாங்கர் பொங்கிய
புளினமொன் றதன்மிசை புக்கு வைகினன்.

இ—ள்: அளியினம்-வண்டுக்கூட்டங்கள், ஒளி இழை உழத்தியர் ஒளி மென் கூந்தலின் நறவு துய்த்து—சோதிவிளங்குகின்ற ஆபரணங்களையணிந்த உழத்தியர்களது ஒளியினையுடைய மெல்லியகூந்தலில் தேனைப்பருகி, அலரில் கண்படும்—மலர்களிற்றுயிலுகின்ற, நளி இரும் தண்டலை ஞாங்கர்—குளிர்ந்த பெரிய சோலையின்பக்கத்தில், பொங்கிய—உயர்ந்திருக்கின்ற, புளினம் ஒன்று அதன் மிசை— ஒரு மணற்குன்றின்மேல், புக்கு வைகினன்—போயிருந்தான் எ—று.

மலர்சூடும்போது கூந்தலில் அதிகமாகத்தேன்சிந்தியிருத்தலால், வண்டுகள், மலரிற்பருகவிரும்பாது கூந்தலிற்பருகுவனவென்க. இதனல் அச்சோலைமலர்களின் பரிமளமிகுதிபோதரும். கூந்தலிற்றேனுண்ட வண்டுகள்தாமும் கண்படைக்குமலரைவிரும்புவதுகூறவே, இந்திரனுக்குமிகவுந்தட்பஞ்செய்யத்தக்கசோலையென்பது பெறப்படும். (௯௪)

தீந்தழல் வெங்கதிர் திளைத்த வாறெனப்
நீந்தருங் கங்குலி னிலவுத் தீப்படப்
பூந்துணர் பரவிய புளினம் பொன்னகர்
வேந்தனுக் காற்றவும் வெம்மை செய்ததே.

இ—ள்: தீ தழல் வெம் கதிர் திளைத்தவாறு என—கொடிய அக்கினியும் வெவ்வியவெய்யிலும் பட்டாற்போல, நீந்தரும் கங்குலில் நிலவுத்தீ பட—கடத்தற்கரிய இராக்காலத்தில் நிலவாகிய அக்கினி (மேனியிற்) படுதலால், பூ துணர் பரவிய புளினம்—பூங்கொத்துக்கள்பரவப்பெற்றிருக்கின்ற மணற்குன்றானது, பொன்னகர் வேந்தனுக்கு—சுவர்க்கலோகாதிபனகிய இந்திரனுக்கு, ஆற்றவும் வெம்மை செய்தது—மிகவும் வெப்பத்தையுண்டாக்கியது எ—று.

தீந்தழல் வெங்கதிர்திளைத்தவாறென என்பதற்கு கொடிய அக்கினியின் வெவ்வியசோதிபட்டாற்போல எனப்பொருள்கூறினுமாம். காமமிக்கார்க்கிரவுநீடித்துத்தோற்றுதலின் ‘நீந்தருங்கங்குல்’ எனவும், வெப்பந்தருதலால் ‘நிலவுத்தீ’ எனவும், பூந்துணர்களாலுண்டாகுந்தட்பத்தினும்பன்மடங்கான வெப்பத்தை நிலவுத்தீ விளைத்ததென்பார் ‘நிலவுத்தீப்பட-பூந்துணர்பரவியபுளினம்-வெம்மைசெய்தது’ எனவும் கூறினர். (௯௫)

சூற்புயன் மாறிய சுரத்திற் றெருக்குறு
மாற்பரல் வரைபுரை மணலின் றிட்டையின்

பாற்படு கின்றனன் பனிம திக்கதிர்
மேற்பட வசைந்தனன் வினையம் வேறிலான்.

இ—ள்: சூல் புயல் மாறிய சுரத்தில் தொக்கு உறும் மால் பரல்வரை புரை—கருக்கொண்டமேகங்கள் மழைபெய்தலில்லாத பாலைவனத்திற்பொருந்தியிருக்கின்ற பெரிய பருக்கைக்கற்களாலாகிய மலையைநிகர்த்த, மணலின் திட்டையின் பால்—மணற்குன்றின்மீது, படுகின்றனன்—இருக்கின்றவனாய், பனி மதி கதிர் மேல் பட—குளிர்ந்த சந்திரகிரணங்கள் தன்மேனியிற்பட, வினையம் வேறு இலான்—(விரகநோயைத்தீர்க்கும்) உபாயம் வேறொன்றுந்தோன்றப்பெறானாய், அசைந்தனன்—அசைந்தான் எ—று.

படுகின்றனனென்பதை வினையாலணையும்பெயராகக்கொண்டு எழுவாயாக்கினுமாம். அசைதல்-வெப்பத்தைச்சகித்தலரிதாதலின். நுண்மையான சிற்சில சிறுபரற்கற்கள் கிடப்பினும் மேனியிலுறுத்திப் பெருந்துயர்விளைப்பனவாமாகவும், நெடுங்காலமழைபெய்யப்பெறாத பாலைவனத்திற் பெரும்பாற்கற்களாலமைந்தமலையை உவமைகூறியதனால், அந்தமணற்குன்று இந்திரனுக்கு ஆற்றொணாப்பெருந்துயர்விளைத்ததென்பதுபெறப்படும்.()

151 திங்களும் வெங்கனல் சிதறிக் காய்ந்திடத்
துங்கவேள் படையுடன் பிறவுஞ் சூழ்ந்திட
மங்கிய வுணர்ச்சியன் மயலின் வன்மையான்
புங்கவர் மன்னவன் புலம்ப லெய்தினான்.

இ—ள்: திங்களும் வெம் கனல் சிதறி காய்ந்திட-சந்திரனும் கொடிய அழற்கிரணங்களைப்பரப்பி வருத்த, துங்க வேள் படையுடன் பிறவும் சூழ்ந்திட—உயர்ச்சிபொருந்திய மன்மதனது படைக்கலங்களும் மற்றைய உறுப்புக்களுஞ்சூழ, மங்கிய உணர்ச்சியன்-நல்லறிவுகுறைந்தவனாய், மயலின் வன்மையான்—பெருமயக்கமுடையவனாய், புங்கவர் மன்னவன்—தேவேந்திரன், புலம்பல் எய்தினான்—புலம்பத்தொடங்கினான் எ—று.

படையெனப் பொதுமையிற்கூறுதலால் பூங்கணைகளுடன் கரும்புவில் மாந்தளிர் வாள் முதலியவற்றையுங்கொள்க. மங்கியவுணர்ச்சியன்=உணர்ச்சிமங்கியவன். மயலின்வன்மையான்=வன்மயலினான். வெப்பந்தீர்க்குமியல்பினனென்பதைவிளக்க இழிவுசிறப்பும்மைபுணர்த்தி 'திங்களும்' எனவும், தன்னாணையைச்செலுத்துதற்குச் சமயம்வாய்த்தானாதலின் 'துங்கவேள்' எனவும் கூறினார். பிற-தென்றற்குதிரை தேர்க்கிளிமுதலியன.(கஎ)

152 மட்டமர் புரிகுழன் மடக்தை யென்னுட
லிட்டுயிர் வவ்வின ளிருந்த யாக்கையுஞ்
சுட்டிடு கிற்றியாற் றூய திங்கணீ
பட்டவர் தம்மையும் படுப்ப ரோவென்பான்.

இ—ள்: தூய திங்கள்—தூய்மையினையுடைய சந்திரனே!, மட்டு அமர் புரி குழல் மடந்தை—வாசனைபொருந்திய முறுக்கிமுடித்த கூந்தலையுடைய இந்திராணி, என் உடல் இட்டு உயிர் வௌவினள்—எனது சரீரத்தைவைத்துவிட்டு உயிரைமாத்திரங்கவர்ந்தாள், நீ இருந்த யாக்கையும் சுட்டிடுகிற்றி—நீ எஞ்சியிருந்தசரீரத்தையுந் தகிக்கின்றாய், பட்டவர் தம்மையும் படுப்பரோ என்றான்—(எவராவது) இறந்தவர்களையும் கொல்லமுயல்வார்களா என்றுகூறுவான் எ—று.

இறந்தாரைக்கொல்ல எவருமுயலாரர்கவும், இந்திராணியானுயிர்கவரப்பெற்ற என்னை மீட்டும்வாட்டமுயல்வது இழிதகவாமென்றான் என்பதாம். உம்மை, முன்னையது எச்சம். பின்னையது இழிவுசிறப்பு. (கஅ)

எஞ்சலி லமுதினை யார்க்கு நல்குநீ
நஞ்சினை யுகுத்திநண் ணலரிற் றப்பியே
யுஞ்சன னிவனுயி ரொழிப்பன் யானென
வஞ்சினம் பிடித்தியோ மதிய மேயென்பான்.

இ—ள்: மதியமே-சந்திரனே!, எஞ்சல் இல் அமுதினை யார்க்கும் நல்கும் நீ—குறை தலில்லாத அமிர்தத்தை அனைவர்க்குங்கொடுக்கின்ற நீ, நஞ்சினை உகுத்தி-(எனக்குமாத் திரம்) விஷத்தைச்சொரிகின்றாய், நண்ணலரில் தப்பி உஞ்சனன்—பகைவரினின்றுந்தப் பி உய்ந்திருக்கின்றான் (ஆதலால்), யான் இவன் உயிர் ஒழிப்பன் என—யான் இவனது உயிரைக்கவர்வேனென்று, வஞ்சினம் பிடித்தியோ—சபதஞ்செய்துகொண்டாயோ, என் பான்—என்றுகூறுவான் எ—று.

உஞ்சனன்-போலி. சந்திரன் அமிர்தங்கொடுத்தலை அவையடக்கத்தில் 'குறை பலமாமதி' என்னுஞ்செய்யுளுரையிற்காண்க. (ருக)

நிற்றலும் வருதிநீ நீடு தண்ணளி
யுற்றிட லன்றியே யொறுத்தி லாய்மதி
யற்றமின் றுன்னிவந் தடுதி யாரிடைக்
கற்றனை யித்திறங் கள்வ நீயென்பான்.

இ—ள்: மதி—சந்திரனே!, நீ நிற்றலும் வருதி—நீ எஞ்ஞான்றும் உதிக்கின்றா ய், நீடு தண்ணளி உற்றிடல் அன்றி ஒறுத்திலாய்—(அக்காலங்களிலெல்லாம்) மிகுந்த த ட்பத்தைப்பொருந்தியிருந்தாயன்றிக் காய்ந்தாயல்லை, இன்று அற்றம் உன்னி வந்து அடு தி—இன்றைக்குச் சமயம்பார்த்துவந்து வருத்துகின்றாய், கள்வ நீ—வஞ்சகனே! நீ, இத் திறம் ஆரிடை கற்றனை—இந்தச்சூழ்ச்சியை எவரிடத்திற்பயின்றாய்?, என்பான்—என்று கூறுவான் எ—று.

ஏனைக்காலங்களிலிடர்செய்பவரும் துயர்வந்தகாலத்திற்றுணைசெய்வர்; நீ அத ற்கு மறுதலையாக, ஏனையகாலங்களிலெல்லாந் துணைசெய்திருந்து, துயருற்ற இச்சமயத் தில் இடர்செய்வது பெருங்கபடமென்றானென்பதாம். (சo)

பெண்ணிய லாரிடைப் பிறங்கு காமமு
முண்ணிகழ் விரகமு முனக்கு முண்டதை
யெண்ணலை யழல்சொரிந் தென்னைக் காய்தியாற்
றண்ணளி மதிக்கிது தகுவ தோவென்பான்.

இ—ள்: பெண்ணியலார் இடை பிறங்கு காமமும்—மகளிர்பாற்கொள்கின்ற காமமும், உள் நிகழ் விரகமும்—(அதுபற்றி) மனத்திலுதிக்கின்ற விரகமும், உனக்கும் உ ண்டு—உனக்குமுள்ளதேயாம், அதை எண்ணலை—அதனைச்சிந்தியாது, அழல் சொரிந்து என்னை காய்தி—அக்கினியைச்சிதறி என்னைச்சுடுகின்றாய், தண்ணளி மதிக்கு இது தகு வதோ என்பான்— சீதளத்தினையுடைய சந்திரனாகியஉனக்கு இது தக்கதா (தகுதியன் றே) என்று கூறுவான் எ—று.

யாவராலும்மதிக்கப்படுதலால் மதியென்னுங்காரணப்பெயர்பெற்றஉனக்கு, கார ணமின்றி என்னைவருத்துவது தகாதென்றானென்பதாம். பெண்ணியலார்- பெண்களுக் குவேண்டிய இலக்கணமுற்றுமொருங்கமைந்தார். காமம்-மாதர்மேல்வைக்கும் இச்சை. வி ரகம்-அவ்விச்சையினால்விளையும்வேதனை. உனக்கும் என்பதில் உம்மை எச்சம். (சக)

அரியநற் றவம்பல வாற்றி யின்றுகா
ணரியதோ ரென்பல தானில் யாக்கையேன்

பரிவுறச் சுடுவதிற் பயனென் பாரிலிவ்
வொருவனை விடுகென வுரைத்து வேண்டுவான்.

இ—ள்: அரிய நல் தவம் பல இன்றுகாறு ஆற்றி—அருமையாகிய நல்ல பலதவங்களை இன்றுவரையுஞ்செய்தலால், உரியது ஓர் என்பு அலது ஊன் இல் யாக்கையேன்— உரியதாகிய எலும்பேயன்றித் தசையற்ற சரீரத்தையுடையேன், பரிவு உற சுடுவதில் பயன் என்—(அங்ஙனமாய என்னை) வருத்தமடையும்படி சுடுவதனாற் (கிடைக்கும்) பிரயோசனம்யாது? (ஒன்றுமில்லையே ஆதலின்), பாரில் இவ் ஒருவனை விடுக என—பூவுலகத்தில் இந்தஒருவனை (உய்ந்திருக்குமாறு) விடுக்குதியென்று, உரைத்து வேண்டுவான்—சொல்லி வேண்டுதல்செய்வான் எ—று.

சகிக்கவல்லாரையன்றி வன்மையற்ற என்னைவருத்துவது முறையன்றென்றான் என்பதாம். விடுக என்னும் வியங்கோளீற்றகரம் தொக்கது. தசைமுதலின அழிந்தகாலத்தும் அழியாதிருத்தலின் 'உரியதோரென்பு' என்றார். (சஉ)

157 அண்டமே னின்றனை யவனி வானக
மெண்டிசை யெங்கணு மெளிது காண்டியா
லொண்டொடி யொருத்தியென் னுயிர்கொண் டுற்றனள்
கண்டதுண் டோமதிக் கடவு ளீயென்பான்.

இ—ள்: மதிக்கடவுள்—சந்திரனே!, நீ அண்டமேல் நின்றனை—நீ ஆகாயத்தினின்றாய் (ஆதலின்), அவனி வானகம் எண் திசை எங்கணும் எளிது காண்டி—பூவுலகமும் ஆகாயவுலகமும் எட்டுத்திக்குகளுமாகிய எல்லாவிடங்களையும் இலகுவிற்காண்பாய், ஒண் தொடி ஒருத்தி என் உயிர் கொண்டு உற்றனள்—ஒள்ளியவளையலையணிந்த ஒரு பெண்ணானவள் எனது உயிரைக்கவர்ந்திருந்தாள், கண்டது உண்டோ—அதனைப் பார்த்ததுண்டா?, என்பான்—என்று கூறுவான் எ—று.

கண்டதுண்டாயிற்கூறுதி; யான் அவள்பாற்சென்றிரந்து மீட்டும்பெற்றுக்கொள்வேனென்பது எஞ்சியது. இதுகாறும் ஆறுசெய்யுட்கள் சந்திரனைக்குறித்துக்கூறியபுலம்பல்.

158 யான்முதற் றோன்றினெ னெனது பின்னவன்
கான்முளை யாகிய காம நீபல
பான்மையி னெனையடல் பழிய தேயலான்
மேன்மைய தாகுமோ விளம்பு வாயென்பான்.

இ—ள்: யான் முதல் தோன்றினன்—யான் முன்பிறந்தேன், எனது பின்னவன் கான்முளை ஆகிய காம—எனக்குப்பின்பிறந்த உபேந்திரனது புதல்வனாகிய மன்மதனே!, நீ பலபான்மையில் எனை அடல்—நீ பலவாற்றாலும் என்னைவருத்துவது, பழியதே அலால்—நிந்தையாகுமேயன்றி, மேன்மையது ஆகுமோ—மகிமையாகுமா, விளம்புவாய் என்பான்—சொல்லுதியென்று கூறுவான் எ—று.

யானுனக்குப் பெரியதந்தையாதலின் வருத்தலாகாதென்றானென்பதாம். மதன்குடையாயும் சுடுகிரணத்தைவீசியும் நீடித்துநின்றும் வருத்துதலின் 'பலபான்மையிலடல்' என்றான். (சசு)

159 பரேருள வுனதுமெய் படுத்த கண்ணுதன்
னெரேலென வுதவிய நிமல னீண்டுள
னெரேகண மொடுங்குமு னுயிரும் வாங்குமாற்
பொரேலினி மதனநீ போகு போகென்பான்.

இ—ள்: மதன—மன்மதனே!, பரு ஏர் உள உனது மெய் படுத்த கண்ணுதல்—நெரேல் என உதவிய நிமலன் ஈண்டு உளன்—மிகுந்த அழகினையுடைய உனதுதேகத்

னை எரித்த சிவபிரான் விரைவிற்றோற்றுவித்த புதல்வராகிய முருகக்கடவுள் இவ்விடத்திருக்கின்றார், ஒருகணம் ஒடுங்குமுன்னே உயிரும் வாங்கும்—ஒருகணப்பொழுதுகழியுமுன்னர்த்தானே உனதுயிரையுங்கவர்வார், நீ இனி பொரேல்—நீ இனிப்போர்செய்யற்க, போகு போகு என்பான்—போ போ என்று கூறுவான் எ--று.

பரு வர் என்பது-முற்றியலுகரங்கெட்டு, பரேரெனப்புணர்ந்தது. ஏகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. உம்மை எச்சம். கு-இரண்டுஞ் சாரியைகள். இச்செய்யுளும் முற்செய்யுளும் மன்மதனைக்குறித்துக்கூறியபுலம்பல். (சரு)

160 வானுழை திரிதரு மதியம் போக்கிய
தீநுழை புண்ணில்வேல் செறித்த தென்னவேள்
கோனுழை கின்றன வதனிற் கூடளி
யீநுழை கின்றன போலு மென்கின்றான்.

இ—ள்: வான் உழை திரிதரும் மதியம் போக்கிய தீ நுழை புண்ணில்—ஆகாயத்திலுலாவுகின்ற சந்திரன்பரப்பிய (கிரணங்களாகிய) அக்கினிபட்டபுண்ணில், வேல் செறித்தது என்ன— வேற்படையைச் செருகினாற்போல, வேள் கோல் நுழைகின்றன—மன்மதனது பாணங்கள் அழுந்துகின்றன, அதனில் கூடு அளி-அம்மலரம்புகளில்மொய்த்த வண்டுகள், ஈ நுழைகின்றன் போலும் என்கின்றான்—(அப்புண்ணில்) ஈநுழைவதையொக்கும் என்று கூறுவான் எ--று.

சந்திரகிரணமுதலியன தம்முளிணக்கமுடையனவாய்ப் பெருந்துயர்விளைத்தமையைக்கூறிப் புலம்பினானென்பதாம். (சசு)

161 வன்றிறற் கொலைஞர்கள் மானிற் கூவிமா
னொன்றறக் கவர்தல்போ லுயிரென் காலினை
யின்றது போலவந் துள்புக் கீர்த்ததாற்
றென்றலுக் கியான்செய்த தீதுண் டோவென்பான்.

இ—ள்: வன் திறல் கொலைஞர்கள்—மிக்க வலிமையினையுடைய வேடுவர்கள், மானில் கூவி—மான்கூவுவதுபோலக் கூவி, மான் ஒன்றற கவர்தல் போல்—(அவ்வொலிகேட்டுவரும்) மான்களை ஒன்றுந்தவறாவண்ணம் (வலையிட்டுப்) பிடித்தல்போல, உயிர் என் காலினை—பிராணனென்னும் வாயுவை, இன்று அது போல வந்து உள்புக்கு ஈர்த்தது—இன்றைக்கு அக்காற்றப்போலவந்து உள் நுழைந்து கவர்ந்தது, தென்றலுக்கு யான் செய்த தீது உண்டோ என்பான்— தென்றற்காற்றுக்கு யானியற்றிய தீங்குயாதேனுமுண்டா? (ஒன்றுமில்லையே, அங்ஙனமாகவும் இச்சமயத்தில் உயிர்கவரவிரும்பியது யாதுபற்றி?) என்று கூறுவான் எ—று. (சஎ)

162 வாகுலப் பரியதோர் மாதர் மாலெனு
மாகுலப் புணரியு ளழுந்தி னோரையும்
வீகுலத் தொகையினுள் விட்டி சைத்திடுங்
கோகிலப் பறவையுங் கொல்லு மோவென்பான்.

இ—ள்: வாகு உலப்பு அரியது ஓர் மாதர் மால் எனும்— அழகுகுறைவில்லாத பெண்களது மயக்கமாகிய, ஆகுல புணரியுள்-நோயென்னுங்கடலில், அழுந்தினோரை—அழுந்தினவர்களை, வீ குல தொகையினுள் விட்டு இசைத்திடும் கோகிலப்பறவையும்—பறவையினங்களின் தொகுதியுள் விட்டுவிட்டொலிக்கின்ற குயிற்பறவையும், கொல்லுமோ என்பான்—கொல்லுமா என்று கூறுவான் எ—று.

வீக்குலமெனற்பாலது, முன்பின்னடிகட்கேற்ப, மிகாதியல்பாயிற்று. வீகுலத் தொகையினுள் விட்டிசைத்திடும் என்பதற்கு, பறவையினங்களுள் இழித்துக்கூறப்படுகின்ற எனப்பொருள்கூறுவர்சிலர். அவர்கருத்தை "உயிர்த்த பொழுதே மின்குரல்கே ளாமு ஞேடிற் றீன்றதாய்-நயப்பின் வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கித் தளர்ந்ததாற்-பயத்த மலர்ப்பூங் காவகத்தி னிருந்து பலகாற் கூவினுற்-செயிர்த்துநின்னைக் குயிலே நான் வெறுத்தல் செப்ப வேண்டுமோ" என்னும்பிரபுலிங்கலீலைச்செய்யுளானறிக. மாதர்மாலெனுமாகுலப்புணரி-உருவகவுருவகம். (சஅ)

163 நம்முரு வாயின னகர் கோனெனத்
தம்மன முன்னியே தளர்வு நீக்கில
கொம்மென வரற்றியுங் கூவ லின்றியு
மெம்முயிர் கொள்வன விருபு ளாமென்பான்.

இ—ள்: நாகர்கோன் நம் உரு ஆயினன் என-தேவேந்திரன் நமது வடிவத்தைக்கொண்டானென்று, தம் மனம் உன்னி தளர்வு நீக்கில-தங்கள்மனத்தில் நினைத்து என் வருத்தத்தையொழிக்காதனவாய், கொம்மென அரற்றியும் கூவலின்றியும்-வீரைவிற்கூவியுங் கூவாதும், எம் உயிர் கொள்வன— எமது உயிரைக்கவர்வன, இரு புள் ஆம் என்பான்—இரண்டுபறவைகளாகுமென்று கூறுவான் எ—று.

தம்முருக்கொண்டமையால் இனத்தானென்றெண்ணிச்சகாயஞ்செய்தல்வேண்டுமாகவும், அங்ஙனஞ்செய்யாது வருத்துதலின், வாடினனென்பதாம். இருபுள் என்றது குயிலையும் கோழியையும். இவற்றுட் குயில் கூவிவருத்துவது; இது கூவாதொழியிற் காமந்தணியும். கோழி கூவாது வருத்துவது; இதுகூவின் இரவுபுலர்ந்து காமநீங்கும். சூரனுதியோர் திக்குவிசயத்தின்பொருட்டுச் சுவர்க்கலோகம்புகுந்தபொழுதும் தக்கன்யாகத்தையழிக்க வீரபத்திரர் வந்தபொழுதும் குயிலுருவையும், கௌதமமுனிவரது மனைவியைப் புணரச்சென்றபொழுது கோழியுருவையும் இந்திரன் கொண்டனன். (சகு)

164 தண்டுத லின்றியே தானு நானுமாய்ப்
பண்டொரு வனிதையைப் பரிவிற் கூடினே
மண்டரு மறிகுவ ரற்றை நாட்சின
முண்டுகொல் கதிரின முதிக்கி லானென்பான்.

இ—ள்: தண்டுதல் இன்றி—மனம்பின்னிடுதலில்லாமல், தானும் நானும் ஆய்-அவனும் யானுமாக, பண்டு—முன்னைநாளில், ஒரு வனிதையை பரிவில் கூடினேம்—ஒருபெண்ணை அன்பினுடன் புணர்ந்தேம், அண்டரும் அறிகுவர்—தேவர்களும் (அதனை) அறிவார்கள், அற்றைநாள் சினம் உண்டுகொல்—அற்றைஞான்றிற் கொண்டகோபம்இருக்கின்றதுபோலும், கதிர் இனம் உதிக்கிலான் என்பான்—சூரியன் இன்னும் உதயஞ்செய்கின்றிலான் என்றுகூறுவான் எ—று.

வனிதையென்றது பெண்வடிவுகொண்ட அருணனை. இந்திரனுஞ்சூரியனும் இவனைப்புணர்ந்தசரித்திரத்தைக் காமதகனப்படலத்திற் பதினன்காஞ் செய்யுளிற்காண்க. தான்விரும்பியபெண்ணை வேறொருவன்விரும்பினனாயின் அவன்மேற்பகைசாதிப்பதுலகியலாதலின் 'அற்றைநாட்சினமுண்டுகொல்' என்றான். (௫0)

165 கோழிலை மடற்பனைக் குடம்பை சேர்தரு
மாழையம் பசலைவாய் மகன்றி லென்பவை
காழக வரிசிலைக் காமன் கோடுபோ
லூழியும் வீந்திடா தொலிக்கு மோவென்பான்.

இ—ள்: கோழ் இலை மடல் பனை குடம்பை சேர்தரும்-வலிய இலைகளையுடைய மடலமைந்த பனைமரங்களிலுள்ள கூட்டிற்பொருந்திய, மாழையம் பசலை வாய் மகா அன்றில் என்பவை—பொன்னிறமமைந்த பசியவாயினையுடைய பெரிய அன்றிற்பறவைகள், காழக வரி சிலை காமன் கோடு போல்— வயிரமாகிய வரிந்தவில்லையேந்திய மன்மதனது ஊதுகொம்புபோல, ஊழியும் வீந்திடாது ஒலிக்குமோ என்பான்— ஊழிக்காலமளவும் ஓயாது ஒலிக்குமா என்று கூறுவான் எ—று.

மகா அன்றில்-மகன்றிலெனமருவிற்று. விரகாக்கினியை மூட்டுதலால் 'காமன் கோடுபோல்' என்றான். (ருக)

166 துன்னல ராகிய தொகையி னோர்தமைத்
தன்னிடை வைத்தெனைத் தளர்வு கண்டதா
லன்னது மன்றியின் றாவி கொள்ளவு
முன்னிய தோகட லுறங்க லாதென்பான்.

இ—ள்: துன்னலர் ஆகிய தொகையினோர் தமை தன்னிடை வைத்து—பகைவராகிய அசுரர்கூட்டத்தாரைத் தன்னிடத்திருத்தி, எனை தளர்வு கண்டது— என்னை (இந்நாள்காறும்) வருத்தியது, அன்னதும் அன்றி—அதுவுமல்லாமல், இன்று ஆவிகொள்ளவும் உன்னியதோ—இற்றைத்தினத்தில் உயிரைக்கவரவும் நினைத்ததுபோலும், கடல் உறங்கலாது என்பான்—சமுத்திரம் நித்திரைசெய்கின்றிலது என்றுசொல்வான் எ—று.

உம்மை முன்னையது இழிவுசிறப்பு; பின்னையது எச்சம். ஓ-ஐயம். உறங்குதலென்றது, ஒலியடங்குதலை. 'துன்னலராகியதொகையினோர்தமைத்தன்னிடைவைத்தெனைத்தளர்வுகண்டது' எனவும் 'இன்றாவிகொள்ளவுமுன்னியது' எனவும் கூறியதனால், அசுரரால்விளைந்ததுயரினும் இத்துயர் பெருந்துயராயிற்றென்பது பெற்றாம். (ருஉ)

167 இவ்வகை யாமினி யெல்லை முற்றவும்
வெவ்வழல் சுட்டிடும் விரக நோய்தெற
வுய்வகை யொன்றில னுயங்க லல்லது
செய்வது பிறிதிலன் றெருளில் சிந்தையான்.

இ—ள்: இவ்வகை-இப்படியாக, யாமினி எல்லை முற்றவும்-இராக்காலவெல்லைமுழுதும், வெவ் அழல் சுட்டிடும் விரகநோய் தெற—கொடிய அக்கினிபோற்சுடுகின்ற காமநோயானது வருத்த, உய்வகை ஒன்று இலன்— உய்யும்வழிசிறிதுமில்லாதவனும், உயங்கல் அல்லது செய்வது பிறிது இலன்— வாடுதலேயன்றிவேறொருசெயலுமில்லாதவனும், தெருள் இல் சிந்தையான்—மனத்தெளிவற்றவனும் ஆயினான் எ—று.

யாமினி-யாமங்களையுடையது. தெருளில் சிந்தையான் = சிந்தைத்தெருளில்லான். (ருங)

வேறு.

168 ஆக்க மித்திற மடைவுழிப் பத்துநூ றடுத்த
நோக்க முற்றவன் சசிபொருட் டுற்றநோ யதனை
நீக்கு கின்றனன் யானென நினைந்துளா னென்ன
மாக்கள் பூண்டதேர் வெய்யவன் குணதிசை வந்தான்.

இ—ள்: இத்திறம் ஆக்கம் அடைவுழி—இவ்வாறான நிகழ்ச்சிகள் நிகழும்பொழுது, பத்து நூறு அடுத்த நோக்கம் உற்றவன் சசிபொருட்டு உற்ற நோய் அதனை யான் நீக்குகின்றனன் என நினைந்துளான் என்ன-ஆயிரங்கண்களையுடைய இந்திரன் இந்திர

ணிகாரணமாகக்கொண்ட காமநோயை யான் ஒழிக்கின்றேனென்றுகருதினவன்போல, மாக்கள் பூண்ட தேர் வெய்யவன்—எழுகுதிரைகள்பூட்டப்பெற்ற தேரையுடைய சூரியன், குணதிசை வந்தான்—கிழக்குத்திக்கிலுதித்தான் எ—று. (௫௪)

169 வெம்பு தொல்லிரு ளவுணர்தங் குழுவினை வீட்டி
யும்பர் மேற்செலு மதியெனு மடங்கலை யுருத்துப்
பைம்பொன் வெஞ்சுடர்க் கரங்களா லதன்வலி படுக்குஞ்
சிம்பு ளாமெனத் தோன்றினன் செங்கதிர்க் கடவுள்.

இ—ள்: வெம்பு தொல் இருள் அவுணர்தம் குழுவினை வீட்டி உம்பர்மேல் செலும்—கலங்குகின்றபழைய இருளாகிய அவுணர்கூட்டத்தையழித்து ஆகாயத்தின்மேற்சென்ற, மதி எனும் மடங்கலை-சந்திரனாகிய சிங்கத்தை, உருத்து-சினந்து, பைம் பொன் வெம் சுடர் கரங்களால் அதன் வலி படுக்கும்-செம்பொன்னிறமான வெவ்விய கிரணங்களாகிய கைகளினால் அதனுடைய வலியை அழிக்கின்ற, சிம்புள் ஆமென-சரபத்தைப்போல, செம் கதிர் கடவுள் தோன்றினன்-சிவந்த கிரணங்களைப்பரப்புகின்ற சூரியன் உதித்தான் எ-று.

வீரபத்திரக்கடவுளாகிய சரபம், இரணியன்முதலியஅசுரரைக்கொன்றுமதங்கொண்டுதேவர்மேலடர்த்த திருமாலாகிய நரசிங்கத்தைக் கைகளாற்கிழித்தழித்துத்தோன்றியதுபோல, சூரியனும், இருளையழித்துச்செருக்குற்றுஆகாயத்திற்றிரிந்தசந்திரனைக் கிரணங்களாற் சிதைத்தழித்துத்தோன்றியதென்பதாம். வெம்புதல்- சினத்தலெனினுமாம். உம்பர்மேற்செல்லுதலை நரசிங்கத்திற்குக் கூறுமிடத்து, தேவர்மேற் செல்கின்ற எனவுரைத்துக்கொள்க. வீட்டிச்செல்லும் என இயையும். உருத்து என்பதனேடியைப்பினும், அங்ஙனமியைத்து, இருளையும்மந்தேகரென்னுமவுணரையும்அழித்தென்றேனும் இருள்போன்ற அவ்வவுணரையழித்தென்றேனும் பொருள்கூறினும், அதற்கேற்ற தன்மை உபமானத்திலின்மையிற் பிழையாமென்க. (௫௫)

170 தொடர்ந்த ஞாயிறு விடுத்திடுங் கதிர்களாந் தூசி
படர்ந்த காலையி னிலவெனு மனிகமுன் பட்ட
வடைந்த மீனெனுந் துணைவரும் பொன்றின ரமர்செய்
துடைந்த மன்னரிற் போயின னுடுபதிக் கடவுள்.

இ—ள்: தொடர்ந்த ஞாயிறு விடுத்திடும் கதிர்கள் ஆம் தூசி படர்ந்த காலையில்-(போர்செய்யுமாறு) தொடர்ந்துவந்த சூரியன்பரப்பிய கிரணங்களாகிய தூசிப்படைபரவியபொழுது, நிலவெனும் அனிகம் முன் பட்ட—நிலவாகிய சேனை முந்தி அழிந்தன, அடைந்த மீன் எனும் துணைவரும் பொன்றினர்—வந்த நக்ஷத்திரங்களாகிய துணைவர்களும் (பின்) இறந்தார்கள், உடுபதிக்கடவுள்—சந்திரன், அமர்செய்து உடைந்த மன்னரில் போயினன்—போர்செய்து தோற்ற அரசரைப்போலமறைந்தான் எ—று.

இச்செய்யுளிலும் பின்னிருசெய்யுட்களிலும், சந்திரனை ஓரரசனாகவும் சூரியனைப்பிறிதோரரசனாகவும் பாவித்து வருணித்தார். சூரியனுதிக்க நக்ஷத்திரங்கள்மறைந்தன; சந்திரனத்தமித்தான் என்பது இதன் தாற்பரியம். (௫௬)

171 விரிந்த பல்கதி ரனிகத்தை வெய்யவன் விடுப்பத்
துரந்த சோமனை யவன்புறங் காட்டினன் றொலைந்து
கரந்து போதலும் பின்னுறச் சென்றில களத்தி
விரிந்து ளோரையுந் தொடர்வரோ சூரர்த மினத்தோர்.

இ—ள்: விரிந்த பல் கதிர் அனிகத்தை வெய்யவன் விடுப்ப—பரந்த பலகிரணங்களாகிய சேனைகளைச்சூரியன்செலுத்த, சோமனை துரந்த—(அவை) சந்திரனைத்துரத்

தின, அவன் புறங்காட்டினன் தொலைந்து கரந்து போதலும்—அச்சந்திரன்தோற்று மறைந்து செல்லுதலும், பின்னுற சென்றில—பின்னேதொடர்ந்துசென்றில, சூரர் தம் இனத்தோர்—சூரரது இனத்தவர்கள், களத்தில் இரிந்துளோரையும் தொடர்வரோ—போர்க்களத்திற் புறங்காட்டினேரையும் பின்றொடர்வாரா? (தொடரார்) எ—று.

சூரர்தம்மினத்தோர் என்பதற்கு வீரர்கூட்டத்திலுள்ளோரெனவும், சூரியனது (கிரணமாகிய) இனத்தவர்களெனவும் இரட்டுறமொழிந்துகொள்க. (௫௭)

திங்க டன்குறை யுணர்த்தவாய் திறந்தெனச் செய்ய
பங்க யங்கள்போ தவிழ்ந்தன குமுதங்கள் பலவுந்
தங்க ணயக னுடைந்தது நோக்கியே தபனற்
கங்கை கூப்பிய திறனென வொடுங்கிய வன்றே.

இ—ள்: திங்கள் தன் குறை உணர்த்த வாய்திறந்து என— சந்திரனது தோல்வியைப் (பிறர்க்குக்)கூறும்பொருட்டு வாயைத்திறந்தாற்போல, செய்ய பங்கயங்கள் போது அவிழ்ந்தன—செந்தாமரைகள் முகை விரிந்தன, குமுதங்கள் பலவும்— ஆம்பன்மலர்களெல்லாம், தங்கள் நாயகன் உடைந்தது நோக்கி—தங்கள் தலைவன்தோற்றமையைப்பார்த்து, தபனற்கு அங்கை கூப்பிய திறன் என—சூரியனுக்கு அகங்கைகளைக்கூப்பிநின்ற தன்மைபோல, ஒடுங்கிய—குவிந்தன எ—று.

சூரியோதயத்திற்றமரைமலர்தலும் குமுதங்குவிதலுமியல்பாதலின், இவ்வாறு வருணித்தார். (௫௮)

வனமெ ழுந்தன வனசமு மெழுந்தன வரியி
னினமெ ழுந்தன மாக்களு மெழுந்தன வெழில்சே
ரனமெ ழுந்தன புள்ளெலா மெழுந்தன வவற்றின்
மனமெ ழுந்தன வெழுந்தன மக்களின் றொகையே.

இ—ள்: வனம் எழுந்தன—சோலைகள் கிளர்ந்தன, வனசமும் எழுந்தன—தாமரைகளும் மலர்ந்தன, அரியின் இனம் எழுந்தன—வண்டுக்கூட்டங்கள் எழுந்தன, மாக்களும் எழுந்தன—மிருகங்களுமெழுந்தன, எழில் சேர் அனம் எழுந்தன— அழகுபொருந்திய அன்னப்பறவைகள் எழுந்தன, புள் எலாம் எழுந்தன—பறவைகளெல்லாம் எழுந்தன, அவற்றின் மனம் எழுந்தன—அந்த விலங்குபறவை முதலியவற்றின் மனங்கிளர்ந்தது, மக்களின் தொகை எழுந்தன—மனிதரின்தொகுதி எழுந்தது எ—று.

சோலைகள், பகலிற்சூரியனது வெப்பத்தாலாகிய வாட்டம்நீங்கப்பெற்று, உதயகாலத்தில் தழைவுற்றுநிற்பனவாதலின் 'வனமெழுந்தன' என்றார். (௫௯)

ஞாயி றுற்றவவ் வளவையி னனந்தலை யுலகி
லேயெ னச்செறி யிருளெலா மறைந்திருந் தென்னச்
சேய ரிக்கணி தந்திடு தெளிவில்கா மத்து
மாயி ருட்டொகை யொடுங்கிய திந்திரன் மனத்துள்.

இ—ள்: ஞாயிறு உற்ற அ அளவையில்—சூரியனுதித்த அப்பொழுதே, நனந்தலை உலகில் செறி இருள் எலாம்-பூவுலகத்திற்பரந்த இருள்களெல்லாம், ஏயென மறைந்திருந்து என்ன—விரைவில் மறைந்திருந்தாற்போல, சேய் அரி கணி தந்திடு தெளிவு இல் காமத்து மா இருள் தொகை—செவ்வரிபரந்த கண்களையுடைய இந்திராணியினலுருவிக்கப்பட்ட தெளிவில்லாத விரகமாகிய பெரிய இருட்டொகுதி, இந்திரன் மனத்துள் ஒடுங்கியது—இந்திரனதுமனத்தில் அடங்கியது எ—று.

நனந்தலையுலகு-நடுவுலகம். அரி-வரி, ரேகை. உலகிற்பரந்த இருட்படலம் விரைவிலழிந்ததுபோல, இந்திரனகத்திற்குடிகொண்ட காமநோயும் விரைவிற்றணிந்ததென்பதாம். (௬0)

கையி கந்துபோய்த் தன்னுயி ரலைத்தகா மத்திப்
பைய விந்திடு பாந்தள்போற் றணிதலும் பதைப்புற்
றொய்யெ னக்கடி தெழுந்தன னகைத்துவெள் குற்று
ஐய கோவிது வருவதே யெனக்கென வறைந்தான்.

இ—ள்: கையிகந்து போய் தன் உயிர் அலைத்த காமத்தீ—வரம்புகடந்துசென்று தனது ஆன்மாவைவருத்திய காமாக்கினியானது, பை அவிந்திடு பாந்தள் போல் தணிதலும்—படஞ்சுருங்கப்பெற்ற பாம்புபோலடங்க, பதைப்புற்று—திடுக்குற்று, ஒய்யென கடிது எழுந்தனன்—மிகவிரைவிலெழும்பி, நகைத்து வெள்குற்றான்— சிரித்து வெட்கங்கொண்டு, ஐயகோ—ஐயோ, இது எனக்கு வருவதே என அறைந்தான்—இவ்விழிவாவு எனக்கு நேர்தற்பாலதாவென்றுகூறினான் எ—று.

கையிகத்தல்-கைதவறுதல்=கட்டுப்பாட்டைக்கடத்தல். ஏகாரம்-வினா. நன்னெறிப்படல்வேண்டுமென்றெண்ணி முருகக்கடவுளைச் சேவித்திருப்பவும் அவனகத்திலொருவாறுபுகுந்துவருத்தியவென்பார் 'கையிகந்துபோய்த்தன்னுயிரலைத்த' எனவும், அரவின் படம் சினந்துழிவிரிந்து சினந்தணிந்துழிச்சுருங்குவதுபோல, காமநோய் இந்திராணியின் அணிகலத்தைக்கண்டவழித்தாணுய்த்தோன்றி இரவுபுலாத்தாணுயொழிந்தமையின் 'பையவிந்திடுபாந்தள்போற்றணிதலும்' எனவும், அஃதொழிந்தவுடன் நல்லுணர்வுதிக்க, அதுகாறும்புலம்பிக்கிடந்தமைக்கஞ்சிநடுங்கினனாதலின் 'பதைப்புற்று' எனவும், அதுபற்றி, அவ்விடத்திற் சிறிதுந்தங்காதுசெல்லுமாறு மிகவிரைவிலெழுந்தனனாதலின், ஒருபொருட்கிளவியிரண்டுபுணர்த்தி 'ஒய்யெனக்கடிதெழுந்தனன்' எனவும், இச்சோலையிலிதுகாறுமிருந்துபுலம்பியதைக்கண்டாருங்கேட்டாரும் நகையாடுவரே! என்செயலிருந்தபடியென்னையென்றெண்ணித் தன்னைத் தானேபழித்துவெள்கினனாதலின் 'நகைத்துவெள்குற்றான்' எனவும், பேதைமைமிக்க காமுகர்பாற்சார்தற்பாலனவாகிய இவ்விழிவுணங்கள் நூற்கேள்வியின் மிக்கநுண்ணியனாகிய எனக்குநேர்தற்பாலனவல்லவேயெனத்துயருற்றனனென்பார் 'ஐயகோவிதுவருவதேயெனக்கெனவறைந்தான்' எனவுங்கூறினார். (௬௧)

தீமை யுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்புந்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கு
மேம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனாற்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில்.

இ—ள்: தீமை உள்ளன யாவையும் தந்திடும்— தீங்கென்றுள்ளனவெல்லாவற்றையும்பயக்கும், சிறப்பும் தோம் இல் செல்வமும் கெடுக்கும்—மேம்பாட்டையும் குற்றமற்ற செல்வத்தையும் அழிக்கும், நல் உணர்வினை தொலைக்கும்— நல்லறிவைக்கெடுக்கும், ஏம நல் நெறி தடுத்து இருள் உய்த்திடும்— சுகத்தைத்தருகின்ற நல்வழியிற்செல்லுதலைத்தடுத்து நரகத்திற்செலுத்தும், இதனால்—இக்காரணத்தால், கருதில்—ஆராயுமிடத்து, காமமே அன்றி ஒரு பகை உளது கொல்—காமமேயன்றி (அதனினுங்கொடிய) பிறிதொருபகை உண்டா? (இல்லையே) எ—று.

"காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத-காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சங்- காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே-காமமே நரக பூமி காணியாக் கொடுப்பது' என்றார் பரஞ்சோதிமுனிவரும். (௬௨)

177 என்ப துன்னியே யிந்திர னுண்டைவைப் பிகந்து
தன்பு றந்தனிற் கடவுளர் குழுவெலாஞ் சார
வன்பொ டேபடர்ந் தறுமுக னடிகளை யடைந்து
முன்பு தாழ்ந்தன னுரோமமுஞ் செங்கையு முகிழ்ப்ப.

இ—ள்: என்பது உன்னி—என்னும் நீதிநூற்றுணிபைச்சிந்தித்து, இந்திரன்-தேவேந்திரன், ஆண்டை வைப்பு இகந்து—அவ்விடத்தினின்றுநீங்கி, தன் புறம் தனில் கடவுளர் குழு எலாம் சார—தன்பக்கத்திற்றேவர்கூட்டத்தாரனைவருஞ்சூழ்ந்துவர, அன்பொடு படர்ந்து— அன்பினுடன்போய், அறுமுகன் அடிகளை அடைந்து—முருகக்கடவுளது பாதங்களையணுகி, முன்பு— திருமுன்னிலையில், உரோமமும் செம் கையும் முகிழ்ப்ப தாழ்ந்தனன்— மயிர்கள்புளகமுறக் கைகள்குவியப்பணிந்தான் எ—று.

இகந்து படர்ந்து என இயையும். முகிழ்த்தல்-உரோமத்திற்காம்போது சிலிர்த்தல்; கைக்காம்போது குவிதல். (சுரு)

178 தொழுத கையினன் கோட்டிய மெய்யினன் றுகிலத்
தெழுது பாவையி லான்றமை புலத்தின னிறைஞ்சிப்
புழுதி தோய்தரு முறுப்பினன் சுருதியின் பொருண்மை
முழுது மூறிய துதியின னாகிமுன் னின்றான்.

இ—ள்: தொழுத கையினன்—குவித்தகைகளையுடையவனும், கோட்டிய மெய்யினன்—வளைத்த தேகத்தினையுடையவனும், துகிலத்து எழுது பாவையில் ஆன்று அமை புலத்தினன்—வஸ்திரத்திற்சித்திரித்தபாவைபோல ஒருவழிப்பட்டடங்கிய ஐம்புலங்களையுடையவனும், இறைஞ்சி புழுதி தோய்தரும் உறுப்பினன்—வணங்குதலால் தூளிபடியப்பெற்ற அவயவங்களையுடையவனும், சுருதியின் பொருண்மை முழுதும் ஊறிய துதியினன் ஆகி—வேதப்பொருள்கள் முழுதுமமைந்த தோத்திரத்தைச்சொல்பவனுமாகி, முன் நின்றான்—திருமுன்னிலையினின்றான் எ—று.

மெய்கோட்டியது பெரியோர்முன்னிறுமாந்துநிற்றலிழுக்காதலின். ஐம்புலனுமொன்றி இறைவர்மாட்டுப்படிந்தமையின், பொறிகளெல்லாம், சித்திரப்பாவையிற் செயலற்றிருத்தல்போல நிலையுற்றிருந்தனவென்க. (சுச)

179 கரிய வன்றனைச் செய்யவன் கருணைசெய் தருளி
வருதி யென்றுகூய் மறைகளும் வரம்புகாண் கில்லா
வரன தாள்களை யருச்சனை புரிதுநா மதனுக்
குரிய வாயபல் கரணமுந் தருதியென் றுரைத்தான்.

இ—ள்: செய்யவன்—சிவந்தநிறத்தையுடைய முருகக்கடவுள், கரியவன் தனை கருணைசெய்தருளி—கருநிறத்தையுடைய இந்திரனுக்குக் கிருபைசெய்து, வருதி என்று கூய்—(சமீபத்தில்) வருகுதியென்றழைத்து, நாம்—யாம், மறைகளும் வரம்பு காண்கில்லா அரன தாள்களை அருச்சனை புரிதும்-வேதங்களும் முடிவுகாணப்பெறாத சிவபிரானது பாதங்களைப்பூசிப்போம், அதனுக்கு உரிய ஆய பல் கரணமும் தருதி என்று உரைத்தான்—அதற்கேற்றனவாகிய பலஉபகரணங்களையுங் கொணருதியென்று கூறியருளினார் எ—று.

அரன என்பதில் அ ஆறும்வேற்றுமைப்பன்மையுருபு. உம்மை-முன்னையது உயர்வுசிறப்பு; பின்னையது முற்று. இரவுமுழுதுங் காமநோயாற்கலங்கினனாதலின், இந்திரனை 'கரியவன்' எனவும், அன்னோரன்னகுற்றங்களை இயற்கையில் நீங்கியிருப்பவராதலின், முருகக்கடவுளை 'செய்யவன்' எனவும், அவர், தன்னைச்சேவிப்பவனாகிய இந்திரனுக்கு

அக்குற்றஞ்சார்தலிழுக்கென்றெண்ணிக் கடைக்கணோக்கஞ்செய்துநீக்கினராதலின் 'கருணைசெய்தருளி' எனவும் கூறினார். (௬௫)

உரைத்த வெல்லையிற் றொழுதுபோ யுழையரிற் பலரைக்
கரைத்து வீற்றுவீற் றேவியே கடிமலர்க் கண்ணி
திரைத்து கிற்படா நறும்புன லவிபுகை தீபம்
விரைத்த கந்தங்க ளேனவுந் தந்தனன் விரைவில்.

இ—ள்: உரைத்த எல்லையில்—(அவ்வாறு) கூறியருளியபொழுது, தொழுது போய்—(இந்திரன்) கைதொழுதுசென்று, உழையரில் பலரை கரைத்து— தன்பரிசனர்களுட் பலரையழைத்து, வீற்றுவீற்று ஏவி—வெவ்வேறாக அனுப்பி, கடிமலர் கண்ணி—மணம்பொருந்திய மலர்மாலையையும், திரை துகில் படாம்—திரைவஸ்திரத்தையும், நறும் புனல்—வாசனையூட்டப்பெற்ற திருமஞ்சனத்தையும், அவி—நைவேத்தியத்தையும், புகை—தூபத்தையும், தீபம்—தீபத்தையும், விரைத்த கந்தங்கள்—பரிமளிக்கின்ற சுகந்தங்களையும், எனவும்-பிறவற்றையும், விரைவில் தந்தனன்—சீக்கிரத்தில் வருவித்தான் எ-று.

துகிற்படாம்-இருபெயரொட்டு. நறும்புனல் என்றதை "பத்துத்துவரினுமைந் துவிரையினு-முப்பத்திருவகையோமாலிகையினு-மூறியநன்னீர்"என்னுஞ் சிலப்பதிகாரத்தொடரானறிக. ஒவ்வோர்பொருளையுக் தனித்தனிகூறி அவ்வவற்றைக்கொணருமாறு ஒவ்வோர்பரிசனர்க்குங்கட்டளையிட்டானென்பார் 'வீற்றுவீற்றேவி' என்றார். (௬௬)

அவ்வக் காலையி லாறுமா முகனுடை யடிக
டெய்வக் கம்மியற் கொண்டொரு சினகர மியற்றிச்
சைவத் தந்திர விதியுளி நாடியே தாதை
யெவ்வெக் காலமு நிலையதோ ருருவுசெய் திட்டான்.

இ—ள்: அவ் அக்காலையில்—அங்ஙனங்கொணர்ந்த அச்சமயத்தில், ஆறு மாமுகன் உடை அடிகள்—சிறந்த ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுள், தெய்வ கம்மியன் கொண்டு ஒரு சினகரம் இயற்றி—தேவதச்சனைக்கொண்டு ஒருகோயிலமைப்பித்து, சைவ தந்திர விதியுளி நாடி-சைவாகமவிதிமுறையை ஆராய்ந்து, தாதை எவ்வெக்காலமும் நிலையது ஓர் உருவு செய்திட்டான்— பிதாவாகிய சிவபிரான் எக்காலத்திலும் நிலைத்திருக்கின்ற ஒருதிருவுருவத்தை அமைத்தார் எ—று.

நித்தியநைமித்திகங்கள் நிகழாதொழியினுஞ் சாந்நித்தியங்குறைவுபடாதிருக்கின்றவென்பார் 'எவ்வெக்காலமுநிலையது' என்றார். பாசுபதவிரதநெறியாகப்பூசித்தாரென முதனூலிற்கூறப்பட்டது. அந்நெறி வேதோபநிடதங்களிற்கூறப்படுங் கிரமத்தைத்தழுவியது. (௬௭)

தேவு சான்மணிப் பீடத்தி னீசனைச் சேர்த்தி
யாவி னைந்து மமுதமும் வரிசையா லாட்டித்
தாவி லாததோர் வாலிதா மணித்துகில் சாத்திப்
பூவின் மாலிகை செய்யசாந் தத்தொடும் புனைந்தான்.

இ—ள்: தேவு சால் மணி பீடத்தின் ஈசனை சேர்த்தி—தெய்வத்தன்மைபொருந்திய இரத்தினாசனத்திற் சிவபெருமானை எழுந்தருளச்செய்து, ஆவின் ஐந்தும் அமுதமும் வரிசையால் ஆட்டி—பஞ்சகவ்வியத்தையும் பஞ்சாமிர்தத்தையும் முறைப்படியபிடேகித்து, தா இலாதது ஓர் வாலிது ஆம் மணி துகில் சாத்தி—குற்றமற்ற ஒப்பில்லாத வெண்மையாகிய அழகிய வஸ்திரத்தையணிந்து, பூவின் மாலிகை செய்ய சாந்தத்தொடும் புனைந்தான்—புஷ்பமாலையையும் செப்பமாகிய சந்தனத்தையுஞ்சாத்தினார் எ—று.

தேவு என்பதில் உகரம் பண்புப்பெயர்விகுதி. ஆவினைந்து-தொகைக்குறிப்புச்சொல். ஐந்தாவன:—பால் தயிர் நெய் கோமயம் கோசலம் என்பன. பஞ்சாமிர்தம்:-

பால் தயிர் நெய் தேன் சர்க்கரை என்பன. இவற்றிற் சிலவற்றைநீக்கி, தேங்காய்த்திரு கல் பழவகை முதலியவற்றைச்சேர்த்தும் வழங்குவர். வரிசையாலாட்டி என்றதனால், நல்லெண்ணெய் மாக்காப்பு மஞ்சட்காப்பு கருப்பஞ்சாறு இளநீர் முதலியவற்றையும் முன்பின் முறைதெரிந்து அபிடேகித்தனரென்பது போதரும். (௬அ)

மருந்தி னாற்றவுஞ் சுவையன வாலுவ நூல்போய்த்
திருந்தி னார்களும் வியப்பன திறம்பல வாகிப்
பொருந்து கின்றன நிரலமை கருனையம் புழுக்கல்
சொரிந்து பொற்கலத் தருத்தினன் மந்திரத் தொடர்பால்.

இ—ள்: மருந்தின் ஆற்றவும் சுவையன—தேவாமிர்தத்தினின்றும் மிக இனிமையுடையனவும், வாலுவ நூல் போய் திருந்தினார்களும் வியப்பன—பாகசாஸ்திரத்திற் பயின்று திருந்தியுள்ளவர்களும் புகழத்தக்கனவும், பல திறம் ஆகி பொருந்துகின்றன—பல[illegible] தங்களாயமைந்தனவும் ஆகிய, நிரல் அமை கருனையம் புழுக்கல்—ஒழுங்காயமைந்த பொரிக்கறிகளையுடைய அன்னத்தை, பொற்கலத்து சொரிந்து—பொற்றட்டத்திற்படைத்து, மந்திரத்தொடர்பால் அருத்தினன்—மந்திரோச்சாரணத்துடன் நிவேதித்தார் எ—று.

முற்கான்னம் திலான்னம் பாயசான்னம் சுத்தான்னம்முதலாகப் பலவகையாயமைக்கப்பட்டிருத்தலின் 'திறம்பலவாகிப்பொருந்துகின்றன' என்றார். (௬௯)

கந்தம் வெள்ளிலை பூகநற் காயிவை கலந்து
தந்து பின்முறை யருத்தினன் புகைசுடர் தலையா
வந்த பான்மைக ளியாவையும் வரிசையா லுதவி
முந்து கைதொழூஉப் போற்றினன் மும்முறை வணங்கி.

இ—ள்: பின் முறை—நைவேத்தியஞ்செய்தபின்பு, கந்தம் வெள் இலை பூக நல் காய் இவை கலந்து தந்து அருத்தினன்-முகவாசம் வெற்றிலை பாக்கு என்னுமிவற்றைச்சேர்த்துவைத்து நிவேதித்து, புகை சுடர் தலையா வந்த பான்மைகள் யாவையும் வரிசையால் உதவி-தூபம் தீபம் முதலாகவுள்ள உபசாரங்களெல்லாவற்றையும் முறைப்படிகொடுத்து, முந்து கை தொழூஉ— திருமுன்னின்று கைகூப்பி, மும்முறை வணங்கி—மூன்றுதரம்பணிந்து, போற்றினன்—துதித்தார் எ—று.

கந்தம்-தக்கோலம் ஏலம்முதலியன. பூகநற்காய்-கமுகினது நல்லகாய். தலையாவந்தபான்மைகளியாவையும் என்றதனால் அலங்காரதீபமுதலாகப் பின்னர்க்கொடுத்தற்பாலனவாமுபசாரங்களெல்லாமுய்த்துரைக்க. (எ0)

வேறு.

இருவரு முணர்கிலா திருந்த தாள்களைச்
சரவண மிசைவரு தனயன் பூசனை
புரிதலு முமையொரு புடையிற் சேர்தர
வருள்விடை மீமிசை யண்ண றோன்றினான்.

இ—ள்: சரவணமிசை வரு தனயன்—சரவணதடாகத்திற்றோன்றிய புதல்வராகிய முருகக்கடவுள், இருவரும் உணர்கிலாது இருந்த தாள்களை பூசனை புரிதலும்—பிரமவிஷ்ணுக்களாலும் அறியப்படாதிருந்த திருவடிகளை வழிபடுதலும், அண்ணல்— சிவபிரான், உமை ஒரு புடையில் சேர்தர—உமாதேவியார் வாமபாகத்திலமைய, அருள் விடை மீ மிசை தோன்றினான்-அருளினையுடைய இடபவாகனத்திலெழுந்தருளினார் எ-று.

தருமவடிவாகிய இடபமென்பார் 'அருள்விடை' என்றார். சரவணமிசைவருதனயன் = சரவணபவன். (எக)

கார்த்திகை காதலன் கறைமி டற்றுடை
மூர்த்திநல் லருள்செய முன்னி வந்தது
பார்த்தன னெழுந்தனன் பணிந்து சென்னிமேற்
சேர்த்திய கரத்தொடு சென்று போற்றினன்.

இ—ள்: கார்த்திகை காதலன்—கார்த்திகைமாதர்க்குப் புதல்வரான முருகக்கடவுள், கறை மிடற்று உடை மூர்த்தி நல் அருள் செய முன்னி வந்தது பார்த்தனன்—நஞ்சைத் திருமிடற்றிலுடைய சிவபிரான் நல்லிருபைசெய்யநினைத்து எழுந்தருளியதன்மையைப்பார்த்து, எழுந்தனன் பணிந்து—எழும்பி வணங்கி, சென்னிமேல் சேர்த்திய கரத்தொடு சென்று போற்றினன்— சிரமேற்கூப்பிய திருக்கரத்துடன் திருமுன்சென்று துதித்தார் எ—று. (எஉ)

செயிர்ப்பறு நந்திதன் றிறத்தில் வீரரும்
வியர்ப்பினில் வந்தெழு வீர ருங்குழீ இக்
கயற்புரை கண்ணுமை கணவற் காணுறீஇ
மயிர்ப்புறம் பொடிப்புற வணங்கி யேத்தினர்.

இ—ள்: செயிர்ப்பு அறு நந்திதன் திறத்தில் வீரரும்—கோபமில்லாத நந்திகணத்தவர்களாயிருந்த நவவீரர்களும், வியர்ப்பினில் வந்து எழு வீரரும்-வியர்வையிற்றோன்றிய இலக்கம்வீரர்களும், குழீஇ-கூடி, கயல் புரை கண் உமை கணவன் காணுறீஇ-கயல்மீன்போன்ற கண்களையுடைய உமாதேவியாரது நாயகராகிய சிவபிரானைத்தரிசித்து, மயிர்ப்புறம் பொடிப்பு உற வணங்கி ஏத்தினர்-தேகத்திலுள்ள ரோமங்கள் புளகமுறப்பணிந்து துதித்தார்கள் எ—று.

மயிர்ப்புறம்=புறமயிர். கடவுளைக்காணுதற்கேற்ற நற்குணமுடையரென்பது போதர 'செயிர்ப்பறுநந்திதன்றிறத்தில்வீரர்' என்றார். (எங)

முண்டகன் முதல்வரு முரண்கொள் பூதருங்
கண்டன ரனையது கரங்கள் கூப்பியே
மண்டனின் மும்முறை வணங்கி வானக
மெண்டிசை செவிடுற வேத்தன் மேயினர்.

இ—ள்: முண்டகன் முதல்வரும்—பிரமாமுதலிய தேவர்களும், முரண்கொள் பூதரும்—வலிமையினையுடைய பூதர்களும், அனையது கண்டனர்—அத்தன்மையைப்பார்த்து, கரங்கள் கூப்பி—கைகுவித்து, மண்தனில் மும்முறை வணங்கி—நிலத்தில்வீழ்ந்து மூன்றுதரம்பணிந்து, வானகம் எண் திசை செவிடு உற ஏத்தல் மேயினர்-ஆகாயமும் எட்டுத்திக்குகளுஞ் செவிடுபடும்படி [பேரொலியாகத்] துதிப்பாராயினர் எ—று. (எச)

வேறு.

ஆயது காலை தன்னி லருவுரு வாகு மண்ணல்
சேயினை நோக்கி யுன்றன் வழிபடற் குவகை செய்தே
நீயிது கோடி யென்னு நிரந்தபல் புவன முற்று
மேயென முடிவு செய்யும் படைக்கலத் திறையை யீந்தான்.

இ—ள்: ஆயது காலை தன்னில்—அப்பொழுது, அரு உரு ஆகும் அண்ணல்-அருவமாயும் உருவமாயும் அருவுருவமாயும் நின்ற சிவபிரான், சேயினை நோக்கி—தமது புதல்வராகிய முருகக்கடவுளைத்திருநோக்கஞ்செய்து, உன் தன் வழிபாட்டிற்கு உவகை செ

ய்தேம், நீயியற்றிய பூசைக்குமகிழ்ந்தேம், நீ இது கோடி என்று—நீ இதனை ஏற்றுக்கொள்வாயென்று திருவாய்மலர்ந்தருளி, நிரந்த பல் புவனம் முற்றும் ஏயென முடிவுசெய்யும் படைக்கலத்திறையை ஈந்தான்—நிறைந்த பல உலகங்களையும் விரைவிலழிக்கவல்லபடைக்கலராசனாகிய பாசுபதாஸ்திரத்தைக்கொடுத்தருளினார் எ—று.

இப்படையைச் சர்வசங்காரப்படையெனவும் வழங்குப. (௭௫)

190 மற்றிது நம்பாற் றோன்றும் வான்படை மாயன் வேதாப்
பெற்றுள தன்றி யாரிப் பெரும்படை பரிக்கு நீரார்
முற்றுயி ருண்ணும் வெஞ்சூர் முரட்படை தொலைப்பா னீது
பற்றுதி மைந்த வென்றுப் பராபர னருளிப் போனான்.

இ—ள்: மைந்த—புதல்வனே! இது நம்பால் தோன்றும் வான் படை—இது எம்மிடத்திற்றோன்றிய சிறந்தபடைக்கலம், மாயன் வேதா பெற்றுளது அன்று—திருமால் பிரமன் என்னுந்தேவத்தலைவர்தாமும் பெற்றுள்ளதன்று, இ பெரும் படை பரிக்கும் நீரார் யார்—பெரிய இந்தப் படைக்கலத்தைத்தாங்குதற்கேற்ற வலிமையுடையார் (உன்னையன்றி) வேறியாவர் (ஒருவருமில்லை), முற்று உயிர் உண்ணும் வெம் சூர் முரண் படை தொலைப்பான்—எல்லாவுயிர்களையும் அழிக்கின்ற கொடிய சூரபன்மனது வலியசேனைகளை அழிக்குமாறு, ஈது பற்றுதி என்று—இப்படையை ஏற்றுக்கொள்ளென்று கூறி, பராபரன்—சிவபிரான், அருளி—கொடுத்து, போனான்—மறைந்தருளினார் எ—று.

மாயன் வேதா என்பதிலுயர்வுசிறப்பும்மைதொக்கது. உண்ணும் என்பதை முற்றுகக்கொண்டு, எல்லாவற்றையுமழிக்கவல்லதெனப் பொருள்கூறினுமாம். (௭௬)

191 கருணைசெய் பரமன் சேணிற் கரந்தனன் போன காலை
யருள்பெறு நெடுவே லண்ண லன்னவற் போற்றிப் பின்னை
விரவிய விலக்கத் தொன்பான் வீரரு மயனு மேனைச்
சுரர்களும் வழுத்திச் செல்லத் தூயதன் றேரிற் புக்கான்.

இ-ள்: கருணைசெய் பரமன் சேணில் கரந்தனன் போன காலை-இவ்வாறுதிருவருள் செய்த சிவபிரான் ஆகாயத்தில் மறைந்துசென்றபொழுது, அருள் பெறும் நெடு வேல் அண்ணல்—(அவரது) திருவருளைப்பெற்ற நெடியவேற்படையையேந்திய முருகக்கடவுள், அன்னவன் போற்றி—அந்தச்சிவபெருமானைத்துதித்து, பின்னை—பின்பு, விரவிய இலக்கத்தொன்பான் வீரரும் அயனும் ஏனை சுரர்களும் வழுத்தி செல்ல—செறிந்த இலக்கத்தொன்பது வீரர்களும் பிரமாவும் திருமால்முதலிய மற்றையதேவர்களுந்துதித்து உடன்வர, தூய தன் தேரில் புக்கான்—சுத்தமாகிய தனது மனோவேகப்பொற்றேரிலேறியருளினார் எ—று.

அருள்பெறும் அண்ணல் எனஇயையும். (௭௭)

192 சில்லியந் தேர்மேற் செவ்வேள் சேர்தலு முலவை வேந்தன்
வல்லைதன் றமர்க ளோடும் வாம்பரி கடாவி யுய்ப்ப
வெல்லையிற் பரிதி தோன்ற வெழுதரு முயிர்க ளேபோ
லொல்லென வெழுந்த தம்மா வுருகெழு பூத வெள்ளம்.

இ—ள்: செவ்வேள்—முருகக்கடவுள், சில்லியம் தேர்மேல் சேர்தலும்— உருளைகளையுடைய தேரின்மேலெழுந்தருளுதலும், உலவை வேந்தன்—வாயுதேவன், வல்லை—விரைவாக, தன்தமர்களோடும்— தனது சுற்றத்தவர்கள்நாற்பத்தொன்பதின்மர்களுடன், வாம் பரி கடாவி உய்ப்ப—தாவுகின்ற குதிரைகளை ஏவிச்செலுத்த, எல்லையில்

பரிதி தோன்ற எழுதரும் உயிர்களே போல்—காலையிற் சூரியனுதிக்க நித்திரைவிட்டெழும்புகின்ற ஆன்மவர்க்கங்களைப்போல, ஒல் என—விரைவாக, உரு கெழு பூதவெள்ளம் எழுந்தது—அச்சத்தைவிளைக்கின்ற பூதசேனைசமூகம் எழுந்தன எ—று.

சூரியன் உதயமலையிற்றோன்றி வரக்கண்டு உயிர்வர்க்கங்கள்எழுவதுபோல, முருகக்கடவுள் தேர்மேல் வருதலைக்கண்டு பூதர்களெழுந்தனரென்பதாம். செந்நிறமுடைமையாற் செவ்வேளுக்குச் சூரியனைஉவமித்தார். உரு-அச்சம். (எஅ)

சாரத நீத்த மெல்லாந் தரையினின் றெழுந்து சூழ்ந்து
போரணி யணிந்து போந்த புடைதனி லிலக்கத் தொன்பான்
வீரருஞ் சுரர்கள் யாரு மேவினர் வந்தார் வான்றோய்
தேர்மிசை யவர்க்கு நாப்பட் சென்றனன் குமரச் செம்மல்.

இ—ள்: சாரத நீத்தம் எல்லாம்—பூதவெள்ளமுழுதும், தரையில் நின்று எழுந்து சூழ்ந்து—பூமியினின்றுமெழும்பி ஒருங்குகூடி, போர் அணி அணிந்து போந்த—போர்க்கோலங்கொண்டு சென்றன, இலக்கத்தொன்பான் வீரரும் சுரர்கள் யாரும் புடைதனில் மேவினர் வந்தார்—இலக்கத்தொன்பது வீரர்களும் தேவரனைவரும் பக்கத்திற்சூழ்ந்துவந்தார்கள், அவர்க்கு நாப்பண்—அவரனைவர்க்கும்நடுவில், வான் தோய் தேர்மிசை-ஆகாயத்தையளாவியதேரின்மேல், குமரச்செம்மல் சென்றனன்—குமாரக்கடவுள் சென்றருளினர் எ—று. (எகூ)

மண்ணியங் கரையிற் றென்பால் வகுத்தசேய் ஞல்லூர் நீங்கி
யெண்ணிய வுதவும் பொன்னி யிகந்திடை மருதி னோடு
தண்ணியன் மஞ்ஞை யாடுந் தண்டுறை பறிய லூருங்
கண்ணுத லிறைவன் றான மெனவுங் கண்டு போனான்.

இ—ள்: மண்ணியம் கரையில் தென்பால் வகுத்த சேய்ஞல்லூர் நீங்கி—மண்ணியாற்றங்கரையின் தென்பாகத்திலமைக்கப்பட்ட திருச்சேய்ஞலூரை நீங்கி, எண்ணிய உதவும் பொன்னி இகந்து— நினைத்தவரங்களையெல்லாங் கொடுக்கின்ற காவேரிநதியைக்கடந்து, இடைமருதினோடு—திருவிடைமருதூரையும், தண் இயல் மஞ்ஞை ஆடும் தண் துறை—திருமயிலாடுதுறையையும், பறியலூரும்—திருப்பறியலூரையும், கண் நுதல் இறைவன் தானம் எனவும்—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் வீற்றிருக்கின்ற பிறதலங்களையும், கண்டு போனான்—தரிசித்து அப்பாற்சென்றார் எ—று.

தண்ணியன் மஞ்ஞையாடுந்தண்டுறை-தண்மையான இயல்பினையுடைய மயில்களாடுகின்ற குளிர்ந்ததுறை. இத்தலத்தை மாயூரமெனவும் வழங்குப. (அ0)

எழில்வளஞ் சுரக்குந் தொல்லை யிலஞ்சியங் கான நோக்கி
மழவிடை யிறைவன் பொற்றாள் வணங்கியே மலர்மென் பாவை
முழுதுள திருவு மென்று முடிவின்மங் கலமு மெய்த
விழுமிதி னோற்றுப் பெற்ற வியன்றிரு வாரூர் கண்டான்.

இ—ள்: எழில் வளம் சுரக்கும் தொல்லை இலஞ்சியங்கானம் நோக்கி—சிறந்த வளங்களைத்தருகின்ற பழைய திருவிலஞ்சியங்கானத்தைத்தரிசித்து, மழ விடை இறைவன் பொன் தாள் வணங்கி-(அங்குவீற்றிருக்கின்ற) சிவபிரானது அழகியபாதங்களைப்பணிந்து, மலர் மென் பாவை முழுது உள திருவும் என்றும் முடிவு இல் மங்கலமும் எய்த விழுமிதில் நோற்று பெற்ற வியன் திருவாரூர் கண்டான்—செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற மெல்லிய இலக்குமி எல்லாச்செல்வங்களையும் எப்போதுமழியாத மங்கலிய

த்தையும் அடையும்படி நன்குதவம்புரிந்து பெற்றுக்கொண்ட சிறந்த திருவாரூரைத்தரிசித்தார் எ—று.

மழவிடையிறைவன்-இளமையாகிய இடபவாகனத்திலெழுந்தருளுகின்றதலைவன். முன்னொருகாலத்தில், திருமால், பகைவரைவெல்லும்பொருட்டுச்சென்று, வில்லைக் கீழ்மேலாகநிறுத்தி, கீழ்க்குதையைவலக்காற்பெருவிரலாலும் மேற்குதையைமோவாய்க்கட்டையாலும் ஊன்றிநிற்ப, பகைவர்கள் செல்லுருக்கொண்டு நாணை அறுத்துவிட்டமையால், அவ்வில் நிமிர்ந்தது. அதனால் தலை வேறாய்க்கிளப்பப்பட்டுத் திருக்கண்ணமங்கையென்னுந்தலத்தில்விழ, திருமால் உயிர்பிரிந்தார். அதன்மேல், திருமகள் திருவாரூரையடைந்து, சிவபிரானைக்குறித்துத் தவஞ்செய்து, தனதுநாயகராகிய அந்தத்திருமாலை எழுப்பி, எல்லாச்செல்வங்களையும்பெற்று வாழ்ந்திருந்தனள் என்பதாம். (அச)

குமாரபுரிப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் களஉ௫.

---

# சுரம்புகு படலம்.

முருகக்கடவுள் பாலைவனத்திற்சென்றருளியசரித்திரத்தைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

முருகக்கடவுள் பாலைவனத்திற்செல்ல, கொடிதாகிய அப்பாலைவனம் பூஞ்சோலையாய் மிகக்குளிர்ந்தது. திருப்பரங்குன்றத்திருந்த பராசரமுனிவரின்குமாரர் அறுவரும் அவரதுவருகையை ஞானத்தாலுணர்ந்து, எதிர்கொண்டு வந்து, வணங்கினர். அச்சமயத்தில் அவர்வரலாற்றை இந்திரன்கூற, முருகவேள்கேட்டு அருள்செய்து, அவரையுடன்கொண்டு அப்பாற்சென்றார் என்பதாம்.

புற்றிடங் கொண்ட புத்தேள் புரந்தரற் கருள்செய் திட்ட
நற்றலந் தன்னைச் சேர்ந்த நகரமுள் ளனவுங் காணூஉக்
கொற்றவெங் கதிர்வே லண்ணல் கொல்லுலை யழலிற் செக்கர்
பற்றிய விரும்பு போலும் பாலையங் கானத் துற்றான்.

இ—ள்: கொற்ற வெம் கதிர் வேல் அண்ணல்—வெற்றிபொருந்திய வெவ்விய ஒளிபொருந்திய வேற்படையை யேந்தியமுருகக்கடவுள், புற்று இடம் கொண்ட புத்தேள் புரந்தரற்கு அருள்செய்திட்ட நல் தலம் தன்னை சேர்ந்த நகரம் உள்ளனவும் காணூஉ-வன்மீகநாதசுவாமி இந்திரனுக்குத்திருவருள்புரிந்தநல்லதிருவாரூரைச்சார்ந்துள்ள நகரங்களெல்லாவற்றையுந்தரிசித்து, கொல் உலை அழலில் செக்கர் பற்றிய இரும்பு போலும் பாலையம் கானத்து உற்றான்- கொல்லனது உலைக்களத்திலுள்ள அக்கினியிற்(காய்ந்து) சிவப்பேறிய இரும்பைப்போன்ற பாலைவனத்திற்போயருளினார் எ—று.

புற்றிடங்கொண்டபுத்தேள்-புற்றை இடமாகக்கொண்டருளிய கடவுள் = வன்மீகநாதசுவாமி. திருவாரூர் பஞ்சபூதத்தலங்களுட் பிருதிவித்தலமெனப்படும். தெய்வீகமாகிய புற்றையுடைமையால், அத்தலநாதரை வன்மீகநாதர் என வழங்குவது. இந்திரன் தான்பூசித்தமூர்த்தியை முசுகுந்தச்சக்கிரவர்த்திக்குக்கொடுத்தமையாற் புலையுருவெய்தி, திருவாரூரிற்சென்று, சிவபிரானது விழாவிற்குப்பறையறைந்துதிரிந்து, சிலநாளில், அ

வருளாற் பழைய இயல்பைப்பெற்ருன்; இச்சரித்திரம் மேல் தக்ஷகாண்டத்திற் கந்தவிரதப்படலத்திற் கூறப்பட்டுளது. நீண்டினுந் தீராவுபத்திரவத்தைவிளைத்தலின், அப்பாலைவனத்திற்குக் கொல்லுலையழலிற்காய்ச்சிய இரும்பை உவமைகூறினர். (௧)

வேறு.

197 ஏழு நேமியும் பெரும்புறக் கடலுமெண் டிசையுஞ்
சூழ வன்னதா லழிவின்றித் தொன்மைபோ லாகி
யாழி யுள்ளுறும் வடவையி னவற்றினைப் பருகி
யூழி தன்னினு மிருப்பதவ் வுயர்பெரும் பாலை.

இ—ள்: ஏழு நேமியும் பெரும் புறக்கடலும் எண் திசையும் சூழ—ஏழுசமுத்திரங்களும் பெரிய புறவாழியும் எட்டுத்திக்குகளினுஞ்சூழ்ந்துநிற்க, அன்னதால் அழிவு இன்றி— அவற்ருலழிதலில்லாமல், தொன்மைபோல் ஆகி— முன்போலாகி, ஆழி உள் உறும் வடவையின் அவற்றினை பருகி-சமுத்திரத்தினுள்ளிருக்கின்ற வடவாமுகாக்கினியைப்போல அக்கடல்களைப்பருகி, ஊழிதன்னினும் இருப்பது—பிரளயகாலத்திலும் அழியாதிருப்பது, அவ் உயர் பெரும் பாலை—உயர்ந்த அந்தப்பெரிய பாலைவனம் எ—று.

பின்னைய உம்மை உயர்வுசிறப்பு. பிரளயகாலத்தில் ஒன்றுபட்டுப்பெருகி உலகத்தையழிக்குங் கடல்களெல்லாம், பரவுந்தோறும் பருகப்படுதலால், அப்பாலைநிலத்தையழிக்கமாட்டாது, புறத்தேசூழ்ந்துநிற்பனவென்க. (௨)

198 அண்டர் நாயக னுலகடு மகந்தனக் காக்கும்
பண்ட மேசெறி பல்வள மாருயிர் பசுக்கண்
மண்டு நேமிநெய் நிலங்கல மாயுற மலர்தீக்
குண்ட மாயது கள்ளிசூழ் கொடியவெம் பாலை.

இ—ள்: செறி பல் வளம்-(உலகத்தில்)நெருங்கிய பலவகைவளங்களும், அண்டர் நாயகன் உலகு அடும் மகம் தனக்கு ஆக்கும் பண்டம்— தேவநாயகராகிய சிவபிரான் உலகங்களைச்சங்கரித்தலாகிய யாகத்திற்கு அமைத்த உபகரணங்களாகவும், ஆர் உயிர் பசுக்கள்—நிறைந்த ஆன்மாக்களெல்லாம் யாகபசுக்களாகவும், மண்டும் நேமி நெய்—நீர்நிறைந்தகடல்கள் நெய்யாகவும், நிலம் கலம் ஆய் உற—பூமி நெய்ப்பாத்திரமாகவும் இருக்க, கள்ளி சூழ் கொடிய வெம் பாலை—கள்ளிமரங்கள்சூழ்ந்த மிகக்கொடிய பாலைநிலமானது, தீ மலர் குண்டம் ஆயது—அக்கினிசொலித்தெரிகின்ற ஓமகுண்டமாயிருந்தது எ—று.

எல்லாவளங்களையும் எல்லாவுயிர்களையும் கொணர்ந்திட்டு எல்லாக்கடல்களையும் பெய்யினும், அக்கினிதணியாது சொலிக்கத்தக்கதென்பதாம். பலபொருள்களைத் தம்முளியைபுடையனவாக உருவகஞ்செய்தலின் இது இயைபுருவகம். (௩)

199 வண்ண வொண்சுதை மெய்யுடை வரநதி கேள்வ
னண்ணு தொல்லுல காகியே நரலையுற் றென்னத்
தண்ணி லாவெழு நாத்தலை யிரண்டுடைத் தழலின்
பண்ண வற்குல காயது முதுபெரும் பாலை.

இ—ள்: நரலை—சமுத்திரமானது, வண்ண ஒண் சுதை மெய் உடை வரநதி கேள்வன் நண்ணு தொல் உலகு ஆகி உற்று என்ன—அழகிய ஒளிபொருந்திய வெண்ணிறச்சரீரத்தையுடைய வருணனிருக்கின்ற பழைய உலகமாயிருந்தாற்போல, முது பெரும் பாலை—பழைய பெரிய பாலைநிலமானது, தண் இலா எழு நா இரண்டு தலை உடை தழலின்பண்ணவற்கு உலகு ஆயது- குளிர்ச்சியில்லாத எழுநாக்களையும் இரண்டுதலைகளையுமுடைய அக்கினிதேவனுக்கு உலகமாயிருந்தது எ—று.

சுதை மெய்-கலவைச்சாந்துபூசியமேனியெனினுமாம். வரநதிகேள்வன்-கங்கைக்குநாயகன். (ச)

உடைய தொல்குலக் கேண்மையா லவ்வனத் துறையுங்
கொடிய வன்னிபாற் சென்றதோ வெப்பமேல் கொண்டு
நடுந டுங்கிவெம் புகையுமிழ்ந் தரற்றி நாவுலர்ந்து
கடல்ப டிந்துநீர் பருகுமால் வடவையங் கனலே.

இ—ள்: வடவையம் கனல்—வடவாமுகாக்கினி, உடைய தொல் குலக்கேண்மையால்-தமக்கியல்பாயுள்ள பழைய சாதியுரிமையினுல், அவ் வனத்து உறையும் கொடிய வன்னிபால் சென்றதோ—அந்தப்பாலைவனத்திலிருக்கின்ற கொடிய அக்கினியினிடத்துப்போயிற்றோ, வெப்பம் மேல்கொண்டு—சூடுமிகப்பெற்று, நடுநடுங்கி—மிகநடுங்கி, வெம் புகை உமிழ்ந்து—கொடிய புகையைக்கான்று, அரற்றி—புலம்பி, நா உலர்ந்து—நாவரண்டு, கடல் படிந்து—சமுத்திரத்திலமிழ்ந்தி, நீர் பருகும்—நீரைப்பருகுகின்றது எ—று.

ஒகாரம் ஐயப்பொருட்டு. வடவைத்தீக்கடலிலிருந்து நீரைப்பருகுவது அப்பாலைநிலத்துவந்தமையாற்போலுமென அதிசயோத்தியாகக்கூறியதனுல், வடவையின்வெப்பத்தினும் இப்பாலைநிலவெப்பம் பன்மடங்கதிகமென்பதுபெற்றும். (ரு)

கற்றை யங்கதிர்ப் பரிதியு மதியுமக் கானஞ்
சுற்றி யேகுவ தல்லது மிசைபுகார் சுரரு
மற்று ளார்களு மனையரே யெழிலியு மருத்து
மெற்றை வைகலு மதன்புடை போகவு மிசையா.

இ—ள்: கற்றையம் கதிர் பரிதியும் மதியும் அ கானம் சுற்றி ஏகுவது அல்லது மிசை புகார்—கூட்டமாகிய கிரணங்களையுடைய சூரியனுஞ் சந்திரனும் அந்தக்காட்டைச்சூழ்ந்துசெல்வதன்றி மேற்செல்லார்கள், சுரரும் மற்று உளார்களும் அனையரே—தேவர்களும் பிறரும் அத்தன்மையரே, எழிலியும் மருத்தும் எற்றை வைகலும் அதன்புடை போகவும் இசையா— மேகங்களுங் காற்றும் எஞ்ஞான்றும் அவ்வனத்தினருகிற் போகவுந்துணியமாட்டா எ—று.

போகவும் என்பதில் உம்மை இழிவுசிறப்பு. மற்றுளார் என்றதில் ஏனையகிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் அடக்கிக்கூறுக. (சு)

சேனம் வெம்பணி யொண்புறு விரலைமான் செந்நா
யானை யாதிக ளவ்வனத் திருக்கவு மாவி
போன தில்லையா லங்கியிற் றோன்றிய பொருள்கண்
மேனி கன்றுவ தன்றியே விளியுமோ வதனுல்.

இ—ள்: சேனம் வெம் பணி ஒண் புறு இரலை மான் செந்நாய் ஆனை ஆதிகள்—பருந்தும் கொடியபாம்பும் ஒளிபொருந்திய புறுவும் கலைமானும் புள்ளிமானும் செந்நாயும் யானையுமுதலாகிய பிராணிகள், அவ்வனத்து இருக்கவும்— அப்பாலைவனத்திலிருந்தபோதும், ஆவி போனது இல்லை—இறந்தில, அங்கியில் தோன்றிய பொருள்கள் அதனுல் மேனிகன்றுவதே அன்றிவிளியுமோ-அக்கினியிற்றோன்றிய பொருள்கள் அவ்வக்கினியினுலுடல்வெதும்புவதேயன்றி இறக்குமா? (இறவா) எ—று.

பாலைநிலத்திற்றோன்றியபொருள்களாதலால் அந்நிலவெப்பத்தால் அழியாது சரீரம்வெம்பியிருந்தனவென்பதாம். (எ)

எண்ணி னுஞ்சுடும் பாலையங் கானிடை யெழுந்த
கண்ண கன்புகை யழல்படு கின்றகாட் சியவே

விண்ணி னீலமுஞ் செக்கரு மவற்றினால் வெடித்த
புண்ணு மொக்குளுங் கதிர்களு முடுக்களும் போலாம்.

இ—ள்: விண்ணில் நீலமும் செக்கரும்—ஆகாயத்திற்காணப்படுகின்ற நீலநிறமும் செவ்வானமும், எண்ணினும் சுடும் பாலையம் கானிடை எழுந்த கண் அகன் புகை அழல் படுகின்ற காட்சிய— நினைத்தாலுஞ் சுடுகின்ற அப்பாலைவனத்தினின்று கிளர்ந்து சென்ற இடமகன்றபுகைப்படலத்தையும் அக்கினியையும்போன்ற தோற்றத்தையுடையன, கதிர்களும் உடுக்களும்-(அவ்வாகாயத்திலுள்ள) சூரியசந்திரர்களும் நட்சத்திரங்களும், அவற்றினால் வெடித்த புண்ணும் மொக்குளும் போல் ஆம்— அப்புகையாலும்அக்கினியாலும் வெதுப்பப்பட்டு வெடித்தபுண்ணையுந் தொப்பளத்தையும் ஒத்திருக்கும் எ—று.

ஆகாயத்தினது நீலநிறம் புகையையும், செவ்வானம் அக்கினியையும், கதிர்கள் புண்ணையும், உடுக்கள் தொப்பளத்தையும்போல்வனவென நிரனிறையாகக்கொள்க.()

204 வேக வெய்யவன் புடையுறா தவ்வன மிசையே
போக வோரிறை யெழுந்தழல் சுட்டது போலு
மேகு தேரொரு காலிலா திழந்ததா லிருகால்
பாகி ழந்தன னவன்கதி ரங்கிபட் டனவே.

இ—ள்: வேக வெய்யவன் புடை உறாது அவ் வனமிசை போக——வேகமாகச்செல்லுகின்றசூரியன் விலகிச்செல்லாமல் அப்பாலைவனத்தின்மேலாகப்போக, அழல் எழுந்து ஓர் இறை சுட்டது போலும்- அவ்வனத்தீக்கிளர்ந்து ஒருசிறிதுசுட்டதுபோலும், ஏகு தேர் ஒரு கால் இலாது இழந்தது——ஓடுகின்றதேர் ஒருசக்கரமின்றி இழந்தது, பாகு இருகால் இழந்தனன்—தேர்ச்சாரதி இரண்டுகால்களையுமிழந்தான், அவன் கதிர் அங்கிபட்டன—அச்சூரியனதுகிரணங்கள் அக்கினிமயமாயின எ—று.

சூரியனதுதேர் ஒருருளுடையதென்பதும், அத்தேரின் சாரதியாகிய அருணனுக்குக் காலில்லையென்பதும் புராணக்கோட்பாடு. (௯)

205 தங்க டொல்பவ மகன்றிலா விண்ணவர் தம்மைத்
துங்க முத்தியின் பொருட்டினா லடைபவர் தொகைபோ
லங்க நொந்துதம் போலவே வெப்பமுற் றயருங்
கங்க நாடியே நீழலுக் கடைவன கலைகள்.

இ—ள்: தங்கள் தொல் பவம் அகன்றிலா விண்ணவர் தம்மை துங்க முத்தியின் பொருட்டினால் அடைபவர் தொகை போல்—தங்களுக்கெய்திய பழைய பிறவித்துயரைநீங்காததேவர்களைச் சிறந்த முத்தியின்பத்தைப்பெறும்பொருட்டுச்சேவிப்பவர்களது தொகுதிபோல, கலைகள்—கலைமான்கள், அங்கம் நொந்து தம்போலவே வெப்பம் உற்று அயரும் கங்கம் நாடி— சரீரம்வருந்தித் தம்மைப்போலவே சூடுபெற்று வருந்துகின்றபருந்துகளைத்தேடி, நீழலுக்கு அடைவன—நிழலுக்குச்செல்கின்றன எ—று.

போலவே என்பதில் ஏகாரம் தேற்றம். பிறந்திறந்துழல்கின்றஆன்மாக்கள் பிறவித்துயரையொழிக்குமாறுமெய்க்கடவுளின்பாதநீழலைச்சாராது தம்போலுழல்கின்றபொய்த்தேவரைச்சார்ந்து கருதியபயனைப்பெறுமைபோல, வெப்பமாற்றாதயானைகள், அவ்வெப்பத்தையாற்றுமாறுநிலையானநீழலைப்பெறாது, தம்போலுழலும் பருந்தினீழலைச்சார்ந்து சுகம்பெற்றிலவென்பதாம். (௧௦)

206 கோல வெங்கதிர் மதியிவர் வைகலுங் கொடிய
பாலை வெஞ்சுரத் தாரழல் வெம்மைபட் டனரோ

காலை தன்னினு மாலையம் பொழுதினுங் கங்குல்
வேலை தன்னினும் பிறவினும் வேலைநீர் படிவார்.

இ—ள்: கோல வெம் கதிர் மதி இவர்—அழகிய கொடிய சூரியனுஞ்சந்திரனு மாகிய இவர்கள், வைகலும்-தினந்தோறும், கொடிய பாலை வெம் சுரத்து ஆர் அழல் வெம்மை பட்டனரோ—மிகக்கொடிய பாலைவனத்திலுள்ள நிறைந்தஅக்கினியின் சூடுதீண்டப்பெற்றார்களோ, காலைதன்னினும்—உதயகாலத்திலும், மாலையம் பொழுதினும்—மாலைக்காலத்திலும், கங்குல் வேலை தன்னினும்—இராக்காலத்திலும், பிறவினும்— மற்றைக்காலங்களிலும், வேலைநீர் படிவார்—கடல்நீரில் முழுகுகின்றார்கள் எ—று.

சூரியன் எல்லாநாட்களிலும் மாலையிலத்தமிப்பவனாயினும், சந்திரன், சிற்சில காலங்களின்மாத்திரம்மாலையினும் ஏனைக்காலங்களிற்பிறகாலங்களினும் அத்தமித்தலின், 'காலைதன்னினுமாலையம்பொழுதினுங்கங்குல்வேலைதன்னினும்பிறவினும்வேலைநீர்படிவார்' என்றார். கிரகங்கள் நாடோறும் அத்தமிப்பதைக் கடலிலமிழ்ந்துவதாகவும் உதிப்பதைக் கடலினின்றெழுவதாகவும் பௌராணிகர் வருணிப்பதியல்பு. (கக)

தொடரும் வானவர் யாவரு மையைதா டொழுவார்
கொடிய பாலைமுன் னுணர்கிலா தணுகினர் கொல்லோ
வடிசி வந்தகம் வெம்பியே யமுதமுண் டதற்காப்
படியின் மேலென்றுஞ் செல்கிலர் விண்மிசைப் படர்வார்.

இ—ள்: தொடரும் வானவர் யாவரும்—கூட்டமாகிய தேவரனைவரும், ஐயை தாள் தொழுவார்—துர்க்கையின்பாதங்களை வழிபடவிரும்பியவர்களாய், கொடிய பாலை முன் உணர்கிலாது அணுகினர் கொல்—வெவ்விய அப்பாலைவனத்தின்றன்மையை முன்னரேஅறியாது வந்தனர்போலும், அடி சிவந்து—கால்கள் சிவப்பேறி, அகம் வெம்பி— மனம்வெதும்பி, அதற்கா அமுதம் உண்டு— அவ்வெப்பம்தீரும்பொருட்டு அமிர்தத்தைப்புசித்து, படியின்மேல் என்றும் செல்கிலர்- பூமியின்மேல் எக்காலத்திலும் நடவாதவர்களாய், விண்மிசை படர்வார்—ஆகாயமார்க்கத்திற்செல்வார்கள் எ—று.

துர்க்கை பாலைநிலத்தெய்வமாதலின், தேவர்வருகைக்கு அத்துர்க்கைபூசையைக்காரணமாக்கினர். (கஉ)

ஒள்ளி தாகிய தலைமையிற் பிறந்துளோ ருலகு
மெள்ளு நல்குர வெய்தலா லிழிந்தவர் கண்ணுங்
கொள்ளு மாறொரு பயன்குறித் தேகல்போற் கொடிய
கள்ளி தன்புடை நீழலுக் கொதுங்குவ கரிகள்.

இ—ள்: ஒள்ளிது ஆகிய தலைமையில் பிறந்துளோர்—சிறந்த உயர்குலத்திற்பிறந்தவர்கள், உலகம் எள்ளும் நல் குரவு எய்தலால்—உலகத்தாரிகழ்கின்ற வறுமைவருதலால், ஒரு பயன் கொள்ளுமாறு குறித்துஇழிந்தவர் கண்ணும் ஏகல் போல்— ஒருபிரயோசனத்தைப்பெறுமாறுகருதி இழிகுலத்தாரிடத்துஞ்செல்லுதல்போல, கரிகள்— யானைகள், கொடிய கள்ளிதன் புடை—கொடிதாகிய கள்ளிமரத்தினருகே, நீழலுக்கு ஒதுங்குவ—நிழலின்பொருட்டொதுங்கிநிற்பன எ—று.

உயர்குலத்தார் வறுமைமிகுதியால் வேண்டியபொருளைப்பெறுமாறு இழிகுலத்தார்பாற்சார்ந்துநிற்பதுபோல, யானைகள் வெப்பமிகுதியால் நிழலைப்பெறுமாறு கள்ளிமரத்தினருகிலொதுங்கிநிற்பனவென்பதாம். தலைமை-ஆகுபெயர். (கங)

209 இரவி கம்மியன் சுட்டுறு கோல்கதி ரெரிதீ
மருவு செந்தரை பொறிமணி கொள்கலம் வறுங்கான்
கரிக ளேகரி காற்குழ றுதிக்கைநீர் கானல்
புரித ரும்பணி வெந்திடும் பணிக்குலம் போலும்.

இ—ள்: இரவி கம்மியன்—சூரியன் பொற்கொல்லனும், கதிர் சுட்டுறு கோல்—அச்சூரியனதுகிரணங்கள் சுட்டுக்கோலும், தீ மருவு செம் தரை எரீ—அக்கினி செறிந்த சிவந்தநிலம் நெருப்பும், பொறி மணி- அக்கினிப்பொறிகள் இரத்தினங்களும், வறும் கான் கொள்கலம்—வெறுமையாகிய காடு பாத்திரமும், கரிகளே கரி—யானைகளே கரியும், துதிக்கை காற்குழல்— அந்தயானைகளின் துதிக்கை ஊதுகுழலும், கானல் நீர்—பேய்த்தேர் நீரும், வெந்திடும் பணி புரிதரும் பணிக்குலம் போலும்— வெந்துகிடக்கின்றபாம்புகள் செய்துமுடிந்தஆபரணமும்போலிருக்கும் எ—று.

கானல் நீரில்லாதிருக்கவும் நீர்நிலைபோலத்தோன்றுமிடம். (கச)

210 ஆன்ற வான்புவி நதிப்புனல் பாதல மதன்கட்
டோன்று நீத்தநீர் யாவையு மொருங்குறத் துற்றுச்
சான்ற பாலையஞ் செந்தழ லப்புன றன்னைக்
கான்ற வாறெனக் கிளர்வன வந்நிலக் கானல்.

இ—ள்: சான்ற பாலையம் செம் தழல்-அந்தப்பாலைநிலத்திற்பரந்த சிவந்த அக்கினியானது, ஆன்ற வான் புவி நதி புனல்—அகன்ற ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள ஆற்றுநீர்களும், பாதலம் அதன் கண் தோன்றும் நீத்த நீர்—பாதாளத்திற்பொருந்திய கங்கைநீரும் ஆகிய, யாவையும்-எல்லாவற்றையும், ஒருங்குற துற்று-ஒருசேரக்குடித்து, அப்புனல்தன்னை கான்றவாறு என-(பின்)அந்த நீரை உமிழ்ந்ததன்மைபோல, அநில கானல் கிளர்வன—அந்த நிலத்திலுள்ள பேய்த்தேர்கள் விளங்குவன எ—று. (கரு)

211 விஞ்சு கானல்வெண் டேரினை யாறென விரும்பி
நெஞ்சி லுன்னியே யிரலைமான் மடப்பிடி நெடுந்தாட்
குஞ்ச ரந்திரிந் துலைவன கொடியவெம் பணிகா
னஞ்சு தன்னையு மருந்துவ ஞமலிநீர் நசையால்.

இ—ள்: இரலை—கலைமானும், மான்—புள்ளிமானும், மட பிடி—அறியாமையையுடைய பெண்யானையும், நெடும் தாள் குஞ்சரம்—நெடிய காலினையுடைய களிற்றுயானையும், விஞ்சு கானல் வெண்டேரினை யாறு என விரும்பி—மிகுந்தகானல்நீராகியபேய்த்தேரை யாறென்றுவிரும்பி, நெஞ்சில் உன்னி—மனத்தில்நினைத்து, திரிந்து உலைவன—நடந்துதிரிந்து (அவைநீராகாமையால்) அலைவன, ஞமலி—நாய்கள், நீர்நசையால்-நீர்வேட்கையினால், கொடிய வெம் பணி கால் நஞ்சுதன்னையும் அருந்துவ—மிகக்கொடிய சர்ப்பங்களுமிழ்ந்த நஞ்சையும் உண்ணுவன எ—று.

பேய்த்தேர் பலவிடங்களினுந்தோன்ற அவற்றையெல்லாம் உண்மையான நீர்நிலையென்றுகருதிப்போய், நீர் கிட்டாமையின் அலைந்துதிரிவனவென்க. (கசு)

செய்ய மண்மக ளுலப்புறு வுந்தியந் தீயாய்
212 வெய்ய வன்செலற் கரியவப் பாலைமே வுதலான்
மொய்யில் வெம்பணி புகையழ லுமிழ்வன முரணு
மையு றுங்கொடு நஞ்சொடு கான்றசெம் மணிகள்.

இ—ள்: வெய்யவன் செலற்கு அரிய அ பாலை—சூரியனுஞ்செல்லுதற்கரிய அந்தப்பாலைவனம், செய்ய மண்மகள் உலப்பு உறு உந்தியம் தீ ஆய் மேவுதலால்— செவ்வி

ய பூமிதேவியினது குறைவில்லாத உதராக்கினியாய்ப்பொருந்துதலினுல், மொய் இல் வெம் பணி புகை அழல் உமிழ்வன முரணும்—வலிமையற்ற கொடிய பாம்புகள் புகையையும் அக்கினியையும் உமிழ்தலையொத்திருக்கும், மை உறும் கொடு நஞ்சொடு கான்ற செம்மணிகள்—கருநிறம்பொருந்திய கொடியநஞ்சினுடனுமிழ்ந்த சிவந்த இரத்தினங்கள் எ—று.

நஞ்சையுமிழ்தல் புகையையுமிழ்வதுபோலவும், மணிகளையுமிழ்தல் அழலையுமிழ்வதுபோலவும் இருந்தனவென்க. (௧௭)

213 முளையி னஞ்சொரி முத்தமு முந்துசெம் பரலு
மளவில் பாந்தளின் மணிகளு மீண்டியே யமர்தல்
விளிவி லவ்வனத் தீச்சுடத் தனதுமெய் வெடித்தே
யுளையு மண்மகண் மொக்குளுற் றிடுதிற னொக்கும்.

இ—ள்: முளையினம் சொரி முத்தமும்—மூங்கிற்கூட்டங்கள் உகுத்தமுத்துக்களும், முந்து செம் பரலும்—முன்ருெடங்கியுள்ள சிவந்த பரற்கற்களும், அளவு இல் பாந்தளின் மணிகளும் ஈண்டி அமர்தல்—அளவிறந்த சர்ப்பங்களீன்ற இரத்தினங்களும் நெருங்கியிருத்தல், விளிவு இல் அவ் வன தீ சுட உளையும் மண்மகள்—அழிவில்லாத அப்பாலைவனத்தக்கினிசுடுதலினுல் வருந்தியநிலமகள், தனது மெய் வெடித்து மொக்குள் உற்றிடு திறம் போலும்—தன்னுடையசரீரம் வெடிக்கப்பெற்றுத்தொப்பளமடைந்ததன்மையைப்போலும் எ—று. (௧௮)

214 கள்ளி பட்டன பாலையுந் தீந்தன கரிந்து
முள்ளி பட்டன வெரிந்தன குராமர முளிந்து
கொள்ளி பட்டன காரகி லன்னதாற் கொடுந்தீப்
புள்ளி பட்டது போன்றது பாலையம் புவியே.

இ—ள்: கள்ளி பட்டன—கள்ளிமரங்கள் அழிந்தன, பாலையும் தீந்தன-பாலைமரங்களும் எரிந்தன, முள்ளி க ரி ந் து பட்டன—முள்ளிச்செடிகள் கரிந்தழிந்தன, குராமரம் எரிந்தன-குராமரங்கள் எரிந்தன, கார் அகில் முளிந்து கொள்ளி பட்டன-கருநிறமான அகிலமரங்கள் காய்ந்துகொள்ளியாயின, அன்னதால்-அக்காரணத்தால், பாலையம் புவி-அப்பாலைநிலம், கொடும் தீ புள்ளி பட்டது போன்றது—கொடியஅக்கினி புள்ளிபட்டாற்போன்றிருந்தது எ—று.

அப்பாலைநிலத்துக் கள்ளிமுதலியனஅழிந்துகிடத்தல், அக்கினியின்மேனியிற் புள்ளிகள்பொருந்தியிருத்தல்போலுமென்பதாம். (௧௯)

215 இன்ன தாகிய பாலையஞ் சுரத்திடை யிறைவன்
றன்ன தாகிய தானைக ளொடுந்தலைப் படலு
மின்னு மாமுகில் பொழிந்தபின் றண்ணளி மிக்கு
மன்னு கின்றபூங் குறிஞ்சிபோ லாயதவ் வனமே.

இ—ள்: இறைவன்—முருகக்கடவுள், இன்னது ஆகிய பாலையம் சுரத்திடை— இ வ் வா று கி ய பாலைவனத்தில், தன்னது ஆகிய தானைகளொடும் தலைப்படலும்—தமதுசேனைகளுடன் எழுந்தருளியவுடன், அவ் வனம்—அந்தவனம், மின்னும் மா முகில் பொழிந்தபின் தண்ணளி மிக்கு மன்னுகின்ற பூ குறிஞ்சி போல் ஆயது— மின்னுகின்ற கரியமேகங்கள் மழைபெய்தபின் குளிர்ச்சிமிகுந்திருக்கின்ற பொலிவாகிய குறிஞ்சிநிலத்தைப்போற் குளிர்ந்தது எ—று.

மழைபெய்யமுன்னரும் மிக்கசெழிப்புடைத்தாயிருந்த குறிஞ்சிநிலமென்பார் 'பூங்குறிஞ்சி' என்ருர். (௨௦)

216 ஆற்ற ருந்திற லங்கிதன் னரசியன் முறையை
மாற்றி யெம்பிரான் வருணற்கு வழங்கின னென்ன
வேற்ற மாகிய வெம்மை போய் நீங்கியே யெவரும்
போற்று நீரொடு தண்ணளி பெற்றதப் புவியே.

இ—ள்: எம் பிரான்—எங்கள் கடவுளாகிய முருகவேள், ஆற்றரும் திறல் அங்கி தன் அரசியல் முறையை மாற்றி—சகித்தற்கரிய வலிமையினையுடைய அக்கினிதேவனது அரசியலுரிமையை விலக்கி, வருணற்கு வழங்கினன் என்ன—வருணபகவானுக்குக் கொடுத்தாரென்று சொல்லுமாறு, அப்புவி—அந்தப்பாலைநிலம், எற்றம் ஆகிய வெம்மை போய் நீங்கி-மிகுதியாகிய வெப்பங்குறைந்தொழிந்து, எவரும் போற்றும் நீரொடு-எவரும் புகழத்தக்க சிறப்பினுடன், தண்ணளி பெற்றது—குளிர்ச்சியைப்பொருந்தியது எ—று.

ஒருங்குதீர்ந்தமையைவிளக்க, 'போய்நீங்கி' என ஒருபொருட்கிளவியிரண்டு புணர்த்தினர். நீரொடு என்பதற்கு நீர்ப்பெருக்கினுடன்எனினுமாம். (௨௧)

217 காத னீங்கலா தலமரு மாருயிர்க் கரண
மாதி யீசன தருளின லவனதா கியபோ
லேது நீரிலா தழல்படு வெய்யகா னிளையோன்
போத லாற்குளிர் கொண்டது நறுமலர்ப் பொழிலாய்.

இ—ள்: காதல் நீங்கலாது அலமரும் ஆர் உயிர் கரணம்— ஆசைநீங்கப்பெறுமையினாற் பிறந்திறந்துழல்கின்ற நிறைந்த ஆன்மாக்களின் (மனமுதலிய) கருவிகள், ஆதி ஈசனது அருளினால் அவனது ஆகிய போல்—முதற்கடவுளாகிய சிவபிரானது கருணையினால் அவருடையதாயினாற்போல, எதும் நீர் இலாது அழல்படு வெய்ய கான்—சிறிதும்நீர்வளமின்றி அழன்றிருந்த கொடிய பாலைவனம், இளையோன் போதலால்— முருகக்கடவுளெழுந்தருளுதலால், நறு மலர் பொழில் ஆய் குளிர்கொண்டது—நறுமணங்கமழும் மலர்கள்நிறைந்த சோலையாகிக் குளிர்ச்சிபெற்றது எ—று.

சீவகரணங்கள், இறைவனருளால் தம்மியல்புநீங்கிச் சிவகரணத்தியல்புற்றாற்போல, பாலைவனமும் முருகக்கடவுளருளால் தன்னழற்சிநீங்கிக்குளிர்ந்ததென்பதாம். ()

218 புறநெறிக்கணே வீழ்ந்துளோர் சிவனருள் புகுங்கா
லறிவு மாற்றலுங் குறிகளும் வேறுபட் டனபோல்
வறிய செந்தழல் வெவ்வனம் வேலவன் வரலா
னறிய தண்மலர்ச் சோலையா யுவகைநல் கியதே.

இ—ள்: புறநெறிக்கணே வீழ்ந்துளோர்—புறச்சமயத்திற்புகுந்தவர்கள், சிவன் அருள் புகுங்கால்—சிவபிரானது கருணைசேர்ந்தபொழுது, அறிவும் ஆற்றலும் குறிகளும் வேறுபட்டன போல்—தமது அறிவும் வல்லமையும்செயலும்வேறுந்தன்மையையடைதல்போல, வறிய செம் தழல் வெவ் வனம்—வெறுமையாகிய சிவந்த அக்கினிசெறிந்த கொடிய பாலைவனம், வேலவன் வரலால்—சுப்பிரமணியக்கடவுள் எழுந்தருளப்பெறுதலால், நறிய தண் மலர் சோலை ஆய்—நறுமணங்கமழுங் குளிர்ந்த பூஞ்சோலையாகி, உவகை நல்கியது—மகிழ்ச்சியைப்பயந்தது எ—று.

புறச்சமயத்திற்புகுந்துழல்வார் சிவனருள்கிடைத்துழி அச்சமயநூலையேஉண்மையென்றுணர்ந்த உணர்வுநீங்கிச் சிவசமயநூலுணர்ச்சியுதிக்கப்பெறுதல்போல, பாலைநிலம், முருகக்கடவுள்சென்றுழி, வெம்மைநீங்கித்தண்மையெய்திற்றென்பதாம். (௨௩)

வேறு.

219 நீரறு முரம்பின் றன்மை நீங்குமச் சுரத்தின் றன்பா
லீரறு புயத்தன் செல்ல வெழில்கெழு பரங்குன் றத்திற்

பாரறு தவம்பூண் டுள்ள பராசரன் சிறுர்க ளாய
வோரறு வகைமை யோரு மோதியா லதனைக் கண்டார்.

இ—ள்: நீர் அறும் முரம்பின் தன்மை நீங்கும் அ சுரத்தின் தன் பால்— நீரில்லாத பரலடுத்துயர்ந்திருக்குந்தன்மையை நீங்கிய அந்தப்பாலைவனத்தில், ஈராறு புயத்தன் செல்ல—பன்னிரண்டுதிருப்புயங்களையுடைய முருகக்கடவுள் எழுந்தருளியபொழுது, எழில் கெழு பரங்குன்றத்தில் பார் அறு தவம் பூண்டு உள்ள பராசரன் சிறுர்கள் ஆய ஓர் அறுவகைமையோரும்—அழகுவிளங்குகின்ற திருப்பரங்குன்றில் ஒப்பற்ற தவஞ்செய்திருந்த பராசரமுனிபுத்திரர்களாகிய ஆறுமுனிவரும், அதனை ஓதியால் கண்டார்— அத்தன்மையை ஞானத்தாற் பார்த்தார்கள் எ—று. (௨௪)

தத்தனே யனந்த னந்தி சதுர்முகன் பரிதிப் பாணி
மெய்த்தவ மாலி யென்ன மேவுமூ விருவர் தாமு
மத்தன தருளை முன்னி யடுக்கலி னிருக்கை நீங்கி
யுத்தர நடவை யெய்தி யொய்யெனப் படர்த லுற்றார்.

இ—ள்: தத்தன் அனந்தன் நந்தி சதுர்முகன் பரிதிப்பாணி மெய் தவ மாலி என்ன மேவும் மூவிருவர் தாமும்—தப்தர் அனந்தர் நந்தி சதுர்முகர் சக்கரபாணி மெய்ம்மையாகிய தவத்தையுடையமாலி என்றுள்ள ஆறுமுனிவர்களும், அத்தனது அருளை முன்னி—சிவபிரானது கருணையைச்சிந்தித்து, அடுக்கலின் இருக்கை நீங்கி—திருப்பரங்குன்றத்திலிருத்தலை நீங்கி, உத்தரம் நடவை எய்தி—வடதிசைநோக்கிநடந்து, ஒய் என படர்தல் உற்றார்—விரைவிற்செல்வாராயினர் எ—று.

"பரங்கோ-டென்னுவுரைபெறுகுன்றிடையிருந்தேதவம்புரிமின்- சின்னுண்மிலைசயிவன்வந்தருள்செயும்" என்று, சரவணதடாகக்கரையில், தேவியார் பாலூட்டியபொழுது, சிவபிரான் முருகக்கடவுளுக்கருளிச்செய்தமையின் 'அத்தனதருளைமுன்னி' என்றார். (௨௫)

ஆர்வல ராகு மைந்த ரறுவரு மளகை நேடிப்
பார்வல்வந் தணையு மாபோற் பாலையென் றுரைக்கு மெல்லை
நேர்வரு கின்ற காலை நெடும்படை நீத்தஞ் சூழச்
சூர்வினை முடிப்பான் செல்லுந் தோன்றல்வந் தணிய னானன்.

இ—ள்: ஆர்வலர் ஆகும் மைந்தர் அறுவரும்—அன்பினையுடைய முனிகுமாரர் அறுவரும், அளகை நேடி பார்வல் வந்து அணையுமா போல்— தாய்ப்பறவையைத்தேடிப்பார்ப்பினங்கள்வந்தணுகுந்தன்மைபோல, பாலை என்று உரைக்கும் எல்லை நேர்வருகின்ற காலை—பாலையென்றுசொல்லப்படுகின்ற இடத்திற்குநேராகவரும்பொழுது, நெடும் படை நீத்தம் சூழ—நெடிய சேனைவெள்ளஞ்சூழ, சூர் வினை முடிப்பான் செல்லும் தோன்றல் வந்து அணியன் ஆனன்— சூரபன்மனுவ்வினையுந்தீவினையையழிக்கும்படிவருகின்ற முருகக்கடவுள் வந்து அணுகினர் எ—று.

பார்ப்பினங்கள் தாய்ப்பறவையிடத்துச்செல்லுதலையுவமைகூறியது, பேராவலுடன் சென்றமையைவிளக்குதற்கென்க. சூர்வினை-ஆறும்வேற்றுமைத்தொகையெனினுமாம். முடிப்பான்-பானீற்றுவினையெச்சம். (௨௬)

அணிமையிற் சேயோ னண்ண வாறுமா முகமும் பன்னி
ரிணைதவிர் புயமுங் கையு மேந்தெழிற் படையின் சீரு
மணியணி மார்புஞ் செங்கேழ் வான்றுகின் மருங்கும் பாதத்
துணையுமத் துணையிற் கண்டு தொழுதுகண் களிப்புக் கொண்டார்.

இ—ள்: சேயோன் அணிமையில் நண்ண—முருகக்கடவுள் சமீபத்திலணுக, ஆறு மா முகமும்—சிறந்த ஆறு திருமுகங்களையும், இணை தவிர் பன்னீர் புயமும்—ஒப்பற்ற பன்னிரண்டு திருப்புயங்களையும், (பன்னீர்) கையும்-பன்னிரண்டுதிருக்கைகளையும், எந்து எழில் படையின் சீரும்—அக்கைகளிலேந்திய அழகிய படைக்கலங்களின் அழகையும், மணி அணி மார்பும்—இரத்தினுபரணங்களையணிந்தமார்பையும், செம் கேழ் வான் துகில் மருங்கும்—சிவந்தநிறமமைந்த சிறந்த பீதாம்பரத்தையணிந்த அரையையும், பாதத்துணையும்—இரண்டு திருவடிகளையும், அத்துணையில் கண்டு—அப்பொழுது பார்த்து, தொழுது—கைகூப்பி, கண்களிப்புக்கொண்டார்—நேத்திரானந்தமுற்றார்கள் எ—று.

நண்ணக்கண்டு எனஇயையும். (உஎ)

223 மூவிரு திறத்தி னோரு முற்றொருங் குணர்ந்த வள்ளல்
பூவடி வணங்கித் தேனீப் புதுநறு வருந்தி யார்த்து
மேவருந் தன்மைத் தென்ன வியப்பொடு வழுத்தி நின்று
தேவர்க டேவ வெம்பாற் றிருவருள் செய்தி யென்றார்.

இ—ள்: மூ இரு திறத்தினோரும்—ஆறுமுனிவர்களும், முற்று ஒருங்கு உணர்ந்த வள்ளல் பூ அடி வணங்கி—எல்லாவற்றையும் ஒருங்கேயறிந்த முருகக்கடவுளது மலர்போலுந்திருவடிகளைப்பணிந்து, தேனீ புது நறு அருந்தி ஆர்த்து மேவரும் தன்மைத்து என்ன-தேன்வண்டுகள் புதிதாகிய தேனைப்பருகி இசைபாடிநிற்குந்தன்மையைப்போல, வியப்பொடு வழுத்தி நின்று-அதிசயத்துடன் துதித்துநின்று, தேவர்கள் தேவ—தேவாதிதேவரே!, எம்பால் திருவருள் செய்தி என்றார்—எம்மிடத்துத்திருவருள்செய்வீராக என்று பிரார்த்தித்தார்கள் எ—று.

புதியதேனையுண்டவண்டுகள் பேரானந்தத்துடனிசைபாடுதல்போல, முனிகுமாரரும், பேரானந்தத்துடனின்று துதித்தனரென்க. (உஅ)

224 என்றிவை யிருமூ வோரு மிசைத்துழி யுயிர்கட் கெல்லா
மொன்றிய வுயிரு மாகி யுணர்வுமா யிருந்த மூர்த்தி
தன்றிரு மலர்த்தாண் முன்னந் தலையளி யோடு தாழ்ந்து
நின்றுகை தொழுதிட் டன்னோர் நிலைமையை மகவான் கூறும்.

இ—ள்: என்று இவை இருமூவோரும் இசைத்துழி-என்று இந்தவாசகங்களை ஆறுமுனிவருங்கூறியபொழுது, மகவான்—இந்திரன், உயிர்கட்கு எல்லாம் ஒன்றிய உயிர் ஆகியும் உணர்வு ஆகியும் இருந்த மூர்த்தி தன் திரு மலர் தாள் முன்னம் தலையளியோடு தாழ்ந்து— ஆன்மாக்களினெல்லாம் பொருந்திய உயிராகியும் அறிவாகியும்நின்ற முருகக்கடவுளது சிறந்த தாமரைமலர்போலுந் திருவடிகளின்முன் பேரன்போடும் வணங்கி, நின்று கைதொழுதிட்டு— நின்று கைகுவித்து, அன்னோர் நிலைமையை கூறும்—அம்முனிவரது வரலாற்றை விண்ணப்பஞ்செய்வான் எ—று.

இந்திரன் விண்ணப்பஞ்செய்யமுன்னும் முருகவேள் அவர்வரலாற்றை உணர்ந்துடையரென்பதுதோன்ற 'உயிர்கட்கெல்லாமொன்றியவுயிருமாகியுணர்வுமாயிருந்தமூர்த்தி' என்றார். (உக)

225 மறுவறு பராச ரன்றன் மதலைக ளாகு மின்னோ
ரறுவருஞ் சிறுரே யாகி யாடுறு செவ்வி தன்னி
னிறைதரு சரவ ணத்து நெடுந்தடம் புனலிற் பாய்ந்து
முறைமுறை புக்கு மூழ்கி முகேரென வலைக்க லுற்றார்.

இ—ள்: மறு அறு பராசரன் தன் மதலைகள் ஆகும் இன்னோர் அறுவரும்—குற்றமற்ற பராசரமுனிவரது புதல்வராகிய இந்த ஆறுமுனிவர்களும், சிறார் ஆகி ஆடுறு செவ்விதன்னில்— பாலர்களாய் விளையாடுங்காலத்தில், நிறைதரு சரவணத்து நெடும் தடம் புனலில் பாய்ந்து—நிறைந்த நெடிய பெரியசரவணவாவியிற்குதித்து, முறை முறை புக்கு மூழ்கி—நிரைநிரையாகப்போயமிழ்ந்தி, முகேர் என அலைக்கலுற்றார்—முகேரென்னும் ஒலியுண்டாகக்கலக்கினார்கள் எ—று. (௯௦)

உலைத்தலை யுணர்ச்சி கொள்ள வுள்ளுயிர் திரியு மாபோ
னிலைத்தலை யின்றி யார்க்கு நீந்தல்செய் குண்டு நீத்த
மலைத்தலை யடையு மெல்லை யாயிடை வதிந்த மீன்க
டலைத்தலை யிரிய வின்னோர் தன்மையங் கதனைக் கண்டார்.

இ—ள்: உணர்ச்சி உலைத்தலை கொள்ள—அறிவு அலைதலைப்பொருந்த, உள் உயிர் திரியுமா போல்—உள்ளிருக்கின்ற உயிரானது (நிலையின்றித்) திரியுந்தன்மைபோல, யார்க்கும் நீந்தல்செய் குண்டு நீத்தம்—எல்லாராலும்நீந்தப்படுகின்ற ஆழமாகிய அச்சரவணவாவி, நிலைத்தலை இன்றி அலைத்தலை அடையும் எல்லை-நிலைப்படுதலின்றி அலைதலைப்பொருந்தும்பொழுது, ஆயிடை வதிந்த மீன்கள் தலைத்தலை இரிய—அத்தடாகத்திலிருந்த மீன்கள் இடந்தோறுந்திரிய, இன்னோர் அங்கது தன்மையை கண்டார்—இம்முனிவர்கள் அத்தன்மையைப்பார்த்தார்கள் எ—று.

உலைதல் அலைதல் என்பன விரித்தல்விகாரம்பெற்றன. யார்க்கும் என்றதில் நான்கனுருபு மூன்றனுருபாகத்திரிக்கப்பட்டது. திரியுமாபோல் இரிய எனஇயையும். அறிவுநிலைகுலைந்துழி உயிர் நிலைகுலைவதுபோல, சரவணவாவிஅலைந்துழி அங்குள்ளமீன்களும் அலைந்தன என்பதாம். (௯௧)

அங்கது தெரிந்து நின்றோ ராண்டுறு மீன்கள் பற்றித்
துங்கம துடைய கோட்டின் சூழலுய்த் துலவு மெல்லைச்
செங்கதி ருச்சி வேலைச் செய்கட னிரப்ப வுன்னிப்
பங்கமி னோன்மை பூண்ட பராசர னங்கண் வந்தான்.

இ—ள்: அங்கது தெரிந்து நின்றோர்—அதனைப்பார்த்துநின்ற அறுவரும், ஆண்டு உறும் மீன்கள் பற்றி—அப்பொய்கையிலுள்ள மீன்களைப்பிடித்து, துங்கமது உடைய கோட்டின் சூழல் உய்த்து உலவும் எல்லை—உயர்ச்சியினையுடைய கரையின்சூழ்விலிட்டு விளையாடும்பொழுது, பங்கம் இல் நோன்மை பூண்ட பராசரன்— குற்றமற்றதவத்தை மேற்கொண்ட பராசரமுனிவர், செம் கதிர் உச்சி வேலை செய் கடன் நிரப்ப உன்னி—சூரியன் உச்சியிற்புகும் மத்தியானத்திற்செய்யவேண்டிய அநுட்டானத்தை முடிக்கநினைத்து, அங்கண் வந்தான்—அவ்விடத்துவந்தார் எ—று.

உச்சிவேலைச்செய்கடன் = மாத்தியானிகம். உலவுமெல்லை வந்தான் எனஇயையும். (௯௨)

வள்ளுறை கொண்ட தெய்வ வான்சர வணத்து வந்தோன்
பிள்ளைக ளாகு மின்னோர் பிடித்தபுன் றொழிலை நோக்கித்
தள்ளருஞ் சினமேல் கொண்டு தனயர்கா ணிவி ரீண்டே
துள்ளுறு மீன மாகிச் சுலவுதி ரென்று சொற்றான்.

இ—ள்: வள் உறை கொண்ட தெய்வ வான் சரவணத்து வந்தோன்—வளப்பமான நீரினையுடைய தெய்வத்தன்மையமைந்த பெரியசரவணதடாகத்தில்வந்த பராசரமுனிவர், பிள்ளைகள் ஆகும் இன்னோர் பிடித்த புன் தொழிலை நோக்கி— புதல்வர்களாகிய இவர்களறவுஞ்செய்கின்ற எளியசெயலைப்பார்த்து, தள்ளரும் சினம் மேல்கொண்டு— த

டுத்தற்கரிய கோபத்தைமிசப்பெற்று, தனயர்காள்—புதல்விர்காள்!, நீவிர்—நீங்கள், ஈண்டே-இச்சரவணதடாகத்திற்றனே, துள்ளுறும் மீனம் ஆகி சுலவுதிர் என்று சொற்றான்-துள்ளுகின்ற மீன்களாகித்திரிகுதிரென்று சபித்தார் எ—று.

அதிகரென்பார் 'வள்ளுறை' என்றார். (௩௩)

அவ்வுரை யிறுக்கு முன்ன ரறுவரு மேனு ளாற்றும்
வெவ்வினை யூழின் பாலான் மீனுரு வாகி யஞ்சி
யெவ்வமி தகலு கின்ற தெப்பக லுரைத்தி யென்னச்
செவ்விதி னுணர்ந்து மேலைத் திருமுனி புகல லுற்றான்.

இ—ள்: அவ் உரை இறுக்கும் முன்னர்—அந்தச்சாபமொழிமுடியுமுன், அறுவரும்—ஆறுபுதல்வர்களும், மேல் நாள் ஆற்றும் வெவ் வினை ஊழின் பாலால்—முற்பிறப்பிற்செய்த கொடிய தீவினையாலுண்டாகிய விதியினுல், மீன் உருவு ஆகி—மீன்வடிவு கொண்டு, அஞ்சி—பயந்து, எவ்வம் இது அகலுகின்றது எப்பகல் உரைத்தி என்ன—இந்தக்குற்றந்தீர்வது என்ஞான்றென்பதைச்சொல்லுதிரென்றுவினுவ, மேலை திரு முனி-பழைய சிறந்தபராசரமுனிவர், செவ்விதின் உணர்ந்து—நன்ருக ஆலோசித்து, புகலல் உற்றான்—சொல்லத்தொடங்கினுர் எ—று.

முனிவர்சாபத்தோடு ஊழ்வினையும் இணங்கிநின்றதென்பார் 'வெவ்வினையூழின்பாலால்' எனவும், ஞானவுணர்ச்சியினுல் அதுதீருங்காலவரையறையைத்தெரிந்தென்பார் 'செவ்விதினுணர்ந்து' எனவும், அதனையுணரவல்லாரென்பார் 'மேலைத்திருமுனி' எனவும் கூறினுர். (௩௪)

இத்தடந் தன்னின் மேனு ளிராறுதோ ளுடைய வண்ண
லத்தன தருளால் வைக வனையனை யெடுக்கு மம்மை
மெய்த்தன முகுக்குந் தீம்பால் வெள்ளமா மதனை நீவிர்
துய்த்திடு மெல்லை தன்னிற் றொல்லுரு வாதி ரென்றான்.

இ—ள்: மேல் நாள்—பிற்காலத்தில், அத்தனது அருளால்—சிவபிரானது கிருபையினுல், இராறு தோள் உடைய அண்ணல்—பன்னிரண்டுதிருப்புயங்களையுடைய முருகக்கடவுள், இ தடம் தன்னில் வைக—இந்தத்தடாகத்திலிருக்க, அனையனை எடுக்கும் அம்மை மெய் தனம் உகுக்கும் தீம் பால் வெள்ளம் ஆம்—அம்முருகக்கடவுளை எடுக்கும் உமாதேவியாரது மெய்ம்மையாகியதனங்கள்பொழிகின்ற இனியபால் வெள்ளமாய்ப்பாயும், அதனை நீவிர் துய்த்திடும் எல்லை தன்னில்-அப்பாலை நீவிர்பருகியபொழுது, தொல் உரு ஆதிர் என்றான்—பழையவடிவமாவீரென்று கூறினுர் எ—று. (௩௫)

என்றிவை முனிவன் கூறி யிரும்பகற் கடனை யாற்றிச்
சென்றன னதற்பின் மீனின் றிருவுரு வமைந்த வின்னோ
ரன்றுதொட் டளப்பில் கால மலமரு முணர்ச்சி யெய்தி
மன்றலஞ் சரவ ணத்து மாண்பெருந் தடாகத் துற்றார்.

இ—ள்: முனிவன்—பராசரமுனிவர், என்று இவை கூறி— என்று இந்தவாசகங்களைச்சொல்லி, இரும் பகல் கடனை ஆற்றி சென்றனன்— மாத்தியானிகத்தை முடித்துப்போயினுர், அதற்பின்—அதன்பின்பு, மீனின் திரு உரு அமைந்த இன்னோர்-மீனினது சிறந்தவடிவத்தையெய்திய இவர்கள், அன்றுதொட்டு—அன்றுமுதல், அளப்பு இல் காலம்—எண்ணிறந்தகாலமாக, அலமரும் உணர்ச்சி எய்தி—புத்திகலங்கி, மன்றலம் சரவணத்து மாண் பெரும் தடாகத்து உற்றார்—மலர்மணநிறைந்த சரவணமென்னும்பெயரையுடைய மாட்சிமைபெற்ற பெரியதடாகத்திலிருந்தார்கள் எ—று.

இரும்பகல் = மத்தியானம். அலமருமுணர்ச்சியெய்தி = உணர்ச்சியலமருதலெய்தி. (௬௬)

23 ஐயநீ யனைய பொய்கை யமர்தலு மவ்வை கண்டாங்
கொய்யென வெடுப்பக் கொங்கை யுகளநின் றிழிந்த தீம்பா
றுய்யதோர் தீர்த்த மாகித் துறுமலு மதனைத் துய்த்து
மையனீங் குற்றுத் தொல்லை வரலிய வடிவம் பெற்றார்.

இ—ள்: ஐய—கடவுளே!, நீ அனைய பொய்கை அமர்தலும்—தேவரீர் அந்தத் தடாகத்தில் வீற்றிருக்க, அவ்வை கண்டு—உமையம்மையார் பார்த்து, ஒய்யென எடுப்ப—விரைவிலெடுக்க, கொங்கை உகளம் நின்று இழிந்த தீம் பால்— இரண்டுதனங்களினின் றுஞ்சிந்திய இனியபாலானது, துய்யது ஓர் தீர்த்தம் ஆகி துறுமலும்—சுத்தமாகிய வெள்ளமாகிப் பாய்ந்துவருதலும், அதனை துய்த்து—அப்பாலைப்பருகி, மையல் நீங்குற்று— அஞ்ஞானம்நீங்கி, தொல்லை வாலிய வடிவம் பெற்றார்— பழைய தூய்மையாகிய உருவத்தைப் பெற்றுக்கொண்டார்கள் எ—று, (௬௭)

233 தொல்லுரு வடைந்த வின்னோர் தூமதி வேணி யண்ண
னல்லரு ளதனால் வந்து நவையகல் பரங்குன் றத்தி
னெல்லையில் விரதம் பூண்டாங் கிருந்தன ரெந்தை யீண்டுச்
செல்லுவ துணர்ந்து போந்தா ரென்றனன் றேவர் செம்மல்.

இ—ள்: தொல் உரு அடைந்த இன்னோர்— பழையவடிவத்தைப்பெற்ற இம்முனிவர்கள், தூ மதி வேணி அண்ணல் நல் அருள் அதனால்—தூய்மையாகிய சந்திரனையணிந்த சடைமுடியினையுடைய சிவபிரானது நல்லகருணையினால், நவை அகல் பரங்குன்றத்தின் வந்து—குற்றமற்ற திருப்பரங்குன்றத்தில்வந்து, ஆங்கு—அம்மலையில், எல்லை இல் விரதம் பூண்டு—அளவிறந்த விரதங்களையனுட்டித்துக்கொண்டு, இருந்தனர்— இருந்து, எந்தை ஈண்டு செல்லுவது உணர்ந்து போந்தார்—எங்கள்கடவுளாகிய தேவரீர் இவ்விடத்தெழுந்தருளுவதையறிந்து வந்தார்கள், என்றனன்—என்று விண்ணப்பஞ்செய்தான், தேவர் செம்மல்—தேவேந்திரன் எ—று. (௬௮)

234 தம்மக வுரைக்குங் கூற்றந் தாதையர் வினவு மாபோ
லம்மக பதிசொற் கேளா வருள்செய்து பராச ரன்றன்
செம்மல்க டம்மை நோக்கிச் செயிர றுகுணத்து நீவி
ரெம்மொடு செல்வி ரென்றான் யாவையு முணர்ந்த பெம்மான்.

இ—ள்: தம் மகவு உரைக்கும் கூற்றம் தாதையர் வினவுமா போல்—தங்கள் புதல்வர்கூறியவார்த்தையைத் தாய்தந்தையர்கள்கேட்பதுபோல, யாவையும் உணர்ந்த பெம்மான்-எல்லாவற்றையும் (முற்றறிவால்) அறிந்தமுருகக்கடவுள், அ மகபதி சொல் கேளா-அந்த இந்திரன்சொல்லிய வார்த்தையைக்கேட்டு, அருள் செய்து—கிருபைபுரிந்து, பராசரன் தன் செம்மல்கள் தம்மை நோக்கி—பராசரமுனிவரது புதல்வரைப்பார்த்து, செயிர் அறு குணத்து நீவிர் எம்மொடு செல்வீர் என்றான்—குற்றமற்றகுணத்தினையுடைய நீவிர் எம்முடன்வரக்கடவீரென்று கட்டளையிட்டார் எ—று.

மைந்தர்கூறுங்குதலைமொழிவழுவுடைத்தாயினும் தாய்தந்தையர் உவந்துகேட்டுப் பரிவுகூர்வதுபோல, இந்திரன்கூறியவாசகந் தவறுடைத்தாயினும் மனமகிழ்ந்துகேட்டுக் கருணைகூர்ந்தனராதலின் 'தம்மகவுரைக்குங்கூற்றந்தாதையர்வினவுமாபோ-லம்மகபதிசொற்கேளா' எனவும், தமக்காட்படுதற்கேற்ற மனத்தூய்மையுடையரென்பதையுள்ளிட்டுக்கூறினராதலின் 'செயிரறுகுணத்துநீவிரெம்மொடுசெல்வீரென்றான்' எனவும் கூ-

றினர். யாவையுமுணர்ந்தபெம்மான் என்றதற்கு, முன்னர் இருபத்தொன்பதாஞ்செய்யுளிற்கூறியதுபோலகலங்கூறுக. (கூ௯)

பராசரன் மைந்த ரன்ன பான்மையை வினவிச் செவ்வேற்
கராசர ணடைந்தே மென்று கட்டுரைத் திறைஞ்சிச் செல்லச்
சராசரம் யாவுந் தந்த சண்முகன் றழல்கட் கெல்லா
மிராசர்தந் தன்மை யெய்து மிருஞ்சுரங் கடந்து போனான்.

இ—ள்: பராசரன் மைந்தர் அன்ன பான்மையை வினவி—பராசரரது குமாரர் அறுவரும் அவ்வாசகத்தைக்கேட்டு, செவ் வேல் கரா சரண் அடைந்தேம் என்று கட்டுரைத்து—சிவந்த வேற்படையையேந்திய கையையுடையவரே! தேவரீரிடத்துச் சரண்புகுந்தோமென்று உறுதிமொழிகூறி, இறைஞ்சி செல்ல— வணங்கி உடன்வர, சராசரம் யாவும் தந்த சண்முகன்—இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய எல்லாவற்றையும்படைத்தருளிய முருகக்கடவுள், தழல்கட்கு எல்லாம் இராசர் தம் தன்மை எய்தும் இரும் சுரம் கடந்து போனான்- அக்கினிகளெல்லாவற்றிற்கும் முதன்மையைப்பெற்ற பெரியபாலைவனத்தைக்கடந்து அப்பாற்சென்றார் எ—று.

இராசர்தந்தன்மை அரசர்களது இயல்பு=முதன்மை. (சo)

சுரம்புகுபடலமுற்றிற்று.

ஆக விருத்தம் களகூ௫.

---

# திருச்செந்திப்படலம்.

திருச்செந்தியம்பதியிற்சென்றுவீற்றிருந்தசரித்திரத்தைக்கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று.

## இப்படலப்பொழிப்பு.

முருகக்கடவுள் திருச்செந்திப்பதியையடைந்து, தேவத்தச்சனைக்கொண்டு கோயிலமைப்பித்து, அக்கோயிலிற் பரிசனருடன் எழுந்தருளியிருந்து, அசுரர்வரலாற்றனைத்தையுங்கூறுமாறு இந்திரனைவினவ, அவ்விந்திரன் வியாழபகவானைத்தூண்டினன். உடனே வியாழபகவான் வணங்கிக் கூறத்தொடங்கினார் என்பதாம்.

சுரமது கடந்து நீங்கிச் சோதிவே லுடைய வள்ளல்
விரிபுனற் சடிலத் தண்ணல் மேவுசெங் குன்றூர் நோக்கிப்
பருமணி வயிர முத்தம் பலவளம் பிறவு மாழித்
திரையெறி யலைவா யாகுஞ் செந்திமா நகரம் புக்கான்.

இ—ள்: சோதி வேல் உடைய அண்ணல்— ஒளிபொருந்திய வேற்படையையேந்திய முருகக்கடவுள், சுரமது கடந்து நீங்கி—பாலைவனத்தைக்கடந்துசென்று, விரிபுனல் சடிலத்து அண்ணல் மேவு செங்குன்றூர் நோக்கி—பரந்த கங்கைநதியையணிந்த சடைமுடியினையுடைய சிவபிரான்வீற்றிருக்கின்ற திருச்செங்குன்றூரைத்தரிசித்து, பருமணி வயிரம் முத்தம் பல் வளம் பிறவும் ஆழி திரை செறி அலைவாய் ஆகும் செந்தி மாநகரம் புக்கான்-பெருத்த இரத்தினங்களையும் வயிரங்களையும் முத்துக்களையும் ஏனைய பல வளப்பங்களையும் கடற்றிரைகள்வீசுகின்ற திருச்சீரலைவாயாகிய திருச்செந்தூரையடைந்தார் எ—று.

சயந்தியென்னும்வடமொழி செந்தியெனவிகாரமாயிற்று. (க)

அறுமுக னங்க ணேகி யகிலகம் மியனை நோக்கி
யிறையிலோர் சினக ரத்தை யியற்றுதி யீண்டை யென்னத்
திறனுணர் புனைவர் செம்மல் சிந்தையி னாடித் தேவ
ருறைதிரு நகரம் வெஃக வொருதிருக் கோயில் செய்தான்.

இ—ள்: அறுமுகன் அங்கண் ஏகி—முருகக்கடவுள் அத்தலத்திற்போய், அகிலகம்மியனை நோக்கி—தேவத்தச்சனைப்பார்த்து, ஈண்டு—இவ்விடத்து, இறையில் ஓர் சினகரத்தை இயற்றுதி என்ன—கணப்பொழுதில் ஒருகோயிலை யமைக்குதியென்றுகட்டளையிட, திறன் உணர் புனைவர் செம்மல்— சிற்பலக்ஷணங்களையுணர்ந்த தேவத்தச்சன், சிந்தையில் நாடி—மனத்தில் ஆராய்ந்து, தேவர் உறை திரு நகரம் வெஃக— தேவர்கள் வசிக்கின்ற சுவர்க்கலோகமும் (யானித்துணைப்பேரெழில்பெற்றிலேனேயென்று)ஆசைப்படும்படி, ஒரு திரு கோயில் செய்தான்— ஒரு சிறந்தகோயிலையமைத்தான் எ—று.

ஐ-சாரியை. அகிலகம்மியன்-எல்லாஞ்செய்யவல்லதச்சன். புனைவர் செம்மல்-தச்சருட்டலைவன். உயர்வுசிறப்பும்மைதொக்கது. (உ)

பொன்னுறு மிரத நீங்கிப் புறனெலாந் தானை நண்ண
வந்நக ரதனு ளேகி யரும்பெருந் துணைவர் பூதர்
மன்னவ ரயன்மா லாதி வானவர் யாரும் போற்ற
மின்னுபொற் பீடத் தையன் வீற்றிருந் தருளினனே.

இ—ள்: ஐயன்—முருகக்கடவுள், பொன் உறும் இரதம் நீங்கி—பொன்மயமாகிய தேரினின்றுமிறங்கி, புறன் எலாம் தானை நண்ண அ நகர் அதனுள் ஏகி— -புறவிடமுழுதுஞ்சேனைகள்நிற்க அந்தநகரத்தினுட்போய், அரும் பெரும் துணைவர் பூதர்மன்னவர் அயன் மால் ஆதி வானவர் யாரும் போற்ற—அருமையாகிய பெருமைவாய்ந்த தம்பிமாரும் பூதத்தலைவர்களும் பிரமாதிருமால்முதலியதேவருமாகிய அனைவருந்துதிக்க, மின்னு பொன் பீடத்து வீற்றிருந்தருளினன்—பிரகாசிக்கின்ற பொன்னாலாகிய சிங்காசனத்தில் எழுந்தருளியிருந்தார் எ—று.

பூதசேனையைப்புறத்தேநிறுத்தி உட்சென்றனராதலின் 'புறனெலாந்தானைநண்ண-ஏகி' என்றார். (ங)

### வேறு.

பானிமிர் மென்குரற் பாற்படு நல்யாழ்
கான மிசைத்தனர் கந்தரு வத்தோ
ரானபல் சட்டுவ மங்கைதொ றேந்தி
வானமிர் தைச்செவி வாக்குறு மாபோல்.

இ—ள்: ஆன பல் சட்டுவம் அங்கைதொறு ஏந்தி வான் அமிர்தை செவி வாக்குறுமா போல்—சிறந்த பல அகப்பைகளை அகங்கையிற்றாங்கித் தேவாமிர்தத்தைக் காதின்வழியே ஊற்றினாற்போல, கந்தருவத்தோர்—கந்தருவர்கள், பால் நிமிர் மென் குரல் பால் படு நல் யாழ் கானம் இசைத்தனர்—வெண்ணிறம்விளங்குகின்ற மெல்லியநரம்புகளினிடத்துத்தோன்றுகின்ற நல்ல யாழிசையையும் மிடற்றிசையையும் பாடினார்கள் எ—று.

செவிக்கு மிகவும் இனிமையைத்தருதலின் 'வானமிர்தைச்செவிவாக்குறுமாபோல்' என்றார். (ச)

சுருதியெ லாமுணர் தூயவன் வானோர்
புரவலன் மாமுனி புங்கவர் யாரு

மருமலர் மாரி வழுத்தினர் வீசி
யிருபுடை தன்னினு மெய்தின ரீண்டி.

இ—ள்: சுருதி எலாம் உணர் தூயவன் - வேதங்களெல்லாவற்றையுமறிந்த பிரமதேவரும், வானோர் புரவலன்—தேவேந்திரனும், மா முனிபுங்கவர் யாரும்—சிறந்த முனிசிரேட்டர்களுமாகிய அனைவரும், இருபுடை தன்னினும் ஈண்டி எய்தினர்—இருபக்கங்களிலும் நெருங்கிப்போய்நின்று, மரு மலர் மாரி வீசி வழுத்தினர்—நறுமணங்கமழும் பூமழையைச்சொரிந்து துதித்தார்கள் எ—று. (௫)

241 வாலிய தூயொளி வானதி யாவும்
பாலகன் மெய்யணி பார்த்தன ராடி
யேலுறு பாங்கரி னீண்டிய வாபோற்
காலினர் சாமரை கைக்கொ டசைத்தார்.

இ—ள்: வாலிய தூய் ஒளி வானதி யாவும்—வெள்ளிய சுத்தமாகிய சோதியினையுடைய ஆகாயகங்கைகளெல்லாம், பாலகன் மெய் அணி பார்த்தனர்— முருகக்கடவுளது திருமேனியின் அழகைப்பார்த்து, ஆடி—ஆனந்தக்கூத்தாடி, ஏலுறு பாங்கரின் ஈண்டியவா போல்— தகுதியாகிய இருபக்கங்களினும் நெருங்கிநின்றாற்போல, காலினர் சாமரை கைக்கொடு அசைத்தார்— வாயுக்கள் சாமரங்களைக்கையிலெடுத்து வீசினார்கள் எ—று.

ஈண்டியவாறு என்பதில் ஈற்றுயிர்மெய்தொக்கது. சாமரமிரட்டுவது கங்கையின் அலைவீசுதல்போன்றிருத்தலின் இவ்வாறுவமித்தார். வடநூல்வழக்குப்போல நதியைப்பெண்பாற்படுத்துதலின், 'பார்த்தனர்' என்றார். (௬)

242 ஒண்ணிழன் மாமதி யோரிரு வடிவா
யண்ணன் முகத்தெழி லார்ந்திட நண்ணி
விண்ணிடை நின்றென வெங்கனல் வருணன்
றண்ணிழல் வெண்குடை தாங்கினர் நின்றார்.

இ—ள்: ஒள் நிழல் மா மதி—ஒள்ளிய சாயையினையுடைய பெரிய சந்திரன், ஓரிரு வடிவு ஆய்—இரண்டுருவங்கொண்டு, அண்ணல் முகத்து எழில் ஆர்ந்திட— முருகக்கடவுளது முகத்தழகைப்பெறும்பொருட்டு, விண் இடை நண்ணி நின்று என— மேலிடத்திற்போய் நின்றாற்போல, வெம் கனல் வருணன்—கொடிய அக்கினியும் வருணனும், தண் நிழல் வெண் குடை தாங்கினர் நின்றார்—குளிர்ந்த நிழலைச்செய்கின்ற வெண்குடைகளைப்பிடித்து நின்றார்கள் எ—று.

நிலவை நிழலெனவழங்குதலின் 'ஒண்ணிழல்' என்றார். விண்-ஈண்டு, திருக்கோயின்மண்டபத்தின்மேலிடம். (௭)

243 கட்டழல் கான்றிடு காமரு நாக
மெட்டு மலாதன யாவையு மீண்டி
யுட்டெளி வாற்பணி வுற்றென வால
வட்ட மசைத்தனர் வானவர் பல்லோர்.

இ—ள்: கடு அழல் கான்றிடு காமரு நாகம் எட்டும் அலாதன யாவையும் ஈண்டி—போழலைச்சொரிகின்ற அழகிய எட்டுநாகங்களுமல்லாத மற்றைய நாகங்களெல்லாம் நெருங்கி, உள் தெளிவால் பணிவுற்று என—மனத்தெளிவோடும் வணங்கிநின்றாற்போல, வானவர் பல்லோர்—பலதேவர்கள், ஆல வட்டம் அசைத்தனர்— ஆலவட்டத்தையசைத்தார்கள் எ—று.

கண் தழல் கான்றிடு எனச்சொல்லுக்குத், கண்களினின்றும் அக்கினியைச்சிந்துகின்ற எனவுரைப்பினுமாம். எட்டுநாகங்களும் எண்டிசைகளினுநிற்பனவாதலின், அவற்றைத்தவிர்த்துக்கூறினர். ஆலவட்டமசைவது பாம்புபடம்விரித்துநிற்பதுபோலுமாதலின் இவ்வாறுவமித்தார். (அ)

வானுயர் தோள்விறல் வாகெனு மண்ண
ஞுடை வாள்கொடு சார்ந்தய னிற்ப
வேனைய தம்பிய ரெண்ம ரிலக்க
ரானவர் போற்றி யகன்கடை நின்ருர்.

இ—ள்: வான் உயர் தோள் விறல்வாகு எனும் அண்ணல் உடைவாள் கொடு சார்ந்து அயல் நிற்ப—மிகவுயர்ந்த புயங்களையுடைய வீரவாகுதேவர் உடைவாளையேந்திவந்து பக்கத்தினிற்க, ஏனைய தம்பியர்—மற்றைய தம்பிமார்களாகிய, எண்மர் இலக்கர் ஆனவர்—எட்டுவீரர்களும் இலக்கம்வீரர்களும், போற்றி அகன் கடை நின்றார்— துதித்து அகன்ற வாயிலில் நின்றார்கள் எ—று. (கூ)

வேறு.

பொருந்தி யின்னவர் புறத்துற வங்க
ணிருந்த ஞானமுத லெல்லையில் காலம்
வருந்து கின்றமக வான்முக நோக்கித்
தெரிந்தி டாதவரி னின்னன செப்பும்.

இ—ள்: இன்னவர் பொருந்தி புறத்து உற— முற்கூறப்பட்டவர்களெல்லாம் பொருந்திப் புறத்திற்சூழ, அங்கண் இருந்த ஞானமுதல்—அவ்விடத்திருந்த ஞானமுதல்வராகிய முருகக்கடவுள், எல்லை இல் காலம் வருந்துகின்ற மகவான் முகம் நோக்கி- அளவிறந்தகாலமாகத் துயருழக்கின்ற இந்திரனது முகத்தைப்பார்த்து, தெரிந்திடாதவரின் இன்னன செப்பும்—ஒன்றுமறியாதவர்களைப்போல இவ்வாசகங்களைக்கூறுவார் எ—று.

செய்யவேண்டிய பணிமுறைகளுடனமைந்தென்பார் 'பொருந்தி' எனவும், தாம் எல்லாமறிந்திருந்தும், பகைவர்வரலாறுகளை நன்குசாவியறிந்தே போர்செய்யவேண்டுமென்னும் நீதிநூனியதிக்கேற்ப வினவினரென்பார் 'தெரிந்திடாதவரினின்னனசெப்பும்' எனவும் கூறினர். (கം)

துறந்து நீதியமர் சூர்முத லானோர்
பிறந்த வாறுமவர் பேணிய நோன்பு
மிறந்த செய்யவர மெய்திய வாறுஞ்
சிறந்து பின்னரசு செய்திடு மாறும்.

இ—ள்: நீதி துறந்து அமர் சூர் முதலானோர் பிறந்தவாறும்— நீதிநெறியினின்று நீங்கியிருக்கின்ற சூரபன்மன்முதலியவர்கள் பிறந்ததன்மையும், அவர் பேணிய நோன்பும்—அவர்கள்தவஞ்செய்தமையும், இறந்த செய்ய வரம் எய்தியவாறும்—மிகுந்த சிறந்த வரங்களைப்பெற்றதன்மையும், பின் சிறந்து அரசு செய்திடுமாறும்—அதன்மேற்சிறப்புற்று அரசியற்றிய தன்மையும் எ—று.

அவர்பேணியநோன்பும் = அவர் நோன்புபேணியதும். இச்செய்யுளும் பிற்செய்யுளுங்குளகம். (கக)

மற்ற வெய்யவர்த மாயமு முற்கொள்
வெற்றியும் வலியு மேன்மையு நும்பா
லிற்றை நாள்வரை யியற்றிய துன்பு
முற்று மொன்றற மொழிந்திடு கென்றான்.

இ—ள்: அவ் வெய்யவர் தம் மாயமும்—அந்தக்கொடியவர்களது மாயத்திறமும், முன் கொள் வெற்றியும்— முன் பெற்ற வெற்றிகளும், வலியும்-வலிமையும், மேன்மையும்—மேம்பாடும், நும்பால் இற்றை நாள் வரை இயற்றிய துன்பும்—உங்களுக்கு இந்நாள்வரையுஞ்செய்த துன்பமும் ஆகிய, முற்றும்—எல்லாவற்றையும், ஒன்று அற மொழிந்திடுக என்றான்—ஒன்றுந்தவறாமற் கூறுகவென்று கூறியருளினர் எ—று.

நும்பால்-உருபுமயக்கம். (கஉ)

248 கோக்கு மாரனிவை கூற விசைந்தே
மீக்கொள் பொன்னுலக வேந்தய னின்ற
வாக்கின் வல்லகுர வன்றனை யன்பா
னோக்கி நீயிவை நுவன்றருள் கென்றான்.

இ—ள்: கோ குமாரன் இவை கூற—முதல்வராகிய முருகக்கடவுள் இவ்வாசகங்களைக்கூறியருள, மீ கொள் பொன்னுலக வேந்து இசைந்து—மேலுள்ளசுவர்க்கலோகத்திற் கதிபனாகிய இந்திரன் சம்மதித்து, அயல் நின்ற வாக்கின் வல்ல குரவன் தனை அன்பால் நோக்கி-தன்னருகில்நின்ற பேச்சிற்சாதுரியமுடைய வியாழபகவானை அன்பினுடன் பார்த்து, நீ இவை நுவன்றருள்க என்றான்— நீர் இவ்வினாக்களுக்கு விடைகூறியருளுக வென்று கூறினான் எ—று.

முருகக்கடவுள்முன்னிலையில் அசுரர்வரலாற்றையெல்லாம் முறைப்படிகூறுஞ்சதுரப்பாடு இந்திரனிடத்தில்லையென்பதும் வியாழனிடத்துண்டென்பதுந்தோன்ற 'வாக்கின்வல்லகுரவன்' என்றார். (கா)

249 வச்சி ரங்கொள்கரன் மற்றது செப்ப
வச்செ னக்குரவ னன்ன திசைந்தே
செச்சைமொய்ம் புடைய சேயிரு பொற்றா
ளுச்சி கொண்டுதொழு தின்ன துரைப்பான்.

இ—ள்: வச்சிரம் கொள் கரன் அது செப்ப—வச்சிராயுதத்தையேந்திய கையையுடைய இந்திரன் அவ்வாசகத்தைக்கூறியவுடன், குரவன்-வியாழபகவான், அச்சென அன்னது இசைந்து— விரைவில் அதற்குடன்பட்டு, செச்சை மொய்ம்பு உடைய சேய் இரு பொன் தாள் உச்சி கொண்டு— வெட்சிமாலையையணிந்த புயங்களையுடைய முருகக்கடவுளது பொன்மயமாகிய இரண்டுதிருவடிகளையுஞ்சிரமேற்கொண்டு [வணங்கி], தொழுது—கைகூப்பி, இன்னது உரைப்பான்— இவ்வாசகத்தைக்கூறுவான் எ—று.

250 அறிதி யெப்பொருளு மாவிக டோறுஞ்
செறிதி யெங்கடுயர் சிந்துதன் முன்னிக்
குறிய சேயுருவு கொண்டனை யார்க்கு
மிறைவ நின்செயலை யாருணர் கிற்பார்.

இ—ள்: யார்க்கும் இறைவ— அனைவர்க்கு முதல்வரே!, எப்பொருளும் அறிதி—எல்லாப்பொருள்களையும் அறிவீர், ஆவிகள் தோறும் செறிதி-எல்லாவுயிர்களிலும் வியாபித்துநிற்கின்றீர், எங்கள் துயர் சிந்துதல் முன்னி குறிய சேய் உருவு கொண்டனை—சிறியேங்களது துன்பத்தைத்தீர்த்தருளும்பொருட்டுச்சிறிய குழந்தையின் வடிவத்தைக்கொண்டீர், நின் செயலை யார் உணர்கிற்பார்—தேவரீரது திருவருட்செயலை யார் அறியவல்லார்? எ—று.

சர்வஞ்ஞத்துவத்தையும் சர்வவியாபகத்தையுமுடைய இறைவராகிய தேவரீர் அடியார்க்கருளுமாறு பாலவேடங்கொண்டீராதலின், தேவரீரது திருவருட்செயலை ஒருவரும் உணரமாட்டாரென்பதாம். (கரு)

எல்லையில் புவனம் யாவையும் யாண்டு
மொல்லு மூவரு முயிர்த்தொகை யாவுந்
தொல்லை மேனிகொடு தோன்றினை யானீ
வல்ல மாயவியன் மற்றெவர் தேர்வார்.

இ—ள்: எல்லை இல் புவனம் யாவையும்—அளவிறந்த எல்லாப்புவனங்களும், யாண்டும் ஒல்லும் மூவரும்—எங்குங்கலந்துநிற்கின்ற மும்மூர்த்திகளும், உயிர்த்தொகை யாவும்—உயிர்க்கூட்டங்களனைத்தும், தொல்லை மேனி கொடு— பழையதிருமேனியாகக் கொண்டு, தோன்றினை—அவதரித்தீர் (ஆதலின்), நீ வல்ல மாய இயல் மற்று எவர் தேர்வார்-தேவரீர்செய்யவல்லமாயங்களின்திறத்தை வேறியாரறிவார்? (ஒருவருமறியார்) எ-று.

விச்சுவரூபியாயும் பிரமாணாதீதராயும் இருக்கின்றீர் என்பதாம். (கசு)

வெய்யர் தன்மையை வினவிய தன்மை
யைய வன்னதை யறிந்திட வன்றே
கைய ரேந்துயர் களைந்துள மீதிற்
செய்ய வின்புதவு சீரரு ளாமால்.

இ—ள்: ஐய—கடவுளே?, வெய்யர் தன்மையை வினவிய தன்மை— (அத்த கைய தேவரீர்) கொடிய அசுரர்களது வரலாற்றைச்சொல்லுமாறு கேட்டதன்மை, அன்னதை அறிந்திட அன்று- அவற்றைஅறிந்துகொள்ளுதற்கன்று (பின்னென்னையெனில்), கையரேம் துயர் களைந்து—கீழோராகிய எங்களது துன்பத்தையொழித்து, உளமீதில்— எங்கள்மனத்தில், செய்ய இன்பு உதவு சீர் அருள் ஆம்--செம்மையாகிய இன்பத்தைத்தரு கின்ற சிறந்த கருணையேயாம் எ—று.

முன்னிருசெய்யுட்களாலுங்கூறப்பட்ட இயல்பினையுடைய தேவரீர் சிறியேங் களது செயலைவினவியது அறிந்துகொள்ளுதற்கன்று; எங்களுக்குச்சூரனுதியரால் நேர்ந் ததுன்பத்தைநீக்கி இன்பத்தைத்தருதற்கேயாமென்பதாம். (கஎ)

ஆகை யாலவுணர் தன்மைக ளெல்லாம்
போகு மெல்லைபுகல் கின்றன னென்னு
வாகைசேர் குமர வள்ளலை நோக்கி
யோகையோ டரச னோதிடு கின்றான்.

இ—ள்: ஆகையால்—ஆதலினால், அவுணர் தன்மைகள் எல்லாம்—அசுரர்களது வரலாறனைத்தையும், போகும் எல்லை புகல்கின்றனன் என்னு— தெரிந்தவரையிற்கூறுகின்றேனென்று, வாகை சேர் குமரவள்ளலை நோக்கி—வெற்றிபொருந்திய குமாரக்கடவுளைப்பார்த்து, ஓகையோடு—மகிழ்ச்சியுடன், அரசன் ஓதிடுகின்றான்— வியாழபகவான் சொல்வாராயினர் எ—று. (கஅ)

திருச்செந்திப்படலமுற்றிற்று.

ஆக விருத்தம் கஎஅரு.

---

# உற்பத்திகாண்டமுற்றுப்பெற்றது.

---

# பிழைதிருத்தம்.



| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௬ | உ௪ | ...பூவுலகத்தில் —— | —— |
| க௨ | ௩.௭ | ...பயனிலை | பெயர் |
| க௩ | ௪க | ...ளி | பூதவொளி |
| க௪ | ௩... | ...திட | உடைந்திட |
| க௮ | [illegible] | ...று என்பது | பின்னிரண்டடிகளில், தொறு |
| ,, | [illegible] | ...டயனமூன்றும் | ஏனையமூன்றுதொழில்களும் |
| ௩0 | [illegible] | ...ிரம் | காப்பியம் |
| ௩௬ | [illegible] | ...ரிலை | பெயர் |
| ௪0 | [illegible] | ...வுசிறப்பு | முற்று |
| ௬க | உ௬ | ...கரவீற்றுச்சுட்டுப்பெயர்—— | —— |
| ௭0 | க௨ | ...திலத்திடை | இரும்புவிமிசை |
| க0௩ | ௩௬ | ...ம்பிடும் | ஒலித்திடும் |
| கக௫ | உ௮ | வெளிப்படையாகவுங்குறிப்பாகவும் | குறிப்பாகவும் வெளிப்படையாகவும் |
| க௯க | உ௪ | ஏகாரங்கள் | முன்னையஏகாரம் |
| க௫௬ | க௮ | காரணன் ஆய | காரணம் ஆன |
| க௫௭ | க௮ | உயர்வுசிறப்பும் | எச்சமும் |
| க௬௪ | க௫ | ஆகிய, + | இவை— |
| க௭௪ | க | நமகக்தென்று | மெமக்கீதென்று |
| க௮௩ | உ௫ | சேண்மிசை | சேணிடை |
| க௮௭ | ௪0 | வேலும் | மேலும் |
| உ0௮ | ௭ | அமரரில் | அமரர்கள் |
| உஉ௪ | க | சுற்ற | சூழ |
| உஉ௭ | உ௯ | அவ்வாறு | அவ்வாறு தேவரீர் |
| உ௯க | க௨ | போலும் | ஒக்கும் |
| உ௩௬ | ௩௩ | திழ்ந்த | திகழ்ந்த |
| உ௪க | க௬ | அசுரர் | அவுணர் |
| உ௪௯ | ௩௪ | தனங்களில் | தனங்களிலும் |
| உ௫௬ | ௯க | இவை —— | —— |
| உ௫௮ | உ | பூத்தான் | செய்தான் |
| உ௫௯ | ௯க | செய்திடு | செய்யுறு |
| உ௬உ | ௯0 | பெயர்ந்திட | பெயர்ந்து உடன்வந்திட |
| உ௭உ | உ0 | அருளுவன் | அறைகுவன் |
| உ௭௪ | க௭ | ஐ திறன் | ஐந்திறன் |
| உ௮0 | ௯உ | விண்ணவன் | மேலவன் |
| உ௯௩ | க௩ | உயர்வுசிறப்பு | இழிவுசிறப்பு |
| உ௯௬ | க0 | மொய்ம்பினேந்தி | மொய்ம்பிலேந்தி |
| ௩0௭ | உ௪ | சுட்ட | சுட்டது |
| ௩க௬ | உ௮ | யான் | யாம் |
| ௩உ௩ | ௩௪ | மன்மதன் | பமன் |
| ௩உ௯ | உ | ஆற்றும்வேள்வியரென | ஆற்றுநோன்பினரென |
| ௩௩௮ | ௩௮ | ததீசிப்படலத்தில் | அனந்தன்சாபநீங்குபடலத்தில் |
| ௩௩௯ | க௫ | தாதையாய் | நல்கி |
| ௩௫உ | உ௯ | இயற்றிட | செய்திட |
| ௩௬௪ | க௬ | அழைத்தருளி, + | நம் மணச்செயல்காட--எமது திருமணச்செயலைக்காணுமாறு, |
| ௩௭க | க௪ | ஆபச்சைவன் | ஆபன் |
| ௩௮௪ | க௭ | தமை | தனை |
| ௪0க | ௩0 | கிற்றல் | கிற்புறுதல் |
| ௪உ௪ | ௬ | குழுவில் | குழுவை [ம், |
| ௪௫௩ | உ௯ | தேனையும், + | முறைமுறை-ஒவ்[illegible]ருமுறைபினு |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | தி[...]தம். |
|---|---|---|---|
| ௩௬௧ | ௨௧ | ஆற்றுதவளாய் | ஆற்றுதவனாய் |
| ௪௬௪ | ௨௩ | இசைத்தான் | இசைத்தா[...] |
| ௪௬௮ | ௧௧ | நாடினரென்பதற்கேற்ப | நாடியென்ப[...]ற்ப |
| ௪௮௧ | ௫ | முகளும் | முகங்களும் |
| ௪௮௪ | ௧௩ | யாவர் | யார் |
| ௪௮௮ | ௩௬ | ஒளிர | ஒளிரவும் |
| ” | ௪௨ | தொக்கது | தொக்கன |
| ௪௯௨ | ௨௬ | சத்தியலோக | சத்திலோக [...]ந்து, |
| ௪௯௪ | ௯௫ | உமாதேவியார், + | கனிநாடினள்[...]யையுங்கண்டு |
| ௪௯௫ | ௯௩ | உய்ந்திட + | உன்தன்மக[...]ப |
| ” | ௩௪ | உய்யும்படி + | உன்புதல்வன[...]மியத்தை |
| ” | ௩௯ | கேட்டலுலாகிய | கேட்டலாகிய |
| ௫00 | ௨௪ | படுத்தும் | படுத்திச்செல்லும் |
| ௫0௨ | ௨0 | ஆயதுகாலைதன்னில் | ஆயதுகாலை |
| ௫0௮ | ௩0 | பொழுது, + | குமரன்மிசை—முருகக்கடவுளின் |
| ௫௨௨ | ௨௭ | அண்ட நிரையும் | அண்டநிரையானவும் [மேல் |
| ௫௨௭ | ௨௯ | கடிதில் | கடிது |
| ௫௩௯ | ௧௯ | வீரரொடு | இலக்கமுடனொன்பான்வீரரொடு |
| ௫௪௬ | ௧0 | போற்றிசெய்ய | சூழ்ந்துபோற்ற |
| ௫௫0 | ௨ | அதுபெற்றிலன் | அது முன்னரே பெற்றிலன் |
| ௫௫௫ | ௨௭ | புதல்வராகிய | நல்லபுதல்வராகிய [ருள் |
| ௫௬0 | ௪0 | இது அழகு-இது | சின் ஆர் அருள் அழகிது-உமதுபேர |
| ௫௬௮ | ௨௫ | முருகக்கடவுள், + | அவ்வாசம் கேட்டலும்—அவ்வார்த்தையைக்கேட்டவுடன் |
| ௫௭௧ | ௩௭ | படைத்திடும் | படைத்தது ஓர் |
| ௫௭௬ | ௩௫ | ஆதலின், + | யான்—நான், இனி—மேல், |
| ௬௧௧ | ௨௯ | அவன்பால் | அவன் மேல் |
| ௬௧௫ | ௭ | குனித்தான் | வளைத்தான் |
| ௬௪௮ | ௮ | வெல்லுதல் | வென்றிடல் |
| ௬௫௨ | ௭ | கொண்டிடும் | கொண்டுறும் |
| ௬௫௪ | ௫ | உடைந்தன | பிளந்தன |
| ௬௫௯ | ௩௪ | விடுத்திட | விட்டிட |
| ௬௮௮ | ௧௩ | செயற்பாலதாகிய | செயற்பாலனவாகிய |
| ௬௮௯ | ௨0 | இறைவனி | இறைவநீ |
| ௬௯0 | ௪௨ | அவரது | அவனது |
| ௬௯௬ | ௨ | மலையாகி | இருக்கையாகி |
| ௭0௫ | ௩௮ | புரத்தினை | புரத்தை |
| ௭0௯ | ௩௫ | தொடர்பை | தொடர்பு |
| ௭௧௩ | ௨௨ | மலர்ந்ததன்மைபோல் | மலர்ந்தது என்ன |
| ” | ௩௬ | என்றான் | என்பான் |
| ௭௨0 | ௨௪ | அரியின் | வரியின் |
| ௭௩௩ | ௧0 | வெந்திடும்பணிபுரிதரும்பணிக்குலம் | வெந்திடும்பணிக்குலம்புரிதரும்பணி |
| ௭௩௪ | ௧௭ | திறம்போலும் | திறன் ஒக்கும் |
| ௭௪௧ | ௩0 | அண்ணல் | வள்ளல் |

☞ ——— இக்குறியிடப்பட்டனவற்றை நீக்கியும், ☞ + இக்குறியிடப்பட்டனவற்றோடு திருத்தத்திற்கண்டவற்றைச் சேர்த்தும் வாசிக்க. ௪0-ம் பக்கத்திற்குள், கெடுதலாகவுங் குறைதலாகவுங்குறித்த விகாரங்களைத்தொகுத்தலென்க. ஆற்றுப்படலத்துப்பதிஞன்காஞ்செய்யுள் குறிஞ்சிநிலத்தைவருணித்ததென்றும்; அது பாலைநிலத்தைவருணித்ததென்க. இன்றியமையாதனவாகக்காணப்பட்டனவே இங்கே திருத்தப்பட்டன.